வெளியீடு—28—7—1970]
[Issued—28—7—1970]

தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, 1969 மார்ச் 24

**Monday, 24th March 1969**

தொகுதி XX—எண் 2

**Volume XX—No. 2**

©
தமிழ் நாடு அரசு
1970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

லை, 50 காசுகள்)
rice, 50 Paise)

DIGITIZED

N69
20
G758

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. | 1–21 |
| 2 அறிவிப்புகள்— | |
| (அ) ‘நவசக்தி’ நாளிதழ்மீது அவையுரிமைக் கேள்வி .. | 21 |
| (ஆ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படாமை .. .. .. .. .. .. | 23 |
| (இ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல் .. .. | 24 |
| (ஈ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல் .. | 24–25 |
| (உ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. .. .. | 50 |
| 3 ஒற்றிவைப்புத் தீர்மானம்— | |
| நாகூரில் இரு முஸ்லீம் பெண்களை வீட்டிலிருந்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வெளியே அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் செய்தியும், அதனால் ஏற்பட்டுள்ள பரபரப்பும் .. .. .. .. .. | 21–23 |
| 4 அரசினர் தீர்மானங்கள்— | |
| (அ) விதி 41 (3)-ஐ தளர்த்தல் .. .. | 23 |
| (ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல் .. .. | 24 |
| (இ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல் .. | 24 |
| 5 அரசினர் மசோதா— | |
| தமிழ்நாடு 1969–70-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள், குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1968) .. .. | 25–38 |
| 6 1969–70ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண் 8-அ பால் வழங்கு திட்டங்கள் .. <br>(ஆ) கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு (உணவு) .. .. | 39–95 |
| 7 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 96 |
| இணைப்புகள் .. .. .. .. .. .. | 97–115 |

# உள்ளடக்கம்


பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. 117–137

2 நடைமுறைக் கேள்வி—

"வக்காலத்து" என்ற சொல்லை அமைச்சர் பயன்படுத்தியது குறித்து .. .. .. .. .. 137–138

3 அறிவிப்பு—

சில அவையுரிமைக் கேள்விகள் ஒத்திவைப்பு .. 138

4 கவன ஈர்ப்பு—

(அ) மக்களவையில் வைக்கப்பட்டுள்ள பஞ்சப் பிரதேசங்கள் பட்டியலில் தமிழ்நாடு விடப்பட்டிருப்பதும், மைய அரசினிடமிருந்து போதிய நிதியைப் பெற வேண்டியதன் அவசியமும் .. .. .. 139–141

(ஆ) சுருட்டப்பள்ளி அணைத்திட்டத்திற்கு ஆரணியாறு நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் வராததால் ஏற்பட்டுள்ள பாதிக்கப்பட்டுள்ள நிலை .. .. 141

5 தன்னிலை விளக்கம்—

"வக்காலத்து" என்ற சொல்லை அமைச்சர் தன் துணை வினாவிற்கு விடையளிக்கையில் பயன்படுத்தியது குறித்து திரு ப. மகாதேவன் விளக்கம் .. .. .. .. .. .. 141–144

6 அறிக்கை அளித்தல்—

அரிசன நலத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை .. .. .. .. .. .. 144

7 1969–70ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 19—கூட்டுறவு .. .. .. 145–149, 150–191

(ஆ) கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் .. .. .. ..
(இ) கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் .. .. .. .. .. ..
(ஈ) கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. .. } 191–235

8 பேரவைத் தலைவரின் விளக்கம்—

பேரவைத் தலைமையின் தீர்ப்பை எதிர்த்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பும், அது குறித்து நடவடிக்கை எடுக்காததும் .. 149–150

9 பேரவை முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள் 235

இணைப்புகள் .. .. .. .. .. .. .. 236–286

## உள்ளடக்கம்.


பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. 287–307

2 நடைமுறைக் கேள்வி—

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தபோது, ஆளுங் கட்சியினர் உபயோகித்த சொற்கள்குறித்து .. .. .. .. .. 307

3 அவையுரிமைக் கேள்விகள்—

(அ) பேரவைத் தலைமையால் அகற்றப்பட ஆணையிடப் பட்ட பகுதிகளை " மறவன் மடல் " வெளியிட்டது குறித்து அச்செய்தித்தாள் ஆசிரியர் வருத்தம் தெரி வித்தது .. .. .. .. .. .. 308

(ஆ) " நவசக்தி " நாளிதழ், பேரவை நிகழ்ச்சி களைத் திரித்து வெளியிட்டதுகுறித்து .. .. 308

(இ) " நவமணி " நாளிதழ், பேரவை நிகழ்ச்சி களைத் திரித்து வெளியிட்டதுகுறித்து .. .. 308

(ஈ) நிதியமைச்சருடைய பேச்சை எதிர்க்கட்சித் தலைவர் திரித்துக் கூறியதுகுறித்து .. .. .. 308–315

4 ஒற்றிவைப்புத் தீர்மானம்—

திருமங்கலத்தில் பேருந்து நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்ட தொழிலாளர் துறை அமைச்சர் தேசீய கீதம் இசைக்கும்போது இல்லாதிருந்தது .. .. .. .. .. 316–318

5 தன்னிலை விளக்கம்—

தன் துணை வினாவிற்கு அமைச்சர் குத்தலாக விடை யளித்ததுகுறித்து திரு. டி. மார்ட்டின் அவர் கள் விளக்கம் .. .. .. .. .. 318

6 அரசினர் தீர்மானம்—

விதி 41 (3)-ஐத் தளர்த்தல் .. .. .. .. 319

7 கவன ஈர்ப்பு—

(அ) திண்டுக்கல் ஜி. டி. என். கலைக் கல்லூரியில் உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த மாணவர் மீது தடியடி .. .. .. .. .. .. 319–320

(ஆ) நெல்லிக்குப்பம் பாரி கம்பெனித் தொழிலாளர் கள் வேலைநிறுத்தம் செய்தபோதும், நெய் வேலி கார்ப்பொரேஷன் தொழிலாளர் ஊர் வலத்தின்போதும் காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை .. .. .. .. .. 320–322

(இ) வடார்க்காடு, நெல்லை மாவட்டங்களில் பருவ மழையின்மையும், கடன் வசூல் ஒத்திவைப்பும், பஞ்ச நிவாரண நிதி ஒதுக்கலும் .. .. .. 322–327

(ஈ) முண்டியம்பாக்கம் தென் இந்திய எஃகு சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் கரும்பை வாங்க மறுப்பதால் கரும்பு பயிரிடும் விவசாயி களின் அல்லல் .. .. .. .. .. 327–329

(உ) பல்லடம் வட்டத்தில் பருவ மழையின்மையும், மின்சாரக் கட்டணத்தை முன்பணமாக வசூல்ப் பதை ஒற்றிவைத்தலும் .. .. .. .. 329–330

8 அறிக்கைகள் அளித்தல்—
(அ) கல்லூரி கல்வி குறித்த பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை .. .. .. .. 330
(ஆ) 1965–66-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கக் கணக்குகள், 1967-ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை ஆகியவற்றின் மீதான பொதுக் கணக் காய்வுக் குழுவின் அறிக்கை .. .. .. 330
(இ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை .. .. .. .. .. 331

9 1968–69-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி அறிக்கை—அவைமுன் அளித்தல் .. .. 331-335

10 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.
(அ) கோரிக்கை எண் 34—எழுதுபொருள்—அச்சுத் துறை .. .. .. .. .. .. 335-354
(ஆ) கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் .. .. .. .. .. 354-410

11 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 410-411

## உள்ளடக்கம்.

பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. 475-521

2 தகவல் கோரல்—
ஒரு வினாவிற்கு விடையளிக்கையில் உறுப்பினர் அவையில் இல்லாததால் அவர் அவைக்கு வந்த பின்னர் அவ்விடையை மீண்டும் அளிக்கக் கோரல். .. 527

3 அறிவிப்புகள்—
(அ) ஒற்றிவைப்புத் தீர்மானங்களை மறுநாளைக்கு எடுத்துக்கொள்ளல் .. .. .. .. 527
(ஆ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா. .. .. .. .. 574

4 அரசினர் தீர்மானம்—
விதி 41 (3)-ஐத் தளர்த்தல். .. .. .. .. 527

5 கவன ஈர்ப்பு—
(அ) பட்டுக்கோட்டையில் தீ விபத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல் .. .. 527-528
(ஆ) வாலாஜா வட்டம், கலவை என்னும் இடத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களும், பாதிக்கப்பட்ட மக்கள் நிலையும் .. .. .. .. .. 528-529
(இ) கோவை மாவட்டத் தலைமை மருந்தகத்தில் எக்ஸ்ரே படச் சுருள் இன்மையால் நோயாளிகள் பாதிப்பு .. .. .. .. .. .. 529

6 அறிக்கை அளித்தல்—
தொழில் நுட்பக் கல்வி பற்றிய பரிந்துரைகளின் மேல் அரசு எடுத்த நடவடிக்கை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை .. .. .. 530

7 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)
(அ) கோரிக்கை எண் 6—மாநிலச் சட்ட மன்றம் .. 530
(ஆ) கோரிக்கை எண் 7—தேர்தல்கள் .. .. 531
(இ) கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. 531-532
(ஈ) கோரிக்கை எண் 33—பல்வகை .. .. .. 532-574
(உ) கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் .. .. }
(ஊ) கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை .. } 574
(எ) கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் .. .. }

8 அரசினர் மசோதா—
தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா .. .. .. .. .. .. 574

9 பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 575

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| நீத்தார் நினைவுக் குறிப்பு— | |
| திரு. எஸ். சின்னையன், முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து .. .. .. .. .. .. | 581 |
| வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. | 581–601 |
| அறிவிப்புகள்— | |
| (அ) ஒற்றிவைப்புத் தீர்மானங்களையும், அவையுரிமைக் கேள்வியையும், ஒற்றிவைத்தல் .. .. | 602 |
| (ஆ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம் .. | 613 |
| (இ) நடைமுறை விதிக்குழுவிற்கு நியமனம் .. .. | 613-614 |
| (ஈ) அவையினர் குழுவிற்குத் தேர்தல் .. .. | 614 |
| (உ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா .. .. .. .. .. .. | 653 |
| அரசினர் தீர்மானம்— | |
| விதி 41 (3)ஐத் தளர்த்தல் .. .. .. .. | 602 |
| கவன ஈர்ப்பு— | |
| (அ) இராசிபுரம் கூற்றத்தில் மழையின்மையும், மக்கள், கால்நடை அல்லல் நீக்கத் துயர்தணிப்பு நடவடிக்கைகளும் .. .. .. .. .. | 602 |
| (ஆ) மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மழையின்மையும், விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தலும் .. .. .. | 602-603 |
| (இ) திருச்சி மாவட்டத்தில் சில வட்டங்களில் பருவ மழையின்மையும், கடன் வசூலை ஒற்றி வைத்தலும். | 603-605 |
| (ஈ) கோபிச்செட்டிபாளையம் வட்டத்தில் சில பிர்க்காக்களில் பருவ மழையின்மையும், துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளலும் .. .. | 605–608 |
| (உ) கோவை நகரில் பெரியம்மை நோய் பரவி வருதல் .. .. .. .. .. .. | 608-609 |
| (ஊ) தமிழக கைத்தறி நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கம், பல நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகளைக் கொடுக்கத் தவறியதும், நெசவாளர் வேலையின்மையும் .. .. .. .. .. | 609–611 |
| (எ) செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள கடன்களை மூன்று ஆண்டுக் கால தவணைக் கடன்களாக மாற்றி வசூலை நிறுத்தி வைத்தல் .. .. .. .. .. | 611-612 |
| (ஏ) கோவை, பல்லடம், அவனாசி வட்டங்களில் பருவமழையின்மையும், கூட்டுறவுத் துறைக் கடன்கள் வசூலிப்பை ஒற்றிவைத்தலும் .. | 612-613 |

பக்கங்கள்.

6 அறிக்கைகள் அளித்தல்—

(அ) சிறைச்சாலைகளையும், அவற்றுடன் சேர்ந்த துறைகளையும் பற்றிய பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்த நடவடிக்கை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை .. .. .. .. .. .. 615

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை .. 615

1968–69-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் .. .. .. .. 615–629, 631–647

8 நடைமுறைக் கேள்வி—

ஓர் உறுப்பினருடைய தெலுங்கு உரையைக் குறிப்பெடுத்தல் குறித்து .. .. .. .. .. 630

9 தன்னிலை விளக்கம்—

தெலுங்கில் தான் ஆற்றிய உரைகள் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறாதது குறித்து திரு பி. வெங்கடசாமி அவர்களின் விளக்கம் .. .. .. .. .. .. 630–631

10 1968–69-ம் ஆண்டிற்கான (இறுதி) கூடுதல் நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—

A. வருவாய்க் கணக்கில் செலவு.

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை எண் | 1 | நிலவரித் துறை .. .. .. | |
| ஷை | 2 | மோட்டார் வண்டிச் சட்டங்கள்-நிர்வாகம் | |
| ஷை | 3 | பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். | 647 |
| ஷை | 4 | முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் .. | |
| ஷை | 6 | மாநிலச் சட்டமன்றம் .. .. | |
| ஷை | 7 | தேர்தல்கள் .. .. .. .. | |
| ஷை | 8 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | |
| ஷை | 9 | மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் | 648 |
| ஷை | 10 | நீதி நிர்வாகம் .. .. .. | |
| ஷை | 11 | சிறைச்சாலைகள் .. .. .. | |
| ஷை | 12 | காவல் துறை .. .. .. .. | |
| ஷை | 13 | கல்வி .. .. .. .. .. | |
| ஷை | 14 | மருத்துவம் .. .. .. .. | |
| ஷை | 15 | பொதுச் சுகாதாரம் .. .. .. | 649 |
| ஷை | 16 | வேளாண்மை .. .. .. | |
| ஷை | 17 | மீனளம் .. .. .. .. | |
| ஷை | 18 | கால்நடை வளர்ப்பு .. | |
| ஷை | 19 | கூட்டுறவு .. .. .. .. | |
| ஷை | 20 | தொழில்கள் .. .. .. | |
| ஷை | 23 | சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன .. .. .. | 650 |
| ஷை | 25 | பழங்குடி மக்கள் அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் .. .. .. .. | |
| ஷை | 26 | பாசனம் .. .. .. .. | |


## உள்ளடக்கம்.

பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள். 653–674

2 ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) தளவாய்புரம் கிராம அரிசன குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லை நிலச்சுவான்தார்கள் அறுவடை செய்து, அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்ற முயற்சித்தல் .. .. .. 674

(ஆ) ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலை கட்டடம் இடிந்து விழுந்து தொழிலாளர் காயமுற்றதும், இறந்தவர்களுக்கு நட்ட ஈடு அளித்தலும். 675–676

3 அரசினர் தீர்மானம்—

விதி 41 (3) ஐத் தளர்த்தல் .. .. .. .. 676

4 கவன ஈர்ப்பு—

(அ) பொன்னேரியில் பல பிரிவு மக்களிடையே ஏற்பட்ட மோதலால் சட்டம், ஒழுங்கு பாதிப்பு .. 677–678

(ஆ) காடாம்புலியூர் பிர்க்காவில் வறட்சி நிலையும், அப் பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வரி வசூலை ஒத்தி வைத்தலும் .. .. 678–680

(இ) நீலகிரியில் போதிய மழையின்மையால் பயிர்கள் பூஷண நோயினால் பாதிக்கப்பட்டதும், கடன் வசூலை ஒத்தி வைத்தலும் .. .. .. .. .. 680

(ஈ) லாரிகள் முதலியவை டீசல் எண்ணெய்க்குப் பதிலாக மண்ணெண்ணெய்யை உபயோகிப்பதால் அரசுக்கு விற்பனை வரி இழப்பும், மக்கட்கு மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடும் .. .. .. 680–686

5 அறிக்கைகள் அளித்தல்—

(அ) மோட்டார் வண்டிகள் சட்ட நிர்வாகம், விவசாயம் பற்றிய பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் .. .. .. .. .. .. 683

(ஆ) தன் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை .. .. .. .. .. .. .. 683

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை .. .. .. .. .. .. 684

(ஈ) டாக்டர் எச் வி. ஹாண்டே, மறைந்த திரு. செ. பாலசுப்பிரமணியம் மீதான வழக்குகள் பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள் .. .. 684

(உ) திரு. டி. மார்டின், "கடிதம்" நாளிதழ் ஆசிரியர், வெளியிடுவோர், திரு. எ. பாலசுப்பிரமணியன் ஆகியவர் மீதான வழக்குகள் பற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கைகள். 684

பக்கங்கள்.

6 அறிவிப்புகள்—
(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல் .. .. 584–68
(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல். 685–686
(இ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல் .. 686
(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்குத் தேர்தல் .. 586–627
(உ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்கு **நியமனம்** .. 687

7 நடைமுறைக் கேள்வி—
அவையுரிமைக் கேள்வி பற்றிய அறிக்கை கொடுத்த உறுப்பினருக்கு அதுபற்றி விளக்க வாய்ப்பளிக்காமல் அதைத் தள்ளுபடி செய்து, கடிதம் மூலம் அவருக்குத் தீர்ப்பை அறிவித்தது .. .. 087–689

8 அமைச்சரின் விளக்க உரை—
தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சீரணிக்காக கருவிகள் வாங்கியது குறித்த உள்ளாட்சித் துறை **அமைச்சரின் உரை** .. .. .. .. .. 689

9 அரசினர் மசோதா—
(அ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா .. .. .. .. .. .. 689–751
(ஆ) தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா .. .. .. .. .. 751–752

10 அரசினர் தீர்மானங்கள்—
(அ) மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. .. .. 752–753
(ஆ) தமிழ்நாடு/சென்னை மோட்டார் வாகன வரிச் சட்டத்தின்கீழ் இயற்றப்படும் வரைவு விதிகள் .. 753

11 பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 754

உள்ளடக்கம்.

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. 755–781

2. தகவல் கோரல்—
வினாக்கள், துணை வினாக்கள் முதலியவை பற்றிய புள்ளிவிவரம் ... .. .. .. .. 781, 831

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்—
க்வாலிடி ரெஸ்டாரெண்ட் கதவடைப்பு .. .. .. 781

4. அரசினர் தீர்மானங்கள்—
(அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல் .. .. .. 782
(ஆ) மாநிலத்தில் வறட்சி நிலையும், துயர் தணிப்பு நடவடிக்கைகளுக்கு மத்திய அரசின் உதவியும் .. 785–830

5. கவன ஈர்ப்பு—
(அ) கோவை மாவட்டத்தில் சில கிராமங்களில் குழாய்க் கிணறுகளிலிருந்து பம்பு செட் மூலம் தண்ணீர் எடுப்பதால் தண்ணீர் பஞ்சம் .. .. 782–783
(ஆ) தென்னார்க்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்தில் குடி தண்ணீர் வழங்கல் .. .. 783–784

6. அரசினர் மசோதா—
தமிழ் நாடு 1969-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் மசோதா .. .. .. .. .. 784

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 831

8. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (தொழிலாளர் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழிலாளர், பத்திரப் பதிவு, பயண அனுமதிச் சீட்டுகள், துறைமுகங்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள் வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

10. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலைய அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— அறக்கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு.

11. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) சீட்டுகள் குறித்த சட்டம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU

SARDAR UJJAL SINGH.

1. THIRU M. KARUNANIDHI, Chief Minister in charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Legislature, Information and Publicity and Cinematograph Act.

2. THIRU K. A. MATHIALAGAN, Minister in charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Commercial Taxes, Indian Overseas, Refugees and Evacuees.

3. THIRU A. GOVINDASWAMI, Minister in charge of Food, Agriculture, Food Production, Animal Husbandry, Fisheries, Forest and Cinchona.

4. DR. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in charge of Public Health, Medicine, Harijan Welfare, Women's and Children's Welfare, Stationery and Printing, Government Press, Tourism, Orphanages, Beggars, Approved Schools and Vigilance Services.

5. THIRU S. MADHAVAN, Minister in charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Education including Technical Education, Official Language, Law and Courts.

6. THIRU S. J. SADIQ PASHA, Minister in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs.

7. THIRU M. MUTHUSWAMY, Minister in charge of Municipal Administration. Community Development, Panchayats, Bhoodan and Gramdan. Khadi and Village Industries, Rural Industries Project, Ex-Servicemen and Prosperity Brigade.

8. THIRU P. U. SHANMUGHAM, Minister in charge of Labour, Registration, Passports. Ports, Prisons, Legislation on Wegihts and Measures. Newsprint Control and Prices and Supplies of Goods Act.

9. THIRU Si. Pa. ADITANAR, Minister in charge of Co-operation, Transport. Nationalised Transport and Motor Vehicles Tax.

10. THIRU K. V. SUBBIAH, Minister in charge of Religious Endowments, Housing and Accommodation Control.

11. THIRU O. P. RAMAN, Minister in charge of Electricity, Legislation on Money-Lending (Rural Indebtedness) and Legislation on Chits.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர் :

### சர்தார் உஜ்ஜல் சிங்.

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, சட்ட மன்றம், செய்தி—விளம்பரம், திரைப்படச் சட்டம்.

2. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நிதி, திட்டம், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வணிக வரிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

3. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி (உணவு-வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வேளாண்மை, உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், காடுகள், சிங்கோனா.

4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (பொதுச் சுகாதார-அரிசன நல அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், அரிசன நலம், எழுதுபொருள்—அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சுற்றுலா, அனாதை இல்லங்கள், இரவலர்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

5. மாண்புமிகு திரு. செ. மாதவன் (கல்வி-தொழில் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சி யளித்தலும், கம்பெனிகள், தொழில் நுட்ப கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்டம், நீதிமன்றங்கள்.

6. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப் பணிகள், சிறுபாசன சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் (Waqfs).

7. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சிறணி.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. பெ. சௌந்தரபாண்டியன்
திரு. எஸ். ஆறுமுகம்
திரு. நா. வீராசாமி
திரு. கா. ராமமூர்த்தி

**சட்டப் பேரவைச் செயலாளர்**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ.,பி.எல்.

**துணைச் செயலாளர்**

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல் எல்.பி.

**உதவிச் செயலாளர்கள்**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்
திரு. சி. கு. ராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி.,பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை

### உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். .. .. | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (அமைச்சர்) .. | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். .. .. .. | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. .. .. .. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். .. .. .. | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. .. .. .. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. .. .. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.). |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். .. .. | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. .. .. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். .. .. | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. .. .. .. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. .. .. .. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. .. .. .. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. .. .. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். .. .. .. | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. .. .. .. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ.கோ. .. .. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. .. .. .. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், ஏ. .. .. | திண்டுக்கல். |
| 24 | பெள்ளி கௌடர், ஜெ. .. .. .. | கூனூர். |
| 25 | பாரதி மோகன், கோ. .. .. .. | குத்தாலம். |
| 26 | பூபதி, எம். .. .. .. | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 27 | பூவராகன், கோ. .. .. .. | விருத்தாசலம். |
| 28 | போஜன், கே. .. .. .. .. | உதகமண்டலம். |
| 29 | சீமைச்சாமி, கரு. .. .. | மானாமதுரை. |
| 30 | சிதம்பரநாத நாடார், ஏ. .. .. | கொளச்சல். |
| 31 | சின்னராஜி, சி. கே. .. .. .. | திருப்பத்தூர். |
| 32 | சின்னச்சாமி, மு. .. .. .. | ஈரோடு. |
| 33 | சின்னசாமி, வி. .. .. .. | ஏர்க்காடு (ஆ.வா.). |
| 34 | சித்தன், என். எஸ்.வி. .. .. | திருமங்கலம். |
| 35 | தனுஷ்கோடி, பி.எஸ். .. .. | திருவாரூர் (செ.வ.). |
| 36 | தருமலிங்கம், ந. .. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 37 | துரைராஜ், சு.ம. .. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 38 | துரைபாண்டியன், என். .. .. | நாங்குனேரி. |
| 39 | துரைராஜ், பி. .. .. .. .. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 40 | துரைசாமி, சு. .. .. .. | திருப்பூர். |
| 41 | துரையரசன், ஆ. .. .. .. | அறந்தாங்கி. |
| 42 | எட்மண்ட், ஜி. ஆர். .. .. (பேரவைத் துணைத் தலைவர்) .. | திருச்செந்தூர். |
| 43 | இளம்வழுதி, இரெ. .. .. .. | கடலூர். |
| 44 | எல்லப்பன், பி. எஸ். .. .. .. | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 45 | கணேசன், எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 46 | கணேசன், எஸ். .. .. .. | செம்பனார்கோவில். |
| 47 | ஜார்ஜ், வ. .. .. .. .. | பத்மநாபபுரம். |
| 48 | ஞானசம்பந்தன், கொ. இர. .. | நாகப்பட்டினம். |
| 49 | கோமதிசங்கர தீட்சிதர், க. .. .. | அம்பாசமுத்திரம். |
| 50 | கோபால், எம். .. .. .. | குன்றத்தூர் (செ. வ.). |
| 51 | கோவிந்தன், கே. ஆர். .. .. | தாரமங்கலம். |
| 52 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்). .. | செய்யாறு. |
| 53 | கோவிந்தராசன், ம. செ. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 54 | கோவிந்தராசன், சி. .. .. .. | நெல்லிக்குப்பம். |
| 55 | கோவிந்தராஜன், வி. எஸ். .. .. | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 56 | கோவிந்தராசுலு, கே. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 57 | கோவிந்தராசன், ஆ. .. .. .. | புவனகிரி. |
| 58 | கோவிந்தசாமி, ஏ. (அமைச்சர்) .. | முகையூர். |
| 59 | ஹபிபுல்லா பேக், டாக்டர் .. .. | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 60 | ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 61 | இளஞ்செழியன், வீ. சா. .. .. | விராலிமலை |
| 62 | இராசரத்தினம், டி. .. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 63 | ஜேம்ஸ், ஜே. .. .. .. .. | திருவட்டார். |
| 64 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. .. | மதுரை-கிழக்கு. |
| 65 | ஜயராஜ், பி. .. .. .. .. | நன்னிலம் (செ. வ.). |
| 66 | ஜயராமன், கி. .. .. .. .. | சேலம்-1. |
| 67 | ஜெயராமன், பி. .. .. .. | போளூம்பட்டு (செ. வ.) |
| 68 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. .. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 69 | கனகசபை, ரா. .. .. .. | சிதம்பரம். |
| 70 | கந்தசாமி கவுண்டர், செ. .. .. | அரவக்குறிச்சி. |
| 71 | கந்தசாமி, எம். .. .. .. | குளித்தலை. |
| 72 | கந்தசாமி படையாச்சி, மு. .. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 73 | கண்ணன், எம். ஆர். .. .. .. | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 74 | கணபதி, எம். .. .. .. .. | கிணத்துக்கடவு. |
| 75 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 158 | இராசாங்கம், மா. .. .. .. | கம்பம். |
| 159 | ராஜாங்கம், என். .. .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 160 | ராஜவேலு, டி. ஏ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 161 | ராமச்சந்திர துரை, ரா. .. .. .. | கந்தர்வக்கோட்டை. |
| 162 | இராமச்சந்திரன், க. ந. .. .. | ஆண்டிமடம். |
| 163 | ராமச்சந்திரன், எம். ஜி. .. .. | பரங்கிமலை. |
| 164 | இராமச்சந்திரன், எஸ். .. .. .. | பண்ருட்டி. |
| 165 | ராமலிங்கம், எஸ். .. .. .. | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 166 | இராமமூர்த்தி, க. .. .. .. | திண்டிவனம். |
| 167 | இராமன், மு. .. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 168 | இராமன், ஓ. பி. (அமைச்சர்) .. .. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 169 | இராமராசன், வ.க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.) |
| 170 | இராமசாமி, இ. .. .. .. | வால்பாறை (செ.வ.) |
| 171 | ராமசாமி கவுண்டர், கே.எம். .. | கோபிசெட்டிப்பாளையம். |
| 172 | ராமசாமி, எஸ்.ஜே. .. .. .. | அரக்கோணம். |
| 173 | இராசு, ஜே.எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 174 | இரத்தினசபாபதி, மு. .. .. .. | விளாத்திகுளம். |
| 175 | ரெத்தினதேவர், ரா. .. .. | முதுகுளத்தூர். |
| 176 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 177 | சகாதேவக் கண்டர், கே. .. .. | தண்டராம்பட்டு. |
| 178 | சாமிநாதன், கே. என். .. .. | வெள்ளக்கோயில். |
| 179 | சங்கரய்யா, என். .. .. .. | மதுரை—மேற்கு. |
| 180 | சந்தானம், பி.எஸ். .. .. | செங்கம் (செ.வ.) |
| 181 | சாரதி, மா.பா. .. .. .. | வேலூர். |
| 182 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 183 | சீனிவாசன், பெ. .. .. .. | விருதுநகர். |
| 184 | செல்லக் கவுண்டர், அ. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா ) |
| 185 | சேனுபதி, அ. .. .. .. .. | காங்கேயம். |
| 186 | சேதுராமன், சி. .. .. .. | சிவகங்கை. |
| 187 | சண்முகம், எம் .. .. .. | விழுப்புரம். |
| 188 | சண்முகசுந்தரம், அ.ப. .. .. | பொள்ளாச்சி. |
| 189 | சிறைமீட்டான், தொ.க. .. .. | பரமக்குடி (செ.வ.). |
| 190 | சிவஞானம், ம. பொ. .. .. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 191 | சிவபெருமாள், க.ந. .. .. .. | ஆத்தூர். |
| 192 | சிவசாமி, மு.ச. .. .. .. | தூத்துக்குடி. |
| 193 | சிவசுப்பிரமணியன், எஸ். .. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 194 | சோமசுந்தரம், ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.) |
| 195 | சௌந்தரபாண்டியன், நா. .. .. | ராதாபுரம். |
| 196 | சௌந்தரபாண்டியன், பெ. .. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ. |
| 197 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. .. | பாபநாசம். |
| 198 | சுந்தர பாரதி, சௌடி எஸ். .. | அருப்புக்கோட்டை. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 199 | சீனிவாசன், சு. .. .. .. | போடிநாயக்கனூர். |
| 200 | சுவாரெஸ், திருமதி ஏ. .. .. | நியமன உறுப்பினர். |
| 201 | சுப்பராஜா, ஏ.அ. .. .. .. | இராஜபாளையம். |
| 202 | சுப்பையா, ஆ.கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.) |
| 203 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) .. | ஆலங்குடி. |
| 204 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். .. | கடையநல்லூர். |
| 205 | சுப்பிரமணியம், அ.லெ. .. .. | திருநெல்வேலி. |
| 206 | சுப்பிரமணிய கவுண்டர், எம். .. | தர்மபுரி. |
| 207 | சுப்பிரமணியம், இ.எம். .. .. | திருக்கோவிலூர். |
| 208 | சுரேந்திரன், எம். .. .. .. | மேட்டூர். |
| 209 | சுவாமிநாத உடையார், த.சி. .. | மன்னார்குடி. |
| 210 | சுவாமிநாதன், வை. .. .. | திருவெறும்பூர். |
| 211 | தம்பி நாயக்கர், பா. .. .. .. | வடமதுரை. |
| 212 | தங்கப்பன், டி. .. .. .. | இராமநாதபுரம். |
| 213 | தவமணி தேவர், வி. .. .. .. | சேடப்பட்டி. |
| 214 | தீர்த்தகிரி, ந. .. .. .. | ஹரூர் (செ.வ.) |
| 215 | தீர்த்தகிரி கவுண்டர், தி. .. .. | ஊத்தங்கரை. |
| 216 | திம்மராய கவுண்டர், தி. சி. .. .. | நாட்ராம்பள்ளி. |
| 217 | திப்பையா, டி.டி.எஸ். .. .. .. | மேட்டுப்பாளையம். |
| 218 | வடிவேலு, எஸ்.கே. .. .. | தொட்டியம். |
| 219 | வரதராஜன், என். .. .. | வேடசந்தூர். |
| 220 | வேதாசலம், மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்) |
| 221 | வீரமணி, சி. .. .. .. .. | சங்கரி (செ.வ.) |
| 222 | வீராசாமி, நா. .. .. .. | ஆர்க்காடு. |
| 223 | வேலப்பன், சி. வே. .. .. .. | கபிலமலை. |
| 224 | வெள்ளத்துரை, ஏ. .. .. .. | வாசுதேவநல்லூர். |
| 225 | வேலுசாமி, பி. .. .. .. | சிங்காநல்லூர். |
| 226 | வெங்கடாசல தேவர், பெ. .. .. | வேதாரண்யம். |
| 227 | வெங்கடசாமி, பி. .. .. .. | ஹோசூர். |
| 228 | வேழவேந்தன், கா. .. .. .. | கும்மிடிப்பூண்டி. |
| 229 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். .. | புதுக்கோட்டை. |
| 230 | விஜயராஜ், தா. .. .. .. | திருவண்ணாமலை. |
| 231 | விநயகம், கே. .. .. .. | திருத்தணி. |
| 232 | விசுவநாதன், செ. கோ. .. .. | செங்கற்பட்டு. |
| 233 | வில்லியம், எம். .. .. .. | கிள்ளியூர். |
| 234 | வெற்றிடம் .. .. .. .. | பெருந்துறை |
| 235 | வெற்றிடம் .. .. .. .. | சாத்தூர் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) | |
|---|---|---|
| 1 | திரு. ப. உ. சண்முகம் .. .. | அமைச்சர் |
| 2 | திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

**சனிக்கிழமை, 1969 மார்ச் 22**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**1. வினுக்கள்-விடைகள்.**

**வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.**

*Pensioners.*

*398 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the pensioners of Tamil Nadu have submitted any memorandum to the Hon. the Chief Minister;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether it is proposed to revise the scale of pension on the basis of cost of living index?

THE Hon. Thiru K. A. MATHIALAGAN:

(*a*) Yes, Sir.

(*b*) The details are as follows—

(i) to increase the rate of dearness allowance admissible to pensioners.

(ii) to grant free medical treatment to pensioners, and

(iii) to nominate a member of the Retired Officials Association as a member of Tamil Nadu Legislative Council.

(*c*) It is not proposed to revise the scale of pension on the basis of cost of living index.

Thiru K. VINAYAKAM: Did the Government concede any of their prayers in the list of their demands apart from the prayer for enhancement of pension?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** குறிப்பிட்ட கோரிக்கைகள் எதையும் பரிசீலனை செய்வதற்கில்லை என்று தான் சொன்னேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, வாழ்க்கைப் புள்ளி அடிப்படையில் பென்ஷனை மாற்றுவது நியாயமானது என்று இந்த அரசு கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** வாழ்க்கைப் புள்ளி என்பது மாறக்கூடியது. பென்ஷன் என்பது நிரந்தரமாக அவர்களுடைய சம்பள அடிப்படையில் கொடுக்கப்படுவது. அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

**திரு. டி. மார்டின்:** ஸ்பீக்கர், சார். பென்ஷன் வாங்குகிறவர்கள் மாதா மாதம் தங்களுடைய அலுவலகத்திற்குச் சென்று வாங்குவதை நிறுத்தி, பென்ஷன் தொகையை அவர்களுக்கு மணி ஆர்டர் மூலமாக அனுப்புவதற்கு அரசு முற்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது யோசிக்கப்பட வேண்டிய விஷயம்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 76 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 77 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 78 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 79 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 80 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 81 | கதிரவன், க. மு. .. .. .. | தென்காசி. |
| 82 | கேசவனு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 83 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 84 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 85 | கோதண்டராமன், வி. கே. .. .. | குடியாத்தம். |
| 86 | கோதண்டராமையா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. .. | பழனி (செ.வ.). |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 89 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. .. | பேராவூரணி. |
| 90 | கிருஷ்ணன், அ. .. .. .. .. | மங்களூர் (செ.வ.) |
| 91 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. .. | சேலம்-2. |
| 92 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 93 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. .. .. | அவினாசி. |
| 94 | குமாரசாமி, கே. என். .. .. .. | பல்லடம். |
| 95 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 96 | மாதவன், செ. (அமைச்சர்) .. .. | திருப்பத்தூர். |
| 97 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 98 | மலைச்சாமி, பெ. .. .. .. .. | மேலூர். |
| 99 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 100 | மணி, கே.பி.எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 101 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 102 | மணி, வி. எஸ். எஸ். .. .. .. | ஆத்தூர். |
| 103 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 104 | மணியன், பி.எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 105 | மாரிமுத்து, அ. .. .. .. .. | ஆடுதுறை. |
| 106 | மாரிமுத்து, எ.ஆர். .. .. .. | பட்டுக்கோட்டை. |
| 107 | மாரிமுத்து, மு. .. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 108 | மார்டின், டி. .. .. .. .. | சாத்தான்குளம். |
| 109 | மருதாசலம், என். .. .. .. | பேரூர் (செ.வ.). |
| 110 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) .. | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 111 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 112 | மேத்தா, எம். .. .. .. .. | பெரியகுளம். |
| 113 | மூக்கையா தேவர், பி.கே. .. .. | உசிலம்பட்டி. |
| 114 | முனுசாமி கௌண்டர், பி.எம். .. | கிருஷ்ணகிரி. |
| 115 | முனுசாமி, ரா.ரா. .. .. .. | மேல்மலையனூர். |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 116 | முனியாண்டி, எ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 117 | முனு. ஆதி .. .. .. .. | திருப்போரூர். |
| 118 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 119 | முருகேசன், க. .. .. .. .. | பாலக்கோடு. |
| 120 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம். |
| 121 | செஞ்சி முனுசாமி, வெ. .. .. | செஞ்சி. |
| 122 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர். |
| 123 | முத்தையா, மு. .. .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 124 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 125 | முத்துசாமி, பா. க.சி. .. .. .. | பெண்ணாகரம். |
| 126 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. .. | நாமக்கல். |
| 127 | முத்துச்செல்வன், பு.செ. .. .. | முசிறி. |
| 128 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 129 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 130 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 131 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 132 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர். |
| 133 | நஞ்சன், சி. .. .. .. .. | கூடலூர் (செ.வ.) |
| 134 | நரசிம்மன், எ. சி. .. .. .. | ஆரணி. |
| 135 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர். |
| 136 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி. |
| 137 | நடராஜன், ஜி. .. .. .. .. | காட்பாடி. |
| 138 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர். |
| 139 | நெடுஞ்செழியன், இரா. .. .. .. | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்) |
| 140 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம். |
| 141 | பழனி, சி. .. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 142 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ.வ.) |
| 143 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி. |
| 144 | பன்னீர்செல்வம், எம். .. .. .. | ஆம்பூர் (செ.வ.) |
| 145 | பரமசிவன் பி. என். .. .. | பொங்கலூர். |
| 140 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 147 | பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ். .. .. | தஞ்சாவூர். |
| 148 | பட்டாபி நாயுடு, எ. .. .. .. | காவேரிப்பட்டணம் |
| 149 | பீர் முஹம்மது, ஹாஜி. ம. மு. .. .. | மேலப்பாளையம். |
| 150 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம். |
| 151 | பெருமாள், எ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி |
| 152 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம். |
| 153 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு. |
| 154 | பொன்னுமலை, தி. .. .. .. | பனமரத்துப்பட்டி. |
| 155 | இராஜா, எ. எம். .. .. .. .. | பவானி. |
| 156 | ராசகோபால், க. மு. .. .. .. | உத்திரமேரூர். |
| 157 | ராசமன்னார், எஸ். எ. .. .. .. | வாணியம்பாடி. |

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் அகதிகள் வருகிறபோது, அவர்களுடைய பிள்ளைகள் அங்கே பள்ளிக் கூடத்தில் படித்ததற்குரிய அத்தாட்சி சர்டிபிகேட்டைக் கொண்டுவர முடியவில்லை. அந்த நிலையில் தொழில் பள்ளிகளில் அவர்கள் சேர முடியாத நிலை இருப்பதால், "அகதிகளினுடைய குழந்தை" என்ற அடிப்படையில் அவர்களுக்குக் கல்வித் தகுதி என்ற நிர்ணயம் இருக்கிறதே அதிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கல்வித் தகுதி என்ற நிர்ணயம் இல்லை. கல்வி அதிகமாக இல்லாதவர்களுக்கு ஒரு பயிற்சி கொடுப்பதற்காகத்தான் இது ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் போது, அவர்கள் தாராளமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, மிகப் பரிவு உணர்ச்சியோடு அவர்கள் விஷயம் கவனிக்கப்படுகிறது.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து திரும்பி வரும் அகதிகளின் குழந்தைகளுக்கு எந்த எந்தத் துறையில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவற்றைப் பற்றிய விவரங்கள் இங்கு இல்லை. பொதுவாக, அவர்கள் இந்தப் பயிற்சிபெறுவதன் மூலமாகச் சிறு தொழில்கள் நடத்துவதற்குவேண்டிய தொழில் நுணுக்கத்தைப் பெற முடிகிறது.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, இந்த விதமாகத் தொழிற் பயிற்சி கொடுக்கின்ற நேரத்திலே இலங்கையிலிருந்து வரக்கூடியவர்கள் பலர் பனைமரத் தொழில் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அநேகர் மீன் பிடிக்கும் தொழில் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து வரும்போது உதவி செய்வதற்கான திட்டத்தில் பனைமரத் தொழில் செய்யக் கூடியவர்களாக இருந்தால், பனை மரங்களைக் குறைந்த லீசுக்கு அவர்களுக்குக் கொடுத்து உதவியும் அல்லது மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டவர்களாக இருந்தால் அவர்கள் மீன் பிடிக்கும் தொழில் செய்வதற்கு வேண்டிய போட்டுகளைக்கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு உதவி செய்வதற்கு நல்ல யோசனையைச் சொல்கிறார்கள். அதனுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து பார்க்கலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** பர்மாவிலிருந்து வந்த அகதிகளில் தொழிற்பட்டம் பெற்றவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா ? அவர்கள் அரசாங்கத்திற்கு மனுப் போட்டு அவர்களுக்கு அரசாங்கம் தொழிலுக்கு உதவி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிப்பட்ட தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை.

**Thiru K. VINAYAKAM :** Sir, out of these repatriates who have been given free industrial training, has anybody been absorbed in any employment under any industry or are they left to themselves to seek their own employment or to start their own small-scale industries ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. 13 பேர்கள் சேர்ந்து இதிலே ஒருவர் நடுவிலே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். மற்றபடி விவரம் இல்லை.



## சட்டப்பேரவைக் கூட்டம்.

* 411 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

வருடத்தில் ஒரு முறை சட்டப் பேரவை கூட்டத்தை வசதியுள்ள மாவட்டங்களில் நடத்தும் உத்தேசம் ஏதேனும் ஆராய்வில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை.

**Dr. H. V. HANDE :** Sir, in view of the fact that a large number of legislators are finding it difficult to participate fully in the proceedings of the Assembly, will this Government at least consider the possibility of increasing the number of meeting days of the Assembly, as is happening in the neighbouring States ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது இருக்கிற இந்த நாட்களிலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் நேரம் ஆக ஆக சட்ட சபை நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்துவதில்லை என அறிகிறோம். நேற்று முன்தினம் கூட மாவட்ட நிர்வாக மானியக்கோரிக்கை விவாதத்தின்போது அப்படிப்பட்ட குறைபாடு இருந்தது. இன்னும் நாட்கள் அதிகமானால் உறுப்பினர்கள் களைப்பு அடைந்[து] [வி]டுவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. எஸ். முருகையன்:** மு[ன்]பு ஊட்டியிலே சட்டமன்றம் கூட்டம் நடைபெற்றது. அப்போது சட்ட[ம]ன்ற உறுப்பினர்கள் எவ்வளவு பேர்கள் கலந்து கொண்டார்கள், அதற்குப் பணம் எவ்வளவு அதிகமாகச் செலவழிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உதகமண்டலத்தில் 20–4–1959 முதல் 30–4–1959 வரைக் கூட்டம் நடந்தது. அதில் பயணப்படியில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக அதிகம் செலவானது ரூ. 12,343 உதகையில் நடந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் அதிகமாகக் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை. பட்ஜட் கூட்டம் சென்னையில் நடைபெற்றபோது குறைந்த பட்சம் 112 பேர்கள் வந்தார்கள் என்றால் உதகையில் 120 பேர்கள் வந்தார்கள். அதிகபட்சம் சென்னையிலே 159 பேர்கள் வந்தார்கள் என்றால் உதகையில் 156 பேர்கள்தான் வந்தார்கள். சராசரி சென்னையிலே 135 பேர்கள் வருகிறார்கள் என்றால் அங்கே 142 பேர்கள் வந்தார்கள். மொத்தத்தில் கலந்து கொண்டவர்கள் சென்னையில் 204 என்றால் அங்கே 170 பேர்கள்தான் கலந்து கொண்டார்கள்.

**திரு. கே. விநாயகம்**—சட்டசபை உறுப்பினர்கள் பெரும்பாலும் விவாதத்தில் கலந்து கொள்ளாததற்குக் காரணம் " அங்கே போனாலும் பிரயோஜனமில்லை, ஐந்து நிமிஷம்தான் பேசுவதற்குத் தருகிறார்கள் " என்று கருதுவதாகத் தெரிகிறது. ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் யோசித்து அதிக நாட்கள் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கடந்த பல ஆண்டுகளாக 9 மணிக்குக் கூடி மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறும்போது மூன்று அல்லது நான்கு மணி வரையிலும் நடைபெறுகிறது. நேற்றையதினம் 4 மணி 10 நிமிஷத்திற்கு முடிந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது, ஏனென்றால் அவர்கள் இங்கு இல்லை.

**திரு. ப. மகாதேவன் :** சென்னை நகரம் வடகோடியிலே இருக்கிறது. தென்கோடியில் இருக்கும் என்னைப்போன்றவர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு சென்னையில் நடக்கும் சட்டப்பேரவைக் கூட்டத்தைத் திருச்சியிலோ அல்லது மதுரையிலோ கூட்டுவதற்கு புனர் ஆலோசனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாவட்டம்தோறும் சட்டசபையைக் [கூ]ட்டுகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, வாழ்க்கைப் புள்ளியின் அடிப்படையில் பென்ஷனை உயர்த்தாவிட்டாலும், பென்ஷன் தொகை நீண்ட காலத்திற்கு முன்னதாக நிர்ணயிக்கப்பட்டது என்பதை அனுசரித்து, அதை ஒட்டு மொத்தமாக ஏதாவது சிறிதளவு உயர்த்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நீண்ட காலத்திற்கு முன்பே நிர்ணயிக்கப்படவில்லை. 1960-ம் வருடத்திற்குப் பிறகு திருத்தப்பட்ட சம்பள விகிதத்தின்படி இந்த அகவிலைப்படியும் சேர்க்கப்பட்ட காரணத்தால் இப்பொழுது இன்னும் உயர்த்த வேண்டிய அவசியம் ஒன்றும் ஏற்படவில்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் ஓய்வு ஊதியம் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன ? அவர்களுக்காக அரசாங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு செலவு ஆகிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக் கேள்வி போட்டால் தகவல் கொடுக்கலாம்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** மேல் மட்டத்தில் உள்ளவர்களுக்குப் பென்ஷனை அதிகப்படுத்த முடியாது என்றாலும், அடிமட்டத்தில் இருக்கின்ற ஓய்வு பெற்ற அரசுப் பணி ஊழியர்களுக்கு ஓரளவாவது அதிகப் படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நியாயமான அளவில் இப்பொழுது கொடுக்கப்படுகிறது என்பது தான் அரசாங்கத்தினுடைய கருத்து.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** 1960-ம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஒரு பென்ஷனும், 1960-ம் ஆண்டுக்குப் பிறகு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அதிகமான பென்ஷனும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?. அந்த வித்தியாசத்தை நீக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றி விவரம் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், பென்ஷன் என்பது நீண்ட நாள் சேவை செய்ததற்குப் பின் வயது முதிர்ந்த நேரத்தில் நிம்மதியாக வாழ்வதற்காக அளிக்கப்படுகிற ஒரு உதவியாகும். அந்த உதவி, அவர்கள் வயதான காலத்தில் சிறிது வசதியாக இல்லாவிட்டாலும், குறைந்தபட்ச தேவையையாவது நிறைவேற்றிக் கொள்ளுகின்ற முறையிலே உயர்த்தப்படுமா ?

**மாண்மிபுகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது அதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்ட முறையில் தான் பென்ஷன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

**Thiru K. VINAYAKAM :** If financial stringency is the cause for refusing the demand for increasing their pension in tune with the cost of living index and the ruling prices in the State, will the Government think of the possibility of increasing their pension by a slab or a slight percentage, even though they could not increase it to the full extent of their demand ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரும்பத் திரும்ப அதையே நான் சொல்லிக்கொண்டு வருகிறேன், அகவிலைப்படியை இன்னும் சிறிது அதிகப் படுத்த வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. இன்றைக்கு இருக்கும் நம்முடைய சம்பள நிர்ணய முறையில் எந்த உதவி கொடுக்க வேண்டுமோ அது கொடுக்கப்பட்டு வருகிறது என்பது தான் அரசாங்கத்தினுடைய தெளிவான கொள்கையாகும்.



### *Touring Cinema Theatres.*

399—*Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the security deposit payable by the touring cinema theatre owners has been increased ; and

(*b*) if so, the reasons thereof ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

### பனியன்களுக்கு ஒருமுனை விற்பனை வரி

*400 வினா—**திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் உற்பத்தியாகும் பனியன்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதித்து அத் தொழிலை ஊக்குவிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. பி. வேலுசாமி :** ஐயா, திருப்பூரில் மிகக் குறைந்த மூலதனத்தில் அதிகப்படியான ஆட்களுக்கு வேலை கொடுக்கும் பனியன் தொழிலை ஊக்குவிக்க அதற்கு ஒரு முனை விற்பனை வரி விதித்தால் சரியாக இருக்கும் என்பது பலருடைய அபிப்பிராயமாக இருப்பதால், அதை ஏற்றுக்கொள்வதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது ஏற்கனவே பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அது மட்டுமல்லாமல், அவர்கள் வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்வதிலே இருக்கும் சில சிக்கல்களை நீக்கி மொத்தமாக காஸ்ட் அகவுண்ட்ஸ் மட்டும் வைத்துக் கொண்டால்கூடப் போதும் என்று சில விதிமுறை இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது.

### *Pre-industrial training for repatriates*

401—*Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the details of the pre-industrial training course offered to repa'riates from other countries ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் தாயகம் திரும்பிய சிறுவர்கள் குறைந்த கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்து, தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்து பயிற்சி பெற விரும்பினால், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 40 பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அவர்கள் தங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்து விடுதிகளிலும் பிற உறைவிடங்களிலும் வசித்து வந்தால் தான் அப் பயிற்சி உதவிப் பணத்தைப் பெறுவர். மேலும் அவர்களது பெற்றோர்களின் வருமானம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-க்கு மேற்பட்டிருக்கக் கூடாது. பயிற்சி பெறும் சிறுவர்களின் பெற்றோருடைய வருமானம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-க்கு மேற்படாதிருப்பின், அச் சிறுவர் ஒவ்வொருவருக்கும் பயிற்சி முறை ஒன்றுக்கு ரூ. 30 புத்தக மானியமும் வழங்கப்படும். இப் பயிற்சியின் கால அளவு 3 திங்கள் என்று முதற்கண் முடிவு செய்யப்பட்டிருந்தது. செங்கற்பட்டு மாவட்டம், கும்மிடிபூண்டியில் 2—4—1968 முதல் அது நடத்தப்பட்டது. இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு கும்மிடிபூண்டி சிறப்புத் துணைக் கலெக்டரிடம் ஒப்படைக்கப்பட்டது. பன்னிரண்டு மாணவர் பயிற்சி பெற்றனர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஏற்கனவே பதில் சொல்லி யிருக்கிறேன். 128 குடும்பங்களுக்கு 80 ரூபாயும், 110 குடும்பங்களுக்குத் துணிமணியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடிசைகள் பாதிக்கப்படவில்லை. மீதி 109 குடும்பங்கள் எந்த விதமான உதவிக்கும் யோக்கியதாம் சங்களைப் பெருததால் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. உறுப்பி னர் அவர்களுடைய இந்தக் கேள்விக்கு அவசியம் ஏற்படவில்லை.

**திரு. அ. மாரிமுத்து:** மாநில மாவட்டத் தலைநகரிலே ஏற்படும் தீ விபத்துக்களுக்குப் பஞ்சாயத்து யூனியன்களிடம் இருந்து நிதியைக் கேட்டுப் பெற்று வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அதைப் போன்று கிராமப் புறங்களில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏன் உதவி செய்யப்படுவதில்லை?

(பதில் இல்லை).

THIRU K. VINAYAKAM: Is it not a fact that the number of fire accidents have been on the increase after the present party came into power. How do these figures compare with the pre-D.M.K. Ministry ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதற்குரிய காரணம் அரசாங்கத்திற்குத் தெரிய வில்லை. மாண்புமிகு உறுப்பினர்-அவர்களுக்கு அந்தக் காரணம் தெரிந் திருந்தால் அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் தடுப்பு நடவடிக்கை கள் எடுக்க வசதியாக இருக்கும்.

*413—*Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether any relief has been given by the Government to the villagers of Kottangadu in Udangudi Panchayat in Tiruchendur taluk in Tirunelveli district who have lost their houses and belongings in the fire accident in the month of July 1968 ; and

(*b*) If so, the particulars thereof ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ஆம்.

(இ) இத்தீவிபத்திற்குள்ளான 105 பேர் தங்கள் வீடுகளை மீண்டும் கட்டிக்கொள்வதற்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 60 வீதம் ரூ. 6,300 ரொக்க மானியமும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 20 வீதம் ரூ. 2,100 உடை மானியமும் வழங்கப்பட்டன.

**திரு. டி. மார்டின்:** நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலூகாவில் பனை ஓலைகளால் வேய்ந்த கூரைகள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, இந்தப் பகுதியில் தீ பிடித்த நேரத்தில் 40 மைல் தூரத்தில் இருந்து அதாவது தூத்துக்குடியில் இருந்து ஃபயர் சர்வீஸ் ஆட்கள் வந்து தீயை அணைக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆகவே, திருச்செந்தூரிலோ, உடன்குடியிலோ அல்லது திசையன்விளையிலோ ஒரு ஃபயர் பிரிகேட் ஆபீசைத் திறக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வியாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியில் இருக்கும் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யலாம்.

**திரு. சோ. அழகர்சாமி:** சமீபத்தில் சென்னையிலே கிருஷ்ணாம்பேட்டை பகுதியிலே தீ விபத்து ஏற்பட்ட நேரத்திலே ஒவ்வொரு குடும்பத்திற்கும் 200 ரூபாய் கொடுத்ததோடு 80 ரூபாய் வீடு கட்டுவதற்கும் கொடுக்கப் பட்டது. மற்ற இடங்களுக்கும் அதேமாதிரி உதவி கொடுக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 200 ரூபாய் வேறு, 80 ரூபாய் வேறு என்று கொடுக்கவில்லை. மொத்தமாக 200 ரூபாய் கொடுக்கப்பட்ட தாக என்னுடைய நினைவு. அந்தந்த இடங்களில் ஏற்படுகின்ற தீ விபத் துக்களின் கோரத் தன்மைக்கு ஏற்ப, மற்ற நிலைமைகளுக்கும் ஏற்ப உதவிகள் செய்யப்படுகின்றன. அந்தப் பகுதி முஸ்லீம் மக்கள் வாழு கின்ற பகுதி. அரசாங்கமும் வீடுகள் கட்டி அவர்களும் குடிசைகள் எழுப்பும் நிலைமை இருக்கக்கூடாது என்றுதான் அந்த உதவித் தொகை கொடுக்கப்பட்டது.

THIRU B. VENKATASWAMY: Government is giving for the fire victims Rs. 80 The amount is insufficient to reconstruct the hut. Will the Government think of supplying bamboos and timber to these people to reconstruct their houses ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பழைய சர்க்கார் இதையே கூடக் கொடுக்கவில்லை. இப்போது 80 ரூபாய் கொடுக்கிறோம். முன்பு இருந்த சர்க்கார் 40 ரூபாய்தான் கொடுத்து வந்தது. அந்த அளவுக்கு உதவி செய்வதில் முன்னேறியிருக்கிறோம். மற்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பது என்றால் அதெல்லாம் வசதிகளுக்கேற்ப, நிலைமைகளுக் கேற்ப கவனிக்கப்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** நமது மாநிலத்திலே ஓலை வீடுகள்தான் அதிகமாக இருக்கின்றன. அதனால் அடிக்கடி தீ விபத்தால் பாதகம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. தீ பிடித்து விட்டால் அதற்குச் சரியான அளவுக்கு ஈட்டுத் தொகை கொடுக்க முடியவில்லை என்பதை மனதில்கொண்டு கூரை வீடுகளுக்கு இன்ஷூரன்ஸ் திட்டத் தைக் கொண்டுவர அரசாங்கம் உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மிகப் பெரிய சமுதாயப் பிரச்சனைகளுக்குக் கேள்வி நேரத்திலேயே பரிகாரம் தேடுமாறு மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். உணவு, உடை, வீடு இந்த மூன்றும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இருக்க வேண்டும், சுகாதாரத்தோடு வாழ வேண்டிய அளவுக்கு வீடு அமையவேண்டு மென்ற சமதர்மத் திட்டத்தை இந்த அரசு கொண்டிருக்கிறது. இது போகப் போக நிலைமைகளுக்கேற்ப சமுதாயத்தில் ஏற்படுத்தித் தீர வேண்டிய ஒன்று.

**திரு. டி. மார்டின் :** இந்த உடன்குடித் தொகுதியில் தீ விபத்துக்கு ஆளானவர்களில் பெரும்பாலோர் பனைமரத் தொழிலாளர்கள். அவர் கள் கருப்புக்கட்டி உற்பத்திசெய்து வைத்திருந்தது எல்லாம் அந்த தீ விபத்திலே சேதமாகிவிட்ட காரணத்தால் அவர்களுக்குக் கொஞ்சம் அதிக அளவுக்கு உதவிசெய்ய அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊர் என்ற காரணத்திற்காக அரசாங்கம் பாரபட்சம் காட்ட முடியாது. அப்படிக் காட்டினால் மற்ற உறுப்பினர்களுடைய தொகு தியைப் பொறுத்து பாரபட்சம் காட்டியதான பழி அரசாங்கத்துக்கு வந்து விடும்.

*414—*Q.* THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether tiles for the construction of houses for the fire victims have been donated to Government by Madras City firms ; and

(*b*) if so, the details thereof ?

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஊட்டியிலே சட்டப் பேரவைக் கூட்ட வேண்டுமென்று ஒரு சாரார் வற்புறுத்தி வந்தார்களா? ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலே கூட்டலாம் என்று சொன்னால், ஊட்டியிலே கூட்டுவார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் விரிக்கின்ற வலை என்று சொல்வது உண்மையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது வலையாக இருந்தால் அதில் விழாத சாமர்த்தியம் நமக்கு இருக்கிறது.

**திரு ஏ. பாலசுப்பிரமணியன்: :** என் கட்சியைச் சேர்ந்தவர்கள் உதகையிலே கூடவேண்டுமென்று சொல்லவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற செலவை அதிகப்படுத்துகின்ற இந்த யோசனைக்கு நாங்கள் உடன்பாடல்ல.

**திரு. கே. போஜன் :** நேரம் ஆக ஆக உறுப்பினர்கள் இருப்பதில்லை எனவே நாட்களை அதிகமாக்கினால் சட்டசபை உறுப்பினர்கள் அதிகமாக வரமாட்டார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற நேரத்தை ஒரு மணி வரை வைத்துக்கொண்டு நாட்களை அதிகமாக வைக்கலாம் என்று கருதுகிறேன். இதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த யோசனையை வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** சட்டசபைக் கூட்டம் நீண்டநாட்கள் நடந்தால் அதிகமாக உறுப்பினர்கள் கலந்துகொள்ளாமல் இருப்பதனால் விட்டுவிட்டு இடை இடையே நடத்தினால் அதிக உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். ஆகையால் அப்படி நடத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பாராளுமன்றக் கூட்டம் மூன்று மாதங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர்:** தலைவர் அவர்களே, உதகையிலே சட்டசபைக் கூட்டம் நடந்தபோது என்னுடைய கட்சியைச் சார்ந்த சட்டசபை தி. மு. க. உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை என்பது உண்மையா ? அதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்போதிருந்த தி. மு. க. உறுப்பினர் 15 பேர்களும் அந்தக் கூட்டத் தொடரிலே கலந்து கொள்ளவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, சட்டசபை 9 மணிக்கு ஆரம்பிக்கிற காரணத்தினாலும், இடைவேளை சாப்பாட்டிற்குக் கலையாமல் இருக்கிற காரணத்தினாலும் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்த நேரத்தை மாற்றி அமைத்துப் பிற்பகல் 6, 7, 8 மணி வரை வைத்துக்கொள்வதற்கு முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. பிற்பகல் கூடுவதுபற்றிச் சொன்னார்கள். பிற்பகலில் பெரும்பாலும் மேலவைக் கூட்டம் இருக்கிறது. இன்னொன்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. பட்டினிப் போடுவதாகச் சொன்னார்கள். அவர்கள் இடையிலேபோய் சாப்பிட்டு விட்டு வருவதை நான் பார்த்துகொண்டுதான் இருக்கிறேன்.



## *Fire accidents*

*412—*Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether a disastrous fire broke out on 14th of July 1968 on Varaganeri, a suburb of Tiruchirappalli ;

(*b*) whether due to this fire, six persons were charred to death and six others suffered serious burns ;

(*c*) the number of huts and homes gutted; and

(*d*) the total loss sustained by the fire ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:**

(அ) ஆம்.

(இ) 4 பெண்கள், 3 குழந்தைகள்.

(உ) 347.

(எ) 2 லட்சம்.

**திரு. கே. விநாயகம் :** தீ விபத்து ஏற்படுவதற்குக் காரணம் என்ன? இதற்குக் காரணமாக இருந்தவர்கள், யாராவது கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா? இனிமேலாவது தீ பிடிக்காமல் பார்த்துக் கொள்ள முயற்சி எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** விபத்து ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. தீ விபத்துகள் ஏற்படாமல் இருப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அற்புதமான யோசனை சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள அரசு தயாராய் இருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா:** திருச்சியிலே தீ விபத்திலே உயிர் இழந்தவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டதா ? தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 80 ரூபாய் கொடுப்பதை 100 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தீ விபத்திலே பாதிக்கப்பட்ட 128 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 80 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது. 110 குடும்பங்களுக்கு துணி மணிகளுக்காக 20 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது. உயிர் இழந்தவர்களுக்குத் பிரைம் மினிஸ்டர் பண்டிலிருந்து கொடுக்கலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இதை கவர்னர் அவர்கள் கொடுக்கவேண்டும். கவர்னர் அவர்கள் கொடுப்பது வரவேற்கத்தக்கதுதான் என்று கவர்னர் அவர்களுடைய பிரைவேட் செகரடரிக்குத் தெரிவிக்கப்பட்டது.

**திரு. டி. மார்டின்:** விஞ்ஞான மேதை திரு ஜி. டி. நாயுடு அவர்கள் குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டத்தை அரசுக்குக் கொடுத்திருக்கிறாரா? அந்தத் திட்டத்தின்படி வராகனேரி பகுதியில் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு மார்டின் அவர்கள் எப்போதும் மூலக் கேள்வியை விட்டுவிட்டே துணைக் கேள்விகள் கேட்கிறார்கள்.

**THIRU T. MARTIN : I am asking only with reference to this Varaganeri village.**

விஞ்ஞான மேதை ஜி. டி. நாயுடு அவர்கள் குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டத்தை அரசுக்குக் கொடுத்திருக்கிறார்களா? அந்தத் திட்டத்தை அரசு ஏற்று திருச்சிராப்பள்ளியிலே தீ விபத்து நடந்த இடத்திலே குறைந்த செலவில் வீடு கட்ட இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) சென்னை ஸ்ரீ கிருஷ்ணா ஓடுகள், மட்பாண்டப் பொருள்கள் நிறுவனம் 60,500 ஓடுகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

### மதுரை நகரில் குடி நீர் நெருக்கடி.

* குறுகிய கால வினா எண் 3.—**திருமதி. கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் என்றுமில்லாத வகையில் குடி தண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், நெருக்கடியைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

மு.ப. 9–30 (இ) மதுரையில் கடும் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதென்றும், ஆழ்துளைக் கிணறு விசையேற்றங்களுக்கு (deep borewell pumps) வகைசெய்வதற்கும், லாரிகளை வாங்குவதற்கும் அரசிடமிருந்து ரூ. 50 லட்சம் கடன்பெற நகராட்சிமன்றம் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளதென்றும், குறிப்பிட்டு மதுரை நகராட்சி மன்றத்தின் தலைவர் மாண்புமிகு உறுப்பினருக்கு அனுப்பிய தந்தியின் நகல் ஒன்றை அவர் அனுப்பியுள்ளார். விரிவான கடிதம் ஒன்று அனுப்பப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தகைய கடிதம் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. நீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டங்கள் இரண்டினை மதுரை நகராட்சிமன்றம் மேற்கொள்வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவற்றில் ஒரு திட்டத்திற்கு ரூ. 89.3 லட்சம் செலவாகும். இத்திட்டம் மிகவும் முன்னேறிய நிலையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மற்றொரு திட்டத்திற்கு ரூ. 197 லட்சம் செலவாகுமென முன்னர் மதிப்பிடப்பட்டது. சில இடர்பாடுகளினால் இத்திட்டம் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. நகராட்சியிடமிருந்து விரிவான கடிதம் வரப்பெற்றவுடன் இத்திட்டத்திற்கு முதலுரிமை அளிக்கப்பட்டு, அதைக்குறித்து மேலும் ஆய்வு செய்யப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, தற்பொழுது ஏற்பட்டிருக்கும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உடனடியாக வைகை அணைக்கட்டிலேயிருந்தோ அல்லது பெரியாறு அணைக்கட்டிலிருந்தோ தண்ணீர் திறந்துவிட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இரண்டாவதாகத் தீட்டப்பட்டத் திட்டத்திலிருந்து பேரணை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்குப் பதிலாக வைகை அணையிலிருந்து கொண்டுவருவதற்கான ஆய்வுகளையெல்லாம் தனியாக ஒரு பப்ளிக் ஹெல்த் இன்ஜினியரிங் சப்-டிவிஷன் மூலமாக ஆராய்ச்சிசெய்து, அது முடிந்தபின் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அதனால் சீக்கிரத்திலேயே இப்பொழுது ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க முடியுமென்று அரசாங்கம் நம்புகிறது.

**திரு. ஏ. முனியாண்டி :** தற்போது ஏற்பட்டிருக்கும் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு மஞ்சளாறு ஊபுரித் தண்ணீரை மதுரைக்குக் கொண்டுவர ஆலோசனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எந்த வகையிலே எந்தப்படியான திட்டத்தின்மூலம் விரைவில் மதுரையிலே ஏற்பட்டிருக்கும் தண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க முடியுமென்று தந்தியைத் தொடர்ந்து கடிதம் எழுதுவதாக மதுரை நகராட்சித் தலைவர் அவர்கள் தந்தியிலேயே தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் விரிவான கடிதம் வரவில்லை. எனவே, நகராட்சி எந்தவிதமான எண்ணம் வைத்திருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு கனம் உறுப்பினர் அவர்களின் கருத்துப்படி வேறு பல ஆறுகளிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருகின்ற முறைகளை அரசாங்கம் ஆலோசிக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள், 415, 416, 417 ஆகிய மூன்றையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்

### சித்த வைத்திய முறை.

*415 வினா : **திரு. வை. சுவாமிநாதன் :** } **புலவர். பொ. பொன்னம்பலம் :** } மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவைத் தொடங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டில் தொடங்குவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) உண்டு.

(இ) இந்த ஆண்டிலேயே திருச்சிராப்பள்ளியில் தொடங்கியாயிற்று 1969–70 ஆண்டில் மேலும் ஐந்து மாவட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

*416 வினா : **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

சித்த வைத்தியத்தின் சிறப்பினை மக்கள் உணரும்பொருட்டு விளம்பர அதிகாரிகளை நியமிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

*417—*Q.* **THIRU K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government have opened a sidha dispensary in the premises of the Tamil Nadu Secretariat, and

(*b*) if so, the purpose that would be served ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) சித்த வைத்திய முறைப்படி சிகிச்சைபெற விரும்புபவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துதருவதற்காக.

**புலவர். பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மஞ்சட்காமாலை, க்ஷயரோகம், குஷ்டம், புற்று போன்ற கடுமையான நோய்களைச் சித்த வைத்திய முறைகளின்மூலம் போக்க முடியும் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவ்வாறாயின் அம்மருத்துவப் பயிற்சி பெற்ற ஒருவரை அந்த முறைகளுக்குத் தனி நெறியாளராக அமைத்துத் தனி ஆய்வுக்கூடம் ஒன்றைத் தமிழகத்தில் உருவாக்கிச் செம்மையுடன் பேணிக்காக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** சித்த மருத்துவத்தின் நல்ல சிறப்புக்களையெல்லாம் அறிந்துதான், அதனால் பல நோய்களுக்கு நல்ல சிகிச்சை அளிக்க முடியுமென்று நம்பிக்கையிருப்பதால்தான் அரசாங்கம் சித்த வைத்திய முறையை ஏற்றுக்கொண்டு, கல்லூரிகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது என்பதைக் கனம் உறுப்பினரவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவை யோசிக்கப்படும்.

**திரு. பெ. மலேச்சாமி :** தலைவரவர்களே, குடும்ப நலத்திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றச் சித்த வைத்திய முறையில் தெளிவாகச் செய்ய முடியுமென்று சிலர் கருத்து தெரிவித்திருக்கிருர்கள். அது பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசு பரிசீலனை செய்யும்.

THIRU K. VINAYAKAM : Is the Siddha dispensary in the Secretariat building patronised by our employees? What is the attendance like ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த மருத்துவமனையில், தலைமைச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ மனையில் தினம் 130 பேர்கள் சிகிச்சை பெறுகிருர்கள். நாளுக்கு நாள் இந்தஎண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருவதால் இங்கு அனைவரும் அக்கறை காட்டுகிருர்கள், அவர்களுக்கு நம்பிக்கையிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

**திரு. ஹாஜி. ம. மு. பீர் முஹமது :** பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சித்த வைத்தியத்திற்காக 300-க்கும் மேற்பட்டவர்கள் வருகிருர்கள். சித்த வைத்தியத்திஞல் பயன் அதிகமாயிருக்கிறது. சித்த வைத்தியத்தின்மீது மக்கள் மத்தியில் நம்பிக்கையிருக்கிறது. எனவே, இரண்டு மருத்துவர்கள் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் ஒருவரைச் சித்த வைத்திய யூஞனி ஆயுர்வேதிக் பட்டம் பெற்றவர்களைப்போட அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்போதும் இருக்கிருர்கள், ஆனுல், மேலும் ஆயுர்வேத யூஞனி மருத்துவத்திற்கு மாணவர்களே கிடைக்கவில்லை என்று நேற்றுக் கூட இந்த மானியத்தின் மீது நடந்த விவாதத்தின் போது குறிப்பிட்டேன். சித்த வைத்தியத்தை விரும்பிப் படிப்பதற்குமாணவர்கள் வருகிருர்கள். அதற்கான ஏற்பாடுகளுக்குத்தான் பாளையங்கோட்டையிலேகூட வகை செய்யப்பட்டிருக்கிறது.

**ஆஸ்டின்பட்டி காச நோய் மருத்துவ மனை.**

418 * விஞ : **திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரையை அடுத்த ஆஸ்டின்பட்டி க்ஷயரோக ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிற்குண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது மேற்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**

(அ) ஆம்.

(இ) இத் திட்டம் இப்பொழுது மருத்துவக் கல்வி நெறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எஸ். அக்னிராஜு :** தலைவரவர்களே, மதுரை தத்தனேரியில் உள்ள தொத்துநோய் வைத்தியசாலையை ஆஸ்டின்பட்டிக்குக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணம் இருந்தது, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** ஆஸ்டின்பட்டியில் இருக்கின்ற க்ஷயரோக மருத்துவமனை குறித்துத்தான் இங்கே கனம் உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டிருக்கிருர்கள். ஆகவே, அந்த மருத்துவ மனையை இன்னும் விரிவுபடுத்தும்வகையில், அதிகப்படியான படுக்கை வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், 102, 162 படுக்கைகளைக் கொண்ட இரண்டு அடிஷனல் வார்டுகளுக்குப் புதுக் கட்டடங்களைக் சட்டுவிக்க வேண்டுமென்றுதான் செயற்குறிப்பு இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் கோரும் வேறு ஊரைப்பற்றி எந்தக் குறிப்பும் தற்போது என்னிடம் இருக்கவில்லை.

*Refresher course in Library Science.*

*419. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) the reasons for conducting a Refresher course in Library Science in the Connemara Public Library ; and

(*b*) whether the Librarian of the said Library is paid any honorarium for conducting the course and, if so, why ?

**மாண்புமிகு: திரு. செ. மாதவன் :** (அ) இம் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நூலகங்களில், புத்தகங்களை வகைப்படுத்தல், அட்டவணையிடுதல் ,முறைப்படுத்தல், படிக்கக் கொடுத்தல் முதலியவற்றின் நடைமுறைகளைச் சீரமைக்கவும் மாவட்ட நூலகக் குழுக்களின் கீழ்வரும் நூலகங்களில் நூலக வேலைமுறைகளின் நிலைமையைப் பொதுவாக மேம்படுத்தவும் 1-ம் நிலை II-ம் நிலை நூலகக் காப்பாளர்களுக்குப் பொது நூலக வேலைமுறைகளில் நடைமுறைப் பயிற்சியளிக்கும்பொருட்டு, கன்னிமாரா பொதுநூலகத்தில் நூலகக் கலையில் நினைவூட்டுவகுப்பு ஒன்று நடத்தக் கருதப்பட்டுள்ளது,

(இ) இல்லை. இவ்வகுப்பு நடத்த நூலகக் காப்பாளருக்கு மதிப்பூதியம் எதுவும் கொடுப்பதில்லை.

DR. H. V. HANDE : Is it a fact that the University itself offers a good course in Library Science and, if so, will not teaching the refresher course consume a good deal of the time of the Librarian of the Connemara Library and prevent him from doing his normal duties ? In view of this difficulty, will this Government think of appointing somebody else so that the Librarian will be able to look after library work and the work may not suffer for want of supervision ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, பல்கலைக்கழகத்திலும் Diploma in Library Science. பயிற்சி கொடுக்கிருர்கள். இது புத்தகங்களை வகைப்படுத்தல், அடுக்கி வைத்தல் முறைகளைப் பற்றி Grade II Librarian தேவை என்று ஒரு குழு பரிந்துரைருஜீசிக்கிறது. அதைக்கருதி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனுல் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. லைப்ரரியனுக்கு வேலைபளு இருக்காது என்று முடிவு செய்கிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** தலைவரவர்களே, இன்று நூலகங்களெல்லாம் கல்வியொடு இணைந்திருக்கும் நிலைமைகளைப் பார்க்கிருேம். ஆகவே, கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்களைப் பகுதிநேர ஊழியர்களாக, லைப்ரரியஞக அமைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பரிசிலிக்கவில்லை.

THIRU K. VINAYAKAM: Is any fee charged from the Librarians who come for this refresher course ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** தேவையான படிகள் கொடுக்கப்படுகின்றன.

DR. H. V. HANDE: The Minister said that the course has not yet commenced. What is the programme that the Government have for this course ? Do they intend to have the course throughout the year or during a part of the year ? Will the Minister give us some more details about the intended course ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** இந்த Refresher course மிக்குறுகிய காலத்தில், இரண்டு வாரத்தில் நடத்தப்படுகிறது. இதனால் வேலைப்பளு ஏற்பட்டு விடாது. பயிற்சி பெறுபவர்களுக்கு என்னென்ன படிகள் கொடுக்க வேண்டுமோ அதையெல்லாம் கொடுக்கிறோம்.

**திரு. அ. மாரிமுத்து :** தலைவரவர்களே, கிளை நூல்கங்களில் புத்தகங்களில் மேல் உள்ள அட்டைகள் இல்லாமல் கிழிந்துபோய் படிப்பதற்கு வசதியற்ற நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு ஆவன செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மேல் அட்டையிலே படிக்க வேண்டியது எதுவும் இருக்காது. புத்தகத்தில் உள்ளேதான் இருக்கும். அட்டைகள் கிழிந்துபோனால் பைண்ட் செய்து அடுக்கி வைக்க இப்போது வசதிகள் இருக்கின்றன.

### காஞ்சிபுரத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி

*420—வினா : **திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சீபுரத்தில் உள்ள பாலிமேடு என்கிற பல்லமேட்டில் இந்த ஆண்டில் (1968) தொல்பொருள் ஆராய்ச்சி மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: There are a number of areas in our State where the Archaeological Survey Department has not gone. For example, a survey party went to Hosur taluk in Dharmapuri district in 1911. But, for the last forty-five years, the party has not gone there. I have come across nearly one hundred stone inscriptions. Dharmapuri district stands in a strategic position between Mysore tableland and the plains below. A reading of the stone inscriptions may shed light on a number of facts relating, to South Indian History. Will the Hon. Minister kindly give instructions to the Archaeological Department to visit these places early ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தர்மபுரி மாவட்டத்தைப்பற்றி என்னிடத்திலே தகவல் இல்லை. ஆர்க்கியலாஜிக்கல் இலாகா ஒவ்வொரு மாவட்டமாக குறிப்பிட்ட பகுதிகளை எடுத்துக்கொண்டு இப்படிப்பட்ட புத்தகங்கள்கூடத் தயார் செய்கிறார்கள். நேற்றுக் கூட என்னிடத்தில் ஒரு புத்தகம் கொடுத்தார்கள். தஞ்சை மாவட்டத்திலே சோழர்கள்



ஆட்சிக் காலத்திலே கிடைத்த கல்வெட்டுக்களை எல்லாம் குறித்து ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் தர்மபுரி மாவட்டத்தைப்பற்றிக் குறிப்புகள் அனுப்பினால் புத்தகமாகத் தயாரிக்கலாம்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the famous Pallavas ruled with Conjeevaram as their capital and whereas the plaee under referency, Palimedu near Conjeevaram would contain some important things from the point of view of archacology, will the Government at least instruct the Archaeological Department to undertake the survey of that place ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்கூட இதைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பல்லவமேடு என்று ஒன்று பெரிய மேடாக இருக்கிறது. அதிலே ஏதாவது சரித்திர ஆதாரம் கிடைக்கும் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினருடைய கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது.

### குழந்தைகள் மனவியல் பள்ளிகள்

*421 வினா :—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

குழந்தைகள் மனவியல் நலப் பள்ளி மாவட்டந்தோறும் அமைப்பது பற்றித் திட்டம் ஏதாவது சர்க்காரின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

### *Shortage of cycle tyres and tubes*

*422—*Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether shortage of the cycle tyres and tubes has been reported in the market in the City of Madras recently ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சைக்கிள் டயர், ட்யூப்புகள் தட்டுப்பாடு இருப்பதாக அறிவிக்கப்படவில்லை. விசாரித்ததில் சென்னை மாநகரக் கடைகளில் அவை தாராளமாக விற்பனைக்குக் கிடைப்பதாகத் தெரிகிறது.

**திரு. ப. மகாதேவன் :** அவைத் தலைவர் அவர்களே, சைக்கிள் ட்யூப் டயர்ஸ் ஷார்ட்டேஜ் இருப்பது தெரிந்திருக்கிற காரணத்தினாலே குமரி மாவட்டத்திலே இரப்பர் பிளாண்டேஷன்ஸ் நிறைய இருக்கின்றன அங்கே இரப்பர் நிறையக் கிடைப்பதால் அங்கு ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** குறிப்பிட்ட, இந்த டன்லப் கம்பெனி டயருக்குத்தான் அதிகம் கிராக்கி இருக்கிறது என்று சொல்கிறார்கள். டன்லப் கம்பெனியிலே அவர்களுடைய தொழிற்சாலையை இன்னும் அதிகரித்து உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டம் வைத்திருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள். புதிதாக இப்படிப்பட்ட தொழிற்சாலை திறக்க யாராவது முன்வந்தால் அரசாங்கம் உதவி செய்ய முன்வரும்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** பல இலட்சக்கணக்கானவர்கள் உபயோகிக்கும் இந்த மிதி வண்டிகளின் டயர், ட்யூப்கள் அடிக்கடி பஞ்சராகி விடுகின்றன. கொஞ்சம் பருமனாக உள்ளவர்கள் ஏறினாலே பஞ்சராகி விடுகின்றன. அவைகளினுடைய தரம் முன்போல் இல்லை. தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதிக 'வெயிட்' இருப்பதாலே பஞ்சர் ஆகாது என்று நினைக்கிறேன். டயர், ட்யூப்கள் ஒவ்வொரு கம்பெனியிலும் தயாரிக்கப்படுகின்றன. சில டயர், ட்யூப்களுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. சில டயர், ட்யூப்களை தரம் குறைந்ததாக மக்கள் கருதினால் நாம் அதை பரிசீலிக்கலாம்.

**திரு. க. கோமதி சங்கரதீட்சிதர் :** சபாநாயகர் அவர்களே, மிதி வண்டிகளை ஏழை மக்கள் மிகவும் உபயோகப்படுத்துவதனால் அவைகளுக்கு டயர், ட்யூப்கள் கிடைக்காமல், அவர்கள் கஷ்டப்படுவதனால் அவர்களுக்கு கிடைப்பதற்கு, இந்த நெருக்கடியை நீக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாக நான் ஒப்புக்கொள்ளவில்லை.

**திரு. ஏ. எம். இ. ராஜா :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது டன்லப் கம்பெனி தயார் செய்கின்ற டயர், ட்யூப்களுக்கு கிராக்கி அதிகம் இருக்கிறது என்று கூறினார்கள். அதேபோல் மற்ற டயர், ட்யூப்களைத் தயாரிப்பவர்களும் இந்த டன்லப் கம்பெனி எந்த அளவுக்கு தயார் செய்கிறார்களோ, அந்த அளவுக்குத் தயார் செய்ய வேண்டுமென்று அரசு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் ஏதும் நடவடிக்கை எடுக்க முடியாது. அவர்களாகவே வியாபாரப் போட்டியில் அப்படிப்பட்ட முறைகளை எல்லாம் கடைப்பிடிப்பார்கள்.

### *Export of tiles*

*423—*Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) whether a large quantity of tiles manufactured in this State are being exported to the Far Eastern countries ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை. சென்னையிலுள்ள ஓடுகள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றுமட்டுமே ஓடுகளைச் சொற்ப அளவுகளில் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்து வந்தது.

(இ) ரூ. 41,747·50 மொத்த மதிப்புள்ள 1,64,500 மேல் ஓடுகளும், 3,950 மோட்டு ஓடுகளும் 1967-68-ம் ஆண்டில் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஓடு, செங்கல் சூளைகளுக்கு முன்பெல்லாம் 5,000, 10,000 என்கின்ற அளவில் கடன் வசதி இருந்தது. இப்பொழுது இருக்கிற முறைப்படி ஒரு இலட்சத்திற்குக் குறைவாக இப்படிப்பட்ட ஓடு, செங்கல் சூளைகளுக்குக் கடன் கொடுக்காததனாலே, தொகையைக் குறைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தகவல் இல்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த ஓடுகளுடைய விலை முன்பு ரூ. 23 ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 33-க்கு விற்கிறது. பற்றுக்குறை காரணமாக அதன் விலை ஏறி இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே, இதை ஏற்றுமதி செய்யாமல் இருக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏற்றுமதி குறைந்த அளவுக்குத்தான் இருக்கிறது. அதனால் எந்தவிதமான பாதகமும் ஏற்படாது.



### துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் நியமனம்.

*424 வினா : **திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியாரால் நடத்தப்படும் துவக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரத்தை அந்தந்த மாவட்டக் கல்வி அதிகாரிகளிடம் அளிப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, சில தனியார் நடத்தும் பள்ளிகளில் நிர்வாகிகள் ஆரம்ப ஆசிரியர்களை நியமிக்கும் போது 'புரோ நோட்டுகள்' எழுதி வாங்கிக் கொண்டு நியமிக்கிறார்கள். சம்பளம் வாங்கியவுடன் சம்பளத்தில் ஒரு பகுதி நிர்வாகிகளுக்குப் போய், மீதிதான் அந்த ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது. ஆகவே, நிர்வாகிகளின் மூலம் சம்பளம் கொடுக்காமல், நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** அதுபற்றிக் குறிப்பிட்டு தகவல் அனுப்பினால் நாம் தவறுகளைக் கண்டுபிடிக்கலாம்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த தனியார் பள்ளிகளிலே வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் சர்க்கார் பள்ளிகளிலே வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும் பஞ்சப்படி போன்றவைகளிலே பெரிய தாரதம்மியம் இருக்கிறது. இவை இரண்டையும் ஒன்றாக அமுல்படுத்த சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

### தொடக்கநிலை ஆசிரியர்கள்

*425 வினா : **திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :**
**திரு. கரு. சீமைச்சாமி :** } மாண்பு மிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கல்வியினுடைய தர உயர்வு கருதி அனைத்து ஹயர்கிரேடு ஆசிரியர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சி ஆங்கிலத்திற்கு மட்டிலும் அமைத்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்ற வேண்டுமென்று 27-12-1964, 1.-8-1966, 8-3-1967 ஆகிய தேதிகளில் சர்க்காருக்கு அனுப்பப் பட்டுள்ள ஆசிரியர் கூட்டணி வேண்டுகோள் சர்க்காரின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, இந்த ஹையர் கிரேட் பயிற்சியை அறவே எடுத்து விடுகின்ற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஹையர் கிரேட் ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் 10,000-க்கு மேல் இருந்தார்கள். ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டு தோறும் திட்டமிட்டு அதன் மூலம் அவர்கள் இந்த செக்கண்டரி கிரேட் இடத்தை பிடித்து விடுவார்கள். இன்னும் ஆண்டுகள் செல்லச்செல்ல ஹையர் கிரேட் ஆசிரியர்கள் தேவை குறையும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

[1969 மார்ச் 22

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக வேண்டி இம்மாதிரி ஹையர் கிரேட் 'ஷார்ட் கோர்ஸ்' கொடுக்கப்படுமா, அதை அரசு கவனிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது ஹையர் கிரேட் ஆசிரியர்கள் வேலை பார்க்க வேண்டிய இடத்தில் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் பொதுவாக ஹயர்கிரேட், செக்கண்டரி கிரேட் என்று இல்லாமல் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு அவர்கள் அந்த வேலையை ஏற்றுக்கொண்டதற்கு பின்னாலே கூட ஒரு பயிற்சி கொடுத்தால் நல்லது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு, சில மாவட்டங்களிலே அதை ஆரம்பித்திருக்கிறோம். மாநிலம் முழுவதும் அப்படிப்பட்ட இன்-ஸர்வீஸ் டிரெயினிங்" கொடுக்க அரசாங்கம் யோசித்து வருகிறது.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஹையர் கிரேட் இடத்திலே வேலை செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குள்ள சம்பளத்தை ஒரே நிலையிலே ஹையர் கிரேட், செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் இரு சாராருக்கும் ஒரே அடிப்படையில் வைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஹையர் கிரேட் படித்தால் அந்தப் படிப்புக்கு ஏற்ற சம்பளம் தான் பெற வேண்டும். ஆனால் செக்கண்டரி கிரேட் படித்தவர்கள் ஹையர் கிரேடிலே வேலை பார்க்கிறார்கள் என்ற குறை இருந்த காரணத்தால் நாம் ஒரு ..பேஸ்டு புரோகிராமாகத் திட்டமிட்டு, ஆண்டுதோறும் அப்படிப்பட்ட வேலையையும் கொடுத்து சம்பளத்தையும் உயர்த்துகிறோம். இன்னும் சில காலத்திலே சரியாகிவிடும் என்று நம்புகிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமான ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்று வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்களே, அதை யொட்டி, அந்த ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 'செலக்ஷன்-டிரெய்னிங்' நடத்த அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நமக்கு எவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமென்று நாம் ஆண்டு தோறும் திட்டம் இடுகின்றோம். ஐந்தாண்டுத் திட்டத்திலே அது கணிக்கப்படுகிறது. திட்டமிட்டவாறு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் இடம் ஒதுக்குகிறோம். இப்பொழுதே சில இடம் தரப்படுகிறது. இன்னும் தேவையையொட்டி அப்பொழுதைக்கப்பொழுது பரிசீலித்து எந்த எந்தப் பயிற்சியைக் குறைக்க வேண்டுமோ அவ்வப் பொழுது அவை குறைக்கப்படும்.

*426 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the higher grade teachers are paid an annual increment of Re. 1 as against Rs. 4 for the Secondary Grade Teachers ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

Dr. H. V. HANDE : Sir, has any representation been made to increase the annual increment of Re. 1 by more than one rupee at least two rupees,—and also what is the total number of higher grade elementary school teachers in our State and what is the extra amount that is going to be spent by the Government if they are to accede to the request of those teachers ? Have the Government worked out the figures and have the Government examined the whole matter ?



1969 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** யாரும் அதைப் பற்றிக் கோரிக்கை தந்திருப்பதாக என்னிடத்திலே தகவல் இல்லை. ஆனால் இதை நாமாக ஏற்படுத்தவில்லை. 1960-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட "பே கமிஷன்," இப்படி ஒரு முடிவு எடுத்தது. ஹையர் கிரேட் டீச்சர்ஸ், செக்கண்டரி கிரேட் டீச்சர்ஸ் ஒவ்வொருவருக்கும் என்ன 'பே ஸ்கேல்ஸ்' என்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கின்ற இன்கிரிமெண்டை நாம் கொடுத்து வருகிறோம். அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமானால் அடுத்த 'பே கமிஷன்' தான் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** இடைநிலைப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளைவிட ஆரம்பநிலைப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளைக் கட்டுப்படுத்தி படிப்புச் சொல்லிக்கொடுப்பது தான் மிகவும் சிரமமான காரியம். ஆகவே ரூ.1 என்பது மாற்றப்படுவதற்கான நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதையெல்லாம் பரிசீலனை செய்து 'பே கமிஷன்' சில காரணங்களையும் காட்டியிருக்கிறது. ஏன் அவர்களுக்கு ரூ. 1 இன்கிரிமெண்டு இருக்கவேண்டும். செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ஏன் ரூ. 4 இன்கிரிமெண்டு இருக்க வேண்டும் என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். அந்தக் காரணங்களை நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம். அதை மறு பரிசீலனை செய்வதென்றால் எல்லோருக்கும் சேர்த்துத் தான் பரிசீலனை செய்ய வேண்டும். தனிப்பட்ட முறையில் ஹயர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பற்றி மட்டும் பரிசீலனை செய்வது என்றால் நலமாக இருக்காது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்று சொல்வதற்கேற்ப சமுதாயத்தில் பிரதான பணியைச் செய்வதற்கான பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நமது அரசு ஒப்புக்கொண்டு, 'பே கமிஷன்' சிபார்சுகளை திருத்தி அமைப்பதற்கு, அவர்களுடைய சம்பள விகிதத்தை சீர்திருத்துவதற்கு, ஆசிரியர்கள் புதிய சமுதாயத்தை உருவாக்குகிறார்கள் என்ற அடிப்படையில், துரிதமாக அதை மாற்றி அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆசிரியர்கள் மீது அதிக பரிவு காட்ட வேண்டும், அவர்களுக்கு ஏராளமான வசதிகள் செய்து தரவேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஆசிரியர்களுக்கு மட்டும் 'பே கமிஷன்' சிபாரிசுகளை மறுபரிசீலனை செய்வதில் நாம் விதிவிலக்குத் தந்தால், மற்றவர்களும் அந்தக் கோரிக்கையை எழுப்புவார்கள். கட்டாய இலவசக் கல்வியை ஒரு வகையில் அமுல் நடத்திக் கொண்டு வருகிறோம். அதே சமயத்தில் வருமானம் குறைந்து, ஆசிரியர்களுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுக்க முடியாமல் நிதி வசதி பற்றாக் குறையை சந்தித்து வருகிறோம். ஆசிரியர்களுக்கு தனியாக 'வெல்பேர் பண்டு' என்று ஏற்பாடு செய்து, அதன் மூலம் வசதிகளைக் கொடுக்கலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

*Scholarship for Mauritius students.*

*427 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) whether the Government propose to offer scholarships for Mauritius students in this State ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) and (இ) மாரிசஸ் தீவுகளில் வசிக்கும் இந்தியர்களில், தமிழ் மொழி பேசும் மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக 1962-ம் ஆண்டில் ஒரு

திட்டம் வகுக்கப்பட்டது. அந்த மாணவர்கள் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பை இம்மாநிலத்தில் படிக்க அவர்களுக்கு வகை செய்வதே இதன் நோக்கமாகும். இத்திட்டம் 1963–64 முதற்கொண்டு செயலில் இருந்து வருகிறது. 1968–69 முதற்கொண்டுஇத் திட்டத்தின் கீழ் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுபவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த இரண்டு மாணவர்களுக்காக இந்த அரசாங்கம் செலவு செய்த தொகை எவ்வளவு என்பதை அறிவிக்கலாமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒரு மாதத்திற்கு ரூ. 150.

THIRU K. VINAYAKAM : For the students coming from Mauritius, are they admitted for any technical courses like M.B.B.S.; B.E., etc. ?

THE HON. THIRU S. MADHAVAN : Including professional colleges and post-graduate courses.

### வேம்பரளிக்கருகில் நீர்த்தேக்கம்.

***428 வினா: திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மேலூர் வட்டத்தில் வேம்பரளிக்கு அண்மையில் சிறிய நீர்த் தேக்கம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பினை அரசு வகுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரம் அவை முன் வைக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) மேலூர் வட்டம் புதூர் கிராமத்தின் வேம்பரளி சிற்றூருக்கு அண்மையிலுள்ள குடும்பி மேடு, சின்னகுண்டுக்கு இடையில் பாயும் ஓடையின் குறுக்கே குளம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு புலனாய்வு செய்யப்பட்டு அது குறித்த விவரமான வரைபடங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(இ) செயற்குறிப்பு இறுதி செய்யப்பட்ட பிறகே விவரங்கள் கிடைக்கு மாதலால், இவ்வினா இப்போது எழவில்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்தப் பகுதி புஞ்சை கள் நிறைந்த பகுதி. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், சுமார் 200 ஏக்கருக்கு மேலே பாசன வசதி பெறுகின்ற நிலங்களாக மாறும். ஆகவே அமைச்சர் அவர்கள் விரைவிலே இந்தத் திட்டத்தை அமுல் செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** ஏற்கெனவே நான் சொன்ன பதிலில் இதற்குப் பதில் இருக்கிறது.

### சோழவந்தான் ஏரி.

***429 வினா : திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப் பாரா—

(அ) சோழவந்தான் வடகரைக் கண்மாயை ஆழப்படுத்த வேண்டு மென்கிற வேண்டுகோள் அப்பகுதி விவசாயிகளிடமிருந்து வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) சென்னை, தூர் எடுத்தல்-பண்படுத்தல் பிரிவைச் சேர்ந்த நிர் வாகப் பொறியாளர், இந்த ஏரியில் தூர் எடுப்பதற்கான நேரடி ஆய்வை முடித்துள்ளார் ; இதற்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து (பாசன) தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டு அன்னாரின் தொழில் நுணுக்கக் குறிப்புரைகளுடன் மேற் பார்வைப் பொறியாளருக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

### வைகை அணையிலிருந்து மின்சாரம்.

***430 வினா : திரு. எஸ். அக்கினிராஜு :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா

(அ) மதுரை மாவட்டம் வைகை அணையிலிருந்து மின்சாரம் எடுக் கும் செயற்குறிப்பு ஏதாவது அரசினரிடமிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எந்த அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** (அ) and (இ) வைகை அணைக்குப் பின்புறத்தில் 10 மெகாவாட் உற்பத்தி திறனளவு கொண்ட மின் நிலையம் ஏற்படுத்த முடியும். ஏற்கெனவே அவசியமான பெருங் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இதில் கிடைக்கக்கூடிய மின்சக்தி வளம் மிகவும் குறைவானதும், குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே கிடைப்பதும். ஆகையால் மிகுந்த ஆதாயமுள்ள பெரிய வேலைத் திட்டங்கள் முடிந்த பின்பே இவ்வேலைத் திட்டம் ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) நவசக்தி நாள் இதழ்மீது அவை உரிமைக் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு சின்னசாமி அவர்கள் நவ சக்தி என்ற ஒரு நாளிதழின் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### நாகூரில் இரு முஸ்லீம் பெண்களை வீட்டிலிருந்து போலீஸ் சப்-இன்ஸ் பெக்டர் வெளியே அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் செய்தியும், அதனால் ஏற்பட்டுள்ள பரபரப்பும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதில் "தஞ்சை மாவட்டம், நாகூரில் 20–3–1969 இரவு நாகூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒரு முஸ்லீம் வீட்டிலிருந்து எவ்விதக் காரணமுமின்றி இரு பெண்களைக் கட்டாயப்படுத்தி வெளியே அழைத்துக்கொண்டு போனதால், நாகூர் முஸ்லீம் பெரு மக்களிடம் பெரும் பரபரப்பையும் கோபத்தையும் ஏற் படுத்தியுள்ளது. இதனால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க இம்மன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும்" எனக் கோரியிருக்கிறார்கள்.

அது எப்படி அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒத்திவைப்பதற்கு வேண் டிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, நாகூர் முஸ்லீம்கள் வாழும் ஒரு பெரிய பிரதேசம். 20-ம் தேதி இரவு எஸ்.ஐ அவர்கள் எந்தவிதக் காரணமுமின்றி எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, எந்தவிதப் புகாருமின்றி, ஒரு முஸ்லீம் வீட்டிற்குள் சென்று, இரு பெண்களை அனாவசியமாக அழைத்துப் போய் துன்புறுத்தியிருக்கிறார் என்கின்ற விஷயம் அங்கிருந்து எனக்குத் தொலை பேசி மூலம் வந்திருக்கிறது. அங்கு இருக்கக் கூடிய முஸ்லீம் லீக் செயலாளர், சுதந்திராக் கட்சித் செயலாளர் இவர்கள் தொலை பேசி மூலம் என்னிடம் இதைத் தெரிவித்து, உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி அங்கே எஸ்.ஐ. அவர்கள் நடந்துகொண்டதன் காரணமாக, முஸ்லீம்கள் மத்தியிலே ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டு, ஒரு அசிங்கமான நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அங்கே பெரிய பரபரப்பு ஏற்பட்டிருப்பதால், அனாவசியமான விளைவுகள் அதன் மூலம் ஏற்படலாம். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, இந்த சபையின் இதர நடவடிக்கைகளை ஒற்றி வைத்து, இதை விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஞானசம்பந்தன் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மீது நான் சில விஷயங்களை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன். ஒற்றிவைப்புத் தீர்மானம் என்பது சபையில் ஒரு முக்கியமான பிரச்சினையை, ஒரு பெரும் நோக்கத்தோடு , அதன் மூலமாக சில வழிமுறைகள் கிடைக்க வேண்டும் என்கின்ற அளவில் கொண்டுவரப்படுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஒரு முறையாகும். இந்த முறையில் சில நேரங்களில் தவறான விளக்கங்களை உறுப்பினர்கள் பெறுகின்ற காரணத்தினால், அது எப்படி சீர்குலைந்துவிடுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் அமைந்திருக்கிறது என்பதை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாகூரில் 20-ம் தேதி இரவு எஸ்.ஐ. ஒரு முஸ்லீம் வீட்டில் எந்தக் காரணமும் இல்லாமல், இரு பெண்களைக் கட்டாயப்படுத்தி வெளியே அழைத்துக்கொண்டு போனதாகவும், முஸ்லீம் பெருமக்களிடையே அதனால் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் நேரில் தகவல் அறிந்து கொடுக்கவில்லை. தொலைபேசி மூலம் வந்த செய்தி என்று குறிப்பிட்டு, அவர்கள் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரியான காரியங்களிலே நாம் அவசரப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் இங்கே சொல்கிறேன். 20-ம் தேதி இரண்டு பெண்கள் அல்ல, ஆறு பெண்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதுபோல் இரண்டு பெண்கள் கைது செய்யப்படவில்லை. அவர்கள் இருக்கும் வீட்டில் பிராந்தி வைத்திருந்தார்கள் என்ற குற்றத்திற்காக அந்தப் பெண்கள் 19-ம் தேதி இரவு கைது செய்யப்பட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பெண்கள் அல்ல—நான் பெயர்களைக் கூடச் சொல்கிறேன், ஏனென்றால், இந்த விஷயங்களையெல்லாம் இப்படிப்பட்ட பெரிய காரியங்களாக எடுத்துவரக் கூடாது என்பதற்காக அதைச் சொல்லுவது அவசியமாகிறது. வேறு 6 பெண்கள் கைது செய்யப்பட்டார்கள். கமலா (முஸ்லீம் பெண் அல்ல), பாத்திமா நபிஜா, தேவிகா, ஆயிஷா, கதிஜா, கமலா, தேவிகா என்ற இரண்டு பெண்களும் முஸ்லீம் பெண்கள் அல்ல, பெயர்களைப் பார்த்தாலே தெரியும். 20-ம் தேதி இரவு 11-15 மணிக்கு அவர்கள் தங்களுடைய தவறின் மூலமாகக் கிடைத்த பணத்தைப் பங்கு போட்டுக்கொள்கிற நேரத்தில், தெருவிலே சண்டை போட்டுக்கொண்டார்கள். சண்டை போட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அவர்களைப் போலீஸார் கைது செய்தார்கள். அவர்கள் இப்படி கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்பட்டது இது முதல் தடவை அல்ல. பல



முறைகள், பல வழக்குகளில் சம்பந்தப்பட்டு, தண்டனை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டார்கள் என்னென்ன தண்டனை அடைந்தார்கள் என்பது பற்றிய விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அவை மிக ஆபாசமாக இருப்பதால், அவற்றைச் சபையில் சொல்ல விரும்பவில்லை. இது சாதாரண விஷயம் யாரோ சொல்லுகிறார்கள், பேசினார்கள் என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற முறையில் கொண்டுவருவது முறையில்லை. இது அரசின் அன்றாட அலுவல்களில் ஒன்று. ஆகவே, இதற்கு அனுமதி வழங்கத் தேவையில்லை என்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை ஒட்டி, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். முதல் அமைச்சர் தொலை பேசி மூலம் கிடைத்த தகவலை வைத்துக் கொண்டுதவறான காரியத்திற்கு இந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். எனக்குக் கிடைத்த தகவல், சுதந்திராக் கட்சி அந்தப் பகுதித் தலைவரும், முஸ்லீம் லீக் செயலாளரும் (சிரிப்பு) வந்துவிட்டேன், சொல்லுகிறேன், இருங்கள் எனக்குக் கொடுத்தார்கள். அவர்கள் குறிப்பிட்டது இரண்டு பெண்களைப் பற்றித்தான். அவர்கள் வீட்டில் பிராந்தி வைத்திருப்பதாகவும், அவர்களைக் கைது செய்து அவர்கள் பேரில் கேஸ் போட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டது. நான் எனக்குக் கிடைத்த யதார்த்த நிலையைச் சொன்னேன். மு.ப. 10-00

**Dr. H. V. HANDE :** While I am grateful to the member for having given serious consideration to the information given by the—Swatantra Party Member—I do not know the name of the gentleman I wish to say that it might have been done in his personal capacity and not on behalf of the party.

(4) அரசினர் தீர்மானங்கள்—(அ) விதி 41 (3))ஐ—தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி, (3)-வது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்கின்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படாமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு இரா நாராயணன் அவர்கள் தன்னுடைய இருக்கையில் இல்லாததால் அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

அதே போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பூபதி அவர்களும் தன்னுடைய இடத்தில் இல்லாததால், அவர் கொடுத்திருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு கிட்டப்பா அவர்களும் தன் இருக்கையில் இல்லாததால், அவருடைய தீர்மானமும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

4. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

" தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின் கீழ் 1969-70-ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைமை வகுத்துள்ள விதி முறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 25-3-1969 செவ்வாய்க் கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள லாம்.

நியமனத்தாள்கள் 26-3-1969 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட் பாளர்கள் 26-3-1969 புதன்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, பதினாறுக்கு மேற் படுமாயின், 27-3-1969 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

" தமிழ்நாடு சட்டப் பேரவையின் 173-வது விதியின் கீழ் 1969-70-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக் கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக் கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படு வதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 25-3-1969 செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 26-3-1969 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட் பாளர்கள் 26-3-1969 புதன்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.



நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படு மாயின், 27-3-1969 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(5) அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1968).

*THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I move—

"That the following amendments made by the Legislative Council in respect of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 (L.A. Bill No. 18 of 1968) as passed by the Legislative Assembly, be taken into consideration :—

*Clause* 3.

In sub-clause (2) of clause 3 delete the word 'and' after item (*d*), renumber item (e) as item (f) and before item (*f*) so renumbered, add the following as item (e):

" (e) the survey number or sub-division number, the extent and local name, if any, of the land cultivated by the owner ; and "

This House is aware that, on my motion this House was pleased to pass on 28th February 1969 the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969, as amended by the Select Committee. The Bill as passed by this House was taken up by the Legislative Council on 3rd March 1969 for consideration. A non-official amendment given notice of by Thiru A. R. Damodaran, M.L.C. to clause 3 was carried in spite of the opposition to the amendment by the Government. The Bill has now been sent back to this House with the amendment mentioned above. The amendment seeks to provide for preparing particulars of the land cultivated by the landowner.

The amendment incorporated by the Council contemplates that the record of rights should also contain the survey number or sub-division number, the extent and local name, if any, of the land cultivated by the owner.

I would like to reiterate that the scope of the present Bill is to prepare a simple record containing particulars of lands in the possession of tenants etc. and the amendment appears to me to be outside the scope of the Bill. I would also like to point out to the House that the present Bill contemplating the preparation of record of tenency rights does not create any new right as such, but only seeks to protect the rights already incorporated or enshrined in the Statute Book in a more effective manner. Of course, this record would also function as the basis on which future land reform legislation would be implemented.

[Thiru K. A. Mathialagan] [1969 மார்ச் 22

In the circumstances narrated by me so far, I move that the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969, as originally passed in this House on 28th February 1969, be taken into consideration and carried without the amendment to clause 3 passed by the Legislative Council.

I now request the House, Sir, to accept the *motion*.

(*திரு க. இராமமூர்த்தி தன் இடத்தில் எழுந்து நின்றார்*).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு இராமமூர்த்தி அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். நாம் நம்முடைய விதி முறைகளைப் பார்க்க வேண்டும். நம்முடைய விதி முறைகளில், விதி 122-ல்

"மேலவையில் செய்யப்பட்ட திருத்தங்கள், பரிந்துரைகளையொட்டி மேல் திருத்தங்கள் கொண்டுவரப்படலாம். ஆனால், மேலவைத் திருத்தங்கள், பரிந்துரைகளின் விளைவாக, அல்லது அவற்றிற்கு மாற்றாக அல்லது மசோதா நிறைவேற்றப்படுவதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக, எழுகிற திருத்தங்கள் தவிர, வேறு மேல் திருத்தங்களைக் கொண்டு வரலாகாது".

என்று இருக்கிறது. இப்பொழுது தாங்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தம் எப்படி மேலவையில் நிறைவேற்றப்பட்ட திருத்தத்தை ஒட்டி இருக்கும் என்பதை விளக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, மேலவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கும் திருத்தம் நிலத்தைப் பொருத்த விவரங்கள் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அந்தத் திருத்தம் சர்வே நம்பர், சப் டிவிஷன் நம்பர், விஸ்தீர்ணம், அந்தப் பகுதியில் அந்த நிலத்திற்கு இருக்கிற பெயர், அதிலே பயிரிடுகின்ற சொந்தக்காரர் போன்ற விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் மேலவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தம் மேலவையிலே தரப்பட்டிருக்கின்ற திருத்தத்திற்கு இணையாக, துணையாக இருக்கின்ற திருத்தமாகும். மேலவையிலே கொடுக்கப்பட்டுள்ள திருத்தம் அதிகப்படியான சில விவரங்களைக் கோருகின்ற திருத்தம். என்னுடைய திருத்தம், மேலவையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற தேவையான திருத்தங்களோடு இன்னும் சில விவரங்களையும் தர வேண்டுமென்பதாகும். ஆகவே, அந்தத் திருத்தத்தின் நீடிப்புத்தான் இந்தத் திருத்தமே தவிர, புதிய திருத்தம் அல்ல. எத்தனை காலத்திற்கு அந்த நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது, என்ன காரணத்திற்காக விடப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரமாகும். இந்த இரண்டு விவரங்களையும் உள்ளடக்கிய என்னுடைய திருத்தம் நம்முடைய சட்டமன்ற விதி முறைகளுக்கு உட்பட்டதாகும். ஆகவே, திருத்தத்தை முன்மொழிய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நம்முடைய சட்டமன்ற விதிகளில், 122-வது விதியில்—

"Further amendments relevant to the subject matter of the amendments or recommendations made by the Council may be moved, but no further amendment shall be moved to the Bill, unless it is consequential upon, or an alternative to an amendment or recommendation made by the Council or is made necessary by the delay in the passage of the Bill."

என்று இருக்கிறது. அதைத்தான் தாங்களும் ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.



1969 மார்ச் 22]

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். சட்டமன்ற விதி முறைகளைப் பொறுத்தவரை, தமிழ் விதி முறைகள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல என்று முன்னாள் முதலமைச்சர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். உரிய முறையில் அதற்குச் சட்டப்படி அங்கீகாரம் கொடுத்த பிறகுதான் தமிழ் விதிகளைப் படிக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, தமிழிலே விதியைப் படித்தது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் பாயின்ட் ஆப் ஆர்டர் வேறு. இதை ஒட்டியது அல்ல.

திரு. க. இராமமூர்த்தி அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற திருத்தம் நம்முடைய விதி முறை 122-ன் படி முறையற்றதாக இருக்கும் காரணத்தால் அந்தத் திருத்தத்தை அனுமதிக்க மறுக்கிறேன்.

**Dr. H. V. HANDE :** Sir, I have been called upon by the Hon. Speaker to explain how exactly the amendment I have given notice of comes within the scope of rule 122 of the Assembly Rules. I will move my amendment if the Hon. Speaker permits me to do so.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தின் பொருளைச் சொல்லுங்கள்.

**Dr. H. V. HANDE :** That is what I have stated.

இப்பொழுது நான் மூவ் பண்ணவில்லை. அதற்கு உட்பொருளைச் சொல்லி தாங்கள் அனுமதி கொடுத்தால் பிறகு மூவ் பண்ணுகிறேன்.

Now the position is that there is an amendment to Clause 3 as passed by the Legislative Council before the House. I shall now read out the amendment passed by the Legislative Council. It runs as follows :

"In sub-clause (2) of clause 3 delete the word 'and' after item (*d*), renumber item (*e*) as item (*f*) and before item (*f*) so renumbered, add the following as item (*e*) :

"(*e*) the survey number or sub-division number, the extent and local name, if any, of the land cultivated by the owner ; and"

What the Hon. Minister for Finance has stated is that this is really a record of tenancy rights and so there is no point in bringing out the record of the owners also. But that amendment brings on record the rights of the landowner also. I will explain how exactly it seeks to do that. Supposing, out of 10 acres two acres are cultivated by the landowner and the other 8 acres are cultivated by various tenants. My amendment seeks that there must be a record for those two acres cultivated by the landowner. Now, let us presume that the amendment suggested by the Legislative Council is going to be passed here also. In such a contingency, I would have to point out to the House that my amendment is definitely not a substitute to that amendment but a consequential one. The Council has suggested amendment to sub-clause (2) of Clause 3 but my amendment is to sub-clause (ii) of Clause 3. My amendment runs as follows.

'Add the following as sub-clause (11) :

"Nothing herein contained in Clause 3 shall take away the right of an aggrieved person to file a suit or petition in the District Court for rectification of the record according to law".

My argument is that if the amendment of the Council should find a place in the Bill, my amendment which seeks to record the rights of the landowner also should find a place there. The landowner also must have a justiciable right to go to a court. Otherwise there is no point in introducing that amendment of the Council and leaving out my amendment as my amendment is only consequential to that amendment of the Council. So, I request you, Sir, you are an impartial judge and I have full confidence in you—to examine whether the amendment I have given notice is not consequential to the amend ment passed by the Council.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற நிலையே இங்கு எழவில்லை. சாகுபடிதாரர்கள், குத்தகைக்காரர்களுக்குப் புதிய உரிமைகளைச் சிருஷ்டிக்கவில்லை. ஏற்கனவே சாகுபடி செய்துகொண்டிருப்பவர்களுக்கு, குத்தகை செய்து கொண்டிருப்பவர்களுக்குப் பதிவேடே தவிர, புதிய உரிமை எதையும் கொடுக்கவில்லை. யாருடைய உரிமையையும் பறிக்கவில்லை. நூறு ஏக்கர் இருக்கிறது என்றால், அதிலே 50 ஏக்கர்தான் சாகுபடிதாரர்கள் சாகுபடி செய்கிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டால், மீதியுள்ள நிலத்தில் நிலச் சொந்தக்காரருக்குத்தான் உரிமை இருக்கிறது. புதிய ரைட் எதையும் கிரியேட் பண்ணவில்லை. ஏற்கனவே இருக்கிற சாகுபடி உரிமை, பயிரிடுகிற உரிமை உத்திரவாதம் செய்யப்படுகிறது. நண்பர் திரு தாமோதரம் அவர்களுடைய திருத்தப்படி 100 ஏக்கர் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் அதிலே இன்னின்ன நிலம் இன்னார் குத்தகை என்று பதிவு செய்யப்படும்போது மீதி நிலத்திலே மிராசுதாரர் தான் சாகுபடி செய்யப்போகிறார், கடவுளா பயிரிடப் போகிறார் ? ஆகவே, அந்த எண்ணம் எல்லாம் வெறும் கற்பனைதான். அதை உத்தேசித்துத் தான் அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று என்னுடைய உரையிலே குறிப்பிட்டேன். இதனுடைய விளைவாக அந்த நிலைமை எழாது. ஒரு உரிமை பாதிக்கப்படுகிறது என்ற நிலைமை வந்தால் அந்த நேரத்தில் அவர்கள் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே மேலவையிலிருந்து கொண்டுவந்த திருத்தம் பொருத்தமில்லையென்று சொன்னார்கள். மேலவையின் திருத்தத்தை இந்த மன்றம் ஏற்றுக்கொண்டது என்பதை வாதத்திற்காவது எடுத்துக் கொண்டால், நான் கொடுத்த திருத்தம் அந்தத் திருத்தத்திற்குப் பொருத்தமாக இருக்கிறதா, இல்லையா என்பதுதான் கேள்வி. என்னுடைய திருத்தம் மேலவையின் திருத்தத்தோடு பொருள் சரியாக இருக்கிறதா என்பதல்ல கேள்வி. இப்போது இருக்கக்கூடிய வாதம், என்னுடைய திருத்தம் மேலவையின் திருத்தத்திற்குப் பொருந்துவதாக இருக்கிறதா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவில்லை. மேலவையில் கொண்டுவந்த திருத்தத்திற்கு எப்படி இது பொருந்தவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவில்லை.

*THE HON. THIRU S. MADHAVAN : The Hon. Member Dr.H.V. Hande has raised a technical question. He says that if the amendment moved by a member in the other House is accepted by this House, then consequentially he must be allowed to move his amendment.



Firstly, I want to object on the same technicality. It is a hypothetical question whether the House is going to accept or reject it. We have to wait and see. On the basis of hypothetical questions, amendments cannot be moved here.

Secondly, new amendments cannot be moved by any Member at this stage when we take up this Bill. Hon. Member can give amendments to the clauses if and when Treasury Bench moves amendments on behalf of Government. Now the Hon. Member wants that if the amendment of the Upper House is accepted by this House, then consequentially he must be allowed to introduce some new clause. That is the meaning of his request. Such a thing is not permissible under our Rules.

DR. H. V. HANDE : I am very glad that the Hon. Minister for Law has interevned. As a lawyer, he will be able to enlighten us better.
இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். மேவையிலிருந்து திருத்தம் அனுப்பப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தம் அங்கத் திருத்தத்திற்கு பொருந்துவதாக இருக்கிறதா, கான்சிக்வன்ஷியலாக இருக்கிறதா என்பதை மட்டும் அமைச்சர் அவர்கள் விளக்கினால் நன்றாக இருக்கும். இந்த ரூல் எப்படியிருக்கிறதென்றால்,

Further amendments relevant to the subject matter of the amendments or recommendations made by the Council may be moved but no further amendment shall be moved to the Bill, unless it is consequential upon an amendment or recommendation made by the Council.

ஆகவே, தயவுசெய்து இது கான்சிக்வன்ஷியலாக இருக்கிறதா, இல்லையா என்பதை விளக்க வேண்டும்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கான்சிக்வன்ஷியலாக இருக்கிறதா இல்லையா என்பது ஹைபோதடிகல் கொஸ்டியனாக இருக்கிறது. அதை நாம் எடுத்துக்கொள்ள முடியாது. ஒரு பில்—மசோதாவின் மேல் மேல்சபை திருத்தம் கொடுத்திருப்பதையொட்டி திருத்தம் இங்கே பரிசீலிக்கும்போது கொண்டுவரலாம். ஆனால், கான்சிக்வின்ஷியல் என்பதற்காக அதன் மூலம் புதிய கருத்துக்களைக் கொண்டு வரக்கூடாது என்பதுதான் என்னுடைய பதிலாகும். பொதுவாகச் சொன்னேன். இதை மட்டும் நான் சொல்லவில்லை. பொதுவாகச் சொன்னேன். பொதுவாக ஒரு மசோதாவை எடுத்து ஆராயும்போது அதற்குத் துணையாக இருக்கும் திருத்தங்களைக் கொண்டுவரலாம். கான்சிக்வின்ஷியல் அமெண்ட்மெண்டாகக் கொண்டுவரக் கூடாது என்று சொல்லவில்லை. அது இந்தத் திருத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோமா இல்லையா என்பதைப் பொறுத்திருக்கிறது. நாம் இப்போது அமெண்ட்மெண்ட் ஏற்றுக் கொண்டுவிடுகிறோம். அப்படிச் செய்துவிட்டால் கான்சிக்வின்ஷியல் அமெண்ட்மெண்டாக இல்லாவிட்டால் என்ன ஆகும் ? அந்த மசோதா குறைபட்ட மசோதாவாக இருக்கும். நாம் கான்சிக்வின்ஷியல் அமெண்மெண்ட்டாக இருக்கிறதா இல்லையா என்பதை முன்கூட்டியே சொல்வது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** திட்டவட்டமாக 122-வது ரூலில் சொல்லவில்லை. அப்படி மேலவையின் திருத்தத்தை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட இது கான்சிக்வின்ஷியலாக இருக்கிநது அப்படி ஒப்புக்கொண்டால் ஹைபோதடிகல் கொஸ்டியனாக ஏற்றுக்கொள்ளககூடிய பிரச்சினையே எழாது. என்னுடைய திருத்தம் அந்தத் திருத்தத்திற்குப் பொருந்துவதாக இருக்சிறதா, பொருந்துவதாக இல்லையா என்பது

தான், நீங்கள் தீர்ப்புச் சொல்ல வேண்டும் மேலவையில் கொடுக்கப்பட்ட திருத்தத்திற்கும் என் டைய திருத்தம் பொருந்துவதாக இருக்கிறதா, இல்லையா ? அது கான்சிக்வின்ஷியலாக இருக்கிறதா இல்லையா என் பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதை அரசாங்கமே கொண்டு வர வேண்டுமா என்ற பிரச்சினையே எழவில்லை. வாக்கெடுப்பு நடத்தி ஞல் அது தோல்வியடையப் போகிறது என்பது தெரியும். வாதத்திற்கு எடுத்துக்கொண்டாலும் அதை அங்கத்தினர்கள் கொண்டுவரக் கூடாதா ? அதற்கு உரிமை இருக்கிறதா, அல்லவா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் மறுபடியும் மறுபடியும் குழப்பத்தான் விரும்புகிருர்கள். 122-வது. . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அமைச்சர் அவர்கள், " குழப்புகிறேன் " என்று சொல்கிருர்கள். நான் அப்படிச் சொல்லவில்லை.

Let there be more light than heat.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நீங்கள் கூடுமான வரையில் பொறுமையோடு வாதாடிஞல் நன்ருக இருக்கும். 122-வது விதியில் "ஃபர்தர் அமெண்ட்மெண்ட்" என்று இருக்கிறது. எல்லாவிதமான அமெண்ட்மெண்டுகளும் இல்லை. இதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, நீங்கள் கான்சிக்வின்ஷியல் அமெண்ட்மெண்ட் கொடுக்கலாம், அல்லது ஆல்டர்நேடிவ் அமெண்ட்மெண்ட் கொடுக்கலாம். இதுவரையில் யாராவது ஆல்டர்நேடிவ் அமெண்ட்மெண்ட் கொடுத்திருந்தால், வரவேற் றிருப்பேன். கான்சிக்வின்ஷியல் என்கிறீர்கள், அப்படி ஒன்றும் இல்லை.

" Nothing herein contained in Clause 3 shall take away the right of an aggrieved person to file a suit or petition in the District Court for rectification of the record according to law. "
என்று சொல்லியிருக்கிறீர்கள்.

It is already implied there.

இந்த மசோதாவிலே இல்லையென்ருலும், இந்த நாட்டுக் குடிமகன் என்ற முறையிலே அந்த உரிமை இருக்கிறது. எற்கெனவே இருக்கிற மசோதாவிலேயே " இம்ப்ளைடு " ஆக இருக்கிறது. அதை அவர் எற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்த திருத்தம் மேலவையிலே வந்த திருத்தத்தினுடைய விளை வாக வந்ததல்ல. ஆகவே, அதற்கு அனுமதி மறுக்கிறேன். மசோதா வின் மீது யாராவது பேச வேண்டுமென்ருல் பேசலாம். எற்கெனவே நம்முடைய மன்றத்திலே விவாதிக்கப்பட்ட மசோதா இது. மறுபடியும் மேலவையிலிருந்து திருத்தம் வந்திருக்கிறது. பின்ஞலே உணவு, பால் பற்றிய மானியங்கள் எல்லாம் இருக்கின்றன. இதை மனதிலே வைத்துக் கொண்டு சுருக்கமாக உறுப்பினர்கள் பேச வேண்டும். விவாதம் இந்தத் திருத்தத்தையொட்டி அமைய வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, on second thoughts I was wondering whether this legislation is of any consequence. My impression about the Bill is that it is of doubtful validity. Simply because a section of the people are clamouring for this kind fo legislation, this Government had thought it fit to bring in this Bill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த " பில் " கொண்டு வந் திருப்பதற்கு நோக்கம் கற்பித்துக்கொண்டு பேசக்கூடாது. இந்தச் சட் டத்தை என் கொண்டு வந்தார்கள் என்பது பொது விவாதத்தில் பேசப் பட்டுவிட்டது. இப்போது திருத்தத்தை ஒட்டித்தான் சுருக்கமாகப் பேச வேண்டும்.



THIRU K. VINAYAKAM : I want to caution the Government even at an early stage that this will not stand the test of law in a court. If people agitate after this Bill becomes au Act, the entire legislation is doomed to failure.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த முறையில் தொடர்ந்து பேசுவது என்ருல் அனுமதிக்க முடியாது. முழு மசோதாவைப் பற்றிப் பேசவேண்டிய நேரம் கடந்து போய் விட்டது. திருத்தத்தை ஒட்டித்தான் பேசவேண்டும்.

THIRU K. VINAYAKAM : Let the Government learn a lesson.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவுக்கு மேலவை கொடுத்திருக்கும் திருத் தம் வரம்புக்கு அப்பாற்பட்டது. இந்த மசோதாவின் மூலம் வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு பார்க்கவேண்டிய பிரச்சினையில் வேறு எந்தப் பிரச் சினையையும் எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்த மசோதா புதிய உரிமை கள் எதையும் கொடுக்கவில்லை. பிறருடைய நிலங்களை இதுவரை குத்த கைக்குப் பலர் வைத்திருக்கிருர்கள். யார் யார் எந்த எந்த நிலங்களைக் குத்தகைக்கு வைத்திருக்கிருர்கள் என்கிற விவரம் தான் இப்போது எடுக்கப்படுகிறது. இந்த நிலையில் நிலச் சொந்தக்காரர்களும் தாங்கள் சாகுபடி செய்கிற நிலங்களைப் பதிவு செய்துகொள்ள விடுவது சட்டத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டது. ஆகவே, மேலவையின் திருத்தத்தை நிரா கரித்துவிட்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற எங்கள் கட்சியின் அபிப்பிராயத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, என்னுடைய கட்சி யின் சார்பில் இந்தத் திருத்தத்தை ஒட்டி சில வார்த்தைகள்சொல்ல விரும்புகிறேன். எந்த நோக்கத்தோடு இந்தத் திருத்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். இதை அரசியல் கட்சிப் பிரச்சனையாக எடுத்துக்கொள்ளாது, பொதுப் பிரச்சனையாகக் கவனிக்க வேண்டும். இந்த மசோதாவிஞல் ஐந்து எக்கர், பத்து எக்கர் நிலம் வைத் திருப்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

(**திரு. என். சங்கரய்யா :** இப்போது எதற்காகப் பொது விவாதத் திற்குப் போகவேண்டும் ?)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசுங்கள், திருத் தத்தை ஒட்டி.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் வரம்புக்கு மீறிப் போகமாட்டேன். நூறு எக்கரா நிலம் வைத்திருப்பவர்கள் 50 எக்கராவைச் சாகுபடிக்கு விட்டிருக்கிருர். இன்னொரு 50 எக்கராவை, தானே சாகுபடி செய்தால், அது இந்த மசோதாவின் கீழ் எதற்காக வரவேண்டும் என்று கேட்கிருர் கள். ஒருவர் ஐந்து எக்கரா, பத்து எக்கராதான் வைத்திருப்பார்.. பத்து எக்கரா வைத்திருப்பவர் 8 எக்கராவை குத்தகைக்கு விட்டு விட்டு 2 எக்க ராவை தானே சாகுபடி செய்து வந்தார் என்ருல், அந்த 2 எக்கரா அவரிடமே சாகுபடிக்கு இருக்கிறது என்பது என் பதிவு செய்யப்படக் கூடாது ? அந்த 2 எக்கராவையும் வேறு ஒருவர், தாம் சாகுபடி செய்வ தாகச் சொல்லி விட்டால் என்ன ஆகிறது என்கிற பயம் காரணமாகத் தான்—அச்சம் காரணமாகத்தான்—இந்த நிலையும் இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் " நான்-பார்ட்டிவ்யூ"-வோடு இதைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

If no provision is made for the consent of the owner or lessee or other person before registration.

இங்கே லெஜிஸ்லேஷன் செய்வதற்கு முன் கூட்டி நிலக்காரருக்கு உரிமை இல்லாது போய் விட்டால்—தான் சாகுபடி செய்கிற இடத்தில் கூட இன்ஞெருவர் சாகுபடி செய்வதான விவரம் புகுத்தப்படுமாஞல்—அவர் கோர்ட்டுக்குப் போஞலும் தன் கட்சியை எடுத்துச்சொல்ல எவ்வித ரெக்கார்டும் இல்லாது போகும். இந்தத் திருத்தத்தை எடுத்துக்கொண்டால்

There will be scope for the consent of the owner or lessee or other person before registration. If it is not put here in opposition to the registration it will be an unconstitutional measure.

என்று இருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்ருல்—இது அரசியல் அமைப்பு அடிப்படை உரிமைக்கே பாதகமாக இருக்கும். தான் சாகுபடி செய்கிற நிலத்தை, தான் சாகுபடி செய்வதாகப் பதிவு செய்து கொள்ள உரிமை மறுக்கப்படுவது சரியல்ல. இந்த வாய்ப்புக்கூட நிலக்காரருக்குக் கொடுக்கப்படவில்லை என்ருல், கோர்ட்டுக்குப் போகவே வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

இது மிக முக்கியமான பாயிண்ட். பேச வேண்டும் என்பதற்காகப் பேசவில்லை. ஆகவேதான் நான் கேட்டுக்கொள்வது எல்லாம்—இது மிகவும் அடிப்படையான விஷயம். நிலக்காரர்களுடைய உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே, இதைப் புனர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு கட்சிச் சார்பற்ற வகையில் மேலவை கொடுத்திருக்கிற திருத்தத்தை ஏகமனதாக ஏற்க வேண்டும்.

This is my last appeal to the Chief Minister to reconsider the whole thing.

என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவுக்கு மேலவை கொடுத்திருக்கும் திருத்தத்தைப் பொறுத்த வரையில் அரசு கொஞ்சம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திருத்தம் குறிப்பிட்டிருக்கிற புள்ளிவிவரங்களோடு மற்ருெரு புள்ளிவிவரம் பற்றிய அவசியம் மசோதாவில் கவனிக்கப்படவில்லை. அது அரசின் கவனத்திற்கு வராமல் போய் இருக்கும்.

பலயிடங்களில் கரும்பு, நெல், வாழை பயிரிடுகிற நிலங்களில் அந்த நிலங்களின் வளம் குறையாமல் இருக்க அல்லது புதிய வளத்தை அந்த நிலத்திற்கு ஊட்ட—ரொட்டேஷன் க்ராப் " என்பதாகப் பயிரிடுவார்கள். "ரொடேஷன் கிராப்" பயிரிட குறிப்பிட்ட ஒரு வருட காலத்திற்கோ, இரண்டு வருட காலத்திற்கோ குத்தைகைக்கு விடுவார்கள். குறிப்பாக நஞ்சை புகளூர், புஞ்சை புகளூர், கம்ப வளம் போன்று கரூர் தாலுக்காவிலும், திருச்சி மாவட்டத்திலும், நாமக்கல் போன்ற பகுதிகளிலும் இதுபோன்ற " ரொட்டேஷன் க்ராப் " பயிர் வைக்க—வெற்றிலைக் கொடிக்காலுக்கு விடுவார்கள். இந்த மசோதாவால் அடிப்படையில் இவர்களை குத்தகைதாரராக எடுத்துக்கொண்டு விட்டால் பல சங்கடங்கள் வரும். இனி இது போல குத்தகைக்கு விடத் தயங்குவார்கள் அல்லது விடாமலே போய்விடுவார்கள். அதன்மூலம் வெகுவாக வெற்றிலைப் பயிரிடுவது பாதிக்கப்படும். தமிழ்நாட்டில் வெற்றிலை நாகரீகத்தின் பண்பின் அடையாளமாகவே இருக்கிறது. இதுபோல " ரொட்டேஷன் க்ராப் " வைப்பது— தடைபடாமல் இருக்க தக்க மாறுதல் மசோதாவில் வேண்டும்.

இன்ஞெரு நிலைமை கூட இருக்கிறது. தென்னந்தோப்பு, பனந்தோப்பு முதலியவற்றைக் குத்தகைக்கு விடுகிறபோது நிலத்தை விடுவதில்லை. பலனுக்குமட்டும் குத்தகை. தென்னங்கன்று வைப்பது, தண்ணீர் பாய்ச்சுவது, வேலி அடைப்பது எல்லாம் நிலக்காரர்களிடமே இருக்கும். இதுபற்றிய விவரங்களைச் சேகரிக்கவும் இந்த மசோதாவில் இடம் அளிக்கவில்லை.



னும் குறிப்பாக வெற்றிலை கொடிக்கால் குத்தகை என்பது
மட்டும் எடுப்பது இல்லை. நாற்பது, ஐம்பது பேர்கள் சேர்ந்து
கைக்கு எடுப்பார்கள். பத்து செண்ட் நிலத்தைக்கூட 40 பேர்கள்
து எடுப்பார்கள். இது பற்றியும் நிலைமை என்ன என்பது மசோ
ல் கவனம் செலுத்தப்படவில்லை. எனவே அதிலே இப்படிப்பட்ட
ரங்களைச் சேர்த்தால்தான் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு இருக்கும்.
லும் அவர்களுக்குப் பாதுகாப்பு அவசியமாகிறது. இந்த மசோதாவில்
தற்கும் வகை செய்யவில்லை என்ருல் ஒன்றிரண்டு வருஷத்திற்குள்ளாக
த்தகைக்கு விடுவது என்ற முறையிலே வெற்றிலைக்கொடி போன்ற
யிர்களுக்குக் குத்தகைக்கு விடாமல் போக நேரிட்டால், அதன்மூலம்
அந்தக் குத்தகைதாரர்களுக்கு இந்த அரசு பாதகம் ஏற்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படும். நேரம் கடந்துவிடவில்லை. எனவே, அரசு இதை இன்னும் புனராலோசனை செய்து என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, மேல்சபையிலிருந்து திருத்தம் கொடுக்கப்பட்டு இங்கே வந்துள்ள இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். ஒரு அவசியமில்லாத, நியாயத்திற்கு விரோதமான ஒரு திருத்தம்தான் இது என்பதுதான் என்னுடைய அபிப்ராயம். இந்த மசோதாவினுடைய நோக்கமே நிலத்திலே நேரடியாக யார் உழுது கொண்டிருக்கிருர்கள் என்ற குத்தகைதாரர்களைப் பதிவுசெய்யக்கூடியதுதான். மற்றபடி நிலச் சொந்தக்காரர்களுக்கோ, அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிருர்கள் என்பதற்கோ அதைப் பதிவு செய்யவேண்டுமென்ற முறையில் அவசியம் ஒன்றும் கிடையாது. வாய் மூலமாகவே குத்தகைக்குக் கொடுத்து, ரிக்கார்டுமூலம் இல்லாததன் காரணமாக நேரடியாக விவசாயம் செய்யக்கூடியவர்கள் அரசாங்கத்தால் அளிக்கப்படுகின்ற எந்தவித நன்மையையும் பெறமுடியாமல் போய்விடுகிற நிலைமை ஏற்படுகிறதால் உணவு உற்பத்திக்குப் பாதகம் ஏற்படுகிறது என்ற அடிப்படையில் அரசாங்கம் இதை ஆராய்ந்து இப்பொழுது ஒரு பதிவு மசோதாவைக் கொண்டுவந்திருக்கிருர்கள். அவ்வாறு கொண்டுவரும்பொழுது நிலச்சுவான்தார்கள் உழுதுகொண்டிருக்கிருர்கள் என்று சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. அதைப்பற்றி கிராம அடங்கலிலே எல்லாம் ரிக்கார்டு இருக்கிறது, பட்டா அவர்கள் பெயரிலே இருக்கிறது. இந்தத் திருத்தத்தின்மூலம் எந்த நல்ல நோக்கத்தோடு தஸ்தாவேஜுகள் இல்லாத விவசாயிகளைப் பதியவேண்டுமென்று மசோதா கொண்டுவந்தோமோ, அதற்கு விரோதமான முறையிலே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் ஒரு பெரிய ஆபத்து இருக்கிறது என்று எச்சரிக்க விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தைத் தயவுசெய்து ஏற்றுகொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு நிலக்கிழார்கள் என்று சொல்லி பெரிய நிலச் சொந்தக்காரர்களைப் பாதுகாக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. சிறு நிலக்கிழார்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்ருல், அவர்கள் நிலத்தை மீட்டுக்கொள்வதற்கு ஏற்கனவே சட்டத்திலே இடம் இருக்கிறது. அவர்களுக்குப்போதுமான விதிவிலக்குகள் எல்லாம் இருக்கின்றன. உழக்கூடியவர்களைப் பதிவு செய்யக்கூடிய மசோதாதான் இந்த மசோதா. எனவே, இந்த மன்றம் முன்ஞலே தீர்மானித்தபடியே இதை நிறைவேற்றவேண்டும். மேல்சபையில் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை ஏகமனதாக நிராகரிக்க வேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்காமல் இருக்கின்ற நிலையை மாற்றி அதை அங்கீரிக்கக்கூடிய முறையிலேதான் இந்தப் பதிவு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. விவசாயம் நிலத்துச் சொந்தக்காரர்களே செய்கிருர்கள் என்று சொன்ஞல், அதற்கு ஏற்கனவே அவர்களுக்கு பட்டா எல்லாம் இருக்கிறது. இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுவதன் நோக்கம் நிலக்கிழார்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் அல்ல. இருக்கின்ற உறவு

முறைகளிலே மாற்றம் ஏற்படுத்துகின்ற பொழுதெல்லாம் ஆதிக்கக்காரர்கள் கொண்டுவருகின்ற ஒரு குறிப்பே தவிர, வேறு எந்தக் கருத்தாகவும் இது தெரியவில்லை. அவர்களுடைய ஏகபோகமான சட்டத்திற்குட்படாத முறையில் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற சொத்து சுதந்திரங்கள் எங்கே பறிபோய்விடுமோ என்ற பயத்தாலேதான் இப்படி வாதம் செய்யக்கூடிய முறையிலே திருத்தத்தைக் கொண்டுவரச் செய்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அந்தத் திருத்தத்தை ஏகமனதாக எதிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்த மசோதா மேல் சபையிலிருந்து திருத்தத்தோடு மறுபரிசீலனைக்காக இங்கே வந்திருக்கிறது. நான் சார்ந்திருக்கிற இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பாக, நான் இந்தத் திருத்தத்தை எதிர்க்கிறேன். இந்தத் திருத்தம் தேவையில்லை. முன்னதாகவே இந்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டுவருவதற்குக் காரணம், நில முதலாளிகள் ஏகபோகமாக அனுபவித்துக்கொண்டு நூற்றுக்கணக்கான வருஷங்களாக சாகுபடி செய்துகொண்டு வந்தும், அவர்கள் பெயரில் குத்தகைக்கு விடாமல் தனித்தனியாக மாற்றி, அவர்கள் உண்மையிலேயே குத்தகைதாரர்கள் இல்லை என்று பொய்விடக்கூடிய நிலைமை ஏற்படுவதால்தான் இந்த அரசு இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இனிமேலும் ஏமாற்றமுடியாது என்ற காரணத்தால்தான் மேலவையிலிருந்து திருத்தத்தோடு இதை அனுப்பியிருக்கிறார்கள். நில முதலாளித்துவம் இன்னும் ஏகபோகமாக ஆட்சி செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. 2, 3 ஏக்கர் என்ற அளவிலே நிலம் வைத்திருக்கின்றவர்கள் நேரடியாகச் சாகுபடி செய்துகொண்டிருக்கின்றவர்களைச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அவர்கள் வேறு யாருக்கும் சாகுபடிக்கு விடுவதில்லை. தஞ்சையிலே, 2, 3 ஏக்கர் என்று சொந்தமாக சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இது அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வாழைத்தோப்பு போன்றவற்றிற்கு இடம் இதில் வேண்டுமென்று கேட்டார்கள். அப்படி வேண்டியதில்லை. வாழை, தென்னந்தோப்பு வைத்திருக்கிறவர்கள், மஞ்சள் சாகுபடி செய்கிறவர்கள் அக்ரிமெண்ட் செய்துகொள்கிறார்கள். ஒரு ஆண்டிற்கு அனுபவித்துக் கொண்டே விட்டுவிடுகிறோம் என்ற முறையிலே அக்ரிமெண்ட் செய்துகொள்கிறார்கள். இந்த மசோதாவின் நோக்கம் பரம்பரையாகச் சாகுபடி செய்கின்றவர்களுக்குச் சாகுபடி பாத்தியதை வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனால் அவர்களுக்கு எந்த விதமான பாதகமோ குந்தகமோ ஏற்படப்போவதில்லை. இந்த மசோதாவின் மூலம் ஆயிரக்கணக்கான ஏழைகள் கோயில் நிலங்களிலே, பெரிய பெரிய நிலங்களிலே சாகுபடி செய்கிறவர்களுடைய அனுபவப்பாத்தியதையை உறுதிசெய்துகொள்வதற்காக உதவிகரமாக இருக்கின்றது என்ற முறையிலே இந்த மசோதாவை ஏற்கனவே நிறைவேற்றியதைப்போல் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி.ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, மேல் சபையிலே— இந்த சபையிலே ஒரு விவாதம் செய்து ஒரு மசோதாவை நிறைவேற்றியிருக்கிறோம்—அந்த மசோதாவிலே திருத்தம் செய்து அனுப்பியிருக்கிறார்கள். மேல்சபையிலே பெரியவர்கள், விஷயம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனை கூறுவதோடு மட்டும் இருந்தால் நன்றாக இருந்திருக்க முடியும். மேல்சபையினுடைய தத்துவமே அதுதான். ஆலோசனை சொல்வதற்காகத்தான் இருக்கிறது. கான்ஸ்டிட்யூஷனிலேகூட அப்படித்தான், கீழ்சபைக்குத்தான் அதிக அதிகாரம் இருக்கவேண்டுமென்று. அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற முறையில்தான் நான் சொல்கிறேன். இருக்கிற நிலைமைபடி பார்த்தால் டெனன்ஸி ரைட் வேண்டுமென்று சொல்லப்பட்டு அதற்காக ஏற்பாடு செய்திருக்கிறோம். பூமியை வைத்திருக்கின்ற சொந்தக்காரர்களுக்கு அவர்களைப் பொறுத்த



வரையில் அவர்களுக்கு நிலம் இருக்கிறது என்பதற்கான பட்டா எல்லாம் இருக்கிறது. எனவே, மீண்டும் மீண்டும் அது வேண்டாம். எங்கள் கட்சியும் அதை ஆதரிக்காது. ஏற்கனவே இந்த மன்றத்திலே தீர்மானித்தபடி டெனன்சிரைட் இருப்பதற்காக ரிக்கார்டு வேண்டுமென்று மசோதா கொண்டுவந்திருக்கிறோம். நான் இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை மட்டும் சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ரிக்கார்ட் செய்வதுகூட ஆதாரபூர்வமாக இருக்கவேண்டும். பொறுப்பில்லாத முறையில் இது என்னுடையது என்ற குழப்பமானதொரு நிலையை ஏற்படுத்தாமல், உண்மையாக உழைத்துக் கொண்டிருப்பவர்கள், நேரிடையாகப் பயிரிடுகிறவர்கள் யார் என்று இருக்கவேண்டும். ஆகவே, மேல்சபையில் கொண்டுவந்துள்ள திருத்தத்தை எங்கள் கட்சி சார்பாகப் பூரணமாக நிராகரிக்கிறேன். ஏற்கனவே உள்ளது அப்படியே நிறைவேற்றப்படவெண்டுமென்ற என் ஆலோசனையைக் கூறுகிறேன்.

திரு டி.எஸ். ஆதிமூலம் எழுந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிவிட்ட பிறகு அமைச்சர் அவர்கள்தான் பதில் அளிக்க வேண்டும். மற்றவர்கள் பேசுவதற்கு இடம் அளிப்பது முறையல்ல, மரபல்ல என்ற ஒரு முறை இருக்கிறது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** "அப்ராப்ரியேஷன் பில்"லில் பிடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இம்மா மன்றதித்ன் முன் கொண்டுவந்துள்ள இந்தத் திருத்தத் தீர்மானம் பற்றி இந்த மன்றத்தில் ஏறக்குறைய எல்லாத் தரப்பினரும் டாக்டர் ஹாண்டே அவர்கள் தரப்பினரும் கூட ஒருமித்த வகையில் கருத்து தெரிவித்தார்கள்.

(THIRU D. S. AUTHIMOOLAM : No, no. )

நான் ஆரம்பத்தில் விளக்கியதுபோல் இது எந்தவிதமான புதிய உரிமையையும் யாரிடத்திலும் உருவாக்கிவிடவில்லை. குடியானவர்களுக்கு ஒரு பதிவேடு வைக்கும் முறை இது. இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினரும், வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினரும்—எல்லாவற்றிற்கும் சிகரம் வைதாற்போல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், தமிழ்நாடு சட்ட சபையில் ஒரு புதிய வரலாற்றையே சிருஷ்டித்திருக்கிறார்கள். மேல் சபையில்கூட இந்தத் திருத்தம் நிறைவேறும்போது வழக்கமான கொள்கையிலிருந்து சிறிதுமாறி அரசாங்கத்தைத் தோற்கடிக்கும் ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற சாதாரண ஆசை வந்துவிட்ட காரணத்தினால் மேல் சபையிலுள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களால் இந்த நிலைமை ஏற்பட்டது.

மேல்சபை உறுப்பினர்கள் உரிமைபற்றியெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். அவைகள் எல்லாம் வரையறுக்கப்பட்டிருக்கின்றன அதைப்பற்றி இப்போது நான் பேச விரும்பவில்லை. மேல் சபையிலிருந்து ஒரு திருத்தம் வருகிறபோது அதை நிராகரிக்க வேண்டும் என்பதல்ல, அங்கிருந்து வருகிற எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதும் அல்ல. நான் இந்தத் தீர்மானத்தை இங்கு கொண்டு வந்திருப்பது, இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளட்டும் என்று கொண்டு வந்திருக்கிறேன். இதற்கு வோட்டு போடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் என்ற முறையில் இத்தீர்மானத்தை இந்த மன்றத்தின் முன்னால் பரிசீலனைக்கு வைத்திருக்கிறேனே தவிர, இதற்கு வோட்டு போடாமல் நிராகரிக்க வேண்டும். இந்த திருத்ததைத் எதிர்த்து எல்லோரும் வோட்டு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி—"சட்டப் பேரவையால் நிறைவேற்றியபடியுள்ள தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதாவில் (சட்டப்பேரவை மசோதா எண் 18/1968) சட்ட மேலவை செய்து கீழ்க் கண்ட திருத்தத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.—

In sub-clause (2) of Clause 3 *delete* the word ' and ' after item (*d*), renumber item (*e*) as item (*f*) and before item (*f*) so renumbered *add* the following as item (*e*) :

" (*e*) the survey number or sub-division number, the extent and local name, if any, of the land cultivated by the owner ; and "

இந்தத் திருத்தத்தை ஏற்போர் " ஆம் " என்க ; மறுப்போர் "இல்லை" என்க. " இல்லை " என்போர் அதிகம்..................................

Dr. H. V. HANDE : We are presssing for a Division.

எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பட்டு, உறுப்பினர்கள் கீழ்க் கண்டபடி வாக்களித்தனர் :—

**ஆதரித்தவர்கள்.**

1. திரு டி.எஸ். ஆதிமூலம்.
2. டாக்டர் எச்.வி. ஹாண்டே.
3. திரு கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
4. திரு எஸ். அழகுத் தேவர்.
5. திரு கே. போஜன்.
6. திரு கே.எஸ். கோதண்டராமையா.
7. திரு செ. கந்தசாமி கவுண்டர்.
8. திரு மு. முத்தையா.
9. திரு கே.எம். ராமசாமி கவுண்டர்.
10. திரு ரா. ரெத்தினதேவர்.
11. திரு பி. வெங்கடசாமி.

**எதிர்த்தவர்கள்.**

1. திரு ஜி.ஆர். எட்மண்ட்.
2. திரு மு. அலங்காரம்.
3. திரு எஸ். அக்னிராஜு.
4. திரு எஸ். கணேசன்.
5. திரு அ. ஆறுமுகம்.
6. திரு எஸ். ஆறுமுகம்.
7. திரு கே. ஆண்டி என்ற குருசாமி.
8. திரு எ.கோ. பாலகிருஷ்ணன்.
9. திரு ஜெ. பெள்ளி கௌடர்.
10. திரு மு. சின்னசாமி.
11. மாண்புமிகு திரு மு. கருணாநிதி.
12. மாண்புமிகு திரு கே.எ. மதியழகன்.
13. மாண்புமிகு திரு எ. கோவிந்தசாமி.
14. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.



15. திரு து.ப. அழகமுத்து.
16. திரு எஸ். முருகையன்.
17. திரு எம். சண்முகம்.
18. திரு ஆர்.என். அரங்கநாதன்
19. திரு டி. இராசரத்தினம்.
20. திரு பி. ஜெயராமன்.
21. திரு எம். கந்தசாமி.
22. திரு எம்.ஆர். கண்ணன்.
23. திரு ஆ. கருப்பையா.
24. திரு கொளத்தூர் கோதண்டம்.
25. திரு சி. கிருஷ்ணமூர்த்தி.
26. திரு நா. கிருட்டிணன்.
27. திரு பெ. மலைச்சாமி.
28. திரு வீ. மலைக்கண்ணன்.
29. திரு பி. துரைராஜ்.
30. திரு பி.எஸ். மணியன்.
31. திரு மு. மாரிமுத்து.
32. திரு ரா.ரா. முனுசாமி.
33. திரு எ. முனியாண்டி.
34. மாண்புமிகு திரு சி.பா. ஆதித்தனார்.
35. திரு இரா. நெடுஞ்செழியன்.
36. திரு செ.கோ. விசுவநாதன்.
37. திரு மா. இராசாங்கம்.
38. திரு மு.ச. சிவசாமி.
39. திரு எஸ். இராமச்சந்திரன்.
40. திரு என். நாச்சிமுத்து.
41. திரு மு. வேதாசலம்.
42. திரு ஆர். நாகசுந்தரம்.
43. திரு மு.க.து. நடராசன்.
44. திரு செஞ்சி வெ. முனுசாமி.
45. திரு எ.சி. நரசிம்மன்.
46. திரு எம். கோபால்.
47. திரு பெ. பெரியசாமி.
48. புலவர் பொ. பொன்னம்பலம்.
49. திரு எ.எம். இராஜா.
50. திரு க.ந. இராமச்சந்திரன்.
51. திரு மு. ராமன்.
52. திரு வ.க. இராமராசன்.
53. திரு இ. ராமசாமி.
54. திரு மு. இரத்தினசபாபதி.
55. திரு கே.என். சாமிநாதன்.
56. திரு என். சங்கரய்யா.
57. திரு க.ர. நல்லசிவன்.

58. திரு ஆ.கு. சுப்பையா.
59. ஹாஜி ம.மு. பீர் முஹம்மது.
60. திரு சோ. அழகர்சாமி.
61. திரு எ. ஆர். சுப்பையா முதலியார்.
62. திரு பெ. சீனிவாசன்.
63. திரு பி.எஸ். தனுஷ்கோடி.
64. திரு எம். சுரேந்திரன்.
65. திரு கே.பி.எஸ். மணி.
66. திரு கொ. இர. ஞானசம்பந்தன்.
67. திரு பி. வேலுசாமி.
68. திரு என். மருதாசலம்.
69. திரு தொ.க. சிறைமீட்டான்.
70. திரு ந. சோமசுந்தரம்.
71. திரு பெ. சௌந்தரபாண்டியன்.
72. திரு எம். சுப்பிரமணிய கவுண்டர்.
73. திரு .தி.சி. திம்மராய கவுண்டர்.
74. திரு நா. வீராசாமி.
75. திரு எ. வெள்ளைத்துரை.
76. திரு பி.ஜி. கருத்திருமன்.
77. திரு ஆர். பொன்னப்ப நாடார்.
78. திரு கே. விநயகம்.
79. திரு எஸ். ராமலிங்கம்.
80. திரு எ.ஒய். எஸ். பரிசுத்த நாடார்.
81. திரு நா. காசிராமன்.
82. திரு எஸ். சிவசுப்பிரமணியன்.
83. திரு நா. சௌந்தரபாண்டியன்.
84. திரு தா. விஜயராஜ்.
85. திரு கோ. பூவராகன்.
86. திரு எம். வில்லியம்.
87. திரு க. கோமதிசங்கர தீட்சிதர்.
88. திரு ஜே. ஜேம்ஸ்.
89. திரு வ. ஜார்ஜ்.
90. திரு ஆர். கருப்பையா.
91. திரு ப. மகாதேவன்.
92. திரு அ. மாரிமுத்து.
93. திரு டி. மார்டின்.
94. திரு சி. நஞ்சன்.

| | |
|---|---|
| ஆதரித்தவர்கள் .. .. .. | 11 |
| எதிர்த்தவர்கள் .. .. .. | 94 |
| நடுநிலைமை வகித்தவர்கள் .. | எவருமிலர். |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தத்தை ஏற்போர் 11 மறுப்போர் 94 : நடுநிலைமை வகிப்பவர் எவரும் இல்லை. ஆகவே, திருத்தம் தோல்வியுற்றது.



(6) 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 8—அ. பால் வழங்கு திட்டங்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 8—அ. பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,51,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, to discuss policy and to point out the need to open more milk kiosk in the City of Madras I move the following cut Motion :—

"That the allotment of Rs. 3,51,71,000 under Demand No. 8-A Milk Supply Schemes be reduced by Rs. 100"

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, எல்லாக் கிராமங்களுக்கும் பால் வழங்கு திட்டத்தை அரசாங்கம் விஸ்தரிக்கத் தவறியதுபற்றி விவாதிக்க.

I move the following cut motion :—

"That the allotment of Rs. 3,51,71,000 under Demand No. 8.—A. Milk Supply Schemes be reduced by Rs. 100"

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு ரிபேட் (மானியம்) லிட்டர் பாலுக்கு 10 பைசா தரவேண்டுமென விவாதிக்க—

"கோரிக்கை எண் 8—அ. பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,51,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு பி. வேலுசாமி:** தலைவரவர்களே, கால்நடைகள் மேம்பாடு அடைவது சம்பந்தமாக விவாதிக்க—

"கோரிக்கை எண் 8—அ. பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,51,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு (உணவு).

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு (உணவு)—என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,14,36,48,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy and to point out the wastage of large sums of money in Government Trading of foodgrains I move the following Cut Motion :—

"That the allotment of Rs. 1,14,36,48,800 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading (food)—be reduced by Rs. 100".

**திரு. பி. வேலுசாமி :** தலைவரவர்களே, உணவுப் பொருள் வர்த்தகத்தை அரசு ஏற்று நடத்த, என்பது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு(உணவு)என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,14,36,48,800ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, புஞ்சை நிலப் பயிர்களான பருத்தி வத்தல், மல்லி, நிலக்கடலை ஆகியவைகளை அரசாங்கமே வாங்குவது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு (உணவு) என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,14,36,48,800 -ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU T. MARTIN : Sir, to discuss the failure to extend one-rupee-a-measure scheme to famine affected areas in the State, I move the following Cut Motion :

" That the allotment of Rs. 1,14,36,48,800 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading (Food) be reduced by Rs. 100 ."

**திரு. என். சங்கரய்யா:** தலைவரவர்களே, மதுரை நகரைச் சுற்றியுள்ள 5 மைல் பிரதேசத்தில் இருக்கும் ஊர்களுக்கு குடும்பக் கார்டு மூலம் மலிவு தான்யம் வினியோகிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்த—

" கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு (உணவு) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,14,36,48800 -ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவரவர்களே, இன்றைய தினம் மிக முக்கியமான பிரச்னைகள் குறித்து இரு மானியக் கோரிக்கைகளை அவை முன் வைத்திருக்கிறோம். என்னுடைய *உரையை அச்சிட்டு இங்கே வழங்கியிருக்கின்றேன். கனம் அங்கத்தினர்களுடைய பொன்னான நேரத்தை நான் எடுத்துக்கொள்ளாமல், அவர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்த பிறகு, அதன் பிறகு முடிவான என்னுடைய உரையைக் கடைசியில் நிகழ்த்தலாம் என்று இந்த அளவோடு நான் நிறுத்திக்கொள்கிறேன். என்னுடைய உரையை நான் பேசியதாகச் சட்டமன்ற நடவடிக்கையில் குறிப்பேற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் தலைவர் அவர்க[ளே,] மிக முக்கியமான இந்த மானியக் கோரிக்கையிலே எங்கள் கட்சி[யின்] பெயரால் கொண்டுவந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு கருத்துக்களை இந்த அவையின் முன் வைப்பதற்கு விரும்புகிறேன்.

முதலாவதாக, இன்று இருக்கிற உணவு நெருக்கடி நிலையை ராஜ்யத்திலே எல்லோரும் உற்று கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். பருவ மழை தவறியதன் காரணமாக, மழை பொய்த்ததன் காரணமாக இன்று

* 97–115ம் பக்கங்களில் 1, 2 இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.



பல மாவட்டங்களிலும் வரட்சி நிலைமை உருவாகிக்கொண்டிருக்கிறது. பொதுவாக, தமிழ்நாடு ஒரு உபரி மாநிலமாக இல்லாமலும், பற்றுக்குறை மாநிலமாக இல்லாமலும், மார்ஜினல் சர்ப்ளஸ் என்று சொல்லக்கூடிய ஒரு மாநிலமாக இருந்துகொண்டிருக்கிறது. இன்று இருக்கக்கூடிய நிலைமையிலே நமக்குப் பெரும் உணவு நெருககடி ஏறபட்டுவிடுமோ என்று பொது மக்களில் பலரும் ஐயப்பாடு கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, நமது மத்திய உணவு அமைச்சர் அவர்கள் அண்மையில், தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்தபோது, நமது உணவு நிலைமையைப் பற்றி நல்ல முறையிலே எடுத்துச் சொல்லி ஒரு இலட்சம் டன் உணவுப் பொருள்களை உடனடியாகத் தர வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் விடுத்திருக்கிறது. அதற்குச் சாதகமான சூழ்நிலையும் உருவாகி இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே நாம் பார்க்கின்றபோது இந்த தேசத்திலே மக்களுக்கு உணவு அளிப்பதை விட சிறப்பான ஒரு காரியத்தை அரசாங்கத்தால் செய்ய முடியாது. ஆனாலும், உணவு வினியோகத்திலே பல கஷ்டங்களும், துன்பங்களும், இன்னல்களும் இருக்கின்றன என்று சொன்னாலும், அது மிகையாகாது.

பல பகுதிகளிலும் இன்று விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் முற்பட்டாலும் அதற்கு மேலே இன்றைக்கு விலைவாசி விஷம் போல் ஏறுவதை நாம் பார்க்கின்றோம். பட்டணத்திலே இன்று பார்த்தால் வெளிச் சந்தையிலே அரிசி விலை அதிகமாக இருக்கிறது என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஒருவேளை அரசாங்கத் தரப்பிலிருந்து அதை மறுத்தாலும் நிலைமையைப் புரிந்துகொண்டவர்கள், நிலைமையைத் தெரிந்தவர்கள் வெளிச் சந்தையிலே அதிகமான விலையிலே விற்கப்படுகிறது என்று ஒப்புக்கொள்வார்கள். ஒவ்வொரு பகுதியிலும் வெளிச் சந்தையிலே அதிகமான விலையில் அரிசி கிடைக்கின்ற காரணத்தாலேதான் பட்டணத்திலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று நான் நினைக்கிறேன். பல பத்திரிகைளிலே இந்த வெளிச் சந்தையிலே அரிசி எப்படி விற்பனை செய்யப்படுகிறது என்று படம் போட்டு, ஆனந்த விகடன் பத்திரிகையிலே வந்ததையும், பல அங்கத்தினர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இதே நிலைமைதான் ஏனைய மாவட்டங்களிலும் உள்ளது. அருள்கூர்ந்து இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்பதற்காக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைகளைப் போக்க விரைவிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு மத்திய அரசாங்கத்தின் மீது பழி சொல்லாமல், நம் எல்லோருக்கும் இந்த தேசத்திலே இருக்கிற, அதிலும் குறிப்பாக தமிழ் மக்களுக்கு உணவு வழங்கக்கூடிய தார்மீகக் கடமை இருக்கிறது என்ற அடிப்படை உணர்வோடு நாம் இந்தப் பிரச்சினையை அணுகவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, ஒரு விஷயம் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இந்த உணவு மண்டலங்களை மறு முறையும் கொண்டுவர வேண்டுமென்று விவாதிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஒரு தனி உணவு மண்டலத்திலிருப்பது தான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதிலும் மூன்று ராஜ்யங்களைச் சேர்ந்த உணவு மண்டலமாக இருந்தால் இன்றுள்ள உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் என்று கருதி, அந்த மாதிரி கொள்கையை நாம் மறு முறையும் பரிசீலிக்கக் கூடாது என்று அரசாங்கத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்பு உணவு மண்டலப் பிராந்தியம் இருந்தது, தென் பிராந்திய உணவு மண்டலம் இருந்தது. அதை மறுமுறையும் கொண்டுவர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்டையிலும் உணவு நிலைமை கவலைக்கிடமாக இருக்கும்போது அவர்களோடு நாம் சேர்ந்து விட்டால் நமக்கும் கஷ்டம் வரும். பிற மாநிலங்களுக்கு உதவக் கூடாது என்ற வாதத்தோடு வரவில்லை. எந்தக் காரணத்தை ஒட்டியும் உணவு மண்டலத்தைக் கொண்டுவரக் கூடாது என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், நான் குறுக்கிடுவதைத் தவருக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். அதைப் பற்றி மற்றவர்களும் பேசாமல் இருக்க வேண்டுமென்பதற்காக திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய கருத்தைத்தான் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதில் உறுதியாக இருக்கிறது. அந்தத் தென் மண்டலங்களை வைத்திருந்தால் மற்றக் கடத்தலுக்குக் கூட வழி ஏற்படும் என்று அரசு கருதுவதாலே அதில் உறுதியாக இருக்கிறது. அதே கருத்தை இவர்கள் தெரிவித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவர்கள் அதைத் தொடர்ந்து வலியுறுத்தக் கூடாது என்பதற்காகத் திட்டவட்டமாகச் சொல்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்காக மட்டில்லா மகிழ்ச்சி உடையவனுக இருக்கிறேன். நான் மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கொள்முதல் பற்றி ஒரிரு கருத்துக்கள்கூறுவது எனது கடமை என்றே கருதுகிறேன். இந்த அரசாங்கம் " tapping the rich and patting the poor 'என்ற, கொள்முதல் கொள்கையை முன்பே விளக்கிக் கூறியிருக்கிருர்கள். ஆனுல், இன்று பல மாவட்டங்களிலும் வறட்சி நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சிறு நிலச்சுவாந்தார்களுக்கு அதிலே கஷ்டங்கள் இருந்துகொண்டே இருக்கின்றன. இன்று இருக்கிற வரிக் கொள்கையின் காரணமாக உரத்திற்கு விலை அதிகமாகாக் கொடுக்க வேண்டியிருக்கிறது. உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது என்பதை எல்லாம் உணர்ந்து இந்தக் கொள்முதலை அதிகத் தீவிரப்படுத்த வேண்டாம். ஆனுல், நாட்டிலே இருக்கிற பற்ருக்குறையை உணர்ந்து தாராளமாக, அதுவும் ஏராளமாக நிலம் வைத்திருப்பவர்கள் நல்லெண்ணத்தோடு, நல்ல மனதோடு அரசாங்கத்திற்கு போதிய அளவுக்குக் கொடுப்பதற்குத் தயங்க வேண்டிய தேவை இல்லை. ஆனுல் இரண்டு ஏக்கர் அல்லது ஐந்து ஏக்கருக்குக் கீழாக நிலம் வைத்து இருக்கின்றவர்கள் அதிகமாக இருக்கிற காரணத்திஞல், அவர்களுக்கு எந்த விதமான தொல்லையும் அரசாங்கத்திலிருந்து இந்தக் கொள்முதல் அதிகாரிகளின் மூலம் ஏற்படக் கூடாது என்று மட்டும்தான் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் இன்று அரசாங்கத் தரப்பிலே கொடுத்த புள்ளி விவரங்களைப் பார்த்தேன். பார்த்தபொழுது சுமார் 44 இலட்சத்திற்கு மேலான ஏக்கர் நிலங்களில் இந்த நெல் சாகுபடி செய்வதாக அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதிலே ஒவ்வொரு ஏக்கருக்குத்தான் இப்பொழுது விதி விலக்கு கிடைத்திருக்கிறது. இரண்டு ஏக்கர் அல்லது மூன்று ஏக்கர் வரை விதி விலக்கு கொடுக்க முடியுமா என்று ஆலோசிப்பது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். மூன்று ஏக்கர் வரை விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று நாம் கொள்கை வகுத்தால் சிறப்பாக இருக்குமென்று அவர்கள் வலியுறுத்தி இருக்கிருர்கள். நான் ஒரு ஆலோசனை கூறுவதற்கு முற்படுகிறேன். அதாவது இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு விதி விலக்கு அளிக்க முடியுமா என்பதை இந்த அரசாங்கம் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கொள்முதல் விலைகளைப் பற்றி இங்கு எடுத்துக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். முதல் தரத்திற்கு ரூ. 43-ம், நடுத் தரத்திற்கு ரூ. 4 5-ம் பைன் வெரைட்டிக்கு ரூ. 48-ம் என்று கொள்முதல் விலையாக மே 1967-லே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த விலையைத் தான் இன்று அரசாங்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த விலையானது மிகவும் குறைவாக இருக்கிறது என்று இங்கு அல்ல, பாராளு





மன்ற உறுப்பினர்கள் கூட, இப்பொழுது கொள்முதல் விலை மிகவும் குறைவாக இருக்கிறது, அதை உயர்த்த வேண்டுமென்று சொல்லியுள்ளதை நான் பத்திரிகையிலே படித்தேன். இது நியாயமான ஒரு கருத்து என்று கருதுகிறேன். சாதாரணமாக அதிகமாக உற்பத்தி செய்பவர்களுக்கு அது அதிக இலாபம் கொடுப்பதாக இருந்தாலும் நடுத்தர விவசாயிகளுக்கு அது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்று கருதுகிறேன். அது கொடுக்க இயலாது, அது கஷ்டமாக இருக்கிறது, இப்பொழுதே அரசாங்கம் 8·79 கோடி ரூபாய் இந்த உணவு மானிய அடிப்படையிலே செலவழிக்கப்போகிறது. அதைக் கூட்டிக் கொடுத்தால் இன்னும் விலைவாசி உயர்ந்துவிடும் என்ற வாதங்களை எல்லாம் இந்த அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். ஆனுல், இன்று இருக்கிற தன்மையிலே இந்தக் கொள்முதல் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. வெளி மார்க்கெட்டிலே இருக்கிற விலையை நாம் பார்க்கின்றபோது இது மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு வேளை, மலிவாகக் கொடுக்கவேண்டுமென்று நாம் திட்டமிட்டிருந்தாலும் இந்த "ஹாண்ட்லிங் சார்ஜஸ்" என்ற நிலைமையிலே நாம் அதிகமான பணத்தைச் செலவழிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. "ஹாண்ட்லிங் சார்ஜஸ்" என்ற முறையிலே சிக்கனமாக நடவடிக்கை மேற்கொண்டால் இந்த இனத்திலே நமக்கு அதிகமாகச் செய்ய முடியும் என்ற கருத்தினை நான் இந்த சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து ஒரு கருத்து, இந்த படி அரிசித் திட்டம். படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று எல்லாப் பகுதியிலிருந்தும் எல்லா மக்களும் சொல்லிக்கொண்டே இருக்கிருர்கள். படி அரிசித் திட்டத்தை இன்று குறிப்பாக பஞ்ச நிலைமையில் இருக்கிற பகுதிகளிலெல்லாம் உடனடியாக விஸ்தரிப்பது பொருத்தமாக இருக்கும். சாலச் சிறந்ததாக இருக்கும். "தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றெல்லாம் நாம் முன்பு பல முறை கூறி இருக்கிரேம் வெளியிலே. ஆனுல், இந்த உணவு நெருக்கடி இருக்கிற இந்த சந்தர்ப்பத்திலே படி அரிசித் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிதி நிலை அனுமதித்தால் அதை விஸ்தரிக்கலாம் என்று ஒருவேளை சொன்னுலும் இந்தச் சந்தர்ப்பத்திலே அதை விஸ்தரிப்பது பொருத்தமாக இருக்கும், கடுமையான வறட்சி இருக்கிற காரணத்திஞல் மக்களுக்கு இலாபமான விலையிலே கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் இருக்கிற ஒரிரு காரியங்களைப் பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன்.

தேர்தல் காலத்தில் எங்கள் ஜில்லாவில், அதிலும் குறிப்பாக, எனது தொகுதியில் ஷாஜி ஃப்ளவர் மில்—ரைஸ் மில்லும் சேர்ந்தது, அங்கிருக்கிற மேற்புரம் பஞ்சாயத்து சேர்மன் உறவினர் மனைவியின் பெயரால் என்று நினைக்கிறேன், அவர்களின் பெயரால் அந்த மில்லுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த மில் இருப்பது கேரளா பார்டர், அதாவது அங்கு இருக்கிற செக் போஸ்ட்டுக்குள் 1½ மைலுக்குப் பக்கத்தில் இருக்கிறது. விளவங்கோடு தாலுகாவில் இந்த லைசென்ஸ் முறை வழங்குவ்து உண்டா என்று கேட்டதற்கு, அப்பொழுது உணவு அமைச்சராக இருந்த நமது மதியழகன் அவர்கள் மேலும் கொடுப்பதற்கில்லை என்று கூறிஞர்கள் இந்த மன்றத்தில். ஆனுல், அதற்கு மாருக, ஒரு நபருக்கு பாராளுமன்ற இடைத் தேர்தல் காலத்தில் அனுமதி வழங்கப் பெற்றிருக்கிறது. அது விரும்பத்தக்க முறை அல்ல என்று நான் கூற விரும்புகிறேன். அதற்கு முன்னதாக பல வருஷங்களாக பலரும் மனுக்கள்

போட்டிருந்தும், அவர்களுடைய மனுக்களை சாதகமான முறையில் பரிசீலிக்கவில்லை. தங்கள் கட்சிக்கு அனுகூலமாக இருந்தார்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பெற்றிருக்கிறது என்ற குற்றச்சாட்டினை நான் இந்த சந்தர்ப்பத்தில் கூற விரும்புகின்றேன்.

இன்னொரு விஷயம். கூட்டுறவு சங்கத்திலிருந்து கடைகளைப் பிரித்து தனியாகக் கொடுத்திருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக விளவங்கோடு தாலூகாவில் தேவிஸ் ராஜ் என்ற பஞ்சாயத்துத் தலைவர் சகோதரர் ஆனந்தராஜ் என்பவருக்கு ஒரு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே லைசென்ஸ் கிடையாது. ஒரு தனியாருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர் கழிந்த தேர்தலில் கூட்டணிக்காக பாடுபட்டார் என்ற காரணத்திற்காக அவருக்கு....அவர் ஒரு மாணவர்,....பி.ஏ. வகுப்பில் இருக்கிறார், அவருடைய பெயரால் லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இது விரும்பத் தக்கது அல்ல, இது வெறுக்கத்தக்கது என்று சொல்லி, இந்தக் குற்றச்சாட்டினை நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். லைசென்ஸ் வழங்கப்பட்டதற்கு அவர்கள் லைசென்ஸ் பீஸ் கட்டவில்லை. அவர்கள் கட்டியதற்கான செலானோ, ரசீதோ இல்லை. ஜீனி விநியோகம் செய்யவேண்டுமென்றால் ரூ. 100 டெபாஸிட் செய்யவேண்டும். உணவு விநியோகம் செய்யவேண்டுமென்றால் ரூ. 200 டெபாஸிட் கட்ட வேண்டும். ரூ. 10 லைசென்ஸ் கட்டணம் கட்ட வேண்டும், அரிசி, நெல் எடுக்க வேண்டுமென்றால், வீட் அண்டு அதர் ப்ராடக்ஸுக்கு ரூ. 10 கட்டணம் கட்டி லைசென்ஸ் பெற வேண்டும். இம்மாதிரி எந்தவித நியாயமும் இல்லாமல், தகுதி இல்லாத ஒருவருக்கு கூட்டுறவு சங்கத்திலிருந்து பிரித்து, லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு சங்கத்துக்கு எந்த விதமான நோட்டீஸும் கொடுக்கப்படாமல் இவ்விதமாகச் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு ஜே. எம். ஸி. எஸ். என்ற கூட்டுறவு சங்கம் இருக்கிறது கூட்டணிக்கு அனுதாபியாக இருந்த திரு. லக்ஷ்மணன் என்ற ஒருவருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே மாதிரி கழிந்த தேர்தல் காலத்தில் இப்படிச் செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டினை நான் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். அங்கு எங்களுடைய கூட்டுறவு நூற்பு ஆலையின் தலைவராக இருக்கிற உயர்திரு ராஜகோபால் அவர்களுக்கு ஒரு மொத்தக் கடைக்கு ஒரு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தக் கடைக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு வியாபாரம் செய்யும் இடத்தில் பல தகராறுகள் இருக்கின்றன. எடை போட்டு தருவதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன அதிலும் குறிப்பாக விளவங்கோடு தாலூகா சப்ளை அதிகாரியாக இருப்பவர் அவர்களுடைய உறவினராக இருக்கிற காரணத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க இயலாமல் போயிருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கள்ளக்கடத்தல் அந்தப் பகுதியில் பல இடங்களில் இருக்கின்றது. 64 மூட்டை அரிசி களியக்காராவிலிருந்து அம்பலக்காரா செக் போஸ்டு மூலமாகக் கடத்தல் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் பேரில் எந்த விதமான நடவடிக்கையும் இதுகாறும் எடுக்கவில்லை. இந்த ஜில்லாவில் எவ்வளவு வேண்டுமானாலும் செக் போஸ்ட் வைத்துக்கொள்ளலாம். ஆட்சேபணை இல்லை. ஆனால், அவைகள் எல்லைப் பகுதியில் இருக்கவேண்டும்.' விளவங்கோடு தாலூகாவில் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சரியான முறையில் போதிய அளவில் அவர்களுக்கு ரேஷன் கிடைக்கவில்லை. மேற்கூறிய பகுதி வறண்ட பகுதியாக இருக்கிற காரணத்தினால், அங்கே படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் விளவங்கோடு தாலூகாவிற்கு படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.



முக்கியமான இந்த மானியக் கோரிக்கையிலே பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்பதை மட்டும் கூறி, நான் அமர்கிறேன். வணக்கம்.

***திரு ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, தமிழக அரசின் உணவு மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் கூற விரும்புகிறேன். இன்று தமிழ்நாடு கடுமையான வறட்சியை எதிர்நோக்கி இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். எனக்கு முன்பு பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் கடந்த கால நிலையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1965–66ல் இந்த மாநிலத்தில் மழை எந்த அளவுக்கு பெய்தது என்பதை நாம் கணக்கிட்டுப் பார்த்தால் 41 நாட்கள் மழை பெய்திருக்கிறது. 1966–67ல் 48 நாட்களுக்கு மழை பெய்திருக்கிறது. 1967–68ல் 39 நாட்களுக்குத்தான் மழை பெய்திருக்கிறது. ஆனால் 1968–69ல் 30 நாட்கள்கூட தேறவில்லை. இந்த நிலையில் தமிழக அரசு நாட்டிலே உணவுத் துறையிலே எந்தவிதமான கலவரமும் ஏற்படாமல் மக்களுக்கு இயன்ற அளவு விளைந்த உணவை கொள்முதல் செய்து பங்கீட்டுத் தந்திருக்கிறது. 1965–66ம் ஆண்டை நாம் எடுத்துக் கொண்டு பார்ப்போமானால், நாம் எவ்வளவு விலை கொடுக்கத் தயாராக இருந்தாலும் அரிசி கிடைக்காத நிலைதான் இருந்தது. ஆனால், எனக்கு முன்பு பேசிய திரு பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள் விலை ஏறிவிட்டது என்று. விலை ஏறிவிட்டது. நான் மறுக்கவில்லை. இன்று நிலவுகிற கடுமையான வறட்சியால்தான் விலை ஏறியிருக்கிறது. இந்த நிலை இயற்கை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. 1965–66ல் என்ன நிலை இருந்தது ? ஆக, தி.மு.க. அரசு ஏற்பட்டதற்குப் பின்னர் உணவுப் பங்கீட்டு முறை திட்டமிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு வேறு வேண்டியதில்லை. மற்றொரு எடுத்துக்காட்டையும் கூற விரும்புகிறேன். 1965–66ல் கட்டாய ரேஷன் கோவை, சென்னை போன்ற இடங்களில் இருந்தபொழுது வாரத்திற்கு இரண்டு நாட்கள் உணவுப் பங்கீட்டுக் கடைகள் திறந்து வைக்கப்பட்டன அன்று. இன்றோ வாரத்திற்கு 7 நாட்களிலும் திறந்து வைக்கப்பட்டு, பலருக்கும் அரிசி கொடுக்கப்பட்டு வருகிறது. இதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு உணவுத் துறை திறமையாக செயல்பட்டு வருகிறது. இதற்காக உணவுத் துறை செயலாளரையும், உணவுத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன். இதே போக்கை நம்முடைய அரசு நீடித்து வரும் என்று நம்புகிறேன்.

இந்த நிலையில் நமக்குத் தேவையான உணவு 43 லட்சம் டன். உற்பத்தியாகி உள்ளது 40 லட்சம் டன்னுக்கும் குறைவாக இருக்கிறது. இந்த நிலையில் மத்திய அரசிடம் ஒரு லட்சம் டன் அரிசி நமக்குத் தேவை என்று கேட்டிருக்கிறோம். அவர்களும் ஆதரவான பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். முதல்படியாக 10,000 டன் அனுப்புவதாக நான் செய்தியைப் பார்த்தேன். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்பு மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசியை வெளி நாட்டுக்கு ஏற்றுமதி சய்வதாக செய்தி வெந்தது. இந்த நாட்டிலுள்ள நிலையில், குறிப்பாக அரிசிக்காக மக்கள் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் வெளி நாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்வது நல்லதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய அரசு. இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்களும் அதைப்பற்றி மத்திய அரசுக்கு எடுத்துக் கூறவேண்டும். மற்றொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மத்தியில் இருக்கிற அரசு வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்கின்றது. இந்த ஆண்டு 125 கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்ய இருக்கிறார்கள். 125 கோடி ரூபாய் பெறுமான உணவுப் பொருள்களும் கோதுமையாகத்தான் வர இருக்கிறது. நம்முடைய மக்கள் அரிசி, சோளம் போன்றவைகளைத்தான் உண்டு பழக்கப்பட்டவர்கள். நம்முடைய மக்கள் கோதுமையை உண்டு பழக்கப் பட்டவர்கள் அல்ல. இந்த நிலையிலே உண்மையிலேயே மத்திய அரசு

தமிழக அரசின்பால் அக்கறை உள்ள அரசாக இருக்குமானால், ஏன் அரிசியை வரவழைக்கக்கூடாது? சரி, அப்படி வரவழைக்கவில்லையென்றால், பஞ்சாப், ஆந்திராவில் அரிசி அதிகமாக விளைகின்றது, அங்கிருந்து நமக்கு வாங்கிக் கொடுக்கலாம் அல்லவா? இங்கு இருக்கும் காங்கிரஸ்காரர்கள் மத்திய அரசுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

மற்றொன்று இந்தப் படி அரிசித் திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்கள் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் பல நேரத்தில் படி அரிசியைப்பற்றி அவாகள குறை கூறியிருக்கிறார்கள். உணவுப் பங்கீட்டு மூலம் நமது அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபா எட்டு கோடி நட்டம் ஆகிறது. தொழில் மானியத்தில் பேசும்பொழுது மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளை திறக்க வேண்டும். அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று கோரினார்கள். மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளை நாம் எடுத்து நடத்த வேண்டுமென்றால், ஆண்டொன்றுக்கு குறைந்தது ரூபாய் மூன்று கோடி நட்டம் அடைய வேண்டும். பதினைந்து ஆயிரம் தொழிலாளர்களுக்காக நாம் இன்றைக்கு ரூபாய் மூன்று கோடி அளவுக்கு நட்டத்தை ஏற்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று கூறும்பொழுது, நான்கு கோடி மக்களுக்கு நாம் உணவுப் பங்கீட்டு முறையில் உணவுப் பொருள்களைக் கொடுக்க ஆரம்பித்தோமானால் சுமார் இருபது கோடிக்கு நட்டம் ஏற்படும். இந்த நட்டத்தை நாம் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது. இதில் என்ன தவறு இருக்கிறது. என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

மற்றொன்றையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக அரசு முன்பிருந்த அரசு கடைப்பிடித்து வந்த கட்டாயக் கொள்முதலையே கடைப்பிடித்து வருகிறது. என்னைப் பொறுத்தவரையில் நான் கூறிக்கொள்வது என்னவென்றால், கட்டாயக் கொள்முதலை அடியோடு நாம் எடுத்துவிட வேண்டும். அதே நேரத்தில் தனியார் யாரும் உணவு வியாபாரத்தை செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் சட்ட விரோதம் என்று நாம் சட்டம் செய்ய வேண்டும். உணவுக் கொள்முதலையும் கைவிட்டு, உணவுப் பங்கீட்டையும் அரசே எடுத்து நடத்த வேண்டும். அதனால் எத்தனை தொகை செலவானாலும் பரவாயில்லை. மனிதன் உயிர் பிரச்சினை உணவு. அதன் மீது, கவனம் செலுத்தி, அந்த உயிர்ப் பிரச்சினையில் அக்கறை எடுத்துக் கொண்டு, எவ்வளவு நட்டம் ஏற்பட்டாலும் பாதகமில்லை என்று, அதை ஏற்றுக்கொண்டு அரசே நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணி அடிக்கப் பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் இருப்பது இரண்டு மணி நேரந்தான்; 17 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஐந்து நிமிஷம் என்றால், ஐந்து நிமிஷத்தில் முடிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து திரு. வெங்கடசாமி.

(**திரு. பி. வெங்கடசாமி :** அவர்கள் தெலுங்கில் உரையாற்றினார்கள்.

* **திரு. தா. விஜயராஜ் :** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை முன்னிட்டு, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மானியத்தில் பேசும்போது, ஒன்றைச் சொல்ல வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டில் உணவு பொருத்த வரையில், மிக நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக, வடாற்காடு, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்கள் மிக வறட்சியான நிலையில் இருக்கின்றன. இன்று இந்த சென்னைப் பட்டணத்தில் கொடுக்கும் அரிசியின் அளவு மூன்று நாட்களுக்கு மேல், அல்லது நான்கு நாட்களுக்கு மேல் வருவதில்லை. அது எல்லோருக்கும் தெரிந்திருக்கும் விஷயம். மற்ற நாட்களுக்கு மக்கள் அதிக விலையில் தான் வாங்கிச் சாப்பிடும் நிலை இருக்கிறது. வெளிச் சந்தையில், படி அரிசி ரூபாய் மூன்று என்று விற்கிறது. இந்த அளவில்கூட எதிர் காலத்தில்



கிடைக்குமா என்ற கேள்விக்குறிதான் நம் முன்பாக நிற்கிறது. காரணம் சென்னைக்கு வரும் அரிசி செங்கல்பட்டு மாவட்டம், வடாற்காடு மாவட்டம் போன்ற இடங்களிலிருந்து, பல முறைகளில், கடத்தல் முறைகளில் வந்து கொண்டிருக்கிறது. அதுதான் மக்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இப்பொழுது வடாற்காடு மாவட்டத்திலேயே கொடுமையான பஞ்சம் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். கிராமாந்தரங்களில் எவ்வளவு அரிசி, நெல் இருந்ததோ, அதெல்லாம். ஏறக்குறைய ரூபாய் ஐம்பது என்று இருந்தது. ரூபாய் எழுபத்தைந்து வரையில் விலை ஏறி, எல்லா வியாபாரிகளும் இருந்ததையெல்லாம் வாங்கிப் போய்விட்டார்கள். வெளி ஜில்லாக்களுக்கு எடுத்துச் சென்று விட்டார்கள். இனிமேல் அந்தப் பகுதியிலேயே மிகுந்த வறட்சி நிலைதான், சொல்ல முடியாத அளவில் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைதான் இருக்கிறது. ஆகவே, அங்கே ஒவ்வொரு கிராமத்திலும் ரேஷன் முறையில் கடைகளில் கொடுத்தாலொழிய, மக்கள் காலந் தள்ளுவதே பெரிய பிரச்சினையாகிவிடும்.

நேற்று பேசிய நண்பர் ஒருவர் சொன்னார், தண்ணீருக்குக்கூட ரேஷன் கார்டா என்று கேட்டார்கள். அதை ஒத்துக்கொண்டார்கள். அது மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த நிலை என்றால், மழை இல்லாத இந்தக் காலத்தில் நிலைமை எப்படியிருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தப் பகுதிக்கு சென்று ஆவன செய்ய வேண்டும் என்கிற நிலை இருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டும். அதை ஒரு குறையாக எடுத்துகொள்ளக் கூடாது. எதிர்க் கட்சி என்றிருந்தால் குறைகள்தான் சொல்லுவார்கள். அவற்றை ஏற்றுக் கொண்டு நிவர்த்திக்க வேண்டும்.

இந்த சம்பா அறுவடையில், இடைக்காலப் பயிர்கள், வடாற்காடு ஜில்லாவில், எந்தவிதமான பயிர்களும் கிடையாது. ஆகவே, அங்கே உடனடியாக நிவாரண வேலைகளை, ஆரம்பிக்க வேண்டும். இப்போது எந்த விதமான வேலைகளும் செய்யவில்லை என்பதால், திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் கூட்டுறவு முறையின் மூலமோ அல்லது வேறு முறையின் மூலமோ, அரிசி விநியோகம் செய்ய வேண்டும். இப்பொழுது எந்தவிதமான விநியோகமும் கிடையாது. ஆனாலும் கொள்முதல் செய்கிறார்கள். நான்கு பக்கங்களிலும் கேட்டுகளைப் போட்டு, அரிசி உள்ளே வரக்கூடாது என்று செய்கிறார்கள். மக்கள் எப்படி வாழமுடியும். கள்ளக் கடத்தலிலே சர்க்காரே ஊக்குவிக்கின்றது என்று சொன்னால் மிகையாகாது. அந்த நிலை மாற வேண்டும். நகரத்திற்கு சப்ளை செய்யும் பொறுப்பை சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்த இடத்திலும் விற்க தடை இருக்கக் கூடாது என்ற நிலை ஏற்பட வேண்டும். இப்பொழுது அரிசியே கிடையாது. அறிக்கையிலேயே பார்க்கிறோம். கள்ளக் கடத்திலிலே கண்டு பிடித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட நாற்பத்திஎட்டு லட்ச ரூபாய் அளவிற்குக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனாலும் இது மொத்தக் கள்ளக் கடத்தலிலே 10 சதவிகிதத்திற்குக்கூட இருக்காது. அதையெல்லாம் கண்டுபிடித்தால், ஐந்து கோடிக்கு மேல் நடந்திருக்கும் என்பதைப் பார்க்கலாம். ஆனால் அப்படி நடக்கவில்லை என்றாலும், கோயம்புத்தூர் போன்ற நகரங்கள் வாழ முடியாது; சென்னை நகரம் வாழ முடியாது; சரியான முறையில் அரிசி கொடுக்க முடியவில்லை என்றால், இந்தக் காரணத்தால்தான் என்பதைச் சொல்ல முடியும்.

அடுத்தபடியாக, நெல்லுக்கு விலை ஏற்றித் தருவதிலே இந்த அரசாங்கம் முன்வரத் தயங்குகிறது. சென்னைபோன்ற இடங்களில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று கொடுக்கிறார்கள். இந்த அரிசி அந்தக் குடும்பத்திற்குப் போதாது. ஆகவே, நான்கு தினங்களுக்குப் பிறகு அவர்கள் மூன்று ரூபாய் கொடுத்து ஒரு படி அரிசியை வாங்க வேண்டியிருக்கிறது.

[திரு. தா. விஜயராஜ்] [1969 மார்ச் 22

அப்படி வாங்குவதால் அந்தக் குடும்பத்திற்கும் நஷ்டம் ஏற்படுகிறது. இதை அரசாங்கம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்த அரசு கிராமத்தில் வாழும் விவசாயிகளுக்குக் கொஞ்சம் கூடுதலான விலையைக் கொடுத்து, இந்த வியாபாரத்தை அரசே முழுவதுமாக ஏற்று, மக்களுக்குக் கொஞ்சம் கூடுதலான விலையில் அரிசியைக் கொடுத்தாலும் நலமாக இருக்கும். அது பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அடுத்த உறுப்பினர் திரு பி. வேலுசாமி அழைக்கப்பட்டார்.)

THIRU K. RAMAMOORTHY : There is no quorum, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எண்ணிப் பாருங்கள். போதுமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நான் எண்ணிப் பார்த்தாகி விட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கோரம் இல்லாத நிலை ஏழாமல் நான் இருந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. பி. வேலுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப் பங்கீடு சம்பந்தமான மானியக் கோரிக்கையில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பருவமழை பொய்த்ததன் காரணத்தால் தமிழக அரசுக்கு உணவுப் பங்கீடு விஷயத்தில் போன ஆண்டு இருந்ததைக் காட்டிலும் இந்த ஆண்டு மிக அதிகமான பொறுப்பு இருக்கிறது என்பது உண்மை. இந்நிலையில் தமிழகத்தில் பல மாவட்டங்களிலே வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த வறட்சிப் பிரதேசங்களிலே வசதி படைத்தவர்கள், கொஞ்சம் சௌகரியமாக உள்ளவர்கள் எப்படியும் வாழ்ந்துவிடுவார்கள். ஆனால் கிராமத்திலே இருக்கிற ஏழை எளிய மக்கள் சாதாரணமாக வயலிலே உழைப்பவர்களும், ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் என்று கூலி வாங்கும் ஏழைகளும் வாழ்கின்ற வாழ்க்கைச் சோகம் ததும்புகின்ற வாழ்க்கையாக அமையும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த ஏழை மக்களுக்கு குடும்பக் கார்டு மூலமாக, குறைந்த விலையில் உணவுத் தானியங்கள் கிடைக்கச் செய்வது, தமிழ்நாட்டில் உழைக்கின்ற கரங்களைப் பாதுகாக்க எடுக்கின்ற நடவடிக்கைகளாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, நெல் அறைவைகளிலே ரைஸ் மில்களிலே—உபரியாக வரவேண்டுமென்ற காரணத்திற்காக நெல்லை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் ஊறப்போட்டு, ஒன்றுக்கு இரண்டு தடவை வேக வைக்கிறார்கள். இப்படிச் செய்யும்போது அந்த நெல் ஏற்கனவே ஒரு தடவை சமையல் ஆய்விடுகிறது. இதனால் உபரியாவது என்னவோ உண்மைதான். ஆனால் அது காரணமாக ஏற்படுகின்ற விளைவுகளோ ஏராளம். ரைஸ் மில்களில் இப்படிச் செய்வது இன்று நேற்று ஏற்பட்ட வழக்கமல்ல. இது தொடர்ந்து ஏழு, எட்டு வருடங்களாக நடைபெற்று வருகின்ற செயலாகும். உபரிக்காக செய்யப்படுகிற இந்த முயற்சியைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டால், இந்த அரிசியை உட்கொள்கின்ற மக்களுக்கு வருகின்ற வியாதிகளிலிருந்து அவர்களைக் காப்[illegible] எடுத்துக்கொண்ட முயற்சியாக இருக்கும் என்பதைத் தெரிவித்[illegible]ள்கிறேன். மக்கள் வியாதிகளிலிருந்து காப்பாற்றப்பட எடுத்துக்கொ[illegible] சரிய[illegible]ான பாதையாக இது அமையும். அரசு இதில் தீவிர கவனம் [illegible]லுத்த [illegible]வண்டும்.

அடுத்தாற்போல், [illegible] உற்பத்திச் செலவுகளைப்பற்றிப் பேசப்பட்டது. சாதாரணமாக நெல் உ[illegible]ற்பத்தி செய்கின்றபொழுது, ஆற்றுப் பாசனத்தின் மூலமும் குளத்துப் [illegible]பாசனத்தின் மூலமும், பம்ப் செட்டின் மூலமாகவும், ஏரிப் பாசனத்தின் [illegible]லமாகவும், விவசாயம் செய்கிறார்கள். எல்லோருக்கும் ஒரே மாதிரியான [illegible] விலை என்று இருப்பதை மாற்றியமைக்க வேண்டும்.



1969 மார்ச் 22] [திரு. பி. வேலுசாமி]

மாடுகளைப் பூட்டி ஓத்து ஓட்டி கிணற்றுப் பாசனத்தின் மூலம் விவசாயம் செய்யும் விவசாயிக்குக் கொஞ்சம் கருணைகூர்ந்து விலையைக் கூட்டித் தர வேண்டும். அவர்களைப் பொறுத்தவரையில் விலை கொஞ்சம் அதிகமாகத் தர ஏற்பாடு செய்தால் அது விவசாயிகளைப் பாதுகாக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கையாக இருக்கும். பல்லடம், தாலுக்கா, கோயம்புத்தூர், தாராபுரம் பகுதியிலே வறட்சி நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்குக் குடும்பக் கார்டின் மூலமாக ஒவ்வொரு வாரமும் உணவுத் தானியங்களை வினியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நகரங்களுக்குக் கிராமங்களிலிருந்து பால் வருகிறது. கிராமங்களிலிருந்து வரும் பாலுடன் முனிசிபல் எல்லையைத் தாண்டியவுடன், அங்கிருக்கும் சானடரி இன்ஸ்பெக்டர்களுக்கு வழக்கமாகக் கொடுக்கும் மாமூலைக் கொடுத்துவிட்டு, வேண்டிய அளவு தண்ணீரைச் சேர்த்து விடுகிறார்கள். கலப்படம் செய்பவர்களை இன்னும் கடுமையாகத் தண்டிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்வது சிறப்பாக இருக்கும். முன்பு வெள்ளைக்காரன் காலத்தில் கசையடி கொடுப்பது என்பது வழக்கமாக இருந்தது. உணவுப் பொருள்களில்—உணவு தான்யம், நெய், பால், முக்கியமாக பாலில் கலப்படம் செய்பவர்களைப் பிடித்து, சிறையில் அடைத்து, கசையடி கொடுத்தால் நல்லபடியாக திருந்துவார்கள் என்பது என் கருத்து. ஒரு சிலர் தங்களுடைய சுயநலனை மட்டும் வளர்த்துக்கொண்டு, சமூக நலன் தேவையில்லையென்ற கருத்தில்தான் கலப்படம் செய்யும் கேவலமான நிலைக்குப் போய்விடுகிறார்கள். பாலில் கலப்படம் செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து தண்டனைகள் அளிக்கப்பட வேண்டும். அதுதான் மனித சமூகத்தைப் பாதுகாக்க எடுத்துக் கொள்கின்ற நடவடிக்கைகளாக அமையும் என்பதைக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. மு. அலங்காரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் எடுத்துக்கொண்ட உணவு மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இன்றையதினம் தமிழகத்தில் உணவு சம்பந்தப்பட்ட வரையில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பருவமழை பொய்த்ததன் காரணமாக பல மாவட்டங்களும், உபரி மாவட்டங்களும் விளைச்சலின்றி மக்கள் கஷ்டப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மக்கள் உணவின்றி, வேறு மாவட்டங்களை நாடிச் செல்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மக்கள் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களுக்குச் சென்று தங்களுடைய வயிற்றை நிரப்புகின்ற வகையில் இருந்து வருகிறார்கள். நமது அரசு எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியினால், ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற திட்டத்தின் மூலம், குடும்பக் கார்டு மூலம் ஏறக்குறைய 170 லட்சம் மக்களுக்கு அரிசி வழங்கும் திட்டத்தை ஏற்றுள்ளதை எல்லாக் கட்சிகளும் பாராட்டும் அளவில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. படிஅரிசி திட்டத்தை விரிவுபடுத்தும் முறையில் நமக்கு அரிசி கிடைக்காவிட்டாலும் அரிசி பங்கீடு (ரேஷன்) முறை இருப்பதன் காரணமாக இன்றையதினம் விலை ஏறாமல் இருக்கிறது. குறிப்பாக எல்லா மாவட்டங்களிலும் வெளிச் சந்தைகளில் அரிசி கூடுதலான விலையில் விற்கவில்லையென்பது எல்லோருக்கும் தெரியும். எல்லா மாவட்டங்களிலும் சட்டபூர்வமாக ரேஷன் இல்லாவிட்டாலும், குடும்பக் கார்டு மூலமாக பல லட்சக்கணக்கான மக்களுக்கு அரிசி வினியோகிப்பதால் இன்றையதினம் அரிசி விலை குறைந்த அளவில் விற்கிறது. அரிசி விலை ஏறுகிறது என்று சொல்வது பொருத்தமல்ல.

இன்றையதினம் நாட்டிலே இருக்கும்படியான நிலைமையை அனுசரித்து மத்திய சர்க்காரை உதவி செய்ய வேண்டுமென்று நாம் வற்புறுத்த வேண்டும். நாம் அனைத்து இந்திய உணவுக் கொள்கையில் அடிப்படையில் அண்டை மாநிலங்களுக்கு உபரி தானியத்தை அனுப்பிக்கொண்டிருந்தோம். தற்போதுள்ள நிலவரத்தில் மத்திய சர்க்கார் நமக்குத் தேவையான அரிசியைக் கொடுக்க வேண்டும். அதற்காக நாம் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

கொள்முதலுக்கு விதித்திருக்கின்ற விலை தகுமான விலையாக இருக்கிறது. உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு விவசாயப் பெருமக்கள் வெற்றிகரமாக ஒத்துழைக்க வேண்டும். சிலர் அரசியல் நோக்கத்தோடு, கொள்முதல் விலையைக் கூட்ட வேண்டும். விவசாயிகள் கொள்முதலுக்கு நெல் போடக்கூடாது என்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்வது தவறு. தங்களுக்குத் தேவையானது போக மீதமுள்ளதை அரசாங்கத்திற்குத் தந்து உதவ விரும்புகிறார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பஞ்ச நிவாரண வேலையாக ரேஷன் கடைகளைத் திறந்து அரிசி வழங்க வேண்டும். அப்படி அரிசி கிடைக்காவிட்டாலும், கோதுமை, மைதா போன்ற உணவுப்பொருள்களை வழங்க வேண்டும். மத்திய அரசு நமக்கு அதிகமான கோதுமையைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது கோதுமை ஓரளவுக்கு தகுந்த உதவியாக இருக்கும். குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்ச நிலைமைக்காக 40 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை ரெகுலர் ஒர்க்கில் போடுவதாகத் தெரிகிறது. இதை ஸ்பெஷல் ஒர்க்கில் போட்டு, அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வசதி செய்துகொடுக்க வேண்டும்.

மற்றபடி ரைஸ் மில்களுக்கு லைசென்சு வழங்குகிறபோது பொதுமக்களுக்குத் தெரிகிறபடி, பக்கத்தில் உள்ள ரைஸ் மில்காரர்களுக்குத் தெரிகிறபடி வழங்க வேண்டும். குறிப்பாக கமுதியில் ஏற்கனவே ரைஸ்மில்கள் இருக்கின்றன. மேலும் பக்கத்தில் உள்ள ராஜாஜி ஹாஸ்டல் கைக்குத்தல் அரிசி சங்கம் கடுமையாய் எதிர்க்கிறார்கள். அப்படி இருக்க, இப்போது புதிதாக ஒரு ரைஸ் மில்லுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதை மறுஇரிசீலனை செய்து அதை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக திறமையானதொரு உணவுக்கொள்கையை நமது சர்க்கார் பின்பற்றி வருவதற்காகப் பாராட்டி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**—பேரவையின் 6 (1) விதியின் கீழ் இப்பேரவையின் மாற்றுத் தலைவர்களாக கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன்:—

1. திரு. பெ. சௌந்திரபாண்டியன்.
2. திரு. எஸ். ஆறுமுகம்.
3. திரு. நா. வீராசாமி.
4. திரு. கா. ராமமூர்த்தி.

## 6. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

***திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இன்றைய மானியத்தின் மீது எங்கள் கட்சிக்காரர் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பால்பண்ணைத் துறையில் மாதவரம் பண்ணை மூலமாக லாபம் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம். இருந்தாலும் சில பண்ணைகள் சரியாக நடைபெறவில்லை. பால் பவுடரைக் கலந்து கொடுப்பதான புகார்கள் வருகின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து நட-





வடிக்கை எடுத்து கலப்படம் நடைபெறாது பார்த்துக்கொள்ள வேண்டும். கலப்படம் செய்கிறவர்களுக்குத் தக்க தண்டனை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி, ஸ்ரீரங்கம் பால்பண்ணை கூட்டுறவு சங்கத்தில் ஒரு நாள் பதப்படுத்தும் திறன் 14 ஆயிரம் லிட்டர் என்றால் நாலாயிரத்து ஐநூறு தான் பதப்படுத்துகிறார்கள் என்று தெரிகிறது. இதுவும் சரியான முறையில் செயல்படவில்லை என்று தெரிகிறது. அதுபோலவே சிதம்பரத்தில் உள்ள பால்பண்ணையும் சரியாக வேலை செய்யவில்லை என்று குறிப்பில் இருந்து காணப்படுகிறது. இதுபோன்ற நிலையை அகற்றி திருச்சி-ஸ்ரீரங்கம் கூட்டுறவுப் பால்பண்ணை நல்லமுறையில் செயல்படத்தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நெல் கொள்முதல் நடவடிக்கைகள் எங்கள் மாவட்டத்தில் நடந்துவரும் செயலானது மிகவும் வருந்தக்கூடியதாக இருக்கிறது. உணவுப் பற்றாக்குறையை முன்னிட்டு கொள்முதல் செய்கிறார்கள். கொள்முதல் செய்கிற முறை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. ஓரிடத்தில் ஏக்கருக்கு 2 மூட்டை என்கிறார்கள். மற்றொரு இடத்தில் ஏக்கருக்கு 4 மூட்டை, 5 மூட்டை என்கிறார்கள். அரியலூர் பகுதியில் ஒரு ஏக்கருக்கு 6 மூட்டை கூட வசூல் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல ஒரு ஏக்கருக்குக் குறைந்த அளவுக்கு நிலம் உள்ளவர்களிடத்தில் கூடக் கடுமையான முறையில் கொள்முதல் செய்யப்படுகிறது. 60 சென்ட், 80 சென்ட், வைத்திருக்கிறவர்களை எல்லாம் கடுமைப்படுத்தி கொள்முதல் செய்திருக்கிறார்கள்.

இன்னும் குறிப்பாகச் சொல்லுகிறேன். எங்கள் பகுதியில் திருமானூரில் ஐந்து பேர் அவித்த நெல்லை அறவைக்கு மில்லுக்கு எடுத்துப்போனார்கள். அந்த அவித்த நெல் மூட்டையைக் கூட பறிமுதல் செய்து கொள்முதல் செய்திருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று தந்தி கொடுத்திருக்கிறார்கள். இப்படித் துன்புறுத்தப்படும் நிலை மாற்றப்படவேண்டும்.

தாங்கள் கஷ்டப்பட்டு, தங்கள் நிலத்தில் பயிரிடுகிற நெல்லைக்கூட அறுத்து வீட்டிற்குக் கொண்டு வரமுடியாத நிலைமை இப்போது இருக்கிறது. அரசாங்க அலுவலர்கள் அவர்களை மதிப்பதில்லை. திருடர்களைப் போல நடத்துகிறார்கள். விரட்டி அடிக்கிறார்கள். தங்கள் நிலத்தை அறுக்கவேண்டுமென்றால் விவசாயிகள் கிராம கணக்குப்பிள்ளை, முனிசீபிடம் அனுமதி பெறவேண்டும். அவர்களிடம் சொல்லிவிட்டுத் தான் அறுக்க வேண்டுமாம். இது போன்ற நிலை மாற்றப்படவேண்டும்.

கிராம உத்தியோகஸ்தர்களிடம் சொல்லிவிட்டு நெல்லை அறுத்து வண்டியில் கொண்டுவருகிறபோது கூட நடுவழியில் நெல்லை வாங்கிவருவதாகச் சொல்லி—கடத்துவதாகச் சொல்லி அதைப் பறிமுதல் செய்கிறார்கள். உடனே வண்டியை விட்டுவிட்டு அவர்கள் கிராம அதிகாரிகளைத் தேடி ஓட வேண்டும்.

இன்று இப்படி விவசாய மக்கள் படுகிற துன்பங்கள் பல. அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிற வரிப் பளு அதிகம். கொடுமைகள் அதிகம். ஐந்து ஏக்கர், பத்து ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்களிடத்தில் கொள்முதல் செய்வதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்களிடம் இருக்கும் நெல்லை எல்லாம் பறிமுதல் செய்வது மிகவும் பயங்கரமாக இருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

அரியலூர் வட்டாரத்தில் இரண்டு மூன்று பகுதிகள் அரியலூர், செந்துறை பிர்க்கா பஞ்சப் பகுதியாகக் காட்சியளிக்கிறது. மழையே இல்லை. இதுபோன்ற பகுதிகளில் உடனடியாக நெல் இல்லாவிட்டாலும் கோதுமையோ, சோளமோ, கம்போ கொடுத்தால்தான் அந்தப் பகுதி மக்கள்

காப்பாற்றப்படுவார்கள். இந்த ஆண்டு வந்திருக்கிற பஞ்சத்தில் இருந்து உடனடியாக அவர்களைக் காப்பாற்றியாக வேண்டுமென்று குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. என். சாமிநாதன் :** மாண்புமிகு **சட்டப்பேரவைத்** தலைவர் அவர்களே, இன்று சபை முன் வைக்கப்பட்டிருக்கிற உணவு மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அதற்கு முன்பாக இந்த மன்றத்தின் முன்னாள் முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது அஞ்சலியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

கடந்த இரண்டாண்டுகளாகப் பொறுப்பேற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு உணவு உற்பத்திப் பெருக்கத்தில் மிகவும் அக்கறை கொண்டு பல காரியங்களைச் செய்து வந்திருப்பதையும், உணவு உற்பத்தியை பெருக்கி மக்களுக்கு உணவு தானியம் சீராகக் கிடைக்கச் செய்யும் நடவடிக்கைகளை எடுத்து வருவதையும் யாரும் மறுக்க முடியாது. அதற்காக நாம் முன்னால் முதல் அமைச்சர் அவர்களையும், விவசாய உணவு அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த நடப்பு ஆண்டில் யாருமே எதிர்ப்பாராத வண்ணமாக இயற்கை நம்மைச் சோதனை செய்துவிட்டது. அதன்காரணமாக வடாற்காடு, செங்கற்பட்டு போன்ற உபரி மாவட்டங்கள் கூட வெளி மாவட்டங்களில் இருந்து வருகிற உணவுப்பொருளை எதிர்ப்பார்த்திருக்கும் அபாயகரமான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பஞ்ச நிலையை சமாளிக்கத்தான் மத்திய அரசிடம் இருந்து தமிழக அரசு ஒரு லட்சம் டன் அரிசி கோரியிருக்கிறது. சில தினங்களுக்கு முன் டெல்லி சென்ற நமது முதல் அமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் நமது நாட்டின் பஞ்ச நிலையை எடுத்து விளக்கியதன் காரணமாக அவர்களும் உடனடியாக 10 ஆயிரம் டன் அரிசி அனுப்ப இசைந்துள்ளார்கள். படிப்படியாக ஒரு லட்சம் டன்னுக்கு பக்கமாக அனுப்புவதாகவும் இசைந்துள்ளார்கள். அதோடு இந்தியப் பிரதமர் அவர்களே பஞ்சப் பகுதியைச் சுற்றிப் பார்க்க இங்கு வருவதாக இருக்கிறார்கள். இத்தகைய ஒரு ஏற்பாட்டைச் செய்த நமது முதல் அமைச்சர் அவர்களை நான் மிகமிகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதோடுகூட பலவேலைகளுக்கிடையே அவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இந்தியப் பிரதமர் நமது பஞ்சப் பகுதியைப் பார்வையிட வருவதற்காக அவர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, எனது தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக்களை எடுத்துக் கூறி எனது உரையை முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். எனது வெள்ளக்கோவில் பகுதி கோவை மாவட்டத்திலேயே மிகவும் வறண்ட பிரதேசம் என்பதை இங்கே உள்ள அமைச்சர்களில் இருந்து பலரும் அறிந்திருப்பார்கள். அங்கே கீழ் பவானி பாசன வசதி பெற்ற ஒரு பகுதி மட்டும் செழிப்பாக இருக்கிறது. மற்ற பகுதிகளை எடுத்துக்கொண்டால் குடிதண்ணீர் கூடக் கிடைக்காத நிலைதான் இருக்கிறது. நல்லகாலத்திலேயே வெள்ளக்கோவிலில் ஒரு குடம் தண்ணீர் 10 காசு என்கிற போது இன்று தமிழ்நாடு முழுவதுமே பஞ்சம் ஏற்பட்டிருக்கிற போது குடம் என்ன விலைக்கு விற்கும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். என்ன விலை கொடுத்தாலும் குடிதண்ணீர் கிடைக்காது, மக்கள் படுகிற அவதி நிலையைப் பார்க்கிறபோது எங்கள் மனம் வேதனைப்படுகிறது. ஆகவே ஏதாவது ஒரு நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்து வெள்ளக்கோவில் பகுதிக்குக் குடித்தண்ணீர் வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக மூலனூர். மூலனூர்ப் பகுதியிலே இதுவரையில் எந்தவிதமான நீர்ப்பாசனத் திட்டமும் கொண்டுவரப்படவில்லை. அந்தப் பகுதி நீர்ப்பாசன வசதிகளைப் பெறவேண்டுமென்றால் ஒரே ஒரு திட்டம் தான் இருக்கிறது. இதற்கு முன்பு இரண்டு முறைகள் பேசும்பொழுதே நான் குறிப்பிட்டிருக்கிறேன். கண்ணடிப்புத்தூர் என்ற இடத்திலே அமராவதி ஆற்றிலே அணைகட்டி உபரி நீரை, அதாவது ஓவர்



ப்ளோயிங் வாட்டரை, மூலனூர்ப் பகுதிக்கு வாய்க்கால் வழியாய்க்கொண்டு வந்து குட்டைகளை அமைத்து, அந்தக் குட்டைகளிலே நீரைத் தேக்கிவைத்தால் அங்கு இருக்கக்கூடிய கிணறுகளிலே ஊற்றுப் பெருகும். அப்படிச் செய்வதன்மூலம் 2 போகம் விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும். இந்தத் திட்டம் முன்பே பரிசீலனை செய்யப்பட்டு அந்தத் திட்டத்திற்கு நிறையச் செலவாகும் என்ற காரணத்தால் அதை ஒத்திவைத்திருப்பதாகத் தெரிகிறது. நான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை மிகப்பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்., தயவுசெய்து மீண்டும் அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து திட்டச் செலவு ஓரளவு அதிகமாக இருந்தாலும் அந்தப் பகுதிக்கு தனி முக்கியத்துவம் கொடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான்கைந்து திங்களுக்கு முன்பு என்னுடைய பகுதியிலே கால்நடைத் தீனிக்காக மக்கள் தீனி வாங்கப் பணமில்லாமல் அவதிப்பட்டார்கள். அந்த நிலைமையை இன்றைய நிதியமைச்சர் அவர்களிடம் எடுத்துகூறி அப்போது நிதியமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் அதற்காக 8 லட்ச ரூபாயும், கிணறுகள் அடிவெட்டு வெட்டுவதற்காக 7 லட்சம் ரூபாயும் கொடுத்தார்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, பரம்பிக்குளம் ஆளியாறுவாய்க்கால் காங்கேயத்திலிருந்து கண்ணபுரம் வரைக்கும் விஸ்தரித்தால் நல்லது, ஒவ்வொரு ஆண்டும் கண்ணபுரம் திருவிழாவில் மாட்டுச் சந்தை, 40 ஆயிரம், 50 ஆயிரம் என்ற அளவில் கூடுகிறது. இப்பொழுது சித்திரா பௌர்ணமி வருகிறது, திருவிழா நடக்க இருக்கிறது. அப்பொழுது ஏராளமான மாடுகளை தமிழ் நாட்டிலே உள்ள பல மாவட்டங்களிலிருந்து விவசாயிகள் வந்து அங்கே மாடு வாங்கிப் போகிறார்கள். இந்த ஆண்டு அந்தத் திருவிழா நடைபெறுமா பெறாதா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் தண்ணீர்ப் பஞ்சம். எனவே அந்தத் திருவிழாவை நடத்தக்கூடிய முறையிலே அந்த வாய்க்காலை கண்ணபுரத்துக்கு விஸ்தரிப்புச் செய்தால் நல்லதாக இருக்கும், அந்தத் திருவிழாவும் நடக்கும் என்று சொல்லிக்கொண்டு கோவை போன்ற பஞ்சப் பிரதேசங்களிலே பஞ்ச நிவாரண வேலைகள் தொடங்கவேண்டுமென்றும் கிஸ்தி வசூல், கடன் வசூல் போன்றவற்றை நிறுத்திவைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிப்பட்டது.)

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாவட்டங்களிலே தஞ்சை மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்கள் எல்லாம் பற்றாக்குறை மாவட்டங்களாக இருக்கக் கூடிய நிலைமையிலே தான் நாம் நின்று கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டிலே சமாளித்துவிட்டால் பிற்காலத்திலே சமாளிப்பது பெரிய கஷ்டமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை இந்த சர்க்கார் உண்மையிலேயே மிகவும் சாமர்த்தியமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. வரப்போகிற எட்டு மாத காலத் ந. ப.
திலே ஒரு சோதனையாக இருக்கப் போகிறது அந்தக் காலம் எனவே, அதை 12-00
உணவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் திறமையாக சமாளிக்க வேண்டும். அவர்களுடைய திறமையைக் காட்டுவதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக வந்திருக்கிறது. ஒன்று மத்திய அரசாங்கத்திடமிருந்து போதுமான அளவுக்கு உணவைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக புஞ்சை தானியங்களைக் கொள்முதல் செய்து ஜனங்களுக்கு விநியோகிக்கக் கூடிய காரியத்தைச் செய்யலாம். இப்பொழுது நாம் புஞ்சை தானியத்தைக் கொள்முதல் செய்வதில்லை. பஞ்சம் கடுமையாக இருக்கிற நேரத்திலே புஞ்சை தானியத்தை மக்கள் சாப்பிட்டுத்தான் ஆகவேண்டுமென்ற நிலைமையை உண்டாக்க வேண்டும். உணவு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறது—தமிழ்நாட்டு மக்கள் அரிசியைத்தான் சாப்பிடக் கூடியவர்கள், கோதுமையை சாப்பிடுவதாக இருந்தாலும் அதனுடைய விலையும் ஜாஸ்தியாக இருக்கிறது என்று. கோதுமையைப் பற்றிக் கவலையில்லை. நகரப்புறமானாலும் சரி, கிராமப்புறங்களானாலும் சரி, பஞ்சத்தைச் சமாளிக்க பொதுமக்களுக்கும் பங்கு உண்டு என்ற வகையிலே கிடைக்கின்ற தானியத்தைச் சாப்பிட முன்வரவேண்டும். அப்படியில்லாமல்

நான் அரிசியைத் தான் சாப்பிடுவேன், மற்றவற்றைச் சாப்பிடமாட்டேன் என்று சொல்வதெல்லாம் ஃபியூடலிஸ்ட் பாலிசி. அதாவது நிலப்பிரபுக்கள் கொள்கை. அப்படியில்லாமல் அரிசியாகட்டும், கம்பு ஆகட்டும் அல்லது சோளம் ஆகட்டும் எது கிடைக்கிறதோ அதைச் சாப்பிடக் கூடிய நிலைமை வரவேண்டும். நான் கம்பு, ராகி, சோளம் சாப்பிடக்கூடியவன் என்ற முறையிலே ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இவற்றிலே இருக்கிற ருசி அரிசியிலே கிடையாது. ஏதோ ஒரு குழம்பு ஊற்றிக்கொண்டால் சுவை வருகிறதே தவிர வேறு எதுவும் கிடையாது. ஸ்டார்ச்சுதான். எனவே புஞ்சைத் தானியங்களைக் கொள்முதல் செய்யுங்கள். நகரங்களில் இருக்கக் கூடியவர்கள் கம்பு, சோளம், ராகி போன்றவற்றைச் சாப்பிடக்கூடிய முறையில் அவர்களுக்கும் அவற்றை விநியோகிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களும் பஞ்சத்தைத் தீர்ப்பதிலே பங்கு எடுத்துக் கொள்ளமுடியும்.

அடுத்தபடியாக, கொள்முதல் முறையில் அடிப்படையான மாற்றம் செய்யவேண்டும். ஒரு எக்கருக்கு நிலம் உள்ளவர்களிடம் கொள்முதல் செய்யக் கூடாது என்று விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தாலும் ஒரு எக்கர் வைத்திருக்கிறவர்களிடம் அதிகாரிகள் கொள்முதல் செய்கிறார்கள். இதை கவனிக்க வேண்டும். ஐந்து எக்கருக்குக் குறைந்து உள்ளவர்களிடம் லெவி சிஸ்டம் பிரகாரம் கொள்முதல் செய்கிறோம். அதற்கு மேலே உள்ளவர்களிடம் அவர்களிடமிருந்து பூர்ணமாக எவ்வளவு கொள்முதல் செய்யமுடியுமோ அதைச் செய்தால்தான் உணவு நெருக்கடியை நாம் சமாளிக்க முடியும். இதிலே தயவுதாட்சண்யம் காட்டக்கூடாது. நான் விலையை உயர்த்தவேண்டுமென்றுகூட சொல்ல முன்வரவில்லை. கொடுக்கப்படுகின்ற போனஸை உயர்த்திக்கொடுப்பதன் மூலம் அவர்களிடமிருந்து அதிகப்படியாகக் கொள்முதல் செய்வதற்கு ஆதரவை நாம் தேட வேண்டும். வருகின்ற பத்து மாதங்களில் 5 லட்சம் டன்னை வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு விநியோகம் செய்வது என்றால் அது மிகவும் கஷ்டமான காரியம். 45 லட்சம் ஜனங்களுக்கு 25 ஆயிரம் டன்னும், 1 லட்சத்து 45 ஆயிரம் மக்களுக்கு 28 ஆயிரம் டன்னும் கொடுக்கக் கூடிய முறை சரியாக இல்லை. கொஞ்சம்கூடப் பயப்படாமல் இந்த அரசாங்கம் படியரிசித் திட்டத்தை ரத்துசெய்துவிடவேண்டும். சாத்தியப்படுகிற வரை எல்லா மக்களுக்கும் உணவுதானியங்களைக் கொடுக்க தைரியமாக முன்வரவேண்டும்.

உணவு தானிய சாகுபடியானது குறைந்துகொண்டேதான் வருகிறது. இதைத் தடுத்து நிறுத்த ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும். கொண்டு வந்தால் அதிலே பல சங்கடங்கள், பல எதிர்ப்புகள் வந்துதான் ஆகும். 10 எக்கர் வைத்திருக்கிறார்கள் என்றால் அதிலே குறைந்தது பாதியில் அதாவது 5 எக்கர் உணவு தானியம் கட்டாயமாகப் பயிர் செய்ய வேண்டும். பஞ்சகாலத்திலே அப்படிச் செய்யாவிட்டால் வேறு எந்தக் காலத்திலே செய்யப்போகிறார்கள்? எனவே, சரிபாதியிலே அவர்கள் உணவு தானியம் போடவேண்டும், மற்றவையிலே அவர்கள் வியாபாரப் பயிர்களைப் போட்டுக் கொள்ளலாம் என்ற அளவுக்கு ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சப் பிரதேசத்திற்கு அரசாங்கம் அரிசியாகக் கொடுக்காவிட்டாலும், கோதுமையோ, கோதுமை மாவோ, சோளமோ, சோளமாவோ, கம்போ, ராகியோ, ஏதாவது கொடுத்து உதவி செய்வதற்கு முன்வரவேண்டும். அப்படிச் செய்தால்தான் பஞ்ச நிலைமையைப் போக்க முடியும். தஞ்சைதான் உபரி மாவட்டமாக இருக்கிறது, மற்றவையெல்லாம் பஞ்சப் பிரதேசங்களாக இருக்கின்றன. எனவே, கோதுமை போன்ற எல்லா உணவு தானியங்களையும் சாப்பிடக் கூடிய முறையும் அந்தப் பழக்கத்தை நம்முடைய மக்களிடத்திலே அதிகமாகப் பரப்புவதற்கு என்ன காரியத்தைச் செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(திரு. நா. வீராசாமி தலைமை.)



*திரு. எம். ஆர். கண்ணன் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு மானியங்களையும் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சர்க்கார் உணவுப் பங்கீட்டு முறையிலே ஓரளவுக்கு நல்ல அடிப்படையிலே . பல கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து தேவையான உணவுப் பொருள்களைக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தாலும் இதிலே அதிகாரிகள் அதிக அக்கறை செலுத்தவில்லை என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். சில அதிகாரிகள் நல்லவர்களாக இருக்கிறார்கள். மக்கள் நல்ல முறையிலே சாப்பிடக்கூடிய உணவுப் பொருள்கள் கொடுக்கவேண்டும். எந்த வியாபாரமாக இருந்தாலும் தானே ஏற்று நடத்தினால் தான் லாப நஷ்டம் ஏற்படுவதை அறிந்து அதில் அக்கறை ஏற்படும். அதிகாரிகள்தான் அருள் உள்ளம் கொண்டும் அவர்கள் கடவுளாக மாறி நல்ல முறையிலே சேவை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் சர்க்கார் போடுகிற திட்டங்கள் எதுவாயினும் நல்ல முறையில் செயல்படும். நல்ல கொள்கையை சர்க்கார் வகுத்து நிறையப் பணம் செலவு செய்து அதிகாரிகள் அதை நல்ல முறையிலே நிறைவேற்றவில்லை என்றால் பொதுமக்கள் அதன் பயனைப் பெற முடியாது. ரேஷன் கடைகள் இருக்கின்றன. நிறைய இன்னும் போகஸ் கார்டுகள் இருந்துகொண்டிருக்கின்றன. சர்க்கார் அனுமதித்துள்ள லாபத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டால் ரேஷன் கடைகள் வைப்பதற்கு இவ்வளவு பேர் முன் வரமாட்டார்கள்.

ஆனால், ரேஷன் கடைகளைத் திறக்கவேண்டுமென்று பலர் விண்ணப்பங்கள் போடுகிறார்கள். ஒரு கடைக்கு நூறு கார்டுகள் என்று வைத்துக்கொண்டாலும் அந்த அரிசியை வெளியே விற்று லாபம் சம்பாதிக்கலாம் என்ற முறையில் தான் அதற்காக விண்ணப்பங்கள் போடுகிறார்கள். இவை சில தவறான அதிகாரிகளின் உடந்தையோடு கூட சில இடங்களில் நடக்கின்றன. இதைக் கண்டு பிடிக்கவேண்டும். என்னைப் போல் சிலரை வைத்துக்கொண்டு செய்தால் நிச்சயமாக அதைக் கண்டு பிடிக்கலாம். அரிசியை அவர்கள் மக்களுக்குத் தான் கொடுக்கிறார்கள் என்றாலும் கூட அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கிறார்கள். இதைக் கவனிக்கவேண்டும்.

ரேஷன் கடைகளை சென்ற காலத்தில் அதிகமாக—நான் சொல்வதில் தவறு இல்லை, நாடார் சமுதாயத்தினருக்குத் தான் கொடுத்திருக்கிறார்கள். நாடார் ஆட்சிக் காலத்தில், அவர்கள் இந்த சர்க்காரைப்பற்றி தவறான பிரசாரம் செய்கிறார்கள். அரிசியில் ஏதாவது தவறு இருந்தால் போய் முதல் அமைச்சர் கருணாநிதியைக் கேளுங்கள், போய் உணவு அமைச்சர் கோவிந்தசாமியைக் கேளுங்கள் என்று சொல்லி தவறான பிரசாரம் செய்கிறார்கள். இந்தப் பிரசாரம் ஒழிக்கப்பட வேண்டும். அதில் பெருவாரியானவர்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் இருக்கிறது, அது உண்மையும் கூட. ஆகவே அதை நிவர்த்திக்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இந்த நிலை மாறினால் மக்களுக்கு மிக மிக நல்லது என்ற என் எண்ணத்தை இங்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த பால் சப்ளையை எடுத்துக்கொண்டால், மாடுகளை எல்லாம் சர்க்காரே வாங்கிக் கொடுக்கவேண்டும். பெல்காம், சிந்தி, டெல்லி போன்ற இடங்களில் நல்ல கறவை மாடுகள் இருக்கின்றன. குறைந்த விலையிலும் கிடைக்கின்றன. அவற்றை சர்க்கார் வாகன்கள் மூலம் கொண்டு வந்து சேர்த்தால் பால் உற்பத்தி அதிகரிப்பதோடு மக்களுக்கு குறைந்த விலையில் பால் வாங்கிக்கொள்ளவும் முடியும். தனி நபர்கள் இதைச் செய்வது என்றால் செலவு அதிகமாகிறது. ஆகவே இதைக் கவனிக்கவேண்டும். மாடுகளுக்கு உணவு சப்ளை செய்வதில் கூட சர்க்கார் ஓரளவு முயற்சி எடுத்து சர்க்காரே அந்த உணவுப் பொருள்களை கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கவேண்டும்.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1969 மார்ச் 22

பாலின் விலையும் ஓரளவிற்கு உயர்த்தப்பட வேண்டும். லிட்டருக்கு இரண்டு ரூபாய்க்குக் குறைவாகக் கொடுத்தால் கட்டுப்படியாகாது. நான் ஒரு பால் வியாபாரி என்று சொல்லிக்கொள்கிறேன். இரண்டு ரூபாய்க்குக் குறைந்து ஒரு லிட்டர் எருமைப்பால் விற்றால் வியாபாரி பிழைக்க முடியாது. ஆகவே, பால் விலையை சற்று அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். அதனால்தான் தனியார், சர்க்கார் பால் பண்ணைகளுக்கு வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகவே பால் விலையை சற்று உயர்த்தவேண்டும். சுத்தமான பால் கிடைக்கவேண்டும் என்பது தான் குறிக்கோளாக இருக்கவேண்டும், விலை சற்று அதிகமானாலும் பரவாயில்லை.

அடுத்தபடியாக, மாடுகளுக்கு இன்ஷூரன்ஸ் செய்யவேண்டும். 2,000 ரூபாய்க்கு ஒரு மாடு வாங்கி, அது இறந்தால் இருபது ரூபாய் செலவு செய்து தான் அதைப் புதைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, மாடுகளுக்கு இன்ஷூரன்ஸ் மிகவும் தேவை (மணியடிக்கப்பட்டது).

இந்த கலப்படச் சட்டம் இருக்கிறது. கொழுப்புச் சத்து அதிகமில்லை என்று பால் வியாபாரிகள் தண்டிக்கப்படுகிறார்கள். கொழுப்பு இருக்கிறதா இல்லையா என்பதை எப்படி பால்காரர்கள் கண்டுபிடிக்க முடியும் என்று தெரியவில்லை. சென்ட்ரல் ஆக்ட் பற்றி எங்களுக்குத் தெரியாது என்று மாநில அரசினர் சொல்கிறார்கள். இது பற்றி கார்ப்பரேஷனும், சர்க்காரும் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. கலப்படம் செய்யப்பட்டிருக்கிறது என்று பால் வியாபாரிகளுக்கு ஆயிரம், இரண்டாயிரம் என்று அபராதம் போட்டு சிலரை ஒரு வருடத்திற்கு அநியாயமாக ஜெயிலிலும் தள்ளி விடுகிறார்கள். ஆகவே இதைப் பற்றி நடவடிக்கைகள் எடுத்து இதைத் தடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கால்நடை மருத்துவம். இந்த கால்நடை மருத்துவர்கள் அதிகமாக இருக்கிறார்களே தவிர அவர்கள் மொபைல் வான்கள் மூலம் ஒவ்வொரு டிவிஷனுக்கும், சென்னை கார்ப்பரேஷன் உதவியுடன் சென்றுவர ஏற்படுத்தினால் தான் கால்நடைகளை நன்கு கவனிக்க முடியும் என்று கூறி இந்த அளவில் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** மிஸ்டர் சேர்மன் சார், இந்த மானியத்தின் மீது பேசும்போது சர்க்கார் முதல் பக்கத்தில் நல்லதொரு விஷயத்தைப் பற்றி எழுதியிருப்பதைச் சொல்கிறேன். "தமிழ் நாடு, அரிசியைப் பொறுத்தவரையிலே உபரி மாநிலமாகவும் இல்லாமல், பற்றாக்குறை மாநிலமாகவும் இல்லாமல், சாதாரண ஆண்டுகளில் தன் தேவையைத் தானே நிறைவு செய்து கொள்ளக்கூடிய நிலையில் இருந்து வருகிறது" என்று கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு ராஜ்யத்தில், இந்த வருடத்தை விடுங்கள், சென்ற இரண்டு வருடங்களாக இந்த உணவுப் பிரச்சினை விஷயத்தில் பழைய காங்கிரஸ் சர்க்கார் செய்து வந்ததில் ஏதாவது ஒரு மாறுதலான காரியத்தை நீங்கள் செய்திருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். அவர்களை விட கடுமையாக செக் போஸ்ட்களை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்போது சாதாரண கிராம அதிகாரிகள், தலையாரிகள் இருந்த இடத்தில் போலீஸைக் கொண்டு செக் போஸ்ட்களில் போடுவது, அதற்கு மேல் ரிசர்வ் போலீஸில் இருந்து ஆள்களைக் கொண்டு வந்து போடுவது என்று இந்த விதமான கெடுபிடிகளால் மக்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அது தவிர வேறு ஒன்றுமில்லை.

கடைசிப் பக்கத்தில், "உணவு விளைச்சலில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு, நயமான விலையில் அனைவருக்கும் தட்டுப்பாடு இன்றி அரிசி கிடைக்கக்கூடிய வசதியான சூழ்நிலை உருவானதும், உணவுக் கட்டுப்பாடு"களுக்குத் தேவை இராது என்பது தான் அரசாங்கத்தின் கருத்து என்று சொல்லப்பட்டிருக்கிறது. வாஸ்தவத்தில் உண்மையான முறையில் அது இந்த ரிப்போர்ட்டில் எழுதப்படவில்லை. உங்களுக்கு எப்போதுமே



1969 மார்ச் 22] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

இந்த கம்யூனிஸ்ட் பாலிஸியில் ரொம்ப "அட்ராக்ஷன்". தேசத்தை நீங்கள் பார்க்க வேண்டும். ஆனால் கட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். அதனால் நல்ல சூழ்நிலை ஏற்பட்டாலும் நீங்கள் போகிற போக்கில் இதிலெல்லாம் ஒரு மாறுதலைச் செய்ய மாட்டீர்கள் என்பது சந்தேகம்தான்

இரண்டு வருடங்கள் நல்ல மழை இருந்தது. உணவு உற்பத்தியும் ஓரளவு ஏற்பட்டு பல லட்சக்கணக்கான டன் ஆங்காங்கு கூடியிருக்கிறது என்று சொன்னார்கள். நீங்கள் என்ன மாறுதல் செய்திருக்கிறீர்கள்? கூட்டணி மேடைகளில் ஏறி எல்லோரும் சொன்னோம். இந்த அரசாங்கம் பொங்கலுக்கு அரிசி போடவில்லை, நாங்கள் ரம்சானுக்கு மூட்டை மூட்டையாக கொட்டி விடுகிறோம். தீபாவளிக்கு அப்படிச் செய்து விடுவோம், இப்படிச் செய்து விடுவோம் என்று சொன்னோம். என்ன செய்தோம். விரலைக் கூட அசைக்கவில்லை. இதை வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். இந்த ராஜ்யத்தில் சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை, அமைதி இல்லை, போலீஸ் நிர்வாகம் சரியாகயில்லை என்று சொல்கிறார்கள். இப்படி தினசரி பத்து புகார்கள் சொல்லும் காங்கிரஸ் தலைவர்களும் நீங்களும் ஒரே போட்டில் போக ஆரம்பித்து விட்டீர்கள். You are sailing in the same boat அவர்களுக்கும் இதில் தெளிவு இல்லை. உங்களுக்கும் இதில் தெளிவு இல்லை.

தெளிவு இல்லையா அல்லது ஆயிரக்கணக்கான ரேஷன் கடைக்காரர்களை ஒவ்வொரு ஜில்லாவிலும் தயாரித்திருக்கிறோம் அவர்களைக் கொண்டு நம் கட்சியை வளர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணமோ கடவுளுக்குத்தான் தெரியும். பத்து வருடங்களுக்கு முன்பு முதுகுளத்தூரில் அப்படி கஷ்டங்கள் ஏற்பட்டன, அப்படி நடந்தது காங்கிரஸ் ஆட்சியில் என்றெல்லாம் புள்ளி விவரங்கள் தயார் செய்து முதல் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் பேசுகிறார்கள். இந்த ரேஷன் எதற்காக வந்தது? 1964-க்கு முன் இது இல்லையே, 21 நாட்கள் நடந்த பாகிஸ்தான் யுத்தத்தினால்தான் இந்தச் சனியன் வந்தது. 1964-க்கு முன்னால் ஜனங்களுக்கு அரிசியும் மற்ற தானியங்களும் நிறைய கிடைத்து வந்தன. அப்போது இல்லாத கஷ்டம் இப்போது புதிதாக என்ன வந்தது? இந்த விவரங்கள் பற்றி டிப்பார்ட்மெண்ட் ஆராய்ச்சி செய்து மந்திரி சபை அளவில் பேசியிருக்கக்கூடாதா? நீங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், 1967 மார்ச்சில் நாம் பதவியில் வந்ததால்தான் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் பாதிப் பேர் உயிரோடு இருக்கிறார்கள், நாம் அவர்களுக்கு அரிசி, கிரிசி போட்டிருக்கிறோம், இல்லாவிட்டால் பாதி ஜனத்தொகை இதற்குள் செத்துப் போயிருக்கும் என்று. இப்படி ஒரு மனப்பான்மையை வைத்துக் கொண்டு நீங்கள் உங்களையே ஏமாற்றிக்கொள்கிறீர்கள்.

இது ரொம்ப வேதனையான விஷயம். இந்த வருஷம் ஒன்றும் பேசிவிடக்கூடாது. இந்த வருடம் மழை இல்லை என்ற முறையில் ஏதோ காரியங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள், செய்து கொண்டு போங்கள். நான் சொல்வது, அடுத்த வருடம் மழை பெய்ய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்வோம், நீங்கள் பிரார்த்தனை செய்யாவிட்டால் விண்ணப்பம் செய்துகொள்ளுங்கள். திரு ஜகஜீவன்ராமை கைகுலுக்கவேண்டுமென்ற எண்ணத்தை ஒதுக்கி வையுங்கள். அதில் உங்களுக்கு ரொம்ப மையல் இருக்கிறது. சென்டரை எதிர்த்து விடுவோம், ஆம், பூம் என்கிறீர்கள். அவர் வந்து கண்க்ராஜுலேட் செய்தவுடன் அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டு கையெழுத்து போடுகிறீர்கள். உணவு விஷயத்தில் மட்டும் நீங்கள் இந்த மனப்பான்மையை கொஞ்சம் கட்டி வைத்துக்கொள்ளுங்கள். நாம் எல்லோரும் ரொம்ப சிநேகிதர்கள் இல்லையா? அதனால் நான் இப்பொழுது என்ன சொல்கிறேன் என்றால் படியரிசித் திட்டம் என்பது படுகுழித் திட்டம். 1939-ஆம் வருஷத்திலே ஒரு மில் தொழிலாளிக்கு சம்பளம் எட்டேமுக்கால் ரூபாய். இன்று அதே

தொழிலாளிக்கு 200 ரூபாய் சம்பளம். ஒரு கொத்தனுருக்கு, சாந்து வேலை செய்பவருக்கு 10 வருஷங்களுக்கு முன்பு 2 ரூபாய் சம்பளம். இப்பொழுது 8 ரூபாய்க்கு ஆள் கிடைக்கவில்லை. யாராவது ஒரு படி அரிசி கேட்டார்களா ? ஏதோ மேடையில் பிரசங்கம் செய்வது தான். அதற்காக, ஒரு படியரிசி போடுகிருேம், முடிந்தால் இன்னும் விஸ்தரித்து விடுவோம் என்ருல் என்ன பொருளாதாரத்தைக் கண்டு விட்டீர்கள் ? ஒரு பொருளாதாரமும் இல்லை. என்னத்தையோ குழப்பிக் கொண்டிருக்கிறீர்கள். படியரிசித் திட்டம் மோசமான ஒரு காரியம். ஆகவே போட்ட வரையிலே, 45 லட்சம் மக்கள் நன்மை அடைகிருர்கள் என்று சொல்லி மற்றவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லி, இராஜ்யத்திலேயுள்ள மற்ற டெவலப்மெண்ட் ஸ்கீம்களிலே கைவைத்து விடாதீர்கள். அதை யாரும் விரும்பவில்லை. ஜனங்கள் விரும்புவது, கட்டுப்பாட்டிற்குள் வருகின்ற சாமான்களைத் தாராளமாக வாங்கிக் கொள்ளலாம், தரமான சரக்குகளை வாங்கிக்கொள்ளலாம் என்ற நிலை வரவேண்டுமென்பது தான். ஆகவே, அந்த நிலை வருவதன் மூலம்தான் இந்த ராஜ்யத்திலேயுள்ள துன்பங்களும் குறையும்.

இந்தச் சர்க்கார் குறைந்தபட்ச கொள்முதல் செய்வதில்லை என்று சொல்லுகிருர்கள். ஆனுல் திருநெல்வேலி ஜில்லாவில் சின்ன விவசாயிகளை ரெவின்யூ அதிகாரிகள் துன்பப்படுத்துகிருர்கள். இதற்கு ஸ்டேட் கவர்ன்மெண்ட் பாலிஸி அப்படி இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு கூட ஒரு கடிதம் வந்தது. அதைக் கனம் முதலமைச்சரவர்களிடம் கொடுத்தேன். நான் "கால் அட்டென்ஷன்" நோட்டீஸ் போட்டு பெரிய விளம்பரம் செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை. திருநெல்வேலி ஜில்லாவில் கடையம் என்ற ஊரில் ஒரு கோயில் எக்ஸ்கியூடிவ் ஆபீசரை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அடித்திருக்கிருர். ரேஷன் பாலிஸியில் ஏதாவது ஜாடைமாடையாகக் காண்பிக்கிற காரணத்தினுல், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், பரம சாதுக்களாகவுள்ள அந்த ஆட்களை போலீஸை விட மிருகத்தனமாக நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே இம்மாதிரியான காரியங்களையெல்லாம் நான் உங்களுக்குச் சொல்வது ஏன் என்ருல், உங்கள் நன்மைக்காக, என்னுடைய நன்மைக்கும் சேர்த்துதான். இன்று பத்திரிகையிலோ எங்கேயோ பார்த்தேன். உளுத்தம்பருப்பிலே இரண்டு லட்சம் உளுத்துப் போனதாலே நஷ்டம் என்று. ஆவுடி, திருவண்ணுமலை கோடவுன்களில் உளுத்த சரக்கினுல் நஷ்டம் என்று அடுத்த ஆடிட் ரிப்போர்ட்டிலே வரப்போகிறது. 1972 எலக்ஷனுக்குள்ளாக உணவுப் பொருள்களை லட்சக்கணக்கான மூட்டைகள் கொள்முதல் செய்து அடுக்கி வைக்கப்பட்டு டேமாஜாக ஆனதால் உருப்படியாக இல்லாமல் சமுத்திரத்தில் போடுவதின் மூலம் 50 லட்சம் ரூபாய் இந்தச் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டது என்று வரும். அதை வைத்துக்கொண்டு மேடைகளில் காங்கிரஸ்காரர்களும் மற்றவர்களும் பேசப் போகிருர்கள். ஆகவே, முக்கியமான விஷயம் இந்தச் சர்க்காரிலே, மந்திரி சபை அளவிலே தீர்க்க ஒரு தெளிவான முடிவை ஏற்படுத்த வேண்டும். அது இல்லாமல் இங்கு வந்து, அந்த ஜில்லா கலெக்டர் 8 லட்சம் டன் கொள்முதல் செய்தார். ஆகவே, அந்த ஜில்லா கலெக்டர் அவர்களுக்கும், சிவில் சப்ளை இலாகாவிற்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றி என்று சொல்வது, இது வேண்டாம். (மணியடிக்கப்பட்டது).

கோதுமை விஷயமாக ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் முதற்கொண்டு மில்களை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தப் போகிருேம் என்று ரிப்போர்ட்டிலே படித்தேன். நல்ல விஷயம்தான். கோதுமை முதலிய ஜாஸ்தியாக வரக்கூடிய பொருள்களை ஒதுக்கிக் கொடுத்துவிட்டு வியாபாரிகளிடத்திலேயிருந்து மைதா போன்ற மற்றப் பொருள்களை,



மில்களிலிருந்து ஒழுங்காக கொள்முதல் செய்யவேண்டும். ஆகவே, கோதுமையை ஒதுக்கிக் கொடுத்து நல்ல முறையில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவரவர்களே, இந்த மானியத்தைப் பற்றிச் சில விஷயங்களைச் சர்க்காரின் தீவிர கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். அமைச்சரவர்களின் பிரசங்கத்திலே குறிப்பிட்டிருக்கிருர்கள், கையிலேயிருக்கும் ஒரு லட்சம் டன்னையும் சேர்த்து 5 லட்சம் டன்கள்தான் இருக்கும். இதைக்கொண்டு நவம்பர் மாதம் வரை சமாளிக்க வேண்டுமானுல், சென்னைக்கு 22,000 டன்களும், மற்ற மாவட்டங்களுக்கு சுமார் 28,000 டன்களும்தான் கிடைக்கும் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். அரிசித் தேவையோ அதிகம். எனவே, எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் தெளிவாகக் கூற விரும்புகிறேன். சர்க்கார் கொள்கைகளின்மீது மாற்றம் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விளைச்சலில் 20 சத வீதம் கொள்முதல் செய்யவேண்டுமென்று இல்லாமல், இருக்கின்ற "மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ்" முழுவதையும் கொள்முதல் செய்தால் நிச்சயமாக நம் மாநிலத்தில் 12 லட்சம் டன்களைக் கொள்முதல் செய்ய முடியும். அந்த 12 லட்சம் டன்னுேடு, புஞ்சைத் தானியங்களையும் கொள்முதல் செய்தால் மொத்தம் 16 லட்சம் டன்கள் நிச்சயமாகக் கொள்முதல் செய்ய முடியும். அதன் மூலம் எல்லோருக்கும் நியாயமான அளவுக்கு உணவுப் பொருள்களை வழங்க முடியும். 3 ஏக்கரா வரை விதி விலக்கு அளித்துவிட்டால் கொள்முதல் குறைந்து விடும் என்று சொல்கிருர்கள். இதைப் பொறுத்தவரையில், நாங்கள் குறிப்பிடுவது, அந்தப் புள்ளி விவரங்கள் ஸ்டாண்டர்ட் கணக்குகளான புள்ளி விவரங்களாக இருக்கலாம் என்று கருதுகிறேன். அது மட்டுமல்ல, மூன்று ஏக்கராக்களுக்கு மேல் உள்ள எல்லோரிடமும் "மார்க்கட்டபிள் சர்ப்ளஸ்" பூராவையும் கொள்முதல் செய்ய ஆரம்பித்தால் கொள்முதலுக்கு முரணுகாது, கொள்முதல் தடைப்படாது, அதிகப்படியான நெல் கிடைக்கும். எனவே, இப்பொழுதிருக்கும் புள்ளி விவரங்கள் 61-வது ஆண்டிலே முடிவு செய்த நிலவரம்புச் சட்டம் இருக்கிறதே, அதை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட ஒரு விஷயமே தவிர, அந்த அடிப்படையிலே புள்ளி விவரங்கள் அமைந்திருக்கின்றனவே தவிர, வேறென்றுமில்லை. எனவே, 3 ஏக்கர்கள் வரை விதிவிலக்கு அளித்துவிட்டு, அதற்கு மேல் படிப்படியாகக் கொள்முதல் செய்து, 10 ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்களிடம் உள்ள "மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ்" பூராவையும், கோயில்களில் இருப்பது, மடங்களில் இருப்பது, நிலப்பிரபுக்களிடம் இருப்பது ஆகியவற்றை எடுத்தால் நம் மாநிலத்திற்கு அதிகப்படியான நெல் கிடைக்கும், அதிகப்படியான அரிசி கிடைக்கும், உணவு நெருக்கடியைப் போக்க முடியும். எனவே, அந்த இடத்திலே அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அவ்வாறு செய்தால் சீராக இருக்கும். எனவே, இதை நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக விலையை எடுத்துக்கொண்டால், எங்கள் கட்சியின் கொள்கைகளை முழுமையாக பார்க்க வேண்டும். ஒட்டு மொத்தமாக, நம்முடைய அருமை நண்பர் கருத்திருமன் அவர்களின் கருததுபப்டி எல்லோருக்கும் விலையை ஏற்றிக்கொடுக்க வேண்டுமென்று கோரவில்லை, சிறு நிலக்காரர்களுக்கு போனஸ், நல்ல விலை கொடுக்க வேண்டும். மாண்புமிகு கருத்திருமன் அவர்கள் கூறுகின்ற, எல்லோருக்கும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற அந்தப் பிடிப்பிலிருந்து அவர்களை விடுவித்து, சர்க்கார் ஆதரிக்கக்கூடிய ஒரு மனப்பான்மையை சிறு நிலக்காரர்களிடம் ஏற்படுத்த முடிந்தால் அதனுல் அவர்களிடமிருந்து உற்சாகமான ஆதரவு கிடைக்கும். நெல்லும் கூடுதலாக கிடைக்கும் எனவேதான், 3 ஏக்கர் வரை பரிபூரணமாக விலக்களித்துவிட்டு, மற்ற

வர்களிடமிருந்து கொள்முதல் செய்தால் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். திட்டவட்டமாக இந்த இடத்திலே கொள்முதல் கொள்கையை மாற்ற வேண்டுமென்று கூறும் கருத்தினை அமைச்சரவர்கள் சீரிய முறையில் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னையிலே கோவாப்பரேடிவ் மில்க் யூனியன் 1927-இலே ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது அது சின்னாபின்னமாகி சீரழிந்த நிலையில் இருக்கிறது. அங்கு டிரான்ஸிட்டரி பைலா 5 வருஷங்களுக்கு நடைமுறையில் இருக்க வேண்டும். சமீபத்தில், டிசெம்பர் 19-லே கூடிய கூட்டத்தில் டிரான்ஸிட்டரி பைலாவை நீக்க வேண்டுமென்று ஜெனரல் பாடிக் கூட்டத்திலே நிறைவேறியது. ஆனால் இதுவரை தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு மாறாக, மில்க் கமிஷனரும், அந்த ஸ்தாபனத்தின் செயலாளரும், ஜனநாயக முறையில் வைக்கப்பட்ட அந்தக் கோரிக்கையை நிறுத்தி, தனிப்பட்ட சுயநலவாதிகளின் நலனைப் பாதுகாப்பதற்கு செய்த சதி வேலையாகும். உதாரணமாக, மில்க் கமிஷனர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். கிராமங்களிலே உள்ள சொஸைட்டிகளில் இருப்பவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது மில்க் கமிஷனர் அந்த அறிக்கையில், டிரான்ஸிட்டரி பைலாவை நீடிக்க வேண்டுமென்றால் ஒரு வாரத்திற்குள்ளாகப் பதில் எழுத வேண்டும், என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தைப் படிக்காதவர்கள் எத்தனை பேர் ? அதன் காரணமாக, பதில் வரவில்லை என்று சொல்லி அங்கத்தினர்கள் ஒத்துக்கொண்டபடி டிரான்ஸிட்டரி பைலாவை நீக்குகிறோம் என்று சொல்வார்கள். அப்படியும், அதை ஆட்சேபித்து 120 பேர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள். 20 பேர்கள் லாயர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். எனவே அரசு டிசம்பர் 19-ஆம் தேதி கூட்டத்தில் போட்டபடி டிரான்ஸிட்டரி பைலாவை நீடிக்க வேண்டாமென்று கூறிக்கொள்ளுகின்றேன். நியமன அங்கத்தினர்கள் சரிவர நடப்பதில்லை, அந்த அங்கத்தினர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்காக எதும் செய்யவில்லை. டெலிபோனைக்கூட தனிப்பட்டவர்கள் உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள். எனவே, ஜனநாயக முறையில் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உடனடியாக அந்த சொஸைட்டியின் தேர்தலை நடத்தி, ஜனநாயக முறையில் அந்த சங்கம் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாதவரம் பால் பண்ணையை எடுத்துக்கொண்டால் நஷ்டம் ஏற்படுகிறது. மாதவரம் பால் பண்ணையில் 69 உரிமதாரர்கள்தான் இருக்கிறார்கள் வெட்கை நோய் வந்ததுதான் இதற்குக்காரணம் என்று கூறலாம். வெட்கை மட்டும் காரணமல்ல. அதற்குப் பிறகு இன்றைக்கு லேக்டோமீட்டரில் 30 மீட்டர் என்று காட்டினால் கணக்கு சீதோஷ்ண நிலைக்காக 4 மீட்டரைக் குறைத்து, 26 தான் என்று போடப்படுகிறது. 102 டிகிரி ஜுரமுள்ள
பி.ப. 12-30 ஒருவனைப் பார்த்து, சீதோஷ்ண நிலைக்காக 4 டிகிரி ஜாஸ்தி காட்டுகிறது என்று சொன்னால் அந்த மனிதனின் கதியென்ன? அது மாதிரி 30-இல் 5 சீதோஷ்ண நிலைக்காகக் குறைக்கிறேன் என்கிறார்கள். அங்கு உரிமதாரர்களிடமிருந்து எடுத்த பாலை காலையிலேயே டேங்கில் விடுகிறார்கள். டாங்கிலே போடுவதற்கு முன், சோதனைக்காகத் தனியாக எடுக்கின்றார்கள். சோதனைக்கு எடுத்த பால் மாலையில் "அடல்ட்டரேஷன்" பால் என்று சொல்லி, அதை விற்ற பணத்தை சர்க்காருக்குக் கொடுத்துவிடுகிறார்கள். இந்த அடல்ட்டரேஷன் பால் விற்ற பணம் சர்க்காருக்குக் கிடைக்கிறது. ஒப்பந்தத்தை மீறி, கான்ட்ராக்டை மீறி, கமிஷனர் நடவடிக்கை எடுக்கிறார் என்று குற்றம் சாட்டுகிறேன். ஒப்பந்தத்தில், சோதனை செய்த பாலை, "கான்ஃபிஸ்கேட்" செய்து, அந்தப் பணத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ளலாம், அதை உரிமதாரருக்கு கொடுக்க வேண்டாம் என்று இல்லை. இம்மாதிரி கொடுமைகள் அங்கே உள்ளன. அதன் காரணமாக, உரிமதாரர்கள் 69-ஆக குறைந்துள்ளார்கள். அந்தப் பணத்தை சரியாகக் கொண்டு வருவதற்கு சிக்கன நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



பல விவரங்கள் என்னிடம் உள்ளன. நேரம் இல்லாத காரணத்தால் அவற்றைக் கூற முடியவில்லை. அங்கே ஓட்டத்தில் இருக்கும் வேன்கள் 14, ஓடாமல் ரிப்பேரில் உள்ள வேன்கள் 19. டாங்கர்கள் மொத்தம் 17, ஓடும் நிலையிலுள்ள டாங்கர்கள் 5. தனியார் வண்டிகள் 13, தனியார் வண்டியில் டாங்கர் பொருத்தப்பட்டது 4. அதிலே ரிப்பேரில் உள்ள வண்டிகள் எங்கு போகின்றன ? நம்மிடம் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் அந்த வண்டிகளைத் தருவதில்லை. "வி.எஸ்.டி ஓர்க்ஷாப்புக்கு"ப் போகின்றன ரிப்பேருக்கு. நம்முடைய ஓர்க்ஷாப்பில் ரிப்பேர் செய்யப்படவில்லை. என்ன காரணம் ? இதனாலே பணம் வீண் விரயம் ஆகவில்லையா ? இதை அரசு கவனிக்க வேண்டும்.

தனியார் வண்டியில் 100 கிரேடில் 1,500 புட்டிகளை எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் நமது வண்டி ஒன்றில் 200 கிரேடில்—4,000 புட்டிகள் கொண்டு செல்கிறோம். இதனால் நமக்கு ஏற்படக்கூடிய செலவு ரூ. 43 ஒரு நடைக்கு. ஆனால் தனியார் வண்டியிலே போனால் ஒரு நடைக்கு ரூ. 55 வீதம் இரண்டு வேளைக்கு ரூ. 110 செலவிடப்படுகிறது. ஈரோடுக்குப் போக வர 526 மைல்கள். தனியார் வண்டியிலே ஒரு மைலுக்கு 90 பைசா வீதம் ரூ. 473·40 தரப்படுகிறது. ஆனால், நமது வண்டியில் ஈரோடுக்குப் போய் வர ஆகும் செலவு ரூ. 127·40. இதை அதிகாரிகள் கவனிக்கவில்லை. அமைச்சர்களாவது கவனிக்க வேண்டும். அப்படி விரயமாவதைத் தடுக்க வேண்டும். அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள், ஆனால் விரயம் தவிர்க்கப்படவில்லை. அதிகார வர்க்கத்தினுடைய செலவினைக் குறைக்க வேண்டும். கான்பிஸ்கேடட் பணத்தை பரிபூரணமாக உரிமதாரர்களுக்குத் தரவேண்டும். அதைத் தராமலிருப்பது மோசடி, அது கான்ட்ராக்ட்க்கே விரோதம். சிதம்பரத்திலே கான்பிஸ்கேடட் பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இங்கேயும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் நிறைய விவரங்கள் இருக்கின்றன. மாதவரம் பால் பண்ணையைப் பற்றி, நேரம் இல்லாததால் சொல்ல முடியவில்லை. சென்னை கோவாப்பரேடிவ் யூனியனுடைய தேர்தலை ஜனநாயக முறையிலே நடத்த அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும். அங்கு ஜெனரல் பாடி முடிவுகளை நிறைவேற்றுவதற்கு நம்முடைய அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உணவு மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் உரை ஆற்றுகிறேன். நமது தமிழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்த இரண்டு வருடத்தில் ஒரு போக நிலங்களில் இருபோக விளைச்சலை உற்பத்தி செய்திருக்கிறது. கிராமங்களிலே, என்னுடைய பகுதி மொரப்பூரிலே 20 வருஷம் ஆண்ட அரசாங்கத்தாலே 600 பம்ப் செட்கள் தான் வழங்கப்பட்டன. ஆனால், இரண்டு வருஷத்திலே 900 பம்ப் செட்கள் இந்த மொரப்பூர் யூனியனுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. உணவு கிடைக்காமையால், தாய்மார்கள் ரோடுகளிலே கியூ வரிசையிலே நின்று அல்லல்பட்டு, தங்களுடைய குழந்தைகளோடு நின்றுகூட அரிசி கிடைக்காமல் போன காலம் உண்டு. அதையெல்லாம் தவிர்த்து தமிழக அரசாங்கம் நல்ல முறையிலே உணவை உற்பத்தி செய்து, உணவு நல்ல முறையிலே விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதேபோல, மின்சாரத் துறையிலே விவசாயிகளுக்கு நல்லமுறையிலே மின்சாரம் வழங்கிக்கொண்டு வருகிறோம்.

விவசாயிகளுக்கு ஒரு குறை இருக்கிறது. சென்ட்ரல் பாங்கியிலே கடன் வாங்கி, கூட்டுறவு பாங்கியின் மூலமாக அந்தப் பணத்தை விநியோகிக்கும்போது, அந்த சங்கங்கள் இப்பொழுது இருக்கும் சூழ்நிலையிலே 10 சதவிகிதம்கூட விவசாயிகளுக்குப் பணம் போய் சேர்ந்தபாடில்லை. அந்தந்த பாங்கியிலே உள்ள தலைவர்கள் விவசாயிகளிடத்திலே ரூ. 500 கொடுத்தார்களானால் ரூ. 5,000-க்கு அவர்களிடத்திலே கையெழுத்து வாங்கி, இதைப்போல் ஒவ்வொரு சங்கத்திலும் ஒரு இலட்சம், 2 இலட்சம், 3 இலட்சம் என்று 5 இலட்சம் வரையில் தனியார் சங்கங்களிலே கையாடிக்

கொண்டு வருகிறார்கள். அதனால் தமிழக அரசாங்கம் புது பாங்குகளை ஆரம்பித்து, அந்த பாங்குகளில் புதுப்புது நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து, புதுப்புது விதமான கடன்களை விவசாயிகளுக்கு நேரடியாக சேரக்கூடிய அளவிலே நல்ல முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி செய்தால்தான் விவசாயிகள் நல்லமுறையிலே கடனைப்பெற்றி உணவு உற்பத்தியை நல்ல முறையில் பெருக்க முடியும். முன்னால் இருந்த பாங்குகளில் எல்லாம் நிறையக் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த பாங்குகளே மேன்மேலும் பணம் வாங்கிக் கொண்டிருந்தால் அது இன்னும் விவசாயிகளுக்கு நல்ல முறையில் போய் சேராது, நல்ல முறையில் உணவு உற்பத்தி பெருகாது என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசாங்கம் வந்த பின்னால், எஸ்டேட், பாரஸ்ட்களை எல்லாம் விவசாயிகளுக்காக ஆடு மாடுகள், மேய்ப்பதற்காக அங்கங்கே சர்வே செய்து, அந்தந்த பஞ்சாயத்துக்களிலே தீர்மானங்கள்போட்டு அனுப்புகிறார்கள். ஆடுமாடு மேய்க்க விவசாயிகளுக்கு அந்த எஸ்டேட், பாரஸ்ட்களை, காடுகளை அரசாங்கம் வழங்கிக் கொண்டு வருகிறது. அதன் வாயிலாக, எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகி இருந்த விவசாயிகள் தங்களுடைய ஆடு மாடுகளை, விவசாயத்திற்கு வேண்டிய ஆடு மாடுகளை, மேய்த்துக்கொள்ள ஏதுவாக இருக்கிறது.

அது மட்டுமல்ல, நமது தமிழக அரசாங்கம் வந்ததற்குப் பின்னால், விவசாயிகளுக்கு நல்ல முறையிலே நில அடைமான பாங்குகள் வாயிலாக கடன் கொடுத்து வருகிறார்கள்.

நமது அரசாங்கம் கிராமங்களிலே இருக்கும் கிராம சேவகர்களை அகற்ற வேண்டுமென்று சொல்வதற்கு முன்னாலே, கிராம சேவகர்கள் எங்களை நீக்கிவிடுவதாக இந்த அரசாங்கம் சொல்லுகிறது என்று ஒவ்வொரு எம். எல். ஏ.க்களுக்கும் எழுதி அனுப்புகிறார்கள். இன்று விவசாயிகள் அவர்களிடத்திலே அல்லல்பட்டு வருகிறார்கள். விவசாயிகள் கடன் வாங்க வேண்டுமென்றால், அந்த கிராம சேவகர்கள், அந்த நில அடைமான பாங்கியிலே உள்ள செக்ரட்டரிகள், நில அடைமான பாங்கியிலே உள்ள சூப்பர்வைசர்கள். இவர்கள் சொல்லுகிற இடங்களில் "கொட்டேஷன்" வாங்கினால்தான் கடன் வாங்க முடியும். (மணி அடிக்கப்பட்டது). அவர்கள் "இங்கு கொட்டேஷன்" வாங்கி வா, அங்கு வாங்கி வா என்று வியாபாரியாக மாறிவிட்டார்கள் இன்றுள்ள நிலையிலே. நான் சொல்லும் இடத்தில் பம்ப் செட் வாங்க வேண்டுமென்று பாங்க் சூப்பர்வைசர் சொல்லுகிறார். நான் சொல்லும் இடத்தில் வாங்க வேண்டுமென்று எலெக்ட்ரிக் சூப்பர்வைசர் சொல்லுகிறார், நான் சொல்லும் இடத்தில் வாங்க வேண்டுமென்று கிராம சேவகர்கள் சொல்லுகிறார்கள். அந்த விவசாயிகள் யாரிடத்தில் அந்த பம்ப் செட்டை வாங்குவது. எலெக்ட்ரிக் சூப்பர்வைசர் சொன்ன இடத்திலே பம்ப் செட் வாங்கவில்லையென்றால் கனெக்ஷன் கொடுக்க மறுக்கிறார். நில அடைமான பாங்கு சூப்பர்வைசர் சொன்ன இடத்திலே பம்ப் செட் வாங்கவில்லையென்றால் அவர் சாங்ஷன் செய்ய மறுக்கிறார். "கொட்டேஷன்" வாங்க மறுக்கிறார். அவர் சொல்லும் இடத்தில் "கொட்டேஷன்" வாங்கிக் கொடுத்தால்தான் பணம் சாங்ஷன் செய்யப்படும் என்று அவர் சொல்கிறார், சாங்ஷன் செய்கிறார். இந்த மாதிரி சிக்கல்களுக்கு இடையிலே விவசாயிகள் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் தங்களுடைய நிலத்தை அடகு வைத்துத்தான் இன்றைய சூழ்நிலையிலே கடன் வாங்குகிறார்கள். (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

***ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டின் உணவுப் பொருள் விநியோகத் துறையைப் பொறுத்தவரையிலே, மழை இல்லாத பஞ்சம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் ஒரு நெருக்கடியான நிலையில் இருக்கிறோம் என்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய வேளாண்மைத் துறை, உணவுத் துறை





அமைச்சரின் சீரிய நிர்வாகத்தின் காரணமாக, உணவுப் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் மாண்டு விடுகின்ற ஒரு சூழ்நிலை நம்முடைய நாட்டில் இப்பொழுது இல்லை என்பதை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் நகராட்சி மன்ற எல்லை ஓரத்தில் இருக்கிற கிராமங்களில் உணவுப் பங்கீட்டு அட்டைகள் மூலம் அரிசி கிடைக்காத காரணத்தினால் மக்கள் தொல்லைகளுக்கு ஆளாகின்ற நிலையை நாம் பார்க்கிறோம். திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை நகராட்சி மன்றங்களின் எல்லைகளிலிருந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கின்றன திருவண்ணாதிபுரம், திம்மராஜபுரம், பொட்டல் முதலிய கிராமங்கள். நகராட்சி மன்ற எல்லைக்குள் வீட்டு வசதி கிடைக்காத காரணத்தினால், நகராட்சியின் எல்லைக்குள் பணிபுரிகிறவர்கள் நகராட்சி மன்ற எல்லை ஓரத்திலுள்ள கிராமங்களில் சென்று வசிக்கிறார்கள். அப்படி கிராமங்களில் சென்று வசிக்கின்ற காரணத்தினால், ஒரு பர்லாங்கு தூரத்திலுள்ள நகராட்சி எல்லைக்குள் பங்கீட்டு அட்டைகள் மூலம் அரிசி விநியோகம் நடக்கிறது. ஆனால், பக்கத்திலுள்ள கிராமங்களில் அப்படி பங்கீட்டு அட்டைகள் மூலம் அரிசி விநியோகிக்கின்ற நிலைமை இல்லை. ஆகவே, இந்த அரசு நகராட்சிக்கு எல்லைப் பக்கத்திலுள்ள கிராமங்களிலும் உணவுப் பங்கீட்டு அட்டைகள் மூலம் அரிசி விநியோகம் செய்வதை விரிவாக்க வேண்டும் என்று கோருகிறேன்.

நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய தாலூக்காக்களில் சில பகுதிகள் மிகவும் வறண்ட நிலையில் இருக்கின்றன. அப்படி இருக்கும்படியான கிராமங்கள் சேரகுளம் கால்வாய், இராமானுஜம்புதூர் மற்றும் பல கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு வாய்ப்பும், வசதியும் இருந்தும்கூட, மழை இல்லாத காரணத்தினால் உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. பங்கீட்டு அட்டைகள் மூலம் அந்தப் பகுதிகளுக்கு உணவுப் பொருள்களை விநியோகம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில குக்கிராமங்களை எடுத்துக்கொண்டால், ஒரு கிராமத்தில் அரிசி விநியோகம் செய்கிறார்கள் உணவுப் பங்கீட்டு அட்டைகள் மூலம். அதற்குப் பக்கத்தில் இருக்கிற அடுத்த கிராமத்தில் அதுபோன்ற நிலை இல்லை. ஒரு கிராமத்தை அவர்கள் தேர்ந்தெடுத்தால், அதற்கு அருகிலே இருக்கிற மறு கிராமத்தையும் தேர்ந்தெடுக்காத காரணத்தினால், அங்கிருக்கிற மக்கள் மத்தியிலே அரசின்மீது மாச்சரியம் வளர்கிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, ஆங்காங்கு அருகருகே இருக்கிற கிராமங்களிலும் பங்கீட்டு அட்டைகள் மூலம் அரிசியை விநியோகம் செய்வதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பசு பராமரிப்பு நிலையம் ஒன்று அபிஷேகப்பட்டியில் இருக்கிறது. பொதிகை மலைச்சாரலில் நல்ல புற்கள் இருக்கின்றன. மாடுகள் மேய மேய்ச்சல் நிலம் மலை ஓரத்தில் இருக்கும்படியான சூழ்நிலை இருக்கிறது. பொதிகை மலைச்சாரலுக்கு அருகிலே அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஒரு சிறந்த பால் பண்ணையை அரசு அமைப்பதன் மூலம் திருநெல்வேலி மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பகுதி, கன்யாகுமாரி மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பால் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு முடியும். அத்துடன் பசு பராமரிப்பு நிலையத்திற்கும் வாய்ப்பாக மாடுகளுக்கு மலை மேய்ச்சல் செய்வதற்கும், உரிய முறையில் பொதிகை மலைச்சாரலில் இருப்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். புதிய பால் பண்ணை ஒன்றை அங்கே அரசுத் தரப்பில் துவக்க வேண்டும் என்று கோருகிறேன்.

நம்முடைய மத்திய அரசிடமிருந்து அதிகமாக உணவுப் பொருள்கள் நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைவிட, உண்ணுவதற்கு ஒரு வாயும், உழைப்பதற்கு இரண்டு கரங்களோடு பிறக்கின்ற குழந்தைகளை பிறக்காமல் தடுப்பதற்காகச் செலவழிக்கும் பணத்தை நம்முடைய உணவுப் பொருள்களின் உற்பத்திக்குச் செலவழிப்பதன் மூலம்

உண்வுப்பொருள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நம்முடைய அரசுத் தரப்பு புள்ளி விவரப்படி இந்த மாநிலத்தில் இருக்கிற விளை நிலங்களில் ஒரு பங்கு நிலம்தான் விளைவிப்பதற்கு தகுதியாக ஆக்கப்பட்டிருக்கிறது. இரண்டு பங்கு நிலம் விளைவிப்பதற்குத் தகுதியற்றதான நிலையில் இருக்கிறது. அவைகளை விளைவதற்குத் தகுதியுள்ள நிலமாக ஆக்கினால் நம்முடைய சுயதேவை பூர்த்தியை அடைய முடியும். அதனால் இந்தத் துறையிலே அரசு போதிய கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவுபடுத்திக்கொள்கிறேன்.

***திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் ஏற்கனவே ஒரு பற்றுக்குறையான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இந்த நிலையில் நாம் ஊழல்களைக் களைந்து, உணவுக்கொள் முதல் விநியோகத்தை சரியான முறையில் அமுல் நடத்தவில்லை என்று சொன்னால், பெரிய நெருக்கடியான இந்த சூதாட்டத்தில் அதிகமான பேராசை பிடித்தவர்கள் தங்களுடைய பேராசைக்கு உகுந்த முறையிலே மக்களையெல்லாம் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கவைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். கொள்முதல் திட்டமிட்டபடி பஞ்சநிலை காரணமாக எல்லா மாவட்டங்களிலும் முடியவில்லை என்று சொன்னாலும்கூட, தஞ்சையில்தான் கொள்முதல் செய்வதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் 4 லட்சம் டன் கொள்முதல் செய்து ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு 50,000 டன்கள் விநியோகம் செய்ய திட்டமிட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுது உள்ள கொள்முதல் எப்படி நடக்கிறது என்று சொன்னால் வெளி மார்க்கெட்டில் வரக்கூடிய அரிசி பூராவும், 10 எக்கராவுக்கு அதிகமாக உள்ள பெரிய நிலப்பிரபுக்கள் தான் சர்க்கார் கொள்முதலுக்குக் கொடுத்தது போக, மீதியை வெளி மார்க்கெட்டில் விற்று லாபம் அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். ஒரு எக்கர் முதல் 10 எக்கர் வரையில் வைத்திருக்கும் சிறு விவசாயிகள் கொள்முதலுக்கு எந்தவிதமான தடங்கலும் சொல்லவில்லை. அவர்கள் தப்பிக்க முடியாத நிலைமையில் அதிகாரிகள் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்துவிடுகிறார்கள். 10 எக்கராவுக்கும் அதிகமாக உள்ள நிலச்சுவான்தார்கள் கையில் .5 லட்சம் எக்கர்தான் இருப்பதாக சொல்லப்படுகிறது நமக்குக் கொடுத்திருக்கிற கணக்குப்படி. அது நில உச்ச வரம்பிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு நிலங்களை தங்களுடைய சொந்தக்காரர்களுக்குப் பிரித்துவைத்துவிட்ட கணக்குப்படி என்று நினைக்கிறேன். 10 எக்கருக்கும் மேல் இருப்பவர்களிடம் நாம் கட்டாயமாக உபரி நெல் பூராவையும் கொள்முதல் செய்தால் தான் நெருக்கடியை சமாளிக்க முடியும். அதே நேரத்தில் சிறு சிறு விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்யக்கூடிய முறை தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. ஒரு எக்கருக்கும் குறைந்து வைத்திருப்பவர்களிடம் கொள்முதல் செய்யக்கூடாது என்று அரசாங்கம் சொன்னாலும், அதிகாரிகள் ஒரு எக்கருக்கும் குறைந்த நிலம் வைத்திருப்பவர்களிடம்தான் கட்டாயமாகக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி கேட்டால், கட்டாயப்படுத்தவில்லை, அவர்களாகவே கொடுத்தார்கள் என்று சாக்குச் சொல்லப்படுகிறது. அப்படி அவர்களிடமிருந்து கட்டாயமாகக் கொள்முதல் செய்வதை கண்டிப்பாக நிறுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது இருக்கிற விலைவாசியில் உற்பத்திச் செலவுகள் மிகவும் அதிகரித்துவிட்டதால், கொள்முதல் விலையை கட்டாயம் உயர்த்தித்தான் கொடுக்க வேண்டும். கொள்முதல் விலையை நாம் உயர்த்திக் கொடுக்கவில்லை என்று சொன்னால், நெல் உற்பத்தி பண்ணக்கூடிய விவ்சாயிகள் நெல்லை விட்டுவிட்டு வேறு அதிகமான வருமானம் வரக்கூடிய வாழை, கரும்பு போன்றவைகளை விளைவிப்பதற்கு மாற்றிக்கொள்ளும் நிலைமை



தான் ஏற்படுகிறது. கொள்முதலிலிருந்து தப்பித்துக்கொள்பவர்கள் வேண்டுமானால் இந்தக் கொள்முதல் விலையை உயர்த்தவேண்டாம் என்று சொல்லலாம். ஆனால், நியாயமாக அரசுக்கு கொள்முதல் விலைக்கு நெல்லை அளிக்கவேண்டும் என்று கருதி, அப்படி நெல்லை அளிக்கக் கூடியவர்கள் இந்த விலை போதாது என்று தான் சொல்கிறார்கள். ஆகவே, கட்டாயமாக கொள்முதல் விலையை உயர்த்தவேண்டும். அதே நேரத்தில் பல இடங்களில் உணவுப் பொருள்களை குடும்பக் கார்டுகள் மூலம் விநியோகம் செய்கிறோம். இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய பஞ்ச நிலைமை காரணமாக, இந்தப் பிரதேசத்திலுள்ள விவசாயத்தொழிலாளர்கள், சாதாரண ஏழை எளிய மக்கள், கூலி வேலை செய்யக் கூடியவர்களுக்கு நியாயமான விலையில் உணவுப்பொருள்கள் கிடைப்பதில்லை. பல இடங்களில் அரிசி விலை ரூ. 2, 3 என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. இப்பொழுது இன்னும் உயரக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகவே, கிராமங்களில் பங்கீட்டு முறையைக் கொண்டுவந்து நல்ல முறையில் நியாய விலையில் அரிசி கிடைக்கும்படிச் செய்யவேண்டும். கோவில்பட்டி தாலூகா, சங்கரன் கோவில் தாலூகா ஆகிய இடங்கள் வறண்ட பிரதேசம். அங்கே உள்ள பல கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி விநியோகத்தை முறையாகக் கொண்டுவர வேண்டும். அதே நேரத்தில் 10 எக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடம் கட்டாயக் கொள்முதல் செய்து, அவர்கள் குடும்பத் தேவை போக உபரி நெல் பூராவையும் கொள்முதல் செய்து பரவலாக கிராமங்களில் நியாய விலையில் அரிசியை விநியோகம் செய்ய தக்க ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, அய்யனாவரம் பால் பண்ணை பற்றி ஒரு வார்த்தை. அதிலே டெம்பரரி-பை-லா என்று சொல்லி, 1963-ம் ஆண்டு அதைக் கொண்டு வந்தார்கள். அந்த பை-லா படி, மூன்று ஆண்டுகளுக்கு மில்க் கமிஷனர் அவர்கள் போர்டு நியமிக்கலாம் என்று சென்னார்கள். இப்பொழுது மூன்று ஆண்டு ஆகிவிட்டது. திரும்பவும், இரண்டு ஆண்டுகள் ஆகி, ஐந்து ஆண்டுகளும் முடிந்துவிட்டது. அப்படி முடிவதற்கு முன்னதாகவே, ஒரு கான்ஸ்டிட்யூஷனல் பாயிண்ட், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால், அந்த மகாசபை ஆட்சேபனை செய்திருக்காது. ஆனால் அப்படிப்பட்ட நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை? காலந் தாழ்ந்த பிறகு, 2—12—1968-ல் இன்னொரு விதியைப் போட்டு, இன்னும் ஒரு ஆண்டுக்கு அதிகாரம் கொடுங்கள் என்று கேட்டுவிட்டு, இப்பொழுது இரண்டு மாதங்களுக்கு அதிகாரம் கொடுங்கள் என்று சொன்னால், இதில் எல்லாம் நியாயமான முறையில், சரியான முறையில் நடக்கவில்லை என்று மகாசபை அங்கத்தினர்கள் கருதுவதில் என்ன நியாயத்தவறு இருக்க முடியும் ? யாரோ வேண்டியவர்களை போர்டில் போடவேண்டும் எண்பதற்காக, இப்படிச் செய்கிறார்கள் என்று புகார் இருக்கிறது. தவறுகள் இருந்தால் பொதுத் தேர்தல் நடத்தி, அதற்குத் தக்க முறையில் செய்திருக்க வேண்டுமே தவிர, "அன்-கான்ஸ்டிட்யூஷனலாக" செய்திருப்பது சரியாகாது. அரசாங்கத்திற்குச் சொல்லுவேன், தயவுசெய்து இதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று. அவர்களும் பொது மக்கள்தானே ? அதிகாரத்தை எடுத்துக் கொண்டு ஏதோ வேண்டியவர்களைப் போடவேண்டும் போர்டில் என்று பார்ப்பது எவ்வளவு நியாயம்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அய்யனாவரம் பால் பண்ணையைப் பொறுத்தவரையில், நிலைமை அப்படியில்லை. யாரையோ போட வேண்டும் என்று எதுவும் செய்யவில்லை. அரசாங்கமே இந்த மாதவரம் பண்ணையோடு சேர்த்து அரசாங்கத்துறையில் செய்யக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய நிலைகள்தான் இருக்கின்றனவே தவிர வேறொன்றும் இல்லை. அது பரிசீலனையில் இருக்கிறது. அய்யனாவரம் தனியாக வைத்துக்கொண்டு இருப்பது சரியில்லை என்று அந்த வகையில் செயல்பட்டிருக்கிறது. மதுரையில் கூட அப்படிப் பட்ட முயற்சி

எடுத்துக்கொள்வதாக இருந்தால், அதை முறையாகச் செய்ய வேண்டும். ஆனால், விதிகளை மீறி, இன்னும் இரண்டு மாதங்கள் அதிகாரம் கொடுங்கள் என்பது சரியில்லை என்பதைத் தான் சொல்லுகிறேன். எடுப்பதானால், அது உங்களுடைய உரிமை. உரிமைப்படி செய்யுங்கள். ஆனால் இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கும் வழி சரியில்லை என்பதைத்தான் சொல்ல வருகிறேன். அதை எடுத்துக் காட்டுவதுதான் என்னுடைய பொறுப்பு.

மாதவரம் மில்க் காலனியில் லாபம் வருகிறது என்கிறார்கள். ஆடிட் ரிப்போர்ட் வந்த பிறகு தெரியும். இப்பொழுது சொல்வதை ஏற்றுக் கொள்ளுகிறேன். எனக்குத் தெரிந்தவரையில், மாதவரம் மில்க் காலனியை ஏன் உண்டாக்கினோம் ? மாடுகள், ஆடுகள், வீதியில் திரிந்து கொண்டு, தனிப்பட்டவர்கள் சரியாகச் செய்யவில்லை என்று, அவற்றையெல்லாம் அங்கே கொண்டுபோக வேண்டும் என்று செய்தோம். 1963-ல் எவ்வளவு பேர்கள் அங்கே இருந்தார்கள் ? 400 லைசென்சிகள் போனார்கள். இப்பொழுது எத்தனை பேர்கள் ? இப்பொழுது இருக்கும் லைசென்சிகள் எத்தனைபேர்கள் என்பதை அரசாங்கம் பார்க்க வேண்டும். இப்பொழுது இருப்பவர்கள் 60 பேர்கள். அப்பொழுது அவர்கள் எவ்வளவு பால் கறந்து கொடுக்க வேண்டும் என்றிருந்தது ? இப்பொழுது எத்தனை கறந்துகொடுக்கிறார்கள் ? முன்பு எவ்வளவு லிட்டர் பால் கொடுத்தார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** லைசென்சுதாரர்கள் தனிப்பட்ட முறையில் மாடுகள் வைக்கக் கூடாது என்கிற கொள்கை இருக்கிறது. அதற்கு எதிர்ப்பும் வருகிறது. அது சம்பந்தமாக அவருடைய கொள்கை என்ன? அவர்களுடைய கட்சிக் கொள்கை என்ன? அப்படிச் செய்ய அவருடைய கட்சிக்கும், அவர்களுக்கும் உடன்பாடுதானா என்கிற கருத்தையும் தெரிவித்தால் விவாதத்திற்கு உதவிகரமாக இருக்கும்.

**திரு. கே. விநயகம் :** ஆட்சி நடத்துவது தாங்கள், உங்களுடைய கொள்கையைப் பரிசீலிப்பது எங்களுடைய வேலை. எங்கள் கொள்கைதான் நாங்கள் நடைமுறையிலே செய்திருக்கிறோமே. ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் 400 பேர்களைக் கொண்டு வைத்தோம். அது இன்றைக்கு 60–க்கு இறங்கிவிட்டது. ஏன்? குறைபாடுகள் இருக்கின்றன என்றால், அதை ஆராயவேண்டும். கேட்டில் ஃபீட் என்ற வகையில் சப்ஸிடி கொடுத்தோம். இப்பொழுது சப்ஸிடி கொடுக்கப்படுமா இல்லையா என்கிற சந்தேகம் இருக்கிறது. கொடுக்கிற பால் எவ்வளவோ, கறந்த பால் எவ்வளவோ அதற்கு 60 சதவிகிதம் சப்ஸிடிதான் என்று புகார் செய்கிறார்கள். அப்படிப் பட்ட புகார்கள் பற்றி யோசிக்க வேண்டும். அடுத்து, "Occupational Charges" என்று இருந்தது. 'per cattle head 15 paise' என்று இருந்தது

இப்பொழுது அது இந்த மாத இறுதிவரையில் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. பின்னால், ஆகுபேஷனல் சார்ஜ் தள்ளிவிடுவார்களோ என்பதெல்லாம் சந்தேகிக்கும் அளவிற்கு விடக்கூடாது.

பால் உற்பத்தியை அதிகமாகச் செய்ய வேண்டும். தனிப்பட்டவர்கள் நம்மை நம்பியிருக்கிறார்கள். நம்மை நம்பித்தான் பால் பண்ணையில் குடியேறினார்கள். இன்றைக்கு விட்டுப் போயிருப்பதற்குக் காரணங்கள் என்ன என்பதை யோசிக்க வேண்டும்.

நாம் பொது மக்களுக்குத் தருவது ஒரு விலை. வாங்குவது குறைவாக வாங்குகிறோம். ரொம்பவும் குறைவாக வாங்குகிறோம். "ஹாண்ட்லிங் சார்ஜஸ்" என்று வரும், எனக்குத் தெரியும். இப்பொழுது, ஒரு ரூபாய்க்கு அல்லது 96 பைசாவிற்கு வாங்குகிறோம். (குறுக்கீடு) வெளி

உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், தலைவர் அவர்களே, "ரூபாய்க்கு ஒரு படித் திட்டம்" என்பது நாங்கள் சொன்னகருத்து அல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன கருத்து அது. அதை நல்ல முறையிலே செய்கிறார்களா? இல்லையே. நாடு முழுவதும் கொண்டு வரவேண்டும். அப்பொழுதுதான், 'political justification or political morality'. இருக்கும். அதைவிட்டுவிட்டு, இப்பொழுது ஏன் இப்படிச் செய்கிறார்கள்? (குறுக்கீடு) சொன்னது நீங்கள், செய்ய வேண்டியதும் நீங்கள். சென்னையிலே கொலை செய்தால் குற்றம் இல்லை, செங்கல் பட்டில் கொலை செய்தால்தான் குற்றம் என்பது போல இருக்கிறது, சென்னையிலே ஒரு படி தருவோம், வெளியிலே கொடுக்க முடியாது என்பது. There is no moral justification. முடியாது என்றால், முடியாது என்று சொல்லுங்கள். நாங்கள் முடியும் என்று சொல்லவில்லை. ஏனென்றால், முடியாது என்று தெரியும், நாங்கள் இப்படிப்பட்ட பமித்தியக்காரத்தனமான வாதங்களை கிளப்பிவிட்டுக் கொண்டு சிக்கிக்கொள்ள மாட்டோம். அது முடியாது என்று அனைவருக்கும் தெரியும். உங்களால் முடிந்தால் அனைவருக்கும் கொடுங்கள். முடியவில்லை என்றால், சொல்லுங்கள் "தெரியாமல் சொல்லிவிட்டோம், ஐயா, நடைமுறையில் இது நடக்காது," என்று சொல்லிவிடுங்கள். பெல்ட் ஏரியாக்கள் என்று சொல்லி, காங்கிரஸ் சர்க்கார் மீது சுமத்தப்ப து நியாயமா? சொன்னது யார்? திராவிட முன்னேற்றக் கழகம். அப்பொழுது சொன்னீர்களா காங்கிரஸ் கொடுத்த இடத்தில் கொடுப்போம் என்று. சொல்லியிருந்தால், வேலூரில் ஒட்டுப் போட்டிருப்பார்களா? செங்கல்பட்டில் போட்டிருப்பார்களா? (குறுக்கீடு) ஒரு வாதத்திற்குச் சொல்லுகிறேன். Law must be made applicable to the entire State and not to patches here and there. Therefore, that is not correct. அதுதான் சொல்கிறேன்..........

(மணியடிக்கப்பட்டது).

**திரு. கே. விநயகம் :** நான் உப தலைவர், சார்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. வீராசாமி).** தங்களுக்குக் கொடுத்த நேரம் ஆகிவிட்டது.

Thiru K. VINAYAGAM : I am almost winding up my speach.

பின்னால் தலைவர் பேசினால் கூட நான் டெவலப் செய்த கருத்தை முடித்துவிடுகிறேன். ஆகவே, முடிந்தால் நாட்டு மக்கள் முழுவதுக்கும் கொடுங்கள். இல்லையென்றால், வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். அதில் தவறில்லை. தோற்றுவிட்டதாக, ப்ரிஸ்டிஜ் ஒன்றும் பார்க்கவேண்டாம். Let us be real in our action and let us be honest to the people. அதைச் சொல்லாது, அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்பதெல்லாம் சரியில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்துள்ள மானியக்கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய

[திரு. செஞ்சி ஏ. முனுசாமி] [1969 மார்ச் 22

கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். கொள்முதல் திட்டப்படி, கிடைக்கின்ற பகுதிகளில் பெற்று, கிடைக்காத பகுதிகளில் வினியோகம் செய்வதை அடிப்படையாகக் கொண்டு, கொள்முதல் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகின்றது. பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற பண்பை கொண்ட யாரும் கொள்முதல் கொள்கையை எதிர்க்கமாட்டார்கள். இருப்பினும், கொள்முதல் திட்டத்தால் ஆங்காங்கே கெடுபிடிகள் இருக்கின்றன என்றும், கேடுபாடுகள் ஏற்படுகின்றன என்றும் புகார்கள் வருகின்றன.
பிற்பகல் 9-00 அவைகளில் பல புகார்கள் புகார்களாகவே இருக்கின்றன. அவைகளில் ஒரு சில உண்மைகளாகவும் இருக்கின்றன. அதை மறுப்பதற்கில்லை. இப்படிப்பட்ட நேரத்தில் உயர் நீதி மன்றம் இரண்டு வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கியிருக்கிறது. அதைப் பார்க்கின்ற பொழுது உண்மையிலேயே மக்கள் மத்தியில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு புறம்பாக இந்த அரசு கொள்முதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றது என்ற தப்பான பிரசாரம் செய்யப்படுகிறது. இது சரியா என்பது ஒருபுறமிருக்க, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை கொட்டை எழுத்துக்களில் போட்டு அன்றுடப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. அதைக்காட்டி கொள்முதலுக்கு நெல் மூட்டைகளைக் கொடுக்காதீர்கள் என்று பிரசாரம் செய்கிறார்கள். கொள்முதலைப் பொறுத்து உயர் நீதிமன்றம் தருகின்ற தீர்ப்பு, தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை விவசாயிகளையும், கொள்முதல் செய்கின்ற நிர்வாகத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்பு,. கொள்முதலில் குறைபாடுகள், குறைகள் இருக்கின்றன. சட்டத்தை உருவாக்குவது சட்டமன்றம், சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து ஆவன செய்வது நிர்வாகம். உரிமைகளையும், வழக்கங்களையும், மரபுகளையும் பாதிக்காதவகையில் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா, ஒழுங்காக சட்டம் கையாளப்படுகிறதா என்று மேற்பார்வையிடுவது நீதிமன்றத்தின் பணியாகும்.

இப்படிப்பட்ட நேரத்தில் அங்கே எழுப்பப்பட்ட தீர்ப்பையொட்டி விலையைக் கூட்டித் தரத்தான் வேண்டுமா என்பது ஒருபுறமிருக்க, நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் ஆண்டுக்காண்டு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும், கொள்முதல் செய்த தானியத்தைத் திரும்பத் தரவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று கேட்பதில் நியாயம் இருக்கிறது. இப்போது பணவீக்கம் பெருகியிருக்கிறது. மத்திய அரசு நோட்டு அடிக்கிறது என்று சொல்லலாம். ஒவ்வொரு பொருளின் விலையும் கூடிக் கொண்டிருக்கிறது. இப்போது அக்ரிகல்சர் பிரைஸ் கமிஷன் பரிந்துரை செய்ததற்கு ஏற்ப மாநில அரசு நெல்லுக்கு விலையை நிர்ணயித்திருக்கிறது. உயர்நீதிமன்றம் ஆண்டுக்கு ஒரு தடவை விலை மாற்றியமைக்கப்பட்ட வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. விலை நிர்ணயம் செய்வதில் கூட மத்திய அரசின் போக்கு மாற்றாந்தாய் மனப்போக்கில் இருக்கிறது. 1965-ல் மோட்டா ரக நெல் குவின்டாலுக்கு ரூ. 37·40, நடுத்தர ரகம் ரூ. 38·73, உயர்ரகம் ரூ. 40·70, 1966-ல் மோட்டா ரகம் ரூ. 40·00, நடுத்தர ரகம் ரூ. 42·00 , உயர் ரகம் ரூ. 45·00 ; 1967-ல் மோட்டா ரகம் ரூ. 43·00, நடுத்தர ரகம் ரூ. 45·00, உயர் ரகம் 48·00. பிறகு நெல் விலை உயர்ந்ததாகக் காணோம்.

கடன் வழங்கும் திட்டத்திலாகட்டும், நிதி வழங்கும் மாற்றாந்தாய் மனப்பான்மையில் இருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. திட்டத்திலாகட்டும் மத்திய அரசு இங்கே அரிசி சாப்பிடுபவர்களுக்கு ஒரு நியதி, கோதுமை சாப்பிடுபவர்களுக்கு ஒரு நியதி என்ற நிலைமை இருக்கிறது. சிவப்பு கோதுமைக்கு எந்த அளவிற்கு விலையை உயர்த்தியிருக்கிறார்கள் என்பது அறிக்கையிலிருந்து தெரிகிறது. 1964-ல் சிவப்பு கோதுமை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 37·41 என்று இருந்தது. 1968 முதலில் 67 ரூபாய் ஆனது. இந்த நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 30 ரூபாய் வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. 1968 முடிவில் குவின்டாலுக்கு 70 ரூபாய் என்று ஆகியிருக்கிறது. இந்த விலை கூட போதாது என்று சொல்கிறார்கள். கோதுமை உற்பத்தி செய்பவர்களுக்கு ஒரு பாகுபாடும் அரிசி உற்பத்தி செய்பவர்களுக்கு



1969 மார்ச 22] [திரு. செஞ்சி வெ முனுசாமி.]

ஒரு பாகுபாடும் என்ற நிலையில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்ற பேச்சை உண்மையாக்குகின்ற வகையில் இது அமைந்திருக்கிறது.

இப்படிப்பட்ட நேரத்தில் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்று பணவீக்கம் பெருகியிருக்கிறது. இது நியாயம் தானா என்று பார்க்கின்ற பொழுது, கொள்முதல் திட்டத்தை நெல்லுக்கு மட்டும் வைத்திருக்கிறார்கள். நெல்லுக்குமட்டும் வைத்துவிட்டு, மற்ற பொருட்கள் விலையேறிக்கொண்டிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன். இப்படிச் செய்வதால் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள், நான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லிக்கொள்கிறேன். நெல் மூட்டையின் விலை கொள்முதல்படி 36 ரூபாய் என்று சொல்கிறார்களே, இன்றையதினம் இயற்கைக் கோளாறினால் பாதிக்கபபட்ட வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, தென் ஆர்க்காட்டின் ஒருசில பகுதிகளில் மூட்டை வெளி மார்க்கெட்டில் 65 ரூபாய்க்கு விற்கிறது. பாடுபடும் விவசாயி 36 ரூபாய்க்கு நெல்லைக் கொடுக்க வேண்டும். ஆனால் வெளி மார்க்கெட்டில் 65 ரூபாய்க்கு விற்கிறார்கள். இடையிலே இருக்கின்ற தொகை இடைத்தரகருக்குப் போகிறது. இப்படிப்பட்ட நிலையில் மார்ஜின் தொகை கள்ளச் சந்தைக்காரருக்குப் போகிறது. யாரோ ஒருவர் பாடுபட்டதற்கு யாரோ ஒருவர் கள்ளச் சந்தையில் கொழுத்துக்கொண்டு போகிறார். இந்தமாதிரியான நிலைமையை அரசாங்கம் நிச்சயமாக மாற்றியமைக்க வேண்டும்.

அரிசி ஆலைக்கு உரிமம் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பித்து, அரசு அனுமதி அளிப்பர். அடிமட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் தயாரிக்கிற அறிக்கையினால் உரிமம் வழங்க அனுமதி மறுக்கப்பட்டால், பாதிக்கப்பட்ட மனுதாரர் அரசுக்கு முறையீடு செய்துகொள்ளலாம். தன்னுடைய மனுவை புனராய்வு செய்ய கோரிக்கை செய்துகொள்ளலாம் என்ற மரபு இருந்தது. உயர்நீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகு, அரசாங்கத்திற்கு அப்பீல் செய்யவோ, ரெவ்யூ செய்யவோ இடமில்லையென்ற நிலைமை வந்திருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை மாற்ற வேண்டும். அடிமட்டத்தில் தவறுகள் நடைபெற்றால் சுட்டிக்காட்டவோ, திருத்தம் செய்யவோ தேவை ஏற்படுகிறது. 20 தினங்களுக்கு முன்புதான் ஒரு மனுதாரருக்கு அந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வேளைகளில் அரசாங்கம் அவசியம் விரைந்து முடிவெடுக்க வேண்டும். இந்த அரசாங்கத்திற்கு அப்பீல் செய்யவும் அதிகாரம் இருக்கிறது. போட்ட ஆர்டர் சரியா, இல்லையா என்பதைப்பார்த்து மாற்றியமைக்கவும் அதிகாரம் இருக்கிறது என்ற நிலையில் விதி மாற்றப்பட வேண்டும். திண்டிவனம் வட்டத்தில் மயிலம் கிராமத்தில் அழகானந்தம், வீரப்ப கவுண்டர் ஆகிய இவர்களுக்கு இடையே நடந்த வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட குறைபாடுகளை நிச்சயமாக அரசாங்கம் களைந்தெறிய வேண்டும்.

அடுத்தபடியாக, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு அதிகமாக இருந்து வருகிறது. 55 பைசாவுக்கு விற்கப்படவேண்டிய மண்ணெண்ணெய் 70 பைசா, 80 பைசா, என்று போய்க்கொண்டிருக்கிறது. செஞ்சிப் பகுதியில் 55 பைசாவுக்கு விற்றது ஒரு ரூபாய் வரையிலும் விற்க ஆரம்பித்தது. பொதுமக்கள் ஆட்சேபித்ததன் பேரில் 80 பைசாவாக விற்கப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு போதுமான எண்ணெய் அனுப்பவேண்டும்.

மேலும், செஞ்சிப் பகுதிக்கு கொள்முதலிலிருந்து விதிவிலக்கு தர வேண்டும். சென்ற ஆண்டு அரசாங்கம் கேட்டதற்குமேல் கொள்முதலுக்கு நெல் வழங்கிய பகுதி என் பகுதி. இவ்வாண்டு அப்பகுதியில் விளைச்சல் இல்லை. சட்டியிலே இல்லை, ஆகவே, அகப்பைக்கு ஒன்றும் வராது. ஆகவே தயவு செய்து மேலும் அகப்பையைப் போட்டு சுரண்ட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்,

**திரு பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கும்படியான மானியத்தின்மீது என் கட்சியின் சார்பாகக் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேசலாம் என்றிருக்கிறேன். பால் பண்ணை வளர்ச்சியைப்பற்றி என் கட்சியில் இருக்கும் திரு. கே. விநாயகம் அவர்கள் நல்லமுறையில் சொல்லி விட்டார்கள். மாதவரம் பால்பண்ணையைப் பொறுத்தவரையில் நான் இதுவரைக்கும் நேரிலே போய் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மதுரை பால் பண்ணைத் திட்டத்தைப் போய் பார்க்கலாம் என்று ஒரு மாதத்திற்கு முன்னால், சில புகார்கள் வந்ததன் காரணமாகச் சென்றேன். மில்க் கமிஷனர் அவர்களும் நேரில் வந்து அழைத்துச் சென்றதன் பேரில் கணக்குகளைப் பார்த்துவிட்டு வரும்படியான சந்தர்ப்பம் கிடைத்தது.

மதுரையில் உள்ள பால் பண்ணைக்கு அதிகமான பால் வருகிறது. அவ்வளவு பால் வந்தும் அவ்வளவையும் அவர்கள் விநியோகம் செய்து மக்கள் பயன்படுத்திக்கொள்ளும் சூழ்நிலை இல்லை. ஆகவே, விநியோகம் போக பாக்கி பாலை வெண்ணெய், நெய் ஆக மாற்றும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிகப்படியாக பால் வரும் சந்தர்ப்பங்களில் இப்படி வெண்ணெய், நெய் போன்ற மாற்றுப் பொருள்களாக ஆக்கும்படியான நிலைமை ஏற்படலாம். ஆனால், அதிலும் சில சந்தேகங்கள் வரத்தான் செய்யும். முடிந்த அளவில் மதுரையில் நல்ல காரியங்களைத் தான் செய்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான நெய், வெண்ணெய் டின்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகள் ஆயிரக்கணக்காக விற்கப்படுகின்றன என்று மில்க் கமிஷனர் என்னிடத்தில் சொன்னார். உடனடியாக, “அதிகமாக இருக்கும்படியான பாலை “பால்பவுடர்” ஆகச் செய்துகொள்ளும் திட்டம் இருந்தால் நல்லதாக இருக்கும்” என்று என்னுடைய ஆலோசனையைச் சொன்னேன். பால் பவுடராக மாற்றுவதனால் எப்போது வேண்டுமானாலும் பாலாக மாற்றிக்கொள்ள சௌகரியமாக இருக்கும். மேனாடுகளில் டென்மார்க் போன்ற நாடுகளில் பாலை பால் பவுடராகச் செய்யும் நிலையங்கள் வெகுவாக இருக்கின்றன. பால் பவுடரை வீட்டிலே வைத்துக்கொள்ளலாம். எப்பொழுது தேவையோ அப்பொழுது பாலாக மாற்றிக்கொள்ளலாம். ஒன்றை நான் சட்டசபையில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

50, 60 ஆயிரம் லிட்டர் பால் அதிகமாக வருகிறதே, அதை உடனடியாக பால்பவுடராக மாற்றும்படியான நிலை இருந்தால் பின்னாலே உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய சௌகரியம் இருக்கும். அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து தக்க நடவடிக்கையை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு இதைக கொஞ்சம் கொஞ்சமாக விஸ்தரிப்பு செய்து கிராமங்களில் இருக்கும் பாலை வாங்கி சீரான முறையில் பவுடராகச் செய்தால் பொதுமக்களுக்குச் சௌகரியமாக கிடைக்கும். கிராமத்திலுள்ள விவசாய மக்களும் தங்களுடைய ஆடுகளையும் மாடுகளையும் நல்ல முறையில் பேணிப் பாதுகாப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவேதான், மதுரை, மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்கள், கோவை, கோவையைச் சுற்றியுள்ள கிராமங்கள், ஈரோடு ஈரோடைச் சுற்றியுள்ள கிராமங்கள் இங்கெல்லாம் அதிகமான அளவில் பால் உற்பத்தியாக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். உண்மையில் கால்நடைகள் அபிவிருத்தி அடைந்தால் சத்துள்ள பால் உணவு-குழந்தைகளுக்கு ஏற்ற உணவு கிடைக்க வழியேற்படும். மாட்டுச் சாணம் சிறந்த உரமாகவும் நிலத்திற்கு அமையும். ஆகவே அதிகமான அளவுக்குப் பால் கிடைக்கிறபொழுது அதைப் பால்பவுடராகவும் மாற்ற வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொள்முதல் விஷயம், சிவில் சப்ளைஸ். பலபல நிலைகளில், இரண்டுமூன்று சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டு மீண்டும் எடுக்கப்பட்டு, மீண்டும் கொண்டுவரப்பட்டு வந்திருக்கிறது. கொள்முதலே வேண்டாம் என்று சொல்லவில்லை. ஜனநாயக ஆட்சியிலே எல்லோருக்கும் உணவுப் பொருள், நியாயமான விலையில், கட்டுபடியாகக்



கூடிய விலையில் கிடைக்க வழிசெய்வது தான் சர்க்காருடைய கடமை. காங்கிரஸ் கட்சியின் கொள்கையும் அதுதான். மக்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்கள், நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்தாக வேண்டியது தலையாய கடமை என்பதில் ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால், அதற்கு என்ன வழி என்பதைத்தான் பார்க்க வேண்டும். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டு என்று சர்க்காரே வைத்து நடத்துகிறபோது பல விடங்களில் தவறுகள் ஏற்பட ஏதுவாக இருக்கிறது. தவறு செய்கின்றவர்களைத் தண்டிக்க வேண்டிய சர்க்கார். அதுவே தவறு செய்கின்ற நிலை வருகிறபோது மக்களுக்கு வெகுவாக சர்க்காரிடம் அதிருப்திதான் ஏற்படும். தனியார் நடத்துகிறபோது திறமையாக, பயனுள்ளதாக இருக்கிற ஒன்று சர்க்காரே நடத்துகிறபோது சரியாக நடப்பதில்லை.

கொள்முதல் விஷயத்தை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் இப்போது கட்டாயக் கொள்முதலைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உற்பத்தியாகிற எல்லா நெல்லையுமே — விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையில் வாங்கி சர்க்கார் விநியோகம் செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. இப்போது இருக்கும்படியான நிலைமை என்ன ? பெரும்பாலான இடங்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நன்றாக விளைந்த சென்ற ஆண்டு 8 லட்சம் கொள்முதல் செய்தார்கள் என்றால், இந்த ஆண்டு 63 லட்சம் கொள்முதல் செய்வது, 54 லட்சமாவது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே மாதிரி கொள்முதல் திட்டம் இருக்குமானால நிச்சயமாக விவசாயமக்கள வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள்.

தங்களுடைய செலவுக்குப் போக பாக்கியுள்ள நெல்லை விவசாய மக்கள் விற்றுத்தான் மற்ற குடும்ப காரியங்களைச் செய்தாக வேண்டும். இன்றைக்கு நாம் அவர்களிடம் இருக்கும் நெல்லை கொள்முதல் செய்கிறோம் என்றால் நாம் அவனுடைய நெல்லுக்குக் கொடுக்கும்படியான விலை நியாயமான விலையா, அவனுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையா என்பதைச் சிந்திக்க வேண்டும். அவன் வாங்கியாக வேண்டிய மற்ற பொருள்கள் எல்லாம் எக்கச்சக்கமாக விலை உயர்ந்திருக்கின்றன. கொள்முதலே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. கொள்முதல் பூராவையும் தனிப்பட்ட ஏஜெண்டுகளிடமே இல்லாமல் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டு மென்பது தான் என் கொள்கை. சர்க்காரே பூரணமாகச் செய்தால் இடைத் தரகர்களுக்குப் போகிற லாபம் விவசாயிகளுக்காவது கிடைக்கச் செய்ய முடியும். இப்போது அப்படி இல்லை. சர்க்கார் உத்தரவு போடுவது —நெல் வாங்குவது வேறு ஒருவர் — அவர் அதை ச ரியான முறையில் பாதுகாக்காதது அல்லது கலப்படம் செய்வது — இதனால், மக்களுக்குத் தரமான அரிசி கிடைக்காமல் போகிறது.

மகாராஷ்டிராவை எடுத்துக் கொண்டால் தனிப்பட்டவர்களிடம் விடுவது கிடையாது. சர்க்காரே நேரடியாகக் கொள்முதல் செய்கிறது. அங்கே சர்க்கார் விவசாயிகளுக்கு ஒரு க்விண்டாலுக்கு 60 ரூபாயில் இருந்து 72 ரூபாய் வரை கொடுக்கிறார்கள். அதனால் விவசாயிகளும் மனமுவந்து அரசாங்கக் கொள்முதலுக்குக் கொடுக்கும்படியான நிலை இருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழகத்திலே இப்போது இருக்கும்படியான கொள்முதல் விலை நியாயமான விலை என்று சொல்ல முடியாது. அமைச்சர் அவர்கள் எப்போதும் சொல்லிவிடுவார்கள். இந்த விலையை நாங்கள் நிர்ணயிக்க வில்லை, மத்திய சர்க்கார் தான் நிர்ணயிக்கிறது, ஜகஜீவன்ராம் தான் நிர்ணயிக்கிறார் என்று சொல்லிவிடுவார்கள். நாம் நம்முடைய மாநிலத்தில் இன்ன விலை தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அதை அவர் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்கிறாரா என்று கேட்கிறேன். ஜகஜீவன்ராம் அவர்களுடைய பீகார் மாநிலத்தில் இன்றைக்கு என்ன விலை இருக்கிறது ? மிக மட்டரகமான நெல்லுக்குக் கூட க்விண்டாலுக்கு 56லிருந்து 65 வரை கொடுக்கிறார்கள். பீகாரில் பாக்கி நெல்லுக்கு விலையே நிர்ணயிக்கவில்லை. இன்றைக்கு குஜராத் மாநிலத்தில் க்விண்டாலுக்கு 58 ரூபாயில் இருந்து 91 வரை இருக்கிறது.

மேற்கு வங்கத்தில் க்விண்டால் 60 ரூபாயில் இருந்து 70 ரூபாய் வரை கொடுத்து வாங்கப்படுகிறது. அப்படி இருக்கிறபோது நம்முடைய மாநிலத்தில் இன்ன விலை தான் இருக்க வேண்டும், இது தான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை என்று சர்க்கார் சொல்லி, அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்களா என்று கேட்கிறேன். விவசாயிகள் வாய் இல்லாத பூச்சிகள் என்று இந்தச் சர்க்கார் வேண்டுமென்றே அவர்களைத் துன்பப்படுத்துகிறது. பட்டினத்தில் உள்ளவர்கள் தான் வாய் உள்ளவர்களா ? நாம் க்விண்டாலுக்கு 80 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு வேளை மத்திய சர்க்கார் மறுக்கக்கூடும். மற்ற மாநிலங்களில் உள்ள விலையை ஒட்டி இங்கேயும் க்விண்டாலுக்கு 60, 65 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நாம் சொன்னால் அவர்கள் மறுப்பார்களா என்று கேட்கிறேன்.

அமைச்சர்கள் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்க உரையில் ஓர் உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக சர்க்காரைக் கொஞ்சம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுதான் உண்மை. **If the procurement prices are enhanced, expenditure on subsidy will have to be increased.** விஷயம் இவ்வளவு தான். கொள்முதல் விலையை அதிகப்படுத்தினால் இப்போதுநாம் கொடுத்து வருகிற சப்ஸிடி தொகையும் அதிகமாகிவிடும். ஆகவே தான் உயர்த்தக் கூடாது என்கிற நிலையை மேற்கொண்டிருக்கிறார்கள். சப்ஸிடி கொடுத்து பட்டினத்தில் உள்ளவர்களுக்கு அரிசி கொடுத்தாக வேண்டும். ஆகவே தான் உங்கள் தலையில் கை வைக்கிறோம் என்கிறார்கள். உண்மையில் பார்க்கப் போனால் இவர்கள் யாருக்கு மானியம்கொடுக்க வேண்டும் ? உற்பத்தி செய்கிறவர்களுக்கு மானியம் கொடுத்தால் மேலும் மேலும் உற்சாகத்தோடு அதிகமாக அவர்கள் உற்பத்திசெய்வார்கள். உற்பத்தி செய்கிறவர்களுக்கு மானியம் என்றால் வரவேற்கத்தக்கது. ஆனால் இந்தச் சர்க்காரில் வாங்கி உண்பவர்களுக்கு மானியம் கொடுக்கப்படுகிறது. இந்த நிலை நீடித்தால் உண்மையில் நிச்சயமாக உற்பத்தி பெருகாது.

எங்கள் சித்தாந்தமே இதுதான். விவசாயிகளுக்கு தாராளமான விலை கொடுங்கள். அவர்கள் உற்சாகத்தோடு அதிகம் உற்பத்தி செய்ய முன்வருவார்கள். உற்பத்தி பெருகினால் தானே விலை குறைந்துவிடுகிறது. இதை முன்பு இருந்தவர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இவர்களுக்குப் புரியவேயில்லை. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையை தாராளமாகக் கொடுங்கள். ஒன்றிரண்டு ஆண்டு சிரமம் இருந்தாலும் உற்பத்தி படிப்படியாகப் பெருகும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கிறது என்கிற போது விவசாயத்தில் எல்லோரும் உற்சாகமாக ஈடுபடுவார்கள். உற்பத்தி பெருகினால் தானே விலை வீழ்ந்துவிடும். இதுதான் உண்மையான பொருளாதார தத்துவம். தலைக்குத் தகுந்த குல்லாய் இருக்க வேண்டுமே தவிர — குல்லாய் இருக்கிறது, அதற்குத் தகுந்தாற்போல தலையைச் சீவிக்கொள்ளுங்கள் என்பது சரியா ? உங்களுக்குப் பல சிக்கல்கள் இருக்கின்றன, உணர்கிறேன். கொள்முதல் விலை கூடினால் சப்சிடி அதிகமாகிவிடும், சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அரிசி விலை கூடினால் அதிகமாக டி. ஏ. கொடுக்கும்படி வரலாம், அதற்காக ஏழை விவசாயிகளை வதைக்க வேண்டுமா ? நஷ்டப்படுத்த வேண்டுமா ? உணவு அமைச்சர் சொல்கிறார், இன்றைக்கு ஒரு படி அரிசி வெளி மார்க்கெட்டில் 3 ரூபாய்க்கு விற்கிறது என்றால் இல்லை இல்லை, இரண்டு ரூபாய், தொண்ணூற்றைந்து காசுக்குத் தான் விற்கிறது என்பார். 2.95 ஆக இருந்தால் என்ன, 2·90 ஆக இருந்தால் என்ன, 3·00 ரூபாயாக இருந்தால் என்ன ?. பல இடங்களில் இப்படித் தான் விற்கிறது. சர்க்கார் கொடுக்கும்படியான விலையைப் போல்இரண்டு மடங்கு அதிகமாக வெளியே விற்கப்படுகிறது. நெல் விலை குவிண்டாலுக்கு 90 ரூபாய் என்ற அளவிலே விற்கிறது. இல்லையென்று யாரும் மறுக்க முடியாது. இந்த நிலைமை ஏன் வருகிறது ? **தேசத் துரோகம் செய்யக் கூடியவர்கள், தப்பித்துக்**



கொள்ளக் கூடியவர்கள் இவர்களுக்குத் தான் சலுகைகள் எல்லாம் போகின்றன. மக்களுடைய நிலையை உணராமல் தப்பித்துக் கொண்டு போகின்ற வியாபாரிகளுக்கும் ஒரு சிலருக்கும் ஏன் **அந்தச் சலுகையைக் கொடுக்க வேண்டும் ? இதற்காக** விவசாயிகள் ஒரு **போராட்டத்தை** நடத்த வேண்டுமென்ற ஒரு கருத்து இருந்தாலும் கூட, என்னைப் பொறுத்த வரையிலும் நான் சொல்லிக் கொள்கிறேன். 20 வருஷமாக கொள்முதலுக்குக் கொடுத்துவிட்டுத் தான் நான் பேசுகிறேன். அறுவடையானவுடனே கொள்முதலுக்குக் கொடுத்து என்னுடைய கடமையை ஆற்றி விட்டுத் தான் நான் பேசுகிறேன். கம்யூனிஸ்டுகாரர்கள் சொல்கிறார்கள். 10 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு என்று ஒரு விலை வைத்துக் கொள்ளலாம், 3 ஏக்கர் என்றால் அதற்கு ஒரு விலையை வைத்துக் கொள்ளலாம் என்கிறார்கள். அதுதான் பாலிட்டிக்ஸ். நிறைய நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு ஒரு உற்பத்தி செலவு, குறைவு ஆக நிலம் வைத்திருக்கிறவனுக்கு உற்பத்தி செலவு அதைவிட ஜாஸ்தியா ? எனவே யாராய் இருந்தாலும் விவ்சாயி விவசாயிதானே ? படியரிசிக்கு மானியமாகக் கொடுக்கும்படியான 8½ கோடி ரூபாயை விவசாயிகளுக்குக் கொடுங்கள். குவிண்டால் ஒன்றுக்கு அப்படிக் கொடுத்தால் இன்னும் 12 ரூபாய் கிடைக்கும். ஐந்து லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்வோம் என்ற உறுதியை நான் கொடுக்கிறேன். ஏதோ சர்க்காருக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டுமென்ற நிலையல்ல. கிராமத்திலே உள்ள கஷ்டப்படுகின்ற விவசாயிகளுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன். விவசாயிகளுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வெளி மார்க்கெட்டிலே விலை அதிகமாகத் தான் இருக்கும். நியாயமாக இருக்கின்ற விவசாயிகளுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை, அவர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள்.

இந்த சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலே எத்தனையோ தவறுகள் நடக்கின்றன. ஆடிட்ஸ் அண்டு அக்கவுண்ட்ஸ் ரிப்போர்ட் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே பருப்பு வியாபாரம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இது சாதாரண வியாபாரமாக, பழைய வியாபாரமாக இருக்கலாம். பருப்பிலே ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றி இந்த சர்க்கார் முறையாக கவனிக்கவில்லை. இதிலே நஷ்டம் மட்டுமல்ல, சலுகைகள் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ என்ற சந்தேகமும் ஏற்படுவதாகத் தெரிகிறது. பருப்பு கெட்டுவிட்டதாக — கெட்டுவிட்டது என்றால் அதை வங்காளக் குடாக் கடலில் போட்டிருக்க வேண்டும், அல்லது மண்ணைப் போட்டு மூடியல்லவா இருக்க வேண்டும் ? — அப்படியல்லாமல் கெட்டுவிட்டதாக சர்டிபிகேட் கொடுக்கப்பட்டு அது யாருக்கோ விற்கப்பட்டிருக்கிறது. கெட்டுப்போன பருப்பை வாங்கி வெளியே இரண்டு பங்கு விலைக்கு விற்றிருக்கிறார்கள். இதற்கு டெண்டர் கால்பார் பண்ணி யிருக்கலாம். அப்படியில்லாமல் விற்றிருக்கிறார்கள். லிட்டர் 90 பைசா என்ற அளவிலே வாங்கி மூன்று ரூபாய்க்கு விற்கப்பட் டிருக்கிறது. இது யாருடைய பொறுப்பு ? யார் கெட்டது என்று சொன்னார்கள் ? ஏன் டெண்டர் "கால்பார்" பண்ணி விற்கவில்லை சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலே இருக்கும்படியான தவறுகளிலே இது மாபெரும் தவறு. அவர்கள் வாங்கி விற்ற விலை ஒன்றே முக்கால் லட்சம் தான். ஆனால் வெளியே அதை வாங்கி விற்றவர்கள் 5 லட்சம், 6 லட்சம் சம்பாதித்துவிட்டார்கள்.

கொள்முதல் செய்வதற்காக வியாபாரிகள் புரக்யூர்மெண்ட் ஏஜெண்ட்ஸ் போடுகிறார்கள். மாறி மாறிப் போடப் படுகிறது. கலெக்டர் அவர்கள் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அதனால் இங்கே 8½ லட்சம் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. கோயம்புத்தூரிலே 62 ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது, கன்னியாகுமரியிலே 39 ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாம் ஆடிட் ரிப்போர்ட்டிலே இருக்கிறது. எப்படிக் கொடுக்கப்பட்டது ? புரக்யூர்மெண்ட் ஏஜெண்ட்களாக வெவ்வேறு ஆட்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனைமலைப் பிளான்டேஷன் அசோஸியேஷன் என்று இருக்கிறது, அது எப்பொழுது வந்ததோ தெரியாது. ஆனைமலையிலே இருக்கிறவர்களுக்கு அரிசி சப்ளை செய்வதற்காக புதிதாக ஏஜெண்டுகள் மூன்று பேர்களை நியமித்து இருப்ப

தாகத் தகவல் வந்திருக்கிறது. அவர்களாவது சரியாகச் செய்தார்களா? கே. ஏ. மாணிக்கம் என்பவர் ஒரு ஏஜெண்ட், சையத் மகமது என்பவர் ஒரு ஏஜெண்ட், எம். கே. ஆறுமுகம் என்பவர் ஒரு ஏஜெண்ட். இப்படி மூன்று பேர்களுக்கு ஏஜென்ஸி கொடுக்கப்பட் டிருக்கிறது. அவர்கள் தஞ்சாவூர் போய் இருக்கிறார்கள். அவர்கள் சர்க்கார் கணக்கிலே வாங்குவதற்கு உத்திரவு போடப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. மற்றவர்கள் ஆயிரம் ஆயிரம் போட்டு இருக்கக் கூடிய நிலைமையிலே இவர்கள் சர்க்கார் கணக்கிலே வாங்கிக் கொள்ளலா மென்று என் சலுகை கொடுக்க வேண்டும்? இதிலே நஷ்டமெல்லாம் வந்திருக்கிறது. யார் வேண்டுமானாலும் செய்யலாம், அதிலே ஆட்சேபணை இல்லை, ஆனால் அவர்களுக்கு மட்டும் தனியாக அப்படி ஒரு உத்தரவு போட வேண்டியதன் காரணம் என்ன? சர்க்காருடைய கணக்கிலே வாங்கலாம் என்று என் உத்தரவு போடவேண்டும்? வேண்டியவர்களுக்குப் போட்டுவிட்டார்களோ என்று கருதக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாம் தர அரிசிக்குத் தான் மானியம் கொடுக்கப்படுவதாக சொன்னார்கள். தென் சென்னைத் தேர்தல் சமயத்தில் முதல்தர அரிசிக்கு மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் தர அரிசியைக் கொடுத்ததாலே 57 லட்ச ரூபாய் கொடுக்கப்பட் டிருக்கிறது. அரசியலிலே நேர்மையற்ற முறையிலே நடக்கும்படியான செயலாகத் தான் இருக்கிறது இது. சாதாரண காலத்தில் இல்லை, தென் சென்னை உப தேர்தல் நடந்த நேரத்திலே — காங்கிரஸ்காரர்கள் செய்தார்களா? எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் மக்களுடைய நன்மையையொட்டி நடக்க வேண்டுமென்று தான் அவர்கள் நடப்பார்கள் — இந்த சர்க்கார் முதல் தர அரிசியைக் கொடுத்ததினாலே 57 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொன்னால் யார் பொறுப்பை ஏற்றுக்கொள்வது? அதைச் செய்தது தவறு. அரசியல் காரணத்திற்காக தேர்தல் காலத்திலே அப்படிச் செய்தது தவறு. கேஸ் போடப்பட்டால் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வாங்கிய வோட்டுகள் என்று சொல்ல முடியும். எனவே, இந்த 57 லட்சம் ரூபாய்க்கு அரிசியைக் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்குமானால், இன்னும் எந்த எந்த இடங்களிலே என்ன தவறுகள் நடந்திருக்கின்றனவோ? இந்த சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் ஒரு பெரிய யானை மாதிரி. நிலைமையிலே இருக்கக்கூடிய டிபார்ட்மெண்டாக இருக்கிறது...............

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** யு ஹாவ் கிரியேட்டட் இட்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** யார் "கிரியேட்" பண்ணினால் என்ன? நாங்கள் "கிரியேட்" பண்ணினோம், நீங்கள் என் சாப்பாடு போடுகிறீர்கள்? நீங்களும் வேண்டும் என்று சொல்லி யிருக்கலா மல்லவா? மதுரையிலே தப்பு நடந்திருக்கிறது. சாதாரணத் தப்பு அல்ல. முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ரேஷன் கடைக்காரர்கள் எல்லாம் அங்கே காங்கிரஸ்காரர்கள் என்று. யாராய் இருந்தால் என்ன? நடவடிக்கை எடுத்துத்தானே ஆக வேண்டும்? அங்கே 5, 6 லட்சம் ரூபாய்க்கு டிரஷரியிலே எல்லாம் தப்பாகச் சொல்லி நடந்திருக்கிறது. அதைப்பற்றி கேஸ் இருப்பதினாலே நான்விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. அப்படி யெல்லாம் நடந்திருக்கின்றன.

அடுத்ததாக சர்க்கரை. சர்க்கரை சம்பந்தமாக திடுக்கிடும்படியான தகவல்கள் எல்லாம் இருக்கின்றன. லெவி செய்கிற சர்க்கரையைத் தவிர வெளி மார்க்கட்டிலே விற்கும்படியான சர்க்கரை என்று வேறு சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக இத்தனை டன் லெவி மூலமாக வந்தது என்று சொல்ல வேண்டும். 1·50 அல்லது 1·70-க்குக் கொடுக்கிறார்கள் வெளி மார்க்கெட்டிலே. ஃப்ரீ மார்க்கெட்டிலே விற்பதற்காக சர்க்கார் ஏதாவது வைத்திருக்கிறார்களா? விநியோகஸ்தர்களுக்கு என்ன விலைக்குத் தான் கொடுக்கப்பட் டிருக்கிறது? லாப நஷ்டக் கணக்கு எல்லாம் இதிலே வரவில்லை. அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது தகவல் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். வெளியிலே 3½ ரூபாய் என்று விற்கக் கூடிய நிலைமை யெல்லாம் இருக்கிறது. வெளியிலே அதிகமான விலைக்கு விற்றிருக்கிறார்கள் என்ற புகார்கள் வராத நிலைமையிலே பார்த்துக்கொள்ள வேண்டும்.



அரிசி ஆலைகளைப் பற்றி இப்பொழுது மட்டுமல்ல, பல நாட்களாக நான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அரசு எத்தனை சதவிகிதம் என்று நிர்ணயிப்பதிலே தவறுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. 65 சதவிகிதம் என்றார்கள், பிறகு 63½ சதவிகிதம் என்றார்கள், மில்காரர்கள் எல்லாம் சேர்ந்து கேட்டுக்கொண்ட பிறகு ஏதோ அட்ஜெஸ்ட்மெண்ட் செய்து அரை சதவிகிதத்தைக் குறைத்துக் கொள்ளுவதில் தவறு இல்லை என்றார்கள். சிவில் சப்ளைஸ் கமிஷனராக பி.ப. 12-30
இருப்பவர் ஒரு மில்லிலே போய் உட்கார்ந்துகொண்டு 100 மூட்டை நெல்லை அரைக்கச் சொல்லி அதிலே எத்தனை சதவிகிதம் வருகிறது என்று பார்த்து, பிறகு நிர்ணயிக்க வேண்டும். நானாக இருந்தால் அப்படித்தான் செய்திருப்பேன். இதிலே டெண்டர் சிஸ்டத்தை வைக்க வேண்டும். ஒரு மூட்டை நெல்லுக்கு கோணி தைக்க 5 பைசா, அவிக்க 10 பைசா, அரைக்க 25 பைசா என்றெல்லாம் இருக்கிறது. டெண்டர் மூலம் எந்த அளவு குறைந்த விலைக்கு அரிசியாகக் கொடுப்பாய் என்று கேட்க வேண்டும். தவிட்டுக்கே நெல் அரைத்துக் கொடுக்கும் அரிசி ஆலைக்காரர்கள் கூட இருப்பார்கள். தாமும் நன்றாக இருக்கும் அப்படிச் செய்தால் ஒரு குவிண்டாலுக்கு ஐந்து ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்கக் கூடிய நிலை கூட ஏற்படும். விவசாயிகள் நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் நடுவிலே இருப்பவர்கள் அதனால் வரக்கூடிய லாபத்தை அடைகிறார்கள். அதோடு லாபத்தில் இருந்தும் 5 ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். ஆகவே, மொத்தத்தில் குவிண்டாலுக்கு 10 ரூபாய் விவசாயிகளுக்குக் கிடைக்கும் நிலை இருக்கிறது. அந்த ஏழை விவசாயிகளுக்குப் போய்ச் சேரவேண்டிய பணம் வெளியே போகிறது என்றால் அது அநீதியானது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

கொள்முதல் விஷயத்தில் பல இடங்களில் கெடுபிடி இருக்கத்தான் செய்கிறது. இல்லையென்று மறுக்க முடியாது. அவர்கள் கட்சி அங்கத்தினர்களேகூட சொல்லிக்கொண்டுதான் இருக்கவேண்டும். ஹைகோர்ட் உத்தரவு போட்டு விட்டார்கள், இஷ்டப்படி தான் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இஷ்டப்படி யாரும் கொடுக்கமாட்டார்கள்- அரசியலுக்காக வேண்டுமானால் அப்படிச் சொல்லிக் கொள்ளலாம். கடமையை உணர்ந்து கொடுப்பவர்கள் நூற்றுக்கு ஐந்து சதவிகிதம் இருக்கலாம். நெல்லைப் பறிமுதல் செய்வது என்றால் மில்லிலே போய் எடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. விவசாயிகளிடமிருந்துஅவன் வண்டியிலே கொண்டுபோகும்போது என் பறிமுதல் செய்கிறீர்கள்? கொள்முதல் திட்டம் வேண்டாமென்றுசொல்லவில்லை. அதிலே ஒரு மாறுதல் இருக்கவேண்டும். உங்களுக்குத்தேவையான எட்டு லட்சம் டன்னை வாங்கிக் கொள்ளுங்கள். ஒரு ஏக்கருக்கு இத்தனை மூட்டை நெல்தான் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அதிகமாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கவேண்டும். சோம்பேறி விவசாயிகள் கஷ்டப்படட்டும். அப்படியானால் பணக்காரர்களாக வருவார்கள் என்று சொல்லலாம். தேசத்திற்காகச் சில காரியங்களைச் செய்துதான் ஆகவேண்டும். தேசத்தினுடைய உணவுப் பிரச்சினையிலே அரசாங்கத்திற்குக் கடமை இருக்கிறது. கிரேடெட் லெவி இருக்க வேண்டும். இரண்டு ஏக்கருக்குக் குறைவாகவும், மூன்று, நான்கு ஏக்கருக்குக் கொஞ்சம் கூடவும், இப்படி கொஞ்சம் கொஞ்சம்கூட்டி பத்து ஏக்கர் வரை இவ்வளவு என்று போட்டுத்தான் தீர வேண்டும். விளையவில்லை என்றால் கேட்கக்கூடாது. சர்க்காரிடத்தில் கணக்கு இருக்கிறது. சராசரியாக விளைந்தால் இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று திட்டம் இருக்குமானால் அவனுக்கும் கடமை தீர்ந்து விடும். யார் அதிகமாக விளைவிக்கிறார்களோ அவர்களுக்கு வெளியே விலை அதிகமாக கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். உபரி நெல்லை இஷ்டமான இடத்திற்குக் கொண்டுபோய் விற்க உரிமை இருக்கவேண்டும். காலையிலே பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்ததைக் காங்கிரஸ் கட்சி கூட ஆதரித்தது என்று சொன்னார்கள். நல்ல காரியத்தை நிச்சயமாக ஆதரிப்போம். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கொடுக்க வேண்டுமென்பதுதான்

காங்கிரஸ் கட்சியின் லட்சியம். விவசாயிகளின் வயிற்றில் அடிக்கக்கூடாது என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் லட்சியம். ஆகவே, நீங்களே நியாயம் என்று உணர்ந்த அளவுக்கு ஒரு விலையை நிர்ணயித்தால் அதிலே மத்திய சர்க்கார் குறுக்கிடுவார்கள் என்று நீங்கள் நினைக்கவேண்டாம். நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் போட்டு அனுப்பும்படியான விலையை அவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளுவார்கள் என்ற உறுதியை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரமாகிவிட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விலைப் பிரச்சினை, வயிற்றுப் பிரச்சினையைப் பற்றி பேசும்போது நேரமாகிவிட்டது என்று சொல்கிறீர்களே.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இதைப்பற்றி நிறையத்தடவை சொல்லியாயிற்று.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அத்தனை தடவை சொல்லியும் செவிடன் காதில் ஊதிய சங்கைப்போல் ஆகிவிட்டதே. நல்ல முறையில் கொள்முதலை நடத்துங்கள். கட்டுபடியாகும் விலை விவசாயிக்குக் கொடுங்கள். விவசாயிகளுக்குக் கஷ்டத்தைக் கொடுக்காமல் 'ஈசி லெவி' முறையை ஏற்படுத்துங்கள். நான் இதுவரை கவிதை எதுவும் சொல்லவில்லை. ஒரே ஒரு கவிதையைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

காய்நெல்லறுத்து கவளம் பொழினே
மாநிறை வில்லதும் பன்னாட்காகும்
நூறு செறுவாயினும் தவித்துப் புக்குனினே
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடியாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவனாகி வைகலும் வரிசையறியா
கல்லென் சுற்றமொடு பரிதவ எடுக்கும் பிண்டநச்சின்
யானைபுக்க புலம்போல தானும் உண்ணான்
உலகமும் கெடுமே.

**(மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பொருளையும் சொல்லிவிடுங்கள்)

ஒரு யானை இருக்கிறது. அந்த யானையைக் கட்டித் தீவனம் போடுவார்களானால் ஒரு ஏக்கரில் விளைந்த நெல் பல நாட்களுக்கு வரும். 'மாநிறை' என்றால் ஒரு ஏக்கருக்குச் சற்றுக் குறைவு என்று வைத்துக் கொள்ளலாம். அதே யானையை அவிழ்த்து வயலில் விடுவார்களானால்—

'நூறு செறுவாயினும் தவித்துப் புக்குனினே'

சாப்பிடுவதை விட அழிப்பது பத்து மடங்கு. ஆகிவிடும்.

'அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே'

இங்கே அறிவுடை வேந்தன் யாரிடத்தில் கொள்முதல் செய்வது என்று பார்த்து கொள்முதலைச் செய்வார்களானால் அதிகமாகக் கூட வரும், கஷ்டம் இருக்காது. அதை விட்டு—

'மெல்லியன் கிழவனாகி வைகலும் வரிசையறியா
கல்லென் சுற்றமொடு பரிதவ எடுக்கும் பிண்டநச்சின்'

என்ற நிலையில் அதிகாரிகளை விட்டு, அதிகாரத்தை வைத்து இது தவறு, அது தவறு என்று சொல்லி காரியங்களைச் செய்வோமானால் யானை புகுந்த காடு கெடுவது போல்தான் நாட்டுமக்கள் சுபிட்சமும் கெட்டுவிடும். மக்கள் சுபிட்சமாக இருக்கவேண்டுமென்றால் கொள்முதல் திட்டத்திலே திட்டவட்டமான முடிவை எடுத்து இவ்வளவுதான் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் கொள்முதல் செய்யவேண்டுமென்று நிர்ணயித்து அந்த முறையிலே கொள்முதலைச் செய்ய முற்படுவார்களானால் பரிபூரணமான ஆதரவைக் காங்கிரஸ் கட்சியினர் கொடுப்பார்கள். அந்த சமயத்திலே விவசாயிகளுக்கும் நியாயமான விலையைக் கொடுங்கள். ஏதோ சென்னைக்கு 22 ஆயிரம் டன், கோவைக்கு 28 ஆயிரம் டன் கொள்முதல்





செய்யப்பட்டு கொடுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 75 லட்சம் பேர் பயன்பெறுகிறார்கள் என்று புள்ளி விவரத்தைச் சொல்லுகிறார்கள்.

முன்பெல்லாம் கோதுமை என்று சொன்னாலே அதைத் தமிழன் சாப்பிட முடியுமா, பச்சரிசி, புழுங்கலரிசி சாப்பிடுகின்ற உங்களுக்குக் கோதுமையைக் கொண்டு வந்து கொடுக்கிறார்களே என்று பேசியவர்கள் இன்று கோதுமைக்குக் கும்பிட்டு வரவேற்புக் கொடுக்கிறார்கள் ; அதைச் சாப்பிடும் பக்குவம் எல்லாம் சொல்லுகிறார்கள். நாங்கள் சொன்னபோது கோதுமை வேண்டாமென்று சொன்னவர்கள் இப்போது இப்படிப் பேசுவது உள்ளபடியே எங்களுக்கு பெருமையாக இருக்கிறது. மக்களுக்கு உணவு வழங்கும் விஷயத்திலே எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி தீவிர நடவடிக்கை எடுத்து தமிழக மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றைய தினம் உணவு மானியக் கோரிக்கையின் மீதும் பால் வினியோகம் செய்யும் துறை மானியத்தின் மீதும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோடு பதினெட்டு உறுப்பினர்கள் பங்குகொண்டு சிறப்பான பல கருத்துக்களை இங்கு தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்துள்ள நல்ல கருத்துக்களை, கருத்தைத் தெரிவித்தவர்கள் யார் என்று பார்க்காமல், சொல்லப்பட்ட நல்ல கருத்துக்களைச் செயல்படுத்துவதில் அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு அமைச்சர் என்ற முறையில் முதன்முறையாக இன்றைய தினம் இங்கு பேசுகிற நேரத்தில் சென்னை வாழ் மக்களுக்கும், கோவை நகரத்தில் உள்ள மக்களுக்கும் படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்த அறிஞர் அண்ணா அவர்கள் நம் மத்தியில் இன்று இல்லாதது உண்மையிலேயே ஒரு பெரிய நஷ்டத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்களின் இறுதி யாத்திரையின் போது, படி அரிசித் திட்டம் கொண்டு வந்த அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டி மக்கள் கதறி அழுத நிலைமை எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. ஆகவே அவர்கள் கொண்டுவந்த நல்ல திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம் என்ற உறுதியை அந்தத் திட்டத்தினால் பலன் அடையக்கூடிய மக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உணவு இலாகா பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதும் இந்தக் கஷ்டமான நேரத்தில் அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டதைச் சிலர் சுட்டிக்காட்டி சில பேர்கள் இந்த மன்றத்திலும் வெளியேயும் கூட அனுதாபம் காட்டி பேசியிருக்கிறார்கள். அந்த உறுப்பினர்களையும், நண்பர்களையும் அனுதாபம் காட்டுவதற்குப் பதிலாக ஆதரவு காட்டும்படியும். ஒத்துழைப்பு தரும்படியும் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் உபரி மாவட்டங்களாக நெல் வழங்கி வந்த வட ஆற்காடு, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடில் சில பகுதிகளான திண்டிவனம், செஞ்சி ஆகிய பகுதிகளில் எதிர்பாராத நிலையில் கடந்த இரண்டு வருடங்களாகத் தொடர்ச்சியாக வறட்சி ஏற்பட்டதன் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இந்தப் பாதகமான நிலையில் கூட நாம் பயப்பட வேண்டிய தேவை இல்லாதிருக்கிறோம் என்பதை நான் திட்டவட்டமாக இந்த அவையில் எடுத்துக்கூற விரும்புகிறேன். சில பேர்கள், வேண்டுமென்றே ஒரு பீதியைக் கிளப்பி, வறட்சி ஏற்பட்டுவிட்டது, பயங்கரமானதொரு நிலை உருவாகி வருகிறது என்ற விளக்கத்தைச் சொல்லுகிற நேரத்தில் பதுக்கல்காரர்கள் இதைப் பயன்படுத்திக்கொண்டு, இதை ஆதாயமாக வைத்துக் கொண்டு தாங்கள் அதனால் லாபம் அடையலாம் என்று கருதுவார்களானால் கடைசியில் அவர்கள் ஏமாற்றம்தான் அடைவார்கள். பதுக்கல்காரர்கள், அவர்கள் வியாபாரிகளாக இருந்தாலும் சரி அல்லது லெவிக்கு நெல் அளக்காமல் சொந்த வீட்டில் அல்லாமல் வேறு இடங்களில் வைத்திருந்தாலும் கூட, அரசு அவற்றை எடுப்பதில் கொஞ்சமும் தயங்காது, கடத்தல்காரர்களை அரசு கடுமையாகக் கண்காணித்துத் தகுந்த

நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பதுக்கி வைத்தால் ஆதாயம் கிடைக்கும் என்று இன்று பதுக்குகிறவர்கள் எதிர்காலத்தில் பெரிய ஏமாற்றத்தை அடையக் கூடிய ஒரு சூழ்நிலை நிச்சயமாக உருவாகும். ஆகவே, அப்படிப்பட்டவர்கள் பதுக்கி வைத்திருக்கிற நிலைபற்றி இந்த நேரத்திலாவது அவர்கள் உணர்ந்து அப்படிப் பதுக்கி வைத்திருக்கிற பொருள்களை விற்கும் ஒரு சூழ்நிலைக்கு ஆளானால் அவர்கள் தப்பித்துக் கொள்ளுகிற ஒரு நிலை ஏற்படும். இல்லையென்றால், பதுக்கி வைத்து ஆதாயம் ஏற்படுவதற்குப் பதிலாக அதனால் அவர்களுக்குப் பாதகம் கூட ஏற்படும். என்பதை இந்த நேரத்தில் நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன்.

உணவு நிலையை எப்படியாவது சமாளிக்க வேண்டும், அதற்கு எனக்குப் பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்ந்த காரணத்தினால்தான் மிகவும் பிற்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்த நான், ஏழைகள் நிறைய இருக்கிற பகுதியிலிருந்து வந்திருக்கிற நான், ஏழைகளின் கஷ்டங்களைத் தெரிந்திருக்கிற காரணத்தினால்தான் இதை எப்படியும் சமாளிக்க வேண்டும் என்ற பொறுப்பையுணர்ந்து இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிற நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்களும், சர்வ கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் எனக்கு ஒத்துழைப்பு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மறைந்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு சமயம் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசுகிற நேரத்தில் ஒன்று சொன்னார்கள். உணவு நிலைமை எப்படி இருக்கிறது என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்ட நேரத்தில், அருகில் இருந்த இன்றைய நிதி அமைச்சராகிய அன்றைய உணவுத் துறை அமைச்சர் அவர்களைச் சுட்டிக்காட்டி **'It is as strong as Mr. Mathialagan, our Food Minister'** என்று சொன்னதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. இப்போது நான் சிறிது இளைத்திருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். உண்மைதான். நான் இளைத்திருந்தாலும், என் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும் கூட, நாட்டிலுள்ள சிறந்த டாக்டர்கள் என்னுடைய உடம்பைக் காப்பாற்றுவார்கள் என்ற தைரியம் எனக்கு இருப்பதைப் போலவே இந்த நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் உணவுநிலையைச் சமாளிப்பதற்கு ஒத்துழைப்பு தருவார்களானால்— நானும் இருக்கிறேன் என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்— உண்மையில் அவர்கள் ஒத்துழைப்பும் இருக்குமானால் நாம் கொஞ்சங் கூட பயப்பட வேண்டிய அவசியம் இருக்காது. அது வார்த்தையளவில் இல்லாமல் செயல் அளவில் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** செயல் அளவில் வரவேண்டுமென்றால், எந்த விதத்தில் செயலில் இல்லாமல் இருக்கிறது என்று சொல்வார்களா ? கொள்முதலுக்கு ஏராளமாகக் கொடுக்கிறேன் என்று சொல்கிறேன். கரும்பு ஒரு சதுர அடி கூடப் போடுவதில்லை என்று சபதம் எடுத்திருப்பதைவிட வேறு என்ன செய்ய முடியும் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கரும்பு ஒரு அடிகூடப் போடவில்லை என்று சொன்னதற்காக நன்றி. இந்த அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தவேண்டுமென்ற அளவில் அவர்கள் வழக்கமாகச் சொல்லி வருகிற அந்த ஒரு குரலைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வார்களேயானால், அல்லது அதை மட்டுப் படுத்திக்கொள்வார்களேயானால், அல்லது அதை நிறுத்துவார்களேயானால் இந்த அரசுக்குப் பெரு உதவியாக இருக்கும். இந்த அரசு என்றும் விவசாயிகளின் வயிற்றில் அடிக்காது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அரசியல் நோக்கோடு அதைச் சொல்லுவார்களானால் அதைப் பற்றி நான் மீண்டும் மீண்டும்......





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அரசியல் நோக்கோடு நான் சொல்லவில்லை. விவசாயிகளின் நோக்கில்தான் சொல்கிறேன். எனக்கு அரசியல் நோக்கம் இல்லை. அவர்களுக்கு இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பட்டணத்தில் வசிக்கிறவர்களுக்கும் அவரது சொந்த மாவட்டமாகிய கோவை நகரத்தில் உள்ளவர்களுக்கும் மட்டும்தான் இந்தப் படி அரிசித் திட்டம் வழங்குவதாகத் தவறான ஒரு கருத்தை வெளியில் சொல்லி வருகிறார்கள். இந்த மன்றத்திலும் சொல்கிறார்கள். ஆனால் நிலைமை என்ன என்று பார்க்க வேண்டும். 127 லட்சம் மக்களுக்கு குடும்ப கார்டு வழங்கி வருகிறோம். இதை அவர்கள் வழக்கமாகச் சொல்கிற பாணியில் யாரைக் கேட்டுக்கொண்டு இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தீர்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோது இந்த இரண்டு பகுதிகளிலும் குடும்பக் கார்டு முறையைக் கொண்டு வந்தார்கள். அப்படி குடும்பக் கார்டு முறையைக் கொண்டுவந்ததற்குக் காரணம், இங்கு உற்பத்தி குறைவாக இருக்கிறது. இங்குள்ள மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை என்று அந்தப் பகுதிகளுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அன்றிருந்த அரசு அதைச் செய்திருக்கிறது. அதே நிலையைத் தொடர்ந்து படி அரிசித் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதே நேரத்திலே, விலையையும் உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இது ஒன்றுக்கொன்று முரண்பாடான காரியம், உண்மையிலேயே, ஒரு நெருக்கடியை உண்டுபண்ண வேண்டுமென்று கருதி, விலையை உயர்த்திவிட்டால் ஒரு படியரிசித் திட்டத்தைக் கைவிட வேண்டியிருக்கும். அதைக் கொண்டு அரசியல் காரியத்திற்குப்பயன் படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தால் அது நடக்காத காரியம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எல்லோருக்கும் படியரிசி போடுங்கள். எட்டு லட்சம் டன்னை கொள்முதல் செய்கிறோம், எல்லோருக்கும் படியரிசி போடுகிறோம் என்று சொல்லுங்கள். நாங்களாவது தியாகம் செய்து உதவி செய்யத் தயாராகயிருக்கிறோம். போடுங்கள் எல்லோருக்கும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதற்கு விலையைக் குறைத்து கொள்ளத் தயாரா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் விலையைக் குறைப்பதற்கு நீங்கள் என்ன ? சர்க்கார் எதற்காக இருக்கிறது ? படியரிசி போட வேண்டியது உங்களுடைய பொறுப்பு, உங்களுடைய முழுப்பொறுப்பு. மத்திய சர்க்காரும் கூட சொல்லிவிட்டார்களே, அது உங்களுடைய பொறுப்பு என்று.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திருப்பித் திருப்பிச் சொன்னாலும் அவர்கள் திருப்தியடையப் போவதில்லை. அவர்களைத் திருப்திசெய்ய முடியாது என்பதை உணருகின்றேன். அவர்கள் அதை ஒத்துக்கொண்டால் எங்களுடைய கட்சியை ஆதரித்ததாக ஆகிவிடுமே என்பதற்காக அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அதைப்பற்றி நான் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். இன்றைய தினம் சர்க்கார் கையிருப்பில் 2·5 டன்கள் அரிசி இருக்கிறது. ஒரு மாதத்திற்கு 50,000 டன்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. ரேஷன் பகுதிக்கும், குடும்பக் கார்டு பகுதிக்கும் போடுவதற்கு 50,000 டன்கள் தேவைப்படும் நேரத்தில் இது 5 மாதங்களுக்குத் தாரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கடைசி 2 மாதங்களுக்கு வருகின்ற நேரத்திலே இன்னும் 1 லட்சம் டன் கொள்முதலாகக்கூடிய நிலைமை நமக்குத் திருப்திகரமாக இருப்பதால் சமாளிக்க முடியும். அதுமட்டுமல்ல, கடைசி ஒரு மாதத்திற்கு மத்திய சர்க்காருடைய உதவியையும் எதிர்பார்க்கிறோம். மத்திய அரசும் நல்லெண்ணத்தோடு, முதலமைச்சர் அவர்களின் முயற்சியின்பேரில் முதல் தவணையாக 10,000 டன்கள் அனுப்பி வைக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மேலும் பெருகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதில்

[திரு. ஏ. கோவிந்தசாமி] [1969 மார்ச் 22

நாங்கள் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அவசியம் கொடுத்து விடுவார்கள் என்ற நம்பிக்கையிலே சமாளிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே, தட்டுப்பாடு அல்லது எந்தவிதமான நெருக்கடியும் வராது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள முடியும். நாங்கள் பொறுப்பேற்ற பிறகு, படியரிசித் திட்டப் பகுதிகளில் எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் செய்து வருகிறோம். ஆனால், காங்கிரஸ் ஆட்சியிலே, 1966-67–லே வாரத்தி ில இரண்டு நாட்கள் அரிசி போடாதிருக்கக் கூடிய நாட்களும் இருந்தன. நாங்கள் பொறுப்பேற்ற பிறகு தொடர்ந்து போடுவோம் என்ற நம்பிக்கையில் எங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

கொள் முதல் விஷயத்திலே விவசாயிகளும், பொது மக்களும் நல்ல முறையிலே ஒத்துழைப்பு தந்து வருகிறார்கள். வறட்சியான பகுதிகளிலேகூட, ஒத்துழைப்பு, நாங்கள் எதிர் பார்ப்பதற்கு மேலாக இருக்கிறது. இன்னும் கொடுக்கத் தயாராகயிருக்கிறார்கள். விவசாயிகளைக் கொடுமைப் படுத்தி வாங்குகிறார்கள் என்று சொல்லும்பொழுது அதற்கான ஆதாரம் கேட்டால் அதை நிரூபிக்கக்கூடிய அளவிலே இல்லாது, ஆயிரக்கணக்கானவர்களிடமிருந்து ஒரு ஏக்கருக்குக் குறைவாக வைத்திருப்பவர்களிடம் கொள்முதல் செய்கிறார்கள் என்று ஒட்டு மொத்தமாகச் சொல்லுகிறார்களே தவிர, திட்டவட்டமாக இந்த கிராமத்திலே, இந்த விவசாயிடம், ஒரு ஏக்கருக்குக் குறைந்தவரிடம் தொந்தரவு செய்தார்கள் என்று காட்டி விட முடியவில்லை. ஆனால், காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபொழுது ஒருநாள் பட்டினி இருக்க வேண்டுமென்று பிரதம மந்திரி அவர்கள் சொன்னார்கள். இங்கேயிருந்த முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள், ஒரு நாள் உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆக, 'வாரத்திற்கு இரண்டு நாட்கள் உண்ணாவிரதம் இருங்கள்' என்று உபதேசம்தான் சொன்னார்கள். நாங்கள் பொறுப்பேற்ற பிறகு, ஒருநாளாவது நோ ஸ்டாக் போர்டு தொங்கியது என்று நிரூபிக்கமுடியுமா? நிரூபிக்க முடியுமா என்று தென் சென்னைத் தேர்தல் நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலே கேட்டார்கள். வேண்டுமென்றே 5 ரேஷன் கடைக்காரர்கள் சேத்துப்பட்டு பகுதியில் நோ ஸ்டாக் போர்டு மாட்டிக் கடையை மூடி விட்டார்கள். உடனே, இரவோடு இரவாக அரிசியை அனுப்பி, என் போட வில்லை என்று கேட்டால், தங்களிடம் பணம் இடையாது, ஆகவே போடமுடியாது என்று அரசியல் நோக்கத்திற்காகச் சொன்னதாகத் தெரிகிறது. போட முடியாது என்று சொல்லி, பொது மக்களிடத்திலே குழப்பம் உண்டு பண்ணி, மக்களை பட்டினி போட்டால் உங்கள் லைசென்ஸை ரத்து செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று சொன்ன பிறகு, பயந்து கொண்டு கடையைத் திறந்து அரிசி அளந்தார்கள். இந்த நிலை இருந்தது. தென் சென்னைத் தேர்தல் நேரத்தில் முதல் ரக அரிசி அளந்ததாகச் சொன்னார்கள். தட்டுப்பாடு இருந்ததால் தென் சென்னையில் மட்டுமல்ல, தேர்தல் நடக்காத வட சென்னையிலும் போட்டோம். அந்த நிலையை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருந்திருமன் :** 5 லட்சம் ரூபாய் நஷ்டத்திற்கும், 57 லட்சம் ரூபாய் நஷ்டத்திற்கும் போட்டார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பட்டினி போடுவது அரசின் கடமையா? இன்று நஷ்டத்தைப்பற்றிச் சொல்பவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால் இந்த அரசு பட்டினி போட்டு விட்டது என்று சொல்ல கூச்சப்படுவார்களா? ஏதாவது தவறு செய்ய மாட்டோமா என்று காத்திருப்பதால்தான் இதைச் சொல்லுகிறார்களே தவிர, வேறெதுவுமில்லை. திரு. விநாயகம் அவர்கள் இந்த அரிசியைச் சாப்பிட முடியவில்லை என்று சொன்னார்கள். நான் அவருடைய உடம்பைப் பார்த்தாலே தெரியும் என்று சொன்ன நேரத்திலே நான் அந்த அரிசியைச் சாப்பிடத் றல் வில்லை என்றார்கள்.



1969 மார்ச் 22]

**திரு. கே. விநாயகம்:** சார், ஏதாவது விளக்கம் கேட்கும் பொழுது விளக்கமான, முறையான பதிலைத்தான் சொல்ல வேண்டுமே தவிர, அவர் இளைத்திருக்கிறாரா என்று கேட்கக்கூடாது. அவர் இளைத்திருக்கிறாரா நான் ஒரு படி அரிசியைச் சாப்பிடுவதில்லை. அவரும் அதைச் சாப்பிடுவதில்லை. நாங்கள் இரண்டுபேரும் ஃபைன் வைரட்டி சாப்பிடுகிறோம்.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** ஃபைன் வெரட்டி சாப்பிடுவதாகவும், இங்கு வழங்கப்படும் அரிசி சாப்பிடக்கூடியதல்ல என்றும் சொன்னார்கள். அதைச் சாப்பிடாமல், அது சாப்பிடக்கூடியதல்ல என்று எப்படிச் சொல்லுகிறார்கள்? என்றைக்காவது சாப்பிட்ட அன்று வயிற்றிலே ஏதாவது கோளாறு இருந்தால் அதற்கு அரிசி பொறுப்பு அல்ல. சென்னையைச் சேர்ந்தவர்கள் இங்கே சாப்பிடுகிறார்கள், அவர்கள் எந்தப் புகாரும் இங்கு சொல்லியதாகத் தெரியவில்லை.

திரு நல்லசிவன் அவர்கள் பேசும் நேரத்தில், புஞ்சைத் தானியங்களை வேண்டிய அளவுக்குக் கொள்முதல் செய்து வைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். இப்பொழுது கிராமத்திலுள்ள மக்கள் சில பகுதிகளிலே, குடும்பக் கார்டு இல்லாத பகுதிகளிலே இன்றைக்கும் புஞ்சைத் தானியங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்: கம்பு, கேழ்வரகு, சோளம், போன்றவற்றைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் கொள் முதல் செய்ய ஆரம்பித்தால் கிராம மக்கள் பட்டினி கிடக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதைத் தாராளமாகக் கிடைக்கக்கூடிய சூழ்நிலையில் செய்யும் நோக்கத்தில்தான் இருக்கிறது. சோளம், மத்தியப் பிரதேசத்திலே அமோகமாக விளைந்திருப்பதால் அதைத் தமிழகத்திற்கு வேண்டிய அளவுக்குப் பெற்று, வழங்குவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்து வருகிறோம் ஆந்திரவிற்குச் சென்ற ஆண்டு மத்திய சர்க்கார் மைலோ 10,000 டன்கள் ஒதுக்கி, அவர்கள் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். அதைத் தமிழகத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மைலோவை உபயோகித்துக்கொண்டு தமிழக மக்கள் நல்ல பலன் அடைந்து வருகிறார்கள். மைலோவை விரும்புகிறார்கள். மைலோவைப் பெறுவதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம். 10,000 டன்கள் வந்தால், வடஆற்காடு, செங்கற்பட்டு, சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விநியோகிக்க வசதியாக இருக்கும் என்று கருதுகிறோம்.

சோளத்தைப் பொறுத்தவரையில், அடுத்த 6 மாதங்களுக்குத் தேவையான சோளத்தை வரவழைத்து, தேவையான மக்களுக்குக் கொடுக்கும் சூழ்நிலை நிச்சயமாக ஏற்படுத்த முடியும். தமிழகத்திலே அரிசி, கிடைக்காத நேரத்திலே சோளம், கோதுமை இப்படி ஏதாவது ஒரு உணவுப்பொருளைக் கொடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்திலே இந்த அரசு இருக்கின்றது. ஒருகாலும், தமிழக மக்கள் பட்டினியாகக் கிடக்க நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். உண்ணாவிரதம் இருங்கள் என்று உபதேசம் செய்யாமல் எப்படியாவது உணவு நெருக்கடியைச் சமாளிக்க வேண்டுமென்று வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

இப்பொழுதும், பஞ்சாயத்துக்களின் மூலமாக, பஞ்சாயத்து யூனியன்களின் மூலமாக கோதுமை வழங்கி வருகிறோம். அதைச் சாப்பிடுவதை இப்பொழுதாவது உணர்ந்திருக்கிறார்களே என்று சொன்னார்கள். கோதுமையை உபயோகப்படுத்துவதில் ஏழைகளுக்குக்கூட சில சங்கடங்கள் இருக்கின்றன. வேண்டிய சர்க்கரையோ, நெய்யோ ஏழைகளுக்குக் கிடைக்காமல் போகுமானால் அது ஏழைகளுக்குத் தகுதியான உணவாக ஆகாது என்றுதான் அன்றும் சொன்னேமே தவிர, கோதுமையே கூடாது [illegible]ன்று சொல்லவில்லை. அரிசித் தட்டுப்பாடு வருகின்ற நேரத்தில் சிகப்புக் [illegible]துமையை, விவசாய மக்கள், ஏழைமக்கள் விரும்புவதால் த [illegible]ருகிறோம்.

இன்றையதினம் சில மாநிலங்களிலே உரத்திற்காகக் கொடுத்துவந்த பி.ப. 2-00 மானியங்களைக் கூட நிறுத்திவிட்டார்கள். ஆந்திரா போன்ற மாநிலங்களிலே நிறுத்தி விட்டார்கள். நான் ஏற்கனவே கூட இங்கே சொல்லி இருக்கிறேன். அதற்கெல்லாம் கூட்டிக் கொடுத்து, விவசாயிகளை ஊக்குவித்து, அதன்மூலமாக நமக்குத் தேவையான நெல்லைப் பெறுவதற்குத்தான் இந்த வசதியையும் நாம் செய்து தருகின்றோம்.

இன்றையதினம் கள்ளக் கடத்தலைக் கண்டுபிடிப்பதற்கு நிறைய முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கை காவல் பிரிவினரால் 1968-ம் ஆண்டிலே 41·32 இலட்சம் மதிப்புள்ள உணவு தானியங்கள் கள்ளக்கடத்தலின் போது கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஏறக்குறைய 2,500 டன்கள் அரிசி மூட்டைகளும், 2,600 டன்கள் நெல் மூட்டைகளும், 160 டன்கள் மற்ற தானிய மூட்டைகளும் பிடிப்பட்டன. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கடத்தப்படுகிற தானியங்கள் நிறைய பிடிக்கப்பட்டிருக்கின்றன கடத்தல்காரர்களை அரசு விட்டு வைக்காது, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கடல்மூலமாக கடத்தப்படுவதைக் கூடக் கண்டுபிடிப்பதற்கு விசைப்படகுகளை எல்லாம் உபயோகப்படுத்தி, அந்த கள்ளக்கடத்தலைத் தடுக்கின்ற முயற்சியிலே இந்த அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது கேரளத்திற்கும் மற்ற மாநிலங்களுக்கும் செல்வதை இதன் மூலமாகத் தடுத்து நிறுத்தியதனுடைய விளைவாக ஓரளவு பொதுமக்களுக்கும் நியாயமாக கிடைக்க வேண்டிய அரிசி கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறோம். கடத்தல்காரர்கள் எல்லைப் பகுதிகளில் சுமையைத் தூக்குவதுபோல் கூட எடுத்துச் செல்ல முற்படுகிறார்கள். அவர்களை அதிகாரிகள் உயிரையும் பணயம் வைத்து, தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் பிடிக்கிறார்கள். ஆகவே, வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேவையானால் அதை இன்னும் தீவிரப்படுத்தி, மற்ற மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்க அரசு எந்த விதமான தயக்கமும் காட்டாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கம் எதற்காக இந்த வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டும், சர்க்கரை வியாபாரம் செய்ததாலே நஷ்டம், பருப்பு வியாபாரம் செய்ததாலே நஷ்டம் என்றெல்லாம் இங்கே கருத்துச் சொல்லப்பட்டது. இந்த அரசாங்கம் அதை மேற்கொள்ளவதினுடைய முக்கிய காரணம், வெளி மார்க்கெட்டின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதுதான். இரண்டாவது, வெளி மார்க்கெட்டில் தட்டுப்பாடு ஏற்படும்போது சில வியாபாரிகள் எதிர்காலத்தில் விலை கூடும் என்று எதிர்பார்த்து தேக்கி வைப்பார்கள். அரசாங்கம் வாங்கி வைக்கும்போது, அரசாங்கம் கையில் இருக்கிற பொருள்களை வெளியிலே விநியோகிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகுமானால் அதனால் நாம் பாதிக்கப்படுவோம் என்ற அச்சத்திலே வியாபாரிகள் தங்களிடத்தில் இருக்கிற பொருள்களைச் சீக்கிரத்திலே விற்கக்கூடிய நிலைமையையும் அதனாலே பதுக்கலைத் தடுக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும் என்பதுதான். அதனாலேதான் அரசாங்கம் இந்த வியாபாரத் துறையிலே ஈடுபட்டிருக்கிறது. பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்க வேண்டிய நிலைமையிலே அரசாங்கம் மேற் சொன்ன காரணங்களால் ஈடுபட வேண்டியிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் நஷ்டம் கூட ஏற்படுகிறது. ஆனால் அங்கே ஏற்பட்டிருக்கிற நிலைமையை நாம் கவனிக்க வேண்டும். நஷ்டம் ஏற்படுகிறது என்றால் உண்மையிலே நஷ்டம் இல்லை. அதற்கு மாறாக இலாபம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் எடுத்துச் சொல்ல முடியும்.

இம்மாநிலத்தினுடைய தேவையை எடுத்துக் கொண்டால், சர்க்கரையைப் பொறுத்தவரை 16,000 டன் நமக்குத் தேவை. ஆனால், நமக்கு மத்திய அரசு கொடுத்ததோ 6,000 டன் தான். மத்திய அரசு லெவி முறையிலே 60 சதவீதத்தை பெற்றுக்கொள்கிறது. ஆலைக்காரர்கள் 40 சதவீதத்தை வெளிச் சந்தையில் அவர்கள் இஷ்டப்படி இந்தியாவிலே எங்கு வேண்டுமானாலும் விற்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு வசதி இருக்கிறது. அந்த அடிப்படையில் மேற்கு வங்காளம், பம்பாய் போன்ற இடங்களிலே சர்க்கரை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 400 முதல் ரூ. 420 வரை விற்றது. அந்த நேரத்தில் தமிழகத்திலுள்ள அதிகமாக சர்க்கரை உபயோகிக்கின்றவர்கள் குறிப்பாக, ஓட்டல்காரர்கள், பிஸ்கட் போன்றவகைளைச் செய்கின்றவர்கள், அதிக சர்க்கரையை வாங்க வேண்டுமென்ற நேரத்தில் அவர்களுக்கு லெவி சர்க்கரை கிடைப்பது கஷ்டம். ஆகவே, கூடுதலாக வியாபாரத்திற்கு வேண்டியதை வெளிச் சந்தையிலே வாங்க வேண்டிய நிலைமை இருந்தது. குவிண்டால் ரூ. 400, ரூ. 420 என்று சர்க்கரையை வாங்கினால் காபியினுடைய விலை உயரும். சர்க்கரை போடுகிற பண்டங்களினுடைய விலை உயரும், பிஸ்கட் விலை உயரும். அதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் வெளிச் சந்தையிலே மலிவான விலையிலே சர்க்கரை கிடைக்கவேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திலே தமிழகத்திலே இருக்கிற சர்க்கரை ஆலைக்காரர்களை எல்லாம் அழைத்து நமது நிதி அமைச்சர் அவர்களும், நானும், மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று ஒரு பேரமே செய்தோம். "உங்களுக்கு விற்க உரிமை இருக்கிறது, வெளியிலே எந்த மாநிலத்திலே வேண்டுமானாலும் விற்கலாம், பம்பாயிலே விற்கலாம், ரூ. 400, ரூ. 420 கிடைக்கக் கூடும், ஆனால் தமிழகத்திலே சர்க்கரை ஆலை வைத்துக் கொண்டு கரும்பு சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கும் இங்கே இருக்கிற மக்களுக்கும் வழங்காமல் இலாப நோக்கம் ஒன்றையே கருத்தில் கொண்டு வெளி மாநிலங்களுக்கு விற்பதைத் தவிர்க்க வேண்டும். நமக்கே உதவி செய்ய வேண்டும்" என்று சொன்ன நேரத்தில் ஒரு ஆலையினுடைய சொந்தக்காரர்—நான் பெயரைச் சொல்லாமல் சொல்லுகிறேன்—மத்திய சர்க்கார் எங்களுக்குக் கொடுத்த உரிமையில் நீங்கள் கை வைக்கலாமா என்று கூடக் கேட்டார். அதிலே தலையிடக் கூடாது என்று கூடச் சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே "நீங்கள் உங்களுடைய மனதைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும். அதே சூழ்நிலையில் இங்கே கரும்பு சாகுபடி செய்கிறார்கள். ஆனால் உங்கள் ஆலைகளுக்குத்தான் அனுப்ப வேண்டுமென்று கிடையாது. வெல்லத்தினுடைய விலை ஏறுகிறபோது, வெல்லத்தைக் காய்ச்சுகிறோம், எங்களுடைய ஆலைக்கே அனுப்பி வையுங்கள் என்று நீங்கள் சொல்கிறபோது அவர்கள் அனுப்ப மறுக்கிற நேரத்தில் அரசாங்கத்தினுடைய துணைக்கு வருகிறார்கள். அரசாங்கம், கரும்பாலைக்குக் கரும்பு அனுப்பவேண்டுமென்று சொல்லவேண்டுமென்று கூறுவதைப் போலவே, இப்பொழுது சர்க்கரையை மலிவான விலையிலே தமிழக மக்களுக்குக் கொடுக்கவேண்டும், விலையைக் குறைக்க வேண்டாம், இலாபத்திலே கொஞ்சம் குறையுங்கள்," என்று சொல்லி, பேரம் பேசி, ரூ. 350 ஆகக் குறைத்தோம். ரூ. 70 அல்லது குறைந்தபட்சம் ரூ. 50 குறைவாகக் குவிண்டாலுக்கு என்று வாங்கி வைத்தோம். ஆனால் நாம் வாங்கி வைத்த பிறகு என்ன நிலைமை ஏற்பட்டது என்று சொன்னால், ஏற்கனவே அங்கே மத்திய அரசு அந்த உரிமையை வழங்கிவிட்டது, இங்கே சர்க்கரை உற்பத்தி கூடுதலாகிவிட்டது. அந்தக் காரணத்தாலே சர்க்கரையினுடைய விலை திடீரென்று குறைந்தது. குறைபட்ட காரணத்தால் நாம் வாங்கி வைத்ததற்குப் பாதகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. நாம் வாங்கி வைக்காமல் இருந்தால் எந்த அளவு நாம் பாதிக்கப்பட்டிருப்போம் என்பதையும் நினைவு வைத்துக்கொள்ள வேண்டும். நாம் எவ்வளவு சர்க்கரை வாங்கினோம் என்ற புள்ளி விவரத்தைக் காட்டுகிறேன். 20,417 டன் சர்க்கரை ஒரு குவிண்டால் ரூ. 350 வீதம் வாங்கப்பட்டது. ரூ. 365-க்கு நாம் விற்றோம். அதன் கொள்முதல் செலவு, உட்பட மொத்தம் ரூ. 711 இலட்சத்திற்கு வாங்கினோம். ரூ. 647 இலட்சத்திற்குத்தான் விற்றோம். மொத்த நஷ்டம் 64 இலட்சம். செலவு 9 இலட்சம். மொத்த நஷ்டம் 73 இலட்சம்.

லெவி சர்க்கரையில் நமக்கு கிடைத்த மொத்த இலாபம் 91 இலட்சம். வெளி சர்க்கரை வாணிபத்தில் நஷ்டம் 73 இலட்சம்,

நிகர இலாபம் 18 இலட்சம். மொத்தத்தில்நஷ்டம் இல்லை, இலாபம்தான் கிடைத்தது. தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கிறபோது நஷ்டம் தோன்றினாலும்கூட லெவி சர்க்கரையிலே நமக்குக் கிடைத்த ஆதாயத்தை வைத்துப் பார்க்கும்போது பொதுவாகவே நமக்கு இலாபம் கிடைத்ததேயொழிய நஷ்டம் என்று செல்வதற்கில்லை. கொள்கைக்கும் வெற்றி கிடைத்திருக்கிறது. நாம் நடத்திய வியாபாரத்திலும் ஆதாயம் கிடைத்திருக்கிறது. இரண்டு அடிப்படையிலே பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய சர்க்கரையும் கிடைத்திருக்கிறது, அதே நேரத்திலே தனிப்பட்டவர்கள் நெருக்கடி உண்டு பண்ணி அதனாலே கஷ்டமான நிலைமையை உண்டு பண்ணுவதும் தடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கும் ஆதாயம் கிடைத்திருக்கிறது.

இந்த 1967–69 வரை சர்க்கரை வியாபாரத்தில் மொத்தம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க வேண்டுமே தவிர, நஷ்டம் வரும் என்பதைப்பற்றி அவர்கள் கொஞ்சங்கூட சிந்திக்கவேண்டிய அவசியம் கிடையாது. அவர்களே, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டித் தலைவராக இருக்கிறார்கள். வரவு-செலவுக் கணக்குகள் வருகின்றபொழுது அவரே தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கும். அதனாலே, அவர்கள் அதைப்பற்றி, அலசி, ஆராய்ந்து கேட்பதற்குச் சந்தர்ப்பம், சூழ்நிலை இருக்கிறது. அதனாலே நஷ்டம் ஏற்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் முன் ஜாக்கிரதையாக ஆலைக்காரர்களுடன் ஒப்பந்தம் பேசி ஒரு முடிவுக்கு வந்தது. அதனாலே இவ்வளவு ஆதாயம் ஏற்பட்டது. அதற்கு நன்றி தெரிவிக்காவிட்டாலும், பெருத்த நஷ்டம் ஏற்பட்டது என்று பீதியான நிலைமையை பொதுமக்களிடத்திலே சொல்லாமல் இருக்க வேண்டியது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கடமையும், கூட. ஆனால், அவர்கள் ஒத்துக் கொண்டாலும் ஒத்துக் கொள்ளாவிட்டாலும், நான் நிலைமையை விளக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

மேலும் பருப்பு வியாபாரம் நடந்ததைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். ஏற்கனவே 1—4—1968-ம் தேதியிலிருந்து வெளி மாநிலங்களிலிருந்து, பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களிலிருந்து பருப்பு வருவது வழக்கம். 1967–68-ம் ஆண்டுக்குக் கடலையை மத்திய சர்க்கார் 1968 பிப்ரவரி-மார்ச் திங்களில் அதிகப்படியாக ஒதுக்கீடு செய்தது. உணவுக் கார்ப்பரேஷன் மூலம் அவை இந்த மாநிலத்திற்கு அனுப்பப்பட்டது. திடீரென்று வெளி மாநிலங்களில் தடை இருந்ததை நீக்கிவிட்ட காரணத்தினால் இங்கே பருப்பு விலை போகவில்லை. விலை போகாத ஒரு நிலைமை ஏற்பட்டுத் தேக்கம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் நீண்ட நாட்களாக அது தேக்கி வைக்கப்பட்ட காரணத்தினால், அது கொஞ்சம் கெட்டுப் போகக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டது. நம் கைவசம் 7,290 டன் கடலையும், 562 டன் கடலைப் பருப்பும் இருந்தது. பஞ்சாபிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதன் அடக்க விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 111. ராஜஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதற்கு அடக்க விலை குவிண்டாலுக்கு ரூ. 99·50. கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட காரணத்தினால் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. அதோடு கூட இங்குள்ள பருப்பின் தரமும் கொஞ்சம் கெட்டுவிட்டது. ரூ. 65 முதல் 70 வரை விற்றது. இந்தச் சமயத்தில் நாம் கையில் இருப்பதை விற்காவிட்டால் இன்னும் அதிகமான நஷ்டத்தை அரசு ஏற்கவேண்டியிருக்கும் என்ற காரணத்தினால், அப்படிக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஒரு சமயத்தில் அதே பருப்பை நாம் ரூ. 100 லிருந்து 125 வரை வாங்கி, ரூ. 161 ஆகக்கூட கணிசமான விலைக்கு விற்றிருக்கிறோம். மொத்தமாக 1967-லிருந்து 1969 வரையிலும் நடந்த பருப்பு வியாபாரத்தில் ஆதாயமா, நஷ்டமா என்று பார்க்கிறபொழுது, ஒரு குறிப்பிட்ட கன்சைன்மெண்டில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய, பொதுவாக ரூ. 100 லிருந்து 125 வரை வாங்கி வந்ததை அதிக விலை ஏற்றத்தின் காரணமாக ரூ. 161-க்கு கூட விற்றிருக்கிறோம். கடலைப்பருப்பை விற்றதில் சுமார் ரூ. 23 லட்சம்



லாபம் கிடைத்திருக்கிறது. கடலையை விற்றதில் நமக்கு நஷ்டம் ரூ. 8 லட்சம் தான். ஆக மொத்தம் பருப்பு வியாபாரத்தில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட லாபம் ரூ. 15 லட்சம். அத்தியாவசியமான பொருள்களை அரசாங்கம் வாங்கி விற்பதன் நோக்கம் வெளி மார்க்கெட்டில் இத்தகைய பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். பதுக்கல் செய்பவர்கள், ஏமாற்றுகிறவர்கள் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எடுத்துக்கொள்ளும் முயற்சி தான். நமக்கு இதில் கணிசமான லாபம் ஏற்பட்டிருக்கிறது, நஷ்டம் இல்லை. குறிப்பிட்ட கன்சைன்மெண்டில் நஷ்டம் ஏற்பட்டது. மொத்தமாகப் பார்த்தால், இதில் ஆதாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தான் இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், அதில் கூட நஷ்டம் இல்லாமல் இருந்திருக்கும், இன்னும் அதிகமாக லாபம் கிடைத்திருக்கக்கூடும். சர்க்கரையைப் பொறுத்தவரைக்கும் ஒரு பகுதியில் ரூ. 73 லட்சம் நஷ்டம் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். லெவி ஷுகரில் லாபம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய குற்றச் சாட்டு என்னவென்றால், ஒரு பகுதி செய்ததைச் சரியாகச் செய்யவில்லை என்பது தான். ஆனால், ஒரு இடத்திலுள்ள லாபத்தை எடுத்து, இன்னொரு இடத்தில் போடக் கூடாது. பருப்பு கெட்டுப்போய்விட்டது என்று சொன்னார்கள். அப்படிக் கெட்டுப்போன பருப்பு வெளியிலே விற்கப்பட்டபொழுது, அதற்கு என் டெண்டர் கால்ஃபார் பண்ணி விற்கப்படவில்லை என்பது தான் என்னுடைய கேள்வி. ஒன்றில் தவறு செய்துவிட்டு, இன்னொன்றில் வந்த லாபத்தை எடுத்து அதில் போட்டுக்கொள்ளலாம் என்று சொல்வது சரியல்ல. பருப்பு கெட்டது என்று சொல்லி அதை விற்றார்கள். அதை வாங்கினவர்கள் அதற்கு மேலே ஒரு விலையில் விற்று நான்கு பங்கு லாபத்தைச் சம்பாதித்திருக்கிறார்கள். கெட்ட பருப்பை என் டெண்டர் மூலம் விற்கவில்லை ? அதில் தான் சந்தேகம் ஏற்படுகிறது. நான் நினைக்கிறேன். தனிப்பட்ட ஒரு சலுகை கொடுக்கும் நிலைமையில் தான் விற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் என் சொல்லக் கூடாது ?

**திரு. கே. விநாயகம்:** தரம் கூடக் கொஞ்சம் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். பருப்பு ஸ்டாக் வைத்திருந்தால், அது பூச்சி, வண்டுகள் பிடித்துக் கெட்டுப்போகாமல் இருப்பதற்கு நாம் ஒரு முறை வைத்[illegible]றோம். ஃப்யூமிகேஷன் என்ற ஒரு முறையை வைத்திருக்கிறோம். ஃப்யூமிகேஷன் செய்துகெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளலாம். அந்த வேலையைச் செய்ய வில்லையா ? நேரத்தில் தடுப்பு நடவடிக்கை எடுத்துக் கொள்ளாத காரணத்தினால்தான் பருப்பு தரம் கெட்டது என்று சொல்லப்படுகிறதே அது என்ன விஷயம் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கிற அக்கறையை நான் பாராட்டுகிறேன். ரூ. 2 கோடி, 3 கோடி அளவுக்கு செய்கிற வியாபாரத்தில் ஒரு கன்சைன்மெண்டில் ஒரு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள பருப்பு கெட்டுவிட்டது. அதற்கு என் டெண்டர் கால்ஃபார் பண்ணவில்லை என்று கேட்கிறார்கள். டெண்டர் முறை சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் கிடையாது. சில நேரங்களில் இம்மாதிரி பொருள்கள் கெட்டுவிடுகின்றன என்றால், உசிதம் போல அந்தந்த அதிகாரிகளுடைய நிர்ணயப்படி இவைகளெல்லாம் செய்யப்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. மலிவான அரசியல் விளம்பரத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம். மலையைக் கெல்லி எலியைப் பிடித்ததாக எடுத்துக்கொள்ளலாம். கோடிக்கணக்கான ரூபாயைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள், லட்சக்கணக்கான ரூபாய்க்குப் பருப்பு வியாபாரம் செய்து நஷ்டம் வந்துவிட்டது என்றெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். யார் வேண்டுமானாலும் தணிக்கை செய்துகொள்ளலாம் இவ்வளவு பெரிய காரியத்தில் ஒரு சிறிய அயிட்டத்தை எடுத்துக்கொள்வது முறையாகாது.

நாம் ரூ. 150 கோடி அளவுக்கு வியாபாரம் செய்கிறோம். அரிசி வியாபாரம் செய்கிறோம். ஏதோ கோவையில் ஒரு லட்சம் ரூபாய் அல்லது ரூ. 60,000 போய்விட்டது என்றெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். நமக்கு இருக்கிற ஒரு பெரிய பொறுப்பின் அடிப்படையில், இம்மாதிரி இருக்கிற அப்படிப்பட்ட சிறு விஷயங்கள் கூடத் தவிர்க்கப்பட வேண்டும். நான் அவைகள் தவிர்க்கப்படக் கூடாது என்று சொல்லவில்லை. இவ்வளவு பெரிய காரியத்தைப் பாராட்டுகிறோம் என்று சொல்வதற்கு அவர்களுக்கு ஒரு பெரிய மனது இல்லாவிட்டாலும், இது மிகச் சிறிய விஷயம் என்பது தான் இந்த அரசினுடைய நிலையே தவிர வேறு ஒன்றுமில்லை. ஏதோ பெரிய காரியங்கள் நடந்துவிட்டன என்று கோடியில் ஆரம்பித்து தெருக்கோடிக்கு வரும்படியான ஒரு நிலை தான் இருக்கிறது. இம்மாதிரியான காரியங்கள் சரியானவையா என்பது தான் என்னுடைய வாதம். அவர்கள் கோபித்துக் கொள்வதற்காக நான் சொல்லவில்லை. மிகப் பெரிய காரியங்களெல்லாம் நடந்திருக்கின்றன. அதுவும் சர்க்கரையைப் பொறுத்தவரையில், உத்திரப்பிரதேசத்தில் எனக்குத் தெரியும், முதல் மந்திரியாக இருப்பவர்கள் வீட்டிலே கூட ஒரு கிலோ ரூ. 7, 8 கொடுத்து வாங்கினார்கள். இந்தியா பூராவும் அப்படி அதிகவிலை கொடுத்து வாங்கிய நேரத்தில், இங்கு மலிவான விலையில் சர்க்கரை கொடுக்க முடிந்தது. விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது தான் நோக்கமே தவிர, நாம் செய்த வியாபாரத்தில் லாபம் மட்டும் நோக்கம் அல்ல. எல்லா மக்களுக்கும் குறைந்த விலையில் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று தான் சிவில் சப்ளைஸ் துறையில் இப்படிப்பட்ட வியாபாரம் எல்லாம் மேற்கொள்ளப்படுகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை.

பருப்பு வியாபாரம் ஆகட்டும், மற்ற வியாபாரம் ஆகட்டும், சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் கோடிக்கணக்கான ரூபாய் புழங்குகிற இடத்தில், பெரிய காரியங்களைச் செய்கிற இடத்தில் எத்தனை பெர்செண்டேஜ் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தான் பார்ப்பது வழக்கம். கோடிக்கணக்கான ரூபாய்க்கு வியாபாரம் செய்யப்படுகிற இடத்தில், விளம்பரத்திற்கு வேண்டுமானால் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், ஏதோ பெரிய விவகாரமாக எடுத்துக் கொண்டு, அதற்கு டெண்டர் போடவில்லை, இதைச் செய்யவில்லை. அதைச் செய்யவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். இதற்கெல்லாம் சில விதிமுறைகள் இருக்கின்றன. இதற்கெல்லாம் சில அதிகாரிகள் இருக்கிறார்கள். இவைகளெல்லாம் முறையாகத்தான் செய்யப்படுகின்றனவே தவிர, ஏதோ திரு. கருத்திருமன் அவர்கள் இங்கே கேட்டார் என்ற காரணத்தினால் காகிதத்தை கிழித்துப் போடுவது என்பது அல்ல. வழக்கமாகத் தணிக்கை செய்யப்படுகிறது. அதற்கு மேலும் அகௌண்டெண்ட்-ஜெனரல் அவர்களால் தணிக்கைக்கு ஆளாக்கப்பட்டுத் தான் இவைகள் அனைத்தும் இங்கே வருகின்றன. கோடிக் கணக்கான ரூபாய்க்கு வியாபாரம் செய்யப்படும்பொழுது, இதெல்லாம் ஒரு பெரிய விவகாரம் அல்ல. அதையும் கூட திருத்திக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது, இன்னும் திருத்தக்கொள்ள வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதை வேண்டுமானால் ஒத்துக்கொள்ளலாமே தவிர, வகையையும், தொகையையும் வைத்துப் பார்த்தால் இது ஒன்றும் பெரிதல்ல என்பதை அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று மட்டும் தான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, மலிவான அரசியல் விளம்பரம், கோடியிலிருந்து தெருக்கோடி என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இப்படி யெல்லாம் பேசலாமா ? நடந்ததை தப்பு என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், தப்பு இருக்கிறது திருத்திக்கொள்ள வேண்டும் என்று சொன்னாலும் கூட அதை ஏற்றுக்கொள்ளலாம். அதைவிட்டுவிட்டு, மலிவான அரசியல் விளம்பரம், கோடியிலிருந்து தெருக்கோடி, முச்சந்தி என்றெல்லாம் அவர்களுக்கே உள்ள தனி பாஷையில் சொன்னார்கள். முச்சந்தி என்று முன்னாள் முதல் அமைச்சர் சொன்னார். பிறகு அது தவறானது என்று திருத்திக் கொண்டார். சட்டசபையை தெருக்கோடி என்று சொல்வது அவமதிப்பதாகதா ? அப்படி சட்டசபையில் சொல்லலாமா ? இது தெருக்கோடி என்று சொன்னார்கள். இது சட்டசபையா, தெருக்கோடியா ? நான் நின்று கொணடிருப்பது சட்டசபையா, தெருக்கோடியா ?





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தெருக்கோடி என்றால் ஏன் அப்படி எடுத்துக்கொள்ள வேண்டும். உங்களைத் தான் மக்கள் இந்த இடத்தில் அமர்த்தி வைத்திருக்கிறார்களே ? நீங்கள் தவறாகப் புரிந்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தெருக்கோடி என்று சொன்னது உண்மையா, இல்லையா ? இது தெருக்கோடியா, சட்டசபையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** உங்களுக்கு அந்த சந்தேகம் வந்திருக்கக் கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, நான் வருத்தப்படுகிறேன். "தெருக்கோடி" என்று சொன்னார்கள். இது தெருக்கோடியா, சட்டசபையா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கோடியில் ஆரம்பித்து, தெருக்கோடிவரையில் போகிறார்கள் என்றது ஒரு உதாரணத்திற்காக, இப்பொழுது பேசும்போது, மதுரையில் தொடங்கிச் சொன்னார்கள். மதுரையில் செய்தார்கள் என்று சொன்னார்கள். மரியாதைக் குறைவாகச் சொல்லவில்லை. கோடியிலே ஆரம்பித்து, தெருக்கோடியிலே போய் விட்டார்கள் என்பதை நான் நிலைநாட்டுகிறேன். நான்.........

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கோடியிலே ஆரம்பித்து தெருக்கோடியில் போகிறார்கள் என்பதை நிலைநாட்டுகிறேன் என்கிறார்கள். அது சரிதானா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள், கோடியிலிருந்து தெருக்கோடிவரை என்று குறிப்பிட்டது, கோடி என்று ஆரம்பிக்கிறார்கள், கோடிக்கணக்கான நஷ்டம் என்று ஆரம்பித்துவிட்டு, சொல்லி முடிக்கிற நேரத்தில், தெருக்கோடி என்று அது தொகையில் இருக்கவில்லை என்பதைத்தான் குறிப்பிட்டார்கள். நேற்றையதினம் கூட, எதிர்க்கட்சித் தரப்பில் பேசிய திரு. காசிராமன் அவர்கள், பெரிதாக ஆரம்பித்து சிறியதாக முடிகிறது என்பதைக் குறிக்க,—நிதி அமைச்சராவது நாகரிகமாகச் சொன்னார்கள்—கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல என்றார்கள். (குறுக்கீடு). அது மாத்திரம் உதாரணமா இது உதாரணம் இல்லையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எதிர்க்கட்சித் தலைவர் கோபிக்கக் கூடாது. அவர்கள் மரபை வளர்க்கலாம். சொன்னார்கள். மதுரையில் ஊழல்கள் நடந்துவிட்டன. 4, 5 லட்சம் ரூபாய் சம்பந்தப்பட்டது என்று. யார் தப்புச் செய்தாலும், தண்டனைக்கு உரியவர் தான். அது அவர் யாராக இருந்தாலும் சரி, அவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி. இந்தச் சட்டை போட்டிருந்தாலும், கதர் சட்டை போட்டிருந்தாலும், நடவடிக்கை எடுக்கப்படும். பொறுப்பற்ற முறையில் காரியங்கள் நடந்திருக்கின்றன என்றால், அவற்றின் மேல் நடவடிக்கை எடுக்க அனுகூலமாக, உதவிகரமாகச் சொல்ல வேண்டும். கோடிக்கணக்கான ரூபாய்கள் கொள்ளை அடித்துவிட்டார்கள் என்று பத்திரிகையில் வந்தது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மதுரை பற்றிச் சொன்னார்கள். அது எவ்வளவு என்றாலும், அரசாங்கத்திற்கும் பொறுப்பு இருக்கிறது. சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை. சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. தப்பு நடந்துவிட்டால் அதைத் திருத்திக் கொள்ள மார்க்கம் இருக்கிறது. ஆனால், இதை யெல்லாம் இப்படிச் சொல்வது பிரசாரத்திற்குப் பயன்படுமேயல்லாது, அது இந்தத் துறையைச் சீராக்க,

செம்மைபடுத்த உதவிகரமாக இருக்காது என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நமக்கு பொதுமக்கள் கட்டளே கொடுத்திருக்கிருர்கள். நாம் அதை நிறைவேற்ற உதவியாக ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இப்பொழுது “கோடியிலிருந்து, தெருகோடிக்கு வந்துவிட்டார்கள்” என்பதை தாங்களும் “பார்லிமெண்டரி லாங்வேஜ்” ஆக, அது தவறில்லை என்று சொல்லுகிறீர்கள் என்று நினைக்கிறேன்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் சொல்லியது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெருக்கோடிக்கு வந்து பேசினுர்கள் என்கிற கருத்துப்படச் சொல்லவில்லை. “கோடி” என்கிற சொல் இருக்கிறதே, அந்தச் சொல்லேயே, அந்தச் சொல்லினுடைய இருவேறு பொருள்களில் ஆண்டிருக்கிருர்கள். “கோடியில் ஆரம்பித்து, தெருக்கோடிக்கு” என்றதில் வெறும் தெருக்கோடி” என்ற பொருளில் இல்லாமல், “தெருக்கோடியாகும்” அளவிற்கு வந்துவிடுகிறதே, என்ற உதாரணத்தில் தான் சொல்லியிருக்கிருர்கள். எதிர்க் கட்சித் தலைவர் தெருக்கோடியில் பேசுவது போலப் பேசுகிருர்கள் என்று சொல்லவில்லை. அதற்காகத்தான், அந்தப் பகுதியை தட்டச்சு செய்து கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் சொல்லியதன் பொருள், தெருக்கோடியில் பேசுவதுபோல் பேசுகிருர்கள் என்று சொல்லவில்லை. “கோடி” என்ற போது, “தொகை” என்று முதலிலேயும், இறுதியில், கோடி என்ற தொகைக்கு இல்லாமல், “தெருக் கோடி” என்ற அளவிற்கு வருகிறது வாதம் என்ற பொருளில், அந்த அளவில் உவமையாக ஆண்டிருக்கிருர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் சொல்லிவிட்டார்கள், தெருக் கோடியில் என்று. எனக்கு வருத்தமாக இருக்கிறது. மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஐயா சொல்லுகிறீர்கள். ஆனுல், அவர்கள் தெருக் கோடியில் நின்று பேசுவதாகச் சொல்லுகிருர்கள்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர் அவர்கள், எதிர்க் கட்சித் தலைவரை தெருக்கோடியில் நின்று பேசுகிருர்கள் என்ற கருத்துப் பட பேசவில்லை. அந்தத் தொடர் அதைக் குறிக்கவில்லை. (குறுக்கீடு) அதுதான் சொல்லுகிறேன், தெருக்கோடியில் நின்று பேசுவது என்ற பொருள் இல்லை. கோடியில் தொடங்கி, தெருக்கோடிக்கு வருகிற வரையில் வந்திருக்கிறது என்பதில் “கோடி” என்ற ஒரே சொல் தமிழிலே இரண்டு மூன்று பொருள்படும் சொல் உண்டு—அந்த வகையில் “கோடி” யில் ஆரம்பித்து என்று சொல்லும் போது, அப்பொழுது தொகையைக் குறிக்கிறது. “தெருக்கோடி” என்னும் போது, இங்கே அது ஒரு இடத்தைக் குறிக்கிறது ; அப்படி ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் வருகிறது என்று பொருள்பட நிதி அமைச்சர் சொன்னுர்கள். தெருக்கோடியில் நின்று பேசுவது என்று அதை எடுத்துக் கொள்ளக் கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏதோ தெருக்கோடியில் நின்று பேசிவிட்டோம் ; ஆயினும் நாங்கள் எழுப்பும் பிரச்சினையில், அது சிறு தவருக இருக்கலாம், அபராதம் என்ருல், ஒரு ரூபாய் அபராதம் என்ருலும் ஒரு லட்ச ரூபாய் அபராதம் என்ருலும், பத்து ரூபாய் அபராதம் என்ருலும், வேறுபாடு கிடையாது. தாங்கள் புலவர்கள், அது கவுரவந்தான் என்று சொல்லும் போது, எனக்கு ரொம்ப தர்ம சங்கடமாக இருக்கிறது. நான் தமிழ்ப் புலவன் இல்லை ; எனக்குத் தமிழும் தெரியாது, என் தாய் பாஷை சன்னடம்..........

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** நிதி அமைச்சர் அப்படிச் சொல்லவில்லை. அப்படியே இருந்தாலும், மாலை நேரத்தில் தெருக் கோடியில் நிற்கிறேம் பேசுகிறேம் என்பதால் அதைப் பெருமையாகக் கூட எடுத்துக்கொள்ளலாம்.





**திரு. பி ஜி. கருத்திருமன் :** நீங்கள் வேண்டுமானுல் அப்படி எடுத்துக் கொள்ளலாம், நான் அப்படி நிற்கவில்லை.

**திரு. க. ர. நல்லசிவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக அமைச்சர் பதில் சொன்னதுதற்குப் பின்னுல்தான் விளக்கங்கள், பர்சனல் எக்ஸ்பளனேஷன்கள் போன்றவைகள் சொல்லலாம் என்று சபையிலே வழக்கம் இருக்கிறது. ஆனுல், எதிர் கட்சித் தலைவர் அவர்கள், ஓயாமல் அமைச்சர் பேசும்போது குறிக்கிட்டுக்கொண்டே இருக்கிருர்கள். அதன் விளைவாக அதிகமாக நேரம் ஆகிவிடுகிறது. மணியாகிறது. அதே போல மீதியுள்ள அங்கத்தினர்களுக்கும் குறுக்கிட்டுக் கேள்விகள் கேட்க உரிமையுண்டா என்பதை அறிய விரும்புகிறேன். வர வர பழங்கால மரபுகள் ஒவ்வொன்ருகப் போய்க் கொண்டே இருக்கிறது. அவர்கள் போல ஒவ்வொருவரும், எழுந்து எழுந்து குறுக்கிடுவது என்று ஆரம்பித்துவிட்டால், சபை நடக்குமா என்ற சந்தேகம் வருகிறது. ஆகவே, இதிலே தங்களுடைய தீர்ப்பை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, தெளிவு பெற இறுதியில்தான் கேள்விகள் கேட்கவேண்டும். ஆனுலும், • எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், நம்முடைய சட்டமன்றத்தின் விதி முறைகளில் அப்படி உரிமை அளிக்கப்படவில்லை என்ருலும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மதிப்பு அளித்து, அவர்கள் விளக்கங்கள் பெறுவதற்கு மன்றத்திலே வெகு நாட்களாக இடமளித்து வந்திருக்கிறேம். எல்லா அங்கத்தினர்களுக்கும் அப்படிக் கொடுததுவிடுவது முறையாக இருக்காது.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, உணவிலிருந்து பாலுக்கு வருகிறேன். (குறுக்கீடு) எதிர்கட்சித் தலைவருக்குப் பால் கொடுக்கலாம் என்று கருதுகிறேன்.

நகரத்தில், 1966-67-ல் 23,250 ஆக இருந்து, 28,200 ஆக அடுத்த ஆண்டில் வாடிக்கைக்காரர்களுடைய எண்ணிக்கை பெருகியிருக்கிறது. 1968-69-ல் 44,000 ஆக உயர்ந்துள்ளது. விற்பனையை எடுத்துக் கொண்டால், கூடுதலாகியிருக்கிறது. 1966-67-ல் 24,000 லிட்டரிலிருந்து 1967-68-ல் 33,000 லிட்டராகி 1968-69-ல் 41,000 லிட்டராக உயர்ந்திருக்கிறது. இந்தக் கணக்கை ஒப்பிட்டுப் பார்த்தால், 1966-67-ஐக் காட்டிலும், 90 சதவிகிதம் வாடிக்கைக்காரர்களும், 70 சதவிகிதம் பால் வினியோகமும் எண்ணிக்கையில் உயர்ந்திருக்கிறது. 1968 எப்ரல் மாதத்தில் பால் வினியோகச் சீட்டுக்காக 18,000 பேர்கள் காத்திருந்தார்கள். அது இப்பொழுது கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 1967-68-ல் இந்த பால் வினியோகத்தின் மூலமாக அரசுக்கு ரூ. 37,980 லாபம் கிடைத்திருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகையில் வட சென்னையிலே நிறைய பால் பூத்துகள் திறக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இது வரையில் சென்னை நகரில் 121 பால் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. எண்ணிக்கையை நாம் 175 ஆக உயர்த்த இருக்கிறேம். 54 பால் பி.ப.
பூத்துக்கள் கூடுதலாக ஏற்பட்டிருக்கின்றன. வட சென்னையில் 2-30
எந்தெந்தப் பகுதிக்கு அவை வேண்டுமென்று கோரி விண்ணப்பம் வந்தால் 54-ல் பெருவாரியான பூத்துகளை வட சென்னையிலே வைக்கிறேம் என்று உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்கிறேன். 50 ஆயிரம் லிட்டர் பால் வரை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறேம். ஏழை மக்கள் வாங்கி உபயோகிக்கக்கூடிய நிலையில் ஒரு லிட்டர் பால் 72 பைசா என்ற விலையில் வழங்கக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கிறேம்.

அடுத்தபடியாக, அயனுவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதில் இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் உறுப்பினர்களே இன்னும் இரண்டு மாத காலம் நீடிக்க வேண்டுமென்பது ஒன்று. மறு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பது மற்ருென்று. அரசாங்கம் இது விஷயத்தில் சீக்கிரமாக முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் திரு கே. விநுயகம் அவர்கள், அந்தக் குறையை நீக்கப்படுகிற சூழ்நிலை விரைவிலே உண்டாகும் என்பதை காத்திருந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மதுரை பால் பண்ணையைப் போய்ப் பார்த்ததாகவும், அங்கு ஒரு யோசனை சொல்லி வந்ததாகவும் சொன்னுர்கள். விரைவில் "மில்க் பவுடர் பிளாண்ட்" ஒன்று 28 லட்சம் ரூபாய் செலவில் நிறுவ இருக்கிருேம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுகிற சூழ்நிலையும் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தச் செய்தியைக் கேட்ட பிறகாவது அவருக்குக் கொஞ்சம் சூடு தணியும் என்று நினைக்கிறேன். மதுரைக்குப் போய் பார்த்து வந்ததைப் போல அவர் மாதவரத்திலுள்ள பண்ணைக்கும் போய்ப் பார்க்க வேண்டும். மாதவரத்திலிருந்து வருகின்ற பால், தண்ணீர் கலக்கப்படாமல் வருகின்றது என்பதை அவர் பார்க்க வேண்டும். இடையிலே தவறுகள் வந்தால் அவை களைந்தெறியப்படும். தவறு செய்பவர்களைப் பிடித்துக் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக உயர்மட்ட அதிகாரிகள் நான்கு பேர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தவறு செய்பவர்களை வேலையிலிருந்து நீக்குவதற்கும் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநுயகம் அவர்கள் மாடுகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டதைப்பற்றிச் சொன்னுர்கள். வெக்கை நோய் ஏற்பட்ட காரணத்தினுல் மாடுகளின் உரிமையாளர்கள் மாடுகளைத் திரும்ப எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ஒரு மாட்டிற்கு 13 பைசா சப்சிடி கொடுக்கிருர்கள். முன்பு இருந்ததை விட 2 பைசா குறைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக 44,101 ரூபாய் செலவு ஏற்பட்டு, வசதி செய்திருக்கிருர்கள். ஒரு லிட்டருக்கு 2 காசு போனஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீவனத்திற்காக 52 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. உலக உணவுத்திட்டத்தின் கீழ் நமக்கு வேண்டிய மக்காச் சோளத்தைக் கொடுத்து, மாட்டுக்குத் தீவனம் வழங்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. குறிப்பாக பால் பெருக்கும் திட்டத்தை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இந்தத் திட்டங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. ஏதாவது கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும் அதைத் தவிர்க்க முடியும் என்ற அளவிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. மதுரையிலே பால் பண்ணைத் திட்டத்தை ஆரம்பித்தபொழுது நஷ்டம்தான் வந்தது. ஆரம்பத்திலே நஷ்டம் இருந்தாலும், எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறியபடி 50 ஆயிரம் லிட்டர் கெப்பாசிடி கொண்ட ஒரு பால் பவுடர் பிளாண்ட் நிறுவத் திட்டமிட்டிருக்கிருேம். அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அந்தப் பாலைப் பெரிதும் ஏற்றுக்கொள்ளாத நிலை இருந்து வருகிறது. ஆகவேதான், அந்தப் பாலையும் சென்னைக்குக் கொண்டுவருகிற சூழ்நிலை இருக்கிறது. அதை யெல்லாம் பால் பவுடர் பிளாண்ட் திட்டத்திலே போட இருக்கிருேம். பால் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டம் அமலாக்கப்படுகிறது.

மதுரைப் பண்ணையில் பாலிலிருந்து வெண்ணை, நெய் முதலியன தயாரிக்கப்படுகின்றன. டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கும் வகையில் சொல்லியிருக்கிறேன். சென்னையில் குறிப்பாக வட சென்னையில் பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்று குறிப்பிட்டதைக் கருத்தில்



கொண்டிருக்கிறேன். மேலும், வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருந்த உறுப்பினர்கள் இந்த அவையில் இல்லாமல் போய்விட்டிருக்கலாம். அவர்கள் வெளியே போய்விட்டாலும், அவர்களுடைய கருத்துக்களை அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களுக்கு அறிவிக்கப்படும். பேசிய எல்லா உறுப்பினர்களுக்கும் வேண்டிய பதில்கள் விரைவில் அளிக்கப்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திரு பொன்னப்ப நாடார் அவர்கள் கடத்தல் இருப்பதைப் பற்றிச் சொன்னுர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,096 குவின்டால் அரிசி கடத்தியிருக்கிருர்கள். கடத்தல்பற்றி உடனுக்குடன் தகவல் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு செஞ்சி முனுசாமி அவர்கள் ரிவிஷன் பெடிஷன் போடுவதைப் பற்றி நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததைப் பற்றிச் சொன்னுர்கள். அரிசி ஆலை உத்தரவுகள் பேரில் ரிவிஷன் பெடிஷன் பரிசீலிக்கக்கூடாதென்று நீதிமன்றம் உத்தரவு இடவில்லை யென்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதுவரையில் 2 ஏக்கர் வரையிலும் கொள்முதலிலிருந்து விலக்கு அளித்ததை 3 ஏக்கர் வரை விதிவிலக்கு அளிக்க முடியுமா என்று கேட்டார்கள். 1966-க்கு முன்னுலே கொள்முதல் விஷயத்தில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுது ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களிடத்திலும் கொள்முதல் செய்தார்கள். காங்கிரஸ் அரசாங்கம் ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கும் விதிவிலக்கு அளிக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே 10 ஏக்கருக்கு மேலே வைத்திருப்பவர்களிடம்தான் கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. அப்படி விலக்கு அளித்தால் கொள்முதல் 5 லட்சம் டன்தான் தேறும். மேலும் கூலிக்கு நெல், சாப்பாட்டிற்கு நெல் என்று பிரித்துவிட்டால் மீதம் இருப்பதைத்தான் கொள்முதலுக்குக் கொடுக்க முடியும். பத்து ஏக்கர் என்று கணக்குப் பார்த்தால் அதிக பட்சம் நிலம் வைத்திருப்பவர்கள் குறுகிவிடுவார்கள். நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதன் காரணத்தால் ஒருவனிடம் 36 ஏக்கர் இருந்தால் அவன் தன்னுடைய பிள்ளைகள் நான்கு பேருக்கும் தலைக்கு 9 ஏக்கர் என்று பிரித்துக் கொடுத்து விடுவான். அப்படி நிலம் பிரிக்கப்பட்ட பிறகு ஒருவர்கூட நெல் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். பத்து ஏக்கர் என்று சொல்லும்போது மிகுந்த உற்சாகமாக இருக்கும். அது சாத்தியக்கூருக இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் பத்து ஏக்கர் என்று சொல்வது சாத்தியக்கூருக இல்லாத காரணத்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, திரு வெங்கடசாமி அவர்கள் பேசும்போது சர்க்கரை கிராமப் பகுதிகளில் விற்கும் விலைக்கும் நகரக் பகுதிகளில் விற்கும் விலைக்கும் வித்தியாசம் இருப்பதாகச் சொன்னுர்கள். சர்க்கரையினுடைய விலை ரூ. 1.75 என்றுதான் விற்கப்படுகிறது. அந்த அளவிலே மத்திய அரசாங்கம் சர்க்கரையினுடைய விலையை ஏற்றியது. சுமார் 8 மாத காலம் குறைந்த விலையில் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்ததைப் பார்த்தோம். அரசாங்கத்திற்கு நஷ்டம்தான் ஏற்பட்டது. மத்திய அரசாங்கத்தின் விலையேற்றத்தின் காரணமாக இப்பொழுது ரூபாய் 1.75க்கு சர்க்கரை எங்கும் ஒரே மாதிரியாக விற்கப்படுகிறது.

சட்டபூர்வமான ரேஷன் கேள்விக்குறியாக இருக்கிறதென்று திரு வண்ணுமலை உறுப்பினர் சொன்னுர்கள். எல்லோருக்கும் உணவு வழங்க சாத்தியக்கூறு இருக்கிறது, தொடர்ந்து நாட்டிலேயும் நம்பிக்கை இருக்கிறது. வாங்கிச் சாப்பிடக்கூடியவர்களுக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, உற்பத்தி பெருகுகின்ற நேரத்திலே விலைவாசியும் இறங்கும், அப்போது படி அரிசித் திட்டத்தை, விலையைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமை வரலா... ருக்கின அப்போது படி அரிசித் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரி... என்று

கூடிய நிலைமை ஏற்படலால். குடும்பக் கார்டில் அளவைக் குறைக்கிறார்கள் என்று சொன்னார்கள். வெளிமார்க்கெட்டில் தாராளமாகக் கிடைக்கிற நேரத்தில்தான் அளவைக் குறைக்கிறோம். தட்டுப்பாடு இருக்கிற நேரத்தில் கூடுதலாக மக்களுக்கு வழங்குகிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திரு கருப்பையா பேசுகின்றபோது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகிற பாலில் பால் பவுடர் கலப்பதாகச் சொன்னார்கள். அந்த மாதிரி கிடையாது. அப்படி யாராவது ஒருவர் இருவர் செய்தால் அதை உடனே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் கண்டிப்பாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு கரியமாணிக்க அம்பலம் பேசுகின்றபோது ஹாஸ்டலில் சப்ளை செய்யப்படுகிற பாலில் தண்ணீர் கலக்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்படி சப்ளை செய்கிறவர் எதாவது தவறு செய்தால் எல்லாமே தண்ணீர் பால் என்று சொல்ல முடியாது. அதிக லாபம் பெறும் நப்பாசையால் ஒருவர் இருவர் தவறு இழைத்துவிடலாம். அந்தமாதிரி அவர் சந்தேகப்படுகிறபோது உடனே அந்தப்பாலை உபயோகிக்காமல், அதுபற்றி அதிகாரிகளுக்குப் புகார் கொடுத்தால் அதை உடனே சோதனை செய்து தவறு இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருக்கிறோம். அவரே புகார் கொடுக்கவில்லை யென்றால் மக்கள் நிலை என்ன ஆவது ? ஆகவே அரசாங்கத்திற்கு உதவியாக இனி அப்படிச் சந்தேகம் தோன்றினால் உடனே அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாடுகள் வாங்குவதற்கு கடன் வசதி அளிக்கவேண்டுமென்று திரு எம்.ஆர்.கண்ணன் சொன்னார்கள். மாடுகள் வாங்க 28 லட்சம் கடன் வசதி செய்யப்பட்டிருக்கிறது. கால்நடை வளர்ச்சிக்கு தரமான தீவனம் அளிக்க நியாயமான விலையில் வழங்க முயற்சி எடுத்து வருகிறோம்.

புதுக் கார்டுகள் வழங்குகின்ற நேரத்தில் போலிக் கார்டுகளைக் கண்டு பிடிக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. வேண்டுமென்றே சிலபேர்கள் இந்தத் தவறான காரியத்தைச் செய்கிறார்கள். இதன்காரணமாக நெருக்கடி உண்டாகவும் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படவும் சூழ்நிலை ஏற்படும். அதுமட்டுமன்றி நியாயமான பேர்களுக்கு ரேஷன் வழங்குவதில் தடை ஏற்படும். வெளி மாவட்டங்களிலிருந்து திடீரென்று வருகிறார்கள். வருகிறவர்கள் "கார்டு கொடு" என்கிறார்கள். வீட்டு விலாசம் இல்லாதவர்களுக்குக்கூட, நடைபாதையில் வசிப்பவர்கள், பெரும் கட்டிடத்திற்கு அருகில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும், நேரில் நாங்கள் வந்து பார்த்து கார்டு கொடுக்கிறோம்" என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அப்படிப் போய்ப் பார்த்துதான் கொடுக்கிறார்கள். இவர்கள் அப்படி ஓரிடத்தில் இருந்து பெறுவதில்லை. இதனால் அரசாங்கத்திற்குக் கொஞ்சம் கெட்ட பெயர் வந்தாலும் கூட, போலிக் கார்டுகளை அரசாங்கம் அனுமதிக்காது. போலிக் கார்டுகளைக் கண்டுபிடிக்கும். கோவையிலும் நடவடிக்கை எடுக்கப்படும். மற்ற மாவட்டங்களிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

காரணம், நியாயமாக வழங்கப்பட வேண்டியவர்களுக்கு அரிசி கிடைக்க ஓர் உத்திரவாதமாக இருக்க வேண்டிய காரணத்தினால்தான் இது பற்றிக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு ஆதிமூலம் அவர்கள் பேசுகின்றபோது, கடையில் கோவில் நிர்வாகியை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தாக்கிவிட்டதாகச் சொன்னார்கள். அதுபற்றி விசாரித்ததில் கோவில் நிர்வாகிதான் ரெவின்யூ இன்ஸ்பெக்டரைத் தாக்கியிருப்பதாக மாவட்ட கலெக்டரிடமிருந்து செய்தி வந்திருக்கிறது. அவர் சொன்ன செய்தி ... யல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** எனக்கு ஒரு தந்தி வந்தது. தந்தி கிடைத்த எட்டு நாட்கள் நானே வைத்திருந்தேன். அதற்குப் பிறகு தான்முதல் அமைச்சரிடம் கொடுத்தேன். அந்தத் தந்தியில உள்ள வாசகம், கோவில் நிர்வாகியை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தாக்கிவிட்டார் என்பதுதான். இரண்டொரு நாட்கள் முன்பு இதுபற்றி நானே விசாரித்ததில் இரண்டு பேர்களும் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கோவில் நிர்வாகிமீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் அதிகாரிகள், ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு உதவியாக அக்கிரமம் செய்கிறார்கள். கோவில் நிர்வாகியை அடித்தது ரெவின்யூ இன்ஸ்பெக்டர். இதை ப்ரூஃப் செய்யத் தயாராய் இருக்கிறேன். விசாரணைக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது சொன்ன வாசகம் தந்தியில் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கோவில் அதிகாரியைத் தாக்கினார் என்றார்கள். இப்போது இரண்டு பேரும் அடித்துக் கொண்டார்கள் என்கிறார். இந்தப் புகாரை முதல் அமைச்சரிடம் கொடுத்தவுடன் அவர் அதை என்னிடம் கொடுத்து விசாரிக்கச் சொன்னார். நான் விசாரித்ததில் கோவில் அதிகாரிதான் ரெவின்யூ இன்ஸ்பெக்டரைத் தாக்கியதாகத் தெரிகிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தான் கொள்முதல் செய்யப் போகிறார். நெல்லை வைத்திருப்பவர் தாக்கியிருக்கிறார். எப்படியும் இதைப்பற்றி மேலும் முழுமையாக விசாரித்து திரு ஆதிமூலம் அவர்களுக்கு நான் விவரம் அளிக்கத் தயாராய் இருக்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** கொள்முதல் விஷயமாக இந்த அவையில் உள்ள 235 பேர்களில் அடிக்கடி சொல்வது நான் தான். புகார் சொல்கிற முறையில் ஒருவிதமாகப் பதில் சொல்லிவிடுகிறார்கள். மந்திரி சொல்லும்போது ஒரு ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களிடம் கொள்முதல் செய்வதில்லை என்றார். எங்கள் ஜில்லாவில் நான் விசாரித்து 500 பேர்களுக்கு மேல் ஒரு ஏக்கருக்கு உட்பட்டவர்களிடமும் கடுமையான முறையில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்கிறேன். இல்லை என்றால் என்னுடைய எம்.எல்.ஏ. பதவியையே ராஜினாமாச் செய்துவிடுகிறேன். அப்படி நிரூபிக்கப்பட்டால் இவர்கள் ராஜினாமா செய்ய வேண்டாம். செய்ய வேண்டுமென்று கூடக் கேட்கவில்லை. அப்படித் தவறாக நடந்துகொள்கிற அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** குற்றவாளிகளுக்கு வாதாட மாண்பு...கு உறுப்பினர் வரமாட்டாரா என்று கேட்கிறேன். அவர்கள்சொன்னது ...று என்று நிரூபிக்கப்பட்டால் அந்தக் குற்றவாளிகளுக்காக வாதிட...மல் இருப்பாரா என்று கேட்கிறேன்.

**...ண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு ஆதிமூலம் அவுங்கச...த்தை முன்னிட்டும் ராஜினாமாச் செய்யவேண்டா... ஏற்படுகிறபோது அவர்கள் தான் உற்சாகம் த...காண்டிருக்கி...

**...மிகு திரு. பேரவைத்தலைவர் :** அமைச்சரவர்கள் அவர் ...த அவ்வளவு சீரியசாக எடுத்துக்கொள் வேண்டாம். திரு அவர் சொல்கிற வழக்கப்படி சொன்ன...

**...கு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1957-இ இருந்து அவரோடு ...பினராக இருந்திருக்கிறேன். அவ சொல்வதைத் தவறாக ...ளவில்லை. அலட்சியமாகவும் எடுத்துக்கொள்ள மாட்டேன். ... சொல்கிறேன். ஒருமுறை ஒன்றை சொல்லிவிட்டு இரண்டாவ... கொள்கிறமுறை வழக்கமாக இந்த அவையில் இருக்கின்... துகூட ஆயிரக்கணக்கானவர்களாக் காட்டமுடியும் என்று ...ர்கள் . . .

[1969 மார்ச் 22

**திரு. டி. எஸ் ஆதிமூலம் :** ஆயிரம் பேர்களைக் காண்பிக்கிறேன். அப்படி காட்டாவிட்டால் என்னுடைய பதவியை ராஜீநாமாச் செய்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) நான் பதவியை ராஜிநாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று சொல்லுங்கள் (மணியடிக்கப்பட்டது.) . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு ஆதிமூலம் அவர்கள்இந்தச் சட்டமன்றத்தில் நீண்டகாலமாக இருந்திருக்கிறார்கள். எப்படிப்பேசவேண்டுமென்ற மரபெல்லாம் இருக்கிறது. எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றதாக இருந்தாலும் நாம் உணர்ச்சி வசப்படக் கூடாது. இது எல்லாம் திரு ஆதிமூலம் அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

**மாண்புமிகு திரு. ஏ கோவிந்தசாமி :** கடைசியாக, கட்சிமாச்சரியம் இல்லாமல் இதை தேசியப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு அனைவருடைய ஒத்துழைப்புடன் இதை நிறை வேற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு இருக்கிற காரணத்தாலே அனைவருடைய ஒத்துழைப்பையும் கொண்டு, மக்களுடைய இந்த முக்கியமான பிரச்னையிலே கவனம் செலுத்திவருகிறார் என்ற முறையிலே அவர்கள் வெட்டுப் பிரேரணைகளை யெல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் எல்லாம் எனக்கு ஆதரவு தருகின்ற முறையிலே அவர்களுடைய நல்ல எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கின்ற முறையிலே திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இந்தப் பால் பண்ணையைப் பொறுத்தவரையில் லாபம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செலவுகள் எல்லாம் பல ஹெட்களின் கீழே வருகின்ற நிலைமை சென்ற ஆண்டு இருந்தது. " வெட்டனரி டாக்டர்ஸ் ", ட்டெபுடி ரிஜிஸ்திரார் ஃபார் கோவாப்ரேடிவ் சொசைடிஸ் " என்று பல்வேறு வகையிலே இருக்கக் கூடியவர்களுக்கு ஆகின்ற செலவுகள் அந்த இலாகாவிலிருந்து பிரித்து இன்னொரு இலாகாவிற்கு மாற்றிவிட்டதனால்தான் இந்த லாபம் வந்திருக்கிறதா அல்லது ஊழல்களைக் கண்டுபிடித்து அதைச் செம்மைப்படுத்திச் சீர்படுத்தியதால் இந்த லாபம் வந்திருக்கிறதா அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அக்கவுண்டென்ட்ஜெனரல் எந்த முறையிலெ கணக்கை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னார்களோ அந்த முறையிலேதான் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. லாபக் கணக்குக் காட்டவேண்டுமென்று மில்க் கமிஷனருக்குச் சொல்லி லாபக் கணக்கைக் காட்டியிருக்கிறார்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டாம். இது முறைப்படிதான் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அக்கவுண்டண்ட்-ஜெனரல், கணக்கு எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னாரோ, அந்த முறையில்தான் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கி

(டாக்டர் எச்.
மாண் புமிகு தி வி. ஹாண்டே எழுந்தார்.)
அவர்கள் விளக்கம் ரு. பேரவைத்தலைவர் : நீங்கள் கேட்டதற்கு அமைச்சர்
சொல்லிவிட்டார்களே.

Dr. H.V. HAND
I have never impute E : On a matter of personal explanation, Sir,
Minister has not answered motives. I am far from it. The Hon.
whether this profit has bered my question. What I want to know i
or as a result of toning een discovered as result of change of ' heads
Minister say that it is due up of the administration. Will the Hon.
the Accountant General ? to change of " heads ", as suggested by
That is the clarification I want.



1969 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எந்த முறையிலே இருந்தாலும் லாபம் லாபம்தான். வேறு இலாகாவிலே மாற்றி எழுதி நஷ்டத்தை மறைத்து விட்டார்கள் என்று அதற்குப் பொருளாகாது. தவறுகள் கணக்கு எழுதுவதிலே வேறு இலாககாவிலே கூட ஏற்படுகின்றன. இந்த மாதவரம் பால்பண்ணையைப் பொறுத்தவரையிலே லாபம் வந்திருக்கிறது. அதிலே அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். இலாக்காக்களிலே தவறு இருக்கும். ஆனால், இந்த இலாகாவைப் பொறுத்தவரையிலே அதுவே ஒட்டுமொத்தமாகக் காரணமாகச் சொல்லிவிட முடியாது. அதுவும் இருக்கக்கூடும்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** இத்துடன் மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் முடிவுற்றது.

(திரு. கொ. இர. ஞானசம்பந்தன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** இப்படியே எழுந்துக்கொண்டிருந்தால் முடிவு இருக்காது. நேரம் ஆகிறது. எனவே இத்துடன் விவாதம் முடிவுற்றது. மானியக்கோரிக்கை எண் 8-அ—பால்வழங்குத் திட்டங்கள் வெட்டுத் தீர்மானங்கள் மீது வக்க்கெடுப்பு.

டாக்டர் எச்.வி. ஹாண்டே, திரு சோ. அழகர்சாமி இவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

திரு ஜே. ஜேம்ஸ், திரு பி. வேலுசாமி ஆகியவர்கள் இருக்கையில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்படும்.

பேரவையின்முன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 8அ—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,51,71,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்ப கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு (உணவு).

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு சோ. அழகர்சாமி திரு என். சங்கரய்யா இவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

திரு டி. மார்டின் திரு பி. வேலுசாமி ஆகியோர் இருக்கையில் இல்லையதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்படும்.

பேரவையின் முன் உள்ள கேள்வி: நக்கு

கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூசய்யப்
செலவு (உணவு) என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,14,36,48,800-க்கு மேளாம்.
தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்." க்கப்பட்ட
சுமார்

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைந்தாண்டுத்
கோரிய தொகை வழங்கப்பட்டது. டுத்தப்பட்டுள்ள

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிச ஆண்டுக்காக
இந்த அளவில் முடிவுற்று, மீண்டும் 24—3—1969 அ ண்டில் இரண்டு
காலை 9 மணிக்குக் கூடும். ரடிற்கான பணித்
ற்றம் ஆகியவை

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. க விளக்கப்பட்டுள்

(7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

*99. Notification issued with G.O. Ms. No. 2376, Rural Development and Local Administration, dated the 21st November 1968 in regard to an amendment to Rural Development and Local Adminis tration Department Notification II-2 No. 329 of 1965, datedthe 18th September 1965, published at page 2 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* (Extraordinary), dated the 20th September 1965. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958].

### B. *Reports, Notifications and other papers.*

a100. Statement in respect of Assurance No. 331/68 in regard to proposal to construct minor reservoirs in certain districts.

†101. Policy note under Demand No. 15—Public Health (English and Tamil).

†102. Speech by Hon. Dr. (Thirumathi) Sathiavani Muthu Minister for Health and Harijan Welfare on Demand No. 14—Medical Grants—1969-70 (English and Tamil).

†103. Report on Urban Water Supply and Drainage Schemes (English and Tamil).

†104. Speech of Hon. Dr. (Thirumathi) Sathiavani Muthu, Minister for Health and Harijan Welfare on Demand No. 38—Capital Outlay on Public Health (English and Tamil).

a105. Policy note on Dairy Development Department **(Tamil).**

தெ
முக.
(டாக்ட
மாண் பு
அவர்கள் வி

Dr. H.V. H.
I have never in
Minister has not a
whether this profit ha
or as a result of toni
Minister say that it is
the Accountant Genera

---

Table of the House on 21st March 1969.

Members on 20th March 1969.

Members on 21st March 1969.





## இணைப்பு 1

[..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

*மானியக் கோரிக்கை—8-A பால் வழங்குத் திட்டம் 1969–70-ம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு ரூ. 3,51,71,000.*

### பால் பண்ணை வளர்ச்சித் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### பொது.

உழவர் பெருமக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் ஒரு துணை வருமானத்திற்கு வழி காணவும், மக்களின் தற்கால உணவில் காணப்படும் விலங்குப் புரதச்சத்துக் குறைவை நிறை செய்யும் முறையில் எல்லாப் பிரிவு மக்களுக்கும் இடையறுது நல்ல பால் கிட்டும் வகையிலும், இருவித குறிக்கோள்களுடன் கிராமப் பகுதிகளில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான பால் பண்ணைத் திட்டங்கள் 1968–69-ம் ஆண்டிலும் நன்கு இயங்கி வந்தன.

சென்னையிலும், மதுரையிலும் இம் மாநிலத்தில் எற்கனவே ஏற்படுத்தப்பட்ட இரு பெரிய பால் பண்ணைத் திட்டங்களின் வாயிலாக, இக் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டன. கிராமப் பகுதிகளில் இருந்து பாலைச் சேகரிப்பதிலும், வழங்கி வருவதிலும் காணப்படும் முன்னேற்றம், நடப்பு ஆண்டில் மிகவும் ஆறுதல் அளிப்பதாக உள்ளது. இவ்விரு திட்டங்களில் ஏற்பட்ட கணிசமான முன்னேற்றங்கள், பால் வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கை, வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை சராசரி பால் வழங்கப்படும் அளவு ஆகியவற்றைக் கீழ்காணும் விவர அட்டவணையில் ஒருசேரக் காணலாம் :—

| ஆண்டு. | பால்வழங்கு நிலையங்களின் எண்ணிக்கை. | பால்பெறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை. | நாளொன்றுக்கு வழங்கப்படும் சராசரி பால் அளவு (லிட்டர்களில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை பால் பண்ணை .. | | | |
| 1966–67 .. .. .. | 73 | 23,250 | 24,000 |
| 1967–68 .. .. .. | 77 | 28,200 | 33,000 |
| 1968–69 .. .. .. | 121 | 44,000 | 41,000 |
| மதுரை பால் பண்ணை | | | |
| 1967–68 .. .. .. | 34 | 16,900 | 12,000 |
| 1968–69 .. .. .. | 37 | 18,600 | 19,000 |

1968–69-ம் ஆண்டில் பால்பண்ணை வளர்ச்சிப் பணித் திட்டங்களுக்கு ஒதுக்கிய தொகை ஒரு சிறிது குறைந்திருந்தாலும், 1969–70-ல் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இதை ஈடுசெய்ய முயற்சி எடுத்துக்கொண்டுள்ளோம். 1968–69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட 55.40 லட்சம் ரூபாய்க்கு மாருக, நடைமுறையில் செலவு சுமார் 62.73 லட்சம் ரூபாய் அளவில் இருக்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பால்பண்ணை வளர்ச்சிக்காக வகைப்படுத்தப்பட்டுள்ள தொகை ரூ. 534-15 லட்சமாகும். இதில் 1969–70-ம் ஆண்டுக்காக ரூ. 71.88 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டில் இரண்டு திட்டங்களிலும் நிறைவேறிய பணி, அடுத்து வரும் ஆண்டிற்கான பணித் திட்டம், கூட்டுறவுச் சங்கங்களில் காணப்பட்ட முன்னேற்றம் ஆகியவை குறித்த விவரங்கள் அடுத்து வரும் பத்திகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

யாளர்களுக்கு பால் வழங்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டில் சென்னைத் திட்டத்தில் பாலை புட்டியில் அடைக்கும் 2-வது பிரிவு ஒன்று நிறுவப்பட்டது. இது மணி ஒன்றுக்கு 4,000 புட்டிகளில் பால் நிரப்பும் திறனளவுடையது. பால் வழங்கும் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பை ஈடு கட்டவே இது ஏற்படுத்தப்பட்டது. சென்னைமாநகரில் பாலின் தேவை நாளுக்குநாள் பெருகிவருவதைக் கருத்தில்கொண்டு 4-வது திட்டக் காலத்தில் இந்தத் திட்டத்தின் உற்பத்தித் திறன் அளவை 1 லட்சம் லிட்டராக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மதுரை பால் பண்ணைத் திட்டம்.

மதுரை மக்களுக்கு நியாயமான விலையில் பால் வழங்குவதைக் கருத்தில் கொண்டு, நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பதப்படுத்தும் திறனளவையுடைய பாலைப் பதப்படுத்தும் யந்திரசாலை மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுமார் ரூ. 33 லட்சம் பெறுமான யந்திரசாதனங்களுடன் ''யூனிசெஃப்'' நிறுவன உதவி பெற்று ரூ. 115 லட்சம் மொத்தச் செலவில் ஏற்படுத்தப்பட்டது. இத் திட்டம் 1967-ம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்டது. 1967-ம் ஆண்டு ஜூன் முதல்கொண்டுதான் இத் திட்டம் பால் வழங்கத் தொடங்கியது. 1967–68-ம் ஆண்டு முதன்முதலாக, கிராமப் பகுதிகளிலிருந்து இத் திட்டத்திற்கு நாள் ஒன்றுக்குக் கிடைத்து வந்த சராசரி பால் 12,000 லிட்டர் ஆகும். 1968–69-ம் ஆண்டில் கிராமப் பகுதிகளிலிருந்து நாளொன்றுக்குக் கிடைத்துவந்த பால் அளவு 19,000 லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. மதுரையில் நாள் ஒன்றுக்குச் சராசரி பால் விற்பனை அளவு சுமார் 12,000 லிட்டராக இருப்பதால், மிகையாகவுள்ள பால் சென்னைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. மற்றும் ஓரளவு வெண்ணெய், நெய் போன்ற துணைப் பொருள்களாக மாற்றவும் பயன்படுத்தப்படுகிறது. பால் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1-16 ஆகும். பதப்படுத்தப்பட்ட பாலின் விலை லிட்டருக்கு ரூ. 1 ஆகும்.

''யூனிசெஃப்'' நிறுவன உதவிக்கான நிபந்தனைகளில் ஒன்று, பத்தாண்டு காலத்திற்குக் குறைந்த வருமானத் தொகுதியினருக்கு லிட்டருக்கு 10 காசு ஈடுசெய்து, ஈடுசெய்த விலையில் இத் திட்டம் பால் விற்பனை செய்யவேண்டும் என்பதாகும். எனவே, 1967 அக்டோபர் 2-ம் தேதி முதற்கொண்டு லிட்டர் ஒன்றுக்கு 88 காசு ஈடு செய்யப்பட்ட விலையில் மதுரை மாநகரில் உள்ள குறைந்த வருமானத் தொகுதியினருக்கு கொழுப்புச் சத்து குறையளவுடைய பால் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திண்டுக்கல், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் ஆகிய இடங்களில் பாலை குளிர வைக்கும் நிலையங்கள் உள்ளன. மதுரை திட்டத்திற்கு பாலை முறையாக அனுப்புவதற்காக, போடிநாய்க்கனூர், கோவில்பட்டி ஆகிய இடங்களில் பாலை குளிரவைக்கும் யந்திரங்கள் அமைக்கப்பட்டன. 1969–70-ல் சங்கரன்கோயில், சிவகங்கை ஆகிய இடங்களிலும் இத்தகைய் யந்திரங்கள் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1969–70-ல் மதுரையில் பால் சேகரிப்பு நாளொன்றுக்கு 20,000 லிட்டர் நிலையை அடையலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. மதுரையில் பால் வழங்குவதற்கு மேலும் 30 நிலையங்கள் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு பால் வழங்கப்பெறும் வாடிக்கையாளர்கள் 22,000 பேராக இருப்பர். முதலாண்டுப் பணிக்கான, அதாவது 1967–68-ம் ஆண்டுக்காக் இத் திட்டத்தின் படிவக் கணக்குகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

## கூட்டுறவுப் பிரிவுகள்.

பல்வேறு பால் வழங்குத் திட்டங்களையும் கூட்டுறவு பாற்பண்ணைகளையும் ஓர் இணைப்பின்கீழ் ஒன்றிணைக்க வேண்டும். இதன் பலனாக, உள்ளூர் தேவைகளை ஈடுகட்டிய பிறகு மிகையாகவுள்ள பாலை இத்தகைய பால் பண்ணைகள், சென்னை, மதுரை போன்ற நகர்ப்புறத் திட்டங்களுக்கும் வழங்கலாம். இதுதான் பால் பண்ணை வளர்ச்சியில் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டிய ஒரு கூறாகும். கூட்டுறவுத் துறையின்கீழ்





பால் பதப்படுத்தும் எட்டு யந்திர சாலைகள் உள்ளன. இந்த யந்திரச் சாலைகளின் திறனளவும் இவை பதப்படுத்தியனுப்பும் சராசரி பால் அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கூட்டுச் சங்கத்தின் பெயர். | யந்திர சாலையின் திறனளவு. | பதப்படுத்தும் பால் அளவு 1967–68-ல் (நாளொன்றுக்கு லிட்டர் அளவு). | 1968–69-ல் பதப்படுத்தும் சராசரி பால் அளவு (நாளொன்றுக்கு லிட்டர் அளவு). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. திருச்சி-ஸ்ரீரங்கம் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 14,000 | 6,160 | 4,600 |
| 2. தஞ்சாவூர் கூட்டுறவு பால் உற்பத்தி, விற்பனைக் கூட்டு அமைப்பு. | 14,000 | 4,535 | 9,100 |
| 3. கன்னியாகுமரி கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 4,000 | 3,355 | 4,800 |
| 4. சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 7,000 | 3,200 | 2,800 |
| 5. உதகமண்டலம் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 7,000 | [illegible]55 | 8,700 |
| 6. சென்னை கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 14,[illegible] | 8,058 | 8,600 |
| 7. கோயம்புத்தூர் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | [illegible]4,000 | 12,329 | 1[illegible],350 |
| 8. கோடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | [illegible],000 | 590 | [illegible]800 |

61458

1969–70-ல் கன்னியாகுமரிகூட்டுறவு [illegible] கூட்டுச் சங்கம், உதகமண்டலம் கூட்டுறவு பால் வழங்கு[illegible] ஆகியவற்றின் திறனளவை மணி ஒன்றுக்கு 1,000 லிட்டரிலிருந்து 2,000 லிட்டராக விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த் நோக்கத்துடன் இத்தகைய சங்கங்களுக்கு உதவி வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மற்ற வேலைகள் : கிராம பால் சேகரிப்பு.

பால் பண்ணையிலும், அரசு பாற்பண்ணையிலும் கிடைக்கும் பாலோடு கிராமப் பகுதிகளிலிருந்தும் பால் சேகரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் சேகரிக்கப்படும் பாலில் பெரும்பகுதி, பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கிராமங்களிலிருந்துதான் வருகிறது. கிராமப் பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படும் பால் முதலில் குளிர வைக்கப்பட்டு அல்லது பதப்படுத்தப்பட்டு அல்லது இடத்திற்கேற்ப இவ்விரு வகையும் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூர்ச் செலவுக்கு எடுத்துக்கொண்டது போக மிகையாகவுள்ள பால் சென்னைத் திட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஈரோட்டில் பால் பதப்படுத்தும் யந்திர சாலையும், வாலாஜாபாத், பாலுச்செட்டிச் சத்திரம் ஆகிய இடங்களில் பாலைக்குளிர வைக்கும் நிலையங்களும் இருப்ப

[1969 மார்ச் 22

மாநில அரசு வேண்டுகோளுக்கிணங்க தேசீய பால் பண்ணை வளர்ச்சி வாரியம், தமிழ் நாடு முழுவதிலும் இப்போதுள்ள பால் வழங்கும் முறையை ஆய்வு செய்யவும், தமிழ்நாடு முழுவதற்கும் பால் வழங்குதல் பற்றிய "பெருந் திட்டம்" குறித்து ஆலோசனை நல்கவும், வல்லுனர் குழு ஒன்றை அனுப்பி வைத்தது என்பதைச் சிறப்பாக இங்கு குறிப்பிட வேண்டும். மதுரை—சென்னை பால் பண்ணைத் திட்டங்களின் பொருளாதாரம் குறித்தும் பணிமுறை பற்றியும் விரிவாக இந்தக் குழு பரிசீலிக்கும். இக் குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதும் மேலும் ஆதாயம் அளிக்கத்தக்க முறையில் பால் பண்ணை வளர்ச்சிக்கான திட்டங்களை வகுக்க மாநில அரசிற்கு இயலும் என்று நம்பப்படுகிறது. அன்றியும், பால் பண்ணைத் துணைப் பொருள்கள் உற்பத்திப் பிரிவுகள் அமைப்பிற்காகவும், மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து முறைகள், மேம்படுத்தப்பட்ட பால் வழங்கு முறை ஆகியவற்றில் தேசீயப் பால் பண்ணை வளர்ச்சி வாரியம் நமக்கு உறு துணையாக இருக்கும் என்றும் நம்பப்படுகிறது.

உலக உணவுத் திட்டத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்கீழ் பெருவாரியான அளவு உணவுத் தானியங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மதுரையிலும், சென்னையிலும் திட்டங்களில் பால்வழங்கும் அளவை பெருக்குவதன் பொருட்டு, கால்நடை கலவைத் தீவனம் தயாரித்து இம் மாநிலத்திலுள்ள பால் உற்பத்திப் பகுதிகளில் வழங்கவும், இந்த உணவுத் தானியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதைக் குறித்த விவரங்கள் அடுத்துவரும் பத்திகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பால் வழங்குக் கூட்டுச் சங்கங்களையும் பால் வழங்குச் சங்கங்களையும் வலுப்படுத்துவதற்கும், கறவை மாடுகள், துணைக் கருவிகள் முதலியவற்றை வாங்குவதற்காக கடன் வழங்குவதில் அவற்றிற்கு உதவி செய்யவும் போதிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னைத் திட்டத்தின் திறன் அளவும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கணிசமாக உயர்த்தப்படும். பால் அதிக அளவில் கிடைக்கும் காலத்தில், மிகையாகக் கிடைக்கும் பாலைத் துணைப் பொருள்கள் பிரிவுகளில் சரிவரப் பயன்படுத்துவதில்லை என்பது இம்மாநிலத்தில் பால் பண்ணைத் திட்டங்களின் முக்கியமான குறைகளில் ஒன்றாகும். எனவே, நான்காவது திட்டக் காலத்தில் பால் மாவுத் தொழிற்சாலை ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சென்னை பால் பண்ணை பால் வழங்கும் திட்டம்.**

இத் திட்டத்தில் பால்பண்ணையும், பால் வழங்குப் பிரிவுடன் கூடிய மத்தியப் பால் பண்ணையும் அடங்கும். இப் பண்ணையில் நான்காயிரம் கறவை மாடுகள் வைத்து வரவும், அவற்றின் சொந்தக்காரர்கள் உறைவதற்குமான இட வசதியும், மற்ற ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், 1965-ல் ஏற்பட்ட வெக்கை நோய் காரணமாக, இப் பண்ணை வெகுவாகப் பாதிக்கப்பட்டதை இம் மன்றம் நன்கறியும். இதனால் இது வரை இவ் வசதிகளை ஏற்று வந்த உரிமதாரர்கள் எண்ணிக்கை மிகவும் குன்றிவிட்டது. இந்நோய் காரணமாகப் பெருவாரியான கறவை மாடுகளை இழக்க நேரிட்டது. எண்ணற்ற உரிமதாரர்களுக்கும் பால் தட்டுப்பாடு ஏற்பட்டது. அடுத்து வரும் ஆண்டுகளில் இப் பண்ணையில் மேலும் உரிமதாரர்கள் தங்க முன்வருவதற்குப் போதிய ஊக்கங்கள் அளிக்கவும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. தற்போது 705 கறவை மாடுகளும் பால் வற்றிய மாடுகளும் கன்றுகளுமாகச் சேர்ந்து 514 மாடுகள் உள்ளன. 69 உரிமதாரர்கள் உள்ளனர். இப்பிரிவுகளிலிருந்து நாள்தோறும் கிடைக்கும் சராசரி பால் உற்பத்தி அளவு சுமார் 2,500 லிட்டர்களாகும். இப் பண்ணையில் உள்ள உரிமதாரர்களுக்குக் குடியிருப்பு வசதிகளும் கால்நடை இலவச மருத்துவ வசதியும் கொடுக்கப்படுகின்றன. இனப் பெருக்க வசதி அளிப்பதற்காக மையக் கிராம நிலையம் ஒன்றும் அமைந்துள்ளது. தழை உட்பட மாட்டுத் தீவனமும் ஈடு செய் விலைகளில் கிடைத்து வருகிறது. இப்பண்ணைக்குள் உரிமதாரர்கள் வந்து தங்குவதை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் இவ்வரசு



1969 மார்ச் 22]

1968–69-ம் ஆண்டில் உரிமக் கட்டணங்களையும், 1968-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குக் கறவை மாடுகளுக்கான இட வசதி கட்டணங்களையும் வசூல் செய்வதைத் தள்ளுபடி செய்துள்ளது. உரிமதாரர்களுக்கு மாட்டுத் தீவனம் ஈடு செய்த விலையில் விற்பனை செய்யப்படுவது 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் தேதி வரையில் தொடரப்பட்டது. இச் சலுகையை மேலும் தொடர்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இப் பண்ணையில் உரிமதாரர் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளுக்கிணங்க, பசு ஒன்றுக்கு 5½ லிட்டர் என்றும், எருமை ஒன்றுக்கு 4 லிட்டர் எனவும் குறிப்பிட்ட குறைந்த அளவு பாலை, ஒவ்வொரு உரிமதாரரும், தொடர்ந்து கொடுத்து வந்தால் அவருக்கு லிட்டர் ஒன்றுக்கு 2 காசு பூரிப்புத் தொகை வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தில் அரசு பால் பண்ணையைப் பற்றிக் கூறுங்கால், 1965-ல் வெக்கை நோய் ஏற்பட்டதன் விளைவாக இப் பண்ணையில் எண்ணற்ற கறவை மாடுகள் குறைந்த சிறிது காலத்திற்குள்ளாகவே இது ஏற்படுத்தப்பட்டது எனலாம். அரசு பால் பண்ணை 165 கறவை மாடுகளுடன் 1966-ல் தொடங்கப்பட்டது. இப்போதுள்ள எண்ணிக்கை 1,510. இதில் 530 கறவை மாடுகளும், 980 பால்வற்றிய மாடுகளும், கன்றுகளும் அடங்கும். தற்போது அரசு பால் பண்ணையில் அன்றாடச் சராசரி பால் உற்பத்தியின் அளவு 2,750 லிட்டராகும். இந்த அளவு 1967–68-ல் 2,100 லிட்டராகவே இருந்தது. அரசு பால் பண்ணையில் மற்றொரு பிரிவை ஏற்படுத்துவதற்காக கறவை மாடுகளை வாங்க அரசு ரூ. 5 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1968–69-ல் சுமார் 150 கறவை மாடுகளும், 1969–70-ல் மேலும் 200 கறவை மாடுகளும் வாங்கப்படும்.

பால் பண்ணையில் உரிமதாரர்களுக்குச் சொந்தமான கறவை மாடுகளின் மூலமாகவும், மாதவரம் அரசு பால் பண்ணையில் உள்ள கறவை மாடுகளின் வாயிலாகவும் கிட்டும் பாலுடன் கிராமப் பகுதிகளிலிருந்துதான் பெரும்பகுதி பால் சென்னை பால் வழங்கும் திட்டத்திற்கு கிடைத்து வருகிறது. கிட்டும் பாலின் அளவைப் பெருக்கிச் சேகரித்து சென்னைத் திட்டத்திற்கு வழங்குவதற்காக ஈரோட்டில் பாலைப் பதப்படுத்தும் (பாஸ்டர்) நிலையங்களும், பாலைக் குளிரவைக்கும் நிலையங்களும், பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கனவே சொல்லியபடி சென்னைத் திட்டம், தற்போது சென்னைமாநகரிலுள்ள 121 பால் விற்பனை நிலையங்கள், மூலமாக, நாளொன்றுக்கு 41 ஆயிரம் லிட்டர் பால் வழங்கி வருகிறது. 1966–67 நிதி ஆண்டு வரையிலே, மாதவரம் திட்டத்தின் வரவு-செலவுகளைக் கணக்கிடும்போது, இத் திட்டம் முழுவதையும் குறித்த, நேர்முக, மறைமுகச் செலவுகள் யாவும் செலவு இனமாகவே காட்டப்பட்டு வந்தன. எடுத்துக்காட்டாக நிர்வாகப்பணியாளர்கள், இயந்திரத் தளவாடங்கள், சாலைகள் கட்டுதல் முதலியவற்றிற்கான செலவு முழுவதும், படிவக் கணக்குகள் தயாரிக்கையில் செலவினங்களின்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளன. வாணிபம் நடத்தும் ஒரு பிரிவில் இவ்வாறு கணக்கு வைக்கும் முறை சரியன்று எனக் கருதப்பட்டது. எனவே இவ்வரசு 1968-ல் ஆணைகள் பிறப்பித்தன. அவற்றின்படி இத் திட்டத்தின் படிவக் கணக்குகள், பால் வாணிபத்தில் நேரடியாகத் தொடர்புடைய மத்திய பாற்பண்ணையும் அத்துடன் இணைந்த பிரிவுகளும் குறித்த செலவுகள் மட்டுமே காட்டப்பட வேண்டும். மத்திய பாற்பண்ணைக்குத் தொடர்பில்லாதவையும், வணிகச் சாற்பற்றவையுமான மற்ற செலவு இனங்கள் இந்தக் கணக்குகளில் இடம் பெறக்கூடாது. இத் திட்டம் 1966–67-ல் ரூ. 21·87 லட்சம் இழப்பும், 1967–68-ல் ரூ. 37,980 சொற்ப ஆதாயமும் காட்டியுள்ளது. 1968–69-லும் இத் திட்டத்திற்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1969–70-ல் இத்திட்டம் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் முழுத் திறனளவுக்குக் கையாண்டு 175 நிலையங்கள் மூலமாக 52,000 வாடிக்கை

தோடு மட்டுமல்லாமல், இதுகாரியமாக, மாநிலமெங்கும் பல்வேறு இடங்களில் குளிரவைக்கும் யந்திர சாலைகள் மொத்தம் 17 உள்ளன. சாத்துவாச்சேரியில் உள்ள குளிர வைக்கும் யந்திரசாலை நாளொன்றுக்கு 4,500 லிட்டர் பால் குளிர வைப்பதாலும், இப்பகுதியில் பால் உற்பத்தி மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாலும், 1969-70-ல் இவ்விடத்தில் பால் உறைய வைக்கும் முழுமை பெற்ற நிலையம் ஒன்றைத் துவக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராம பால் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், தரமான பால் வழங்கும் அடிப்படையில், பசுவின் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 72 முதல் 78 காசு வரையிலும், எருமைப் பாலுக்கு 80 முதல் 90 காசு வரையிலும் பல நிலைகளில் தொகை செலுத்தப்படுகிறது. ஆண்டு முழுவதும் அதிக உற்பத்திக்கான ஊக்கம் அளிப்பதற்காக, பால் குறைவாகக் கிடைக்கும் காலத்தில் மேற்சொன்ன விலைக்கு மேல் 4 காசு கூடுதலாக ஊக்கமளிப்பு விலையும் கொடுக்கப்படுகிறது.

**கிராம பால் பண்ணை விரிவாக்கப் பணி.**

கறவை மாடுகளுக்கு உரிய அளவில் தீவனமிடல், இன விருத்தி ஏற்பாடு செய்தல், பேணிப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து கிராமத்தினருக்கு அறிவூட்டும் பொருட்டு, கீழ்க்காணும் வசதிகள் கிராமப் பகுதிகளில் விரிவாக்கப்பட்டுள்ளன :—

(i) கிராமப் பகுதிகளில் பால் சேகரிப்பு நிலையங்கள் அமைத்தல், மாட்டுத் கொட்டில்கள் கட்டுதல், பால் வண்டி வசதிகள் ஏற்படுத்துதல். ஒன்பது கொட்டில்கள் கட்டி முடிக்கப்பட்டன.

(ii) மேலும் அதிகமாகப் பால் அனுப்பவும், கிராமப் பால் சேகரிப்பை மேம்படுத்தவும் சாதனங்கள்/வண்டிகள் வாங்குவதற்காக கூட்டுச்சங்கங்களுக்கு/சங்கங்களுக்கு கடனுதவி அளித்தல்.

(iii) பால் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதிலும், தூய்மையான முறையில் பால் உற்பத்தி குறித்து தொழில்நுட்பஞ் சார்ந்த ஆலோசனைகளை நல்குவதிலும், பாற்பண்ணை நலப் பணியாளர்கள் இச் சங்கங்களுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

சிறு சங்கங்களுக்கு பணபலம் அளிக்கும் கருத்துடன் அவற்றை நிலைத்து இயங்கும் வன்மை பெற்ற கூட்டுறவுப் பிரிவுகளுடன் இணைத்தும் அமைக்கும் திட்டத்தை இத்துறை தொடங்கி வைத்தது. இப்போது 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி நிலவரப்படி, 23 கூட்டுறவு பால் வழங்குக் கூட்டுச் சங்கங்களும், 2,672 கூட்டுறவு பால் வழங்குச் சங்கங்களும் உள்ளன.

**உலக உணவுத் திட்டம்.**

உலக உணவுத் திட்டத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, மூன்றாண்டுகாலத்திற்கு மொத்தம் 7,500 டன் "சொர்கம்" என்னும் ஒருவகைச் சோளமும், மக்காச் சோளமும் வழங்கப்படும். சென்னையிலும், மதுரையிலும் உள்ள கால்நடை முனைப்புத் திட்டப் பகுதிகளில் கால்நடைகளுக்காக, கால்நடைகலவைத் தீவனம் தயாரித்து வழங்கும் நோக்கத்துடன் சென்னை, மதுரை திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுதோறும் 2,500 டன்னாக மூன்றாண்டுக்கு "சொர்கம்" என்னும் ஒரு வகையான சோளமும், மக்காச் சோளமும் பகிர்ந்தளிக்கப்படும். மாதவரத்திலும், மதுரையிலும் இப்போதுள்ள தீவனக் கலவைப் பிரிவுகளில், உலக உணவுத் திட்டம் வழங்கும் தானியங்களுடன் கலந்து, கால்நடை கலப்புத் தீவனத்தைத் தயாரித்து வழங்கும் வேலை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. தீவனக் கலவைத் தயாரிப்பு வேலையைக் கூடுதலாக்கி மேலும் தீவனம் வழங்குவதற்காக, மணி ஒன்றுக்கு 4 முதல் 5 டன்





தயாரிப்புத் திறனுடைய பெரிய யந்திரம் மாதவரத்தில் நிறுவப்பட்டு வருகிறது. 1969-70-ல் மதுரையிலும் இத்தகையதொரு பெரிய யந்திரம் நிறுவுவது குறித்தும் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

அளவு முறைத் தீவனம் வழங்கப்பட்டு வருவதால், இத்தகைய திட்டங்களில் பால் உற்பத்தி கணிசமாக உயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக உணவுத்திட்ட ஒப்பந்தத்தில், மாட்டுத் தீவனம் வழங்கப்படுவதோடன்றி, 389 டன் கடைந்த பால் மாவு வழங்குவதற்கான ஏற்பாடும் அடங்கியுள்ளது. மிகக் குறைந்த வருமானமுடையோருக்கும், வறியோருக்கும் பதப்படுத்திய அல்லது இரு முறை பதப்படுத்தியபால் தயாரித்து வழங்க சென்னை, மதுரை திட்டங்களுக்கு இந்தப் பால் மாவு வழங்கப்படுகிறது. உலக உணவுத் திட்ட உதவியுடன் இரு முறை பதப்படுத்தப்படும் பால் உற்பத்தியும், பால் வழங்கு வேலையும் சென்னையில் 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் தேதியன்றும், மதுரையில் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் தேதியன்றும் தொடங்கியது. மிகக் குறைந்த விலையில் இவ்வகையான பால் சென்னையில் லிட்டர் 72 காசாகவும், மதுரையில் 64 காசாகவும் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது மலிவுப் பால் நாளொன்றுக்கு சராசரியாக, 23 சிறப்பு விற்பனை நிலையங்கள் மூலம் சுமார் 2,500 லிட்டர் விற்பனை செய்யப்படுகிறது. 1969-70-ல் நாளொன்றுக்கு இந்த அளவு 5,000 லிட்டராக உயர்த்தப்படும். மதுரையில், விலை ஈடு செய்யப்பட்ட பாலின் சராசரி விற்பனை நாளொன்றுக்கு 1,090 லிட்டராகும். 1969-70-ல் இவ் விற்பனையை நாளொன்றுக்கு 3,000 லிட்டராக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**இணைப்பு 2**

பேரவைத் தலைவர் அவர்களே,

46-வது மான்யமான உணவுப் பொருள்களில் அரசாங்க வர்த்தக மானியத்தை முன்னிட்டு ரூபாய் 76,95,50,300 கோரிக்கைக்கு இப் பேரவை ஒப்புதலை அளிக்க வேண்டுமென்று கோருகின்றேன். இந்த நேரத்தில் தமிழ் நாட்டின் உணவு நிலைமை பற்றிய விவரங்களை இப் பேரவை முன்பு வைக்க விரும்புகிறேன்.

சாதாரண ஆண்டுகளில் பற்றுக்குறை இல்லை.

2. தமிழ் நாடு, அரிசியைப் பொறுத்த வரையிலே உபரி மாநிலமாகவும் இல்லாமல், பற்றுக்குறை மாநிலமாகவும் இல்லாமல், சாதாரண ஆண்டுகளில் தன் தேவையைத் தானே நிறைவு செய்து கொள்ளக் கூடிய நிலையில் இருந்து வருகிறது. பருவநிலை பாதிக்கப்பட்டால் இந்தத் தன்னிறைவு நிலை பாதிக்கப்பட்டு ஓரளவு பற்றுக்குறையையும் ஏற்படுவதுண்டு. சென்ற இரு ஆண்டுகளாக உணவுப் பெருக்கத்திற்காக அரசு எடுத்துக் கொண்டுள்ள தீவிர நடவடிக்கைகளின் பயனாக, விளைச்சலில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. ஆனால் சென்ற ஆண்டின் இறுதியிலும், இவ்வாண்டிலும், பருவநிலை பெரிதும் நம்மைச் சோதித்துள்ளதால், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக நாம் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகள் பலன் நமக்கு முழு அளவில் கிடைக்காமல் போய்விட்டது.

ஐந்தில் ஒரு பங்கு கொள்முதல்.

3. சாதாரணமாக நாம் விளைச்சலில் ஐந்தில் ஒரு பகுதியைத் தான் கொள்முதல் செய்து வருகின்றோம். 1965-ம் ஆண்டில் ஏறக்குறைய 8.16 லட்சம் அரிசி டன்களும், 1966-ம் ஆண்டுடில் 7·19 லட்சம் அரிசி டன்களும், 1967-ம் ஆண்டில் 8·54 லட்சம் அரிசி டன்களும் கொள்முதல் செய்திருந்தோம். 1968-ம் ஆண்டில் நாம் 9 லட்சம் அரிசி டன்கள் கொள்முதல் செய்ய முடியுமென்று எதிர்ப்பார்ததற்கு மாறாக, 7·6 லட்சம் டன்கள் தான் கொள்முதல் செய்ய இயன்றது. இதற்கு முக்கிய காரணம், வட ஆற்காட்டிலும், செங்கற்பட்டிலும், ஏற்பட்ட வறட்சி நிலை தான்.

4. நம் மாநில மக்கள் தொகையில் ஏறக்குறைய 170 லட்சம் பேருக்குக் குறைந்த விலையில் அரிசி வழங்கப்படுகின்றது. சென்னை நகரிலும், கோவையிலும் அதை ஒட்டிய புறநகர்ப் பகுதிகளிலும், 1967-ம் ஆண்டு மே மாதம் முதற்கொண்டு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் அமலில் இருந்து வருகிறது. இத் திட்டம் சென்னையை ஒட்டிய சார்புப் பகுதிகளுக்கு 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதி முதற் கொண்டு விரிவு படுத்தப்பட்டது. இம் மூன்று பகுதிகளிலும் ஏறக்குறைய 45·5 லட்சம் பேர், ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தின் பலனை அனுபவிக்கின்றனர். நம் மாநிலம் முழுவதும், மற்ற மாவட்டங்களில் ஏறக்குறைய 127 லட்சம் பேர்களுக்குக் குடும்பக் கார்டு முறையின் மூலம் அரிசி வழங்கப்படுகின்றது.

## 1969-ம் ஆண்டு நிலைமை.

5. இந்த ஆண்டைப் பொறுத்த வரையிலே, செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளதால், நம்முடைய நிலைமை மேலும் நெருக்கடியாகி உள்ளது. சாதாரணமாக, நம் மாநிலத்தில் உபரி மாவட்டங்கள் என்று மதிப்பிடப்படுபவை, தஞ்சை, வடாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகியவை. மற்ற மாவட்டங்கள் பற்றாக் குறை மாவட்டங்களாகவோ, தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்யக்கூடிய நிலையிலோ தான் இருக்கின்றன. 1969-ம் ஆண்டு சனவரித் துவக்கத்தில் நம்மிடம் ஏறக்குறைய 1 லட்சம் அரிசி டன்கள் கையிருப்பில் இருந்தன. சாதாரணமான ஆண்டுகளில் சம்பா அறுவடைக் காலத்திலே, செங்கற்பட்டு, வடாற்காடு, ஆகிய இரண்டு மாவட்டங்களிலிருந்து மட்டும் ஏறக்குறைய 90 ஆயிரம் அரிசி டன்கள் நமக்குக் கிடைக்கும். இந்த ஆண்டு அம் மாவட்டங்களிலிருந்து நமக்கு அரிசி கிடைக்காது என்பது மட்டுமல்ல, வறட்சி நிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு நாம் இந்த இரு மாவட்டங்களுக்கும் மற்ற மாவட்டங்களிலிருந்து அரிசி அனுப்ப வேண்டிய நிலையில் உள்ளோம். இதைத் தவிர, தென்னாற்காட்டில் செஞ்சி, திண்டிவனம் தாலூக்காக்கள் போன்ற பகுதிகளில் விளைச்சல் திருப்திகரமாக இல்லை. இராமநாதபுரம் மாவட்டமும் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளது. தஞ்சையில் மட்டுமே பயிர் விளைச்சல் மிகத் திருப்திகரமாக உள்ளது. இச் சூழ்நிலையில், நாம் சம்பா அறுவடையின்போது 4·7 லட்சம் டன்கள் கொள்முதல் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருந்த போதிலும், 4 லட்சம் டன்கள் கிடைத்தாலே திருப்தி அடைய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

6. சம்பாவில் நாம் 4 லட்சம் டன்கள் கொள்முதல் செய்வோம் என்ற அடிப்படையில், நம் கையிருப்பிலிருந்த ஒரு லட்சம் டன்களைச் சேர்த்து, மொத்தம் நமக்கு 5 லட்சம் டன்கள் கிடைக்கும். இந்த 5 லட்சம் டன்களைக் கொண்டு தான், அடுத்த குறுவை அறுவடை ஆரம்பமாகும் வரை, அதாவது நவம்பர் மாதம் வரையில், நாம் நிலைமையைச் சமாளிக்க வேண்டும். வடாற்காடு, திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் சம்பாவுக்குப் பின், குறுவைக்கு முன், இடைக்காலப் பயிர் விளைச்சல் சாதாரண ஆண்டுகளில் இருப்பது உண்டு. இந்த ஆண்டில் இந்த விளைச்சல் வடாற்காடு, செங்கற்பட்டு, மாவட்டங்களில் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகவே தான் இந்த 5 லட்சம் டன்களைக் கொண்டு அக்டோபர் மாதக் கடைசி வரை நாம் வினியோகப் பொறுப்பை நிர்வகிக்க வேண்டுமென்ற அடிப்படையில் கணக்கிட்டுள்ளோம்.

7. ஐந்து லட்சம் டன்களைக் கொண்டு 10 மாதத்திற்கு விநியோகிக்க வேண்டுமென்றால், மாதத்திற்கு 50 ஆயிரம் டன்கள் தான் விநியோகிக்க முடியும். சென்னையிலும், கோவை நகரத்திலும், சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளில் நாம் அரிசி வழங்கும் அளவைக் குறைக்க முடியாது. இந்த இரு பகுதிகளிலும் நமக்கு ஏறக்குறைய 22,000 டன்கள் மாதம் தேவைப்படுகின்றன. ஆகவே மற்ற மாவட்டங்களில் அரிசி வழங்குவதற்கு நமக்குச் சுமார் 28,000 டன்கள் தான் கிடைக்கும். இச் சம்பாவில் இது வரை நாம் மூன்று லட்சம் டன்கள் கொள்முதல் செய்துள்ளோம். இந்த



நிலைமைகளை மனதிற் கொண்டு கொள்முதலை மேலும் வெற்றிகரமாக நடத்துவதற்குப் பொதுமக்கள் மனமுவந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

8. இந்த இக்கட்டான நிலைமையை நாம் சமாளிப்பதற்கு, மத்திய அரசு ஒரு லட்சம் டன்கள் அரிசியை உடனடியாகத் தந்துதவ வேண்டுமென்று நாம் கோரியுள்ளோம். மத்திய உணவு அமைச்சர் அண்மையில் தமிழ் நாட்டிற்கு வந்திருந்தபோது, முதலமைச்சரும், நிதி அமைச்சரும், நானும், இக் கோரிக்கையை நேரில் வற்புறுத்தினோம். மத்திய உணவு அமைச்சரும் நம் நிலைமையை உணர்ந்து, நமக்கு இயன்ற வரை உதவி செய்வதாக வாக்களித்துள்ளார். நம்முடைய விளைச்சல் நிலைமை திருப்திகரமாக இருந்தபோது, நாம் அனைத்திந்திய உணவுக் கொள்கைக்கு உட்பட்டு, கேரளத்திற்கு அரிசி அனுப்பி வந்துள்ளோம். நம் மாநிலம் எப்போதுமே உபரி மாநிலமாக இருந்தது இல்லை. அந் நிலையிலும் நாம் கேரளத்திற்கு அரிசி அனுப்பி வநதுள்ளோம் என்றால், அனைத்திந்தியக் கொள்கைக்கு நாம் கட்டுப்பட வேண்டும் என்ற ஆர்வமும், கேரள மக்களுக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வமும் தான் காரணம் ஆகும். தமிழ் நாட்டு மக்களுக்கு ஓரளவு இடைஞ்சல் ஏற்பட்டதையும் பொருட்படுத்தாமல், நாம் முந்திய ஆண்டுகளில் கேரளத்திற்கு அரிசி அனுப்பி வந்ததை மனத்திற்கொண்டு, இப்போது நம் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருக்கின்ற நேரத்தில், மத்திய அரசு நமக்கு கணிசமாக உதவ முன் வர வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயமே.

9. மேற் சொன்ன விவரங்களிலிருந்து நெருக்கடியான இந் நிலைமையைச் சமாளிக்க, உறுதியான நடவடிக்கைகளும் பொது மக்களின் பூரணமான ஒத்துழைப்பும் தேவை என்பது தெளிவாகிறது. வசதி படைத்தவர்கள் கொள்முதலுக்குத் தாராளமாகவும் தடையின்றியும் நெல் தந்துதவ வேண்டும் என்று இம்மன்றத்தில் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். கொள்முதலுக்கு நெல் அளப்பது சட்டத்துக்கு உட்பட்டது மட்டுமல்ல, சமூக நலனுக்கு அவசியமானது என்ற அடிப்படையை விவசாயப் பெருமக்கள் ஏற்றுக் கொண்டு கொள்முதலை வெற்றிகரமாக நடத்தி வைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

10. ஒரு சில வழக்குகளில் உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பையொட்டி, கொள்முதலுக்கு நெல் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற ஒரு தவறான ஆதாரமற்ற கருத்து மக்களிடையே ஒரு சிலரால் வேண்டுமென்றே பரப்பப்பட்டு வருகின்றது. இது மிகவும் வருந்தத் தக்கது. சில மனுதார்கள் தொடுத் துள்ள வழக்குகளின் பேரில் நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பு அந்த மனுதாரரைப் பொறுத்தவரை தான் கட்டுப் படுத்துமே தவிர, பொதுவாகக் கொள்முதல் செல்லாது என்ற நிலைமையை ஏற்படுத்தவில்லை. அந்த வழக்குகளில் நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பைப் பொறுத்தவரையிலுங்கூட நாம் 'அப்பீல் செய்ய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளோம். நீதிமன்றம் இத் தீர்ப்பைத் தாற்காலிகமாக நிறுத்தியும் வைத்துள்ளது. கொள்முதல் செல்லுபடியாகாது என்று நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கவில்லை. கொள்முதல் விலையைப் பற்றிக்கூட இப்போது தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள விலைகள் தான் உச்ச விலைகள் என்றும் அதற்கு மேல் விலை கொடுப்பதும் கோருவதும் சட்டப்படி செல்லாது என்றும் தெளிவுபடுத்தி, மத்திய அரசினர் இன்றியமையாப் பொருள்களின் சட்டத்தின் (Essential Commodities Act.) 3 (3எ) பிரிவின் கீழ் ஒரு உத்தரவு வெளியிட்டுள்ளனர். இந்த உத்தரவு தான் இப்போது செல்லுபடியாகும் உத்தரவு. இதன்படி தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள விலைகள் தான் கொள்முதலுக்குக் கொடுக்க வேண்டிய உச்ச வரம்பு விலை. இந் நிலையை உணர்ந்து, பொது மக்களின் நலனுக்காக அரசு மேற்கொண்டுள்ள கொள்முதல் நடவடிக்கைகளுக்குத் தாராளமாக ஒத்துழைப்பை விவசாயப் பெருமக்கள் வழங்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

## கொள்முதல் விலைகள்.

11. 1965-ம் ஆண்டு வரை நம் மாநிலத்தில் கொள்முதல் விலைகள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தன. மோட்டா ரகம் குவிண்டாலுக்கு 37·40 ரூபாய் முதற்கொண்டு 38·22 ரூபாய் வரை. நடுத்தர ரகம் 38·73 ரூபாய் முதற்கொண்டு 39·50 வரை. உயர் ரகம் 40·70 ரூபாய் முதற்கொண்டு 48·12 ரூபாய் வரை. 1966-ம் ஆண்டில் இந்த விலைகள் பின்வருமாறு உயர்த்தப்பட்டன. மோட்டா ரகம் குவிண்டாலுக்கு 40 ரூபாய் : நடுத்தர ரகம் ரூபாய் 42 ; உயர் ரகம் ரூபாய் 45 இதைத் தவிர ஒரு ஏக்கராவுக்கு 5 மூட்டைக்கு மேல் அளப்பவர்களுக்கு அந்த விகிதத்திற்கு மேற்பட்ட அளவுக்கு குவிண்டாலுக்கு 2 ரூபாய் ஊக்குதல் போனஸாக அளிக்கப்பட்டுவந்தது.

1966-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் குறுவை நெல் கொள் முதலில் குவிண்டாலுக்கு 3 ரூபாய் போனஸ் தரப்பட்டு வந்தது. இது பின்னர் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ம் தேதி வரை சம்பா பயிருக்கும் நீடிக்கப்பட்டது.

1967-ம் ஆண்டு மே மாதத்தில் மோட்டா அரிசிக்குக் குவிண்டாலுக்கு 43 ரூபாய் விலையை மத்திய அரசு பரிந்துரை செய்தது. இதை ஏற்றுக் கொண்டு, அது வரை விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த மூன்று ரூபாய் போனஸை விலையிலே சேர்த்து, பின்வருமாறு நிர்ணயிக்கப் பட்டது : மோட்டா ரகம் குவிண்டாலுக்கு ரூபாய் 43 ; நடுத்தர ரகம் ரூபாய் 45 ; உயர் ரகம் ரூபாய் 48 ; இந்த 3 ரூபாய் போனஸை நாம் விலையுடனேயே சேர்த்து விலையை நிர்ணயம் செய்துள்ளபோதும் இந்த போனஸ் தொகையினால் ஏற்படும் செலவை நாம் பொது மக்களிடமிருந்து பெறுவதில்லை. இச்செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. போனசுக்கு முன்பு என்ன விலைக்கு நாம் அரிசியை விற்று வந்தோமோ அதே விலைக்குத் தான் இப்பொழுதும் அரிசியை விற்று வருகிறோம்.

12. கொள்முதல் விலை குறைவாக இருக்கின்றது என்றும், அதை உயர்த்தவேண்டுமென்றும் விவசாயிகளிடமிருந்து பல கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. நாம் கொள் முதல் செய்யும் அரிசி முழுவதும் இங்கே தான் வினியோகிக்கப்படுகிறது. ஆகவே நாம் கொள் முதல் விலையை உயர்த்தினால், பொது மக்களுக்கு நாம் வினியோகம் செய்யும் அரிசியின் விலையையும், உயர்த்த வேண்டும். அரிசியின் விலை உயர்ந்தால்,, மற்ற அத்தியா வசியப் பண்டங்களின் விலையும் உயர்ந்து, பொதுவாக விலைவாசிகள் ஏறிப் பணவீக்கம் ஏற்படும் என்ற கருத்தில், அரிசி விலையை உயர்த்தக்கூடாது என்ற கொள்கையை அரசாங்கம் உறுதியாகப் பின் பற்றி வருகிறது.

13. கொள்முதல் விலையைப் பொறுத்தவரையில், விளைபொருள் விலைவாசிக் கமிஷன் **Agricultural Prices Commission** அனைத்திந்திய அடிப்படையில் இப் பிரச்னையை ஆராய்ந்து நம் மாநிலத்திற்குப் பரிந்துரை செய்த விலையைத் தான் நாம் ஒப்புக் கொண்டுள்ளோம். இப் பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே விலை நிர்ணயப் பிரச்னையில் நாம் மத்திய அரசின் கொள்கையைத் தான் பின்பற்றி வருகின்றோம்.

14. மேலும் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் ஒரு போக நிலங்களிலும் இரு போகம் செய்வதற்கு நாம் திட்டம் வகுத்துச் செயல்படுத்தி வருகின்றோம். உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவியாக உயர்ரக நெல்களை நாம் வழங்கி வருகின்றோம். ஆகவே விளைச்சல் கணிசமாக உயர்ந்துள்ளதால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் லாபத்தின் அளவும் திருப்திகரமாக இருக்கும். கொள்முதலின் விலையை உயர்த்தினால் அரிசியின் விலை உயர்ந்து அதையொட்டி விவசாயத்திற்குத் தேவையான மற்றப் பொருள்களின் விலையும் உயர்ந்தால், விவசாயிக்குக் கிடைக்கும் பணம்





உண்மையில் ஒரு லாபமாகாது. விதைகளை நாம் இப்போது சலுகையான விலையில் விற்று வருகின்றோம். உரத்தை தாராளமாக வழங்கி வருகின்றோம். உரத்தின் விலையைக் குறைக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தியபோதும் மத்திய அரசு இக் கோரிக்கைக்கு இணங்கவில்லை. நம் மாநிலத்தில் நீர்ப்பாசனத்திற்கான கட்டணம் மற்ற மாநிலங்களில் உள்ள கட்டணத்தை விடப் பொதுவாகக் குறைவாகவே இருக்கின்றது. ஆகவே விவசாயிக்குத் தேவையான பொருள்களைத் தாராளமாக வழங்குவதிலும், அவற்றில் சற்று சலுகை காட்டுவதிலும் தான், அவர்களுக்கு உண்மையான நிவாரணம் கிடைக்கச் செய்ய வேண்டும். கொள்முதல் விலையை உயர்த்துவதால் மட்டும் அவர்களுக்கு உண்மையான லாபம் கிடைக்காது. மேற்சொன்ன காரணங்களைக் கொண்டு நாம் கொள்முதலுக்கு நிர்ணயித்துள்ள விலைகள் நியாயமானவை தான் என்று அரசாங்கம் கருதுகின்றது.

15. விவசாயப் பெருமக்கள் விளைச்சலைப் பெருக்குவதற்கு உற்சாகம் அளிக்கவேண்டும். அதே சமயத்தில் அரிசியை வாங்குவோருக்கு, நயமான, நியாயமான விலையில் கிடைப்பதற்கான வசதி செய்ய வேண்டும். உற்பத்தியாளர், பொதுமக்கள் இருவருடைய நலனுக்கும் உகந்த முறையில் இருவர் நலனுக்கும் ஏற்ற, ஒரு விலையை நிர்ணயிக்க வேண்டும். இது தான் தமிழ்நாட்டு அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. இந்தக் கொள்கையின் அடிப்படையை விவசாய பெருமக்கள் ஏற்று அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## கொள்முதலுக்கு விதிவிலக்கு.

16. ஒரு ஏக்கராவும் அதற்குக் குறைவாகவும் நிலம் உள்ள விவசாயிகளிடமிருந்து நாம் இப்பொழுது கொள்முதல் செய்வதில்லை. மூன்று ஏக்கராக்கள் வரை கொள்முதலுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று சிலர் கருத்து தெரிவிக்கின்றார்கள். கொள்முதலைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தும் இவர்கள், அதே சமயத்தில், மூன்று ஏக்கரா வரை விலக்கு அளிக்க வேண்டுமென்று கோருவது ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தோன்றுகிறது. நம் மாநிலத்தில் சுமார் 44·39 லட்சம் ஏக்கராக்களில் நெல் பயிர் செய்யப்படுகின்றது. இதில் 8·59 லட்சம் ஏக்கராக்கள் ஒரு ஏக்கராக்கும் அதற்குக் குறைவாகவும் உள்ள இனத்தில் வருகின்றன. ஆகவே ஏறக் குறைய ஐந்தில் ஒரு பகுதி நிலப்பரப்புக்கு நாம் கொள்முதலிலிருந்து இப்பொழுது விலக்கு அளித்து வருகின்றோம். 3 ஏக்கரா வரை விலக்கு அளிக்க வேண்டுமென்றால், மொத்த நிலப்பரப்பில் பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்புக்கு நாம் விலக்கு அளிக்க வேண்டி வரும். 44·39 லட்ச ஏக்கராக்களில் சுமார் 25·50 லட்சம் ஏக்கராக்கள் மூன்று ஏக்கராவுக்கும் குறைவாக உள்ள இனத்தில் வரும். இவ்வாறு பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்புக்கு நாம் விலக்கு அளித்து விட்டு கொள்முதல் நடத்துவது சாத்தியம் இல்லை என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வார்கள்.

17. பத்து ஏக்கராவுக்கும், அதற்கு மேற்பட்ட நிலங்களிலிருந்து மட்டுமே நாம் கொள்முதல் செய்யவேண்டுமென்று சிலர் வற்புறுத்துகின்றார்கள். பத்து ஏக்கராக்களுக்கு மேற்பட்ட உடைமைகள் இனத்தில் மொத்தம் ஐந்து லட்சம் ஏக்கராக்கள் தான் வருகின்றன. இவற்றிலிருந்து மட்டும், நாம் உபரி அனைத்தையும் கொள்முதல் செய்தால் கூட, நமக்குத் தேவையான அளவு கொள்முதல் செய்வது சாத்தியமல்ல.

## அரிசி விநியோகத்தில் மான்யம்.

18. நாம் பொதுமக்களுக்கு அரிசி விநியோகம் செய்வதில் மூன்று வித மான்யங்கள் இருக்கின்றன. மூன்று ரூபாய் போனசை விலையுடன் சேர்த்து நிர்ணயித்த போதிலும், அந்த போனசுக்காகும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அரிசியின் விலையை உயர்த்தா

மல் பொதுமக்களுக்கு விற்பதால், ஏற்படும் மான்யச் செலவு ஒன்று. இந்த வகையில் 1967-68-ம் ஆண்டில், நாம் விநியோகித்த 7·06 லட்சம் டன்களுக்கு 317·70 லட்சம் ரூபாய் செலவு செய்தோம், இந்த மான்யத்தின் பலனை சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் மட்டுமல்லாமல் குடும்பக் கார்டு பகுதிகளில் உள்ள 125 லட்சம் பேரும் அனுபவிக்கின்றனர். 1968-69-ம் ஆண்டில் இதற்கான மான்யச் செலவு 324 லட்சம் ரூபாய் வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

19. ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தின் கீழ், சென்னையிலும் கோவையிலும், சென்னைச் சுற்றுப்புறப் பகுதிகளிலும், கிலோ கிராமுக்கு 66 பைசா வீதம் நாம் அரிசியை விற்பதால் ஏற்படும் மான்யச் செலவு மற்றொரு வகையானது. இதுதான் இந்த அரசு கொண்டுவந்த படியரிசித் திட்டத்ினால் நேரடியாக ஏற்படும் மான்யச் செலவு. 1967-68-ம் ஆண்டில் 1·67 லட்சம் டன்களை நாம் இத் திட்டத்தின் கீழ் வினியோகித்ததனால் 290·62 லட்ச ரூபாய் மான்யச் செலவு ஏற்பட்டது. 1968-69-ம் ஆண்டில் 1·88 லட்சம் அரிசி டன்கள் வினியோகிப்பதால், 376·25 லட்ச ரூபாய் மான்யச் செலவு ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாம் ரக அரிசியைத்தான் படி அரிசித் திட்டத்தின் கீழ் நாம் விநியோகிப்போம் என்று ஒப்புக் கொண்டுள்ளபோதிலும், போதிய அளவு இரண்டாம் ரக அரிசி கிடைக்காத காரணத்தினால் சில சமயங்களில் முதல் ரக அரிசியையே நாம் 66 பைசா விலைக்கு விற்று வருகின்றோம். இதனால் மான்யச் செலவு உயர்கிறது.

20. நாம் கொள்முதல் செய்யும்போது கொடுக்கும் விலைக்கு மேல், போக்குவரத்துச் செலவு, கிடங்குகளில் சேமிப்புச் செலவு, வட்டி, வியாபாரிகளுக்குக் கழிவு, போன்ற செலவுகளையெல்லாம் நாம் ஏற்றுக் கொண்ட பின்பு, நாம் அவற்றைச் சேர்த்துக் கூடுதலான விலைக்கு அரிசியைக் குடும்பக் கார்டு பகுதிகளில் விற்கவேண்டும். கூடியவரை லாபமும் நட்டமும் இன்றியே நாம் இந்த விலையை நிர்ணயித்துள்ள போதிலும், ஒரு சில மாவட்டங்களைப் பொறுத்த வரையில் நமக்கு ஏற்படும் செலவை விடக் குறைவான விலையிலேயே நாம் விற்று வருகின்றோம். பொது வினியோக முறையின் கீழ் அரிசி விலை உயரக் கூடாது என்ற கவலையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கம் 1967-ம் ஆண்டில் நிர்ணயித்த விலைகளை, அதற்குப் பின்பு நமக்காகும் செலவு கூடியுள்ள போதிலும் உயர்த்தவில்லை. இந்த வகையிலும் நாம் மான்யச் செலவை ஏற்றுக்கொள்கிறோம். 1968-69-ம் ஆண்டில் இந்த வகையில் 102 லட்சம் மான்யச் செலவு நமக்கு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக மொத்தம் இந்த மூன்றுவகை மான்யங்களையும் சேர்த்து 1968-69-ம் ஆண்டில் சுமார் 8 கோடி ரூபாய் மான்யச் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கும். 1969-70-ம் ஆண்டில் இது கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

21. இப்போதுள்ள கொள்முதல் விலையிலேயே, நாம் 8·8 கோடி ரூபாய் மான்யச் செலவு செய்ய வேண்டியுள்ளது. கொள்முதல் விலையை உயர்த்தினால், நம்முடைய மான்யச் செலவு மேலும் அதிகரிக்கும் என்பதையும் நாம் மனதிற் கொள்ளவேண்டும். இந்த விவரங்களிலிருந்து தெளிவாகும் மற்றொரு உண்மை என்னவென்றால், ரூபாய்க்கு படியரிசித் திட்டத்தின் கீழ் மட்டும்தான் மான்யம் தரப்படுகிறது என்ற பரவலான, தவறான, கருத்துக்கு மாறாக, உண்மையில் குடும்பக் கார்டு பகுதிகளில் வழங்கும் அரிசிக்கும் மான்யம் தரப்படுகிறது. 1967-68-ம் ஆண்டில் நமக்கு ஏற்பட்ட மொத்த மான்யச் செலவான 5·88 கோடியில், ஏறக்குறைய பாதி தான் ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தினால் மட்டும் ஏற்பட்ட மான்யச் செலவாகும். அதைப் போலவே 1968-69-ம் ஆண்டில் நமக்கு ஏற்படும் 8 கோடி ரூபாய் மான்யச் செலவில் 3·76 கோடி ரூபாய்



தான் ஒரு படி அரிசித் திட்டத்தினால் மட்டும் ஏற்படும் செலவாகும். ஆகவே சென்னை நகரிலும், கோவையிலும், சுற்றுப்புறப் பகுதிகளிலும் வாழும் மக்கள் மட்டுமே இந்த மான்யச் செலவின் பலனை அனுபவிக்கின்றனர் என்ற வாதம் சரியானது அல்ல. தமிழ் நாட்டில் பொது வினியோக முறையின்கீழ் அரிசி பெறும் 170 லட்சத்துக்கு மேற்பட்ட மக்களும் இந்த மான்யத்தின் பலனை அனுபவிக்கின்றனர். சென்னை, கோவை, சென்னைச் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு சற்று அதிக அளவு சலுகை கிடைக்கின்றது என்றுதான் நாம் கூற முடியுமேயொழிய, கிராம மக்களுக்கு நன்மை செய்யாமல் நகர மக்களுக்கு மட்டுமே மான்யத்தினால் நன்மை கிடைக்கின்றது என்று கூறுவது சற்றும் பொருந்தாது.

### படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்த முடியுமா ?

22. ரூபாய்க்குப் படி அரிசித் திட்டம், சென்னையிலும் கோவையிலும் சென்னைச் சார்புப் பகுதிகளிலும் இப்போது வெற்றிகரமாக நடந்துவருகிறது. இதன் பலனாக, விலைவாசிகள் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்தைக் குறை கூறுவோரே, இத் திட்டத்தை மற்றப் பகுதிகளுக்கும் விரிவாக்க வேண்டுமென்று அதே மூச்சில் கோருவது சற்று விசித்திரமாக உள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்த இப் பகுதிகளை நாம் முதலில் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், இப்பகுதிகளில் பாட்டாளி மக்கள் அதிகம் இருக்கின்றார்கள் என்பதும், அதிக விலையில் அவர்கள் அரிசி வாங்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தினால், பொதுவாக விலைவாசிகள் ஏறிவிடும் என்பதும்தான். இந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டுதான் இப் பகுதிகளில் முதலில் சட்டபூர்வமான பங்கீட்டு முறை முந்திய அரசாங்கத்தினால் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. சட்டபூர்வமான பங்கீடு முறை அமலில் இருந்த பகுதிகளில்தான், நாம் இப்போது படி அரிசித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றோம்.

23. படி அரிசித் திட்டத்தை மற்றப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கைக்கு அரசாங்கம் அனுதாபமாய் உள்ளபோதிலும் இப்பொழுது அதை ஏற்றுக்கொள்வது சாத்தியமாய் இல்லை. இதனால் ஏற்படும் மான்யச் செலவு அதிகமாகும் என்பது ஒரு காரணம். நாம் கொள்முதலை இன்னும் அதிக அளவு கணிசமாக உயர்த்தினாலொழிய, மற்றப் பகுதிகளுக்கும் இத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான அரிசி நம் கையிருப்பில் இராது என்பது மற்றொரு காரணம். ஆகவே கொள்முதல் உயர்ந்து, அரசாங்கக் கையிருப்பில் அதிக அரிசி கிடைத்தால்தான், நிதி நிலைமையையும் மனதில் கொண்டு, மற்றப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதைப் பற்றி முடிவு செய்ய இயலும்.

### குடும்பக் கார்டு முறையை விரிவுபடுத்த வேண்டுமா ?

24. குடும்பக் கார்டு முறையையும் மற்றப் பகுதிகளுக்கு விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டு வருகின்றது. குடும்பக் கார்டு முறை இப்பொழுது நம் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் அமல் செய்யப்பட்டு, சுமார் 125 லட்சம் பேருக்குப் பலனளிக்கின்றது.

சட்டபூர்வமான பங்கீட்டு முறைக்கும், குடும்பக் கார்டு முறைக்கும் அடிப்படை வேறுபாடு ஒன்று உண்டு. சட்டபூர்வ பங்கீட்டுப் பகுதியில் வெளிச் சந்தையில் அரிசி விற்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, அப் பகுதியில் வாழும் மக்களுக்குத் தேவைப்படும் அரிசி முழுவதையும் வழங்குகின்ற பொறுப்பை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதை முன்னிட்டு, வயது வந்த ஆள் ஒருவருக்கு வாரத்திற்கு 1,400 கிராம் அடிப்படையில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. குடும்பக் கார்டு பகுதிகளில் வெளிச் சந்தை அரிசி விற்கத் தாராளமாக அனுமதிக்கப்படுகிறது. அப் பகுதி மக்கள் வெளிச் சந்தையில் அரிசி வாங்கிக்கொள்ளலாம்.

வெளிச் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படும்போதோ, விலை சற்று ஏறுமுகமாக இருக்கும்போதோ, அரசாங்கம் குடும்பக் கார்டு முறையின் கீழ் அரிசி வழங்கி மக்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிப்பதுதான் குடும்பக் கார்டு முறையின் நோக்கம். குடும்பக் கார்டு பெற்றுள்ளவர்கள் வெளிச் சந்தையிலும் தாராளமாகப் பெற்றுக்கொள்ள முடியுமாதலால், அவர்களுக்கு ஆண்டு முழுவதும், குடும்பக் கார்டின் கீழ் அரசாங்கத்தினர் அரிசி வழங்க வேண்டுமென்ற அவசியமோ, சட்டபூர்வ பங்கீட்டுப் பகுதியில் வழங்கப்படும். 1,400 கிராம் விகிதத்தில் அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற அவசியமோ கிடையாது. இந்த அடிப்படையில்தான் அறுவடைக் காலங்களில், அரிசிப் புழக்கம் தாராளமாக இருக்கும் சூழ்நிலையில், குடும்பக் கார்டுகளின் மூலமாக அரிசி வழங்குவது குறைக்கப்படுகிறது. 500 கிராம் முதல், 1,200 கிராம் வரையிலே, வெளிச் சந்தை நிலைமையை அனுசரித்தும், விலைவாசிகளையும், அரசாங்கம் கையிருப்பையும் மனதிற்கொண்டும், வழங்கும் அரிசியின் விகிதத்தைக் கூட்டிக் குறைக்கும் அதிகாரம் மாவட்டக் ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை வேறுபாட்டை நாம் மனதிற் கொண்டால், குடும்பக் கார்டு பகுதிகளிலும் 1,400 கிராம் அளவில் ஆண்டு முழுவதும் கொடுக்க வேண்டும் என்று எழுப்பப்படும் கோரிக்கை சற்றும் பொருத்தமற்றது என்பது தெளிவாகும்.

அடிப்படையில் இந்த வேறுபாடு இருந்தபோதிலும் நடைமுறையில் எல்லாப் பகுதிகளுக்கும் குடும்பக் கார்டுகளை விரிவுபடுத்த வேண்டுமென்றும் இக் கார்டுகளின் மூலம் வழங்கப்படும் அரிசியின் விகிதத்தை உயர்த்த வேண்டுமென்றும், கோரிக்கைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இந்தக் கோரிக்கைகளை நாம் நிறைவு செய்யவேண்டுமென்றால், இப்போது விளைச்சலில் ஐந்தில் ஒரு பகுதியை நாம் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக கொள்முதலை மிகக் கணிசமாக அதிகரிக்க வேண்டும். ஆகவேதான் குடும்பக் கார்டு முறையை மேலும் பல இடங்களுக்கு விரிவுபடுத்தவேண்டுமென்ற கோரிக்கைகயையும் அரிசி விகிதத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**தரப் பரிசோதனை.**

25. பொது மக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் தரம் திருப்திகரமாக இருக்கவேண்டும் என்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது. அரைவை ஆலையாளர் தயாரிக்கும் அரிசியின் தரத்தைப் பரிசோதிக்க, 88 தரப் பரிசோதனைப் பணியாளர்களை அரசாங்கம் நியமித்திருக்கிறது. மக்களுக்கு வழங்கும் அரிசி தரமானதாக இருக்க வேண்டும் என்பதில் அரைவையாளர்களும் மிகுந்த கவனம் செலுத்தி அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கள்ளக் கடத்தல்.**

26. போக்கு வரத்துக் கட்டுப்பாடுகளை மீறிக் கள்ளத்தனமாக நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு அரிசி கடத்தப்படுவதைத் தடுப்பதில் அரசு மிகவும் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துள்ளது. 1968-ம் ஆண்டில் சுமார் 42 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அரிசி கள்ளக் கடத்தலின் போது கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கைகளை மேலும் கவனமாகவும், உன்னிப்பாகவும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் நலனுக்காக வகுக்கப்பட்டுள்ள இவ் விதிகளை மீறுவதில் தங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டுவது சட்டப்படி குற்றம் மட்டுமல்ல. பொதுமக்களுக்குக் பெரும் துரோகம் இழைப்பதாகும், என்ற உணர்வைப் பரப்புவதில் பொதுமக்களும், வர்த்தகர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கோருகின்றேன்.





**கோதுமை.**

27. இவ்வாண்டு வறட்சியின் காரணமாக, கோதுமை, சோளம், மைலோ போன்ற தானியங்களை அதிக அளவில் விநியோகிப்பது அவசியமாகிறது.

1967-ம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட கோதுமையின் அளவு திடீரென மிகவும் குறைந்துவிட்ட காரணத்தினால், கோதுமையின் ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தி வந்தோம். இக் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு கோதுமை ஒதுக்கீட்டை இப்பொழுது உயர்த்தியுள்ளது. 1967-ம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 51,000 டன்கள் கோதுமைதான் ஒதுக்கப்பட்டன. 1968-ம் ஆண்டில் நம் கோரிக்கைகளை ஏற்று மத்திய அரசு 88,680 டன்கள் கோதுமை ஒதுக்கியுள்ளது.

28. நம் மாநில மக்கள் பெரும்பாலும் அரிசி உணவுக்கே பழக்கப்பட்டவர்கள். சத்தான உணவைச் சாப்பிட வேண்டும் என்பதற்காக, பொது மக்கள் கோதுமையைப் பெருமளவில் பயன்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது. அதே சமயத்தில், தமிழ்நாடு மக்கள் அரிசி உணவுக்கே பழக்கப்பட்டவர்கள் என்பதால், அரிசிக்குப் பதிலாகக் கோதுமையை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்யும் முயற்சி பலன் அளிக்காது என்பதையும், நாம் உணர்ந்துள்ளோம். ஆகவேதான் மத்திய அரசிடமிருந்து நாம் அதிக அரிசி கேட்கும்போது, அரிசிக்குப் பதிலாக அவர்கள் கோதுமையைத் தருவதாகக் கூறுவது, நம் பிரச்னைக்குத் தீர்வு காண உதவாது என்பதையும் நாம் எடுத்துக்காட்டியுள்ளோம்.

29. கோதுமையின் விலையையும் மத்திய அரசு படிப்படியாக உயர்த்தி வந்துள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது. 1964-ம் ஆண்டு வரை சிவபபுக் கோதுமையின் விலை குவிண்டாலுக்கு 37.51 ரூபாயாக இருந்தது. 1968-ம் ஆண்டுத் தொடக்கத்தில் அது 67 ரூபாயாய் இருந்தது. 1968-ம் ஆண்டு நடுவிலே அது மீண்டும் 70 ரூபாயாக உயர்த்தப்பட்டது. சிவப்புக் கோதுமையின் விலையை 70 ரூபாயிலிருந்து மேலும் உயர்த்த மத்திய அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. கோதுமையைப் பயன்படுத்துவதில் அதிக உற்சாகம் காட்டாத மக்களிடையே கோதுமையைப் பரப்புவதற்கு தமிழ்நாடு அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருகின்ற நேரத்திலே, மத்திய அரசு கோதுமையின் விலையை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே சென்றால், இந்த அரசின் முயற்சிகளுக்குப் பெரிதும் குந்தகம் ஏற்படுகின்றது என்பதையும் நான் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

30. கோதுமை அரைவையாலைகளை மேற்பார்வை செய்து கண்காணிக்கும் அதிகாரம் இதுவரை மத்திய அரசிடம் இருந்தது. 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் முதற்கொண்டு இந்த அதிகாரம் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, ரவை, மைதா, போன்ற கோதுமைப் பொருள்களின் விநியோகத்தைச் சீராகச் செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

**மைலோ, சோளம் விநியோகம்.**

31. இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமையை முன்னிட்டு, சோளம், மைலோ எனப்படும் அமெரிக்கச் சோளம் ஆகியவற்றையும் மத்திய அரசிடமிருந்து வருவித்துத் தமிழ்நாடு மக்களுக்கு வழங்க உணவுத் துறை முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. சென்ற ஆண்டு 32,000 டன்கள் மைலோ தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு மத்திய அரசு அமெரிக்காவுடன் செய்துகொண்டுள்ள புதிய பி.எல். 480 ஒப்பந்தத்தின் கீழ், கோதுமை இறக்குமதிக்கு வசதி செய்யப்பட்டுள்ளதேயொழிய மைலோ இறக்குமதிக்கு வசதி செய்யவில்லை. ஆகவே, இந்த ஆண்டு நமக்கு மைலோ கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. மைலோவுக்குத் தமிழ்நாடு மக்களிடையே நல்ல வரவேற்பு இருப்பதால், மைலோவைத் தருவிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகின்றோம்.

37. இதைத்தவிர, நவீன முறைப்படி பெரிய அளவில் இயங்கும் அரைவை ஆலைகளை நிறுவுவதற்குக் கூட்டுறவு அமைப்புக்கும், இந்திய உணவுக் கூட்டு நிறுவனத்திற்கும், (Food Corporation of India) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், தஞ்சாவூர், செம்பொன்னார்கோவில், மன்னார்குடி, திருவையாறு, கும்பகோணம், மாயவரம், பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இந்த அரைவை ஆலைகள் நிறுவப்படும். தென்னார்காடு மாவட்டத்தில், சிதம்பரத்திலும், கள்ளக்குறிச்சியிலும், இரு ஆலைகள் நிறுவ உத்தேசம் உள்ளது. திருச்சி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளியிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகத்திலும், செங்கற்பட்டிலும், வடாற்காட்டில் செய்யாறிலும், மதுரையிலும், திருநெல்வேலியிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சியிலும் நவீன ஆலைகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆலைகள் ஒரு மணி நேரத்தில் 4 டன் நெல்லை அரைக்கக் கூடியவை. நெல்லைப் புழுங்க வைக்கும் சாதனங்கள் இந்த ஆலைகளில் பொருத்தப்படும். பெரிய அளவில் இயங்கக்கூடிய இந்த நவீன ஆலைகள் நிறுவப்பட்ட பின்பு, துரிதமாக, தரமான, அரிசியைத் தயார் செய்வதற்கு நம் மாநிலத்தில் உள்ள வசதிகள் மிகக் கணிசமாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### மண்ணெண்ணெய்.

38. மண்ணெண்ணெய் வினியோகம் இப்பொழுது ரேஷன் முறையின் கீழ் கொண்டுவரப்படவில்லை. தமிழ் நாட்டின் தேவைக்கு மத்திய அரசு 1968 டிசம்பர் மாதம் முடிய மாதம் 27,509 கிலோ லிட்டர்கள் மண்ணெண்ணெய் ஒதுக்கி வந்தது. (ஒரு கிலோ லிட்டர் என்பது 1,000 லிட்டர் அடங்கியது). சென்ற சில மாதங்களாக 30,431 கிலோ லிட்டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டின் பெரும் பகுதி இந்திய எண்ணெய் நிறுவனம் ( Indian Oil Corporation ) மூலம் தரப்படுகிறது. பொதுவாக, இந்த ஒதுக்கீடு நம் தேவைக்குப் போதுமானதே. ஆயினும், இந்திய எண்ணெய் நிறுவனத்திற்குக் கொச்சியிலிருந்தோ, அயல் நாட்டிலிருந்தோ எண்ணெய் வந்து சேருவதில் தாமதம் ஏற்படும் சமயங்களில் வினியோகத்தை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. கப்பல்கள் வருவதில் தாமதம் ஏற்படும் செய்தியைப் பயன்படுத்திக்கொண்டு சிலர் வேண்டுமென்றே ஒரு தட்டுப்பாடு நிலையை உண்டாக்கி விடுகின்றனர். இதைத் தடுத்து வினியோகத்தைச் செம்மையாக்க, உணவுத் துறை உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுத்து வருகிறது. மண்ணெண்ணெயின் விலை சென்னை நகரில் மார்ச் மாதத்திற்கு முன்பு லிட்டருக்கு 51 பைசாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மத்திய அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் மண்ணெண்ணெய்க்கு கலால் வரி உயர்த்தியதன் காரணமாக, மார்ச் மாதம் 3-ம் தேதி முதற்கொண்டு லிட்டர் 55 பைசாவாக சென்னை நகரில் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரண்டு மாதங்களில் சென்னையில் நிறுவப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, உற்பத்தியைத் தொடங்கியவுடன், நம் தேவைக்கு மேலாகவே மண்ணெண்ணெய் தாராளமாகக் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

### பொது.

39. உணவு விளைச்சலில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு, நயமான விலையில் அனைவருக்கும் தட்டுப்பாடு இன்றி அரிசி கிடைக்கக் கூடிய வசதியான சூழ்நிலை உருவானதும், உணவுக் கட்டுப்பாடுகளுக்குத் தேவை இராது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. ஆனால் அத்தகைய வசதியான சூழ்நிலை உருவாகும் வரை, விலைவாசிகள் உயருவதையோ, உணவுப் பொருள்கள் மக்களுக்குக் கிடைப்பதில் சிரமம் ஏற்படுவதையோ, அரசாங்கம் அனுமதிக்க முடியாது. ஆகவே தான் நாம் கட்டுப்பாடுகளை அமல் நடத்த வேண்டியுள்ளது. செம்மையான வினியோகம் நடப்பதற்கு உதவியாக



இக் கட்டுப்பாடுகளைத் திறமையாகவும், பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையிலும் நடத்தி வர, உணவுத் துறை தன்னால் இயன்ற வரை பாடுபட்டு வருகின்றது. இந்த அடிப்படையை உணர்ந்து, பொது மக்கள் நலனுக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பை அளித்து, கொள்முதல் சிறப்பாகவும், வினியோகம் செம்மையாகவும் நடக்க உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வினாக்கள்—விடைகள் 



கொடுத்து அந்த இடங்களில் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கேற்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு கொளத்தூர் கோதண்டம் :** குறிப்பிட்ட எருவாக்கம் கிராமத்தில் நஞ்சை நிலமாக இருப்பதால், அதை வாங்கமுடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். நான்கு நாட்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் வேறு புறம்போக்கு நிலமோ, புஞ்சையோ இல்லை என்று சொன்னால் நிச்சயமாக அதை வாங்குவதற்கு சர்க்கார் உத்தரவு போடும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அதற்கு உடனடியாக சர்க்கார் உத்தரவு போடுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எருவாக்கம் கிராமத்திலே ஏற்கனவே அரிஜன மக்களுக்கு 1·99 ஏக்கர் நிலம் ரூபாய் 2,288-க்கு எடுக்க செயற்குறிப்பு வந்து அதைத் தவிர்த்து வேறு புஞ்சை நிலம் கொடுக்கலாமா என்று மீண்டும் கலெக்டர் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது அவர்களுடைய பதில் இன்னும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஆனால் வேறு புஞ்சை நிலம் இருக்கிறதா என்று அறிவிப்பார்களானால் அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளலாம். அப்படி இல்லையென்று சொன்னால் ரூபாய் 2,288-க்கு இந்த நஞ்சை நிலத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அந்த நிலத்தை எடுப்பது பற்றி முடிவாகும்.

கோவை தலைமை மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு.

*** 437 வினா—திரு சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை அரசினர் தலைமை மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இக்குறையை நீக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**
(அ) and (இ) : தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் தலை மருத்துவமனைக்கு குடிதண்ணீர் கோயம்புத்தூர் நகராட்சியால் வினியோகிக்கப்படுகிறது. ஆனால் தற்போது இருக்கும் தண்ணீர் பற்றாக்குறையால் ரூ. 16,300 செலவில் ஒரு குழாய்க் கிணறு கோவைத் தலைமை மருத்துவமனையில் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

**திரு டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், கோவை மருத்துவ மனையில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது, அதற்காகக் குழாய்க் கிணறு அமைத்துத் தண்ணீர் எடுக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தண்ணீரே இல்லாமல் அங்கே பேஷண்டுகளுக்கு ஆபத்து ஏற்படுவதற்கு முன்னாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதற்கு ஏதாவது கால வரையறை குறிக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏற்கனவே அந்த மருத்துவ மனையில் பற்றாக்குறை உண்டு. அந்தப் பற்றாக்குறையை நீக்கவேண்டும் என்பதற்காகத்தான் 2 அங்குலம் ஆக இருந்த குழாயை 4 அங்குலம் ஆக அகலப்படுத்தவேண்டும் என்று ஒரு புதிய திட்டத்தையும் 100 படுக்கைகள் கொண்ட வேறு கட்டிடத்திற்கு ஒரு புதிய குழாய்க் கிணறு (போர் வெல்) எடுப்பதற்கான ஒரு திட்டத்தையும் நிறைவேற்றித் தண்ணீரைத் தருகிறோம். ஆனால், அந்தத் தண்ணீரும் இப்பொழுது மருத்துவ மனையில் இருக்கும் அத்தனை பேருக்கும் போதவில்லை. இப்பொழுது மருத்துவ மனைக்கு நகராட்சி தண்ணீர் கொடுத்துக்கொண்டு

வருகிறது. எனவே, நகராட்சிதான் அந்தச் செயலிலே ஈடுபடவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டு, நகராட்சி இன்றைக்கு அந்த நிலையில் இருக்கவில்லை என்பதை மீண்டும் மீண்டும் கடிதத் தொடர்பு மூலமாக அறிந்தபிறகு, அரசாங்கம் $6\frac{1}{2}$ அங்குல அகலமுள்ள குழாய்க் கிணறு (போர் வெல்) போட்டு, அவசரமாக அந்த மருத்துவ மனையில் இருக்கிறவர்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யவேண்டுமென்பதற்காக 16,000 ரூபாய் செலவில் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. விரைவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றி அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Apart from the scarcity of water in the Headquarters Hospital at Coimbatore, is the Minister aware of the fact that the entire population of Coimbatore Town is now subject to scarcity of water, what is the total number of gallons supplied to the people per day and how much does each family get out of it ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வியை ஒட்டியதாகவா உங்கள் துணைக் கேள்வி இருக்கிறது ?

**திரு கே. விநாயகம் :** அப்படித்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "மருத்துவ மனையில் தண்ணீர்த் தட்டுப்பாடு" பற்றியது மூலக் கேள்வி. தாங்கள் பொதுவாக கோயம்புத்தூர் நகரத் தண்ணீர்த் தட்டுப்பாடு பற்றிக் கேட்க ஆரம்பிக்கிறீர்களே. இப்படியே போனால், மற்றவர்கள் மதுரையைப்பற்றிக்கூடக் கேட்க ஆரம்பித்துவிடலாம்.

**திரு கே. விநாயகம் :** அப்படியெல்லாம் "ஸர்கம்ஸ்க்ரைப்" பண்ண முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வியை விட்டு, துணைக் கேள்வி ரொம்பத் தொலைவாகப் போகக் கூடாது.

**திரு கே. விநாயகம் :** நான் கோயம்புத்தூரில்தான் இருக்கிறேன் (சிரிப்பு)

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** ஆஸ்பத்திரிக்குள் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கோயம்புத்தூர் நகரத்திற்குத் தண்ணீர் தருகிற முறை வேறு, மருத்துவ மனைக்குத் தண்ணீர் தருகிற முறை வேறு, மூலக் கேள்வி, மருத்துவ மனையில் இருக்கும் தண்ணீர்த் தட்டுப்பாட்டைக் குறித்துத்தான். இருந்தாலும், பதில் சொல்கிறேன். சில தினங்களுக்கு முன்னால் இந்த மன்றத்திலேயே கோவை நகரத் தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்கு நான் விளக்கமாக ஒரு உரையாற்றியிருக்கிறேன். அந்த வகையில், சிறுவாணியிலிருந்து கோவைக்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டும். அதற்காக கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடிந்து, அவர்கள் தண்ணீர் தருவார்கள் என்று நம்புகிறோம். என்றாலும் இப்போதிருக்கும் நெருக்கடியை யொட்டி, செல்வச் சிந்தாமணி, பெரியகுளம், குமாரசாமிகுளம் ஆகிய இந்தக் குளங்களிலிருந்து குழாய்க் கிணறுகள் (போர் வெல்) ஐந்து அவசரமாகத் தோண்டியெடுத்து, தண்ணீர் தரவும், அதல்லாமல், 100 கிணறுகள் வீதிகளில் எடுத்து அந்த நகர மக்கள் அனைவருக்கும் தண்ணீர் தரவும் திட்டம்





தீட்டப்பட்டிருப்பது பற்றி நான் ஏற்கெனவே இந்த மன்றத்தில் கூறியிருக்கிறேன். இவைகளெல்லாம் அவசர காலத்திற்கு இருக்கின்ற நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தீட்டப்பட்ட திட்டங்களாகும். எப்ரல் மாதம் முதல் தேதிக்குள் 100 கிணறுகள் எடுக்கப்பட்டுவிடும். இந்த மூன்று குளம் பகுதிகளிலும் ஐந்தாறு கிணறுகள் வெட்டியெடுத்து தண்ணீர்ப் பற்றாக்குறையை நீக்கிவிட முடியும்.

குடி நீர் வசதிகள்.

**438 வினா—திரு பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம், நத்தத்திற்குக் குடிதண்ணீர் வழங்குவதற்காக அதற்கு அண்மையில் உள்ள விரிச்சலாற்றில் கிணறு அமைக்கும் திட்டம் என்னவாயிற்று ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நத்தத்திற்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்றும் இல்லை.

**திரு பெ. மலைச்சாமி :** நத்தம் . ஒரு பேரூராட்சியாகும். இந்த ஊரில் தற்போது மேல்நிலைத் தொட்டி கூட இயங்கவில்லை. விரிச்சலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்குத் திட்டம் இருந்ததாகச் சில அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக மேலும் ஏதாவது ஆய்வு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1961-ம் ஆண்டு எடுத்த ஜனன மரணக் கணக்கின்படி அங்கே 12,757 பேர்தான் மக்கள் தொகை என்று கூறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மூன்று கிணறுகள் இருக்கின்றன. பற்றாக்குறையை நீக்குவதற்காக மேலும் இரண்டு கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. எனவே இப்பொழுது இந்த ஆண்டு ஒதுக்கிய ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தில் அந்த நத்தம் பகுதிக்குத் தண்ணீர் கொண்டுவருகிற திட்டம் ஏதும் சேர்க்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக, விரிச்சலாற்றிலிருந்து நத்தத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் செயற்குறிப்பு எப்போதுமே இருந்திருக்கவில்லை.

**திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, இந்தக் குடி தண்ணீர்ப் பிரச்சினையைப்பற்றி மூன்று கேள்விகள் இருக்கின்றன. ஒன்று, மருத்துவ மனைக்குக் குடி தண்ணீர் கொண்டுவருவது பற்றியது. இரண்டாவது நத்தத்திற்கு. மூன்றாவது, திருப்பரங்குன்றத்திற்கு. இப்படி இருக்கிறது. பொதுவாக நாடு பூராவுமே குடி தண்ணீர்ப் பஞ்சம் இன்றைய தினம் இருக்கிற காரணத்தினாலே, இதை நிவர்த்திப்பதற்கு "வாட்டர் போர்டு" ஒன்று அமைத்து, பரவலாக எல்லா இடங்களுக்கும் கிடைக்கத்தக்க அளவுக்கு சர்க்கார் ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** "வாட்டர் போர்டு" ஒன்று அமைக்கவேண்டும் என்கிற எண்ணம் அதிகாரிகள் மத்தியில் இருந்து, அதுபற்றி வெகுவாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால்; இன்னமும் அரசாங்கம் அதுகுறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை. ஆனால், பொதுவாக, தற்போது பருவமழை பொய்த்து அதன் காரணமாக எல்லா இடங்களிலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதற்காக, அவசர அவசரமாக எந்த எந்தப் பகுதிகளில் மிக மிகக் கவனம் செலுத்த வேண்டுமோ அந்தப் பகுதிகளில் எல்லாம் அவசரமாக கவனம் செலுத்தி வருகிறோம். ஆனால், கோவை உதகை, கோவில்பட்டி, ஆவடி போன்ற இன்னும் பல பகுதிகளில் அவசரமாக சில திட்டங்களையெல்லாம் தீட்டி உடனடியாகத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் முடிவெடுத்து உடனுக்குடன் செய்துகொண்டுதான் வருகிறது.

**439 வினு—திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :

மதுரை, திருப்பரங்குன்றத்திற்குக் குடி தண்ணீர் வசதி அளிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** திருப்பரங்குன்றத்திற்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்றும் இல்லே.

**திரு. எஸ். அக்னிராஜு :** தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் ஒரு முக்கியமான யாத்திரிகர் ஸ்தலம். வாரத்தில் இரண்டு முறை ஆயிரக்கணக்கானவர்கள் அங்கே சென்றுக் கொண்டு வருகிருர்கள். அந்தக் கோயிலுக்கு வருஷமொன்றிற்கு ஆறு இலட்ச ரூபாய் வருமானம் இருந்தும், அதை மதுரை தேவஸ்தானத்தோடு சேர்த்துக்கொண்டிருப்பதால், அங்கே எந்தவிதமான வசதியும் இதுவரை செய்துகொடுக்கப்படவில்லே. ஆகவே, உடனடியாக தனிப்பட்ட கவனம் செலுத்தி அதற்கு ஏதாவது வசதி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஊராட்சி மன்றங்கள்அவைகளின் எல்லேக்குட்பட்ட இடங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து தரவேண்டும் என்று விதி இருக்கிறது. அந்த வகையில் அந்த ஊராட்சி மன்றத்தின் தலைவர் அவர்கள் அரசாங்கத்தைக்கூடப் பல முறை நாடியிருக்கிருர்கள். ஆனுல், அரசாங்கம் அதற்கு எந்தவிதமான திட்டமும் எடுத்துக்கொள்ளவில்லே. இப்பொழுது ஒரு கோடி ரூபாய் செலவழித்து 31 திட்டங்களே எடுத்துக்கொண்டு இருக்கிறது என்றுலும், அந்த 31 திட்டங்களில் திருப்பரங்குன்றம் பஞ்சாயத்துக் குடி தண்ணீர்த் திட்டம் சேர்க்கப்படவில்லே. அடுத்து இதைப்பற்றி யோசிக்கலாம் என்று கூடக் கூற விரும்புகிறேன்.

**திரு. சொ. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, வைகை என்று இருந்தும், கை வைத்தாலும் தண்ணீர் இல்லே. மண்வெட்டி வைத்து வெட்டினுலும் தண்ணீர் கிடைக்காத நிலே இன்று ஏற்பட்டிருக்கிறது மதுரையில். அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். இரயிலில் போகும்போது பார்த்தாலே தெரியும். அந்த அளவிலே மதுரையில் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. அதற்கு உடனடியாக நிவாரணம் செய்ய உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** வைகையில் கனம் உறுப்பினர் கை வைத்தால் உள்ளபடியே தண்ணீர் வருமோ என்னவோ தெரியாது. ஆனுல், பொதுவாகவே, மதுரை நகரம், அதைச் சுற்றியுள்ள பகுதிகள், இவை அனேத்துக்கும் தண்ணீர் தர வேண்டும் என்ற வகையில் மதுரைக்கு ஐம்பது இலட்ச ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்க வேண்டும் என்று மதுரை நகராட்சித் தலைவர் கேட்டிருக்கிருர்கள். ஆனுல், எந்த வகை என்று செயற்குறிப்பை அவர் அனுப்பவில்லே. சென்னேக்கு வருமாறு தந்தி மூலமாக அவரை அழைத்திருக்கிறேன். அவர் இன்றே நாளேயோ வருவார். வந்த பிறகு, எப்படி மதுரைக்குத் தண்ணீர் கொடுக்கின்றது என்கிற திட்டத்தை ஆலோசிக்கலாம். கிணறுகள் வெட்டி தண்ணீர் எடுக்கலாமா, அல்லது ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கலாமா என்பதைக் குறித்து அவர்கள் ஆலோசனே தெரிவித்தால், அதைக் குறித்து அரசாங்கம் பரிசீலனே செய்து, சுற்றுப்புறங்களில் இருக்கும் இடங்களுக்குக் கூட தண்ணீர் கொடுக்கக் கூடிய முறைகளே எல்லாம் அரசாங்கம் கவனிக்கும்.

**திரு. எஸ். அக்னிராஜு :** திருப்பரங்குன்றத்தில் உள்ள தேவஸ்தானத்திற்கு வருஷத்திற்கு ஆறு லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. தேவஸ்தான நிதியிலிருந்து குடி தண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதைப் பற்றி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் அந்த தேவஸ்தானத்தை அணுகினுர்களா என்று தெரியவில்லே. அணுகியிருந்தாலும், இல்லாவிட்டாலும் அரசாங்கம் அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

*அரசு பொது மருத்துவ மனேயில் நிலேய மருத்துவ அதிகாரி.*

***440 வினு—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

சென்னே மத்திய மருத்துவ மனேயில் (ஜெனரல் ஆஸ்பத்திரி) ஆர்.எம்.ஓ. எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிருர் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தமிழ்நாடு மருத்துவ மனேயில் உள்ள சிவில் மருத்துவ அதிகாரிகள் சென்னே, அரசு பொது மருத்துவமனேயில் நிலேய மருத்துவ அதிகாரியாக (R.M.O.) நியமிக்கப்படுகின்றனர்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** : மருத்துவ மனேயில் இருக்கும் ஆர்.எம்.ஓ.க்கள் நிர்வாகத்தையும் பார்த்துக்கொள்ள வேண்டும். மருத்துவத் துறையிலும் கவனம் செலுத்த வேண்டும். ஸ்டோரில் இருக்கும் விலே உயர்ந்த மருந்துகளேப் பாதுகாக்க வேண்டுமென்ற முறையில் விதி இருக்கிறது. அதை மாற்றியமைக்கும் வகையில் நிர்வாகத்தைப் பொருத்தவரை ஒரு நிர்வாக அதிகாரியைப் போடவும், மெடிகல் ஸ்டோர்சைப் பொருத்தவரை சூப்பரின்டென்டெண்ட் ஒருவரைப் போடவும், மருத்துவம் சம்பந்தப்பட்ட மட்டில் ஆர்.எம்.ஓ. பணி என்றும் பிரித்து அமைக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆர்.எம்.ஓ. பதவியில் இருப்பவர்கள் நிர்வாகத்திலேதான் இருக்கலாமே தவிர, தனியாக மருத்துவ (பிரைவேட் பிராக்டீஸ்) பார்க்க முடியாது. கனம் உறுப்பினர் அவர்கள்கூறிய யோசனேகளில் ஏதேனும் எடுத்துக்கொள்ளலாமா என்று பரிசீலிக்கலாம். தற்போதுள்ள முறையில் ஆர்.எம்.ஓ. நிர்வாகதிலே முழு கவனத்தையும் செலுத்த வேண்டுமென்று விதி இருக்கிறது.

**திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** அரசாங்க மருத்துவ மனேயில் மருத்துவம் செய்கிற டாக்டர்கள் எத்தனே ஆண்டுக் காலம் வரை தொடர்ந்து ஒரே மருத்துவ மனேயில் பணியாற்றலாம் ? சில மருத்துவ மனேகளில் ஏழாண்டுகள் பத்தாண்டுகளுக்கு மேலும் பணியாற்றுகின்ற நிலேமை இருக்கிறதே. ஒரு இடத்தில் இத்தனே ஆண்டு காலந்தான் பணியாற்ற வேண்டும் என்ற நிர்ணயம் இருக்கிறதா ? அப்படி ஒரே இடத்தில் தொடர்ந்து இருப்பவர்கள் மாற்றப்படுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதற்கான வரையறை இருக்கிறது. நிர்வாக முறைப்படி பிரைமரி ஹெல்த் சென்டர்களில் பணியாற்றக்கூடியவர்கள் மூன்ருண்டு காலம் பணி புரிய வேண்டுமென்று விதி இருக்கிறது. கணவன் மனேவி இருவரும் மருத்துவர்களாக இருப்பார்களானுல், அவர்கள் இருவரும் ஒரே இடத்தில் வாழ வேண்டுமென்ற நிர்ப்பந்தம் காரணமாக மாற்றம் ஏற்படக் கூடாது என்று விரும்புகிருர்கள். இதிலே பல சிக்கல்கள் இருப்பதால், சட்டப்படி கவனிக்காமல் மனிதாபிமானத்தோடு கவனித்து, கணவனும், மனேவியும் ஒன்ருக இருக்க வேண்டும், பிள்ளேகள் படிக்க வேண்டும் என்ற முறையில் மாற்றம் செய்ய முடியாத நிலே இருக்கிறது. அதோடு, அந்த வட்டார மக்களுக்குப் பிடித்துவிட்ட காரணத்தால், மருத்துவர்களே மாற்றக் கூடாது என்று கூறுகிருர்கள். சட்டமன்ற உறுப்பினர்களே அடிக்கடி வந்து டாக்டர்களே மாற்றக் கூடாது என்று கூறுகிருர்கள், அவர்கள் மாற்றப்பட வேண்டுமென்று சட்டம் இருந்தும் இவற்றை எல்லாம் உத்தேசித்து நடைமுறையில் மாற்றுவதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

திரு வி. கே. கோதண்டராமன் : ஆர்.எம்.ஓ.க்கள் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆரம்பத்திலேயே சொன்னேன். சிவில் சர்ஜன், பஸ்ட் கிளாஸ் அதிகாரிகளாக இருப்பவர் கள்தான் ஆர்.எம்.ஓ.க்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம் : மாவட்ட மருத்துவ அதிகாரிகளாக இருப்பவர்களை ஆர்.எம்.ஒக்களாக நியமிப்பதாகத் தெரிகிறது. இவர்கள் சீனியாரிடி அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா அல்லது திறமையின் அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது கொஞ்சம் உயர்ந்த பதவியாக இருக்கும் காரணத்தால் நீண்டகால அனுபவம், திறமை இவைகளை எல்லாம் அனுசரித்துத்தான் பதவியில் அமர்த்தப் படுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM: Sir, may I know from the Hon. Minister whether the R.M.O. of the Madras General Hospital is in charge of only administrative activities inside the hospital or is he also in charge of the distribution of medicines as well as in charge of stores and if so, will the Government be pleased to determine the special duties which have to be done by this officer ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து ; என்னிடத்திலே இருக்கும் குறிப்பின்படி He was posted to the administrative side as R.M.O. என்று இருக்கிறது. நிர்வாகத்திற்காகத்தான் இப்போது ஆர்.எம்.ஓ. போடப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி கட்டடம்.

*441 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டிலுள்ள மருத்துவக் கல்லூரியை இட வசதிக் குறைவால் வேறு இடத்திற்கு மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Hosur Government Hospital.*

*442—*Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :

(*a*) whether there is any proposal to increase the bed strength in the Hosur Government Hospital ; and

(*b*) if so, when it will be implemented ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ)

(இ) 1970-71-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ள உத்தேசம் இருக்கிறது.





THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to the climatic conditions, the Hosur taluk stands on a different footing. It is very cold there for four months. Our present Hon. Minister for Public Works, who visited the place last year found the patients lying on ground and also on mats and he also expressed sympathy for them. So, keeping these aspects of the matter in the mind, will the Hon. Minister for Public Health be pleased to give top priority and provide beds not only to the hospital in Hosur but also to the hospital at Denkanikotta.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : டெங்கனிக் கோட்டை பற்றிய குறிப்பு இல்லை. ஹோசூரில் 44 படுக்கைகள் கொண்ட அவுட் பேஷண்ட் ப்ளாக், லேபர்-கம்-ஆப்பரேஷன் தியேட்டர், இன்பெக்ஷியல் டிஸீஸ்ஸ் வார்டு, மார்ச்சுவரி பிளாக், கட்டுவதற்கும், இரண்டு மருத்துவ அதிகாரி இல்லங்களும், ஆறு செவிலியர் இல்லங்களும், இரண்டு மருத்துவத் துணை அதிகாரி இல்லங்களும் கட்டுவதற்குச் செயற்குறிப்புகள் உள்ளது. நிதிப் பற்றாக் குறை காரணமாக 1970-71-ம் ஆண்டில் எடுத் துக் கொள்வதாக குறிப்பு இருக்கிறது.

உதகையில் நடுத்தர வகுப்புப் பயணிகள் விடுதி.

வினா. *443 திரு கே. போஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கோடை காலங்களில் உதகைக்கு வரும் நடுத்தர வகுப்புப் பிரயாணிகள் குறைந்த கட்டணத்தில் தங்கக்கூடிய பிரயாணிகள் விடுதி ஒன்று கட்டிக் கொடுக்கும், செயற்குறிப்பு ஏதேனும் சர்க்காரிடம் உள்ளதா

(இ) ஆம் எனில், இந்த விடுதி எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) உதகையில், மாணவர்கள், மற்றும் சுற்றுலாப் பயணிகள், இரு வருக்கும் பொதுவாக உதவும் வகையில் ஒரு சுற்றுலாப் பயணிகள்—மாண வர்கள் விடுதி கட்டுவது பற்றிய கருத்து பரிசீலனையில் இருந்து வருகிறது.

(இ) இது எப்போது முடிவுபெறும் என தற்போது கூற இயலாது.

திரு கே. போஜன் : தற்போது உதகையிலுள்ள சர்க்கார் டூரிஸ்டு பங்களாவில் அதிக வருவாய் உள்ளவர்கள்தான் தங்க முடியும். தனிப் பட்டவர்கள் நடத்தும் ஓட்டலிலும் அதிகச் செலவாகிறது. ஆகவே, குறைந்த வருவாய் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாமல் இருக் கிறது. குறைந்தவருவாய் உள்ளவர்கள் தங்கும் அளவுக்கு ஒரு விடுதி ஒன்றை அரசாங்கம் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அங்கே பயணி கள் நிரந்தரமாக ஆண்டு பூராவும் வருவது கிடையாது. ஒரு ஆண்டில் மூன்று மாதங்கள்தான் அங்கு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அதற்காகப் பல பெரிய கட்டிடங்களைக் கட்டுவதற்கேற்ற வசதி இல்லை. ஆனால், பருவ காலத்தில் வருகின்றவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டு மென்பதற்காக ஒரு புதிய திட்டத்தை மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். உதகையில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கான விடுதி ஒன்றைக் கட்டி, பள்ளி நாட்கள் முடிந்த பிறகு அதிலே பயணிகள் தங்குகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு பெரிய கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அதற்காக விஜயநகரம் எஸ்டேட் என்ற பகுதியில் ஓர் இடத்தைக் கேட்டோம். அது உதகை வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடம். அவர்கள் அதைத் தர மறுத்துவிட்டார்கள். தற்

போது ஸ்டோன் ஹவுஸ் ஹில் என்ற இடத்தைக் கேட்டிருக்கிறோம். அது தகுதியான இடம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். அந்த இடம் கிடைத்த பிறகு மாணவர் விடுதி கட்டுவதன் மூலமாக விடு முறைக் காலத்தில் பயணிகள் அங்கு தங்கும் வகையில் புதிய திட்டம் இருக்கிறது.

கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுலம்.

வினா—*444 :திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம்-மகராஜபுரம், கஸ்தூரிபா காந்தி கன்னியா குரு குலத்திற்கு நமது அரசு செய்துவரும் உதவிகள் யாவை ?

(இ) இந்தக் குரு குலத்திற்கு மேலும் உதவிகள் செய்யும் செயற் குறிப்பு எதுவும் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**
(அ) வேதாரண்யம், மகராஜபுரத்திலுள்ள கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுல அனாதை இல்லம் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி ஒன்றினையும், அனாதை இல்லம் ஒன்றினையும் நடத்தி வருகிறது. கீழே விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளவாறு, மானிய உதவி விதிக் கோவையில் விதித்த முறைகளுக்கிணங்க இந்த நிலையங்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை வழங்குகிறது.

| | | சிறுவர்களுக்கான விடுதி. | உயர்நிலைப் பள்ளி. |
|---|---|---|---|
| 1966-67 | .. | ரூ. 8,631 | ரூ. 1,157. |
| 1967-68 | | ரூ. 6,917 | ரூ. 1,334. |

கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கருவிகள் முதலியவற்றை வாங்குவதற்கான மானியமாக 1967-68-ல் ரூ. 4,400 வழங்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

*Another dam across Cauvery near Mettur Dam.*

*445—*Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal before the Government for the construction of another dam across the river cauvery either at the upstream or at the downstream of Mettur Dam ?

மு.ப
9-39 **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. நா. காசிராமன் :** மழை காலங்களில் அதிகமாக வருகிற தண்ணீர் கடலில் விடப்படுகிறது. ஆகவே, ஹொகனக்கல்—மேட்டூருக்கு இடையே நடுவில் ஒரு அணை கட்டி அத் தண்ணீரைத் தேக்கினால் மழை இல்லாத காலத்தில் அது பயன்படுமென்று முன்பு பொதுவாகப் பேசப் பட்டு வந்ததே, அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா :** மேட்டூர் நீர்த் தேக்கத் திற்கு மேற்புறத்தில் ஹொகனக்கல் அருகில் ஓர் அணையைக் கட்ட சில தொடக்க ஆய்வு வேலைகளை மேற்கொள்ளப்பட்டன கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பாசன வசதி ஒன்றும் கிடையாது.





**திரு. எஸ். ஆறுமுகம் :** தற்போது மேட்டூர் அணையின் கீழ் ஒரு அணை கட்ட இயலவில்லை என்றாலும், தற்போதுள்ள அணையை மேலும் ஒரு பத்து அடி உயர்த்த உத்தேசமுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படி ஒரு உத்தேசம் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** ஹொகனக்கல் திட்டம் பற்றி மைசூர் ரசாங்கம் ஏதோ ஆட்சேபணைகள் எழுப்பியதன் காரணமாக அது நின நக்கிறது என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா ? அப்படியானால் ந்த ஆட்சேபணைகளை மாற்றி விரைவில் அதைத் துவக்குவதற்கு ஏற்பாடு ய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.** ஏற்கனவே குறிப்பிட்டது ால் கடிதப் போக்கு வரத்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. முடிவு ற்படவில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** திருச்சி மாவட்டத்தில் அப்பர் அணைக்கட்டில் ரெகுலேட்டர் கட்டி பாசன வசதிகள் அளிப்பதற்காக $1\frac{1}{4}$ கோடிரூபாயில் ரு திட்டமிட்டிருக்கிறார்களே, அது இந்த வருடத்தில் செயல்படுத்தப் படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இக் கேள்வி மூலக் கேள்வியோடு தொடர்பு உடையதாக இல்லை.

**திரு. கே. விநாயகம் :** போதுமான அளவிற்கு மழை இல்லாதபோது வெள்ளப் பெருக்கு இல்லை. ஆயினும் சில ஆண்டுகளில் அதிகப்படியான வெள்ளம் வந்து நம் அணைகளையெல்லாம் மீறி தண்ணீர் பிறகு கடலில் போகும் நிலைமை இருக்கிறது. அந்தக் காலத்தில் அதைத் தடுத்து நிறுத்தி நமக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு அப் ஸ்ட்ரீமில் அல்லது டவுன் ஸ்ட்ரீமில் அணை கட்டுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது. அதன் மூலம் தண்ணீரைச் சேகரித்து வைக்கலாம் அல்லவா ? இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் அவர்களின் நியாயமான கேள்விக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். 1961-ல் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால் பாசன வாயில்கள் உடைப்பெடுத்து சேதம் அடைந்தன. எனவே, வெள்ளத்திற்கான காரணங்களை ஆராயவும், காவிரி வடி நிலத்தில் வெள்ளப் பெருக்கினைக் குறைக்கவும், வெள்ளத்தால் ஏற்படும் தீங்குகளை மட்டுப்படுத்தவும், தகுந்த நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூறுவதற்கு சிறப்பு அதிகாரி ஒருவரை அரசாங்கம் நியமித்தது. மேல் அணைக்கட்டின் இரண்டு கால்களிலும் தக்க அளவில் நீர் விடப்படுவதற்கு உறுதியான ஏற்பாடாகவும், கொள்ளிடத்தில் ...பான்படி நீர் வடியச் செய்து அதனைக் கட்டுப்பாட்டில் வைக்கவும் காவிரி ஆறுக்கு மேல் அணைக்கட்டில் 1.80 கோடி மதிப்பீட்டுச் செலவில் தடுப்புச் சுவர் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று சிறப்பு அதிகாரி ஆலோசனை கூறினார். அது பரிசீலிக்கப்பட்டது. ஆனால் நிதி நிலைமை காரணமாக இத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் கேள்வி கேட்கலாம். ஆனால் அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்த முடியாது.

**திரு எஸ். ஆறுமுகம் :** மழை காலத்தில் தண்ணீர் வந்து வீணாக அது கடலில் போய் சேருகிறது. சேலம் மாவட்டத்தில் 10,000 எக்கர் களுக்கு பாசன வசதி அளிக்கும் வகையில் இப்படி ஓடுகிற ஆற்றின் மத்தியில் இரண்டு மூன்று இடங்களில் தடுப்பு ஏற்படுத்தி உபரி தண்ணீரை அங்குள்ள நிலப் பகுதிகளுக்கு பாசன வசதிக்கு கொடுக்கக் கூடிய வகையில் இதை பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் சொன்ன கருத்தை பரிசீலிக்கலாம்.

*கல்லணையைப் பலப்படுத்தல்.*

*446 வினா—**திரு. வை. சாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஸ், லாரி போன்ற வாகனங்களின் போக்குவரத்து தொடங்கும் வண்ணம் கல்லணையை பலப்படுத்தும் யோசனையை அரசு பரிசீலித்ததா ?

(இ) அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) அத்தகைய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு ஆர். கருப்பையா :** திருச்சியில் இருந்து கும்பகோணம் செல்வதற்கு அந்தப் பகுதி ரோடை சரியானபடி அமைத்தால் நலமாக இருக்கும். ஆகவே இனிமேலாவது அந்த ரோடை அகலப்படுத்தி லாரிகள், பஸ்கள் போவதற்கு ஏற்பாடு செய்ய வகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது, கல்லணையைப் பலப்படுத்தல் பற்றிய கேள்வி.

*'Gheraos' in Coimbatore.*

*447 *Q.*—Thiru N. S. V. CHITHAN and Thiru K. VINAYAKAM : Will the Hon. Minister for Labour be pleased to state whether a number of arrests have been effected in Coimbatore in connection with gheraos in April 1968 ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** "கெரோ" என்ற பெயரிலோ அல்லது வேறு எவ்வகையிலோ சட்டம் மீறப்பட்ட இடத்திலெல்லாம் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**திரு. என். எஸ். வி சித்தன் :** தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்று சமுதாயத்தைப் பீடித்திருக்கிற ஒரு கொடிய தொத்து நோயான இந்த கெரோ பலயிடங்களில் பரவலாக நடந்து வருகிறது. அதன்மேல் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு வழிவகைகள் இருந்தாலும் அப்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசு தயக்கம் காட்டுவது ஏன் ?

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** தமிழ்நாட்டில் பரவலாக கெரோ பாவி வருகிறது என்பதை அரசு ஒத்துக்கொள்ளாது. எங்கெங்கு கெரோ செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. சமாதானம் ஏற்பட்ட பிறகு சிலயிடங்களில் வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது.

Thiru K. VINAYAKAM : This instrument of ghearoing employers, principals, teachers, or vice-chancellor, is it a constitutionally admitted instrument or is this staging of protest against the superiors conceived only by the leftists organisations in this country ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** யார் கெரோ செய்தாலும் சட்டப்படி அதை அனுமதிக்க முடியாது என்று அரசு ஏற்கனவே அறிவித்திருக்கிறது. அது லெஃப்டிஸ்ட் ஆனாலும் சரி, ரைட்டிஸ்ட் ஆனாலும் சரி, காங்கிரஸ்ஆனாலும் சரி, யார் செய்தாலும் சரி சட்டப்படி அரசு அதை அனுமதிக்காது.



**திரு. கே. என். குமாரசாமி:** தொழிலாளர்கள் நியாயமான உரிமைகளைக் கூட நேராகக் கேட்கிறபோது அதை கெரோ என்று சொல்லி கைது செய்யப்படுவது நியாயமா ? நியாயமான உரிமைகளை எந்த அடிப்படையில் வற்புறுத்துவது என்பதுபற்றி அரசு ஏதாவது ஆலோசனை சொல்லியிருக்கிறதா ? இப்போதுள்ள நிலையில் அப்படி ஏதாவது கேட்கப்போனால் அது கெரோதான் என்று சொல்லி கைது செய்கிற நடவடிக்கையை அரசு கைவிடுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு இல்லை. மானேஜ்மெண்ட் கேட்டு கெரோ என்ற பெயரில் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவலை அனுப்பினால் அதுபற்றி அரசு விசாரிக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கழிந்த ஏப்ரலில் கோவையில் தொழிலாளர்கள் கெரோ செய்ததற்கான காரணங்கள் என்ன ? தொழிலாளர்களின் பிரச்னைகள் என்ன ? அந்தப் பிரச்னைகளை தீர்க்க அரசு என்ன வழிவகைகளை மேற்கொண்டது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏப்ரலில் நான்கு இடங்களில் கோவை மாவட்டத்தில் கெரோ நடந்திருக்கிறது. ஆனந்தகுமார் மில்ஸ், சரவணம்பட்டி; டெக்ஸ்டூல் கம்பனி, கோயம்புத்தூர்; கோவாப்பரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ், தாராபுரம்; யுனைடெட் ப்ளீச்சேர்ஸ், மேட்டுப்பாளையம்; சரவணம்பட்டியில் 182 பேர்கள் கெரோவில் ஈடுபட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு பிறகு வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. கெரோவிற்குக் காரணம், ஊதியத் தகராறு. டெக்ஸ்டூல் கம்பனியில் 22 பேர்கள் ஈடுபட்டார்கள். வழக்குநீதிமன்றத்திற்குப் போயிற்று. அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். கெரோவிற்குக் காரணம், வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது. கூட்டுறவு ஸ்பின்னிங் மில்ஸ், தாராபுரத்தில் ஐந்து தொழிலாளர்கள் கெரோவில் ஈடுபட்டார்கள். காரணம், லாக் அவுட்-ஐ எடுக்க வேண்டும் என்பது. வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது. மேட்டுப்பாளையத்தில் 18 பேர்கள் ஈடுபட்டார்கள். ஒரு எக்ரிமென்டை நிறைவேற்ற கெரோ செய்தார்கள். வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தொழிலாளர்கள் அவர்களுடைய நியாயமான உரிமைகளுக்காக வேண்டி, செய்த வேலைக்கு சம்பளம் கிடைக்கவில்லை அல்லது மாதக் கணக்கில் கதவடைப்பு செய்ததன் காரணமாக வேலையில்லாது கஷ்டப்படுவது இதுபோன்ற பிரச்னைகளை தீர்ப்பதற்காக வேண்டி கெரோ போராட்டம் நடத்துகிறார்கள். என்று சொன்னால் அது நியாயமா ? அல்லது அதை விட இந்த சர்க்காரை கவிழ்த்து விட வேண்டும் என்பதற்காக கெரோ இல்லாது வேறு பெயரால் போராட்டம் நடத்துகிறார்களே காங்கிரஸ்காரர்கள் அது ஒரு கொடுமையான வியாதி அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டை ஏன் கூறுகிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கெரோ நடைபெறுவதை கம்யூனிஸ்ட் சர்க்கார் கூட அனுமதிப்பது இல்லை.

Thiru K. VINAYAKAM : Is our Government convinced of the fact that the menace of ghearoing has resulted in the reduction of national production in the entire State ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பாதிக்கக்கூடிய அளவில் பொதுவாக கெரோக்கள் நடந்ததாகத் தெரியவில்லை.

**திரு ஆர். பொன்னப்ப நாடார் :** சார், இந்த முற்றுகை அல்லது கெரோவினால் தண்டிக்கப்பட்ட கேஸ்கள் எத்தனை என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தண்டிக்கப்பட்டதாக என்னிடத்தில தகவல் இல்லை. நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் இருக்கிறது.

### *Retrenchment of mill employees in Coimbatore.*

*448 *Q*.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware of the retrenchment of employees by the mill owners of Coimbatore in April 1968 ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 1968-ம் ஆண்டு எப்ரல் மாதத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்களை பெருவாரியான வேலை நீக்கம் செய்வது பற்றி கோயமுத்தூர் ஆலை நிர்வாகிகளிடமிருந்து அறிக்கை எதும் வரவில்லை. அந்த மாதத்தில் பஞ்சாலைகளில் ஆட்குறைப்பு செய்யப்படவுமில்லை.

**திரு என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர்களில் இல்லாது போனாலும் கூட வேறு எந்தெந்த ஆலைகளில் ஆட்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. எத்தனை பேர்கள் ? கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வி பஞ்சாலையைப் பற்றியது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, கோவையில் ஆட்குறைப்பு சம்பந்தமாக ஒன்றும் நடவடிக்கை இல்லை. ஆனால், சிக்கனச் சேமிப்பு என்பதன் பெயரால் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலமாக தற்காலிகமாக 10 ஆண்டுகளாக இருந்தவர்களுக்கு வேலையில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா ? அதே நேரத்தில் அந்தத் தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கனம் அங்கத்தினர் கூறுவது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

THIRU K. VINAYAKAM : May I know how many workers have been thrown out of employment, apart from retrenchment of employees by mill owners, and what steps this Government propose to take to reinstate them in the mills which should be opened after laborious negotiations between the Centre and the State ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வி ஆட்குறைப்பு பற்றியது. அந்த மாதத்தில் ஆற்குறைப்பு எதுவும் செய்யப்படவில்லை என்று நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

### மீனாட்சியம்மன் கோவில் திருப்பணி

* 49 வினா—**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திருப்பணிக்கான பொது வசூல் எவ்வளவு ?

(இ) அறநிலைய இலாக்கா மூலம் கொடுக்கப்பட்ட மான்யம் எவ்வளவு ?





(உ) திருப்பணி விழாக்குழு அந்த துறையின் மூலம் சர்க்காருக்கு திருப்பித்தர வேண்டிய பாக்கி ஏதேனும் உண்டா ?

(எ) திருப்பணியின் வரவு-செலவுகளை ஆடிட் செய்யப்பட்ட ஆடிட் ரிப்போர்ட்டின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ரூ. 23,39,491·89.

(இ) இந்து சமய-அறக் கட்டளைகள் துறை மானியம் எதையும் வழங்கவில்லை.

(உ) இந்த வினா எழவில்லை.

(எ) இத்தணிக்கை அறிக்கைகள் 1371 முதல் 1375 வரையிலுள்ள பசலிகளைப் பற்றியன. இந்தத் தணிக்கை அறிக்கைகள் மூலம் ஏற்பட்ட பொதுவான விளைவுகள் போதிய அளவு மனநிறைவு அளிப்பவையாக கருதப்படுகின்றன. இந்தத் தணிக்கை அறிக்கைகள் பல பக்கங்களைக் கொண்டவை. எனவே, பேரவையில் அவற்றை வைக்க இயலவில்லை.

THIRU N. KASIRAMAN : Similarly when temple funds are diverted to non-governmental functions, will the Government be pleased to audit those accounts and to place the audit report before this House since temple funds are public properties and are under the control of the Government ?

**மாண்புமிகு திரு. வே. வி. சுப்பையா :** இந்த அறிக்கைகள் ஆடிட் செய்யப்படுகின்றன. ஆனால் ஆடிட் ரிப்போர்ட் பக்கங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் வைக்க இயலவில்லை.

**திரு பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, இந்தத் திருப்பணியையொட்டி நடந்த ஒரு கோபுரத்திற்கான செலவை பிர்லா அவர்கள் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

### திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அறநிலையங்கள்.

வினா :* 450 **புலவர். பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் எத்தனை கோவில்கள் அறநிலைய பொறுப்பிலிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு.கே. வி. சுப்பையா :** திருச்சி மாவட்டத்தில் 1122 அறநிலையங்கள் இருக்கின்றன.

**புலவர். பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் இந்தக் கோயில்களைச் சேர்ந்த சொத்துக்களிலிருந்து எவ்வளவு வருமானம் அறநிலையக் குழுவிற்குக் கிடைக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதுபற்றிய தகவல்கள் என்னிடத்தில் இல்லை.

### குடியிருப்பு மனைகளுக்கு பட்டா வழங்கல்.

*431—வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், சுக்காலியூர் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தை குடியிருப்பு மனைக்காக பட்டா வழங்க வேண்டும் என்று கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) மேற்படி இடம் குடியிருப்புக்கு உகந்ததல்ல என்று சுகாதார அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டதால் கோரிக்கை தள்ளிவிடப்பட்டது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, மேற்படி இடம் நஞ்சை நிலம் அல்ல, வறட்சியான இடம். ஆகவே அதை மீண்டும் பரிசீலனை செய்து ஆராய்ந்து அந்த இடத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடியிருப்பு மனையாக மாற்றித்தர மீண்டும் முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.** நஞ்சை நிலம் அல்ல என்பதற்காக அஸைன் செய்யப்படவில்லை. இது வீடுகள் கட்ட உகந்த இடம் அல்ல என்று டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசரால் தெரிவிக்கப்பட்டிருப்பதால், அந்தக் காரணத்தின் அடிப்படையில் தாசில்தார் அவர்கள் கொடுப்பதற்கில்லை, அடமானம் செய்ய உகந்ததல்ல என்று கூறியிருக்கிறார்கள்.

**திரு கே. பி. எஸ். மணி :** சார், டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் என்னென்ன காரணங்களைக் கொடுத்து அந்த இடம் வீடு கட்டத் தகுதியில்லை என்று கூறியிருக்கிறார்கள் என்பதை அறிய முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விவரம் இல்லை. ஆனால், அவர்கள் வீடு கட்டுவதற்கு லாயக்கு இல்லை என்பதன் அடிப்படையிலே இதைக் குறிப்பிட்டிருப்பதால் தாசில்தார் அவர்கள் கொடுப்பதற்கில்லை என்று கூறியிருப்பதாக வருவாய்த்துறை அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

**திரு எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, இம்மாதிரியான புறம்போக்கு இடங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்காக அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்றுதான் திரு சௌந்தரபாண்டியன் அவர்களின் கேள்வி. ஹெல்த் ஆபீசர்கள் பள்ளம்,மேடு என்று எதையோ போட்டுவிடுகிறார்கள். இனிமேலாவது, இதை அரசாங்கம் பரிசீலனை செய்து—இல்லாவிட்டால் தனிக் குழுவை வைத்து—இப்படிப்பட்ட இடங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசாங்கக் கட்சியிலே இருக்கின்ற கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியாமல் இருப்பதுதான் வருத்தமாயிருக்கிறது. இந்த அரசாங்கம் 70,000 ஏக்கர்கள் தரிசு நிலங்களைக் கொடுத்தது. 70,000 ஏக்கர் அளவிலே உழுவதற்கும், வீட்டுமனை கட்டுவதற்கும் கொடுத்திருக்கிறது. அதோடு, நிரம்ப வீட்டுமனைகளுக்கு கொடுப்பது மட்டுமல்லாமல் ஹரிஜனங்களை இந்த லிஸ்டிலே முதன்மையாகக் கருதப்படவேண்டுமென்று சர்க்கார் உத்தரவே மாற்றப்பட்டிருக்கிறது. நிரம்பச் செய்வது என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொண்டால் நல்லது என்று கருதுகிறேன்.

**திரு என். கிட்டப்பா :** கோயில் நிலங்களிலிருக்கும், ஏழை ஹரிஜன மக்களையும், பிற்படுத்தப்பட்ட மக்களையும் அந்த இடங்களிலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் இந்த மன்றத்திற்கு ஏற்கனவே சொன்னேன். இம்மாதிரியான பிறருடைய நிலங்களிலே வீடுகள் கட்டிக்கொண்டிருப்பவர்களை வெளியேற்றக் கூடாது என்பதற்காக, பாதுகாப்பு அளிக்க மசோதா இந்த மன்றத்தின் முன்னால் வர இருக்கிறது என்பதைச் சிலநாட்களுக்கு முன்னால் இந்த மன்றத்தில் அறிவித்திருக்கிறேன்.





*** 432—வினா—திரு சு. துரைசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் குறிச்சி கிராமத்தில் உள்ள காலி இடங்களை பட்டா செய்து கொடுக்க கேட்டு 8—6—1966-ல் முன்னாள் இராணுவத்தினிடமிருந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, குறிச்சி கிராமத்தில் புறம்போக்கு இடம் இருக்கிறது. இனிமேலாவது, விண்ணப்பித்துக்கொள்பவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 8—6—1966 அன்று விண்ணப்பம் வந்துள்ளதா என்பதுதான் கேள்வி. அப்பொழுது வரவில்லை என்பதைத்தான் சொல்கிறேன். நிலம் இருக்கிறது என்றால் கண்டிப்பாக அரசாங்கத்தின் கொள்கை, கூடுமானவரையில் இதைக் கொடுப்பதற்கு ரொம்ப விரைவாகவும், துரிதமாகவும் 10, 15 ஆண்டுக்காலத்தில் நடைபெறாத நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, கவனிக்கப்படும் என்றுதான் பொருள்.

**திரு ஆர். நாகசுந்தரம் :** தலைவரவர்களே, முந்தைய சர்க்கார் ஓரிடத்தை முன்னாள் இராணுவத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். அதே இடத்தில் தியாகிகளுக்கும் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த இடத்தை வேறு தனி நபர்கள் அனுபவித்து வருவதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? இப்படிப்பட்ட பல குளறுபடிகள் பட்டா வழங்குவதிலே உள்ளதால் தான் நமது அரசு பட்டா வழங்க முடியவில்லை. ஆகவே, நீண்ட நாட்களாக யார் உள்ளார்களோ அவர்களுக்கே பட்டா செய்வதற்கு நமது அரசு முன் வருமா ?

(விடை இல்லை).

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** தலைவரவர்களே, இந்த பட்டா கொடுக்கின்ற நேரத்தில் அங்குள்ள பஞ்சாயத்துக்களுடைய தீர்மானம் தேவை என்று சொல்கிறார்கள். ஆனால் வேண்டுமென்றே பஞ்சாயத்து தடுத்துவிடுகிற தீர்மானத்தை போட்டுவிடுகிறது. அதை நிவர்த்திக்க அரசு ஏதாவது மாற்றுமுறையைக் கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை முழுவதும் நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. "வேண்டுமென்றே" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். "வேண்டுமென்றே" என்றால் அது யோசிக்கவேண்டிய பிரச்சனையே தவிர, பஞ்சாயத்து போர்டுக்கும் சில உரிமைகள் இருக்கின்றன. பஞ்சாயத்து போர்டிலே சில புறம்போக்கு நிலங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே பஞ்சாயத்து நலன்களுக்கும் தனிப்பட்டவர்களுடைய நலன்களுக்கும் முரண்பாடு வருகிற நேரத்தில் எந்த நலன்கள் பொது மக்களுக்கு இசைந்தவை என்பதை ஒட்டித்தான் இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

### *Tax exemption for certain film shows.*

***433—*Q.*—Thiru N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Finance be pleased to state whether tax exemption has been granted for film shows organised in connection with Flag Day celebrations during 1967–68 ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

[1969 மார்ச் 24

**திரு என். எஸ். வி. சித்தன் :** *பேரவைத் தலைவரவர்களே, கொடிநாள் விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படக் காட்சிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படுவதைப்போல பள்ளிக்கட்டடநிதி, கல்வி வளர்ச்சி நிதி போன்றவைகளுக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற திரைப்படக் காட்சிகளுக்கும் கல்வியின் வளர்ச்சியை கருத்திலே கொண்டு அரசாங்கம் வரி விலக்கு அளிக்குமா ?*

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** *இது மாதிரியான திரைப்படக் காட்சிகளுக்கு விதி விலக்கு அளிக்கப்படவில்லை.*

**திரு நா. வீராசாமி :** *தலைவர் அவர்களே, பிளாக் டே அன்றைய தினம் திரையிடப்படுகின்ற திரைப்படக் காட்சிகளுக்கு வரி விலக்கு அளித்ததாகச் சொன்னார்கள். இதனால் அரசாங்கத்துக்கு எவ்வளவு நஷ்டம் ? இப்படிப் பட்ட விலக்குகளை வேறு எதற்காவது கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** *அவைப்பற்றி விவரம் இல்லை.*

**திரு. டி. மார்டின் :** *ஸ்பீக்கர் சார், இந்தக் கொடி நாள் விழாவை ஏற்பாடு செய்தது யார் ? அதற்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது ? அந்தச் செலவை யார் யார் பொறுப்பேற்றுக்கொண்டார்கள் ?*

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The question does not arise.

**திரு. கே. போஜன் :** *தலைவர் அவர்களே, இவ்விதம் நடத்தப்பட்ட திரைப் படக் காட்சிகளினால், கொடி நாள் விழாவுக்காக ஏற்பாடு செய்யப் பட்ட காட்சிகளினால் மொத்தம் எவ்வளவு வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** *இங்கு உள்ள கேள்வி வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டதா என்பதுதானே தவிர, கொடிநாள் விழாவினுடைய விவரங்கள் பற்றியதல்ல. இந்தக் கேள்வியை தனி யாகப் போட்டால் அதற்கு பதில் அளிக்க முடியும்.*

### கால்நடை மருத்துவ மருந்துகள்.

*434—வினா : **புலவர். பொ. பொன்னம்பலம் :** *மாண்புமிகு உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கால்நடை மருத்துவத்திற்குரிய மருந்துகள் நம் நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றனவா ?*

(இ) *ஆமெனில், எங்கெங்கே மருந்து செய் மனைகள் இருக்கின்றன ?*

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :**

(அ) *கால்நடை மருத்துவத்திற்குரிய பெரும்பான்மை மருந்துப் பொருள்களும், மருந்துகளும் பொதுவாக நமது நாட்டில் தனியார் துறையில் தயாரிக்கப்படுகின்றன. மருத்துவப் பொருள்கள் கிடங்கில் கிடைக்காமலும் கால்நடை மருத்துவத் தொழிலுக்கு இன்றியமையாது தேவைப்படுபவையுமான உரிமை சார்ந்த சில மருந்துகள் அவசியத்தை முன்னிட்டுச் சில வேளைகளில் வெளிநாட்டிலிருந்து வாங்கப்படுகின்றன.*

(இ) *நோய்த் தடுப்புப் பணிக்குத் தேவைப்படும் உயிரியல் மருந்துகள் ராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திலும் உத்திரப்பிரதேசம் இஸத் நகரிலுள்ள இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலும் தயாரிக்கப்படுகின்றன. வெறிநாய்க் கடிநோய்க்குத் தேவையான ஊசி, மருந்து குன்னூர் பாஸ்டர் நிலையத்திலும், இஸத்நகர், இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலும் பம்பாய் ஹப்கின் நிலையத்திலும்*



1969 மார்ச் 24]

*தயாரிக்கப்படுகின்றது. மருந்துப் பொருள்களும் மருந்துகளும் தயாரிக்கும் தனியார் நிறுவனங்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.*

**புலவர் பொ. பொன்னம்பலம் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே அனைத்து மருந்துகளையும் தயாரிப்பதற்கு அரசு முயற்சி எடுத்து, ஆவன செய்ய முற்படுமா என்பதை அறிய விழைகிறேன்.*

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** *தமிழகத்தில் சில மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. வேறு சில மருந்துகள் வெளி நாட்டிலிருந்தும் நோயைப் போக்கவேண்டிய அவசியத்திற்காக இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது.*

**திரு அர். கருப்பையா :** *தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு வருகின்ற நெஞ்சடைப்பான் சப்பை நோய் போன்ற வியாதிகளுக்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். எனவே, தனியாக டாக்டர் குழுவை நியமித்து, முயற்சி செய்து கால்நடைகளுக்கு வருகின்ற இத்தகைய கொடிய வியாதிகளிலிருந்து அவற்றைக் காப்பாற்ற அரசு முயற்சி எடுக்குமா. என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** *டாக்டர்களிடமிருந்து அந்தக் குறை வரவில்லை. கனம் அங்கத்தினரிடமிருந்துதான் வருகிறது. இது பற்றி டாக்டர்களைக் கேட்டால் அதற்கு வேண்டிய மருந்துகள் இருப்பதாகத் தான் தகவல் கொடுக்கிறார்கள்.*

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** *தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் இராணிப்பேட்டையில்தான் நன்றாக மருந்து தயாரிக்கிறார்கள். நானே நேரில் பார்த்தேன். அதைப் பற்றிச் சந்தேகம் இல்லை. ஆனாலும் அதை இன்னும் கொஞ்சம் டெவலப் செய்வதற்கு, சில ஆராய்ச்சிகள் செய்வதற்கு அரசாங்கத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** *இராணிப்பேட்டை கால்நடை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நல்ல ஆராய்ச்சியும் நல்ல மருந்துகளும் கண்டுபிடிக்கிறார்கள். மலிவான விலையிலும் கூட அந்த மருந்துகள் விற்கப்படுகின்றன.*

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** *தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு சித்த வைத்திய மருந்துகளை பயன்படுத்த வேண்டுமென்று அரசு ஆராய்ந்ததா ? அதைப் பயன்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** *கால்நடைகளுக்கும் தமிழ் மருத்துவர்கள் நல்ல மருந்து கொடுத்துத்தான் வருகின்றார்கள். ஆனால் அது பற்றி அரசாங்கம் தனிப்பட்ட முறையிலே முயற்சி எடுத்துக்கொள்ள வில்லை. ஆஸ்பத்திரி இல்லாத இடங்களில் தனிப்பட்ட கால்நடை வைத்தியர்களும் சிறப்பான மருந்துகளைக் கொடுத்து வருகின்றார்கள். மாடுகளுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் உண்டாகக் கூடிய வியாதிகளும் தீர்ந்து வருகின்றன.*

### உணவு உதவித் தொகை.

*435—வினா—**திரு. ஏ. எம். இராஜா :** *மாண்புமிகு உணவு, வேளாண்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *இந்திய அரசிடமிருந்து உணவு உதவித் தொகை யாதேனும் இந்த அரசாங்கம் கேட்டுள்ளதா ?*

(இ) *ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?*

[1969 மார்ச் 24

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** மத்திய அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளில், இப்பிரச்னை எழுப்பப்பட்டது. இக்கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரிய வந்ததால், இது வற்புறுத்தப்படவில்லை.

**திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகவும், மாண்புமிகு மதியழகன் அவர்கள் உணவு அமைச்சராகவும் இருந்தபொழுது கோதுமைக்கு உதவித் தொகை அளித்த மாதிரி அரிசி சாப்பிடுகிறவர்களுக்கும் உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதை மத்திய அரசு மறுத்தவுடனே, பர்மாவிலிருந்து வந்த தமிழர்கள் அங்கே எவ்வளவு சொத்துக்களை எல்லாம் விட்டு விட்டு வந்திருக்கிறார்களோ அந்தத் தொகைக்கு ஈடாக அங்கிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு சம்மதிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை கூறப்பட்டதே அது என்னவாயிற்று ? அதை மீண்டும் வற்புறுத்த இந்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** முதலமைச்சர்கள் மாநாட்டில் மறைந்த அறிஞர் அண்ணா அவர்களோடு உணவு துறை அமைச்சராக இருந்த மதியழகன் அவர்களும் நானும் கலந்து கொண்டோம். அப்பொழுது அதை அண்ணா அவர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். பர்மாவிலிருந்து அரிசி கொண்டுவருவதற்கு அனுமதி தாருங்கள் என்று வற்புறுத்தினார்கள். மத்திய அரசு அதற்கு இணங்கவில்லை. மேற்கொண்டு சந்தர்ப்பம் வருகின்றபொழுது எல்லாம் வற்புறுத்திக் கூறுவோம். அந்தக் கோரிக்கையை வற்புறுத்துவதிலே நாம் எந்தவித தயக்கமும் காட்ட மாட்டோம்.

**Dr. H. V. HANDE :** Sir, as a policy has the Central Government been giving food subsidy for wheat and of late has the Central Government stated that they would stop this subsidy. If so, have this Government discussed this matter and got an assurance from the Government of India that if they continue the food subsidy for wheat they would also continue food subsidy for rice ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இப்பொழுது இருக்கிற நிலை கோதுமைக்காகச் செய்யப்பட்டு வந்ததை அவர்கள் எடுத்துவிட்டார்கள். நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை எங்களுக்குக் கொடுக்கவில்லை என்றால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்பது அல்ல. கோதுமைக்கும் கொடுக்க வேண்டும், அது நியாயமானதுதான். வட மாநிலங்களிலே இருக்கிற ஏழை மக்கள் அதை ஏராளமாகச் சாப்பிடுகிறார்கள். அதனாலே கொடுப்பதில் ஒன்றும் தவறில்லை. எங்களுக்கும் கொடுங்கள் என்ற நிலைமையிலேதான் நாம் முதலமைச்சர்கள் மகாநாட்டிலே கோரிக்கை வைத்தோம். ஆனால் இதனாலே ஏராளமாகச் செலவாகிறது என்ற பொறுப்போடு இந்த மானியமும் இப்பொழுது கொடுக்கப்படவில்லை.

**திரு. கே. விநாயகம் :** சார், மத்திய சர்க்கார் நமது சர்க்காருக்கு மாத்திரம் இந்த மானியத்தைக் கொடுக்கவில்லையா ? இதே மாதிரி தேசத்திலே இருக்கிற, மற்ற எல்லா சர்க்கார்கள் கேட்டிருந்தும் கொடுக்கவில்லையா ? நமக்கு மாத்திரம் ஏதாவது பாரபட்சம் காட்டுகிறார்களா மற்றவர்களை விட்டுவிட்டு.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** ஏற்கனவே நான் முதலிலே சொன்ன பதிலிலிருந்தும், இரண்டாவது டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலிலிருந்தும் விநாயகம் அவர்களுடைய கேள்விக்குப் பதில் இருக்கிறது.

மு ப. **திரு. கே. என். குமாரசாமி :** இப்பொழுதாவது பஞ்சம் ஏற்பட்டிருக்கிற நிலைமையில், உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமையில் ஏதோ 10,000 டன் கொடுப்பதாக இருக்கிறார்கள். அதை சப்ஸிடியோடு கொடுக்கிறார்களா, அதை எப்படி வழங்குகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



1969 மார்ச் 24]

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** நமக்கு இப்பொழுது அரிசி கிடைப்பதுதான் முக்கியம். சப்ஸிடியைவிட.

**திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** இந்தியாவிலேயே கோதுமை சாப்பிடுகிறவர்கள், அரிசி சாப்பிடுகிறவர்கள் என்று இரண்டு வகைதான் உண்டு. கோதுமை சாப்பிடுபவர்களுக்கு மட்டும் மத்திய சர்க்கார் ஏற்கனவே சப்ஸிடி கொடுத்திருக்கிறது. இப்பொழுது நிறுத்திவிட்டது. இப்படிக் கொடுத்த வரைக்கும் எவ்வளவு தொகை கோதுமைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கணக்குப் பார்த்து, அந்தத் தொகையை அரிசி சாப்பிடுபவர்களுக்கு மத்திய சர்க்கார் நியாயமாக நடந்து கொள்பவர்களாய், பாரபட்சம் இல்லாதவர்களாய் இருந்தால், கொடுக்க வேண்டும். இப்பொழுது நிலைமை இன்னும் கொஞ்சம் மோசமாக இருக்கிற காரணத்தினால், மீண்டும் இந்த அரசாங்கம் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி, கோதுமைக்குக் கொடுத்த பழைய தொகையைக் கணக்கிட்டு, அதற்கு ஈடாக அரிசிக்கு சப்ஸிடி வாங்க முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** ஏற்கனவே அவர்கள் கோதுமைக்குக் கொடுத்து வந்ததைப்போல அரிசிக்கும் கொடுக்க வேண்டும் என்று அவ்வப்பொழுது வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். சந்தர்ப்பம் வரும்பொழுதெல்லாம் வற்புறுத்திக்கொண்டு தான் வருகிறோம். முன்னாள் முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திற்கு அரிசிக்கு சப்ஸிடி கொடுக்க வேண்டும் என்ற நிலையை திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாமும் அதைத் தொடர்ந்து வற்புறுத்தத் தயங்கமாட்டோம். ஏற்கெனவே அவர்கள் கொடுக்கவில்லை என்றாலும் கூட, இப்பொழுது கொடுத்தால் தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடிக்குப் பெரிய உதவியாக இருக்கும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

**திரு. ப. மகாதேவன் :** வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய கோதுமைக்கும், இந்தியாவிலே உற்பத்தியாகக்கூடிய கோதுமைக்கும் உள்ள விலை வித்தியாசத்தைச் சரிபடுத்துவதற்குத் தான் சப்ஸிடி என்று கொடுத்தார்கள் என்று நான் சொல்கிறேன். அது சரிதானா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** மத்திய சர்க்காருக்கு மெம்பர் அவர்கள் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறார்கள். அப்படியானால் இப்பொழுது மத்திய சர்க்கார் அதை நிறுத்தி விட்டது. அதை அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அவர்கள் நமக்குக் கொடுக்கவில்லை. ஏதோ ஒரு காரணம் காட்டுவதற்காக அப்படிச் சொல்கிறார்கள். அந்தச் சமாதானத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. நமக்கு இருக்கிற நிலைமையில் நாம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு வருகிறோம். மத்திய அரசு இதை ஒரு சாக்காகச் சொல்கிறார்கள். அவர்கள் இந்தத் தொகையை சப்ஸிடியாகக் கொடுத்தால் நமக்கு உதவியாக அமையும். ஆகவே, அங்கத்தினர் அவர்கள் இப்பொழுது தமிழகத்தின் நிலைமையைக் கருதி, இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்காமல் இருப்பது நலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக்குறிக்கும்]

(2) நடைமுறைக் கேள்வி.

**"வக்காலத்து" என்ற சொல்லை அமைச்சர் பயன்படுத்தியது குறித்து**

**திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர், மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார். நண்பர் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கும்பொழுது வெளி நாட்டிலிருந்து வருகிற கோதுமைக்கும், இந்தியாவில் உற்பத்தியாகிற கோதுமைக்கும் விலையில் வித்தியாசம் இருப்பதால், அந்த ஏற்றத்தாழ்வை சரிக்கட்டுவதற்கு சப்ஸிடி கொடுத்தார்கள் என்பது சரிதானா

என்று கேட்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது உறுப்பினர் வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த மன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் உறுப்பினர்கள் எல்லோருக்கும் அவரவர்களுடைய கொள்கையைப்பற்றிப் பேசுவதற்கும், தங்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டால் அதைப்பற்றி கேட்பதற்கும் உரிமை இருக்கிறது. சட்ட மன்றத்தில் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசினார் என்று சொல்வது சரியா? நீதிமன்றத்தில் தான் வக்காலத்து முறை என்று இருக்கிறதே தவிர, சட்டமன்றத்தில் வக்காலத்து முறை இருக்கிறதா? வக்காலத்து வாங்கிப் பேசுகிறார் என்று சொல்வது தாங்கள் இந்தச் சபையில் அனுமதிக்கப்படுகிற வார்த்தை என்று கருதுகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒரு தேவையில்லாத பாயின்டு ஆப் ஆர்டர்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. Usually lawyers are the only class of people that are entitled to file 'vakalats' and argue in a Court of law on behalf of another, viz., their client. But here, in this House, we are not functioning as lawyers. We are all members duly elected by the people. We are not expected to file 'vakalats' here and argue on behalf of Government of India. Such being the case, is not the Hon. Minister lowering the reputation and dignity of the House when he goes to the extent of saying that we have taken vakalats from the Government of India.?

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** திரு. மார்டின் அவர்கள் எழுப்பிய பாயின்டு ஆஃப் ஆர்டரில் பொருள் இல்லை என்று நான் குறிப்பிட்டு விட்டேன். அப்படிச் சொன்னதில் ஒன்றும் தவறில்லை. அவர் பாயின்டு ஆஃப் ஆர்டர் மீது நமது விஷயகம் அவர்கள் இன்னொரு பாயின்டு ஆஃப் ஆர்டர் எழுப்புவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. மகாதேவன் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** தன்னிலை விளக்கம் பிறகு ஆகட்டும். இப்பொழுது இல்லை.

(3) அறிவிப்பு.

*சில அவையுரிமைக் கேள்விகள் ஒற்றிவைப்பு.*

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் நவசக்தி என்ற பத்திரிகையின்மீது கொடுத்திருந்த உரிமைப் பிரச்னையை இன்று எடுத்துக்கொள்வதாகக் கூறினேன். வேண்டிய தகவல் இன்னும் கிடைக்காத காரணத்தினால்நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் " நவமணி " என்ற பத்திரிகையின் மீது ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையும் நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

அடுத்து, உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் மீது ஒரு உரிமையை மீறிய பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்று இல்லாத காரணத்தினால், அதையும் நான் நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.



(4) கவன ஈர்ப்பு.

*(அ) மக்களவையில் வைக்கப்பட்டுள்ள பஞ்சப்பிரதேசங்கள் பட்டியலில் தமிழ்நாடு விடப்பட்டிருப்பதும், மைய அரசினிடமிருந்து போதிய நிதியைப் பெற வேண்டியதன் அவசியமும்.*

DR. H. V. HANDE : I wish to call the attention of Hon. the Minister for Finance to a matter of urgent public importance; namely,

"The deletion of the name of the State of Tamil Nadu in the list of drought affected areas submitted to the Parliament and the need to get an adequate Central financial assistance for the State."

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The decision to seek assistance from the Government of India for drought affected areas ni Tamil Nadu was taken on 17th February 1969 by the Chief Minister of Madras. The request for assistance reached the Government of India on 22nd February 1969. The Finance Ministery of the Government of India has clarified that only those States for which the Government of India have already given assistance would be included in the list submitted to the Parliament. The Union Government is sending a team to study the condition in Tamil Nadu which will be reaching Madras on 25th March 1969. On studying their report the State of Tamil Nadu would also be included in the list of drought affected areas and after release of assistance would be added to the list submitted to the Parliament. I wish to assure the House that Tamil Nadu will get finanical assistance from the Centre for drought relief in this State. During his last visit to Delhi, the Chief Minister of Tamil Nadu has discussed this with the Prime Minister, Deputy Prime Minister and Union Food Minister. It is also proposed to ask for more assistance from the Union Government for relief work for the period after 31st March 1969. The Prime Minister of India has agreed to visit Tamil Nadu on the 17th April 1969, as a token of her goodwill to this State.

DR. H. V. HANDE : Has this Government made any assessment of the total expenditure and then written a letter to the Central Government indicating the total expenditure necessary for complete relief operations for the drought conditions prevailing in Tamil Nadu? Has this Government got worked out schemes for each district and will the Government take the active co-operation of M.L.A's in the area in regard to relief operations and has this Government got written reply from the Central Government that they will include Tamil Nadu in the subsequent list that they are likely to place before Parliament?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் சொன்னதற்கு உண்மையான பொருள் அது தான். 25-ம் தேதி ஒரு ஸ்டடி டீம் இங்கே வருகிறது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் சுற்றுப் பயணம் செய்து நிலைமையை நேரில் கண்டறிவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. இந்த அரசாங்கம் ஏற்கனவே இதற்காக ரூ. 1 கோடி 57 லட்சம் அளவுக்கு ஒதுக்கியிருக்கிற நிலைமையைப்பற்றி எடுத்துரைத்

இருக்கிறது. இன்னும் நல்ல வகையிலே ரூபாய் 5 கோடி அளவுக்குக் கூட செலவாக வேண்டும் என்பதற்கான விவரங்களை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். இதிலே ஒரு முக்கியமான விவகாரம் என்ன வென்றால், மத்திய சர்க்கார் நமக்கு நிதி உதவி செய்வதில்லை. கடனாகத் தான் கொடுக்கிறார்கள். ஏதோ மத்திய சர்க்காரிடமிருந்து நமக்கு நிரம்பப் பணம் வந்துகொண்டிருக்கிறது என்ற தவறான கருத்தில் இந்த மன்றமும், வெளியில் இருப்பவர்களும் இருக்க வேண்டாம். கடனாகக் கொடுப்பதற்கே இவ்வளவு தாமதம் ஆகிறது, இவ்வவவு நாளாகிறது. அட்டவணையில் நாம் இருப்போமா என்ற நிலைமை இருக்கிறது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இதை மானியமாகக் கொடுக்க வேண்டும், கடனாக இல்லை என்பதை வற்புறுத்தியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருப்போம். பீஹார், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்கு அப்படி மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்தின் துரதிருஷ்டம் கடனாகக் கொடுப்பதற்கே இவ்வளவு தாமதம் ஆகிறது இங்கே உள்ள ஒரு கோரத்தன்மையை நமது முதல் அமைச்சர் அவர்கள் பிரதம மந்திரி அவர்களுக்கும், துணைப் பிரதம மந்திரி அவர்களுக்கும், உணவு மந்திரி அவர்களுக்கும் விளக்கிவிட்டு வந்திருக்கிறார்கள். இன்னும் மீண்டும் தொடர்ந்து அதற்கான வாய்ப்பு ஏற்படுவதற்கு அரசாங்கம் முயலும்.

**Dr. H. V. HANDE** : From the answer given by the Hon. Minister it looks as though the Central Governmnt is hesitating to give money by way of loan or 'manyam' (மானியம்). There seems to be no hope.

**The Hon. Thiru K. A. MATHIALAGAN** : I did not say so.

**Dr. H. V. HANDE** : There is that possibility. Will this Government, since we have only three or four days left, take the views of all the members or at least pass a unanimous resolution to bring home to the Central Government the intensity of the situation Probably, they, in the Centre, are not aware of the intensity of the drought situation in Tamil Nadu. that it is so severe here. To bring home to the Centre the intensity of the drought condition and the intensity of feeling of the Members, will this Government take some step like passing a resolution and convey it to the Central Government ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். இந்த மன்றமும் மாதம் முழுதும் தெளிவு படுத்தும் முறையில், நிதி ஒதுக்கீடு மசோதாவின் மேல் அழுத்தமாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எப்படி வகை செய்வது என்பதில் தான் சங்கடம். ஒரு புயல் வந்து சேதம் ஏற்படுகிறது என்றால், பணத்தை உதவியாகவோ தானமாகவோ கொடுப்பதில்லை. கடனாகக் கொடுத்து, கணக்கு எழுதி வைத்துக் கொண்டு, பின்னால் வாங்குகிறார்கள். அந்த நிலை இல்லாமல் மாறுதல் ஏற்படவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல், தீர்மானம் போடுவது என்றால், சட்ட சபையிலே பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் யோசித்து, ஒரு முடிவு எடுப்போமானால், அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை. அதை பிஸினஸ் அட்வைசரி கமிட்டி முடிவுக்கு விட்டு விடுகிறேன்.

**திரு. ப. மகாதேவன் :** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.....

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** இப்பொழுது உட்காருங்கள்.

**Thiru B. MAHADEVAN** : I am rising on a point of order, Sir, When I put a supplementary question to the Hon. Minister for Food, he gave a reply. When I asked for a personal explanation, you did not allow me to proceed. .



அனுமதிக்கப்படவில்லை என்று. அந்தச் சொற்களிலே குற்றம் இல்லை. செயலில் தான் குற்றம் இருக்கிறது. அவை தவறான நிகழ்ச்சிகள் என்றது போல, "வக்காலத்து வாங்குவது" என்பதும் தவறான நிகழ்ச்சி என்பதை, வக்கீல் ஒத்துக் கொண்டாலும், நான் ஒத்துக்கொள்ள வில்லை. அது ஒரு கவுரவமான சொல்தான். அந்தச் சொல்லை இந்த சபையிலே உபயோகிக்கக் கூடாது என்று சொல்லத் தேவையில்லை. ஆகவே, அமைச்சரவர்கள் அதைத் திரும்பப் பெற வேண்டும் என்பதும் இல்லை. அரசுக்காகப் பேசுகிறார்கள் என்ற பொருளில் வருவது; அதற்கும் மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள் என்பதற்கும் பொருளில் வேறுபாடில்லை. இரண்டும் ஒன்றுதான். "வக்காலத்து வாங்குவது" என்ற சொல் இந்த மன்றத்தில் கூறக் கூடாத சொல் அல்ல, இகழக்கூடிய சொல்லும் அல்ல, ஆகவே, இதில் எந்த ஒழுங்குத் தவறும் இல்லை.

**Thiru K. VINAYAKAM** : On a point of further explanation. For monetary consideration, we file a vakalat. We take money and then file a vakalat. Here we do not take any money from the Central Government. You must know the implications of the word.

(The bell was rung.)

Please here me (The bell was rung). Why dont' you here me on so simple an affair ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் எழுந்தவுடன் உறுப்பினர் உட்கார வேண்டும்.

**திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். இப்பொழுது பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பு அளித்த பிறகு, அது முடிவானது என்று சட்ட மன்ற விதிகள் இருக்கின்றன. "வக்காலத்து வாங்குவது" என்ற சொல் சட்ட மன்றத்தில் உபயோகிக்கக் கூடாத சொல் அல்ல; உபயோகிக்கக் கூடிய சொல்தான். அந்த முறையில் தீர்ப்பு அளித்திருக்கிறேன். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரிந்துபேசல்) ஆம், அது பரிந்து பேசல் என்ற அளவில் இருக்கிறது. அது கவுரவமான சொல். அந்தக் கவுரமான சொல்லை அமைச்சர் அவர்கள் ஆண்டிருக்கிறார்கள். ஆகவே, எந்த விதமான இழுக்கும் இல்லை. அதைச் சொல்வதனால், உறுப்பினர்களுக்கு, அந்தத் தொழிலைச் செய்யும் உறுப்பினர்களுக்கு, எந்த விதமான இழுக்கும் இல்லை என்பதைத் தெளிவாகக் கூறுகிறேன். அதில் ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை.

**Thiru K. VINAYAKAM** : Please permit me to make a statement. Vakalats are filed only for monetary consideration.

**திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே............

**திரு. கே. விநாயகம் :** தாங்கள் ஒரு உண்மையைக்கவனிக்க வேண்டும். வக்காலத்து வாங்குவதென்றால், பணம் வாங்கிக் கொண்டுதான் கோர்ட்டில் பேசுகிறோம். இங்கே அப்படிப் பணம் வாங்கிக் கொண்டு பேசுகிறோமா ?

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, கனம் விநாயகம்அவர்கள் * * * * ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். ஆங்கிலத்திலே (Advocating)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

வாங்குவதாகச் சொன்னார்கள். நான் வழக்கறிஞர் தான்; ஆனால் இந்தப் பணிக்காக நான் கோர்ட்டுக்குக் கூடப் போவது இல்லை. அகில இந்தியக் கட்சியின் உறுப்பினன்; குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டும் கட்சி இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது முறையான வார்த்தை அல்ல.

**திரு. ப. மகாதேவன் :** அதைநான் வாபஸ் வாங்குகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன வார்த்தையை அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும். இல்லையென்றால், அதை சட்ட சபைப் பதிவேட்டிலிருந்து எடுத்துவிட வேண்டும். என்னுடைய தந்நிலை விளக்கத்தைச் சொல்லி, அவர்கள் குறிப்பிட்ட வார்த்தையைப் பதிவேட்டிலிருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பதிவேட்டிலிருந்து எடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவருடைய பொறுப்பு.

THIRU K. VINAYAKAM : This is a very serious matter and we should not take it lightly. It affects the very dignity of this House, not only of this House but also the dignity of the practising lawyers who are members of this House. 'Vakalat' is a very serious word.

இதற்கு முன்னே, "தாளம் போடுகிறார்கள்" என்கிற வார்த்தையையும், "பின் பாட்டுப் பாடுகிறார்" என்ற வார்த்தையையும் ஆட்சேபித்திருக்கிறார்கள். அதே மாதிரி இந்த வார்த்தையும், நம்முடைய கவுரவத்தைப் பாதிப்பதாக இருக்கிறது. அது மட்டுமல்ல, நம்முடைய சபையினுடைய கவுரவத்தையே பாதிக்கிறது. வழக்கறிஞர்கள் வழக்கு மன்றத்திலே தான் வக்காலத்து போடுகிறார்கள். சட்ட மன்றத்தில், அவர்கள் பொது மக்களுடைய பிரச்சினைகளை, மாநில சர்க்காருடைய பிரச்சினைகளை, மத்திய சர்க்காரின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. "இன்ஸல்ட்" செய்வது போல, அவமானப்படுத்தும் முறையில், வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசுகிறார்கள் என்பது முற்றிலும் தவறு. அதை பதிவேட்டிலிருந்து எடுத்துவிடவேண்டும். அல்லது அவராகிலும் அதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். இரண்டும் இல்லை என்றால், எங்களால் இங்கே அரை நிமிஷம் கூட இருக்க முடியாது. (காங்கிரஸ் கட்சி ஆரவாரம்).

THIRU A.V. P. ASAITHAMBI : I am rising on a point of order, Sir.

THIRU K. VINAYAKAM : I am not yielding.

THIRU A. V. P. ASAITHAMBI : I am rising on a point of order. You are not yielding ?

**திரு. கே. விநாயகம் :** ஆதலால் தாங்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த வார்த்தையை பதிவெட்டிலிருந்து எடுத்து விடுங்கள். அந்த வார்த்தை எங்களுக்கு அவமானமாக இருக்கிறது. அதை எடுங்கள்; இல்லையென்றால், அவர்களை வாபஸ் வாங்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. விநாயகம், பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்தார்கள். அதில் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன இருக்கிறது ? (குறுக்கீடு) அதுதான் சொல்லுகிறேன். இது எந்த வகையில் ஒழுங்கு மீறியதாகும் ? ஒழுங்கு மீறிய நிகழ்ச்சி ஒன்றும் இல்லை. அந்த வார்த்தை பார்லிமெண்டரியா, அல்லது அன்-பார்லிமென்டரியா என்பது பற்றி விளக்கம் கேட்கட்டும். ஆனால், விநாயகம் சொன்னார்கள், "பின் பாட்டு பாடுகிறார்", "தாளம் போடுகிறார்கள்" என்ற சொற்கள்



(அ) கோரிக்கை எண் 19—கூட்டுறவு.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,74,04,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. பி. வேலுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு முறையில் புதிதாக மாறுதல் செய்யக் கோரி விவாதிக்க.—

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,74,04,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss policy and point out the need to take immediate and active steps to prevent the malpractices in the Co-operative Sector, I move the cut motion standing in my name—

"That the allotment of Rs. 3,74,04,700 under Demand No. 19—Co-operation—be reduced by Rs. 100."

**திரு சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு சகலவிதமான வரிகளிலிருந்தும் விலக்களிக்க வேண்டுமென்று விவாதிக்க.—

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,74,04,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைட்டியில் 1965-66 முதல் கணக்குகள் தணிக்கை செய்யாமலிருப்பதைப் பற்றி விவாதிக்க.—

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,74,04,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் உரையாற்றுவார்கள்.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் :** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் 1968-69 ம் ஆண்டு, ஓராண்டு நிர்வாகம் பற்றிய விளக்கவுரை* இன்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர, கூட்டுறவுத் துறையில் வட்டாரங்களில் கூட்டுறவு வங்கி வசதிகளை அளிப்பதற்கான கொள்கை விளக்கக் குறிப்பும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இந்த விவாதத்தைத் தொடங்கி வைக்கின்ற முறையில் பொதுவான கண்ணோட்டத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் ஏறத்தாழ 22 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறை என்று சொல்லுகின்றபொழுது கூட்டுறவுத் துறையில் நடக்கின்ற தொழில்கள், கூட்டுறவுத் துறையில் நடக்கின்ற நிறுவனங்கள் என்ற முறையில் இருக்கின்றன. அவை பொதுத் துறையைச் சேர்ந்தவைகளும் அல்ல, தனியார் துறையைச் சேர்ந்தவைகளும் அல்ல. இவை இரண்டிற்கும் இடைப்பட்ட இடையில் இருக்கும் துறைகளாகும். இன்றைக்கு நாட்டில் 22 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள்இருக்கின்றன என்றால்

* 236-248-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல்தான். வக்காலத்து என்பதாகும். அவர் காங்கிரஸ் கட்சிக்குத்தான் வக்காலத்து வாங்கியிருக்கிறார். வக்காலத்து என்ற சொல் ஆங்கிலத்தில் இருக்கும் Advocating என்ற வார்த்தைக்குத்தான் வரும். * * * * * * * *

THIRU K. VINAYAKAM : He cannot talk like that. 'Vakalat' is a Hindi word.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆசைத்தம்பி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் எழுந்து, மற்றொரு உறுப்பினர், திரு. கே. விநாயகம் அவர்களுக்கு * * * * என்று பேசுவது முறையாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு உறுப்பினர்களுடைய மதிப்பை அறிந்துதான் மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும். இரண்டுக்கும் ஒரே பொருள்தான் என்று சொல்லிவிடலாம். ஆனால். * * * * * என்று பேசுவது முறையாக இருக்காது. திரு. ஆசைத்தம்பி அவர்கள் கூறிய வார்த்தை கனம் அங்கத்தினருடைய மனதைப் புண்படுத்தும் வகையில் அமைந்திருப்பதால், அந்த வார்த்தையைச் சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.

THIRU K. VINAYAKAM : As a mark of protest against this kind of insinuation against the class of Advocates and as a mark of displeasure about the ruling, we stage a walkout.

(ஆளும் கட்சியில் சிலர் : "போ, போ".)

THIRU K. VINAYAKAM : This is the type of people we have got in this House. We are ashamed.

THIRU R. PONNAPPA NADAR : This is the sort of treatment meted out to us.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையை விட்டு வெளிநடப்பு செய்தனர்).

**(6) அறிக்கை அளித்தல்.**

அரிசன நலத் துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU S. AGNI RAJU : Sir, I rise to present the report of the Committee on Estimates on Harijan Welfare Department (Fifth Report).

(7) 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969-670-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. இப்போது இரண்டு மானியக் கோரிக்கைகள் அவை முன் இருக்கின்றன. காலையில் கூட்டுறவு மானியத்தை எடுத்துக் கொண்டு, மாலையிலே அரசுப் போக்கு வரத்து மானியத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவாகியிருக்கிறது. ஆகவே, முதலில் கூட்டுறவு பற்றிய மானியக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேண்டாம் என்று சொல்லவில்லை. முடியட்டும், சொல்லலாம் என்று சொன்னேன். அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

(ஆ) சுருட்டப்பள்ளி அணைத்திட்டத்திற்கு ஆரணியாறு நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் வராததால் ஏற்பட்டுள்ள பாதிக்கப்பட்ட நிலை.

**திரு. கா. வேழவேத்தன் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"தமிழகம், ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்களுக்கும் உரிமையான ஆரணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து ஒப்பந்தப்படி சுருட்டப்பள்ளி அணைத் திட்டத்திற்கு வந்து கொண்டிருந்த தண்ணீர் இப்போது வராததால் தமிழக வடக்குப் பகுதிகளில் பாசனம் பெற்று வந்த 6,000 ஏக்கர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலைபற்றியது".

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, சுருட்டப்பள்ளி அணைக்கட்டின் தலைப்பு மதகு வரவுகால் 1967-68-ல் பெய்த மழையின்போது தூறு படிந்து விட்டது. வரவுகாலின் வலது கரை மண் அரிக்கப்பட்டது. இதனால் சுருட்டப்பள்ளி அணைக்கட்டின் கீழ் தமிழ் நாட்டில் இப்போது பாசனத்தில் இருந்து வரும் 6,066 ஏக்கரில், 1967-68, 1968-69-ம் ஆண்டுகளில் எவ்வளவு ஏக்கர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்ற புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 1960-ம் ஆண்டு முதல், 1967-ம் ஆண்டு வரை ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக முதல் போகத்தில் 677.21 ஏக்கரும், இரண்டாவது போகத்தில் 494.61 ஏக்கரும் சாகுபடி செய்யப்படவில்லை. ஆந்திரப் பிரதேச அரசு அணைக்கட்டைச் சரிவரப் பேணி வராததாலும் சுருட்டப்பள்ளி அணைக்கட்டின் ஆயக்கட்டு முழுவதும் தமிழ்நாட்டிலே அமைந்துள்ளதாலும், வாய்க்கால் நீரை ஒழுங்காக வழங்குமாறும் அணைக்கட்டினைப் பேணி வரும் பொறுப்பினை தமிழ்நாட்டு அரசிற்கு மாற்றிக் கொடுக்குமாறும் ஆந்திரப் பிரதேச அரசுக்கு எழுதக் கருதப்பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, மேற்கொண்டு அமைச்சர் கொடுத்த விவரத்திற்கு மேலாக, ஆரணியாற்றின் அணைக்கட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தை கூறி, ஆந்திரா வாய்க்கால் நீர் விடாதது சட்ட விரோதமானது என்கிற தகவல் வந்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்கார் நீர்ப்பாசன அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தி, தக்க வழிவகை செய்யுமா நம் அரசு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்யும்.

**(5) தன்னிலை விளக்கம்.**

"வக்காலத்து" என்ற சொல்லை அமைச்சர் தன் துணை வினாவிற்கு விடையளிக்கையில் பயன் படுத்தியது குறித்து திரு. ப. மகாதேவன் விளக்கம்.

**திரு. ப. மகாதேவன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் நான் ஒரு உண்மையைக் கூறியபோது, வெளிநாட்டுக் கோதுமை பஞ்சாப் கோதுமையைவிட, ஏற்றுமதிச் செலவு முதலியவை இருப்பதால் விலையில் அதிகமாக, கூடுதலாக இருக்கிறது, அதை ஒரு முகப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி சொன்ன போது, ஒரு உண்மையைச் சொன்ன நேரத்தில், "இன்ஸினுவேஷன்" ஆக, வக்காலத்து

அவைகளை நான்கு வகையான கண்ணேட்டத்துடன்தான் பார்க்க முடியும். இவைகளைப் பிரிக்கின்ற பொழுது, இந்த நிறுவனங்கள் என்னென்ன வகையில் வேலை செய்கின்றன, என்னென்ன பணிகளைச் செய்கின்றன என்று பார்த்தால் நான்கு வகையான தொழில்களைச் செய்து வருகின்றன,

முதலாவதாக, விவசாயப் பண்ணைகள், அவை பூரண வெற்றியடைந்து விட்டன என்று சொல்லக்கூடிய நிலைமையில் நான் இல்லாமல் இருக்கிறேன். அவை பூரண வெற்றியடையவில்லை என்பதை ஓரளவு வருத்தத்தோடு சொல்கிறேன். விவசாயத் துறை என்று சொல்லுகின்றபொழுது கூட்டுறவுச் சங்கங்களே நேரடியாக விவசாயத்தில் ஈடுபட்டு, நிலத்தை உழுது பயிரிட்டு வருவதைத்தான் சொல்கிறேன். இதைப் பற்றிச் சொல்லும் போது, இதில் எது வெற்றி, எது தோல்வி என்பதை விளக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுத் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோ, எப்போது வெற்றியடைந்ததாகச் சொல்ல முடியும் என்பதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எது வெற்றி, எது தோல்வி என்பதை மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிருர்கள். "இந்தத்துறையில் நடக்கின்ற நிறுவனங்கள் வெற்றியடைந்தாகச் சொல்ல வேண்டுமென்றுல், முதலாவதாக பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் நடைபெற வேண்டும். இரண்டாவதாக, இந்த நிறுவனங்களுடைய வரவு செலவுக் கணக்குகளைப் பார்க்கின்றபொழுது, மிச்சம் வர வேண்டும்;" என்பதைத் தான் அண்ணு அவர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

இலாபம் என்று சொல்ல முன்வரவில்லை. மிச்சம் வரவேண்டும் தனியாருக்குத்தான் இலாபம் உண்டு, நட்டம் உண்டு. அரசுக்கு இலாபமும் இல்லை, நட்டமும் இல்லை. ஆகவேதான் அதை மிச்சம் என்று குறிப்பிட விரும்புகிறேன். வருவாய் என்றும் சொல்லலாம். இந்தக் கண்ணேட்டத்துடன்தான் நான் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, விவசாயப் பண்ணைகள் ஓரளவுக்கு வெற்றியடைந்துவிட்டதாகச் சொல்ல முன்வரவில்லை.

முற் பகல் 10-30 இரண்டாவதாக, கூட்டுறவுத் துறையில் நடக்கின்ற தொழிற்சாலைகள்; மூன்றுவதாக, கூட்டுறவுத் துறையில் நடக்கின்ற வாணிபங்கள் அல்லது பண்ட மாற்று நிறுவனங்கள். வாணிபத் துறையைப் பொறுத்த வரையில் பண்டமாற்றுத் தொழிற்சாலைக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்குமிடையே உள்ள கருத்து வேறுபாடு என்னவென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். தொழிற்சாலை என்றுல் ஒரு தனிப் பொருளை எடுத்து வேறு ஒரு பொருளாக மாற்றுவது. . ஆனல் பண்ட மாற்றுச் சங்கங்கள் ஒரு பொருளை மற்ருெரு பொருளாக மாற்றுவது இல்லை. ஒரு பொருளை வாங்கி அதையே சிறிது அதிகவிலைக்கு விற்று இடையில் ஆதாயம் பெறக் கூடியவை இந்தப் பண்ட மாற்றுச் சங்கங்கள். இந்தப் பண்டமாற்று சங்கங்கள் அல்லது வணிகச் சங்கங்கள், வணிக நிறுவனங்கள் பற்றித்தான் உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானம் ஏராளமாகக் கொடுத்திருக்கிருர்கள் உறுப்பினர்கள் சொல்லுகிற குறைகள் எல்லாம் பொதுவாக இந்த ரகத்தைச் சேர்ந்த, தினுசைச் சேர்ந்த சங்கங்களைப் பற்றித்தான். இவற்றில் தவறுகள் இருக்கின்றன—கையாடல்கள் இருக்கின்றன—ஒழுங்கீனங்கள் இருக்கின்றன—இன்னும் ஊழல்கள்—ஊழல் என்ற சொல் சட்ட சபையில் பயன்படுத்தக் கூடியதுதானே என்னவோ—என்பன பற்றி வெட்டுத் தீர்மானங்கள் பெருவாரியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மூன்றுவதாக, நாம் பார்ப்பது தொழிற்சாலைகளை நடத்துகின்ற சங்கங்கள். சங்கம் என்ற சொல் கூட அவ்வளவு சிறப்பானதல்ல—என்னமோ தர்ம ஸ்தாபனங்கள் நடத்துகிற சாரிடபிள் சொஸைடி—போன்ற தவறுன எண்ணம் உண்டாகிறது—மறைந்த முதலமைச்சர் மாமேதை அண்ணு அவர்கள் இதைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிருர்கள். இந்த நிறுவனங்களில் மிச்சம் அல்லது இலாபம் வருவாய் வரவேண்டும். அது



தான் இலக்கணம். இந்தக் கண்ணேட்டத்தோடு தொழிற்சாலைகளை நடத்துகிற நிறுவனங்களைப் பார்க்கிறபோது—சில தோல்வியே அடைந்துள்ளன. குறிப்பாக சிமெண்ட் உற்பத்தி தொழிற்சாலை கூட்டுறவு நிறுவனத்தின்கீழ் இருக்குமானல், அது தோல்வியே அடைகிறது. ப்ளாஸ்டிக் பொருள் கூட்டுறவு நிறுவனம் இருக்குமானல் அது தோல்வியே அடைகிறது. ஊசிகளைச் செய்கிற நிறுவனமும் தோல்வியே அடைகின்றன. ஆனல் வேளாண்மை அல்லது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட—அக்ரோ இண்டஸ்ட்ரி—கூட்டுறவு முறையில் நல்ல இலாபம் அளிக்கக் கூடியதாக டிக்கிறது. குறிப்பாக சர்க்கரை ஆலையை எடுத்துக் கொண்டால், ஒரு வந்நுவு சர்க்கரை ஆலையைக் கூட்டுறவுத் துறையில் எடுத்து நடத்தும் விகிதட அதைச் சுற்றியுள்ள ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், அளவுக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் அளவில் கரும்பைச் சாகுபடி தால் இந்தச் சர்க்கரை ஆலைக்குக் கொடுத்து நன்மை அடைந்து வருகிருர் அதிக அதே சமயம் சர்க்கரை உற்பத்தி செய்கிற தொழிற்சாலையும் நிலைத்தை அடைகிறது. மிச்சத்தை அடைகிறது—வருவாயை அடைகிறது. லான் முன்பு சொன்ன இரண்டு இலக்கணங்களும் பொருந்தியதாக இருப்பது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிற கூட்டுறவுத் தொழிற்சாலை நிறுவனங்கள்தான். நம் மாநிலத்தில் ஓரளவுக்கு இது வெற்றியாக நடைபெறுகிறது. மகாராட்டிர மாநிலத்தை எடுத்துக் கொண் டால் 20 சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறையில் திறந்திருக்கிருர்கள். இவற்றினல் விவசாய மக்களுக்கு நன்மையும் ஏற்படுகிறது. தொழில் நிறுவனமும் லாபம் பெறுகிறது.

இப்படி மூன்று வகையான கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிச் சொன்னேன். கடைசியாக உள்ளது பண உதவி அளிக்கும் சங்கங்கள். இவை பற்பல பிரிவுகளில் இயங்குகின்றன. சிலபேர் வங்கிகள் என்கிருர்கள். லாண்டு மார்ட்கேஜ் பாங்க் என்றும், சென்ட்ரல் பாங்க் என்றும் சொல்லுகிருர்கள். நீண்ட காலக் கடன் அளிக்கும் வங்கிகள், குறுகிய காலக் கடன் அளிக்கும் வங்கிகள் என்று இருக்கின்றன. ரூரல் பாங்க் என்றும் இருக்கிறது. திண்டிவனம் அர்பன் பாங்க் என்று இருக்கிறது. இவை எல்லாம் க்ரெடிட் சொஸைட்டிகள்—பெயரைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. இவை எல்லாம் பண உதவி செய்கின்ற நிறுவனங்கள், இவை பெருவாரியாக வெற்றி அடைந்திருக்கின்றன . காரணம் இந்த நிறுவனங்கள் தொழிலை நடத்துவது இல்லை. நடத்துகின்றவர்களுக்குப் பண உதவி அளித்து கொடுத்த பணத்தை சிறிது வட்டியோடு சேர்த்துத் திரும்ப வசூல் செய்கிறது. அது போலவே விவசாயத்தை நடத்துவது இல்லை. விவசாயத்தை நடத்துகிறவர்களுக்குப் பண உதவி அளித்து அவர்களை ஊக்குவிக்கிறது. அதே போல வீடுகளைக் கட்டுவது இல்லை. வீடு கட்டுகிற தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குக் கடன் கொடுத்து உதவுகிறது. இப்படி பண உதவி செய்கிற கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் வெற்றி அடைந்திருக்கின்ற காரணத்திஞல் தான் கொள்கை அளவில் இதை விஸ்தரித்து மக்களுக்கு மேலும் அதிக அளவில் உதவி செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.

கூட்டுறவுத் துறையில் மட்டுமல்ல. மனித சமுதாயத்தில் உள்ள எல்லாத் துறைகளிலுமே—எதில் நமக்குத் தோல்வி ஏற்படுகிறதோ அதிலேயே மேன்மேலும் தோல்வி அடைய நாம் முயற்சிகளைச் செய்யக் கூடாது. எந்தத் துறையில் வெற்றி அடைகிருேமோ அதில் தொடர்ந்து சென்று மேலும் மேலும் வெற்றி அடைவதுதான் சிறந்தது. அந்த முறையில் பண உதவி செய்கின்ற நிறுவனங்கள் மூலம் வெற்றி ஏற்படுகிற காரணத்திஞல் அதை எல்லா வட்டாரங்களுக்கும் விஸ்தரிக்கின்ற ஒரு முடிவு மேற்கொண்டு திட்டமிட்டிருக்கிருேம். அதை உங்கள் முன்னுலே படித்துவிட விரும்புகிறேன்.

கிராமங்களில் உள்ள விவசாயப் பெருமக்கள் கூட்டுறவு வங்கிகளில் இருந்து கடனுதவி பெறுவதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. மாவட்ட நிலையிலுள்ள கூட்டுறவு வங்கிகள், வட்டத் தலைநகர்களில் மட்டுமே இப்பொழுது இயங்குகின்றன. எனவே கடன் வசதிகளை நாடிச் செல்லும் கிராம மக்கள் நெடுந்தொலைவு அலைய வேண்டியிருக்கிறது. உழவுக்கு

உதவும் கடன் தொகை, உழவர்கள் கைக்குக் கிடைப்பதற்கு வகை செய்வதில், காலதாமதமும், பணவிரயமும் ஏற்படுவதாக குறை கூறப்படுகின்றது. பருவத்தே பயிர் செய்தல் வேண்டும் எனவே, பருவங்கடந்த உதவி பயனற்ற உதவியாகி விடுகிறது. ஆதலால், உழவர்களுக்குக் கடனுதவி அளிப்பதில் ஏற்படும் காலதாமதம், அறவே தவிர்க்கப் படுதல் வேண்டும்.

கிராம மக்களுக்கு எளிதில் கிட்டும் வகையில் வங்கிகளை அமைத்தலே இந்த இடர்பாடுகளைக் களையும் வழியாகும். வங்கிகளில் பணம் போட்டு எடுக்கும் பழக்கமும் கிராம மக்களிடையே விரைவில் பரவ வேண்டும். "ஒரு கிராமத்திற்கு ஒரு வங்கி" என்ற குறிக்கோளை எய்தும் வகையில் முதற்படியாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியிலும் கூட்டுறவுத் துறை வங்கிகள் செயல்பட வேண்டும் என தமிழ் நாடு அரசு கருதுகிறது. "மாநிலக் கூட்டுறவு நில அடைமான வங்கி"யுடன் (The State Co-operative Land Mortgage Bank) இணைந்துள்ள "முதல் நிலை வங்கிகள்" (Primary Bank) வட்டத் தலைநகர்களில் மட்டுமே உள்ளன. வட்டார (பிளாக்) அளவில் கிளைகளை அமைத்து வங்கி வசதிகளைப் பெருக்குமாறு கூட்டுறவு மத்திய வங்கிகளைக் (The Co-operative Central Bank) கேட்டுள்ளோம். ஆனால், இதில் போதிய முன்னேற்றம் இன்னும் காணப்படவில்லை.

வட்டார அளவில் வங்கி வசதிகளைப் பெருக்குவதற்குக் கூட்டுறவு மத்திய வங்கிகளால் இயலாது போனால், கூட்டுறவுத் துறையில், "வட்டார வங்கிக் கழகங்களை" (Primary Banking Societies) அமைத்தாக வேண்டும் என்பதைத் தவிர, இன்று நிலவும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லை.

வட்டார அளவில் இயங்கும் இவ் வங்கிகள் செயல்படத் தொடங்கி விடில், உழவர்களுக்குக் கடனுதவி கிடைப்பதில் உள்ள காலதாமதம், மறைந்துவிடும். கடனுதவி நாடும் மக்கள் நெடுந்தொலைவு அலைய வேண்டிய தொல்லையும் நீங்கும். அத்துடன், கிராம மக்களிடையே "வங்கிப் பழக்கம்" பரவும்.

எனவே, தமிழகத்திலுள்ள 375 ப்ளாக்குகளில்—இரண்டு மூன்று மலைப் பிரதேசங்களில் இருக்கிற காரணத்தினால் அவை நீங்கலாக—மற்ற வட்டாரங்களில் வட்டாரத்திற்கு ஒரு வங்கி என்று முதலில் தொடங்கி அதனால் விவசாய மக்களுக்கு விரைவில் பணம் கிடைக்கச் செய்து நாளடைவில் மேல் நாடுகளில் இருப்பதைப் போல ஊருக்கு ஒரு வங்கி என்கிற இறுதி லட்சியத்தை அடைவதற்கு இன்றைக்கே முதற்படியாக செயல்பட அரசு முடிவு செய்துள்ளது.

கடைசியாக, இந்த விவாதத்தை நான் தொடங்கி வைக்கிறபோது ஒன்றை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன். 2 ஆண்டுகளுக்கு முன்னால் மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் வரவுசெலவுத் திட்டத்தை இந்தப் பேரவையில் அளித்த போது திரு. கருத்திருமன் அவர்கள் நல்ல கருத்தைச் சொன்னார்கள். உறுப்பினர்களைப் பற்றிக் குறிப்பிடாமலும், தாக்கிப் பேசாமலும் கருத்துக்களைப் பற்றி பேசுவது சிறந்தது என்று அவர் குறிப்பிட்டதை உறுப்பினர்களுக்கும், எனக்கும் நினைவு படுத்திக்கொள்கிறேன். ஏராளமான வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளைப் பற்றிப் பேச முடியும். சென்ற ஆண்டு விளக்க உரை இருக்கிறது, அதைப்பற்றிப் பேச முடியும். வட்டாரத்திற்கு ஒரு வங்கி என்கிற திட்டமிருக்கிறது, அதைப்பற்றிப் பேச முடியும்.

ஒரு வட்டாரத்திற்கு ஒரு வங்கி என்ற முறை புதிதாகக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிப் பேச முடியும். இன்னும் உங்கள் கருத்துக்கள் எவ்வளவோ இருக்கின்றன. அதைப்பற்றிப் பேசமுடியும். ஊழல்கள், கையாடல்கள் இவற்றைப்பற்றிப் பேசும்பொழுது தனிப்பட்ட எவர்பற்றியும் பெயர் குறித்துச் சொல்லாமல், பொதுவாகவும் சொல்லாமல்—அவற்றைப் பற்றி யெல்லாம் எனக்கு எழுதியனுப்



பினால் நான் நிச்சயமாகக் கவனிப்பேன் என்ற அளவிலே—உரையாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கையாடல்கள், ஊழல்கள், ஒழுங்கீனங்கள் இவற்றைப் பற்றி நீங்கள் பேசுகின்றபொழுது மிகுந்த வேதனை
விதி இருந்து இருக்கின்ற என்னுடைய கவலையைத் தீர்ப்பதற்கு உங்களுடைய
கள். அவர்களை—இன்னபடி நடக்கிறது, இன்னபடி நடவடிக்கை எடுக்க
பொறுத்து ஒவ்வொரு முறையிலே—திசை தெரியாது திண்டாடிக் கொண்டிருக்
வைக்கிறார்கள். உதவி செய்ய வேண்டுமென்ற முறையில் எடுத்துச்சொல்ல
ஆண்டு ஒன்றுக்கு கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறைக்கு நான் புதி
இருர்கள். ரிசர்வ் பாங்க் கூட்டுறவுத் துறையை நல்ல முறையில் நடத்துவதற்காக
துக்கு கொடுக்கிறது அளிக்கின்ற வகையில் அமைச்சர்களைப் பற்றிச் சொல்லா
இற்கு $3\frac{1}{2}$ சதவிகிதத்தை பயனளிக்கின்ற கருத்துக்களைச் சொல்கின்ற வகையில்
டிக்கு கொடுத்துக் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
வந்துவிடுகிறது. இ
விகிதம், $7\frac{1}{2}$ சதவி
அளவுக்கு ஆவரோ

(8) பேரவைத் தலைவரின் விளக்கம்.

தால் இதிலே
தலைமையின் தீர்ப்பை எதிர்த்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்
அதிகமாக த
நடப்பும், அது குறித்து நடவடிக்கை எடுக்காததும்.
நினைக்கிற
லாபம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த விவாதத்தைத் தொடங்குவதற்கு முனபு சில கருத்துக்களை நான் கூறுவதற்கு விரும்புகிறேன். பேரவைத் தலைவர் தீர்ப்பளித்ததை யொட்டி காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள், பேரவைத் தலைவருடைய தீர்ப்பை எதிர்த்துச் செய்திருக்கிறார்கள். பேரவைத் தலைவருடைய தீர்ப்பு எவ்வளவு நியாயம், அல்லது நியாயமல்ல என்பது வேறு. இதைப்பற்றி நான் முன்பே தெரிவித்திருக்கிறேன். வக்காலத்து என்ற சொல்லை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னைப் பற்றிச் சொல்லும்பொழுதே பயன்படுத்தியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் ஆளுங்கட்சிக்கு வக்காலத்து வாங்குகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது எந்த அளவிலே இருந்தாலும் பேரவைத் தலைவர் இந்த மன்றத்திலே அனுமதிக்கக்கூடிய சொல் தான் அது என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். பேரவைத் தலைவருடைய தீர்ப்புத்தான் முடிவான தீர்ப்பு; அதற்கு யாரும் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கக் கூடாது என்று பல விதிமுறைகள் இருக்கின்றன.

'The Chair is the final authority in this matter. Whether a word is parliamentary or unparliamentary has to be decided by the Chair and nobody else.'

'A member cannot give a "ruling" whether a point raised is a point of order or not.'

'There is no appeal against the decision of the Chair whoever might occupy it.'

என்று போட்டிருக்கிறது. மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸிலே

'The Speaker's rulings, as already stated, cannot be questioned except on a substantive motion. A member who protests against the ruling of the Speaker commits contempt of the House and the Speaker. The Speaker's decision is equally binding whether given in the House or on a departmental file. He is not bound to give reasons for his decisions. Members cannot criticise directly or indirectly, inside or outside the House, any ruling given, opinion expressed or statement made, by the Speaker.'

என்று இருக்கிறது. அப்படிப்பட்ட விதிமுறைகளை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருக்கின்ற நிலையில், காங்கிரஸ் உறுப்பினர்கள், பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்துவிட்டதற்குப் பிறகு, அந்தத் தீர்ப்புச் சரிதானா என்று கேட்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவருடைய தீர்ப்புச்

சரியல்ல, பேரவைத் தலைவர் சரியாக நடக்கவில்லை என்றால் அ... வேறு வழிவகைகள் இருக்கின்றன. அதையும் நமக்குச் செ... கிறார்கள்.

'His action cannot be criticised incidentally upon any form of proceeding except a substantive'

என்ற அளவிலே அதற்கும் விதிமுறைகள் இருந்தும் மன்றத்தின் உரிமையை மீறி நடந்திருக்கிறார்கள். பாராளுமன்ற முறையிலே இருக்கக் கூடிய உரிமையை பேரவைத் தலைவருடைய தீர்ப்பை யொட்டி இருக்கக்கூ... இந்தியாவிலே உள்ள சட்டமன்றத் தலைவர்களுடைய... வெடுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, 1963ஆம் ... செல்லப்பாண்டியன் அவர்கள் பேரவைத் தலைவராக இ...

'Speaker's ruling should always be obeyed. protest against his ruling was an unbecoming way of protest and was therefore not in order'

என்ற தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது அவர்கள் வெளிநடப்புச் செய்திருப்பது, பேரவைத் தலைவருடைய தீர்ப்பை எதிர்த்து செய்திருப்பது, இந்தச் சட்டமன்ற உரிமைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாகும் உரிமை மீறியதாகும். இருப்பினும்

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர் "

என்று குறள் இருக்கிறது. அந்தக் குறளைப் படித்தவராக பேரவைத் தலைவர் இருக்கிறார். அந்தக் குறளை எழுதிய வள்ளுவர் உருவமும் இங்கே முன்னால் இருக்கிறது. அதோடு,

"பேதமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின் "

என்றும் சொல்லியிருக்கிறார். அந்த முறையிலே காங்கிரஸ் கட்சியினர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பேரவையின் மரபைக் காப்பாற்றுவதற்கு காங்கிரஸ் கட்சியினர் பெரிதும் துணையாக நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மானியக் கோரிக்கையின்மேல் விவாதம் தொடரும்.

## (7) 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**திரு. ரா. கனகசபை :** தலைவர் அவர்களே, இன்று கூட்டுறவுத் துறை விவாதத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையில் என்ன, என்ன நடந்திருக்கிறது என்பதைப் பற்றி முதலிலே விரிவாக பேசினார்கள். அவர்கள் பேசிய தெல்லாம் இப்பொழுது கொடுத்து இருக்கும் புது பாலிசி நோட்டிலே வட்டாரங்களிலே எல்லாம் கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். வரவேற்பதோடு மட்டுமல்ல, இப்பொழுது சாயிகளுக்கு ஷெட்யூல்ட் பாங்க்ஸ் கடன் கொடுக்க முன்வருகின்ற ... திலே கிளைகளைத் துரிதமாக ஏற்படுத்த வேண்டுமென்பதிலே எந்தவித அபிப்பிராய பேதமும் இல்லை. ஆனால், மத்திய பாங்குகள் இதை ... படுத்துவதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படும். அவர்கள் ஏற்கனவே ஒவ்வொரு மத்திய பாங்கிற்கும் 5, 7, 10 என்ற அளவிலே அந்தந்த பாங்கிற்குக் தகுந்தாற்போல் கிளைகளைத் திறந்திருக்கிறார்கள். ஒவ்வொரு கிளையைத் திறக்கும்பொழுதும் ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. அப்படிச் செலவாகிற நேரத்தில் அதற்குத் தகுந்தாற் போல் அவர்கள் நஷ்டத்தைச் சரிக்கட்டக்கூடிய நிலையில் இல்லாமல் இருக்கிறார்கள். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. வேண்டிய அளவு ஷெட்யூல்ட் பாங்க்ஸ் டெபாசிட்டுகள் சேமிப்பதைப் போல்கூட்டுறவு





பாங்குகளிலே சேமிப்பதற்கு கூட்டுறவு அலுவலர்களுக்குத் தகுதியில்லை என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ரிசர்வ் பேங்கிலே ஒரு விதி இருக்கிறது. கடன் கொடுக்கும்பொழுது அவர்கள் ஒன்று சொல்கிறார்கள். அவர்களுடைய சொந்த நிதி எவ்வளவு இருக்கிறதோ அதைப் பொறுத்து ஒவ்வொரு பாங்கிற்கும் மினிமம் இன்வால்வ்மெண்ட் ஒன்று வைக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் சௌத் ஆற்காடு பாங்க் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ரிசர்வ் பாங்க் ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்கிற்கு 3 சதவிகிதத்துக்கு கொடுக்கிறது. ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்க் சென்ட்ரல் பாங்கிற்கு $3\frac{1}{2}$ சதவிகிதத்திற்குக் கொடுக்கிறார்கள். அதை அவர்கள் சொஸைடிக்குக் கொடுத்துக் கடைசியாக $7\frac{1}{2}$ சதவிகிதத்துக்குக் கொஞ்சம் கூடுதலாக வந்துவிடுகிறது. இந்த ஒரு கோடி ரூபாய் டெபாசிட் 6 சதவிகிதம், 7 சதவிகிதம், $7\frac{1}{2}$ சதவிகிதம் என்ற அளவுக்கு வாங்கி ரொம்பவும் குறைந்த அளவுக்கு ஆவரேஜ் பாரோயிங் ரேட்ஸுக்கும் குறைந்த அளவுக்கு வருவதால் இதிலே நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால் டெபாசிட் அதிகமாக, அதிகமாக தங்களுக்கு நஷ்டம் வருகிறது என்று சென்ட்ரல் பாங்கினர் நினைக்கிறார்கள். கிளைகளை ஏற்படுத்தி அதிகமான டெபாசிட் வாங்குவதால் லாபம் இல்லையென்று நினைக்கும்படியான சூழ்நிலை இருந்து வருகிறது. இதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று நினைத்து சென்ற நவம்பர் மாதத்தில் ரிசர்வ் பாங்க் கவர்னர் வந்தபோது ஒரு யோசனையைச் சொன்னேன். நான் சொன்ன யோசனையை டெபுடி கவர்னர் அவர்கள் சென்ற மாதம் வந்தபோது சரி என்று ஏற்றுக்கொண்டார்கள். மக்களுடைய சேமிப்பைக் கொண்டு கடன் கொடுத்து வருகிறோம் என்று சொன்னால் அது நல்ல சேவை என்ற எண்ணத்தைக் கொள்ள வேண்டும். கூட்டுறவுத் துறைக்கு ரிசர்வ் பாங்க் 50 சதவிகிதந்தான் கொடுத்து வருகிறார்கள். அதை 40 சதவிகிதமாக்கினால், 40ல் இருந்து 30 சதவிகிதமாக்கினால் 3 பர்சன்ட், $2\frac{1}{2}$ பர்சன்ட் அல்லது 2 பர்சன்ட் என்ற அளவிலே வட்டியைக் குறைத்துக் கொடுத்தால் அந்த பாங்குகள் அவர்களிடமிருந்து பெறக்கூடிய தொகையைக் குறைத்துக் கொண்டு மக்களுடைய சேமிப்பை அதிகம் பெறுவதில் கவனம் செலுத்த முடியும், அதற்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். அரசாங்க ரீதியில் இந்த யோசனையைச் சொன்னால் எனக்குத் தெரிந்த வரையில் ரிசர்வ் பாங்கு அதிக ஆட்சேபம் சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

புதிய கிளைகளைத் திறப்பதற்கு கட்டடம் இருக்கலாம், பணம் இருக்கலாம். ஆனால் தேவையான ஆட்கள், பயிற்சி பெற்ற ஆட்கள் இல்லை. 250 கிராஞ்சுகளை திறக்க வேண்டுமென்று சொன்னால் "டிரெயின்டு பர்சனல்" பயிற்சி பெற்ற ஆட்கள் இருப்பது மிகவும் முக்கியமானது. அமைச்சர் அவர்கள் பேசும்போது கூட்டுறவு பாங்கில் "ஒன் வே டிராபிக்" இருக்கிறது என்று சொன்னது போல் வருகின்ற பணத்தை வெளியிலே கடன் கொடுக்கத்தான் வழி இருக்கிறதே தவிர, மக்களிடமிருந்து டெபாசிட் வாங்குகின்ற பழக்கம் இல்லை. கடலூர் சென்ட்ரல் பாங்கிலேயே நேரடியாக பணத்தை வாங்கிக் கொள்ளாது சிதம்பரத்தில் உள்ள பாங்கிலிருந்து வாங்கிக் கொள்வது போன்ற ஒரு நிலைமைதான் இருக்கிறது. பாங்கிங் ஹாபிட் ஜனங்களுக்கு உண்டாகவில்லை. அலுவலர்களுக்கும் பயிற்சி இல்லை. அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து பெரும் அளவில் ஆட்களுக்குப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். திடீரென்று சர்வீஸ் கமிஷனை 300, 400 சீனியர் இன்ஸ்பெக்டர்களுக்கு ஆள் அனுப்ப வேண்டுமென்று கேட்டுப் பெற்று ஏதோ அவர்களுக்கு அவசர அவசரமாகப் பயிற்சி கொடுக்கப்படுகின்றன. கொஞ்சம் காலதாமதமானாலும் பயிற்சி பெற்ற அலுவலர்கள் இருந்தால்தான் டிபார்ட்மெண்டுக்கும் நல்லது. இன்ஸ்டிட்யூஷனுக்கும் நல்லது. ஏதோ டெபுடி ரிஜிஸ்ட்ரார்களை போட்டு அவசர அவசரமாகப் பயிற்சி கொடுக்காமல் 8, 9 மாதங்கள் நல்ல முறையில் பயிற்சி கொடுத்து, ஸ்டேட் பாங்கு, ஷெட்யூல்ட் பாங்குகளில் எல்லாம் பயிற்சி கொடுத்து நியமித்தால் நல்ல முறையில் வேலை செய்ய முடியும். அறுபது ஆண்டுக் காலத்திற்கு மேலாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டிலே இருந்து வந்திருந்தும் சில துறைகளில் நல்ல முறையில் இல்லை. பாங்குகள் லாபகரமாக நடந்து வந்தாலும், கடன் கொடுக்கும் ஸ்தாபனங்கள் அவ்வளவு நல்ல முறையில் நடக்கவில்லை.

லேவாதேவியைப் பொருத்தவரை ஆண்டு அறிக்கையில் 50 கோடி ரூபாய் கடன் கொடுக்கத் திட்டம் போட்டிருந்தது. 38 கோடி ரூபாய்தான் கொடுக்க முடிந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். கடன் வாங்க விவசாயிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கடன் பெறுவதிலே உள்ள ப்ரொசீஜரல் டிபிகல்டீஸ் அதிகமாக இருக்கும் காரணத்தால் அதை எல்லாம் களைந்து சீக்கிரமாகக் கடன் கொடுக்க வழிவகைகளைச் செய்ய வேண்டும். தற்போது கடன்கள் $7\frac{1}{2}$ வட்டிக்கும் 8 வட்டிக்கும் கொடுக்கப்படுகிறது. அதுவே அதிகம் என்று நினைக்கிறார்கள். விவசாயிகளுடைய நிலை என்ன ? விவசாய பாங்கு வேண்டிய அளவுக்குக் கடன் கொடுத்தால் அரை பர்செண்ட் ஒரு பர்செண்ட் கூடக் கொடுப்பது பற்றிக் கவலை இல்லை. தற்போது "த்ரீ டயர்" சிஸ்டம் இருக்கிறது. கிராமச் சங்கங்கள், அதற்குப் பிறகு சென்ட்ரல் பாங்கு, அதற்குப் பிறகு ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்கு. கிராமச் சங்கங்கள் விவசாயிகளிடத்தில் இருந்து அப்ளிகேஷனை வாங்கி சென்ட்ரல் பாங்குக்கு அனுப்பி திருப்பி வருவதற்குள் சாகுபடி காலமே தீர்ந்துவிடும். நான் ஒரு யோசனையைச் சந்தானம் கமிட்டியிடம் சொன்னேன். முதலாண்டில் ஒருவர் எவ்வளவு ரூபாய்க்குத் தன்னுடைய விளைபொருள்களை விற்பனை செய்தாரோ அதிலே 50 சதவிகிதம் வரை "காஷ் கிரெடிட்" கொடுத்து விட்டால் விவசாயி தனக்குத் தேவையான நேரத்திலே எவ்வளவு பணம் வேண்டுமோ அதை வாங்கிக் கொள்ளலாம் என்று செய்வது நல்லது. இப்போதுள்ள நிலைமையில் மொத்தமாக அவனுக்குக் கடனைக் கொடுத்து விடும்போது அதைச் சாகுபடிக்குச் செலவு செய்வதற்குப் பதிலாக வேறு செலவுகளுக்குப் பணத்தைச் செலவு செய்து விடக்கூடிய நிலைமை இருக்கிறது. அன்றைக்கன்று எவ்வளவு பணம் வேண்டுமோ அதை மட்டும் வாங்கிக் கொள்ளும் வகையில் வழிவகைகளை வகுத்தாக வேண்டும்.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் மேலவை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்காகப் போடப்பட்ட இடத்தில் அமர்ந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்காருவதற்காக சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடத்திலே இந்த மன்ற உறுப்பினர் உட்காந்திருப்பது முறையாக இருக்காது.

**திரு. ரா. கனகசபை :** கமர்ஷியல் பாங்குகளிலே காலையில் போனால் மாலையில் பணம் கொடுத்து விடுவார்கள் என்ற நிலையிலே அவர்களிடம் சென்று அவர்கள் வாங்கலாம். அந்த நிலையிலே கூட்டுறவு பாங்குகள் எல்லாம் நல்ல முறையில் இயங்கவில்லை என்றால் இன்னும் இரண்டு ஆண்டு காலம் போனால் என்ன நிலைமை ஏற்படும் என்று நினைக்கப் பயமாக இருக்கிறது.

சந்தானம் கமிட்டியை நியமித்து அதிலே பல விஷயங்களைப் பற்றிப் பரிசீலனை செய்து வருகிறார்கள். போன வருஷம் ஜூன் மாதம் அவர்கள் இன்டரிம் ரிப்போர்ட் கொடுத்தார்கள். ஆனால் இதுவரை அந்த ரிப்போர்ட் வெளியிலே பிரசுரிக்கப்படவில்லை. எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகவும் தெரியவில்லை. பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. கமிட்டியின் ரிப்போர்ட் என்ன என்று வெளியிடாவிட்டாலும் அதிலே என்ன இருக்கிறது என்று சூசகமாகத் தெரிந்ததால் பொறுப்பிலுள்ளவர்கள் சங்கத்தின் அலுவல்களைச் சரிவரக் கவனிப்பதில்லை. அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதைப்பற்றித் தெளிவாகத் தங்களுடைய கொள்கையைத் தெளிவுபடுத்தி விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய பாங்கில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருந்து டிபார்ட்மென்டல் ஆபீஸர்ஸ் நிறைய டெப்யூடேஷனில் வந்து வேலை செய்கிறார்கள்.

இதற்கு முன் இருந்தவருக்கு முன் இருந்த பதிவாளர் அவர்கள் கூடுமான வரையில் உங்கள் ஸ்தாபனங்களில் உங்கள் அலுவலர்களையே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். இங்கிருந்து டெப்யுட்டேஷன் அனுப்புவது சிரமமாக இருக்கும் என்ற கொள்கை



வகுத்து அதன்படி நடவடிக்கைகள் எடுத்து வந்தார்கள். அதற்கு அடுத்து வந்த பதிவாளர் அவர்கள் டிப்பார்ட்மெண்டல் ஆபீசரை வைத்துக்கொள்வது நல்லது என்று சொன்னார்கள். ஆகவே நான் சொல்வது என்னவென்றால் ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் அந்தந்த தொழிலில் திறம்பட நடத்துபவர்கள் இருக்கவேண்டுமென்றால் அவர்களுக்கு அதற்காக தனிப்பட்ட பயிற்சி கொடுத்தால் நலமாகயிருக்கும். ஒருவர் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்டுக்குப் போகிறார், அடுத்தவர் மார்க்கெட்டிங் சொஸைட்டிக்குப் போகிறார். அதற்குப் பின் ஆறு மாதங்கள் கழிந்து பாங்குககு வருகிறார் ஒருவர் ஸ்பின்னிங் மில்லுக்குள் போகிறார், என்று இப்படியிருக்கிறது.இப்படி ஒவ்வொரு இடத்திற்கும் போவதன் காரணமாக அவர்களின் அனுபவம் அந்த ஸ்தாபனங்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், அந்தந்த ஸ்தாபனத்திற்கேற்ப தனிப்பட்ட முறையில் பயிற்சி பெற்ற அலுவலர்களை அவரவர்களே நியமித்து நடத்துவது தான் நலமாக இருக்கும். டிப்பார்ட்மெண்டல் ஆபீசர்களை வைத்துச் செய்வதனால் எந்த விதமான பலனும் அதிகமாக இருக்க முடியாது.

சற்றுமுன் அமைச்சர் அவர்கள் மில்ஸ் பற்றிச் சொன்னார்கள். சர்க்கரை ஆலைகளை பெருமளவு ஆரம்பித்து விட்டார்கள். நூற்பாலைகளை பெருமளவில் ஆரம்பித்து விட்டார்கள் அவசரமாக. இருக்கிற நூற்பாலைகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. சர்க்கார் உத்தரவாதத்தின் பேரில் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்க்ஸ் மூலம் கொடுத்தோம். சொன்ன டேட்படி சர்க்கார் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. டைம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். உத்தரவாதம் கொடுத்து வட்டியும் முதலுமாக இன்ன தேதியில் கொடுத்து விடுகிறோம் என்று சொன்னால் அப்படிக் கொடுத்திருக்கவேண்டும். அப்படியில்லாமல் டைம் கேட்டால் அந்த பாங்க் தன் கமிட்மென்ட்களை சரியாக நிறைவேற்ற முடியாது. நான் கேள்விப்பட்ட வரையில் ஒவ்வொரு மில்லும் மாதத்தில் 10,000 ரூபாய்க்கு மேல் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருப்பதாக அறிகிறேன். என் அந்த ஆலைகள் அப்படி நடத்தப்படுகின்றன ? தனியார் துறை ஆலைகளில் லாபம் வரும்போது என் இவற்றில் நஷ்டம் வரவேண்டும் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கூட்டுறவுத் துறையில் நடக்கிற ஆலைகள் பற்றி குறிப்பட்டார்கள். அந்த ஆலைகளையெல்லாம் நான் இரண்டாகப் பிரித்தேன். ஒன்று சிமெண்ட் செய்கிற ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நடந்தால் அவை வெற்றி பெறாது. குண்டூசி செய்கிற ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நடந்தால் அவை வெற்றி பெறாது. கப்பல் செய்கிற ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நடந்தால் அவை வெற்றி பெறாது. எந்த ஆலைகள், எப்படிப்பட்ட ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நடந்தால் வெற்றி பெறும் என்றால், அக்ரோ இண்டஸ்ட்ரீஸ், சர்க்கரை ஆலைகள் போன்றவை. சர்க்கரை ஆலை, என்றால் ஆயிரம் விவசாயிகள் சேர்ந்து ஆளுக்கு இரண்டு ஏக்கர் மூன்று ஏக்கர் என்று கரும்பு விவசாயம் செய்து அந்தக் கரும்பைக் கொண்டு போய் கூட்டுறவு ஆலைகளில் விற்று அவர்கள் இலாபம் பெறலாம். அதே சமயம் அந்தக் கரும்பை வாங்கி சர்க்கரையாக்கும் கூட்டுறவு ஆலைகளும் இலாபம் பெறுகின்றன. ஆகவே உறுப்பினர் அவர்கள் இந்த இரண்டு பிரிவுகளையும் வேறுபடுத்தி கவனத்தில் வைத்துக் கொண்டு, அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கூட்டுறவுத் துறையில் நடத்தப்பட முடியுமா முடியாதா என்பது பற்றி தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. கனகசபை:** கூட்டுறவு ஆலைகள் வெற்றி பெறாது என்று சொல்லவில்லை. நான் சொல்வது, அரசாங்கம் காரண்டி கொடுத்த பணத்தை அந்தத் தேதியில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று வலியுறுத்து[illegible]. நஷ்டத்தில் ஆலைகள் ஓடிக்கொண்டிருக்கும்போது,

இன்னின்ன ஆலைகள் லாபத்தில் நடக்காது என்று சொல்லும்போது அதற்கு ஏதாவது ஒரு வழி கண்டு பிடிக்கவேண்டுமே தவிர அவை நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருப்பதால் எந்த விதமான பலனும் இல்லை.

" வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடிடத் தொழில் செய்யாக் குற்றத்தால் "

என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவும் கூடி தொழில் செய்வதுதானே. ஏன் இது நஷ்டத்தில் ஓடவேண்டும்?

அடுத்தபடியாக, சர்க்கரை ஆலைகள் பற்றி ஒரு வார்த்தை, அதோடு முடித்துக்கொள்கிறேன். இப்போது சில சர்க்கரை ஆலைகள் நஷ்டத்தில் ஓடுகின்றன. சில ஆலைகள் லாபத்தில் ஓடுகின்றன என்று சொல்கிறார்கள். இந்த சர்க்கரை ஆலைகளைப் பற்றி ஊரில் பேசப்படுவது என் காதில் விழும்போது என்னால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதாவது, கூட்டுறவு ஆலைகள் பற்றிச் சொல்வது. ப்ரீ மார்க்கெட் ஷுகர் இருக்கிறது. மொலாஸஸ் இருக்கிறது. இவற்றை நிர்வகிப்பவர்கள் பற்றி என் காதில் விழும்போது மனதுக்கு சங்கடமாக இருக்கிறது. ஷுகர் கண்ட்ரோல் விலையில் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள், சில இடங்களில் 75 ரூபாய்க்கு விற்கப்படுவதாகச் சொல்கிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்காக 450 ரூபாய் கொடுத்து மொலாஸஸ் வாங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். இது உண்மையாக இருக்கலாம் அல்லது பொய்யாகவும் இருக்கலாம். தனிப்பட்டவர்கள் பற்றி நான் சொல்லவில்லை. புகார்கள் வர இடம் கொடுக்கக்கூடாது. இந்த ப்ரீ மார்க்கெட் ஷுகர் பற்றி எங்கு பார்த்தாலும் ஒரே புகாராக இருக்கிறது. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், இந்த மில்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சென்ட்ரல் ஏஜென்ஸியை வைத்து மொத்தமாக டெண்டர்கள் கோரி அதைப் பிரித்துப் பார்த்து நல்ல முறையில் அலாட்மெண்ட் செய்வதற்கு வழி வகுக்கவேண்டும். இப்படிச் செய்தால் புகார்களும் வராது, கூட்டுறவுத் துறைக்கும் நல்லதொரு பெயர் கிடைக்க வழி ஏற்படும். சர்க்கரை ஆலைகளில் லாபம் வருவதாகச் சொல்கிறார்கள். மதுரை நாஷனல் ஷுகர் மில்சுக்கு என்று நாற்பது லட்சம் ரூபாய் பணம் போட்டிருக்கிறார்கள். அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. இந்த ஆலைகளுக்கு தலைவர்களை நாமினேட் செய்வதில் தவறு இல்லை. ஆனால் சர்க்கரை வியாபாரம் செய்பவர்களை இந்த ஆலைகளுக்கு தலைவர்களாக போட்டால் நிலைமை எப்படியிருக்கும் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த ஃப்ரீ மார்க்கெட் ஷுகர் விற்பதற்கு மத்திய அரசு தான் உரிமை வழங்கிறதே தவிர அது ராஜ்ய சர்க்கார் வழங்கும் உரிமை அல்ல. இப்படி உரிமை வழங்குவது மத்திய அரசின் கையில் இருக்கிறது. 40 சத வீதம் என்றிருந்ததை இப்போது 30 சத வீதம் என்று குறைத்திருக்கிறார்கள். படிப்படியாகக் குறைத்து கடைசியில் அவ்வளவையும் சர்க்கார் லெவிக்கு அளிக்கவேண்டும் என்ற நிலைமை வந்து விட்டால் உறுப்பினர் அவர்கள் சொல்கிற குறைபாடுகள் வர நியாயமிருக்காது. மத்திய சர்க்கார் வழங்குகிற உரிமையை ராஜ்ய சர்க்கார் தடுத்து இன்ன விலைக்குத் தான் விற்கவேண்டும் என்று வற்புறுத்த இடம் இல்லாமல் போய் விட்டது. அதையும் கூட ஓரளவிற்கு கட்டுப்படுத்தினோம். மற்ற மாநிலங்களில் சர்க்கரையின் விலை உயரும்போது இங்கே அதனால் பாதகம் ஏற்படுகிறது. தனிப்பட்ட முறையில் சர்க்கரை வியாபாரம் செய்கிறவர்கள் ஆலைத் தலைவரானால் ஃப்ரீ மார்க்கெட் ஷுகரை இஷ்டப்படி விற்றுக்கொள்ள வழியிருக்கும் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எங்கேயானாலும் ஒரு விலைக்குத் தான் விற்க முடியும். ஆலைக்கு ஆலை அல்லது மாவட்டத்திற்கு மாவட்டம் விலை வித்தியாசம் என்ற நிலை இருக்க முடியாது.

**திரு. ரா. கனகசபை :** அமைச்சர் அவர்களுக்கு விவரங்கள் தெரியவில்லை என்று நினைக்கிறேன். ஃப்ரீ மார்க்கெட் ஷுகரை எடுத்துக் கொண்டால், கணக்கெடுத்துப் பார்த்தால் ஒரு ஊருக்கு இன்னொரு





ஊர் விலையில் வித்தியாசம் இருக்கிறது. விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லவில்லை. கூட்டுறவு நூற்பாலைகளில் நூல் வாங்கிக் கொள்வதற்கு என்ன வழிவகை வைத்திருக்கிறார்களோ அதே போல் இந்த ஆலைகள் எல்லாம் சேர்ந்து டெண்டர் வாங்கி எல்லாத் தலைவர்களும் உட்கார்ந்து கொண்டு பிரித்துக் கொடுத்தால் நலமாகயிருக்கும். ஒரு மில்லுக்கு ஒரு மில் விலை வித்யாசமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எந்த ஆலைகளில் அப்படி மாறுபட்ட விலையில் விற்பதால் தனிப்பட்ட வியாபாரிகள் ஆதாயம் அடையும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை விளக்கும் முறையில் இன்ன ஆலைக்கு இன்ன ஆலை வித்தியாசம் இருக்கிறது, இதனால் இன்னார் இவ்வளவு லாபம் அடையும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை விளக்கத் தயாரா ?

**திரு. ரா. கனகசபை :** இந்த ஆலைக்கு அந்த ஆலைக்கு வித்தியாசம் இருக்கிறது என்பதை எந்த இடத்திலும் கணக்கெடுத்துப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். இதில் இரகசியமான விஷயமே கிடையாது. நான் தனிப்பட்ட மனிதர்களைப் பற்றிப் பேசுவதற்கு முதலில் தயாராகவில்லை. வேண்டுமானால் எந்தெந்த இடத்திலே இருக்கிறது என்று எழுத்து மூலமாக எழுதித்தருகிறேன். கட்சிமனப்பான்மையில்லை. அதிகப்படியானத் தொடர்பு கொண்டிருப்பவர்கள் உங்கள் கட்சிக்காரர்கள்தான்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஆலை விஷயத்தில் கூட்டுறவு விஷயத்தில் அவருக்கு அனுபவம் இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. அனுபவம் இருப்பதன் காரணமாகத் தான், கூட்டுறவு சர்க்கரை ஆலையை நடத்துகிறவர்களிடமுள்ள ஊழல், தவறாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லுகிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எனவே, எழுதி அனுப்பினால் அரசாங்கத்திற்கும், நாட்டிற்கும் உதவியாக அது இருக்க முடியும்.

**திரு ரா. கனகசபை :** தனிப்பட்ட முறையில் யாரையும் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இதற்கு ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டும். ஊழல் இருந்தாலும், இல்லாவிட்டாலும் கெட்ட பெயர் வராமல் தடுப்பதற்கு வழி கண்டு, டெண்டர் வழியைக் கண்டு படிக்க வேண்டுமென்பதற்காக யோசனை சொல்லுகிறேனே தவிர தனிப்பட்ட முறையில் யார் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கவலைப்படவில்லை. அதற்காகத் தான் சொல்கிறேன். இந்தப் பெயரே கூட்டுறவுத் துறைக்கு வரக்கூடாது என்பதைத் தான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன். ஆகையால் இதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும். முக்கியமான அமெண்ட்மெண்டை செய்ய வேண்டும். அமால்கமேஷன் ஆப் சொஸைட்டீஸ் செய்யவேண்டும் வயபில் யூனிட் ஒவ்வொரு இடத்திலும் கஷ்டமாக இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருகிறது. இந்த வருஷத்திலேயே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். சங்கங்களிலே இணைக்கும்பொழுது ஒவ்வொருவரும் செய்கிறார்கள். பதிவாளருக்கு அதிகாரத்தைக் கொடுத்து, உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் பேசிய பேச்சுக்காக மீண்டும் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் தரப்பிலேயிருந்து, ஏற்கெனவே, ஒரே விலையில் விற்க வேண்டுமென்ற அளவிலே ஒரு அறிக்கை "ஸ்டேட் ஃபெடரேஷன்" மூலமாக, யுனிட் வரவேண்டு மென்று, ஒரே விலை விற்க வேண்டுமென்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பேசும் போழுது, நான் விவரம் தெரியாமல் கூறுவதாகக் கூறினார்கள். அவர்கள் கையிலே இருக்கும் விவரத்தைத் தயவு செய்து கொடுத்தால் அது அரசாங்கத்திற்கு உதவிகரமாக இருக்கும். அவர்கள் தங்கள் கருத்தைத் திருத்திக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

ஒரே விலை விற்க வேண்டுமென்று அரசாங்க சார்பிலே சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மாறுபட்டவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும், யாருக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

**திரு. ரா. கனகசபை :** முதலிலே, நான் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்பதற்குப் போகவில்லை. இம்மாதிரி பிரச்னையே வரக்கூடாது. விற்பனைக்குத் தனி வழி கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காகச் சொன்னேனே தவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. கோவிந்தராசன் அவர்கள். இப்பொழுது ஒன்றரை மணிக்குள்ளாக முடித்துவிட வேண்டும். மாலையிலே வேறு டிமாண்ட் இருக்கிறது. தினமும் 3 மணி, 4 மணி என்று ஆவதைப் போல் இப்பொழுது ஆகக்கூடாது. 15 பேர்கள் இந்த டிமாண்டிலேயே பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எனவே, ஒருவரும் ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. சொ. கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுவரை எந்த மானியத்திலும் பேசவில்லையாதலால், எனக்கு 5 நிமிடங்கள் கூடக் கொடுக்கும்படி பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு மானியத்தில் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் நம்மை விட்டு மறைந்தமைக்கு என் தொகுதி மக்கள் சார்பிலும், என் குடும்பத்தின் சார்பிலும் என் அனுதாபத்தை அண்ணியார் அவர்களுக்கும், மற்றும் குடும்பத்தார்களுக்கும் தெரிவித்துக்கொண்டு பேச விழைகிறேன்.

கூட்டுறவு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, இப்பொழுது ஏதோ சர்க்கரை ஆலைகளில் ஊழல் நடந்துவிட்டதாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள். அவ்வாறு ஒன்றுமில்லை. அதற்குக் கமிட்டியே இருக்கிறது. அது பரிசீலனை செய்து டெண்டர் கேட்டு பிறகு தான் சர்க்கரை விற்கப்படுகிறது என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தனிப்பட்ட முறையில் லாபம் சம்பாதிக்கிறார்கள் என்பதை நிரூபிப்பார்களா ? அதற்கு அவர் கடமைப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கத்தில் ஊழல் என்று ஆரம்பித்தால் ஐந்து நிமிஷங்கள் போதாது, 5 மணி பேசினாலும் முடியாது. கூட்டுறவு இயக்கம் இன்னும் அரசியல் ஆதிக்கக்காரர்களின் இரும்புப் பிடியிலிருந்து விடுபடவில்லை என்பதற்கு நாகர்கோவில் தேர்தல் ஒரு உதாரணம். அடுத்து, கூட்டுறவு விதியின்படி கூட்டுறவு கட்டிடங்களை அரசியல் காரியங்களுக்கு வாடகைக்கு விடக்கூடாது என்று இருந்தும் மதுரையில் எம். டி. சி. சி. பேங்க் ஹால் காங்கிரஸ் கூட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் தேதியும் விடப்பட்டு காங்கிரஸ் கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டுறவுச் சட்டம் 1904-ல் உருவாகி, 1912-ல் புதுப்பிக்கப்பட்டு, 1932-ல் திரும்பவும் மாற்றப்பட்டு 1961-ல் திருத்தப்பட்டு வெளியிடப் பட்டும், அதன் சந்து பொந்துகளில் மறைந்துகொண்டவர்களின் கொட்டத்தை அடக்க நமது கூட்டுறவு முன்னாள் அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்களின் முயற்சியால் சந்தானம் குழு அமைக்கப்பட்டது. அந்த அறிக்கையை விரைவில் பெற்று புதிய சட்டத்தை உருவாக்க புதிய கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு ஆதித்தனார் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.





கூட்டுறவுத் தணிக்கையை விடுத்து தனியார் துறை தணிக்கையை நாடுவது விபரீதங்களை விளைவிக்கும் என எச்சரிக்க விரும்புகிறேன். டி.யு.சி.எஸ்-யிலும் கோவாப்பரேட்டிவ் ஃபையர் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸும் தனியார் துறை தணிக்கைக்கு விடப்பட்டுத் திரும்பவும் கூட்டுறவுத் துறைத் தணிக்கைக்கு மாற்றப்பட்டது சரியில்லாத காரணத் தால். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் தணிக்கையை தனியார் துறை தணிக்கைக்கு விட உத்தரவிடப்பட்டுள்ளது. தயவு கூர்ந்து அதை மாற்றி கூட்டுறவுத் துறை தணிக்கைக்கு விட மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காலதாமதம் தவிர்க்கக் கூடியதே. தணிக்கை சம்பந்தமான முடிவு சந்தானம் குழு பரிந்துரைக்கு ஒப்ப, மாற்றிக் கொள்ளலாமெனவும் அதுவரை அரசு எந்த முடிவுக் கும் வர வேண்டாமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கு 3 ஆண்டுகளாக நிறுத்தப்பட்ட அயல்துறை பணி படியைக் கொடுக்க சர்க்கார் முன் வர வேண்டுமெனவும், அதில் தயக்கம் காட்ட வேண்டாமெனவும் கேட்டுக்கொள்கிறேன். பலமுறை நம் அரசிடம் அவர்கள் கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுகிறேன்.

கூட்டுறவு அச்சகங்கள் யார் யார் கைக்கோ சென்று விட்டன. மாவட்டத்திற்கு ஒன்று என்பதை மாற்றி, ஒன்றுக்கு மேற்பட்டது ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன் அவைகளும் அச்சகத் தொழிலாளர்கள் சேர்ந்து கூட்டுறவு முறையில் நடத்த வழிவகை செய்யப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நில அடைமான வங்கி சென்ற ஆண்டு சிறப்பாகப் பணி புரிந்தது. இந்த ஆண்டு கடும் தண்ணீர் பஞ்சத்தை எதிர்த்துப் போராடும் கால கட்டத்தில் புதிய திட்டங்களை வரையறுத்துக்கொண்டு கிணறு வெட்ட, பம்பு செட்டு அமைக்க அதிகமான கடன் தொகை வழங்க வேண்டும். அதிலும் நெசவாளர்களுக்கு, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் அரசாங்கம் பங்கு தொகை கடன் வழங்குவது போல் நில அடைமான வங்கி மூலம் கடன் பெறும் விவசாயிக்கு பங்குத் தொகையை அரசாங்கம் கடனாக வழங்க ஏற்பாடு செய்தல் நலம் பயக்குமென கூறிக்கொள்கிறேன்.

மேலும், நெல் கொள்முதல் தனியார், அரிசி ஆலை அதிபர்களிடம் விடுவதால் அவர்கள் அரசியல் காரணங்களால் சரிவர நடப்பதில்லை. அதை மாற்றி கிராம, மாவட்ட அளவிலுள்ள கூட்டுறவு சங்கங்களை இந்தப்பணியில் முழு அளவில் ஈடுபடுத்த கேட்டுக்கொள்கிறேன்.

சி. எஸ். ஆர்., டி. ஆர். பதவிகளுக்கு இடையில் அசிஸ்டெண்ட் ரிஜிஸ்தார் பதவி ஒன்று ஏற்படுத்தினால் பதவி உயர்வின்றி பல ஆண்டு களாகச் சோர்வடைந்திருக்கும் சி. எஸ். ஆர். கள் இந்த அசிஸ்டெண்ட் ரிஜிஸ்தார் பதவிக்காவது வேலை உயர்வு பெறுவார்கள் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை).

ரீஜினல் ஜாயிண்ட் ரிஜிஸ்தார் அலுவலகம் ஒவ்வொரு ரீஜனிலும் இருப்பதால், டி. ஆர். அலுவலகம், பின் ஜே. ஆர். அலுவலகம், பின்பு ரிஜிஸ்தார் அலுவலகம் என்று வருவதால் பணம் விரயம் ; கால தாமதம் ஆகிறது. அந்த ஜே. ஆர். அலுவலகங்களையும், ரிஜிஸ்தார் அலுவலகத்திற்கே மாற்றிவிட்டால் நலமாக இருக்குமென எண்ணுகிறேன். அவ்வாறு செய்தால் பண விரயமும், காலதாமத ஏற்படாது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை, என்பதற்கு ... யை மனதில் கொண்டு இந்த ஆண்டு கூட்டுறவு கடன் ... சிக்கு வந்தபொழுது ... ஆண்டு வரை தள்ளி வைக்க உத்தரவிட கேட்டுச் சொன்னேன். அவர் உட(

கூட்டுறவுத் துறையில் உப பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள், இள நிலை ஆய்வாளர்கள் இடங்களை அதிக நாட்கள் காலியாக வைக்காமல் உடனுக்குடன் பூர்த்தி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக டி. ஆர். தேர்வு நேரிடையாக செய்யப்படுவதால் மற்றவர்களின் வேலை உயர்வைப் பாதிப்பதுடன் அவர்களுக்குச் சோர்வை உண்டாக்குகிறது. ஆகவே, நேரடி தேர்வை சில ஆண்டுகள் தள்ளி போடக் கேட்டுக்கொள்கிறேன்.

வட்டாரங்களில் கூட்டுறவு வங்கி வசதி ஏற்படுத்துவது வரவேற்கத் தக்கது. அதைக் காலாகாலத்தில் செய்ய வேண்டுமென்றும், மாவட்ட வங்கியின் கீழ் அது இயங்காமல் தனி அதிகாரத்துடன் தனிக் கமிட்டி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு அதை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவுத் துறையிலே பல நன்மைகள் செய்யக்கூடிய நிலையிலே இருந்தாலும் கூட, ஒரு சிலர் பதவியிலே ஒட்டிக்கொண்டிருந்து, அதை விட்டு விலகாமல் இருந்து, பல ஆண்டுகளாக சுகபோகத்தை அனுபவித்து வருகிருர்கள். அதை மாற்றி, ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு மேல் அதில் இருக்கக்கூடாது என்ற நிலையை உண்டாக்க வேண்டுமென்றும், பல பதவிகளை ஒருவர் வகிக்கக்கூடாது என்றும் இந்த நேரத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். கூட்டுறவுத் துறையிலே பல ஊழல்கள் பற்றிப் பேசினுலும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்து, அவர்களுக்கு ஏற்ப செயல்பட்டால் இலாபத்தில் நடக்கும் என்பதற்கு மோட்டார், லாரி உரிமையாளர்கள் சங்கம் தனியாக கூட்டுறவு சங்கங்கள் அமைத்து திருச்சியிலும், கோவையிலும், நீலகிரியிலும் நடத்துவதில் இலாபம் கண்டிருக்கிருர்கள். அதைப்போல் சம்பந்தப்பட்டவர்களை அதில் சேர்த்து கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைத்து நடைமுறைக்குக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

**திரு. செ. கந்தசாமி கவுண்டர் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலேயுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு பாங்குகளின் மூலம் கடன் உதவி பெறுவதிலுள்ள இடர்ப்பாடுகளைக் களைவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இருந்தாலும் விவசாயக் கடன் வழங்குவதில் சில இடங்களில் நஞ்சைப் பிரதேசங்களில் பயிர்களுக்குக் கடன் வழங்கியதை தவணைகளில் வசூலிப்பது சுலபமாக இருக்கிறது ; அதே சமயத்தில் புஞ்சை பிரதேசங்களில் வளரும் பயிர்கள் எதிர்பாராதவிதமாக மழை குறைவதாலும் கிணறுகளில் தண்ணீர் இல்லாமையினுலும் சாவியாகிவிடுவதாலே அவைகளின்மேல் செலுத்தப்பட்ட கடன்களை தவணை முறைப்படி வசூல் செய்வதில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, குறைந்த அளவில் கிராமக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் தரப்படுகின்ற கடன்கள் குறைந்த ஓராண்டிலிருந்து இரண்டாண்டு வரை இருக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம கூட்டுறவு நாணயசங்கங்கள் முன்பெல்லாம் நகைகளின் பேரில் பணம் கொடுக்கும் உரிமை பெற்றிருந்தார்கள். அது அப்படி இருந்த பொழுது கிராமத்திலே இருக்கிற ஏழை மக்கள் சிற்சில சமயங்களில் நெடுந்தூரம் சென்று பாங்குகளிலே நகைகளை வைத்து பணத்தை பெறுவதற்குப் பதிலாக, அந்த அந்த கிராமத்திலேயே அதிகச் செலவில்லாமல் பணம் பெற முடிந்தது. முடிகின்றபொழுது சீக்கிரமாகச் சென்று பணம் கட்டி நகைகளைத் திரும்பப் பெறுவதற்கும் வசதியாக இருந்தது. அதே மாதிரி கிராம கூட்டுறவு சங்கங்களில் நகைகளின்பேரில் கடன்வழங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், விவசாயிகள் நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்களுருவாகக ...ய ஆற்றுநீரை, எங்கெங்கே புஞ்சை நிலங்கள் இருக்கின்றன கேட்டுக்கொள்... லாம் அதையெல்லாம் நஞ்சை நிலங்கள் போல் பயிரி
அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறே...



ஏழை உழவர்களுக்கு, வசதியற்ற உழவர்களுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்குப் போதுமான கடன் வழங்குவதைப்போல் நிலமற்ற விவசாயக் கூலிகளுக்கும் சங்கங்களிலிருந்து சிறிதளவாவது கடன் கொடுக்க வகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் கீழ் மட்டத்திலுள்ள சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் இவர்களுக்கு எல்லாம் சங்கங்கள் ஏற்படுத்தப்படுவதைப் போல் கிராமத்தில், சமுதாயத்தில் மிகமிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிற அரிசனங்களுக்கும் ஏதாவது சங்கங்கள் அமைத்து அதன் மூலமாக அவர்களுக்கும் கடன் உதவி செய்து, அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தற்காலத்தில், மழை இல்லாமல், பருவமழை பொய்த்ததன் காரணமாக, பலபகுதிகள் வறண்டிருப்பதால் கூட்டுறவு நாணய சங்கங்கள் தற்போது வசூலிக்க வேண்டிய தவணைகளை ஓராண்டிற்கு ஒத்தி வைத்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இட்டத்தட்ட இரண்டு லட்சம் ஜனத்தொகை உள்ள பெரிய நகரங்களில் மட்டும் சிறப்பு அங்காடிகளை நிறுவி, 50 ஆயிரம் ஜனத்தொகை உள்ள பகுதிகளில் மொத்த விற்பனை நிலயங்களை நிறுவி வசதி செய்திருப்பது போல் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒவ்வொரு சிறப்பு அங்காடியாவது அமைத்து, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒவ்வொரு மொத்த விற்பனை நிலயத்தையாவது அமைத்து, வசதி செய்து கொடுத்தால் ஆங்காங்கு உள்ள மக்கள் எல்லோரும் நியாயமான விலையில் எல்லாப் பொருள்களையும், பண்டங்களையும் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை கூறிக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. இரா. நாராயணன் :** சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியறிதலை தெரிவித்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவு என்கின்ற முறை நமது தமிழ்நாட்டிலே பல விதமாக எண்ணப்பட்டுவந்தாலும் விவசாய மக்களுக்கு ஏற்ற அளவிலே கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன் பெற முடியவில்லை. ஏனென்ருல் மாவட்ட பாங்க் என்ற ஒரு நிறுவனம் வைத்துக்கொண்டு, அந்த மாவட்ட பாங்குக்கு கூட்டுறவு சங்கங்கள் ஒரே நேரத்திலே கடன் தேவைப்படுவதை பூர்த்தி செய்து அனுப்பி எந்த நேரத்திலே கடன் வாங்க வேண்டுமோ அந்த நேரத்திலே அவர்கள் வாங்க வேண்டுமென்று இன்றைக்கு விதி முறை இருந்து வருகிறது. அதிலும் சாதாரணமாக விவசாயிகள் பயிர் ...ட செய்கிற காலத்திலே அரசாங்கத்தாலே இந்த கூட்டுறவுத்துறை மூலம் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. அதிலே குறுகிய காலக் கடன், ...நடுத்தர காலக் கடன் என்று கடன் கொடுக்கப்பட்டு, 10 மாதத்திலே அந்த கடனை வசூலிக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது.

கூட்டுறவு சங்கத்திலே நானும் ஒரு தலைவராக இருக்கிற காரணத்திஞல் நானும் சில குறைபாடுகளை, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இப்பொழுது நான் கூட எங்களுடைய சங்கத்திற்காக $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் கூட்டுறவு சங்கத்திலே அந்த பாங்க் மூலமாகக் கடன் கேட்டபொழுது, பாங்கிலே உள்ளவர்கள் அங்கே அதை மறுத்தார்கள். ஏனென்ருல், அந்த சங்கம் நடைமுறைக்கு வரவில்லை. அது "ஏ" யில் இருக்கிறதா, "பி" யில் இருக்கிறதா, "சி" யில் இருக்கிறதா என்று கூற முடியவில்லை. இதனுல் இந்த சங்கத்திற்கு கடன் கொடுக்க முடியாது என்று பாங்கிலே கூறப்படுகிறது. இதை நமது அரசாங்க சார்பிலே போட்டிருக்கிற சி.ஈ.ஓ. என்பவரே அறிவார்கள். நான் எதற்காக சொல்கிறேன் என்ருல், அந்த கூட்டுறவு சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய வசதிகள் விரைவிலேயே கிடைக்க முடியவில்லை, என்பதற்காகத்தான். நமது மாநில ரிஜிஸ்திரார் அவர்கள் திருச்சிக்கு வந்தபொழுது அவரிடத்திலே நேரிலே இதைப்பற்றிகுறை சொன்னேன். அவர் உடனே அந்த சி.ஈ.ஓ.வை கூப்பிட்டு விவசாயிகளுக்

கும் எப்பொழுதும் கடன் கொடுக்க வேண்டும், கடன் கொடுத்தால்தான் அந்த சங்கம் அதிகப் பணம் கொடுக்க முடியும் என்ற நிலைமை ஏற்படும் என்று சொல்லி, அதற்குப் பிறகு எங்களுடைய சங்கத்திற்கு கடன் வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நம்முடைய அரசாங்க சார்பிலே நமது கனம் அமைச்சரவர்கள் ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒரு பாங்கை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த சமயத்திலே கொண்டு வந்த திட்டத்திற்கு அவர்களுக்கு எங்களுடைய தொகுதியின் சார்பாக, மக்களுடைய சார்பாக நான் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நமது பழைய கூட்டுறவு அமைச்சர் மாதவன் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் விவசாயமக்களுக்கு வேண்டிய கடனை வழங்க வேண்டுமென்று, கடன் உதவி செய்ய வேண்டுமென்று பல கூட்டங்களிலே பேசி விதிமுறைகளை திருத்தி அமைத்தும்கூட விவசாய மக்களுக்கு கடன் பெற வேண்டிய அளவு பெறுவது சுலபமாக இல்லை. பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதனால்தான் இந்த சங்கங்கள் மூலமாக கடன் வழங்குவதை விட இப்பொழுது ஒவ்வொரு தாலுகாவிலும் ஒவ்வொரு பாங்கை ஏற்படுத்தி, அதன்மூலமாக விவசாய மக்களுக்கு நல்ல முறையிலே கடன் வழங்க அரசாங்கம் முன் வந்ததற்கு அவர்களுக்கு எனது நன்றியறிதலை இரண்டாவது முறையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது தவிர, மூன்று சங்கங்களை ஒன்றாக இணைத்து அதை ஒரு பாங்காக ஏற்படுத்த வேண்டுமென்று இப்பொழுது பாங்கிலே உள்ள அதிகாரிகள் வற்புறுத்தி வருகின்றார்கள். அந்தமாதிரி ஏற்படுத்துவது சங்கத்திற்கு சங்கம், கிராமத்திற்கு கிராமம் பகையை ஏற்படுத்துமே தவிர அதனால் நன்மை அடைய முடியாது என்ற கருத்தை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு சங்கமும் தனித்து இயங்கினால் தான் அந்த கிராமத்திலுள்ள மக்களுக்கு நாம் நல்ல வழி வகைகளை செய்யமுடியும். 4 சங்கங்களை ஒன்றாக சேர்த்து, இணைத்து பாங்காக ஏற்படுத்தி அங்குள்ள டைரக்டர் மூலம் கடன் பெறுவது என்றால் அது சுலபமான காரியம் அல்ல என்பதை நான் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். எந்த சங்கமும் தனியாக இயங்க வேண்டுமென்று அரசாங்கம் ஒரு உத்தரவிட வேண்டுமென்று நான் மிகவும் பணிவுடன்கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). ஆகையினால் இந்த கூட்டுறவு முறையை நமது சர்க்கார் வெகு தீவிரமாக்கி, ஒவ்வொரு சங்கத்தினாலும் நல்ல பயன் அடையக்கூடிய முறையில் அந்த விதிமுறைகளை திருத்தி, பாங்கியினுடைய விதிமுறைகளைத் திருத்தி, விவசாயிகளுக்கு நல்லமுறையிலே கடன் உதவி செய்ய வேண்டுகிறோம். விவசாயமக்களுக்கு ஏற்ற அளவிலே இப்பொழுது நாம் பல காரியங்களை செய்ய வேண்டுமென்று நான் சொல்ல இரண்டு நிமிடம் அதிகமாகத் தேவைப்படுகிறது என்றும் தயவுசெய்து கொடுக்க வேண்டுமென்றும் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நான் ஒரு சங்கத்திலே இருக்கிறேன். எங்கள் சங்கத்திற்கு 33 இலட்சம்ரூபாய்க்கு நாங்கள் விவசாய உரம் கேட்டோம். இப்பொழுது மார்க்கெட்டிங் சொஸைட்டி என்று ஒரு சொஸைட்டி இருக்கிறது. அந்த சொஸைட்டியிலே நாங்கள் வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மு.ப. 11–30 நாங்கள் அதற்கு ரூ. 10 டெபாசிட் கட்டி சங்கத்திற்கு அந்த உரிமை வேண்டும் என்று கேட்டோம். நாளது வரையில் இந்த சங்கத்திற்கு அதை விநியோகம் செய்ய அனுமதிதர மார்க்கெட்டிங் சொஸைடி ரிஜிஸ்டிரார் முன்வரவில்லை. எங்களுடைய சங்கத்திற்குச் சேரவேண்டிய அந்த லாபம், கமிஷன் வருவதில்லை. அது மார்க்கெட்டிங் சொஸைடிக்குப் போய்விடுகிறது. அதிலும் சர்க்கார் கவனம் செலுத்தி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சி. கோவிந்தராசன் :** கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்

" வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடி தொழில் செய்யாக் குற்றத்தால் "



என்ற பாரதிதாசன் பொன் மொழியை தன்னுடைய ஆய்வுரையில் பொரித்திருக்கிறார்கள். ஆனாலும் கூட்டுறவு இயக்கம் அந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்றிருந்தாலும், இப்பொழுது இருக்கிற இயக்கத்தின் பழம்பெருச்சாளிகள் நீண்ட நாட்களாக இதில் இருந்து கொண்டு இந்த இயக்கத்தையே சீர்குலைத்து வருவதை நாம் பல ஆண்டுகளாகக் காணமுடிகிறது. கிராமப் புறங்களில் வசதி படைத்தவர்கள், மேல் தட்டிலுள்ளவர்கள் இந்த இயக்கத்திலும், நகர்புறங்களில் அதிலும் வசதி படைத்தவர்கள் இந்த இயக்கத்திலும் புகுந்து கொண்டிருக்கிற காரணத்தினால், தொடர்ந்து அவர்களே இசும் பாத்தியதை மாதிரி இவைகளை நடத்திக்கொண்டு வருகிற காரணத்தினால், இந்த இயக்கத்திலே ஊழல்கள் மலிந்து இருக்கின்றன என்று நான் சொல்லும்பொழுது, அது மிகை என்று யாரும் சொல்லமாட்டார்கள். நமக்கே தெரியும். பல தலைவர்கள், பல உறுப்பினர்கள் இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் பல ஆண்டுகளாக இருந்து இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக வெள்ளி விழாக்கள், பொன் விழாக்கள் நடத்தப்படுவதை கூட நாம் காண்கிறோம். காலம் சென்ற முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில்கொண்டு தான் அடிக்கடி கூறி வந்திருக்கிறார்கள். எவரும் தொடர்ந்து பல காலமாக இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினராக இருப்பதைத் தடுக்க வேண்டும், அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய வகையில் விதி முறைகள் அமைய வேண்டும் என்பதை அவர்கள் அடிக்கடி கூறி வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் தொடர்ந்து இந்த இயக்கத்தில் இருப்பதன் காரணமாக ஊழல்கள் மலிந்திருக்கின்றன என்பதை உணர்ந்திருந்த காரணத்தினால், புதிய அரசு ஏற்பட்ட பிறகு 1968 பிப்ரவரியில் திரு சந்தானம் அவர்கள் தலைமையில் இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் ஒரு இடைக்கால அறிக்கை கூட சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த இடைக்கால அறிக்கையில் உறுப்பினர் பதவி காலம், தேர்தல் நடத்தும் முறை, சொஸைடியின் சேர்க்கை (காம்பொஸிஷன்) இவைகளைப்பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவைகளையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, இந்த இயக்கத்திற்கு புத்துயிர் ஊட்டக்கூடிய முறையில், வருங்கால சந்ததியினர், இளைஞர்கள், நாணயமாக உள்ளவர்கள் இந்த இயக்கத்தை நடத்தி வரும்படியான முறையில் இச்சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய வங்கிகளிலிருந்து கடன் கொடுப்பது கூட மேல் தட்டிலிருப்பவர்கள், மத்தியதர விவசாயிகள் இவர்களுக்குத் தான் கிடைக்கக் கூடிய நிலைமை இருந்து வருகிறது. நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு, அவசியமானால், தேவைப்பட்டால் அவர்களிடமிருந்து கூரிடி வேண்டுமென்றால், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய தானியத்தையே அடிப்படியாக வைத்து, அவர்களுக்குக் கடன் கொடுக்க முன்வர வேண்டும். நிலம் இல்லாத விவசாயிகள், குத்தகைதார் விவசாயிகள் ஆகியோர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலமாக சுலபமான முறையில் ஜாமீனில்லாமல் வட்டியில்லாமல் அல்லது குறைந்தவட்டியில் கடன் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமான விஷயம் தணிக்கை முறை, தணிக்கை முறை பற்றி இங்கே சட்டமன்றத்தில் கேள்வி நேரத்திலும், மற்ற நேரங்களிலும் கூட விவாதம் எழுப்பப்பட்டு வருகிறது. கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் நேர்மையிலே அவர்களுடைய கண்டிரோலில் இருக்கக்கூடிய தணிக்கை முறையை எடுத்துவிட வேண்டும். மாநிலத்திலுள்ள ஆடிட்டர்-ஜெனரல் பிரதிநிதி இந்தத் தணிக்கையை நடத்த வேண்டும். நான் இந்தத் துறைக்கு மட்டும் இப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் டிபார்ட்மெண்டு கண்டிரோலில் உள்ள தணிக்கை முறையே கூடாது என்ற கருத்தில் தான் நான் இதைச் சொல்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியார் ஆடிடர்கள் போய் கூட்டுறவு நிறுவனங்களில் ஆடிட் செய்வது என்ற முறை திட்டவட்டமாக நிறுத்தப்பட வேண்டும். மேலும், கூட்டுறவு சங்கங்களில் தணிக்கை செய்வதில் காலதாமதம் கூடாது. கணக்கு முடிந்து மூன்று மாதங்களுக்குள் தணிக்கையாளர் அவருடைய அறிக்கையை சமர்ப்பித்து

விடவேண்டும். தணிக்கையாளரால் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள் கணக்குகளோடு பிரசுரிக்கப்பட வேண்டும். அதற்கு அவசியமானால் கூட்டுறவு சட்டத்தில் 64-வது விதியை திருத்த வேண்டுமென்றாலும், திருத்தி அமைக்க வேண்டும். அப்பொழுது தான் நிர்வாகத்தில் என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை பேரவையின் உறுப்பினர்கள் தெரிந்து கொண்டு, கண்காணிப்புடன் இருந்து, குறைகளை நிவர்த்திப்பதற்கும், ஊழல்களை தடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக்கூடிய, பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவு ரிஜிஸ்டிராரால் தயார் செய்யப்பட்ட மாதிரி விதிகள், தொழில் சங்கங்களை சுதந்திரமாக அமைப்பதற்கு தடையாக அமைந்திருக்கின்றன. அடிப்படை உரிமைகளை தொழிலாளர்களுக்கு மறுக்கக்கூடிய முறையில் இவைகள் அமைந்திருக்கின்றன. ஏற்கனவே 1964-ம் ஆண்டில் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கு மெட்ராஸ் ஷாப்ஸ் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட்ஸ் ஆக்ட் ஒரு பாதுகாப்பாக இருந்தது. அதைக்கூட முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கம் ரத்து செய்துவிட்டது. இந்த ஊழியர்களுக்கு கடை சிப்பந்திகள் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்துவிட்டார்கள். அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்கள், இன்கிரிமெண்டு இல்லாதது, சம்பள வெட்டு, போதுமான சம்பளம் இல்லாதது, இப்படிப்பட்ட எந்தக் குறைகளைப்பற்றியும் கூட்டுறவு ரிஜிஸ்ட்டிராரிடம் தான் முறையிட முடியும். அவர்கள் விஷயத்தில் மாநில தொழிலாளர் இலாகா, அல்லது லேபர் கமிஷனர் தலையிடமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. லேபர் டிபார்ட்மெண்டு இதில் தலையிடக்கூடிய முறையில் விதிகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். மெட்ராஸ் ஷாப்ஸ் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட்ஸ் ஆக்ட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதை ரத்து செய்து, குறைந்தபட்சம் அந்த சட்டத்தையாவது இவர்கள் விஷயத்திலும் அமுல்படுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சட்டத்திலுள்ள செக்ஷன் 70-ன் படி ரிஜிஸ்டிரார் தொழிலாளர்களை சஸ்பெண்டு பண்ணலாம் எந்தவித விசாரணையுமின்றி. இது நல்ல நிர்வாகத்துக்கு அறிகுறியாக இருக்குமானால், நான் ஒன்று குறிப்பிடுகிறேன், சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள், அதாவது அந்த சொஸைடியை நடத்துபவர்களுக்கு பல்வேறு விதமான ஊழல்கள் ஏற்படும்பொழுது, அதே விதி அவர்களுக்கும் அனுஷ்டிக்கப்பட்டால் நல்லதாக இருக்கும். அதேமாதிரி கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியக்கூடிய சிப்பந்திகளுக்கும், மற்ற பாங்கு ஊழியர்களுக்கும் எம்மாதிரி சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ, அப்படிப்பட்ட சலுகைகள் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கைத்தறி சம்பந்தப்பட்ட மட்டில் ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி போதாது. ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருகிறது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு ரிசர்வ் பாங்கு சில கண்டிஷன்களை விதிக்கிறது. இந்த கண்டிஷன்கள்படி நன்கு செயல்படும் சொஸைட்டிகள் கூட கடன் பெறமுடியாத நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு உரம், உழவடைப் பொருள்கள் முதலியவைகள் வாங்குவதற்கு அக்ரிகல்சரல் லோனுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியைப் போன்று ஒதுக்கப்பட வேண்டும். கூட்டுறவு மானியத்தில் சிறு தொழில்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது, 4, 5 பேர்களுக்கு வழங்கப்படும். கைத்தறிக்கு ரூ. ஒரு லட்சம், இரண்டு லட்சம், என்று ஒதுக்கப்பட்டால்—ஒரு கைத்தறி நடத்துவதற்கு ரூ. 500 போதும்—கணக்குப் பிரகாரம் ஒரு தறி மூலம் பிழைப்பவர் $2\frac{1}{2}$ பேர்—கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கினால் 500 பேர்களுக்கு மேல் பிழைக்க முடியும். ரிசர்வ்பாங்கில் கடன் வாங்குவதற்கான முயற்சி இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்காமல், கூடுமானவரையில் கூட்டுறவு வங்கிகளுக்கு நம்முடைய மாநிலத்திலிருந்து தொகை ஒதுக்கி, இதற்கு ஏற்பாடு செய்வது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். அதே மாதிரி கூட்டுறவுத் துறையிலே................

**(மணி அடிக்கப்பட்டது).**





***திரு. மு. அலங்காரம் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் மீது நானும் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ராமனாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ராமனாதபுரம் மத்திய வங்கியை இரண்டாகப் பிரித்து, கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதியிலுள்ள வேறுபாடுகளைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெரும்பாலும் கிழக்குப் பகுதியிலுள்ள கூட்டுறவு வங்கிகளுக்கு ராமனாதபுரம் மத்திய வங்கி அதிகமான சலுகைகள் அளிக்கவில்லை என்ற புகார்கள் இருந்து வருகின்றன. மேலும் பல கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து கூட்டுறவு நாணயச் சங்கங்களாக மாற்றி அமைத்ததால், பல குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. பல குறைகள் நிறுத்தப்படவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பல நோக்கு கூட்டுறவு சங்கங்களை இணைத்து கூட்டுறவு நாணய சங்கங்களாக மாற்றியதால், அதன் தலைவர்கள் நல்ல முறையில் செயல்பட முடியாத நிலை இருக்கிறது. ஏனென்றால் முன்பு ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சங்கம் இருந்தது. 5, 6 சங்கங்களை இணைத்து நாணய சங்கங்களாக மாற்றியதால், ஒவ்வொரு கிராமத்திற்கும் கிடைக்கக்கூடிய நன்மைகள் கிடைக்க முடியாத நிலைமை இருந்துவருகிறது. ஆகவே, பழைய முறையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கூட்டுறவு சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் லோன் அப்ளிகேஷன்கள் அனுப்பினால், மத்திய வங்கியிலிருந்து அது திருப்பி அனுப்பப்படுகிறது. தலைவர் சென்று அனுமதி வாங்கும் சந்தர்ப்பங்களில் அதிகமான செலவினங்கள் ஏற்படுகின்றன. மேற்பார்வைக் கழகத்திற்கு என்னென்ன குறைகள் என்பதைக் கடிதப் போக்கு வரத்து மூலமாகத் தெரிவித்து இந்த அவசியமற்றச் செலவைத் தவிர்க்க வேண்டும். மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விவசாயிகளுக்கு எந்த எந்த நன்மைகள் செய்யப்பட வேண்டும் என்று ஒரு மாவட்ட ரீதியில் வழி முறைகள் இருந்தாலும், அவை கடைப்பிடிக்கப்படுவதில்லை. விவசாயிகளுக்கு மூன்று வருஷக் கடன்கள் கொடுக்க வேண்டுமென்று இருந்தாலும், ஒரு வருஷக் கடன்களைக் கொடுத்துவிடுவதால், அதிகத் தொந்தரவாக இருக்கிறது.

மேலும் சங்கங்களுக்குக் கட்டட வசதி இல்லை. கொடுக்கப்படும் உரங்களையும், தானியங்களையும் வாடகைக் கட்டடத்தில் தான் அவர்கள் வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஒரு கட்டடத்திற்கு வாடகைக்காக ரூ. 10 அனுமதிக்கப்படுகிறது. தனிப்பட்ட கட்டடங்களுக்குப் போகும்போது வாடகை 25 ரூபாய் அளவில் இருக்கிறது. பின்னால் ஆடிட் அப்ஜெக்ஷன் வருகிறது. அப்படிப்பட்ட குறைகளைத் தவிர்க்க ஒவ்வொரு சங்கத்திற்கும், கோடவுன்கள் வேண்டும் என்றும், அலுவலகங்கள் வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நில அடைமான வங்கி முதுகளத்தூர் தாலுகாவில், பரமக்குடியில் இருக்கிறது. முதுகளத்தூரிலேயே ஒன்றை அமைக்க வேண்டும் என்பது நீண்டநாள் பிரச்சினை. அதை உடனடியாகப் பரிசீலனை செய்து, அந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என் தொகுதியில் காட்டிலாகாவிற்குச் சொந்தமான பகுதிகள் இருக்கின்றன. அங்கே ஒரு ஆட்டுப் பண்ணை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஆட்டுப் பண்ணை வைத்தால், அந்த வட்டாரத்தில் உள்ள விவசாய மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும். அதிகப்படியான வருமானமும் சர்க்காருக்குக் கிடைக்கும்.

எங்கள் பகுதியில் மீனவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ரேஷன் கடைக்கு மனுப் போட்டால், நிராகரிக்கப்படுகிறது. தாய்மார்கள் அடிக்கடி பலவிடங்களுக்குப் போய் அலைந்து வாங்க வேண்டியிருப்பதால், தங்கள் கடமையைச் சரிவர செய்ய முடியவில்லை. ஆகவே, மீனவர்களுக்கு அதிகமாக நன்மை செய்ய அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நியாய விலைக் கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அமைத்தால்தான், பொது மக்கள் குறைகளை எழுப்ப முடியும். தக்க நடவடிக்கையும் எடுக்க முடியும். மேலும் பிற்பட்ட பகுதிகளில்

குறைகளை நிவர்த்திக்க, லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டிகள் ஒரு யூனியனுக்கு ஒன்று என்று ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் அதிகமான நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்ட முறையில் வரும் புகார்களை உடனடியாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்குத் தக்க நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தக் கூட்டுறவு மானியத்தின்மேல் பேசுவதற்கு அனுமதி கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி, என் உரையை முடிக்கிறேன்.

***திரு. பி. வேலுசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சம்பந்தமான கோரிக்கையின் மீது, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

இந்தக் கூட்டுறவு சம்பந்தமாக, அமைச்சரவர்கள், தன்னுடைய முன்னுரையில் சொல்லும்போது, விவசாயம், வர்த்தகம், தொழிற்சாலை இவை திருப்திகரமாக இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். வாஸ்தவமாகவே, கூட்டுறவு பொறுத்த வரையில், அந்த விதிகள் தவறானவர்கள் தப்பிக்கப் பார்த்தால், கூட்டுறவு முறையில் இருக்கும் அளவிற்கு வேறெதிலும் கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு மனிதன் தவறு செய்தால், அந்தத் தவறு எங்கெல்லாம், எப்படியெல்லாம் தப்பிக்க வேண்டுமோ, அப்படியெல்லாம் செய்ய வழி வகைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விதி முறைகளை மாற்றி அமைக்காத வரையில், தவறுகளைக் கண்டுபிடிப்பது என்பது நடக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரணமாக, ஸேல்ஸ் ஸொஸைட்டிகள் என்று இருக்கின்றன. இந்த ஸேல்ஸ் ஸொஸைட்டிகள் மூன்று ஆண்டுக்(கு) ஒரு முறை வட்ட முறையில் தேர்தல் நடத்துகிறார்கள். வட்ட முறையி(ல்) தேர்தல் நடத்தும்போது, நிர்வாகிகளாக இருக்கின்றவர்கள், ஏற்கனவே போன ஆண்டு நிர்வாகிகளாக இருந்தவர்கள், இந்த ஆண்டு வருகின்றவர்கள், தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் தன் ஆட்களாகப் பார்த்து, தன்னுடைய செல்வாக்கையும், அந்தஸ்தையும் உயர்த்திக்கொள்ளும் வகையி(ல்) செய்துகொள்ள வாய்ப்புக்கள் இருக்கின்றனவேயன்றி, வேறொன்(று)ம் இல்லை. அப்படி வழி வகைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை மாற்றி அமைக்க, அந்தச் செயல்களைத் தடுக்க முயற்சிகள் எடுக்காவிட்டால் அதிகப்படியான தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பாகப் போய்விடும்.

வார்டுகள் இருக்கின்றன. ஸேல்ஸ் ஸொஸைட்டிகளில் வாங்குகின்ற அங்கத்தினர்களைக் கொண்டு, ஒரு அட்வைஸரி கமிட்டி வைத்து, அங்கத்தினர்களை மையமாகக் கொண்டு, டைரக்டர்களைத் தேர்ந்தெடுப்பது வழக்கமாக இருக்கிறது. இதை மாற்றி அங்கத்தினர்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கும் முறையை ஏற்படுத்துவது மிக மிக அவசியமானது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

அத்தோடு, இந்த ஸொஸைட்டிகளில், பிரசிடெண்டுகள், செக்ரட்டரிகள் கையில்தான் இருக்கிறது. குமாஸ்தாக்களை நியமிப்பது, நீக்குவது எல்லாம் அப்படி நீக்குவதும், நியமிப்பதும் அவர்கள் கையில் இருப்பதால், அவர்கள் செய்கின்ற தவறுகளைச் சரியாக மறைப்பதற்கு கணக்கெழுதி, காரியங்களைச் செய்ய அந்த நபர்களைப் பயன்படுத்தி, தவறுகளிலிருந்து தப்பிக்க வாய்ப்புகளும் வழி வகைகளும் இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட எல்லாக் குமாஸ்தாக்களையும், நியமிப்பது போன்ற காரியங்களை மையப்படுத்தி, அவர்கள் கையிலிருந்து எடுத்து, அந்த அந்தப் பிரதேசக் கூட்டுறவுச் சங்கத்தின் கையில் இல்லாமல், மையப்படுத்திச் செய்ய வேண்டும்.

அவர்களுக்குரிய தகுதிக்கேற்ப, பிராவிடண்ட் பண்ட், இன்ஷ்யூரன்ஸ் மற்ற சலுகைகளும், மற்றத் தொழிலாளர்களுக்கு உள்ளதுபோல், வசதிகளை அளிக்க வேண்டும். அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்தோடு, கூட்டுறவில் பிரயாணப் படி, அவரவருக்குத் தக்க வகையில் சௌகரியம்போல இருக்கிறது. அதை மாற்றி, சொஸைட்டிக்கு என்ன கெபாசிடி, அதன் பொருளாதார நிலை என்ன, என்பதைப் பொருத்து



பிரயாணப் படி இருக்க வேண்டும். இப்பொழுது அது வளர்ந்துகொண்டே போகிறது. ஒவ்வொரு சொஸைடிக்கும் இவ்வளவுதான் என்று வரையறுத்து கணக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த சொஸைடிகளில் வாங்குகின்ற பொருள் ரூ. 10 என்று ஒரு பொருள் வாங்கினால், அந்தப் பொருள் அன்றைய மார்க்கெட்டில் ரூ. 15 என்றால், ரூ. 14–க்கு விற்கப்படுகிறது. பிரைஸ் பாலிஸி என்று வைத்திருக்கிறார்கள். அப்படியெல்லாம் இல்லாமல், சாதாரணமாக கொள்ளை லாபம் அடிக்கின்ற வியாபாரிகளைத் தடுக்கவே கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்படுகிறது என்பது என்னுடைய கருத்து. வாங்கும் பொருள் கூட்டுறவு சொஸைட்டியில் வெளியிலே இருக்கும் விலையை விட ஒரு 10 சதவிகிதம் குறைந்து இருந்தால், நலமாக இருக்கும். இப்பொழுது, கிட்டத்தட்ட அதை ஒட்டிய நிலையிலேயே இருக்கிறது. அதை மாற்றி அமைக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு, நாமினேஷன் கொடுக்கின்ற காலத்தில், கூட்டுறவு ஆலைகளில், பஞ்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள், ரெஜிஸ்ட்ராரிடம் விளக்கம் கேட்டால், அவர்கள் சொல்லுவது கிடையாது. கூலி வேலைக்கு வரும் தொழிலாளர்கள் நிறையப் படித்து வருவதில்லை. விளக்கம் கேட்கும்போது, ரெஜிஸ்ட்ரார் அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும் என்கிற கட்டாயம் இருக்க வேண்டும். ஆகவே, இப்பொழுது இருக்கும் முறையை மாற்றி அமைக்க வேண்டும். என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்குத் தேவையான, செல்வாக்குப் படைத்தவர்களே வருவதற்கு ஏதுவாக இருக்கிறது. இவற்றையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது 12 கூட்டுறவுப் பஞ்சாலைகள் இருக்கின்றன. இவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, மற்ற பஞ்சாலை போலத்தான் பளு ; ஆகவே, வெளியிலே என்ன கூலியோ அந்தக் கூலியே கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்குக் குறைந்த கூலி கொடுப்பது சரியாக இருக்காது. அந்த ஆலைகளில் கூட இன்றைக்கு 10 ஆலைகள் நஷ்டத்தில் இருக்கின்றன என்று அறிகிறேன். இரண்டே இரண்டு ஆலைகள் மட்டும் லாபத்தில் ஓடுகின்றன என்றும் அறிகிறேன். (மாண்புமிகுதிரு சி. பா. ஆதித்தனார் : 12 ஆலைகளும் நட்டத்தில்தான் ஓடுகின்றன.) 12 ஆலைகளும் நஷ்டத்தில்தான் ஓடுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். திருப்பூரில் ஒரு கூட்டுறவு ஆலை—அமைச்சர் பெயரைச் சொல்ல வேண்டாம் என்பதால், பெயரைச் சொல்லவில்லை. —கூட்டுறவு ஆலைக்குப் பஞ்சு வாங்கும் நபர் ஏற்கனவே பஞ்சாலைக்கு அதிபர். அந்த நபர் பஞ்சாலைக்கு காட்டன் பர்ச்சேஸிங் கமிட்டியில் மெம்பராகப் போட்டார்கள். ஏற்கனவே, சர்க்கார் உத்தரவாதம் கொடுத்து, பாங்கியில் இருந்து பணம் கொடுத்தும், ஆலையை ஒரு வாரம் கூட நடத்த முடியவில்லை. அப்படிப்பட்ட நபரைப் பஞ்சு வாங்க, போட்டால், அந்த ஆலை உருப்படுமா ? அப்படிப்பட்டவர்களை பஞ்சு வாங்க, நூல் விற்க என்று போட்டால், அனுபவம் அற்றவர்களைப் போட்டால், என்ன ஆகும்? ஏற்கனவே இருக்கும் 12 பஞ்சாலைகளும் அழிந்துகொண்டு இருக்கின்றன. அதையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது.) அந்த முறையில் இந்தத் துறையைச் சிறப்பானதாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. மு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். இன்றையதினம் உழவர்களுக்கு கடன் வழங்கும் விவகாரத்தில் ஒரு புதிய முறையைக் கையாள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். நான் கடந்த ஆண்டு பொது விவாதத்தின்போது இந்த மன்றத்திலே இதைப் பற்றி வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, புதிய முறையை எவ்வளவு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவாக விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே கடன் வழங்குவதற்காக எத்தனையோ அமைப்புக்கள் இருந்தபோதிலும், உழவர்களுக்குச் சிறப்பாகப் பணம் பெறுவதற்கான ஒரு புதிய முறையை, புதிய கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

ஈரோட்டிலுள்ள ஒருவர் 40 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள லாரி ஒன்றை வைத்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். லாரி ஈரோட்டில் இருக்கிறது. லாரி உரிமையாளர் லாரியினுடைய உரிமைப் பத்திரத்தை எடுத்துக்கொண்டு சென்னைக்கு வந்து லாரியின் பேரில் 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் வேண்டுமானால், அந்தத் தொகையை ரொக்கமாகப் பெற முடிகிறது. ஆனால், ஈரோட்டிலே 5 ஏக்கர் பூமி இருந்து, அத னுடைய மதிப்பு 50 ஆயிரம் ரூபாயாக இருந்தாலும் அந்தப் பூமியினுடைய உரிமைப் பத்திரத்தை வைத்துக்கொண்டு குறிப்பிட்ட நேரத்தில் 10 ஆயிரம் ரூபாய் வாங்க முடியாத நிலை இருக்கிறது. தனிப்பட்ட லேவாதேவிக் காரர்களைச் சட்ட ரீதியாக எப்படித் தடை செய்ய வேண்டுமென்பது தனிப் பட்ட விவகாரம். ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய சொத்து இருந்தால், அவர் விரும்புகிற நேரத்தில் குறிப்பிட்ட வங்கியில் சொத்து மதிப்பிலே 25 சத வீதம் காசோலை மூலமாக உடனடியாகப் பணம் வாங்கு கிற முறையைக் கொண்டுவந்தால்தான் உழவர்களுடைய பிரச்சினையை முழு மையாகத் தீரும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியத் துணைக்கண்டத்தில், அந்தத் துறையில் வல்லுநர்களாக இருக்கக்கூடியவர் கள் இதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத் தில் இருக்கின்ற விவசாயிகள் ஏககாலத்தில் சொத்தில் 25 சத வீதம் பணம் கேட்டால் நிதி ஆதாரத்திற்கு எங்கே போவது? என்பது கடந்த ஆண்டு பொறுப்புள்ள இடத்திலிருந்து கேட்கப்பட்டது. நான் என்னுடைய யோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறையில் இருக் கிற உயர்மட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனம் செலுத்த வேண்டும். தனிப்பட்ட வங்கிகள் தமிழகத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு வங்கிக்கும் ஒவ்வொரு மாவட்டத்தை ஒதுக்கி வைத்து, அந்த வங்கியின் அனுமதியில்லாமல் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்யக் கூடாது என்று பாதுகாப்பை சர்க்கார் கொடுத்துவிட்டால், அந்த வங்கிகள் உழவர் களுக்கு தேவையான பணத்தைத் தேவையான நேரத்தில் கொடுக்கத் தயாரக இருக்கின்றன. இம்மாதிரியான புதிய முறையில் பணம் கிடைக்க வழி செய்தால் பெரிய நன்மை ஏற்படும். மேலும் காசோலை மூலமாகப் பணம் வாங்குகிற பழக்கத்தை கிராம மக்களிடையே ஏற்படுத்திக் கொடுத்து விட்டால், அவர்கள் தங்கள் பணத்தை வங்கிகளில் டெபாசிட் செய்ய முடியும். கிராமங்களில் தேங்கியிருக்கின்ற பணம் பகிரங்க மார்க்கெட்டிற்கு வரும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள் கையானது ஆரம்பக் கட்டத்திலே இருக்கிறதே தவிர, முழுமையான அள வில் செயல்படுத்துகிற வேகம் இல்லை. விவசாயிகளுக்கு மாடுகள் வாங்க, விவசாயத்திற்கான யந்திரங்கள் வாங்க, மற்றும் உழவுச் செலவுகளுக்காக காசோலையை உபயோகப்படுத்தும் முறை தமிழகத்தில் அமல் படுத்தப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இதில் இருக்கிற ஆற்றலி லும், அறிவிலும், நம்பிக்கை இருக்கிறது. அவர் இன்னும் கொஞ்சம் வேகமாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்ல தலைவர் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் குறிப்புப் புத்தகத் திலே சர்க்கரை ஆலைகள் என்ற தலைப்பில் ஒரு பாரா இருக்கிறது. எனக் குக் கிடைக்கின்ற தகவலின்படி தனியார் துறையில் இருக்கும் ஒரு சர்க்கரை ஆலையில் 1967-68-ல் ஒரு கோடியே 85 லட்சம் ரூபாய் இலாபம் வந்திருக்கிறது . ஆனால், கூட்டுறவுத் துறையில் இயங்கும் சர்க் கரை ஆலைகளில் சிலவற்றில் கொஞ்சம் இலாபம், அல்லது கொஞ்சம் நஷ்டம் அல்லது ஆடிட்டர் கணக்கு இன்னும் வர வேண்டியிருக்கிறது என்ற அளவில்தான் நிலைமை இருக்கிறது. நாம் எல்லோரும் சோஷ லிஸத்தில் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள், தேசியமயத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள், தமிழகத்தில் தனியார் துறையில் இருக்கும் ஒரு



சர்க்கரை ஆலையில் ஒரு கோடியே 85 லட்சம் ரூபாய் இலாபமும், அதே சமயத்தில் பொதுத் துறையில் இருக்கும் சர்க்கரை ஆலையில் நஷ்டமும் என்று சொன்னால், நாம் சோஷலிஸத்தில் நம்பிக்கை வைக்க வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. எனக்குத் தெரிந்த ஒரு விஷயத்தைக் குறிப்பிடலாம் என்று இருக்கிறேன். சோவியத் நாட்டி லிருந்து ஒரு குழு இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்து ஆராய்ச்சிசெய் திருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்காவிலிருந்து வரவில்லை—அமெரிக்கா விலிருந்து வந்தால் அவர்களை முதலாளித்துவத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லலாம்—சோவியத் நாட்டிலிருந்து வந்தவர்கள் "இந்தியா பூராவும் பொதுத் துறையில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது" என்ற கருத் தைச் சொன்னார்கள். இதற்கு இரண்டு வலுவான கருத்துக்களைக் கூறி னார்கள். பொதுத் துறையில் நிர்வாகம் செய்யும் அதிகாரிகள் அந்தத் தொழிலில் முழுமையாகப் பயிற்சி பெருதவர்களாக இருப்பது முதற் காரணம். இரண்டாவது காரணத்தை நான் சொல்வதற்கு வெட்கப்பட வேண்டியிருக்கிறது. இதைச் சொல்வதற்கு மிக்க வேதனைப்படுகிறேன். அதாவது, பொறுப்பற்ற தொழிலாளர் வர்க்கம். 25 ஆண்டுகளாக தொழிலாளர் வாழ்க்கையில் ஈடுபட்டவன் நான். இந்த மன்றத்தில் இதைச் சொல்வதற்கு நான் மிக்க வேதனைப்படுகிறேன். ஆகவே, சர்க்கார் துறையாக இருந்தாலும் அல்லது வேறு எந்தத் துறையாக இருந் தாலும் புதிய கோணத்தில் செயல்பட வேண்டும். அதிகாரிகள் நியமனம் செய்யப்படும்பொழுது அவர்களுக்குக் குறைந்தது ஆறு மாத காலத்திற் காவது பயிற்சி அளிக்க வேண்டும்—சாதாரணமாக டீ கடையில் தேனீர் போடுவதற்குக் கூட சிறிது காலம் பயிற்சி கொடுக்கிறார்கள்—நான் அதிகாரி கள் மீது சந்தேகப்படவில்லை. அதிகாரிகளுடைய ஆற்றலையும் அறிவை யும் நம்புகிறேன். ஆனால் அவர்களுக்குச் சிறிது காலம் முறையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதுதான் என் குறிக்கோள். இம் மாதிரியான பயிற்சி எல்லா மட்டத்திலேயும் வந்தாக வேண்டும். கூட் டுறவுத் துறையில் பொதுத் துறையில் இருக்கிற, என் வணக்கத்திற்குரிய தொழிலாளர் வர்க்கம் மிகுந்த பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும். தேசிய மயமாக்கும் கொள்கையில் நம்க்பிக்கை கொண்ட எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் பொறுமையோடு பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் 20 லட்சம் பேர். அதற்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 7 கோடி ரூபாயும், இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7 கோடி, 7 கோடி ரூபாயும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 கோடி ரூபாயும் ஒதுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த அளவிற்கு இதைக் கூட்டுறவுத் துறையில் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது என்பதைப் பார்க்க வேண்டும், முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடி யாத நிலை இருக்கிறது. கூட்டுறவு இயக்கம் ஒரு நல்ல இயக்கம். அதை நிர்வகிக்கக் கூடிய தலைவர்கள்தான் பெருவாரியான இந்தச் சங்கடங்க ளுக்குக் காரணம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புதிய தறிகளைப் பதிவு செய்ய வருடம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் மூன்று லட்சம் என்று அனுமதித்திருக்கிறது. புதிய கைத்தறி நெசவாளர் கள் போதிய அளவில் அநேகமாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. உதா ரணமாக, இந்த மாநிலத்தினுடைய கூட்டுறவுச் சங்கத் தலைவருடைய சங்கத்தை எடுத்துக் கொள்ளலாம், சென்னிமலைக் கூட்டுறவு சங்கத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். அதற்கு கடந்த ஆறுமாதமாக நெசவாளர் 57 பேர் பலமுறை விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் துணைப் பதிவாளர் ஈரோடு கூட்டுறவு கைத்தறி டைரக்டர், ந. ப 12-0
திரு. க. ர. நல்லசிவன், மற்றும் அதிகாரிகளுக்கு விண்ணப்பம் கொடுத் திருக்கிறார்கள். இந்த மாநிலத்தினுடைய நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தை யாரை நம்பி ஒப்படைத்திருக்கிறோமோ, அவருடைய சங்கத்தில்தான் இம்மாதிரி நடக்கிறது. அந்தச் சங்கத்தினுடைய தலைவர் அப்படி இருக் கிறார். ஏற்கனவே அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். இது

சம்பந்தமாக மறுபடியும் தனிப்பட்ட முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இதுபோன்ற ஊழல்கள் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் முன்னால் இருந்துவருகின்றன. இதற்கு அடிப்படைக் காரணமே பரம்பரை பரம்பரையாக ஏகபோக உரிமையாக சிலர் அவற்றில் தொடர்ந்து இருப்பதுதான். அதனாலேயே அத் துறையினால் கிடைக்க வேண்டிய பெரும் நன்மை தடைப்படுகிறது. இவற்றைக் களைவதற்குப் புதிய அரசாங்கமாவது முன்வரவேண்டும். எந்த தலைவர் மீது குறைகள் அடிக்கடி சொல்லப்பட்டு வந்திருக்கின்றனவோ, அதே தலைவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். கடந்த பத்தாண்டுகளாக நானே சொல்லி வந்திருக்கிறேன். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பரிசீலித்ததாகக் கூடத் தெரியவில்லை. உதாரணமாக

I sumbit that I have taken up the final audit of the Chennimalai Weavers Production and Sale Society for 1964–65 and during the course of final audit, I notice serious irregularities in the society.என்று சொல்லப்படுகிறது. இதுபோலவே பல சொஸைடிகளின் ஆடிட் ரிப்போர்ட் இருக்கின்றன. தயவு செய்து புதிய அரசாங்கமாவது தவறு இன்றி கூட்டுறவு சங்கம் எது என்று தெரிந்து ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். விவசாயிகள் கூட்டுறவு சங்கமாக இருந்தாலும் சரி, தொழிலாளர் கூட்டுறவு சங்கமாக இருந்தாலும் சரி அவற்றினால் விவசாயிகளுக்கோ, தொழிலாளர்களுக்கோ நன்மை கிடைக்க வேண்டுமென்று சொன்னால் வருகிற ஆண்டிலாவது அவை சீரமைக்கப்பட்டாக வேண்டும். அவற்றுக்கு ஒரு புதுத்தெம்பு, புதிய போக்கு, மாறுதல் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் மீது பேசுகின்ற நான் கூட்டுறதுவுத் துறை பற்றிய கொள்கை விளக்கத்தில் இன்றையதினம் இந்தச் சர்க்காரால் கூட்டுறவு விதிமுறைகளை மாற்றுவது திருத்துவது பற்றி நியமிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கையோ, குறிப்போ தருவார்கள் என்று எதிர்ப்பார்த்தேன். ஆனால், எவ்விதக் குறிப்பும் தரப்படவில்லை. அமைச்சர் அவர்கள் தம் பதிலிலாவது அதைத் தருவார்கள் என்று நினைக்கிறேன். முன்பே கொடுத்திருந்தால் உறுப்பினர்கள் அதைப் பற்றித் தங்கள் கருத்தைத் தெரிவித்துக் கொள்ள வாய்ப்பு இருந்திருக்கும்.

கூட்டுறவுத் துறையை பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கிற பெரிய சங்கடம், சிக்கல், பதவியில் இருக்கிற அதிகாரிகளினால்தான் வருகிறது. அவை நல்ல முறையில் செயல்படாததற்குக் காரணமோ டெபுடி ரிஜிஸ்திராரில் இருந்து ரெஜிஸ்திரார் வரை எந்த விஷயத்திலும் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துக் கொள்வதில்லை. இதுவே கூட்டுறவு சங்கங்களின் ஊழல் மலிந்து வருவதற்குக் காரணமாக அமைகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வேறு எங்கும் போக வேண்டியதில்லை. என்னுடைய திண்டிவனம் பகுதி கூட்டுறவு அர்பன் பாங்கே விளங்குகிறது. தனிப்பட்ட முறையில் நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்லாது இருக்க முடியாது. ஒரு கிராமுக்கு 5 ரூபாய் கடன் கொடுக்கலாம் என்றால் இங்கே 14 ரூபாய் வரையில் கொடுக்கப்படுகிறது. இந்த விவரத்தை 1969-ம் ஆண்டு ஜனவரிமாதம் 2-ம் நாள் நான் டெபுடி ரிஜிஸ்திராருக்கு எழுதினேன். நான் கொடுத்த புகார் வந்ததாக 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதியில் பதில் கிடைக்கிறது. அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைப் பற்றி 1969-ம் வருடம் பிப்ரவரி மாதம் 22-ம் தேதியில் கையெழுத்திட்டு அனுப்பப்பட்ட தபால் 1969-ம் வருடம் மார்ச் மாதம் 4-ம் தேதியில் என்னுடைய கைக்குக் கிடைக்கிறது. கூட்டுறவுத் துறையை செம்மையாக நடைபெறச் செய்யும் அதிகாரிகளே இந்த நிலையில் நடந்துகொள்கிறார்கள் என்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டாம். இந்த நிலைமையை ரிஜிஸ்தராரிடம் நேரில் சொல்லி 15 நாட்களாகின்றன. எனக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என்று சொல்கிறேன். இந்த வங்கி கடந்த நான்கு ஆண்டுகாலமாக துறையினரால் இன்ஸ்பெக்ஷன் கூட செய்யப்படவில்லை.



வட்டரத்திற்கு ஒரு வங்கி என்று ஏற்படுத்தி மக்களுக்குக் கடன் கிடைக்க வழிசெய்யப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடன் வழங்குவது பொறுத்து மனுகொடுத்த ஒரு மாதத்திற்குள் கடன் கொடுக்கப்பட்டாகவேண்டும் என்கிற ஒரு காலவரையை ஏற்படுத்தியாக வேண்டும்.

அடுத்து, அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்பரேஷனைப்பற்றி ஒரு வார்த்தை. இதை கூட்டுறவுத் துறையோடு இணைப்பதில் ஒரு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் குறிப்பிடுகிற மோட்டார்களைத் தான் விவசாயிகள் வாங்கவேண்டியிருக்கிறது. 20, 25 ரக மோட்டார்கள் பட்டியலில் இருந்தாலும் 2, 3 ரக மோட்டார்கள் தான் கிடைக்கிறது என்று சப்ளை செய்கிறார்கள். அதோடு காட்லாக்கில் இருக்கிற விலையைக் கொடுக்க வேண்டிய அவசியம் வேறு ஏற்படுகிறது. அதன் காரணமாக பார்கெயினிங் வசதியில்லை. மேலும் சர்வீஸ் சார்ஜ் என்று 30 ரூபாய் வாங்குகிறார்கள். என்ன சர்வீஸ் செய்கிறார்கள் என்பது புரியவில்லை. மோட்டார்களைப் போட்டவுடன் ரிப்பேர் ஆனால் விவசாயிகளேதான் கவனித்துக்கொள்கிறார்கள். இவர்களுக்குச் சொல்லி அனுப்பி இவர்கள் வந்து செய்வதாகத் தெரியவில்லை. கூட்டுறவுத் துறையிலேயே அந்த அந்தப் பகுதியில் சர்வீஸ் சென்டர்களை ஏற்படுத்துவது நன்றாக இருக்கும்.

இன்றைய தினம் கிராமத்திற்கு ஒரு வங்கி என்று ஏற்படுத்துவது என்றால், அதற்கான செயல்திட்டம் நமக்கு வேண்டும். கட்டடம் வேண்டும். நல்ல அபிஷியல்ஸ் வேண்டும். இவற்றின் மூலம் வயபிள் யூனிட்டின் நிலைமை என்ன என்பதும் தெளிவுபடுத்தப்பட்டாக வேண்டும்......

மணியடிக்கப்பட்டது.

**DR. H. V. HANDE :** Hon. Chairman, in support of the cut motion given by the Swatantra Party I want to state the following things.

Co-operative Department has been there for a number of years. During the past several years it has built up a tradition of corrupt practices and several malpractices which have been mentioned on both sides of the House even before and during the Congress Party rule. Even after the Congress Party has become the Opposition Party, the same thing is continuing. We want to stress that we have the ful'est confidence in the present Minister for Co-operation who is very seriously applying his mind to rooting out corruption as far as possible. An example of this department would be a cane chair which has been there for a number of years and which has developed a number of places where bugs stay. Unless the chair is dipped in boiling water and de bugged, there is no possibility of ensuring safety for the persons sitting on the chair. Similarly unless the entire Co-operative Movement is cleansed of these persons, there is no chance of improving it. I shall give an example of how it is functioning. I have with me the balance sheet of The Madras State Consumers' Co-operative Federation Limited, as on 30th June 1968. The Federation has a fairly large investment and it has sustained a loss of Rs. 2,18,383·80. What is the root cause? This is because a new class of people has come up. A class of career co-operators has sprung up and this class has a monopolistic control over the entire gamut of co-operatives from the primary to the apex level institutions and is exercising hegemony over the entire movement for well over the decades. I want the Minister to look into this. I wish that this new class is wiped out. We witness the spectacle of the celebrations of silver jubilee of presidentships and large donations in cash and kind are collected for the jubilee by

sychophantic followers. These Co-operative Big Brothers are the very bane of the movement. They have sedulously fostered co-operative misrule.

What type of management should we have ? I plead that the principle of 'Honorary Management' should be replaced by the principle of 'Professional Managament'. Honorary managment was all right some years ago when things were better off.

Now, Sir, my submission is that the Movement has become sophisticated and technical in character. Therefore, like the United States of America, the United Kingdom, Sweden and also Japan, we have to adopt the Professional Management Concept for the Co-operative Movement.

Then I come to the next point, namely, employees of Co-operatives. Can they be given the right of membership or not ? I think they should be given membership and they should not be denied that right because then only will they have an interest in the working of the co-operative movement.

Then I come to the present system of Audit-keeping—Single Entry Book-keeping". It gives room for many malpractices. Many tainted transactions were hidden under the item " Adjusting Heads " and escaped detection for decades. Further, Single Entry Book-keeping is ill-adapted to the modern forms of "Managing Accounts, Cost Accounts and Margin Control Syestems". So 'Single Entry' should be replaced by 'Double Entry Book-keeping'.

Then I come to the Audit Report and the Audit Objections. They come very late after a number of years and unless they are expedited, there is no scope for rectification.

Then my submission is that the Inspectorate of Local Fund Audit should also organise an " Audit Rectification Cell ", which should be charged with the responsibility of the rectification of Audit defects within a prescribed time-limit. That department should also organise a separate " Audit-Counselling Cell ", which should be charged with the duty of advising the Co-operatives of adopting modern methods of Managerial Accounts, Cost Accounts and Margin Control Systems.

Then I come to an important point and I request the Hon. Minister to give full attention to it. It relates to Co-operative Judiciary. The power of settling the disputes arising in Co-operatives vests with the Registrar under section 73 (2) of the Madras Co-operative Societies Act, 1961. Section 73 (2) reads as follows :—

'The Registrar may, on receipt of such reference—

(*a*) decide the dispute himself or transfer it for disposal to any person subordinate to and empowered by him ; or

(*b*) subject to such rules as may be prescribed, refer it for disposal to an arbitraror or arbitrators.'

This section does not accommodate the creation of an independent judicial body. Now, whatever evidence is given in the primary





court will stay even if a matter is taken to the Supreme Court and you cannot change the evidence there. You can only interpret particular point in your own way but you cannot change the evidence given in the primary court. So, I want an independent body to settle disputes arising in Co-operatives. Now the Department is completely ignorant of legal principles and procedure. Further, with the monopolistic control exercised by the coterie of Co-operative Big Brothers, the Department is biassed towards the non-official leadership. The Officers virtually let loose a kind of "Co-operative Legal Tyranny"—I may be pardoned for using that expression though it is a parliamentary one—against the defenceless litigants, other than the " Big Brothers", The introduction of an Appellate Tribunal under section 96 does not solve the problem. Therefore, I request the Hon. Minister to consider the whole matter and if necessary to amend the Act. Also, it is neccessary that all matters requiring judicial determination like disqualifications of the Committee Members, Surcharge, Supersession, Election Disputes, etc., should also be taken out of the Registrar and vested in the Co-operative Courts under section 73 of the Act.

(At this stage Mr. Chairman sounded the gong.)

Sir, I am the only speaker to speak from our Party and the Hon. Speaker has allotted 10 minutes for me and I request you to allow some more minutes.

Now, I will refer to some important points and skip over minor points. Our Planners have accepted the principle that the Co-operative Movement should be developed as an instrument of democratic planning. Even so, a large investment of about Rs. 30 crores is going to be invested in the Co-operative Movement in the Fourth Plan of this State. All these moneys will go to a coterie of co-operative leadership and I request the Hon. Minister to give very careful consideration to this aspect of the matter.

Now, I will briefly refer to the working of three Co-operative institutions in the City of Madras, and their accounts have been completely checked and the Auditors have given their reports. Firstly, the Tamil Nadu Co-operative Union, Ltd., has constructed a three-storeyed building at a cost of Rs. 6 lakhs in August 1964. The District Co-operative Audit Officer, Madras, and the chief Co-operative Audit Officer, Madras, had pointed out a number of grave financial and engineering irregularities in their Audit Reports. The quantitative value of the irregularities is estimated to be Rs. 2·40 lakhs. The sharp increase of 170 per cent in the cost of the building reinforces the enormity of mismanagement of the funds of the Union and explains the huge loss of Rs. 2·40 lakhs.

The second institution is the George Town Co-operative Bank, Ltd. This Bank has been badly mismanaged continously for a number of years. Illegal excess borrowing to the tune of Rs. 100 lakhs per year, illegal bonus on subscriptions, etc., are some of the defects pointed out by the District Co-operative Audit Officer, Madras. An illegal expenditure of Rs. 2·2 lakhs incurred in respect of building reconstructions was also pointed out in his report for 1961–62.

[Dr. H. V. Hande] [1969 மார்ச் 24

The third institution is the Central Co-operative Printing Works, Ltd. The quantitative value of the loss sustained by the Press in the years 1961–63 is of the order of Rs. 2·24 lakhs. Now I want to make an earnest appeal to the Hon. Minister. Unless we appoint a High Power Commission of Enquiry to go into the management of these institutions, there is no salvation for the co-operative movement. In the meanwhile, I request the Government to supersede these three institutions and surcharge the persons responsible for their mis-management. Even surcharge is not enough and they must also be booked. I hope and trust that the Hon. Miinster will consult legal experts and examine the matter and I pray to God that during his tenure of office, he will divert the waters to clean completely the dirty— Aegean Stables of his Department through his honest efforts. Now the Hon. Minister nods and I know that he will do his best in regard to this matter. Thank you.

***திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். விவசாயிகள் எளிதிலே பணம் வாங்குவதற்காகவும் பணம் விரையமாக ஆகாமல் இருப்பதற்காகவும் புதிதாக அரசு ஒரு யோசனை வைத்து இருக்கிறது. அந்த யோசனையானது இன்றைக்கு விவசாயிகளுக்காக ஒவ்வொரு கிராமத்திலும் விவசாய பாங்கு ஏற்படுத்தவேண்டுமென்றும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், பஞ்சாயத்துக்கும் ஒவ்வொரு வங்கி ஏற்படுத்த வேண்டுமென்றும் இருக்கிறது. அது யோசனையாக இல்லாமல் உடனடியாக அரசு அமலாக்குவதற்கு முன்வந்தால் விவசாயிகள் சுலபமாகப் பணம் வாங்குவதற்கும் உபயோகப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கிராமத்திற்கு ஓர் வங்கி என்பது யோசனை. வட்டாரத்திற்கு ஒரு வங்கி என்பது அமுலாக்கப்பட்டு வருகிறது. இரண்டையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக சொல்கிறேன்.

**திரு. என். மருதாசலம் :** ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு வங்கிஎன்பது பது யோசனை. வட்டாரத்திற்கு ஒரு வங்கி என்பது உறுதியாகக்கொண்டு வரப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நன்றி, வாழ்த்துகிறேன். அதே மாதிரி வங்கியிலே டைரக்டர்கள் மூலமகாத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படியில்லாமல் மகாசபை மூலமாக ஒவ்வொரு தலைவரையும் தேர்ந்தெடுக்கச் செய்ய வேண்டும். அதோடு ஒவ்வொரு வங்கிக்கும் ஒரு தலைவர் என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இப்பொழுது பல வங்கிகளுக்கு ஒருவர் தலைவராக இருக்கிறார். அப்படியில்லாமல் ஒவ்வொரு வங்கிக்கும் ஒவ்வொரு தலைவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பஞ்சாயத்து யூனியன் ஒன்றிலே பெண் மெம்பர் ஒருவரும், ஹரிஜன மெம்பர் ஒருவரும் நாமினேட் செய்கிறார்கள். அதேமாதிரி கூட்டுறவு வங்கியிலும் பெண் மெம்பர் ஒருவரையும், ஹரிஜனமெம்பர் ஒருவரையும் சேர்த்துக்கொள்வதற்குச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு வங்கியிலே விவசாயிகள் பணம் வாங்கும் போது நூற்றுக்கு 15 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. பதினைந்து ரூபாய் என்பதைப் பத்து ரூபாய் என்று ஆக்க வேண்டுமென்று விவசாயிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். விவசாயிகளுடைய அபிப்பிராயத்தின் படி அந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும். விவசாயிகள் பணம் பெறும்போது 9 பர்சன்ட் வட்டி வாங்கப்படுகிறது. அதை 6¼ சதவிகிதம் ஆகக் குறைத்தால்தான் விவசாயிகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் ஏற்படும்.



1969 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எந்த வங்கியில் 9 சதவிகிதம் வட்டி வாங்கப்படுகிறது என்று குறிப்பாகத் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

**திரு. என். மருதாசலம் :** எங்கள் ஊரில் உள்ள விவசாய சொஸைடியில் 9 சதவிகிதம் வாங்குகிறார்கள். அப்படி இல்லாமல் 6½ சதவிகிதம் தான் வாங்க வேண்டுமென்று சட்டத்தைத் திருத்த வேண்டும். பங்குதாரர் சேர்க்கும்போது 10 ரூபாய்க்கு மேல் வாங்கக்கூடாது. தற்போது தாலூகாவுக்குப் பக்கத்தில்தான் வங்கி இருக்கிறது. வட்டாரத்துக்கு ஒரு வங்கி ஏற்படுத்துவது என்ற அரசின் முடிவு நல்ல முடிவு. இந்த முடிவு உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். சந்தானம் கமிட்டி என்று ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது . , . (மணி அடிக்கப்பட்டது.)

***திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன். கூட்டுறவுத் துறைக்கு நல்ல ஆட்கள் கிடைப்பது ரொம்பக் கஷ்டம். இந்தத் துறையிலே உள்ள ஊழல்களைப் பற்றி முன்பு பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் மிகத்தெளிவாகச் சொன்னார்கள். எந்தக் கூட்டுறவு ஸ்தாபனமாக இருந்தாலும் சரி, நடத்துகிறவர்கள் நல்லவர்களாக இருந்தால் ஸ்தாபனமும் நன்றாக இருக்கும். கூட்டுறவுத் துறையில் லஞ்சம் தாண்டவமாடுகிறது. கையாடல் நடக்கிறது என்று சொல்லி டிபார்டுமெண்டில் இருந்து கோர்ட்டுக்குப் போகிறார்கள். அதிலே 100-க்கு ஒன்றுதான் நிரூபிக்கப்படுகிறது. பச்சையாகச் சொன்னால் சட்டம் அந்த அளவுக்கு இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஒருசிலர், சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்றவர்கள் அதிலே ஈடுபட்டு நல்ல முறையிலே சேவை செய்ய முன்வருகிறார்கள். இருப்பினும் இந்தச் சட்டசிக்கல் காரணமாக, சட்டத்திலுள்ள ஓட்டைகள் காரணமாக அவர்களும் அதை விட்டு விட்டுப் போய்விடும்படியான நிலைமை இருக்கிறது. போர்டுக்குரியவர் களை "பை ரொடேஷன்" தேர்ந்தெடுக்கிறார்கள். அதனால் முன்பு இருந்த போர்டு அடுத்த வருஷம் இருக்காது. ஆகவே, ஒரு போர்டை சூப்பர்சீட் பண்ணும்போது அதிலே உள்ளவர்கள் எல்லாம் பொறுப்பு என்ற நிலைமையை உண்டாக்க முடியாதபடி சட்ட சிக்கல் இருக்கிறது. ரொடேஷனில் புது போர்டு வந்து விட்டது என்ற நிலையில் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது. சூப்பர்சீட் பண்ணுவது பற்றியுள்ள செக்ஷன் 65-ல் **Suo mot the Registrar can take any action or have an enquiry.** என்று இருக்கிறது. என்குயரி செய்யும் போது பிரைமா பேசி கேஸ் இருக்கிறதா என்று பார்த்துச் செய்யவேண்டும். எங்களைப் போல் ஒருவர் இருவர் நல்லவர்களா வருபவர்கள் கூட வர விரும்பாத சூழ்நிலை தற்போது இருக்கிறது. இதிலே ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லுகிறேன்—நடக்கிறது என்று சொல்லவில்லை. நானே நாளைக்கு அமைச்சராக வருகிறேன் என்று வைத்துக்கொண்டால் ஒரு குறிப்பிட்ட போர்டு சம்பந்தமாகக் கெடுதலை ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்தால் அதற்குச் சட்டம் இடம் கொடுக்கிறது. அதிலே ஏதோ தவறு இருக்கிறது என்று பெட்டிஷன் கொடுத்து நடவடிக்கை எடுத்து தவறு ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்பட்டவுடன் தவறாகப் பெட்டிஷன் கொடுத்தவர் மேல் நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறதா என்றால் இல்லை. அமைச்சர் அவர்கள் இந்த நிலைமைகளைக் கவனிக்க வேண்டும். டிபார்ட்மென்டில் பர்சன்ஸ் எல்லா சொஸைடியிலும் இருக்க வேண்டும். போர்டு இருக்கிறது என்றால் ஃபாரின் சர்வீசில் சி.எஸ்.ஆர். செக்ரடரியையோ, எஸ்.ஐ. மானேஜரையோ போட்டுக்கொள்ளலாம். வேண்டாமென்று சொல்லிவிட்டால் போடத் தேவையில்லை என்ற நிலை இருக்கிறது. ஏன் போடக் கூடாது ? தற்போது உள்ளபடியே நல்ல லாபத்தில் சொஸைட்டிகள் நடக்கின்றன என்றால் அது சிவில் சப்ளைஸ் இருக்கும் காரணத்தால் நடக்கக்கூடிய கோவாப்பரேடிவ் கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்கள்தான். அது ரேஷன் மூலம் வரும் லாபந்தான். உங்களுடைய "எஃபர்டினால்" ஏற்பட்ட லாபம் அல்ல. கண்டிப்பாக ஒவ்வொரு ஸ்டோரிலும் நல்லவர்களைப் போட வேண்டும். மானேஜ் பண்ணுகிறவர்களைப் போட வேண்டும்.

ரெவின்யூ டிபார்டுமெண்டுக்கும், கோவாபரேடிவ் டிபார்டுமெண்டுக்கும் இடையே ஒரே சண்டை. சிவில் சப்ளைஸ் ஆர். ஐ., தாசில்தார் வான் கேட்டு அல்லது ஜீப் கேட்டு கொடுக்கவில்லை என்று சொன்னால் அதனால் தவறான நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, கண்டிப்பாக சி.எஸ். ஆரைப்போட வேண்டும், நல்லவர்களைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்கெட்டிங் சொஸைடி இருக்கிறது. கடன் வேண்டுமென்றால் தனிப்பட்ட வியாபாரியிடம் இரவு 12 மணிக்குப் போய்க் கேட்டால் 300 ரூபாய் கொடுத்து விட்டு மறுநாள் கொடுக்கவில்லை என்றால் மடியைப் பிடித்து விடுவான். இங்கே அவசரமாக ஒரு வாரத்திற்குள் பணம் தரவேண்டுமென்று சொன்னால் இல்லாத கமிட்டிகளை எல்லாம் போட்டு அங்கேபோய் பணம் வருவதற்கு முன்னால் விவசாயிகளுடைய நிலைமை என்னாவது? கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இவற்றை எல்லாம்நன்றாக மனத்திலே வைத்துக்கொண்டு இந்தச் சட்டச் சிக்கல்களை எல்லாம் ஒழித்துவிட்டு அரசியலுக்கு இடம் கொடுக்காமல் சூப்பர்சீட் பண்ணுவதற்கு முன்னால் "பிரைமா பேசி" கேஸ் இருக்கிறதா என்று பார்த்து விட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, நல்லவர்கள் அதற்கு வர வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பு. செ. முத்துச்செல்வன் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த கூட்டுறவுத் துறைமானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்கள்கூற விழைகின்றேன். கூட்டுறவு இயக்கம் என்றாலே ஒரு பெரிய ஊழல் நிறைந்த இயக்கம் என்று இருந்ததை திராவிட முன்னேற்றக்கழகம் அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாள் தொட்டு நல்ல முயற்சிகளின் வாயிலாக இன்று நாட்டில் ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி கூட்டுறவு இயக்கங்கள் என்று சொன்னால் அது பாமர மக்கள் பயன்படக் கூடிய இயக்கங்கள் என்று கருதக்கூடிய அளவில் இந்த நாட்டிலுள்ள பாமர மக்கள் பயன்படக்கூடிய இயக்கமாக கூட்டுறவு இயக்கத்தை மாற்றிய பெருமை இந்த துறைக்கு பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்களைச் சாரும் என்று கூறுவதில் தவறு இல்லை. அதைத் தொடர்ந்து இப்போது அதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் மாண்புமிகு திரு. ஆதித்தனார் அவர்கள் நல்ல சட்டங்களைப் பயின்றிருக்கிற காரணத்தினாலும், அவர்களுக்குள்ள அனுபவம் காரணமாகவும் இந்த துறையை மேலும் நல்ல முறையில் விரிவுபடுத்தி இத்துறையில் உள்ள ஊழல்களை அகற்றுவதற்கு முயற்சிப்பார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இந்த கூட்டுறவு இயக்கங்களை நல்ல நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டு வர வேண்டும். கூட்டுறவு இயக்கங்களில் உள்ள ஊழல்களைப் போக்கக்கூடிய அளவில் நல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எதிர் தரப்பில் சொல்லப்பட்ட பல சிக்கல்களை யெல்லாம் களைந்தெறிந்து அதிலுள்ள ஓட்டை உடைசல்களை எல்லாம் தகர்த்தெறிந்து, கூட்டுறவு இயக்கங்களில் காவலர்களாக செல்வந்தர்கள் இருக்கும் நிலையை மாற்றுவதற்கான சட்டங்களை அமைத்து பாமர மக்கள் அதில் இடம் பெறத் தக்க வகையில் சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கங்களில் முன்பெல்லாம் கடன் பெறுவது என்றால் அது அவ்வளவு சுலபமானதல்ல. முன்பு நில அடைமான வங்கிகளில் இருந்து கடன் பெறுவது என்றால் பகீரதப் பிரயத்னம் என்று சொல்வார்களே அதுபோல் இருந்து வந்தது. ஒருவர் நில அடைமான வங்கியிலும் கடன் பெற வேண்டுமென்றால் இரண்டு மூன்று ஆண்டுகளாக அதற்காக நடந்து காத்திருந்து, பத்தாயிரம் ரூபாய் கடன் பெறுவதற்கு ஆயிரத்து ரூபாயாவது செலவழிக்கவேண்டிய ஒரு துர்ப்பாக்கியகரமான நிலை இருந்து வந்தது. இதை நம் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள்கூட ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் கூட கூட்டுறவு நில அடைமான வங்கியில் கடன் பெற நில அடைமான வங்கியில் பங்குத் தொகை செலுத்தி அந்தக் கடனை இதுவரையில் பெற முடியாத நிலை இருந்து கொண்டிருப்பதாகவும், அந்தக் கடன் அவர்களுக்கு கிட்டாவிட்டாலும் பங்குத் தொகை மட்டும் இருந்து கொண்டிருப்



பதாகவும் குறிப்பிட்டார்கள். அப்படி குறிப்பிட்டு விட்டு, இந்தஅரசு ஏற்பட்ட பிறகு கூட்டுறவு நில அடமான வங்கியில் கடன் பெறுவது என்றால் பங்குத் தொகையைச் செலுத்திவிட்டு ஒரு மாத காலத்திற்குள்ளாக சுலபத்தில் கடன் பெறும் நல்லதொரு நிலை ஏற்பட்டிருப்பதை பாராட்டியிருக்கிறார்கள். இன்றைய நிலையில், கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் கடன் பெற மனு அனுப்பி ஒரு மாத காலத்திற்குள் கடனைப் பெறுகிறார்கள். அதோடு முன்பு அவர்கள் அதற்காக செலவு செய்ய வேண்டிவந்த தொகை அதிகமாக இருந்தது. அப்படி ஆயிரக்கணக்கில் செலவு செய்து கடன் பெற வேண்டிய நிலையை மாற்றி நல்ல முறையில் கடன்கள் பெறுவதற்காக சட்டங்களை எல்லாம் சீர்திருத்தி நல்லதொரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

எங்கள் திருச்சி மாவட்டத்தில் கூட இரண்டு கோடி ரூபாய்க்கு மேலாக நில அடைமான வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கடன் கொடுப்பதால் விவசாயிகள் மோட்டார் சாதனங்கள் எல்லாம் வாங்கி நல்ல முறையில் விவசாயம் செய்ய வழி பிறந்தது. இன்னும் பல நல்ல சீர்த்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

என் தொகுதியில் உள்ள முசிறியில் ஒரு கூட்டுறவு நவீன அரிசி அறைக்கும் ஆலையை ஏற்படுத்த எட்டு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று மதிப்பீடு செய்து அரசுக்கு ஒரு கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் கோரிக்கையை அரசு ஆராய்ந்து, பரிசீலித்து அனுமதித்தால் அந்த ஆலை அங்கு அமைவது பொருத்தமாகவிருக்கும். முசிறி தாலுகாவில் அதுபோன்ற அரிசி அறைக்கும் ஆலை இல்லாத தால் அதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் திருச்சி மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலையே கிடையாது. ஆனால் மற்ற மாவட்டங்களில் இருக்கின்றன. ஆகவே எந்தவிதமான ஆலையும் இல்லாத எங்கள் முசிறி தாலுகாவில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிடைக்கக் கூடிய சர்க்கரை ஆலையை முசிறியில் கூட்டுறவு வாயிலாக ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த அளவிற்கு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை மானியத்தின்மீது எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பதவி என்றால் சில பேர்களை அது தேடிப் போகும். ஆனால் ஒரு சிலர் பதவியைத் தேடி அலைவார்கள். அப்படி தேடித் தேடி அலைந்து கஷ்டப்பட்டு, மிகவும் தொல்லைக்கு ஆளாகி எப்படியிருந்தாலும் பதவி கிடைக்க வேண்டும் என்னும்படியான நினைவில், அரசியல் வாழ்வில் இறுதியாக அந்தப் பதவியை நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அப்படி அவர்கள் பெற்ற முறையிலும்கூட அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் பதவியேற்ற சமயத்தில் சொன்னார்கள். நான் தவறு செய்தாலும் கூட முதல் அமைச்சர் அவர்களே, என்னைக் கூப்பிட்டுக் கேட்டு நடவடிக்கைள் எடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆரம்பமே நல்ல சகுனமாக இல்லை. எடுத்தவுடனே தவறு தான் செய்வேன், அப்படியிருந்தாலும் கூப்பிட்டு என்னைக் கேட்டு அதற்கு மேல் நடவடிக்கைகள் எடுங்கள் என்று சொல்லியதை அறிக்கையில் இருந்து பார்த்தோம். தவறு செய்தாலும் என்னைக் கூப்பிட்டுக் கேட்டு அட்ஜஸ்ட்மெண்ட் ஏதாவது செய்யுங்கள் என்று கூறியிருக்கிறார்கள்.

நான் அப்போது சபையில் இல்லை. என் கட்சியைச் சார்ந்த வினாயகம் அவர்கள் குறிப்பின்படி சொல்கிறேன். நான் இங்கு இருக்கிறேன். திசை தெரியாமல் இருக்கிறேன், ஆகவே திசையைக் காட்டுங்கள் என்று சொன்னார்கள். அது உண்மை. இவ்வளவு நாட்கள் கஷ்டப்பட்டு அவர்களுக்கு திசை தெரியாமல் இருந்தது. நான்கு பக்கத்திலும் கதவுகள் திறந்திருக்கின்றன. அவர்கள் எந்தத் திசையில் வந்தார்களோ

எந்தத் திசையில் போகிறார்களோ அது அவர்கள் இஷ்டம். தனக்கே நம்பிக்கையில்லாமல் எங்கே பாதை இருக்கிறது என்று தெரியாமல், திசை தெரியாமல் இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். திசை தெரியாது இருக்கும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். திசை தெரியாத ஒருவரை ஏன் முதல் அமைச்சர் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை.

இந்த போக்குவரத்து மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் குறளைப் போட்டிருக்கிறார்கள், திருவள்ளுவர் படத்தையும் போட்டிருக்கிறார்கள். நிதி அமைச்சரின் கோரிக்கை வந்தபோது அவர்கள் புகைப் படத்தைப் போட்டார்கள். இதில் கூட ஒற்றுமையாக இருந்து எல்லோரும் சேர்ந்து ஒரு மாதிரியாகப் போடக் கூடாதா ? இது பற்றி முதல் அமைச்சர் அவர்களிடம் சொன்னேன். நிதி அமைச்சர் அவர்கள் தன் புகைப்படத்தைப் போட்டுக்கொண்டிருக்கிறார்களே, ஏன் உங்கள் அழகான திருவுருவம் வரவில்லை என்று கேட்டதற்கு அவர்கள் சிரித்து விட்டார்கள். ஒரு இடத்தில் திருக்குறள் இருக்கிறது. மற்றொரு இடத்தில் பாரதிதாசன் பாடல் இருக்கிறது. நான் என் ஆலோசனையைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

“தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.”

“யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு”.

என்று இவைகளையும் போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவர்கள் சொல்லின் தலைவர். அவர்கள் திசை தெரியாமல் இருக்கிறார் என்று சொல்வதைக் கேட்டு வருத்தப்படுகிறேன். ஒரு அமைச்சராக இருப்பவருக்கு, அதிலும் வயதில் முதிர்ந்தவருக்கு, எல்லாக் கட்சிகளிலும் இருந்து அனுபவம் பெற்றவருக்கு திசை தெரியாமல் இருப்பது பற்றி ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுக்கு திசை காட்ட வேண்டுமென்றால் எப்போது வேண்டுமானாலும் காட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்த வழியை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களேயானால் முதல் அமைச்சர் அவர்கள் ஆட்சேபிக்கமாட்டார்கள் என்ற நிலையைக் கூறி என் கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவுத் துறையில் சென்னை மாநிலம்தான் இந்தியாவிலேயே சிறப்பான முறையில் நடந்து வருகிறது. என்பதை யாரும் மறுக்க முடியாது. உடனே இரண்டு வருடங்களிலா என்று கேட்பார்கள். அது 1967-க்கு முன்பு. சென்னையில் இந்தக் கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பித்து வைத்த கூட்டுறவு இயக்கத்தின் தந்தை திரு ராமலிங்கம் செட்டியார் அவர்கள் எங்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் இவையெல்லாம் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை பாரதப் பிரதமர் நேரு அவர்களே போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்கள் விவசாயிகளுக்கு சரியானபடி பயன்படுகின்றனவா, உதவி உடனடியாகக் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். முன்னே நடந்ததா என்று பழைய கதையை ஆரம்பித்து விடாதீர்கள். அப்போது ஓரளவு நடந்தது. இப்போது என்ன மாற்றத்தை செய்யப் போகிறீர்கள் ? உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், சாதாரணமாக ஒருவர் லாரி வாங்குவதாக வைத்துக்கொள்வோம். ரெஜிஸ்ட்ரேஷன் புக்கில் 20,000 என்றால் 10,000 என்று வாங்க சௌகர்யமாக இருக்கின்றது. அதே சமயத்தில் பூமி வைத்திருப்பவர்களின் பூமியின் மதிப்பீட்டைச் செய்கிறோம் என்றால், 4 ஏக்கர் நஞ்சை வைத்துக்கொண்டிருந்தால், 1 ஏக்கர் 10,000, 15,000 ரூபாய் என்றால், 60,000 ரூபாய்க்கு இத்தனை பர்செண்ட் என்று உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால்தான் விவசாயம் சீராகவும், சிறப்பாகவும் நடக்க முடியும். அதற்குக் கேட்டால் 50 வருஷங்களுக்கு முன்பு, சப்-ரிஜிஸ்ட்ரார் கோர்ட்டிலேயுள்ள வில்லங்க சர்டிபிகேட்டைக் காட்டுங்கள் என்று சொல்கிறார்கள்.



காட்ட வேண்டியதுதான். காட்டாமல், யாரும் ஏமாற்றக் கூடாது. இருந்தாலுங்கூட, 50,000 என்றால், 12,500 ரூபாயை உடனடியாகக் கொடுக்க வேண்டும். கடன் இருந்தால் அதை நீக்கி, பாக்கியை உடனடியாகக் கொடுக்கச் செய்தல் மிக மிக அவசியம். அப்படியிருந்தால்தான் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க சௌகர்யமாக இருக்கும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு “ரிவால்விங் கிரெடிட்” என்று இருக்கிறது. 10 ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய பூமியிலே விளைகின்ற விளைபொருள்களின் மதிப்புக்குத் தகுந்த கடன் வழங்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் மதிப்பு என்றால் 10 ஏக்கர்களுக்கு 10,000 ரூபாய் கொடுக்கலாம், “ரிவால்விங் கிரெடிட்” என்று. அதே பூமியிலே விளையக்கூடிய விளைபொருள்களை, கோவாப்பரேட்டிவ் சொஸைடி, எடுத்து கடனைத் திருப்பிக் கட்ட ஏற்பாடு செய்வது சிறப்பாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன. இரண்டுவிதத்திலே நன்மையாக அமையும். கூட்டுறவு மூலமாக இந்த விளைபொருளை விற்பதற்கும், கூட்டுறவு வங்கியின் மூலம் விளைபொருள்களைப் பெறுவதற்கும், குறைந்த வட்டிகளில் திருப்பிக் கொடுக்கச் செய்வதற்கும் நல்ல முறையிலே அமையும் என்னும்படியான நிலையைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சர்க்கரையிலே, வெளி மார்க்கட்டிலேயிருக்கும் நிலைகளைச் சொன்னார்கள். உணவு அமைச்சர் அவர்கள் தவறு இருந்தால் காட்டுங்கள் என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில், இம்மாதிரி சர்க்கரை என்றிருந்ததை, கல்கண்டு செய்வதற்காக கல்கண்டு செய்வதற்காக என்று நூற்றுக்கணக்கான டன்கள் வாங்கித் தவறான வழிகளில் பிரயோஜனப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டைக் சாட்டாமல் இருக்க முடியாது. 73 லட்ச ரூபாய் வெளி மார்க்கெட்டிலே வழங்கியதில் சர்க்கரைக்கும் ஒரு பகுதி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்து லாபம் என்று பேசுவதில் பிரயோசனம் கிடையாது. வெளி மார்க்கெட்டிலே நஷ்டம் இருக்கத்தான் இருக்கிறது. அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். அதிலேயிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. ஏதோ ஒரு தவறை வேறு லாபத்தில் வைத்துக் கணக்குக் காட்டுவது நல்லதாக இருக்க முடியாது. 73 லட்சம் ரூபாய் நஷ்டம் சர்க்கரை விற்பனையில், என்றால், சர்க்கரை எத்தனை டன் ? 350 ரூபாய்க்கு வாங்கி இருப்பு வைத்திருந்தால் யார் யாருக்கு, எந்தெந்த முறையிலே, எந்தெந்த விலைக்குக் கொடுக்கப்பட்டது ? எப்படிக் கொடுக்கப்பட்டது என்று கணக்கு வர வேண்டும். சர்க்கரையிலே கல்கண்டு செய்வதற்காக என்று, ஒரு சில நபர்களால், போட்டிகளைத் தவிர்க்க, 400, 420 ரூபாய் என்று விற்கப்பட்டதாகப் புகார்கள் இருக்கின்றன. கட்டுப்பாடு விலை என்று சொல்லுகிறோம். தானியக் கட்டுப்பாடு என்று சொல்லுகிறோம். அதற்கும் கெடுபிடி இல்லை. அதற்கு, 2, 3 பங்கு இருக்கக் கூடிய நிலையை நிதர்சனமாகக் காணும்படியான நிலையிருக்கிறது. சர்க்கரை விஷயத்திலே சட்டசபை முடிவதற்குள்ளாக கோவாப்பரேடிவ் யூனியன்களிலும், சர்க்கரை ஆலைகளிலும் வெளி மார்க்கெட் விலை யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்று திட்டவட்டமான ஒரு நிலையிருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேமாதிரி, மொலாஸஸ். பெரிய தில்லுமுல்லுகள் நடந்து வருகின்றன. தவறுகள் நடந்து வருகின்றன. தனிப்பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை அதிபர்களால், கள்ளச் சாராயம் காய்ச்சப் பயன்படுகிறது ஆகவே பூரணமாக கட்டுப்பாடு செய்யவேண்டும். மொலாஸஸ் பூவையும் சர்க்காரே எடுத்து, டெண்டர் கால்பார் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் பிரயோஜனமாக இருக்கும் என்று ஆலோசனை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கட்டிடங்கள் கட்டுவதிலே எவ்வளவோ நிலைகள் எல்லாம் இருக்கின்றன. ராமலிங்கம் கட்டிடத்தை, முன்னாலே இடித்துக் கட்டுவது என்று திட்டம் போட்டிருந்து அப்பொழுதிருந்த முதலமைச்சரவர்கள்

வேண்டாமென்ற நிலையிலேயே நிறுத்திவைக்கப்பட்டதாக அறிகிறோம். இப்பொழுதிருக்கும் சூழ்நிலை இடித்துவிட்டுக் கட்டுவதற்கு 75 லட்சம் ரூபாய்க்கு மேலே திட்டம் போடப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிகிறது. ஆகவே, உடனடியாக இப்பொழுதிருக்கும் நிலையிலேயே, கோவாப்பரேட்டிவ், ஏழை விவசாயிகளுக்குக் கடனைக் கொடுப்பதை விட்டுவிட்டு, அவர்களுக்குச் செய்யவேண்டிய சௌகர்யங்களையெல்லாம் விட்டு விட்டு, புதுக் கட்டிடத்தை, இடித்துவிட்டோ அல்லது வேறு விதமாகவோ கட்டுவது நல்ல காரியம் அல்ல என்று இந்தச் சர்க்காருக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன். அப்படித் திட்டமிருந்தால், ஏற்கெனவேயிருக்கும் கட்டிடம் போதும் என்ற அபிப்பிராயத்துடன் இருப்பது நல்லது என்று கருது கிறேன். லாபம் கிடைத்து, அந்த லாபத்திலே வேறு இடத்திலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்தாலும் செய்யலாமே தவிர, ஏற்கெனவே இருக்கும் கட்டிடத்திற்கு 75 லட்சம் ரூபாய் செலவழிக்கும்படியான நிலை இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். என்று கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவிலே எத்தனையோ தொழில்கள் நடந்துகொண்டிருக் கின்றன. பத்திரிகைகள், பாக்கி இதரத் தொழில்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கூட்டுறவைப் பார்க்கும்படியான நிலையில், யாரோ கொடுக்கிறார்கள், கோவாப்பரேட்டிவிற்கு டிவிடெண்ட் கூட கொடுக்க வேண்டியதில்லை, நஷ்டத்திலே வைத்துக்கொள்ளலாம். தனிப்பட்ட முறையிலே பழிவாங்கும் எண்ணத்துடன் தங்களுக்குப் போட்டியாக வரும் என்று எண்ணி, ஏதையும் எடுக்கக்கூடாது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எந்த அமைச்சர் எந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தாலும், ஏதாவது தொடர்பிருந்தால் அதிலிருந்து நீங்கிக்கொள்ளவேண்டும். இப்பொழுதிருக்கும் அமைச்சரவர்களுடைய நிலை எல்லோருக்கும் தெரிந்த விஷயம். வேறு எத்தனையோ தொழில்களில் சம்பந்தப் பட்டிருந்தாலும், எப்பொழுது அமைச்சராக வருகிறாரோ அப்பொழுது அந்தந்தத் தொழில்களிலிருந்து விடுபட்டதாக, அந்தத் தொழில்களில் சம்பந்தம் இல்லை என்னும்படியான நிலையில் இராஜிநாமா செய்து விடுவது தலையாய கடமை என்பதை முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு தொழில் இரு தொழில்கள் அல்ல, மிகவும் சிறப்பான தொழில்களை, எத்தனையோ விதத்தில் நடத்திக் கொண்டு வரும் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவர் களுடைய கடமை, அவர்கள் எல்லாத் தொழில்களிலிருந்தும் விடுபட வேண்டும். "எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை" என்னும்படி யான நிலையில் இருக்கவேண்டும். முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், கருத்திருமன் அவர்களுக்கு முதுகிலே புண்......

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அன்றைக்குச் சொன்னால் உடனடி யாகவல்லவா பதில் சொல்லவேண்டும் ? இப்பொழுது எதற்கு ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது தான் நேரம் வருகிறது. முதுகிலே புண் இருக்கலாம். ஆனால் மடியிலே பொன் இல்லை என்று காட்டி விட வேண்டும் அரசியலுக்கு வந்துவிட்டால். அப்பொழுது சொல்லவில்லை என்றால், இப்பொழுது தான் அதற்குப் பொருத்த மான சந்தர்ப்பம். என் அப்பொழுது சொல்லவில்லை என்று ஞாபகப் படுத்தியிருக்கிறார்கள். முதுகிலே இருக்கலாம். ஆனால்.... (குறுக்கீடு) யாரும் எனக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. எனக்குத் தெரியும். மடியிலே பொன் இல்லை என்று காட்டி விட வேண்டியது அமைச்சரின் நிலையாக இருக்கவேண்டும்.

இந்தத் துறையில் இருக்கும் அமைச்சரவர்கள் எல்லாத் தொழிலி லும் இருக்கின்ற காரணத்தினால், எல்லாத் தொழிலிலும் சம்பந்தப் பட்டிருப்பதால், இன்னும் சில குற்றச்சாட்டுகளைக்கூட சொல்ல விரும்பு கிறேன். பத்திரிகைகளிலெல்லாம் இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில், அவர்கள் அமைச்சரானதற்குப் பின்னால் கோவாப்பரேட்டிவ் விளம்பரங்கள், அந்தப் பத்திரிகைக்களில் அதிகப்படியாக வந்து கொண்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன். முன்னாலே



கால் பக்கம், அரைப் பக்கம் என்று வந்துகொண்டிருந்தால் இப்பொழுது முக்கால் பக்கம், முழு பக்கம் என்ற அளவிலே விளம்பரங் கள் வந்திருக்கின்றன. பதவியைத் தவறான வழியில் நடத்திக்கொண்டி ருக்கிறார்களோ என்ற சந்தேகத்தை எழுப்பாமல் இருக்க முடியாது. அதற்காகத் தான் யார் பதவியிலே இருந்தாலும் சரி....

**திரு. மு. சின்னசாமி :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். தலைவரவர் களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், கூட்டுறவு அமைச்சர் அவர்களைப் பற்றி, சொந்த வாழ்க்கையிலே தலையிட்டு அவர் ஏதோ தொழிற்சாலை நடத்துவது போல சொல்லுகிறார்கள். நான் எதிர்க் கட்சித் தலைவரவர்களைக் கேட்கிறேன். திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் எந்தத் தொழிலில் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார்கள், எந்தத் தொழிலில் இருக்கிறார்கள் என்று அவையிலே சொல்ல முடியுமா ? அப்படிச் சொல்வதற்கு மறுத்து விட்டால், அமைச்சர் மீது உள் நோக்கம் கற்பிக்கும் வகையில் அவையிலே பேசுவது சரியா என்பதற்குத் தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** : சம்பந்தப்பட்ட அமைச்சரே சொல்லாமல் இருக்கும்பொழுது இவருக்கு என்ன கஷ்டமாக இருக்கிறது.

**THE HON. THIRU A. GOVINDASAMY :** Any Momber can raise a point of order.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆகவே, அதைப் பேசுவதற்கு எனக்கு உரிமையிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பொன் இருக்கிறதா ? மடியை அவிழ்க்கிறீர்களே ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆகவே, சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நான் சொல்லியதை அவர் இல்லையென்று மறுக் கட்டும். எனக்கு ஒன்றுமே கிடையாது, நான் நிரபராதி, நான் ஏழை என்று சொல்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. (ஆளும் கட்சியில் பல உறுப்பினர்கள் குறுக்கீடு) உரிமையிருக்கிறது என்று சொல்லுங்கள். பணக்காரன் என்றால் உங்களுக்கு என் கஷ்டமாக இருக்கிறது ? எனக்குத் தெரியும், அந்தக் கட்சியிலே இருப்பவர்கள் தான் நிறைய சொல்லுகிறார்கள், அதைச் சொல்லுங்கள், இதைச் சொல்லுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** யார் சொன்னது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அடிக்கடி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் வந்து அவரிடத்திலே முறையிடுவதாகச் சொல்லுகிறார்கள். யார் அப்படிப்பட்டவர்கள் என்று பெயரை தயவு செய்து அவர்கள் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் அவர்களிடத்திலே பேசவில்லை என்று நம்புகிறீர்களா. நான் அதைச் சொல்லத் தயாராக இருக் கிறேன். இதையெல்லாம் பேசினால், இது எங்களிடையே இருக்கிற இரகசியம். "ஓத் ஆப் சீக்ரெசி" என்று எடுத்திருக்கிறோம். அதனால் அவர்கள் சொல்கிறார்கள். நான் இப்படி சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் தனியாகக் கேட்டால் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதலமைச்சரிடத்திலே தனியாகச் சொல்கிறேன் என்று சொல்கிறார்கள். அப்படி தனியாகப் பேசவேண்டிய தன்மையில் இருந்தால் தனியாகப் பேசி இருக்கவேண்டுமே, சட்ட மன்றத்திலே ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது பத்திரிகையிலே வருகிறது. ஆகவே, வெளிப்படை யாக மக்களுக்குத் தெரிவிக்கிற காரியத்தை சொல்லுகிற நேரத்தில், யார் யார் அதைச் சொல்கிறார்கள் என்று கேட்கும்போது பகிரங்கமாகச் சொல்வதில் தவறில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் இன்னும் சொல்லுகிறேன், பகிரங்கமாக சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். (ஆளும் கட்சி உறுப்பினர்களில் பலர் குறுக்கீடு). சும்மா சத்தம் போடாதீர்கள். நான் சொல்வேன், நான் சொன்னால் நடவடிக்கை எடுக்கிறீர்களா ? (குறுக்கீடு) யார் சொல்கிறார்களோ, அவர்களைத் தான் சொல்கிறேன். என்று சொல்கிறேன். அதை விவரமாகச் சொல்கிறேன் (குறுக்கீடு) பயப்படவில்லை. நீங்கள் மனதார நினைக்கிறீர்களா, நீங்கள் சொல்லவில்லையென்று. அதிலே..........

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படியே சொல்லிக்கொண்டு போனால், பிறகு எங்கள் தரப்பில் இருந்து, காங்கிரஸ் கட்சியி லிருந்து இன்னின்னார் இப்படி சொன்னார்கள் என்று நாங்கள் பேசி, இப்படி ஒரு இலாவணி போட்ட மாதிரி ஆகிவிடக் கூடாது. தயவு செய்து சொல்ல வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். "சொல்லட்டுமா, சொல்லட்டுமா" என்று கைகளை மூடி வைத்துக்கொண்டு "இதை அறிவாயா" என்று கூறுவது நல்லதல்ல, சொல்லிவிடுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எந்த சந்தர்ப்பத்திலே சொல்ல வேண்டுமோ, சொல்ல வேண்டிய நேரத்திலே சொல்ல தயாராக இருக்கிறேன். அதே மாதிரி எங்கள் கட்சியிலே சொன்னார்கள் என்று சொன்னால் நீங்கள் சொல்லுங்களேன், நான் கேட்கிறேன், யார் சொன்னது என்று. அதே மாதிரி உங்கள் கட்சிக்குள்ளே போய் கேட்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு. எனக்குத் தெரிந்ததை நான் சொல்கிறேன். மனசாட்சி வைத்து நீங்கள் பேசவேண்டும். அதை திட்டவட்டமாக இன்னும் நன்றாக சொல்ல வேண்டுமானால் சில விஷயங்களை யெல்லாம் நம்மிடம் தான் சொல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கும்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படித் தான் "பம்பாய் மெயில்" என்ற நாடகத்தில் வருகின்ற ஒரு வில்லன் ஒரு இரகசியத்தை வெளியிட வேண்டுமென்ற கட்டம் வரும்போதெல்லாம் "ஒரு காலம் வரும்" என்று கூறிவிட்டு சொல்லாமலே போய்விடுவான். உடனே திரை விழும், அந்த காட்சி முடியும். இப்படியே ஒவ்வொரு காட்சியிலும்" "ஒரு காலம் வரும், கூறுவேன்" என்று கூறிக்கொண்டு, கடைசியிலே அந்த வில்லன் சொல்லாமலே போய்விடுவான். அப்படி இல்லாமல் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இதற்கு ஒரு காலம் வரும் என்று காத்திருக்கத் தேவை இல்லை. இப்பொழுதே பகிரங்கமாகக் கூறலாம். எல்லா உறுப்பினர்களும் பகிரங்கமாகச் சொல்லலாம் என்று கூறும்போது அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தயவு செய்து பகிரங்கமாக சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள், என்று. இனி தயவுசெய்து அப்படி சொல்ல வேண்டாம். இனி சொல்வதாக இருந்தால் இன்னார் சொன்னார் என்று சொல்லிவிட்டு பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இன்னொன்று சொல்கிறார்கள். நான் ஒருவர் குறிப்பிடுகிறார் என்று சொன்னால் கையெழுத்து போட்டாரா என்று கேட்பார்கள். இனிமேல் கையெழுத்து வாங்கிக் கொண்டு சொல்ல ஆசைப்படுகிறேன். நான் சொன்னவுடனே என்ன சொல்லப் போகிறார்கள் ? ஏற்றுக்கொண்டு நான் சொன்னேன் என்று சொல்லப் போகிறார்கள் ? சொல்லவில்லை என்று சொல்லி விடப் போகிறார்கள். அதற்கெல்லாம் சாட்சி வேறு வேண்டுமென்று கேட்கப் போகிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** இப்படிப் பட்ட நிலைமை இருக்கிற காரணத்தால் தான் தயவு செய்து சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இனிமேல் கையெழுத்து வாங்கிக் கொண்டுதான் சொல்வேன் என்று சொல்கிறேன். (ஆளும் கட்சி உறுப்பினர்களில் பலர் குறுக்கீடு) இல்லையென்று சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் பெயரைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். சொன்னவுடனே அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்பார்கள். கையெழுத்து போட்டார்களா என்று கேட்பார்கள். ஆகையினாலே கையெழுத்து வாங்கிக்கொண்டு அங்கே 2 சாட்சிகளை வைத்து இனிமேல் சொல்லத் தயாராக இருக்கிறேன். அப்படி வேண்டுமென்றால் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

பொறுப்புள்ள நிலையிலே வரும்படியான சந்தர்ப்பத்திலே அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்றால், அந்தத் தொழிலிலிருந்து விடுபட வேண்டுமென்ற சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். இப்பொழுது இருக்கும் படியான சூழ்நிலையில் அவர் தனிப்பட்ட முறையிலே தொழிலில் இருந்தால், அதில் தொடர்பு வைத்திருந்தால் கவலை இல்லை. பெரிய தொழில் அதிபராக இருக்கும்படியான நிலையிலே அவர் அமைச்சராக இருக்கிறார். எந்த எந்த நிலையிலே இருக்கிறார்களோ, அதிலிருந்து விடுபட்டு, தொடர்பிலிருந்து விடுபட்டு, அதை எல்லாம் ராஜிநாமா செய்திருக்கிறார்களா அந்தத் தொடர்பிலிருந்து விடுபட்டிருக்கிறார்களா என்பதை எல்லாம் நமது முதலமைச்சராவது சொன்னதாக எங்களுக்கு இது வரையிலே தெரியவில்லை. அப்படி இருந்தால் நல்ல மரபு என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் இன்னும் அதிகமாக விவசாயிகளுக்குப் பயனை அளிக்க வேண்டுமென்ற வகையிலே, அதிகமான நிதியை ஒதுக்கி, அவர்களுக்கு நன்மை செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பேரவை மாற்றுத் தலைவர்வர்களே, இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்தபோது நான், எதிர்க்சித் தலைவர் அவர்களை மிகவும் பாராட்டி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் இப்பேரவையில் நிகழ்த்திய சொற்பொழிவை நினைவுபடுத்தி யதோடு அப்போது சொன்னார்கள், யாரைப் பற்றியும் குறிப்பிட்டு, குறிப்பிட்டு அமைச்சர்களை பற்றி குறிப்பிட்டுப் பேச வேண்டாம், அது தமிழ்நாட்டுப் [illegible] அல்ல, என்று எல்லாம் சொல்லி—வேறு ஒரு உறுப்பினர் [illegible]பிட்டுச் சொன்னபோது அது சட்டப் பேரவையின் பதிவேட்டிலிருந்து [illegible] வேண்டுமென்று, எல்லாம் சொல்லி—குறுக்கிட்டு நான் [illegible]வர்களை முதலிலே பாராட்டிவிட்டு, பிறகு உறுப்பினர்களை எல்லாம் [illegible] கேட்டுக் கொண்டேன். இந்தக் கூட்டுறவுத் துறையில் [illegible]ளும் தவறுகள், கையாடல்கள், ஊழல்கள், ஒழுங்கீனங்கள் எல்லாம் [illegible]க்குமானால், அவற்றை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, [illegible]களைவதற்கு என்ன முறை என்பதை நீங்கள் சொல்லும்படி அன்று கேட்டுக்கொண்டேன். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் [illegible] சொல்லிவிட்டார் என்பதனாலே நான் அவர்கள் மீது ஏதோ [illegible]ப்போவது இல்லை. பந்தாட்டங்களிலே நாம் பார்த்திருப்போம். [illegible]யதிலே கால் பந்தாட்டம் விளையாடியது உங்கள் எல்லோருக்கும் [illegible]ருக்கலாம். பழைய நினைவுகளை நீங்கள் திரும்பிப் பார்த்தால், [illegible]டைய அனுபவத்தில் தெரியும். கால் பந்தாட்டம் நடக்கும். [illegible] குழுக்கள் ஒன்றோடொன்று மோதி விளையாடும்போது ஒரு குழு [illegible] பெறும். மற்றொன்று தோல்வி அடைந்துகொண்டே போகும். [illegible] அடைந்த குழு 4 கோல்களைப் போட்ட பிறகு, தோல்வி அடைந்த [illegible]ந்தை விளையாடுவது இல்லை, ஆளை விளையாடுவார்கள், (ஆரவாரம்). [illegible] எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளை விளையாடுவது என்று [illegible]ம்) அதைத் தொடங்கி இருந்தபோதிலும் அதற்குப் பதிலாக [illegible] அவர்களை விளையாடுவேனேயானால், ஃபௌல் என்று தலைவர்களாக [illegible]ர்கள், நீங்கள், ரெஃபரி போன்றவர்கள், நடுவர் அவர்கள், தீர்ப்புத் [illegible]கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆளை விளையாடுவது என்பது சரியான கருத்தில்லை. தவருக விளையாடிஞல், அதே மாதிரி ஃபௌல் பண்ணித் தான் விளையாடுவார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னர்களே பற்பல குற்றச்சாட்டுகளை எல்லாம், அவற்றையெல்லாம் நான் சொல்லிக்கொண்டிருக்க விரும்பாமல், அவர்கள் ஏதோ நான் தொழிலிலே ஈடுபட்டிருப்பதாகவும், அதை விட்டுவிடவில்லை என்றும் சொன்னதை எடுத்துக்கொள்கிறேன். எந்தத் தொழில் ? உங்களால் சொல்ல முடியுமா ? அல்லது ஏதோ தொழிலிலே ஈடுபட்டதன் காரணமாக ஏதோ ஒரு உத்திரவு, விளம்பரங்களைப் பற்றிப் பிறப்பித்ததாகவும், சொன்னர்கள். அதை நீங்கள் ருசுப்பிக்க முடியுமா ? காட்ட முடியுமா? ஒன்றும் முடியாது, நான் ஏதோ..............

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பாவம், பரம ஏழை, அவரைவிட ஏழை ஒருவருமே கிடையாது. (திரு ஈ. ஆர். கிருஷ்ணன், மற்றும் பல ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறுக்கீடு) உங்களுக்கு ஏன் கஷ்டமாக இருக்கிறது ? காரணம் என்ன, எனக்குத் தெரியும். அவர் ஏழை என்று சொல்லவேண்டுமென்ருல், எந்த விதமான தொழிலிலும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று அவர் ஏற்றுக்கொண்டால் எனக்கு ஒன்றும் இல்லை. அதிலே தொடர்பில்லை என்று சொல்ல............

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே அது நியாயமான கேள்வி. ஆனல், தெரிந்து கொள்ளாமல் அந்தக் கேள்வியைக் கேட்டார் என்பதுதான் எங்களுக்கெல்லாம் உள்ள வேதனை. கூட்டுறவுத் துறைக்கு மாண்புமிகு திரு ஆதித்தனர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிருர். ஆகவே, எந்தத் தொழிலெல்லாம் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிருர்களோ, அவைகளை எல்லாம் விட்டுவிடச் செய்ய வேண்டும், முதலமைச்சர் அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதிலிருந்து அவர் தொடர்பு கொண்டிருக்கிருர் என்ற அர்த்தத்திலே தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்டினர்கள். அத... கூட்டுறவுத் துறை அமைச்சர் இப்பொழுது பதில் அளிக்கிருர். "... தொழிலிலே நான் தொடர்புகொண்டிருக்கிறேன், சொல்ல முடி... என்று கேட்டார். தொடர்பு கொண்டிருந்தாலும், இந்தப் ... பொறுப்புக்கு வந்தவுடன் ராஜிநாமா செய்ய வேண்டும், அதுதான்... கம். ஆனல் இவர் செய்யவில்லை என்ற அர்த்தத்துடன், "அமைச்... வந்தவுடன் வேறு தொழில்களிலுள்ள தொடர்புகளை எல்லாம் ... செய்ய வேண்டும் அதுதான் மரபு" என்று எதிர்க் கட்சித் தலை... அவர்கள் சொன்னர்கள். ஏற்கனவே, தொழிலிலே தொடர்பிருக்கிறதா, என்று இவர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது எந்தத் தொழிலிலும் தொடர்பு இல்லை என்று சொன்னதற்கு நன்றி தெரிவிப்பதற்குப் பதில், "ஐயோ பாவம், பரம ஏழை," என்று அவர் குறிப்பிடுகின்ருர். மன்ருடியார் போன்ற ஏழைகளும், இராஜா ஸர் போன்ற பரம ஏழைகளும் காங்கிரஸ் கட்சியில் இருக்கிற நேரத்தில் அவர் ஐயோ பாவம், பரம ஏழை என்று கூறுவது எங்களுக்கு மிகுந்த வேடிக்கையாக இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு மன்ருடியார் அவர்கள் மந்திரி சபையில் மந்திரிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சமயத்தில், தான் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிற சர்க்கரை ஆலையிலிருந்து ராஜிநாமா செய்தார். திரு முத்தையா செட்டியார் அவர்களும் ராஜிநாமா செய்து விட்டுத்தான் மந்திரியாக வந்தார் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** திரு மன்ருடியார் அமைச்சராக இருந்தபொழுது என்ன தவறு செய்தார்கள் என்று சொல்லும்படியாகக் கேட்கிருர்கள். மன்ருடியார் அவர்கள் அமைச்சராக இருந்த பொழுது





சர்க்கார் பண்ணைக்கு மாடு விற்றிருக்கிருர்கள். சர்க்கார் பண்ணையிலிருந்து மாடு வாங்கியிருக்கிருர்கள். இல்லையென்று நிரூபிக்க முடியுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தவறு இருந்தால் நீங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபொழுது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லையே ? எதிர் க் கட்சியில் 50 பேர்கள் உட்கார்ந்திருந்தீர்களே, சர்க்கார் பண்ணைக்கு மாடு விற்றிருக்கிருர், மாடு வாங்கியிருக்கிருர் என்ருல், தவறு இருந்தால், ஒழுங்கீனம் இருந்தால், நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லையே ?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** தொழிலில் தொடர்புவைத்துக் கொண்டு வருகிருர் கூட்டுறவு அமைச்சர் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்டினர். "நான் எந்தத் தொழிலில் தொடர்பு வைத்திருக்கிறேன் ?" என்பது அமைச்சர் அவர்களுடைய கேள்வி. அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய பதில் என்ன ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கோடீசுவரர் என்று பத்திரிகைகளிலெல்லாம் வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஒரு கோடீசுவரர் திரு சி. ப. ஆதித்தனர் என்று பத்திரிகையில் போட்டிருக்கிருர்கள். அதுதான் தகவல், அவர்கள் குடும்பத்தில் ஒவ்வொன்றும் என்ன நிலைமை என்பதை நான் பார்த்துச் சொல்ல முடியுமா ? நான் தகவல் கேட்கிறேன். சம்பந்தம் இல்லை என்ருல், சம்பந்தம் ஒன்றும் கிடையாது, எனக்கும் எந்தத் தொழிலுக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை என்று சொல்லிவிடலாமே? நான் கோடீசுவரன் என்று சொன்னல், திட்டவட்டமாக எந்தத் தொழிலிலும் எனக்கு சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிடட்டுமே ? நான் கேட்பதற்குக் கூட உரிமை கிடையாதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கேள்வி கோடீசுவரன அல்லது குடிசை வாசியா என்ற கேள்வியா ? அல்லது அமைச்சர் அவர்கள் எந்தத் தொழிலிலும் தொடர்பு வைத்திருக்கிருரா, இல்லையா என்பது கேள்வியா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கோடீசுவரனக இருக்க வேண்டுமென்ருல், பல விதத்தில் சம்பந்தம் வைத்திருக்க வேண்டும். எனக்கு ஒரு ...தேகம் இருக்கிறது. அவர் ஒரு பெரிய கோடீசுவரர் என்றுதான் ...ன்னும் நினைத்துக்கொண்டிருக்கிருேம். சில லட்சக்கணக்கானரூபாய்க்கு ...ரஸ்டு எழுதி வைத்து, நடத்துவதாகத் தகவல் இருக்கிறது. ஆகவே, ...ந்தச் சூழ்நிலையில் நான் சொல்கிறேன், அமைச்சர் அவர்கள் ஒன்றிலும் ...ம் இல்லையென்ருல், அப்படியில்லை, என்று சொல்லிவிடட்டுமே, வேண்...ம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** அதைத்தான் சொல்லிவிட்டார்களே ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படி இல்லையென்ருல், எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சொல்லட்டும். எந்தவிதமான தொழிலிலும் சம்பந்தமில்லை என்று சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அமைச்சருக்கு சில ஆலைகளில் உரிமை இருக்கிறது, அமைச்சர் அவர்கள் அதை விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அமைச்சர் அவர்கள் தனக்கு அப்படிப்பட்ட எந்தத் தொழிலிலும் ஈடுபாடு இல்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொன்னதற்குப் பிறகு, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமேதவிர, அதன் மீது விவாதிப்பது நல்லது அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** இப்பொழுதாவது பந்து விளையாடலாமா ? மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்வேன். என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பொறுமையைக் காட்டுகிருர்களோ, அதைவிட எனக்கு அதிகப் பொறுமை

இருக்கிறது. அதனுல்தான் என்னுல் சகித்துக்கொள்ள முடிகிறது. ஏனென்றுல், உண்மைக்குப் புறம்பானவைகளை நீங்கள் சொல்லும்பொழுது, ஒரே வார்த்தையில் சொல்லிவிட முடியும். நீங்கள் கூறுவது உண்மையல்ல, என்று சொல்லிவிட முடியும். தேவையற்ற விதத்தில் அபாண்டங்களை ஒன்றின்மேல் ஒன்ருக நீங்கள் சுமத்திக்கொண்டேபோவது பற்றி நான் வருந்துகிறேன் என்ற ஒரு நிலைமையோடு, எனக்கு ஓரளவுக்கு பரிதாபம் உண்டாகிறது. எந்தவிதத்திலும் கோபமில்லை. நான் பல முறை சொல்லிவிட்டேன். எனக்கு எந்த விதத்திலும் ஒரு தொழில் துறையிலோ, தொழிலிலோ எந்த விதமான தொடர்பும் கிடையாது. இவ்வளவு தூரம் சொன்னதற்குப் பிறகு, ஏதாவது தொழிற்சாலையோடு எனக்குத் தொடர்பு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமானுல், என்னிடம் சொல்லுங்கள் அல்லது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்லலாம் தெரிந்திருந்தால். தெரிந்திருந்தால் நீங்கள் சொல்லியிருப்பீர்கள். ஏதோ வேண்டும் என்று சொன்ன நிலைமை தானே ஒழிய, தெரிந்து சொன்ன காரியம் அல்ல. தெரிந்து சொன்ன காரியம் அல்ல என்பதை நான் உணர்ந்திருக்கிற காரணத்தினுல்தான் அதை நான் பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை. அதை நாவினுல் சுட்ட வடு என்ற அளவுக்கு ஆருத புண்ணுக வைத்துக்கொள்ளவில்லை. முதலிலேயே உங்களைப் பற்றி எப்படிப் பெருமைப்படுத்திப் பேசினேனே, அதே எண்ணத்தில் தொடர்ந்து கூட்டுறவுத் துறையிலே சில கருத்துக்களைச் சொல்லத் தொடங்குகிறேன்.

கூட்டுறவுத் துறையில் நான் ஏற்கனவே சொன்னபடி, அந்தத் துறையிலே எடுத்துப் பார்க்கும்பொழுது, ஏராளமான தவறுகள், கையாடல்கள் ஒழுங்கீனங்கள், ஊழல்கள் நடைபெற்றிருப்பதாக புகார்கள் இருப்பது எனக்குத்தெரியும். கூட்டுறவுத் துறையைப் பிரித்து, இன்னென்ன வகையான தொழில்களிலே பெருவாரியாக ஒழுங்கீனங்கள்இருக்கின்றன என்பதையும் நான் தெளிவுபடுத்தி, பிரித்துக் காண்பித்து, பண உதவி என்ற முறையில் அது எந்தப் பெயரால் நடந்தாலும், வங்கி என்ற பெயரால் நடந்தாலும், கூட்டுறவு வங்கி என்ற பெயரால் நடந்தாலும், அர்பன் பாங்கு என்ற பெயரால் நடந்தாலும், அல்லது ரூரல் பாங்கு என்ற பெயரால் நடந்தாலும், எல்.எம். பாங்கு என்ற பெயரால் நடந்தாலும், கூடியவரையில், கூட்டுறவு இயக்கம் ஒரு நல்ல பெயரோடு—கூடியவரையில் என்று சொல்கிறேன்—நடந்துவருகிறது என்று சொல்லி அதை மேலும் பே... ஊக்குவிக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மற்ற துறைகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை நல்ல மு...யில் நடப்பதற்கான வகையில் திருத்தி அமைக்க நான் முற்படமாட்டே... என்று சொல்லவில்லை. அவைகளை திருத்தி அமைத்துத்தான் ஆகவேண்டு... விவசாயப் பண்ணைக் கூட்டுறவுத் துறையில் நடந்தாலும் சரி, தொழி...சாலை கூட்டுறவுத் துறையில் நடந்தாலும் சரி, அதைப் போல வாணிபம், பண்டம் மாற்றுதல், கூட்டுறவுத் துறையில் நடந்தாலும் சரி, பெரும்பாலான தவறுகள் வாணிபம் அல்லது பண்டம் மாற்று செய்கின்ற கூட்...வு... சங்கங்களில் நடைபெறுகின்றன என்பது உறுப்பினர்கள் எடுத்துச் சொ... திலிருந்து எனக்கு நன்ருகத் தெரிகிறது. ஆகவே, அதிலே எ... செய்ய முடியும்? இவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன, ஒழுங்கீனங்க... இருக்கின்றன, அதோடு சேர்த்து நான் கேட்டதெல்லாம் உங்களிடம் அதை இன்னென்ன வகையிலே திருத்தலாம், இப்படிச் செய்தால் ஒழுங்கீனங்களை, ஊழல்களை அகற்றிவிட முடியும் என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்து, நான் பணிவோடு கேட்டுக்கொண்டேன். அதற்கான வழிகளைக் கொஞ்சம் காண்பியுங்கள் என்று சொன்னேன். அதனுல் நான் திசை தெரியாமல் திண்டாடுகிறேன் என்பது அல்ல, எனக்கு நன்ருகத் தெரியும். இப்பொழுது சொல்ல வேண்டுமென்ருலும் சொல்லலாம், பெருவாரியாக எப்படிப்பட்டவர்கள் அல்லது எந்த அரசியல் நோக்குள்ளவர்கள் இந்த வாணிபத் துறையில் உள்ள. கூட்டுறவு நிறுவனங்களில் கையாடல்களை நடத்துகிருர்கள் என்று. தணிக்கை செய்யப்பட்டது. நீங்கள் நன்ருக நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். தணிக்கை 1967–68-ல் செய்யப்பட்டது



ஏறத்தாழ 300 கூட்டுறவுத் துறையில் உள்ள சங்கங்களில் கையாடல்கள் நடந்திருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது. வருடம் 1966–67. அப்படியானுல் அதில் ஈடுபட்டவர்கள் யார் யார் என்பது எனக்குத் தெரிகிறது. இன்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசிய பேச்சிலிருந்து அவர்களுக்கு எந்த விதமான இரக்கமோ, மன்னிப்போ இல்லாமல், குற்றம் கடிவது வேந்தன் தொழில், அதாவது அரசின் தொழில் குற்றம் செய்தவனை தண்டிப்பது என்ற முறையில் நீங்கள் அருள்கூர்ந்து சொல்லிவிடுங்கள். ஏனென்ருல், முதல் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். உங்கள் வரிசையில் உள்ளவர்கள் எங்களிடம் கேட்டார்கள், பெரிய முறையிலே தவறுகள் நடந்திருக்கின்றன, பிறகு அதை மன்னித்து விடுங்கள்என்று கேட்டார்கள். அதைச் சொல்லட்டுமா?'' என்று கேட்டார்கள். சொல்லட்டுமா? அப்படித் தைரியமாக இப்பொழுது எழுந்து 'சரி' என்று சொன்னுல், உங்கள் பின்னுல் இருப்பவர்கள் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள் என்பதைச் சற்றுச் சொல்லச் சொன்னுல்—நான் சொல்லவேண்டுமென்று விரும்பவில்லை—நான் சொல்லிவிட முடியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் எப்பொழுதும் சொல்லியிருக்கிறேன். பல முறை சொல்லியிருக்கிறேன். தவறு செய்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும், யாராக இருந்தாலும் சரியே, அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படி ஒன்றும் சொன்னது கிடையாது. இந்தப் பக்கம் இருந்தாலும் சரி, அந்தப் பக்கம் இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், தவறு நடந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** நான் இதை அதோடு விட்டு விடுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு மேலே சொல்ல வேண்டாம் என்று சொல்கிருர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் பல முறை சொல்லியிருக்கிறேன். யார் தவறு செய்திருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். கருத்திருமன் தவறு செய்திருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டியதுதான் என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடவடிக்கை எடுப்பது பற்றியில்லை ...மைச்சரவர்கள் கேட்பது, அவர்கள் கேட்பது, உங்கள் தரப்பிலிருந்து ...வடிக்கை எடுக்க வேண்டாம் என்று எத்தனை பேர் கேட்டுக் கொண்டார் ... மாண்புமிகு முதல் அமைச்சர் "சொல்லட்டுமா" என்று கேட்டதிற்கு, பதில் சொல்ல வேண்டும், சொல்லட்டுமா, வேண்டாமா என்று, நடவடிக்கை எடுப்பதுபற்றியில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** யார் வேண்டுமானுலும் சரியே, வந்திருக்கும் புகார் நியாயமானது என்ருல், நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக ... வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன். பார்த்தீர்களா, செய்து ...டார்கள் என்ருல், பயப்படுவது கிடையாது. யார் வேண்டுமானுலும் கேட்டிருக்கலாம். அதற்காகச் சலுகை வேண்டாம் எங்களுக்கு என்று தனிச் சலுகை வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** இனியாவது மாண்புமிகு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து, எங்களிடம், "இந்தத் தவறுகள் நடந்துவிட்டன, நீங்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாம்; கையாடல் செய்த பணங்களை போட்டு விட்டோம், பணத்தைத் திரும்பக் கொடுத்துவிட்டதால், நாள் கழித்தாலும், கொடுத்துவிட்டோம், நடவடிக்கை எடுக்க வேண்டாம்" என்று கேட்காமல் இருக்க வேண்டும் என்று, தங்கள் பின்னுல் உள்ள உறுப்பினர்களிடம் தெரிவித்தால், என்னைப் பல சங்கடமான நிலையிலிருந்து நீக்கியதாக ஆகும். (பலத்த சிரிப்பு).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்த கஷ்டம் தெரியும். யாராக இருந்தாலும் சரியே, நடவடிக்கை எடுங்கள். நடவடிக்கை எடுத்து இருக்கிறேன், என்று மூடி மூடி வைத்து இருக்க வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன். எந்தவிதமான குற்றங்களையும் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அங்கத்தினர்களுக்கு இருக்கும் உரிமையை, அரசியல் பண்ண வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன். அரசியல் பண்ண வேண்டு மென்றால், பண்ணுங்கள், ஆட்சேபணையில்லை.

(திரு சி. கோவிந்தராசன் தன்னிடத்தில் எழுந்து நின்றார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருஙகள்.

**திரு. சி. கோவிந்தராசன் :** ஒரு விளக்கம், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் எல்லாம் பின்னால் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் :** விளக்கம் கேட்பது பேரவைத் தலைவர் அனுமதியோடுதான் கேட்க வேண்டும்.

ஒன்று மட்டும் மிகத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வாணிகத் துறை, மார்க்கெட்டிங் சொஸைடி, கன்ஸ்யூமர்ஸ் சொஸைடி, இப்படிப்பட்ட வாணிகத் துறை, பண்ட மாற்றுத் துறையில் உள்ள சங்கங்களில், நிறுவனங்களில்தான் பெருவாரியான கையாடல்கள் நடந்திருப்பதாக உலகத்திற்கே தெரியும். இப்படிப்பட்ட ஊழல்களை, ஒழுங்கீனங்களைவிட்டு வைத்துவிடுவோம் என்ற நம்பிக்கை இருந்தால், உலகத்திற்கு, தமிழ்நாட்டிற்குத் தெரிவிக்கிறேன். இனிமேல் அவ்வாறு எண்ணம் இருப்பவர்கள், இவ்விதமான காரியங்கள் செய்யாமல் இருக்கும் முறையில் எச்சரிக்கையாக, அப்படிச் செய்யும் ஊழல்கள், 1967-ம் வருஷம் வரையில் கண்டுபிடிக்கப்பட்டவைகளையும், இனிமேல் கண்டு பிடிக்கப்படுபவைகளையும் மன்னித்து விடுவோம் என்ற நிலை இல்லாமல், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே பகிரங்கமாகச் சொல்லுவதன் மூலம், இந்தத்துறை சுத்தமாக ஆக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இனிமேல் இப்படி நடக்காமல் இருக்க என்ன வழிவகை என்ற கேட்ட போது, உறுப்பினர் திரு கோவிந்தராசன் சொன்னார்கள், கணக்குத் தணிக்கை செய்வதில் காலதாமதம் ஆகிறது என்று. ரொம்ப உண்மை. சில கணக்குகள் மூன்று ஆண்டுகளாகியும், தணிக்கை செய்யப்படாமல் இருக்கின்றன. வேறு சில கணக்குகள் இரண்டு ஆண்டுகளாகியும் தணிக்கை செய்யப்படவில்லை. 1966–67-ம் ஆண்டுக்குப் பிறகு தணிக்கைசெய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் மிக மிகக் கொஞ்சம். இந்தக்கணக்கு தணிக்கை செய்வது விரைவில் நடந்தாக வேண்டும் என்று அதிகாரிகளை வற்புறுத்திக் கொண்டும், சொல்லிக் கொண்டும், கணக்குத் துறையில் நன்றாக தேர்ந்த வல்லுநர்கள் தேவை என்பதைச் சுட்டிக்காட்டிக் கொண்டும் வருகிறேன்.

இன்னொன்றையும் ஒரு உறுப்பினர் சொன்னார்கள். இவ்வாறு கையாடல் செய்வதற்குக் காரணமாக இருப்பது, குறிப்பாக கணக்கு எழுதும் பழக்கம் என்றார். அந்தக் கணக்கெழுதுவதில், வரவை மட்டும் எழுதுகின்ற, அதாவது "ஸிங்கிள் எண்ட்ரி ஸிஸ்டம்" அந்த முறைப்படி எழுதுகிறார்கள். வரவேண்டிய தொகைகளை கணக்கில் காண்பிப்பது இல்லை. இரண்டையும் பக்கம் பக்கமாக எழுதுவதுதான் வாணிகத்திற்கு முறையான கணக்கு. அந்த முறைப்படி, இனிமேல் கணக்கு வைத்து கொள்ள வேண்டும். வைத்தாக வேண்டும் என்றா எற்கனவே சொல்லி விட்டேன் ஒரு சில நாட்களுக்கு முன்னால். 'கூட்டுறவுத் துறையில் 22,000 சொச்சம் நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகளில் வாணிக முறையில் கணக்குகள் வைத்தால், கையாடல் நடந்து இருந்தால், இலகுவாகக் கண்டு பிடிக்கத் தக்க திட்டங்களை எற்கனவே அனுப்பிவிட்டேன் என்று தெரிவிக்கிறேன்.





உறுப்பினர் திரு. அலங்காரம் அவர்கள் சொன்னார்கள். 4, 5 கூட்டுறவுக் கிராமச் சங்கங்களைச் சேர்த்து இணைப்பது பற்றி. நாணயச் சங்கங்களைப்பற்றி யாரோ ஒரு உறுப்பினர் நாணயச் சங்கங்கள் என்று பெயர்தான் அதிலே நாணயமே குறைவாக இருக்கிறது ; சங்கம் என்ற தன்மையும் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, 4, 5 சங்கங்களை ஒன்றாகச் சேர்த்து இணைப்பதன் மூலமாக ஊருக்கு ஊர் சண்டை சச்சரவுகள் உண்டாகின்றனவே யன்றி, வேறு நலன் இல்லை என்று சொன்னார்கள். நானே, இந்த அறிக்கையில், 16-வது பாராவில் என்று நினைக்கிறேன் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன. அதைப்பற்றி புனராலோசனை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது.

கொள்கையளவில் உங்கள் முன்னால் ஒரு திட்டம் வைக்கப்பட்டது. அதை வாசிக்கும் போது, எதிர்க் கட்சித் தலைவர் இல்லாத காரணத்தால், அவர்கள் அதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. முக்கியமாக கொள்கையைக் கடைப் பிடிக்கிறோம். அவர்கள் அப்பொழுது இல்லாத காரணத்தால், அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நான் சொல்லியிருப்பது என்னவென்றால், இரண்டு முறைகளைச் சொல்லியிருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு ஊரிலும் ஒரு வங்கி வேண்டும் ; மக்களுக்கு வங்கியில் பணம் போட்டு எடுக்கும் பழக்கம் வரவேண்டும். அதை ஒரு லட்சியமாகச் சொல்லுகிறோம். லட்சியம் என்றவுடனே, நாளைக்கு நடத்திக் காண்பி என்று சொல்லக் கூடாது. அந்தக் கொள்கையை நடத்தும் அளவில், முதற்படியாக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வங்கி நடைமுறையில் கொண்டு வருகிறோம். அதைக் கொள்கையளவில் குறிப்பு நன்றாக எடுத்துக் காட்டுகிறது. கிராமத்திற்கு ஒரு வங்கி என்று வந்தாலும், அப்போது கூட, மேல் நாடுகளில் இருக்கும் முன்னேற்றமான பொருளாதார நிலையை நாம் அடைந்து விட மாட்டோம்; மேல் நாடுகளில் ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒரு வங்கியல்ல, 2, 3, 4 வங்கி கூட இருக்கின்றன. ஒரு ஊர் இருக்குமானால் ஒவ்வொரு தெரு மூலைகளிலும் இருப்பது ஒன்று ஒரு சாராயக் கடையாக இருக்கும் அல்லது ஒருவங்கியாக இருக்கும் என்று சொல்வார்கள்.

"Every street corner would have either a bar or a bank." அந்த முறை அங்கே இருக்கிறது. மக்களுக்கு வங்கிப் பழக்கம் இருக்கிறது. எவருமே பணத்தைக் கையில் வைத்துக் கொள்வது கிடையாது. ஒரு ரோட்டைக் கடந்து சென்றால் வங்கியில் போய்ச் சேரும் நிலை வெளி நாடுகளில் இருக்கிறது. ஆனால் நம்முடைய ஊர்களில், பெண்கள் பெருவாரியாக வங்கிகளுக்குப் போவதே கிடையாது. உறுப்பினர் திரு மருதாசலம் நன்றாகச் சொன்னார்கள். பெண்களானாலும் சரி, ஆண்களானாலும் சரி, எதாவது பணம் இருக்குமானால், அதை வங்கியில் போடவேண்டும் என்றால், 6, 7 மைல் நடந்து செல்ல வேண்டியிருக்கும். யாருமே தயாராக இருக்க மாட்டார்கள். சாதாரணமாக கையில் இருக்கும் பணத்தை, பானை, சட்டிகளில் வைப்பார்கள். அதிலும், அரிசிப்பானையில் வைக்கும் பழக்கம்தான் நம்மூரில் இருக்கிறது. அதை மாற்றி, வங்கிப் பழக்கத்திற்குப் பெருவாரியாகக கொண்டு வந்தால், வங்கி நடத்தும் போது, தேவைப்படும்போது, அது இலகுவாக இருக்கும். அதற்காகத் தான் முதல் படியாக வங்கிகளை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒன்று என்று வைக்க இருக்கிறோம். இங்கே இருக்கும் உறுப்பினர்களுக்குத் தெரியும் ; தொகுதிகளில் ஒனறு, இரண்டு வட்டாரங்கள் இருக்கும் தொகுதிகளில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு வங்கி என்ற நிலை எற்பட்டால், அதனால் விவசாயிகளுக்கு எவ்வளவு நன்மை உண்டாகும் என்பதைக் கற்பனை செய்து பார்க்க வேண்டும். கடன் வாங்க விவசாயிகளுக்கு இப்பொழுது எவ்வளவு மைல் அலைய வேண்டும்? செலவு எவ்வளவு ஆகும்? எவ்வளவு தொல்லை எவ்வளவு காலதாமதம்? அத்தனையும் அகற்றப்பட்டு, அந்தப் பகுதியிலிருக்கும் வங்கியில் பணம் வாங்கலாம். அதுமட்டுமல்ல. சொத்தின் விலைக்குக் கால் பங்கு கடன் வழங்குவது என்றாலும் விரைவில் முடிவு எடுப்பது நல்லது. ஓவர் டிராப்ட் வாங்குவதுபற்றி முன்னாள் நிர்வாகம் செய்த அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். அதாவது இவ்வளவு நிலம் இருக்கிறது, இவ்வளவு வரை கடன் கொடுக்கலாம் என்று வரையறுத்து அதற்கு உண்டான செக் புத்தகத்தை

அவர்கள் வசம் கொடுத்துவிடுவது. விவசாயிக்குப் பணம் தேவையென்றால், பாங்கிக்குக் கூடப் போக வேண்டியதில்லை. கிராமங்களில் படித்தவர்கள் செக் முறையைக் கையாண்டால் நல்லது. கிராமத்திலுள்ள மக்கள் செக் புத்தகம் வைத்துக் கொள்ளும் முறையைப் பழக்கப்படுத்திக் கொண்டால் நல்லது.

திரு. கனகசபை அவர்கள் கூட்டுறவு வங்கிக்குத் தலைவர். அவர் "வட்டாரங்கள் தோறும் கிளைகளைத் திறவுங்கள்" என்று நான் பேசியதைக் குறிப்பிட்டு, இதனால் எவ்வளவோ பெரிய தொல்லைகள்" என்று பேசினார்கள். நான் அவருக்குப் பதில் சொல்ல வேண்டிய நேரத்தில் அவர் இங்கிருந்து கேட்காததற்கு மிகவும் வருந்துகிறேன். அவர் சொல்வது சென்ட்ரல் பாங்க். இது குறுகிய காலக் கடன் கொடுக்கக்கூடிய வங்கியாக கூட்டுறவுத் துறையில் வந்திருக்கிறது. இதற்குச் சுமார் 100, 110 கிளைகள் இருக்கின்றன. இன்னும் கிளைகளைத் திறந்து நடத்தினால் நட்டம் ஏற்படும் என்று சொன்னார்கள். அந்த உறுப்பினரே வேறொரு கருத்தையும் சொன்னார்கள். ரிசர்வ் வங்கிலிருந்து 3 சத வீதத்திற்கு வாங்கும் பணம் விவசாயிகளின் கைக்குப் போகும்போது அது 7½ சத வீதமாக ஆகிறது எனறு சொன்னார்கள். ஏன் விவசாயி அதிகமான சத வீத வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது? ஜில்லா வங்கி என்றும், தாலுகா வங்கி என்றும், இருப்பதால்தான் ஒவ்வொரு கையிலும் மாறி மாறிப் போகும்போது அவர்கள் 1 பர்சென்ட், 1½ பர்சென்ட் என்று எடுத்துக் கொள்வதால், விவசாயிகள் கையில் போகும்போது அது 7½ பர்சென்ட் வட்டியாக ஆகிவிடுகிறது. திரு கனகசபை அவர்கள், "ஒரு கிளை திறப்பதாக இருந்தால் பத்தாயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது". என்று சொன்னார்கள். அவர் சொல்லும்போது என்னுடைய நெஞ்செல்லாம் உருக்கமாக இருந்தது. கூட்டுறவுத் துறையில் நடத்துகிற வங்கியில் நட்டம் ஏற்படுகிறதே என்று வருத்தப்பட்டேன். போன வருடக் கணக்கை எடுத்துப் பார்த்தால், எவ்வளவு லாபம், எவ்வளவு நட்டம் என்று கணக்குத் தெரியும். உறுப்பினர் அவர்கள் இங்கு அவையில் இல்லாததால், அவருடைய கட்சிக் கொறடா திரு கே. விநாயகம் அவர்கள் அவரிடம் சொல்வதற்காகச் சொல்கிறேன். சென்ட்ரல் பாங்கில் அவர்கள் கிளைகளாகத் தொடங்குவதாக இருந்தால் நட்டம் ஏற்படும் என்று வாதாடுகிறார்களே அவர்களுக்குப் போன வருடத்திலே எவ்வளவு லாபம் வந்திருக்கிறது என்ற கணக்கைப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன். வங்கியை நடத்துகிறவர்கள் பத்தாயிரம் ரூபாய் நட்டம் என்று சொல்வதா ? மாவட்ட வங்கியும் மத்திய வங்கியும் சுமார் ஒரு கோடி ரூபாய் வரை லாபமாகப் பெற்றிருக்கின்றன. விவசாயிகள் தேவையான கடனுக்கு அலைந்து திரிய வேண்டியிருக்கிறதே, பாங்கி கிளைகளைத் திறவுங்கள் என்று சொன்னால் பத்தாயிரம் ரூபாய் நட்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். ஒரு வருடத்தில் கிடைக்கிற லாபத்தைக் கூட போட்டு சரிக்கட்டிக் கொள்ளலாம். ஆயிரம் பத்தாயிரம் சேர்ந்தது ஒரு கோடி. நாங்கள் 375 வட்டாரங்களிலும் ஒவ்வொரு பாங்கைத் திறவுங்கள் என்று சொல்கிறோம். அவர்கள் நட்டம், நட்டம் என்று சொல்கிறார்கள். எதிர் கட்சிக் கொறடா போன்றவர்கள் அவர்களுக்கு ஆதரவாகச் சொல்கிறார்கள். ஒரு கிளையைத் திறப்பதற்கு அரசாங்கம் 5 ஆயிரம் ரூபாய் இனாமாகக் கொடுக்கிறது. இவ்வளவு செய்தும் வங்கியை நடத்துகிறவர்கள் நஷ்டம் என்று சொல்கிறார்கள். நான் அந்தக் கூட்டத்திலே தெளிவாகவும், பணிவாகவும் இதைப் பற்றிச் சொன்னேன். ஆர்க்காடு நண்பர் திரு. ரு. வீராசாமி அவர்கள் நான் சொன்னதை மிகவும் ரசித்தார்கள். கிராமங்களில் வாழ்கிறவர்கள் அதிகமான வட்டியைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மூன்று பர்சென்ட் என்று சென்னையிலே வாங்குவது கிராமத்திற்குப் போகும்போது 7½ பர்சென்ட் என்ற அளவிற்கு வருகிறது. இந்தச் சிரமத்தையெல்லாம் சொல்லி, கிராமங்களில் பாங்குகளைத் திறவுங்கள் என்று கூட்டத்தில் மன்றாடிக் கேட்டுக் கொண்டேன். இப்போது ஏறக்குறைய 100 பிளாக்குகளில் கிளை வங்கி இருக்கிறது. பாக்கி 275 வட்டாரங்களில் நாங்கள் கிளைகளைத் திறக்கிறோம் என்று அவர்கள் சொல்வார்கள் என்று ...க்கோம். ஆனால் அவர்கள் எவ்வளவோ நஷ்டப்படுகிறோம் என்ன செய்வது ?





**திரு. கே. விநாயகம் :** சூப்பர்சீட் செய்வது.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் :** அந்த வங்கியைக் கலைத்துவிடுவது என்று அங்கத்தினர் சொல்கிறார். அப்படிச் செய்யத் தேவையில்லை. அவர்கள் நடத்துவதை நடத்தட்டும். ஒரு கோடி ரூபாய் இப்போது லாபம் வருகிறதென்றால் இன்னும் ஒரு கோடி ரூபாய் இலாபம் வரட்டும். நாங்கள் குறுக்கிட விருப்பவில்லை. ஒரு கோடி, இரண்டு கோடி என்று கொறடாதானே சொல்கிறார் என்று திரு. கருத்திருமன் அவர்கள் சொல்லக்கூடும். நான் தெளிவாகச் சொல்வதெல்லாம், நீங்கள் விரைவிலே பாக்கியிருக்கப்பட்ட வட்டாரங்களிலும் வங்கிகளைத் திறக்கவில்லையென்றால் அரசாங்கமே திறக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன் (ஆரவாரம்) நாங்கள் வலிவற்ற அரசாங்கம் அல்ல. இன்றைக்குக் கிராமங்களில் இருக்கிற விவசாய மக்கள் விவசாயத்தைப் பெருக்கி வந்தார்கள். அவர்கள் உணவுக்காகத் திண்டாடிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவர்களுக்கு உதவி செய்யாமல் கிடைத்த ஒரு கோடி ரூபாய் இலாபத்தை வைத்திருக்க வேண்டுமா ? அந்தப் பணத்தைக் கைப்பற்ற எங்களுக்கு அதிகாரம் இல்லை. எந்தெந்த வட்டாரங்களில் வங்கிகள் இல்லையென்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். நீங்கள் அதிகாரிகளுக்கு அல்லது எங்களுக்கு அதைப்பற்றித்தெரிவியுங்கள். அடுத்த ஆண்டுமார்ச் 31-ம்தேதிக்குள், ஏப்ரல் 1-ம் தேதிக்குள்ளாக அவர்கள் திறக்காத நிலைமை இருக்குமானால், அரசு கிளைகள் இல்லாத அத்தனை பிளாக்குகளிலும் வங்கிகளைத் திறக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமவாசிளுக்குப் பணம் தேவைப்படுகிறது. இனிமேல் அவன் பணத்திற்காக ஐந்தாறு மைல்கள் நடந்து அலைய வேண்டியதில்லை. இவ்வாறு வட்டாரங்களில் வங்கியின் கிளைகளைத் திறப்பதன்மூலம் உணவு உற்பத்தி பெருகும். விவசாய நிலைமை உயரும். நாங்கள் கிளைகளைத் திறப்பதில் துணிச்சலோடு இருக்கிறோம். நாங்கள் பணிவோடு பேசுகிறோம் என்றால் பலம் இல்லாததால் அப்படிப் பேசவில்லை. நாங்கள் உறுதியாகச் சொல்கிறோம், "லேண்ட் மார்ட்கேஜ் பேங்க்" என்ற நில அடமான வங்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் ஏறத்தாழ லாபம் வந்துகொண்டிருக்கிறது. யாரும் நஷ்டத்தில் நடத்தவில்லை. மாவட்டங்களிலே, வட்டாரங்களிலே இருக்கும் வங்கிகளில் குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் இரண்டும் கிடைக்க வழிசெய்யப்படும்.

பி.ப. 1–30

ஒரு வங்கியே இரண்டையும் செய்யும். இதற்காக ஏன் நாலுபேர் ? நீண்ட காலக் கடன் கொடுக்க ஒரு ஆள், குறுகிய காலக் கடன் கொடுக்க ஒரு ஆள். இரண்டையும் ஒரே வங்கி கவனித்துக் கொள்ளலாம். குறிப்பாக விரைவிலேயே கிராம மக்களுக்குக் கடன் கிடைக்க நாம் வட்டாரத்திற்கு ஒரு வங்கியாவது உடனடியாக ஏற்படுத்தியாகவேண்டும். கூட்டுறவுத் துறையில் வேறு தொழில்களை உண்டாக்குவதற்குக்கூட இந்த வங்கிகள் உதவி செய்யும்.

அடுத்து, ஓர் உறுப்பினர் உண்மையான குறை ஒன்றைச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் பற்பல தொழிலை நடத்துகிறார்கள், ஆனால் அந்தத்துறையில் பயிற்சி பெற்றவர்களைப் போடாத காரணத்தினால் நஷ்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்றார்கள். அது மிகவும் உண்மை. வங்கிகளை நடத்துவதற்குக்கூட மிகவும் தேர்ச்சி பெற்றவர்களை நாம் தயார் செய்துகொண்டிருக்கிறோம். இன்றைய தினம் வங்கியை நடத்துகிறவர்கள் என்னமோ தங்களை ராஜா போல நினைத்துக்கொண்டு—வங்கிகளுக்கு வருகிறவர்களை என்னமோ பிச்சைக்காரர்களைப் போல பார்க்கிறார்கள். உண்மையில் இந்த நிலை மாற்றப்பட வேண்டும். கிராமத்தில் உள்ள விவசாயிகளிடம் சென்று அவர்களுக்கு என்ன உதவி தேவைப்படுகிறது என்பதையும், அவர்களால் என்னவிதமாக வங்கிகளில் பணம் போட்டுவைக்க முடியும் என்பதையும் தெரிந்து மக்களுடைய ஊழியர்கள் தாங்கள் என்கிற நினைப்போடு செயல்பட்டாக வேண்டும். ஆகவே, வங்கிகளை நடத்துகிறவர்களுக்கு நிச்சயமாகப் பயிற்சி வேண்டும். அதற்காகத்தான் சில தனியார் வங்கிகளைக்கூடச் சில பேர்களுக்குப் பயிற்சி அளிக்க முடியுமா என்று கேட்டிருக்கிறோம். அவர்களிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை என்றாலும் நல்லவிதமாகப் பதில் வரும் என்று நம்புகிறேன்.

[திரு. சி. பா. ஆதித்தனுல்] [1969 மார்ச் 24

வேறு பல குறைகளைச் சொன்னுர்கள். வறட்சிப் பகுதிகளில் கொடுக்கப்பட்டிருக்கிற கடன்களை இவ்வாண்டு வசூல் செய்யாது ஒத்திவைக்கவேண்டும் என்றுர்கள். இது முதல் அமைச்சர் அவர்கள் பார்த்துச் செய்ய வேண்டிய விஷயம். மாவட்ட ஆட்சியாளர்களுடைய கருத்துக்களின்படி முதல் அமைச்சர் அவர்கள் எந்த எந்தப் பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவிக்கிறுர்களோ அங்கெல்லாம் கடன் வசூல் தள்ளிவைக்கப்படும். இப்படிப்பட்ட பல சங்கடங்கள் எல்லாம் ஒருவாறு தீர்ந்துபோகின்றகாலத்தை நாம் விரைவில் பார்க்கப்போகிறேம்.

நம்முடைய இலட்சியத்தை நாம் அடைவதற்கு மற்றவர்களையே நாம் நம்பிக்கொண்டிருக்கவில்லை. அப்படி நம்பிக்கொண்டிருந்தாலும் முதற்படியாக ஒரு வட்டாரத்திற்கு ஒரு வங்கி என்கிற நம்முடைய லட்சியம் நிறைவேற எத்தனையோ வருடங்கள் ஆகிவிடும்.

நான் திரு. கனகசபை அவர்களிடம் போன ஆண்டே பணிவோடு கேட்டுக்கொண்டேன். அவர்களும், மற்ற நில அடைமான பாங்கியின் பெரும் தலைவர்களும் கூடிய விரைவில் எத்தனை கிளைகள் திறக்க முடியுமோ அவற்றைத் திறக்கிறேம் என்றுர்கள். முதலில் 50 கிளைகள் என்று நினைத்து 20 கிளைகளைத் தொடங்கத்திட்டமிட்டு ஒரு வருடம் முழுவதுக்குமாக 10 கிளைகளைத்தான் திறந்தார்கள். இந்த அளவில் பார்த்தால் 375 வங்கிகள் திறக்கப்படுவதற்கு 37 வருடங்களுக்குமேல் ஆகிவிடும். இன்னும் 14,500 கிராமங்களுக்கும் திறக்கப்பட வேண்டுமென்றுல் இதை ஒட்டிக் கணக்குப் போடுகிறபோது 1,450 வருடங்களாகிவிடும். இந்த அளவுக்குச் சென்றுல் நாடு எப்படி முன்னேற்றம் அடைய முடியும்? ஆகவேதான் அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதிக்குள் எல்லா வட்டாரங்களிலும் ஒரு பாங்க் என்ற முறையில் திறக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்களும் எந்த எந்த இடத்தில் வங்கி திறக்கப்படலாம் என்பதற்குத் தங்கள் மேலான கருத்துக்களை எனக்கோ, அதிகாரிகளுக்கோ தெரிவிக்கலாம். எதிர்க் கட்சித் தலைவர் கேட்காவிட்டாலும் அவர்களுடைய தொகுதியிலும் 2 வங்கிகள் திறக்கப்பட்டு, அவர்களுடைய தொகுதி விவசாயப் பெருமக்களுக்கும் உதவி செய்யத்தான் போகிறேம். இன்றைய தினம் இந்த வங்கிகளின் தலைவர்களாக இருக்கிற அவர்களது கட்சிக்காரர்கள் கொஞ்சம் ஒத்துழைத்தால் எங்களுக்கு வேலை கொஞ்சம் குறைவு. அப்படிச் செய்யவில்லை என்றுல் நாங்களே அந்த வங்கிகளைத் திறக்க முன்வருவோம், திறந்து கிராம மக்களுக்கு உதவி செய்யத் தயாராய் இருக்கிறேம் என்று சொல்லி முடிக்கிறேன்.

**THIRU K. VINAYAKAM**: Let him make clear the target date. இந்த வருஷத்திற்குள் என்று சொல்லவில்லை. அடுத்த வருஷமா, அதற்கு அடுத்த வருஷமா?

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர்**: நான் திரு. கனகசபையிடம் கேட்டுக்கொண்டபோது ஆற்காடு உறுப்பினர் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் கிளைகள் திறப்பதற்குக் கொடுத்துள்ள கால தவணை மூன்றே மூன்று மாதங்கள்தான். அடுத்த 3 மாதங்களுக்குள் அவர்களே மனமுவந்து முன் வந்தால் வரட்டும். எல்லா வட்டாரங்களிலும் ஒவ்வொரு கிளை வங்கிகள் ஏற்பட்டாக வேண்டும். இல்லையென்றுல் 1970-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதிக்குள் அத்தனை வட்டார வங்கிகளும் திறக்கப்படும் என்று தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் கொறடா அவர்களது தொகுதியிலும்கூடத் திறந்தாகும் என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வளவு தெளிவாக எல்லாவற்றையும் நான் எடுத்துச்சொல்லியிருப்பதன் காரணமாகக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



1969 மார்ச் 24]

**DR. H. V. HANDE**: What do the Government think about the judicial powers? Can they separate the judicial powers in respcet of the co-operatives and vest them in an independent body with judicial powers and amend the Co-operative Societies Act to achieve this object? What is the view of the Government on what I have said about this in my speech?

**THE HON. THIRU SI. PA. ADITANAR**: It is very right that Dr. Hande raised the question of separation of the judicial power now vested in the Head of the Co-operative Department. This is one of the matters which has been referred to the Committee under the chairmanship of Mr. K. Santhanam. Mr. Santhanam has submitted two interim reports one relating to the constitution of socities and election of office-bearers and the other relating to the Triplicane Urban Co-operative Society. This particular aspect, I think, will be dealt with in the final report of the Committee.

திரு. பி. வேலுச்சாமி, டாக்டர்எச். வி. ஹாண்டே, திரு. சோ. அழகர்சாமி, திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்**: பேரவைமுன்னுள்ள கேள்வி "கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,74,04,700க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்**: பேரவையின் முற்பகல் நிகழ்ச்சிகள் இந்த அளவில் இப்போது முடிவுற்று, மீண்டும் மாலை 4 மணிக்குப் பேரவை நிகழ்ச்சிகள் துவங்கும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

(இடைவேளைக்கு பிறகு—மாலை 4–00 மணி.) பி.ப. 1-39

**மாண்புமிகு பேரவைத்தலைவர்**: மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடரும்.

(ஆ) கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள் நிர்வாகம்.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 36,71,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

**THIRU N. KASIRAMAN**: Sir, to discuss about the policy in regard to grant of bus permits, I move the following cut motion:—

"That the allotment of Rs. 36,71,100 under Demand No. 2—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100."

**திரு. ஜி. கோவிந்தராசன்**: பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ள புதிய விண்ணப்பதாரருக்கு ரூட் கொடுக்க வேண்டுமென்ற கொள்கை இருந்தும், அதிகம் ரூட்களை வைத்துள்ள பழைய நபர்களே, தங்களின் மகன் அல்லது உறவினர்கள் பேரில் ரூட் பெறுவதைத் தடுப்பது குறித்து விவாதிக்க,—

[திரு. சி. கோவிந்தராசன்] [1969 மார்ச் 24

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,71,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் ".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) கோரிக்கை எண். 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 17,19,98,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் ".

**திரு. வி. வேலுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து நடைமுறைச் செலவுகளைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 17,19,98,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the general policy and the desirability of providing alternate routes for the operators who have been affected by the nationalisation policy, I move the following cut motion :—

'That the allotment of Rs. 17,19,98,100 under Demand No. 30—Road Transport Schemes be reduced by Rs. 100.

**திரு. சி. கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுப் போக்குவரத்தில், திறமையைப் பெருக்கவும், சீர்கேடு இல்லாமல் பார்த்துக்கொள்ளவும் ஏழு வண்டிகளுக்கு ஒரு பரிசோதகர் நியமிப்பதன் அவசியத்தைப்பற்றி எடுத்துக்கூற—

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிறு ரூ. 17,19,98,100-ல் ரு. 100 குறைக்க வேண்டும். "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the general policy and desirability of introducing some improvement and efficiency in the working of Transport Schemes, I move the following cut motion :—

"That the allotment of Rs. 3,00,36,000 under Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100."



1969 மார்ச் 24]

**திரு. சி. கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துதிட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,00,36,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. வேலுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சித் திட்டங்களை மேலும் உயர்த்தக் கோரி விவாதிக்க,

"கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,00,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வருகின்றன. இப்பொழுது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள்.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர் :** தலைவர் அவர்களே, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்துத் துறை மற்றும் தனியார் மோட்டார் போக்குவரத்துத் துறை ஆகிய இரண்டு துறைகளின் ஓர் ஆண்டு நிர்வாகங்கள்பற்றிய ஆய்வுரைகள் * உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் இந்த விவாதத்தைத் தொடங்கிவைக்கும் முறையில் கொள்கை விளக்கத்தைமட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இவ்வரசின் கொள்கையை மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்கள் இம்மாமன்றத்திலே வெகு தெளிவாக விளக்கியுள்ளார்கள். 1967-வது ஆண்டிலே வரவுசெலவுத் திட்டத்தை இம்மன்றத்தின் முன் படைக்கின்றபோது மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்கள் கீழ்க்கண்டவாறு கொள்கை விளக்கத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறுர்கள். அதை நான் படிக்கிறேன். 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 17ஆம் தேதி அப்போதைய முதலமைச்சர் அவர்களுடைய விளக்க உரை. இது போக்குவரத்துத்துறை பற்றிய கொள்கை விளக்கம்.

முதலாவதாக அவர்கள் சொல்லியிருப்பது " பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்படும் ஒரு சிறந்த பணியாகவே சாலைப் போக்குவரத்து உள்ளது." என்று சொல்லியிருக்கிறுர்கள்.

இரண்டாவதாகத் " தனியாரின் ஊக்கத்திற்கும் முயற்சிக்கும் முதன்மையிடம் அளிக்கப்பட்டுள்ள நாடுகள் பலவற்றிலும், சாலைப் போக்குவரத்துப் பணியை அந்த நாட்டு அரசும் ஊராட்சி மன்றங்களும் பெரும் பாலும் மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றன. நம் நாட்டிலும்கூட, பல மாநில அரசுகள் சாலைப் போக்குவரத்தில் மிகப் பெருமளவிற்கு நாட்டுடமையாக்கியுள்ளன" என்று சொல்லியிருக்கிறுர்கள்.

மூன்றுவதாக, "மக்கள் தொகை மிக நெருக்கமாகவும், நல்லதொரு சாலை அமைப்பைக் கொண்டதாகவும் உள்ள தமிழகத்தைப் போன்றதொரு மாநிலத்தில் நெடுந்தொலை பஸ் போக்குவரத்து, அரசிற்கு வருமானத்தை ஈட்டித்தரும் முக்கிய ஆதாரமாயிருந்திருக்கவேண்டும். ஆனுல் இப்போது நாம் ஆராயத் தேவையற்ற சில காரணங்களுக்காகச் சாலைப் போக்குவரத்துப் பணியை நாட்டுடமையாக்குவதற்கு முனைப்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை : வரியில்லா வருமான இனங்களைப் ( , Non-tax Revenues ) பெருக்குவதன் மூலமாகவே மக்களின் வரிச்சுமைகளை நியாயமான எல்லைக்குள் நிற்குமாறு செய்து, வளர்ச்சிப் பணிகளுக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் நிதி வசதிகளை மேலும் திரட்ட முடியுமென இன்றைய அரசு கருதுகிறது" என்றும் சொல்லியிருக்கிறுர்கள்.

---

*248–286-ம் பக்கங்களில் இரண்டாவது, மூன்றுவதுஇணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. சி. பா. ஆதித்தனுர்] [1969 மார்ச் 24

எனவே எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சிக் கொறடா அவர்களும் பல முறை கொள்கை என்ன, கொள்கை என்ன என்று கேட்கிறுர்கள் அல்லவா ? இதைவிடத் தெளிவாகக் கொள்கையை விளக்கமுடியுமா என்பதை அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முதலாவதாகச் சொல்கிறுர்கள், சாலைப் போக்குவரத்து மக்களுக்குப் பயன் உள்ளதாகவும், மக்களுடைய நன்மைக்காகவும் வசதிகளைக் கொடுப்பதாக இருக்கவேண்டும் என்று.

இரண்டாவதாகச் சொல்கிறுர்கள், பஸ் போக்குவரத்துத் துறை அரசுக்கு வருமானத்தைத் தருவது நான்-டாக்ஸ் ரெவின்யூவாக இருக்கவேண்டும்.

இந்த இரண்டு கொள்கைகளையும் மிகத் தெளிவாக அவர்கள் கூறியிருக்கிறுர்கள். இதற்குப் பிறகு இன்னும் கொள்கை என்று கேட்பதற்கு வழியில்லை. என்போன்றவர்கள் பேரறிஞர் அண்ணு அவர்கள் வகுத்த வழியிலே இந்தத் துறையை நடத்திச் செல்ல வேண்டுமேதவிர வேறு என்ன செய்ய முடியும் ?

எனவே, இந்தத் துறையை நான் நடத்திச் செல்லுகிற வகையில் தண்டவாளம் என்று சொல்லுகின்ற இந்த இரண்டு வரிகளையும் கோடிட்டுக் காண்பித்திருக்கிறுர்கள். ஒன்று, பொது மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும். இரண்டாவது அதிலே வருமானம் வரவேண்டும் அரசுக்கு. இந்தத் தண்டவாளத்திலிருந்து நான் அணுவளவும் விலகுவதாக இல்லை. இந்த இரண்டு கண்களையும் கொண்டுபார்த்து இந்தத் துறையை எப்படி நடத்திச் செல்லுவது என்பதிலே உங்களுடைய கருத்துக்களை எல்லாம் எனக்குச் சொல்லி, சிறந்த முறையில் எப்படிச் செய்ய முடியும் என்பதற்கெல்லாம் உங்களுடைய உரைகளின் மூலமாக எனககுத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆனுல் அவர்கள் வகுத்த கொள்கை இருக்கிறதே இரண்டு—அதை மாற்றி—ஒன்று, மக்களுக்கு அதிகச் சங்கடங்களை உண்டாக்குங்கள்—அதாவது உண்டாக்கக்கூடிய கருத்துக்களைச் சொன்னுலும் இந்த அரசு ஏற்றுக் கொள்ளாது, இந்த அமைச்சு ஏற்றுக் கொள்ளாது. வருமானம் வராத அளவிலே மேலும் செலவினங்களை மட்டுமே சொல்வதாக இருந்தாலும் அதையும் இந்த அமைச்சு ஏற்றுக் கொள்ளாது.

நான் மனதிலே சில திட்டங்களை வைத்திருக்கிறேன். அதையெல்லாம் நன்ருக உருவாக்கும் முன்னுல், அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறும் முன்னுல் வெளியிட முடியாது. இரண்டு கொள்கைகளும், இரண்டு கண்களும், இரண்டு பாதைகளும் அல்லது இரண்டு தண்டவாளங்களும் நன்ருகச் செயல்படுகின்ற முறையில் திட்டங்களை வகுத்திருந்தாலும் நீங்கள் சொல்வதையும் கேட்டு இறுதிப்படுத்த, மேலும் பயனுள்ளதாக வரவேற்கக்கூடிய வகையில் உங்களுடைய கருத்துககளைக் கூறவேண்டுமென விரும்புகிறேன். வேறு சிலர் "பப்ளிக் யுடிலிடி"— பொதுமக்களுக்குப் பயன்படுவதாக இருப்பதால், இலாபமும் இல்லாமல் நஷ்டமும் இல்லாமல் நடக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். "நோ பிராபிட் நோ லாஸ் பேசிஸ்" -ல் நடக்க வேண்டுமென்று ஒரு சிலர் சொல்வதானுல் அது இந்த அரசின் கொள்கையல்ல. பேரறிஞர் அண்ணு அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். "..........தமிழகத்தைப் போன்றதொரு மாநிலத்தில் நெடுந்தொலை பஸ் போக்குவரத்து அரசுக்கு வருவாயினத்தை ஈட்டித் தரும் முக்கிய ஆதாரமாக இருக்க வேண்டும். என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். என் போன்றவர்கள் கடமை, அதை நிறைவேற்றித் தருவதுதான். அவர்கள், நகரத்தில் ஓடுகின்ற பஸ்களைப் பற்றிச் சொல்லவில்லை. ஒவ்வொரு சொல்லிலும் கருத்துப் புதைந்து கிடக்கிறது. நெடுந்தொலை பஸ் போக்குவரத்து அரசுக்கு வருமானத்தை ஈட்டித் தரும் முக்கிய ஆதாரமாக இருக்க வேண்டும் என்றுதான் கூறியுள்ளார். நான் வகுத்துள்ள திட்டத்தின்படி இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வரத்தக்க அளவுக்கு ஒரு திட்டத்தை அமைக்கக் கூடுமென்று கருதுகிறேன். சென்ற ஆண்டிலே இந்த அரசுத் துறை என்ன வகையிலே சயல்பட்டிருக்கிறது என்பதை உங்கள் முன்னுல் வைக்க விரும்கிறேன். மேலெ்ழுந்த வாரியாகப் பார்க்கும்போது அவர்கள்



969 மார்ச் 24] [திரு. சி. பா. ஆதித்தனுர்]

1969 ன்ன இரண்டு இலக்கணங்களிலும் அதில் அமையவில்லை போல
ாறும். உண்மையாக அதை நன்ருகத் துருவிப் பார்க்குமிடத்து மக்க
வரை வசதியைப் பெருக்கவும் வருமானத்தைப் பெருக்கவும் உண்டான
ாணிக்கு டைய சிறப்பான அடித்தளத்தை அவர்கள் போட்டுவைத்துவிட்டார்
வண்டுப் லை கட்டவேண்டிய பொறுப்பு என்னுடையதாக இருக்கிறது.
இருக்கின்ற ங்களுடைய கருத்துக்களைச் சொல்லி எனக்கு உதவியாக உரை
ஒவ்வொன்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ர்கள்தான் ந விஜயராஜ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், அமைச்
திற்குப் புறம்ப ஏதோ ஒரு புதிய திட்டத்தை வைத்திருப்பதாகச் சொன்னுர்
ற்குள் கொண் தப்பற்றி அமைச்சரவையில் பேசி முடிவு செய்யப் போவதாகவும் சொன்னுர்கள். அதை இப்போதே, சட்ட சபை கூடும்போதே வைத்து விடுவதுதான் உபயோககரமாக இருக்கும். ஆகவே, அதை இந்தத் தொடர்க் கூட்டத்திலே வைப்பார்களா ?

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டரா ? எத்தனை முறை சொன்னுலும் உறுப்பினர்கள் நான் சொல்லுவதை ஏற்றுக் கொள்வதே இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்ருல் சட்டமன்ற விதிமுறைகளுக்கு மாருக இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சிகள் அமையுமானுல் அதைச் சுட்டி காட்டுவதற்காகத்தான் அமைந்திருக்கிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற அந்த நிழலிலே எழுந்து உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கிறுர்கள். அப்படிக் கூறுவதை ஒரு வழக்கமாகவே கொண்டிருக்கிறுர்கள். அந்த முறையை மேற்கொள்ள வேண்டாம் ; அது நல்ல முறையாகாது.

***திரு. நா. காசிராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள், சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு ஆகிய மானியங்களின்கீழ் நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை வலியுறுத்திச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மோட்டார் போக்குவரத்துக்காக பஸ்களுக்குப் பர்மிட் கொடுக்கிறுர்கள். அவ்வாறு பர்மிட் கொடுக்க சில விதிமுறைகளை ஏற்படுத்தியிருக்கிறுர்கள். அதிலே என்ன இருக்கிறது என்ருல் பஸ் பர்மிட் கேட்கிறவர் இன்கம் டாக்ஸ் கட்டுகிருரா, ஒர்க்ஷாப் ஃபெசிலிடி இருக்கிறதா, நல்ல முறையில் அனுபவம் இருக்கிறதா, பண வசதி உடையவராக இருக்கிருரா, சர்க்கார் வரியை ஒழுங்காகக் கட்டுகிருரா என்று இவ்வளவெல்லாம் விதி முறைகள் இருந்தும், காலம் முன்னேறி வந்திருக்கும் இந்தச் சமயத்தில்கூட, முதலாளிகளிடத்தில் வேலை செய்யும் உழைப்பாளர்களுக்கு மோட்டார் ன்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் ஆக்டின்படி குறைந்த அடிப்படைச் சம்பளத்தை, காடுக்கவேண்டிய அலவன்சை, வாங்ங் அலவன்சை செருப்பை, உடைகளைக் கொடுக்கின்ருர்களா, லேபர் டிப்பார்ட்மெண்டில் தகராறு இல்லாதவராக இருக்கிருரா, தன்னுடைய தொழிலாளர்களை ஒழுங்காக நடத்துகிருரா என்று பார்ப்பதற்கு உண்டான கண்டிஷன், கைடிங் பிரின்சிபிள்ஸ் இருக்கிறதா என்ருல் இல்லை. அது இருந்தால்தான் தொழிலாளர்கள் நல்ல முறையில் வேலை செய்ய முடியும், தொழிலும் நன்ருக நடக்கும்.

இப்போது ஒவ்வொரு குவார்ட்டருக்கும் டாக்ஸ் கட்ட 'டைம்' கொடுக்கிருர்கள். மூன்று மாதத்திற்கு ஒரு முறை டாக்ஸ் கட்ட வேண்டும். அது அந்த மாதத்தில் 15-ம் தேதிக்குள் கட்ட வேண்டுமென்று விதி இருக்கிறது. மூன்று நான்கு தடவைகளாக தள்ளிப்போட்டுக்கொண்டே வந்து கடைசியில் டைம் கொடுக்கிருர்கள். பஸ் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மாநில சர்க்காருக்குக் கட்டப்பட வேண்டிய வரிதான் முதல் சார்ஜ். அந்த வரியைக் கட்டிவிட்டுத்தான் வண்டியை லைனில் ஓட்ட வேண்டுமேயொழிய, வண்டியை ஓட்டிவிட்டு அதிலிருந்து வரக்கூடிய வருவாயைக் கொண்டு வரியைக் கட்டுவது என்பதல்ல. நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரை ஒரு பக்கத்தில் ரிசர்வ் பாங்கியிலிருந்து கடன் வாங்குகிறது. இன்னெரு பக்கத்தில் மத்திய அரசு கொடுத்துள்ள கடன்களுக்கு ரி-ஷெட்யூல் பண்ணி லாங்கர் பீரியட் வேண்டுமென்று கேட்கிறது.

[திரு. நா. காசிராமன்] [1969 மார்ச்

பொது ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடனை 40 வருஷத் 30 வருஷத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லு இந்த நிலையில் நல்ல தொழிலை நடத்தி—நான் அந்தத் தொ ஈடுபட்டிருந்தாலும் சொல்லுகிறேன்—லாபம் சம்பாதிக்கக்கூடிய வரியைக் கட்ட டைம் கொடுக்கக் கூடாது. அப்படி டைம் கொநக்குப் அது சர்க்காருக்கு என்ன லாபத்தைக் கொடுக்கிறது ? ஒன்று கொடுப் இதன் காரணமாக ஒழுங்காக வரிகட்டுகிறவர்களும் ஏன் நா தாழ்த்தி வரியைக் கட்டக்கூடாது என்று நினைக்கும்படிய ஏற்படுகிறது. மாநில அரசுக்கு வரக்கூடிய நிதி வருவாய் அரசுக்கு கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. வேண்டும்.

பஸ் கட்டணத்தை விதிப்பதற்குச் சில விதி முறைகள் இருக்கின்றன. திருவிழாக் காலங்களில் ஒன்றரைப் பங்கு கட்டணமாக டிக்கட் வாங்கலாம் என்று இருக்கிறது. சாதாரணமாக மாம்பலத்திற்கும் தாம்பரத்திற்கும் 30 பைசா கட்டணம் என்றால் திருவிழாக் காலத்தில் 30 பைசாவோடு 15 பைசா சேர்த்து 45 காசுகள் வாங்கலாம். இது வெகு நாட்களுக்கு முன் னால் ஏற்பட்ட விதி. அப்போதெல்லாம் பஸ்ஸில் போவது என்பதே குறைவு. திருவிழாக் காலங்களில் ஒரு வழிப் பாதையாக இருக்கும். இப்போது திருவிழாக் காலமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் பஸ்ஸில் கூட்டம் இருக்கிறது.

ஆகவே, இந்த நிலையில் பஸ் போக்குவரத்து மக்களிடமிருந்து 1½ பங்கு வாங்கலாம் என்ற உரிமையை வைத்திருப்பது மக்களுக்கு நல்ல தாகாது. ஆகவே, அதை எடுத்துவிடுவதுதான் நாம் மக்களுக்குச் செய்யும் ஒரு நல்ல காரியமாகும்.

அமைச்சர் அவர்களின் அறிக்கையில் ஆம்னி பஸ் தொல்லைபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் எல்லா பஸ்களுக்கும், ஸ்டேட் டிரான்ஸ் போர்ட்டுக்கும்கூட நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அவற்றிற்கு வரியை உயர்த்திவிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஒரு நல்ல யோசனை என்று என்னால் சொல்ல முடியாது. ஒரு ஸ்மக்ளர், ஸ்மகிள் செய்து அதன் மூலம் சொத்து சம்பாதித்தால், அந்தச் சொத்திற்கு அதிக வரிபோடுவதினால் ஸ்மக்ளிங்கைத் தடுத்து விட்டதாகாது. அப்படி அதன்மேல் வரிப்போடுவதால் ஸ்மக்ளிங்கைத் நாம் மறைமுகமாக ஒத்துக் கொள்வதுபோல் ஆகும். இந்த மோட்டார் வாகனச் சட்டத்தின் செக்ஷன் 2 (3)-ல்

'Notwithstanding that the passengers may pay separate fares..'

என்றிருக்கிறது. காண்ட்ராக்ட் காரியேஜுக்குத் தனியாக சார்ஜ் வாங்கலாம் என்றிருக்கிறது. என்னதான் வரிப்போட்டாலும், அதிலிருந்து தப்பித்துக் கொள்ள ஆம்னி பஸ் சொந்தக்காரர்களுக்குத் தெரியும். காண்ட்ராக்ட் பெர்மிட் கண்டிஷனில்.

'The vehicle should be let under contract expressed or implied forthe use of the vehicle either as a whole or by a part of passengers who may pay separate fares from one point to another without stopping to pick up or set down along the line orthe route passengers not including in the contract.'

என்றிருக்கிறது. இந்த ஆம்னி பஸ் சர்வீஸில் தனித் தனியாகப் பாசஞ் சர்களிடம் சார்ஜ் வாங்கலாம் என்பதை மாற்றியமைத்தால்தான் மற்ற பஸ்காரர்களுக்கும், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் ஏற்படும் நஷ்டத்தை ஓரளவு குறைக்க முடியும்.

சட்டத்திற்குப் புறம்பாக பஸ் சர்வீஸ் நடத்திச் சம்பாதிக்கிறவர்களை கண்காணிக்க நல்ல முறையில் ஆபீஸர்கள் இயங்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் 300 பஸ்கள், 400 லாரிகள் என்று ஓடுகின்றன. அவற் றிற்கு மதிப்புப் போட்டுப்பார்த்தால், கிட்டத்தட்ட ஐந்து கோடி ரூபாய்



1969 மார்ச் 24] [திரு. நா. காசிராமன்]

வரை வரும். அவ்வளவு பெறுமானமுள்ள அந்த வண்டிகளைக் கண் காணிக்கும் அதிகாரிகளுக்கு நல்ல முறையில் சம்பள விகிதங்கள் இருக்க வேண்டும். அவர்களுக்கு இப்போதுள்ள சம்பள விகிதங்கள் குறைவாக இருக்கின்றன.

ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டு மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக் டர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அதிகப்படுத்தினால் சட்டத் திற்குப் புறம்பாக நடக்கிறவர்களைக் கண்காணிக்கவும், அவர்களைச் சட்டத் திற்குள் கொண்டுவரவும் முடியும்.

இப்போது பஸ்களில் ஓவர்லோட் இருக்கிறது. சென்னையில் ஓடுகிற தேசியமயமாக்கப்பட்ட பஸ்களில் ஓவர்லோட் அதிகமாக இருக்கிறது. எங்கள் தஞ்சையில் கூடுமான வரையில் 99 சத விகிதம் ஓவர்லோடு என்பதே இருக் காது. இதை நான் உறுதியாகச் சொல்ல முடியும். அந்த அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்கிறோம். ஒரு ½ டிக்கட் ஏற்றினாலும் கண்டக்டர்மீது நடவடிக்கைகள் எடுத்து அவருக்குத் தகுந்த தண்டனை கொடுக்கிறோம். அப்படி இங்கு செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக் கின்றனவா இல்லையா என்று தெரியவில்லை. இங்குள்ள ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் பஸ்களுக்கு பர்மிட்டே இருப்பதாகத் தெரியவில்லை. பர்மிட் கண் டிஷனில்தான் ஓவர்லோடு ஏற்றக் கூடாது என்று இருக்கிறது. ஆகவே, பர்மிட்டே இல்லாதிருக்கும்போது இந்த பர்மிட் கண்டிஷன் எப்படிவரும்? ஓவர்லோட் ஏற்றுவதினால் லாபம் வருகிறது என்று நினைக்கிறார்கள் ஆனால் அப்படி அதனால் லாபமும் ஏற்படுவதில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதுபற்றி விரிவாகச் சொல்லப்போனால் கண்டக் டர்களைக் குற்றம் சொல்வதுபோல் எடுத்துக்கொள்வார்கள். ஆக, எது வானாலும், அந்த ஓவர்லோடை அனுமதிக்கக் கூடாது.

14-3—1965-ல் இங்கு பேசும்போது திரு. எம். எஸ். மணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பஸ் முதலாளிகளும் கண்டக்டர்களும் கூட்டாகச் சேர்ந்துகொண்டு ஓவர்லோடு ஏற்றுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தடுக்க ஓவர்லோடு ஏற்றினால்,கண்டக்டர்தான் பொறுப்பாளி, அப்படி செய்தால் அந்தக் கண்டக்டரின் பாஸ் ரத்து செய்யப்படும் என்று ஒரு கண்டிஷன் போடுங்கள். எந்தக் கண்டக்டராவது தற்கொலைக்கு ஒப்பான அந்தக் காரியத்தைச் செய்வாரா என்று பாருங்கள். எவ்வளவுநான் முதலாளி சம்பளம் கொடுத்தாலும், அப்படி ஓவர்லோடு ஏற்றினால் தன் பாஸ் போய்விடும் என்றால் அப்படிச் செய்ய எவராவது துணிவாரா ? ஓவர்லோடு ஏற்றினால் அந்தக் கண்டக்டர்தான் பொறுப்பு என்று சட்டத் தைத் திருத்துங்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** அவரை வேலையிலிருந்து நீக்க மாட்டீர் கள் என்பதற்கு என்ன காரணடி ?

**திரு. நா. காசிராமன் :** ஓவர்லோடு ஏற்றினால் பாஸ் கான்ஸல் செய்யப் படும் என்று செய்தால் பாஸ் இல்லாமல் எங்கு வேலை கிடைக்கும் ? அப்படிச் செய்தால் வேலை போய்விடுமே என்ற பயம் இருக்கும்.

அடுத்தபடியாக, தேசியமயமாக்கப்பட்ட பஸ் போக்குவரத்துபற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். காலையில் கொடுக்கப் பட்ட இந்தக் குறிப்பையும் இதற்கு முன்பு கொடுக்கப்பட்ட குறிப்புகளையும் நான் பார்த்தேன். ஆடிட் ரிப்போர்ட் 1968-க்குள்ளதும் 1969-க்குள்ளதும் கொடுக்கப்பட்டிருப்பது நமக்குத் தெரியும். கமர்ஷியல் அண்டர்டேகிங்ஸ் ல் 31-3-1967-ல் 1,206 ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் இருப்பதாகக் குறிப் பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ஆடிட் ரிப்போர்ட் 1968-லும் சரி, 1969-லும் சரி, 1,201 பஸ்கள் இருப்பதாகத்தான் இருக்கிறது. ஆகவே மீதி ஐந்து பஸ்கள் என்னவாயின ? கணக்கில் வரவில்லையா, அல்லது கணக்கு எடுக்க முடியவில்லையா ? 1,206 பஸ்களில் 1,201 பஸ்கள்தான் இருப்பதாக ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த ஐந்து பஸ்கள் என்னவாயின என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் 'நான்–டாக்ஸபிள் ரெவின்யூ' கொடுக்கவேண்டுமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்களும்கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்ய வேண்டும்.

நல்ல வருமானம் கிடைக்க வேண்டுமென்றால், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாகாவை நான்கு காம்பொட்டிவ் க்ரூப்ஸாகப் பிரித்து, வட சென்னை, தென் சென்னை, மேற்கு சென்னை, கிழக்கு சென்னை என்று நான்காகப் பிரித்து எந்தப் பகுதி அதிகமாக லாபம் சம்பாதிக்கிறது என்று கண்காணிப்பதோடு அந்த இலாகா அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்லது. அதனால் மாநில அரசுக்கு நஷ்டம் வராது. தனியார் துறையில் இருப்பவர்கள் டீஸலுக்கு எவ்வளவோ காசு கொடுக்கிறார்கள். ஆனால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு டீஸல் ஆயில் லாபமாகக் கிடைத்து வருகிறது. அதோடு ஸ்பேர் பார்ட்ஸ் டயர், டியூப்ஸ் இவையெல்லாம் குறைந்த விலையில் கிடைத்தும்கூட இதில் நஷ்டம் ஏற்படுகிறது என்றால் எங்கேயோ லீக்கேஜ் இருக்கிறது. அந்த லீக்கேஜை உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும்.

இப்படிச் சொல்வதால் நான் தேசீய மயமாக்கப்பட்டதை எதிர்ப்பதாக நினைக்கக் கூடாது. தேசீய மயமாக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும். அந்த அளவிற்கு முப்பது ஆண்டுக் காலத்தில் இந்தத் தொழிலைக் கொண்டு வைத்த தொழில் அதிபர்கள் குறித்து நான் பெருமைப்படுகிறேன். அரசாங்கம் இத்தொழிலை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லும் நிலையில் அந்தத் தொழிலை வளர்த்தவர்களுக்கு, அவர்களை ஊக்குவிக்கும் முறையில் வேறு ஒரு தொழிலை அளித்தாக வேண்டும்.

அரசாங்க பஸ் போக்குவரத்தை விஸ்தரிக்கப் போகிறோம் என்று சொல்லி விஸ்தரித்துக்கொண்டுபோய் அதை நிலைநாட்டாமல் போனால் எதற்காக இந்த ஸ்டேட் டிரான்ஸ்போட்டை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணக்கூடிய ஒரு நிலை ஏற்படும். வரிப் போடாத வருமானத்தை இது கொடுக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். வரியாக வருகிற பணத்திலிருந்துதான் இது ஓடுகிறது. இது நல்லதுதானா என்பதுபற்றி யோசித்து ஒரு முடிவு எடுக்கவேண்டும்.

1967–68ல் ஸிட்டி டிரான்ஸ்போர்ட் மைலுக்கு ஒரு ரூபாய் சம்பாதித்துக் கொடுத்தது. ஆனால் 1968–69-ல் மைலுக்கு 1·44 ரூபாய் சம்பாதித்துக் கொடுத்தாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, மைலுக்கு 44 காசு கூடுதலாகியிருக்கிறது. இது எப்படி வந்தது? 14 பைசா என்றிருந்ததை 15 பைசா என்று மாற்றினார்கள். 18 பைசா என்றிருந்தது 20 பைசாவாக ஆக்கப்பட்டது. இந்த 14, 18 பைசா ஸ்டேஜ்களில்தான் அதிகமாகப் பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்கள். முன்பு சொன்னார்கள், இந்த விகித மாற்றத்தினால் அதிக வருமானம் வருவதற்கில்லை என்று. இந்த விகிதாச்சாரம் உயர்த்தப்பட்டதால்தான் இந்த வருவாய் அதிகமாக வந்திருக்கிறது. ஆக, தேசீயப் போக்குவரத்து நஷ்டம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்றால், ஸிட்டியை நான்கு "காம்பெடெட்டீவ் க்ரூப்ஸாகப்" பிரிக்க வேண்டும். அல்லது ஒரு ரோடு டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்—இப்போது எலக்ட்ரிசிட்டி கார்ப்பரேஷன் நல்ல முறையில் இயங்குவதுபோல்—நிறுவி அதில் இந்தத் தொழிலில் அனுபவம் உள்ளவர்களைப்போட்டு நடத்தினால் நல்ல வருவாயும் கூடுதல் பலனும் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பி.ப. 4-30 நமது தேசீய மயமாக்கப்பட்ட பஸ்களின் வேகத்தைப் பார்த்தால் ஜெட்டு ஏரோப்ளேன்களின் வேகத்தையும் மிஞ்சி விடும்போல இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 22–3–1969 சனிக்கிழமையன்று 7 மணிக்குக் கிளம்பிக் கும்பகோணத்திற்குச் சென்றேன். செங்கற்பட்டு அருகில் ஒரு பஸ், MSR 7360, பி-95 என்று இருந்தது, 94-ஆம் நம்பர் ரூட்டிலே போகும் பஸ் அது. நான், டாட்ஜ் காரிலே 65 மைல் வேகத்தில் சென்றும் அந்த பஸ்ஸை ஓவர்டேக் செய்ய முடியவில்லை. ஆனால், அதில் பிரயாணிகளும் அதிகம் இல்லை. நடுவில் பிரயாணிகளையும்





ஏற்றவில்லை. பாலாறு பாலத்திற்கருகில் போலீஸ் அதிகாரிகள் நிறுத்தினார்கள். அப்பொழுதுதான் அந்த பஸ்ஸை ஓவர்டேக் செய்ய முடிந்தது. பாசஞ்சரைக்கூட ஏற்றிக்கொள்ளாமல் பஸ்ஸை ஓட்டிக் கொண்டு சென்றார்கள். அதனால் பஸ்ஸுக்கும் ஆபத்து, பிரயாணிகளுக்கும் சௌகரியம் இல்லை. இம்மாதிரி சர்வீஸ்களை நடத்துவதால் என்ன லாபம்? யாருக்கு லாபம்? நாமும் பஸ் சர்வீஸ் நடத்துகிறோம் என்று சொல்லிக் கொள்ளதான் பிரயோசனப்படும். ஒரு பழமொழி சொல்லுவார்கள், "எங்க வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்" என்று. அது கலெக்டர் வேலையா பியூன் வேலையா என்பது போய்ப் பார்த்தால்தான் தெரியும். எனவே, நல்ல முறையில் செக் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

16–3–1965 அன்று பேசும்பொழுது, இப்பொழுது அமைச்சராகவும், அப்பொழுது இந்தச் சபையில் உறுப்பினராகவும் இருந்த திரு. ப. உ. சண்முகம் அவர்கள், ஆர்.டி.ஓ.-க்களை ஏற்பாடு செய்திருக்கிறோம், அவர்களுக்கு உதவிகரமாக இருப்பதற்கு ஜாயிண்ட் ரீஜினல் டிரான்ஸ்போர்ட் ஆபீஸர்களை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதைப் பின்பற்றிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஆர்.டி.ஓ.-க்களாக இருப்பவர்கள் அடிக்கடி கேம்ப் செல்ல வேண்டியிருக்கிறது. எந்தெந்த இடத்திலே அதிக பஸ்கள் ஓடுகின்றன, யார் யார் தவறு செய்கிறார்கள், எங்கெங்கு விரிவு படுத்தலாம் என்று திட்டமிடுவதற்காக அடிக்கடி கேம்ப் போக வேண்டியிருக்கிறது: அப்படிப் போகும் நேரங்களில், ஆபீஸ்களில் இருந்து அலுவல்களைக் கவனிப்பதற்கு யாருக்கும் இப்பொழுது சட்டப் பூர்வமான அதிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஜாயிண்ட் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீஸர்களை முன்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை இரண்டு வருடக் காலத்திற்கு முன்பு எடுத்துவிட்டதாகத் தெரிகிறது. அவ்வாறு செய்தது நல்லது அல்ல. எனவே, இதைப்பற்றி யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடித்தபடியாக லாரிகளை எடுத்துக்கொண்டால், அவை வெகு வேகமாகப் போகின்றன. அந்த லாரிகளில் அதிகப்படியான பிரயாணிகளை ஏற்றிச் செல்லுகிறார்கள். சமீபத்தில் பத்திரிகைகளில் பார்த்தேன், பத்திரிகையில் பார்த்ததைச் சொல்லக்கூடாது என்று சொல்லுவார்கள், ஆனால், எந்தச் சமாச்சாரமும் நாங்கள் பத்திரிகையின் மூலமாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது, ஆனால், அது உண்மையா, இல்லையா என்பதை விசாரித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். சத்தியமங்கலத்தில், திருவிழாவிற்காக, லாரியில் 40, 50 பேர் சென்று அந்த லாரி கவிழ்ந்து பலர் மாண்டார்கள். படுகாயம் அடைந்தார்கள என்று கேள்விப்படுகிறோம். ஏன் அப்படி ஏற்பட்டது? அங்கேயுள்ள அதிகாரிகள் லாரிகளைத் தடுத்து நிறுத்தியிருந்தால் இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்காது. சமீபத்தில் மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்களின் இறுதிச் சடங்குகளைக் காண சென்னைக்கு லாரிகளில் நிறையப் பேர் வந்தார்கள். ஆனால், அப்பொழுதிருந்த வேகமும், ஆர்வமும் வேறு. எப்படியாகிலும் இங்கு வந்து கலந்துகொள்ள வேண்டுமென்ற வேகத்தில் வந்தார்கள். அந்தச் சமயத்தில் வேண்டுமானால் போனால் போகிறது என்று விட்டிருந்திருக்கலாம். ஆனால், தினமும் போகிறார்கள். இதனால் தேசீய மயமாக்கப்பட்ட பஸ்களின் வருமானமும் பாதிக்கப்படுகிறது என்பதைக் கருத்திற்கொண்டு, இதை நன்றாக செக் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். லாரிகளில் போவதைத் தடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தச் சட்ட சபையிலே 13–3–1964 அன்று பேசும்பொழுது ரோடுகள் குறுகலாகவும் இருக்கின்றன, அதில் நெல்லை உலர்த்துகிறார்கள், அதனாலே இங்கு விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அப்பொழுது இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்தவரும், இன்றைய சபாநாயகராகவும் வீற்றிருக்கின்ற தாங்கள் சொன்னீர்கள். நெல் மாத்திரம் அல்ல, வைக்கோலையும் காய வைக்கிறார்கள். அதனால், கார்கள் போகும் பொழுது, பஞ்சிலேயிருந்து நூல் வருவதைப்போல, ப்ராப்பலர் ஷாப்ட்டிலே சுற்றி அடிபட்ட ஆமைபோல் போய் நின்று விடுகிறது

[திரு. நா. காசிராமன்] [1969 மார்ச் 24

அதனால் ப்ரேக் டவுன்கள் ஆகின்றன, ஆக்ஸிடெண்டுகள் நடக்கின்றன. ஆகவே, ரோடுகளிலே நெல், வைக்கோல் முதலியவற்றைக் காய வைக்காமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடித்தபடியாக, போக்குவரத்து விபத்திலே அதிகமாக பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் சைக்கிளிலே செல்லுபவர்கள்தான். மெரினா பீச், மவுண்ட் ரோடு ஆகிய இடங்களில் ஒரு சைக்கிளில் இரண்டு பேர்கள் செல்வது சகஜமாக இருக்கிறது. அவர்களைப் போலீசார் பிடித்து உண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஒரு சைக்கிளில் ஒருவருக்குமேல் செல்வதை நிச்சயமாகத் தடுக்க வேண்டும்.

380 தனியாருடைய பஸ்களைச் சர்க்கார் எடுத்திருப்பதாக கூறியிருக்கிறார்கள். அதனுடைய மதிப்பைப் போட்டுப் பார்த்தால் 38 லட்சம் ரூபாய் வருகிறது. இந்த 38 லட்சம் ரூபாய் வரையுள்ள பஸ்கள், தனியாருக்குச் சொந்தம் என்றாலும்கூட, அது தேசியச் சொத்துக்களிலே ஒன்றாக இருக்கிறது. அவைகளை "ஐடிலாக" நிறுத்துவதால் சர்க்காருக்கு லாபம் இல்லை. புதுப்புது ரூட்டுகள் திறக்க வேண்டியிருக்கிறது. அவைகளில் நல்ல நிலைமையில் இருக்கக்கூடிய பஸ்களை, இரண்டு, மூன்று வருஷங்களுக்குத் தற்காலிகப் பர்மிட் கொடுத்து ஓடச் செய்தால் அதனால் சர்க்காருக்கும் வருமானம் வரும், மக்களுக்கும் நன்மை பயக்கும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

டெப்ரிசியேஷனை 20 பர் செண்ட் ஆக இருந்ததை ,16-2/3 பர் செண்ட் ஆகக் குறைக்கிறார்கள். இது புத்தகத்தில் லாபம் காட்டுவதற்கு என்றால் உதவிகரமாக இருக்கும். ஒருவன் சொன்னாலும், "சேலம் சர்க்கரை சித்தப்பா, ஏட்டிலே எழுதி நக்கப்பா" என்று அதுபோல், சர்க்கரை என்று ஏட்டிலே எழுதிவிட்டால் தித்தித்து விடாது. அதைப்போல பேப்பரிலே டெப்ரிசியேஷனைக் காட்டி விடுவதால் லாபம் கிடைத்து விடாது. தனிப்பட்டவர்கள் பேங்கிலே கடன் வாங்க வசதியாகத்தான், கணக்குகளை மாற்றத்தான் வசதியாக இருக்குமேதவிர, நல்ல முறையில் லாபம் வருமென்று மனச்சாட்சி ஒத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேசீயமயப் போக்குவரத்தை இன்னும் தீவிரமாக, நல்ல முறையிலே செய்ய வேண்டும், தனியார் போக்குவரத்துத்துறையிலும், தேசீய போக்குவரத்துத் துறையிலும் இருக்கக்கூடிய ஊழியர்களின் நலன்கள் பூரணமாகப் பாதுகாக்கப்பட வேண்டும், அதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் அங்கத்தினர் அவர்கள், அரசாங்க பஸ் வேகமாகச் செல்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டும்பொழுது, தானே 65 மைல் வேகத்தில் சென்றதாகக் குறிப்பிட்டார்கள். தயவு செய்து அவர்கள் இனிமேல் அப்படிப் போக வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. நா. காசிராமன் :** ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் பஸ்களுக்குச் சட்ட பூர்வமாக வேகக் கட்டுப்பாடு உண்டு. கார்களுக்கு வேகக் கட்டுப்பாடு இல்லை. அதோடு, காரில் வேகமாகச் சென்றால், நான் ஒருவன் தான் ஆபத்தில் சிக்கிக்கொள்வேன். ஆனால் பஸ் என்றால், அதில் 40, 50 பேர்கள் இருப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கும் ஆபத்து வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்வது.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் அவர்களுக்கும் ஆபத்து ஏற்படக்கூடாது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறோம்.

**திரு. நா. காசிராமன்** நன்றி.



169 மார்ச் 24]

**மாண்புமிகு திரு சி. ப. ஆதித்தனார் :** உறுப்பினரவர்களை ஒரு ளக்கம் கேட்க விரும்புகிறேன். அரசாங்கப் பேருந்துகளில் டெப்ரிசிபஷன் கணக்குப் போடும்பொழுது, தேய்மானம் 16-2/3 போடுகிறார்கள். னியார் துறையில் தாங்களே எவ்வளவு டெப்ரிசியேஷன் போடுகிறீர்கள் ன்பதைத் தெரியப்படுத்தலாம் என்றால் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள் ன்றேன்.

**திரு. நா. காசிராமன் :** இதில் ஒளிமறைவு ஒன்றுமில்லை. நாங்கள் ப்போர்ட் கொடுத்துக் கொண்டிருப்பதால் இதில் ஒளிமறைவு ஒன்று ில்லை. 25 பர் செண்ட் க்ளெய்ம் பண்ணுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 15 உறுப்பினர்கள் பெயர் ள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்கிறேன், த்தனை மணிக்கு முடிக்கலாம் ?

**மாண்புமிகு திரு. சி.ப. ஆதித்தனார்:** அது பேரவைத் தலைவரவர் ளுடைய விருப்பமே தவிர, என்னுடைய விருப்பம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய வசதியைக் கேட் கிறேன், $7\frac{1}{2}$ மணிக்கு முடிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. சி. ப. ஆதித்தனார் :** எதிர்க்கட்சியிலே உள்ள வர்கள் எவ்வளவு நேரம் இருப்பதற்குச் சம்மதிக்கிறார்களோ அவ்வளவு நேரம் இருப்பதற்கு நானும் சம்மதிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 7 மணி என்றால்கூட இப்பொழுதே $4\frac{1}{2}$ மணிக்கு மேலாகி விட்டது. இன்னும் $2\frac{1}{2}$ மணி நேரம் தான் இருக்கிறது. அமைச்சரவர்கள் பதில் சொல்வதற்கும், எதிர்க்கட்சியிலே "வைண்ட் அப்" செய்து பேசுவதற்கு ஒரு மணிநேரம் ஆகும் அப்படியென்றால், ஒவ்வொருவருக்கும் 6 நிமிடங்கள்தான் வரும்.

* **திரு. ஆர். என். அரங்கநாதன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தேசீயமயமாக்கப்பட்ட போக்குவரத்து என்கிற கொள்கையை மிகத் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே முதல் கட்டமாக 75 மைல்களும் அதற்கு மேலும் தூரமுள்ள ரூட்டுகள் தேசீயமயத் திட்டத்தின்கீழ் வருமென்று 1967–68 பட்ஜெட்டில் சமர்ப்பித்தார்கள். அப்பொழுதே நண்பர் திரு விநாயகம் அவர்கள், பஸ் முதலாளிகள் பொன் முட்டையிடும் வாத்து, அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள், ஹைகோர்ட்டிற்கும், சுப்ரீம் கோர்ட்டிற்கும் போவார்கள் என்று முன்னாலேயே எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லியபடியே, பர்மிட் எக்ஸ்பையர் ஆனவுடனேயே, ஹைகோர்ட்டில் ரிட் தாக்கல் செய்வதோடு "இன்டரிம் ஸ்டே" வாங்குகிறார்கள். இன்னொரு வாடிக்கை என்னவென்றால், ஒவ்வொரு பஸ் முதலாளியும் தன்னுடைய பர்மிட் எக்ஸ்பயர் ஆவதற்குக் கொடுத்திருந்த கடைசித் தேதியில் ஹைகோர்ட்டிலே சென்று ஸ்டே கேட்கிறார்கள். பாதிக்கப்பட்ட பஸ் முதலாளிகள் அத்தனை பேர்களும் சேர்ந்து representative capacity யில் இந்த "டெக்னிக்கல் க்வெஸ்டின்" மீது தீர்ப்பு கோரலாம். தேசீயமயம் செய்வது இந்திய அரசியல் சட்ட விதிகளுக்கு விரோதமாக இருக்கிறதா என்று ஹைகோர்ட்டிலே சென்று ஒரு மனதாகத் தீர்மானம் எடுத்துக் கொள்ளலாம். அதை விட்டுவிட்டு, ஒவ்வொரு பஸ்ஸுக்கும் தனிப்பட்ட முறையிலே எக்ஸ்பயர் ஆனவுடன் இன்டரிம் ஸ்டே வாங்குவதானது, தேசீயமயமாக்கும் திட்டத்தைத் தோற்கடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. அதற்குத் தகுந்தாற்போல், சென்னை உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பளித்திருந்தும் ஒரு சில முதலாளிகள் சுப்ரிம் கோர்ட்டுக்குப்போய் இண்டரிம் ஸ்டே பெற்றிருப்பதைப் பார்க்கலாம். இன்னொரு விஷயம், இன்டரிம் ஸ்டே-க்கான ஒரு அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கிருப்பதை இந்தச் சட்ட மன்றம் எடுத்துவிட முடியாது. ஆனால், அதே நேரத்திலே இன்டரிம் ஸ்டே-யை வெக்கேட் செய்ய அரசாங்க இலாக்கா நிச்சயமாக

[திரு ஆர். என். அரங்கநாதன்] [1969 மார்ச் 24

உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். ஃபைல்களை சம்பந்தப்பட்ட அட்வகேட் ஜெனரலுக்கு அனுப்புவதில் தாமதம் இருப்பதாகவும் அந்தத் தாமதம் ஏற்படுவதனால் ஹைகோர்ட் அடிக்கடி அந்த வழக்குகளை விசாரிக்கும் நேரத்தில், மெயின் பெட்டிஷன்களை நாம் பரிசீலித்துவிடலாம். இன்டரிம் ஸ்டே மனுக்களைப் பரிசீலிக்க வேண்டியதில்லை என்ற நோக்கத்தோடு இன்டரிம் ஸ்டே பெட்டிஷன்களையும், மெயின் பெட்டிஷன்களையும் ஒன்ருக எடுத்துக் கொள்கிருர்கள். அதன் காரணமாக 6 மாதங்கள், ஒரு ஆண்டு என்ற முறையிலே இன்டரிம் ஸ்டே ஆப்பரேஷன் இருப்பதால், தேசிய மயமாக்கப்பட்ட அந்த ரூட்டிலே பஸ்கள் போக முடியாத நிலை இருக்கிறது.

அது மட்டுமல்லாமல், கோர்ட்டு மூலமாகப் பரிகாரம் தேடுகின்ற அதே நேரத்திலே பஸ் முதலாளிகள் வேறு முறையைக் கையாண்டு இந்த தேசியமயமாக்குகின்ற திட்டத்தைத் தோற்கடிக்க முயன்று வருகிருர்கள் என்பதைக் கண்கூடாகப் பார்த்தேன், நேரடியாக அனுபவத்திலே பார்த்தேன். சென்னையிலிருந்து புறப்படுகின்ற அரசாங்க பஸ் போக்குவரத்து சோளிங்கருக்குப் போகிறது என்று சொன்னுல், அந்த அரசாங்க பஸ் போக்குவரத்து புறப்படுவதற்கு இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களுக்கு முன்னுலே தனியார் பஸ் புறப்படுகிறது. அதே போல் தமிழக அரசு போக்குவரத்து திருவள்ளூருக்குப்போய்ச் சேர்ந்த உடன் ஒரு நிமிஷம் அல்லது இரண்டு நிமிஷம கழித்து தனியாருடைய பஸ்ஸை எடுத்துவிடுகிருர்கள். நமது தமிழக அரசு போக்குவரத்து அரக்கோணம் போய்ச் சேர்ந்தவுடனே அங்கே இருக்கிற தனியார் பஸ் முதலாளிகள் நமது பஸ் புறப்படுவதற்கு இரண்டு நிமிஷம் முன்னுலேயே எடுத்து விடுகிருர்கள். இதனுலே, வழியிலே இருக்கிற அத்தனை பிரயாணிகள் கட்டணங்களையும் தனியார் பஸ் முதலாளிகள் பெறுகின்ற நிலைமையை நாம் பார்க்கிருேம். அதற்குப் பரிகாரம் என்னவென்ருல், ஏற்கனவே கடந்த ஆண்டு விவாதத்தின்போதும் கூறப்பட்டது அரசாங்க பஸ்களுக்கு அந்தந்த இடங்களில் "லோடர்களை" நியமிக்க வேண்டும். தனியார் பஸ்களிலே நிரம்ப லாபம் கிடைப்பதற்கு முக்கியமான காரணம் லோடர்கள் என்ற நபர்களை வைத்திருப்பது தான். அவர்கள் இருப்பதன் காரணமாக, பிரயாணிகளை ஏற்றுவதோடு கூட, "பிஃபோர் டைம்" அல்லது "ஆஃப்டர் டைம்" இருப்பதைத் தடுத்து, நிறுத்தி, அதன் மூலமாக பஸ் முதலாளிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கிறது. நம்முடைய அரசாங்க பஸ் போக்குவரத்துக்கும் லோடர்களை நியமிப்பதன் மூலமாக நிச்சயமாக நாம் அடைந்து வரும் நஷ்டத்தை ஓரளவுக்கு சரிக்கட்ட முடியும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதிலும், தனியார் பஸ் முதலாளிகள், கிராமப் பகுதிகளிலே, காட்டு சாம்ராட்களைப் போல, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற ஜமீந்தார் பரம்பரையைப் போல நடந்து கொண்டு வருகிருர்கள். அந்தந்த கிராமப் பகுதியிலே அந்தந்த அரசாங்க பஸ் போக்குவரத்துக்கு என்னென்ன முறையிலே இன்னல் அளிக்க முடியுமோ, எப்படி எப்படி முட்டுக்கட்டை போட முடியுமோ அந்த முயற்சிகளிலெல்லாம் ஈடுபடுவதை நாம் பார்க்கிருேம். அவர்களுடைய கோட்டைகளாகக் கருதுகின்ற பகுதியிலே, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் வருவதிலிருந்து, புறப்படுகிற வரையிலும் பிரயாணிகள் கூட்டத்தை நிறுத்தி வைப்பதை நாம் பார்க்கிருேம், அறிந்திருக்கிருேம். அது விஷயமாக புகார்களைக்கூட அனுப்பி இருக்கிருேம். அந்தப் புகார்களை அனுப்பிய பிறகு அந்தப் புகார்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று ஆர். டி. ஓ. ஆபீஸில் சென்று பார்த்தால் தனியார் பஸ் முதலாளிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனுல், தனியார் பஸ்கள், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸுக்கு 2 நிமிடங்கள் முன்னுல் புறப்பட்டு, எனக்கு முன்னுல் நண்பர் திரு. காசிராமன் அவர்கள் சொன்னதைப் போல், ஓவர்லோடு பாசஞ்ஜர்களை கணக்கில்லாமல் ஏற்றிப் போகிருர்கள். 40 தான் கணக்கு என்று சொன்னுல் 80, 100 என்று ஏற்றுகிருர்கள். ஆர்.டி.ஓ. அவர்களிடம் அதுபற்றிச் சொன்னுல் அவர், எந்த இடத்திலே அவர்கள் "ஓவர்லோடு" ஏற்றுகிருர்களோ அங்கே இருந்து "போன்" செய்யுங்கள்



1969 மார்ச் 24] [திரு. ஆர். என். அரங்கநாதன்]

என்று சொல்கிருர்கள். "ஓவர்லோடு" ஏற்றப்பட்டிருப்பதைப் பார்த்தால் எப்படி "போன்" செய்ய முடியும் அங்கிருந்து ? எப்பொழுது அவர் வருவது ? அதற்குள் பஸ் போய் சேர்ந்துவிடும். அதற்காகத் தனி "ஸ்குவாட்" ஆர்.டி.ஓ. ஆபீஸுக்கு சம்பந்தம் இல்லாத வகையில் அந்தந்த இடத்தில் அமைக்க வேண்டும். அந்தந்த ஆர்.டி.ஓ. ஆபீஸினுடைய காம்பவுண்டைச் சுற்றி சுற்றி ஏஜண்டுகளை நியமித்து இருக்கிருர்கள், தனியார் பஸ் முதலாளிகள். ஆர்.டி.ஓ. எங்கே புறப்படுகிருர், எப்பொழுது புறப்படுகிருர் என்று இவைகளைக் கண்காணிக்கவும், செக்கிங் இன்ஸ்பெக்டரைக் கண்காணிக்கவும் தகவலைச் சொல்வதற்கும் நம்பகமான ஆட்களை ஆர்.டி.ஓ. ஆபீஸின் காம்பவுண்டில் இன்றைய தினம் பஸ் முதலாளிகள் நியமித்துக்கொண்டு வருகிருர்கள். அத்தகைய முறையை நாம் தோற்கடிக்க வேண்டுமென்ருல், தனியான "ஸ்குவாட்" போட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களிடையே டைமிங்கை மாற்றிக் கொடுத்தால், அதனுல் பிரயாணிகளை அதிக அளவுக்கு ஏற்றிச் செல்ல முடியும், நம்முடைய அரசுப்போக்குவரத்துக்கும் இலாபம் கிடைக்கும் என்ற கோரிக்கைகளை டைரக்டர் ஆப் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றும் பொது மக்களும் மனுக்கள் மூலமாகக் கொடுத்திருக்கிருர்கள். அந்த டைமிங்கை மாற்றிக் கொடுக்கும்படி சம்பந்தப்பட்ட ஆர்.டி.ஓ. ஆபீஸிலிருந்து போனவை இதுவரைக்கும் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளை மாற்றித் தராத காரணத்தால் கூட பழைய பஸ் முதலாளிகள் இன்னும்கூட நிறைய இலாபம் சம்பாதித்து வருகிருர்கள். (மணி அடிக்கப்பட்டது).

நம்முடைய தமிழக அரசு போக்குவரத்திலே சாதாரணமாக சின்னக் குறைகள் கூட, தீர்த்துவிடக் கூடிய சிறு வழிகளுள்ள பிரச்னைகள் கூட இருப்பதை இன்றையதினம் பார்க்கிருேம். "ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸ்" இல்லை என்று சொல்லி புத்தூரிலே நம்முடைய அரசு வண்டிகள் இரண்டைப் பிடித்ததை நாம் பார்த்தோம். மாண்புமிகு திரு பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே வரி கட்டாத காரணத்தாலே அரசாங்க பஸ்கள் இரண்டை நிறுத்தி வைத்ததை நாம் கண்டோம். ஆனுல், ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் வைப்பது போன்ற சின்னக் காரியங்களை எல்லாம் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் ஆபீஸர்கள் கவனிக்க வேண்டும். காரணம், இத்தகைய சின்னக் குறைகளை நாம் புறக்கணித்து விடுவதாலே அல்லது உதாசீனப்படுத்துவதாலே பாதிக்கப்படுவது அரசாங்கத்தினுடைய பெயர் என்பதை அங்கே உழைக்கின்ற அத்தனை அதிகாரிகளும் ஊழியர்களும் உணர வேண்டும். கண்டக்டர் சிறிய தவறு செய்தால் கூட அது அரசைத் தான் பாதிக்கிறது. ஆகவே, அவர்கள் சமுதாயத் தொண்டாக நினைத்து பணி புரிய வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இண்டர்-ஸ்டேட் பர்மிட்டிலே மைசூர் இராஜ்யத்திற்கும் நம்முடைய தமிழக அரசிற்கும் ஒரு அக்ரிமெண்ட் ஏற்படுத்தப் போவதாகவும், அது சம்பந்தமாக கமிஷனர்கள் கலந்து பேசுவதாகவும், அந்த அக்ரிமெண்ட் கண்டிஷன்களை பைனலைஸ் செய்யவில்லை என்றும் நாம் அறிந்தோம். அந்த ஒப்பந்தத்தின் முடிவுகளின்படி ரெசிப்புரோக்கல் பேஸிஸிலே நாம் ஸ்டேட் பர்மிட்டுகளைக் கொடுக்க வேண்டுமென்றும் அவர்களும் அவ்வாறே கொடுக்க வேண்டுமென்றும் பேச்சுவார்த்தைகளில் ஒத்துக் கொண்டார்கள். அந்த வகையிலே பல பஸ்களை விடவேண்டுமென்று தனியாரிடத்திலேயிருந்து மைசூர் இராஜ்ஜியத்திலே எல்லா விதமான பர்மிட்டுகளைப் பெற்று ரெஸிப்புரோக்கல் பேஸிஸிலே தமிழ்நாடு அரசாங்கத்திற்கு மனு செய்திருக்கிருர்கள். அத்தகைய மனுக்களை உடனடியாகப் பரிசீலனை செய்து அவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் மைசூருக்கும் நமக்கும் ஏற்பட்டிருக்கக் கூடிய ஒப்பந்தத்தை நாம் விரைவிலே முடிக்க முடியும் என்று கூறிக்கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

[1969 மார்ச் 24

*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்த பஸ் போக்குவரத்தைப்பற்றி மிகத் தெளிவாக எனக்கு முன்னலே பேசினுர்கள். இருந்தாலும் நமது அமைச்சர் அவர்கள் பல ஆதாரங்களோடு அரசாங்கம் தேசீயமயமாக்குவதிலே உள்ள கொள்கையைப் பற்றி மிகத் தெளிவாகச் சொன்னுர்கள். மக்களுக்கு வசதி செய்வது, லாபசுரமாக நடத்துவது இந்த இரண்டுதான் குறிக்கோள் என்றும் மிக அழுத்தம் திருத்தமாகச் சொன்னுர்கள். அதை விட பஸ் போக்குவரத்து புத்தகத்திலே, ஆய்வுரையிலே திருவள்ளுவர் படம் போட்டு ஒரு குறளும் போடப்பட் டிருக்கிறது.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு".

என்று போடப்பட்டிருக்கிறது. அவர்கள் என்ன சொன்னுர்களோ அதைப் படம் பிடித்தது போல் மிக அழகாக குறளின் மூலமாக அந்த ஆய்வுரையிலே போடப்பட் டிருக்கிறது. மக்களுக்கு நல்ல முறைகளை வகுத்தலும், வகுத்து வருவாயைத் தேடுவதும், அதை ஒழுங்காக மக்களுக்கு விநியோகிப்பதும் தான் அரசாங்கத்தினுடைய குறிக்கோள் என்ற முறையிலே மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. அவர்களும் சொன்னுர்கள். அந்தத் திட்டத்திலும் தீட்டப்பட்டிருக்கிறது. ஆனல் நடைமுறையிலே இதற்கெல்லாம் நேர் விரோதமாக இருக்கிறது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. மக்களுக்கு இதனலே வசதி குறைவது என்பதைப் பலபேரும் அறிவார்கள். அரசாங்க நாட்டுடமையாக்கப்பட்ட திட்டத்திலே வசதிக் குறைவு என்பதை எல்லோரும் அறிவார்கள். எனக்கு முன்னலே பேசிய நண்பர்களும் கூடச் சொன்னுர்கள், வழியிலே நிற்பவர்களை ஏற்ருமல் போகிருர்கள் என்று. உண்மையிலே அவர்கள் ஏற்றினல் கூட ஏறத் தயாராக இல்லாத நிலையிலே எங்கள் பகுதியிலே பலர் இருக்கிருர்கள். காரணம், அந்த பஸ்ஸிலே ஏறினல் ஒழுங்காகப் போய்ச் சேருவோமோ, சேராமலே நின்றுவிடுவோமோ என்ற பயத்திலே பலபேர்கள் இருக்கிருர்கள். அவர்கள் ஏற்றிக் கொள்ளாதது ஒரு முறை, அவர்கள் ஏறப் பயப்படுவது ஒரு முறை. இப்படிப் பல முறைகளிலே ஆபத்திலே கொண்டு போ 'க்கொண்டிருக்கிறது. எல்லாத் தொழில்களும் தேசீயமயமாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே, சோஷலிஸ சித்தாந்த வாதிகளாகிய அங்கத்தினர்கள் பலர் வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக்கிருர்கள். இந்தத் தேசீயமயமாக்கப்பட்ட ரூட்களில் பஸ்களை இரண்டாண்டுகளுக்கு மேல் ஓட்டக் கூடாது என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். மூன்ருண்டுகளுக்கு மேல் ஓட்டக் கூடாது என்றும் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். அடிக்கடி பழுதடைவதால் குறிப்பிட்ட காலத்தில் வர முடியவில்லை, என்ஜின்கள் எல்லாம் அடிக்கடி கெட்டுவிடுகின்றன, பராமரிக்கப்படுவதில்லை என்றெல்லாம் வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட் டிருப்பதைப் பார்த்தால் இந்த போக்குவரத்துத் துறை சரியாகப் பராமரிக்கப்படவில்லை, பல நிலைகளிலும் இந்தத் தேசீயமயமாக்குவதிலே ஆபத்து இருக்கிறது என்பதற்கு இது எடுத்துக் காட்டாக இருக்கிறது.

இன்னென்றும் நான் சொல்வேன், மக்களுக்கு வாய்ப்பில்லை, வசதியில்லை. இலாபகரமாகவும் இல்லை என்பது ஆபத்தான பிரேரணை. லாபமாக இருக்கிறதா என்ருல், நிச்சயம் இல்லை. அதிலும் கணக்கில் எப்பொழுதும் ஒழுங்கில்லாத கணக்கு காட்டப்பட்டு வருகிறது. நான் இதற்கு முன்பும் சொல்லி யிருக்கிறேன். இப்பொழுதும் சொல்கிறேன். கணக்குப்படி அவர்கள் சொல்கிருர்கள், 16–3/4 சதம் தேய்மானம் என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல், புத்தகத்தில் எங்குமே 10, 11 சதத்திற்கு மேல் தேய்மானம் கணக்குக் காட்டப்படவில்லை. 1967–68-ஆம் ஆண்டு கணக்குப்படி ரூ. 16 கோடி 37 லட்சம் மூலதனம், ஆய்வுப் புத்தகக் கணக்குப்படி. ஆனல் அதற்கு தேய்மானம் அனுமதிக்கப்பட்டிருப்பது ரூ. 1 கோடி 59 லட்சம். சுமார் 11 சதம் தான் தேய்மானம். ஆனல் 16–3/4 சதம் தேய்மானம் என்பது எனக்கு எங்குமே புலப்படவில்லை. இப்படி ஒவ்வொரு ஆண்டும் தேய்மானம் குறைத்துக் காண்பிக்கப்படுகிறது, கணக்கில். அதற்குக் காரணம், இல்லாத லாபத்தை உள்ள



1969 மார்ச் 24] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

தாகக் காட்டுவது என்று சொன்னல் அது மிகையாகாது. இன்னும் ஒன்று சொல்கிறேன். எத்தனை சதம் மற்றவர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் ஒரு இன்கம்-டாக்ஸ் ஆர்டரை, கோவையிலே வி. ஸி. கே. பஸ் சர்வீஸின் இன்கம்டாக்ஸ் ஆர்டரைக் கையில் கொண்டு வந்திருக்கிறேன். அந்த ஆர்டரில் 25 சதம் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரணமாக இன்கம் டாக்ஸ் சட்டப்படி 25 சதமானம் எல்லோருக்கும் அனுமதிக்கப்படுவது. அது மட்டும் அல்ல. 25 சதமானம் தேய்மானம் காட்டியும் 15 பஸ்கள் உடைய கம்பெனி 9 பஸ் வெளியூர் பயணம் நகர பஸ் 6 என்று வைத்துக் கொண்டிருக்கிற பஸ் கம்பெனி ரூ. 1,61,427 இன்கம்டாக்ஸ் கொடுத்திருக்கிருர்கள். அதாவது 25 சதவிகிதம் தேய்மானத்திற்கு ஒதுக்கியதற்குப் பின்னர் ரூ. 2,48,000 லாபம் சம்பாதித்து 65 சதவீதம் இன்கம்டாக்ஸ் ரூ. 1,61,000 கொடுத்திருக்கிருர்கள். அதாவது பஸ் ஒன்றுக்கு சுமார் ரூ. 11,000 அவர்கள் இன்கம் டாக்ஸ் கொடுத்திருக்கிருர்கள். அப்படியானல் 1,500 பஸ்களுக்கு 3 கோடி ரூபாய்க்கு மேல், நமது அரசாங்கம் தூங்கிக்கொண்டிருந்தால், இன்கம்டாக்ஸ் வந்திருக்கும், இது கணக்கில் வந்தால். சும்மா தூங்கிக்கொண்டு, இதை ஒழுங்காக கவனித்தால் ரூ. 3 கோடி வந்திருக்கும். ஆனல், இதுமாதிரி உண்மைக்கு மாருக கணக்குக் காட்டி ரூ. 23 லட்சம் நஷ்டத்தைக் காண்பித்திருக்கிருர்கள். தேய்மானத்தை தேய்மானச் சட்டப்படி ஒழுங்காகக் கணக்குக் கொடுத்திருந்தால், ரூ. 2 கோடி நஷ்டம் வந்திருக்கும் என்று உறுதியாகச் சொல்கிறேன். இதுமாதிரி வருகிற ரூ. 3 கோடியும் போய், ரூ. 2 கோடி நஷ்டமும் என்ருல் எதற்காக தேசீயமயமாக்க வேண்டும் ? முன்னர் எல்லாம் இதை கொள்கையாகச் சொன்னபொழுது, இதுமாதிரி சம்பாதித்து தனியார் குவித்து கொள்ளையடிப்பதைத் தடுத்து அரசாங்கமே அந்த ஊதியத்தையெல்லாம் சம்பாதித்து மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படுகிற வரி இல்லாத ஆட்சி நடத்துகிற திட்டம் என்று வகுக்கப்பட்ட திட்டம் இது. ஆனல், இந்தத் திட்டத்தில் நாம் தூங்கிக்கொண்டு இருந்தாலும், யாரோ கொடுக்கிற வரியையும் தொலைத்து, அவரவர்கள் சம்பாதிக்கிறதைக்கூட நீங்கள் சம்பாதிக்க வேண்டாம், அவர்கள் கொடுக்கிற இன்கம்டாக்ஸ் கூட இல்லையா என்று நான் கேட்கிறேன். ஆகவே, வருவாயும் தொலைந்து, தானக வருவதும் போய், எல்லாம் சேர்ந்து ரூ. 5 கோடி நஷ்டம் வரும் என்று நிச்சயமாகச் சொல்கிறேன். உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். நான் உண்மையாகத்தான் சொல்கிறேன். என்னுடைய சொந்தச் செலவில் ஒரு ஆடிட்டரை நியமிக்கத் தயார். இந்தக் கணக்கு உண்மை இல்லை என்று நிரூபிப்பதற்குத் தயார் எந்த இடத்தில் வேண்டுமானலும் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்கிறேன். மக்கள் கஷ்டத்தைப் போக்குகிறோம், வாழ்க்கை வசதியை உயர்த்துகிறோம் என்று சொல்லி, வருகிற வருவாயும் போய், சம்பாதிக்கிற பணமும் போய், வரி போடவில்லை என்று சொல்லியும் மறுபடியும் மக்கள் தலையில் வரியைச் சுமத்துவது தவறு. ஆகவே, மக்களுக்கு நன்மையைச் செய்வதற்கு என்ன வழி என்பதை நன்ருகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

விபத்துக்கள் அடிக்கடி ஓயாமல் ஏற்படுகின்றன. அநேக பத்திரிகைகளில் பார்க்கிறோம், பஸ்கள் விழுந்து மக்கள் செத்தார்கள் என்ற செய்தியை. ஆனல் பஸ் என்று தான் போடுகிருர்கள், ஸ்டேட் பஸ் என்று போடுவதில்லை. அது பற்றி என்ன உத்தரவோ ? அல்லது அவர்களாகவே போடக்கூடாது என்று நினைக்கிருர்களோ தெரியவில்லை. நான் கோவை பஸ் டெப்போவில் பார்த்திருக்கிறேன். அடிபட்ட பஸ்கள் நாள் கணக்காக அங்கேயே நின்றுகொண்டிருக்கின்றன. சாதாரணமாக பிரைவேட் பஸ்களில் ஆக்ஸிடெண்ட் ஆன மறுநாளே பஸ்கள் ரோடில் ஓடும். ஆனல் மாதக்கணக்கில் ஆனலும் ஸ்டேட் பஸ்கள் வெளியே ரோடில் போவதில்லை. மனசார நெஞ்சில் கைவைத்துப் பார்த்தால் இது மறுக்க முடியாத உண்மை என்பது விளங்கும். சித்தாந்தத்தை அடிப்படையாக வைத்து மக்கள் தலையிலே வரிகளைப் போட்டுக்கொண்டே போகவேண்டாம். சித்தாந்தத்திற்காக வருத்தப்

படாமல் கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டும். கொள்கைக்காக நாம் இல்லை, நமக்காகக் கொள்கை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

"சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்"

என்று வள்ளுவர் வகுத்ததை மனதில் கொள்ளவேண்டும். மனிதப் பண்பில் உயர்ந்த பண்புதான் சால்பு. சால்புக்கு உச்ச நிலைமை தான் தன்னுடைய தோல்வியையும் தமக்கு ஒப்பில்லாத தாழ்ந்தோரிடத்திலும் ஒத்துக்கொள்வதாகும் என்று சால்புக்கு கட்டளையாக வள்ளுவர் அவர்கள் வகுத்திருக்கிறார்கள். எங்களை எவ்வளவு தாழ்ந்தவர்களாக நீங்கள் எண்ணினாலும் தயவு செய்து சால்புக்கு கட்டளையாக நின்று, தோல்வியை ஒப்புக்கொண்டு, தேசியமயமாக்குவதை நிறுத்தி மேற்கொண்டு நாட்டிற்கு நலன் பயப்பது எதுவோ அதைச் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, விவசாய மேம்பாட்டிற்கும் பொருளாதார உயர்வுக்கும் உதவுவது கூட்டுறவு. சமுதாய உறவுக்கு உதவுவது போக்குவரத்து. இந்த இரு பெரும் துறைகளின் பொறுப்பினை ஏற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை வரவேற்று, செய்துள்ள சாதனைக்காக பாராட்டுகிறேன். எனக்கு முன்பு பேசிய சுதந்திராக் கட்சி உறுப்பினர் மாண்புமிகு கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து தோல்வி கண்டுவிட்டது, ஆகவே அந்தத் திட்டத்தை கைவிடுங்கள் என்று குறிப்பிட்டார். அதற்கு முன்பு பேசிய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் திரு காசிராமன் அவர்கள் கூட இந்தத் திட்டத்தை வரவேற்று ஆதரித்துப் பேசியிருக்கிறார். இந்தத் திட்டம் இன்று நேற்றுத் தொடங்கியது அல்ல. அதனுடைய வரலாற்றுப் பாதையை நமது மதிப்புமிக்க சுதந்திராக் கட்சி உறுப்பினர் அவர்களுக்கு சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமையாகும். தேசியமயமாக்கவேண்டும் என்ற கொள்கை 1946-ம் ஆண்டு டிசம்பரில் கொண்டுவரப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். 1947-ம் ஆண்டு அக்டோபரில் அதை ஏற்கெனவே இருந்த காங்கிரஸ் அரசு செயலுக்குகொண்டு வந்தது. 1948-ம் ஆண்டு ஜூலையில் சென்னை நகரத்தில் பேருந்துகள் அத்தனையையும் நாட்டுடைமையாக்கவேண்டும் என்று முடிவுசெய்து ஆக்கப்பட்டது. 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் 120 மைல்களுக்கு மேற்பட்ட எல்லா வழித்தடங்களும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் அரசு திட்டமிட்டது. அதற்குப் பிறகு கடந்த 8 ஆண்டு காலமாக அதைப்பற்றி எண்ணிப் பார்க்காமல் இருந்து விட்டது. தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் சிந்தித்துப் பார்த்து, நல்ல முடிவு செய்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் நாட்டுடைமையாக்கும் திட்டம் நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் முறையிலும் சமுதாய உறவினை உருவாக்கும் நல்ல திட்டம் என்கிற வகையில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் 75 மைல்களுக்கும் அதற்கும் மேற்பட்ட தொலைவில் உள்ள எல்லா வழித்தடங்களும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரை ஏறத்தாழ 234 வழித்தடங்களை நாட்டுடைமையாக்கியிருப்பது கழக அரசின் சாதனையாகும். 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரை எதிர்பார்க்கப்படுவது ஏறத்தாழ 146 வழித்தடங்களாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல நாட்டுடைமையாக்கும் திட்டம் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. ஏற்கெனவே சுதந்திராக் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் ஒன்றாக இருந்த நேரத்தில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அன்று சொல்லாத அவர் இன்று ஏன் அதைக் குறிப்பிடவேண்டும் என்று தன்னுடைய கட்சிக்காரர்களைக் கேட்கவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் இன்றைய வருவாய்க்கும், அதன் உயர்வுக்கும் என்ன காரணம் என்பதை ஆராயும்போது, 15 பைசாவை 20 பைசாவாகவும், 18 பைசாவை 20 பைசாவாகவும், 22 பைசாவை 25 பைசாவாகவும், 32 பைசாவை 35 பைசாவாகவும் ஏற்றியது தான் இன்றைய வருமான உயர்வுக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டினார்கள். அவருக்கு நான் சுட்டிக்காட்டுவது, அது காரணமல்ல. காங்கிரஸ் ஆட்சியில் ஒரு மைலுக்கு வாங்கிய கட்டணம் ஆறு பைசா; அதை முன்னேற்றக் கழக அரசு ஐந்து பைசாவாகக் குறைத்தது. அதனால்தான் வருவாய் பெருகிற்று, நீங்கள் சொன்ன காரணம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மாற்றத்தை நாங்கள் ஏன் செய்தோம் என்றால், மக்கள் உள்ளத்தில் எந்த நயா பைசாவைக் கொடுப்பது, மூன்று பைசாவா, ஆறு பைசாவா என்று முடிச்சை அவிழ்க்கும்போது ஒரு பைசா இல்லையென்றால் கண்டக்டர் இறங்கிப் போ என்று சொல்லும் போது மக்களுக்கு ஏற்படும் குழப்பத்தைப் பார்த்துத்தான் முன்னேற்றக் கழக அரசு இந்த நிலையை உருவாக்கியது. மேலும் விடுமுறை நாட்களில் நகர சுற்றுப் பிரயாணம் செய்ய பொது மக்களுக்கு நாள் முழுதும் நகரத்தைப் பார்க்க, 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் நாள் முதல் விருப்பப் பயணம் செய்ய சீட்டு வழங்கியிருப்பது முன்னேற்றக் கழக அரசின் சிறந்த சாதனைகளில் ஒன்று. இன்னும், குருடர்கள் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு இரக்கம் காட்டும் வகையில், அவர்கள் சிகிச்சை பெறப் போகும்போதும், வரும்போதும், கட்டணம் இல்லாமல் செல்லக்கூடிய முறையில் சலுகை காட்டப்பட்டது. ஆகவே, இப்படி அடுக்கிக்கொண்டே போனால் காலம் போதாது. கொடுத்திருக்கும் காலம் குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, முடிக்கிறேன். வணக்கம். பி.ப. 5-00

*திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் பேசிய சுதந்தராக் கட்சி உறுப்பினர் நாட்டுடைமை ஆக்கியது சரியில்லை என்று அதை எதிர்த்து, அப்படிப்பட்ட திட்டம் கூடாது என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் கொடுத்த காரணம், இந்தத் திட்டம் தோல்வி கண்டு இருக்கிறது, அரசாங்கம் பல்வேறுவிதமான நஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். எனவே, இந்த அரசு நாட்டுடைமையைச் சரியான முறையில் செயல்படுத்தி, திறம்பட நடத்தி, உறுதியாக இருந்து லாபம் இல்லாவிட்டாலும், நட்டம் இல்லாமல் போக்குவரத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இரண்டு முக்கியமான அம்சங்களைக் குறிப்பிட வேண்டும். ஒன்று, அட்மினிஸ்ட்ரேஷன்; நிர்வாக நி[illegible]. இரண்டாவது, இந்த இலாகா அனுசரிக்கும் தொழிலாளர் கொ[illegible]கை. நிர்வாகம் நல்லமுறையில் நடக்க வேண்டும். நம்மிடம் இரண்டாயிரம் பஸ்கள் இருக்கின்றன. ஒரு நாளுக்கு வருமானம் 3·5 லட்சம் ரூபாய். அப்படியிருந்தும் நட்டம் வரக்கூடிய காரணம் என்ன என்பதை அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு காரணம், டாப் ஹெவி அட்மினிஸ்ட்ரேஷன். அந்தச் செலவு அதிகமாக இருக்கிறது. மேல் மட்ட நிர்வாகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், ஏராளமான கெசடட் ஆபீசர்களும் அதிகமாக இருக்கிறார்கள். இந்தத் துறைக்கு ஒரு பில்டிங் செக்ஷன் தேவையில்லை. பொதுப்பணித் துறை இருக்கும்போது கட்டடங்கள் கட்ட என்று ஒரு தனி செக்ஷன் எதற்காக? ஆகவே, இந்த பில்டிங் செக்ஷன் அவசியமில்லை. ஏனென்றால், இந்தத் திட்டத்தால் பணம் விரயமாகிறது. அடுத்து, டீசல் ஆயில் சம்பந்தமானது. பல ஆயில் கம்பெனிகளிலிருந்து வாங்கி டெப்போக்களில் சேர்க்கப்படும் ஆயிலுக்கு சரியான கணக்குக் கிடையாது. ஒவ்வொரு பஸ்ஸுக்கும் டீசல் ஆயில் போடும்போது, எவ்வளவு என்கிற கணக்கைக் காட்ட ரெஜிஸ்டர் இல்லை. எனவே டீசல் ஆயில் சம்பந்தப்பட்ட வரையில் ஓட்டை இருக்கிறது என்று கருதுகிறேன். பல்வேறுவிதமான காரணங்களால், நல்ல முறையில் நடத்தப்பட்டு ஏராளமான லாபத்தைப் பெறவேண்டிய இந்தத் துறை நஷ்டம் அடையும் சூழ்நிலை இருக்கிறது. இது திறம்படக் கவனிக்கப்பட வேண்டும்.

அடுத்து, ஸ்பேர் பார்ட்ஸ். வெளியிலே விற்கப்பட்டு வருவதாக செய்திகள் வருகின்றன. ப்ரேக் டவுன்கள் ஏற்படுகின்றன. உயிர் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த ப்ரேக் டவுன் போன்றவற்றைக் கவனிக்க போதுமான ஆள்கள் கிடையாது. இன்னும் நல்ல ஆதாயம் வரக்கூடிய முறையில், விளம்பரம் பெறக்கூடிய முறையில், நிலைமைகள் சீர்செய்யப்பட வேண்டும். லாரி சர்வீஸ் எடுத்து நடத்த முடியும்.

தொழிலாளர் பற்றிய கொள்கை சரியாக இல்லை. 1960-ம் ஆண்டுக்குப் பிறகு சம்பளம் உயர்த்தப்படவில்லை. 1960-லிருந்து உயர்வே கிடையாது. சம்பளம் மிக மோசமான சம்பளமாக இருக்கிறது. 15 ரூ. ஒரு ஸ்வீப்பருக்கு. அரசுத் துறையில் எந்தத் துறையிலும் இந்த ரூ. 15 சம்பளம் கிடையாது. வேறு எங்கேயும் கிடையாது. ஒரு தொழிலாளருடைய வேஜ் பில் இங்கே என் கையில் இருக்கிறது. இரண்டு நாள் அவர் வேலைக்குப் போகவில்லை. 28 நாட்கள் வேலை செய்தும் இரண்டு நாளுக்கு பிடிப்புப் போக, ரூ. 13 சொச்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் அரசுப் போக்குவரத்தில் அடிப்படைச் சம்பளம் அதிகமாக இருக்கிறது. ஒரு கண்டக்டருக்கு ரூ. 70 சம்பளம். இது நம் மாநிலத்தில். கேரளாவில் ரூ. 110. ரூ. 40 வித்தியாசம். போனஸ் சம்பந்தப்பட்டவரையில், மாநிலப் போக்குவரத்தில் சுத்தமாகக் கிடையாது. தமிழ் நாட்டைத் தவிர மற்ற மாநில அரசுப் போக்குவரத்துகளில் 18 சத விகிதம், 20 சத விகிதம் என்று பஞ்சப்படியையும் சேர்த்து போனஸ் கொர்டுக்கப்படுகிறது. இங்கே ஊக்க போனஸ் என்று ஒர்க்ஷாப் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது ட்ராபிக் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. பேட்டா மிகக் குறைவு. இரவு வேளை தங்கினால் ரூபாய் ஒன்று அதிகம். இன்றைக்கு இருக்கும் அகவிலை நிலையில் ஒரு வேளை சாப்பாட்டுக்குக்கூட இந்தப் படி காணாது.

வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில், 1962-லிருந்து ஒரு நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று வரையில் ஒரு குடிசை கூட கட்டப்படவில்லை. அந்த நிதியில் ரூ. 10,64,000 இருக்கிறது. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் கூட எந்த வித்ட்ராயலும் கிடையாது. எடுக்கப்படவே இல்லை. செலவே கிடையாது.

அதற்கு அடுத்தபடியாக தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை பற்றியது. பனிஷ்மெண்டுக்கென்று ஸ்டாண்டிங் ஆர்டர் எதுவும் கிடையாது. அரசு ஊழியர்களுக்கு இருக்கும் விதிகள் தான் இவர்களுக்கும் இருக்கிறது. விபத்துக்கள் ஏற்பட்டால், இவர்களுக்கு இரண்டு விதமான தண்டனைகள். ஒன்று கோர்ட்டில் வழக்கு வருகிறது. இன்னும் டிபார்ட்மெண்டல் ப்ரொஸீடிங்க்ஸ் எடுத்து தண்டனை கொடுக்கிறார்கள். இன்னும் தண்டனை பற்றிச் சொல்லும்போது, எங்கேயோ நடந்த தவறுகளுக்காக தொழிலாளி தண்டிக்கப்படுகிறான். மைகேல் என்ற கண்டக்டர் டிக்கட் சீரியல் நம்பரில் ப்ரிண்டிங் தவறு ஏற்பட்டது காரணமாக 4 மாத ஸஸ்பென்ஷன் செய்யப்பட்டுள்ளார். ராஷ் ட்ரைவிங்குக்காக கண்டக்டருக்கும் தண்டனை கொடுக்கிறார்கள். ஒரு பிரயாணி 9 கிலோ அரிசி—கள்ளக் கடத்தல் இல்லை, தேவைக்குக் குறைவான அரிசி—கொண்டு சென்றதற்கு கண்டக்டருக்கு ஸஸ்பென்ஷன் தண்டனை. என்க்வொயரி இல்லாமல், நோட்டீஸ் இல்லாமல், தொழிலாளிகள் ஸஸ்பென்ஷன் செய்யப்படுகிறார்கள். பல மாதங்கள் விசாரணை கிடையாது, தீர்ப்பு அளிப்பது கிடையாது. ப்ரமோஷனுக்கு எந்தவிதமான ப்ரொவிஷனும் கிடையாது. இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு மேல் ப்ரமோஷன் கிடையாது. சமீபத்திலே, ஒரு யூனியன் தொழிலாளர்களுக்கு மேல் பதவி கொடுக்கவில்லை, கொடுக்க வேண்டும் என்று வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்ததை அனைவரும் அறிவார்கள். 15,000 தொழிலாளர்கள் இருக்கும் இந்த ஸ்டேட் ட்ரான்ஸ்போர்டில் 5,000 பேர்கள் டெம்பரரியாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்க்ரிமெண்ட் வருஷந்தோறும் கிடையாது. அதை கணக்கிடுவதற்கு போதுமான ஸ்டாப் இல்லை என்கிறார்கள். போக்குவரத்து அதிகரித்திருக்கிறது. அதற்கேற்றாற்போல ஸ்டாப் அதிகரிப்பு கிடையாது. தமிழக அரசு



பஸ்களில் திருவள்ளுவருடைய திருக்குறள்கள் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழியை அரியணையில் ஏற்றியுள்ள அதே சமயத்தில், தொழிலாளர்களுக்கெல்லாம் சார்ஜ்-ஷீட் ஆங்கிலத்தில் தான் கொடுக்கப்படுகிறது, 24 மணி நேரத்தில், 48 மணி நேரத்தில் பதில் எழுதிக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். தொழிலாளிகள் அல்லல்படுகிறார்கள். அடுத்து, ஆண்டுக்கு மூன்று செட் ட்ரஸ்கள் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் கொடுப்பதில்லை. கைகளைச் சுத்தம் செய்துகொள்ள ஒர்க்ஷாப் டெக்னிகல் ஸ்டாபுக்கு மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டும். பதிலாக டீசல் ஆயில் கொடுக்கிறார்கள். இது வேஸ்ட் மட்டுமல்ல, இன்னொரு பக்கத்தில் கையை டீசல் ஆயிலில் கழுவுவதால் பல்வேறுவிதமான சர்ம வியாதிகள் ஏற்படுவதற்கும் ஏதுவாகும்.

முக்கியமான பிரச்சினை சங்க அங்கீகாரம் பற்றிய பிரச்சினை. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திருச்சியில் பேசும்போது, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நிர்ணயிப்பது எப்படி ? ரகசிய பாலட் மூலமாக மெஜாரிடி சங்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட குறைகள் இருக்கும்போது, அந்தக் குறைகளை எடுத்துக் கொண்டு சங்கத் தலைவரும், மற்ற நிர்வாகிகளும் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களைப் பேட்டி காணச் சென்றார்கள். அவர்களுடன் இந்தச் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும், திரு. பாரதிமோகன் அவர்களும் சென்றிருந்தார்கள். அமைச்சர் அவர்கள் சங்கத் தலைவரும் மற்றவர்களும் கொடுத்த மெமோரண்டத்தை வாங்கிப் பார்க்க மறுத்து தூக்கியெறிந்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, முதலிலே நண்பர் அவர்களுடைய தோழர்கள் சிலர் கோட்டைக்கு வந்து, முன்னேற்பாடு எதுவும் இல்லாமல், உள்ளே நுழைந்து ஒரு தாளை என்னிடம் கொடுத்தார்கள். பல கோரிக்கைகள் அடங்கிய அந்தத் தாளிலே, இறுதியாக, நமது நண்பர்கள் நேரடி நடவடிக்கையில் இறங்கி விடுவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். "இவை, இவையெல்லாம் எங்கள் கோரிக்கை. எனவே, எங்களை நேரடி நடவடிக்கையில் இறங்கவிடாமல் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு", என்பதாக அந்த வாசகம் அமைந்திருந்தது. நானும் பல தொழிற் சங்கங்களைப் பார்த்திருக்கிறேன். தொழிற்சங்கத் தலைவனாகவும் இருந்தவன். நேரடி நடவடிக்கை என்று எழுதிய கடிதத்தை அதற்கு உரியவர்களிடம் கொடுப்பது உண்டா? நான் அதை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, அவர்களுடைய கையில்தான் கொடுத்தேன். ஆகவே, தவறான தகவல்களைக் கொடுக்க வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். திரு. கோவிந்தராசன் அவர்கள் அப்போது அங்கு இருக்கவில்லை. நான் எப்போதும் அன்போடு, பண்போடு, பணிவோடு பேசுபவன். உறுதியை இழந்து ஏதாவது செய்து விடுவேன் என்று எதிர்பார்த்தால் அது நடக்காது. அவர்கள் கொடுக்க வந்த கடிதத்தில் பல கோரிக்கைகள், நிறைவேற்றக் கூடிய கோரிக்கைகள். ஆனால், "நேரடி நடவடிக்கை" என்ற ...டைய லோடு, என் கையில் ஒரு தாளைக் கொடுத்தால், நானும் அவர்க திரும்பக் தோழன் என்ற முறையில் அதைத் திருத்திக் கொடுக்கும்படி, கொடுக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**திரு. சி. கோவிந்தராசன் :** அமைச்சர் அவர்கள் ...... ள, தன்னிலை

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்க விளக்கம் ..........

பிரச்னையே எழ

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய திரு. கோதண்ட வில்லை. அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஆகவே, தன்னிலை ராமனைப்பற்றி எதுவும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ...தமல்ல. ஒருவரைப் விளக்கம் என்று நீங்கள் எழுந்து சொல்வது பொருத்...வேண்டும். பற்றிக் குறிப்பிட்டால்தான் தன்னிலை விளக்கம் சொல்ல—

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, எந்த விதமான முன்னறிவிப்புமின்றி தொழிலாளர் சங்கத் தலைவர் வந்தார் என்றும், மெமொரண்டத்தின் வாசகம் பயமுறுத்தலாக இருந்தது என்றும் குறிப்பிட்டார். நானே அமைச்சர் அவர்களை நேரில் பார்த்து, இத்தனை மணிக்கு வருகிறார்கள் என்று அந்த என்கேஜ்மெண்டை ஃபிக்ஸ் பண்ணியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: என்னுடைய பழங்கால நண்பர், 1956 முதல் பழக்கப்பட்ட நண்பர், என்னைப் பார்க்க வருவதாகத் தான் கனம் அங்கத்தினர் குறிப்பிட்டுச் சொன்னார். சரி என்று அதற்காக நான் ஒப்புக்கொண்டேன். அங்கத்தினர் வேறு எவரையும் பற்றி அப்போது குறிப்பிடவில்லை. எதிர்பார்க்காதவிதமாக அவர்களுடைய தோழர்கள் சிலர் வந்து கோரிக்கை மனுவைக் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த கடிதத்தையும் படித்துப் பார்த்துவிட்டு, கடைசியில் இருந்த வாசகத்தை மட்டும் திருத்தி எழுதிக் கொடுங்கள், மிரட்டல் வேண்டாம் என்று அவர்களிடமே கொடுத்து கேட்டுக்கொண்டேன். நான் அதை தூக்கியெறியவில்லை. தூக்கி எறிந்ததாகச் சொல்வது சரியல்ல ; எனது பழங்கால நண்பருடைய கையிலேயே கொடுத்துவிட்டேன்.

திரு. சி. கோவிந்தராசன் : டிரான்ஸ்போர்ட்டிலிருந்து ஒரு டெலிகேஷன் வருகிறது. உங்கள் நண்பர் திரு. வி. பி. சிந்தன் அவர்களும் வருகிறார்கள் என்றுதான் குறிப்பிட்டேன். திரு. வி. பி. சிந்தன் மட்டும் வருகிறார் என்று நான் குறிப்பிடவில்லை. அந்த மெமொரண்டத்தையே நான் இந்த மன்றத்திற்குப் படித்துக்காட்ட விரும்புகிறேன். நேரடி நடவடிக்கை என்ற பயமுறுத்தல் அதில் இல்லை. மந்திரி அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படிப்பதற்கு முன்னாலே நீங்கள் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதியைப் பெறாமல் நீங்கள் எப்படிப் படிக்க முடியும் ? நீங்கள் என்ன படிக்கப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவேண்டும் அல்லவா ? உங்களுக்கும் மந்திரிக்கும் தெரியும் என்றாலும் இது பேரவையில் நடக்கிற காரியம் அல்லவா ?

திரு. சி. கோவிந்தராசன் : தங்கள் அனுமதியோடு கடைசிப் பகுதியை மட்டும் படிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறுதிப் பகுதியை மட்டுந்தான் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை மட்டும் படியுங்கள்.

THIRU C. GOVINDARAJAN : 'We do have confidence, Sir, that under your guidance the administration of the State Transport Department will succeed in removing those anomalies [illegible] attend to the grievances of the workers in a very short period. and [illegible] also hopeful that there may not be any need for the We are [illegible] to resort to Direct Action to secure the just demands workers [illegible]nd human living and working conditions.'

இது மிரட்[illegible]ல் கடிதமா என்பதை இந்த மன்றத்தில் உள்ளவர்கள் தான் முடிவு க[illegible] வேண்டும்.

அது மட்டுமல்[illegible] போனவர்களிடம் இன்னொன்றையும் அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிற[illegible]கள். "இன்னும் எத்தனை மாணவர்களைத் தாக்க திட்டமிட்டிருக்கிறீர்க[illegible] ? அந்தப் பட்டியலையும் நீங்கள் கொடுத்து விட்டால், அந்தந்த மா[illegible]வர்களை வெளியூருக்கு அனுப்ப நான் தயார் செய்கிறேன்" என்ற[illegible] கூறினார்கள். இப்படி வேண்டுமென்றே மாணவர்களுக்கும் தொழி[illegible]ளர்களுக்கும் மோதுதல் ஏற்படுத்த திட்டமிட்டு வேலை



செய்கிறார் இந்த அமைச்சர் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல ; பஸ் தொழிலாளர்–மாணவர் மோதல் பற்றிய விசாரணை அறிக்கை வெளிவராமலிருக்கும்போது பொறுப்புள்ள அமைச்சர் இப்படிப் பேசியது முறையாகாது. இந்த ஒரு குறிப்பிட்ட சங்கம் மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் மோதுதலை ஏற்படுத்தவில்லை. ஏதோ துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட சம்பவத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்றும் சங்கம் அறிக்கை விட்டிருந்தது. அன்றைய முதலமைச்சர் அவர்கள் சர்வகட்சி கூடி அமைதி நிலை நாட்ட முடிவுகாண வேண்டும் என்றும் சொன்னார்கள். நாங்கள் அதை ஏற்றுக்கொண்டு அதற்காகப் பாடுபட்டோம். வேறொரு சாரார் மாணவர்களைத் தூண்டிவிட்ட காரணத்தினால் அந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால் இன்றைக்கு இந்தப் பதினைந்தாயிரம் தொழிலாளர்களிடம் விரோதப் போக்கில் ஒரு அமைச்சர் இருப்பாரானால்........

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அன்றைக்கு எனது நண்பர் அங்கே வரவில்லை. மற்றவர்கள் சொல்லிய தகவல்களை வைத்துத் தவறாக எதையும் தெரிவிக்க வேண்டாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, நான் அப்போது அவர்களோடு கூடப் போய் இருந்தேன். அமைச்சர் அவர்கள் உண்மையை மறைக்கக்கூடிய அளவுக்குச் சொல்கிறார். உண்மையிலே நாங்கள் அங்கே போனபோது அவர் சொன்னது என்ன ? "இன்னும் எத்தனை மாணவர்களை அடிக்கத் திட்டம் வைத்திருக்கிறீர்கள் ? அந்த லிஸ்டைக் கொடு" என்றார்கள். அவர் நாங்கள் கொடுத்த தாளை படித்தவுடனேயே, டேபிள் மீது தூக்கி எறிந்து விடவில்லையா ? அது டேபிள் மீது விழுந்தது............

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தூக்கி எறிந்ததாகச் சொல்வது சரியல்ல ; திருத்திக் கொடுங்கள் என்று அவர்களிடமேதான் கொடுத்தேன். அங்கே நடந்தது என்ன ? தூக்கியெறிந்ததாகச் சொல்வது சரியல்ல. திருத்திக் கொடுங்கள் என்று அவர்களிடமேதான் நான் கொடுத்தேன். தாள் கீழே விழுந்தது என்று அங்கத்தினர்........

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அமைதியாக இருக்கவேண்டும். எதையும் சொல்வதற்கு முறை இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : "நான் கீழே எறிந்தேன்" என்பதாகச் சொன்னதை திரு. கோதண்டராமன் வாபஸ் பெற வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தூக்கி எறியவில்லையென்று சொன்னதைத்தான் அமைச்சர் வாபஸ் பெற வேண்டும்.

திரு. சி. கோவிந்தராசன் : சங்கத்தின் தலைவர் அமைச்சரிடம் அந்த மகஜரைக் கொடுக்கும்போது அங்கு அவர் நடந்துகொண்ட முறை மோசமானது. தொழிற்சங்கத்தை அவர் எப்படி மதிக்கிறார், எப்படி நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டோம். அப்படி நடந்து கொண்டதற்கு அமைச்சர் மன்னிப்புக் கோர வேண்டும். இவர் இப்படி நடக்கிற காரணத்தினால் எண்ணூரிலே இருக்கும் தொழிலாளர்களுக்குள்ளே கலவரம் ஏற்படக்கூடிய நிலவரம் இருக்கிறது. 15 ஆயிரம் தொழிலாளர்களுக்கு இவர் அமைச்சராக இருக்கிறார்.

* * * * *

(மணியடித்து, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்).

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணையின்படி அகற்றப்பட்டது.

***திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் போக்குவரத்து பற்றி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்துகளைப் பற்றிக் கவனிக்கிறபோது இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட பின்னல் இத்துறையில் நல்ல பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். போக்குவரத்து என்று சொல்கிற நேரத்தில் பழைய ஆட்சியிலே "போக்கு"-மட்டுமே இருந்தது என்பதும் இப்போது "வரத்து" உள்ளது என்பதும்—வர ஆரம்பித்திருக்கிறது என்பதும் நாம் எல்லாம் அறிந்த உண்மை. அதுவும் குறிப்பாக கலைஞர் இத்துறைக்கு பொறுப்பேற்றுக்கொண்டு இத்துறையில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து வந்தார்கள். இன்றைக்கு கூட்டுறவு அமைச்சர் அந்தப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள். எனக்கு முன்னல் பேசிய மாண்புமிகு கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தங்கள் குறைகளை எடுத்துச் சொன்னாலும் பொறுப்பேற்று இருக்கிற அமைச்சர் அவர்கள் தொழில்துறையில் நிறைய அனுபவம் படைத்தவர்கள். நல்ல சூழ்நிலையில்தான் இந்தப் பொறுப்பை ஏற்று இருக்கிறார் என்றும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தேசீயமாக்கும் கொள்கையைப் பற்றிப் பேசும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஓர் அழகான கருத்தைச் சொன்னார்கள். எதிர்காலத்தில் நாட்டில் இருக்கிற தனியார் பஸ்களாக இருந்தாலும் சரி, தனியார் தொழில் நிறுவனங்களாக இருந்தாலும் சரி அவற்றினை தேசீயமாக்குகிற போது நல்ல தொழில் வல்லுநர்களின் மூளைகளை நாம் தேசீயமாக்க வேண்டும். அவர்களுடைய மூளை வன்மைத்திறனை நாம் பயன்படுத்திக் கொண்டாக வேண்டும். அதன் மூலமாக நல்ல எதிர்காலத்தை நாம் பெற முடியும் என்று குறிப்பிட்டார்கள். தொழில் துறையில் சிறந்த வல்லுநராக விளங்கும் நமது அமைச்சர் இத்துறை பொறுப்பை ஏற்றிருப்பது நமக்கு நல்ல நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறது.

இந்த நேரத்தில் நான் உங்கள் மூலமாகக் குறிப்பிடுவது 1966–67-லே இருந்த வருவாயைக் காட்டிலும் 1967–68-லே வந்திருக்கிற வருவாய், நீள் தொலைவுப் பயணத்தின் மூலமாக வருகின்ற வருவாய் அதிகமாகி இருக்கிறது என்பதுதான். இத்தனைக்கும் நாம் மைலுக்கு 6 காசாக இருந்த கட்டண விகிதத்தை 5 காசாகக் குறைத்திருக்கிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்படியும் இந்த வருவாய் அதிகமாக ஆகியிருக்கிறது. ஆயினும் மொத்தத்தில் இன்னும் லாபத்துடன் நடத்தும் சூழ்நிலை ஏற்படாததை நாம் மெத்த வருத்தத்துடன் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். அதற்குரிய அடிப்படைக் காரணத்தை எல்லா மட்டங்களில் இருந்தும் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். முதல் சீர்திருத்தமாக இயக்குநர்களுக்குத் துணையாக துணை இயக்குநர் நிர்வாக சிக்கல்களிலே பங்கு கொள்ள வேண்டுமென்ற அமைப்பை இப்போது உருவாக்கியிருக்கிறோம். அதுமட்டுமே போதாது என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். இன்னும் தொழில் நுட்பத் திறனுடைய சீப் என்ஜினியர்களுக்கு நிறைய அதிகாரங்களைக் கொடுத்து தொழில் நுட்ப டெக்னிகல் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய முழுத்திறமையைப் பயன்படுத்திக் கொண்டு நிர்வாகத்தைச் சீர்திருத்தினல் நல்ல வருமானத்தைப் பெற முடியும். இன்றைக்கு பஸ்களில் இருந்து அதிக வருமானம் வருகின்றது என்றால் அதே சமயம் அதிகச் செலவும் ஆகிவிடுகிறது. அடிக்கடி பஸ்கள் ப்ரேக் டவுன் ஆகி விடுகின்றனவே என் என்று டிரைவர்களைக் கேட்டால்—டெப்போவில் பழைய பார்ட்சுகளையே போட்டு அனுப்பி விடுகிறார்கள் என்கிறார்கள். டெப்போவில் கேட்டால் உரிய பொருள்கள் கிடைப்பதில்லை என்கிறார்கள். இந்த நிலையை மாற்றினல் தான் நல்ல லாபம் வரும்.

இரண்டாவதாக வருவாய் பெருக, தனியார் பஸ் துறைகளில் வசூலுக்கு ஏற்றபடி பேட்டா கொடுப்பது போல நம்முடைய பஸ்களிலும், நாம் கண்டக்டர்களுக்கு ஊக்கம் ஏற்படுத்துகிற வகையில் "கலெக்ஷன





பேட்டா" போன்ற சில திட்டங்களைக் கொண்டுவந்தாக வேண்டும். அரசு போக்குவரத்து ஆலோசனைக் குழு என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர அதன் கூட்டம் நடைபெறுகிறதா என்று தெரியவில்லை. அதை மாவட்ட அளவில் அமைத்து ஒவ்வொரு மாவட்டத்தில் இருக்கிற பிரதிநிதிகளையும் இணைத்து இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது கூடி அந்த அந்த மாவட்டத்தில் இருக்கிற போக்குவரத்துத் துறையின் சீர்திருத்தத்தை ஆராய வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வழியில் நிறுத்தாமல் காலியாக வண்டியை ஓட்டுகிறவர்களின் மீது நடவடிக்கை எடுக்கிறோம். அதை இன்னும் தீவிரப்படுத்தி தவறு செய்கிறவர்களை தண்டிப்பதோடு கூட நல்ல முறையில் வேலை செய்கிறவர்களுக்கு அவர்களுடைய வசூலுக்கு ஏற்றபடி போனஸ்படி மாதிரி கொடுக்க வேண்டும். செக்கிங் இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட்படி இன்க்ரிமெண்டு வழங்கலாம். அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிற வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நான் கும்முடிப்பூண்டி தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறவன். சென்னையைத் தொடுகிற எல்லா பஸ்களும் எங்கள் பகுதியில் இருந்து வந்த காரணத்தினல் அவை தேசீயமாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் மூலம் நிறைய லாபம் வந்துகொண்டிருக்கிறது. ஆயினும் ஆரம்ப காலத்தில் இருந்தே செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். அது நிறைவேறவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன்முதலாக சென்னையில் இருந்து வெளியூர் போகிற பஸ்கள் அனைத்தும் தரமான புதியவையாக இருக்க வேண்டும். அடிக்கடி பஸ்கள் வழியில் நின்றுவிடுகிற காரணத்தினல் சர்க்கார் பஸ்கள் நின்றுவிடும் என்பதாகச் சொல்லி பயணிகள் தனியார் பஸ்களுக்கு நிற்கிற நிலை மாற்றப்பட்டாக வேண்டும்.

இரண்டாவதாக தண்டையார்பேட்டை டெப்போவில் இருந்து குறிப்பிட்ட நேரத்தில் சர்க்கார் பஸ்கள் ஸ்டாண்டுக்கு வருவதில்லை. அதன் காரணமாக பயணிகள் தனியார் பஸ்களில் ஏறிப்போகிறார்கள். இதைக் கண்டுபிடித்து இதற்கு வேண்டிய பரிகாரத்தைக் காணவேண்டும்.

மொத்தத்தில் புதியதாக இந்தத்துறைப் பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி போக்கு மட்டும் இன்றி வரத்து அதிகமாக ஆவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து இதை நல்ல போக்குவரத்தாக அமைக்க வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, தேசீயமயமாக்கப்பட்ட போக்குவரத்துத் துறை மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் தமது கொள்கை விளக்கக் குறிப்பில் நாட்டுடைமையாக்கப்படுவதன் கொள்கை என்ன என்று கூறினர்கள். எல்லா மக்களுக்கும் தொண்டாற்றவும் இது செயல்பட்டாக வேண்டும்.

இந்தக் கொள்கை அடிப்படையில் இந்த இலாகாவானது இன்று நேற்றல்ல கடந்த 22 ஆண்டுகளாகச் செயலாற்றி வருகிறது. நிதி வசதி உள்ளவர்கள் சொந்தக் கார்களை வைத்திருக்கிறார்கள். ஆகவே ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியவர்களுக்கு வசதியாக இது ஒரு எஸன்ஷியல் சர்வீஸ் என்ற முறையில் இயங்கிவருகிறது இதுவரை இத்துறையின் மூலம் லாபம் வந்தேயாகவேண்டுமென்று யாரும் கருதியதாகத் தெரியவில்லை. தனியார் நிறுவனமாக இருந்தால் லாப நோக்கோடு செயல்படவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். பொது மக்களுக்கு எஸன்சியல் சர்வீஸ், என்ற முறையில் அரசு நடத்தி வருகிற இந்த நிறுவனத்தில் லாபம் வந்தேயாக வேண்டுமென்ற நிபந்தனை இருக்கக்கூடாது. அப்படி ஒரு நிபந்தனை ஏற்படுத்தப்படுமானல்

அது நிச்சயமாக நாம் இதுவரை கையாண்டு வந்திருக்கிற கொள்கைக்கு விரோதமானதாக ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுக்குச்
பி.ப. 5-3( சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு ஒரு சயின்டிஃபிக் சோஷலிசம் என்ற கொள்கையிலே செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஏழை எளியவர்கள், வாழ வசதியற்றவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் இவர்களுக்கு வசதி கொடுக்க வேண்டுமென்ற ஏகக் கொள்கையைத்தான் இந்த அரசு பின்பற்றி வருகிறது. ஆகவே, அப்படியிருக்கும்பொழுது இந்த இலாகாவில் இந்த நிபந்தனையை புதிய அமைச்சர் உருவாக்கியது கொள்கைக்கு முரணானது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கழிந்த ஆண்டு பட்ஜெட்டின் போது அப்பொழுது இந்த துறையின் அமைச்சர் அவர்கள் சில திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். பாட்டாளி மக்களுக்கு வசதியாக கட்டண ஏற்பாட்டில் மாறுதல் செய்ய வேண்டுமென்ற அளவிலே 14 காசாகவும், 22 காசாகவும் இருப்பதை ரௌண்ட் பிகர் ஆக மாற்ற வேண்டுமென்ற அளவிலே அப்படி இருப்பதால் பயணிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் சச்சரவு ஏற்படுகிறது என்பதைப் போக்குவதற்காக அவர்கள் ரௌண்ட் பிகராக மாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே கட்டணங்களைக் கைக்கொண்டு சீரமைப்புச் செய்தார்கள். ஆனால் அனுபவத்தில் பார்க்கும்பொழுது அந்த மாறுதலினால் கிராமங்களிலே சொல்வார்கள் கிணறு வெட்ட பூதம் வந்ததுபோல் என்று, அதுமாதிரி 14 காசாக இருந்ததை 15 காசாகவும் 22 காசாக இருந்ததை 25 காசாகவும் மாற்றாமல், 14 காசாக இருந்ததை 30 காசாகவும், 22 காசாக இருந்ததை 40 காசாகவும் மாற்றியிருக்கிறார்கள்.

எனது ஜில்லாவை எடுத்துக் கொண்டால் தனி பிராஞ்சு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அங்கே 22-வது நம்பர் ரூட்டிலே சென்ற ஆண்டு மார்ச் முதல் 20 காசாக இருந்ததை 40 காசாக உயர்த்தியிருக்கிறார்கள். 25-வது நம்பர் ரூட்டிலே செட்டிகுளம்—இருக்கந்துறை ரூட்டிலே 14 காசாக இருந்ததை 30 காசாகவும், செட்டிகுளம்-ராதாபுரம் பகுதியிலே 30 காசாக இருந்ததை 50 காசாகவும் மாற்றியிருக்கிறார்கள். இப்படி மாற்றியமைப்பதனால் 50 சதவீதம், 100 சதவீதம், 115 சதவீதம் என்ற அளவிலே கட்டணம் உயர்ந்து விட்டது. இந்தப் போர்வையில் கட்டணங்களை ரௌண்ட் பிகராக மாற்ற வேண்டுமென்று கூறி இம்மாதிரியான பிற்போக்கான கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏழை எளியவர்கள் பொது மக்கள் இந்த இலாகா ஒரு சீர்கேடான நிலைமையில் இருப்பதால் வெறுக்கிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சீரமைப்பில் மெட்ராஸ் சிட்டிக்கும், கன்னியாகுமரி பிராஞ்சுக்கும் கட்டண வீதத்தில் விபரீதமான கொள்கை கையாளப்பட்டு வருகிறது. சென்னை பட்டணத்தில் ஓடுகின்ற பஸ்களில் 10 கிலோமீட்டருக்கு 4 காசு என்றும், அடுத்து வருகின்ற ஒவ்வொரு 2 கிலோ மீட்டருக்கும் 2 காசு என்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். இப்படி 15 மைல் வரையிலே அனுமதித்துவிட்டு 15 மைலுக்கு மேலே 2½ காசாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் நாகர்கோவிலைப் பொறுத்த வரையில் அங்கே டவுனில் ஓடுகின்ற பஸ்களில் முதல் இரண்டு கிலோ மீட்டர் வரையில் 10 காசும் அதற்கு அடுத்தபடியாக 10 மைல்கள் வரையிலும்—சென்னையில் உள்ளதைப் போன்று 15 மைல் வரையிலும் அல்லாமல் தான் அந்தக் கட்டண வீதம் அனுமதிக்கப்படுகின்றது. இதை மாற்றியமைத்து இந்த விபரீதத்தைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலே கொடுக்கப்படுகின்ற கட்டண வீதத்தையே கன்னியாகுமரி ஜில்லாவுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி ஜில்லாவானது சென்னைப்பட்டணத்தைபோல் ஜனத்தொகையிலும் விஸ்தீரணத்திலும் அல்ல. குறைவாகத்தான் இருக்கும். எனவே சென்னை நகரத்தைப்போன்று கன்னியாகுமரி ஜில்லா முழுவதற்கும் கிட்டி. கர்வீசாக கருதி கட்டணத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்தக்கட்டண வீதத்தால் மாணவர்களுக்கு ஒரு கஷ்டம் இருக்கிறது. மாணவர்கள் கன்சஷென் டிக்கட் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட ரூட்டில் ஓடுகின்ற பல பேருந்துகளில் சிலவற்றில்தான் யாத்திரை செய்யலாம். அதே ரூட்டில் ஓடுகின்ற வேறு சில பேருந்துகளில் அந்த கன்சஷன் டிக்கட்டை வைத்துப் பயணம் செல்ல முடியாத நிலைமையெல்லாம் இருக்கிறது. இதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாளுக்குநாள் பிரேக் டவுன் அதிகமாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன் பேருந்துகளைச் சரியாக பழுதுபார்க்காத காரணத்தாலும் ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாததாலும் பிரேக் டவுன் வருகின்றன. அதையொட்டி ஆக்ஸிடென்ஸ் ஏற்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். தேசியமயமாக்கப்பட்ட ரூட்களில் ஓடிக் கொண்டிருந்த தனியார் பேருந்துகளில் வேலை பார்த்துக்கொண்டிருந்த ஊழியர்களுக்கு டிரான்ஸ்போர்ட் இலாகாவில் வேலை வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு இன்னும் வேலை வாய்ப்புக் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படும் என்று உறுதி கூறப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் உடனடியாக அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இராணித் தோட்டத்திலே ஒரு ஒர்க்ஷாப் இருக்கிறது. சென்னை நகரத்திலே இருக்கும் ஒர்க்ஷாப்பை விட நல்ல லாபகரமான முறையிலே அங்கேயுள்ளவர்கள் நல்ல திறமை வாய்ந்த தொழில் நுட்பம் காட்டக்கூடியவர்கள். அந்த ஒர்க்ஷாப்பை இன்னும் விரிவுபடுத்தி அதிகப்படியாக பாடி பில்ட் செய்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, அங்கே வேலைபார்க்கின்ற தொழிலாளர்களுடைய சம்பளத்திற்கும், அண்டை மாநிலமான கேரளாவிலே வேலைபார்க்கின்ற தொழிலாளர்களுடைய சம்பளத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. கேரளாவில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களைப் போன்று இவர்களுக்கும் நல்ல ஊதியத்தை அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

***திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற சாலைப் போக்குவரத்து, மோட்டார் வண்டிச் சட்டங்கள் மானியக் கோரிக்கைகளை ஆதரித்துச் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு பஸ்களை தேசீயமயமாக்க வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் முதல் கட்டமாக 75 மைல்களுக்கு மேல் இருக்கக்கூடிய ரூட் பஸ்களையெல்லாம் தேசிய மயமாக்க வேண்டுமென்று. இன்றைய தினம் அப்படிச் செய்து நல்ல முறையிலே நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தத் துறையினுடைய பொறுப்பைப் புதிதாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல திட்டமிட்டு நம்முடைய தமிழகத்திலே நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்ற நிலைமையை மாற்றி நஷ்டத்தை ஈடு செய்து லாபத்தைத் தேடித் தருவார்கள் என்பதிலே எந்த விதமான அபிப்பிராய பேதமும் கிடையாது. எதிர்க் கட்சிக்காரர்கள் கூட இந்த நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் நல்ல லாபத்தைக் காணுவார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தாலும் வெளியே சொல்லாமல் இருப்பதாலே அதிலே எந்த விதமான ஆச்சரியமும் இருக்க முடியாது. நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய சில விஷயங்களை நாம் கவனிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். பஸ் ரூட்டுகளைப் பொறுத்த வரையில் 1964-ம் ஆண்டிலே மார்க் ஸிஸ்டம் என்று வைத்திருந்தார்கள். காங்கிரஸ் அரசு இருந்த

காலத்திலேயே அவர்கள் அந்த மார்க் சிஸ்டத்தை எடுத்து விட்டார்கள். அதற்குப் பிறகு நம்முடைய அரசு அந்த மார்க் சிஸ்டத்தை வைத்திருக்கிறது. அதனுடைய அடிப்படையைப் பார்க்கிற போது ஒரு பஸ் வைத்திருக்கிறவருக்கு ஒரு மார்க், 4 பஸ்கள் வைத்திருப்பவருக்கு 4 மார்க் என்றும் பஸ் தலைமை இடத்திற்கு ஒர்க்ஷாப்புக்கு என்றெல்லாம் அதிக அளவிலே மார்க் கொடுத்த நிலைமை இருப்பதால் புதிதாக அந்தத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு புதிய பஸ் ரூட்கள் கிடைக்காமல் போய், ஏற்கனவே 4, 5 பஸ் ரூட்கள் வைத்திருக்கிறவர்களுக்குத் தான் அந்த ரூட்களும் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் பரிசீலனை செய்து அந்த மார்க் சிஸ்டத்தை எடுத்து விட்டால் நல்லது என்று கருதுகிறேன். அதே நேரத்திலே நம்முடைய தமிழர்கள் பர்மா, இலங்கை போன்ற வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் நல்ல கொள்கையொன்றை மனதிலே வைத்து இருந்தார்கள். தாயகத்துக்கு திரும்பக் கூடிய தமிழர்கள் வாழ்வில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்த எந்தத் துறையானாலும் அவர்களுக்கு அந்தத் துறையிலே அவர்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற அரிய கருத்தை வைத்திருந்தார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து தாயகம் திரும்பும் தமிழர்களுக்காகக் கூட்டுறவு முறையில் சங்கத்தை அமைத்து புதிய பஸ் ரூட்டுகளை வழங்குவதில் இவர்களுக்கு முதற் சலுகை தர வேண்டும். அப்படிச் செய்து தருவதன் மூலம் தாயகத்திற்கு திரும்பி வரக்கூடியவர்களுக்கு நல் வாழ்வினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வசதியாக அமையும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாவட்டங்களிலும், சென்னை நகரத்திலும் பஸ், மற்ற வாகனங்களை ரிப்பேர் செய்ய ஒர்க்ஷாப் இருக்கிறது. இன்றைய தினம் அவை எப்படி நடைபெறுகிறது என்று பார்த்தால் கொஞ்சம் பயமாகக் கூட இருக்கிறது. எல்லாத் துறையிலும் இருக்கக்கூடிய பஸ்களும் ஒர்க்ஷாப்பில் கொண்டு திருத்தப்பட்டால் மூன்று மாதங்கள் நான்கு மாதங்களுக்கு முன்னாலே தான்அந்தத் துறைக்குச் செல்லுகிறது. ரிப்பேர் செய்வதில் கூட அவ்வளவு சுத்தமாக ஒழுங்காக செய்து தரப்படுவது இல்லையென்ற புகார்கள் பரவலாக வருகின்றன. தவறுதல்கள் நடப்பதாக ஒரு பக்கத்தில் சொல்லப்படுகிறது. இவைகளைத் தவிர்த்தாக வேண்டுமென்ற அடிப்படையில் ஒவ்வொரு ஒர்க்ஷாப்புக்கும், அவற்றைக் கவனிக்கக்கூடியவகையில் தனியார் குழுவை ஏற்படுத்தி அதிலே நான்கைந்து உறுப்பினர்களையும் ஒரு தலைவரையும் போட்டு அந்த ஒர்க்ஷாப்புகளைப் பார்வையிட்டு குறிப்புகள் எழுதலாம், அரசுக்குத் தகவல் கொடுக்கலாம் என்ற வகையில் ஏற்படுத்தினால் நடக்கக்கூடிய தவறுகளைக் கண்டுபிடித்து உடனுக்குடன் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து நிவர்த்திப்பதனால் ஏற்படக்கூடிய நட்டத்தை, வீண் விரயத்தைத் தவிர்க்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்கள் சாதாரணமாக சிவில் உடையிலே இருக்கிறார்கள். மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்கள், செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் அவ்வளவு பேருக்கும் கட்டாயமாக யூனிபாரம் இருக்க வேண்டுமென்ற முறையைக் கொண்டுவரவேண்டும். ஓய்வு நேரம் தவிர மற்ற வேலை நேரத்திலே கண்டிப்பாக யூனிபாரம் அணிந்திருந்தால் தான் ஒழுங்காக வண்டிகளைச் செக் செய்கிறார்களா என்று மற்றவர்கள் பார்க்கவும் வசதியாக இருக்கும். மேலதிகாரிகள் கூட அவர்களைப் பார்த்தவுடன் அடையாளம் கண்டு கொண்டு அவர்கள் என்ன நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும். ஆகவே, இதை அவசியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது நம்முடைய நாட்டுக்குத் தமிழ் நாடு என்ற பெயர் வைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு என்ற பெயர் டெல்லி பாராளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டு விட்டது. அந்த நிலையில் இன்னும் எம். எஸ். ஆர். எம்.எஸ். க்யூ. என்று மெட்ராஸ் ரிஜிஸ்ரேஷன் என்ற முறையிலேயே



பதிவு செய்யப்பட்டு வருகிறது. இது மாற்றப்பட வேண்டும். ஏற்கனவே பதிவு செய்யப்பட்டதை மாற்றுவதோடு புதியதாகப் பதிவு செய்யும் போது "தமிழ் நாடு" என்பதிலுள்ள "டி" என்ற முதலெழுத்தைக் கொண்டு எல்லாவண்டிகளுக்கும் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, இந்தத் துறையில் ஏற்படக்கூடிய நட்டத்தைத் தவிர்க்க பெருமுயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் இது நட்டத்திலே நடந்துகொண்டிருந்தாலும், இவைகளை எல்லாம் சீராக்கி வருமானத்தைப் பெருக்கக்கூடிய நிலையில் மத்திய அரசு டீசல் எண்ணெய் போன்றவைகளுக்குப் புதியவரிகளை விதித்திருப்பது தேச உடைமையாக்கும் திட்டத்திற்கு விரோதமான முறையில் அமைந்திருக்கிறது. அது கண்டனத்திற்குரிய ஒன்றாகும். நாம் அத்தனை பேரும், மத்திய அரசு விதித்திருக்கக் கூடிய வரிகளைக் கண்டிக்கின்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை ஆதரிக்கிறார்கள். அவர்கள் வடக்கே இருப்பவர்களைப் பகைத்துக் கொள்ள முடியாது. அவர்களுடைய நிலைமை நமக்கு நன்றாகப் புரிகிறது. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், டீசல் எண்ணெய் வரி உயர்வு மூலம் இதிலே ஏற்படுகின்ற நட்டத்தை மத்திய அரசு ஏற்கவேண்டுமென்று கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய மானியங்களை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பல அரசியல் கட்சிகள் இங்கே இருந்தாலும்கூட ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை என்ற நியதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கட்சியும் நல்ல கொள்கைகளை வைத்து மக்களுக்காகப் பணியாற்றுகிறது. நாட்டுடைமையாக்குகின்ற கொள்கை மிக மிகச் சிறப்பான ஒரு கொள்கை. அந்தக் கொள்கை கடந்த 22 ஆண்டு காலமாக இருந்து வந்தும் அது வெற்றி பெற்றதா என்றால் இல்லையென்றே நாம் அனைவரும் ஒத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். கொள்கை நல்லது என்பதால் குறைபாடுகளைச் சொல்லக்கூடாது என்பது தவறான வாதம். அந்த வாதம் ஒழிந்தால்தான் நாட்டில் நல்ல நிலைமை ஏற்படும். அந்தக் கொள்கை நல்ல கொள்கை என்றாலும் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்தில் இதுவரை நஷ்டமே இருக்கிறது என்பதற்காக கொள்கை சிறந்ததல்ல என்று சொல்லிவிட முடியாது.

திரு. காசிராமன் அவர்கள் நாட்டுடைமையாக்கும் திட்டம் மேலும்மேலும் வளரவேண்டுமென்று சொன்னார்கள். உண்மையிலேயே அவர்கள் மனதாரச் சொன்னதாக நான் கருதவில்லை. அவர்களுடைய கட்சியும் தேசவுடைமைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தால் வெளியே மக்களுக்காகப் பயந்து கொண்டு அப்படிச் சொல்கிறார்கள். நான் சார்ந்திருக்கின்ற கட்சி பலன் தரக்கூடியமுறையில் நாட்டுடைமையாக்கப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று முயற்சி செய்கிறது. ஆனால் இன்னும் பலன் கிடைக்கவில்லை. கம்யூனிஸ்ட் உறுப்பினர் இந்த இலாகாவிலே நஷ்டம் வந்தாலும் அவர்களுக்குப் போனஸ் கொடுக்க வேண்டுமென்று செ[illegible] எங்கிருந்து கொடுப்பது ? தொழிலாளர்களுக்கு அவர்கள்தான் தலைவர்கள், மற்றப் பேர்கள் எல்லாம் தொழிலாளர்களைக் கவனிப்பதில்லை போல் பேசுகிறார்கள். பொதுத் துறை மக்களுடைய வரிப் பணத்தைக் கொண்டு நடக்கிறது. ஏற்கனவே நஷ்டமாகிக் கொண்டிருக்கும் நிலையிலே மக்களுடைய பணத்தைக் கொண்டு எப்படி போனஸ் கொடுக்க முடியும் ? இன்று ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிறோம். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்டில் உள்ள அதிகாரி நல்லவராக இல்லாவிட்டால் நஷ்டம் ஏற்படக் கூடிய நிலை ஏற்படுகிறது. கண்டக்டர் தவறு செய்தாலும் அதனால் ஏற்படுகின்ற கெட்ட பெயர் ஆட்சிக்குத்தான். ஒரு ரூட்டில் பஸ் ஓட்ட பத்து பேர் பர்மிட் கேட்டால் பத்து பேருக்கும் கொடுக்கவேண்டும். அப்படி அந்தப் பத்து பேருக்கும் கொடுத்துவிட்டால் எந்த விதமான தொந்தரவும் யாருக்கும் ஏற்படாது. பத்து பேர் கேட்கும்போது ஒருவருக்குத் தான் கொடுப்பது என்ற முறையில் தவறுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, பொதுமக்கள் பணத்தை இன்வெஸ்ட் செய்யும்போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்க

வேண்டும். திரு. காசிராமன் அவர்கள் சொன்னார்கள்—எங்களுடைய காரை வேகமாக ஓட்டி அதனால் ஏதாவது பார்ட் உடைந்து விட்டால் அந்த நஷ்டம் என்னோடு போய்விடுகிறது. ஆனால் சர்க்கார் துறையிலே கவனம் இல்லாது ஒருவர் அப்படி வேகமாக ஓட்டி கெட்டு விடுகிறது என்றால் அதனால் ஏற்படக்கூடிய நஷ்டம் பொதுமக்களுக்கு. இப்படி ஒவ்வொரு துறையிலும் கவனிக்க வேண்டும் மதுவிலக்குக் கொள்கையைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நாளைக்கு அந்த சப்ஜெக்ட் வரும்போது அதைப் பற்றிச் சொல்லலாம். காங்கிரஸ்காரர்கள் மதுவிலக்குத் திட்டம் தோற்றுவிட்டது என்று சொல்லுகிறார்கள். அதைக் கேட்டு மதுவிலக்குத் திட்டத்தை எடுத்துவிட்டால் தேர்தல் காலத்தில் பிரச்சாரத்திற்கு இடம் கிடைக்காதா என்று பார்க்கிறார்கள். இன்று பல அரசியல் கட்சிகளில் ஒரே குறிக்கோளைக் கொண்டவர்களாக பலர் இருக்கிறார்கள். நடைமுறைக்கு இணைந்தகருத்தைச் சுதந்திராக் கட்சியினர் கூறுகிறார்கள் என்றால் யாருமே அதை மறுக்க முடியாது. பெரும்பாலான அரசியல் வாதிகள் பிரச்சாரத்தினால்தான் அரசியலை அடைகிறார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

எனது தொகுதி பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி முடித்துக்கொள்கிறேன். என் தொகுதியான பேசின்பிரிட்ஜ் ஏழை தொழிலாளர்களைக் கொண்ட ஒரு பகுதி. அங்கு வண்டிகளே கிடையாது. அங்கு பஸ் நிலையமும் இடையாது. மழை பெய்தாலும் சரி, வெய்யில் அடித்தாலும் சரி. அங்குள்ள மக்கள் வெளியிலே நின்றுதான் வாட வேண்டியிருக்கிறது. சர்க்கார் அது விஷயத்தில் எந்தவிதமான முயற்சியும் செய்யவில்லை.

சர்க்கார் சிப்பந்திகள் 90 சதவீதம் பேர்களும் ஒத்துழைப்பு தருவதில்லை. ஏதோ காலத்தைக் கடத்துகிறார்களே தவிர சர்க்காருக்கு ஒத்துழைப்புதருவதில்லை. சில நேர்மையான அதிகாரிகளை மட்டும் நியமித்து விடுவதால் ஒன்றும் செய்துவிட முடியாது. எப்போது மக்கள் நாட்டுடைமை என்பதை சொந்த உடமை என்று கருதுகிறார்களோ அப்போதுதான் நாம் அபிவிருத்தி காண முடியும்.

அடுத்து, சர்க்கார் தொழிலுக்கு வருகிறவர்களுக்கு 25 வயது என்று வைத்திருக்கிறார்கள். ஏன் அப்படி ஏற்படுத்தினார்கள் என்று தெரியவில்லை. அதை நாற்பது வயது என்று மாற்றினால் என்ன கெட்டுவிடும் ? நாற்பது வயதான டைரக்டர் அவர்கள் நல்ல அறிவாற்றல் உடையவராக இருக்கவில்லையா ? நாம் எவ்வளவு நாட்கள் வேலை செய்கிறார்களோ அந்த அளவிற்கு தான் சம்பளம் கொடுக்கப் போகிறோம். வேலை செய்த நாட்களையொட்டித் தான் பென்ஷன் கொடுக்கப்போகிறோம். ஆகவே அறிவாற்றல் உள்ளவர்களை அவர்கள் 30, 35 வயது ஆனாலும் சரி அவர்களை சர்க்கார் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். பேஸின் ப்ரிட்ஜ் பகுதியில் அதிகப்படியான வண்டிகளை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. பி. வேலுசாமி :** தலைவர் அவர்களே, இந்த பஸ் போக்குவரத்து மானியத்தின் மீது எனது வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். இந்த பஸ் போக்குவரத்து சம்பந்தமாக கொடுக்கப்பட்டுள்ள இந்த ஆண்டு அறிக்கையில், இதுவரையில் கிட்டத்தட்ட 190-ல் இருந்து இன்றுவரை இந்தப் போக்குவரத்து நஷ்டத்தில் தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் வருகிற ஆண்டில் 4·31 லட்சம் ரூபாய் லாபம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பார்க்கப்படுகிற செலவைப் பார்த்தால் அதன் தூரம் வெகு தூரத்தில் இருப்பதைப் பார்க்கிறேன். 1967–68-ல் நேர்முகச் செலவு 94·79 லட்சம் ரூபாய் என்றும், 1968–69-ல் எதிர்பார்க்கப்படுபவை 1,245·83 லட்சம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக கிட்டத்தட்ட 250·84 லட்சம் ரூபாய் வித்தியாசம் வருகிறது. மறைமுகச் செலவை எடுத்துப் பார்த்தால் 1967–68-ல் 93 லட்சம் ரூபாய் என்றும், 1968–69-ல் 104·77 லட்சம் ரூபாய் என்றும் கிட்டத்தட்ட நேர்முகச் செலவு, மறைமுகச் செலவு என்றும் இரண்டு விதத்திலும் சேர்ந்து கிட்டத்தட்ட 262·61 லட்சம் நஷ்டத்தை தாண்டி நான்கு லட்சம் ரூபாய் வரவேண்டும். ஆகவே அப்படி வருகிற ஆண்டில் நான்கு லட்சம் ரூபாய் லாபம் வருமானால் அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள சிறப்பான பொன்னான



மலரை நான் அவர்களுக்குப் போடுவேன். ஆகவே நான்கு லட்சம் ரூபாய் வருகிற ஆண்டில் லாபம் கிடைக்கும் என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. அடுத்து, இந்த பஸ் டிரான்ஸ்போர்டில் தனியார் பஸ்களில் ஓவர்லோடு ஏற்றக்கூடாது என்று விதியிருக்கிறது. ஆனால் தேசீயமயமாக்கப்பட்ட பஸ்களில் ஓவர்லோடு என்றுவது என்றால் அது நாமே சட்டத்தை மீறுவதாகும். நாமே சட்டத்தை மீறுவது என்பது எந்த விதத்தில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னொரு தவறும் இருக்கிறது என்று கருதுகிறேன். பாரிஸ் கார்னரிலிருந்து ஒரு பஸ் புறப்பட்டால் 80-ல் இருந்து 85 பேர்களை ஓவர்லோடு ஏற்றுகிறார்கள். அந்த பஸ் பாரிஸ் முனையிலிருந்து சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வருவதற்குள் 85 பேர்களுக்கு கண்டக்டர் டிக்கட்டுகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர் இந்தக் கடைசியிலிருந்து அந்தக் கடைசிக்கு வருவதற்குள்ளாக நான்கு பேர்கள் சென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கிவிடுவார்கள். அப்படி பிரயாணம் செய்த நான்கு பேர்களும் டிக்கட் வாங்காமல் இறங்கிவிடுவார்கள். அப்படி இறங்குவதால் பஸ்ஸுக்கும் நஷ்டம், அப்படி டிக்கட் வாங்காமல் இறங்குகிறவர்களை தவறு இழைக்க ஒரு வாய்ப்பையும் தேடித் தருகிறது. அதே நேரத்தில் அந்த கண்டக்டர் உள்ளத்திலும் ஒரு கல்மிஷ உணர்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி ஓவர்லோடு ஏற்றுவதால் கண்டக்டர் இயல்பாகவே தவறு இழைக்கும் ஒரு வாய்ப்பை நாமே ஏற்படுத்திக்கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. பின்னர், 2½ பைசா என்று வைத்து நஷ்டம் ஏற்படுவதற்கு அவசியமேயில்லை. எல்லாயிடங்களிலும் மூன்று பைசா என்றிருக்கும்போது இங்கு 2½ பைசா என்று வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதையும் கவனிக்க வேண்டும். அடுத்தாற்போல் லாரி டிரான்ஸ்போர்ட். லாரி டிரான்ஸ்போர்டைப் பார்த்தால் யம தர்ம ராஜனுக்கு வேலை குறைச்சல் என்று ஒரு பத்திரிகையில் ஒரு துணுக்கு வந்திருந்தது. லாரியோடு லாரி மோதி மக்கள் இறப்பது என்பது தமிழ் நாட்டில் சகஜமாக போய்விட்டது. என்று பார்த்தாலும் இரண்டு லாரிகள் மோதிக் கொண்டன என்ற செய்தி வந்து கொண்டே இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ? மாலை மேட்டுப்பாளையத்திலிருந்து ஏழு மணிக்கு உருளைக்கிழங்கை ஏற்றிக் கொண்டு லாரியில் புறப்பட்டால் காலையில் கொத்தவால்சாவடிக்கு வந்து சேரவேண்டியிருக்கிறது. இறக்கி விட்டு 12 மணிக்கு திரும்ப வேண்டியிருக்கிறது. ஆக, ராத்திரி தூக்கம் இல்லாமல் செல்லவேண்டியிருப்பதால் லாரியோடு லாரி மோத வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே லாரி ஓட்டுகிறவர்களுக்கு எட்டு மணி நேரம் என்று வைத்து ட்ரிப் ஷீட்ஸ் வைத்து அதன் மூலம் கண்டிப்பாக எட்டு மணி நேரம்தான் ஓட்டவேண்டும் என்று செய்ய வேண்டும். அதோடு இரவு நேரங்களில் லாரி ஒன்றுக்கு இரண்டு ட்ரைவர்களும் இரண்டு கண்டக்டர்களும் இருக்க வேண்டும். ப்ரேக் கண்டிஷன் சரியான முறையில் இருக்க வேண்டும். இல்லாவிடில் மக்கள் காக்காய் குருவிகள் போல் கொன்று குவிக்கக்கூடிய நிலை ஏற்படும். (திரு. மகாதேவன் அழைக்கப்பட்டார்)

***திரு. ப. மகாதேவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தேசீயப் போக்குவரத்து போன்ற மானியங்களின் மீது கொடுககப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகள் மேல் என் கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர்அவர்கள் நாட்டுடைமை பற்றிச்சொல்லும் போது அதில் கட்டாயமாக வருமானம் வரவேண்டும் என்று சொன்னார்கள். நாட்டுடைமை நாட்டுக்கு நல்லது செய்வதற்காக என்று எண்ணுபவர்களும் உண்டு. அவர்களோடு ஒன்றை நான் ஒத்துக்கொள்கிறேன். கட்டாயமாக நஷ்டம் வரக்கூடாது. ஆனால் நடைமுறையில் பார்க்கும் போது 1966–67-ல் 61லட்சம், 1967–68-ல் 23·25 லட்சம் நஷ்டம், இந்த வருடம் நான்கு லட்சம் லாபம் வரலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் வைத்தே ஸ்டேட் டிரான்ஸ்போர்டில் நாம் கொடுக்கக் கூடிய சம்பளம் பி.ப.
தான் குறைவு. கேரளாவில் அதிகச் சம்பளம் கொடுக்கிறார்கள். அங்கு 6-00
போனஸுக்கு என்று 28 லட்சம் ரூபாய் கொடுககிறார்கள். இன்கம் டாக்ஸ்காக 36 லட்சம் கொடுக்கிறார்கள். டிக்கட் கன்ஸஷன்ஸ் என்பதற்காக 20·5 லட்சம் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் கொடுத்தும் அவர்கள் 1966–67லே 24,80,443 ரூபாய் லாபம் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இங்கு அதில் பாதி சம்பளம் தான், பூரிப்பு ஊதியமும் கிடையாது, கன்

நடத்தும் நம்முடைய அரசுத் துறை மட்டிலும் என் நட்டக் கணக்கில் நடத்தப்படுகிறது ? என்பதை நமது அரசு மிகவும் கவனத்துடன் பரிசீலனை செய்ய வேண்டுகின்றேன்.

நமது போக்குவரத்துத் துறை பேருந்துகள் வேகமாக ஓட்டப்படுவதும், திடீர் திடீர் என்று பிரேக் போடுவதும், பயணிகள் வழித் தடங்களில் நின்று கை காட்டினாலும், நமது பேருந்துகளில் இடம் இருந்தும், பேருந்துகளை நிறுத்திப் பயணிகளை ஏற்றிச் செல்லாத நிலை இருப்பதும் நமதுபோக்குவரத்துத் துறை நஷ்டத்திற்கு ஒரு காரணமாக உள்ளது. நமது அரசு பரிசீலனை செய்து பரிகாரம் தேட வேண்டும்.

நமது பேருந்து வழித்தடங்கல் செல்லும் சாலைகளை சரியாகப் பராமரிக்காத காரணத்தாலும், நம் நாட்டில் உள்ள, பொதுவான, போக்குவரத்துத் துறையினர் மிகவும் நட்டத்திற்கு ஆளாகின்றனர். அதனால் நெடுஞ்சாலை பெருவழித்துறையாரும் இத்துறையில் கவனம் செலுத்தச் செய்ய வேண்டுகிறேன்.

நமது பேருந்துகளில் ஓட்ட வேகத்தை அளவிடும் கருவியை விரைவில் பொருத்தச் செய்வதன் மூலமும் நமது நட்டக் கணக்கை ஒழுங்கு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாகூர்-வேளாங்கண்ணி-மாயூரம்-மதுரை-பழனி கீழ்க்கரை ஏறுவாடி, திருச்செந்தூர், பொட்டல்புதூர் ஆகிய ஊர்களில் நடைபெறும் சமய விழாக்களிலும், குற்றால சீசன் காலங்களிலும் பல நகரங்களில் இருந்து நமது பேருந்துகளை விடச் செய்வது மூலம் நல்ல லாபமும் அடையலாம். பொதுமக்களுக்கும் அது மிகவும் உறுதுணையாகவும் இருக்கும்.

நாகர்கோவில் நாகூர் செல்லும் துரிதப் பேருந்தை, பெரிய தர்கா இருக்கும் பொட்டல்புதூரில் நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்லச் செய்வது அரசுக்கும் மக்களுக்கும் பயன் உள்ள ஒன்ருக இருக்கும்.

திருச்செந்தூரில் இருந்து செங்கோட்டைக்குச் செல்லும் நமது பேருந்து தற்சமயம் அம்மன்புரம் சோனகன்விளை என்னும் ஊர்வழியாகச் செல்கின்றது. அவைகளில் சிலவற்றை வீரபாண்டியன்பட்டினம், காயல்பட்டினம் ஆறுமுகனேரி ஆகிய ஊர் வழியாகச் செல்வதற்கு வகை செய்வதுடன் திருச்செந்தூரில் இருந்து காயல்பட்டினம், ஆறுமுகனேரி, ஆத்தூர், தூத்துகுடி, கோயில்பட்டி ஆகிய ஊர்கள் வழியாகச் சாத்தூருக்குப் புதிய வழித்தடம் ஒன்றில் நமது அரசுப் பேருந்து விட்டால் அரசுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் லாபகரமாக இருக்கும் என்பதுடன், நாகர்கோவில், நாங்குனேரி, சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம், தென்காசி வழியாக புளியங்குடி என்னும் ஊருக்கு புதிய வழித் தடத்தில் நமது அரசு பேருந்துவிடச் செய்ய வேண்டுகின்றேன்.

திருச்செந்தூர், காயல்பட்டினம், ஆறுமுகநேரி, நாசரேத், சாத்தான்குளம், நாகர்கோவில் வழியாக தக்கலை என்னும் . ஊருக்குப் புதிய வழித்தடத்தில் நமது அரசு பேருந்து விட்டால் பயணிகளும் பயனடைவர்.

**திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, ஒரு அங்கத்தினர் இப்படி எழுதிவைத்துக்கொண்டு படித்துக்கொண்டேயிருந்தால் அது இந்தச் சபையின் ஒழுங்காகுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் எழுதிப் படிக்கவில்லை. நீங்கள் அவருடைய பேச்சிலே பல ஊர்களின் பெயர்களைப் பார்க்கிறீர்கள் இல்லையா, அந்தப் பெயர்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியாது என்பதற்காகக் குறித்து வைத்துக்கொண்டு கூறுகிருரே தவிர, அவர் எழுதிப் படிக்க வில்லை.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் நான் எழுதிப் படிப்பதாகச் சொல்கிருர்கள். எழுதிப்படிக்கவேண்டுமென்ற நிலையில் பேச்சாற்றல் உள்ளவன் அல்ல என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை தொடருகின்றேன். அதாவது, திருச்செந்தூர்-காயல்பட்டினம்-ஆறுமுகனேரி-நாசரேத்-சாத்தான்குளம்



நாகர்கோவில் வழியாக தக்கலை என்னும் ஊருக்கு புதிய வழித்தடத்தில் நமது அரசு பேருந்து விட்டால் பயணிகளும் பயனடைவர். இந்து-கிருஸ்துவ இஸ்லாமிய திருத்தலங்கள் மூன்றிற்கும் செல்கின்ற ஒரு சிறப்பான வாய்ப்பும் உள்ளது —தேசீய ஒரு ஒருமைப்பாடு நம்முடைய போக்குவரத்துத் துறையின்மூலமாக அமையும் என்று கூறி இந்தத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் அமர்கின்றேன்.

THIRU K. VINAYAKAM: Mr. Deputy Speaker, Sir, at the very outset let me make it very clear beyond any reasonable doubt that I or the Party to which I have the honour to belong, namely the Congress Party, is not against nationalisation of Bus Transport In fact, Sir, it is we who have introduced nationalisation long before some of us were born. In 1947 or 1948 when the Hon. Thiru B. Gopala Reddi was the Finance Minister here, the nationalisation scheme was introduced. So nobody should run away with the impression that we are against nationalised service, but we are against pitfalls that are beset in the actual working of the system. When we criticise this Government or the past Government—in those days also this was the very attitude which we adopted—it is only to rectify the system and not to criticise the entire administration. As our late Chief Minister pertinently remarked, the service must be of public utility and it must also be a service through which we should get non-tax revenue. To quote him in Tamil he has stated :

வரி போடாமலே வருவாயும் செம்மையாகவேண்டும். வரி வருவாய்......

So intelligent he was that he was able to couple those two things in the same words. But are we now actually contributing to the public utility and that is the first thing what we have to consider and then come to the next aspect Whether we are earning sufficient income out of this scheme. About public utility we may talk about so much on the floor of this House but it is the public who should say about the utility of our Transport system. My experience about the working of the scheme is that neither are we catering to the needs of the public through this Department nor are the peple who are working this scheme are satisfied with it and the same is the case with regard to the Government also. When I say 'Government' I include the Opposition also. We are not satisfied with it from the point of view of income. It is always beset with losses, write-off and all those things. But when the present Party came into power, they hit upon the idea of extending this service and they have stated that any route commencing from the Madras City and any route beyond 75 miles would be nationalised. I have no quarrel with the Government on this point but how did they actually work it ? There are permits given to the operators but permits are just mere scraps of paper. The permit-holders also had no sufficient ground to agitate in a court of law claiming concession and so they went out of existence. Then what happened was that the present Chief Minister who was then Transport Minister had stated that the displaced operators would be given suitable alternative permits and they would not be thrown to the skies or windsor Gods to eke out their livelihood.It

was a fond hope which was entertained by the private operators who were thrown out of their business. Sir, I being an Opposition Member gave a caution right at the beginning that some of the displaced private operators might go to the Court. Then the late Chief Minister jocularly remarked 'You yourself would be instrumental in taking these operators to the Court and that you yourself would make them agitate'. That has not been my intention. They are affected by the scheme and naturally they would like to survive. They went to the Court and tried their luck and they succeeded in some instances but many of them sincerely believed that ourGovernment would carry out their promises and that they would be given alternative routes. After four months what happened I know most of the operators in the Chingleput and North Arcot districts whose routes have been nationalised did not go to the Court thinking that the Government would be sincere or honest enough to translate their promises made on the floor of the House into action. But how did we treat them? We just gave them temporary permits and asked them to deviate from the regular routes. I am just giving an example to explain my point. Suppose one person runs a bus from Madras to Tiruthani via Poonamallee. Now the suggestion thrown out by the Government is that he should avoid that route because they run their own buses in that route and if that person also runs his bus in that route, the collections in the Government Transport would go down. Then the displaced operators obliged the Government by accepting the alternate routes where the competition would be less-competition in the sense that they would not compete with the Government and they will carry on their operations in a less popular route. Thus for four months we kept them in a lull so that they would not go to the Court and they would not agitate against the Government. Then what happened is that we simply butchered them. I cannot think of any language less effective than this..........

**மாண்புமிகு திரு எ. கோவிந்தசாமி :** *தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்ட அந்த "புச்சர்ட்" என்ற வார்த்தையை சட்டமன்ற நடவடிக்கை யிலே இருக்கவேண்டிய வார்த்தையா என்பதை யோசித்து, அது நீக்க வேண்டிய வார்த்தையாக இருந்தால் நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.*

THIRU K. VINAYAKAM: I am agreeable. That is a sound suggestion. I think it is a parliamentary word. If it is unparliamentary, I have no objection to withdraw, substitute or amend it.

MR. DEPUTY SPEAKER: I wish the hon. Member withdraws it if it is an unparliamentary word.

THIRU K. VINAYAKAM: How can you suppose, Sir, it is unparliamentary? I have said that I have no objection, if it is held unparliamentary, to withdraw it. But you must find out whether it is unparliamentary and give your ruling tomorrow. Her Majesty's language is so fine that you cannot express your ideas much better in any other language.



THE HON. THIRU S. J. SADIQ BASHA: The hon. Member speak sfine English.

THIRU K. VINAYAKAM: Thank you for the compliments.

(Mr. Speaker in the Chair).

We conveniently cajole ourselves that private bus operators have been thrown out of their operations. Think of the retinue of the personnel working under these operators, the conductors, loaders, etc. Think of their families. What an amount of unemployment we have created in our country by this kind of nationalisation. You think only 380 bus routes and theiroperators who have been affected. Along with them, plenty of people working under them have been thrown out of employment. The Government would not be able to take all those personalities. You have got your regulations. They must have passed S.S.L.C. He must possess a licence and he must be below 25 or 30 and then only he can be appointed as driver. But most of these people thrown out of employment, are more than 35 or 40.Sothey cannot be absorbed in the State Transport. They are good workers they can serve this Government efficiently. But we are not making use of them. A lot of unemployment is thus being created on account of this nationalisation and in not providing alternative employment to the bus operators I will leave it there.

Coming to the efficiency and income which we derive out of the Transport system, Government transport is like an octopus with all its tentacles spread over every nook and corner. There is no route wherein the State Transport is not running. Below fifty miles, private operators are allowed in some routes. But not more. Above 75 miles, the State Transport comes. Private operators cannot get any alternative route. So the operators went into the background to eke out their livelihood in some other way. That is the position. Whichever party is in power, the bus operators should not be treated in this way.We must think of giving alternative routes to the operators whose routes we have taken away. We must provide them with some livelihood.

Regarding State Transport Service, it has been there for some years. It is there today to serve the people. I am not against the transport system. How best we can improve the system is the angle from which I see this question. The party in power as well as the party in opposition must think about the process by which we can give better service to the people. My impression about our own service is that they are not taking more passengers as private operators do. Take the case of a bus going from here to Tiruttani. At Tiruttani terminus or at Broadway, the loaders (the people who put in passengers into the bus) see to it that the bus is full. No bus leaves empty. It is always starting from the terminus with full complement of passengers. But what is the fate of our Transport bus? There is a loader here. The conductor simply stands. He does not take any interest in loading passengers

into the bus. Whether it starts with full complement of passengers or not, he does not care. He gets his pay all right. He gets his D.A. He is not bothered about collection. There is also no incentive for him. He should complete his 8 or 10 trips per day. He does not worry about collection. What is the incentive we have given him for more collection.That is the bane of our country. No nationalised service is upto the mark. Unless the national character of every individual improves, nationalisation is not going to be successful. Take telephones. Sorry, Sir. I shall not touch upon it since it is a Central subject. After nationalisation, deluge is the order of the day. Our transport buses are not working with profit, because we do not give the workers enough incentive.

**மாண்புமிகு திரு எ. கோவிந்தசாமி :** *தலைவர் அவர்களே, தயவு செய்து கனம் அங்கத்தினர் அவர்கள் தவருக எடுத்துக்கொள்ளவேண்டாம் அவர் முதலில் சொன்ன கொள்கையிலிருந்து இப்பொழுது பின்னடை ஓருரா என்பதைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையை ஒப்புக் கொண்டார்கள். இப்பொழுது அதற்கு மாறுபட்டுப் பேசுகிருர்கள். குழப்பத்திற்கு இடமில்லாமல் அவர் என்ன நினைக்கிருர் என்பதைத் தெளிவாகச் சொல்லிவிடவேண்டும்.*

**திரு கே. விநயகம் :** *நான் முதலிலேயே ஆங்கிலத்தில் சொன்னேன்.*

I am not against nationalisation. We have introduced nationalisation. I am only suggesting how best we can improve our efficiency after nationalisation.

THE HON. THIRU A. GOVINDASAMY : Then what is the meaning of your last sentence.

THIRU K. VINAYAKAM : The Hon. Minister can recall from memory what I said last. Let us not argue upon this now.

We must introduce a system by which our personnel should take some personal interest in the service and show more collection. Our object should be to make this a profit showing concern. What is the process which we should adopt. That is what we should analyse. We must give sufficient incentive to the conductors and drivers. You should also have a new category of 'loaders' at the terminus. At the terminus the bus must invariably leave with full complement. That can be done only if the loaders are there Otherwise how is it possible ? I find from my experience that private buses are able to leave the terminus with full complement of passengers because of these 'loaders'. Our conductors do not worry now. That defect should be rectified. Let us analyse the reasons for the present loss. Let us find out ways and means to improve the thing. Let us appoint a commission which will make good suggestions to improve the working.

The personnel also must show courtesy to the people. In the City of Madras (I am not talking of mofussil, it is much worse there) What is it that is happening ? It is a different story in the mofussil In the city of Madras, old people, women, children stand in this bus stands but the driver simply goes . Too many passengers should not be allowed to stand. There is a limit of 25 or so. He counts. He thinks there are 25 and goes without stopping. But



in reality there may be only ten or fifteen. But he uses his discretion to count. I mean the driver. Of course this is a disease that is coming from our administration. I am not blaming you alone. We must sit down calmly and try to rectify the mistakes. That is my idea.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *நேரமாகிக்கொண்டிருக்கிறது. நாம் 7 மணிக்கு விவாதத்தை முடிப்பதாகச் சொல்லியிருக்கிறோம்.*

THIRU K. VINAYAKAM : I am winding up. You must give me some time. I was very conservative first and said we shall finish by 7·00 p.m. You were liberal in extending it to 8·00 p.m. Let me touch upon in your favour, now.

Once a year, we celebrate the 'Courtesy week'. During that one week, they are courteous. During other days, they are not so. I am not blaming the Hon. Minister. As I said previously the national character must improve. Then only you can find a new idea. The disease is somewhere. We should not allow these drivers and conductors to show discourtesy to the people. We must also encourage these people to be more courteous by giving them necessary incentives. That is my point.

Sir, finally coming to the benefits to the workers, I read in the Press that our Chief Minister when he was the Minister for Transport one day collected all the workers in a workshop and then announced 'I am going to give an increase of ten paise in the Daily Allowance'. Mark the words 'Ten Paise'. Ten paise is not a big amount to tempt our workers to be very enthusiastic about the increase in wages. I can understand the financial stringency which the Government are facing and already this Department is working at a loss all the time. But would the workers be pleased with this most generous gift of ten paise You must try to increase it and that is my point.

Sir, breakdown has become a very serious problem. About three years ago new buses were purchased when my Party was in power and they were running smoothly and you inherited those new buses. You were running those buses and you got a good name but now they are three years old and they are lifting their legs and standing on the roads. That should not be the state of affairs and breakdowns must be avoided by having a good service and maintenance organisation in the workshop. I believe there are four or five workshops all over the State of TamilNadu and I think we had given them very good technical staff. But still that is not enough. There should not be more than five per cent breakdown. In this connection, I must say that it is tragic to see those buses emitting smoke and people say that jaundice is the result of the smoke emitted by these buses. It may be true or may not be true. That is for you to investigate and make a through study of the entire problem.

[1969 மார்ச் 24

Sir, I have a very good word for our transport system and do not run away with the impression that I am totally against the present transport system. After all, it is my system and I worked it. In this connection, I wish to refer to the tragic agitation in the City of Madras which took place on 25th and 26th March last year and our late Chief Minister had stated that everything happened in such quick succession that he was not able to properly diagnose the whole situation. Sir, it is stated in the report relating to the Transport Department that due to stoppage of bus service on 25th and 26th March you have incurred a loss of Rs. 7·50 lakhs. It is a fact that on 25th there was stoppage of work. There was stoppage of work only after 7 p.m. on that day and ticket collections were made from morning till 7 p.m. on that day. The student-busman clash took place at about 6 p.m. and had spread all over the State by about 7 p.m when there was stoppage of service. So, what happened to thecollections made from morning till 7 p.m Had not the conductors deposited the collections at the counters of the Transport Department and what was the collection left in the possession of the conductors. They would have certainly deposited the collections as they are expected to do. So, do not tell me that there was stoppage of service on the 25th and that is not a fact. Of course on the 26th the buses were off the roads and I request the Hon. Minister for Transport to investigate the matter and see whether that statement in the report is correct or not.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "ஃபைனலி" என்று சொல்லி விட்டு, எவ்வளவு நேரமாகிறது.

**திரு கே. விநயகம் :** ஆங்கிலத்தில் அப்படித் தான் சொல்வது வழக்கம். "ஒன் மோர் பாயிண்ட்" என்று சொல்லிக்கொண்டே போவது வழக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள்.

THIRU K. VINAYAKAM : One more point, Sir. Last but not least, I know that in connection with the agitation of busmen and students, hundreds of witnesses were examined by Thiru Somasundaram who was appointed to go into the matter. He must have produced a report and what happened to that report and what has prevented this Government from placing that report on the table of the House.Did anybody go to the Court for you to say easily that it is *sub judice*. It is not *sub judice*. Only cases were launched against 5 busmen and 5 students. It is a criminal affair. Therefore, that report must be made available to the people.

*     *     *     *     *

**மாண்புமிகு திரு எ. கோவிந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சி. கோவிந்தராசன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் *  *  * என்று பேசியிருக்கிறார். இதைச் சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த வார்த்தையை திரு. சி. காவிந்தராஜன் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

---

*பேரவைத் தலைவரின் ஆணைக் கிக ணங்அகற்றப்பட்டது.



1969 மார்ச் 24]

**திரு. சி. கோவிந்தராசன் :** *  *  *  *  *  *  * என்று சொன்னேன் *  *  *  *  *  ** . என்று குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் பேசியதை ரிப்போர்ட் எடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிப்பட்ட தொடரை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, நான் முன்பு பேரவையிலே தலைவராக இருந்தபொழுது ஒவ்வொரு திருக்குறள் பாக்களைச் சொல்லி, பேரவை நடவடிக்கைகளைத் தொடங்குவது வழக்கம். இன்றைக்கு எனக்கு நானே ஒரு திருக்குறள் பாவைச் சொல்லித் தொடங்குகிறேன்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்".

தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையானது நட்டத்தில் நடைபெறுகிறது என்று.......

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் சொன்னது ஒருவரைக் குற்றம் சொல்வது போல் இல்லையா ? எனக்கு அதை விளக்கவேண்டும். "விநயகம் அப்படிச் சொன்னால், அதற்கு ஒரு பொருள் இருக்கிறது" என்று சொன்னீர்களே, அமைச்சர் பேசுவது மட்டும் குத்தலாக இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விநயகம் அவர்கள் வேண்டுகோளாக அதை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இதனுடைய பொருள் என்னவென்றால்......

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதுமட்டும் உயர்ந்த பொருள், இது மட்டும் தாழ்ந்த பொருளா ?

**மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார்:** நான் யாரையுமே குறிப்பிட்டுப் பேசவில்லை. என்னுடைய வாழ்க்கையில் திருக்குறள் பா ஒன்றைச் சொல்லித் தொடங்குவது என்பதை ஒரு பாதையாக நான் அமைத்துக் கொண்டேன்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்"

என்று சொல்லி தொடர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "அவர் நாண" என்றால் யார் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "இன்னா செய்தவர்கள் நாண" என்று பொருள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "நாண" என்பது அவமானப்படுத்துவதாக இல்லையா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்தத் திருக்குறளைச் சொல்வதை எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆட்சேபணை இருக்குமானால் அதைக்கூட வாபஸ் பெற்றுக்கொள்ள நான் தயார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திருக்குறள் அறிவை மெச்சுகிறேன். அதை வைத்து எங்களை அடிக்கவேண்டாம் என்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** முதலிலேயே சொன்னேன் நான் யாரையும் குறிப்பிடவில்லை என்று. பேரவையிலே வள்ளுவர் படம் இருக்கிறது. எனது நெஞ்சுக்கு உறுதியாக இருக்கும்படியாக அதை நினைவுப்படுத்திக்கொண்டேன்.

---

*பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பட்டது.

செஷனும் மிகக் குறைந்தவர்களுக்குத் தான். இப்படியெல்லாம் இருந்தும் எப்படி நஷ்டம் வருகிறது. இந்தத் தேசிய மயக்கொள்கை வேரோடு ஆட்டங்கண்டுவிடும் என்று நினைக்கும்படியாக இருக்கிறது. முன்பிருந்த டைரக்டர்கள் கவனம் செலுத்தி நல்லமுறையிலே சீர்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது இருப்பவர்களும் திறமை மிக்கவர்கள். அவர்கள் மேலும் துணிந்து நல்ல முறையில் நாட்டங்கொண்டு இந்த நஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கேரளாவிலே 6 கோடி ரூபாய் மூலதனத்தை வைத்து லாபத்தைக் காட்டுகிறார்கள், ஆனால் இங்கு 12 கோடி ரூபாய் மூலதனம் போட்டு நஷ்டத்தில் ஓட்டிக்கொண்டிருக்கிறோம்.

மைலுக்கு என்ன செலவாகிறது என்று கணக்கிட்டுப் பார்த்தால், கேரளாவிலே ஒரு மைலுக்கு 137 காசாக ஆனால், இங்கு 162 காசு ஆகின்றது. கேரளாவிலே பர்ஸண்டேஜ் வேஜஸ், ப்ராவிடெண்ட் பண்ட், கிராஜுவிடி, போனஸ் எல்லாம் 34 சதவிகிதம். இங்கே 21 சதவிகிதம் தான். ப்யூயல், லூப்ரிகேஷன், ஸ்பேர் பார்ட்ஸுக்கும் அங்கேயிருப்பதைவிட இங்கு கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. கேரளாவிலே இருப்பதுபோல் அல்லாமல் மலைப்பகுதிகளும் இங்கு குறைவாக இருக்கிறது. எனவே, இங்கே ஏன் கூடுதலானது என்று பார்த்துக் கண்டு பிடிக்க வேண்டும். கேரளாவிலே யூடிலிசேஷன் ஃபிர்க்ஸ் 91 சதவிகிதம். ஆனால் இங்கு 81 சதவிகிதம் தான். எனவே, மெயின்டெனென்ஸ் போதாது. நல்ல முறையில் அது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். லோடு ஃபேக்டர் கேரளாவோடு சீர்தூக்கிப் பார்க்கும்போது குறைவாக இருக்கிறது

அடுத்து பே ஸ்கேலை எடுத்துக் கொண்டால் தொழிலாளர்களுக்கு கூடுதலாக ஊதியம் கொடுக்க வேண்டும். கேரளாவில் வெஹிகிள் எக்ஸாமினருக்கு 175-ல் தொடங்கி 330 வரை செல்லுகிறது. இங்கே 140-ல் தொடங்கி 270 வரைதான்செல்லுகிறது.செலெக்ஷன் கிரேட் டிரைவர்களுக்கு கேரளாவிலே 145-ல் தொடங்கி 240 வரையில் செல்லுகிறது. இங்கேயோ 90 ரூபாயிலிருந்து 210 வரைதான் செல்லுகிறது. ஃபஸ்ட் கிரேட் டிரைவர்களுக்கு கேரளாவிலே 120-ல் தொடங்கி 215 வரை செல்லுகிறது. இங்கே 80 ரூபாயில் தொடங்கி 175 வரைதான் போகிறது. இவ்வளவு குறைந்த சம்பளத்தை கொடுத்துக்கொண்டிருந்தும் இங்கே லாபம் இல்லை சென்னையிலே ஓட்டிக்கொண்டிருக்கக் கூடிய டிரைவர்களுக்கு 1 ரூபாய் 35 காசு பேட்டா கொடுக்கிறார்கள். விலைவாசி உயர்வில், அவர்கள் சாப்பாட்டிற்கு அது போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதை உயர்த்த வேண்டும்.

என்னென்ன முறைகளிலே வருவாயைப் பெருக்கலாம் என்பதற்கு நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். டிக்கெட்டுகள், தனியார் கம்பெனிகளில் இருப்பதுபோல் 10 அல்லது 20 சீட்டுகள் கொண்ட புத்தக வடிவமாக இருக்க வேண்டும். ஏறுமிடத்தையும், இறங்குமிடத்தையும் எழுதிக்கொடுக்கும்படி மாற்ற வேண்டும். சீட்டுப் பரிசோதகர் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும். அவர்களுக்கு நல்ல ஊதியத்தையும் கூட்டிக்கொடுக்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களை எடுக்க இருப்பதாக்த் தெரிகிறது. அதை மாற்றி, கண்டக்டர் வேலை பார்ப்பவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுத்தால் நன்றாக இருக்கும். அல்லது கிராஜுவேட்டுகளாக இருக்க வேண்டும்.

ஜம்பிங் ஃபேர் சிஸ்டத்தை மாற்றியாக வேண்டும். நாகர்கோயிலில் இருந்து சுசிந்திரத்துக்கு 20 காசு, நாகர்கோயிலிருந்து தேரூருக்கும் 20 காசு, இதனால் அந்த டிக்கட்டுகளை வாங்கி அதையே திருப்பிக்கொடுக்கக் கூடிய ஒரு கெட்ட நடவடிக்கையில் ஈடுபட அது ஏதுவாக அமையும். கம்பைண்ட் டிக்கட்டுகளைத் தவிர்க்க வேண்டும். நாகர்கோயிலிலிருந்து வள்ளியூருக்கு 90 காசு, வள்ளியூரிலிருந்து பாளையம்கோட்டைககு 90 காசு, நாகர்கோயிலிலிருந்து பாளையம்கோட்டைக்கு 1 ரூபாய் 90 காசு. இதில் 90 காசுக்கு நாகர்கோயிலிலிருந்து வள்ளியூர் வரை வந்துவிட்டு, வள்ளியூர் வந்தவுடன் அதே டிக்கட்டுகளைக் கூட ஒரு ரூபாய் டிக்கட்டுடன் சேர்த்து பாளையம்கோட்டைக்குச் செல்வதற்குக் கொடுத்துவிடலாம். இதனால் 1



ரூபாய் நஷ்டம் ஏற்படும். எனவே, இறங்குமிடத்தை பஞ்சிங் பண்ணாமல் கொடுத்தால் அரசாங்கத்திற்கு நஷ்டம் வரும்படி செய்ய முடியும். எனவே, அந்த முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அனுமலீஸ். குமாரபுரத்திலிருந்து பனைக்குடிக்கு 20 காசுகள். பனைக்குடியிலிருந்து வள்ளியூருக்கு 20 காசுகள். ஆனால், குமாரபுரத்திலிருந்து வள்ளியூருக்கு நேராகப் போனால் 50 காசுகள். ஆகவே, பிரயாணிகள் குமாரபுரத்திலிருந்து பனைக்குடிக்கு 20 காசு டிக்கெட்டு வாங்கிக்கொண்டு, பிறகு அங்கிருந்து 20 காசு டிக்கட்டு வாங்கிக்கொண்டு, வள்ளியூருக்கு வந்துவிடலாம். ஆக, 40 காசுக்களில் குமாரபுரத்திலிருந்து வள்ளியூருக்கு வந்துவிடலாம். நல்ல விவரம் தெரிந்த பிரயாணிகள் இவ்வாறு இறங்கி ஏறினால் நஷ்டம்தான் ஏற்படும். இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னும், நாகர்கோயிலிலிருந்து திருவனந்தபுரத்திற்குச் செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ்களிலே தினத் தந்தி பத்திரிகையை மட்டும்தான் ஏற்றிச் செல்லுகிறார்கள். தின மலர், தினமணி பத்திரிகைகள் ஏற்றிச் செல்லத் தடையிருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதைப் பற்றி ஆராய்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தோவாளையிலிருந்து பூக்கூடைகளைத் தனியார் பஸ்களில் ஏற்றிச் செல்ல முடியவில்லை. அதற்கும் வழிவகை செய்ய வேண்டும்.

டீலக்ஸ் கோச்சுகளை ரேட்டைக் கூட்டி விடலாம். இரவில் எக்ஸ்பிரஸ் பஸ்களை விடலாம். நாகர்கோவிலிலிருந்து மெட்ராஸுக்கு நேரடியாகப் பஸ் விடலாம். ஏனென்றால், நாகர்கோவிலிலிருந்து மெட்ராஸுக்கு வருபவர்கள் திருச்சி வந்து வர வேண்டும். அப்படி 10, 15 பேர்கள் நாகர்கோவிலிலிருந்து திருச்சிக்கு வந்தால், திருச்சியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு அனைவருக்கும் இடமில்லாமல் போய்விடக் கூடிய நிலையும் ஏற்படுகிறது. அதேபோல் நெய்வேலியிலிருந்து போகக்கூடியவர்களும், விழுப்புரம் இரயிலடியில் இறங்கிக் கஷ்டப்படுகிறார்கள். எனவே, நெய்வேலியில் இருந்தும் திருச்சிக்கு பஸ்களை விடலாம். எக்ஸ்பிரஸ் பஸ்களை இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை மாற்றி நல்ல நிலையில் வைத்திருந்தால், பிரயாணிகள் ஆசையோடு வருவார்கள், அதனால் அரசாங்கத்திற்கு வருமானமும் கிடைக்கும்.

பழைய பஸ்களை மாற்றும்பொழுது, டிரக்குகளாக மாற்றுவதற்குப் பரிசீலனை செய்வது நலமாக இருக்கும்.

கடைசியாக, நன்னடத்தையால் கண்டக்டர்கள் மக்களை கவர்ந்திழுக்க வேண்டும். அதனாலேயே வருவாய் வளர வேண்டும் என்று கூறி முடித்து கொள்கிறேன்.

***ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்து போக்குவரத்துத் துறை மானியத்தின்மீது முஸ்லிம் லீக் கட்சியின் மீது சார்பில் என்னைப் பேச அழைத்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நாட்டுடமையாக்கப்பட்ட நம்முடைய பேருந்து போக்குவரத்துத் துறை, அதனால் ஏற்படும் நட்டக் கணக்கின் காரணமாகவும், தொழிலாளர்களின் பல பிரச்னைகளையும் கொண்டு பார்க்கும்பொழுது இத்துறை ஒரு நெருஞ்சி முள்ளாக இருந்து வருவதை நாம் பார்க்கின்றோம். என்றாலும், "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்" என்ற குறளுக்கு இணங்க லாபகரமான தொழில்துறை அனுபவமுடையவர்களிடம் இத்துறையை முதல் அமைச்சர் விட்டிருப்பதால், இறை அருளால், இதன் வருங்காலம் மிகவும் லாபகரமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய 1898 பயணப் பேருந்துகள் நமது அரசிற்குச் சொந்தமாக உள்ளன. மூன்று நான்கு பேருந்துகளே சொந்தமாகவுள்ள தனியார் நிறுவனங்கள் லாபகரமகா நடைபெற்றுவரும் பொழுது 1898 பேருந்துகளைச் சொந்தமாக வைத்து

போக்குவரத்துத் துறை நட்டத்தில் நடந்து வருகிறது என்பது மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை. நாட்டுடைமை ஆக்கி இரண்டாயிரம் பஸ்களை நடத்தி வருகிறோம். இவை தவிர தனியார் துறையில் எட்டாயிரம் பேருந்துகள், 15 ஆயிரம் லாரிகள் தமிழ் நாட்டில் ஓடுகின்றன. நான் தனியார் துறையிலே ஓடுகிற எட்டாயிரம் பஸ்கள், பதினைந்தாயிரம் லாரிகள் இவற்றைப் பற்றிக் குறிப்பிடவில்லை. முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது அரசுத் துறையில் இரண்டாயிரம் பஸ்கள் ஓடுகின்றன. இத்தனை பஸ்கள் ஓடியும் கூட அரசுக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டு வருகிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

நான் இந்தத் துறையை ஏற்று நடத்தவேண்டுமென்று பெரிய ஆவல் கொண்டவனுக இருக்கவில்லை. முதலிலேயே சொல்லி விடுகிறேன். பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே இரண்டாயிரம் பஸ்களை ஓட்டி இவ்வளவு பெரிய நட்டத்தை ஏற்றுக்கொண்டு வருவதில் என்ன பயன் என்று பலமுறை ஐயப்பாடு கொண்டது உண்டு. இப்போது விளக்க உரையில் கொடுக்கப்பட்டுள்ளதைவிட, உண்மையைச் சொல்லப்போனுல் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் சொன்னதுபோல, டெப்ரிசியேஷன் அதிகம் தான். திரு காசிராமன், திரு கிருஷ்ணசாமி கவுண்டர் இவர்களுக்கு இது நன்ருகத் தெரியும். அவர்கள் சொல்லியபடி குறைந்த பட்சம் 25 சத வீதம் பஸ்களுடைய மூலதனத்தில் தேய்மானமாக ஆண்டு தோறும் கழித்தாகவேண்டும். அதற்குப் பிறகு தான் லாப நஷ்டக் கணக்கையே பார்க்க முடியும். அது மட்டும் அல்ல. தேய்மானத்தைக் கழிப்பதோடு கூட டெவலப்மெண்டு ரிபேட், வளர்ச்சி நிதியையும் கழித்தாகவேண்டும். திரு காசிராமன் போன்றவர்களுக்கு இவை நன்ருகத் தெரியும். இப்படி கழித்துவிட்டுப் பார்த்தால் நமது போக்குவரத்துத் துறை இலாபமாக நடக்கிறது என்று சொல்வதற்கு நான் துணிய மாட்டேன். நமக்குப் பெரிய நட்டம் ஏற்பட்டு வருகிறது. அதுவும் குறிப்பாக தனியார் துறையில் நடக்கிற பஸ் போக்குவரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நட்டம் மிகுந்த அளவில் இருக்கிறது என்பது புலனுகும். இது சொல்லித் தான் மற்றவர்களுக்குத் தெரியும் என்பது அல்ல.

திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் ஒரு பஸ் கம்பெனியைப் பற்றிச் சொன்னுர்கள். அதில் 15 பஸ்கள் ஓடுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு தேய்மானம், வளர்ச்சி நிதி இவற்றை எல்லாம் கழித்துவிட்டு பார்க்கிறபோது இரண்டரை இலட்சம் இலாபம் வருகிறது என்ருர்கள். அப்போது பஸ் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் லாபம் வருகிறது. அப்படிப் பார்க்கிறபோது இரண்டாயிரம் பஸ்களை ஓட்டுகின்ற நமது தமிழக அரசுக்கு மட்டும் இத்துறையின் மூலம் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி அளவில் இருக்கவேண்டும். ஆனுல் இல்லை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** நான் லாபம் என்று சொல்லவில்லை. பிறருக்குக் கொடுக்கும் வருமான வரியில் பெரும் அளவு 3 கோடி என்று சொன்னேன். லாபம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** எச்செலவும் போக ஒரு பஸ்ஸுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் லாபம் என்ருல் இரண்டாயிரம் பஸ்களுக்கு 3 கோடி ரூபாய் நமக்கு வரவேண்டும் என்று நான் சொன்னேன். ஆனுல் பெரும் அளவு நமக்கு நட்டம்தான் வருகிறது.

ஆகவே, இப்போது நாம் அடைகிற நட்டத்தைத் தவிர்க்க என்ன வழி என்பதைத் தான் நாம் சிந்திக்க வேண்டும். இது பற்றி உறுப்பினர்கள் பேசும்போது நான் நன்ருகக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஓர் உறுப்பினர் சொன்னுர். இன்னும் அதிகப்படியான பரிசோதகர்களை நியமிக்கவேண்டும் என்ருர். இன்னும் அதிகப்படியான பரிசோதகர்களை நியமிப்பதால் மட்டும் இது தீர்ந்துவிடும் என்று நான் எண்ணவில்லை. குறிப்பாக ஒருவழி தடம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அது தனியாரிடம் இருந்தபோது நாள் ஒன்றுக்கு 800 ரூபாய் வசூலாகிக் கொண்டிருந்தது. பிறகு



அரசு நடத்தத் தொடங்கியதும் 800-ல் இருந்து 600-க்குக் குறைந்தது. பிறகு 500 ஆகி, இதற்கென்றே பரிசோதகர்களை நியமித்த பிறகு 200க்குக் குறைந்து போய்விட்டது என்பது எனக்குத் தெரியும். அதிக பரிசோதகர்களைப் போடவேண்டும் என்பது சிறந்த மருந்தும் அல்ல. முறையும் அல்ல. மேற்கொண்டு, மேற்கொண்டு இன்ஸ்பெக்டர்களைப் போடுவது, அவர்களுக்கு சூப்பர்வைசர்களைப் போடுவது, ப்ளையிங் ஸ்க்குவாடுகளைப் போடுவது எல்லாம் செலவைத்தான் கூட்டிக்கொண்டே போகும்.

அதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் எதற்காக நாம் தேசியமாக்கவேண்டும் என்ற ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்கள். ஏன் நாட்டுடைமையாக்க வேண்டும்? நாட்டுடைமையாக்கியது தவறு போலத் தோன்றும். இதற்கு நான் சுருக்கமாகச் சொல்கிற விளக்கம், பதில் நாட்டுடைமை யாக்குவதா, வேண்டாமா என்பது அல்ல இப்போதுள்ள பிரச்சினை. எங்களுக்கு அண்ணு அவர்கள் ஒரு வழியை வகுத்துக்கொடுத்து விட்டார்கள். அந்த வழி நின்றே தொடர்ந்து நடத்துவோம். அதில் மாறுதல் இல்லை. போக்குவரத்துத் துறையைப் பற்றிச் சொல்கிறபோது இரண்டு குறிப்புகளைச் சொல்லி, ஒன்று நாட்டு மக்களுக்குப் பெரிதும் பயன்படும் பணியாக இருக்க வேண்டும், அதே சமயத்தில் இது அரசின் வருமானத்தைப் பெருக்கித் தரவேண்டும். இந்த அடிப்படையில் நாட்டு மக்களுக்குப் பணி செய்ய தேசியமயமாக்கிவிட்டோம். இது பற்றி மறுசிந்தனை கிடையாது என்பதை மிகத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பின் நட்டத்தைத் தவிர்க்க வேறு ஏதாவது வழிகள் உண்டா? எனது நண்பர் மாண்புமிகு கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களுடைய ஜெயபேரிகை பத்திரிகையில் இரண்டாண்டுகளுக்கு முன்னுல் என்னைப் பற்றி எழுதியிருந்தார்கள். ஆதித்தனிடம் வேறு ஒன்றும் இல்லை. மூளை ஒன்று தான் இருக்கிறது என்பதாக. என்ன எண்ணத்துடன் எழுதினுர்களோ தெரியாது. அந்தக் குறிப்பைவெட்டி கையில் வைத்திருக்கிறேன்.

நட்டம் வராமல் தடுப்பதற்கு ஒரு வேளை கட்டணங்களை உயர்த்தி விடலாம் என்ற எண்ணம் ஓடலாம். அந்த எண்ணம் எங்களுக்கு ஓடவில்லை. அதே சமயத்தில் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழக அரசு போக்குவரத்து ஒன்றில்தான் கட்டணம் மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டரை பைசா தான். கேரளத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 3 பைசா. மைசூர் மாநிலத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 5 பைசா. ஆந்திர மாநிலத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 3·12 பைசா. மகாராஷ்டிரத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 3·6 பைசா. குஜராத்தில் 3.3 பைசா. ஒரிசாவில் ஒரு கிலோ மீடருக்கு 3.5 பைசா. பீகாரில் ஒரு கிலோ மீட்டருக்கு 4 பைசா. உத்தரப் பிரதேசத்தில்3·3 பைசா. நமது இந்தியத் துணைக் கண்டத்திலே தேசியமாக்கப்பட்ட பஸ் நிறுவனங்கள் 34-லும் நம்முடைய மாநிலம் போக்குவரத்துத் துறையில் இருக்கும் கட்டண விகிதம் தான் மிகவும் குறைவானது. இந்த 34-லேயும் என்ன இரவு 7-00
என்ன கட்டணங்கள் என்று வரிசையாக ஆராய்ந்து அறிந்து, துளைத்துத் துருவிப் பார்த்தால், இவ்வளவு குறைந்த கட்டணம் இந்த மாநிலத்திலே உள்ள இந்தப் பேருந்து நிறுவனத்தைத்தவிர வேறு எந்த இடத்திலும் இல்லை என்பதைக் காணமுடிகிறது. ஆகவே, சட்டென்று உயர்த்திவிடுவதா ? அப்படி உயர்த்துவதானுல் மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்கள் சொல்லிய இரண்டு இலக்கணங்களிலே முதல் இலக்கணம் அடிபடுகிறது. ஆகவே, கட்டணத்தை உயர்த்துவது என்பது அவர்கள் காட்டிய வழியிலே செல்வதாகாது.

மேலவையிலே நான் முன்பு பேசியபொழுது இந்தப் பேருந்துத் துறையை வருவாய் உடையதாக ஆக்கப் போவதில் துணிவுடையவனுக இருக்கிறேன் என்று கூறினேன். அப்பொழுது ஒருவர் சொன்னுர்கள். அப்படியானுல் நீங்களும் கட்டணத்தை உயர்த்தித்தான் ஆகவேண்டுமென்று. இல்லை, கட்டணத்தை உயர்த்தாமல், மறைந்த முதல

[1969மார்ச் 24

THIRU K. VINAYAKAM: Sir, on a point of clarification. There was the Madras State Transport Advisory Committee which has become defunct. It was doing some good work. Do the Government propose to revive it or leave it as it is ?

Also there was a proposal to give free passes to M.L.As. so that they could travel at any time all over the State and find out the mistakes in the working of the transport system. Is that the proposal he has in mind and he wants ratification for that from the Hon. Chief Minister.

THE HON. THIRU SI. PA. ADITANAR: I think, Sir, my hon. Friend, the Whip of the Opposition Party, is dragging me into deep waters. As far as the Committee is concerned, I believe in appointing committees that will be associated with the Government not only at the State level but also at the district level. I also believe that the late revered Chief Minister had given an assurance in this House that departmental committees would be appointed, and I will faithfully carry out the assurance given by the late Chief Minister.

As regards free passes for the M.L.As, I do not ask for anything free and I do not like to give anything free. If these passes are to be given, what is it that the Hon. Member has in mind as a return for this ? Will he do some checking so that the number of Checking Inspector's posts can be reduced ? There are also other questions which are involved in this matter. Therefore, regarding this question of free passes, if not to the Members as such, but to certain other persons who are representatives on the Transport side, I am thinking of doing something. But, I am not thinkin of giving anything free but in return for services like checking.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

(திரு. நா. காசிராமன் விளக்கம் கேட்க எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலேயே கேட்டிருக்க வேண்டும். விவாதம் முடிவுற்றது என்று சொன்ன பிறகு விளக்கம் கேட்பது நல்லதல்ல.

கோரிக்கை எண் 2-க்குதிரு. நா. காசிராமன் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**திரு. சி. கோவிந்தராசன் :** அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 2-மோட்டார் வண்டிச் சட்டங்கள்/நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 36,71,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 30-க்கு திரு. பி. வேலுசாமி திரு. சி. கோவிந்தராசன் ஆகியோர் கொடுத்த வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டன.



1969 மார்ச் 24]

திரு. கே. விநயகம் அவர்கள் கொடுத்தவெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்குவிடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி:–

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 17,19,98,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 43-க்கு திரு. கே. விநயகம் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. சி. கோவிந்தராசன், திரு. பி. வேலுசாமி ஆகியோர் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 43-சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,00,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிந்து, மீண்டும் பேரவை நாளை காலை 9 மணிக்குக் கூடும். இரவு 7-15

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

9 பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

## *A. Statutory Rules and Orders.*

100. Notification issued with G.O.Ms. No. 2485, Home, dated the 30th August 1968 in regard to exemption from payment of the tax leviable in respect of the car bearing registration number MDB 5905, belonging to Dr. Leo Dale Haws, United States Agency for International Development Mission for India. [*Laid on the table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931].

## *B. Reports, Notifications and other papers.*

106. Notification issued with G.O. Ms. No. 2180, Rural Development and Local Administration, dated the 25th October 1968 in regard to the date of coming into force of the Madras City Municipal Corporation and District Municipalities (Amendment) Act, 1968.

மைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியபடி, நெடுஞ்சாலை பஸ் போக்குவரத்து அரசுக்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற முறையில், நடத்திக்காட்டமுடியும் என்ற எண்ணம் உடையவனாக இருக்கிறேன்.

அது என்ன என்பதை விரிவாக வெளியிட இருக்கிறேன். இன்னும் சிற்சில பகுதிகள் முடிவாகாமல் இருக்கின்றன. ஆனால் ஒன்று மட்டும் இப்பொழுது சொல்லிவிடுகிறேன். அது கட்டணத்தை உயர்த்தப் போகின்ற வழியும் இல்லை; பஸ் போக்குவரத்திலே உள்ள பயணிகளுக்கான வசதிகளைக் குறைக்கப்போவதும் இல்லை. வசதிகள் கூடித்தான் இருக்கும். அதே நேரத்திலே இதிலே இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் வரக்கூடிய வழியை வெகு சீக்கிரமே வெளியிட இருக்கிறேன் என்பதை, நான் நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இப்பொழுது அதை வெளியிடாததற்கு நண்பர்கள் என்னை மன்னிக்கவேண்டும். தலைவர் ஆக இருக்கின்றவர்கள், ஏற்றுக்கொண்டதற்கு பிறகு தான் மற்றவர்களுக்குச் சொல்லவேண்டுமென்ற முறைப்படி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை வேண்டுமென்ற அளவிலே, இதிலே நான் காத்துக்கொண்டிருக்கிறேன். நிச்சயமாக இதை நிறைவேற்றுவேன், என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

தொழிலாளர்களைப்பற்றி நான் ஒன்று சொல்லவேண்டும். இங்கிருக்கக்கூடிய நண்பர்கள் சிலர், என்னைப்பற்றி அறியாது, பணக்காரர் என்று பொதுமக்களுக்கு என்மீது மாசு கற்பிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு இருக்கிறார்கள். நான் 1948-ஆம் ஆண்டிலிருந்து இரண்டு தொழிற்சங்கங்களுக்குத் தலைவராக இருந்திருக்கிறேன். விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்து, விவசாயிகளின் கூலி உயர்வுக்காகப் பாடுபட்டு, சிறைப்படுத்தப்பட்டு, கைவிலங்கிடப்பட்டு, நண்பர் ராமமூர்த்தி அவர்கள் பெரிய அளவிலே பாராட்டினார்கள்—தொழிலாளர் சங்கத்திலே ஏறத்தாழ 12 ஆண்டுகளுக்கு மேல் தலைவராக இருந்து பணியாற்றியிருக்கிறேன். பல கோரிக்கைகளை நிறைவேற்றப் போராடி தொழிலாளர் ஊர்வலம் நடத்தி, வெற்றி பெற்றிருக்கிறேன். எனவே தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை எப்படிக் கவனிக்கவேண்டும் என்பது எல்லாம் எனக்குத் தெரியும்.

தொழிலாளர்களுக்கு நான் சொல்வது எல்லாம் நான் அவர்களுடைய நலன்களில் பெரிதும் அக்கறைகொண்டவன். அவர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் சோமசுந்தரம் குழு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. இரண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறது. ஒன்று எப்படி வருவாயை இந்தத் துறையில் உயர்த்துவது, இரண்டாவது தொழிலாளர்களை எப்படி ஊக்குவிப்பது என்பதுபற்றியது. அவர்கள் முடிவுசொல்லவேண்டுமென்றுதான் காத்துக்கொண்டிருக்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. தொழிலாளர்கள் கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டினால், இது இவ்வளவு செலவாகும் என்று சொன்னால், செலவு பெருத்த அளவிலே இல்லையென்றால், நான் உடனே நிறைவேற்றித் தருகிறேன் என்பதைப் பகிரங்கமாகச் சொன்னதுண்டு. மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசியபோது மாணவர்களுடைய பிரச்சினைபற்றி எடுத்துரைத்தார்கள். அது தீர்க்கப்பட வேண்டிய ஒன்று.

மாணவர்கள் வேறு, தொழிலாளர்கள் வேறு என்ற எண்ணம் அறவே நீக்கப்படவேண்டும். ஒரு தொழிலாளர் என்னைச் சந்திக்கும் போது தன்னுடைய மகன் மாணவனாக இருப்பதாகச் சொன்னார். அப்படியானால் மாணவர் வேறு, தொழிலாளர் வேறு என்று சொல்லமுடியாது. அவர்கள் இருவரும் ஒரே ரத்தம்தான், வேறு இல்லை. மாணவர்கள் சமுதாயத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு நல்லுறவை வளர்ப்பதற்காக நல்ல எண்ணம் நிலவச் செய்வதற்காக ஒரு குழுவை அமைப்பதாக, அதற்கு யார் யார் உறுப்பினர்கள் என்பதைப்பற்றி முடிவெடுக்கப்போவதாகச் சில பேர்களிடம் சொன்னதுண்டு. தொழிற் சங்கத்திலே உள்ள தலைவர்களும், மாணவர்கள் தலைவர்களும் ஒன்று கூடிப் பேசினால் பகைமை உணர்ச்சி ஏற்படாது. ஒருவரை ஒருவர்



நன்றாகத் தெரிந்துகொள்ளாததுதான் பகைமை உணர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது. ஒருவரை ஒருவர் நன்றாகத் தெரிந்து கொண்டதற்குப் பிறகு நமக்குள் பகைமை இருக்கமுடியாது. (சிரிப்பு.) மாணவர்கள் தலைவர்களுக்கும், தொழிலாளர்கள் தலைவர்களுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுவதற்காக, அவர்கள் மேசையைச் சுற்றி உட்கார்ந்து, கூடிப்பேசவேண்டும். மாணவர்களும் தொழிலாளர்களும் ரத்தத்தோடு ரத்தமாகத்தான் இருப்பார்கள், அவர்கள் ஒருவரை ஒருவர் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம், பிரச்னையைத் தீர்த்துவிடலாம். எனவே நான் தொழிலாளர்களுக்கு அப்பாற்பட்டவன் என்று கருதினால் அது தவறு. மாணவர்கள் சமுதாயத்தின் மேல் எனக்கு மிகுந்த நல்ல எண்ணம் உண்டு. ஆனால் அதன் காரணமாக தொழிலாளர்களிடம் அது இல்லை என்று எண்ணினால் அது தவறு. இரண்டு பேர்களையும் ஒன்றாக இணைத்துப் பிணைத்து நல்ல காரியங்களை நிறைவேற்ற முடியுமென்று கருதுகிறேன்.

மேலும் பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். எனக்கு இந்தத் துறை புதிய துறை என்ற காரணத்தாலே உடனடியாக அவற்றிற்கு முடிவு சொல்லாத நிலையில் இருக்கிறேன். அவற்றை நான் குறித்து வைத்துக்கொண்டு இருக்கிறேன். எந்தக் கருத்தையும் நான் மறந்துவிடுபவன் அல்ல, நீங்கள் சொன்னால் அதற்குப் பதில் சொல்லாமல் நான் நழுவி விட்டுவிடுபவன் அல்ல. அவைபற்றிய முடிவை விரைவிலே காணமுடியும் என்பதைச் சொல்லிக்கொண்டு, இறுதியாக என்னுடைய கோரிக்கைகளின்மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை அவற்றைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அன்போடு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு டீ. மார்டின் :** முன்பு 25, 26 தேதியன்று பஸ்கள் ஓடவில்லை என்ற காரணத்திற்காக நஷ்டம் 7·50 லட்சம் ரூபாய் என்று எழுதி அதற்காக காரணம் காட்டப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சிபா. ஆதித்தனார் :** நான் அதைக் குறித்து வைத்திருக்கிறேன். ஏன் அந்த நஷ்டம் அப்படிக் காண்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதை நிச்சயமாக நீங்கள் தெரிந்துகொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

**திரு. கொ. ரா. ஞானசம்பந்தன் :** நம்முடைய அரசுடைமையாக்கப்பட்ட வகையில் இன்னும் அந்தத் துறையை முன்னேற்றுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்போவதாகச் சொன்ன அமைச்சர் அவர்கள் நஷ்டக் கணக்கைக் காட்டிப் படித்துக் காண்பித்தார்கள். அதே நேரத்தில் மறைந்த முதலமைச்சர் அவர்களுடைய முறையில் நடத்தப் போகிறேன் என்றும் சொன்னார்கள். அப்படியானால் அவர்கள் முன்னால் சொல்லியதற்கு முரணாக இருக்கிறது. இந்த அரசினுடைய கொள்கையைத் தெளிவாக விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதில் எந்த விதமான முரண்பாடும் இல்லை. மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகக் கொள்கையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதை வாசித்தேன். மீண்டும் ஒரு முறை வாசித்தால் உறுப்பினர் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். அவர்கள் சொல்லிய விளக்கத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கக்கூட—பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கக்கூட—எனக்கு அருகதை இடையாது. மறைந்த முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டு விட்டார்கள். அந்த இரண்டு தண்டவாளத்தில் இருந்து அணுவளவு கூடப்பிசகாமல் இந்த அமைச்சு செல்லும் என்ற உறுதியைச் சொல்லுகிறேன்.

## இணைப்பு I

[145-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

*கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களில் 1968-69-ஆம் ஆண்டுகளில் எய்திய முன்னேற்றம் பற்றிய ஆய்வுரை.*

1968-69-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் மேலும் ஓராண்டு முன்னேற்றம் அடைந்துள்ளது. கூட்டுறவின் கீழ் வரும் பெருந் திட்டங்கள், வேளாண்மைக் கடன் வசதி, கூட்டுறவு விற்பனை, கூட்டுறவுப்பண்ணை, பயன் கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்குத் தொடர்புடையனவாகும்.

2. இந்த ஆண்டில் வேளாண்மைக் கடன் வழங்கும் சங்கங்கள், நில அடைமான வங்கிகள் ஆகியவற்றின் மூலம் குறுகிய கால நீண்டகால வேளாண்மைக் கடன் வழங்கப்படுவதில் சீரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது கடன் வழங்கு நிறுவனங்களின் மூலம் கடன் வசதியளிக்க ஊக்கமளிப்பதற்காக கிணறுகள் வெட்டவும், விசை ஏற்றங்களை நிறுவவும் அளிக்கப்பட்டும், அரசின் நீண்டகால தக்காவிக் கடன்கள் 1-4-1968 முதல் நில அடைமான வங்கிகள் மூலமாகவே அளிக்கப்பட்ட வேண்டுமென்று அரசு கட்டளையிட்டது. 1968-69-ல் நில அடமான வங்கிகள் நீண்டகாலக் கடன்களை வழங்குவதில் கண்ட முன்னேற்றம், அவற்றின் மீது சுமத்தபட்ட பொறுப்பைக் கூட்டுறவு நிறுவனங்கள் தகுந்த முறையில் செயல்படுத்துமென்பதை ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பித்துக்காட்டியுள்ளது. 1967-68-ல் மொத்தம் ரூ. 6·96 கோடி வழங்கப்பட்டது. 106 தொடக்க நில அடைமான வங்கிகளுடன் கூடிய மத்திய நில அடைமான வங்கி 1969 பிப்ரவரி வரையில் மொத்தம் ரூ. 11 கோடி வழங்கியுள்ளது. இதுவரையில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் ரூ. 17 கோடியாகும். ரூ. 12 கோடி கடன் வழகப்படவேண்டும் என்ற குறிக்கோள் அளவு முடிவுசெய்யப்பட்டிருக்க இந்த நிதியாண்டில் ரூ. 13 கோடி வழங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969-70-ல் நீண்ட காலக்கடன்களை ரூ. 14 கோடியாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காம் திட்டக் காலத்தில் மொத்தம் ரூ. 90 கோடி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

3. தொடக்க வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் மூலமாகக் கூட்டுறவு மத்திய வங்கிகள் வழங்கிய குறுகியக்கால, நடுத்தரக்காலக் க்டன்களும் மன நிறைவளிப்பதாய் இருந்துவந்தது. 1969 ஜனவரி இறுதி வரையில் இச்சங்ககங்கள் ரூ. 38·40 கோடி தொகையை வழங்கியுள்ளது. 1967-68-ல் ரூ. 37·26 கோடி வழங்கப்பட்டது ; முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1968-69-ல் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு சுமார் 4 கோடி ஆகும். 1969-70-ல் ஆண்டில் ரூ. 62·50 கோடி கடன் வழங்கப்படவேண்டுமென இலக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நான்காம் திட்டக் காலத்தின் இறுதி ஆண்டில் ரூ. 80 கோடி வழங்கும் நோக்குடன் வழங்கும் கடன் தொகையை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், வேளாண்மை உற்பத்திக்குழு மதிப்பிட்ட ரூ. 160 கோடி மொத்த வேளாண்மைக் கடன் தேவைகளில் குறைந்தது 50 சதவீதம் நிறைவு செய்யப்பட முடியும்.

4. நெல்கொள்முதல் செய்தல், அரைத்துப் பதப்படுத்துதல் இவற்றில் பெரிதும் முன்னேற்றம் ஏற்பட்டது. 1968-ம் ஆண்டு சம்பா, குறுவைப் பருவத்தில் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் 2·37 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்தது. இதில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் கொள்முதல் செய்த அளவு 1·30 லட்சம் டன் ஆகும். 1969-ல்சம்பா அறுவடைப் பருவத்தில் ரூ. 2·75 கோடி மதிப்பிடக்கூடிய 55,000 டன் நெல் அளவை இந்த சங்கம் ஏற்கனவே கொள்முதல் செய்துள்ளது. இச் சங்கம் ரூ. 38 லட்சம் செலவில் நிறுவியுள்ள



நவீன அரிசி ஆலையுடன், மாதம் ஒன்றுக்கு 9,000 டன் மொத்த திறனுடன் மற்றும ஐந்து நவீன அரிசி ஆலைகளை நிறுவும் பணியும் நிறைவேறி வருகிறது. இந்த ஆலைகள் விரைவல் செயல்படும். இம்மாவட்டத்திலுள்ள இந்த ஆலைகளும் மற்ற அரிசி, ஆலைகளும் தயாரிக்கும் தவிடு ஆதாயமுள்ள வகையில் பயன்படுத்தப்பட, திருவாரூரில் ரூ. 20 லட்சம் செலவில் மேற்படி சங்கம் அரிசித் தவிடு எண்ணெய் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஏழு மாவட்டங்களில் மணிக்கு 2 டன் அரைக்கும் திறனுள்ள 7 நவீன அரிசி ஆலைகளை மேற்கொண்டு நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆலைகள் 1969-70-ல் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

5. விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கவும் பொதுமக்களுக்குப் பயன்படும் பொருள்கள் நியாய விலையில் கிடைக்கவும் 50,000 மக்கள் தொகையும் அதற்கு மேற்பட்டுள்ள நகரங்களிலும் பெருநகர்களிலும் மொத்த வணிக, தொடக்கப் பண்டசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 30 மொத்த வாணிகப் பண்டசாலைகள் உள்ளன ; இவற்றுடன் 534 சில்லறைக் கிடங்குகள் இணைக்கப்பட்டுள்ளன. 1,704 தொடக்கப் பண்டசாலைகளும் உள்ளன. மொத்த வணிகப் பண்டசாலைகள் 1967-68-ல் மொததம் ரூ. 29·47 கோடி விற்பனை செய்துள்ளன. 1968 நவம்பருடன் முடிவுறும் 5 மாதங்களில் ஏற்பட்ட விற்பனை ரூ. 12·16 கோடி. இவற்றுடன் 2 லட்சமும் அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகையுள்ள மாநகரத்திலும் நகரங்களில் துறைப்பண்டசாலைகள் செயல் பட்டு வருகின்றன. 1967-68-ல் அத்தகைய பண்டசாலைகள் ஆறு இருந்தன; 1968-69-ல் எட்டு பண்டசாலைகள் செயல்பட்டு வருகின்றன. 1969-70-ல் மேலும் ஐந்து பண்டசாலைகளை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு அங்காடிகள் எனப் பெயர் பெற்ற இத்துறைப் பண்டசாலைகள் 1968-69-ல் (1969 ஜனவரி வரையில்) ரூ. 2·87 கோடிக்கு மொத்தம் விற்பனை செய்துள்ளன. 1967-68-ல் ரூ. 3·75 கோடி தொகைக்கு விற்பனை செய்துள்ளன.

6. கடந்த காலத்தில் கூட்டுறவு நிலையங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாகக் குறையீடுகள் வந்தன. இவ்வாறு காலதாமதம் ஏற்படுவதற்குப் போதுமான பணியாளர்கள் இல்லாமையும் ஒப்பளிக்கப்பட்ட பதவிகளில் பணியாளர் நியமனம் செய்யப்படாமையுமே காரணமென்று அறியப்பட்டது. இநத ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்ளும் வணிக அலுவல்கள் பெருகியுள்ளதைக் கணக்கில் கொண்டு, பணியாளர் எண்ணிக்கையை வரையறுக்கும் அவற்றின்மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்புகளை முற்றிலும் முறையை அரசாங்கம் திருத்தியமைத்துள்ளது. கூடுதல் பணியாளர்களை நியமிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்துடன், தணிக்கையின் தரத்தை உயர்த்தும் வகையில் நேரிடை தணிக்கையாளர்களின் பணியை மேற்பார்வையிடவும் கூடுதல் அலுவலக நியமனத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளினால், அடுத்த 6 திங்கள்களில் தணிக்கை செய்யவேண்டிய கணக்குகள் தணிக்கையிடப்பட்டு முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

7. வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளை ஈடுசெய்ய அண்மைக் காலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க வளர்ச்சி திறம்பட நிறைவேற்ற இந்த இயக்கம் எய்திய முன்னேற்றத்தை மதிப்பிடுவது திறமையை உயர்த்துவதும் அவசியமாகிறது. எனவே, இம் மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் செயல்படுவதை ஆராய்ந்து சரியான வகையில் அதன் சீர்திருத்தத்திற்கும் சிரமைப்பிற்கும் செயற் குறிப்புகளை வகுக்க குழு ஒன்றினை அமைப்பது அவசியமென்று அரசு கருதியது. இதன்படி, 1968 பிப்ரவரியில் திரு கே. சந்தானம் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. கூட்டுறவு நிறுவனங்களின் அமைப்பு, குழுக்களின் அமைப்பு, உறுப்பினர்களின் பதவிக்காலம், அக்குழுக்களின் தேர்தல், டி.யூ.சி.எஸ். செயல்படும் விதம் ஆகியவை பற்றி இச்குழு இடைக்கால அறிக்கைகளை அளித்தது டி.யூ.சி.எஸ். குறித்த அறிக்கை

யின்மீது ஆணைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. மற்றொரு இடைக்கால அறிக்கை அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. இக் குழுவின் இறுதி அறிக்கை விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

8. கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கு 1967-68, 1968-69 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட மொத்தச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| திட்டத்தின் பெயர். (1) | 1967-68-ல் ஏற்பட்ட செலவு. (2) | 1968-69-ல் நிதி ஒதுக்கம். (3) | 31-12-68 வரையில் செய்த செலவு. (4) |
|---|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்). | | |
| கூட்டுறவுக் கடன்—மத்திய நில அடைமான வங்கி ஈட்டுப் பத்திரம், விற்பனை செய்தல், தயாரித்தல், சர்க்கரை ஆலைகள், பயன்துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், கல்விப் பயிற்சி அளித்தல், பலவகைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு அரசாங்கம் அளிக்கும் தொகை இதில் அடங்கும். | 333·50 | 451·25 | 351·29 |

பல்வேறு திட்டங்கள் குறித்து எய்திய முன்னேற்றம் அடுத்து வரும் பத்திகளில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

## I. வேளாண்மைக் கடன் வசதி.

9. வேளாண்மைக் கடன் வழங்குவதில் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் எய்திய முன்னேற்றத்தைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

### குறிக்கோள் அளவும் சாதனைகளும்.

| (1) | 1967-68-ல் நிலைமை. (2) | 1968-69-ம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு. (3) | 1968-69-ல் எய்திய சாதனை (1969 ஜனவரி வரையில்). (4) |
|---|---|---|---|
| (i) கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள கிராமங்களின் சதவீதம். | கிராமங்கள் அனைத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. | | |
| | (ரூ. கோடியில்.) | | |
| (ii) கடன் வழங்குதல்— | | | |
| குறுகியகால, நடுத்தரக் காலக் கடன்கள். | 37·26 | 57·65 | 38·40 |
| நீண்டகாலக் கடன்கள் .. .. | 6·96 | 12·00 | 11·00 |



| (1) | 1967-68-ல் நிலைமை. (2) | 1968-69-ம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு. (3) | 1968-69-ல் எய்திய சாதனை (1969 ஜனவரி வரையில்.) (4) |
|---|---|---|---|
| | (ரூ. கோடியில்). | | |
| (iii) மத்திய வங்கியால் திறக்கப்பட்டிருக்கும் கிளைகளின் எண்ணிக்கை. | 99 | 30 | 11 |
| (iv) பங்கு மூலதனம் (அரசின் பங்கு மூலதனம் நீங்கலாக) இந்த ஆண்டின் இறுதியில் எய்தப்படும்.— | | | |
| தொடக்கச் சங்கங்கள் .. .. .. | 9·94 | 11·21 | 11·06 |
| மத்திய வங்கிகள் .. .. .. | 7·38 | 8·13 | 7·83 |
| மாநிலக் கூட்டுறவு வங்கி .. .. | 2·10 | 2·62 | 2·11 |
| (v) வைத்துவரப்படும் வைப்பு நிதி— | | | |
| தொடக்கச் சங்கங்கள் .. .. .. | 3·28 | 4·20 | 3·48 |
| மத்திய வங்கிகள் .. .. .. | 21·08 | 23·49 | 21·83 |
| மாநிலக் கூட்டுறவுச் சங்கம் .. .. | 10·13 | 11·50 | 10·22 |

கடன் வழங்கும் நிறுவனங்கள் தங்கள் கடனளிக்கும் திட்டத்தைப் பெருக்கும் வகையில் அவற்றிற்குப் பங்கு மூலதனம் அளித்தல், நிர்வாகப் பணியாளர்களின் செலவை ஈடு செய்ய அவர்களுக்கு உதவித் தொகை அளித்தல், மத்திய நில அடைமான வங்கியின் கடன் பத்திரங்கள்மீது அசலும் வட்டியும் செலுத்துவதற்கு உத்திரவாதம் அளித்தல் போன்ற வழிகளில் அரசு அவைகளுக்குப் போதிய உதவி வழங்கி வருகிறது. 1968 டிசம்பர் வரையில் ரூ. 290·92 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில் ரூ. 242·77 லட்சம் செலவாகியது.

10. கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் வாங்கும் சக்தியைப் பெருக்கும் பொருட்டு, கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசு முதலீடு செய்து வருகிறது. 31—12—1968 வரை கீழே குறிப்பிட்டுள்ளபடி மொத்தம் ரூ. 4·80 கோடி இவ்வகையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| தமிழ்நாடு கூட்டுறவு வங்கி .. .. .. .. | 126 |
| மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் .. .. .. | 195 |
| சென்னை கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கி .. | 45 |
| தொடக்கக் கடன் வழங்கு சங்கங்கள் .. .. .. | 114 |

இது குறித்து மேலும் உதவியளிக்கும் தேவை, அவ்வப்போது மதிப்பிடப்படும்.

[1969 மார்ச் 24

யுள்ளது. மத்திய வங்கிகள் வைத்திருந்த வைப்புத் தொகை 1968, மார்ச் இறுதிவரையில் ரூ. 21·08 கோடி இருந்தது. இது 1969, ஜனவரி இறுதியில் ரூ. 21·83 கோடியாக உயர்ந்தது.

18. நீண்டகாலத் தக்காவிக் கடன்களை நில அடைமான வங்கிகள் மூலம் வழங்கும் அரசின் முடிவை ஒட்டி, கிணறுகள் வெட்டுதல், விசை யேற்றங்களை நிறுவுதல், நிலங்களைப் பண்படுத்துதல், டிராக்டர்களை வாங்கு தல் போன்ற பணிகளுக்கு அளிக்கப்படும் நீண்டகாலக் கடனைத் தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான 106 தொடக்க நில அடைமான வங்கிகள் வழங்கு கின்றன. இக்கடன் திட்டத்தின் பெரும் பகுதி உணவு உற்பத்திப் பெருக்கத்தை எய்த உதவுகிறது. மத்திய நில அடைமான வங்கி வெளியிடும் கடன் பத்திரங்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான உத்தர வாத வரம்பை இந்த ஆண்டில் ரூ. 30 கோடியிலிருந்து ரூ. 45 கோடிக்கு உயர்த்தியுள்ளது. இந்த வங்கிகள் வழங்கும் கடன்கள் குறித்துப் பின்பற்றப்படும் வழக்கமான நடைமுறை எளிதாக்கப்பட்டுள்ளது. பல சலுகைகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்கடன்களைப் பலரும் பெற வகை செய்வதற்கும் அவற்றை எளிதில் பெறுவதற்கும் கீழ்க்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன:—

(அ) கடன்கள் வழங்குவதில் ஏற்படும் கால தாமதத்தைப் போக்க கிளைகளே கடன்களை வழங்கும் வகையில் மத்திய நில அடைமான வங்கி வட்ட அளவில் கிளைகளைக் கொண்டுள்ளது ;

(ஆ) வில்லங்கச் சான்று தேவைப்படும் கால அளவு 23 ஆண்டு களிலிருந்து 13 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(இ) கடன் வாங்குவோரால் வழங்கப்படும் பங்கு மூலதனம் கடன் தொகையில் 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(ஈ) இதற்கு முன்னர் ரூ. 2,000 கடன் பெறுவதற்கே வகை செய்யப்பட்டிருந்ததற்கு மாறாக, ரூ. 5,000 வரையில் பெறப்படும் கடன் களுக்கு வில்லங்கச் சான்றுகள் வாங்குவதற்கான கட்டணம் செலுத்து வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது;

(உ) ஈடாக வைக்கும் சொத்தின் மதிப்பை யொட்டிக் கடன் வாங்கும் வரம்பு 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

(ஊ) தனிப்பட்டவர் வாங்கும் உயர் அளவுக் கடன் வரம்பு ரூ. 40,000-க்கு உயர்த்தப்பட்டது. முதலில் இந்த அளவு ரூ. 25,000 ஆக இருந்தது. கிணறுகள் வெட்டுதல், விசையேற்றங்களை நிறுவுதல் டிராக் டர்களை வாங்குதல், நிலத்தைப் பயன்படுத்தல் ஆகிய கூட்டுறவுக் காரியங் களுக்காக இவை வழங்கப்படுகின்றன.

நில அடைமான வங்கிகளின் நலனை பாதுகாக்கும் பொருட்டு இந்த ஆண்டில் நில அடைமான வங்கிகள் சட்டத்தில் புதிய விதித்துறை செய்யப் பட்டது. 1968 ஜூலை 4-ம் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு அவற்றின் சார்பாக எழுதிக் கொடுக்கப்பட்ட அடைமானங்கள் குறித்து (அரசுக்குச் சேர வேண்டிய நில வருவாய் நீங்கலாக) பிற தொகைகளைவிட இந்த வங்கி களுக்கு முன் உரிமை இந்த விதித்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

19. இந்த ஆண்டில் வழங்கப்பட வேண்டுமென்ற ரூ. 12 கோடி இலக்கு முடிவு செய்யப்பட்டிருக்க, இந்த ஆண்டில் நில அடைமான வங்கிகள் இதுவரையில் (1969 பிப்ரவரி) ரூ. 11 கோடி வழங்கியுள்ளது. 1967–68–ல் ரூ. 6·96 கோடியே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க தாகும். மத்திய நில அடைமான வங்கி அதன் இயல்பான வேலைத் திட்டங்களுக்காக வெளியிட்ட கடன் ஈட்டுறுதி ஆவணங்களுக்கு ரூ. 2·90 கோடி அளவில் அரசு தொகை வழங்கியுள்ளது. 1969–70-ம் ஆண்டின் குறிக்கோள் அளவு ரூ. 14 கோடி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1969–70 மத்திய நில அடைமான வங்கி வெளியிடும் கடன் ஈட்டுறுதி ஆவணங்களுக்கு ரூ. 4 கோடி அளவில் அரசு தொகை வழங்கும்.



1969 மார்ச் 24]

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நில அடைமான வங்கிகள் ரூ. 90 கோடி அளவிற்கு நீண்டக் காலக் கடன்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

20. தனது இயல்பான கடன் வழங்கும் திட்டம் ஒருபுறமிருக்க, வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தின் உதவியுடன் மத்திய நில அடைமான வங்கி சிறப்பு வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது. மேற்சொன்ன கழகம் மறு கடன் வசதிகளைக் பெருமளவில் அளித்து வேளாண்மை தொடர்பான வளர்ச்சி திட்டங்களுக்கு உதவ முன் வந்துள்ளது. மத்திய நில அடைமான வங்கி, மாநில அரசும் வேளாண்மை மறுகடன் உதவிக் கழகமும் ஒப்புக்கொண்ட விகிதாச்சாரபடி நிதி வழங்கு சிறப்பு வளர்ச்சி கடன் ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிடுவதன் மூலம், இத்திட்டங்களின்கீழ் கடன்கள் வழங்குவதற்குத் தேவையான நிதி வசதியைத் திரட்டுகிறது. 1968–69-ல் சிறப்பு வளர்ச்சி கடன் ஈட்டுறுதி ஆவணங்களுக்கு மாநில அரசு ரூ. 20 லட்சம் வழங்கி யுள்ளது. 1969–70-ம் ஆண்டிற்கு ரூ. 60 லட்சம் வழங்கவும் அரசு கருதியுள்ளது.

21. மேற்சொன்ன கழகத்தின் உதவியுடன் நிறைவேற்றுவதற்கு ஏற்கெனவே மேற் கொள்ளப்பட்ட திட்டங்களில் பரம்பிக்குளம், ஆழியாறு திட்டத்தின்கீழ் நிலத்தைப் பயன்படுத்தும் பணி இறுதிக்கட்டத்தில் உள் ளது. இத்திட்டத்தின் 75,000 ஏக்கர் கீழ் பயன்படுத்துவதற்கு ரூ. 375 லட்சம் ஒதுக்கப்பட்ட கடன் இலக்கில் நில அடைமான வங்கிகள் இதுவரையில் (1969 ஜனவரி ) சுமார் 58,840 ஏக்கரைப் பயன்படுத்த ரூ. 305 லட்சம் வழங்கியுள் . இத்திட்டம் முழுவதும் 1969–70 முற்பகுதியில் முடியு மென எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத் தினிடமிருந்து பெறும் உதவியுடன் இதுவரையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள பிற திட்டங்களைக் கீழே உள்ள விவர அறிக்கை காட்டும்:—

| திட்டத்தின் பெயர். | மொத்தச் செலவு. | வேளாண்மை மறு கடனுதவி நிறுவனம், மாநில அரசு ஆகியவை களின் பங்கு. | |
|---|---|---|---|
| | | வேளாண்மை மறு கட னுதவி நிறுவ னத்தின் பங்கு. | அரசின் பங்கு. |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 1 புதுக்கோட்டையிலே கிணறு தோண்டும் திட்டம். | 92·50 | 83·25 | 9·25 |
| 2 தொண்டாமுத்தூர், பெரிய நாய்க்கன்பாளையம் ஆகிய இடங்களில் கிணறு தோண் டும் திட்டம். | 168·00 | 165·20 | 16·80 |
| 3 தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்னை வளர்ச்சி. | 31·50 | 23·63 | 7·87 |
| 4 கன்னியாகுமரி மாவட்டத் தில் ரப்பர் தோட்ட வளர்ச்சி | 24·00 | 18·00 | 6·00 |
| 5 நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலைத் தோட்டங்கள் வளர்ச்சி. | 50·00 | 37·50 | 12·50 |

11. வசதி குறைந்த உழவர்களுக்கும், வசதியற்ற உழவர்களுக்கும், நிலமற்ற குத்தகைதாரர்களுக்கும், போதுமான அளவு கடன் வழங்குவதற்கான, கடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊக்கமளிப்பதன் பொருட்டு, தொடக்கச் சங்கங்களும் கூட்டுறவு மத்திய வங்கிகளும் உருவாக்கிய மீளாக் கடன் சிறப்புச் சேம நிதிக்கு அரசு நேரடியாக மானியம் வழங்கி வருகிறது. அதாவது, உழவர்களில் மிகவும் வறிய நிலையிலுள்ளவர்களின் கடன் நிலுவைகளுக்காக தொடக்கச் சங்கங்களுக்கு அப்படியே 12 சதவீத மானியமும், கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு 4 சதவீத மானியமும் அரசு வழங்கி வந்துள்ளது. இவ்வாறு 1968-69-ல் மொத்தம் ரூ. 6 லட்சம் அரசு வழங்கியுள்ளது. 1967-68-ல் அரசு 3·66 லட்சமே இவ்வகையில் வழங்கப்பட்டது. மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்கச் சங்கங்கள், ஆகியவற்றின் மீளாக் கடன் சிறப்புச் சேம நிதிக்கு இதுவரையில் அரசு ரூ. 101 லட்சம் வழங்கியுள்ளது.

12. வேளாண்மைக் கடனை உரியகாலத்தில் வழங்கும்பொருட்டு, முன்னதாகவே, உழவர்களின் கடன் தேவைகள் மதிப்பிட்டு, அறியப்பட்டு, பயிர் வேலைகள் தொடங்குவதற்கு முன்னரே அந்த ஆண்டுக்கு ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்படும் கடன் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளில் கடன் வழங்கு சங்கங்கள் உழவர்களுக்கு வழங்கும் கடன், வசதி உற்பத்தி அடிப்படையில் அமைந்து விட்டது. எவ்வளவு ஏக்கர் பரப்பில் பயிரிடப்படுகிறது, பயிரிடப்பட்ட பயிர்கள் எவ்வகையின், முனைப்பான வேளாண்மை முறைகள் கையாளப்பட்டுள்ளனவா என்பதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டே சாகுபடிக் கடன்கள் வழங்கப்படுகின்றன. உரங்கள், மற்றும் பிற உழவுத் தொழில் தேவைப் பொருள்கள் வடிவிலும் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன.

13. 8,792 தொடக்க வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் கிராம அளவில் உழவர்களுக்குத் தேவைப்படும், குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களை வழங்குகின்றன ; இவை, மாவட்ட அளவில் 15 கூட்டுறவு மத்திய வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மத்திய வங்கிகள், தமிழ்நாடு கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் வழங்கும் கடன் தொகை, ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இம் மாநிலத்தில் 1965-66, 1966-67, 1967-68 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன் முறையே ரூ. 30·95 கோடி ; ரூ 31·41 கோடி, ரூ. 37·26 கோடி ஆகும். 1968-69 (1969 ஜனவரி வரையில்) கடன் வழங்கு நிறுவனங்கள் ஏற்கெனவே ரூபாய் 38·40 கோடி கடன் வழங்கியுள்ளன. இம்மாநிலத்தில் நான்காவது திட்டத்தின் இறுதி ஆண்டில் உழவர்களுக்கு மொத்தம் ரூ. 160 கோடி கடன் தேவைப்படுமென வேளாண்மை உறபத்திக் குழு மதிப்பிட்டுள்ளது. இத்தொகையில் குறைந்தது 50 சதவீதம் தொகையாவது வழங்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இயலும் வகையில் கடன் வழங்குவதை ஆண்டுக்கு ஆண்டு அதிகப்படுத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. தங்கள் கடன் தொகை முழுவதையும் பெற உழவர்களுக்கு இயலும் வகையில், உழவர் ஒருவர் குறுகிய காலக் கடனாக வாங்கும் உயர் அளவு, பதிவு செய்த கரும்பு பயிரிடுவோர் சம்பந்தமாக ரூ. 20,000 ஆகவும், பிற பயிர்கள் பயிரிடுவோர் சம்பந்தமாக ரூ. 15,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. பதிவு செய்த கரும்பு பயிரிடுவோர் ஒருவர் பிற பயிர்களையும் விளைவித்தால் அவர் மொத்தம் ரூ. 35,000 வரையில் கடன்பெற முடியும். நடுத்தர காலக் கடனுக்காக உயர் வரம்பு ரூ. 10,000-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

14. போதுமான கடனையும், விதைகள், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் முதலிய பிற வேளாண்மைத் தேவைகளையும் உழவர்களுக்கு அளிப்பதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட மாவட்ட மும்முர வேளாண்மைத் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் சம்பந்தமாக வாழை, கரும்பு, தென்னை, வேர்க்கடலை, காய்கறிகள், புகையிலை, சிறுதானியங்கள், சோளம், பருத்தி முதலிய பிற பயிர்கள் சம்பந்தமாகவும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2,223 கிராமங்கள் இத்திட்டத்தின்கீழ் வருகின்றன ; இத்



திட்டத்தின்கீழ் 4·50 லட்சம் மொத்த உறுப்பினர்களைக் கொண்டு 572 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. 1968-69-ல் (1969, ஜனவரி வரையில்) ரூ. 4·74 கோடி மொத்தக் கடன் வழங்கப்பட்டது ; 1967-68-ல் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 3·93 கோடியேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

15. நெல், கேழ்வரகு, சோளம், வேர்க்கடலை, பருத்தி இவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில் செயல்படுத்தப்படும். முழு வேளாண்மைப் பகுதித் திட்டம், செங்கற்பட்டு, கோயம்புத்தூர், மதுரை திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது. 12·27 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 3,505 கடன் வழங்கும் சங்கங்கள், 1968-69-ல் இத்திட்டத்தை நிறைவேற்றச் செயல்பட்டு வருகின்றன. 1968-69-ல் (1969, ஜனவரி வரையில்), இப்பகுதிகளில் உழவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் ரூ. 12·96 கோடியாகும். 1967-68-ல் வழங்கப்பட்ட தொகை ரூ. 11·62 கோடி.

16. ஆதாயமற்ற, நிதி வசதியற்ற சங்கங்களைக் கலைத்துவிட்டு, அவை ஆண்டுக்கு ரூ. 2 லட்சம் குறைந்த கடன் தொகை வழங்கும் வகையில் அவற்றை மாற்றும் திட்டம், 1968-69-ல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது. இம்மாநிலத்தில் இத்தகைய 4,800 சங்கங்கள் இருக்குமென மதிப்பிடப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்துவதற்கு முன்னர் 11,000 கடன் வழங்கு சங்கங்கள் இருந்தன. இப்போது இக் கடன் வழங்கு சங்கங்களின் எண்ணிக்கை 8,792 ஆகக் குறைத்து விடப்பட்டது. நிதிவசதியற்ற சங்கங்கள் நிதி வசதி மிக்க சங்கங்களுடன் இணைய விருப்பமில்லாத காரணத்தினால் இத்தகைய சங்கங்களின் எண்ணிக்கையை மேற்கொண்டும் குறைப்பதற்கு நிதி வசதியற்ற சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. கடன் வசதிகள் அதிகரித்துள்ள காரணத்தினால், ஆதாயமற்றவை என்று முன்பு கருதப்பட்ட. சங்கங்களில் சில, நிதி வசதியுள்ள சங்கங்களாக ஆகிவிட்டன என்பது உண்மைதான். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு மக்களின் ஆதரவுதான் வலுவூட்ட முடியும் என்பதையும் எத்தகைய கட்டாயமும் முறையும் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவாது என்பதையும் அரசு அறியும். எனினும், இத்தகைய சங்கங்களைக் கட்டாயமாக நிதிவசதியுள்ள சங்கங்களுடன் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்ககங்கள் சட்டத்தில் வகை செய்வதற்கான செயற்குறிப்பைக் கூட்டுறவுக் குழுவிடம் அரசு அனுப்பியுள்ளது.

17. கிராம, நகர்ப்புற சேமிப்புகளைத் திரட்டும் பொருட்டுக் பெருகி வரும் உற்பத்திக் கடன் தேவைகளைச் சரிக்கட்ட மத்திய வங்கிகளின் நிதிவசதியைப் பெருக்கவும் எல்லா வட்டத் தலைமையிடங்களிலும் பிற முக்கியமான இடங்களிலும் கிளைகளைத் தொடங்க மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. இதற்கு கிளைகளைப் பேணும் செலவை ஈடுசெய்ய உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த ஆண்டின் தொடக்கத்திலுள்ளவாறு 92 கிளைகள் செயல்பட்டு வந்தன ; இந்த ஆண்டின் 30 கிளைகள் தொடங்கப்பட வேண்டும். இலக்கியப் பட்டிருக்க இதுவரை மேலும் 11 கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. இது வரை செயல்பட்டு வரும் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்துள்ளது. கிராம மக்கள் வங்கிகளைப் பரவலாக பயன்படுத்த வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. வங்கிகளில் பணம் போடுவதனால் ஏற்படக் கூடிய நன்மைகளை மக்கள் அடையவேண்டும், என்பதுடன், கூட்டுறவு வங்கிகளில் பணம் சுட்டி வைக்கும் வழக்கம் மக்களிடையே ஏற்பட வேண்டும் என்பது இதன் நோக்கமாகும். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு கிளையாவது இருக்கும் வகையிலே மேற்கொண்டும் கிளைகள் பலவற்றைத் தொடக்குமாறு மாவட்டச் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கியும் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளும் இந்த ஆண்டில் நல்ல ஆதாயத்துடன் செயல்பட்டதிலிருந்து வங்கித் தொழிலில் கூட்டுறவு இயக்கம் நன்கு செயல்பட முடியும் என்பது தெளிவாகி

மேலே கூறப்பட்டுள்ள திட்டங்களுக்கு 1968–69-ல் ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. இவ்வேலைத் திட்டங்கள் செயல்படத் தொடங்கிவிட்ட 1969–70ல் கணிசமான முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

22. செங்கற்பட்டு மாவட்டத்தில் 2,000 குழாய்க் கிணறுகளையும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 2,000 குழாய்க் கிணறுகளையும் 1,000 வடி முனைக் குழாய்க் கிணறுகளையும் அமைக்கும் இரு தனித் திட்டங்களை, வேளாண்மை மறு கடனுதவி கழகத்திலிருந்து உதவி எதும் பெறு மல், செயல்படுத்தும் பணியை மத்திய அடைமான வங்கி மேற்கொண்டுள்ளது

## II. கூட்டுறவு விற்பனையும் பதப்படுத்துதலும்.

23. 1967–68-ல் கூட்டுறவு விற்பனை, பதப்படுத்தல் ஆகிய திட்டங் களைச் செயல்படுத்துவதற்காகவும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பங்கு மூலதன வகையில் முதலீடு செய்வதற்காகவும் ரூ. 62·05 லட்சம் செல வழிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் முக்கியத் திட்டங்களுக்காக ஒதுக்கப் பட்ட தொகையும், இதிலிருந்து செலவிடப்பட்ட தொகையும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டத்தின் பெயர். | 1968–69-ம் ஆண்டிற்கான செலவு. | 1968 டிசம்பர் வரை பயன்படுத் தப்பட்டத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூபாய் லட்சத்தில். | ரூபாய் லட்சத்தில். |
| 1 விற்பனைச் சங்கங்கள், பதப்படுத்தும் பிரிவுகளுக்குப் பங்கு மூலதனம். | 10·46 | 1·60 |
| 2 நவீன அரிசி ஆலைகளை நிறுவுதல் .. | 106·75 | 43·43 |
| 3 பதப்படுத்தும் பிரிவுகளைப் பெரிய அளவில் நிறுவுதல். | 14·81 | 14·81 |
| 4 சர்க்கரை ஆலைகளில் பங்கு மூலதனம் செய்யப்பட்ட தொகை. | 35·00 | 5·00 |
| 5 லாரிகள் வாங்குவதற்காக உதவித் தொகை | 3·00 | .. |
| 6 கிடங்குகளைக் கட்டுதல் .. .. .. | 5·50 | 2·79 |

பயன்படுத்தப்பட்ட தொகையில் ஏற்பட்ட குறைவு நிதி ஆண்டின் முடிவிற்குள் ஈடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

24. 1967–68-ல் கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப்பட்ட வேளாண்மை விலை பொருள்களின் மதிப்பு ரூ. 23 கோடி ஆகும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1969 வரை, இக் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 15 கோடி மதிப்புள்ள வேளாண்மை விளை பொருள்களை விற்பனை செய்தன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதி ஆண்டிற் குள், இக் கூட்டுறவுச் சங்கங்கள் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண்மை விளைபொருள்களை விற்பனை செய்யும் அளவிற்கு இதன் பணிகளைப் படிப்படியாக விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

25. கொள் முதல் பணிகளில், இவ்விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் பங்கு கொள்கின்றன. 1968-ம் ஆண்டு சம்பா, குறுவைக் காலங்களில் இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் 2.3 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்தன. 1967-ம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட அளவு 192 டன்களாகும் தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்வதற்காக உள்ள அரசாங்கத்தின் செயல்களில் ஒன்றுன தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை நிறுவனம், இம் மாட்டத்தில்





உள்ள கூட்டுறவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்பட்ட மொத்த அளவில் 50 சதவீதத்தைக் கொள்முதல் செய்ததன் மூலம், சிறந்த பணியாற்றி, இந்த முக்கியப் பணித் துறையில் தனக்கென ஓர் இடத்தை ஏற்படுத்திக்கொண்டது.

26. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை நிலையத்தினரால் ரூ. 38 லட்சம் செலவில் நிறுவப்பட்ட மணி ஒன்றுக்கு 4 டன் நெல் அரைக்கும் திறனுள்ள நவீன அரிசி ஆலை, 1968–69-ல் 16,000 டன் நெல்லை அரைத்தது.

தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்களின்கீழ் மேலும் 12 நவீன அரிசி ஆலைகள் நிறுவக் கருதப் பட்டுள்ளது. இவற்றில் ஐந்து தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறுவப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறுவப்படவிருக்கும் 5 ஆலைகளை நிறுவும் வேலை நடைப்பெற்று வருகின்றது. இவை விரைவில் தொடங்கப்படும். இந்த ஐந்து ஆலைகளை நிறுவுவதற்காக ரூ. 56·64 லட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆலைகளிலிருந்து கிடைக்கும் அரிசித் தவிட்டை உபயோக மான முறையில் பயன்படுத்தும் வகையில், ரூ. 19·75 லட்சம் செலவில் ஒரு அரிசித் தவிட்டு எண்ணெய்த் தொழிற்சாலை நிறுவப்பட்டது. இதில் பங்கு மூலதனமாகவும் கடனுதவியாகவும், அரசின் உதவி ரூ. 14·80 லட்சம் ஆகும்.

மற்ற மாவட்டங்களில் நிறுவப்படவிருக்கும் எஞ்சிய 7 ஆலைகள் பற்றிய விவரங்கள் முடிவாக வகுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான பணிகள் 1969–70-ம் ஆண்டுத் தொடக்கத்தில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

27. வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கு, விற்பனைச் சங்கத் தால் ரூ. 20 லட்சம் செலவில் நிறுவப்படுகிற, பழங்களை டப்பிகளில் அடைக்கும் பிரிவிற்கான கட்டிட வேலைகள் முடிவடைந்துள்ளன. வரும் மாம்பழப் பருவத்தில் இந்தப் பிரிவு செயல்படும் பொருட்டு, இயந்திரங் களை நிறுவும் பணிகள் கூடிய சிக்கிரத்தில் முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்காகப் பங்கு மூலதனமாகவும், கடனாகவும் அரசு ரூ. 15 லட்சம் வழங்கியுள்ளது. பழங்களை டப்பிகளில் அடைக்கும் பிரிவுக்கு இணைப்பாக குளிர்ச்சாதனப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்காக, 1969–70-ல் ரூ. 5 லட்சம் உதவியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

28. சுல் குலம், விளவங்கோடு கூட்டறவு விற்பனைச் சங்கம் மரவள்ளிக் கிழங்கைப் பதப்பிடும் பிரிவு ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்காக உதவித் தொகையாக ரூ. 1·50 லட்சம் வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதில் ரூ. 25,000 நடப்பு ஆண்டில் வழங்கப் பட்டுள்ளது.

29. 1967–68-ல் கூட்டுறவுச் சங்கங்களால் 60 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டன. 50 கிடங்குகளைக் கட்டுவதென்று திட்டமிடப்பட்டு, நடப்பு ஆண்டில் (1968–69) 32 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டன. இந்த ஆண்டில் இதுவரை ரூ. 2·79 லட்சம் உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

30. **கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்.**—இம் மாநிலத்தில் 7 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவைகளில் மொத்த கரும்பு பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 7,500 மெட்ரிக் டன்களாகும். அதாவது ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் மொத்தச் சர்க்கரை அளவு 1·33 லட்சம் மெட்ரிக் டன்களாகும். 1967–68-ம் ஆண்டின் முடிவில் இந்த சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடு ரூ. 177·73 லட்சம் ஆகும். தருமபுரி, கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு, ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 லட்சம் உ நடப்பு ஆண்டில் ரூ. 10 லட்சம் பங்கு மூலதன முதலீடு செய்

39. துறை அதிகாரிகளைத் தெரிந்தெடுத்து கூட்டுறவுத் துறையிலுள்ள பெரிய தொழில் நிறுவனங்களில் தலைமை நிர்வாகிகளாக, திறமையாகக் கடமையாற்றுவதற்கு "தொழில் நிர்வாகத்தில்" சிறப்புப் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## இணைப்பு 2

[193-ம் பக்கத்திலுள்ள அடிகுறிப்பைக் காண்க.]

### 1968-69-ல் போக்குவரத்துத் துறையின் நிர்வாகம் பற்றிய குறிப்புரை.

சமுதாய வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் போக்குவரத்து மிகை இன்றியமையாத, இணைந்த ஒரு கூறுகும். முக்கியமாக பொதுமக்களுக்கு இப்பணியின் மூலம் கிடைக்கும் நன்மைகளையொட்டி, சாலைப் போக்குவரத்தின் திறன் முடிவு செய்யப்படுகிறது.—

நகரங்களிலும், நகர்ப்புறங்களிலும், நாட்டுப்புறங்களிலும் வளர்ந்து வரும் தொழில்—பொருளாதார முன்னேற்றத்திற்கேற்ப சாலைப்போக்வரத்தும் சரி நிகராக வளர்ச்சியடைந்திருக்கிறது. 1968-ம் ஆண்டில் வண்டிப் போக்குவரத்து நிலையாகப் பெருகி வந்துள்ளதைக் கீழ்க்காணும் விவர அட்டவணையிலிருந்து அறியலாம்.—

| கீழ்க்காணும் நாட்களில் உள்ளவாறு. | பயணப் (பேருந்து) வண்டிகள். தனியார். | பயணப் (பேருந்து) வண்டிகள். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை. | சரக்கு வண்டிகள். வாடகை லாரிகள். | சரக்கு வண்டிகள். தனியார் லாரிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 31—12—1966 .. .. | 5,395 | 1,423 | 10,623 | 3,134 |
| 31—12—1967 .. .. | 5,681 | 1,638 | 10,738 | 3,095 |
| 31—12—1968 .. .. | 5,716 | 1,898 | 11,908 | 3,138 |

| | ஒப்பந்த வண்டிகள். | பிற மோட்டார் வண்டிகள். | மொத்தம். |
|---|---|---|---|
| | (6) | (7) | (8) |
| 31—12—1966 .. .. | 5,788 | 742 | 27,105 |
| 31—12—1967 .. .. | 7,087 | 1,016 | 29,255 |
| 31—12—1968 ... .. | 8,726 | 1,315 | 32,701 |

### போக்குவரத்துத் துறை அமைப்பு

கீழ்க்காணும் சட்டங்களையும் அவற்றின்கீழ்ச் செய்யப்பட்டுள்ள விதிகளையும் செயல்படுத்துவது இத் துறையின் முக்கிய பணிகளாகும்:—

(1) மோட்டார் வண்டிகள் சட்டம், 1939.
(2) தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், 1931.
(3) தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (பயணிகள்—சரக்குகள் வரி விதிப்பு) சட்டம், 1952.

போக்குவரத்துத் துறை, பேக்குவரத்துத் துறை ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ்ச் செயல்பட்டு வருகிறது. போக்குவரத்து ஆணையாளர் வருவாய்த் துறை வாரியத்தின்உறுப்பினராவார். மாநில நிலையில்,





போக்குவரத்துத் துறை ஆணையாளருக்கு மூன்று போக்குவரத்து துறை துணை ஆணையாளர்களும் இரண்டு உதவிச் செயலாளர்களும் துணை செய்கின்றனர். துணைப் போக்குவரத்துத துறை ஆணையாளர்களில் ஒருவர் நாட்டுடைமை யாக்கப்பட்ட பேருந்துகளின் பணிகளைக் கவனிப்பதற்கென்றே நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ் நாடு போக்குவரத்துத் துறையின் பயணித் துணைவர்களுக்கும் (Conductors), வலவர்களுக்கும் (Drivers) உரிமம் வழங்குதல், இத் துறையின் வண்டிகளைப் பதிவு செய்தல், அவற்றுக்கு அனுமதிச் சீட்டு வழங்குதல் போன்ற பணிகளை உரிய காலத்தில் செய்வது இவரது பொறுப்பாகும்.

மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். இவர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் செயலாளராக உதவி புரிகின்றனர். சென்னை மாநகரில் காவல் துறை ஆணையாளர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகச் செயல்படுகின்றார். இவருக்கு காவல்துறைத் துணை ஆணையாளர் (போக்குவரத்து, உரிமம் வழங்கல்) செயலாளராக உள்ளார். இத் துணை ஆணையாளர் மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் என்ன பணிகளை மேற்கொள்கின்றாரோ அதே பணிகளை மேற்கொள்கின்றார்.

வரி வசூலிப்பைச் சோதனையிடும் பணி முனைப்பாகச் செயல்படுத்துவதன் பொருட்டும், மோட்டார் வண்டிகள் சட்டம், அதன்கீழ் வகுக்கப்பட்ட விதித் துறைகள் ஆகியவற்றைச் செயல்படுத்தலில் காவல்துறை ஆணையாளருக்குத் தேவையான உதவி புரியும் நோக்கத்துடனும், சென்னை மாநகரத்துக்காக வட்டாரப் போக்குவரத்து அதிகாரி ஒருவரை அரசு நியமித்துள்ளது.

### அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்

பேருந்துப் போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சி கீழ்க்காணும் வழிமுறைகளில் எய்தப்படுகின்றன :—

(1) புதிய வழித் தடங்களுக்கும், ஏற்கெனவேயுள்ள வழித்தடங்களில் கூடுதலான பேருந்துகளுக்கும் அனுமதிச் சீட்டுகள் வழங்குதல் மூலம் வண்டிகளின் எண்ணிக்கையைப் பெருக்குதல் ;

(2) பேருந்துகளின் பயண ஓட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும், தற்போது உள்ளவற்றை விரிவுபடுத்துதலும் ;

(3) தற்போதுள்ள வண்டிகளுக்குப் பதிலாக, பெரிய வண்டிகளை விடுவதன் மூலம் இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

பேருந்துகளின் எண்ணிக்கையிலோ அல்லது பேருந்து இருக்கைகளின் எண்ணிக்கையிலோ ஆண்டொன்றுக்கு 10 சத வீதம் உயர்வு ஏற்படவேண்டுமென்பதே பொதுவான நோக்கமாகும். 1968-ல் 99 புதிய வழித்தடங்கள் 14,283 இருக்கைகளை கூடுதலாக்கும் வகையிலேல் தொடங்கப்பட்டன. 1967-ல் 145 புதிய வழித்தடங்கள் (28,902 இருக்கைகள்) தொடங்கப்பட்டன. 1966-ல் 134 (27,380 இருக்கைகள்) வழித்தடங்கள் தொடங்கப்பட்டன.

பயணிப் பேருந்துகள் குறித்த அனுமதிச் சீட்டுகளுக்கு விண்ணப்பித்துக் கொள்பவர்களிடையே யிருந்து அனுமதிச் சீட்டுகளை வழங்குவதற்காகத் தெரிந்தெடுக்கிற கொள்கைகள் இதுவரை நிர்வாக முறையில் விதிக்கப்பட்ட பொதுக் கோட்பாடுகளின் அடிப்படையில் இருந்தன. சில நீதிமன்றத் தீர்ப்புகளின் விளைவாக, வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு வழிகாட்டியாக இருக்கும் வகையில் அரசு சில விதிகளை வருத்துள்ளது.

ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1967–68-ல் பிழியப்பட்ட கரும்பு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை ஆகியவைகளைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 1968–69-ம் ஆண்டிற்கான கரும்பு பிழியும் பணி தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

| ஆலையின் பெயர். | 1967–68. பிழிந்த கரும்பு. | 1967–68. உற்பத்தியான சர்க்கரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | டன். லட்சத்தில். | டன் லட்சத்தில். |
| 1 வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள். | 1·15 | 0·12 |
| 2 சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் | 0·80 | 0·07 |
| 3 அமராவதி சர்க்கரை ஆலைகள் .. .. | 0·77 | 0·07 |
| 4 மதுராந்தகம் சர்க்கரை ஆலைகள் .. .. | 0·65 | 0·06 |
| 5 தேசியக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் .. | 0·17 | 0·02 |
| 6 தர்மபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் .. | கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. | |

## III. பயன் துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்.

31. விலை ஏற்றத்தைத் தடுக்கவும், பயன் துய்ப்போர் பொருள்கள் நியாயமான விலையில் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யவும், ஐம்பதாயிரமும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பட்டணங்களிலும், நகரங்களிலும், மொத்த விற்பனை நிலையங்கள், ஆரம்பப் பண்டக சாலைகள் ஆகியவைகளை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 30 மொத்த விற்பனை நிலையங்களும், (இவற்றுடன் 588 சில்லறை விற்பனை நிலையங்கள் இணைக்கப்பட்டுள்ளன), 1,074 ஆரம்ப பண்டகசாலைகளும் இத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. பங்கு மூலதனம், தொழில் மூலதனம், டிரக் வண்டிகளை வாங்குதல், கிடங்குகளைக் கட்டுதல் முதலியவைகளுக்காக அரசு உதவி அளித்து வருகிறது.

32. இரண்டு லட்சமும் அதற்கு மேலும் மக்கள் தொகையுள்ள நகரங்களிலும், பட்டணங்களிலும், சிறப்பங்காடி என்றழைக்கப்படும் துறைப் பண்டகசாலைகளை நிறுவும் திட்டம், கடலூர், நாகர்கோவில் ஆகிய பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டு, தற்போதுள்ள சிறப்பங்காடிகளின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது. மேலும், இரண்டு சிறப்பங்காடிகளை நிறுவுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதில் ஒன்று வட சென்னையிலும், மற்றொன்று திருநெல்வேலியிலும் நிறுவப்படும். தூத்துக்குடி, காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் சிறப்பங்காடிகள் நிறுவுவது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது.

1967–68-ல் சிறப்பங்காடிகளில் விற்பனையான பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 3·75 கோடி. 1969-ம் ஆண்டு ஜனவரி முடிய, 7 திங்கள்களில் விற்பனையான பொருள்களின் மதிப்பு ரூ. 2·87 கோடி ஆகும்.

## IV. பிறவகைச் சங்கங்களும் அதன் பணிகளும்.

33. புகலூருக் கால்வாயிலிருந்து நீர் இறைத்து, அதன் மூலம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் உள்ள 10 கிராமங்களில், 2,212 ஏக்கர் புன்செய் நிலத்தை பாசனத்தின் கீழ் கொண்டுவரும் பொருட்டு, இந்த ஆண்டு, நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. தமிழ் நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கி, ரூ. 72 30 லட்சம் செலவில் குழாய் கிணறுகளை அமைத்தல், விசையேற்றங்களை அமைத்தல், குழாய்களை நிறுவுதல், நிலங்களைப் பண்படுத்துதல் முதலியவைகளுக்காக மேற்கொண்ட திட்டத்திற்காக ஏற்படும் மூலதனச் செலவை ஈடு செய்வதற்காக 718 பட்டாதாரர்களுக்குக் கடனுதவி அளிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை சங்கம் நிறைவேற்றும் பொருட்டு அரசு ஒரு துணைப் பதிவாளரையும் தேவையான பிற பணியாளர்களையும் செலவேதுமின்றி கொடுத்து உதவியுள்ளது.





34. மத்திய வீட்டு அடைமானச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள 50 வீட்டு அடைமான தொடக்கச் சங்கங்கள் உள்ளன. இந்த சங்கங்கள் நடப்பு ஆண்டில் ரூ. 71·20 லட்சத்தையும், 1967–68-ம் ஆண்டு முழுவதும் ரூ. 83 லட்சத்தையும், கடனகப் பகிர்ந்தளித்துள்ளன.. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து, மத்திய வீட்டு அடைமானச் சங்கம் பெற்றுள்ள கடனைத் திருப்பிச் செலுத்துதல் குறித்து அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

35. சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர் போன்றவர்களின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள சங்கங்களுக்கு உதவி அளிப்பது தொடர்ந்து இந்த ஆண்டும் அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில், முடி திருத்துபவர்களின் நலனுக்காக ரூ. 37,000 உதவியுடன் காஞ்சீபுரத்தில் ஒரு சங்கம் நிறுவப்பட்டது. தற்போது தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்கள் நூற்றுப் பதினலும், சலவைத் தொழிலாளர் சங்கங்கள் பத்தொன்பதும், முடி திருத்துபவர் சங்கங்கள் பதினைந்தும் உள்ளன.

36. தாயகம் திரும்புவோரைக் குடியேற்றுதல்—பர்மாவிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் நடப்பாண்டில் கூட்டுறவு அச்சகம் ஒன்று அமைக்கப்பட்டது. இச் சங்கம் 1968-ம் ஆண்டு ஆகஸ்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. தாயகம் திரும்பிய 16 பேருக்கு ரூ. 68,725 வணிகக் கடனக அரசு வழங்கியது. இவர்கள் இத் தொகையை இச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்தனர். இச் சங்கம் முதல் ஐந்து திங்களில் செயல்பட்டு வந்ததில் சுமார் 33,500 மதிப்புடைய ஒப்பந்தக் குறிப்புகளும் ரூ. 17,992 அச்சகக் கட்டணங்களாகவும் இதற்கு ஆதாயம் கிடைத்தது.

37. இலங்கையிலிருந்து இம் மாநிலத்திற்கு மிக அண்மையில் பெருவாரியான அகதிகள் வரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும். இலங்கை அகதிகளைக் குடியேற்றுவதற்கானத் திட்டம் இந்திய அரசுடன் கலந்துகொண்டுதயாரிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை துயர் தணிப்பு வேலைக்கான பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றும்.

38. கூட்டுறவுக் கல்வியும், பயிற்சியும்.—கூட்டுறவுக் கல்வி, பயிற்சி குறித்த திட்டங்கள் சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் தங்கள் துறைப் பணியாளர்களுக்கும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கும் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறது. இம் மாநிலத்தில் இளநிலை கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் எட்டும் இடைநிலை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் உள்ளன. நடப்பாண்டில் இதுவரை இந் நிறுவனங்கள் அரசிடமிருந்து ரூ. 1·08 லட்சம் உதவி பெற்றுள்ளது. நில அடைமான வங்கிகள் மூலமாக, கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதன் அவசியத்தைக் கருதியும், சிறப்பு வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவி செய்வதற்காக வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் வகித்து வரும் பங்கை உயர்த்துவதைக் கருதியும் துறை அதிகாரிகளுக்கு 1969–70-ல் சிறப்புப் பயிற்சி அளிக்கவும் கருதப்பட்டிருக்கிறது.

### நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து

பேருந்துப் போக்குவரத்தைப் படிப்படியாக விரிவுபடுத்தும் முறையில் இம் மாநிலத்தில்பயணிகள் பேருந்து போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவது குறித்து கொள்கையில் அரசாங்கம் மாற்றஞ் செய்துள்ளது. மாற்றியமைக்கப்பட்டுள்ள நாட்டுடைமையாக்குவது குறித்து கொள்கைகள் அடியிற் கண்ட வகையைச் சார்ந்த வழித்தடங்களுக்கும் பொருந்தும்.—

75 மைல்களும் அதற்கு மேலுமுள்ள சாதாரணப் பேருந்துப் பணி—கடுவிசைப் பேருந்துப் பணிகளின் வழித்தடகள்,

2. தொலேவினைக் கருதிப் பார்க்காமல், சென்னை மாநகரிலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் அனைத்தும் ;

3. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் உட்பட கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

இவ்வழித்தடங்களில் தனியார் பேருந்துகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமங்கள் முடிவடையும் தருவாயில் (இரு மாநிலங்களுக் கிடையிலான வழித்தடங்கள் உட்பட) வழக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே இக் கொள்கை படிப்படியாகச் செயல்படுத்தப்படுகின்றது. இக் கொள்கையைத் திறமையுடனும் உரிய காலத்திலும் செயல்படுத்த, மோட்டார் வண்டிகள் சட்டத்தின் விதித்துறைகளில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டி யிருந்தது. 1968-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்தச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 18/1968) மூலம் இத்திருத்தங்கள் செய்யப்பட்டன—

(1) வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் பயணிப் பேருந்துப் போக்குவரத்து அனுமதிச் சீட்டுகளை வழங்க அல்லது புதுப்பிக்கச் செய்துகொள்ளபடுகிற விண்ணப்பங்கள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்கையில், 68-C பிரிவின் கீழ் நாட்டுடைமையாக்கும் திட்டத்தை வெளியிடுவது குறித்து ஆலோசித்துப் பார்ப்பது அவர்களது கடமையாகும்.

(2) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறைக்கு முறையான அனுமதிச் சீட்டு வழங்கப்படும் வரையில், செய்திறனுள்ள தற்காலிக அனுமதிச் சீட்டுகளை அத் துறைக்கு வழங்க வேண்டியது, போக்குவரத்து அதிகாரிகளின் கடமையாகும்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் போக்குவரத்தின் செயல்முறை குறித்த விரிவான ஆய்வு, மன்றப் பேரவைமுன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

### சரக்கு வண்டிகள்

வளர்ந்துவரும் வாணிபத்திற்கும் வர்த்தகத்திற்கும் ஏற்ப பொது லாரிகளுக்கும் தனியார் லாரிகளுக்கும் மாநில முழுவதிலும் அனுமதி சீட்டுகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. பொது லாரிகளைக் கொண்டு வந்து காண்பித்தவுடன் முறையான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் வரையில் அவற்றிற்கு தாற்காலிக அனுமதிச் சீட்டுகள் உடனடியாக வழங்கப்படுகின்றன. தென் மாநிலங்கள் முழுவதிலும் சரக்கு வண்டி போக்குவரத்து தடையின்றி நடைபெற வகை செய்யும் நோக்குடன் இம் மாநிலத்திலுள்ள பொது லாரிகளுக்குக் கூட்டு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிச் சீட்டுகள் இம் மாநிலத்திலும், கேரளம், மைசூர், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் செல்திறன் உள்ளவையாகும். இதற்கு மற்ற மாநிலங்களின் போக்குவரத்து அதிகாரிகள் மேற்கையெழுத்திட வேண்டியதில்லை. 200 வண்டிகளுக்கு இத்தகைய அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளன.



குறிப்பிட்டுள்ள அளவாகிய 200 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டு விட்டதாலும், அவை போன்ற அனுமதிச சீட்டுகளுக்குத் தேவை அதிகமாயிருப்பதாலும் ஒவ்வொரு மாநிலம் குறிசதும் மேலும் 200 அனுமதிச் சீட்டுகள் வழங்க இரு மாநிலங்களுக்கிடையிலான போக்குவரத்துக் குழு ஆலோசனை கூறியுள்ளது. இத்தகைய அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுள்ள வண்டிகள் அதிகச் சரக்குச் சுமையை எற்றிச் செல்வதை அனுமதிக்கும் நோக்கத்துடனும், சம்பந்தப்பட்ட பிற மாநிலங்களில் பின்பற்றப்படுகிற வழக்கத்தையொட்டியும், இந்த வண்டிகள் ஏற்றிச்செல்லக் கூடிய சரக்கு எடை 12,192 கிலோ கிராமிலிருந்து 15,240 கிலோகிராமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### ஒப்பந்த வண்டிகள்

இம் மாநிலத்தில் வாடகை வண்டிகளுக்கும், சீர் பேருந்துகளுக்கும் (Omnibuses) தனி வசதிப் பேருந்துகளுக்கும் (Luxury coches) மாநில முழுவதிலும் தாராளமாக அனுமதிச்சீட்டு வழங்குகின்றனர். சீருலாப் பயணிகளுக்கு உதவியாக புதிய அம்பாஸடர் மோட்டார் வண்டிகளுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளுக்கும் சீருலா வாடகை வண்டிகளுக்கான அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது. 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி அன்று உள்ளபடி, 347 பெரிய பேருந்துகளும் 29 தனி வசதிப் பேருந்துகளும், 294 சீருலா வாடகை வண்டிகளும் இயங்கி வந்தன. சென்ற ஆண்டில் மாநிலத்தில் 26 தனிவசதிப் பேருந்துகளும், 74 சீர் பேருந்துகளும், 189 சீருலா வாடகை வண்டிகளும் இயங்கி வந்தன. சென்னை மாநகரிலும், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய நகராட்சிகளிலும் இயங்கிவரும் வாடகை வண்டிகளில் மட்டுமே அளவுப் பொறிகள் (Meters) கட்டாயமாகப் பொருத்தப்பட்டு வருகின்றன. மூன்று நகரங்களின் நகராட்சி எல்லைகளுக்குள் நடத்தும் பயணங்களுக்காக மட்டுமே மீட்டர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஸ்டாண்டர்ட் வாடகை வண்டியைத் தவிர சென்னை மாநகரில் ஓடுகிற மற்றெல்லா வாடகை வண்டிகளிலும் 1968 எப்ரல் முதல் கட்டண வீதத்தை அதிகரிக்காமல் மேலும் ஒரு பயணியை ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆட்டோ ரிக்ஷாக்களின் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. சென்னை மாநகரில் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை 200-லிருந்து 300-ஆக அதிகரிக்கும் செயற் குறிப்பு ஆலோசனையில் இருந்துவருகிறது.

*ஆலோசனைக் குழுக்கள்.*—(1) மோட்டார் போக்குவரத்தின் கோட்பாடு, நிர்வாகம் குறித்த முக்கிய பணிகளில் அரசிற்கு ஆலோசனை கூற, அரசு கோக்குவரத்துத் துறையின் பொறுப்பு வகிக்கும் அமைச்சரைத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினர்களையும் பேருந்துப் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட அரசுப் போக்குவர்த்துத் துறை ஆலோசனைக் குழு ஒன்று உள்ளது. இக் குழு 1968-ல் கூட்டம் ஒன்று நடததியது.

(2) மாவட்ட அளவில், மோட்டார்ப் போக்குவரத்துத் தொடர்பான நடவடிக்கைகளில் வளர்ச்சி மன்றங்கள் அரசிற்கு ஆலோசனை கூறுகின்றன.

(3) போக்குவரத்துக் கட்டுப்பாட்டையும் போக்குவரத்துப் பாதுகாப்பையும் ஒட்டிய எல்லா நடவடிக்கைகளையும் செவ்வனே கவனிப்பதற்காகத் தமிழ் நாட்டுச் சாலே மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக்குழு என்னும் உயர் நிலேக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட நிலேயில், மாவட்டச் சாலே மேம்பாடு-போக்குவரத்து திட்டக்குழு, மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தனிப்பட்ட குழுவாகச் செயலாற்றி வருகிறது. சென்னை நகரில், இதை முன்னிட்டு, சென்னை நகரச்சாலே மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக்குழு என்ற தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு சாலேப்பணிகளின் பொறுப்பேற்றுள்ள பல்வேறு முகவர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, மாநகர சாலேகள் வளர்ச்சி போக்குவரத்து திட்டக்குழுவின் ஒருங்கிணைப்புத் துணைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(4) மாநிலத் தலைநகர் நிலையில், சென்னை பெருநகர் சாலை வளர்ச்சி —போக்குவரத்துத் திட்டக்குழு என வழங்கப்படுகின்ற குழு ஒன்றும் அமைக்கபபட்டுள்ளது. 1968-ல் அது இருமுறை அவை கூடியது.

## வரி விதிப்பு

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் போக்குவரத்திற்கும் வாணிகத் திற்கும் ஊக்கமளிப்பதற்காக, போக்குவரத்து வண்டிகள் மீது ஒருமுனை வரி விதிப்பது குறித்து இம் மாநிலத்திற்கும் அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரம், புதுச்சேரி ஆகியவற்றிற்கும் இடையே ஏற்பு உடன் படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. மைசூர் மாநிலத்தைப் பொறுத்த வரையில், இரு மாநில வழித்தடங்களில் பேருந்து அனுமதிச் சீட்டுகளை பங்கிட்டுக் கொள்வதற்கு ஏற்பு உடன்பாடு ஏற்படுகிறவரே, இந்த உடன்பாடு சரக்குப் பேருந்துகளுக்கும், ஒப்பந்தப் பேருந்துகளுக்கும் மட்டுமே பொருந்தும்.

மாநிலங்கள் ஒன்றோடொன்று செய்துகொண்ட ஒப்பந்த அடிப்படைகளின்கீழ் தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லுகின்ற பேருந்துகள் ஒருமுனை வரிச்சலுகையைக் கீழ்க்கண்டவாறு பெறுகின்றன:—

| | தமிழ்நாட்டுச் சரக்கு வண்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| தமிழ்நாடு—ஆந்திரா .. .. .. .. | 1,197 |
| தமிழ்நாடு—மைசூர் .. .. .. .. | 700 |
| தமிழ்நாடு—கேரளம் .. .. .. .. | 800 |

அனுமதிச் சீட்டுகளில் மேற்கையொப்பமிடும் முறை குறித்து இப்போதுள்ள ஏற்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| மாநிலங்கள். | தமிழ்நாட்டினைச் சேர்ந்தவை. | | | ஏனைய மாநிலங்கள். | | |
|---|---|---|---|---|---|---|
| | பொது வண்டிகள். | தனியார் வண்டிகள். | ஒப்பந்த வண்டிகள். | பொது வண்டிகள். | தனியார் வண்டிகள். | ஒப்பந்த வண்டிகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| தமிழ் நாடு—ஆந்திரா .. | 2,000 | 100 | 20 | 2,000 | 100 | 20* |
| தமிழ் நாடு—மைசூர் .. | 700 | 50 | 20* | 700 | 50 | 20* |
| தமிழ் நாடு—கேரளம் .. | 800 | 75 | 150† 20* | 800 | 75 | 150† *20 |

*சீருலா வாடகை வண்டி.
†சாதாரணமானவை.



சாலைப்போக்குவரத்து வரிவிதிப்பு விசாரணை குறித்து கேஸ்கர் குழுவின் பரிவுரைகள் ஆய்வு செய்யப்பட்டன. நம்முடைய கருத்துக்கள் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டன. இந்திய அரசு அமைத்த கீழ்க்கண்ட குழுக்களின் அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

இந்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆதாயம் பயக்கவல்ல வகையில் போக்குவரத்து வண்டிகள் குறித்த ஆய்வுக்குழுவின் அறிக்கையும் போக்குவரத்து நிதி வசதி குறித்த ஆய்வுக் குழுவின் அறிக்கையும் இன்னும் கிடைக்கவில்லை.

போக்குவரத்து வசதிகளை விரிவு படுத்துவதற்கான வருங்காலத் திட்டங்களை வகுப்பதில் இவ்வறிக்கைகள் பெரிதும் பயனுள்ளவையாக இருக்குமென நம்பப்படுகிறது.

## வருவாய்

1968-69-ல் கட்டண வீதங்களில் அல்லது வரியில் எந்த உயர்வும் இல்லை. 1968-69-ம் ஆண்டில் 1—4—1968 முதல் 31—12—1968 வரையுள்ள 9 திங்களில் ரூ. 13·66 கோடி வருவாய் கிட்டியது. எனவே, 1—4—1968 முதல் 31—3—1969 வரை சுமார் ரூ. 18 கோடி கிட்டுமென எதிர்ப்பார்க்கலாம். 1967-68-ம் ஆண்டில் ரூ. 16·83 கோடி மட்டுமே வருவாய் கிட்டியது என்பதை இங்கு நினைவு கூர்வது நல்லது.

## செயற் குறிப்புகள்

விபத்துகள்.—மிகையான வேகத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் பயணிப் பேருந்துகளிலும் சரக்கு வண்டிகளிலும் "டேக்கோகிராப்" என்னும் சாதனத்தைப் பொருத்தலாம் என்று மாநிலப் போக்குவரத்து ஆலோசனைக் குழு பரிவுரை செய்துள்ளது. குழுவின் பரிவுரை ஆலோசனையிலுள்ளது. இரவு நேரங்களில் 200 கிலோ மீட்டர் தொலைவிற்குமேல் ஓடும் ஒவ்வொரு சரக்கு வண்டிக்கும் இரண்டு வலவர்களை நியமிப்பதற்கான செயற் குறிப்புகள் ஆலோசனையிலுள்ளன. அவ்வாறு செய்தால் இரவு நேரங்களில் சரக்கு வண்டிகள் விபத்துக்களுக்கு உட்படாமல் இருக்கும்.

சரக்குப் பேருந்து நிலையங்கள்.—சரக்குகளை அனுப்புவதற்கான பயணச் சீட்டுகள் வாங்கும் வசதி, கிடங்கு வசதி, சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கான வசதி ஆகியவற்றுடன் கூடிய சரக்குப் பேருந்து நிலையங்களை முக்கிய நகரங்களின் வெளிப்புறத்தில் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஆலோசனையிலுள்ளது.

பல நோக்க சோதனைச் சாவடிகள்.—இரு மாநிலங்களுக்கிடையில் ஓடும் வண்டிகளைத் திறம்படச் சோதனையிடும்பொருட்டு, முக்கிய வழித் தடங்களில் பொருத்தமான இடங்களில் பலநோக்க சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சீர் பேருந்துகள்.—பேருந்து நிலையங்களுக்கருகில் பயணிகளை ஏற்றிச் செல்வதன் மூலம் சீர் பேருந்துகள் வழக்கமாக ஓடிக்கொண்டிருக்கும் பயணிப் பேருந்துகளுக்குப் பெரும் தடையாய் உள்ளன என்பது குறித்து அரசின் நாட்டத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தகைய பேருந்துகளின் எண்ணிக்கை ஓராண்டிற்குள் 4 மடங்கு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய பொருத்தமற்ற போட்டியை நீக்கும் நோக்கத்துடன் அத்தகைய சீர் பேருந்துகள் குறித்த மோட்டார் வண்டி வரியை வழக்கமான பயணிப் பேருந்துகள் குறித்த மோட்டார் வண்டி வரிக்கு நிகராக இருக்கும் வகையில் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயங்கும் சோதனைப் பிரிவுகள் (Flying squads) அமைத்தல்.—மோட்டார் வண்டிகள் சட்டத்தையும் வரி விதி[illegible]ங்களையும் மீறும் மோட்டார் வண்டிகள், தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் பேருந்துகள் குறித்துத் திறம்பட கண்காணிக்க, இயங்கும் சோதனைப் பிரிவுகள் நான்கை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அதன்

தலைமையிடம் சென்னையில் இருக்கும். போக்குவரத்து உதவி ஆணையாளரின் (செயல்படுத்தல்) மேற்பார்வையில் அவை இயங்கும். அவருக்கு உதவியாகத் தேவைப்பட்ட பணியாளர் இருப்பர். இயங்கும் ஒவ்வொரு சோதனைப் பிரிவிலும் வட்டாரப் போக்குவரத்து இணை அதிகாரி ஒருவர், மோட்டார் வண்டி ஆய்வாளர் ஒருவர், மோட்டார் வண்டி இணை ஆய்வாளர் ஒருவர், ஆகியோர் அடங்கி இருப்பர். கீழே குறிப்பிட்ட தலைமையிடங்களுடன், நான்கு மண்டலங்களில் அவை செயல்படும் :—

| மண்டலங்கள். | தலைமையிடங்கள். |
|---|---|
| 1. வட ஆர்க்காடு-செங்கற்பட்டு-சென்னை மாநகர். | சென்னை. |
| 2. சேலம்-தருமபுரி-கோயம்புத்தூர், நீலகிரி. | கோயம்புத்தூர். |
| 3. திருச்சிராப்பள்ளி-ஈரோடு-தஞ்சாவூர்-தென் ஆர்க்காடு. | திருச்சிராப்பள்ளி. |
| 4. மதுரை-இராமநாதபுரம்-திருநெல்வேலி-கன்னியாகுமரி. | மதுரை. |

## முடிவுரை.

மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதன் விளைவாக ஏற்படும் பல்வேறு சிக்கல்களை அரசு நன்கு அறியும். போக்குவரத்து ஒழுங்கு முறைகளையும் போக்குவரத்து வசதிகளையும் மேம்படுத்துவதற்கான கருத்துக்களை அரசு வரவேற்கின்றது. மொத்தத்தில், அண்மைக் காலத்தில் சாலைப் போக்குவரத்து ஒரே சீராக மேம்பாடு அடைந்து வந்துள்ளது. வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து முன்னேற்றம் காணப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## இணைப்பு 3.

[193-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழ்நாட்டில் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் போக்குவரத்து 1968-69.

நாட்டுடமையாக்கப்பட்ட பயணிகள் பேருந்து மக்கட் பணியில் இருபத்தோரு ஆண்டை முடித்துக்கொண்டு 1968-ம் ஆண்டில் இருபத்திரண்டாம் ஆண்டை எய்தியது. வாணிக அடிப்படையில் அரசினால் நடத்தப்படும் ஒரு நிறுவனத்தின் திறமை பெரும்பாலும் மக்களுக்கு அது ஆற்றும் தொண்டினைக் கொண்டும் அதன் நிதி நிலையைக் கொண்டும் முடிவு செய்யப்படுகிறது. இந்த நிறுவனம் இவ்வாண்டில் கூடுதலாகவும் சிறப்பாகவும் ஆற்றிய போக்குவரத்துப் பணிகளின் விவரங்கள் இந்த ஆய்வுரையின் அடுத்துவரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன. 1968-69-ம் ஆண்டில் எதிர்ப்பார்க்கப்பட்ட முன்னேற்றம் பற்றியும், 1968-69-ம் ஆண்டின் இறுதியில் இந்த நிறுவனம் ஆற்றுமென எதிர்ப்பார்க்கப்படும் போக்குவரத்துப் பணியின் அளவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கை காட்டுகிறது :—

| | சென்னை கிளை. | | நீள் தொலைவுப் போக்குவரத்துப்பணி | |
|---|---|---|---|---|
| | 1968 மார்ச் 31-ம் தேதி. | 1968 டிசம்பர் 31-ம் தேதி. | 1968 மார்ச் 31-ம் தேதி. | 1968 டிசம்பர் 31-ம் தேதி. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை. | 1,301 | 1,391 | 190 | 194 |
| (2) பேருந்துகளின் பணி எண்ணிக்கை. | 1,120 | 1,207 | 148 | 150 |





| | சென்னை கிளை. | | நீள் தொலைவுப் போக்குவரத்துப்பணி. | |
|---|---|---|---|---|
| | 1968 மார்ச் 31-ம் தேதி. | 1968 டிசம்பர் 31-ம் தேதி. | 1968 மார்ச் 31-ம் தேதி. | 1968 டிசம்பர் 31-ம் தேதி. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (3) வழித்தடங்களின் எண்ணிக்கை. | 335 | 395 | 56 | 58 |
| (4) வழித்தடங்களின் மொத்த நீளம் (மைல்களில்). | 16,206 | 18,062 | 11,753 | 12,284 |
| (5) பயணத் தடவைகள் அல்லது ஒற்றைப் பயணங்கள். | 17,218 | 17,538 | 186 | 192 |
| (6) அன்றுடப் பயண மைல் கணக்கு. | 1,51,717 | 1,89,703 | 37,349 | 38,090 |
| (7) அன்றுடச் சராசரி வசூல் (ரூபாய்). | 2,50,000 | 2,75,000 | 54,000 | 55,000 |
| (8) அன்றுடப் பயணம் செய்த பயணிகளின் சராசரி எண்ணிக்கை. | 9,62,000 | 10,00,000 | 28,000 | 30,000 |

பேருந்துப் போக்குவரத்துப் பிரிவின் இயங்கு திறனை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு அது ஆற்றும் பணியை மேலும் சிறக்கச் செய்யவும் நடவடிக்கைகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. இத் துறையின் நிதிநிலை விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மூலதன முதலீடு.

| ஆண்டு. | ஆரம்ப இருப்பு. | இந்த ஆண்டில் சேர்க்கைகள். | இறுதி இருப்பு. | மொத்த வருவாய். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| 1967-68 .. .. .. | 12,03·17 | 2,17·34 | 14,20·51 | 12,23·81 |
| 1968-69 (எதிர் பார்க்கப்படுவது) | 14,20·51 | 2,20·17 | 16,40·68 | 15,44·71 |

| ஆண்டு. | மொத்தச் செலவு. | நிகர வருவாய். | பயணிகள் வசதி நிதி, வளர்ச்சி நிதி, தேய்மான நிதி தொழிலாளர் வீட்டு வசதி நிதி, ஆகியவற்றிற்கு தொகை வழங்கல். | நிகர ஆதாயம் |
|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| 19[illegible]68 .. .. .. | 10,87·99 | 1,35·82 | 1,59·07 | (—)23·25 |
| 1968-69 (எதிர் பார்க்கப்பட்டது) | 13,50·60 | 1,94·11 | 1,89·80 | (+) 4·31 |

[1969 மார்ச் 24

1967-68-ல் ரூபாய் 23·25 லட்சம் இழப்பு ஏற்பட்டதற்கு பிரிவுவாரி விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| (1) அரசுப் பேருந்துப் போக்குவரத்து, சென்னைக் கிளை .. | (—) 33·40 |
| (2) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரி .. | (+) 2·54 |
| (3) அரசுப் பேருந்து போக்குவரத்து, கன்னியாகுமரிக் கிளை. | (—) 1·78 |
| (4) நெடுந்தொலைப் போக்குவரத்துப் பணிகள் .. .. | (+) 6·71 |
| (5) இராணித் தோட்டம் பணிக்களரி .. .. .. .. | (+) 2·68 |
| | (—) 23·25 |

அரசுப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த சென்னைக் கிளையிலும், கன்னியாகுமரிக் கிளையிலும் ஏற்பட்ட விரயமே துறையினருக்கு ஏற்பட்ட விரயத்திற்குக் காரணமாகும்.

அரசுப் பேருந்துப் பணி, சென்னைக் கிளை.—அரசுப் பேருந்துப் பணியைச் சேர்ந்த சென்னைக் கிளையில் 1967-68-ல் ரூ. 33·40 லட்சம் விரயம் ஏற்பட்டது; 1966-67-ல் ரூ. 62·27 லட்சம் விரயம் ஏற்பட்டது. ஆனால் கீழ்க்கண்ட காரணங்களால் விரயம் குறைந்து வருவாய் அதிகரித்தது.—

(அ) உலகத் தமிழ் மாநாட்டின் போதும் இந்திய உலக வர்த்தகப் பொருட்காட்சியின் போதும் பயணிகள் போக்குவரத்து அதிகரித்தது.

(ஆ) 1967-68-ன் பிற்பகுதியில் செயல்படுத்தப்பட்ட நாட்டுடைமை யாக்கிய மாவட்டப் பேருந்துப் போக்குவரத்து.

திங்கள் ஒன்றுக்கு பேருந்து ஒன்றிலிருந்து கிடைத்த வருவாய் 1967-68-ல் ரூ. 5,504 ; 1966-67-ல் ரூ. 4,965 கிடைத்தது. கூடுதலாக விடப்பட்ட பேருந்துகளினால் கூடுதல் வருவாய் கிடைத்ததென்பதில் ஐயமில்லை. சென்னை மாநகரில் பேருந்து நடத்துவதில் இடர்ப்பாடுகள் இருப்பினும் (கடந்த ஆண்டு ஆய்வுரையில் விவரிக்கப்பட்டது) கட்டண வீதங்களில் உயர்வு இல்லாதபோதிலும் இவ்வாறு வருவாய் கிடைத்தது. ஆனால், இன்னும் விரயம் ஏற்படுகிறது; இயங்கு செலவு உயர்ந்ததன் காரணமாகவே விரயம் அதிகரித்துள்ளது. இயங்கு செலவுக்கும் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கையின் அதிகரிப்புக்கும் தொடர் பில்லை. விரயத்திற்கான காரணங்கள் வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (அ) 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதற் கொண்டு தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் அதிகரித்த அகவிலைப்படி வீதங்களை அளித்தலும் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதற் கொண்டு நகர ஈட்டுப்படி அளித்தலும். | 12·37 |
| (ஆ) கடுவிசை டீசல் எண்ணெய் விலையில் ஏற்பட்ட உயர்வு. | 4·06 |
| (இ) மோட்டார் வண்டிகளுக்கு விதிக்கப்படும் வரி உயர்வு .. | 5·19 |
| மொத்தம் .. | 21·62 |

மாணவர்-பேருந்துத் தொழிலாளர் தகராறு காரணமாக 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25, 26-ம் தேதிகளில் போக்குவரத்துப் பணி நிறுத்தப்பட்டதனால் வருவாயில் குறிப்பிட்ட விரயம் ஏற்பட்டது இது ரூ. 7·50 லட்சம் ஆகும்.



1969 மார்ச் 24]

இத்துடன், தேய்மான வீதம் 20 சதவீதத்திலிருந்து 16 சத வீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது; 1967-68-ம் ஆண்டுக் கணக்கில் இந்த விவரம் கொடுக்கப்படவில்லை; இப்பொருள் பற்றிக் கணக்குத் துறைத் தலைவருடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டுள்ளதே காரணமாகும். இவை எல்லாவற்றையும் கணக்கில் கொண்டால் விரயம் நீக்கப்படலாம்.

அரசுப் போக்குவரத்துப் பணி, கன்னியாகுமரி.—கன்னியாகுமரி அரசுப் போக்குவரத்துப் பணிக்கு 1967-68-ல் ரூ. 1·78 லட்சம் விரயம் ஏற்பட்டது; முந்திய ஆண்டில் ரூ. 5 லட்சம் விரயம் ஏற்பட்டது. 1967-68-ல் விரயம் ஏற்பட்டதற்குக் கீழ்க்காணும் இனச் செலவுகளே காரணமாகும்; இதற்கும் பேருந்து எண்ணிக்கை அதிகரிப்பிற்கும் தொடர்பில்லை :—

(அ) 1967 நவம்பர் 1-ம் தேதி முதல் அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டன.

(ஆ) மோட்டார் வண்டிகள் வரி உயர்த்தப்பட்டது.

(இ) கடுவிசை டீசல் எண்ணெய்ச் செலவு உயர்ந்தது.

பேருந்து ஒன்றுக்கு ஒரு திங்களுக்குக் கிடைக்கும் வருவாய் 1966-67-ல் ரூ. 5,779 ஆக இருந்தது; இது 1967-68-ல் ரூ. 6,277 அதிகரித்தது. ஒரு திங்களுக்கு ஒரு பேருந்துக்காகும் சராசரிச் செலவு 1966-67-ல் ரூ. 6,062 ஆக இருந்தது. இது 1967-68-ல் ரூ. 6,351 ஆக உயர்ந்தது.

**2. நீள் தொலைவுப் போக்குவரத்து—**

1967-68-ல் கிடைத்த ஆதாயம் ரூ. 6·71 லட்சம்; முந்திய ஆண்டில் கிடைத்த ஆதாயம் ரூ. 4·64 லட்சம். மொத்த வருவாய் சுமார் ரூ. 29·53 லட்சம் ஆக உயர்ந்துள்ளது; செலவு சுமார் ரூ. 27·46 லட்சம் அதிகரித்துள்ளது. நிகர ஆதாயத் தொகையில் ரூ. 2·07 லட்சம் நிகர அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பேருந்து ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு, 1966-67-ல் வருவாய் ரூ. 8,464 ஆக இருந்தது 1967-68-ல் ரூ. 9,065 ஆக உயர்ந்தது. ஒரு மைலுக்கு 6 காசு என்றிருந்த கட்டணம் 5 காசு ஆகக் குறைக்கப்பட்டதனால் இந்த ஆண்டில் அதிக எண்ணிக்கையினர் பயணம் செய்ததன் விளைவாக வருவாயில் அதிகரிப்பு ஏற்பட்டது. ஒரு மாதத்திற்கு ஒரு பேருந்துக்காகும் செலவு 1966-67-ல் ரூ. 8,234 ஆக இருந்தது, 1967-68-ல் ரூ. 8,759 ஆக உயர்ந்தது. கீழ்க்கண்ட செல வினத்தினால் இது ஏற்பட்டது; பேருந்து எண்ணிக்கை அதிகரித்ததற்கும் இதற்கும் தொடர்பில்லை.—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (அ) 1967 நவம்பர் 1-ம் தேதி முதற்கொண்டு அகவிலைப்படி உயர்ந்ததும், 1967 அக்டோபர் 1-ம் தேதி முதல் நகர ஈட்டுப்படி அளித்தலும் .. .. .... .. | 2·00 |
| (ஆ) கடுவிசை டீசல் எண்ணெய் விலை உயர்வு .. .. | 1·10 |
| (இ) மோட்டார் வண்டி வரியில் உயர்வு .. .. .. | 1·70 |
| மொத்தம் .. | 4·80 |

[1969 மார்ச் 24

### 3. தமிழ்நாடு பேருந்துப் போக்குவரத்துத் துறையில சேம நிதிகள்

**1) தேய்மான சேமநிதி—**

பேருந்துகள் ஓடுவதின் விளைவாக அவற்றில் ஏற்படும் பழுதுகளைச் ரிபார்க்கவும் பயனற்றுப்போன இயந்திரப் பாகங்களுக்குப் பதிலாக, புதியன பற்றை வாங்கவும் ஆகும் செலவைச் சரிக்கட்ட தேய்மான சேமநிதி ன்று உள்ளது. 1968-69-ல் மேற்படி நிதியில் சேர்க்கப்பட்ட தொகை மற்படி நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை ஆகியவற்றைக் குறித்த ள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 968 ஏப்ரல் 1-ம் தேதியன்று மேற்படி நிதியில் இருப்பில் இருந்த தொகை .. .. .. .. .. .. | 5,65·33 |
| 968-69-ல் சேர்த்த தொகைகள் .. .. .. .. | 1,89·80 |
| மொத்தம் .. | 7,55·13 |
| 968-69-ல் இந்நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை .. | 57·75 |
| 969 மார்ச் 31-ம் தேதியன்று இந்த நிதியில் இருப்பு (எதிர்பார்ப்பது) .. .. .. .. .. .. | 6,97·38 |

துறையினருக்குச் சொந்தமான பேருந்துகளின் காரணமாகத் தேய்மான சமநிதிக்கு மிகுதியான தொகைகள் சேர்க்கப்பட்டன.

**2) பயணிகள் வசதி நிதி—**

தொடக்கத்தில் ரூபாய் 3 இலட்சம் தொகையுடன் இந்த நிதி 1960-61-ல் ற்படுத்தப்பட்டது. பேருந்துப் போக்குவரத்து நிறுவனம் விரிவடைந்து காண்டே போகையில் பயணிகளின் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகளை மற்கொள்ளவே இந்த நிதி வகை செய்யப்பட்டது. 1965-ம் ஆண்டு ார்ச் திங்கள் 31-ம் தேதி வரையில் இந்த நிறுவனத்தில் தனித்தனிப் பிரிவுகளிலிருந்து கிடைக்கும் நிகர ஆதாயத்திலிருந்து 5 சதவீதம் மற்படி நிதிக்கு வழங்கப்பட வேண்டுமென்று இருந்தது. 1965-66 தல் துறை முழுவதற்கும், அதாவது பிரிவுகள் அனைத்தும் அடங்கிய றை முழுவதற்கும் கிட்டுகிற நிகர ஆதாயத்தில் 5 சதவீதம் மேற்படி திக்கு வழங்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

1969 ஏப்ரல் 1-ல் உள்ளவாறு நிதி இருப்புக் கீழே காட்டியுள்ள விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 968 ஏப்ரல் 1-ம் தேதியன்று இருந்த இருப்பு .. .. | 2·86 |
| 68-69-ல் சேர்த்த தொகை .. .. .. .. | 0·20 |
| மொத்தம் .. .. | 3·06 |
| 68-69-ல் இதிலிருந்து வாங்கிய தொகை .. .. .. | .. |
| 69 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது) .. | 3·06 |



1969 மார்ச் 24]

1964 அக்டோபர் திங்கள் 1-ம் தேதிக்கு முன்பு மேற்படி நிதிகளை நிர்வகிப்பதில் இயக்குநருக்கு உதவி செய்வதற்கென, சென்னை, கன்னியாகுமரி கிளைகளுக்குத் தனிச்சிறப்பு ஆலோசனைக் குழுக்கள் இருந்தன. சென்னை, கன்னியாகுமரி கிளைகளுக்கான பயணிகள் வசதி நிதிக்கான சிறப்பு ஆலோசனைக் குழுக்கள் கலைக்கப்பட்டதால் 1964 அக்டோபர் திங்கள் 1-ம் தேதி முதல் சென்னை, கன்னியாகுமரி கிளைகளின் போக்குவரத்து ஆலோசனைக் குழுக்கள் கலைக்கப்பட்ட குழுக்களின் அலுவல் களையும் கவனித்துக் கொள்கின்றன.

**(3) வளர்ச்சி நிதி—**

போக்குவரத்துத் துறையின் பெருகிவரும் தேவைகளை நிறைவேற்று வதற்காக ரூபாய் 22·5 லட்சம் தொடக்கத் தொகையுடன் இந்த நிதி 1960-61-ல் நிறுவப்பட்டது. 1965 மார்ச் 31-ம் தேதி வரையில் இத் துறையின் தனித்தனிப் பிரிவுகளின் நிகர ஆதாயத்தில் 33⅓ சதவீதம் மேற்படி நிதிக்குச் செலுத்தப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. 1965-66 முதல் துறை முழுவதன் நிகர ஆதாயத்தில், அதாவது, பிரிவுகள் அனைத்தும் அடங்கிய துறை முழுவதன் நிகர ஆதாயத்தில் 33⅓ சதவீதம் மேற்படி நிதிக்கு வழங்கப்படுமென்று வகைசெய்யப்பட்டது.

1969 ஏப்ரல் 1-ம் நாளன்று இந்த நிதியின் தோராய இருப்புக் குறித்த புள்ளி விவரம் வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளன்று இருப்பு .. | 25·96 |
| 1968-69-ல் சேர்த்த தொகை .. .. .. .. .. | 1·82 |
| மொத்தம் .. | 27·78 |
| 1968-69-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. .. | .. |
| 1969 ஏப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு (எதிர்பார்ப்பது) .. | 27·78 |

**(4) வீட்டு வசதி நிதி—**

தமிழ் நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை தொழிலாளர் வீட்டு வசதி நிதி எனப்படும் நிதியை அரசாங்கம் 1962-63-ல் நிறுவியது. இத் துறையின் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியையும், ஏனைய வசதியையும் செய்துகொடுப்பதற்கான செலவுக்கு வகைசெய்வதே இந்த நிதியின் நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டும் தனிப்பட்ட முறையில் தமிழ் நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் நிகர வருவாயிலிருந்து இந்த நிதிக்குத் தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு செய்கையில் தமிழ் நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை ஏற்றுக்கொண்ட பொறுப்புகளும் வீட்டு வசதிக்கான அதன் வேலைத் திட்டமும் கருத்தில் கொள்ளப் படுகின்றன.

1969 ஏப்ரல் 1-ம் தேதியன்று இந்த நிதியில் இருக்கக்கூடிய இருப்பைக் கீழ்க்கண்ட புள்ளிவிவரம் காட்டுகிறது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1968 ஏப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு .. .. .. | 9·94 |
| 1968-69-ல் சேர்த்த தொகை .. .. .. .. | 0·70 |
| மொத்தம் .. | 10·64 |
| 1968-69-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. .. | .. |
| 1969 ஏப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு (எதிர்பார்ப்பது) .. | 10·64 |

[1969 மார்ச் 24

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக, தண்டையார்பேட்டையிலும், குரோம்பேட்டைக்கு அண்மையிலுள்ள நெமிலிச்சேரி கிராமத்திலும், நாகர்கோயில் நீண்டகரை கிராமத்திலும் நிலம் வாங்கி உள்ளது.

மாநில வீட்டு வசதி வாரியத்தின் குறைந்த வருமானமுடையோர் குடியிருப்புகள் மாதிரியை அடிப்படையாகக்கொண்டு குரோம்பேட்டையில் மூன்று அடுக்கு வகைக் குடியிருப்புகள் 5 தொகுதிகள் கட்டும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. அரசுப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரியில் பணியாற்றுவோரின் 90 குடும்பங்கள் இங்கு இடம்பெறும்; இதற்காகும் செலவு ரூ. 7·00 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**(5) விபத்துச் சேம நிதி—**

இந்த நிதி 1951ம் ஆண்டு நவம்பரில் ஏற்படுத்தப்பட்டது. பேருந்துகளில் செல்லுகையில் எதிர்பாரா வண்ணமாக ஏற்படும் விபத்துக்களின் வாயிலாக அவ்விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மற்றவர்கள் செய்துகொள்ளும் உரிமைக் கோரிக்கைகளுக்குச் சம்பந்தப்படுகிற செலவைச் சரிக்கட்டப் போதுமான நிதியை வைத்து வருவதே இந்த நிதியின் நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டின் வருவாயிலிருந்து ஆண்டுதோறும் மொத்தமாக ரூபாய் 2,000 என்ற ஒரே மாதிரியான வீதம் அல்லது இதன் செலவுகளைச் செய்த பிறகு மேற்படி நிதியில் ரூபாய் 2 லட்சம் தொகை எஞ்சியிருப்பதற்கு அவசியமான தொகை, இவற்றில் எது குறைவாய் உள்ளதோ அத்தொகை மேற்படி நிதிக்குச் செலுத்தப்பட்டது.

பேருந்துகளை ஈட்டுறுதி செய்வது தொடர்பான விதிகளை, 1965-ல் இந்திய அரசு திருத்தியது. இந்த விதிகளின்படி ஆண்டு ஒன்றுக்கு வண்டி ஒன்றுக்கு ரூ. 100 தொகை அளிக்கப்பட வேண்டும். இந்த நிதி 1968-69-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. நடப்பு ஆண்டில், எதிர்பார்க்கும் செலவைச் சரிக்கட்ட உயர்ந்த அளவுத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

1969ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதியன்று மேற்படி நிதியில் இருக்கக்கூடிய இருப்புத் தொகையைக் கீழ்க்கண்ட புள்ளி விவரத்தில் காணலாம்.—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1968 ஏப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு .. .. | 0·55 |
| 1968-69-ல் சேர்த்த தொகை .. .. .. .. | 3·04 |
| மொத்தம் .. | 3.59 |
| 1968-69-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. .. .. | 3·00 |
| 1969 ஏப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு (எதிர்பார்ப்பது) .. | 0·59 |

**(6) துயர் தணிப்புக் கருணை நிதி—**

1960 ஜூன் திங்களில் இந்த நிதி ஏற்படுத்த அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. ஊழியர்களின் ஈமச் சடங்குகளுக்காகும் செலவைச் சரிக்கட்டுவதே இந்த நிதியின் நோக்கமாகும். மேலும் பெரும் விபத்துக்குள்ளான ஊழியர்களின் உடனடியான செலவுக்குப் பணம் வழங்கவும், போக்குவரத்துத் துறைப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களில் சிக்கிய ஏழைகளுக்கு, ஆதரவற்றவர்களுக்கு அல்லது அவர்களது குடும்பத்தினருக்குப் பணம் வழங்கவும் இந்த நிதியிலிருந்து தொகை பயன்படுத்தப்படுகிறது. முதற்கண் இந்த நிதிக்கு ரூ. 1,000 செலுத்தப்பட்டது. அரசாங்கம் முதலில் அனுமதித்த ரூ. 1,000 அளவிற்கு இந்த நிதியின் இருப்புத் தொகை இருக்கும்படி செய்வதற்கென ஆண்டுதோறும் தொகை சேர்க்கப்படுகிறது.



1969 மார்ச் 24]

1969-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியன்று இருக்கக் கூடிய இருப்புத் தொகையை கீழ்க்கண்ட புள்ளி விவரம் காட்டுகிறது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1968 ஏப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு .. .. .. | 0·01 |
| 1968-69-ல் சேர்த்த தொகை .. .. .. .. | 0·04 |
| மொத்தம் .. | 0·05 |
| 1968-69-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. .. .. | 0·04 |
| 1969 ஏப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு (எதிர்பார்ப்பது) .. | 0.01 |

## 4. பேருந்துப்பணியை நாட்டுடைமையாக்குதல்

உலகப் போருக்குப் பின் நாட்டினைச் சீர்படுத்துவது குறித்த மத்தியக் குழு பொதுப் போக்குவரத்து ஏற்பாடு அரசாங்கத்திற்குச் சொந்தமாகவும், அரசாங்கத்தினால் நிர்வாகிக்கப்படுவதாகவும் இருக்க வேண்டுமென 1944, டிசம்பர் திங்களிலேயே பரிவுரை செய்தது. இப் பரிவுரையினையொட்டி, தமிழ் நாட்டில் உள்ள பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று 1946 டிசம்பரில் அரசாங்கம் முடிவு செய்தது. 1947 மார்ச் திங்களிலேயே, சென்னை மாநகரில் அப்போதிருந்த 239 தனியார்ப் பேருந்துகட்குக் கூடுதலாக, 30 பேருந்துகளை விடுவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. நாட்டுடைமையாக்கும் திட்டம் 1947-ம் ஆண்டு அக்டோபரில் இறுதியாகச் செயலுக்குக் கொணரப்பட்டு, ஒவ்வொரு திங்களிலும் கூடுதலான பேருந்துகள் விடப்பட்டன. தனியார் பேருந்து உரிமையாளர்கள் தங்களது பேருந்துப் போக்குவரத்துக்களை நிறுத்திக் கொண்டு வந்தனர். படிப்படியாக, 1948 ஜூலைத் திங்களில் சென்னை நகரில் உள்ள நகரப் பேருந்து போக்குவரத்து முழுவதும் நாட்டுடைமையாக்கப்பட்டது.

முதல் நெடுந்தொலைக் கடுவிசைப் போக்குவரத்து சீர் வசதியுடன் 1959 ஆகஸ்டில் தொடங்கப்பட்டது. 120 மைலுக்கு மேற்பட்ட எல்லா வழித்தடங்களிலும் போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்துகளே விடப்படவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அது தொடங்கப்பட்டது. அவ்வப்போது நெடுந்தொலை வழித்தடங்கள் பல தொடங்கப்பட்டன. தற்போது, இம் மாநிலத்தின் மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்துப் போக்குவரத்துப் பணியினால் இணைக்கப்பட்டுள்ளன.

பயணிகள் பேருந்துப் போக்குவரத்தைப் படிப்படியாக நாட்டுடைமையாக்கும் நோக்கத்துடன் தனியார் பேருந்து உரிமையாளர்களின் உரிமங்களின் செல்திறன் கால அளவு முடிவடைகையில், அவர்களது கீழ்க்கண்ட வகை வழித்தடங்களை நாட்டுடைமையாக்கி, தமிழகப் போக்குவரத்துத் துறையின் பேருந்துகளை அவற்றில் ஓட்டுவதென 1967 ஜூன் திங்களில் அரசாங்கம் முடிவு செய்தது :—

(அ) 75 மைல்களும் அதற்கு மேற்பட்ட தொலைவும் உள்ள வழித்தடங்கள் அனைத்தும் சாதாரண, கடுவிசைப் போக்குவரத்துக்கள் ;

(ஆ) சென்னை மாநகரிலிருந்து வெளிச் செல்கிற, சென்னை மாநகருக்குள் வந்து முடிவடைகிற வழித்தடங்கள் அனைத்தும்—(அவற்றின் நீளம் என்னவாக இருப்பினும்) ;

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வழித்தடங்கள் அனைத்தும்—அந்த மாவட்டத்திலிருந்து வெளிச் செல்கிற, அதற்குள் வந்து முடிவடைகிற வழித்தடங்கள் உட்பட.

[1969 மார்ச் 24

மேற்குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்துப் பணியை மேம்படுத்தும் பணிகள் அனைத்தையும் போக்குவரத்துத் துறையே மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் முடிவு செய்தது.

மேற்சொன்ன கொள்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முதல் வழித்தடம் சென்னை—ஆரணி வழித்தடமாகும். 1967 ஆகஸ்டு ஒன்றுந்தேதி முதல் அதில் போக்குவரத்துத் துறைப் பேருந்துகள் ஓடுகின்றன. அப்போது முதல், வழித்தடங்கள் பல, துறையினரால் மேற்கொள்ளப்பட்டு, துறையினர் பேருந்துகள் அவற்றில் ஓடுகின்றன.

இக் கொள்கையையொட்டி, 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம்தேதி வரையில் 234 போக்குவரத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குள் மேலும் 146 போக்குவரத்துப் பணிகள் மேற்கொள்ளப்படும். அரசு வகுத்த கொள்கையையொட்டி அவர்களின் அனுமதிச் சீட்டுக் காலம் முடிவடைந்ததும் தனியார் பேருந்து உரிமையாளர்களிடமிருந்து வழித்தடங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்னர் அரசாங்கப் போக்குவரத்து நிறுவனம் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் விதித் துறைகளை யொட்டி வரைவுத் திட்டங்கள் வெளியிடுகின்றது. வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் 1968-ம் ஆண்டு 18-ஆவது தமிழ் நாட்டுச் சட்டத்தினை யொட்டி, தனியார் பேருந்து உரிமையாளர்களிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட வழித்தடங்களில் வண்டிகளை ஓட்டுவதற்கு ஒரு தடவையில் நான்கு மாதங்களுக்கு, தமிழ் நாடு போக்குவரத்துத் துறைக்குத் தற்காலிக அனுமதிச் சீட்டுகள் வழங்குகின்றனர்.

தனியார் பேருந்து உரிமையாளர்களில் சிலர், அலுவல் விதிகளைச் சேர்ந்த 23-A (1) பிரிவின்கீழ் வேலைத் திட்டங்களை வெளியிடுவதற்குத் தொழில்—தொழிலாளர்—வீட்டுவசதித் துறையில் அரசுச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் செல்திறனையும் அலுவல் விதியைச் சேர்ந்த 23-A (2) பிரிவின்கீழ் அவ்வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு உள்துறை அரசுச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் செல்திறனையும் மறுத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். தமிழ் நாடு நிறுவன அவசரச் சட்டமும் (அவசரச் சட்டம் 1/1968) மோட்டார் வண்டிகள் (திருத்த) சட்டமும் (சட்டம் எண் 18/1968) செல்திறன் அற்றவையென்றும் வழக்குத் தொடரப்பட்டது. ஒரு வழக்கில் தனியார் பேருந்து முதலாளி ஒருவர் இந்திய உச்ச நீதிமன்றத்தின்முன் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இவ் வழக்கு விசாரணையிலிருந்து வருகிறது.

அலுவல் விதிகளைச் சேர்ந்த 23-A விதி செல்திறனுள்ளது என்றும், மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 68-C, 68-D பிரிவுகளின்கீழ் முறையே தொழில்—தொழிலாளர்—வீட்டுவசதித் துறை, உள்துறை அரசுச் செயலாளர்களுக்குச் சட்டப்படிக்கான அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கப்பட்டது சரியென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே, இதுவரையில் அறிக்கையிடப்பட்டுள்ள வரைவுத் திட்டங்களனைத்தும் செல்திறனுள்ளவையென்று முடிவு செய்யப்பட்டது. மேலும் தமிழ் நாடு 1968-ம் ஆண்டு 1-வது அவசரச் சட்டமும், தமிழ் நாடு 1968-ம் ஆண்டு 18-வது திருத்தச் சட்டமும் செல்திறனுள்ளவையாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவ் வரைவுத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படும் வரையில் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை உடனே மறுத்து விடாமல் வட்டாரப் போக்கு வரத்து அதிகாரிகள் அந்த விண்ணப்பங்களை வைத்துவர வேண்டி வருமென்றும், வரைவுத் திட்டங்கள் முடிவு செய்யப்படும் வரை இயன்ற வரையில் தாற்காலிக அனுமதிகளை வழங்க வேண்டுமென்றும் கருதப்பட்டது.



1969 மார்ச் 24]

தனியார் துறை பேருந்துப் பணியாளர், அரசு அந்தந்த வழித்தடங்களை மேற்கொண்டதன் பலனாக வேலையிழந்தபோதிலும் அவர்கள் அரசுப் போக்குவரத்துத் துறையில் பணி செய்வதற்குத் தகுதியுடையவர் என்று கண்டறியப்பட்டால் அவர்கள் விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல் அரசுப் போக்குவரத்துத் துறைப் பணியில் எடுத்துக் கொள்ளப்படுவர். இப் பணியாளர் வேலை வாய்ப்பு நிலையத்தின்மூலம் விண்ணப்பம் செய்துகொள்ளத் தேவையில்லை.

### 5. நிறுவனம் செயல்படுதல்.

(i) **பேருந்துப் போக்கு வரத்து.**—ஒரு போக்குவரத்து நிறுவனத்தின் திறன் போக்குவரத்துப் பணிக்காக வழங்கப்படும் பேருந்துகளின் சத வீதத்தையும், சாலைகளில் போக்குவரத்துக்கு ஓட்டப்படும் பேருந்துகளின் சத வீதத்தையும் பொறுத்ததாகும். போக்குவரத்துக்காகவுள்ள வண்டிகளின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, போக்குவரத்து இயக்கத்திறன் சத வீதம், சாலைகளில் ஓடும் பேருந்துகளின் சத வீதம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை | போக்குவரத்துப் பணிக்காக வழங்கப்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1967-68 (எதிர்பார்ப்பது) | .. | 1,517 | 1,302 |
| 1968-69 (எதிர்பார்ப்பது) | .. | 1,843 | 1,677 |

| இயக்கத்திறன். | சாலைகளில் ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கை. | மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கையில் சாலைகளில் ஓட்டப்பட்டவற்றின் சத வீதம். |
|---|---|---|
| (4) | (5) | (6) |
| 86 ./. | 1,259 | 83 ./. |
| 91 ./. | 1,585 | 86 ./. |

சாலைகளில் விடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பது மேலே கொடுத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரியவரும். உள்ள பேருந்துகளை முழுதும் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் அவ்வாறு செய்யப்பட்டது.

இந்த ஆண்டில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை, அவை பயணம் செய்த மைல்கள், வசூல் முதலியவைகுறித்த விவரங்கள் கீழே உள்ள புள்ளி விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | ஆண்டுத் தொடக்கத்தில் வண்டிகளின் மொத்த எண்ணிக்கை. | ஆண்டில் சேர்க்கைகள். பழையன வற்றிற்குப் பதிலாக. | ஆண்டில் சேர்க்கைகள். புதியவை. | ஆண்டு முடிவில் மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1967-68 | .. | 1,373 | 151 | 358 | 1,731 |
| 1968-69 (எதிர்பார்ப்பது). | .. | 1,731 | 128 | 235 | 1,965 |

[1969 மார்ச் 24

| ஆண்டு. | ஏற்றிச் செல்லப்பட்ட பயணிகள் எண்ணிக்கை. | கட்டணம் வாங்கிய தூரம் (மைல் கணக்கில்). (Revenue Mileage.). | வசூல் (பயணச் சீட்டுகளின் விற்பனை). |
|---|---|---|---|
| | (6) | (7) | (8) |
| | | | ரூ. |
| 1967–68 .. .. | 422,708,105 | 72,820,000 | 10,44,62,625 |
| 1968–69 .. .. | 335,634,648 (1968 டிசம்பர் வரையில்.) | 69,830,147 | 10,26,87,763 |

1967–68-ல் சென்னை நகர, புற நகர், நீள்தொலை பேருந்துப் போக்கு வரத்துக்களில் நாளொன்றுக்கு ஒரு பேருந்து ஏற்றிச் சென்ற பயணிகளின் அன்றுட எண்ணிக்கை 920-ஆக இருந்தது. இது 1966–67-ல் 906-ஆக இருந்தது.

(ii) குரோம்பேட்டையிலும், நாகர்கோயிலிலும் உள்ள பட்டறைகள்.—குரோம்பேட்டையிலும், நாகர்கோயிலிலும் உள்ள பட்டறைகளின் வேலை முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | தமிழக அரசுப் போக்குவரத்துத் துறைக்கென துறையினரின் பட்டறைகளில் கட்டப்பட்ட வண்டி மேல் பகுதிகளின் எண்ணிக்கை. | தனியார் நிறுவனங்களில் கட்டப்பட்ட வண்டி மேல் பகுதிகள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1967–68 .. .. | 523 | .... | 523 |
| 1968–69 .. .. | 362 | .... | 362 |

பட்டறைகளின் எஞ்சிய திறன் பிற துறைகட்கு வேண்டியவற்றைச் செய்யப் பயன்பட்டது.

(iii) பணியாளர்.—1967–68, 1968–69 ஆண்டுகளில் இத் துறையைச் சேர்ந்த பணியாளர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | 1967–68 (31–12–1967 அன்றிருந்த படி.) | 1968–69 (31–12–1968 அன்றிருந்த படி.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (a) தொழில் நுட்பப் பணியாளர்— | | |
| (i) மேற்பார்வைப் பணியாளர்கள் .. | 308 | 334 |
| (ii) மேற்பார்வைப் பணியாளர்கள் நீங்கலாக ஏனைய பணியாளர்கள். | 5,109 | 6,054 |
| மொத்தம் .. | 5,417 | 6,388 |



1969 மார்ச் 24]

| | 1967–68 | 1968–69 |
|---|---|---|
| (b) போக்குவரத்துப் பணியாளர்— | | |
| (i) மேற்பார்வைப் பணியாளர் .. .. | 623 | 708 |
| (ii) மேற்பார்வைப் பணியாளர்கள் நீங்கலாக ஏனைய பணியாளர்கள். | 6,734 | 8,581 |
| மொத்தம் .. | 7,357 | 9,289 |

ஆய்வு ஆண்டில் தொழில் நுட்பப் பணியாளர் எண்ணிக்கையில் 971 கூடுதலாகியது. போக்குவரத்துப் பணியாளர்களின் எண்ணிக்கையில் 1932 கூடுதலாகியது.

**6. சென்னை கிளையில் கூடுதல் பேருந்துப் பணிகளும், வழித்தடங்களும்**

(அ) சென்னைக் கிளையில் கீழ்க்கண்ட புதிய வழித்தடங்கள் தொடங்கப் பட்டுள்ளன :—

| நகர, புறநகர் வழித்தடங்கள். | | | | பேருந்து கள். |
|---|---|---|---|---|
| (1) | வழித்தடம் எண் | 38-A | மூலக்கடை—பாரிமுனை .. | 2 |
| (2) | ஷை | 48-B | அம்பத்தூர் தொழிற்பேட்டை—வடபரம்பாக்கம். | 2 |
| (3) | ஷை | 25-B | திருவல்லிக்கேணி—அசோக் நகர். | 4 |
| (4) | ஷை | 12-E | அசோக்நகர்—மந்தைவெளி | 4 |
| (5) | ஷை | 12-F | விவேகாநந்தர் இல்லம்—ரங்கராசபுரம். | 3 |
| (6) | ஷை | 21-F | சீதக்காதிநகர்—திருவான் மியூர். | 4 |
| (7) | ஷை | 38-G | பாரிமுனை—சீதக்காதிநகர் | 1 |
| (8) | ஷை | 12-G | வடபழநி—திருவான்மியூர் | 2 |
| (9) | ஷை | 23-E | மந்தைவெளி—நுங்கம்பாக் கம் ரயில் நிலையம். | 2 |
| (10) | ஷை | 58-B | தங்கசாலை—காரனோடை .. | 2 |
| (11) | ஷை | 51-F | சைதாப்பேட்டை—வேளச் சேரி. | 2 |

(ஆ) கீழ்க்காணும் வழித்தடங்களில் ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது :—

| | | | | அதிகப்படுத் தப்பட்ட பேருந்துப் போக்கு வரத்து எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | வழித்தடம் | எண் 70-A | பிராட்வே—பழவந்தாண்டலம். | 1 |
| (2) | ஷை | எண் 23-A | எழும்பூர் —இந்திராநகர் .. | 2 |
| (3) | ஷை | எண் 64 | நீதிமன்றம்—மாதவரம் பால் பண்ணை. | 2 |
| (4) | ஷை | எண் 20 | பாரிமுனை—வில்லிவாக்கம் | 2 |

(இ) காலையிலும், மாலையிலும் மாணவர்களுக்கென தனி வண்டிகள் தொடர்ந்து விடப்பட்டன. முக்கிய சந்தைகள், திருவிழாக்கள், கலை நிகழ்ச்சிகள், மாநாடுகள் முதலியவை சம்பந்தமாக ஏற்பட்ட கூடுதல்

கான திட்டமொன்றுக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இப்பயணச் சீட்டுகள் நகர வழித்தடங்கள் அனைத்துக்கும் செல்லுபடியாகும். இப்பய ணச் சீட்டுகள் விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. அவை எந்த நாளன்று விற்பனை செய்யப்படு கின்றனவோ அந்த நாளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இப்பயணச் சீட்டு ஒவ்வொன்றுக்குமு உரிய மதிப்பு ரூ. 1·50 என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 1968–69-ல் இது நீடிக்கப்பட்டுள்ளது.

9. குருடர்களுக்கும், ஊனமுடையோருக்கும் சலுகை.

இத் துறையின் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு குருடர்களுக்கும், ஊனமுடையோருக்கும் அரசாங்கம் சலுகை வழங்கியுள்ளது. வழங்கப் பட்டுள்ள சலுகை குறித்த விவரங்கள் வருமாறு :—

(அ) இத் துறையின் பேருந்துகளில் குருடர்களும், ஊனமுடையோரும் கட்டணமின்றிப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். இவர்களுக்குத் துணை வருவோருக்கு முழுக் கட்டணம் வசூலிக்கப்படும்.

(ஆ) தன் ஒரு காலைப் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள முடவர்களுக்கும் சலுகை உண்டு.

(இ) குருடர் அல்லது ஊனமுடையோர் துணையின்றித் தாமே பயணம் செய்வார்களானால், அவருக்குத் துணை எதும் தேவையில்லை என்று கருதப்பட்டு, அவருக்குச் சலுகை எதும் வழங்கப்படமாட்டாது.

(ஈ) இப்பேருந்தின் மூலம் பயணம் செய்கின்ற குருடர் அல்லது ஊனமுடைய ஒருவர் சிகிச்சைப் பெற்று வருகிறார் என்று மருத்துவர் ஒருவரின் சான்றிதழைக் காண்பிககவேண்டும் அல்லது மருத்துவ மனைச் சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

(உ) இச்சலுகை நகரப் பேருந்துக்களில் மட்டுமே அனுமதிக்கத்தக்க தாகும்.

(ஊ) இச்சலுகை சிகிச்சை பெறும் காலத்திற்கு மட்டுமே அனுமதிக் கத்தக்கதாகும்.

10. நீள் தொலை பேருந்துப் போக்குவரத்து.

(அ) இவ்வாண்டில் பின்வரும் நீள் தொலைப் பேருந்து போக்கு வரத்துக்கள் தொடங்கப்பட்டன.

(1) வழித்தடம்—503—சென்னை-திருச்சி—2 பேருந்துகள்.

(2) வழித்தடம்—505–எ—சென்னை-சேலம்—2 பேருந்துகள்

(3) வழித்தடம்—536—திருச்சி-தூத்துக்குடி—2 பேருந்துகள்.

(4) வழித்தடம்—557—சென்னை-கும்பகோணம்—2 பேருந்துகள்.

(ஆ) வழித்தடங்கள் 503-ம் 505-எ-ம் இரவுப் போக்குவரத்துகளாக இயக்கப்படுகின்றன.

(இ) வழித்தடம் 549—கோயம்புத்தூர்—சேலம் ரத்துசெய்யப்பட்டது. கோயம்புத்தூர்-இராமநாதபுரம் என்னும் புதிய வழித்திட்டம் 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ந் தேதியன்று இயக்கப்பட்டது.



(ஈ) நீள் தொலைப் பேருந்துகளின் மூலம் கிடைக்கிற வருவாயைப் பெருக்கும்பொருட்டு இப்பேருந்துகளில் 35 இருக்கைகளுக்குப் பதிலாக 39 இருக்கைகள் அமைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இப்போது கட்டப்படும் நீள் தொலைப் பேருந்துகள் அனைத்திலும் 39 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. பழைய வண்டி களில் படிப்படியே இருக்கைகளின் எண்ணிக்கை 39 ஆக உயர்த்தப்பட்டு வருகிறது.

(உ) இப்போது 58 நீள் தொலை வழித்தடங்களில் 150 சீர்வசதிப் பேருந்துகள் ஓட்டப்படுகின்றன.

11. கன்னியாகுமரிக் கிளையின் கூடுதல் பேருந்துகளும் வழித்தடங்களும்

(அ) கன்னியாகுமரிக் கிளையில் பின்வரும் புது வழித்தடங்கள். தொடங்கப்பட்டன :—

(1) வழித்தடம்—மாணவர் தனிப் பேருந்து—குருச்சடைக் கல்லூரி தக்கலை—1 பேருந்து.

(2) வழித்தடம்—மாணவர் தனிப் பேருந்து—நாகர்கோயில் கொளச்சல்—1 பேருந்து.

(3) வழித்தடம்—30-A—தொடுவெட்டி-தெங்கப்பட்டினம் (வழி)—கரிங்கல்—1 பேருந்து.

(4) வழித்தடம்—14-B—கொல்லங்கோடு-தொடுவெட்டி—1 பேருந்து.

(5) வழித்தடம்—74—செங்கோட்டை-திருச்செந்தூர்—2 பேருந்துகள்.

(6) வழித்தடம்—10H—நாகர்கோயில்-புத்துக்கடை—1 பேருந்து.

(7) வழித்தடம்—13-J—நாகர்கோயில்-முத்துலூர்—1 பேருந்து.

(8) வழித்தடம்—3-C—நாகர்கோயில்-கனகப்பாபுரம்—1 பேருந்து.

(ஆ) நான்கு வழித்தடங்களில் போக்குவரத்துகளை அதிகப் டுத்துவதும் நீட்டிப்பதும் மேற்கொள்ளப்பட்டது.

12. தொழில் நுட்ப மேம்பாடுகள்.

**(அ) பணி மனைகள் —சென்னை மாநகரம்—**

சென்னை மாநகரில் ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்தமையால் ரூ. 3·00 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் வட சென்னையில் (மாதவரம்) மேலும் ஒரு பணி மனை கட்டப்பட்டு வருகிறது.

**(ஆ) பணி மனைகள் —வெளியூர்—**

கீழ்க்காணும் இடங்களில் பணி மனைகள் கட்டப்பட்டு வருகின்றன :—

(1) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ராணித் தோட்டம்.
(2) மதுரை.
(3) பாளையங்கோட்டை.
(4) உதகை.
(5) பாபநாசம்.
(6) திண்டுக்கல்.
(7) வேலூர்.
(8) தஞ்சாவூர்.
(9) வந்தவாசி.
(10) ஒசூர்.
(11) கடலூர்.
(12) கோயம்புத்தூர்.

[1969 மார்ச் 24

தகுந்த நிலம் கிடைக்காமையால் கீழ்க்காணும் இடங்களில் பணிமனைகள் கட்டும் செயற்குறிப்புகள் செயல்படுத்தப்படாமல் உள்ளன :—

(1) தருமபுரி.

(2) பழநி.

(3) திருவண்ணாமலை.

(4) காஞ்சீபுரம்.

(5) விருதுநகர்.

(இ) பேருந்து நிலையங்கள்.—மதுரையில் பேருந்து நிலையம் ஒன்று கட்டப்பட்டது ; 1968, ஜூலையில் இது செயல்படத் தொடங்கியது. நகராட்சியின் பேருந்து நிலையங்கள் உள்ள இடங்களில் அவற்றையே அரசுப் பேருந்துகளும் பயன்படுத்திக் கொள்ளலாமென்று பொதுக்கொள்கையாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு சிக்கன நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது ; நகராட்சிப் பணிகளையும் அரசாங்கப் பணிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

### 13. டயர் புதுப்பிக்கும் பிரிவுகள்.

(அ) சென்னையில் உள்ள டயர் புதுப்பிக்கும் பிரிவு மூன்று முறை மாற்றங்களில் ( Shifts ) செயல்படுகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு. | புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1967–68 .. .. .. .. .. .. | 11,581 |
| 1968–69 (1968 டிசம்பர் 31 வரை) .. .. | 11,438 |

(ஆ) நாகர்கோயிலில் உள்ள தொழிற்சாலை, புதுப்பிக்கப்பட்ட டயர்களுக்கான தேவையைச் சரிக்கட்டவும் புதிய டயர்களுக்காகும் செலவைக் குறைக்கவும் 1967 ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் மூன்று முறை மாற்றங்களில் செயல்படுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1967–68 .. .. .. .. .. .. | 4,211 |
| 1968–69 (1968 டிசம்பர் 31 வரை) .. .. | 3,211 |

டயர் புதுப்பிக்கும் பிரிவுகளில் டயர்கள் புதுப்பிக்கப்படுவதுடன், குழல்களும் ( Tubes ) டயர்களும் ஒட்டிச் செப்பனிடப்படுகின்றன.

சென்ற ஆண்டைப் போல், தொழிலாளர் கல்வித் திட்டத்தின் நலன்கள் இத் துறையினால் முற்றிலும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

### 14. தொழிலாளர் கல்வித் திட்டம்.

நடப்பு ஆண்டில் பயிற்சியளிக்கப்பட்ட தொழிலாளர்-ஆசிரியர்களின் எண்ணிக்கை வருமாறு :—

1968–69 (1968 டிசம்பர் 31 வரையில்) .



1969 மார்ச் 24]

நடப்பு ஆண்டில் பயிற்சி பெற்ற பிரிவு நிலை வகுப்புப் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1968–69 .. .. .. .. .. .. 536

### 15. பயிற்சி.

(அ) 1961-ம் ஆண்டு பயிற்சியாளர்கள் சட்டத்தின் கீழ் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம், இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுகிறது. இச் சட்டத்தின் கீழ்ப் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை, இந்த ஆண்டு ஆராயப்பட்டு கீழே குறிப்பிட்டவாறு எண்ணிக்கை குறிப்பிடப்பட்டது. திருத்தியமைத்த திட்டத்தின்கீழ் பயிற்சிபெறும் காலம், இரண்டு ஆண்டுகளாகும் :—

| தொழில் | பயிற்சியாளர்கள் எண்ணிக்கை. | | | |
|---|---|---|---|---|
| | சென்னைக் கிளை. | அரசாங்கப் போக்கு வரத்து மத்தியப் பணிக்களரி. | கன்னியாகுமரி பிரிவு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கம்மியர் (மோட்டார் வண்டி) .. .. | 101 | 16 | 19 | 136 |
| உலோகம் பற்றவைப்பவர் .. .. | 4 | 3 | 2 | 9 |
| கடைசல்காரர் .. .. .. .. .. | .. | 3 | 1 | 4 |
| பெஞ்ச் பொருத்துநர் .. .. .. | .. | .. | 1 | 1 |
| மொத்தம் .. | 105 | 22 | 23 | 150 |

பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகை கீழ்க்காணும் வீதங்களில் அளிக்கப்படுகிறது :—

| | சென்னையில். | அரசாங்கப் போக்குவரத்து மத்தியப்பணிக்களரியில். | கன்னியாகுமரிக் கிளையில். |
|---|---|---|---|
| | (ரூபாய் மாதத்திற்கு.) | | |
| (i) பயிற்சியின் முதல் ஆண்டுக்கு. | 70 | 60 | 60 |
| (ii) பயிற்சியின் அடுத்த ஆண்டுக்கு. | 80 | 70 | 70 |

இப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள் இயன்றவரை இத் துறையின் பணியில் அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சித் தொழில்களில், குறிப்பாக, கம்மியர் (மோட்டார் வண்டிகள்) தொழில்களில் பயிற்சி பெற்றவர்களை நியமிப்பதில் இத் திட்டம் இத்துறைக்குப் பலனளிக்கிறது.

(ஆ) பொறியியல் பட்டம் பெற்றவர்களுக்கும் தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் இந்திய அரசின் பயிற்சி உதவிப் பணம் வழங்குவதற்கான திட்டத்தின்கீழ்ப் பயிற்சியளிக்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

(இ) தகுதிப் பட்டயப் பட்டதாரர்களுக்கு துறைப் பணிக்களரியில் சம்பளம் பெறும் பயிற்சி பெறுபவர்களாகப் பயிற்சியளிக்கப்படுகிறது. நகரப் பணி மனைகளில் இத்துறை 40 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கிறது; அரசுப் பேருந்துப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரியில் 24 பேருக்கும் கன்னியாகுமரி கிளையில் 30 பேருக்கும் ஒரே சமயத்தில் பயிற்சியளிக்கப் படுகிறது.

(ஈ) இத்துறையின் தொழிலாளர்களது மக்களுக்கும் அவர்களைச் சார்ந்து வாழ்வோருக்கும் பயிற்சியளிக்கும் திட்டம், தொடர்ந்து செயல் படுத்தப்பட்டுவருகிறது. ஓராண்டுக் காலப் பயிற்சியின்போது பயிற்சியாளர் களுக்கு, முதல் ஆறு திங்களுக்கு ரூ. 1 வீதத்தில் நாட்படியும் அடுத்த ஆறு திங்களுக்கு ரூ. 1·50 நாட்படியும் அளிக்கப்படுகிறது. பயிற்சியைத் திறம்பட முடித்த பின்னர், இத்துறையில் அவர்கள் வேலைக்கமர்த்தப் படுகின்றனர்.

### 16. தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பணி நலங்கள்.

சென்ற ஆண்டு ஆய்வுரையில் விவரித்துள்ள நலன்கள் உட்படக் கீழ்க்காணும் நலன்களும் இந்த ஆண்டில் தொழிலாளர்களுக்கு நீட்டிக் கப்பட்டுள்ளன.

(அ) இதுவரையில் இரவு முறை மாற்றுப் பணிகளில் ஈடுபட்ட தொழில் நுட்பப் பணியாளர்கள் மட்டுமே சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இரவு அலுவல் படி பெறத் தகுதியுடையவர்களாயிருந்தனர். 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதி முதற்கொண்டு கீழ்க்காணும் வீதங்களில் காவல் பணிபுரிவோருக்கும் இச்சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது.

| வகை. | இரவு நேர அலுவல் படி ஒரு நாள் இரவுக்கு. |
|---|---|
| | ரூ. |
| (1) பாதுகாப்பு அதிகாரி .. .. .. .. .. | 1·05 |
| (2) பணியாளர் மேற்பார்வையாளர் .. .. .. | 0·45 |
| (3) காவலாளி .. .. .. .. .. .. | 0·40 |

(ஆ) குரோம்பேட்டை, அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிக் களரியிலுள்ள சில தொழிலாளர்களுக்குச் சென்னை மாநகரத்திற்கும் குரோம்பேட்டை பணிக்களரிக்கும் இடையே பயணம் செய்ய ரயில்வே சீசன் டிக்கட் கட்டணத்திற்கு ஈடாகத் தொழிலாளர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 7 என்னும் உயர் அளவிற்கு உட்பட்டு படி அளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள், சென்னையிலுள்ள அரசாங்க "ஆட்டோமொபைல்" பணிக்களரியில் முன்னர் பணியாற்றிக் குரோம்பேட்டைக்கு மாற்றப்பட்டவர் களாவர். ரயில்வே கட்டணம் திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாக உயர் அளவு திங்கள் ஒன்றுக்கு 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் நாள் முதல் ரூ. 7-லிருந்து ரூ. 7·70 ஆக உயர்த்தப்பட்டது.

(இ) டயர் புதுப்பிக்கும் பிரிவில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும் ஊக்கப் பூரிப்பு ஊதியத் திட்டம், திருத்தியமைக்கப்பட்டது; ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறைமாற்றுப் பணியிலும் எவ்வளவு வார்ப்புகள் செயல்படுகின்றன என்னும் அடிப்படையில் உற்பத்தித்திறன் குறிப்பிடப்பட்டது. பூரிப்பூதிய ஆண்டான 1966–67 முதல் (1966 அக்டோபர் முதல் 1967- செப்டம்பர் வரையில்) இத் திருத்தியமைத்த திட்டம் நிறைவேற்றப்பட்டது. கூடுதல் பூரிப்பூதியமாகத் தொழிலாளர் களுக்கு தோராயமாக ரூ. 500 அளிக்கப்பட்டது.





(ஈ) (i) மைகோ, பெங்களூர்,
(ii) டெல்கோ, ஜாம்ஷெட்பூர்,
(iii) அசோக் லேலண்டு, எண்ணூர், ஆகிய இடங்களில் சிறப்புப் பயிற்சிபெற தொழிலாளர்கள் அனுப்பப்பட்டனர்.

(உ) பூரிப்பூதிய ஆண்டாகிய 1967–68-க்கு (1967, அக்டோபர் முதல் 1968, செப்டம்பர் வரையில்) குரோம்பேட்டை, அரசுப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரியில் தொழிலாளர்களுக்கு அளிக்கும் சலுகையாக ஊக்கப்பூரிப்பு ஊதியத் திட்டமும் வருகைப் பூரிப்பூதிய திட்டமும் தனியே பிரிக்கப்பட்டது.

(ஊ) இதுவரையில் வெளியூர்களிலுள்ள தொழிலாளர்களின் சம்பளமும் படிகளும் தலைமையிட அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு வந்தன; மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களுக்கு வழங்கப்படுவதற்கு அனுப்பப்பட்டுவந்தன. இம் முறையினால் கால தாமதம் ஏற்பட்டுவந்தது; இதன் காரணமாக, வெளியூர்களிலுள்ள தொழிலாளர்கள் ஒவ்வொரு மாதமும் 7-ம் தேதியிலிருந்து 10-ம் தேதிக்குள் அவர்கள் சம்பளத்தைப் பெற்றுவந்தார்கள். இதனால் போக்குவரத்தில் ரசீதுப் பட்டிகளும் தவறிவிட ஏதுவாயின. இதன் காரணமாக வெளியூர்களிலிருந்து துணைப்பட்டிகள் சம்பளத்திற்காகத் தயாரித்துச் சென்னைக்கு அனுப்பப்பட்டு வந்தன. 1968, ஆகஸ்டு 1-ம் தேதி முதல் திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள பணிமனைகளின் மேற்பார்வையாளர்கள், கருவூலத்தில் கணக்குத் தொடர்பு வைத்துக்கொண்டு, உள்ளூர்க் கருவூலத்திலிருந்து தொழிலாளர்களின் சம்பளத் தொகையை அளிக்கத் தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த முறை தொழிலாளர்களின் சம்பளக் கேட்பைத் தீர்ப்பதில் ஏற்படும் கால தாம தத்தைப் பெருமளவு குறைத்து துறையின் திறமையையும் மேம்படுத்த உதவியது.

### 17. நலப் பணிகள்.

(1) **மருத்துவ உதவி**—ஒவ்வொரு நகரப் பணிமனைக்கும் அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரியிலுள்ள பணிக்களரிக்கும் கன்னியா குமரி பிரிவிற்கும் மருந்தகங்கள் உள்ளன. இந்த மருந்தகங்களில் இருப்பு இல்லாததும் சிகிச்சைக்குப் பணியாளர்கள் விலைக்குவாங்கியதுமான விலை உயர்ந்த மருந்துகளின் செலவை அரசாங்கம் ஈடு செய்கிறது. இத் துறையுடன் குடும்ப நலத் திட்டப் பிரிவு ஒன்றும் இணைக்கப் பட்டுள்ளது.

(2) **வீட்டு வசதி**.—குரோம்பேட்டையில் 90 குடும்பங்கள் வசிப்பதற்கு வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறைப் பணியாளர்களுக்கு, குறைந்த செலவில் வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 188 குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

(3) **கருணை உதவி**.—அளிக்கப்படும் நலன் 3 (6) பாராவில் விளக்கப் பட்டுள்ளது. இத்துடன் அபராத நிதியும், காயமடையும் தொழிலாளருக்கு ரூ. 791 வரையில் நிதியுதவி அளிக்கப் பயன்படுத்தப்பட்டது. தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 1,140 அளிக்கப்பட்டது.

(4) **பொழுதுபோக்கு வசதிகள்**.—முந்திய ஆண்டில் அளிக்கப்பட்ட பொழுது போக்கு வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் இதற்கென அரசாங்கம் ரூ. 8,000 அளித்துள்ளது. 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் தேதி ஒரு நூல்நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

(5) **நியாய விலைக்கடை**.—1964-ம் ஆண்டு மே மாதம் 1ந் தேதி முதல் இக்கடை செயல்பட்டு வருகிறது. கட்டுப்பாட்டுப் பொருள்கள் அனைத்தும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. தொழிலாளர் களுக்கு கடன் வசதியும் செய்யப்பட்டுள்ளது. தற்போது நியாய விலைக் கடையில் 1,900 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.

## 18. பொதுத் தொடர்புப்பணிகள்.

(1) 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ந் தேதி வரையில் நீள் தொலைவுப் போக்குவரத்திற்கு இருக்கை ஒதுக்கம் செய்யப்பட்ட பயணச் சீட்டுகள் தொடர்பாகத் திருப்பிச் செலுத்தப்படும் தொகை தலைமையிட அலுவலகத்தில் மட்டும் திருப்பிச் செலுத்தப்பட்டது. இதனால் பயணம் செய்யும் பொதுமக்களுக்கு பெருமளவு இடர்பாடும் பணம் பெறுவதில் காலதாமதமும் ஏற்பட்டது. 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ந் தேதி முதல் இத் தொகையை அப்பயணச் சீட்டுகள் வாங்கப்பட்ட இடத்தில் அங்கு வசூலான தொகையிலிருந்து அளிக்க உத்தரவிடப் பட்டது. இதனால் பயணிகள் தங்கள் தொகையைத் திருப்பிப் பெற்றுக் கொள்ள வசதி ஏற்பட்டது. இதனால் இத்துறைக்கும் பொதுமக்களுக்கும் உள்ள தொடர்பு பெருமளவில் மேம்பட்டது.

(2) பொதுமக்களிடமிருந்து வரும் முறையீடுகளும், குறைகளும் உடனடியாகக் கவனிக்கப்படுகின்றன. காலம் மாற்றுதல், வழித்தடங்களை நீட்டித்தல், வழித்தடங்களை மாற்றுதல் ஆகிய பணிகள் பயணம் செய்வோரின் வசதிக்கேற்பத் தகுந்தவாறு செய்யப்படுகின்றன.

(3) இழந்த பொருள் பிரிவிற்குப் பயணிகளின் 2,106 பொருள்கள் வந்துசேர்ந்தன. அவற்றில் 517 பொருள்கள் அவற்றை இழந்தவரிடமே சேர்ப்பிக்கப்பட்டன. எஞ்சிய பொருள்கள் உரியவரிடம் சேர்ப்பிக்க காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(4) செய்தித்தாள் மூலமும், அனைத்திந்திய வானொலி மூலமும் முக்கிய அறிவிப்புகளை மக்களுக்கு அறிவிக்க 80 செய்திக் குறிப்புகள் இத் துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

(5) 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ந் தேதியில் துறைமுகம் என்ற பெயரை சீதக்காதி நகர் என்று மாற்ற விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. 1968-ம ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ந் தேதியில் அப்போது பொதுப்பணி அமைச்சராய் இருந்த திரு. மு. கருணாநிதி அவர்களால் மதுரையில் புதிய பேருந்து நிலையம் ஒன்று திறக்கப்பட்டது.

(6) ஏற்புபெற்ற அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற பேருந்தில் பயணம் செய்ய குருடர்களுக்கும், உடல் ஊனம் உடையவர்களுக்கும் இத்துறை, பேருந்து சீட்டுகள் அளித்து வருகிறது.

## 19. மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம்.

1955-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி முதல் செயல்படும் மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம், இம் மாநிலத்தில் பொதுப் பணித் துறை நீங்கலாக அரசின் பல துறைகளைச் சேர்ந்த மோட்டார் வண்டிகளைச் செப்பனிடுதல், பேணுதல் பணியைச் செய்ய அமைந்ததாகும்.

அரசின் பல துறைகளின் மோட்டார் வண்டிகள் திறம்படவும் சிக்கன முறையிலும் பேணப்படுவதற்காக மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம் சீரமைக்கப்பட வேண்டும் என்று 1966-ல் கருதப்பட்டது.

அரசின் பல துறைகளால் நிர்வகிக்கப்படும் மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை, அரசுப்பணிகள் விரிவடையும் காரணத்தால் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளன ; அதிகரித்து வரும் இந்த வண்டிகளைப் பேணும் பணியை மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனத்தினால் கவனிக்க முடியவில்லை.

வண்டிகளைச் சிக்கனமாகவும் திறம்பட' பேணவும் பாதுகாக்களவு தனியார் பணிக்களரிகளை நம்பும் அவசியத்தை இயன்ற அளவு தவிர்க்கவும், கீழே குறிப்பிட்ட மூன்று நிலைகளில் மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனத்தின் முழு அமைப்பையும் சீரமைப்பதற்கான விரிவான செயற்குறிப்புகள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன.



**முதல் நிலை.**—கூடுதல் பணியாளர்களை நியமித்தல் ; எல்லாப் பணிக் களரிகளுக்கும் போதுமான கருவிகளையும் துணைக் கருவிகளையும் வழங்குதல். உதிரிப் பாகங்களின் இருப்பை ஏற்படுத்த மத்தியக் கொள்முதல், சேமித்தல் பிரிவை உருவாக்குதல்.

**இரண்டாம் நிலை.**—சென்னை மத்தியப் பணிக்களரிக்காகப் புதிய கட்டிடங்களைக் கட்டுதல்; மதுரை, சேலம், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள பணிக்களரிகளுக்கான கட்டிடங்களை மேம்படுத்துதல்.

**மூன்றும் நிலை.**—கோயம்புத்தூரிலும், கன்னியாகுமரியிலும் இரண்டு பணிக்களரிகளை ஏற்படுத்துதல்.

சீரமைப்புத் திட்டத்தின் முதல்நிலை ஏறத்தாழ 1967-ல் முழுவதும் நிறைவேற்றப்பட்டது. அனுமதிக்கப்பட்ட பல தொழில் நுட்பப் பதவிகளில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்; மிகையான கருவிகளும் துணைக் கருவிகளும் வாங்கப்பட்டு எல்லாப் பணிக்களரிகளுக்கும் வழங்கப் பட்டன. சீரமைத்துச் செப்பனிடப்பட்ட வண்டிகளைக் கணக்கிட்டே முதல் நிலை செயல்படுத்தப்பட்ட பாங்கினை அறிந்துகொள்ள முடியும்.

மத்தியக் கொள்முதல் சேமிப்புப் பிரிவு, 1966-ல் அமைக்கப்பட்டது: அரிய இணைப்புக் கருவிகளும் விரைந்து செலுத்தும் பாகங்களும் தயாரிப் பாளர்களிடமிருந்தும் மொத்த வணிகர்களிடமிருந்தும் மொத்த அளவில் வாங்கப்பட்டு வருகின்றன. மத்திய பணிக்களரிக்கு வேளச்சேரியில் சிறந்த கட்டிடம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது ; இங்கு ஏற்கெனவே தகுந்த இடம் ஒன்று கையகப்படுத்தப்பட்டுள்ளது. சேலத்தில் புதிய கட்டிடங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன; நீர் வழங்கும் இணைப்பும் மின்சார இணைப்பும் இன்னும் கொடுக்கப்படவில்லை. இதுபோன்றே மதுரையிலும், தமிழ்நாடு போக்குவரத்துத் துறை ஏற்கெனவே கையகப் படுத்திய புதிய இடத்தில் சிறந்த பணிக்களரி ஒன்றைக் கட்டத் திட்ட மிடப்பட்டுள்ளது. தஞ்சாவூரில், தற்போதுள்ள இடத்தில் கூடுதல் கட்டி டம் கட்டப்படும்.

மூன்றுவது நிலையை நிறைவேற்றுவதற்கு ரூ. 26 லட்சம் நிதி உதவி தேவைப்படுகிறது ; இரண்டாவது நிலை முற்றிலும் நிறைவேற்றப்பட்டதும் இது மேற்கொள்ளப்படும். இவ்வாறு இந்த மூன்று சீரமைப்பு நிலைகளும் முடிவுற்றதும், அரசின் எல்லாத் துறைகளையும் சேர்ந்த வண்டிகளைச் சிறந்த அளவில் சிக்கனமாகவும் திறம்படவும் செப்பனிட முடியுமென்றும் தனியார் பணிக்களரிகளை நம்பியுள்ள நிலை பெருமளவு தவிர்க்க முடியுமென்றும் கருதப்படுகிறது. 1968 டிசம்பர் திங்களில் கார் செப்ப னிடும் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. அமைச்சர்களின் கார்களையும், தலைமைச் செயலகம், அரசாங்க விருந்தினர் மாளிகை ஆகியவற்றின் கார்களையும் செப்பனிடுவது இதன் பணியாகும். கார்களைச் செப்பனிடு வதற்காக பணியாளர்களின் ஒரு பிரிவினர், நியமிக்கப்பட்டு, இவர்கள் இப்போது அப் பணிகளை நிறைவேற்றி வருகின்றனர். இதனால் அரசாங்கத் திற்கு ஓரளவு சேமிப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 20. பொது.

(1) சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும் இத்துறையின் அதிகாரிகளும் அடங்கிய குழு ஒன்றை, இத்துறையின் உதவாத வண்டிகளைச் சரியாக மதிப்பிட்டு, ஏலம் விடுவதற்காக அரசாங்கம் அமைத்தது. இக்குழு குறிப் பிட்ட காலத்திற்கு ஒருமுறை கூடுகிறது ; உதவாதவையாக ஒதுக்கப்பட்ட வண்டிகளைப் பார்வையிடுகிறது ; அந்த வண்டிகள் ஏலம் விடப்படும்போது இக்குழு நேரில் கண்காணிக்கின்றது.

(2) பேருந்துகளில் விளம்பரம் வெளியிடுவது 1968-69-லும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதில் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரையில் ரூ. 1·31 லட்சம் வருவாய் கிடைத்தது. சென்னைக் கிளையில் 1967-68-ல் ரூ. 1·20 லட்சமே பெறப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

பேருந்துகள் செல்கின்றன ; முக்கியச் சாலை வழிமட்டும் அவைகள் செல்வதில்லை. பொதுமக்களுக்குப் பயன்தரும் நிறுவனம் என்ற முறையிலும் பொது வணிக நிறுவனம் என்ற முறையிலும் இத்துறை செவ்விய முறையில் பணியாற்றி வருகின்றது.

புள்ளி விவர அறிக்கை I.

பேருந்துகளின் மொத்த எண்ணிக்கையும் சாலையில் ஓட்டப்படும் பேருந்துகளின் சராசரி எண்ணிக்கையும்.

| ஆண்டு. | ஆண்டு இறுதியில் இருந்த பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை. | ஆண்டில் சாலையில் ஓட்டப்படும் பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1959-60 .. .. .. | 561 | 386 |
| 1960-61 .. .. .. | 695 | 537 |
| 1961-62 .. .. .. | 770 | 569 |
| 1962-63 .. .. .. | 814 | 629 |
| 1963-64 .. .. .. | 950 | 690 |
| 1964-65 .. .. .. | 1,076 | 789 |
| 1965-66 .. .. .. | 1,256 | 937 |
| 1966-67 .. .. .. | 1,373 | 1,069 |
| 1967-68 .. .. .. | 1,731 | 1,259 |
| 1968-69 (எதிர்பார்க்கப்படுபவை). | 1,966 | 1,585 |

புள்ளி விவர அறிக்கை II.

ஆண்டொன்றில் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, புதிதாக வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையும் அதிகரித்த பேருந்துகளின் எண்ணிக்கையையும் காட்டும் புள்ளி விவர அறிக்கை.

| ஆண்டு. | பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிதாக வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை. | அதிகரித்த பேருந்துகளின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 959-60 .. .. .. | 114 | 10 | 124 |
| 960-61 .. .. .. | 35 | 134 | 169 |
| 961-62 .. .. .. | 11 | 75 | 86 |
| 962-63 .. .. .. | 130 | 44 | 174 |
| 1963-64 .. .. .. | 43 | 136 | 179 |
| 1964-65 .. .. .. | 137 | 126 | 263 |
| 1965-66 .. .. .. | 113 | 180 | 293 |
| 1966-67 .. .. .. | 105 | 117 | 222 |
| 1967-68 .. .. .. | 151 | 358 | 509 |
| 1968-69 (எதிர்பார்க்கப்படுபவை). | **128** | **235** | **363** |





புள்ளி விவர அறிக்கை III.

1959-60-ம் ஆண்டிலிருந்து 1968-69-ம் ஆண்டு வரை கிடைத்த வருவாய் ஏற்பட்ட செலவு, நிகர வருவாய், ஆதாயம் ஆகியவற்றின் விவரம்.

| ஆண்டு. | மொத்த வருவாய். | ஏற்பட்ட செலவு. | நிகர வருவாய். | நிதி- | நிகர ஆதாயம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1959-60 .. .. | 266·53 | 201·70 | 64·83 | 37·73 | 27.10 |
| 1960-61 .. .. | 316·27 | 239·67 | 76·60 | 61·37 | 15·23 |
| 1961-62 .. .. | 391·65 | 297·21 | 94·44 | 75·81 | 18·63 |
| 1962-63 .. .. | 468·96 | 378·72 | 90·24 | 77·82 | 12·42 |
| 1963-64 .. .. | 550·83 | 487·10 | 63·73 | 91·82(—) | 28·09 |
| 1964-65 .. .. | 675·82 | 589·43 | 86·39 | 104·63 | (—)18·24 |
| 1965-66 .. .. | 839·27 | 740·67 | 98·60 | 112·99 | (—)14·39 |
| 1966-67 .. .. | 968·15 | 896·55 | 71·60 | 132·60 | (—)61·00 |
| 1967-68 .. .. | 1,223·81 | 1,087·99 | 135·82 | 159.07 | (—) 23.25 |
| 1968-69 (எதிர் பார்க்கப்படுபவை). | 1,544·71 | 1,350·60 | 194·11 | 189·90 | (+)4·31 |

புள்ளி விவர அறிக்கை IV.

நேர்முகச் செலவையும் மறைமுகச் செலவையும் காட்டும் விவர அறிக்கை, தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை.

பாகம் I.

| செலவின் விவரம். | 1967-68 (கணக்குகள்). | 1968-69 (எதிர் பார்க்கப் படுபவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| A. I. நேர்முகச் செலவு— | | |
| (1) போக்குவரத்துப் பணியாளர், தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோருக்குக் கொடுக்கப்படும் ஊதியம். | 240·21 | 310·10 |
| (2) எரிபொருள் .. .. .. .. | 236·70 | 286·85 |
| (3) டயர்களும், ட்யூபுகளும் .. .. | 42·43 | 68·00 |
| (4) உதிரி பாகங்களும், துணைப்பகுதிகளும்.. | 111·81 | 94·28 |
| (5) பழுது பார்த்தலும், செப்பனிடுதலும் .. | 16·11 | 70·00 |
| (6) மோட்டார் வண்டி வரியும், மேல் வரியும். | 179·90 | 238·50 |
| **(7) அதிகாரிகள், பணியாளர்கள் சம்பளம்** | **27·41** | **33·48** |
| (8) வாடகை, வீதங்கள், வரிகள், உடை, ஏனைய சில்லறைச் செலவுகள். | 35·25 | **37·92** |

பாகம்—I தொடர்ச்சி.

| செலவின் விவரம். (1) | 1967-68 (கணக்குகள்). (2) | 1968-69 (எதிர் பார்க்கப் படுபவை). (3) |
|---|---|---|
| A. I. நேர்முகச் செலவு—தொடர்ச்சி. | | |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 9. அரசுப் போக்குவரத்தைச் சேர்ந்த மத்தியப்பணிக்களரியில் ஏற்படும் நேர்முகச் செலவுகள். | 73·75 | 73·63 |
| 10. இராணித் தோட்டம் பணிக்களரியில் ஏற்படும் நேர்முகச் செலவுகள். | 31·42 | 33·07 |
| மொத்தம்—நேர்முகச் செலவுகள் .. | 994·99 | 1,245·83 |
| B. மைல் ஒன்றுக்கு ஆகும் நேர்முகச் செலவு— | | |
| | ரூ. காசு. | ரூ. காசு. |
| 1. சென்னைக் கிளை .. .. .. .. | 1·22 | 1·19 |
| 2. கன்னியாக்குமரி கிளை .. .. | 1·17 | 1·14 |
| 3. நீள் தொலை பேருந்துப்பணி .. .. | 1·26 | 1·24 |
| II. A. மறைமுகச் செலவு— | | |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. விடுப்பும் ஓய்வூதியமும் .. .. | 20·78 | 23·34 |
| 2. தணிக்கைக் கட்டணம் .. .. .. | 0·98 | 1·05 |
| 3. மூலதனத்தின் மீது வட்டி .. .. | 59·87 | 69·40 |
| 4. அரசுப் போக்குவரத்தைச் சேர்ந்த மத்தியப்பணிக்களரிக்காக ஏற்படும் மறைமுகச் செலவு. | 7·94 | 7·73 |
| 5. இராணித் தோட்டம் பணிக்களரிக்காக ஏற்படும் மறைமுகச் செலவு. | 3·43 | 3·25 |
| மொத்தம்—மறைமுகச் செலவு .. | 93·00 | 104·77 |
| | ரூ. காசு. | ரூ. காசு. |
| B. மைல் ஒன்றுக்கு ஆகும் மறைமுகச் செலவு— | | |
| 1. சென்னைக்கிளை .. .. .. | 0·13 | 0·12 |
| 2. கன்னியாகுமரிக் கிளை .. .. .. | 0·06 | 0·06 |
| 3. நீள் தொலை பேருந்துப்பணி .. .. | 0·09 | 0·08 |



பாகம் II.

| செலவின் விவரம். (1) | 1967-68 (கணக்குகள்). (2) | 1968-69 (எதிர் பார்க்கப் படுபவை). (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. போக்குவரத்துப் பணிக்காகும் நேர் முகச் செலவுகள். | 889·82 | 1,139·13 |
| 2. அரசுப் போக்குவரத்தைச் சேர்ந்த மத்தியப் பணிக்களரிக்கும், இராணித் தோட்டம் பணிக்களரிக்கும் ஆகும் நேர்முகச் செலவுகள். | 105·17 | 106·70 |
| 3. மொத்தம்—நிறுவனத்தின் நேர்முகச் செலவு. | 994·99 | 1,245·83 |
| 4. போக்குவரத்துப் பணிக்காகும் மறை முகச் செலவு. | 81·63 | 93·79 |
| 5. அரசுப் போக்குவரத்தைச் சேர்ந்த மத்தியப் பணிக்களரிக்கும், இராணித் தோட்டம் பணிக்களரிக்கும் ஆகும் மறைமுகச் செலவு. | 11·37 | 10 98 |
| 6. மொத்தம்—நிறுவனத்தின் மறை முகச் செலவு. | 93·00 | 104·77 |
| 7. மொத்தம்—அரசுப் போக்குவரத்துத் துறை நிறுவனத்துக்காகும் நேர்முகச் செலவும் மறைமுகச் செலவும். | 1,087·99 | 1,350·60 |

பாகம் III.

| (1) | சேர்க்கும் தொகை. 1967-68 (2) | 1968-69 (எதிர் பார்க்கப் படுவது). (3) | 1969 ஏபரல் 1-ம் தேதி நிலவரப்படி முன்னேற்ற இருப்பு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. தேய்மானம் ஒதுக்க நிதி | 159·28 | 189·80 | 697·38 |
| 2. வளர்ச்சி நிதி .. .. | .. | .. | 27·78 |
| 3. பயணிகள் வசதி நிதி .. | .. | .. | 3·06 |
| 4. வீட்டு வசதி நிதி .. .. | .. | .. | 10·64 |
| மொத்தம்.. | 159·28 | 189 80 | 738·86 |

புள்ளி விவர அறிக்கை V.

மூலதன முதலீடு.

| கீழ்க்கண்ட தேதிய நிலவரப்படி. | மொத்தம். | ஒவ்வொரு ஆண்டு சேர்க்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1959 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 3,01·84 | 25·66 |
| 1960 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 3,68·08 | 66·24 |
| 1961 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 4,33·66 | 65·58 |
| 1962 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 4,96·05 | 62·39 |
| 1963 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 5,11·06 | 15·01 |
| 1964 ஏப்ரல் 1-ந்தேதி .. .. .. | 6,88·54 | 177·48 |
| 1965 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 8,48·86 | 1,60·32 |
| 1966 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 10,02·02 | 1,53·16 |
| 1967 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 12,03·17 | 2,01·15 |
| 1968 ஏப்ரல் 1-ந் தேதி .. .. .. | 14,20·51 | 2,17·34 |
| 1969 ஏப்ரல் 1-ந் தேதி (தற்காலிகமானது.) .. .. .. | 16,40·68 | 2,20·17 |

புள்ளி விவர அறிக்கை IV.

குரோம்பேட்டை அரசுப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரியில் கட்டப்பட்ட பேருந்து மேல்பகுதிகளின் எண்ணிக்கை.

| கால அளவு. | கட்டப்பட்ட மேல் பகுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1958–59 .. .. .. | 66 |
| 1959–60 .. .. .. | 83 |
| 1960–61 .. .. .. | 97 |
| 1961–62 .. .. | 127 (20 சீர்வசதிப் பேருந்துகள், 3 சரக்கு பேருந்துகள் உட்பட.) |
| 1962–63 .. .. .. | 122 (28 சீர்வசதிப் பேருந்துகள் உட்பட.) |
| 1963–64 .. .. .. | 182 (37 சீர்வசதிப் பேருந்துகள், 7 சரக்குப் பேருந்துகள் உட்பட.) |



| கால அளவு | கட்டப்பட்ட மேல் பகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1964–65 .. .. .. | 292 (42 சீர்வசதிப் பேருந்துகள், சரக்குப் பேருந்துகளாக மாற்றப்பட்ட 60 பேருந்துகள் ஏனைய 15 –பணிகள் உட்பட.) |
| 1965–66 .. .. .. | 324 (23 சீர்வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்காகச் செய்யப்பட்ட 61 பணிகள் உட்பட.) |
| 1966–67 .. .. .. | 342 (15 சீர்வசதிப் பேருந்துகள் ·மத்தியப் பிரதேசத்திற்காக 7 பேருந்துகள், ஏனைய துறைகளுக்காகச் செய்யப்பட்ட 151 பணிகள் உட்பட.) |
| 1967–68 .. .. .. | 432 (5 கடுவிசைப் பேருந்துகள், 133 விசைப் பேருந்துகள், 2 சரக்குப் பேருந்துகள் மத்தியப் பிரதேசத்திற்காக 2 பேருந்துகள், ஏனைய துறைகளுக்காகச் செய்யப்பட்ட 4 பணிகள், உலகத் தொழிற் சந்தைக்காக 3 சிறப்புப் பேருந்துகள் உட்பட.) |
| 1968–69 .. .. .. (எதிர் பார்க்கப்படுபவை.) | 390 (62 விசைப் பேருந்துகள், 1 சரக்குப் பேருந்து, மத்தியப் பிரதேசத்திற்காக 5 பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக செய்யப்பட்ட 102 பணிகள் உட்பட.) |

புள்ளி விவர அறிக்கை VII.

இராணித் தோட்டம் பணிக்களரியில் கட்டப்பட்ட பேருந்து மேல் பகுதிகளின் எண்ணிக்கை.

| கால அளவு. | கட்டப்பட்ட மேல் பகுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1964–65 .. .. .. | 44 (4 சீர்வசதிப் பேருந்துகள் உட்பட.) |
| 1965–66 .. .. .. | 60 (21 சீர்வசதிப் பேருந்துகள் உட்பட ஆனால் ஏனைய துறைகளுக்காகச் செய்யப்பட்ட 23 பணிகள் நீங்கலாக.) |
| 1966–67 .. .. .. .. | 72 (7 சீர்வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்கான 32 பணிகள் உட்பட.) |
| 1967–68 .. .. .. | 111 (12 சீர்வசதிப் பேருந்துகள், அரசாங்கத்தின் மற்ற துறைகளுக்கான 12 பேருந்து மேல் பகுதிகள் உட்பட.) |
| 1968–69 (எதிர்பார்க்கப்படுபவை | 86 (12 சீர்வசதிப் பேருந்துகள் ஏனைய துறைகளுக்கான 6 பணிகள் உட்பட.) |

(3) விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன், இந்த ஆண்டில் பொதுமக்கள் தொடர்பு-விளம்பர அதிகாரி ஒருவரை அரசு நியமித்துள்ளது.

(4) கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் அப்போதைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் (தற்போது முத அமைச்சர் அவர்கள்) அளித்த உறுதி மொழியையொட்டி உயர் அதிகாரக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் ஆய்வு வரம்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(i) விரயத்தைத் தவிர்க்கவும் இத்துறை செய்த முதலீடுகளைப் பொறுத்து இத்துறை செயல்படுவதை மேம்படுத்தவும் வழி வகை காணுதல் ;

(ii) இத்துறையின் தொழிலாளர்களின் தற்போதைய சம்பளத்தையும் முன்னேற்ற வாய்ப்புகளையும் அவர்களுக்கு வசதியளிக்கும் நிலைகளையும் ஆராய்தலும் அவற்றைச் செயல்படுத்தும் வழி, வகைகளைக் கூறுதலும்.

1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்கு முன்னர் அதன் அறிக்கையை அளிக்குமாறு இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது ; இக்குழுவின் அறிக்கையை அரசு ஆய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கும். இத்துறைக்கு விரயம் ஏற்படுத்தும் சென்னை மாநகரப் போக்குவரத்தின் வருவாயை அதிகரிப்பது பற்றி இத்துறை தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

1967, டிசம்பர் முதற்கொண்டு சென்னை மாநகரப் போக்குவரத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கூடுதல்களும் குறைப்புகளும் நீட்டிப்பும் மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. 1967, டிசம்பரில் உள்ளவாறு மாநகரப் போக்குதரத்தின் 80 சதவீதம் ஆதாரமற்றதாக உள்ளது. கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி பல வழித்தடங்களின் வசூல் தொகையை அதிகரிக்க பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ன. குறைந்த வருவாய் கிடைக்கும் வழித்தடங்கள், மேம்பாட்டிற்காக அடிக்கடி மாற்றத் துக்கு உட்பட்டு வருகின்றன.

சென்னை மாநகர-வெளியூர்ப் போக்குவரத்துக்கள் உட்பட மாநகரில் 751 பேருந்துகள் இயங்குகின்றன. 1967- ஜூன் திங்களில் 61 நெருக்கடி நேரப் பேருந்துகள் இயக்கப்பட்டிருக்க இப்போது 10 நெருக்கடி நேரப் பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுகின்றனவென்று குறிப்பிடத்தக்கதாகும். காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாக இரண்டு சிறு தொலைவுப் போக்குவரத்துக்களை அதாவது மாணவர் சிறப்புப் பேருந்துகள் இயக்கப் படுகின்றன. மாணவர் சிறப்புப் பேருந்துகள் விடப்படும் முன்னரும் பின்பும் விடும் போக்குவரத்துப் பணிகளுக்கு சூழ்நிலைக்கேற்ப நான்கு மணி நேர அல்லது எட்டு மணி நேர பணி அட்டவணை கொடுக்கப்பட்டது. இப்போக்குவரத்துகள் சிக்கனமற்றவை என்றும் ஆதாயமற்றவை என்றும் கருதப்பட்டது. எனவே, இப்போக்குவரத்துகள் ஆதாயமுள்ளதாக மட்டு மன்றி, குறிப்பிட்ட வழித்தடங்களில் ஓடும் வகையில் இந்த சிறு தொலைவுப் போக்குவரத்துகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணி அட்டவணை வகுக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையில் முறையான வழித்தடப் போக்குவரத்துக்களுடன் மாணவர் சிறப்புப் போக்குவரத்துக்கள் சிலவற் றையும் இயக்கத் தீர்மானிக்கப்பட்டது. சிறு தொலைவுப் போக்குவரத்துகள் சில, 2 முறை மாற்றுகளில் முழு நாள் போக்குவரத்தாக அதாவது 16 மணி நேரம் இயக்கப்படும் வகையில் மாற்றப்பட்டுள்ளன.

ஆதாயமற்ற வழித்தடங்களில் வசூலாகும் தொகையை அதிகரிக்க ஒரு வழித்தடததின் பேருந்துகளை, நெரிசல் இல்லாத நேரங்களில் மற்றொரு வழித்தடத்திலோ அல்லது அவ்வழித்தடத்தின் பகுதியிலோ இயக்குவது மற்றொரு நடவடிக்கையாகும். 11-பி, 11-சி வழித் தடங்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும். நெரிசல் இல்லாத நேரத்தில்



11-சி வழித்தட வண்டிகள், 12-பி வழித்தடத்திலும் 11-பி வழித்தட வண்டிகள், 29-பி வழித்தடத்திலும் இயக்கப்படுகின்றன. சில வழித்தடங் களில் ஆதாயமற்றுக் போக்குவரத்தை நடத்துவதும் நெரிசல் இல்லாத நேரங்களில் நிறுத்தப்பட்டுள்ளது.

கட்டண வசூலை அதிகரிக்கும் பொருட்டு வழித்தடங்கள் மாற்றியமைக் கப்பட்டுள்ளன. வழித்தடங்களை மாற்றியமைத்தலும் பேருந்துகளை மாற்றி வழங்குதலும் கீழ்காணும் இரு நோக்கங்களுகாகச் செய்யப்பட்டுள்ளன.

(1) வசூலை அதிகப்படுத்தல்

(2) அண்மைக் காலத்தில் எழுந்துள்ள புதிய குடியிருப்புகளுக்குப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துதல்.

வசூலை அதிகப்படுத்தவும் ஆதாயமற்றப் போக்குவரத்தைத் . தவிர்க்கவும் இத்துறை முனைப்பாக முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் ஆதாயமற்ற முறையில் இயங்குவதற்குப் பலகாரணங்கள் உள்ளன. குறிப்பிட்ட இடங்களில் பேருந்து நிலையங்கள் வேண்டுமென்றும் வசதிகள் வேண்டு மென்றும் ஒரு சில தொகுதி மக்கள் குரல் எழுப்பியதன் காரணமாக ஆதாயம் தரத்தக்க வழித்தடங்களில் பேருந்துப் பணியை நீட்டிக்க இயலாததாகிவிட்டது.

ஒரே சமயத்தில் பேருந்துகள் பல ஒன்றுகச் சேர்ந்து ஒன்றன்பின் ஒன்றுக, வருவது, போக்குவரத்துத்துறை ஆதாயமற்ற முறையில் இயக்கப் படுவதற்குக் காரணமென்று காணப்பட்டது. பேருந்துகள் இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றுக வருவ்தற்குக் காரணங்களாவன:—

(அ) இருப்புப் பாதை-சாலைக் கடவு போன்ற போக்குவரத்து தடைகள், சாலைச் சீரமைப்புப் பணிகளினுல் பேருந்து மாற்று வழி செல்லுதல்.

(ஆ) குறிப்பிட்ட ஒரு பகுதியில் பல வழித்தடங்கள் அமைந் திருத்தலும் ஒவ்வொரு வழித்தடத்திற்கும் தனித்தனி இடைவெளி நேரம் இருத்தலும்.

இரண்டாவது குறிப்பிடப்பட்ட காரணம் பற்றி ஆராய்ந்து அதைப் போக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது, முதற் காரணம், போக்குவரத்துக் கட்டுப்பாட்டில் அடங்காது.

மாநகரப் போக்குவரத்தில் காணப்பட்ட மற்றொரு குறை யாதெனில், வழித்தடங்களின் சில பகுதிகளில்மட்டும் பயணிகள் அதிக அளவு பயணம் செய்கின்றனர் என்பதும் புறப்படுமிடத்திலிருந்து பேருந்து சேர்விடம் வரையில் அவ்வாறு இருப்பதில்லையென்றும் அறியப் பட்டுள்ளது. இத்தகைய பகுதிகளில் அதிக அளவுப் பேருந்துகளை விடுவதன் மூலம் மக்களுக்கு வசதி செய்து கொடுக்கலாம்.

மேலே சொல்லப்பட்டதிலிருந்து, மாநகரப் போக்குவரத்தைப்பொறுத்த வரையில் வசூலை அதிகரிக்கவும் ஆதாயமற்ற முறையில் இயக்கப்படு வதைக்குறைக்கவும் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அறியப்படும், அதே சமயத்தில் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவிற்கு இருக்கும் வழித்தடங்களில் பேருந்துகளை அதிகரித்தும் அண்மைக் காலத்தில் எழுந்த புதிய குடியிருப்பிடங்களுக்குப் பேருந்துத் தொடர்பு ஏற்படுத்தியும் ஆவன செய்யப்பட்டுள்ளமையும் அறியப்படும். வாடகைக் கார்கள் பொதுமக்களால் பயன்படுத்தப்படுவது குறைந்துள்ளது என்றும் தமிழ் நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையினுல் தங்கள் தொழில் அச்சுறுத்தப்படுவதாகவும் வாடகைக்கார் ஓட்டுபவர்கள் கருதுவது பேருந்துப் போக்குவரத்துப் பணியின் சிறப்பு நிர்வாகத்துக்குச் சான்றுகும். இப்போது, வழித்தடங்கள் சிலவற்றிலிருந்து ஆதாயம் கிடைக்காத போதிலும் மாநகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் தமிழ் நாடு அரசாங்கப்

நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

| தொடர் எண். | வழித்தட எண். | பேருந்து களின் எண்ணிக்கை. | வழி. | ஒட்டப்படும் நாள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |

கன்னியாகுமரி பிரிவில் இயங்கும் நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| வழித்தட எண். | வழித்தடம். | பேருந்துகளின் எண்ணிக்கை. | ஓட்டப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 17-E | நாகர்கோயில்—மொண்டக்காடு .. .. | 1 | 20—5—1968. |
| 18-A | நாகர்கோயில்—பெரியக்காடு .. .. .. | 1 | 1—7—1968. |
| 19-C | நாகர்கோயில் (வழி).—கொளச்சல்—ராஜாக்க மங்கலம் | 1 | 22—6—1968. |
| 17-F | நாகர்கோயில்—பெருஞ்சாணி .. .. | 1 | 25—5—1968. |
| 17-G | நாகர்கோயில்—பூத்துரை .. .. .. | 1 | 25—5—1968. |
| 16-C | பூத்துரை—கொளச்சல் .. .. .. | 1 | 10—6—1968. |
| 12-C | நாகர்கோயில் (வழி).—தோடுவெட்டி—ராஜாக்க மங்கலம் | 1 | 10—6—1968. |
| 17-H | நாகர்கோயில்—(வழி) அசாரி பள்ளம்—தோடு வெட்டி—முட்டம். | 1 | 10—6—1968. |
| 65 | நாகர்கோயில்—திருநெல்வேலி .. | 6 | 1—7—1968. |
| 65-A | நாகர்கோயில்—(வழி) எருவாடி—திருநெல் வேலி. | 1 | 1—7—1968. |
| 66 | கன்னியாகுமரி—திருநெல்வேலி .. .. | 1 | 1—7—1968. |
| 26-A | நாகர்கோயில்—(வழி) வேலமாட—ராஜா ...ர். | 1 | 4—7—1968. |
| 19-C | நாகர்கோயில்—(வழி) ராஜாக்கமங்கலம்—கொளச்சல். | 1 | 5—7—1968. |
| 41 | கொளச்சல்-அருமானே .. .. .. | 1 | 6—7—1968. |
| 41-A | கொளச்சல்—தோடுவெட்டி .. .. .. | 1 | 6—7—1968. |
| 16-C | பூத்துரை—கொளச்சல் .. .. .. | 2 | 10—7—1968. |
| 14-B | தோடுவெட்டி—கொல்லங்கோடு .. .. .. | 1 | 10—7—1968. |
| 15-D | தோடுவெட்டி—அலென்சோளி .. .. | 1 | 10—7—1968. |
| 15-E | குழித்துரை—பனச்சமூட் .. .. .. | 1 | 10—7—1968. |
| 42 | மணக்குடி—வீரணி .. .. .. .. | 2 | 14—7—1968. |
| 22-A | தோடுவெட்டி—அழகியபாண்டிபுரம் .. .. | 1 | 1—10—1968. |
| 38-A | நாகர்கோயில்—கேசவன்பூத்தென்துரை .. | 1 | 1—11—1968 |
| 13-H | தக்கலே—குலசேகரம் .. .. .. .. | 1 | 2—9—1968 |
| 19-B | நாகர்கோயில்—(வழி) ராஜாக்கமங்கலம்—கொளச்சல். | 1 | 25—5—1968. |

# தமிழ்நாடு சட்டப்பேரவை

---

செவ்வாய்க்கிழமை, 1969 மார்ச் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலே 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலேவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினுக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

*Cultivating Tenants in Thanjavur District.*

* 451 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of patta holders who own less than 5 acres of cultivable lands in Thanjavur district;

(*b*) the number of tenants who are engaged in cultivation in Thanjavur district;

(*c*) the total acreage of land cultivated by tenants in Thanjavur district as on March 1968; and

(*d*) the number of tenants who own patta lands in Thanjavur district?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :**

(*a*) 607,374.

(*b*) 160,672.

(*c*) 301,618.

(*d*) 64,089.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலேவர் அவர்களே, இந்தக் கணக்கு ஸ்டாண்டார்ட் ஏக்கரா அல்லது சாதாரண ஏக்கரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று தான் கருதுகிறேன். இப்போது விவரம் இல்லே.

**திரு. என். கிட்டப்பா :** தஞ்சாவூர் மாவட்டத்தில் இம் மாதிரி குத்தகை அடிப்படையில் பயிரிடக்கூடிய விவசாயிகள் இந்த மாவட்டத்திலுள்ள தர்மபுரம் ஆதீன மடத்திற்குச் சொந்தமான எவ்வளவு ஏக்கர் இடங்களில் குத்தகை சாகுபடிதாரர்கள் இருக்கிறுர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

**திரு. பி. வேலுச்சாமி :** தலேவர் அவர்களே, ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ளவர்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு பேர்கள் இருக்கிறுர்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது தஞ்சையைப் பற்றிய கேள்வி. தமிழ்நாட்டைப் பற்றியது அல்ல.

நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். | வழித்தட எண். | பேருந்துகளின் எண்ணிக்கை. | வழி. | ஓட்டப்படும் நாள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 404-B | 2 | சேலம்—திருச்சி .. .. | 2—4—1968. |
| 2 | 141 | 2 | சென்னை—போளூர் .. .. | 24—4—1968. |
| 3 | 95-B | 1 | சென்னை—திருப்பாலைவனம் .. | 17—4—1968. |
| 4 | 411 | 1 | நாமக்கல்—ரெங்கபாயன்காடு .. | 26—6—1968. |
| 5 | 414 | 1 | திருப்பூர்—ரெங்கபாயன்காடு .. | 8—5—1968. |
| 6 | 143 | 1 | சென்னை—கம்மாவண்பாளையம் .. | 11—5—1968. |
| 7 | 370 | 1 | திருநெல்வேலி—மதுரை .. | 19—5—1968. |
| 8 | 415 | 1 | தருமபுரி—குண்டக்கோட்டை .. | 27—5—1968. |
| 9 | 415-A | 1 | தருமபுரி—தேன்கனிக்கோட்டை. | 27—5—1968. |
| 10 | 19-D | 1 | அடையாறு—செம்பாக்கம் .. | 1—6—1968. |
| 11 | 203-A | 1 | வேலூர்—திண்டிவனம். .. | 5—6—1968. |
| 12 | 416 | 1 | வேலூர்—ரெங்கபாயன்காடு .. | 10—6—1968. |
| 13 | 19E | 2 | அடையார்—திருப்போரூர் .. | 11—6—1968. |
| 14 | 19-F | 2 | அடையார்—மகாபலிபுரம் .. | 11—6—1968. |
| 15 | 131 | 1 | சென்னை—பெரும்புதூர் .. | 22—7—1968. |
| 16 | 271 | 1 | கோயம்புத்தூர்—சேலம் .. | 6—8—1968. |
| 17 | 417 | 2 | அரியலூர்—சேலம் .. .. | 9—8—1968. |
| 18 | 213 | 1 | திண்டிவனம்—கச்சிரப்பாளையம் .. | 14—8—1968. |
| 19 | 214 | 2 | சிதம்பரம்—திண்டிவனம் .. | 15—8—1968. |
| 20 | 88-E | 1 | சென்னை—சனங்கலம் .. .. | 17—8—1968. |
| 21 | 136-A | 1 | சென்னை—திமிரி .. .. | 17—8—1968. |
| 22 | 271 | 1 | கோயம்புத்தூர்—சேலம் .. | 1—9—1968. |
| 23 | 98 | 1 | சென்னை—வேங்கல் | 16—9—1968 |
| 24 | 86-A | 1 | சோளிங்கர்—சென்னை .. | 22—9—1968. |
| 25 | 272 | 1 | பவானி—பழனி .. .. | 3—10—1968. |
| 26 | 216 | 2 | வேலூர்—அனந்தபுரம் .. | 18—10—1968 |
| 27 | 452-A | 1 | அத்தி பெல்லி எல்லை—திருவண்ணாமலை. | 18—10—1968. |
| 28 | 370 | 1 | திருநெல்வேலி சந்திப்பு—மதுரை. | 4—11—1968. |
| 29 | 108 | 4 | சென்னை—சேலம் .. .. | 1—12—1968. |
| 30 | 129 | 2 | சென்னைசெங்கற்பட்டு — .. | 1—12—1968. |
| 31 | 97-B | 1 | சென்னை—திருத்தணி ... ... | 1—12—1968. |
| 32 | 58-C | 2 | சென்னை—பழவேற்காடு .. | 1—12—1968. |
| 33 | 81-B | 2 | சென்னை—விளாம்பூர் ... .. | 1—1—1969. |
| 34 | 130 | 2 | சென்னை—வந்தவாசி .. .. | 1—1—1969. |
| 35 | 139-A | 1 | சென்னை—அரியூர் .. .. | 1—1—1969. |
| 36 | 143-B | 2 | சென்னை—சித்தாளம்பட்டி .. | 1—1—1969. |



நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

| தொடர் எண். | வழித்தட எண். | பேருந்துகளின் எண்ணிக்கை. | வழி. | ஓட்டப்படும் நாள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 37 | 143 | 1 | சென்னை—கம்மவார்பாளையம் .. | .... |
| 3 | 121-A | 2 | சென்னை—ஸ்ரீபெரும்புதூர் .. | 1—1—1969. |
| 39 | 97 | 1 | சென்னை—திருத்தணி .. .. | 1—1—1969. |
| 40 | 97-C | 1 | சென்னை—திருத்தணி .. .. | 1—1—1969. |
| 41 | 103 | 3 | சென்னை—நாயுடுப்பேட்டை .. | 1—1—1969. |
| 42 | 112-A | 2 | சென்னை—சத்தியவேடு .. | 1—1—1969. |
| 43 | 114 | 2 | சென்னை—காளஹஸ்தி .. | 1—1—1969. |
| 44 | 112 | 1 | சென்னை—வாதபாளையம் .. | 1—1—1969. |
| 45 | 113-A | 1 | சென்னை—பந்தவாக்கம் .. | 1—1—1969. |
| 46 | 76-B | 2 | காஞ்சிபுரம்—சென்னை .. | 1—1—1969. |
| 47 | 76-D | 1 | காஞ்சிபுரம்—சென்னை .. | 1—1—1969. |
| 48 | 76-C | 1 | காஞ்சிபுரம்—சென்னை .. | 1—1—1969. |
| 49 | 82-A | 2 | சென்னை—மேதம்பாக்கம் .. | 1—1—1969. |
| 50 | 51-C | 1 | சென்னை—சேலையூர் .. .. | 1—1—1969. |
| 51 | 52 | 3 | சென்னை—பல்லாவரம் .. .. | 1—1—1969. |
| 52 | 55-A | 1 | சென்னை—திருநீர்மலை .. | 1—1—1969. |
| 53 | 60 | 2 | சென்னை—அனகாபுத்தூர் .. | 1—1—1969. |
| 54 | 20-A | 2 | சென்னை—அம்பத்தூர் .. | 1—1—1969. |
| 55 | 138-A | 1 | சென்னை—கடம்பத்தூர் .. | 1—1—1969. |
| 56 | 54-A | 1 | சென்னை—தண்டலை .. | 1—1—1969. |
| 57 | 54 | 1 | சென்னை—பூந்தமல்லி .. | 1—1—1969 |
| 58 | 50-A | 1 | சென்னை—திருவேற்காடு .. | 1—1—1969 |
| 59 | 54-F | 1 | சென்னை—நேமலூர் .. .. | 1—1—196 |
| 60 | 50 | 1 | சென்னை—மதுரவாயல் .. | 1—1—16 |
| 61 | 52-A | 2 | சென்னை—கீல்கட்டளை .. | 1—1—19 |
| 62 | 54-G | 2 | சென்னை—திருமிசை .. | 1—1—1 |
| 63 | 53-B | 3 | சென்னை—தண்டலை .. .. | 1—1— |
| 64 | 92-A | 1 | சென்னை—ஊத்துக்கோட்டை .. | 1—1— |
| 65 | 56-D | 1 | தியாகராயநகர்—மணலி .. | 1—12 |
| 66 | 78 | 1 | காஞ்சீபுரம்—சென்னை (அதிகமாக்கப்பட்டது). | 1— |
| 67 | 79 | 1 | காஞ்சீபுரம்—சென்னை (அதிகமாக்கப்பட்டது). | 1— |
| 68 | 108 | 1 | சென்னை—சதுரங்கப்பட்டினம் .. | 1 |

[1969 மார்ச் 25

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் மொத்தம் பயிரிடக்கூடிய நிலங்களை வைத்திருப்பவர்களில் ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் பட்டாதாரர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக்கேள்வி போட வேண்டும்.

### காஞ்சிபுரத்தைத் தனி மாவட்டமாக்கல்.

* 452 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :**
**திரு. கே. வினாயகம் :**
**திரு. கரு. சீமைச்சாமி :** } மாண்புமிகு நிதி அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் சில வட்டங்களையும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சில வட்டங்களையும் ஒன்று சேர்த்து காஞ்சிபுரம் மாவட்டம் ஆக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. வினாயகம் :** நமது மாநிலத்தில் இப்போது இருக்கிற மாவட்டங்கள் ஒன்று பெரிதாகவும் ஒன்று சிறியதாகவும் இருக்கிறது என்ற காரணத்தினாலும், செங்கல்பட்டு மாவட்டம் மிகச் சிறியதாக இருக்கிற காரணத்தினாலும், செய்யாறு, அரக்கோணம், தாலுக்காக்களை எடுத்து செங்கல்பட்டு மாவட்டத்தோடு இணைத்தால், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு நன்மையாக இருக்கும என்ற விஷயத்தை அரசு யோசித்ததா ? இதைப்பற்றி பொது மக்களிடமிருந்தோ, அல்லது டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கமிட்டியிடமிருந்தோ சிபார்சு வந்ததா ? அதைப் பரிசீலித்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதுமாதிரியான யோசனை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனை மறைந்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு காஞ்சிபுரம் நகரசபை வரவேற்பு அளித்தபோது சொல்லப்பட்டது. இப்பொழுதிருக்கிற காஞ்சிபுரம், திருத்தணி, உத்திரமேரூர் தாலுக்காவோடு அரக்கோணம் தாலுக்காவும் வந்தவாசி தாலுக்காவும், செய்யாறு தாலுக்காவும், சேர்த்து ஒரு மாவட்டமாக அமைக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டது. அந்த யோசனைக்கு பல இடங்களிலிருந்து எதிர்ப்பு வந்தது. செங்கல்பட்டு வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், திருவள்ளூர் வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், வட ஆர்க்காடு வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. செங்கல்பட்டு நகரமன்றமும், மதுராந்தகம் பஞ்சாயத்து யூனியன் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் ஏற்கனவே இருக்கிற எங்களுடைய மாவட்டம் இன்னும் குறைக்கப்பட்டு விடுமே என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த முயற்சியை பரிசீலனை செய்வதுபற்றி அரசாங்கம் ஒத்திவைத்திருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் திருத்தணி தாலுக்கா நியாயமாக இருக்க வேண்டும். ஆனால் ஏற்கெனவே இருந்த முதல் அமைச்சர் சொந்த காரணத்திற்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் அதை சேர்த்திருக்கிறார்கள். அது கிழக்கு பாகிஸ்தான் போலவும் மேற்கு பாகிஸ்தான் போலவும் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? எனவே அதை மாற்றி திருத்தணி தாலுக்காவை வட ஆர்க்காடு மாவட்டத்தில் சேர்ப்பதற்கு உத்தேசம் உண்டா ?



1969 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கிழக்கு பாகிஸ்தான் மேற்கு பாகிஸ்தான் என்று சொல்லிதான் கிழக்குப் பாகிஸ்தானையும் மேற்குப் பாகிஸ்தானையும் எப்படி சேர்ப்பது என்று விழித்துக்கொண்டிருக்கிறார்கள். இருக்கிற நிலைமையில் இப்போது இருப்பதே நன்றாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த மாவட்டங்களைப் பிரிக்கிற நேரத்தில் வக்கீல்கள் சங்கம் எதிர்ப்பு தெரிவித்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வக்கீல்கள் தாங்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்பதற்காக அப்படித்தான் சொல்வாகள் பொதுஜனங்களுககு வசதியாக இருப்பதைப்பற்றி அவர்கள் அபிப்பிராயத்தை சொல்லமாட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வக்கீல்கள் பற்றி இத்தகைய நோக்கம் கற்பிக்கத் தேவையில்லை. அவர்கள் தெரிவித்ததும் ஒரு அம்சமாக இருக்கலாமே தவிர வக்கீல்களும் பொதுவாக மக்களிடத்தில் பாண்டித்தியம் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். வக்கீல்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கிற கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, காஞ்சீபுரம் இவற்றை தனி மாவட்டங்களாக பிரிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போதுள்ள நிலையிலே காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு மாவட்டமாக அமைக்கப்பட்டிருக்கிறது. நான் அடிக்கடி இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன் சரித்திர பூர்வமாகவும் பூகோள ரீதியிலேயும், பொருளாதார தன்மையிலேயும் அப்படி பல்வேறு தன்மைகளைக்கொண்டு மாவட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று. இப்போது அவைகளை மாற்றவேண்டிய அவசியம் இல்லை. மாற்றவும் முடியாது. நிர்வாகம் வசதியாக இருப்பதற்கு குறைந்த அளவிற்கு மாவட்டம் வேண்டும். சிறந்த முறையில் காரியங்களை நிறைவேற்றுவதுதான் அரசினுடைய குறிக்கோள். எனவே, சாத்தியப்பட்ட வகையில் மாவட்டங்களை மாற்றி அமைக்க அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

**திரு. இல. பலராமன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மறைந்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வந்தவாசி தாலுக்காவையும், செய்யாறு தாலுக்காவையும் பிரிக்கலாம் என்று சொன்னதாக சொன்னார்கள். இந்த இரண்டு தாலுக்காக்களும் அந்த மாவட்டத்திற்கு உயிர்நாடியாகவும் அதிகமாக விளையக்கூடிய பகுதியாகவும் இருக்கின்றன. எனவே அப்படிப் பிரித்தால் அங்கே வறட்சி நிலைமை ஏற்படும் என்பதை உணர்கிறார்களா ? எனவே இப்போது வைத்திருக்கக்கூடிய முறையையே வைத்திருக்க அரசு உறுதி கொடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிப் பரிசீலிக்கின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனையும் எடுத்துக்கொண்டு அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. கே. வினாயகம் :** மேற்கூறிய வட ஆர்க்காடு இப்போது பெருமை இழந்திருப்பதற்குக் காரணம் அதிலே இருந்த பலமநேரி, சித்தூர் மாவட்டத்திற்குப் போய்விட்டதனாலேதான். திருத்தணி மக்கள் செங்கல்பட்டு மாவட்டத்திலேயே இருந்துவிடுகிறோம். அது 24 மைலுக்குள் இருக்கிறது. 50 மைலுக்கு அப்பால் உள்ள வட ஆர்க்காடு மாவட்டத்தில் நாங்கள் சேர விரும்பவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இவ்வளவு நாட்களாக தெரியாமல் இருந்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது. திரு வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய கேள்விக்கு இந்தக் கேள்வியிலிருந்து பதில் பெறுவார் என்று நினைக்கிறேன்.

[1969 மார்ச் 25

## புதிதாக ஏற்படுத்தப்பட்ட தாலுக்காக்கள்.

*453 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டில் எத்தனை புதிய தாலுக்காக்கள் ஏற்படுத்தப்பட்டன ?

(இ) அதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) 1967–68-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் நான்கு புதிய வட்டங்களும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இரண்டு புதிய வட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன ?

(இ) மதுரை மாவட்டத்தில் வட்டங்களைச் சீரமைத்ததால், திங்களொன்றுக்கு ரூ. 378 சம்பளம் பெறும் சிறப்புத் தாசில்தார் பதவி ஒன்றைக் கூடுதலாக ஏற்படுத்தியதன் காரணமாக செலவு மட்டுமே செய்யப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சீரமைத்ததனால் 29–2–1968 தேதி வரையில் ரூ. 10,902·53 செலவாகியுள்ளது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** திருச்சி மாவட்டம் திருமயம் வட்டத்தில் அமைந்திருக்கும் பொன் அமராவதிப் பகுதியைப் பிரித்து அதை வட்டமாகவோ அல்லது துணை வட்டமாகவோ அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக சாத்தியக் கூறுள்ள இடங்களில் புது வட்டங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. பொன் அமராவதி அப்படி அமையவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அதைப்பற்றி அரசு யோசிக்கும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** புதுக்கோட்டையை ஒரு மாவட்டமாக்குவதற்கு சில தாலுக்காக்களைச் சேர்த்தால்தான் ஒரு மாவட்டமாக அதை ஆக்கமுடியும் என்று சொல்கிறார்களே அது உண்மையா ? ஒரு மாவட்டமாக்குவதற்கு எவ்வளவு ஜனத்தொகை தேவை என்பதை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புதுக்கோட்டை சமஸ்தானம் இப்போதுதான் ஒரு மாவட்டத்திற்குள்ளே வந்திருக்கிறது. காலப்போக்கில், வரலாற்றுப் போக்கில் சில ஏற்படும். இப்போது இருப்பதுபோல் ஒரு மாவட்டத்திற்குள் அது இருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். சரித்திர பாரம்பரியத்தை அனுசரித்து அதைச் சுற்றியுள்ள இடங்களைச் சேர்த்து அதை ஒரு புது தனி மாவட்டமாக ஆக்கலாம் என்றும் சொல்கிறார்கள். இப்படி இரண்டுவிதக் கருத்துக்கள் உள்ளன. புதுக்கோட்டையை ஒரு தனி மாவட்டமாக ஆக்கலாம் என்பதில் நியாயங்கள் இல்லாமலும் இல்லை. அதை உடனடியாகச் செய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே அரசின் தீவிர பரிசீலனையில் இது நெடுநாட்களாக இருந்து கொண்டு வருகிறது.

**திரு கொ. இரா. ஞானசம்பந்தன் :** தஞ்சை மாவட்டத்தில் நாகபட்டினம், நன்னிலம், திருத்துறைப் பூண்டி தாலூக்காக்கள் மிகப் பெரிய தாலூக்காக்களாக இருக்கின்றன. ஆகவே அதைப் பிரித்து வேதாரணியம் தாலூக்கா, கொடவாசல் தாலூகா, திருவாரூர் தாலூகா என்று பிரிக்க சீக்கிரம் உத்தரவிடப்படுமா ? நிர்வாகத்தில் பல கஷ்டங்கள் இருப்பதினால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா ?



1969 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கிழக்கு தஞ்சை, மேற்கு தஞ்சை என்றிருக்கிறது. மேற்கு தஞ்சையை என் உறுப்பினர் வெறுக்கிறார்கள் என்று தெரியவில்லை. கிழக்குத் தஞ்சைக்குள்ளேயே எல்லாக் காரியங்களையும் அடக்கிவிடவேண்டும் என்பதில்லை. நிர்வாகம் இப்போது செம்மையாகத்தான் நடைபெற்று வருகிறது.

**திரு. நா. வீராசாமி :** இப்போதிருக்கிற தாலூக்காக்கள் எல்லாம் எவ்வளவோ வருடங்களுக்கு முன்னால் அப்போதிருந்த ஜனத்தொகை, அப்போதிருந்த வருவாய் இவைகளை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டவைகளாகும். ஆனால் இப்போது அப்படி பிரிக்கப்பட்ட வட்டங்களில் ஜனத்தொகை பெருகியிருக்கிறது. வருவாயும் பெருகியிருக்கிறது. இதையெல்லாம் அடிப்படையாக் கொண்டு வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வாலாஜா போன்ற பெரிய வட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நம் அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் அச்சாணி போன்று, அடித்தளமாக நல்ல முறையில் அமைந்திருக்கிற நிர்வாக இயந்திரம் ரெவின்யூ இலாகா இயந்திரமாகும். வேறு பல இலாக்காக்களும் சமீப காலங்களில் வளர்ந்து முழுமை பெற்றனவே தவிர கட்டுக்கோப்பான அமைப்பைக் கொண்டுள்ள இலாகா ரெவின்யூ இலாகா தான். ஆகவே, அப்படிப்பட்ட ரெவின்யூ இலாகாவில் செய்யப்படுகிற மாற்றங்கள் அல்லது புதுத் திருப்பங்கள் இவை மூல அடித்தளத்திற்கு ஊறு நேராதபடி செய்யப்படவேண்டும்.

## பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகம்.

*454 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்தை ஊத்துக்கோட்டை அல்லது பெரியபாளையத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இது பற்றி செங்கை மாவட்ட வளர்ச்சி மன்றம் அனுப்பிய பரிந்துரையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) பென்னலூர்ப்பேட்டை துணை வட்டத்தின் தலைமையிடத்தை வேறிடத்திற்கு மாற்றுவதற்குச் செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றம் செய்த பரிவுரை அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

**திரு. கே. விநாயகம் :** இந்த சப்-தாலூகா விஷயத்தில் தாலூக்கா ஆபீஸில்தான் ட்ரெஷரி இருக்கிறது. ஒரு தாசில்தார் முழுப் பொறுப்பேற்றுக் கொள்கிறார். சப்-தாலூக்கா விஷயத்தில் ஒரு இன்டிபென்டன்ட் டெப்டி தாசில்தாரைப் போடுகிறார்கள். அல்லது ஒரு டெப்டி தாசில்தாரைப் போடுகிறார்கள். அங்கு சப்-ட்ரெஷரி வசதியில்லாமல் போவதால் அந்தப் பகுதி மக்கள் பணம் ட்ரெஷரியில் செலுத்தவேண்டுமென்றால் தாலூக்கா ஹெட்க்வார்டர்ஸ்க்கு வரவேண்டிய கஷ்டம் இருப்பதால் சப்-தாலூக்கா என்ற காட்டிகரியையே எடுத்துவிட்டு முழு தாலூக்காவாக ஆக்குவதற்கு என்ன கஷ்டமிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழககன் :** அது ஒரு நாளில் வரைபடம் வரைவது போன்ற காரியம் அல்ல. கூடுமான வரையில் சப் தாலூக்காக்களை இன்டிபென்டன்ட் சப் தாலூக்காக்களாகவும், முழுமையான தாலூக்காகள் ஆக்கவும் பல்வேறு வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கருவூலம் தாலூகா தலைமை பீடத்தில் இருப்பதும் கூடுமானவரையில் சப் தாலூக்காக்களில் கருவூலங்கள் அமைக்கவும் முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன. பலவிடங்களில் அப்படி கருவூலங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன.

**திரு டி. மார்டின் :** இப்படி ரெவின்யூ அடிப்படையில் தாலூக்காக்கள் அமைக்காமல் சிவில் சப்ளைஸ் மூலம் அதிகப்படியான வேலை இருப்பதால் அந்த அடிப்படையில் தாலூக்காக்கள் அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சிவில் சப்ளைஸ் என்பது நிரந்தரமானதல்ல. இன்று ரேஷன் இருக்கிறது. குடும்பக் கார்டுகள் இருக்கின்றன. ஆனால் ஒரு நிலைமை ஏற்படுமானால், எங்குமே ரேஷன் தேவையில்லை என்றதொரு நிலை ஏற்படுமானால், எந்தயிடத்திலும் குடும்பக் கார்ட் முறை தேவையில்லை என்ற நிலை வருமானல் ஒரு விநாடிகூட தாமதம் ஏற்படாமல் இந்த சிவில் சப்ளைஸ் இலாகா கலைத்து விடப்படும் ஆகவே, நிரந்தரமற்ற ஒன்றை பின்பற்றி நிரந்தரமாக இருக்கிற ஒரு காரியத்தில் ஈடுபடுவது அவ்வளவு சரியானதல்ல.

## *Collections during Kalakshepams.*

*455 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is a proposal to bring the collections made during Kalakshepams under the purview of the Entertainment Tax Act, 1939 ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** காலட்சேபங்களுக்கு கேளிக்கை வரி விதிக்கும் உத்தேசம் ஒன்றுமில்லை.

**திரு என். எஸ். வி. சித்தன் :** கோவில்களைத் தவிர பிறயிடங்களில் நடத்தப்படுகிற காலட்சேபங்களுக்கு பெரிய தொகை வசூலிக்கப்படுகிறது. எனவே 1939-ம் ஆண்டு பொழுதுபோக்கு வரிச் சட்டத்தின்கீழ் காலட்சேபங் களில் வரும் வசூலுக்கு வரி விதிக்கப்பட்டால் அரசாங்கத்திற்கு ஒரு கணிச மான தொகை வருவாயாகக் கிடைக்கும் அல்லவா ? அப்படி இதுவரை யில்லாமலிருந்தாலும் இனியாவது அதுபற்றி பரிசீலிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசாங்கத்திற்கு வருவாய் அதிகம் கிடைக்கும் காரியத்தில் உறுப்பினர் அவர்களுக்குள்ள அக்கறையை நான் பாராட்டுகிறேன். அதற்கு நன்றியும் செலுத்துகிறேன். ஆனால் பொதுவாக இப்போது என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் சினிமாக்கொட்டகை யில் நடக்கிற சினிமாக் காட்சிகளுக்கும், அதுமாதிரி குதிரைப் பந்தயத் திற்கும் மட்டும்தான் இருக்கிறது. நாடகங்கள், டிராமாக்கள், நடனங்கள், இசைக் கச்சேரிகள், சர்க்கஸ் கம்பெனிகள், போட்டி விளையாட்டுகள் (ஸ்போர் ட்ஸ்) இப்படியெல்லாம் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் கூட நாம் என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் வசூல் செய்வதில்லை. உறுப்பினர் அவர் களின் கேள்வியின் முதல் பகுதியைப் பாராட்டுகிறேன். நல்ல யோசனை களை அவர்கள் சொல்லலாம். இப்படிப்பட்ட விதிவிலக்குகள் இருப்பதால் காலட்சேபங்களுக்கு கேளிக்கை வரி விதிக்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. மா. பொ. சிவஞானம் :** நான் அறிந்தவரையில், காலட்சேபங் களுக்கு எங்குமே டிக்கட்ஸ் வைத்து கட்டாயமாக வசூலிக்கப்படுவதில்லை. தட்டு வசூல் மூலம் பணம் திரட்டி கோவில் திருப்பணிகள் செய்யப்படு கின்றன. ஆகவே, இந்தக் கேளிக்கை வரிச் சட்டம் அங்கே போவதற்கு வழியில்லை என்பதை அரசு ஒப்புக்கொள்கிறதா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புரோகிதர்கள் மற்றவர்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. பக்தியைப் பெருக்கிக் கொள்வதற்கும், ஆண்டவனிடம் அன்பைப் பெருக்கிக்கொள்வ தற்கும் கட்டணம் வசூலிக்கிற ஒரு நிலைமையை அரசாங்கம் இன்று ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** இப்போது நடைபெறுகிற காலட் சேபங்கள் வாரக்கணக்கில் ஒரு பொருட்காட்சி நடப்பது போல் 20 நாட்கள், 30 நாட்கள் என்று தொடர்ந்து ஒரு இடத்தில் நடத்தி வருகிறார்கள். அதற்காக ஏராளமாக வசூல் செய்கிறார்கள். அதே சமயத்தில் அந்த காலட்சேபங்கள் மக்களை மகிழ்விக்கிற வகையில், அதாவது கிண்டல் பண்ணுவதும், இன்னும் சொல்லப்போனால் அரசியல் நிலையில் கிண்டல் செய்து மூன்று, நான்கு மணி நேரம் என்டெர்டெயின்மெண்ட் வைத்திருக்கிறார்கள். ஆகையினால் அவர் களுக்கு இந்த வரி போடுவது நியாயந்தான் என்பதை அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய கருத்து. பொழுதுபோக்கான பரத நாட்டியம், நாடகம், வேறு வகையான விளையாட்டுக்கள் மைதானங்களில் நடக்கும் விளையாட்டுக்கள், சர்க்கஸ் கம்பெனிகள் இவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது என்பதைச் சொன்னேன். ஆகவே, அரசாங்கம் இப்போது இதற்கு வரி விதிக்க உத்தேசிப்பதாக இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தற்போது தமிழ்நாட்டில் காலட்சேபம் செய்யக்கூடியவர்கள், அவர்களுடைய சொந்த காலட் சேபத்தை நடத்த வருவாய் கிடைக்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அத்தகையவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் சொன்னமாதிரி பெரிய காலட்சேபத் திலே லட்சாதிபதியானவர்களும், ரொம்ப பிரகாசமாக ஜெகஜோதி யாக இருப்பவர்களும் இந்த அரசாங்கத்திற்கும் தெரியும்.

THIRU K. S. KOTHANDARAMAIH : These kalakshepams are not merely of entertainments ; they also improve the cultural and devotional aspects of our country. Though the Government are not giving any help to those who do kalakshepams yet private persons are giving help. The Government of Mysore, I hear, has set apart a sum for each district for improving the cultural aspects and arrange programmes at the Government level. Similarly will this Government set apart some amounts for each district ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மைசூர் மாநிலத்தில் இருக்கிற விவகாரங்கள் எனக்குத் தெரியாது. ஆனால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இவைகள் கலாச்சாரத்தை வளர்ப்பதற்காக மட்டும் நடைபெறுகிறது என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. மத சம்பந்தமாக, பக்தி சம்பந்தமான, சிலபேர் மட்டும் ஆதரிக்கிற கருத்துக்களும் இதில் பரப்பப்பட்டு வருகின்றன. மதச் சார்பற்ற அரசாக இருப்பதால், குறிப்பிட்ட எந்தமதத்திற்கும் ஒரு பாரபட்சமாக, பரிவாக நடந்து கொண்டது என்ற கெட்ட பெயரை, மதச்சார்பற்ற அரசாங்கமாக இருப்பதால் வாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை.

## எலி ஒழிப்புத் திட்டம்

* 456 வினா.—திரு. நா. சௌந்திரபாண்டியன்
திரு. கரு. சீமைச்சாமி
திரு. வை. சுவாமிநாதன்
திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் } மாண்புமிகு

உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எலி ஒழிப்புத் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) இத்திட்டம் எப்போது, யாரால் ஏற்படுத்தப்பட்டது ?

(உ) இத்திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) இம் மாநிலத்தில் குறிப்பிட்ட ஒரு சில பகுதிகளில் எலி ஒழிப்பு மருந்தை இலவசமாக அளிப்பதன் மூலம், வேளாண்மைத் துறை எலி ஒழிப்புத் திட்டம் ஒன்றை இந்த ஆண்டில் (1968–69) மேற் கொண்டது.

(உ) உழவர்களுக்கு இலவசமாக எலி ஒழிப்பு மருந்து வழங்குவதன் மூலம் இத் திட்டம் இம் மாநிலத்தில் 5 லட்சம் ஏக்கரில் ரூ 2·50 லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது.

**திரு. நா. சௌந்திரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த புதிய நடவடிக்கை ஏதாவது அரசு எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதும் தான் நிறைவேற்றி வருகிறது. குறிப்பாக ஐந்து டிவிஷன்களாகப் பிரித்து, தமிழகத்தை 5 டிவிஷன்களாகப் பிரித்து, ஒரு டெபுடி டைரக்டர் தலைமையிலே, மெட்ரூஸ் டிவிஷனில் 30,000 ரூபாய் செலவில் 60,000 ஏக்கர் நிலத்தில் எலி ஒழிப்பை மேற்கொள்ளுகிறோம். அதைப் போலவே தஞ்சாவூர் டிவிஷனில் 1,50,000 ரூபாய் செலவில் 3 லட்சம் ஏக்கர் நிலங்களிலுள்ள எலிகளை ஒழிக்க ஏற்பாடு. கோயம்புத்தூர் டிவிஷனில் 30,000 ரூபாய் செலவில் 60,000 ஏக்கர் நிலங்களில் எலி ஒழிப்பை மேற்கொள்ளுகிறோம். திருநெல்வேலி டிவிஷனில் 20,000 ரூபாய் செலவில் 40,000 ஏக்கர் நிலங்களில் எலி ஒழிப்பை மேற்கொள்ளுகிறோம். மதுரை டிவிஷனில் 20,000 ரூபாய் செலவில் 40,000 ஏக்கர் நிலங்களில் எலி ஒழிப்பை மேற்கொள்ளுகிறோம். ஆகவே, 2,50,000 ரூபாய் செலவில் 5 லட்சம் ஏக்கர்களிலுள்ள எலிகளை ஒழிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, இந்த எலிகள் உணவு தானியம் வைத்திருக்கக்கூடிய இடம், தஞ்சை மாவட்டம் இப்படிப்பட்ட இடங்களில் அதிகமாக இருந்துகொண்டு, உணவுப் பொருள்களைச் சேதமாக்கி வருகின்றன. இப்படிப்பட்ட இடங்களில் உள்ள எலிகளைப் பிடிப்பதற்கு பூனைகளைப் அனுப்பும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பூனைகள் எதிர்பார்க்கின்ற அளவிற்குக் கிடைக்குமானால் அனுப்பலாம். அவைகளை எங்கிருந்து இறக்குமதி செய்வது என்பது தான் பிரச்னை.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அதிகப்படியாக நெல் உற்பத்தியாகக் கூடிய அந்த மாவட்டத்தில், எலிகளால் அதிகமான தொல்லைகள் ஏற்படுகின்றனவே. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்தின் மூலமாக இந்த எலி மருந்து வைத்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தப் பஞ்சாயத்து மூலமாக எலி



மருந்தை இனமாக சப்ளை செய்ய முன் வருமா ? அமைச்சரவர்கள் இனமாகக் கொடுப்பதாகச் சொன்னர்கள். ஆனல், அப்படிக் கிடைப்பதில்லை. பாதி விலைக்குத் தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, எலி மருந்துகளை இனமாக ஒவ்வொரு பஞ்சாயத்தின் மூலமாகவும் கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்தத் திட்டத்தின்மூலம் இலவசமாகக் கொடுக்கும்படித்தான் கட்டளை. கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபடி பாதி விலைக்குக் கொடுக்கிறர்கள் என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்திலும், ஒவ்வொரு பஞ்சாயத்து மூலமாகத்தான், முன்னேடித் திட்டமாக இந்தத் திட்டத்தைக் கையாளுகிறோம். பலன் ஏற்படக்கூடிய சூழ்நிலை வரும்பொழுது இன்னும் விஸ்தரிக்கக்கூடிய அளவில் கையாளலாம்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவரவர்களே, இந்த எலிகளை ஒழிக்க இயற்கை எதிரிகளைப் பற்றி ஆலோசனையை நண்பரவர்கள் சொன்னர்கள். அதை வளர்க்க முடியவில்லை என்றல், எலிகளுக்கு இயற்கையாக உள்ள எதிரி பாம்பு. அந்தப் பாம்புகளை பிடித்துக் கொண்டு போகாமல் இருக்கக்கூடிய திட்டம் இருந்தால் நன்ருகயிருக்கும். எனவே, பாம்புகளைப் பிடியாமல் தடுக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பாம்புகள் சாப்பிட தவளைகள் இருக்கின்றன. எலித் தொல்லைகள் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திற்கு திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் நேரில் போய்ப் பார்க்கவேண்டும். எலிகளினல் விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுகிருர்கள் எவ்வளவு தொல்லைப்படுகிருர்கள் என்பது அவர்கள் நேரில் போய்ப் பார்த்தால் தெரியும். அவ்வளவு அதிகமாக எலிகள் இருக்கின்றன. கதிர் வரும்பொழுது, கதிரைக் கத்தரிப்பதால் பெரும் நஷ்டம். உற்பத்தியைப் பாதிக்கக்கூடிய நிலை கூட ஏற்பட்டு வருகிறது. எலியைப் பிடித்து, தோலைக்கூட வெளிநாட்டிற்கு அனுப்பலாமா என்று யோசனை இருக்கிறது. அது நல்ல லாபகரமாக நடக்குமா என்பதைப் பற்றித்தான் பரிசீலனை செய்ய வேண்டும். இந்தத் திட்டத்திற்கு மத்திய சர்க்காரிடத்திலே வாதாடி, உற்பத்தியைப் பெரிய அளவில் பாதிக்கும் என்று சொன்ன நிலையில் மத்திய சர்க்காரின் முழுச் செலவிலேயே நிறைவேற்றப்படுகிறது.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவரவர்களே, இந்தியாவில் 250 கோடி எலிகள் இருப்பதாகக் கணக்கெடுக்கிருர்கள். அந்த 250 கோடி எலிகளில் தமிழகத்தில் எத்தனை கோடி எலிகள் இருப்பதாக அரசு கருதுகிறது ? இந்த எலிகளை ஒழிப்பதற்கு எலி ஒழிப்பு வாரங்கள் கொண்டாட உத்தேசம் உண்டா ? பூனைப் பண்ணையும் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உறுப்பினரவர்கள் எந்த (statisitcal officer) இடமிருந்து இந்தப் புள்ளி விவரங்களைச் சேகரித்தார் என்று தெரியவில்லை. எலி ஒழிப்பு வாரம் கொண்டாட முடியாது. ஆனல் சில மாதங்களில் இந்த எலி ஒழிப்பு மாதங்களை கூட கொண்டாட வேண்டிய நிலை இருக்கிறது. பிப்ரவரி, மார்ச் திங்கள்களில், அறுவடை முடிந்தவுடன், வயலில் வரப்புகளையும், வாய்க்கால்களையும் வெட்டி எடுக்கிருர்கள். அப்பொழுது நிறைய குஞ்சுகள் பொறித்து, அறுவடைக்கு முன்னல் தானியங்களைச் சாப்பிட்டு, குஞ்சு பொறித்திருந்தால், குடும்பத்தோடு அழிக்கும் நிலையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதுமாத்திரமல்ல, ஜுலை மாதத்தில் தண்ணீர் வற்றியவுடன், வெளிச்சம் போட்டு, வெளிச்சத்தில் வருகிற எலிகளை ஒழிக்கவேண்டியிருக்கிறது. பொறிகளை வைத்துப் பிடிக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல. எலிப்பரஷானம் வைத்துப் பிடிக்க வேண்டியிருக்கிறது இப்படிப் பல திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், வாரங்கள் கொண்டாடி ஒழிக்க முடியாது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், மத்திய அமைச்சர், எலிக்கறி சாப்பிட்டால் நல்ல உணவு என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேறுவிதமாகக் கேள்வி போடலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** பாம்புகளைப் பிடித்தால் ஒரு பாம்புக்கு 5 ரூபாய் என்று கொடுக்கிறோம். அதே போல, எலிகளைப் பிடித்தால், பஞ்சாயத்து யூனியன் மூலமாக ஒரு எலிக்கு 4 அணா, 8 அணா என்று கொடுக்க ஏற்பாடு செய்தால் எலிகளை ஒழிப்பதற்கு அது நல்ல திட்டமாக இருக்குமா, இல்லையா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒரு எலியைப் பிடித்தால் 4 அணா என்று கொடுத்தால் அதற்கு உண்டாகும் செலவைப் பார்க்க வேண்டும். இது இலாபகரமாக இருந்தால், அந்தத் திட்டத்தை மேற்கொள்ள மக்களே முன் வருவார்கள். அரசாங்கம் ஒத்துழைக்கக்கூடிய நிலையைப் பார்க்கும்பொழுது, எலி ஒழிப்புப் பாஷாணம் கொடுப்பதன் மூலமாக, பரவலாக ஒழிக்கக்கூடிய சூழ்நிலையிருப்பதால், இப்போது, தோலை அனுப்பினால் ஒத்துக்கொள்ளக்கூடிய நிலையிருக்கும் என்று தெரிகிறது. தோல் மிருதுவாக இருப்பதால், அடிக்கக்கூடிய நிலையில் தோல் கெட்டு விடுமோ என்ற அச்சம்கூட இருக்கிறது.

### தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள முந்திரிக் காடுகள்.

*457 வினா—**திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்தில் 1964-65, 1965-66 ஆகிய ஆண்டுகளின் போது முந்திரிக் காடுகளைக் குத்தகை எடுத்தவர்களிடமிருந்து வசூலாகவேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :**

1964-65—நாலாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது ரூபாய் அறுபத்தி ஐந்து காசு.

1965-66—ஆயிரத்து எண்ணூறு ரூபாய்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த பாக்கித் தொகை விருத்தாசலம் வட்டத்தில் யாரிடம் உள்ளது ? எவ்வளவு நாட்களாக உள்ளது ? விருத்தாசலம் வட்டத்திலே உள்ள இருப்பூர் கிராமத்தில் நம்முடைய முன்னாள் அமைச்சருடைய உறவினர் இன்னும் பணம் கொடுக்காமல் இருக்கிறார் என்று சொல்கிறார்களே அது உண்மையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்னாள் அமைச்சருடைய உறவினர் என்று சொல்லவேண்டாம். யார், யார் என்று கேட்டீர்களே அதோடு விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ரூ. 3,000 வர வேண்டியிருக்கிறது. ஜி. பரமசிவம் என்பவர், மேற்கிருப்பு விருத்தாசலம் வட்டத்தைச் சேர்ந்தவர் ரூ. 3,000 கொடுக்கவேண்டியிருக்கிறது. எலத்தொகை ரூ. 13,415. அவர்கள் கொடுக்கவேண்டிய தொகை ரூ. 3,000.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இந்த முந்திரித் தோட்டங்கள் காட்டிலாகாவினால் பராமரிக்கப்படுகின்றனவா ? தென்னார்க்காடு மாவட்டத்தில் எவ்வளவு ஏக்கர் பயிரிடப்படுகிறது ? இந்த தோட்டங்களில் பயிரிட்டதனால் கிடைத்த மொத்த வருவாய் என்ன ? மற்ற மாவட்டங்களில் இது போன்று முந்திரித் தோட்டங்களில் பயிரிட்டதனால் கிடைத்த வருவாய் என்ன என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சில தோட்டங்கள் தனியார் துறையிலே இருக்கின்றன. காட்டிலாகா வசமுள்ள நிலங்களில் முந்திரி சாகுபடி செய்ய அதை எலத்திற்கு விடுகிறார்கள். கனம் அங்கத்தினர் எவ்வளவு ஏக்கர் பயிரிட்டிருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். இப்பொழுது குத்தகைவிட்ட நிலங்கள் அந்தப் பகுதியிலே 1964-65-லே 13,726 ஏக்கர் தான். அதே ஏக்கர் தான் மீண்டும் விடப்பட்டிருக்கிறது. அவைகள் காட்டிலாகா வசமுள்ள நிலங்கள்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பாக்கி வரவேண்டுமென்று சொன்னார்கள். அந்த பாக்கி எப்பொழுது முதல் வரவேண்டியிருக்கிறது ? அந்தப் பாக்கியின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்தப் பாக்கி 1964-65-ல் ஏற்பட்டது. அதை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ற தகவல் இல்லை. இந்த விவரம் கிடைத்ததனாலே நடவடிக்கை எடுக்கப்படுவதிலே காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும் அந்தத் தொகையை வசூல் செய்வதற்கு வேண்டிய திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ளும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, சர்க்காருக்குச் சொந்தமான முந்திரிக் காடுகளை இனித் தனியாருக்கு எலம் விடாமல் சர்க்காரே முந்திரி ஏற்றுமதிக்காகவும், முந்திரி எண்ணெய் தயாரிப்பதற்காகவும் அவற்றை பயன்படுத்தி, அன்னியச் செலாவணி சம்பாதிப்பது பற்றிப் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தென்னார்க்காடு ஜில்லாவிலே காட்டுவளத் துறையிலே ஒரு முந்திரித் தோட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு அது பெரிய அளவில் இல்லை. தனியார்களே நிறைய வைத்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுடைய நிலங்களுக்கு அருகிலே இவைகள் இருக்கின்ற காரணத்தினால் தனிப்பட்டவர்களுக்கு எலம் கொடுப்பதின் மூலம் அவர்களுக்கும் ஆதாயம் கிடைக்கின்றது. அரசாங்கத்திற்கும் ஆதாயம் கிடைக்கிறது. அரசாங்கம் நேரடியாக வைத்துக்கொண்டிருப்பதாலே திருட்டுப் போகக்கூடிய நிலை ஏற்படுவதைத் தடுக்கவும், பக்கத்திலே பட்டா நிலங்களைக் கடந்து செல்லும்போது இடையூறுகள் ஏற்படுவதைத் தடுக்கவும் தான் அருகிலுள்ளவர்களுக்கு எலத்திற்கு விடுகிறோம். அவர்களும் போட்டி போட்டுக்கொண்டு எலம் கேட்கிறார்கள். அதனாலே அவர்களுக்கு நன்மை இருந்தாலும் அரசாங்கத்திற்கும் வருமானம் வருகிறது.

### தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி.

*458 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு உபரி மாநிலமாகக் கருதப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த உணவு தானியங்கள் எவ்வளவு உபரியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) இம்மாநிலம் அரிசி உற்பத்தியில் ஏறத்தாழ தன்னிறைவுஉடையதென்றும் சிறு தானிய வகைகளில் பற்றாக்குறை உடையதென்றும், பருப்பு வகைகளில் அதிக அளவில் பற்றாக்குறை உடையதென்றும் கருதப்படுகிறது.

(இ) சிறு தானியங்கள் 2·55 லட்சம் டன்கள் வரை பற்றாக்குறை. பருப்பு வகைகள் 3·75 லட்சம் டன்கள் வரை பற்றாக்குறை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சார், இதிலே சில மாவட்டங்கள் பற்றாக் குறை மாவட்டங்களாக இருக்கிற காரணத்தாலும் சில மாவட்டங்கள் உபரி மாவட்டங்களாக இருக்கிற காரணத்தாலும் உபரி மாவட்டத்தை யும் பற்றாக்குறை மாவட்டத்தையும் இணைத்து "சோன்" ஆகப் பிரித்து இப்பொழுது மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கக்கூடிய தடையை நிறுத்தி, "சோன்களை" எல்லாம் ஃப்ரீ சோன்களாக வைத்து ஒரு சோனுக்கும் இன்னொரு சோனுக்கும் வேண்டுமானால் இப்பொழுது ஆரம்பத்தில் தடை வைத்துக்கொண்டு, அதை சரியாக, சமமாக நடத்தமுடியும் என்று அரசாங்கம் கருதினால் கடைசியாக, இறுதியாக, இந்த சோன்களிலே இருக்கக்கூடிய தடையை நிறுத்தி விட முடியுமா ? இதை பிரிலிமினரி எக்ஸ்பரிமெண்டாக அரசாங்கம் சோன்களாக வைத்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அவர்களுடைய கட்சிக் கருத்தை வற்புறுத்துகிற அளவிலே ஒரு யோசனையாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற திட்டம் நல்ல திட்டம் என்று இந்த அரசு கருதுகிறது.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, நம்முடைய மாகாணத்தில், 1965–66-ல் 1966–67-ல், 1967–68-ல், இந்த மூன்று ஆண்டுகளிலே உணவு உற்பத்தி எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தை சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றி முழுத்தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அதற்கு வேண்டிய புள்ளி விவரங் களைச் சேகரித்துத் தர முடியும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எந்த எந்த மாவட்டங்கள் உணவுப் பொருள் உற்பத்தி யில் உபரி மாவட்டங்களாகவும் எந்த எந்த மாவட்டம் பற்றாக்குறை மாவட்டங்களாகவும் இருக்கின்றன என்கின்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தஞ்சை, வட ஆற்காடு; தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்கள் உபரி மாவட்டங்கள் மற்ற திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் தன்னிலைக்குக் கொஞ்சம் பற்றாக்குறை உள்ள மாவட்டங்களாகத்தான் கருதப்படுகின்றன. அறவே பாதிக்கப்படுகின்ற மாவட்டங்களாக இராம நாதபுரம் மாவட்டம், தருமபுரி மாவட்டம் உள்ளன.

**திரு. கே. விநாயகம் :** சார், பொதுவாகவே, நமது மாநிலத்தில் நிலைமைகளெல்லாம் சீரோடிருந்தால் எவ்வளவு உணவுப் பொருள் உற்பத்தி ஆகும். இப்பொழுது இந்த ஆண்டு நிலைமை சீராக இல்லாததனாலே, பருவ மழை இல்லாததனாலே எவ்வளவு குறைந் திருக்கிறது ? அதை ஈடு செய்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்திருக் கிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நிகர உற்பத்தி 39 இலட்சத்து 90 ஆயிரம் டன் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டிலே துண்டு விழக் கூடியது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும். எந்த அளவுக்கு உற்பத்தி பெருக திட்டம் இட்டிருக்கிறோம் என்று கேட்டால், ஒரு போகத்தை இரு போகமாக ஆக்குகின்றோம், விளைச்சலைத் தரக்கூடிய ஆடுதுறை 27, ஐ. ஆர். 8 போன்ற விதைகளை சாகுபடி செய்வதன் மூலமாக உற் பத்தியைப் பெருக்குகின்றோம். தண்ணீர் தட்டுப்பாடு வருகின்ற நேரங்களிலே மின் இணைப்பை துரிதப்படுத்தி, ஒவ்வொரு ஆண்டும், 50,000 பம்ப் செட்களுக்கு கனெக்ஷன் கொடுக்கிறோம். இவை களின் மூலம் உற்பத்தியை பெருக்குவதற்கு வேண்டிய முயற்சி களிலே ஈடுபடுகிறோம். விவசாயிகளுக்கு கடன் வசதி, மற்ற





சௌகரியங்கள் செய்வதன் மூலம் விவசாயிகள் உற்பத்தியிலே அதிக அக்கறை காட்டுகிற அளவிலே நமக்குத் தேவையான அளவு உற்பத்தி செய்ய வழி இருக்கிறது.

### சாலைகள் அமைப்பு.

*459 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம் மேலூர்-சேக்கிப்பட்டிச் சாலையில் உள்ள மேலவளவு என்ற ஊரில் அண்மையில் சுமார் 3 பர்லாங் தூரம் வரை தனியார் வசம் உள்ள நிலத்தை வாங்கி சாலை அமைக்கும் செய்ற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும். ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) மேலவளவுக்கருகில் மேலூரிலிருந்து சிக்கிப்பட்டிச் சாலைக்குக் கிளைச்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு எதுமில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, 20 ஆண்டுகாலமாக இரு பக்கத்திலேயும் பெருவழித்துறை சாலை இருக்கிறது. இடையிலே சாலையே அமைக்காமல் ஊருக்குள்ளே போக்குவரத்துகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி பெருவழித்துறை அதிகாரிகள் அரசாங்கம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றது என்று கூறுகிறார்கள். விரைவாக அரசு நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இச்சாலை அமைக்க யோசனை பரிசீலனையில் இருக்கிறது. அரசாங்கம் இரண்டாந்தரத் திட்ட வேலைகளின் கீழ் நிதி நிலையை அனுசரித்து இதை சேர்த்துக்கொள்ளும்.

*460 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலக்கட்டளை பொது மக்களிடமிருந்து சாலை வசதி செய்து தர வேண்டும் என கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த வினாவையே கோரிக்கை யாக ஏற்று எனது தொகுதி உள்ள மேலக்கட்டளை கிராமத்திற்கு சாலை வசதி செய்து தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்த அரசு எப்பொழுதும் கோரிக்கைகளை பரிசீலிக்கும்.

### கரூர்—திண்டுக்கல் இருப்புப் பாதை

* 461 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்கு இரயில் பாதை அமைக்கும் திட்டம் எந்த நிலைமையில் இருந்து வருகிறது ?

(இ) எந்தெந்த ஊர் வழியாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) and (இ) : கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்கு திட்டமிடப்பட்டுள்ள அகல இரயில் பாதைக்கான அளவை வேலை முடிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் திட்ட அறிக்கைகளும் மதிப்பீடும் இறுதியாக்கப்படுவதாக தென் மண்டல ரயில்வே பொது மேலாளர் தெரிவித்திருக்கிறார். திட்டமிடப்பட்டுள்ள பாதை தாந்தோனி, வெள்ளியணை, பாளையம், குஜிலியம்பாறை, கோவிலூர், எரியோடு, குளத்தூர் வழியாக செல்லுகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த ரயில் பாதையை விரைந்து முடிப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே பரிந்துரைத்திருக்கிறோம். மேலும் பரிந்துரைக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த ரயில் பாதையின் மொத்த நீளம் என்ன ? இதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது மத்திய அரசிடம் கேட்கவேண்டிய கேள்வி.

### *Supply of tar by Madras Refinaries.*

*462 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Highways Department has entered into contracts with Madras Refinaries for the supply of tar by the end of the year ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, மார்ச்சு மாதம் 31-ம்தேதி பஞ்சாயத்துக்களில் ஹாஃப் கிராண்டு வேலைகள் முடிவடைய வேண்டியிருப்பதால், தார் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதால், தார் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தார் கிடைக்க ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஏதாவது குறைபாடு இருக்குமானால், கனம் உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** ஏற்கனவே நெய்வேலி தார் விலை அதிகமா என்று கேட்டதற்கு, அதன் விலை விவரம் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள் தற்பொழுது நமக்கு வேண்டிய தார் எங்கு வாங்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளலாமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நமக்கு வேண்டிய தாரை இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனிடமிருந்து வாங்குகிறோம்.

### தேனீ வளர்ப்புப் பண்ணை ஊழியர்கள் வேலை நிறுத்தம்.

*463 வினா—: **திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனீ வளர்ப்புத் துறையிலிருந்து வேலையிழந்த ஊழியர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களுக்கு நமது அரசு வேலையிழப்பிற்குப் பிறகு ஏதாவது உதவி செய்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) 130 பேர்கள்

(இ) ஆம்.

(உ) வேலையிழந்த தேனீ வளர்ப்புத் துறை பணியாளர்களில் 19 பேர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரசினர் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்புத் திட்டத்துக்கு ரூ. 2,000 வரை கடன் உதவி அளிக்கப்படுகிறது. வேலையிழந்த தேனீ களப்பணியாளர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு தனியாக தேன் விற்பனையாளர்களாக மாறலாம் என்றும், இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வோரின் கடன் விண்ணப்பங்களுக்கு முதலிடம் கொடுத்து பரிசீலிக்கவேண்டும் என்றும், தொழில் வணிகத் துறை இயக்குனருக்கு உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

**திரு பி. எஸ். தனுஷ்கோடி :** இந்தத் தேனீ வளர்ச்சி தமிழகத்தில் ரொம்ப முக்கியமான தொழிலாக இருப்பதினால், மேலும் தேன் சாதாரண மருந்து வகையாகவும், உணவு வகையாகவும் ரொம்பவும் அதிகமாகத் தேவைப்படுவதினாலும், இந்தத் திட்டத்தை விஸ்தரித்து நல்ல முறையில் ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தேன் சிறந்த, நல்ல சத்துள்ள உணவு என்பதாலும், அது அதிகமான அளவிலே தயாரிக்கப்பட்டால் வெளி நாடுகளுக்குக் கூட அனுப்பமுடியும் என்பதினாலும், இந்தத் திட்டத்தை செயல்படுத்த நாம் மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டோம். என்றாலும், நட்டம் ஏற்படுகிற இடங்களில் அந்தத் தொழில் நிலையங்களை நடத்த முடியவில்லை. பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்த முடியாது. கதர் கைத்தொழில் வாரியம் நடத்த முடியாது. தனிப்பட்டவர்களை தூண்டுதல் மூலம்தான் அதை நடத்த வேண்டும் என்பதினால் ரூ. 2,000 கடன் கொடுத்து அந்தத் தொழில் செய்ய முன்வருபவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. அப்படி அந்தத் தொழில் செய்ய முன் வந்தால், தேவையான கடன் வசதி அவர்களுக்கு வழங்கப்படும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** தேன் சூட்டைத் தணிக்கும் என்று சொல்லப்படுவதால், அடிக்கடி வெளி நடப்புச் செய்யும் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு தேன் இனமாக சப்ளை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் உறுப்பினர் அவர்களே அவர்களுக்கு எந்தத் தேன் கொடுத்தால் சூடு தணியும் என்று கருதுகிறார்களோ, அதை அவர்களே வழங்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தத் துறையிலுள்ள பீல்டுமென் வேலையிலிருந்து நீக்கப்பட்டு வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு இலாகாக்களில் மாற்று வேலை கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** முதலாவதாக எராளமான பேர்களை வேலையிலிருந்து அனுப்பியதற்கு இப்பொழுது புதிய அரசு பொறுப்பல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், அந்தப் பணியாளர்களில் 19 பேர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு இடங்களில் அவர்களுக்கு தகுதி இருக்குமானால், வேலை வாய்ப்பு இருக்குமானால், மாற்று வேலை கொடுப்பதற்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் மாற்று வேலை கொடுப்பதற்கும், அரசினர் போக்குவரத்துத் துறையில் நடத்துனர் (கண்டக்டர்) வேலை கொடுப்பதற்கும் கிராம வளர்ச்சித் துறையிலிருந்து வந்திருக்கிற வேண்டுகோளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. வாய்ப்பு கிடைக்கின்ற இடங்களில் அவர்களுக்கு இடம் தருவதுபற்றி அனுதாபத்துடன் அரசு கவனிக்கும்.

## நகர் பஞ்சாயத்துக்கள்.

*464 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தாலம், சீர்காழி, பொறையாறு, தரங்கம்பாடி ஆகிய நகர பஞ்சாயத்துக்களை நகராட்சி மன்றமாக மாற்றியமைக்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இல்லை.

**திரு என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நகராட்சி பட்டணங்களாக ஆக்கக்கூடிய அளவுக்கு மக்கள் தொகை, வருவாய் இவைகள் உள்ள மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றனவா ? எந்தெந்த மேஜர் பஞ்சாயத்துக்களை தஞ்சை மாவட்டத்தில் நகராட்சி பட்டணங்களாக ஆக்க அரசு எண்ணியுள்ளது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 20,000-க்குக் குறையாத மக்கள் தொகையும், ஒரு லட்ச ரூபாய்க்குக் குறையாத வருவாயும் உள்ள பேரூராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்களாக மாற்றப்படும். தஞ்சை மாவட்டத்தில் அப்படிப்பட்ட ஊர்கள் எவை இருக்கின்றன என்பதை கனம் உறுப்பினர் அவர்களே பரிசீலித்துத் தெரிந்துக் கொள்ளலாம்.

## பஞ்சாயத்துக்களுக்குத் தேவைப்படும் புத்தகங்கள், நமூனுக்கள்.

*465 வின.— திரு என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேவைப்படும் புத்தகங்கள், நமூனுக்கள் போன்றவைகளை அரசாங்க அச்சகங்களில் அச்சிடாமல் ஹோ அண்ட் கோ போன்ற தனியார் அச்சகங்களில் அச்சிடுவது உண்மையா ?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :**

(அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாயூரம் போன்ற நகராட்சிகளில் சாதாரணமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற நிகழ்ச்சி நிரல்கூட 20, 30 பிரதிகள் தேவைப்படுகிற நேரத்தில்கூட, அச்சகத்தில் அதை அச்சடிக்கிருர்களே, அதை மாற்றி சைகிளோஸ்டைல் செய்தால் போதும். அது ஓரளவுக்கு செலவைக் குறைக்கும் என்று அரசு உத்தரவிட முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதைப்பற்றி விவரம் இல்லை என்ருலும் கூட, நகராட்சியைப் பொறுத்த வரையிலே சென்னை எழுதுபொருள் அச்சகத்திலே அச்சிட்டுத் தரவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அதற்காக தனியாக அவர்கள் அச்சிடமாட்டார்கள். பொதுவாக நகராட்சி மன்றங்களுக்குத் தேவையான நமூனுக்களை மொத்தமாக அச்சிட்டு அவர்களுக்குப் பிரித்துக்கொடுப்பது வழக்கம். கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தனிப்பட்ட முறையில் அச்சடித்திருந்தால், அவைகளையெல்லாம் சிக்கனப்படுத்தவேண்டும் என்று நாம் அறிவுரை வழங்குவதில் தவறு ஒன்றுமில்லை.

**திரு ஆர். கருப்பையா :** திருச்சி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவைப்படுகிற பாடப் புத்தகங்களை ஜூன் மாதத்திலேயே கிடைக்கும்படி செய்யவேண்டும். அப்படியில்லாமல் இப்பொழுது ஜூலை, ஆகஸ்டு மாதத்தில்தான் கிடைக்கிறது........



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வியை ஒட்டித்தான் உறுப்பினர்களுடைய துணைக் கேள்வி அமையவேண்டும்.

## கீழ்பருத்திக்குடி பஞ்சாயத்துப் பிரிவு.

*466 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் தாலுகா, குமராட்சி யூனியனைச் சேர்ந்த கீழ்ப் பருத்திக்குடிப் பஞ்சாயத்திலிருந்து மேலப் பருத்திக்குடிப் பஞ்சாயத்து பிரிந்து இரண்டு வருடமாகியும் இப் பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பிரிக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன ?

(இ) இதுகுறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :**

(அ) & (இ) : கீழ்ப் பருத்திக்குடி, மேல் பருத்திக்குடி ஊராட்சி மன்றங்களுக்கிடையே சொத்துக்களைப் பிரிப்பதுகுறித்து ஏற்கெனவே தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தனது 19—2—1968 தேதியிட்ட நடவடிக்கைகளில் ஆணை பிறப்பித்துள்ளார்.

## *Employees in film trade.*

***467 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware that large number of persons employed in film trade are keeping idle consequent on the stoppage of production in this State ?**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** திரைப்படத் தயாரிப்புத் தொழிலில் சென்ற ஆண்டு பணிபுரிந்தவர்களில் எத்தனை பேர்கள் இந்த ஆண்டு பணி புரிகிருர்கள் ? எத்தனை பேர்கள் பணிபுரியவில்லை என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதைப்பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார் எத்தனை தொழிலாளர்கள் வேலையில் இருக்கிருர்கள் என்ற விவரம் இல்லாமல், அமைச்சர் அவர்கள் யாரும் வேலையில்லாமல் நீக்கப் படவில்லை என்ற தகவல் எப்படிக் கொடுக்கமுடியும்.?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கத்தினர் கேட்டது திரைப் படத் தொழிலில் திரைப்படத் தயாரிப்பு நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெருவாரியான நபர்கள் வேலையின்றி இருக்கிருர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். நான் இல்லை என்று பதில் சொன்னேன். மொத்தமாக ஸ்டுடியோவில் எவ்வளவு பேர்கள் இருக்கிருர்கள் என்ற கேள்வியையும் அங்கத்தினர் கேட்கவில்லை. அதற்கான பதிலும் இங்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வியிலிருந்து அந்தக் கேள்விக்கும் விடை வந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

**திரு. கே. விநாயகம் :** குறிப்பாகக் கணக்கு இல்லை என்றாலும்கூட போன ஆண்டு இந்தத் தொழிலில் அதிகமான மக்கள் ஈடுபட்டார்கள் என்பதும், இந்த ஆண்டு அதைவிட அந்த எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதும், அந்த விஷயமாவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஏ.வி.எம். ஸ்டூடியோவில் சென்ற ஆண்டு வேலை செய்த தொழிலாளர்கள் 160 பேர்கள், படத் தயாரிப்பு நிறுத்தப்பட்ட காரணத்தினால் குறைக்கப்பட்டார்கள். அதற்குப்பிறகு உடனே முருகன் பிரதர்ஸ் என்ற பெயரில் அவர்களுடைய பிள்ளைகளே அந்தத் தொழில் நிறுவனத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தினால், மீண்டும் தொழில் ஆரம்பிக்கப்பட்டு 70 தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதேமாதிரி அருணாசலம் ஸ்டூடியோ மூடப்பட்டுவிட்ட காரணத்தினால் 50 தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள். ஏ. எல். எஸ். அந்த ஸ்டூடியோவை எடுத்துக் கொண்ட பிறகு 30 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. பிரகாஷ் ஸ்டூடியோவில் 36 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள், பின்பு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். திரு. சித்தன் அவர்கள் மொத்தமாகக் கேள்வி கேட்டார்கள். மொத்தமாகச் சேர்த்துதான் என்னிடம் விவரம் இருந்தது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் பற்றி ஸ்டூடியோ வாரியாக தனியாகக் கேள்வி கேட்டிருந்தால் ஸ்டூடியோ வாரியாகச் சொல்லியிருக்க முடியும்.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், அருணாசலம் ஸ்டூடியோவில் 50 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள், அவர்களில், 30 பேர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டதாகவும், மற்ற 20 பேர்களைச் சேர்க்கப்படவில்லை என்றும் தெரிகிறது. அதாவது அரசாங்கத்தின் கணக்கில் வந்திருக்கிறதா ? அதையாவது முன்னால் அறிவித்திருந்தால் நல்லது அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள். அதைச் சொல்லியிருக்கலாம் இல்லையா என்பது கேள்வியாகாது. அமைச்சர் விளக்கம் அளித்து விட்டார்கள். ஏன் இப்படிப்பட்ட விடை அளிக்கவில்லை என்று சொல்வது கேள்வியாகாது.

**திரு. டி. மார்ட்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அருணாசலம் ஸ்டூடியோவிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட 50 பேர்கள் வேலை இழந்தார்கள் என்றும், அவர்களில் 30 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றும் சொன்னார்கள். மீதம் உள்ள 20 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்களா, இல்லையா என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வி கேட்டிருப்பது, "பெருவாரியான நபர்கள் வேலையின்றி இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா" என்று இருக்கிறது. அதற்குப் பெருவாரியாக வேலை இழக்கவில்லை என்று பதில் அளித்திருக்கிறேன். மற்றவர்களையும் எடுப்பதுபற்றிப் பேச்சுவார்த்தை நடக்கிறது.

*Cellular Concrete Plant.*

*468 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal to start a cellular concrete plant in our State ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ஆம்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லை எதற்கு உபயோகப்படுகிறது என்று கூற முடியுமா?



**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இது செங்கலுக்குப் பதிலாக சுவர்கள் எழுப்புவதற்கும், சுவர் எந்த உயரத்திற்கு வேண்டுமானாலும் எழுப்புவதற்கும், பல மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்தப் புழைக் கற்களைப் பயன்படுத்தலாம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த செலுலார் காங்க்ரீட் செகோஸ்லோவாகியா நாட்டுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? செங்கலுக்குப் பதிலாக இதைப் பயன்படுத்துவதால் என்னென்ன நன்மைகள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதைத்தான் இப்பொழுது சொன்னேன். செங்கலுக்குப் பதிலாக உபயோகிக்கும்போது, இது செங்கலைவிட கனம் குறைவாக இருக்கிறது, லேசானது, புழைக் கற்களை எவ்வளவு உயரமானதாக இருந்தாலும், சுவற்றை எழுப்பலாம், எத்தனை மாடிக் கட்டடமாக இருந்தாலும் இந்தக் கற்களை உபயோகிக்கலாம். ஆர்.ஸி.ஸி. ரூப்புக்குப் பதிலாக இந்தக் கற்களைப் பயன்படுத்தலாம் என்றும் கருத்துக் கூறப்படுகிறது.

*Slums around S.I.E.T. College.*

*469 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the S.I.E.T. College for Women in Madras City is surrounded by slums ; and

(*b*) whether any request for their clearance has been received by the authorities ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ஆம். S.I.E.T. கல்லூரியைச் சுற்றிலும் ஐந்து சேரிகள் உள்ளன.

(இ) இதுவரை இம்மாதிரியான வேண்டுகோள் அரசாங்கம் அல்லது வீட்டுவசதி வாரியத்தின் கவனத்திற்கு வரவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சார், அண்மையிலே தயாரிக்கப்பட்ட அறிக்கையிலே, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் ஸோஷல் ஒர்க், தயாரிக்கப்பட்ட அறிக்கையில், நாலில் ஒருபாகம் சென்னையிலே நம்முடைய ஜனத்தொகை 20 லட்சத்தில் கால் பாகம், கிட்டத்தட்ட 5 லட்சம் சேரிகளில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. அப்படி இருப்பதால், இந்த அரசாங்கம் சேரிகளில் இருக்கும் மக்களை வேறு நல்ல இடத்திற்குக் கொண்டுபோய் அமர்த்துவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அது எந்த அளவிற்கு வெற்றிபெற்றிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** சேரிகளை அகற்றும் திட்டத்தில் கூடுமான வரையில் அவர்களை அங்கங்கேயே வைக்க வேண்டும் என்றுதான் செய்யப்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது, 491 சேரிகள் சென்னையில் இருக்கின்றன. கிட்டத்தட்ட 100 சேரிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 57 சேரிகளில் வேலை துவங்கப்பட்டிருக்கிறது. வேலை நடந்துகொண்டே இருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் ஒரு ஸ்விம்மிங் பூல் இருப்பதாகக் கூறுகிறார்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே இருப்பது சேரிகளைப் பற்றி........

THIRU T. MARTIN : Sir, there is a swimming pool in the S.I.E.T. College.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுபற்றி இந்த அமைச்சரிடம் வராது. இவர்கள் சேரியைப்பற்றித்தான் சொல்ல முடியும்.

THIRU T. MARTIN : Sir, I am coming to that......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி சொல்லுங்கள்.

திரு. டி. மார்டின்: அந்த எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் ஒரு ஸ்விம்மிங் பூல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த ஸ்விம்மிங் பூல் அங்குள்ள மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், பக்கத்திலுள்ள மக்கள் வந்து அந்தக் கல்லூரி ஸ்விம்மிங் பூலை கொஞ்சம் தவறுதலாக உபயோகிக்கும் நிலை இருப்பதாகச் சொல்லப்படுவது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படிக் கொண்டு வரப்பட்டிருந்தால், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது என்று கருது கிறேன். அதுபற்றி அரசாங்கத்திற்குத் தகவல் கிடையாது. (பலத்த சிரிப்பு).

### கோயில்களிலிருந்து நிதி வழங்கல்.

*470—வினா : திரு. என். எஸ். வி. சித்தன், திரு. மு. கிருஷ்ண மூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களிலிருந்து தமிழ்நாடு அரசுக்குக் கணிசமான அளவு தொகையை வளர்ச்சி நிதி என்கிற பெயராலோ அல்லது வேறு பெயராலோ கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை. "வளர்ச்சி நிதி" என்ற பெயரிலோ அல்லது பிற பெயரிலோ இம்மாநிலத்திலுள்ள அற நிலையங்கள் அரசாங்கத்திற்கு நிதி வழங்க வேண்டுமென்று ஏதும் ஆணையோ அன்றிச் சுற்றறிக்கையோ அனுப்பப்படவில்லை.

திரு பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, திருப்பதியில் அங்கே உள்ள கோயில் வருமானத்திலிருந்து ஒரு பல்கலைக்கழகமே அமைத் திருக்கிறார்கள். அதேபோல, தமிழகத்தில் பல்கலைக் கழகம் அமைக்கா விட்டாலும், கோவில் வருமானத்தில் இருந்து கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அறநிலையப் பண்டிலிருந்து பழனியில் ஒரு கல்லூரி அமைக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகள் அமைக்க வாய்ப்புக்கள் எங்கு எங்கு இருக்கிறதோ, அதை அரசு கவனிக்கும்.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, தெய்வீகப் பேரவை என்ற பெயரிலே அறநிலைய ஆணையர் அவர்கள் பணம் வசூலிக் கிறார்கள். அது அரசின் அனுமதி பெற்றுத்தான் செய்யப்படுகிறதா ? அப்படி வசூல் செய்துள்ள பணம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : காமன் குட் பண்ட் என்ற முறையில் கமிஷனர் அவர்கள் பணம் ஒவ்வொரு ஊர்களிலும், வாலண்ட்ரி கன்ட்ரிபூஷன் என்ற முறையில் வசூலிக்கப்படுகிறது அப்படிப்பட்ட பண்டுகள் தவிர வேறு விதமான பண்டுகள் கிடையாது அதுவும் கட்டாயம் இல்லை.

திரு. க. ர. நல்ல சிவன் : இந்த அறநிலைய நிதி சம்பந்தமாக, கல் யாண மண்டபங்கள் கட்டலாம் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறதா ? அப்படியானால், இந்த நிதியிலிருந்து எவ்வளவு கல்யாண மண்டபங்கள் ராச்சியம் பூராவிலும் கட்டப்பட்டிருக்கிறது என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதற்கான தகவல் என்னிடம் இல்லை, தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.



திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, இந்த அற நிலையங்களில் இருக்கும் செலவுபோக மீதி பணங்களைக் கல்வி நிலையங் கள், மருத்துவ மனைகள் போன்றவற்றை அமைத்து மக்களுக்கு வசதி களைச் செய்து கொடுக்க இந்த நிதியை உபயோகிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, அற நிலையங்களைப் பாதுகாக்கவே அந்த நிதி இருப்பதால், அறநிலையங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று இருக்கும் அந்த நிதி அந்தக் காரியங்களுக்கே செலவழிக்கப்பட வேண்டும். அதற்கு மேல் உபரி யாக இருந்தால், அதை நன்கு யோசித்து, மக்களுக்கு நல்ல காரியங் களுக்குச் செலவழிக்கப்பட வேண்டும் என்றால், நன்கு யோசித்துத்தான் செலவழிக்கப்பட வேண்டும் என்றநிலையை உண்டாக்க வேண்டும். அற நிலையங்களின் பாதுகாப்புத்தான் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்ற வகையில் அந்த நிதியை உபயோகிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா : அறநிலையப் பாதுகாப்பிற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

### 2. நடைமுறைக்கேள்வி

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தபோது, ஆளுங் கட்சியினர் உபயோகித்த சொற்கள் குறித்து.

*திரு. ரா. ராமச்சந்திர துரை. ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய இந்தப் பேரவையானது இதுவரையில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக கண்ணியத்துடனும், கட்டுப் பாட்டுடனும் நடந்து வந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன ? எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : சட்ட சபையில் தரக் குறைவான வார்த்தைகள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார், எந்த நேரத்தில் பேசி னார்கள் ?

திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புச் செய்த நேரத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் போ, போ என்று சொல்லியும், சில தரக் குறைவான வார்த்தைகளையும் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. அது நேற்றே முடிந்துவிட்ட நிகழ்ச்சிதான்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு அதைப் பற்றிச் சொல்லுங் கள்.

### 3. அவையுரிமைக் கேள்விகள்.

(அ) பேரவைத் தலைமையால் அகற்றப்பட ஆணையிடப்பட்ட பகுதிகளை "மறவன் மடல்" வெளியிட்டது குறித்து, அச்செய்தித்தாள் ஆசிரியர் வருத்தம் தெரிவித்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நமது சட்டமன்ற நிகழ்ச்சியிலிருந்து நீக்கவேண்டுமென்று பேரவைத் தலைவர் நீக்கிய பகுதி 'மறவன் மடல்' பத்திரிகையில் வெளிவந்ததைக் குறிப்பிட்டு, பேரவையில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னையை யொட்டி, அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தவறுக்கு வருத்தம் தெரிவித்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

We regret very much for the publication of the news item at page 4 of our Daily dated 6th March 1969 (City) which we later larnt that it has been expunged from the proceedings of the Legislative Assembly by the Deputy Speaker. As our reporter immediately rushed to the phone, he did not notice the order of Deputy Speaker and we felt much for it.

We are enclosing herewith a copy of our Daily in which we published our regret for the publication of the abovesaid news. We assure you that hereafter wards we will take much care while publishing the proceedings of the Madras Legislative Assembly.

என்று வருத்தம் தெரிவித்திருக்கிற காரணத்தால் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவையில்லையென்று முடிவு எடுக்கிறேன்.

(ஆ) 'நவசக்தி' நாளிதழ் பேரவை நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டதுகுறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. மு. சின்னசாமி, அவர்கள் நவசக்தி பத்திரிகை நம்முடைய பேரவை நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டதற்காக ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்தார்கள். நான் அதை மறுநாள் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். இதற்கு இடையில் அந்தப் பத்திரிகை ஒரு திருத்தம் வெளியிட்டிருக்கிறதே ஒழிய அதற்கு வருத்தம் தெரிவித்து எழுதவில்லை. அப்படி வருத்தம் தெரிவித்து எழுதும் என்று எதிர்பார்த்து, இதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

(இ) நவமணி நாளிதழ் பேரவை நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள், நவமணிப் பத்திரிகை பேரவை நிகழ்ச்சியைத் திரித்து வெளியிட்டதற்காக அப்பத்திரிகைமீது ஓர் உரிமைப் பிரச்னை கொண்டுவந்தார்கள். அந்தப் பத்திரிகை பிறகு திருத்தத்தை வெளியிட்டு, தவறான செய்தியை வெளியிட்டமைக்காக வருந்துகிறோம் என்று வருத்தம் தெரிவித்திருக்கிறது. ஆகவே, இந்த நிகழ்ச்சியை இதோடு விட்டுவிடுகிறேன். ஆனாலும், நிகழ்ச்சிகளை முதலிலே வெளியிட்டுவிட்டு, பிறகு திருத்தம் வெளியிட்டு, வருத்தம் தெரிவிக்கிற முறையைச் செய்தித் தாள்கள் மேற்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஈ) நிதியமைச்சருடைய பேச்சை எதிர்க்கட்சித் தலைவர் திரித்துக் கூறியதுகுறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள்.**



"18-3-1969 அன்று நடைபெற்ற விவசாய மானியத்தின்மீது பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரியையும் வந்தவுடன் போட்டு, 23 கோடிக்கு ஓவர்டிராப்ட் வைத்திருக்கிறீர்களே, இனி இன்சால்வென்ட் செய்துவிட்டுத்தான் போகப்போகிறீர்கள். உங்களுக்கே தெரியாது வாங்கிவிட்டீர்கள்போல இருக்கிறது என்று பேசினார்கள்.

உடனே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, எனக்கே தெரியாதிருக்கும் என்று சொன்னார்கள், அது உண்மையான நிலை அல்ல என்று கூறினார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஓவர்டிராப்ட் தமக்குத் தெரியாது என எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது உண்மையான நிலை அல்ல என்று அன்றே தெளிவாக மறுத்திருந்தும், 21-3-1969 அன்று டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்போது, பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இவ்வளவு தொகை ஓவர்டிராப்ட் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள், இப்படிப்பட்ட பெரிய தொகையைச் செலவழித்திருக்கிறோம் என்ற நிலைமைகூடத் தெரியாமல் பொறுப்புள்ள நிதியமைச்சர் எழுந்து எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள் சட்ட சபையிலே. நிதியமைச்சருக்குத் தெரியாமல் ஒரு நிலை இங்கு ஏற்பட்டிருக்குமானால், அது மிகவும் வருந்தத்தக்கது என்று கூறி, இச்சபையில் நடவாத ஒன்றை நடந்ததாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதை வேண்டுமென்றே திரித்துக் கூறியதாகவும் தெளிவாகத் தெரிவதால், மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர்மீது சபையை மீறிய குற்றம் நிகழ்ந்திருப்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், சுருக்கமாகச் சொல்லவேண்டும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 184-வது விதியின்கீழ் உரிமை மீறிய பிரச்னையைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். மேலெழுந்தவாரியாக, எவ்வாறு உரிமை மீறப்பட்டது என்பதைமட்டும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பிரச்னையிலே சம்பந்தப்பட்டவர்களைப் பார்ப்பதற்குப் பதிலாக இதிலே இருக்கின்ற தன்மைகளைப் பார்ப்பது இந்தப் பேரவையினுடைய கண்ணியத்திற்கும், பெருமைக்கும் ஏற்றதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

18-3-1969 அன்று நடந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபொழுது, 23 கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்ட் இருக்கிறதே என்று குறிப்பிடப்பட்டது. நிதியமைச்சர் அவர்களை மறுபடியும் பார்த்து, "இது உங்களுக்கும் தெரியாமல் நடந்துவிட்டதே" என்று சொன்னார்கள். உடனே நிதியமைச்சர் அவர்கள் எழுந்து அதற்கு எனக்கே தெரியாமல் நடந்துவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறார்கள், அது உண்மையானது அல்ல என்று கூறினார்கள், 18-3-1969 அன்று வேளாண்மைத்துறை மானியத்தின்மீது எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அன்றே பதிலளித்துவிட்டார்கள். அது முடிந்துபோன ஒன்று. ஆனால் மறுபடியும், உறுப்பினர் டாக்டர் எச். வி. ஹாண்டே 21-3-1969 அன்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபொழுது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஓவர் டிராப்ட் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது, பொறுப்பிலே உள்ள நிதி அமைச்சர் அவர்கள் தனக்குத் தெரியாது என்று சட்ட சபையிலே வெளியிட்டிருக்கிறார் என்று அவர்கள் திட்டவட்டமாகக் கூறினார்கள். அது மட்டுமல்ல, அந்த நேரத்திலே நிதி அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. நிதியமைச்சர் இல்லாத நேரத்திலே கூறினார். ஏற்கனவே எழுப்பப்பட்ட ஒன்றுக்குத் தகுந்த பதில் அளித்த பிறகு, தீர்ந்துவிட்ட பிரச்னையைப்பற்றி, அதற்குரியவர் இல்லாத நேரத்தில் இந்த அவையில் எழுப்பி, அதை விவாதத்திற்குரிய பிரச்னையாக ஆக்குவதையும், இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் பேசு

வதையும், பதில் சொல்வதையும் ஏற்றுக்கொள்கிற முறையை மீறுவதாக இருக்கிறதா என்பது மட்டுமல்ல. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நன்றாக அறிவார்கள், தங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு இருக்கிற உரிமைகள் வேண்டுமென்று வற்புறுத்துகிற நேரத்தில் **Erskine May's Parliamentary Practice**—படி வேண்டுமென்று கேட்பது அவருடைய வாடிக்கை. அதிலே குறிப்பிட்டிருப்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**'The House may treat the making of a deliberately misleading statement as a contempt. Reflections upon members are reflections upon the House.'**

அது மட்டுமல்ல, 'Gross or wilful misrepresentation of particular members speeches will amount to contempt இதெல்லாம் 115-ம் பக்கத்திலிருந்து 119-ம் பக்கம் வரையில் உள்ள பக்கங்களில்தான் குறிப்பிடப்படுகின்றன. எதிர்க்கட்சித் தலைவருக்குப் பேச உரிமை இருக்கிறது. மற்றவர்கள் பேசுகிறபொழுது குறுக்கிடுவதற்கும் உரிமை இருக்கிறது. அது மட்டுமல்ல, அமைச்சர்கள் பேசுகின்றபொழுதும் குறுக்கிடுவதற்கு உரிமை இருக்கிறது. மற்றும், இதர எதிர்க்கட்சிகள் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து பேசும்போதும் குறுக்கிடுவதற்கு உரிமை இருக்கிறது. அவருக்குக் குற்றச்சாட்டுகளைக் கூறுகின்ற உரிமை இருக்கிறது, ஆதாரம் எங்கே என்று கேட்டால், காலம் வரும் என்று சொல்ல உரிமை இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு அளித்த பிறகு பேசுவதற்கும் உரிமை இருக்கிறது. பொதுவாகச் சொல்லப்போனால், எதிர்க்கட்சித் தலைவர் சட்ட மன்றத்திலே எந்த நேரத்திலேயும் எழுந்து இடைவிடாமல் எதையும் பேசுவதற்கு இந்த மன்றத்திலே உரிமை இருக்கிறது. ஆனால், இவ்வளவு உரிமைகளும் இருக்கின்றனவே என்று சொன்னால், மன்றத்தினுடைய உரிமையை மீறுவதற்காக அல்ல, உறுப்பினர்களுடைய கண்ணியத்தை மீறுவதற்காக அல்ல என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவேதான் இதிலே வெள்ளிடை மலையாக விளங்குகிறது. ஏற்கனவே கூறிய கருத்தைத் திரித்துக் கூறி மாசு கற்பிக்கின்ற முறையில் இந்த மன்றத்திலே பயன்படுத்துவது இந்தப் பேரவையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் நீண்ட நாளைக்குக் காப்பாற்றாது என்ற காரணத்தினால்—மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலும் போதும், இவ்வளவு நேரம் பேசவேண்டுமென்பதுகூட இல்லை—உள்ளங்கை நெல்லிக்கனியாக, வெள்ளிடை மலையாக, நிதி அமைச்சர் கூறிய கருத்து இங்கே திரித்துக் கூறப்பட்டிருப்பது விளங்குகிறது. ஆகவே, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர் பேசும்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு இன்னின்ன உரிமைகள் எல்லாம் இருக்கின்றன என்று சொல்லிவந்தார்கள், மனதார அந்த உரிமைகள் இருக்கின்றன என்று சொன்னாரா அல்லது இந்த இந்த வகையில் எல்லாம் தலையிட்டு தம் உரிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற வகையில் இன்சின்யுவேஷன் என்று சொல்வார்களே, அந்த முறையில் சொன்னார்களா என்பதற்குத் தங்களுடைய ரூலிங் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் பேசியிருக்கிறார்கள். உரிமைகள் எல்லாம் இருக்கின்றன என்று குறிப்பிட்டபோது வேண்டாத உரிமைகளை எல்லாம் எடுத்துக்கொள்கிறார்கள் என்று உள்நோக்கத்தோடு சொன்னதாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. **எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிமைகள் இருக்கின்றன.**





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியானால் அவர்கள் சொன்ன உரிமைகளை எல்லாம் ஒரு பட்டியலாகப் போட்டுப் பேரவை விதிகளிலே திருத்திக்கொள்ளுங்கள்.

*** மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்னையைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மற்றவர்களையும் யோசனை கேட்பதற்கு முன்னால் இதில் என்னைச் சம்பந்தப்படுத்தியிருக்கிற காரணத்தினால் தன்னிலை விளக்கம் என்ற முறையில் சில விஷயங்களைக் குறிப்பிடுவதற்கு தாங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதற்குத் தாங்கள் அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய அனுபவத்தில் தன்னிலை விளக்கத்திற்காக இந்த மன்றத்தில் எழுவது இதுதான் முதல் தடவையாக இருக்கும் என்று நினைக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படி ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டார்களே என்பதற்கு நான் வருத்தப்படுகிறேன்.

நான் ஓவர்டிராப்ட் பற்றி இந்த மன்றத்திற்கு என்னுடைய இறுதித் துணை மதிப்பீட்டுத் தீர்மானத்தின்மீது சொல்வதாக இருந்தேன். ஆனால், எதிர்பாராத விதமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்னைபற்றி விவசாயத் துறை மானியத்தின்மீது எழுப்பினார்கள். அன்றைக்கு நடந்தது என்ன ? விவசாய மானியத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டு வந்தார்கள். அப்படிப் பேசிக்கொண்டு வருகிற நேரத்தில் திரு. இராமச்சந்திரன் சொல்லியிருப்பதைப் போல திடீரென்று "23 கோடிக்கு ஓவர்டிராப்ட் வாங்கியிருக்கிறீர்களே, என்பதாகவும், இன்சால்வென்ட் செய்துவிடுவீர்கள் என்பதாகவும்" சொன்னார்கள். அப்படிச் சொல்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. தாராளமாகச் சொல்லலாம். விவசாய அமைச்சர் இந்த மன்றத்தில் இருந்தார். நானும் அப்போது உட்கார்ந்திருந்தேன். அந்த விவாதத்தில் நான் குறுக்கிட வேண்டிய அவசியம் இல்லை. எதிர்க்கட்சி தலைவர் அதோடு விட்டுவிட்டுப் போயிருந்தால் நான் குறுக்கிட்டிருக்கவும் மாட்டேன். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் " நிதி அமைச்சர் சிரிக்கிறார், அவருக்கே தெரியாது வாங்கிவிட்டார்கள் போலிருக்கிறது " என்று சொன்னார்கள். மன்றத்தின் நடவடிக்கைக் குறிப்பை எடுத்துப் பார்த்தால் தெரியும். அப்போது நான் குறுக்கிட்டுச் சொன்னது என்ன ? "ஒன்றைச் சொன்னார்கள், எனக்கே தெரியாதிருக்கும் என்றார்கள். அது உண்மையான நிலை அல்ல" என்பதாகக் குறிப்பிட்டதோடு மேலும் கூடச் சொன்னேன். நம்முடைய மொத்த ஆஸ்திகளின் மதிப்பு ரூ. 500 கோடியிருக்கும். இவர்களது கடந்த 18 வருஷ ஆட்சியில் 400 கோடியை அழித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இதை எல்லாம் பற்றிச் சொல்லப்போனால், அவர்களுக்கே அனுகூலமாக இருக்கும் என்று கருத வேண்டாம். ஓவர்டிராப்ட்பற்றிப் பேச நிதி ஒதுக்கீடு மசோதாவில் சந்தர்ப்பம் இருப்பதால் இப்போது வேளாண்மைத் துறை மானியத்தின்மீது பேசி முடித்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.

" ஓவர்டிராப்ட் பற்றி உங்களுக்கே தெரியாது " என்றவுடன் நிதி அமைச்சர் தனக்குத் தெரியாது என்று சொன்னார் என எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறபோது நாம் சுதந்திரமாக இந்த மன்றத்தில் செயல்படவேண்டிய நிலையில் இப்படி நான் சொன்னதை வேறு விதமாகச் சொல்வது என்றால், பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடமை இருக்கிறது. "உங்களுக்கே தெரியாது ஓவர்டிராப்ட் வாங்கி விட்டீர்கள்போல இருக்கிறது" என்றார்கள் எதிர்க்கட்சித் தலைவர். "அது உண்மையான நிலை அல்ல" என்று நான் மறுத்திருக்கிறேன். இன்னும் ஆங்கிலத்தில் சொன்னால் நன்றாக விளங்கும்.

**To say that I do not know about the overdraft is not the correct position.** என்பதுதான் நான் சொன்ன வாசகம். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் எல்லா மெம்பர்களும் இருந்தார்கள். அரசு ரூ. 23

கோடிக்கு ஓவர்டிராப்ட் வாங்கியிருக்கிறதா என்று கேட்கிறபோது, நிதி அமைச்சர் தனக்குத் தெரியாது என்று இந்த மன்றத்தில் சொல்லியிருப்பாரானல் பத்திரிகைகள் பெரிய பெரிய எழுத்துக்களிலே போட்டிருக்கமாட்டார்களா? எத்தனையோ விஷயங்கள் எனக்குத் தெரியாதிருக்கலாம். நான் சகலகலா வல்லவன் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளவில்லை. இதை வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. பலதுறைகளில் ஒன்றும் தெரியாத முட்டாளாக நான் இருக்கலாம். ஆனல் இந்த விஷயத்திலே எனக்குத் தெரியாது என்று நான் சொல்லியிருந்தால் அது வேறு விஷயம். அது உண்மை நிலை அல்ல என்று நான் சொல்லியிருக்கிறபோது நிதி அமைச்சரே ஓவர்டிராப்ட் வாங்கியிருப்பது தமக்குத் தெரியாது என்று சொன்னர் என்பது சரியல்ல. உண்மைக்கு மாருக விவகாரம் பெரியதாக, ஊருக்கும், நாட்டுக்கும், உலகத்திற்கும் தவருன கருத்து பரவும். இது சரியல்ல. இப்போதே ஓவர்டிராப்ட் வாங்கியிருப்பது தெரியாது என்று நிதி அமைச்சர் சொல்கிருர், விதியும் மதியும் விளையாடுகிறது என்றெல்லாம் பேசத் தொடங்கி விட்டார்கள் என்ருல் இது சரியல்ல. உண்மையிலேயே லாயக்கில்லாத ஒருவனை நிதி அமைச்சராக முதல் அமைச்சர் ஆக்கி விட்டாரோ என்ற கேள்வி எழும். தவருன கருத்தைச் சொல்லி, இப்படித் தவருன எண்ணங்களை உண்டாக்குவது சரியாகாது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அவர் ஒரு மந்திரியாகவே வந்திருக்கவேண்டும். அவரே ரொம்ப நாளாக எதிர்பார்த்தார். என்னுடைய பெருமதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் பத்தாண்டுகள் நிதி அமைச்சராக இருந்திருக்கிருர்கள். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் ஓப்பனிங் பாலன்ஸ், காஷ் பாலன்ஸ் நம்முடைய அரசுக் கருவூலம், பற்றிய விவரக் கணக்கில் நிதி அமைச்சர் கையெழுத்துப் போட்டாக வேண்டியிருக்கிறது. அப்படி இருக்கிறபோது ஓவர்டிராப்ட் சமாசாரம் தெரியாது என்ருல், ஒன்று விவகாரம் தெரியாத முட்டாளாக இருக்கவேண்டும், அல்லது வேண்டுமென்றே இந்த மன்றத்தை "மிஸ்லீட்" பண்ணியதாக இருக்கவேண்டும். அது உண்மை நிலை அல்ல என்பதை நான் சொல்லியும், எதிர்க்கட்சித் தலைவருக்கு என்னிடம் என்ன கோபமோ தெரியவில்லை, "தெரியாது" என்று சொன்னர் என்ருர்கள். உண்மையில் அது எனக்குத் தெரியும், பின்னல் பேசப் போகிறேன் என்றுதான் அன்று அறிவித்தேன். தெரியாது என்று நான் சொல்லியிருந்தால் அது "இன்கரக்ட் ஸ்டேட்மெண்டு" கொடுத்ததாகவே ஆகும்.

இந்தச் சபையினுடைய கிரியேச்சர்தான் மந்திரி சபை. நீங்கள் வேண்டாமென்ருல் நாங்கள் வெளியேறி விடலாம். இன்னொருவரைக் கூப்பிட்டு உட்கார வைத்துக் கொள்ளலாம். நிதி அதிகாரம் எல்லாம் இந்தச் சபைக்குத்தான் உண்டு. மேலவைக்கு அது கிடையாது. எனவே அந்த நிலையில் அதை மறைத்த குற்றத்திற்கும், அதையொட்டி எழுகின்ற குற்றங்களுக்கும் நான் ஆளாகக்கூடிய நிலைமை வரும். நிதியமைச்சர் என்ற முறையிலே என்னுடைய மிகச் சாதாரணமான அடிப்படைக் கடமைகளைக்கூட, எவ்வளவு பணம் இருக்கிறது என்றுகூடப் பார்க்காத குற்றம் எல்லாம் வருகிறது. நிதித் துறை இலாகாவின் அமைச்சருக்குத் தெரியாமலேயே கதை நடந்து கொண்டிருக்கிறது என்ற அளவிலே அந்த இலாகாவிற்கும் ஒரு ஆபத்தான நிலைமையெல்லாம் வருகிறது. இவ்வளவு பிரச்னைகள் எல்லாம் இதற்குப் பின்னலே இருக்கின்றன.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நிரம்ப உரிமைகளை எடுத்துக் கொள்கிருர்கள். நம்முடைய அவையும் புதிய முறையை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது. நான் அதை வேண்டாமென்று சொல்லவில்லை. குறைபாடுகள் இருந்தால் அதை அம்பலப்படுத்த வேண்டுமென்றுதான் இந்த அரசாங்கம் விரும்புகிறது. எல்லா வகையான விமர்சனங்களையும்



தெளிவாகச் செய்யுங்கள். ஆனல் குற்றஞ்சாட்டுவதும், நிரூபியுங்கள் என்று சொன்னல் உடனே வேறு ஒரு கட்டத்திற்கு மாற்றிக்கொள்வதுமான நிலைமையெல்லாம் இருக்கிறது. அவர்கள் சொன்ன உடனே நான் எழுந்து சொல்லியிருக்கிறேன். அப்படித் தவருன முறையிலே எந்தப் பத்திரிகையிலும் வரவில்லை, நம்முடைய பதிவேட்டிலும் இல்லை. அவர்கள் இரண்டு நாட்கள் கழித்து அதைப் பெரிய விவாதமாக்கி விட்டார்கள். அது நம்முடைய மரபுக்கு உகந்ததல்ல. உண்மையிலேயே இதிலே "பிரைமா பேஸி" கேஸ் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் கொண்டுவந்து இருக்கிருர்கள். ஆரோக்கியமான நல்ல மரபுகளை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் சொல்லப்படுகிறது.

வேளாண்மைத் துறை மானியத்திலே ஓவர்டிராப்ட் பற்றித் தெரியாது என்று சொல்லுகின்ற பைத்தியக்கார நிதியமைச்சர் இருக்கிருர் என்று பத்திரிகைகளில் போடக்கூடிய நிலை இருப்பதால் அவர்கள் சாதாரணமாக 8 காத தூரத்திலே ஓடுவார்கள், இதனல் 14 காத தூரத்திலே ஓடுவார்கள். இந்த நிலைமை ஏற்படுவது இந்த அரசுக்கும் நல்லதல்ல, அவர்கள் வகிக்கிற பொறுப்புக்கும் நல்லதல்ல என்பதால் அருள்கூர்ந்து நிலைமையைத் தெளிவாக்குவதற்காக இந்த மன்றத்திலே என்ன நடந்தது என்பதைப் படித்துக் காண்பியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். என் மீது இருக்கிற தவருன நிலைமையைப் போக்க வேண்டும். அவர்கள் என்னைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்த வேண்டுமென்ற அற்ப ஆசையுடன் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கவில்லை. அற்பம் என்ருல் தவருக எடுத்துக் கொள்வார்கள், நான் அற்பம் என்று சொல்வது ஆங்கிலத்தில் வருகின்ற மொமெண்டரி பிளஷர் தான். நான் சார்ந்திருக்கிற பொறுப்பை, கடமையைத் தட்டிக் கழித்தேன், இந்த மாமன்றத்தைத் திசை திருப்பினேன், தவருன செய்தியைக் கொடுத்தேன், இலாக்காவிடமும் தவருன விவரங்கள் இருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் வருகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தாலே இந்த நாட்டுக்கு உண்மையான நிலைமையைத் தெரியப்படுத்தி, இதை உரிமைப் பிரச்னையாக விடாமல் இருக்கலாம். தெளிவுபடுத்திவிடக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

அவர்கள் விமர்சனம் செய்யட்டும், குற்றங் குறைகள் இருந்தால் அணு அணுவாகச் சொல்லுங்கள், அதன் மூலம் தெளிவு பெறுவதற்கு இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொண்டு, இதிலே மூடிமறைப்பதற்கு ஒன்றுமில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட துரதிருஷ்டமான நிலைமை ஏற்பட்டதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஆனல் அவர்கள் இதுபற்றிய விளைவுகளை உணராமல் எடுத்துச் சொல்லியிருப்பார்களா என்பது தெரியவில்லை. இருந்தாலும் நாங்கள் அதைப் படித்துக் காண்பியுங்கள். பத்திரிகைகளிலே தவருன செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, நிலைமையைத் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவரவர்களே, பண்ருட்டித் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் கொண்டுவந்திருக்கின்ற உரிமைப் பிரச்னைமீது நிதியமைச்சர் அவர்கள் விளக்கத்தைத் தந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்னையின்மீது நிதியமைச்சர் அவர்கள் பேசிய பேச்சைக் கேட்ட பொழுது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. நான் ஏதோ தவருகக் குற்றச்சாட்டுக்களைக் கொண்டு வருவதைப் போலச் சொன்னர்கள். எனக்கு அந்த நிலை வேண்டாம். எனக்குத் தெரிந்த வரையில் அரசியலில் தவருனதையோ அல்லது திரித்துக் கூறியோ சொல்ல வேண்டுமென்ற நிலைமை இல்லை. நிதியமைச்சர் பதவி என்ருல் என்னவென்று எங்களுக்குத்தெரியும்.

இந்த ஓவர்டிராப்ட் என்பதை முதன் முதலில் ராஜாஜி அவர்கள் தான் 1952 இல் கொண்டு வந்தார்கள், 17 கோடி அப்பொழுது வைத் திருந்தார்கள். ஆகவே தெரியவில்லை என்று நான் சொல்லவில்லை. நான் நடந்ததைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், ஞாபக மறதியாக இருக்கலாம். குறிப்புகளிலே எப்படி இருக்கிறதோ தெரியாது. வேளாண் மைத்துறை அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் வரி போடுகிறது என்று சொன்ன நேரத்திலே, நீங்கள் வரியைக் குறைத்து வசதியைப் பெருக்கு வோம் என்று சொன்னீர்கள், 255 கோடியிலிருந்து 285 கோடியாக அதிகமாகி, இப்பொழுது 35 கோடி ரூபாய் அளவுக்கு அதிகமாக வரிப் போட்டு, 16 கோடி ரூபாய்க்கு பற்றுக்குறை பட்ஜெட்டையும் போட்டு, இன்று காலையிலே பத்திரிகையிலே பார்த்தேன், 23 கோடி ரூபாய்க்கு ஓவர்டிராப்ட் வைத்திருக்கிறார்கள் என்று வேகத்திலே இப்படி நடந்திருக் கிறது என்று பேசினேன். அப்பொழுது திடீரென்று நிதியமைச்சர் அவர்கள் உள்ளே வந்தார்கள். நிதியமைச்சருக்குத் தெரியாமல் வாங்கி விட்டார்களோ என்னவோ தெரியவில்லை என்று சொன்னேன். பட்ஜெட் எஸ்டிமேட்ஸிலே பைனான்ஷியல் மெமொரண்டத்திலே ஒரு இடத்திலே கூட காணப்படவில்லை, அதிலே வரவு வைத்திருந்தால் தெரியமுடியும், அதில் வரவு இல்லை. ஓவர்டிராப்ட் வாங்கி யிருந்தால் 23 கோடி ரூபாய் என்றாலும், 10 கோடி, 5 கோடி என்றாலும் ஒரு பக்கத்திலே குறிக்கப்பட் டிருந்தால் தெரியும். பைனான்ஷியல் ஸ்டேட்மெண்டில் அதுபற்றிக் காண வில்லை. அதனால் தான் நிதியமைச்சருக்குத் தெரியாமல் நடந்துவிட்டதோ என்று ஒரு மோமெண்டிலே நான் சொன்னதாக ஞாபகம். நான் மறந்து இருக்கலாம், அந்த நேரத்திலே என்னுடைய மனது எப்படி இருந் திருக்குமோ எனக்குத் தெரியாது. அவர்கள் தெரியாது என்று சொல்லி யிருக்கலாம். அவர்கள் சொல்லாமல் நான் சொல்லியிருக்க மாட்டேன். அவர்கள் மீது பழி, வீண் பழி சுமத்துவதற்காக அல்ல. ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி அப்படிச் செய்வது நல்லதல்ல. எனவே அப்படிப்பட்ட நிலைமையில் நான் சொல்லவில்லை. அவர்கள் அப்படிச் சொன்னதாக இடையில் ஒரு வார்த்தை விடப்பட்டிருப்ப தாக எனக்குத் தெரிகிறது. ரிப்போர்ட்டர்ஸ் எடுப்பதிலே நம்பலாமா வேண்டாமா ? நம்பலாம், ஒரு ஒரு வார்த்தையை எழுதாமலும் இருக் கலாம். டேப் ரிக்கார்டர் இருந்தால் வாசகம் பூராவும் புரியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அப்படிச் சொன்னதாக நினைக்கிறேன். ஞாபகம் இல்லாமலிருக்கலாம். எனக்கு ஞாபகம் சரியாக இருக்காது என்று சொல்ல முடியாது.

முன்பொரு முறை முன்னாள் முதலமைச்சர் ரௌடி என்று சொன் னார்கள் என்று வந்தது. எனக்குத் தெரியும் அவர்கள் சொல்லவில்லை யென்பது. பத்திரிகைகளில் எல்லாம் வந்தது அவர்கள் சொன்னதாக. நான் செயலாளரிடம், முதலமைச்சர் சொல்லாத வார்த்தையைச் சொன்ன தாக சொல்வது சரியல்ல என்று சொன்னேன்.

எனவே, முடிந்த வரைக்கும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஞாபகக் குறைவு இருந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. மரபைக் காக்கிற எதிர்க்கட்சித் தலைவர் பழி சுமத்துவதாகச் சொன்னார்கள். அப்படி யில்லை.

ஓவர்டிராப்ட் வாங்க வேண்டாமென்று சொல்லவில்லை. எந்த சர்க்கா ரும் வாங்கும். எவ்வளவு பெரிய பிஸினஸ் ஆக இருந்தாலும் ஓவர் டிராப்ட் வாங்க வேண்டியது தான். அவர்கள் அதற்குப் பின்னாலே விளக்கம் கொடுத்துவிட்டார்கள். அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதற்காக ஒரு உரிமைப் பிரச்னை என்று சொல்லி இதை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவருக்கு என்ன, என்ன உரிமைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நன்றி. நிதியமைச்சர் சொன்னார்கள் வீண் பழி சுமத்த வேண்டுமென்பதால் சொன்னதாகச் சொன்னார்கள். அந்த எண்ணம் எனக்கு இல்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



உங்களுடைய குறைகளைப் பற்றிக் கூறவேண்டு மென்பதற்காக இந்த ஓவர்டிராப்ட் பற்றிக் குறிப்பிடவில்லை. அப்படிக் குறைகளைக் கூறவேண்டு மென்றால் இந்த இரண்டு வருடங்கள் நடந்தது பூராவையும் சொன்னால் போதும். இதை நீங்கள் உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொளுள்வதாக இருந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை ; பயந்து ஓடுவதாக தயவு செய்து எடுத்துக் கொள்ளாதீர்கள். நான் என்னுடைய நிலையை விளக்கி விட்டேன். பட்ஜெட்டிலேயே இந்த ஓவர்டிராப்ட் பற்றிக் குறிப்பிட்டிருந் தால் சந்தேகம் வந்திருக்காது. இந்தச் சர்க்காருக்கு அதிகமான ஓவர் டிராப்ட் இருக்கிறது என்றால் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அதிலே எனக்கும் கடமையும், பொறுப்பும் இருக்கிறது. எதையோ தவறாகச் சொல்லி அரசியலை நடத்தும் நிலையில் நான் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய தீர்ப்பு எப்படி இருக்கிறதோ, என்னுடைய நிலையை விளக்கிவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கெழுத்தாளர்கள் எழுதி யுள்ளதை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து படிக்கிறேன்—

"திரு. பி. ஜி. கருத்திருமன் : நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிகளைக் குறைத்து வசதிகளைப் பெருக்குவோம் என்று சொன்னீர்களே, செய்தீர்களா ? வரியையும் வந்தவுடன் போட்டு 23 கோடிக்கு ஓவர்டிராப்ட் வைத்திருக்கிறீர்களே, இதுவரை உங்களை நல்லவர் கள் என்று நினைத்தோம். இன்று காலை பேப்பரிலே வந்த பிறகு தானே உங்களைப் பற்றித் தெரிகிறது நீங்கள் வந்தவுட னேயே நான் சொன்னேன், இன்ஸால்வென்ட் செய்துவிட்டுத் தான் போகப் போகிறீர்கள் என்பதாக. இன்சால்வென்ட் என்று சொன்னார் என்றீர்கள். இப்போது நிதி அமைச்சர் சிரிக்கிறார். உங்களுக்கே தெரியாது வாங்கிவிட்டீர்கள் போல இருக்கிறது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒன்றைச் சொன்னார்கள் எனக்கே தெரியா திருக்கும் என்றார்கள், அது உண்மையான நிலை அல்ல. நமது மொத்த ஆஸ்திகள் — சொத்துக்களின் மதிப்பே 500 கோடி. இவர்களது 18 வருஷ ஆட்சியில் என்ன செய்தார்கள், 400 கோடியைக் கரைத்துவிட்டு வெளியே போனார் கள், அல்லது மக்கள் போகச் செய்தார்கள். இதை யெல்லாம் பற்றிச் சொல்ல முடியும். அந்தக் கருத்துக்கள் அவர்களுக்கே அனுகூலமாக இருக்கும் என்று கருத வேண்டாம். இதுபற்றிச் சொல்ல நிதி ஒதுக்கீடு மசோதாவில் சந்தர்ப்பம் இருப்பதால் இப்போது வேளாண்மைத் துறை மானியத்தின் மீது பேசி முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பேசி முடித்தாகிவிட்டது."

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அது உண்மைநிலை அல்ல என்று மறுத்திருக்கிறார்கள். நம்முடைய சட்ட விதிகள், வேண்டுமென்றே தவ றாகத் திரித்துக் கூறினால் தான் உரிமை மீறிய நிகழ்ச்சி என்று கூறு கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. காதிலே பட்ட காரணத்தாலே சொன்னார்கள், வேண்டுமென்றே சொல்ல வில்லை. இதைப் பற்றித் தெளிவாக அவர்கள் கூறிவிட்ட காரணத்தால் மேற்கொண்டு எந்த விதமான நடவடிக்கையும் தேவையில்லை என்று கூறி இதனை முடிக்க விரும்புகிறேன்.

**திரு டி. எஸ். ஆதிமூலம் :** அவர்கள் வேண்டுமென்று நிச்சயம் சொல்லி இருக்க மாட்டார்கள். இந்தியா கவர்ன்மெண்ட் பெரிய இன்ஸால் வென்ட் ஆக இருக்கக் கூடிய நேரத்தில் அவர்கள் இப்படிச் சொல்லி யிருக்க முடியாது.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

**திருமங்கலத்தில் பேருந்து நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட தொழிலாளர் அமைச்சர் தேசிய கீதம் இசைக்கும் போது இல்லாதிருந்தது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்—

"The tense situation prevailing in Tirumangalam on account of the disrespect shown by the Minister for Labour while National Anthem was sung at the foundation stone laying function for 'Arigner Anna' bus—stand at Madurai Road, Tirumangalam, recently."

என்ற கருத்தை விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைப் போலவே திரு. கருப்பையா அவர்களும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அதே பொருள் பற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அது திருமங்கலத்திலே நடந்ததாகச் சொல்லப்படுகின்ற நிகழ்ச்சியாக இருப்பதால் திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள், அது எப்படி பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய ஒன்று என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17–3–1969 அன்று மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள், மறைந்த மாநில முதல்வர் மாண்புமிகு அண்ணா அவர்கள் பெயராலே திருமங்கலத்தில் பேரூராட்சியினரால் கட்டப்பட இருக்கும் பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டச் சென்றிருந்தார்கள். அமைச்சர் அவர்கள் அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு உரையாற்றிய பிறகு, இறுதியாக தேசிய கீதம் இசைக்கப்படுகின்ற நேரத்திலே, காரில் ஏறிக்கொண்டு மதுரைக்குச் சென்று விட்டார்கள். ஒரு நாட்டின் மானத்தைக் காப்பது தேசியக் கொடி. ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டையும், மேன்மையையும் எடுத்தியம்புவது தேசிய கீதம். அதற்கு உரிய மதிப்பைக் கொடுத்து மரியாதை செலுத்த வேண்டியது இந்திய நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். அதிலே, பிறருக்கு முன் மாதிரியாக நடந்து காட்ட வேண்டிய அமைச்சர் அவர்கள், தேசீய கீதம் இசைக்கப்படுகின்ற, நேரத்தில், புறப்பட்டுச் சென்றது வேதனை தரத்தக்கது ; கண்டிக்கத் தக்கது. அமைச்சர் அவர்களுடைய செயல் அந்தப் பகுதி மக்களிடையே பரபரப்பான சூழ்நிலையை ஏற்படுத்தி யிருப்பதால் இது அரசின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்ட ஒன்று அல்ல, எனவே, பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும், திரு கருப்பையா அவர்களும் கொடுத்திருக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திரு சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள் — தேசிய கீதம் என்பது ஒரு நாட்டினுடைய மானத்தை, பண்பாட்டை, ஒற்றுமையை எல்லாம் குறிப்பதாகும் என்றார். அதனை அவமதிக்கக் கூடாது என்பதிலே இந்த மன்றத்திலே இருக்கும் யாருக்கும் எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. இதைப் பற்றி நாலைந்து நாட்களுக்கு முன் குறிப்பிடுகின்ற நேரத்தில் திரு சித்தன் அவர்கள் குறிப்பிட்ட இதே வார்த்தைகளைச் சொல்லி தேசிய கீதத்தின் பெருமை, தேசீயக் கொடியின் பெருமை இவைகள் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதிலே இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையும், நாங்கள் அரசுப் பொறுப்பு ஏற்பதற்கு முன்னால் மாநகராட்சிப் பொறுப்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்ற காலத்திலேயே அங்கிருந்த மேயர்கள் எந்த அளவுக்கு இந்தப் பண்பைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்பதையும் விளக்கியிருக்கிறேன். தமிழகத்தில் திராவிட



முன்னேற்றக் கழக அமைச்சர்களையும் தேசீய கீதத்தையும் இணைத்து தேசீய கீதத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் அவமதிக்கிறார்கள் என்ற தவறான பிரசாரத்தை நாட்டில் இருக்கும் சில ஏடுகள் வெகு ஒழுங்காகச் செய்து வருகின்றன. என்ன காரணத்தாலோ தேசீய கீதத்தை மாநிலத்தில் இருக்கிற அமைச்சர்கள் அவமதிக்கிறார்கள் என்று கூறுவது அமைச்சர்களைக் குற்றம் சாட்டுகிறதோ இல்லையோ, தேசீய கீதத்தை அந்தப் பத்திரிகையாளர்கள் இப்படிப்பட்ட பிரசாரத்தினால் அவமதிக்கிறார்கள் என்று தான் கருதுகிறேன்.

தொழிலாளர் அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களிடம் நான் இதைப் பற்றிக் கேட்டேன். என்னிடத்தில் விளக்கிய அளவில், "அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு அவசரமாக மதுரைக்குச் சென்று கூட்டத்திலே பேசிவிட்டு, உடனடியாக ரயிலுக்குப் போக வேண்டிய அளவில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் நிகழ்ச்சி முடியும் வரை இல்லாமல் கல் நாட்டிவிட்டு வந்து விட்டேன்" என்றார். அதற்குப் பின் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. நாங்கள் தான் பாவிகள் என்று வைத்துக் கொண்டாலும், கவர்னர் பெருமான் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள், மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள், மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் அமைச்சர்கள் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் எல்லாம் கூட அவர்கள், முடிவுறுகிற வரை இல்லாமல் இடையில் போகக் கூடிய அளவுக்கு வேறு நிகழ்ச்சிகளின் காரணமாக அவர்களுக்கும் ஏற்படுவது உண்டு. அவர்கள் போன பிறகு தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்து தேசீய கீதம் பாடப்படுவதும் உண்டு. ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுகின்றவர்கள் அது முடிகிற வரையில் இருந்து தீரவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அதற்கும் தேசீய கீதப் பிரச்சினைக்கும் முடி போடுவது நல்லது அல்ல.

திரு. கருப்பையா அவர்கள் கொடுத்திருக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானம் "நவசக்தி" பத்திரிகையில் வந்த செய்தியை அடிப்படையாகக் வைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஒத்தி வைப்புத் தீர்மானங்களில் உள்ள வாசகத்திற்கும், "நவசக்தி" பத்திரிகையில் வெளிவந்த செய்திக்கும் இடையே வாசகத்தில் முரண்பாடு இருக்கிறது. தேசீய கீதம் பாடும்போது தொழிலாளர் அமைச்சர் இடத்தை விட்டு எழுந்து போய்விட்டார் என்று ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே இருக்கிறது. "நவசக்தி" பத்திரிகையிலே இருப்பது — "மந்திரி அடிக்கல் நாட்டி முடிந்ததும் அவசரமாகக் காரில் ஏறிச் சென்று விட்டார் ; அதன் பின் நடந்த தேசீய கீத நிகழ்ச்சியில் மந்திரி கலந்து கொள்ளவில்லை". அவர்தான் போய்விட்டாரே. எப்படி அதன்பின் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியும் ? அவர்கள் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு ஆதாரமாக இருந்த பத்திரிகைச் செய்தியிலே மந்திரி அவசரமாகப் போய்விட்டார் என்று குறிப்பிட்டிருக்கிறது. "அதன் பின் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை" என்பதற்குப் பதிலாக "கலந்து கொள்ள இயலவில்லை" என்று போட்டிருந்தால், பொறுப்பான பத்திரிகை பொறுப்பான முறையில் செய்தியை வெளியிட்டது, அவர்களுக்கும் தேசீய கீதத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது என்று ஒத்துக் கொள்ள முடியும். ஆகையால் தேசீய கீதத்தை அவமதிக்கிறோம், அவமதிக்கிறோம் என்று கூறி ஒரு தவறான பண்பாட்டை தமிழக அரசுக்கு உண்டாக்குகிறோம் என்று கருதிக் கொண்டு அப்படிப்பட்டதொரு நிலையை தமிழ் நாட்டுக்கு ஏற்படுத்த வேண்டாம் என்று மிகுந்த அக்கறையோடு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நான் இந்த தமிழக ஆட்சியின் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறேன் என்ற அளவில் இப்படிப்பட்ட காரியங்களில் என் அமைச்சரவையில் உள்ள எந்த அமைச்சரும் நிச்சயமாக தேசீய கீதத்தை அவமதிக்க வேண்டுமென்ற அளவில் ஈடுபடமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. இனி ஒரு நிகழ்ச்சி இப்படி நடைபெற்று விட்டால் அது சரியா இல்லையா என்பதை

பு செய்து உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் எனக்கு எழுதிக் டு விவரங்களைத் தெரிந்து கொண்டால் நல்லது. சட்ட மன்றத்தில் படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டு வரும்போது, அது பத்திரிகைகளில் நகிற காரணத்தினால் இந்தியாவில் ஒரு பகுதியில் தேசிய கீதம் இன்று பமதிக்கப்படுகிறது என்ற செய்தி பகைவர் நாடுகளுக்கு தித்திப்பான ய்தியாக இருக்கும் என்ற காரணத்தினால் இப்படிப்பட்ட முயற்சிகளில் னிமேல் நண்பர்கள் ஈடுபடாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் காண்டு அவையை ஒத்தி வைத்து இதை விவாதிக்கத் தேவையில்லை ன்ற கருத்தை தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தை யொட்டியும், அவர்கள் கொடுத்த உறுதியை யொட்டியும் இதுபற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

**5. தன்னிலை விளக்கம்.**

**தன் துணை வினாவிற்கு அமைச்சர் குத்தலாக விடையளித்தது குறித்து திரு. டி. மார்டின் அவர்கள் விளக்கம்.**

**திரு. டி. மார்டின் :** "பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன்" ஸார். கேள்வி நேரத்தின்போது எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் உள்ள ஸ்விம்மிங் பூல் நீச்சல் குளத்திற்கு வெளியார்கள் போய் அதை அசுத்தம் செய்கிறார்கள் என்பது பற்றி கேட்ட நேரத்தில், அமைச்சர் அவர்கள் அதற்குப்பதில் அளிக்கும்போது, அங்கத்தினருக்கு அனுபவம் இருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள். உண்மையில்......(சிரிப்பு.)

I am a Member (laughter). Therefore, when we put questions here, we are not putting questions on the basis of personal experience. From information which we have received from several sources, we will put questions and it is highly uncharitable for the Hon. Minister to say in this House that the Member has got personal experience. We have discussed so many things about corruption, immorality, etc. If the Hon. Minister replies by saying that a particular Member has got experience, then it will be a serious reflection on that Member. Therefore, Sir, I humbly request the Chair to give a ruling whether the Hon. Minister has got such a right to cast reflection on the Member when he puts a question for an answer.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது "பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன்" அல்ல. சாதாரணமாக கேள்விகள் கேட்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் வேடிக்கையாக; "உறுப்பினர் அவர்கள் அனுபவத்தில் கூறுகிறார்கள் போலும்" என்று கூறினால், அதை உள்நோக்கத்தோடு கூறுவதாக உறுப்பினர் அவர்கள் கொள்ளத் தேவையில்லை. அப்படி சில வார்த்தைகள் வந்தால்தான் கேள்வி நேரத்தில் கொஞ்சம் இனிமை இருக்கிறது இரு தரப்பிலும்தான். ஆகவே, இதையெல்லாம் பெரிய அளவில் எடுத்து கொள்ள வேண்டாம்.



**6. அரசினர் தீர்மானம்.**

**விதி 41 (3)-ஐ தளர்த்தல்**

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதைத் தளர்த்த வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

**7. கவன ஈர்ப்பு.**

**(அ) திண்டுக்கல் ஜி. டி. என். கலைக்கல்லூரியில் உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த மாணவர் மீது தடியடி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, சென்ற பிப்ரவரித் திங்கள், 11-ம் தேதி திண்டுக்கல் ஜி.டி.என். கலைக்கல்லூரியில் உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த மாணவர்கள் மீது காவல்துறையினர் தடியடி நடத்தியுள்ள அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 11—2—1969 அன்று வேலை நிறுத்தம் செய்த திண்டுக்கல் ஜி.டி.என். கலைக் கல்லூரி மாணவர்கள் சுமார் 400 பேர் கல்லூரிக்குள் கூட்டங்கூடி, அதற்கடுத்த வாரம் நடைபெறவிருந்த மாதிரித் தேர்வு நடைபெறக் கூடாதென கோரிக்கை விடுத்தனர். அவர்கள் வன்செயலில் ஈடுபடத் தொடங்கி பிற்பகல் 2-30 மணி அளவில் கற்களை வீசியெறியத் தொடங்கியதாக காவலர்களின் உதவியை நாடி கல்லூரி முதல்வர் எழுதிய வேண்டுகோள் அனுப்பினார். திண்டுக்கல் காவல் துறை உதவிக் கண்காணிப்பாளரும், காவலர் சிலரும் கல்லூரிக்கு விரைந்து வந்து, சிறு அளவில் தடியடி செய்து அமைதியை நிலைநாட்டினர். 11 மாணவர்களும் 3 காவலர்களும் காயமுற்றனர். இவர்கள் புறத்துள்ள பிணியாளர்களாக சிகிச்சை அளிக்கப்பட்டனர். மாணவர்கள் கற்களை வீசியெறிந்ததால், கல்லூரிக் கட்டடங்களிலும் விடுதிக் கட்டடங்களிலும் இருந்த குழல் விளக்குகள், கண்ணாடி சாளரங்கள் ஏனைய பொருள்கள் இவை நாசமுற்றன. கல்லூரி உடைமைக்கு 4,000 ரூபாய் அளவிற்குச் சேதம் ஏற்பட்டது.

இந்நிகழ்ச்சிக் குறித்து ஏ. எஸ். இளங்கோ மீதும் ஏனைய 18 மாணவர்கள் மீதும் இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் 147, 148, 149, 427, 332-வது பிரிவுகளின் கீழ் திண்டுக்கல் வட்டக் காவல் நிலையத்தில் 101/69 எண் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர்களில் 16 பேர் அந்த இடத்திலேயே கைது செய்யப்பட்டனர். எஞ்சிய மூவர், பிறகு கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மாணவர்கள், பின்னர் திண்டுக்கல் உட்கோட்ட குற்றவிசாரணை நீதிபதியால் பிணையத்தில் விடுவிக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சி நடந்த பின்னர், கல்லூரி அதிகாரிகள் எப்பொழுது கல்லூரி பிறகு திறக்கப்படும் என்று தேதி குறிப்பிடாமல், கல்லூரி மூடப்பட்டதாக அறிவித்தனர். கல்லூரி 10—3—1969 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. இப்பொழுது அமைதி நிலவி வருகிறது.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** மதியம் ஒரு மணிவரையில் அமைதியாக உண்ணாநோன்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், அதற்குப் பின்னால் அஸிஸ்டெண்ட் சூப்பரின்டென்டெண்ட் ஆஃப் போலீஸ் தடியடி துவங்கிய பின்னர்தான் மாணவர்கள் பக்கத்திலிருந்து விரும்பத்தகாத எதிர் நடவடிக்கைகள் ஏற்பட்டது என்றும் எனக்குத் தகவல் வந்தி

ருக்கிறது. அஸிஸ்டென்ட் சூப்பரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் அவர்கள் பின்னால் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அது உண்மையாக இருக்கும் என்று நம்ப இடம் இருக்கிறது. அது ஒருபுறமிருக்க, 98 மாணவர்கள் இப்போது ஆர்பிட்டரரியாக வருடாந்திரப் பரீட்சைக்கு அனுப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் பலர் இறுதி வருடப் பரீட்சைக்குப் போகவேண்டியவர்கள். நடந்த சம்பவத்தை விட்டு விட்டு இந்த மாணவர்கள் பரீட்சைக்குப் போவதற்கு வேண்டிய வழி வகைகளைப் கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து கொண்டு முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காவலர்கள் தாங்களாகவே சென்று நடவடிக்கைகள் எடுத்ததாகக் கூறுவது சரியான தகவல் அல்ல. அது அவருக்கு வந்த தகவல் என்று குறிப்பிட்டார்கள். காவலர்களின் உதவியை நாடி கல்லூரி முதல்வர் எழுதிய வேண்டுகோள் அனுப்பினார். அதன் பிறகுதான் காவலர்கள் கல்லூரிக்குள் சென்றார்கள் என்றிருக்கிறது. மாணவர்களின் வருங்கால நிலைபற்றிக் குறிப்பிட்டார்கள். கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து ஆவன செய்யப்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** காவலர்கள் அழைக்காமல் சென்றதாகச் சொல்லவில்லை. முதல்வர் கடிதம் எழுதித்தான் அவர்கள் சென்றார்கள் என்று சொல்லும் தகவலை ஏற்றுக்கொள்கிறேன். காவலர்கள் சென்ற பிறகுதான், தடியடி தொடங்கிய பின்னர்தான் எதிர் நடவடிக்கைகள் ஏற்பட்டன என்றுதான் நான் சொன்னேன் இப்போது கவனிக்க வேண்டியது வழக்குகள் இல்லாமல் பார்த்து அம் மாணவர்கள் பரீட்சைக்கு போவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இறுதிப் பரீட்சைக்கு போக வேண்டியவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பரீட்சைக்கு அனுப்பும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. இது தனியார் துறைக் கல்லூரி என்பதால் அவர்கள் விருப்பப்படி செய்வது பழி வாங்கும் ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து, முதல் அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நிச்சயமாக அதில் கவனம் செலுத்தப்படும் என்ற உறுதியினை நான் அளிக்கிறேன்.

**(ஆ) நெல்லிக்குப்பம் பாரி கம்பெனி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோதும், நெய்வேலி கார்ப்பொரேஷன் தொழிலாளர் ஊர்வலத்தின்போதும் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கை.**

***திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, நான் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் தனிப்பட்ட இரண்டு சம்பவங்கள் பற்றி கொடுத்திருந்தேன். அந்த இரண்டையும் க்ளப் செய்து ஒரே தீர்மானமாக அனுப்பப்பட்டிருக்கிறது. இருப்பினும் அவற்றை தனித்தனியாகப் படிக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எப்படித் திருத்திக் கொடுத்திருக்கிறார்களோ அப்படித்தான் படிக்க வேண்டும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** இது 10-ம் தேதி நடைபெறவில்லை. 19-ம் தேதி அன்று நடைபெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அச்சிட்டுக் கொடுத்ததைத்தான் நீங்கள் படிக்க வேண்டும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, கடந்த சனவரித் திங்கள் 10-ம் தேதியன்று நெல்லிக்குப்பம் பாரி கம்பெனி தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பெற அமைதியான முறையில் வேலைநிறுத்தம்



செய்தபோதும், அதேபோன்று நெய்வேலியில் நிலக்கரி கார்ப்ரேஷன் தொழிலாளர்கள் தங்கள் அதிகாரிகளிடம் மகஜர் கொடுப்பதற்காக அமைதியாக ஊர்வலம் சென்றபோதும், போலீஸார் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இரண்டாவது ஊதிய வாரியத்தில் (Second Wage Board) முடிவு அறிவிக்கப்படும் வரை, உயர் சதவீதம் பூரிப்பூதியமும் சிறப்பான பணி நிலைகளும் வேண்டுமென்று கேட்டு, நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. தொகுதி கம்பெனிகளின் தொழிலாளர்கள் 1969, ஜனவரி 9/10 நள்ளிரவு முதல் வேலை நிறுத்தம் செய்தனர். 65 அதிகாரிகளும் இன்றிமையாப் பணியிலுள்ள சில பணியாளர்களும் மட்டும் வேலை நிறுத்தம் செய்யவில்லை. மேற்படி தொகுதிக் கம்பெனிகளின் தொழிலாளர்கள், ஈ.ஐ.டி., எஸ்.எப். தொழிலாளர் சங்கத்தாலும் (இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ்), ஈ.ஐ.டி. பாரித் தொழிலாளர் சங்கத்தாலும் (அனைத்து இந்திய தொழிற்சங்க காங்கிரஸ்), பாரி தொழிலாளர் சங்கத்தாலும் (எச்.எம்.எஸ்.) நிர்வாகிக்கப்படுகின்றனர். மேற்சொன்ன எல்லாச் சங்கங்களும் 1968-ல் தனிப்பட்டு இயங்கத் தொடங்கின, ஆனால், ஈ.ஐ.டி. பாரித் தொழிலாளர் சங்கம் மட்டும் சி. கோவிந்தராசன், எம்.எல்.ஏ. தலைமையின் கீழ் இயங்கியது. பெரும்பான்மைத் தொழிலாளர்களால் நடத்தப்படும் வேலை நிறுத்த நிலைமையை சமூக விரோதிச் சக்திகள் பயன்படுத்திக்கொண்டு சட்டம், ஒழுங்குச் சிக்கலை ஏற்படுத்துமென்று, கம்பெனியிடம் பற்றுறுதியுள்ள தொழிலாளர்களுக்கு ஊறு ஏற்படக் கூடுமெனவும் விலை உயர்ந்த இயந்திரங்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்படலாமென்றும் அஞ்சப்பட்டால், தொழிற்சாலைக்கு வெளியிலும் நகரிலும் போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஈ.ஐ.டி. சங்கத்திற்கும் பிற சங்கங்களுக்குமிடையே கருத்து வேற்றுமை இருந்தது. என்றாலும், சிறப்பான காவல்துறைப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. பற்றுறுதியுள்ள தொழிலாளர்களையும் அதிகாரிகளையும் பாதுகாக்கவும், ஈ.ஐ.டி. தொழிலாளர்களுக்கும் பிற சங்கங்களின் தொழிலாளர்களுக்கும் இடையே மோதல்கள் நிகழாது தடுக்கவும், சட்டம் ஒழுங்கைப் பேணும் நோக்கில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளுடன் கூடிய படைக்கலந் தாங்கிய காவல் படையினர் நிறுத்தப்பட்டனர்.

1969, ஜனவரி 24-ம் தேதி, வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது. ஈ.ஐ.டி. சங்கம் தவிர பிற சங்கங்களுக்கும் நிர்வாகத்திற்கும் உடன்பாடு காணப்பட்டது.

ஈ.ஐ.டி. சங்கத்தினர் நடத்திய ஊர்வலத்தில் முன்வாயில் வழியாக வருவதைவிட்டு ஊர்வலத்தினர், பின்வாயில் வழியாக வந்தனர், காவல் பாதுகாப்பை மீறிவரும் எண்ணத்தில் இவ்வாறு வந்தனர். இதை எதிர் பார்த்து ஊர்வலத்தினர் நிறுத்தப்பட்டனர்: சிதம்பரம், வருவாய்க் கோட்ட அதிகாரியும் தென் ஆர்க்காடு, காவல்துறைக் கண்காணிப்பாளரும் பூரிப்பூதியம் பற்றி விவாதிக்க நிர்வாக இயக்குநரைச் சந்திக்க அவர்களின் பிரதிநிதிகள் நால்வரை அனுப்புமாறு தொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். தொழிலாளர்கள் கேட்கவில்லை, காவலர்கள் மீது கற்களை வீசினர் என்றும் காவலர்கள் ஐவருக்குக் காயம் ஏற்பட்டது என்றும் ஊர்வலத்தினர் காவலர்களின் கட்டை மீறிக் காவலர்களை தடியால் தள்ளத் தொடங்கினர் என்றும் நிர்வாக அலுவலகம் நோக்கி விரைந்தனர் என்றும் காவலர்கள் அவர்களைத் துரத்திப் பிடித்து அவர்களைப் பின்நோக்கித் தள்ள முயன்றனர் என்றும் இக் கை கலப்பில் ஊர்வலத்தினர் சிலர் முழக்கங்கள் எழுப்பிக் கொண்டு, நிர்வாக இயக்குநர், பிற முதுநிலை அதிகாரிகள் ஆகியோரின் அலுவலகங்கள் உள்ள இடத்தருகில் நுழைந்தனர் என்றும் சிதம்பரம், வருவாய்க்கோட்ட அதிகாரியின் ஒப்புதலுடன், காவலர்கள் குறைந்த வலிமையைப் பயன்படுத்தி சுற்று மதிலுக்குள் இருந்து தொழிலாளர்களை வெளியேற்றினர் என்றும் நெய்

வேலி நகரியத்தில் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது; தடியடி எதுவும் செய்யப்படவில்லை. முறையாகப் புலனாய்வு செய்த பின்னர், நெய்வேலி நகரியத்தில் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்றச்சாட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. கோவிந்தராசன்:** தலைவரவர்களே, இரண்டு சம்பவங்களையும் ஒரேவிதமாக இணைத்து, நெய்வேலியில் நடந்த சம்பவம் நெல்லிக்குப்பத்தில் நடந்த மாதிரி அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி நான் ஒரு விளக்கம் கோருகிறேன். நெல்லிக்குப்பம் சம்பந்தப்பட்டவரையில் ஐ.என்.டி.யூ.சி. ஸ்தாபனமே கிடையாது. 4 தொழிற்சங்கங்களும் ஒன்று சேர்ந்து கூட்டுக் கமிட்டி அமைத்து, அதன் மூலம் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. ஜனவரி மாதம் 10-ம் தேதி முதல் அமைதியாக வேலை நிறுத்தம் செய்தனர். 19ந் தேதியன்று தொழிற் சங்கக் காரியாலயத்தின் முன்னால் கண்ணீர்ப் புகை கொண்டுவரக் காரணம் என்ன? முதலாளிகளுக்குச் சாதகமாக அந்த போலீஸ் காவல் படையினர் இருந்தது. அப்படி வைக்க வேண்டியது அவசியமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அமைதி நிலைநாட்டப்பட வேண்டும், எந்தவித அசம்பாவிதமும் ஏற்பட்டு விடக்கூடாது என்றும், முன்னெச்சரிக்கையாக போலீசார் இருந்தார்கள். கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்யவில்லை, வைத்திருந்தார்கள், தேவைப்பட்டால் பயன்படுத்துவதற்காக.

**திரு. சி. கோவிந்தராசன்:** அதேமாதிரி, நெய்வேலியில் அமைதியாக, 10-ஆம் தேதியன்று தங்களுடைய கோரிக்கைகளை, 7, 8, 9 தேதிகளில் உண்ணாவிரதம் இருந்து பிறகு 10-ஆம் தேதி மேனேஜிங் டைரக்டரிடம் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்காக ஊர்வலம் சென்றவர்கள் மீது திடீரென்று எந்தவித முன்னெச்சரிக்கையுமின்றி தடியடி செய்தார்கள். அதைப் போலவே, துப்பாக்கிச் சனியனால் ஒருவருடைய உயிர்நிலையில் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அந்தத் தொழிலாளி அனுமதிக்கப்பட்டிருக்கிறார். வேறு பல தொழிலாளர்களும் காயமுற்று அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்த விளக்கத்தின்பேரிலே ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால் கேளுங்கள். அதைத் தவிர புது நிகழ்ச்சிகள், புது செய்திகள் பற்றிச் சொல்வதற்கு நேரம் இல்லை. அமைச்சரவர்களின் அறிக்கை மேல் விளக்கம் வேண்டுமானால் கேட்கலாம். புதிய செய்திகளுக்கும் விளக்கம் கொடுங்கள் என்று கேட்க முடியாது.

**திரு. சி. கோவிந்தராசன்:** நான் கொடுத்த செய்தியிலிருந்து, அதற்கும் விளக்கம் இல்லை. அதற்கான அறிக்கை இல்லாமல், வேறுவிதமாக வரக்கூடியதாக இருப்பதால் விஷயமே வேறு என்று......

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தொழிலாளர் பற்றி மான்யம் இன்று வருவதாக இருக்கிறது எனக் கருதுகிறேன். அந்த நேரத்தில் விளக்கிச் சொன்னால், நானும், தொழிலாளர் அமைச்சரவர்களும் சிரத்தை காட்ட வசதியாக இருக்கும். எனவே, அங்கத்தினர் அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் விளக்கம் கொடுத்தால் நல்லது.

**(இ) வடார்க்காடு, நெல்லை மாவட்டங்களில் பருவ மழையின்மையும், கடன் வசூல் ஒத்திவைப்பும், பஞ்ச நிவாரண நிதி ஒதுக்கலும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. கே. சகாதேவக் கவுண்டர் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றைக் கொண்டு வருவார்கள்.



**திரு. கே. சகாதேவக் கவுண்டர்:** தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"வடாற்காடு மாவட்டத்தில் பருவமழை பொய்த்துவிட்டதாலும், பயிர்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டதாலும், குறிப்பாக செங்கம் தாலுக்காவில் குடிதண்ணீர் கிடைக்காததாலும், பஞ்ச நிவாரண நிதி ஒதுக்க வேண்டியது" பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பலராமன் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றைக் கொண்டு வருவார்கள்—

**திரு. இல. பலராமன்:** தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"வடாற்காடு மாவட்டத்தில் பருவ மழை தவறியதால் விவசாய மக்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பெற்றிருக்கும் கடன்களையும், இந்த ஆண்டில் தவணை கடந்த கடன்களையும் இன்னும் ஓராண்டு காலத்திற்கு ஒற்றிவைத்து, மீண்டும் புதிய கடன்கள் தாராளமாகக் கொடுக்க வேண்டியது பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு என். துரைபாண்டியன் அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியம் ஒன்றைக் கொண்டு வருவார்கள்.

**திரு. என். துரைப்பாண்டியன்:** தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர்கள் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"திருநெல்வேலி ஜில்லாவில் குறிப்பாக நாங்குநேரி தாலூக்காவில் வள்ளியூர், விஜயநாராயணம், நாங்குநேரி பிர்க்காக்களில் பருவமழை தவறிவிட்ட காரணத்தால் மேற்படி பகுதிகளைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து வரி, கடன்களை வசூல் செய்யாது நிறுத்தி வைக்க வேண்டியது பற்றி."

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவரவர்களே, 1968-ல் தென் மேற்குப் பருவமழையும், வட கிழக்குப் பருவ மழையும் முற்றிலும் பொய்த்துவிட்டதாக வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இதனால், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏரிகள் வறண்டுள்ளன. வேளாண்மைப் பணிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் வறட்சியால் தாக்குண்ட பகுதிகளிலுள்ள உழவர்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் துயர்தணிப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வருவாய்த்துறை வாரியம் மூலமாக அவர் செயற்குறிப்புகளை அனுப்பினார். வறட்சி நிலைமையை நேரடியாக மதிப்பிடுவதற்கென பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட நில வருவாய், நிலச்சீர்திருத்தங்கள் ஆணையாளரின் கருத்துரைகளையொட்டி வருவாய்த்துறை வாரியம் தயாரித்து அனுப்பியுள்ள செயற்குறிப்புகளை அரசு ஏற்றுக்கொண்டது. இம்மாவட்டத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட துயர்தணிப்புப் பணிகளாவன:—

(i) 1969-70-ல் செய்ய வேண்டி வரும் செப்பனிடும் பணிக்கு உள்ளூர் பாசன மானியத்தின் கீழ் 1968-69-ம் ஆண்டிற்காக ரூ.6 லட்சம் நிதி ஒதுக்கம் செய்தல்.

(ii) குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 8 லட்சம் ஒதுக்குதல்.

(iii) மிகவும் பாதிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் கிராமச் சாலைகளை அமைப்பதற்கும் சரளைக்கல் போடுவதற்கும் ரூ. 6 லட்சம் ஒதுக்குதல்.

(iv) கடன் தவணைகள் வசூலிக்கப்படுவதைத் தள்ளிவைத்தல், கடன் தவணைகளை அவரவர்களாக முன் வந்து செலுத்தினால் அவை ஏற்றுக்கொள்ளப்படும். எனவே, முதல் படியாக, இம்மாவட்டத்தில் துயர் தணிப்புப் பணிகளுக்கு ரூ. 20 லட்சம் ஒதுக்கப்பட்டது. எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளிலும் உழவர்களுக்கும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் துயர்தணிப்புப் பணிகளை மேற்கொள்ள சில உடனடி நடவடிக்கை மேற்கொள்வது பற்றி, 17-ந் தேதி பிப்ரவரி மாதம் 1969-ம் வருடம் உணவு அமைச்சர் கூட்டுறவு அமைச்சர், வேளாண்மை அமைச்சர் ஆகியோருடன் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் நடத்திய உயர்நிலைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. சிறு பாசன பணிகள், பொதுப்பணித்துறையின் ஏரிகளையும், நீர் வழங்கு கால்வாய்களையும் சீர்படுத்தல், பாசனத்திற்கும், குடிநீர்த்தேவைகளுக்கும் பயன்படும் கிணறுகளை ஆழப்படுத்துதல், சாலை அமைத்தல் ஆகிய சிறப்பான பணிகளை மேற்கொள்ள வட ஆற்காடு மாவட்டத்திற்கு மேலும் நிதியளிக்க முடிவெடுக்கப்பட்டது. மேலே சொன்ன பணிகளை மேற்கொள்ள அரசு, மேலும் ரூ. 15·5 லட்சம் நிதியளித்தது. மொத்தத்தில் ரூ. 35·5 லட்சம் அளவிற்கு இம் மாவட்டத்திற்கு துயர் தணிப்பு அளிக்கப்படுள்ளது.

## திருநெல்வேலி மாவட்டம்.

அடுத்து வறட்சி நிலைமைகளால் திருநெல்வேலி மாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். அதற்கேற்ப நடப்பு ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் குறிப்பிட்ட துயர் தணிப்பு பணிகளை மேற்கொள்வதற்காகக் கீழ்க்காணும் செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார் :—

(i) 1968-69-இல் ராதாபுரம் துணைவட்டத்தில் நிலங்களைப் பண்படுத்த தக்காவிக் கடன்களாக வழங்க ரூ. 1 லட்சம் ஒதுக்குதல்.

(ii) 1969-70-இல் தக்காவிக் கடன்களுக்கு ரூ. 3 லட்சம் ஒதுக்குதல்.

(iii) கிராம நீர் வழங்கு திட்டத்தின் கீழ் ரூ. 1 லட்சம் ஒதுக்குதல்.

(iv) சிறு பாசனத்திட்டத்தின் கீழ் சங்கரன் கோயில், கோயில் பட்டி, நாங்குநேரி ஆகிய வட்டங்களில் ஏரிகளில் தூறு எடுத்தல் பணிக்கு ரூ. 3·5 லட்சம் ஒதுக்குதல்.

கடன்களையும் நிலவரி வசூலிப்பையும் பொதுவாகத் தள்ளிவைக்கும் அவசியம் இல்லையென்றாலும், நாங்குநேரி வட்டம் ராதபுரம் துணை வட்டம், சங்கரன்கோயில் வட்டத்தைச் சேர்ந்த சேந்தமங்கலம், வள்ளிக்கோனேந்தல் பிர்க்காக்கள், கோயில்பட்டி வட்டத்தைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம், எப்பொதுவென்றான் பிர்க்காக்கள், திருச்செந்தூர் வட்டத்தில் சாத்தான்குளம் துணை வட்டம் ஆகிய இடங்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருதுகிறார். மேற்சொன்ன இடங்களில் கடன் வசூலிப்பதில் கடுமையான நடவடிக்கைகள் அவசியமில்லை என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

தக்காவிக் கடன்களாக வழங்குவதற்கும், சிறுபாசனப் பணிகள், பொதுப் பணித் துறையின் ஏரிகளைச் சீர் செய்தல், பாசன குடிநீர்க் கிணறு



களை ஆழப்படுத்துதல், சாலை அமைத்தல் ஆகிய சிறப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் வேண்டப்பட்ட 8·5 இலட்சம் ரூபாய் திருநெல்வேலி மாவட்டத்திற்கு அரசு வழங்கியுள்ளது.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவர் அவர்களே, செங்கம் தாலூகாவிலே பழைய பயிர்களை அடி வெட்டு வெட்டுவதற்காக மனுக்கள் அளிக்கப்பட்டு, அதற்கு வேண்டிய பணமும் ஒதுக்கி, அதை பட்டுவாடா செய்கின்ற நேரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் பட்டுவாடா செய்ய வேண்டாமென்று தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. செங்கம் பகுதிக்கு எவ்வித பணமும் ஒதுக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உடனே அந்த மனுக்களை எல்லாம் பட்டுவாடா செய்வதற்கும் அங்கே வேண்டிய பஞ்ச நிவாரண வேலைகளை எடுத்துக்கொள்வதற்கும் அரசாங்கம் வழி செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதுபற்றி மாவட்ட கலெக்டர் அவர்களிடம் தெரிந்துகொள்ளலாம். ஆனால், இப்பொழுதே ஒதுக்கப்படுகின்ற நிதிகள் எந்த எந்த முறையிலே செலவு செய்யப்படுகின்றன, அந்த வேலைகளிலே எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9-ம் தேதி கலெக்டர்களுடைய மாநாடு ஒன்றை சென்னை நகரிலே கூட்டி இருக்கிறார்கள். அதிலே இவ்வளவு நாட்களாக நடைபெற்றிருக்கிற வேலைகளினுடைய முன்னேற்றத்தைப் பற்றியும், இன்னும் துரிதப்படுத்த வேண்டிய காரியங்களைப்பற்றியும் இனி மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் யோசிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற செங்கம் மாவட்டத்தைப் பற்றி கலெக்டர் அவர்களிடம் கலந்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் பருவ மழை பொய்த்ததன் காரணமாக வறட்சியான பிரதேசமாகி உள்ளது என்று கூறினார்கள். ஆனால் வறட்சியான பிரதேசம் என்று அறிவிக்கப்பட வேண்டும், பிரகடனப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு அங்கே வறட்சி இருந்தும் வரிகள் வசூலிக்கப்படுகின்றன. கடன்கள், வசூலிக்கப்படுகின்றன, கூட்டுறவு கடன்கள் ஜப்தி மூலம் கூட இன்றைக்கும் வசூலிக்கப்படுகின்றன என்பதை இந்த அவைக்கு தெரியப்படுத்திக்கொண்டு, கடன்கள் இன்றைக்கும் விநியோகம் செய்யப்படாமல் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடி வெட்டப்பட்ட பிறகு கூட இன்றைக்கு ஒரு பஞ்சாயத்து யூனியன் ரூ. 10,000 ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தற்காலிகமாக நிறுத்தி இருக்கிறார்களா என்று கூடத் தெரியவில்லை. தேவையான அளவுக்குத் துரித நடவடிக்கைகள் இல்லாமல் விவசாயி இறந்து கொண்டிருக்கும்போது கொடுக்காமல் அவர் இறந்தபின்னால் ஏதோ வாழ்விக்க. . . . . . . . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஐந்து நிமிஷம் பிரசங்கம் பண்ணுகிறீர்கள். நீங்கள் சொல்வதற்கு இன்னொரு அறிக்கை கொடுக்கலாம் போலிருக்கிறது. அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலிருந்து மட்டும் விளக்கம் கேட்கலாம்.

**திரு. இல. பலராமன் :** இது போன்ற காரியங்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த அவையைக் கேட்டுக்கொண்டு தண்ணீர் பஞ்சம் பரவலாக இருக்கிற நிலைமையிலே தண்ணீர் கேட்டால். .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொடுத்த அறிக்கையிலேயிருந்து விளக்கம் பெறுவதற்கு 2 கேள்விகள்தான் கேட்கலாம். நீங்கள் புதிதாகக் கருத்து கொடுத்து அதற்கெல்லாம் என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்பதற்கு இந்த 41-வது விதியின் கீழ் இடம் இல்லை.

**திரு. இல. பலராமன் :** மேலும் அதிகமாக ஒதுக்கீடுச் செய்வதாகக்
கூறவேண்டும். அந்த ஒதுக்கீடு எவ்வளவு தேவைப்படுகிறது என்று
தேவையை அறிந்து, துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவல் அனுப்புவார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுடைய யோசனைக்கு, எந்த எந்த விஷயத்திலே நடந்திருக்கின்
றன. எந்நிலையிலே எவ்வளவு காரியங்கள் நடைபெறும் என்று
இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை விசாரிக்கிறேன் என்று
மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. என். துரைப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, ராதாபுரம்
உப வட்டத்திற்கு மட்டும் 8 இலட்சம் ரூபாய் ஒதுக்க இருப்பதாகச்
சந்தோஷமாக இருந்தோம். இன்று அமைச்சர் அவர்கள் பதிலிலே
திருநெல்வேலி மாவட்டம் முழுவதற்கும் $8\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் என்று
சொன்னார்கள். உண்மையாக, அந்த மாவட்டத்திலே அதைவிட அதிகம்
ஒதுக்கவேண்டும். இதிலும் நாங்குநேரி, ராதாபுரத்திலுள்ள நஞ்சை
நிலங்களின் தீர்வையை ரத்து செய்ய உத்தேசம் உண்டா? நாங்குநேரி
ராதாபுரம் வறட்சிப் பிரதேசமாகக் கருதப்படுகிறதா அல்லது பஞ்சப்
பிரதேசமாகக் கருதப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன். இந்தியப்
பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இங்கே வரும்பொழுது அவர்களை
ராதாபுர பகுதிக்கு அழைத்துச் செல்லும் உத்தேசம் உண்டா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்த எந்த அளவு செய்ய
வேண்டுமோ அந்த அளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கலெக்
டர் அவர்களும் அதைப்பற்றி அறிக்கை அனுப்பினார்கள். பொதுவாகக்
வறட்சி நிலை இருக்கிறது என்பதிலே நம் யாருக்குமே இரண்டுவித்
அபிப்பிராயங்கள் கிடையாது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் அமைச்
சர் அவர்கள் நம்மீது இருக்கிற பரிவுனுடைய அடையாள விஜயமாகத்
தான் இதைச் செய்யப்போகிருர்கள். காலையிலே வருகிருர்
கள். மறுநாள் காலையிலே திரும்ப வேண்டியிருக்கிறது. இப்பொழுது
இருக்கிற நிலைமைகளில் செங்கற்பட்டு மாவட்டத்தைலேயும், வட ஆற்
காடு மாவட்டத்திலேயும் மட்டும்தான் இன்றைக்கு மாலைக்குள்ளே அவர்
கள் பார்வையிட முடியும். இராமநாதபுரம் மாவட்டமும் இதைவிடக்
கடுமையானதால் பஞ்சம் உள்ள மாவட்டம். கோயம்புத்தூர் மாவட்
டம் எறக்குறைய இது மாதிரியான நிலை இருக்கிறது. என்று சொல்லக்
கூடிய மாவட்டம்தான். இருந்தாலும், இன்னும் கூடுமானால் நம்
முடைய முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு தென்னாற்காடு மாவட்
டத்திலே செஞ்சி பகுதிக்கு இந்தியப்பிரதமரை அழைத்துச் செல்லலாமா
என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, திருநெல்வேலி
(குறுக்கீடு) திண்டிவனம் வழியாக அவர்கள் செல்வதற்கு நேரம் இருக்
கிறது. நான் இன்னும் முதல் அமைச்சரிடத்திலே அனுமதி பெறவில்லை
(குறுக்கீடு) கோயம்புத்தூர் என்று சொல்கிருர்கள். அவர்கள் கோபி
த்துக்கொள்ளமாட்டார்கள், நமக்கும் உரிமை இருக்கிற காரணத்தாலே
தான் அந்த வழியாக அழைத்து கொண்டு போகவில்லை. இப்பொழுதுள்ள
இருக்கிற நிலையில் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் வட ஆற்காடு மாவட்
டத்திற்கும் அழைத்துச் செல்வதாகத் திட்டம், திண்டிவனமும் பக்கத்
திலேதான் இருக்கிறது. நம்முடைய இராமமூர்த்தி அவர்களுடைய
தொகுதி. அந்த வழியாகச் செல்லவேண்டுமென்றால் 30, 40 மைல்
கள்தான் அதிகமாகின்றன. 3 மாவட்டங்களுக்கு அவர்கள் விஜயம்
செய்ததாக இருக்கட்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.
முதலமைச்சர் அவர்கள் அதுபற்றிய இறுதி முடிவைச் செய்வார்கள்
ஆகவே, யாரும் தவருகக் கருதிக்கொள்ளவேண்டியதில்லை. நாம்
தனி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. எல்லோருக்கும் நாம்
சொந்தமானவர்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் என்று
வெளியிலேதான் அந்த அந்த தொகுதியைச் சேர்ந்தவர்களே



தவிர நாம் எல்லா ஊர்களுக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள்
**Though elected from Nanguneri, he represents the entire State.**
இப்பொழுது இருக்கிற நிலையில் திருநெல்வேலி மாவட்டத்தைப்பற்றியும்,
கோயம்புத்தூர் மாவட்டத்தைப்பற்றியும் மிகுந்த சிரத்தைகொண்டு நமது
முதலமைச்சர் அவர்கள் நிரம்பச்செய்யவேண்டுமென்று சொல்கிருர்கள்.
பிரதமரிடத்திலே அதுபற்றி மீண்டும் வலியுறுத்தப்படும். இன்றைக்குக்
கூட 3 மணிக்கு டெல்லியிலே இருந்து வந்திருக்கிற நிபுணர் குழுவிடம்,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர்
அவர்களும் மற்ற அமைச்சர்களும் விவாதிக்க இருக்கின்றோம் என்று
மட்டும் நான் சொல்லிக்கொண்டு இன்னும் கூடுமானால் என்னென்ன
செய்ய முடியுமோ அதிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கிற
அக்கறை—உறுப்பினர்கள் வேறு, அரசாங்கம் வேறு, அமைச்சர் வேறு
என்று கூட அல்ல—கண்டு இந்த நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு
எங்களாலான எல்லா காரியங்களையும் எடுத்துக்கொள்கிறோம் என்பதை
மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ச) முண்டியம்பாக்கம் தென் இந்திய எஃகு சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர்
கரும்பை வாங்க மறுப்பதால் கரும்பை பயிரிடும் விவசாயிகளின் அல்லல்.**

THIRU K. RAMAMOORTHI : Sir, I call the attention of the Hon. Minister for Food and Agriculture to a matter of urgent public importance, namely, the plight of the agriculturists who have cultivated sugarcane in Tindivanam Taluk at the instance and encouragement of the officers of the South India Steel and Sugars Limited, who now refuse to take even Ratoon sugarcane, as also the handicap to the agriculturists in the case of registration of sugarcane, the process being not conducive to the agriculturists.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே,
1967–68 கரும்பு நடும் பருவத்தில் வெல்லத்தின் விலை மிக உயர்ந்திருந்
தாலும், சர்க்கரை ஆலைகள் கரும்பிற்கு நல்லவிலை வழங்கியதாலும்,
1967–68-ல் அதிகப் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டது. இவ்வளவு
அதிகப் பரப்பில் கரும்பு பயிரிடுவதற்கு ஆலைகள் பதிவு அளிக்க முன்
வராத போதிலும் கரும்பு அதிகப் பரப்பில் பயிரிடப்பட்டது. 1968–69-ல்
கரும்பாலைப் பருவத்தில் வெல்லத்தின் விலை கடந்த ஆண்டு விலையில்
50 சத வீதத்துக்கும் குறைந்து விட்டது. அதன் விளைவாக, கரும்பு
பயிரிடுவோர் அனைவரும் இப்போது சர்க்கரை ஆலைகளுக்கே கரும்பு
வழங்க விரும்புகின்றனர். இதைத் தொடர்ந்து சர்க்கரை ஆலைகளுக்குக்
கரும்பு வழங்க பதிவு பெற்ற கரும்பு பயிரிடுவோரும் பதிவு பெருத
கரும்பு பயிரிடுவோரும் முன்வந்தனர். ஆலைகள் மே இறுதிவரையில்
அல்லது ஜூன் 15-ம் தேதி வரையிலும் தங்கள் முழுத்திறனளவிலும்
கரும்பு பிழிந்தாலும், பதிவு பெருதவர் கரும்புகளையும் வாங்கிப்
பிழிவதற்கு அந்த ஆலைகளால் இயலாது. எனவே பதிவு செய்யப்பட்டவர்
கள், கரும்பை மட்டுமே வாங்கும் நிலையில் அவை இருக்கும். ஆலையுடன்
பதிவு செய்து கொண்ட பின்னரே கரும்பு பயிரிடுவது அவசியமாகிறது.
அவர்களுக்கு உள்ள மாற்று வழி கரும்பை வெல்லமாக மாற்றுவதுதான்.

முண்டியம்பாக்கத்திலுள்ள தென்னிந்திய எஃகு சர்க்கரை ஆலை
இந்த ஆண்டில் பதிவு செய்துள்ள பகுதியிலிருந்து மட்டுமே கரும்பு
ஏற்றுக்கொள்ள முடியும். மறுதாம்புக் கரும்பைப் பொறுத்தவரையிலும்
கூட, எந்த ஆலை அதைப் பதிவு செய்து கொண்டதோ அந்த ஆலையே
அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வழக்கத்திற்கு மாருக இந்தப் பயிர்
காலத்தில், பதிவு செய்த அளவுக்கு மேலேயே பயிரிட்டுள்ளதால் பதிவு
பெற்ற, பதிவு பெருத கரும்புப் பயிரிடுவோர் கரும்பு வழங்க முன்

வந்தனர். முண்டியம்பாக்கம் திரு. தென்னிந்திய எஃகு சர்க்கரை ஆலைக்கும் படாளத்திலுள்ள திரு. மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும் வழங்கப்பட்ட கரும்பு மிகையாகவே உள்ளது. நடப்பு கரும்புப் பருவத்தில் இவ்வாலைக்கு மூன்று லட்சத்திற்கு மேல் கரும்பு கிடைக்கும் போல் தெரிகிறது. ஆலையின் திறனளவு குறைவாக இருப்பதால் கரும்பு பிழியும் அளவுக்குமேல் கரும்பு ஏற்றுக்கொள்ளும் நிலையில் அந்த ஆலை இல்லை. முண்டியம்பாக்கம், திரு. தென்னிந்திய எஃகு சர்க்கரை ஆலைக்கு இப்போது ஒதுக்கப்பட்ட ஒலக்கூர் பிர்க்கா, திண்டிவனம் நகரம், படாளத்தில் உள்ள திரு மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கப்படலாம் என்று இப்போது அரசுக்கு முறையீடு செய்து கொள்ளப்பட்டுள்ளது. முண்டியம்பாக்கம், திரு. தென்னிந்தியா எஃகு சர்க்கரை ஆலை நடப்பு கரும்புப் பருவத்தில் கரும்பு பிழிவதற்காக, அந்தப் பகுதியில் பதிவு செய்யப்பெறாத கரும்பை பிழிவதற்கு ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை, என்னும் காரணமாகவே மேற்சொன்ன முறையீடு செய்து கொள்ளப்பட்டுள்ளது. திரு. மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலும் ஏறக்குறைய இதே நிலைதான் உள்ளது. அந்த ஆலையும் இவ்வாண்டு பதிவு பெறாத கரும்பை பிழிய இயலாது. இருப்பினும், கரும்புப் பயிரிடுவோருக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண்களைக் களையும் வகையில் கூடுமான அதிக அளவில் கரும்புகளை ஏற்றுக் கொள்ளுமாறு முண்டியம்பாக்கம் திரு. தென்னிந்திய எஃகு சர்க்கரை ஆலையை இணங்கவைக்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, திண்டிவனம் முண்டியம்பாக்கம் மில்லுக்கு உட்பட்ட ஏரியாவைப்பொறுத்தவரைக்கும், சில இடங்களில் சென்ற ஆண்டு அந்த மில்லில் கரும்பு போட்டவர்கள் ரிஜிஸ்டர் செய்யப்படாமல் இருக்கிறார்கள். விவசாயிகள் சென்று அங்கு ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டும் என்று ஆலையில் சொல்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக இருந்து வருகிற பழக்கம் என்னவென்றால் விவசாயிகளும் அங்கே போய் ரிஜிஸ்டர் செய்து கொள்வார்கள், அதிகாரிகளும் அவர்களாகவே விவசாயிகளை பதிவு செய்து கொள்வார்கள். விவசாயிகள் அதிகாரிகள் பதிவு செய்து கொள்வார்கள் என்று தாங்கள் பதிவு செய்யாமலே இருந்துவிட்ட நிலைமை அங்கே இருந்து வருகிறது. எந்த விவசாயிகள் சென்ற ஆண்டு அந்த மில்லுக்கு எவ்வளவு சப்ளை செய்தார்களோ அதே அளவு இந்த ஆண்டும் அந்த மில் அவர்களிடமிருந்து கரும்பை எடுத்துக்கொள்கிற நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்துமா ? அது மாதிரி மறுதாம்புக் கரும்பைப் பொறுத்த வரைக்கும் கூட இந்த ஆண்டு மில்களுக்கு சப்ளை செய்வதற்கு அரசு தன்னுடைய இன்ப்ளுவென்ஸை யூஸ் பண்ணி, விவசாயிகள் சார்பில் முயற்சிப்பார்களா ?

அதோடு திண்டிவனம் பகுதியில் ஏராளமான ஏக்கர் நிலங்களில் கரும்பு வைத்திருக்கிறார்கள். அவைகளில் பல ரிஜிஸ்டர் செய்யப்படாத நிலங்களாக இருந்து கொண்டிருக்கிறது. வறண்டுவிட்ட காரணத்தினால், தண்ணீர் ஊற்றி கரும்பைக் காப்பாற்றுவதற்கு முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அரசு தமிழகத்தில் உள்ள பல பகுதிகளிலும் இருக்கிற மில்கள், தென் ஆற்காடுக்கு பக்கத்தில் இருக்கிற சர்க்கரை ஆலைகள் இந்தக் கரும்புகளை ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, கரும்பு விலை ஏறியதன் காரணமாக வழக்கமாக பதிவு செய்த கரும்பைவிட. பதிவு செய்யாதவர்கள் கூட கூடுதலாகச் சாகுபடி செய்துவிட்டார்கள், குறிப்பாக திண்டிவனம் பகுதி பற்றிக் குறிப்பிடப்பட்டது. தமிழகத்தில் எங்கு பார்த்தாலும், எங்கெங்கு ஆலைகள் இருக்கின்றவோ அதை ஒட்டிய பகுதிகளில் எவ்வளவு ரிஜிஸ்டிரேஷன் அந்த ஆலைகளுக்கு இருக்கிறதோ அதற்கு மேலாக, இரட்டிப்பு மடங்கு அன்-ரிஜிஸ்டர்டு கரும்பாக (யு.ஆர்) இருக்கிறது. அதைச் சில ஆலைகளுக்கு எடுத்துக்கொள்ளும்படி நாங்கள் விண்ணப்பங்களைத் தயார் செய்து கூட அனுப்பியிருக்கிறோம். ஆனால் அந்தந்த ஆலைகளுக்கு கபாஸிடி இருக்கிறது. குறிப்பிட்ட நாளில் பதிவு செய்த கரும்பை எடுத்துக்கொள்ள வேண்டும். அதனால் பதிவு செய்யாத கரும்பை எடுத்துக்கொள்வதற்கு காலதாமதம் ஆகிறது. தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் கரும்பு தரம் குன்றி, எடை காணாத அளவுக்கு நிலைமை ஏற்படுகிற சூழ்நிலையும், அச்சமும் இருக்கிறது. பதிவு செய்த கரும்பைக் கூட எடுத்துக்கொள்வதற்குக் காலம் கடத்தப்படுகிற நிலைமை கூட இருக்கிறது. முண்டியம்பாக்கத்திலுள்ள ஆலையில் பதிவு செய்த கரும்பையே இப்பொழுது எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. வளவனூர், பனங்குப்பம் போன்ற பக்கத்து கிராமங்களில், பதிவு செய்த கிராமங்களில் கூட இப்பொழுது கரும்பை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. திண்டிவனம் பகுதியில் பதிவு செய்யப்பட்ட கரும்பையே இப்பொழுது எடுக்க முடியாத நிலையில் இருப்பதாக அவர்கள் தங்களுடைய நிலைமையை எடுத்துச் சொல்லி வாதிக்கிறார்கள். மறுதாம்புக் கரும்பைப் பொறுத்த வரையில் கூட அதே நிலை தான். எந்த ஆலையில் பதிவு செய்யப்பட்டதோ, அதே ஆலைக்குத் தரவேண்டும் என்ற நிலை இருக்கிறது.



வெல்லத்தின் விலை வீழ்ந்துவிட்ட காரணத்தினால் சர்க்கரை ஆலைக்குக் கரும்பைக் கொண்டு வருகிறார்கள். வெல்லத்தின் விலை ஏறினால், சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொண்டுவர மாட்டார்கள். இம்மாதிரி சூழ்நிலையில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் அரசு கவனித்து அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இம்மாதிரி கரும்பு எடுக்கப்படாத நிலையை உணர்ந்து கரும்பு பயிரிடுபவர்கள் மீண்டும் நெல் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை தானாகவே உருவாகும். இருந்த போதிலும், இப்பொழுது சாகுபடி செய்யப்பட்டிருக்கிற கரும்பு வீணாகப் போகாமல் பார்த்துக் கொள்வதற்கு, எந்தெந்த ஆலைகளை எடுத்துக் கொள்ள முடியுமோ அந்தந்த ஆலைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். திண்டிவனம், ஒலக்கூர் பிர்க்காவை படாளம் பகுதியில் சேர்த்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கரும்பையே தாங்கள் எடுக்க முடியாத நிலையில் இருக்கும்பொழுது, எப்படி திண்டிவனம் பகுதியில் ஏற்கெனவே பதிவு செய்து கொள்ளாத கரும்பை எடுத்துக் கொள்ள முடியும் என்று அவர்களுக்கிருக்கிற சங்கடத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் குறைந்த விலைக்குக் கூட ரூ. 65-க்குக் கூட கொடுக்க முன் வருகிறார்கள். கரும்பு விலை இப்பொழுது ரூ. 90 ஆக இருந்தாலும் கூட, அன்-ரிஜிஸ்டர்டு கரும்பை ரூ. 65-க்குக் கூட கொடுக்க முன் வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் கூட ஆலைகள் அந்தக் கரும்பை எடுத்துக்கொள்ள முடியாத சங்கடமான நிலை இருக்கிறது. அரசாங்கம் முயற்சி செய்து, விவசாயிகளுக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்ய முடியுமோ அந்த முறையில் தமிழகத்திலுள்ள ஆலைகள் கரும்பை எடுத்துக்கொள்வதற்கான வழிவகைகள் காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "ஒன் ஆர் டு குவெஸ்சின்ஸ்" தான் என்று விதியில் இருக்கிறது. ஏற்கனவே உறுப்பினர் அவர்கள் முதலிலேயே இரண்டு கேள்விகள் கேட்டாகி விட்டது.

**(உ) பல்லடம் வட்டத்தில் பருவ மழையின்மையும், மின்சாரக் கட்டணத்தை முன் பணமாக வசூலிப்பதை ஒத்திவைத்தலும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. கே. என். குமாரசாமி.

(சிறிது நேரம் கழித்து) உங்களிடம் காப்பி இல்லையா ? நானே உங்களுக்காகப் படித்து விடுகிறேன்.

[பேரவைத் தலைவர்] [1969 மார்ச 25

“ கோவை ஜில்லாவில் பல்லடம் தாலுக்காவில் பருவமழை தவறி விட்டதால் பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலையில் மின்சார பம்புசெட்டு உபயோகிக்கும் விவசாயிகளுக்கு மின்சார இலாகா அடிஷனல் செக்யூரிடி டிபாசிட் என்ற தொகை வசூல் செய்வதற்காக விவசாயிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளதை ஓராண்டு தள்ளிவைக்க வேண்டிய அவசியம்பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, நடைமுறையிலுள்ள விதிகளின்படி தமிழ்நாடு மின்சார வாரியம் விவசாயம் உட்பட எல்லா மின்சாரம் பயன் படுத்துவோரிடமிருந்தும் மூன்று மாதத்திய மின்சாரக் கட்டணம்'தோராயமாக நிர்ணயித்து முன் 'பணமாக வசூலிக்கிறது. இம்முன் பணம் மூன்று மாதக் கட்டணத்துக்கும் குறைவாயுள்ளது என்று தெரியும்பொழுது மேலும் அதிகப்படி முன் பணம் கட்டும்படி மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட நபர்களைக் கேட்கிறது. மின்சாரம் உபயோகிப்போர் இந்த அதிகப்படி முன் பணத்தை ஒரே தடவையில் கட்டுவதற்குச் சிரமம் தெரிவித்தால் ஒவ்வொரு நபரின் பிரச்சினையும் உசிதமான முறையில் பரிசீலிக்கப்பட்டு, அந்நபர்கள் இவ்விதிகளின்படி பணத்தை தவணை முறையில் கட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** கடந்த மூன்று ஆண்டு காலமாக மழை பெய்யாக் காரணத்தினால் ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அடிஷனல் செக்யூரிடி டெபாசிட் தள்ளிவைக்கப்பட்டு, மறுபடியும் மீண்டும் இந்த ஆண்டு அப்படித் தள்ளிவைக்கப்பட்ட டெபாசிட் தொகையை வசூல் செய்வதற்கான நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவ மழை தவறி வறட்சியாக இருப்பதன் காரணமாக, மேலும் அந்த டெபாசிட் தொகையைக் கட்ட முடியாத நிலையில் விவசாயிகள் திண்டாடுவதால், மீண்டும் அது தள்ளி வைக்கப்பட்டு, அப்படிக் கொடுக்கப்பட்ட நோட்டீஸ் இந்த ஆண்டும் நிறுத்திவைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அதை அமைச்சர் அவர்கள் உத்தரவு மூலம் செய்யுமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, எல்லா விவசாயிகளுக்கும் தள்ளி வைக்க வேண்டும் என்று சொல்லுவதைவிட, கூடுதலான சிரமம் உள்ள விவசாயிகளுக்கு—தனிப்பட்ட முறையில் மின் சார வாரியத்திற்கு தெரிவித்தால், அதைப் பரிசீலனை செய்து—இப்பொழுது இருப்பது போல தவணை முறையில் அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

## 8. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) கல்லூரி கல்வி குறித்த பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU S. AGNIRAJU : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Collegiate Education (Sixth Report).

### (ஆ) 1965-66-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் 1967-ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை ஆகியவற்றின் மீதான பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I rise to present the Report of the Committee on Public Accounts (1968–69) on the Appropriation Accounts 1965–66 and Audit Report, 1967.



1969 மார்ச் 25]

### (இ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை

THIRU K. VINAYAKAM : Sir, I have the honour to present the Fourth Report of the Committee on Government Assurances as laid on the table.

## 9. 1968-69-ம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி அறிக்கை—அளித்தல்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்முன் வைப்பான்வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான விவர அறிக்கை * ஒன்று மன்றத்தின்கண் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் ஏறக்குறைய 66 கோடி ரூபாயாகும். ஆயினும், இதில் 11 கோடி ரூபாய் மட்டுமே வருவாய்க் கணக்கின் பாற்படும்.

இப்போது வேண்டப்படும் நிதி ஒதுக்கத்தின் கணிசமான பகுதி பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குரியதாகும். இதற்கென ஏறக்குறைய 46 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. முதற்கண் நோக்குவார்க்கு இந்த நிதி ஒதுக்கம் உயர்ந்த அளவினதாகக் காணப்பட்டாலும், மாநில நிதி வாயில்கள் அதனால் எவ்வகையிலும் பாதிக்கபடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1966–67-ம் ஆண்டில் செயலுக்குக் கொண்டு வரப்பட்ட கணக்கிடும் நடைமுறை ஒன்றின் காரணமாக இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதன்படி, மாநில அரசு இந்திய ரிசர்வ் வங்கியிடம் வாங்கும் அதிகப்பற்று அதன் முந்நாளைய பற்றேடு ஒப்பிடும்போது குறைந்து காணப்படும் போதெல்லாம், அக் குறைவு தமிழ் நாட்டுத் தொகுநிதியிலிருந்து இந்திய ரிசர்வ் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தப்பட்ட தொகையாகக் கருதப்படுகிறது. எனவே, இங்ஙனம் செலுத்தப்பட்ட தொகை ஒவ்வொன்றுக்கும் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட ஒரு நாளில் நாம் ஒரு கோடி ரூபாய் அதிகப்பற்று வாங்கியிருந்து, அடுத்த நாளன்று அந்த அதிகப் பற்றுத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதாய் இருந்தால், கணக்கிடும் புதிய நடைமுறையின்படி இவ்வாறு தொகை திருப்பிச் செலுத்தப்படுவதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் பெறவேண்டும். அடுத்த நாளன்றும் ஒரு கோடி ரூபாய் அதிகப்பற்று வாங்கி மேற்கூறியவாறே அதனை அதற்கடுத்த நாளன்றே கொடுத்துத் தீர்த்தாலும் நாம் மேலும் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் பெறவேண்டிவரும். மாதத்தில் எந்த ஒரு நாளிலாவது மாநில அரசுபெறும் அதிகப்பற்று ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாமலேயே இருக்கட்டும். ஒரு நாளில் நாம் ஒரு கோடி ரூபாய் அதிகப்பற்று வாங்குவதாகவும் அதனை அடுத்த நாளன்று திருப்பிச் செலுத்துவதாகவும் வைத்துக் கொள்வோம். இங்ஙனம் ஒரு மாதத்தில் பதினைந்து தடவை நிகழ்வதாக இருந்தால், அதிகப் பற்று ஒரு கோடி ரூபாயாகவே இருந்தும் கூட, அம் மாதத்தில் ஏறக்குறைய பதினைந்து கோடி ரூபாய் அளவிற்கும் நிதி ஒதுக்கம் தேவைப்படலாம். இதனால், வேண்டப்படும் நிதி ஒதுக்கத்தை வைத்து மட்டும், ஒரு மாநிலம் எவ்வளவு தொகைக்கு அதிகப் பற்று வாங்கியிருக்கிறது என்பதைச் சொல்ல முடியாது என்பது தெளிவாகும். ஆகவே, இந்த நிதி ஒதுக்கம் ரொக்க இருப்பில் அன்றாடம் ஏற்படும் மாறுதல்களையே பெரும்பாலும் குறிப்பிடும். உண்மையில் இது நம்முடைய அதிகப் பற்று நிலையை மிகைப்படுத்திக் காட்டுகின்றது எனலாம்.

அதிகப் பற்றினைக் குறித்து இவ்வாறு கூறி வருகையில், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து நாம் பெற்றுவரும் இந்த அதிகப் பற்று வழக்கத்திற்கு மாறானதென்றோ, அச்சுறுத்தும் அளவில் வாங்கப்படுகிறதென்றோ

[திரு. கே. எ. மதியழகன்] [1969 மார்ச் 25

கருத வேண்டியதில்லை என்று நான் இம் மாமன்றத்தினருக்கு உறுதி அளிக்க இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள விழைகின்றேன். முற்றிலும் தாற்காலிகமாக அல்லது வரவு செலவினங்களிடையே குறிப்பிட்ட காலங்களில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் காரணமாக நாம் பெறும் அதிகப் பற்றுகளுக்கும், ஒரு மாநிலத்தின் மிக அடிப்படைக் காரணங்களாலும் அதன் நிதி நிலைமையில் கடுமையான சமனற்ற நிலையை உண்டாக்குகிற நிலை காரணமாகவும் பெறப்படும் அதிகப் பற்றுகளுக்கும் பெரும் வேறுபாடு உண்டு. இப்போது நாம் பெற்றுவரும் அதிகப் பற்றுகள் நான் முதற்கண் குறிப்பிட்ட தற்காலிகச் சூழ்நிலைகள் காரணமாகவே அமைந்துள்ளன என்பதைத் தயக்கமின்றிக் கூறுவேன். இப்போது நாம் ஏறக்குறைய 15 கோடி ரூபாய் அளவிற்கு அதிகப் பற்று வாங்கியுள்ளோம். நமது அதிகப் பற்றுத் தொகைக்கு மிக அதிகமாக ஏராளமான தொகைகள் மத்திய உதவி நிலுவை வகையிலும், மத்திய வரிகளில் மாநிலப் பங்கு வகையிலும் மத்திய அரசின் பற்பல துறைகளிலிருந்து நமக்கு இன்னும் சேர வேண்டியிருப்பதுதான் இந்த அதிகப் பற்றுக்குரிய முக்கியமானகாரணங்களில் ஒன்றாகும். நிதி ஆண்டின் இறுதியில் இத்தொகைகளை நமக்குக் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், மாநில அரசு என்கிற வகையில், இந்த வரவுகளை நாம் பெறுகிற வரையில் நமது செலவினங்களைத் தாமதப்படுத்த இயலாது. செலவினங்கட்கும் வரவினங்கட்கும் இடையே இந்த அதிகப் பற்று முட்டையுறவியாகச் செயல்படுகிறது. இந்த அதிகப் பற்றிற்கு மற்றொரு காரணமும் உண்டு. நமது மாநிலத்தில் இப்போது காணப்படும் வறட்சி நிலைகள் காரணமாக, நம்மிடம் ஏராளமாய் இருப்பிலுள்ள உர வகைகளை விற்பனை செய்வது இடர்ப்பாடாகியுள்ளது. நம்மிடம் ஏறக்குறைய 23 கோடி ரூபாய் அளவிற்கு உர வகைகள் இருப்பிலுள்ளன.

நமது கணக்கில் காணும் அதிகப் பற்றைக் குறித்து மிகைப்படுத்திப் பேசப்பட்டுள்ளது. தொடர்ந்து அதிகப் பற்று வாங்கிவருவது வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிட்டுள்ள வரவினங்களுக்கும் செலவினங்களுக்கும் உள்ளபடியான கணக்குகளுக்குமிடையே சம நிலை இல்லாததையே புலப்படுத்துமென்பதை முதற்கண் நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் நமது நிலை அதுவன்று. மத்திய அரசிடமிருந்து நமக்கு உரிமையாகச் சேர வேண்டிய உதவித் தொகைகள் அனைத்திற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அவை உரிய காலத்தில் நம் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டால், அதிகப் பற்றுகளை இம்மாத இறுதிக்குள் அறவே தீர்ப்பதில் நாம் வெற்றி காண்போமென்கிற நம்பிக்கையிருக்கிறது. இயல்பான வணிக முறையில் கூட, ஒரு பெரிய நிறுவனம் நடைமுறை மூலதன தேவைகளுக்காகவும், தனக்கு ஏற்படும் செலவுகளுக்கும் தான் பெறும் வரவுகளுக்கும், இடையிலான பின்னடைவுகளைச் சரிக்கட்டுவதற்கும், தனது வங்கிகளிடமிருந்து அவ்வப்போது அதிகப் பற்றுகள் வாங்கித் தீர வேண்டிய நிலை ஏற்படுவது நாம் அனைவரும் அறிந்தவொன்றாகும். பற்பல துறைகள், வணிக நிறுவனங்கள் இவற்றின் பணிகளுக்கு நிதி உதவுவதுடன், சமுதாயத்தினரின் நலனைக் கருதி இன்றியமையாப் பொருள்களை இருப்புக் கட்டி வைப்பதற்காகவும் நிதி வசதி செய்ய வேண்டியிருக்கிற ஒரு மாநில அரசைப் பொறுத்த வரையில், இத்தகைய தேவைகள் இயல்பாகவே மிக முனைப்பானவையாகும். நமது மாநிலம் போன்ற மாநிலங்கள் அவ்வாறு தற்காலிக அதிகப் பற்றுகள் வாங்குவதைத் தவிர்க்க வேண்டுமென்றால், ஆண்டு முழுவதிலும் மாநிலங்களுக்கு நிதி வசதிகள் சீராகக் கிடைத்துவரும் வகையில் மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிதிகளை வெளியிடும் முறையைச் சீரமைப்பது அவசியமாகும். எடுத்துக்காட்டாக, தற்போதைய ஏற்பாட்டின்படி வருமான வரியில் மாநிலத்தின் பங்கில் 10 சத வீதம் ஜூலையிலும், 20 சத வீதம் அக்டோபரிலும், 25 சத வீதம் ஜனவரியிலும், எஞ்சிய 45 சத வீதம் மார்ச்சிலும் வழங்கப்படுகிறது. இதனால், வரவுகளுக்கும், செலவுகளுக்குமிடையே இயல்பாகவே பின்னடைவுகள் உண்டாகின்றன. தற்காலிக அதிகப் பற்றுக்கள் வாங்காமல் மாநிலங்கள் தங்கள் பணிகளை நிறைவேற்றிக் கொண்டு போக வழி



1969 மார்ச் 25] [திரு. கே. எ. மதியழகன்]

கோலும் மற்றொரு ஏற்பாடு இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து மாநில அரசுகள் பெறும் அனுமதியுள்ள வழி வகை முன் பணங்கள் குறித்துத் தற்போது செயலில் உள்ள ஏற்பாடுகளை ஆய்வு செய்வதாகும். 1954–55-ல் இந்திய ரிசர்வ் வங்கி அனுமதித்த வழி வகை முன் பணங்கள் (Authorised Ways and Means Advances) நமது வருவாய்க் கணக்கின் வரவினங்களோடு ஒப்பிடுகையில், 1.8 சத வீத அளவிற்கு இருந்தன. இப்போது அவை 0.6 சத வீத அளவிற்கே உள்ளன. அதாவது, நமது நிதி அலுவல்களின் அளவு உயர்ந்திருப்பதற்கு இணங்க, வங்கியின் வரம்புகள் உயரவில்லை. விரைந்து ஆய்வு செய்ய வேண்டிய கருத்துக்களில் இதுவும் ஒன்றாகும். எனவே, நாம் இப்பொழுது வாங்கிவரும் அதிகப் பற்றுகள் முற்றிலும் தாற்காலிகமானவையே என்றும், நான் குறிப்பிட்டுள்ள வழிகளைக் கருத்திற் கொண்டு நமக்கும் இந்திய ரிசர்வ் வங்கிக்கும், மத்திய அரசுக்குமிடையேயுள்ள உறவு வகைகளின் அடிப்படையைச் சீரமைக்க முனைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், மாநிலங்கள் அதிகப் பற்றுகளை நிச்சயமாகத் தவிர்க்கலாம் என்றும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மீண்டும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

மாநில நிதி வாயில்களின் நிலைமையைப் பாதிக்காத மேலும் சில பெரிய நிதி ஒதுக்கீடுகள் தற்போதைய துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகத்திற்குச் செலுத்தப்படும் பங்கு மூலதனத் தொகையின் நிமித்தம் ஒரு கோடி ஐந்து லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் காணலாம். சிறு தொழில்கள் கழகத்திலிருந்து சில தொழிற் பிரிவுகள் மாநில அரசுக்கு மீண்டும் மாற்றப்பட்டிருப்பதனால், வரவு செலவுத் திட்டக் கோட்பாடுகளுக்கும் கணக்குமுறைக் கொள்கைகளுக்கும் இணங்க, இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. செலவின வகையில் செய்துள்ள நிதி ஒதுக்கம் "கடன்கள் முன்பணங்கள் வகையில் வசூல்கள்" என்கிற தலைப்பின் கீழ் வரவினமாகக் காட்டப்பட்டுச் சமன் செய்யப்படும். அரசு வாணிபத்தின் கீழ், கோதுமை கொள்முதலுக்காக 4 கோடி 27 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யும்படி வேண்டியுள்ளோம். இப்போது வேண்டப்படும் இத்தொகை நாளடைவில் கோதுமை விற்பனையின் மூலம் ஈடு செய்யப்படுமாதலால், இந்த நிதி ஒதுக்கமும், மாநில நிதி நிலையில் நிலையான பின்விளைவுகள் எதையும் ஏற்படுத்தாது.

மற்றும், சாலைப் போக்கு வரத்துத் திட்டங்களுக்காக 1 கோடி 24 லட்ச ரூபாய் வகை செய்யும்படி வேண்டப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கலாம். இத்துறையின் பணிகள் விரிவடைந்திருப்பதையே இது எதிரொளிக்கின்றது. இப்போது வேண்டப்படும் இச்செலவினம் கூடுதல். வரவினங்களின் வாயிலாகப் பெரும்பாலும் ஈடு செய்யப்படும். இதைப் போலவே, தற்போதைய துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான வேறு இரு நிதி ஒதுக்கீடுகளாலும் மாநில நிதி நிலையின் மீது உடனடியாக எவ்விதச் சுமையும் கூடிவிடாது. இவை கல்பாக்கம் அணு மின் நிலையத்திற்கும், மணலியிலுள்ள சென்னை உரத் தொழிற்சாலைக்கும் நீர் வழங்கும் திட்டத்திற்குச் சம்பந்தப்படுபவையாகும். இவற்றிற்காக 27 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப் பணிகளுக்கான செலவினம் முழுவதும் இந்திய அரசிடமிருந்து கடன் உதவி பெற்று ஈடு செய்யப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள மகப்பேறு, குழந்தை நல நிலையங்களைப் பேணி வருவதற்காக, அவற்றிற்கு 22 லட்ச ரூபாய் அதிக மானியம் அளிக்கும் வகையில் தற்போதைய துணை மதிப்பீடுகளில் வேண்டப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களைக் கண்ணுறுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சி மன்றங்களின் சார்பில் மாநில அரசு திரட்டிய கேளிக்கை வரித் தொகையை அவைகளுக்கு மாற்றுவதற்காகவும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளூர் செஸ் மேல்வரி இணை மானியத்தை அதிக அளவில் வழங்குவதற்காகவும் கூடுதல் நிதி ஒதுக்கம்

வேண்டப்பட்டுள்ளது. இவ்வாறு நிதி வாயில்கள் மாற்றப்படுவதால், உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பற்பல வளர்ச்சித் திட்டங்களை அவை மேலும் ஆர்வத்தோடு நிறைவேற்ற இயலுமென நான் உறுதியாக நம்புகிறேன்.

நமது மாநிலத்தில் வானம் வழங்காததால் வறண்டு கிடக்கும் பகுதிகளுக்குத் துயர் தணிப்பு அளிப்பான் வேண்டி அரசு மேற்கொண்டுள்ள சில திட்டங்களைப் பற்றித் தற்போதைய துணை மதிப்பீடுகள் ஓரளவிற்கு எதிரொலிக்கின்றன. வேளாண்மை நிலை நிதிக்கு (Agricultural Stabilisation Fund) 25 லட்ச ரூபாய் செலுத்துவதற்காக நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளதை நோக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வறட்சியால் தாக்குண்ட பகுதிகளில் உழவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்கள் வகையில் அவர்களுக்குத் துயர் தணிப்பு அளிப்பதற்காக இந்த நிதி ஒதுக்கம் பயன்படுத்திக் கொள்ளப்படும். சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக 26 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிந்துள்ள, சென்னை மாநகரின் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கும் அவசர ஏற்பாடுகளின் நிமித்தம் 15 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யும்படியும் வேண்டியுள்ளோம்.

தூத்துக்குடியில் மீன் துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்காக 32 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. இதற்காக 208 லட்ச ரூபாய் முதலீடு தேவைப்படும். இதற்கு ஆகும் செலவு முழுவதும் இந்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவிவாயிலாக ஈடு செய்யப்படும். வேளாண்மை சார்ந்து தொழில்கள் கழகம் டிராக்டர்களை வாங்குவதற்காக அதற்குக் கூடுதல் பங்கு மூலதனத் தொகை வகையில் 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்ய வழி கோலப்பட்டுள்ளதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் காணலாம். இந்தப் பங்கு மூலதனத் தொகைக்கு இணையாக, இந்திய அரசும் 20 லட்சம் ரூபாய் நேர்முக உதவி அளிக்கும். இதனால் இக் கழகம் தனது பணி அளவினை விரிவு படுத்திக்கொள்ள இயலும்.

பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பு உதவிச் சம்பளங்கள் வழங்கப்படுவதற்கென 24 லட்சம் ரூபாய் கூடுதலாக வகை செய்திருப்பதை பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அரசு செயல்படுத்தி வரும் பற்பல சமூக நலத் திட்டங்களை மேலும் திறம்பட ஒருமுகப்படுத்தி நிறைவேற்றுவதற்காகத் தலைமைச் செயலகத்தில் தனித் துறை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்காக இத் துணை மதிப்பீடுகளில் வகை செய்துள்ள நிதி ஒதுக்கத்தின் வாயிலாகச் சட்ட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

தற்போதைய துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள பற்பல நிதி ஒதுக்கங்கள் இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்ட திருத்த மதிப்பீடுகளில் முன்னரே எதிரொலித்துள்ளன. நடப்பு ஆண்டில் இதுவரையிலான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு பற்பல துறைகளின் தேவைகளை மேலும் ஆய்வு செய்ய இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம். இந்த ஆய்வு காரணமாக, கூடுதல் நிதி வசதி வேண்டுகோள்கள் சில ஏற்கப்பட்டுள்ளன. எனவே, மன்றத்தின் முன்புள்ள தற்போதைய துணை மதிப்பீடுகள் முந்திய ஆண்டுகளைப் போலவே திருத்த மதிப்பீடுகளுக்குமேல் சில இனங்களில் கூடுதலாக உள்ளன.

இந்தத் துணை மதிப்பீடுகளில் கண்டுள்ள ஏனைய செயற்குறிப்புகள் பற்றி, விவர அறிக்கையில் கொடுத்துள்ள விரிவான குறிப்புகளுக்குமேல் சிறப்பான விளக்கம் ஏதும் தேவையில்லை என்று கூறி, இத் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்குமாறு வேண்டுகின்றேன்.



## 10. 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 34—எழுதுபொருள் அச்சுத்துறை

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 34—எழுதுபொருள் அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,75,66,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

THIRU K. RAMAMURTHY : Sir, to discuss policy, I move the following cut motion :—

"That the allotment of Rs. 2,75,66,500 under Demand No. 34—Stationery and Printing—be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : Sir, to discuss policy and to bring home the need to place on the Table of the House a copy of the investigation done by the One Man Commission headed by Sri Kaivar, I.C.S., in regard to the functioning and the review of the working of the Government Press and with reference to the observations made by some of the members of the Legislature during the debate on the budget for the year 1967–68, I move the following cut motion :—

"That the allotment of Rs. 2,75,66,500 under Demand No. 34—Stationery and Printing—be reduced by Rs. 100".

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க அச்சகத்திலே பிரிண்ட் செய்ய மேலும் அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக தனியார் அச்சகங்களில் அச்சிடுவதைப்பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,75,66,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், உரையாற்றலாம்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் நெருக்கடியைக் கருதி, நான் இந்த மன்றத்தில் முறையாக ஆற்றவேண்டிய இந்த உரையை*, நான் ஆற்றியதாகக் கருதவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மன்ற உறுப்பினர்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புரையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களை அறிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களைக் கூறி, மேலும் பல நல்ல ஆலோசனைகளைக் கூறி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பைத் தரும்படிக் கேட்டுக்கொள்வதோடு, உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிந்து இறுதியில் நான் உரையாற்றுகிறேன் என்று கூறி, இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* 412–425-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மானியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் ஒரு மணி நேரமாகும். உறுப்பினர்கள் பேசி, இறுதியில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் ஐந்து நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளாமல் இருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொருவருக்கும் ஐந்து நிமிடமே அனுமதிக்கப்படும்.

***திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எழுதுபொருள்-அச்சுத் துறை மானியத்தின் மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழகத்திலே இருக்கும் அரசாங்க அச்சகம் மிகவும் பழமையானது. இதில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை செய்துவருகிறார்கள். இத்துறை நல்ல முறையில் செயல்படவேண்டுமென்ற நோக்கத்தோடு வருவாய்த் துறை அங்கத்தினர் திரு. கெய்வார் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவானது அரசாங்கத்திற்கு ஒரு பரிந்துரையை அனுப்பியிருப்பதாக அறிகிறேன். அந்தப் பரிந்துரை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. அந்தப் பரிந்துரையை நமது சட்டமன்றத்தில் வைத்து நன்றாகப் பரிசீலித்து, ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தத் துறையானது, மற்ற எல்லாத் துறைகளுக்கும் உயிர் நிலையாக அமைந்திருக்கிறது. எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய பாரங்கள், புத்தகங்கள் போன்றவைகளை அச்சடித்துக் கொடுக்கும் பொறுப்பு இதற்கு உண்டு. தவிர, பாடபுத்தகங்களும் அரசாங்க அச்சகத்திலே அச்சடிக்கப்படுகின்றன. ஆனால் இந்தப் பாடப் புத்தககங்கள் எல்லாம் காலாகாலத்தில் மாணவ, மாணவிகளுக்குக் கிடைக்கவில்லையென்ற குறை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் குறை அச்சகத்தின் நிர்வாகக் குறைவினால் ஏற்படுகிறதோ, மற்ற காரணங்களால் ஏற்படுகிறதோ எதுவும் தெரியவில்லை. ஆகவே, குறிப்பிட்ட காலத்தில் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் கிடைக்கும்படியான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான பாரங்கள், பதிவேடுகள், மற்றும் எழுதுபொருள்கள் போன்றவைகளுக்கு இண்டெண்ட் கொடுத்தும் பணம் அனுப்பியும் காலாகாலத்தில் கிடைக்காததன் காரணமாக இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. அரசாங்கம் அதையும் தவிர்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, 1 முதல் 3 வகுப்பு வரையுள்ள பாடப் புத்தகங்களை அரசாங்க அச்சகத்தில் அச்சடிக்காமல் தனியார் துறையில் அச்சடிப்பதாக அறிகிறேன். அதைத் தவிர்க்க வேண்டும். மேலும் அரசாங்கமே பாடப் புத்தகங்களை அச்சடித்து, குறைந்த விலையில் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இரவுநேர ஊழியர்களுக்குக் கொடுக்கும் அலவன்ஸ் குறைவாக இருக்கிறது. அதை அதிகமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். மேலும், ஊழியர்களின் சம்பள விதங்களை மாற்றியமைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஊழியர்களுடைய குறைகளைஅரசாங்கம் அவ்வப்பொழுது பரிசீலித்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்காலிகமாக இருக்கும் ஊழியர்களுடைய வேலையை நிரந்தரமாக்குவதற்கு கிட்டத்தட்ட ஏழெட்டு ஆண்டுகள் ஆகின்றன. குறைந்தது இரண்டு வருடங்களிலாவது அவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டுமென்ற கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டு அதை அவர்களுக்குச் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் கிளை அச்சக ஊழியர்களுடைய சம்பள உயர்வு, நிரந்தரமாக்கப்படுவது போன்ற பிரச்சினை சென்னை தலைமை அச்சகத்திற்கு வந்து பரிசீலனை செய்து வழங்கப்படுகிற நிலை இருப்பதால் மிகுந்த காலதாமதமாகிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு கிளை அச்சகத்தில் இருக்கிற மேற்பார்வையாளருக்கே அதிகாரம் கொடுத்து சம்பள உயர்வு, நிரந்தரமாக்குவது போன்ற அங்கிருக்கும் ஊழியர்களுடைய பிரச்சினையைக் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சட்டசபை நடவடிக்கை குறிப்புகள் தாமதமாக அச்சிட்டுக் கொடுக்கப்படுகின்றன. இதனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் பெரிதாகப் பயன்படவில்லை. இதற்கு உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்து உடனுக்குடன் அச்சிட வகை செய்ய வேண்டும்.

அடுத்து தற்போது அச்சிடப்படுகிற அரசிதழ்—கெஜட் தாள் தாளாக இருக்கிற காரணத்தினால் அவற்றை ஒழுங்காக சேமித்து வைக்க முடியவில்லை. ஆகவே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி அதைத் தைத்து பைண்டு செய்து அனுப்பினால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கும் முறையில் மாவட்டக் கிளை அச்சகங்களை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மாவட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வசதியாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். மாவட்ட அளவில் உள்ள காரியாலயங்களுக்கும் காரியங்கள் நல்ல முறையில் உடனுக்குடன் நடைபெறும்.

அடுத்து, ஊழியர்களை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு அவர்களுடைய சம்மதம் இல்லாமல் மாற்றுவது தவறு. அவர்களே விரும்பினால்தான் மாற்றல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காலியாகும் இடங்களுக்கு அல்லது வேறிடங்களுக்கு அச்சகத்தில் பணிபுரியும் ஊழியர்களுடைய குழந்தைகளுக்கு முதல் இடம் கொடுப்பது நல்லது. அல்லது அந்த மாவட்டத்தில் இருந்தே எடுத்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழக அரசு என்ற சின்னம் மாற்றப்படவில்லை. அதை உடனடியாக தமிழ்நாடு அரசு என்ற சின்னமாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அச்சகத்தில் பல ஊழல்கள் இருப்பதாகப் பேசப்படுகிறது. தவறு செய்கிறவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாகத்தினர்மீது வரும் புகார்களை இந்த அரசு உடனுக்குடன் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன்:** தலைவர் அவர்களே, எழுதுபொருள் அச்சக மானியத்தை வரவேற்று எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடன் ஊழியர்களுக்கு லிபரலைஸ்டு பென்ஷன் திட்டத்தை கொண்டுவந்தார்கள். அத்துடன் இரவு அலவன்சை 50 காசில் இருந்து 75 காசாக உயர்த்தினார்கள். இப்படிப் பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் என்றாலும் அந்த நிர்வாகம் நல்ல முறையில் நடக்கவில்லை. அதுபுரையோடிப்போன நிர்வாகமாக இருக்கிறது. நமது ஆட்சி எந்த அளவு முயற்சித்தாலும் அதைச் சரிப்படுத்த முடியாது என்பது என் எண்ணம். நிர்வாகத்தில் இருக்கக் கூடிய ஊழல்களைச் சொல்ல வேண்டுமென்றால் மிகமிக விரிவாக இருக்கும். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த கழிசடைப் பத்திரிகை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் சொன்னது தவறு. அதை திரும்பப் பெறவேண்டும்.

னும் இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே அந்த ஊழியர்களுடைய குறையைப் போக்குவதற்கு வீட்டு வசதிகள் போதிய அளவுக்குச் செய்து கொடுக்க உடனடியாகச் சாத்தியப்படுகின்ற அளவுக்குச் செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

உத்தியோக உயர்வு என்றால் என்றைக்கும் சீனியாரிடி அடிப்படையிலேதான் இருக்கவேண்டும். அது அங்கே மீறப்பட்டிருக்கிறது. எக்காரணத்தைக் கொண்டும் மீறுத அளவுக்கு வற்புறுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அச்சகம் சிறப்பாகவும் நல்ல முறையிலும் நடைபெறுவதற்கு முக்கியமான புகார்கள் பற்றிக் கவனம் செலுத்தக்கூடிய வகையில் நிர்வாகமும், தொழிலாளர்களும் சேர்ந்த சிலரும் ஒரு கூட்டுக் குழுவை அமைத்து அவ்வப்பொழுது அதைக் கண்காணித்து வந்தால் நன்றாக இருக்கும். நிர்வாகத்தை போன போக்கிலேயே போகவிடுவது நல்லதல்ல, அதை ஓரளவுக்குச் சீராக்குவதற்கு, செக் செய்வதற்கு இது உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, வெளியார் அச்சகங்களுக்கு ஆர்டர்கள் கொடுப்பதை டெண்டர்கள் கேட்பதை நிறுத்திவிடவேண்டும். இவ்வளவு பெரிய அச்சகத்தை வைத்துக்கொண்டு, இன்னும் ஏராளமான வசதிகளைச் செய்தால், நல்ல முறையிலே நிர்வாகம் செய்தால் அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்கலாம்.

அடுத்ததாக, மெட்டல் பாய்ஸன் விஷயங்களுக்காக மல்டி வைட்டமின் டேப்ளட்ஸ், பால் போன்றவைகளைக் கொடுப்பதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று அவர்களிடம் நீண்ட காலமாக ஒரு வற்புறுத்தல் இருந்து வருகிறது. அதையும் உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

அங்கே ஊழியம் செய்கின்ற தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய சங்கத்திற்கு இரண்டு ஆண்டுக் காலமாகியும்கூட அங்கீகாரம் கிடைக்கவில்லை. இது ஒரு சிறிய விஷயம் தான். சட்ட மன்ற உறுப்பினர்களே அந்தச் சங்கத்தின் தலைவர்களாக இருக்கக் கூடிய, தலைமை தாங்கி நடத்தக்கூடிய நிலையில் அங்கீகாரம் கொடுத்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய அளவில் ஏற்பாடு, செய்து ஓரளவுக்கு அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு வசதிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இந்தத் துறையில் இந்த சட்ட மன்றத்திலேயே பல விஷயங்களை எடுத்துச்சொல்ல வேண்டிய நிலைமை இருந்தது. இப்பொழுது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாகச் சொல்லிக்கொள்ள முடியாத நிலைமைதான் இருக்கிறது. சமீபத்திலே இன்ஸ்பெக்ஷன் நேரத்திலே பல பேர்கள் டோக்கன்களைப் போட்டுவிட்டு நூற்றுக்கணக்கான பேர்கள் இல்லை என்ற நிலைமை வெளிப்பட்டதாம். அதற்காக டைம்கீப்பர்கள் இரண்டு பேர்களை சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். அதற்கு டைம்கீப்பர்கள் எப்படிப் பொறுப்பாகும் ? அது யாருடைய பொறுப்பு ஆகும் ? வந்த நோத்தைக் குறிக்கக்கூடிய டைம்கீப்பர்கள் ஏன் சஸ்பெண்ட் செய்யப்படவேண்டும் ? இதைக் கவனிக்கவேண்டும்.

இது ஸ்வீடிஷ் பேப்பர். சர்க்கார் டெக்ஸ்ட் புக் பிரிண்டிங் செய்வதற்காகக் கொடுக்கப்பட்டது. இன்னும் 300 ரீம்கள் சும்மா கிடக்கின்றன. நேர்த்தியான பேப்பர் இது. இது இனிமேல் பயன் படாது. இப்படியெல்லாம் விரயமானால் எப்படி இதிலே நஷ்டத்தைத் தவிர்க்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இந்த அச்சகத்திற்குள்ளே அடிக்கடி அடிதடி ஏற்படுகிறது என்ற புகார்கள் வருகின்றன. நம்பமுடியாத புகார்கள் அல்ல, நம்ப வேண்டிய புகார்கள் தான். கோஷ்டி கோஷ்டியாக உருவாகின்றன. இதை எல்லாம் என்ன என்பதையும் கவனிக்கவேண்டும். மெத்தனமாக இருக்கக்கூடாது. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும், காரியதரிசி அவர்களும், இயக்குநர் அவர்களும் அவருக்குக் கீழே உள்ள பணியாளர்களும் இதைக் கவனிக்கவேண்டும்.

இந்த அச்சகம் சிறப்பாகவும் நல்ல முறையிலேயும் நடக்க வேண்டும் என்றால் ஊழியர்களுடைய உற்சாகத்தைப் பெறவேண்டும். அதைப் பெறுவது கஷ்டமல்ல. சுலபமாகப் பெறலாம். எவ்வளவு வசதிகள் அவர்களுக்குச் செய்துகொடுக்கமுடியுமோ அதைச் செய்து கொடுக்க அந்தச் சங்கத்தை அங்கீகரித்து, பேச்சு வார்த்தை நடத்தி, அதற்காகக் கூட்டுக் குழுவை அமைத்து நல்ல முறையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். இந்த அச்சகச் சிற்றுண்டி சாலையிலே என். கே. சுப்பிரமணியம் பொறுப்பில் இருக்கிறார். அவர் வந்தபொழுது கடன் இல்லை, கையிருப்பு 10,500 ரூபாய் இருந்தது. இன்றைய தினம் கடன் 16,000 ரூபாய் இருக்கிறது. இது ஏன் ஏற்பட்டது என்பதைப் பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இந்த அச்சக எழுது பொருள் மானியத்தின் பேரிலே பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்காக நான் முதலிலேயே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கத்தின் அச்சகத்திலே நடக்கிற நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது அரசாங்கத் தொழில்களிலே தேவைப்படுகிறவற்றை பிரிண்ட் அடிக்கின்ற நிலைமை தனியார் அச்சகங்களுக்குச் செல்வதாகத் தெரிகிறது. காரணம் 6 சதவீதம் தனியார் அச்சகத்திலே கொடுக்கக்கூடிய நிலைமை மீண்டும் இருக்கிறது. அரசாங்க அச்சகத்திலே ஓவர் டைம் மூலம் சரியாக வேலை செய்யக்கூடிய நிலைமை ஏற்படுத்தினால் இதைத் தவிர்க்கலாம்.

பஞ்சாயத்து யூனியன்களிலேயும், பஞ்சாயத்து போர்டுகளிலேயும் அவரவர்கள் தங்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் தனியார் அச்சகம் மூலமாக அச்சிடுவதால் காலதாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக அந்தப் பகுதிகளில் வேலைகள் தடைபடுகின்றன. அந்த நிலைமையைப் போக்குவதற்கு அரசாங்க அச்சகத்திலேயே அவற்றை அச்சடிக்கச் செய்யவேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே அதிகாரிகளாக இருக்கின்றவர்கள், பழக்கப்பட்ட தொழிலாளர்கள் ஆக இருந்தால்கூட வேலை கொடுக்காமல் அச்சகத்தில் இடம் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஏதோ சில காரணங்களுக்காகவோ, சிபார்சுக்காகவோதான் வேலை கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையும் கவனிக்கவேண்டும்.

இன்னொரு பிரச்னையைப்பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 250 பேர்கள் ஓவர்டைம் செய்கிறார்கள் என்பதை 1,000 பேர்கள் ஓவர்டைம் செய்தார்கள் என்று ரிஜிஸ்டரிலே பெயர் பதிவு இருந்ததாகப் பத்திரிகையில் வந்ததாகச் சொன்னார்கள். இது எந்த அளவுக்கு இருக்கிறது, இதற்கு யார் பொறுப்பு என்பதைப் பார்க்கவேண்டும் பொதுத்துறையில் இவ்வளவுதூரம் அபாயகரமான நிலைமையை உண்டாக்குவதற்காக, யார் அக்கறை அற்றவர்களாக இருக்கிறார்கள், யார் சரியாக நடந்துகொள்ளாமல் இருக்கிறார்

**திரு. எம். ஆர். கண்ணன் :** அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். ஒரு பத்திரிகையில் வந்த செய்தியைத் தான் சொன்னேன். அண்மையில் சில அதிகாரிகள் அந்த அச்சகத்தைப் பார்வையிடச் சென்றபோது இரவு 800 தொழிலாளர்கள் வேலை செய்ததாகக் கையெழுத்திட்டார்கள். உள்ளே 300 பேர்கள் தான் இருந்தார்கள். அவர்களிலும் 150 பேர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வேலை செய்துகொண்டிருந்தவர்கள் 150 பேர்கள் தான் என்றால் இது இந்த அரசாங்கத்தின் தவறு, அல்லது இந்த இலாகா அமைச்சரின் தவறு, இதை உணரவேண்டும். அது நிர்வாகத்தின் தவறு. இது இன்று நேற்று இருப்பதல்ல. புரையோடிப்போன வியாதி. இதைக் கண்டுபிடித்ததற்காக இந்த ஆட்சியைப் பாராட்டவேண்டும். அதைவிட்டு காங்கிரஸ் கட்சிப் பத்திரிகைகள் "கருணாநிதி ஆட்சியிலே இப்படி ஊழல்" என்று பெருந்தலைப்பிட்டுக் காட்டுகிறது.

இந்த நிர்வாகத்தினை கண்டிப்பாக மாற்றியாக வேண்டும். டிசெம்பர் மாதத்தில் கோவாப்பரேடிவ் சொஸைடி தேர்தல் நடந்தது. அங்கு அப்போது நடந்த அமர்க்களம், சண்டை, போலீஸ் அழைக்கப்படவேண்டிய நிலைமை இது எல்லாம் இருக்க வேண்டுமா ? யார் அதிகாரியாக இருக்கிறார் என்பதுபற்றி சிறிதும் கவலை கிடையாது. அந்த நிர்வாகம் ஒழுங்காக நடைபெற உறுதியாக, கடுமையாக அமைச்சர் நடந்துகொண்டாக வேண்டும். அப்படி இல்லை என்றால் இன்னும் அதிகப் படியான சண்டைச் சச்சரவுகள்தான் ஏற்படும். பல லட்சக்கணக்கான ஊழல்கள் இருக்கின்றன. இவற்றை அமைச்சரிடமும் அவ்வப்போது சொல்லிவருகிறேன். தனியார் துறையில் இப்படி ஒரு பிரஸ் இருந்தால் பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஆண்டொன்றுக்குச் சம்பாதிக்கலாம். ஆனால் இன்றைக்குப் பலகோடி ரூபாய்கள் விரயமாகின்றன. தொழிலாளர்களுடைய நலனுக்காக வைத்திய உதவி அளிக்கிறோம் என்றால் சில குறிப்பிட்ட பேர்கள் நூற்றுக்கணக்கான ரூபாய்களை மாதந்தோறும் மெடிகல் பில் என்று பெறும்படி செய்வது நியாயமாகத் தோன்றவில்லை. அப்படி இருக்கக் கூடியவர்களை உடல் நலக்குறைவு காரணத்தை ஒட்டியே அச்சகத்தில் இருந்து எடுக்க உரிமை இருக்கலாம். அவர்களுடைய வாழ்வை வளப்படுத்துவது வேறு. தவறான முறைகளில் நடக்க அனுமதிப்பது வேறு. இப்படி நடக்கின்றவர்களின் ஒரு க்ரூப்பை டைரக்டர் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நிர்வாகத்தை சீரழிக்கிறார்கள் என்று சொல்லி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, அச்சுத்துறை மானியத்தின் பேரில் எனது கட்சிச் செயலாளர் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களை மொழிய பிரியப்படுகிறேன். மிகமிகப் பழங்காலம் தொட்டே அச்சுத்துறை கவர்மென்டிடம் இருந்து வருகிறது. அதை விரிவுபடுத்திக்கொண்டே போவதனால் அந்தத் துறையில் நாம் அதிகவெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்வதற்கில்லை. சாதாரண பாட புத்தகம் அச்சிட்டுவதற்கும், அரசு பரிசு சீட்டுகளை அச்சிடுவதற்கும் அச்சு இயந்திரங்களை 25 லட்சத்திற்கு வாங்கிக் கொண்டிருப்பதைவிட இப்படிப்பட்ட சாதாரண காரியங்களைத் தனியார் அச்சுக்கூடங்களுக்கு விட்டுவிட்டால் சரியாக இருக்கும். இரகசியத் தஸ்தாவேஜிகளையும், வரவு செலவுத் திட்ட தஸ்தாவேஜிகளையும் மட்டும் சர்க்கார் அச்சகத்தில் அச்சிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

அதோடு கோவையில் சென்டிரல் பிரின்டிங் பிரஸ் இருக்கிறது. அங்கே இருக்கிற ஊழியர்களுக்கு இருக்கிற சம்பள விகிதம், அலவென்சு எல்லாம் மற்ற எல்லாவற்றையும் விட அதிகமாக இருப்பதால் அங்கே இருக்கிற தனியார் அச்சகங்கள், கூட்டுறவுத் துறையில் செயல்படும் அச்சகம் இங்கெல்லாம் ஊழியர்களை அமர்த்திக்கொள்வது சங்கடமாக இருக்கிறது. சாதாரணமாக கோவையில் உள்ள கூட்டுறவு அச்சகம் திறமையாக வேலை செய்கின்ற ஒன்று என்று தெரியும். அரசே பல காரியங்களை எடுத்துச் செய்வதனால் நமது அச்சகத்தில் காலதாமதம், பொருள் விரயம்தான் ஆகிக்கொண்டிருக்கிறது.



மத்திய சிறையில் அச்சகம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேமாதிரி மற்ற எல்லா மாவட்டச் சிறைகளிலும் அச்சகம் ஏற்படுத்துவது கைதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதாக இருக்கும். ஒரே இடத்தில் குவியவிடாமல் பரவலாக அச்சு இயந்திரங்களை வைப்பதுதான் நன்றாக இருக்கும். இப்போது அப்படி இல்லை. உதாரணமாக எம்.இ. ஆர். (மெட்ராஸ் எஜுகேஷனல் ரூல்ஸ்) என்ற புத்தகம் பல ஆண்டுகளாக நாட்டத்திலே இல்லாத நிலைமை இருக்கிறது. எப்பொழுது கவர்ன்மென்ட் பிரஸ்ஸிலே கேட்டாலும் இருப்பதில்லை. இந்த அச்சகத்தைப் பொறுத்த வரையில் சில முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தனியார் பள்ளிகளிலோ அல்லது சர்க்கார் பள்ளிகளிலோ இருக்கின்ற ஆசிரியர்களுடைய நிலையை வகுத்து அவர்களுடைய யோக்கியதாம்சம் என்ன, சம்பளம் என்ன என்பதைப் பற்றியெல்லாம் அதிகாரபூர்வமாக தருகிற முறையில் வெளியீடு ஒன்று வெளியிடவேண்டுமென்று சொன்னேன். அதை நான் ரிவிஷன் ஆஃப் பே கேட்டதாக பத்திரிகையிலே மாற்றிப்போட்டார்கள். நான் அப்படிக் கேட்கவில்லை. அரசாங்கத்தின் அச்சகத்திலே இப்படிப்பட்ட ஒரு புத்தகம் வெளியிடப்படாத நிலையிலே அதிகாரிகளுக்குப் பலவிதமான சங்கடங்கள் இருக்கின்றன என்பதைத்தான் நான் முன்பு எடுத்துச் சொன்னேன்.

பஞ்சாயத்துக்களிலே வரிவசூல் தாமதப்படுவதற்குக் காரணம் அரசாங்க அச்சகத்திலே இருந்து ரசீது புத்தகங்கள் வரவில்லையென்பது. ஆகையினால் ரசீது கொடுக்காமலேயே பணம் வசூலிக்கப்படுகிறது. எனவே பஞ்சாயத்து அதன் ஒன்றிப்புகளுக்கு வேண்டியவற்றை அச்சடிப்பதை மற்றவர்களுக்கு விட்டுவிடுவது நல்லது என்று கூறி, இந்த அரசாங்க அச்சகத்தில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தரும் அரசாங்கத்தைப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு ஏ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்காக ஏற்கனவே இரண்டாவது சம்பளக் குழு அமைக்க வேண்டு மென்று சொல்லியும், அவர்களுக்காக எந்த விதமான வசதியையும் செய்யாமல் இருப்பதால் அவர்களுக்கு என்ன என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யெல்லாம் ஆராய்ந்து அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கம்பாஸிட்டர்ஸ். அவர்கள் ஒரு மணிக்கு ஆயிரம் என்ஸ் வேலை செய்ய வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் ஆரம்பிக்கின்ற நேரத்தில் 800 என்ஸ் என்று ஆரம்பித்து, வயதாக வயதாக 1,000 என்ஸ் செய்ய வேண்டு மென்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. வயதாக வயதாக திறமை அதிகமாகலாம், குவாலிடி உயரலாம், ஆனால் குவான்டம் அதிகமாகும் என்று நாம் எதிர் பார்க்க முடியாது. ஆகவே, கட்டாயமாக 1,000 என்ஸ் என்று இருப்பதை 800 என்ஸ் ஆகக் குறைத்தால் வேலை சிறப்பாகச் செய்யவும், வயதாக வயதாக அவர்களுக்குத் தொந்திரவு இல்லாத முறையில் ஊழியம் புரியவும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 4,000 பேர்கள் வேலை செய்கிற நிலையில் 300 பேர்களுக்குத்தான் வீட்டு வசதி இருக்கின்றது. அவர்கள் பல தடவைகள் இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியத்திலே அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் படுகின்றன. இன்

கள், யார் இப்படி அரசாங்க துறையினைப் பலவீனப்படுத்தவேண்டுமென்ற நிலையில் இருக்கிறார்கள் என்பது எல்லாம் இதன் மூலமாகத் தெரிகிறது. ஏன் இவ்வளவு பெரிய தவறுக்கு இடம் அளிக்கின்ற நிலைமையைக் களைந்தெறிவது இல்லை ? ஆகவே, இந்தத் துறை நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று சொன்னால் சரியான முறையில் நிர்வாகத்தை நடத்திச் செல்லவேண்டும்.

ஒரு அச்சக முதலாளி சொல்லுகிறார், பெரும்பகுதி வருமானம் வேஸ்ட் பேப்பரிலேயே வந்து விடும் என்று. நஷ்டமே வராத வகையில் வேஸ்ட் பேப்பரில் இருந்தே லாபம் வந்து விடும் என்று சொல்லுகின்ற நிலைமையில், அரசாங்க அச்சகத்தில், நாலாயிரம், ஐயாயிரம் பேர் வேலை செய்கின்ற இடத்தில், அந்த வகையில் எவ்வளவு லாபம் வந்தது என்று தெரியவில்லை. இந்தத் துறையினை ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சரானாலும் சரி, அதிகாரிகளானாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, தங்களுடை சொந்த அச்சகமாகக் கருதி பணியாற்ற வேண்டும்.

இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்காமல் அடிமைகளைப் போல் பயத்தின் மூலமாகவோ, அதிகாரத்தின் மூலமாகவோ வேலை வாங்குவது என்ற கொள்கையை கைவிட்டு, அவர்களை ஊக்கப்படுத்தும் முறையில், உற்சாகப்படுத்தும் முறையில் சம்பளங்களைக் கொடுத்து நல்ல நிலைமைகளை உருவாக்கிக் கொடுப்பதன் மூலந்தான் அவர்கள் அதிக உழைப்பைக் கூட கொடுக்க முன் வருவார்கள். இன்றைக்கு நம்முடைய நாட்டிலே உழைப்பாளிகளைப் பற்றி அவ்வளவு கேவலமாக நினைக்கக்கூடிய நிலை இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டில் அத்தகைய நிலைமையை மாற்ற வேண்டும். அதிகாரத்தைப் பயன்படுத்தி வேலை வாங்குவதற்குப் பதிலாக பணி செய்கின்ற தோழர்கள் என்ற அளவிலே அதிகாரிகள் அவர்களிடம் பழகி வேலை வாங்க வேண்டுமென்று கூறி இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தத் துறையிலே பல மாற்றங்கள் தேவையென்று பல அங்கத்தினர்கள் கூறினார்கள். குறிப்பாக பழுதடைந்த பண்டைக் காலத்து முறையில் அச்சிடப்பட்ட பல பொருள்கள் நம்முடைய கையில் இருக்கும் காரணத்தால் அதை மாற்றுவதற்கு வேண்டிய துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த இலாகாவிலே ரேஷனலிசேஷன் மிகவும் இன்றியமையாதது என்று கருதுகிறேன். பழுதடைந்த பழைய இயந்திரங்களை மாற்றி, ஆட்குறைப்பு ஏற்படாத வழியிலே ரேஷனலைஸ் செய்தால் சிறப்பாக இருக்கும்.

இந்த இலாகாவிலே பல துறைகளிலே நல்ல முறையில் முன்னேற்றம் கண்டிருந்தாலும் டெக்ஸ்ட் புக்ஸ் காலாகாலத்திலே கிடைக்கவில்லை. அதனால் மாணவர்களுக்கும் பெரும் கஷ்டம் ஏற்படுகிறது என்ற குறையை எல்லா இடங்களிலும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்க்க அரசாங்கம் அதிவிரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தனியார் துறைக்கு டெக்ஸ்ட் புக்ஸை அச்சடிக்கக் கொடுப்பது விரும்பத்தக்கது அல்ல. அரசாங்கத் துறையிலே காலாகாலத்தில் அச்சடித்து மக்களுக்கு விநியோகம் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

இன்று நமது தேசத்திலே இருக்கிற சட்டங்களையும், அதோடு இணைந்த நோடிபிகேஷன், ரூல்ஸ் போன்றவற்றை எல்லாம் காலாகாலத்தில் பெற கஷ்டங்கள் இருக்கின்றன. இந்த தேசத்தின்



சட்டங்கள் என்ன முறையிலே இருக்கின்றன என்று தெரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு நமது அச்சுத் துறையிலிருந்து இந்த மாதிரி நூல்களை உடனடியாக வெளியிடுவதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். டிப்பார்ட்மெண்டல் மான்யுவல்ஸ் பழைய முறையிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. என்ன விதி முறைகள் இருக்கின்றன என்று தெரிந்து கொள்வதும், மக்கள் அதைப் புரிந்து கொள்ளவும் கஷ்டமாக இருக்கிறது. குறிப்பாக, வழக்கறிஞர்கள் படும் துன்பம் இன்ன அளவு என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு சட்டத்திலும் என்ன திருத்தம் இருக்கிறது, என்ன விதிமுறைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன, இலாகாக்களில் என்ன திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் டிப்பார்ட்மெண்டல் மான்யுவல்ஸ் மூலம் தெரிந்து கொள்வதில் கஷ்டங்கள் இருக்கின்றன. இந்த நிலைமைகளையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

பல பகுதிகளிலே அச்சுத் தொழிலை விரிவுபடுத்த அச்சகங்களை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அண்மையில் விருத்தாசலத்தில் ஒரு பகுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வேறு பகுதிகளிலும் குறிப்பாக திருநெல்வேலி போன்ற பகுதிகளில் இந்த மாதிரி நிறுவனத்தை நிறுவ முடியுமா என்பதற்கான சாத்தியக் கூறுகளை அரசாங்கம் தீவிரமாக ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காலாகாலத்தில் தேவையான பாரங்கள், புத்தகங்கள் கிடைப்பதில் கஷ்டங்கள் இருக்கின்றன. துரிதமாக அரசாங்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட நடவடிக்கை எடுக்கவேண்டும். தற்போது ஹோர அண்டு கம்பெனியாரிடம் பாரங்கள் அச்சிட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்த்து அரசாங்க அச்சகத்திலேயே அச்சடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த இலாகாவில் உள்ள பல குறைகளைச் சொன்னார்கள். அதைப் பற்றி ஆராய ஒரு நிபுணர் குழுவை போர்டு மெம்பர் தலைமையில் ஏற்படுத்தி அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்து அதைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள்.

பொதுவாக, இந்த நிர்வாகத்திலே தொழிலாளர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இந்த மன்றத்திலே "லெட் பாய்சன்" பற்றியெல்லாம் சொன்னார்கள். இதைத் தவிர்க்க அவர்களுக்குப் பால் வழங்கும் திட்டம், வைட்டமின் வழங்கும் திட்டம், மருத்துவ வசதி ஆகியவற்றில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தேர்தலுக்காக எலக்டோரல் ரோல்ஸ் போன்றவற்றை அச்சடிக்கும்போது வெளி அச்சகங்களில் கொடுக்கும் நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். நமது தலைமை அச்சகத்தில் இருந்து லாட்டரிச் சீட்டுகளை உடனுக்குடன் பிரிண்ட் செய்து விநியோகம் செய்வதை சிறப்பாகவும், பொறுப்புடனும் செய்திருக்கிறார்கள்.

நமது இலாகாக்களுக்குத் தேவையானவற்றை வெளியிலிருந்து வாங்குவதைத் தவிர்த்து, மத்திய அச்சகத்திலிருந்தும், பிராந்திய அச்சகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய சுமுகமான நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த இலாகாவிலே பணியாற்றுகின்றவர்கள் பலருக்கு உத்தியோக உயர்வு கிடைக்கவில்லை. அவர்களுடைய சீனியாரிட்டி புறக்கணிக்கப்படுகிறது என்ற புகார்கள் இருக்கின்றன. இதைக் காலாகாலத்தில்

கவனித்து ஒருமைப்படுத்தி நல்ல முறையில் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்த இலாகா சட்டசபை உறுப்பினர்களுக்குப் பய னுள்ளதாக இருக்க ஒருசில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன்.

எழுதுபொருள்களைச் சட்டசபை உறுப்பினர்களுக்குத் தருகிறார்கள். அது விரிவடையமுடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும். காண்டக்ட் சர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்றால் போதிய தாள்கள் விலை கொடுத்து அரசாங்கத்தில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. சொற்பமாகவும் இருக்கிறது. அதிகமாகக் கொடுக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

*நமது சட்ட மன்ற நடவடிக்கைகளைத் துரிதமாக அச்சடிக்க தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இந்தக் காரியங் களை எல்லாம் அரசாங்கம் மேற்கொள்ளும் என்று எதிர்பார்த்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.** தலைவர் அவர் களே, வழக்கமாக இந்த மானியத்தின்மீதான விவாதத்திற்கு நிறைய நேரம் ஒதுக்கப்பட்டு, நல்ல வாதங்கள் நடைபெறும். ஆனால் இந்த ஆண்டு ஒரு மணி நேரமே இந்தக் கோரிக்கை பற்றி விவாதிக்க ஒதுக்கப் பட்டிருப்பதிலிருந்து, இது விவாதத்திற்குரிய ஒன்றல்ல என்பதுதான் விளங்கு கிறது. அதிலும் மாண்புமிகு உறுப்பினர்களும், மிகச் சுருக்கமாகவே தங்கள் பேச்சுக்களை முடித்துக்கொண்டார்கள். நான் அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன். சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்கள்.

பெருமதிப்பிற்குரிய ஹாண்டே அவர்களும் பேசுவார்கள் என்று எதிர் பார்த்தேன். அவர்கள் பேசவேண்டுமென்று நான் எப்போதும் விரும்பு வதுண்டு. ஆகவே அவர்கள் பேசவேண்டுமென்று எதிர்பார்த்தேன். ஆனால் வழக்கமாக இந்த மானியக் கோரிக்கையின்மீது கூறப்படுகிற புகார்கள், குற்றச்சாட்டுகள் இவைகள் எல்லாம் இந்த ஆண்டு அவ்வளவாக இருக்கவில்லை என்று நான் கருதுகிறேன். வழக்கமாக சொல்லிக் கொண்டு வருவதைத்தான் இப்போதும் சொல்லிக்கொண்டு வந்திருப்ப தாக நினைக்கிறேன். ஒன்றே ஒன்று மட்டும் புதிதாகச் சொன்னார்கள். திடீரென்று அச்சகத்தில் பிரவேசம் செய்து கண்டுபிடிக்கப்பட்ட தவறுகள் என்று பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியை வைத்துக்கொண்டு பரவ லாகப் பேசப்பட்டதே தவிர, அரசாங்க அச்சுத்துறை, எழுதுபொருள் துறை நல்ல முறையில்தான் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்றுதான் கூற முடியும்.

எல்லோரும் ஒன்றைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். காலதாமதம் ஆகிறது என்று. உண்மையில் அதை நான் ஒத்துக்கொள்கிறேன். இன்று நம் அச்சகத்தில் அதிகப்படியான வேலைகள் வாங்கப்படுகிறது. அரசாங்கப் பரி சுச் சீட்டுகளை அரசாங்க அச்சகத்தில் அச்சடிக்கிறோம். பரிசுச் சீட்டுத் திட் டம் துவங்கியதிலிருந்து கிட்டத்தட்ட ஆறு கோடி நாற்பது லட்சம் டிக்கட் களை அச்சடித்துத் தந்திருக்கிறார்கள். பஸ் ரூட்டுகள் தேசியமயமாக்கப் பட்டதன் விளைவாக அதற்கான கட்டணச் சீட்டுகளை எல்லாம் நம் அச்சு துறையிலேயே செய்ய வேண்டியிருக்கிறது. நாளுக்கு நாள் பெருகி வரு கிற பாடப் புத்தகங்கள், ஆண்டுக்காண்டு பெருகி வருகிற பல நமூனுக்கள், ஜி.ஓ.க்கள், பல மான்யுவல்கள் இவைகள் அதிகப்பட்டு வருவதால், வேலைப் பளு அதிகமாகியிருக்கிறது. அதை அறிந்து இந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய்க்கு நிறைய புது இயந்திரங்களை—நான் கொடுத்துள்ள விளக்க உரையில் அந்தப் பட்டியல் இருக்கிறது—வாங்கியிருக்கிறோம். ஆனால் அந்த இயந்திரங்களை எல்லாம் இன்னும் அமைக்கவில்லை. அந்த இயந்திரங்களை அமைப்பதற்கான செலவு பல லட்சக் கணக்கான ரூபாய் ஆகிறது. ஆகவே, அவற்றை அமைப்பதற்காக இன்று நிதி இலாகாவிற் கும், குறிப்பாக மின்சார போர்டுக்கும் இடையே பேச்சு வார்த்தைகள்



நடந்து வருகின்றன. அந்தப் பேச்சு வார்த்தைகளில் கட்டணம் பற்றி முடிவு எடுக்கப்பட்டுவிட்டால், உடனே அந்த இயந்திரங்களை எல்லாம் பொறுத்திவிட முடியும். அப்படிப் பொறுத்திவிட்ட பிறகு வேலைகள் துரித மாக நடைபெறும். அந்த வகையில் எந்தவிதமான தாமதமும் ஏற்ப டாது என்று நான் உறுதி கூற விரும்புகிறேன். இந்தக் காலதாமதத்தை நாங்கள் உணருகிறோம். அதற்காக எவ்வளவோ முயற்சித்து அந்தத் தாமதத்தை நீக்க வேண்டும் என்பதற்காக செயல்படுகிற காரணத்தினால் தான் இந்த 25 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரங்களை வாங்கி யிருக்கிறோம். அவற்றை எவ்வளவு விரைவில் அமைக்கிறோமோ அந்த அளவிற்கு காலதாமதம் தவிர்க்கப்பட முடியும்.

தொழிலாளர் பெருமக்களுக்குத் தரப்படுகிற அலவன்ஸ், சம்பள விகி தங்கள், இவற்றையெல்லாம் அதிகமாக்க வேண்டுமென்று வழக்கம்போல் சொன்னார்கள். ஏற்கனவே 50 காசாக இருந்த இரவு அலவன்ஸை (Night Allowance) இப்போது 75 காசாக உயர்த்தியிருக்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் படியேற முடியுமே தவிர, திடீரென்று தாவி ஏறிவிட முடியாது. கடந்த ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டிலும் தொழிலாளர்கள் சங்கங்கள் இதைப் பற்றி அதிகமாகச் சொல்லிவந்தார் கள். அதை அரசாங்கம் உணர்ந்துதான், தொழிலாளர்களின் பேரில் அரசுக்கு அக்கறையிருப்பதால்தான், 50 காசு என்றிருந்ததை 75 காசாக உயர்த்தியிருக்கிறோம். இன்னும் அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கோருவது நியாயமாக இருக்கலாம். ஆனால் நம் நிதி நிலையைப் பொறுத்து குறைந்த அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர, உயர்த்தப் பட வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லாமலில்லை.

சட்டமன்ற நடவடிக்கைகளை அச்சடித்துத் தருவதில் மிகக் காலதாமத மாகிறது என்று சொன்னார்கள். இதைப் பரிசீலனை செய்தேன், இந்த சட்டமன்றத் துறையிலேயே இந்த நிகழ்ச்சிக் குறிப்புகளை எல்லாம் அச்சடித்துக்கொண்டால் என்ன என்று. அச்சகத்தின் சார்பில் ஒரு அச்சகமும், அதை நிர்வகிக்க அதிகாரிகளையும் கூட நாங்கள் ஒதுக்கி விடுகிறோம், எனவே சட்டமன்றத் துறையே இந்த சட்டமன்ற ஏடுகளை யெல்லாம் அவர்களே அச்சடித்துக்கொள்வதால் நமக்கும் வேலை குறையும். காலாகாலத்தில் மன்ற நடவடிக்கைகளும் விநியோகிக்கப்பட முடியும் என்ற அளவில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால், சட்டமன்றத் துறை அதை ஒப்புக்கொள்ளவில்லை என்று எனக்கு விவரங் கள் கூறப்பட்டிருக்கின்றன. எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க வேண்டுமோ, அந்த விரைவு, அந்த வேகம் அச்சுத் துறையில் அதிக மாகியிருக்கிறது என்பதற்காகத்தான் எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகளை பற்றிக் குறிப்பிட்டேன்.

அரசாங்க கெசட்பற்றிக் கூறப்பட்டது. கடந்த ஆண்டே மதிப்பிற் குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இது பற்றிக் கேட்டார்கள். ஒவ் வொரு சட்டம், ஒவ்வொரு பிரிவு என்றிருக்கிறது. இவற்றை ஒன்று கச் சேர்த்து கொடுக்க முடியாத காரணத்தினால்தான் தனித் தனியாகப் பிரித்துக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். சில தமிழில் இருக்கின்றன. சில ஆங்கிலத்தில் இருக்கின்றன. எனவே எல்லாவற்றையும் ஒன்றாக ஒரே தொகுப்பாகக் கொடுக்க முடியாது. ஆங்கிலத்தில் வேறு, தமிழில் வேறு என்று இருப்பதால், தனியாகக் கொடுத்தால்தான் விநியோகிக்க வசதியாக இருக்கும். எனவே அவற்றை ஒட்டுமொத்தமாகச் சேர்த்துக் கொடுக்க முடியாது என்று கடந்த முறையே இந்த மன்றத்தில் நான் கூறியிருக்கிறேன்.

தொழிலாளர்களை ஊருக்கு ஊர் மாற்றுவதுபற்றி மீண்டும் இங்கு சொல்லப்பட்டது. கடந்த ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டுகளிலும் சென்னையில் இருப்பவர்களை திருச்சிக்கும், திருச்சியில் இருப்பவர்களை புதுக் கோட்டைக்கும் என்றும் மாற்றியிருக்கிறார்கள் என்று கூறினார்கள். அது சரியல்ல என்பதை உணர்ந்ததால் அப்படி மாற்றம் செய்யக் கூடாது என்று நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம், ஏற்கனவே மாற்றப்பட்டவர்

கள் கூட அந்தந்த ஊர்களுக்கு திரும்ப வரவழைக்கப்பட்டுவிட்டார்கள். எனவே சொந்த இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்கு மாற்றும் முறையை இந்தத் துறை கைவிட்டுவிட்டது. இனி யாரும் மாற்றிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது.

திரு எம். ஆர். கண்ணன் அவர்கள் வேதனைக்குரிய ஒரு செய்தியை இங்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பேசும்போதே அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். பல லட்சக்கணக்கான ரூபாய் அளவில் உள்ள ஊழல்கள் பற்றிய புகார்களை எல்லாம் அமைச்சர் அவர்களிடம் சொன்னேன் என்று கூறினார்கள். நான் மெத்த வருத்தப்படுகிறேன். அவர்கள் என்னிடத்தில் எந்தப் புகாரைப் பற்றியும் சொன்னது கிடையாது. பதிவேட்டில் இது பதிவு பெறவேண்டும், இப்படி ஏதோ குறைகளைச் சொல்லவேண்டுமென்பதற்காக, அதுவும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர் சொல்கிறார் என்றால், உள்ளபடியே அது குறித்து நான் வருத்தப்படுவது தவிர வேறு எதைச் சொல்வது என்று புரியவில்லை. என்னிடம் எந்தக் குறையைப் பற்றியும் அவர்கள் சொல்லவில்லை. அதுவும் லட்சக்கணக்கான ரூபாய் பற்றிய ஊழல்கள் பற்றிச் சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த சட்டமன்றம் துவங்கியபோது இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் பெருமதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களான திரு பாலசுப்பிரமணியம், டாக்டர் ஹாண்டே, டாக்டர் பேக், திரு எம். ஆர். கண்ணன் இவர்கள் எல்லாம் ஆரம்பத்தில் பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அவற்றையெல்லாம் விசாரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் வருவாய் வாரியத்தின் முதல்வரான திரு கெய்வார் அவர்களை ஒன் மான் கமிட்டியாக, ஒரு உறுப்பினர் விசாரணைக் கமிட்டியாக நியமித்து, இவர்கள் கொடுக்கிற புகார்களை எல்லாம், சட்டமன்றத்தில் பேசிய குற்றச்சாட்டுகளையெல்லாம் பரிசீலனை செய்து, குறைகள் இருந்தால் அவற்றை நீக்கப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று அவர்கள் குற்றம் சாட்டிச் சொன்னபோதே சட்டமன்றத்தில் ஒத்துக்கொண்டேன். அதே போன்று அவரைப் பரிசீலனை செய்யுமாறு பணித்தேன். அவர் கொடுத்த அறிக்கையைக் கூட, எந்தெந்தக் குற்றச்சாட்டுக்களை யார் யார் செய்தார்கள், என்னென்ன வகைகளிலே பரிசீலனை செய்யப்பட்டது என்று கடந்த ஆண்டு சட்ட மன்றத்தில் சொன்னேன், புகார்களைப் பொறுத்த வரையில். அவர் கொடுத்திருக்கும் அறிக்கை என்னிடத்திலே இப்போதும் இருக்கிறது. குற்றச்சாட்டைக் கூறிய பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு ஹாண்டே அவர்களும், தாங்கள் கூறிய புகார்களை நேரிலே சென்று, பெருமதிப்பிற்குரிய கெய்வார் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, பரிசீலனை செய்யுங்கள் என்று சொல்லப்பட்டது. அவர் பரிசீலனைசெய்து, சிலவற்றை நீக்கி, சிலவற்றை ஏற்று, பொதுவாக நிர்வாக சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்துக்குக் கொடுத்த அறிக்கையில் தந்திருக்கிறார்கள். ஆனால், சட்டமன்றத்தில் புகார்களைக் கூறிய பிறகு, மதிப்பிற்குரிய திரு கண்ணன் அவர்கள் திரு கெய்வார் அவர்களை அணுகவில்லை. கெய்வார் அவர்கள் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் தேதி, மதிப்பிற்குரிய கண்ணன் அவர்களுக்குக் கடிதம் அனுப்பி, "என்னைச் சந்திக்க வேண்டும், நீங்கள் சட்டமன்றத்தில் புகார் கூறியிருப்பதாகவும், பரிசீலனை செய்ய அமைச்சரவர்கள் ஒப்புக்கொண்டதாகவும் எனக்குச் செயலாளர் கடிதம் எழுதியிருக்கிறார்கள், எனவே, நீங்கள் அதைப் பற்றி என்னிடத்திலே சொல்லுங்கள், நிரூபிக்கக்கூடிய ஆதாரங்களைக் கொடுங்கள்" என்று எழுதிக் கேட்டபொழுது, திரு ஹாண்டே அவர்களும், திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் சென்றார்கள். திரு. கண்ணன் அவர்கள் வரவில்லை. திரு. ஹபிபுல்லா பேக் அவர்கள் வேறு பல வேலைகள் இருக்கிற காரணத்தினால் வருவதற்கில்லை என்று மதிப்பிற்குரிய கெய்வார் அவர்களுக்குப் பதில் அனுப்பியிருக்கிறார்கள். எனவே, புகார்களைக் கூறிவிட்டு அதை நிரூபிக்க வாருங்கள் என்றால் வராமல் இருப்பது சரியல்ல, மீண்டும் அதே





மாதிரியான புகார்களை சட்டமன்றத்திலே சொல்லுவது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்குக் கூட முறையல்ல என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆனால், இப்படிப்பட்ட புகார்கள் பத்திரிகையிலே வந்தன. திடீரென்று அதிகாரிகள் அச்சகத்தை பரிசோதனை செய்தார்கள். அப்பொழுது பல தவறுகள் ஏற்பட்டிருந்தன என்று அது போன்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. நீங்களெல்லாம் இந்த மன்றத்திலே கூறுகிறீர்கள், பலர், அச்சகத்திலே நிர்வாகத் துறையில் ஒழுங்காக மேற்பார்வை செய்யவில்லை என்று கூறுகிறார்கள் என்பதற்காக அதிகாரிகள் திடீர்ப் பிரவேசம் செய்கிறார்கள். அதைத் தவறு என்று எப்படிச் சொல்ல முடியும் ? பரிசீலனை செய்வதிலே பல ஊழல்கள் இருந்தன என்று படம் பிடித்துக் காட்டுவது, சில பத்திரிகைகளிலே வருவது கூட உள்ளபடியே உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. அன்றைக்கு அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். பல தொழிலாளர்கள் வேலை செய்திருக்கிறார்கள். பத்திரிகையிலே போடுவதை வைத்துப் பேசுவது முறையல்ல. என்றாலும், தவறுகள் நடந்திருக்கின்றன. திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் கூட, டைம் கீப்பரை என் வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். கடந்த சட்டமன்றத்திலே சொன்னேன், தொழிலாளர்கள் வேலைக்கு வருகிறார்கள், 6 மணிக்கு உள்ளே நுழைகிறார்கள், மீண்டும் வெளியிலே போய் விடுகிறார்கள். அவைகளுக்கெல்லாம் தடை போட்டு, 6 மணிக்கு உள்ளே நுழைந்த பிறகு உடனே பெரிய கதவை இழுத்துப் பூட்ட வேண்டும், 6½ மணிக்கு வெளியே போகக் கூடாது, மீண்டும் 10 மணிக்கு ஓய்வுக்காக அரை மணி நேரம் கொடுக்கும்பொழுது, அப்பொழுது திறந்துவிட்டு, பிறகு உள்ளே வந்த பிறகு, கதவைப் பூட்ட வேண்டும், வெளியே போகக் கூடாது என்று சொன்னேன். அதைச் செய்யக் கொஞ்சம் தாமதமானது. காரணம், மெயின் கேட்டைப் பூட்டிவிட்டால், தொழிலாள மக்கள் மளிகை சாமான்கள் வாங்குவதற்கு சுற்றுச்சுவர் தடுப்புக்குள்ளேயேதான் கடை இருக்கிறது. மெயின் கேட்டைப் பூட்டிவிட்டால், சாமான் வாங்குவதற்கு வழியிருக்காது. இவர்களுக்கு வழி ஏற்பாடு செய்துவிட்டு பிறகு மெயின் கேட்டைப் பூட்ட வேண்டுமென்று, சாமான்களுக்குத் தனியாக வழி செய்துவிட்டு, இப்பொழுது மெயின் கேட்டைப் பூட்டி வைத்திருக்கிறோம். தொழிலாளர்கள் வருகிறார்கள், டோக்கன் போடுகிறார்கள். டோக்கன் போட்டுவிட்டு வெளியே போய்க்கொண்டிருந்தார்கள். இதற்கு முன்னால் டோக்கன் போடும் முறையில், எல்லா நம்பர்களும் ஒரே இடத்தில் இருக்கும். இவர்கள் வந்து இவர்களுடைய நம்பருக்கு மாத்திரம் டோக்கன் போடுவது கிடையாது. வேண்டிய நம்பர்களையெல்லாம் கூடப் போட்டுவிடுவது. அதேபோல், டைம் கீப்பருக்கு முன்பு கையெழுத்துப் போட வேண்டும். இல்லையென்றால், மற்றவர்கள் சார்பில் தவறான கையெழுத்துப் போட்டுவிடுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இவைகளைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தில், டைம் கீப்பருக்கு முன்னால், தொழிலாளி வரும்பொழுது, அவருடைய கையெழுத்தை மாத்திரம் போட வேண்டுமே தவிர, கூட நான்கைந்து கையெழுத்துக்களை போடக்கூடாது. இவைகளைத் தடுப்பதற்காக ஒரே டோக்கனைத்தான் ஒருவர் போட வேண்டும். இதை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்.

அதே போல் புத்தகங்கள் கூட இதற்கு முன்னால் ஒரே புத்தகம் வைக்கப்பட்டிருந்தது. வேலைக்கு வந்தவுடன் கையெழுத்துப் போடுவது, எல்லா ஷிப்டுகளுக்கும் ஒரே புத்தகம், காலைக்கும், மாலைக்கும் ஒரே புத்தகம், ஓய்வுக்காக வெளியிலே வந்துவிட்டு மீண்டும் வந்தாலும் அதிலே தான், மதிய உணவுக்காகச் சென்றுவிட்டு மீண்டும் வந்தாலும் அதிலேதான் கையெழுத்துப் போட வேண்டுமென்றிருந்தது. இதனால் சில தொழிலாளர்கள் செய்யக் கூடிய தவறு என்னவென்றால், காலையிலே 3, 4 இடங்களிலும் சேர்த்துப் போட்டுவிடுவது. அதையெல்லாம் களைய வேண்டுமென்ற முறையில், 3 முறை, 3 புத்தகங்களில் 3 கையெழுத்துக்கள் போட வேண்டும். அதை அதிகாரிகள் கவனிக்க வேண்டும். தொழிலாளர்கள் உள்ளே வந்த பிறகு எண்ணிக்கொண்டிருக்க வேண்டும்,

மாகக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க முடியும். "ஸ்வீடிஷ்" பேப்பர் எல்லாம் இன்றைக்கு விரயமாகின்றன என்று சொன்னார்கள். தொழிலாளப் பெருமக்கள் ஆத்திரமோ, கோபமோ படக் கூடாது. பல தவறுகள் நடத்தப்பட்டுதான் வருகின்றன. அதற்கு அரசாங்கத்தையோ, நிர்வாகிகளையோ குறைகூறுவது முறையல்ல. நல்ல முறையிலே உள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கலாம். அவர்களுக்குத்தானே தெரியும், தொழிலாளர்களைப் பற்றி. தொழிலாளர்களைப்பற்றி தொழிலாளர்களுக்குத்தானே தெரியும். பாம்பின் காலை பாம்புதானே அறியும். யார் எந்தவிதமான தவறுகள் செய்தார்கள் என்று அவர்களுக்குத்தானே தெரியும். எனவே பொதுவாகப் பேசுவதைவிட நல்லமுறையிலே ஆட்சியாளர்கள் இன்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, சொன்னால், நாங்கள் எடுக்கிறோம். நீங்கள் சொன்னீர்கள், நாங்களும் நடவடிக்கை எடுத்தோம். இந்தக் குறைகளெல்லாம் குறைந்துகொண்டு வருகின்றன. மேலும் சொல்வதானால் உண்மையிலே அவைகளிலே நல்ல மாற்றங்கள் செய்வது அவசியம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ரிஜிஸ்திரார் ஆப் கோவாப்பரேடிவ் சொஸைட்டி இலாகாவில் இருந்து ஒருவர் மாற்றப்பட்டு விட்டிருக்கிறார். முடிவாக, பொறுப்பேற்று, அந்த சிற்றுண்டிசாலை பணங்கள் வழங்கப்பட்டதிலே ஏதோ ரூ. 20,000, ரூ. 15,000 என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி எதுவும் குறிப்பு இருக்கவில்லை. சிற்றுண்டி சாலை வரவு-செலவு கணக்குகளை துணைப் பதிவாளர், டெப்புட்டி ரிஜிஸ்திரார் ஆப் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ்தான் தணிக்கை செய்கிறார். இவர்கள் சொன்னவர் விட்டுச் சென்றபோது ரூ. 165 பணமாகவும், ரூ. 705 பாங்கிலும் இருந்தது. மற்றவகையில் நடைமுறையில் இப்பொழுது கடன் இருப்பதாகத் தெரியவில்லை. அதுதான் என்னிடத்திலே இருக்கிற குறிப்பு. உறுப்பினர்கள் ஆதார பூர்வமாகச் சொல்வார்களானால், அதை நிருபிப்பார்களானால் நான் உள்ளபடியே அதை ஏற்றுக்கொள்ளவோ, அல்லது பரிசீலனை செய்யவோ, அல்லது எனது கருத்தைக் கூட மாற்றிக்கொள்ளவோ முயற்சிக்கிறேன் என்று அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஸ்வீடிஷ்" பேப்பரைப்பற்றிச் சொன்னார்கள். "ஸ்வீடிஷ்" பேப்பர் அச்சகத்திலே தரப்படுகிறது. அது இனமாக வந்த பேப்பராக இருக்கட்டும். பரவாயில்லை; இனமாக வந்தால் மதிப்புக் குறைந்தாவிட்டது? அந்த பேப்பர் வெளியிலே வந்துவிட்டது. யார் எடுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஊதிய உயர்வினைக் கேட்டுக் கொண்டிருப்பதே அவர்களுடைய பணியாக இருக்கக்கூடாது. அவர்கள் செய்கிற தவறுகளையும் கண்டுபிடிக்க வேண்டும். திருத்த வேண்டும். இந்த பேப்பர்கள் எப்படி வெளியே வந்தன? யார் எடுத்து வந்தார்கள்? சிற்றுண்டி எடுத்துச் செல்கிற டப்பாவிலே வந்ததா? கையிலே வந்ததா? சட்டை ஜோபியிலே வந்ததா, கையிலே வந்ததா, எந்த உருவிலே அது வந்தது? எனவே தவறு செய்பவர்களை, தொழிற் சங்கங்களை நடத்துகிறவர்கள் கண்டிக்க வேண்டும். தவறுகளையும் சுட்டிக்காட்ட வேண்டும். நான் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்களை மாத்திரம் சொல்லவில்லை. பொதுவாக எல்லா தொழிற் சங்கங்களையும் நடத்துகிறவர்கள் இவற்றில் கவனம் செலுத்த வேண்டும். அக்கறையோடு நடந்து கொண்டார்களானால் எந்தத் தொழிற் சங்கமும் ஒழுங்காக நடைபெறும்.

வேலை கொடுப்பதைக் கூட இங்கே குறிப்பிட்டுக் கூறப்பட்டது. மெட்ராஸ் புரடக்டிவிடி கவுன்சில் தான் ஆயிரம் என்ஸ், 900 என்ஸ் என்று நிர்ணயிக்கிறார்கள். அதை அரசாங்கமே நிர்ணயிக்கவில்லை. எனவே அவர்கள் நிர்ணயிப்பதிலிருந்து ஆயிரம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலே செய்யும்போது 1500 என்று சொல்கிறார்கள். அச்சகத்திலே இன்னும் 800 ஆக்க வேண்டுமென்று நாளைக்குச் சொன்னால், 8 மணி நேரம் வேலை செய்வது சரி அல்ல, நாளைக்கு 4 மணி நேரம்தான் நாம் செய்ய முடியும் என்ற நிலைமை வரலாம். அதற்குப் பிறகு 4 மணி





நேரம் என்ன ஆகுமோ எனக்குத் தெரியாது. எனவே, இதுபோன்ற தவறுகள் இருக்கின்ற காரணத்தினால் திடீரென்று பரிசோதித்து அங்கே உள்ள தவறுகளை எல்லாம் கண்டுபிடித்து, அந்தத் தவறுக்குக் காரணமாக இருந்த ஒரு ஓவர்சீர், கிருஷ்ணமூர்த்தி என்று பெயருடையவர், நான்கு ஜூனியர் டைம் கீப்பர்ஸ், சார்லஸ், வெங்கடேசன், முனுசாமி, சிவராமன் என்பவர்கள் எல்லாம் இப்போது தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலெல்லாம் பொறுப்போடு நடந்திருப்பார்களானால் தொழிலாளிகள் டோக்கனை போட்டுவிட்டு ஓடி இருக்க மாட்டார்கள். அவர்களை எல்லாம் மேலும் கண்காணிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இந்த அளவுக்கு அரசாங்கம் போதிய நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக் கொண்டு வருகிறது.

மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் கெய்வார் கொடுத்த அறிக்கை என்ன என்ன சிபாரிசுகளைக் கொண்டுள்ளது என்றெல்லாம் கேட்டார்கள். நேரம் இடம் தரவில்லையென்றாலும் அதைப்பற்றி சிறிது சொல்கிறேன். அதைப் படிப்பதற்கு நேரம் ஆகும். 10 ஆலோசனைகள் மூலம் என்ன என்ன அந்த அச்சகத்திலே செய்ய வேண்டுமென்றெல்லாம் அவர்கள்அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள்.

1. Unless the Press is provided with adequate floor space, machines, equipment, tools and plant, it cannot function efficently. Therefore, output must be maximised in the existing set-up and long-term plan simultaneously drawn up.

2. A proper schedule of preventive maintenance and care of the existing machines should be established. Proper inventories and spare parts should be built up. The Mechanical Section of the Press should be properly reorganized both with additional machines and skilled officers and workers with a view to attending to all maintenance and repair work in the Press itself. Obsolute machines should be disposed of and new machines should be purchased."

இப்படிப்பட்ட பல கீழ இயந்திரங்களை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பட்ட முறையில் மேலும் பல நடவடிக்கைகள் எடுத்து, இயந்திரங்களை மாற்றி அமைத்து, அதிகப்படியாக வேலை செய்யக்கூடிய அளவுக்கு அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். அதை இப்பொழுது அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. எவை, எவையை நிறைவேற்றலாம், எவை, எவையை நிறைவேற்றுவதில் அரசாங்கத்திற்கு என்ன சிக்கல் இருக்கிறது. இருக்கிற பொருளாதார நெருக்கடியில் எப்படி நிறைவேற்றலாம் என்பதையெல்லாம் பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இதைத் தான் எனது உரையிலே ஆரம்பத்திலேயே சொன்னேன்.

"கெய்வார் கமிட்டி" கொடுத்த அறிக்கையின்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை என்றோ, அதற்காக எந்த விதமான காரியங்களிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை என்றோ உறுப்பினர்கள் தப்பாக எண்ண வேண்டாம். இந்த மன்ற உறுப்பினர்களுக்கு அதைப்பற்றிச் சொல்ல அரசாங்கம் விரும்பவில்லை என்றோ, நிர்வாகிகள் மீது திரு. கெய்வார் அவர்கள் குற்றத்தைச் சொல்லி யிருக்கிறார்கள், எனவே இந்த அறிக்கையை அரசாங்கம் அவை முன்பு வைக்கவில்லை. மன்ற உறுப்பினர்களுக்குத் தரவில்லை என்றோ தவறாக எண்ண வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள், அதாவது தமதம், தாமதத்திற்கான காரணம், பழைய இயந்திரங்கள் இதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்யப்படும்.

நானே கணக்கெடுத்துப் பார்த்தேன். 1910-ம் ஆண்டில் வாங்கிய பல இயந்திரங்கள் இருக்கின்றன. 1910-ம் ஆண்டு பிறந்தவர்கள் இன்றைக்கு எவ்வளவு வேலை செய்கிறோம்? முன்பு செய்த வேலை செய்ய

முடியவில்லை. அப்படியிருக்கும் பொழுது பழைய இயந்திரங்கள் எப்படி வேலை செய்யும்? புதியதாகக் கூட இயந்திரங்கள் வாங்கி இருக்கிறோம். இன்னும் அதிகப்படியான இயந்திரங்கள் வாங்கி, இன்னும் அதிகப்படியான முறையில் வேலை செய்யும் வகையில் சீர்திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய இருக்கிறது. நல்ல கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்கிக்கொண்டு எழுதுபொருள், அச்சுத்துறையிலுள்ள குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறி, எவ்வளவு தூரம் அதிக வேலை செய்யமுடியுமோ அவ்வளவு தூரம் வேலை வாங்கவேண்டுமானால் அதற்குப் பொருள் தான் தேவை. எனவே, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் அவற்றை வற்புறுத்தாமல் அவைகளை திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக்கோரிக்கையை நிறைவேற்றித்தருமாறு கேட்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், ஸார். கெய்வார் கமிஷன் நிலையைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கெய்வார் கமிஷன் ஒன்மேன் கமிஷன். ஏற்கனவே நாங்கள் இதைப்பற்றி குறைகளைச் சொல்லியிருக்கிறோம். எங்களையும் சேர்த்து ஒரு 5, 6 பேர் கொண்ட கமிட்டி அமைத்து, நிர்வாகத்தைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். ஆளும் கட்சியிலிருப்பவர்கள் குறைகளை எடுத்துச் சொன்னால் தான் ஆளும் கட்சிக்கு மதிப்பு உயருமே தவிர, ஆளும் கட்சியினர் குறையை கூறக்கூடாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்வது நிச்சயம் நல்லது அல்ல. இப்பொழுதுகூட, அருள்கூர்ந்து 5 பேர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு கமிட்டி போட்டு, அந்த அதிகாரியை வேலையிலிருந்து ஓய்வுகொடுத்து ஒரு சில நாட்களுக்கு வெளியில் உட்கார வைத்து, அங்குள்ள ஊழல்களை கண்டு பிடிக்க வேண்டும். அப்படி அங்கே ஊழல் இல்லையென்றால் நான் எதற்கு வேண்டுமானாலும் உட்படுகிறேன். அவ்வளவு ஊழல்கள் அங்கே நடைபெறுகின்றன. டைம் கீப்பரை சஸ்பெண்டு செய்துவிட்டால் என்ன செய்ய முடியும்? அவர் என்ன செய்ய முடியும்? அவர் தடுத்தால் அவரை உதைப்பார்கள். அந்த அளவுக்கு அங்கே நிலைமை இருக்கிறது. அருள்கூர்ந்து நான் குறை கூறுவதைக் கேட்டுக்கொண்டு அந்த குறைகளைக் களைவதற்கு ஒத்துழைக்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் சொன்னது என்னவென்றால், உறுப்பினர் அவர்கள் புகார் கூறினார்கள். அதற்காக அவரை விசாரணை செய்ய திரு. கெய்வார் அவர்கள் அழைத்தபொழுது, அவர் சென்று தன்னுடைய குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை. குற்றச்சாட்டைச் சொன்னால், அதை நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்க முடியவில்லையென்றால், சட்டமன்றத்தில் அதைப் பெரிதுபடுத்தி பேசக் கூடாது. அதுவும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் அப்படிப் பெரிதுபடுத்திப் பேசுவது நல்லது அல்ல என்று தான் சொன்னேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் புகார்கள் இருந்தால் சொல்லத்தான் வேண்டும். ஒழுங்கீனங்கள் இருந்தால், குற்றச்சாட்டுகள் இருந்தால், அதை அடிப்படையாக நிரூபிக்கக்கூடிய முறையில் அரசாங்கம் திருத்திக்கொள்ளக்கூடிய முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த முறையில் சொன்னால் தான் அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் நலமாக இருக்கும் என்பதை மீண்டும் வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு எ. பாலசுப்பிரமணியம்:** டிபன்பாக்ஸில் எடுத்துக்கொண்டு போனார்களா? பையில் எடுத்துக்கொண்டு போனார்களா என்று கேட்டார்கள். லாரியைக் கூட உபயோகப்படுத்தியிருக்கலாம். மேலே தொடங்கி கீழே சில பேர்கள் கூட சம்பந்தப்பட்டிருக்கலாம். சில தொழிலாளர்கள் கூட பயன்படுத்தப்பட்டிருக்கலாம். எங்களுக்கு தகவல் கிடைக்கும்பொழுது நாங்கள் சொல்லித்தான் ஆகவேண்டும். விசாரணை அந்தப் பக்கத்தில் தான் நடத்த வேண்டுமே தவிர, விசாரணையை நாங்கள் நடத்த முடியாது. சம்பந்தப்பட்ட ஆளை நாங்கள் எப்படி தெரிந்து கூற முடியும்?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தொழிற்சங்கத் தலைவர் காகிதத்தை கையில் வைத்திருக்கிறார். இவருக்கு அந்தக் காகிதம் கொடுத்தவர் யார்? எப்படி அந்தக் காகிதம் வெளியே வந்தது? 300 ரீம் என்றெல்லாம் சொன்னார்கள். அந்தக் காகிதம் எப்படி உங்களுக்கு வந்தது? டிபன் பாக்ஸில் வைத்து கொண்டுவரப்பட்டதா? யார் போய் தேடிப்பிடிப்பது என்று சொல்கிறார்கள். உங்கள் கையில் இப்பொழுது அதை யார் கொண்டுவந்து கொடுத்தது, இப்படித்தான் எல்லாம் வெளியே போயிருக்கும். தொழிற்சங்கத் தலைவர்கள் இப்படி அவர்களுக்கு யாராவது கொண்டுவந்து கொடுத்தால், "நீங்கள் இப்படி கொண்டு வந்துவிட்டீர்களே, இப்படி உங்களைப் போல் எத்தனையோ பேர்கள் கொண்டுவரலாம் அல்லவா? என்று கொண்டுவந்தவரை திருப்பிக் கேட்க வேண்டும். அப்பொழுது தான் இப்படி பொருள்கள் வெளியே போகாமல் இருக்கும். நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இனியாவது யார், எப்படி எதைக் கொண்டுவந்தார்கள், இப்படி எத்தனை பேர்கள் கொண்டு வருகிறார்கள் என்பதைப் பற்றி துப்புத் துலக்கி தொழிற்சங்கத் தலைவர்கள் சொல்வார்களேயானால் அவர்களுக்கு நான் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திரு. கெய்வார் ரிப்போர்ட்டைப் பொறுத்த வரையில், இப்பொழுது சில குறிப்புகளை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதே வகையிலே முழு ரிப்போர்ட்டையும் அச்சடித்து நமக்குக் கொடுத்தால் அது நலமாக இருக்கும். அதற்காக நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதைப் பொறுத்தவரையிலே அரசாங்கம் என்ன முடிவு எடுத்துக்கொண்டிருக்கிறது?

Sir, the entire report of Thiru Kaiwar should be printed and distributed to the Members of this House. In view of the fact that some of the Members have made representations more than once in the past, it would be nice and useful if that report is made available to them so that they would know how far the grievances and complaints mentioned by them have found a place in the report.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அச்சிட்டுக் கொடுக்கக்கூடிய அளவுக்கு இது விஷயதானம் உள்ளதாக இருக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் சில குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு ஹாண்டே அவர்களும், மாண்புமிகு பாலசுப்பிரமணியம் அவர்களும் திரு. கெய்வாரிடத்தில் போய் குறைகளைச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு ஹாண்டே அவர்கள் கூறிய குற்றச்சாட்டைப் பொறுத்த வரையில் யாரோ ஒருவர் எங்கோ ஒரு கடிதத்தை எழுதிக்கொடுத்தார். அவர் சொன்னதைத் தான் நான் இங்கே சட்டமன்றத்தில் பேசினேன். எழுதுபொருள் அச்சுத் துறையைப்பற்றிய குறைகளை நான் நேரில் அறியேன். எனக்குச் சொன்னார்கள், அதைப் பற்றிப் பேசினேன்" என்று தான் சொன்னார். அந்தக் கடிதத்தில் கையெழுத்து இடப்படவில்லை என்று திரு. கெய்வார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். யார் அந்தக் கடிதத்தை எழுதியது என்று தெரியவில்லை. யாரோ பொறுப்பற்றவர், கையெழுத்தில்லாமல், புகார் சொல்வதற்கென்றே எழுதப்பட்ட கடிதம், அந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டு இவ்வளவு பெரிய விசாரணையில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை என்று திரு. கெய்வார் அவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்களின் புகாரைப் பரிசீலனை செய்து, அதில் தவறுகள் இருப்பதையெல்லாம் சுட்டிக்காட்டி, எந்தக் காரணத்தினால் தவறுகள் என்றெல்லாம் கூட அறிக்கை தந்திருக்கிறார்கள். எனவே தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அச்சடித்துத் தரக்கூடிய முறையில் அதில் அவ்வளவு சரக்குகள் இல்லை. பொதுவாக நிர்வாகத்தைப்பற்றி பல முறையில் சீர்திருத்துவதற்கான கருத்துக்களை, அதாவது அச்சுத்துறை எந்தவகையில் முன்னேற்றப்படவேண்டும், அதிகப்படியான

[டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து] [1969 மார்ச் 25

வேலை வாய்ப்பு தர வேண்டும், இயந்திரங்களை பழுது பார்க்க வேண்டும், தொழிலாளர்களுக்கு மேலும் நன்மை செய்ய வேண்டும் என்பதை யெல்லாம் தனது கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்கான சீர்த்திருத்தங் களையெல்லாம் எப்படிச் செய்யவேண்டும் என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தான் நான் மன்ற உறுப்பினர்களுக்கு இப்பொழுது கூறியிருக்கிறேன். அவைகளையெல்லாம் அரசாங்கம் பரிசீ லனை செய்யும்.

**Dr. H. V. HANDE :** Sir, a number of Members have raised many points in the last two years, and if at least a copy of the report is given to them, they can go through it and know what exactly is the position. It would also be in the interest of the Government if it is printed and circulated to the Members and it would also be useful to the Members to know whether the allegations made by them are futile or not.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

திரு. கே. இராமமூர்த்தி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வி.கே. கோதண்டராமன் ஆகியோர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவை யின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 34—"எழுது பொருள்-அச்சுத் துறை" என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,75,66,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடபபட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவையின் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்று மீண்டும் பேரவை மாலை 3·00 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

[இடைவேளைக்குப் பிறகு மாலை 3·00 மணி.)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் – தலைமை.]

## (10) 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (ஆ) கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 79,98,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, To discuss policy என்பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முனமொழி கிறேன் :

"கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 79,98,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1969 மார்ச் 25]

**Dr. H. V. HANDE :** Sir, to discuss policy and to point out the labour unrest and to bring home the need to devise ways and means of bringing about labour participation in management at least in public enterprises, I move the cut motion standing in my name :

"That the allotment of Rs. 79,98,300 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100".

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் பிராவி டெண்ட் பண்ட், இன்ஷூரன்ஸ் ஆகியவை கட்டாத நிர்வாகத்தினர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுபற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண். 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 79,98,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே; தொழில் அதிபர் களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்படுகின்ற உடன்பாடுகள், சர்க்காரால் ஏற்படுகின்ற சட்டங்கள் அமல் நடத்துகின்ற கொள்கை பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண். 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 79,98,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை பிரேரேபிக்கிறேன்.

**திரு எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, தொழிலாளர் களின் தொழில் தகராறுகள் உடனுக்குடன் தீர்க்கப்படாத நிலையைப் பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண். 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 79,98,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என்பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதித்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது சொல்லுகிறார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, நான் பேசியதாகக் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பு* அங்கத்தினர்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். மேற்கொண்டு இறுதியில் அரசாங்கம் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கும்.

***திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, தொழிலாளர் மானியத்தின்மீது எனது கட்சியின் சார்பில் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தொழி லாளர் பகுதியானது, நாட்டில் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாகும், தேசத்தின் முதுகெலும்பாகவும் இருக்கிறது என்றால் அது மிகையாகாது. எந்தத் துறையிலும் முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்றால், தொழிலாளர்கள் அயராது உழைத்தால்தான் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணமுடியும். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகையால்தான் அந்தப் பகுதிக்காக நமது அரசு ஒரு இலாகா, அந்த

*425–473-ம் பக்கங்களில் இரண்டாவது, மூன்றாவது இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

மேற்பார்வையாளர்கள் சென்று பார்க்கும்போது எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று கவனிக்க வேண்டும். இவ்வாறு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், அச்சகத்திலே பல தவறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்துதான் செய்கிறோம்.

டோக்கன் போடுகிறார்கள் என்றால், டைம் கீப்பர் தானே முன்னால் இருக்கிறார், அவர் எப்படிக் கணக்கு எடுக்காமல் போக முடியும். ஆகையால், டைம் கீப்பர் தவறு செய்திருக்கிறார். எனவே அவரை சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கறோம். ஆதலால், அவரை ஏன் சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று கேட்பது சரியல்ல. அவர் தவறு செய்திருக்கிறார். அவரே தொழிலாளர்கள் செய்யும் தவறுகளுக்கு உடந்தையாக இருந்திருக்கிறார் என்று அரசு கருதியதால் அவரை சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் கண்காணித்து, அச்சகத்திலே நல்ல முறையிலே வேலை வாங்குவதற்குக் கூடுமான வரையில் ஒழுங்காக அச்சகம் வேலை செய்யும் வகையில் இப்பேர்ப்பட்ட களையெடுப்புகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. பொன்னுசாமி அவர்கள் கோவை அச்சகத்தைப் பற்றி சொன்னார்கள். அது நம் மாநில அரசாங்கத்தைச் சார்ந்தது அல்ல. மத்திய அரசாங்கத்தை சார்ந்த அச்சகமாகும். நமக்கு அந்த நிர்வாகத்தில் எந்த விதமான பொறுப்பும் இல்லை. அங்கேயுள்ள பல தவறுகளைக் களைய, அதைப் பற்றி நடவடிக்கை எடுக்க நமக்கு எந்த வித அதிகாரமும் இருக்கவில்லை.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் வேலை வாங்குகின்ற எண்களைப் பற்றிச் சொன்னார்கள். 1000 எண்களை 800 ஆக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். மற்ற அச்சகங்களில் 1,500, 2,000 எண்கள் என்று செய்கிறார்கள். இப்படி மற்ற அச்சகங்களில் 1500, 2000 எண்கள் வரை செய்யும் பொழுது, அரசாங்க அச்சகத்தில் மாத்திரம் 1000 ஆக இருப்பதை 800 ஆக ஆக்க வேண்டுமென்று தொழிற்சங்கத் தலைவர்கள் வாதாடுகிறார்கள். தனியார் அச்சகத்தில் வேலை செய்யும் ஒரு ஆளின் வேலையை விட அரசாங்க அச்சகத்திலே மாத்திரம் குறைந்து செய்ய வேண்டுமென்று சொன்னால் அதற்குப் பொருள் என்ன ? இந்த வேலையை நிர்ணயிக்கும்பொழுது, மெட்ராஸ் ப்ரொடக்டிவிடி கவுன்சில் என்ற துறையினர் அரசாங்க தொழிற்சங்கத்தின் சார்பிலே இருப்பவர்களையும் அனுசரணையாக வைத்துக்கொண்டு தான் இந்த வேலை வாங்கும் முறையை வகுக்கிறார்கள். அப்பொழுது தொழிற்சங்கத் தலைவர்கள், இவ்வளவு தான் செய்ய முடியும். இதற்கு மேல் செய்ய முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். எனவே, வேலை குறைகிறது, ஏற்கனவே இப்பொழுது தனியார் அச்சகத்தை விட நமது அச்சகத்தில் குறைவுதான். அங்கே 1500 எண்கள் என்றால் இங்கே 1000 தான். அதையும் 800 ஆக ஆக்கிவிட்டால் 8 மணி நேரத்திற்குப் பதிலாக 6 மணி நேரம், 5 மணி நேரம்தான் வேலை செய்ய முடியும். 5 மணி நேரம் வேலை செய்துவிட்டு, பாக்கி 3 மணி நேரத்தில் தூங்காமல் என்ன செய்வார்கள் எனவே 8 மணி நேரத்தில் செய்யக் கூடிய வேலையைச் செய்ய வேண்டும். தனியார் துறையில் எந்த அளவுக்கு வேலை செய்கிறார்களோ, அந்த அளவுக்கு அரசாங்க அச்சகத்திலும் நாம் வேலை வாங்க வேண்டும். வேலையை நிர்ணயிக்கும் பொழுது, இது போன்று தொழிற்சங்கத்தின் சார்பிலே உள்ளவர்கள் குறைக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். அவ்வாறு குறைத்துவிட்டால், பிறகு 8 மணி நேரம் வேலை செய்வதற்குப் பதிலாக, விடியற்காலை வரை செய்வதற்குப் பதிலாக, 3 மணி நேரம் தூங்கிவிடுவார்கள். விரைவிலே செய்துவிட்டுத் தூங்குவார்கள். இப்படியெல்லாம் இல்லாமல் ஒரு நாளைக்கு எவ்வளவு செய்ய வேண்டுமோ, அவ்வளவு செய்ய வேண்டும். கம்பாசிட்டர் எத்தனை அச்சுக் கோர்க்க வேண்டுமோ அவ்வளவு கோர்க்க வேண்டும்.

வீட்டு வசதிகளைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஸ்டேட் ஹவுஸிங் போர்டில் கட்டுகிற வீடுகளிலே அவர்கள் நமக்குப் பங்கு தருவது கிடையாது. மின்சார வாரியத்திலே இருப்பவர்களுக்குத் தருகிறார்கள். அது





போல் இவர்களுக்கும் தர வேண்டுமென்று கேட்டால், அது குவாஸி கவர்ன்மெண்ட், தனியாக இருப்பது, ஆனால் அச்சகத்தொழிலாளர்கள் அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள் என்கிறார்கள். அரசாங்க லேபர் ஆபீசரும் ஸ்டேட் ஹவுஸிங் போர்டோடு கலந்திருக்கிறார்கள். அவரே இதற்கு ஒத்துக்கொள்ள மறுக்கிறார். இருந்தாலும், அதை அரசாங்கம் விட்டு விடவில்லை. இந்த அச்சகத் தொழிலாளர்களுக்கும் கட்டித் தர வேண்டுமென்றுதான் வாதாடிக்கொண்டு வருகிறது. எனவே, அவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டுமென்றுதான் எண்ணம் இருக்கிறதே தவிர, கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் இருக்கவில்லை.

உத்தியோக உயர்வு இவைகளைப்பற்றியெல்லாம் கூறினார்கள். உத்தியோக உயர்விலே என்ன விதிகள் மீறப்பட்டன என்றெல்லாம் எனக்குத் தெரியவில்லை. என்னிடத்திலே எந்தக் குறிப்பும் இருக்கவில்லை. அது போல், கனம் உறுப்பினர் அவர்கள் எந்த உத்தியோகம் முறைகேடான முறையிலே தரப்பட்டது என்றெல்லாம் குறிப்பு தருவாரானால், உள்ளபடியே அதுகுறித்து விசாரணை நடத்தவோ, அல்லது பதில் தரவோ, விரும்புகிறேன். அப்படி அவர் தருவாரானால் அது குறித்து ஏதாவது செய்யமுடியும் என்று நம்புகிறேன். தொழிலாள மக்களின் எல்லா நன்மைகளையும் இன்றைக்கு அரசாங்கம் கவனத்தோடுதான் செய்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற சங்கத்தை அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று கூறுகிறார்கள். ஏற்கனவே அங்கீகாரம் செய்யப்பட்ட சங்கம் இருக்கிறது. இரண்டாவது சங்கத்தை எப்படி அங்கீகாரம் செய்வது ? அதற்கும் ஏற்கனவே ஒரு வாக்கெடுப்பு எடுக்க வேண்டுமென்று. (குறுக்கீடு). மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். "பாலட்" வைக்கலாம் என்று. அதுபற்றி முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. நானே அதை ஒத்துக் கொண்டேன். பலமுறை சங்கத்தின் தலைவரிடம் கூடச் சொன்னேன். சீக்கிரத்திலே "பாலட்" எடுத்துவிடுங்கள், இரகசிய ஓட்டாவது எடுங்கள், எந்த சங்கத்திற்கு அதிக ஆதரவு இருக்கிறது என்று முடிவு எடுத்துவிட்டால் அந்த சங்கத்தை அரசாங்கம் அங்கீகரித்துக்கொண்டு போகிறது, என்று சொன்னேன். அந்த தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று சொல்பவர்கள் அதைச் செய்ய வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்து ஏன் தரவில்லையென்றால், ஏற்கனவே அங்கீகாரம் அளிக்கப்பட்ட சங்கம் ஒன்று உள்ளதே ? (குறுக்கீடு). அந்தப் பணியிலே அவர்கள் ஒத்துழைப்புத்தருகிறேன் என்று சொன்னார்கள். நான் ஏற்கனவே இரகசிய வாக்கெடுப்பு எடுக்க வேண்டுமென்று ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். அதற்கு முன்வரவில்லை யாரும். யார் யார் பக்கமோ போகும், எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ என்ற அச்சத்தினால், அவர்கள் அதற்கு விரைந்து வரவில்லை. அரசாங்கம் என்ன செய்யும் ? அரசாங்கம் வழியைக் காட்டியிருக்கிறது. அதைத் தலைவராக இருக்கிறவர்கள் விரைவுபடுத்த வேண்டும்.

கோஷ்டிச் சண்டைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். யாருக்குக் கோஷ்டி ? கோஷ்டி யார் யார் மத்தியிலே இருக்கிறது, யார் மத்தியிலே கோஷ்டிச் சண்டைகள் இருக்கின்றன. அங்கே இருக்கிற தொழிலாளர்கள் மத்தியிலே கோஷ்டிச் சண்டைகள் இருக்கின்றன. அவர்களுக்குள்ளே தொழிற்சங்கங்கள் வைத்துச் சண்டை போடுகிறார்கள். எதற்கெல்லாம் போராடுவது, எவர் முன்னால் போவது, வித்திடுவது, இதற்காக தொழிலாளர் மத்தியிலே கோஷ்டிச் சண்டைகள் இருக்கின்றன. சங்கங்களை நடத்துபவர்கள்தான் கோஷ்டிச் சண்டைகளுக்குக் காரணமே தவிர, வேறு இல்லை. நான் பலமுறை இங்கே கூறி இருக்கிறேன். நிர்வாகிகள், அரசாங்கம் அவர்கள் மீது தவறுகள் இருந்தால் சொல்லுங்கள், அந்தத் தவறுகளை நாங்கள் கண்டு பிடிக்கிறோம். ஆதாரபூர்வமான புகார்களைக் கொடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் கடந்த முறை சொன்னார்கள். யாரோ ஒருவர் எழுதிய கடிதத்தைப் படித்தார். அதை நிரூபிக்க முடியாமல் போய்விட்டது. எனவே, புகார் கொடுப்பதை அதிகார பூர்வ

இலாகா செயல்படுவதற்கு நிதி ஒதுக்கீடு, ஆக இந்த நிலையில் நாம் முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். ஆனால், நம்முடைய அமைச்சரவர்கள் தன்னுடைய உரையில், அச்சடித்துக் கொடுத்திருக்கிற புத்தகத்தில், அரசின் கொள்கையை ஒரு அளவில் விளக்கியிருக்கிறார்கள். அந்த உரையின் இறுதியில், இந்த அரசின் பாலிஸி என்று கூறி " வளர்க தொழில் வாழ்க தொழிலாளர் " என்ற பதத்தைக் காண்கிறோம். இந்தச் சொற்றொடர், ஒன்றோடொன்று ஒட்டியதாக, தனித்தனிச்சொற்களாக இல்லாமல், வாழ்க தொழிலாளர் " என்பதோடு, " வளர்க தொழில் " என்பதும் இணைந்திருப்பதைக்காண்கிறோம். அதோடு இன்னொன்றும் சேர்ந்திருக்கும் நிலையை நாம் காண்கிறோம். ஆக இந்த அரசுக்கு தொழிலாளர்களுக்கான இன்டிபெண்டென்ட் பாலிசி இல்லை என்பதைத்தான் இந்த உரையின் மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி ஒருவேளை இந்தத் தொழில் வளராமல் போய்விட்டால் தொழிலாளர்கள் நிலை என்ன ஆக இருக்குமோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. தொழில் வளராமல் தளர்ந்துபோய்விட்டால் தொழிலாளர்களும் வாழாமல் மாண்டு தான் போக வேண்டுமோ என்று அரசைக் கேட்க விரும்புகிறேன். ஆக இந்தக் கொள்கையை வைத்துக் இந்த அரசு தொழிலாளர்களுக்கு என்னதான் செய்யப்போகிறார்கள் என்பது என்னால் சிந்திக்க முடியவில்லை. நமக்கென்று ஒரு தனிக் கொள்கை வகுத்திருக்குமானால் ஓரளவு அந்தக் கொள்கையை செயலாற்ற முடியாது போனாலும்கூட கொள்கை இருக்கிறது என்றாவது நம்பிக்கை கொள்ள இடமிருக்கும். ஆக இந்த அரசுக்கு தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் தனிக்கொள்கை என்பது இல்லை என அறிந்து வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர் வாழ்க என்று கூறியதோடு இந்த அரசு அமைகிறதே தவிர அதையொட்டி தொழிலாளர்களுடைய வாழ்வுக்காக எந்த நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அதற்கான சான்றுகளை நான் அமைச்சர் அவர்கள் உரையில் காண்பதற்கில்லை. உண்மையில் நான் கூறியதுபோல் தொழில் வளரவில்லை என்று சொன்னால் தொழிலாளர் நிலை அவலமானது என்பதை எடுத்துக் காட்ட இன்று தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் தொழில்கள் ஸ்தம்பித்திருக்கிற பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் எல்லாம் மிகவும் செயலற்று வாழ்வதற்கு வழியின்றி தவிக்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம்.

உதாரணமாக இன்றைக்கு ஏகதேசம் 35 பஞ்சாலைகள் நமது மாநிலத்தில் மூடப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக இருபதாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மில்கள் மூடப்பட்டதன் காரணமாக வாழ்வு இழந்திருக்கும் தொழிலாளர்களுக்காக இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்று பார்த்தால் மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் திருச்சியில் ஒரு மகாநாட்டைக் கூட்டினார்கள். வாக்குறுதிகளைத் தாராளமாகக் கொடுத்தார்கள். உடனேயே மில்களைத் திறக்க வழிவகைகளைச் செய்வோம், இல்லையென்று சொன்னால் உங்களுக்கு வேறு ஏதாவது மார்க்கத்தில் கடன் உதவி புரிவோம் என்கிற அளவில் வாக்குறுதிகளை வெளிப்படையாக அறிவித்ததை நாம் அறிவோம். அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் என்ன ஆயிற்று ? எத்தனையோ மாதங்கள் ஆகிவிட்டன. ஒரு மில்லாவது திறந்ததாகவோ மில் தொழிலாளர்கள் வேலையில் அமர்த்தப்பட்டதாகவோ நமக்குத் தகவல் இல்லை. இப்படி பஞ்சாலைகள் மூடப்பட்டது நம் மாநிலத்தில் மட்டும் அல்ல. மகாராஷ்டிரம், குஜராத் போன்ற இப்படிப்பட்ட மாநிலங்களிலும் கூட பஞ்சாலைகள் மூடப்பட்டன. நம்மைப்போல அந்த அரசுகள் செயலற்று இருக்காமல் அவற்றைத் திறக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டன. சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மூடப்பட்ட மில்கள் அனைத்தும் திறக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் கூறுவேன். மகாராஷ்டிரத்திலும்,



குஜராத்திலும் இருக்கிற மில்களைவிட நம் மாநிலத்தில் இருக்கிற மில்கள் திறந்து வேலைசெய்யும் பட்சத்தில் லாபம் அடைவதற்குரிய வாய்ப்புகள் அதிகம் உள்ளவை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கத்தினர் பேசுகிறபோது மகாராஷ்டிரம் குஜராத் போன்ற மாநிலங்களைக் குறிப்பிட்டார்கள். அங்கே மூடப்பட்ட மில்கள் எத்தனை, திறக்கப்பட்ட மில்கள் எத்தனை, திறக்கப்பட்ட மில்கள் இலாபத்தில் வேலை செய்கின்றனவா, நட்டத்தில் வேலை செய்கின்றனவா என்கிற விவரம் தெரிந்து சொன்னால் எனக்குப் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தொழிலாளர் மானியத்தின்மீது பேசுகிறபோது அவை லாபத்தில் நடக்கின்றனவா, நட்டத்தில் நடக்கின்றனவா என்பதை நான் பார்க்கவில்லை. மூடப்பட்ட மில்கள் திறக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் சொன்னேன். அமைச்சர் கேட்ட விவரங்களை அவரே நன்கு அறிந்திருக்கலாம். நான் கூறுவது என்னவென்றால் ஒருவேளை நட்டமே ஏற்படுகிறது என்றாலும் கூட மிக நெருக்கடியான நேரத்தில் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க நாம் நட்டத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். ஆகவே, இந்த மில்களைத் திறந்தால் ஒரு வேளை நட்டத்திலேயே ஓடும் என்றாலும் தொழிலாளர் நலன் கருதி இந்த மில்களைத் திறந்து தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னால் தொழிலாளர் இலாக்காவை ஏற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் முன்பு எதிர்கட்சியில் இருந்த போது என்ன சொன்னார்கள் என்பதை அவர் தன் சக அமைச்சரிடம் சொல்வது நலமாக இருக்கும். ஒருவேளை அமைச்சர் சொல்வதற்கு வாய்ப்பும் வசதியும் இல்லையென்று சொன்னாலும் கூட நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1966-ம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்தில் தொழிலாளர் மானியத்தின் மீது எதிர்க்கட்சி வரிசையில் இருந்து பேசும்போது மாண்புமிகு மாதவன் அவர்கள் அன்றையதினம் ஆட்சியில் இருந்தவர்களுக்குப் புத்திமதி கூறினார்கள். " ஏதாவதொரு காரணத்தை வேண்டுமென்றே கூறி முதலாளிகள் நிறுவனங்களை அடைத்தால் அரசாங்கமே அவற்றைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும், பாதுகாப்பும் அளிக்க முன்வரவேண்டும் " என்ற புத்திமதியைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இன்றையதினம் அமைச்சராக இருக்கிற மாதவன் அவர்கள் இதே அவையில் எதிர்கட்சியில் இருக்கும்போது சொன்னதைக் குறிப்பிட்டார்கள். ஆனால் அன்றைக்கு தொழிலாளர் அமைச்சராக இருந்த திரு வெங்கட்டராமன் அவர்கள் அதற்குப் பதில் அப்படித் திறக்க முடியாது என்று சொல்லியிருக்கிறாரே, அதையும் சேர்த்துச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அடுத்த ஆளுக்கு நாம் சொல்கிற புத்திமதியை நாமே நம் வாழ்க்கையில் செயலாக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவன் நான். அதுவே உயர்ந்த தத்துவம் என்று நினைக்கிறேன். அடுத்தவர்களுக்கு யோசனை சொன்னீர்கள், அவர்கள் கேட்கவில்லை என்றாலும், நீங்கள் சொன்ன யோசனையை நீங்களே செயலாற்ற முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை இன்றைய தொழில் அமைச்சருக்கு எப்படித் திறப்பது என்கிற சந்தேகம் இருந்தால் தன் சக அமைச்சரிடம் கேட்டால் அவர் வழிவகைகளைச் சொல்லக் கூடும். (மணி அடிக்கப்பட்டது) எங்கள் கட்சியில் வேறு யாருமே பேசுவதற்கு இல்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பதினைந்து பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். சீக்கிரம் முடித்துக்கொள்ளவேண்டும்.

**திரு ஜே. ஜேம்ஸ் :** பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியது இந்த அரசாங்கத்தின் பொறுப்பு, ஆகவே இதற்கு ஆவன செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கழிந்த ஆண்டு இந்த மன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் கூறியது எனது ஞாபகத்திற்கு வருகிறது. "எல்லா சட்டங்களையும் மத்திய அரசு நிறைவேற்றுகிறது" என்று குறிப்பிட்டார். இங்கு சட்டமில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கின்ற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இன்னும் சட்டத்திற்குட்படாத தொழிலாளர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக, கேஷுவல் ஒர்க்கர்ஸ், காண்ட்ராக்ட் ஒர்க்கர்ஸ், கன்ஸ்ட்ரக்ஷன் ஒர்க்கர்ஸ், விவசாயத் தொழிலாளர்கள் இம்மாதிரியான தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்காவது இந்த அரசு ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, இவர்களுடைய தொழில்வாய்ப்புக்கு—செக்யூரிட்டி ஆஃப் எம்ப்ளாய்மெண்ட்—வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்களுக்குத் தேவையான சட்டங்களைக் கொண்டுவர வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

தலைவர் அவர்களே, இன்னும் ஐந்து நிமிடங்கள் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுதே நீங்கள் பதினைந்து நிமிடங்கள் எடுத்துக்கொண்டீர்கள். இன்னும் பேசுவதற்கு நிறைய பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, சீக்கிரத்தில் உங்களுடைய பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நமது மாநிலத்தில் தொழில் தகராறுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதனால் தொழிலாளர்களும் முதலாளிகளும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த அரசு தனது கொள்கையை விளக்கமாய் சொல்லியிருந்தால் முதலாளி–தொழிலாளிஇருசாராருக்குமிடையேஇருக்கும் தகராறுகள் தீர்க்கப்பட்டிருக்கும்.முதலாளிகள் தொழில் தகராறுகளினால் நஷ்டமடைகிறார்கள். இந்த அரசு முதலாளிகள்–தொழிலாளர்கள் இருசாராரிடத்திலும் விலாங்குமீன் போல நடந்துகொள்கிறார்கள். முதலாளிகளைக் காணும் போது இந்த அரசு "நான் உன் இனத்தைச் சேர்ந்தவன்" என்று விலாங்குமீன் தலையைக் காட்டுவது போல் காட்டுவார்கள். ஆனால் தொழிளலார்களிடத்தில் பேசும்போது, "இந்த அரசாங்கம் உங்களுக்காக காகவே இருக்கிறது" என்று சொல்லி விலாங்கு மீன் வாலைக் காட்டுவதுபோல் நடந்துக்கொள்வார்கள். ஆகவே, முதலாளிகளிடம் பேசும் போது அவர்களுக்காகவும், தொழிலாளிகளிடம் பேசும்போது தொழிலாளர்களுக்காகப் பாடுபடுவதாகவும் இந்த அரசு நடந்து கொள்கிறது. இரு வகுப்பினரையும் திருப்தி பண்ணக்கூடிய நிலையில் இல்லாமல் இருப்பதால், எந்தத் துறையையும் எடுத்துக்கொண்டு அதிலுள்ள குறைகளை இந்த அரசால் நிவர்த்தி செய்ய முடியவில்லை. திட்டவட்டமாக எதையும் செய்யமுடியவில்லை.

(மணியடித்து அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்).

***திரு. எஸ். அக்னிராஜு:** மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது எனது கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். கடந்த 1967-ம் ஆண்டைவிட 1968-ம் ஆண்டில் கதவடைப்பு, வேலையிழப்பு நாட்கள், மற்றவைகளையொட்டிப் பார்க்கும்போது, பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் கண்டிருக்கிற நல்ல சூழ்நிலையை இந்த அமைச்சரவை உண்டாக்கியிருக்கிறது. நமது மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே. ஜேம்ஸ் அவர்கள், இந்த அரசுக்குத் தொழிலாளர்களின் பால் தனிப்பட்ட கொள்கை இல்லையென்பதாகக் கூறி, விலாங்கு மீன் கதையைச் சொன்னார்கள். தொழிலாளர்களும், முதலாளிகளும்—இருவருமே—இந்த நாட்டினுடைய கண்கள் என்று இந்த அரசு கருதுகிறது. ஒருவர் வாழ்ந்தால்தான் மற்றவர் வாழ முடியும் என்ற நிலையைச் சீர்தூக்கிப் பார்த்து தொழிலாளர்களுடைய வாழ்க்கையை எந்த அளவிற்கு முயற்சி செய்து அளிக்க வேண்டுமோ அந்த அளவிற்குச் செய்திருக்கிறது. அதைப்போல் முதலாளிகள் பக்கம் நியாயமிருந்தாலும் அதில் அரசு தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்கத் தயாராக இருக்கிறது.



அடுத்தபடியாக, கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய பஞ்சாலை நிலைமையைப்பற்றிச் சொல்லி, அதை அரசு தீர்த்ததா என்று கேட்டார்கள். பஞ்சாலை நிலைமையைப் பொறுத்தவரையில் இந்தச் சிக்கலுக்கு யார் காரணம் ? அதை ஏன் போக்க முடியவில்லை என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய அத்தனை ஆலைகளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுடையவை, ஒருசில தவிர. அவர்கள் ஐம்பது, அறுபது வருடங்களாக மூலதனத்தைப் போட்டு, அதிலிருந்து கிடைக்கக்கூடிய லாபத்தை வேறு தொழில்களில் போட்டுவிட்டு, பஞ்சாலை அபிவிருத்திக்கு வழி செய்யாமல் இருந்ததால்தான் இன்றையதினம் இந்த நிலைமை பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டிருக்கிறது. முதலாவதாக, பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் முழுக்க முழுக்க மத்திய அரசாங்கச் சட்டத்தின்கீழ் வருகிறது. இரண்டாவதாக, மாநில அரசு எந்த நிலையிலும் தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்க போதிய அதிகாரம் இல்லை.

மூன்றாவதாக, எத்தனையோ கணக்குகளைச் சொல்லி, இத்தனை கோடி ரூபாய் இருந்தால்தான மில்லைத் திறப்போம் என்று சொல்கிறார்கள். இதிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்து, வேறு தொழிலில் போட்டுவிட்ட காரணத்தினால், இந்த அரசை மிரட்ட வேண்டுமென்ற காரணத்தினால் முதலாளிகள் இப்படி மிரட்டி வருகிறார்கள். மறைந்த நமது முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் திருச்சியிலே பேசும் போது, "இப்படிப்பட்ட தொழில்களை மீண்டும் திறப்பதாக இருந்தால் பண உதவி செய்கிறோம்" என்று சொன்னார்கள். அதன்படி இந்த அரசு மூன்று கோடி ரூபாய் வரைக்கும் வாங்கித்தர, வங்கியிடம் கியாரண்டி தந்திருக்கிறது. இதன்காரணமாக எட்டு ஆலைகள் திறக்கப்பட்டு வேலை செய்து வருகின்றன.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் எந்தப் பிரச்சினையானாலும் உடனுக்குடன் தீர்க்கப்படக்கூடிய வகையில் சட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஒரு ஆலையிலே பிரச்சினை வருகிறது என்றால், ஓர் ஆலைத் தொழிலாளி பாதிக்கப்படுகிறான் என்றால் அவனுக்கு நியாயம் கிடைக்கின்ற வகையில் இப்போதைய சட்டத்தில் இடம் இல்லை. ஒருபஞ்சாலையில் பத்தாண்டுக் காலம் வேலை செய்தவனை, ஏதாவது ஒரு காரணம் காட்டி திடீரென்று வேலை நீக்கம் செய்தால், அவனைப் பாதுக்காக்கக்கூடிய அளவிற்கு சட்டத்திலே இடம் இல்லை. மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஃபேக்டரி ஆக்ட் இருக்கிறது. "இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட்" மத்திய அரசாங்கத்தினால் போட்ட சட்டமாகும். இந்தச் சட்டத்தினால் பஞ்சாலைத் தொழிலில் பாதிக்கப்பட்ட தொழிலாளருடைய குறைகள் நிவர்த்தி செய்ய முடியவில்லை. தொழிலாளி பாதிக்கப்பட்டால், ஆலை முதலாளியால் பழி வாங்கப்பட்டால் அவனால் நேரடியாகக் கோர்ட்டுக்குப் போக முடியாது. ஃபேக்டரி ஆக்டில் பாதிக்கப்பட்ட தொழிலாளி மேல் முறையீடு செய்து கொள்வதற்கு வழி இருக்கிறது. அதேபோல் பஞ்சாலைத் தொழிலில் எந்த விதமான வசதியும் இல்லை. நாம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து, பாதிக்கப்படுகின்ற தொழிலாளி உடனே தன்னுடைய மேலதிகாரிக்கு முறையீடு செய்து, தனக்கு நியாயம் கிடைக்கவில்லிவிட்டால் செய்வதற்கு நாம் வழிவகை செய்ய வேண்டும். படிக்கவேண்டும்.

DR. H. V. HANDE : Sir, it is just an ordinary sentence and I will read it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் ஒரு முறை இருக்கிறது அல்லவா ?

DR. H. V. HANDE : It is not a controvertial matter. Thiru Lobo Prabhu wants unemployed persons to form into an association on trade union lines so that the Association of the Unemployed can see that Employment Exchanges render better service, because as they now function, they reduce or at least distort, employment opportunities,. He goes on to say that the disturbances at the Convocation of the Mysore University by students demanding employment is a sign of the thunderstorm which will burst in the country with more disaster than any strikes and demonstrations of the employed and the Labour Ministry must therefore reorient itself for the Unemployed because they have a greater ethical and economic significance and infinitely more political urgency. In other words, unless this problem is solved, we may not be able to give enough encouragement to those who are underemployed. Trade unions are there to protect the underemployed and to see that their interests are protected and their demands accepted by the management. So, it is all the more necessary that the unemployment problem which has assumed serious proportions should be seriously attended to by the Government.

Sir, in the Review of 'Labour in Tamil Nadu', it is stated that the number of candidates registered by the Employment Exchange is 264,007 and the number of candidates placed is only 28,543 which is nearly one-tenth of the number of candidates registered. This establishes my point about the unemployment problem.

Then I come to the next point, namely, the Malayalee and the Tamil trouble which is raising its head in Ennore and other places. My request to the Hon. Minister is, let there be no linguistic barriers among the workers. After all, all the workers belong to one particular category in the sense that their problems are similar. So, my only request through this House and also through our Friends outside, is, let there be no illwill, or rancour or acrimony between the Malayalees and the Tamils and they all belong to India. They have the same problem to face and the same rights to fight for.

I come to the third point, namely Coimbatore textile problem. I have time and again stated that it has to be tackled scientifically. I think most of the remarks that have been offered in the House are unscientific and they do not go to the root of the problem. Till the problem is scientifically solved, there is no salvation for the peolple affected by it. The Government are going to start many industries like the Pellatisation Plant and the unemployed persons affected by the textile crisis should be given first chance there.



Now, I come to the fourth point, namely, labour participation in the management. There is a feeling that labour and management are different people. It is not so. They are something like parts of a cycle. Is the front wheel different from the back wheel or one handle is different from the other ? No. They are components or parts of the same cycle. Similarly, I want labour and management to co-operate so that it may lead to the labour participation in the management of industries by purchase of some shares. Recently at the All India meeting of the Swatantra Party held in Bhuvaneshwar a resolution in favour of labour participation in the management and seeking the co-operation of the management in this regard was passed unanimously without dissent. I endorse that resolution and I request the Government to strive towards that end.

The fifth point is, whether there is any shift in the automation policy of the Government. I request the Hon. Minister to state categorically in his reply, whether there has been a shift in their policy. I want a clear-cut answer from him.

Then I come to a more important matter, namely, that the attitude of the capitalists and Industrialists must be changed. Unless they are changed, things would become bad and the present bitterness would continue. Now the management has adopted a bad attitude and they think that the labourers are there for their benefit. That attitude must change. In this connection, I will illustrate one example. One gentleman, Thiru Subramania Achari who was working in the Engineering Construction Corporation, Limited, was involved in an accident which occurred in the harbour area while he was engaged in his work and he was taken to the General Hospital and some treatment was given to him. He was out of action for nearly three months. The management asked him to produce a proof for that. He told the management that he had medical treatment in the General Hospital. Then the Management wrote a letter to the General Hospital Authorities but they —I do not want to cast any aspersion on my friends who are working there—wrote a letter saying that there is no record to show that he was treated there. It is because of that letter sent by the General Hospital authorities that that person did not get benefit from the management. Now he is in the middle of the road.

So I request that the Minister and all sections of this House must tell the management : This is not the way you should conduct yourself. They are expected to be more sympathetic towards the working people. Otherwise working people will not tolerate it.

Then I come to another point which my distinguished colleague Mr. Audimoolam wanted me to say and that is about beedi employees. In the Ambasamudram area and especially in his village of Mukkudal, large sections of the people are beedi employees. They have no protection. We have been stressing this point time

and again. They cannot get protection because the Labour Inspector has so many items of work to attend to that he will not have time to attend to the interests of beedi employees. I appeal to the Minister to appoint a special Inspector in the Tirunelveli District to look after the interests of the beedi employees.

As regards Employees State Insurance, in Tamilnad people want 11 beds for 1,000 workers. It has been accepted. Even our late revered Anna said that it would be done. But unfortunately the Central Government's attitude is every disturbing. They have pointed out that Tamil Nadu has advanced, that the other States have not advanced—it is all given in the brochure given to us—and that three beds should be sufficient for 1,000 people. If my memory is correct, out of the 11 beds, 5 are for ordinary cases, 4 for tuberculosis cases and 2 for maternity cases. This has to be brought to the attention of the Centre that whatever be the development in other States, let there be no retardation of development in our State. There should be specialists in the E.S.I. Hospital. Let the Director of Medical Education and the Director of Medical Services be a little liberal in giving specialists.

The High Power Committee for Economy suggested the amalgamation of the Department of Labour and the Department of Weights and Measures. The Central Government have allotted some funds for the Weights and Measures Department. After the amalgamation of both the departments, the Central Government have said that they will be withdrawing the amount that they were giving to the Weights and Measures Department. Even though there is a small reduction in expenditure due to the clubbing together of these two departments, we are losing the Central aid by this clubbing together and we are also preventing a large section of people from getting promotion.

I hope and trust that the Government will look into the facts that I have mentioned. Finally I must say on behalf of my Party that we have full confidence that the present Ministry will look after the labour problems and that we endorse the labour policy of the Dravida Munnetra Kazhagam Government.

Thank your, Sir

***திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, தொழிலாளர் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆரம்பத்திலே இந்த மன்றத்திலே பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர் பஞ்சாலைகள் கோவையில் மூடிக்கிடக்கின்றவற்றைத் திறக்க இந்தத் தமிழக அரசாங்கத்தால் முடியவில்லை என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் குஜராத்திலும், ஆமதாபாத்திலும் பஞ்சாலைகள் திறக்கப்பட்டுவிட்டன என்ற கருத்தையும் சொன்னார். நான் அவரிடம் மிகப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். குஜராத்தில் இன்னும் மூடிய பஞ்சாலைகள் திறக்கப்படவில்லை, உறுப்பினர் அவர்கள் அதைத் தெரிந்து சொன்னார்களா அல்லது தெரியாமல் சொன்னார்களா என்று தெரியவில்லை.



இந்த அரசாங்கம் தொழிலாளர்களைப் பார்த்தால் தொழிலாளர் அரசாங்கம் என்றும், முதலாளிகளைப் பார்த்தால் முதலாளிகள் அரசாங்கம் என்றும் இரண்டு விதமாகக் கூறி விலாங்கு மீன் போன்று நடந்துகொள்வதாகத் தெரிவித்தார். மிகத் தெளிவாக, தலைவர் அவர்களே உங்கள் மூலமாக அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை தொழிலாளர் சர்க்கார்தான், தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதைப் பொருத்தவரை சட்டத்தில் உள்ளபடி நன்மைகளைச் செய்வதோடு கூட சட்டத்தில் இல்லாத உரிமைகளைக் கூட தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தருவது நியாயம் என்று தோன்றினால் அதையும் நிறைவேற்றிக் கொடுக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தைப் பொருத்தவரை எப்போதும் தொழிலாளர்கள் பக்கத்திலே தான் இருக்கும். இன்று நம்முடைய அமைச்சரவர்களும் அவர்களுடைய உரையிலே தெளிவாகப் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், தலைமை)

தமிழ்நாட்டில் இருக்கும் பஞ்சாலைகளைப் பொறுத்து இரண்டாவது சம்பளக் கமிஷன் சம்பந்தமாக மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. பஞ்சாலை ஊதியக் குழுவை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நியமிப்பது என்ற கொள்கையை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். 1969-ம் ஆண்டில் தான் முதல் சம்பளக் குழு தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்தது. 1960-ம் ஆண்டு வரை கிட்டத்தட்ட பத்தாண்டு காலமாகியும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் இரண்டாவது சம்பளக் குழுவின் சிபார்சுகளைப் பெற்று பயனடைந்து மூன்றாவது சம்பளக் குழுவுக்குச் சென்றிருக்கவேண்டிய நிலையில் இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளைப் பெறுவதிலேயே மத்திய அரசு காலதாமதம் செய்து கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் இரண்டாவது சம்பளக் குழு சம்பந்தமாக ஒரு முடிவை அறிவிக்க வேண்டுமென்றும், அதற்கு இந்த மாநில அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஞ்ஜினியரிங் தொழிலுக்கு சம்பளக் குழு பரிந்துரை கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சிபார்சுகளை மிக விரைவில் கொடுக்க மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கனம் உறுப்பினர் ஹாண்டே அவர்கள் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளைப் பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டைப் பொருத்தவரை 1968-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் மத்திய இ. எஸ். ஐ. கார்ப்பரேஷன் ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஏற்கெனவே ஆஸ்பத்திரி கட்டுவது பற்றிச் சொல்லப்பட்டிருந்தாலும் மருந்தகங்களைக் கட்டுவதற்கு உத்தரவு கொடுத்திருந்தாலும் கூட கார்ப்பரேஷன் அனுமதி பெறாமல் மேற்கொண்டு காரியங்களை செய்யக்கூடாது என்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு நியாயம் என்று பார்க்கவேண்டும். நம்முடைய தொழிலாளர்களைப் பொருத்தவரை சுகாதார வசதி இல்லாமல், ஆஸ்பத்திரி வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மத்திய இன்ஷூரன்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டிற்கு ஏற்கெனவே அனுமதி கொடுத்தவற்றைக் கூட செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தால், நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டும், நாட்டில் பிரிவினை மனப்பான்மை இருக்கக்கூடாது, எல்லோரும் ஒன்றாக வாழவேண்டும் என்ற தத்துவத்தைச் சொல்லிக் கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன ? ஏற்கெனவே அனுமதி கொடுக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளைக் கூடக் கட்டக்கூடாது என்று சொன்னால் மத்திய

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் 14 லேபர் ஆபீசர்களும், 3 டிப்டி கமிஷனர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வாகன வசதியும் மற்ற வசதிகளும் கிடையாது. லேபர் ஆபீசர் ஒரு இடத்திற்கு வர வேண்டுமென்றால், அவர் ஆலை முதலாளியினுடைய காரில்தான் வர வேண்டியிருக்கிறது. ஆலை முதலாளிக்கும் தொழிலாளருக்கும் இடையே உள்ள தகராறில் அவரால் எப்படி நியாயம் வழங்க முடியும்? ஆகவே, லேபர் ஆபீசருக்கு வாகன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ஒவ்வொரு லேபர் ஆபீசருக்கும் ஒரு ஜீப்காராவது வழங்கப் படவேண்டும். நமது மாநிலத்தில் இப்பொழுது 14 லேபர் ஆபீசர்கள் தான் இருக்கிறார்கள். தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்காக லேபர் ஆபீசர்களை இன்னும் அதிகப்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு தொழிற்சாலையில் 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்றால் அங்கே ஒரு வெல்பேர் ஆபீசர் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் ஆலை முதலாளிகள் தாங்களே ஒரு வெல்ஃபேர் ஆபீசரைப் போட்டுக் கொள்கிறார்கள். இப்படி ஆலை முதலாளிகளால் நியமிக்கப்படும் வெல்ஃபேர் ஆபீசரிடமிருந்து தொழிலாளர்கள் எப்படிப்பட்ட நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? ஆகவே, அரசு தனியாக வெல்ஃபேர் ஆபீசர்களைப் போட வேண்டும் வெல்பேர் ஆபீசர்கள் அரசால் நியமிக்கப்படுபவர்களாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, போனஸ் ஆக்ட் பிரகாரம் ஒரு தொழிற்சாலையில் வரவு செலவுக் கணக்கைத் தயார் செய்து கொடுக்கிறார்கள். அவர்களாகவே ஒரு ஆடிட்டரைப் போட்டு எந்தெந்த வழியாக, எந்தெந்தச் சட்டத்தின் மூலமாக பணத்தை மறைக்க முடியுமோ, அவ்வளவையும் மறைத்து விட்டு, தேய்மானம் இவ்வளவு, கட்டிடம் இவ்வளவு என்ற பெயரால் தொகையை ஒதுக்கி வைத்துவிட்டு, வரவுசெலவுக் கணக்குகளைத் தயார் செய்கிறார்கள். ஆகவே, வரவுசெலவுக் கணக்குகளைத் தயார் செய்வதற்கு முன்பாக, தொழிலாளர் பிரதிநிதி ஒருவரையும் சேர்த்து, அந்தக் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்கு உத்தரவாதம் செய்யும் வகையில் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும்.

பி.ப.
3-30

இப்போதுகூட பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்தவரையில், எந்தெந்த ஆலைகளை ஓட்ட முடியாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளில் நன்றாக ஓடும் மில்களை எடுத்து நடத்த வேண்டும். ஆனால் ஆலை முதலாளிகள் காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற காரணத்தினால் அவைகளை ஏற்று நடத்த முடியாது என்கிறார்கள். அந்த மில்களை அவர்கள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறையில் சட்டம் இயற்றப்படவேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு வருடத்தில் ஆறு மாதங்கள் அல்லது ஐந்து மாதங்கள்தான் வேலை இருக்கிறது. நாட்டிலே இருக்கிற பிரச்னைகளுக்குக் காரணம் இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வருடம் பூராவுக்கும் வேலை தரக்கூடிய விவசாயத்திற்குப் பிறகு அவர்கள் பக்கத் தொழில் செய்வதற்கு வசதியைச் செய்துகொடுக்கவேண்டும்.

கடைசியாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது தொழிற்சங்கத் தலைவர்கள் ஒரு முதலாளியை எதிர்த்து கருத்தைச் சொல்லமுடியாத நிலைமை இருக்கிறது. தொழிற்சங்கத் தலைவர்கள் சென்றவுடன் அவர்களை முதலாளிகள் எதிர்க்கக்கூடிய நிலைமைதான் இருந்துவருகிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவராக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவராக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவராக இருந்தாலும்சரி அந்த நிலைமைதான் இருந்துவருகிறது. மதுரையிலே கருணாகரன் தவரையப்பவர் அடிக்கப்பட்டு இரத்தக்காயங்களுடன் என்னிடம் வந்தார். அமைச்சரவை ...னே அடிபட்டிருக்கிறார், என்று போலீஸ் மேலதிகாரிக்குத் உறுப்பினர் திரு ...தேன். அதற்குப் பிறகு வழக்கு மன்றத்திற்குச் ச..லைக்காரர்களும் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். அவர்களுடைய வழக்கு வெற்றியடைந்தது. அதற்குப் பிறகு அவர்களிடமிருந்து எனக்கு எத்தனையோ மிரட்டல் கடிதங்கள் வந்துக் கொண்டிருக்கின்றன. அந்த பஞ்சாலைக்காரர் கருமுத்து தியாகராச செட்டியார்தான். சட்ட மன்ற உறுப்பினராய் இருக்கிற எனக்கே இப்படிப்பட்ட பயமுறுத்தல் கடிதங்கள் வருகின்ற நிலைமை இருக்குமானால் சாதாரணத் தொழிற்சங்கத் தலைவர்கள் சுமுகமாகப் பிரச்னைகளை எப்படி தீர்க்கமுடியும் என்பதைப் பார்க்கவேண்டும். தொழிற்சங்கத் தலைவர்கள் சட்ட பூர்வமாக பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். அவர்கள் சுமுகமாகப் பிரச்னைகளைத் தீர்க்க முயலும்போது, கதவடைப்புச் செய்யாமல் பலாத்காரம் செய்யாமல், சட்டபூர்வமாகச் செயல்படுகின்ற நேரத்தில் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தாகவேண்டும். இந்த விஷயத்தில் நான் வெளியே முயற்சிசெய்தேன், முடியவில்லை. எனவே, அதைச் சட்டமன்றத்திலே சொல்லித்தான் ஆகவேண்டுமென்ற நிலையில் சொல்லுகிறேன். எனவே இதிலே நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்து எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் சமாதானமான முறையிலே பிரச்னையை அணுகுகின்ற போது அவர்களுக்குச் சட்டபூர்வமாகப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு சட்டத்திலே இடமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். (வணக்கம்).



DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, at the very outset I must congratulate the Government on the excellent line that they have printed on the treatise on "Labour in Tamil Nadu".

"வளர்க தொழில், வாழ்க தொழிலாளர்"

That is a very sensible line. Unless there are industries in Tamil Nadu, workers will not be able to get a fair deal. I shall explain my point in greater detail. Today the serious problem that is facing Tamil Nadu is unemployment which is much more serious than under employment. For one vacancy hundreds of persons apply and that is the tragic situation that we are facing today. If hundreds of persons apply for one vacancy, to what extent the trade unions or the members of any trade union can press their demands with the employer? That is the question to be answered. In this connection, I can quote one instance. Recently for 150 posts of khalasis in the Integral Coach Factory thousands and thousands of people applied. At least thousand persons would have come to me for getting conduct certificates. Similarly about 12 Members of the Assembly and probably some Ministers would have been approached by these persons. I may also inform this House that a person working in I.C.F. told me that bundles of applications came in lorry-loads, and that shows the fantastic extent to which the unemployment problem has assumed serious proportions in Tamil Nadu and unless that problem is solved, there is no salvation for Tamil Nadu. I think it is relevant to quote a line from the article written by my distinguished Friend, Thiru Lobo Prabhu. He wrote an article on 'Trade Union for Unemployed'.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை என்னிடத்திலே கொடுத்து என்ன என்ன படிக்கலாம் என்று நான் பூர்த்துச் சொல்லிவிட்ட பிறகு தான் படிக்கவேண்டும்.

DR. H. V. HANDE: Sir, I am sorry for not taking the permission of the Chair......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "சாரி" என்று சொல்லிவிட்டால் போதுமா? என்னிடம் அனுமதி பெற்றுத்தான் படிக்கவேண்டும்.

அரசாங்கத்தின் போக்கும், அந்த ஸ்தாபனத்தின் போக்கும் நிச்சயமாக கண்டிக்கத்தக்க ஒன்றாகும். இதைப் போக்க நம்முடைய மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடமும், அந்த ஸ்தாபனத்திடமும் தெரிவித்து நம்முடைய உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

கோவையிலே ஏறத்தாழ ஒன்றரை கோடி ரூபாய் செலவிலே 500 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கட்டி முடிக்கப்பட்டு ஒன்றரை ஆண்டு காலமாகிவிட்டது. அது இன்னும் திறக்கப்படவில்லை. அதற்குக் காரணம் இ. எஸ். ஐ. கார்ப்பரேஷன் மத்திய ஸ்தாபனந்தான். தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கக்கூடாது என்பதிலே அவர்கள் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஒன்றரை கோடி ரூபாய் செலவிலே ஆஸ்பத்திரி கட்டப்பட்டு அதை ஒன்றரை ஆண்டு காலமாகத் திறக்கப்படாமல் இருப்பதற்கு யார் காரணமாக இருந்தாலும் சரி, இதன் காரணமாக அங்கிருக்கும் தொழிலாளர்கள் மிகப் பெரிய கஷ்டத்துக்கு உள்ளாகியிருகிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதற்கு நம் மாநில அரசு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே ஆயிரம் பேர்களுக்கு 11 படுக்கைகள் என்று இருந்ததை நான்கு படுக்கைகளாக குறைக்க வேண்டு மென்று சொல்லப்படுகிறது. அதை மாற்றி ஏற்கனவே இருந்தது போல் ஆயிரம் தொழிலாளர்களுக்கு 11 படுக்கைகள் என்ற அளவில் அந்த அமைப்பு இருப்பதற்காக மாநில அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

இன்று பெருந்துறையில் டி. பி. ஸானடோரியம் இருக்கிறது. அங்கு தொழிலாளர்களுக்காக சில படுக்கைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அதை இப்போது மூடி விடவேண்டு மென்ற எண்ணம் மத்திய அரசுக்கும் ஈ. எஸ். ஐ. கார்ப்பரேஷனுக்கும் இருப்பதாகத் தெரிகிறது. அதை மாநில அரசு வற்புறுத்தி அந்த சானடோரியம் அங்கேயே இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். பெருந்துரையில் நோயாளிகள் வந்து தங்கினால் குணம் அடையக் கூடிய சிறந்த இடமாக இருக்கிறது அது. ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் அதை மூடிவிடுவதற்கான சூழ்நிலையை உருவாக்கி விடக் கூடாது.

இன்று நம் அரசு தொழிலாளர்களுக்காக என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறது என்பதைப் பற்றி தொழிலாளர் நிலைமை என்ற புத்தகத்தில் விளக்கமாக சொல்லப் பட்டிருக்கிறது. சில தொழில்களைப் பொறுத்த வரையில் குறைந்தபட்ச சம்பளம் கொண்டு வரப் போகிறோம். என்ற முறையில் அரசு எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்கு முன் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர், இந்த அரசு தொழிலாளர்களுக்காக என்ன செய்திருக்கிறது என்று கேட்டார்கள். அந்தப் புத்தகத்தை அவர்கள் பார்க்கவில்லை என்று கருதுகிறேன். 12-வது பக்கத்தில் என்னென்ன தொழில்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்படும் என்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். விசைத் தறியைப் பொறுத்த வரையில் திருப்பூர் சுற்று வட்டாரத்தில் பத்தாயிரக் கணக்கான விசைத் தறிகளுக்காக குறைந்த பட்ச கூலி நிர்ணயிப்பதாக தெரிவித் திருக்கிறார்கள். அதன் மேல் தக்க நடவடிக்கைகள் எடுத்து கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வங்கி ஊழியர்களுக்கு ஷாப் சட்டத்திலிருந்து விதி விலக்கு கொடுப்பது பற்றி யோசனை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்கக் கூடாது.

அடுத்து, இன்று நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டு வருகிறது. அதற்கு அடிப்படைக் காரணம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் காலாகாலத்தில் துவங்கப்படாததுதான். மூன்றாவது



திட்டம் கழிந்து மூன்று ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் நான்காவது திட்டம் துவங்கப்படவில்லை. அது துவங்கப்படுவதற்கான காரியங்களைச் செய்தால் தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க முடியும். ஆகவே அதற்கு மாநில அரசு பொறுப்பல்ல.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இந்த அரசு வந்த பிறகு தொழிலாளர்களுக்காக எந்த அளவிற்கு அவர்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு அவர்களுக்கு உரிமைகள் கிடைப்பதற்கு வேண்டிய காரியங்களை செய்து வருகிறது. என்பதற்காக தொழிலாளர் இந்த அரசை பாராட்டுகிறார்கள். அப்படிப்பட்ட இந்த அரசு சிறந்தோங்க வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, முதலில் நான் தொழிலாளர்கள், முதலாளிகள் இருவரும் சம பலம் கொண்டவர்கள், சம சக்தி படைத்தவர்கள், இரு சாராருக்கும் இடையே அரசு நடுநிலைமை வகிக்கிறது என்ற கருத்தை நிராகரிக்கிறேன். அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர் இலாகா இயங்கி வருகிறது என்று சொல்லிக் கொண்டு நடைமுறையில் முதலாளிகளுக்குச் சாதகமான நிலையை நாட்டில் உருவாக்கிக் கொண்டு வருகிறது. ஒரு புறத்தில் மிக வசதி படைத்தவர்கள், மறுபுறத்தில் ஒருவித வசதியும் இல்லாத தொழிலாளர்கள் இருப்பதைப் பார்க்கிறோம். அனட்டோல் பிவின்ஸ் என்பவர்

**'The prince and the pauper have equal right to sleep under the bridge'**

என்று, மன்னனும் பிச்சைக்காரனும் பாலத்தடியில் படுத்துறங்குவதற்கு சம சுதந்திரம் கொண்டவர்கள் என்றார். தொழிலாளர்களின் கைகளைப் பலப்படுத்துவதற்கு, பலஹீனமானவர்களின் கைகளைப் பலப்படுத்துவதற்கு உள்ள அரசாங்கத்தின் கொள்கை என்ன ? அப்படி ஒரு கொள்கை இல்லாததினால்தான் பழைய கருப்பன் கருப்பனே என்ற முறையில் இந்த இலாகா செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

இன்று ரிஸஷன் என்று சொல்கிறார்கள். அது போய் விட்டதாக மத்திய அமைச்சர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இல்லை, இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு அதற்கு ஒரு புதிய சாட்சி வந்திருக்கிறது. திரு எச். வி. ஆர். ஐயங்கார் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு அதுபற்றி பேசியிருக்கிறார்கள். எனக்கு எதிர் துருவம் அவர். **'Ministers are whistling in the dark'** என்று கூறியிருக்கிறார்கள். இருட்டில்போகிறவன் தைரியத்திற்காக சப்தம் போட்டுக் கொண்டுபோவான். இப்படி, ரிஸஷன் போய்விட்டது, போய்விட்டது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, ரிஸஷன் போய்விட்டது என்று ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். முதலாளிகள் தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்டது இந்த நிலை. ஆனால் அதனால் ஏற்படக்கூடிய வேதனையை முழுவதும் தொழிலாளர்களின் பேரில் அவர்கள் திணிக்கப் பார்க்கிறார்கள்.

வரிச் சலுகை வேண்டுமென்று கேட்கிறார்கள் முதலாளிகள், மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். சேல்ஸ் டாக்ஸை குறைக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் முதலாளிகள் தொழிலாளர்களின் வேலைப்பளுவை உயர்த்த வேண்டும் என்று சொல்கிறார்கள். தொழிலாளர்களின் சம்பளத்தில் வெட்டு வேண்டும், அவர்களின் பஞ்சப்படி குறைக்கப்பட வேண்டும், ஆள் குறைப்பு செய்ய வேண்டும். என்றெல்லாம் கோரி அவற்றைச் சாதித்துக் கொண்டு வருகிறார்கள். முதலாளிகள் தங்கள் லாப விகிதத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய நிலைதான் இன்றும் இருக்கிறது. வேலைப் பளுவை உயர்த்தினால்தான், சம்பளத்தில் ஒரு பகுதியை ஒத்தி வைக்க சம்மதித்தால்தான் மில்களைத் திறப்போம் என்கிறார்கள். அதற்கு கன்ஸிலியேஷன் நடக்கிறது. காவிரி மில்காரர்களும் கன்ஸிலியேஷன் கேட்கிறார்கள். இந்தக் கஷ்ட காலத்தில் ஆள் குறைப்பை அனுமதியோம்

என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். தொழிலாளர்களுக்கு இருக்கும் உரிமைகளை பாதுகாத்தே தீருவோம் என்ற ஒரு கொள்கை இருக்க வேண்டும். அப்படி ஒரு கொள்கை மட்டும் இருந்தால் போதாது. அதை அமல் செய்ய வேண்டும். இலாகா அதை அமல் செய்யும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

சட்டத்தில் உள்ள ஓட்டை உடைசல்களை வியாக்கியானம் செய்யும்போது அப்படிப்பட்ட வியாக்கியானங்கள் தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையில் செய்யப்படவேண்டும். இந்த இலாகாவினால், என்று சொல்ல வேண்டும். இவற்றை சில உதாரணங்கள் கொடுத்து விளக்க நான் விரும்புகிறேன். பொதுப்படையாகப் பேசுவதில் பயன் இல்லை. தோல் பதனிடும் தொழிலாளர்கள் 45,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கான மினிமம் வேஜஸ் 1962-ம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. இந்த மினிமம் வேஜஸ் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை தீர்மானிக்கப்பட வேண்டும். 1967-ல் அதை எடுக்கவில்லை. இப்போது 1968 அக்டோபர் 15-ம் தேதி அது முடிவாயிற்று. சென்ற வாரம் வரை கெஜட்டில் பிரசுரிக்கவில்லை. ஆகவே இதுவரையில் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உயர்வு கிடைக்கவில்லை. அப்படி அந்த உயர்வு தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற ஆத்திரம் இந்த இலாகாவிற்கு இருக்கிறதா என்றால் இல்லை. ஆக, இந்த 45,000 தொழிலாளர்களுக்கு அந்த கூலி உயர்வு கிடைக்கவில்லை. முதலாளிகளிடம் இதுபற்றிக் கேட்டால் கெஜட்டில் வந்த பிறகு தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். கோமதி மில்லில் பல பிரச்னைகள். அங்கே ஒரு லேபர் ஆபீசர் இருக்கிறார். விசித்திரமாக இருக்கிறது. அவருக்கு நேராக உட்கார்ந்து கொண்டே முதலாளி தொழிலாளர்களை பழிவாங்கித்தான் தீருவேன் என்கிறார். ஃபெயில்யூர் ரிப்போர்ட் அனுப்புவதில்லை. ஆறு மாதமாகிவிட்டது. அதிகப்படியான வேலைப் பளுவிற்கு சம்மதித்தால் சர்ப்ளஸ் லேபரர்ஸ் 49 பேர்களை வேலையிலிருந்து நீக்குவதில்லை என்று ஒப்பந்தம் இருந்தது. இப்போது அவர்களை நீக்க வேண்டுமென்கிறார்கள் முதலாளிகள். புது வேலைப்பளு ஒப்பந்தம் வேண்டுமென்று கேட்கிறார் முதலாளி. ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை முதலாளி மீறுகிறார். சர்ப்ளஸ் ஆக உள்ளவர்களை நீக்கம் செய்வேன் என்கிறார். இவ்வாறு உள்ள ஒப்பந்தத்தை முதலாளி மீறுவதுபற்றி தாவா எழுப்பி, கன்ஸிலியேஷன் நடக்கும்பொழுது, முதலாளி புதிய வேலைப் பளுவை ஏற்க வேண்டும் என்கிறார். அதுபற்றியும் கன்ஸிலியேஷனுக்கு விட லேபர் ஆபீசர் ஒத்துக் கொள்கிறார்.

மூடப்பட்ட மில்களைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. யாராவது ஒரு முதலாளியாவது ப்ராவிடன்ட் பண்ட் பணம் கொடுக்கவில்லை என்பதற்காக ப்ராஸிக்யூட் செய்திருக்கிறீர்களா ? ஏன் செய்யவில்லை ? பிராஸிக்யூட் செய்தால் மில்லை மூடிவிடுவார் என்கிறார்கள். மூடப்பட்ட மில் முதலாளியையாவது—அந்த ப்ராவிடன்ட் பண்ட் பணத்தை அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்.—பிராஸிக்யூட் செய்தீர்களா ? என்ன செய்தீர்கள்? ஒரு ஆள் மீதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமே.

பி.ப. அடுத்து, மகாலட்சுமி மில்ஸ். 4 சத வீதம் மினிமம் போனஸ் கொடுக்க
4-00. வேண்டுமென்றிருந்தது. 1965 போனஸ் டிஸ்ப்யூட் கோர்ட்டுக்குச் சென்று அது பெண்டிங்கில் இருக்கிறது. 1966-ம் ஆண்டு போனஸ் தாவா வந்தது. முதலாளி அரசாங்கத்திற்கு மனுப் போட்டார்கள். 34-வது செக்ஷன்படி Bonus 4 சத வீதம் கொடுக்காமல் இருப்பதற்கு எக்ஸெம்ப்ஷன் கேட்டார்கள். கவர்ன்மெண்ட் கொடுக்க முடியாது என்று நிராகரித்தது. பிறகு ஹைகோர்ட்டிற்குச் சென்று, அரசாங்கம் கொடுக்க முடியாது என்று சொன்னதற்குக் காரணம் காட்டவில்லை என்ற காரணத்தைக் காட்டி Quash பண்ணிவிட்டது. 9 மாதங்கள் ஆகின்றன. இன்னும் அதற்கான காரணம் அரசாங்கத்தினால் காட்டப்படவில்லை. இந்த இலாகா எந்தக் காரணத்திற்காக கொடுக்க முடியாது என்று சொன்னது என்பதற்கான காரணம் காட்டப்படவில்லை. 1965-ஆம் வருஷம் கோர்ட்டிற்குப் போய், 1966 போய், 1967-ஆம் ஆண்டும் போய் 1968 இப்பொழுது வந்துவிட்டது.



எத்தனை மாதங்கள், எத்தனை வருஷங்கள் தாமதமாக ஆகின்றது ? நமது இலாக்கா எந்தெந்த காரணங்களுக்காக விலக்கு கொடுக்க மாட்டோம் என்று சமர்ப்பிக்காததால் அந்தத் தாமதம் யாருக்கு ஆதரவாகப் போகிறது ?

அதேபோல பீடி; சுருட்டுத் தொழிலாளர் சட்டம், ஹைகோர்ட் ஸ்டே செப்டம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து இருக்கிறது. ‘High Court, unconditional saty’ ஏழு மாதங்களாகின்றது. நாம் அதை Vacate செய்ய வேண்டாமா? சென்ட்ரல் கவர்ன்மெண்ட் கௌண்டர் போடவில்லை என்று சொல்லலாம். அவர்களுக்கு அக்கறை இல்லாவிட்டாலும் நமக்கு அக்கறை இருக்க வேண்டாமா ? நாம் அதைச் செய்துவிட்டு, மத்திய சர்க்காரை கௌண்டர் போடவேண்டுமென்று கேட்க வேண்டும். அப்பொழுதும் மத்திய சர்க்கார் கௌண்டர் போடவில்லை என்றால் சொல்லுங்கள். அவர்களைப் பிடிப்போம் ஆனால் நாம் என்ன செய்தோம்? தமிழகத்தில் 125,000 பீடி. சுருட்டுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

கூட்டுறவு மில்லில் நடப்பது என்ன ? காட்டு ராஜா தர்பார். எந்தச் சட்டமும், எந்த ஒழுங்கும் இல்லை. இன்றைக்கோ நாளைக்கோ தாராபுரம் கூட்டுறவு மில்லில் ஸ்டிரைக் நடக்க விருக்கிறது. ஒர்க்ஸ் கமிட்டியிலுள்ள தலைவர்களை யெல்லாம் பழி வாங்குகிறார்கள். அப்படி நடக்கிறது. சிறு தொழில் கார்ப்பரேஷனில் 64 யூனிட்டுகள் இருக்கின்றன. 6,000 தொழிலாளிகள் அவைகளில் 2 வருஷம், $2\frac{1}{2}$ வருஷம், 5 வருஷங்கள் வேலை செய்தவர்களை யெல்லாம் கூட பர்மனென்ட் செய்யாமல் இருக்கிறார்கள். 240 நாட்கள் தொடர்ந்து சர்வீஸ் இருந்தால் சாதாரணமாகப் பர்மனெண்ட் ஆக்க வேண்டுமென்றிருக்கிறது. சர்க்கார் துறையிலே, பொதுத் துறையிலே நடப்பவைகளில் 5 வருஷங்கள் ஆனாலும் பர்மனெண்ட் ஆக்காமல் இருக்கும் அக்கிரமம் நடக்கிறது. ரூ. $1\frac{1}{2}$ என்றும், ரூ. 2 என்றும் கூலி தரப்படுகிறது ! ஆகவே, பொதுத் துறை, கூட்டுறவுத் துறை இரண்டையும் காட்டி தனிப்பட்டவர்கள் எப்படி நடப்பார்கள் ? இதைச் சுட்டிக்காட்டி அங்கேயும் அக்கிரமம் நடக்கிறது.

முக்கியமாக நெய்வேலி, ஸெராமிக், வடலூர் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சம்பளப் பட்டுவாடா சட்டம் 15/2-ன் கீழ் மனுப் போடுகிறார்கள். சம்பளம் கிடைக்கத் தாமதம் ஏற்பட்டால் நஷ்ட ஈடு தர வேண்டும். அப்படி 236 பேர்கள் மனுப் போட்டார்கள். மனுப் போட்டால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நஷ்ட ஈட்டைக் கொடுக்க வேண்டுமென்று per head என்று 16/2 சொல்லுகிறது. ஒவ்வொருவருக்கும் தனித்தனி நஷ்டஈடு தரவேண்டுமென்று இருக்கிறது. பகிரங்கமாக டெபுடி லேபர் கமிஷனர் அவர்கள், இராமமூர்த்தி என்று கருதுகிறேன், மொத்தம் 25 ரூபாய் வாங்கிக் கொண்டால் போதும் என்று சொல்லுகிறார்கள். ஆளுக்கு ஒரு ரூபாய் என்றாலும் 236 ரூபாய் ஆகிறது. 25 ரூபாய் கொடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அங்கு சட்டப்படி நடக்கவில்லை. மேனேஜ்மெண்ட் வாதம் பூராவையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெளிவாக எழுதியிருக்கிறார்கள்.

**‘Legally the management was not justified in postponing the payment after 7th and this is against the requirements of the Statute with regard to the payment of wages.’**

என்பது அவருடைய தீர்ப்பு. இப்படித் தீர்ப்பளித்துவிட்டு என்ன செய்கிறார் ? ஆளுக்கு 10 ரூபாய் என்றாலும் 236 பேர்களுக்கும் இரண்டாயிரத்துச் சொச்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். ஆனால் 25 ரூபாய் மாத்திரம் சங்கத்திற்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றால், அது சட்ட விரோதம். சிவில் கோர்ட்டுக்குப் போனால் அவர் தீர்ப்பு நிற்காது. ஆனால், தொழிலாளர்கள் சிவில் கோர்ட்டுக்குப் போகமுடியாது. என்ன செய்வது ?

Marine boat building yard ராயபுரத்திலே ஒரு சங்கம்தான் இருக்கிறது. அதை அங்கீகரிக்க மறுக்கிறது அரசு. இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது. 1968 அக்டோபரில் செய்து கொண்ட ஒப்பந்தம், இன்று நாம் இப்பொழுது மார்ச் மத்தியில் இருக்கிறோம். எப்ரலும் வந்துவிடப் போகிறது, இதுவரை அந்த ஒப்பந்தம் அமல் படுத்தப்படவில்லை. இதனால் போட் கட்டும் தொழிலாளர்கள், கோமதி மில் தொழிலாளர்கள், லட்சத்து இருபத்தைந்தாயிரம் பீடித் தொழிலாளர்கள் இந்த அனுபவத்திலிருந்து என்ன நினைப்பார்கள் ?

எதற்காக இத்தனை உதாரணங்கள் கொடுத்துக் கூறுகிறேன் என்றால், இந்த இலாக்காவில் செயல்பாடு மாறவில்லை. அது மாறாது. தானாக மாறும் என்ற நம்பிக்கையும் எனக்குக் கிடையாது. என் அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். 25 ஆண்டு கால அனுபவத்தின் வாயிலாகச் சொல்கிறேன். தொழிலாளர்களின் கட்சியில், பலஹீனமானவர்களுடைய கட்சியில் இருப்போம் என்ற கொள்கை வரவேண்டும். அந்தக் கொள்கையை அமுலாக்க இலாக்காவைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்படியிருந்தால்தான் முன்னேற்றம் காண முடியும். இல்லையென்றால் இப்படித்தான் இருக்கும். இந்த அனுபவத்தின் அடிப்படையில் தொழிலாளர்களிடையே கசப்பு உணர்ச்சி வளரத் தான் செய்யும்.

இன்னும் ஓரிரு வார்த்தைகள் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் ஒரு சங்கம் இருக்க வேண்டுமென்று பேசுகிறார்கள். சிலர், தொழிலுக்கு ஒரு சங்கம் என்று கூறுகிறார்கள். சில தொழிற்சங்கத் தலைவர்கள் ஓட்டுப்போடக்கூடிய நிலை ஒரு தொழில் சங்கத்திற்கு ஏற்பட்டுவிட்டால் தங்களது பிழைப்பு போய்விடுமோ என்று நினைப்பதாகத் தெரிகிறது—vested interest.

நான் தெளிவாகச் சொல்லுகிறேன். Ballot மூலம் தீர்மானிக்க வேண்டும். மைனாரிடியாக இருப்பவர்கள் மெஜாரிடிக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். I.N.T.U.C. காரர்கள் என்றுமே "பாலட்" முறையை ஏற்றுக்கொள்வது கிடையாது. அரசின் தயவில் வளர்ந்தவர்கள். மதிப்பிற்குரிய மேலவையில் உறுப்பினராக இருக்கும் தி.மு.க.வைச் சேர்ந்தவரும் "Labour Advisory Committee" யில் ஓட்டுப் போடக்கூடாது என்கிறார்கள். எங்களைத் தவிர வேறு யாரும் ஓட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். தொழிலாளர்கள் தாங்கள் ஓட்டுப்போட்டு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால், தங்களது சங்கத்திற்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு உரிமை கொடுக்கக் கூடாதா ? Verification என்று என்னென்ன அக்கிரமங்களை லேபர் இலாகா செய்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன்—மேற்கு வங்காளமும், கேரளாவும்—அதைப்பற்றி சாதாரணமாகப் பேச விரும்பவில்லை—வங்காளத்தில் 14 கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டணி. அந்தக் கூட்டணி இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தித் தீர்மானிக்கவேண்டும் என்று கொள்கை வைத்துள்ளது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு "சேலஞ்ஜ்" பண்ண வேண்டும். அப்படி பார்த்து முடிவு செய்யவேண்டும். அப்படித் தேர்தலை நடத்தி தொழிலாளர்களிடையே ஒற்றுமைப்படுத்த வேண்டிய பொறுப்பு இருக்கிறது. தொழிற்சங்கத் தலைவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை, உடன்பாடு இல்லை என்று அரசாங்கம் விலகி விடக்கூடாது. அரசாங்கத்தின் கொள்கை, ஓட்டுக்குவிட்டு தொழிலாளர்களிடையே தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தவேண்டும். இல்லையென்றால் தொழிலாளர்கள் பிளவுபட்டு சிதறிக் கிடக்கிறார்கள். தொழிலாளர்கள் ஆட்குறைப்பு செய்யப்படுகிறார்கள். சம்பளத்தைக் குறைக்கச் சொல்கிறார்கள், சம்பளத்தை வெட்டச் சொல்லுகிறார்கள், பிராவிடெண்ட் ஃபண்ட், E. S. I. முதலியவைகளைல் மோசடி நடக்கிறது. எனவே, அந்தத் தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஒரே ரீதியில், ஜனநாயக ரீதியான முறையில், "பாலட்" மூலம் ஒரு



சங்கத்தைத்தான் அங்கீகரிக்க வேண்டும். இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை சேலஞ்ஜ் செய்ய வேண்டும். அப்படி நடந்தால் தொழிலாளர் குறைகளை போக்கி ஒற்றுமைப்படுத்த அரசு துணை நின்றதாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக தொழில் தகராறுகளை ஒட்டிய தாவாக்கள் தொழில் தகராறு "செட்டில்" ஆனதும் வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்ற கொள்கையை அரசு அறிவித்திருந்தது. ஆனால், அந்தக் கொள்கை நடக்கக் காணோம். பள்ளிப்பாளையத்தில் கேரோ மாதிரி நடந்தது. மூன்றாவது நாளன்று செட்டில்மெண்ட் ஆகிவிட்டது. ஆனால் அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படவில்லை. Manali Oil Refinery-யில் வழக்கு இருக்கிறது. வாபஸ் வாங்கப்படலாம் என்று அந்தக் கொள்கைப்படி நடக்காத காரணத்தால் தொழிலாளர்கள் துன்புறும் நிலை இன்றைக்கும் நீடித்திருக்கிறது.

கடைசியாக ஆட்டோமேஷனைப்பற்றிச் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். தெளிவாக அனுமதிக்க மாட்டோம் என்று அறிவிக்கப்பட்டதாக நினைக்கிறேன். மறுபடியும் அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பழைய அறிக்கையில் தெளிவாக இருந்தது. (குறுக்கீடு) இதில் தெளிவாக இல்லை. அப்படியிருந்தால் மகிழ்ச்சி. அறிவிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறேன். நமது அமைச்சரவர்களே Electronic computer industry துவக்க விழாவில் கலந்துகொண்டால் அது எங்கு கொண்டுபோய்விடும் ? அந்தக் கருவியை என்ன செய்வது ? அது ஆட்டோமேஷனுக்குத்தான் பயன்படும். இதுதான் மிச்சம். அந்த நிலையில் அரசு இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் பிறகு தர்மசங்கடமான நிலைக்குக் கொண்டுபோய் விட்டுவிடும். இதில் ஒன்றிணைத்த கொள்கை வேண்டும். தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்போம் என்ற கொள்கை வேண்டும். Labour Advisory Committee என்று ஒரு கமிட்டி இருக்கிறது. அதில் 7, 8 தொழிற்சங்கத் தலைவர்கள் சேர்ந்து அரசுக்கு உதவியாக ஆலோசனை சொல்ல உதவிகரமாக இருக்கும் என்று நான் சொல்லி ஆரம்பிக்கப்பட்டது. போன ஜூலை மாதம் அது கூடிற்று. இப்பொழுது நாம் எங்கிருக்கிறோம் எப்ரல் மாதத்திற்கு வரப்போகிறோம். எட்டு மாதங்களாகியும் இன்னும் கூடவில்லை. புதிய கமிட்டியும் அக்டோபர் மாதம் போட்டு, அதுவும் கூடவில்லை. அடுத்த மாதம் கூடும் என்று தெரிவிக்கிறார்கள். அது அமைத்தும் பயன்படவில்லை என்று எண்ணினால், அதைக் கலைத்து விடுங்கள், அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் பெயருக்குக் கமிட்டி என்று வைத்துக்கொண்டு கூடாமல் இருக்கக்கூடாது. வேறுபல கமிட்டிகள் அப்படி இருக்கின்றன. Sales Tax Advisory Committee என்று இருக்கிறது. அது இரண்டு வருஷமாகக் கூடவே கிடையாது. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லையென்றாலும், கமிட்டி என்று போட்டால் அடிக்கடி கூட்டி, அதிலுள்ள அங்கத்தினர்களின் ஆலோசனை என்ன என்பதை அறியவேண்டும். அவ்வாறு கூட்டி 3 மாதத்தில் உள்ள அனுபவம் என்ன என்று அறிய வேண்டும். அதற்காகக் கூட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் உறவு சட்டத்தையே தமிழ்நாட்டில் திருத்தி அமைப்பது உதவியாக இருக்கும். அது சம்பந்தமாக ஆலோசனைகள் தரத் தயாராக இருக்கின்றோம். தெளிவாக இருக்க வேண்டும், முதலாளிகளுக்காகவும், தொழிலாளிகளுக்காகவும் நாங்கள் இருக்கிறோம் என்று சொல்வது கூடாது. நாங்கள் நடுநிலைமை அல்ல, இந்த அரசு பலவீனமானவர்களின் கட்சிப் பக்கத்தில் இருக்கும், அப்படித்தான் செயல்படும் என்றிருக்க வேண்டும். நான் மையமான கருத்தாக வற்புறுத்துவது அதுதான். அது நிறைவேற்றப்பட்டால்தான் நல்லதாக இருக்கும். இல்லையென்றால், பல லட்சக்கணக்கான தொழிலாளர்களிடையே வளரும் கசப்புணர்ச்சியைத் தடுக்க முடியாது. அமைச்சரவர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு இலாக்கா மட்டும் இருப்பது எனக்கு மகிழ்ச்சி.

சட்டம், கூட்டுறவு, அது, இது என்று இல்லாமல் (குறுக்கீடு) ஜெயில் இருக்கிறதாம், அதைக்கூட எடுத்துவிட்டால் எனக்குச் சந்தோஷம்தான். அவர் வருத்தப்பட்டாலும் எனக்குச் சந்தோஷம்தான். இதற்கு தனி நாள் ஒதுக்கவேண்டும். 5, 10 நிமிஷத்திலே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பற்றி பேசுவது என்பது சுலபமான காரியம் அல்ல. அவைத் துணைத் தலைவர் அவர்கள் பொறுமையாக எனக்கு நேரம் தந்திருக்கிறார்கள் என்பதை நினைவிற்கொண்டு, நன்றி கூறிக்கொண்டு எனது கருத்துக்களை தயவு செய்து பரிசீலனை செய்யவேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

***திரு. நா. காசிராமன்.** : தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற புத்தகங்களிலிருந்து கடந்த 2 வருஷ காலங்களிலே தொழில் துறையிலே தொழிலாளருக்கு எவ்வளவுவிதமான பாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. பாக்டரீஸ் ஆக்டின் கீழே இயங்கக்கூடிய தொழிற்சாலைகளிலே 1967-ம் வருஷத்தைவிட 1968-ம் வருஷத்திலே 17,000 பேருக்கு மேல் வேலை போயிருக்கிறது. மெட்ராஸ் ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்டின்கீழ் இயங்கக் கூடிய ஸ்தாபனங்களிலே 24,000-த்து சொச்சம் பேருக்கு மேல் வேலை போயிருக்கிறது. மெட்ராஸ் பீடி ஒர்க்கர்ஸ் (இன்டஸ்ட்ரியல் ப்ரெமிஸஸ்) சட்டத்தின்கீழ் உள்ள ஸ்தாபனங்களிலே 1966–67-ஐவிட 1967–68-ல் 25,000-த்து சொச்சம் பேருக்கு வேலை போயிருக்கிறது. ஆனால் இப்படி எல்லோருக்கும் வேலை போயிருக்கிறது என்று சொல்லும்போது எது அதிகமாகியிருக்கிறது என்று பார்த்தால் வேலை நாட்கள் இழப்பு வருஷத்திற்கு வருஷம் அதிகமாகியிருக்கிறது. 1966-ம் வருஷத்தைவிட 1967-ம் வருஷம் 365,905 மான்-டேஸ்ஸை இழந்திருக்கிறோம். 1967-ம் வருஷத்தைவிட 1968-ல் 1,126,947 மான்-டேஸ் இழந்திருக்கிறோம். இவை எல்லாம் எதைக் காட்டுகிறது ? தொழிலாளர்களுக்குப் பாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன, தொழில் துறையிலே அமைதி ஒழுங்கான முறையில் இல்லை என்பதைக் காட்டுகிறது. அதற்குக் காரணமே தொழிலாளர்களுக்குப் பாதகமாக அரசு உள்ளதுதான். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப்போல் தொழிலாளர்கள் கொஞ்சம் வீக்னஸ் உள்ளவர்கள். அவர்களுக்குச் சாதகமாக இருக்கவேண்டியதுதான். சாதகமாக இருக்கவேண்டுமே தவிர, நமது அரசு தொழிலாளர் அரசு, நமது அரசு மாணவர்கள் அரசு என்று சொல்லிக்கொண்டிருந்தால், யாருடைய பிள்ளை என்று கேட்டால், அம்மா பிள்ளை, அப்பா பிள்ளை என்று செல்லம் கொடுத்துவிட்டுக்கொண்டிருக்கக் கூடாது. தொழிலாளர்களுக்குச் செய்யவேண்டும், அதைச் சொல்லாமல் செய்யவேண்டும், செய்வோம் என்று சொல்லாமல் செய்யவேண்டும். இந்த சர்க்கார் தங்களை 'Government of the people, for the people and by the people ஆக எண்ணி நடக்கவேண்டும். நடக்கிற காலத்திலே செய்கையிலே தொழிலாளர்களுக்கு சாதகமான காரியங்களைச் செய்யவேண்டும். அதை சொல்லிக்கொண்டே இருக்கக்கூடாது. அப்படி சொல்வதனால் சில சமயங்களிலே அசட்டுத் துணிச்சல் ஏற்பட்டு அதன் காரணமாக பலவிதமான தகராறுகள் ஏற்படுகின்றன. அதன் பலன்தான் இந்த இரண்டு வருஷங்களிலே பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை போனது, மான்-டேஸ் இழப்பு ஏற்பட்டது.



திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் தொழிற்சங்கங்களைப்பற்றிச் சொன்னார்கள், ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்கவேண்டுமென்று. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் ஏற்படுத்துவது என்பது இருக்கட்டும். ஒரு தொழிற்சாலையிலே ஒரு சங்கம் இருக்கவேண்டும். அரசாங்கம் முன்நின்று ஏற்பாடு செய்தால் அதை நடத்திக்காட்ட முடியும். இதே சட்டசபையிலே—பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு ஒரே ஒரு பாரகிராஃப் படிக்கிறேன்.—16-3-1964 அன்று அப்பொழுது உறுப்பினராக இருந்த இன்றைய கல்வி அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள், "ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன் என்ற கொள்கை நமது நாட்டுக்கு வரவேண்டுமென்றால் அதற்கு நம்முடைய அரசாங்கம் முன் நின்று கட்சி வேறுபாடற்ற முறையிலே, அரசியல் கட்சிகளோ, அரசியல் கட்சித் தலைவர்களோ சம்பந்தப்படாத முறையிலே அரசாங்கம் முன் நின்று தொழிலாளர்கள் பிரச்சினையை உடனுக்குடன் கவனித்தால் நிச்சயம் ஒரு நல்ல ஏற்பாட்டை நம்முடைய மாகாணத்தில் ஏற்படுத்த முடியும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்", என்று சொல்லியிருக்கிறார். இன்றையதினம் அமைச்சராக உள்ள மாதவன் அவர்கள் அன்றையதினம் சொல்லியிருக்கிறார்கள். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன் ஏற்படுத்தவேண்டுமென்றால் அரசாங்கம் முன் நின்று கொண்டு வரவேண்டும். இப்போது இந்த இரண்டு வருஷத்திலே அரசாங்கம் ஏதாவது செய்திருக்கிறதா என்று பார்த்தால், அவர்கள் சொல்லித்தான் அவர்கள் செய்திருப்பதையும் செய்யாமலிருப்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அதே தினம், 16—3—64 அன்று இதே மன்றத்தில் மாண்புமிகு திரு. எம். எஸ். மணி அவர்கள் பேசி இருக்கிறார்கள். முன்னே சொல்லும்பொழுது சொன்னார்களே, இப்பொழுது நடக்கவில்லையே என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

ஒரு சின்ன சமாச்சாரம். தொழிலாளர்கள் தங்களுக்கு ஆத்தரைஸ்டு ரெப்ரசன்டேட்டிவ்வை தொழில் கோர்ட்டுகளுக்கு அனுப்பவேண்டுமென்றால் ரூ. 3½ ஸ்டாம்பு பேப்பரில் எழுதினால் தான் செல்லும் என்று இருக்கிறது. இன்னும் இருக்கிறது, இன்னும் மாற்றவில்லை என்று நினைக்கிறேன். அப்பொழுது மணி அவர்கள் சொன்னார்கள், அதை நீக்க வேண்டுமென்று. அதை உடனடியாகச் செய்யவேண்டும். தொழிலாளர்கள் இதனால் கஷ்டப்படுகிறார்கள். அப்பொழுது சொன்னார்களே, வருஷம் 2 ஆயிற்றே, சொன்னதைச் செய்தார்களா ? அப்பொழுது ரத்து செய்யும்படி சொன்னார்களே, ரத்து செய்தார்களா ? அப்பொழுது சௌகரியமாக இருந்தது, சொன்னார்கள். இப்பொழுது அதைச் செய்யவில்லை. அது நல்லதல்ல. அதைப் பார்த்து செய்வதுதான் நல்லது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களில் ஒன்று, பிராவிடண்ட் பண்ட் கட்டப்படாமல் இருப்பது. பிராவிடண்ட் பண்டிற்கு தொழிற்சாலைகளிலே பணம் கட்டாமல் இருக்கிறார்கள். நான் ஒரு தொழில் நிறுவனத்துடன் சம்பந்தப்பட்டவன் என்ற முறையிலே வெட்கப்படுகிறேன். தொழில் நிறுவனத்தை நடத்தி இலாபம் அடைந்திருக்கும் தொழில் நிறுவன ஸ்தாபகர்கள் தொழிலாளர்களுக்கு வேண்டிய பிராவிடண்ட் பண்ட், மற்றைய சௌகரியங்களை உடனுக்குடன் செய்யவேண்டும். இதையெல்லாம் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் சரியானபடி லேபர் ஆபீஸர்கள் போய் பார்க்க முடியவில்லை. லேபர் ஆபீஸர் இந்த வேலையோடு வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ் என்ற இலாகாவையும் ஒரு ஜில்லாவிற்கு பார்க்கவேண்டியிருக்கிறது. கேட்பதற்குச் சின்ன இலாகா போல் தோன்றும். தொழிலாளர் இலாகா முக்கியமான இலாகா. ஒவ்வொரு ஜில்லாவிலும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பல நூற்றுக்கணக்கான ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இலாகாவிலும் பல ஆயிரக்கணக்கான வியாபாரிகள், வர்த்தகர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் உள்ள வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸை; எடைகளையும் அளவைகளையும் 2 வருடத்திற்கு ஒரு தடவை, சென்று பார்த்து, பரிசீலித்து, முத்திரை போடவேண்டும். மற்றொன்று தொழிலாளர்களை கவனித்துக்

கொள்வது. இரண்டு முக்கியமான காரியங்கள். அவர்கள் நலன்களை பார்க்காமல் போனால் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்படுவார்கள். இந்தப் பக்கம் வர்த்தகர்கள் அளந்துகொடுக்கக்கூடிய பொருள்களும், நிறுத்து கொடுக்கக் கூடிய பொருள்களும் நாளாவட்டத்தில் எடைகளின் தேய்மானத்தின் காரணமாக குறைவாகக்கூடிய நிலைமை ஏற்படும். ஒரு கிலோ சர்க்கரை வாங்கினால், அது அந்த அளவிற்கு குறைவாக இருக்கக் கூடிய நிலை ஏற்படும். இம்மாதிரியான காரணங்களினால் இரண்டு விதமாக நஷ்டம் ஏற்படுகிறது. இதை அவசியம் பிரித்தாக வேண்டும். லேபர் ஆபீஸரையும், வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ் இலாகாவையும் தனியாகப் பிரித்தால் தான் அந்த இரண்டு விஷயங்களிலும் சுமுகமான நிலை ஏற்படும். இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு இடத்திற்கும் சென்று அவைகளை பரிசீலிக்க முடியவில்லை. காரணம் லேபர் ஆபீஸருக்கு அதைச் செய்வதற்கு அவகாசம் இல்லை. ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் செல்வதற்கு அவர்களுக்கு அவகாசம் இல்லை. வாகன வசதிகளும் கிடையாது. ஆகையால் இதைத் தனியாக பிரிக்கவேண்டும்.

இந்த ஸ்டாம்பிங் அண்ட் ரீ-வெரிபிகேஷன் என்ற இனத்திலே கட்டணங்களை உயர்த்தி இருக்கிறார்கள். 1968–ஆம் வருஷத்திலேயிருந்து கட்டணங்களை உயர்த்தி இருந்தும், சென்ற ஆண்டைவிட இந்த வருஷத்திலே இந்த ஸ்டாம்பிங் அண்ட் ரீ-வெரிபிகேஷனிலே ரூ. 3 இலட்சம் குறைவாகக் கிடைத்திருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது). இதை நாம் சரியான முறையில் செய்யவில்லை. ஆபீஸர்கள் செய்யவில்லை என்று சொல்லவில்லை. அவர்களுக்கு செய்வதற்கு வசதி இல்லை.

ஜில்லா முழுவதற்கான பொறுப்பை ஏற்றிருக்கின்ற அந்த லேபர் ஆபீஸர்களுக்கு சம்பளம் எந்த அளவிலே கொடுக்கப்படுகிறது என்று பார்த்தால் ரூ. 300—25—600 என்று கொடுத்திருக்கிறோம். ஜில்லா பூராவுக்கும் பொறுப்பேற்றுள்ள அதிகாரிகளுக்கு இவ்வளவு கொடுத்திருக்கிறோம். தாலுகாவிற்கு பொறுப்பேற்றுள்ள "ஜெ.சி.டி.ஓ." அவர்களுக்கு என்ன சம்பளம் என்று பார்த்தால், அவர் சிறிய பகுதியிலே தான் வேலை செய்கிறார், ரூ. 375—25—600. டெபுடி கலெக்டர் ஒரு தாலுகாவிலே இருப்பவர், அவருக்கு என்ன சம்பளம் என்று பார்த்தால் ரூ.375—35—800 மிகப் பெரிய ஜில்லா பூராவையும் கண்காணிக்கின்ற அந்த லேபர் அதிகாரிகளுக்கு இப்பொழுது கொடுக்கின்ற பணம் போதுமா என்பதை அரசாங்கம் நன்கு ஆலோசனை செய்யவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அரிசி மில்களைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். அங்கு ஒரு தராசை வெரிஃபை பண்ணினால் போதும் என்று போட்டிருக்கிறார்கள். நெல் வியாபாரத்திலே இப்படிப்பட்டவர்கள் பல தராசுகளை வைத்திருக்கிறார்கள். இந்த பாக்டரி சட்டத்தின்கீழ் அந்த அரிசி மில்லில் வைத்திருக்கின்ற அந்த தராசை மட்டும் பரிசோதித்து முத்திரைப் போட்டால் அது எந்த அளவுக்குக் கெடுதல் பயக்கும் என்பதை நான் சொல்லி, அரசுப் பொறுப்பிலே உள்ளவர்களுக்கு விளக்கவேண்டிய அவசியம் இல்லை, அவர்கள் இதை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நாம் நல்ல முறையிலே சேவை செய்ய வேண்டும். அதற்காகத்தான் நல்ல ஊக்கமான வழியில் லேபர் ஆபீஸரிடமிருந்து வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸை பிரித்துத் தனியாக அதிகாரியை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதுதான் தொழிலாளர்களுக்கும் நம்பகமான நல்ல காரியங்களைச் செய்ய முடியும். வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ்லிலும் நல்ல காரியங்களைச் செய்ய முடியும்.

பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னார்கள். அது கோர்ட்டில் இருக்கிறது. ஸ்டே இருக்கிறது. அதற்கு நாம் தான் தாவாவை எடுத்துக் கொண்டு ஸ்டேயை வெகேட் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய சர்க்கார் சட்டம் போட்டிருக்கிறார்கள். சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பெரிய முதலாளிகள் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அதற்காக மத்திய சர்க்கார்



தான் இதில் உதவி செய்ய வேண்டும் என்று இருக்க முடியாது. தினவு எடுத்தவன் தான் சொறிந்துக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்கார்தான் செய்துகொடுக்க வேண்டும் என்று சும்மா இருந்துவிடமுடியாது. நம்முடைய மாநிலத்திலுள்ள தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு அதற்காக வக்காலத்து வாங்கி, நடவடிக்கை எடுத்து ஸ்டே ஆர்டரை வெகேட் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும், மத்திய சர்க்கார் இதற்கும் முன்வந்து செய்ய வேண்டும் என்று இருந்துவிட்டால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நன்மை செய்தவர்கள் ஆகமாட்டோம் என்பதைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். கோபால்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய நிலையைப்பற்றி நல்லதோர் முடிவு எடுக்கக் கொண்டுவந்த இந்த மானியத்தை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச முற்படுகிறேன். உலகத்திலே மிகவும் முக்கியமானதும், அவசியமானதும் நாட்டு மக்கள் எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதும் இந்தத் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையாகும். நம்முடைய நாட்டிலே தொன்று தொட்டு பலநூற்றாண்டு காலமாக தொழிலாளிகள் தொழிலாளிகளாகவே இருக்கிறார்கள். முதலாளிகள் முதலாளிகளாகவே வளர்ந்துகொண்டே போகிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாம் கண்டறியவேண்டும். ஒரு முதலாளி பல லட்சக் கணக்கான ரூபாய் முதல்போட்டு அல்லது சர்க்காரிடம் கடன் வாங்கி ஒரு தொழிற்சாலையை அமைத்து, நடத்திக் கொண்டு வருவதாக வைத்துக்கொண்டால், தொழிலாளிகளுக்கு கொஞ்சம் கூலி உயர்த்திக் கொடுக்கவேண்டும் அல்லது போனஸ் தரவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விட்டால், வசதியுள்ள முதலாளி கதவை மூடிவிடுகிறார். அதோடு விட்டுவிடாமல் தொழிற்சாலையை மூடிவிட்டு; கோர்ட்டுக்குச் சென்று விடுகிறார். கோர்ட்டுக்குச் சென்றால், 2 வருடம் 3 வருடம் ஆகியும் தொழிலாளர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இந்த இருவர்களுக்கும் ஒரு நல்ல சுமுகமான உறவு உண்டாக்க சர்க்கார் முன்வந்து, இப்பொழுது தான் இரண்டு ஆண்டு காலமாக சில நல்ல அரிய காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

என்னுடைய தொகுதியில் ஒரு தொழிற்சாலை மூடப்பட்டது. நம்முடைய ஒப்பற்ற மாபெரும் தலைவர் பேரறிஞர் மறைந்த அண்ணா அவர்கள், உடல் நலம் சரியில்லாத நேரத்திலும் கூட, ஒரு நாள் பூராவும் அந்த முதலாளியையும், தொழிலாளிகளையும் ஒன்றாக சேர்த்து வைத்து, தகராறைத் தீர்க்க வழிவகை செய்த தலைவர் ஆவார். பல ஆண்டு காலமாக நம்முடைய தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டே வருகிறார்கள். குறிப்பாக நான் ஒன்று சொல்கிறேன். நம்முடைய நாட்டுத் தொழிலாளிகளுக்கும் மேல்நாட்டுத்தொழிலாளிகளுக்கும் வேறுபாடு, வித்தியாசம் உண்டு. மேல் நாட்டுத் தொழிலாளர்கள் நல்ல வசதியோடு நல்ல உடையில் காரில் வந்து இறங்கி, தங்களுடைய உடைகளை களைந்துவிட்டு, மாற்று உடை அணிந்து தொழிற்சாலையில் வேலை செய்துவிட்டு, திரும்பவும் தங்களுடைய உடைகளை அணிந்துகொண்டு காரில் வீட்டிற்குச் செல்கிறார்கள். அந்த சர்க்கார் அந்த நாட்டு மக்களுக்கு இப்படி நல்லதோர் சலுகையை செய்து தந்திருக்கிறார்கள். நமது நாட்டிலோ தொழிலாளிகள் நல்ல உடை அணிந்து தொழிற்சாலைக்குச் சென்றால், மறு நாள் அந்தத் தொழிலாளி வேலைக்கு வர முடியாது. அவனுக்கு வேலை கிடையாது. என் தொழிலாளி இப்படி நல்ல உடை உடுத்துக்கொண்டு வருகிறான் என்ற பொறாமை தான் காரணம். ஆகவே, மேல்நாட்டிலுள்ள தொழிலாளிகளுக்கும், நம் நாட்டுத் தொழிலாளிகளுக்கும் வேறுபாடு, வித்தியாசம் உண்டு.

குறிப்பாக, நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த 20 ஆண்டுக் காலமாக ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் சர்க்கார் பெரும்பாலான கட்டிடங்களைக் கட்டுவதற்கு உறுதுணையாக இருந்த கற்சுவர்களையெல்லாம் உருவாக்கியது என்னுடைய தொகுதியில் உள்ள தொழிலாளி

[திரு. எம். கோபால்] [1969 மார்ச் 25

மக்கள் தான். ஆனால் செங்கல் கல்லுக்கு கண்டிரோல் கொண்டுவந்தவர்கள் அந்தக் காலத்திலுள்ள காங்கிரஸ் சர்க்கார். என்னவோ தெரியவில்லை, அந்தத் தொழிலாளிகளுக்கு கட்டண உயர்வோ அல்லது கட்டண கண்டிரோலோ கொண்டுவர மறந்துவிட்டார்கள். ஆகாயத்தையே வீடாகவும், பூமியையே பாயாகவும் கருதி படுத்துறங்கும் தொழிலாளி மக்கள் 6 மாதம் உழைக்கிறார்கள், 6 மாதம் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக நான் ஒன்று சொல்கிறேன். அண்மையில் சென்னைக்கு 5 மைல்களுக்கு அப்பால் பெரும்பாலும் எல்லா சேம்பர்களும் என் தொகுதியில் தான் இருக்கின்றன. அங்கே தொழிலாளி மக்கள் வாழ்வதற்கு வழி கிடையாது. இன்றைக்கு ஒரு முதலாளி ஒரு லட்சம் ரூபாய் முதல் போட்டு ஒரு சேம்பர் வைத்து நடத்தினால், 5 ஆண்டுக்குள் சுமார் ரூ. 5 லட்சம் அல்லது 10 லட்சம் பொறுமான முதலாளியாக ஆகிவிடுகிறார். ஆனால், கல்லைச் சுடும் தொழிலாளி, கல்லை அடுக்கும் தொழிலாளி அப்படியே தொழிலாளியாகவே இருக்கிறான். உண்ண உணவு கிடையாது. இருக்க இடம் கிடையாது, உடுக்க உடை கிடையாது. இதற்கெல்லாம் நாம் காரணம் கண்டறிய வேண்டும்.

மற்றொன்றும் சொல்கிறேன். சென்னை மாநகராட்சியில் 5 ஆண்டுகளாக, 10 ஆண்டுகளாக காஷுவல் லேபராக பணிபுரிந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். லேபர் ஆபீசருக்குத் தெரியும். அவரே ஆணையாளராக இருந்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட நிரந்தரமற்ற தொழிலாளர்களை நிர்ணயம் ஆக்குவதற்கு ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும். 2 ஆண்டுகளோ, 3 ஆண்டுகளோ நிரந்தரமற்ற தொழிலாளர்களாக இருக்க வேண்டும், பிறகு 3 ஆண்டுக்கு மேற்பட்டு அவர்களை நிரந்தரமான தொழிலாளர்களாக மாற்ற வேண்டும் என்பதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். ஏனோ தானோ என்று பல ஆண்டுகாலமாக முன்பு ஆண்டு வந்த சர்க்கார் இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். இப்பொழுது வந்திருக்கும் மக்கள் சர்க்கார் இதைக் கண்காணித்து, அந்தத் தொழிலாளர்களுக்கு சட்டம் கொண்டுவந்து அவர்கள் வேலையை நிர்ணயம் செய்ய வழிவகை செய்ய வேண்டும். அதே போலத் தான் மின் துறையிலும் பல தொழிலாளர்கள் இருக்கிறார்கள். சுமார் 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் என்று நினைக்கிறேன், அந்தத் தொழிலாளர்கள் இன்னும் வேலையில் நிர்ணயம் ஆக்கப்படவில்லை. அருள் கூர்ந்து நமது சர்க்கார் 5 ஆண்டுகள் வேலை செய்த தொழிலாளர்களின் வேலையை நிர்ணயம் செய்வதற்கு சட்டம் கொண்டு வந்து, இந்தத் தொழிலாளி மக்களை வாழவைக்க வேண்டும்.

அதைப்போல பாதாள சாக்கடை வேலை செய்யும் தொழிலாளிகளின் வேலையும் நிர்ணயம் ஆக்கப்படாத நிலை இருக்கிறது. அந்தத் தொழிலாளிகள் உலகத்திலேயே யாரும் செய்ய முடியாத தொழிலைச் செய்கிறார்கள். அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் திடீரென்று இறந்துவிட்டால், அவர்கள் குடும்பத்திற்கு ஒன்றும் வழிவகை செய்யப்படவில்லை. ஆகவே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு டிபார்ட்மெண்டாக கண்டறிந்து, ஆங்காங்குள்ள தொழிலாளிகள் பற்றிய அறிக்கை வாங்கி அதைப் பரிசீலனை செய்து, எவ்வளவு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்து, அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் பல ஆண்டு காலமாக தொழிலாளிகள் வளர்வது இடையாது. அவர்கள் நலனைப்பற்றி கேட்பதற்கு ஆள் கிடையாது. அவர்கள் ஏனோ தானோ என்று விடப்பட்டிருக்கிறார்கள். சில தொழிலாளர்களை வோட்டுப் போடச் செய்யவேண்டுமென்று ஏதோ ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தத் தொழிலாளர்களிடம் சென்று அவர்களை கைப்பற்றுகிறார்கள். அவர்களைச் கைப்பற்றி அவர்களை வாழ விடுவதும் இல்லை, சாகவிடுவதுமில்லை. அதைப் போல இல்லாமல், மக்கள் சர்க்கார் நன்றாக ஆலோசித்துப் பரிசீலனை செய்து, எல்லாத் தொழிலாளர்களும் வாழ, வாழவைக்க நல்லதோர் திட்டத்தைக் கொண்டுவருமாறு கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.



1969 மார்ச் 25]

***திரு. சோ. அழகர்சாமி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் மானியத்தின் மீது நான் கொண்டுவந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். நம்முடைய நாட்டில் தொழிலாளிகளுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக குறிப்பாக பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் 20,000 பேர்கள் இன்றைக்கு வேலையில்லாமல், வாழ்வதற்கு எந்த விதமான வழியும் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கக் கூடிய நிலை இருக்கிறது. அதுமட்டிலும் அல்லாமல் பல தொழில்களில் வேலை செய்யக் கூடிய தொழிலாளிகள் தங்களுடைய வேலைக்கு உத்தரவாதம் இருக்கிறதா எதிர்காலத்தில் நிரந்தரமாக வேலை பாதுகாக்கப்படுமா என்ற பயத்தில் தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். காரணம் முதலாளிகளுக்குப் பொதுவாக தொழிலில் நெருக்கடி ஏற்பட்டால், அந்த நெருக்கடியை தொழிலாளிகளின் தலையில் சுமத்தி, அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் முதலாளிகள் செயல்படுகிறார்கள். லாபத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நான் எந்தவிதமான ஒரு நெருக்கடியையும் தொழிலாளிகள் தலையிலே சுமத்த முற்படுகிறார்கள். வேலைப் பளுவை அதிகரிக்க வேண்டும், அதிகமான வேலையை தொழிலாளர்கள் செய்ய வைக்க வேண்டும், லாபத்தைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கம் தான் அவர்களுக்கு.

பல மூடப்பட்ட மில்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்தும் கூட, அவர்கள் பாங்கிலிருந்து கடன் பெறுவதற்கு அரசாங்கம் உத்தரவாதம் கொடுத்தும்கூட, பல மில்கள் பணம் வாங்கியும் கூட, திறக்கப்படாமல் இருக்கிறது. பெரும்பகுதி தொழிலாளிகள் வாழ வழி இல்லாமல், ஊரை விட்டு வெளி இடங்களுக்குச் சென்று விட்டார்கள். இன்னும் சிலர் உலகத்தையே கூட விட்டுப் போயிருப்பார்கள். இந்த மாதிரி நெருக்கடி நிலை ஏற்பட்டு, அவர்கள் எவ்வளவு நாட்களுக்கு பொறுமையாக இருக்க முடியும் ? வேலையை இழந்து இரண்டு வருடங்களுக்கு மேலாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கவி பாரதி தாசன் அவர்கள் சொல்லியதுபோல,

"காணும் பொருளெல்லாம் தொழிலாளி செய்தான்
அவன் காணத்தகுந்தது வறுமையா
அவன் பூணத்தகுந்தது பொறுமையா."

என்று பொறுமையாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு காலம் தான் பொறுமையோடு இருக்க முடியும் ?

இன்றைக்கு "கேரோ" என்றால் அதை எப்படிப் பொறுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் பட்டினியாக இருக்கிறார்கள். அரசாங்கத்தின் சட்ட திட்டங்கள் தொழிலாளர்களுக்குப் பாதகமாகவும், முதலாளிகளுக்கு சாதகமாகவும் பயன்படுத்தப் படுகின்றன. வேலை இழந்த தொழிலாளி திரும்பப் பழி வாங்கப்படுகிறான். தொழில் கோர்ட்டு மூலமாக தொழில் கோர்ட்டில் நெடுநாளைக்கு இழுத்தடித்து, அவர்களைச் சோர்வு அடையச் செய்கிறார்கள். அரசு ஒன்று செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். தொழில் கோர்ட்டுக்குப்போய் வேலையிழந்த தொழிலாளி வழக்கு நடத்தி, அதிலே தீர்ப்புக் கிடைக்கும் வரையில், அவனுக்கு 50 சதவிகிதம் முதலாளி சம்பளத்தைக் கொடுக்கக் கூடிய நிலையில் சட்டத்தை அமைக்க வேண்டும். இன்றைக்கு தொழிலாளிகள் தங்களுக்காக இருக்கும் சட்டதிட்டங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால், அவர்களுக்கு பலமான தொழில் சங்கம் இருந்தால் தான் முடியும். ஒற்றுமையும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பயன் கிடைக்கிறது.

மதிப்பிற்குரிய திரு. காசிராமன் அவர்கள் சொன்னார்கள், பல தொழில் அதிபர்கள் இன்ஷூரன்ஸ் பிராவிடெண்ட் பண்ட் இவற்றிற்கான பணத்தைச் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்று. நான் பத்திரிகையில் படித்ததாக நினைவு, இந்த வகையில் கிட்டத்தட்ட தொழில் அதிபர்கள் ஒரு கோடி ரூபாய் வரை வருஷக்கணக்கில் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்று.

அரசு, அந்த இலாகா இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. வேறு மாநிலங்களைப் பார்த்தால், பம்பாய், மத்திய பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்களில், இப்படிப்பட்ட முதலாளிகள் மீது மோசடி செய்தார்கள் என்ற முறையில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு அந்த மாதிரி தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய பணங்களைக் கட்டாமல் இருப்பவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கத் தயங்கக் கூடாது. வேறு பல மாநிலங்களிலும் அப்படிச் செய்திருக்கிறார்கள்.

பெரும் பகுதித் தொழிலாளர்கள் ஈடுபட்டிருப்பது கைத்தறித் தொழில். அதிலே கிட்டத்தட்ட 20 லட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வேலை செய்யக் கூடியவர்களுக்கு நிரந்தரமான வேலை கிடையாது. கூலியும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்ய ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்ய இந்த அரசு முன்வரவேண்டும். கைநெசவு தொழிலாளிகளைப் பாதுகாக்க, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடத்தைப் போக்க, நெருக்கடியைப் போக்க, ரிசர்வ் பாங்கு விதித்திருக்கும் நிபந்தனைகளைப் போக்கி, தாராளமாக கடன் கொடுக்க முயற்சிகள் செய்து கைநெசவுத் தொழிலாளிகளைப் பாதுகாக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வேறு பல தொழில்களிலே, மத்திய சர்க்காருடைய முயற்சியின் மேல் "ஆடோமேஷன்" என்று சொல்லப்படுகின்ற அணு இயந்திரம் புகுத்தத் திட்டம் இட்டிருக்கிறார்கள். ஏற்கனவே மக்கள் தொழில் துறையில் வேலை வாய்ப்பில்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அந்தத் துறையில் நம்முடைய அரசு எந்த முறையிலேயும், முழு மூச்சாக எதிர்த்து, அணு இயந்திரத்தை இங்கே வரவிடாமல் தடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்ட ரீதியாகப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று விதி முறைகள் இருந்தாலும், 10 வருஷங்களுக்கு மேல் வேலை செய்த தொழிலாளிகளை பல தொழிற்சாலைகளிலும் பர்மனென்ட் ஆக்காமல், டெம்பரரியாகவே தாற்காலிகமாகவே வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் தொழில் இலாகா தீவிரமாகக் கவனித்து, ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு, இரண்டு வருஷமோ அல்லது வேறு வகையிலோ குறிப்பிட்டு, அப்படிப் பட்டவர்களை நிரந்தரமாக்க கட்டாயமாக முயற்சிகள் எடுக்க வேண்டும்.

அதே மாதிரி ஒரு தொழிலுக்கு ஒரு தொழில் சங்கம் என்ற அந்த முறையைக்கொண்டு வர அரசு உடனடியாக முயற்சி எடுத்து, அங்கே உள்ள எந்த ஒரு சங்கம் மெஜாரிடி தொழிலாளர்களுடைய ஆதரவைப் பெற்று இருக்கிறதோ, அந்தச் சங்கத்தை அந்தத் தொழிலுக்கு என்று அங்கீகரிக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

***திரு. இ. ராமசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு தொழில் அமைச்சர் கொண்டு வந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்ல முற்படுகிறேன். தொழில் மானியத்தை ஆதரித்துப் பேசுகின்ற இந்த நேரத்தில், தமிழகத்தில் இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்களுடைய நிலையைப் பற்றி இங்கே சொன்னால், அதன் மூலமாக அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பரிகாரம் கிடைக்கும் என்று, அந்த முறையில் என்னுடைய கருத்துக்களைப் பேச முற்படுகிறேன்.

தமிழகத்தில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வால்பாறை தேயிலைத் தோட்டங்களிலும், நீலகிரி தேயிலைத் தோட்டங்களிலும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு தினக் கூலி ஆண்களுக்கு ரூ. 2–48 காசும், பெண்களுக்கு ரூ. 2–02 காசும் கிடைக்கின்றன. ஆனால், அந்தக் கூலி அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்குப் போதுமா என்றால், இன்றைக்கு இருக்கும் விலைவாசி ஏற்றத்திற்கு அது போதாது என்றுதான் சொல்ல முடியும். ஆனால்,



அண்டை மாநிலமான கேரளத்தில், தோட்டத் தொழிலாளிகள் கடந்த ஆண்டுக் கடைசியில் கூலி போதாது என்று ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தி, கால வரையின்றி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, அதன் விளைவாக ஆண்களுக்கு ரூ. 3·50-ம், பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 3-ம் கொடுக்கலாம் என்று சம்பளப் போர்டுக்கு கேரள அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால், தமிழகத்தில் அந்த கேரள எல்லை ஓரத்தில் இருக்கும் தோட்டப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களிடையே போராட்டம் என்ற அந்த தொத்துநோய் நம்முடைய நாட்டில் பரவாமல் இருக்கும் வண்ணம், இங்கே உள்ள தோட்ட தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயத்தை உடனடியாக அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, ஓரளவிற்கு கூலியை உயர்த்திக்கொடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு வேடிக்கை, ஊட்டிப் பகுதியில் கொழுந்து பறிக்கும் தொழிலாளிக்கு ஒரு கிலோவிற்கு 9 காசிலிருந்து, 15 காசு வரையில் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் வால்பாறையில் பறிக்கின்ற கொழுந்துத் தொழிலாளிக்கு 6½ காசுதான் கொடுக்கப்படுகிறது. தினக் கூலியில் மாறுபாடு கிடையாது. ஆனால் கொழுந்துக்கு மட்டும் அங்கே 9 லிருந்து 15 வரையில் இருக்கும் போது, வால்பாறையில் மட்டும் 6½ காசு மட்டுமே கிடைக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வைப் போக்கி ஊட்டியில் கொடுக்கும் அளவிற்கு வால்பாறையிலும் கொழுந்துக் கூலியைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்று. தோட்டத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற பெண் தொழிலாளிகளுக்கு பிரசவ கால சகாயத் தொகை கொடுக்கப்படுகிறது. ஒரு பெண் குழந்தை எடுத்தால், சகாயத் தொகை ரூ. 63 கொடுத்தார்கள். இப்பொழுது நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஒரு பெண் குழந்தை எடுத்தால், பேரு கால சகாயத் தொகையாக, அவர்கள் வேலை செய்கின்ற வேலையின் அடிப்படையில், கடந்த காலம் வாங்குகின்ற கூலியின் அடிப்படையில், 84 நாட்களின் சம்பளத்தைக் கணக்கிட்டுக்கொடுக்கப்படவேண்டும். 12 வாரங்களுக்கு பேரு கால சகாய உதவி கொடுக்கலாம் என்று சட்டத்திலும், விதி முறைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தோட்ட மானேஜ்மென்டார் 12 வாரம் என்பதை, அவர்கள் வாரத்திற்கு ஆறு நாட்கள் தான் என்று கணக்கு எடுத்து, 72 நாட்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். அதைத் தோட்ட தொழிற்சங்கங்கள் ஆட்சேபித்திருக்கின்றன. நம்முடைய அரசுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், புகார் செய்ததற்குப் பிறகு, அரசாங்க உத்தரவு பிரதம ப்ளான்டேஷன் இன்ஸ்பெக்டர் மூலமாக கொடுக்கப்பட்டு, வாரத்திற்கு ஏழு நாட்கள் என்றுதான் கணக்கிடப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும், அந்த தோட்ட முதலாளிகள் அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்கள். எனவே அந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு அமுல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்று, 1968 ஆண்டிற்கான போனஸ் பற்றி இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

1962 பிப்ரவரி 20-ல் செய்து கொண்ட ஓய்வுகால சகாய நிதி ஒப்பந்தம் 1967 பிப்ரவரியுடன் முடிந்துவிட்டது. மறு ஒப்பந்தம் செய்துகொள்ளும் முயற்சியில் தொழிற் சங்கத் தலைவர்கள் ஈடுபட்டு கோரிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மறு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும் என்று தொழிற் சங்கம் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறது. இது வரை எந்த விதமான பதிலும் இல்லை யென்று கூறப்படுகிறது. 1968-ம் ஆண்டுக்கான போனஸ் பிரச்சினை பற்றியும், ஓய்வுகால மறு ஒப்பந்தம் பற்றியும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னென்று. தொழிலாளர்களின் பிராவிடன்ட் ஃபண்ட் நிதியிலிருந்து தொழிலாளர்கள் தங்களுடைய பிள்ளைகளின் கல்விக்காகவும், மற்றும் வீடு கட்டுவது போன்ற இன்றியமையாத செலவுக்காக கடன் பெறலாம் என்று சட்டத்தில் இருந்தாலும் கூட, அதிலிருந்து எந்த ஒரு தொழிலாளியும் கடன் பெற்றதாகத் தெரியவில்லை. தொழிலாளர்கள் தங்களுடைய பிராவிடன்ட் ஃபண்ட் நிதியிலிருந்து கடன் பெறக் கூடிய அளவிற்குச் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

இந்த மன்றத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தோட்டப் பகுதிகளில் மானேஜ்மெண்டார் வேலைப் பளுவை அதிகப்படுத்துகிறார்கள். எக்கருக்கு இத்தனை ஆட்கள் என்று சொன்னாலும், அதைப் பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுத்துச் சொன்னாலும், அதை மதிக்காமல், "நாங்கள் விரும்பினால் ஆட்களைச் சேர்த்துக் கொள்வோம், நாங்கள் விரும்பாவிட்டால் ஆட்களை நிறுத்திவிடுவோம், அது எங்கள் விருப்பம்" என்று சொல்லி, வேலைப் பளுவை தொழிலாளர் மத்தியில் சுமத்துகிறார்கள். ஆகவே, அரசு எக்கருக்கு இத்தனை ஆட்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தி, நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு சக தொழிலாளி இறந்துவிட்டால், அந்தச் சவ ஊர்வலத்தில் அந்தத் தொழிலாளர்கள் கலந்து கொள்ள முடியாது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கோவை மாவட்டம், பச்சை மலைத் தோட்டத்தில் ஒரு தொழிலாளி செத்து விட்டான். அவனுடைய சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டதற்காக 18 நாட்கள் சம்பளத்தை ஆயிரம் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்டிருந்தது. சவ அடக்கத்தில் கலந்துகொள்வது தவறு என்று சொல்லி, 4 நாட்கள், 7 நாட்கள், 14 நாட்கள், 20 நாட்கள் என்ற அளவில் பல்வேறு தோட்டங்களில் சம்பளம் பிடிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளி தன்னுடைய சொந்த ஊரை விட்டு, பிழைக்க, தேயிலைத் தோட்டத்திற்கு வந்த இடத்தில் இறந்துவிட்டான் என்ருல், அவனுடைய சவ ஊர்வலத்திலே தொழிலாளர்கள் கலந்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது. இதன் காரணமாக பச்சைமலைத் தோட்டம் மூடப்பட்டது. பிறகு டிப்டி கமிஷனர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டதன் பேரில் மீண்டும் திறக்கப்பட்டது. இந்தப் பிரச்சினை கோர்ட்டுக்கு விடப்பட வேண்டும். அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் இதில் நடவடிக்கை எடுத்து, இதை கோர்ட்டுக்கு விட்டால், கோர்ட்டின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள தொழிலாளர்கள் தயாராக இருக்கிருர்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை கோர்ட்டுக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் தோட்ட தொழிலாளர்கள் பிழைக்க வழி இல்லாமல்தான் தேயிலைத் தோட்டத்திற்குச் சென்றிருக்கிருர்கள். ஆகவே அவர்களுடைய வாழ்வுக்கு ஒரு நல்ல திட்டத்தை அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். மற்றும் குடியிருப்பு சம்பந்தமாக புறம்போக்கு நிலங்களில் ஓய்வு பெருகின்றவர்கள் நல்வாழ்க்கை நடத்துவதற்கும், வீடுகட்டிக்கொள்வதற்கும் ஒதுக்கப்பட்ட மானியத்திலிருந்து சகாயமாகக் கொடுத்தாலும் சரி, நீண்ட காலத் தவணையாகக் கொடுத்தாலும் சரி, உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

* **திரு. கே. என். குமாரசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மானியக் கோரிக்கையின் பேரில் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். தேசத்தினுடைய தொழில் உற்பத்தியிலே ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, தனியார் துறையும், பொதுத் துறையும் நன்ருக இயங்குகின்ற நிலைமையிலே தொழிலாளர்களுக்கு வாழ்க்கை வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்று





பார்த்தால், தொழிலாளர்களுடைய நிலைமை மிகவும் கீழான நிலையில் இன்றைக்கு இருந்து வருகிறது. கடந்த பல வருடங்களாக தொழில் தகராறுகள் சட்டங்கள் மூலமாகவும், தொழில் சமரச அதிகாரிகள் மூலமாகவும் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருந்தாலும்கூட, இன்னும் முழுமையான அளவிற்குத் தீர்க்கப்படவில்லை யென்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஏதோ சில வருடங்களில் தொழில் தகராறுகள் சமரசத்தின் காரணமாக கொஞ்சம் அதிகமாக தீர்க்கப்பட்டிருக்கலாம். உண்மை நிலவரம் என்னவென்று பார்த்தால், எப்பொழுது பார்த்தாலும் தொழில் தகராறு காரணமாக தேசத்தினுடைய தொழில் நஷ்டம் ஏற்படுவதில் அதிகமாகவே இருந்து வருகிறது. தொழிலாளர்களும் சம்பளம் இழக்கப்பட்டிருக்கிருர்கள். மேலும் அரசாங்கத்திற்கு வருகின்ற வரிகள் வராமல் நஷ்டம் ஏற்பட்டுப் போய் இருக்கிறது. அடுத்த படியாக தகராறுகள் முற்றுவதன் காரணமாக தொழில் நஷ்டம் ஏற்படுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். சமரச அதிகாரிகளுக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டு, எது சரியானது என்பதைக் கண்டு அமல்படுத்துகின்ற முழு அதிகாரம் இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஆலைகளை நடத்துகின்ற முதலாளிகள் தொழில் தகராறு சம்பந்தமான பேச்சு வார்த்தைக்கு முன் வருவதில்லை. அங்கங்கே இருக்கும் வெல்பேர் ஆபீசர் என்று சொல்லக் கூடிய சமரச அதிகாரிகளைப் பேச்சுவார்த்தைக்கு முதலாளிகள் அனுப்பி வைக்கிருர்கள். அவர்கள் பிரச்னையை முதலில் ஏற்றுக் கொண்டாலும், பின்னல் மறுக்கிருர்கள். இன்னும் சொல்லப் போனல் முதலாளிகள் தங்களுக்கு சாதகமாக இருந்தால் தான் ஏற்கிருர்கள். இல்லையானல், சமரச அதிகாரிகள் நடத்தும் பேச்சுவார்த்தை. தங்களை கட்டுப் படுத்தாது என்று சொல்லுவார்கள் தொழிலாளர் நலனை முன்னிட்டு எந்தப் பிரச்சினையையும் அவர்கள் பேசுவது கிடையாது. முதலாளிகள் எல்லாம் ராஜாக்கள். அவர்கள் என்ன சொல்கிருர்களோ அதைத் தான் அந்த அதிகாரிகள் செய்ய வேண்டுமே தவிர, தொழிலாளர் நலனுக்காக ஒன்றையும் செய்யும் நிலை இருக்காது. அதிகமாக அதிகாரிகள் கேட்டால் கோர்ட்டுக்குப் போகிறேன் என்று சொல்கிருர்கள். முதலாளிகளின் மத்தியில் அந்த மாதிரியான மனப்பான்மை வளர்ந்துகொண்டிருக்கிறது. அந்த வளர்ச்சி தேசத்திற்கும் தொழிலுக்கும் பயன்படுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு தேசத்தின் தொழிலாளர்களை மதிக்கின்ற தன்மையிலே கூட கோளாறு இருப்பதன் காரணமாக தொழில் தகராறு பரவி யிருக்கிறது. 1967-ம் ஆண்டிலே அதிகப்பட்டு, 1968–லே குறைந்திருக்கிறது என்று கூறினர்கள். எந்த அடிப்படையில் என்று கேட்டால் ஒரு தொழிலாளி ஒரு மாதம் வேலை செய்து சம்பளம் கேட்டால், குறிப்பிட்ட 7-ம் தேதி, 10-ம் தேதி கொடுக்கக் வேண்டிய சம்பளம் கேட்டால் இப்போது இல்லை, 20-ம் தேதி கொடுக்கிறேன் என்று சொல்கிருர்கள். ஒரு மாதம் பாடுபட்ட தொழிலாளிக்கு சம்பளம் கிடைப்பதில்லை. சட்டம் இருக்கிறது. அதை நாடிப் போக வேண்டுமென்ருல் அவனிடம் பணம் இல்லை. அப்படியே போனலும் ஒரு பத்து ரூபாய் அபராதம் முதலாளிக்கு விழும். இன்னும் அதிகமாக கேட்டால் ஆலையை இழுத்துப் பூட்டி விடுவேன் என்று அவர்களிடமிருந்து பதில் கிடைக்கின்றது ஏழை தொழிலாளர்களை பாதுகாக்க முடியாத நிலையிலே, அதிகாரிகளாலும், அரசாங்கத்தாலும் பாதுகாக்க முடியாத நிலையிலே சட்டத்தில் கோளாறு, வழக்கமாக வந்த பழைய மரபுகள் புறக்கணிக்கப்படுகின்றன. தொழிலில் லாபம் அடைந்தால் தொழிலாளிக்கு சம்பளம் உண்டு, வகுத்த சட்டங்கள் உண்டு, உடன்பாடு காண்கின்ற சட்டங்கள் உண்டு. லாபம் வந்தால் தான் இத்தனையும் உண்டு. தொழில் நஷ்டம் அடைந்தால் தொழிலாளி பெற்ற உரிமைகள் அத்தனையும் புறக்கணிக்க முயலுகிருர்கள். காரணம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். இன்ஷ்யூரன்ஸுக்கு பணம் கட்டவில்லை யென்ருல், வைத்திய வசதி தொழிலாளர்களுக்குக் கிடையாது என்று சொல்கிருர்கள். கோவாபரேடிவ் ஸ்டோருக்கு அந்தப் பணத்தைக் கட்டாததால் அவர்களுக்கு தானியம் கொடுப்பதில்லை. பிராவிடன்ட் ஃபண்ட் எவ்வளவு ரூபாய்

மானேஜ்மென்டாரிடம் இருக்கிறது. அரசு கட்டச் செய்யவில்லை. இவ்வளவையும் வைத்திருக்கிறார்கள், இத்தகைய நிலைமை என் ஏற்பட்டது என்று பரிசீலிக்கிறார்களா என்றால் இல்லை. நஷ்டம் வருகின்றது. இதெல்லாம் கட்ட முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள்? தொழிலாளர்கள் நீங்கள் வேலைப் பளுவை அதிகமாக்கிக் கொள்ள வேண்டும், அப்போது தான் லாபம் கிடைக்கும், 'செல்ஸ் டாக்ஸ், இன்கம் டாக்ஸ் எல்லாம் அதிகமாகப் போய்விட்டது. நீங்கள் நினைக்கின்ற உரிமை கொடுப்பதற்கு இல்லை" என்று சொல்கிறார்கள். லாபம் அதிகமாக வந்துகொண்டிருந்த போது என்ன செய்தார்கள் வருடா வருடம் தொழிலுக்கு க்ஷேமநல நிதி என்று ஒரு நிதி உண்டு. அந் நிதியை மூலதனமாக ஆக்கி அதற்கும் வட்டி எடுத்து மில்லின் லாபத்தைக் குறைத்தார்கள். 1949-ம் ஆண்டிலிருந்தே ஆலைகளுக்குச் சிக்கல் ஏற்பட்டுவிட்டது. தொழிலாளர்களுடைய பிராவிடண்ட் ஃபண்ட் நிதி சுரண்டப்பட்டிருக்கிறது அதன் பேரில் நடவடிக்கை ஏதாவது உண்டா? நடவடிக்கை எடுக்க முடியுமா? மாநில சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது. லாபம் வருகிற காலத்தில் முதலாளிகள் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். நட்டம் வருகிற காலத்தில் தொழிலாளர்கள் தலைமேல் தான் கையை வைப்பார்கள். இந்த நிலைமையை இப்படியே விட்டு வைத்திருக்கலாமா? சிந்திக்க வேண்டும்.

இன்று நாட்டில் இருக்கிற நிலைமை என்ன? உழைப்பவர்களுக்கு மதிப்பு கிடையாது. வெறும் ப்ரஸ்டிஜுக்காக — போலி கௌரவத்திற்காக போராட்டங்கள் நடக்கின்றன. என்றால் தொழிலாளர்கள் எப்படி வாழ்வது? முதலாளிகள் சொல்கிறார்கள் எங்களுக்குக் கட்டுப்பட்டுத் தான் வாழவேண்டும். இல்லையானால், நாங்கள் எப்படி கௌரவத்தை விட்டு வாழ்வது என்று கூறுகிறார்கள்? ஒரு தொழிலாளிக்கு சட்டப்படி இன்ன வேலை செய்ய வேண்டும் என்று இருக்கிறது. தான் முதலாளி என்பதற்காக தொழிலாளியிடம் நீ இன்ன வேலையைச் செய் என்கிறபோது சட்டத்தில் எனக்குள்ள வேலையைச் செய்கிறேன், அது என் வேலை இல்லை என்றால் என்ன தவறு? அதற்காக உடனே முதலாளிகள் "நான் சொல்வதை மீறினால் டிஸ்மிஸ் என்று சொல்லி அவனை டிஸ்மிஸ் செய்கிறார்கள். இது நியாயமா? தான் சொல்கிற வேலையைச் செய்யவில்லை என்றால் டிஸ்மிஸ். தொழிற்சாலையில் வெல்பேர் ஆபீசர் என்று இருக்கிறார். அவர் முதலாளி செய்ததை சரி என்று விடுகிறார். அவரும் ஒப்புக்கொண்டுவிட்டால், பூர்வாங்க விசாரணை முடிந்துவிட்டதாகவே ஆகிவிடுகிறது. இது நியாயமான விசாரணைதானா? இன்றைக்கு பாக்டரிகள் இது போன்று தான் ஒரு தலைப்பட்சமாக விசாரணை நடக்கிறது. அவன் போய் கோர்ட்டில் வாதாடி வெற்றி பெறுவது என்றால் மூன்று வருஷமோ நான்கு வருஷமோ ஆகிவிடும், சொல்ல முடியாது. ஒரு சின்ன உதாரணம். மேட்டுப்பாளையத்தில் ஒரு வழக்கு 10 வருஷகாலமாக நடந்துகொண்டிருக்கிறது. சிந்தித்துப் பாருங்கள். இந்த நிலையை மாற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்தாக வேண்டும்.

மூடப்பட்ட ஆலைகளைத் திறக்க ஒரு கமிட்டி அமைத்து 12 ஆலைகள் பற்றி அந்த ரிப்போர்ட் கிடைத்திருக்கிறது. மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட் வந்த பிறகு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். இப்போது தேசிய கார்ப்பரேஷன் என்று நடத்தி நன்றாக நடக்கக்கூடிய ஒன்றினோடு மோசமான ஒன்றைச் சேர்த்து மூடப்பட்ட ஆலைகள் திறக்கப்படுவதற்கு முயற்சி செய்வதாக இருக்கிறது. இருக்கிற சிக்கலைத் தீர்க்க உடனடியாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால் அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுங்கள். இன்று ஆலை முதலாளிகள் நம்முடன் ஒத்துழைக்க முன் வருவதில்லை.

பல்லடத்தில் லட்சுமணா மில்லில் இருக்கிற 5 சைபிடுகள் கூடாது என்று சொன்னால் உடனே மூடிவிட்டார்கள். ஐந்து சைபிடு கட்டினால் தான் ஆலையைத் திறப்பேன் என்று சொல்லி விட்டார்கள்.



அவர்கள் ஆலைகளில் போட்ட ஒரு குறிப்பிட்ட மூலதனத்திற்கு மேலே ஒரு மடங்கு, இரண்டு மடங்கு அல்ல ஐந்து பத்து மடங்கு சம்பாதித்த பிறகும் தாங்கள் மூலதனம் போட்டதனாலே உரிமை இருக்கிறது என்றால் அவர்கள் போட்ட மூலதனம் பத்து மடங்காகப் பெருக தங்கள் உழைப்பை நல்கிய தொழிலாளர்களுக்கு அதில் எவ்வித உரிமையும் இல்லை என்ற நிலை இருக்கக்கூடாது. போட்ட மூலதனத்திற்கு மேலாக பதினைந்து, இருபது மடங்கு சம்பாதித்தாகி விட்டது என்றால் அந்த ஆலைகளில் உழைப்பையே பங்கு மூலதனமாக மாற்றுவதற்கு தொழிலாளர்களுக்கு உரிமை அளிக்கும் நிலையை சட்டபூர்வமாக நாம் கொண்டுவந்தாக வேண்டும். அப்போது தான் தேசத்தில் உற்பத்தி பெருகும், சமரச அதிகாரிகள் எடுக்கிற முயற்சிக்குப் பலன் கிடைக்கும், தொழில் கோர்ட்டுகள் சாதகமான தீர்ப்பை வழங்கும். இன்றைக்கு பூர்வாங்க விசாரணை நடத்தப்பட்டிருந்தாலே போதும் என்கிற அளவில் தான் தொழில் கோர்ட்டுகள் தீர்ப்பு இருக்கின்றன. இந்த நிலையை மாற்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரே நாளிலே மாற்றவேண்டுமென்று சொல்லவில்லை. இன்றைக்கு தொழிலாளர் சமூகம் நிலைகுலைந்து போய் இருக்கிறது . . .

மணியடிக்கப்பட்டது.

***திரு. மு. சின்னசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்கள் மன்றத்தில் கொடுத்திருக்கும் மானியத்தை ஆதரித்து இதன் அடிப்படையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்த மட்டிலும் இந்த மன்றத்திலே நடந்த விவாதத்தில் அடிப்படையில் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம், அல்லது ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்ற பிரச்சினையில் என்னுடைய நேரத்தை எடுத்துக்கொள்வதில் மெத்த ஆசைப்படுகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இந்த நாடு சுதந்திரம் பெற்ற பிறகு தொழிற்சங்க வளர்ச்சியானது 1955-ம் ஆண்டிற்குப் பிறகு தொழிற்சங்க அமைப்பில் சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது. என்பதைத் தான் பார்க்கிறேன். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொன்னால் அந்தத் தொழிற்சாலையில் இருக்கிற தொழிலாளர்கள் எந்த அமைப்புக்கு யார் அதிகம் வாக்குக் கொடுக்கிறார்களோ அந்த அமைப்பையே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியன் குறிப்பிட்டார்கள். இருதய பூர்வமாக அந்தக் கருத்து நியாயந்தானா என்று கேள்வி எழுப்ப ஆசைப்படுகிறேன். இந்திய துணைக் கண்டத்தின் அரசியல் வரலாற்றை பார்த்து, பங்குபெற்ற, நான் ஒரு பிரச்சினையில் தெளிவான முடிவுக்கு இந்த நாடும், மன்றமும் வந்தாகவேண்டும் என்று கருதுகிறேன். இவ்வளவு பெரிய கட்டிடம் மோசமாகச் சேதம் அடைந்திருக்கிற நேரத்திலே ஒரே ஒரு வெளிப்படியை மாத்திரம் சீர்திருத்தம் செய்துவிடலாம் என்பது உண்மைக்கு முரணான செயலாகும்.

தொழிலாளர் பிரச்சினை என்பது ஒரு சமூக நீதி, தொழிலாளர் பிரச்சினை இந்த நாட்டின் அரசியல் தத்துவம், தொழிலாளர் பிரச்சினை இந்த நாட்டின் பொருளாதாரத் தத்துவம், இத்தனையையும் உள்ளடக்கி இந்த பிரச்சினையை பார்க்கவேண்டுமே தவிர பத்து லட்சம் தொழிலாளர்களுடைய பிரச்சினை இது என்று மட்டும் இந்திய துணைக் கண்டத்தில் பார்க்கவும் முடியாது. பார்ப்பது அரசியல் விஞ்ஞானத்திற்கு விரோதமானதும் ஆகும். எனவே தொழிலாளர் பிரச்சினை என்று சொன்னால் தொழிற்சாலைக்கு அப்பால், புறத்து வாழ்வில் இருக்கிற அரசியல்வாதி ஒருவரது தலைமையின் கீழே தான் இயங்கியாக வேண்டும். ஒரு தொழிற்சாலைக்கு இன்றைய இந்தியாவிலே நிச்சயமாக தொழிற்சாலைக்குள் வேலை செய்யும் ஒரு தொழிலாளி ஒருவரே தலைமை தாங்கும் நிலை ஏற்படவில்லை. ஒரு அரசியல்வாதி ஒரு தொழிற்சாலையில் ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கு

முன் வந்து வேலை செய்தாக வேண்டியிருக்கிறது. உதாரணமாக கோவை மாவட்டம் பஞ்சாலை தொழிற்சங்கத்தை அமைக்க எத்தனையோ நாட்கள் தொடர்ந்து பாடுபட்டு, என் நினைவு உதவி செய்தால் மறைந்த மாபெரும் தலைவர் எம். ஜி. ராமசாமியின் முயற்சியால், பஞ்சாலை தொழிற்சங்க ஸ்தாபனம் உருவாயிற்று. அது ஒரு தேசிய ஸ்தாபனமாக, விடுதலைக்குத் தலைமை தாங்கும் ஸ்தாபனமாக, நல்ல மரபினைக் கொண்ட அரசியல்வாதிகள் அடங்கிய தாய்மை ஸ்தாபனமாகக் கோவையிலே இருந்து கொண்டிருந்தது. இன்றைக்கு அந்த ஸ்தாபனத்திலே பிரஜா சோஷலிஸ்ட்ஸ் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கோவையிலே தான் எத்தனை சங்கங்கள் ? அதற்கு அரசியல் கட்சிகள் காரணமா அல்லது அரசுப் பொறுப்பேற்றிருக்கிற ஆட்சி காரணமா என்பதை மனம் விட்டுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கோவை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம், கோவை ஜில்லா தேசியத் தொழிலாளர் சங்கம் என்று அரசியல் கட்சிகள் இடம் வகிக்கின்ற நிலைமையினைப் பார்க்கும்பொழுது ஒன்று, இரண்டு, மூன்றாக உடைந்து தொழிற்சங்கங்கள் இரண்டு, மூன்று என்ற அளவிலே ஒவ்வொரு இடத்திலேயும் இந்தியத் துணைக் கண்டத்திலே நாம் பார்க்கிறோம். என்னைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு, எந்தவிதமான கருத்துவேறுபாட்டிற்கும் இடமிலாமல் பரிபூரணமாக சோஷலிஸ அமைப்பிலே நம்பிக்கை கொண்டிருக்கின்ற அரசாகும். எனவே இடது புறம் போவதா அல்லது வலது புறம் போவதா என்ற நிலைமைக்கே இடமில்லை. நடுநிலைமையில் போகின்ற நிலையும் இல்லை. ஒரு சாலையிலே இடது புறம் போனால் பாதுகாப்பு இருக்கும். வலது புறம் போனால் பாதுகாப்பு இருக்கும். அப்படியில்லாமல் நடுநிலைமையிலே போனால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பது எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமனுக்குக் கூடத் தெரியும். எனவே திராவிட முன்னேற்றக் கழக அரசின் அரசியல் கொள்கை, திராவிட முன்னேற்றக் கழக அரசின் பொருளாதாரக் கொள் கொள்கை, திராவிட முன்னேற்றக் கழக அரசின் தொழிலாளர் கொள்கை, ஒரு பக்கம் போகின்ற அமைப்பே ஒழிய இரண்டு பக்கமுமோ அல்லது மத்தியிலோ போகக்கூடிய அமைப்பல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது இருக்கின்ற பிரச்சினை என்ன ?

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நம்முடைய பூர்வீக சன்மானம். அந்தச் சட்டத்தின் கூட்டிலே அதிகார வர்க்கம் அடங்கிக் கிடக்கிறது. ஒரு பிரச்சினையை எடுத்துக் கொண்டு ஒரு அதிகாரி என்ன செய்யலாம் என்று பார்க்கிற நேரத்தில் ஒரு பக்கம் இந்திய அரசியலமைப்புச் சட்டப் புத்தகமும் மற்றொரு பக்கம் தொழில் சட்டப் புத்தகமும் இருக்கின்றன, இரண்டிற்கும் இடையே உள்ள கைதிகளாக, கைதிகள் என்று சொன்னால் தவறாக இருக்கலாம், அடிமைகளாக இருக்கிறார்கள் என்று தான் சொல்லவேண்டும். அந்தக் கூட்டிலிருந்து விடுபட்டு என்றைக்கு அந்த அதிகாரத்தைக் கைப்பற்றுகிறோமோ அன்றைக்குத் தான் இந்தப் பிரச்னை முழுக்க முழுக்கத் தீர்க்கப்படுமே தவிர, அதற்கு முன்னால் செய்வதெல்லாம் தலை வலிக்கு மருந்து போடுவது போல் தான் இருக்கும். தொழிலாளர் அரசு என்று சொன்னால் முழுக்க முழுக்க உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமையாக்கி புதிதாக எல்லாம் செப்பனிடப்பட்ட நிலைமை வந்தால் தான் அதிலே ஒரு அடி எடுத்து வைத்ததாக இருக்கும். அப்படி அந்தக் கூட்டிலே இருந்து விடுபடாமல் அதிலிருந்துகொண்டே காரியங்களைச் செய்வோமானால் அது ஒரு அடிகூட எடுத்துவைக்கமுடியாத நிலைமையைத் தான் தோற்றுவித்துக்கொண்டிருக்கும். தோழமைக் கட்சியைச் சேர்ந்த தோழர் ஒருவர் தன்னுடைய குடும்பத்தையும் மற்ற எல்லாவற்றையும் இழந்துவிட்டு வெளியேறிய காட்சியைப் பார்த்து விட்டுத்தான் நான் இதைச் சொல்லுகிறேன்.



சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்பதை ஏற்றுக் கொண்டுள்ள மாநில அரசு மத்திய அரசை எதிர்பார்த்து, எதிர் பார்த்துக் காரியங்களைச் செய்வது வேடிக்கையாக இருக்கிறது. மாண்புமிகு காங்கிரஸ் நண்பர்கள் வருத்தப்படமாட்டார்கள் என்று நம்புகிறேன். பஞ்சாலைத் தொழில் நெருக்கடியைப் பற்றி அவர்கள் ஏதோ அங்கலாய்த்துக்கொண்டார்கள். நான் கிண்டல் செய்யவில்லை. உண்மையிலேயே அவர்களிடம் கேட்கிறேன். ஒரு முப்பது நாட்களுக்கு மத்திய சர்க்காரிலே இருக்கிற தொழில் அதிகாரத்தை எல்லாம் மாநில அரசுக்குக் கொடுத்துவிடும்படி டெல்லிப் பேரரசிடம் சொல்லுங்கள். அடுத்த 24 மணி நேரத்திலே கோவைப் பஞ்சாலைத் பிரச்னை தீரும். 1944-ம் ஆண்டு முதல் 1949-ம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுக்காலத்திற்கு ஒரு பொற்காலம் இருந்தது. அப்பொழுது ஐந்து லட்சம் மூலதனத்திலே தொழிற்சாலை ஆரம்பித்து 25 லட்சம் சம்பாதித்து விட்ட முதலாளிகள் அந்தக் கேபிடல் இன்வெஸ்ட்மெண்டை வேறு பகுதியில் போட்டு சமூகத்தின் விரோதிகளாக இருக்கிறார்கள். அந்த ஒரு மாதத்திற்குள்ளாக அவர்கள் எல்லாம் சிறையிலே போடப்படுவார்கள். அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். அப்பொழுது தான் இந்தப் பிரச்னை தீரும். அப்படியில்லாதவரை இப்படிப்பட்ட நாடகம் தான் பெரும்பாலும் இருக்கும். இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள இடது சாரிக் கூட்டங்களும் சோஷலிஸ சக்திகளும் நாமும் ஒருங்கிணைந்து ஒரு தெளிவான கண்ணோட்டத்தோடு 1972-லே டெல்லியிலே உட்கார்ந்து செய்யவேண்டிய காரியத்தைச் செய்தால் இந்தப் பிரச்னை தீரும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாடகம் நடத்துவதாகச் சொன்னார்கள். நாடகம் நடத்துவது அவரா ? வேறு யார் என்பதையெல்லாம் சொல்ல வேண்டும்.

**திரு. மு. சின்னசாமி :** நான் அரசியல் நாடகத்தைத்தான் குறிப்பிட்டேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாடகம் நடத்துவது என்பது பார்லிமண்டரி வேர்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அவர்கள் ங்களுக்கு எஜமானர்கள் அல்ல, அவர்களுக்குத்தான் எஜமானர்கள், னவே அவர்கள்தான் நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. மு. சின்னசாமி :** அரசியல் நாடகம் என்று சொன்னேன். அவர்கள் எங்களுக்கு எஜமானர்கள் அல்ல.

***திரு. சி. நஞ்சன் :** தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியை சேர்ந்தவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல், அவர்கள் சொந்த ஊரிலே இருப்பதற்கு வீடு இல்லாமல் இருக்கிறார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய குடும்பங்கள் அவதிப்படுகின்ற நிலைமைதான் இருக்கிறது. ஒரு குடும்பத்தில் 10 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் இரண்டு பேர்கள் அல்லது மூன்று பேர்கள்தான் வேலை செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. மற்றவர்களுக்கு வேலை இல்லை. இதற்கு காரணம் என்னவென்றால், ஒரு தோட்டத்தில் 400 ஏக்கர் என்று இருந்தால் ஒரு ஏக்கருக்கு மினிமம் இத்தனை ஆள் என்று பதிவு செய்துகொள்கிறார்கள். எனவே மற்றவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. இதற்கு ஒரு வழிவகை அரசாங்கம் செய்ய வேண்டும்.

நீலகிரிப் பகுதியிலே தேயிலைத் தோட்ட அதிபர்களிடத்தில் ஆயிரம் கணக்கில் வேஸ்ட் லேண்ட்ஸ் இருக்கின்றன. அந்த லேண்டை தொழிலாளர்களுடைய குடும்பத்திற்குக் கொடுத்தால் அதிலே அவர்கள் உணவு தானியங்கள் பயிர் செய்து நன்மையடைவார்கள் என்று நம்புகிறேன். இந்த விஷயத்திலே அரசாங்கம் முன் நின்று நல்ல ஒரு ஆதரவை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அமைதியாக நடக்கக்கூடிய தொழில் தேயிலைத் தோட்டத் தொழில் தான். அந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் கூடக் கிடைக்கவில்லை. ஒரு ஆண் தொழிலாளருக்கு 2·50 என்றும், பெண் தொழிலாளருக்கு 2·01 என்றும் கொடுக்கிறார்கள். இந்தப் பிரச்னையில் அரசாங்கம் ஈடுபட்டு, முடிவு எடுக்க வேண்டும். அண்டை மாநிலமான கேரளத்திலே 3.50 என்ற அளவிலே கொடுக்க வேண்டுமென்று வேஜ் போர்டுக்கு அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறார்கள். அதே போல் இந்த மாநிலத்திலும் சிபார்சு செய்ய வேண்டும். 3.50 என்ற அளவுக்கு இல்லாமல் குறைந்த பட்சம் கூலி 4.00 என்ற அளவிலே சிபார்சு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. லேபர் ஆக்ட்டைப் பார்க்கிற நேரத்திலே அவர்கள் இப்பொழுது வசிக்கக் கூடிய வீடுகள் சரியாக இல்லை என்பது என்னுடைய வாதம். பத்து சதுர அடி அகலத்தில் வீடு இருந்தால், 10, 15 பேர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அது சட்ட விரோதமான செயல். இந்தச் சட்ட விரோதகமான செயலைக் கண்டுபிடிப்பதற்கு பிளான்டேஷன் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அந்தந்த எஸ்டேட்டுகளிலே எப்படியெல்லாம் வீட்டு வசதி இருக்கிறது என்பதை ஆராய்ந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேயிலைத் தோட்டத்திலே இருக்கக்கூடிய சூப்பர்வைசர்கள், ஸ்கில்டு தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேயிலைத் தோட்டத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு உணவு தானிய விஷயத்தில் பற்றுக் குறையால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதி ரேஷன் அதாவது 1,200 கிராம் கொடுத்தால் அதிலே பாதி 600, 700 கிராம் என்ற அளவிலே கொடுததுக் கொண்டு வந்தார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை. இப்போது ஒரு வாரத்திற்கு 1200 கிராம் கொடுக்கிறார்கள். அதையும் சிறிது சிறிதாக வாரத்தில் இரண்டு மூன்று தடவையாகக் கொடுக்கிறார்கள். இதனால் தொழிலாளர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறைதான் சோத்துப் படி கொடுக்கிறார்கள். அந்த ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்கள் வாங்கிக்கொண்டால்தான் கஷ்டம் இல்லாமல் இருக்கும். அரசாங்கம் இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் ஒருவர் பிரசவ அலவன்ஸ் பற்றிச் சொன்னார்கள். நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் ஒரு பெண் தொழிலாளிக்கு பிரசவம் ஏற்பட்டால், ஆண் குழந்தைக்கு 5 ரூபாய் என்றும், பெண் குழந்தைக்கு 3 ரூபாய் என்றும் கொடுத்து வந்தார்கள். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு காங்கிரஸ் அரசாங்கம் தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திலே அக்கறைகொண்டிருந்ததன் காரணமகாப் படிப்படியாக அதை 63 ரூபாய் பிரசவ அலவன்ஸ் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. தொழிலாளர் பிரச்சினையிலே இந்த அரசாங்கம் நல்ல கவனத்தைச் செலுத்தி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், காப்பித் தோட்டத் தொழிலாளர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் நல்லதொரு திட்டத்தைத் தீட்டி இந்த அரசாங்கம் தொழிலாளர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பகுதியில் போக்கு வரத்து வசதி மிகக் குறைவாக இருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் ஒரு வாரத்தில் ஏழு நாட்கள் வேலை செய்துவிட்டு கடைசி நாளன்று சந்தைக்குச் செல்ல வேண்டுமென்றால், நல்ல பஸ் வசதி இல்லை. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு நல்ல பஸ் வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

தோட்டத்தொழிலாளர்களுக்கும் மானேஜ்மெண்டாருக்கும் இடையே நடக்கக் கூடிய சம்பவங்கள் வருந்தத்தக்க நிலைமையில் இருக்கின்றன. தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்வது, சஸ்பெண்ட் செய்வது என்குயரி செய்வது ஆகிய விஷயங்களில் தொழிலாளர்களுக்குக் கஷ்டமான நிலை இருக்கிறது. ஒரு தொழிலாளியை என்குயர் செய்யவேண்டுமென்றால், 15 மைல் 20 மைலுக்கு அப்பால் குறிப்பிட்ட நாளில் லேபர் ஆபீசரைச் சந்திக்க வேண்டுமென்ற உத்தரவை அனுப்புவார்கள். அந்தத் தொழிலாளி குறிப்பிட்ட அந்த நாளில் அவ்வளவு தொலைவு செல்வதற்கு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஒவ்வொரு லேபர் ஆபீசருக்கும் ஜீப் கொடுத்து அவர்கள் என்குயரி செய்வதற்கோ மற்றப்படி அவர்களுடைய நலனைக் கவனிப்பதற்கோ, அந்தந்த எஸ்டேட்டுகளுக்கே சென்று தொழிலாளர்களை விசாரிக்க கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மானேஜ்மெண்டார், தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் ஆகியோருடன் கலந்து பேசி முடிவெடுப்பதற்கு வசதியாக இருக்கும். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக்கும் இடையே சம்பளம் எவ்வளவோ மாறுபாடு இருக்கிறது. ஆகையால், இவர்களுக்கும் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓவாலி பகுதியில் இருக்கும் மானேஜ்மெண்ட் தங்களுக்குச் சொந்தமான பூமியில் விலை மதிக்கவொண்ணாத பல ஆயிரக் கணக்கான மரங்களை வெட்டி அந்தப் பணத்தை அக்கவுண்டில் வைக்காமல் கள்ள கணக்கில் வைத்திருக்கிறார்கள். அரசாங்கம் அந்தக் கணக்கை கண்டுபிடித்தால், அரசாங்கத்திற்கு வருமானம் வரும் என்று கருதுகிறேன். அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்......(மணி அடிக்கப்பட்டது).

**திரு. ஆலடி அருணா :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

புதிதாக கடந்த இரண்டாண்டுகளாகப் பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஏழை எளிய பாட்டாளி மக்கள், உழைக்கின்ற சமூகம் ஆகியோரின் பேராதரவோடு இந்த அரசாங்கத்தை நடத்திச் செல்லுகிறது என்பது நாடறிந்த உண்மை. இந்த அரசாங்கத்திற்குத் தொழிலாளர்களின் துணை இருக்கக் கூடாது, உழைப்பாளிகளின் உதவி இருக்கக்கூடாது, பாட்டாளிகளின் பக்கத் துணை இருக்கக் கூடாது என்பதிலே காழ்ப்புணர்ச்சி கொண்ட காங்கிரஸ் நண்பர்கள், இந்த அசாரங்கம் தொழிலாலர்களுக்கு எதிரானது, பாட்டாளிகளின் பக்கமே திரும்பாது என்ற அடிப்படையில் இந்த அரசாங்கத்திற்கு எதிராக தொழிலாளர்களைத் தூண்டிவிடும் நோக்கத்தோடு இன்றையதினம் பஞ்சாலைப் பிரச்சினையை மையமாக வைத்து அரசியல் இலாபத்தைப் பெற முயற்சிக்கிறார்கள்.

இன்றையதினம் தமிழகத்திலே மூடிக் கிடக்கிற ஆலைகளைக் குறித்து, அவற்றின் நிலைமை குறித்து, அவற்றைத் திறப்பதற்குத் தமிழக அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் குறித்து எல்லாம் ஏற்கனவே இந்த மாமன்றத்திலே முன்னாள் தொழிலாளர் நல அமைச்சரும், தொழில் அமைச்சரும், தெளிவான முறையில் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். மூடிக்கிடக்கும் ஆலைகளுக்குப் பொறுப்பாளி யார் ? ஆலைகளைத் திறக்க தமிழக அரசு என்ன வழிகளை ஏற்றுக்கொண்டது ? ஆலைகளைத் திறப்பதற்காக மின்சாரக் கட்டணத்திலே சலுகை அளிக்கத் தயாராக இருந்தது. அந்தத் தொழிலாளர்களின் துயரத்தைத் துடைக்க வேண்டுமென்ப

தற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் அமைச்சர்கள் தெளிவாக இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிற நிலையில் மாநில அரசு என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ, அவ்வளவையும் தரத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இத்தனை விளக்கத்திற்குப் பிறகும் காங்கிரஸ்காரர்கள் இந்த ஆலைகள் மூடிக் கிடப்பதற்கு மாநில சர்க்கார்தான் பொறுப்பாளி, ஏப்ரல் மாதம் 13-ம் தேதிக்குள் ஆலைகளைத் திறக்காவிட்டால் ஆர்ப்பாட்டம் செய்வோம், ஆலைகளைத் திறப்பதற்காக போராட்டம் நடத்துவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். மத்திய சர்க்காருடைய தவறுகளை, மத்திய சர்க்காருடைய கையாலாகாத்தனத்தைத் தமிழக சர்க்கார் சுட்டிக்காட்டி, தமிழக அரசைப் பொறுத்த வரை என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதையும் கூறிய பிறகு மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்கத் தைரியமற்றவர்களாக மாநில சர்க்கார்தான் பொறுப்பு என்ற முறையிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோவில் ஆண்டி என்பது போல மாநில சர்க்காரைத் திட்டிக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு அதற்கான விளக்கங்களைத் தெளிவாக வைத்திருக்கிறார்கள். ஆலைகள் திறக்கப்பட வேண்டுமென்ற நியாயத்தை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வளவையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய வாதத்தை, நம்முடைய நியாயத்தை காங்கிரஸ் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தூங்குபவனைத்தான் எழுப்ப முடியுமே தவிர, தூங்குபவனைப் போல் நடிப்பவனை எழுப்ப முடியாது.

காங்கிரஸ்காரர்கள் இந்தப் பிரச்னையைப் பக்க பலமாக வைத்து அரசியல் லாபத்தைப் பெற முடியுமா என்று பார்க்கிறார்கள். அந்த வகையிலே பேராட்டத்திலே குதிக்கப்போவதாக அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்து, தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். பேராட்டத்தைத் துவங்குகின்ற வகையில் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதற்காக இந்த அரசாங்கமோ, அதற்குப் பக்க பலமாக இருக்கிற இயக்கமோ, அதற்குப் பக்க பலமாக இருக்கிற பொதுமக்களோ, துளியும் கவலைப்பட மாட்டார்கள். சட்டம் இருக்கிறது. போலீசார் இருக்கிறார்கள், நீதிமன்றம் இருக்கிறது, சிறைச்சாலை இருக்கிறது, அங்கே நிறைய இடமும் இருக்கிறது. அவர்களுடைய பேராட்டத்தைப் பற்றிப் பொருட்படுத்தவில்லை. பிரச்னையின் நியாயத்தை அவர்கள் உணர வேண்டும். இந்த நிலைமைக்குப் பொறுப்பாளி யார் என்பதை அவர்கள் உணரவேண்டும.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு விவாதத்தில் குறிப்பிட்டார்கள். மகாராஷ்டிரத்திலும், குஜராத்திலும் மூடப்பட்ட மில்களைத் திறக்கவில்லையா ? தமிழகத்திலே மட்டும் ஏன் தயக்கம் காட்டப்படுகிறது ? என்று கேட்டார்கள். ஏதோ நாம் பதலளிக்க முடியாத கேள்வியை, ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி கேட்டுவிட்டது போல் கேட்டதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நினைத்துக் கொண்டார்கள். மகாராஷ்டிரத்தில் மூடப்பட்ட ஆலைகள் எத்தனை ? குஜராத்தில் மூடப்பட்ட ஆலைகள் எத்தனை ? அவற்றைத் திறப்பதற்கு எப்படி முயற்சித்தார்கள் ? அங்கே மூடப்பட்டுள்ள ஒரு ஆலையைத் திறப்பதற்குத் தேவையான நிதி எவ்வளவு ? இங்கே மூடப்பட்டுள்ள ஆலைகளில் ஒரு ஆலையைத் திறப்பதற்குத் தேவையான நிதி எவ்வளவு ? எதிர்க்கட்சியினர் நாணயத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்கள், தெய்வ பக்தியுள்ளவர்கள், மனச்சாட்சியோடு பதில் சொல்லட்டும். மகாராஷ்டிரத்தில் திறக்கப்பட்டது ஒரே ஒரு ஆலை. அந்த ஒரு ஆலை கூட நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

இங்கு ஒரு ஆலையைத் திறந்துவிட்டால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை ஒப்புக் கொண்டு விடப் போகிறாரா ? இல்லை. வட நாட்டை விட இங்கு பிரச்சினை சிக்கலாக இருக்கிறது. ஆக, தொழிலாளர்களையும் காப்பாற்றியாக வேண்டும், நிதி நிலைமையையும் பேணியாக வேண்டும் என்று இந்த அரசு தன் அதிகாரத்திற்குட்பட்ட முறையில் நடவடிக்கைகள் எடுக்கும்போது காங்கிரஸ்காரர்கள் என்ன சொல்கிறார்கள் ?



படி அரிசி போடாதே, பஞ்சாலையைத் திற என்று சொல்லட்டும். பி.யு.ஸி-க்கு இலவசப் படிப்பு கொடுக்காதே, பஞ்சாலையைத் திற என்று சொல்லட்டும். மருத்துவ மானியக் கோரிக்கையைக் குறையுங்கள், பஞ்சாலையைத் திற என்று சொல்லட்டும். எப்படி அப்படிச் சொல்ல முடியும் அவர்களால் ? எந்த மானியம் வந்தாலும் இவ்வளவுதானா, இதற்கு மேல் கிடையாதா என்று அரசின் கஜானாவைக் காலி செய்யும் கண்ணோட்டத்தில் இருக்கிறார்கள். இந்த அரசு திவாலாகாதா என்று ஆசைப்படுகிறார்கள். அந்த அடிப்படையில் தான் அவர்கள் எந்தப் பிரச்சினையையும் அணுகுகிறார்கள்.

தமிழக அரசு தொழிலாளர்களின் அரசு என்ற அடிப்படையில் அவர்களின் துயரத்தைத் துடைக்க கடமைப்பட்டிருக்கிறோம் என்ற அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் முயற்சி எடுத்து வருகிறது. இன்றைய ஒரு விசித்திரமான நிலை என்னவென்றால், தொழிற்சாலைகள் துவங்குவதற்கு அனுமதி கொடுப்பது மத்திய அரசு அதற்கான சட்டங்களை வகுப்பது மத்திய அரசு. ஆனால் தொழிலாளர்கள் துன்பத்தில் தூக்கியெறியப்படும்போது அவர்களைக் காப்பாற்றித் தீரவேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகிறது மாநில அரசு. சுதந்திரத்தை அனுபவிப்பது ஒரு சர்க்கார், உரிமைகளை அனுபவிப்பது ஒரு சர்க்கார், ஆனால் கடமையை நிறைவேற்றித் தீர வேண்டிய இக்கட்டுக்கு தள்ளப்படுவது இன்னொரு சர்க்கார். இதை வேறு வழியில் சொல்லப்போனால், காதலிப்பவன் ஒருவன் பிள்ளையை வளர்ப்பவன் மற்றொருவன். உரிமைகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு கடமையை நிறைவேற்றித் தீர வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகும்.

மாநில அரசின் மீது காங்கிரஸ் கட்சி நண்பர்கள் பாய்கிறார்கள் என்றால் அது நியாயமா, அது முறையா ? இருபது ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தவர்களுக்கு நிர்வாகச் சிக்கல்கள், நிர்வாக சிரமங்கள் தெரியாமல் போய் விட்டதா ? அவர்கள் ஆட்சியில் இருந்தபோது எட்டு ஆலைகள் மூடப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் ஐந்து என்று சொல்கிறார்கள். இப்போது 28 ஆலைகள் மூடப்பட்டிருப்பதை 35 ஆலைகள் என்று சொல்கிறார்கள். நான் எண்ணிக்கையைப் பற்றி கவலை கொள்ளவில்லை, அவர்கள் எண்ணத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். எட்டு ஆலைகள் மூடப்பட்ட அந்தக் காலத்தில் அப்போதிருந்த பெருமதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்கள் சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன ? இதே மன்றத்தில் அவற்றைத் திறக்க முடியாது என்று அவர்கள் பச்சையாகச் சொல்லவில்லையா ? அந்த ஆலைகளைத் திறக்கப் போவதில்லை, யார் அதைப் பற்றிக் கேட்க என்று பகிரங்கமாகச் சொல்லவில்லையா ? அன்று அப்படிப்பட்ட பதிலைச் சொல்லிவிட்டு இன்று ஆர்பாட்டம் நடத்தப்போகிறோம் என்று முழங்குகிறார்கள். யாரை ஏமாற்ற, எந்த அரசியல் இலாபத்திற்காக இதைச் சொல்கிறார்கள் என்று கேட்கிறேன்.

பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது என் தலையாயக் கடமையாகும். ஒரு புறத்தில் தொழில் நெருக்கடி. அதன் அடிப்படையில் தொழிலளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இன்னொரு பக்கத்தில் தொழில் வளர்ச்சி என்றாலும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 75,000 பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் என்றவுடன் வட ஆற்காடு, தென் ஆர்க்காடு, சேலம், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களிலும் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும் நெல்லை மாவட்டத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. இன்று அந்தத் தொழில் இருப்பவர்களில் 90 சத வீதம் பேர்கள் ஆண்கள். ஆனால் நெல்லை மாவட்டத்தில் இந்தத் தொழிலில் இருப்பவர்கள் முழுக்க முழுக்க தாய்மார்கள். ஆகவே, இந்த பீடி முதலாளிகள் இன்றைய தினம் கொள்ளைக்காரர்களைப் போல்

இருக்கிறார்கள். துணிந்து சுரண்டுகிறார்கள். சட்ட விரோதமான செயல்களில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் குறைந்தபட்சக் கூலியை கடந்த ஆண்டு ஜுலை மாதத்தில் வெளியிட்டது. முக்கூடலில் உள்ள பீடி சக்கரவர்த்தி என்று சொல்லப்படுகிற கம்பெனியார் அந்த குறைந்தபட்ச கூலியை மூன்று மாதங்களுக்கு பின்னால்தான் அமல் செய்தது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, நண்பர் ஆலடி அருணா அவர்கள் பேசுகிற நேரத்தில் பீடி முதலாளிகள் கொள்ளைக்காரர்களைப் போல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த வார்த்தையை நம் மன்றத்தில் பயன்படுத்த தேவையில்லாத ஒன்று. அதை அவர்கள் தயவு செய்து திரும்பப் பெற்றுக் கொள்வது நம்முடைய மரபைக் காப்பாற்றுவதாக அமையும்.

**திரு ஆலடி அருணா** : முதல் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அந்த வார்த்தையை திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன். கடந்த ஜுலையில் அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கூலியை டி. பி. சொக்கலால் கம்பெனியார் மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் அமல் செய்தார்கள். மூன்று மாதங்கள் கழிந்த பிறகாவது செய்தார்களே அந்த ஒரு கம்பெனியைத் தவிர நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வேறு எந்தக் கம்பெனியும் இதுவரை பீடித் தொழிலாளர்களுக்கு அந்த குறைந்த பட்சக் கூலியைக் கொடுக்கவில்லை. இதுசாதாரண விஷயமாகத் தெரியலாம். ஆனால் இது ஒரு பயங்கரமான பிரச்சினை. 75,000 தொழிலாளர்கள் அரசு நிர்ணயித்திருக்கும் குறைந்தபட்சக் கூலியை பெற முடியாத ஒரு நிலை இருக்கிறது. அங்குள்ள பீடிக் கம்பெனிகள் 1958-க்கு முன்னால் இருந்த குறைந்த பட்சக் கூலியைக் கூட தொழிலாளர்களுக்கு கொடுக்காமல் காலம் கடத்தி வந்தார்கள். 1963-ல் தான் அந்த குறைந்தபட்சக் கூலியை அவர்கள் அரசியல் காரணங்களுக்காக கொடுக்க முன் வந்தார்கள். அதே எண்ணத்தில் இந்த அரசு நம்மை தட்டிக்கேட்காது, எதையும் நாம் செய்யலாம் என்ற எண்ணத்தில் குறைந்த பட்ச கூலியைக்கூட அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள்.

சொக்கலால் கம்பெனியார் குறைந்த பட்ச கூலியை மூன்று மாத காலம் அமல் செய்யாததால் 11 லட்சம் ரூபாய் அளவிற்கு இந்த பாக்கியிருக்கிறது. இது சம்பந்தமாக அங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இங்குள்ள லேபர் கமிஷனருக்கு எழுதியிருக்கிறார்கள். இதன் அடிப்படையில் நாங்கள் வழக்குகள் தொடங்கவேண்டும், அப்படி வழக்குகள் தொடங்குவதற்கு எங்கள் கையில் உள்ள அதிகாரிகளை வைத்து எதையும் செய்யமுடியவில்லை, ஆகவே புதிதாக சில அதிகாரிகள் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குமுன் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு காசிராமன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். வெயிட்ஸ் அன்ட் மெஷர்ஸ் இலாகாவையும், தொழிலாளர் நல இலாகாவையும் பிரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இது பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போது ஒரு மாவட்டத்தில் ஐந்தல்லது ஆறு அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்ஸ் ஆஃப் லேபர்தான் இருக்கிறார்கள். இந்த ஐந்து ஆறு பேர்களை வைத்துக்கொண்டு முகத்தலளவையும் பார்க்கவேண்டும், நிறுத்தலளவையும் பார்க்கவேண்டும், அதோடு ஷாப் ஆக்ட் நல்ல முறையில் செயல் படுத்தப்படுகிறதா என்பதையும் பார்க்கவேண்டும். எப்படி அவர்களால் இவ்வளவு காரியங்களையும் செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும். ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ஆப் லேபர் தேவை. இவ்வளவு பெரிய பொறுப்பை எப்படி அரசு ஏற்க முடியும் என்று அரசு ஆச்சரியப்படலாம். பஞ்சாயத்து யூனியன்



களின் ஈ. ஓ. ஃபார் இண்டஸ்ட்ரீஸ் இருக்கிறார்கள். ஈ. ஓ. ஃபார் எட்யூக்கேஷன் இருக்கிறார்கள். இவர்கள் எதற்காக இருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. அந்த பதவியில் இருப்பவர்களை உடனடியாக இந்தத் தொழிலாளர் நல இலாகாவிற்கு எடுத்து அதன் மூலம் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள அரசாங்கம் முன்வர வேண்டும்.

நம் தொழிலாளர் பிரச்சினையில் அடிப்படையில் ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இன்று அரசாங்கம் எதையும் செய்ய முடியாததொரு நிலை இருக்கிறது. தொழிலாளர் நல இலாகாவால் என்ன செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தொழிலாளர்கள் தலைவர்களையும் முதலாளிகளையும் கூப்பிட்டு இப்படி நடக்கக் கூடாதா என்று ஊரில் நாட்டாண்மை வழக்குகள் பேசுவது போல் நாடாளுகிற அரசு செய்யவேண்டிய ஒரு சோகச் சூழ்நிலை இருக்கிறது. காரணம், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு, அந்த விதி முறைகளை வைத்துக்கொண்டு எந்த அரசாகயிருந்தாலும், எவ்வளவுதான் தொழிலாளர்களை வாழ வைக்க முயற்சி எடுக்கிற அரசாக இருந்தாலும் சரி பிரச்சினைகளுக்கு பரிகாரம் கண்டுவிட முடியாது. லேபர் கமிஷனருக்கு ஜுடீஷியல் அதிகாரங்கள் இருக்கவேண்டும். இவர்களை வேலையில் எடுத்துக் கொண்டாக வேண்டுமென்று கட்டளையிடக் கூடிய அளவிற்கு அவர்களுக்கு அதிகாரங்கள் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் முதலாளிகள் பயப்பட மாட்டார்கள். முதலாளிகள் இப்போது என்ன செய்கிறார்கள் என்றால் காலம் கடத்துகிறார்கள். தொழில் கோர்ட்டுக்கு வா என்கிறார்கள். பிறகு ஹைக்கோர்ட்டுக்கு வா என்கிறார்கள். அதில் தொழிலாளர்கள் வெற்றி பெற்றுவிட்டால் இந்திய தலைமை நீதிமன்றத்திற்கு, சுப்ரீம் கோர்ட்டுக்கு வா என்கிறார்கள். இப்படி காலந் தோறும் ஒவ்வொரு நீதி மன்றப் படிக்கட்டிலும் ஏறி இறங்குவதற்கு போதிய நிதி வசதி உள்ளவர்களா தொழிலாளர்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இந்த இண்டஸ்ட்ரீயல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் தக்க திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு ஜுடீஷியல் அதிகாரம் லேபர் கமிஷனருக்கு அளிக்கப்பட வேண்டும், அதோடு மற்ற கூடுதல் அதிகாரங்களும் அரசுக்கு கொடுக்கப்படவேண்டும். அந்த முயற்சிகள் மூலம்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணமுடியும்.

மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட பீடி, சிகார் ஆக்டுக்கு இன்றைய தினம் பீடி முதலாளிகள் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அதை உடனடியாக வெக்கேட் செய்தாகவேண்டும். அவர்கள் அரசின் அடிப்படை கொள்கையை ஏற்க மறுக்கிறார்கள். எந்த பீடி முதலாளியாக இருந்தாலும் சரி, ஏன் எந்த முதலாளியாகயிருந்தாலும் சரி, அரசாங்க ஆணைகளை மீறுகிறவர்களை ப்ளாக் லிஸ்டில் சேர்த்து ஒவ்வொரு அலுவலகத்திலும் அதைத் தொங்க விடவேண்டும். குறைந்த பட்சக் கூலியை கொடுக்க முடியாது என்று பீடி முதலாளிகள் அரசுக்கு விடும் அறைகூவலை மறந்து விடக்கூடாது. " இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்" என்பதற்கும், "வயலேஷன் ஆஃப் லா" என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. குறைந்த பட்சக் கூலியோடு மேலும் 8 அணா கொடு என்பது Industrial Dispute, குறைந்த பட்சக் கூலியே தா என்பது சட்டபூர்வமான வேண்டுகோள். அதைக்கூட முதலாளிகள் மறுக்கிறார்கள். அவர்கள் நமது சட்டத்தின் விரோதிகள். அப்படி சட்டத்திற்கு விரோதமாக நடக்கக்கூடியவர்களின் பெயர்களை அரசாங்க அலுவலகங்களில் தொங்கவிட வேண்டும். அவர் என்றைக்காவது ஒரு நாள் அரசாங்கத்தின் தலைவாயிலை மிதித்துத்தான் ஆக வேண்டும். அப்பொழுது சட்டத்தை அமல் நடத்தக் கூடிய நிர்பந்தத்தை அரசு உருவாக்க வேண்டும். அதை மனத்திற்கொண்டு, நாம் தொழிலாளர்களுக்காக இருக்கிறோம் என்பதைத் தெளிவு படுத்தினால் தவிர,

முதலாளிகளின் கொட்டத்தை அடக்க முடியாது. அவர்கள் பாம்பைவிட நச்சுத்தன்மை படைத்தவர்கள், உடும்பைவிட பிடிவாதம் உடையவர்கள், காட்டெருமையைவிட முரட்டுத்தன்மையுடையவர்கள். இதை மனத்திலே கொண்டு செயல் பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன். நன்றி வணக்கம்.

**திரு ஆர். பொன்னப்ப நாடார் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிவேகமாக, உயர்திரு நண்பர் ஆலடி அருணு, அவர்கள் பஞ்சாலைப் பிச்னையின் மீது வேகமான பலர் கருத்துக்களை இந்த மன்றத்திலே வைத்தார்கள். அவர்கள் இந்தப் பஞ்சாலைப் பிரச்னையைப் பொறுத்த வரையிலே காங்கிரஸ் தரப்பிலேயிருந்து போராட்டம் துவங்கப் போவதாகவும், அதற்கு அரசாங்கமும், அரசாங்க சட்டங்களும், பாதுகாப்பாகவும் இருக்கும், சிறைச்சாலைகள் திறந்து கிடக்கிறது என்று மிரட்டுகின்ற தன்மையில் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த வரையிலே, இந்த மாமன்றத்திலே அதன் விவரங்களைப்பற்றி நான் கூறுவது பொருத்தமாக இருக்காது என்று எனக்குத் தெரிந்தாலும், அன்னுருடைய கவனத்திற்கு, இது சிலமானசெயல் என விளக்கம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சிறைச்சாலையைக் கண்டு பயப்படுவதாகவோ, அல்லது போலீசைக் கண்டு பயப்படுவதாகவோ அல்ல, சட்டத்தைக் கண்டு நாங்கள் பயப்படத் தயாராக இருக்கிறோம். சட்டத்திற்கு விரோதமான செயல்களில் இறங்க காங்கிரஸ்காரர்கள் ஒருகாலும் துணியமாட்டார்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். எனவே, அத்தகைய பயமுறுத்தல்களை அன்னுர் எங்களைப் போன்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டாமென்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுதுள்ள பிரச்னை என்ன என்பதுபற்றி நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறக்க வேண்டாமா ? அதற்குத் தொழிலாளர்கள் என்ன செய்ய வேண்டும், அரசாங்கம் என்ன செய்யவேண்டும், மத்திய சர்க்கார் என்ன செய்ய வேண்டும் என்ற பிரச்னையைத் தீவிரமாக ஆராய வேண்டியது நமது கடமை என்று கருதுகிறேன். இந்த மன்றத்திலே உயர்திரு. ஹாண்டே அவர்கள் அவர்களுடைய கருத்தினை சமர்ப்பித்தார்கள். "Workers, participation" என்ற முறையிலே கருத்துக்களை எடுத்துக் கூறினுர்கள். மூடிக்கிடக்கும் நிறுவனங்களைத் திறப்பதற்கு என்னென்ன முறைகளை, என்னென்ன வழிவகைகளைத் தேட வேண்டுமென்று அவர்களும் ஆராய வேண்டும். அதைப் போலவே அரசாங்கமும் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆராயக் கடமைப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரிலே இருக்கின்ற சட்டம் இருப்பதால், நாமாக ஒன்றும் செய்ய முடியாது என்று ஓலமிடுவதால் எந்தவிதமான பயனும் இல்லை என்று நான் கூற விரும்புகிறேன். ஒருவேளை மத்திய சர்க்காரில் இருக்கின்ற வரிக் கொள்கை காரணமாக பல சலுகைகள் மூடிக்கிடக்கும் பஞ்சாலைகளைத் திறப்பதற்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை எந்த முறையிலே பயன்படுத்த வேண்டுமென்று சிந்திப்பது கடமை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்க வேண்டும், தொழிலாளர்களின் துயரங்கள் நீங்க வேண்டும், அவர்களுக்கு வாடிய வயிறும், ஒட்டிய கன்னங்களும் இருக்கக்கூடாது என்டதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். ஆகையால், காங்கிரஸ்காரர்கள் ஒருவேளை இதைப்பற்றி எடுத்துப் பேசினுல் ஏதோ அரசியல் லாபத்திற்காக அரசியல் நோக்கத்தோடு, அரசியல் கண்ணேட்டத்தோடு என்று எள்ளிநகையாடுவது நியாயம் அல்ல, தர்மம் அல்ல என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினைக்குச் சரியான வழி காண வேண்டுமென்று நினைக்கிறேன். இன்று பல கஷ்டங்கள் இருக்கின்றன. மூடிக்கிடக்கும் மில்களிலிருந்து வரி பாக்கியிருக்கிறது. மின்சாரம் கிடைப்பதிலே கஷ்டம் இருக்கிறது. அதற்கு அதிகப் பணம் செலுத்த வேண்டியிருக்கிறது,





இன்கம்டாக்ஸ் கொடுப்பதில், பிராவிடெண்ட் ஃபண்ட் தொகை கொடுப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் ஆராய, அரசாங்கம் முத்தரப்பு மாநாடு ஒன்றை உடனடியாகக் கூட்ட வேண்டும். முன்பு ஒரு முத்தரப்பு மாநாடு கூடியது ஞாபகம் இருக்கிறது. தனியாக ஒரு கார்ப்பொரேஷனை மேற்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். ஆனுல், சாதாரணமாக அதிகாரம் நமது மாநிலத்திற்கு இருக்கிறது. இந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, நாம் இதற்கு ஒரு தீர்வு காணவேண்டும். எப்படி மகாராஷ்டிரம் அதற்கு தீர்வும், பரிகாரமும் கண்டிருக்கிருர்கள் ? அது லாபகரமாக இல்லை, நஷ்டத்தில் ஓடுகிறது என்று கூறினுர்கள். ஆனுல், தொழிலாளர்களுக்கு நன்மை செய்கின்ற அளவிலே செய்ய வேண்டும். சாதாரணமாக **A bad workman will blame the tools** என்று அதேமாதிரியில்லாமல், ஏதோ அதிகாரத்தில் மத்திய சர்க்கார் இருக்கிறது. **Industrial Disputes Act, Industrial Development and Regulation Act**–ன் கீழ் மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருந்தாலும், மாநில அரசுக்கு சட்டப்படி இருக்கும் அதிகாரம் போதாது என்றிருந்தாலும், மத்திய சர்க்காரும் நமது அரசாங்கம்தான். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தான் மத்திய ஆட்சியிலே இருக்கிருர்கள், நமது பிரதிநிதிகளும் அங்கிருக்கிருர்கள். அவர்கள் நம்முடையபிரச்னைகளை, குறிப்பாகத் தமிழ்நாட்டின் பிரச்சினைகளை வாதாட நல்லதிறமை படைத்த, நாவன்மைபடைத்தவர்கள் அங்கிருக்கிருர்கள். அவர்கள் இருந்தாலும் நம் பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்கு நாம் எல்லா நல்லமுயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சாதாரணமாகத் தொழில் அமைதி ஏற்பட்டால்தான் இந்த தேசத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்று எல்லா நிபுணர்களும் சொல்லுகிருர்கள். தமிழகம் தொழில் அமைதிக்கு பெயர் கெட்ட பகுதியாக இருக்கிறது. ஆனுல், சமீபத்தில் நடக்கும் காரியங்களை நாம் சற்றுப் பார்க்கும்பொழுது நமது மாநிலத்திலே தொழில் அமைதி இந்த ஆண்டு ஒரு வேளைக் குறைவாக யிருந்தாலும், கடந்த ஆண்டைவிடக் குறைவாகயிருந்தாலும், இழப்பீடான நாட்களையும் லாக் அவுட்களையும் பார்க்கும்பொழுது, அச்சிட்டுக் கொடுத்திருப்பதில் 50-வது பக்கத்திலே கூறியிருக்கிருர்கள். 1966-ஆம் வருஷம் 176 கதவடைப்பும், வேலை நிறுத்தமும் ஏற்பட்டதாகவும் இதனுல் ஏற்பட்ட இழப்பு நாட்கள் 7,54,612 என்றும், கூறியிருக்கிருர்கள். அதேபோல 1967-ஆம் ஆண்டு 305 கதவடைப்புகளும், வேலை நிறுத்தமும் ஏற்பட்டதாகவும் இதனுல் ஏற்பட்ட இழப்பு நாட்கள் 11,20,517. அவ்வளவு நாட்கள் விரயமானது என்று காணப்பட்டிருக்கிறது. 1968-லே 231 கதவடைப்பும், வேலை நிறுத்தமும் ஏற்பட்டதாகவும் இதனுல் 18,81,559 இழப்பு நாட்கள் என்று கணக்குப் போட்டிருக்கிறது. இப்படி நாம் கணக்குப் பார்க்கும்பொழுது 1968-லே 231 ஆகியிருக்கிறது. 1967-ல் 305 ஆக இருக்கிறது. ஆனுல் இழப்பு நாட்கள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. தொழிலாளர் மத்தியிலே அமைதியான நிலைமை ஏற்பட்டால்தான் இந்த மாநிலத்திலே தொழிலதிபர்கள் பணத்தை முதல் முடக்கம் செய்ய முன்வருவார்கள்.

வங்காளத்திலிருந்து தொழிலதிபர்கள் வரப் போவதாக பத்திரிகையில் பார்த்தேன். அதற்குச் சுமுகமான நிலை ஏற்படுவதற்கு இந்த அரசாங்கம் நிலையான ஒரு தொழிலாளர் கொள்கையை ஏற்படுத்த வேண்டும். முற்றுகை, கேரோ சட்ட விரோதமானது என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. நாம் பார்க்கும்பொழுது இந்த முற்றுகையானது வங்காளத்திலே சரியாகயில்லை என கல்கத்தா ஹைகோர்ட் ஸ்பெஷல் பெஞ்ச் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இப்பொழுது தொழில் நிறுவனங்களில் ஏற்படும் தகராறுகளில், சட்டம், ஒழுங்குபிரச்னை என்ற காரணத்தினுல் மட்டும் தலையிடாமல் அதைச் சுமுகமாகப் பைசல் செய்ய வேண்டிய வழியைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். கூடிப்பேசி முடிவு காண வேண்டும். அதுமட்டுமல்லாமல், கால விரயம் இல்லாமல் இருக்க வேண்டும். உடனடியாக தொழில் கோர்ட்டுக்கு அனுப்புவது சாலச் சிறந்தது.

தமிழகத்திலே தீபாவளி வரும்பொழுதே உடனே போனஸ் பிரச்னையும் வந்துவிடுகிறது என்பதை நாம் அறிவோம். பல தொழில் நிறுவனங்களில் போனஸ் பிரச்னையால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன 4 சதவிகிதம் வேண்டுமா, வேண்டாமா, போனஸ் எப்படிக் கொடுக்க வேண்டும் என்றபிரச்னை வரும்பொழுது தொழிலாளர் மத்தியிலே போராட்ட மனப்பான்மைதான் இருந்துகொண்டேயிருக்கிறது. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திலே அடித்தளத்திலே இருப்பவர்கள். அவர்கள் தங்கள் உத்தியோகத்தில் வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற நிலையில் நினைக்கிறார்கள். அவர்களுடைய துன்பங்கள் தீர வேண்டுமானால் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய ஊதியத்தில் ஒரு பகுதியாக போனஸை, லாபத்தில் ஒரு பகுதியைவேண்டுமென்று கேட்கிறார்கள். நியாயமானதுதான். அதற்கான சட்டமும் மத்திய சர்க்கார் செய்திருக்கிறது. தொழில் நிறுவனங்களில் சுமுகமாகப் பைசல் செய்ய வேண்டிய பிரசனைகள் இவைகளையெல்லாம் நாம் ஆராயவேண்டும்.

கழிந்த அக்டோபர் மாதத்தில் என்று நினைக்கிறேன், இந்து பத்திரிகாலயத்தில் ஒரு போராட்டம் ஏற்பட்டது. வேஜ் போர்ட் நிர்ணயித்த கூலியைக் கொடுக்க வில்லை என்று ஏற்பட்டு பல நாட்கள் கதவடைப்பும், ஸ்ட்ரைக்கும் போன்ற விரும்பத்தகாத பல காரியங்கள் நிகழ்ந்ததை நாம் அறிவோம். இம்மாதிரி பல கம்பெனிகளிலே சிம்ப்ஸன் குரூப் கம்பெனி, மெட்டல் பாக்ஸ் கம்பெனிகளில் நடந்திருக்கிறது. அதையெல்லாம் தொகுத்து அமைச்சரவர்கள் இந்தப் புத்தகத்திலே தந்திருக்கிறார்கள். எனவே, இதுபற்றி விரிவான விவரங்களைச் சொல்லாமல் தொழில் அமைதி ஏற்படுவதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும், இன்றிருக்கும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடிதடி ஏற்பட்ட பிறகு நாம் செல்ல வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படக்கூடாது. அனுதாபமான முறையிலே அரசாங்கம் அணுக வேண்டும். அப்பொழுதுதான் தொழிலாளர் பிரச்னையில் அமைதியை நிலைநாட்ட முடியும்.

இன்றிருக்கும் சமூகத்திலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு, வருவாய் அடிப்படையிலே பல கஷ்டங்கள், துன்பங்கள் எல்லாம் இருக்கின்றன. அதைத் தீர்க்கப் பல நல்ல காரியங்களைச் செய்ய நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

குறிப்பாக, ஓரிரு காரியங்களை நான் கூற வேண்டுமென்றே நினைக்கிறேன். முதலாவதாக, இங்கு கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலே சிலவற்றை பார்க்கின்றேன். பிளாண்டேஷன்ஸ் ஒர்க்கர்ஸ் சுமார் 85,001 பேர் இருப்பதாகவும் 304 பிளான்டேஷன்ஸ் நிறுவனங்கள் இருப்பதாகவும் இந்த அறிக்கையிலே கூறி இருக்கிறார்கள். பீடித் தொழிலிலே 2,21,609 நபர்கள் இருப்பதாகவும் 50,242 நிறுவனங்கள் இருப்பதாகவும் இந்த அறிக்கையிலே பார்த்தேன். இந்த அறிக்கையிலே பார்க்கின்றபொழுது நமதுதொழில் அமைதியான முறையில் பல இடங்களில் இல்லை என்பதைக் காணமுடியும். குறிப்பாக, டெக்ஸ்டைல்ஸ், இன்ஜினீயரிங், பீடி அண்டு டுபாக்கோ ஆகியவை உள்ள பகுதிகளில் தான் அதிகமான நாட்கள் இழக்கப்பட்டிருக்கின்றன, தகராறுகளும் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இந்த வருஷம் ப்ளான்டேஷனிலே 4 ஸ்ட்ரைக்கும் (லாக் அவுட்ஸ் இருப்பதாகவும்) அதில் 1,992 தொழிலாளர்கள் ஈடுபட்டதாகவும் 13,476 நாட்கள் இழந்ததாகவும் இந்த அறிக்கையிலே கூறி இருக்கிறார்கள். கழிந்த வருஷம் ப்ளான்டேஷனிலே 6 நாட்கள்தான் வேலை இழக்கப்பட்ட நாட்கள். பிளான்டேஷன் தொழிலாளர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பிளான்டேஷன் தொழிலாளர்களது அவல நிலையை பார்க்



கும்பொழுது பல நல்ல காரியங்களை இந்த இலாகா மூலமாக செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குறிப்பாக, இரப்பர் தோட்டத்திலே பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு ஏதாவது பிரச்னை தீரவேண்டுமானால் ஸ்ட்ரைக் செய்யவேண்டி இருக்கிறது. அரசாங்கத்தை எதிர்த்து ஸ்ட்ரைக் செய்ய வேண்டும். தனியார் நிறுவனங்களிலே இருக்கிற கூலியும் இந்த அரசாங்க நிறுவனங்களிலே கொடுக்கப்பட வில்லை என்று சொல்லும் போது நான் அரசாங்கத்தை குறை கூறாமல் இருக்கமுடியாது. ஆதலால் இத்தகைய காரியங்களிலே அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே வலுலியுறுத்துக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, விசைத் தறியைப் புகுத்த வேண்டுமா, வேண்டாமா, அதனால் இன்றிருக்கிற நமது தொழில்களுக்குப் பாதகம் ஏற்படுமா, ஏற்படாதா என்ற பிரச்னைகளையும் நாம் சற்று உன்னிப்பாக கவனிக்க வேண்டும். பல மாநிலங்களிலே விசைத் தறிகளைப் புகுத்துவதற்குக் காரணம் அதில் நெய்த நூல் சிறப்பாக இருக்கிறது என்பதுதான். தமிழ்நாட்டிலே நூல்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, விசைத் தறியிலே நமது மாநிலத்தின் முன்னேற்றத்திற்கேற்ப செயலாற்றினால் நல்ல காரியமாக இருக்கும் என்றே கருதுகிறேன். குறிப்பாக, இங்கே பல பஞ்சாலைகள் இருக்கின்றன. அந்தப் பஞ்சாலைகளிலே நாம் அதிக நூல்களை உற்பத்தி செய்கிறோம். பஞ்சு மட்டிலும் அதிகமில்லை. ஆதலால் இப்பொழுதே பஞ்சாலைப் பிரச்னைக்குப் பரிகாரம் காணவேண்டுமென்று கருதுகிறேன். இந்த விசைத் தறியை புகுத்தக்கூடாது என்ற அபிப்பிராயம் இன்றைக்கு நம்மிலே பலருக்கு இருக்கிறது. பலருக்கு வேலை வாய்ப்பு இழக்க நேரிடும் என்று வாதாடப்படுகிறது. அப்படியானால் நம்முடைய தேசத்திலே முன்னேற்றம் ஏற்படாது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆட்டோமேஷனை எதிர்க்கிறார்கள். தத்துவரீதியாக, இங்கே மனித சக்தி இருக்கிறதனாலே ஆட்டோமேஷனை எதிர்க்கின்றோம். ஆனால் வெளிநாடுகளிலே, அதிலும் விஞ்ஞானத்திலே முன்னணியிலே இருக்கிற மேற்கத்திய நாடுகளிலே இன்று ஆட்டோமேஷன் அதிகமாகி இருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துக்கூறத் தேவையில்லை. ஆனால் இந்த விசைத்தறியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் நன்மையை உத்தேசித்து தமிழ்நாட்டிலே இருக்கிற தொழிலாளர்களுடைய நன்மையை உத்தேசித்து தமிழர்கள் வளம் பெற வேண்டுமென்ற முறையிலே அந்தக் கொள்கையை வகுத்துக் கொள்வது சிறப்பாகவிருக்கும். இல்லாவிட்டால், குஜராத் மாநிலத்திற்கும் மகாராஷ்டிரா மாநிலத்திற்கும் அடிமைப்பட்டவர்களாக ஆகிவிடுவோம் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், இந்த பிராவிடன்ட் பண்ட் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். பிராவிடன்ட் பண்ட் $6\frac{1}{4}$ சதவீதத்தை இப்பொழுது 8 சதவீதமாக உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால், இது சட்டத்திலே குறிக்கப்பட்டுள்ளதை தவிர சரியான முறையிலே அமுல் நடத்தப்படாமல் பல முதலாளிகளும் இந்த பிராவிடன்ட் பண்ட் பணத்தை காலாகாலத்திலே செலுத்துவதில்லை. அவர்கள்மீது வழக்கு தொடரவில்லையென்று அங்கத்தினர்கள் கூறினார்கள். நான் வழக்குத் தொடரவேண்டுமென்று கூறவில்லை. நம்முடைய இலாகா மூலமாக வலியுறுத்தி உடனடியாக அந்த பணத்தை அவர்கள் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

"ஈ.எஸ்.ஐ. ஸ்கீமை" அனுசரித்து பல சிக்கல்கள் இருக்கின்றன. பல பகுதிகளிலே இந்த ஈ.எஸ்.ஐ. ஸ்கீமினால் பயன்பெறாத பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் இன்னும் இருந்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இந்த ஸ்கீமை அனுசரித்து பல இடங்களிலும் ஆஸ்பத்திரிகள் வேண்டுமென்று கேட்டால் அதற்குப் பல தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் வேண்டும், அனுமதி

வேண்டும், ஆதலால்தான் காலதாமதம் ஆகிறது என்று இந்த மன்றத்திலே பேசப்பட்டது. ஆனால் நமது மாநில அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுத்தால் அதற்காக எந்தவிதமான தங்கு தடையும் இருக்காது என்று கருதுகிறேன். அதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்ல நினைக்கிறேன்.

தொழிலாளர்கள் நலத்தைப்பற்றிச் சற்று சிந்திக்க வேண்டும். தோட்டத்திலே பள்ளிக்கூடங்கள் கிடையாது. சரியான பயனை அனுபவிக்க முடியவில்லை. நசிந்துவிடக் கூடிய நிலையில் பல தோட்டங்கள் இருக்கின்றன. பள்ளிக்கூடங்களிலே தொழிலாளர்களுடைய குழந்தைகளை அனுப்புவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு நல்ல கூலி லைன்ஸ்—அவர்களுடைய வீடுகளை கூலி லைன்ஸ் என்று சொல்வார்கள்—அந்த மாதிரி கூலி லைன்ஸ் கூட அவர்களுக்குக் கிடைக்காத நிலைமையிலே பலரும் இடர்ப்படுகிறார்கள். ஆதலால், இந்த தொழிலாளர் நலன் என்ற துறையிலே அவர்களுக்குத் துரிதமாக வீடு கட்டிக் கொடுப்பதற்கு முதலாளிகளும் அரசாங்கமும் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திலிருந்து வீடு கட்டுவதற்காக நமக்கு பிளான் எக்ஸ்பெண்டிச்சரிலே பணம் ஒதுக்குவார்கள். அது ஒரு வேளை போதுமான அளவிலே இல்லையென்று சொன்னால் அதற்காக அதிகமாக உதவி வாதாடி கேட்டுக் கொள்வது பொருத்தமாக சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன்.

அடுத்ததொரு விஷயம் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். இங்கு இந்த மன்றத்தின் முன்பு பேசப்பட்ட விஷயம்தான். வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ் இப்பொழுது இந்த லேபர் இலாகாவிலே இருந்து கொண்டிருக்கிறது. அதை தனியாக பிரிப்பது தான் நலமாக இருக்குமென்று கருதுகிறேன். ஏனென்றால் அவர்கள் பணியாற்றுவதற்கு இது பலவிதங்களில் இடைஞ்சலாக இருக்கின்றது. தொழிலாளர் நலன்களைக் கவனிக்கவும் முன்னேற்றங்களுக்கான சட்டங்களைச் சரியான முறையிலே அமுல்படுத்துவதற்கும் இது ஒரு இடைஞ்சலாக இருக்கிறது. ஆதலால் இதில் ஒரு பிரிவை வேண்டுமென்றால் வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் என்று தனியாக நிறுவினால் சிறப்பாக இருக்குமென்று கருதுகின்றேன்.

அடுத்தொரு விஷயம், நம்முடைய வேலை தரும் நிறுவனத்தைப் பற்றிக் கூறவேண்டுமென்றே நினைக்கிறேன். இந்த தேசத்திலே இன்றுவேலையில்லாத்திண்டாட்டம் கோர தாண்டவமாடுகிறது என்று பேசப்பட்டது. நான் சாதாரணமாக அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்தைக் கொஞ்சம் சொல்கிறேன். இன்று எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் "லைவ் ரிஜிஸ்தர்" என்ற ஒன்றில் பதிவு செய்கிறார்கள். அதில் பதிவு செய்து வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள் என்பதை அரசாங்கம் தந்திருக்கிற புள்ளி விவரங்களிலிருந்து அப்பட்டமாக தெரிந்துகொள்கிறேன். இன்று வேலை தேடித் தருகின்ற ஸ்தாபனம் பெரிய அளவிலே இருந்தாலும் தனியார் துறையிலே இந்த வேலை தேடித் தரும் நிலையம் மூலமாக தொழிலாளர்களை அமர்த்துவதில்லையென்ற குற்றச்சாட்டு பல இடங்களில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, வேலை தேடித் தரும் நிலையத்தின் மூலமாகத் தான் உத்தியோகத்தில் அமர்த்த முடியும் என்ற நியதியை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்பதை தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அதிலும் பல தில்லுமுல்லுகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. இந்த மாதிரி இடங்களில் என்ன காரியங்களைச் செய்தால் செவ்வனே செய்ய முடியும் என்பதை கவனித்து அரசாங்கம் அதற்குவேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்னொரு விஷயம், இதில் டிரெயினிங் கூட இருக்கிறது. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் டிரெயினிங் கூட வைத்திருக்கிறார்கள். இதிலே பல இடங்களிலும் இன்று தொழில் நுணுக்கம் பெறக் கூடிய, ஐ.டி.ஐ. ஸ்தாபனங்களை அவர்கள் கையிலே கொடுத்து, அவர்கள் இதைத் துரிதமாக நடத்தி, இன்று வேலையில்லாமல் திண்டாடுகிற தொழிலாளர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு இது வழிவகையாக இருக்குமென்று கருதுகிறேன்.



இந்த அங்கஹீனப்பட்டவர்களுக்கு வேலை தேடிக்கொடுப்பதற்கு இந்த இலாகாவிலே ஒரு பிரிவு இருக்கிறது. அவர்களுடைய முன்னேற்றத்திற்காக அவர்கள் என்னென்ன வேலை செய்யமுடியுமோ அதற்கு ஏற்றவாறு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். நம்முடைய அரசாங்க அச்சகம் இருக்கிறது, அதில் அங்கஹீனப்பட்டவர்களை அமர்த்திக்கொள்ளுவதற்கு, பைண்டிங் செக்ஷன் மற்றும் சில சில்லறை வேலைகளைக் கொடுப்பதற்கு போதிய வாய்ப்பிருக்கிறது. கஷ்டப்படுகின்றவர்களுக்கு நல்ல நன்மை செய்யக்கூடிய காரியங்களையெல்லாம் இந்த இலாகா மூலமாகச் செய்யமுடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, நமது தொழில்துறையைப் பொறுத்த அளவிலே இன்று பல பத்திரிகைகள் தலையங்கங்கள் எழுதி இருக்கின்றன. இங்கு நல்ல நிலை இல்லை, அமைதியான நிலை இல்லை, தொழில் துறை நல்ல முறையில் இருந்தால் இந்த தமிழ்நாட்டிலே வளர்ச்சி ஏற்படக்கூடிய எல்லா வாய்ப்புகளும் சூழ்நிலைகளும் இருக்கின்றன என்று பத்திரிகைகள் தலையங்கம் தீட்டியிருக்கின்றன. ஆதலால் நடுநிலையில் நின்று, நியாயத்தின் பக்கம் இருக்க வேண்டும். ஏதாவது தகராறு வந்தால் முதலாளிகள் பக்கத்திலும் இருக்க வேண்டும், நீதியின் பக்கத்திலே இருந்து நடுநிலையாக செயலாற்றுவது மிகவும் சாலச்சிறந்ததாக இருக்கும். அதிலே இன்றிருக்கிற சட்டங்களின் படி நாமெல்லோரும் சட்டத்தை கடைப்பிடிக்கவேண்டுமென்று கூறி எனது பேச்சினை முடித்து அமைகிறேன், வணக்கம்.

*** மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நல மானியத்தின்மீது பலதரப்பட்ட அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நான் அத்தனை பேர்களுக்கும் தங்கள் மூலம் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் "வளர்க தொழில் வாழ்க தொழிலாளர்" என்று போடப்பட்ட அந்த வாக்கியங்களைக் குறித்து வியாக்கியானம் செய்து, இதைப் பார்த்தால் தொழிலை நம்பித்தான் தொழிலாளர்கள் வாழவேண்டுமா என்று கேட்டார்கள். தொழிலை நம்பி தொழிலாளர்கள் வாழக்கூடாது என்று கூட பேசினார்கள். அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். தொழில்கள் வளர்ந்தால்தான் தொழிலாளர்கள் வாழ்க்கை மறுமலர்ச்சி அடைய முடியும். அதனால்தான் தொழில்கள் வளர வேண்டும் என்ற அடிப்படையில்தான், தொழிலாளர்கள் வாழ்க்கையும் அதோடு பின்னியிருக்கிறது. ஆகவேதான் இந்த இரண்டு வரிகளும் அங்கே போடப்பட்டிருக்கின்றன என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசைப்பற்றி தனக்குத் தோன்றிய வகைகளிலெல்லாம் பேசி, கடைசியில் விலாங்கு மீன் என்று அவர் சொல்லிவிட்டார்கள். முதலாளிகளைக் கண்டால் அவர்கள் பக்கம் ஆதரிக்கிறோம், தொழிலாளர்களைக் கண்டால் தொழிலாளர்கள் பக்கம் போகிறோம், எனவே விலாங்கு மீன் என்ற முறையில் கூறினார்கள். தொழிலாளர்களைக் கண்டால் தொழிலாளர்கள் பக்கம் போவதும், முதலாளிகளைக் கண்டால் முதலாளிகள் பக்கம் போவதும், இப்படி விலாங்கு மீனாக இருக்க வேண்டுமென்பது தி.மு.க. வின் வாழ்க்கையாக இருந்ததில்லை. தொழிலாளிகளைப் பார்த்தால் தொழிலாளர்களாக இருக்கிறோம் என்றும், முதலாளிகளைப் பார்த்தால் முதலாளிகளாக இருக்கிறோம் என்ற அளவில் எங்கள் கட்சியில் யாரும் செய்ததாக எனக்கும் நினைவு இல்லை. தி.மு.க. வைப் பொறுத்த மட்டில் தெளிவாக தொழில் கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால், கடந்த இரண்டு ஆண்டு காலமாக ஏற்பட்ட பல்வேறு தொழில் சிக்கல்களைக்கூட இதற்கு முன்பு இந்த இலாகாவை ஏற்றுக் கொண்டிருந்த மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் வெகு சுலபமாக தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

தொழில்தகராறுகள் ஏற்படும் போதெல்லாம் இந்த அரசு காலதாமதத்தோடு நடவடிக்கை எடுக்கிற ஒரு இயந்திரத்தை வைத்திருக்கிறது என்று கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் குற்றச்சாட்டு சாட்டினார்கள். கால தாமதம் ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டு ஓரளவுக்கு உண்மையாக இருந்தாலும், காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்களை நானும் விசாரிக்கச் சொன்னேன். நெய்வேலி சிராமிக் தொழிற்சாலையில் கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் காலத்தில் கொடுக்கப்படவில்லை, அதனால் அவர்களுக்கு காம்பபென்சேஷன் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அதற்காக ஒரு கன்ஸிலியேஷன் நடந்த பொழுது அங்கிருந்த லேபர் ஆபீசர் ரூ. 25 வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சமாதானமாகச் சொல்லி வைத்து (குறுக்கீடு) ஜட்ஜ்மெண்டு, முடிவு சொல்லி யிருக்கிறார்கள். நான் அதைப் பற்றி விசாரித்த பொழுது, ஏன் கால தாமதம் ஆயிற்று என்று கேட்டதற்கு, சிராமிக் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்த காரணத்தினால் தான் முதலாளிகள் சம்பளம் கொடுப்பதற்கு தயக்கம் காட்டினார்கள், அதனால் சங்கடம் ஏற்பட்டது என்று கூறப்பட்டது. அது தான் உண்மையாக இருக்க முடியும் என்று இந்த அரசு நம்புகிறது.

பொதுவாக, இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அத்தனை பேர்களும் பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசினார்கள். மூடப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கையை சில பேர்கள் 35 என்று சொன்னார்கள். பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 20,000 என்று திரு. ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அரசாங்கத்திடம் உள்ள புள்ளி விவரக் கணக்குப்படி மூடப்பட்டிருக்கிற ஆலைகளின் எண்ணிக்கை 27 ஆகும். பாதிக்கப்பட்ட தொழிலாளிகளின் எண்ணிக்கை 14,240 ஆகும். 14,240 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு புனர் வாழ்வு அளிக்க வேண்டும், மீண்டும் மூடப்பட்ட ஆலைகள் திறக்கப்பட வேண்டும், என்று தி. மு. க. அரசு கூறியதையும், காலம் சென்ற தமிழக முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியையும் பல நண்பர்கள் சுட்டிக்காட்டி, இதன் காரணமாக இந்த அரசு வேறு என்ன செய்திருக்கிறது என்று கூட கேட்டார்கள். இரண்டு மகாநாட்டைக் கூட்டினார்கள். இதில் மேற்கொண்டு எதுவும் செய்யவில்லை என மெத்த வருத்தப்பட்டுக் கொண்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன, தொழிலாளிகள் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள் என்ற உண்மையை அத்தனை பேர்களும் ஒத்துக்கொண் டிருக்கிறோம். ஆலைகள் மூடப்பட்டதற்கான காரணங்களை மட்டும் ஏனோ ஆராய்வதற்கு சில பேர்கள் மறுக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன, தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆலைகள் மூடப்பட்டிருப்பதற்குக் காரணங்கள் என்ன என்பதை அங்கத்தினர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வரலாம் என்று நினைக்கிறேன்.

எனக்கு முன்பு, கடைசியாகப் பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கு இருக்கிற ஆலைகள் பெரும்பாலும் நூற்பு ஆலைகளாக இருக்கின்றன என்ற உண்மையைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டு, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டும், நமது மாநிலத்தில் நூற்பு ஆலைகளைத் தான் விஸ்தரித்துக் கொண்டு இருந்தோம். உற்பத்தியாகின்ற நூல் பெரும்பாலும் 60 சத விகிதம் வடக்கே இருக்கிற பவர் லூம்களை நம்பியோ அல்லது வேறு ஆலைகளை நம்பியோ வாழ வேண்டியிருந்தது. இங்கு துணி ஆக்குகின்ற ஆலைகள், வீவிங் செக்ஷன், ரொம்பவும் குறைவு. காம்பேஸிட் மில்கள் ரொம்பவும் குறைவு. இங்கு இருக்கிற நூற்பு ஆலைகளில் உற்பத்தி யாகும் நூல்கள் வெளி மாநிலங்களை நம்பி வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை, கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டும், ஏற்பட்டிருந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





வெளி மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் துணி ஆலைகள் மிகக் குறைவு என்ற காரணத்தினால் அந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதலாவதாக இங்கு உற்பத்தியாகிற நூல் வெளி மாநிலத்தை நம்பி வாழ வேண்டும். இரண்டாவதாக இந்த மாநிலத்தில் துணி உற்பத்தி ஆக்குகின்ற ஆலைகள் மிகவும் குறைவு. மூன்றாவதாக தனி நபர் வாங்கும் திறன் வளரவில்லை, ஆனால் ஆலைகளில் கதிர்கள் வளர்ந்திருக்கின்றன. இந்த நாட்டில் பொதுவாக சர்க்காருக்குக் கிடைத்திருக்கிற கணக்குப்படி தனிநபர் துணி வாங்கும்திறன் 16 கெஜத்திற்கு மேல் வளரவில்லை. ஆனால் கதிர்கள் வளர்ந்திருக்கின்றன. துணிகள் வாங்குகிற திறன் மக்களிடம் குறைவாக இருந்திருக்கிறது. இதனால் நூலும் துணியும் தேங்கி விட்டன.

அடுத்து, வெளி நாட்டுக்கு ஏற்றுமதி ஆகிக்கொண்டு வந்த நூல்கள், துணிகள் இவைகளுடைய அளவு குறைக்கப்பட்டு விட்டது. மேலும் சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு மேல் பஞ்சு விலை ஏறி இருந்தது இன்னொரு காரணம். பஞ்சு விலை ஏறி இருந்தது என்று சொன்னால், பயங்கரமான அளவுக்கு விலை ஏறி இருந்ததை நான் குறிப்பிட விரும்புகிறேன். 100-ல் நூல் 1961-ம் வருடத்தில் ரூ. 2,400 விலையாக இருந்தது, 1967-ம் வருடத்தில் ரூ. 4,100 என்ற விலைக்குப் பயங்கரமாக உயர்ந்திருந்தது. இப்படி பஞ்சு விலை ஏறியதின் காரணமாக உற்பத்தி விலையும் ஏறிப்போய் விட்டது.

வாழ்க்கைப் புள்ளி உயர்ந்து விட்டதால், தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய பஞ்சப் படியும் உயர்ந்துகொண்டே வந்திருக்கிறது. 1961-ல் கொடுக்கப்பட்ட பஞ்சப்படி ரூ. 75·85. 1967 செப்டம்பர் மாதம் வரையில் கொடுக்கப்பட்ட பஞ்சப்படி ரூ. 137·82, அந்த அளவுக்கு பஞ்சப்படியை உயர்த்திக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது பாங்கு வட்டி விகிதம் 6 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக உயர்ந்தது.

நூல் உற்பத்திக்குத் தேவையான பஞ்சு பெரும்பாலும் வெளி மாநிலங்களிலிருந்து வரவேண்டியிருந்தது. அதனால் பஞ்சை இங்கே கொண்டு வருவதற்கு டிரான்ஸ்போர்ட்டு சார்ஜ் அதிகமாக இருந்தது. அதுவும் அல்லாமல் சர்க்கார் போட்டு வந்த எக்சைஸ் வரி—1961-க்கு முன்பு எக்சைஸ் வரி கிடையாது—அதற்குப் பின்பு போடப்பட்ட எக்சைஸ் வரி 1961-ம் ஆண்டில ஒரு கிலோ கிராமுக்கு 15 பைசாவாக இருந்து வந்த வரி இப்பொழுது ரூ. 1·20 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் அல்லாமல் ரிசர்வ் பாங்கு கொடுத்து வந்த கடன் வசதியையும் சுருக்கிப் போட்டது. மூடப்பட்டிருக்கிற ஆலைகள் மிகப் பழைய ஆலைகள். இவைகளின் காரணமாகத்தான் இந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை அத்தனை பேர்களும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

இந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன, மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு தமிழக அரசு என்ன உதவி செய்திருக்கிறது என்பதைப்பற்றி சற்றுவிளக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த ஆலைகளிலிருந்து வசூலிக்கப்படவேண்டிய மின்சாரக் கட்டண பாக்கி, விற்பனை வரி முதலியவைகள் வசூலிப்பதை ஒத்தி வைக்கிறோம் நாங்கள். மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரைக் கேட்டு, அந்தக் குழு விசாரணை செய்து சமர்ப்பித்த அறிக்கைகளின்மீது, சில பாங்குகளுக்கு அரசு உத்தரவாதம் கொடுத்து, அந்த ஆலைகளைத் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இன்னும் சில பாங்குகளிலிருந்து கடன் கொடுப்பதாக அறிக்கை வந்திருக்கிறது. உத்தரவாதம் தர இருக்கிறோம். மேலும் 1—6—1968 முதல் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளராக இருக்கும் ஆலைகள் அனுப்பும் நூலுக்கு விற்பனை வரியை அடியோடு ரத்து செய்திருக்கிறோம். அதுவும் அல்லாமல், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்கள் பிராவிடெண்டு பண்டிலிருந்து கடன் உதவி கொடுக்கவேண்டும் என்பதற்காக இந்த அரசு சட்டத்தைத் திருத்தி

அமைத்திருக்கிறது. இதற்கும் மேலாக டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஒன்று அமைக்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் ரூ. 15 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. மத்திய சர்க்காரை நாங்கள் கேட்டிருக்கிறோம்.

காலம் சென்ற தமிழக முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு எழுதிய கடைசி கடிதத்தில் "நீங்கள் எக்சைஸ் வரியை பொறுத்தவரையில் கொஞ்சம் சலுகை காட்டினால், இந்த அரசு மின்சார வரி, விற்பனை வரி இவைகளில் சலுகை காட்டும், அப்படி சலுகை காட்டினால் ஓரளவுக்கு பாதிக்கப்பட்ட மில்களை ஓட்டுவதற்கு இயலும்" என்று எழுதியிருந்தார்கள். சில சலுகைகளை மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறது. ஆனால், அப்படி கொடுக்கப்பட்ட சலுகைகள் மூடப்பட்டிருக்கிற ஆலைகளைத் திறப்பதற்கு உதவுமா என்று கேட்டால், நான் தெளிவாகச் சொல்கிறேன். மூடப்பட்ட ஆலைகள் திறக்கப்படுவதற்கு அந்த சலுகைகள் உதவாது, போதாது; அது மட்டுமல்ல, அதற்கும் இதற்கும் சம்மந்தமே கூட இல்லை என்று சொல்லிவிடலாம். ஓரளவிற்கு சலுகையினால், இலாபம் கிடைக்குமே தவிர, மூடிய மில்களை ஓட்டுவதற்கு எந்த விதமான அறிகுறியும் இல்லை, என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். மத்திய சர்க்கார் கொடுக்கும் சலுகைகள் மூடிய ஆலைகளை ஓட்டுவதற்கு இல்லை. மேற்கொண்டு சலுகைகளை இன்னமும் உயர்த்த வேண்டும், உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இப்பொழுது நம் முதல் அமைச்சர் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம் சொன்னதன்மேல், அவர்கள் மறு பரிசீலனை செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். நல்ல பதில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதற்கிடையில், அடுத்த 13-ம் நாளுக்குள்ளாக இந்த மில்களை ஓட்டாவிட்டால், நாங்கள் போராட்டத்தைத் துவங்குவோம் என்றுசொல்வதும், போராட்டம் என்றால் சிறைச்சாலை, தடியடி, இதை யெல்லாம் நாங்கள் பார்த்தவர்கள் என்று விளக்கம் கொடுப்பதும், எனக்கு உள்ளபடியே ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. எனக்கு முன் பேசிய திரு. பொன்னப்ப நாடார் பேசும்போது, மத்திய சர்க்கார்மீது பழி போடுகிறீர்கள், பழி போடுகிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களின் பேச்சுக் குறிப்பில் பார்த்தால், அவர்களே சொல்லியிருக்கிறார்கள், நிறைய மத்திய சர்க்காரோடு பேசுங்கள், கேளுங்கள், பேசுவோம், கேட்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். பேசுவோம், கேட்போம் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் உரத்த குரலில் கேட்போம், போராடுவோம் என்று சொல்லியிருப்பது, பழியை மத்திய சர்க்கார்மீது போட வேண்டும் என்பதற்காக இல்லை. பாதிக்கப்பட்ட 14,000 தொழிலாளர்களைப் பாதுகாக்க, அந்தப் பிரச்சினையை அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது, அரசியல் இலாபத்தை மனதில் கொண்டு, எந்த அரசியல் கட்சி விளையாட்டும் அநாகரிகமானது; நாகரிகமான செயல் என்று யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். தொழிலாளர்களுக்கு புனர் வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காக போராட்டம் நடத்த வேண்டும் என்றால், யாரை எதிர்த்துப் போராட்டம் நடத்துவது? அதுதான் பிரச்சினை. கொடுத்திருக்கும் சலுகைகள் அத்தனையும் அரசு கொடுத்திருக்கும் வரிச் சலுகைகள் போதாது, மேற்கொண்டு வரிச் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு அதிகாரம் டெல்லியினிடத்தில் தான் இருக்கிறது. அதைச் சொன்னால் கூட மத்திய சர்க்கார் மீது பழி போடுகிறீர்களா என்பார்கள். அதில் புண்ணியம் இல்லை. உள்ளபடியே அதற்கான அதிகாரம் டெல்லியிடம் இருக்கிறது. அவர்கள் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கவில்லை. ஆலைகள் ஓடினாலும், ஓடாவிட்டாலும், பாதிக்கப்பட் டிருக்கிற ஆலைகள் பெரும்பாலும், பணவசதியற்றுப் போய் இருக்கின்றன. ஏராளமான கடன்கள் இருக்கின்றன. கடனுக்கு ஈடு செய்து முன் வந்து ஆலைகளை ஓட்ட முன் வரவேண்டும். இதிலே நல்ல ஆலைகளை ஓட்ட வேண்டும் என்று தொழில் அமைச்சர் திரு. மாதவன், முயற்சி எடுத்து, அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்கிற உண்மையை அங்கத்தினர்கள் அறிவார்கள். அவ்வளவு இருந்தும், இந்த அரசை எதிர்த்துப் போராட்டம் நடத்துவது என்றால், என்ன நியாயம் என்று தான் புரியவில்லை. பத்திரிகையில் பார்த்தோம்,



ஒரு தீர்மானம் போட்டு, வெளியிட்டிருக்கிறார்கள்—சர்க்கார் பஸ்களுக்கு முன்னால் மறியல் செய்வோம், ஆலைகளைத் திறக்காவிட்டால் — என்று. அவர்கள் போராட்டம் நடத்தவேண்டியது, தாலுகா ஆபீஸில் அல்ல; தபால் ஆபீஸில். அதை மறந்து விடுவார்கள். மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடுவது என்பதை விட்டுவிட்டு, மாநில சர்க்காரை எதிர்த்துப் போராட வேண்டும் என்று ஏன் சொல்லுகிறார்கள்? உங்களுக்குச் சொல்லுவேன், எங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டுச் செய்யக்கூடிய அத்தனையையும் செய்துவிட்டோம்.

கனம் பாலசுப்பிரமணியம் பிராவிடெண்ட் பண்ட் தொகையைக் கொடுக்காதவர்களைப்பற்றிச் சொன்னார்கள். பிராஸிக்யூஷன் செய்ய வேண்டும் என்று சொன்னால், செய்யாமல் இருக்கிறோம் என்றால், அது முதலாளிகளுக்குக் காட்டும் சலுகையல்ல. மேலும் ப்ராஸிக்யூஷன் செய்தால் ஓடிக் கொண்டிருக்கிற ஆலைகளையும் மூடிவிடுவார்களோ, அதனால் மேற்கொண்டும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்களோ என்றுதான், அந்த எண்ணத்தில்தான் செய்யவில்லை.

என்ன காரணத்திற்காக போராட்டத்தைத் துவங்க வேண்டும் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்? தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் மாநில சர்க்காரோடு போராட்டம் நடத்தினால், புண்ணியம் இல்லை, பரிகாரம் கிடைக்காது. மத்திய சர்க்காரை எதிர்த்து அப்படிப்பட்ட போராட்டம் நடத்துவதானால், தாராளமாகச் செய்யட்டும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரோடு நானே உடன் இருக்கிறேன் என்று முதல் அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படி ஈடுபடுகிறார்கள் என்றால், உடனடியாக நாங்களும் அதில் இருப்போம் என்பது உறுதி என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவேன். எங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்துவேன் என்பது அரசியல் நோக்கம் என்பதை மட்டும் சொல்ல வேண்டும். அது தொழிலாளர் பிரச்சினையே அல்ல. உள்ளபடியே தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் இருந்தால், இந்தப் பிரச்சினைக்கு போராட வேண்டியது மத்திய சர்க்காரை எதிர்த்துதான், மாநில சர்க்காரை எதிர்த்து போராட்டம் எதுவும் செய்ய முடியாது. நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவேன், தெரிந்தோ, தெரியாமலோ, அவர்கள் இதிலே தமிழ்நாடு தொழிலுக்கு பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டைச் சாட்டாமல் இருக்க முடியாது. பேசுகிறார்கள், தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது, அமைதி கெட்டுப்போய்விட்டது என்று. அப்படிப் பேசுவதன் மூலம், பொதுவாக, முதலாளிகளைப் பயமுறுத்தி, அவர்களைத் தயங்க வைக்க இந்தத் தீர்மானம் பயன்படுமே தவிர, தொழிலாளர்களை வேலையில் அமர்த்தி வைக்க இந்தத் தீர்மானம் பயன்படாதவாறுதான் இருக்கிறது. முதலாளிகளைப் பயமுறுத்திச் செயல்படுவதென்றால், அது தமிழ்நாட்டில் தொழிலைக் கெடுக்க வேண்டும் என்கிற கெட்ட நோக்கம் இருக்க வேண்டுமேதவிர, நல்ல நோக்கத்தோடு இந்தப் போராட்டம் துவங்கப்படுவதாக ஒத்துக் கொள்ளவே முடியவில்லை. அவர்களைக் கேட்டுக் கொள்ளுவேன், தெரிந்து போட்டார்களோ, தெரியாமல் போட்டார்களோ,— தெரியாமல் போட்டார்கள் என்றால் எதிர்க்கட்சித் தலைவர் கோபித்துக் கொள்ளுவார்கள், நாங்கள் என்ன தெரியாதவர்களா என்று — ஆகவே, தெரிந்து போட்டார்கள் என்றால், தெரிந்து போட்டிருந்தால், அவர்களைக் கேட்டுக் கொள்ளுவேன், தயவுசெய்து தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்குப் பாதகம் விளைவிக்காதீர்கள் என்று. போராட்டம் என்றால் என்ன, சிறைச்சாலையைப் பார்த்ததில்லையா, தடியடியைப் பார்த்ததில்லையா என்றால், அந்த அளவிற்கு சர்க்கார் அந்த முடிவுக்குப் போகும் என்று கருத வேண்டாம். மற்றவர்களைப்போல, உங்களிடமும் பேசுவதற்கு அரசு தயாராக இருக்கிறது; நல்ல பரிகாரம் காண நீங்களும் ஒத்துழைப்பீர்களானால், இந்த அரசு அதற்கான எல்லா முயற்சிகளையும் எடுக்கத் தயாராக இருக்கிறது, ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுவேன். இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வேன், போராடப் போகிறோம் என்பதை அருள்கூர்ந்து ஒத்திபோட

வேண்டும் என்று கேட்க மாட்டேன், கைவிட வேண்டும் என்று கேட்கிறேன். பரிகாரம் தேடுவதற்கு, உட்கார்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்த, இந்த அரசு தயாராக இருக்கிறது. நீங்களும் நல்ல யோசனைகளைச் சொன்னால், அவற்றை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கிறது.

மகாராஷ்டிரத்தில் ஓட்டவில்லையா என்று கேட்கிறார்கள். அதை விமரிசனம் செய்ய வேண்டும் என்றால், ஆம், ஓடுகிறது; ஓடுவது நான்கு ஆலைகள். அந்த ஆலைகளை ஓட்டுகிறார்கள். அவர்களுக்கு வரும் நஷ்டத்தையும், இந்த 27 ஆலைகளை நடத்துவதில் ஏற்படும் நஷ்டத்தையும் கணக்குப் போட்டுப் பார்த்தால், ஆண்டு ஒன்றுக்கு, ஏற்படக்கூடிய நஷ்டம் ஏறக்குறைய ரூ. 30 கோடி ஆகிறது. இந்த நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் தாங்க வேண்டியதுதான் என்கிறார்களா? நான் நினைக்கிறேன், எந்த ஒரு எதிர்க்கட்சியாக இருந்தாலும், இப்படி அவசரப் பட்டுச் சொல்லுவார்கள் என்றுமட்டும் நினைக்க வேண்டாம், இது சரியான யோசனைகூட இல்லை. இந்தப் பயங்கரமான நஷ்டத்தை இந்த அரசு எப்படித் தாங்க முடியும்? இந்த ஆலைகள் மூடப்பட்டனவே, 1965-ம் ஆண்டிலிருந்தே மூடிக்கொண்டு வருகிறார்கள். 1966-ல் இதே மன்றத்தில் நான் நினைக்கிறேன், இப்போது அமைச்சராக இருக்கும் திரு. மாதவன் அவர்கள், அன்றைய தினம் தொழில் அமைச்சராக இருந்த கனம் வெங்கட்டராமன் அவர்களை, மூடப்பட்டிருக்கும் ஆலைகளை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டபோது, "தப்பு, நடத்த முடியாது" என்று சொல்லியிருக்கிறார்கள்.. இன்றைக்குக கழக அரசுக்கு யோசனை சொல்லுகிறவர்கள், கனம் வெங்கட்டராமன் அவர்களுடைய பதிலைக் கொஞ்சம் நினைவில் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன். இருந்தாலும்கூட இந்த அரசு ஒரு கார்ப்பொரேஷனை நிறுவி, அந்த ஆலைகளை ஓட்டுவதற்கு முயற்சிக்கிறோம், அந்த நிலையை ஒத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வேன்.

ஆடோமேஷன்பற்றிச் சொல்லும்போது, அரசின் தெளிவான கொள்கை என்ன என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் கேட்டார்கள். தெளிவாகச் சொல்லிவிடுகிறேன், ஏற்கனவே அதையே அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்த அரசு ஆடோமேஷனை ஏற்றுக்கொள்ளாது; எதிர்க்கும். அதுதான் அடிப்படைக் கொள்கை. நாங்கள் ஆடோமேஷனை ஏற்றுக் கொள்ளவில்லை; அதைப் புகுத்துவதை அரசு நிச்சயம் எதிர்க்கும் என்கிற உத்தரவாதத்தைத் தெரிவிக்கிறேன்.

பீடித் தொழிலைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏன் நீங்கள் கௌண்டர் போடவில்லை, ஏழு மாதங்கள் ஆகிவிட்டதே என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கேட்டார்கள். அந்த வழக்கில், முதல் ரெஸ்பான்டெண்ட் மத்திய சர்க்கார்தான்; இரண்டாவது ரெஸ்பான்டெண்டுதான் நாம். ஆனால், மத்திய சர்க்காருக்கு உடனே எழுதியிருக்கிறோம். தந்தி கொடுத்திருக்கிறோம். நேற்றுக்கூட எழுதியிருக்கிறோம், உடனடியாக கௌண்டர் தயார் செய்யுங்கள் என்று. அதற்கு பதில் என்னவென்றால், மற்ற மற்ற மாநிலங்களில் பீடி சட்டத்தை அமுலாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். எல்லா விடத்திலும் ரிட் போட்டவர்களுக்கெல்லாம் சேர்த்து, ஒரே மாதிரி கௌண்டர் தயார் செய்துக் கொண்டிருக்கிறோம் என்கிற பதிலைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். எப்படியாவது, விரைவில் சட்டத்தை அமுலாக்க வேண்டும் என்று உடனடியாக, கௌண்டர் போட்டு, பீடிச் சட்டத்தில் வந்திருக்கும் ரிட்டை வெகேட் செய்ய, அதை எதிர்த்து காலி செய்ய வேண்டும் என்கிற நடவடிக்கையை எடுப்போம் என்கிற உத்தரவாதத்தை தருகிறேன். தயங்க மாட்டோம்; மத்திய சர்க்காரிடமிருந்து கௌண்டர் வந்தவுடன் நாங்கள் கௌண்டர் போடுவோம் என்பதையும் தெரிவிக்கிறேன்.



இன்னும் ஒன்று கேட்டார்கள், டாக்டர் ஹாண்டே என்று நினைக்கிறேன். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் தொழில்கள் சம்பந்தமாக ஜாயிண்ட் மானேஜ்மெண்ட் கவுன்சில்கள் நிறுவப்பட வேண்டுமென்ற கருத்துப்படச் சொன்னார்கள். அதை எல்லாத் தொழிற்சாலையில் இருப்பவர்களும் ஏற்றுக்கொள்வதில்லை. இந்த அரசாங்கம் 19 இடங்களில் ஜாயிண்ட் மானேஜ்மெண்ட் கவுன்சில்களை நிறுவியிருக்கிறது. அவற்றில் 16 தனியார் துறையிலும் 3 அரசுத் துறையிலும் இருக்கின்றன.

மற்றும், தமிழர்–மலையாளி இன மக்களிடையே இருக்கும் மனஸ்தாபத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது அரசாங்கத்திற்கு உடன்பாடான கொள்கை அல்ல. மேலும் ஈ.எஸ்.ஐ.சி. ஆஸ்பத்திரிகளில் ஸ்பெஷலிஸ்டுகளைப் போட வேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். தக்க ஆட்கள் கிடைக்கும்போது போடுகிறோம், தக்க ஏற்பாடுகள் செய்கிறோம்.

இன்னும் பலர் பேசும்போது ஈ.எஸ்.ஐ.சி. ஆஸ்பத்திரியைப்பற்றிப் பேசினார்கள். இதைப்பற்றி திரு. சு. துரைசாமி அவர்களும் குறிப்பிட்டார்கள். கோயம்புத்தூரில் கட்டப்பட்டிருக்கிற ஈ.எஸ்.ஐ.சி. ஆஸ்பத்திரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த ஆஸ்பத்திரி இன்னும் திறக்கப்படவில்லை. இந்த ஆஸ்பத்திரி 500 படுக்கை வசதிகள் கொண்டதாக அமைக்கப்பட்டு கட்டப்பட்டது. இப்பொழுது மத்திய அரசும், மத்திய இ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷனும் சேர்ந்து, தமிழகத்தில் மட்டும் இந்தத் திட்டம் வேகமாக வளர்ந்து விட்டது, வடக்கு மாநிலங்களில் வளரவில்லை, ஆகவே, நாங்கள் அதிகமாகப் பணம் செலவழிக்க முடியாது, படுக்கைகளின் எண்ணிக்கையை 500-லிருந்து 300-ஆகக் குறைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்கிறார்கள். $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிட்டு கட்டிய ஆஸ்பத்திரியை மூடியே வைத்திருப்பது சரியல்ல, 300 படுக்கைகள் இருந்தாலும் வாங்கிக் கொள்ளலாம் என்று கருதி அவர்கள் கோரிக்கைக்கு ஒப்புக்கொண்டு இந்த அரசு மத்திய ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுக்கு எழுதியிருக்கிறது.

அடுத்தபடியாக, பெருந்துறையில் உள்ள டி. பி. சானடோரியத்தில் தொழிலாளர்களுக்காக சில படுக்கைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இதை மூடிவிட வேண்டுமென்று மத்திய அரசுக்கும், ஈ. எஸ். ஐ. கார்ப்பரேஷனுக்கும் எண்ணம் இருக்கிறது. இந்த சானடோரியத்தில் தொழிலாளர்கள் தங்கி உடல் நலம் பெறுவதற்கு வசதியிருக்கிறது. மாநில அரசு இதனுடைய தேவையை வற்புறுத்தி, அந்த சானடோரியம் அந்தப் பகுதியிலேயே தொடர்ந்து நிச்சயமாக இருக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறது.

அடுத்தபடியாக திரு. நா. காசிராமன் அவர்கள், எடையளவுத் துறை, தொழிலாளர் நல இலாகா இரண்டையும் ஒன்றாக இணைத்திருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 1966–ம் ஆண்டு "ஹைபவர் கமிட்டியின்" யின் பரிந்துரையின்படி சிக்கனத்தை முன்னிட்டு, இரண்டு இலாகாவையும் இணைத்து ஒருவரே கவனிக்க வேண்டுமென்று போட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் இதைப் பிரிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதை மீண்டும் தனித்தனி இலாகாவாக பிரிப்பதற்கு இப்போது இயலாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. கே. என். குமாரசாமி அவர்கள் முதலாளிகள் பஞ்சு ஆலைகளைத் திறக்க மறுக்கிறார்கள், இதற்குத் தனியாகச் சட்டம் தேவை என்று குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழில் சட்டங்களைத் திருத்தி, உருப்படியான ஒரு நல்ல சட்டத்தை உருவாக்குவதற்காக முன்பு தொழிலாளர் இலாகாவை நிர்வகித்து வந்த அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்தும், மத்தியப் பிரதேசத்திலிருந்தும் தொழில் சட்டங்களை வரவழைத்து, இந்த இலாகாவை இந்த நாட்டினுடைய

வளர்ச்சியோடு எப்படிப் பொருத்திக்கொள்வது என்று ஆலோசித்து, ஒருங்கிணைந்த முறையில் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவரலாம் என்று ஆலோசித்து வருகிறார்கள். ஒரு புதிய சட்டம் வரும். அப்போது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு ஏறக்குறைய 33,706 வீடுகள் கட்டித் தரத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 29,196 வீடுகள் கட்டப்பட்டுவிட்டன. மீதி வீடுகள் விரைவில் கட்டப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும் அங்கத்தினர்கள் பலரும் தங்களுடைய யோசனைகளைச் சொன்னார்கள். அங்கத்தினர்கள் சொன்ன யோசனைகளையெல்லாம் அரசாங்கம் பரிசீலிக்கும் என்ற உத்தரவாதத்தைச் சொல்லிக்கொள்கிறேன். சிறப்பான யோசனைகளை அரசாங்கம் பரிசீலிக்கும் என்று கூறி, தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை, உறுப்பினர்கள் அருள்கூர்ந்து திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, பஞ்சாலைகளைத் திறக்கும்படியான சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக போராட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் " அதை ரத்து செய்ய வேண்டும், அவைகள் எல்லாம் அரசியல் நோக்கத்திற்காக நாங்கள் செய்கிறோம் " என்று சொன்னார்கள். நாங்கள் இதை அரசியல் நோக்கத்திற்காகச் செய்வதைவிட, 16 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே, அவர்களுடைய வாழ்வு மலர வேண்டுமென்பதற்காகத்தான் செய்கிறோம். முன்னால் 4 மில்கள் மூடப் பட்டிருந்த சமயத்தில் அப்போது எதிர்க்கட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகக் கட்சிக்காரர்கள், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பிரச்சினைகளைத் தீர்ப்போம் " என்று சொன்னார்களே, பிரச்சினைகளை இப்போது தீர்த்தார்களா என்றால் இல்லை. அப்போது நான்கு மில்கள் மூடப்பட்டிருப்பதற்காக அத்தனை ஆர்ப்பாட்டம் செய்தீர்களே, இன்றைய தினம் 27 மில்கள் மூடப்பட்டிருக்கின்றனவே இதற்கு எல்லாம் என்ன சொல்லப் போகிறீர்கள் ? இவைகள் எல்லாம் திடீர் என்று ஏற்பட்டது என்று சொல்லவில்லை. தொடர்ந்து, இரண்டு மூன்று வருடங்களாக ஏற்பட்ட தவறுகளின் விளைவாக இந்த மில்கள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

எங்களுடைய போராட்டம் எதற்காக என்றால், சர்க்கார் தீர ஆலோசித்து திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்காகவே தவிர, வேறு காரணங்களுக்காக அல்ல. போராட்டத்தை நடத்துவதால் மட்டும் எந்தக் கட்சியும் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது என்பது எங்களுக்குத் தெரியாதா என்ன ? அந்தப் பிரச்சினை தீர என்ன செய்யப்போகிறீர்கள் ? ஜனநாயகத்திலே போராட்டம் செய்வதற்கு உரிமை இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, நீங்கள் மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராட்டம் நடத்தும்போது, நாங்களும் உங்களுடன் சேர்ந்து போராடுவோம் என்று சொன்னார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், " சேம் சைட் கோல் " அடிக்கிற மாதிரி இருக்கிறது (சிரிப்பு). நாங்களும் சேர்ந்து போராடுகிறோம் என்று சொல்வது " சேம் சைட் கோல் " அடிக்கிற மாதிரி இல்லையா ?



ஆளும் கட்சி உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்கள், " காதலிப்பவன் ஒருவன், பிள்ளை வளர்ப்பவன் ஒருவன் " என்று சொன்னார்கள். (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு). நீங்கள் சொன்னதைத்தான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போதிருக்கும் பிரச்சினை என்னவென்றால், மில்களை எப்படித் திறக்க வேண்டும் என்பதுதான். மத்திய சர்க்கார் 2½ கோடி ரூபாய் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனுக்கு உதவுவதாக பேப்பரிலே படித்தேன். எக்சைஸ் டூட்டியாக 15 லட்சம் ஒதுக்கிவிட்டோம் என்று சொன்னார்கள்.

மகாராஷ்டிரத்தில் சமீபத்தில் 12 மில்களைத் திறப்பதாக ஏற்பாடுகள் நடந்து, அவை இப்போது ஓடிக்கொண்டிருக்கின்றன. குஜராத்தில் மில்கள் திறக்கப்பட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் அவர்களுக்கு அதிகமான சலுகையை வழங்கி, அதிகமான தொகையை கொடுத்திருந்தால் அதே அளவுத் தொகையை நிச்சயமாக நாங்கள் போராடி வாங்கிக்கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும் அவர்களுக்கு எந்த அளவிற்குக் கொடுத்தார்களோ, அந்த அளவுத் தொகை நமக்குக் கொடுக்கவில்லையென்றால், மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது என்றால், நாங்கள் போராடி அந்த அளவுத் தொகையை வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் 30 கோடி ரூபாய் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மூடிய மில்களைத் திறப்பதற்கு 30 கோடி ரூபாய் ஆகும் என்று சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, 30 கோடி ரூபாய் இருந்தால்தான் திறக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். இது, " கல்யாணம் பண்ணினால்தான் பைத்தியம் தெளியும், பைத்தியம் தெளிந்தால்தான் கல்யாணம் " என்று சொல்வார்களே, அப்படி இருக்கிறது. 27 மில்களுக்கு அடிப்படையே 13½ கோடி ரூபாய்தான் ஆகும். மூடியுள்ள 27 மில்களையும் ஓட்ட முடியும் என்று நான் சொல்லவில்லை. திட்டவட்டமாக, " கண்டம் " பண்ணக்கூடிய மில்கள் சில இருக்கின்றன. அவற்றைக் " கண்டம் " பண்ண வேண்டும். சில மில்கள் நஷ்டம் ஏற்படக்கூடியவையாக இருக்கின்றன. சில மில்களை மற்றவற்றுடன் இணைத்தால் லாபம் வரலாம் என்று கருதப்படுகிறது.

கோயம்புத்தூரில் முன்பு மில்கள் ஓடி உற்பத்தியான நூல் அளவை, இப்போதுள்ள மில்கள் 3 ஷிப்ட்டுகள் வைத்து, அதே அளவு நூலை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். 27 மில்கள் ஓடிக்கொண்டிருந்த சமயத்தில் எவ்வளவு நூல் உற்பத்தியானதோ, அந்த அளவு நூல் இப்போது 3 ஷிப்டுகள் போட்டு, உற்பத்தி செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்த பின்னால் அவரிடம் விளக்கம் கேட்கிற முறையில் பேசலாமே தவிர மீண்டும் ஒரு பிரசங்கமே செய்வதாக இருந்தால் நான் சட்டப்பேரவை விதிகள் எதன் கீழும் அனுமதிப்பதற்கில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் விளக்கம் கேட்டுக் கேட்டு அவர்கள் சரியாகப் பதில் சொல்வதாக இல்லை. என்னுடைய ஆலோசனை என்ன என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சொன்ன ஆலோசனையை திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு முன்பு சொல்லியிருக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு. பொன்னப்பநாடார் இந்த விஷயம்பற்றிப் பேசவில்லை. நான் ஒரே இடத்தில் சொல்லியிருக்கிறேன் எங்கள் கட்சியின் சார்பில் போடப்பட்ட தீர்மானத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனால் இந்த விஷயத்தை விளக்கியாக வேண்டியிருக்கிறது. என் அப்படிப்பட்ட தீர்மானத்தைப்

போட்டோம் என்று சொன்னால் இந்தச் சர்க்கார் திட்டவட்டமாக எவ்வித முடிவும் எடுப்பதில்லை. உருப்படியாக காரியம் எதைச் செய்தாலும் நாங்கள் எங்களது ஒத்துழைப்பைத் தரத் தயார். இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இதில் அரசியல் பிரச்சினை கிடையாது. இது பதினாயிரக்கணக்கான ஏழை எளிய தொழிலாளர்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை. அதை இந்தச் சர்க்காருக்கு உணர்த்துவதற்காகத் தான நாங்கள் அந்தத் தீர்மானத்தையே போட்டோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நிலை—அல்ல மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நிலையைக் கருதி அந்தப் பஞ்சாலைகள் விரைவில் திறக்கப்படாவிட்டால் போராட்டம் துவங்கப்படும் என்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியிருக்கிற தீர்மானத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிற நேரத்தில் இவர்கள் போட்டிருக்கிற தீர்மானம் அரசியல் இலாப நோக்கத்தோடு போடப்பட்டதாகச் சொல்லவில்லை. தொழிலாளர் பிரச்சினையை அரசியல் இலாபநோக்கத்தோடு அணுகக்கூடாது என்று எல்லாக் கட்சிகளையும் சேர்த்தே குறிப்பிட்டார்கள். அதைத் தனக்கென்று எடுத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருக்கத் தேவையில்லை. அங்கு ஆலைகள் மூடப்பட்டிருக்கிற காரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் பதினாலாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களது பிரச்சினையை இந்த அரசு மிகுந்த அனுதாபத்தோடு கவனித்து வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பலநேரங்களில் மாநாடுகளைக் கூட்டித் தொழிற்சங்கத் தலைவர்களையும், ஆலை அதிபர்களையும் அழைத்து அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அதன்காரணமாக முன்பு ஒரு முறை பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க 2 லட்சம் வரையில் அரசு சார்பில் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போதுகூட அங்கிருக்கிற யூனியன்களுடைய தலைவர்கள் ஒன்று கூடிப் பொதுவாக எல்லா மில்களிலும் இருக்கிற தொழிலாளர்கள் தங்களுடைய 2 நாள் ஊதியத்தைப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கக் கொடுப்பதாகவும் அப்படி வசூலிக்கப்படுகிற 2 நாள் ஊதியம் பத்து லட்சத்திற்கு மேல் வரும் என்றும் அப்படிச் சேர்க்கப்படுகிற தொகைக்கு ஈடாக அரசும் தந்துதவவேண்டும் என்றும் சொன்னார்கள். " நீங்கள் பத்து லட்சம் அல்லது 15 லட்சம் சேர்ப்பீர்களானாலும் எல்லா மில்களிலும் இருக்கிற தொழிலாளர்களிடம் இருந்து 2 நாள் சம்பளத்தின்மூலம் எவ்வளவு சேர்க்கிறீர்களோ அதற்கீடாகிய தொகையினை அரசும் தரும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக மூடப்பட்டிருக்கிற பஞ்சாலைகளினால் யார், யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையினை இந்த அரசு உணர்ந்தேதான் இருக்கிறது.

இப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிப் போராட்டம் என்று ஆரம்பித்திருப்பது கூட ஆலைகள் மூடப்பட்டுவிட்டதன் காரணத்தினால் முதலாளிகள் தவிக்கிறார்களே என்கிற அனுதாபத்தினால் அல்ல என்று கருதுகிறேன். அவர்களுடைய எண்ணம் எல்லாம் கஷ்டப்படுகிற தொழிலாளர்களுடைய நலனைக் கருதி மீட்டும் அவர்களுக்கு வாழ்வளித்து ஊக்குவிக்கவேண்டுமென்று நல்லெண்ணத்துடன், பேருணர்ச்சியுடன்தான் இத்தகைய தீர்மானத்தைப் போட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்ய அரசு தயாராய் இருக்கிறது.

இதற்கிடையில் போராட்டம் நடத்துவதாக, முடிவாகத் தீர்மானிக்கவில்லை என்று கருதுகிறேன். சில வாய்தாக்கள் கொடுத்திருக்கிறார்கள். வாய்தா என்ற வார்த்தையை உபயோகிக்கலாமோ என்னவோ—அது



வழக்கு மன்ற வார்த்தை (சிரிப்பு). அந்த வாய்தா என்பது தீர்ந்து போய் போராட்டம் என்று நடத்தினால் நடக்கிற தொழிற்சாலைகளைக் கூட மூடப்படவேண்டிய சூழ்நிலையை உருவாக்கி விடுவோம் என்பதை மறந்து விட முடியாது. பாதிக்கப்பட்ட பதினாலாயிரம் தொழிலாளர்கள் மட்டும் தான் இதில் ஈடுபடுவார்கள் என்று சொல்ல முடியாது. திறந்து வேலை நடந்து கொண்டிருக்கிற தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்களும் அனுதாப வேலை நிறுத்தம் என்பதாக ஏற்பட்டு இன்னும் நான்கைந்து ஆலைகள் மூடக்கூடிய சூழ்நிலையை நமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ உருவாக்கிவிடுவோம் என்பதைப் போராட்டம் நடத்துகிறவர்கள் சிந்திக்க வேண்டும்.

" சேம் சைட் கோல் போடுகிறார்கள் " என்றார்களே, உண்மையில் அவர்கள் தான் " சேம் சைட் கோல் " போடுகிறார்கள். தீர்மானம் என்ன ? பஞ்சாலைகளைத் திறக்காவிட்டால் போராட்டம். இதற்கு மத்திய சர்க்காரின் உதவிகள் பூரணமாக நமக்குக் கிடைக்கவில்லை. மராட்டிய மாநிலத்திற்குச் சென்றிருந்தபோது விசாரித்தேன். சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத்தில், செயலாளர்களிடத்தில் பேசினேன். அது என்க்ரேஜிங் ஆக இல்லை, நஷ்டமே ஏற்பட்டு வருகிறது என்றார்கள்.

" எங்களுடைய காலத்தில் நான்கு மில்கள் மூடப்பட்டதற்கு என்ன என்னவோ சொன்னீர்களே, இப்போது 27 மில்கள் மூடப்பட்டுவிட்டனவே, இவற்றை நீங்கள் திறக்கக்கூடாதா ? " என்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய காலத்தில் நான்கு மில்கள் மூடப்பட்ட நேரத்தில் நாங்கள் அவற்றைத் திறவுங்கள் என்று சொன்னோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின்சார்பில் எந்தவிதமான போராட்டத்திலும் ஈடுபடவில்லை. தொழிலாளர் பிரச்சினையை ஜாக்கிரதையாக அணுகவேண்டும். கண்ணாடிப் பாத்திரத்தைப் போலப் பயன்படுத்தவேண்டுமென்று அறிந்திருக்கிறோம். ஆகவேதான் அவர்களது ஆத்திர உணர்ச்சியைத் தூண்டிவிடாது—அந்த நேரத்தில் இருந்த மாநில அரசுக்கு எங்கள் கருத்தை எடுத்துச் சொல்லி அவற்றைத் திறந்து வைக்க வேண்டுமென்று—வற்புறுத்தியிருக்கிறோம். அப்போது தொழிலாளர்களுடன் நல்ல பழக்கமும், தொழிற்சங்கத் திறமையும் வாய்ந்த அமைச்சர் அவர்கள் இருந்தார்களே, அவர்கள் என்ன பதில் சொன்னார்கள். " எங்களால் திறக்க இயலாது" என்று சொன்னார்கள். அதைத்தான் நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். கையில் சரியான புள்ளி விவரங்கள் கூட எதுவும் இன்றி நாங்கள் சொன்னோம், மராட்டியத்தில் திறந்து இருக்கிறார்களே என்பதாக. வெறும் எதிர்க் கட்சியாக இருந்து மட்டும் பழகியவர்கள் நாங்கள். ஆளும் கட்சியில் இருந்து பலவித புள்ளிவிவரங்களை எல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் நீங்கள். (திரு. பி. ஜி. கருத்திருமன்: இல்லை) மந்திரியாக இருந்தால்தான் ஆளும் கட்சி என்று சம்மதிப்பார்கள் போலும். ஆகவே அந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் திரு. வெங்கட்டராமன் அவர்கள் மூடப்பட்ட நான்கு மில்களைத் திறக்க முடியாது என்றார் என்றால் நான் கேட்கிறேன், உங்களால் நான்கு மில்களைத் திறக்க முடியவில்லையே, எங்களைப் பார்த்து 27 மில்களைத் திறவுங்கள் என்று சொல்கிறீர்களே, இது என்ன நியாயம் என்று.

நிச்சயமாக இந்த அரசு பதினாலாயிரம் தொழிலாளர்களுடைய பிரச்சினையை இதயபூர்வமாக உள்ள அனுதாபத்துடன் கவனிக்கும். ஐயோ, 27 மில்களுடைய முதலாளிகள் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்களே, தங்களுடைய மாளிகையில் இருந்து புகையாத மில்களைப் பார்த்து அவர்கள் மனம் வேதனையால் எவ்வளவு புகையும், ஆகவே அந்த மில்களைத் திறக்க முயற்சிக்க வேண்டும் என்கிற கோணத்தில் இல்லாமல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆகவே அவற்றைத் திறந்தாகவேண்டும் என்கிற எண்ணத்தில் அரசு நிரம்ப அக்கறை கொண்டிருக்கிறது. அதன் காரணத்தினால்தான் இன்று இருக்கும் நிலைமையை மேலும் கெடுத்துவிடாதிருக்க காங்கிரஸ் கட்சி போராட்டத்தை ஒத்திவைக்கவேண்டுமென்று எச்சரித்து தொழிலாளர்

[திரு மு. கருணாநிதி] [1969 மார்ச் 25

நலத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார். அப்படிக் கேட்டுக்கொண்டதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் தாம் எடுத்துக்கொண்ட வாய்ப்பில் இங்கே அதை மறு பரிசீலனை செய்கிறோம் என்று பெருந்தன்மையுடன் பதில் அளித்திருப்பாரானால் பாராட்டியிருப்பேன். சொல்லாததனால் பெருந்தன்மை இல்லை என்று அல்ல. சொல்லியிருந்தால் பாராட்டுவதற்குரிய பெருந்தன்மையாக இருந்திருக்கும்.

ஆகவே, எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். சட்ட மன்றம் நடந்துகொண்டிருப்பதன் காரணமாக முழுமையாக கவனிக்க முடியவில்லை. ஆயினும் அடுத்த திங்களில் இது சம்பந்தமான எல்லாக் காரியங்களும் கவனிக்கப்படும் என்கிற உறுதியினை இங்கே நான் அளிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் போராட்டத்தை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நன்றி. நிச்சயமாக அவர் சூசகமாவது இன்னஇன்ன நடவடிக்கை எடுக்கப்படும், போராட்டத்தை ஒத்திவையுங்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். நாங்களும் பேராட்டத்தைத் தேடிச் செல்பவர்கள் அல்ல. " சொச்சொச்சே " என்கிறீர்களே, அதுதான் காதில் விழுகிறதே. நீங்கள் எடுத்துக் கொள்ளப்போகிற நடவடிக்கைகளைத் திட்டவட்டமாக அறிவியுங்கள். திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுத்து, இது முதல் நடவடிக்கை இது இரண்டாவது நடவடிக்கை என்று 13-ஆம் தேதிக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அளவிலே ஒரு ஆலோசனை சொல்வதற்காகத்தான் சொல்லியிருக்கிறோம். போராட்டம் என்றால் எவ்வளவோ கொண்டுபோய் விடும். திடீரென்று நடத்துவது நல்லதல்ல என்பது எல்லாம் எங்களுக்குத் தெரியும். டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் நிறுவியிருக்கிறார்களா? அதனுடைய அம்சங்கள் என்ன, என்ன ? 14 ஆயிரம் தொழிலாளர்களுடைய பிரச்சினையெல்லாம் எப்படி அணுகுகிறோம் என்பதைப்பற்றி எல்லாம் வாயளவில் இல்லாமல் செயலளவில் செய்தால் நன்றாக இருக்கும். திட்டவட்டமாக இந்தச் சித்திரை மாதத்திற்குள்ளாக—புதிய முதலமைச்சர் வந்திருக்கிறார்கள்—அவர்கள் அப்படித் திட்டவட்டமாகச் செய்வார்களானால் அதைப் பரிசீலனை செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நிச்சயமாக அடுத்த மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். ஒரே ஒரு சிறிய விஷயம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற பொழுது என்னைப் பார்த்துக் பேசிக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு எதிரொலியை வைத்துக்கொண்டு அதைப்பற்றிப் பேசினால், அந்த எதிரொலியெல்லாம் பதிவேட்டில் ஏறாது—அவர்கள் என்னைப் பார்த்து நாக்கைச் சப்பாதீர்கள் என்று சொன்னதாகப் பதிவேட்டில் ஏறிவிடும். எனவே அவர்கள் அப்படிப்பட்ட நேரங்களில் சிறிது, இடைவெளிவிட்டு, இன்னார் இப்படிச் சொன்னார்கள் என்று சொல்லி அதற்காகச் சொல்கிறேன் என்று சொல்வார்களானால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்தச் சபையிலே எல்லா நடவடிக்கைகளும் பதிவு ஏட்டிலே இருக்கும். சிரிக்கிறார்கள், அழுகிறார்கள் என்றெல்லாம் இருக்கும். எல்லாமே அவற்றிலே வரும். நையாண்டிகள் செய்தால்........

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வராது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வராது என்று சொல்கிறார்கள். சிரிக்கிறார்கள் என்று வருகிறது. நீங்கள் செய்தால் வராதோ என்னவோ, தலைப்படியானால், எது எது வரும், எது எது வராது என்று குறிப்பிட்டு கொடுத்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.



[1969 மார்ச் 25]

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** நான் சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொன்னதைத் தெளிவாக்க விரும்புகிறேன். பேமெண்ட் ஆப் வேஜஸ் ஆக்டின் கீழ் மனுக்கள் 16-11-1967-ஆம் தேதி போடப்பட்டிருக்கின்றன. அதற்கு டெபுடி கமிஷனர் ஆப் லேபர் அல்லது அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஆப் லேபரிடமிருந்து வந்தது 1-2-1969-ஆம் தேதி. இப்படிப் பதினான்கு மாதங்கள் ஆயிற்று. இது லாக் அவுட்டினால் அல்ல, ஸ்ட்ரைக்கினால் அல்ல. அவருடைய தாமதம்தான் காரணம். 25 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். சட்டத்தை மீறிச் செய்திருக்கிறார்கள். நான் கோர்ட்டுக்குப் போக முடியாது, ஏனென்றால் தொழிலாளியாக இருப்பதாலே.

அடுத்தபடியாக, விசைத் தறியைப் பொறுத்த வரையில், 16 கஜம் என்று சொன்னார்கள். சராசரியாக 16 கெஜம் வரும் என்று சொன்னார்கள். சோற்றுக்கே இல்லையென்கிற நேரத்தில் துணி எடுக்க முடியாது. விசைத் தறியாக மாறிவிட்டால், வேலையில்லாத் திண்டாட்டம் வளரும். துணி தேங்கும். பக்கிங்காம் அண்ட் கர்னாடிக் மில் துணியையே வேனில் வைத்து விற்கக் கூடிய நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது. விசைத் தறியைப் புகுத்தி காம்போஸிட் மில்களைக் கொண்டுவந்தால், அது—திரு. ஜி. கே. சுந்தரத்தினுடைய யோசனை—தொழில்கள் வளராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விசைத் தறிகள், காம்போஸிட் மில்கள்பற்றிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். இவற்றைப் பற்றி அரசு எந்த விதமான முடிவும் எடுக்கவில்லை என்றாலும் இது குறித்து, கைத்தறி நெசவாளருக்குப் பாதகம் ஏற்படும் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. உணர்ந்திருக்கிற நேரத்திலே இதைப் பற்றி முடிவு எடுக்கவேண்டுமென்றால், எல்லாக் கட்சிகளையும் கைத்தறித் தொழிலாளர்களையும், நெசவுத் தொழில் தலைவர் திரு. நாச்சிமுத்து அவர்களையும் கூப்பிட்டுப் பேசிய பிறகே முடிவு எடுக்கப்படும் என்ற உறுதி மொழியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, தொழிலை நம்பித்தான் தொழிலாளர்கள் வாழ வேண்டுமா என்று நான் கூறியதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் அவ்விதம் கூறவில்லை. அந்தப் பொருள் படவும் கூறவில்லை. தொழிலுக்கு மந்த நிலை இருக்கிற நிலையிலும் தொழிலாளருக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் கூறினேனே தவிர அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துப்பட நான் கூறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மூடப்பட்ட மில்களைத் திறப்பதற்கு 30 கோடி ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். மறைந்த முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றிப் பேசிய பொழுது கூறியிருக்கிறார்கள். அவ்வளவு தொகை அரசாங்கத்தால் போட முடியாவிட்டாலும் அதற்கு மூன்று விதமாக வழி சொல்லியிருக்கிறார்கள். பேங்க் கியாரண்டி கொடுத்தால், ஓடுகிற மில்களை ஓட்டிக்கொள்ளலாம். இதைத் தவிர, ஆய்வுக் குழு இந்தப் பஞ்சாலைகளைப் பரிசீலனை செய்து எடுத்து நடத்தக்கூடிய பஞ்சாலைகளைப் பற்றி சிபார்சு செய்து எடுத்து நடத்துங்கள் என்று எந்த ஆலைகளைச் சொல்லுகிறதோ அந்த ஆலைகளை எடுத்து நடத்தலாம் என்றும், கடைசியில் இந்தக் குழு ஏற்றுக்கொள்ளாத ஆலைகளைப் பொறுத்த வரையில், எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களையும் வைத்துப் பேசி முடிவு எடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை அமுல்படுத்த சென்ற செப்டம்பர் மாதத்திற்குள் முடிவு எடுக்கலாம் என்று சொன்னார்கள். இது சம்பந்தமான அந்தக் குழுவினுடைய அறிக்கை 12 மில்களைப் பொறுத்த வரையில் கிடைத்திருக்கிறது. எனவே அந்த 12 ஆலைகளைப் பற்றி அரசு என்ன முடிவுக்கு வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் கோவை சென்றிருந்த பொழுது அடுத்த மாதத்திற்குள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இந்த

அறிக்கையிலே அதைப் பற்றியெல்லாம் தெளிவாகச் சொல்லப்படவில்லை. எனவே, என்ன முடிவு செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்த மூன்று உறுதிமொழிகளையும் இந்த அரசு மறக்கவில்லை. கியாரண்டி கொடுத்திருக்கிறோம். அந்த ஆய்வுக்குழுவின் அறிக்கையில் எந்த எந்த ஆலைகளை எடுத்து நடத்த முடியும் என்று முடிவு தெரிவித்திருக்கிறார்களோ அந்த ஆலைகளை எல்லாம் எடுக்க முடியுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து கார்ப்பரேஷன் மூலம் நடத்த ஏற்பாடு செய்யும். 12 மில்களுக்கு கியாரண்டி கொடுக்கப்பட வேண்டுமென்று வந்திருக்கிறது. ஆனால் பேங்கர்கள் கியாரண்டி கொடுப்பதற்கு கூட மறுக்கிறார்கள். அது பரிதாபகரமான நிலைமை. ஆலையின் நிலைமையைப் பார்த்த பிறகு பணம் கொடுத்தால் திரும்பி வராது என்று கருதி கியாரண்டி கொடுக்க மறுக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்து பரிகாரம் காண அரசு முயற்சி செய்யும். அந்த ஆய்வுக் குழுவினர் சொல்கிற ஆலைகளை டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாக எடுத்து ஓட்டுவதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இடத்தில் இல்லாததால், அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. சோ. அழகர்சாமி, திரு. கே. என். குமாரசாமி, திரு. எ. பாலசுப்பிரமணியன் ஆகிய இவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 79,98,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 11. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

"Nil"



### B. Reports, Notifications and Other papers.

* 107. A Review on the Progress made in the Handloom Industry (English).

† 108. A Review on the Progress made in the Handloom Industry (Tamil).

* 109. A Review on the Nationalized Transport in Tamil Nadu (English and Tamil).

* 110. A Review on Road Transport in Tamil Nadu 1968–69 (English and Tamil).

* 111. A Review of the Progress made in Co-operative Development Schemes, 1968–69 (English and Tamil).

* 112. Policy Note on Co-operative Banking at Block level.

‡ 113. A Review on Labour in Tamil Nadu, 1968–69 (English and Tamil).

114. Note of the Agriculture Department with reference to the suggestion made by the Committee on Public Accounts in recommendation 26 in its Report on the Accounts of the State of Tamil Nadu for the year 1963–64 in regard to the supply of bamboos to a paper mill.

§115. Fifth Report of the Committee on Estimates, 1968–69 (Fourth Assembly) relating to Harijan Welfare Department.

116. Report of the Committee on Estimates relating to action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Collegiate Education (Sixth Report).

117. Report of the Committee on Public Accounts, 1968–69 on the Appropriation Accounts 1965–66 and Audit Report, 1967.

118. Fourth Report of the Committee on Government Assurances (Fourth Assembly).

---

* Despatched to Members on 22nd March 1969.

† Despatched to Members on 23rd March 1969.

‡ Circulated and Despatched to Members on 24th March 1969.

§ Placed on the Table of the House on 24th March 1969.

## இணைப்பு I.

[335-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### எழுதுபொருள்-அச்சுத்துறை.

### 1968-69-ல் எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணியினைக் குறித்த ஆய்வுரை.

**அமைப்பு.**—எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் அரசாங்க எழுது பொருள் பண்டசாலைக்கும் அரசாங்க அச்சகத்திற்கும் பொறுப்புடையவர் ஆவார். நிர்வாகப் பிரிவில் அச்சகத் துணை இயக்குநரும், தொழில் நுட்பப் பிரிவில் பணி மேலாளரும் இயக்குநரின் உதவியாளராகச் செயல்படுகின்றனர். துறையின் நிறுவன விளக்கப் படம் ஒன்று இதன் முடிவில் இணைக்கப்பட்டுள்ளது.

### அச்சகப் பிரிவு.

2. **அச்சகப் பிரிவு.**—சென்னையிலுள்ள அரசாங்க அச்சகம் 1831-ம் ஆண்டில் ஒரு சில பழைய அச்சுக்களுடனும், 10 தொழிலாளர்களுடனும் தொடங்கப்பட்டது. தற்போது கிழக்கு ஆசிய நாடுகளிலேயே மிகப் பெரிய அச்சக நிறுவனமாக இது வளர்ந்துள்ளது. இதில் இப்போது ஏறக்குறைய 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் தொடர்ந்து நல்ல உறவு முறை நீடித்து வருகிறது.

எழுது பொருள்-அச்சுத் துறையின் அச்சகப் பிரிவிலே கடந்த மூன்றுண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பணிகளின் பலன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

### முதலீடு செய்துள்ள மூலதனம்.

| ஆண்டு. | அறிக்கை I. | | | அறிக்கை II. | | |
|---|---|---|---|---|---|---|
| | தொடக்க இருப்பு. | ஆண்டில் சேர்க்கை. | இறுதி இருப்பு. | மொத்த வருவாய். | மொத்தச் செலவு. | தேய்மான சேம நிதிக்கு வழங்கிய தொகை. |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1965-66 .. | 39,41,086 | 3.25,651 | 39,71,620 | 50,44,801 | 1,48,57,074 | 2,52,374 |
| 1966-67 .. | 39,71,620 | 11,07,743 | 48,78,581 | 55,29,639 | 1,45,15,326 | 2,50,528 |
| 1967-68 .. | 48,78,581 | 3,24,831 | 49,02,999 | 68,93,979 | 1,31,16,604 | 3,00,413 |

குறிப்பு.—வணிக முறையில் இயங்காத அரசாங்கத் துறைகளுக்கு இந்த அச்சகத்தில் இலவசமாக அச்சுப்பணி செய்து தரப்படுகிறது. எனவே, ஆதாய நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளாமல் பணி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதால், இத் துறையில் வருவாயைவிட செலவு மிகுந்துள்ளது.



மொத்தச் செலவு விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | வருவாய்க் கணக்கில் செலவு (ஆதாயம் தரும் துறைகள்—அச்சுக் கோர்ப்புப் பிரிவு, இயந்திரப் பிரிவு, பைண்டிங் பிரிவு). | ஏனைய இனங்கள் (ஆதாயம் தராதவையும் பணி இயல்பானவையும், இயந்திரப் பிரிவு, அச்சு வார்ப்புப் பிரிவு, படிவங்கள் அனுப்புதல், பொதுவாக அனுப்பும் வேலையைக் கவனிக்கும் பிரிவு). | மொத்தம். |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1965-66 | .. | 1,07,71,949 | 40,85,125 | 1,48,57,074 |
| 1966-67 | .. | 1,08,86,494 | 36,28,832 | 1,45,15,326 |
| 1967-68 | .. | 98,37,128 | 32,79,476 | 1,31,16,604 |

கடந்த மூன்றுண்டுகளில் இம்மாநில அரசாங்கத் துறைகளுக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் செய்து கொடுத்த பணிகளின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1965-66. | 1966-67. | 1967-68. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. இலவசமாக அச்சிட்டுப் பெறுவதற்கு உரிமையுள்ள அதிகாரிகள். | 99,11,466·84 | 1,02,38,735·73 | 87,86,270.96 |
| 2. தொகை கொடுப்பதன் மேல் வழங்கப்பெற்ற உரிமையுள்ள (மத்திய அரசு) அதிகாரிகள்— | | | |
| (i) ஆயத்துறை .. | .. | .. | .. |
| (ii) நிறுவன வரி நீங்கலான வருமான வரி. | | | |
| (iii) தணிக்கை .. | 1,11,913·32 | 80,220·54 | 1,12,896·48 |
| (iv) எழுதுபொருள் அச்சகப்பணி. | 637·25 | 6,926·94 | 13,466·83 |
| (v) அறிவியல் பணிகள். | 21,984·57 | .. | — |
| 3. இந்திய அஞ்சல்—தந்தித் துறை. | .. | .. | 402·94 |
| 4. தொகை கொடுப்பதன் மேல் வழங்கப்பெற உரிமையுள்ள அதிகாரிகள்— | | | |
| (i) தனியார் நிறுவனங்கள். | 2,41,352·62 | 2,10,280·19 | 2,96,442·85 |
| (ii) வாணிக நிறுவனங்களும், துறைகளும். | 4,81,317·51 | 3,50,192·53 | 6,19,456·37 |
| (iii) உள்ளாட்சி மன்றங்களுக்காகச்செய்த தேர்தல் பணி. | 139·03 | 138·07 | 8,191·57 |
| மொத்தம் .. | 1,07,72,811·14 | 1,08,86,494·00 | 98,37,128·00 |

(3) புதிய சட்ட மன்றப்பேரவை, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் பற்றிய "விவர நூல்", அரிசன நலத் துறை விண்ணப்பங்கள், பிற படிவங்கள், நகராட்சித் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல் கள், பல அரசுக் கல்லூரிகளுக்கான நாட் குறிப்பேடுகள்—இவை அச்சிடப்பட்டன.

(4) சட்ட மன்றப் பேரவையில் நடக்கும் விவாதங்கள், பால் வழங்கு அட்டைகள், தமிழ் நாடு போக்குவரத்துத் துறை பயணச் சீட்டுகள், 1968–69-க்கான நாட்குறிப்பு, 1969-ம் ஆண்டுக்கான நாட்குறிப்புப் புத்தகங்கள், தமிழ்நாடு அரசிதழ்கள், தமிழ்நாடு சட்ட அறிக்கைகள் —இவை அச்சிடப்பட்டன.

இந்த அச்சகம் முழு அளவிற்குச் செயல்பட்டு வருகிறது. என்றாலும், சில பணிகளின் அவசரப் பாங்கினையொட்டி அவற்றை உள்ளூரில் தனியார் அச்சகங்களில் அச்சிடவேண்டியுள்ளது.

அரசு அச்சகத்தில் நடந்த வேலைகளின் மதிப்பும், தனியார் அச்சகங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளின் மதிப்பும், கடந்த மூன்றுஆண்டுகளில் அவற்றின் சத வீதமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| ஆண்டு. | மொத்த வேலையின் மதிப்பு. | அரசு அச்சகத்தில் செய்த வேலையின் மதிப்பு. | தனியார் அச்சகத்தில் செய்த வேலையின் மதிப்பு. | மொத்த மதிப்பில் சத வீதம். அரசாங்க அச்சகம். | தனியார் அச்சகம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | ரூ. | ரூ. | ரூ. | | |
| 1965–66 .. | 1,06,37,869 | 99,11,467 | 7,26,402 | 93·17 | 6·83 |
| 1966–67 .. | 1,22,54,832 | 1,02,38,736 | 16,096 | 83·55 | 16·45 |
| 1967–68 .. | 92,44,780 | 87,86,271 | 4,58,509 | 95 04 | 4·96 |

1968-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில

பல்வேறு அச்சுப் பணிகளில் பயணச் சீட்டுகள் அச்சிடும் பணியும், அரசே வெளியிடும் பாடப் புத்தகங்களை அச்சிடும் பணியும் மிகவும் உயர்ந்துள்ளன. அச்சிடப்பட்ட அரசு பாடப் புத்தகங்கள் பற்றிய விவரங்கள், "பாடப் புத்தகம், கிளை அச்சகம்" என்ற தலைப்பின்கீழ் தனியே தரப்பட்டுள்ளன. கடந்த மூன்றுஆண்டுகளில் அச்சிட்டு வழங்கிய பயணச் சீட்டுகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| ஆண்டு. | | | | அச்சிடப்பட்ட பயணச் சீட்டு களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1965–66 | .. | .. | .. | 3,861·82 |
| 1966–67 | .. | .. | .. | 6,887·24 |
| 1967–68 | .. | .. | .. | 4,098·70 |

(2) அரசு வெளியீடுகள் நிலையம், மலேச்சாலை, சென்னை-2.—சென்னை மலேச்சாலையிலுள்ள அரசு வெளியீடுகள் நிலையத்தில், தமிழ் நாடு அரசு வெளியீடுகளும் இந்திய அரசு வெளியீடுகளும் பெறப் பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு நேரில் விற்பதைத் தவிர, பண அஞ்சல் மூலம், அல்லது கருவூலச் செலுத்துச் சீட்டு மூலம் பணம் அனுப்புபவர்களுக்கும் இந்த வெளியீடுகள் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும், சென்னை மாநகரிலும், வெளி



யூர்களிலும் அதிகாரம் பெற்ற முகவர்கள் வாயிலாகவும், இவ்வெளி யீடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியில் உள்ளவாறு 47 முகவர்கள் உள்ளனர். 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் ரூ. 2,04,664·95-க்கு அரசு வெளியீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந் நிலையம் விற்பனை அதிகாரியின் பொறுப்பில் உள்ளது.

(3) பாடப் புத்தகக் கிளை அச்சகம், மலேச்சாலை, சென்னை—2.—பணி உதவி மேலாளரின் உடனடி மேற்பார்வையின்கீழ் இந்த அச்சகம் இரண்டு முறை மாற்றுகளில் செயல்படுகிறது. 397 தொழிலாளர்கள் இங்கு பணியாற்றுகின்றனர். 1967–68-ல் அரசே வெளியிடும் 1-ம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு வரையிலான (தமிழ்) பாடப் புத்தகங்களும் நான்காம் வகுப்பு முதல் எழாம் வகுப்பு வரையிலான (ஆங்கிலம்) பாடப் புத்தகங்களும் 90·50 லட்சம் வரையில் அச்சிடப்பட்டன. இது வன்றி, மைய அச்சகத்திலிருந்து மாற்றப்பட்ட சில முதன்மை அச்சகப் பணிகளும் இந்த அச்சகக் கிளையில் நிறைவேற்றப்பட்டன.

1969–70-ம் ஆண்டுக்கு 67·70 லட்சம் பாடப் புத்தகங்களுக்கான கேட்புக் குறிப்பு ஒன்று பெறப்பட்டுள்ளது.

மலேச்சாலை, பாடப் புத்தக அச்சகத்தில் சிற்றுண்டிச் சாலையைத் திறப்பதற்கு வட்டியில்லாக் கடனாக ரூ. 3,000 வழங்க அரசு அனு மதித்துள்ளது. அவசியமான கலன்களும், நாற்காலி முதலியனவும் வாங்கப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் அச்சடிக்கப்பட்ட பாடப் புத்தகங் களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| ஆண்டு. | | | | புத்தகங்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1965–66 | .. | .. | .. | 73·27 |
| 1966–67 | .. | .. | .. | 70·45 |
| 1967–68 | .. | .. | .. | 90·50 |

பாடப் புத்தக அச்சகத்திற்கு இப்போதுள்ள இட வசதி மிகக் குறைவு. எனவே கட்டிடம் ஒன்றைக் கட்டுவதுபற்றி ஆலோசிக்கப் பட்டு வருகிறது.

(4) உயர் நீதி மன்றத்திலுள்ள கிளை அச்சகம்.—உயர் நீதி மன்ற விளாகத்தில் அமைந்துள்ள கிளை அச்சகத்தில் நீதி மன்றத்துக்கு அன்றாடம் தேவைப்படும் வழக்குப் பட்டியல்கள் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம், இரண்டு முறை மாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகிறது. இதைத் தவிர, அவசரமாகத் தேவைப்படும் தரப்படுத்திய படிவங்களும், தரப்படுத்தாப் படிவங்களும் இங்கு அச்சிடப்படு கின்றன.

உயர் நீதி மன்ற வழக்குகள், இந்தியச் சட்ட அறிக்கைகள் ஆகிய இவைகளை அச்சிடுவதற்கு இக் கிளை அச்சகத்தின் கிழக்குப் பக்கத்தில் அரசு 2,090 ச. அடி இடத்தைக் கூடுதலாக ஒதுக்கியுள்ளதால், சில இயந்திரங்களையும், பிற கருவிகளையும் மத்திய அச்சகத்திலிருந்து மாற்றுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கிளை அச்ச கத்தை விரிவுபடுத்தவும், இதற்கெனக் கூடுதல் பணியாளர்களையும், இயந்திரங்களையும் வழங்கவும் அரசு ஒப்பளித்துள்ளது. பொதுப்பணித் துறையின் மின்சாரப் பொறியாளர் புதிய வளவுகளுக்கு மின்சாரம் அளிக்கும் பணியை மேற்கொண்டுள்ளார்.

இக் கிளை அச்சகம், மத்திய அச்சகத்தின் பணி உதவி மேலாளர் ஒருவரின் கண்காணிப்பில் உள்ளது.

[1969 மார்ச் 25

**3. அச்சகத் தேய்மானச் சேமநிதியின் இருப்பு.**—அச்சகம் இடரின்றித் திறம்பட இயங்கும் நோக்கத்துடன், அச்சகத்தைச் சேர்ந்த இயந்திர தளவாடங்களையும், மேசை நாற்காலி போன்ற பொருள்களையும் புதுப்பிப்பதற்காகவும், புதிதாக வாங்குவதற்காகவும், தேய்மானச் சேம நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அச்சகத்திலுள்ள இயந்திரத் தளவாடங்கள், மற்றும், மேசை நாற்காலி போன்ற பொருள்களுக்கு ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் உள்ள மதிப்பின்படிக் கணக்கிடப்படுகிற தேய்மானத் தொகை (ஆண்டில் புதிதாக வாங்கப்படும் பொருள்கள், இயந்திரங்கள் இதில் அடங்கா) குறைந்து வரும் மதிப்பின் அடிப்படையில் குறிப்பிட்ட வீதத்தில் ஆண்டுதோறும் இந்த நிதிக்குச் செலுத்தப்படும்.

இருப்புப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்ட பயன்படுத்த இயலாத, அச்சு பொறி, கருவிகள், மேசை நாற்காலி போன்ற பொருள்களின் புத்தக மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| 1968-ம் ஆண்டு எப்ரல் திங்கள் 1-ம் தேதியில் இந்த நிதியிலிருந்த தொகை. | 14,11,743 |
| 1968–69-ம் ஆண்டில் சேர்க்கப்படுமென்று மதிப்பிட்டுள்ள தொகை. | 3,70,700 |
| 1968–69-ல் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ள தொகை. | 3,42,400 |
| 1969-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதியில் எதிர்பார்க்கப்படும் மிச்சத் தொகை. | 14,40,043 |

**4. வாங்கப்பட்ட இயந்திரங்களும் கருவிகளும்.**—1968–69-ம் ஆண்டில் கீழ்க்கண்ட இயந்திரங்களும், கருவிகளும் வாங்கப்பட்டன. அவற்றின் மதிப்பு அவைகளுக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ளது :—

| வாங்கப்பட்ட கருவிகளின் விவரம். | அளவு. | விலை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. 42" அளவுடைய இந்தியாவில் தயாரித்த புலி சின்னம் காகிதம் வெட்டும் இயந்திரம், பவரின் சக்தியால் இயங்கும் தானாகவே நிற்கும், இரண்டு வெளி நாட்டுக் காகிதம் வெட்டும் கத்திகள் பொருத்தப்பட்டது. மற்றப்படி எல்லா சாதாரண இயந்திரப் பாகங்களைக் கொண்டது. 440 வோல்ட் ஏ.சி. மின்விசையுடன் கூடிய மின் மோட்டார் கொண்டது. 3 நிலைகள் 50 சைக்கிள்கள், நிலைப்புள்ளி முதலியவைகளைக் கொண்டது. சுவிட்சும், ஸ்டார்டரும், இல்லாதது. | | 4,104·00 |
| 2. சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்ட, 70—90 சென்டி மீட்டர் 27"—36"), அளவுடைய தட்டை வடிவ எழுத்து அச்சு இயந்திரம், வகை. பி.டி. 5. இயந்திரத்திற்குச் செல்ல வேண்டிய பொருள்களைத் தொடர்ந்து தானாகவே வழங்கக் கூடியது, ரப்பர் உருளை ஒரு பிரிவு, உருளை அச்சு ஒன்று, இரண்டு சேசுகள், 50 சைக்குள். 3 நிலைகளில் இயங்குவதற்கு வேண்டிய எசி. மின் விசைக் கருவிகள் ஆகியவைகளைக் கொண்டது. | | 83,844·03 |
| | மொத்தம் .. | 87,948·03 |



1969 மார்ச் 25]

**5. அந்நியச் செலாவணி.**—ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட எஞ்சியுள்ள அந்நியச் செலாவணி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | ஒப்பளிப்பு வழங்கியது. | பயன் படுத்தியது. | எஞ்சி இருப்பது. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1966–67 .. .. | 13,455 | 13,455 | .. |
| 1967–68 .. .. | 95,714 | 95,714 | .. |
| 1968–69 .. .. | 2,47,050 | 2,47,050 | .. |

அந்நியச் செலாவணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன், அவசியமான உரிமங்களும், அதிகாரப் பத்திரங்களும் பெறப்பட்டு, அந்நிய நாடுகளிலிருந்து பொறிகளையும், கருவிகளையும், இறக்குமதி செய்து வழங்குவதற்காக, குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

**6. கட்டடங்கள்.**—கழிவுக் காகிதங்களை சேகரித்து வைப்பதற்காக ரூ. 34,000 செலவில் ஓரளவு நிலையான கொட்டகை ஒன்றைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

விருத்தாசலம், அரசு வட்டார அச்சகத்திற்காகக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக நிலங்களைக் கையகப்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்ட வருவாய் அதிகாரிக்கு இது குறித்து கடிதம் எழுதப்பட்டுள்ளது.

**7. அரசாங்க அச்சகத்தில் கீழ்க்காணும் பிரிவுகள் அடங்கியுள்ளன.**—

(1) மைய அச்சகம், தங்கசாலைக் கட்டிடம், சென்னை–1.

(2) அரசாங்க வெளியீடுகள் விற்பனை நிலையம், மலைச்சாலை, சென்னை–2.

(3) பாட புத்தகக் கிளை அச்சகம், மலைச்சாலை, சென்னை-2.

(4) உயர் நீதிமன்றக் கிளை அச்சகம், சென்னை–1.

(5) மைய சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகம், சென்னை–3.

(6) கிளை அச்சகம், புதுக்கோட்டை.

(7) வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.

(8) வட்டார அச்சகம், சேலம்.

(9) வட்டார அச்சகம், விருத்தாசலம்.

இந்த அச்சகங்கள் செயல்படும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

**(1) மைய அச்சகம்.**—மைய அச்சகத்தில் 2,600 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். வழக்கமாகச் செய்யும் அச்சுப் பணியுடன் கீழ்க்கண்ட பணிகளையும் இந்த அச்சகம் நிறைவேற்றியுள்ளது :—

(1) உலகத் தமிழ் மாநாட்டிற்காக ஏராளமான அழைப்பிதழ்களும், உறைகளும், சிறு வெளியீடுகளும், தமிழிலும், ஆங்கிலத்திலும் சாதாரண வண்ணத்திலும், பல வண்ணங்களிலும் உயர்தர காகிதத்தில் அச்சிடப்பட்டன.

(2) அஞ்சலகச் சிறு சேமிப்புத் திட்டங்கள் குடும்ப நலத் திட்டங்கள், மீன் காட்சிகள், வனவிலங்கு வாரம் ஆகியவற்றின் பல கூறுகளை விளக்கும் சிறு வெளியீடுகள் பல வண்ணங்களில் அச்சடிக்கப்பட்டன.

[1969 மார்ச் 25

(5) **சென்னை மையச் சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகம்.**—மையச் சிறைச்சாலையில் கைதிகளுக்கு வேலையளிக்கும் நோக்கத்துடன், இந்தக் கிளை அச்சகம் நிறுவப்பட்டுள்ளது. இதில் ஏறக்குறைய 180 கைதிகள் பணியாற்றுகின்றனர். மைய அச்சகத்திலிருந்து அனுப்பப்பட்ட மேற்பார்வைப் பணியாளர்கள் இக் கைதிகளின் பணியை மேற்பார்வையிடுகின்றனர். தரப்படுத்திய படிவங்களை அச்சிடும் வேலை மிகப் பெரிய அளவினதாகும். எனவே கைதிகளுக்கு முழு நேர வேலை கொடுப்பதற்கு ஏற்ற படிவங்கள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. அரசாங்க அச்சகத்தின் 31 தொழில் நுட்பப் பணியாளர் இங்கு பணியாற்றுகின்றனர்.

கடந்த மூன்றுண்டுகளில் இக் கிளை அச்சகத்தில் ஆன செலவு செய்த வேலை மதிப்பு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | | | | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. |
| 1965–66 | .. | .. | .. | 2,78,666 | 2,16,465 |
| 1966–67 | .. | .. | .. | 2,78,848 | 2,16,108 |
| 1967–68 | .. | .. | .. | 2,52,128 | 1,95,097 |

(6) **கிளை அச்சகம், புதுக்கோட்டை.**—பணி உதவி மேலாளர் ஒருவரின் உடனடி மேற்பார்வையின்கீழ் இக் கிளை அச்சகம் செயல்படுகிறது. இரண்டு முறை மாற்றுகளில் இது செயல்படுகிறது. இந்த அச்சகத்தில் 191 பேர் பணியாற்றுகின்றனர்.

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட வேலை இனங்கள் நிறைவேற்றப்பட்டன:—

(1) அரசிதழ் சிறப்பு வெளியீடுகள் 836 உட்பட, எல்லா மாவட்டங்களுக்குமான மாவட்ட அரசிதழ்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டன.

(2) மதுரை-வடக்கு, மதுரை நகரம், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி ரயில்வே காவல்துறை, தஞ்சாவூர், திருநெல்வேலி, தர்மபுரி மாவட்டங்கள் சம்பந்தமாக வாராந்திரக் குற்றம், குற்ற நிகழ்வுத் தாள்கள், மாதாந்தரக் குற்ற ஆய்வு, மதுவிலக்கு ஆய்வு, மாவட்டப் புலனாய்வுப் பணி குறித்த அச்சு வேலைகள்.

(3) கல்லூரிகளுக்கான நாட் குறிப்பேடுகள்—17 இனங்கள்.

(4) தலைமைச் செயலகம் பற்றிய குறியீடுகள்.

(5) திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் குறியீட்டு அட்டவணை—7 ஆண்டுகளுக்குரியது.

(6) வாழ்க்கை வழிகாட்டிச் சிறு ஏடுகள்—23 இனங்கள்.

(7) தரப்படுத்திய படிவங்களும் தரப்படுத்தாப் படிவங்களும் (தமிழ்நாடு கணக்கு விதித் தொகுப்பு, தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு ஓய்வூதியத் தொகுதிப் படிவங்கள் போன்றவை).

(8) பெருந்துறைச் சட்ட மன்றப் பேரவைத் தொகுதியின் வாக்காளர் பட்டியல்களும் சுருக்கத் திருத்தச் சேர்க்கைகளும்.

(9) பற்பல கருவூலங்களுக்குத் தேவைப்படும் 70 காசு மதிப்புள்ள முத்திரைத் தாள்களை அச்சிடுதல்.

(10) உலோகத் தகடுப் புத்தகங்கள் போன்ற பொருள்கள் தயாரிப்பு.



1969 மார்ச் 25]

கடந்த மூன்று ஆண்டுகளில் செய்த செலவும், பணியின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | | | | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. |
| 1965–66 | .. | .. | .. | 4,77,639 | 4,40,507 |
| 1966–67 | .. | .. | .. | 4,88,318 | 4,44,252 |
| 1967–68 | .. | .. | .. | 4,79,362 | 4,35,811 |

(7) **வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.**—இந்த வட்டார அச்சகம், பணி உதவி மேலாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. இந்த அச்சகத்தில் மொத்தம் 119 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

கடந்த மூன்றுண்டுகளில் செய்த செலவும், பணியின் மதிப்பும் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | | | | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. |
| 1965–66 | .. | .. | .. | 2,91,205 | 2,34,432 |
| 1966–67 | .. | .. | .. | 2,61,854 | 2,09,483 |
| 1967–68 | .. | .. | .. | 2,55,936 | 2,03,416 |

(8) **வட்டார அச்சகம், சேலம்.**—இக் கிளை அச்சகம், பணி உதவி மேலாளர் ஒருவரின் நேரடி மேற்பார்வையில் உள்ளது. இங்கு 92 பேர் பணியாற்றுகின்றனர்.

கீழ்காணும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:—

(1) அன்றாடக் குற்றம், வாராந்திர, மாதாந்திர, ஆண்டு ஆய்வு, மாதாந்திர மதுவிலக்கு, குற்ற ஆய்வு உட்பட சேலம் சம்பந்தப்பட்ட மாவட்டப் புலனாய்வுப் பணிகள்.

(2) சேலம், தர்மபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் சம்பந்தப்பட்டவையும், செயலகத் துறைகள் சம்பந்தப்பட்டவையுமான ஆவணக் குறியீடுகள்.

(3) உயர் நீதி மன்ற வழக்குகள், சேலம் அரசினர் கலைக் கல்லூரிக் குறிப்புகள் முதலியன சம்பந்தப்பட்ட பணிகள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் செய்த செலவும் வேலை மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | | | | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. |
| 1966–67 | .. | .. | .. | 1,99,910 | 1,59,928 |
| 1967–68 | .. | .. | .. | 1,79,449 | 1,43,200 |

(9) **வட்டார அச்சகம், விருத்தாசலம்.**—இந்த அச்சகம், பணி உதவி மேலாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. இங்கு 126 பேர் பணியாற்றுகின்றனர்.

கீழ்க்காணும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன :—

(1) அன்றாடக் குற்றத்தாள்கள், வாராந்தரக் குற்ற ஆய்வுகள், மாதாந்தரக் குற்ற ஆய்வுகள், மதுவிலக்குக் குற்ற ஆய்வுகள், தென் ஆர்க்காடு மாவட்டத்தின் ஆண்டுக் குற்ற ஆய்வுகள்.

(2) விருத்தாசலம், திருப்பூர் அரசினர் கலைக் கல்லூரிகளின் கல்லூரி நாட்குறிப்பேடுகள்.

(3) 1969-ம் ஆண்டுக்கான இந்து சமய, அறக் கட்டளைகள் ஆண்டுக் குறிப்பு.

(4) வருவாய்த்துறைப் படிவங்கள் (தரப்படுத்தியவை) சுமார் 46 இனங்கள்.

(5) பத்திரப் பதிவுத் துறையின் II-2 பதிவுக் கட்டுப் புத்தகங்கள் 30,000.

(6) அச்சடித்த வெளியீடுகள் மொத்தம் 2,00,81,712.

(7) கட்டுதல் பிரிவில் தனித் தாள்கள் அனுப்பப்பட்டவை [52,688·04 (ஆயிரத்தில்)].

வாடகைக் கட்டிடத்தில் இந்த அச்சகம் தற்போது செயல்படுகிறது.

தொழிலாளர் பொழுதுபோக்கு மன்றத்திற்கு இக் கட்டிடத்தின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. நல நிதியிலிருந்து ரூ. 200 ஒதுக்கப்பட்டுள்ளது. இதழ்கள், விளையாட்டுப் பொருள்கள் வாங்கவும் பூப்பந்து கால்பந்து விளையாட்டிடமும் அச்சகத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ளன

கடந்த இரண்டு ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகையும் செய்த வேலையின் மதிப்பும் கீழ்வருமாறு:—

| ஆண்டு. | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1966-67 .. .. .. | 1,94,757 | 1,55,805 |
| 1967-68 .. .. .. | 2,74,334 | 2,19,200 |

8. **அரசுப் பரிசுச் சீட்டு அச்சடித்தல்.**—இந்த ஆண்டு பரிசுச் சீட்டுகளை அச்சடித்தல் சிறப்புப் பணியாகும். இந்த மாநிலத்தின் வருவாயைப் பெருக்க, ரூ. 1 பரிசுச் சீட்டுகளை அச்சடித்து வெளியிட அரசு ஆணையிட்டுள்ளது. சிறு சேமிப்புத் துறை இயக்குநர் பரிசுச் சீட்டுகளுக்குப் பொறுப்பு வகிக்கிறார். இவர், அரசுப் பரிசுச் சீட்டுகள் இயக்குநர் என்றழைக்கப்படுகிறார். பரிசுச் சீட்டுகளை அச்சடித்துக் கருவூலங்களுக்கு அனுப்பும் பணி எழுது பொருள்—அச்சுத் துறை இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள் பெருமளவில் பரிசுச் சீட்டுகளை அச்சடித்தலில் மிகவுயர்ந்த தொழில் நுட்பத் திறன் வேண்டியுள்ளது. மிக உன்னிப்பாக நாட்டமும் செலுத்தப்படவேண்டியுள்ளது. இப் பணி, 1968, ஆகஸ்டு திங்களில் தொடங்கப்பட்டு இந்த ஆய்வு ஆண்டிலும் தொடர்ந்து நடக்கிறது. ஒவ்வொரு தொடரிலும் 10 லட்சம் பரிசுச் சீட்டுகள் அடங்கிய 64 தொடர் பரிசுச் சீட்டுகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

பொதுமக்களிடம் பரிசுச் சீட்டு பரவலாக்கப்பட்ட பின்னர் குறுகிய கால அறிவிப்பில் பரிசுச் சீட்டுகளின் தேவை அதிகரித்துள்ளது. இது அச்சகத்திற்கு பெரிதும் இடர்ப்பாட்டைத் தந்துள்ளது. எனினும், அச்சகம் இரவு பகலாகப் பணியாற்றி, பொதுமக்களின் இத் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. அவசியமான அளவிற்கு அரசு, கூடுதல் பணியாளர்களை நியமித்தது. பரிசுச் சீட்டுகளை அச்சடிப்பதற்கென ரூ. 25 லட்சம் அளவிற்கு இயந்திரம் வாங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.



விளக்கப்படத் தொடர்பான எழுத்துப் பகுதி அச்சடிக்கும் இயந்திரங்கள் (Letter-Press Printing Machines) பதினைந்தும், தொய்வகப் படிவ முறை அச்சு இயந்திரங்கள் இரண்டும் (Offset Printing Machines சுழல் இலக்கமிடும் இயந்திரம் (Rotary Numbering Machines) ஒன்றும் கம்பி தைக்கும் இயந்திரங்கள் இரண்டும், வெட்டு இயந்திரங்கள் நான்கும் இந்தச் சிறப்புப் பணிக்கு வாங்கப்படுகின்றன. இப் பணி நம்பகமான, ரகசியத் தன்மை வாய்ந்ததாகையால் இப் பிரிவில் பணியாற்றுவோருக்குச் சிறப்பு ஊதியம் அளிக்கப்படுகிறது. 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையைக் குறுகியகால அளவில் அச்சிட்டு வழங்கியதன் மூலமாக அரசு அச்சகம் உண்மையாகவே சிறந்த பணி ஆற்றியுள்ளது.

9. **தொழிலாளர்களுக்கு வசதிகளும் நலன்களும்.**—சென்னை அனைத்து இந்திய வானொலியின் அறிவுரையின் பேரில் 25 உறுப்பினர்களுடன் மைய அச்சகத்தில் கேள்வியறிவு மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த மன்றம் பல வழிகளில் சிறப்புக் கல்வி நிலையமாக அமைகிறது. தொழிலாளர்கள் தங்கள் அறிவாற்றலை விரிவுபடுத்த உதவுகிறது. அன்றாட வாழ்வில் நிகழும் சிக்கல்களை உரிமையுடன் விவாதிப்பதற்கும் இது துணை செய்கிறது. சுருங்கச் சொன்னால், இது கேட்கவும், விவாதிக்கவும், செயல்படவும் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சிறந்த வாய்ப்பாக அமைகிறது. குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கூட்டங்கள் நடக்கின்றன.

கடமையின்போது ஈய நச்சு அபாயத்திற்கு உள்ளாகும் மத்திய அச்சகப் பணியாளர்கள் 150 பேருக்கும், புதுக்கோட்டையில் உள்ள அரசு அச்சகப் பிரிவில் பணியாற்றும் 15 பேருக்கும் ஆளுக்கு ¼ லிட்டர் பாலும், பல வைட்டமின் நிறைந்த மாத்திரை ஒன்றும் வழங்கப்படுகின்றன.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்குத் தாராள ஓய்வு ஊதிய விதிகளின் நன்மைகளை விரிவுபடுத்துதல்.**—அரசு, தாராள ஓய்வு ஊதிய விதிகளின் நன்மைகளை அரசு அச்சகப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தி உள்ளது. இத் திட்டத்தின்கீழ் வரும் ஓய்வு ஊதிய நேர்வுகளை பரிசீலிக்க ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்ட நேர்வுகளைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தாராள ஓய்வு ஊதிய விதிகளை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் . பரிசீலிக்கப்பட்ட ஓய்வு ஊதிய நேர்வுகள். | முடிவு செய்யப் பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | எஞ்சியவை. |
|---|---|---|
| 256 | 190 | 66 |

(i) **மருத்துவ வசதிகள்.**—பணியாளர்களின் நலனுக்காக, இரண்டு முழு நேர மருத்துவ அதிகாரிகளும், இரண்டு தலைமைச் செவிலியர்களும், மருந்து கலந்து கொடுப்பவர் ஒருவரும், இரண்டு முதலுதவி கவனிப்பாளர்களும் கொண்ட தனி மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு, மருத்துவ மனை சிகிச்சை, அறுவை சிகிச்சை, தனி உடல் ஆய்வுகள், தனிச் சிகிச்சைகள் தேவைப்படும்பொழுது அவர்கள், இந்தத் தனி மருந்தகம் இணைக்கப்பட்டிருக்கும் சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அனுப்பப்படுகிறார்கள். நாள் ஒன்றுக்குத் தோராயமாக 200 பேர் சிகிச்சை பெறுகிறார்கள்.

உலோக உருக்கு பணி போன்ற அபாயகரமான பணிகளில் ஈடு பட்டுள்ள பணியாளர்களுக்கு பல வைட்டமின்கள் கலந்த மாத்திரைகளும், பாலும் கொடுக்கப்படுகின்றன. இத்தகையப் பணியாளர்களைப் பரிசோதித்து, சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. நெருக்கடி காலத்தில் பிணியாளர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்காக இந்த மருந்தகத்தில் ஒரு மருத்துவ ஊர்தி உள்ளது.

[1969 மார்ச் 25

அரசு அச்சக மருத்துவப் பணியாளர்களுடன்கூடிய இந்தத் தனி மருந்தகம் திங்கள் காலையிலும், வெள்ளி பிற்பகலிலும், அச்சகப் பணியாளர்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக பாடப் புத்தக அச்சகப் பிரிவில் செயல்பட்டு வருகிறது.

(ii) **குழந்தைகள் காப்பகம்.**—பணி புரியும்பொழுது குழந்தைகளை விட்டுச் செல்வதற்காக இத் துறையிலுள்ள மகளிர் பணியாளர்களுக்கு குழந்தைக் காப்பக வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைக் காப்பகத்தில் இரண்டு பெண்கள் குழந்தைகளைக் கவனித்து வருகின்றனர்.

(iii) **கூட்டுறவு சிற்றுண்டி விடுதி**—தனி அதிகாரி என்றழைக்கப்படும் கூட்டுறவுத் துறை முதுநிலை நேடுநரின் நிர்வாகத்தின்கீழ், பணியாளர்களின் நலனுக்காக ஆதாயமோ இழப்போ இன்றி கூட்டுறவு சிற்றுண்டிச் சாலை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் சிற்றுண்டிச் சாலையில் விற்கப்படும் பண்டங்களின் விலை, பொது சிற்றுண்டி சாலைகளில் விற்கப்படும் பண்டங்களின் விலைகளை விட 50 சத வீதம் குறைவாக உள்ளது. இதைத் தவிர, இந்தச் சிற்றுண்டி விடுதி, பணியாளர்களுக்காக காலையிலும், மாலையிலும் தேநீரும், பாலும் வழங்கி வருகிறது. இதற்காகும் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. 1967–68-ல் விற்பனையான பண்டங்களின் மதிப்பு ரூ. 1,62,829·74. 1968 ஏப்ரல் திங்களிலிருந்து டிசம்பர் வரை விற்பனையான பண்டங்களின் மதிப்பு ரூ. 1,24,347.32.

(iv) **கூட்டுறவு வங்கி.**—தமிழ் நாடு அரசு அச்சக எழுதுபொருள் துறை பணியாளர்கள் கூட்டுறவு வங்கி 46 ஆண்டுகளாகச் செயலாற்றி வருகிறது. இதன் உறுப்பினர்களுக்குக் குறைந்த வீத வட்டியில் கடனுதவி அளிக்கிறது. 2,336 உறுப்பினர்கள் கொண்ட இந்த வங்கி 1968-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி வரை ரூ. 6,89,216·56 செலுத்தப்பட்ட பங்கு மூலதனமும் கொண்டது. 1968-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி வரையில் உறுப்பினர்களுக்கு ரூ. 62,34,928 கடன் வழங்கப்பட்டுள்ளது. 1968-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி முடிவில், உறுப்பினர்கள் செலுத்தவேண்டிய தொகை ரூ. 31,62,882·22 ஆகும். உறுப்பினர்களிடமிருந்தும் உறுப்பினர் அல்லாதவர்களிடமிருந்தும் வைப்பீட்டுத் தொகையைத் திரட்டுவதோடு மட்டுமல்லாமல் இந்த வங்கி, சென்னை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்தும் கடன் வாங்கும். கூட்டுறவு மத்திய வங்கிக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டிய கடன் தொகை ரூ. 15,87,170 ஆகும். 1968-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதியன்று சேம நிதி ரூ. 1,49,330·44 ஆகவும், வைப்பீடுத் தொகை, ரூ. 11,37,954·68 ஆகவும், நடைமுறை மூலதனம் ரூ. 34,14,341·24 ஆகவும் இருந்தது. 1967–68-ல் இந்த வங்கி ரூ. 27,537·77 நிகர ஆதாயம் ஈட்டியது. தணிக்கைக் காரியங்களுக்காக இவ்வங்கி "ஏ" பிரிவின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(v) **பணியாளர்கள் பயன் துய்க்கும் கூட்டுறவுப் பண்டகசாலை.**—இந்தக் கூட்டுறவுப் பண்டசாலைக் கட்டுப்பாடு இல்லாத பொருள்களை, பணியாளர்களின் நலனைக் கருதி விற்று வருகிறது. 1967–68-ல் விற்பனையான பண்டங்களின் மதிப்பு ரூ. 1,82,997 ஆகும். 1968-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து 1968-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி வரையுள்ள காலத்தில் இது ரூ.. 2,09,585 ஆக அதிகரித்துள்ளது. 411 உறுப்பினர்களைக் கொண்ட இப் பண்டசாலையில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 4,110. அரசு ரூ. 2,500 பங்கு மூலதனமாக முதலீடு செய்துள்ளது. நடைமுறை மூலதனத்திற்காக அரசிடமிருந்து ரூ. 50,000 வட்டியில்லாக் கடனாகப் பெற்றது.

பரிசீலனையில் உள்ள எதிர்காலத் திட்டங்கள் பின்வருவனவாகும்.—

(1) தங்கசாலைக் கட்டிடத்தில் ஒரு உணவுப் பங்கீட்டுப் பிரிவைத் தொடங்குதல்.

(2) தங்கசாலைக் கட்டிடத்தில் ஒரு துணிகள் பிரிவைத் தொடங்குதல்.



1969 மார்ச் 25]

(3) காமராஜ் நகர் காலனியில் வசிக்கும மக்களின் தேவைகளை நிறைவு செய்ய அங்கு ஒரு கிளையைத் தொடங்குதல்.

(vi) **காமராஜ் நகர் காலனியில் பள்ளி.**—சென்னை மாநகராட்சியால் காமராஜ் நகர் காலனியில் நடத்தப்படும் தொடக்கப் பள்ளியில் இடவசதி போதவில்லை. அப்பள்ளியில் இரு கொட்டகைகள் ஒவ்வொன்றும் ரூ. 33,250 செலவில் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

10. **பாதுகாப்பு ஏற்பாடுகள்.**—அரசு அச்சகம், பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறிப்பிட்ட அளவு உதவிபுரியும் தமிழ்நாடு உற்பத்தித் திறன் நிறுவனத்தின் உறுப்பினராகும். தேசியப் பாதுகாப்புச் சங்கத்தில் சேருவதற்கான வழிவகைகளைக் கண்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அச்சகத்திற்காக ஒரு புதிய பாதுகாப்புக் குழுவை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

11. **பொது.**—(i) அரசு அச்சகம், அதன் பிரிவுகள் ஆகியவைகளில் உள்ள இயந்திரங்களின் இருப்பு, மரச் சாமான்கள், அச்சுகள், அச்சுப் பொருள்கள் ஆகியவைகள் ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஒப்பாய்வு செய்யப்படுகிறது. கடைசியாக 1965-ல் இருப்பு ஒப்பாய்வு நடந்தது.

(ii) மற்ற பொருள்கள் ஆண்டுக்கு ஒரு முறை, இருப்பு ஒப்பாய்வு அதிகாரியால் ஒப்பாய்வு செய்யப்படுகிறது.

(iii) இத்துறையில் பணிபுரியும் பணியாளர்களின் நலனுக்காக அரசிதழ் பதிவு பெற்ற ஒருவரும், அரசிதழ் பதிவு பெறாத மற்றொருவரும் ஆக இரண்டு தொழிலாளர் நல அதிகாரிகள் உள்ளனர்.

(iv) தமிழ்நாடு மத்திய சிறைச்சாலைப் பிரிவு அச்சகத்தில் பணி புரியும் ஆட்களுக்கு, நாளைக்கு ரூ. 15 வீதம் அபாயப்படி அளிக்கும்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(v) இரவு முறை மாற்ற வேலை நேரத்தில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் இரவு முறை மாற்ற ஊதியப் படியை, நாளைக்கு 50 காசிலிருந்து 75 காசாக அரசு உயர்த்தியுள்ளது.

(vi) அரசு அச்சகத்தில் பணிபுரிவோருக்கு அளிக்கப்படுகின்ற தேநீர், பன்ரொட்டி ஆகியவைகளுக்காக கொடுக்கப்பட்ட 17 காசுகள் 20 காசாக அரசினால் உயர்த்தப்பட்டுள்ளன. (பன் ரொட்டிக்காக 10 காசு தேநீருக்காக 10 காசு).

(vii) தொழிலாளர்கள், குற்றேவலர்கள், பதிவேட்டு எழுத்தர்கள், எண்ணுபவர்கள், சிப்பம் கட்டுபவர் ஆகியவர்களை, அரசு அச்சகத்தில் உள்ள தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அடுத்த பதவிக்குப் பதவி உயர்வு அளிக்க அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(viii) 1968-69-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பதவிகளின் விவரம் :—

| பதவி விவரம் | சம்பளம் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கண்காணிப்பாளர் .. .. | 180—5—200—10—300 .. | 1 |
| உதவியாளர்கள் .. .. | 125—5—175 | 3 |
| எழுத்தர்கள் .. .. .. | 90—4—110—3—140 .. | 3 |
| தட்டச்சர் .. .. .. | 90—4—110—3—140 .. | 1 |
| முதுநிலை முதல் கணிகர் .. | 175—10—225 .. .. | 2 |
| அனுப்புகை எழுத்தர் .. | 90—4—110—3—140 .. | 1 |
| காவலாளர் .. .. .. | 50—1—60 .. .. | 4 |
| உதவிப்பணி மேலாளர் .. | 300—25—600 .. .. | 1 |

[1969 மார்ச் 25

| பதவி விவரம் | சம்பளம். | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பரிசுச்சீட்டு வழங்கல் அதிகாரி. | 200—10—300 .. .. | 1 |
| முதுநிலை முதல் கணிகர் .. | 175—10—225 .. .. | 1 |
| தலைமை முதுநிலை யந்திரப்பணி முதலாள். | 175—10—225 .. .. | 1 |
| முதுநிலை யந்திரப் பணியாள் .. | 125—5—175—10—225 .. | 4 |
| இளநிலை யந்திரப் பணியாள் .. | 90—4—110—3—140. | 4 |
| தலைமை முதுநிலைப் புத்தகம் கட்டுபவர். | 90—4—110—3—140 .. | 40 |
| இளநிலை புத்தகங் கட்டுபவர் | 70—2—100 .. .. .. | 20 |
| ஒழுங்கு அமைப்பவர் .. .. | 90—4—110—3—140 .. | 2 |
| அச்சுக் கோர்ப்பவர் .. .. | 80—3—110 .. .. .. | 6 |
| எண்ணுபவர் .. .. .. | 55—1—70 .. .. .. | 10 |
| கிடங்குப் பணியாள் .. .. | 70—2—90—3—105 .. | 2 |
| கிடங்கு எழுத்தர் .. .. | 90—4—110—3—140 .. | 2 |
| சிப்பங்கட்டும் பணியாள் .. | 55—1—70 .. .. .. | 5 |
| உதவியாளர் .. .. .. | 125—5—175 .. .. | 1 |
| எழுத்தர் .. .. .. | 90—4—110—3—140 .. | 1 |
| காவலாளர் .. .. .. | 55—1—70 .. .. | 5 |
| தட்டச்சர் .. .. .. | 90—4—110—3—140 .. | 1 |
| தலைமை முதுநிலை யந்திரப் பணியாள். | 175—10—225 .. .. | 1 |
| தலைமை வரியச்சுக் கம்மியர் .. | 100—5—150 .. .. | 1 |
| கிடங்கு எழுத்தர் .. .. | 90—4—10—3—140 .. | 1 |
| கிடங்குப் பணியாள் .. .. | 70—2—90—3—105 .. | 1 |
| காலங் குறிப்பவர் .. .. | 70—2—90—3—105 .. | 2 |
| காவலாளர் .. .. .. | 50—1—60 .. .. .. | 1 |
| இயந்திர மேலாள் .. .. | 100—5—150 .. .. | 1 |

(ix) அரிசன நல அமைச்சர் 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 13-ம் நாள் சட்டப் பேரவையில் அளித்த உறுதிமொழிக்கேற்ப அரசாங்க அதிகாரி ஓர் உறுப்பினர் கொண்ட குழு ஒன்றினை 1967-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு நிறுவியுள்ளது. இந்த அதிகாரி அரசு அச்சகமும், எழுதுபொருள் பிரிவும் செயல்படும் வகையினை ஆராய்ந்து, செய்து முடிக்கும் பணியளவை மேம்படுத்துவதற்கும் நடை முறையைச் சீரமைப்பதற்கும் உரிய வழி வகைகளை எடுத்துக் கூறுவார். இப்பொழுது கிடைத்துள்ள இந்தக் குழுவின் இறுதி அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

### எழுதுபொருள் பிரிவு.

12. எழுதுபொருள்-அச்சகத் துறையைச் சேர்ந்த எழுதுபொருள் பிரிவு, எழுதுபொருள்கள், தட்டெழுத்து இயந்திரங்கள், படியெடுக்கும் இயந்திரங்கள் முதலியவற்றை வழங்குவதற்கான மத்தியப் பிரிவாகும். அரசாங்கத் தலைமைச் செயலகத் துறைகளிலும், சென்னை மாநகரிலுள்ள தலைமை அலுவலகங்களிலும் பணியாற்றும் கடைநிலைப் பணியாளர்களுக்குரிய உடைகளையும் இந்தப் பிரிவே வழங்குகின்றது. சென்னை மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள மருத்துவ மனைகளில் பணி புரியும் குற்றேவலர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்களில்



1969 மார்ச் 25]

பணி புரியும் தபேதார்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் உடைகள் வழங்கும் பணியை இந்தப் பிரிவே கவனித்துக் கொள்கிறது. மலைப் பகுதிகளிலும், பிற குளிர்ப் பகுதிகளிலும் பணியாற்றும் அரசுக் கடைநிலைப் பணியாளர்களுக்கும் குளிர்ப் பாதுகாப்பு ஆடைகளை இந்தப் பிரிவே வழங்குகிறது. வணிகத் துறையைத் தவிர இம்மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்கள் அனைத்திற்கும் எழுதுபொருள்கள் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

13. இம் மாநிலத்தின் வணிகத் துறைகள், சில மத்திய அரசு அலுவலகங்கள், சிறிதே அரசுச் சார்புள்ள நிறுவனங்களைப் போன்ற சில அலுவலகங்கள் ஆகியவைகள் முன்னமே தொகை செலுத்தியதன் பேரிலோ புத்தகக் கணக்கு அடிப்படையிலோ அவைகளுக்கு எழுதுபொருள்கள் வழங்கப்படுகின்றன. இந்த நேர்வுகள் அனைத்திலும், தட்டெழுத்து இயந்திரங்கள், படியெடுக்கும் இயந்திரங்கள் இவை குறித்து 5 சதவீதம் துறைச் செலவாகவும், கணக்கிடும் இயந்திரம் குறித்து 6 சதவீதம் துறைச் செலவாகவும், ஏனைய எழுதுபொருள் குறித்து 21 சதவீதம் துறைச்செலவாகவும் வசூலிக்கப்படுகின்றன.

14. எழுதுபொருள்களை வாங்குவதற்குரிய செலவு, எழுது பொருள், பிரிவினருக்கு ஏற்படும் பெரிய செலவினங்களில் ஒன்றாகும். இந்தச்செலவினத்தின் பெரும் பகுதி இந்தியாவில் உற்பத்தியாகும் எழுதுபொருள்களின் விலையாகும். காகிதம், அட்டைகள், தட்டெழுத்து இயந்திரங்கள், நகலெடுக்கும் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதிலும் பெரும்பகுதி செலவு ஏற்படுகின்றது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையின் மூலம், இத் துறை வழங்கியப் பொருள்களின் அளவுபற்றி அறியலாம்.

| ஆண்டு. | எழுதுபொருள்கள் வாங்கியதன் மதிப்பு. | எழுதுபொருள் கேட்பு அதிகாரிகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட எழுது பொருள்களின் மதிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | | ரூ. |
| 1965-66 .. .. .. | 92,30,858 | 2,225 | 1,09,53,111 |
| 1966-67 .. .. .. | 1,02,89,886 | 2,260 | 1,06,15,466 |
| 1967-68 .. .. .. | 95,76,248 | 2,212 | 85,95,834 |

| ஆண்டு. | வழங்கப்பட்ட தட்டெழுத்து இயந்திரங்கள், நகல் எடுக்கும் இயந்திரங்கள், படிபெருக்கி இயந்திரங்கள், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவைகளின் எண்ணிக்கைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தட்டெழுத்து இயந்திரம் (ஆங்கிலம்) | தட்டெழுத்து இயந்திரம் (தமிழ்) | கையால் இயக்கப்படும் நகல் எடுக்கும் இயந்திரம். | மின்சாரத்தில் இயங்கும் நகல் எடுக்கும் இயந்திரம். | படி பெருக்கும் இயந்திரம். | கணக்கிடும் இயந்திரம் |
| | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1965-66 .. .. | 703 | 183 | 73 | 9 | 7 | .. |
| 1966-67 .. .. | 566 | 147 | 101 | 2 | 28 | .. |
| 1967-68 .. .. | 428 | 151 | 20 | 7 | 17 | 8 |

[1969 மார்ச் 25

## இணைப்பு-II.

[355-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தொழிலாளர் அமைச்சர் அவர்களின் உரை.

### தொழில், தொழிலாளர், வீட்டுவசதித் துறை.

### கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்படத் தொழிலாளர்கள்.

சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே !

"கோரிக்கை 24—தொழிற்சாலைகள் உட்படத் தொழிலாளர்கள்" என்பதன் கீழ் ரூ. 79,98,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மீது நான் முன்னுரைக்கிறேன். வேலை வாய்ப்புப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கம் இந்தக் கோரிக்கையில் அடங்குகிறது. சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள தொழிலாளர் துறை மற்றும் வேலை வாய்ப்பு, பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தின் வேலை வாய்ப்புப் பிரிவு, 1968–69-ல் செய்த சாதனைகளைக் காட்டும் ஆய்வுரையை மாண்புமிகு உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

தொழிலாளர் துறையின் சில பரந்த கொள்கை குறிப்புகளையும் சாதனைகளையும் உங்கள் அனுமதியுடன் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு வழிகோலும் வகையில் தொழில் அமைதியை நிலைநாட்டுவதும், அதே நேரத்தில் உற்பத்தியான செல்வத்தில் தங்களுக்குரிய பங்கைத் தொழிலாளர்கள் அடையும் வகையில் செயல்படுவதும் அரசின் கொள்கையாகும். தொழிலாளர்களும் நிர்வாகத்தினரும் கூட்டாகக் கலந்துப் பேசி தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதுதான் இயல்பான பழக்கமாகும். இத்தகைய பழக்கத்திற்கு ஊக்கமளிக்க அரசு முயன்று வந்துள்ளது. இம்முறையில் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள இயலவில்லையென்றால் தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் வகை செய்துள்ள நிர்வாக அமைப்பு அத்தகராறுகளைத் தீர்க்கவேண்டி வருகிறது.

1968-ல் சமரச அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்ட குறையீடுகளின் எண்ணிக்கையும், அவை எவ்வாறு தீர்த்துவைக்கப்பட்டன என்ற விவரமும், வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகளின் எண்ணிக்கை பற்றிய விவரமும், எத்தனை வேலை நாட்கள் விரயம் ஆயின என்பதும், பிற தொடர்பான விவரங்களும், அவை முன்புள்ள ஆய்வுரையில் கொடுக்கப்பட்டுள்ளன. 1968-ல் ஏற்பட்ட வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் அவற்றில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் 1967-ல் இருந்ததை விடக் குறைவாக உள்ளதென்பது அவற்றிலிருந்து தெரிய வரும். விரயமான வேலை நாட்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குக் காரணம் பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்ட மந்த நிலையை அடுத்து கோவைப் பகுதியில் மூடப்பட்ட ஆலைகளின் சிக்கல்கள் குறித்துத் தொழிலாளர்களின் கவலையைத் தெரிவிப்பதற்காக அங்கு நடந்த கிளர்ச்சியினால் பஞ்சாலைத் தொழில் எங்கணும் நிறுத்தப்பட்டமையும் பெரிய தொழிற்சாலைகளில் தொடர்ந்து நிகழ்ந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் ஆகும்.

தகாறுகளில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரும் அல்லது அவர்களில் ஒரு தரப்பினர் தீர்வு காண்பதற்கு விருப்பமில்லாதுள்ள இடங்களில் தொடர்ந்து மூடப்பட்டுள்ள தொழில்சாலைகள் எவ்வாறு திறக்கப்பட முடியுமென்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. தகராறுகளை விரைந்து தீர்க்க வேண்டுமென்னும் கருத்தில் தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் சமரசம் செய்து வைப்பதற்குரிய அமைப்பை வலுப்படுத்தவும் அரசு விரும்புகிறது:



1969 மார்ச் 25]

பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலையும், அதன் காரணமாக 20 பஞ்சாலைகளுக்கு மேல் இம்மாநிலத்தில் மூடப்பட்டதும், அதன் விளைவாகத் தொழிலாளர்கள் பலர் வேலையிழந்ததும் அரசிற்கு மிகுந்த கவலை தந்து வந்துள்ளன. தகராறுகளின் காரணமாகத் தொழிற்சாலை மூடப்பட்ட இடங்களில் எல்லாம் தகராறுகளைத் தீர்த்து வைத்து ஆலைகள் திறக்கப்பட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன், மூடப்பட்ட ஆலைகள் பற்றி ஒரு குழு ஆய்ந்து அறிவித்த பின்னர் வங்கிக் கடன்களுக்கு அவற்றிற்கு உத்திரவாதம் அளித்து அவற்றின் நெருக்கடியைத் தீர்க்க நொடித்துவிட்ட அந்த ஆலைகளுக்கு உதவி வழங்கவும் அரசு முயன்று வந்துள்ளது. ஆனால், இந்த நடவடிக்கைகளினால், எல்லா ஆலைகளிலும் சிக்கல் தீர்ந்து விடவில்லை. 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட குழு ஆராய்ந்த பின்னர், இக் காரியத்திற்குத் தகுந்தவாறுள்ள ஆலைகளை மேற்கொண்டு நடத்தக்கூடிய மாநிலப் பஞ்சாலைக் கழகம் ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இருபது ஆலைகளைப் பொறுத்த வரையில் அவ்வாறு ஆய்வு செய்யப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன. பன்னிரண்டு ஆலைகள் குறித்து அறிக்கைகள் வந்துள்ளன.

பல்வேறு ஊதிய வாரியங்களின் இடைக்காலப் பரிவுரைகளையும் இறுதியான பரிவுரைகளையும் எல்லா நிறுவனங்களும் நிறைவேற்ற வேண்டுமென்பதில் அரசு முனைந்து நடவடிக்கை எடுத்து வந்துள்ளது. சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையிலிருந்து இம்முயற்சியினால் ஏற்பட்டுள்ள சிறந்த பலன் தெரியவரும்.

பருத்தி நெசவாலைத் தொழிலுக்கான இரண்டாவது சம்பள வாரியமும் பொறியியல் தொழில்களுக்கான சம்பள வாரியமும் அவற்றின் இறுதிப் பரிவுரைகளை அளித்துள்ளன ; அவற்றை இந்திய அரசு ஆலோசித்து வருகிறது. இப்பரிவுரைகள் ஒருமித்த கருத்தைக் கூறுமையால், அவற்றை நிறைவேற்றும்போது ஏற்படக் கூடிய சிக்கல்களுக்கு மாநில அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். அத்தகைய சிக்கல்களை உடன்பாடாக தீர்த்து வைக்க எல்லா முயற்சிகளையும் இம்மாநில அரசு மேற்கொள்ளும்.

கூட்டு நிர்வாக மன்றங்களை (Joint Management Councils) நிறுவுவது குறித்து 250 தொழிலாளர்களையும் அதற்கு மேற்பட்டவர்களையும் பணிக்கமர்த்தியுள்ள தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தினருடன் தொழிலாளர் துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டுள்ளனர் ; இது வரையில் அத்தகைய மன்றங்கள் 19 தொழில் நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ளன வென்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பிற நிறுவனங்களிலும் அத்தகைய மன்றங்களை ஏற்படுத்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

அரசு உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட மந்த நிலைக்குக் காரணம், போதிய நிதிவசதியின்மையே ஆகும். ஆயினும், பொதுத் துறை, தனியார் துறை கூட்டுறவுத் துறைகளுக்கு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென ரூ. 150 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. நான்காம் திட்ட காலத்தில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தொழிலாளர் கொள்கை சம்பந்தமாக அரசுக்கு ஆலோசனை கூற, தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும், நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் அடங்கிய முறையே, தொழிலாளர் பிரதிநிதிகளின் தொழிலாளர் ஆலோசனைக் குழு (Labour advisory Group of employees Representatives) என்ற குழு ஒன்றினையும், தொழிலதிபர்கள் பிரதிநிதிகள் தொழிலாளர் ஆலோசனைக் குழு (Labour advisory Group of employers representatives) என்ற குழு ஒன்றினையும் அரசு அமைத்துள்ளது. தொழிலாளர்களின் பற்பல சிக்கல்கள் குறித்து அவர்களின் கருத்தறிய இக்குழுக்களின் கூட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கூட்டப்படுகின்றன.

[1969 மார்ச் 25

பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராய அரசு எண்ணியுள்ளது ; குறிப்பாக, மற்ற மாநிலங்களில் அத்தகைய சட்டங்களில் மிகவும் வேண்டப்படும் விதித்துறைகள் நமது மாநிலத்திற்குப் பொருந்துமாறு சட்டங்களில் எந்த அளவிற்கு ஏற்றுச் செயல்படுத்தப்பட முடியுமென்பதையொட்டி ஆராயவும் அரசு கருதியுள்ளது. இதற்கென இச்சட்டங்கள் பற்றி விரிவாக ஆராயச் சிறு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள சட்டங்களுக்குப் பொருத்தமான திருத்தங்களைச் செய்யும் செயற் குறிப்புகளை இக்குழு வகுக்கும்.

பணியாற்றும் தொழிலளார்களின் பாதுகாப்பையும் நலனையும் நன்மையையும் காக்கும் பொருட்டும், தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் வேறுபாடு எதுவும் காட்டப்படாமல் அவற்றை நிறைவேற்றும் வகையிலும் தொழிலாளர் சட்டங்கள் அனைத்தையும் திறம்படச் செயல்படுத்துவதுமே அரசின் நோக்கமாகும். இதுபோன்றே, சமரச அதிகாரிகள், தொழிலாளர், நிர்வாகத்தினர் ஆகிய இரண்டு தரப்பினருக்கும் மன நிறைவு அளிப்பதற்கேற்பத் தகாராறுகளைத் தீர்க்கச் செயல்படுகின்றனர் என்கிற வகையிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும் தனியார் துறை நிறுவனங்களிலும் தகராறுகளை தீர்ப்பதற்கு வெவ்வேறு நிலைகள் பின்பற்றப்படுகின்றன என்னும் குற்றச் சாட்டுக்கு இடமில்லாமலும் இவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சிறந்த பாதுகாப்பான வேலை நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதைத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் கவனிக்கிறது ; இது, அதிக உற்பத்திக்கு வழி காணும். தொழிற் பிரிவுகள் அளவில் அவசர உற்பத்திக் குழுக்களை (Emergency Production Committees) அமைத்தும், வேலைக் கமர்த்தப்பட்டுள்ளவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு, நலன் இவற்றைக் காக்கத் தொழிலாளர்களிடையேயும் நிர்வாகத்தினரிடையேயும் பாதுகாப்பு முறைகளுக்கான விழிப்புணர்வை உருவாக்கியும் தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்குவதில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய பாதுகாப்புக் குழுக்களை (Safety Committees) அமைத்துத் தொழிற்சாலைகளில் விபத்துக்களைக் குறைக்க ஆய்வாளர் அலுவலகத்தினர் முயன்று வருகின்றனர். ரசாயனப் பொருள்கள், பாறையெண்ணெய் சார்ந்த ரசாயனப் பொருள்கள் தயாரிப்பில் பல தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. இவைகள் வர்த்தகக் கழிவுகளையும் கழிவு நீரையும் வெளிப்படுத்துவதனால் சுற்றுப்புறமும் விண்வெளியும் கெடுவதற்கு ஏதுவாகின்றது. தொழிற்சாலைச் சட்டத்தையும் விதிகளையும் சரியாகவும் கண்டிப்பாகவும் செயல்படுத்துவதன் மூலம் இத் தொழிற்சாலைகளிலிருந்து தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படும் தீங்குகள் பெரிதும் குறைக்கப்படும். பாதுகாப்பு, சுகாதாரம் குறித்த சிக்கல்களில் விழிப்புணர்ச்சியேற்படுத்தப் பத்துத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினருக்குக் கேடயங்களும் ரொக்கப்பணமும் வழங்கும் பரிசுத் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. தொழிற்சாலைத் தொழிலாளர்களின் கருத்துரைகளும், முழக்கமும், பாதுகாப்பு குறித்த சுவரொட்டிகளும் சிறந்ததெனத் தீர்மானிக்கப்பட்டால் அவர்களுக்கு ரொக்கப்பணம் அளிக்கும் பரிசுத் திட்டத்திற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

எடைகள், அளவைகள் துறை, தொழிலாளர் துறையுடன் இணைக்கப்பட்டதன் விளைவாக, இத்துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது ; தொழிலாளர் துறை துணை நேடுநர்கள் (Deputy Inspectors of Labour) எனப்படும் புதியவகை அதிகாரிகளை ஏற்படுத்தியதுடன், தொழிலாளர் நேடுநர்கள், உதவி நேடுநர்கள் பதவிகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. எடைகள், அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தை, இந்த அதிகாரிகள் தங்கள் பிற பணிகளுடன் நிறைவுடன் செயல்படுத்தி வருகிறார்கள்.



1969 மார்ச் 25]

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் முதலில் கோயம்புத்தூரில் 1955, ஜனவரியில் செயல்படுத்தப்பட்டது. இம்மாநிலத்தில் இத்திட்டம் இப்போது 3,36,500 ஈடுறுதி செய்த தொழிலாளர்களையும் 2,04,650 குடும்பப் பிரிவுகளையும் கொண்டு செயல்படுகிறது. 1968–69-ல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஊத்துக்குளி, பல்லடம், ஆகிய புதிய பகுதிகளுக்கும் திருநெல்வேலி மாவட்டம், கோயில்பட்டி, கரிசல்குளம் ஆகிய புதிய இடங்களுக்கும் சேலம் மாவட்டம் ஓடப்பள்ளி, பள்ளிப்பாளையம் ஆகிய இடங்களுக்கும், வட ஆர்க்காடு மாவட்டம் ஆரணிக்கும் நீடிக்கப்பட்டது. விருதுநகர்ச் சுற்றுப்புறங்களுக்கும் நெல்லிக்குப்பம் பகுதிக்கும் இத்திட்டத்தை மேலும் நீடிக்க அரசு ஆணையிட்டுள்ளது. விரைவில் இப்பகுதிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். கோயம்புத்தூர் பகுதியில் தற்போதுள்ள பட்டியல் முறைக்குப் (Panel System) பதிலாகப் பணி முறையைச் (Service System) செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. 1969, ஏபரல், 13-ம் தேதி (தமிழ்ப் புத்தாண்டு நாள்) முதல் கோயம்புத்தூர்ப் பகுதியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்குத்தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவ நலன்களை நீடிக்கத் திட்டமிட்டதன் விளைவாகவே, மேற்சொன்ன முறை செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இதற்கென 13 புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறக்கப்படும். மேற்சொன்ன திட்டம் நிறைவேற்றப்படும்போது 86,700 குடும்பங்கள் கோயம்புத்தூர் பகுதியில் பலனடையும்.

சென்னை மாநகரில் தற்போது 625 படுக்கை வசதிகளுடன் அமைந்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதிப் பிணியாளர்களின் பயனுக்காகவே எல்லா வசதிகளுடன் கூடிய மருத்துவ மனை ஒன்றுள்ளது. கோயம்புத்தூரில் 500 படுக்கைகளுடன் கூடிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை கட்டும் பணி பெரும்பாலும் முடிவடைந்துள்ளது. இந்த மருத்துவமனையை விரைவில் தொடங்கும் பொருட்டு, இந்த மருத்துவமனைக்கான கருவிகளை அமைப்பதற்கான தொடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மதுரையில், தற்போதுள்ள தொத்துநோய் மருத்துவ மனையில் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு அது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனையாக மாற்றப்பட்டு வருகிறது. கட்டிடம் கட்டும் பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது. தற்போதுள்ள தொத்து நோய் மருத்துவமனை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதும் இந்த மருத்துவ மனை செயல்படத் தொடங்கும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்காக 36 இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு இதுவரை ஒப்பளித்துள்ளது. இவற்றில் 32 மருந்தகங்கள் ஏற்கனவே கட்டப்பட்டுவிட்டன. 13 இடங்களில் அரசு மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் 16 படுக்கைகளுடன் கூடிய பிரிவு ஒன்றைக் கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் மருத்துவ மனையில் தங்கி, பொதுவான சிகிச்சை பெறுவதற்கும், மகப்பேறு மருத்துவத்திற்கும் மேற்கண்ட இடங்களில் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட ஆர்க்காடு மாவட்டம் பெண்ணாத்தூரில் அரசு காசநோய் நலம் பேண் மருத்துவ மனையில் 26 படுக்கைகளுடன் கூடிய பிரிவு ஒன்றைக் கட்டவும் அரசு ஒப்பளித்துள்ளது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் கழகத்தின் முழுச் செலவில் மேற்சொன்ன கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நிதிநிலை இடர்ப்பாட்டின் காரணமாக, கட்டிடப் பணி தொடங்கப்படாத இடங்களில் அல்லது நிலம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாத இடங்களில், இக் கழகத்திடமிருந்து நிதி சம்பந்தமான புதிய அனுமதி பெறுமல் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் குறித்தும் புதிய கட்டிட வேலைகள் தொடங்கப்படக்கூடாதென்று 1968 ஜூலையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் அரசைக் கேட்டுக்கொண்டது. அதன் நிதிநிலையை ஆராயும் பொருட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம், துணைக் குழு ஒன்றை நியமித்தது ; இக்குழு, மருத்துவ மனையில் தங்கி மருத்துவம் செய்து கொள்வோருக்குப் படுக்கை வசதியளிப்பது சம்பந்தமாகவும் நிலம் கையகப்படுத்தல் குறித்தும் சில பெரும் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென பரிந்துரைத்தது. ஈட்டுறுதி செய்து கொண்ட 1,000 பேருக்கு 11

படுக்கைகள் வீதம் ஏற்படுத்த வேண்டுமென்றும் அளவுகோலை, 1,000 தொழிலாளர்களுக்கு 4 படுக்கைகள் வீதம் குறைக்க வேண்டுமென்று இத் துணைக் குழு செய்த பரிவுரை, தொழிலாளர்களைப் பெரிதும் பாதிக்கு மென்று கருதப்பட்டது. எனவே, இத்துணைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்க முடியாதென்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு அரசு தெரிவித்துள்ளது.

மதுரை, தூத்துக்குடி, விக்கிரமசிங்கபுரம் பகுதிகளிலுள்ள ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு இத் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகளை நீட்டிக்கும் செயற்குறிப்புக்களை அரசு ஆலோசித்து வருகிறது.

இரண்டாவது உலகப்போரில் பணியாற்றித் திரும்பிய வீரர்களது மறு வாழ்வுக்கு வகைசெய்யும் நடவடிக்கையாக, அமைக்கப்பட்ட தேசிய வேலைவாய்ப்புப் பணி, படிப்படியாகத் தனது அலுவல்களைப் பெருக்கி நாட்டில் ஒவ்வொரு வகை வேலையையும் தன் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வந்தது. வேலை தேடி வருவோருக்கு இப் பணி நிலையம் வேலை வாய்ப்பு அளிப்பதுடன், வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் வேலை வாய்ப்பு ஆலோசனை நல்கியும் தொழில் தகவல் அறிவித்தும் பணியாற்றுகிறது. பர்மா, இலங்கை ஆகிய இடங்களிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிப்பதில் இது சிறப்பாக நாட்டம் செலுத்துகிறது. இதற் கென நியமிக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரி **Employment Liaison Officer)** சிறந்த தனியார், பொதுத் தொழி லதிபர்களுடனும் பிற தொடர்புள்ள நிறுவனங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொள்ளுகிறார்; இந்த அகதிகளுக்கு ஒழுங்கான முறையில் மறு வாழ்வளிக்கும் பணியை ஒழுங்காக நிறைவேற்றவே இவர் அவ்வாறு தொடர்பு கொண்டுவருகிறார். இம்மாநிலத்திலுள்ள தொழிலாளர் வேலை வாய்ப்பு அமைப்பு நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது; ஆண்டு தோறும் வேலை தேடிவரும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது. இதற்கேற்ப அடுத்த ஐந்து ஆண்டுகளில் வேலை வாய்ப்புப் பணியை விரிவு படுத்துவதற்கும், மும்முரப்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் தற்போதுள்ள பணி அமைப்பை விரிவுபடுத்த வேலைவாய்ப்புப் பணி நிறு வனம் திட்டமிட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள தேசிய வேலை வாய்ப்புப் பணி அமைப்பின் செயல்கள் குறித்த விவரங்கள், சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

இறுதியாக, தொழில்கள் வளர்ச்சியும் தொழிலாளர்கள் செழிப்புமே எப்போதும் இந்த அரசின் கொள்கையாயிருக்குமென்பதை மீண்டும் வலி யுறுத்த விரும்புகிறேன்.

"வளர்க தொழில்
வாழ்க தொழிலாளர்."

**இவைகூறி, இம்மானியக் கோரிக்கையை இப்பேரவையினர் ஏற்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.**

## இணைப்பு-III.

[69-ம் பக்கத்திலுள்ள **அடிக்குறிப்பைக் காண்க.**]

### 1968-69-ல் தமிழ்நாட்டில் தொழிலாளர் நிலைமை ஆய்வு.

1. தொழிலாளர் நிலைமை குறித்த சட்டங்கள் இந்த **அறிக்கையில்** கீழ்க்கண்ட வகைகளில் ஆய்வு செய்யப்படுகின்றன :—

1. நிறுவனச் சட்டம்.
2. ஊதியச் சட்டம்.
3. தொழில் தகராறுகள் சட்டம்.
4. சமூகப் காப்புச் சட்டம்.
5. தொழிலாளர் நல **ஏற்பாடுகள் சட்டம்.**



இவை தவிர, எடைகள், அளவைகள் சட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும், வேலை வாய்ப்புப் பணி குறித்தும் தனித்தனி அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

### I. நிறுவனச் சட்டம்.

2. **1948-ம் ஆண்டுத் தொழிற்சாலைகள் சட்டம்.**—ஆண்டுத் தொடக்கத்தில் 7,177 தொழிற்சாலைகள் பட்டியலில் இருந்தன. இந்த ஆண்டில் 466 தொழிற்சாலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. 249 தொழிற்சாலைகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. ஆண்டு முடிவில் இம்மாநிலத்திலிருந்த தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 7,394 ஆகும். இதன் விவரங் கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | பதிவேட்டில் இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | 1967. | 1968. |
| பிரிவு 2 (m) (i) .. .. .. .. | 5,481 | 5,704 |
| பிரிவு 2 (m) (ii) .. .. .. .. | 401 | 420 |
| பிரிவு 85 (i) .. .. .. .. .. | 1,295 | 1,270 |
| | 7,177 | 7,394 |
| வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 4,06,384 | 3,88,931 தாற்காலிக மானது (அறி விக்கப்பட்ட தொழிற்சாலை களில் உள்ள தொழிலாளர் கள் இதில் அடங்காது.) |

1968 டிசம்பர் வரையில் உரிமக் கட்டணங்களாக ரூ. 17,09,791·59 வசூலிக்கப்பட்டுள்ளது. 1967-ல் உரிமக் கட்டணங்களாக ரூ. 16,37,500·00 வசூலிக்கப்பட்டது.

சென்ற ஆண்டில் நடந்த 11,235 முறையான நேடுதல்களுக்கு (Inspection) மாறாக இந்த ஆண்டில் 10,069 முறையான நேடுதல்கள் நடத்தப்பட்டன. அவற்றுடன், 1,271 சிறப்பு நேடுதல்களும், 400 ஞாயிற றுக் கிழமை நேடுதல்களும், 305 எதிர்பாரா நேடுதல்களும் 313 இரவுநேர நேடுதல்களும் (மொத்தத்தில் 2,289) நடத்தப்பட்டன. சென்ற ஆண்டில் இத்தகைய 2,340 நேடுதல்கள் நடத்தப்பட்டன.

ஆய்வாண்டில் தொழிற்சாலைச் சட்டம், அதற்குத் தொடர்பான சட்டங் கள் இவற்றின் விதித் துறைகளை மீறியதற்காக 1,487 வழக்குகள் தொழிற் சாலை நிர்வாகத்தினர் மீது தொடரப்பட்டன. சென்ற ஆண்டில் 859 வழக்குகள் தொடரப்பட்டன.

1967–68-ம் ஆண்டுகளில் நிகழ்ந்த விபத்துகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | சாதாரண விபத்துக்கள். | மரண விபத்துக்கள். |
|---|---|---|
| 1967 .. .. .. .. .. .. | 19,268** | 25* |
| 1968 .. .. .. .. .. .. | 21,687 | 56 |

**1967-ம் ஆண்டுக்காகக் கொடுக்கப்பட்ட 19,268 சாதாரண விபத்துக் களில், 199 விபத்துக்கள் விபத்துக்களாகக் கருதப்படவில்லை. ஏனெனில் 48 மணி நேரத்திற்குள் அவர்கள் வேலைக்குத் திரும்பினர்.

* 1967-ல் நடந்ததாக அறிவிக்கப்பட்ட 25 மரண விபத்துக்களில் ஒரு விபத்து பின்னர் தொழில் விபத்தல்லாத விபத்தாகக் கருதப்பட்டது.

1968-ன் முடிவில் 269 தொழிற்சாலைகளில் பாதுகாப்புக் குழுக்கள் செயல்பட்டு வந்தன. முந்திய ஆண்டின் இறுதியில் 264 குழுக்கள் செயல்பட்டன.

பத்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வேலை செய்பவையும், விசை யின் உதவியுடன் தயாரிப்பு வேலை முறையில் ஈடுபட்டுள்ளவையுமான தொழிற்சாலைகளுக்கும், 20 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வேலை செய்கிறவையும் விசையின் உதவியில்லாமல் தயாரிப்பு வேலை முறையில் ஈடுபட்டுள்ளவையுமான தொழிற்சாலைகளுக்கும் இச் சட்டம் பொருந்து கிறது. இன்னும் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள் பணியாற்றும் சில வகை நிறுவனங்களுக்கும் இச் சட்டத்தின் விதித்துறைகளை அரசு 1967 செப்டம்பரில் நீட்டித்த அறிவிப்பு வெளியிட்டது. அதன் விளைவாக, இந்த அறிவிப்பின் செய்திறனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று கொடுக்கப்பட்டது. இந்த ரிட் மனுவின் மீது தீர்ப்பு கூறப்படுகிற வரையில் இந்த அறிவிப்பு செயல்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. இது குறித்து உயர்நீதி மன்றம் இன்னும் ஆணை பிறப்பிக்கவில்லை.

**3. தமிழ்நாடு 1947-ம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம்.**—இந்த ஆண்டில் இச்சட்டத்தின் விதித்தநுறைகள் மதுரை மாவட்டத்தில் தல்லாகுளம், பொன்மேனி, கொச்சடை, மாடக்குளம் பேரூராட்சிகளுக்கும் சாத்தமங்களம் ஊராட்சி மன்றத்துக்கும் நீட்டிக்கப்பட்டது.

1967 முதல் 1969 வரையில் மூன்றுண்டுகளின் தொடக்கத்தில் இச் சட்டம் பொருந்திய கடைகள், நிறுவனங்களின் எண்ணிக்கையும் அவற்றில் வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டுத் தொடக்கத்தில். | இச்சட்டம் பொருந்துகிற நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலைக்கமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1967 .. .. .. .. | 1,67,869 | 2,09,261 |
| 1968 .. .. .. .. | 1,88,843 | 2,09,424 |
| 1969 .. .. .. .. | 2,16,538 | 1,84,710 |

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் 1968-ல் **3,42,918** நேடுதல்கள் நடத்தினர்.

இச்சட்டத்தின் விதித் துறைகளையும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளை யும் மீறிய தொழிலதிபர்கள் மீது ஆய்வாண்டில் 654 வழக்குகள் தொடரப்பட்டன. முந்திய ஆண்டில் அந்த எண்ணிக்கை 157 ஆக இருந்தது.

| | 1967. | 1968. |
|---|---|---|
| ஆண்டுத் தொடக்கத்தில் நீதிமன்றங்களின் விசாரணையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | 27 | 18 |
| இந்த ஆண்டில் வழக்கு தொடர அனுமதிக் கப்பட்டுள்ள நேர்வுகளின் எண்ணிக்கை. | 157 | 694 |
| தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டவை ... | 165 | 556 |
| விடுவிக்கப்பட்டுத் தீர்ப்புக் கூறப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | .. | 6 |
| **வசூலிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை.** | **ரூ. 2,184** | **ரூ. 10,318** |



மேற்படி சட்டத்தின் 41-வது பிரிவின் கீழ் 1968-ம் ஆண்டில் தொழி லாளர்த் துறை துணை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு அவரால் முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகள் குறித்த விவரங்கள் வரு மாறு :—

| | |
|---|---|
| 1968 ஜனவரி 1-ம் தேதியன்று முடிவு செய்யப்படாமலிருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 221 |
| இந்த ஆண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 320 |
| மொத்தம் .. | 541 |
| முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை .. | 39 |
| ஆண்டின் இறுதியில் முடிவு செய்யப்படாமல் உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 146 |

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இச்சட்டத்தின் 51-வது பிரிவின்கீழ் 6 மனுக்கள் முடிவாகாமல் இருந்தன. இந்த ஆண்டில் 2 மனுக்கள் பெறப்பட்டன. இந்த ஆண்டில் 3 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன.

சென்னை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலும், தமிழ்நாட்டில் உள்ள அதன் கிளைகளிலும் வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் ஊதியத்திலிருந்து சொந்தக் கடனுக்காகவும் தொடர் வைப்புத் தொகைக்காகவும் தொகை கழித்துக் கொள்ள, தமிழ்நாட்டுக் கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் 34-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (c) பகுதியின் கீழ் அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், செதி அல்லது பணியைப் பெறுகிற ஒவ்வொரு வேலையாளும் தனது தொழிலதிபர் தனது ஊதியத்திலிருந்து அதற்குறிய தொகையை கழித்துக்கொள்ள எழுத்து மூலமான அதிகாரம் அளிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு அது உட்பட்டதாகும்.

இந்த ஆண்டில் மேற்படி சட்டத்தின் 6, 52-வது பிரிவுகளின்கீழ் அரசு 8 தற்காலிக விலக்குகளையும், தொழிலாளர்த் துறை ஆணையாளர் இரண்டு தற்காலிக விலக்குகளையும் வழங்கினர். தொழிலாளர் துறைத் துணை ஆணையாளர் 128 நேர்வுகளில் தற்காலிக விலக்குகளை வழங்கினர்.

**4. தமிழ்நாடு 1958-ம் ஆண்டு உணவு விடுதிகள் சட்டம்.**—இந்த ஆண்டில் இச் சட்டத்தின் விதித் துறைகள் மதுரை மாவட்டத்தில் நல்லாகுளம், பொன்மேனி, கொச்சடை, மாடக்குளம் ஊராட்சிகளுக்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் கிரமங்கலம், மதுக்கூர் பேரூராட்சிகளுக்கும் நீட்டிக்கப்பட்டன.

1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி அன்று 20,305 நிறுவனங் கள் இருந்தன. இவைகளில் 9,486-ல் தொழிலாளர்கள் இல்லை. இந்த நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை 65,620 ஆக இருந் தது. 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி அன்று உணவு விடுதி களின் நிறுவனங்களின் எண்ணிக்கை 21,021 ஆகவும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 63,087 ஆக இருந்தது.

1-1-1968 முதல் 31-12-1968 வரையில் உள்ள கால அளவின் போது பதிவுக் கட்டணமாக ரூ. 96,143 வசூலிக்கப்பட்டது. 1-1-1967 முதல் 31-12-1967 வரையில் அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,28,480·50 ஆகும்.

நேடுநர்கள் தங்கள் நேடுதல்களின்போது இந்தச் சட்ட விதித் துறைகள் மீறப்பட்டதைக் கண்டுபிடித்ததன் விளைவாக ஆய்வாண்டில் 839 வழக்குகள் தொடரப்பட்டன. 1967-ல் அந்த எண்ணிக்கை

[1969 மார்ச் 25

303 ஆக இருந்தது. இவற்றில் 655 வழக்குகள் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டன. 10 வழக்குகள் விடுதலை அளித்துத் தீர்ப்பளிக்கப் பட்டன. ஒரு வழக்கு திரும்பப் பெறப்பட்டது. இந்த ஆண்டில் ரூ. 13,544 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. 1967-ல் அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 3,393 ஆகும்.

1967 தொடக்கத்தில் தொழிலாளர் துறை அதிகாரிகள் முன்பு 85 மேல்முறையீடுகள் முடிவுறு நிலையில் இருந்தன. 279 மேல்முறையீடுகள் இந்த ஆண்டில் கொடுத்துக்கொள்ளப்பட்டன. வேலையிலிருந்து அகற்றுதல் அல்லது வேலை நீக்கம் ஆகியவற்றை எதிர்த்து இச் சட்டத்தின் 19 (2) பிரிவின்கீழ் அந்த முறையீடுகள் செய்து கொள்ளப் பட்டன. 1968-ல் தொழிலாளர் துறை அதிகாரிகள் 277 மேல் முறையீடுகள் குறித்து முடிவு செய்தனர். 1967-ல் 458 மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன.

1968-ம் ஆண்டு இந்திய உலகத் தொழில்-வாணிகச் சந்தையின் பொருட்காட்சித் திடலில் இருந்த உணவு விடுதி அனைவற்றிற்கும் அரசு தாற்காலிக விலக்கு வழங்கியது.

இம்மாநிலத்தில் உணவு விடுதிகளில் வேலையில் உள்ள தொழிலாளர்களின் வேலை நிலைமை குறித்து நேடுதல் நடத்த அரசால் நியமிக்கப் பட்ட சிறப்பு அதிகாரி தனது அறிக்கையைக் கொடுத்துவிட்டார். அதைத் தொழிலாளர் துறை ஆணையாளர் தொழிலாளர் பிரதிநிதிகளுடனும் தொழிலதிபர் பிரதிநிதிகளுடனும் கலந்து விவாதித்தார். தொழிலாளா துறை ஆணையாளரின் பரிவுரைகளை யொட்டி சிறப்பு அதிகாரியின் அறிக்கையை அரசாங்கம் ஆய்வு செய்து வருகிறது.

**5. 1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்.**—1968 தொடக்கத்தில் 301 மலைத் தோட்டங்கள் இருந்தன. அவற்றில் 84,764 தொழிலாளர்கள் வேலை செய்தனர். ஏழு புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 4 மலைத் தோட்டங்கள் அகற்றப்பட்டன. ஆண்டு இறுதியில் மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் பொருந்திய மலைத் தோட்டங்களின் எண்ணிக்கை 304 ஆகும். அவற்றில் வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 85,001 ஆகும்.

மலைத் தோட்டங்களின் நேடுநர்கள் 558 முறையான நேடுதல்களை நடத்தினர். அவற்றுடன் 624 சிறப்பு, ஞாயிற்றுக்கிழமை எதிர்பாராத நேடுதல்களை இந்த ஆண்டில் நடத்தினர். இந்த ஆண்டில் 148 பதிவாகாத மலைத் தோட்டங்களையும் அவர்கள் நேடுதல் செய்தனர்.

அரசாங்கம் மலைத் தோட்டங்களில் பணிபுரியும் மருத்துவ மனை, மருத்துவப் பணியாளர்கள், வீட்டு வேலையாட்கள், காவலர், கால்நடைகளைப் பாதுகாப்பவர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் ஆகியவருக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு. 1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 19, 20, 21, 22-வது விதிகளினின்றும் விலக்கு அளித்தது. 1948-ம் ஆண்டில் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் 13, 14-வது பிரிவுகளின் கீழ் இதே மாதிரியான விலக்குகள் எல்லா மலைத் தோட்டங்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டில் 10 மலைத் தோட்டங்களில் மருத்துவத் திட்டங்களை அரசு ஏற்றது. இவற்றில், 7 மலைத் தோட்டங்களில் திட்டங்கள் இறுதி ஒப்புதல் குறித்தவை. மூன்று திருத்த ஒப்புதல் குறித்தவை. இந்த ஆண்டில், நமது மருத்துவத் திட்டங்களுக்கு ஏற்கனவே ஒப்புதலளிக்கப் பட்ட 4 மலைத் தோட்டங்கள் ஏனைய மலைத் தோட்டங்களுடன் இணைக்கப்பட்டன. 31-12-1968 அன்றைய நிலவரப்படி, ஏற்பளிக்கப் பட்ட மருத்துவத் திட்டங்களையுடைய மலைத் தோட்டங்களின் மொத்த எண்ணிக்கை 258 ஆகும்.



1969 மார்ச் 25]

தொழில் துறை மூலமாக மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பணியாற்றும் நேரங்களில் அணிவதற்காக கம்பளி உடைகள் வழங்கப் பட்டன. போர்த்திக்கொள்வதற்கான கம்பளிகளைப் பொறுத்தவரையில், மலைத்தோட்ட உரிமையாளர்கள் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவற்றை வழங்கத் தாமே ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டும் என்று மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு முடிவு செய்துள்ளது.

அரசு, மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனைக் குழுவின் பரிவுரையின் மேல் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குரிய தரமான வீடுகள் குறித்த குறிப்பீடுகளை முடிவு செய்துள்ளது.

1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்ச் சட்டத்தின் கீழ் 5,021 தனிப்பட்ட தொழிலாளர்களும் 32,451 தொழிலாளர் குடும்பங்களும் மலைத் தோட்டங்களில் வசித்து வந்தனர். 33,706 தர வீடுகள் கட்டப்பட வேண்டுமென விதிக்கப்பட்டிருக்க 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதியுடன் முடிவடையும் அரையாண்டில், 29,196 வீடுகள் முடிவு செய்யப்பட்டுள்ள தரங்களை ஒட்டிக் கட்டப்பட்டுள்ளன. மூன்றாவது திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட கடன் உதவியைக் கொண்டு மலைத் தோட்ட உரிமையாளர்கள் 195 வீடுகளைக் கட்டி முடித்தனர். மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான உதவித் தொகை வீட்டு வசதி திட்டத்தினை இந்திய அரசு இப்பொழுது அனுப்பியுள்ளது. இத்திட்டம் மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு இப்பொழுது அனுப்பப்பட்டுள்ளது. கடன்-உதவித் தொகை குறித்த வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

1968-ல் 11 மலைத் தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட வீடு கட்டும் திட்டங்களுக்கு சென்னை, மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளர் ஒப்புதல் அளித்தார்.

புதிய குழந்தைக் காப்பகங்களைக் கட்டுவதற்காக 4 திட்டங்களும் ஏற்கனவேயுள்ள குழந்தைக் காப்பகங்களைப் புதுப்பிக்க ஒரு திட்டமும் 1968-ல் மலைத் தோட்டத் தலைமை நேடுநரால் ஒப்புதல் அளிக்கப் பட்டன.

ஆண்டுத் தொடக்கத்தில் நீதிமன்றங்களில் ஆறு வழக்குகள் முடிவுறு நிலையில் இருந்தன. 1968-ல் 16 வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஆண்டில் 16 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. அவற்றில் 13 வழக்குகள் தண்டனை விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டன. மூன்று வழக்குகள் விடுதலையளித்துத் தீர்ப்பு கூறப்பட்டன. 1968 இறுதியில் 6 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இருந்தன.

உதகை துணைக் குற்றவியல் நீதிபதியால் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து ஒரு தொழிலதிபர் கோயம்புத்தூர் மாவட்டக் குற்றவியல் நீதிபதியின் நீதிமன்றத்தில் மேல் முறையீடு ஒன்றைக் கொடுத்துக்கொண்டார். அவரை விடுவித்துத் தீர்ப்புக் கூறப்பட்டது. அவர் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து மேல் முறையீடு செய்ய வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

மலைத்தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு.—மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு கூட்டம் 1968 மார்ச் 16-ம் நாளன்று சென்னையில் தொழிலாளர்த் துறை ஆணையாளரின் தலைமையில் கூடி, குழந்தைக் காப்பகங்களில் பயிற்சி பெற்ற செவிலியை ஆயாவாக அல்லது தாயாக நியமித்தல், தொகுதி மருத்துவ மனை குறித்த விதித் துறைச் செயல்படுத்துவது முதலியன குறித்து விவாதித்தது.

1969 பிப்ரவரி 21-ம் நாளன்று குன்னூரில் தொழிலாளர்த் துறை ஆணையாளரின் தலைமையில் கூடி, ஒப்பந்த வேலை, நிகராடைகளை முடிவு செய்தல், மருத்துவ மனை பிணியாளர்களின் உணவு முதலியவற்றைக் குறித்தும் விவாதித்தது.

யலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் 1968 ஜூன் 21-ம் நாளன்று உதகையில் கூடியது. தொழில்-தொழிலாளர் வீட்டு வசதித் துறையின் இணைச் செயலாளர் அதற்குத் தலைமை வகித்தார். தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளித்தல், வேலையிலிருந்து அகற்றப்பட்ட பிறகு மலைத் தோட்டங்களில் குடியிருப்புகளில் குடியிருந்துவரும் தொழிலாளர்களை வெளியேற்றுதல் ஆகியவை குறித்து அப்போது விவாதிக்கப்பட்டது.

**6. தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பீடித் தொழில் வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டம்.**—தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பீடித் தொழில் வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் 1967–68, 1968–69 கால அளவில் உரிமம் வேண்டி விண்ணப்பித்துக்கொண்ட பீடித் தொழில் வளவுகளின் எண்ணிக்கை குறித்த விவரம் வருமாறு :—

| | 1967–68. | 1968–69. |
|---|---|---|
| உரிமம் வேண்டி மனுச் செய்துகொண்ட பீடித் தொழில் வளவுகளின் எண்ணிக்கை. | 2,226 | 1,546 |
| எவ்வளவு தொழிலாளர்களை நியமிக்க உரிமம் வேண்டப்பட்டது என்பது. | 33,190 | 21,165 |

இம்மாநிலத்தில் உள்ள பீடித் தொழிற்சாலை வளவுகள் அனைத்திற்கும், அவற்றில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கும், 1967 நவம்பர் 30-ம் நாளிலிருந்து மேலும் 6 திங்கள் கால அளவுக்கு, மேற்படி சட்டத்தின் 18, 21, 26, 27, 31 பிரிவுகளிலிருந்து அரசு 1968 மார்ச்சில் விலக்கு அளித்தது.

மேற்படி சட்டத்தின் உரிமம் வழங்கும் விதித் துறைகளிலிருந்து பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட விலக்கினை, 1968 ஆகஸ்டு 31-ம் நாள் வரை தொடர்ந்து வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1968-ம் ஆண்டில் பீடித் தொழிற்சாலைகளிடமிருந்து உரிமக் கட்டணங்களாக மொத்தம் ரூ. 34,205·50 தொகை வசூலிக்கப்பட்டது. 1967-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 35,611 ஆகும்.

இந்த ஆண்டில் 78 வழக்குகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவற்றில் 65 வழக்குகள் குறித்து தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டன. ரூ. 834 அபராதமாக வசூலிக்கப்பட்டது. 1967-ல் நான்கு வழக்குகள் தொடரப்பட்டன. ரூ. 85 அபராதமாக வசூலிக்கப்பட்டது. ஒரு வழக்கில் விடுதலை அளித்துத் தீர்ப்புக் கூறப்பட்டது.

**7. 1966-ம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள் சட்டம்).**—பீடி-சுருட்டு தொழிலில் வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் ஊதியங்கள் உட்பட வேலை நிலைமைகளை முறைப்படுத்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். மூன்றுவது பிரிவைத் தவிர, இச்சட்டத்தின் விதித் துறைகள் அனைத்தும் 1968 ஜூலை 1-ம் நாள் முதல் செயலுக்கு வந்தன.

மூன்றுவது பிரிவு, 1968 செப்டம்பர் 1-ம் நாள் முதல் செயலுக்கு வந்தது. இச்சட்டம் செயலுக்கு வந்ததன் விளைவாக, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பீடித் தொழிற்சாலை வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப் படுத்தல்) சட்டத்தை ரத்து செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1966-ம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் கீழ் விதிகளை மாநில அரசு வகுத்தது.

தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர் ஒவ்வொருவரும் தமிழ் நாடு எடைகள்-அளவைகள் (செயல்) சட்டத்தின் கீழ் தமக்கு ஒப்படைத்துள்ள பகுதிகளுக்கு மேற்படி சட்டத்தின் கீழுள்ள தகுதி வாய்ந்த அதிகாரியின் அலுவல்களை நிறைவேற்ற அதிகாரமுள்ளவராவார்.



மேற்படி சட்டத்தின் ஐந்தாவது பகுதியின் கீழ் மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாராரிகளாக தொழிலாளர் துறை துணை ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையாளர் (நேடுதல்கள்), நீங்கலாக தொழிலாளர் துறை துணை ஆணையாளர்கள், தொழிலாளர் துறை நேடுநர்கள், தொழிலாளர் துறை துணை நேடுநர்கள், தொழிலாளர் துறை உதவி நேடுநர்கள், ஆகியோர் தத்தமது அதிகார வரம்புகளுக்குள், மேற்படிச் சட்டத்தின் கீழ் நேடுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் துறை துணை ஆணையாளர் (நேடுதல்கள்), மேற்படிச் சட்டத்தின் 6 (2) பிரிவின் கீழ் தலைமை நேடுநராக நியமிக்கப்பட்டுள்ளார். 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் விதித் துறைகளும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளும் இச்சட்டம் பொருந்துகிற பீடி-சுருட்டு தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) விதிகளைச் சேர்ந்த 3 (2) விதியின் கீழ் அனுப்பப்பட்ட மனை-கட்டிட வரைப் படங்களைப் பரிசீலித்துப் பார்க்கையில், தகுதி வாய்ந்த அதிகாரி, இச்சட்டத்தின் கீழ் தொழிற்சாலை வளவுகளாக பயன்படுத்துவதற்கு ஏற்றவையாக உள்ளனவா என்றும் மேற்படிச் சட்டத்தின் 8 முதல் 16 வரையுள்ள பிரிவுகளின் தேவைகளை அவை பூர்த்தி செய்கின்றனவா என்றும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளது.

1966-ம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் 41-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பீடித் தொழிற்சாலை வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் உரிமங்களை உடைய அனைவருக்கும் 1966-ம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் 4-வது பிரிவின் கீழ் அதே ஆண்டுக்கென புதிய உரிமங்களுக்கு விண்ணப்பித்துக் கொள்வதிலிருந்தும், பெறுவதிலிருந்தும் அரசு விலக்களித்துள்ளது.

தமிழ்நாடு 1958-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் விதித் துறைகளை 1966-ம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் 2 (*k*) பிரிவில் பொருள் கூறியுள்ள பீடி-சுருட்டு நிறுவனங்கள், தொழிற்சாலை வளவுகள் அனைத்திற்கும் நீட்டிப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் ஆய்விலுள்ளன.

1966-ம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், அதன் கீழ் செய்துள்ள விதிகள் ஆகியவற்றின் செல்லுந்திறனை மறுத்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களை இம்மாநிலத்திலுள்ள சில பீடி நிறுவனங்களின் நிர்வாகிகள் கொடுத்துக்கொண்டனர். உயர்நீதி மன்றம் அந்த ரிட் மனுக்கள் மீது முடிவெடுக்கும் வரையில், ரிட் மனு கொடுத்துக்கொண்டவர்கள் குறித்து மேற்படி சட்டமும் அதன் விதிகளும் செயல்படுத்தப்படுவதை நிறுத்திவைக்க அனுமதி வழங்கியது.

**8. 1961-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.—**

சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையாளர் (நேடுதல்கள்) 1968-ம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் இம்மாநிலத்திற்கான தலைமை நேடுநராகத் தொடர்ந்து இருந்து வந்தார். இச்சட்டத்தின் விதித் துறைகள் தொழிலாளர் துறை உதவி நேடுநர்கள் 140 பேர்களாலும், துணை நேடுநர்கள் 18 பேர்களாலும், நேடுநர்கள் 10 பேர்களாலும் செயல்படுத்தப்பட்டன.

1968-ம் ஆண்டில் ரூ. 1,923.75 பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. பதிவுகளைப் புதுப்பிப்பதற்கான கட்டணமாக ரூ. 33,425·25 வசூலிக்கப்பட்டது. இரண்டாவது பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்கென ரூ. 70 கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் 87 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் செய்யப்பட்டன. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருப்பது மெய்ப்பிக்கப்படாததால் அல்லது நிறுவனங்கள் மூடிவிடப்பட்டதால் இந்த ஆண்டில் 81 நிறுவனங்கள் பதிவேடுகளிலிருந்து நீக்கப்பட்டன. 1968-ம் ஆண்டின் இறுதியில், 1,079 நிறுவனங்கள் இருந்தன.

மலைத் தோட்டங்களில் உள்ள போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 1961-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளிலிருந்து அளித்துள்ள விலக்கை மேலும் ஒரு ஆண்டுக்கு, அதாவது, 22-9-1968 முதல் 21-9-1969 வரை அரசாங்கம் நீட்டித்துள்ளது.

நீள் தொலை வழித்தடங்களை இயக்கும் மூன்று நிறுவனங்கள், பண்டிகைக் காலங்களில் இரண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒரு நாளில் 8 மணி நேரத்திற்குப் பிறகு அல்லது ஒரு வாரத்தில் 48 மணி நேரத்திற்குப் பிறகு, ஆனால் ஒரு நாளைக்கு 10 மணி நேரத்திற்கு மேற்படாமலும் ஒரு வாரத்தில் 54 மணி நேரத்திற்கு மேற்படாமலும் வேலை செய்ய மோட்டார் போக்குவரத்து நிறுவனத் தலைமை ஆய்வாளர் அனுமதி வழங்கினர்.

1961-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டத்தின் விதித்துறைகளை செவ்விய முறையில் செயல்படுத்துவது குறித்து ஆலோசிக்க நியமிக்கப்பட்ட முக்கூட்டு நிலைக் குழுவின் பதவிக் காலத்தை அரசு 7-10-1968 முதல் ஓராண்டுக்கு நீடித்துள்ளது.

இந்த ஆண்டில் 78 நேர்வுகளில் வழக்குகள் தொடரப்பட்டன. 43 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. அதன் மூலம் ரூ. 2,895 அபராதம் வசூலாகியது. ஒரு வழக்கில் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. மோட்டார் போக்கு வரத்து நிறுவன தலைமை நேடுநர் கொடுத்துள்ள அனுமதியின்மேல் தொழிலாளர் துறை நேடுநர் 61 வழக்குகளைத் தொடர்ந்தார். அந்த வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 1,455 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டது.

**9. உழைக்கும் பத்திரிகையாளர்கள் (வேலை நிலைமைகள்—பல்வகை ஏற்பாடுகள்) சட்டம்.—**

1955-ம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் (வேலை நிலைமைகள்—பல்வகை ஏற்பாடுகள்) சட்டம் 1968-ம் ஆண்டில் தொடர்ந்து செய்தித் தாள் நிறுவன நேடுநர்கள் என்ற முறையில் தொழிலாளர் துறை நேடுநர்களால் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டது.

இந்த ஆண்டில் 65 செய்தித் தாள் நிறுவனங்கள் இருந்தன. 3,673 தொழிலாளர்கள் அவற்றில் வேலையில் இருந்தனர். இந்த ஆண்டில் நேடுநர்கள் 106 நேடுதல்களைச் செய்தனர்.

இச்சட்டத்தின் 17-பி பிரிவின் (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தொழிலாளர் துணை நேடுநர்களை நேடுநர்களாக அரசு நியமித்துள்ளது.

**10. தொழில் வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம், 1946.—** 1968-ம் ஆண்டு 46 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள் குறித்து சான்றளிக்கப்பட்டன. இதனால் சான்றளிக்கப்பட்ட நிலை ஆணைகளின் மொத்த எண்ணிக்கை 4,479 ஆக அதிகரித்தது. முப்பத்தி ஒன்பது நேர்வுகளில் நிலை ஆணைகளுக்கான திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன.



**11. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசியப் பண்டிகை விடுமுறைகள்) சட்டம், 1968.—**

இந்த ஆய்வாண்டில் மூன்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில் வைத்துக்கொண்டுள்ள 18,762 கடைகளும், நிறுவனங்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வந்தன. இக்கடைகளிலும், நிறுவனங்களிலும் பணி செய்து கொண்டிருந்த பணியாளர்களின் எண்ணிக்கை 1,72,126 ஆகும். இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக 207 நேர்வுகளில் வழக்குத் தொடர அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் 131 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு வழக்கு குறித்து விடுவிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. 1967-ம் ஆண்டில் அபராதமாக ரூ. 200 வசூலிக்கப்பட்டிருக்க இந்த ஆண்டில் ரூ. 1,461 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. இந்த ஆண்டில் நேடுநர்கள் 34,817 நேடுதல்களை நடத்தினர்.

**II. ஊதியங்கள் வழங்குதல் குறித்த சட்டம்.**

**12. 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.—**

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் அண்மையில் சேர்க்கப்பட்ட கீழ்க்கண்ட தொழில்களுக்கு, குறைந்த அளவு ஊதிய வீதங்களை முடிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது :—

1. தங்க நகைகள் செய்யும் தொழில்.
2. முந்திரித் தொழில்.
3. விசைத் தறித்தொழில்.

கீழ்க்கண்ட தொழில்களில் குறைந்த அளவு வீதத்தில் ஊதியங்கள் அளிப்பதற்காக குழுக்களை அமைக்கும் செயற்குறிப்புகள் ஆலோசனையில் உள்ளன :—

1. அரிசி ஆலை அல்லது மாவு ஆலை அல்லது பருப்பு ஆலையில் வேலை.
2. பொது மோட்டார் போக்குவரத்தில் வேலை.
3. மோட்டார் பணிக்களரியில் வேலை.
4. வாசனைப் புகையிலை தயாரிப்பில் வேலை.
5. சிறு துறைமுகங்களில் படகுத் தயாரிப்பில் வேலை.

சலவைச் சாலைகள்—துணிகளை வெளுத்தல் (கம்பளி ஆடைகள் உட்பட உடைகள்) தொழிலில் குறைந்த அளவு ஊதியவீதங்களை முடிவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு செய்த பரிவுரைகள் ஆய்வில் உள்ளன.

கீழ்க்கண்ட தொழில்களுக்கான குறைந்த அளவு வீதங்களை முடிவு செய்யப்பட்டன/மாற்றியமைக்கப்பட்டன :—

1. தீப்பெட்டி—பட்டாசுத் தொழில் (மாற்றியமைக்கப்பட்டன)
2. பீடி தயாரிக்கும் தொழில் உட்பட புகையிலை (மாற்றியமைக்கப்பட்டன.)
3. உப்பளங்கள் (மாற்றியமைக்கப்பட்டன).
4. தோல் பதனிடுதல்—தோல் தயாரிப்பு (மாற்றியமைக்கப்பட்டன).
5. சின்கோனா (மாற்றியமைக்கப்பட்டன).
6. ஜவ்வரிசித் தொழிற்சாலை (முடிவு செய்யப்பட்டன).
7. செங்கல்—ஓடுகள் தயாரிக்கும் தொழில் (மாற்றியமைக்கப்பட்டன).

கயிற்றுத் தொழிலில் வேலையிலுள்ளோருக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களை முடிவு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

[1969 மார்ச் 25

வெட்டு மரத் தொழிலில் வேலையிலுள்ளோருக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களை முடிவு செய்வதற்கான குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

பின்னல் உள ஆடைத்தொழிலில் குறைந்த அளவு ஊதிய வீதங்களை மாற்றியமைக்கும் அறிவிப்பை சென்னை உயர்நீதி மன்றம் செல்திறனற்றது என்று தீர்ப்புக் கூறியது. எனினும்,மேற்கூறிய தொழிலில் கொடுக்கப் பட வேண்டிய ஊதிய வீதங்கள் குறித்து கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் துறை ஆணையாளரின் முன்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

தோட்டத் தொழில்களில் ஈடுபட்டுள்ள மருத்துவ மனை, மருத்துவப் பணியாளர்களுக்கும், வீட்டு வேலைப் பணியாளர்கள் முதலியோருக்கும், 1968 டிசம்பர் 26-ம் நாள் வரையில் 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதிய வீதங்கள் சட்டத்தின் 13, 14-வது விதித் துறையிலிருந்து அளிக்கப்பட்ட விலக்கின் கால அளவு முடிவுற்றது. அதை, 27-12-1968-முதல் மேலும் ஓர் ஆண்டுகாலத்திற்கு நீடிப்பது குறித்து நேடுதல் செய்யப்பட்டு வருகிறது.

பீடித் தொழிற்சாலை வளவுகளில் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் அனைவருக்கும், குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 13, 14-வது பிரிவுகளிலிருந்து 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி வரை, மேற்கொண்டும் விலக்களிக்கப்பட்டது.

2,21,609 தொழிலாளர்கள் பணிபுரியும் 50,842 நிறுவனங்கள் (தொழிற்சாலைகள் உள்பட) இச் சட்டத்தின் கீழ் இருந்தன.

ஆய்வாண்டில் 52 வழக்குகள் தொடரப்பட்டன. 50 வழக்குகள் குறித்து அபராதத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. மொத்தம் ரூ. 1,255 அபராதம் வசூலிக்கப்பட்டது. (முந்திய ஆண்டில் 32 வழக்குகள் தொடரப்பட்டு அவை அனைத்திற்கும் அபராதத் தண்டனை விதிக்கப்பட்டது. மொத்தம் ரூ. 845·00 அபராதம் வசூலிக்கப்பட்டது). தற்போது ஆய்வில் உள்ள ஆண்டில் தொழிலாளர் துறை நேடுநர்களும், உதவி ஆய்வாளர்களும் 13,392 நேடுதல்கள் செய்தனர். 1967-ம் ஆண்டில் 8,635 நேடுதல்கள் செய்யப்பட்டன.

தொழிலாளர் துறை துணை நேடுநர்களும், புள்ளிவிவர நேடுநர்களும் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் நேடுநர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

### 13. 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.—

1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் பொருந்துகிற நிறுவனங்கள் நீங்கலாக ஏனைய எல்லா நிறுவனங்கள் குறித்தும் தொழிலாளர் துறைப் பிரிவு இச் சட்டத்தை நிர்வகிக்கின்றது. தொழிற்சாலைகள் உட்பட 31,111 நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்துகிறது. 1968-ல் இந்த நிறுவனங்களில் பணியாற்றிய 7,75,818 தொழிலாளர்களுக்கு இச்சட்டம் பொருந்தியது. முந்திய ஆண்டில் 6,84,683தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்த 35,563 நிறுவனங்களுக்கு இச் சட்டம் பொருந்தியது.

நூற்றுப் பதினேழு நேர்வுகளில் (தொழிற்சாலைகள் உட்பட) தொழில் நிறுவன நிர்வாகத்தினர் மீது வழக்குத் தொடரப்பட்டது. அவற்றில் ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணையில் இருந்த வழக்குகள் உட்பட 104 வழக்குகள் குறித்து அபராதத் தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு வழக்கு குறித்து விடுவிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. ரூ. 1,712 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

ஆய்வாண்டில், ஊதியங்கள் வழங்கப்படவில்லை என 686 உரிமை மனுக்கள் தொழிலாளர் இழப்பீட்டுக்கான கூடுதல் ஆணையாளர்களுக்குக் கொடுத்துக்கொள்ளப்பட்டன. (1967-ம் ஆண்டில் 503 உரிமை மனுக்கள் கொடுத்துக் கொள்ளப்பட்டன.



1969 மார்ச் 25]

அவற்றைத் தவிர ஆய்வாண்டின் தொடக்கத்தில் 379 உரிமை மனுக்கள் விசாரணையில் இருந்தன. 1,065 உரிமை மனுக்களில், 657 உரிமை மனுக்கள் குறித்து ஆய்வாண்டில் தீர்வு காணப்பட்டது. (1967-ல் 558 உரிமை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது).

ரெயில்வேக்கள், விமானப் போக்குவரத்துப் பணிகள், சுரங்கங்கள் முதலியவற்றில் தொழிலதிபர் செய்து கொடுத்துள்ள சிற்றுண்டிச் சாலை வசதிகள் குறித்து, ஊதியம் வழங்கல் சட்டத்தின் 11-வது பிரிவின் படிக்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊதியங்களிலிருந்து தொகைகளைக் கழித்துக் கொள்வதற்கான அதிகாரியாக (மத்திய) தொழிலாளர் துறைத் தலைமை ஆணையாளரை மத்திய அரசு நியமித்துள்ளது.

1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் காரியங்களுக்காக அச்சட்டத்தின் 14 (3) பிரிவுக்கு இணங்க தமிழ்நாடு அரசு கீழ்கண்ட மத்திய அரசு அதிகாரிகளை நேடுநர்களாக நியமித்துள்ளது. அந்த நேடுநர்கள் 2-வது பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த தொழில் நிறுவனங்கள் குறித்து நேடுநர்களாகப் பணியாற்றுவர்.

| அதிகாரிகள் | தொழில் நிறுவனங்களின் வகைகள். |
|---|---|
| (1) | (2) |
| (1) தொழிலாளர் துறை வட்டார ஆணையர் (மத்திய), சென்னை. | சென்னை துறைமுகத்தில் உள்ள கப்பல் துறை, சரக்குத் துறை அல்லது தோணித்துறை. |
| (2) சென்னையில் தலைமையிடத்தைக் கொண்டுள்ள (மத்திய) தொழிலாளர் துறை உதவி ஆணையர். | டிை |
| (3) சென்னையில் தலைமையிடத்தைக் கொண்டுள்ள தொழிலாளர் துறைச் சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரிகள். | டிை |

1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 26-வது பிரிவின் (2), (3) உட்பிரிவுகளுக்கிணங்க, 1937-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் விதிகளில் தமிழ்நாடு அரசு சில திருத்தங்களைச் செய்துள்ளது.

விமானப் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊதியம் வழங்கப் பொருந்துமாறு, 1958-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் (விமானப் போக்குவரத்து பணிகள்) விதிகளை மத்திய அரசு இயற்றியுள்ளது. ஜம்மு-காஷ்மீர் மாநிலங்கள் தவிர இந்தியா முழுவதற்கும் இவ்விதிகள் பொருந்தும்.

## III. தொழில் தகராறுகள் சட்டம்.

### 14. 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.—

தொழில் தகராறுகளை இசைவான முறையில் தீர்த்து வைக்க சமரச அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டனர் ; அதன் விவரம் வருமாறு :

| | 1967. | 1968. |
|---|---|---|
| (அ) புலனாய்வு செய்யப்பட்ட முறையீடுகளின் எண்ணிக்கை. | 8,173 | 10,491 |
| (இ) சமரச முயற்சிகள் மூலம் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை. | 1,194 | 1,936 |
| (உ) தீர்ப்புக்கென அனுப்பப்பட்ட தொழில் தகராறுகள் எண்ணிக்கை. | 471 | 491 |
| (எ) தனிப்பட்ட முறையில் தீர்வு காண்பதற்கென அனுப்பப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை. | 81 | 72 |

[1969 மார்ச் 25

(இ), (உ), (எ) இனங்களின்கீழ் வராத நேர்வுகள் தனிப்பட்ட முறையில் தீர்த்து வைக்கப்பட்டன. அல்லது அவற்றைக் குறித்து தீர்ப்பு அளிக்கப்படுவதற்கென விடுவது அவசியம் இல்லை என்று கருதப்பட்டது.

15. I. **வேலை நிறுத்தங்கள்.**—ஆய்வுரை ஆண்டிலும், சென்ற ஆண்டிலும் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1967. | 1968. |
|---|---|---|
| (அ) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்கள் .. | 305 | 231 |
| (இ) இழக்கப்பட்ட வேலை நாட்கள் .. .. .. | 1,120,517 | 1,881,559 |

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்து தொழில் வாரியான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1967.

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகளின் எண்ணிக்கை. | வேலை நிறுத்தத்தில் பங்குகொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | இழக்கப்பட்ட வேலை நாட்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பஞ்சாலைத் தொழில் .. | 167 | 62,671 | 3,50,007 |
| 2 பொறியியல் .. .. | 44 | 14,373 | 4,95,601 |
| 3 தோல் பதனிடும் தொழில் .. | 13 | 1,181 | 11,465 |
| 4 புகையிலை, பீடி .. .. | 14 | 694 | 2,044 |
| 5 தோட்டத் தொழில் .. | 1 | 1 | 6 |
| 6 ஏனையவை .. .. .. | 66 | 38,231 | 2,61,394 |
| மொத்தம் .. | 305 | 117,151 | 1,120,517 |

1968.

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகளின் எண்ணிக்கை. | வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | இழக்கப்பட்ட வேலை நாட்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பஞ்சாலைத் தொழில் .. | 86 | 55,502 | 268,967 |
| 2 பொறியியல் .. .. | 61 | 15,446 | 429,298 |
| 3 தோல் பதனிடும் தொழில் .. | 7 | 3,936 | 28,076 |
| 4 புகையிலை, பீடி .. .. | 8 | 11,381 | 178,720 |
| 5 தோட்டத் தொழில் .. | 4 | 1,992 | 13,476 |
| 6 ஏனையவை .. .. .. | 65 | 27,109 | 963,022 |
| மொத்தம் .. | 231 | 115,366 | 1,881,559 |



1969 மார்ச் 25]

II. 1968-ம் ஆண்டு வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் தீர்த்து வைக்கப்பட்ட முறை :—

| | |
|---|---|
| (அ) நேரடி உரையாடல் .. .. .. .. | 31 |
| (இ) தொழிலாளர்கள் தாங்களாகவே வேலைக்கு வருதல். | 43 |
| (உ) தொழிலாளர் துறை அதிகாரிகளால்/அரசாங்கத்தால் சமரச ஏற்பாடு செய்து தீர்த்து வைக்கப்பட்டவை | 153 |
| (எ) தீர்ப்பு அளிக்கப்பட்டவை .. .. .. | .. |
| (ஐ) புதிய தொழிலாளர்களை வேலைக் கமர்த்திக் கொள்வது. | .. |
| (ஒ) ஆண்டின் இறுதியில் தீர்வு காணப்பட்டு வருபவை. | 4 |
| | 231 |

**அடிக்குறிப்பு.**—பொருளாதாரக் காரணங்களுக்காக மூடப்பட்ட பஞ்சாலைகள் இதில் அடங்கவில்லை. பஞ்சாலைத் தொழிலில் மந்த நிலைமை ஏற்பட்டதைத் தொடர்ந்து, மூடப்பட்ட ஆலைகள் குறித்த சிக்கல் மீது தொழிலாளர்களின் கவலையைத் தெரிவிப்பதற்காக வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன. இழக்கப்பட்ட வேலை நாட்களின் எண்ணிக்கை அதிகரித்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். இந்த எண்ணிக்கை அதிகரித்ததற்கு, 1968-ல் பெரிய தொழில் நிறுவனங்கள் சிலவற்றில் நீடித்திருந்த வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் காரணமாகும். அத் தொழில் நிறுவனங்களின் பெயர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

1. ஹிந்து பத்திரிகை, சென்னை.
2. பெஸ்ட் அண்ட் கம்பெனி, சென்னை.
3. சிம்சன் குரூப் கம்பெனிகள், சென்னை.
4. மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள்.
5. வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பீடி நிறுவனங்கள்.
6. தமிழ்நாடு எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, மணலி.

**1968-ல் சில முக்கிய உடன்பாடுகள்.**

**(1) மேற்கிந்திய தீப்பெட்டித் தொழிற்சாலை, திருவொற்றியூர், சென்னை. (விம்கோ தொழிற்சாலை).—**

தொழிலாளர்கள் 28-12-1967 முதல், தங்கள் கோரிக்கைகள் பலவற்றிற்காக வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர்கள் 19-4-1968 அன்று வேலை நிறுத்தத்தை நிறுத்திக்கொண்டு வேலைக்குத் திரும்பினர். இரு தரப்பினரும் நேரடியாக உரையாடல்கள் நடத்தினர். அதன் பயனாக 19-2-1969 அன்று சென்னையில் உள்ள தொழிலாளர் துறை சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்பட்டது.

**(2) என்பீல்ட் இந்தியா நிறுவனம், சென்னை.—**

சில தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதை எதிர்த்து, தொழிலாளர்கள் 31-12-1967 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். சமரச ஏற்பாடுகள் பலனளிக்கவில்லையாதலால், இது தீர்ப்புக்கு விடப்பட்டது. வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதும் தடை செய்யப்பட்டது. எனினும், தொழிலாளர்த் துறை ஆணையாளர் முன்பு ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு வேலை நிறுத்தம் 11-2-1958 முதல் நிறுத்தப்பட்டது.

[1969 மார்ச் 25

**(3) இந்திய மெட்டல் பாக்ஸ் கம்பெனி நிறுவனம், சென்னை.—**

நான்கு தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து மெட்டல் பாக்ஸ் கம்பெனித் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 6—2—1968 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் துறை ஆணையாளரின் ஆலோசனையின் மேல் 1—4—1968 முதல் வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது.

**(4) தாரங்கதாரா கெமிக்கல்ஸ் நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம்.—**

கூடுதல் அகவிலைப்படி, ஏனைய வசதிகள் கோரி தொழிலாளர்கள், 30–3–1968 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். திருநெல்வேலி மாவட்ட தொழிலாளர்த் துறை அதிகாரியின் முன்பு செய்யப்பட்ட சமரச ஏற்பாடுகள் பயனற்றுப் போயின. எனினும், சென்னைத் தொழிலாளர்த் துறை ஆணையாளர் முன்பு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பின்பு வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது.

**(5) சேஷசாயி இண்டஸ்டிரீஸ் நிறுவனம், வடலூர்.—**

தொழிற்சாலையின் பாதுகாப்பு அதிகாரியைத் தாக்கியதற்காக தொழிலாளர் சிலருக்கு அபராதம் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் 27–3–1968 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். நிர்வாகத்தினர் 6–4–1968 முதல் கதவடைப்பு செய்தனர். 1968 ஜூன் 29-ம் நாளன்று ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதன் விளைவாக, 3–7–1968 முதல் கதவடைப்பு நீக்கப்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

**(6) சுதேசமித்திரன் நிறுவனம், சென்னை.—**

பத்திரிகை நிறுவனங்களின் பிற பணியாளர்களுக்கு ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று கோரி, சுமார் 200 தொழிலாளர்கள் 23–4–1968 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர்த் துறை ஆணையாளர் முன்பு ஏற்பாடு செய்யப்பட்ட சமரசப் பேச்சு வார்த்தைகள் பயனற்றுப் போயின. பின்னர் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிய பொழுது நிர்வாகத்தினர் அவர்களுக்கு வேலையளிக்க மறுத்து கதவடைப்பு அறிவிப்புக் கொடுத்தனர். தொழிலாளர் சிலரை வேலையிலிருந்து நீக்குவது குறித்து தொழிலாளர்த் துறை சிறப்புத் துணை ஆணையாளர் எடுத்த முடிவினை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டும் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதன் பிறகு, தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பினர்.

**(7) பெஸ்ட் அண்ட் கம்பெனி (பிரைவேட்), நிறுவனம், சென்னை.—**

தொழிலாளர் ஒருவரை வேலையிலிருந்து நீக்கியதை எதிர்த்து இத் தொகுதியில் உள்ள ஆறு தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் அனைவரும் 23–5–1968 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். அரசாங்கத்தினால், இத் தகராறு தீர்ப்புக்கு விடப்பட்டது. இத் தகராறு தீர்ப்புக்கு விடப்பட்ட பின்பும் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடந்ததால் நிர்வாகத்தினர் 666 தொழிலாளர்களையும் வேலையிலிருந்து நீக்கினர். தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 27–9–1968 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தினை தொடர்ந்து 28–9–1968 அன்று வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது.

**(8) வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பீடி தயாரிப்பு நிறுவனங்கள்.—**

கூடுதல் ஊதியங்களையும், ஏனைய சில வசதிகளையும் வேண்டுமென்று கோரி, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பீடித் தயாரிப்பு நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள 15,000 தொழிலாளர்கள் 23–5–1968 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். 8–7–1968 அன்று செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 9–7–1968 முதல் வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது.



1969 மார்ச் 25]

**(9) "ஹிந்து" பத்திரிகை, சென்னை.—**

ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கோரி தொழிலாளர்கள் 28–7–1968 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். எனினும் வேலை நிறுத்தம் 5–8–1968 முதல் நிறுத்தப்பட்டது. ஆனால் நிர்வாகத்தினர் சங்கத்தின் துணைத் தலைவரை வேலையிலிருந்து நீக்கிய பொழுது நிறுவனத்தில் மீண்டும் அமைதியின்மை ஏற்பட்டது. ஆகவே, நிர்வாகத்தினர் 22–8–1968 முதல் கதவடைப்பு செய்தனர். 31–10–1968 அன்று தொழிலாளர்த் துறை ஆணையாளர் முன்பாக ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. கதவடைப்பு 2–11–1968 முதல் நீக்கப்பட்டு விட்டது. ஒப்பந்த நிபந்தனைகளின்படி, தீர்வு காணப்படாத சிக்கல்கள் அனைத்தும் நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டன.

**(10) சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மோகனூர்.—** இடைக்கால நிவாரணம், ஊதிய மாற்றம் முதலியவற்றைக் கோரி 640 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். எனவே, 14–8–1968 முதல் நிர்வாகத்தினர் கதவடைப்பு செய்தனர். இரு தரப்பினருக்குமிடையேயும், ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டு 13–9–1968 முதல் வேலை மீண்டும் தொடங்கப்பட்டது.

**(11) சிம்சன் குரூப் கம்பெனிகள், சென்னை.**—1967–68-ம் ஆண்டிற்கான, பூரிப்பூதிய தகராறுகள் தீர்க்கப்படாமலிருக்கையில், தொழிலாளர்கள் வேண்டுமென்றே மெதுவாக வேலை செய்தனர் என்றும், ஏனைய ஒழுங்கீனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்றும் கூறப்படுகின்றது. நிர்வாகத்தினர், 17–10–1968 முதல் 13 பிரிவுகளில் கதவடைப்பு செய்தனர். 17–10–1968 முதல் 9 பிரிவுகளில் வேலை நிறுத்தம் நடந்தது. தொழிலாளர்த் துறை ஆணையாளர், இரு தரப்பினரையும் கலந்து விவாதித்த பிறகு, நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடத்தும்படி அவர்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். வேலை நிறுத்தமும், கதவடைப்பும் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணமாகிய பூரிப்பூதிய அளவினை முடிவு செய்வது குறித்து நேரடிப் பேச்சு வார்த்தைகளின் போது சங்கத்திற்கும், நிர்வாகத்தினருக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. 1968-ம் ஆண்டு நவம்பர் 18–20-ம் நாளில் பழைய நிலைமை மீண்டும் திரும்பியது. எனினும் "மெயில்" பத்திரிகையிலும், S.R.V.S. நிறுவனத்திலும் நடந்த வேலை நிறுத்தங்கள் முறையே 23–10–1968 அன்றும், 25–10–1968 அன்றும் நிறுத்தப்பட்டன.

**(12) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர்த் தோட்டங்கள்.—** கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர்த் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், ஊதியங்களை அதிகரிக்க வேண்டும் என்று கோரி 11–11–1968 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். உடன்பாடு ஏற்பட்டதன் விளைவாகத் தொழிலாளர்கள் 20–11–1968 முதல் வேலைக்குத் திரும்பினர்.

**(13) நெய்வேலி மட்பாண்ட-சூடுதாங்கும் கற்கள் தொழிற்சாலை லிமிடெட், வடலூர்.**—தீபாவளிக்கு முன்பணம் வேண்டுமென்று கேட்டு சுமார் 200 தொழிலாளர்கள் 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 18-ந் தேதி முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். நிர்வாகத்தினர், 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 20-ம் தேதி முதல் கதவடைப்பு செய்தனர். 1947-ம் ஆண்டு, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் தொழிலாளர்த் துறை ஆணையாளர் முன்பாக 1969-ம் வருடம் ஜனவரி மாதம் 6-ம் தேதி அன்று ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. 1969-ம் வருடம் ஜனவரி மாதம் 16-ம் தேதி முதல் வேலைக்குத் திருப்புவதற்கும், கதவடைப்பை நீக்குவதற்கும் தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் ஒப்புக்கொண்டனர்.

**(14) திருப்பூரில் உள்ள பின்னல் உள் ஆடைத் தொழிற்சாலை.—** அரசாங்கம், 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 21-ம் தேதியிட்ட தனது நடவடிக்கைகளில் முடிவு செய்த குறைந்த அளவு ஊதிய வீதங்களை திருத்தியமைக்க வேண்டும் என்று கோரி திருப்பூரில் உள்ள சுமார் 432 பின்னல் உள் ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் சுமார் 6,000

(23) கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை நிறுவனம்' ஆரல்வாய்மொழி.—வேலைச் சுமை, அதற்கேற்ற ஊதியம் ஆகியவற்றைத் தீர்மானிப்பது குறித்து தகராறு தனிப்பட்ட முறையில் தீர்த்துவைக்கப் படுவதற்காக, சென்னை, தொழிலாளர்த்துறை ஆணையரிடம் அனுப்பப் பட்டது. தொழிலாளர்த்துறை ஆணையர் இதைப்பற்றி ஆலோசித்து 1968 மார்ச் 14-ம் தேதியன்று தம்முடைய முடிவைத் தெரிவித்தார்.

பஞ்சாலைத் தொழிலில் பொருந்துமுறைச் செயல்களைப் புரிதல்.—பஞ்சாலைத் தொழிலில் பொருந்துமுறைச் செயல்கள் புரிவது குறித்த சிக்கல்கள் பற்றிநடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கெனத் தொழிலாளர்த் துறை சிறப்புத்துணை ஆணையாளரொருவர் உள்ளார். 1968-ம் ஆண்டில் பொருந்துமுறைச் செயல்கள் புரிவது குறித்து 68 தகராறுகள் துறையின் உதவியுடன் தீர்த்துவைக்கப்பட்டன. அறுபது தகராறுகள் நேரில் பேசித் தீர்த்து வைக்கப்பட்டன.

16. தனிப்பட்ட முறையில் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தகராறுகள்.—தொழிலாளர்களை வேலையிலிருந்து தள்ளிவிடுதல், நீக்கிவிடுதல், எடுத்து விடுதல் குறித்து எழும் தகராறுகளைத் தனிப்பட்ட முறையில் தீர்த்துக் கொள்ள ஒப்புக்கொள்ளும்படி பொதுவாக இருதரப்பினருக்கும் ஆலோசனை கூறப்பட்டன. 1968-ம் ஆண்டில் 72 தகராறுகள் தனிப்பட்ட முறையில் தீர்வுகாண்பதற்கென அனுப்பப்பட்டன. தொழிலாளர்களை வேலையிலிருந்து தள்ளிவிடுதல், நீக்கிவிடுதல், எடுத்துவிடுதல், ஊதியம், பூரிப்பூதியம், வேலைச்சுமை ஆகியவை குறித்து அத்தகராறுகள் ஏற்பட்டன.

17. தொழில் தகராறுகள் குறித்து தீர்ப்பு.—சென்னைத் தொழில் நடுவர் மன்றத்திற்கும், சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் உள்ள தொழில் நீதிமன்றங்களுக்கும் சென்னையிலுள்ள தொழிலாளர்க் கான கூடுதல் நீதிமன்றத்திற்கும் தீர்வு காண்பதற்கென அனுப்பப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை, அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை குறித்த 1967, 1968 ஆண்டுகளுக்கான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1967. | 1968. | 1967. | 1968. |
| | (1) | (2) | (3) | (4) |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை. | 91 | 92 | 65 | 94 |
| தொழில் நீதி மன்றங்கள் .. | 380 | 399 | 235 | 337 |
| மொத்தம் .. | 471 | 491 | 300 | 431 |

மேற்சொன்னவற்றிற்குக் கூடுதலாக, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33 (c) (2) பிரிவின் கீழ் தொழிலாளர்கள் அனுப்பியுள்ள 1,987 விண்ணப்பங்களை தொழில் நீதி மன்றங்கள் பரிசீலனை செய்து அவை குறித்துத் தீர்வு கண்டன. சென்ற ஆண்டில். 2,467 விண்ணப்பங்களுக்குத் தீர்வு காணப்பட்டது.



18. தொழில்கள் பொதுப்பயன் பணிகளாகும் என அறிவித்தல்.—பொதுப்பயன் பணிகளென ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள எல்லாத் தொழில்களும் ஆய்வாண்டில் அவ்வாறே தொடர்ந்து அறிவிக்கப் பட்டுள்ளன. அவற்றிற்குக்கூடுதலாக, ஆய்வாண்டில் கீழ்க்கண்ட தொழில்களும் பொதுப்பயன் பணிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன :—

1. பிஸ்கோதுக்கள், ரொட்டிப் பொருள்கள்.
2. யுரேனியம் தொழில்.

19. வழக்குகள்.—தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக (தீர்ப்புகளைச் செயல்படுத்தாதற்காக) கீழ்க்கண்ட தொழில் நிறுவனங்களுக்கு எதிராகத் தொழில் தகராறுகள் சட்டத்தின் 29-வது பிரிவின்கீழ் வழக்குகள் தொடர அரசாங்கம் ஒப்பளிப்பது வழங்கியது :—

(1) திருப்பூரில் உள்ள திருப்பூர்-ஈரோடு போக்குவரத்து (தீர்வுகாணு நிலையில் உள்ளது).

(2) M. M. அலி மோட்டார் போக்குவரத்து, வேலூர் (நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டது).

(3) மாடர்ன் ஏஜென்சீஸ், சென்னை-32 (தீர்வுகாணு நிலையில் உள்ளது).

20. தொழிலாளரின் ஊதிய நிலுவை வசூல்கள்.—ஆய்வாண்டில் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33 (c) (i) பிரிவின் கீழ் 184 நேர்வுகளில் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூலிக்க அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. அவ்வாறு வசூலிக்க, ஆணையிடப்பட்ட தொகை மொத்தம் ரூ. 4,00,393·17.

21. ஊதிய வாரியம்.—ஊதிய வாரியத்தின் இடைக்கால, இறுதியான பரிவுரைகளைச் செயல்படுத்த இந்த ஆண்டில் மும்முர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொறியியல் தொழிலுக்கான ஊதிய வாரியம் செய்த இடைக்காலப் பரிவுரைகளைப் பெரும்பாலான தொழில் நிறுவனங் கள் ஆய்வாண்டில் செயல்படுத்தின. இந்தப் பரிவுரைகள் 152 நிறுவனங் களுக்கு (40,515 தொழிலாளர்கள்) செய்யப்பட்டன. அவற்றில் 141 நிறுவனங்கள் (36,223 தொழிலாளர்கள்) பரிவுரைகளைச் செயல் படுத்தின.

தோல், தோலினால் செய்த பொருள்கள் தொழில் ; ஹெவி கெமிக்கல்ஸ், பெர்ட்டிலைசர்ஸ் இண்டஸ்ட்ரி ஆகியவற்றிற்கு ஊதிய வாரியம் செய்த இடைக்கால பரிவுரைகளைச் செயல்படுத்தின. சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த வரையில் இரண்டாவது ஊதியவாரியம் செய்த இடைக் காலப் பரிவுரைகள் எல்லாத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்காததால் இடைக்கால இடர்தணிப்புத் தொகை தொழிலாளர்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

சாலைப் போக்குவரத்துத் தொழில், மின்சார நிறுவனங்கள் ஆகிய வற்றுக்காக பரிவுரை செய்யப்பட்ட இடைக்கால தணிப்பும், சிமிட்டி தொழிலுக்காக இரண்டாவது மத்திய ஊதிய வாரியம் செய்த இறுதியான பரிவுரைகளும் இந்த ஆய்வாண்டில் கிடைத்தன. அவற்றைச் செயல் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பருத்தி பஞ்சாலைத் தொழிலுக்காக அமைக்கப்பட்ட இரண்டாவது ஊதிய வாரியம், பொறியியல் தொழிலுக்காக ஏற்படுத்தப்பட்ட ஊதிய வாரியம் ஆகியவை அவற்றின் இறுதியான பரிவுரைகளைத் தயாரித்துக் கொடுத்துவிட்டன. அவற்றை இந்திய அரசு ஆலோசித்து வருகிறது.

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான ஊதிய வாரியம், பத்திரிகை நிறுவனங்களின் பிற பணியாளர்களுக்கான ஊதிய வாரியம் ஆகிய வற்றின் அறிக்கையின்மீது இந்திய அரசு தனது முடிவை அறிவித் துள்ளது. உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான பரிவுரை சட்டப்படிக் கான ஆணையாகும். இம் மாநிலத்திலுள்ள 40 பத்திரிகை நிறுவன

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர், பின்னர் கோயம்புத்தூர் தொழிலாளர்த் துறை துணை ஆணையாளர் முன்பாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு தொழிலாளர்கள் 1969-ம் வருடம் ஜனவரி மாதம் 7-ம் தேதி முதல் வேலை நிறுத்தத்தை நிறுத்தினர்.

(15) **லட்சுமி மில்ஸ் நிறுவனம், கோவில்பட்டி.**—நிர்வாகத்தினர், 1968-ம் வருடம் ஜூலை மாதம் 24-ம் தேதி முதல் 3-வது முறை மாற்றுப் பணியை நிறுத்தி விட்டதை எதிர்த்து, மேற்கூறிய ஆலையின் தொழிலாளர்கள் வழக்கமான வேலைகளைச் செய்ய மறுத்து விட்டனர். நிர்வாகத்தினர் 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதி முதல் ஆலையில் கதவடைப்பு செய்து விட்டனர். மதுரை மாவட்டத் தொழிலாளர் துறைத் துணை ஆணையாளர் இதில் குறுக்கிட்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 1968-ம் வருடம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் உடன்படிக்கை செய்து வைத்தார். நிர்வாகத்தினர் கதவடைப்பை நீக்கினர். 1968-ம் வருடம் செப்டம்பர் மாதம் 4-ம் தேதி முதல் வேலை மீண்டும் தொடங்கிற்று. சீரமைப்பு குறித்து தனிப்பட்ட முறையில் தீர்ப்பளிக்கப்படுவதற்காக அது தொழிலாளர் துறை உதவி ஆணையருக்கு (நிர்வாகம்-பொது) தெரிவிக்கப்பட்டது. அவர் 1968-ம் வருடம் டிசம்பர் மாதம் 16-ம் தேதி அன்று தனது முடிவினைத் தெரிவித்தார்கள். இந்த ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 1,600 ஆகும்.

(16) **தென் இந்திய விஸ்கோஸ் நிறுவனம், சிறுமுகை, மேட்டுப் பாளையம்.**—பூரிப்பூதியம் குறித்து 1967-ம் ஆண்டில் எழுந்த தகராறினைத் தொடர்ந்து 1968-ம் வருடம் செப்டம்பர் மாதம் 29-ம் தேதியில் தொழிலாளர்கள் சுமார் 1,000 பேர் வேலை நிறுத்தம் செய்தனர்.

நிர்வாகத்தினர் 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 8-ம் தேதி முதல் ஆலையில் கதவடைப்பு செய்தனர். கோயம்புத்தூர் மாவட்ட தொழிலாளர்த் துறை அதிகாரி இதில் குறுக்கிட்டு, சமரச அறிக்கை ஒன்றை அனுப்பினார். கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு நடத்தப்பட்ட உரையாடல்களின் விளைவாக உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதன்படி நிர்வாகத்தினர் கதவடைப்பை நீக்கினர். 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 27-ம் தேதி முதல் வேலை மீண்டும் தொடங்கப்பட்டது.

(17) **பஞ்சாலைகளில் பொது வேலை நிறுத்தம்.**—மூடப்பட்ட ஆலைகளைத் திறக்க வேண்டுமென்று கோரி கோயம்புத்தூரில் உள்ள தேசியப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கத்தைச் (இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்) சேர்ந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள் 1968-ம் வருடம் மே மாதம் 23-ம் தேதி அன்று வேலை நிறுத்தம் செய்தனர். திருச்சிராப்பள்ளியில், அப்பொழுதைய முதல் அமைச்சரின் முன்பு நடத்தப்பட்ட உரையாடல்களின் விளைவாக 1968-ம் வருடம் மே மாதம் 24-ம் தேதி அன்று, வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது. இந்திய தேசியத் தொழிற் சங்க காங்கிரசையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் (அதாவது அனைத்திந்திய தொழிற் சங்க காங்கிரஸ், ஹிந்த் மஸ்தூர் சபா முதலியவை) சேர்ந்த சங்கங்கள் தவிர ஏனைய சங்கங்களைச் சேர்ந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள், மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் திறப்பது குறித்து மேற்கொண்டும் உறுதி மொழிகள் அளிக்கப்பட வேண்டுமென்று கோரி, 1968-ம் வருடம் மே மாதம் 28-ம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்தனர். அப்பொழுதைய முதல் அமைச்சரின் முன்பு சென்னையில் 1968-ம் வருடம் மே மாதம் 29-ம் தேதி அன்று நடந்த உரையாடல்களின் விளைவாக இந்தச் சங்கங்கள் வேலை நிறுத்தத்தை நிறுத்தின.

(18) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிலாளர்கள் வேலைச் சுமை காரணமாக 1968-ம் வருடம் ஜூலை மாதம் 9-ம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்தனர். வட ஆற்காடு மாவட்டம் ஆட்சித் தலைவர் தலையிட்டு, வேலை நிறுத்தம் 1968-ம் வருடம் ஜூலை மாதம் 17-ம் தேதி முதல் நிறுத்தப்பட்டது.

(19) திண்டுக்கல்லில் உள்ள 33 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவரும், வாராந்திர விடுமுறை நாளிற்கு ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்று கோரி 1968-ம் வருடம்





ஆகஸ்ட் மாதம் 22-ம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்தனர். மதுரை மாவட்டத் தொழிலாளர்த்துறை ஆணையாளர் முன்பாக 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி அன்று செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து 1968-ம் ஆ ஆகஸ்ட்டு மாதம் 24-ம் தேதி அன்று வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது.

(20) சர்க்கரை ஆலைகள்.—சர்க்கரை ஆலைகளுக்கான II-வது ஊதிய வாரியத்தின் இறுதிப் பரிவுரைகள் அறிவிக்கப்படுவதற்குக் காலதாமதம் ஏற்படக்கூடுமென்று சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் உணர்ந்ததனால், ஊதியங்கள், படிகள் முதலியவற்றைக் குறித்துச் சர்க்கரை ஆலைகளின் நிர்வாகத்தினருக்கு 1968 நவம்பரில் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர்.

தொழிற்சாலை வாரியாக உடன்படிக்கை ஏற்படுவதற்கான வாய்ப்புகளை அறிவதற்காக தொழிலாளர்த்துறை ஆணையாளர் சம்பந்தப்பட்டவர்களுடன் பல நாட்களுக்குத் தொடர்ச்சியாக பேச்சு வார்த்தைகள் நடத்தினார். சம்பந்தப்பட்டவர்களிடையே கருத்து வேறுபாடு காரணமாக தொழிற்சாலை வாரியான உடன்பாடு ஏற்பட முடியவில்லை. அதன் பின்னர் கீழ்க்கண்ட நிறுவனங்கள் குறித்து அந்தந்த நிறுவன அளவில் உடன்பாடு ஏற்பட்டது.

| | |
|---|---|
| 1. மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், பட்டாளம்.<br>2. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், கிருஷ்ணராஜபுரம்.<br>3. காவிரி சர்க்கரை அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், பேட்டவாய்த்தலை.<br>4. தட்சிண சர்க்கரை அண்டு அப்காரி கம்பெனி லிமிடெட், புகலூர். | 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் உடன்பாடு. |
| 5. கோத்தாரி சர்க்கரை அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், காட்டூர்.<br>6. திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை, வடபாதிமங்கலம்.<br>7. அருணா சர்க்கரை ஆலை லிமிடெட், பெண்ணாடம்.<br>8. சக்தி சர்க்கரை ஆலை, ஆப்பக்கூடல். | 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின் கீழ் உடன்பாடு. |

நெல்லிக்குப்பத்தில் உள்ள இ.ஐ.டி. பாரி கம்பெனி லிமிடெட்டைப் பொறுத்த வரையில் ஆணையர் முன்பு உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட்டைப் பொறுத்த வரையில் ஊதியங்கள், படிகள் முதலியவைக் குறித்து, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 (2) பிரிவின் கீழ், தீர்ப்பளிக்கப்படுவதற்காக சென்னைத் தொழில் நடுவர் மன்றத்திற்கு அவற்றை அனுப்பும்படி இருதரப்பினரும் கூட்டாகச் சேர்ந்து அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(21) மதுரை ஆலைகள் நிறுவனம், மதுரை.—1967-68-ம் ஆண்டுக்குரிய பூரிப்பூதியம் குறித்து ஏற்பட்ட தகராறுகளைத் தொழிலாளர்த் துறை ஆணையர் குறுக்கிட்டுத் தீர்த்து வைத்தார். தொழில் தகராறுகள் குறித்த சட்டத்தின் 12 (3) பிரிவின்படி 1968 ஏப்ரல் 24-ம் தேதியன்று உடன்பாடு ஏற்பட்டது.

(22) 1967-68-ம் ஆண்டில் தொழிலாளர்களுக்கு பூரிப்பூதியம் வழங்குவது பற்றிய தகராறு குறித்து அந்த பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான தொழிற் சங்கங்களுக்கும் தென்னிந்திய ஆலை உடைமையாளர்கள் சங்கத்துக்குமிடையே தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்படி 1968, அக்டோபர் 8-ம் தேதியன்று உடன்பாடு ஏற்பட்டது. பூரிப்பூதியத் தொகை 4 சதவீதத்திலிருந்து 19·4 சதவீதம் வரை வழங்கப்படுகிறது.

| தொழில்களின்/நிறுவன வகையின் பெயர். | பொருந்திய தேதி. |
|---|---|
| (1) | (2) |
| பாரிடஸ் கனி சுரங்கங்கள் .. .. | 1968, ஆகஸ்டு 31-ம் தேதி. |
| டெலமைட் கனி சுரங்கங்கள் .. .. | ஷை |
| சுட்ட களிமண் சுரங்கங்கள் .. .. | ஷை |
| களிக்கல் சுரங்கங்கள் .. .. .. | ஷை |
| சயனேட் கனி சுரங்கங்கள் .. .. | ஷை |
| சில்லிமினேட் கனி சுரங்கங்கள் .. | ஷை |

ஸ்டியடைட் கனிச் சுரங்கங்கள், 1968, டிசம்பர் 31-ம் நாள் சின்கோனு மலைத் தோட்டங்கள்.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் தற்போது 120 தொழில்களுக்கும் பிறவகை நிறுவனங்களுக்கும் பொருந்துகின்றது.

தமிழ்நாட்டில் 5,157 நிறுவனங்களுக்கு/தொழிற்சாலைகளுக்கு 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் பொருந்தும்படிச் செய்யப்பட்டுள்ளது. இச் சட்டம் பொருந்துகிற தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையும் அந்த நிதிக்குத் தவணைத் தொகை செலுத்துபவர்களின் எண்ணிக்கையும் முறையே 555,764-ம் 489,663-ம் ஆகும்.

இந்த நிதிக்குச் செலுத்தப்படும் தவணைத் தொகை வீதம்.—சட்டப்படி நோக்கின் சம்பளத்தில் $6\frac{1}{4}$ சத வீதம் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தப்பட வேண்டும். ஆனால், 73 தொழில்கள்/நிறுவன வகைகள் குறித்து சம்பளத்தில் 8 சத வீதம் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தவேண்டிய தொகைகள் நிர்வாகச் செலவுகள்/ஆய்வுக் கட்டணங்கள் முதலியன குறித்து கேட்பு/வசூல்/நிலுவைத் தொகைகள் பற்றிய புள்ளி விவரம் (1968 சனவரியிலிருந்து 1968 நவம்பர் 30-ம் தேதி வரை) :—

| பாக்கிகளின் தன்மை. | கேட்பு. | வசூல். | டிசம்பர் மாதம் 1-ம் தேதியன்று நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ | ரூ. | ரூ. |
| 1 நடப்பு தவணைத் தொகைகள். | 9,00,40,571·55 | 8,06,09,368·80 | 94,31,202·75 |
| 2 நிர்வாகச் செலவுகள். | 20,74,967·80 | 18,70,943·16 | 2,04,024·64 |
| 3 ஆய்வுக்கான செலவுகள். | 2,52,698·00 | 2,51,044·04 | 1,653·96 |
| 4 முன்பு சேர்ந்து வந்திருந்த தொகைகள். | 46,69,183·75 | 45,33,649'37 | 1,35,534·38 |

வைப்பு நிதிக்குச் செலுத்த வேண்டிய தொகை நிலுவைகளும் நிர்வாகச் செலவுகளும் முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் பெருமளவிற்கு அதிகரித்துள்ளன. பஞ்சாலைகள் நூல் சந்தையில் ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாகவும் நிதிப்பற்றுக்குறை காரணமாகவும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை வழங்காததே அதற்கு முக்கிய காரணமாகும். தமிழ்நாட்டு அரசினால் நியமிக்கப்பட்ட முக்கூட்டுக் குழுவின் பரிவுரைகளின்





விளைவாக நிதிப் பற்றுக்குறையால் மூடப்பட்ட 18 துணி ஆலைகளுக்கு உத்திரவாத உதவி வழங்கியுள்ளது. வங்கிகள் வழங்கும் கடனிலிருந்து சட்டப்படிக்கான பொறுப்புகள் குறித்துச் செலுத்தப்பட வேண்டிய தொகையைக் கழித்துக்கொண்டு எஞ்சியுள்ள தொகை ஆலைகளுக்கு வழங்க வேண்டுமென அரசு குறிப்பான ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இந்த ஆலைகள் வங்கிகளிடமிருந்து கடன் பெறும்போது அவற்றிடமிருந்து நிலுவை தொகைகளை வசூல் செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வட்டி வீதம்.—1968-69 நிதி ஆண்டில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகளில் தனித்தனிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட வட்டி வீதம் $5\frac{1}{4}$ சத வீதமாகும். முந்திய ஆண்டில் வரவு வைக்கப்பட்ட வட்டி வீதம் 5 சத வீதமாக இருந்தது.

முன் பணங்கள்.—கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு, ஆய்வு ஆண்டில் 1968 நவம்பர் 30-ம் தேதி வரையில் ரூ. 84·55 லட்சம் அளவிற்குத் திரும்பச் செலுத்தத்தக்கதாய் இராத முன்பணங்கள் வழங்கப்பட்டன :—

| | நேர்வுகளின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| (அ) ஆயுள் காப்புறுதித் தவணைத் தொகை செலுத்துதல். | 26,929 | 16,47,544·66 |
| (ஆ) உறைவிடங்கள், வீட்டு மனைகள் வாங்குதல். | 1,308 | 15,24,685·00 |
| (இ) பயன்துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு, பங்குகளை வாங்குவதற்காக. | 1,200 | 35,185·00 |
| (ஈ) மருத்துவக் காரணங்களுக்காக .. | 893 | 1,35,734·05 |
| (உ) ஒரு தொழிற்சாலை அல்லது நிறுவனம் தற்காலிகமாக மூடப்பட்டதன் காரணமாக வேலை இழந்தவர்களுக்குச் சிறப்பு முன் பணம். | 24,198 | 51,12,455·30 |

வருங்கால வைப்புநிதிக் கணக்குகளை இறுதியாகத் தீர்த்து வைத்தல்.—1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் உள்ள கால அளவில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாகத் தீர்ப்பதை முன்னிட்டு ரூ. 2,55,09,668·01 தொகையை வழங்கியது. 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை உள்ள கால அளவில் ரூ. 2,20,26,515·30 வழங்கப்பட்டது. இதைத் தவிர மரணமடைந்த உறுப்பினர்களின் 345 நியமனதாரர்களுக்கு வாரிசுகளுக்கு மரண உதவி நிதியிலிருந்து கூடுதல் உதவித் தொகையாக ரூ. 91,517·65 தொகையும் வழங்கப்பட்டது.

கணக்குகள் குறித்த ஆண்டு அறிக்கையை வழங்குதல்.—1967-68-ம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டியிருந்த 4,22,455 ஆண்டுக் கணக்குச் சீட்டுகளில் 1968, டிசம்பர் 31-ம் தேதி வரையில் 3,68,388 சீட்டுகள் அனுப்பப்பட்டன.

வட்டாரக் குழு—தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி—சென்னை வட்டாரம்.—சென்னை வட்டாரத்தைச் சேர்ந்த தொழிலாளர் வைப்பு நிதி வட்டாரக் குழு ஆய்வாண்டில் 1968, ஜனவரி திங்கள் 25-ம் தேதியிலும், 1968, ஜூலை 25-ம் தேதியன்று கூடியது. 1952-ம் ஆண்டு தொழிலாளர்

வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுவது பற்றி அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களைப் பற்றி விரிவாக இக் குழு விவாதித்தது. குழுவின் பரிவுரைகள் உயர் அதிகாரிகளின் ஆலோசனைக்கு அனுப்பப் பட்டன.

ஆய்வாண்டில் 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் செய்யப்பட வேண்டிய முக்கியமான திருத்தங்கள்.—

(1) இத் திட்டத்தின் 68-H1 பாராவில் "30 நாட்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேலை நிறுத்தம் நீங்கலான பிற காரணங்களுக்காக 15 நாட்கள்" என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

(2) 68-C, 68-D, பாராக்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக மேற்கொண்டும் திருத்தப்பட்டுள்ளன :—

(அ) இரண்டாவது முன்பணத்திற்கு ஒப்பளிப்பு வழங்க வட்டார ஆணையாளர்களுக்கு இயலச் செய்தல்.

(ஆ) இந்தப் பத்திகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகையை வசூலிப்பதற்காக ஒரு உறுப்பினர் மனையைப் பெற இயலாவிட்டால், வீட்டை வாங்க அல்லது கட்ட இயலாவிட்டால் அல்லது வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் அவருக்கு வீடு ஒதுக்கியது ரத்து செய்யப்பட்டால், மறுக்கப்பட்டால் இப்பத்திகளின்கீழ் அனுமதித்துள்ள தொகையை வசூலிப்பதற்கென திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை மேற்படி நிதியில் உறுப்பினரின் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

(3) 68-H பத்தி திருத்தப்பட்டுள்ளது. தொகை செலுத்தும் தேதி வரையில் வட்டி உட்பட, தொழிலதிபர் செலுத்தும் மொத்தத் தொகையில் 50 சத வீதத்திற்கு மேற்படாத அளவிற்கு அல்லது அத் தேதியில் தமக்குச் சேர்ந்து வந்த தொகைகளைத் திரும்பப் பெற உறுப்பினர் அனுமதிக்கப்பட் டிருந்தால் 69-வது பாராவின் (3) துணைப் பாராவின் கீழ் அனுமதிக்கத் தக்க தொகையின் பாதி அளவிற்கு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்த அளவிற்கு வருங்கால வைப்பு நிதியிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திரும்பப் பெறத்தக்க முன் பணங்களை வழங்கும் பொருட்டு அந்தப் பாரா திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், 6 தினங்களுக்கு மேற்பட்ட தொழிற்சாலை நிறுவனம் கதவடைப்புச் செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் அந்தத் தொழிற்சாலை நிறுவனம் மீண்டும் செயல்படத் தொடங்கக் கூடுமென பொருத்தமாக அரசு கருத வேண்டும்.

68. (B) (I) பத்தியில் "பன்னிரண்டு திங்கள்" என்னும் சொற்கள் வருமிடங்களி லெல்லாம் "இருபத்திநாலு திங்கள்" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும். 68-B பாராவின் முதலாவது வரம்பு நிபந்தனையில் "ஆறு திங்கள்" என வரும் சொற்களுக்குப் பதிலாக "பன்னிரண்டு திங்கள்" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

விலக்களிக்கப்பட்ட பிரிவுகளிலும் விலக்களிக்கப்படாத பிரிவுகளிலும் வருங்கால வைப்பு நிதியை முதலீடு செய்வதில் அடியிற்கண்ட முதலீட்டு முறையை 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் பின் பற்ற வேண்டுமென்று இந்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

| | |
|---|---|
| (1) மாநில அரசு வெளியிட்டு வழங்கியுள்ள ஈட்டுப் பத்திரங்களிலும் மத்திய அரசு அல்லது மாநில அரசு உத்தரவாதமளித்துள்ள மற்ற ஈட்டுப் பத்திரங்களிலும். | 35 சத வீதத்திற்கு மேற்படாமல். |
| (2) மத்திய அரசு வெளியிட்டுள்ள சேமிப்புச் சான்றிதழ்கள் அல்லது பிற சான்றிதழ்கள் உட்படடி மத்திய அரசு ஈட்டுப் பத்திரங்களில் எஞ்சியுள்ளதைமுதலீடு செய்தல். | 65 சத வீதம். |



ஆய்வாண்டின் இறுதி வரையில் தொழிலாளர் வருங்கால சேமிப்பு நிதிச் சட்டம் திட்டத்தின் கீழ் 120 தொழில்கள்/வகைகள் ஆகியவற்றின் நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களில் 73 தொழில்கள்/வகைகள் குறித்தவற்றின் தொகை வீதங்கள் உயர்த்தப் பட்டன. இச் சட்டத்தை மேலும் பல தொழில் நிறுவனங்களுக்கும் நீட்டிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் கருத்தில் உள்ள இத்தகைய தொழில் நிறுவனங்கள் வருங்காலச் வைப்பு நிதித் திட்டத்தின் மூலம் ஏற்படக்கூடிய நிதிச்சுமையை ஏற்கும் திறன் வாய்ந்தவை எனக் கருதத்தக்க தொழில்கள் இச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

28. தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டம்.—தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டம் இம் மாநிலத்தில் கீழ்க்கண்ட இடங்களில் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதி முதல் செயலில் உள்ளது. இத் திட்டத்தில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்கள், 336,500 பேரும், 204,650 குடும்பப் பிரிவுகளும் அடங்குகின்றன :—

1 சென்னை மாநகரமும் அதன் புற நகர்களும்.
2 கோயம்புத்தூரும் அதன் எல்லைப் பகுதிகளும்.
3 மதுரையும் அதன் புற நகர்களும்.
4 தூத்துக்குடி.
5 அம்பாசமுத்திரம்.
6 திருப்பூரும் அதன் எல்லைப் பகுதிகளும்.
7 சேலம்.
8 உடுமலைப்பேட்டை.
9 மேட்டூர் அணை.
10 சிவகாசி.
11 ராஜபாளையம்.
12 பீளமேடு.
13 பெரியநாயக்கன்பாளையம்.
14 பால்மியாபுரம்.
15 ராணிப்பேட்டை.
16 திருச்சிராப்பள்ளி.
17 காவிரி நகர்.
18 திண்டுக்கல்.
19 திருநெல்வேலி.
20 கும்பகோணம்.
21 புதுக்கோட்டை நமணசமுத்திரம்.
22 ஈரோடு.
23 பொள்ளாச்சி.
24 ஆவடி, பட்டாபிராம்., பாடி, வீரராகவபுரம்.
25 திருவான்மியூர் உட்பட செங்குன்றம்.
26 வாணியம்பாடி.
27 குடியாத்தம்
28 விருதுநகர்.
29 மேட்டுப்பாளையம்.
30 செங்கோட்டை.
31 நாகர்கோவில்.

[1969 மார்ச் 25

23. மேட்டூர் மேல் அணை.
24. திருநகர்.
25. பொன்னகரம்.
26. பழங்காநத்தம்.
27. பரவை.
28. உடுமலைப்பேட்டை.
29. திருப்பூர் I.
30. கும்பகோணம்.
31. கோயில்பட்டி.
32. முனிசாலை ரோடு.

பணியாளர் குடியிருப்புகளுடன் கூடிய இந்த 2 மருந்தகங்களும் ரூ. 1,90,44,400 மதிப்பீட்டுச் செலவில் (அதாவது சுமார் இரண்டு கோடி ரூபாய்) கட்டப்பட்டன.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்கள் கீழ்க்கண்ட இரண்டிடங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன :-

1. திருவல்லிக்கேணி.
2. சூளை.

செலவினம்.—தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகளை வழங்குவதற்கான செலவு முதற்கண் மாநில அரசால் செய்யப்பட்டு, தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிக் கழகம், மாநில அரசு இவற்றிற்கிடையே பகிர்ந்து கொள்ளப்படும். ஈட்டுறுதி செய்து கொண்ட பணியாளர்களுக்கும், அவற்றின் குடும்பத்தினரும் இத் திட்டத்தின் கீழ் வரும் இடங்களில் 7 : 1 என்ற விகிதத்திலும், ஈட்டுறுதி செய்து கொண்டுள்ளவர்கள் மட்டுமே இத் திட்டத்தின் கீழ் வரும் இடங்களில் 3 : 1 என்ற விகிதத்திலும் பகிர்ந்து கொள்ளப்படும்.

1968–69-ல் மருத்துவ வசதிகளுக்காகச் செய்யப்பட்ட செலவு தோராயமாக ரூ. 181 லட்சமாகும்.

1968 ஜனவரி முதல் டிசம்பர் வரையில் உள்ள கால அளவில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கு ரொக்கத் தொகையாக வழங்கப்பட்ட பல்வேறு உதவிகள் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் வருமாறு :—

| உதவிகளின் வகை. (1) | கொடுத்த தொகை. (2) ரூ. | கா.சு |
|---|---|---|
| 1968 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான கால அளவில் ரொக்கமாக வழங்கப்பட்ட உதவித் தொகைகள் :— | | |
| (அ) நோய்க்கால உதவி .. .. .. .. (இ) நீட்டிக்கப்பட்ட நோய்க்கால உதவி .. .. | 1,28,73,834 | 14 |
| தொழில் செய்கையில் காயம் பட்டதற்கான உதவி— | | |
| (அ) வேலை செய்ய தாற்காலிகமாக இயலாமைக்கான உதவி. | 10,98,194 | 99 |
| (இ) வேலை செய்ய நிலையாக இயலாமைக்கான உதவி. | 14,17,954 | 36 |
| (உ) சார்ந்துள்ளவர்களுக்கு உதவி .. .. | 83,296 | 50 |
| **பேறு கால உதவி** .. .. .. .. | 6,47,033 | 51 |



1969 மார்ச் 25]

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டம்.—சென்னை, அயன்புரத்திலுள்ள தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனை மும்முரத் திட்டத்தின் கீழ் கருத்தடை செய்து கொள்வதற்காக ஏற்பளிக்கப்பட்ட அறுவை சிகிச்சை நிலையமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி நீட்டிக்கப்பட்டுள்ள இடங்களில் அமைந்துள்ள மருந்தகங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு சிறு மருத்துவச் சாலைகள் அமைப்பதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டம், திட்டத்தில் சேராத வேலைத் திட்டமாகத் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

## V. தொழிலாளர் நலப் பணிகள்

29. ஈடுசெய் விலையில் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம்.—தொழிலாளர்களுக்கு ஒழுங்கான வீட்டு வசதி அளிப்பது இன்றியமையாதிருப்பதினாலும் இதனால் தொழிலாளர்-நிர்வாகத்தினரிடையில் ஏற்படும் நல்லுறவு ஏற்பாட்டு உற்பத்தி பெருகும் என்ற எண்ணத்தாலும் மாநில அரசும், மத்திய அரசும் தொழிலாளர் வீட்டு வசதி சிக்கலைத் தீர்ப்பதற்காக பெரு முயற்சி எடுத்து வருகின்றனர். தொழிலாளர் வீட்டு வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களுக்கும் நிலக்கரி, அபிரகச் சுரங்கங்களைத் தவிர மற்ற சுரங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் உதவிபுரியும் வகையில் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தை இந்திய அரசு தொடங்கியது. இத் திட்டத்தின்கீழ் மாநில அரசிற்கும், சட்டபூர்வமான வீட்டு வசதி வாரியங்களுக்கும், தொழிலாளர்களுக்கும், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உதவித் தொகை மூலமும், கடன் வசதி மூலமும் இந்திய அரசு நிதி உதவி அளித்து வருகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு, தனியார், கூட்டுறவுத் துறைகளுக்காக 150 லட்சம் ரூபாய்த் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டில் எய்திய முன்னேற்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அரசுத் திட்டங்கள்.—பொதுத் துறையில் வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 1968–69-ம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 1·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1968-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் முடிய அந்த ஆண்டில் ரூ. 8 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1967–68-ல் இத் திட்டங்களுக்காக ரூ. 8·10 லட்சம் செலவிடப்பட்டது. 1968-ல் சிங்காநல்லூரில் III-வது பகுதியாக 50 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1967–68-ல் தொழில் துறை கட்ட மேற்கொண்ட 165 வீடுகளில், அதாவது, அம்பத்தூரில் 51 வீடுகள், காட்பாடியில் 12 வீடுகள், திருச்சிராப்பள்ளியில் 12 வீடுகள், கிண்டியில் 54 வீடுகள், மதுரையில் 24 வீடுகள், திண்டுக்கல்லில் 12 வீடுகள் ஆகியவற்றில் திண்டுக்கல்லில் 12 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி 156 வீடுகளைக் கட்டும் பணி பல்வேறு நிலையிலுள்ளன. இவை 1969 மார்ச் 31-குள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் துறைத் தொழிலதிபர்கள் திட்டம்.—1967–68-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ரூ. 2·50 லட்சம் ஒதுக்கப்பட்டது. மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறையினால் தனியார்த் தொழிலதிபர்களுக்குப் புதிதாக கடன்கள் எதும் வழங்கப்படவில்லை. 1968–69-ல் தனியார் துறைக்கு ரூ. 0·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இது வரையில் செலவு எதும் செய்யப்படவில்லை.

32 வேலூர்.

33 நாகப்பட்டினம்.

34 திருநகர் (மதுரை).

35 பேரூர் செட்டிபாளையம்.

36 திருமங்கலம்.

37 வராகநேரி (திருச்சி).

38 மயிலேரிபாளையம்.

39 பரவை, தேனூர், சமயநல்லூர் (மதுரை).

40 ஊத்துக்குளி, பல்லடம் பகுதி(கோயம்புத்தூர்).

41 கோயில்பட்டி., கரிசல்குளம் (திருநெல்வேலி மாவட்டம்).

42 ஓடப்பள்ளி, பள்ளிபாளையம் (சேலம் மாவட்டம்).

43 ஆரணி (வட ஆர்க்காடு மாவட்டம்).

மேற்சொன்ன பகுதிகளில் 71 அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்களும், 9 இயங்கும் மருந்தகங்களும், 10 தொழிலதிபர் பயன்படுத்தும் மருந்தகங்களும், 49 மருத்துவர் பிரிவுகளும் இத் திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. மேலும், மூன்று பகுதி நேர மருத்துவர்களும், 84 பகுதி நேர மருத்துவ வல்லுநர்களும், 24 முழுநேர மருத்துவ வல்லுநர்களும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுகின்றனர்.

1968–69-ம் ஆண்டில் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டம் கோவை மாவட்டத்தில் ஊத்துக்குளி, பல்லடம் பகுதிகளுக்கும் திருநெல்வேலி மாவட்டத்தில் கோயில்பட்டி, கரிசல் குளத்திற்கும், சேலம் மாவட்டத்தில் ஓடப்பள்ளி, பள்ளிபாளையத்திற்கும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆரணிக்கும் நீட்டிக்கப்பட்டது. விருதுநகர் புறநகர்ப் பகுதிகளுக்கும் நெல்லிக்குப்பம் பகுதிக்கும் இந்தத் திட்டத்தை மேலும் நீட்டிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இத் திட்டம் இந்த பகுதிகளிலும் விரைவிலேயே செயல்படுத்தப்படும். ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி செய்து தருவதாக அடியிற் கண்ட தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்கள் நான்கு 1968–69-ம் ஆண்டில் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம், கோயில்பட்டி.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம், பள்ளிபாளையம்.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம், பல்லடம்.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம், ஆரணி.

கோயம்புத்தூர், மதுரை, விக்கிரமசிங்கபுரம், தூத்துக்குடி பகுதிகளில் வாழும் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதியை நீட்டிப்பதற்கான செயற்குறிப்புகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

மருத்துவமனை.—தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் வரும் பிணியாளர்களுக் கென்றே சென்னை அயன்புரத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு மருத்துவ மனை 1962, ஏப்ரல் முதல் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகரிலும், அதன் புறநகர்களிலும், ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பத்தினருக்கும் இத் திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி நீட்டிக்கப்பட்டுள்ளதால் இந்த மருத்துவ மனையில் படுக்கைகளின் எண்ணிக்கை 625 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் 500 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனையொன்று கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மதுரையில் தற்போதுள்ள தொத்துநோய் மருத்துவமனையை இரண்டு அறுவைக் கூடங்களுடன் 66 படுக்கைகள் கொண்ட வார்டும் கூடுதல் கட்டிட அமைப்பும் போடப்பட்டு தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனையாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. கட்டிட வேலை ஏறக்குறைய முடிந்துவிட்டது. தற்பொழுதுள்ள தொத்துநோய் மருத்துவமனையை வேறிடத்திற்கு மாற்றியவுடன் இந்த மருத்துவமனை செயல்படத் தொடங்கும்.



வார்டும் இணைப்பு மருத்துவ மனைகளும்.—தாம்பரம் காச நோய் நலம் பேண் மருத்துவ மனையில் மொத்தம் 52 படுக்கைகளுடன் கூடிய நிலையான தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி வார்டுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிவகாசி அரசாங்க மருத்துவ மனையில் 12 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. லால்குடி அரசாங்க மருத்துவ மனையில் தொழிலாளர் ஈட்டுறுதி நோயாளிகளுக்காக 10 படுக்கைகளுடன் கூடிய ஒரு வார்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கோயில்பட்டி அரசாங்க மருத்துவமனையில் 32 படுக்கைகளுடன் கொண்ட தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிப் பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. நாகர்கோயில் காச நோய் அரசாங்க மருத்துவமனையில் 26 படுக்கைகளுடன் கூடிய காச நோய் வார்டு ஒன்றைக் கட்டுவதற்கும் வட ஆற்காடு மாவட்டத்தில் பெண்ணாத்தூர் காசநோய் அரசாங்க மருத்துவமனையில் 16 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றைக் கட்டுவதற்கும் அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. காவிரி நகரிலும் உசிலம்பட்டியிலும் உள்ள தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகத்திலும் பத்து படுக்கைகள் கொண்ட ஒவ்வொரு வார்டு கட்டுவதற்கும் அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள 13 அரசாங்க மருத்துவ மனைகளிலும் 10 படுக்கைகளுடன் கூடிய வார்டு ஒவ்வொன்று கட்டுவதற்கும் அரசாங்கம் இசைவளித்துள்ளது.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்கள்.—தற்போது தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்கள் கீழே குறிப்பிட்ட இடங்களில் உள்ள புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன :—

1. பொம்மூர்.
2. தண்டையார்பேட்டை.
3. செம்பியம்.
4. கொண்டித்தோப்பு.
5. கீழ்ப்பாக்கம்.
6. திருவொற்றியூர்.
7. செங்குன்றம்.
8. அம்பத்தூர்.
9. ஆவடி.
10. பல்லாவரம்.
11. சிங்காநல்லூர்.
12. ஒண்டிப்புதூர்.
13. சரிப்பாளையம்.
14. உப்பிலிபாளையம்.
15. வெள்ளலூர்.
16. சிவகாசி.
17. ராஜபாளையம்.
18. தூத்துக்குடி.
19. விக்கிரமசிங்கபுரம்.
20. காவேரி நகர்.
21. ராம்ஜி நகர்.
22. மேட்டூர் கீழ் அணை.

## தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்

1958-ம் ஆண்டுத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்ட விதிகளுக்கிணங்க, தோட்ட அதிபர்கள் தங்களுடைய தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு உதவ இத் திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத்தின் கீழ், தோட்ட அதிபர்கள், தங்களுடைய தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக, வீடு ஒன்றுக்கு ரூபாய் 3,000 என்ற வீதத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் அவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இவ் வேலைத் திட்டத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 10 லட்சமாகும். 1967–68 திட்ட மதிப்பீட்டில் ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால், கடன் உதவி எதுவும் வழங்கப்படவில்லை. 1968–69-ல் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி திட்டத்திற்காக ரூ. 0·50 லட்சம் ஒதுக்கப்பட்டது. இது வரை தோட்ட அதிபர்களுக்காக எத் தொகையும் வழங்கப்படவில்லை.

30. <u>தோட்டத் தொழிலாளர் நலன் (i) காப்பிக் கொட்டை வாரிய மானியம்.</u>—தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிக்காக காப்பிக்கொட்டை வாரியம் 1968–69-ல் மானியத் தொகை ஒதுக்கியுள்ளது. இத்தொகை மைசூர், சென்னை, கேரளம் ஆகிய மாநிலங்களுக்கு முறையே 55 : 30 : 15 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும். இவ்வாறு வழங்கப்பட்ட தொகையைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்குமாறு தமிழ் நாட்டு அரசை காப்பிய வாரியம் கேட்டுள்ளது. காப்பிக்கொட்டை வாரியத்தால் குறிப்பிட்டுள்ளபடித் திட்டங்களை வகுப்பதில் சில இடர்ப்பாடுகள் உள்ளதால், இது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. 1968–69-ல் எந்த வேலைத் திட்டத்தையும் நிறைவேற்றும் எண்ணமில்லை.

(ii) <u>தேயிலை வாரிய மானியம்.</u>—தேயிலை வாரியம் அளிக்கும் மானியத்திலிருந்து, (1) தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு குன்னூர் தையல் நிலையத்தில் பயிற்சி அளிப்பது, (2) தேயிலை எஸ்டேட்டிலிருந்து 9 மாணவர்களுக்குத் துணைச் செவிலியர்-மருத்துவச்சி படிப்பில், கோயம்பத்தூர் தலைமையிட மருத்துவ மனையில் பயிற்சி யளிப்பது ஆகிய நல நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

1968–69 தேயிலை வாரியம் மானியம் எதையும் ஒதுக்கவில்லை.

(iii) <u>ரப்பர் வாரிய மானியம்.</u>—கோட்டயம் ரப்பர் வாரியம் நாகர் கோயிலிலுள்ள அரசு காச நோய் மருத்துவ மனையில் 4 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு கட்டுவதற்காக ரூ. 18,900 ஒதுக்கியுள்ளது. ரப்பர் வாரியம் ரூ. 18,900 கொடுக்க முன் வந்துள்ளதால் ரூ. 21,500 செலவில் 4 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றைக் கட்டுவதற்காக சென்னை மருத்துவப் பணி இயக்குநர் திட்டமொன்றை அனுப்பியுள்ளார். ரூ. 18,900 தருமாறு ரப்பர் வாரியத்தை அரசாங்கம் கேட்டுள்ளது. மேலும் மேற்கூறிய திட்டத்திற்காக எஞ்சிய செலவுத் தொகையாக ரூ. 2,600-ஐ அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளது. 1967–68-க்கான திருத்த மதிப்பீட்டில் அரசாங்கத்திற்குச் செலுத்தத் தக்க மானியமாக ரூ. 18,900 ஒதுக்கப்பட்டுள்ளதாக ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது. ரப்பர் வாரியத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள மானியம் இதுவரை பெறப்படவில்லை.

31. <u>தொழிலாளர்களின் கல்வி.</u>—இந்திய அரசினால் நாடு முழுவதும் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள் கல்வித் திட்டம் 1968–69-லும் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது.





சென்னை, மதுரை, கோயம்புத்தூரிலுள்ள வட்டார நிலையங்கள் தொழிலாளர்-ஆசிரியர்களுக்காக கீழே குறிப்பிட்டபடி பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றன :—

| | சென்னை. | மதுரை. | கோயம்பத்தூர். |
|---|---|---|---|
| முடிவடைந்த தொழிலாளர்—ஆசிரியர் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை. | 5 | 4 | 4 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்—ஆசிரியர் எண்ணிக்கை. | 158 | 135 | 78 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 7,895 | 6,543 | 2,266 |

சென்னை வட்டார நிலையத்தினரால் 1968-ம் ஆண்டு மே 29 முதல் ஆகஸ்டு 28-ம் நாள் வரை சென்னை நிலையத்தின் பெண் தொழிலாளர்களுக்காக சிறப்பான தொழிலாளர்—ஆசிரியர் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

32. <u>பயன்துய்ப்போர் கூட்டுறவுப் பண்டக சாலைகளும் நியாய விலைக் கடைகளும்.</u>—250 பணியாளர்களோ, அதற்கு மேற்பட்ட பணியாளர்களோ உள்ள தொழில் நிறுவனங்களுக்கும் மலைத் தோட்டங்களுக்கும் அங்கு பணிபுரியும் தொழிலாளர் நலனுக்காக பயன்துய்ப்போர் கூட்டுறவுப் பண்ட சாலைகளையும், நியாய விலைக் கடைகளையும் அமைக்கும்படி கேட்கப்பட்டுள்ளன.

33. <u>தமிழ்நாடு தொழிலாளர் அரசாங்க இதழ்.</u>—தமிழ் நாடு தொழிலாளர் அரசாங்க இதழ், பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் திங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றது. இதில் தொழில் தகராறுகள், வேலை நிறுத்தங்கள், தொழிற் சங்கங்கள், முக்கியமான ஒப்பந்தங்கள், சென்னை தொழிலாளர் நீதி மன்றம், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புச் சுருக்கங்கள், உயர்நீதி மன்றம், தலைமை நீதி மன்றம் ஆகியவற்றின் முடிவுகள், பணிபுரியும் வகுப்பிற்கான பயன்துய்ப்போர் பண்ட விலைக் குறிப்பீடுகள் ஆகியவை குறித்த பயன்தரும் தகவல்களும் புள்ளி விவரங்களும் இதில் வெளியிடப்படுகின்றன. மேலும் தொழிலாளர் சிக்கல்கள், தொழில் நிர்வாகம் ஆகியவை குறித்த சுவையான கட்டுரைகளையும் இது வெளியிடுகிறது. இதைத் தவிர உலக நாடுகள் தொழிலாளர் நிறுவனம், இந்தியத் தொழிலாளர் மாநாடு, தொழிலாளர் நிலைக்குழு, மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு முதலியவற்றின் தீர்மானங்களையும், பரிந்துரைகளையும், இது வெளியிடுகின்றது. புள்ளி விவரங்களில் பெரும் பாலானவை தமிழில் அச்சிடப்பட்டு வருகின்றன.

34. பொது.—துய்ப் பொருள் விலைவாசிக் குறியீட்டு அட்டவணை துய்ப் பொருள் விலைவாசிக் குறியீட்டு அட்டவணைப் புதிய தொகுதிகளைத் தயாரிப்பதற்கான சிறப்புக் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பார்ப்பதற்காக சென்னைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத் துறைத் தலைவரும் பொருளாதாரப் பேராசிரியருமாகிய திரு டாக்டர் வி. ஷண்முகசுந்தரம் அவர்களை அரசாங்கம் நியமித்தது. அவர் தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் உரையாடல் நடத்தினர் என்று மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் கடைசி கூட்டத்தின் முடிவிலிருந்து தெரிய வருகிறது. இந்த அறிக்கை ஆய்விலுள்ளது.

(ii) தொழிலாளர் ஆலோசனைக்குழு.—தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கான தொழிலாளர் ஆலோசனைக் குழுவைத் தவிர, தொழிலாளர்க்குத் தொடர்புடைய எல்லாவற்றைக் குறித்தும் தொழிலாளர் துறை அமைச்சருக்கு ஆலோசனை கூறும் பொருட்டு, தொழிலதிபர்களின் பிரதிநிதிகளுக்கான ஆலோசனைக் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ளது. 1968, ஜூலை 8-ம் நாளன்று இவ்விரண்டு ஆலோசனைக் குழுக்களும் சென்னையில் கூடின. தொழிலாளர்களுக்காக உரையாடல் நடத்துவதற்கேற்ற ( **Bargaining Agent for workers** ) முகவுரைத் தெரிந்தெடுப்பதன் முறை முதலியன குறித்து விவாதித்தன.

(iii) தொழிலாளர் பற்றிய தேசிய ஆலோசனைக்குழு.—1968, செப்டம்பரில், முன்னாள் தலைமை நீதிபதியும், தொழிலாளர் தேசிய ஆணைக்குழுவின் தலைவருமான டாக்டர் பி. பி. கஜேந்திர கட்கர் தொழிலாளர்களின் ஆணையாளருடன் சென்னை மாநகரிலுள்ள சில தொழிற் பிரிவுகளைச் சென்று பார்வையிட்டார். அங்குள்ள தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் ஆகியோரின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

(iv) தொழிலாளர் நலக்குழு.—இந்திய அரசின் முன்னாள் தொழிலாளர் துறை துணை அமைச்சர் திரு. பி. கே. மாளவியா அவர்களின் தலைமையில் இந்திய அரசினால் அமைக்கப்பட்ட தொழிலாளர் நலக்குழு பல்வேறு மாநிலங்களில் கூடியது. 1968, டிசம்பர் 27 முதல் 30-ந் தேதி வரையில் டில்லியிலும், 1969, ஜனவரி 10 முதல் 12 வரை பம்பாயிலும், 1969-ல் பிப்பிரவரி 10 முதல் 15-ந் தேதி வரையிலும் கோவாவிலும் நடைபெற்ற இக் குழுவின் கூட்டங்களில், குழுவின் உறுப்பினரான சென்னை, தொழிலாளர் நல ஆணையாளரும் கலந்து கொண்டார்.

(v) மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்.—மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் தனது 16-வது கூட்டத்தை சென்னையில் 1968-ம் ஆண்டு ஜூலை 9-ம் நாள் அன்று நடத்தியது. ஆலோசனை செய்யப்பட்ட முக்கிய பொருள்களில் சில வருமாறு: தொழிலாளர்களின் கல்வியறிவு பற்றிய அறிக்கை, நெசவுத் தொழிற்சாலைகளில் படித்தவர்களின் எண்ணிக்கை, வேலை நிறுத்தம், கதவடைப்புகளின்போது தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி வசதிகளைத் தவறான வழிகளில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான புதிய முறைகளை வகுத்தல், வேலை நிறுத்தங்களின்போது / கதவடைப்புகளின்போது பழைய தகராறுகளை நியாய விசாரணை செய்தல் முதலியனவாகும்.

## VI. எடைகள்—அளவைகள்.

35. எடைகள்-அளவைகள் துறை தொழிலாளர் துறையுடன் இணைக்கப்பட்டதன் விளைவாக, தொழில் நுட்ப வகையைச் சேராத தொழிலாளர் சட்டங்களைச் செயல்படுத்துவதுடன், 1958-ம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் விதித்துறைகளை செயல்படுத்தும் பணி, 1967 ஜனவரி 4-ம் நாள் முதல் தொழிலாளர் துறை ஆய்வாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு 1958-ம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம், தர எடைகள்-அளவைகளை செயலுக்குக் கொண்டு வருவதற்கும் அதற்குத் தொடர்பானவற்றிற்கும் வகை செய்கிறது. அது மாநிலம் முழுவதிற்கும் பொருந்தும்.

எடைகளையும் அளவைகளையும் மெட்ரிக் முறைக்கு மாற்றும் பணி இம் மாநிலத்தில் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1967 டிசம்பர் 1-ம் நாள் முதல் எல்லாத் தொழில்களுக்கும், வாணிகங்களுக்கும், எல்லா வகைப் பொருள்களுக்கும் மெட்ரிக் அலகுகளையே கட்டாயமாக பயன்படுத்த வேண்டும் என்பது இம் மாநில முழுவதும் செயல்படுத்தப்பட்டது.





உணவுப்பொருள்கள், தானியங்கள், பருப்பு வகைகள், சிறு தானியங்கள் ஆகியவற்றை எடை மூலமே விற்கவேண்டும் என்பது மாநகரில் 1966 ஜூன் முதல் செயலுக்கு வந்தது. 1968 அக்டோபரில் இம் மாநிலத்திலுள்ள நகராட்சிகளிலும், நகரியங்களிலும், பேரூராட்சிகளிலும் அம்முறை கட்டாயமாகச் செயல்படுத்தப்பட்டது.

36. உரிமங்கள்.—1966, 1967, 1968-ம் ஆண்டுகளில் எடை அளவை சட்டத்தின்கீழ் எடை-அளவு கட்டுப்பாடு அதிகாரி அவர்களால் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதில், புதிய உரிமங்கள், பழைய உரிமங்களைப் புதுப்பித்தல் ஆகிய இருவகையும் அடங்கும்.

| | 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|
| உற்பத்தியாளர்கள் .. .. | 116 | 126 | 123 |
| வணிகர்கள் .. .. .. | 640 | 546 | 598 |
| பழுதுபார்ப்போர் .. .. | 203 | 220 | 201 |

37. விளம்பரம்.—மெட்ரிக் முறை எடைகள்-அளவைகளின் விளம்பர வாரம் 1968 டிசம்பர் 28 முதல் 1969 ஜனவரி மூன்றும் நாள் வரை கொண்டாடப்பட்டது. விளம்பர வாரத்தில் எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் அலுவலகத்திலும் தொழிலாளர்த் துறை நேடுநர்களின் அலுவலகத்திலும் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. பல்வேறு வகையான மெட்ரிக் எடைகளைப்பற்றியும், அளவைகளைப்பற்றியும், கருவிகளை எடைபோடுதல் பற்றியும், அளவெடுப்பது பற்றியும் அவற்றை எப்படி பயன்படுத்துதல் என்பது பற்றியும் அநியாய விலை விற்கும் வணிகர்களின் பொதுவான நேர்மையற்ற நடத்தையைப் பற்றியும் பொது மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவே இப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. மெட்ரிக் முறையை பயன்படுத்துதல் குறித்த சுவரொட்டிகள் தமிழ்நாடு போக்குவரத்து பேருந்துகளில் பின்பக்கத்திலும், சந்தைகள், சினிமா கொட்டகைகள், சிற்றுண்டிச்சாலைகள், அரசாங்க அலுவலகங்கள் போன்ற பொது இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. நிலப்பகுதிகளை அளவெடுப்பதற்கான மாற்று அட்டவணைகளும் தெர்மாமீட்டர் மாற்று அட்டவணைகளும் அவற்றை வேண்டும் என்று கேட்டவர்களுக்கும் அரசாங்கத் துறையினர்களுக்கும் வழங்கப்பட்டன. மெட்ரிக் விளம்பர வாரத்தின் முதல் நாளாகிய 1968 டிசம்பர் 28-அன்று எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி அவர்கள் எடைகள்-அளவைகள் பற்றிய உரையினை வானொலி மூலம் நிகழ்த்தினர். எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் அலுவலகத்தில் விளம்பர வாரத்தின் கடைசி நாளன்று பத்திரிகையாளர்கள் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு, எடைகள்-அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு பத்திரிகையாளர்களுக்கு விளக்கப்பட்டது. "மெட்ரிக் பல்வகை" என்ற புத்தகம் வெளியிடப்பட்டு, வழங்கப்பட்டது.

38 செயல்படுத்துதல்.—(i) மாநில எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் ஒப்புதலுடன் தொழிலாளர்த் துறை உதவி மேற்பார்வையாளரால் (எடைகள்-அளவைகள் மேற்பார்வையாளர்கள்) வகுக்கப்பட்டுள்ள படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் எடைகளை மீண்டும் சரிபார்க்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ii) இதுவரை மேற்கொள்ளப்படாத சரிபார்க்கும் பணிகளாகிய வாடகை வண்டிகளின் மீட்டர்கள், தண்ணீர் மீட்டர்கள், திரவ அளவைகள் ஆகியவற்றைச் சரிபார்க்கும் பணி 1969–70-ல் மேற்கொள்ளப்படும்.

(iii) அறிக்கை ஆண்டில் 1958-ம் ஆண்டு தமிழ்நாடு எடைகள்—அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் விதித்துறைகளையும் அதன் கீழ் வகுக்கப்பட்ட சட்டங்களையும் மீறியதற்காக 120 நேர்வுகளில் வழக்கு

தொடரப்பட்டது. இவற்றில் 52 நேர்வுகளில் அபராதம் விதிக்கப்பட்டது. மற்றொரு வழக்கில் குற்றமற்றவர் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. பிற வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவு பெறாமல் உள்ளன.

39. மாநில எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் மாநாடு.—எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் 13-வது மாநாடு 1968 மே திங்களில் டார்ஜிலிங்கில் நடைபெற்றது. அப்பொழுது எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியாயிருந்தவர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முடிவுகளில் சில கீழ் கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) சிப்பமிடப்படும் பொருள்களுக்கான அளவை முடிவு செய்தல்.

(2) ஒவ்வொரு ஆண்டும் விளம்பர வாரத்தை நடத்துதல்.

(3) முகாம் இடங்களில் மறுமுறை சரிபார்த்தல், முத்திரையிடும் பணிகளை மேற்கொள்ளுவதற்காக ஆய்வுக் கூடத்துடன் கூடிய சுற்றியங்கும் வண்டி ஒன்று வாங்குதல்.

(4) வாடகை மோட்டார் வண்டிகள், ஆட்டோ ரிக்ஷாக்களில் உள்ள மீட்டர்கள், எண்ணெய் அளவுகளைக் காட்டும் நாடாக்கள் குறித்து சில புதிய குறிப்பீடுகளைக் கொண்டுவருதல், இந்த இனங்களில் எடைகள்-அளவைகள் சட்டத்தைச் செயல் படுத்துதல்.

40. நிதிக்கூறுகள்.—இந்த ஆண்டில் இத்துறைக்கு ரூ. 17,85,724·34 வருவாய் வந்தது. ரூ. 22,50,003·00 செலவிடப்பட்டது. சென்ற ஆண்டில் இத்துறைக்கு ரூ. 14,84,711·80 வருவாய் கிடைத்தது. ரூ. 19,76,523 49 செலவு செய்தது. 1968 ஜனவரி 1-ந் தேதி முதல் செயலுக்கு வரும் வகையில் சரிபார்க்கும், முத்திரையிடும் பணிக்கான கட்டண வீதங்கள் உயர்த்தப்பட்டன.

## VII. தேசிய வேலை வாய்ப்புப் பணி.

41. வேலை வாய்ப்புகள்.—தேசிய வேலை வாய்ப்புப் பணியின்கீழ் தமிழ் நாட்டில் 20 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், சென்னையில் தொழில் நிர்வாகப்பணி அலுவலகம் ஒன்றும், ஊனமுடையோர்க்காக சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒன்றுமாக, இரண்டு பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் ஆலோசனைக் கழகங்களும் ஆக நான்கு சிறப்பு அலுவலகங்களும் சேர்ந்ததாகும். 1968 எப்ரல் 1-ம் நாள் தொடங்கப்பட்ட கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்துக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும் இதில் சேர்ந்ததாகும். கிருஷ்ணகிரியில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் தொடங்கப்பட்டதை ஒட்டி, சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட சுற்றியங்கும் பதிவுப்பிரிவு செயல்படுத்துவது நிறுத்தப்பட்டது. இராமநாதபுரத்திலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தைச் சேர்ந்த மற்றொரு சுற்றியங்கும் பதிவுப் பிரிவு இம்மாவட்டத்தின் ஒதுக்குப்புற பகுதிகளில் தொடர்ந்து செயல்பட்டு வந்தது.

இந்தக் கால அளவின்போது பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், வேலையில் அமர்த்தப்பட்டவர்கள், வேலைவாய்ப்புப் பதிவேட்டில் பதிவு செய்து வேலை வாய்ப்பு கிடைக்காமல் உள்ளவர்கள், அரசாங்கத்துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பணியைப்





பயன்படுத்திக்கொண்ட வேலையளிப்போர் ஆகியவர்களின் எண்ணிக்கையும், இவ்வகையில் 1967–68-ம் ஆண்டிற்கான எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்படுகின்றன.

| தொடர் எண். | விவரம். | ஆய்வுக்காலத்தின் போது 1968 எப்ரல் முதல் 1968 நவம்பர் வரை. | 1967–68 வரவு-செலவு திட்ட ஆண்டின் போது (1967 எப்ரல் முதல் 1967 நவம்பர் வரை உள்ள கால அளவிற்கு). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள். | 2,64,007 | 2,38,738 |
| 2 | வேலையில் அமர்த்தப்பட்டவர்கள். | 28,543 | 31,149 |
| 3 | அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை. | 40,711 | 44,246 |
| 4 | வேலைவாய்ப்பு ஏற்பாட்டு அலுவலகங்களின் பணியை பயன்படுத்திக் கொண்ட வேலையளிப்போர்களின் சராசரி எண்ணிக்கை— | | |
| | (அ) அரசாங்கம் (பொதுத் துறை). | 1,113 | 1,028 |
| | (ஆ) ஏனையோர் (தனியார்த் துறை). | 241 | 233 |
| 5 | இந்தக் கால அளவின் முடிவில் இருந்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை— | 2,78,196 | 2,31,804 |
| | (30–11–1968-ல் கண்ட நிலவரப் படி). | (30–11–68 அன்று உள்ளபடி). | (30–11–67 அன்று உள்ளபடி.) |

42. ஊனமுடையோர்க்கான வேலை வாய்ப்பு ஏற்பாட்டு அலுவலகம்.—இந்த அலுவலகம் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஊனமுடைய (குருடர், செவிடர், முடவர்) விண்ணப்பதாரர்களை பதிவு செய்து கொண்டு தகுந்த வேலைவாய்ப்பு உதவியை அளிக்கின்றது. உடல் ஊனமுடைய விண்ணப்பதாரர்களை தகுந்த வேலைகளில் அமர்த்தும்பொருட்டு, அவர்களுக்கான வேலை வாய்ப்பைப் பற்றி அறிவதற்குச் சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக தனியார் துறையில் வேலையளிப்போரிடமும், அரசாங்கத்தில் வேலையளிப்போரிடமும் இந்த அலுவலகம் நெருங்கிய முறையில் தொடர்புகொண்டு பணியாற்றி வருகின்றது. இது போன்ற சிறப்பான முயற்சிகளினாலும், வேலை வாய்ப்பு அளிப்பவர்களின் ஒத்துழைப்புடனுமே உடல் ஊனமுற்றோர்களை வேலையில் அமர்த்த முடிந்தது.

1968-ல் (ஏப்ரல் முதல் நவம்பர் வரை) இந்த அலுவலகம் 336 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்துகொண்டு அவற்றில் 134 பேர்களை வேலையில் அமர்த்தியுள்ளது.

**43.** தொழில் நிர்வாகப் பணி வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை.—இம்மாநிலத்தில் தொழில், அறிவியல், பொறியியல், நிர்வாகம், மேற்பார்வை வகையில் உயர் தகுதி பெற்றுள்ளவர்களின் தேவையை இந்த அலுவலகம் நிறைவேற்றி வருகிறது. இதற்காக இந்த அலுவலகம் அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் வேலையளிப்போரிடம் நெருங்கிய தொடர்புகொண்டு செயலாற்றி வருகிறது. 1968-ம் ஆண்டின் போது (1968 ஏப்ரல் முதல் நவம்பர் வரை) இந்த அலுவலகம் உயர் தகுதி பெற்ற 4,744 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களில் 273 பேர்களுக்கு வேலை பெற்றுக்கொடுத்தது.

காலி இடங்களுக்கும், தொழிலாளர்களை அனுப்புவதற்கும் இந்த அலுவலகம் மாநில வேலை வாய்ப்பு ஒருங்கிணைப்பு அலுவலகமாக செயல்படுகிறது.

**44.** சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் உள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத்தகவல் ஆலோசனைக் கழகங்கள்.—பல்கலைகழக மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் தகவல், ஆலோசனை கூறுதல், வேலை வாய்ப்பினை நாடும் மாணவர்களின் பெயரைப் பதிவு செய்தல் ஆகிய ணிகளை இக்கழகம் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலுள்ள பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்புக் கழகம் 1968-ல் (ஏப்ரல் முதல் நவம்பர் வரை) 390 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து 40 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகம் வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்புக் கழகம் அதே காலத்தில் 375 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து 18 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

**45.** தொழில் முறை வழி காட்டுதல்—வேலை வாய்ப்பு ஆலோசனை கூறல்.—நீலகிரி, தருமபுரி மாவட்டங்கள் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் தொழில் முறை வழிகாட்டுதல்-வேலை வாய்ப்பு ஆலோசனை கூறும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. பிழைப்பிற்குரிய வழியறிவிக்கும் நிலையங்களாகவும் இதற்குத் தேவையான பயனுள்ள தகவல் சேகரிக்கும் நிலையங்களாகவும், வேலை வாய்ப்பு, வாழ்க்கை வசதி பயிற்சி வசதிகள் தொழில் பழகும் பயிற்சி போன்ற விண்ணப்பதாரர்களின் நலனுக்காக வசதி செய்யும் வகையில் மேற்சொன்ன பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டங்களிலுள்ள தொழில் முறை காட்டும் அலுவலகங்கள் விண்ணப்பதாரர்களுக்குத் தொகுதியாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ வழிகாட்டுதல், ஆலோசனை கூறுதல், ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன. இவர்கள் தங்கள் மாவட்டங்களிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள், பிற கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகொண்டு பள்ளிகள், கல்லூரிகளிலுள்ள மாணவர்களுக்கு பிழைப்பு பற்றிய செய்திகளை அளித்து வருகின்றன. இந்த தொழில்முறை வழிகாட்டும் பிரிவு அந்தப் பகுதியிலுள்ள விண்ணப்பதாரர்களின் நலனுக்காக வேலை வாய்ப்புப்பற்றிய தகவல்களைச் சேகரித்தும், மாவட்டங்களில் "வேலை வாய்ப்பு, பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள்" என்னும் காலாண்டுக்கு ஒரு முறை வெளியாகிற இதழை வெளியிட்டு வருகின்றன.



இக்கால அளவில், இத் திட்டத்தினால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறாகும்.—

| அலுவலகங்களின் பெயர்கள். | | | கூட்டாகப் பலருக்கு வழி காட்டுதல் திட்டத்திற்கு சென்றவர்கள் எண்ணிக்கை. | தனிப்பட்டவர்களுக்கு வழி காட்டும் தகவல் அறிவித்தல். | தனிப்பட்டவர்களுக்கு வழி காட்டுதல். |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| 1 சென்னை | .. | .. | 23,170 | 1,788 | 2 |
| 2 செங்கற்பட்டு | .. | .. | 14,317 | 526 | 11 |
| 3 கடலூர்—நெய்வேலி | | .. | 5,758 | 1,074 | .. |
| 4 வேலூர் .. | .. | .. | 8,457 | 3,273 | 122 |
| 5 சேலம் .. | .. | .. | 2,406 | 439 | .. |
| 6 கோயம்புத்தூர் | .. | .. | 7,661 | 384 | 9 |
| 7 தஞ்சாவூர் | .. | .. | 4,653 | 406 | .. |
| 8 திருச்சிராப்பள்ளி | .. | .. | 7,278 | 2,112 | .. |
| 9 இராமநாதபுரம் | .. | .. | 3,386 | .. | 4 |
| 10 மதுரை .. | .. | .. | 5,029 | 1,964 | 11 |
| 11 திருநெல்வேலி | .. | .. | 3,579 | 1,283 | .. |
| 12 கன்னியாகுமரி | .. | .. | 5,138 | 3,595 | .. |

வேலை வாய்ப்பு இயக்குநர் அலுவலகத்திலுள்ள மாநிலத் தொழில் முறை வழி காட்டும் பிரிவு, மாவட்டங்களில் தொழில் முறை வழிகாட்டும் திட்டத்தின் அலுவலகங்களை ஒருங்கிணைத்துக் கண்காணிக்கிறது. இக்காலப் பகுதியில் 10 தொழில் முறை வழிகாட்டும் பிரிவுகள் ஆற்றியுள்ள பணியை மாநிலத் தொழில்முறை வழிகாட்டும் பிரிவின் துணை இயக்குநர் மதிப்பீடு செய்தார். மாநிலத் தொழில்முறை வழிகாட்டும் பிரிவின் மேற்பார்வையின் கீழ், தொழில் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்வதற்கான விருப்பச் சோதனைகள் வேலைவாய்ப்பு அதிகாரிகளால் நடத்தப்பட்டன.

தொழில் முறை வழிகாட்டும் பிரிவுகளுக்கும், பள்ளிகளுக்கும் வழங்குவதற்காக, "பள்ளிப் படிப்பு முடித்தவர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டி" மாநிலத் தொழில் முறை வழிகாட்டும் பிரிவினால் வெளியிடப்பட்டது. கிண்டியிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஆகியவை, கோயம்புத்தூரிலும் பூவிருந்தவல்லியிலும் உள்ள புகுமுக தொழில் பயிற்சி நிலையங்களால் நடத்தப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் குறித்த பொருட்காட்சியில் பங்கெடுத்துக்கொண்டன. மேலும் ஆலோசனை வசதிகள், பயிற்சி வேலைவாய்ப்பு வசதிகள் பற்றிய தகவல் முதலியன குறித்த தேவையான தகவல்கள் கொண்ட தகவல் கூடங்களை மாணவர்களுக்காக அவை அமைத்தன.

**46.** வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் தருகிற பிரிவு.—ஆய்விலுள்ள காலப் பகுதியில் வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் சேகரிப்பிற்காக மூன்று காலாண்டுகளில் (அதாவது, 1968 மார்ச், ஜூன், செப்டம்பரில்

முடிவடையும் காலப் பகுதியில்) தகவல் சேகரிப்புப் பணி மேற்கொள்ளப் பட்டன. கிடைத்த விவரம் பின்வருமாறு :—

| காலாண்டு முடிவடைதல். | கேட்கப்பட்ட நிறுவனங் களின் எண்ணிக்கை. | பதில் அறிவித்த வைகளின் எண்ணிக்கை. | பதில் கிடைத்த சத வீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1968— | | | |
| மார்ச் .. .. .. | 16,184 | 15,487 | 95·7 |
| ஜூன் .. .. .. | 16,530 | 15,833 | 95·8 |
| செப்டம்பர் .. .. | 17,192 | 16,478 | 95·8 |

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட அறிக்கைகள் வெளியிடப்பட்டன :—

(1) 1967-ம் ஆண்டு ஜூன், செப்டம்பர், டிசம்பர் ஆகிய திங்களில் முடிவடையும் காலாண்டுப் பகுதிக்கான தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு நிலவரத்தைத் தெரிவிக்கும் மாநில வேலை வாய்ப்பு ஆய்வு அறிக்கைகள்.

(2) 1967-ம் ஆண்டு டிசம்பர், 1968 மார்ச், ஜூன் திங்களில் முடிவடையும் காலாண்டுப் பகுதிக்காக தமிழ்நாட்டிலுள்ள பற்றுக்குறை தொழில்கள் குறித்த காலாண்டு அறிக்கைகள்.

(3) 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் முடிவடையும் காலப் பகுதிக்காக பொதுத் துறையில் தொழிலாளர் களின் தொழில் வகை குறித்த அறிக்கை.

(4) தமிழ் நாட்டில் மூன்றும் திட்டக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பின் வகையும் கல்வி கற்றோரின் உழைப்பு சக்தியும் குறித்த சிறப்பு ஆய்வு அறிக்கை.

(5) தமிழ் நாட்டில் பயிற்சி பெற்ற கைப்பணியாளர்களின் திறனைப் பயன்படுத்தப்படும் வகைமீதான குறிப்பு. (தமிழ்நாடு அரசின் யோசனை யின் பேரில் இந்த இயக்குநர் அலுவலகத்தின் வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் அறியும் பிரிவால் நடத்தப்பட்ட விரைவு ஆய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும் இது.)

இக்காலப் பகுதியில், மாநில வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் பிரி வின் உதவி இயக்குநர் மாவட்டங்களிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களோடு இணைக்கப்பட்ட 6 நேரிடப் பிரிவுகளின் பணியை மதிப்பிட்டார்.

47. மாநிலத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு, சென்னை-5.—இந்த இயக்குநர் அலுவலகத்தின் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு அதன் வழக்கமான தொழில் ஆய்வு, பகுப்பாய்வுப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது.

ஆய்விலுள்ள காலப் பகுதியில், செவிலியர் பணி குறித்த வேலை வாய்ப்புக் குறிப்பு நூல், நடுநிலைப் பள்ளிக் கல்வியில் தேறியவர்களுக் கான வேலை வாய்ப்பு வழிகாட்டி நூல் ஆகியவற்றை மாநிலத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு வெளியிட்டது. மேலும் மற்றொரு சிறு நூல் அதாவது " மருந்து தயாரித்துக் கொடுப்பவர் " சம்பந்தப்பட்ட சிறு நூல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இம்மாநிலத்தில் சென்னை மாநகரிலும், மாவட்டங்களிலும் உள்ள 135 நிறுவனங்களுடன்/நிலையங்களுடன் மாநிலத் தொழில் தகவல் அறிவிப்பு அதிகாரி தொடர்பு கொண்டார். தொழில்கள் பற்றி ஆராய சம்பந்தப்பட்ட சிறு நூல் முதலியன தயாரிக்க வல்லுநர்களுடனும் இவர் கலந்தாலோசித்தார்.



48. சென்னையில் உள்ள வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரியின் நடவடிக்கைகள்.—ஆய்விலுள்ள காலப் பகுதியில் 1,683 பர்மா அகதி களும் 197 இலங்கை அகதிகளும் தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்பு உதவி நாடிப் பதிவு செய்திருந்தனர். 238 பர்மா அகதிகளும், 36 இலங்கை அகதிகளும் வேலையில் அமர்த்தப் பட்டுள்ளனர். 1968 நவம்பர் 30-ம் தேதியன்று தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேடுகளில் உள்ளவாறு 1,595 பர்மா அகதிகளும், 173 இலங்கை அகதிகளும் வேலை வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டுள்ளனர்.

மதுரை மாவட்டம் தெ. கல்லுப்பட்டியிலுள்ள கிராமப் பயிற்சி நிலை யத்தின் பணிக்களப் பகுதியில் 47 அகதிகள் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மானா முகாமிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் 47 அகதிகள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். இப்பிரிவினால் செய்யப்பட்ட முயற்சிகள் மூலமாக மேற்படி நிலையம் இந்திய அரசினால் நடத்தப்படுகிறது.

இம்மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அளிப்பவர்களின் முதன்மை வாய்ந்தவர்களுடனும் திருச்சிராப்பள்ளியிலும், கும்முடிப்பூண்டியிலும் இடைத்தங்கல் முகாம்களுடனும் தொடர்புடைய அரசாங்க—மறு வாழ்வு அதிகாரிகளுடனும் உதவி இயக்குநர் (வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரி) நெருங்கிய தொடர்பை தொடர்ந்து பேணிவருகிறார்.

49. உழைப்புச் சக்தியும், வேலை வாய்ப்புத் திட்டங்களும்—எய்திய சாதனைகள்.—(1) இக்காலப் பகுதியில், தருமபுரி மாவட்டத்தின் தேவை களுக்கு ஏற்பாடு செய்யும்பொருட்டு, கிருஷ்ணகிரியில் தனிப்பட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்று துவக்கப்பட்டது.

(2) சென்னைப் பல்கலைக்கழகத்திலுள்ள பல்கலைக்கழக வேலை வாய்ப்பு தகவல் அறிவிப்பு-வழிகாட்டும் கழகத்திற்காக தொழிற்நுட்ப உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

(3) மாநில வேலைவாய்ப்பு நிலவரம்—தகவல் அறிவிப்புப் பிரிவிற் கான மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

(4) 1966-67-ல் செயல்படத் துவங்கிய மாநிலத் தொழில் வாய்ப்பு வழிகாட்டும் பிரிவு 1967-68-ம் ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டது.

(5) மதுரைப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்பு-வழிகாட்டும் கழகம் ஒன்று அமைப்பதற்கான செயற் குறிப்புகள் அரசினால் அண்மையில் ஏற்பளிக்கப்பட்டன. அந்த கழக மும் விரைவில் நிறுவப்படும்.

50. 1969-70-ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.—(1) மாநிலத் தொழில் வாய்ப்பு வழிகாட்டும் பிரிவிற் காக தொழில் நுட்ப உதவியாளர் ஒருவரையும், உதவியாளர் ஒருவரையும் நியமித்தல்.

(2) மாநிலத் தலைமையிடத்தில் பணியாளர் பயிற்சிப் பிரிவு ஒன்றை நிறுவுதல்.

(3) மாநிலத் தலைமையிடத்தில் ஆய்வுப் பிரிவு ஒன்றை நிறுவுதல்.

(4) மாநில இயக்குநர் அலுவலகத்தில் கணக்கீட்டு இயந்திரத்தையும், அட்டவணைப்படுத்தும் இயந்திரத்தையும் தேவையான பணியாளர்களோடு அமைத்தல்.

(5) தொழில்களில் அமர்வது குறித்து வழிகாட்டும் சிறு நூல்களைத் தமிழில் அச்சிடுதல்.

(6) மாவட்டங்களில், வேலை வாய்ப்புத் துணை அலுவலகங்கள் இரண்டை நிறுவுதல்.

(7) அண்ணாமலை நகரிலுள்ள பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்பு-வழிகாட்டும் கழகத்திற்காக தொழில்நுட்ப உதவி யாளர் ஒருவரை நியமித்தல்.

# இணைப்புகள்

## முக்கிய புள்ளிவிவரக் குறிப்புகள்.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம். | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | |
| (1) தொழிற்சாலைகள் சட்டம்— | | | ரூ. | காசு |
| 1967 .. .. | 7,177 | 406,384 | 16,37,500 | 00 |
| 1968 .. .. | 7,394 | 388,931 | 17,09,792 | 00 |
| (2) தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம்— | (அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளில் இவை சேர்க்கப்படவில்லை—தற்காலிகமானவை) | | (1968 டிசம்பர் வரை). | |
| ஆண்டுத் தொடக்கத்தில்— | | | | |
| 1967 .. .. | 187,869 | 209,281 | எழாது. | |
| 1968 .. .. | 188,843 | 209,424 | .... | |
| 1969 .. .. | 216,538 | 184,710 | .... | |
| (3) தமிழ்நாடு பீடித் தொழிற்சாலை வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்தல்) சட்டம்— | | | | |
| 1966-67 .. | 2,932 | 46,487 | 52,679 | 50 |
| 1967-68 .. | 2,226 | 33,190 | 35,611 | 00 |
| 1968-69 .. | 1,546 | 21,165 | 34,205 | 50 |
| (4) தமிழ்நாடு ஓட்டல் உணவு விடுதிகள் சட்டம்— | | | | |
| ஆண்டு தொடக்கத்தில்— | | | | |
| 1968 .. .. | 21,021 | 63,087 | 1,28,480 | 50 |
| 1969 .. .. | 20,305 | 65,620 | 96,143 | 00 |
| (5) மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்— | | | | |
| 1967 .. .. | 301 | 84,764 | எழாது. | |
| 1968 .. .. | 304 | 85,001 | — — | |



(6) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம்—

| ஆண்டு. | இச்சட்டம் செயலிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை. | இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | வசூலித்த தொகை. | நிர்வாகச் செலவு. | மேற்பார்வை செலவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 1966 .. .. .. .. | 4,481 | 501,722 | 619·95 | 16·42 | 2·26 |
| 1967 .. .. .. .. | 4,979 | 536,790 | 793·74 | 18·89 | 2·48 |
| 1968 .. .. .. .. | 5,157 | 489,663 | 851·42 | 18·70 | 2·51 |

(7) தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிச் சட்டம்—

| ஆண்டு. | இச்சட்டம் செயலிலுள்ள இடங்கள். | சட்டத்தினால் பலனடைந்து வரும் தொழிலாளர்கள். | பண உதவி நலன் நோய்வாய்ப் படுவதற்கான நலன் நீண்ட காலத்திற்கு நீங்காத பிணிகளுக்கான விரிவு செய்த நலன் உட்பட்டது. | தற்காலிகமாகச் செயல்திறன் அற்றுப்போன தற்கான நலன். | நிலையாகச் செயல் திறன் அற்றுப்போன தற்கான நலன். | நம்பிவாழ்பவர்களுக் கான நலன். | மகப்பேறு நலன். | மருத்துவ நலன் அளிப்பதற் கான செலவு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| 1967 | .. 39 | 1·07 (தொழிலாளர்கள்) 2·23 (குடும்பப் பிரிவுகள்) | 15·03 | 7·00 | 6·31 | 0·75 | 5·90 | 145·00 |
| 1968 | .. 43 | 3·37 (தொழிலாளர்கள்) 2·05 (குடும்பப் பிரிவுகள்) | 128·74 | 10·98 | 14·18 | 0·83 | 6·47 | 181·00 |

## புதன்கிழமை, 1969 மார்ச் 26

சென்னே செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலே 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினுக்கள்-விடைகள்

### * வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினு எண்கள் 471 முதல் 480 வரையில் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Linguistic minority students.*

*481 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the steps taken by the State Government to provide facilities for collegiate education for linguistic minority candidates in this State from this year?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறுபான்மை மொழி மாணவர்கள் ஆங்கில மொழி வாயிலாகத் தங்களின் படிப்பினைத் தொடர அரசாங்கக் கல்லூரிகளிலும், அரசாங்க மானியம் பெறும் தனியார் கல்லூரிகளிலும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, வெளியிலிருந்து, இலங்கை போன்ற இடங்களிலிருந்து வரக்கூடிய அகதிகளுக்கு தோட்ட முதலாளிகள் வேலே கொடுப்பது திருப்தியாக...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது 481-வது கேள்வி.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, till one year ago there used to be an English Section in the Teachers' Training School at Katpadi and last year an order was published in the Gazette abolishing that section. We represented the matter to the Government and till now no action has been taken in the matter. So also with regard to colleges at Gudiyatham, Thiruttani and Madras City, there is no English Section for the linguistic minorities. So, will the Government be pleased to provide English Sections there ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய கேள்விகளேப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லே. பொதுவாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கொள்கை சிறுபான்மை மொழி பேசக்கூடிய பகுதியினர் எங்கே அதிகமாக இருக்கிறர்களோ அங்கே பயிற்சி மொழியாக ஆங்கிலத்தைப் படிப்பதற்கு ஏற்ற வசதிகளேச் செய்து கொடுக்கிறேம். எங்கெங்கே தேவையோ அங்கங்கே செய்து கொடுக்கிறேம். மற்ற விவரங்களேப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

(8) மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்—

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம். வசூலிக்கப்பட்ட புதுப்பிப்பதற்கான கட்டணம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1967 .. .. .. .. | 1,073 | 38,712·25 |
| 1968 .. .. .. .. | 1,079 | 35,419·00 |

(9) ஊதியம் வழங்கல் சட்டம்—

| ஆண்டுகள். | செயல்படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை. (தொழிற்சாலைகள் உட்பட.) | இச்சட்டத்தினால் பலன்பெறும் தொழிலாளர்களி எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1966 .. .. .. .. | 31,108 | 574,589 |
| 1967 .. .. .. .. | 35,563 | 684,683 |
| 1968 .. .. .. .. | 31,111 | 775,818 |

(10) குறைந்த அளவு ஊதியச் சட்டம்—

| | | |
|---|---|---|
| 1966 .. .. .. .. | 6,709 (தொழிற்சாலைகள் நீங்கலாக). | 74,249 (தொழிற்சாலைகள் நீங்கலாக.) |
| 1967 .. .. .. .. | 6,311 (தொழிற்சாலைகள் நீங்கலாக.) | 143,695 (தொழிற்சாலைகள் நீங்கலாக.) |
| 1968 .. .. .. .. | 50,842 (தொழிற்சாலைகள் உட்பட). | 221,609 |

(11) தொழிற் சங்கங்கள் சட்டம்—

| 1967 ஜனவரி 1-ம் தேதியுள்ள நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை. | 1968 ஜனவரி 1-ம் தேதிய நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை. | 1969 சனவரி 1-ம் தேதிய நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1,336 | 1,530 | 1,666 |

(12) வேலைநிறுத்தங்கள்—

| ஆண்டுகள். | நடைபெற்ற வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும். | இழந்த மனித உழைப்பு நாட்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1966 .. .. .. .. | 176 | 754,612 |
| 1967 .. .. .. .. | 305 | 1,120,517 |
| 1968 .. .. .. | 231 | 1,881,559 |

**திரு க. கோமதிசங்கர தீட்சிதர் :** சிறுபான்மைப் பகுதியினருக்கு உரிய உரிமை அளித்து வந்தால்—ஹோசூரில் மாணவர்களிடையே நடைபெற்றது போல் நடைபெருமல் இருக்கக்கூடிய வகையில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறுபான்மையினருக்கு எப்போதுமே பாதுகாப்பு அளித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைப்பற்றிக் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. பயிற்சி மொழி சம்பந்தமாக வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே அப்படி வசதி வேண்டுமென்று கேட்கிறார்களோ அங்கே தரப்படுகிறது. சென்னையிலும் அதைச் சுற்றிலும் உள்ள இடங்களில் தமிழ்தான் பயிற்சி மொழியாக இருந்தாலும் சிறுபான்மை மொழியினருக்கு ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**ஹாஜி மா. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையோர் மொழிகளான உருதுவும், சம்ஸ்கிரதமும் எந்தெந்தக் கல்லூரிகளில் போதிக்கப்படுகின்றன ? அப்படியென்றால் எத்தனை மாணவர்கள் பயிலுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. சிறுபான்மையோர் என்பதற்காக கல்லூரிகளிலெல்லாம் சிறுபான்மையோர் மொழிகளை வைக்கவேண்டுமென்று சொன்னால் அது நிர்வாகத்திற்கு இடையூறாக இருக்கும். எங்கெங்கே சிறுபான்மையோர் மொழி குறிப்பாக வேண்டுமென்று கேட்கிறார்களோ, அங்கே அந்தந்த எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சிறுபான்மை மொழி மாணவர்கள் என்றால், எம்மொழி பேசுகிற மாணவர்கள் என்று அறிய விரும்புகிறேன். திராவிட மொழி பேசுகின்றவர்கள் தமிழை நன்றாகக் கற்று புலமை பெற்றிருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். எனவே, ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழே பயிற்சி மொழியாக இருந்தால் தமிழிலே நன்றாகப் புலமை பெற முடிகிறது..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைப் போடவேண்டும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** எனவே, தமிழிலே எல்லா இடங்களிலும் பயிலுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? எந்தெந்த மொழி சிறுபான்மை மொழி என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது தமிழ் நாடு, தமிழ்தான் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். தமிழ் நாட்டிலே பிற சிறுபான்மை மொழியினர்களுக்கு அந்த மொழியில் பயிலுவதற்கு அரசு வாய்ப்புக் கொடுக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது அப்படிக் கொடுக்கப்படுகிற நேரத்திலே தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலும் அப்படி வாய்ப்புத் தந்தால் கல்வித் திட்டத்திலே குழப்பம் ஏற்படும் என்று கருதுகிறார்கள். இப்போது தமிழைப் பயிலுவதற்கு மாணவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஒரு சில இடங்களிலே மட்டும் குறிப்பிட்ட மாணவர்களுக்கு அப்படி வசதிகள் வேண்டுமென்று கேட்ட காரணத்தாலே அங்கு ஆங்கிலத்தை வைத்திருக்கிறோம்.

**Thiru K. VINAYAKAM :** Sir, as far as the collegiate education is concerned if the minorities like the people who speak Hindi and Gujarati get into colleges, of course they take English language as a medium of struction. But what about their mother tongue or the second language? ities given to them to teach in their own mother-tongue !





**மாண்புமிகு திரு செ. மாதவன் :** கல்லூரிகளிலே மொழிப் பயிற்சி பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. அவர்கள் நடத்தக்கூடிய குஜராத்தி, மராட்டி பள்ளிகளிலே எஸ்.எஸ்.எல்.சி. கேள்வித் தாள்களே கூட குஜராத்தியிலேயேயும், மராட்டியிலேயேயும் தயாரிக்கப்படுகின்றன. அவர்கள் அந்த மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. கல்லூரிப் பயிற்சி மொழியைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

## *Polytechnic*

*482 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :,

(*a*) whether the re-constituted Southern Regional Committee of the All India Council for Technical Education has recommended the setting up of two Polytechnics on a "Sandwich pattern" in Madras; and

(*b*) if so, the salient features of the recommendation ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) தொழில் நுட்பக் கல்வி குறித்த அனைத்திந்திய மன்றத்தின் தெற்கு வட்டாரக் குழு ஒரு குழுவினை நிறுவியுள்ளது. இக்குழு ஏற்படுத்த விழைகிற தொழில் உடனுழைப்பு வகையினையும், ஏற்படுத்த வேண்டிய பல்வேறு பாடமுறைகளின் அவசியத்தையும், சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, படிப்பிலடங்கி இருக்க வேண்டிய பாடப் பொருள்கள், சென்னை மாநகரில் ஏற்படுத்தவிருக்கிற இவ்விரு பல் தொழிற் பள்ளிகளிலும் பணியிடைக் கல்வி முறையை (sandwich Type) ஏற்படுத்தி, நடத்துவதற்கு வேண்டிய நிதி வசதியின் மதிப்பீடுகளையும் இக்குழு ஆய்வு செய்யும். இது குறித்து தெற்கு வட்டாரக் குழுவின் முடிவான பரிவுரை எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண் 483-ஐயும் எடுத்துக் கொள்ளலாம்.

*483 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) whether the Government proposes to start agricultural polytechnics in the State ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

Thiru K. VINAYAKAM : I submit to the ruling of the Chair. The first question is different from the second question.

May I know in which two polytechnics the Government propose to introduce sandwich courses after the receipt of the report envisaged by the Minister ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** சாண்ட்விச் கோர்ஸ் இப்போதே இருக்கிறது. சென்னையில் உள்ள சென்ட்ரல் பாலிடெக்னிக்கிலும் மதுரையில் உள்ள பாலிடெக்னிக்கிலும் அதைப் பின்பற்றி பாடத்திட்டத்திலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த கோதாரி, ஏ.வி.எம். சாரிடீஸ் தாங்கள் புதிதாகத் திறக்கவிருக்கிற பாலி

டெக்னிக்குகளில் இந்த சாண்ட்விச் கோர்ஸை வைக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. அதன் பிறகு முடிவு எடுக்கப்படும்.

**திரு டி. மார்டின் :** ஸ்பீக்கர், சார், இந்த பாலிடெக்னிக்கில் படிக்கும் மாணவர்களுக்கு ஆங்காங்கு இருக்கும் தொழிற்சாலைகளில், படிக்கின்ற காலத்திலேயே பயிற்சி ஏற்படக்கூடிய அளவுக்கு ஏதாவது நடைமுறையில் இப்பொழுது இருந்து வருகிறதா ? இல்லையென்றால், இனிமேலாவது அவ்வாறுஒரு பயிற்சி அளிக்கக்கூடிய நோக்கம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் உறுப்பினர் அவர்கள் சாண்ட்விச் கோர்ஸ் என்றால் என்ன என்று கேட்டிருந்தால், அதுதான் அதற்குப் பதில். ஒரு பகுதி கல்லூரியிலும், ஒரு பகுதி தொழிற்சாலையிலும் வேலை பார்த்துக்கொண்டே படிக்கவேண்டும் என்பதுதான் இந்தத் திட்டம். இந்தத் திட்டத்தை நாம் இப்பொழுது இரண்டு பாலிடெக்னிக்குகளிலே நிறைவேற்றி வருகிறோம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்பொழுது தொழில் நுட்பக் கல்லூரிகளிலும், தொழில் நுட்பப் பள்ளிகளிலும் படிக்கும் மாணவர்களுக்கே உத்தியோகம் சரிவரக் கிடைக்காத நிலை இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அகில இந்திய ரீதியிலும் இதே நிலைதான் இருக்கிறது. ஆகவே, இத்தகைய பயிற்சியை இன்னும் விஸ்தரித்துக் கொண்டே போவதன்மூலம் இத்தகையவர்களிடையே மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகத்தானே செய்யும் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து, ஓரளவுக்குக் கட்டுப்படுத்துவதைப்பற்றி யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழில் நுட்பக் கல்லூரியில் படிக்கக் கூடியவர்களெல்லாம் வேலைக்காகப் படிக்கவேண்டும் என்ற கருத்தை நான் ஒத்துக்கொள்ளவில்லை. அவர்கள் அந்த அறிவைப் பெற்று தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடுவதற்கு நம்முடைய நாட்டிலே வாய்ப்பு இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் வருவாய் வாய்ப்புகள் சற்று குறைந்த காரணத்தால் உடனடியாக அரசாங்க வேலைகளில் எடுத்துக்கொள்ளுவதில் அவ்வளவாக வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆனால், தொழில் வளர்ச்சியில் இந்த நாடு பின்தங்கி விடும் என்று நான் நம்பவில்லை. தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டும் என்று விரும்பும் நாம், தொழில் நுட்பக் கல்விப் பயிற்சியைக் குறைப்பது சரியல்ல.

**Thiru K. VINAYAKAM:** Where does this Government propose to start these agricultural polytechnics, what will be the content of the course, will it be on a par with B.Sc. (Agriculture) or slightly less and what will be the duration of the course?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அக்ரிகல்சரல் பாலிடெக்னிக் இல்லை என்று ஒரு கேள்விக்குப் பதில் சொன்னேன். நான் விசாரித்ததில், அக்ரிகல்சரல் பாலிடெக்னிக் முன்பே இருந்து, அந்தத் திட்டத்திற்கு வரவேற்பு இல்லாத காரணத்தால் அதை நிறுத்தி விட்டதாகச் சொன்னார்கள். அக்ரிகல்சரல் கல்லூரியில் படிப்பது விவசாயத்தைப் பற்றி. அக்ரிகல்சரல் பாலிடெக்னிக்கில் படிப்பது விவசாயத்திற்கு வேண்டிய மெஷினரி சம்பந்தப்பட்டது. அதுபற்றிய கல்வியைத்தான் அதில் கொடுத்து வருகிறார்கள். இப்பொழுது இல்லை என்று சொல்லிவிட்டோம். தஞ்சை மாவட்டத்தில், நாங்கள் எங்களுடைய பாலிடெக்னிக்கை அக்ரிகல்சரல் பாலிடெக்னிக்காக மாற்றுகிறோம் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கான திட்டத்தைக் கேட்டிருக்கிறோம். திட்டம் வந்தால் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** விவசாய அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதுதான் சர்க்காருடைய அடிப்படையான நோக்கம். அப்படியிருக்கும்போது, இப்பொழுது நவீன முறையில் நாம் விவசாய



அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காகவேண்டி வேளாண்மைத் தொழில் நுட்பப்பள்ளி அவசியம் அல்லவா ? ஆகவே, அதை உடனடியாக சர்க்காரே ஆரம்பிப்பதற்கான ஏற்பாடு இனிமேலாவது செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முன்பே விளக்கமாகச் சொன்னேன். விவசாயக் கல்லூரியில்தான் விவசாய முன்னேற்றத்திற்கு வேண்டிய பாடத் திட்டங்கள் அமைகின்றன. அக்ரிகல்சரல் பாலிடெக்னிக்கில் இந்த அக்ரிகல்சரல் இம்ப்ளிமென்ட்ஸ் பற்றிய அறிவாற்றலைக் கொடுப்பது, மெஷினரிகளை எப்படிச் செப்பனிடுவது போன்ற பாடத்திட்டம்தான் அதிலே வைத்திருக்கிறார்கள். அது ஏற்கனவே வைக்கப்பட்டிருந்து, ஆதரவு இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டது.

**திரு. பி. எஸ். மணியன் :** மதுரை மாவட்டம், டி. கல்லுப்பட்டியில் ஆர்.இ.டி.சி. என்னும் அரசாங்க நிறுவனம் விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்துவருகிறது. லாபகரமாகவும் இருக்கிறது. அதேமாதிரி பல இடங்களில் விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அங்குள்ள நிறுவனத்தைப் பற்றிய தகவல் இல்லை. விவசாயக் கருவிகள் உற்பத்தி செய்வதற்கு நாமே திருச்சியில் அக்ரிகல்சரல் இம்ப்ளிமென்ட்ஸ் ஒர்க்ஷாப் வைத்து, அங்கே பல இலட்ச ரூபாய்க்கு ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகிறது.

### பி.ஓ.எல். பட்டப் படிப்பு

***484 வினா.—திரு பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி.ஓ.எல். பட்டப் படிப்பு எந்த ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது ?

(இ) மறுபடியும் துவக்குவது குறித்து அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) சென்னைப் பல்கலைக் கழகம் கடைசி முறையாக 1959 செப்டம்பரில் பி.ஓ.எல். தேர்வை நடத்தியது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல். பட்டப் படிப்பு இன்றும் உள்ளது. அந்தப் படிப்பை அப்பல்கலைக்கழகம் எடுத்துவிடுகிற செயற்குறிப்பு எதுவும் இல்லை. மதுரைப் பல்கலைக் கழகம் பி.ஓ.எல். பட்டத் தேர்வை நடத்துவதில்லை.

(இ) பல்கலைக்கழகங்கள் அப்பட்டப் படிப்பை மீண்டும் கொண்டு வருவது குறித்து பல்கலைக் கழகங்களே ஆலோசிக்க வேண்டும்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, முன்பு வித்வான்கள் என்று அழைக்கப்பட்ட புலவர்கள், இனி புலவர்கள் என்றே அழைக்கப்படுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். அது எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரும் ? முன்பு வித்துவான்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் இனி புலவர்கள் என்று அழைக்கப்படுவார்கள் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வித்துவான் எனப்படுபவர்கள் புலவர்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. ஏனோ அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கிறார்கள். இது ஒரு சாதாரண கோரிக்கையாகும். நம்முடைய அரசு பல்கலைக்கழகத்திற்கு இதைப் பற்றித் தெரிவித்திருக்கிறது. பல்கலைக் கழகம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளுவதாக முடிவு எடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன் அதுபற்றிய செயற்குறிப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

**ஹாஜி மா. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, பி.ஓ.எல். படித்துவிட்டு தமிழ் ஆசிரியர்களாகப் பணி புரிகிறவர்களுக்கும்; ஆங்கிலமும் கற்றுத் தமிழ் ஆசிரியர்களாகப் பணி புரிபவர்களுக்குமிடையே ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்ற குறைபாடு இருக்கிறது. ஆகையால், தமிழில் படித்துப் பட்டம் பெற்ற அவர்களுக்கும், ஆங்கிலத்திலே படித்துப் பட்டம் பெற்ற இவர்களுக்கும் இடையே ஊதியத்தில் ஏற்றத் தாழ்வு இல்லாமல் நம்முடைய அரசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பி.ஓ.எல். படிப்பு வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் கேள்வி. ஆனால், சம்பளம் நிர்ணயிக்கும்போது தமிழாசிரியர்களைப் பொறுத்து, கிரேடு–1, கிரேடு–2 என்று வைக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் என்ன என்ன க்வாலிபிகேஷன் வேண்டும் என்றும் போடுகிறார்கள். அந்தப் பிரிவுப்படிதான் சம்பளம் நிர்ணயிக்கிறார்கள். ஆங்கிலம் படிப்பவர்களுக்குக் குறைவு, தமிழ் படித்தவர்களுக்குக் குறைவு என்பதல்ல. எந்த எந்த க்வாலிபிகேஷனை நாம் எந்தெந்த கிரேடுக்கு வைக்கிறோமோ அந்த கிரேடின் படி சம்பளம் கொடுக்கப்படும்.

**THIRU K. VINAYAKAM:** Consequent on the abolition of the B.O.L. Course, what is the substitute course which the University of Madias is having ? Is the syllabus of the B.O.L. on a par with the syllabus of the Vidwan Course ? Wlfis is the better of the two ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பி.ஓ.எல். பாடத் திட்டத்தைப் பற்றி குறிப்பு எதும் இல்லை. ஆனால், இன்டர்மீடியட் எடுத்துக்கொண்டு அதை முடித்தவுடன் பி.ஏ. படிக்க வேண்டும் என்று வைத்தார்கள். இப்பொழுது புகுமுகப் படிப்பை முடித்தவுடன் பி.ஏ. இலும், எம்.ஏ. இலும் தமிழ் படிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, பி.ஓ.எல். படிப்பு வேண்டாம் என்று எடுத்திருக்கிறார்கள். இப்போதே மற்ற பட்டப் படிப்பிலே வசதி இருப்பதால் பி.ஓ.எல். தேவை இல்லை என்று நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகம் முடிவு செய்திருக்கிறது.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, தமிழ் லிட்ரேச்சர் எம்.ஏ.-க்கும் இங்கிலீஷ் லிட்ரேச்சர் எம்.ஏ.-க்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது என்பதுதான் முன்னே வந்த கேள்வி. அமைச்சர் அவர்கள் கிரேடுவாரியாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அப்படி அந்த கிரேடு வித்தியாச ரீதியில் ஏற்படுத்தி இருந்தால். அதுவே தவறு தானே, அதைத் திருத்துவதற்கு ஆட்சி முன்வருமா ? மொழிகளிலே, அதுவும் நாட்டு மொழிக்குத் தாழ்வும், அயல் மொழிக்கு உயர்வும் காட்டும் கிரேடை மாற்றுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எம்.ஏ.-யைப் பற்றித் தகவல் இல்லை. நான் தமிழாசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். தமிழாசிரியர்களைப் பொறுத்து, முதல் கிரேடு, இரண்டாம் கிரேடு என்று இரண்டுவிதமாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். 1948-ம் ஆண்டிலிருந்து அதை அமல் நடத்தி இருக்கிறார்கள். அதிலே முதல் கிரேடுக்கு எவ்வளவு தகுதி, இரண்டாவது கிரேடுக்கு எவ்வளவு தகுதி என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதற்குச் சம்பள விகிதம் இருக்கிறது. அதிலேதான் போராட்டம் என்று சொன்னார்கள். அதை எப்படி மாற்றுவது என்பது எனக்குத் தெரியவில்லை. இரண்டு க்வாலிபிகேஷன் இருக்கும் வரை இரண்டு சம்பளம் இருந்துதான் தீர வேண்டும். எம்.ஏ.-ஐப் பற்றித் தகவல் இல்லை.

### குழந்தைகளுக்கு பொருட்காட்சிசாலை.

*485 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகள் மியூசியம் ஒன்று ஆரம்பிப்பதற்காக முன்னாள் கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்களால் தற்போதுள்ள மியூசியம் தியேட்டருக்கருகில் அஸ்திவாரக்கல் போடப்பட்டதைத் தொடர்ந்து வேலை ஆரம்பிக்கப்படாததற்கான காரணங்கள் யாவை ?

(இ) இந்த மியூசியம் எப்போது எங்கு ஆரம்பிக்கப்படும் ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) and (இ) சென்னை அரசாங்க அரும் பொருட்காட்சிசாலையில் சிறுவர் பிரிவு ஒன்றை ரூ. 10.62 லட்சம் செலவில் கட்டத் திட்டமிடப்பட்டிருந்தது. நிதிப் பற்றுக்குறை காரணமாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அரும் பொருட்காட்சிசாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்திய அரசிடமிருந்து முழு நிதி உதவி கிட்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இது நிறைவேறவில்லை. இம்மாநில நிதிகளிலிருந்தே இச்செலவு முழுவதையும் செய்வது இடர்ப்பாடானதென்று தெரியவந்தது. எனவே, இச்செயற்குறிப்பு தள்ளி வைக்கப்பட்டது. இத்தகைய கட்டிட வேலைக்குப் பெரும் தொகையைச் செலவிடுவதற்கு இம்மாநில நிதி நிலை இடந்தரும்போதே இது மேற்கொள்ளப்படலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** குழந்தைகளின் நலனை உத்தேசித்து இனியாவது இந்த அரசாங்கம் முயற்சியை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1956-ம் ஆண்டிலிருந்து இது ஒத்திவைக்கப்பட்டு வந்தது. இனிமேல் இந்தப் பகுதிக்கு பணம் அதிகமாக ஒதுக்கினால், அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** இப்படி ஒரு மியூசியம் ஆரம்பிக்க அடிப்படையான திட்டம் போட்டு, மதிப்பீடுகள் தயார் செய்து, அடிக்கல் கூட நாட்டப்பட்ட பிறகு, சர்க்கார் அங்கீகாரம் செய்யாத காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் இப்படிப்பட்ட நிலையில் அடிக்கல் நாட்டுவதை கைவிட உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அடிக்கல் நாட்டு விழாவில் இப்படிப்பட்ட தவறுகள் எதிர்பாராத நிலையிலே ஏற்பட்டு விடுகின்றன. இந்தத் திட்டத்தைப் பொறுத்த அளவுக்கு பணம் அதிகமாகச் செலவாகும் என்ற காரணத்தால் மத்திய அரசில் இருந்து ஒதுக்கப்பட்ட பணம் குறைவாக இருந்த காரணத்தால் இந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** மாணவர்கள் இதுபோன்ற மியூசியங்கள், ஸூ-க்கள் ஆகியவற்றைப் பார்க்கப் போகின்ற நிலையில் கட்டணம் இல்லாமல் அவர்களை அனுமதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியாகக் கேள்வி போடவேண்டும்.

### *Silk Industry for Hosur :*

*486 *Q.*—**THIRU B. VENKATASWAMY :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a silk reeling, twisting and weaving factory at Hosur : and

(b) if so, when ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) and (இ): இவ்வரசு 1967-ம் வருடம், ஆகஸ்ட் திங்கள் பட்டு சுற்றும், முறுக்கும், நூற்கும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கும் திட்டத்திற்கு ஏற்பளித்துள்ளது. அந்தத் தொழிற்சாலை இவ்வாண்டு சனவரித் திங்கள் 31-ம் நாள் வேலை தொடங்கிற்று.

**THIRU B. VENKATASWAMY :** Sir, silk is a dollar-earning commodity in the State. There is large scope for development of silk industry at Hosur and Thalawadi. So, will the Government come forward to intensify the scheme and establish a Reeling and Weaving Factory in Hosur ?

**THE HON. THIRU S. MADHAVAN :** I had already stated that the factory was started on 31st January.

**திரு. எம். சுரேந்திரன் :** பட்டுத் தொழிற்சாலையை உண்டாக்குவதற்கு பட்டு நூல் மிகவும் முக்கியம். பட்டுப் பூச்சிகளை வளர்த்து பட்டு நூலை உண்டாக்க யாராவது முன்வந்தால் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை இந்த அரசு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வந்தால் பரிசீலிக்கலாம்.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Sir, reeling and twisting arrangements have been made with regard to silk at Hosur but the twisted yarn is sent to Gujarat and other States. So, if we start the industry at Hosur, many people who had gone to Bangalore can come back and take up this industry in Hosur. Therefore, will the Government start a Silk Weaving Industry at Hosur.

**THE HON. THIRU S. MADHAVAN :** Sir, the Government approved the scheme in August 1967 for the establishment of the Silk Reeling-*cum*-twisting *cum*-weaving unit at Hosur in the Dharmapuri district. The unit started functioning from 31st January.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** பட்டு, வெளி மாநிலங்களில் இருந்து வரவேண்டியிருக்கிறது. ஜரிகை இன்னொரு வெளி மாநிலத்தில் இருந்து வரவேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் இதை நம்பி வாழக்கூடியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே, பட்டுப் பூச்சிகளை வளர்க்க மல்பரி பிளாண்டேஷனை அதிகப்படுத்தவும், ஜரிகைத் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தர்மபுரியில் நாம் புதிதாக ஆரம்பிப்பதற்கு ஒத்துக்கொண்ட தொழிற்சாலையிலே இப்போதே ரீலிங்-கம்-ட்விஸ்டிங்-கம்-வீவிங்-க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குத் தேவையான ஜரிகையையோ, சில்க்கையோ உற்பத்தி செய்ய இப்போதே ஏற்பாடு இருக்கிறது. இதை எந்த அளவுக்கு விரிவாக்குவது என்பதைப் பற்றி அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கே. போஜன் :** நம் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் பட்டுப் பூச்சிகள் வளர்க்கப்படுகின்றன? சுமார் எவ்வளவு பட்டு நூல் கிடைக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவரம் இல்லை.

### ஹரூரில் கூட்டுறவு நூற்பாலை

*487 வினா.—திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி ஜில்லா ஹரூர் தாலுகாவில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைக்க அரசாங்கத்தில் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கிளம்பிடவே இடமில்லை.

**திரு. கி. வேலுசாமி :** நின்று கிடக்கின்ற பஞ்சாலைகளில் ஏதாவது ஒன்றை, அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் பிராவிடெண்ட் பண்ட் தொகையைப் பங்குத் தொகையாகக் கொண்டு, கூட்டுறவு முறையில் தொடங்க முயற்சிக்கப்படுமா



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிதாகக் கூட்டுறவு நூற்பாலைகள் ஏற்படுத்தப்படுமா? என்ற கேள்விக்கு "இல்லை" என்று பதில் சொன்னேன். இப்போது இருக்கக்கூடிய பிரச்சினையையே தீர்க்க முடியவில்லை. கூட்டுறவுத் துறையில் இல்லாவிட்டாலும் தனியார் துறையில் இருக்கக்கூடிய ஆலைகளில் தொழிலாளர் சிலபேர் வந்து, "எங்களுடைய பங்குத் தொகையைத் தருகிறோம், அரசாங்கமே ஆலையை ஏற்று நடத்தட்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** நம்முடைய ராஜ்யத்திலே கூட்டுறவு முறையில் பல பஞ்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு அவைகளிலே இருக்கிற தொழிலாளர்களுக்கும், தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுகின்ற சம்பளத்திலே, மற்றச் சலுகைகளிலே வித்தியாசம் இருக்கிறது. இப்போது பல ஆலைகள் மூடிக் கிடக்கக்கூடிய நிலையில் மேலும் மேலும் கூட்டுறவு முறையில் ஆலைகளைத் திறப்பதை ஊக்குவிப்பது நல்லதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** "இல்லை" என்று முதலிலேயே சொல்லிவிட்டேன்.

**திரு. என். கிட்டப்பா :** தமிழகத்திலுள்ள பெரும்பாலான கூட்டுறவு நூற்பாலைகள் நட்டத்தில் ஓடிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் ஒரு கமிஷனை நிறுவி பரிசீலிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிதாக மத்திய அரசு கொடுத்திருக்கிற நிவாரணத்திலே கூட்டுறவு நூற்பாலைகள் அதிகப் பலன் அடையும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்குப் பிறகு நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகள் சிறந்த முறையில் நடைபெறும் என்று கருதுகிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் தமிழகத்தில் நட்டத்தில்தான் நடக்கின்றன. இப்போதுள்ள நிலையில் புதிய நூற்பாலைகளை ஆரம்பிப்பதாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னது வரவேற்கத்தக்கது. அமைச்சர் அவர்கள் முன்னாலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, தொழில் நுட்பக் கல்லூரிகளில் அதிகமாகப் படிக்க முன்வரவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு இது முரணாக இல்லையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினருக்கு உள்ள முரண் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. தொழிற்கல்வி நூற்பாலைகளுக்கு மட்டுமல்ல. நாட்டிலுள்ள எல்லாத் தொழில்களுக்கும் தேவையான தொழிற் கல்வி இருக்கிறது. இன்றைக்கு நூற்கப்படுகின்ற நூலுக்குச் சந்தை இல்லாத காரணத்தால் மந்த நிலை இருக்கிறது. உற்பத்திச் செலவு அதிகமாகி இருக்கிறது. காம்போசிட் மில்கள் அதிகமாக இல்லாத காரணத்தால் மராட்டியம், குஜராத் மாநிலத் தொழில்களோடு போட்டி போட முடியவில்லை. அதன் காரணமாக டெக்ஸ்டைல் க்ரைஸிஸ் ஏற்பட்டிருக்கிறது. அதனால் மேலும் நூற்பாலைகளை அதிகப்படுத்த வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, தொழிற் கல்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** காம்போசிட் மில்கள் இல்லாததால் நட்டம் ஏற்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஸ்பின்னிங், வீவிங் இரண்டும் இணைந்த ஒரு மில்லை "மாடல்" ஆக ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா ?

[1969 மார்ச் 26

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** இப்போதே நம்முடைய நாட்டில் அத்தகைய காம்போசிட் மில்கள் 24 இருக்கின்றன. வெறும் நூற்பாலைகள் மட்டும் 192 இருக்கின்றன, அந்த நூற்பாலைகள் எல்லாம் காம்போசிட் மில்லாக மாறி வரவேண்டுமென்றுதான் நூற்பாலைச் சொந்தக்காரர்கள் விரும்புகிறார்கள். அதற்கான பண வசதி இல்லாத காரணத்தால் தயக்கம் காட்டுகிறார்கள்.

### பொறியாளர்கள் ஓய்வு பெறும் வயது

*488 **வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இஞ்சினீயர்களை வேலையிலிருந்து 55 வயதில் ஓய்வு பெற வேண்டுமென்ற உத்திரவு போடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் காரணமாக யார் யாருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்டவர்கள் ஓய்வு பெற வேண்டுமென அறிவிப்பு கொடுக்கப் பட்டது.

**1. பொதுப்பணித்துறை**

(i) பொது தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை.

(ii) மேற்பார்வைப் பொறியாளர் .. ஒருவர்.

(iii) நிர்வாகப் பொறியாளர் .. ஒருவர்.

(iv) மின்சாரப் பொறியாளர் .. ஒருவர்.

(v) உதவிப் பொறியாளர்கள் .. எண்மர்.

**2. நெடுஞ்சாலை—கிராமப்பணி**

(i) தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை—கிராமப்பணி).

(ii) மேற்பார்வைப் பொறியாளர் .. நால்வர்.

(iii) கோட்டப் பொறியாளர் .. .. ஒருவர்.

(iv) உதவிப் பொறியாளர்கள் .. அறுவர்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதில் யாருக்காவது 55 வயதுக்கு மேல் ஓய்வு பெற்றும் எக்ஸ்டன்ஷன் அளிக்கப்பட்டதா ? அதில் யாராவது உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை—கிராமப் பணிகள்) ஒருவருக்கு ஓராண்டுக் காலம் அதிக நீட்டிப்பு கொடுக்கப்பட்டது. ஹவுசிங் போர்டில் இருக்கும் எஞ்சினியர் ஒருவருக்கும் எக்ஸ்டன்ஷன் கொடுக்கப் பட்டது. நீதிமன்றத்திற்குப் போனது பற்றிய விவரம் இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** அதிகாரிகள் விரும்பினால் 50 வயதில் ஓய்வு பெற்றுவிடலாம் என்ற கருத்தை இந்திய அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. அது சம்பந்தமாக நம்முடைய அரசை அவர்கள் கலந்தார்களா ? அதன் மீது யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அப்படி ஒன்றும் யோசனை கொடுக்கப்படவில்லை.



1969 மார்ச் 26]

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஒன்றிரண்டு பேர்களுக்கு மட்டும் இதுபோன்ற விதிவிலக்கு அளிப்பதற்கான காரணம் என்ன ? அந்த அளவிற்கு திறமையுடையவர்கள் கிடையில்லை என்பது பொருளா ? பல பேர்களுக்கு ப்ரமோஷன் கிடைக்கவில்லை என்று எண்ணிக்கொண்டிருக்கக் மு.ப.
கூடிய இந்த நேரத்தில் ஒன்றிரண்டு பேர்களுக்கு மட்டும் ஏன் விலக்கு 9-30
அளிக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஓய்வுபெற்ற பின்னர் மீண்டும் தலைமைப் பொறியாளராக (நெடுஞ்சாலை—கிராமப் பணிகள்) அமர்த்தக் காரணம், அவருடைய பணிக்குறிப்புகள் தொடர்ந்து நல்ல முறையில் இருந்தன. தலைமைப் பொறியாளராகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதிவாய்ந்த இரு மேற்பார்வைப் பொறியாளர்களில் ஒருவர் ஒழுங்கு நடவடிக்கை வழக்கு, தீர்ப்பு மன்ற விசாரணையிலிருக்கிறார். மற்றவர் இரண்டு ஆண்டுகள் மட்டுமே மேற்பார்வைப் பொறியாளராகப் பணிபுரிந்து நிலையான வட்டங்களின் பொறுப்பை மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெறாமல் இருந்தார்.

இன்னொருவர், ஸ்டேட் ஹவுஸிங் போர்டு சட்டவிதிமுறைகளின்படி மூன்று ஆண்டுகள் தொடர்ந்திருக்கலாம் என்று விதியிருப்பதால் அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. போஜன்:** நம் மாநிலத்தில் பொறியியல் பயிற்சி பெற்றவர்கள் அநேகம் பேர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய இவ்விதம் ஓய்வு பெற்றவர்களுக்கு விலக்கு அளித்து அவர்களை வேலையில் ஈடுபடச் செய்வதைத் தடுக்க, அரசு இனிமேலாவது ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா:** வேலைவாய்ப்பை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான் ஏற்கனவே 58 வயது என்றிருந்தது 55 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதில் யாருக்கும் வேலை நீடிப்பு தரவில்லை. இப்போது கூட ஒருவர்தான் நீடிப்பில் இருக்கிறார். அது பப்ளிக் வொர்க்ஸ் டிப்பார்ட்மெண்ட் பற்றியது. இன்னொரு அதிகாரி ஸ்டேட் ஹவுஸிங் போர்டுக்கு மாற்றப்பட்டுவிட்டதால் அந்தப் பிரச்சினை இதில் எழவில்லை.

### சிறைக் கைதிகள் விடுதலை

*489 **வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் 1968 பிப்ரவரி முடிய, தண்டனைக்காலம் முடிவுறாத எத்தனை சிறைக் கைதிகளை விடுதலை செய்துள்ளது, மாவட்டவாரியாக ?

(இ) எந்தெந்த வேளைகளில் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ)—

| | மாவட்டங்கள். | விடுதலை செய்யப்பெற்ற கைதிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | சென்னை .. .. .. .. .. .. | 263 |
| 2 | செங்கற்பட்டு .. .. .. .. .. .. | 196 |
| 3 | வட ஆர்க்காடு .. .. .. .. .. .. | 372 |

| மாவட்டங்கள், | விடுதலை செய்யப்பெற்ற கைதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 4 தென் ஆர்க்காடு .. .. .. .. .. | 208 |
| 5 தஞ்சாவூர் .. .. .. .. .. .. | 297 |
| 6 திருச்சிராப்பள்ளி .. .. .. .. .. | 288 |
| 7 மதுரை .. .. .. .. .. .. | 252 |
| 8 இராமநாதபுரம் .. .. .. .. .. | 136 |
| 9 திருநெல்வேலி .. .. .. .. .. | 226 |
| 10 கன்னியாகுமரி .. .. .. .. .. | 39 |
| 11 சேலம் .. .. .. .. .. .. | 585 |
| 12 கோயம்புத்தூர் .. .. .. .. .. | 1,126 |
| 13 நீலகிரி .. .. .. .. .. .. | 126 |
| 14 தர்மபுரி .. .. .. .. .. .. | 115 |
| | 4,229 |

(இ) 4,229 கைதிகளில் 155 கைதிகள் ஆலோசனை வாரியத்திட்டத்தின் கீழும், 1965-ம் ஆண்டில் மொழிக் கிளர்ச்சியின்போது தண்டிக்கப்பெற்ற கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கியதன் விளைவாக 4 கைதிகளும் விடுதலை செய்யப்பெற்றனர். மற்றவர்கள் கடந்த ஜனவரியில் சென்னை மாநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டின் நினைவாக சிறைத் தண்டனைகள் சிறப்பாகத் தள்ளுபடி செய்யப்பட்டதன் விளைவாக விடுதலை செய்யப்பட்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த 4,229 பேர்களில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு பெற்று சிறை சென்றவர்களில் எவ்வளவு பேர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்? போலீஸார் வாயில் பெட்ரோலை ஊற்றிச் சாக அடித்ததன் காரணமாகத் தண்டனை அளிக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதன் காரணமாகப் போலீஸார் மத்தியில் ஒரு அதிருப்தி ஏற்பட்டு இருப்பதை அரசு அறியுமா ? இனிமேலாவது குற்றவாளிகளுக்கு விடுதலை அளிக்கும்போது, செய்யப்பட்ட குற்றங்களைக் கருத்தில் கொண்டு விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: "இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் தண்டிக்கப்பட்ட நான்கு கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்" என்று சொன்னேன். அந்த நான்கு பேர்களும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் போலீஸாரை எரித்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் அல்லர்; பொதுவாக விடுதலை செய்யப்பட்டவர்கள். போலீஸாரை எரித்த குற்றத்திற்காக ஒருவரும் தண்டிக்கப்படவில்லை. அவர்கள் கூறுகிறபடி, அப்படிப்பட்ட எவரும் விடுதலை செய்யப்படவில்லை.

திரு. எம். பூபதி : 4000-க்கு மேற்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்பட்டதில் ஜன்ம தண்டனை பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் என்பதை மாவட்டவாரியாகச் சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தத் தகவல் என்னிடமில்லை

திரு. பெ. மலைச்சாமி : 1967-ல் நடந்த பொதுத் தேர்தலையொட்டி பல ஆயுள் கைதிகளை அன்றைய அரசாங்கம் விடுதலை செய்தது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தத் தகவல் என்னிடமில்லை



திரு. என். கிட்டப்பா : மறைந்த முன்னாள் முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாவது வயது நிறைவையொட்டி தமிழகத்தில் உள்ள சிறைக் கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைக்கவும் சிலரது தண்டனையைக் குறைத்து விடுதலை செய்யவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றிய யோசனை தற்சமயம் இல்லை.

THIRU K. VINAYAKAM : While we have no objection to the release of political prisoners, will the Government be pleased to state how many out of these released prisoners had committed criminal offences and granted remission of sentence by the Government ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விடுதலை செய்யப்பட்டிருக்கிற 4,229 கைதிகளும் க்ரிமினல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள்தான். இதில் அரசியல் கைதிகள் என்று காங்கிரஸ்காரர்கள் நம்பிக்கொண்டிருப்பது அவர்கள் கருத்துப்படியுள்ள அரசியல் கைதிகள், இந்தி மொழிக் கிளர்ச்சியில் தண்டிக்கப்பட்டவர்கள். இந்தி மொழிக் கிளர்ச்சியில் தண்டிக்கப்பட்டவர்களில் விடுதலை செய்யப்பட்டவர்கள் நான்கு பேர்கள். அந்த நான்கு பேர்களும் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். வேறு யாரும் இல்லை. தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் அரசியல் கைதிகள் என்ற நோக்கத்திற்காக யாரும் விடுதலை செய்யப்படவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : கிரிமினல் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கும் கைதிகள், விடுதலை செய்யப்பட்டதற்குப் பின்பு அவர்கள் நடத்தையைப் பார்வையிடுவதற்கும் ; அவர்கள் நல்லெண்ணம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ளவும் இந்த அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா ? அப்படி ஏற்பாடு செய்திருந்தால் அதன் விளைவு என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆலோசனை, வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. விடுதலை செய்யப்பட்ட கைதிகளைக் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : காந்திஜி நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்தச் சமயத்தில் மரண தண்டனை அளிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆயுள் தண்டனை என்றும், பத்து ஆண்டுகள் ஜெயிலில் இருந்தவர்களைப் பூர்ண விடுதலை செய்யவும் ஒரு உத்தரவு போட அரசு யோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உத்தரவாதம் கொடுப்பதற்கில்லை. அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி மத்திய அரசாங்கம் ஒரு அறிக்கை அனுப்பி அதன் சார்பில் உலகத் தமிழ் மாநாடு நடந்த போது என்னென்ன ரெமிஷன் கொடுத்தோமோ அதே விதத்தில் காந்திஜி நூற்றாண்டு விழாவின்போதும் கொடுத்திருக்கிறோம். மரண தண்டனை அடைந்தவர்கள் ஒரு தேதி குறிப்பிட்டு அதற்கு முன்னால் மரண தண்டனை விதிக்கப்பட்டு அந்த தேதிக்குள் நிறைவேற்றப்படாமல் இருந்தால் அவர்களுக்கு அதை ஆயுள்காலத் தண்டனையாக மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : 1942-ல் நம் நாட்டில் தேசீய விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் பம்பாய்க்கு அருகில் ஒரு சப் கலெக்டர் கொலை செய்யப்பட்டு, அதன் காரணமாகத் தூக்கு தண்டனை அடைந்தவர் ஒரு கால கட்டத்திற்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். தமிழ் நாட்டிலும், தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட தூக்கு மேடை ராஜகோபால் என்பவர், தண்டனைக் காலம் முடிவதற்குள் விடுதலை செய்யப்பட்டார், ஆகவே, ஒரு அரசியல் போராட்டம் அல்லது மொழிப்

போராட்டம் நடந்து சில காலம் சென்றதற்குப் பின்னால், தண்டனை அடைந்தவர்களை விடுதலை செய்யவேண்டுமென்ற நியதியை பிரிட்டீஷ் ஆட்சிக் காலத்தில் கடைப்பிடித்து வந்தார்கள். அந்த நியதி காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. இன்று மொழிப் போராட்டம் நடந்து சில வருடங்கள் கழிந்ததற்குப் பின்னால், அந்த உணர்ச்சிகள் மாறிய கால கட்டத்தில், அதில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யக் கூடிய நியதியை அரசு ஏற்றுக்கொள்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதில் தவறு இல்லை, நியாயந் தான்.

## மாநில வீட்டுவசதி வாரியக் கட்டடம்

*490 வினா—**திரு எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை நகரத்தில் உள்ள "ஸ்டேட் அவுஸிங் போர்டு" கட்டடம் எந்த ஆண்டில் எவ்வளவு ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது ?

(இ) தற்போது அங்கு கூடுதல் மாடி கட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(உ) ஏர்கண்டிஷன், பர்னீச்சர் இவைகளுக்கான தொகை எவ்வளவு ?

(எ) மதிப்பீட்டுத் தொகையைக் குறைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) மாநில வீட்டுவசதிவாரியக் கட்டிடம் 1964-ம் ஆண்டில் ரூ. 16·25 லட்சம் செலவில் கட்டப்பட்டது.

(இ) ரூ. 4·77 லட்சம்.

(உ) வாரியம் அவை கூடும் அரங்கத்தில் தட்ப வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் முறைக்கும், அரங்கத்தில் அவை கூடுவதற்கான வசதிகளைச் செய்வதற்கும் ரூ. 94,000 செலவாயிற்று. வாரியக் கட்டிடம் முழுவதிலும் மேசை, நாற்காலி போன்ற வசதிகள் செய்வதற்கு ரூ. 1,04,800 செலவாயிற்று. இந்தத் தொகை ரூ. 16·25 லட்சத்தில் அடங்கும்.

(எ) இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டதன் நோக்கமே, அதற்காகச் செலவு அதிகமாக இருக்கிறது என்ற முறையைக் கொண்டுதான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தொகையை ஆடிட் செய்யவோ அல்லது அரசாங்கம் செக் பண்ணுவதற்கோ ஏதாவது யோசனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இந்தக் கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டிருக்கின்றன. இனிமேலும் அப்படிப்பட்ட கணக்குகளை ஆடிட் செய்வது வழக்கத்தில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Thiru K. VINAYAKAM :** Sir, may I know whether any room in this buidling has been air conditioned. To my knowledge, there is none.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** வாரியம் அவை கூடும் அரங்கத்தில் தட்ப வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் முறைக்கும், அரங்கத்தில் அவை கூடுவதற்கான வசதிகளைச் செய்வதற்கும் 94,000 ரூபாய் செலவாயிற்று. ஒரு ரூம் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருக்கிறது.



## *Association of planters*

*471 *Q.*—**Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR:** Will the Hon the Minister for Finance be pleased to state whether the Government received any representation from the Association of Planters in Tamil Nadu in regard to rehabilitation of repatriates from Ceylon and other places during 1968 ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவரவர்களே, இலங்கை முதலிய இடங்களிலிருந்து வரும் அகதிகளுக்கு, தோட்ட முதலாளிகள் அசோசியேஷனிலிருந்து வேண்டிய வசதி கொடுத்து, வேலை கொடுக்கிறோம் என்று தெரிவித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வேண்டிய நடவடிக்கைகள் நிரம்ப எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதனுடைய விவரங்கள் இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் தமிழர்களின் மறு வாழ்வுக்கு உதகை போன்ற இடங்களில் தேயிலை, காப்பித் தோட்டங்களை அமைத்துத் அவர்களுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்த நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. அதுபோல, தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் மறு வாழ்வு அளிக்கக் கூடிய திட்டங்களை நம்முடைய அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்மிபுகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதைப்பற்றிய விவரங்கள் இந்த மன்றத்திலே விரிவான அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த கேள்வியைப் பொறுத்த வரையில், தனியாக தோட்ட உடைமையாளர்களிடமிருந்து தாங்களும் இந்த அகதிகளை ஏற்றுக்கொள்ளுகிறோம், புனர் வாழ்வு அளிப்பதற்கும், அகதிகள் நிர்மாண வேலை இந்த மாதிரி. உதவிகளைச் செய்வது இவை குறித்து விண்ணப்பம் வந்திருக்கிறது என்பது பற்றிய கேள்வி. அவர்களுடைய விண்ணப்பம் வந்திருக்கிறது என்று மட்டும்தான் சொன்னேன். முழு விவரம் இந்த மன்றத்திலே வேறு நேரத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

**திரு. பி. வேலுசாமி :** சார், இலங்கையிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வரும் தமிழர்கள், இந்தியர்கள் அங்கே கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக வேலை செய்தும் அவர்கள் அநியாயமாக இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். எனவே, மத்திய சர்க்காருக்கு எடுத்துச்சொல்லி, அந்தப் பகுதியிலேயே பிரஜா உரிமை வழங்க, ஏதாவது முயற்சியை நமது சர்க்கார் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது முடிந்து போன விவகாரம். சிரிமாவோ பண்டாரநாயகா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயும், முன்னாலே இங்கேயிருந்த அமைச்சர் அவர்களும் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். இன்றைக்கும் நாம் ஏற்றுக்கொள்வதற்கான முறைகளை, புனர் வாழ்வு, நிர்மாண செலவை முழுவதும் மத்திய அரசே ஏற்றுக்கொள்வது என்றும் சொல்லி செயல்பட்டு வருகிறது. நாமும் பல பூர்வாங்க வேலைகள் செய்திருக்கிறோம். சுமார் 5¼ லட்சம் பேர் வரக்கூடிய வாய்ப்புக்கள் எல்லாம் முடிந்து போன விவகாரம். அதற்கு வேண்டிய வேலைகளும் துவங்கியிருக்கிறோம். அதை எப்படிச் செம்மைப்படுத்துவது என்பதுதான் இப்பொழுதுள்ள பிரச்சினை.

**திரு. கே. போஜன் :** சார், அமைச்சரவர்கள் கூறிய பதிலிலிருந்து, தோட்ட உடைமையாளர்களிடமிருந்து இலங்கையிலிருந்து திரும்புபவர்கள் மறுவாழ்வு குறித்து முறையீடு அனுப்பப்பட்டது என்று சொன்னார்கள் அதன் விவரங்கள் என்ன ? அதன்மீது அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தோட்ட உரிமையாளர்கள் சங்கத்திலிருந்து, அவர்கள் இம்மாதிரியான அகதிகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்காக, இந்த மாதிரியான உதவிகளை அரசாங்கம் செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள்.

1. Grant of financial assistance by way of loan.

2. Tax relief.

3. Grant of additional loans for bringing of more areas under plantations.

4. Permission for clear felling of trees in the reserved areas in the existing plantations.

இப்படி 4 கோரிக்கைகளை அனுப்பி யிருந்தார்கள். இதற்காக அவர்களுக்கு ஏதாவது கடன் வசதி செய்யலாமா என்பதற்கு Board of Rehabilitation. அதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு, அதைப்பரிசீலனை செய்தது. அந்தப் பரிசீலனையின் விளைவாக சில சிபாரிசுகள் செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே தோட்டம் நடத்துபவர்கள், உரிமையாளர்களுக்குக் கீழ்க்கண்ட அடிப்படையிலே அகதிகளை வைத்துக் கொள்வதானால் "லோன்" உதவி செய்யலாம் என்றுசொல்லி யிருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| Tea plantations | .. | Rs. 7,000 for a repatriate-employee. This will approximate to Rs. 7,000 per acre. |
| Coffee .. .. | .. | Rs. 7,000 for a repatriate-employee. This will approximate to Rs. 3,500 per acre. |
| Rubber .. .. | .. | Rs. 9,000 for a repatriate-employee. This will approximate to Rs. 3,000 per acre. |
| Minor products | .. | Rs. 7,000 for a repatriate-employee. This will approximate to Rs. 1,750 per acre. |

இந்தக் கமிட்டியின் சிபாரிசுகள் இந்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன. இரண்டாவதாக, தங்களுக்கு வரி ரீலீஃப் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதுவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. வேறு மரங்களை அப்புறப்படுத்துவது சம்பந்தமாக இப்பொழுது பொதுவாக அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளை அனுசரித்து காப்பித் தோட்டங்கள், மரங்களை மட்டும் அகற்றுவதற்குச் சில அதிகாரம் இருக்கிறது. டீ பிளான்டேஷன்ஸ் அகற்றப்படுவதில்லை. இருந்தாலும், டீ பிளாண்டேஷன்களையும் அகற்ற உரிமைகள் கேட்கிறார்கள். பொதுவாக, இப்படிப்பட்ட மரங்களையெல்லாம் அகற்றலாம், சீர்படுத்தலாம் என்று சொல்லும் நேரத்தில் சில விதிமுறைகள் இருக்கின்றன. ஏதாவது, வேறு நீரூற்றுக்களுக்கு கெடுதல் வருகிறதா என்று பார்க்க வேண்டும். ஊரின் தட்ப, வெப்ப நிலை பாதிக்கப்படுமா என்று பார்க்க வேண்டும். இன்னும் வேறு ஏதாவது மண் வெடிப்புகள், இம்மாதிரி நிலைமைகள் ஏற்படுமா என்று பார்க்க வேண்டும். இதையெல்லாம் பார்த்து, மரங்களை அகற்றலாமா என்று யோசிக்கப்படும். இவை கோரிக்கைகள். இவை பரிசீலனையில் இருக்கின்றன. கடைசியாக வந்த கோரிக்கை, நிலம் கொடுங்கள், நிலம் கொடுங்கள். நாங்கள் வைத்துக்கொள்ளுகிறோம் என்று சொன்னார்கள். அதை யோசிப்பதற்கில்லை. ஏறக்குறைய காட்டிலாக்காவில்தான் நிலங்கள் இருக்கின்றன. காட்டிலாக்கா ரொம்ப சுருங்கிக்கொண்டு வருகிறது. அந்த இலாகாவை வைத்திருக்கக் கூடாது என்று வனத்துறையினர் ஆட்சேபம்





தெரிவித்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலே புதிதாக நிலம், தோட்டம் முதலியன கொடுத்து அகதிகளைப் புனரமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

## டெல்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாடு

* 472 வினா: திரு. எஸ். ராமச்சந்திரன் : மாண்புமிகு உணவு வேளாண்மைதுறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1968–ல் டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் தனி உணவு மண்டலங்களை எடுத்துவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா ?

(இ) ஆமெனில், தமிழ்நாடு அரசின் சார்பில் அதுபற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) மாநாட்டின் போது அறுதியிட்டுப் பரிவுரை ஏதும் செய்யப்படவில்லை. மண்டல முறை குறித்துப் பொதுவாக விவாதிக்கப்பட்டது. அந்த விவாதத்தில் பல மாநிலங்களின் முதலமைச்சர்களும் உணவு அமைச்சர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

(இ) நெல், அரிசி சம்பந்தமாகத் தற்போதுள்ள தனி-மாநில மண்டலமே ( Single-State Zone ) தொடர்ந்து நீடித்திருப்பதற்குச் சாதகமாக உணவு அமைச்சரவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** தலைவரவர்களேதனி உணவு மண்டலமாகத் தமிழகம் இருப்பதால்தான் ஓரளவிற்கு உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும், பற்றாக்குறையைப் போக்கவும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இத்தகைய ஏற்பாட்டை நிரந்தரமான அமைப்பாக ஆக்கக்கூடிய அளவில் இந்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. எ. கோவிந்தசாமி :** இந்தக் கருத்தை மாநாட்டிலே வற்புறுத்தியிருக்கிறது. தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கும் அந்த நிலைதான் இப்பொழுது இருக்கிறது.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** சார், கிராமத்திற்குக் கிராமம் கூட உணவு நடமாட்டத் தடை இருந்து வருகிறது. இதனால் பஞ்ச காலத்திலே உணவுப்பொருள்கள் வெளிச்சந்தையில் கிடைப்பது அரிதாகி மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். மாநிலம் முழுவதையும் ஒரு உணவு மண்டலமாக ஆக்கி, மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டத்திற்கு வட்டம் இருக்கும் தடைகளை நீக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** இந்தக் கருத்தை சுதந்திரா கட்சி வலுவாக வலியுறுத்தி வருகிறது. (குறுக்கீடு) நான் கட்சியின் கொள்கை என்றுதான் சொன்னேன். தவறாக ஒன்றும் சொல்லவில்லை. மாவட்டத்திற்கு மாவட்டம் கட்டுப்பாடு இருந்தாலன்றி, உபரியாக இருக்கும் மாவட்டத்திலிருந்து பற்றாக்குறை மாவட்டத்திற்குக் கிடைப்பதற்குக் கெடுதல் ஏற்பட ஏதுவாக இருக்கும். அதனால் பல தவறுகள் ஏற்படவும், அரசாங்கத்திற்கு உணவு நெருக்கடியைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்படவும் வழியிருப்பதால் இந்தக் கட்டுப்பாடு தேவையாகிறது. பற்றாக்குறை மாவட்டங்களுக்கு எங்கே உபரியாக விளைகிறதோ அங்கிருந்து அரசு கொடுக்கக் கடமைப்பட்டிருககிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 473, திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்.

**THIRU N. S. V. CHITHAN :** I am not putting the question.

## பூச்சி கொல்லி மருந்துகளுக்கு உதவித் தொகை

*474—வினா திரு. கே. போஜன் : மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விவசாயப் பயிர்களுக்குத் தெளிக்கும் பூச்சி மருந்துகளுக்காக மத்திய அரசு நம் மாநில அரசுக்கு ஏதேனும் உதவித்தொகை அளிக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) பூச்சி மருந்துகள் அவற்றின் விலையில் 65 சதவிகிதப்படி உழவர்களுக்கு விற்கப்படுகின்றன. எஞ்சிய 35 சதவிகித விலையில் பாதியை மத்திய அரசும், பாதியை மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து அளிக்கின்றன.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 65 சதவீதம் மத்திய அரசு மானியம் தருவதாகக் கூறினார்கள். . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பூச்சி மருந்துகள் விலையில் 65 சதவிகிதம் உழவர்களுக்கு விற்கப்படுகின்றன. எஞ்சிய 35 சதவிகித விலையில் பாதியை மத்திய அரசும் பாதியை மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

## மதுராந்தகம் நகருக்குப் புதைச் சாக்கடை

*475—வினா : திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

மதுராந்தகம் நகரத்திற்குப் பாதாளச் சாக்கடை தேவையென்ற கோரிக்கையின் மீது சர்க்கார் நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மார்ச் 1967-ல் மதுராந்தகத்துக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் தேவையென்ற கோரிக்கை அந்தப் பஞ்சாயத்திடமிருந்து வந்தது அரசின் தற்போதைய நிதிப் பற்றுக்குறையினால் இத்திட்டத்தை அரசினால் எடுத்துக்கொள்ள இயலாது என்று அறிவிக்கப்பட்டது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, பாதாள சாக்கடை அமைக்கவேண்டுமானால் அதற்கு வேண்டிய நிலைமைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பஞ்சாயத்தின் எல்லைக்குட்பட்ட இடங்களில் பஞ்சாயத்துக்களே பாதாள சாக்கடை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். எனவே, மதுராந்தகம் பஞ்சாயத்தாக இருக்கிற காரணத்தினால் அரசாங்கம் அதை ஏற்று நடத்துவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## படிப்பு உதவித் தொகைகள்

*476 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களுக்கு வழங்கும் உபகாரச் சம்பளம் எந்த மாதத்தில் வழங்கப்படுகிறது ?





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தமிழக அரசு, மற்றும் மத்திய அரசு உதவித் தொகைகளில் முதல் தவணை டிசம்பர் மாத முடிவுக்குள் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது தவணை, அதாவது, சனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் முடிய கணக்கிடப்பட்ட தொகை, சனவரி மாதத்தில் கொடுக்கப்படுகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, உபகாரச் சம்பளம் வழங்குவதற்குரிய பாரங்கள் எப்பொழுது அச்சிட்டு வெளியிடப்படுகின்றன ? அவற்றைக் காலதாமதமாக வழங்குவதால்தான் உபகாரச் சம்பளம் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது என்று பொதுவாகக் கருத்து இருக்கிறது. இதை விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்த பாரங்கள் கொடுக்கப்படுவதிலே காலதாமதம் ஏற்படுவதை ஓரளவுக்குத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்கின்றோம். அவைகள் அச்சடிக்கப்படுகின்ற அரசாங்க அச்சகத்தில் நிறைய வேலைகள் இருக்கின்ற காரணத்தால் இவைகளெல்லாம் தாமதப்படுகின்றன. அதற்காக இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்களே, அந்த அந்த மாவட்டத்திற்குத் தேவையான பாரங்களை—வெறும் பாரங்களாக இருக்கின்ற காரணத்தினால்—அச்சிட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பல பேர்கள் இந்த பாரங்களை விலைக்கு விற்பதாகப் புகார்கள் கூறப்படுகின்றன. அதனால் கூட பாரங்கள் தேவையானபோது கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. ஆதலால் தேவையானவர்களுக்கு, குறிப்பிட்ட காலத்தில் சேர்க்கப்படவில்லை. இவைகளையெல்லாம் தவிர்க்க அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னால் மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்கும் தொகை போதவில்லையென்று இரண்டாவது இன்ஸ்டால்மெண்ட் கேட்கப்பட்டதே, அந்தத் தொகை வழங்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இரண்டாவது இன்ஸ்டால்மெண்ட் மானியமாக 26 இலட்சம் கேட்கப்பட்டு வந்தது. பரிசீலனைக்குப் பிறகு நமது நிதித்துறை அதை ஏற்றுக்கொண்டு 24 இலட்சத்து சொச்சத்திற்கு இன்றைக்கு அனுமதி அளித்துள்ளது.

**திரு. ஆலடி அருணா :** தலைவர் அவர்களே, ஆதித் திராவிட மக்கள் பின்தங்கிய மக்கள் என்ற வகுப்பு அடிப்படையில் ஸ்காலர்ஷிப் கொடுப்பதால் ஒவ்வொரு வகுப்பினரும் தங்கள் வகுப்பைப் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று அரசிடம் கூறுகிறார்கள். எனவே, அதை வருமான அடிப்படையில், வருமானக்குறைவுள்ள வகுப்பார், யாராக இருந்தாலும், அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கின்ற வகையில், மத்திய அரசாங்கத்திடம் பரிந்துரைக்க நமது அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் உபகாரச் சம்பளம் வருமான எல்லையின் அடிப்படையிலே தான் தரப்பட்டு வருகிறது. அந்த வருமான எல்லையில் சாதி வேறுபாடுகள், சமய வேறுபாடுகள் எதுவுமே கிடையா. அதிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் மத்திய அரசாங்கம் தான் உபகாரச் சம்பளம் தருகிறது. மாநில அரசாங்கம் தருகிற உபகாரச் சம்பளம், மாணவர்கள் வாங்கிய மதிப்பெண்கள், பின் தங்கியவர்கள், மிகவும் பின் தங்கியவர்கள் என்றெல்லாம் பிரித்துப் பலவிதமாகக் கொடுத்துக்கொண்டு வரப்படுகிறது.

[1969 மார்ச் 26

*** 477 வினா திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புலவர், வித்வான் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களில் எத்தனை பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் ( Scholarships ) உதவித் தொகை அரிசன நல இலாகாவால் அளிக்கப்படுகிறது ?

(இ) மொத்தம் எவ்வளவு தொகை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) தகுதியுள்ள சாதியினர் (குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் உட்பட) .. .. .. .. .. .. 10

பின்தங்கிய வகுப்பினர் .. .. .. .. 15

(இ) தங்கிப் பயிலா உதவித் தொகை—

தகுதியுள்ள சாதியினர், பின்தங்கிய வகுப்பினர் .. ரூ 25

தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உண்டு றைச் செலவுகள்—

| | சென்னை. | வெளியூர். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தகுதியுள்ள சாதியினர் (ஒரு மாதத்திற்கு) | 60 | 50 |
| பின்தங்கிய வகுப்பினர் (ஒரு மாதத்திற்கு) | 40 | 35 |

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரத்திலிருந்து ஏறக்குறைய 50 பேருக்குத்தான் அந்த உதவித் தொகை கொடுப்பதாகத் தெரிகிறது. மொத்தம் எத்தனை பேர் புலவர், வித்வான் பயிற்சிக்குப் படித்துக்கொண்டிருக்கிறார்கள் ? தமிழ் வளர்ச்சியிலே அக்கறை கொண்டிருக்கிற அரசு இந்தத் தமிழ்ப் பட்டப் படிப்புப் படிக்கின்றவர்களை ஊக்குவிக்க அதிக மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த உபகாரச் சம்பளம் குறிப்பிட்ட கணக்குக்கு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இத்தனை பேருக்குத் தான் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதை வேண்டுமானால் அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் பரிசீலிக்கும்.

### அரிசனங்களுக்கு வீட்டு மனை

*** 478 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமனியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1966-67-ல் சிதம்பரம் தாலுக்காவிலிருந்து அரிசனங்களுக்காக மனை கொடுப்பதில், ஆட்சேபித்து ஐகோர்ட்டில் கொடுத்திருக்கும் ரிட் மனுக்கள் எத்தனை ?

(இ) அதன் முடிவு என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) சிதம்பரம் தாலுக்காவில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்து 1966-67-ஆம் ஆண்டில் 3 ரிட் மனுக்கள் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

(இ) அம் மனுக்களில் ஒன்றில் அதாவது ரிட் மனு 266/1966 நிலச் சொந்தக்காரரின் கோரிக்கையை ஏற்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. மற்ற இரண்டு ரிட் மனுக்கள் இன்னும் உயர்நீதி மன்றத்தில் முடிவுறாமல் உள்ளன.



1969 மார்ச் 26]

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** சபா நாயகர் அவர்களே, சிதம்பரத்தில் புறம்போக்கு நிலங்களோ, புஞ்சை நிலங்களோ எடுப்பதற்கு வழியே கிடையாது. எல்லாம் நஞ்சை நிலங்களாக இருக்கின்றன. நஞ்சை நிலங்களை எடுத்தால்தான் மனைக்கட்டுகள் கொடுக்க முடியும். ஆகவே, நஞ்சை நிலங்களை எடுத்துத் தரவேண்டிய நிலையில் ஹைகோர்ட்டுக்குப் போகும் ரிட் மனுக்களைத் தடுப்பதற்கு நம் அரசாங்கம் எடுததிருக்கும் நடவடிக்கை என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தனிப்பட்டவர்களுடைய நிலங்களை அரசாங்கம் எடுக்கும்போது, தனிப்பட்டவர்கள் ஹைக் கோர்ட்டுக்குச் செல்வதற்கு உரிமையிருக்கிறது ; எனவே செல்கிறார்கள். அரசாங்கம் அவர்களை ஹைகோர்ட்டுக்குச் செல்லக்கூடாது என்று தடுக்க முடியாது. ஹைகோர்ட்டுக்குச் சென்றுவிட்ட பிறகு வழக்கை விசாரணை செய்து, நீதிபதி அவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று தீர்ப்புக்கூறலாம், முடியாது என்றும் சொல்லலாம். ஹைகோர்ட்டுக்குச் செல்லக் கூடாது நிலச் சொந்தக்காரர்கள் என்று அரசாங்கம் எந்த விதக் காரணத்தைக் கொண்டும் தடை செய்ய முடியாது.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, நிலச் சொந்தக்காரர்களிடத்திலேயிருந்து நிலம் எடுக்கும் பொழுது ஒவ்வொரு நிலச் சொந்தக்காரரும் கோர்ட்டுக்குச் சென்றுவிடுகிறார்கள். அந்த வழக்கு முடிய 5 ஆண்டுகள் ஆகின்றன. அப்படி 4 நிலங்களை எடுத்துக் கொண்டு போனால் அந்த வீடில்லாத அரிசனங்களுக்குத் தங்களுடைய ஆயுளிலே மனை பெற முடியவில்லை. ஆகையினாலே மாவட்ட ஆட்சித் தலைவர்களே முடிவு செய்து அந்த நிலத்தை எடுத்துக் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகை செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் எந்த எந்த நிலத்தை எடுக்க வேண்டும், நிலச் சொந்தக்காரர்களுக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது, அதிலே அரிசனங்களுக்குக் கொடுப்பதிலே எந்தவித குறையும் ஏற்படுமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்து அவர்களே அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள், "அந்த இடத்தை நாங்கள் கொடுக்க மாட்டோம்" என்று வழக்கு மன்றம் செல்கிறார்கள். வழக்கு மன்றத்திலே பல வழக்குகள் இருக்கின்றன. நீதிபதி அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள். அதிலே கால தாமதம் இருக்கிறதே தவிர, வழக்கு மன்றம் செல்வதையே நாம் தடை செய்ய முடியாது, சட்டதிட்டத்திற்கு மீறியும் கடுமையாகக் கையகப்படுத்துவோம் என்று சட்டம் இயற்ற முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கடுமையாக நடவடிக்கை எடுக்க முடியாது ; அதற்கு சட்டமும் கிடையாது ; அது முறையும் அல்ல.

**திரு. என். ராஜாங்கம் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தில் நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போவது வழக்கம், அதற்கு சட்டமும் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் தடுத்துப் பேசவில்லை. ஆனால், இருக்கிற நிலைமையில் அரசாங்கம் ஏதாவது ஒரு முடிவெடுக்கும்போது, ஜனநாயகத்திற்குரிய முடிவு எடுக்கும் போது, ஜனங்களுக்கு வேண்டிய முடிவு எடுக்கும்போது இப்படி கோர்ட்டுகளில் தடை கேட்டுச் செல்கின்றார்கள். இதனால் அரசாங்கத்தினுடைய நிலைக்கு நல்ல வழி ஏற்படவில்லை. ஆகவே, அரசாங்கம் இருக்கிற விதிகளைத் தளர்த்துவதற்கு ஏதாவது திருத்தம் கொண்டு வருவதற்கு சட்டசபைக்கு உரிமை இருக்கிறதா ? உரிமை இருந்தால் அந்தத் திருத்தத்தினைக் கொண்டுவந்து திருத்துவதற்கு வழி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பல வகையிலே பரிசீலனை செய்துதான் எந்த நிலங்களையெல்லாம் கையகப் படுத்தவேண்டும் என்று அரசாங்கம் சட்டம் நிறைவேற்றி வைத்திருக்கிறது. தேவையில்லாத நிலங்களை வைத்திருப்பவர்கள், அதிக நிலம் வைத்திருப்பவர்கள் என்றெல்லாம் பல கட்டங்கள் இருக்கின்றன. அவைகளை விரைவுபடுத்துவதற்கு

நோட்டிஃபிகேஷன், 6 (1) நோட்டிஃபிகேஷன் அடிப்படையிலே சொத்துக்களை பற்றி நோட்டிஃபிகேஷன் வெளியிடுகிறார்கள். தடை ஏதாவது இருக்குமானால் அரசாங்கத்திற்குச் சொல்லித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறோம். இவைகளின் மீது நாம் முடிவெடுக்கும்போது நிலச் சொந்தக்காரர்கள் வழக்குமன்றம் செல்கிறார்கள். நாம் பல முறைகளை வைத்திருக்கிறோம். அந்த முறைகளைப் பரிசீலனை செய்கிறோம். அவர்கள் கொடுக்க மறுத்தால், சமாதானம் கூறவோ, விளக்கம் கூறவோ தாசில்தார், அரிசன நல இலாகாவிற்காக ஸ்பெஷல் தாசில்தார் (லாண்ட் அக்விசிஷன்) தலையிடுகிறார். அவர் நேரடியாக சமாதானம் சொல்லி, நிலைமையைப் பரிசீலனை செய்து செயலில் ஈடுபடுகிறார். இத்தனையையும் மீறித்தான் அவர்கள் வழக்கு மன்றம் செல்ல முடிகிறது. வழக்கு மன்றம் செல்வதைத் தடுக்க முடியாது. வழக்குகளை விரைவிலே பரிசீலித்துத் தீர்ப்பு கூறவேண்டுமென்றுதான் இன்றைக்கு அரசாங்கத்தின் வழக்கறிஞர்களைக் கொண்டு அடிக்கடி வற்புறுத்தி வருகின்றோம். எனவே இந்த வழக்குகளின்மீது விரைவிலே தீர்ப்புக் கூறி முடிவெடுப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது.

### *Regional Medical College at Tiruchirappalli.*

*479 *Q.*—Thiru K. VINAYAKAM, Thiru V. SWAMINATHAN, and Thiru K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state —

(*a*) whether there is a proposal to locate Regional Medical College in Tiruchirappalli.

(*b*) if so, when would the proposal be implemented ; and

(*c*) the number of students proposed to be admitted in the first year ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) அண்டு (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு கே. விநயகம் :** ரீஜனல் மெடிகல் காலேஜ்களை பெரும்பாலும் சென்டிரல் கவர்ன்மெண்டுதான் ஆரம்பித்திருக்கிறது. அதுமாதிரி சென்டிரல் கவர்ன்மெண்டு ஏதாவது யோசனை தெரிவித்ததா? அதற்கு ஏதாவது இடையூறுகள் இருக்கின்றனவா? திருச்சியில் இடம் கிடைக்கவில்லை, போதிய அளவுக்கு வசதி இல்லை என்று நமது சர்க்கார் எடுத்துரைத்திருக்கிறதா? இது தாமதப்படுவதற்குக் காரணம் என்ன? சென்டிரல் கவர்ன்மெண்டு காரணமா? அவர்கள் கேட்டு, நாம் உதவி தராமல் அது தாமதப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ரீஜனல் மெடிகல் காலேஜஸ் ஐந்து துவக்க வேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் திட்டங்களில் ஒன்று. நமது அரசாங்கத்தின் சார்பில் நாமும் மூன்று மருத்துவக் கல்லூரிகளைத் துவக்க வேண்டும் என்ற செயற் குறிப்பும் இருக்கிறது. டைரக்டர் ஆஃப் மெடிகல் சர்வீஸஸ் சிபார்சு செய்தவை, கோவை, தர்மபுரி, அருப்புக்கோட்டை என்ற மூன்று இடங்கள். அரசாங்கம் சிபார்சு செய்த இடங்கள் கோவை, திருச்சி, சேலம். இந்த மூன்று இடங்களில் கோவையில் ஏற்கனவே, பி.எஸ்.ஜி. சாரிடீஸ் டிரஸ்ட் ஆஃப் கோயம்பத்தூர், திருவாளர் குப்புசாமி நாயுடு சாரிடீஸ் டிரஸ்டு, கோவை ஆகிய இருவர்களும் ரூ. 25 லட்சம் நன்கொடையாகத் தந்து, ஒரு புதிய கல்லூரி ஆரம்பிப்பதற்கு உதவி செய்கிறோம் என்று அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்தார்கள். அதை மத்திய அரசுக்கு நமது மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறது. ஆனாலும், இன்னும் அதற்குரிய பதில் வரவில்லை.



திருச்சியில் இப்பொழுது 400 படுக்கைகள் கொண்ட அரசாங்க மருத்துவ மனை ஒன்று இருப்பதன் காரணமாக, அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்று நினைத்து, மத்திய சர்க்காருக்கு திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வகை இருக்கிறது என்று எழுதியிருக்கிறோம். ஆனால், மத்திய சர்க்காரிடமிருந்து அதற்கும் இதுவரையில் எந்த விதமான பதிலும் வரவில்லை. பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது, சேலத்தில் மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தப்போவதாக. ஆனால், அதிகாரபூர்வமாக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மாநில அரசுக்கு எதுவும் வரவில்லை. திருச்சியில் கூட தனியார்கள் திரு எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி செட்டியார், மானேஜிங் டிரஸ்டி, உருமு சேஷாசலம் செட்டியார் சாரிடிஸ் ரூ. 5 லட்சம் நன்கொடை கொடுத்து, 40 ஏக்கர் நிலமும் நன்கொடையாக, இனமாகக் கொடுத்து, ஒரு மருத்துவக் கல்லூரி திருச்சியில் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். பொது மக்கள் ரூ. 15 லட்சம் அளவுக்கு நன்கொடையாக வசூல் செய்து தருவதாக உறுதி கூறியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் வைத்து அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. மாநில அரசின் சார்பில் திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கலாமா என்பதையெல்லாம் பற்றிப் பரிசீலனை நடக்கிறது.

### *Sanitary Inspector's Course.*

*480 *Q.*—Thiru N. S. V. CHITHAN ; Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the number of seats available in different Medical Colleges for the Sanitary Inspector's Course in this State ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :—**

| மருத்துவக் கல்லூரியின் பெயர். | இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. சென்னை மருத்துவக் கல்லூரி .. .. .. | 50 |
| 2. ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி .. .. .. | 100 |
| 3. மதுரை மருத்துவக் கல்லூரி .. .. .. .. | 100 |
| 4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி .. .. .. | 50 |
| 5. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி .. .. .. | 50 |
| மொத்தம் .. | 350 |

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இவற்றை உயர்த்துவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இவைகளை உயர்த்துவதாக இல்லை. இது தவிர, காந்தி கிராம் ரூரல் இன்ஸ்டிட்யூட்டில் 30 இடங்கள் இருக்கின்றன.

**திரு. கே. விநயகம் :** சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ் டிரெயினிங் கோர்ஸுக்கு டிபார்ட்மெண்டல் காண்டிடேட்ஸ் ஒரு சிலர் வருகிறார்கள். அவர்களுக்கு டிரெயினிங் ஆனதும் வேலை கிடைத்துவிடுகிறது. சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ் கோர்ஸுக்கு டிரெயினிஸாக டைரக்ட் ரெக்ரூட்மெண்டு செய்யப்படுபவர்களுக்குப் பெரும்பாலும் வேலை கிடைக்காத நிலைமை இருக்கிறது, அதைப்பற்றி ஏதாவது அரசாங்கத்திற்குத்

தெரியுமா ? அப்படியிருந்தால், எத்தனை பேர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை என்ற புள்ளி விவரம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** டிபார்ட்மெண்டல் காண்டிடேட்ஸ் 60 சத வீதம், லோகல் பாடீஸ், உள்ளாட்சி மன்றங்களிலிருந்து 25 சத வீதம், ஓபன் மார்க்கெட், யாரை வேண்டுமானாலும் நேரடியாக எடுத்துக்கொள்வது என்ற வகையில் 15 சத வீதம் என்று அறிவிப்பு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். அடிஷனல் டைரக்டர் ஆஃப் ஹெல்த் சர்வீஸஸ் அண்டு பாமிலி பிளானிங் தான் இவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எல்லா வகையிலிருந்தும் காண்டிடேட்ஸ் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகிற காரணத்தினால், வெளியிலிருந்து தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்குள்ள தகுதி இருக்குமானால் யாரும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வசதி இருக்கிறது.

**வெள்ளிக் குறியிடாத விஞக்கள்.**

*Teacher-Pupil ratio in schools.*

41 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

Whether all the schools in Tamil Nadu have been instructed to admit 55 students for each section so that the pupil-teacher ratio may be 55: 1.

*A.*—No.

இல்லை.

*Evening Courses in Queen Mary's College, Madras.*

42 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) The number of students who are attending the evening course in the Queen Mary's College, Madras ; and

(*b*) Whether there are separate lectures for them ?

*A.*—(*a*) 106.

(*b*) Additional posts of teaching staff have been sanctioned by Government at the time of starting the evening course to meet increased work load. They are, however, not treated as exclusively belonging to the evening course. Their services are also utilised for teaching the corresponding subjects in the regular course in the same way as teachers of regular course work in the evening course, subject to the work load of each of the number not exceeding the maximum prescribed by the University.

(அ) 106.

(ஆ) மாலைநேரப் படிப்பு தொடங்கிய பின்னர் வேலைச்சுமை அதிகரித்ததை ஈடு செய்ய அரசு கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. முறையான கல்லூரிகளில் மாலை நேரப் படிப்பு கற்பிக்கப் பயன்படுத்தப்படுவதைப் போலவே இவர்களும் மாலை நேர வகுப்புகளுக்கு மட்டுமின்றி முறையாகக் காலையில் நடக்கும் வகுப்புகளிலும் அவரவர்களுக்குரிய பாடங்களைக் கற்பிக்கவும் பயன்படுத்தப்படுகிறார்கள். ஆனால், இத்தகைய ஆசிரியர்களின் வேலைச்சுமை பல்கலைக் கழகத்தால் வரையறுக்கப்பட்டதற்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்கு இது உட்பட்டதாகும்.





*Rajasthanis in Tamil Nadu.*

43 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether he has received any communication early in 1968 from the Chief Minister of Rajasthan State on the question of the members of Rajasthan Community in this State ; and

(*b*) If so, the details thereof ?

*A.* (*a*) Yes.

(*b*).—The Chief Minister of Rajasthan brought to notice that some members of the Rajasthan Association in Madras had received annonymous letters of a threatening nature, and expressed his confidence that appropriate action would be taken by this Government in the matter.

(அ). ஆம்.

(இ). அச்சுறுத்தும் தன்மையில் பேரிலாக் கடிதங்கள் சென்னையிலுள்ள ராஜஸ்தான் கழக உறுப்பினர் சிலருக்கு வந்துள்ளதை ராஜஸ்தான் முதலமைச்சர் நாட்டத்திற்குக் கொண்டுவந்தார். இந்த அரசாங்கம் இது குறித்து ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனத் தன் நம்பிக்கையையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

*State Transport Bus Conductors.*

44. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) Whether any compilant has been received by the commisioner of Police, Madras, against the conductors of State Bus Transports in Madras city about the 13th March 1968 from some advocates of Madras.

(*b*) If so, the details thereof and ;

(*c*) The action taken thereon ?

*A.* (*a*) No.

(*b*) and (*c*). Does not arise.

(அ) இல்லை.

(இ) and (உ) விஞவிற்கு இடமில்லை.

45 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon the Minister for Co-operation be pleased to state—

(*a*) Whether any complaint has been received by the Director of State Transport, Madras, against the conductors of State Transport, Madras City from some Advocates about the 13th March 1968 ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon ?

*A.*—(*a*) A complaint dated 13th March 1968 was received by the Director, Tamil Nadu Transport Department from Thiru R. K. Balasubramanian, Advocate, Mylapore.

(*b*) Thiru Balasubramanian stated in his complaint that on the 12th March 1968 at about 9-15 p.m. himself, his advocate friend and the Honourable Member were waiting for a bus at the Ajantha bus stop that a bus No. 21 route came to the stop, that before his friend and the

Hon'ble Member could board the bus, the conductor whistled and the bus started off without waiting for even a couple of seconds though there were not many passengers in the bus and that when the complainant questioned the conductor why he had done so, the conductor was evasive in his behaviour. The complainant stated also that such behaviour is not unusual on the part of the bus employees and requested the Director to bring to the notice of the departmental employees the provision of section 336 of the Indian Penal Code so that such behaviour may not be repeated.

(c) The concerned conductor was fined by the department. There are standing instructions to the effect that the buses should be stopped at all bus stops.

(அ) மயிலாப்பூரைச் சேர்ந்த வழக்குரைஞர் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியன் அவர்களிடமிருந்து 13–3–1968-ம் நாளிட்ட குறையீடு ஒன்று தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை இயக்குநருக்கு வந்தது.

(இ) 1968 மார்ச் 12-ம் தேதி இரவு சுமார் 9–15 மணிக்கு அவரும் அவரது நண்பரான வழக்குரைஞர் ஒருவரும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினரும், அஜந்தா பேருந்து நிறுத்தத்தில் பேருந்துக் காகக் காத்திருந்தனர் என்றும், 21-ம் எண் வழித்தடப் பேருந்து ஒன்று அந்த நிறுத்தத்திற்கு வந்ததாகவும், அந்தப் பேருந்தில் அவரது நண்பரும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினரும் ஏறுவதற்கு முன்னரே பயணித் துணைவர் "விசில்" ஊதி விட்டார் என்றும், அந்தப் பேருந்தில் பயணிகள் மிகக் குறைவாகவே இருந்த போதிலும் இரண்டு விநாடிகள் கூட காத்திராமல் பேருந்து புறப்பட்டு விட்டதென்றும், இவர் இதுபற்றிப் பயணித் துணைவரிடம் ஏன் இவ்வாறு செய்தீரென வினவிய போது, அவர் சரியான பதில் அளிக்காது தட்டிக் கழித்தாரென்றும் திரு. பாலசுப்பிரமணியன் தனது குறையீட்டில் குறிப்பிட்டுள்ளார். குறையீடு செய்தவர் பேருந்துத் தொழிலாளர்களிடம் இத்தகைய நடத்தை வழக்க மாக நடைபெறுகிறதென்று குறிப்பிட்டு, இவ்வாறான செய்கை மீண்டும் நடைபெறாதிருக்க இந்தியத் தண்டனைச் சட்டக் கோவையின் 336-வது பிரிவின் விதித் துறையைப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களின் நாட்டத்திற்குக் கொண்டு வருமாறு இயக்குநரைக் கேட்டுக்கொண்டார்.

(உ) சம்பந்தப்பட்ட பயணித் துணைவருக்கு இத்துறை அபராதம் விதித்தது. எல்லாப் பேருந்து நிறுத்தங்களிலும் பேருந்துகள் நிறுத்தப் பட வேண்டுமென்று நிலைக் கட்டளைகள் உள்ளன.

*Recruitment by Public Service Commission*

46 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House a list showing the posts that are—

(i) included and

(ii) excluded from the purview of the Madras Public Service Commission ?

*A.*—Almost all gazetted posts and most of the important non-gazetted posts under the State Government, are within the purview of the Madras Public Service Commission. It is difficult to list out all these posts as they are large in number. Posts which have been excluded from the purview of the Commission are specified in Annexure I to the Madras Public Service Commission Regulations, 1954, incorporated in the Madras Services Manual, Volume I.



மாநில அரசாங்கத்தின் கீழ் உள்ள அரசிதழ்ப் பதிவு பெற்ற பதவிகள் பெரும்பாலும் அனைத்தும், அரசிதழ்ப் பதவி பெறாத முக்கிய பதவிகளில் பெரும்பாலானவையும் தமிழ்நாட்டு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகத் தின் மேலாண்மையின்கீழ் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை மிக அதிக மாக உள்ளதால், அவற்றின் பட்டியலைத் தருவது கடினமானதாகும். இக் கழகத்தின் மேலாண்மையிலிருந்து நீக்கி விடப்பட்ட பதவிகள், தமிழ் நாட்டுப் பணிகள் நடைமுறை நூல், 1-ம் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள, 1954-ம் ஆண்டு தமிழ்நாட்டு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழக ஒழுங்கு முறை விதிகளின் 1-ம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

*Domestic servants in Madras City*

47 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether the Commissioner of Police has suggested to the residents of the Madras City to furnish to him the addresses of their servants ; and

(b) if so, the details thereof ?

*A.*—(a) The Inspector-General of Police has issued instructions that registration of domestic servants may be done on the request of the employers.

(b) Theft by domestic servants was found to be high in many of the towns and cities. This could be checked by registering the servants and verifying their antecedents. It is voluntary on the part of the employers to register their servants.

(அ) வீட்டுக்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது வீட்டு வேலைக்காரர்களைப் பதிவு செய்யலாம் என்று காவல்துறைத் தலைவர் கட்டளை பிறப்பித்து உள்ளார்.

(இ) பல நகரங்களில் வீட்டு வேலைக்காரர்கள் திருட்டுக் குற்றங்களில் ஈடுபடும் நிகழ்ச்சிகள் அதிகரித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. வீட்டு வேலைக்காரர்களைப் பதிவு செய்து அவர்களது முன் வரலாற்று விவரங்களை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் அத்தகைய திருட்டுக் குற்றங்கள் நடப்பதைத் தடுக்கலாம். வீட்டுக்காரர்கள் தமது வீட்டு வேலைக்காரர்களைப் பதிவு செய்யத் தாமே வந்தால் மட்டுமே அவர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

*Lady Sivasamy Ayyar Girls' High School, Madras.*

48 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the authorities of the Lady Sivasamy Ayyar Girls' High School, Mylapore, Madras have approached the Government to make it a Women's College ; and

(b) if so, the details thereof ?

*A.*—(a) and (b) No. This is a matter for the University authorities to consider.

*Cases against officials in Agriculture Department.*

49 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) with regard to the report of the Vigilance Commission—*vide* paragraph 5 under item (i) in Chapter VI, the details of (i) gazetted and (ii) non-gazetted officers in the Agriculture department whose cases were examined ; and

(*b*) the nature of the action taken in their cases ?

*A.*— (*a*) and (*b*)

| *Gazetted.* | *Non-gazetted.* | *Agriculture Department.* |
|---|---|---|
| 2 | 1 | Co-operation Department. |
| 4 | 3 | Forest Department. |

In regard to 6 gazetted officers, 3 cases have been dropped and the other 3 are still under consideration.

In respect of 4 non-gazetted officers, 2 cases have been dropped, 1 case is still under consideration and allegations against one person could not be substantiated.

| அரசிதழ் பதிவு பெற்றவர். | அரசிதழ் பதிவு பெருதவர். | வேளாண்மைத் துறை. |
|---|---|---|
| 2 | 1 | கூட்டுறவு துறை. |
| 4 | 3 | காடுகள் துறை. |

அரசிதழ் பதிவுபெற்ற 6 அதிகாரிகளைப் பொறுத்த மட்டில், 3 அதிகாரிகள் மீதிருந்த வழக்கு கைவிடப்பட்டது. மற்ற மூவர் மீதிருந்த வழக்கு இன்னும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

அரசிதழ் பதிவு பெருத 4 அலுவலர்களைப் பொறுத்த மட்டில், 2 பேர் மீதிருந்த வழக்கு கைவிடப்பட்டது. ஒரு வழக்கு மட்டும் பரிசீலனையில் உள்ளது. ஒருவர் மீது கூறப்பட்ட புகார்களை மெய்ப்பிக்க முடியவில்லை.

*Repairs to flooring while laying underground cables.*

50 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state —

Whether the Chairman of the Tamil Nadu Electricity Board has received about the 4th August 1968, complaints that the field staff of the Board do not repair the flooring while putting the underground cable in the Madras City ?

*A.*—No such complaints have been received. Repairs to flooring inside the house have to be carried out by the consumers themselves as indicated in the service connection advice slip. The repair charges are not also included in the estimate for service connection. As regards cutting on the road surface for laying cables the resurfacing is done by the Corporation and necessary deposit is paid to the Corporation by the Board well in advance.



அத்தகைய புகார்கள் எதுவும் வரவில்லை. மின்சார இணைப்பு ஆலோசனைக் குறிப்புச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மின்சாரம் பயன்படுத்துவோரே வீட்டிற்குள் தரையைச் செப்பனிடும் பணியைச் செய்து கொள்ள வேண்டும். மின்சார இணைப்புக்கான மதிப்பீட்டில் சீர் செய்யும் செலவுகள் சேர்க்கப்படவில்லை. அடிநிலக்கம்பி வடம் போடுவதற்காகச் சாலைப் பரப்பை வெட்டுவது தொடர்பாக மீண்டும் சாலையைச் சரி செய்யும் பணியை சென்னை மாநகராட்சி மேற்கொள்கிறது. முன்னதாகவே இதற்காகச் சென்னை மாநகராட்சிக்கு அவசியமான வைப்புத் தொகையை மின்சார வாரியம் செலுத்தி விடுகிறது.

*Sri Chokkeswara Temple, Kancheepuram*

51 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

Whether the Government has ordered the renovation of Sri Chokkeswara Temple in Kancheepuram ?

*A.*—No. The Government have, however, sanctioned the carrying out of certain repairs to the temple at an estimated cost of Rs. 6,400. The work is in progress.

இல்லை. ஆயினும், அர்சாங்கம் இக் கோவிலில் ரூ. 6,400 செலவில் சில மராமத்துப் பணிகளை நிறைவேற்ற ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப் பணிகள் நிறைவேறி வருகின்றன.

*Publication of Composition of Saint Thyagarajah.*

52 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state with reference to the answer to Unstarred Question No. 68, placed on the Table of the House on 29th August 1968.

(*a*) whether the Madras State Sangitha Nataka Sangam has planned the publication of the composition of Saint Thyagarajah iteslf ; and

(*b*) if not, the procedure being adopted to its publication by private parties under its patronage ?

*A.*—(*a*) and (*b*) The Sangam has already published the " Nowka Charitram " of Saint Thyagarajah at its cost. It proposed to publish Prahalatha Baktha Vijayam, 334 Thyagaraja Krithis and 74 Divyanama Kirthanas which are under the scrutiny of the expert artists of the Sangam. The Sangam sanctioned a grant of Rs. 698 in 1962–63 to Prof. Thiru S. Ramanathan for publication in book form the ' Ursava Samprathaja Kirthanas ' of Saint Thyagaraja.

(அ) அண்டு (இ) ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இயற்றிய "நௌக சரித்திரம்" என்ற நூலைத் தன் சொந்த வெளியீடாக தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஏற்கனவே வெளியிட்டுள்ளது. சங்கத்தின் இசைவல்லுநர்களின் பரிசீலனையிலுள்ள பிரகலாத பக்த விஜயம் 334 தியாகராஜ கிருதிகள், 74 திவ்விய நாம கீர்த்தனங்கள் ஆகியவைகளை சங்கம் வெளியிடக் கருதியுள்ளது: இச்சங்கம் உற்சவ "சம்பிரதாய கீர்த்தனைகள்" என்னும் நூலை வெளியிடுவதற்காக பேராசிரியர் திரு. எஸ். இராமநாதன் அவர்களுக்கு 1962–63-ல் ரூ. 698 உதவித் தொகை வழங்கியது.

[1969 மார்ச் 26

*P.G. Courses in Regional Engineering College, Tirachirappalli*

53 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be placed to state withe reference to the answer to Unstarred Question No. 82, placed on the Table of the House on 29th August 1968—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to pursue the UNESCO scheme to start Oriented Post-Graduate Courses in the Regional Engineering College, Tiruchirappalli, and ;

(*b*) if not, the reasons thereof ?

*A.*—(*a*) The proposal will be pursued by the Regional Engineering College, Tiruchirappalli which is an autonomous institution.

(*b*) Does not arise.

(அ) திருச்சிராப்பள்ளி வட்டாரப் பொறியியல் கல்லூரி தன்னாட்சி உரிமை பெற்றது. இந்தச் செயற் குறிப்பு குறித்து அது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

(இ) இவ்வினா எழவில்லை.

*Lands under Cultivation.*

54 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the extent of land now under cultivation ; and

(*b*) the extent of land cultivable but not under cultivation, along the river bed of Tambaraparani river in Ambasamudram Constituency ?

*A.*—(*a*) 3,607·20 acres.

(*b*) 54·12 acres.

*Permits for puffed rice*

55 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state, with reference to the answer to Unstarred Question No. 3 placed on the floor of the House on 29th August 1968, the reasons for the refusal of grant of permits for preparation of puffed rice districtwise ?

*A.*—In Salem district, out of 10 cases, permits were refused in 9 cases on the ground that the particular variety of paddy required for the manufacture of puffed rice was not available in that district.

In Coimbatore district, out of 1,681 cases, permits were refused in 1,011 cases as they were not bonafide manufaturers of puffed and beaten rice.

பொரி செய்வதற்கு வேண்டிய குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நெல் சேலம் மாவட்டத்தில் கிடைக்கவில்லையென்ற காரணத்தால், அம்மாவட்டத்தில் அனுமதிச் சீட்டுகளாக விண்ணப்பித்துக் கொண்ட 10 பேரில், 9 பேருக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படவில்லை.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், அனுமதிச் சீட்டு கோரி 1,681 பேர் விண்ணப்பித்துக் கொண்டனர். அவர்களில் 1,011 பேருக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படவில்லை. பொரி, அவல் தயாரிப்பதில் உண்மையில் அவர்கள் ஈடுபடாததே இதற்குக் காரணம்



1969 மார்ச் 26]

*Central Schools in Tamil Nadu.*

56 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of schools run by the Central Schools Organisation in this State and their location ; and

(*b*) the subjects prescribed for students?

*A.*—(*a*) Eight schools. They are—

1. Kendriya Vidyalaya (Central School), Red Fields Coimbatore-12

(2) Central School, Air Force Station, Avadi P.O., I.A.F. Madras-55.

(3) Central School, Heavy Vehicles Factory, Avadi, Madras-54.

(4) Central School, C/o Indian Institute of Technology, Madras-36.

(5) Adarsh Central School, 24, Royapettah High Road, Madras-14.

(6) Central School, Tambaram, I.A.F. Madras-46.

(7) Central School, Madurai-9.

(8) Central School, Thennur, Tiruchirappalli.

(*b*) These Central Schools prepare students for the All-India Higher Secondary Education of the Central Board of Secondary Education, New Delhi. Details of the subjects prescribed are not available.

(அ) எட்டுப்பள்ளிகள், அவையாவன :—

(1) கேந்திரிய வித்யாலயா (மத்தியப் பள்ளி) ரெட் பீல்ட்ஸ், கோயம்புத்தூர் 12

(2) மத்தியப் பள்ளி, விமானப்படை நிலையம், ஆவடி அஞ்சல், இந்திய விமானப்படை, சென்னை-54.

(3) மத்தியப் பள்ளி, கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி, சென்னை-54.

(4) மத்தியப் பள்ளி, மேற்பார்வை இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-36.

(5) ஆதர்ச மத்தியப் பள்ளி, 24, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை-14.

(6) மத்தியப் பள்ளி, தாம்பரம், இந்திய விமானப்படை, சென்னை-46.

(7) மத்தியப் பள்ளி, மதுரை-9.

(8) மத்தியப் பள்ளி, தென்னூர், திருச்சிராப்பள்ளி.

(இ) புது டில்லி, இடை நிலைக் கல்விக்கான மத்திய வாரியத்தின் அனைத்திந்திய இடைநிலைக் கல்விக்காக மாணவர்களை இந்த மத்தியப் பள்ளிகள் தயார் செய்கின்றன. இப்பள்ளிகளில் படிக்க வேண்டிய பாடங்கள் குறித்த விவரங்கள் கிடைக்கவில்லை.

*Books published during World Tamil Conference.*

57 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

whether the Government have permitted all the Panchayat unions to purchase the books published in connection with the World Tamil Conference held at Madras in 1968?

*A.*—Yes. Panchayat Unions were permitted to purchase the books brought out in connection with the World Tamil Conference subject to the availability of funds.

ஆம். உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி வெளியிட்ட புத்தகங்களை ஊராட்சி ஒன்றியங்கள் நிதி வசதியைப் பொறுத்து வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

*Contracts entered into by Directorate of Industries and Commerce.*

58 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

the details of contracts for the supply of goods, entered into by the Industries and Commerce Directorate with Thiru Binny and Company during 1967–68 ?

*A.*—No contracts for the supply of goods, have been entered into by the Industries and Commerce Directorate with Thiru Binny and Company during 1967–68.

தொழில் வாணிகத்துறை சாமான்கள் வழங்குவதற்கான ஒப்பந்தம் எதிலும், திரு. பின்னி அண்டு கம்பெனியுடன் 1967–68-ஆம் ஆண்டில் ஈடுபடவில்லை.

*Representations from N.G.G.Os.*

59 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

whether the representatives of the N.G.G.O.s met him about 25th July 1968 ?

*A.*—Yes. The representatives of the N.G.G.Os met the late Chief Minister on the 25th July 1968.

ஆம். அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களின் பிரதிநிதிகள் மறைந்த முதலமைச்சரை 1968-ம் ஆண்டு ஜூலை 25-ம் நாள் சந்தித்தனர்.

*Advisory Council for Physically Handicapped.*

60 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

the names of the members of Advisory Council for the Physically Handicapped attached to the employment Exchange for the Physically Handicapped for the year 1967–68 ?

*A.*—The names of the present members of the Advisory Committee for the Special Employment Office for Physically Handicapped are—

*Chairman.*—Director of Employment and Training, Madras.

*Members*—

I. *Employers' Representatives*—

1. Secretary, Employers, Federation of South India, Madras-1.
2. Chairman, Amalgamations Limited, Madras-2, or his nominee.
3. Secretary, South India Mill Owners, Association, Coimbatore.



II. *Workers' Representatives*—

1. General Secretary, Indian National Trade Union Congress. Tamilnad Branch.
2. All India Trade Union Congress (Thiru K. M. Sundaram)
3. Thiru A. N. Parasuram, Principal Miner TutorialCollege, Madras-8.

III. Representatives of the Department of Social Welfare and Ministry of Labour and Employment.

IV. Representatives of voluntary organisations dealing with the welfare of physically handicapped.

1. Chairman, Mylapore Round Table No. 3.
2. Dr. Mary Varghese, Christian Medical College Hospital, Vellore.

V. *State Government representatives*—

1. Secretary to the Government of Tamil Nadu, Education Department or his nominee.
2. Deputy Secretary to Government (Planning) Rural Development and Local Administration Department, Madras-9.
3. Director of Women's Welfare, Madras.
4. Principal, Government School for the Blind, Poonamallee.
5. Director of Medical Services or his nominee.

VI. *Medical Specialists*—

1. Dr. T. T. Ramalingam, Former Superintendent, Government Ophthalmic Hospital, Madras.
2. Dr. M. Natarajan, Orthopaedic Surgeon, Government General Hospital, Madras.

*Secretary.*—Assistant Director, Employment Office for Physically Handicapped, Madras.

உடல் ஊனமுற்றோருக்காக உள்ள தனிப்பட்ட வேலை வாய்ப்பகத்தின் ஆலோசனைக் குழுவில் கீழ்கண்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர் :—

குழுத்தலைவர்—வேலை வாய்ப்புப் பயிற்சி நிலைய இயக்குநர், சென்னை

உறுப்பினர்கள்

I. தொழிலதிபர்களின் பிரதிநிதிகள்—

1. செயலாளர், தென்னிந்திய தொழிலதிபர் கூட்டணி, சென்னை-1.
2. தலைவர், அமால்கமேஷன்ஸ் லிமிடெட், சென்னை-2 அல்லது அவரால் நியமித்தனுப்பப்படுபவர்.
3. செயலாளர், தென்னிந்திய ஆலை அதிபர் சங்கம், கோயம்புத்தூர்.

II. பணியாளர்கள் பிரதிநிதிகள்—

1 பொதுச் செயலாளர், இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ், தமிழ்நாடு கிளை.

2 அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் (திரு. கே. எம். சுந்தரம்).

3 திரு. ஏ. என். பரசுராம், முதல்வர், மினர்வா டியூடோரியல் கல்லூரி, சென்னை-8.

III. சமுதாய நலத்துறை தொழில் வேலை வாய்ப்பு அமைச்சகப் பிரதிநிதிகள்.

IV. உடல் ஊனமுற்றோரின் நலனுக்காக தொண்டு முறையில் பாடுபடும் நிறுவனங்களின் பிரதிநிதிகள்—

1. தலைவர், மயிலாப்பூர் வட்ட மேசை எண் 3.

2. டாக்டர் மேரி வர்கீஸ், கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, வேலூர்.

**V. தமிழ்நாடு அரசாங்கப் பிரதிநிதிகள்—**

1. தமிழ்நாடு அரசாங்கச் செயலாளர், கல்வித் துறை அல்லது அவரால் நியமித்தனுப்பப்படுபவர்.

2. அரசாங்க துணைச் செயலாளர் (திட்டமிடல்), கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறை, சென்னை-9.

3. மகளிர் நலத்துறை இயக்குநர், சென்னை.

4. முதல்வர், கண்ணிழந்தோருக்காக அரசாங்கப்பள்ளி, பூவிருந்தவல்லி.

5. மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் அல்லது அவரால் நியமித்தனுப்பப்படுபவர்.

**VI. மருத்துவ வல்லுநர்கள்—**

1. டாக்டர் டி. டி. ராமலிங்கம், முன்னாள் கண்காணிப்பாளர், அரசாங்கக் கண் மருத்துவ மனை, சென்னை.

2. டாக்டர் எம். நடராஜன், முடநீக்கியியல் மருத்துவர், அரசாங்கப் பொது மருத்துவ மனை, சென்னை.

செயலாளர் :

உதவி இயக்குநர், உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பகம் சென்னை.

### *Commutation by Pensioners.*

61 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

the details of living—

(i) Gazetted and

(ii) non-Gazetted Officers.

who have commuted their pensions in this State before 1945?

*A.*—(i) The total number of living Gazetted Officer-Pensioners who have commuted their pensions before 1945, is 48.

(ii) The total number of living non-Gazetted Officer pensioners, who have commuted their pensions before 1945, is 244.

(அ) தற்போது வாழ்ந்து வருபவர்களும் 1945-ம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வூதியத் தொகையை மொத்தத் தொகையாக மாற்றியவர்களுமாகிய அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 48.

(இ) தற்போது வாழ்ந்து வருபவர்களும் 1945-ம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வூதியத் தொகையை மொத்தத் தொகையாக மாற்றியவர்களுமாகிய அரசிதழ் பதிவுபெறாத அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 244.



### *Uniform for Students.*

62 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

whether there is any proposal to direct a uniform dress for school and college students in this State ?

*A.*—There is no compulsory scheme.

கட்டாயப்படுத்தும் திட்டம் இல்லை.

### *Contracts entered into with English Electric Company.*

63 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

the details of the contracts handed over to the English Electric Company, Limited, by the State Electricity Board during 1967–68.

*A.*—The following orders were placed by the Tamil Nadu Electricity Board on English Electric Company of India, Limited, Madras during 1967–68 :—

| *Serial number and date of purchase order.* | *Description of materials ordered.* | *Value of the order.* |
|---|---|---|
| | | RS. |
| 1. 27th September 1967. | 1 No. 3″ Buchholz relay .. .. | 880 |
| 2. 28th September 1967. | Spares for Turbo alternator sets at Basin Bridge Power House. | 59,400 |
| 3. 28th March 1968 | Spares for Turbo alternator sets at Basin Bridge Power House. | 3,650 |

மாநில மின்சார வாரியம் கீழ்க் கண்டவற்றை வழங்குமாறு 1967-68-ல் இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி, இந்தியா, லிமிடெட் என்கிற நிறுவனத்திற்கு ஆணை அனுப்பியுள்ளது :—

| தொடர் எண்ணும் கொள்முதல் செய்யப்பட்ட ஆணை தேதியும். | வழங்குமாறு ஆணை அனுப்பிய பொருள்களின் விவரம். | அதன் மதிப்பு. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் தேதி. | பெரிய அளவிலான மின்சாரத்தைச் சிறிய அளவிலான மின்சாரத்தைக் கொண்டு கட்டுப்படுத்தும் 3 அங்குல முள்ள புக்கோல்ஸ் செயல் கருவி ஒன்று. | 880 |
| 2. 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ம் தேதி. | பேசின் பாலம் மின் நிலையத்தின் மாற்றுச் சுழல் தட்டு யந்திரங்களுக்கான உதிரி உறுப்புகள். | 59,400 |
| 3. 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28-ம் தேதி. | பேசின் பாலம் மின் நிலையத்தின் மாற்றுச் சுழல் தட்டு யந்திரங்களுக்கான உதிரி உறுப்புகள். | 3,650 |

[1969 மார்ச் 26

*Theft in Thanjavur Medical College Hostel.*

64 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether any burglary was reported to the local police by the inmates of the Women's Hostel, Thanjavur Medical College about 19th August 1968 ?

*A.*—Yes.

ஆம்.

*Excavations at Korkai*

65 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

whether excavations at Korkai near Tiruchendur are to be undertaken y the Archaeology Department of the State shortly ?

*A.*—The State Department of Archaeology has taken up the excavations work at Korkai near Tiruchendur on 10th October 1968.

திருச்செந்தூர் அருகேயுள்ள கொற்கையில், மாநிலப் புதைப்பொருள் ஆராய்ச்சித் துறை 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி அன்று நில அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

ஸ்பிரிட் ஒதுக்கீடு

66 வினு—திரு கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 1964-65, 1965-66, 1966-67 ஆண்டுளில் எத்தனை லிட்டர் spirit ஒதுக்கப்பட்டுள்ளது ?

விடை—சாராயம் (spirit) மாவட்ட வாரியாக ஒதுக்கப்படுவதில்லை. அவ்வாறிருக்க, இங்குக் குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் செங்கற்பட்டு மாவட்டத்திற்குச் சாராயம் ஒதுக்கப்பட்டதுப்பற்றிய கேள்வி எழவில்லை.

No district-wise allotment of spirit is made. As such, the question of allotment of spirit made to Chingleput District for the years referred to therein does not arise.

வட்டார மருத்துவ நிலையங்கள்

67 வினு—திரு கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுச் சுகாதார-அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுராந்தகம் வட்ட தலைமை மருத்துவ நிலையம் கட்டப்படுவதற்கான திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ரூபாய் எவ்வளவு ?

(உ) இந்தக் கட்டட வேலை எப்போது முடியும் ?

விடை—(அ) & (உ): மதுராந்தகம் வட்டத் தலைமை மருத்துவ நிலையத்தில் 24 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இதற்காக இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை.



1969 மார்ச் 26]

68 வினு—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுச்சுகாதார—அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கள்ளக்குறிச்சி வட்டத் தலைமை மருத்துவ மனைக்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு ?

(இ) எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—(அ) தொகை எதுவும் ஒதுக்கப்படவில்லை.

(இ) சுமார் ரூ. 90,000 மதிப்பில் 16 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று கட்டும் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் (1970-71) பரிசீலனைக்காக ஒத்திபோடப்பட்டுள்ளது.

பாலங்கள்

69 வினு—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா:—

கிழக்கு கடற்கரை சாலையில் அடையாளச்சேரி, பரமங்கேணி, முட்டுக்காடு ஆகிய இடங்களில் பாலங்கள் கட்ட ஒதுக்கி இருக்கிற ரூபாய் எவ்வளவு ?

விடை—அடையாளச்சேரி, பரமங்கேணி, கோவளம் என்கிற இடங்களில் பாலங்கள் கட்டுவதற்காக முறையே ரூபாய் 1,60,000, ரூபாய் 3,94,000, ரூபாய் 25,00,000 ஒதுப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் குறிப்பிடும் முட்டுக்காடு பாலம் கோவளத்தில் கட்டப்படும் பாலத்தைத்தான் குறிக்கிறது.

A provision of Rs. 1,60,000, Rs. 3,94,000, and Rs. 25,00,000 have been made for the construction of bridges at Adayalacheri, Paramankeni and near Kovaam respectively. The bridge at Muthukadu referred to in the question is the same as at Kovalam.

*Fire Accidents*

70 *Q.*—THIRU S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Finance be pleased to place on the Table of the House a paper containing the following details regarding the fire accidents in Madras City from the date of inception of the present Government—

(*a*) the number of fire accidents monthwise;

(*b*) the details of places where accidents occurred;

(*c*) number of dwelings that have been affected;

(*d*) number of persons fallen victim:

(*e*) the total amount of loss that has been suffered; and

(*f*) the steps taken to rehabilitate the affected persons.

*A.*—A statement * is placed on the table of the House.

பேரவை முன் விவர அறிக்கை *ஒன்று வைககப்பட்டுள்ளது.

*Conference of Police Officials*

71 *Q.*—THIRU K. VINAYAGAM.
THIRU V. K. KOTHANDARAMAN } Will the Hon. the Chief Minister be plased to state—

(*a*) whether it is a fact that an annual Police Officials' Conference was held in Tiruchirappalli during the month of August 1967.

* Printed as Appendix on pages 576–580.

(*b*) if so the subject discussed; and

(*c*) whether the Government would place a record of the proceedings on the table of the House?

A.—(*a*) Yes.

(*b*) Subjects elating to the administration of the Poiice Department were discussed at the Conference.

(*c*) It is not possible to place on the table of the House a record of the proceedings of the conference.

(அ) ஆம்.

(இ) காவல் துறையின் அன்றாட நிர்வாகம்பற்றிய செய்திகள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டன.

(உ) மாநாட்டு நடவடிக்கைக் குறிப்புகளை மன்றப் பேரவைமுன் வைப்பதற்கில்லை.

*Canes for Blind*

72 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether white canes were distributed to 25 blind persons of Government School for the Blind at Poonamallee by the United States Consul-General; and

(*b*) if so, the purpose of these canes?

*A.*—(*a*) Yes.

(*b*) The canes are meant to identify the blind so that the persons who have good eye-sight will know that the persons carrying white canes are blind and so need help.

(அ) ஆம்.

(இ) பார்வையுள்ளவர்கள், இவ்வெண்ணிறத் தடிகளை வைத்திருப்பவர்கள் கண்ணற்றவர்கள் என்று பார்த்தவுடன் அடையாளம் கண்டு கொண்டு உதவ இத்தடிகள் பயன்படுகின்றன.

*Purchase of potatoes*

73 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) did the Government incur any loss in the transaction of purchase and distribution of potatoes to the people during April 1966;

(*b*) if so, how much; and

(*c*) who was responsible for such loss?

*A.*—(*a*) Yes.

(*b*) Rs. 6,34,164·32 P. (Rupees six lakhs thirty four thousand one hundred and sixty four and paise thirty-two only.)

(*c*) The matter is under the consideration of Publlc Accounts Committee.





(அ) ஆம்.

(இ) ரூ. 6,34,164·32 (ஆறு லட்சத்து முப்பத்து நான்கு ஆயிரத்து நூற்று அறுபத்தி நான்கு ரூபாயும் முப்பத்தி இரண்டு காசுகளும்).

(•) பொது கணக்குக் குழு இதைப் பரிசீலனை செய்து வருகிறது.

*Death of Child in Presentation Convent Madras*

74 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any representation was made to the Hon. the Education Minister on 12th July 1968 by the parents of the child who died inside the school premises of the Presentation Convent, Mount Road, Madras on 1st July 968; and

(*b*) if so, the action taken thereon?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தமிழ் நாட்டுக்கு அரிசி இறக்குமதி**

75 வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி, திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு உணவு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1967-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆந்திரா மாநிலத்திலிருந்து நமது மாநிலத்திற்கு பச்சை, புழுங்கல் அரிசி முறையே என்னென்ன விலையில், எவ்வளவு டன்கள் இறக்குமதி செய்யப்பட்டன?

(இ) 1967-ம் ஆண்டு முடிவுக்குள் மேலும் எவ்வளவு டன்கள் இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது?

(உ) சென்னை நகரத் தேவையை ஆந்திரத்திலிருந்து வரும் அரிசி பூர்த்தி செய்துவிடுமா?

விடை.—(அ) 1967-ம் ஆண்டு மார்ச் திங்களில் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து 168 டன் பச்சரிசி மட்டுமே ஒரு குவிண்டால் ரூ. 77·95 என்ற கிடங்கு விலை வீதப்படி இறக்குமதி செய்யப்பட்டது. இதில் விற்பனை வரி அடங்கவில்லை.

(இ) 1967-ம் ஆண்டில் எஞ்சியுள்ள திங்களில் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து 13,350 டன் பச்சரிசி வந்தது.

(உ) ஆந்திரப் பிரதேசத்திலிருந்து இறக்குமதி செயப்பட்ட மேற்சொன்ன அளவுள்ள பச்சரிசி சென்னை மாநகரத்தின் தேவைக்குப் போதுமானதல்ல.

(*a*) A quantity of 168 tonnes of raw rice only was imported from Andhra Pradesh during the month of March 1967, at an ex-depot price of Rs. 77·95 per quintal (exclusive of sales tax).

(*b*) A quantity of 13,350 tonnes of raw rice was received from Andhra Pradesh during the remaining months of the calendar year 1967.

(*c*) The above quantities of raw rice imported from Andhra Pradesh were not sufficient to meet the requirements of Madras City.

## கேரளத்திற்கு அரிசி விநியோகம்

76 வினா.—திரு எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு உணவு-வேளாண்மைதுறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் அண்டு அக்டோபர் திங்களில் கேரள அரசாங்க உணவமைச்சர் அரிசி கோரி நமது அரசாங்கத்தை கேட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் ஒப்புதல் விபரம் என்ன ?

விடை.—(அ) ஆண்டு (ஆ) கேரளாவிற்கு அரிசி அனுப்புவது குறித்து 1967-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25-ம் நாளில் கேரள உணவு அமைச்சர் தமிழ்நாட்டு முதலமைச்சருடன் விவாதித்தார். 1967- ஆண்டு நவம்பர் திங்களில் கேரளாவுக்கு 3,000 டன் அரிசி அனுப்புவதற்கு இந்த அராங்கம் ஆணை பிறப்பித்தது. 1967-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் மேலும் 10ச,000 டன் அரிசி அனுப்புவதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(*a*) and (*b*) On 25th November 1967, the Kerala Food Minister had a discussion with Chief Minister of Madras for movement of rice to Kerala. This Government issued orders for the release of 3,000 tonnes of rice to Kerala State in the month of November 1967. Subsequently orders have also been issued for the release of another quantity of 10,000 tonnes of rice to Kerala State in the month of December 1967.

## திருச்சிராப்பள்ளியில் புதிய உயர்நிலைப்பள்ளிகள்

77 வினா.—திரு. வை, சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

1967-68-ல் திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களில் உயர் நிலைப்பள்ளிகள் தனியார் துறையிலும் அரசுத் துறையிலும் துவக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

விடை.—தனியார் துறை—இல்லை.

அரசுத் துறை—(1) வேட்டன் விடுதி, (2) அம்பிகாபுரம், (3) டி. களத்தூர், (4) கூத்தூர், (5) திருக்களம்பூர், (6) கோவில்பட்டி, (7) தேனேரிப்பட்டி, (8) மலையாடிப்பட்டி, (9) மேல் சிவபுரி, (10) கருங்குளம்.

*Under Private Agency*—Nil.

*Under Government*—(1) Vettanviduthi, (2) Ambikapuram (3) T. Kalathur, (4) Kuthur, (5) Thirukkalampur, (6) Kovilpatti, (7) Theneripatti, (8) Malayadipatti, (9) Melasivapuri and (10) Karungulam.

## *Repatriates from Ceylon*

78 *Q.*—THIRU T. MARTIN : Will tho Hon. the Minister for Finance be pleased to state—

whether there is any proposal to supply nylon fishing nets to Ceylon repatriates who are fishermen ?

*A.*—A proposal to rehabilitate Ceylon repatriates by training them in mechanised fishing and to supply boats and synthetic twin has been forwarded to the Government of India, for approval and financial assistance.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளின் மறுவாழ்வுக்காக அவர்களுக்கு விசைப்படகு மீன் பிடி பயிற்சி அளித்து, அப்பால் படகுகளும், செயற்கை முறுக்கு நூல்களும் வழங்கும் திட்டம் மத்திய அரசின் அங்கீகாரத்திற்காகவும் நிதி உதவிக்காகவும் அனுப்பப்பட்டிருக்கிறது.



## சென்னை செய்தி

79 வினா.— திரு. டி. மார்டின் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 டிசம்பர் (Madras Information) என்ற அரசாங்க வெளியீட்டில் அட்டைக் கவரிலுள்ள உலகத் தமிழ் மாநாட்டின் சின்னம் முழுவதும் ஆங்கில சொற்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை.—(அ) ஆம். அரசாங்க வெளியீடான சென்னை செய்தியின் (Madras Information) 1967 டிசம்பர் இதழில் அட்டைப் படத்தில் உலகத் தமிழ் மாநாட்டு சின்னத்தில் முதலில் முழுவதும் ஆங்கில சொற்களை எழுதி அச்சிடப்பட்டது.

(இ) ஆனால் பின்னர் தமிழ் மாநாட்டுச் சின்னம் தமிழிலேயே இருக்கவேண்டும் என்பதால் தமிழ் சொற்களுடன் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

## குலசேகரன் பட்டினத்தில் வரலாற்று பொருள் குறித்து ஆய்வு.

80 வினா.— திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள குலசேகரப் பட்டினம் பகுதியில் பண்டைக் காலத்து தமிழர் நாகரீகம், பண்பாடு, கலை பற்றிய வரலாற்று ஏடுகள், நாணயங்கள் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் உள்ளனவா என்று ஆய்வு செய்ய தமிழக அரசில் தற்சமயம் ஏதேனும் செயற் குறிப்பு உண்டா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை.—(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

## *Strike by Students of Industrial School at Dindigul.*

81 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether the students of the T.E.L.C. Industrial School at Dindigul in Madurai district were attacked by some people in their hostel on 10th April 1968 ; and

(*b*) If so, the details thereof ?

*A.*—(*a*) No incident occurred on 10th April 1968.

(*b*) Does not arise.

(அ) 10—4—1968-ல் எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானக் கருவிகளுக்கான மானியம்

82 வினா—திரு எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் முதல் 1967 மார்ச்சு மாதம் 30-ம் தேதி வரை மத்திய அரசு உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான கருவிகள் வாங்குவதற்கென மான்யமாக தொகை ஏதேனும் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை ?

(உ) கொடுக்கப்பட்ட தொகைக்காக விஞ்ஞான கருவிகள் காண்ட்ராக்ட்டு மூலமாக வாங்கப்பட்டதா, அல்லது நேரடியாக வாங்கப்பட்டதா ?

விடை.—(அ) ஆம்.

(இ) ரூ. 11·66 லட்சம்.

(உ) தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளனைத்தும் கண்ணாடிக் கருவிகளை இண்டியில் உள்ள விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தொழிற்சாலையிலிருந்து வாங்க வேண்டும் என்றும், அரசாங்கப் பள்ளிகளும் வாரியப் பள்ளிகளும் தமக்குத் தேவையான மேசை, நாற்காலி முதலியவற்றை சிறைச்சாலைத் துறை முதலியவற்றின் அரசாங்க மரவேலைத் தொழிற் பிரிவுகளிலிருந்து வாங்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. பள்ளி நிர்வாகிகள் ஏனைய விஞ்ஞானக் கருவிகளை, ஒப்பந்தப் புள்ளிகளையும் ஒப்பந்தத் தொகை விவரங்களையும் வரவழைப்பதற்கான நடைமுறையைப் பின்பற்றிய பிறகு, வெளிச் சந்தையிலிருந்து வாங்குகின்றனர்.

(a) Yes.

(b) Rs. 11·66 lakhs.

(c) The glassware articles were ordered to be purchased by all the selected schools from the Scientific glass Apparatus Factory, Guindy. Government and Board Schools were ask d to pu chase articles of furniture from the Government Wood Working Units Jail Department etc. The other scientific equipments are purchased by the Managements from the open m rket after following the procedure of inviting tenders and quotations.

### *Inclusion of Madaloor tank in Manimuthar Scheme.*

83 *Q.*—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) Whether there is any proposal to include Kallanputhukulam Tank in Madaloor village in Sathankulam Panchayat Union Council area in Tirunelveli district under the Manimuthar Scheme ; and

(*b*) if so, the details thereof ?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

### *Incidents of drowning in sea.*

84 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

The number of drowning tragedies that occurred in the sea between Royapuram and Elliots Beach at Adyar, during 1967-68 ?

*A.*—There were sixteen incidents of drowning tragedies.

பதினாறு பேர் மூழ்கி இறந்தனர்.



### *Tribal Show in Nilgiris.*

85 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state —

The details of the Tribal show conducted by the Nilgiris Tourist Traffic Advisory Committee on the 18th May 1968 ?

விடை.—" நீலகிரியின் நடனங்கள்" (Dances of the Niligiris) என்பவை நீலகிரி சுற்றுலா வளர்ச்சி அறிவுரைக் குழுவால் நடத்தப்பட்டன. இந்த நடன நிகழ்ச்சியில், 50 கோடர்கள், 30 தோடர்கள், 60 படகர்கள் ஆகிய மலைக்குடி மக்கள் பங்கெடுத்தனர். மலைக்குடி மக்கள் அழகிய ஆடவர் பெண்டிர் தேர்வும், சில விளையாட்டுகளும் நடைபெற்று, பரிசு வழங்கப்பட்டது.

### *Kerosene scarcity in Madurai*

86 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

Whether the Government are aware of the Kerosene scarcity in Madurai district ?

*A.*—During the third week of April 1968 there was some paucity of Kerosene in Madurai City. This was mainly due to want of wagon supply. The position had improved subsequently and normalcy has been restored.

1968-ம் ஆண்டு எப்ரல் மூன்றாம் வாரத்தில் மதுரைநகரில் மண்ணெண்ணெய்க்கு ஓரளவு தட்டுப்பாடு இருந்தது. மண்ணெண்ணெய் எடுத்து வரும் வண்டிகள் வேண்டிய அளவில் இல்லாததே இதற்குக் காரணமாகும். அதன் பின்னர் நிலைமை சீர்திருந்தி மண்ணெண்ணெய் தாராளமாகக் கிடைத்து வருகிறது.

### *Cases of food poison in School for Blind, Poonamallee*

87 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether a number of food poison cases have been reported by the authorities of the Government School for the Blind, Madras about the 3rd March 1968 ; and

(*b*) if so, the details thereof ?

*A.*—A case of food poisoning involving 95 persons was reported by the authorities of the Government School for the Blind, Poonamallee, Madras on 3rd March 1968.

On 3rd March 1968 the hostel inmates of the Blind School, Poonamallee numbering about 300 were supplied with rice, soyabeans sambar with cabbage at about 7 p.m. After some time some of them developed nausea, giddiness and purging. Ninety-five pupils were admitted to the Government General Hospital, Madras and all preventive measures were undertaken. There was no danger to th life of anyone. Samples of food stuffs and the sampl s of soyabeans powder used in the preparation of food were sent to the Government Analyst, Guindy, for analysis and they were found to be free from chemical poisons.

(அ) சென்னை, பூவிருந்தவல்லி, குருடர்க்கான அரசாங்கப் பள்ளியின் அதிகாரிகள் 3—3—1968-ல் உணவில் நச்சுக் கலப்பு ஏற்பட்டதனால் 95 பேர் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

(இ) பூவிருந்தவல்லி, குருடர் பள்ளியின் மாணவர் இல்லத்தில் உறைபவர்கள் சுமார் 300 பேருக்கு 3—3—1968-ல் இரவு சுமார் 7 மணிக்கு சோறு, சோயா மொச்சை சாம்பார், முட்டைக்கோசு பொறியல் வழங்கப்பட்டன. சிறிது நேரம் கழித்து, அவர்களில் சிலருக்கு வாந்தியும், மயக்கமும், பேதியும் ஏற்பட்டன. சென்னை, அரசாங்கப் பொது மருத்துவ மனையில் 95 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். எல்லாத் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. எவரது உயிருக்கும் ஆபத்து ஏற்பட வில்லை. உணவுப் பொருள் மாதிரிகளும் உணவுத் தயாரிப்பில் பயன் படுத்தப்பட்ட சோயா மொச்சைத் தூள் மாதிரியும் பகுப்பாய்வுக்காக, கிண்டி, அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டன. ரசாயன நச்சுப் பொருள் அவற்றில் இல்லையென்று கண்டறியப்பட்டது.

### *Applications for assignment of lands.*

88 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of land assignment applications received from the year 1965 to 1968 in Dharmapuri district, talukwar; and

(*b*) the number of applications disposed of and the number pending?

A.—

| Name of Taluks. | | Number of land assignment applications received from the year 1965 to 1968 in Dharmapuri District. (Taluk-war) | Name of applications disposed of | | Number of applications pending. |
|---|---|---|---|---|---|
| | | | Sanctioned. | Rejected. | |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| Krishnagiri taluk .. | .. | 479 | 427 | .. | 52 |
| Hosur taluk .. | .. | 659 | 308 | 312 | 39 |
| Dharmapuri taluk | .. | 1,051 | 465 | 586 | .. |
| Harur taluk .. | .. | 564 | 390 | 88 | 86 |
| Denkanikottah taluk | .. | 875 | 550 | 26 | 299 |
| Palacode taluk .. | .. | 217 | 1 | 146 | 70 |
| Uthangari taluk .. | .. | 419 | 337 | 47 | 35 |
| Pennagaram taluk | .. | 99 | 75 | .. | 24 |
| Total .. | | 4,363 | 2,553 | 1,205 | 605 |

89 வினா.—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலூக்கா தொண்டாமுத்தூர் தொகுதி பெரியநாயக்கன்பாளையம் பகுதியிலுள்ள நெ. 4 வீரபாண்டி கிராமத்திலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து கொடுக்கக் கோரி 11—5—1964-ல் மனு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?



விடை.—(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

### கோவை மாவட்டத்தில் கற்கண்டு உற்பத்தி.

90 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் கற்கண்டு உற்பத்திக்காக 1967-ம் ஆண்டு அனுமதி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) பல்லடம் வட்டத்தில் கற்கண்டு உற்பத்தி செய்வதாகச் சொல்லி அனுமதி வாங்கிய ஒருவர் மீது பொள்ளாச்சி சப்-கலெக்டர் நேரில் சென்று குற்றம் கண்டு நடவடிக்கை எடுத்தாரா?

விடை.—(அ) 7 பேர்.

(இ) பல்லடம் வட்டத்தில் கற்கண்டு தயாரிப்பதற்கென ஒதுக்கப் பட்ட சர்க்கரையைத் தவறுதலாகப் பயன்படுத்தியதாக பொள்ளாச்சி துணைக் கலெக்டர் எந்த ஒரு நேர்விலும் கண்டு பிடிக்கவில்லை.

(*a*) 7 persons.

(*b*) There was no case in which the Sub-Collector, Pollachi, detected misuse of quota allotted for the manufacture of sugar candy in Palladam taluk.

### பேரூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர்.

91 வினா.—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை தாலூகாவில் பேரூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் பேரிலுள்ள உணவுப் பங்கீட்டுக் கடையில் ஊழல் நடந்ததையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை.—பேரூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் பேரிலுள்ள உணவு பங்கீட்டுக் கடையில் சில குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் கோயம்புத்தூர் நகர உணவுப் பங்கீட்டு அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு உணவு பங்கீட்டுக் கடை நடத்த அளிக்கப்பட்டிருந்த அனுமதியை ரத்து செய்தார். அவ்வாணையை எதிர்த்து பஞ்சாயத்து யூனியன் தலைவர் மாவட்ட வருவாய் அதிகாரிக்கு அப்பீல் செய்தார். மாவட்ட வருவாய் அதிகாரி அம்மனுவைத் தள்ளுபடி செய்து நகர உணவு பங்கீட்டு அதிகாரியின் ஆணையை உறுதி செய்தார். இதன்மேல் பஞ்சாயத்து யூனியன் தலைவர் உணவு வழங்குத்துறை ஆணையாளருக்கு அப்பீல் செய்தார். அவர் மாவட்ட வருவாய் அதிகாரியின் ஆணைக்கு தற்காலிக தடை விதித்து பஞ்சாயத்து யூனியன் தலைவர் பங்கீட்டுக் கடையை நடத்த அனுமதித்தார். உணவு வழங்குத் துறை ஆணையாளர் அப்பீல் மனுவைப் பரிசீலித்து மாவட்ட வருவாய்

வெற்றிலைப் பாக்குக் கடைகள் இரண்டு, வேர்க்கடலைக் கடைகள் இரண்டு, ஒரு சலவைச் சாலை, ஒரு தச்சுப் பட்டறை ஆகியவை தீக்கிரையாயின. சாலையோர விற்பனையாளர் (ஹாக்கர்) உடைமைகளும் (பூட்சுகள்) தீயில் அழிந்தன. உயிர்ச் சேதம் எதுவுமில்லை. உடைமைகள் விரயத்தின் மொத்த மதிப்பு ரூ. 15,400 என்று மதிப்பிடப்படுகிறது. புதுக்கோட்டை, வருவாய்க் கோட்ட அதிகாரி, நிகழ்ச்சி நடந்த இடத்திற்குச் சென்று பார்த்து, தீயினால் பாதிக்கப்பட்டோருக்குத் துயர் தணிப்பு வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டார். இந்தத் தீவிபத்து தற்செயலாகவே ஏற்பட்டது என்றும், வேண்டுமென்றுஎவரும் தீ வைத்ததாகச் சந்தேகப்படுவதற்கில்லை என்றும், பட்டுக்கோட்டை தாசில்தார் அறிவித்துள்ளார். தீ விபத்தில் வீடிழந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர் 7—3—69 அன்று ரூ. 50 வழங்கினார்.

**(ஆ) வாலாஜா வட்டம், கலவை என்னும் இடத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களும் பாதிக்கப்பட்ட மக்கள் நிலையும்.**

**திரு. நா. வீராசாமி :** பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

"கடந்த 26—2—1969-லிருந்து தொடர்ந்து வட ஆற்காடு மாவட்டம், வாலாஜா வட்டம், கலவை என்னும் இடத்தில் தனியார் குடிசைக்கும், அரிசி ஆலைக்கும், அரசினர் உயர் நிலைப் பள்ளிக்கும் தீ வைக்கப்பட்டு வருவதனால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை பற்றியது."

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, the Collector of North Arcot has reported that there were fire accidents in Kalavai village in Wallajah taluk on 20th February, 2nd, 4th and 6th March 1969 resulting in destruction of sugarcane crops, tea shop, part of rice mill and the high school shed. The total value of property lost was about Rs. 5,000 out of which the school's share was Rs. 4,000. As no residential houses were involved, the question of granting cash relief did not arise.

The school shed was lost in the fire on 6th March 1969 and prior to that date, the school was running 4 sections in the shandy sheds and under the greenwood trees and 3 sections in the shed which was burnt. The Tahsildar, Wallajah and Block Development Officer, Timiri, were instructed by the District Revenue Officer to arrange for suitable accomodation to run the school. The Chief Education Officer, Vellore, is of the opinion that all the sections could be run in the temporary buildings without much inconvenience as the classes have to be run only till the first week of April 1969. He has promised to spare some amount from out of the funds available with him under Secondary Education Fund.

The Superintendent of Police, North Arcot district, visited the scene of occurrence in all the four cases on 15th March 1969. He is of the opinion that the fires which broke out on 20th February and 6th March 1969 were accidental while the fires on 2nd and 4th March 1969 were not free from mischief and in this connection, one insane Mooban, aged 25 years, son of Bomini is suspected. It is reported that 4 cases under Section 436, I.P.C., have been registered in Kalavai Police Station and the Inspector of Police, Cheyyar has taken up personal investigation in all of them. Investigation made by the Police discloses that it is not true that fires were started to divert the public in order to commit thefts as no such thefts have actually taken place. This does not appear to be any political motive as there is no faction among the political sympathisers in the village. Police patrols have been strengthened in the area to prevent further incidents.





**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, திமிரியில் இருக்கின்ற பி. டி. ஓ., தாசில்தார் இவர்கள் பள்ளிக்கூடத்தைப் பார்வை இட்டும், பள்ளியைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எரிந்துபோன கட்டடத்தைக் கட்ட அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கல்வி அதிகாரி அவர்கள் அதற்கான வேலைகளைக் கல்வி நிதியிலிருந்து செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது எவ்வளவு தூரம் நடக்கிறதோ அதை விரைவு படுத்தலாம்.

**(இ) கோவை மாவட்டத் தலைமை மருந்தகத்தில் எக்ஸ்ரே படச் சுருள் இன்மையால் நோயாளிகள் பாதிப்பு.**

**திரு. எம். பூபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"கோவை மாவட்டத் தலைமை மருந்தகத்தில் எக்ஸ்ரே பிலிம் இன்மையால் பல கொடிய நோய்களுக்கு சிகிச்சை செய்து கொள்ள இயலாமல் நூற்றுக்கணக்கான நோயாளிகள் கஷ்டப்படும் நிலை."

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, இந்திய அரசு எக்ஸ்ரே படச்சுருள் இறக்குமதியை நிறுத்திவிட்ட காரணத்தால் நாடு முழுவதிலும் இப் படச் சுருள் பற்றுக்குறை பெரிதும் இருந்து வருகிறது. இந்தியாவில் எக்ஸ்ரே படச்சுருள் தயாரிக்கும் ஒரே நிறுவனமாகிய இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் நாட்டின் தேவையில் சுமார் 50 சதவீதம் மட்டுமே வழங்குவதால் எக்ஸ்ரே படச்சுருளின் தேவையைச் சரிக்கட்ட இயலவில்லை. இதனால் கடந்த மூன்று அல்லது நான்கு மாதங்களாக அரசு மருத்துவ மனையில் படச்சுருள் பற்றுக்குறை ஏற்பட்டது ; கோயம்புத்தூர், அரசுத் தலைமையிட மருத்துவ மனையிலும் இப்பற்றுக்குறை இருந்தது. இந்திய அரசு இப்படச்சுருளை இறக்குமதி செய்யும் கொள்கையைத் தளர்த்தினால் அன்றி, அல்லது இந்துஸ்தான் புகைக்கப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் முழுத் தேவையும் நிறைவு செய்யும் வகையில் உற்பத்தியைப் பெருக்கினால் அன்றி, இந்த இடர்பாடு தொடர்ந்து நீடிக்குமெனத் தெரிகிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, இந்த பிலிம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டும், வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுவதால் மத்திய சர்க்காரை வற்புறுத்தி, நம் நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில், பல மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே இல்லாத நெருக்கடியைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுககுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, இந்தத் தட்டுப்பாடு நம் மாநிலத்தில மட்டுமல்லாமல், அகில இந்தியாவிலும் இருப்பதை மத்திய சர்க்கார் அறியும். உதகையில் இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனியிலிருந்து 50 சதவீதம் கொடுப்பதோடு, மேலும் அவர்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டால், அது பூர்த்தி செய்யப்படும். அதோடு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதையும் தளர்த்தினால், நலமாக இருக்கும். அந்த வகையில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

[1969 மார்ச் 26

அதிகாரியின் ஆணையை மாற்றி பஞ்சாயத்து யூனியன் தலைவர் செலுத்தியுள்ள காப்பு வைப்புத் தொகையை (டிபாசிட் பணத்தை) மட்டும் பறிமுதல் செய்து உணவுப் பங்கீட்டுக் கடையை மீண்டும் அவரே நடத்த அனுமதி அளித்துள்ளார்.

## பூமிதான, கிராமதான நிலங்கள்

92 **வினா.**—திரு. என். சங்கரய்யா:—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்காணும் வினாவிற்கு விடை அளிப்பாரா—

தமிழகத்தில் இதுவரை கிராமதான நிலம் பூமிதான நிலம் எவ்வளவு கிடைத்துள்ளன, மாவட்டவாரியாக ?

**விடை.**—

### 1. பூமிதானம்.

| மாவட்டத்தின் பெயர். | அறிக்கையிடப் பட்ட நிலப் பரப்பு. (ஏக்கரில்). | உறுதிப்படுத் தப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்). | இதுவரை வழங்கப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| செங்கற்பட்டு .. .. | 1,673 | 1,673 | 1,144 |
| தென் ஆர்க்காடு .. .. | 1,530 | 1,515 | 1,376 |
| வட ஆர்க்காடு .. .. | 395 | 394 | 379 |
| தஞ்சாவூர் .. .. | 872 | 872 | 872 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 2,510 | 2,454 | 2,231 |
| சேலம், தர்மபுரி .. .. | 1,902 | 1,902 | 1,951 |
| ராமநாதபுரம் .. .. | 2,046 | 2,042 | 2,042 |
| திருநெல்வேலி .. .. | 2,747 | 2,731 | 1,664 |
| கோயம்புத்தூர் .. .. | 5,884 | 5,858 | 2,375 |
| மதுரை .. .. | 3,693 | 3,283 | 2,607 |
| கன்னியாகுமரி .. .. | 89 | 51 | 49 |
| நீலகிரி .. .. | 56 | 56 | .. |
| மொத்தம் .. | 23,397 | 22,831 | 16,690 |

பூதானத்திற்காகப் பெறப்பட்ட நிலங்களின் பரப்பளவு 22,831 ஏக்கராகும். எஞ்சியுள்ள நிலங்களை வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1969 மார்ச் 26]

### 2. கிராம தானம்

| மாவட்டத்தின் பெயர். | பெறப்பட்ட கிராமதானப் பத்திரங்களின் எண்ணிக்கை. | வெளியிடுவதற்காக அனுப்பப் பட்ட கிராம தானப் பத்திரங்களின் எண்ணிக்கை. | | உறுதிப்படுத்தப் பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | |
| | | எண்ணிக்கை. | பரப்பளவு (ஏக்கரில்). | எண்ணிக்கை | பரப்பளவு (ஏக்கரில்). |
| மதுரை .. .. | 1,029 | 23 | 1,119 | 15 | 669·00 |
| ராமநாதபுரம் .. | 241 | 14 | 1,928 | .. | .. |
| திருச்சிராப்பள்ளி | 177 | .. | .. | .. | .. |
| திருநெல்வேலி .. | 1,606 | 46 | 2,028 | 7 | 415·00 |
| மொத்தம் .. | 3,053 | 83 | 5,075 | 22 | 1084·00 |

| | அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை. | | மறுக்கப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை. | விசாரணை செய்யப்பட வேண்டிய பத்திரங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | (5) | | (6 | (7) |
| | எண்ணிக்கை. | பரப்பளவு (ஏக்கரில்). | எண்ணிக்கை. | |
| மதுரை .. .. | 13 | 615 | 2 | 250 |
| ராமநாதபுரம் .. | .. | .. | .. | 84 |
| திருச்சிராப்பள்ளி | .. | .. | .. | 44 |
| திருநெல்வேலி .. | .. | .. | 7 | 936 |
| மொத்தம் .. | 13 | 615 | 9 | 1,314 |

### *I. Bhoodan.*

| Name of District | Extent of acres notified | Extent in acres confirmed | Extent of acres distributed so far. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| Chingleput .. .. .. | 1,673 | 1,673 | 1,144 |
| South Arcot .. .. .. | 1,530 | 1,515 | 1,376 |
| North Arcot .. .. .. | 395 | 394 | 379 |
| Thanjavur .. .. .. | 872 | 872 | 872 |
| Tiruchirappalli .. .. .. | 2,510 | 2,454 | 2,231 |
| Salem and Dharmapuri .. | 1,902 | 1,902 | 1,951 |
| Ramanathapuram .. .. | 2,046 | 2,042 | 2,042 |

| Name of District | Extent of acres notified | Extent in acres confirmed | Exten of acres distributed so far. |
|---|---|---|---|
| (1) | (2) | (2) | (4) |
| Tirunelveli .. .. .. | 2,747 | 2,731 | 1,664 |
| Coimbatore .. .. .. | 5,884 | 5,858 | 2,376 |
| Madurai .. .. .. | 3,693 | 3,283 | 2,607 |
| Kanyakumari .. .. .. | 89 | 51 | 49 |
| The Nilgiris .. .. .. | 56 | 56 | .. |
| Total .. | 23,397 | 22,831 | 16,690 |

The extent of lands obtained for Bhoodan is 22,831 acres. Action is being taken to distribute the remaining lands.

## II. *Gramdan.*

| Name of District. | Number of Gramdan patrams received. | Number of patrams sent for publication. | | Number of patrams confirmed. | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | |
| | | Number. | Extent in acres. | Number. | Extent in acres. |
| Madurai .. .. | 1,029 | 23 | 1,119 | 15 | 669·00 |
| Ramanathapuram | 241 | 14 | 1,928 | .. | .. |
| Tiruchirappalli .. | 177 | .. | .. | .. | .. |
| Tirunelveli .. | 1,606 | 46 | 2,028 | 7 | 415·00 |
| Total .. | 3,053 | 83 | 5,075 | 22 | 1084·00 |

| Name of District. | Number declared by Government. | | Number of patrams rejected. | Number of patrams yet to be enquired. |
|---|---|---|---|---|
| | (5) | | (6) | (7) |
| | Number. | Extent in acres. | Number. | |
| Madurai .. .. | 13 | 615 | 2 | 250 |
| Ramanathapuram | .. | .. | .. | 84 |
| Tiruchirappalli .. | .. | .. | .. | 44 |
| Tirunelveli .. | .. | .. | 7 | 936 |
| Total .. | 13 | 615 | 9 | 1,314 |

93 வினு—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில் எத்தனை எக்கர் பூமிதானமாகக் கொடுக்கப்பட்டது ?



(இ) அதில் அரசாங்கத்தின் வசம் உள்ளது எத்தனை எக்கர் ?

(உ) தரிசாக எத்தனை எக்கர் உள்ளது?

**விடை**—(அ) 5,857 எக்கர் 14 செண்ட்.

(இ) தமிழ்நாட்டு நிலக்கொடை வேள்விச் சட்டத்தின்படி, பூமிதான நிலங்களை நன்கொடையாக வழங்கியவர்களின் உரிமையும், உடைமை உரிமையும் மற்றும் நிலக்கொடை வேள்வியின் காரியங்களுக்காக, தமிழ்நாட்டு நிலக்கொடை வேள்வி வாரியத்திற்கு மாற்றப்படுவதோடல்லாமல் அந்த வாரியத்திடம் நிலைபெறவும் செய்யும். எனவே, இந்த நிலங்கள் அரசாங்கத்தின் வசம் இல்லை.

(உ) 3,481 எக்கர் 66 செண்ட்.

(*a*) Five thousand eight hundred and fifty-seven acres and 14 cents.

(*b*) According to the Madras Bhoodan Yagna Act, the right, title and interest of the donors of the Bhoodan lands stand transferred to and vest in the Madras State Bhoodan Yagna Board for the purposes of the Bhoodan Yagna. Therefore these lands are not with the Government.

(*c*) Three thousand four hundred and eighty-one acres and sixty-six cents.

### முன்னுள் காங்கிரஸ் தலைவருக்குப் போலீஸ் பாதுகாப்பு

94 வினு.—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னுள் அகில இந்திய காங்கிரஸ் தலைவருக்குத் தொடர்ந்து போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில் அதனுல் ஆண்டு ஒன்றுக்கு சர்க்காருக்கு ஏற்படும் செலவு எவ்வளவு?

**விடை.**—

(அ) இல்லை

(இ) வினுவிற்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

### நிலவரி

95 வினு.—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா?

தமிழகத்தில் நில வரியாக 1967–68-ல் வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு—

**விடை.**—

| | | ரூபாயில். |
|---|---|---|
| 1 | நிலவரி நிலுவையில் வசூலான தொகை .. | 1,33,16,431 |
| 2 | நடப்பு நிலவரியில் வசூலான தொகை .. | 9,02,40,188 |
| 3 | எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் உள்ள நிலுவை வரியில் வசூலான தொகை. | 1,10,288 |
| 4 | எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் உள்ள நடப்பு வரியில் வசூலான தொகை. | 2,99,105 |

[1969 மார்ச் 26

| | | ரூபாயில் |
|---|---|---|
| 5 | இனும் விதிப்புச் சட்டத்தின்கீழ் உள்ள நிலுவை வரியில் வசூலான தொகை. | 2,71,828 |
| 6 | இனும் விதிப்புச் சட்டத்தின்கீழ் உள்ள நடப்பு வரியில் வசூலான தொகை. | 18,45,965 |
| 7 | நிலவரி கூடுதல் விதிப்பு, தண்ணீர் வரி கூடுதல் விதிப்பு ஆகியவற்றின் கீழ் உள்ள நிலுவை வரியில் வசூலான தொகை. | 13,76,264 |
| 8 | நிலவரி கூடுதல் விதிப்பு, தண்ணீர் வரி கூடுதல் விதிப்பு ஆகியவற்றின்கீழ் உள்ள நடப்பு வரியில் வசூலான தொகை. | 99,48,742 |
| | மொத்தம் .. | 11,74,08,811 |

| | | RS. |
|---|---|---|
| 1 | Amount collected under arrears of Land Revenue .. | 1,33,16,431 |
| 2 | Current collection of Land Revenue .. .. .. | 9,02,40,188 |
| 3 | Estates Abolition Act (Arrears) .. .. .. | 1,10,288 |
| 4 | Estates Abolition Act (Current) .. .. .. | 2,99,105 |
| 5 | Madras Inam Assessment Act (Arrears) .. .. | 2,71,828 |
| 6 | Madras Inam Assessment Act (Current) ... .. | 18,45,965 |
| 7 | Additional Assessment and Additional Water Cess (Arrears). | 13,76,264 |
| 8 | Additional Assessment and Additional Water Cess (Current). | 99,48,742 |
| | Total .. | 11,74,08,811 |

### செஞ்சி வட்டம், வல்லத்திற்குக் காவல் நிலையம்

96 வினு.—செஞ்சி வெ. முனுசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டத்தில் உள்ள வல்லத்தில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

விடை—இல்லை.

### அரசூர் கிராமத்திற்கு கால்நடை மருந்தகம்

97 வினு.—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு உணவு-வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் சூலூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட அரசூர் கிராமத்தில் கால்நடை ஆஸ்பத்திரி வைக்க சர்க்காருக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் என்றால், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

விடை.—(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அரசூரில் கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு தற்போது எதுவுமில்லை.

(இ) இவ்வினுவுக்கு இடமில்லை.



1969 மார்ச் 26]

(a) There is no proposal now. to start a Veterinary Dispensary at Arasur in Sulur Panchayat Union, Coimbatore district.

(b) The question does not arise.

### காட்டு யானைகளால் கொல்லப்பட்டவர்கள்

98 வினு.—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு உணவு-வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

1967-ல் காட்டு யானைகளால் கொல்லப்பட்ட நபர்கள் எத்தனை பேர்?

விடை.—ஆறு நபர்கள்.

### *Handpounding of Paddy.*

99 *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government is encouraging handpounding of paddy as a cottage industry in our State ; and

(b) if so, the details thereof ?

*A.*—(a) The handpounding of paddy is encouraged as a Village Industry by the State Khadi and Village Industries Board with major financial assistance from the Khadi and Village Industries Commission, Bombay.

(b) The units engaged in the production of handpounded rice are given the following assistance :—

(1) Financial assistance for construction of godowns and paddy drying yards and marketing depots together with implements for paddy boiling and weighing ;

(2) Liberal loans for providing share capital and working capital.

(3) Financial assistance for imparting training ; and

(4) Necessary managerial assistance.

The assistance given by the Khadi and Village Industries Commission to these units is on the same pattern as to the Industrial Co-operatives engaged in the production of handpounded rice.

மாநிலக் கதர்-கிராமத் தொழில்கள் வாரியம் பம்பாயிலுள்ள கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக் குழு அளிக்கும் பெரும்பான்மை நிதி உதவியுடன் கைக்குத்தல் அரிசித் தொழிலை கிராமத் தொழிலாக ஏற்று ஆதரவு தருகின்றது.

கைக்குத்தல் அரிசி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பிரிவுகளுக்கு அடியிற் கண்ட உதவி வழங்கப்படுகின்றது:—

1. கிடங்குகள், நெல் உலர்த்தும் கூடங்கள், விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கான நிதி உதவி, நெல்லைப் புழுங்க வைப்பதற்கும் எடை போடுவதற்குமான கருவிகளை வாங்குவதற்கு நிதி உதவி.

2. பங்கு மூலதனம், நடைமுதல் மூலதனம் குறித்து தாராளமாகக் கடன் வழங்குதல்.

3. பயிற்சி அளிப்பதற்கான நிதி உதவி.

4. அவசியமான நிர்வாக உதவி.

கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழு இந்தப் பிரிவுகளுக்கு வழங்கும் உதவி கைக்குத்தல் அரிசி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் உதவியின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

### தெய்வீகப் பேரவைக்கு சகாயத் தொகை

100 வினு.—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலைய சட்டம், 36வது பிரிவின் கீழ் நிதி மாற்றம் செய்ய ஆணையரிடம் முன் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் தெய்வீகப் பேரவையின் ஆரம்பகால முதல் 1967-ம் வருடம் அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரை நிதி மாற்றம் செய்ய சகாயத் தொகை செலுத்திய அறநிலையங்களின் விபரமும் மொத்த எண்ணிக்கையும் எவ்வளவு ?

(இ) அவ்விதம் வசூலிக்கப்பட்ட தொகையின் கூடுதல் என்ன ?

(உ) 1967-ம் வருடம் அக்டோபர் மாதம் 3-ம் தேதி வரையில் என்னென்ன வகையில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது ?

விடை.—(அ) 120 கோயில்கள், கோயில்களுடன் இணைக்கப்பட்டுள்ள 10 கட்டளைகள், 15 மடங்கள் ஆகியவை சகாயத் தொகை செலுத்தியுள்ளன. ஏறக்குறைய எல்லா நேர்வுகளிலும் தொகை செலுத்திய பின்னரே, நிதி மாற்றுவதற்கு ஒப்பளிப்பு பெறப்பட்டது.

(இ) and (உ) பேரவைக்கு 1967-ம் வருடம் அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரை சகாயத் தொகையாக ரூ. 3,54,390 கிடைத்துள்ளது.

(*a*)—120 Temples, 10 Kattalais attached to the temples and 15 Maths, have paid contribution. In almost all the cases sanction for diversion was obtained only after actual paymant.

(*b*) and (*c*).—Cash amounting to Rs. 3,54,390 was received by the Peravai as contribution up to 31st October 1967.

### துவரங்குறிச்சி—கோசிக்குறிச்சி சாலை

101 வினு.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியையும், மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கோசிக்குறிச்சியையும் இணைக்கும் வகையில் அங்கு ஒரு சாலை அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

விடை.—(அ) திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியையும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கோசிக்குறிச்சியையும் இணைக்கும் வகையில் சாலை அமைக்கத் திட்டம் எதுவும் தற்போது ஆய்வில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### அண்ணமலை நகர் மன்றம்

102 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணமலை நகர் டவுன்ஷிப் கமிட்டியில் இருக்கும் மெம்பர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?

விடை.—(அ) ஒன்பது பேர்.

(இ) பற்றுள்ள அனைவருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(*a*) Nine

(*b*) The members are appointed with a view to give representation to all interests concerned.



[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. தகவல் கோரல்

**ஒரு வினுவிற்கு விடையளிக்கையில் உறுப்பினர் அவையில் இல்லாததால், அவர் அவைக்கு வந்த பின்னர் அவ்விடையை மீண்டும் அளிக்க கோரல்.**

**திரு. தி. தீர்த்தகிரிகவுண்டர் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார். நான் சபைக்குக் கொஞ்சம் தாமதமாக வந்த காரணத்தினுல், என் பெயரில் கொடுக்கப்பட்ட 487-ம் எண்ணுள்ள கேள்வி எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது நான் சபையில் இல்லை. அந்தக் கேள்விக்கான பதிலின் விபரம் என்ன என்று அறிவதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி அளிக்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஆகாது.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கெல்லாம் இப்பொழுது இடமில்லை.

### 3. அறிவிப்புகள்

**(அ) ஒற்றிவைப்புத் தீர்மானங்களை மறுநாளைக்கு எடுத்துக்கொள்ளல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு சோ. அழகர்சாமி, திரு. டி. மார்டின் ஆகிய இருவரும் இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை நாளைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன்.

### 4. அரசினர் தீர்மானம்

### விதி 41(3)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது என்பதைத் தளர்த்தவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 5. கவன ஈர்ப்பு

**(அ) பட்டுக்கோட்டையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல்.**

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை நகரில் 6—3—1969 அன்று நடந்த தீ விபத்தில் சிறு கடைக்காரர்கள், குடிசைகளில் வசிக்கும் ஏழைகளின் சொத்துக்கள் வீடுகள் சுமார் ஒரு லட்சம் பெறுமானமுள்ளவை சேதமடைந்துள்ளதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பட்டுக்கோட்டை நகரில் நகராட்சி எல்லையில் 6—3—1969 அன்று ஒரு தீ விபத்து ஏற்பட்டது. இதன் விளைவாக, மூன்று குடிசைகள், மூன்று தேனீர்க்கடைகள், மூன்று தையல் கடைகள், தொடக்கப்பள்ளிக் கட்டிடம் ஒன்று, ஒரு மளிகைக் கடை,

### (6) அறிக்கை அளித்தல்.

தொழில் நுட்பக் கல்வி பற்றிய பரிந்துறைகளின் மேல் அரசு எடுத்த நடவடிக்கை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU S. AGNI RAJU: Mr. Speaker, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Technical Education (Seventh Report).

### 7. 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

#### (அ) கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத்தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,48,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, to point out the dire need to increase the number of days the Legislative Assembly meets to at least one hundred days in a year, I move the cut motion standing in my names:

"That the allotment of Rs. 21,48,600 under Demand No. 6—State Legislature—be reduced by Rs. 100."

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, ஆண்டிற்கு நூறு தினங்களுக்குக் குறையாமல் சட்டமன்றம் நடத்த வேண்டுமென்பது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,48,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. அ. மாரிமுத்து :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, மாநிலத்தில் எங்கு வேண்டுமானாலும் செல்வதற்கு ரயில்வே பாசும், அரசாங்க பஸ்களில் செல்ல பாசும் கொடுக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் —என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,48,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்: :** தலைவர் அவர்களே, சட்ட மன்ற விடுதியில் உறுப்பினர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கத் தவறியது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,48,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, சட்டமன்ற பேச்சுக்களை டேப் ரிகார்டு செய்வது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,48,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



#### (ஆ) கோரிக்கை எண்—7 தேர்தல்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத்தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,04,600–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி:** ஐயா, இடைத் தேர்தல்களில் அமைச்சர்கள் பிரச்சாரம் செய்யப் போகாதிருக்கக்கோரி விவாதிக்க.

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,04,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன்.

**திரு எம். பூபதி :** தலைவர் அவர்களே, வாக்காளர் பெருமக்களின் சிரமத்தைக் குறைக்க நடமாடும் ஓட்டுச் சாவடிகள் அமைப்பதைப் பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,04,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, வாக்குப் பதிவு முறையை மாற்றி அமைப்பது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,04,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன்.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவர் அவர்களே, நடமாடும் தேர்தல் சாவடி ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்கிற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,04,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், தேர்தல்களில் வாக்களிப்பதைக் கட்டாயமாக்க வேண்டுமென்பது குறித்து விவாதிக்க,

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்கிற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,04,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்கிற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன்.

#### (இ) கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே. ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்கிற தலைப்பின்கீழ் ரூ. 4,14,58,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**DR. H. V. HANDE:** Sir, to discuss policy and point out the need to disclose assets of Ministers as well as their close relations to the House, periodically atleast once a year, I move the following cut motion.

"That the allotment of Rs. 4,14,58,100 under Demand No. 8 Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

[1969 மார்ச் 26

**திரு ஜேம்ஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் தங்கள் சொத்துக்களின் விவரங்களை சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கத் தவறியது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்கிற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 4,14,58,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** பேரவைத்தலைவர் அவர்களே, ஒவ்வொரு பிரச்சினையிலும் தீர்வு காண்பதில் கால நிர்ணயம் ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க,

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 4,14,58,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தலைமையிடப் பணியாளர்களுக்குக் குறைந்த வாடகையில் வீடுகள் வரிசை கட்டித் தர வேண்டுமென்பது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 4,14,58,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1968-ம் ஆண்டு செப்டம்பர் 19-ம் தேதி நடந்த மத்திய அரசு ஊழியர்கள் போராட்டத்தின் விளைவாகத் தமிழகத்தில் உள்ள மத்திய அரசு ஊழியர் கள்மீது போடப்பட்டுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்குவதுபற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 4,14,58,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (ஈ) கோரிக்கை எண் 33—பல்வகை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,58,01,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

THIRU N. S. V. CHITHAN: Sir, to discuss policy, I move the following cut motion :—

"That the allotment of Rs. 5,58,01,300 under Demand No. 33 —Miscellaneous be reduced by Rs. 100".

DR. H. V. HANDE: Sir, to discuss policy I move the following cut motioni :—

"That the allotment of Rs. 5,58,01,300 under Demand No. 33—Miscellaneous—be reduced by Rs. 100".



1969 மார்ச் 26]

**திரு. பி. வேலுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கைதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளை மேலும் உயர்த்தக் கோரி விவாதிக்க,

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற தொகை ரூ. 5,58,01,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த எட்டயபுரம் வீட்டை அரசாங்கம் வாங்கிப் பாதுகாப்பது குறித்து விவாதிக்க,

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற தொகை ரூ. 5,58,01,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை, பர்மா, மலேயா முதலிய பிரதேசங்களிலிருந்து தாயகம் திரும்பிவரும் மக்களுக்கு உதவி புரியும் விஷயத்தைப்பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற தொகை ரூ. 5,58,01,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்குப் பேரவை முன் வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது முன்னுரையாகக் கூற விரும்பினால், உரையாற்றலாம்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அறிவித்த பிறகு, இறுதியில் நான் என்னுடைய கருத்துக்களை அறிவிப்பேன் என்று கூறி, இந்த அளவில் என் உரையை முடிக்கிறேன்.

* **திரு டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையை யொட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை அவையில் வைக்க விரும்பு கிறேன். ஜனநாயக அடிப்படையில் நாம் பாராளுமன்ற முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பாராளுமன்ற ஆட்சி முறையில் ஆளும் கட்சி என்றும், எதிர்த்தரப்பில் எதிர்க்கட்சி என்றும் இரண்டு அமைப்புகள் இருப்பதைக் காண்கிறோம். ஆளும் கட்சி "ஆட்சி" என்ற தேரை ஓட்டிச் செல்கின்றபொழுது, அந்தத் தேர் ஜனநாயக முறையில் செல்கிறதா, ஓடிக்கொண்டிருக்கிற நேரத்தில் அது ஜனநாயக மரபுகளைக் கொலை செய்கிறதா. அந்தத் தேரை ஓட்டுகின்ற கரங்களும், உள்ளமும் தூய்மை பொருந்தியவையாக இருக்கின்றனவா என்பதை விழிப்போடு பார்த்து, நல்ல முறையில் தேரை நடத்துவதற்கு, நல்ல யோசனைகளைக் கூறியும், இடித்துச் சொல்ல வேண்டிய நேரங்களில் இடித்துச் சொல்லியும் எதிர்க்கட்சி பணியாற்ற வேண்டியிருக்கிறது.

எதிர்க்கட்சி ஆற்றக் கூடிய பணிகளில் மிகவும் முக்கியமானது, கேள்வி கேட்பது ஒன்றாகும். சாதாரணமாக, தங்களுடைய அலுவ லகத்தில் நூற்றுக்கு மேலான கேள்விகள் நான் கொடுத்திருந்தேன். அந்தக் கேள்விகளை தாங்கள் தங்களுடைய அதிகாரத்தின்கீழ் அனுமதித் திருந்தும், சபை கலைக்கப்பட்ட நேரத்தில் (prorogue) எல்லாம் திரும்பவும் அவைகளைப் புதுப்பித்து (renew) நோட்டீஸ் கொடுத்தும், அநேக கேள்விகள் இந்த மாமன்றத்தில் வரவில்லை. ஒரு சில கேள்விகள் வந்திருக்கின்றன. எனவே அவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நிச்சயம் கவனித்து

உறுப்பினர் கொடுத்த கேள்விகளை, தாங்கள் அனுமதித்திருப்பவைகளை மன்றத்திற்குக் கொண்டுவந்து, கேள்வி கேட்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அமைச்சர்கள் கேள்விக்குப் பதில் சொல்லும் நேரத்தில், "தனிக் கேள்வி போடலாம்" என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. இன்னும் "விவரம் இல்லை" என்று சொல்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. உறுப்பினர்கள் துணைக் கேள்விகளைக் கேட்கிறார்கள் என்ற நிலையில் கேள்வி சம்பந்தப்பட்ட பூர்வாங்கமாக சகலவிவரங்களையும் சேகரித்து இந்த அவைக்குக் கொண்டுவர வேண்டும். கூடியவரையில் "தனிக் கேள்வி போடவும்", "விவரம் இல்லை" என்ற சொற்களைத் தடுப்பதற்கு தாங்கள் நல்ல யோசனைகளை அவர்களுக்குக் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள செலவு பட்ஜெட் டிமாண்டைப் பார்த்தால் 1966–67-ல் காங்கிரஸ் இந்த ஆட்சியை நடத்திவந்தநேரத்தில் 6·44 லட்சம் ரூபாய் செலவாகி இருக்கிறது. அதற்குப் பின்பு 1967–68-ல் 10·03 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. அதற்குப் பிறகு 1968-69-ல் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது 11·99 லட்ச ரூபாயாக கூடியிருக்கிறது. மேலும் *T.A. and other allowances* பொறுத்த வரையில் 1967–68-ல் 2,29,726 ரூபாயும், 1968–69-ல் 3,23,000 ரூபாயும் செலவாகியிருக்கிறது. மற்றும் மோட்டார் வாங்குவதிலும், அவைகளைப் பாதுகாத்தல் என்ற முறையில் 1967–68-ல் 3,10,511 ரூபாயும் 1968–69-ல் 4,21,300 ரூபாயும் கணக்கில் காட்டப்பட்டிருக்கின்றன.

மற்றும் ஆபீஸ் செலவு என்ற வகையில் 1967–68-ல் 1,57,345 ரூபாய் செலவாகியிருக்கிறது. 1968–69-ல் ரூ. 1,10,000 செலவாகி இருக்கிறது. குறிப்பாக அமைச்சர்களுடைய சம்பளம் ரூ. 500. ஆனால் இந்த செலவினங்களையெல்லாம் பார்த்தால் 1966–67-ல் 6·44 லட்ச ரூபாய் இருந்தது. இது 1968–69-ல் 11·99 லட்ச ரூபாய் ஆக இருக்கிறது. இந்த அவை அருள்கூர்ந்து பார்க்க வேண்டும். குறிப்பாக ஆளும் கட்சியில் எதிர்க் கட்சியில் இருந்தவர்கள் இன்று அமைச்சர்களாக இருக்கின்ற நேரத்தில் எதிர்கட்சியில் எதிர்கட்சி தலைவர்களுக்கு ஒரு செகரடேரியட் என்று இருக்குமானால் இங்கு பேசும் உறுப்பினர்கள் தேவைப்படும்பொழுது தங்களுக்குவேண்டிய விவரங்களை அந்த செகரடேரி-யட்டிலிருந்து பெறமுடியும் என்று பேசியுள்ளார்கள். அதைக் கவனிக்கலாம்.

இன்று காலைப் பத்திரிகையைப் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டேன். அமைச்சர் அவர்களுடைய சொத்து விவரம் பத்திரிகையில் வந்திருப்பதைப் பார்த்தேன். மந்திரிகள் சொத்து விவரங்களைக் கொடுத்திருக்கிறார்களே என்று பார்த்தால் மத்திய அமைச்சர்களுடைய சொத்து விபரங்கள் பத்திரிக்கையில் வந்திருக்கின்றன. பிரதம மந்திரியின் சொத்து விவரம், திரு. பக்ருதின் அலிஅகமத், மற்றும் திரு. கரண்சிங் போன்றவர்கள் சொத்து விவரங்கள் வந்திருக்கின்றன. இந்த மன்றத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் இதுபற்றிப் பேசிய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தன் கொடுத்த விளக்கம் என்னவென்றால், "வெல்த் டாக்ஸ்" மூலம் நான் மத்திய அரசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறேன். அதனுடைய விவரத்தை எதிர் கட்சிக்காரர்கள் வாங்கிப் பார்த்துக்கொள்ளலாமே என்று கூறினார்.

உண்மையிலேயே நாம் எல்லோரும் இந்தப் பேரவையில்தான் உறுப்பினர்களாக இருக்கிறோம். பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தால் எளிதில் மத்திய அரசினிடம் இருந்து அந்தத் தகவல்களைக் கேட்டுப் பெற முடியும். ஆனால் இந்த ஸ்டேட்மெண்டை ஒருகால் மறைமுகமாகத்தான்





பெற முடியுமோ, என்னமோ, மறைமுகமாகப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறுவதற்குப் பதிலாக நாங்கள் அங்கம் வகிக்கின்ற இந்த மன்றத்திற்கு அவர்களே நேரிடையாக அளிக்க ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாக இருக்கும். குறிப்பாக அவர்கள் பேசுகின்ற போது சட்டப்பேரவையில் தலைவராக இருந்தபோது, சட்டப்பேரவை கூடும் போது ஒவ்வொரு திருக்குறளைச் சொல்லியே ஆரம்பிப்பது வழக்கம் என்று சொன்னார்கள். நானும் கவனித்து இருக்கிறேன். முதன் முதலாக இப்பேரவையைத் தொடங்குகிறபோது,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று சொல்லியே ஆரம்பித்திருக்கிறார். அதுபோல எல்லோருக்கும் முன்னோடியாக இருக்கின்ற அவர்கள், இந்தச் சொத்து விவரங்களையும் தங்களுடைய, தங்களுடன் நெருங்கிய உறவு உடையவர்களின் சொத்து விவரங்களையும் இந்தப் பேரவையில் வைத்து எல்லா அமைச்சர்களும் அவ்வாறு அளிப்பதற்கு முன்னோடியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர்கள் எல்லோரும் வைக்க வேண்டுமென்று சொல்லுங்கள் முதல். அமைச்சர் முன்னோடியாக இருக்க வேண்டுமென்று சொல்லுங்கள். ஒருவரை மட்டும் குறித்துச் சொல்லக் கூடாது.

**திரு டி. மார்டின் :** மேலும் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இப்போது நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரத்திற்கு எச்ஸ்பரஸ் பஸ்களில் பத்திரிகை பார்சலைக் கொடுத்தால் வாங்க மறுக்கிறார்கள். அதே சமயம் 'தினத்தந்தி' பேப்பர் பார்சலை மட்டும் வாங்கி எடுத்துச் செல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நேற்றையதினம் இந்தப் பேரவையில் நடந்த விவாதத்தின்போது அதுபற்றி குறிப்பிட்டார்கள். உடனே நான் அதிகாரிகளிடத்தில் விசாரித்து விவரங்கள் எழுதி வாங்கினேன். எக்ஸ்ப்ரஸ் பஸ்களில் எந்தப் பத்திரிக்கையும் எடுத்துச் செல்வதில்லை. எந்தக் கட்சிப் பத்திரிக்கையாக இருந்தாலும் எச்ஸ்ப்ரஸ் பஸ்களில் எடுத்துக்கொள்வது கிடையாது. அதே சமயத்தில் சாதாரண பஸ்களில் யார் யார் எந்தப் பத்திரிகையை கொடுத்தாலும் எடுத்துச் செல்கிறார்கள் அணுகிக் கேட்கிறபோது, யாருடைய பத்திரிக்கைப் பார்சலையும் எடுத்துச் செல்ல மறுத்ததில்லை என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. டி. மார்டின் :** என்னிடத்தில் 'தினமலர்' பத்திரிகையினர் கொடுத்துள்ள மனு இருக்கிறது. ஒரு பத்திரிக்கைக்கு ஒரு பத்திரிக்கை பாரபட்சம் காட்டப்படுவதாகவே குறித்திருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற நிலை இருந்தால் அது நிவர்த்திக்கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உறுப்பினர் அவர்களும் என்னைப்போலவே வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார். அவரைவிட மிகவும் கீழான நிலையில் இருந்து நான் வாழ்க்கையைத் தொடங்கியவன். 12 ஆண்டுகள் வெளி நாடுகளிலே வழக்கறிஞராக வாழ்க்கையை நடத்தியவன். அவரும் தம்தொழிலில் நல்ல முன்னேற்றம் அடைந்தார் என்றால் நான் மகிழ்ச்சி அடைவேன். எந்த விதமான பொறாமையும் அடையமாட்டேன். ஆனால் சொல்லுகின்ற பதில்களை உண்மை என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அன்றைக்கு அது பற்றிக் குறிப்பிடப்பட்ட உடனேயே நான் அதிகாரிகளிடம் இருந்து ரிப்போர்ட்டை வரவழைத்தேன். துரித வண்டிகளில் எந்தப் பத்திரிகையையும் எடுத்துச் செல்வது இல்லை என்பது விதி. அதே சமயம் கோரினால் எந்தப் பத்திரிகையையும் சாதாரண வண்டிகளில் எடுத்துப் போகலாம் என்பது

பது விதி. இதில் எந்த விதமான பாரபட்சமும் காட்டப்படுவதில்லை. ஆகவே, பாரபட்சம் காட்டுவதாகச் சொல்லாமல் இருப்பது நமது பண்பாட்டுக்கு உகந்ததாக இருக்கும்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதை விட்டு விடுகிறேன். இந்த நாட்டில் இப்போது சேரணிப்படை அமைக்கப்பட்டிருக்கிறது. 1967–68-ல் அந்தச் சேரணிப்படைக்கு 9·94 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 9·10 லட்ச ரூபாய் செலவாயிருக்கிறது. அந்தச் சேரணிப்படைத் தொண்டர்கள் தங்கள் உழைப்பை தானமாக நல்கினாலும் அவர்களுக்கு தினம் ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் சாப்பாட்டுக்காகக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. சுமார் 40 ஆயிரம் ரூபாய் சாப்பாட்டுக்காகச் செலவழிக்கப்பட்டிருந்தும் அஜர் பட்டியல் இல்லாததால் கணக்கைப் பிரிக்க முடியாமல் திணறிக்கொண்டு தெளிவில்லாத நிலையில் அந்தக் கணக்கு இருக்கிறது. இதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

அதோடு மட்டும் அல்ல. மற்ற 11 மாவட்டங்களில் 17,200 ரூபாய் குறிப்பிட்ட தொகைக்கு மேலாகச் செலவு செய்திருக்கிறார்கள். என் என்ற விவரத்தை அமைச்சரவை கண்டு பிடித்தாக வேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 1967–68-ல் சேரணித் தொண்டர் படைக்காக தளவாடம் வாங்கும் வகையில் 6 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். 1968–69-ல் மீண்டும் 20 ஆயிரம் ரூபாய்க்குத் தளவாடம் வாங்கியிருக்கிறார்கள். 1967–68-ல் வாங்கிய தளவாடம் எங்கே போயிற்று?

அது மட்டுமல்ல, அரசின் ஊழியர்கள் தனியாக நன்கொடை வசூல் செய்வதை அரசு தடுத்தாக வேண்டும். குறிப்பாக சேரணிப் படையின் பேரால் வெளியிடப்பட்ட சிறப்பு மலருக்கு (சொவினியர்) நான்கு மாவட்டங்களில் ரூ. 40,400-க்கு நன்கொடை வசூல் செய்திருக்கிறார்கள். இன்னும் 10 மாவட்டங்களில் வசூலான கணக்கே தெரியவில்லை. இந்த 40,400 ரூபாயை அரசாங்கப் பொதுக் கணக்கில் கொண்டு வராமல் தனிக் கணக்கில் வைத்திருக்கிறார்கள், இது நியாயமா? ஆட்சியில் உள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களால் நன்கொடை வசூலிக்கப்படுகின்ற முறை சரியா? இதைத் தவிர்க்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், உலகத் தமிழ் மகாநாட்டின் கணக்கையும் அரசாங்கப் பொதுக்கணக்கில் வைக்காமல் ஸ்டேட் பாங்க் கணக்கில் இந்தச் சர்க்கார் வைத்திருக்கிறார்கள். இது சரியல்ல. அரசு எடுக்கும் நடவடிக்கைகளில் எல்லாக் கணக்கு விவரங்களையும் பொதுக்கணக்கில் கொண்டு வர வேண்டுமேயல்லாமல் இப்படித் தனிக் கணக்கு வைப்பது சரியாகாது என்று கூறவிரும்புகிறேன்.

அதோடு, இந்த அமைச்சரவை சர்க்கார் பணங்கள் கையாடல் சம்பந்தமாக உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துத் தண்டிக்க வேண்டும். 30-ம் தேதி செப்டம்பர் மாதம் 1968-ம் வருடம் வரைக்கும் இந்த மாநிலத்தில் மிஸ் அப்ரோப்ரியேஷன் என்ற தலைப்பில் 11·87 லட்சம் ரூபாய் விரயமாக்கப்பட்டிருக்கிறது. அதோடு 30-ம் தேதி அகஸ்ட் மாதம் 1968-ம் வருடம் வரைக்கும் ஷார்ட்டேஜ், டெஃப்ட், டாமேஜ் வெகிகில்ஸ் என்ற இனத்தில் 20·13 லட்சம் விரயமாகியிருக்கிறது. அதோடு திரும்பப் பெற முடியாத நிலையில் தெஃப்ட், ஃபயர் இனத்தில் சர்க்காருக்கு 44·51 லட்சம் நஷ்டமாயிருக்கிறது.

கடந்த ஆண்டு மார்ச் திங்களில் இந்தே பஸ் தொழிலாளர்கள் மாணவர்கள் இடையே ஏற்பட்ட போராட்டத்தின்போது பஸ்கள் இரவில் தான் நிறுத்தப்பட்டன. இது நாடு அறிந்த உண்மை. 25-ம் தேதி பகல் எல்லாம் பஸ்கள் ஓடின. இரவில் நடந்த சம்பவம் காரணமாக பஸ்கள் அதற்குப் பிறகு ஓடவில்லை. அரசாங்கத் தரப்பில் வைக்கப்பட்டுள்ள குறிப்பில் பஸ்கள் ஓடாத காரணத்தினால் 7·50 லட்சம் ரூபாய்



நஷ்டம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி அறிக்கை கொடுக்கிறபோது முழு விவரங்களையும் சரியான முறையில் சேகரித்து இந்த அவையில் வைக்க வேண்டும். தமிழக அரசின் கணக்குகளை அக்கவுண்டெண்ட் ஜெனரல் ஆடிட் செய்து அந்த ரிப்போர்ட் 5-ம் தேதி மார்ச் மாதம் 1969-ம் வருடம் கையெழுத்தாகியிருக்கிறது. 20-ம் தேதி மார்ச் மாதம் 1969-ம் வருடம்தான் வந்திருக்கின்றது. அதை உடனேயே இந்த அவையில் வைத்திருந்தால் இத்தனை நாள் நடந்த விவாதங்களில் அதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்க முடியும்,

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர் :** பஸ் தொழிலாளர்-மாணவர்களிடையே ஏற்பட்ட போராட்டத்தின்போது 7 லட்சம் நஷ்டம் ஏற்பட்டதாக நேற்று முன்தினம் கொடுத்த குறிப்பு பற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டபோது அதையும் விட்டு வைக்கவில்லை. உடனேயே போய் அதிகாரிகளை விளக்கம் கேட்டேன். இரண்டு நாட்கள் பூராவும் ஓடவில்லை. அப்போது வசூலாகவில்லை. அதற்குப் பிறகு நான்கு நாட்கள் ஸ்கெலிடன் செர்விஸ் என்ற முறையில்தான் சில பஸ்கள் ஓடின. ஆகவே வசூல் குறைவு. ஆக, 2 நாட்கள் வசூலே இல்லாத காரணத்தினாலும், 4 நாட்கள் குறைந்த வசூல் தான் இருந்தது என்ற காரணத்தினாலும் சேர்த்துப் பார்க்கிறபோது அவர்கள சொன்ன கணக்குச் சரியாக இருக்கிறது. அந்த விவரங்களைக் கூட கேட்டு எழுதி வாங்கி வைத்து விட்டேன்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோள் எல்லாம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் ஆகிறது.

**திரு. டி. மார்டின் :** இடையில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். என்னுடைய வேண்டுகோள் தங்களிடம் என்னவென்றால் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ம் தேதியன்று ஆடிட் ரிப்போர்ட் கையெழுத்தாகி இருக்கிறது. ஆனால் இந்தச் சபையிலே 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் தேதியிலே தான் வைக்கப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இது பற்றி அக்கறை செலுத்தி ஆடிட் ரிப்போர்ட்டை உடனடியாக இந்த அவையிலே வைக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்தால் அதிலே கொடுக்கக்கூடிய விவரங்களைப் பார்த்து உறுப்பினர்கள் டிமாண்டுகளின் மேல் பேசுகின்றபொழுது அதிகமான விவரங்களோடு பேசுவதற்கு உதவியாக இருக்கும். எனவே, ஆடிட் ரிப்போர்ட்டை கையெழுத்தானவுடனேயே இனிமேலாவது காலதாமதமின்றி மறுநாளே இந்த அவையிலே வைப்பதற்கு, பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது தான் என்னுடைய வேண்டுகோள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நேரத்தில் அவர்கள் கையெழுத்திட்டு அனுப்பிவிட்டதாகவும் பேரவைத் தலைவர் தான் அவைக்கு வைப்பதிலே காலதாமதம் செய்வதாகவும் கூறி இருக்கிறார்கள். அப்படியல்ல. எந்த நேரத்திலே பெறப்படுகிறதோ உடனேயே வைக்கப்படுகிறது. ஆகவே காலதாமதம் இருப்பதாகச் சொல்லி, அதற்குப் பேரவைத் தலைவர் பொறுப்பு என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நிறைய அதிகாரம் இருக்கிறது. இந்த விஷயத்தில் சீக்கிரமாக அக்கவுண்டண்ட் ஜெனரல் அவர்களிடம் சொல்லி பெற்று இந்த அவையிலே வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக அமைச்சர்கள் பதவி விலக வேண்டுமென்று எதிர்க்கட்சியாக இருந்து, இன்று ஆளுங் கட்சியாக வந்திருப்பவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது பதவி விலகவேண்டுமென்று கூறவில்லை. ஏனென்றால் பொதுத் தேர்தல் 1972-லே தான் வரு

கிறது. இப்பொழுது நடைபெற இருக்கின்ற இடைத் தேர்தல்களில் அமைச்சர்கள் ஜனநாயக முறையைக் கடைப்பிடித்து இப்படிப்பட்ட நேரங்களில் தேர்தல்கள் நடக்கின்ற இடங்களில் பொது விழாக்களில் கலந்து கொள்ளாமல் இருக்கவே வேண்டுமென்று அவர்கள் எதிர்க் கட்சியிலிருந்த பொழுது சொன்னார்கள். அதனை ஞாபகப்படுத்தி அவ்வாறு நடக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அமைச்சரவை பல கமிஷன்களை அமைத்துள்ளது. தீ வைப்பு நடைபெற்றது சம்பந்தமாக கமிஷன் அமைக்கப்பட்டது. பஸ் தொழிலாளர்கள்—மாணவர்கள் போராட்டத்தைப் பற்றி ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. இது போன்ற நேரங்களிலே "ஸப்ஜுடிஸ்" வரத்தான் செய்யும். "ஸப்ஜுடிஸ்" சம்பந்தப்பட்ட சம்பவங்கள் பற்றிய அறிக்கையைவிட்டு மற்ற அறிக்கைகளை இந்த அவையிலே கூடிய சீக்கிரம் வைக்கவேண்டும். "ஸப்ஜுடிஸ்" என்று சொன்னால் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக இருக்கிற பப்ளிக் பிராஸிக்யூடர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் தாக்கீது கொடுத்தால் வழக்குகளைச் சீக்கிரமாக முடித்துவிடுவார்கள். எனவே அந்த முறையில் அறிக்கைகள் இங்கே விரைவாக வருவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, பேரவைத் தலைவர் அவர்களே,

The Constitution gives fundamental right to every citizen in this country—right to freedom of speech, freedom of expression and freedom of though. But, unfortunately our Constitution has not codified the parliamentary privileges which are attachable to the Legislature and the Parliament. Mr. Speaker, Sir, our Legislature could not be compared with the House of Commons which has a sovereign power of legislation because any Act or any law or any rule or any regulation which will be passed by this Assembly will be running concurrent to Part III containing the Fundamental rights guaranteed under the Constitution. If any law or rule violates the fundamental rights guaranteed under Part III of the Constitution of India, the Judiciary has been given the power to strike down that excessive usurpation of power by the Legislature. Mr. Speaker, Sir, the term 'law' in that Chapter includes by implication custom, usage, parliamentary powers, parliamentary immunities, parliamentary privileges, etc. Therefore, a Member and also a (third party) citizen has to know what is the privilege of this Honourable House and what is the power of this Honourable House and what is the custom or other privileges relating to the House and to the Member and to the Speaker and to the Ministers. Thefore, if these are know by codification, a Member can regulate his conduct and the third party citizen who is outside the Legislative Assembly can also regulate his conduct so as not to encroach upon our privileges, our powers, the power of this House and the power of the Hon. Speaker. But, Sir, at the same time, I would like to bring to your kind notice that there are very valuable rights like the freedom from unlawful arrest is given in the Constitution. Therefore, when a person is arrested for an offence which he has committed without knowing the rule or law or custom, it would cause great injustice to that particular individual. Now, we rely upon the Parliamentary privilege but unfortunately those privileges have not been codified. We have to find our stray instances of privileges which were asserted from the Magna Carta days. Now, we are in the jungle to find out the real privileges . . .





**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், இந்தச் சபையிலே இருக்கிற அங்கத்தினர்களுக்கு, இந்தச் சபைக்கு சபாநாயகருக்கு மற்ற எல்லோருக்குமே என்ன என்ன உரிமைகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெளிவாக இருக்கிறபோது அது எல்லாம் இல்லாதது மாதிரி காட்டிலே விடப்பட்ட மாதிரி சொல்கிறார்களே, அது முறைதானா ?

THIRU T. MARTIN : Sir, I am very sorry that the Honourable Member has not understood me. I am referring to the previleges asserted by the House of Commons in England. My point is that I want that the Ministry when it appoints a Committee of jurists to consider the relations between the Centre and the States, they should simultaneously take steps to appoint a Committee of jurists also to consider the Codification of the law of privileges so that the citizens may know what is the privilege asserted and the Member also could know what is the privilege he could claim and the Speaker and the House itself should know their privileges. If it is written and codified, it will have the force and quality of law. With these words, I resume my seat.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் சீரணியைப்பற்றிப் பேசுகின்றபொழுது தென் ஆற்காடு மாவட்டத்திலே கருவிகளுக்காக 20 ஆயிரம் ரூபாய் செலவழித்ததாகக் குறிப்பிட்டார்கள். இன்னும் சில மாவட்டங்களிலே தேவைக்கு அதிகமான தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது, என்ன காரணத்திற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலே கருவிகளுக்காக 20 ஆயிரம் ரூபாய் செலவு செய்யவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருசில மாவட்டங்களிலே ஒதுக்கப்பட்ட தொகையைவிட அதிகமாகச் செலவாகியிருக்கிறது. அதற்குக் காரணம் இந்தச் சீரணி ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுக் காலம்தான் ஆகியிருக்கிறது. ஒரே நாளில் எல்லா இடங்களிலும் ஆரம்பிக்கப்படவில்லை. சிலசில இடங்களில் ஆர்வத்தின் காரணமாக வேலைகள் நடைபெறுகின்றன. சிலசில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்படாத நிலைகள் இருக்கின்றன. ஒரு பகுதியிலே இருக்கிற தொகையை இன்னொரு பகுதிக்குச் செலவு செய்கிறோம். இப்படிச் சில ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாமே தவிர, வேறு அல்ல. முதலிலே ஆரம்பிக்கின்றபொழுது கருவிகள் வாங்கியபோது குறைவான அளவில் வாங்கப்பட்டது. பிறகு பரவலாகக் கருவிகள் வாங்கப்பட்டிருக்கலாம். ஆகவே, முதன் முதலில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட அதிகமாக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது என்றால் 11 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கலாம். அதன் காரணமாக 25 லட்சம் ரூபாய் அளவுக்குப் பயன் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சீரணிப் படை என்று சொல்லக்கூடாது, சீரணி என்றுதான் சொல்லவேண்டும் என்று மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்ட்டின் போன்றவர்கள் அதைப் 'படை' என்ற சொல்லால் அழைத்து வேறு நோக்கத்தைக் கற்பிக்க முயல வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**THIRU T. MARTIN:** The Hon. Minister has stated that twenty thousand rupees were not spent in the year 1968-69. Page 41 of the Audit Report, 1969, says:

**Rs. 20,000 were spent in 1968-69 in South Arcot district on purchase of tools even though tools had been purchased in 1967-68 for the maximum amount of Rs. 6,000 admissible under the scheme.**

இதை ஆதாரமாக வைத்துத்தான் நான் பேசினேன் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1969 மார்ச் 26

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வேறு மாவட்டங்களில் செலவழிக்கப்படாதது இந்த மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு செலவழிக்கப்பட்டது என்றுதான் சொன்னேன். அந்த விளக்கத்தை இப்போது அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய விவாதம் ஒரு மணிக்குள் முடிந்து வாக்கெடுப்பு எடுக்க வேண்டும். முதலமைச்சர் அவர்களுடைய பேச்சும் ஒரு மணிக்குள் முடியவேண்டும். ஆகவே, உறுப்பினர்கள் ஐந்து நிமிஷத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, நம்முடைய தேர்தல், தலைமைச் செயலகம் முதலிய மானியங்களின் மீது இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தேர்தலிலே ஒவ்வொரு தடவையும் அரசுக்கும் தேர்தலிலே நிற்பவர்களுக்கும் பெருத்த செலவு ஏற்பட்டு விடுகிறது. தற்போது தேர்தல் மாநில சட்ட மன்றங்களுக்கும், பாராளுமன்றங்களுக்கும் ஒரு முறையும், பஞ்சாயத்துக்களுக்குத் தனியாக ஒரு முறையும், அதற்குப் பிறகு நகராட்சிகளுக்கும் நடைபெறுகிறது. இந்த முறையில் ஏகப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன. ஏராளமான போலீசார்களும், அதிகாரிகளும் நியமிக்கப்பட வேண்டியிருக்கிறது. அரசுக்குச் செலவு ஒருபுறம், அதே சமயத்தில் தேர்தலில் நிற்பவர்களுக்கும் செலவு அதிகமாக ஆகிறது. ஆகவே, பாராளுமன்றம், சட்ட மன்றம், நகராட்சி, பஞ்சாயத்து ஆகிய அத்தனை தேர்தல்களையும் ஒரே முறையில் நடத்தி விடலாம். நகராட்சி, பஞ்சாயத்துக்களுச்கும் கூட ஐந்தாண்டுகள் என்ற கெடுவை வைத்துத் தேர்தலை நடத்தினால் பொது மக்களுக்கும், அதே சமயத்தில் அரசுக்கும் காலம், நேரம், பணம் முதலியவை மிச்சமாகும். இதனைத் தேர்தல் கமிஷனுக்கும், மத்திய அரசுக்கும் சொல்லி சிபாரிசு செய்து இந்த முறையைக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தலைமைச் செயலகம் இருக்கும் இந்த இடம் நெருக்கடி மிகுந்ததாக உள்ளது. இந்த அலுவலகத்தில் பணிபுரியும் துணைச் செயலாளர்கள் தாழ்வாரங்களில் இருந்து வேலை செய்து வருகிறார்கள். அலுவலகங்களில் போதுமான அளவுக்கு இடம் கிடையாது. பல அடுக்கு மாடி கொண்ட ஒரு கட்டிடத்தைக் கட்டி ஒவ்வொரு அமைச்சருக்கும், அவரது செயலாளர் துணைச் செயலாளர்கள் இணைச் செயலாளர்கள், இலாகா சிப்பந்திகள் ஆகியோருக்கும் இட வசதி செய்து கொடுத்தால் நிர்வாகம் நல்ல முறையில் இயங்கும்.

இன்று 500 ரூபாய்க்கு உட்பட்டவர்களுக்குத்தான் வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி கிடைக்கிறது. அன்புகூர்ந்து அதை 1,200 வரை தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டுப் பிரச்சினை அவர்களுக்கும் உள்ளது. மலிவான வீடுகளைக் கட்டி தவணைவாடகை முறையில் தந்து விடலாம். அவர்கள் உணவு உட்கொள்ளப் போதிய இடம் கிடையாது. வசதி நிறைந்த டிபன் ஷெட் கட்டித் தந்து உதவ வேண்டும்.

நம்முடைய அமைச்சர்கள் ஏறத்தாழ முழு நேர ஊழியர்களைப் போன்றவர்கள். அவர்கள் தற்போது வேறு எந்த வேலையையும் பார்க்க முடியாது. அவர்களுக்கும் குடும்பம் உண்டு. மனைவி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தற்போது மாதம் 500 ரூபாய் மட்டுமே பெற்று வருகிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு குறைவாக இல்லை. இவ்வாறு குறைத்துப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு குறைத்து வாங்குவதை காங்கிரஸ்காரர்களோ, மற்ற யாருமே விரும்பவில்லை. பொதுமக்களும், மற்றவர்களும், பத்திரிகையாளரும் அமைச்சர்களிடமிருந்து நல்ல பணியை எதிர்பார்க்கிறார்களே தவிர, குறைந்த ஊதியத்தை வாங்கிக் கொள்ளுவதை விரும்பவில்லை. ஆகவே,



1969 மார்ச் 26] [திரு. ஆர். நாகசுந்தரம்]

குறைந்த அளவு ஆயிரம் ரூபாய் என்றாவது அவர்கள் தங்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலேதான் அமைச்சர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. எதற்காக நம்முடைய அமைச்சர்கள் சிரமப்பட வேண்டும்? தற்போது அதிகப்படியான இலாகாக்களை வைத்துக்கொண்டு மிகவும் சிரமப்படுகிறார்கள். இன்னும் குறைந்தது மூன்று அமைச்சர்களையாவது அதிகரித்து ஏராளமாக இருக்கக்கூடிய இலாகாக்களைப் பிரித்துக் கொடுத்தால் அமைச்சர்கள் அளவோடு நல்ல திடகாத்திரத்தோடு பணியாற்ற முடியும்.

நமது அரசின் செய்தித் துறை விஸ்தரிக்கப்பட வேண்டும். அதற்கென்று நெறியாளர் நியமிக்கப்பட வேண்டும். செய்தித் துறை, சுற்றுலாத் துறை ஆக இரண்டும் முக்கியமான துறைகளாகும். மாவட்டப் பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகளை நியமித்து மாவட்டங்களிலே அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் தொடர்பை ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தின் சாதனைகளை, கொள்கைகளை மக்கள் புரிந்து கொள்ளச் செய்ய முடியும்.

**(திரு. நா. வீராசாமி—தலைமை)**

வி.ஐ.பி.,-கள், மந்திரிகள், பெரிய அதிகாரிகள் வந்தால் தற்போது தாசில்தார்தான் வரவேற்கிறார். அந்த நிலைமை மாறி மாவட்டப் பொது மக்கள் தொடர்பு அதிகாரி வரவேற்கக்கூடிய நிலைமை இருக்கவேண்டும். மாவட்ட சீரணியையும் அவர்கள் பொறுப்பில் விட்டுவிடலாம்.

குழந்தைகள் நலனுக்காகச் சிறுவர் அரங்கம் உள்ளது. நல்ல படங்களைப் போட்டுக் காண்பித்துக் குழந்தைகளுக்கு வேறு பழக்கங்கள் இல்லாமல் பாதுகாக்க எல்லா மாவட்டங்களிலும் சிறுவர் அரங்கு ஏற்படுத்தப்பட வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இறுதி யாத்திரைப் படம் மிகவும் வெற்றிகரமாக 100 காட்சிகள் காட்டப்பட்டு பொதுமக்களைக் கவர்ந்துள்ளது.

இரண்டு டூரிஸ்ட் ஆபீஸ்கள் உள்ளன. ஒன்று மதுரையிலும், மற்றொன்று உதகையிலும் உள்ளன. திருச்சி, தஞ்சை முக்கியமான யாத்திரைக்கான இடங்கள். அந்த இடங்களிலும் பிரத்தியேகமான டூரிஸ்ட் ஆபீசர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி, மதுரை, உதகை ஆகிய இடங்களில் உள்ள ஓய்வு விடுதிகள் மிகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை மேலும் விஸ்தரிக்க வேண்டும். சேலம், கோவை, ஹோகனேகல், தஞ்சை போன்ற இடங்களிலும் ஓய்வு விடுதிகள் தேவை. ஏராளமான உல்லாசப் பயணிகள் வருகிறார்கள். அவர்கள் சென்னையைச் சுற்றிவிட்டு ஓடி விடுகிறார்கள். சென்னையில் அவர்கள் தங்கி ஓய்வெடுக்க இடம் கிடையாது. ஆகவே, ஐலண்டு மைதானத்திலே அத்தனை பஸ்களும் நிற்க பஸ் ஷெல்ட்டர்களைக் கட்டி, பெரிய ஹால்களையும் கட்டவும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். அப்படிப்பட்ட வசதிகளைச் செய்தால் அரசாங்கத்திற்கும் ஆதாயம் வரும், வருகின்றவர்களும் சிரமப்படாமல் இருப்பார்கள். சுற்றுலாப் பயணத்தை ஊக்குவிக்க மாநில சுற்றுலாப் பயண இலாகாவை நிறுவி சுற்றுலா நோக்கத்தைப் பரப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்டமன்ற நாட்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. எதற்காக நான்கு மணி வரை நடத்தவேண்டும் ? இன்னும் பத்து பதினைந்து நாட்களுக்கு சட்டமன்றத் தொடரை நீடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கத்தினர்கள் பேச அதிக வாய்ப்புத் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

*திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இன்று நமது நாட்டினுடைய அரசியல் சட்டத்திலேயே பலமாறுதல்களைச் செய்யவேண்டுமென்று சொல்லும்படியான காலம். இருபது ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய நாட்டில் இருந்த அரசியல் சட்டத்தினுடைய ஓட்டைகள் சில அடைபட வேண்டிய நிலையில் இருக்கும்படியான காலம். இப்படிப்பட்ட ஒரு காலத்திலே நம்முடைய மாநிலத்திலும் சரி, இந்த நாட்டிலும் சரி கவர்னர் பதவி என்பது அவசியமா என்று கேட்கும்படியான நிலைமையில் இருக்கிறோம். 1966-ம் ஆண்டு இதே மான்யக் கோரிக்கையின் மீது இன்றைய முதலமைச்சராக இருக்கக்கூடியவரும், மற்றும் பலரும் இதே கோரிக்கையிலே இந்த விஷயத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். இன்று கவர்னர் பதவி என்பது அலங்காரப்பதவி, ஆடம்பரப் பதவி என்று பெரிய பெரிய அரசியல் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் இருக்கும்படியான காங்கிரஸ் ஏடு ஒன்று கூட, கவர்னர் பதவி என்பதை ஒரு நிர்வாகி என்ற முறையில்தான் பார்க்க வேண்டும். அமைச்சரவைக்கு மேல் பதவி என்ற முறையில் பார்க்கக் கூடாது என்ற கருத்தை வெளியிடும்படியான நிலைமை இருக்கிறது. எனவே, இன்றைக்கு ஏழை நாடான நம்முடைய நாட்டில் பல லட்சக்கணக்கான ரூபாயைச் செலவழித்து ஏன் வீணடிக்க வேண்டும்? அப்படிப்பட்ட பதவி இன்றைக்குத் தேவையில்லை. மாநில அமைச்சரவை இல்லாத நிலைமை ஏற்பட்டால் அதைப்பற்றிக் கவனிக்க மத்திய அமைச்ச
மு.ப 11-00 ரவையில் வேறு ஏற்பாடு செய்துகொள்ளலாம். கவர்னர் பதவி இன்று நம் நாட்டுக்குத் தேவையில்லை என்று வற்புறுத்த வேண்டிய காலத்தில் இருக்கிறோம்.

சட்டமேலவை என்று ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளைக் கொண்ட இந்தச் சட்டமன்றம் சட்டங்களை இயற்றுவதற்குப் பூரண அதிகாரம் படைத்திருக்கிறது. ஆகவே, அதற்கு மேலே ஒரு மேலவை என்று வைத்துக்கொண்டு லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யத் தேவையில்லை. மேலும் அனாவசியமான அரசியல் தொந்தரவுகளும் ஏற்படுகின்றன. அமைச்சர்கள் காலை ஒன்பது மணியிலிருந்து இரண்டு மணி வரை இங்கு உட்கார்ந்திருந்து விட்டு துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று மாலை நான்கு மணிக்கு அங்கு போய் உட்காரவேண்டும். எதற்காக அதை வைத்துக்கொண்டு கட்டி அழவேண்டுமென்று புரியவில்லை. இன்று நம் மாநிலத்திற்கு அது தேவை இல்லை என்று சொன்னால் அதைக் கலைத்து விடுவதற்கு இந்த மாநில அமைச்சரவைக்கு அதிகாரம் இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் அமைச்சர்களின் சுற்றுப் பயணங்கள் நறுக்குத் தெரித்தாற்போல் இருக்கவேண்டும். தேவையான இடங்களுக்கு மட்டுமே அவர்கள் செல்ல வேண்டுமென்ற நிலை இருக்க வேண்டும். தேவையற்ற விழாக்களை ரத்து செய்துவிட வேண்டும். மக்களின் பிரச்சினைகளுக்கு, மக்களின் கஷ்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அளவில் அமைச்சர்களின் சுற்றுப் பயணம் இருக்க வேண்டும். இந்த அவைக் கூட்டத்தின்போதே நம் சுகாதார அமைச்சர் அவர்கள் தூரத்தில் ஒரு சுற்றுலா மாளிகையைத் திறக்கச் செல்லும் அழைப்பிதழைப் பார்த்தேன். இங்கே முக்கியமான சட்டமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது அதைப் போய்த் திறக்க வேண்டிய அவசியம் என்ன வந்துவிட்டது என்று எனக்குப் புரியவில்லை. அவற்றில் ஒன்றிரண்டைக் குறிப்பிட்டுக் கூற முடியும். ஹோட்டல் திறப்பதற்கு, தங்கும் விடுதிகள் திறப்பதற்குப் போவது என்பது தேவையற்றதாகும். நமக்குச் சென்ற கால அனுபவம் இருக்கிறது. ஆகவே, மக்கள் பிரச்னை எதுவோ அதற்கு மட்டும்தான் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அடுத்து, நம் அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செல்லும்போது மாவட்டத்தில் அவரவர் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டும் கலந்து கொண்டால் போதும் என்ற நிலை இருந்தால்தான் வேலைகள் நன்கு நடைபெறும். ஒவ்வொரு அமைச்சரும் போகும்போது தாசில்தார், டெபுடி





கலெக்டர், மாவட்ட கலெக்டர் என்று பல்வேறு இலாகா அதிகாரிகளும் அங்கு செல்வதாக இருந்தால் நிச்சயமாக அவர்கள் வேலைகள் பாதிக்கப்படும். ஆகவே, அந்த அந்த அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மட்டும் கலந்து கொண்டால் போதும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வரவேற்பு அதிகாரியை நியமித்து, அவர்கள் அமைச்சர்களை வரவேற்பது போன்ற இலாகாக்களின் இணைப்பு வேலைகளைச் செய்தால் போதும் என்று செய்ய வேண்டும். சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கும் நிகழ்ச்சியையும் வைத்துக்கொண்டால் அரை மணி அல்லது ஒரு மணி நேரம் அமைச்சர் அவர்களிடம் மன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரச்னைகள் பற்றிப் பேசி மக்கள் காரியங்களைக் கவனிக்க உதவியாக இருக்கும்.

இருபது ஆண்டு காங்கிரஸ் ஆட்சியின் காரணமாக பொது வாழ்வைக் களங்கப்படுத்தும் ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அமைச்சர்களாக இருப்பவர்கள் என்னென்னவோ செய்து விடுவார்கள், சொத்து சம்பாதித்துக் கொள்வார்கள் என்று நினைக்கும் ஒரு நிலை மக்கள் மத்தியில் இருக்கிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அமைச்சர்களின் சொத்துக் கணக்குகளைப்பற்றி ஒரு மசோதா கொண்டு வரலாம் என்று. அது உடனடியாகக் கொண்டுவரப்பட வேண்டும். எதிர்தரப்பில் இருப்பவர்கள் சொல்வது பற்றிக் கவலையில்லை. நம் நாட்டில் உள்ள கோடிக் கணக்கான மக்களின் உள்ளங்களில் உள்ள அழுக்கைத் துடைத்தெறிய வேண்டிய கடமையை நம் அமைச்சரவை முன் உதாரணமாக நின்று நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து, ஆலோசனைக் குழுக்கள் கூடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இருக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் விற்பனை வரிச் சட்டம் குறித்து ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்துவிட்டு இரண்டு ஆண்டுகளாகியும் அந்தக் குழு கூடவில்லை என்றால் அர்த்தமேயில்லை. பல ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது என் வேண்டுகோள். அந்தக் குழுக்கள், மூன்று அல்லது ஆறு மாதங்கள் என்று ஒரு காலத்தை நிர்ணயித்து அப்படிக் கூடினால் அமைச்சரவைக்கு, அமைச்சர்களுக்கு, இலாகாக்களுக்கு அது உதவியாக இருக்கும், சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் அது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றக் கூட்டங்கள் வருடத்திற்கு 40 அல்லது 45 நாட்கள் நடத்துவது மிகக் குறைவு. அதை 90 நாட்கள், மூன்று மாதங்கள் நடத்துகிற முறையில் இருந்தால் கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சட்டமன்றம் கூடினால்—உடனுக்குடன் எழக்கூடிய பிரச்னைகளை சட்ட மன்றத்தில் எழுப்புவதற்கும் அவற்றிற்கு அமைச்சர்கள் பதில் அளிக்கவும், பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளவும் உதவியாக இருக்கும். நாடாளுமன்றத்தைப்போல் ஒரு வருடத்தில் ஒன்பது மாதங்கள் கூடத் தேவை இல்லை.

அடுத்து, மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்கு "லெட்டர் பாட்" கிடைக்கும், அது கிடைக்கும், இது கிடைக்கும் என்று சொன்னார்கள். அப்படிக் கிடைப்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று கருதுகிறேன். அதுகுறித்து உறுதியான உத்தரவுகள் போட வேண்டும். உறுப்பினர்கள் இந்த மாநிலத்தில் எங்கு வேண்டுமானாலும் செல்வதற்கு நம் சர்க்கார்த்துறை பஸ்களில் பாஸ் கொடுப்பதில் என்ன தகராறு இருக்கிறது என்பதை அரசு யோசனை செய்ய வேண்டும். அப்படிக் கொடுப்பது நல்லது. இப்படி உறுப்பினர்களுக்குப் பாஸ் கொடுப்பதினால் வேலைகள் துரிதமாக நடக்க உதவியாக இருக்கும்.

அடுத்து, நம் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள், அமைச்சர்களை வந்து தொந்தரவு செய்கிற காரணத்தினால் நாங்கள் சரியான சமயத்தில் மன்றத்திற்கு வர முடிவதில்லை என்று. அவர்களின்

பதிலில் அன்றே நாம் திருப்தி அடையவில்லை. எந்த வேலையாக இருந்தாலும் சட்டமன்றம் ஒன்பது மணிக்குக் கூடுகிறது என்றால் மன்றத்திற்குத் துரிதமாக அந்தக் காலத்திலேயே வேலையை ஆரம்பிப்பது என்ற ஒரு முறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எது வந்தாலும் சரி, யார் வந்தாலும் சரி காலை எட்டு மணிக்குமேல் பார்க்கக் கூடாது என்ற உறுதியான கொள்கையை அனுஷ்டிப்பதில் தவறு இல்லை. அவர்கள் மாலை நேரத்தில் வந்து பார்த்துக் கொள்ளலாம். சட்டமன்றம் காலத்தில் கூடுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்கு இப்போது வரும் பதில், இது கிடைத்தது என்று மட்டும் வருகிறது. அதோடு இல்லாமல் கிடைத்ததற்குப் பின்னால் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதுபற்றி இரண்டு மாதங்களுக்கு உள்ளாகவாவது தகவல் கிடைக்கும் முறையில் பதில்கள் அனுப்பப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத்தைச் சுற்றி சுறுசுறுப்பாக வேலை செய்யும் சிப்பந்திகள், எட்டு ஆண்டுகள், பத்து ஆண்டுகள் என்று பணிபுரிந்து வரும் சிப்பந்திகள் வேலையில் நிரந்தரமற்றவர்களாக இருக்கிறார்கள். எவ்வளவோ பிரச்னைகள் பற்றி நாம் இங்கு பேசுகிறோம், ஆகவே சட்ட மன்றத்தில் உழைக்கும் அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஹாஸ்டலில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு சம்பளம் கூட மிகக் குறைவாக இருக்கிறது, அதோடு வேலை நிரந்தரமற்ற நிலையிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் உதவி செய்யும் முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்தில் நடவடிக்கைக் குறிப்புகள் எடுக்கப்படுகிறன்றன. அவர்கள் எவ்வளவோ திறமையாகக் குறிப்பு எடுத்தாலும்—அவர்கள் மீது நான் குற்றம் சொல்லவில்லை—நாம் சமயத்தில் மிக வேகமாகப் பேசும்போது எப்படி எடுக்கமுடியும் என்ற சிக்கல் இருக்கிறது. ஆகவே, டேப் ரிக்கார்ட் எடுத்துக்கொண்டால் யார் பேசினாலும் அதை மறைக்க முடியாது, மாற்ற முடியாது. அது உதவியாக இருக்கும். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முழுவதும் தமிழில் இந்த மன்ற நடவடிக்கைகள் வரும் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; அதுகுறித்துத் துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, சர்க்கார் சிப்பந்திகளுக்கு இரண்டாம் சம்பளக் கமிஷனை அமைக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக நாம் அவர்களுக்கு ஒரு சம்பளக் கமிஷனை அமைக்க வேண்டும். பல்வேறு மாநிலங்களிலும் இப்படி சம்பளக் கமிஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதே போல் நாமும் இங்கே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய சர்க்கார் சிப்பந்திகள் மீது போடப்பட்டிருக்கும் வழக்குகளை வாபஸ் பெறுவது சம்பந்தமாக நாம் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏன் நாம் மத்திய அரசைக் கேட்க வேண்டும்? நமக்கே அந்த அதிகாரம் இருக்கிறது. நாமே அந்த வழக்குகளை வாபஸ் வாங்க முடியும். அந்த அதிகாரம் நமக்கு இருக்கிறது. பின் நாம் எதற்காக அவர்களைக் கேட்க வேண்டும்? அப்படிச் செய்வது நம்மை நாமே பலஹீனமாகக் காட்டுவது ஆகும். ஆகவே, உடனடியாக அந்தச் சிப்பந்திகள் மேல் உள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, கடைநிலை ஊழியர்கள் சம்பந்தமாக அவர்கள் தங்கள் கோரிக்கைகளை நம் முன்னால் வைத்திருக்கிறார்கள். அதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.) நமது





தலைமைச் செயலாளருக்கு ரூ. 3,500 சம்பளம் என்று இந்த புத்தகத்தில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஏழை நாடு என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். 2,000 ரூபாய்க்குமேல் எந்தப் பதவிக்கும் நாம் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லையென்ற அபிப்பிராயத்தை மத்திய அரசுக்கு நாம் அறிவிக்க வேண்டும். 50 ரூபாய் வாங்கும் ப்யூனுக்கும் 3,500 ரூபாய் வாங்கும் தலைமைச் செயலாளருக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? 40 மடங்குக்கு அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட வித்தியாசமிருக்கிற சமூக வாழ்வு நமக்குத் தேவையில்லை. அதிகபட்சமான வருமானம் 2,000 ரூபாய் என்றிருந்தால் போதும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

தேர்தல் ஜாபிதாவைத் திருத்துவது சம்பந்தமான சில வேலைகள் நகரங்களில் நடைபெறுகின்றன. ஆனால், கிராமப்புறங்களில் அறவே அது நடைபெறுவதில்லை. அதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. கிராமப்புறங்களில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறைதான் திருத்தப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அதில் கூட சரியானபடி திருத்தங்கள் வருவதில்லை. ஆகவே கிராமப்புறங்களில் தேர்தல் ஜாபிதாவைத் தக்க சமயத்தில் தக்கபடி திருத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்கள், நகரசபைத் தலைவர்கள் இவர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டு திரு. ஆறுமுகம் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.)

***திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, மாநில சட்ட மன்றம், தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், பல்வகை ஆகிய மானியக் கோரிக்கைகளை மாண்புமிகு முதல் அமைச்சர் சமர்ப்பித்திருப்பதை நான் ஆதரித்து வரவேற்று சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்திய உபகண்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றந்தான் சீரும் சிறப்புமாக ஜனநாயக உரிமைகளைப் பேணிப பாதுகாத்து வருகின்ற பணியில் முனைந்திருக்கிறது, அதற்கான வகையில் செயல்பட்டும் வருகிறது என்பதை இந்திய உப கண்டத்திலுள்ள அத்தனை பேர்களும் நன்கு அறிவார்கள். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இப்பொழுது இந்த மாநிலத்தினுடைய பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தலைமையின் கீழ் மேலும் இந்த நிர்வாகம் சீரும் சிறப்புமாக, செம்மையாக, நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சியில் அவர்களுடைய எண்ணம் செல்லும் என்பதில் நமக்கெல்லாம் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

நம்முடைய திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, நம்முடைய தமிழ்நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்ற பெயரைச் சூட்டியிருக்கிறோம். அதைப்போலவே, சென்னை, கோவை நகரங்களுக்குப் படியரிசித் திட்டத்தையும், இதர பகுதிகளில் சீரான உணவுப் பங்கீட்டையும் அமல்படுத்தி வருகிறோம். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு அளிக்கப்படும் அகவிலைப்படியைப் போலவே மாநில அரசு ஊழியர்களின் அகவிலைப்படியும் உயர்த்தப்பட்டிருக்கின்றது. அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடன் வசதித் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஏழை—பணக்காரர்கள் என்ற வித்தியாசத்தை அகற்றி எல்லோரும் பி. யூ. சி. வகுப்பு வரை இலவசமாகப் படிப்பதற்கான வசதிகளையெல்லாம் நாம் செய்து கொடுத்திருக்கிறோம். புஞ்சை நிலங்களுக்கு நிலவரியை எடுத்து இருக்கிறோம். ஒருபோக சாகுபடியாகக் கூடிய இடங்களில் இருபோக சாகுபடியைக் கொண்டு வந்து, தீர்வையையெல்லாம் ரத்து செய்திருக்கிறோம். புதிய கல்லூரிகளை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். தூத்துக்குடித் துறைமுகத்திற்காக மத்திய சர்க்காரை வற்புறுத்தி அதை நாம் செயல்படுத்தி வருகிறோம். சென்னைக்குக் குடிதண்ணீர்த் திட்டத்தை நாம் தீட்டி வருகிறோம். கூவம் நதித் திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். இப்படி இந்த நாட்டில் ஜனநாயக அமைப்புக்களின் அடிப்

படையிலே நாம் நிர்வாகத்தை நல்லமுறையிலே நடத்தி வரும்பொழுது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் பாதுகாப்பு இல்லை, நிர்வாகம் சீர்கெட்டு விட்டது என்றெல்லாம் பேசுவது அவர்களுக்கு வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. அப்படி வாடிக்கையாக அவர்கள் பேசுவதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள்கூட அடிக்கடி வார்த்தைகளை உபயோகப்படுத்துவார்கள், 'உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது, அந்த யோக்கியதை உங்களுக்கு இல்லை' என்றெல்லாம் அவர்களுடைய வார்த்தைகள் அமைகின்றன. ஆனால், அவர்கள் சொல்லுகின்ற கருத்தை, அவர்களைப்பற்றி இந்த நாட்டிலே உள்ள மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அதை மறந்து விட மாட்டார்கள்.

மாநில சட்டமன்றத்திற்கு, நாடாளுமன்றத்திற்கு பொதுத் தேர்தல் நடக்கின்றபொழுது அந்தத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்கள் அந்த ஐந்தாண்டுக் காலத்தில் இடைத்தேர்தல்கள் எங்கேயாவது நடைபெறுமானால் அந்த இடைத்தேர்தல்களிலே, பொதுத் தேர்தல்களில் நின்று தோல்வியடைந்தவர்கள் போட்டியிடாமல் இருப்பது நல்லதாகும். அப்படிப் போட்டியிடுகின்ற காரணத்தினாலே, அரசியலிலே மிகவும் செல்வாக்கு படைத்தவர்கள், பொதுத்தேர்தலிலே நின்று தோல்வியடைந்து, இடைத்தேர்தல் வருகின்றபொழுது, குறிப்பாக காமராஜர் போன்றவர்களையே நாம் எடுத்துக் கொள்ளுவோம். இடைத்தேர்தலில் அவர்கள் போட்டியிடும்பொழுது, எப்படியாவது வெற்றிபெற வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கும் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் வருகின்ற காரணத்தினாலே அங்கே சுமுகமான நிலையில் தேர்தலை நடத்த, ஜனநாயகத்தின் அடிப்படை உரிமைகள் சில இடங்களில் பறிக்கப்படும் சூழ்நிலையெல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, மத்திய சர்க்காருக்கு நம்முடைய மாநில அரசு, பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் இடைத்தேர்தலில் நிற்கக்கூடாது என்ற அளவிற்கு நாம் பரிந்துரை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

காலையிலே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள், இடைத் தேர்தல்களில் அமைச்சர்கள் பங்கு பெறக்கூடாது என்று அங்கத்தினர் அவர்கள் கூடச் சொன்னார்கள். நாகர்கோயில் இடைத்தேர்தலில், நம்முடைய தமிழகத்தின் இப்பொழுதைய முதலமைச்சராக இருக்கின்ற கலைஞர் கருணாநிதி அவர்கள், நம்முடைய சட்ட அமைச்சரவர்கள், மற்றுமுள்ள அமைச்சர்களெல்லாம் சென்றார்கள். (குறுக்கீடு). சட்ட அமைச்சர் இல்லை, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் அங்கிருந்தார்கள். அப்பொழுது வன்முறைகள் தலைதூக்கின. ஆனால், வன்முறை தலைதூக்கியது ஏன் என்பதை நாம் சற்றுக் கவனித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், வன்முறையின் மூலம்தான் தேர்தலில் வெற்றி பெற முடியுமென்ற நிலையை வேண்டுமென்றே உருவாக்கிச் செயல்படுத்தினார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் அப்படி ஒரு எதிர்க்கட்சியாகயிருந்து, ஆளுங்கட்சியாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருந்திருப்பார்களானால், இன்றிருக்கும் முதலமைச்சரவர்களை முன்பு பாளையங்கோட்டைச் சிறையிலே அடைத்தார்களே, அதைப்போல பல பேர்களை அந்தத் தேர்தலின்போது அடைத்திருப்பார்கள். அது மட்டுமல்லாமல் உங்கள் நிர்வாகத்தின் கீழ், நாங்கள் அப்படிப் பலாத்காரத்தில் ஈடுபட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு எத்தனை கொடுமைகளை நீங்கள் செய்திருப்பீர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் இப்பொழுதிருக்கும் சர்க்கார் ஜனநாயக முறையில் எதிர்க்கட்சியாக இருந்து வந்தவர்கள், அடிபட்டவர்கள், துன்பப்பட்டவர்கள் என்று அந்த அடித்தளத்திலேயிருந்து வந்த காரணத்தினால், அவர்கள் தோற்றுவிட்டு இன்று பதவி போய் விட்டதே என்று அலறிக்கொண்டிருப்பவர்கள் என்று நினைத்து இந்தச் சர்க்கார் அவர்களுக்கு ஜனநாயக உரிமையை மீறிக் கொடுக்கக்கூடிய சலுகைகள் இருந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே, இனிமேலாவது தேர்தல்கள் வரும்பொழுது, நம்முடைய எதிர்





கட்சித் தலைவர் அவர்களைப் போன்றவர்கள், அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் சொல்லி, நம்முடைய பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். 1970-இல் பஞ்சாயத்துத் தேர்தல்கள் வரவிருக்கின்றன. அதற்குள்ளாக 1958-ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தி, நேரடித் தேர்தலைக் கொண்டு வருவதற்கு நம்முடைய முதலமைச்சரவர்கள் முனைய வேண்டுமென்று சொல்லி, இந்த வருவாய்த்துறை வாரியத்தை எடுத்து விடுவதைப் பாராட்டி, அதனைத் தலைமைச் செயலகத்தோடு இணைப்பது மிகச் சாலச் சிறந்தது என்று கூறி அமர்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, அவைத் தலைவரவர்கள் அனுமதித்தபடி எனக்குப் பத்து நிமிஷங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். 10 நிமிஷங்களுக்குப் பிறகு தயவு செய்து மணியடிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நமது சட்டமன்றத்திலே, பல்லாண்டுகளாக மேல் சபை தேவையில்லை என்ற கருத்து பேசப்பட்டு வந்திருக்கிறது. இன்றைக்கு ஆட்சியிலே இருக்கக் கூடியவர்கள் இதைப்பற்றிப் பலமாக வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஆகவே, நம் மாநிலத்திலே மேல் சபை தேவையில்லை என்ற ஒரு முடிவை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படிச் செய்தால் உயர்ந்த படிப்பு உள்ளவர்கள், புத்திசாலிகளின் கருத்துக்களைப் பெற முடியாமல் போகுமே என்று கேட்கலாம். அதற்காக, மேதாவிகள், தனித் திறமையாளர்கள் ஆகியவர்களை இந்தச் சட்டசபையில் இணைப்பு மெம்பர்களாக, ஓட்டுரிமை இல்லாமல், சேர்த்துக் கொள்ளலாம். எனவே, அந்த வகையிலே மேல் சபையை ஏற்படுவதற்கு அதற்கான முடிவை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த சட்டசபைத் துறை ஒரு டெக்னிக்கல் டிபார்ட்மெண்டா அல்லது நான்-டெக்னிக்கல் டிபார்ட்மெண்டா என்ற விஷயம் பரிசீலனைக்குரியது. அதைப்பற்றி அரசு முடிவெடுக்கவில்லை. இது டெக்னிக்கல் டிபார்ட்மெண்ட் என்ற முடிவை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படி முடிவெடுக்கப்பட்டால் நமக்கு பின்னால் பல காரியங்களுக்கு வசதியாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

சட்டமன்றக் கூட்டம் நடக்கும் நாட்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக நாம் கூறிக்கொண்டு வந்திருக்கிறோம். நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகும் சட்டசபை கூடும் நாட்கள் அதிகரிக்கப்படவில்லை. வருஷம் ஒன்றுக்கு 90 நாட்களாவது கூட வேண்டுமென்ற ஒரு கொள்கையை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி ஒத்துக்கொள்ளப்படும் அந்தக் கொள்கை இதுவரை அமுலாக்கப்படவில்லை. குறைந்தபட்சம் 90 நாட்களாவது ஆண்டொன்றுக்குக் கூட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பட்ஜெட் கூட்டம் 45 தினங்களாவது நடக்கவேண்டும். அதற்கு அனுசரணையாக பிப்ரவரி 15ம் தேதியே பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டால்தான் எல்லா அங்கத்தினர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, பட்ஜெட் சம்பந்தமாக ஒரு முழு விவாதத்தை நடத்த முடியும். ஆகவே, இதை அரசாங்கம் பரிசீலித்து அடுத்த ஆண்டு, பிப்ரவரி மத்தியிலேயே அதாவது 15-ம் தேதியே பட்ஜெட்டைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மார்ச் மாதத்திலே கூட்டினால், அவசரம் அவசரமாக, 'அப்ரோப்ரியேஷன் பில்' மாத இறுதிக்குள் முடிந்துவிட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதுவும் இந்த மாதம் லீவு வேறு வந்துவிட்டது, அதனால் 28-ஆம

தேதியே அப்ரோபிரியேஷன் பில்லை முடிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆகவே, மெம்பர்கள் தங்கள் கருத்துக்களைப் பூரணமாகச் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. எனவே, பட்ஜெட் கூட்டம் 45 நாட்களாவது நடக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது காலஞ்சென்ற மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த அவையிலே அறிவித்தபடி, முக்கியமான முடிவுகளை எடுக்கும்பொழுது, எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு 'கன்சல்டேட்டிவ் கமிட்டி' அமைத்து; அக்கமிட்டியில் பரிசீலித்து முடிவு எடுத்துக்கொள்ளலாம் என்ற கருத்தை வெளியிட்டார்கள். ஆனால், அது அமலாக்கப்படவில்லை. அதை அமலாக்குவதற்கு இப்பொழுதுள்ள முதலமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் 'செகண்ட் ரேங்க் லீடர்ஷிப்'பை உருவாக்குவதில்லை. எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவாகச் சொல்லுகிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்தபொழுது, செகண்ட் ரேங்க் லீடர்ஷிப்பை உருவாக்கவில்லை. பார்லிமெண்டரி செகரிட்டரியை வைத்துக்கொண்டிருந்தால், அரசாங்க நிர்வாகத்தைப் பற்றி உணர்ந்து கொள்ள முடியும். இன்று நம்முடைய எதிர்க் கட்சி ஒரு ஷேடோ கேபினெட்டாக இயங்க வேண்டும். அப்படி இயங்கி அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லக்கூடிய வாய்ப்பிருந்தால், சட்டமன்றத்தில் நல்ல கருத்துக்களைப் பெற முடியும். அதற்கான வாய்ப்பை, பார்லிமெண்டரி செக்ரட்டரியை ஏற்படுத்தி, அனுபவம் மிக்கவர்களை அந்த ஆட்சியிலே இருந்தவர்கள் உருவாக்கி இருப்பார்களானால், இன்றைக்கு அந்த இடம் மோசமான நிலையில் இருக்காது. நாமும் உருவாக்காமல் இருக்கக் கூடாது. ஆகவே, பார்லிமெண்டரி செக்கரட்டரியை ஏற்படுத்தி, நிர்வாகத் திறமையுள்ளவர்களை உருவாக்கினால் அரசாங்கத்திற்கு நன்மையாக இருக்கும், அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செலவைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம், இதனாலே ஒன்றும் பெரிய செலவு ஆகிவிடாது.

நாட்டில் எந்த அளவிலே நிலைமைகள் இருக்கின்றன, என்னென்ன நடந்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம் எதிர்த்தரப்பிலே உள்ளவர்களை எல்லாம் சந்தித்துத் தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், அரசாங்கக் கட்சித் தரப்பிலே உள்ளவர்கள், எல்லாம் நன்றாக இருக்கின்றன என்றுதான் சொல்வார்கள். கொஞ்சம் சிரமம் இருந்தாலும், எதிர்த்தரப்பிலே உள்ளவர்களைத் தனியாகச் சந்தித்துப் பேசுவதற்கான பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால், நலமாக இருக்கும். அந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டசபை அங்கத்தினர்களாக நாம் இருக்கிறோம். சட்டசபை அங்கத்தினர்களுக்கு எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். தொகுதியிலே அவர்கள் வேலை செய்ய வேண்டும்; தொகுதி மக்களுடைய குறைகளைக் கேட்க வேண்டும். எங்களுக்கு இருக்கிற வசதிகளோ மிகவும் குறைவு. சாதாரணமாக, ஏழைக் குடும்பத்திலே இருந்து வந்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறோம். அவர்களுக்கு வருகின்ற ரூ. 250 சம்பளத்தை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. நான் பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன். அந்தப் பட்டுக்கோட்டை தொகுதியிலே ஒரு ஆபீஸ் வைத்துக்கொள்ள என்னாலே முடியவில்லை. ஆபீஸுக்கு இடம் கேட்டால், ரூ. 65 வாடகை கேட்கிறார்கள். என்னால் எப்படிக் கொடுக்க முடியும்? தொகுதி மக்களுடைய குறைகளை எப்படி அதிகாரிகளுக்குச் சொல்ல முடியும்? தபால் செலவை எப்படிச் சரிக்கட்ட முடியும்? நேரடியாகக் குறைகள் சொல்ல வருபவர்களைக் கேட்க முடியவில்லை. அவர்கள் என்ன குறைகள் சொல்கிறார்கள் என்பதை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்ல முடியவில்லை. ஆகவே, சர்க்கார் கட்டிடங்கள் ஆங்காங்கு இருந்தால், அங்கு சிறிய அறையை அங்கத்தினர்களுக்குக் கொடுக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொகுதி வேலையை எல்லோராலும் கவனிக்க முடிய





வில்லை, என் போன்ற ஆட்களால் கவனிக்க முடியவில்லை. திறம்பட வேலை செய்ய முடியவில்லை. சர்க்கார் ஜீப் இருக்கிறது. எத்தனை நாட்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று தெரியவில்லை. அதிகாரி மனது வைத்தால் எடுத்துக்கொள்ளலாம், இல்லையென்றால் முடியாது. நாம் புரோகிராம் போடுகிறபடி அந்த ஜீப்பைக் கொண்டு காரியங்களைச் செய்ய முடியவில்லை வருஷத்திற்கு 50 நாட்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜீப் எடுத்துக் கொள்ளுவதற்குக் கட்டாயமாக ஒரு உத்திரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஸ்டல் கட்டப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. குழாயைத் திருப்பினால் கையோடு வந்துவிடுகிறது. எதில் கையை வைத்தாலும் கையோடு வந்துவிடுகிறது. தண்ணீர் கொட்டிக்கொண்டே இருக்கிறது, அதை நிறுத்த முடியவில்லை, நிறுத்தினால் திறக்க முடியவில்லை. அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாப்பாட்டின் தரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய தேவையே கிடையாது. ஆகவே, சாப்பாட்டு வசதியை நல்ல முறையிலே செய்து தர வேண்டும். சுவற்றை வைத்துத்தான் சித்திரம் எழுத முடியும். உடம்பு கெட்டுப் போனால், என்ன செய்ய முடியும்? இப்பொழுது ஏறக்குறைய $1\frac{1}{2}$ மாதமாக மட்டமான சாப்பாடு சாப்பிட்டு உடல்நிலை கெடுகிறது. சிலபேர் சாப்பிடுவதில்லை. ஆகையினால், நல்ல முறையிலே சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யுங்கள். இங்கே 2 மணிக்கு முடிந்தவுடன் 3 மணிக்கு சாப்பிட வேண்டியிருக்கிறது, 3 மணிக்கு சாப்பிட முடியவில்லை. அந்த நேரத்தில் மட்டமான சாப்பாடுதான் கிடைக்கிறது. இங்கேயே சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். எங்களுக்குத் தேவையாக இருந்தால், நாங்கள் பணம் கொடுத்தால் சாப்பாடு வந்துவிடும் என்ற முறையில் இங்கேயே சாப்பாடு சாப்பிடுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். கொஞ்சம் நோயாளியாக இருப்பவர்கள் ஓட்டலிலே சாப்பாடு சாப்பிடுவதற்கு முடியாது. அவர்கள் குடும்பத்தோடு வந்து சமையல் செய்து சாப்பிடுவதற்கு வசதி இல்லை. அவர்கள் குடும்பத்தோடு வந்து சமையல் செய்து சாப்பிடுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டும். அதற்கான வசதியைச் செய்து கொடுத்தால், என்னைப் போன்றவர்கள் சமையல் பையனை வைத்தாவது சமையல் செய்யச் சொல்லிச் சாப்பிடுவோம். ஓட்டல் சாப்பாட்டை நினைத்தாலே பயமாக இருக்கிறது. ஆகவே, சாப்பாட்டிற்கு நல்ல ஏற்பாட்டைச் செய்து, வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அரசாங்க பஸ்களில், இரயில்களில் இலவசமாய்ச் செல்ல இலவசப் பாஸ் அளித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லா இடங்களுக்கும் செல்வதற்குரிய வசதியை அளித்தால் நலமாக இருக்கும். இரயிலிலேயே எப்பொழுதும் போய்க்கொண்டிருப்பார்கள் என்று சொல்லலாம். இரயிலிலே வேலை இருந்தால்தான் போவார்கள். ஏனென்றால் வேறு வகைச் செலவும் உண்டு. இரயிலிலே டிக்கட் செலவுமட்டும் ஏற்படுவதில்லை, இன்னும் நிறைய செலவுகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இரயிலிலே, பஸ்ஸிலே இலவசமாகச் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அருகிலே கேரளாவிலே, மைசூர் மாநிலத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதைக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கத்தினர்களுக்குப் ஃபோன் வசதியே கிடையாது. ஹாஸ்டலிலே ஃபோனுக்காக க்யூவிலே நிற்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அறைக்கு அறை ஃபோன் வைக்கலாம். இதனாலெல்லாம் பெரிய செலவாகிவிடாது. இதிலே என்ன சிக்கனம் செய்ய முடியும்? இதிலெல்லாம் சிக்கனம் கடைப்பிடிக்க முடியாது.

சட்டசபை அங்கத்தினர்களுடைய கட்சிகளுக்கெல்லாம் ஆபீஸ் கொடுக்க வேண்டும். 4 பேர், 5 பேர் இருந்தால், தனியாகப் பேச முடியவில்லை. யாராவது வந்துவிடுவார்கள், தனியாகப் பேசும்போது. தனியாகப் பேசக் கூடிய முறையில் ஆபீஸ் கொடுப்பதற்கு ப்ரப்போசல் இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். அதைக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது), சார், மன்னித்துக்கொள்ளுங்கள், இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1969 மார்ச் 26

அமைச்சர்களுக்கு ரூ. 500 சம்பளம் என்ற கொள்கையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்குத் தனியாக வசதி கிடையாது. (குறுக்கீடு) ஏழைகள் மந்திரியாக வரக்கூடாதா என்ன ? இப்பொழுது வந்திருப்பவர்களெல்லாம் பணக்காரர்களா என்ன ?' அவர்களுக்கு அனுமதித்த தொகையை எடுத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டும். யாராவது வேண்டாமென்றால் வேண்டாம் என்று சொல்லிக்கொள்ளட்டும். ஆனால், அவர்களுக்குக் கொடுத்ததைக் குறைக்கக் கூடாது. ஏனென்றால், பொது வாழ்க்கையிலே நல்ல பெயரோடு வாழ வேண்டும். அவர்களுக்குக் களங்கம் ஏற்படக் கூடாது. அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்தால் தான் களங்கம் ஏற்படாது. இல்லையென்றால், களங்கம் ஏற்படும். சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கூட களங்கம் ஏற்படக் கூடாது. ஒருவரை நம்பி வாழவே கூடாது. பிறரை நம்பி வாழ வேண்டுமென்ற நிலைமையே இருக்கக் கூடாது. அதை அனுசரித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சட்டமன்றத்தைப் பொருத்தவரையில் இந்தக் கூட்டத் தொடரிலே எனக்கு ஏற்பட்ட வருத்தத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே பேசப்பட்டதைப் பார்த்தால் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று கிளப்பி, பேச்சு உரிமை குறைக்கப்பட்டிருக்கிறது என்ற உணர்வு எனக்கு ஏற்படுகிறது. அதைப்பற்றி இங்கே விவரமாகப் பேசுவதற்கு விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்களும் அவைத் தலைவர் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர்களும் கலந்து இந்த மன்றத்திலே பேச்சு உரிமை குறைக்கப்பட்டிருக்கிறது எப்படி, அதற்காக என்ன செய்யலாம் என்று பேசி முடிவெடுக்கவேண்டும். ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால், "நீங்கள் அதற்காக ஏதாவது விவரங்களைக் கையிலே வைத்துக்கொண்டு சொல்லுங்கள்," என்று சொன்னால் என்ன செய்ய முடியும் ? சட்டமன்ற நடவடிக்கைகளை எல்லாம் படித்துப் பார்த்தேன். அந்த உரிமை குறைக்கப்பட்டிருக்கிறது என்ற உணர்வு இருக்கிறது. அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. சபை கண்ணியமான முறையிலே நடக்கவேண்டும், இருக்கவேண்டும். அங்கத்தினர்கள் நினைப்பதைத் தைரியமாகச் சொல்வதற்கு உரிமை இருக்கவேண்டும். உரிமை மீறிப் பேசுவதை அனுமதிக்கவேண்டுமென்று கூறவில்லை. நியாயமாகச் சொல்வதற்கு அனுமதி இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய சிப்பந்திகளைப்பற்றி........

(மணி அடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

***திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரியுள்ள மானியத்தின் மீது என்னுடைய கருத்தையும் சொல்வதற்கு விரும்புகிறேன. இன்றைய தினம் நமது சர்க்கார் நிர்வாகம் செயல்படுவதற்காக மானியம் ஒதுக்கப்படுகிறது. அவ்வாறு ஒதுக்குகின்ற இந்த சந்தர்ப்பத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும் யோசனைகளையும் சொல்வது மேன்மேலும் நிலையைத் துரிதப்படுத்துவதற்கு உதவியாக இருக்குமென்ற முறையிலே தான் இப்பொழுது அங்கத்தினர்கள் அவர்கள் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் இன்றைய தினம் நம்முடைய தலைமைச் செயலகத்தை எடுத்துக்கொண்டார்களானால் முன்னால் என்ன நடந்ததோ, அதில் இப்பொழுது சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் ஒரு சம்பந்தப்பட்ட பேப்பரைத் தேடவேண்டுமென்று சொன்னால், மணிக் கணக்கிலே காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சில சமயங்களிலே மணிக் கணக்கிலே காத்திருந்தும் கூட சம்பந்தப்பட்ட பேப்பர் இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை ஏற்படாத அளவுக்குத் துரிதமாகப் பேப்பர்களைப் பைசல் செய்து சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அனுப்புவதற்கும் அல்லது இம்மாதிரி சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் சென்று அலையாத அளவிற்கு இருப்பதற்கும் தலைமைச் செயலகத்திலே வேலை செய்யவேண்டும். அந்த முறையிலே தலைமைச் செயலகத்திலே இருக்கக் கூடியவர்களை முடுக்கிவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1969 மார்ச் 26] [திரு. ஆ. கு. சுப்பையா]

இரண்டாவதாக, நமது மாநிலம் எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். இதற்கு முன்னாலேயெல்லாம் அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு தேர்தலில் ஈடுபடுவதன் மூலம், தவறான சில காரியங்களை அதிகாரிகள் செய்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு நீண்ட காலமாகச் சொல்லிக்கொண்டு வந்துள்ளோம். அதை முழுக்க முழுக்க காங்கிரஸ் கட்சியைச சேர்ந்தவர்கள் செய்து வந்தார்கள். இன்றைக்கு அரசாங்கத்தில் மு.ப.
மாற்றம் ஏற்பட்டிருக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் நம்முடைய அமைச்சர்கள் 11-30
நிர்வாகத்தில் தலையிடுவதில்லை என்று சொன்னாலும், அந்தப் பழக்கம் அறவே கூடாது என்ற முறையில், தேர்தல் காலங்களில் அமைச்சர்கள் தேர்தல் வேலைகளைச் செய்யாத அளவுக்கு இருப்பதற்கு இந்தியாவில் ஒரு எடுத்துக்காட்டாக விளக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயமாகும்.

மாவட்ட, மாநில அதிகாரிகளுக்கு எழுதுகின்ற கடிதங்களுக்கு சமீபத்தில் தான் அக்நாலெட்ஜ்மெண்டு வருகிறது. அதற்கு முன்னால் அந்தப் பதில் கூட இருக்காது. இப்பொழுது பதில் வருகிறது. பதில் வருவதோடு மாத்திரம் இருந்துவிடக்கூடாது. எழுதுகிற கடிதங்களின் மீது நடவடிக்கை எடுத்து, இன்ன இன்ன வேலைகள் செய்ய முடியும், செய்ய முடியாது, செய்வதிலே இருக்கக்கூடிய இடையூறுகள் என்ன என்பதையெல்லாம் விவரமாகப் பதிலில் தெரிவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். உதாரணமாக ஒரு தாசில்தாருக்குக் கடிதம் எழுதினால் கூட, அதற்கு எந்தவிதமான பதிலும் கிடைப்பதில்லை. ஆண்டுக் கணக்கில் நடவடிக்கை எடுப்பதும் கிடையாது. இம்மாதிரியான ஒரு முறை இருந்துகொண்டிருக்கிறது.

தாசில்தார் அலுவலகத்திலே இருப்பதே கிடையாது. எப்பொழுது பார்த்தாலும் ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். அலுவலகத்திலே இருந்து அலுவல்களைக் கவனிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படவேண்டும். ஒரு குறிப்பிட்ட தினத்தில் தான் வெளியே செல்லவேண்டும் என்ற நிலையை கீழே இருந்து தாலூக்கா மட்டம், மாவட்ட மட்டம் வரையில் உள்ள அதிகாரிகள் ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். அப்பொழுது தான் வேலைகள் முறையாக நடைபெறும். இல்லை என்று சொன்னால் பழைய போக்கில் போகக்கூடிய ஒரு நிலை தான் ஏற்படும். அப்படி ஏற்படக்கூடாது. இந்த நிலையை மாற்றி அமைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற இலாகாவைப் பொறுத்தவரையில் நாம் பேசுகின்ற பேச்சுக்களையெல்லாம் எழுதித் தருகிறார்கள். அச்சடித்துத் தருகிறார்கள். அதைப் படித்துப் பார்த்துப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த டைப்ரைட்டர்கள் தேய்ந்து போயிருக்கின்றன என்று நினைக்கிறேன். ஆகவே, புதிய மெஷின்கள் வாங்கிக் கொடுத்தாகவேண்டும். படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்குத் தெளிவாக இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கேள்விகள் போட்டு ஓராண்டு ஆகியும், அந்தக் கேள்விகளுக்குப் பதில் தயார்செய்து கொடுக்க மறுக்கின்றனர். என்ன காரணம் என்று தெரியவில்லை. சென்ற ஆண்டு போட்ட கேள்விக்கு, சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து பதில் கிடைக்கவில்லை என்று சொன்னால், பதில் கிடைக்கவில்லை, பதில் அளிக்க முடியாது என்று பதில் அளித்துவிட்டால் மிக மிக உதவியாக இருக்கும். அதைச் செய்தாகவேண்டும்.

அடுத்தபடியாக, அங்கத்தினர்கள் கேள்விகள் போட்டால், மூன்று மாதங்களுக்கு மேல் ஆனால், கவர்னர் அவர்கள் சபையினுடைய கூட்டத்தைக் கலைத்துவிடுகிறார்கள். அவ்வாறு கலைக்கப்பட்டால் மீண்டும் ஒரு முறை அங்கத்தினர்கள் கேள்விகளைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். என்ற ஒரு விதி இருக்கிறது. தயவு செய்து அந்த விதியை எடுத்துவிட வேண்டும். அங்கத்தினர்களுக்குப் பல அலுவல்கள் இருக்கின்றன. பல இடங்களுக்குச் சென்று வரவேண்டியிருக்கிறது. அதே கவனமாக இருந்து கேள்விகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய வாய்ப்பு, வசதி இல்லை என்று சொன்னால், அந்த அங்கத்தினர்கள் போட்டிருக்கக்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1969 மார்ச் 26

கூடிய கேள்விகள் அத்தனையும் காலாவதி ஆகின்றன. ஆகவே, அந்த நிலை இருக்கக்கூடாது. அது சம்பந்தமாக விதிகளில் ஏதாவது இடையூறுகள் இருக்குமானால், அதைத் திருத்திக்கொள்வதுதான் நன்மையாக இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சட்டமன்ற விடுதியில் அங்கத்தினர்களுக்கு ஏற்படுத்தியிருக்கக்கூடிய வசதிகள் குறைவாக இருப்பதுபற்றி அங்கத்தினர்கள் அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி கவனிக்கவேண்டும். அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்களில் அதிகமான பேர்களை தற்காலிக ஊழியர்களாக வைத்திருப்பதைவிட, குறைவான எண்ணிக்கையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களை வைத்துக் கொள்ளவேண்டும். அவர்களை நிரந்தரமாக வைத்துக்கொள்வதன் மூலம் அந்த வேலைகளை முறையாகச் செய்ய முடியும். அப்படிச் செய்தால் அவர்களுக்கு நாம் ஒரு உத்தரவாதம் அளித்தது போல இருந்திருக்க முடியும். 10 ஆண்டுகள், 12 ஆண்டுகள் வேலை செய்திருக்கக்கூடிய பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் தற்காலிக ஊழியர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அது கூடாது. சில பேர்கள் நமக்கு அறிமுகம் தெரிவதே இல்லை. 15 வருஷங்களாக இருப்பவர்கள் தற்காலிக ஊழியர்களாகவே இருப்பதைப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். சில பேர்கள் புதியதாக வந்தவர்கள் பெர்மனெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான முறை இருந்தால், என் எப்படி பெர்மனெண்ட் செய்யப்பட்டார்கள் என்பதையெல்லாம் பார்க்கவேண்டும். 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிக்கொண்டிருக்கக் கூடியவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கி, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றம் நடக்கக்கூடிய காலங்களை நீடித்து நடத்துவது தான் சரியாக இருக்க முடியும். காலையிலே 9 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 1 மணிக்கு முடித்துக்கொள்ளவேண்டும். மீண்டும் வேண்டுமென்றால் மாலையில் 2, 3 மணி நேரம் வைத்துக்கொள்ளலாம். அதைப் பற்றி ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. சட்டமன்ற உறுப்பினர்கள் பல வேலைகள் சம்பந்தமாக அதிகாரிகளை அந்த சந்தர்ப்பத்தில் தான் பார்க்கவேண்டியிருக்கிறது. தலைமை அலுவலகத்தில் சென்று சம்பந்தப்பட்ட வேலைகளைக் கவனிக்கவேண்டிய நிலைமை இருப்பதினால், முழு நேரமும் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதனால் இங்கே சட்டமன்றத்தில் இருந்தால், வெளியேயுள்ள முக்கியமான காரியங்களைச் செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ், ரயில் பாஸ்கள் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். காலம் சென்ற அறிஞர் அண்ணா அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதியை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். எழுதுவதற்கு பேப்பர், பென்சில் கவர் இவைகளெல்லாம் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஓர் ஆண்டு ஆகிவிட்டது. கொடுக்கவில்லை. அதையும் செய்யவேண்டும்.

எட்டயபுரத்தில் இருக்கக்கூடிய பாரதியார் பிறந்த வீட்டை அரசாங்கமே வாங்கி அந்த வீட்டை நினைவுச் சின்னமாக வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, பஞ்சாயத்துக்கள் தேர்தலைப் பொறுத்தவரையில், ஒரே காலத்தில் மக்களே பஞ்சாயத்துத் தலைவர்களையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்தத் தேர்தல் நடக்கவேண்டும் என்ற முறையில் பஞ்சாயத்துக்கள் சட்டத்தைத் திருத்தி அமைப்பது நலம். இல்லையென்றால், எப்பொழுது பார்த்தாலும், தேர்தல், தேர்தல் என்று தேர்தலில் பங்கு கொள்ளும் நிலை தான் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களே பஞ்சாயத்துத் தலைவர்களையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.



1969 மார்ச் 26] [திரு. ஆ. கு. சுப்பையா]

***திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, நான் இப்பொழுது பேசுகிற விஷயம் அனைத்தையும் தி.மு.க. எதிர்க்கட்சியினராக இருந்த நேரத்தில் அவர்கள் பேசியதை வைத்துத் தான் பேசுகிறேன். நான் பேசுகின்ற நேரத்தில் பலவற்றை ஆதாரத்துடன் பேசுகிறேன். பலவற்றை கேள்விப்பட்டவைகளை வைத்துப் பேசுகிறேன். ஆதாரத்துடன் பேசுகிறபொழுது எங்களுக்கு அமைச்சர்களிடமிருந்து பதில் வருவதில்லை. கேள்விப்பட்டதை வைத்துப் பேசுகிறபொழுது குறுக்கீடு செய்து, "ஆதாரம் இருக்கிறதா ?" என்று கேட்கிறார்கள். எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரமோ 10 நிமிஷம். எனவே அமைச்சர்களும், அங்கத்தினர்களும் குறுக்கிடாமல்......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** ஐந்து நிமிடம் தான் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இப்பொழுது கொடுக்கப்படுகிறது.

**திரு ரா. ராமச்சந்திர துரை :** குறுக்கிடாமல் இருந்தால் சுருக்கமாக என்னுடைய பேசசை முடித்துவிட எண்ணுகிறேன். "நாங்கள் பகுத்தறிவுப் பாசறையிலிருந்து வந்தவர்கள், சுயமரியாதை நோக்குடன் நடப்பவர்கள்" என்று கூறுகிற தி.மு.க. இந்த அமைச்சர் அவை அமைத்த நேரத்தில், அவர்களைப் பார்க்கிற நேரத்தில் பகுத்தறிவுப் பாசறையிலிருந்து வந்தவர்கள் தானா, சுயமரியாதை நோக்குடன் வந்தவர்கள் தானா என்று சிந்திக்கக்கூடிய வகையிலே இருக்கிறது. தி.மு.க. எதிர்க் கட்சியினராக இருந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சியினர் ஆளும் கட்சியாக இருந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சியினரைப் பார்த்து ஜாதியின் அடிப்படையில் அமைச்சர்களை வைக்கக் கூடாது, தகுதியின் அடிப்படையில் தான் வைக்க வேண்டும் என்று கூறினார்கள். இன்றைய தினம் அமைச்சர்களாக வைக்கப்பட்டவர்களைப் பார்க்கிற நேரத்தில், உள்ளபடியே அமைச்சர்கள் அனைவரும் நெஞ்சில் கை வைத்துப் பார்த்துக் கொண்டால், இது ஜாதியின் அடிப்படையில் வருகிறதா அல்லது தகுதியின் அடிப்படையில் வருகிறதா என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, அமைச்சர்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டதாகக் கூறியிருக்கிறார்கள். நமது மதிப்பிற்குரிய நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசுகிற நேரத்தில்கூட, இந்த ரூ. 500 சம்பளம் போதாது, அதிகப்படியாக உள்ள சம்பளத்தை வாங்கிக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். அது உள்ளபடியே ஒப்புக் கொள்ளக் கூடிய விஷயம்தான். ஆனால் அமைச்சர்கள் ரூ. 500 சம்பளம் வாங்கிக் கொண்டாலும் கூட, அவர்கள் வெளி ஊர்களுக்குப் போகிற நேரத்தில் போக்குவரத்துச் செலவு (பாட்டா) வகையிலே பல ஆயிரக் கணக்கான ரூபாய் அவர்களுக்கு வருகிறது. காந்தியார் அவர்கள் சொன்னார்கள். அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள், பொதுப் பணியில் இருப்பவர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும், எளிய வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று கூறினார்கள். உள்ளபடியே இன்று அமைச்சர்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டாலும் கூட, அவர்கள் எளிய வாழ்க்கை நடத்துவதாக ஒப்புக்கொள்ள முடியாது. அவர்கள் வெளியூர்களுக்குச் செல்கின்ற நேரத்தில் அவர்களுக்கு அளிக்கப்படுகிற விருந்துகள் இவைகளையெல்லாம் பார்த்தால், படாடோபமான வாழ்க்கையைத் தான் அவர்கள் நடத்துவதாக கூறலாமே ஒழிய, சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார்கள் என்று பெயரளவுக்கு இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. அவர்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டாலும் கூட, குறிப்பிட்ட அளவுக்குப் பொதுப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் அவர்களுடைய அரசியல் வாழ்க்கையை நல்லதோர் முறையில் நடத்த வேண்டும். ஆகவே, சம்பளம் எல்லாம் உயர்த்தப்பட்டால் தான் நல்லதோர் முறையில் வாழ்க்கையை நடத்த முடியும்.

[திரு. ரா. ராமச்சந்திர துரை] [1969 மார்ச் 26

மற்றொன்று சொல்லிக்கொள்கிறேன் அமைச்சர்களுடைய சொத்து விவரங்களைப்பற்றி பல தடவைகள் இந்த அவையிலே பேசப்பட்டு வந்திருக்கிறது. அமைச்சர்களுடைய சொத்து விவரங்களைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், அவர்கள் எதிர்க் கட்சியினராக இருந்த நேரத்தில் கூட, காங்கிரஸ் கட்சியில் இருக்கக் கூடிய அங்கத்தினர்களும், அமைச்சர்களும் சொத்து விவரங்களை இந்த அவையிலே வைக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். இன்று அவர்கள் சொத்து விவரங்களை இந்த அவையிலே வைத்திருக்கிறார்களா என்றால், உள்ளபடியே வைக்கவில்லை. காரணம் என்ன? வெளியே பேசப்படுகிற அசிங்கமான வார்த்தைகளைக் கேட்டு தமிழக அமைச்சரவை இவ்வளவு கேவலமான நிலைக்குப் போகிறதே என்பது குறித்து நான் வேதனைப்படுகிறேன். எனவே அவர்கள் சொத்து விவரக் கணக்குகளை இந்த அவையிலே வைப்பது மிகவும் அவசியம். ஒரு பத்திரிகையில் கூட பார்த்ததாக ஞாபகம். மறைந்த முதல் அமைச்சர் இருந்த காலத்தில், அவர்கள் சொத்து விவரங்களை மற்ற அமைசசர்களிடம் கொடுத்திருப்பதாகவும் மற்ற அமைச்சர்கள் முதல் அமைச்சரிடம் கொடுத்ததாகவும் பத்திரிகையில் செய்தி வந்ததாக ஞாபகம்.

அடுத்தபடியாக திரு. மாரிமுத்து அவர்கள், எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் ஒரு "ஷேடோ காபினெட்" ஆக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே, இங்கிலாந்து நாட்டிலே, "காபினெட்" என்றும், "ஷேடோ காபினெட்" என்றும் இரு முறைகள் இருக்கின்றன. ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் அந்த வகையில் இருக்கிறார்கள். முதல் அமைச்சருக்கு எத்தனை சலுகைகளும் மற்றவைகளும் இருக்கின்றனவோ அத்தனையும் எதிர்க்கட்சித்தலைவருக்கும் கொடுக்கப்படவேண்டும், முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கள் எதிர்க்கட்சிக்கு 'ஷேடோ காபினெட்' என்ற முறையில் சலுகைகள் கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக உள்ளவர்கள் உள்ளபடியே ஓரளவிற்கு வசதியுள்ளவர்களாக இருந்தாலும் கூட எளியவர்களாக இருக்கக்கூடியவர்களும் தலைவராக வருவதற்கு வாய்ப்பு இருக்கிற (குறுக்கீடு) காரணத்தால்அதைச் சொல்கிறேன். அது இருக்கட்டும். எனவே, அவர்களை "ஷேடோ காபினெட்" என்ற முறையில் முதல் அமைச்சருக்குக் கொடுக்கப்படும் வசதிகள், கட்டட வசதி, கார் வாகன வசதி போன்ற வசதிகளை எதிர்க்கட்சித் தலைவருக்கும் கொடுக்க வேண்டும். சகல விதமான உரிமைகளையும் கொடுக்கவேண்டும். அந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுத்துவிட்டு, ஏதோ காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள், அதற்காகக் கொடுத்தோம் என்று அந்த மாதிரிப் பிரச்சினையைக் கொண்டு வரவேண்டாம் என்று மட்டும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமைச்சர்கள், நிர்வாகத்தில் தலையிடுவது பற்றி ஒரு சில விஷயங்களை மட்டும் கூறுவதற்கு நான் ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சிபாரிசினால், ஆஸ்டலில் பல வருஷங்களாக வேலை செய்த ஸ்வீப்பர்கள், மற்றும் பணி ஆட்கள் பர்மெனென்ட் செய்யப்படாமல், மற்ற 8, 10 பேர்களை மட்டும் சிபாரிசு செய்து பர்மெனன்ட் செய்திருப்பதாக அங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். அவற்றை விசாரித்து, அதிக வருஷம் வேலை செய்திருப்பவர்களையெல்லாம் பர்மெனென்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் சொல்ல வேண்டும். ஒரு ஸ்பிரிட் கடைக்கு என்று ஒரு ஏக்கர் புறம்போக்கு நிலம் 60 வருஷ லீஸுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த லீஸுக்குக் கொடுத்த நிலம் ஸ்க்வொயர் ஃபுட் கிட்டத்தட்ட ரூ. 25, ரூ. 30 பெறுமானமுள்ள இடம். (குறுக்கீடு) அவர் பிரெஞ்ச் பாலிஷ், ஸ்பிரிட் விற்கிறவர். அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள இடம் இருக்கும் பக்கத்தில் அதன் பக்கத்திலே ஒரு ஏக்கர் நிலத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று கோரி, அந்த இடமும் அவருக்குக்



1969 மார்ச் 26] [திரு. ரா. ராமச்சந்திர துரை]

கொடுக்க, சாங்க்ஷன் செய்வதற்குச் சிபாரிசு செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அந்த இடத்தை ஹவுசிங் போர்டுக்காகவும், கூட்டுறவு பில்டிங்குக்காகவும் கேட்டுக் கொடுக்கப்படாமல் மறுக்கப்பட்டு, தனி நபருக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** கனம் அங்கத்தினர் அவர்கள், இடத்தை 60 வருஷத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றார்கள். யாருக்குக் கொடுத்தார்கள், எப்பொழுது கொடுத்தார்கள் என்ற விவரங்களையும் சொன்னால் நல்லதாக இருக்கும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, டி. கதிரேசன், டி. கே. இண்டஸ்ட்ரீஸ், செண்ட் தாமஸ் மவுண்ட், செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட் (குறுக்கீடு : எந்தக் கட்சி ? ) எந்தக் கட்சியாக இருந்தால் என்ன ? நாங்கள் கட்சிப் பாகுபாடு பார்ப்பதில்லை. (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கதிரேசன் என்ற பெயரைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் அந்த இடத்தில் எவ்வளவு ஆண்டுகளாகக் கம்பெனி வைத்திருக்கிறார்கள், எப்பொழுது கொடுக்கப்பட்டது, எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்கிற விவரமெல்லாம் தெரியுமா

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** முழு விவரமும் தேவையென்றால், மத்தியானம் கொடுக்கிறேன். இம்மாதிரிக் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு அமைச்சருடைய சிபாரிசினால் செய்யப்பட்டது என்று பேசப்படுகிறது. (குறுக்கீடு) அவர்களுக்கு லீஸுக்குக் கொடுக்கச் சிபாரிசு செய்யப்பட்டு, மேலே பேப்பர்....................

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 60 வருஷ லீஸ் எந்த ஆண்டில் விடப்பட்டது ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அதைத் தான் மத்தியானம் கொடுக்கிறேன் என்றேன். மேலும் வார்னிஷ் குடித்துப் பலபேர் இறந்த நேரத்தில் பல கடைகளுடனும் இவர் கடையும் சீல் வைக்கப்பட்டு இவருக்கு மாத்திரம் 20,000 (இருபதாயிரம்) லிட்டர் ஸ்பிரிட்டுக்குப் பெர்மிட் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், இது ஒரு அமைச்சருடைய சிபாரிசால் கொடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஹாஸ்டல் வசதிகளையெல்லாம் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. என. கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இன்றைய தினம், நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அவையில் வைத்திருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள், ஆளும் கட்சித்தலைவராக இருந்தபோது, இந்தச் சபையில் ஒரு நல்ல எதிர்க் கட்சி இல்லையே என்று வருத்தப்பட்டார்கள்; இன்றைக்கு இருக்கின்ற எதிர்க் கட்சி ஒரு நல்ல கட்சியாக இருக்கிறதா என்பதை அவர்கள் கூர்ந்து நோக்கியிருப்பின் அத்தகைய நிலையைப் பார்த்திருப்பார்களா என்பதை எண்ணிப் பார்க்கிறேன். ஆளும் கட்சியின் ஒரு சாதாரண உறுப்பினர் என்ற வகையில் இந்தச் சட்ட மன்றத்தின் நடவடிக்கைகளை, சட்ட மன்றத்தின் பாரம்பரியத்திற்கு இழுக்கு ஏற்படாத வகையில் தனிச் சிறப்பு உள்ளது என்பதை இந்தியத் துணை கண்டத்திலேயே ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதற்காக என்னுடைய தனிப்பட்ட முறையில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த எதிர்க்கட்சித் தலைவருக்கு, என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று அந்தத் தராப்பிலேயிருந்து சுட்டிக்காட்டி

ஞர்கள். நானும் அதையே வலியுறுத்திச் சொல்லுகிறேன். அயல் நாடுகளில் தரப்படுவதாகக் குறிப்பிடுவதுபோல, எதிர்க்கட்சித் தலைவருக்கு நம்முடைய அமைச்சர் உபயோகிக்கும் கார்களைப்போல் இல்லாமல், ஒரு பெரிய காராகக் கொடுத்து (குறுக்கீடு—சிரிப்பு), நான் உள்ளபடியே சொல்லுகிறேன், வேடிக்கைக்காக இல்லை, ஒரு பெரிய காராகக் கொடுத்து, எதிர்க்கட்சித் தலைவரை ஆளும் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவிற்கு மதிக்கிறது என்பதை அதன் மூலம் காண்பிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

இன்னொன்று. பல உறுப்பினர்கள் பேசினார்கள் ஒன்றைப்பற்றி வர்க்க ரீதியாகச் சொல்லுவார்கள் என்று நினைத்தேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் பலர் என்னைப்போன்ற வாழ்க்கைத் தரத்தில் இருப்பார்கள் என்று கருதுகிறேன். அமைச்சர்கள் ரூ. 500-ல் அவர்கள் இருக்கும் நிலையிலேயே சமாளிக்க முடியவில்லை. எதிர்க்கட்சி அங்கத்தினர்களே எடுத்துச் சொல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் தவறிவிட்டார்கள். இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் எங்களுக்கும் சேர்த்துத் தீவிரமாக வாதாடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறைந்த பட்சம் நாள் படி ரூ. 15 என்பதை ரூ. 20 என்று உயர்த்த வேண்டும் என்று சொல்ல வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் ரூ. 15 ஆக இருப்பதை ரூ. 30 ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்கலாம். நான் கேட்கிறேன், 15 ரூபாயை 20 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று அதோடு ரூ. 250 என்கிற சம்பளத்தில் ஏழை எளிய மக்கள் நன்றாகப் பணிசெய்து சமாளிக்க முடியவில்லை என்பதால், அந்த ரூ. 250 என்பதை ரூ. 300 ஆக (குறுக்கீடு—குரல்கள்) 400 எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் 400 என்கிறார்கள். இரண்டையும் சேர்த்து, மூன்றால் நான்கால் வகுத்து எது சரியோ அந்த வகையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சருடைய பெயரிலேயே, கருணை காட்டுவதற்கும், நிதியை வாரி வாரி வழங்கக் கூடியவர்கள் என்பதற்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறவர்கள். எங்கள் இயக்கத்திற்கே அவர்கள் அந்த அளவிற்குப் பெருந்தகையாக இருப்பவர்கள். இந்த மன்றத்திலே இருக்கக்கூடியவர்களை, எளியவர்களைக் காப்பாற்ற நல்ல திட்டங்களைக் கொண்டுவருவார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தாற்போல் பதவி விலகல்பற்றிக் குறிப்பிட்டார்கள். பதவி விலகலுக்குப் பின்னாலே, அவர்கள் எதை எதிர்பார்த்துச் சொல்லியிருப்பார்களோ, நான் அதைக் குறிப்பிட விரும்பவில்லை. அப்படிக் குறிப்பிடுபவர்கள், சிலபல இடங்களில் காரியங்களைச் செய்கிறார்கள், அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகித் தேர்தலில் ஈடுபடுகிறார்கள் என்று ஓர் எடுத்துக்காட்டையாவது எடுத்துக்காட்டிச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அண்டை மாநிலங்களில்கூட அவ்வாறு இல்லாததால் எடுத்துக் காட்ட இயலவில்லை.

அடுத்தபடியாக தேர்தலைப்பற்றிப் பரவலாகச் சொன்னார்கள். மத்திய சர்க்கார் " தேர்தல் நேரங்களில் வாக்காளர்களைக் காரில் அழைத்துச் செல்லலாமா? கார்களைப் பயன்படுத்தலாமா ?" என்று இதுபற்றி விவாதிப்பதாகப் பத்திரிக்கைகளில் செய்திகள் வருகின்றன மாநில அரசைப் பொறுத்தவரையில் தீர்மானமாக ஒரு நல்ல வடிவம் காண வேண்டும். என்னைப்போன்ற ஏழையாக இருக்கிறவர்கள் இயற்கையாக காரை வைத்துக்கொள்ள முடியாது. பணக்காரர்கள் தேர்தல் நேரங்களில் கொடுக்கின்ற தொல்லைகளை இதனால் தீர்க்க முடியும் என்று கருதுகிறேன். அரசு ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, தேர்தல் நேரங்களில் பல கட்சிகளில் உள்ளவர்கள் மேடைகளில் ஏறிப் பேசுகிறார்கள். அப்படிப் பேசுகின்றவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்களைப்பற்றி, அமைச்சர்களைப்பற்றி, மற்றவர்களைப்பற்றித் தனி நபர் வாழ்க்கையை வைத்து மேடைகளில் விமர்சித்துப் பேசுகிறார்கள்.





தேர்தலுக்கு முன்னால் சர்வ கட்சிக் கூட்டம் என்று கூட்டப்படுகிறது. அந்தக் கூட்டத்தில் சர்வகட்சித் தலைவர்களும் கூடி, தேர்தல்கால நடவடிக்கை முறைகளைப்பற்றி ஒழுங்கு செய்துகொள்ளுகிறார்கள். ஆனால் அப்படி ஒருங்கே கூடி ஒரு முடிவு எடுத்தாலும், மேடைகளில் பேசும் போது அப்படி நடந்துகொள்வதில்லை. தனிப்பட்ட நபர் வாழ்க்கையை விமர்சித்துப் பேசுகிறார்கள். இதனால் தேர்தல் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டையும் மீறுகிறார்கள். ஆகவே, தேர்தல் கால ஒழுங்கு நடவடிக்கைகளை நமது அரசு நல்ல முறையில் மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

ஊராட்சிகள், நகராட்சிகள் நன்றாக இயங்குவதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மா. முத்துசாமி அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். சில ஊராட்சிகள் பேரூராட்சி மன்றங்களாக மாற்றப் படவில்லை. என்னுடைய மாயவரம் தொகுதியில் மணல்மேடுப் பகுதியைப் பேரூராட்சியாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, 1968-ம் ஆண்டு செப்டம்பர் 19-ம் தேதியன்று மத்திய அரசாங்க ஊழியர்கள் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கருணை காட்டி வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலைவாய்ப்பு இழந்தவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக, அவர் இறுதியாக நுங்கம்பாக்கத்தில் வாழ்ந்துகொண்டிருந்த இல்லத்தை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும். மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட மாவீரன் நினைவாக அந்த இல்லத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Mr. Chairman, on behalf of the Swatantra Party we have given a few cut motions under each Demand. In support of the cut motions our party members have given, I wish to state a few things.

Firstly, to-day the Assembly of Tamil Nadu is one of the foremost Assemblies in this country. The whole of Asia is looking forward to our country for the sustenance and maintenance of democracy and democratic forces. In fact, if there is still any hope left in Asia especially after the recent events in neighbouring countries like Pakistan that have been brought to our attention in the early hours of this morning, it is mainly because in India we have a sound system of democracy. Taking India in general and Tamil Nadu in particular, I am proud to say that the Assembly of Tamil Nadu has a hoary, fine past and it is the duty of the present Ministry to protect the great name that Tamil Nadu Assembly has built up in the last two decades.

In the Assembly we have the question hour. But most of the time is consumed by a number of points relating to particular areas. My submission tothe members of my party and to all the other membersis that, as far as possible the questions which we put must be to the point We should not put questions merely after reading something in the newspapers or just for the sake of publicity. We should not develop the habit of putting such questions. Questions must be put to correct any miscarriage of justice. The fundamental purpose of the question hour is to drive home, to compel and call the attention of the Ministers to the spot where there is miscarriage of justice. I request all hon. members including the members of my party to put questions relating to specific points. If necessary, we are bound to put questions of a general nature;

If certain matters are brought to the attention of the Government and if the Government attend to them properly, there is every hope and trust that the administration will be better. That should be our attitude towards the question hour.

The way in which we conduct ourselves in this House is also very important. As far as possible, every minute of the time of the House that we utilise must be spent with a purpose. I do not say that it is not spent with a purpose now. I am only utilising this opportunity to remind ourselves about the duty cast on us. Every hour of the House is very taxing in that the common man spares a good chunk of his daily bread to see that something is done. Exercise in futility in the proceedings of the Assembly must be put an end to. This is a categorical point which I want to stress.

Of late, I find that there is a tendency to evade in giving answers to questions. We should look at the way in which the departmental heads prepare the answer. They must be able to anticipate the supplementary questions that are likely to be put under each main question and furnish the Ministers with necessary information so that the Ministers will be able to answer them. But sometimes—I do not say 'always' — we are really disappointed when here and there the supplementaries are not properly answered, and even for simple supplementaries arising directly from the main question, the answer given is 'Notice is required'. This is a grievance which has been there even during the time of the Congress Ministry. It is the sacred duty of the Minister to anticipate the supplementaries and answer them properly. I do not condemn, because slowly the Ministers will improve. When a Minister is not able to give a proper answer, Irequest the Leader of the House, who is very vigilant and is an expert in legislative practices, to help the House or the questioner by giving proper answer.

'Zero hour' is not really there in our Rules book. Actually in the Parliament Rules also there is no zero hour. But after the question hour and before the next item of business is taken up, there is the convention of ventilating some grievances or letting off of some steam on some burning topics of the day which do not come within the scope of questions or call attention notices. We should give such a facility to the members. A little steam let off here will definitely do a great service to the people outside and it will to a great extent give satisfaction to the people concerned that their grievances have been pointed out. On behalf of my party I request the House to re-frame the rules so as to provide for a zero hour. It need not be long; it may be for fifteen or twenty minutes.

Then I come to the place which should be accorded to the Members of the Assembly by officials at functions. I feel that they should be placed next to the Ministers. Some of us may be very small. But each member represents a lakh of persons. This is a point to which I request the Ministry to give careful consideration.

Next I come to the facilities in the M.L.As. Hostel. Though I do not reside in the Hostel, some of my friends are residing there and I know the condition of life in the Hostel. Though it is an attractive building, the facilities that are available there, are deplorable and pathetic. They do not have a place to eat, there is no place for them to take food. There is no good hotel also to supply them food. If a member wants to have breakfast or coffee in the morning, it is an ordeal. I am speaking on behalf of all the members residing in the Hostel.



The question of emoluments of M.L.As. is a ticklish problem. Nobody wants to take the lead though every party wants an increase in emoluments. Let us not go into this in this House now and say that this party or that party asked for an increase. Let an all-party committee including the Leader of the Opposition, who is distinguished parliamentarian, be appointed and let the question be thrashed out in that committee. That can be done later on.

Then I come to the employees working in this Assembly Department. நண் பகல் 12-00
They are terribly dissatisfied. The interests of these employees, namely, peons and ordinary clerks should be properly looked after. They have to work for longer hours. Suddenly we declare that we will have lunch, and we will meet again at 3 p.m. or 4 p.m. As a result of that, these poor people cannot get food immediately and to compensate them they should be given proportionate allowance and a clear-cut decision must be made in regard to this matter.

Then I come to the most important cut motion I have moved namely to point out the dire need to increase the number of days the Legislative Assembly meets to at least 100 days in a year. I hope we will be able to thrash out our problems in greater detail. For instance, there is the Education Demand and a sum of Rs. 70 crores is spent on Education. The Leader of the Opposition takes a good chunk of time and the Hon. Minister for Education also takes agood chunk of time and allow only three or five minutes for each hon. Member. This has happened even during the Congress regime. By the time a Member warms up and begins to analyse the points, there is the constant threat from the Chair ringing the bell. Therefore, we must increase the number of meeting days.

In this connection, I want to point out that we do not know when the Assembly is going to meet and we know it only from the press. We never get information. In fact, once a friend of mine told me that the Assembly would meet on aparticular day and when I asked him how he knew it, he stated that he saw the announcement in 'Dina Mani'. Even during the Congress regime I took up this matter with the Chairman of the Legislative Council, the Hon. Thiru Manickavelu Naicker and also Dr. Cherian when he was the Chairman of the Legislative Council and they told me, 'How can I tell you about it ? So, I want that the starting of the Assenbly must be told earlier to the Members.

Now I shall briefly touch one or two points for paucity of time. As regards decorum, we should evolve a code of decorum both with regard Members and Ministers. We should be strict with regard to the acceptance of public enagagements from a particular party—I do not mean a political party—because some persons use their names and get benefits. We should not allow them to exploitour names by dubious means and that should be strictly prevented. In the name of Ministers so many things have happened. For instance, I was told that in the Queen Mary's College the Principal of that College collected donations almost compulsorily for a particular occasion to which a Minister was invited. Without the knowledge of the Minister, the money was collected and this will bring the Ministry into disrepute in spite of the fact that the Ministry is doing hard work. I know how much hard work the Ministers put in to solve certain problems and therefore we should not allow anything which would bring discredit to the Ministry and we should be very watchful about it.

Then, I come to the admissions to the Medical College.

(At this stage Mr. Chairman sounded the gong.)

Sir, we are 20 members and only one person from our side is speaking and at least 15 minutes should be given for one person to speak.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஐ. வீராசாமி) :** இன்றைய தினம் விவாதம் முடிந்து ஒரு மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று பேரவைத்தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே பேசிய பிறகு எதிர்க்கட்சித் தலைவர் பேசி, மாண்புமிகு அமைச்சர் பேசியாக வேண்டும். இருப்பது 55 நிமிடங்கள். டாக்டர் ஹாண்டே அவர்களுக்குப் பேரவைத் தலைவர் 10 நிமிடங்கள் ஒதுக்கினார்கள். அவர் அப்போது 12 நிமிடங்கள் பேசிவிட்டார். ஆகவே, அடுத்த 2 நிமிடங்களுக்குள் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, I would not take a single minute more than that.

Now I come to the admission to the Medical Colleges. Now what has exactly happened? A number of persons outside this House try to bring discredit to the Ministry. They would bring an agent and take him to the M.L.A.s and Ministers and arrange for talks for five minutes with them and in this way certain nefarious activities take place between various persons. One person says that he has given money to M.L.A.s and Ministers and the affected party does not know to whom the money has finally reached. This is a very serious thing and if an impression is created that the Ministry is doing a wrong deed, there is every possibility of the Ministers and the Ministry setting a bad name therefore they must be very strict with these persons, whoever they may be. If a person approaches a Minister, he must say, 'Nothing can be done, you can go out'. That should be the attitude which should be adopted by the Ministers. Otherwise, unnecessarily this sort of 'puhar' is likely to take place.

Then with regard to election matters, the idea of mobile polling booths was orginally suggested by my revered leader, Thiru Rajaji some years ago. I request this Government to give careful consideration to this matter about which my distinguished Friend, Thiru K. M. Ramasami Gounder, has moved the cut motion.

Finally, I would refer to the Ministers' participation in the election campaign. A clear-cut policy should be evolved by the Congress Party which is ruling at the Centre, the Swatantra Party, D.M.K. and other parties with regard to this matter. Whetherthey are Central Ministers or State Ministers belonging-to Bihar or Tamil Nadu or even Orissa where my Party is in power, a clear-cut policy must be volved in regard to this matter, by the distinguished Prime Minister, the Chief Minister and the Leader of the Opposition. There is no use in accusing the D.M.K. that because of certain political reasons or political expediency the North Indian Congress leaders were prevented from coming here during the election time. That is all. Thank you.

**திரு. பி. ஜி. கருந்திருமன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவைமுன் இருக்கும்படியான இந்த மானியங்களின் மேலே எங்கள் கட்சி சார்பாகக் கொண்டு வந்த வெட்டுப்பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.





முதலாவதாக, சட்டமன்றத்தைப்பற்றி இருக்கும்படியான மானியக் கோரிக்கையின்மீது பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். முதலாவதாக, சட்டமன்றம் இன்னும் அதிகமான நாட்கள் கூட வேண்டும் என்கிற அபிபிராயத்தைச் சொன்னார்கள். நானும் பல வருடங்களாக அதைக் கூறி வந்திருந்தாலும்கூட, ஒவ்வொரு வருடமும் கூடும்படியான நாட்கள் குறைந்துகொண்டே வருகின்றன என்பதைப் பார்க்கிறோம். அதற்குக் காரணம், மன்றம் கூடுவதற்கு வேலை இல்லை என்று சொல்லலாம். ஆனால், பாராளுமன்றத்தில் மூன்று செஷன்கள் கண்டிப்பாக நடக்க வகை இருக்கிறது. மூன்று செஷன்கள் என்றால், முதல் செஷன் பிப்ரவரி மாதம் முதல் திங்கள் கிழமை, இரண்டாவது செஷன் ஆகஸ்டு மாதம் இரண்டாவது திங்கள் கிழமை, மூன்றாவது செஷன் நவம்பர் மாதம் மூன்றாவது திங்கள் கிழமை கூடுவது என்பதாகத் திட்டமாக வைத்திருக்கிறார்கள். சிறிது முன்னே பின்னே இருந்தாலும் முறைப்படி அங்கே அமைந்திருக்கிறது. இது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அதைப்போலவே தமிழ்நாடு சட்டமன்றமும் பட்ஜெட் கூட்டம் என்றால் பிப்ரவரி மாதம் இன்ன தேதியில் நடக்கும் என்று வரையறுக்கப்படவேண்டும். அதற்குப் பிறகு 2வது செஷன், அதற்கு பிறகு 3-வது செஷன் என்பதாக 100 நாட்கள், குறைந்தது 90 நாட்கள், மூன்று மாதமாவது நடக்க வேண்டும்.

இப்பொழுது நாம் பட்ஜெட், வரவுசெலவுத் திட்டங்கள், சட்டமன்ற நடவடிக்கைகள், மசோதாக்கள் மட்டிலும்தான் எடுத்துக் கொள்கிறோமே தவிர, சட்டமன்றத்திலே வைக்கும்படியான அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்களைப்பற்றி எல்லாம் விவாதிக்கும்படியான நிலைமை இப்பொழுது இல்லை. என்ன என்ன தவறுகள் இருக்கின்றன, எப்படி அவற்றைச் சீர்திருத்தம் செய்யவேண்டும், எந்த எந்த இலக்காக்களிலே காரியங்களை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டுமென்று இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம்பற்றி விவாதிப்பதற்காக அதிகமான நாட்கள் சட்டமன்றம் கூடுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கவேண்டும், ஒவ்வொரு அட்மினிஷ்டிரேஷன் ரிப்போர்ட் பேரிலேயும் 4 நாட்கள் 5 நாட்கள் என்று ஒவ்வொரு சட்டசபைக் கூட்டத் தொடரிலேயும் 3 அல்லது 4 அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்களை எடுத்துக் கொண்டு பேசக்கூடிய நிலைமை ஏற்பட்டால் நல்லது என்ற முறையிலே அதற்காக அதிக நாட்கள் நடத்தக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும்.

ஆகவே, சட்ட மன்றம் அதிகமான நாட்கள் கூடுவதினாலே அதிகமான அளவில் உறுப்பினர்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கும். அதைத் தவிர, ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் நேரடியாகப் பழகுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கும். மூன்று மாதம், நான்கு மாதம் என்ற அளவிலே அடிக்கடி கூடுவதால் உறுப்பினர்கள் எல்லோரும் அடிக்கடி கூடிப் பழகுவதற்கும் ஒரு சந்தர்ப்பம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1952-ம் வருடத்திலிருந்து 1957வரை 365 நாட்கள் கூடியது என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு 1957-1962-லே கொஞ்சம் குறைந்தது. அதற்குப் பிறகு 1962-67-லே மிகமிகக் குறைந்துவிட்டது. இப்பொழுது கொஞ்சம் இம்புருவ் என்று சொல்கிறார்கள். இந்த இரண்டு முறையிலே 1962-லேயும் 1967-லேயும் இருந்ததைவிட ஓரளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இன்னும் முன்னேற்றம் இதிலே இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிக் கூடினால்தான் அங்கத்தினர்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதால் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். குறைந்தது இரண்டு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது—ஐந்தாறு மாதங்களுக்கொரு முறை கவர்னர் கூட்டவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது என்று நினைக்கிறேன்—பட்ஜெட் கூட்டம் முடிந்த பிறகு மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்ற அளவில் கூடக்கூடிய நிலைமை வரவேண்டும்.

இன்னொரு புகாரும் சொன்னார்கள். காலையில் 9 மணியிலிருந்து பிற்பகல் 3மணி வரைஆகிவிடுகிறது. என்று சொன்னார்கள். அது தவிர்க்க முடியாத நிலைமையாக இருக்கிறது. உறுப்பினர்களுக்கு அதுதான்

சௌகரியமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. சாப்பாட்டுக்காகக் கலைந்து மீண்டும் கூட்டவேண்டுமானால் அங்கத்தினர்கள் அவ்வளவாக வரக்கூடிய நிலைமை இல்லை. கோரம்கூட இருப்பதில்லை என்னுடைய சொந்த அனுபவத்தில் இதைச் சொல்கிறேன். பாராளுமன்றத்தில்கூட அப்படிப்பட்ட நேரத்திலே கோரம் இல்லாத நிலைமை உண்டு. எனவே, பாராளுமன்றத்திலே செய்கிற மாதிரி "ஓட் ஆன் அக்கவுண்ட்" என்று ஒன்று வைத்துவிட்டு "பாஸ்" பண்ணிக்கொண்டு, ஒரு மாதம் கழித்துத் தொடர்ந்து நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. மார்ச் 31-ம் தேதிக்குள் "வோட் ஆன் அக்கவுண்ட்" என்று வைத்து "பாஸ்" பண்ணிக்கொண்டு, அதற்குப் பிறகு தொடர்ந்து மூன்று மாதம், நான்கு மாதங்கள் வரைக்கும் டிமாண்டுகளிலே விவாதம் செய்கின்ற முறையும் இருக்கிறது. பிப்ரவரியிலே ஆரம்பித்தால் மே மாதம் 10 தேதி வரைக்கும் விவாதம் நடந்துவருகின்றது. அதைப்போன்று அதிகமாக அங்கத்தினர்கள் ஊக்கமாகவும் ஆர்வமாகவும் கூட்டத்திலே கலந்து கொள்ளவேண்டும், பேசவேண்டுமென்ற நிலைமை இருப்பதால் ஒரு தரம் கூட்டம் ஆரம்பித்தால் 4 வாரம் வைத்து, கூட்டம் மார்ச் மாதம் 31 வரை நடத்தி, அதற்குள் "வோட் ஆன் அக்கவுண்ட்" என்ற முறையில் பாஸ் பண்ணிக்கொண்டு, அதற்குப் பிறகு டிமாண்டுகளின் பேரிலே விவாதம் தொடர்ந்து மே மாதம் 10 தேதி வரையிலும் வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டால் ஒரு சில டிமாண்டுகளை இரண்டு நாட்களுக்கு எடுத்துக்கொண்டு பேசலாம் இன்னும் சிலவற்றை மூன்று நாட்கள் என்ற அளவிலே கூட எடுத்துக்கொண்டு பேசமுடியும், எல்லோருக்கும் நிறையச் சந்தர்ப்பமும் இருக்கும் என்ற அளவிலே அதிக நாட்கள் சட்ட மன்றத்தைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சௌகரியங்களைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். பாக்கியிருக்கிற மாநிலங்களிலே காலத்திற்குத் தகுந்த மாதிரி ஏறிக்கொண்டிருக்கிறது. எனவே, அந்த முறையிலே நாமும் செய்துகொள்வதிலே தவறில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் இதை ஒரு டிக்ளிஷ் பிராப்ளம் என்று சொன்னார்கள். அது வாஸ்தவம்தான். நமக்காக வசதிகளைச் செய்துகொண்டால் அதைப் பற்றிக் கேட்பார்கள். அவர்களுடைய வசதியைப் பெருக்கிக்கொள்கிறார்கள் என்று நினைப்பார்கள். அதிலே ஒன்றும் தவறு இல்லை. சீக்கிரமாகவும் நல்ல முறையிலும் பொதுமக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்குச் சரியாகச் செய்கிறோம் என்ற அளவிலே அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிற அளவிலே செய்தால் இது எல்லாம் சாதாரணம்தான். இதை ஏற்றுக்கொள்வது ஒரு பக்கம் இருக்கலாம். சில சில வசதிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செய்துகொடுப்பதிலே எந்தவிதமான தவறும் இருக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள். ஒரு கனம் உறுப்பினர் நாகர்கோவிலில் காங்கிரஸ்காரர்கள்தான் வன்முறையில் ஈடுபட்டார்கள் ; நாங்கள் ஈடுபடவில்லை என்று சொன்னார்கள். வன்முறை என்று சொன்னால் நீங்கள் இடம் கொடுத்ததாக இரண்டு அர்த்தம் இருக்கிறது, வன்முறை நடப்பதற்கு நீங்கள் அடிப்படையாக இருந்தீர்களா அல்லது வன்முறை ஏற்பட்டிருந்தால் தடுப்பதற்கு என் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் ஜெயித்தால் அது நன்முறை, காங்கிரஸ்காரர்கள் ஜெயித்தால் அது வன்முறை என்று சொல்வது சரியல்ல. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கட்சியிலிருக்கிறார்கள், அவர்கள்தான் தவறே செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கக்கூடாது. இப்பொழுது இரண்டு இடைத்தேர்தல்கள் வர இருக்கின்றன. எனவே திட்டவட்டமாக இருக்க வேண்டும். அமைச்சர்கள் இடைத் தேர்தலுக்குப் போய்ப் பிரச்சாரம் செய்ய வேண்டுமா வேண்டாமா என்பது பிரச்னை அல்ல. அமைச்சர்கள் பிரச்சாரம் செய்யட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது.



காங்கிரஸ் ஆட்சியிலிருந்த சமயத்திலே பிரச்சாரம் செய்தார்கள். எனவே, ஜனநாயகத்திலே பிரச்சாரம் செய்வதற்கு உரிமை இருக்கிறது. அது தவறு இல்லை. அமைச்சர்கள் என்ற நிலைமையில் அங்கே அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அவர்கள் போகிறார்கள், உடனே அந்த அதிகாரியைப் போடுங்கள், இந்த அதிகாரியை மாற்றுங்கள் என்று எந்த அதிகாரியைப் போட்டால், சொந்தக்காரர்களைப் போட்டால் ஓட்டுகள் கிடைக்கும் என்று போடக்கூடிய நிலைமையெல்லாம் இல்லாமல் இருந்தால் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்கமுடியாது. தவறுகள் நடந்து வருகின்றன. அதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதிர்க்கட்சியிலிருந்தபோது அவர்கள் என்ன சொன்னார்கள், ஆறு மாதத்திற்கு முன்பாக, தேர்தலுக்கு முன்பாக பதவி விலகிவிடுவோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு மறைந்த முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் அது பொதுத் தேர்தலுக்குத்தான் சொன்னோம், இடைத் தேர்தலுக்கு அல்ல என்று சாமாத்தியமாகச் சொன்னார்கள். நான் பொதுத் தேர்தலுக்குத்தான் அதைச் சொன்னேனே தவிர இடைத் தேர்தலுக்குச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரிப் பேசுவதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. அமைச்சர்கள் தேர்தல்கள் வந்தால் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அந்த நேரத்திலே அடிப்படையாகக் காரியங்கள் நடைப்பெறவேண்டும். அப்பொழுது புதிது புதிதாகத் திட்டங்களைப் போடுவதும், புதிது புதிதாகப் பள்ளிக்கூடங்கள் திறப்பதும், புதிது புதிதாக அதிகாரிகளை மாற்றுவதும் கூடாது. இடைக்காலத் தேர்தலின்போது இரண்டு மாதங்களுக்கு அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கக்கூடாது. பொதுத் தேர்தலின் போது ஆறு மாதத்திற்கு முன்னால் எந்தவிதமான கொள்கை அறிவிப்பும் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் வருகின்றபொழுது அறிவித்தார்கள், நாங்கள் வந்தால் விலைவாசிகள் இறங்கும்வரை சம்பளம் வாங்கமாட்டோம் என்று சொன்னார்கள். பாதிச் சம்பளமாகக்குறைத்துக் கொள்கிறோம் என்று குறைத்துக்கொண்டார்கள். ஆனால் செலவைப் பார்க்கிறபோது 1966-67-லே 6 லட்ச ரூபாயாக இருந்தது 11 லட்சமாக ஆகியிருக்கிறது. சம்பளத்தைக் குறைத்துக்கொண்டார்களே தவிர பாக்கி இருக்கும்படியான செலவுகளைப்பற்றிப் பார்த்தால் அதைவிட 2 மடங்கு, 3 மடங்கு என்று அதிகமாக இருக்கிறது. சுற்றுப்பிரயாணச் செலவுகள் டெலிபோன் செலவுகள் என்ன ஆகியிருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். மேலவையில் ஒரு கேள்விக்கு, ஆறு மாதத்திற்கு டெலிபோன் செலவு 40 ஆயிரம் ரூபாய் என்று பதில் வந்திருபதாகப் பார்த்தேன். மாதம் 500 ரூபாய் என்று சம்பளம் எடுத்துக் கொள்வதிலே என்ன பொருத்தம் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதிலே 1,000 ரூபாய்க்குப் பதிலாக 10 ஆயிரம் ரூபாய் என்று தவறாக டைப் செய்திருக்கிறார்கள் என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

**திரு. பி.ஜி. கருத்திருமன்:** விளக்கம் சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன். டைப் செய்ததிலே தவறு என்று சொல்கிறார்கள். இப்படி தான் எல்லாம் வருகிறது என்ற நிலைமையில் சொல்லிவிடுகிறார்கள். அதையும் பார்த்துத்தானே போடவேண்டும். அதுதான் பெரிய ஆபத்தாக இருக்கிறது. நான் லண்டனுக்குப் போன சமயத்திலே ஒரு இடத்திலே—இதை நான் உதாரணத்திற்காகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—சிகை அலங்காரம் செய்து கொள்ள உட்கார்ந்திருந்தேன். அதற்கு 10 ஷில்லிங் என்று போட்டிருந்து. உட்கார்ந்ததற்குப் பிறகு ஒவ்வொன்றாகச் செய்து, ஷாம்பு போட்டு, பவுடர் அடித்த பிறகு மூன்று பவுன் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். 10 ஷில்லிங் என்று போட்டிருக்கிறதே என்று கேட்டதற்கு ஒவ்வொன்றுக்கும் கணக்கு சொன்னார். அதே போன்று 500 ரூபாய் சம்பளம் என்றால் 6,000 ரூபாய்தான் வர வேண்டும். ஆனால் இப்படிப் பலவற்றைச் சேர்த்து சார்ஜ் பண்ணியது போல 11 லட்சம் ரூபாய் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** *அங்கே கிராப் செய்து கொண்டீர்களா அல்லது மொட்டையடித்துக் கொண்டீர்களா ?*

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** *நீங்கள் மொட்டை அடிக்கத்தான் போகிறீர்கள் என்று தெரிகிறது. திருப்பதிக்குப் போனால் நாலணாவுக்குமொட்டை அடித்துக்கொள்ளலாம். உங்களுடைய நிலை மொட்டையடிப்பதுதான் என்று சொன்னால் நான் ஆட்சேபணை சொல்லவில்லை.*

*அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செல்ல வேண்டாமென்று சொல்லவில்லை. முன்பு எங்களைப் பற்றிக் குற்றச்சாட்டாகச் சொன்னதையே நீங்கள் இப்போது அதையும் விட அதிகமாகச் செய்கிறீர்களே என்பதுதான் எங்களுடைய கேள்வி. கட்சிக் கூட்டங்களுக்குப் போகும்போது அரசில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுவதில்லை என்று கூறுகிறார்கள். எப்போது கட்சிக் கூட்டத்திற்குப் போனீர்கள், எப்போது அரசாங்க வேலைக்குப் போனீர்கள் என்று கணக்குப் பார்ப்பது ? யார் அதைப் பார்ப்பது ? அப்படிப் பார்ப்பது கூட நாகரிகமானது அல்ல என்று கருதுகிறேன். திருமண விழாக்களிலே கலந்து கொள்ளுவதாக எட்டு, ஒன்பது அமைச்சர்களுடைய பெயர்கள் போடப்படுகின்றன. உன்னுடைய திருமணத்திற்கு ஐந்து அமைச்சர்கள் வந்தார்கள் என்றால், என்னுடைய திருமணத்திற்கு 9 அமைச்சர்கள் வந்தார்கள் என்று கூறும்படியான நிலை இருக்கிறது. எளிமை என்பது போய் ஆடம்பரத்தில் முடிந்திருக்கிறது. இந்த மாதிரி திருமணத்திற்குப் போகும்போதெல்லாம் சர்க்கார் பணத்தை டி.எ.வாக வாங்கினார்களா என்று கேட்டதைக் கூட நான் நாகரிகமாகக் கருதவில்லை. இத்தனை பேர் ஒரு திருமணத்திற்குப் போக வேண்டியது அவசியந்தானா ? ஆகவே, வீண் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*இரண்டு நாட்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டபோது அமைச்சர்களின் சொத்து விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு வரி கொடுத்திருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மறைந்த திரு. அண்ணாதுரை அவர்கள் சொத்து விவரத்தைக் கொடுக்கத்தான் போகிறோம் என்று சொன்னார்கள். அப்படிக் கொடுத்தால் நாட்டு மக்கள் அறிந்து கொள்ளும் நிலை ஏற்படும். சந்தேகமான நிலை இருக்காது. நான் அரசியலில் இல்லாமல் இருந்தால் எதை வேண்டுமானாலும் வாங்கலாம். அரசியலில் இருக்கும்போது பொதுமக்கள் என்னுடைய செயல்களைக் கவனித்துக் கொண்டிருக்கக் கூடிய நிலை இருக்கிறது. இரண்டு லட்சத்திற்குச் சொத்துக்களை வாங்குகின்றவர்கள் தங்களுடைய பெயரில் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். கருத்திருமன் பெயரில் இருக்காது, சொந்தக்காரர்கள் பெயரில் அல்லது மிகவும் வேண்டியவர்கள் பெயரில் தான் இருக்கும் என்னுடைய சக்திக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு சொத்தை வாங்காலம். 25,000 ரூபாய்க்கு ஒரு சொத்தை வாங்கலாம். அதுவே மூன்று லட்சம் என்று வருமானால் அது சந்தேகத்திற்குரிய விஷயமாகத்தான் ஆகும். பொது வாழ்வில் இருக்கக் கூடியவர்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் வாழ்க்கையை நடத்தியாக வேண்டும். மக்களுடைய வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறோம். ஆகவே, இன்னும் ஐந்தாறு மாதத்திற்குள்ளாகவாவது இந்த விவரங்களைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன்.*

*எதிர்க்கட்சித் தலைவருக்குச் சில சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று ஆளும் கட்சியிலிருந்து கூட அழகாகப் பேசினார்கள். அதற்காக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குத் தனிப்பட்ட நிலையில் சௌகரியங்கள் இருக்காலம், இல்லாமல் இருக்கலாம். கடந்த 20 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் நான் எந்த விதமான சலுகையும் இல்லாமல் வாழ்ந்து விட்டேன், வாழத் தயாராக இருக்கிறேன். முன்பு எதிர்க் கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சில சௌகரியங்கள் எதிர்க் கட்சித்தலைவருக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சௌகரியங்களைக் கேட்கவில்லை) எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்போது இருந்த*





*சர்க்கார் கொடுக்கவில்லை, நாங்கள் எதிர்க்கட்சித்தலைவருக்கு 2,000 ரூபாய் பெறுமானமுள்ள பர்னிச்சர் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதைப் பற்றி அடிக்கடி சொல்லும்போது கஷ்டமாக இருக்கிறது. அப்படிச் சொல்லும்போது அதைத் திரும்பக் கொடுத்து விடலாமா என்று கூட எனக்குத் தோன்றிற்று. ஆனால் அது சரியல்ல என்று செய்யவில்லை. (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அடிக்கடி சொல்லவில்லை) இரண்டு முறை சொல்லியிருக்கிறீர்கள். ஒன்றைச் செய்ததற்குப் பிறகு அதைப் பற்றிச் சொல்லிக்காட்டுவது நல்லதல்ல. எந்த வசதிகளைச் செய்து கொடுத்தாலும் அரசியல் நோக்கத்தோடு செய்யக்கூடாது. யார் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சி எதிர்க் கட்சியில் இருந்தாலும் சரி, இந்தச் சௌகரியங்களைச் செய்து தரவேண்டுமென்று மறைந்த திரு. அண்ணாதுரை அவர்களுக்கு எழுதியிருக்கிறேன். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அண்ணா என்று தான் சொல்லுங்களேன். மிகுந்த சிரமப்பட்டுச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே) அண்ணாத்துரை என்று சொன்னால் தான் மரியாதையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அண்ணாத்துரை என்று சொன்னால்தான் அழகாகவும் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவருக்கு செக்ரடேரியட்டில் இருந்து எவ்வளவோ கடிதங்கள் வருகின்றன, அவற்றிற்குப் பதில் எழுதி சர்க்காருக்கு அனுப்பவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தப் பதவியில் இருப்பவருக்குச் சில சலுகைகள் செய்துகொடுக்கப்படவேண்டும். அங்கத்தினர்களுக்குக்கூட சம்பளத்தை அதிகமாகக் கொடுக்காவிட்டாலும்கூட, தொகுதியில் சுற்றுப்பயணம் செய்வதற்கு ஒரு அலவன்ஸ் இருந்தால் கூட நன்றாக இருக்கும். அதற்கு என்று ஒரு பிக்ஸட் அலவன்ஸ் இருந்தால் தொகுதியில் நிலைமைகளை அப்போதைக்கப்போது அறிந்து கொள்ள வசதியாக இருக்கும்.*

*சென்னையில் செக்ரடேரியட் இருக்கிறது. இந்தியாவிலேயே தமிழக செக்ரடேரியட்டில் உள்ளவர்கள் போல் வேலைகளைத் திறமையாகச் செய்யக் கூடியவர்கள் வேறு எங்கும் இல்லை. டெல்லி செக்ரடேரியட்டுக்குக் கூட இங்கிருந்து அதிகாரிகள் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட, "டெல்லியில், எங்களுடைய திறமையான அதிகாரிகளை எல்லாம் நீங்கள் எடுத்துக் கொண்டு விட்டீர்களே" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி டெல்லி செக்ரடேரியட்டுக்குக் கூட இங்கிருப்பவர்களை எடுத்துக் கொள்ளும் நிலைமையைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது.*

*நம்முடைய சட்டமன்ற இலாகாவிலே பணிபுரிகின்ற அலுவலர்களுக்கும் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுக்க வேண்டும். அவர்களை அன்பாகவும், மரியாதையாகவும் நடத்த வேண்டும். சட்ட மன்ற இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும், கவுரவம் கொடுத்து கண்ணியமாக நடத்த வேண்டும். அப்போதுதான் உறுப்பினர்கள் மக்கள் முன்னிலையில் பணி செய்வது சிறப்பாக அமைய முடியும் என்று கூறி நாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து அமருகிறேன்.*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள நான்கு மானியங்களைக் குறித்து உறுப்பினர்களும், இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தங்களுடைய சீரிய கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மன்றம் எப்படி நடைபெற வேண்டும் என்பதிலும் நாம் அனைவரும் இணைந்து நின்று எத்தகைய மரபுகளைக் காத்து வருகிறோம் என்பதிலும் நாம் ஒருவருக்கொருவர் பெருமைப்பட்டுக் கொள்ளத்தக்க அளவில் ஏதோ இடையில் சிறு சிறு மாச்சரியங்களும், அபிப்பிராய பேதங்களும் ஏற்பட்டாலும் கூட பெருமைப்பட்டுக் கொள்ளத்தக்க அளவில் நம் மன்றத்தின் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதை நம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றவர்களும் இங்கு சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எதிர்க் கட்சிகள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதில் முன்னேற்றக் கழக அரசு எவ்வளவு பெருந்தன்மையோடு நடந்து வருகிறது என்பதை ஏதோ ஒரு முறை தேவைப்பட்ட நேரத்தில் எடுத்துச் சொன்னால் அதை நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாக*

எடுத்துக் கொள்ளக்கூடாது. இது குறிப்பிட்ட திரு. கருத்திருமன் என்பவருக்காக அளிக்கப்பட்டது என்பதல்ல. அந்த இடத்தில் எதிர்க் கட்சித் தலைவராக யார் இருந்தாலும் அவர்களுக்கு அந்தச் சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்ற அந்த எண்ணத்தோடுதான், எதிர்க் கட்சி மதிக்கப்படவேண்டும் என்ற நிலையில்தான், அது அளிக்கப்பட்டதே தவிர வேறு அல்ல.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக வந்தவுடன் ஆளும் கட்சியின் சட்டசபைக் கட்சிக்கான கட்டடத்தைக் கூட ஏற்கனவே இருந்த ஆளும் கட்சி—காங்கிரஸ் கட்சி—பயன்படுத்தி வந்த கட்டடத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. திரு. ஆர். வி. அவர்கள் எங்களிடம் அதுபற்றிப் பேசியபோது, ஏற்கனவே காங்கிரஸ்காரர்கள் ஆளும் கட்சியில் இருந்தபோது அவர்கள் அனுபவித்திக் கொண்டிருந்த அந்தக் கட்டடத்தையே அவர்கள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறிவிட்டு, நாங்கள் ஐம்பது பேர்கள் இருந்த நேரத்தில் எந்த அளவிற்கு எங்களுக்கு ஒரு சிறிய இடம் ஒதுக்கப்பட்டிருந்ததோ அந்த இடத்தில் இன்னும் எங்கள் அலுவலகத்தை வைத்துக்கொண்டு சட்டசபைக் கட்சிக் கூட்டங்கள் நடைபெறும்போது மட்டும் பக்கத்தில் ஒரு தாழ்வாரத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். இவைகளை எல்லாம் நான் சொல்லக் காரணம், எதிர்க்கட்சிகளை மதிக்க வேண்டும் என்ற அந்த மனவளத்தின் அடிப்படையில் முன்னேற்றக் கழக அரசு நடந்து கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான். அந்த அளவில் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் மற்ற ஏனைய கட்சித் தலைவர்களும் இந்த மாமன்றத்திலே நல்ல வகையில் தங்கள் பணிகளை ஆற்றிவருகிறார்கள். ஆகவே, இந்த சட்டமன்ற மானியத்தின் மீது பேசுகிற நேரத்தில் நான் இந்த மன்றத்தின் முன்னவன் என்ற அளவில் அவர்களுக்கெல்லாம் என்னுடைய அன்பு கலந்த, இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய நிலை உயர்த்தப்பட வேண்டும், அவர்களுக்கு என்று இருக்கிற வசதிகள், வாய்ப்புக் கூறுகள் இவைகள் எல்லாம் கவனிக்கப்படவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆளும் கட்சித் தரப்பிலிருந்து கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களும் அதை எடுத்துப் பேசினார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு இங்கிலாந்து போன்ற நாடுகளில் தரப்படுகிற மதிப்பும், அவர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளும், வசதிகளும், வாய்ப்புகளும் இங்கேயும் வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு முரண்பட்ட கொள்கையை உடையதல்ல என்பதற்கு உதாரணமாக இன்றையதினம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்கும் மகிழ்ச்சியளிக்கத் தக்க விதத்தில் ஒரு அறிவிப்பினை நான் தர விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவரின் சம்பளம் அதிகமாக்கப்படும், கார் தரப்படும், கார் அலவன்ஸ், வீட்டு அலவன்ஸ் இவைகள் வழங்கப்படும், அவர்களுக்கு என்று ஒரு ப்யூனும், ஒரு சுருக்கெழுத்தாளரும் தரப்படும். (ஆரவாரம்). அவைகளுக்கெல்லாம் சட்டம் திருத்தப்பட்டாகவேண்டும். அதிக விரைவில் அந்தச் சட்டம் திருத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு.)

திரு. ஆதிமூலம் அவர்கள் அவசரப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன, என்கிறார்கள். எனக்கிருக்கிற சங்கடம் எல்லாம் சம்பளத்தை அதிகமாக்கிவிடலாம், ஆனால் இப்போது நாட்டில் வறட்சி நிலைமை இருக்கிறது. சம்பளத்தை அதிக மாக்கிக்கொண்டு வறட்சிப் பகுதிகளுக்கு எம்.எல்.ஏ.க்கள் சென்றால் வறட்சிப் பகுதியில் வாடிக்கொண்டிருக்கிற மக்கள், "வா, வா, சம்பளத்தை அதிகமாக்கிக் கொண்டு வருகிறீர்களா?" என்று கேட்காவிட்டாலும், மொழிகளால்





எதிர்க்காவிட்டாலும் விழியால் பார்ப்பது அந்த அர்த்தத்தைத்தான் தெரிவிக்கும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு படி 12 ரூபாய் என்றிருந்தது ரூ. 15 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்று அது ரூ. 20 ஆக ஆக்கப்படுகிறது என்ற அந்த மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கும் நம்முடைய சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கிறது.

சட்டசபை நடவடிக்கைகளை குறிப்பு எடுப்பதற்குப் பதிலாக டேப் ரிக்கார்ட் செய்யப்படவேண்டுமென்று நம் மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களும், அடிக்கடி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதையே வலியுறுத்தி வருகிறார்கள். டேப் ரிக்கார்ட் செய்வதில் நமக்கு ஒன்றும் சங்கடம் இல்லை. அது சுலபமான முறைகூட. ஆனால், அந்த சுலபமான முறையை வேறு மாநிலங்களில் பயன்படுத்தாமல் இருப்பதற்கும், பாராளுமன்றத்தில் கூட அந்த சுலபமான முறையைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கும் உரிய காரணங்களை நாம் அறிந்தாக வேண்டும். இப்போது சபாநாயகர் அவர்கள் ஒருவர் பெயரைச் சொல்லி அழைக்கிறார்கள். "எதிர்க்கட்சித் தலைவர்" என்று அழைக்கிறார்கள். அப்போது அந்த ஒலி டேப் ரிக்கார்டரில் பதிவாகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது இடையில் ஒருவர் எழுந்து நின்று பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறார். அப்படி எழுப்புபவர் திரு.ஆசைத்தம்பியாக இருக்கலாம், டாக்டர் ஹாண்டேயாக இருக்கலாம், அல்லது திரு. அரங்கண்ணலாக இருக்கலாம் அல்லது அங்குள்ள திரு. ஞானசம்பந்தமாகவும் இருக்கலாம், யாராகவும் இருக்கலாம். உடனே சபாநாயகர் அவர்கள், அதை டேப் ரிக்கார்டரில் பதியச் செய்யவேண்டுமென்றால் "இப்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டிருப்பவர் அரங்கண்ணல் அவர்கள்" என்று சொன்னால்தான் அதற்குப் பிறகு நாம் பதிவேட்டில் அதைக் குறிப்பு எழுதிக் கொள்ள முடியும். ஆனால், நம் சட்டசபை நடவடிக்கைகளைக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்காவிட்டால் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எந்தத் திசையிலிருந்து வருகிறது, எந்தத் திக்கில் இருந்து வருகிறது, எப்போது வருகிறது என்றெல்லாம் கண்டு பிடிக்க முடியாத அளவிற்கு ஒழுங்குப் பிரச்னைகள் அடிக்கடி குவிகிற நிலையில், டேப் ரிக்கார்டர் அல்ல, வேறு எந்தவிதமான சாதனத்தாலும் யார் அந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார் 'என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகவே, அது பதிவு செய்யப்பட முடியாத ஒன்றாக ஆகிவிடும். இங்கே குறிப்பு எடுத்துக் கொள்கிறார்கள். யார் பேசியிருக்கிறார் என்று உடனே குறிப்பு எடுத்துக் கொள்கிறார்கள். இன்னார் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார், இன்னார் பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் கேட்டார், இன்னார் பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் கேட்டார் என்றளவிற்குக் குறிப்பு எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் டேப் ரிக்கார்டரில் அந்த வசதி இல்லாமல் போய் விடும். அவர்கள் சொல்வது, எழுதியதைத் திருத்திவிடுகிறீர்களே என்ற குற்றச்சாட்டு. நம்மை நாமே நம்பாத அளவிற்குப் போய் விடக்கூடாது. இந்த அலுவலில் ஈடுபட்டிருக்கிறவர்கள், அந்தக் காரணத்திற்காக இருக்கிற சுருக்கெழுத்தாளர்கள் நிச்சயமாக அந்த நிலைமைக்குப் போகமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு நாம் காரியங்களைச் செய்ய வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : டேப் ரிக்கார்டரை நம்பி, அதை வைத்து மட்டும் எடுக்கக் கூடாது. சுருக்கெழுத்தாளர்களும் இருக்க வேண்டும். டேப் ரிக்கார்டர் எப்போது அவசியம் என்றால் சந்தேகப்படுகிற சமயத்தில் அது அவசியப்படுகிறது. பாராளுமன்றத்தில் அப்படி டேப் ரிக்கார்ட் செய்து எடுக்கிறார்கள். அதோடு சுருக்கெழுத்தாளர்களும் எடுக்கிறார்கள். அப்படி எடுக்கப்படுகிறபோது சில இடங்களில் ஒன்றிரண்டு வார்த்தைகள் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கலாம். டேப் ரிக்கார்டரைப் பூர்ணமாக நம்பக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அதைக் கூட உடனே கேட்டால் போட்டுப் பார்க்கலாம், தவறு செய்யாமல் செய்து விடலாம். மறுநாள டேப் ரிக்கார்டரைப் போட்டுப் பார்த்தால் பல குரல் மன்னர்கள் இன்று நாட்டில் புறப்பட்டிருக்கிறார்கள், அதேபோல் பேச வைத்து, திரு. கருத

திருமன் அவர்கள் பேசியதுபோல் பேச வைத்து மாற்றிவிடலாம். கோர்ட்டில் சாட்சியங்களுக்கு டேப் ரிக்கார்டரைப் பயன்படுத்துவதில்லை. டேப்ரிக்கார்டரில் சாட்சியங்களைப் பதிவு செய்வதில்லை. இது வழக்கறிஞர் பெருமக்களுக்கு நன்கு தெரியும். அந்த அளவில் இன்றைய தினம் டேப்ரிக்கார்ட் முறை வைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டசபை நிகழ்ச்சிகள் பற்றி எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். வெளி நடப்புகள், வாக் அவுட், என்பவைகளெல்லாம் ஜனநாயக சட்டமன்ற முறைகளில் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைகள் என்றாலும் அவைகளை நாம் நிதானமாகவும், நியாயமான முறையிலும், தேவையான அளவிலும், அளவிற்கு மீறிவிடாமலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்னால் எதிர்க் கட்சி கொறடாவான திரு. விநாயகம் அவர்கள், துணைத் தலைவர் அவர்கள் இருந்தார்கள். இருந்தாலும் அவர்களுக்கு அங்கு சம உரிமை கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலோ என்னவோ அவர்கள் எழுந்து ஒரு பிரச்னைக்காக வெளிநடப்பு செய்தார்கள். அவர் கட்சியில் உள்ளவர்கள் அவரைத் தொடர்ந்து அவரோடு எழுந்து சென்றார்கள். எந்தப் பிரச்னைக்காக அந்த வெளிநடப்பு நடந்தது? வக்காலத்து என்ற ஒரு வார்த்தை பயன்படுத்தப்பட்டது. மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குகிறார் என்று உணவு-வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னதற்காக, அதற்கு எவ்வளவோ விளக்கங்கள் சொல்லப்பட்ட பிறகும், சபாநாயகரவர்களே கூட விளக்கம் அளித்துத் தீர்ப்பளித்த பிறகும், "வாக் அவுட்" தவிர்க்க முடியாததாகப் போய்விட்டது. அவர்களுக்கு நான் ஒன்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"அந்தச் சான்றுகளைத் தவறு என்று சொல்லும்படியான அளவுக்குப் புத்தி இல்லாத தனம் என்னிடத்தில் இல்லை. 'அபிஷியல் ரிப்போர்ட்டி'ல் இருந்து தாங்கள் படித்ததை ஏற்றுக் கொள்ளுகிறேன். தாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு தேடி வக்காலத்து எடுத்துக்கொள்ளும் நேரத்தில் வேறு ஏதாவது வேலையைக் கவனித்திருக்கலாமே".

இது சபாநாயகரைப் பார்த்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் 15—3—1969 அன்று உதிர்த்த வாசகங்கள். 'வக்காலத்து எடுத்துக் கொள்ளும் நேரத்தில் வேறு ஏதாவது வேலையைக் கவனித்திருக்கலாமே' என்று சபாநாயகரவர்களைப் பார்த்து எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறினால் யார் வாக்-அவுட் செய்வது? ஆளுங்கட்சி வாக்-அவுட் செய்ய முடியாது, செய்வது இல்லை. சபாநாயகர்தான் வாக்-அவுட் செய்திருக்க வேண்டும், வேறு வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைக் கூட குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைக்கூட சபாநாயகரவர்கள் குறிப்பிட்டும்கூட திரு. விநாயகம் அவர்கள் கேட்கவில்லை. வக்காலத்து என்பது இந்தச் சபையின் நடைமுறையிலேயிருக்கின்ற வார்த்தை என்று சபாநாயகரவர்கள் அன்று குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இரண்டு, மூன்று முறை பயன்படுத்தியிருப்பதை ரிப்போர்ட்டில் பார்த்திருக்கிறேன். நடைமுறையில் இருக்கின்ற வார்த்தை என்று சபாநாயகர் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். அவ்வாறெல்லாம் இருந்தும், வாக்-அவுட் நடந்திருக்கிறது. இதுபற்றிப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வந்ததேயல்லாமல், நம்முடைய சபையிலே தேவையில்லாத காரணங்களுக்காக வாக்-அவுட் செய்யக்கூடிய நிலைமை உருவாகிவிட்டதே என்ற கவலையைத்தான் என் போன்றவர்களுக்கு ஏற்படுத்தியது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

நம்முடைய நண்பர் திரு. மார்டின் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மிகவும் பரபரப்போடு ஒரு செய்தியை இங்கு சொன்னார்கள். மந்திரிகள் சொத்து விவரம் என்று





பத்திரிகையிலே வந்திருந்தது. உடனே தமிழக மந்திரிகள் தான் சொத்து விவரத்தைக் கொடுத்து விட்டார்கள் என்று எண்ணி பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தேன். ஆனால், டெல்லியிலிருக்கின்ற மந்திரிகள் பாராளுமன்றத்தில் தங்களுடைய சொத்து விவரங்களைக் காட்டிய விவரத்தைப் படித்து ஆச்சரியப்பட்டேன். தமிழக மந்திரிகள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற கேள்வியை நிறுத்தினார்கள். அதற்குப்பிறகு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மத்திய சர்க்காரிலே இருக்கிற அமைச்சர்கள் தங்களுடைய சொத்து விவரங்களைக் காட்டிவிட்டதாக எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு அவர்களுடைய ஆச்சரியத்திற்கெல்லாம் மேலாக நான் அதிக ஆச்சரியத்தோடு அது என்ன என்று, அந்த விவரத்தைப் பார்த்தபொழுது, பாராளுமன்றத்தில், அங்கு மந்திரிகளினுடைய சொத்து விவரங்களைக் கொடுக்கின்ற நோக்கத்தோடு அந்த விவரங்கள் அந்தச் சபையில் வைக்கப்படவில்லை. யார் யார் 'வெல்த் டாக்ஸ்' கட்டியிருக்கிறார்களோ அந்த மந்திரிகளின் சொத்து விவரம் என்று அந்த ஒருகேள்விக்கு மாத்திரம் பதிலாக திரு.மொரார்ஜி தேசாய் அவர்கள சொததுவிவரத்தை வைத்திருக்கிறார்கள். திரு. மொரார்ஜிதேசாய் அவர்களுடைய சொத்து விவரமே அதில் இடம் பெறவில்லை. அதிலிருந்து அமைச்சர்கள் வைத்த சொத்து விவரம் என்ற கூற்று, உண்மைக்கு மாறானது, தவறாகப் புரிந்து கொண்ட தன்மையின் அடிப்படையைக் கொண்டது. அது மட்டுமல்ல, 9 மந்திரிகளின் சொத்து விவரங்கள்தான் அதிலே குறிப்பிடப்பட்டிருந்தன. அவர்களுக்கு இரண்டாண்டு, மூன்றாண்டுக் காலத்தில் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது, என்ற விவரங்கள்தான் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, எல்லா மந்திரிகளினுடைய சொத்து விவரங்களும் அங்கு வைக்கப்படவில்லை. இதைச் சொல்வதனால், அவர்கள் வைக்கவில்லை. ஆகவே, நாங்களும் வைக்க மாட்டோம் என்பதற்கு இது பீடிகை என்ற அளவுக்கு யாரும் கருதத் தேவையில்லை. மந்திரிகளின் சொத்து விவரங்கள் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய சொத்து விவரங்களும் இந்த மன்றத்திலே வைக்கப்பட வேண்டுமென்று முன்னேற்றக் கழக அரசு விரும்புகிறது. அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டு, விரைவில், அடுத்த திங்களிலேயே நம்முடைய மாமன்றத்திலேயுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றினைக் கூட்டி, சொத்து விவரங்களை எப்படியெப்படி வைக்க வேண்டும், எனனென்ன முறைகளில் வைக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று உங்களைக் கேட்டறிந்து, அந்த அபிப்பிராயக் கோவைக்குப் பிறகு மந்திரிகளின் சொத்து விவரம் இந்த மன்றத்திலே வைக்கப்படும், சட்டமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களும் இந்த மாமன்றத்திலே வைக்கப்படும் என்பதை நான் இங்கே மிகத் திண்ணமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சீரணியைப்பற்றி, இங்கு பேசிய நண்பர்களில் சிலர் குறிப்பிட்டார்கள் சீரணி என்ன சாதித்து விட்டது, செலவானதைத் தவிர, என்று கேட்டார்கள். அதற்கு ஒரு குறிப்பை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சீரணியின் சாதனைப் பட்டியலைச் சொல்லுகிறேன். கட்டி முடிக்கப்பட்ட பள்ளிகள் 171. முடியும் தறுவாயில் உள்ள பள்ளிகள் 143 தூர் எடுக்கப்பட்ட கால்வாய்கள், குளங்கள்388. அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் 188. வெள்ளையடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் 7,618. பெயர் பலகைகள் வழங்கப்பட்ட பள்ளிகள் 2,562. சுவர்களில் திருக்குறள் பொறிக்கப்பட்ட பள்ளிகள் 6,555. திருவள்ளுவர் உருவப்படம் வழங்கப்பட்ட பள்ளிகள் 2,918. அடுத்து, சீரணியின் குறிப்பிடத்தக்க சில பணிகள். 32,000 ரூபாய் மதிப்புள்ள ஊரூர் பள்ளிக் கட்டடம் பத்தே நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. இதில் அரசின் பங்கு 4,000 ரூபாய் மட்டும்தான். வியாசர்பாடியில் ஏழு பர்லாங் நீளமுள்ள வடிகால் ஒன்று 18,000 ரூபாய் மதிப்பில் அரசின் செலவு 1,200 ரூபாயுடன் வெட்டப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் குடுமியான்மலையில் விவசாயப் பண்ணை அமைக்க நிலத்தைத் திருத்தி மேடிட்டுப்போன பழைய குளம் ஒன்றைக் கண்டுபிடித்து, அது செப்பனிடப்பட்டது, இதனால் 45 ஏக்கர் நிலப்பரப்பு நஞ்சையாக மாறியுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 95 வாய்க்கால்கள் தூர் எடுக்கப்பட்டன. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தூர் எடுக்கப்படாமல் இருந்த நான்கு

வாய்க்கால்கள் சீரணியால் ஒரு திங்களில் செப்பனிடப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது. செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் 17,000 ரூபாய் மதிப்பில் 3 மைல் நீளமுள்ள வாய்க்கால் தூர் எடுக்கப்பட்டது. திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தில் $2\frac{1}{2}$ மைல் நீளமுள்ள வாய்க்கால் தூர் எடுக்கப்பட்டது. திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் 2 மைல் நீளமுள்ள வாய்க்கால் தூர் எடுக்கப்பட்டது. பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 2 மைல் நீளமுள்ள வாய்க்கால் தூர் எடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட காரியங்களில் சீரணியினர் மிகச் சிறந்த முறையிலே தங்களுடைய ஆக்கப் பணிகளையெல்லாம் ஆக்கி வருகின்றனர்.

பாரதியார் இருந்த வீட்டைப்பற்றி இங்கு பேசிய உறுப்பினர்கள் பலர் குறிப் பிட்டார்கள். அதை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும், அரசினுடைய ஏற்பாட்டின்படி பாரதியின் நினைவுச் சின்னமாக அந்த வீட்டை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டது. அந்த வீட்டின் சொந்தக்காரரிடத்திலே, அந்த வீட்டை விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டபொழுது, 35,000 ரூபாய் கிரயமாகக் கேட்டார். ஆனால், திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் அவர்கள், வீட்டின் மதிப்பு 20,000 ரூபாய் என்று மதிப்பிட்டார்கள். தற்பொழுது அந்த வீட்டுச் சொந்தக்காரர், வீட்டின் விலை எதுவாக இருந்தாலும் ஒத்துக்கொள்வதற்குத் தயாராக உள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக கலெக்டர் அவர்களின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கை வந்தவுடன், பாரதியார் இருந்த வீட்டை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டசபை உறுப்பினர்களின் விடுதியிலே இருக்கின்ற சங்கடங்களைப்பற்றியெல்லாம் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். போன் வசதி வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு அறைக்கும் தொலைபேசி வசதி வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது இந்த ஆண்டிலே நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உணவு பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது போடப்படும் உணவு சுவையான அளவிலே இல்லை என்று கூறினார்கள். ஏற்கனவே ஒரு ஏற்பாடு இருந்தது. மறுபடியும் அந்த ஏற்பாட்டை நாம் எண்ணிப் பார்க்கலாம். கூட்டுறவு முறையில், இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் சேர்ந்து ஒரு உணவு விடுதியை நடத்த ஏற்பாடு செய்யலாம். இப்பொழுது அவர்கள் சொல்லும் புகார்கள், ஒரு நாளைக்கு வருபவர்கள் மறு நாளைக்கு வரவில்லை, எத்தனை பேர் வருகிறார்கள் என்று கணக்குத் தெரியவில்லை என்று விடுதி நடத்துபவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, உறுப்பினர்களே சேர்ந்து கூட்டுறவு முறையில் நடத்த முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம். அதுபற்றி " ஹவுஸ் கமிட்டி " யில் தக்க ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. மார்ட்டின் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்களும் இன்றைக்கு என்னவோ அவரையே பின்பற்றிப் பேசினார்கள். அப்படிப் பேசிய நேரத்திலும், அமைச்சர்களின் சம்பளம்தான் குறைக்கப்பட்டிருக்கிறதே தவிர, செலவு அதிகமாக இருக்கிறது என்று கூறினார்கள். ஒன்றை இடையிலே சொல்ல மறந்துவிட்டேன். இப்பொழுது நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களே கூட, எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றிச் சொன்னீர்கள். எனக்குக் கீழேயிருக்கும் துணைத் தலைவரைப்பற்றி எதுவுமே சொல்லவில்லையே என்று சொல்லுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படும் அத்தனை சலுகைகளும் துணைச் சபாநாயகரவர்களுக்கும் வழங்க நிச்சயமாக ஆலோசிக்கப்படும், அதற்கும் சட்டம் திருத்தப்படும் என்பதை உங்களுக்குக்கூட அல்ல, சபாநாயகரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (குறுக்கீடு) கொறடாவுக்கு என்கிறார்கள். அதுவே, " கொறடா " என்றுதான் இருக்கிறதே, எனவே, இன்னும் குறைக்காமல் இருந்தாலே போதும். (சிரிப்பு).





மந்திரிகள் சம்பளம் குறைவாக வாங்குகிறார்களே தவிர, செலவு அதிகரித்திருக்கிறது என்று நண்பர் திரு. மார்டின் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். இதிலே மந்திரிகளின் சம்பளத்தை 1966–67-இல் இருந்ததற்கும் இப்பொழுது இருப்பதற்கும் பார்த்தால் 1966–67-இல் ரூ. 95,000, 1967–68-இல் ரூ. 56,000 என்கின்ற வரிசையில் இருக்கிறது. அதிகப்படியாகச் செலவு ஆகியிருப்பதற்குக் காரணம், 6 லட்சமாக இருந்தது, 10 லட்சம், 11 லட்சம் என்ற அளவிலே ஆகியிருப்பதற்குக் காரணம், " அதர் சார்ஜஸ் " சுமார் ஒரு லட்சமாகயிருந்தது சுமார் மூன்று லட்சமாக ஆகியிருக்கிறது. அதிகப்படியாக இரண்டு லட்சம் ரூபாய் ஆன காரணம், அந்த இரண்டு லட்சம் ரூபாய்களுக்குக் கார்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. அந்தச் செலவினால் அதிகமாயிருக்கிறதேதவிர மந்திரிகளின் இலாக்காவைப் பொறுத்த வரையில் அதிகமாகிவிடவில்லை. அதைப் போலவே ரூ. 4,21,000 ஆக 1968–69-இல் இருப்பதற்குக் காரணம், அதிகமாக இருப்பதற்குக் காரணம், அமைச்சர்களுக்கு அல்ல ஸ்டாஃப்க்காக கார்கள் வாங்கப்பட்டன.

அதுமட்டுமல்ல , தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அமெரிக்காவிற்குச் சிகிச்சைக்காகச் சென்றிருந்த செலவு 94,000 ரூபாய், அந்தச் செலவையும் இதில் எழுதியிருக்கிறார்கள். அந்த 94,000 ரூபாயை முன்னேற்றக் கழகத் தலைமை நிலையம் இப்பொழுது திருப்பிச் செலுத்திவிட்டது. என்றாலும்கூட அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்தப் பணத்தை வரவு வைத்துக்கொண்டு திருத்தப்படும். கார் செலவும், அண்ணா சிகிச்சைச் செலவும் சேர்த்து எழுதப்பட்டிருப்பதால் உயர்ந்திருக்கிறதேயல்லாமல் வேறு அல்ல.

டியேர்னஸ் அலவன்ஸ் 1966–67-இல் 45,000 ரூபாயாக இருந்தது, 1967–68-இல் ரூ. 69,000 ரூபாயாக இருந்தது. 1968–69-ல் ரூ. 91,000 என்கின்ற அளவுக்கு டியர்னஸ் அலவன்ஸ் போன்றவைகள் உயர்ந்திருக்கின்றன. அந்தக் காரணங்களாலே மந்திரி இலாகாவைப் பொறுத்த அளவிலே செலவு அதிகமாகி இருக்கிறதாகத் தோன்றுகிறதேதவிர, வேறு அல்ல என்ற விளக்கத்தையும் நான் இங்கே அளித்து, இந்த மானியத்தின்மீது பேசப்பட்ட எல்லாக் கருத்துக்களையும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன அபிப்பிராயங்கள் அத்தனையையும் சர்க்கார் நல்ல முறையிலே யோசித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும் என்று கூறி வெட்டுப்பிரேரணைகளை முன் மொழிந்துள்ள உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு இன்றையதினம் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் என்ற நிறைந்த நம்பிக்கையோடு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** முதலமைச்சர் அவர்கள் இந்தப் படியை ரூ. 20 ஆக உயர்த்தியது பற்றி நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். எல்லா சார்பாகவும்தான் சொல்லுகிறேன். கட்சியைப் பற்றி இதில் ஒன்றும் கிடையாது. எங்கள் கட்சி வேண்டாமென்று சொல்லி இருக்கிறது. அங்கத்தினர் என்ற முறையில் நன்றி சொல்லிக்கொள்கிறேன். சிறு விளக்கம் சொல்லப் பிரியப்படுகிறேன். இப்பொழுது பார்லிமெண்டு மெம்பர்களுக்குள்ள சம்பளத்தை ரூ. 500 என்பதை ரூ. 600 என்றும், டெய்லி சிட்டிங் பீஸை, டெய்லி அலவன்ஸை ரூ. 30 என்பதை ரூ. 50 என்றும், " லேடி டைப்பிஸ்ட் " முதல் ஸ்டெனோகிராஃபர் போன்ற எல்லா வசதிகளும் செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலைமைகள் இருப்பதை ரூ. 20 என்று சொல்வதை மனப் பூர்வமாக ஒத்துக்கொண்டாலும் சம்பளத்தை ரூ. 400 என்றும் அங்கெல்லாம் ஃப்ரீ குவார்ட்டர்ஸ் எம்.பி.க்களுக்கு இருக்கிறதே. அதே மாதிரி இங்கும் கொடுக்க வேண்டும். சில மாநிலங்களில் ரூ. 450 என்று கூட இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, சம்பளத்தை ரூ 400 ஆகக் கூட்டி,

டெய்லி அலவன்ஸை ரூ. 20 ஆக வைத்துக்கொண்டாலும், நம் எம்.எல்.ஏக்களுக்கும், மைசூரிலே இருக்கிறதாமே அதைப்போல் ஃப்ரீ குவார்ட்டர்ஸ் என்று அந்த வசதியை மனப்பூர்வமாக அறிவிக்கவேண்டும். மேற்கொண்டு, இதை " ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்டாக " 1969-ம் வருடம் சனவரி மாதத்திலிருந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.** தலைவர் அவர்களே, சம்பளத்தைப் பொறுத்த வரையில் மற்றவர்களும் திரு. ஆதிமூலம் அவர்களும் சொன்னார்கள். இப்பொழுதுள்ள நிதி நிலையில் அவைகளையெல்லாம் கவனிக்க முடியாது. " லேடி டைப்பிஸ்ட் " வேண்டுமானால், அவர்களுக்கு மாத்திரம், ஏனென்றால், அச்சம் இல்லாத அளவில், போட வேண்டிய அவசியம் ஏற்படுமானால் அவர்களுக்கு மாத்திரம் செய்யலாம். வேறு சம்பளத்தைப் பொறுத்த வரையில் இப்பொழுது அதிகப்படுத்துவதாக உத்தேசம் இல்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, சம்பளத்தை உயர்த்துவதில்லையென்ற கருததை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதே மாதிரி இந்தப் படியை உயர்த்த வேண்டிய அவசியமும் இப்பொழுது இல்லையென்று எளது சார்பாக, எனது கட்சியின் சார்பாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வறட்சி என்று பேசினோம். சராசரி மனிதன் கிராமத்திலே வாழக்கூடிய ஏழை 8 அணா, 10 அணா கூட கூலி பெற முடியாத காலத்தில் நாம் நமது படியை உயர்த்துவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. ரூ. 15 படியிலே சென்னையிலே வேலை செய்ய முடியவில்லை என்பது நியாயமானதாக இல்லை. என அனுபவததில் அவ்வளவு நியாயமாகப் படவில்லை. ஆகவே, அதைப் பரிசீலனை செய்வது அவசியம். இல்லை, அதைக் கலந்து பேசி என்ன தேவை என்று பேசினால் நன்றாக இருக்கும். பஸ், ரயில்வே ஃப்ரீ பாஸ்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அதற்காக அரசு ஆவன செய்வது உதவியாக இருக்குமென்று எங்கள் கட்சியின் சார்பாக கூறுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏழைகள் பஸ்ஸிலே காசு கொடுத்துப் போகும்போது, எம்.எல்.ஏக்கள் காசு கொடுக்காமல் போவதைப்பற்றிச் சொல்லுகிறார்கள். எம்.எல்.ஏக்கள் இங்கே பணி புரிய வேண்டிய நேரத்திலே எத்தனையோ செலவுகள் இருக்கின்றன. எத்தனையோ பேர்கள் எம்.எல்.ஏ-க்களைப் பார்ப்பதற்காகத் தொகுதியிலிருந்து வந்துவிடுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான செலவுகளையும், காஃபி மாதிரி தேவைகளையும் நாம்தான் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். எம்.எல்.ஏ-க்களுக்கு மாத்திரம் ரூ. 20 என்று இல்லை. அவர்களைப் பார்க்க தொகுதியிலிருந்து எத்தனையோ பேர்கள் வருகிறார்கள். அவர்களுடைய தேவையையும் கருத்திலே கொண்டு, அவர்களுக்கும் சேர்த்து இது கொடுக்கப்படுகிறது. ஏழை இதைப் பார்த்து கஷ்டப்படுவான் என்றால், நீங்கள் பஸ்களிலே ஃப்ரீயாக செல்லும்போதுதான் கஷ்டப்படுவான், நாம் காசு கொடுத்துப் போகிறோம். இவர்கள் ஃப்ரீயாகப் போகிறார்கள், என்று.

**Thiru T. MARTIN** : Sir, in my speech I referred to a particular paragraph in page 41 of the Audit Report and it runs as follows —

‘Rs. 20,000 were spent in 1968–69 in South Arcot district on purchase of tools even though tools had been purchased in 1967–68 for the maximum amount of Rs. 6,000 admissible under the scheme.’

The Hon. Minister gave some answer which is contrary tothe observations contained in that Audit Report. May I know from theHon. Chief Minister whether the statement contained in theAudit Report is correct or the explanation given by the Hon. Minister for Local Adminstration is correct.



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் மாண்புமிகு உறுப்பினருடைய அபிப்பிராயத்தையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார் என்பதையும் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து அதைப்பற்றி நாளைய தினம் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு வெட்டுத் தீர்மானங்கள்.

கோரிக்கை எண் 6-க்கு கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 6 — மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,48,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 7-க்கு திருவாளர்கள் சோ. அழகர்சாமி, எம். பூபதி, கே. எம். ராமசாமி கவுண்டர், கே. சகாதேவ கண்டர் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

கோரிக்கை எண் 7-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்த திரு. எம். சுரேந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி

"கோரிக்கை எண் 7 — தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,04,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 8-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சோ. அழகர்சாமி, திருமதி. கே. பி. ஜானகியம்மாள் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

கோரிக்கை எண் 8-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்த திரு. எம். சுரேந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 8 — மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,14,58,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 33-க்கு திரு என். எஸ். வி. சித்தன், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு சோ. அழகர்சாமி, திரு வி. கே. கோதண்டராமன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

கோரிக்கை எண் 33-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்த திரு. பி. வேலுசாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால், அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படும்.

## APPENDIX.

[*VIDE* ANSWER TO UNSTARRED QUESTION NO. 70 ON PAGE 511]

Clauses (*a*) to (*f*):—Statement of fire accidents in the Madras City during the period from 6th March 1967 to 31st March 1968.

*Number of fire accidents from 6th March 1967 to 31st March 1968.*

| | | |
|---|---|---|
| March .. .. .. .. .. | 1967 .. | 4 |
| April .. .. .. .. .. | Do. .. | 3 |
| May .. .. .. .. .. | Do. .. | 2 |
| June .. .. .. .. .. | Do. .. | 1 |
| July .. .. .. .. .. | Do. .. | 33 |
| August .. .. .. .. .. | Do. .. | 4 |
| September .. .. .. .. .. | Do. .. | 2 |
| October .. .. .. .. .. | Do. .. | 2 |
| November .. .. .. .. .. | Do. .. | 6 |
| December .. .. .. .. .. | Do. .. | 3 |
| January .. .. .. .. .. | 1968 .. | 3 |
| February .. .. .. .. .. | Do. .. | 3 |
| March .. .. .. .. .. | Do. .. | 3 |



| Details of places. (1) | Date of occurrence. (2) | Number of dwellings affected. (3) | Number of victims. (4) | Extent of loss of private properties. (5) Rs. |
|---|---|---|---|---|
| 1 Wooden bunk in Saligramam village by the side of Madras State Transport Department Bus Depot, Saligramam. | 10th March 1967 .. .. | 1 | 1 | 100 |
| 2 Karaikuttai, South Canal Bank Road, Madras-28. | 23rd March 1967 .. .. | 1 | 1 | 100 |
| 3 R.K. Mutt Road, Madras-4 .. .. .. | 24th March 1967 .. .. | 1 | 1 | 8,000 |
| 4 Chockalinga Gramani Garden, Madras-13. | 13th March 1967 .. .. | 1 | 1 | 500 |
| 5 46, Subbaroya Chetty IV Lane, Madras-12. | 11th April 1967 .. .. | 1 | 5 | 3,000 |
| 6 Rundalls Road, Vepery .. .. .. | 17th April 1967 .. .. | 1 | 1 | 11,000 |
| 7 Flowers Road, Purasawalkam .. .. | 19th April 1967 .. .. | 60 | 317 | 27,000 |
| 8 146, Venkatapuram, Madras-12 .. .. | 1st May 1967 .. .. | 1 | 1 | 500 |
| 9 Ranganthan Street, III Lane, Chetput .. | 3rd May 1967 .. .. | 1 | 2 | 60 |
| 10 Third Palla Street, Vyasarpadi .. | 20th June 1967 .. .. | 8 | 8 | 3,950 |
| 11 Royapuram Beach Sea-shore .. .. | 1st July 1967 .. .. | .. | 43 | 40,000 |
| 12 Bala Mandir School, T' Nagar .. .. | Do. .. .. | 200 | 400 | 50,000 |
| 13 Appaduraithottam Pattunoolkaranthottam, Mundakanniamman Koil Street. | 3rd July 1967 .. .. | 703 | 703 | 2,00,000 |
| 14 Badrikarai, Kodambakkam High Road .. | 5h July 1967 .. .. | 75 | 83 | .. |
| 15 Nattanthottam near Barbers Bridge .. | Do. .. | 100 | 117 | 30,000 |
| 16 Audi Manyathottam, Mandavelli .. .. | Do. .. .. | 250 | 293 | 1,00,000 |
| 17 St. Mary's Road, Abhiramapuram .. .. | Do. .. .. | 49 | 127 | Not ascertainable. |
| 18 Chetty Thottam Saidapet, .. .. | Do. .. .. | 2 | 2 | Do. |
| 19 Pulla Reddy Puram, Egmore .. .. | 6th July 1967 .. .. | 1 | 1 | 60 |
| 20 Junction of Mosque Street, Aiyavoo Naidu Street. | Do. .. .. | 7 | 8 | 10,250 |

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 33 — பலவகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,58,01,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.*

**(உ) கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,48,91,000 under Demand No. 10—Administration of Justice."

*நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**(ஊ) கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 98,68,900 under Demand No. 5—Registration Department."

*நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**(எ) கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,32,66,400 under Demand No. 11—Jails."

*நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.**

**(ஆ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

**8. அரசினர் மசோதா**

**தமிழ் நாடு, 1969ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா**

THE HON. THIRU K. A MATHIALAGAN : Sir, I move for leave to introduce the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1969.

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.*

HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bi]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட் டிருக்கிறது.



இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

[பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

**9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்**

**A. *Statutory Rules and Orders.***

Nil.

**B. *Reports, Notifications and other papers.***

+ 119. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1968-69 (English and Tamil.)

+ 120. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1968-69 (English and Tamil).

+ 121. Speech of Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance, presenting the Final Supplementary Estimates for 1968-69 (English and Tamil).

122. List of Unstarred Questions and Answers from Nos. 41 to 102.

@ 123. A Review of the working of the Stationery and Printing Department during the year 1968-69 (English and Tamil).

@ 124. Speech of Hon. Dr. Sathiavanimuthu, Minister for Health and Harijan Welfare on Demand No. 34— Stationery and Printing (English and Tamil).

@ 125. Speech of Hon. Thiru P. U. Shanmugam, Minister for Labour on Demand No. 24—Labour including Factories (English and Tamil).

---

**+ Placed on the Table of the House on 25th March 1969.**

**@ Despatched to Members on 24th March 1969.**

| Details of places. (1) | Date of occurrence. (2) | Number of dwellings affected. (3) | Number of victims. (4) | Extent of loss of private properties. (5) |
|---|---|---|---|---|
| | | | | Rs. |
| 21 Appavu Nagar, Saidapet | 6th July 1967 | 1 | 1 | Not Ascertainable. |
| 22 Chetty Thottam (second accident) | Do. | 1 | 1 | Do. |
| 23 Third Main Road, C.I.T., Nagar, Madras-35. | 7th July 1967 | 2 | 2 | Do. |
| 24 Kottur Village, Bank of Buckingham Canal. | 10th July 1967 | 4 | 11 | 6,200 |
| 25 Swamyarthottam, Saidapet | Do. | 1 | 1 | Not ascertainable. |
| 26 Namasivayapuram, Nungamakkam | 5th July 1967 | 1 | 2 | Do. |
| 27 Canal Bank Road, Kasthuri bai Nagar | 8th July 1967 | 2 | 4 | Do. |
| 28 Kamarajapuram, G. N. Chetty Road, Madras-17. | 6th July 1967 | 3 | 3 | Do. |
| 29 Chettythottam Appavu Nagar, Saidapet, (third accident). | 7th July 1967 | 2 | 2 | Do. |
| 30 GhouseMohideen Sahib Street | 6th July 1967 | 1 | 1 | Do. |
| 31 Korukupettai near Cable Installation | 9th July 1967 | 1 | 1 | Do. |
| 32 Valliammal Thottam, Puliyar Village | 10th July 1967 | 1 | 1 | 250 |
| 33 Malligaipoo Colony, Vyasarpadi | 12th July 1967 | 1 | 1 | 60 |
| 34 Appaswamy Mudaly Street, Chetput | 7th July 1967 | 2 | 3 | Not ascertainable. |
| 35 C.V.D. School, Kilpauk | 9th July 1967 | .. | .. | Do. |
| 36 Irusappa Maistry Street, Ponnuswamy Chetty Street, New Washermanpet. | 11th July 1967 | 6 | 19 | 500 |
| 37 South Usman Road, T.Nagar | 10th July 1967 | 1 | 1 | Not ascertainable. |
| 38 Ammai Ammalthottam | 11th July 1967 | 1 | 1 | Do. |
| 39 Back side of South East Taluk Office | Do. | 5 | 10 | Do. |



| Details of places. (1) | Date of occurrence. (2) | Number of dwellings affected. (3) | Number of victims. (4) | Extent of loss of private properties. (5) |
|---|---|---|---|---|
| 40 Ayodhyakuppam, Triplicane | 8th July 1967 | 6 | 6 | Do. |
| 41 Sankarapathar Street, Ramalingapuram | 15th July 1967 | 7 | 16 | 1,400 |
| 42 Manicka Vinayagar Koil Street | 14th July 1967 | 1 | 1 | 150 |
| 43 Varadarajapet, Puliyur | 25th July 1967 | 1 | 1 | 500 |
| 44 Valleeswaranthottam and Narayanaswamy thottam. | 1st August 1967 | 101 | 250 | 1,01,460 |
| 45 Valleeswanthottam | 3rd August 1967 | 16 | 24 | Not ascertainable. |
| 46 Ganesapuram, Teynampet | 4th August 1967 | 7 | 15 | Do. |
| 47 6, Amir Jan Sahib Street, Puliyur | 30th August 1967 | 1 | 3 | 1,250 |
| 48 Rotans Nagar, Madras-14 | 15th September 1967 | 6 | 6 | Not ascertainable. |
| 49 241, Wall Tax Road, Madras-3 | 28th Spetember 1967 | 1 | 1 | 40,000 |
| 50 8/2, First Pettah Street, Vyasarpadi | 10th October 1967 | 1 | 1 | 2,200 |
| 51 Lock Nagar, Triplicane | 19th October 1967 | 2 | 10 | Not ascertainable. |
| 52 Kabali Vana Bojanathottam | 9th November 1967 | 2 | 2 | Do. |
| 53 Boopathy Nagar and Gopalaswamy Nagar. | Do. | 27 | 80 | Do. |
| 54 55, Foxen Street, Madras-1 | 10th November 1967 | 2 | 2 | Do. |
| 55 Batcha Garden, Madras-4 | Do. | 22 | 24 | 2,400 |
| 56 103, 104, P.V. Koil Street, Madras-14 | 14th November 1967 | 3 | 3 | Not ascertainable. |
| 57 8, Bangaru Reddy Street, Aiyanvaram | 30th November 1967 | 26 | 26 | 21,650 |
| 58 23-B, South Mada Street, Nungambakkam. | 17th December 1967 | 1 | 1 | Not ascertainable. |
| 59 Palayakaran Street, Aiyanavaram | 22nd December 1967 | 1 | 1 | 200 |
| 60 9, Poosan Street, Puraswalkam | 19th December 1967 | 6 | 6 | 1,350 |
| 61 11, Begum Sahib III Lane, Mir sahibpet | 13th January 1968 | 1 | 3 | Not ascertainable. |
| 62 Palayakaran Street, Aiyanawaram | January 1968 | 1 | 1 | Do. |
| 63 Ayodyakuppam, Triplicane | 31st January 1968 | 4 | 5 | Do. |
| 64 Chamudeeswaranpuram, Vyasarpadi | 15th February 1968 | 1 | 1 | Do. |
| 65 Sachidanandan Street, Madras-12 | 29th February 1968 | 5 | 5 | 200 |
| 66 Cheyyar Parthasarathy Naidu Street, Perambur. | Do. | 1 | 1 | 100 |
| 67 Nachiappa Chetty Street, Madras-4 | 1st March 1968 | 5 | 5 | Not ascertainable. |

| Details of places. | Date of occurrence. | Number of dwellinge offected. | Number of victims. | Extent of loss of private properties. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | RS. |
| 68 Chintadripet Cooum River Bank, Opposite Napier Park. | 7th March 1968 .. .. | 17 | 38 | 15,000 |
| 69 4, Bharathi Road, Second Street, Perambur. | 6th March 1968 .. .. | 1 | 1 | 2,000 |

*Rehabilitation measures*—

The State Housing Board has constructed fire-proof tenements for the victims of the following areas:—

(1) Sivashanmugam area, near Bala Mandir School, T' Nagar.

(2) Appadurai Naicken Thottam and Pattunoolkaranthottam.

(3) Nattanthottam.

(4) Andi Manayathottam.

*Reasons for the accedints.*—The accidents were due to carelessness of the hut dwellers.



**சென்னை மாநகரில் 6—3—1967 முதல் 31—3—1968 வரையுள்ள காலத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் பற்றிய விவர அறிக்கை.**

1967 மார்ச் 6 முதல் 1968 மார்ச் 31 வரை ஏற்பட்ட தீவிபத்துக்களின் எண்ணிக்கை:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1967 | மார்ச் | 4 | 1967 | செப்டம்பர் | 2 |
| | ஏப்ரல் | 3 | | அக்டோபர் | 2 |
| | மே | 2 | | நவம்பர் | 6 |
| | ஜூன் | 1 | | டிசம்பர் | 3 |
| | ஜூலை | 33 | 1968 | ஜனவரி | 3 |
| | ஆகஸ்டு | 4 | | பிப்ரவரி | 3 |
| | | | | மார்ச் | 3 |

| இடங்கள் பற்றிய விவரங்கள். | தீ விபத்து ஏற்பட்ட தேதிகள். | பாதிக்கப் பட்ட குடியிருப்புகள் எண்ணிக்கை. | பாதிக்கப் பட்டவர் எண்ணிக்கை. | தனியார் சொத்து இழப்பு அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூ. |
| 1 சாலிக்கிராமம், தமிழக அரசுப் போக்குவரத்து பேருந்து பணிமனைக்குப் பக்கத்தில் உள்ள பெட்டிக்கடை. | 10 -3-1967 | 1 | 1 | 100 |
| 2 காரைக்குட்டை, தெற்குக் கால்வாய்க் கரைச்சாலை, சென்னை-28 .. .. | 23- 3-1967 | 1 | 1 | 100 |
| 3 இராமகிருஷ்ண மடத் தெரு, சென்னை-4 .. .. .. .. | 24- 3-1967 | 1 | 1 | 8,000 |
| 4 சொக்கலிங்க கிராமணித் தோட்டம், சென்னை-13 .. .. .. | 13- 3-1967 | 1 | 1 | 500 |
| 5 46, சுப்பராய செட்டி, 4-வது சந்து, சென்னை-12 .. .. .. .. | 11- 4-1967 | 1 | 5 | 3,000 |
| 6 ரண்டால்ஸ் சாலை, வேப்பேரி .. .. .. .. .. | 17- 4-1967 | 1 | 1 | 11,000 |
| 7 ப்ளவர்ஸ் சாலை, புரசைவாக்கம் .. .. .. .. .. | 19- 4-1967 | 60 | 317 | 27,000 |
| 8 146, வேங்கடபுரம், சென்னை-12 .. .. .. .. | 1- 5-1967 | 1 | 1 | 500 |
| 9 ரங்கநாதன் தெரு, 3-வது சந்து, சேத்துப்பட்டு .. .. .. | 3- 5-1967 | 1 | 2 | 60 |
| 10 மூன்றுவது பள்ளத் தெரு, வியாசர்பாடி .. .. .. .. | 20- 6-1967 | 8 | 8 | 3,950 |
| 11 இராயபுரம் கடற்கரை .. .. .. .. .. .. | 1- 7-1967 | .. | 43 | 40,000 |

| | இடங்கள் பற்றிய விவரங்கள். | தீ விபத்து ஏற்பட்ட தேதிகள். | பாதிக்கப் பட்ட குடியிருப்புகள் எண்ணிக்கை. | பாதிக்கப் பட்டவர் எண்ணிக்கை. | தனியார் சொத்து இழப்பு அளவு. |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | | ரூ. |
| 12 | பாலமந்திர்பள்ளி, தி. நகர் .. .. .. .. .. .. .. | 1 -7-1967 | 200 | 400 | 50,000 |
| 13 | அப்பாத்துரைத் தோட்டம், பட்டுநூல்காரத் தோட்டம், முண்டக்கண்ணியம்மன் கோவில் தெரு. | 3- 7-1967 | 703 | 703 | 2,00,000 |
| 14 | பத்rிகரை, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை .. .. .. .. .. | 5- 7-1967 | 75 | 83 | .. |
| 15 | நாட்டான் தோட்டம், ஹாமில்டன் வாராவதி அருகில் .. .. .. | 5- 7-1967 | 100 | 117 | 30,000 |
| 16 | ஆண்டிமானியத் தோட்டம், மந்தைவெளி .. .. .. .. | 5- 7-1967 | 250 | 293 | 1,00,000 |
| 17 | புனித மேரி சாலை, அபிராமபுரம் .. .. .. .. .. | 5- 7-1967 | 49 | 127 | தெரியவில்லை |
| 18 | செட்டித் தோட்டம், சைதாப்பேட்டை .. .. .. .. .. | 5- 7-1967 | 2 | 2 | தெரியவில்லை |
| 19 | புல்லாரெட்டிபுரம், எழும்பூர் .. .. .. .. .. .. | 6- 7-1967 | 1 | 1 | 60 |
| 20 | மருதித் தெரு, அய்யாவு நாயுடு தெரு சந்திப்பு .. .. .. | 6- 7-1967 | 7 | 8 | 10,250 |
| 21 | அப்பாவு நகர், சைதாப்பேட்டை .. .. .. .. .. .. | 6- 7-1967 | 1 | 1 | தெரியவில்லை. |
| 22 | செட்டித் தோட்டம் (இரண்டாவது விபத்து) .. .. .. .. | 6- 7-1967 | 1 | 1 | ,, |
| 23 | மூன்றுவது மெயின்சாலை, சி.ஐ.டி. நகர், சென்னை-35 .. .. | 7- 7-1967 | 2 | 2 | ,, |
| 24 | கோட்டூர் கிராமம், பக்கிங்ஹாம் கால்வாய்க் கரை .. .. .. | 10- 7-1967 | 4 | 11 | 6,200 |
| 25 | சாமியார் தோட்டம், சைதாப்பேட்டை .. .. .. .. .. | 10- 7-1967 | 1 | 1 | தெரியவில்லை. |
| 26 | நமச்சிவாயபுரம், நுங்கம்பாக்கம் .. .. .. .. .. .. | 5- 7-1967 | 1 | 2 | ,, |
| 27 | கால்வாய்க்கரை சாலை, கஸ்தூரிபாய் நகர் .. .. .. .. | 8- 7-1967 | 2 | 4 | ,, |
| 28 | காமராஜபுரம், கோபதி நாராயணசாமி செட்டி சாலை, சென்னை-17 .. | 6- 7-1967 | 3 | 3 | ,, |
| 29 | செட்டித் தோட்டம் அப்பாவுநகர், சைதாப்பேட்டை (மூன்றுவது விபத்து) | 7- 7-1967 | 2 | 2 | ,, |
| 30 | கொளஸ் முகைதீன் சாயபு தெரு .. .. .. .. .. | 6- 7-1967 | 1 | 1 | ,, |
| 31 | கொருக்குப்பேட்டை கேபிள் நிறுவனம் அருகே .. .. .. | 9- 7-1967 | 1 | 1 | ,, |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 32 | வள்ளியம்மாள் தோட்டம், புலியூர் கிராமம் .. .. .. .. | 10- 7-1967 | 1 | 1 | 250 |
| 33 | மல்லிகைப்பூ காலனி, வியாசர்பாடி .. .. .. .. .. | 12- 7-1967 | 1 | 1 | 60 |
| 34 | அப்பாசாமி முதலி தெரு, சேத்துப்பட்டு .. .. .. .. .. | 7- 7-1967 | 2 | 3 | தெரியவில்லை. |
| 35 | சி. வி. டி. பள்ளி, கீழ்ப்பாக்கம் .. .. .. .. .. | 9- 7-1967 | .. | .. | ,, |
| 36 | இருசப்ப மேஸ்திரி தெரு, பொன்னுசாமி செட்டி தெரு, புதிய வண்ணாரப்பேட்டை. | 11- 7-1967 | 6 | 19 | 500 |
| 47 | தெற்கு உஸ்மான் சாலை, தி. நகர் .. .. .. .. .. | 10- 7-1967 | 1 | 1 | தெரியவில்லை. |
| 38 | அம்மை அம்மாள் தோட்டம் .. .. .. .. .. .. | 11- 7-1967 | 1 | 1 | ,, |
| 39 | தென் கிழக்கு வட்ட அலுவலகத்திற்குப் பின்புறம் .. .. .. | 11- 7-1967 | 5 | 10 | ,, |
| 40 | அயோத்யா குப்பம், திருவல்லிக்கேணி .. .. .. .. .. | 8- 7-1967 | 6 | 6 | தெரியவில்லை. |
| 41 | சங்கரபக்தர் தெரு, ராமலிங்கபுரம் .. .. .. .. .. | 15- 7-1967 | 7 | 16 | 1,400 |
| 42 | மாணிக்க விநாயகர் கோயில் தெரு .. .. .. .. .. | 14- 7-1967 | 1 | 1 | 150 |
| 43 | வரதராஜபேட்டை, புலியூர் .. .. .. .. .. .. | 25- 7-1967 | 1 | 1 | 500 |
| 44 | வள்ளீஸ்வரன் தோட்டம், நாராயணசாமி தோட்டம் .. .. .. | 1- 8-1967 | 101 | 250 | 1,01,460 |
| 45 | வள்ளீஸ்வரன் தோட்டம் .. .. .. .. .. .. .. | 3- 8-1967 | 16 | 24 | தெரியவில்லை. |
| 46 | கணேசபுரம், தேனும்பேட்டை .. .. .. .. .. .. | 4- 8-1967 | 7 | 15 | ,, |
| 47 | 6, அமீர்ஜான் சாகிப் தெரு, புலியூர் .. .. .. .. .. | 30- 8-1967 | 1 | 3 | 1,250 |
| 48 | ரோட்டன்ஸ் நகர், சென்னை-14 .. .. .. .. .. | 15- 9-1967 | 6 | 6 | தெரியவில்லை. |
| 49 | 241, வால்டாக்ஸ் சாலை, சென்னை-3 .. .. .. .. .. | 28- 9-1967 | 1 | 1 | 40,000 |
| 50 | 8/2, முதல் பேட்டை தெரு, வியாசர்பாடி .. .. .. .. | 10-10-1967 | 1 | 1 | 2,200 |
| 51 | லாக் நகர், திருவல்லிக்கேணி .. .. .. .. .. .. | 19-10-1967 | 2 | 10 | தெரியவில்லை. |
| 52 | கபாலி வனபோஜன தோட்டம் .. .. .. .. .. .. | 9-11-1967 | 2 | 2 | ,, |
| 53 | பூபதிநகர், கோபாலசாமி நகர் .. .. .. .. .. .. | 9-11-1967 | 27 | 80 | ,, |
| 54 | 55, ஃபாக்ஸன் தெரு, சென்னை-1 .. .. .. .. .. | 10-11-1967 | 2 | 2 | ,, |
| 55 | பாட்சா தோட்டம், சென்னை-4 .. .. .. .. .. .. | 10-11-1967 | 22 | 24 | 2,400 |
| 56 | 103, 104, பி. வி. கோயில் தெரு, சென்னை-14 .. .. .. | 14-11-1967 | 3 | 3 | தெரியவில்லை. |
| 57 | 8, பங்காரு தெரு, அயன்புரம் .. .. .. .. .. .. | 30-11-1967 | 26 | 26 | 21,650 |
| 58 | 23, தெற்கு மாடவீதி, நுங்கம்பாக்கம் .. .. .. .. .. | 17-12-1967 | 1 | 1 | தெரியவில்லை. |
| 59 | 2, பாளையக்காரன் தெரு, அயன்புரம் .. .. .. .. .. | 22-12-1967 | 1 | 1 | 200 |
| 60 | 9, பூசன் தெரு, புரசைவாக்கம் .. .. .. .. .. .. | 19-12-1967 | 6 | 6 | 1,350 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

## வியாழக்கிழமை, 1969 மார்ச் 27

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) நீத்தார் நினைவுக் குறிப்பு

திரு. எஸ். சின்னையன் முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து :

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1962-ல் இருந்து 1967-ம் ஆண்டுவரை நாமக்கல் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினரான எஸ். சின்னையன் அவர்கள் 21—3—1969-ம் நாளன்று காலமானதைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

### 2. வினாக்கள்-விடைகள்.

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 491, 492 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Famine area.*

*493 *Q.*—THIRU B. VENKATASWAMY, THIRU N. S. V. CHITHAN : THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) the areas declared as famine areas in our State ; and

(*b*) whether any permanent famine relief measures were taken so far in such places ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) எந்த இடமும் பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : In Madras State so many areas have been affected by drought. But this Government have not taken any permanent famine relief measures. Will this Government come forward to recommend all the famine affected areas to the Central Government and take permanent relief measures and not temporary measures to save such areas ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த நிலைமையில் பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்தவில்லை என்று சொன்னேனே தவிர நமது மாநிலமே பஞ்சமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் அறிவார்கள். இது சம்பந்தமாக ஒரு கோடியே 85 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, மத்திய அரசினுடைய உதவியையும் எதிர்பாராமல் பல்வேறு மாவட்டங்களில் வேலைகள் நடந்து கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதற்கு மேலாக இந்தியப் பிரதமர் அவர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்திருப்பதும், அவர்கள் 17-ம் தேதி இங்கு வர இருப்பதும், இந்தியப் பிரதமரையும், துணைப் பிரதமரையும் இது சம்பந்தமாக டில்லியில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சந்தித்ததையும், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதும் இம்மாமன்றம் அறியும். இந்திய அரசு இங்குள்ள நிலைமையை ஆராய்வதற்காக ஒரு குழுவை அனுப்பியிருக்கிறார்கள். அது தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறது. இந்தக் குழு முதல் அமைச்சர் அவர்களை நேற்றைய முன் தினம் சந்தித்து என்ன உதவிகளைச் செய்யலாம் என்று ஆலோசனை நடத்தியது என்பது இம்மாமன்றத்திற்குத் தெரியும். தவிர இவ்வளவு நாளாக அவர்கள் லோனாகக் கொடுத்துவந்திருந்திருக்கிறார்கள், அப்படியில்லாமல் அதைக் கிராண்டாகக் கொடுக்கவேண்டுமென்று நானும் முதல் அமைச்சர் அவர்களும் வற்புறுத்தியிருக்கிறோம். நம்முடைய அதிகாரிகள் எல்லாம் அதற்காக எவ்வளவு ஆகும் என்று கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் ரெவின்யூ அமைச்சர் என்ற முறையில் 10 கோடி ரூபாயாவது கேட்கவேண்டுமென்று சொல்லி அதற்காக அதிகாரிகளும் தகவல் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். 10 கோடி ரூபாயாவது கொடுக்கவேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அமைச்சர் அவர்கள் இதுவரை பொதுவாக ஒரு கோடியே எண்பத்தி ஐந்தாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதில் மதுரை மாவட்டத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது யானை பசிக்கு சோளப்பொறி போடுவதுபோன்று இருக்கிறது. எனவே இங்குள்ள வறட்சி நிலைமையை உத்தேசித்து அதிகமான தொகையை ஒதுக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பொதுவாகத்தான் சொன்னேன். இதில் அரசாங்கம் எவ்வளவு கவனம் செலுத்தியிருக்கிறது என்பதைத்தான் சென்னேன். அதற்காக 1½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றால் எந்தெந்த பகுதிகளில் அதை செலவு செய்யவேண்டும் என்பதைப் பொறுத்தவரையில், அதைவிட அதிகமாக வறட்சி நிலைமை இருக்கக்கூடிய பகுதிகளுக்கு பிரையாரிட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் இவ்வளவு பெற வேண்டும் என்று கணக்கு சொல்லும்போது நிறைய தேவைப்படுகிறது என்பது தெரிகிறது. எனவே, மதுரை மாவட்டத்தினுடைய நிலைமையும் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** மத்திய அரசாங்கத்திடமிருந்து வந்த நிபுணர் குழு வறட்சி நிலைமையைக் கண்டறிவதற்கு வட ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் கடுமையான பஞ்சம் இருந்து வருகிறது. இதுபற்றி கவர்னர் உரையில்கூட வரவில்லை. ஆகையால் இந்த நிபுணர் குழுவை அங்கே அனுப்பி அங்குள்ள நிலைமைகளை ஆராய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் கூறுவது முற்றிலும் தவறானது. முதலில் 1½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில் இராமநாதபுரம் மாவட்டத்திற்குத்தான் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிபுணர் குழு அடையாளத்திற்காக அங்கங்கே எப்படி இருக்கிறது என்று பார்க்கிறார்களே, தவிர, அதற்காக ஒவ்வொரு ஊருக்கும் சென்று பார்க்கிற நிலைமை இல்லை. இராமநாதபுர மாவட்டத்தைப் பொறுத்தவரை அது கிராணிக் ஃபாமின் ஏரியா என்று நானும் மற்றவர்களும் அவர்களிடம் வற்புறுத்தியிருக்கிறோம். இராமநாதபுரம்





மட்டும் அல்ல, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரையிலே சில பகுதிகள் உசிலம்பட்டி, திருமங்கலம் போன்ற பகுதிகள் இருக்கின்றன. இதிலே எந்தவிதமான பாரபட்சமும் இல்லை. பிரதமர் அவர்கள் கூட இரண்டு மூன்று இடங்களுக்குத்தான் வருகிறார்கள் என்றால் மற்ற இடங்கள் எல்லாம் அவசியம் இல்லை என்பதல்ல. இந்த நிபுணர் குழு அங்கங்கே உள்ள நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பதை அவசரமாக முடிவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தினாலே அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மற்றப்படி இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய குறை இப்போதே கவனிக்கப்படும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது வறட்சி நிலைமையை அனுசரித்து 10 கோடி ரூபாயாவது குறைந்தபட்சம் நமது நாட்டிலே செலவு செய்ய வேண்டுமென்று திட்டம் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். இவ்வளவு பரிவோடு விவசாயிகளை அணுகுகிற அரசு கடன், நிலத் தீர்வை, சொசைடி கடன் இவைகளைக் கட்டாயமாக வசூலிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதிகள் எல்லாம் காய்ந்துபோன பகுதிகளாக இருப்பதினாலே அவைகளைத் தள்ளி வைக்க அரசாங்கம் உத்திரவு போடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் நிலைமை தவறானது. கடன் வசூல்களை யெல்லாம் தள்ளி வைக்குமாறும், அவைகளைக்கெடுபிடியாக வசூல் செய்யக் கூடாதென்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு அத்தகைய நிலைமை இருந்தாலும்கூட, இதைப் பார்த்தாவது அதிகாரிகள் செய்வார்கள் என்று மனதார நம்புகின்றோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தப் பஞ்ச நிலை ஏற்படுவதற்கே காரணம், மழை இல்லாததன் விளைவாகத் தண்ணீர் வசதி இல்லாததுதான். இப்பொழுது பஞ்சப் பிதேசங்களில் உதவிக்காக வேண்டி, ஏதோ ஏரிக்கரையின் மேல் மண்ணைத் தூக்கிப் போட்டுவிட்டால் மட்டும் அது நிரந்தர உதவியாகாது. நிரந்தரமான உதவி அளிக்கக்கூடிய தன்மையில், நம்முடைய மாநிலத்தில் எங்கெல்லாம் சின்ன அணைகளாக இருந்தாலும், பெரிய அணைகளாக இருந்தாலும் கட்டப்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றனவோ அவற்றை யெல்லாம் கட்டி., நீர்த் தேக்கங்களை அமைக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நீர்த் தேக்கங்கள் கட்டுவதென்பது ஒன்று. ஏரிக்கரையின்மேல் மண்ணைத் தூக்கிப் போடுவது என்பது ஒன்று. இரண்டுமே தேவையானவைதான். எதைச் சீக்கிரமாகச் செய்ய முடியுமோ எதை அவசரமாகச் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறதோ அதனை அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பஞ்ச நிலைமையைப்பற்றிய விவாதம் 31-ந் தேதியன்றுவைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மேற்கொண்டு இதில் துணை வினாக்கள் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

அடுத்து, வினா எண். 494 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

<u>கிராம அடங்கல்கள்.</u>

*** 494 வினா:—திருமதி கே. பி. ஞானகியம்மாள்,**
**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு நீதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குத்தகை வார விவசாயிகளைக் கிராம-கர்ணம் அடங்கல்களில் அதற்கென தனியாக ஒரு பகுதி இருந்தும் அதில் பதிவு செய்வது கிடையாது என்பது அரசுக்குத் தெரியுமா ?

| | இடங்கள் பற்றிய விவரங்கள். | தீ விபத்து ஏற்பட்ட தேதிகள். | பாதிக்கப் பட்ட குடி யிருப்புகள் எண்ணிக்கை. | பாதிக்கப் பட்டவர் எண்ணிக்கை. | தனியார் சொத்து இழப்பு அளவு. |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | | ரூ. |
| 61 | 11, பேகம் சாஹிப் 3-வது சந்து, மீர்சாஹிப்பேட்டை .. .. .. | 13- 1-1968 | 1 | 3 | தெரியவில்லை. |
| 62 | பாளையக்காரன் தெரு, அயன்புரம் .. .. .. .. .. | - 1-1968 | 1 | 1 | ,, |
| 63 | அயோத்யாகுப்பம், திருவல்லிக்கேணி .. .. .. .. .. | 31- 1-1968 | 4 | 5 | ,, |
| 64 | சாமுண்டீஸ்வரன்புரம், வியாசர்பாடி .. .. .. .. .. | 15- 2-1968 | 1 | 1 | ,, |
| 65 | சச்சிதானந்தன் தெரு, சென்னை-12 .. .. .. .. .. | 29- 2-1968 | 5 | 5 | 200 |
| 66 | செய்யாறு பார்த்தசாரதி நாயுடு தெரு, பெரம்பூர் .. .. .. | 29- 2-1968 | 1 | 1 | 100 |
| 67 | நாச்சியப்ப செட்டி தெரு, சென்னை-4 .. .. .. .. .. | 1- 3-1968 | 5 | 5 | தெரியவில்லை. |
| 68 | சிந்தாதிரிப்பேட்டை கூவம் ஆற்றுக்கரை, நேப்பியர் பூங்கா எதிரே .. | 7- 3-1968 | 17 | 38 | 15,000 |
| 69 | 4, பாரதி சாலை, இரண்டாவது தெரு, பெரம்பூர் .. .. .. | 6- 3-1968 | 1 | 1 | 2,000 |

மறுவாழ்வு நடவடிக்கைகள்—

கீழ்க்காணும் பகுதிகளில் பாதிக்கப்பட்டோருக்கு மாநில வீட்டுவசதி வாரியம் எளிதில் தீப்பிடிக்காத குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறது :—

1. சிவஷண்முகம் பகுதி பாலமந்திர் பள்ளி அருகில்.
2. அப்பாதுரை நாய்க்கன் தோட்டம், பட்டு நூல்காரன் தோட்டம்.
3. நாட்டான் தோட்டம்.
4. ஆண்டிமானியத் தோட்டம்.

விபத்துக்களுக்கான காரணங்கள்—

இவ்விபத்துக்களுக்குக் காரணம் குடிசைவாசிகளின் கவனக் குறைவே ஆகும்.



பக்கங்கள்.

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.


கோரிக்கை எண் 27 பொதுப் பணிகள்—பணிகள் .. 650
டி 28 பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திர சாதனங்களும்
டி 30 சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் ..
டி 32 ஒய்வூதியங்கள் .. .. ..
டி 33 பல்வகை .. .. .. ..
டி 34 எழுதுபொருள்—அச்சுத்துறை ..
டி 35 காட்டுவளத் துறை .. .. .. } 651
டி 36 ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. .. .. 652

B. வருவாய்க் கணக்குக்குப் புறம்பான மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 38 பொதுச் சுகாதார மூலதனச் செலவு.
டி 39 வேளாண்மை மூலதனச் செலவு ..
டி 40 தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு .. .. .. ..
டி 41 பாசன மூலதனச் செலவு .. ..
டி 42 பொதுப் பணிகள் மூலதனச் செலவு .. } 652
டி 45 ஒய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல்.
டி 46 அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. .. .. .. } 653

C. கடன்கள், முன் பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்

கோரிக்கை எண் 47 மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் .. .. 653

11 அரசினர் மசோதா—
தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா .. .. .. .. .. .. 653

12 பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 654

(இ) பயிர் தவணை செய்யும் போது குத்தகை வார விவசாயிகளின் பெயரை கிராம கர்ணம் அடங்கல்களில் பதிவு செய்து கொள்வதைக் கண்டிப்பாக அமல் நடத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) & (இ) " தமிழகத்தில் குத்தகை வார விவசாயிகளைப்பற்றிய விவரங்களை கிராமக் கர்ணம், அடங்கல்களில் அதற்கென தனியாக ஒரு பகுதி இருந்தும் அதில் பதிவு செய்வது கிடையாது என்பது அரசுக்குத் தெரியுமா " என்று கேட்டிருக்கிறார்கள். அப்படிப் பதிவு செய்யவில்லை என்பதற்கான விவரங்கள் இல்லை. எனவே, இக் கேள்விக்கு இடமில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, நீண்ட நாளாகிவிட்டது. சட்டமே வந்துவிட்ட பிறகு என்னுடைய கேள்விக்கு உரிய பதில் இன்றைக்கு வருகிறது. ஆகவே, துணைக் கேள்வி கேட்கவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, கர்ணீகரிடமுள்ள அந்த தஸ்தவேஜில் நிலத்திற்குரிய சொந்தக்காரரின் பெயர்தான் இருக்கிறது. " நிலச் சொந்தக்காரர் " என்ற " காலம் " தான் இருக்கிறது. " குத்தகைதாரர் " என்ற " காலம் " இல்லை. ஆகவே, " குத்தகைக்காரர் " என்ற " காலத் "தை நமது அரசாங்கம் அச்சிட்டுக் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அம்மையார் அவர்களுடைய கேள்வியில், குத்தகைதாரருக்கு என்று ஒரு " காலம் " இருந்தும் அதில் ஏன் பதிவு செய்வது கிடையாது என்று இருக்கிறது. ஆகவே, " காலம் " இருந்தது. ஆனால், சில பேர்கள் அதில் பதிவு செய்யவில்லை. அம்மாதிரியாக ஏற்பட்ட நிலைமைக்காகத்தான் அவர்களேகூட எனக்காகப் பதிலளித்துவிட்டார்கள். அதற்காக ரிக்கார்டு ஆஃப் டெனன்ஸி சட்டமாக்கியிருக்கிறோம். இம்மாதிரியான ஒழுங்கீனங்கள் ஏற்படாமல் சாகுபடியாளர்கள், குத்தகைக்தாரர்களின் நியாயமான உரிமைகள் இச் சட்டத்தினால் பாதுகாக்கப்படும் பதிவு செய்கிற முறையினை நிர்வாகம் சரியாக அமல்படுத்தும்.

**திரு. பி. வேலுசாமி :** ஐயா, இந்தக் குத்தகைக்கும் வாரத்திற்கும் விவசாயம் செய்கின்ற விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட கால அளவு விவசாயம் செய்திருப்பார்களானால் அந்தப் பூமியை அந்தக் குத்தகைதாரருக்கும் வாரதாரருக்கும் சொந்தமாக்குவதற்கு சர்க்கார் உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது மிகப் பெரிய கேள்வி. இந்த அரசாங்கம் கொள்கை பற்றி கேள்வி நோத்தில் முடிவு செய்வதில்லை.

**திரு கே. விநாயகம் :** இந்தக் கிராமங்களில் முன்சீப்புளும் கணக்கப்பிள்ளைகளும் வைத்துக்கொள்ள வேண்டிய அடங்கல், சிட்டாக்களெல்லாம் சரியாக எழுதி வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கென்று ஆண்டுக்கு ஒரே ஒரு நாள் தான் இருக்கிறது. ஜமாபந்தியின்போதுதான் செட்டில்மெண்ட் ஆஃப் அக்கவுண்ட்ஸ் செய்வார்கள். அதைக்கூட நீங்கள் ஒழித்துவிடப் போகிறீர்கள். அப்படியிருக்கும் போது, அடங்கல், சிட்டா இவைகளில் கிராம அதிகாரிகள் எழுதினார்களா இல்லையா என்று பார்ப்பதற்கு என்ன மோடஸ் ஆப்ராண்டி, என்ன முறை இருக்கிறது என்று தயவு செய்து சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஜமாபந்தி என்பதை எடுத்தது நல்லது, அதை இவ்வளவு காலமாக எடுக்காமலிருந்து இப்போதுதாவது எடுக்கிறார்களே என்று பாராட்டுகிற நேரத்தில், அதுவும் அவர்கள் கட்சியும் பாராட்டுகிற நேரத்தில், கனம் உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் திடீர் என்று, " அதை ஏன் எடுத்துவிட்டீர்கள் "? என்ற



முறையில் கேட்கிறார்கள். ஜமாபந்தி முறை போய்விட்டால், அதனால் நடைபெறவேண்டியவைகளெல்லாம் போய்விட்டன என்று பொருளல்ல. நிர்வாக முறையில் எப்படிச் செய்யவேண்டும் என்பதற்கான வழிவகைகள் எல்லாம் கவனிக்கப்படும். ஜமாபந்தி முறை தோல்வியடைந்துவிட்டது, அது அபகீர்த்தி அடைந்துவிட்டது என்பதற்காக அதை ஒழிக்கிறோம். மாற்றுத் திட்டங்கள் வகுக்கும்போது அதற்கான வழிவகைகள் வகுக்கப்படும்.

**திரு. ஆர். கருப்பையா :** பொதுவாக, குத்தகைதாரர்கள், நெல் பயிரிடுவதற்கு நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, அதே நேரத்தில் கரும்பு பயிரிடுகிறார்கள். ஆனால், நிலச் சொந்தக்காரருக்கு கரும்புக்குரிய அந்தக் குத்தகையைக் கொடுப்பதில்லை. இதுபோன்ற விஷயங்களில், எந்தப் பயிர் செய்வதாகச் சொல்லிக் குத்தகைக்கு எடுக்கிறார்களோ அந்தப் பயிரைத்தான் பயிரிட வேண்டும் என்று அரசு ஏதாவது உத்தரவு போடுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கரும்பு போடுவதைப்பற்றி மட்டும் சொன்னார்கள். கரும்பு பயிரிடுகிற இடத்திலே " கம்பு " என்று எழுதிய நிலைமைகளே கூட சில இடங்களிலே வந்திருக்கின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** ஐயா, இந்த அடங்கலில் சாகுபடியாளர்களுடைய பெயரைப் பதிவு செய்யாததால் இப்பொழுது சாகுபடி செய்து கொண்டு வரக்கூடிய சாகுபடியாளர்களுடைய உரிமைகள் பாதிக்கக் கூடாது என்று நாம் சமீபத்தில் சாகுபடியாளர்கள் பதிவு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அவர்களுக்குரிய உரிமைகள் கிடைத்துவிடும் என்பதை உணர்ந்து, அந்த உரிமைகள் கிடைக்கக் கூடாது என்பதற்கான பொய்க்காரணங்களைக் கற்பித்து, தங்களுடைய நிலத்தைப் பிடுங்கிக்கொள்வார்களோ என்று கருதி, தங்கள் நிலத்தில் தாங்களே சொந்தமாகப் பயிரிடுவதாகச் சொல்லி ஒரு வார காலமாக நடக்கிற நிகழ்ச்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அடங்கலில் இருக்கிறதையே எடுத்துக்கொள்வது என்பதல்ல. அதற்குரிய விசாரணை செய்து, அவர்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்கும் நாம் சமீபத்தில் இங்கே நிறைவேற்றிய சட்டத்திலே எல்லா விதமான வழிவகைகளும் இருக்கின்றன. அதையொட்டி நாம் ஏற்படுத்தப்போகிற விதிமுறைகளில் அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், கிராமங்களில் கர்ணங்கள் தயாரிக்கும் ரிகார்டுகள் மிகப் பழமையானவை, அவற்றிலே பல தவறுகள் இருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடிக்க முடியாது என்று புகார்கள் இருக்கின்றன. ரிகார்டுகளைப் பரிசீலனை செய்து ஒழுங்குபடுத்தி இனிமேலாவது அவற்றை முறையான வகையிலே வைத்துக்கொள்வதற்கு ஒரு கமிட்டி வைத்துப் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒழுங்கீனங்களைக் களைவதற்காகத்தான் நாம் சட்டமே கொண்டுவந்திருக்கிறோம். இப்பொழுது நம் முன்னால் உள்ள நிலைமை ரிகார்டு ஆஃப் டெனன்ஸி சட்டத்தை அமல்படுத்துவதற்கும் மாண்புமிகு உறுப்பினர்களும் நாட்டிலிருக்கும் மக்களும் ஒத்துழைக்க வேண்டும். குத்தகை சாகுபடியாளர்களின் உண்மையான பெயர்கள் சீராகப் பதிவு செய்யப்பட்டு, அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப் பாடுபடுவதுதான் நம் முன்னால் இப்பொழுது இருக்கும் கடமையாகும்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் சர்க்கார்ப் புறம்போக்குகளில் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களில் யார் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு பி மெமோ போடாமல் பக்கத்து நிலக்

காரர்களுக்கு பி மெமோ போட்டு கிஸ்தி வசூல் செய்கிறார்கள். இனி மேலாவது யார் சாகுபடி செய்கிறார்களோ அவர்களுக்கு பி மெமோ போட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றிய நிலைமைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு குறிப்பாகக் கனம் உறுப்பினர் கொண்டு வந்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

## *Residents of M.G.R. Nagar.*

*495 *Q.*—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the residents of the M.G.R. Nagar near Ashok Nagar met him about the 4th October 1968 in connection with the eviction notice served on them ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எம். ஜி. ஆர். நகர்-அசோக் நகர்வாசிகளிடமிருந்து விண்ணப்பம் வந்திருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** சார், இந்த நகரம் திடீர் என்று ஏற்பட்டு விட்டது. அங்கு குறைந்தது 3,000 குடிசைகள் இருக்கின்றன. அவர்கள் குடிசைகள் போட்டுக் கொண்டு வசிக்கும் நிலம் ஹவுசிங் போர்ட்டைச் சேர்ந்தது. அங்கு குடியிருப்பவர்களை அப்புறப்படுத்தி பாதாள சாக்கடை வசதி, மற்ற வசதிகளெல்லாம் அங்கே செய்ய வேண்டும் என்ற யோசனை இருப்பதால், அங்கு வசிப்பவர்களுக்கு வேறு எங்காவது இடத்தைக் கொடுத்து அப்புறப்படுத்திவிட்டு, நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** இது செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்ததென்று நினைக்கிறேன். எம்.ஜி.ஆர். நகர் சென்னை மாநகரத்திற்குள் வருவதில்லை. பொதுவாக, திடீர் நகரங்கள் ஏற்பட்டு, திடீர் நிலைமைகள் ஏற்படுகின்றன. ஏனென்றால், சமுதாயமே திடீர் சமுதாயமாக மாறியிருக்கிறது. ஆகவே, திடீர் முடிவுகள், திடீர்ப் பரிகாரங்கள்தான் தேட வேண்டியிருக்கிறது. எம்.ஜி.ஆர். நகருக்குக்கீழே பாதாள சாக்கடை அமைப்பதற்கு குந்தகம் இருக்கிறது என்பது ஒன்று. இப்படி திக்கற்ற ஏழை மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ளும் வாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுப்பது ஒன்று. இரண்டிலும் அரசாங்கத்திற்குக் கடமை இருக்கிறது. இப்பொழுதிருக்கிற நிலைமை செங்கற்பட்டு மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியிடமிருந்து ஒரு விரிவான அறிக்கை கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை இன்னும் வந்து சேரவில்லை.

DR. H. V. HANDE : Sir, this relates to No. 106 Division of the Corporation of Madras and recently in the Corporation elections also almost all of them have found a place in the voters list. Most of these people will be homeless if they are disturbed and there is a constant fear among them that they are likely to be disturbed. In view of that, will this Ministry come forward with a concrete proposal to rehabilitate these persons the moment they are disturbed, as otherwise, they would be in the middle of the road ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்கள் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்கும் கேள்வி முரணாக இருக்கிறது. எம். ஜி. ஆர். நகரிலுள்ளவர்களை அங்கிருந்து வெளியேற்றுங்கள் என்பது திரு. விநாயகம் அவர்களுடைய அழுத்தமான கோரிக்கை. ஆனால், வெளியேற்றுகிற நிலைமை ஏற்பட்டால் என்ன செய்ய



போகிறீர்கள் ? " என்பது டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கேள்வி. என்னுடைய நினைவு, ஒரு சிறு பகுதி சென்னை மாநகர எல்லைக்குள் இருக்கலாம். பெரும்பாலான பகுதி சென்னை மாநகருக்கு வெளியிலே இருக்கிறது என்பதுதான். வெளியே இருக்கும் இடங்களையும் இதில் தொடர்புபடுத்திக் கூறுகிறார்கள். நம்முடைய பொதுப் பணித்துறை பாதாள சாக்கடைக்கான குழாய்களைப் போட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அந்த விவரங்களை எடுத்துக் கொண்டு, எவ்வளவு தூரத்திற்கு சாத்தியக் கூறு இருக்கிறதோ அதைக் கவனிப்பதற்கு நாம் முயற்சிக்கலாம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, சென்னையில் கூவம்ஆறு சீரமைப்புச் திட்டத்தின் அடிப்படையில் கூவம் ஆற்றின் இரு பக்கங்களிலும் உள்ள மக்களை வெளியேற்ற அறிக்கை கொடுத்திருப்பதன் காரணமாக, வேறு பகுதியில் அவர்களை குடியேற்றுவதற்கு அரசு வைத்திருக்கும் மாற்றுத் திட்டம் என்ன என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** நகரில் கூட இந்தப் பிரச்சினை முடிவுறாது, இடையறாது தொடர்ந்து போய்க் கொண்டிருக்கிற ஒரு பிரச்சினையாக இருக்கிறது. அவர்களும் இந்த நாட்டு குடிமக்கள், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைக் கூடுமான வரையில் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்கிறது. நம்முடைய முயற்சிக்கும், வளர்கிற மக்கள் தொகைக்கும், நகரத்தை நோக்கி நகர்கிற மக்கள் பெருக்கத்திற்கும் ஒரு இடையறாத பெரும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சென்னை நகரத்திலும் பல திடீர் நகரங்கள் இருக்கின்றன. எங்கெங்கே காலி இடங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் திடீரென்று குடிசைகள் தோன்றுகின்றன. ஒரு சில போக்கிரிகள் இப்படி ஏற்படுகிற திடீர் நகரத்தில் 20, 30 குடிசைகளை போட்டுக் கொண்டு வாடகை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கத்தின் திடீர் நடிவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** அப்படி திடீர் நகரம் என்ற திருநாமம் சூட்டியது மதுரையில் தான். திடீர் என்று ஒரு நகர் ஏற்பட்டால், அதற்காக திடீரென்று ஒரு முடிவு எப்பொழுதும் எடுத்து விடக் கூடாது. இது ஒரு பெரிய சமுதாயப் பிரச்சினை. நான் முன்பு சொன்னதுபோல் வளர்கின்ற மக்கள் தொகைக்கும், மாநகரத்தை நோக்கி வேலை வாய்ப்பு இல்லாமல் கிராமப் புறங்களிலிருந்து இங்கு வருகிறவர்களுக்கும், இங்கு இருக்கிற இட நெருக்கடிக்கும் இடையே ஒரு சக்களத்திப் போராட்டம் நடைபெறுகிறது. அது அவ்வளவு சீக்கிரம் முடிவு பெறக்கூடியது அல்ல.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தப் பிரதேசத்தில் சுமார் 4,000 வீடுகளுக்கு மேலே கட்டப்பட்டுள்ளன. 4, 5 வருஷ காலமாக அங்கே இருக்கிறார்கள். பாண்டிச்சேரியில் எவ்வளவு ஸ்ட்ரைட் ஆக, ரோடு அருமையான ரோடாக அங்கே செப்பனிடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கூட பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, திடீரென்று இந்த வீடுகளை அகற்றி, ரோடைப் பராமரிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்படவில்லை. அங்கு இருப்பவர்களில் 100-க்கு 90 பேர்கள் சக நடிகர்களாக இருக்கக்கூடியவர்கள் (மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்) அவர்களை அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தாமல், அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சக நடிகர்களாக இருந்தாலும், அவர்கள் நடிகர்களாக இல்லாவிட்டாலும், அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கையாக இருந்தால், அதைக் கவனிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. நடிகர்கள் என்பதனால் புறக்கணிப்பது என்பதும் கிடையாது. நடிகர்கள் இல்லை என்பதினால்

இல்லாத சலுகைகளையும் கொடுத்துவிடுவதும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை கருத்தில் எடுத்துக் கொண்டு இந்தப் பிரச்சினை முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண்கள் 496 முதல் 500 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

## *Government Polytechnic for Women, Adyar*

*501 *Q*.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:—

(*a*) the number of girl students who have successfully completed Diploma Course in Civil Engineering at the Government Polytechnic for Women, Adyar, since its introduction.

(*b*) the number of those successful candidates who are under Government employment ; and

(*c*) whether any alternate employment has been provided for the unemployed diploma holders (girls) ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** (அ) 28 பேர்.

(இ) 11 பேர்.

(உ) டிப்ளொமா பெற்றவர்கள் அனைவருக்கும் அரசாங்கத்தால் வேலை அளிக்க இயலாது.

Dr. H. V. HANDE : In these days when even boys are not able to get any jobs after having taken the diploma, many of these girls who have got in into the course, are very much disappointed. If these passed girls are not going to be absorbed, it will be a disincentive for further girls to come and join. In view of this, will the Ministry take some more sympathetic attitude than what they are doing now and see that these passed girls are given employment at least in Government departments and if all of them are not likely to be taken in, will the Ministry consider giving them alternative jobs wherein their technical skill is not properly utilised ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கத்தில் எந்த அளவுக்கு வேலை இருக்கின்றதோ அந்த அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் தனியார் துறையிலும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் தனிப்பட்ட முறையில் வேறு எதாவது உதவி வேண்டுமானால் எழுதிக் கேட்டால் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

## கடலூர் கலைக் கல்லூரி முதல்வர்

*502 வினா—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரிலுள்ள கலைக் கல்லூரியின் பிரின்சிபால் 1967-ம் ஆண்டு மாணவர்களைச் சேர்ப்பதில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என்று திரு சி. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., அவர்களால் 12—8—1967-ல் அனுப்பப்பட்ட மனு ஏதேனும் மாண்புமிகு கல்வி அமைச்சர் மூலம் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?

(இ) குறைந்த மார்க்குகள் வாங்கிய மாணவர்களை கல்லூரியில் சேர்த்தது உண்மையா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** (அ) ஆம்.



(இ) புகு முக வகுப்பில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வில் வாங்கிய மதிப்பெண்கள் மட்டுமின்றி, பாடத் திட்டத்திற்குப் புறம்பான (விளையாட்டுப் பந்தயங்கள், சமூகத் தொண்டுகள் போன்ற) செயல்களில் பெற்ற தேர்ச்சி முதலானவையும் கணக்கில் கொள்ளப்படுகின்றன.

**திரு. சி. கோவிந்தராசன் :** கடலூர் கலைக் கல்லூரி முதல்வர் சம்பந்தமாக பல்வேறு விஷயங்களைக் குறிப்பிட்டு அன்றிருந்த தொழில் கல்வி அமைச்சர் அவர்களுக்கும், நகல் ஒன்று முதல் அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட்டதா, முடிவு என்ன எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப்பற்றி அறிக்கை கேட்கப்பட்டது. அந்தக் கல்லூரி முதல்வர் அவர்கள் அரசாங்கம் பிறப்பித்த ஆணையின்படி மதிப்பெண்ணை மட்டும் எடுத்துக் கொள்ளாமல், வேறு எக்ஸ்ட்ரா கரிக்குலர் ஆக்டிவிடீஸையும் எடுத்துக்கொண்டு தேர்வை நடத்தியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சில சாட்சியங்களைத் தருவதாகச் சொல்லியிருப்பதாக தகவல் இருக்கிறது. அந்த சாட்சியங்கள் கிடைத்தவுடன் பரிசீலித்து எழுதுவதாக நம்முடைய இயக்குனர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள் அரசுக்கு.

**திரு. சி. கோவிந்தராஜன் :** இந்தக் கல்லூரி முதல்வர் 1966-ம் ஆண்டு சென்னையில் உள்ள கலைக் கல்லூரி முதல்வராக இருந்தார். அப்பொழுது புகுமுக வகுப்பில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது, எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் தேறாத, பரீட்சையில் தவறிய, ஒரு மாணவனை புகுமுக வகுப்பில் சேர்த்துவிட்டதாக வதந்தி உலாவுகிறது. அரசாங்கம் அதுபற்றி உண்மையை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** வதந்திகளை எப்பொழுதும் அரசாங்கம் நம்புவதில்லை. 1966-ம் ஆண்டு நிகழ்ச்சியைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏதாவது சொல்லி, வதந்தி என்று சொல்லிவிடக் கூடாது. அதைப்பற்றி கேள்வி கேட்பதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அது தான் நம்முடைய விதிமுறையில் இருப்பது. திரு கோவிந்தராஜன் அவர்கள் கேள்வி கேட்கக்கூடிய நேரத்தில், அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய நிலையிலிருந்து அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

## உயர்நிலைப் பள்ளிகள்

*503—வினா : திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகள் திறப்பதற்காக கட்ட வேண்டிய பணத்தை கட்டிய பின் இன்னும் (ஜூன் 1968 வரை எத்தனை பள்ளிகள் திறக்கப்படாமல் உள்ளன ?

(இ) திறக்கப்படாமல் உள்ள பள்ளிகளுக்காகக் கட்டப்படும் பணம் திருப்பி தரப்படுமா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** (அ) நான்கு.

(இ) ஆம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** உயர்நிலைப் பள்ளியைத் துவக்குவதற்காக அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அதற்கு அனுமதி கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான்கு பள்ளிகளைத் துவக்குவதற்கு அனுமதி கேட்டு பணம் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னர் நம்முடைய துறையினர் பரிசீலனை செய்து அந்த இடத்தில் பள்ளிகளைத் துவக்குவதற்கு ஒத்துக்கொள்ளக் கூடாது விதிமுறைகளின்படி என்று தெரிவித்திருக்கிற காரணத்தினால், அந்தக் கமிட்டி திருப்பி பணத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. நா. சௌந்தர பாண்டியன் :** அரசு உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்கும் பொழுது பின் தங்கிய பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகள் அவசியமாக தேவைப்படுகின்ற இடங்களில் இந்த அரசாங்கம் விதிமுறைகளைத் தளர்த்தி, உயர்நிலைப் பள்ளிகளை அந்த இடங்களில் திறப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பொதுவாக வருகின்ற விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, எங்கெங்கே மக்களுக்கு பள்ளிகள் தேவையாக இருக்கிறதோ அங்கெல்லாம் அனுமதி வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட பின் தங்கிய பகுதியில் பள்ளியைத் துவக்குவதற்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்றால், அது குறித்து எழுதி அனுப்பினால், அதைப் பரிசீலிக்கலாம்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி ஒன்றைத் துவக்க வேண்டுமென்றால் எவ்வளவு பணம் கட்டவேண்டும், எத்தனை ஏக்கர் நிலம் அதற்குத் தேவை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** நாம் பல கட்டங்களில் அந்தப் பணத்தை வாங்குகிறோம். முதலில் ரூ. 5,000 கொடுத்தால் ஆரம்பிப்பதற்கு ஒத்துக்கொள்கிறோம். அதற்குப் பின்னால் ரூ. 5,000 கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். கட்டடத்திற்கு என்று பணம் கேட்கும்பொழுது ரூ. 12,500 கொடுத்தால், நாங்கள் ரூ. 12,500 கொடுக்கிறோம். இடத்தைபொறுத்த வரையில் குறைந்தபட்சம் 5 ஏக்கர் இருக்க வேண்டும். பெண்கள் உயர் நிலைப்பள்ளியாக இருந்தால், குறைந்தபட்சம் 3 ஏக்கர் இருக்க வேண்டும். அதிகமாக கொடுத்தாலும் வரவேற்று வாங்கிக்கொள்கிறோம்.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், பணம் படைத்த ஒரு சிலர் நல்ல இதயத்தோடு கல்வி வளர்ச்சியில் இரக்கம் காட்டி சிற்சில சமயங்களில் கட்டடம் கட்டுவதற்கு முன்வந்துள்ளனர். சர்க்கார் பள்ளியாக இருந்தாலும் சரி, கட்டடம் கட்டுவதற்கு முன்வந்து பண உதவி செய்கிறார்கள். அப்படிப் பண உதவி செய்கிறபொழுது தங்களுடைய குடும்பத்தில் யாராவது ஒருவரது பெயரை அந்தப் பள்ளிக் கட்டிடத்திற்கு கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதை செயல்முறைக்குக் கொண்டு வந்து, தனியார் துறையிலிருந்து அதிகமாகப் பணம் பெறுவதற்கு வழி கோரி, அப்படிப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியார் துறையில் சொந்தமாகப் பள்ளி நடத்தினாலும், அதற்கும் நாம் உதவி செய்கிறோம். உயர்நிலைப் பள்ளிகளுக்கு இதுமாதிரி நன்கொடை அளிப்பது பற்றி தனியாக அரசாங்கம் ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. பெயர் கொடுக்க வேண்டும் என்று சொல்லி நன்கொடை கொடுக்க முன்வருவது அவ்வளவு நல்லது அல்ல. பெயர் வைக்கும் பிரச்சினை கொஞ்சம் சங்கடமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. தனியார் நன்கொடை கொடுக்கிறார்கள். பொது மக்களும் வசூலித்துக் கொடுக்கிறார்கள். தனியார் தாங்கள் ஒரு பகுதியைக் கொடுத்து விட்டு, தாங்கள் அதிகமாகக் கொடுக்கிறோம் என்பதினால் குறிப்பிட்ட பெயரை வையுங்கள் என்று சொல்வது சட்டப்படி ஒத்து வராது என்று கருதுகிறேன். அதுபற்றி அரசாங்கம் அண்மையில் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு, ரூ. 75,000 என்று கருதுகிறேன். ரூ. 75,000 தருவதற்கு ஒருவர் முன்வந்தால், பெயரை வைக்கலாம் என்ற ஒரு ஆணையை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது.



**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளியைத் துவக்க வேண்டுமானால் 12 ஆயிரம் ரூபாயை இந்தக் கமிட்டியாரிடம் கொடுத்தால் அரசாங்கத்திலிருந்து 12 ஆயிரம் ரூபாய் கொடுக்கும் என்று சொன்னார்கள். சில பஞ்சாயத்து யூனியன்கள் இந்தப் பணத்தைக் கமிட்டியாரிடம் கொடுக்கத் தயாராக இருந்தும் அதை சர்க்காரிலே ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்களே, காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொல்வது உண்மைதான். பத்தாயிரம் ரூபாய் பஞ்சாயத்து யூனியனிலேயிருந்து கொடுக்கலாம் என்று முன்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்படி பஞ்சாயத்து யூனியன் கொடுத்தால், அதனுடைய நிதி நிலைமை பாதிக்கப்படும் என்ற காரணத்தினால், அப்படிச் செய்யக் கூடாது என்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பியது. எந்தெந்த பஞ்சாயத்து யூனியனிலே அதனுடைய பொருளாதார நிதி நிலைமையிருக்கிறதோ, எந்தெந்த பஞ்சாயத்து யூனியனிலே வசதியிருக்கிறதோ அந்த பஞ்சாயத்து யூனியன் கொடுக்கலாம் என்று தீர்மானித்து பஞ்சாயத்து யூனியன்களை விவரம் கேட்டிருக்கிறோம். விவரம் வந்ததற்குப் பின்னால் தக்க முடிவு எடுக்கப்படும்.

* 504 வினா:—**திரு கொ. இர. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 750-க்கு அதிகமான மாணவர்கள் கல்வி பயிலும் High Schools எத்தனை தமிழ் மாநிலத்தில் இருக்கின்றன ?

(இ) அவைகள் எல்லாவற்றிற்கும் Lower Division Clerk-குகள் அமர்த்தப்பட்டுள்ளனரா ?

(உ) இவர்களுடன் Upper Divi-ion Clerks ஒருவரையும் ஒவ்வொரு பள்ளிக்கும் அமர்த்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ .மாதவன் :** (அ) 605 (அறுநூற்று ஐந்து).

(இ) இல்லை. 590 பள்ளிகளில் மட்டும் எழுத்தர்கள் உள்ளனர்.

(உ) இல்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, எல்.டி.சி. நியமிக்கப்படாத பள்ளிகளில் அன்றாட வேலைகள் பாதிக்கப்படுகின்றன என்று நடைமுறையில் அனுபவம் இருக்கிறது. அரசாங்கம் இதை கவனத்தில் கொண்டு, 750-ம் அதற்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கும் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் எல்.டி.சி. யு.டி.சி. இவர்களை நியமிக்கும்படியான அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, அரசாங்கம் விரைவில் உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, பத்து பள்ளிகளிலே எல்.டி.சி. இருக்க வேண்டும். ஆனால் இல்லை. இதில் நான்கு கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்டவை, மூன்று பழைய மாவட்டக் கழகத்தைச் சேர்ந்தவை, ஒன்று நகராட்சியைச் சேர்ந்தது, இரண்டு கன்னியாகுமரியில் இருப்பவை. இந்தப் பள்ளிகளில் ஏன் எல்.டி.சி.க்களை நியமிக்கவில்லை. என்ன ஆட்சேபம் இருக்கிறது என்பதையெல்லாம் அரசாங்கம் விவரம் கேட்டிருக்கிறது. விவரம் கிடைத்தவுடன் பரிசீலித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

**திரு. நா. சௌந்தர பாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களே உயர்நிலைப்பள்ளியில் வேலைசெய்யும் குமாஸ்தாக்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கப்படுகிறதா ? தனியார் உயர்நிலைப்பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்கள் குமாஸ்தாக்கள் ஆகியோருக்கு ஓய்வு ஊதியம் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : For want of clerical staff in high schools as well as middle schools, most of the clerical work is done by the teaching staff with the result their efficiency is lost. Will the Government think of the possibility of extending this facility of appointing clerical staff to the middle schools which were previously known as " Upper Primary Schools " ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மிடில் ஸ்கூல்ஸ் தரத்திலும், எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் எந்தெந்த நேரத்தில், யு.டி.சி., எல்.டி.சி., போடலாம் என்று விதிமுறை இருக்கிறது. மேலும் அதனுடைய நிதிநிலைமைகளையும் பார்க்கவேண்டும். பத்து உயர்நிலைப்பள்ளிகளில் குமாஸ்தாக்களை வைக்காமல் இருக்கிறார்கள். ஏன் வைக்கவில்லை.? அவர்களிடத்தில் பணவசதி இல்லாமல் இருக்கிறதா என்பதை யெல்லாம் விசாரித்து அரசாங்கம் தக்க முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு ஆர். பொன்னப்ப நாடார்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறியபோது, கன்னியாகுமரி பகுதியில் இரண்டு பள்ளி களில் எல்.டி.சி.-க்கள் இல்லையென்று சொன்னார்கள். அந்தப் பள்ளிகளில் அரசாங்கத் தரப்பில் நியமிப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை அரசாங் கம் எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தத் தகவலைப்பற்றி ஏற்கனவே கேட்டிருக்கிறார்கள், பதில் கூறியிருக்கிறேன்.

**திரு நா. வீராசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சில ஆண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் பெண் எழுத்தர்களையும், சில பெண்கள் உயர் நிலைப்பள்ளிகளில் ஆண் எழுத்தர்களையும் நியமித்திருப்பதனால் சில தகராறுகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்காக ஆண்கள் உயர் நிலைப்பள்ளிகளில் ஆண் எழுத்தர்களையும், பெண்கள் உயர்நிலைப்பள்ளி களில் பெண் எழுத்தர்களையும் நியமிக்க அரசாங்கம் வகைசெய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தாய்க்குலம் எல்லாத் துறைகளிலும் வரவேண்டும் என்று சொல்கிறார்கள். தகராறு எங்காவது இருந்து, கனம் உறுப்பினர் எடுத்துச்சொன்னால், அது பரிசீலிக்கப்படும்.

## *University Examinations.*

*505 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the basis on which the examiners are selected for the University examinations in this State ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தேர்வாளர்களை (Examiners) தேர்ந் தெடுப்பதற்காகப் பல்கலைக்கழகங்கள் விதித்துள்ள விதிமுறைகளையொட்டி அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் மூலம் தேர்வாளர்கள் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர்.



**திரு என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்வாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய படி, ஊதியம் எல்லாம் காலதாமதமாகக் கொடுக்கப்படுகிறது. மார்ச் மாதம் நடந்த பரீட்சைக்கு நவம்பர் மாதத்திலும், செப்டம்பர் மாதம் நடந்த பரீட்சைக்கு ஜனவரியிலும் தான் படி, ஊதியம் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். அண்மைக் காலம் வரையில்எல்லாப் பத்திரிகைகளிலும் தேர்வு முடிவுகள் வந்தன. பல்கலைக் கழகம் தேர்வுகளை வெளியிடுவதற்காகக கட்டணம் வசூலித்ததன் காரணத்தினால் ஒரு சில பத்திரிகைகளில்தான் தேர்வு முடிவுகள் வருகின்றன. ஆகவே, கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப் பல்கலைக் கழகம் செய்கிறது. எல்லாக் கேள்விகளையும்......

**திரு. என். எஸ். வி. சித்தன்:** ஆகவே, அரசாங்கம் தலையிட்டு, தேர்வு முடிவுகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவர அரசாங்கம் தக்க முடிவு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் இதைச் செய்கிறது. படி கொடுக்கும் விவகாரத்தில் ஒரு குறை இருப்பது உண்மைதான். யார் யார் தேர்வாளர்கள் என்பதறிந்து அவர்கள் அனுப்பிய மதிப்பெண்கள் வந்து, அதைப் பல்கலைக் கழகம் பரிசீலித்து, அதற்குப் பின்னாலே படி, ஊதியம் கொடுக்க வேண்டி யிருப்பதால் காலதாமதமாகிறது. விரைவில் படி,. ஊதியம் கொடுப் பதற்குப் பல்கலைக் கழகம் வழிவகை செய்யும்.

**திரு. ரா ராமச்சந்திர துரை :** பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அதிக மார்க் வாங்கியவருக்கு இடம் கொடுக்காமல்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தேர்வாளர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதைப்பற்றித்தான் மூலக் கேள்வி இருக்கிறது.

**திரு. டி. மார்ட்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி கேள்விக்குப் பதில் எழுதிய விடைத்தாள்களைத் திருத்துகின்ற நேரத்தில் அதற்குக் குறைந்த ஊதியம் தரப்படுகிறது என்று கூறப்படுகிறது. அந்த ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கும் வகையில் இந்த அரசாங்கம் பல்கலைக் கழகத்திற்குச் சிபாரிசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பரீட்சை எழுதி முடிந்தவுடனே, எக்ஸாமினர்கள் பின்னர் மார்க்குகளைத் திருத்திவிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தக் குற்றச் சாட்டுகளைப் போக்குவதற்காக, எஸ்.எஸ்.எல்.சி. விடைத் தாள்களை ஒரே இடத்தில் திருத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள், அதுபோல பி.ஏ., பி.எஸ்சி., பி.காம். போன்ற விடைத்தாள்களையும் ஒரே இடத்தில் திருத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, குறைகள் பொதுவாக இருப்பதாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருசில இடங்களில் இருக்கலாம். அவற்றையும் நீக்க அரசாங்கம் பாடுபடும். ஒரே இடத்தில் விடைத்தாள்களைத் திருத்தும் யோசனையை மதுரைப் பல்கலைக் கழகம் பின்பற்ற முன்வந்திருக்கிறது. அதற்காகும் செலவில் ஒரு பகுதியை நாம் ஏற்கிறோம்.

[1969 மார்ச் 27

*Post of Joint Director of Sericulture.*

*506 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to fill up the post of Joint Director for Sericulture which is vacant now ?

THE HON. THIRU S. MADHAVAN: The post of Joint Director of Industries and Commerce (Sericulture) is not now in existence.

THIRU B. VENKATASWAMY: Is it not a fact that the post of Joint Director (Sericulture) has been abolished ? May I know the reasons for the same ?

THE HON. THIRU S. MADHAVAN : Government came to the conclusion that the post is not necessary and has been unnecessarily created in the past.

THIRU B. VENKATASWAMY: Sericulture is thriving well in our Madras State especially in Hosur taluk and Thalavadi firka. So will this Government re-consider the matter and try to post a Special Officer so as to intensify sericulture in our State ?

THE HON. THIRU S. MADHAVAN : The other Joint Directors are looking after " Sericulture ". No post is necessary for "Sericulture " alone.

**அணைக்கட்டுகள்.**

*507 வினா.—திரு. மு. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மருதங்குடி ஆற்றில் பெருமகளூர் ஏரிப் பாசனத்திற்காக அணை கட்டும் திட்டம் ஏதேனும் தீட்டப்பட்டதா ?

(இ) ஆம் எனில், இதுவரை அரசாங்கம் அவ்வணை கட்டும் திட்டத்தை நிறைவேற்றாததற்குக் காரணம் என்ன ?

(உ) அதற்கான துரித நடவடிக்கை எடுக்க உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இந்தச் செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு வந்துள்ளது. அதன் தகுதிகளை யொட்டி அதற்கு ஒப்பளிப்பு வழங்கப்படும்.

(உ) ஆம்.

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை எப்போது தொடங்கப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே இத்திட்டம் குறித்து அங்குள்ள அதிகாரி பரிவுரை செய்து குறிப்பு அனுப்பியுள்ளார். இதை ஆராய்ந்து பரிசீலித்த பின்னர் ஒப்பளிப்பு வழங்கப்படும்.



1969 மார்ச் 27]

*508—வினா : திரு. மு. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அம்புலி ஆற்றில் சித்தாதிக் காட்டுக்கு அருகில் நீர்ப் பாசனத்துக்கு அணை கட்டும் திட்ட வேலைக்கு ஆய்வு அறிக்கை எந்த ஆண்டு தயாரிக்கப் பெற்றது ?

(இ) அதன் மதிப்பீடு என்ன ?

(உ) அதன் வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ ) 1967.

(இ) ரூபாய் 2.82 லட்சம்.

(உ) இத்திட்டம் ஆலோசனையில் உள்ளது. இத்திட்டம் ஏற்கப்பட்டால் அதன் பின்னர் இப்பணி தொடங்கப்படும்.

*Employees of Annamalai University Hostel.*

*509 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the employees of the hostel in Annamalai University staged an agitation in March and April 1968, by not receiving their salaries ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) இப்பல்கலைக் கழகத்தின் மற்ற ஊழியரைப் போலத் தங்களுடைய அகவிலைப் படியும் மாநில அரசாங்க அலுவலர்களுடைய அளவுக்கு உயர்த்தப்பட வேண்டுமென இத்தொழிலாளர் கேட்டனர். ஆனால், பல்கலைக் கழகங்கள் தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித் துறைகளுக்கு உட்படாததால், இதில் அரசாங்கம் தலையிடுவதற்கில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அண்ணாமலை பல்கலைக் கழக உணவு விடுதியில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் அகவிலைப்படி கூட்டித் தரப்பட வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். மறைந்த முதல் அமைச்சர் அவர்களிடம் கூடக் கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நிர்வாகத்தில் இருப்பவர்கள் அரசு அதிகமாக மானியம் கொடுத்தால் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். சென்ற ஆண்டு 2 லட்சம் அதிகமாகவே அரசு மானியம் கொடுத்திருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தோடு தொடர்புகொண்டு அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் சொல்கிற தகவல் என்னிடத்தில் இல்லை, அதை விசாரித்துப் பார்க்கிறேன்.

<u>மாநில வீட்டு வாரியத்து வீடுகள்.</u>

*510—வினா : திரு. கரு. சிமைச்சாமி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் வீடுகளில் ( Government Quarters ) உள்ள அரசாங்க அலுவலர்கள் சொந்தமாக வீடு கட்டினால் சர்க்கார் வீடுகளைக் காலி செய்துவிட வேண்டும் என்ற விதி உள்ளது போல் வீட்டு வசதி போர்டுக்குச் ( State Housing Board ) சொந்தமாக உள்ள வீடுகளிலும் அரசாங்க அலுவலர்கள் காலி செய்ய விதி உள்ளதா ?

[1969 மார்ச் 27

(இ) இல்லை என்றால், விதிகள் ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) and (இ) ஆம் : 1968 ஜூனில் இதற்கிணங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் சொந்தமாக வீடு வைத்திருப்பவர்கள் தங்களுடைய வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு வீட்டு வசதி வாரியத்தின் வீடுகளில் இருந்து வருகிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** சொந்தமாக வீடு கட்டிக் கொண்டவர்கள் 2 மாத காலத்திற்குள் காலி செய்துவிட வேண்டுமென்று உத்திரவு இருக்கிறது. காலி செய்யாவிட்டால், என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது என்பதற்கு விதி முறைகள் இருக்கின்றன. அதன்படி அவர்களை வெளியேற்ற இடம் இருக்கிறது.

**திரு. நா. சௌந்திரபாண்டியன் :** அரசாங்க உயர்தர அதிகாரிகள் அரசாங்கத்தில் இருந்து கடனைப் பெற்று சொந்த வீட்டு கட்டிக்கொண்டு அரசாங்க வீடுகளில் குறைந்த வாடகையில் இருந்துகொண்டே இருக்கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு பெரும் நஷ்டமாகிறது. ஆகவே, சொந்த வீடு கட்டிக்கொண்டவர்களை அரசாங்க வீடுகளில் இருந்து காலி செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** சொந்த வீடு கட்டிக்கொண்டவர்கள் அரசாங்க வீடுகளில் இருக்கக் கூடாது என்று உத்திரவு இருக்கிறது. ஒருகால் வெளியூரில் இருந்த காரணத்தினால் இந்த வீட்டை வாடகைக்கு விட்டிருந்து, இவர்கள் மறுபடியும் சென்னைக்கே வருகிறபோது தம் வீட்டில் உள்ளவர்களைக் காலி பண்ண முடியாத நிலை இருக்குமானால், அவர்களுக்கு அரசாங்க வீடுகளில் இருக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** அரசாங்கத்திலே பணியாற்றுகிற அதிகாரிகள் சொந்தமாக வீடு இருந்தும் அதை வாடகைக்கு விட்டுவிட்டு அரசாங்க வீட்டில் குடியிருக்கிறார்கள். அப்படி இருக்கிறவர்கள் யார் யார் என்பதைக் கண்டுபிடிக்க போலீஸ் பிரிவினரோ, அல்லது தனி அதிகாரிகளோ இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது பற்றி ஒரு குறை முன்பே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அரசாங்கம் அதுபோல இருக்கிறவர்கள் யார் யார் என்று கணக்கெடுத்துப் பார்த்ததில் அது வெறும் புகாராக இருந்ததே தவிர அப்படி வந்தவர்கள் நான்கு பேர்கள் என்றுதான் நினைக்கிறேன். அதற்குக் காரணம் அவர்களில் வெளியூர்களில் இருந்து மாற்றலாகி வந்தவர்கள், அவர்களுடைய சொந்த வீடு வாடகைக்கு விடப்பட்டு ரெண்ட் கண்ட்ரோல் ஆக்டின்படி காலி செய்ய முடியாத நிலையில் இருந்தது. மேலும் சென்னை நகருக்கு அவுட்சைடில் வீடு கட்டியிருப்பவர்கள்—நகரிலேயே இருக்க வேண்டிய அவசியத்தின் முன்னிட்டு விதி விலக்குக் கொடுக்கப்பட்டவர்கள். ஆகவே இது பற்றி பெரும் அளவில் குறை சொல்ல பொதுவாக இடம் இல்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** அரசாங்கத் தரப்பில் ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருப்பது போலவே நகரசபை ஊழியர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கணவனும், மனைவியும் ஆசிரியராக இருந்து சொந்தமாக இரண்டு பேர்கள் மீதும் வீடுகள் இருந்தும், அவற்றை வாடகைக்கு விட்டுவிட்டு, நகரசபை வீடுகளிலேயே குறைந்த வாடகையில் அவர்கள் இருந்து வருகிறார்கள். அதுபோல இருக்கக் கூடாது என்பதாக ஆணை ஒன்றைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1969 மார்ச் 27]

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** இப்போதே அரசாங்க ஆணை இருக்கிறது. நகரசபைகளைப் பொறுத்த வரையில் நகரசபைகள்தான் முடிவு செய்ய வேண்டும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** அரசாங்க அதிகாரிகள் தங்களுடைய சொந்த வீடுகளைப் பிள்ளைகளின் பேரால், உறவினர்களின் பேரால், மனைவிகளின் பேரால் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். உத்தியோகஸ்தர்கள் பேரிலேயே இருப்பதில்லை. இதை வைத்துக் கொண்டு அரசாங்க வீடுகளில் தங்கியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மை தானா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** அவர்களே விளக்கமும் சொன்னார்கள். அந்த அதிகாரியின் பேரில்மட்டுமல்ல, அவர்களைச் சார்ந்த யார் பேரில் இருந்தாலும் அரசாங்க வீடுகளில் இருக்க முடியாது என்று விதி முறையில் சொல்லியிருக்கிறோம். நான் முன்பு குறிப்பிட்டபோது இது பற்றிய புகார்களை விசாரித்ததில் பெரும்பாலும் உண்மை அல்ல என்று சொன்னேன். அப்படி யாராவது இருப்பதாக கனம் உறுப்பினருக்குத் தெரிந்து எழுதி அனுப்பினால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஹாஜி மா. மு. பீர் முஹம்மது :** அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற போது அரசாங்கத் தரப்பு அதிகாரிகளின் மீது கூறப்படுகிற புகார் பெரும்பாலும் உண்மை அல்ல என்று கூறினார்கள். அது பாராட்டத் தக்க அம்சமே. ஆனால், சிறிதளவு இருப்பதாகத் தெரிகிறதே, அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** சிறிய அளவில் இருப்பதாகக் கூறவில்லை. நான்கைந்து கேஸ்கள் அப்படி இருந்தன. அதற்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக வெளியூரில் இருந்து மாற்றலாகி வந்திருப்பவர்கள் தங்களுடைய சொந்த வீட்டில் குடியிருப்பவர்களைக் காலி செய்விக்க முடியாத காரணத்தினாலும், சென்னை நகருக்குப் புறம்பே வீடு கட்டியிருப்பவர்கள் சென்னை நகரிலேயே இருக்க வேண்டிய அத்தியாவசியத்தின் காரணமாகவும்—விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்தை ஏமாற்றி சொந்த வீடு கட்டிக் கொண்டவர்கள் அரசாங்க வீடுகளில் இருப்பதாகச் சொல்வது தவறு.

### *Honorary Surgeons.*

***496 *Q.*—Thiru A. M. RAJA, Thiru C. GOVINDARAJAN:** Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether there is any proposal to abolish the system of appointing Honorary Civil Assistant Surgeons and Honorary Civil Surgeons in the hospitals ?

**The Hon. Dr. (Thirumathi) SATHIYAVANIMUTHU :** Yes.

A suggestion made by the Estimate Committee of the Legislative Assembly is under consideration of Government.

**திரு ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, டாக்டர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. ஆறாயிரம் மக்களுக்கு ஒரு டாக்டர் என்ற நிலை உள்ளது. ஆகவே, டாக்டர்கள் மக்களைச் சுரண்டி வருகிற நிலை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா நேரத்தில் குற்றச்சாட்டு வேண்டாம்.

திரு ஏ. எம். இராஜா : தனியாக்த் தொழில் செய்வதையே சட்ட விரோதமாக ஆக்க அரசு சட்டம் கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி தனியாகத் தொழில் செய்வது பற்றி அல்ல. மருத்துவ மனைகளில் சம்பளம் இல்லாமல் பணி செய்கின்றவர்களைப் பற்றியது. எஸ்டிமேட் குழுவினர் தற்சமயம் ஏறத்தாழ 64 இடங்களில் கௌரவ மருத்துவர்களாகப் பணியாற்ற டாக்டர்கள் முன்வரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் சம்பளம் பெறுகிற டாக்டர்களையே நியமித்துவிடலாம் என்று கூறியிருக்கிறார்கள். எல்லோரையுமே சம்பளம் பெறும் டாக்டர்களாகப் போடுவது என்றால் செலவு அதிகமாகிறது. எனவேதான் அரசு அதைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : இந்த ஹானரரி முறை நடப்பதால் ஏழை வியாதியஸ்தர்களை டாக்டர்—மூன்று மணிநேரம்தான் செயலாற்றுகிறார்கள்—அந்த மூன்று மணி நேரத்திலே சரியாகக் கவனிப்பதில்லை, நல்ல முறையிலே போதுமான அளவுக்கு மருந்து கொடுப்பதில்லை, சொந்த ஆஸ்பத்திரிக்கு வந்தால்தான் சௌகரியமாகும் என்று சொல்லுவதாக அவர்கள் மிகவும் கஷ்டப்படுவதால் அந்த முறையை நிறுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட தவறான எண்ணங்கள் இருப்பதாக அரசாங்கத்திற்கு அதிகார பூர்வமாக எந்தத் தகவலும் கிடையாது. பரவலாக அப்படிப் புகார்கள் சொல்லப்பட்டாலும் அரசாங்கத்திற்கு அது குறித்து எந்தப் புகாரும் வரவில்லை. மேலும் அதிகமான அளவில் மருத்துவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை தர வேண்டிய நிர்ப்பந்தமும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆரம்பத்திலே மருத்துவர்கள் தேவை என்ற நிலைமையிலே சம்பளம் இல்லாமல் வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அது ஆலோசனையில் இருக்கிறது. அதன்மீது இன்னும் எந்த விதமான முடிவும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு சு. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்த ஹானரரி டாக்டர்கள் நியமிப்பதற்கு என்ன என்ன விதி முறைகள் இருக்கின்றன. அதிகமான மக்கள் வருகின்ற நிலைமையில் உள்ள இடங்களுக்கு ஹானரரி டாக்டர்களைப் போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1947-ஆம் ஆண்டிலே ரீஆர்கனைசேஷன் கமிட்டி என்ற கமிட்டி வேலை புனருத்தாரணம் என்ற அடிப்படையிலே அமைக்கப்பட்ட அந்தக் குழு சம்பளம் இல்லாமல் நியமிக்க வேண்டுமென்ற முடிவெடுத்தது. அந்த முடிவுப்படி மூன்று சம்பளம் இல்லாத அதிகாரிகளும் மூவருக்கு ஒருவராக சம்பளம் வாங்கும் அதிகாரிகளும்நியமிக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. 1947-ல் மெடிகல் எஜுகேஷன் கமிட்டியிலும், பப்ளிக் ஹெல்த் கான்ஃபரன்ஸிலும் முடிவெடுக்கப்பட்டபடி 40 படுக்கைகள் உள்ள மருத்துவ மனையில் அது மருத்துவக் கல்லூரியோடு தொடர்பு கொண்ட மருத்துவ மனையாக இருந்தால் பிஸிஷியன் ஒருவரோ அல்லது சர்ஜன் ஒருவரோ அத்துடன் சம்பளம் வாங்குகிறவர்கள் மூவரும், ஹானரரியாக 5 பேர்களும் நியமிக்க வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். இரண்டையும் அரசாங்கம் பரிசீலனை செய்தது. இரண்டு கமிட்டிகளும் முடிவெடுத்தபடி எங்கங்கு தேவையோ அங்கு இருக்கின்ற மருத்துவ வசதிகளையும் படுக்கை வசதிகளையும் பொறுத்து ஹானரரி டாக்டர்களை நியமிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டு அதன்படி செய்யப்பட்டு வருகிறது. அது பற்றித்தான் 1966-67-லே எஸ்டிமேட் கமிட்டியானது, இது தேவையற்றது 1936-ம் ஆண்டிலே அதிகப்படியான டாக்டர்கள் தேவை என்ற காரணத்தால் சம்பளம் இல்லாத முறையில் அதிகாரிகளை நியமித்தார்கள், இப்பொழுது இது தேவையில்லை என்று சிபார்சை அனுப்பியிருக்கிறார்கள். தேவையா அல்லவா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. இப்பொழுது 346 இடங்களில் 71 ஹானரரி மெடிகல் ஆபீஸர்கள் தேவைப்படுகின்றனர். மேலும் 64 இடங்களில் காலியாக இருக்கிறது என்ற விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## மதுரை அரசு மருத்துவமனை.

*497 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுச்சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசாங்க மருத்துவ மனையில் க்ஷயரோகப் பிரிவில் (T. B. Ward) படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டுமென்கிற வேண்டுகோள் ஏதேனும் அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, தற்போது காச நோய் கிராமப் புறங்களிலே அதிகமான அளவுக்குப் பரவி வருகிறது. அத்தனை பேர்களுக்கும் மருத்துவமனைகளிலே இடம் கொடுப்பதற்கு வசதிகள் இல்லை. இந்தக் குறையை நீக்கக் கூடிய முறையில் மாவட்டங்களில் உள்ள எல்லா கிராமப்புறங்களுக்கும் காச நோய்க்கு வைத்திய வசதி செய்யக்கூடிய முறையில் நடமாடும் மருத்துவமனை வைப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் 20 நோயாளிகள் தங்குவதற்குத்தான் வசதியிருக்கிறது. ஆனாலும் 100 பேர்கள் ஒரு நாளைக்கு அங்கே சேர்த்துக் கொள்ளப்படக்கூடிய நிலைமையில் உள்ளது. அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக தோப்பூர் ஆஸ்டின்பட்டியில் உள்ள மருத்துவ மனையில் அதிகமான படுக்கை வசதிகளைச் செய்வதற்காக முடிவு எடுக்கப்பட்டு அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலேயே அதற்குரிய செயல் திட்டங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களிலேயே உள்ள பெரிய மருத்துவ மனையாக மதுரை மருத்துவமனை இருக்கிறது. ஏறத்தாழ 1,000 பேர்களுக்கும் அதிகமானவர்கள் அந்த நோயுள்ளவர்கள் வெயிட்டிங் லிஸ்டிலே இருப்பதாக அறிகிறேன். அவர்களுக்கு இடம் கிடைப்பதற்கு 2 ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் ஆகக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். அதைத் தவிர்க்கக்கூடிய முறையில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க ஆஸ்டின்பட்டி மருத்துவமனையில் விரைவிலேயே ஏற்பாடுகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைத்தான் நான் சொன்னேன். ஆஸ்டின்பட்டி மருத்துவ மனையிலே அதிகமான படுக்கை வசதிகள் செய்து கொடுப்பதற்கு எஸ்டிமேட்டுகள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவிலேயே அதைச் செய்து கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்யும்.

### Underground drainage schemes

*498. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether underground drainage scheme has not been fully implemented in Salem Municipality ;

(*b*) the estimated cost of the scheme ; and

(*c*) when it would be completed ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இதுவரை திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

(இ) and (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** சேலம் நகரத்திலே அண்டர்கிரவுண்ட் ட்ரெயினேஜ் சிஸ்டத்திற்காக இதுவரையிலும் அனுமதி கொடுக்காததற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா ? அரசாங்கம் அதைப் பரிசீலித்து உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** சேலத்திற்கு ஒரு சாக்கடை வடிகால் திட்டம் ஏற்படுத்த 1920-லே 16 லட்ச ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அப்போதிருந்த நிலையில் அது செய்ய முடியாது என்று கருதி, 5,70,000 ரூபாய் செலவில் ஒரு சிறிய திட்டம் போடப்பட்டு படிப்படியாக அதைச் செய்து முடித்தார்கள். ஆனால், பாதாள சாக்கடை கட்ட வேண்டுமென்ற முடிவு 1963-ஆம் ஆண்டிலே சீப் என்ஜினீயர் (என்ஜினீயரிங் அண்டு முனிசிபல் ஒர்க்ஸ்) சொல்லி 92,62,000 ரூபாய் செலவிலே செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். அதற்காக 28,500 ரூபாய் அடிப்படையான ஆரம்ப பூர்வாங்க வேலைகளுக்காக, ஆராய்ச்சிக்காக ஒதுக்கி அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது. அதற்குப் பிறகு திருமணிமுத்தாறு என்ற ஆறு சேலம் நகரத்திற்கு இடையிலே ஓடுகின்ற காரணத்தாலே கழிவுநீர் கலக்கிறது. அதனால் தண்ணீர் அசுத்தப்பட்டு விடுகிறது. எனவே, கழிவுநீருக்காகத் தனியாக வடிகால் ஏற்படுத்த வேண்டும் என்ற அளவிலே திருமணிமுத்தாறுக்கு இரு கரைகளிலும் சுவர்கள் எழுப்பி அந்தக் கழிவு நீரைக் கொண்டுபோய் விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய முறையில் அந்த முனிசிபல் கமிஷனர் கேட்டிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தக் கழிவு நீரை ஸுவேஜ் பார்ம்-க்குக் கொண்டுபோய் மீண்டும் அதை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடிய முறையில் செய்யலாம் என்று யோசிக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் 12½ சத வீதம் இதற்காக உதவி கொடுக்கிற காரணத்தாலே கழிவு நீரைக் கொண்டுபோய் விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய காரணத்தாலும் புதிய முறையிலே திருமணிமுத்தாறு கரைகளில் சுவர்கள் கட்டுவதற்காக 3 கோடியே 35 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்பட்டால் 3 லட்ச ரூபாய் ஆண்டொன்றுக்கு அதைப் பராமரிப்பதற்காக முனிசிபாலிடிக்குச் செலவாகக் கூடிய நிலைமையும் இருக்கிறது. எனவே அந்த நகராட்சி வருஷத்திற்கு 3 லட்ச ரூபாய் செலவழிக்கக்கூடிய நிலையில் ஒப்புதல் தந்தால் செய்யலாமென்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால் அந்த நகராட்சியிடமிருந்து எந்த விதமான தகவலும் இல்லை.

*499 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the details of the underground drainage scheme sanctioned for Alandur and its neighbourhood ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆலந்தூர் நகரத்துக்கு வடிகால் திட்டத்திற்கான ஒப்புதல் அரசு அளிக்கவில்லை. ஆனால், இத் திட்டத்திற்கான புலனாய்வுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்தத் திட்டத்திற்கு மொத்த மதிப்பீடு எவ்வளவு ஆகும் என்று அறிவிப்பீர்களா ?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1963-லே அரசாங்கம் 9 லட்சத்து 11 ஆயிரத்திற்குத் திட்டம் கொடுத்தது. பொதுவாக ஆலந்தூர் பஞ்சாயத்து சிறிய அளவிலே அப்பொழுது இருந்தது. ஆனால் இப்பொழுது ஆதம்பாக்கம், பவளந்தாங்கல், நங்கநல்லூர் போன்றவையும் சேர்ந்துவிட்ட பிறகு அதைப் பெரிய திட்டமாக்க வேண்டுமென்ற அளவிலே அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிலையில் அதற்காக ஆய்விற்காக 31,810 ரூபாய் செலவை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. 1965-க்குப் பிறகு அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சாக்கடைத் திட்டங்களுக்காக 12 கோடியே 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட 1 கோடி ரூபாய்தான் புதிய திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய திட்டங்களிலே ஆலந்தூரும் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, அதுவும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு கே. விநாயகம் :** ஆலந்தூர் முனிசிபாலிடி சென்னைக்கு அருகாமையில் இருப்பது மன்றி அண்டர் கிரவுண்ட் டிரெய்னேஜ் இல்லாததால் கழிவு நீர் எல்லாம் அங்கே ஊறி சுற்றுப்புறத்தில் இருக்கும் கிணற்றுத் தண்ணீர் கெட்டுப்போய் குடிக்க முடியாத அளவுக்கு ( not portable water) இருக்கிறது. அதனால் பல நோய்கள் பரவுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அதற்கு உடனடியாகப் பரிகாரம் தேட இந்த ஆண்டே அதைச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதைத்தான் நான் சொன்னேன். இந்த ஆண்டு ஆலந்தூர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

* 500 **வினா.—திரு. ரா. சௌந்தர பாண்டியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர் நகரத்திற்கு பாதாள சாக்கடை அமைக்க வேண்டும் என கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வந்தது ? அது தற்போது எந்நிலைமையில் இருந்து வருகிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) கரூர் நகருக்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்று கோரி அந்நகராட்சி திருச்சி மாவட்ட ஆட்சியாளருக்கு 1955-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் விண்ணப்பம் செய்தது.

(இ) கரூர் நகர சாக்கடைத் திட்டத்திற்கு அரசினர் ஒப்புதல் அளிக்கவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அது அரசுக்கு எப்போது வந்தது ? அது எந்த நிலைமையில் இருக்கிறது ? இனியாவது கரூர் சாக்கடைத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1955-ம் ஆண்டில் நகராட்சியினர் அரசாங்கத்துக்கு விண்ணப்பித்தார்கள். பிறகு மனு என்ன ஆனது என்று தெரியவில்லை. இந்த முறை அரசாங்கமே பரிசீலனை செய்யும்போது கரூர் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுவதாக முடிவு எடுக்கவில்லை. காஞ்சிபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி, ஆலந்தூர் ஆகிய இடங்களில்தான் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளவதாகத் திட்டம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்.

### (அ) ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், அவையுரிமைக் கேள்வியையும் ஒத்திவைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மார்ட்டின், திரு. சுப்பையா, திரு. கருப்பையா ஆகிய மூவரும் ஆலங்குளத்தில் கட்டடம் இடிந்து விழுந்ததைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம்கொண்டு வந்திருக்கிறார்கள்.மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாததால் அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி அவர்கள் கொடுத்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாததால் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அதை நாளைக்கு எடுத்துக் கொள்ளுகிறேன்.

## (4) அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 244-வது விதியின்கீழ், 41-வது விதி பிரிவு (3)ன் படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

## (5) கவன ஈர்ப்பு.

### (அ) இராசிபுரம் கூற்றத்தில் மழையின்மையும் மக்கள், கால்நடை அல்லல் நீக்கத் துயர் தணிப்பு நடவடிக்கைகளும்.

### (ஆ) மேட்டூர் வட்டம் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மழையின்மையும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தலும்.

**திரு. பெ. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் இராசிபுரம் கூற்றத்தில் (தாலுக்கா) பருவ மழையின்மையால் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் உழவர் பெருங்குடியினர் அவதியுறும் நிலையில் ஆடுமாடுகளுக்குத் தீவனமின்றி அல்லற்படும் நிலைபற்றியும், உடனடியாகத் துயர்தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** மேட்டூர்தாலுக்கா கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இரண்டு வருடங்களாக மழை சரியாக இல்லாததால் விவசாயிகள் வாங்கி இருக்கும் கடன்களையும் வரிகளையும் கட்டமுடியாமலிருப்பதால் அந்தப் பகுதியைப் பஞ்சப் பகுதியாக அறிவித்து அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இராசிபுரம் வட்டத்தில் குடிதண்ணீர் பற்றுக்குறை இருப்பதாக சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவித்துள்ளார். இந்த வட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக இதுவரை ரூ. 37,240 செலவு செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறை ஏற்கனவே வழங்கிய ரூ. 2 லட்சத்துடன், அரசின் வருவாய்த்துறை



அண்மையில் ரூ. 2·50 லட்சம் வழங்கியுள்ளது. மேற்கொண்டும் ரூ. 5 லட்சம் ஒதுக்கிக் கொடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டியுள்ளார். அவரது வேண்டுகோள் அரசின் ஆலோசனையில் உள்ளது. தீவனம் கிடைப்பதாகவும், துயர்தணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்றும் அவர் அறிவித்துள்ளார்.

கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதில் குளத்தூர் ஊராட்சி ஒன்றிய உழவர்கள் அனுபவிக்கின்ற இடர்ப்பாட்டினைப் பொறுத்தவரையில், மேட்டூர் உதவிக் கலெக்டரிடமிருந்து நிலைமையைக் கேட்டறிந்த பின்னர் அறிக்கை அனுப்புவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வாக்குறுதி அளித்துள்ளார். இப்போதுள்ள நிலையில் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடன் தவணைகளை வசூலிப்பதை ஒத்திப்போடலாமென மாவட்ட ஆட்சித்தலைவர் கருத்தறிவிக்கலாம். அரசிடமிருந்து இதற்குச் சாதகமான பதிலே கிடைக்கும். எனினும், அத்தகைய தவணைத் தொகைகளை வசூலிப்பதை ஒத்திப்போட வேண்டிய நிலை இருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து மேற்கொண்டு அறிக்கை கிடைத்தபின் இது குறித்து அவசியமான கட்டளைகள் பிறப்பிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** அங்கே உள்ள உதவிக் கலெக்டர் அவர்களிடத்தில் கடன்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனும் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. இதுபற்றி அரசாங்கம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உறுதியான உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் சொன்னேன். மாவட்ட ஆட்சித் உதவித் தலைவரிடம் இருந்து அறிக்கை வரவேண்டும். அவர் ஒத்தி வைக்கலாம் என்று சொன்னால் கண்டிப்பாக அரசாங்கம் ஒத்தி வைக்கும் முறையில்தான் முடிவு எடுக்கும். அவருடைய அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை விரைவில் அனுப்புமாறும் வற்புறுத்தியிருக்கிறோம்.

### (இ) திருச்சி மாவட்டத்தில் சில வட்டங்களில் பருவ மழையின்மையும், கடன் வசூலை ஒத்தி வைத்தலும்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், புதுகோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவமழை பொய்த்தமையால், விளைச்சல் இன்றி குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒத்தி வைக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஆர். கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக, திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவமழை பொய்த்தமையால் விளைச்சல் இன்று குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒத்தி வைக்கவேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு.க.ந. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம புதுக்கோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவ மழை பொய்த்தமையால், விளைச்சல் இன்றி குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியை பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒத்தி வைக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள வறட்சி நிலைமைகளுடன் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள நிலைமைகளின் தன்மையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குறைந்த இடர்ப்பாடே உள்ளதெனலாம். 1005 ஏரிகளுக்குப் போதுமான நீர் கிடைக்கவில்லையென்றும் இதனால் 24,220 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். தள்ளுபடி செய்யும் தொகை தோராயமாக ரூ. 1,07,425 இருக்கும். சம்பா நெல் அறுவடையாகிறதென்றும் கொளத்தூர், திருமயம், அரியலூர், மணப்பாறை வட்டங்கள் தவிர மற்றப்பகுதிகளில் பயிர்களின் நிலைமை பொதுவாக மனநிறைவளிப்பதாய் உள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். அமராவதி ஆற்றுக் கால்வாயில் நீரில்லை ; இப்போது பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்குப் போதுமான நீர், பிறவாய்க்கால்களிலிருந்து வழங்கப்படுவதில்லை.

திருமயம் தொகுதியில் மட்டும் 10,163 ஏக்கர் பரப்பு நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கும் 497 ஏரிகள் நீர் வழங்கப்படாமையாலும் மழையின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வருவாய்த்துறை வாரிய நிலை ஆணைகளின் 13-வது விதியின் கீழ் நிலவரித் தள்ளுபடி அளிக்கப்படும். தள்ளுபடி செய்யப்படவேண்டியிருக்கும் தொகை ரூ. 64,137 ஆகும். திருமயம், கொளத்தூர், அரியலூர், மணப்பாறை வட்டங்களில் நெற்பயிர்கள் விளைவு, 0 சதவீதம் முதல் 30 சதவிகிதம் வரையில் ஆகும். குளித்தலை, மணப்பாறை வட்டங்களில் குடிநீர்ப் பற்றுக்குறை உள்ளது. இம்மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு துயர் தணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவது பற்றி, இது குறித்த மாவட்ட ஆட்சித்தலைவரின் விரிவான செயற்குறிப்புகள் கிடைக்கப் பெற்றதும் ஆலோசிக்கப்படும்.

***புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் மற்றைய பகுதிகளைப் போல் திருச்சி மாவட்டத்தில் பாதிப்பு இல்லை என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கை வந்திருப்பதைச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்கள். ஆனால் திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டைப் பகுதியை என்றும் கொஞ்சம் தனியாகப் பார்க்கவேண்டிய சூழல் இருக்கிறது. திருச்சி மாவட்டம் என்று சொல்லும்போது புதுக்கோட்டையையும் திருச்சியோடு இணைத்துப் பார்க்கக் கூடிய காரணத்தினால் புதுக்கோட்டைப் பகுதிக்கு நல்ல பயன்தர முடியாத சூழல் அமைந்துவிடுகிறது. புதுக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள ஆலங்குடி, கொளத்தூர், திருமயம் வட்டங்களுக்கு தனி ஆய்வு என்றைக்கும் தேவை. அந்த வகையில் இப்போது பார்த்தால் மழை பொய்த்தமையால் வித்திட்டும் விளைபயன் பெறமுடியாத ஒரு சூழல் ஏற்பட்டுவிட்டது. திருமயம், எம்பல், பனைப்பட்டி விராச்சிலை, கீழாநிலை, மதகம், ஆலவயல், நகரப்பட்டிப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுத் துன்புறும் நிலை இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த நேரத்தில் நீண்ட பிரசங்கம் செய்யக்கூடாது. விளக்கங்கள் கூடாது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** ஆகவே, உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**திரு ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, குறிப்பாக அரியலூரைச் சுற்றியுள்ள வட்டாரங்களில் மழையின்மை காரணமாக குளங்கள் மூலம் பாசன வசதி பெறுகிற நிலங்கள் சேதமடைந்துவிட்டன. ஆகவே அரியலூர் சுற்று வட்டாரமாகிய ராயப்புரம் ஆதிகுடிகாடு மக்களுக்கு வசதியாக நியாயவிலைக் கடைகள் திறக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதிகள் பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை, உணர்வுகளை நான் நிரம்ப மதிக்கிறேன். அதே மாதிரி அரியலூர் பகுதியில் நியாயவிலைக் கடைகள் திறக்கவேண்டும் என்று திரு. கருப்பையா



அவர்கள் சொன்னார்கள். அது உணவு அமைச்சர் அவர்கள் முடிவு செய்யவேண்டிய ஒன்று. பொதுவாகத் தவறான கருத்தை அவர்கள் கொண்டுவிட்டார்களோ என்று கொஞ்சம் பயமாக இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் இவற்றில் இருக்கிற நிலை அங்கு இல்லை என்றுதான் சொன்னேன். அங்கு செழுமையாக இருக்கிறது என்று மந்திரி சொல்லிவிட்டார் என்று தவறாக திரு. கருப்பையா அவர்கள் சொல்லவில்லை, எதிர்கட்சிக்காரர்கள் பரிவாகயிருக்கிறார்கள். மக்களுக்கு நன்மை செய்கிற காரியங்கள் பற்றி எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்களும் சொன்னார்கள். புதுக்கோட்டையைப் பற்றியும் எனக்குத் தெரியும். உறுப்பினர் அவர்களே ஒவ்வொரு ஊராக அழைத்துச் சென்று காட்டியிருக்கிறார்கள். அங்குள்ள நிலைமை எனக்குத் தெரியும். நான் சொன்னது என்னவென்றால், கலெக்டர் அவர்கள் என்னென்ன சிபார்சுகளைச் செய்கிறார்களோ அதன் அடிப்படையில் அந்தக் காரியங்கள் கவனிக்கப்படும் என்றுதான் சொன்னேன். அவர்கள் சொன்ன கருத்துக்களும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கும். எடுக்கிற நடவடிக்கைகளில் புதுக்கோட்டையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அரியலூர் வட்டார நிலையையும் பரிசீலனை செய்வதற்கு சாத்தியக் கூறான காரியங்களைச் செய்ய அரசாங்கம் தயாராகயிருக்கிறது.

**திரு. க. ந. இராமச்சந்திரன் :** திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தைப் பற்றி நம் நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அங்கு எப்போதுமே ஒருகுடம் தண்ணீர் பத்து பைசா கொடுத்து வாங்கும் நிலையில் இருந்த மக்கள் அங்கு அடிக்கடி வறட்சி நிலை ஏற்பட்டு விட்டதால் இன்று அவர்கள் ஒரு குடம் தண்ணீர் 20 பைசா கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அங்கு ஆடுமாடுகளுக்குக் கூடத் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதை உத்தேசித்து அந்தப் பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிப்பதோடு அல்லாமல், கூட்டுறவுக் கடன்களையும், அரசாங்கக் கடன்களையும் இந்த ஆண்டு ஒற்றிவைத்து அடுத்த ஆண்டு அவர்களிடமிருந்து நிச்சயம் வசூலித்துக் கொள்ளலாம் என்ற விதிவிலக்கை எங்கள் பகுதிக்கு அளிப்பார்களானால், அந்தப் பகுதி மக்கள் ஓரளவு பயன் பெறமுடியும். ஆகவே அதைப்பற்றி அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைப்பற்றி ஆராயலாம்.

(ஈ) கோபிசெட்டிபாளையம் வட்டத்தில் சில பிர்க்காக்களில் பருவ மழையின்மையும், துயர்தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளலும்

**Thiru K. M. Ramasamy Gounder :** Under rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Finance to a matter of urgent public importance, namely, the drought condition prevailing in certain pockets of Nambiyur and Punjaipuliampatti firkas and Siruvallur, Kollappalur, etc., villages in Gobichettipalayam taluk due to failure of monsoon and the consequent suffering of people for want of foodgrains, etc., the immediate necessity to declare the area as famine affected one, to postpone the collection of various loans and development taxes and to take immediate relief measures :

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, கோவை மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் வட்டம், நம்பியூர் புளியம்பட்டி பிர்க்காக்கள், சிறுவலூர், கொளப்பலூர் கிராமங்கள் உட்பட கோவை மாவட்டத்தின் சில பகுதிகளில் கடந்த இரண்டாண்டுகளில் பருவமழை பெய்யாததன் விளைவாக, பருவநிலை சரியாக இல்லை. இது பஞ்ச நிலைமையன்று; மிகுந்த வறட்சி நிலையே என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்து தெரிவித்துள்ளார். இந்த மாவட்டத்தில் பஞ்சத் துயர் தணிப்பு வேலைகளுக்காக அரசு ரூ. 24 லட்சம் வழங்கியுள்ளது. நம்பியூர் பிர்க்கா,

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 மார்ச் 27

புளியம்பட்டி பிர்க்கா இரண்டும் நம்பியூர், சத்தியமங்கலம் வட்டாரங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. புஞ்சைப்புளியம்பட்டி பிர்க்காவின் சில பகுதிகள் பவானிசாகர் வட்டாரத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன. கூகலூர் பிர்க்காவில் சிறுவலூர், கொள்ளப்பலூர் கிராமங்கள் கோபி வட்டாரத்துடன் இணைக்கப் பட்டுள்ளன. இப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக இடர் தணிப்பு கொடுக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளின் விவரம் அடியிற்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| தொகுதியின் பெயர். | நில மேம்பாட்டுக் கடன்— வேளாண்மைக் கடன். | புதிய கிணறு உதவித் தொகைத் திட்டம். | உதவித்தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| கோபிச்செட்டிப் பாளையம். | 16,000·00 | 28,000·00 | 6,500·00 |
| நம்பியூர் .. | 40,000·00 | 36,500·00 | 10,000·00 |
| சத்தியமங்கலம் .. | 17,000·00 | 36,500·00 | 6,500·00 |
| பவானிசாகர் .. | 2,500·00 | 32,000·00 | 9,000·00 |
| மொத்தம் .. | 75,500·00 | 1,33,000·00 | 32,000·00 |

| தொகுதியின் பெயர். | பாதகமான பருவநிலை. | கிராமப்புற நீர்வழங்கல் திட்டம். சாதாரணக் கிணறு தோண்டும் பணிகள். | கிராமப்புற நீர்வழங்கல் திட்டம். குழாய்நீர் வழங்கல். |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| கோபிச்செட்டிப் பாளையம். | 30,000·00 | 14,800·00 | 10,750·00 |
| நம்பியூர் .. | 20,000·00 | 14,800·00 | 10,750·00 |
| சத்தியமங்கலம் | 5,000·00 | 14,800·00 | 10,750·00 |
| பவானிசாகர் .. | 50,000·00 | 14,800·00 | 10,750·00 |
| மொத்தம் .. | 1,05,000·00 | 59,200·00 | 43,000·00 |



1969 மார்ச் 27] [திரு. கே. ஏ. மதியழகன்]

மேலும், சமுதாயக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ஊராட்சி ஒன்றி யங்களும் தங்களுடைய பொது நிதியிலிருந்து அடியிற்கண்ட அளவுக்குத் தொகை செலவழித்துள்ளன.—

| | ரூ. |
|---|---|
| கோபி .. .. .. .. | 53,618·00 |
| நம்பியூர் .. .. .. .. | 1,06,152·00 |
| சத்தியமங்கலம் .. .. .. | 35,640·00 |
| பவானிசாகர் .. .. .. .. | 20,000·00 |

பெரிய ஊராட்சியாகிய புன்செய் புளியம்பட்டிக்கு ஒருவாரம் விட்டு ஒரு வாரத்திற்கு வயது வந்தவர் ஒருவருக்கு 600 கிராம் வீதம் அரிசி வழங்கப் படுகிறது. வாரம் ஒன்றுக்கு ஒருவருக்கு 2 கிலோகிராமுக்குக் குறையாமல் கோதுமை கொடுக்கப்படுகிறது. அரிசி இருப்புப் போதுமான அளவு இல்லாததால், நம்பியூர் பிர்க்கா, கொளப்பலூர், சிறுவலூர் கிராமங்கள் உட்பட கிராமப் பகுதிகளில் குடும்பக் கார்டுமூலம் 2 கிலோ கிராம் அளவுக்கு கோதுமை மட்டுமே வழங்கப்படுகிறது. நம்பியூர் வட்டாரத்தில், 1967–68-ம் ஆண்டில் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கத்தின் மூலம் "குறுகியக் காலக் கடனாகக்" கொடுக்கப்பட்ட ரூ. 1,08,251 தொகை "இடைக்காலக் கடனாக" மாற்றப்பட்டுவிட்டது. கொளப்பலூர் கிராமத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ரூ. 20,595 வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை வசூலிப்பது 31—3—1969 தேதி வரை ஒத்தி போடப்பட்டுள்ளது. கூட்டு றவுக் கடன்களை வசூலிப்பதை இந்த ஆண்டும் தள்ளிப்போடும்படி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தக்காவிக் கடன்களையும் மெதுவாக வசூலிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதியளிக்கப்பட்டுள் ளது.

வேறெந்த இடர் தணிப்பு நடவடிக்கைகளுக்கும் தற்போது அவசிய மில்லை என்றும் இந்த நிலை குறித்துச் சிறிது காலம் கழித்த பிறகு சீர்தூக்கிப் பார்க்கப்படும் என்றும் தற்போதுள்ள நிலைமை சீரடையா விட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் சொன்ன விளக்கத்திலேயிருந்து இந்த கோயம் புத்தூர் ஜில்லாவில் பஞ்சப் பிரதேசம் என்று பல்லடம், அவிநாசி தாலுக்காக்களுக்குத்தான் அதிகமாகக் கவனம் செலுத்தப்படுகிறது. இப்பொழுது தமிழ் மாநிலத்திலே பஞ்சப் பிரதேசம் என்று செங்கற் பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களுக்கு மத்தியக் குழு வந்து போனதுபோல், பல்லடம், அவிநாசி என்ற அளவில் பஞ்சப் பிரதேசம் என்று நின்று விடுகிறது. நம்பியூர், புளியம்பட்டி பிர்க்காகள் அவினாசி, பல்லடத்தோடு இணைந்த பிரதேசம். மாவட்ட ஆட்சித் தலை வருக்கு, கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகக் கொடுத்திருந்த தொகை சத்திய மங்கலம் தாலுக்காவிலுள்ள பவானிசாகர் பிளாக்கிலேயே நின்று விடுகிறது. நம்பியூருக்கு வழக்கமாகக் கொடுப்பது கிடையாது. உணவுப் பங்கீட்டு ரேஷனும் நான்கு வாரங்களாக நிறுத்தப்பட்டு விட்டது. அதை விட புஞ்சைப் புளியம்பட்டி நகரப் பஞ்சாயத்திற்கு மட்டும் போட்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் சுருக்கமாகக் கேளுங்கள். இப்போது பெரிய ஸ்டேட்மெண்ட் கொடுக்க முடியாது. அமைச்சர் கொடுத்த ஸ்டேட்மெண்டின்பேரிலே சிறு விளக்கம் கேட்பதற்குத்தான் இப்போது இடம் கொடுக்கமுடியும்.

**திரு. கே. எம் ராமசாமி கவுண்டர் :** பஞ்சாயத்துக்கள் வறண்ட பஞ்சாயத்துக்கள். எனவே, கோதுமை போன்ற மற்ற உணவுப் பொருட்களைப் பங்கீட்டு முறையில் கொடுக்க, ரேஷன் முறையில் வழங்க வேண்மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதோடு, கோபி நில அடமான பாங்கு பற்றிச் சொன்னார்கள். சிறுவலூர், வெள்ளாங்கோயில் முதலியவை ஈரோடு தாலுக்காவிலுள்ள உம்பியாளம் பட்டி வங்கியோடு சேர்க்கப்பட்டிருப்பதால் பணம் வசூல் செய்ய முடியவில்லை. எனவே, கோபிச்செட்டிப்பாளையத்தோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனைகளைச் சொன்னார்கள். என்றைக்குமே அவர்களுடைய கோபிசெட்டிப் பாளையத்தைப் பார்த்தால் பசுமையாக இருக்குமே தவிர, அங்கே அந்த மாதிரி நிலைமைகள் இருப்பது, அமைச்சருக்கும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் தெளிவாகத் தெரியும். உணவு நிலைமையில் நெருக்கடி இருக்கிற கடுமையான நிலைமை தெரியும். அதற்காகத்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டேன். எனினும் எவ்வளவு தூரம் செய்ய முடியும், கோதுமை கொடுக்க முடியுமா என்று உணவு அமைச்சரவர்களைக் கலந்துகொண்டு செய்யலாம். வங்கியைக் கோபிசெட்டிப்பாளையத்தோடு இணைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது நியாயமான முறை என்றுதான் படுகிறது. அதுபற்றிக் கவனிக்கலாம்.

(உ) கோவை நகரில் பெரியம்மை நோய் பரவி வருதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு. எம். பூபதி அவர்கள் மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு எம். பூபதி :** தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கோவை நகரில் கொடிய வைசூரி நோய் பல பகுதிகளுக்கும் பரவி வருகிற நிலைபற்றி"

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, கோயம்புத்தூர் நகராட்சியில் பெரியம்மை நோய் பரவியுள்ளதாகத் தகவல் எதுவுமில்லை. ஈரோடு நகராட்சியில் பெரியம்மையால் ஒருவர் பாதிக்கப்பட்டதாக 12—1—1969-ல் அறிவிப்புப் பெறப்பட்டது. இத் தகவல் கிடைத்ததும் நகராட்சிச் சுகாதார அதிகாரியும் தண்டையார்ப்பேட்டை, தொத்து நோய் மருத்துவ மனையில் பணியாற்றும் ஐ.சி.எம்.ஆர். பொறுப்பிலுள்ள அதிகாரியும் ஈரோட்டிற்குச் செல்லுமாறும் ஈரோடு நகராட்சியில் கொள்ளை நோய் பற்றி ஆய்வு மேற்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டனர். இக் குழுவினர், பெரியம்மை நோய் மற்றொருவருக்கும் கண்டிருப்பதாகக் கண்டறிந்து அவர் ஈரோட்டிலுள்ள தொத்து நோய்கள் சிகிச்சை மனையில் சேர்க்கப்பட்டார். மேலும், நோய் பரவுவதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது கிடைத்துள்ள தகவலின்படி, இந்த நகராட்சிப் பகுதியில் பெரியம்மை நோய் இல்லை.

**திரு. எம். பூபதி :** தலைவரவர்களே, பரவலாக அங்கு நோய் இருந்தாலும் அதைப் பொது மக்கள் அங்கிருக்கின்ற நகர் மன்றத்திற்கோ அல்லது சுகாதார அதிகாரிகளுக்கோ ரிப்போர்ட் செய்வதில்லை. தொடர்ந்து



பரவிக்கொண்டு வருகிறது. ஏற்கெனவே, முறையான நடவடிக்கைகளை நகர மன்றத்தினர் எடுத்துக்கொண்டிருந்தனர் ; தடுப்பு ஊசிகள் போடுவதற்கு வசதியிருந்தது. இந்தக் கால கட்டத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறது. வெளி நாட்டிலேயிருந்து சக்திவாய்ந்த மருந்துகள் கிடைத்தும் அவற்றை முறையாக உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்கள். இதை அமைச்சரவர்கள் கவனித்துத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நல்ல மருந்துகளை உபயோகப்படுத்துவதில்லை என்று கூறுவது அவ்வளவு சரியாக இருக்க முடியாது. நோய் இருக்கிறதுஎன்பதை நகராட்சிக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ தெரிவிக்கப்பட்டால்தான் எந்தெந்த இடத்தில் நோய் இருக்கிறது, எந்தெந்த மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற இப்படிப்பட்ட தகவல்கள் மூலம் அவர்கள் தெரிந்து கொள்ள முடியும். அப்படித் தெரிந்து கொண்டுதான் இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதிகப் படியானவர்களுக்கு இந்த நோய்கள் காணப்படுகின்றன என்றால் மக்கள் மத்தியிலேயிருந்து அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்திருப்பார்களேயானால் நடவடிக்கை எடுத்திருக்கலாம். வேறுயாரும் கொடுத்திருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு. எம். பூபதி அவர்கள் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

(ஊ) தமிழக கைத்தறி நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கம், பல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகளைக் கொடுக்கத் தவறியதும், நெசவாளர் வேலையின்மையும்.

**திரு எம். பூபதி :** தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"தமிழக கைத்தறி நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனம், கோவை (தொழில்) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனம், கணபதி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனம் போன்ற பல நூற்றுக் கணக்கான கைத்தறி நெசவு சொசைட்டிகளுக்குக் கொடுக்கவேண்டிய பல லட்சக் கணக்கான பணத்தைக் கொடுக்காததால் பல ஆயிரக்கணக்கான கை நெசவு தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கும் அவசரப் பொது முக்கியமான காரியம்".

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, கோயம்புத்தூர் கைத்தறித் தொழில் நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கம், கணபதி கைத்தறி நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கம் போன்ற நூற்றுக்கணக்கான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பல லட்சம் அளவில் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கொடுக்கத் தவறியது என்றும், அதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலையிழந்துள்ளனர் என்றும் அரசின் நாட்டத்துக்குக் கொண்டு வந்துள்ளார் உறுப்பினரவர்கள்.

தமிழ்நாட்டில் உற்பத்தி விற்பனை ஆரம்ப நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்கள் 1,072 உள்ளன. அவற்றில் 132 கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ளன.

கோயம்புத்தூர் நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த வரையில், 28—2—1968 தேதி அன்றைய நிலவரப்படி அதற்குக் கொடுக்க வேண்டிய தொகை எதுவும் பாக்கியில்லை. 1—3—1968 தேதியிலிருந்து 28—2—1969 தேதி வரை உள்ள கால அளவில் ரூ. 50,948 மதிப்புள்ள பொருள்கள் வாங்கப்பட்டன. இந்தக் கால அளவில் அதற்கு 42,697 ரூபாய் வழங்கப்பட்டது. ரூ. 8,251 இன்னும் கொடுக்க வேண்டியுள்ள தொகையாகும்.

கணபதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த வரையில் 28—2—1968 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ரூ. 3,908 கொடுக்கவேண்டியதாக இருந்தது. அந்தச் சங்கத்திலிருந்து 1—3—1968 தேதியிலிருந்து 28—2—1969 தேதிவரையில் வாங்கப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 19,258 ஆகும். அந்தக் கால அளவில் கொடுக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 17,180 ஆகும். இச் சங்கத்திற்கு ரூ. 5,986 இன்னும் கொடுக்கப்படாமல் உள்ளது. எனவே, 28—2—1969 தேதி அன்றைய நிலவரப்படி, இந்த இரண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொடுக்கவேண்டிய தொகை அதிகமில்லை.

இந்திய ரிசர்வ் வங்கி நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ரூ. 1 கோடி அளவில் கடன் வசதி பெறுகிறது. இவ்வாறு கடன் வசதி பெறுவதற்கு ஈடு காட்டும் வகையில் இச் சங்கம் இந்திய ரிசர்வ் வங்கி புதிதாக வகுத்துள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. ஏற்றுமதி செய்பவர்கள் சார்பாகவும், பயன் படுத்துவோர் சங்கம் சார்பாகவும், சாயங்கள், ஏனைய ரசாயனப் பொருள்கள் ஆகியவற்றை ரூ. 40·80 லட்சம் அளவிற்கு சங்கம் இறக்குமதி செய்தது. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வாங்கிய கடனுக்கு இத் தொகை ஈடாகக் கருதப்படவில்லை. 1968-ம் ஆண்டு அக்டோபர், நவம்பர் திங்களில் அரசுப் பணியாளர்களுக்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட ரூ. 28·59 லட்சம் மதிப்புள்ள பொருள்களை ஈடு செய்வதாகக் கூறியும் இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புக்கொள்ளவில்லை. இதன் விளைவாக இருப்பு அறிக்கையில் ஈடு காட்ட வேண்டிய தொகையில் பற்றுக்குறை ஏற்பட்டது. சங்கம் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் தேதியிலிருந்து 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் தேதி வரை உள்ள கால அளவில் கடன் வரையறைக்குள் செயல்பட முடியவில்லை. எனவே, ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வாங்கிய பொருள்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை இந்த கால அளவில் கொடுக்க இயலவில்லை. இதனால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஓரளவு இடர்ப்பாடுற்றன.

ஆயினும், தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதிவரை உள்ள கால அளவில் ரூ 3·67 கோடி மதிப்புள்ள பொருள்களைத் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் வாங்கியது. அந்தக் கால அளவில் ரூ. 3.79 கோடி அளவிற்கு இச் சங்கம் தொகை செலுத்தியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறும் கடன் தொகைக்குத் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஈடுகாட்டவேண்டிய தொகைக்காக உதவி புரியும் நோக்கத்துடன் அரசு 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் தேதியன்று ரூ. 28 லட்சம் கடன் உதவித் தொகையும் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் தேதியன்று மற்றொரு ரூ. 9 லட்சம் கடன் உதவித் தொகையும் வழங்கியது. தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கடன் வரையறைக்குள் செயல்படுவதற்கு இயலும்படி அரசு தேவையான நடவடிக்கையும் எடுத்தது.



**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிற ஆயிரக்கணக்கான கூட்டுறவு ஸ்தாபனங்களில் நூற்றுக் கணக்கான ஸ்தாபனங்களுக்கு முறையாகவும், உடனடியாகவும் நிதி இன்றைக்குக் கிடைக்கவில்லை என்பதைக் கூறினார்கள். இனிமேலாவது அவைகளுக்கு உடனடியாகக் காலாகாலத்தில்—ஏனென்றால் அவைகளெல்லாம் மிகக்குறைந்த நிதியை வைத்து நடத்தப்படுகின்ற ஸ்தாபனங்கள்—நிதி கொடுப்பதற்கு வேண்டிய மாற்று ஏற்பாடுகளைச் செய்ய சர்க்கார் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுதே அந்த நிதி வசதிக்கு ஏராளமான ஏற்பாடுகள் இருக்கின்றன. கூட்டுறவு தலைமைச் சங்கம் அவர்களுடைய பிரைமரி சொஸைட்டியிலே வாங்குகின்ற சரக்குகளுக்கு பணம் கொடுப்பதற்கு ரிசர்வ் வங்கி ஒரு கொள்கையின் அடிப்படையிலே முன் பணம் தருகிறார்கள். அதை வைத்து உதவி செய்கின்றோம். சரக்குகளில் தேக்கம் அடைகின்ற காரணத்தால் தலைமைச் சங்கத்திலே சில சமயத்திலே இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அப்பொழுதைக்கப்பொழுது அவர்கள் அரசாங்கத்தை அணுகுகிறபொழுது அரசாங்கம் உதவி செய்கிறது.

(எ) செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள கடன்களை மூன்று ஆண்டுக் காலத் தவணைக் கடன்களாக மாற்றி வசூலை நிறுத்திவைத்தல்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட கடன்களை தற்போதைக்கு நிறுத்திவைத்து, அதை மூன்று ஆண்டுகால தவணைக் கடன்களாக மாற்றி உடனே வசூலை நிறுத்தி வைக்க வேண்டுவதுபற்றி."

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் முழுவதிலும் வறட்சி நிலைமை பரவியுள்ளதாலும், பயிர்கள் விளையாததாலும், கூட்டுறவு நாணயச் சங்கங்களின் உறுப்பினர்கள், குறுகிய காலக் கடன்களை மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத் தப்படத்தக்க நடுத்தர காலக் கடன்களாக மாற்றும்படி விண்ணப்பித் துள்ளார்கள். செங்கற்பட்டு மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், இயல்பான பயிர் விளைச்சலில் 8-ல் 3 பகுதியே இப்பொழுது விளைந் துள்ளது என்று வருவாய்த் துறை அதிகாரிகள் சான்று அளித்துள் ளனர். காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கி தன்னுடன் இணைந்துள்ள சங்கங்களிடமிருந்து குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன் களாக மாற்ற வேண்டுமென்று விண்ணப்பங்களை பெற்றுள்ளது. ரூ. 32,18,036 மதிப்புள்ள குறுகிய காலக் கடன்களை, நடுத்தர காலக் கடன்களாக மாற்ற வேண்டுமென்று மதிப்பிடப்படுகிறது. இத்தொகையில் தனது நிதியிலிருந்து ரூ. 5,900 கொடுக்கவும், வேளாண்மைக் கடன் நிலைப்படுத்தும் நிதியிலிருந்து அதாவது, Agricultural Credit Stabilisation Fund-லிருந்து ரூ. 4,77,136 கொடுக்கும்படி கோரியும், தமிழ்நாடு கூட்டுறவு வங்கியிலிருந்து ரூ. 27,35,000 வரை நடுத்தரக் காலக் கடன் கொடுக்கும்படி கோரியும், காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கி செயற்குறிப்புகளை அனுப்பியது. காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கி கேட்டிருந்த 27,35,000 ரூபாயை தமிழ்நாடு கூட்டுறவு வங்கி வழங்கியுள்ளது.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1969 மார்ச் 27

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தில், குறிப்பாக 1966-ம் ஆண்டு புயலடிக்கப்பட்டு அந்த 1966-ம் ஆண்டிலே வாங்கப்பட்ட கூட்டுறவு கடன்களுக்கு ஓராண்டு காலம் தவணை வேண்டுமென்று அப்பொழுது கேட்கப்பட்டு ஓரளவு 1967-ம் ஆண்டு அது நீடிக்கப்பட்டது. 1968-ல் இயற்கையின் காரணமாக திரும்பவும் வறட்சி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இப்பொழுதும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் ஏற்கனவே தவணை தவறிய கடன்களுக்கு இந்த சலுகை அளிக்க வேண்டுமென்ற கருத்தை ஒட்டி, பல விண்ணப்பங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதன் பேரிலே உடனடியாக சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** புயல் அடிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுடைய கடன் தவணை தவறி இருக்குமானால் அவற்றையும் சேர்த்து கவனிக்கும்படியாக நான் கூட்டுறவு வங்கியைக் கேட்டுக்கொள்ளச் சம்மதிக்கிறேன்.

## (ஏ) கோவை, பல்லடம், அவிநாசி வட்டங்களில் பருவ மழையின்மையும், கூட்டுறவுத் துறைக் கடன்கள் வசூலிப்பை ஒற்றிவைத்தலும்

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்:

"கோவை, பல்லடம், அவிநாசி வட்டங்களில் கடந்த மூன்று ஆண்டுகாலமாக தொடர்ந்து பருவமழை தவறிய காரணத்தால் விளைச்சல் இன்றி விவசாயப் பெருமக்கள் மிகுந்த கஷ்ட நஷ்டங்களுக்கு உட்படுள்ளதால் அரசாங்கக் கூட்டுறவுத் துறை கடன்களை ஒத்திவைக்கவேண்டியதுபற்றி"

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கோவை, பல்லடம், அவிநாசி வட்டங்களைப் பொறுத்தவரையில், கீழ்க்கண்ட பகுதிகளில் மானாவாரிப் பயிர்களின் விளைச்சல் 25 சதவீதத்திற்குக் குறைவாகவும், கிணறுகள்மூலம் பாசனம் பெறும் பயிர்களின் விளைச்சல் 35 சதவீதத்திற்குக் குறைவாகவும் உள்ளது என்று குறிப்பிட்டு, அவற்றிற்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அனாவாரிச் சான்றிதழை வழங்கியுள்ளார்:—

அவிநாசி வட்டம்—வட்டமுழுவதும், கோயம்புத்தூர்—தொண்டமுத்தூர் பிர்க்காவைத்தவிர மற்ற எல்லாப் பகுதிகளும், பல்லடம், வட்டம்—வட்டம் முழுவதும்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அனாவாரிச் சான்றிதழ் அளிக்கப்பட்ட பகுதிகளில், கூட்டுறவுச் சங்கங்களால் இதுவரை கொடுக்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு, கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிக்குத் தெரியப்படுத்தி இருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல்லடம் வட்டத்திலேயும் அவிநாசி வட்டத்திலேயும் 25 சதவிகிதம் 35 சதவிகிதத்திற்கும் குறைவாக விளைச்சல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினார்கள். நடுத்தரக் கடன் என்று மட்டும் அல்லாமல் ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளி வைக்கக்கூடிய முறையிலே அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1969 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** குறுகியக் காலக் கடனை நடுத்தரக் கடனாக மாற்றுவதன்மூலமாக அது ஓரளவிற்குத் தள்ளிவைக்கப் படுகிறது. குறுகியக்காலக் கடன், வாங்கிய கடனை ஒரு ஆண்டிலே திரும்பக் கொடுக்க வேண்டுமென்பது. நடுத்தர ஆண்டுக் கடன் என்பது 3 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள்வரை தவணை கொடுக்க வேண்டுமென்பது. ஆனால் இப்பொழுது நாம் கருத்தில் கொண்டுள்ளது, 3 ஆண்டுகளில் குறிப்பிட்டுத் தரவேண்டுமென்பது. ஆதலால் முதல் ஆண்டு கொடுக்கவேண்டிய தவணை ஏற்கனவே தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

## (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) அலுவல் ஆய்வுக்குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சில அறிவிப்புகள். தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின்கீழ் 1969–70-க்கு பின் வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1 மாண்புமிகு பேரவைத் தலைவர் (தலைவர்).
2 மாண்புமிகு பேரவை முன்னவர்.
3 மாண்புமிகு நிதி அமைச்சர்.
4 மாண்புமிகு உணவு-விவசாய அமைச்சர்.
5 மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர்.
6 மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர்.
7 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
8 திரு. து. ப. அழகமுத்து.
9 திரு. பி. ஜி. கருத்திருமன்.
10 திரு. கே. விநாயகம்.
11 திரு. பி. கே. மூக்கையா தேவர்.
12 திரு. எ. பாலசுப்பிரமணியன்.
13 திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
14 திரு. க. ர. நல்லசிவன்.
15 திரு. ஆ. கு. சுப்பையா.
16 ஹாஜி மா. மு. பீர் முஹம்மது.
17 திரு. ம. பொ. சிவஞானம்.

### (இ) நடைமுறை விதிக்குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப்பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ், 1969–70-க்கு, பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1 மாண்புமிகு பேரவைத் தலைவர்.
2 மாண்புமிகு முதலமைச்சர்.
3 மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர்.
4 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
5 திரு. எல். கணேசன்.
6 திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.
7 திரு. நா. கிருட்டிணன்.

8 திரு. பி. எஸ். மணியன்.
9 திரு. செஞ்சி. வெ. முனுசாமி.
10 திரு. ஈ. எம். நடராசன்.
11 திரு. பி. ஜி. கருத்திருமன்.
12 திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
13 திரு. க. முருகேசன்.
14 திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.
15 திரு. என். வரதராசன்.
16 திரு. கே. என். குமாரசாமி.
17 திரு. ஆ. கு. சுப்பையா.

பேரவைத் தலைவர், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(ஈ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969-70-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்குச் சட்டப்பேரவையின் பதினொன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டுக் கீழ்க்கண்ட பதினொன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்.

1 திரு. செ. கந்தசாமி கவுண்டர்.
2 திரு. மூ. மாரிமுத்து.
3 திரு. பொ. பொன்னம்பலம்.
4 திரு. வி. டி. அண்ணாமலை.
5 திரு. க. மு. கதிரவன்.
6 திரு. இ. ராமசாமி.
7 திரு. கே. என். குமாரசாமி.
8 திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்.
9 திரு. அ. மாரிமுத்து.
10 திரு. கொ. இர. ஞானசம்பந்தன்.
11 திரு. மு. இராமன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1969–70-ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் நாளிலிருந்து மேற்படி குழுவின் அமைப்புப் பற்றிப் பேரவை விதியில் பதினொன்று உறுப்பினர்களுக்குப் பதிலாக பதின்மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, எஞ்சியுள்ள இரண்டு இடங்களுக்கு ஆன தேர்தல் அடுத்த சட்டப்பேரவைக் கூட்டத்தில் நடத்தப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

பேரவையின் 221 (1)-வது விதிக்கிணங்க—
1 திரு. சி. சேதுராமன்.
2 திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
3 திரு. ந. தீர்த்தகிரி.
4 திரு. எம். அப்துல் கபூர் சாகிப்.

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.



(6) அறிக்கைகள் அளித்தல்.

அ) சிறைச்சாலைகளையும், அவற்றுடன் சேர்ந்த துறைகளையும் பற்றிய பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்த நடவடிக்கை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

**THIRU S. AGNI RAJU :** Mr. Speaker Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Jails and other allied Departments (Eighth Report).

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை.

**THIRU M. KANDASWAMY :** Mr. Speaker, Sir, I rise to present the Third Report (Fourth Assembly) of the Committee on Subordinate Legislation for the year 1968–69.

(7) 1968–69-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்.

**திரு க. இராமமூர்த்தி :** ஸார், ஆன் எ பாயிண்டு ஆஃப் ஆர்டர், கட் மோஷன் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஜெனரல் டிஸ்கஷன் முடிந்த பிற்பாடு, ஒவ்வொரு டிமாண்டையும் எடுத்துக் கொள்கிற நேரத்தில் கட் மோஷன்கள் கொண்டுவரலாம்.

**திரு க. இராமமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீட்டிற்கான அறிக்கையின் மீதான விவாதத்தைத் துவக்கி வைக்கின்ற நேரத்தில் இந்தத் துணை மதிப்பீட்டுகளைப்பற்றிய. . . . . .

**திரு. டி. மார்டின் :** ஆன் எ.பாயிண்டு ஆஃப் ஆர்டர், மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று ஒரு மணிக்கு விவாதத்தை முடிக்க வேண்டும்.

**THIRU T. MARTIN :** Sir, yesterday the Hon. Chief Minister undertook to give an answer in this House regarding the amount of Rs. 20,000 overspent in regard to the South Arcot district. To-day the Hon. Chief Minister has not come and I want to know from the Chair whether he is going to give an answer to-day or he has made arrangements through other Hon. Ministers to give an answer.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் அமைச்சர் அவர்கள் இருந்து, அதைக் கொடுக்கவில்லை என்றால் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். முதல் அமைச்சர் அவர்களே இங்கே இல்லை, இல்லாத நேரத்தில் எப்படி பாயிண்டு ஆஃப் ஆர்டர் வரும் ?

**THIRU T. MARTIN :** Sir, I want to know whether the Hon Chief Minister has made arrangements through other Hon. Ministers to give an answer.

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** தான் அதற்குப் பதில் சொல்லிவிடு கிறேன். நேற்று நம்முடைய மதிப்பிற்குரிய திரு. மார்ட்டின் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினையைப்பற்றி தென் ஆர்க்காடு மாவட்ட

[திரு. மா. முத்துசாமி] [1969 மார்ச் 27

ஆட்சித் தலைவர் மூலம் விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. அதைப் பற்றிய விவரமான விளக்கம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அது கிடைத்தவுடனேயே அவர்களுக்கு அந்தத் தகவல் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த இறுதித் துணை மதிப்பீடுகளைப் பொறுத்தவரையிலும், ஏற்கனவே நாம் அனுமதித்திருக்கிற தொகைக்கும் கூடுதலாக இந்த மதிப்பீடுகள் இன்றையதினம் நம்முடைய மன்றத்தில் விவாதத்திற்கு வந்திருக்கிறது. இந்த மதிப்பீடுகள் வருகிற நேரத்தில் தேவையைப்பற்றி அதிகமாக விமர்சிக்கவில்லை என்றாலும், மதிப்பீடுகளின் கொள்கையைப் பற்றி விமர்சிக்கின்ற அளவில் இன்றைய தினம் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கல்விக்காக கூடுதலாக ஒதுக்கக் கோரியிருக்கிற தொகை ஏறக்குறைய ஒரு கணிசமான தொகையாகக் கோரியிருக்கிறார்கள். பல்வேறு இனங்களுக்காக அந்தத் தொகையைக் கோரியிருந்தாலும்கூட, கல்வியைப் பொறுத்தவரையிலும் சர்க்கார் கடைப்பிடிக்க வேண்டிய சில கொள்கையை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எஸ்.எஸ்.எல். ஸி.தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்கின்ற முறை மாற்றி அமைக்கப்பட்டு, கடந்த ஆண்டிலிருந்து அந்த முறை பின்பற்றப்படுகிறது. அதற்கான கூடுதலான தொகையையும் சர்க்கார் மனமுவந்து ஏற்றுக் கொண்டிருக்கிறது. கூடுதலான செலவினங்களின் அடிப்படையிலே மாணவர்களுக்கு வேண்டிய எல்லா சலுகைகளையும் அளித்து, அவர்கள், பின்னாலே கல்வியைத் தொடர்கிற நேரத்தில் அவர்களுக்கு வேண்டிய சலுகைகளையெல்லாம் அளித்து, பல்கலைக் கழகத்தில் அவர்கள் சேருகிற நேரத்தில் அவர்களுக்கு கல்வி வசதி, மற்ற வசதிகள் தருவதற்கு ஏற்பாடு செய்தும்கூட, கல்வித் திட்டத்தைப் பொறுத்த வரையில், கல்விக் கொள்கையை பொறுத்த வரையில், எங்கோ ஏதோ ஒரு தவறு இருக்கிறது என்ற நிலைமையை நாம் உணர்கிறோம். ஆகவே, அரசு அதில் மிகுந்த அளவிலே அக்கறை கொண்டு பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. கல்வி அமைச்சர் அவர்கள் இதுபற்றி கல்வித் துறையிலே இருக்கிற வல்லுநர்களை, சிறந்தவர்களைக் கலந்து ஆலோசித்து, இது பற்றி நடவடிக்கை எடுக்க இருப்பதாக முன்னமேயே தெரிவித்திருக்கிறார். இந்த நேரத்தில் எங்கள் கட்சியின் சார்பிலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்த வரையிலும், ஏறக்குறைய எல்லாக் கல்லூரிகளிலும் மிகப் பெரிய அளவுக்கு ஒழுக்கம் குறைந்திருக்கிறது. ஒழுக்கம் குறைந்திருப்பதோடு மட்டுமல்ல, அங்கே பாடங்கள்தான் நடக்கிறதா, ஒழுக்கம் இருக்கிறதா என்று சந்தேகப்படுகிற ஒரு நிலைமையும் இருக்கிறது. இவற்றைக் கண்காணிக்கிறார்களா, இவற்றை நடத்திச் செல்கிறவர்கள் நல்ல முறையில் மாணவர்களைக் கண்காணிக்கிறார்களா, அவர்களுக்குக் கல்வியை ஏற்பாடு செய்கிறார்களா என்பதையெல்லாம் அரசு புனராலோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. வெறுமனே பாடத் திட்டங்களை வைத்துக்கொண்டு, அதற்கான நடைமுறை விதிகளை வைத்துக்கொண்டு, நாம் கல்விக் கொள்கையை அணுகிவிட முடியாது. நாம் வகுத்துக்கொண்டிருக்கிற கல்வித் திட்டத்தின் அடிப்படையில் ஏதோ ஒரு கோளாறை நாம் இன்னமும் அணுக முடியாத நிலையில் இருக்கிறோம், அல்லது அணுகத் தவறியிருக்கிறோம். அதன் காரணமாகக் கல்லூரிகளில் எப்பொழுது எடுத்தாலும் மிக அதிகமான அளவுக்கு—யார் மீதும் தவறு என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை—மாணவர்கள் வன்முறையில் ஈடுபடுவது மிகச் சாதாரண பழக்கமாகி விட்டது. அவர்களுக்குள்ளே அடித்துக்கொள்வது, அல்லது வெளியிலே இருப்பவர்களோடு மோதிக்கொள்வது, அல்லது போலீஸாரோடு மோதிக்கொள்வது என்ற நிலைமைதான் இருக்கிறது. இன்னும் உச்சமான கட்டம் அதில் என்னவென்றால், அங்கே இருக்கிற கல்லூரி முதல்வர்கள், கல்லூரி ஆசிரியர்களை நேரில் வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட செயல்கள் நடக்கின்றன, அப்பொழுது இவர்களைக் கண்காணிப்பதற்கோ



1969 மார்ச் 27] [திரு. க. இராமமூர்த்தி]

அல்லது தடுப்பதற்கோ தகுதியற்றவர்களாக அல்லது முடியாதவர்களாக அங்கே இருக்கிற ஆசிரியர்களும், முதல்வர்களும் இருக்கிற ஒரு நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை வளர்ந்து வருகிறது. இந்தத் தன்மையை நாம் எவ்வளவு விரைவில் அடக்க வேண்டுமோ அல்லது தடுக்க வேண்டுமோ அவ்வளவு விரைவில் நாம் செயல்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் கல்விக் கொள்கையை நாம் மிக விரைவிலே திருத்தி அமைக்க வேண்டும். அப்படித் திருத்தி அமைக்கும்பொழுது இந்தச் சீர்கேடான நிலைமையின் அடிப்படைக் காரணத்தை நாம் அணுக வேண்டும். அந்த நிலைமையை நாம் உணர்கிற வரையிலும், அதைச் செய்கின்ற வரையிலும், அங்கு இருக்கிற கல்லூரி முதல்வர்கள், பள்ளித் தலைவர்கள் அவர்களுடைய கடமையைச் சரிவரச் செய்யவேண்டிய ஒரு அவசியத்தை அவர்களுக்கு நாம் உணர்த்தியாக வேண்டும்.

இந்த நேரத்தில் நான் குறிப்பாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் பற்றிய விவரங்களில் நான் செல்ல விரும்பவில்லை. ஆனால், அமைச்சர் அவர்களுக்குச் செய்திகள் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். சட்டக் கல்லூரியில் நடந்த சம்பவங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் நன்றாகப் பரிசீலிக்கவேண்டும் என்று நான் சொல்லிக் கொள்வதோடு நிறுத்திக்கொள்கிறேன். மேற்கொண்டு அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால், ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அங்கே கல்லூரி முதல்வரையும், ஆசிரியர்களையும் வைத்துக்கொண்டு மாணவர்கள் பல்வேறு நேரங்களில் வன்முறைச் செயல்களில் அடிக்கடி ஈடுபடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கல்வியைப்பற்றிய இன்னொரு விவரத்தையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பின்தங்கிய வகுப்பினர்களுக்குக் கல்விச் சலுகை அளிப்பதற்காக, ஸ்காலர்ஷிப்பிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தொகை என்ற அளவிலே அது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டாலும், ஒன்றை நாம் உணரவேண்டும். கடந்த காலத்தில் படித்த மாணவர்களின் தொகை ஆண்டுக்கு ஆண்டு கூடியிருக்கிறது என்ற பிரத்யட்ச நிலைமையை உணர்ந்து, அந்த அளவுக்கு ஸ்காலர்ஷிப் தொகையைக் கூடுதலாக ஒதுக்கியிருக்கிறோமா என்பதை அந்தரங்க சுத்தியோடு உணர்ந்து பார்த்தால், நிச்சயம் ஒதுக்கியிருக்கின்ற தொகை மிகவும் குறைவு, இன்னும் தொகை கூடுதலாகத் தேவை என்பது தெரியவரும். பின்தங்கிய நிலையில் இருக்கிற மாணவர்கள் கல்விக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. அவர்களுக்குச் சலுகை செய்கின்ற முறையில், இந்தத் தலைப்பிலே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைக் கூடுதலாக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதே போல நமக்கு வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. மழை இன்மையால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் அது பற்றிப் பேச விரும்பவில்லை, ஏனெனில் அது பற்றித் தனியாக விவாதிக்க இருக்கிறோம் என்பதால்.

குடிநீர் பற்றாக்குறை பற்றி என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. குடிநீர் பற்றாக்குறையைப் பொறுத்த வரையில், வறண்டு போகும் நேரத்தில் மட்டும் கவனிக்கக்கூடிய பிரச்சினை அல்ல இது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான பரிகாரம் தேடவேண்டும். கிராமப் புறங்களில் மழை இல்லாததால், பெண்கள் மிகத் தொலைவில் இருக்கும் கிணறுகளுக்கும், ஏன், ஆண்களேகூட கழனிகளில் இருக்கும் கிணறுகளுக்குச் சென்று நீர் எடுக்கும் அவல நிலை இருக்கிறது. குடிநீர் பிரச்சினையைக் கூடிய சீக்கிரத்தில் தீர்க்க சர்க்கார் முன்வரவேண்டும். இதற்கான ஒதுக்கீடு செய்திருக்கும் தொகை மிக மிகக் குறைவானதாக இருக்கிறது. குடி

நீர்ப் பிரச்சினை கிராமப்புறங்களில் சாதாரண காலத்தில்கூட, மழை பெய்யும்போதுகூட, தீர்க்கப்படாத பிரச்சினையாக இருக்கிறது. அடிக்கடி வறண்டு போகும் காரணத்தால் அடிக்கடி ஏற்படும் பிரச்சினை இது. ஆகவே, இதை உடனடியாகத் தீர்க்க கவனம் செலுத்தப்படவேண்டும்.

போலீஸ் துறையைப் பொறுத்தவரையில், அவர்களுடைய உபகரணங்களுக்காக என்று மிகமிகத் தேவையான ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. போலீசாருக்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில், போலீஸைப் பொறுத்தவரையில், அவர்கள் கடமையை மிகத் தெளிவாக,மற்றவர்கள் நம்பும் அளவில் அரசு ஊர்ஜிதம் செய்ய வேண்டும். அது இல்லாமல், அரசியல் கட்சிகளின் விமரிசனத்திற்கு ஆளாகி, அவர்களுடைய புகழுக்கும், ஏச்சுகளுக்கும் தக்க முறையில் நடக்கிறார்கள் என்ற நிலைக்கு விட்டுவிடக் கூடாது. அவர்களுக்குக் கூடுதலாகக் கொடுக்கும் உபகரணங்கள், ஆயுதங்கள், ஒதுக்கீடுகள் இவையெல்லாம் அவர்கள் வேலையைச் செம்மையாகவும், முறையாகவும் செய்யக்கூடிய அளவில் அமைக்க வேண்டும். அவர்கள் இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு, சரியான முறையில் பயன்படுத்தவில்லையோ என்கிற அச்சமோ, சந்தேகமே மக்கள் மனதில் ஏற்படும் நிலை இருக்கக் கூடாது.

நீதித் துறையைப் பொறுத்த வரையில், இன்றைக்கு இருக்கும் பெரிய குறை, மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும், முன்சீப்புகளுக்கும் போதுமான வீட்டு வசதி இல்லாத நிலை இருக்கிறது. அவர்கள் தனித்த ஒரு ஜாதியினராகத்தான் இருக்க வேண்டியதாக இருக்கிறது. தனிப் பிரிவாக இருந்தால்தான், அவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு இருக்கும். ஆகவே, மற்றவர்களைப் போல, அவர்கள் வெளியிலே போய் வீடு தேடுவது என்பது முடியாத காரியம். அவர்கள் ஒரு ஊருக்கு மாற்றப்படுகிறார்கள் என்றால், யாரோ ஒருவருடைய சிபாரிசு பிடித்து வீடு தேடிக் கொள்ள வேண்டும் என்ற நிலை இருந்தால், அது அவர்களுக்கு இக்கட்டான நிலையை உண்டாக்கி விடும். ஆகவே, ஒரு விளக்கமான செயற்குறிப்பின் அடிப்படையில், ஒரு திட்டத்தின் அடிப்படையில், இப்படிப்பட்ட நீதித் துறை அதிகாரிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில், இடவசதியிருக்கிறது. ஆகவே, இவர்களுக்கும், கோர்ட்டுகளுக்குப் பக்கத்திலேயே இருக்கும் இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு கவனம் செலுத்தி, நிச்சயமாகச் செயல்பட வேண்டும், செயல்படுவார்கள் என்று நம்புகிறேன்.

மாவட்ட மட்டத்திலே இரண்டொரு ஆலோசனைகளைச் சொல்லாமல் இருக்க முடியாது. இன்றையதினம், தாலுகா மட்டத்தில், தாலுகாவில் நடக்கும் நிகழ்ச்சிகளை, நடைமுறையில் ஏற்படும் சீர்திருத்தங்களை, நடவடிக்கைகளை மாதந்தோறும், அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை, சட்டமன்ற உறுப்பினர்கள் விமரிசனம் செய்யும், பரிசீலிக்கும் நிலை ஏற்படவேண்டும். கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று சொல்லும்போது, அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவராமல் இருக்க முடியாது. ஜில்லா மட்டத்தில், தாலுகா மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகளை அடிக்கடி மாற்றுவது என்ற நிலை கட்டாயம் தவிர்க்கப்படவேண்டும். அதை நிறுத்த வேண்டும். என்னுடைய பகுதியில் பெரிய அதிகாரிகள் மாவட்டத்தில், நான்கு தடவை ஜில்லா கலெக்டரையும், மற்றவர்களையும் மாற்றியிருக்கிறார்கள். பொருளாதாரத்தில் மாவட்டங்கள் முன்னேற வேண்டும் என்று சொல்லும்போது இப்படிப்பட்ட மாற்றங்களைத் தவிர்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து செயல் பட முடியாத நிலையை இது உண்டாக்கிவிடுகிறது. இது தவிர்க்க முடியாத ஒன்று என்று பதில் சொல்லக் கூடும் என்றாலும், தவிர்க்கக்கூடிய காரணங்களை அரசு பரிசீலிக்க வேண்டும்.





அதோடு, ஜில்லா மட்டத்தில் அரசாங்க அதிகாரிகள் புதியதான சில காரியங்களுக்கு அரசாங்கத்தின் அனுமதியோடு பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டுகிறார்கள். அந்தப் பொறுப்பை ஏற்றுக கொண்டு இருக்கிறார்கள். இது பயங்கரமான நிலையைத் தோற்றுவிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. உதாரணமாக, தமிழ் மாநாட்டிற்கு நிதி வசூல் செய்யப்பட்டது. அந்தக் கணக்கு பப்ளிக் அக்கௌண்ட்ஸ் என்ற தலைப்பின் கீழ் வரவில்லை. இன்னும் சில மாவட்டங்களில் பல்வேறு காரணங்களுக்காக வசூல் செய்யப்பட்டது பப்ளிக் அகௌண்ட்ஸ் என்ற தலைப்பின்கீழ் கொண்டுவரப்படவில்லை. அரசாங்க அதிகாரிகள் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்தால், அவையெல்லாம் பப்ளிக் அகௌண்ட்ஸ் என்ற தலைப்பில கொண்டுவரப்பட்டு, ஆடிட் செய்யப்படாத நிலை இருந்தால், அது எப்படிப்பட்ட சந்தேகங்களை எழுப்ப இடமளிக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்த அதிகாரிகள் மட்டத்திலிருந்து, ஆங்காங்கே இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, உடனடியாகப் பதில் என்றால், உங்கள் கடிதம் கிடைத்தது, தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லும் பதில் மட்டும் கொடுத்தால் போதாது. அது 10, 15 நாட்களில் கிடைக்கிறது. அதற்குப் பிறகு எடுக்கப்படும் நடவடிக்கை என்ன, கூறிய குற்றச்சாட்டுகள், குறைகள் இவற்றைக் கண்டு ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட நிலைமைகள் என்ன என்பதைத் தெரிவிக்க மூன்று மாதங்கள், நான்கு மாதங்கள், என்னுடைய ஒரு கேசில் ஓர் ஆண்டுகூட ஆகியிருக்கிறது. மக்களுடைய பிரதிநிதிகள், அவர்களுக்கு வரும் குறைகளை, தவறுகளை அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்தால், அவர்கள் அதில் ஆர்வம் காட்டுவார்கள் என்ற நிலைமை இருக்க வேண்டும். அதன்றி, அவர்கள் அவற்றில் போதுமான கவனம் செலுத்தாமல், அக்கறைகாட்டாமல் இருப்பார்கள் என்றால், அதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

அதே போல, கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்க மட்டத்திலேயும், மாவட்ட மட்டத்திலேயும் இருக்கும் அதிகாரிகளிடையே இருக்கின்ற கடிதப் போக்குவரத்து, உத்தரவுகள் பரிமாறிக்கொள்வது, இவற்றில் சரியான கோ–ஆர்டிநேஷன், இணைப்பு இல்லாத நிலை இருக்கிறது. இதை ஆடிட் ரிப்போர்ட்டில் பார்க்கிறோம். இந்த நிலைகள் காரணமாக, அரசாங்கத்திற்கு ரூ 10 லட்சம், உணவுப் பொருள் விற்பனையில் மட்டும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைக் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம், ஜில்லா மட்டத்தில் அதிகாரிகள், உடனுக்குடனே அரசின் உத்திரவைப் பெறாமல், அமைச்சர் சொல்லிவிட்டார்கள் என்ற காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாகவே, இதைச் செய்யவேண்டும் என்று நினைத்துக்கொண்டு, அப்படிச் செய்தால்தான் சிறப்பாகப் பணியாற்றினோம் என்று நினைப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு நடவடிக்கை எடுக்கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும் நிலை வந்திருக்கிறது. அதன் விளைவாக, தஞ்சாவூர், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டக் கலெக்டர்களுடைய தவறின் காரணமாக, அரசாங்கத்தின் உத்திரவு பெறாமல், நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, 10 லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆடிட் ரிப்போர்ட்டில் பார்க்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட அளவிலே அதிகாரிகள் அமைச்சர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அல்லது அமைச்சர்கள் திருப்திப்படுவார்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தங்களுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கின்ற ஒரு நிலைமை இருந்து வருகின்றது. ஆகவே, அரசு போதிய கவனத்தைச் செலுத்தி, அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளைப் பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். துணை மதிப்பீட்டில் ஏறக்குறைய 66 கோடி ரூபாய்க்குக் கேட்டிருந்தாலும் ஒரு 11 கோடி ரூபாய் மட்டுமே வருவாய்க் கணக்காகவும், எஞ்சிய தொகையைப் பொறுத்தவரையில், மூலதனக் கணக்கிலும் கடன் வகைகளைத் திருப்பிக் கொடுக்கும்வகையிலும் அமைந்திருப்பதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பிட்ட இனங்களுக்குத் தொகைகளை ஒதுக்கியிருப்பதைக் கூர்ந்து கவனிக்கிறபோது நம்முடைய அரசு, எது எது இன்றியமையாதது, எது எது முக்கியமானது என்பதைக் கருத்திலே கொண்டு காரியமாற்றியிருக்கிறது. ஆயினும், எந்தெந்த இனத்திற்குத் தொகைகள் ஒதுக்கப் பெற்றுள்ளதோ அவைகளைச் செலவழிக்கிறபோது, திட்டத்தை ஆரம்பித்து நடத்தும்போது, நிர்வாகத்திலுள்ள சிலர் செய்கின்ற தவறுகளின் காரணமாக அலுவல்களிலே தாமதமாவதைக் காண்கிறோம். இதனால் அரசுக்கும், அமைச்சரவைக்கும் கெட்ட பெயர் உண்டாகிறது.

தஞ்சை மாவட்டம் முழுவதிலும் இறைவைப் பாசனம் தேவைப்படுகிறது என்ற திட்டத்தின் அடிப்படையில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் சென்ற ஆண்டு மூன்று இறைவைப் பாசனத் திட்டத்தையும், இந்த ஆண்டு ஒரு இறைவைப் பாசனத் திட்டத்தையும், அந்தத் தொகுதியில் மட்டும் மொத்தம் நான்கு இறைவைப் பாசனத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர இன்னும் வேலைகள் தொடங்கப்படவில்லை. என்ன காரணம் என்று கேட்டால், இறைவைப் பாசனத் திட்டத்தின் கீழ் அக்ரிமெண்ட் விதி இருக்கிறது, அதை எழுத வேண்டுமென்று நிர்வாகத்தினர் கூறுகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அப்படிப்பட்ட ஏற்பாடு தேவையில்லையென்று அறிவித்து, அந்த உத்திரவை மாற்றி வேலைகளை ஏற்று நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. இப்படிப்பட்ட நிர்வாக நிலைமை சில இடங்களில் இருக்கிற காரணத்தினால், நம்முடைய அமைச்சர்களுக்கும், நம்முடைய அரசுக்கும் கெட்ட பெயர் ஏற்படுவதைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். உணவுப் பொருள் அபிவிருத்தியில் கவனம் செலுத்தும்போது, ஒரு வட்டத்தின் அடிப்படையில் கவனம் செலுத்துவதற்கு முக்கியத்துவம் தர வேண்டும். திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் பாமினியாறு திட்டம் 25 ஆண்டு காலமாக இருந்து, அரசாங்கத்தின் கவனத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகக் குறிப்புகள் கொடுக்கப்பட்டு, அது தலைமைப் பொறியாளருக்கு வந்திருப்பதாக அறிகிறேன். இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு முன்வந்து நிறைவேற்றிவிட்டால், இதனால் சுமார் முப்பது, நாற்பது கிராமங்களுக்கு நன்மை விளையும். இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டுவருகிறபோது, அரசாங்கம் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தாலும், அரசாங்க அதிகாரிகள் செய்கிற தவறுகளின் காரணமாக அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. அரசாங்க அதிகாரிகள் செய்கிற தவறுக்கு ஓர் உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய ஊரான முத்துப்பேட்டைக்கு அருகே ஒரு பெரிய கோயில் உண்டு. அந்தக் கோயிலுக்கு அறங்காவலர்கள் மூன்று பேர் உண்டு. ஒருவருடைய இடம் சென்ற மாதம் காலியானதால், நான் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தேன். என்னை எதிர்த்து இன்னொருவர் விண்ணப்பம் செய்திருந்தார். விண்ணப்பம் செய்த இருவர்களில், யாருக்குத் தகுதி இருக்கிறதோ அவரை நியமிக்க வேண்டும். அதுதான் முறை, அதுதான் மரபு, நான் யாரை எதிர்த்து விண்ணப்பம் செய்திருந்தேனோ, அவரையும் போட வேண்டுமென்று நிர்வாகத் தலைவர் புதிதாக ஓர் இடத்தை உற்பத்தி செய்து, அவரையும் என்னையும் நியமனம் செய்திருக்கிறார். நிர்வாக அதிகாரிகள் அரசாங்கத்தின் லட்சியத்திற்கு முரணானவர்களாக இருப்பதால், இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படுகின்றன. இறுதியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள 66 கோடி ரூபாய்க்குள்ள இறுதித் துணை மதிப்பீட்டை ஆதரித்து, என் உரையை முடித்து, அமர்கிறேன், வணக்கம்.



***திரு. பி. எஸ். எல்லப்பன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை ஆரம்பத்திலிருந்து பஞ்சம், பஞ்சம் என்ற பஞ்சப்பாட்டுத்தான். எங்கேயும் தண்ணீர் இல்லை, உணவு இல்லை, நாடே படுசூரணமான நிலையில் இருக்கிறது என்று எல்லோரும் சொன்னார்கள். இம்மாதம் 23-ம் தேதியன்று நம்முடைய கவர்னர் அவர்கள் மதுராந்தகம் தாலுகாவிலே சில முக்கியமான இடங்களிலே சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். எங்கேயும் தண்ணீர் இல்லை, ஒன்றும் கிடையாது. "பார்த்த பார்வையில் தாண்டி, உள்ளத்தைப் பறித்துக்கொண்டான்டி" என்று சொல்வார்களே, அது போல கவர்னர் அவர்கள் அந்த இடங்களைப் பார்த்ததும் அங்குள்ள நிலைமைகளைப் பார்த்து, உண்மையிலேயே பஞ்சம்தான் என்று தீர்மானித்துவிட்டார்கள்.

அடுத்து, மிகவும் முக்கியமானது கால்நடை. கால்நடைகள் க்ஷேமமாக இருந்தால்தான் அடுத்த வருஷமாவது நல்ல மாசூல் செய்ய முடியும். விவசாயம் செய்ய முடியும். இப்போது ஆடு, மாடுகள் அவ்வளவையும் அடிமாட்டுக்காக தெருவிலே ஓட்டிக்கொண்டு, சந்தைக்குக் கொண்டு போகிறார்கள். பாவம் விவசாயி என்ன செய்வான்? தண்ணீர் இல்லை, உணவு இல்லை. ஆடு, மாடுகள் எல்லாம் கசாப்புக் கடைக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. கால்நடைகள் இல்லாவிட்டால் விவசாயம் எப்படி நடக்கும்? உண்மையிலே பின்னாலே தெய்வசக்தி இருந்து, மழை பெய்து, க்ஷேமம் வந்தது என்று சொன்னால் கால்நடைக்கு எங்கே போக வேண்டும்? ஆடு, மாடுகளை வைத்துக்கொண்டுதான் மனிதன் வாழ முடியும், வாழ வேண்டும். கால்நடைகள் இல்லாமல் மனிதன் வாழ முடியாது. மனைவிக்குப் புருஷன், புருஷனுக்கு மனைவி என்று சொல்வார்களே, அது போல, ஆடு, மாடுகளுக்கு மனிதன், மனிதனுக்கு ஆடு, மாடுகள் என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் கால்நடைகள் தண்ணீர் இல்லாமல், உணவு இல்லாமல் பரிதவிக்கின்றன.

ஒரு கிணறு எடுத்தால், சர்க்காரில் 3 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கிறார்கள். ஒரு சில இடங்களில் போரிங் பம்ப் செட்டுகளைப் போட்டால் தண்ணீர் கொப்பளிக்கிறது. ஆகவே, சுலபமாக ஆயிரம் ரூபாய் செலவில் போரிங் செட் பைப்புகளைப் போட்டால் மாட்டுக்கும் தண்ணீர் கிடைக்கும், மனிதனுக்கும் தண்ணீர் கிடைக்கும், விவசாயம் செய்வதற்கும் தண்ணீர் கிடைக்கும். ஆகவே, சர்க்கார் முதலிலே போரிங் செட் பைப்புகளைப் போடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இதை நான் கவர்னர் அவர்களிடத்திலும் சொன்னேன். எனக்கு இங்கிலீஷ் தெரியாது. கவர்னர் அவர்களுக்குத் தமிழ் தெரியாது. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்பதைப் பக்கத்திலிருந்தவர்களிடம் கேட்டார். நான் சொன்னதை அவர் இங்கிலீஷில் கவர்னர் அவர்களிடம் சொன்னார் உடனே கவர்னர் என்னுடைய கருத்தைப் புரிந்துகொண்டார். நேற்றையதினம் நடந்த டின்னர் பார்ட்டியிலேகூட, கவர்னர் அவர்கள் என்னைப் பார்த்ததும், நீ மதுராந்தகத்தைச் சேர்ந்தவர் அல்லவா? என்று கேட்டார். குடி தண்ணீர் விஷயத்தில் ரொம்ப அவசரமாக ஆடு, மாடுகளைக் காப்பாற்ற வேண்டுமானால், இந்த போரிங் செட் பம்புகளைப் போட வேண்டும். இதை என்னுடைய தீர்மானமாக வைத்துக்கொள்ளுங்கள்.

பஞ்சம் வருகிறதே, இந்த மந்திரிதான் என்ன செய்வார்? எல்லோரும் பஞ்சத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர் என்ன செய்வார்? பாவம். (சிரிப்பு). அவரும் நம்மைப் போன்ற மனிதர்தான். எத்தனை விஷயங்களை அவர் சிந்திக்க முடியும்? ஒரு ஜில்லாவில் பஞ்சம், இரண்டு ஜில்லாவில் பஞ்சம் என்று சொன்னால், ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவிற்குத் தூக்கிப் போடலாம். நாடு பூராவுமே பஞ்சம் என்றால், மந்திரி என்ன செய்வார்? நானும் நாலு வார்த்தைதான் பேசினேன், சும்மாவா இருந்தேன் என்று சொல்லும் அந்த நிலையில் எல்லோரும் பேசுகிறார்கள். இதற்கெல்லாம் பரிகாரம் எங்கே இருக்கிறதென்றால், ஆண்டவனிடத்தில்தான் இருக்கிறது. அவன் சரியாகக் கணக்குப் பார்த்தால்தான் எல்லாம் சரியாகும். மாரி இல்லையென்றால் காரியம் இல்லை

யடா என்பார்கள். இறைவன் அருளால் தான் மழை பெய்து நாடு செழிக்க வேண்டும். நாடு செழித்தால்தான் அரசு செழிக்கும். அதற்காகத்தான் சங்கராச்சாரியார் ஒரு பிரார்த்தனை பண்ணச் சொன்னார். எல்லோரும் வருண ஜபம் செய்யுங்கள், அதில் ஒரு சக்தி இருக்கிறது, பாண்டவர்கள் அந்தச் சக்தியைக் கண்டார்கள் என்று சொன்னார்கள். இப்போது மூன்று நாட்களாக மதுராந்தகத்தில் வருண ஜபம் நடக்கிறது. ஒரு வாரத்தில் மழை வந்தால் ஆச்சு—இல்லை என்றால் வருண ஜபம் வெறும் பேச்சாகும். (சிரிப்பு). இது எல்லாம் ஒரு நம்பிக்கை. நம்பிக்கை இல்லாமல் மனிதன் வாழ முடியுமா ? எடுத்தற்கு எல்லாம் சந்தேகப்பட்டால் என்னதான் நடக்கும் ?

அடுத்து, கல்வி விஷயமாக—நான் முந்திரிக்கொட்டை மாதிரி வரக் கூடாது என்று எதுவும் பேசாமல் இருந்துவிட்டேன். குறிப்பாக ஒரு விஷயம். சூணாம்பட்டையில் ஒரு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் இருக்கிறது. 700 பிள்ளைகள் படிக்கிறார்கள். செங்கல்பட்டுக்கே கோடி. அங்கே ஹைஸ்கூல் வேண்டுமென்று நானும் 1948-லே இருந்து பிரயத்தனம் செய்கிறேன். ஜமீன்தார் குறுக்கே நிற்கிறார். ஹைஸ்கூல் வந்தால் சாதாரண ஜனங்கள் ஒரு மாதிரியாக ஆகிவிடுவார்கள் என்பது ஆட்சேபனை. கடைசியாக சென்ற வருஷம்தான் ஹைஸ்கூலுக்கு 15 எக்கர் நிலம் தந்துவிடுகிறேன், பணம் எதுவும் தர முடியாது, ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார். கல்வி அமைச்சர் பார்த்துக்கொண்டிருக்கிறாரே என்று சொல்கிறேன். அந்த 15 எக்கர் நிலத்தை எடுத்துக்கொண்டு அங்கே ஒரு ஹைஸ்கூலை ஏற்படுத்தித் தர வேண்டும். அதை ஏற்படுத்தித் தருவார்களானால், அந்தத் தாலுக்காவில் உள்ள பாமர மக்கள் கல்வி கற்பதற்கு ஏதுவாக இருக்கும்.

அடுத்து, ரெவின்யூ டிபார்ட்மெண்டு இருக்கிறதே, * அதைப்போல உலகத்திலேயே கிடையாதப்பா !

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** * என்ற வார்த்தையை எடுத்துவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த வார்த்தையை எடுத்துவிடுகிறேன்.

**திரு. பி. எஸ். எல்லப்பன் :** இது வெள்ளைக்காரன் கொண்டுவந்த சட்டம். செல்லரித்துப் போனது. யாருக்கு இந்தச் சட்டம் துணையாக இருக்கிறது ? செல்வம் படைத்த நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்களுக்குத்தான் அனுகூலமானது. சாதாரண பாமர மக்களுக்கு ஒருவித பிரயோசனமும் இல்லை. மாறாக எத்தனையோ தொந்தரவு கொடுக்கிறது. இங்கே போனால் அங்கே போ என்கிறது, அங்கே போனால் இங்கே போ என்கிறது. ஜனங்கள் திண்டாடுகிறார்கள். மூன்று அம்சத் திட்டம் என்று அலைந்தோமே என்ன ஆயிற்று ? இரண்டு மாதம் நடந்ததுதான் மிச்சம். ஒருவனுக்குக் கூட பட்டா கொடுக்கவில்லை. இதையே எடுத்தால்தான் ஜனங்களுக்கு அனுகூலம் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தயவு செய்து பஞ்ச நிவாரணமாக மாடுகள் வாழ்வதற்கும் மனிதர்கள் வாழ்வதற்கும் தகுந்த ஏற்பாடு செய்யுங்கள். ரொம்பப் பேசுவதற்கு எங்கள் கட்சியிலே என்னை விட மாட்டேன் என்கிறார்கள். நீங்கள் சும்மா இருங்கள், நாங்கள் பேசிக்கொள்கிறோம் என்கிறார்கள். நானும் சும்மா இருந்தாலும் இருப்பேன். அப்புறம் எழுந்துவிட்டால் அவ்வளவுதான். (பலத்த சிரிப்பு). வணக்கம்.

***திரு. ஜே. பெள்ளி கௌடர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள துணை மானிய மதிப்பீட்டுத் தீர்மானத்தின் மீது பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய

*பேரவைத் தலைவரின் ஆணையிணங்க அகற்றப்பட்டது.



நீலகிரி மாவட்டத்தில் பல கோடி ரூபாய்கள் மின்சாரத் திட்டத்திற்காக செலவிடப்பட்டு காரியங்கள் நடந்து வருவதை அரசு அறியும். ஆகவே, மேட்டுப்பாளையத்தில் இருந்து கோத்தகிரி வழியில் பெரிய இயந்திரங்களைக் கொண்டு செல்வது என்கிறபோது—குன்னூர் வழியில் இருப்புப் பாதை தடை செய்கிறது—கோத்தகிரி-மேட்டுப்பாளையம் சாலையில்தான் போக வேண்டியிருக்கிறது. நடுவில் சில இடங்கள் குறுகலாகவும், சாலை பழுதடைந்தும் இருப்பதால் உடனடியாக இந்தக் குறைகளை நீக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மாவட்ட வாரியாகச் சொன்னால், மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தோட்டத் தொழிலாளருடைய குறை—விவசாயிகளுக்கு நிலம் தருவதிலும்—பள்ளி வசதி, ரோடு வசதி, ஹரிஜன மக்களுக்கு நிலத்தைக் கையகப்படுத்துகிற முறையில் சில சில குறைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் மக்களுக்கு நலம் செய்கிற முறையில் நீக்கித் தரவேண்டுமென்று மக்கள் சார்பாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டிலே குறைகள் இல்லாமல் இல்லை. ஏராளமான குறைகள் நாட்டில் இருக்கின்றன. கடந்த 20 ஆண்டுக் காலமாக ஆட்சி நடத்திப் பல கோடி ரூபாய்களைச் செலவு செய்தும் நாட்டில் ஏராளமான குறைகளை விட்டேதான் சென்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக பற்பல குறைகளைக் களைந்துகொண்டேதான் வருகிறது. எல்லாவற்றையும் உடனடியாகக் களைந்துவிட முடியாது. இதைக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், தாங்கள் 20 ஆண்டு காலம் ஆட்சி செய்து என்ன செய்தோம் என்பதை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். அரசுக்கு வேண்டிய அவகாசமும், போதிய அளவு கால வரம்பும் இருந்தால்தான் அந்தக் குறைகளை நல்ல முறையில் போக்க முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் சட்டமன்றத்திற்கு உள்ளேயும், சட்டமன்றத்திற்கு வெளியேயும், பலவிதமாகத் தாக்கிப் பேசி வருகிறார்கள். ஆயினும், கழகத் தொண்டர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதைக் காப்பாற்றி மக்களிடத்தில் எவ்வளவு அன்பாகவும், பண்பாகவும் பழகி வருகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. கடந்த பல ஆண்டு காலமாக காஞ்சிப் பாடத்தைக் கற்றுவந்த காரணத்தினால்தான் பல நேரங்களில் எங்கள் அண்ணா அவர்களை 'அண்ணா! இப்படிப் பேசுகிறார்களே' என இதயம் துடிக்கின்ற போதெல்லாம் 'இதனை நாங்கள் எப்படிப் பொறுப்பது' என்கிறபோது, 'தம்பீ ! சந்தனத்தை அறைக்க அறைக்கத்தான் மணக்கும். அவர்கள் திட்டத் திட்டத்தான் வளர்வோம்' என்று அண்ணா சொன்னார்கள். திட்டித் திட்டி எழுதியும், பேசியும்' வந்த காரணத்தினால்தான் இன்றைக்கு நாங்கள் இந்த அளவுக்கு வளர்ச்சி பெற்று கருத்துக் குன்று கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறோம். இந்த நிலைமையில் மீண்டும் மீண்டும் கழகத்தைத் திட்டி, தரக் குறைவாக எழுதி, அதன் மூலம் எங்களை அழித்துவிடலாம் என்று நினைத்தால், அது முடியாத காரியம். இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ளவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாராட்டுகிறார்கள். டெல்லி பாராளுமன்ற நிர்வாகத்தையே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்று நடத்த வேண்டிய நிலை வந்து சேர்ந்துவிட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரசியலில் கட்சிப் பாகுபாடு பாராமல் நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய, கட்சிப் பாகுபாடு இல்லாமல் இந்த அரசுக்கு ஒத்துழைப்பைத் தர முன்வர வேண்டுமென்று காங்கிரஸ் மெம்பர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு உணவுப் பஞ்சத்தை நீக்கத் தக்க வகையில் வறட்சிப் பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்க வசூல் செய்கிற நேரத்தில் கலெக்டர் எல்லோருக்கும் ஒரே விதமான பட்டியலைத் தருகிறார். வசதி உள்ளவர்கள் இருக்கிறார்கள், வசதியற்ற ஏழைகள் இருக்கிறார்கள். அவரவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ற வகையில் வசூல் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திருமதி கே. பி. ஜானகியம்மாள்** : தலைவர் அவர்களே, 1968–69 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையின் மீதுஎனது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மதுரை மாவட்டத்திலும் எல்லா மாவட்டங்களைப் போலவே வறட்சியான நிலைமை தான் ஏற்பட்டு இருக்கிறது என்பதை என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், மற்றும் பலரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டு மழை, 15 அங்குலம் என்ற அளவுக்குத்தான் மதுரை மாவட்டத்திலே பெய்திருப்பதாகப் புள்ளி விவரம் குறிப்பிட்டுள்ளது. 2,850 கண்மாய்கள் அங்கே இருந்தும் கூட அவையெல்லம் தூர்ந்துபோய்விட்டன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். புஞ்சைப் பிரதேசங்கள் முழுதும் தீய்ந்துவிட்டன ; ஒரு ஏக்கரில் பருத்தி ஒரு குவிண்டால் விளைந்த இடத்தில் இன்றைக்கு 30 கிலோகூட கிடைக்காத நிலைமை தோட்டப் புஞ்சையில் இருக்கிறது. குடிநீர்ப் பஞ்சம் மிகவும் மோசமான நிலைக்குப் போய்விட்டது. இந்த நிலையில் எல்லா உறுப்பினர்களும் எடுத்துக் கூறியதைப்போல் நானும் கூறுவதுமட்டுமல்லாமல் அதைத் தீர்ப்பதற்காக நான் சில ஆலோசனைகளை இந்த நேரத்திலே கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

ஏப்ரல் மாதம் 9–ஆம் தேதி எல்லா மாவட்ட ஆணையாளர்களும் சென்னையிலேகூடிப் பேச மாநாடு நடக்கப்போவதாக அறிகிறேன். அதற்குள்ளாக மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களை நடத்தி அந்த அந்த மாவட்டங்களிலே உள்ள அபிப்ராயங்களைச் சேகரித்துக் கொண்ட பிறகு அந்த அந்த மாவட்டக் கலெக்டர்கள் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு விவாதித்தால் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதேபோன்று, 31-ஆம் தேதி இங்கே நடக்கக்கூடிய சட்டப்பேரவை விவாதத்திலேயும் அதற்கான நல்ல முடிவுகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், இந்தியப் பிரதமர் அவர்கள் சமீபத்தில் இது சம்பந்தமாக சுற்றுப் பிரயாணம் செய்து பார்க்க வருகின்ற நேரத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்ற அத்தனை இடங்களுக்கும் போய்ப் பார்வையிட ஏற்பாடு செய்யப்படவேண்டும். பஞ்சத் தணிப்பு நிவாரணத்திற்காக 20 கோடி ரூபாய் வேண்டுமென்று நாம் இப்பொழுது மத்திய அரசிடம் கோரியிருக்கிறோம். அது போதாது, இன்னும் அதிகமான தொகையைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். இந்தப்பஞ்சம் சாதாரணப் பஞ்சம் அல்ல; தாது வருஷப் பஞ்சம் என்று 1952லே ஏற்பட்டதைப்போல் தொடர்ந்து மழையில்லாததால் தேங்கித்தேங்கி இந்த ஆண்டு மொத்தமாகப் பெரிய அளவு பஞ்சமாக ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் நமது மாநிலத்தில் உள்ள ஜமீன்தார்களுக்குக் கொடுக்கக் கூடிய $1\frac{1}{2}$ கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசுக்குத்தான் இதிலே அதிகாரம் இருக்கிறது என்றால் அவர்களையும் கேட்டு, மக்கள் செத்து மடிந்து கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் ஜமீன்தார்களுக்கும், மன்னர்களுக்கும் கொடுக்கின்ற மானியத் தொகையைத் தமிழகத்திலே இந்த ஆண்டுக்காவது நிறுத்தி வைக்க வேண்டுமென்பதையே எனது ஆலோசனையாகக் கூறிக்கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் சில வார்த்தைகள் கூறிக்கொள்வதற்கு ஆசைப்படுகிறேன். நகரப் பஞ்சாயத்துக்களின் வருமானத்தை உயர்த்த வேண்டும். இன்று தனியார் நடத்தக்கூடிய சினிமாத் தியேட்டர்களில் பலவிதமான ஊழல்கள் நடக்கின்றன. நகரப் பஞ்சாயத்திலேயே சினிமாக்களை எடுத்து நடத்துவதின் மூலம் வருமானம் அதிகமாகக்கூடிய நிலைமை உருவாகும். சில நடைமுறை வேலைகளுக்குக்கூட ரோடு போடுவது, கிணறு வெட்டுவது, நிர்வாகத்தை நடத்துவது போன்ற செலவுகளுக்குக் கூட பணம் இல்லாமல் கஷ்டப்படக்கூடிய நிலைமையில் பல ஊராட்சி மன்றங்கள் உள்ளன.





நகரப் பஞ்சாயத்துக்களாலும், பஞ்சாயத்து ஒன்றியங்களாலும் நடத்தப்படுகின்ற மகப்பேறு நிலையங்களிலே பிரசவம் பார்ப்பதற்காக ஒரு மருத்துவமாதும், ஒரு உதவியாளரும் இருக்கிறார்கள். இவர்கள் கிராமங்களுக்கு கேஸ் பார்க்கச் சென்று விட்டால், அந்த நேரங்களில் அங்கே ஆளே இருப்பது கிடையாது. அப்படிப்பட்ட நேரங்களில் தாய்மார்கள் வந்தால் அவர்களாகவே பிரசவிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி மதுரை நகரை அடுத்துள்ள அவணியாபுரத்திலே ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி நான் மதுரை மெடிக்கல் ஆபீஸரிடம் ஒரு ரிபோர்ட்டைக்கூடக் கொடுத்திருக்கிறேன். எனவே, மகப்பேறு நிலையங்களுக்கு லேடி டாக்டர் அவசியம் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகரப் பஞ்சாயத்துக்கள் நடத்தக்கூடிய பள்ளிகளிலே அவர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாக அறிகிறேன். எம்.எல்.ஏக்களோ அல்லது பொதுமக்கள் பிரதிநிதிகளோ அவற்றைப் பார்வையிடவேண்டுமென்றால் முன்னதாக இத்தனும் தேதி வந்து பார்வையிடப்போகிறேன் என்று முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டுத்தான் செல்ல வேண்டுமென்று உத்தரவு இட்டுள்ளதாகத் தெரிகிறது. அது சரியல்ல. பொது மக்கள் பிரதிநிதிகள் எந்த நேரத்திலேயும் போய்ப் பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கைத்தறித் துணி தேக்கமாக இருப்பதாலும் மக்களிடையே வாங்கும் சக்தி குறைந்திருப்பதாலும் அந்தத் தொழிலைச் செய்யக் கூடியவர்கள் பெருமளவில் பாதிக்கப்படக்கூடிய நிலைமையை எதிர் நோக்கி நிற்கிறார்கள். எனவே, அந்தச் சரக்கை மத்திய அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே நல்ல முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். மத்திய அரசு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக அதைச் செய்வதற்கும் முன் வரக்கூடிய அளவிலே மாநில அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுராந்தகத்திலே ஒரு சப்–மாஜிஸ்ட்ரேட் தவறான முறையிலே நடந்துகொண்டதாக வழக்குப் போடப்பட்டு அதற்குப்பிறகு அவர் விடுதலை செய்யப்பட்டு இப்பொழுது செங்கற்பட்டிலே மாற்றப்பட்டு வேலை பார்ப்பதாக அறிகிறேன். இப்படி ஒரு கேஸிலே மாட்டிக் கொண்டவரை அந்த இடத்திற்குப் பக்கத்திலே போடுவதன் காரணமாக அவர் தனக்கு விரோதமாகச் சாட்சியம் சொன்னவர்கள்மீது பழிவாங்கக் கூடிய சூழ்நிலை இருப்பதாக மனுக்கள் வந்திருக்கின்றன. இப்படிப்பட்டவரை தூரத்திலே உள்ள வேறு மாவட்டத்திற்கு மாற்றினால்தான் பகைமையும், விரோதமும், குரோதமும் இல்லாமல் இருக்கும். எனவே அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மெடிக்கல் லிப்ட் அட்டெண்டர்கள் இருக்கிறார்கள். அரசின் கீழும், ஹாஸ்டலிலும் லிப்ட் அட்டெண்டர்கள் இருக்கிறார்கள். இது போன்ற பல இடங்களிலே வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வேலை எல்லாம் ஒரே வேலைதான். ஆனால் மெடிக்கல் அட்டெண்டர்களுக்கு மாத்திரம் மற்றவர்களைப்போல் இல்லாமல் சம்பளம் குறைத்துக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரே வேலைக்கு, ஒரே வகையான தொழிலாளருக்கு இப்படி சம்பள வித்தியாசம் இருக்கக் கூடாது. எனவே, அவர்களுடைய சம்பளத்தை ஒரே மாதிரி உயர்த்திக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீடு என்பது ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சடங்காக இருக்கிறது. எந்த அரசாங்கமாக இருந்தாலும் துணை மதிப்பீடு இல்லாமல் பூராத் தொகையையும் ஒரே தடவையில் மதிப்பீடு செய்வது என்பது இயலாத காரியம். ஆகையினால்தான் இந்தத் துணை மதிப்பீடுகள் அடிக்கடி கொடுக்கப்படவேண்டியிருக்கின்றன.

எப்படி இருந்தாலும் எல்லாவற்றிலுமே நாம் சுத்தமாகக் கணக்கிட முடியாது என்றாலும் கூட, மதிப்பீடு என்பது கொஞ்சம் ஒத்ததாக இருக்க வேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே மோட்டார் வாகனம் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் இரண்டு லட்சத்துக்கு முப்பத்திரண்டு ஆயிரம் ரூபாய் அதிகமாகக் கோரப்பட்டிருக்கிறது. இது எதற்காக என்றால் தபால் செலவுக்காகவும், வண்டியைப் பழுது பார்ப்பதற்கும் கோரப்பட்டிருக்கிறது. தபால் செலவை எதிர்பார்க்கமுடியாதா? வண்டியைப் பழுது பார்ப்பது என்பது முதலிலேயே தெரிந்ததுதானே? எனவே இதையெல்லாம் சரியான முறையிலே மதிப்பீடு செய்யாததாலே இந்தத் துணை மதிப்பீட்டிலே அதிகமாகக் கேட்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி இல்லாமல் கூடுமான வரையில் மதிப்பீடுகள் சரியானமுறையிலே இருப்பதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நியூ ஸர்வீஸஸ் ஸ்கீம், அதாவது புதிய பணித் திட்டங்கள் இன்று அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. புதிய டிபார்ட்மெண்டுகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. புதிய டிபார்ட்மெண்டுகள் தோற்றுவிப்பதின்மூலம் அதிகப்படியான செலவுகள் வரலாம். புதிய டிபார்ட்மெண்டுகள் ஏற்படுவது எந்த அளவுக்குச் சரியானது என்பதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சோஷியல் வெல்பேர் டிபார்ட்மெண்ட் புதிதாக ஏற்பட்டிருக்கிறது. அதற்குச் செலவு குறைவுதான்; அதனால் ஒன்றும் பாதிக்கப்போவதில்லை என்றாலும் புதிதாக டிபார்ட்மெண்ட் தோற்றுவிக்க வேண்டுமென்றால் அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டிலே 52,600 ரூபாய் ஸ்டாக் குறைவுக்காக கோரியிருக்கிறார்கள். 52,600 ரூபாய் என்பது குறைந்த தொகை அல்ல. இவ்வளவு தொகை எப்படி வந்தது என்பதைப் பரிசீலிக்கவேண்டும். அதற்குப் பதில் சொல்லவேண்டும்.

இங்கு நாம் எல்லாம் இந்த நாட்டிலே சோஷலிஸம்தான் வர வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம், ஒரு சிலரைத் தவிர. ஆட்சியிலே இருக்கிறவர்கள் அதை ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். சோஷலிஸத்தை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாக நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்காக நான் இந்த நேரத்திலே ஒரு சிறிய ஆலோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை அடுத்த ஆண்டாவது அமல்படுத்த அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய நாடு விவசாய நாடு. எந்த சோஷலிஸம் வந்தாலும் அது விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்டுதான் வரமுடியும். நம்முடைய மாநிலத்திலே தரிசு நிலங்கள் சாகுபடிக்கு லாயக்காக இருந்தால், சேர்ந்தாற்போலுள்ள 15,000 ஏக்கர் நிலங்களை எடுத்து ஐந்தாறு ஏக்கருக்கு ஒரு குடும்பம் வீதம் விவசாயிகளை அங்கே குடியேற்றி சோஷலிஸம் என்றால் எப்படி இருக்கும் என்பதை அங்கு நடத்திக் காண்பிக்கவேண்டும் என்பது என்னுடைய அவா.

11-30 மு.ப. அதற்கு சாவரின் ஸ்டேட் பவர் கிடையாது. நம்முடைய அதிகாரத்துக்கு உட்பட்ட ஸ்டேட் ஆக வைத்து, சோஷலிஸ்ட் ஸ்டேட் என்றால் மக்கள் எப்படி இருப்பார்கள், விவசாய முறை எப்படி இருக்கும், பொருளாதார அபிவிருத்தி எப்படி இருக்கும், வருவாயை எப்படிப் பகிர்ந்து கொள்ளுகிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் செயல்படுத்த வேண்டும். இரண்டாயிரம் குடும்பங்களைக் குடியேற்றலாம். அந்த இரண்டாயிரம் குடும்பங்களுக்குத் தேவையான சாமான்களை எல்லாம் அங்கேயே உற்பத்திசெய்ய வேண்டும். பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் சர்வதேச நகர் ஒன்று செயல்படுவதுபோல் சோஷலிஸ்ட் ஸ்டேட் என்று ஏற்படுத்த வேண்டும். மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கொள்கையை என்னுடைய கட்சி மனப்பூர்வமாக ஆதரிக்கிறது. மத்தியைப் பலகீனப்படுத்தாமல் எந்த அளவுக்கு அதிகாரங்களை எடுத்துக் கொள்வது என்பதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு கமிட்டி போட்டுப் பரிசீலிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரவேண்டுமென்ற கருத்தை உடையவர்களை மட்டுமல்லாது, அப்படி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கக்கூடாது என்ற கருத்துடையவர்களையும் சேர்த்துக்கொண்டால்தான் அப்பேர்பட்டவர்களுடைய கருத்தையும் அறிந்து முடிவு எடுத்துக்கொள்ள வேண்டும், அரசியல் சட்டத்துக்கான டிராப்ட் திருத்த மாதிரி ஒன்றைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நியூ சர்வீஸ் ஸ்கீமுக்காக 72 லட்ச ரூபாய் கன்டின்ஜென்சி பணத்தில் இருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் செலவில் ஒரு ரோடு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். பதினைந்தாயிரம் மக்களுக்குண்டான பாதை வசதி அதனால் ஏற்படும். பத்தாயிரம் ஏக்கர் இரு போகச் சாகுபடி செய்யக்கூடிய பகுதி. தற்போது வண்டிகள் போக முடியாத நிலை. அந்த பின்னையூர்—ஏனாதி ரோட்டைப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகப்பட்டினம், தூத்துக்குடி அரசாங்கத் துரித வண்டி அதிராம்பட்டிணம் வழியாகப் போகவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. இரா. மாணிக்கவாசகம்:** தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

“ விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி.”

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப, இன்று எங்கு பார்த்தாலும் பசியின் தன்மையையும், தண்ணீரில்லாக் கொடுமையையும் காணுகின்றோம். அந்த நிலையிலே கோவை மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருப்பதை உணர்கின்றோம். இது இன்று ஏற்பட்ட நிலை அல்ல. நீண்ட நெடுங்காலமாகவே அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை மிகவும் சிரமமான ஒன்றாகவே இருந்து வருகிறது. அந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான பரிகாரம் தேடவேண்டுமென்றால் முன்பு பேசப்பட்டு வந்த முறையில் கங்கை நீரை இந்தப் பகுதிக்குக் கொண்டு வரவேண்டும். அந்த முயற்சியில் அரசு தீவிரமாகவும், திடமாகவும் செயல்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது ஏற்படுத்துகிற நிவாரணங்கள் எல்லாம் சிறிது காலத்திற்கே பயன்படும் நிலைமையில் இருக்கிறது. நாட்டு ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறார்கள், ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறார்கள். கேரளாவில் இருக்கும் உபரி தண்ணீரை, ஆந்திரத்தில், மைசூரில் இருக்கும் உபரி தண்ணீரை எல்லாம் பயன்படுத்தும் வகையில் திட்டமிட்டு நிறைவேற்றினால்தான் உண்மையிலேயே ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும். அதற்கான வழிவகைகளைச் செய்ய அமைச்சரவை முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் 150 அடி, 200 அடி அளவுக்கு வெறும் பாறைகளை உடைத்து எடுத்த பிறகு கூட தண்ணீரைக் காண முடியாத நிலைதான் இருக்கிறது. அப்படி இருந்தும் என்ன காரணத்தாலோ கோவை மாவட்டத்திற்குப் பஞ்ச நிவாரண நிதி மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் மிகக் குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இங்கே வருகின்றபோது அந்தப் பகுதியைப் பார்க்க வரவேண்டும். நேரம் இல்லாவிட்டாலும்கூட, முதலமைச்சர் அவர்களும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களும் வந்து அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் எங்கு பார்த்தாலும் தண்ணீர் இல்லாத காரணத்தால் அங்குள்ள மக்கள் வாடுகின்ற நிலைமையில் அந்தப் பகுதியில் கடன் வசூல்களை ஒத்தி வைக்க வேண்டும். தொண்டாமுத்தூரைத் தவிர மற்றப் பகுதிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே வேதனைப்படுகிறேன். என்ன காரணத்தாலோ அந்தப் பகுதியைச் சிறப்புடையதாகக் கருதியிருக்கிறார்கள். அதிகாரப் பற்றற்ற ஒரு குழுவை அமைத்து அந்தப் பகுதியைப் பற்றிக் கணிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

கோவை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை சென்ற அரசாலேயே பரிசீலிக்கப்பட்டு பேச்சு வார்த்தை நடைபெற்றிருக்கிறது. அதிலே ஏனோ தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே பல அலுவல்கள் மேலும் மேலும் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. அந்த மாவட்டத்தின் அலுவல்கள் சீராக நடைபெறவும் பொதுமக்களின் நன்மைக்காகவும் விரைவில் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நேரம் குறைவாக இருப்பதால் இரண்டொரு கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன். மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறவர்களிடம் டெபாசிட் தொகை கேட்கப்படுகிறது. கட்டாயப்படுத்துகிறார்கள். இந்த நேரத்தில் டெபாசிட் தொகையை வசூலிக்காமல் அடுத்த ஆண்டு வசூலிக்கும் முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிணறுகளை வெட்டும்போது பெரும்பகுதி பாறைகளாக இருப்பதால் மருந்து வைத்து வெடித்து பாறைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கான மருந்து தோட்டாக்களை சென்னைக்கு வந்து, 300, 350 மைல் தூரம் வந்து வாங்க வேண்டியிருப்பதால் அதை வாங்கிச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. அப்படி வந்தவுடனே கிடைக்கக்கூடிய நிலையும் இல்லை. ஆகவே அந்தந்த மாவட்டங்களிலேயே அந்த மருந்துகள் கிடைப்பதற்கான வழியை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். கருப்பையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968-69ம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு எங்கு பார்த்தாலும் வறட்சி, தண்ணீர்ப் பற்றுக்குறை என்று எங்கு பார்த்தாலும் பரவலாகப் பேசப்படுகிறது. அரியலூர், உடையார்பாளையம் தாலுகாவில் அதிகமான தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் இல்லாத காரணத்தால் சாகுபடி செய்தவர்கள் மாடுகளை விட்டுப் பயிர்களை மேய்க்கும் நிலை இருக்கிறது. அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. அதற்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். அதற்காக சென்ற காங்கிரஸ் சர்க்கார் ஜேடர்பாளையம் திட்டத்தை ஏற்படுத்தி காவிரியிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து, அரியலூர், உடையார்பாளையம் ஆகிய தாலுகாக்களில் பாசன வசதி செய்து தரவேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்கள். இந்த அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விடாது நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

குடிதண்ணீரைப் பொறுத்தவரையில் அரியலூருக்கு அருகாமையில் கொள்ளிடம் ஓடுகிறது. ஏறக்குறைய 15 மைல்தான். அந்த 15 மைல் தூரத்திலுள்ள கொள்ளிடத்திலிருந்து அரியலூருக்குக் குடிதண்ணீர் கொண்டுவந்து கொடுக்க முடியும். கொள்ளிடத்தில் எப்போதும் தண்ணீர் வற்றுவது இல்லை. ஆகவே பதினைந்து மைல் தூரத்திலுள்ள கொள்ளிடத்தில் இருந்து தண்ணீரை அரியலூருக்குக் கொண்டு வந்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அரியலூரில் அடிக்கடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. எங்கள் பகுதியில் கோடைகாலம் ஆரம்பமாகி இரண்டு மூன்று மாதங்கள் ஆகின்றன. அந்தப்பகுதிகளில் குளங்களிலும் தண்ணீர் இல்லை, கிணறுகளிலும் தண்ணீர் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிக்கு நிரந்தரமாக தண்ணீர் கிடைப்பதற்கான





ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த வறட்சி நிலவும் பகுதிகளில் வசூல்கள் கெடுபிடியாக நடந்து வருகிறது. சிறு சேமிப்பு மூலம் நடைபெறுகிற வசூல் காரணமாக ஏழைக் குடியானவர்களும், விவசாயிகளும், கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை மூலம் விடுத்துள்ள செய்தி மிகப் பயங்கரமாக இருக்கிறது. அந்தச் சுற்றறிக்கையை உதவி சபாநாயகர் அவர்களே, உங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

"உங்கள் கோட்டத்தில் வசூலில் ஈடுபடும் ஒவ்வொரு அதிகாரிக்கும் அவரவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்தத் தவறினால் அதன் விளைவுகள் விரும்பத்தகாததாய் இருக்கும் என்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீங்கள் கண்டிப்பாய் அறிவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்...........

நகல் எல்லா தாசில்தார்களுக்கும் கமிஷனர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

'இந்தக் குறை கூற்றைப் பார்க்க நீங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். அப்படியும் சரிக்கட்டாவிட்டால் தண்டனையும், டிவிஷனுக்கு உங்களால் இழுக்கும் உண்டாக வேண்டுமென்றும் இருந்தால் நீங்கள் எந்த தண்டனைக்கும் தப்ப முடியாது. நீங்கள் உங்கள் கீழ் வேலை பார்ப்பவர்களிடம் சலுகையுடன் இருந்தால், தண்டனை அடையும் பொறுப்பு பூராவும் உங்களுடையதே. ஆகவே குறையின்றி குறியீட்டை நிறைவு அடைய பாடுபடுவீர்கள். கோட்டத்துக்கு மாசு உண்டாக்காதீர்கள்" என்றிருக்கிறது. இது, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் நே. மு. ந.க.ஆர். 26. 27217/68 தேதி 22—2—69-ன் நகல் அரியலூர் கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டது. இந்த அறிக்கை ஆபீசர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே அங்குள்ள கமிஷனர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் விவசாயிகளைக் கொடுமைப்படுத்தி வசூல் செய்கிறார்கள். இதுபோன்ற கெடுபிடி வசூல்களை எங்கள் பகுதிகளைப் போன்ற பின்தங்கிய பகுதிகளில் செய்யாமல் இருப்பது நல்லது.

திருமழப்பாடியில் ஒரு சர்க்கரை ஆலை துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் விளையும் கரும்பை கொத்தாரி ஆலையினர் எடுக்க மறுக்கிறார்கள். அது எங்களுக்கும் சௌகரியமாக இல்லை. ஆகவே திருமழப்பாடியில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதினால் சர்க்கரை உற்பத்தியும் பெருகும். ஆகவே அங்கு ஒரு சர்க்கரை ஆலை நிறுவப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வித்துக்கள் தகுந்த காலத்தில் கொடுக்கப்பட வேண்டும். இப்போது நல்ல விதைகள் கிடைக்கிறது என்றிருந்தாலும் அதை காலதாமதமாகக் கொடுப்பதினால் விவசாயிகள் அதை வாங்கி உபயோகித்து அதன் பலனைப் பெற முடிவதில்லை. ஆகவே விவசாய ஸீஸன் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே இதுபோன்ற விதைகளை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் வசதியாக இருக்கும். திருச்சியில் இந்த C.O. 29 காலதாமதமாகக் கிடைத்த காரணத்தினால் பாதகம் ஏற்பட்டது. ஆகவே இது போன்ற பாதகங்கள் ஏற்படாமல் விதைகள், உரங்கள் போன்றவை காலத்திலேயே விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தெலுங்கில் உரையாற்றினார்கள்.)

### (8) நடைமுறைக் கேள்வி

#### ஓர் உறுப்பினருடைய தெலுங்கு உரையைக் குறிப்பெடுத்தல் குறித்து

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், நண்பர் திரு. வெங்கடசாமி அவர்கள் பேசிய தெலுங்கு வார்த்தைகள் எங்களுக்குப் புரியவில்லை. அது அமைச்சரவர்களுக்குப் புரியுமா ? இது சட்டசபை நடவடிக்கைக் குறிப்பில் எடுக்கப்பட்டிருக்கிறதா ? ஏனென்றால், அவர்கள் எங்கள் ஜில்லாக்காரர், பக்கத்துத் தாலுக்காக்காரர், அதனால் எங்களுக்கும் பலன் உண்டு. நன்மை உண்டு. அவர்கள் சொன்ன விவரங்கள் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதற்கு இதுவல்ல நேரம். அவர் பேச ஆரம்பித்தவுடனேயே கேட்டிருந்தால் பதில் சொல்ல முடியும். அவர்கள் பேசுவதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தீர்கள், இப்போது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறீர்கள் ? இதற்கு முன்னாலேயே கூட்ட நடவடிக்கையில் சொந்த தாய்மொழியிலேயே பேசியிருக்கிறார்கள். அப்படி கன்வென்ஷன் இருக்கிறது.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** கூட்ட நடவடிக்கையில் இருப்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை, இப்பொழுது தெரிந்துகொண்டோம். ஏன் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் எங்கள் ஜில்லா, பக்கத்துத் தாலுக்கா, அவர்கள் பேசிய விவரங்களுக்கு முக்கியத்துவம் இருக்கும். அமைச்சரவர்களுக்கு அது தெரியுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டசபை நடைமுறை விதி முறைகளில் விதி 61-ஐப் பாருங்கள்.

### (9) தன்னிலை விளக்கம்.

தெலுங்கில்தான் ஆற்றிய உரைகள் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இடம்பெறாதது குறித்து திரு. பி. வெங்கடசாமி அவர்களின் விளக்கம்.

THIRU B. VENKATASWAMY : On a point of personal explanation, Sir, This is an important point. I want a ruling from the Chair. My speeches in Telugu are not recorded and not printed in the minutes. I am even deprived of my right as a member in the Assembly.

MR. DEPUTY SPEAKER : As per rules you should have given the substance of your speech even before you participated in the discussion.

THIRU B. VENKATASWAMY : What I am going to express I cannot anticipate. In a mood I may change the subject. After the speech only I can give the script.

MR. DEPUTY SPEAKER : That cannot be permitted.

THIRU B. VENKATASWAMY : If I give the gist of my speeches in advance, will you include the speeches in the proceedings ?

MR. DEPUTY SPEAKER : Yes.



THIRU B. VENKATASWAMY : After delivering speeches, I have given the script of my speeches in Telugu. At least you should record the speeches whose Telugu scripts I have given to the Secretary.

MR. DEPUTY SPEAKER : You should give the translation of your sp-ech in English, not in Telugu.

THIRU K. S. KOTHANDARAMIAH: The Linguistic Minorities Commission has said that important documents and Government orders concerning the people may be given in Telugu also. Government of Madras have also accepted that recommendation. So I request the Hon. Speaker to show sympathy and, in pursuance of that recommendation, permit the printing of Telugu speeches in the Official Report. Previously they were doing it. In the interest of the people at least you can do that.

### (7) 1968-69-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய உதவி தலைவர் அவர்களே, நிதியமைச்சரவர்கள் கொண்டு வரக்கூடிய துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வருகிறேன். நமது தமிழ் நாட்டில் பெரும் பகுதியான பிரதேசங்களில் மழையும், தண்ணீரும் இல்லாத காரணத்தினால் பெரிய அளவிற்கு வறட்சி ஏற்பட்டு, இன்றைய தினம் வறட்சி ஏற்படக்கூடிய பிரதேசங்களில் இருக்கக்கூடிய மக்களை எவ்வாறு பாதிக்கிறது என்ற ஒரு ஐயப்பாட்டில் இருந்துகொண்டிருக்கிறோம். அவ்வாறிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் நம்முடைய அரசு பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்தினால் ஒழிய மத்திய அரசிடமிருந்து கோரியிருக்கக்கூடிய 1 லட்சம் டன் உணவையும், 20 கோடி ரூபாயையும் பெறுவதற்கு முடியாது. அதற்காகத்தான் மன்ற அங்கத்தினர்கள், பஞ்சப் பிரதேசம் என்று அறிவியுங்கள் என்று சொல்லுகிறார்கள். இன்றைய தினம் கால்நடைகளையெல்லாம் விலை கூறுகின்ற ஒரு ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீரே இல்லை என்று சொன்னால் மக்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்துவார்கள் ? ஆகவே, இதை மிகப் பிரதானமான அவசரமான வேலையாகக் கருதி, எத்தனை கோடி ரூபாய் செலவழிந்தாலும் எல்லாத் தொகையையும் மத்திய சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களையும் அழைத்து அவர்களுடைய ஆலோசனைகளையெல்லாம் பெற்று, அதன்மூலமாக மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய தொகைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இம்மாதிரி பஞ்சப் பிரதேசம் என்ற நிலை ஏற்படுவதற்குத் தண்ணீர் இல்லாததுதான் காரணமாக இருக்கிறது. தண்ணீர் இல்லை என்று சொன்னால் கீழ் ஊற்றைப் பயன்படுத்த முடியும். கீழ் ஊற்றைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு வசதி இருக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். 200, 250, அல்லது 300 அடி ஆழத்தில் கிடைக்கின்ற கீழ் ஊற்று நீர்களை எடுத்து விவசாயத்திற்குக் கொண்டு வருவதன் மூலமாகத்தான் தண்ணீர் பற்றாக்குறையையும் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் போக்குவதற்கு முடியும். அந்த முறையில் ஒரு விரிவான திட்டத்தை அரசு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்றைய தினம் தஞ்சை மாவட்டம் உபரியான மாவட்டம் என்பது நமக்குத் தெரியும். அந்த மாவட்டத்தில்கூட மானாவாரி பிரதேசம் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அங்கு மழையில்லாத காரணத்தினால் அவர்கள் விவசாயம் செய்திருந்த பூமிகளெல்லாம் பாதிக்கப்பட்டு அங்குள்ள ஏழை மக்கள் வாழ்வதற்கு, வாழ்க்கை நடத்துவதற்கு வகையில்லாத ஒரு நிலையில் இருந்துகொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டிய திட்டங்களை அரசு தயாரிக்க வேண்டும். அவ்வாறு தயாரிப்பதன் மூலமாக, அங்கே வேலையில்லாதிருக்கின்ற அந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து அந்த மக்களுடைய வாழ்க்கையிலே ஒரு மாற்றத்தைஏற்படுத்துவதற்கு முடியுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வடவாறு பாசனத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அந்தத்திட்டம் அமலுக்குக் கொண்டு வராமல் வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக ஒரு 15 கிராமங்கள், திருமக்காட்டைச்சுற்றி 50,000 ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு வழிவகை செய்வதன்மூலம், வீணாகப் போகும் நீரை வடவாற்றில் விடுவதன் மூலமாக, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக 50,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுத்தால் பல லட்சக் கணக்கான டன்கள் உற்பத்தி செய்ய முடியும். அந்த முறையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மற்றொன்று, இன்றைய தினம், அதிகாரிகள் திட்டங்கள் தயாரிக்கப்பட்ட பிறகும் கூட அவைகளை நிறைவேற்றாமல் அவ்வாறே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கூத்தாநல்லூரையும் பக்கத்தில் இருக்கக்கூடிய கிராமங்களையும் இணைக்கின்ற முறையிலே, இடையிலே செல்கின்ற வெண்ணாறு, அதிவீரராமனாறு இரண்டையும் ஒன்றாக இணைத்து, ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர், மேம்பாலத்தைக் கட்டுவதன் மூலமாக பல ஆயிரக் கணக்கான நிலங்களுக்கு, ஆற்று நீரைத் தேக்கி பாசனத்திற்குக் கொடுக்க முடியும். அவ்வாறு கொடுக்க முடியுமென்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. ஆகக்கூடிய செலவில் நான்கில் ஒரு பகுதியை விவசாயிகள் தருகிறேன் என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக, 50,000 ரூபாய் நாங்கள் பங்குத் தொகையாகத் தருகிறோம் என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். ஆனால், அரசாங்கத்திலிருந்து, அதிகாரிகள், ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமென்று சொல்லுகிறார்கள். விவசாயிகளே முன்வந்து, 50,000 ரூபாய் தருகிறேன்: என்று சொல்லக்கூடிய நேரத்தில் அதை வரவேற்று, அந்தத் தொகையைப் பெற்று வேலையை முடிப்பதற்குப் பதிலாக, இல்லையென்பதற்குப் பதிலாக இன்று லட்ச ரூபாய் தந்தால்தான் செய்து கொடுப்பேன் என்று சொல்வது நியாயத்திற்குப் புறம்பானதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகின்றேன்.

ஹரிஜன முன்னேற்றத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வீடு கட்ட வாங்கி, தரிசாகவே கிடக்கிறது. சில நபர்கள் அந்த நிலத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அப்படி ஆக்கிரமித்து வைத்திருக்கக்கூடியவர்களை அகற்றி தரிசாக இருக்கக்கூடிய நிலங்களையும், அவர்களுக்காக வாங்கி ஒதுக்கப்பட்டிருக்கும் நிலங்களையும் அரசாங்கச் செலவிலேயே தூர்த்து வீடு கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பல லட்சம் ரூபாய்கள் தேவையில்லாமல் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகைக்கு ஆதாயம் தரக்கூடிய அளவுக்கு அந்த இடங்களிலெல்லாம் வீடு கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நில ஆர்ஜித விஷயத்தில் ஏதோ ஒரு காலத்தில் செய்த சட்டங்களை வைத்துக்கொண்டு இன்று அரசாங்கத்திற்குத் தேவையாக, சமூகத்திற்குத் தேவையாக இருக்கக்கூடிய நிலங்களை எடுக்கின்றபொழுது அது சட்டப்படி செல்லாது என்று கோர்ட்டுகளிலே வழக்காடி தீர்ப்பு வாங்கி விடுகிறார்கள்.





ஆகவே, மனித சமுதாயத்திற்கு தேவையில்லாத ஒரு நிலை ஏற்படுகிறது. அவ்வாறு சமுதாயத்திற்குத் தேவை என்று சொல்கின்ற நேரத்தில் எடுத்துக் கொள்ளக்கூடிய அதிகாரத்தை நமது அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமானால நில ஆர்ஜித சட்டத்தை நல்ல முறையிலே திருத்தம் செய்து, தேவைப்பட்ட பொழுது எடுத்துக்கொள்ளுவதற்குரிய அதிகாரங்களை அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை போன்ற மாவட்டங்களில் விவசாயிகள் 6 மாதங்களுக்கு எந்த வேலையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். 6 மாத காலம்தான் விவசாய வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எஞ்சியிருக்கக்கூடிய 6 மாத காலம் வேலை செய்வதற்கு கோடைக்கால விவசாயம் செய்வதற்குரிய முறையிலே தஞ்சை மாவட்டத்திலே நீரூற்றுக்களைக் கண்டுபிடித்து, வெட்டியிருக்கின்ற கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்து, கோடைக் காலத்தில் அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் விவசாயம் செய்யக்கூடிய நிலையை அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. டி. **அண்ணாமலை** : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்த 1968–69-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையின் மீது இரண்டொரு கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இந்த நிதிக் கோரிக்கை தற்போது மிகச் சிறப்பாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் இன்னும் கீழ்க்காணுகின்ற இரண்டொரு குறைகளை தவிர்ப்பதற்கு வழி செய்தால் மிக நன்றாகஇருக்கு மென்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் தற்போதைய நிதிநிலை அறிக்கைக்கு சிறப்பான கருத்துக்களை எடுத்துக்கூறி இருக்கிறார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதி குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலே சென்ற சில ஆண்டு காலமாக உயர்நிலைப் பள்ளிகள் அதிகமாக துவக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமின்றி எல்லோருக்கும் இலவசமான கல்வி என்ற காரணத்தால் மாணவர்கள் அதிகமாக பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் கல்லூரிப் படிப்புக்கு வருகின்றபொழுது அவர்களுக்குக் கல்லூரியிலே இடம் ஒதுக்கப்படுவதில்லை. இரண்டாவது, ஹாஸ்டல்களிலே வசதிகள் இல்லை. மூன்றாவது மானியங்கள், ஸ்காலர்ஷிப் அவர்களுக்கு அதிகமாக வழங்க ஏற்பாடு செய்யப்படவில்லை. எங்கெங்கு மாணவர்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்களோ அந்த நிலைமைகளுக்கேற்றவாறு அந்த நிதியை சேர்த்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வந்தவாசி தாலுகாவில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இருந்த இடத்திலே தற்போது இருபத்திரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன அவ்வளவு அதிகமாகப் பள்ளிகளுக்கு தனிக்கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பில்லாத நிலை இருக்கிறது. அதற்காக "மாச்சிங் கிராண்ட்ஸ்" "ஸயன்ஸ் கிராண்ட்ஸ்" கொடுக்கப்படுவது முன்பிருந்த அதே நிலையிலே இருக்கிறதே, அதற்காக அதிகமாக ஒதுக்கப்படுவது அவசியமென்று தெரிவித்துக் கொள்கிறேன் இந்த மாச்சிங் கிராண்ட்ஸையும் ஸயன்ஸ் கிராண்ட்ஸையும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பக்கத்திலே நூல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். கிராமத்திலுள்ள மாணவர்கள் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக பள்ளிகளுக்கு பக்கத்திலேயே நூல் நிலையங்கள் இருக்கவேண்டும். சில வகுப்புகளிலே 40, 45 மாணவர்கள் இருக்கிறார்கள். டீச்சர்ஸ், ஸ்டூடெண்ட்ஸ் ரேஷியோவை 1:25 அல்லது 1:30 என்று ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கல்லூரிகள், பயிற்சிப் பள்ளிகள் விஷயத்திலே மாணவர்களைச் சேர்க்கின்றபொழுது அந்த அந்த வட்டாரத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட்டி, அவர்களையும் ஓர் உறுப்பினராக சேர்த்து, அவர்களுக்கு வாய்ப்பளித்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். இல்லாவிட்டால், ஏதோ அதிகாரிகளை வைத்துவிட்டால், அவர்களுக்குத் தேவையானவர்களை, மார்க்குகள், சான்றிதழ் என்று எடுத்துக்கொண்டு விடுவார்கள். அதனால் மிகமிக ஏழை எளிமையான குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எனவே பயிற்சிப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் சேர்க்கின்றபொழுது அந்தப் பகுதியிலே இருக்கிற வட்டார சட்டமன்ற உறுப்பினரையும் ஓர் உறுப்பினராகச் சேர்த்து வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்திலே பஞ்சம் தலை விரித்தாடுகின்றது.

"தானம் தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்"

என்று வள்ளுவர் கூறிய முறைக்கேற்ப நாட்டிலே எந்த வளர்ச்சியும் பெற முடியவில்லை. தமிழகத்திலே இருக்கிற அரசு முயன்று சிறந்த காரியங்களைச் செய்த போதிலும் அவைகள் பரிமளிக்கமுடியவில்லை. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் பண்டைக் காலத்தில் வெள்ளையன் ஆண்டபொழுது வீரபாண்டிய கட்டபொம்மன், "வானம் பொழிகிறது. பூமி விளைகிறது, உனக்கேன் தீர்வை" என்று அடிமை நாட்டிலே கூறினான். இப்பொழுது வெள்ளையர்கள் சென்று, மாற்றுக் கட்சியாக இருந்த காங்கிரஸ்காரர்கள் சென்று, துரத்தப்பட்டு நம்முடைய அரசு இருக்கிறது. அரசினுடைய எண்ணங்களை எல்லாம் அறிந்துகொண்டு திறமையாகச் செயல்பட வேண்டியவர்கள் நம்முடைய ரெவின்யூ அதிகாரிகள். அவர்கள் திறமையாகச் செயல்படுவதாகத் தான் எண்ணுகிறார்கள். ஆனால் திறமையாக இல்லையென்று வருத்தத்தோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பருவ மழை பெய்யவில்லை. ஆறு, கால்வாய்களில் தண்ணீர் ஓடவில்லை, ஏரிகளில் தண்ணீர் இல்லை, பயிர்கள் விளையவில்லை, உணவுப் பொருள்கள் அறுவடை இல்லை. இவ்வளவு இருந்தாலும் கூட, எடுத்துக்கொடு என்று கேட்கிறார்கள். தன்னிடத்திலே இருக்கிற விதையை நிலத்திலே போட்டான் உழவன், உழுதான், சாவியாகிவிட்டது. இப்பொழுது செஸ் கொடு, ரோட் ஃபண்ட் கொடு என்று கேட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள். கலெக்டர்களிடத்திலே கேட்டபொழுது, வற்புறுத்திக் கேட்கமாட்டார்கள், சும்மா கேட்டிருக்கிறார்கள், கொடுத்தால் கொடுக்கட்டும் கொடுக்காவிட்டால் போகட்டும் என்ற நிலைமையே தவிர, வேறு இல்லை என்று சொல்கிறார்கள்.

வந்தவாசி, செய்யார் தாலூகாவையெல்லாம் பஞ்சப் பிரதேசமாக பிரகடனப் படுத்தவேண்டும். அந்தப் பகுதியிலே ஏற்கெனவே, மீண்டும் மழை, புயல் அடித்த காரணத்தால் நிறைய சேதாரம் ஏற்பட்டு, ஏரிகள் பாழாய்ப் போயிருக்கின்றன. அவைகளுக்கு மிகமிகக் குறைவாக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ஏனைய அமைச்சர்களும் மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களிடம் 5 கோடி கேட்டிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். ஆனால் நம்முடைய நாட்டுக்கு 5 கோடி போதாது. (மணி அடிக்கப்பட்டது) சுமார் 25 கோடி பஞ்ச நிவாரண வேலைகளுக்காக அவர்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கிராமப் புறங்களிலே இருக்கிற ஏழை விவசாயிகளுக்கு அரிசி கிடையாது.

வட ஆற்காடு மாவட்டத்திலே தீவிர கொள்முதல் திட்டத்தின்கீழ் அக்டோபர் 31, 1968-வரை அரிசி வைத்துக்கொண்டு மற்ற ஏனைய உபரிகளை எல்லாம் எடுத்துக்கொண்டு விட்டார்கள். சர்க்காருக்குக் கொடுத்து விட்டார்கள் எல்லாவற்றையும். இந்த நேரத்திலே அவர்களிடத்திலே அரிசி இல்லை. அவர்களைப் பார்த்து அரசாங்கம் கோதுமை



சாப்பிடு என்று சொல்லுகிறார்கள். உண்மை தான். நம்முடைய நாட்டிலே கோதுமை "ஸ்டேபிள் ஃபுட்" அல்ல, அரிசிதான் பிரதான உணவுப் பொருள். அரிசி இருந்தால், ஒரு வேளை உணவுக்கு, கொதிக்கவைத்து உப்பு போட்டு, மிளகாய் வைத்துக் கடித்துக்கொண்டு சாப்பிடலாம். அதைக் கொண்டு நாளைப் போக்கி விடுவான். அதாவது அது சீப் லிவிங். ஆனால் அரசு சொல்கின்ற கோதுமைக்கு அதிக செலவாகிறது' காலையிலே பூரி, நண்பகலிலே பூரி, இரவிலே பூரி, எப்பொழுதும் பூரி, பூரி பூரி என்று பூரியையே சாப்பிட்டுக்கொண்டிருக்க முடியுமா என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

தமிழகத்திலே கைத்தறி துணி தேங்கி இருக்கிறது. பர்மாவிலே நிறைய அரிசி இருக்கிறது. தேங்கியிருக்கிற துணியை கொடுத்தால், பர்மாவிலே இருக்கிறவர்கள் அரிசி கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று நிபுணர்கள் கூறி இருக்கிறார்கள் என்னிடத்திலே. இது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. எனவே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிற பஞ்சப் பகுதிகளுக்கு எப்படியாவது சோறு கொடுத்தாகவேண்டும். 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி அரிசி விளைய முடியும். எனவே, அவர்கள் ஒரு லட்சம் டன் கேட்டார்கள். மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்களிடமும் மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களிடமும். அது போதாது, நமக்குப் போதாது. ஏழைகள் கிராமங்களில் இருக்கவேண்டும். நாம் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் அந்தப் பகுதிகளை எல்லாம் விட்டு நகரங்களுக்கு சென்றுவிடுவார்கள். எனவே, அந்த நிலைமையிலே எப்படி பயிரிடமுடியும். விவசாயி தொழிலாளி இல்லையென்றால் எப்படி பயிரிட முடியும்? எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களிடமும், மத்திய அரசிடமும் எடுத்துக் கூறி, எப்படியாவது 5 இலட்சம் டன் அரிசியும், 25 கோடி ரூபாயும் பஞ்ச நிவாரணத்திற்குக் கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கிராமப் புறங்களிலே பஞ்ச நிவாரண வேலைகளுக்கு நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமின்றி, குறைந்த விலையில் பொருள்கள் விற்கக்கூடிய கடைகளையும், கஞ்சித்தொட்டிகளையும் வைக்க வேண்டும். கஞ்சித் தொட்டி வைத்துக் காப்பாற்றினால் அவர்கள் பின்னால் உழைத்து கஷ்டப்பட்டு, வேலை செய்வார்கள். அங்கே இருக்கிற ஏழை தொழிலாளிகள், பாட்டாளிகள் விவசாயக் கூலிகள் அங்கிருந்து என்ன செய்வார்கள் அரிசியும் கிடைக்காத நிலையில். சர்க்காரினுடைய கொள்முதல் அதிகாரிகள் தீவிரமாக இருந்து உபரியாக இருப்பதைக்கொண்டு சென்று விடுகிறார்கள். எனவே, அவர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. முத்தையா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கையின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் "வானம் பொழியுது பூமி விளையுது உனக்கு ஏனடா கப்பம்" என்று வீரபாண்டிய கட்டபொம்மன் சொன்னார் என்று குறிப்பிட்டார்கள். எனது தொகுதியான ஒட்டப்பிடாரத்தில் பிறந்த கட்டபொம்மன் அந்த மாவீரர் தொகுதியிலிருந்து வந்த உறுப்பினர் என்ற முறையில் அவர்களைப் பெருமையோடும் சீரோடும் சிறப்போடும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனது தொகுதியிலே கோவில்பட்டிக்கு வந்திருந்த போர்டு மெம்பர் கனம் மணி அவர்களிடத்தில் எங்கள் கோவில்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம் வட்டாரம் மிகமிகப் பின்தங்கிய பகுதி அநேக கிராமத்தில் மழை இல்லாத காரணத்தினால் வறட்சி ஏற்பட்டு விவசாயம் செய்யாமல் அநேக இடங்களில் பஞ்சமாக இருக்கிறது. குடிக்க

[திரு. மு. முத்தையா] [1969 மார்ச் 27

தண்ணீர் இல்லை, அந்த அவல நிலையை போக்க வேண்டும், பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்யவேண்டும், அதற்குண்டான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த வட்டாரத்திலுள்ள பெருங்குடி மக்கள் சென்று கேட்டபொழுது, அவர்கள் என்ன சொன்னார்கள் ? அது மிகவும் வருந்தத்தக்க விஷயம், வருத்தப்படவேண்டிய விஷயம். "உங்கள் நிலைப்படி இருந்தால் நீங்கள் எங்காவது விளைநத காட்டுக்கு போகவேண்டும்" என்று சொன்னார்கள். விளைந்த காட்டிற்கு போக வேண்டும் என்று சொன்னால், இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் எங்கு பார்த்தாலும் பஞ்சம் என்ற ஒரு சொல்தான் நீடித்திருக்கிறது. அப்படி பஞ்ச நிலை இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு நிரந்தரக் காட்டிற்கு, அந்த நாட்டுக்கு இவர்களே தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும் என்று கனம் போர்டு மெம்பர் அவர்களை மிகவும் வருத்தத்தோடு கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரத்தைச் சுற்றியுள்ள 18 கிராமங்களில் இன்னும் விதைப்புகூட ஆகவில்லை. அப்படிப்பட்ட ஒரு இடத்திலிருந்து "நீங்கள் விளைந்த காட்டிற்குப் போங்கள்" என்று அவர்கள் எப்படித் துணிச்சலோடு சொல்லலாம் என்று மிகவும் வருத்தப் பட்டுசசொல்கிறேன்.

எனது தொகுதி ஒட்டப்பிடாரம் தொகுதி. கோவில்பட்டித் தாலூகாவை சேர்ந்தது. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் கோவில் பட்டித் தாலூக்கா மிகவும் பின் தங்கிய தொகுதி என்று அந்தப் பட்டியலில் அன்றே சேர்த்திருக்கிறார்கள். இன்று வரை அதற்கு விமோசனம் ஒன்றும் இல்லை. மிகவும் வருத்தப்படுகிறேன். அவர்கள் சொன்னார்கள் "எங்கள் காங்கிரஸ் ஆட்சி வந்தால் தேனாறு ஓடும், பாலாறு ஓடும்" என்றார்கள். அதை மக்களும் நம்பினார்கள். ஆனால் அவர்கள் ஆட்சியில் அப்படி ஓடவில்லை. அதற்காக நான் வருத்தப் பட்டுச் சொல்கிறேன். தேனாறும் பாலாறும் தெருவெல்லாம் ஓடும், நாம் அருந்தலாம் என்று மக்கள் ஆவலோடு இருந்தார்கள். ஆனால் அதே போல் அப்படி இல்லை, "வருகிறது, வருகிறது, கள்ளாறு சிறு பாசனத் திட்டம் சங்கரன்கோவில் வழியாக கிரியாறு திட்டம் வருகிறது. சங்கரன்கோவில், கோவில்பட்டி வட்டாரம் செழிப்படையும், முன்னுக்கு வரும் என்று சொன்னார்கள். என்று தான் வரப்போகிறதோ ? எனக்கு ஆச்சர்யமாகத் தான் இருக்கிறது. இந்தத் திட்டம் என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. எங்கள் வட்டாரத்தில் இந்த அவல நிலையைப் போக்க வேண்டும். வட்டாரம் என்ன நிலையில் இருக்கிறது என்றால் அங்கே குடிப்பதற்கு குடி தண்ணீர் இருக்கிறதா என்றால் இல்லை. அதற்காக நமது அரசாங்கத்தின் ஒரு கமிட்டி போட்டு அந்த வட்டாரம் என்ன நிலையில் இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். எல்லோரும் சொல்கிறார்கள் "எங்கள் வட்டாரம் பஞ்சமாக இருக்கிறது, மழை இல்லை, தண்ணீர் இல்லை நாங்கள் கஷ்டப்படுகிறோம்" என்று சொல்கிறார்கள். நான் ஒன்று குறிப்பாகச் சொல்லிக்கொள்கிறேன். எல்லோரும் அப்படிச் சொல்வது வழக்கம். எனது வட்டாரத்தில் அரசாங்கம் ஒரு கமிட்டி போட்டு, கோவில்பட்டி வட்டாரத்தில் ஒட்டப்பிடாரம் எந்த நிலையில் இருக்கிறது என்று பரிசீலனை செய்து பஞ்சப் பிரதேசமாக இருந்தால், ஒப்புக்கொள்ளுங்கள் இல்லை என்றால் தள்ளி விடுங்கள். மற்றொன்றும் சொல்லிக்கொள்கிறேன். அங்கு கடன் வசூல் செய்வதை ஒத்திப் போடவேண்டும், தீர்வை வஜா செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஜாக்கிரதையாக, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆமை வேகத்தில் போகக்கூடாது இல்லையென்றால் மாடுகளையும், வெங்கலப் பாத்திரங்களையும் ஜப்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எனது தொகுதியில் சாலிக்குளம் என்ற பகுதி காட்டு இலாகாவைச் சேர்ந்தது. அங்கே காட்டு இலாகா நீண்டகாலமாக முந்திரிமரம் என்ற ஒரு மரத்தை வைத்துப் பயிர் செய்கிறார்கள். அந்த மரத்தினால் அரசாங்கத்திற்கு யாதொரு வருமானமும் இல்லை, அங்கே எத்தனை ஏக்கர் இருக்கிறதோ



1969 மார்ச் 27] [திரு. மு. முத்தையா]

அதை எல்லாம் உடனடியாக அங்குள்ள விவசாயிகளுக்கு பட்டா வழங்கினால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன். அடுத்து கழுகுமலையைச் சேர்ந்த கரடி குளம் பகுதியில் ஆயிரம் ஏக்கர் இன்று காட்டு இலாகாவைச் சேர்ந்தது. அதிலிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது பிரயோசனம் இருக்கிறதா என்றால் கிடையாது. அந்த இடத்தில் சாதாரணமாக 3 அடிக்கு கீழே பாறை இருக்கிறது. அங்கே ஏதோ ஒரு வகை மரம் வைக்கிறார்கள். 3 அடிக்கு கீழே பாறை இருப்பதால் வேர் எங்கே ஊன்றும்? எல்லாம் பட்டுப் போய் விடுகிறது. அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் வருகிறது. அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தி உடனடியாக நேரில் போய்ப் பார்த்து நான் சொல்வது பொய் அல்லது மெய் என்பதைத் தெரிந்து கொண்டு ஆவன செய்யவேண்டும். மேலும், கழுகுமலை, கயத்தாறு ஆஸ்பத்திரிகளில் மருந்து இருந்தால் டாக்டர் இல்லை, டாக்டர் இருந்தால் மருந்து இல்லை. இந்த அவல நிலை நீங்க வேண்டும். அரசே, இந்த ஆஸ்பத்திரிகளை ஏற்று நடத்த வேண்டும்.

மேலும் எனது வட்டாரத்தில் டூரிங் சினிமாக்களை தனியார்கள் நடத்துகிறார்கள். அந்த இடங்களில் நிலை எப்படி இருக்கிறது என்றால், எல்லோரும் கீழே போட்டிருக்கிற மணலில் உட்கார வேண்டும். பர்ஸ்டு ஷோவின்போது வெற்றிலை பாக்கு போட்டு துப்பி பீடி, சிகரெட் பிடித்து கீழே அசுத்தப்படுத்துகிறார்கள். அதற்குப் பிறகு அந்த இடத்தை பெருக்குகிறார்கள். உடனே செகண்டு ஷோவிற்கும் அங்கே தான் வந்து உட்காருகிறார்கள். இதனால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. எல்லா இடங்களிலும் பெஞ்சுகள் போட்டு உட்காருவதற்கு வசதி செய்து தரவேண்டும் என்று நிரந்தரமான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டும். அம்மாதிரி நிபந்தனை விதிக்கவேண்டும். அப்பொழுது தான் சுகாதாரக் கேடு இல்லாமல் இருக்கும். (மணி அடிக்கப்பட்டது) மேலும் எனது வட்டாரத்தில் கயத்தாறு........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கோ. பூவராகன்.

**திரு. மு. முத்தையா :** எனது வட்டாரத்தில் கயத்தாறு...........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஐந்து நிமிடம் தான் உண்டு. நீங்கள் 9 நிமிடம் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். நான் உட்காரச் சொன்னால் நீங்கள் தயவுசெய்து உட்கார வேண்டும்.

**திரு. கோ. பூவராகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இறுதி துணை மதிப்பீட்டின் பேரில் எனது ஒரு சில கருத்துகளை இங்கே சொல்ல இருக்கிறேன். இறுதித் துணை மதிபபீடு ரூ. 66 கோடிக்கு இன்றையதினம் நம் மத்தியிலே வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது துணை மதிப்பீடு ஏற்கெனவே ரூ. 25 கோடிக்கு வைக்கப் பட்டது. அதற்கு முன்னால் முதல் துணை மதிப்பீடு ஆறு கோடி ரூபாய்க்கு மேலே வைத்திருக்கிறார்கள். மொத்தம் 1968-69-ம் ஆண்டு துணை மதிப்பீடுகள் மட்டும் கிட்டத்தட்ட ரூ. 100 கோடிக்கு வந்திருக்கிறது. துணை மதிப்பீட்டைப் பார்க்கிறபொழுது, இனிமேல் முதல் மதிப்பீடே அவசியமில்லை. மார்ச்சு மாதத்தில் இந்த மன்றம் கூடி முதல் மதிப்பீட்டை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதக் கூடிய அளவுக்கு இன்றைய தினம் மன்றத்தில் துணை மதிப்பீடுகள் வந்திருப்பதை நாம் பார்க்கிறோம். ரூ. 100 கோடிக்கு துணை மதிப்பீடு என்று சொன்னால், துணை மதிப்பீடு தவிர்க்கமுடியாத ஒன்று என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அன்று நான் இதைப்பற்றிக் குற்றம் சொன்னபொழுது, மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். துணை மதிப்பீடு வரும், அப்படி வந்தாலும், ஒரு மூச்சு விடுகிற அந்த அளவுக்கு இடைவெளி இருக்கும்" என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் மொத்தத்தில் துணை மதிப்பீடு

[திரு. கோ. பூவராகன்] [1969 மார்ச் 27

ரூ. 100 கோடி அளவுக்கு வருகிறபொழுது, முதல் மதிப்பீட்டிற்கும், இடையே வைத்திருக்கிற துணை மதிப்பீட்டிற்கும் உள்ள தூரமோ மூச்சுவிடுகிற தூரம் அல்ல—கிட்டதட்ட 1,000 கிலோ மீட்டர் தூரம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு துணை மதிப்பீடு இருக்கிறது. துணை மதிப்பீடு தவிர்க்க முடியாத ஒன்று. அவசியம் ஏற்படுகிறபொழுது, அரசாங்கம் ஏற்கனவே இந்த மன்றத்தில் அனுமதியின்றி செலவிட்டுவிட்டு, பிறகு இந்த மன்றத்திற்கு வருகிறது அனுமதி பெறுவதற்கு எந்தக் காரியங்களுக்குச் செலவிட்டிருக்கிறார்கள்? எப்படிப்பட்ட காரியங்களுக்கு என்ன தனிப்பட்ட முறையில், தவிர்க்க முடியாத காரியங்களுக்காக, சட்டசபையின் முதல் மதிப்பீட்டிலேயே கொண்டு வரமுடியாமல், தவிர்க்கமுடியாத இனங்களில் செலவு செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், நிதி இலாகா ஒரு சிறந்த, நல்ல முறையில் சரியான சிறப்பு வாய்ந்த நிதி இலாகாவை வைத்திருந்தோம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்; இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால், பார்க்கும்போது 1967–68லேயே 70 கோடி ரூபாய்க்கு மேல் துணை மதிப்பீடு வந்தது: பின்னால் 1968–69-ல் 100 கோடி ரூபாய்க்கு வந்தால், நிதி இலாகா எவ்வாறு செயல்படுகிறது என்பது தெரியவரும். எந்தத் தலைப்புக்களின் கீழ் எப்படிப்பட்ட காரியங்களைக் கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள், என்பதைப் பார்த்தால், இல்லை, அவர்கள் சரியாக மதிப்பீடு செய்யவில்லை என்றுதான் தெரிகிறது. நல்ல ஸ்திர நிலைக்கு மாறாக வளைந்து வளைந்துபோகும் நிலையில்தான் நிதி இலாக்கா இருக்கிறது.

நிதி இருக்கிறதோ இல்லையோ, அதைப் பற்றிக் கவலையில்லை, எப்படி வேண்டுமானாலும், எந்த ஏற்பாட்டின் கீழும் வரலாம் என்ற முறையில் நிதி இலாகா போய்க்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது வருந்தத்தக்க ஒன்றாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ரிசர்வ் பாங்கியில் ஓவர்-டிராப்ட் வாங்கியாகிவிட்டது. பற்றாக்குறை இருக்கிறது, மேலும் வரி போட முடியவில்லை, இதெல்லாம் அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தும் இன்றைக்கு ரூ 100 கோடிக்கு துணை மதிப்பீடு வருகிறது. இப்படி ஒரு ஆண்டு காலத்தில் வந்தால், நிலைமை எப்படியாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சென்ற ஆண்டு ஒதுக்கினது ரூ. 247 கோடி. அதன் மேல் இந்த துணை மதிப்பீடுகள். இதையெல்லாம் பார்க்கும் உறுப்பினர்களுக்கு, நிதி அமைச்சர் தன்னுடைய பதிலில் எந்த அளவிற்கு நிலைமைகள் போய்க்கொண்டு இருக்கின்றன, சரியான முறையில் செல்லுகின்றதா என்பதைத் தெளிவாக்க வேண்டும். சொல்லக்கூடும், இவையெல்லாம் தவிர்க்க முடியாதவைகள் என்று தவிர்க்க முடியாத இனங்கள் என்றால் அவை எவை எவை? ஒரு ஆண்டு காலத்தில் என்ன ஏதாவது பெரிய புயல் அடித்து, தவிர்க்க முடியாத அளவில் திடீரென்று இன்ன இனங்களில் இத்தனை கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறோம் என்று சொல்லட்டும். பஞ்ச நிவாரணத்திற்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்யக்கூடிய அளவில் நிலைமைகள் தெரிந்திருந்தும். இன்றையதினம் மார்ச்சு மாதத்தில், சட்ட மன்றத்தில் பேசுகிறோக்கள். ஆனால், இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும் என்பது மூன்று நான்கு மாதங்களுக்கு முன்னதாகவே அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தும், என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள், எத்தனை கோடி ரூபாய்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்னென்ன காரியங்கள் மூன்று நான்கு மாதங்களில் முடிந்திருக்கின்றன என்பதை சொல்வார்களானால், அது வரவேற்கத்தக்க அளவில் இருக்கும் என்பதை இந்தச் சமயத்திலே சொல்ல விரும்புகிறேன்.

ரூ. 66 கோடியில், ஒரு கோடி ரூபாய்க்கு படிகள், பிரயாணப் படிகள், அமைச்சர்கள், அதிகாரிகள், மற்றவர்கள் என்ற வகையில் வந்திருக்கிறது. எப்படி வந்தது ? இது நிதி இலாகாவிற்கு அப்பாற்பட்டதா ? நிதி இலாகாக் கணிப்பிற்கு அப்பாற்பட்ட காரியங்கள் என்றால் அது சரியானது தானா ? ஒவ்வொன்றையும் பார்க்கும் போது, ஒவ்வொரு துறையிலும்,



1969 மார்ச் 27] [திரு. கோ. பூவராகன்]

பல்வேறு இனங்களிலும் நிதி இலாகா கவனிக்காமல் விட்டுவிட்டு எந்த நேரத்தில் வேண்டுமானாலும், செலவிட்டுவிட்டு, பின்னால் மன்றத்திற்கு வந்தால், அதை மன்றம் அனுமதித்து விடும் என்ற போக்கு இருப்பதாகத் தெரிகிறது, அது கண்டிக்கத்தக்க ஒன்றாக இருக்கிறது என்பதை இந்த சமயத்திலே சொல்ல விரும்புகிறேன். நிதிப் பொறுப்பில் இருக்கும் அமைச்சருக்கு இதைச் சொல்லிக்கொள்வேன்.

மேலும், இந்த துணை மதிப்பீடு வருகின்ற போது, சம்மந்தப்பட்ட இனங்களைப் பார்க்கும்போது, என்னென்ன இனங்களுக்கு துணை மதிப்பீடு கொடுத்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, ஏதாவது பழைய இனங்களுக்கா என்றால் இல்லை, புதிய இலாக்காக்கள் வந்திருக்கின்றன. இப்படிப் புதிய இலாக்காக்கள் வரும் என்பது முன்கூட்டியே தெரியாதா ? இல்லையென்றால், அவை அவசியம் என்று கருதவில்லையா இடையில் தோன்றுவதற்குக் காரணம் என்ன ? என்ன காரியம் இடையில் திடீரென்று நின்று விடும் என்று இலாக்காக்கள் தோற்றுவிக்கப் பட்டன ? ஏதோ வேண்டுமென்று செய்ததாகத்தான் தோன்றுகிறது. அப்படிச் செய்துவிட்டு துணை மதிப்பீட்டில் சேர்த்து, மன்றத்திற்கு வந்திருப்பதாக அறிகிறேன்.

கட்டடங்கள் பல இடங்களில் கட்டியிருக்கிறார்கள். அனுமதி வழங்கியிருக்கிறார்கள். இவை யெல்லாம் வேண்டியவைகள் தானா ? தேவை தானா ? மார்ச்சு மாதத்தில், 1968–69-ல், திட்டமிட்ட போது, இன்னின்ன கட்டடங்கள் கட்டுவதற்கு அவசியம் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்படிக் கட்டடத்திற்கு என்று ஒதுக்கியிருந்தால் ஆட்சேபணையில்லை. இப்பொழுது, அரசாங்கத்தில் பணம் இல்லை ; வரி போட இடமில்லை ; ஓவர் டிராப்ட்வாங்கியாகி விட்டது ; இந்த நிலையில் செய்வானேன் ? அதிகாரம் இருக்கிறது, எது வேண்டுமானாலும் செய்துவிட்டு, மன்றத்தில் வைக்கலாம் என்று செய்திருப்பதாகத் தோன்றுகிறது.

கல்லூரிகளுக்குக் கட்டடம் கட்ட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரிகள் எப்பொழுது வந்தவை ? இதற்கு முன்னால் வந்த பழைய இடமில்லாத கல்லூரிகளுக்கு கட்டடம் அமைத்தாகிவிட்டதா ? அப்படிப்பட்ட 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு கட்டடம் வேண்டும் என்கிற கோரிக்கைகள் இந்த மன்றத்திலே எழுப்பப் பட்டிருக்கிறது. அவை யெல்லாம் அவசியமில்லை என்று நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிக்கு இந்த ஆண்டே கட்டடம் அமைக்க வேண்டும் என்று என்ன அவசியம் வந்தது ? அரசியலுக்காக இவ்வாறு செய்தார்கள் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

அதுபோலவே, பல இடங்களில் சாலைகள் போட்டிருக்கிறார்கள். ஏற்கனவே போடப்பட்ட சாலைகளைப் பராமரிக்க, அவற்றைச் சீராக வைக்க, நல்ல முறையில் வைக்க என்று பணம் கேட்கப்படவில்லை. ஆனால், புதிய சாலைகளைப் போடுவதற்காக, துணை மதிப்பீடு கேட்பதற்கு என்ன அவசியம் ? ஏதாவது செக்யூரிடி காரியமா ? எந்த அளவில் நிதியை எப்படி ஒதுக்கியிருக்கிறார்கள் ? ஏன் ? தேவை யென்றால், முதல் மதிப்பீட்டிலேயே வரவில்லை இவை யெல்லாம் துணை மதிப்பீட்டில் வரக்கூடாது என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று, சுற்றுலா மாளிகையில் அதிகமாகப் பராமரிப்புக்கென்று ரூ. 2·77 லட்சம் கேட்கிறார்கள். அப்படி என்ன பராமரிப்பு செய்ய வேண்டிடிய அவசியம் இருக்கிறது ? சந்தேகங்கள் வருகின்றன. திடீரென்று இந்த ஆண்டு, 1968–69-ல் ரூ. 2·77 லட்சத்திற்கு அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்ன ? என்ன காரணம் ? ஆங்காங்கே சிற்சில இடங்களில் கேள்விப்படுகிறேன், சில அமைச்சர்கள், பல பேர்களுக்கு, வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று இல்லாமல், விருந்து வைக்க வேண்டும் என்று சொல்லி, சம்மந்தப்பட்டவர்கள், சம்மந்தப்படா

தவர்கள் எல்லோருக்கும் சேர்த்து, விருந்துகள் வைத்ததன் காரணமாக இந்த செலவினத்தை உண்டாக்கியிருக்கிறார்கள் என்று அதை இந்த சமயத்தில் துணை மதிப்பீடு தொகையிலிருந்து அறிகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு பூவராகன் அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்ல உரிமை இருக்கிறது. அமைச்சர்கள் யாரும் விருந்து வைக்கவில்லை. சுற்றுலா மாளிகையில், அதற்கான செலவுகளை அமைச்சர் கணக்கில் எழுதப்படுவ தில்லை. ரொம்ப நாள் அனுபவம் பெற்ற, அமைச்சராக ஐந்து ஆண்டு இருந்தவர்கள், சுற்றுலா மாளிகைகளைக் கூட அவர்தான் பரிபாலனம் செய்தார்கள் என்று கருதுகிறேன் (குறுக்கீடு) டூரிஸமா, சரி, அவர்கள் சொல்வது சரியில்லை. மற்றவர்கள் பேசலாம். அவர்கள் மாஜி அமைச்சர், மறுபடியும் அமைச்சராக வரக்கூடியவர், வரவேண்டும் என்று ஆசைப்படு கிறேன், அப்படிப்பட்டவர்கள் மேலெழுந்தவாரியாகச் சொல்லுவது சரி யில்லை. என்ன தவறாகச் செலவாகிவிட்டது என்று சொன்னால், அனுகூல மாக இருக்கும்.

**திரு. கோ. பூவராகன் :** ஒன்று, இரண்டைச் சொல்கிறேன். சென்னை யில் இருக்கின்ற, அரசாங்கத்திற்குச் சொந்தமான விருந்தினர் மாளிகை யில், 1967-க்கு முன்னால், ஒரு ஆண்டுக்கு, 1967–68-ல் என்ன செலவு ? 1968–69-ல் என்ன செலவு ? யார் யார், எந்த அமைச்சர்கள் எப்பொழுது, எப்பொழுது தங்கினார்கள் ? எவ்வளவு உணவு அளிக்கப் பட்டது ? இந்த விவரங்களை யெல்லாம் மன்றத்தில் வைப்பார்கள் என்றால் ?....................

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அமைச்சர்கள் விருந்து சாப் பிடவில்லை, சாப்பிடுவதும் இல்லை. முக்கியமான அதிகாரிகள், மற்றவர் கள் வந்திருப்பார்கள். இன்றைக்கு இருப்பது மக்கள் அரசாங்கம் ; இந்த நேரத்தில் ஒன்றிரண்டு அமைச்சர்கள் அங்கே தங்கக் கூடும், விளக்கத்திற்காகச் சொல்லுகிறேன். சமாதானத்திற்காகச் சொல் லவில்லை. காஃபி சாப்பிடுவதாக இருந்தால், திரு. பூவராகனே கூட வந்தால், காஃபி சாப்பிட்டால், அதற்கான பணத்தை, ஒன்று அமைச் சரவர்கள் கொடுக்க வேண்டும், அல்லது பூவராகன் அவர்கள் கொடுக்க வேண்டும் என்ற நிலைதான் இருக்கிறது. இது ரொம்பச் சிறிய விஷயம், இதை ஒரு முக்கியமான காரியமாகப் பேசுவது அவ்வளவு சரியானதாக இல்லை. அவர்கள் காட்டட்டும், இப்படி இப்படி விருந்துக்குச் செலவழிக் கப்பட்டது என்று. சென்னை மாளிகையிலே, மத்திய அமைச்சர்கள், அதிகாரிகள், இவர்களெல்லாம் தங்கும்போது, அரசாங்க விருந்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களுடைய செலவுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆகவே, நம்முடைய அமைச்சர்களோ, அவர் களுடைய நண்பர்களோ சாப்பிடுவதோ, விருந்துண்ணுவதோ இல்லை ; அதற்கான அவசியமும் ஏற்படவில்லை. முன்னாள் அமைச்சருக்குத்தெரி யும். காஃபி போன்றவை சாப்பிடும்போது, என்ன செய்கிறார்கள் என்று. மற்றவர்களுக்கு காப்பி போன்றவை கொடுக்கலாம், என்பதையும் இந்த அமைச்சரவையில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, பயப்படவேண்டி யதில்லை ; எந்தவிதமான முறைகேடான, விரயமான செலவும் இந்த இனத்தில் ஏற்பட்டுவிட்டது என்று பயப்படவேண்டிய அவசியமில்லை என் பதைச் சொல்லுகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** தலைவர் அவர்களே, அதிகமாகச் செலவிட்டு விட்டார்களே என்ற பயம் இல்லை. இந்தச் செலவு 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பராமரிப்புச் செலவு என்று துணைமதிப்பீட்டில்வந் திருக்கிறது. எதற்காக இந்தச் செலவு கூடியிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்கு அறிவித்தால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, சாலை ஓரங்களில் நல்ல நிழல்தரும் மரங்களை வைத்துப் பராமரிப்பதற்காக 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. எந்த ஊரில் நிழல்தரும் மரங்களை வைத்து வளர்த்தார்கள் ? எப்படி





இந்தத் தொகை அதிகமானது ? எந்தெந்த ஊர்களில் நிழல்தரும் மரங்களை வைத்துப் பராமரிப்பதற்காக இவ்வளவு அதிகமாகச் செல விட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். பயன்தரக்கூடிய, சாலையோரங்களில் இருந்த மரங்களையெல்லாம் வெட்டி வீழ்த்திவிட்டார்களே, அதற்காகவா இவ்வளவு ரூபாய் செலவானது ? வெட்டி வீழ்த்துவதற்குச் செலவு கூடியிருக்கிறது என்றால் சரி. பனை மரம், தென்னை மரம் இவைகளுக்குக் கிளைகள் இல்லை. அதனால்தான் அவைகளை வெட்டவில்லை. எல்லா மரங்களுடைய கிளைகளையும், இன்னும் சொல்லப்போனால் அடிமரங்களையும் வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். நமது உணவு விவசாய அமைச்சர் அவர்களும், “ நான்கூட அதைப் பார்த்துக் கண்டித்தேன் ” என்று சொன்னார்கள். எல்லா இடங்களிலும் உள்ள மரங்களை வெட்டி வீழ்த்துவதற்கு வேண்டுமானால் 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது என்றால், ஏற்றுக்கொள்ளலாம். எந்தஊரில், எந்தச் சாலையிலே நிழல்தரும் மரங்களை வைத்துப் பராமரித்ததற்காக இவ்வளவு செலவு என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கவேண்டும். இவ்வாறு பல இனங்கள் நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஏதோ ஒன்றிரண்டு இனங்கள் என்று சொன்னால், அவசியம் இருக்கிறது என்று சொல்லலாம். ஏற்கெனவே 25 கோடி ரூபாய், அதற்கு முன்னால் 6 கோடி ரூபாய், இப்போது 66 கோடி ரூபாய் என்ற அளவில் முறை கேடான காரியங்களுக்கு ஏற்கெனவே நிதியை ஒதுக்கிச் செலவிட்டு விட்டு, இப்போது அனுமதிக்கு வருகிறது என்றால் இதை ஆட்சேபிக் காமல் இருக்க முடியாது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். “ குமுதம் ” என்ற பத்திரிகை எல்லோருக்கும் தெரியும், ரொம்ப நல்ல பத்திரிகை. அதற்கு 5,17,000 ரூபாய் கடனாகவும், 2,68,700 ரூபாய் இனாமாகவும் கொடுத்திருக்கிறார்கள். பத்திரிகைக்குக் கொடுத்ததை ஏன் கொடுத் தீர்கள், எதற்காக அந்தப் பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்டது என்று நான் கேட்கவில்லை. அந்தப் பத்திரிகை நல்ல பத்திரிகை. இந்த அரசாங்கம் 5 லட்சம் ரூபாய் கடனாகவும், $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் மானிய மாகவும் கொடுத்திருக்கிறது. நமக்கிருக்கும் சங்கடங்கள், பாங்கில் அதி கப்பற்று வாங்கியிருக்கும் நிலைமை போன்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தச் செலவு முதல் மதிப்பீட்டிலேயே வராமல், துணை மதிப்பீட்டில் வந்ததற்கு இந்த மன்றம் அனுமதிப்பது தேவையா, இல்லையா என்று அறிய விரும்புகிறேன். துணைமதிப்பீட்டில் வேகம் வேகமாக அவசரம் அவசரமாக வர வேண்டிய நிர்ப்பந்தம் என்ன ஏற்பட்டது என்பதை இந்த மன்றததிலே நிதியமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என நம்பு கிறேன்.

இப்படி பல தொகைகளை, பல இனங்களிலே செலவிட்டு விட்டு, துணைமதிப்பீட்டிலே வருகிற காரியங்கள் நிறைய இருக்கின்றன. என்க்கு நேரம் இல்லாததால் எல்லாவற்றையும் சொல்ல முடியவில்லை. ஒரு மணிக்குள் முடித்துக்கொள்ள வேண்டும் என்று அவைத் தலைவர் அவர் கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களுக்குச் செலவிட்டு விட்டு, இந்த மன்றத்திலே அனுமதிக்கு வருவதா ? அப்படி வருவதை நாம் ஏற்றுக்கொள்வதா ? இனி வருகிற ஆண்டுகளிலும் இப்படி வருகிற சூழ்நிலை இருக்குமானால், நிதிநிலை அறிக்கையே வேண்டியது இல்லை, என்றைக்காவது ஒரு நாளைக்குச் செலவிட்டு விட்டு இந்த மன்றத்தைக் கூட்டி அனுமதி தாருங்கள் என்று சொன்னால் அனுமதி கொடுத்து விடலாம். முதலில் 247 கோடி, துணை மதிப்பீட்டில் 100 கோடி ரூபாய். இலாகாவில் இருப்பவர்கள் இதைத் கவனிக்காமல் இருக்கிறார்களா ? அல்லது இலாகாவில் இருப்பவர்களை, அமைச்சர்கள் இழுத்த இழுப்புக்கு வரவேண்டுமென்று நினைக்கிறார்களா ? இப்படி தவறுகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

[திரு. கோ. பூவராகன்] [1969 மார்ச் 27

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அதுமட்டுமல்ல, என்ன காரியத்திற்காக இவ்வளவு ரூபாய் செலவு செய்கிறோம் என்பதைப் பார்க்கும்போது, நீர்ப்பாசன வசதி வேலைகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் பல நீர்ப்பாசன வேலைகள் நடந்துகொண்டிருந்தவை பாதியிலேயே நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டு பாலங்கள் வேலை பூர்த்தியடையாமல் அப்படியே இருக்கின்றன. இவைகளைபற்றி முன்னாள் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். 66 கோடி ரூபாய்க்கு மேலே துணை மதிப்பீட்டிலே வரும்போது—ஒரு 5 லட்சம் ரூபாய் கூடச் செலவு இல்லை—நிறுத்தப்பட்ட வேலைகளை பூர்த்தி செய்திருக்கலாம். இந்த வேலைகளை பூர்த்தி செய்தால் பாசன வசதி ஏற்படும்.

புதிய பாலங்களைக் கட்டுவதற்கு முயற்சி செய்கிறபோது, புதிய வேலைகளை மேற்கொள்கிறபோது, என்னுடைய தொகுதியில் கல்லூரிக்கு இடம் தேடிக் கொடுப்பதற்கு, விவசாய முன்னேற்றக் காரியங்களுக்கு, நீர்ப்பாசன வசதிகளுக்கு இந்த அரசு ஏன் முன்வரவில்லை ? அதற்கு ஏதாவது அரசியல் நோக்கம் இருக்கிறதா ? துணை மதிப்பீட்டில் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கொண்டுவரலாம், எந்தக் காரியத்திற்கு வேண்டுமானாலும் கொண்டுவரலாம் என்ற போக்கை அவர்கள் வைத்துக் கொள்வார்களானால் அது நல்லதல்ல என்பதைக் கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதித் துணை மதிப்பீடுகள்பற்றி நடைபெற்ற இந்த விவாதத்தில் பல உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்களுடைய மேலான கருத்துக்களையெல்லாம் நல்ல வகையில் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என் நன்றியைத் தெரிவித்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடைசியாகப் பேசிய என்னுடைய அருமை நண்பரும், முன்னாள் அமைச்சரும், இன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலாளருமான நம்முடைய நண்பர் திரு. கோ. பூவராகன் அவர்கள் ஏதோ பெரிய விஷயங்களைச் சொல்வதாக நினைத்துக்கொண்டு உரை நிகழ்த்தினார்கள். ஒன்றிரண்டு பிரச்சினைகளை இங்கே எடுத்து வைத்தார்கள். அவைகள் எல்லாம் பார்ப்பதற்குப் பெரிதாக தோற்றமளித்தாலும், அவைகளிலே எவ்வளவு நியாயம் இருக்கிறதென்பதையும் இந்த மன்றத்திற்குச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். "துணை மானியக் கோரிக்கைகள் என்ற பெயராலே, இப்படியெல்லாம் ஆண்டு மத்தியிலே இதைக் கொண்டுவரலாமா, தவறு அல்லவா ?" என்று சொன்னார்கள். நான் அதற்கு, "நீங்கள் எல்லாம் கொண்டுவரவில்லையா ?" என்று சொல்ல முன்வரவில்லை.

**திரு. கோ. பூவராகன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலேயே தவறான கருத்தைச் சொல்கிறார்கள். இந்த மன்றத்திலே துணை மானியக் கோரிக்கை வேண்டாமென்று சொல்லவில்லை. எந்த அரசாங்கத்திலே இவ்வாறு 247 கோடி ரூபாய் முதல் மதிப்போடு, 100 கோடி ரூபாய் துணை மதிப்பீட்டில் வந்தது என்பதை இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, விளக்குவதற்காகத்தான் நான் நின்றுகொண்டிருக்கிறேன். ஏதோ பெரிய விஷயத்தைச் சொன்னதாக அவருக்கு நினைப்பு. அது மிகவும் சாதாரண விஷயம். இந்தச் சங்கதிக்கு மறுப்புச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். இந்த மன்றத்திலே இருக்கின்ற துணைமானியம் 66 கோடி ரூபாய்தான். இந்த 66 கோடி ரூபாய் துணை மானியத்திலேகூட, இன்றைக்கிருக்கும் நிலவரம், 11 கோடி ரூபாய் ரெவின்யூக் கணக்கில் வருமானம் இருக்கிறது. இதைப் படிக்காமலேயே கனம் உறுப்பினர்



1969 மார்ச் 27] [திரு. கே. ஏ. மதியழகன்]

அவர்கள் சொல்லிவிட்டார்கள். மூலதனச் செலவுகள் என்பதும், பெரிய ஏற்பாடுகளாகச் செய்யப்படுகிறது காரியத்தை நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

இன்னொன்றையும் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். இரண்டாவது பாராவிலே குறித்திருக்கிறோம்.

"The House will notice that a substantial portion of the appropriation now sought relates to the repayment of public debt for which a provision of about Rs. 46 crores has been made ."

துணைமானிய மதிப்பீடு 66 கோடி ரூபாய் என்றால் 46 கோடி ரூபாய்நிதி ஒதுக்கத்தின் கணிசமான பகுதி—பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்தவதற்காகக் கோரப்பட்டுள்ளது.

ஆகவே, ஏதோ பெரிய அளவுக்கு துணை மானியக் கோரிக்கையின் கீழ் கொண்டுவரலாமா என்பதாக திரு பூவராகன் அவர்கள் கேட்பது சரியல்ல. வேறு யாராவது புதிய உறுப்பினர் எடுத்துச் சொன்னால் பரவாயில்லை. ஆனால் இந்தப் பேரவையில் அமைச்சராகவே இருந்தவர் இப்படி ஒரு தவறான வர்ணத்தைக் கொடுப்பது என்றால் சரியல்ல. இந்த விதிமுறைகளை எல்லாம் திராவிடமுன்னேற்றக் கழகம் தம் அலுவலகத்தில் இருந்து எடுத்துக்கொண்டு வந்தது அல்ல. நேற்றும் இருந்தன. இன்றும் இருக்கின்றன. நாளையும் இருக்கக்கூடியவை தான்.

மதிப்பிற்குரிய திரு. மாரிமுத்து அவர்கள் கூடச் சொன்னார்கள். இப்போது அரசாங்கக் கணக்கு எழுதுகிற முறை பொதுவாக எல்லோருக்கும் புரிவதில்லை. என்றைக்கு சாதாரண குடிமகனுக்குக் கூட புரிகிற அளவில் அரசாங்கத்தின் வரவுசெலவுகளை எழுதுகின்ற காலம் வருகிறதோ அன்றைக்குதான் சரியான காலம் என்று நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம்.

அறுபத்தியாறு கோடி ரூபாய்க்கு துணைமானியக் கோரிக்கை வந்தது என்பதால் ஏதோ முதல் மானியம் வருகிறபோது அதற்குப் பயந்து கொண்டு அவசரம் அவசரமாகக் காரியங்களைச் செய்வதாகச் சொல்வது தவறான கருத்து. அதுவும் இந்த அவையில் பொறுப்பு வாய்ந்த அமைச்சராக இருந்த ஒருவர் அப்படிச் சொன்னதின் காரணத்தினால்தான் இதை விளக்கவேண்டியிருக்கிறது. இந்த விவகாரம் முழுவதும் தெரிந்தவர்கள். தெரியாது என்று சொல்லமாட்டேன். ஒரு பிரச்சாரத்திற்காக 66 கோடி ரூபாய் கடைசி நாளிலே வாங்கிப்போனார்கள் என்று சொல்வதற்காகச் சொல்கிறார். நான் அதனைத் தான் சொல்கிறேன். நான் கொடுத்துள்ள விவரங்களைப் படித்திருக்கமாட்டார் என்பது அல்ல.

**திரு. கோ. பூவராகன் :** நான் படித்திருக்கமாட்டேன் என்றார்கள். படிக்காமல் எந்த விஷயத்தையும் நான் சொல்வது இல்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பார்க்காமலேயே அவர் பேசியிருக்கலாம். 46 கோடிக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அது நிதி இலாகாவுக்குத் தெரியாதா, முதல் மதிப்பீட்டிலேயே அதை ஏன் கொண்டுவரவில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முதன் முறையில் வருவது என்பதில்லை. சில கடன்கள் நவம்பர் மாதத்தில் முற்றுப் பெறுகின்றன. சில பிப்ரவரியில் முற்றுப் பெறுகின்றன. சில ஜூலை மாதத்தில் மெச்சூரிடி அடையும். அந்த அந்தக் கடன் முற்றுப்பெறுகிற நேரத்தில்தான் எவ்வளவு கடன் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்கிற நிலையே எழுகிறது.

நான் சொன்னதை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டார்கள் போலிருக்கிறது. அவர்கள் படிக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. படிக்காதவர்களையே படித்தவர்கள் என்று சொல்லப் பழக்கப்பட்டவன். ஒரு நாளும் படிக்காதவர்கள் என்று அவரைச் சொல்லமாட்டேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 மார்ச் 27

நேரம் குறைவாக இருப்பதால் நான் அவர் குறிப்பிட்டதைப்போல சூசகமாக ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் 41 லட்சம் ரூபாய் சென்னை மாநகரின் தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்காகவும், சேலம், கோயம்புத்தூர், மாவட்டங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும் கோரப்பட்டிருக்கிறது. மழையின்றி ரெட் ஹில்ஸில் தண்ணீர் இல்லாதுபோய்விடும், பூண்டி ரிசர்வாயர் பாதிக்கப்படும் என்பதை எதிர் பார்த்தோமா ? இந்தத் தண்ணீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்க உடனடியாக நாம் செயல்பட்டாக வேண்டியிருக்கிறது.

வறண்டு கிடக்கும் பகுதிகளுக்கு துயர்தணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே அக்ரோ ஸ்டபிலைசேஷன் பண்டுக்கு வேளாண்மை நிதி நிலைக்கு 25 லட்சம் ஒதுக்கப்பட்டு அந்தத் தொகையும் இதில் சேர்ந்திருக்கிறது. இதை எல்லாம் உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். சென்னை நகருக்கு 15 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்றால் உடனடியாக 28 புதுக்கிணறுகள் எடுத்தாகவேண்டியுள்ளது. தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளித்தாகவேண்டும். கோயம்பத்தூர் மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் இன்று ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமையைச் சமாளிக்க இருக்கக்கூடிய கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக 24 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்றால் இதற்கு அவசியம் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது.

மேலும் 1½ கோடி ரூபாய் பஞ்சப் பிரதேசத்திற்குச் செலவு செய்ய அனுமதித்திருக்கிறோம். இதை எல்லாம் முன்கூட்டியே எதிர்பார்த்து யாரும் பொதுமானியத்தில் ரிசர்வ் செய்கிறது இல்லை. இதுபோன்ற செலவுகளை எல்லாம் துணை மதிப்பீட்டில்தான் கொண்டுவருவார்கள். நேற்று இருந்த அரசாங்கத்திற்கும் இதுதான் நிலைமை. நாளை வரப் போகிற அரசாங்கத்திற்கும் இதுதான் நிலைமை.

அடுத்து, தூத்துக்குடியில் மீன்பிடிக்கிற துறைமுகம் அமைக்க இந்திய அரசு ஒப்புதல் இப்போதுதான் அளித்தது. இதற்காக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், நானும், முன்னாள் முதல் அமைச்சர் அவர்களும் தொடர்ந்து பல நடவடிக்கைகளை எடுத்ததன்காரணத்தினால் இது இப்போது 2 கோடி அளவில் ஏற்கப்பட்டுள்ளது. ஆகவே, இதற்காக 32 லட்சம் ரூபாயை உடனடியாக நமது அரசு ஒதுக்கியுள்ளது.

அதேமாதிரி "தமிழ்நாடு சிறுதொழில்கள் கழகத்திற்கு" பங்குத் தொகையாக ஒருகோடி ரூபாய் செலுத்த வகை செய்யப்பட்டிருக்கிறது. இவை திரும்பி வந்துவிடுகிற பணம் தான். ஒன்றும் விரயமாக்கப்படவில்லை.

அதேமாதிரி பிற்பட்ட மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புக்காக 24 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திண்டிவனம் உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் கூடச் சொன்னார்கள் பிற்பட்ட மாணவர்களுக்கு இன்னும் நிரம்பக் கொடுக்கவேண்டும் என்றார்கள். இதையும் பாராட்டிச் சொல்லியிருப்பாரானால் நான் மகிழ்ந்திருப்பேன். முந்தைய அரசாங்கத்தில் 91 லட்சம் தான் ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்போது கடைசித் தவணையாக நாம் ஒதுக்குகிற இந்த 24 லட்சத்தையும் சேர்த்தால் மொத்தம் பிற்பட்ட இனத்தவர்களுக்கான ஒரு கோடியே 13 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். இன்னும் கொடுக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை. (திரு ராமமூர்த்தி எழுந்தார்கள்.) அவர் என்ன சொல்லப் போகிறார் என்று நானே சொல்லிவிடுகிறேன். முன்பு இருந்ததைவிட இப்போது மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகம் என்பார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** துணைமதிப்பீட்டில் வந்ததைக் கருத்தில் வைத்துச்சொல்லவில்லை. கூடுதலாக ஒதுக்கியிருக்கிற கருத்தைக் குறிப்பிட்டே இன்னும் அதிகம் ஒதுக்கவேண்டுமென்று சொன்னேன். குறிப்பிட்டதே பாராட்டாகத்தான் அமையும். மேலும் இப்போது அதிகமாகி வருகிற மாணவர்களின் எண்ணிக்கைக்கேற் ரேஷ்யோ விகிதத்தில் அதிகப்படுத்தவில்லை என்பதே என் குறைபாடு.



1969 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாணவர்கள் அதிகமாக அதிகமாக தொகையும் அதிகமாகும் என்று சொல்கிறார்கள். வளர்கின்ற சமுதாயத்தில் சமூக நலக் காரியங்களுக்கு எவ்வளவு தொகை இருந்தாலும் அது நிறைவான குறிக்கோளாக ஆகாது. இருந்தாலும் இந்த அரசுக்கு அதிலே எவ்வளவு சிரத்தை இருக்கிறது என்பதை இந்த மாமன்றம் ஒத்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிற்பட்ட மாணவர்களுக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

நேரம் இல்லாததாலே அதிகமாகச் சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அதேமாதிரியாக ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். சொல்லவேண்டுமென்பது என்னுடைய மரபு இல்லை. அவர்கள் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகச் சொல்லியிருக்கிறேன். 1965-66-லே அவர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள், நான் அங்கே இருந்தேன்

This refers to a token provision for purchase of sugar on Government account in Madras State during 1965–66.

An expenditure of Rs. 78 lakhs has been incurred. Strictly speaking, approval of the Legislature should have been sought in 1965–66 itself. But this was omitted to be done. We are now seeking post-facto sanction of the Legislature so as to regularise the expenditure already incurred. என்ற நிலையும் இருக்கிறது. இப்பொழுது 66 கோடி ரூபாய்க்குக் கொண்டு வந்ததாக அவர்கள் சொன்னார்கள். 66 கோடி ரூபாய் என்பது திரு. பூவராகன் அவர்கள் கணக்கையும் அந்த 78 லட்சத்தையும், 1965–66-ம் வருடத்திலே அவர்கள் சர்க்கரை வாங்கிய கணக்கையும், அவர்களுடைய வேலையையும் நாங்கள் செய்யக் கூடிய அளவிலே இதிலே வந்திருக்கிறது. அவர்கள் விட்டுப்போன வேலையைச் செய்திருக்கிறோம். அதையும் அவர்கள் சொல்லியிருப்பார்களானால் நன்றாக இருந்திருக்கும். அப்பொழுது 78 லட்சம் சர்க்கரை வாங்கியதைக் கொண்டு வரவில்லை என்று சொல்லவில்லை. சர்க்கரையின் விலை ஏறிவிட்டது என்றால் அதைச் செய்யத்தான் வேண்டும், இல்லாவிட்டால் மக்கள் கூப்பாடு போடுவார்கள். ஆகவே, அது இருக்கத்தான் செய்யும்.

எட்டு கோடி ரூபாய் உணவு தானிய சப்ஸிடிக்காக, படியரிசித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அந்தந்த மாதக் கணக்கைப் பார்த்துத்தான் கணக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக இதே துணை மதிப்பீட்டிலே கோதுமையைப் பொறுத்த வரையில்

Under State Trading, a provision of Rs. 4 crores and odd is sought for purchase of wheat. என்று போடப்பட்டிருக்கிறது. இது எல்லாம் நடைபெற வேண்டியிருக்கிறது. தொடர்ந்து அரிசி போதவில்லையென்றால் கோதுமை வாங்கவேண்டுமென்ற நிலை ஏற்படுகிறது. இதற்காக எப்படி முதலிலேயே மன்றத்திலே அதைக் கொண்டு வரமுடியும் ? அந்த வகையிலேதான் இது அமைந்திருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

மற்றபடி ஒன்றிரண்டு சொன்னார்கள், சாலைகள் பராமரிப்பு, சுற்றுலா மாளிகைகள் இவை பற்றிச் சொன்னார்கள். ஒரு வகையிலே எனக்குச் சந்தோஷம். சிறு விஷயங்களையெல்லாம் அவர்கள் சொன்னபோது ஒரு பொது உணர்ச்சி வரும், மற்றவர்கள் தொந்தரவு பண்ணாத நிலைமை இருக்கும். இப்படிச் சொல்லிவிட்டு கோடிக்கணக்கான ரூபாயிலே தொடங்கி அமைச்சர்கள் காப்பி சாப்பிட்டார்கள் என்று வந்துவிடக்கூடாதே—மாஜி அமைச்சருடைய பெரிய பேச்சு ஒரு பெரிய தோற்றத்தைப் பொறித்துவிடக் கூடாதே—என்பதற்காகத்தான் நான் குறுக்கிட்டேன்.

[திரு. கே. எ. மதியழகன்] [1969 மார்ச் 27

A peculiar feature of "Kumudham" is that the employer is prepared to give free quarters to workers, which no other employer is prepared to give: என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். குமுதம் பத்திரிகைக்குக் கொடுத்ததற்குக் காரணம் பத்திரிகைக்காரர்கள் வாடகையே இல்லாத சலுகையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலே அந்தப் பத்திரிகைக்குக் கொடுக்க வேண்டுமென்றார்கள். மற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கிறோம், அரசாங்க ஊழியர்களுக்கு, பொதுமக்களுக்கு கட்டிக்கொடுக்கிறோம், அந்த முறையிலேதான். குமுதம் பத்திரிகைக்கு பிரத்தியேகச் சலுகை காட்டிவிட்டார்கள் என்று சொல்லமுடியாது. அது என்ன வர்ணம் என்று தெரியாத அளவுக்கு இருக்கக்கூடிய பத்திரிகை. அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. அவர்களும் ஒரு பத்திரிகைக்காரர்கள் என்ற அடிப்படையிலேதான் செய்யப்பட்டிருக்கிறது. வேறு ஒன்றும் நோக்கம் கிடையாது. இலவசமாகக் கொடுத்துவிடுங்கள் என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு, ஒன்றுமே இல்லாதவர்களுக்குக் கொடுக்கிறோம். மந்திரிகளுக்கேகூடக் கொடுக்கிறோம். பெரிய பெரிய அதிகாரிகளுக்குக் கொடுக்கிறோம். அந்த வகையிலே பத்திரிகைக்காரர்களும் அந்தச் சலுகையைப் பெறுகிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை.

சாலைப் பராமரிப்பைப்பற்றிச் சரியாகத் தெரியவில்லை. இன்னொரு சந்தர்ப்பத்திலே சொல்கிறேன்.

இப்பொழுது நடைபெறுகிற அரசாங்கம் போலிஸ் அரசாங்கம் அல்ல. இது ஒரு வெல்பேர் ஸ்டேட் ஆக இருக்கிற காரணத்தாலே நீயூ சர்வீஸஸ், ஷார்ட் சர்க்யூட் புரவிஜர் என்று வைத்துக் கொண்டு இருக்கிறோம். இவையெல்லாம் தேவைப்படுகின்றன.

பஞ்சம் வந்து விட்டது, மத்திய சர்க்கார் கொடுக்கின்ற வரையில் நாம் காத்துக் கொண்டிருக்க முடியவில்லை. கடன் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே காலத்தினுடைய அறைகூவலை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையிலே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிற நேரத்திலே குடிநீருக்காகவும், அவசியமான காரியங்களுக்காகவும், மூலதனங்களுக்காகவும் இப்படி ஏற்படுகிறது என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீஸ்காரர்களைப்பற்றியும், கல்வியைப் பற்றியும் சொன்னார்கள். போலீஸ்காரர்கள் கண்ணீர்ப் புகை, தடியடிப்பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடாது, அவர்கள் மக்களுடைய நண்பர்கள்தான் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய சித்தாந்தம். கூடுமானவரையில் அப்படி நடப்பதற்குத்தான் அரசாங்கம் முயற்சிக்கும். தவிர்க்க முடியாத நிலை ஏற்படுமானால் எவ்வளவு குறைந்த அளவுக்கு ஈடுபட வேண்டுமோ, அந்த வகையில் தான் இருக்கும். மக்களுடைய நண்பர்கள்தான் போலீஸ்காரர்கள் என்ற வகையில் போலீஸாருடைய மனோபாவம் மாறிக் கொண்டிருக்கிறது. இன்னும் மக்களுடைய மனோபாவம் அதே மாதிரி மாற வேண்டும். சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்ற மகத்தான பணியிலே ஈடுபடுகின்ற பாதுகாவலர்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஆயுதத்தைக் கொடுத்தார்கள் என்று எல்லாம் அவர்கள் மும்மரமாகப் பேசவேண்டியதில்லை. எந்த ஒரு இடத்திலும் தடியடிப் பிரயோகம் நடைபெறக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் ஆசை. எந்த ஒரு இடத்திலும் கண்ணீர்ப்புகை உபயோகிக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் ஆசை. எந்த ஒரு இடத்திலும் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் ஆசை. எந்த ஒரு இடத்திலும் சட்டம் ஒழுங்கு கெடக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் ஆசை. சில நிலைமைகள் ஏற்படுகின்றன. அப்பொழுது அது அத்துமீறியவையா சட்டத்திற்குட்பட்டவையா என்பதுதான் பிரச்னையே தவிர வேறு ஒன்றும் இல்லை. சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கின்ற ஊழியர்களாக காவலர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்



1969 மார்ச் 27] [திரு. கே. எ. மதியழகன்]

கொள்கிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளை இந்த மாமன்றம் ஏற்றருளுமாறுகேட்டுக்கொண்டு, மற்றவர்கள் சொன்னதற்கெல்லாம் நேரம் இல்லாததால் பதில் சொல்ல வில்லை, குறிப்பிலே அவையிருப்பதால் அவற்றிற்குரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். பி. ப. 1-00

(10) 1968–69-ம் ஆண்டிற்கான (இறுதி) கூடுதல் நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

A. வருவாய்க் கணக்கில் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,06,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,10,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைமுன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,50,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்கிற தலைப்பின்கீழ் ரூ. 1,09,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,96,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ 67,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப்பணியாளர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 70,02,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,30,05,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண். 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ.11,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,44,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 12—காவல்துறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,94,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் 13—கல்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 61,16,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 14—மருத்துவம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,27,37,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,00,66,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 16—வேளாண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 17—மீனளம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,66,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 18.—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 63,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 19—கூட்டுறவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 41,42,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 20—தொழில்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் ஏனைய பின் தங்கிய வகுப்பினர் நலன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,14,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 26—பாசனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,99,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியதொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,60,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியதொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள், பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,04,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 30—சாலைப்போக்குவரத்துத் திட்டங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்கு வரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ், ரூ. 1,23,85,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 35,38,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 33—பல்வகை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,08,84,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 34—எழுதுபொருள்—அச்சுத் துறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 34—எழுது பொருள்-அச்சுத்துறை என்ற தலைப் பின் கீழ் ரூ. 14,13,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,29,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,33,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை வழங்கப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

B. வருவாய்க் கணக்கிற்கு புறம்பான மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,56,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,72,10,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,62,000-க்குமேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 55,06,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது



கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்த

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

"கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,95,500-க்கு மேற்படாத தொகையை அர வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்ட

கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செல

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதன செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,27,43,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனை திருப்பிக்கொடுத்தலும்.

கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,61,51,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதாவை, இந்தப் பேரவைக்குக் கொண்டு வருவதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுவதற்கும், ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(11) அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா.

**The Hon. Thiru K. A. MATHIALAGAN :** Sir, I move—

"That leave be granted for the introduction of The Tamil adu Appropriation (No. 4) Bill of 1969."

The motion was put and carried and leave was granted.

**The Hon. Thiru K. A. MATHIALAGAN :** Sir, I introduce Bill.

**R. SPEAKER :** The Bill is introduced.

ரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று ம் 28-3-1969 அன்று காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

ினர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 12. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

@ 101. Notification issued with G.O. Ms. No. 2824, Home, dated the 25th September 1968, in regard to exemption from payment of Tax leviable in respect of the vehicle MDG 1328, belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Tiruchirappalli. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931)].

@ 102. Notification issued with G.O. Ms. No. 2398, Home, dated the 20th August 1968, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MSQ 3981 belonging to Thiru Theodore E. Hoffman of the United States Agency for International Development Mission to India. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931)].

103. Notification issued with G.O. Ms. No. 345, Public (Elections IV), dated the 20th February 1969, in regard to the issue of the Tamil Nadu Legislators' Hostel (Accommodation) Rules, 1969. [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Payment of Salaries Act,* 1951 (*Madras Act XX of* 1951).]

104. Annual Financial Statement for 1969-70 and Supplementary Financial Statement for 1968-69 of the Tamil Nadu State Electricity Board. [*Laid on the Table of the House under sub-section* (3) *of section* 61 *of the Electricity (Supply) Act,* 1948 (*Central Act* 54 *of* 1948).]

### B. *Reports, Notifications and other papers.*

@ 126. Report of the Committee on Estimates relating to the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Technical Education (Seventh Report).

127. Report of the Committee on Estimates relating to the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Jails and other allied Departments (Eighth Report).





128. Third Report of the Committee on Subordinate Legislation for the year 1968-69 (Fourth Assmebly).

† 129. Policy Note on Demand No. 5—Registration Department (Tamil).

† 130. Speech on Demand No. 5—Registration Department (Tamil).

% 131. The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1969 (L.A. Bill No. 9 of 1969).

@ Placed on the Table of the House on 26th March 1969.

† Despatched to Members on 25th March 1969.

% Despatched to Members on 26th March 1969.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

**வெள்ளிக்கிழமை, 1969 மார்ச் 28**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினுக்கள்—விடைகள்.

**வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.**

*Drinking evil in Railways.*

* 511*Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Railway Administration has sought the assistance of the State Police to check drinking evil in Railways ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** ரயில்களில் மது அருந்தும் திமையைத் தடுக்கும்படி ரயில்வே நிர்வாகத்தினர் ரயில்வே காவல்துறையின் உதவியை எப்போதுமே நாடியதில்லை.

**திரு. கே. விஞயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ப்ரோகிபிஷனை நாம் அமல் படுத்துவதினுலே, ரயில்கள் நம்முடைய மாநிலத்திலே போகிறபோது அந்த இடங்களிலே மது அருந்தக் கூடாதென்று யோசனை சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது ? வடக்கே எங்கெல்லாம் கூபட் ரேஷனிங் இருக்கிறதோ அங்கெல்லாம் சோறு போடக்கூடாது என்ற விதி இருக்கிறது. அதேபோல் சாராயம் குடிக்கிற விஷயத்திலேயும் இதை அனுசரிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** யோசனை சொல்வது மாத்திரம் அல்ல, நமது மாநிலத்திலே செல்கிற ரயில்களில் மது அருந்தும் பர்மிட் பெருத நிலையில் இருந்தால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த மாநிலம் எத்தனையோ மடங்கு தேவலை என்று சொல்லலாம். வடநாட்டிலே போகக்கூடிய ரயில்வே பிளாட் பாரங்களில் பிராண்டி, விஸ்கி போன்றவைகளை பச்சையாக, பகிரங்கமாக அருந்துகிருர்கள். மத்திய சர்க்காரிடத்திலே, " முதலிலே நீங்கள் அங்கே கவனியுங்கள்" என்று சொல்கிற அளவிற்கு வற்புறுத்த நமது அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அங்கே இதை எடுத்துச் சொல்வது நல்லது.

**திரு. பெ. மலேச்சாமி :** ரயில்களில் அதிகமாகக் குடிக்கிருர்கள் என்று தெரிகிறது. நமது நாட்டில் 40 கோடி ரூபாய் வருமானம் போய்விடுகிற காரணத்தினுல் இந்த மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** இதற்காக திட்டம் ஒன்றும் கிடையாது.

### கோவையில் கைப்பற்றப்பட்ட கள்ள நோட்டுகள்.

***512 வினா.— திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் கள்ள நோட்டு அச்சடிக்கும் மெஷின் வைத்திருந்த தாகவும் கள்ள நோட்டுகள் வைத்திருந்ததாகவும் யாரேனும் கைது செய்யப்பட்டார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம். சிலர் கைது செய்யப் பட்டனர்.

(இ) 1969-ம் வருடம் மார்ச் மாதம் 6-ம் தேதி அன்று காரமடைக் காவல்நிலைய எல்லைக்குள் உள்ள புகலூரில் பருத்திவிதை நீக்கும் தொழிற் சாலையைக் காவலர் திடீரென்று சோதனையிட்டுப் பல்வேறு நிலைகளில் அச்சிடப்பட்டிருந்த கள்ள நோட்டுகளையும், கள்ள நோட்டுகளை அச்சிடுவதற் கான அச்சுக்கட்டைகள், காகிதம் முதலியவற்றையும் கைப்பற்றினர். இவ் வழக்குப் புலனாய்வில் உள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இது பிடிக்கப்பட்ட நேரத் திலே, முதல் நாள் 1½ கோடி ரூபாய் பிடிக்கப்பட்டது என்றும் அதற்குப் பிறகு படிப்படியாக குறைந்த தொகையே இருப்பதாகவும் பத்திரிகை வாயிலாகப் பார்த்தோமே, இது எந்த அளவிற்கு உண்மை ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** ரூ. 8,38,400 மதிப்புள்ள கள்ள நோட்டுகள் பிடிபட்டன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கள்ள நோட்டு வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கு, இந்த சமூக துரோகிகளுக்கு, சிறைகளில் ஏ, பி. வகுப்புகள் கொடுப்பதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** குற்றங்கள் நிரூபிக்கப்படுகின்ற வரையில் அவர்களுக்குள்ள தகுதிகள் என்னென்ன என்பதைப்பற்றி ஆராய்ந்து சிறைச்சாலைகளில் வகுப்புகள் தரப்படுகின்றன. நிரூபிக்கப்பட் டால்கூட அவர்களுடைய தகுதிகள் ஆராயப்பட்ட பின்தான் வகுப்புகள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கள்ள நோட்டு அச்சடிக்கிறவர்கள், நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைய வைக்கும் மாபாதகச் செயலைச் செய்கிறார்கள். எனவே அவர்கள் தண்டிக்கப் படுகிற நேரத்திலே குற்றத்தைச் செய்வதற்கு ஆயுள் தண்டனை அளிக்காமல் சாகும் வரை சிறை தண்டனை அளிப்பதற்கு இந்த அரசு மத்திய அரசுக்கு யோசனை கூறுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது இருக்கிற சட்ட வரம்பிற்கு உட்பட்டு வழக்கு மன்றத்தில் காரியங்கள் ஆற்றப்படும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** கள்ள நோட்டுகள் அச்சடிப்பது பற்றி பல சம்பவங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இம்மாதிரி சம்பவங்கள் வராமல் தடுப்பதற்கு அரசு ஜரூர் நடவடிக்கை என்ன எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** இந்த அரசு ஜரூராக நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது—இதற்கு முன்னால் கள்ள நோட்டுகள் வினி யோகிக்கப்பட்ட பிறகுதான் பிடிக்கப்படுவார்கள்—இப்போது வினியோகம் ஆவதற்கு முன்பே பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ஜெ. பெள்ளி கவுடர்:** இப்படிப்பட்ட தேசத் துரோகச் செயலைச் செய்தவர்களைக் கண்டுபிடித்த திறமை மிக்க அதிகாரிகளைப் பாராட்டி அவர் களுக்கு பரிசு வழங்க அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பொதுவாக நமது மாநிலத்திலே இப்படிப்பட்டவர்களுக்கு பரிசுகள் அளிக்கப்படும் என்று முன்பே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். பூபதி :** இந்தக் கள்ள நோட்டு அச்சடிப்பதில் ஈடுபட்ட நபர்களின் பெயர்களை அறிவிப்பார்களா ? அந்த நபர்களை பிடிப்பதிலே பங்குகொண்ட அதிகாரிகளைப் பாராட்டி சன்மானம் வழங்குவதற்கு மத்திய சர்க்காரிடம் சிபாரிசு செய்ய உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதன் காரணமாக கைது ஆன வர்கள் :—

1. ஆறுமுக கவுண்டர்.
2. அமீர் என்கிற அப்துல் ஹமீது (முகம்மது ஷா சாகிப் மகன்).
3. வேலு என்கிற வேலாயுதம், கேரள மாநிலம்.
4. வினோதன், கண்ணனூர்.
5. உனக்கன் மகன் தம்பு பாப்பு என்கிற பத்மனாபன், கண்ணனூர் ஆகிய ஐந்து பேர்களுடைய பெயர்கள் இப்போது இருக்கின்றன.

**திரு. சி. வீரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளநோட்டு அச்சடிப்பது கோவை மாவட்டத்திலே அடிக்கடி நிகழ்வதற்குக் காரணம் என்ன என்று ஆராயப்பட்டதா ? வேறு மாவட்டங்களில் இம்மாதிரி அச்சடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் ஏதாவது அரசுக்குத் தெரியவருகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கள்ளநோட்டு அச்சடிப்பதற்கு முக்கியமான காரணம் பேராசை.

**திரு. கே. விநாயகம் :** குறிப்பிட்ட இந்த நிகழ்ச்சி பற்றி இன்னும் புலன் விசாரணை நடந்துகொண்டிருப்பதனாலும், இன்னும் பலர் சிக்கலாம் என்ற நிலைமை இருப்பதாலும் இந்த இடத்திலே இதுபற்றி கேள்விகள் போட்டு பதில்கள் வழங்குவது விசாரணைக்குக் குந்தகம் என்று கருதி, இதை இதோடு நிறுத்திக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதனால்தான் அப்படிப்பட்ட கேள்விகள் வராமல் பொதுவாக பதில் அளித்துவருகிறேன். அப்படிக் கேள்விகள் வருமானால், நானே பதில் அளிக்கமாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

**திரு. மு. சின்னசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்ட வர்களில் ஆறுமுக கவுண்டர் நீங்கலாக மற்றவர்கள் எந்த மாநிலத்தை சேர்ந்தவர்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இருவர்—வினோதன், பத்மனாபன் என்பவர்கள் கண்ணனூரைச் சேர்ந்தவர்கள். வேலு என்ற வேலாயுதம் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் என்றிருக்கிறது.

**திரு. ப. மகாதேவன்: :** கள்ள நோட்டுகளை அச்சடிக்கிறவர்கள் மீது குற்றம் நிரூபிக்கப்பட்ட பின் அவர்களுடைய தகுதிகளைப் பார்த்து "ஏ" கிளாஸ் அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். குற்றம் செய்தவர்கள் கள்ளநோட்டு அச்சடித்ததனாலே ஏற்பட்ட வசதியினால்தான் அவர்களுக்கு அந்த ஸ்டேடஸ் வந்திருக்கும் என்பதால், அவ்வாறு கொடுக்காமல் இருப் பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பழைய கேஸ்களில் மில் முதலாளிகள் இருந்திருக்கிறார்களே, அதைப் பற்றித் தான் சொன்னேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், ஒருதனி நபரைக் கொலை செய்தாலேயே, அந்தக் குற்றம் செய்தவருக்குத் தூக்குத் தண்டனை அளிக்கக்கூடிய அளவுக்குச் சட்டம் இருக்கிறது. ஆனால், ஒரு அரசைக் கொலை செய்யக்கூடிய அளவுக்கு இவ்வளவு மோசமான ஒரு போக்கு இருக்கும்போது, அதற்குத் தகுந்த தண்டனை அளிக்க அந்தச் சட்டத்தைத் திருத்தினாலொழிய ஒன்றுமே செய்ய முடியாது என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில், இதுபோன்று மோசமான ஒரு போக்கில் ஈடுபடக்கூடியவர்களுக்குச் சாதகமான முறையில்தானே அந்தச் சட்டம் இருக்கிறது ? ஆகவே, அதை மாற்றி, திருத்தியமைக்கும்படி நமது சர்க்கார் சார்பிலே அதை வற்புறுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** தண்டனையைக் கடுமையாக்க சட்டத்தைத் திருத்தலாமா என்கிற யோசனையும் பரிசிலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 513, 514 ஆகிய எண்களுள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

## அரசு மருத்துவ மனைகள்.

* 515 **வினு.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

மதுரை அரசாங்க மருத்துவ மனையிலுள்ள "நடமாடும் கண் வைத்திய சாலை"யின் நிர்வாகப் பொறுப்பு யாரிடம் உள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மதுரை அரசாங்க மருத்துவ மனையிலுள்ள "நடமாடும் கண் வைத்தியசாலையின்" நிர்வாகப் பொறுப்பு அம்மருத்துவ மனையின் முதல்வரிடம் (Dean) இருக்கிறது.

**திரு. பெ. மலேச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த நடமாடும் கண் வைத்தியசாலைக்கென அமெரிக்க அரசு ஏதாவது உதவி செய்கிறதா ? ஆம் எனில், ஆண்டொன்றுக்கு எவ்வளவு உதவி அளிக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படி அமெரிக்க அரசு ஒன்றும் நமக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, நடமாடும் கண் மருத்துவ மனை மூலம் பல கிராமங்களுக்கும் சென்று நூற்றுக் கணக்கானவர்களுக்கு கண் ஆபரேஷன் செய்யப்படுகிறது. அப்படி ஆபரேஷன் செய்துகொண்டவர்களில் பலர் வசதியாக சௌகரியம் அடைந்து வருகிறார்கள். சில பேர்களுக்குக் கண் சிகிச்சையை தொடர்ந்து கவனிப்பதற்கு ஆள் இல்லாத காரணத்தால் கண் கெட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட கேஸ்கள் இருந்தால், அதைத்தொடர்ந்து பராமரிப்பதற்கு என்ன ஏற்பாடு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்த நடமாடும் கண் வைத்தியசாலைகள் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளோடு இணைக்கப்பட்டு இருக்கின்றன. அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் எப்படிக் கண்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கும், கண்களில் வேறு கோளாறுகள் வர முடியாத அளவுக்கும், தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளுவதற்கும் பல பிரச்சாரங்கள் செய்து விளக்கப்பட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அறுவை சிகிச்சைக்குப் பிறகு, நல்ல "ஃபாலோ அப்" இருப்பதற்கு "ஐ காம்ப்ஸ்" இருக்கின்றன. மதுரையில் நான்கு "ஐ காம்ப்ஸ்" நிறுவப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு "காம்ப்" புக்கும் ஐயாயிரம் ரூபாய் செலவு செய்து, அறுவை சிகிச்சைக்குப் பிறகும் பராமரிக்கப்படும் அளவுக்கு வசதிகள் செய்துகொண்டு வருகிறார்கள்.



**திரு. கொளத்தூர் கோதண்டம் :** நடமாடும் கண் வைத்தியசாலை மதுரை நகரத்தைத் தவிர வேறு எந்த எந்த நகரங்களிலே இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மதுரையிலும் சென்னையிலும் தான் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Dr. Modi, a great eye doctor, is doing philanthropic work in other areas of the State and will the Government be pleased to bring him here and make use of his services for the people who are suffering from eye disease?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட உத்தேசம் ஏதும் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள், சென்னையிலும், மதுரையிலும் மட்டும் தான் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். கோயமுத்தூர் நகரம் மிகப் பெரிய நகரமாக வளர்ந்து வருவதால், கோயமுத்தூரிலும் விரைவில் அப்படிப்பட்ட நடமாடும் கண் வைத்தியசாலையை வைக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்பொழுது எந்தச் செயற்குறிப்பும் கோயமுத்தூர் பற்றி இல்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, படியரிசித் திட்டமும் சென்னை போன்ற நகரத்தில் இருக்கிறது. நடமாடும் கண் வைத்தியசாலையும் சென்னை போன்ற நகரத்தில் இருக்கிறது. கிராமத்திலிருக்கும் மக்களுக்கும் இத்தகைய கண் வைத்திய வசதி ஏற்படுவதற்காக மூவிங்யூனிட் போன்று, அவர்களுக்கு டெண்ட், மற்றவைகள் கொடுத்து, ஜில்லாதோறும் ஒவ்வொரு வாரம் வந்திருந்து அறுவை சிகிச்சை முதலியவைகளைச் செய்ய அரசு முன்வருமா ? இப்பொழுது செய்து கொண்டிருக்கிற இந்த நடைமுறைக்கு என்ன செலவு ஆகிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அந்த நிலையங்கள் இரண்டு மாவட்டங்களுக்கு மாத்திரம்தான் என்று இருந்தாலும், நடமாடும் மருத்துவ நிலையங்கள் பல மாவட்டங்களுக்கும் செல்லுகின்றன. எனவே, எல்லா மாவட்டங்களிலும் இருக்கும் அத்தியாவசியமான இடங்களுக்குச் சென்று சிகிச்சை கொடுத்துக் கொண்டுதான் வருகிறது. செலவினங்களைப் பொறுத்த வரையில், நடமாடும் மோட்டார் வண்டிக்கு ஆகும் பெட்ரோல் செலவு ரூ. 9,200 ஆகும். ஒவ்வொரு நிலையத்திற்கும் இரண்டு மோட்டார் வாகனங்கள் இருக்கின்றன. அவற்றுக்குச் செலவு ரூ. 40,000. கூடார அமைப்புக்காக ரூ. 10,000 செலவாகிறது. பிரசாரச் செலவு ரூ. 20,000 கண் வைத்திய சிகிச்சைக்குத் தரப்படுகிற கருவிகளுக்காக ரூ. 12,000, செலவாகிறது. "கராஜ்" கட்டுவதற்கும், வாகன வசதிகளுக்கும் ரூ. 8,000 செலவாகிறது. ஆக, சுமார் ஒரு லட்ச ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்படுகிறது.

*516 **வினு.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையிலுள்ள எக்ஸ்ரே பிலிம் (Film) அதற்கு தேவையான பிலிம் இல்லாத காரணத்தால் தற்போது செயலற்று இருந்து வருகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** அந்த மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இருக்கும் எக்ஸ்ரே சாதனங்களை இயக்குவதற்கு உள்ளவர், 25 மைலுக்கு அப்பாலுள்ள கும்பகோணத்திலிருந்து வரவேண்டியிருப்பதால், வாரத்திற்கு இரண்டு மூன்று தடவைதான் வரக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றி, மாயவரத்திலுள்ள அந்த மருத்துவ மனையிலேயே ஒருவரை நியமித்து, அங்குள்ள மக்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருமா ?

[1969 மார்ச் 28

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாயூரத்தில் தான் அந்த ரேடியோகிராஃபர் இருக்கிருர். டாக்டர் கஸ்தூரிரங்கன் என்ற பெயருள்ள அந்த ரேடியோ கிராஃபர் கொஞ்ச நாள் விடுமுறையில் சென்றிருந்தார். அவர் மொத்தமாக விடுமுறை எடுக்காமல், கொஞ்சங் கொஞ்சமாக 5 நாள், 10 நாள், 15 நாள் என்று விடுமுறை எடுத்த காரணத்தால், அவருக்குப் பதிலாக வேருெருவரை நியமிக்க முடியாமல் போய்விட்டது. இப்பொழுது அவருடைய விடுமுறை முடிந்துவிட்டது. அவரே மீண்டும் பதவிக்கு வந்துள்ளார். இடையிலே அந்த மூன்று மாதங்களுக்குத்தான் முக்கிய அவசரமான கேஸ்களைப் பொறுத்து ரேடியாலஜிகல் எமர்ஜன்ஸி எக்ஸ்ரேஸ் இவைகளையெல்லாம் அந்தந்தப் பெரிய மருத்துவ மனைகளில், ரேடியாலஜி பிரிவு இருக்கும் இடங்களில் கொண்டு போய் அவர்களுக்குப் பரீட்சை செய்துகொண்டு வரப்பட்டது. சிறிய சிறிய கேஸ்களுக்கெல்லாம் திருவாரூரிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் அவர்கள் அந்த கருவிகளையே இங்கே கொண்டுவந்து அவர்களுக்குப் பரிசீலனை செய்யப்பட்டது. விடுப்பிலே சென்றிருந்த டாக்டர் கஸ்தூரிரங்கன் என்பவர் இப்பொழுது மீண்டும் பணிக்கு வந்துவிட்ட காரணத்தால் இப்பொழுது மாயூரத்தில் அத்தகைய நெருக்கடி எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து கேள்வி எண் 517. திரு. சித்தன் அவர்களுடைய கேள்விக்கு மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கேள்வி எண் 516-க்கு ஒரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேறு கேள்விக்கு வந்தாகிவிட்டதே.

### *Drinking water schemes for Madurai district.*

* 517 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :

(*a*) The details of the drinking water supply schemes proposed to be implemented during Fourth Plan period in Madurai district and

(*b*) the estimated expenditure therefor ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) அண்டு (இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** திருமங்கலம் குடிநீர்த் திட்டம் ஏற்கனவே மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதாக இருந்தது; என்ன காரணத்தினுலோ அது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இனிமேல் வருகிற திட்டத்திலாவது சேர்த்துக்கொள்ளப் படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திருமங்கலம் குடிநீர்த் திட்டம் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. மதுரை[illegible]க்கு வைகையிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம், பழனி குடிநீர்த் திட்டம், தேனி, திண்டுக்கல், கொடைக்கானல் டௌன் ஷிப், மேலூர் பஞ்சாயத்து, ஆகிய இவைகளைப் பற்றித் தான் குறிப்பு இருக்கிறதே தவிர, திருமங்கலத்தைப் பற்றிக் குறிப்புகள் இருக்கவில்லை.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, may I know the tota amount set apart in the Fourth Plan for our State for the supply of drinking water ?

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : It is proposed to take up only 31 new water-supply and water-supply augmentation schemes and a provision of Rs. 12 crores and 50 lakhs have been scheduled for this purpose. So, out of these schemes only one scheme has been taken up in the Madurai district and that is 'Ottanchatram'.



1969 மார்ச் 28]

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, திண்டுக்கல் குடி நீர் திட்டத்திற்குச் சென்ற ஆண்டே ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னும் அந்த வேலை என் துவக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.:** திண்டுக்கல் பகுதிக்கு ஏறத்தாழ 12 இலட்சம் 67 ஆயிரம் ரூபாய் செலவழித்து ஒரு திட்டம் நடத்திக்கொண்டு வருகிருர்கள். ஆனல், அதை இன்னும் நிறைவேற்றவில்லை. சர்விஸ் ரிசர்வாயர் என்கின்ற அந்தத் தேக்கம் கட்டப்பட்டு வருகிறது. அது முடிந்துவிட்ட பிறகு தண்ணீர் விநியோகிக்க முடியும்.

**திரு. பி. துரைராஜ் :** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் புளியங்குடி நகரில் குடி தண்ணீருக்கு எவ்வளவு திண்டாட்டம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே நேரில் பார்த்திருப்பதால் நன்ருக அறிவார்கள். அந்த நகரத்திற்குக் குடி தண்ணீர்த் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு ஏதாவது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுமதி அளிக்கப்பட்டிருந்தால், அதைக் கூடிய விரைவில் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் ஏற்கனவே சொன்னேன். 12 கோடி 50 இலட்ச ரூபாய் செலவில் 31 புதிய திட்டங்களை எடுத்துக்கொண்டிருக்கிறேம் என்று. நெல்லை மாவட்டத்தில் இருக்கும் திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் இப்பொழுது உறுதியாகச் சொல்லமுடியாது.

### நாககுப்பத்துக்கு உயர்நிலைப் பள்ளி

* 518 **வின —திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கள்ளக்குறிச்சி வட்டம் நாகக்குப்பம் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி துவக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை கிடைக்கப்பெற்றதா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு கோரிக்கை கிடைக்கப் பெற்றது அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 1967–68, 1968–69-ம் ஆண்டுகளில் பெறப்பட்டது. அது தள்ளி வைக்கப்பட்டது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** நாக குப்பத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னலேயே அவர்கள் பணம் கட்டியிருக்கிருர்கள். பணத்தோடு சேர்த்து ஒரு கட்டடமும் கொடுப்பதற்கு அங்கிருப்பவர்கள் வாக்குறுதி அளித்தும் எந்தக் காரணத்தால் அந்த உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்படவில்லை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த இடத்தில் உயர்நிலைப் பள்ளி தேவையில்லை என்று பரிந்துரை செய்திருக்கிருர்கள். ஆனல் அதற்குப் பின்னல் சட்டமன்ற உறுப்பினர் திரு. கேசவலு அவர்கள் அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள் அதே போல் இயக்குனர் இந்த ஊரில் பள்ளிக்கூடம் வைப்பது பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

### மாணவிகளுக்குச் சலுகை

* 519 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண்கள் 18 வயது பூர்த்தியானால் S.S.L.C. தனியாக எழுதும் சலுகை தரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அச் சலுகையை ஆண்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** பெண்களுக்கு மட்டும் இந்த உரிமை ஏன் வழங்கப்படுகிறது ? அப்படி ஆண்களுக்கு வழங்குவதில் என்ன தடை இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது பள்ளி இறுதிப் படிப்பு படிப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே இந்த விதிவிலக்கு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பெண்களுக்கு விவாகரத்து செய்து கொண்டவர்கள், விதவைகள் இவர்களுக்கெல்லாம் ஒரு வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்பதற்காக 1962-ம் ஆண்டு இப்படிப்பட்ட ஒரு விதி விலக்கு கொடுக்கப்பட்டது. இந்த விதிவிலக்கு இனிமேல் மற்றவர்களுக்கு விரிவாக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. கே. விநாயகம் :** 1962-ம் ஆண்டிலிருந்து இந்த விதிவிலக்கு காரணமாக எவ்வளவு மாணவிகள் இந்தப் பரீட்சைக்குப் போயிருக்கிறார்கள் ? எவ்வளவு பேர்கள் அதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்ற கணக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த விவரங்கள் சேகரிப்பதற்கு ஏராளமாகச் செலவு ஏற்படும்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆண்களைப் பொறுத்தவரையில் இந்தச் வயது வரம்பை கொஞ்சம் கூட்டி யார் வேண்டுமானாலும் 20 அல்லது 22 வயதுக்கு மேற்பட்டவர்களும் எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதலாம் என்று விதி விலக்கு அளிப்பதால் என்ன இழப்பு ஏற்படுகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மெட்ரிகுலேஷன் எழுத இப்போதே வாய்ப்பிருக்கிறது. பள்ளி இறுதி வகுப்பில் இப்போது ஏராள மானவர்கள் படிப்பதற்கு நம் நாட்டில் வாய்ப்புகள் இருக்கிற காரணத்தினால் இந்தச் சலுகைகள் கொடுக்கவேண்டிய அவசியமில்லை.

**திரு. நா. வீராசாமி :** அதிகமான பள்ளிகள் இருப்பதால் ஆண்களுக்கு அத்தகைய வாய்ப்பு கொடுக்கத் தேவையில்லை என்று சொன்னார்கள். ஆனால் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு பலயிடங்களில் வேலை செய்யும் லட்சக்கணக்கானவர்களுக்கு மேலும் மேல் படிப்பு படிக்க, அதாவது பி.யு.ஸி., பீ.ஏ. போன்ற பரீட்சைகள் தனியாக எழுதுவதற்கு மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போன்று இந்த மாநிலத்திலும் அதற்கு வழி வகுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே நாம் மாலை நேரக் கல்லூரிகள் வைத்திருக்கிறோம். அங்கே சென்று அவர்கள் படிக்கலாம். மற்ற மாநிலங்களில் என்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால் அதைப் பரிசீலிக்கச் சொல்கிறேன்.

THIRU T. MARTIN: May I know from the Hon. Minister whether there is any proposal before Government to re-introduce E.S.L.C. examination in Tamil Nadu ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை.





### வடாற்காடு மாவட்டத்தில் மையச் சமயற்கூடம்

* 520 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் மையச் சமையற்கூடம் அமைப்பதற்கென அமெரிக்க உலக கூட்டுறவு (கேர்) நிறுவனத்தால் தேர்ந்து எடுக்கப்பட்டு, அம் மாவட்ட கலெக்டரிடமிருந்து பரிந்துரையுடன் வந்துள்ள இடங்களின் விவரங்கள் யாவை ?

(இ) அவை எப்போது எந்த எந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) :—அடுத்த ஆண்டில் வடஆற்காடு மாவட்டத்தில் மூன்று மையச் சமயற்கூடங்கள் காட்பாடி ஒன்றிப்புகளில் அமைக்கப்படும். வாலாஜா, வேம்பாக்கம் ஆகிய ஊராட்சி

### கல்வி இலாகா அலுவலர்கள்

* 521 வினா—திரு. பி. வேலுசாமி : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வி இலாக்காவில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள், மற்றுமுள்ள அதிகாரிகள் சிப்பந்திகள் வேலைக்கு சேர்ந்து எவ்வளவு ஆண்டுகளில் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்ற வரம்பு சர்க்கார் வகுத்துள்ளது ?

(இ) ஆம் எனில், நிரந்தரம் செய்யப்பட வேண்டிய வரம்பு கடந்தும் வேலை நிரந்தரம் செய்யப்படாமல் உள்ளவர்களுக்கு நிரந்தரம் செய்ய சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. பி. வேலுசாமி :** இந்தக் கல்வி இலாகாவில் பணிபுரிகிற ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் இவர்கள் எட்டு ஆண்டுகள், பத்தாண்டுகள் சர்வீஸாகியும் கூட நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களை நிரந்தரம் செய்வதற்கு முயற்சி உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எப்போதைக்கெப்போது நிரந்தரம் செய்யவேண்டும், கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்ய வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. பொதுவாக இதில் சிக்கல் ஏற்படுவது எந்த வேலையில் நியமிக்கிறோமோ அந்த வேலை நிரந்தரமாகயிருந்தால் உடனடியாக நிரந்தரமாக்கப்படுகிறது, அது இடைக்கால வேலையாக இருந்தால், அதாவது டெம்பரரியாக இருந்தால், கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படாமல் அடிக்கடி பரிசீலித்து கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்ய வேண்டுமென்று சர்க்கார் அறிவித்து வருகிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்வதற்கு ஏதாவது குறிப்பிட்ட விதிகள் இருக்கின்றனவா அல்லது, குறிப்பிட்ட காலவரை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனி விதிமுறைகள் இருக்கின்றன.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** ஜில்லா போர்டிலிருந்து கல்வி இலாகாவிற்கு மாற்றப்பட்ட அதிகாரிகள், ஆசிரியர்கள் இவர்களுக்கும் கல்வி இலாகாவில் பணிபுரிகிற ஆசிரியர்கள், மற்றவர்களுக்கும் இடையே தாரதம்மியம் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாவட்டக் கழகம் நடத்துகிற உயர் நிலைப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக் கொப்ப தரவேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதை எற்கிற முகத்தான் இருவருக்கும் ஏதாவது சங்கடங்கள் ஏற்படக்கூடாது என்பதற் காக இருதரப்பாரையும் கல்வி ஆலோசகர் சந்தித்து இருவரும் ஒத்துக் கொள்ளக்கூடிய வழி முறைகளை வகுத்து ஏற்பாடு செய்து வருகிறார்கள். விரைவில் அது பூர்த்தியாகிவிடும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தனியார் நடத்தும் ஆலைகளிலும் மற்ற பாக்டரிகளிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேல் வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்கவேண்டு மென்று தொழிற் சட்டங்கள் கூறுகின்றன. அதேபோல் ஆசிரியர் களுக்கும் மற்றும் சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஏதாவது குறிப்பிட்ட வருடத்திற்குள் வேலை செய்தால் அவர்களின் வேலை நிரந்தரமாக்கப்படும் என்பதற்கான ஒரு சட்டம் பிறப்பிப்பதற்கு அரசுக்கு யோசனை உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது கூட நிரந்தரம் இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆசிரியர்களை வேலைக்கு நியமிக்கும்போது அந்த ஆசிரியர்களை நிரந்தரமாக நாம் எடுத்துக்கொண்டிருந்தால் உட னடியாக அவர்களுக்கு நிரந்தரமாகிவிடும். டெம்பரரி பேஸிஸில் வேலைக்கு அமர்த்தும்போது கொஞ்சம் காலதாமதமாகிறது. அப்படி காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும்படி அடிக்கடி சர்க்கார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தி வருகிறது.

### ஆசிரியர் பயிற்சி

*522 **விஞ :—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

நத்தம், அல்லது மேலூரில் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் ;** இல்லை.

**திரு பெ. மலைச்சாமி :** ஆசிரியர் பணிக்கு ஆண்களைவிட பெண் களால்தான் அதிகம் பயன் இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது; இதை வலியுறுத்துகிற அளவில் பெண்களுக்கு இத்தகைய பயிற்சி பள்ளிகளைத் துவக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. இப்போதுள்ள பிரச்னை எல்லாம் பயிற்சி பெற்று வெளியே வந்தவர்களுக்கு பூர்ணமாக வேலை கொடுக்க முடியவில்லை என்ற காரணத்தால் வருடந்தோறும் எவ்வளவு ஆசிரிய ஆசிரியைகள் வேண்டுமென்று கணக்கிட்டு அதற்கேற்றாற்போல் இடங்களை ஒதுக்கி வருகிறோம், கூட்டுகிறோம், அல்லது குறைத்து வருகிறோம்.

**ஹாஜி மா. மு. பீர் முஹம்மது :** ஆரம்பப் பள்ளி மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர்களை விட ஆசிரியைகள் சிறந்த முறையில் பயிற்றுவிக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் கல்வியாளர்களிடம் இருக்கிற காரணத்தினால் ஆசிரியர் பயிற்சிக்கு அதிகம் மாணவர்களை எடுப்பதைவிட அதிகமான மா ணவிகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆண்களையே அப்படி முற்றிலும் வெறுப்பதற்கு நான் தயாராகயில்லை. ஆண்களிலும் திறமையான வர்கள் இருக்கிறார்கள், பெண்களிலும் திறமையானவர்கள் இருக்கிறார் கள். இரண்டிலும் மோசமானவர்களும் இருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பெண்களுக்கென ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறப்பது ஒருபுறமிருக்க ஏற்கனவே உள்ள சிலயிடங்களில் —திருமங்கலத்தில் 80 ஆக இருந்த இடம் 40 ஆக குறைக்கப்பட்டிருக் கிறதே அதை மீண்டும் 80 ஆக உயர்த்த ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தப் பள்ளிக்கூட்டத்தைக்கூட பரிசீலித்தேன். நம் தேவைக்கேற்றவாறு எண்ணிக்கையை கூட்டுகிறோம் அல்லது குறைக்கிறோம் என்று முன்னாலே சொன்னேன். எல்லாவற்றை யும் கூட்டினால் வேலையில்லாத் திண்டாட்டத்தை அணுகவேண்டிய கார ணத்தால், ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு செக்ஷன் கூட்டுவது அல்லது குறைப்பது என்பதுபற்றி அப்போதைக்கப்போது அதிகாரிகள் பரிசீலித்து முடிவு எடுக்கிறார்கள்.

**புலவர் க. முருகையன் :** இப்போது தேர்வு பெற்றிருக்கிற ஆசிரியர் களுக்கு வேலை கிடைக்கவில்லை. சர்க்காருடைய பணத்தையும், பொது மக்களின் வரிப் பணத்தையும் செலவு செய்து அவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். ஆகவே, இந்தப் பயிற்சியைக் குறைத்து வேறு பயிற்சிகளுக்கு வகை செய்ய அரசுக்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ் ஆசிரியர் அப்படிச் சொல் வது என்றால் அதைப் பாராட்டி நாம் அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டியது தான். இருந்தாலும் சில நேரங்களில்—நான் தமிழ் ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்து கொண்டேன். அவர்கள் போட்டிருக்கும் தீர்மானம் தமிழ் ஆசிரியர்களுக்கு வேலை இல்லை, ஆகவே அவர்களை பஞ்சாயத்து யூனியன்களில் நியமிப்பதற்கு முன் உரிமை கொடுக்கவேண்டும் அல்லது கோவில்களில் நிர்வாக அதிகாரிகளாகப் போடவேண்டும் என்று கூட அவர்கள் தீர்மானம் போட்டிருந்தார்கள். ஆசிரியர்களின் எண்ணிக்கை யைக் கணக்கிட்டு எப்படியாவது பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க ஐந்தாண்டுத் திட்டங்களில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை நாம் வருடந்தோறும் பெருக்கி வருகிறோம்.

*523. **விஞ—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா : மு.ப. 9-30

(அ) ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயிலும் மாணவர்கட்கு அரசினர் வழங்கும் உதவித் தொகை (Stipends)-ஐ அதிகரிக்கும் உத்தேசம் அரசினர்க்கு உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி யில் பயிலும் மாணவர்களுக்கு அரசினர் உதவித் தொகை ஏதேனும் அளிக்க முயற்சிப்பார்களா ? குறைந்தபட்சம் ஆதிக் திராவிட சமுதாயத் திற்கும், பிற்பட்ட சமுதாயத்திற்கும் உதவித் தொகையை அதிகரிக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. அதிகப்படுத்தப் போகிறார்களா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளைப் பார்க்கும்பொழுது, ஏராளமான மாணவர்கள் முன் வருகிறார்கள். ஆகவே, அதிகப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவரவர்களே, பயிற்சிப் பள்ளி களில் படிக்கும் ஆண்களைவிட பெண்களுக்கு கைவேலைகள் நிறைய இருக்கின்றன. தையல், நிட்டிங் இருக்கின்றன. அதற்கு வேண்டிய உபகரணங்களை வாங்கவேண்டியிருக்கிறது. அதற்காக பெண்கள் பயிற்சிப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு ஸ்டைஃபண்டை உயர்த்துவதற்கு அரசாங் கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதைக்கு இல்லை.

**திரு ஈ. ஆர். கிருஷ்ணன் :** பேரவைத் தலைவரவர்களே, ஆசிரியாகள் நிறையத் தேவைப்பட்ட காலத்தில் அவர்கள் பயிற்சிப் பள்ளியில் சேர்வதற்கு ஊக்கமளிப்பதற்காக ஸ்டைஃபண்டை கொடுத்து வந்தது. இப்போது அதிகப்படியான ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகளில் தேர்ச்சிப் பெற்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனவே, தற்காலிகமாக அதை நிறுத்துவதற்கு உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது நல்ல யோசனை.

**திரு. நா. காசிராமன் :** தலைவரவர்களே, இந்த ஸ்டைஃபண்டை அதிகப்படுத்துவது ஒருபக்கத்தில் இருக்கட்டும். ஸ்டைஃபண்ட் கொடுத்து பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்கள் வெளியிலே 5 வருஷ காலத்திற்கு வேலைகள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று பைண்ட் ஓவர் செய்யப் பட்டிருக்கிறது. அப்படியிருப்பதால் வெளியிலே வேலைக்குப் போக முடியவில்லை, இங்கும் வருவதற்கு வழியில்லை. குறைந்த ஊதியம் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, பைண்ட் ஓவரிலிருந்து ரிலீஸ் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பி.டி. விஷயத்தில் விதிமுறை களைப் பார்த்தேன். அப்படிக் கட்டாயமாக இருப்பதாகத் தெரிய வில்லை. அவ்வாறு வேலைக்குச் சென்றவர்கள், அரசாங்கம் வேலைக்குக் கூப்பிடும் பொழுது ரிலீஃப் வாங்கி வர விதி இருப்பதாகப் பார்த்தேன். அதுபோல இருக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** தலைவரவர்களே, ஆசிரியர் வேலையில்லாமல் இருப்பதற்குக் காரணம், மாணவர்கள்-ஆசிரியர் கள் ரேஷியோ மிக அதிகமாக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆசிரியருக்கு உள்ள மாணவர்களை இன்னும் குறைத்து ரேஷியோவை நியாயமாகச் செய்தால் திறமைக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும். வேறுவகையிலே, ஆசிரியர்களுக்கு வேலையும் கிடைக்கும். பள்ளியிலே படிப்புத் திறமை அதிகமாகும். எனவே, அப்படி ரேஷியோவைக் குறைக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது விகிதாச்சாரம் அதிக மாக இருப்பதாகத் தகவல் இல்லை. 20 குழந்தைகளுக்கு, ஒரு கிராமத் திற்கு ஒரு ஆசிரியர் என்று ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அது பிரச்சினை அல்ல.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவரவர்களே, ஆசிரியர் வேலைக்கு முன் வராத காலத்தில், வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் உதவித் தொகை அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. தற்சமயம் 40 மாணவர்கள் படிக்கக் கூடிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு 4,000 பேர்கள் மனுச் செய்வதால் இந்தவிதமான நெருக்கடியைத் தவிர்க்க, அரசு துணிந்து ஸ்டைஃபண்ட் கொடுப்பதை நிறுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவரவர்களே, சமுதாயத்தில் மிகவும் ஏழையாக உள்ளவர்கள், எஸ்.எஸ்.எல்.ஸி.-க்குமேல் தாங்கள் படிக்க முடியாது என்ற காரணத்தினால் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்கு மனுப் போடுகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் 18 ரூபாய் ஸ்டை ஃபண்டைக் கொண்டு சாப்பிடுவதற்குக் கூட முடியவில்லை. அவர்கள் ஏழைகளாக இருப்பதால், அவர்களுக்கு இன்னும் ஸ்டைஃபண்ட் தொகை உயர்த்திக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது 18 ரூபாய் கொடுக்கப் படுகிறது. இதுவே போதும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஏழைகளும் வருகிறார்கள், பணக்காரர்களும் வருகிறார்கள். ஏழைகளுக்கு பிற வசதி கள் இலவசக் கல்வி என்ற திட்டத்தில் கொடுத்து வருகிறது. ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்கு ஏராளமானவர்கள் வருகிறார்கள். உயர்த்திக் கொடுப் பது பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். இப்போதைக்கு பரிசீலிப்பதாக இல்லை.





**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர் கள் பதில் சொல்லும்பொழுது பயிற்சிப் பள்ளிகளில் கட்டாய வேலை நிர்ப்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால், பயிற்சிப்பள்ளி களில் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்கள் இறந்துவிட்ட பிறகும் கூட அந்தப் பணத்தைப் பெற்றோர்கள் கட்ட வேண்டுமென்ற வரையறைகள் உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நிர்ப்பந்தம் இல்லை என்று கூட நான் சொல்லவில்லை. அப்படிப்பட்ட நிலையிலிருந்தால் தனியாரிடத்தில் வேலை பார்த்தாலும்கூட, அரசாங்கத்துறையிலே கூப்பிடும்பொழுது ரிலீப் ஆர்டர் வாங்கிக்கொண்டு வருவதற்கு விதி இருப்பதாக நான் பார்த்தேன் என்று சொன்னேன். ரெகவரி பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்துவிட்டு, பல வருஷ காலமாக வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறு வேலை கிடைக்கும் வரையில் சர்க்கார் உதவித் தொகை கொடுக்க ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** வேலையில்லாதவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்போதைக்கு நம் நிதி நிலைமை இடம் கொடுக்காது.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, இந்த ஸ்டைபண்ட் முறையை நீக்கிவிட்டு, மாற்று வேலைகள் தருவது, ஏழ்மையானவர்களின் பொருளாதார அடிப்படையைக் கொண்டு ஏழைகளுக்கு ஸ்காலர்ஷிப் தரக் கூடிய திட்டம் புகுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** இப்போதைக்கு அப்படிப்பட்ட பரி சீலனை இல்லை.

THIRU B. VENKATASWAMY : Is it a fact that due to the implementation of family planning so many teachers are deprived of jobs because there is no child production in our State ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஊராட்சித் தலைவர் மாறான கருத்தைச் சொல்லுகிறார்கள், ஏராளமாக பிள்ளைகள் பிறந்து கொண்டி ருப்பதாகத்தான் தெரிகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து ஏராளமானவர்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்கு வருகி றார்கள். சமாளிக்க முடியாத நிலை இருக்கிறது என்ற தகவலைச் சொன் னார்கள். வெளியிலேயும் அந்த நிலை இருக்கிறது. எனவே, தரமான ஆசிரியர்களைத் தயார் செய்ய வேண்டுமென்ற கொள்கையை யொட்டி, வரப்போகும் சமயத்தில் ஆசிரியப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படு கின்ற நேரத்தில், 300, 350 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை அமைக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் முன்னாலே யோசனை சொன்னார்கள், ஆசிரியைப் பயிற்சி பெறுபவர் களுக்கு மன வளம் இருக்கிறதா, பண்பு இருக்கிறதா, அறிவு வளர்ச்சி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஆனால் இறுதியில் மதிப்பெண் களைக் கணக்கிட வேண்டுமென்று சொன்னார்கள். மதிப்பெண்களை எடுத் துக்கொண்டால் மன வளம் இருக்கிறதா, ஆசிரியர் பயிற்சிக்கு ஏற்ற முறையில் இருக்கிறதா என்று பார்க்க முடியாது என்று கருதுகிறேன். அதற்கான குழு அமைக்கிறோம். அந்தக் குழு பரிசீலித்து ஆராய்ந்து திறமையானவர்களைத் தேர்ந்தெடுக்கிறது.

(இ) அப்படி எடுக்கவில்லையெனில், சர்க்கார் இது குறித்து ஆவன செய்யும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) மத்திய சாலை நிதி உதவி கொண்டு பாலம் கட்டும் வேலையை மேற்கொள்வதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. எஸ். சந்தானம் :** தலைவர் அவர்களே, அத்தகைய பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள்ளாக செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எவ்வளவு சீக்கிரமாகச் செய்யலாமோ அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கு அந்த ஆற்றைக் கடக்க வேண்டுமானால் வண்டிகளும் மற்றவைகளும் ஆற்றிலே இறங்கித்தான் செல்ல வேண்டி இருக்கிறது. அடிக்கடி ஆற்றிலே வெள்ளம் வருகின்றபொழுது மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்படுகிறது. எனக்கே கூட அதைக் கடக்கிறபொழுது அந்த அனுபவம் ஏற்பட்டது. அந்த நிலைமையை மனதில் கொண்டு இந்த மழைக் காலத்திற்குள் வேலையையும் தொடங்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினரைப் போல் எல்லோரும் அந்த திட்டத்தைப் பற்றிச் சொன்னதால் அந்த திட்டம் ஆராயப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே தற்போதுள்ள முதலமைச்சர் அவர்கள் அங்கே விஜயம் செய்தபோது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தார்கள். அந்த நேரத்திலே உடனடியாக நான் பார்த்து செய்வேன் என்ற வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவும் பஞ்சத்தைப் போக்கவும் நிவாரணமாக இந்த ஆண்டிலே, மழைக் காலத்திற்குள்ளே அதை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்த வாக்குறுதியின் அடிப்படையில் தான் வேலைகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

### லாரி ஓட்டுநருக்குச் சம்பள விகிதம்

***528 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை கார்ப்பொரேஷனில் வேலை செய்யும் லாரி டிரைவர்களுக்கும், மற்ற நகர சபையில் (Municipalities) வேலை செய்யும் லாரி டிரைவர்களுக்கும் அடிப்படைச் சம்பள விகிதத்தில் வித்தியாசம் உண்டா?

(இ) ஆம் எனில், அதனை ஒருமுகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) உண்டு. மாநகராட்சியில் லாரி ஓட்டுநருக்கு மாத அடிப்படை சம்பளம் ரூ. 90—4—110—5—140. நகராட்சிகளில் ஓட்டுநருக்கு மாத அடிப்படை சம்பளம் (கனமான வண்டிகளுக்கு) ரூ. 75—1—85 ; (இலேசான வண்டிகளுக்கு) ரூ. 70—1—80.

(இ) இல்லை.



**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளிலே வேலை செய்கின்ற லாரி டிரைவர்களுக்கு உள்ள சம்பளத்தை, மாநகராட்சியில் வேலை செய்பவர்களுக்கு " ஈக்குவல் " ஆக, சமமாக உயர்த்துவது நல்ல சமாச்சாரம் என்றாலும் நகராட்சிகளிலே வேலை செய்கின்ற லாரி ஓட்டுபவர்களை மாத்திரம் கணக்கிலெடுக்காமல், நகராட்சிகளிலே வேலை செய்கின்ற அத்தனை சிப்பந்திகளுக்கும் இதே மாதிரி சர்க்காரிலே உள்ள சிப்பந்திகளுக்கு ஒப்ப கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**[மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாநகராட்சியிலே லாரி ஓட்டுபவர்களுக்கு கொடுக்கிற சம்பள அளவுக்கு நகராட்சியிலே இருப்பவர்களுக்கும் கொடுத்ததாக நான் பதில் அளித்ததாக நீங்கள் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான் அப்படிப்பட்ட பதிலைச் சொன்னதாக, இங்கே விளக்கம் இல்லை. எப்போதுமே எல்லா பணிகளிலும் நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் ஊதியத்திலே வேறுபாடு இருந்து வருகிறது. நகராட்சியினுடைய நிதி நிலை அதிகப்பட்டு, அப்படிப்பட்ட பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை வந்தால், நிச்சயமாக அவைகளைக் கவனிக்க அரசாங்கம் தயங்காது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளில் லாரி ஓட்டுபவர்களுக்கு சம்பளம் இல்லாது, நாட்படி கொடுக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அகவிலைப் படியாக ரூ. 75 தரப்படுகிறது. அரசாங்க விகிதத்தில் அகவிலைப் படியும், அவைகளுக் கொப்ப ரூ. 17 என்ற விகிதத்தில் வீட்டு வாடகைப் படியும் மாநகராட்சி மன்றத்திற்கு வழங்கப்படுகிறது. நகராட்சி மன்றத்திற்கு அகவிலைப்படி ரூ. 75-ம், ரூ. 75-க்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 7-ம், ரூ. 75-க்கும் குறைவாக சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 3-ம் வீட்டு வாடகைப் படியாக வழங்கப்படுகிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, இந்த டிரைவர்கள் என்ற பட்டியலிலே பஞ்சாயத்து யூனியனிலே வேலை செய்கின்றவர்களுடைய பெயரும் வருகின்றதா? அவர்கள், மற்ற எல்லா டிரைவர்களைக் காட்டிலும் பி. டபிள்யூ.டி., ஹைவேஸ், இவைகளில் உள்ள டிரைவர்களைக் காட்டிலும் குறைவாகச் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தைக் கருதி, ஏதாவது விதிவிலக்கு அளிக்குமா அரசு என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இது, நகராட்சிகள், மாநகராட்சிகள் தொடர்புடைய கேள்வியாகும். ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றிய விவரம் இதிலே வரவில்லை.

### பேரூராட்சி மன்றப் பணியாளர்கள்

***529 வினா.—திரு சா. மெய்யப்பன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சி மன்றங்களில் பணிபுரியும் தலைமை எழுத்தர், எழுத்தர், தண்டலர், சுகாதார மேஸ்திரி முதலியோருக்கு சம்பளங்கள் என்ன, தரவாரியாக ?

(இ) அவர்களுக்கு பென்ஷன்கள் உண்டா ?

(உ) அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்படுகிறதா ? ஆம் எனில் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) :—

தலைமை எழுத்தர்—ரூ. 90—3—105—4—125.

எழுத்தர்—ரூ. 70—2—90—3—103.

தண்டலர்—ரூ. 55—1—70.

பொதுச் சுகாதார மேஸ்திரி—ரூ. 50—1—60.

### *Coir Industries.*

* 524 *Q.*—THIRU A.M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether there is any proposal to start coir industries in the State ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) அரசாங்க தொழில் வணிகத்துறையின் மூலம் கயிற்றுத் தொழிற்சாலை நடத்துவதற்கான திட்டம் ஏதுமில்லை.

இம்மாநிலத்தில் கயிற்றுத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் மத்தியப் பணிச் சங்கங்களும் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. மிதியடி கெட்டிநார் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக முன்னோடித் தொழிற்சாலை ஒன்றை அரசாங்கம் தென்காசியில் நிறுவியுள்ளது. அத்தொழிற்சாலை 1968 ஜூன் இடைப்பகுதியிலிருந்து இவற்றைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. கெட்டிநார், கலவைத் தேங்காய் நார் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கென 20 தொழிற் பிரிவுகளை நிறுவும் திட்டத்திற்கும் இந்தப் பிரிவுகளுக்கான பட்டுக்கோட்டையில் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கம் ஒன்றை நிறுவுவதற்கும் அரசாங்கம் ஏற்பளித்துள்ளது. நிலம், கட்டிடம் இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு, தொடராச் செலவு ரூ. 3 லட்சம், பங்கு மூலதனத்திற்கு ரூ. 10,000 சேம நிதி ஒதுக்கத்திற்கு ரூ. 5,000 இத்திட்டத்திற்குச் செலவாகும். இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலளிக்கையில் கயிற்றுத் தொழிற்சாலைக்குப் பதிலாக நார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறினார்கள். இந்த நார் உற்பத்தியின் மூலம் நமது நாட்டிலேயிருந்து வெளிநாடுகளுக்கு நாம் ஏதாவது ஏற்றுமதி செய்திருக்கிறோமா? அப்படிச் செய்திருந்தால் எவ்வளவு தொகைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவு தொழிற்சாலை இருப்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்றுமதி பற்றிய விவரம் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, ஈத்தாமொழியில் கன்னியாகுமரி ஜில்லாவில் பயிற்சிப் பள்ளிக்கூடம் இருக்கிறது . அங்கு தாராளமாக கயிற்றுக்கான மூலப்பொருள்கள் இருப்பதால் அங்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பயிற்சிப் பள்ளி இருக்கிறது. 40 மாணவர்களுக்குப் பயிற்சிகொடுக்கப்படுகிறது. அங்கே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த திட்டம் இருக்கிறதா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, சேலம் வட்டத்திலே அக்ரஹாரம் நாட்டாமங்கலத்தில் கயிற்றுத் தொழிற்சாலை இயங்கியது. தற்போது சில ஆண்டுகளாக நடைபெறவில்லை. அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியாக அதைப்பற்றிக் கேட்க வேண்டும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே குடிசைத் தொழிலாக இந்தக் கயிற்றுத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்ய முன் வந்து அதை அபிவிருத்தி செய்ய ஊக்கமளிக்க முன் வருவார்களா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

### அணைக்கட்டுகள்

*525 **வினா.—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை என்னும் பள்ளத்தின் மேல், செல்லம்பாளையம் கிராமத்துக்கு பக்கத்தில் அணை கட்டும் திட்டம் ஏதாவது உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) எண்ணமங்கலம் கிராமத்திற்கு அருகில் வழுக்குப்பாறை பள்ளக் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு (பாசனத்) தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது. அதன் விவரம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலளிக்கையில் இந்தத் திட்டம் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு ஏக்கராக்களுக்குப் பாசன வசதிகள் கிடைக்கும்? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 750 ஏக்கர் புதிய பாசனத் திட்டம், 977 ஏக்கர் பாசன ஊர்ஜிதப்படுத்துவதற்கு. மொத்தம் 1,860 ஏக்கர். இதன் உத்தேசச் செலவு ரூ. 25 இலட்சம்.

*526 **வினா.—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அந்தியூர் தொகுதியில் ஓடும் வறட்டுப் பள்ளத்தில் மேல் எண்ணமங்கலம் கிராமத்திற்கு பக்கத்தின் அணை கட்டும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) செயற்குறிப்பில் குறிப்பிட்டுள்ள அணை, 2,089 ஏக்கர் அடங்கிய புதிய ஆயக்கட்டிற்குப் பாசன வசதியளிக்கும். இதற்கு ரூபாய் 40·90 லட்சம் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது பொதுப்பணித் துறையின் உள்ளூர் அதிகாரிகளால் ஆராயப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இந்த அந்தியூர் பகுதி மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கு கோடைகாலத்தில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப் படவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு திட்டங்களையும் விரைவாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### செங்கத்திற்கு வடக்கே செய்யாற்றின் குறுக்கே பாலம்

* 527 **வினா.—திரு. பி. எஸ். சந்தானம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டம், செங்கம் கிராமத்திற்கு வடக்கே செல்லும் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்ட சர்க்கார் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) தமிழ் நாடு தாராள ஓய்வூதியத் திட்டம் ஊராட்சிப் பணியாளர்களுக்கு நீட்டிக்கப்படவில்லை. இருப்பினும், பணிக்கொடை, வருங்காலச் சேமிப்பு நிதி நலன்களைப் பெற அவர்களுக்குத் தகுதியுண்டு.

(உ) ஊராட்சிகளின் எழுத்தர்களும், தலைமை எழுத்தர்களும் பேரூராட்சியின் தரம் 1 அதிகாரியாகவும் (ஊராட்சி) வளர்ச்சி அதிகாரியாகவும் தெரிந்தெடுக்கப்படலாம். உரிய தகுதி பெற்றிருப்பின் உரிய காலம் கடந்த பின் தண்டலர்களும் ஊராட்சிகளில் எழுத்தர்களாகப் பதவி உயர்வு பெறலாம். உள்ளாட்சி மன்றங்களில் உள்ள பொதுச் சுகாதார மேஸ்திரிகளுக்கு மேலும் பதவி உயர்வு பெற வாய்ப்பில்லை.

## *Pre-fabricated houses*

*530 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state.—

(*a*) whether the Tamil Nadu Housing Board has given up the idea of setting up a pre-fabricated housing plant near Madras ; a nd

(*b*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா** : (அ) ஆம்.

(இ) அமைப்பு வீடுகளை (Pre-fabricated houes) அமைப்பதற்குத் தேவைப்படும் தொழிற்சாலையை நிறுவ தோராயமாக ரூ. 4 கோடி செலவு ஆகும். தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து இப்பெரும் தொகையை முதலீடு செய்ய இயலாது.

**திரு. கே. விநாயகம்** : சார், இந்த பிரீ-ஃபாபிரிகேட்டட் ஹவுஸிங் பிளாண்ட் வைத்தால் அந்த யூனிட்டிடமிருந்து, செலவுக் குறைவாக பல பொருள்களைப் பெறமுடியும், வீடுகள் உண்டாக்கமுடியும் என்ற ஒரு கருத்து இருந்தது. அவர்கள் வெளியே அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் போய், இன்னும் விலை குறைவாக, கடைசியிலே வீடுகள் மதிப்பிடப்படும் என்ற கருத்து நமக்கு இலாபம் என்ற காரணத்தினால், அதை என் இப்பொழுது கை விட்டுவிட்டார்கள் ? ஹவுஸிங் போர்ட் வீட்டுக்குரிய பொருள்களையும் உண்டாக்கமுடியும், அதன் மூலமாக உறுப்புகள் மற்ற தேவையான பொருள்களையும் குறைந்த விலையில் வினியோகம் செய்யமுடியும், அதனாலே இலாபம் அடைய முடியும். அதை என் கைவிட்டார்கள் என்று சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா** : இப்பொழுது இந்த பிரீஃபாபிரிகேட்டட் ஹவுஸிங் பிளாண்ட் கட்டுவதற்கு, நிறுவுவதற்கு மட்டும் தோராயமாக ரூ. 4 கோடி தேவைப்படுகிறது. அதல்லாமல் அந்தப் பொருள்களை வாங்கி வியாபாரம் செய்வதற்கு மேற்கொண்டு பல கோடி ரூபாய் தேவைப்படும். அது மட்டுமல்லாமல், இப்பொழுது செங்கற்சூளை ஒன்று 90 இலட்சம் ரூபாய் செலவிலே கட்ட இருக்கிறோம். புழை கற்கள் தொழிற்சாலை ஒன்று சுமார் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிலே கட்ட இருக்கிறோம். அதற்கும் மேற்கொண்டு பல கோடி ரூபாய்கள் தேவைப்படுகின்றன. இந்த இரண்டு தொழிற்சாலைகளிலும் உற்பத்தி ஆகின்ற பொருள்களை வாங்கி உபயோகிப்பதற்கு நம்மிடம் போதுமான தேவைகள் இல்லை. அதற்கே, பி. டபிள்யூ. டிபார்ட்மெண்ட், சென்ட்ரல் பி. டபிள்யூ.டி., ரெயில்வே இவர்களெல்லாம் ஒத்துழைத்தால் தான் அந்த இரண்டு தொழிற்சாலைகளும் முன்னுக்கு வரமுடியும். ஆகவே பணமும் தேவைப்படுகிறது. நாட்டிலே தேவையும் குறைவாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இப்பொழுது தொழிற்சாலைகளில் வேலை செய்து வருகின்ற வேலை ஆட்களுக்கு வேலை இழப்பு ஏற்படுகிற நிலைமையும் இருக்கிற காரணத்தால், அதை தற்போது செய்வதற்கில்லை.



## உழவர்களுக்கு உதவி

*513 வினா.—**திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு உணவு-வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டந்தோறும் வேளாண்மைத் துறைக்கென ஒரு தலைமை அலுவலகத்தை அமைத்து உழவர்களுக்கு உதவி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : (அ) ஆம்.

(இ) பரிசீலனை முடிவடைந்த பிறகுதான் எப்பொழுது அமல் படுத்தப்படும் என்று தீர்மானிக்கப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி** : தலைவர் அவர்களே, தற்பொழுது ஒன்றியங்களிலுள்ள வேளாண்மைத் துறை விஸ்தரிப்பு அதிகாரியின் பணி அவ்வளவு நன்மை தருவதில்லை என்று கருத்து இருக்கிறது. அரசு விரைவிலே ஆராய்ந்து தாலுக்கா தலைமை இடங்களில் அத்தகைய ஒரு அலுவலகத்தை விரைவில் திறக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : வட்ட ரீதியிலே விவசாயத் துறையை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய முறையும், மாவட்ட ரீதியில் அதற்கு வேண்டிய மாற்றங்களும் அரசாங்கத்தின் தக்க ஆலோசனையில் இருக்கிறது. அதைப்பற்றி தீர்க்கமாக ஆலோசித்துத் தான் பிறகு முடிவு எடுக்கப்படும். இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களிலே பணியாற்றுகின்ற விஸ்தரிப்பு அதிகாரிகள் சரியாக பணியாற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டு சரியானதல்ல.. எங்காவது ஓரிரு இடங்களில் அப்படிப்பட்ட தவறுகள் இருக்குமானால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப்பற்றி பரிசீலித்து, அதன் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள விஸ்தரிப்பு அதிகாரி விற்பனை அதிகாரியாக மட்டும், கோடவுன் கீப்பராக வேலை செய்து வந்ததை மாற்றி, இப்பொழுது அவர்கள் வயலிலேயே சென்று விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனை கூறுவதோடு, அவர்களுக்கு உதவியாக இருக்கவேண்டிய அளவில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஏதாவது குறை எந்த ஊரில் இருந்தாலும், அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம்.

**திரு. ஆர். நாகசுந்தரம்** : நெய்வேலியில் அதிவேகமுள்ள மின் ஊந்தின் மூலம் நாள் முழுவதும் மணிக்கு ஒரு லட்சம் காலன் தண்ணீர் இறைக்கப்படுவதால் தான் தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் உள்ள குளங்களும், ஏரிகளும் வறண்டு போய் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பொறி இயல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அது உண்மையாயின், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்வி போடவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : விவசாய அலுவலகத்தைப் பற்றிய கேள்வி இது. உறுப்பினர் அவர்கள் நீரோட்டத்தைப்பற்றி கேட்கிறார்கள். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. எஸ். முருகையன்** : ஒன்றியங்களில் இப்பொழுது கம்போஸ்டு டெவலப்மெண்டு இன்ஸ்பெக்டராக வேலை செய்பவர்கள் ஒரு ஆண்டு காலமாக என்ன வேலை செய்வது என்றே தெரியாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் முழுக்க, முழுக்க வேளாண்மைத் துறையில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சில இடங்களில் திறமையாக பணியாற்றிருக்கிருர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகளைச்சந்தித்து உரக்குழி போடுவதில் ஈடுபட்டிருக்கிருர்கள். எங்கேயாவது வேலைத் தவக் கம் இருந்து, பணியாற்ருத நிலை இருந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவர்களை வேறு பணியில் ஈடுபடுத்து வது பற்றி யோசிக்கலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** விவசாய அலுவலகங்கள் பெரும்பாலும் பஞ்சாயத்து ஒன்றியங்களில் இணைக்கப்பட்டு, அவற்றின் பகுதியாக இருப்ப தால், நகராட்சி மன்ற எல்லைக்குள் இத்தகைய விவசாய அலுவலகம் இல்லாத நிலைமை இருக்கிறது. குறிப்பாக, திண்டிவனத்தில் விவசாய அலுவலகம் இல்லாமல், ஒலக்கூர் பஞ்சாயத்து ஒன்றியத்தோடு இணைக்கப் பட்டு, இந்த அலுவலகம் அங்கே மாற்றப்படுகிற காரணத்திஞல், நகராட்சி எல்லைக்குள் விவசாய அலுவலகம் இல்லாத நிலையில் விவசாயிகளுக்கு அனுகூலம் இல்லாத நிலை இருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலித்து, திண்டிவனத்தில் விவசாய அலுவலகம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுது கூட நகராட்சி எல்லைக்கு அருகாமையில் உள்ள ஒன்றியங்களில் அதற்கு வேண்டிய வேலைகள் கவனிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக திண்டிவனம் பற்றி சொன்ஞர்கள். பொதுவாக ஒரு வட்டத்துக்கு ஒரு விவசாய அலுவலகம் வேண்டும் என்ற நிலைமை வரும்பொழுது திண்டிவனத்திற்கும் வரக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது, என்று நான் மூலக் கேள்விக்குப் பதில் சொன்னதிலிருந்து கனம் அங்கத்தினர் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** விவசாய விதைப் பொருள்கள் சரிவர கிடைப்பதில்லை. விதைப் பொருள்கள் சரிவர கிடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** விதைப் பொருள்களும் ஒவ் வொரு யூனியனிலும் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. எந்த குறிப்பிட்ட விதைப் பொருள் கிடைக்கவில்லை என்ற ஒரு நிலைமையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது உடனுக்குடன் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாம். மாவட்ட அளவிலே உள்ள அதிகாரிகளிடம் அதைப்பற்றித் தெரிவிக்கலாம். அதை அவர்கள் கவனிக்காத சூழ்நிலை இருந்தால், டைரக்டர் அவர்களின் கவனத்திற்கோ அல்லது நேரடியாக என்னுடைய கவனத்திற்கோ கொண்டு வந்தால், விவசாயிகளுக்கு வேண் டிய விதைகள் காலாகாலத்தில் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க லாம்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, விவசாய விஸ்தரிப்பு அலுவலர்கள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் நான்கு பேர்கள் இருக்கிருர்கள். ஒரு கார், மோட்டார் பைக் இருக்கிறது. மற்ற இருவர்களுக்கு ஒன்றும் கிடையாது. விவசாய காலத்தில் நல்ல முறையிலே வேலை செய்யவேண்டுமென்ருல், அவர்கள் உதவியை நாடவேண்டிய நிலை இருக்கிறது அவர்கள் கிராமங்களில் நல்ல முறையில் பணியாற்று கிருர்கள். ஆகவே, மற்றவர்களுக்கும் விவசாயக் காலத்தில் ஸ்கூட்டர் வாங்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? மேலும், முன்ஞள் முதல் அமைச்சர் அண்ணு அவர்சள் அவர்களுக்கு அரைக்கால் சட்டை கொடுப்பதாகச் சொன்ஞர்கள். விவசாயக் காலத்தில் அவர்களுக்கு அரைக்கால் சட்டை கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** விவசாய விஸ்தரிப்பு அதிகாரி களை அடையாளம் தெரிந்துகொள்கிற அளவில் அவர்கள் காக்கி அரைக்கால் சட்டை அணிந்து வயலுக்குச் செல்லவேண்டும் என்று முதலில் கேட்டுக்கொண்டோம். சிலர் அப்படி காக்கிச் சட்டை போடு வதற்கு கூச்சப்பட்டார்கள். பிறகு ஒரு உத்தரவு போட்டு அவர்கள் அரைக்கால் சட்டை போடவேண்டும் என்று சொல்லி, அவர்கள் அதை போட்டுக்கொண்டு வருகிருர்கள். அரைக்கால் சட்டை வாங்கித் தருவதாகச் சொல்லவில்லை. ஏற்கெனவே இருந்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் அப்படிப்பட்ட வாக்குறுதி ஒன்றும் அளிக்கவில்லை. என்னேடு



எல்லா விவசாயக் கருத்தரங்குகளிலும் அவர்கள் கலந்துகொண்டிருக் கிருர்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லை. நாங்கள் அவர்களை அவ்வாறு கேட்டுக்கொண்டோம். அவர்களும் இது சிக்கனமான முறை என்ற காரணத்திஞல், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, இப்பொழுது நடைமுறையில் அம்மாதிரி போட்டுக்கொண்டு வருகிருர்கள். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் சரியாக செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிற நேரத்தில், தஞ்சையில் அமோக விளைச்சல் ஏற்பட்டிருக்கும் பொழுது விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்கிருர்கள். என்று சொன்னதற்கு நன்றி. அவர்களுடைய தேவையைப்பற்றியும், வாழ்க்கை வசதியைப்பற்றியும் பரிசீலிக்கலாம்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கோட்டாட்சிக்கு ஒரு மாவட்ட வேளாண்மை விவசாய அலுவலர் என்ற அடிப்படையில் அரசாங்கம் கொள்கை வகுத்திருக்கிறதா ? சேரன்மாதேவியில் அம்மாதிரி ஒரு விவசாய அலுவலகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, அங்கே ஒரு விவசாய அலுவலகம் அமைக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர் களுடைய கேள்வியின் முன்பகுதி பரிசீலனையில் இருக்கிறது. இரண்டாவது பகுதியையும் கவனிக்கலாம்.

### இரசாயன உர வினியோகம்

*514 விஞ.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகு பயன் தரும் (High yielding) விவசாயத்திற்காக விசேஷமாக ரசாயன உரம் மத்திய சர்க்காரால் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

(இ) அதற்கு ஏதாவது நிபந்தனைகள் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) பற்பல மாவட்டங்களில் இந்தத் திட்டங்களின் கீழ் அடங்குமென மதிப்பிடப்பட்டுள்ளன ,பரப்பளவின் அடிப்படையிலும் பரிந்துரைக்கப்பட்ட உர அளவின் அடிப்படையிலும் உர ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(இ) மிகு பயன்தரும் பயிர் வகைத் திட்டத்தின் தேவைகள் முழு ளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இத்திட்டத்தைப் பாதிக்கும் கையில், இந்த உரங்கள் வாணிக பணப்பயிர்களுக்கு வழங்கப்பட காது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த விசேஷ ரசாயன உரத்தை யோகப்படுத்தும் மிகுபயன் தரும் விவசாயத்தின் காரணமாக எந்தெந்த வட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகமாக கொடுத்திருக்கிறது என் தைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கேபவிந்தசாமி :** தஞ்சை, கனம் அங்கத்தினர் ர்ந்திருக்கிற வட ஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், தென் ற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம் இப்படி எங்கெங்கே வாய்ப்பு வசதி நக்கிறதோ, அங்கெல்லாம் மிகுபயன் தரக்கூடிய திட்டம் நிறைவேற்றப் டிருக்கிறது. கூடுதலாக நிறைவேற்றப்பட்டது தஞ்சை மாவட்டத்தில் ான்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஹையீல்டிங் ாயன உரம் நாம் இந்திய சர்க்காரை இந்த ஆண்டு எவ்வளவு ட்டோம் ? மத்திய சர்க்கார் கொடுத்தது எவ்வளவு சதவிகிதம் றைவாகக் கொடுத்திருக்கிருர்கள். அப்படி நாம் கேட்டதைக் கொடுப் ற்கு மறுபடியும் வலியுறுத்த இந்த சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுது நம்மிடம் உரம் தேங்கியிருக்கிறது. தேவையான உரத்தை கேட்டுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக போதுமான மழை பெய்யாத காரணத்தினால், உரம் தேங்கி இருக்கிறது நிலைமைதான் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு எவ்வளவு உரம் வேண்டுமானாலும் அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்பொழுது இருக்கிற உரத்தை விற்றால், தமிழக அரசுக்கு அதிக ஆதாயம் ஏற்படும்.

**திரு. கே. விநாயகம்:** மத்திய சர்க்கார் நமது மாநில சர்க்காருக்கு தேவையான அளவு கெமிகல் பெர்டிலைஸர்ஸ் கேட்ட அளவுக்கு தாராளமாகக் கொடுத்து வருகிறார்கள் என்பது உண்மையா? நாம் தான் வாங்கி இன்னும் போதிய அளவு பயன்படுத்தவில்லை என்பது உண்மையா? நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் எந்தவிதமான பாரபட்சமும் காட்டுவதில்லை என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** 1966–67-க்கு முன்பிருந்த நிலைமை வேறு, அப்பொழுது இருந்த அரசு கேட்டதில் பாதி அளவு தான் கொடுத்தார்கள். நாங்கள் பொறுப்பேற்ற பிறகு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நமக்குத் தேவையான ரசாயன உரத்தைக் கொடுக்க வேண்டுமென்று முதல் அமைச்சர்கள் மாநாட்டிலும் உணவு அமைச்சர் மாநாட்டிலும் தொடர்ந்து நாம் வற்புறுத்தியதன் விளைவாக நமக்குக் கொடுப்பதை கொஞ்சம் கூடுதலாக்கினார்கள். நம் தேவையை முழுக்க கொடுக்க வில்லை. இந்த நேரத்தில் உரம் தேங்கியிருக்கிறது என்ற கேள்வி வரும்பொழுது, கடந்த இரண்டு ஆண்டு காலமாக மழை பெய்யாத காரணத்தினால் தான் உரம் தேங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த விஷயத்தில் நாம் மத்திய சர்க்காரை குறை சொல்வதற்கில்லை. தேவையான அளவு கொடுக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறபொழுது, திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் நமக்கு கொடுக்கவேண்டிய உரத்தை கொடுக்க வெண்டிய அளவில் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை மகிழ்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். திரு. விநாயகம் அவர்களும் அதை சந்தோஷத்தோடு கேட்டுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்
மு.ப. 10.00 பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்**

**(அ) தளவாய்புரம் கிராம அரிசன குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லை நிலச்சுவான்தார்கள் அறுவடை செய்து அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்ற முயற்சித்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அழகர்சாமி அவர்கள், ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, "நெல்லை மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலூகா, தளவாய்புரம் கிராம அரிசன குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லை, நிலச்சுவான்தார்கள் வன்முறையில் அறுவடை செய்து கொண்டு அரிசன ஏழை விவசாயிகளை நிலத்தைவிட்டும் வெளியேற்ற முயற்சிப்பதால், இவ்வட்டாரத்தில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது அரசு அவசர நடவடிக்கை எடுத்து, நில வெளியேற்றத்தைத் தடுத்து, சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று விவாதிக்க, பேரவையில் இன்றைய மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்" என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிக்குட்பட்டது என்பதாலும், இன்றைக்கு நிதி ஒதுக்க மசோதாவின்மேல் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதாலும், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்க மறுக்கிறேன்.



**(ஆ) ஆலங்குளத்தில் சிமெண்டு தொழிற்சாலை கட்டடம் இடிந்து விழுந்து தொழிலாளர் காயமுற்றதும், இறந்தவர்களுக்கு நட்ட ஈடு அளித்தலும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மார்டின் அவர்களும், திரு. கருப்பையா அவர்களும், திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, "மார்சுத் திங்கள் 25-ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு 12-மைல் தூரத்தில் உள்ள ஆலங்குளத்தில் தமிழக அரசின் சார்பில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுகிறது. இதற்கான கட்டட வேலைகள் நடைபெறும்பொது, சுமார் இரவு 7-மணிக்குத் திடீர் என்று கட்டடம் இடிந்து விழுந்திருக்கிறது. இதில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் சுமார் 105 பேர்கள் காயமுற்றிருக்கிறார்கள். இதை பற்றி விவாதிக்க இந்த சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. மார்டின்** அவர்கள், முதலில் இது எப்படி பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்கத் தகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் சுருக்கமாக விளக்க வேண்டும்.

***திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவகளே, இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு 12-மைல் தூரத்திலுள்ள ஆலங்குளத்தில் தமிழக அரசின் சிபாரிசின்மேல் நடத்தப்படும் சிமெண்டுத்தொழிற்சாலைக் கட்டட வேலையின்போது, ஏறத்தாழ 105 கட்டடத் தொழிலாளர்களை கட்டடம் இடிந்து, அந்த இடிபாட்டில் அவர்கள் சிக்கி, பலபேர்கள், காயமுற்றும், 4 பேர்கள் உயிரிழந்துமிருக்கிறார்கள் என்று தெரிகிறது. 70 ஆண்களும், 35 பெண்களும் காயம் அடைந்திருக்கிறார்கள். நேற்று வந்த செய்திப்படி, மறுபடியும், பார்க்கும்போது, அதில் 43 பேர்கள் காயம் அடைந்தும் இருப்பதாகத் தெரிகிறது. 4 பேர்கள் உயிரிழந்தும் இருக்கிறார்கள். பொதுவாக பொது நிறுவனத்தில் கட்டடங்கள் கட்டுவது, தனியார் கண்டராக்டர்களைக் கொண்டுதான் கட்டுவது வழக்கம். ஆனால், இந்த இடத்தில் இரவு 7 மணிக்கு காங்கிரிட் போடும்போது, இந்த விதமான ஆபத்து எற்பட்டு, 4 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அரசின் சார்பாக, கட்டடம் கட்டுவதில் அதிகாரிகள் இருந்து மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். இவ்வளவு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்றால், உண்மையிலேயே, அது அன்றாடப் பிரச்சினையாகக் கருத முடியாது. காரணம், இவ்வளவு பெரிய ஆபத்து பொதுத்துறையில் இதுவரை ஏற்பட்டது இல்லை. காயம் அடைந்தவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க வேண்டியது அவசியமாகத் தேவைப்படுகிறது. இறந்தவர்களுக்கு, அவர்களுடைய குடும்பத்தார்களுக்கு நிவாரணத் தொகை கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தொழிலாளர்களின் மேல் இரக்கம் வைத்து, இதைப் பொதுப் பிரச்சினையாகக் கருதவேண்டும் என்று கூறி, இதைப்பற்றி விவாதிக்க மிஸ்டர் ஸ்பீக்கர் அனுமதி கொடுத்து, விவாதிக்க சபையின் அனுமதி வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, திரு. மார்டின் அவர்கள் விவராமாகக் கூறிவிட்டார்கள். இருந்தபோதிலும், தனியார் காண்ட்ராக்டர் மூலமாக, அரசின் கட்டடத்தைக் கட்டும்போது, கண்டராக்டர்கள் அதிக ஆதாயம் பெறவேண்டும் என்று சரியான முறையில் செயல்படுவதில்லை. கட்டடம் முடிந்த பிறகும் கூட விபத்துகள் ஏற்பட்டு நஷ்டங்கள் ஏற்படுகின்றன. அந்த முறையை மாற்றி, நேரிடையாக அரசாங்கமே இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வது நலமாக இருக்கக்கூடும். இறந்து போன நான்கு பேர்களுடைய குடும்பத்தார்களுக்கும், நஷ்டஈடு கொடுப்பது பற்றி விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்களும், திரு. சுப்பையா அவர்களும் கொண்டுவந்துள்ள இந்த ஒத்திவைப்புப் பிரேரணையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதிலே நண்பர் திரு. மார்டின், அரசாங்கத்தினுடைய அதிகாரிகள் முன் நின்று கட்டட வேலையை நடத்திக் கொண்டிருந்தபோது, இப்படிப்பட்ட கோர சம்பவம் ஏற்பட்டிருக்

கிறது என்று குறிப்பிட்டார்கள். நண்பர் திரு. சுப்பையா அவர்கள், உண்மையைப் புரிந்து கொண்ட நிலையில், அரசாங்க அதிகாரிகள் இருந்து இந்த வேலை நடைபெறவில்லை என்பதையும், தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களால்தான் வேலை நடைபெற்றிருக்கிறது என்பதையும் விளக்கியிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும், விபத்து காரணமாக உயிரிழந்த தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும், காயம் அடைந்த தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஒப்பந்தப் பணி சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் என்கிற ஒப்பந்தக்காரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் அந்த வேலையை நடத்தி வந்தார்கள். அப்படி நடைபெறும் போது, தரையிலிருந்து 23 அடி உயரத்தில் 4 இரும்பு உத்தரங்கள் கொடுக்கப்பட்டு, இந்த ஆலை இல்ல மேடை 40-க்கு, 40, 6" கன அளவில் அமைக்கப்பட்டது. கலவை போடும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, கற்கலவை சரிந்து, ஏணியிலிருந்து ஏற்றிக்கொண்டிருந்த 4 தொழிலாளர்களும் கீழே இருந்த தச்சர் ஒருவரும் பாதிக்கப்பட்டார்கள். 4 பேர் இறந்தார்கள். 42 பேர்கள், 22 ஆண்களும், 20 பெண்களும் காயம் அடைந்திருக்கிறார்கள். மருத்துவ மனையில் 30 பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இராஜபாளையம் அரசு மருத்துவ மனையில், 12 ஆண்களும், 16 பெண்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 2 ஆண்கள் மதுரை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். 3 பேர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டனர். 9 பேர்கள் இராஜபாளையத்தில் மருத்துவரால் அவுட்-பேஷன்ட்டாக சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள்.

காயம் அடைந்து இறந்த தொழிலாளர்களுக்கு தொழில் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் ஒப்பந்தக்காரர்கள் இழப்பீடு தரவேண்டும் என்றும் இருக்கிறதற்கு ஏற்ப, உயிர் இழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு, தொடக்கச் செலவுக்காக ஒரு குடும்பத்திற்கு ரூ. 250 என்று கொடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து அந்த உதவியைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அவர்கள் அதைச் செய்யத் தவறினால் நஷ்ட ஈடுகொடுக்கும்படி வற்புறுத்த எல்லாவிதமான நடவடிக்கையும் அரசு எடுக்கும். திரு. மார்டின் குறிப்பிட்டது போல. அரசாங்க அதிகாரிகள் பொதுத் துறையில் நடவடிக்கை எடுத்தபோது ஏற்பட்ட அசம்பாவிதம் இல்லை என்றாலும், ஏற்பட்ட சம்பவம் வேதனைக்குரியது. ஆகவே, அது அரசின் அன்றாட அலுவல்களில் வருகிறது.

திரு. சுப்பையா அவர்களின் யோசனையைப் பரிசீலிக்கலாம். ஆனால், எல்லாக் கட்டடங்களையும் அரசாங்க அதிகாரிகளே நேரிடையாகக் கட்டுவது இயலாத காரியம், அதோடு, தொடர்ந்து இருக்கும் வழக்கத்தை ஒட்டி, சில பணிகளுக்கு டெண்டர் விட்டு, ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கிறோம் என்ற நிலை இருக்கிறது. ஆக, இது அரசின் அன்றாட அலுவல்களில் வருகிறது என்கிற காரணத்தால் இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உகந்தது அல்ல, இதைப்பற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சருடைய விளக்கத்தை ஒட்டி, இதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன்.

**(3) அரசினர் தீர்மானம்.**
**விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.**

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதி (3)-வது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



**(4) கவன ஈர்ப்பு.**

**(அ) பொன்னேரியில் பல பிரிவு மக்களிடையே ஏற்பட்ட மோதலால் சட்டம், ஒழுங்கு பாதிப்பு.**

THIRU N. S. V. CHITHAN : Mr. Speaker, Sir, under rule 41 of the Assembly Rules, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance namely, the serious law and order situation created by clashes by different sections of the people at Ponneri.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி எல்.என். கலைக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரியும் திரு. குணசேகரன் அவர்களுக்கும், பொன்னேரியைச் சேர்ந்த திரு. சந்திரசேகரன் என்பவருக்கும் 27—2—1968 அன்று நடந்த பூசலின் விளைவாக, 28—2—1968 அன்று காலை சுமார் 9-30 மணிக்கு, பொன்னேரி எல்.என். கலைக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 300 மாணவர்கள், திடீரென்று திரு. சந்திரசேகரன் அவர்கள் வீட்டில் புகுந்து திரு. சந்திரசேகரன் அவர்களையும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களையும் தாக்கினர். வீட்டுச் சாமான்களுக்கும் சேதம் விளைவித்தனர். மாணவர் ஆர்ப்பாட்டத்தினால் கோபமடைந்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 300 பேர், எதிர் நடவடிக்கையாக மாணவர்களைத் துரத்தி, எல்.என். கலைக் கல்லூரியை அடைந்து தொடர்ந்து கற்களை வீசத் தொடங்கினர். காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கையில் இறங்கி, சட்ட விரோதிகளைத் துரத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். மேற்படி இரு சம்பவங்களிலும் கிராமத்தைச் சேர்ந்த 3 பேரும் 27 மாணவர்களும் காயமடைந்தனர். அவர்கட்கு வைத்திய உதவி அளிக்கப்பட்டது.

கிராமத்தைச் சேர்ந்த ஒருவரும் 6 மாணவர்களும் சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் அகத்துள்ள பிணியாளர்களாக அனுமதிக்கப்பட்டனர். மேற்படி இரு சம்பவங்களின்மேல் பொன்னேரி காவல் நிலையத்தில் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிரிமினல் நடைமுறை விதிக் கோவையின் 144-வது பிரிவின் கீழ் பொன்னேரி நகர ஊராட்சிப் பகுதியில் 28—2—1969-லிருந்து 15 நாள்வரை கூட்டங்கூடுவதைத் தவிர்ப்பதற்கு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கொண்டு அசம்பாவித நிகழ்ச்சிகள் ஏதும் நடக்காமல் தடுப்பதற்காக, ஆயுதமேந்திய காவல் படையினர் முக்கியப் பகுதிகளில் சுற்றுக் காவல் செய்தனர். கல்லூரி முதல்வர் 1969 மார்ச்சு 5-ம் தேதிவரை கல்லூரி மூடப்பட்டதாக அறிவித்தார். பின்னர், கல்லூரி 1969 மார்ச்சு 5-ம் தேதி திறக்கப்பட்டது. சம்பவம் நடந்த இடத்தை செங்கல்பட்டு மாவட்டக் கலெக்டரும், செங்கல்பட்டு காவல்துறைக் கண்காணிப்பாளரும் சென்று பார்த்தனர். இதையொட்டி கிராமத்தார்களும், மாணவர்களும் இணைந்த ஒரு சமாதானக் கமிட்டி உடனடியாக அமைக்கப்பட்டு, அவர்களிடத்தில் அமைதியைக் காக்க வேண்டுமென்ற அவசியத்தையும், ஒற்றுமையோடு வாழவேண்டும் என்ற அவசியத்தையும் எடுத்துரைத்தது. அது தகுந்த பலனைத் தந்தது. நடந்ததை மறந்து, ஒற்றுமையோடு வாழ்வோம் என்ற இணைந்த வேண்டுகோள் ஒன்றை, அக்கமிட்டி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விடுத்தது. நிலைமை தற்போது சாதாரணமாக உள்ளது.

தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்தில் 27—2—1968, 28—2—1968 என்று படித்தேன். நேற்று சொன்னதுபோல் இது டைப்பிஸ்ட் தவறு. இதை 27—2—1969, 28—2—1969 என்று திருத்திக் கொள்ளவும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி நடந்து ஒரு மாதம் ஆகிறது. 28—2—1969 அன்று குறிப்பிட்ட மாணவர்கள் கல்லூரிக்குச் சென்று, அங்குள்ள சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்திருக்கிறார்கள். சேதம் எவ்வளவு? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? மற்றும் மாணவர்கள் போலீஸ் பாதுகாப்பில் இருந்தபோதும் சிலர் தாக்கியிருக்கிறார்கள். அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அங்கு பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது. என்று சொல்லப்படுகிறது. ஆகவே, எக்ஸாமினேஷன் சென்

டரை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கோரிக்கை மாணவர்களிடமிருந்து ஏதேனும் வந்திருக்கிறதா ? அதன்மீது எடுத்துக்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தத் தகராறே ஒரு டியூட்டருக்கும், அவர் குடியிருந்த வீட்டுக்காரருக்கும் இடையே ஏற்பட்ட சம்பவம். ஒரு ட்யூப் லைட் தகராறு தான். டியூட்டர் தன்னுடைய சொந்தச் செலவில் ஒரு ட்யூப் லைட் அந்த வீட்டில் போட்டிருந்தார். வீடு காலி செய்கிற நேரத்தில் ட்யூப் லைட்டை அவரே எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று சொல்லப்பட்டது. டியூட்டர் அந்த வீட்டிற்குண்டான மின்சாரக் கட்டணத்தை குடியிருந்த நேரத்தில் செலுத்தாமல் இருந்தார். டியூட்டர் பெயர் திரு. குணசேகரன், வீட்டின் சொந்தக்காரர் பெயர் திரு சந்திரசேகரன். டியூட்டர் வீட்டைக் காலி செய்கிற நேரத்தில், வீட்டின் சொந்தக்காரர் அவரிடம், "டியூப் லைட்டை இங்கே விட்டுவிட்டுப் போங்கள். நீங்கள் மின்சாரக் கட்டணம் கட்டவில்லை. அதற்குப் பதிலாக இந்த ட்யூப் லைட் இங்கே இருக்கட்டும்" என்று சொல்லியிருக்கிறார். அதன் பிறகு இருவருக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. கல்லூரி மாணவர்கள் டியூட்டருக்குப் பரிந்துகொண்டு, திரு சந்திரசேகரன் வீட்டைத் தாக்கினார்கள். அதன் பிறகு அந்த கிராமத்தைச் சேர்ந்த சிலர் வீட்டுக்காரர் திரு. சந்திரசேகரனுக்காகப் பரிந்து கொண்டு மாணவர்களைத் தாக்கினார்கள். இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கேள்விப் பட்டவுடன் நான் செங்கல்பட்டு மாவட்டக் கலெக்டருடன் தொடர்பு கொண்டேன். போலீசார் அங்கு சென்று இரு தரப்பாரையும் கூட்டி, அமைதியை நிலைநாட்டி; சமாதானக் குழு ஒன்றைக் கூட்டி, ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருந்து செயல்படுவோம் என்று அறிவித்தனர். இப்போது அங்கே சமாதானம் நிலவுகிறது. அங்கே அமைதி நிலவுவதால் உறுப்பினர் சொன்ன வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேச எதுவும் இல்லை.

**(ஆ) கடாம்புலியூர் பிர்காவில் வறட்சிநிலையும் அப் பகுதியைப் பஞ்சப் பிரேதசமாக அறிவித்து கடன், வரிவசூலை ஒற்றி வைத்தலும்.**

THIRU S. RAMACHANDRAN :Mr. Speaker, Sir, under rule 41 of the Assembly Rules I would like to call the attention of the Hon. the Minister for Finance to a matter of urgent public importtance, namely, the acute drought condition prevailing in about thrity villages in Kadambuliyur firka in Panruti Constitutency of South Arcot District, the untold misery of the people for want of foodgrains and the scarcity of fodder and water for the cattle and the immediate necessity to declare the area as famine affected area and to postpone the collection of all kinds of loans, and taxes, etc. forthwith.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை குறித்தும், இதன் விளைவாக மேற்கொண்ட துயர்தணிப்பு நடவடிக்கைகள் குறித்தும் விவர அறிக்கை ஒன்று இது போன்ற அறிவிப்புகளை யொட்டி, 7—3—1969 அன்று சட்ட மன்றப் பேரவையில் என்னால் கொடுக்கப் பட்டது.

திண்டிவனம், செஞ்சி வட்டங்கள் முழுவதும், திருக்கோயிலூர், விழுப்புரம், கடலூர், விருத்தாசலம் வட்டங்களில் ஒரு சில பகுதிகளும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், திண்டிவனம், செஞ்சி வட்டங்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொண்டும் அறிக்கை அனுப்பியுள்ளார். எனவே, இவ் வட்டங்களில் துயர்தணிப்பு நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். இம் மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை நில வருவாய் ஆணையாளர் பரவலாகச் சுற்றுப்பயணம் செய்து, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியல் தலைவர்கள் ஆகியோரது முறையீடுகளைக் கேட்டார். இம் மாவட்டத்தித் 1968, நவம்பர், டிசம்பர் திங்களில் முக்கிய புன்செய்ப் பயிர்களிலிருந்து நியாயமான அறுவடை கிடைத்துள்ள தென்றும், எனவே உண்மையில்



உள்ள வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் சிறு நிலக்கிழார்கள் பாதிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கையில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ஓரளவு துயர்தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டால் போதுமானதென்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். இம் மாவட்டத்தில் துயர்தணிப்பு குறித்து ஏற்கெனவே, ரூ. 10 லட்சம் செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்க, துயர்தணிப்பு நடவடிக்கைகள் குறித்து தற்போது அனுப்பப்பட்டுள்ள செயற்குறிப்புகளினால் ரூ. 15 லட்சம் செலவாகும் என்றும் பாதிக்கப்பட்ட குடியானவர்களின் நலன் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள செயற்குறிப்புகள் முழுவதையும் நிறைவேற்றவேண்டியது இன்றியமையாதது என்றும் ஆணையாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொதுப் பணித் துறை ஏரிகள், சிறு பாசன ஏரிகள் ஆகியவற்றைச் செப்பனிட்டு மேம்படுத்துதல், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், குடி மராமத்துப் பணிகளை மேற்கொள்ளுதல், சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளை ரூ. 10 லட்சம் அதிகச் செலவு வரையரைக்கு உட்பட்டு மேற்கொள்ளவும், எஞ்சிய செலவு குறித்து ஒப்புதலுக்காக அரசின் ஆணைகளை எதிர்பார்க்குமாறும் அவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தாமாகவே ஆலோசனை கூறியுள்ளார். துயர்தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான எஞ்சிய ரூ. 5 லட்சம் வழங்குவது குறித்து செயற்குறிப்பின் மீது ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும். வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நில வருவாய் வசூலையும் கடன் நிலுவைகள் வசூலையும் மெதுவாகச் செய்து கொள்ளலாம் என்று அவசியமான இடங்களில் நடப்பு நிலவரியைத் தள்ளிவிடலாம் என்றும் ஆணையாளர் கருத்துத் தெரிவித்துள்ளார். கடன் நிலுவைகளையும், நிலவரியையும் வசூல் செய்யும் பணியை ஒற்றிவைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, அரசு ஏற்கெனவே ஆணைகள் பிறப்பித்துள்ளது.

கடலூர் வட்டத்தைச் சேர்ந்த காடாம்புலியூர் பிர்க்காவும், மழையையே நம்பி வான் பொய்த்ததன் காரணமாக மிகவும் பாதிக்கப் பட்டுள்ள பல கிராமங்கள் கொண்ட பகுதிகளில் ஒன்றாகும். எனவே, இங்கு துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது. இப் பகுதியில் எப்பொழுதும், குடி நீர்ப்பற்றாக் குறை கடுமையாக உள்ள காரணத்தினால், மாவட்ட ஆட்சித் தலைவர் நிலவரி வருவாய் ஆணையாளரைக் கலந்து ஆலோசித்து, பண்ணுருட்டி வட்டாரத்தைச் சேர்ந்த, பேர்பெரியாங்குப்பம் கிராமத்தில் ஆர். எஸ். எண். 359-ம் நிலத்தில் உள்ள துளைக் கிணறு ஒன்றை மேற் கொள்ளலாம் என்றும் இப்பகுதிக்கு குடிநீர் வழங்க இக் கிணறு பயன் படுத்திக் கொள்ளப்படலாம் என்றும் செயற்குறிப்பை அனுப்பியுள்ளார். நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகமும் இக்கிணறு உள்ள பகுதியை விட்டுக் கொடுக்கத் தயாராக உள்ளது. மின் விசையேற்றம் ஒன்றை நிறுவுவதற்கும், குடிநீரைச் சேர்த்து வைப்பதற்கான தரைமட்ட நீர்த் தொட்டி ஒன்றை அமைப்பதற்காகவும், ரூ. 14,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இக் காரியத்திற்காக பண்ணுருட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குத் தனிப்பட்ட மானியம் வழங்கப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுள்ளார். இச் செயற்குறிப்பு சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டால் நான்கு கிராமங்கள் பயனடையுமென்று நிலவரி வருவாய் ஆணையாளர் பரிவுரை செய்துள்ளார். இது குறித்து முறையாக ஆய்வு செய்யப்பட்ட பின்னர் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11-ம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் கடைசியாக அனுப்பிய அறிக்கையில், காடாம்புலியூர் பிர்க்காவில் கால்நடைகளுக்குப் போதுமான தீவனமும், தண்ணீரும், உணவுப் பொருளும் உள்ளன என்றும் மேற்படி பிர்க்காவில் பொதுப்பணித் துறை ஏரிகளையும் நீர் வழங்கு வாய்க்கால்களையும் செப்பனிடுவதற்காக ரூ. 15,000-மும், சிறுபாசனப் பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 27,500-ம் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

**திரு. எஸ். இராமச் சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பகுதிகளைப் பற்றி நன்றாக அறிவார்கள். எங்கள் பகுதி சாதாரண காலங்களிலே வறண்டிருக்கும். இப்போது குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல், சேரும் நீரும் கலந்த நிலையில் இருப்பதால் அதைக் குடிக்கின்றமக்களுக்குக் காலராநோய் வந்துவிட்டது. அந்தப் பகுதியில் பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியத்திடமும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கேட்டுக்கொண்டோம். பாசன வசதியுள்ள ஏரிகளைத்தான் பராமரிக்க முடியும், குடிநீர்க் குளங்களை ஆழப்படுத்த முடியாது எனத் தெரிவித்து விட்டனர். இந்தப் பகுதியில் இருக்கின்ற குளங்களே குடிநீர்க் குளங்கள் தான். இக்குளங்களில் மழை மூலம் தேங்கும் நீரைத் தான் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள். பாசனவசதி உடைய குளங்களோ ஏரிகளோ இந்தப் பகுதியில் கிடையாது. ஆகவே பஞ்சநிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் குடி தண்ணீர்க் குளங்களை ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மேலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திடம் 500 அடி அல்லது 600 அடி ஆழம் வரை 15 நாட்களில் துளை போடும் சக்தி உள்ள "போர் செட்டுகள்" உள்ளன. அவைகளைப் பயன்படுத்தி இப் பகுதியில் இரண்டு குழாய்க் கிணறுகளைத் தோண்டினால் குடிதண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும். இந்தக் கருவிகள் இப்பொழுது ஓய்வாக இருக்கின்றன. அரசாங்கம் வாடகை கட்டினால் குறைந்த செலவில் குழாய்க் கிணறுகள் போட்டுத் தர நெய்வேலி நிறுவனத்தினர் சம்மதித்துள்ளனர். ஆகவே, தமிழக அரசு இந்த உதவியைப் பயன்படுத்தி, இப் பகுதியில் இரண்டு குழாய்க் கிணறுகள் போட்டுத்தர ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினருடைய யோசனைகளைப் பரிசீலனை செய்து, சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் முன்வரும்.

**(இ) நீலகிரியில் போதிய மழையின்மையால் பயிர்கள் பூஷண நோயினால் பாதிக்கப்பட்டதும், கடன் வசூலை ஒத்திவைத்தலும்.**

**திரு. ஜெ. பெள்ளி கவுடர் :** தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் போதிய மழையில்லாததாலும் விவசாயப் பயிர்களுக்குப் பூஷண நோய் விழுந்ததாலும் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் தற்போது வசூல் செய்யும் கடன்களைத் தள்ளிப் போடவேண்டும்" என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, the Collector of the Nilgiris has reported that there was no rain for the past four months in the district. However, the condition of the standing crops such as tea, coffee, potato and paddy is fair. There is also no prevalence of late blight or past attack on crop at present. In the circumstances the situation does not warrant the postponement of collections of loan instalments.

(ஈ) லாரிகள் முதலியவை டீசல் எண்ணெய்க்குப் பதிலாக மண்ணெண்ணெயை உபயோகிப்பதால் அரசுக்கு விற்பனை வரி இழப்பும் மக்கட்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடும்.

THIRU N. KASIRAMAN : Mr. Speaker, Sir, under rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. the Minister for Food and Agriculture to a matter of urgent public importance, namely the unauthorised and illegal use of kerosene oil instead



of high speed diesel oil by lorries and other automobiles in spite of the ban from 15th September 1965 and the consequent loss of revenue to the State from Sales Tax in addition to the scarcity created to the same product resulting in the sufferings of the people.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் தன் கவன ஈர்ப்பு அறிக்கையில் லாரிகளும், பஸ்களும், சட்டத்துக்கு விரோதமாக டீசல் எண்ணெய்க்கு பதிலாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்துவது பற்றியும், அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் மண்ணெண்ணெய் கிடைப்பதில் சென்னையில் ஏற்பட்ட தட்டுப்பாடு நிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொணர்ந்த கவன ஈர்ப்பு அறிக்கையையும், அதன்மீது வெளியிடப்பட்ட அறிக்கையையும் மன்ற உறுப்பினர்களின் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். எதிர்பாராத சூழ்நிலைகளால் மக்களுக்கு ஏற்பட்ட இடைஞ்சலைப் போக்க அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக மண்ணெண்ணெய் விநியோகம் தற்போது சீராக நடைபெறுவது தெரிந்ததே.

மாண்புமிகு உறுப்பினர் தமது கவன ஈர்ப்பு அறிக்கையில், பொதுவாக மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டைப் பற்றிக் குறிப்பிடுவதோடு அல்லாமல், லாரிகளும், பஸ்களும் டீசல் எண்ணெய்க்குப் பதிலாக, தவறான முறையில் மண்ணெண்ணெயை உபயோகிப்பதை குறிப்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். அவர் கொடுத்துள்ள அறிக்கையில் அடங்கியிருக்கும் பொருளை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. மண்ணெண்ணெயைத் தவறாகப் பயன்படுத்துவதற்குத் தடையிருந்தும், அதற்கு மாறாக லாரிகளும், இதர மோட்டார் வாகனங்களும் டீசலுக்குப் பதிலாகத் பயன்படுத்துவது.

2. அங்ஙனம் டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெயை லாரிகளும், பஸ்களும் பயன்படுத்துவதால் அரசுக்கு ஏற்படும் வரி இழப்பு.

3. மண்ணெண்ணெயை அங்ஙனம் தவறாகப் பயன்படுத்துவதால் மக்கட்கு ஏற்படும் தட்டுப்பாடு, இம்மூன்று பொருள்களுள் மூன்றாவதாகக் கூறப்படுவது உணவுத் துறையைப் பொருத்ததாகும். ஆகவே, அதுபற்றி முதலில் நிலைமையை விளக்க விரும்புகிறேன்.

மத்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ள மண்ணெண்ணெயின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தும் ஆணை, 1965-ம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் முதல் அமலில் இருக்கின்றது. இவ்வாணை, மண்ணெண்ணெயை விளக்கெரிப்பதற்கும், சமைப்பதற்கும் எரிபொருளாகப் பயன்படுத்துவதன்றி வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவது கூடாது என்று கட்டுப்படுத்துகிறது. இவ்வாணையில் நான்காவது பிரிவின்படி, விளக்கெரிப்பதற்கும், சமைப்பதற்கும் எரி பொருளாக உபயோகிப்பதும் தவிர வேறு உண்மையான தொழிற்சாலை சம்பந்தமான உபயோகங்களுக்கு மண்ணெண்ணெயை உபயோகிக்க அனுமதி வழங்கலாம். இவ்வரசால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு 1,000 லிட்டருக்கு மேல் உபயோகிக்க உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் விசேஷ அனுமதி வழங்குகிறார். 1,000 லிட்டருக்குக் குறைவாக இருந்தால் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும் சென்னையில் உணவுப் பொருள் வழங்குதுறை, உணவுப் பங்கீடு துணை ஆணையாளர்களும் அனுமதி வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார்கள்.

மண்ணெண்ணெய் உபயோகத்தைக் கட்டுப்படுத்தும் ஆணையின் மூன்றும் பிரிவின்படி கட்டுப்பாட்டை மீறுபவர்கள் 1955-ம் ஆண்டு அத்தியாவசியப் பொருள்களின் சட்டத்தில் 7, 8, 9, 12-ம் பகுதிகளின் கீழ் தண்டிக்கப்படுவார்கள். மண்ணெண்ணெய் உபயோகத்தைக் கட்டுப்படுத்தும் ஆணையைக் கண்டிப்பாக அமல் நடத்தும்படி மாவட்ட

**மாண்புமிகு திரு எ. கோவிந்தசாமி:** 

ஆட்சியாளர்களுக்கு உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையாள அறிவுரை அனுப்பியுள்ளார். மண் ணெண்ணெய் உபயோகிப்பதைத் தீவிரமாகக் கண்காணிக்கும்படி ஒழுங்குச் சட்டப்பிரிவு (புலனாய்வுப் பகுதி) போலீஸ் கண்காணிப்பாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள பொருள், மண்ணெண்ணெயைத் தவறுகப் பயன்படுத்துவதற்குத் தடையிருந்தும், அதற்கு மாருக லாரிகளும், இதர மோட்டார் வாகனங்களும் டீசலுக்குப் பதிலாகப் பயன்படுத்துவது பற்றியது.

மேலே நான் குறிப்பிட்டது போல், மண்ணெண்ணெய் விளக் கெரிப்பதற்கும் சமைப்பதற்கும் எரி பொருளாகப் பயன்படுத்துவதன்றி வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தக் கூடாதென பொதுத் தடை யிருக்கின்றது. இதுவன்றி, குறிப்பாக லாரிகளும், பஸ்களும் மண் ணெண்ணெயைத் தவறுகப் பயன்படுத்துவதைத் தடுக்க இயலுமா வென அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. புகைச் சோதிக்கும் கருவி கொண்டு, பெருஞ்சாலைகளில் செல்லும் வண்டிகளைச் சோதித்துச் சந்தேகப்பட்ட வாகனங்களிலிருந்து எரி பொருளை எடுத்து ஆராய்ச்சி நிலையத்தில் பகுத்தறிந்து நடவடிக்கை எடுக்க இயலுமா என்பதை அரசு ஆராய்ந்து வருகிறது. அன்றியும், 1939-ம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் விதிகளை மாற்றியமைத்து, பர்மிட் கொடுக்கும் விதிகளுள் டீசல் அல்லது பெட்ரோல் தவிர இதர எரிபொருள்களை உபயோகிப்பதைத் தண்டிக்க தகுந்த குற்றமாக்க இயலுமா என்றும் அரசு பரிசீலனை செய்து வருகிறது. ஆகவே இந்தப் பொருள்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது, என்பது தெளிவாகும்.

மாண்புமிகு உறுப்பினர், டீசலுக்குப் பதிலாக . மண்ணெண்ணெயினை லாரிகளும், பஸ்களும் உபயோகிப்பதால் அரசுக்கு எற்படும் வரி இழப்பு பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

மண்ணெண்ணெயினைத் தவறுகப் பயன்படுத்தும் செயல் சில்லரை வியாபாரிகள், மோட்டார் வாகனங்களை உபயோகிப்பவர்களுக்கு விற்கும் போது ஏற்படுகின்றது. ஆனல், மண்ணெண்ணெய் மீது விதிக்கப்படும் ஒரு முனை விற்பனை வரி மண்ணெண்ணெய் விற்கும் பெரும் நிறுவனங்கள் சில்லரை வியாபாரிகளுக்கு விற்கும்போது வசூலிக்கப்படுகின்றது. ஆகவே, இந்தத் தவருன முறையில் மண்ணெண்ணெய் பயன்படுத் துவதால், விற்பனை வரி இழப்பு எதுவும் இல்லையென ஒருவாறு கூறலாம். ஆனல், வேறு வகையில் இந்தப் பிரச்னையை அலசிப் பார்த் தால், இதனல் அரசுக்கு இழப்பு ஏற்படுவது உண்மையே. மண்ணெண் ணெயை இப் பேரூந்துகள் தவறுகப் பயன்படுத்துவதைத் தவிர்த்தால், டீசல் எண்ணெயின் விற்பனை அதிகரிக்கும். டீசல் எண்ணெய் அதிக மாக விற்கப்படுமாஞல் அரசுக்கு எரிபொருள் விற்பனை வரி மூலம் அதிக வருமானம் வரும். தற்போது மண்ணெண்ணெயின் மீது விலை மதிப்பின் $5\frac{1}{2}$ சத வீதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. மண்ணெண்ணெயைப் பெரும் நிறுவனங்கள் சென்னையில் சில்லரை வியாபாரிகளுக்கு விற்கும்போது லிட்டர் 51 பைசாவுக்கும், இதர மாவட்டங்களில் தூரத்திற்குத் தகுந்தவாறு சற்று கூடுதலாகவும், விற்கப்படுகிறது. ஆகவே சுமாராக 1 லிட்டர் மண்ணெண்ணெய்க்கு 3 பைசா விற்பனை வரியாக அரசுக்குக் கிட்டுகிறது. டிசலுக்கு லிட்டருக்கு 10 பைசா வீதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்துவதால், அரசுக்கு லிட்டர் ஒன்றுக்கு சுமாராக 7 பைசா நட்டம் ஏற்படுகிறது. இம் முறையில் அரசுக்கு ஏற்படும் வரி இழப்புத் தொகை பெரிதே எனத் தோன்றுகிறது.

அவ் வகையில் அரசுக்கு ஏற்படும் வரி இழப்பை எப்படித் தடுக்கலாம் என்றும், மண்ணெண்ணெயைத் தவறுகப் பயன்படுத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆலோசனை நடத்தி வருகிறது.

**திரு .நா. காசிராமன் :** மத்திய அரசாங்கமானது மண்ணெண் ணெயை வீட்டு உபயோகம் தவிர மற்ற எல்லாக் காரியங்களுக்கும்



தடை செய்திருக்கிறது. அந்த உத்தரவை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

மண்ணெண்ணெயை லாரிகளுக்கு உபயோகப்படுத்துவதைக் கண்டு பிடிக்க பெருஞ்சாலைகளில் செல்லும் வண்டிகளின் எரி பொருள்களை எடுத்து பரிசோதித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்கலாம் என்ருர்கள். அதோடு நான் கண்ணுல் பார்க்கிறேன். தாம்பரத்தில் வரிசையாகக் கடைகளை வைத்துக் கொண்டு பெரிய புனல்களை வைத்துக் கொண்டு லாரிகளுக்கு மண்ணெண்ணெய் ஊற்றப்படுகிறது. இவற்றை உடனடி யாகத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யோசனை சொல்ல வேண்டாம். விளக்கம் பெற வேண்டுமென்ருல் கேளுங்கள்.

**திரு. நா. காசிராமன் :** கடைசியில் "ஆகவே" போடவேண்டும். அதைப் போட்டுவிடுகிறேன். (சிரிப்பு.)

ஆகவே, இதுபோல பகிரங்கமாக மண்ணெண்ணெய் உபயோகிக்கப் படுவதைத் தடுக்கவும், சோதனைகள் மூலமும் தடுக்க உடனடியாக என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் குறிப் பிட்டதைப் போல எந்த எந்தக் காரியங்களுக்கு மண்ணெண் ணெயை உபயோகப்படுத்தலாம் என்று மத்திய அரசு கட்டளையிட்டிருக் கிறதோ அது வற்புறுத்தப்படும். டீசல் எண்ணெய்க்குப் பதிலாக லாரி களில் மண்ணெண்ணெயை உபயோகப்படுத்துவதை கனம் அங்கத் தினர் நேரில் கண்டதாகச் சொல்வதனுல் நம்புகிறேன். அதைத் தடுப்பதற்கும் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும். மேலும் இதுபற்றி உறுப்பினரிடம் தகவல் இருந்தால் அதைத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் நிறைய புகை விட்டுச் செல்கிற வண்டிகளின் எரிபொருளையும் சோதனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். இப்படிப் பரிசோதிப்பதிலும் தவறு இல்லை. ஆகவே இப்படித் தவருக உயயோகப்படுத்துவதைத் தடுக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

### (5) அறிக்கைகள் அளித்தல்

#### (அ) மோட்டார் வண்டிகள் சட்ட நிர்வாகம், விவசாயம் பற்றிய பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள்.

THIRU S. AGNI RAJU : Mr. Speaker, Sir, I rise to present the report of the Committee on Estimates on the action taken by Govern- மு. ப. 10-30
ment on the recommendations of the Committee contained in the Report on Motor Vehicles Tax Administration (Ninth Report) and the Report on Agriculture (Tenth Report).

I also submit that the Report on Agriculture is under print and copies will be circulated to Members in due course.

#### (ஆ) தன் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.

THIRU P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the recommendations of the Committee contained in its earlier Reports.

Sir, the Report is under print and copies would be circulated to Members in due course.

(இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை.

THIRU M. KANDASWAMY : Mr. Speaker, Sir, I rise to present the Fourth Report (Fourth Assembly) of the Committee on Subordinate Legislation for the year 1968-69.

(ஈ) டாக்டர் எச். வி. ஹாண்டே, மறைந்த திரு. செ. பாலசுப்பிரமணியம் மீதான வழக்குகள் பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள்.

**மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் :** தலைவர் அவர்களே, அவையுரிமைக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்—

(i) பேரவைத் தலைவர் மீது டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் நேரடியாகக் குற்றஞ்சாட்டியது பற்றிய வழக்கு.

(ii) மாண்புமிகு அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை எழுப்பும்போது மறைந்த திரு. செ. பாலசுப்பிரமணியம் அவர்கள் தவறாகக் கூறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது குறித்த வழக்கு.

(உ) திரு. டி. மார்டின், "கடிதம்" நாளிதழ் ஆசிரியர், வெளியிடுவோர், திரு. ஏ. பாலசுப்ரமணியம் ஆகியவர் மீதான வழக்குகள் பற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கைகள்

**மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் :** தலைவரவர்களே, அவையுரிமைக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன் :—

(i) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்ட்டின், மாண்புமிகு பேரவைத் தலைவர் தவறான, உண்மைக்குப் புறம்பான அறிக்கையை வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டியதைப் பற்றிய வழக்கு.

(ii) 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ம் தேதிய "கடிதம்" நாளிதழில் கண்டுள்ள சில பகுதிகள் சம்பந்தமாக அவ்விதழின் ஆசிரியர், வெளியிடுபவர் மீது கொண்டுவரப்பட்ட வழக்கு.

(iii) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. பாலசுப்பிரமணியம், மற்றும் சில உறுப்பினர்கள் மீதான வழக்கு.

" இன்று சட்டப் பேரவையின் முன் அளிக்கப்பட்ட மேற்படி குழுவின் அறிக்கைகள் சட்டப்பேரவையின் 191 (b) விதியின் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் " என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு குழுவின் அறிக்கைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் :** "அவையுரிமைக் குழுவின் மேற்சொல்லப்பட்ட அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளைச் சட்டப் பேரவையின் 191 (b) விதியின் கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக் கொள்ளவேண்டும் " என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(6) அறிவிப்புகள்

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969-70-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டுக் கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1. திரு. ஆ. கு. சுப்பையா.
2. ,, வி. கே. கோதண்டராமன்.
3. ,, க. ர. நல்லசிவன்.



4. திரு. பி. வேலுசாமி.
5. ,, கே. போஜன்.
6. ,, என். எஸ். வி. சித்தன்.
7. ,, ஆர். கருப்பையா.
8. ,, எஸ். முருகையன்.
9. ,, மு. கிருஷ்ணமூர்த்தி.
10. ,, ஈ. ஆர். கிருஷ்ணன்.
11. ,, சி. கே. சின்னராஜி.
12. ,, கு. கிருஷ்ணமூர்த்தி.
13. ,, ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
14. ,, எம். எஸ். மணி.
15. ,, இரா. மாணிக்கவாசகம்.
16. ,, து. ப. அழகமுத்து.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1969-70-ம் ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் அவர்களுடைய அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும் சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969-70-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டனர். அவர்களின் பெயர்கள் ஆவன :—

1. திரு. என். சங்கரய்யா.
2. ,, எம். சுரேந்திரன்.
3. ,, சா. மெய்யப்பன்.
4. ,, ஏ. ஆர். சுப்பையா முதலியார்.
5. ,, பி. ஜி. கருத்திருமன்.
6. ,, நா. காசிராமன்.
7. ,, இல. பலராமன்.
8. ,, து. ப. அழகமுத்து.
9. ,, வி. எஸ். கோவிந்தராசன்.
10. ,, ஆர். நாகசுந்தரம்.
11. ,, பி. துரைராஜ்.
12. ,, ஏ. கோ. பாலகிருஷ்ணன்.
13. ,, எஸ். ஆறுமுகம்.
14. ,, கொளத்தூர் கோதண்டம்.
15. ,, மு. ச. சிவசாமி.
16. ,, ஹாஜி ம. மு. பீர் முஹம்மது.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1969-70-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் அவர்களுடைய அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், சட்டப் பேரவையின் 174-வது விதிக் கிணங்க திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (இ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969–70-ம் ஆண்டுக்குரிய அவையுரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப் பேரவையின் பன்னிரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டுக் கீழ்க்கண்ட பன்னிரண்டு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :—

1. திரு. கரு. சீமைச்சாமி.
2. ,, சி. கோவிந்தராசன் (நெல்லிக்குப்பம்).
3. ,, பி. எஸ். சந்தானம்.
4. ,, டி. சி. திம்மராயன்.
5. ,, கே. ஆண்டி என்னும் குருசாமி.
6. ,, மு. சண்முகம்.
7. ,, மு. கோபால்.
8. ,, எஸ். கே. வடிவேலு.
9. ,, ஆ. கருப்பையா.
10. ,, ஏ. ஆறுமுகம்.
11. ,, கே. விநயகம்.
12. ,, ஜே. ஜேம்ஸ்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1969–70-ஆம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

1969-ம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ம் நாளிலிருந்து மேற்படி குழுவின் அமைப்புப்பற்றி பேரவை விதியில் 12 உறுப்பினர்களுக்குப் பதிலாக 14 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, எஞ்சியுள்ள இரண்டு இடங்களுக்கு ஆன தேர்தல் அடுத்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் நடத்தப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் துணை தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

சட்டப்பேரவையின் 183 (4)-வது விதிக்கிணங்க மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

### (ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப்பேரவையின் 201 (1)-வது விதியின் கீழ் 1969–70-க்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களைச் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. பழனிவேல் ராஜன்.
2. ,, பெ. சீனிவாசன்.
3. ,, கா. வேழவேந்தன்.
4. ,, ஆலடி அருணா.



5. திரு. எம். சி. பாலன்.
6. ,, கே. ஆர். கோவிந்தன்.
7. ,, கி. ஜெயராமன்.
8. ,, ப. மகாதேவன்.
9. ,, டி. மார்டின்.
10. ,, கே. எம். ராமசாமி கவுண்டர்.
11. ,, ஏ. ஆர். மாரிமுத்து.
12. ,, கோ. பாரதி மோகன்.

சட்டப் பேரவையின் 202-ஆவது விதியின்கீழ், திரு. பழனிவேல் ராஜன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

### (உ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214(1)-வது விதியின்கீழ், பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. சு. துரைசாமி.
2. ,, ஆ. துரையரசன்.
3. ,, டி. இராசரத்தினம்.
4. ,, கே. என். சாமிநாதன்.
5. ,, என். கிட்டப்பா.
6. ,, வீ. சா. இளஞ்செழியன்.
7. ,, கே. விநயகம்.
8. ,, என். எஸ். வி. சித்தன்.
9. ,, பி. வெங்கடசாமி.
10. திருமதி கே. பி. ஜானகியம்மாள்.
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
12. ,, கே. பி. எஸ். மணி.

சட்டப் பேரவையின் 215 (1)-வது விதியின்கீழ் திரு. கே. விநயகம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, அரசினர் மசோதா . . .

### (7) நடை முறைக் கேள்வி.

**அவையுரிமைக் கேள்விபற்றிய அறிக்கை கொடுத்த உறுப்பினருக்கு அது பற்றி விளக்க வாய்ப்பளிக்காமல் அதைத் தள்ளுபடி செய்து கடிதம் மூலம் அவருக்கு தீர்ப்பை அறிவித்தது.**

THIRU T. MARTIN : Sir, on a point of order. To-day inside the Assembly I am served with an order D.O. No. 7017A-1 M.L. (B), dated 28th March 1969 regarding the matter of privilege.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றி நீங்கள் இப்பொழுது சொல்வது. . . .

THIRU T. MARTIN : Sir, I am not going to speak on the merits of the order. Sir, I gave notice of a matter of privilege against the Hon. Minister for Finance yesterday. The Hon. Speaker stated inside the Assembly that that would be taken up the next day. Now to-day I am given this reply inside the Assembly. Sir, my submission is whether the Hon. Speaker has got specific

power under the Assembly Rules to reject a matter of privilege inside the Chamber without giving an opportunity to the mover to substantiate it or at least show to the Hon. Speaker whether there is a *prima facie* case of breach of privilege against a particular person referred to in the notice. Now, Sir, I am not going to speak on the merits of the case. My submission is that even with regard to a matter under Rule 42, the Hon. Speaker was so generous....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அது வேறு.

THIRU T. MARTIN : . . . in bringing it to the Assembly and reading it and then giving his ruling inside the Assembly itself. Breach of privilege being an important matter and the substance raised therein also being useful for the House, so far as the matter covered in the notice..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு வாருங்கள், உங்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

THIRU T. MARTIN : I am coming to the point of order. Let me state my case. After all we are all new Members and our Constitution also does not prescribe any written privilege or power of Members.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எங்கேயோ போகிறீர்களே !

THIRU T. MARTIN: Please give me an opportunity to state my case. Breach of privilege being an important matter, important than matters covered under Rule 41 and Rule 42, naturally the House would like to know what is the matter raised by any particular Member, against any other Member or Minister or anybody. Principle of natural justice required that the concerned Member who moves the motion should be given an opporunity either inside or outside the Chamber to state his case. Such an opportunity has not been given to me, to substantiate my case.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. மார்ட்டின் அவர்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன ? தங்களுக்கு அதைப்பற்றி விளக்குவதற்கு நேரமும் வாய்ப்பும் கொடுத்தார்களா, பேரவைத் தலைவர் அருளோடு நடந்து கொண்டாரா இல்லையா என்பதெல்லாம் பிரசசினை அல்ல. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

THIRU T. MARTIN : Under the circumstances, in such a situation, has the Hon. Speaker the power under these Rules to reject the motion, without giving me an opportunity? Under which rule, has the Hon. Speaker the power to reject the privilege motion inside his Chamber, without even giving an opportunity for the concerned Member to substantiate his case ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நம்முடைய திரு. மார்ட்டின் அவர்கள் 42-ஆவது விதியின் கீழ் கொடுக்கப்படுகிற ஒத்திவைப்புத் தீர்மானம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதைப் போல்தான் உரிமைப் பிரச்சினையும் என்று சொல்லுகிறார்கள். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. 42-ஆவது விதியின்படி கொடுக்கப்படுகின்ற ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அவையில் கொண்டு வந்து தள்ளுவதோ அல்லது அவையில் கொண்டுவரத்தக்கது அல்ல என்ற முறையில் அவையில் கொண்டுவர அனுமதிக்காமல் இருப்பதோ பேரவைத் தலைவரின் உரிமை



யாகும். திரு. மார்ட்டின் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதை இந்த அவையில் முன்மொழியவில்லை. அவர் கொடுத்த நோட்டீஸ் பற்றி நாளை முடிவு கூறுகிறேன் என்றுதான் சொன்னேன். அதை அறையிலேயே தள்ளிவிடுவதா அல்லது அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்த பிறகு தள்ளுவதா என்பதெல்லாம் பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அந்த வகையில் திரு. மார்ட்டின் அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினையின் பொருள் இந்த அவையில் பேசுகின்ற அளவுக்கு முக்கியத்துவம் இல்லாதது என்பதால் வேண்டிய தகவல்களைக் கொடுத்து அறையிலே தள்ளப்பட்டு விட்டது. ஆகவே, இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (8) அமைச்சரின் விளக்க உரை.

### தென் ஆற்காடு மாவட்டத்தில் சீரணிக்காக கருவிகள் வாங்கியது குறித்த உள்ளாட்சித் துறை அமைச்சரின் உரை

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்ட்டின் அவர்கள் கேட்ட விளக்கத்திற்கு ஒரு அறிக்கையை இந்த மன்றத்திலே கொடுக்க விரும்புகிறேன்.

அரசு ஆணை எண் 279-ன் படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கோட்ட அளவில் எடுத்துக் கொள்ளும் சீரணி வேலைகளுக்காக 6,000 ரூபாய் மதிப்புள்ள கருவிகள் வாங்கிக் கொள்ளலாம் என்ற விதிப்படி தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் சென்ற நிதி ஆண்டு 1967–68-ல் கருவிகள் வாங்க ஆணை கொடுத்திருந்தார்கள். ஆனால், கருவிகள் அந்த நிதி ஆண்டு முடிவிற்குள் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு 1968–69 செப்டம்பரில்தான் கருவிகள் வழங்கப்பட்டு அதற்கான தொகையும் இந்த ஆண்டில் பட்டுவாடாச் செய்யப்பட்டிருக்கிறது.

தணிக்கைக் குறிப்பில் தென் ஆற்காடு மாவட்டத்தில் 1967–68-ல் 6,000 ரூபாய் பெறுமானமுள்ள கருவிகள் வாங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல.

நிதி ஆண்டு 1968–69-ல் ரூ. 20,000 ரூபாய்க்குக் கருவிகள் வாங்கியது பற்றி தென் ஆற்காடு மாவட்டத் தலைவர் தவறான அறிக்கை கொடுத்ததன் பேரில் 20,000 ரூபாய்க்குக் கருவிகள் வாங்கப்படவில்லை என்று பதில்தர நேரிட்டது. இது பற்றி உடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து விளக்கம் கேட்டதற்கு கூற்றம் அளவில் எடுத்துக் கொள்ளும் வேலைகளுக்காக கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. ஆனால முனபு கொடுத்த அறிக்கையில் தவறாகக் கொடுக்கப்பட்டது என்று பதில் கொடுத்திருக்கிறார். தவறான அறிக்கை கொடுத்ததற்காகவும் அதிகப்படியாகக் கருவிகள் வாங்கியதற்காகவும் தென் ஆற்காடு மாவட்டத் தலைவரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. விளக்கம் கிடைத்தபின் தகுந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### (9) அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க எண் (3) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 9/1969) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

* **திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்** : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசின் சார்பில் ஒட்டு மொத்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நிதி அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று தமிழ்நாடு பூராவும் எங்கு பார்த்தாலும் இருக்கின்ற வறட்சி, பசி, பஞ்சம் என்ற நிலை பற்றி எல்லோரா[illegible] பேசப்பட்டு வருகிறது. அதற்காகப் பஞ்ச நிவ[illegible]யாளுக்கு ஆறு ரூபாய்

[திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்] [1969, மார்ச் 28

தொடங்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் ஜில்லாவாரியாக நிதி ஒதுக்கீடு செய்து சில குறிப்பிட்ட பஞ்ச நிவாரண வேலைகளை எடுத்துக் கொள்ளும்படி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

தர்மபுரி மாவட்டம் மிகப் பின் தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்திற்குப் பத்து லட்சம் ரூபாய் தான் பஞ்ச நிவாரண வேலைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மிக்க குறைவான தொகையாகும். அந்தத் தொகை இரண்டு வட்டாரத்திலே ரோடு வேலை செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கப்பட்டு எல்லா வட்டத்திற்கும் அந்த நிதி உதவி கிடைக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது பெரிய குறைபாடாகும். தர்மபுரி மாவட்டம் எல்லாத் துறையிலும் பின்தங்கிய மாவட்டம். 1965-ல் சேலம் மாவட்டத்திலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம். ஆகவே. அந்த மாவட்டத்திற்கு பஞ்ச நிவாரண வேலைக்காக அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மாவட்டம் கல்வித் துறையிலும் பிற்போக்கான மாவட்டமாக இருக்கிறது. அங்கு உயர்நிலைப் பள்ளிகளை அதிகமாகத் திறக்க வேண்டுமென்று கோரிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க விதிமுறைப்படி முதல் தொகை 5,000 ரூபாயும், ஐந்து எக்கர் நிலமும் கொடுத்து கட்டிடத்திற்காக நிதியும் பொதுமக்கள் கொடுப்பதாகச் சொல்லி ஓரளவு தொகைகளைச் செலுத்தியும் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இரண்டு இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அங்கெல்லாம் உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் 500-க்கு மேற்பட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அத்தகைய ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க தற்போது 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருக்கும் ரேஷியோவை 25 என்றோ அல்லது 20 என்றோ ஆக்கினால் பல ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். ஒரு பஞ்சாயத்தில் ஒரு மைல் தூரத்திற்குள் ஒரு பள்ளிக்கூடத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்பதற்குப் பதிலாக அரை மைல் தூரம் இருந்தாலும் பள்ளிக்கூடங்கள் இருக்கலாம் என்று அனுமதி கொடுத்தால் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அரசாங்கம் இதைப் பற்றிககவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம் பிரிந்து நான்கு ஆண்டுகளாகியும் எந்த வசதிகளும் ஏற்படவில்லை. குறிப்பாக, சுகாதார வசதியில் பின்தங்கிய இடமாக இருக்கிறது. நீண்ட நாட்களுக்கு முன்னால் தருமபுரி, ஊத்தங்கரை பகுதிகளில் காலரா, பிளேக் போன்ற தொத்து நோய்கள் ஏற்பட்டு அதற்காக ஸ்பெஷல் அலவன்ஸ் கூடக் கொடுத்திருக்கிறார்கள்.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு அன்றைய அரசாங்கம் பல திட்டங்களைப் போட்டு அந்த வியாதிகளை அறவே ஒழித்திருந்தாலும் கூட, இன்று ஓரளவு வளர்ச்சி கண்டிருந்தாலும கூட, எங்கள் பகுதி சுகாதாரத் துறையில் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலுள்ள தலைமை ஆஸ்பத்திரிக்குக் கட்டடங்கள் இல்லை. மருத்துவர்களுக்கு வீட்டு வசதி இல்லை. மருத்துவ சாதனங்கள் கிடைப்பதில்லை என்ற நிலைதான் இருக்கிறது. ஜில்லா அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பித்து அங்கு ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருந்தும் இன்று அதற்கான உபகரணங்கள் கிடைப்பதற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் வழிவகை செய்யப்படவில்லை. ஆகவே பின் தங்கிய எங்கள் மாவட்டத்திற்கு தக்க வைத்திய வசதிகள் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று

கொண்டுவர அனுமதிக...



1969 மார்ச் 28] [திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்]

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லா ஒரு வறட்சிப் பிரதேசம் ; அது ஒரு மேட்டுப்பாங்கான பிரதேசம், அது பருவ மழையை நம்பி வாழும் பிரதேசம் ; அங்கு எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இருக்கவில்லை. ஆகவே, அங்குள்ள காட்டாறுகளின் குறுக்கே சிறு சிறு செக் டாம்ஸ் கட்டிப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று ஜில்லா அபிவிருத்தி மன்றத்தில் சில கோரிக்கைகள் விடுத்திருக்கிறோம். அவற்றை ஏற்று நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். ஊத்தங்கரை வட்டாரத்தில் பாம்பாறு அணைக்கட்டுத் திட்டம், ரெங்கப்பநாயக்கன் ஏரி அணைக்கட்டுத் திட்டம் இவற்றைப் பரிசீலனை செய்து அனுமதிக்காக அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அவற்றை அனுமதித்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றினால் அந்தப் பகுதி மக்கள் பலன் அடைவார்கள்.

அடுத்தபடியாக , தர்மபுரி ஜில்லாவில் வறட்சி ஏற்பட்டிருப்பதால் அங்கு உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கும் நல்ல விலை கிடைக்கவில்லை. அங்குள்ள விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்றுள்ள கடன்களையும், அரசாங்கக் கடன்களையும் தவணைப்பிரகாரம் திருப்பிச் செலுத்த வசதியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கூட்டுறவு இலாகா அதிகாரிகளும், அரசாங்க அதிகாரிகளும் விவசாயிகளைக் கெடுபிடி செய்து அவற்றை வசூலிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அங்குள்ள வறட்சி நிலையை உத்தேசித்து, கூட்டுறவு இலாகா மூலம் கொடுக்கப்பட்டுள்ள கடன்களை மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளிப்போடவேண்டும் அல்லது இந்த ஆண்டாவது அதை வசூலிக்காமல் நிறுத்தி வைக்க வேண்டும். அரசாங்கக் கடன்களை வசூலிப்பதையும் ஒரு வருட காலத்திற்குத் தள்ளிப்போடவேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை துவங்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பொது மக்களிடமிருந்து பங்குத் தொகையாக 40 லட்சம் ரூபாயும், அரசாங்கப் பங்குத் தொகையாக 80 லட்ச ரூபாயும் கொடுக்க வேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டு, அரசாங்கம் கொடுக்கவேண்டிய பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்படாமல் இருக்கிறது. கட்டடங்கள் கட்ட, மெஷினரிகள் வர ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆகவே, அரசாங்கம் அளிக்க வேண்டிய அத்தொகையை அளிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இன்று படித்தவர்கள் இடையிலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி இருக்கிறது. ஆகவே, எங்கள் பின்தங்கிய ஜில்லாவில் சிறு சிறு இன்டஸ்ட்ரீஸ்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அங்கு ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அரூரில் ஒரு இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் பள்ளிக்கூடத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த மாநிலத்தில் ஆண்டு ஒன்றுக்கு $1\frac{1}{2}$ லட்சம் பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்து வருகிறார்கள். அவர்கள் வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அப்படி வேலையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அரூர் தாலுக்காவில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தவேண்டுமென்று மூன்று வருடங்களுக்கு முன்னால் பரிசீலனை செய்து அதற்காக இடம் கூடத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்காக பங்குத் தொகை வசூலிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்தார்கள். அதைப் பற்றி நான் இங்கு கேள்வி கூடக் கேட்டிருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் அது பரிசீலனையில் இல்லை. கை விடப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார்கள். எங்கள் அரூர் தாலுக்காவில் அப்படி ஒரு நூற்பாலை ஏற்படுத்தினால் அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உதவியாக இருக்கும். கோவை ஜில்லாவில் உள்ள கூட்டுறவாலைகளில் வேலை செய்யக் கூடிய ஒரு பெண் கூலியாளுக்கு ஆறு ரூபாய்

ஏழு ரூபாய் கூலி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் எங்கள் பகுதியில் 1 ரூபாய், $1\frac{1}{4}$ ரூபாய்க்கு வேலை செய்ய ஆள் கிடைக்கிறது. ஆகவே, இந்த நூற்பாலை அங்கு அமைக்கப்பட்டால் அதிகப்படியான பேர்களுக்கு நாம் வேலை தேடித் தர முடியும். ஆகவே அந்த ஆலை அங்கு அமைவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தலைவர் அவர்கள் சமிக்ஞை காட்டி விட்டார்கள். ஒன்றை மட்டும் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

தர்மபுரி—சேலம் ஜில்லாவில் உள்ள எங்களுக்கு நீண்ட நாட்களாக ஒரு பெரும் குறை இருந்துவந்தது. அது அமைச்சரவையில் எங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்பதுதான். மறைந்த முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் சேலம் மாவட்ட மக்களின் குறையைப் போக்கும் விதத்தில் சேலம் மாவட்டத்திற்கு அமைச்சரவையில் ஒரு பிரதிநிதித்துவம் கொடுத்தார்கள். அதே போல் தர்மபுரி மாவட்ட மக்களும் ஒரு குறையைச் சொல்கிறார்கள். ஆகவே, தர்மபுரி மாவட்டத்திற்கும் அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் கொடுத்து கலைஞர் அவர்கள் மக்களின் அந்தக் குறையை நிவர்த்தி செய்து அங்குள்ள மக்களுக்குத் திருப்தியை அளிக்க வேண்டுமென்று தர்மபுரி மாவட்ட மக்கள் சார்பாகக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, இன்றையதினம் இறுதிக் கட்டத்தில் ஒப்படைத்தல் என்ற சடங்கு நடைபெறுகிற இந்த நேரத்தில் நான் என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 40 சத வீதம் பகுதி குறைந்த மழையும், போதுமான நீர்ப்பாசன வசதி இல்லாததாகவும் இருக்கிறது. ஆகவே, இந்த நிலப் பரப்புப்பகுதிகளை நாம் பஞ்சப் பிரதேசமாகக் கவனத்தில் எடுத்துக்கொண்டு அந்தப் பிரதேசங்களில் உள்ள பூமியின் அடியில் உள்ள தண்ணீர் நிலைகளை ஆராய்ந்து அவற்றை மேலே கொண்டுவந்து பாசன வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழி வகைகளைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை நாம் மேலே கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் அதே நேரத்தில், அங்குள்ள தண்ணீர் நிலை குறைந்து விடாமல் இருப்பதிலும் கவனம் செலுத்தி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நிலையான நீர்ப்பாசனவசதிகளை, அந்தப் பகுதிகளுக்கு நாம் செய்து தர முடியும். இப்போது ஜோர்டான், ஈராக் போன்ற நாடுகளில் அப்படிப்பட்ட முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நம் பொறியியல் வல்லுநர்களை அந்த நாடுகளுக்கு அனுப்பி, அது பற்றிய பயிற்சியை அவர்கள் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்று நமக்கு அண்டர் வாட்டர் ஸோர்ஸ்ஸ் ஒன்றுதான் இருக்கிறது. நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீரை நாம் அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டுவிட்டோம். கழிவுநீர்த் திட்டங்களை நம் பொறியாளர்கள் இலாபத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டுதான் அத்திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்கிறார்கள். இந்தத் திட்டங்களில் நாம் இலாபத்தைப் பார்க்காமல் அதனால் எந்த அளவிற்கு நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன என்பதை மட்டும் கணக்கிலெடுத்து அத்திட்டங்களை விரிவாகச் செயல்படுத்த வேண்டும்.

இந்த நேரத்தில் நான் மற்றொன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஷுகர்கேன் செஸ் நிதி என்று இருக்கிறது. கரும்பாலைகள் உள்ள பகுதிகளில், புதுச்சாலைகள் ஏற்படுத்துவதற்காக அந்த செஸ் நிதிவசூலிக்கப்படுகிறது. அந்த நிதி ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வசூலிக்கப்படுகிறது. ஆனால், அந்த நிதி சாலை வசதிகளுக்காகச் செலவிடப்படுகிறதா என்று பார்த்தால், நமக்கு ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. காரணம், அப்படிப்பட்ட சாலை வசதிகள் செய்வதற்காகத் தமிழ் நாட்டில் ஒரே ஒரு கோட்டப் பொறியாளர்தான் இருக்கிறார். ஒரு பொறியாளர் அதிக பட்சம் பதினைந்து அல்லது இருபது லட்சம் ரூபாய்தான் ஓர் ஆண்டுக்குச் செலவிட முடியும். ஆகவே, இந்த வருடத்திலிருந்தாவது மூன்று அல்லது நான்கு டிவிஷன்களை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். அப்படி ஏற்படுத்துவதில் நிதித் துறைக்கு ஏதாவது சங்கடங்கள் இருந்தால்,



இந்தத் தொகையை அந்தந்த ஆலைப் பகுதிகளுக்கு ஒதுக்கி, அவர்கள் அதை ஹைவேஸிடம் கொடுத்து, அந்தந்தப் பகுதிகளில் புது சாலைகள் போடுவதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டுக் கூறிக் கொடுக்க வேண்டும். இந்தக் கரும்பு செஸ் நிதியை நல்ல முறையில் முண்டியம்பாக்கம் ஆலைதான் பயன்படுத்திக்கொண்டு வருகிறது. இதைப் போல மற்ற ஆலைகளும் பயன்படுத்தி அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஹைவேஸ் டிபார்ட்மென்டிடம் இந்தப் பணத்தைக் கொடுத்து அந்தப் பகுதியிலே புதிய சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மு. ப. 11-00.

இந்த நேரத்தில் மத்திய அரசு பம்பு செட்டுகளுக்கும், உரத்திற்கும் இன்னும் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான பொருள்களுக்கும வரிகளை உயர்த்தியிருக்கிறது. நம்முடைய அரசு விலைவாசிகளைக் குறைக்கவும், உணவுப் பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கவும், உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவும், வழி வகுக்கும் திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டுவரும் நேரத்தில், இந்திய பேரரசு விவசாயத்திற்கு அத்தியாவசியமான பொருள்களுக்கு வரிகளை ஏற்றிச் செல்வது, தமிழக அரசின் விலைவாசிகள் திட்டக் குறைப்பு நடவடிக்கைகளைப் பங்கப்படுத்துவது போலவும், குலைப்பது போலவும், எனக்குப் படுகிறது. இந்த முறையை இந்தியப் பேரரசு கைவிட வேண்டும். அதற்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையில், இந்தியப் பேரரசு கோதுமையை 37 பைசாவிலிருந்து 83 பைசா அளவில் உயர்த்தியிருக்கிறது. நாம், நெல் விலையை எடுத்துக்கொண்டால், நம்முடைய அரசு ஒரே சீரான விலைக்குக் கட்டுப்படுத்திக்கொண்டு வருகிறது. ஆனால், இந்திய பேரரசு விலையைக் கட்டுப்படுத்த வேண்டும், அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்று கூறிக்கொண்டே, செயல் முறையில் விலைகளை ஏற்றிக்கொண்டுதான் வருகிறது. தமிழகத்திலே கோதுமை வாங்குபவர்கள் விலை உயர்வு என்ற காரணத்தினாலே கோதுமையை வாங்க மறுக்கின்றனர். ஆகவே, உடனடியாக கோதுமை விலை குறைக்கப்பட வேண்டும். அதை மத்திய அரசு செய்யுமாறு நம்முடைய தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றையதினம் தமிழகத்தில் பெரும் பஞ்சம் நிலவுகிறது. வறட்சியின் காரணத்தினால், உற்பத்தியாகி இருக்கின்ற உணவுப் பொருள்கள் 40 இலட்சம் டன்களுக்குக் குறைவாகத்தான் இருக்கிறது. நம்முடைய தேவையோ 45 இலட்சம் டன்னாக இருக்கிறது. எனவே, நமக்குக் குறைந்தது 5 இலட்சம் டன்கள் பற்றாக்குறை விழுமென்று கருதுகிறேன். இந்த ஐந்து இலட்சம் டன்களையும்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மத்திய சர்க்கார் நமக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று நமது அரசு இந்தியப் பேரரசைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே அதிகமாக விளைந்தபோதெல்லாம் நாம் மத்திய அரசினுடைய வேண்டுகோளுக்கிணங்கி, மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்து வந்திருக்கிறோம். நாம் இதுவரையிலே மத்திய அரசிடம், எங்களுக்கு உணவுப் பொருள்களைக் கொடுங்கள் என்று கேட்டது இல்லை. இப்போது நம்முடைய நிலை, இயற்கையின் காரணமாக, வறட்சி ஏற்பட்டு, இருக்கின்ற காரணத்தினால், நம் பஞ்ச நிலையின் காரணமாகக் குறைந்தது ஐந்து லட்சம் டன்கள் தேவைப் படுகின்றன. அந்த ஐந்து லட்சம் டன் உணவுப் பொருள்களை நமது இந்தியப் பேரரசு தமிழக அரசுக்குக் கொடுத்து உதவ வேண்டும், உண்மையிலேயே தென்னாட்டின்பால் அக்கறை இருக்குமானால், அன்பு இருக்குமானால், இந்தியப் பேரரசு ஐந்து இலட்சம் டன் உணவுப்பொருள்களைத் தருவார்கள் என்று நான் நம்புகிறேன். வங்காளத்தார் 30 இலட்சம் டன்களைப் கேட்டிருக்கின்றார்கள். நமது அரசு ஒரு இலட்சம் டன் கேட்டிருக்கிறது. என்னுடைய கணக்குப்படி ஐந்து இலட்சம் டன் பற்றாக் குறையாக இருக்கும் என்று நான் கணக்கிடுகிறேன். இந்த ஐந்து லட்சம் டன்னைக் கொடுத்தால், உணவுப் பஞ்சம் ஏற்படுகின்ற நேரத்தில், மக்க

ளுக்குக் கொடுத்துக் காப்பாற்ற முடியும். ஆகவே, மத்திய அரசு உடனடியாக ஒத்துழைப்புத் தந்து இந்த உணவுப் பொருள்களைக் கொடுக்க வேண்டும். இந்த நேரத்தில் நமது நிதியமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன், கோவை மாவட்டம் மிகவும் பஞ்சப்பிரதேசம், பல்லடம், தாராபுரம், அவினாசி தாலுக்காக்களும், பவானியின் கடையிலுள்ள அந்தியூரும் வறட்சி நிறைந்த பகுதிகள். இந்தப் பகுதிகளுக்குப் பெரும் தொகை ஒன்றை ஒதுக்கி பஞ்ச நிவாரண வேலைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்தியப் பேரரசின் துணைப் பிரதமர் அவர்கள் சமீப காலத்திலே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மாநில அரசுகள் ஓட்டுகளை இழக்க நேரிடும் என்ற பயத்தினால், வரி விதிக்க மறுக்கின்றன, வருவாய் இனங்களை மாநிலங்களுக்கு மாற்றுவதால் ஆபத்து விளையும் என்று கருதுகிறேன். அதிகப் பணம் வேண்டுமென்றே துண்டுவிழும் பட்ஜெட் தயாரித்துள்ளன, இதைக் கண்டு நிதிக் கமிஷன் ஏமாறப்போவதில்லை, கண்டிப்பாக இருப்போம் என்ற வகையில் கூறியுள்ளார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில், இந்தியப் பேரரசு, என்றாவது தமிழகத்திற்குச் சேரவேண்டிய நியாயமான பங்கைக் கொடுத்திருக்கிறதா? தமிழக அரசு துண்டுவிழும் நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கின்ற காரணத்தினால் இந்தியப் பேரரசின் துணைப் பிரதமர் விரட்டுகின்ற பாவனையில் அவருடைய கூற்று இருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு 10.8 சத விகிதம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5.7 சத விகிதம் தான் நமக்குக் கிடைக்க இருக்கிறது. இந்த மாறுபாடான நிலையில், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு உள்ள இந்த நிலை நீடித்தால், நிச்சயமாக தமிழக மக்கள் உங்களை விரட்டுவார்கள். 1967-லேயே இந்தியப் பேரரசின் ஆட்சியின் பேரில் நம்பிக்கையில்லை என்று திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். 39 பாராளுமன்றத் தொகுதியில் மூன்றே மூன்று தொகுதிகளில் மட்டும்தான் காங்கிரசு வெற்றி பெற்றிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது ? இந்தியப் பேரரசின் பேரில் தமிழக மக்களுக்கு நம்பிக்கை யில்லை என்பதைக் காட்டுகிறது அல்லவா ? இந்த மாமன்றத்தில் அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றேன். இந்தப் போக்கை நீடிக்கக் கூடாது, அப்படி நீடித்தால் நிச்சயமாக நீங்கள் எங்களிடமிருந்து விடுபெற விரும்புகிறீர்கள் என்றுதான் இந்தத் தமிழகம் நினைக்கும் என்று கூறிக் கொண்டு விடைபெறுகிறேன்.

**திரு ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய உதவித் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த பட்ஜெட்டிலே இருக்கின்ற ஒரு தவறைச் சுட்டிக் காட்ட நான் விரும்புகிறேன். பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருப்பதற்கும், நிதியமைச்சரவர்களுடைய பேச்சின்போது குறிப்பிட்டதற்கும் மாறுபாடு இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. அந்த மாறுபாட்டை அரசாங்கம் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அதை இந்த அவையின் முன் நான் சொல்ல முன்வந்துள்ளேன். நம்முடைய மொத்த வருவாய் 268 கோடியே 66 இலட்சம் ரூபாய். நம்முடைய ரெவின்யூ செலவு 285 கோடியே 37 இலட்சம் ரூபாய். ஆகவே, இதன் மூலம் துண்டுவிழுவது 16 கோடியே 70 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த 268 கோடியே 66 இலட்சம் ரூபாயில், ரெவின்யூ செலவு-வரவு என்று கூறப்பட்டு இருக்கிறதே அதிலே [ அடிஷனல் மொபலிசேஷன் ] என்று 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் சேர்த்துக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றிருக்கும் வரியமைப்பின் மூலமாக நமக்குக் கிடைக்க வேண்டிய உண்மையான வருவாய் 263 கோடியே 6 இலட்சம் ரூபாய்தான். ஆனால், இந்த அடிஷனல் மொபலிசேஷனிலே போடப்பட்டிருக்கும் தொகையைச் சேர்த்துதான் 268 கோடியே 66 இலட்சம் வந்திருக்கிறது. ஆகவே, இதைச் சேர்த்து, இந்த வரவு போக, துண்டு நமக்கு 16 கோடியே 70 இலட்சம். ஆகவே, இந்த பட்ஜெட் அளிக்கின்றபொழுது, அடிஷனல் மொபலிசேஷன் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற இடத்தை நாம் பார்க்கின்றபொழுது, புதிதாக வரிகள் போடப்பட்டால், அந்த இடத்திலே குறிப்பிட்டுப் போடுவது வழக்கம். இதற்கு முன்னால் இருக்கின்ற ஃபினான்ஷி



யல் ஸ்டேட்மெண்டில் சொன்னார்கள். அதிலேயெல்லாம் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், அந்த அடிஷனல்மொபலிசேஷன் என்ற அந்த இடத்திலே,

**Lump sum credit for additional taxation.**

என்ற காலத்திலே அடிஷனல் மொபலிசேஷன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை நிச்சயமாக வரியின் மூலம் நமக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் என்ற கருத்திலே, 5 கோடி 60 இலட்சம் ரூபாய் என்று கூறப்பட்டதாக என்னுடைய கருத்து. ஆகவே, இந்த 5 கோடியே 60 இலட்சத்தை எப்படி ஈடுகட்டுவது என்று நிதியமைச்சரவர்கள் தங்களுடைய பிரசங்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே என்ன கூறியிருக்கிறார்கள் என்றால்,

**'The Revenue Estimates for 1969-70 as now before the House place the receipts on Revenue Account at Rs. 268·66 crores including a sum of Rs. 5·60 crores to be mobilised by the State with reference to the target of additional taxation set by the Planning Commission for the State for the Fourth Plan period'.** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்து, அதே பிரசங்கத்திலேயே, பின்னால் தொடர்ந்து பேசுகின்றபொழுது,

**' Some efforts at mobilisation of resources for the Plan is however necessary as already indicated with reference to the targets set by the Planning Commission and Government will place proposals in this regard in due course before the House '.**

அதோடு விடாமல், அடுத்தபடியாகத் தொடர்ந்து

**'It is hoped that these resources could in part be secured through rural debentures, a new instrument for mobilisation of savings in rural areas.'**

என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே, அடுத்து, நிதியமைச்சர் கடைசியிலே பதில் பிரசங்கத்திலே சொல்லுகின்றபொழுது, அதிலே என்ன கூறியிருக்கிறார்கள் என்றால், இந்த 5 கோடியே 60 இலட்சம், டிபெஞ்சர் மூலம் கடன்பெறுவது மூலமும், அரசின் செலவினங்களைக் குறைத்தல் மூலமும், அரசின் முதலீட்டுத் துறைகளிலே லாபம் பெறுவதன் மூலமும் ஈடு செய்யப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக பட்ஜெட் தயாரிக்கப்படுவது இரண்டு முறை.

இரண்டு விதமாகப் பட்ஜெட் தயாரிக்கப்படுகின்றது. ஒன்று ரெவின்யூ பட்ஜெட் ; இன்னொன்று காஷ் பட்ஜெட். காஷ் பட்ஜெட் என்பதை வேஸ் அண்ட் மீன்ஸ் பட்ஜெட் என்றும் சொல்வார்கள். ரெசீட்ஸ் அண்ட் டிஸ்பர்ஸ்மெண்ட் பட்ஜெட் என்றும் சொல்வார்கள். தமிழில் அதை ரொக்க வசதி பட்ஜெட் என்று நாம் கூறலாம். ஆகவே, இரண்டு விதமாகப் பட்ஜெட் தயாரிக்கப்படுகிறது. சர்க்காருக்கு வருவாய்த் துறையில் வரக் கூடிய பணம் பூராவையும் ரெவின்யூக் கணக்கில் வரவு வைக்க வேண்டும். கடனாக வரக்கூடிய வருவாயை ரெவின்யூக் கணக்கில் வருவாய் என்று கணக்கு வைக்கக்கூடாது. அப்படிப் பழக்கம் இல்லை, ஆகையினால், காஷ் பட்ஜெட் வேறு, ரெவின்யூ பட்ஜெட் வேறு. காஷ் பட்ஜெட், ரெவின்யூ பட்ஜெட் என்று இரண்டு விதமாகப் தயாரிக்கின்றோம். ஆகவே, டிபென்சர் மூலமாக வருகின்ற வருவாயை ரெவின்யூ சைட் வரவிலே வைப்பது தவறு. ரெவின்யூ சைடிலே கணக்கு வைப்பது சர்க்கார் திருப்பிக் கட்ட வேண்டாதது. டிபென்சர் மூலமாக வருகின்ற வருவாயை, சர்க்கார் வட்டியும், முதலுமாகத் திருப்பிக்கட்ட வேண்டும். ஆகவே, அதை காஷ் பட்ஜெட்டிலே சேர்க்க வேண்டுமேதவிர, ரெவின்யூ பட்ஜெட்டிலே வரவு வைக்கக் கூடாது. நான் எல்லா வகையிலும் இதைப் பார்த்தேன்.

அடுத்தபடியாக, அரசின் செலவினைக் குறைத்தல்மூலமாக வருகின்ற வருவாயைச் செலவு இனத்தில் தான் குறித்துக் காட்ட வேண்டுமே தவிர,

வருவாய்த் துறையிலே வரவு வைக்கக் கூடாது. அரசுத் துறையின் செலவைக் குறைப்பதால் அதை அரசுத் துறையின் செலவில் காட்ட வேண்டுமே தவிர, இந்த ரெவின்யூக துறையிலே வருவாய் வைக்கக் கூடாது. மொத்தமாக 5 கோடியே 60 இலட்சம் துண்டு விழுகிறது. அதை ஈடுகட்ட முடியும் என்றால் எந்த பட்ஜெட்டிலே என்ற விளக்கம் சொல்லப்படவில்லை. நான் மற்ற நாடுகளில் பட்ஜெட் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதைப் பார்த்தேன். அமெரிக்காவிலே எப்படித் தயாரிக்கபடுகிறது என்பதையும் பார்த்தேன். இலண்டனிலே எப்படித் தயாரிக்கப்படுகிறது என்பதையும் பார்த்தேன். அந்த முறையிலே பார்க்கும்பொழுது, இந்த முறை இல்லவே இல்லை. ஆகவே, நான் சொல்லுவது என்னவென்றால், நீங்கள் 5 கோடியே 60 இலட்சத்தை ரெரிவின்யூ சைடிலே வரவு வைத்திருப்பது சரி என்று வைத்தால், இன்ன வகையிலே இந்த வரி மூலம் இதைச் சரிக்கட்டப் போகிறோம் என்று சொல்லிவிடவேண்டும். அல்லது, பிறகு சொல்லுகிறோம் என்று சொல்லலாம். அதிலே தவறு கிடையாது. ஆனால், டிபென்சர்மூலமும் செலவைச் சிக்கனப்படுத்துவதன் மூலமும் இதை ஈடு கட்டுவோம் என்பது சரியான முறை அல்ல. அது பட்ஜெட்டுக்கும் பொருத்தமாக இல்லை. ஆகவே, இப்பொழுது நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, இந்த 5 கோடியே 60 இலட்சம், நமக்கு துண்டுவிழக் கூடிய 16 கோடியே 70 இலட்சம் இரண்டையும் சேர்த்து, மொத்தம் 22 கோடியே 30 இலட்சம் துண்டு ரெவின்யூ சைடிலே என்று சொல்லுங்கள். அதிலே ஆட்சேபணை கிடையாது. அப்படிச் சொல்ல முடியும். இல்லையென்றால், 16 கோடியே 70 இலட்சம் தான் துண்டு என்று சொன்னால், இந்த 5 கோடியே 60 இலட்சத்திற்கு இன்ன வகையிலே வரி போடப் போகிறோம் என்று தெரிவிக்க வேண்டும். ரெவின்யூ பட்ஜெட்டிலே துண்டு விழலாம், 16 கோடியே 70 இலட்சம் விழுந்திருக்கிறது. ஆனால், காஷ் பட்ஜெட்டிலே துண்டுவிழ வேண்டிய அவசியம் கிடையாது. சென்ற ஆண்டு ஆரம்ப இருப்பு 55 இலட்சத்தையும் சேர்த்து சுமார் 18 கோடிக்குத் துண்டு விழுகிறது. டிபென்சர் மூலம் வரவு வைத்திருக்க முடியும். கடன் இருந்தும் வரவு வைத்திருக்கிறார்கள். காஷ் பட்ஜெட்டிலே 5 கோடியே 60 இலட்சம் வரவு வைத்திருப்பதால் இங்கே துண்டு, ஓவரால் டெஃபிசிட் 19 கோடிக்கு வருகிறது. ஆனால், உண்மையிலே ஓவரால் டெஃபிசிட்எதுவும் வரவில்லை ? இந்த 5 கோடியே 60 இலட்சத்தையும் சேர்த்து எப்படி நிதி இலாகா நமது அமைச்சருக்கு அந்த ஆலோசனையைக் கொடுத்தது என்பதைத்தான் அறிய விரும்புகிறேன். ரெவின்யூ சைடிலே 5 கோடியே 60 இலட்சம் வரவு வைத்து, டிபென்சர் மூலமும், சிக்கன நடவடிக்கையின்மூலமும, தொழில் துறையின் மூலமும், வரவு வைப்போம் என்று எப்படி உணர்ந்து கொண்டார்கள். எப்படி இதை மழுப்ப முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளவே முடியவில்லை. ஆகவே, அரசாங்கம் இதை சாதாரண விஷயம் என்று கொள்ள வேண்டியதில்லை. இது டெக்கினிக்கல் பாயின்ட், பட் வைட்டல் பாயின்ட். டெக்னிக்கல் பாயின்ட் தான், ஆகவே இப்பொழுது இதைப் பற்றி அறிவிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். தவறுவது இயற்கை. அந்தத் தவற்றைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. இந்த ரெவின்யூ பட்ஜெட்டில் டெஃபிசிட் 22 கோடியே 30 இலட்சம் வரும் என்று சொன்னால், அதை ஒத்துக்கொள்ளலாம். அதை ஒத்துக்கொள்ளுங்கள், இன்ன வரி போடப்போகிறோம் என்று சொல்லுங்கள். பின்னால் வரி போடப்போகிறோம் என்று சொல்லுங்கள். ஓவரால் டெஃபிசிட்டை எப்படி நிறைவு படுத்தப் போகிறோம் என்று சொல்லுங்கள். ஆகவே, எந்த வகையிலே பார்த்தாலும் இன்றைக்கு அரசாங்கம் விரிவாகப் பதில்சொல்லக் கடமைப் பட்டிருக்கிறது. அந்தப் பதிலைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மு. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்ஜெட் கூட்டத்தில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் முறையான வாதங்களை எடுத்து வைக்க, அதற்கு நல்லதொரு சந்தர்ப்பமும் கொடுத்து, அதை முறையாகச் செயல்படுத்தி, அதைத் தொடர்ந்து இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்துத் திறமையாகச் செயல்பட்டு வருகிறது என்



தை நான் தெரிவித்துக்கொள்வதோடு தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் தொழில் துறையிலே எவ்வித முன்னேற்பாடும் முன்னேற்றமும் காணப்படவில்லை, ஏனென்றால், தஞ்சை மாவட்டம் விவசாயத்திற்கு முதலிடம் பெற்றிருக்கிறது. அந்த ஒரே காரணத்தினால் அங்கே தொழில் துறையிலே அரசு முன்னேற்றம் காட்டவில்லை, அங்கே உள்ளவர்களும் அந்த நிலையினை விரும்பவில்லை, அதனாலே அங்கே உள்ள விவசாயிகள் விவசாயம் செய்யும் நேரம் போக மற்ற நேரங்களில் நிம்மதியாக வாழ முடியவில்லை; அவர்களை நிம்மதியாக வாழ வைக்க தொழிற்கூடங்களை உருவாக்கத் தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு எனது தொகுதியைப் பொறுத்தவரைக்கும் பல காலமாகவே தொழில் துறையில் பிற்போக்காகவே நடத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே தொழில் துறையில் தஞ்சை மாவட்டத்தில் மூலப் பொருளான வைக்கோல் ஏராளமாகக் கிடைக்கின்றது. அங்கே சுண்ணாம்புக் கல் ஏராளமாகக் கிடைக்கின்றது. அதனாலே விவசாயத்திலே ஈடுபட்ட நேரம் போக மற்ற நேரங்களிலே அவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக வைக்கோலிலிருந்து காகிதத்தை உற்பத்தி செய்யல்லாம். எனவே அங்கே காகிதத் தொழிற்சாலையை அங்கே உருவாக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். சுண்ணாம்புக் கல் தளங்கள் அங்கே ஏராளமாக இருக்கிற காரணத்தினால், சுண்ணாம்புக் கல் மூலமாகப் பல பொருள்களை உருவாக்க முடியும். விவசாயத்திற்குத் தேவையான பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அங்கே உருவாக்குவதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூரில் ஒரு காவல் நிலையம் தேவை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. சேதுபாவாசத்திரம் ஒன்றியம் உள்ள அந்தக் கடலோரப் பகுதியில் கள்வர் பயம் அதிகமாக இருக்கிறது. கள்ளக் கடத்தல் கள்வர் வழிப்பறி அதிகமாக இருப்பதன் காரணமாக சேதுபாவாசத்திரம் பகுதிக்கு நிச்சயமாக ஒரு காவலர் நிலையம் துவக்க வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே சேதுபாவாசத்திரம் ஒன்றியத்திற்கு ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் தேவை என்ற கோரிக்கை ஒன்றியத்தின் மூலமாகவும், பஞ்சாயத்தின் மூலமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் செயலுக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணித் தொகுதியைப் பொறுத்த வரைக்கும் ஒரே ஒரு அரசினர் மருத்துவ மனைதான் பெயரளவில் இயங்கிக்கொண்டிருக்கிறது. டாக்டர் ஒருவர்தான் இருக்கிறாரே தவிர, கட்டட வசதிகள் இல்லை. மருந்து வசதிகள் இல்லை, செவிலியர்கள் இல்லை. அந்த நிலையை உடனடியாக மாற்றி இந்த அரசு அங்கு நல்லதொரு நிலையத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும் தெரியவருகிறது. எனவே அதைச் செயலுக்குக் கொண்டுவர இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை–தஞ்சை புகைவண்டித் தொடர்பு ஏற்படுத்த வேண்டுமென்று முந்திய அரசு காலத்திலேயே ஒரு கோரிக்கை இருந்து வந்தது. அந்தக் கோரிக்கைக்கு மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டதாகப் பத்திரியிலே செய்திகள் வந்தன. அந்தத் திட்டத்தை இந்த அரசு உடனடியாகச் செயலுக்குக் கொண்டுவர முயற்சி எடுத்து, மத்திய அரசுக்குச் சிபார்சு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, பஞ்சப் பிரதேசம் பற்றி எல்லா உறுப்பினர்களும் திறமையாகப் பேசினார்கள். ஆனால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் பஞ்சப் பிரதேசம் அங்கு இருக்கிறது என்ற கண்ணோட்டம் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இல்லை. பேராவூரணித் தொகுதியிலே ஒரு

பகுதியான கீரமங்கலம் பகுதியும் அறந்தாங்கி தாலூக்காவில் ஒரு பகுதியும் நிச்சயமாகத் தஞ்சை மாவட்டத்திலே இருக்க வேண்டிய பகுதி அல்ல. அது புஞ்சைப். பகுதி. வானம் பார்த்த பகுதி. அங்கே சி.எம்.பி. கால்வாய்ப் பாசனம் இல்லை. ஆறு வெட்டி, கிணறுகள் மூலமாகப் பாசனம் செய்யவேண்டுமென்ற நிலை இருந்தாலும் மின்சாரம் அங்கே விஸ்தரிக்கப்படாத காரணத்தாலே அங்கே எவ்விதத் தொழிலும் சய்யமுடியவில்லை, வளர்ச்சியும் ஏற்படவில்லை. ஆகவே, என்றும் பஞ்சப் பிரதேசமாகக் காட்சியளிக்கின்றது. இன்றைக்கு ஏதோ மழை இல்லை, கிணற்றில் தண்ணீர் இல்லை என்ற காரணத்தினால் பஞ்சப் பிரதேசமாகப் பல பகுதிகள் இருந்தாலும், அது நிரந்தரமான பஞ்சப் பிரதேசமாக இருக்கிற காரணத்தாலே மற்ற, தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுக்கிற சலுகையை, அதற்கும் கொடுக்கவேண்டுமென்று இந்த மாமன்றத்தை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்குப் பல முறை வருகை தந்திருக்கிறார்கள். பேராவூரணித் துணை வட்டம் தனித்து இயங்கும் துணை வட்டமாக மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை இந்த அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அது உடனடியாகச் செயலுக்கு வரவேண்டும். தனித்து இயங்கும் தாலூக்காவாக அதை மாற்றுவதற்கு உடனே வழிவகை செய்யவேண்டும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் பல கோரிக்கைகளை இங்கே சொல்கிறோம். திரும்பத் திரும்ப இந்தக் கோரிக்கைகளைப் பற்றி சட்டமன்றத்தில் பேசுகின்ற நிலையில் ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வதற்குப் பரிகாரம் தேடுவதைவிட, எதிர்க்கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் எடுத்துச்சொல்வதற்குப் பரிகாரம் உடனே கிடைக்கிறது என்ற அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் அவரவர்கள் தொகுதிக்குச் செல்கின்ற நேரத்தில், அங்குள்ள பொது மக்கள் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தினால், ஆண்டு ஆரம்ப பட்ஜெட் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட கோரிக்கைகள் உடனே பரிசீலனை செய்யப்பட்டு, பரிகாரம் அடுத்த சட்டமன்றக் கூட்டத்திற்கு வருகிற நேரத்தில் இன்னென்ன காரியங்கள் இன்னென்ன உறுப்பினர்களால் சொல்லப்பட்டன. இந்த இந்தத் திட்டங்கள் இந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன, இன்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. அதற்குரிய காரணங்கள் என்ன என்பது பற்றிய ஒரு குறிப்பைச் சட்டமன்றத்தின் முன் வைக்கின்ற நிலைமையை மாண்புமிகு அமைச்சர்கள் ஏற்படுத்தித் தருவார்களேயானால், நிச்சயம் அது பலனுள்ள திட்டமாக இருக்கும் என்று கூறி, இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போழுது நான் முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் பல ஜில்லாக்களில் பொதுவாகத் தண்ணீர்ப் பற்றுக்குறை இருந்து வருகிறது. திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், பெரிய செழிப்பான பிரதேசம் என்று சொல்லுவார்கள். அங்கே இரண்டு, மூன்று தாலூக்காக்களுக்குத் தான் தாம்பரபரணித் தண்ணீர் பிரயோசனப்படுகிறது. அதே மாதிரி ஒவ்வொரு ஜில்லாவிலும் தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் பெரிய ஜில்லா, அதில் 5, 6 தாலூகாக்களுக்குக் காவிரித் தண்ணீர் இருக்காது என்று நினைக்கிறேன், ஆகவே, இவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்த்துப் பரிகாரம் தேடுவதில் சர்க்கார் தீவிரமாக இருக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அண்டை மாநிலமான கேரளத்தில் ஏராளமான சில்லரை நதிகளும், பெரிய நதிகளும் இருக்கின்றன. அவைகளிலுள்ள தண்ணீரெல்லாம் சரியாக உபயோகப்படுத்தப்படாத முறையில் வீணாக அரபிக் கடலில் போய் விடுகிறது. அந்தச் சர்க்காரை நல்ல முறையில் அணுகி, மத்திய சர்க்காரின் உதவியையும் வைத்துக்கொண்டு, அந்தத் தண்ணீரை எல்லாம் சென்னை ராஜ்யத்திற்குக் கொண்டுவர முயற்சி செய்து அநேக காரியங்களை



அதன் மூலம் சாதிக்கவேண்டும். அப்படியானால் கோவை என்றுமே வறட்சியான ஜில்லாவாக இருக்காது.

(திரு. சு. துரைசாமி தலைமை).

அதே மாதிரி திருநெல்வேலி ஜில்லா வட பகுதி பூராவும் செழிப்படையும், இராமநாதபுரம் ஜில்லா செழிப்படையும். தமிழ் நாடு பொதுவாக நல்ல முறையில் தண்ணீர் வசதி உள்ள ராஜ்யமாக ஆகிவிடும். இந்த விஷயத்தில் ஏனோ தானோ என்று இருந்துவிடாமல் நல்லவிதத்தில் முயற்சி செய்யவேண்டும். இந்த நேரத்தில்தான் மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் பற்றி, அவர்களுடைய அருமையைப்பற்றி நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் ஒரு தேசியத் தலைவர் மட்டத்தில் உள்ளவர்கள். அவர்கள் உடம்பு ஆரோக்கியமாக இருந்து 5 வருஷங்களுக்கு நமக்கு அவர்கள் சேவை செய்வதற்கு நாம் கொடுத்துவைக்கவில்லை. அவர்கள் இருந்திருந்தால் டெல்லி மட்டத்திலும், கேரள அரசாங்கத்தினிடமும் முயற்சி செய்து நல்ல விதமாக தமிழ் நாட்டு ஜனங்களுக்கு சேவை செய்திருப்பார்கள். அந்த பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லை. அந்த முயற்சியை இந்த மந்திரி சபை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஏதோ ரொட்டினாக உள்ள வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. முக்கியமான ஒரு காரியத்தில் குறிக்கோளாக அதை வைத்துக்கொண்டு, தீவிரமாக அந்தக் காரியத்தில் ஈடுபட்டு, அந்தக் காரியத்தைச் சாதிக்கவேண்டும். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பரம்பிகுளம்-ஆளியாறுத் திட்டத்தை அன்று ரொம்பவும் முயற்சி செய்து கொண்டுவந்தார்கள். அதன் விளைவாகக் கோவை ஜில்லாவில் ஒரு பகுதி இன்று நல்லபடியாக வளம் பெற்றிருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தில் சர்க்கார் நல்ல முறையில் பிரயாசைப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ பெரிய யோசனைகள் சொல்வதாகக் கேலியாக நினைத்துக் கொள்ளாதீர்கள். செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஜில்லாக்களை எல்லாம் பார்க்கும்பொழுது, நிறைய நதிகள் இருக்கின்றன என்று தெரிகிறது. 15 நதிகள் சிறியவையும், பெரியவையுமாக இருக்கின்றன என்று நினைக்கிறேன். இல்லையா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** செங்கற்பட்டில் பாலாறு இருக்கிறது. ஆனால், தண்ணீர் கிடையாது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** 15, 20—நதிகள் இருக்கும் என்று நினைக்கிறேன். மேலோட்டமாக அந்த நதிகளில் தண்ணீர் வராவிட்டாலும், அவைகளின் கீழ் மட்டத்தில் ஸப்-ஸாயில் வாட்டர் ஏராளமாக இருக்கும். இதை வெளியே கொண்டுவருவதற்கு வேண்டிய திட்டத்தை அமைத்து, தண்ணீரை வெளியே கொண்டுவந்தால், 4, 5 ஜில்லா அளவில் எவ்வளவோ நீர்ப்பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யலாம். அதையும் இந்த மந்திரிசபை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கொண்டு இந்த சர்க்கார் பட்ஜெட்டில் சில நல்ல காரியங்களைச் சொல்லி இருக்கிறார்கள். பிரி-யூனிவர்ஸிடி ஃபீ கன்ஸெஷன் கொடுத்திருக்கிறார்கள். சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு முன்னோடியாகச் சில காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் இந்தச் சர்க்காரை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் பணத்தைச் சிக்கனமாக உபயோகித்து இன்னும் சில காரியங்களைச் செய்ய சர்க்காருக்குக் கடமை இருக்கிறது.

முக்கியமாக எடுத்துக்கொண்டால், பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு ரூ. 75 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இராஜ்யத்தில் கிட்டத்தட்ட 3,000 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். சர்க்கார் பள்ளி, தனியார் பள்ளி ஆகிய 3,000 ஹைஸ்கூல்களில் ஆயிரம் ஹைஸ்கூல்களுக்குத்தான் ஓரளவுக்கு நியாயமான கட்டடங்கள் இருக்கின்றன. மற்ற 2,000 ஹைஸ்கூல்களுக்கு மாட்டுத் தொழுவம் அல்ல, மாட்டுத் ... ஒரு ... வத்தைவிடக் கொஞ்சம் சுமாராக இருக்கும், அப்படியுள்ள நிலை ... கொடுக் ... கேவலமான கட்டட வசதி உள்ள நிலைமைதான் இருக்கிறது ... சுதந் ... கல்விக்காக ரூ. 60 கோடி செலவழிக்கிறோம் என்று ... போகத் கட்டடம் கட்டுவதற்கு ரொம்பவும் குறைவாகத் தான் ... பிராயம் தான். ... எழுதிக் கேளுங்

யிருக்கிறார்கள். ரூ. 75 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு ரூ. 75 லட்சம் என்பது 10 வருஷங்களுக்கு முன்புள்ள ரூ. 15 அல்லது 20 லட்சத்திற்குத் தான் சமம் என்று நினைக்கிறேன். இப்பொழுது விலைவாசியெல்லாம் கூட, ரேட்கள் எல்லாம் உயர்ந்துவிட்டன. ஒரு ஜில்லாவில் குறைந்தபட்சம் ஒரு வருஷத்தில் 30, 40 பள்ளிகள் உதவித் தொகை பெற்று, அங்கெல்லாம் கட்டட வேலை நடக்கக்கூடிய அளவுக்கு, அதற்கான தொகையை ஜாஸ்தியாக ஒதுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, சயன்ஸ் லாபரட்டரிக்கு ரூ. 39 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த இராஜ்யத்திலுள்ள 1,000 ஹைஸ்கூல்களில் சயன்ஸ் வகுப்பு நடத்துவதற்கு லாயக்கான, வசதி உள்ள லாபரிட்டரீஸ் கிடையாது. இதற்கு நீங்கள் ரொம்பவும் குறைந்த தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். கல்வி விஷயத்தில் நீங்கள் எவ்வளவு தூரம் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதற்கு இதை நான் ஒரு ரொம்ப முக்கியமான குறையாக எடுத்துச் சொல்கிறேன். ஆகவே, இந்தக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும். பஸ் டிரான்ஸ்போர்ட், படி அரிசித் திட்டம் இவைகளினால் சர்க்காருக்குக் கோடிக் கணக்கில் நஷ்டம் ஏற்படுகிறது. அதே நேரத்தில் இப்படிப்பட்ட முக்கியமான காரியங்களுக்குப் பணத்தை ரொம்பவும் குறைவாக ஒதுக்கியிருக்கிறீர்கள்.

மேற்கொண்டு ரோடு வசதியைப் பார்த்தால் அதுவும் ரொம்ப மோசமாக இருக்கிறது. எங்கள் கட்சியைச் சார்ந்த கனம் கோதண்டராமையா அவர்கள் என்னிடம் ஒரு குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஹோசூர் தாலூகா மைசூர் ஸ்டேட் பக்கத்தில் இருக்கிறது. நமது ஸ்டேட்டுக்குக் கடைசியில் மைசூர் ஸ்டேட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது. மைசூருக்குப் போவதற்கு அநேக ரோடுகளுக்கு நம்முடைய ராஜ்யத்திலிருந்து கனெக்ஷன் இருக்கிறது. பூராவும் ரோடுகள் ரொம்பவும் மோசமாக இருக்கின்றன. பூராவும் மண் ரோடாக இருக்கிறது. அவைகளையெல்லாம் நல்லவிதத்தில் மெட்டல் ரோடுகளாக மாற்றி, இண்டர்-ஸ்டேட் பஸ் போக்குவரத்திற்கு வசதி செய்து தரும்படியாகப் பேசவேண்டும் என்று என்னிடம் குறிப்புக் கொடுத்தார்கள்.

மூ.ப. 11-30 அதுமட்டுமல்ல, இராச்சிய அளவில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், மற்றவைகளுக்கும் கூடுமான வரையில் நல்ல விதமான முறையில் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் முறையில் பணங்கள் ஒதுக்க வேண்டும். (மணி அடிக்கப் பட்டது) என்ன சார், ப்ரண்ட் ரோவில் உள்ளவர்களுக்குக் கொஞ்சம்..............................

பஞ்சத்தைப் பற்றிச் சொல்லும்போது, நம் பேரில் உள்ள குறைவால் தான் இந்தப் பஞ்சம் வந்துவிட்டது. ஜனங்களுக்கு சில அநீதியான மத்திய தர வகுப்பினருக்கு அனுகூலக் குறைவான சட்டங்களைச் சில காரியங்களுக்காகச் செய்கிறோம். அதன் காரணத்தால் இன்றைக்குப் பஞ்சம். இதனால்தான் இயற்கை நமக்கு ஒத்துழைப்புத் தரவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், லாண்ட் ரிகார்ட் டெனன்ஸி ரைட்ஸ் மசோதாவைச் சொல்லலாம். அதில் அநீதி இருக்கிறது என்றால் அது மிகையாகாது. சரியான படி ரிகார்ட்டு பண்ணவிட்டால், கோர்ட்டுக்குப் போய்ப் பரிகாரம் தேட சட்டத்தில் விளக்கம் இல்லை. அதிலே ஒருத்தனுக்கு 5 ஏக்கர் இருக்கிறது என்றால், அதிலே ஒரு ஏக்கரைக் குத்தகைக்குக் கொடுத்துவிட்டு, 4 ஏக்கரை சொந்தச் சாகுபடி செய்கிறார் என்பதைத் தெளிவாக ரிகார்டு எப்படிச் செய்வது என்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை. ஏற்கனவே உள்ள விவசாய உரிமைச் சட்டங்கள், குடியானவர்கள் பாதுகாப்புச் சட்டம், இப்படிப் பல சட்டங்களால், ...ஞ்ச நஞ்சம் நிலங்களுக்கு இருந்த மதிப்பும் குறைந்துபோய்விட்டது. அ.. நிலம் வைத்திருப்பவர்கள் கூட, சட்டத்தில் விதிவிலக்கு இல்லாத பெரிய ..த்தகைக்காரர்களை வெளியேற்ற முடியாமல், ஏதாவது கல்யாணம், சரியாக உ..ாந்தரவு, தொழில் ஆரம்பிப்பது போன்ற ஏதாவது காரியம் விடுகிறது. ..ண்டும் என்றால், சிறிய நிலச் சொந்தக்காரரும் தன்னுடைய காரின் உதவி..றுக் கஷ்டத்தைப் போக்கிக் கொள்ளவோ, ஏதாவது சென்னை ராஜ்ய





தொழிலை ஆரம்பிக்கவோ முடியாத நிலை இருக்கிறது. நிலத்தையும் விற்கமுடியாது, வாழ்க்கையும் நடத்தமுடியாது என்கிற நிலையில் இருக்கிறார்கள். அப்படி நிலத்தின் பேரில் சட்டங்களைப் போட்டுப் போட்டு, லட்சக்கணக்கான நடுத்தர நில உடைமையாளர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கி, அவர்கள் அடியோடு நசுங்கிவிட்டார்கள். பட்டணத்தில் இருக்கிறவர்களுக்குத் தெரியாது. எலெக்ஷனுக்கு நிற்கிறவர்களுக்குத் தெரியாது. கிராமங்களுக்குப் போனால் தான் அங்கே எத்தனை குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன என்பது தெரியும். அப்படி இருக்கும் போது, இப்பொழுது இந்த ரெகார்டு சட்டமும் வந்திருக்கிறது. முன்னால் ஒரு நஞ்சைக்கு ரூ. 5,000 பெறுமானம் என்றால், இப்பொழுது, நஞ்சையாக இருந்தாலும், புஞ்சையாக இருந்தாலும், மதிப்பு இன்றைக்கு ரூ. 2,000 ரூ. 1,000 கூட இல்லாமல் போய், லட்சக்கணக்கான குடும்பங்கள் சொத்து மதிப்பை இழந்து நாசமாகப் போய்விட்டார்கள். நான் இப்படி அடிக்கடி பேசும்போது, நம்முடைய கம்யூனிஸ்டு அங்கத்தினர்கள் என்பேரில் எரிச்சல் படுகிறார்கள். அவர்கள் அப்படி எரிச்சல் படக்கூடாது. சிறு உடைமையாளர்கள் கெட்டுப்போவதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்று கேட்கிறேன். இப்படிப்பட்ட நேரத்தில் இவர்கள் மேல் கண் வைத்து, இந்தச் சர்க்கார் நடந்து கொண்டதால்தான் மழை பெய்யவில்லை என்பதைத் தெரிவிக்கிறேன். இப்படித்தான் நாட்டில் துன்பம் வரும் என்பதையும் தெரிவிக்கிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும் திருக்குறள்

" முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் "

என்று வள்ளுவர் சொன்னார். அது உங்களுக்கும் தெரிந்த விஷயம். ஆகவே, இப்படிப்பட்ட சட்டங்களைச் செய்து செய்து, அதன் மூலம் நீங்கள் நாட்டில் கஷ்டத்தை உண்டாக்கிவிட்டீர்கள். கஷ்டப்படுத்துங்கள், பெரிய புள்ளிகளைக் கஷ்டப்படுத்துங்கள், அவர்களுக்கு கஷ்டத்தை உண்டாக்கிவிட்டுப் போங்கள் ஆனால், நடுத்தர வகுப்பினருக்குத் துன்பங்களை உண்டுபண்ணாதீர்கள் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேற்கொண்டு, தஞ்சாவூரில் என்ன நடக்கிறது? அறுவடைக் கூலியை நிர்ணயம் செய்ய, வயலிலே வேலைசெய்யும் விவசாயினுடைய கூலியை நிர்ணயம் செய்ய ஒரு ஹைகோர்ட் ஜட்ஜு தலைமையில் விசாரணை. எங்காவது கேள்விப்பட்டதுண்டா? இந்த நாட்டில் அநீதியாகக் கிளர்ச்சி செய்கிறவர்களைத் தைரியமாக அடக்க முடியாமல் சர்க்கார் இன்றைக்கு இருக்கிறது. ஹைகோர்ட் ஜட்ஜு தலைமையில் கூலி நிர்ணயம் செய்கிறோம் என்றால், இது என்ன கோடிக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கும் பாக்டரியா, வயிற்றுச் சாப்பாட்டுக்கு இல்லாத, வயலில் வேலை செய்யும் விவசாயிகளுக்கு அறுவடைக் கூலி. இதை நிர்ணயிக்க கணபதியா பிள்ளை கமிஷன். எதற்குத்தான் கமிஷன் போடுவது என்று கிடையாதா? சர்க்கார் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில்தான் செய்திருக்கிறார்கள் என்பதைத் தயவுசெய்து கவனிக்க வேண்டும்.

[திரு. பு. செ. முத்து செல்வன் தலைமை]

அன்றைக்குச் சட்டசபை அங்கத்தினர்களுடைய உரிமைகள் பற்றிப்பேச நேரம் இல்லை பார்லிமெண்டில் 30, 50 என்று ஏதோ சொன்னேன், சில காரியங்களை மற்ற அங்கத்தினர்களும் சொன்னார்கள். உடனே முதல் மந்திரி என்னவோ 15-ஐ 20-ஆக ஆக்கினார்கள்.* நீங்களும் சட்டசபை மெம்பர்கள் ஆகியபிறகு மந்திரிகள் ஆகியிருக்கிறீர்கள். இதிலே சம்பளம், படி அல்ல பிரச்சினை. இது ஒரு அந்தஸ்துப் பிரச்சினை. அரியானா நம்மில் மூன்றில் ஒரு பங்கு; ஒரிசா நம்மில் மூன்றில் ஒரு பங்கு. எழுதிக்கேளுங்கள், சட்ட சபை மெம்பர்களுக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்று. இது என்னுடைய சொந்த அபிப்பிராயம். சுதந்தராக் கட்சி இதற்காக எனக்கு கல்தாக் கொடுத்தால் கூட போகத் தயாராக இருக்கிறேன். இது என்னுடைய சொந்த அபிப்பிராயம் தான். ஆக, அரியானாவிற்கு எழுதிக் கேளுங்கள். ஒரிசாவிற்கு எழுதிக் கேளுங்

கள். அதெல்லாம் மூன்றில் ஒரு பாகம் உள்ள ஸ்டேட்டுகள்தான் அங்கெல்லாம் எவ்வளவு வசதிகள் கொடுக்கிறார்கள். ஆனால் செய்த தப்புக்கெல்லாம் பொறுப்பு காங்கிரஸ் காரர்கள் தான். அண்டை ராஜ்யமாகிய கேரளாவில் என்ன நிலைமை ? நம்மில் பாதி இராச்சியம் தான். அந்தக் காலத்திலேயே அங்கே 200 ரூபாய். அதே நேரத்தில் இங்கே, அப்பொழுது இருந்த பிரமச்சாரி முதல் மந்திரி காமராஜ நாடார், தனக்கு மட்டும் ரூ. 1,500 சம்பளம் வாங்கிக் கொண்டு, மெம்பர்களுக்கு ரூ. 150 சம்பளம், படி $12\frac{1}{2}$ ரூபாய். ஒரு மெடிகல் ரெப்ரசெண்டடிவ்க்கு ரூ. 30 படி, உங்களுக்குத் தெரியுமா ? என்ன கேவலம் ? சரி, சிக்கனத்திற்காக என்று சொல்லுங்கள், ரூ. 5 மட்டுமே வாங்கிக் கொள்ளுகிறோம். மூன்று நாளைக்கு புளியஞ்சோற்றைக் கட்டிக் கொண்டு வருகிறோம். செக்ரட்டேரிட்டில், அசெம்பிளிக் கட்டடத்திற்கு, வர குடை வாங்கிக் கொடுங்கள். மான் மார்க் குடை வேண்டாம். அது விலை அதிகம். மூர்மார்க்கெட்டுக்கு சீஃப் செக்ரடிரியை அனுப்பி, ப்ளாஸ்டிக்கிலே நாலு ரூபாய், மூன்றரை ரூபாய்க்கு விற்கிறதே அந்தக் குடையை ரூ 250 வாங்கிக் கொடுங்கள், அப்படியே கால்நடையாகக் குடையைப் பிடித்துக் கொண்டே வந்து சேருகிறோம். (பலத்த சிரிப்பு) ஏன் ? என்ன சொல்லுகிறேன் என்றால், மற்ற இராஜ்யங்களுக்கு எழுதிக் கேளுங்கள். அரியானாவில், சீஃப் விப் ஆஃப் தி கவர்மெண்டுக்கு அவரை நான் ஒரு இடத்தில் சந்தித்தேன் —அவருக்குத் தனி அறை, இன்னும் மந்திரிமார்களுக்கு இருக்கிற சலுகைகள் எல்லாம் உண்டு, இங்கே பார்த்தால், நம்முடைய விப் பாயில் இருக்கிறார். நான் கூடப் பத்தமடைப்பாய் சப்ளை பண்ண வேண்டும் என்று நினைக்கிறேன். ஆகவே, இங்கே நம்முடைய அங்கத்தினர்களுடைய அந்தஸ்தை உயர்த்தவேண்டும். மைசூர் சர்க்காரிலே ஃப்ரி குவார்ட்டர்ஸ் வருஷம் பூரா. இங்கே ரூ. 250 சம்பளம். டெலிபோன் சம்பந்தமாகப் பார்த்தால், கனம் மொரார்ஜி சார்ஜைக் கூட்டியாகி விட்டது. நேற்று ஒரு பில் வந்தது. என்னுடைய பிரண்ட் ஒருவர் போன் பேசவேண்டும் என்றார் ; இல்லை என்று சொல்லக் கூடாது நிலை. " மாடு கன்னுக்குட்டி போட்டுவிட்டதா ? என்று முதல் கேள்வி போட்டாரே பார்க்கணும். (சிரிப்பு). கடைசியில் என்ன ஆயிற்று ? ஒரு புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுத்ததைப் பார்த்தால் அதில் 32 ரூபாய் என்று போன் போட்டிருந்தது. பில்லுக்கு 187 ரூபாய் என்று என்னுடைய டி. ஏ. பில்லில் கட் பண்ணியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் எல்லாம் சீஃப் மினிஸ்டரிடம் நயவுசெய்து சொல்லி, நியாயமான முறையில் ஒரு மசோதாவைக் கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால் நீங்கள் கொடுத்த ** 5 ரூபாய்கூட வேண்டாமென்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது மந்திரிகள் எல்லாம் ஏன் சம்பளத்தைக் குறைத்து வாங்க வேண்டும் ? ஏதோ முதலில் கமிட் பண்ணியாகிவிட்டது சீஃப் மினிஸ்டர் இதை யோசிக்க வேண்டும். ஏதோ நம்முடைய கூட்டுறவு அமைச்சர் திரு. ஆதித்தன் போன்றவர்களுக்கெல்லாம் சம்பளக் கஷ்டம் இல்லாமல் இருக்கலாம். அவர்கள் வேண்டுமானால் குறைத்து வாங்கிக்கொள்ளலாம் இப்பொழுது நம்முடைய லா மினிஸ்டர் அவர்கள் பிராக்டீஸ் பண்ணினால் மாதத்திற்கு 2 ஆயிரம் ரூபாய் வரையில் கிடைக்கும். இன்றைக்குப் பார்ட்டியிலே சேர்ந்து, உழைத்து, இப்பொழுது 500 ரூபாய் சம்பளம் என்று வாங்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பது எந்த நியாயம் ? உங்களுக்குப் பயமிருந்தால் பேசாமல் இருங்கள். டி.எம்.கே. கட்சி மெம்பர் பண்ணுவது பகவானுக்குத்தான் தெரியும் (சிரிப்பு). நாம் ஏதேதோ கேட்கப்போய் எல்லாம் எதிர்க்கட்சித் தலைவருக்குத்தான் யோகம் அடித்திருக்கிறது. எல்லா பார்ட்டித் தலைவர்களையெல்லாம் கூப்பிட்டுப்பேசி, அவர்களுடைய தலையில் பாரத்தைப் போட்டு, நல்லவிதமாகச் செய்யுங்கள்.

**We stand first in all respects.** இப்பொழுது நாம் 250 ரூபாய் சம்பவம் வாங்குகிறோம் என்றால், மற்றவர்கள் கேலி செய்யமாட்டார்களா?

** பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





இந்தியாவிலேயே மெட்ராஸ்தான் முதலில் இருக்கிறது **. ஆகவே, இந்தப் பிரச்சினையைக் கௌரவமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வணக்கத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்,

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ** என்றார்கள். அந்த வார்த்தையைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்** (திரு. பு. செ. முத்துச்செல்வன்) : சுதந்திராக் கட்சித் தலைவர் அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக் கொண்டால் நன்றாக இருக்கும். அந்த வார்த்தையைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

***. திரு. செஞ்சி வெ. முனுசாமி :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின்முன் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற நிதி ஒதுக்க மசோதாவின்மீது சில கருத்துக்களைப் பேச விரும்புகிறேன். 1968–69-ம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீட்டின் கணக்கின்படி 66 கோடி ரூபாய் வழங்கவேண்டும் என்றும், 1969–70-ம் ஆண்டுக்காக 717 கோடி ரூபாய் வழங்க வேண்டுமென்றும் சொல்லி, இந்த மன்றத்தின் முன்னே கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இன்றைய தினம் ஒதுக்கியிருக்கின்ற நிதிகளில் இரண்டில் ஒரு பங்கை நாம் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டி வகைசெய்யப்பட்டிருக்கிறது. இந்நிலை நாட்டிலேயிருக்கிற நலிவுகளை, நாட்டிலேயிருக்கிற சங்கடங்களை, நாட்டிலேயிருக்கிற கஷ்டங்களைப் போக்குவதற்காகப் பயன்படுகிறதா என்பதைப் பார்க்கும்போது, இல்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன்.

அறுபத்தியாறு கோடி ரூபாயில் கிட்டத்தட்ட 46 கோடி ரூபாய் பழைய கடன்களைத் திருப்பிக்கொடுப்பதற்கும், 717 கோடி ரூபாயில் கிட்டத்தட்ட 243 கோடி ரூபாய் பழைய கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கும் வேண்டி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நிலைமை இப்படியே இருக்குமானால் சமதர்மம் என்பது அரசியல் அரங்கிலே பேசப்படும் பேச்சாகத்தான் இருந்து வரும். தனி மனிதர்கள் வாங்கிய கடனைத் திருப்பி வசூலிக்கின்ற வகையில் மத்திய அரசு மாநிலங்களுக்குக் கொடுத்த கடனைத் திருப்பி வசூலிக்கின்ற நிலை இருக்கிறது. இப்போக்கு தொடர்ந்து நீடிக்குமானால், நாட்டின் சுபிட்சம் பாதிக்கப்படும். இந்த நிலைமையை மாற்றித்தர வேண்டுமென்று இருக்கின்ற நிலையை உணர்ந்து கட்சி மாச்சர்யமின்றி ஏகோபித்த குரலை இந்த மன்றத்திலே எழுப்ப வேண்டும்.

சமீப காலமாக ஒரு பிரச்னையைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் இந்த மன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பேசிக்கொண்டு வருகிறார்கள். இந்த அரசாங்கம் ஓவர் டிராப்ட், அதாவது அதிகப் பற்றை வாங்கியிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும், பேசிக்கொண்டு வருகிறார்கள். ஓவர்டிராப்ட் வாங்குவது பெரிய மனிதர்களுடைய இலட்சணம் என்ற வகையில் இருக்கின்றது. ஊரிலே ஒரு பெரிய மனிதன் என்றால், ஒரு மில்லுக்குச் சொந்தக்காரன் என்றால், அவனுக்கு ஓவர் டிராப்ட் பாங்கிலே அனுமதிக்கப்படுகிறது. ஆகவே ஓவர்ட்ராப்ட் வாங்குவது அவமானகரமானது அல்ல. இந்த அரசு ஓவர்டிராப்ட் வாங்கியிருப்பதற்கு யார் காரணம் என்பதல்ல பிரச்னை. எந்தக் காரணங்களுக்காக ஓவர்டிராப்ட் வாங்கப்படுகிறது ? அப்படி ஓவர்டிராப்ட் வாங்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துபவர் யார் ? இந்தக் காரியங்களுக்கு ஓவர்டிராப்ட் வாங்குவது நியாயம்தானா என்பதைத்தான் பார்க்க வேண்டும். மத்திய அரசு தருகிற நிதிகளை எந்த அளவிலே கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை இறுதித் துணை மதிப்பீட்டிலே அமைச்சர் அவர்கள் நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய போக்கு மாறி, தேவையான நிதியைச் சீராக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகப்பற்று வாங்குபவர்கள் பெரிய மனிதர்கள் என்று குறிப்பிட்டேன். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழக

** பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அரசு 15 கோடி ரூபாயைப் பற்ருக வாங்கியிருக்கிறது. நம்மைவிடப் பெரியவர்கள் அண்டை மாநிலங்களில் இருக்கிருர்கள் என்பதை நாம் மறப்பதற்கில்லே. எனவே, ஒரு நல்ல முடிவை மத்திய அரசு இவ்விஷயத்தில் எடுக்க வேண்டும். முன்னுள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரும், நாகர்கோயிலில் வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கவனத்தை இதுபோன்ற பிரச்சினைகளைக்குறித்து ஆராய, அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம்காண கவனத்தைத் திருப்பியிருக்கிருர்கள். நாம் அவருக்கு நன்றி தெரிவிக்கிருேம். திரு. மொரார்ஜி தேசாய் தன் கவனத்தைத் திருப்ப மறுத்தாலும், விரைவில் இதற்கு ஒரு நல்ல முடிவு இடைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் நாடு பூராவிலும் பஞ்சம் பெருகியிருக்கிறது. தமிழகத்தில் சில பகுதிகள் எப்போதும் வறண்டே இருக்கின்றன. அது போன்றல்ல எங்கள் பகுதி. ஆனல், ஐந்தாறு வருடங்களுக்கு ஒரு முறை இப்படி ஏற்படுவது வாடிக்கை. எங்கள் பகுதியில் வாடிக்கைக்கு மாருக, ஓராண்டு தள்ளி மறுபடியும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. 1966–ல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதி எங்கள் பகுதி. 1967–68-ல் ஓரளவு நிம்மதியாக இருந்து, ஏரி, குளங்களில் தண்ணீர் நிறைந்து, நெல்லும் மற்றத் தானியங்களும் விளைந்தன. ஆனல், இந்த ஆண்டு வறட்சியின் காரணத்தால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிருேம். இந்த நேரத்தில் தமிழக அரசு மிகப் பெருந்தன்மையோடு, விரைவாக முடிவு எடுத்து 15 லட்சம் ரூபாய் பஞ்ச நிவாரண வேலைகளுக்கான திட்டத்தைத் தீட்டித் தந்திருக்கிறது. அதற்குப் பாராட்டு தெரிவிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிருேம். பாராட்டைத் தெரிவிக்கின்ற நேரத்தில் இன்னும் கூடுதல்தொகை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வேண்டுகிறேன். மாவட்ட. ஆட்சித்தலைவர் 10 லட்சம் ரூபாய் அளவில் முதல் அறிக்கை அனுப்பியிருக்கிருர். இரண்டாவதாக 10 லட்சம் ரூபாய் அளவிற்கு அறிக்கை அனுப்பியிருக்கிருர். இதுவும் போதாது. செஞ்சி, திண்டிவனம், மற்றும் தென்னுர்க்காடு மாவட்டத்தில் பரவலாகப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற இடங்களில் எல்லாம் பஞ்ச நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டாவது அறிக்கையை அங்கீகரித்து மேலும் தொகை ஒதுக்க வேண்டுகிறேன்.

ஒன்றைமட்டும் இந்த மன்றத்தின் கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். எங்கள் பகுதிக்கு போர்டு மெம்பர் திரு. மணி அவர்கள் வந்த நேரத்தில் அந்தப் பகுதிகளிலுள்ள கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும் என்று எடுத்துக் கூறிேனும். எங்கள் பகுதிப் பாறைப் பிரதேசம், கிணறுகளை ஆழப்படுத்தினல்தான் தண்ணீர் கிடைக்கும், விவசாயம் செய்ய முடியும். கிணறுகளை ஆழப்படுத்தக் கடன்களைக் கொடுக்க முன்வருகிருேம் என்று தனித் தாசில்தார் ஒருவர் செஞ்சிப் பகுதியில் நியமனம் செய்யப்பட்டார். ஆனல் மறு தாக்கீதில் அந்தப் பதவி ரத்துசெய்யப்பட்டு, அந்த தனித் தாசில்தாரைத் திரும்பப் பெற்றிருக்கிருர்கள். வறட்சி மிக்க இந்த நேரத்தில் கிணறுகளை ஆழப்படுத்தியாக வேண்டும். அதற்குத் தேவையான கடன்தொகை அளிக்கப்பட வேண்டும். தனித் தாசில்தார் அவசியம் தேவை. பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்கப்பட்டு, பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்கின்ற நேரத்தில் வேலை இல்லாத விவசாய ஏழைத் தொழிலாளர்களுக்கு வேலை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலைகளைப் பராமரிக்கவும், புதுப்பிக்கவும் திட்டம் ஒன்று ஏற்படுத்தியிருக்கிருர்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சில பகுதிகளில் சாலைகள் இல்லாமல் இருக்கின்றன. எங்கெங்கு சாலைகள் அமைக்க வேண்டுமோ, அங்கு எல்லாம் விவசாய மக்களுக்கு வேலை கொடுத்து ,விவசாய மக்களுடைய வாழ்வுக்கு வழி தேடிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, கிராமத்திலுள்ள கணக்குகளை கிராம அதிகாரி கர்ணம் எழுதுகிருர். கர்ணம் எந்த அளவிற்குக் கணக்கு எழுதுகிருர் என்பது கனம் உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். கர்ணம் வயல்காட்டிற்குச்



சென்றுதான் கணக்கு எழுதுகிருரா அல்லது திண்ணையில் உட்கார்ந்து கொண்டுதான் கணக்கு எழுதுகிருரா என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். ஏதோ எட்டு அணு, பத்தணு, பன்னிரண்டணு என்று சாகுபடி கணக்கு எழுதியிருப்பதால் சில கிராமங்களில் பஞ்ச நிவாரணப்பணி துவங்கப்படவில்லை. ஒரு சில கிராமங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.இன்னும் ஒரு சில கிராமங்களுக்கு வரி விலக்கு இல்லை. இம்மாதிரியான நிலைமை செஞ்சி, திண்டிவனம் பகுதியில் இருந்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு வரி விலக்கு கிடையாது, ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு இருக்கிறது என்று சொன்னல், சமதர்மம், சமத்துவம் பற்றிப் பேசுகிற நாம் பாரபட்சம் காட்டுவதாக ஏற்படும். ஆகவே, எல்லாக் கிராமங்களுக்கும் பலன் அளிக்கின்ற வகையில் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். மிகவும் கஷ்டப்பட்டு, மோட்டார் வைத்துப் பாடுபட்டுக் கரும்பு பயிரிட்டு ஆடுவதற்கு இன்றைக்கு படாளத்திற்குக் கொண்டு செல்வதா, முண்டியம்பாக்கத்திற்குக் கொண்டு செல்வதா என்று தெரியாது திரிசங்கு சொர்க்கம் போலத் திண்டாடுகிருர்கள். ஆகவே அடுத்த வருடத்திலாவது இந்தப் பகுதியில் விளைகிற கரும்பை இங்கேயே ஆடுவதற்குக் கூட்டுறவுத் துறையில் செஞ்சியில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தித்தரவேண்டும. பருத்தியே விளையாத பகுதியில் நூற்பு ஆலையையும், கரும்பே விளையாத பகுதியில் சர்க்கரை ஆலையையும் அமைப்பதென்று இல்லாமல் கரும்பு அதிகம் விளையக்கூடிய இந்தப் பகுதியில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலையை ஏற்படுத்தத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டுமென்று சொல்லி உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத்தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவின் கீழ் ஓரிரு கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முதன் முதலிலே சட்டசபைக் கூட்டத் தொடரில் கவனித்துப் பார்த்த போது, எல்லா ஜில்லாக்களிலும் பஞ்ச நிலை உருவாகியிருப்பதை எல்லோரும் சொன்னுர்கள். கொடிய பஞ்சமாக இருக்கிறது, குடி தண்ணீருக்குக் கூட கஷ்டமாக இருக்கிறது என்று உறுப்பினர்கள் சொன்னுர்கள். அதுவும் நமது வரவு-செலவுத் திட்டத்திலே ஒரு கோடியே ஐந்து புள்ளி ஏழு என்று நினைக்கிறேன்—பஞ்சத் துயர் தணிப்புக்காக இந்த அரசாங்கம் ஒதுக்கீடு செய்திருக்கிறது. மேலும் மத்திய அரசாங்கத்திடம் இருந்து பத்து அல்லது பன்னிரண்டு கோடி நிதி உதவி பெறவேண்டும் என்று மாநில அரசு கேட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். இந்தத் தொகையைப் பெற்றுக்கொள்வதில் பல கஷ்டங்கள் இருக்கும். மானியமாக மத்திய சர்க்கார் வழங்கப் போகிருர்களா, அல்லது கடனுக வழங்கப் போகிருர்களா என்று கூர்ந்து கவனிப்பது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். கடனுக வழங்குவார்களானல் வட்டி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும். எந்த அளவுக்கு மானியமாக கிடைக்குமோ அந்த அளவு நாம் பெற்றுக்கொள்ள மத்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். இந்த விவகாரத்தை 31-ம் தேதி விரிவாக விவாதிக்கப் போகிருேம். ஆகவே இதைப்பற்றிக் கூடுதலாக இந்தச் சந்தர்ப்பத்தில் விவாதிக்கத் தேவையில்லை. நமது மதிப்பிற்குரிய பிரதமர் அவர்கள் இந்த மாநிலத்திற்கு வரப்போகிருர்கள். அப்போதும் இந்தக் கருத்தினை இந்த அரசாங்கம் வற்புறுத்தும் என்று கருதுகிறேன். இது விஷயத்தில் காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் பூரண ஒத்துழைப்புத் தரத் தயாராய் இருக்கிருேம் என்பதைக்கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பஞ்சம் என்று சொன்னல் காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் அல்ல, ஏனைய கட்சிக்காரர்களுக்கு மட்டும் அல்ல, இது ஒரு தேசீயப் பிரச்சினை. இந்த தேசத்தில் மற்ற பல இடங்களில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற போதெல்லாம் அந்த அந்தப் பகுதிகளுக்கு மத்திய சர்க்கார் எவ்விதம் உதவி செய்திருக்கிறதோ அதேபோன்று தமிழகத்திற்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் உதவியைப் பெற வாதிடவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசாங்கத்திற்கு நாம் சொல்ல வேண்டும். அவர்கள் தருகிற நிதி உதவிகளை காலாகாலத்தில் கொடுக்க வேண்டும். அப்படித் தராத காரணத்தினால்தான் நாம் ஓவர்டிராப்ட் வாங்கவேண்டியதாக ஆகிறது. ஆகவே கொடுக்கிற உதவிகள் காலத்தில் கிடைக்க வேண்டும். மேலும் ஜூலையில் பைனான்ஸ் கமிஷன் தீர்ப்பு அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நமக்கு எவ்வளவு அதிகமாகக் கிடைக்க வேண்டுமோ அந்த அளவு பெறுவதற்குத் தீவிரமாக முயற்சி செய்ய வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநில அரசும் பல்வேறு திட்டங்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறது. ஆயினும், எந்தவேலையும் மார்ச் திங்களில்தான் நடக்கின்றதே தவிர பட்ஜெட் கூட்டம் முடிந்தவுடனே சீராக வருடம் பூராவும் நடப்பதில்லை. காரணம் கேட்டால், அட்மினிஸ்ட்ரேடிவ் சாங்ஷன் வரவில்லை, டெக்னிகல் சாங்ஷன் வரவில்லை என்பதாக இருக்கிறது. இப்படி பணம் ஒதுக்கியும் வேலை நடை பெறுவது காலதாமதமாகிற காரணத்தினால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இவற்றைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக, பள்ளிக்கூடம், குடிதண்ணீர் திட்டம், ஆஸ்பத்திரிகள் போன்ற விஷயங்களில் காலம் தாழத்துவதற்கு அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. இதற்குவேண்டிய தாக்கீதுகளை இலாக்கா மேலதிகாரிகளுக்கு உடனடியாக நல்கவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லப்போனால் ஆயிரத்துத்தொள்ளாயிரத்து நாற்பத்தாறி இருந்தே எங்கள் பகுதியில் கட்டாயக் கல்வி அமுலபடுத்தப்படுகிறது. அரசாங்கத் தரப்பில் பலர்பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. இன்றையதினம் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கடடம் இல்லை, நடுத்தரப் பள்ளிகளுக்குக் கட்டடம் இல்லை, ஆரம்பப் பள்ளிகருக்குக் கட்டிடம் இல்லை. இந்த அவல நிலையைப் போக்க அரசாங்கம் இப்போது 70 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். பள்ளிக் கட்டிடங்களைச் சிறப்பாகச் சீரமைக்க வழிவகை செய்ய வேண்டும். அதை துரிதமாகச் செலவழிக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். இதில் தயக்கமோ, சுணக்கமோ காட்டினால் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்கக்கூடாது என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். சட்டம், ஒழுங்கு பராமரிப்பில் பாரபட்சமான நிலை பல இடங்களில் இருக்கிறது. ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு ஒரு நியாயம். எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கு ஒரு நியாயம் என்ற முறையில் அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாட்டுப் பாதுகாப்புக்குப் பொறுப்பான போலீஸ் இலாக்காவினரே இப்படித் தவறு செய்வார்களானால் நாட்டில் அராஜகமும், குழப்பமும்தான் ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் இடைத் தேர்தல் காலத்தில் அதிகாரிகள் பலவிதத்தில் பாரபட்சமாக நடந்து கொண்டார்கள். தேர்தலும் முடிந்துவிட்டது. வெற்றியும் பெற்றோம். ஆனால் இன்றைக்குக் குட்டித் தலைவர்களாக இருப்பவர்கள் போலீஸ் ஸ்டேஷன் சென்று பொய் வழக்குகளைக் கொடுப்பதும், அதிகாரிகள் அதை ஜோடனை செய்து பலரைச் சிறைச்சாலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதும் ஆகிய அவல நிலைநீடிக்கிறது. இது பற்றிப்பல கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் கட்சி மனப்பான்மையில்—தங்களைக் கட்சி ஊழியர்களைப் போல நினைந்து செயல்படுவது வெறுக்கத்தக்கது—விரும்பத்தக்கதும் அல்ல. வேண்டுமானால் இதற்கு வேண்டிய ஆதாரம் தரத் தயாராய் இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகக் கொடியைக் கழற்றியதாக—கொடி வழக்கு—பல வழக்கறிஞர்கள்மீது கூட இந்தக் குற்றச் சாட்டுகள் இருந்து கொண்டிருக்கின்றன. **Law does not take notice of trifles** என்கிற முறையில் இதற்கு விரோதமாகக் காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரியான நடவடிக்கை உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் கூறவேண்டியது பஞ்சாலைகளைப் பற்றியது. பஞ்சாலைகளைப் பற்றி விரிவாக விவாதித்திருக்கிறோம். மூடப்பட்டிருக்கிற





9 பஞ்சாலைகளை அரசாங்க காரண்டி கொடுத்து திறப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். இப்படிப் பாதிக்கப்பட்டுள்ள 14 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க அத்தியாவசியமான நடவடிக்கைகள் எவற்றை எடுக்கமுடியுமோ அவற்றைத் துரிதமாக எடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய கார்ப்பரேஷனை நிறுவுவதற்கு வேண்டிய வழிவகை செய்திருக்கிறார்கள். மத்திய சர்க்காரையும் அணுகி எல்லா விதமான உதவிகளையும் பெற்றாக வேண்டும். பஞ்சாலைப் பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும். தேசத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளில் தமிழகத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள்தான் மிகவும் அதிகம். ஆகவே, இதில் நாம் போதிய அக்கறை காட்ட வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் இருக்கிற ஒரு பிரச்சினை—பட்ஜெட்டைப் போடுகிறபோது ஏழாயிரம் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ஆசிரியர்களின் நிலையை உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகப் பார்த்தோம். எங்கள் ஜில்லாவில் இருக்கிற ஆசிரியர்களில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு தனியார் பள்ளியில் உள்ளவர்களுக்கு இது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் எங்கள் பகுதிக்கும் போதுமான அளவுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர் தகுதியைப் பெற்று ஹையர் கிரேட் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறவர்களுக்கு—அரசாங்கப் பள்ளிகளில் வேலை செய்பவர்களுக்கும் போதிய அளவுக்கு இந்தச் சலுகை விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினை. உயர்நீதி மன்றத்திலே ஒரு ரிட் பதிவாகி ந.ப. 12-00.
யிருக்கிறது. அதைப்பற்றிக் பேசிவிட்டு முடித்துக்கொள்கிறேன். அங்கு பட்டம்பெற்ற ஆசிரியர்களாக இருக்கிறவர்கள் இரண்டாவது கிரேடிலே ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் புரமோஷனுக்கோ அல்லது முதலாவது கிரேடிலே வருவதற்கோ இந்த டெஸ்ட் பாஸ் பண்ண வேண்டியதில்லை என்று முன்பு ஆணை இருந்தது. ஆனால் சமீபத்திலே ஒரு ஜி.ஓ. அவர்கள் கண்டிப்பாகப் பாஸ் செய்தாக வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். அதை ஆட்சேபித்து அந்த ஆசிரியர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் போட்டார்கள். செப்டம்பர் மாதம் 1968-ம் ஆண்டிலே உயர்நீதி மன்றம் அந்தமாதிரி அவர்கள் பாஸ் பண்ண வேண்டியதில்லை என்று தீர்ப்புக் கூறியது. இலாக்காக்களிலே, குறிப்பாக கல்வி இலாகாவிலே உள்ள அதிகாரிகள் இந்தத் தீர்ப்பை இதுகாறும் அமல் நடத்தவில்லை. இது ஒரு பெரிய அநீதி, வஞ்சனையானது என்றே நான் சொல்ல வேண்டும். எப்பொழுது உயர்நீதி மன்றம் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்று தீர்ப்பு வழங்கிவிட்டதோ அப்பொழுதே உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால், அதற்காக அப்பீல் செய்து அந்தத் தீர்ப்பை ரத்து செய்யலாம். இதுவரையில் அப்படியும் செய்யவில்லை. அந்தத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு ஏன் தயங்குகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ; அவர்களுடைய உத்தியோக உயர்வும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசாங்கம் இதிலே உடனடியாக நடவடிக்கை எடுத்து அதை அமலாக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், "கண்டெம்ப்ட் ஆஃப் தி கோர்ட்" ஆகிவிடும். எனவே, இதிலே துரிதமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவின் மீது மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேசிய சாம்பிள் சர்வே என்ற ஸ்தாபனம் இந்தியாவில் உள்ள மாநிலங்களுடைய வருமானங்களைச் சில ஆண்டுகளாகக் கூறக்கூடிய நிலைமையில் அந்தக் கணக்கிலே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில்—இந்தியாவிலே சுமார் 70 சதவீத மக்கள் 1 ரூபாய்தான் ஒரு நாளைக்குப் பெறுகிறார்கள்—ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்குட்பட்டுத்தான் வருமானம் பெறக்கூடிய நிலைமை கிராமப் பகுதிகளாக இருந்தாலும், நகரப்பகுதிகளாக இருந்தாலும் இருக்கிறது என்பதைப் பின்னணியிலே வைத்துக்கொண்டுதான் நாம் இந்த நிதி ஒதுக்க மசோதாவைப் பரிசீலிக்கிறோம்.

சாதாரணமாக, உழைக்கக்கூடிய விவசாயிகள், தொழிலாளர்கள், நடுத்தர மக்கள் இவர்களை அடிப்படையாகக்கொண்டு நாம் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதில் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சி என்பதைப் பின்னணியிலே கொண்டு இப்பொழுது இருக்கிறோம். அதைப்பற்றித் தனியாகப் பேசி விவாதித்துக்கொள்ளலாம் என்றாலும் கூட, இப்பொழுது அதைப்பற்றி அதிகமாகச் சொல்லாமல் இன்று நம்முடைய மாநிலத்திலே உள்ள நிலைமையைப் பார்க்கும்பொழுது அதிகமான நியாய விலைக் கடைகள் அவசியம் என்பது தெரிகிறது. எல்லா மாவட்டங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்யாமல், மத்திய அரசிடமிருந்து வந்த தூதுக் குழுவினர் செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்த நேரத்திலே மக்கள் தங்களுடைய ஊர்களிலே நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வெளியிலே விலைவாசி உயர்ந்திருக்கிற காரணத்தாலே நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று அவர்கள் கேட்பது நியாயமானது. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்வது, மத்திய அரசினிடமிருந்து கோதுமை, அரிசி இவற்றை வற்புறுத்திப் பெறுவதற்காக—இந்த அரசாங்கத்திற்கு என்னுடைய கட்சியின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.—என்னுடைய கட்சி ஆதரவளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்திலே 10 எக்கரும் அதற்கு அதிகமாகவும் வைத்துள்ள நிலச்சுவான்தார்களிடமிருந்து அவர்களுடைய சொந்தத்திற்கு தேவையானது போக அதிகமாகக் கொள்முதல் செய்யவேண்டுமென்ற முயற்சியை நாம் எடுக்காமல் போனால் அதிகமாக நியாய விலைக் கடைகள் கேட்கக் கூடிய மக்களுக்கு நாம் உதவி செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். மூன்று ஏக்கருக்கும் அதற்கும் குறைந்த நிலமுள்ள விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யாமல் விதி விலக்கு அளிக்கின்ற நேரத்திலே நாம் 10 ஏக்கர் அளவில் அதற்கு மேலேயும் உள்ளவர்களிடமிருந்து அதிகமாக அதிகமாக அந்த அளவுக்கு கொள்முதலும் அதிகமாகச் செய்ய வேண்டும். 10 ஏக்கர் நிலமுள்ளவர்களிடமிருந்து அவர்களுடைய தேவைக்குப் போக அதிகமானதை, உபரியாக உள்ளதை, நாம் கொள்முதல் செய்யவேண்டும்.

கள்ளக்கடத்தல் என்று குறைபாடுகள் இருக்கின்றன. அது யாருடைய தானியங்கள் ? ஏழை விவசாயிகளிடம் தானியம் கையிருப்புக் கிடையாது. எனவே பெரிய நிலப்பிரபுக்களிடத்திலே தான் இருக்கிறது. இப்படிப்பட்ட கடுமையான வறட்சி நிலைமை இருக்கிற போது நிலப்பிரபுக்களை வற்புறுத்துகிறோம் . என்று பயப்படாமல் சர்வகட்சியின் சார்பிலும் ஒரு ஏற்பாடு செய்து அங்கங்கே கொள்முதல் அதிகமாகச் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். புஞ்சை தானியங்களையும் கொள்முதல் செய்யவேண்டும். கடுமையான வறட்சி நிலைமை இருப்பதால் பெரிய நிலக்கிழார்களிடமிருந்து கொள்முதல் செய்தால்தான் தேவைப்படுகின்ற இடங்களில் எல்லாம் நியாய விலைக்கடைகளை ஏற்படுத்த முடியும்.

கணபதியா பிள்ளை கமிஷன் தஞ்சையைப் பொறுத்த வரையில், குறிப்பாக கீழ் தஞ்சாவூர் விவசாயிகளுடைய பிரச்சினையைப்பற்றி ஆய்வு செய்வதற்காக ஏற்படுத்தி இருக்கிறார்கள். தொழிலாளர்கள் சம்பளம் ஒரு பிரச்சினை, அதுமட்டும்தான் அதிலே யோசிக்கப்பட்டு வருகிறதே தவிர, மாவட்டத்திலே உள்ள நிலப்பிரபுக்களிடத்திலே உள்ள உறவுமுறைப் பிரச்சினை, விவசாயத் தொழிலாளர்களின் நிலைமைகள், வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றைப்பற்றியும் அவர்கள் விசாரிப்பதற்கும் அங்கே சாட்சியம் கூறுவதற்கும் அரசாங்கம் கட்டளையிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் பற்றி முழு விசாரணை செய்தால்தான் நல்லது. கூலிப் பிரச்சினையை மட்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அரசாங்கத்தினுடைய கொள்கையிலே சமீபத்திலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இண்டஸ்ட்ரியல் டெவலெப்மெண்டு கார்ப்பரேஷன் என்ற தொழில் வளர்ச்சிக் கழகம் அரசுத் துறையிலே உள்ள தொழில்களுக்கு நிதி வசதி செய்து கொடுத்தது. தனியார் துறையிலே உள்ள தொழில்களுக்கு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் என்பதன் மூலம் நிதி உதவி செய்யப்பட்டது. இப்பொழுது தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தனியார் துறைத் தொழில்களுக்கு உதவி செய்யக் கூடிய அளவில் கொள்கையில் மாற்றத்தைச் செய்திருக்கிறார்கள். இந்த மாநிலத்தினுடைய நிதி வசதிகளைப் பெரும்பாலும் பாதிக்கக்கூடிய அளவில் அது தேவையில்லை என்று கருதுகிறேன். தனியார் துறையிலே விரும்பினால் அவர்கள் நிதியைத் திரட்டிக் கொள்ளமுடியும்.

கோயம்புத்தூர் பஞ்சாலைக்காக ஒரு லட்ச ரூபாய்தான் ஒதுக்க முடிந்தது. அப்படிப்பட்ட நிலைமையில் மூடப்பட்ட மில்களைத் திறப்பதற்கும், தொழில்களைத் தொடர்ந்து நடத்துவதற்கும், தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கவும் அந்தப் பணத்தை உபயோகிக்கப்படுத்தினால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்கத்தினுடைய போக்குவரத்துத் துறை ஆகிய துறைகளை நடத்தக் கூடிய கொள்கைக்கு தேசிய மயமாக்குகின்ற கொள்கைக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய வகையில் கொள்கைப் பிடிப்பு வேண்டும். நாம் நல்ல முறையிலே பொதுத் துறையிலே நடத்தமுடியும் என்ற கொள்கைப் பிடிப்பு இருந்தால்தான் தொழில்களைப் பலமாக நடத்த முடியும். எனவே, தொழில்களை நடத்துகின்ற, போது தொழிலாளர்களிடமிருந்து பங்கு, பணி இவற்றைப்பற்றிய ஆலோசனைகளை எடுத்துக் கொண்டு விரயங்களைத் தவிர்த்து லாபமரமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

தனியார் துறையிலே உள்ள தொழிலதிபர்கள் பத்திரிகைகளிலே பார்த்தால் அரசுத் துறையில் பெரும் தோல்வி என்று சொல்வதை பார்க்கிறோம். அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். நாம் அதைப் பொருட்படுத்தக்கூடாது. பியுராகிராடிக் அதிகாரிகளை நாம் தொழில்கள் நடத்தக்கூடிய நிலைமையில் போடக்கூடாது. அங்கேயுள்ள சிப்பந்திகளை ஆலோசனை கேட்டு அவர்களுடைய ஒத்துழைப்புடன் செய்தாலே லாபகரமாக தொழில்களை நடத்தமுடியும். அப்படிச்செய்தால் இறுதியாகப் பார்க்கக்கூடிய நேரத்திலே மூன்றரைக்கோடி மக்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கு அந்தப் பணம் பயன்படும் என்ற அளவிலே அந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

கைத்தறியைப் பொறுத்த வரையில் அதற்கு எதிராகப் பவர்லூம் என்ற பிரச்சினை இருக்கிறது. 5 லட்சம் மக்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்ன ஆவது என்று கவனிக்க வேண்டும். கைத்தறித் தொழில், மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறத்தல், இவற்றைக் கவனிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறையிலே தொழிலாளர்களுக்கு அரசாங்கச் சட்ட திட்டம், கொள்கை இவை மேலும் மேலும் அந்தத் தொழிலாளர்களுக்குத்தான் சாதகமாக இருக்கவேண்டும். அதேபோல அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கவேண்டும் என்றால் காட்டுவளத்தைப் பெருக்கி அதன் மூலம் வருமானத்தைப் பெருக்குவதற்கும், தனியார்கள் காடுகளைப் பயன்படுத்தி, மரங்களை வெட்டிப் பணத்தை வீணாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தாமல், காடுகளின் வளத்தைப் பெருக்குவதற்கு முயலவேண்டும். காட்டு வளத்தின் முன்னேற்றத்திலே அக்கறை செலுத்துகின்றபோது அங்கே வாழ்கின்ற பழங்குடி மக்கள், டிரைப்ஸ், அவர்களுடைய வாழ்க்கை முறையை உயர்த்துவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை பலப்படுத்த, அரசாங்கம் செய்யக் கூடிய முதலீடுகளும், உதவிகளும் மீனவர்களுக்கே பயன்படும்படியாகச் செய்ய வேண்டும். அதிலே தனியார் துறையை ஆதரிப்பது என்ற நிலை ஏற்பட்டால் ஒரு சில முதலாளி கள் அதிகப்படியான பணம் பெறமுடியுமே தவிர லட்சக்கணக்கான மீனவர்களுக்கு நன்மை ஏற்பட முடியாது. ஆகையால் அரசாங்கம் அந்தத் துறையிலே செய்கின்ற முதலீடு பூராவும் மீனவர்களுடைய கூட் டுறவுச் சங்கங்களுக்கே கொடுத்து அவர்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடைய முயற்சிக்க வேண்டும்.

கூட்டுறவுத் துறையை முழுக்க முழுக்க கூட்டுறவுத் துறையாகவே நடத்துவது என்ற கொள்கை முக்கியமானதாகும். கூட்டுறவுத் துறையிலுள்ள நிர்வாகங்களின் கணக்கைத் தனியார் தணிக்கை செய்வது என்ற யோசனை அபாயகரமானது என்று குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை நிர்வாகத்திலே உள்ள கோளாறுகளை முழுவதும் நீக்க வேண்டும். தனியார் துறை அதிலே குறுக்கிடாதபடி திறம்பட நடத்து வதற்குத் தேவையான மாற்றங்களை, திருத்தங்களைச் செய்ய வேண்டு மென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

போலீஸ் துறையைப் பொறுத்தவரை மதுரையிலுள்ள ஃபென்னர் கார்க் கம்பெனியைச் சேர்ந்த வேலுவின் மரணம் பெரிய நிகழ்ச்சியாகி வழக்கு நடைபெறுகிறது. மரணத்திற்குக் காரணமானவர்கள் மீது செஷன்ஸ் கோர்ட்டில் வழக்கு நடைபெறுகிறது. அரசாங்க அதிகாரி கள் உஷாராக இருந்து திறம்பட வழக்கை நடத்த வேண்டுமென்று மதுரை நகர தொழிலாளர்கள் விரும்புகிறார்கள், அக்கறை காட்டு கிறார்கள். அந்த வகையில் வழக்கை நல்ல முறையில் நடத்த வேண்டும்.

போலீஸ் இலாகா திறம்படப் பணியாற்ற வேண்டுமென்று சொன்னால் சந்தேக வழக்குகள் போடுவதை நிறுத்தியாகவேண்டும். மதுவிலக்குக் கொள்கையை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். இதர மாநிலங் களில் அதைக் கைவிட்டு விட்டார்கள். அதைக் கைவிட்டு விடுவதால் அரசாங்கத்திற்கு அதிக வருமானம் வருகிறது என்பதற்காக மட்டு மல்லாமல், ஒன்றும் அறியாத ஏழை எளிய மக்கள் வழக்கில் சிக்கி கஷ்டப்படாமல் இருக்க, அந்த வழக்கத்தைக் கைவிட முடியாத அளவுக்கு உள்ள ஏழை மக்கள் தண்டனைக் குற்றங்களுக்குள்ளாகி அவதிக்குள்ளா கின்ற நிலைமை இல்லாமல், அவர்களுடைய உரிமையை சட்டத்தைக் கொண்டு பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ளும் நிலைமை இல்லாதிருக்க மதுவிலக்கு கொள்கையை ரத்து செய்யவேண்டும். இந்த மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்ய வேண்டுமென்பதற்கு நம்முடைய முத லமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதால் ஏற்படக்கூடிய இழப்பில் ஓரளவாவது மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மதுவிலக்கை எடுத்து விடுவதால் ஓரளவுக்கு அரசுக்கு வருவாய் வருகிறது என்று சொன்னாலும் அதற்காக மட்டுமல்லாமல் மக்களுடைய உரிமையைக் காக்க மதுவிலக்கை ரத்து செய்யவேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பில் கூற விரும்புகிறேன்.

மத்திய மாநில உறவுபற்றி பிரச்சனை முக்கியமான பிரச்சனை. வரக்கூடிய எப்ரல் மாதத்தில் நடைபெற இருக்கின்ற தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் மாநில முதலமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற இருக்கிறது. கேரள முதலமைச்சர் திரு. இ. எம். எஸ். நம்பூதிரி பாட் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களும் நிதி ஒதுக்கீடும் தேவை என்பதை வற்புறுத்தி, இந்தியாவிலுள்ள பெரும் தொழில் முதலாளிகள், அந்நிய முதலாளிகள் லாபத்தைக் கட்டுப்படுத்தி இந்திய மக்களுக்கு அதிகப்படியான வருமானத்தைத் தேடுகின்ற முறையில் இந்திய அரசின் திட்டத்திற்கு மாற்றுத் திட்டத்தை உருவாக்கி தேசிய வளர்ச்சி கவுன்சிலுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப் பற்றி விவாதிக்கும்



போது நம்முடைய அரசும், மேற்கு வங்க அரசு போன்றவைகளும் சேர்ந்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், அதிக நிதி ஒதுக்கீட்டை பெறும் முறையில் உள்ள திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் சாதகமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மாநில அரசாங்கத்தில் இருக்கக்கூடிய ஊழியர்களைப் பொறுத்தவரை தொழிலாளர்கள் சில இலாகாக்களில் தற்காலிகமாக வேலை செய்துகொண் டிருக்கிறார்கள். அப்படி தற்காலிகமாக இருக்கக்கூடியவர்களை வேலை யிலிருந்து நீக்கக்கூடாது. புதிதாக தொழிலாளர்களையோ, சிப்பந்தி களையோ எடுத்துக்கொள்ளுவதை நிறுத்திவிட்டு இவ்வாறு தற்காலிக மாக இருக்கக்கூடியவர்களை, விவசாய இலாகா, பி. டபிள்யூ. டி. போன்ற வற்றில் இருக்கக்கூடியவர்களை வேலையில் வைத்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் பல யோசனைகளையும், குறைகளையும் எடுத்துக் கூறுகிறார்கள். மின்சார இலாகாவைப் பொறுத்தவரை சட்ட மன்றத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அடுத்த ஆண்டு விவாதிக்கும்போது கொடுக்கிறார்கள். அதே போன்று நிதி ஒதுக்கீடு செய்யும்போதும் ஒவ்வோராண்டும் கூறப்படுகின்ற கருத்துகளை ஒட்டி என்ன நடவடிக்கை கள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்று வருகின்ற ஆண்டில் பட்டியல் கொடுத்தால் உறுப்பினர்கள் பேசும்போது அந்தந்த இலாகாக்களைப் பொறுத்து நல்ல முறையில் அறிந்து கருத்துக்களையும் கூற முடியும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கோ. பூவாரகவன்** : கனம் சபைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் விவாதத்தில் இருக்கக்கூடிய நிதி ஒதுக்க மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் நிதியை ஒதுக்குகின்றபோது மூலதனச் செலவுக்காக முந்திய ஆண்டுகளை விட எவ்வளவு அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று பார்த்தால், மூன் றாண்டுகளுக்கு முன்னால் எந்த அளவுக்கு மூலதனச் செலவுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்பதையும் பார்த்து இப்போது ஒதுக்கப்பட்டிருப்பதையும் பார்க்கும்போது ஆண்டுதோறும் மூலதனச் செலவு குறைந்து கொண்டே வருவதைப் பார்க்க முடிகிறது. இது மிகவும் அபாயகரமான சூழ்நிலைக்கு நம்மைக் கொண்டு போய் விட்டு விடும் என்று நான் இந்த மன்றத்திலே எச்சரிக்க விரும்புகிறேன். நம் முடைய நிர்வாகச் செலவு அதிகரித்துக்கொண்டே போய், மூலதனச் செலவு குறைந்துகொண்டே வந்தது என்று சொன்னால், என்னதான் திட்டங்களைப் போட்டாலும், அவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சி களை எடுத்துக்கொண்டாலும், சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் அவரவர் களுடைய கருத்துக்களைச் சொன்னாலும் பயனற்றுப் போகின்ற நிலைமைக்குக் கொண்டுபோய் விட்டு விடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ளாமல் இருக்க முடியாது.

நிதி இலாகா வருவாய்க்குத் தகுந்தவாறு பட்ஜெட்டைத் தயாரித் திருக்கிறார்களா என்று பார்க்கும்போது இல்லையென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றையதினம் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக் கிறது. இந்த ஆண்டு பற்றாக்குறை 16 கோடி ரூபாய், சென்ற ஆண்டு அதிகப்பற்று 13 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய்க்கு மேல் சரிக்கட்டவேண்டியிருக்கிறது. ரிசர்வ் பாங்கில் ஓவர்டிராப்ட் பெற்றது. இந்த 23 கோடி ரூபாய், சென்ற ஆண்டிலே உள்ள 13 கோடி ரூபாய், இந்த பற்றாக்குறை 16 கோடி ரூபாய் எல்லாம் சேர்த்து இன்றையதினம் பற்றாக்குறை நிலைமையில் இருக்கிறார்கள். இந்த அளவுக்கு நம்முடைய நிதி நிலைமை கெட்டிருக்கும் நிலையில் எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அதற்கு ஒரு நல்ல சூழ் நிலையை ஏற்படுத்திக்கொடுக்க முடியாத நிலைதான் இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அமைச்சரவை நாட்டிலே எந்தக் காரியம் நடந்தாலும் அதற்கு ஒரு நீதி விசாரணை என்று ஏற்படுத்திவிட்டு அதைப்பற்றி இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் விவாதிக்க முடியாத சூழ்நிலையை உண்டாக்கியிருப்பதை நாம் உணர்ந்து வந்திருக்கிறோம். நீதி விசாரணை முடிந்து விட்ட பிறகும் அறிக்கைகளை ஏன் இந்த மன்றத்தில் வைக்கக்கூடாது ? அந்த அறிக்கையிலே என்ன இருக்கிறது ? வெளியில் இருப்பவர்கள் பல்வேறாகப் பேசுகிறார்கள். அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது, அமைச்சர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அந்த மாதிரிப் புகார்களுக்கெல்லாம் இடம் இல்லாதபடி ஏதாவது ஒரு அறிக்கையாவது இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறதா என்றால் ஒன்று கூட இதுவரை வைக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது இதைப் பற்றியும் விளக்குவார்கள் என்று கருதுகிறேன். ஏதோ சமாதானம் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. மன்றம் இன்னும் ஒரு நாள்தான் நடக்க இருக்கிறது. மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் சொல்லுகின்ற காரியங்களுக்கு வெறும் சமாதானத்தைச் சொல்லி முடித்து விடுவது பொருத்தமாக இருக்காது. மனச்சாட்சியைத் தொட்டுப் பார்க்க வேண்டும். நியாயமான காரியங்கள்தான் நடைபெற்றிருக்கின்றன என்று கருதத்தக்க அளவுக்குப் பதில் கொடுக்கிறோமா என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெவின்யூ போர்டைக் கலைப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கான மாற்றுத் திட்டங்கள் தயாராகிவிட்டனவா அல்லது வெறும் அறிவிப்பு மட்டுந்தான் வந்திருக்கிறதா என்று தெரியவில்லை. முன்னால் ஏற்கனவே ரெவின்யூ போர்டைக் கலைக்க முயற்சி நடந்தது. அப்போது ரெவின்யூ போர்டைக் கலைத்து விட்டு ஆங்காங்கு டிவிஷனல் கமிஷனர்களை ஏற்படுத்துவதாகத் திட்டமிட்டார்கள். ஆனால் அதன் காரணமாக வேலைப் பளு அதிகமாவதோடு செலவினங்களும் கூடும் என்று உணர்ந்த காரணத்தால் அது நிறுத்தப்பட்டது.

இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற காரியங்களைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு ரெவின்யூ போர்டு இருக்கிறது. இந்த ரெவின்யூ போர்டைக் கலைத்துவிடுவது என்று முடிவு எடுத்தால், அதோடு சேர்ந்த ஒன்றைப் பற்றிக் கூற விரும்புகிறேன். அதோடு செக்ரடேரியட்டையும் சேர்த்து எந்தளவிற்கு அதை மாற்றியமைப்பது என்பதையும் ஆலோசிக்க வேண்டும். ரெவின்யூ போர்டைக் கலைத்துவிட்டு செக்ரடேரியேட் முறையை வைத்துக் கொண்டு இருப்பது என்றால், எந்த அளவிற்கு அதனால் நன்மை இருக்கிறது, அதனால் ஒழுங்கான முறையில், உரிய காலத்தில் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ரெவின்யூ போர்டைக் கலைக்கும்போது செக்ரடேரியேட் முறையையும் மாற்றினால் ஓரளவிற்கு நன்மையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை எப்படி மாற்றினால், எந்த முறையில் மாற்றினால், நன்றாக இருக்கும் என்பதை நேரம் இல்லாததால் இப்போது அதைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. ரெவின்யூ போர்டை எடுப்பது பற்றியும், செக்ரடேரியேட் முறையை மாற்றியமைப்பது பற்றியும் இந்த மன்றத்தில் நாம் ஒரு நாளைக்கு விவாதம் வைத்துக்கொண்டால் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லி அவற்றை எவ்வாறு மாற்றியமைப்பது என்பது பற்றிய கருத்துக்களை அறிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை நான் வரவேற்கிறேன். இந்த மன்றத்தின் அபிப்பிராயத்தை, இந்த மன்ற உறுப்பினர்களின் அபிப்பிராயங்களை அறிந்துகொள்வதில் அரசாங்கம் அக்கறை காட்டும். ரெவின்யூ போர்டை ஒழிப்பது என்று வெளியில் சொல்கிறார்கள். அந்த மொழியை நான் உபயோகிக்க விரும்பவில்லை. ரெவின்யூ போர்டை எடுத்துவிடுவது பற்றி உறுப்பினர் அவர்களின் கருத்து



என்ன, அதை வரவேற்கிறார்களா, இல்லையா என்று சொன்னால் நல்லது. இந்த நேரத்தில் விரிவாக விவாதிக்க முடியாதுதான். இருந்தாலும், அவர்களின் அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டுத் தொடர்ந்தால் நல்லது.

**திரு. கோ. பூவராகவன் :** ரெவின்யூ போர்டைக் கலைப்பது பற்றி எந்த அளவிற்கு அரசாங்கம் அதை மாற்றியமைக்க இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் சொன்னால், அதற்குமேல் அது சரியான முறையா அல்லது தவறான முறையா, அப்படி மாற்றியமைக்க வேண்டுமா, அல்லது இப்போது இருப்பது போல் இருக்கலாமா என்பது பற்றிய எங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியும். இது பற்றி அவசரப்படத் தேவை இல்லை. அடுத்த மன்றக் கூட்டம் கூடுவதற்குள் ஒரு அறிக்கையைத் தயாரித்து எந்த அளவிற்குச் சீரமைப்பு செய்யப் போகிறோம் என்று அறிவிக்க வேண்டும். அப்படி அதைக் கலைப்பது என்றால், அதோடு இணைந்து செக்ரடேரியட் முறையையும் மாற்றியமைக்க வேண்டும். கலெக்டர்கள் அலுவலகங்களிலிருந்து வரும் தபால்கள் இப்போது குமாஸ்தாவிடம் சென்று, பின்னர் சூப்பிரன்டென்டிடம் சென்று, பின்னர் அஸிஸ்டென்ட் செகரட்டரியிடம் சென்று, பின்னர் டெப்டி செகரட்டரியிடம் சென்று, பின்னர் ஜாயின்ட் செகரட்டரியிடம் சென்று, பின்னர் செகரட்டரியிடம் சென்று திரும்பி வருவதற்குள் மிகுந்த காலதாமதமாகிறது. ரெவின்யூ போர்டு என்பது வெள்ளைக்காரன் ஆட்சியில் ஏற்பட்டது. அதனால் காலதாமதமாகிறது என்று அதை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லும் போது, அதோடு இணைந்த முறையில் செகரட்டேரியட் முறையையும் மாற்றியமைக்க முடியுமா என்பதை ஆலோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே நிர்வாகத்தில் உள்ள சிறந்த நிபுணர்களையும், மற்றவர்களையும் கலந்தாலோசித்து, இன்றைய நிர்வாக முறை எவ்வாறு இருக்கிறது என்று ஆலோசித்து, அது பற்றிய ஒரு அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்து, அதன்மேல் உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு பிறகு ஒரு முடிவு எடுத்தால் நலமாக இருக்கும். அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்றையதினம் வரி வசூலில் முழு நேரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் பஞ்சம், பஞ்சம், என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்களும் வருவாய்த் துறை அதிகாரிகளும் பழைய பாக்கி வசூல், நிலுவை வசூல், இவற்றை ஆங்காங்கு துரிதப்படுத்துகிறார்கள். கீழ் மட்ட அதிகாரிகளுக்குத் தொந்தரவு கொடுத்து அவர்கள் இந்த வசூலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த வருடம் முழுமையும் பழைய பாக்கி வசூல், இந்த ஆண்டிற்குள்ள வசூல்—இவற்றை நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடந்த இரண்டாண்டுகளாக சமுதாய நலத் துறை என்று பல துறைகளை ஏற்படுத்திக்கொண்டு நாடகங்கள் மற்றும் பல துறைகளில் வசூல் செய்திருக்கிறார்கள். அந்தக் குழுக்களில் யார் யார் இருக்கிறார்கள், எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், அந்தப் பணத்தை எங்கே கட்டியிருக்கிறார்கள், எது எதற்காகச் செலவிடப்பட்டது, மீதி எவ்வளவு தொகை இருக்கிறது என்பது தெரியவில்லை. சாதாரணமாக ஒரு இன்விடேஷன் அடித்து 100 ரூபாய், 200 ரூபாய் என்று தொகை போட்டுக் கொடுக்கிறார்கள். அவற்றிற்கு வரிசை எண் கிடையாது. டூப்ளிகேட் கிடையாது. கல்லூரிக்கு நன்கொடை என்று போட்டு வசூலிக்கிறார்கள். அந்த வசூல் எப்படியிருக்கிறது, அதை யார் மேற்பார்வையிடுகிறார்கள், அரசாங்கத்திற்கு அந்தக் கணக்கு ஒழுங்காக வந்திருக்கிறதா, அப்படி வரவில்லையென்றால் அதற்கு யார் பொறுப்பு என்று தெரியவில்லை. இந்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகாரிகள் முயற்சி எடுத்து வசூல் செய்த பணம் எவ்வளவு, எந்தக் காரியங்களுக்காக வசூல் செய்தார்கள், அந்தக் காரியங்கள் எவ்வாறு நடந்திருக்கின்றன, அவற்றில் மீதிப் பணம் எவ்வளவு என்பதைப் பற்றியெல்லாம் இன்றையதினம் ஒரு தணிக்கை செய்யவேண்டும்.

உலகத் தமிழ் மாநாட்டின் கணக்கு சரியாக இல்லை என்று அக்கவுண்டெண்ட்-ஜெனரல் அவர்கள் ரிப்போர்ட் வந்திருக்கிறது. மலர் தயாரித்த கணக்கு சரியாக இல்லை, கலெக்டர்கள் கணக்குகளைச் சரியாகக் கொடுக்கவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. எப்போது அந்தக் கணக்குகள் சரியாக வந்து சேரும்? காலதாமதம் ஆகும்போது அந்தக் கணக்குகள் வைத்திருப்பவர்களுக்கே அது மறந்துவிடும். தணிக்கை செய்யும் அதிகாரிகளுக்கும் அது குறித்து என்ன செய்வதென்று தெரியாமல் போய்விடும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவற்றை உடனடியாகச் சீர் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதோடு பஞ்ச நிவாரண வேலைக்காக என்று ரூ 1,57,00,000 ஒதுக்கியிருக்கிறார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு மிக மிகக் குறைவான தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு தாலுக்காக்கள் பஞ்சப் பிரதேசங்கள் என்றும், மற்ற தாலுக்காக்களில் பஞ்சம் இல்லை என்றும் சொல்கிறார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களும் முழுக்க முழுக்க பாதிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா மாவட்டங்களும், பகுதி பகுதியாகப் பார்த்தால், ஒரு தாலுகா அல்லது ஒரு பிர்க்கா பாதிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் ஒரு தாலுகா முழுமையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தண்ணீரே இல்லாத இடங்களும் இருக்கின்றன. ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் கூடச் சொன்னார்கள், அவர்கள் பகுதியில் ஒரு குடம் தண்ணீர் 20 பைசாவிற்கு விற்கப்படுகிறது என்று. அங்கேயாவது தண்ணீர் கிடைக்கிறது, இப்படிக் கொடுக்கிறார்கள். சில இடங்களில் அது கூடக் கிடையாது. ஆகவே, இந்த நிவாரண வேலைகளை ஜூன் மாதத்திற்குள்ளேயே முழுக்க முழுக்க முடித்துவிட வேண்டும். பின்னால் விவசாய வேலைகள் ஆரம்பமாகிவிடும். பஞ்ச நிவாரண வேலைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். இல்லாவிடில், பணம் ஒதுக்கப்பட்டும், அதன் பலனை மக்கள் அடைய முடியாத ஒரு நிலை ஏற்படும். அதோடு ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு அதிகாரியை நியமித்து, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை என்னென்ன வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைக் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது). விஷயங்களைச் சொல்ல வேண்டாமென்று சொன்னால் நிறுத்திக் கொள்கிறேன். அவர்கள் டயத்தில் சிறிது எடுத்துக்கொள்கிறேன். நான் சொல்லும் விஷயங்கள் சர்க்காருக்கு உதவியாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன்.

தொழிற்சாலைகளை அமைக்க இருக்கிறோம் என்று சொல்லிவிட்டால் போதாது. அப்படி அறிவித்துவிட்டால் மட்டும் போதாது. அவற்றை உடனடியாக ஆரம்பிப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். நம் ராஜ்யத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூன்றல்லது நான்கு வர இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலை என்றால், ஒரு ப்ரமோட்டர் போட்டு ஷேர் ஹோல்டேர்ஸ் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்க்கும்போது, எந்தெந்தப் பகுதிகளைப் போட்டிருக்கிறார்கள், யார் யாரை நியமித்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். தென் ஆர்க்காட்டில் திருவெண்ணைநல்லூரில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ அரசாங்கத்திற்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் ஆரம்பித்தாலும் சரி, அல்லது தனியார் துறையில் ஆரம்பித்தாலும் சரி அங்கு அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு ஏராளமான கரும்பு உற்பத்தி செய்யக் கூடிய நிலங்கள் இருக்கின்றன. அந்த ஆலை எப்போது ஆரம்பிக்க இருக்கிறது, எங்கே ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பது பற்றிய தகவல் இல்லை. கரும்பாலைகளில் உள்ள கழிவுப் பொருள்களை, மொலாஸஸ், வேஸ்ட்ஸ் இவற்றை என்ன செய்கிறார்கள்? நான் கேள்விப்பட்டது, மொலாஸஸில் 60 சத விகிதம் சர்க்கார் எடுத்துக்கொண்டு விற்பனை செய்துவந்தார்கள் என்றும், இப்போது அதை முழுக்க முழுக்கத் தனிப்பட்டவர்களிடம் கொடுத்துவிட்டார்கள் என்றும் அறிகிறேன். அவை முழுக்க முழுக்க அரசாங்கத்தினிடம் வர வேண்டும். தனிப்பட்டவர்களுக்கு அதைக் கொடுப்பது அவ்வளவு உசிதமாக இருக்காது.



அடுத்து, இந்த நிதி நிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும்பொழுது, கட்டடங்கள் கட்டுவது, பாதைகள் போடுவது இதையெல்லாம் பார்க்கும்பொழுது, இரண்டு மூன்று மாவட்டங்களோடு அதற்கான வேலைகள் நின்றுவிடுகின்றன. தஞ்சை மாவட்டம், கோவை மாவட்டம், திருச்சி மாவட்டத்தில் ஒரு பகுதி, திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பகுதி தவிர, தென்னார்க்காடு, வடார்க்காடு இன்னும் பின்தங்கிய மாவட்டங்களான சேலம், தர்மபுரி மாவட்டங்களில் அங்கே வேலைகளுக்காக 10 லட்சம், 5 லட்சம், 6 லட்சம் என்ற அளவில் ஒதுக்கப்பட்டு, கட்டட வேலைகள், சாலை வேலைகள், ரோடு வேலைகள், அல்லது ஏற்கனவே போடப்பட்டிருக்கின்ற சாலைகளைப் பழுது பார்த்தல் போன்ற ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்தால் காணோம். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இங்கு முன்னாலே பேசிய உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்கள், சர்க்கரை ஆலை நிதியிலிருந்து, ஷுகர் கேன் செஸ் நிதியிலிருந்து அந்தந்த வழிகளிலுள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது தான் தகுந்த முறையாக இருக்கும்.

எங்கள் மாவட்டத்தில் அருணா சர்க்கரை ஆலை என்று ஒரு ஆலை இருக்கிறது. இந்த ஆண்டு செஸ் நிதி சேர்ந்திருக்கிறது; சென்ற ஆண்டும் சேர்ந்திருக்கிறது. அங்கு ஆயிரக்கணக்கான டன் கரும்புகள் ஒரு ஆற்றைக் கடந்து வரவேண்டும். அந்த ஆற்றில் தரைப் பாலமோ, அல்லது நிரந்தரமாக ஒரு பாலமோ போட வேண்டுமென்று கோரிக்கைகள் அப்போது இருந்தன. அப்போதிருந்த அரசாங்கத்தாலும் பரிசீலனை செய்யப்பட்டு, மதிப்பீடுகள் தயாரித்து வைத்திருந்தார்கள். ஆனால், அது என்ன காரணத்தாலோ நடைமுறைக்கு வரவில்லை. என்னுடைய பகுதிகளில் பல சாலைகள் அப்படியே வேலை செய்யப்படாமல் இருக்கின்றன. மிக முக்கியமாக, அவசரமாக அந்த ஆலைகளுக்குக் கரும்பு கொண்டுபோகக் கூடிய சாலைகளெல்லாம் ஒன்றுமே வேலை செய்யப்படாமல் அப்படியே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது, நான் முன்கூட்டியே இந்த மன்றத்தில் சொன்னபடி அரசியல் நோக்கம் இருக்கக் கூடாது, பொறுப்புக்கு வந்துவிட்ட பிறகு, எந்தப் பகுதியாக இருந்தாலும் பின்தங்கிய பகுதிகளுக்கு வேலைகள் செய்யப்பட வேண்டும் என்று கூறிக் கொள்ளுகின்றேன்.

எங்கள் பகுதியில் கல்லூரி ஒன்று இருக்கிறது. இந்த ஆண்டு பட்டப் படிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எந்த அளவுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. விஞ்ஞானப் படிப்பு இருக்கிறதா அல்லது சமூக நூல் அல்லது ஹிஸ்டரி தொடங்கியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. விஞ்ஞானப் படிப்பும் அங்கே தொடங்கப்பட வேண்டும்.
அதற்குக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டு[illegible] சென்றாலும், [illegible] ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிக[illegible], ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க நிதி ஒதுக்க[illegible]ர்களானே. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் [illegible]களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு என் [illegible] முழுவதும் நிதியமைச்சரவர்கள் பதில் [illegible] சொல்வதோடு அதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்க வேண்டிய வேலைகளை ஆரம்பிக்கத் துரிதப்படுத்துவார்கள் என்று கருதுகிறேன்.

கிராமங்கள் மிக மிகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. கிராம மக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் கேட்கலாம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களையும், மாநாடு கூடுகின்றபொழுது கேட்கலாம்—அரசாங்க நிதி கோருகின்றீர்கள்; கடன் கோருகின்றீர்கள், அந்தக் கடன்களுக்கெல்லாம் யார் யார் அதிகமாகப் பங்கு கொள்கிறார்கள்? 100, 200, ஆயிரம் ரூபாய்க்குக் கீழ்ப்பட்டவர்கள், கிராம மட்டத்திலேயிருப்பவர்கள் அத்தனை பேரும் பங்களிக்கிறார்கள். அப்படி நிதி உதவி அளிக்கும் கிராம மக்களுக்கு ஏன் வசதிகள் செய்யக் கூடாது, கிராமச் சாலைகள் ஏன் பராமரிக்கக் கூடாது, குடிநீர் வசதி ஏன் செய்யக் கூடாது, அதிகமாக ஏன் சலுகைகள் காட்டக் கூடாது என்று இந்த மன்றத்திலே அவர்களை கவனித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

அதோடு, ஆரம்பப் பள்ளிகளுக்கான பணம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஏன் என்று தெரியவில்லை. முக்கியமான அடிப்படைக் கல்விக்குக் குறைத்திருக்கிறார்கள். கட்டடங்களுக்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அடிப்படைக் கல்வி முக்கியம் என்பதை உணர வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

உணவுத் துறையிலே இன்று எப்படி இருக்கிறது ? அமைச்சரவர்கள் ப்ரொக்யூர்மெண்ட்பற்றிச் சொன்னார்கள். ஒரு ஏக்கருக்கு மேலே இருப்பவர்களிடம்தான் ப்ரொக்யூர் செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்குக் குறைவாக இருப்பவர்களிடத்தில் செய்யப்படுவதில்லை என்று சொன்னார்கள். நண்பர் ஆதிமூலம் அவர்கள் சுதந்திராக் கட்சிக்காரர் என்ன சொன்னார்கள் ? "ஆயிரம் பேரை வேண்டுமானாலும், இந்த மன்றத்திலே ருசுப்படுத்தவேண்டுமென்றால், நான் கொண்டுவந்து நிறுத்தத் தயாராயிருக்கிறேன்" என்று சொன்னார்கள். என்னுடைய பகுதியிலும் அவ்வாறுதான் இருக்கிறது. ஒரு ஏக்கர் கூட அல்ல, பட்டாவே இல்லாத, இரயில்வே லைன் ஓரங்களில் 10 செண்ட், 8 செண்ட் என்று அவைகளில் பயிரிடுபவர்கள், ஏரி குளங்கள் அருகிலே, 20 செண்ட், 30 செண்ட் என்ற அளவிலே, தண்ணீர்ப் பிடிப்பு இல்லாத இடங்களில் பயிர் செய்யக்கூடிய அவர்களிடத்திலேயிருந்துகூட இன்றையதினம் ப்ரொக்யூர்மெண்ட் செய்யப்படுவதைப் பார்க்கும்பொழுது, வருந்தத்தக்க அளவிலே இருக்கிறது. அவ்வாறு செய்யும் நிலையிருந்தால் அது ஓரளவுக்கு நல்ல முறையில் அமையாது என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். கிராமங்களிலுள்ள அத்தனை உணவுப் பொருள்களையும் நகரத்திற்குக் கொண்டுவந்துவிட்டால், கிராமத்திலுள்ள மக்கள் யாரை நோக்கி எங்கே போவார்கள் ? எங்கே கேட்பார்கள் ? நகரங்களிலே பத்திரிகைகள் இருக்கின்றன. படித்தவர்கள் பலர் இருக்கிறார்கள், உடனே பத்திரிகைகளில் எழுதி செய்தி வந்தால் அமைச்சரின் கவனத்திற்கு வந்து, குறைகளைப் போக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்கள். ஆனால் கிராம மக்கள் யாரிடம் போவார்கள் ? அவர்களுடைய குறைகளை கேட்பதற்கு, அவர்கள் தங்களுடைய குறைகளைச் சொல்லுவதற்கு யார் இருக்கிறார்கள் ? உடனடியாக அவர்களுடைய குறைகளைப் பூர்த்தி செய்ய என்ன நிலைமைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை உணர வேண்டும். சங்கடங்கள் இருக்கலாம். நகரங்களில் உள்ள சங்கடங்களை மட்டும் சமாளித்து விட்டு, கிராம மக்கள் ஏமாளிகளாக இருக்கிறார்கள் என்று மட்டும் எண்ணி விடக்கூடாது. அரியலூரில் ஒரு நிகழ்ச்சி—பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. கொள்முதலுக்கு தாங்களாகவே முன்வந்து கொடுக்கக்கூடியவர்களாகயிருந்தால் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டிருக்குமா ? அரியலூரில்மாத்தூர் என்ற கிராமத்தில் தாசில்தாரை அடித்திருக்கிறார்கள். விரும்பிக் கொடுத்திருந்தால் இப்படி அடித்த நிகழ்ச்சி அங்கே ஏற்பட்டிருக்குமா ? நான் மாத்தூரைப் பார்த்திருக்கிறேன். அந்த ஊருக்குப் போய் இருக்கிறேன். அது வளமான ஊர் அல்ல, வசதி படைத்த ஊரும் அல்ல. சாதாரணமான ஊர் அந்த ஊர். அந்த ஊரிலே கெடுபிடி செய்து உணவு தானியத்தை நகரத்திற்குக் கொண்டுவர ஏன் முயற்சியெடுக்க வேண்டும் ? இவ்வாறு ஒவ்வொரு இடத்திலும் நடக்கிறது. நடக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. இது நடக்கக் கூடாத விஷயம். ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் கொதித்தெழுந்தால் அரசாங்கம் சமாளிக்கக்கூடிய நிலைமைகள் இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ப்ரொக்யூர்மெண்ட் செய்யும் அதிகாரிகளிடம் சொல்லி வைக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பின்தங்கிய வகுப்பார்களுக்கும், ஹரிஜன மக்களுக்கும் ஒதுக்கும் பணத்தைச் சரிவரச் செலவிடுவதாகத் தெரியவில்லை. ஒதுக்கப்படும் பணமும் குறைந்துகொண்டே வருகிறது. இவ்வாறு குறைந்து கொண்டே வந்தால் நல்ல முறையில் இருக்காது. இந்த மன்றத்திலே பின் தங்கிய, மிகவும் பின் தங்கிய, தாழ்ந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அந்தச் சமுதாயத்தில் உள்ள தாழ்ந்த மக்கள் முன்னேற வேண்டுமென்று விரும்புகிறேன். ஒதுக்கப்படும் பணம் ஆண்டுக்காண்டு செலவிடப்படுவதில்லை. அதிகமாகவும் ஒதுக்கப்படவில்லை. இவ்வாறு செய்வது சரியாக இருக்காது என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியிலே சில நடக்காத, இடையிலே நிறுத்தி உள்ள வேலைகளை மட்டும் சொல்லிக்கொண்டு, எங்கள் கட்சித் தலைவரவர்கள் பேச வேண்டியிருப்பதால் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அங்கே ஒரு ஹரிஜன உணவு விடுதி இருக்கிறது. பின் தங்கியவர்களுக்கு உணவு விடுதி ஒன்று இருக்கிறது. அங்கே கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமென்று ஏற்கனவே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறோம் ஏற்கெனவே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பக்கத்திலேயிருக்கின்றஊமங்கலம், காடாம்புலியூர் பிர்க்காக்கள், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் குடிதண்ணீர் வசதியில்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முழுக்க முழுக்க இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறது. எல்லா இடங்களிலும் ஒரே ஆண்டிலேயே குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திவிட முடியாது. இதற்காக ஐந்தாண்டுத் திட்டங்கள், பத்தாண்டுத் திட்டங்கள் போட்டு, ஆண்டு ஒன்றுக்கு இத்தனை கோடி ரூபாய் செலவிட வேண்டும், அந்தப் பணம் கட்டாயம் செலவிடப்பட வேண்டும் என்று ஒரு திட்டம் போடவேண்டும். அதைப்போலவே, கடற்கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் குடிதண்ணீர் வசதிக்கு என்ன ஏற்பாடு செய்யப் போகிறோம் ? இப்படிப்பட்ட குறைகளை கவனிப்பதற்காக, அதற்காக என்று மொத்தமாக, கிராமத்திலே குடிநீர் வசதிக்காக 1 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம், 10 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று போடுவதால் மட்டும் பயன் இருக்காது. திட்டமிட்ட பணம் செலவழிக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். எப்படித் திட்டமிட்டு, சென்னை நகரத்திற்குக் காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார்களோ அதைப்போல கிராமப்புறங்களிலும் எந்தெந்தப் பகுதிகளுக்கு என்னென்ன முறைகள் என்று சொல்ல வேண்டும். இன்றைக்குக் காவிரி நீர் வருமா, வராதா என்ற சந்தேகம் இருக்கிறது. மறுபரிசீலனை செய்யக்கூடிய அளவிலே இருப்பதாக அறிகிறேன். காவிரியில் தண்ணீர் வந்து, பிறகு வீராணம் ஏரிக்கு வந்து, அங்கிருந்து சென்னை நகருக்கு வரவேண்டும். இப்பொழுதுள்ள சூழ்நிலையிலே

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வீராணம் ஏரிக்கு எங்கிருந்து தண்ணீர் வரப்போகிறது ? காவிரிக்கு எங்கிருந்து நீர் வரப்போகிறது ? வேறு பேச்செல்லாம் அடிபடுகிறது. காவிரி அன்னையை விட்டுவிட்டு, கிருஷ்ணா கோதாவரி பக்கம் போகலாம் என்ற நிலை இருக்கிறது. அதுவும் நல்லதுதான். அது நிரந்தரமான திட்டம். (குறுக்கீடு) என்ன உறவு என்பதைக் கண்டுபிடித்தவர்கள்தான் சொல்லவேண்டும். காவிரி அன்னைக்கும், கிருஷ்ணா, கோதாவரிக்கும் என்ன உறவு என்பதைக் காவிரி அன்னையைக் கண்டுபிடித்தவர்கள்தான் சொல்லவேண்டும். கிருஷ்ணா, கோதாவரியிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவதற்கு இப்போது பேச்சு ஆரம்பித்திருக்கிறார்கள். நல்ல முறையிலே அந்த அரசாங்கத்தோடு பேசி, மத்திய சர்க்காரின் உதவியையும் வைத்து, நிரந்தரமாகச் சென்னை நகரத்திற்குக் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை இருக்கும்பொழுது, காவிரி நீரைக் கொண்டுவந்து அனாவசியமாக வீணாக்க வேண்டாம். அப்படிச் செய்தால் பல ஆயிரக் கணக்கான நஞ்சை நிலங்கள் பாழாகும் சூழ்நிலை உருவாகி விடும் என்று சொல்லிக்கொண்டு, நேரமில்லாத காரணத்தினால் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, வருகின்ற காலத்திலே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் புதிய வரிகள் எதுவும் போட முடியாது என்பதை நாம் சொல்லி வருகின்றோம். கடந்த காலத்தில் இருந்த அரசாங்கம் எந்த அளவுக்குப் போடமுடியுமோ அந்த அளவுக்கு வரி போட்டு விட்டது. ஆகவே, வருகின்ற காலத்திலே பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் தயார் செய்யவேண்டும். ஆனால், தொடர்ச்சியாக பற்றாக்குறை பட்ஜெட் தயார் செய்துகொண்டு நம்முடைய மாநிலத்தை ஒழுங்கான முறையிலே நடத்தமுடியுமா என்று கேட்டால் அது நிச்சயம் சங்கடமானதுதான். ஆகவே, வரி போடாமலேயே வருமானத்தைப் பெருக்குவதற்குரிய வழியிலே இந்தப் புதிய அரசாங்கம் தங்களுடைய கவனத்தைச் செலுத்தவேண்டும்.

அந்த அடிப்படையிலே ஒன்றிரண்டு விஷயங்களைச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது கார், நெருப்பு போன்றவற்றிற்கான இன்ஷூரன்ஸ்கள் எல்லாம் தனியாருடைய கையிலே இருக்கின்றன. அதன் மூலமாக 5 கோடி ரூபாய் முதல் 10 கோடி ரூபாய் வரை தனியார் பெறுகிறார்கள். நம்முடைய மாநில அரசாங்கம் கார் இன்ஷூரன்ஸ், நெருப்பு இன்ஷூரன்ஸ் போன்றவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டால் நிச்சயமாக நாம் இன்றைக்கு, நிகழ்ச்சியைப் பொறுத்து, 5-லிருந்து 10 கோடி ரூபாய் வரை பெற முடியும். அதற்கான முயற்சியை, அதற்கான எண்ணத்தை இந்த அரசாங்கம் ஞாபகத்திலே வைத்துக்கொள்ளவேண்டும். இதைப்போல் வருமானத்தைப் பெருக்கினால் தான், ஒரு நல்ல நிலைமையினைக் காணமுடியுமே தவிர, பற்றாக்குறை பட்ஜெட்டை தொடர்ச்சியாகக் கொண்டு வந்தால் மாநிலத்தினுடைய பொருளாதாரத்தைச் சீர்படுத்த முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்யும்போது நமக்குத் தொழிலிலே வருவாய் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

இன்றைக்கு இண்டஸ்ட்ரியல் பினான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகப் பணம் கொடுக்கிறோம். அந்தத் தொழிற்சாலைகளெல்லாம் தனியாரிடம் இன்ஷூரன்ஸ் செய்கிறார்கள். அதன் மூலமாக இன்ஷூரன்ஸ் கம்பெனிகளும் இலாபம் அடைகின்றன. தனியாரும் இலாபம் அடைகிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் சர்க்காரிடம்தான் இன்ஷூரன்ஸ் செய்யவேண்டுமென்று நாம் வற்புறுத்த முடியும். அதை எல்லாம் ஞாபகத்திலே கொண்டு இந்த சர்க்காரே கார், நெருப்பு போன்ற இன்ஷூரன்ஸ்களை எடுத்து நடத்த, ஆவன செய்ய முயற்சி எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் வேதனையாகவும் அதே நேரத்திலே பயங்கரமாகவும் இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு நாம் ஏற்பாடு செய்யாவிட்டால் பெரும் பூதமாக அது வளரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்திலே படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற வாலிபர்கள். இன்னொரு பக்கத்திலே தொழில் நுட்பக் கல்வியிலே முன்னேற்றம் அடைந்து வேலையில்லாமல் இருக்கிற வாலிபர்கள். இது எங்கே கொண்டுபோய்ச் சேர்த்திடும் என்று சொல்ல முடியாது. அது மட்டும் அல்ல, 18 வயதிற்குமேலே வேலை தேடி வரக்கூடியவர்கள், பஞ்சம் அதிகமானதாலே இருந்த வேலையும் போய் உள்ளவர்கள், ஆயிரக்கணக்கானோர். அதற்கடுத்தாற்போல் இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் ஆப்பிரிக்கா, ஆசிய நாடுகளில் ஒன்றிரண்டு ஊர்களிலிருந்தும் பலர் நம்முடைய தேசத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் விவசாயத் தொழிலாளிகளுக்கு ஒரு சில நேரங்களிலே வேலை இருக்கும். பல நேரங்களில் வேலை இல்லாமல் இருக்கும். இப்படி வேலையில்லாத் திண்டாட்டம் மாநிலத்தினு



டைய பெரும் பிரச்னையாக ஆகிக்கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். அந்த வகையிலே சிந்தித்துப் பார்க்கவேண்டிய பொறுப்பு நம்முடைய கையிலே இருக்கிற காரணத்தால் அதைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இது வளர்ந்து கொண்டிருக்கிறது. நம்மால் என்ன செய்ய முடியும் என்ற மனப்பாங்கிலே இருக்கமுடியாது. அப்படி இருந்தால் இந்தப் பிரச்னையிலே ஒரு முடிவுக்கு வரமுடியாது.

பெரிய இயந்திரங்களை உபயோகப்படுத்துவதில், மத்திய அரசாங்கம் அவர்களுக்கு உதவுகிறது, ஆகவே அதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லப்படுகிறது. மாடர்ன் ரைஸ் மில்கள் எல்லா இராஜ்யங்களிலும் ஏற்படுத்துகிறோம். மாடர்னைசேஷன் சரிதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப் பொறுத்தவரையிலே 100 சாதாரண அரிசி ஆலைகள் செய்கின்ற காரியத்தை ஒரே ஆலை செய்கின்றது. தஞ்சாவூர் ஜில்லாவிலே, கோயம்புத்தூர் ஜில்லாவிலே அது புதிதாக வந்து கொண்டிருக்கிறது. அங்கெல்லாம் ஆயிரக்கணக்கான அரிசி ஆலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு வலுவில்லாத நிலை உள்ளது. இப்படி இருக்கும்பொழுது அரசாங்கத்தார் என்ன சொல்வார்கள் ? மத்திய அரசாங்கமானது உணவுக் கார்ப்பரேஷன் மூலமாக நிதி உதவி செய்து ஒவ்வொரு இராஜ்யத்திற்கும் கொடுக்கும்போது நாம் என்ன செய்யமுடியும் என்ற பதிலைச் சொல்வார்கள் என்று எனக்குத் தெரியும்.

கைத்தறிக்குப் பதிலாக விசைத் தறியைப் புகுத்தக்கூடாது என்ற கோஷம் ஒரு பக்கத்திலே இருந்தும் கூட, மத்திய அரசாங்கம் மைசூருக்கு கொடுக்கின்றது ; பம்பாய்க்குக் கொடுக்கின்றது. அப்படியிருக்கும் போது நாம் மட்டும் வாங்காவிட்டால், அங்கே உள்ளவர்கள் அவைகளை இங்கே விற்பார்கள், நாம் என்ன செய்ய முடியும், என்று சொல்கிறார்கள். இப்படியே வேலையில்லாத் திண்டாட்டம் தானே வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கவனித்து, திட்டமிட்டு, பெரிய கண்ணோட்டத்தோடு புதிய முடிவைக் காண அரசு முயற்சிக்க வேண்டும். இன்றைக்கு நைலான், நைலக்ஸ், ரேயான் வந்துகொண்டிருக்கின்றன. நம்மைப் போன்ற அரசியல்வாதிகள் கூடப் போட்டுக்கொள்ளுகிறார்கள். அது கவர்ச்சியானது சந்தேகம் கிடையாது. சுலபமானது சந்தேகம் கிடையாது. விலை உயர்வானது, ஒப்புக்கொள்கிறேன். அதே நேரத்திலே, கைத்தறித் துணிகள், கதர்த் துணிகள், ஆலைத் துணிகள் இவைகளுக்குப் போட்டியாக வந்திருக்கிறது. அதன் காரணமாக, தேசம் பூராவும் ஆலைகளை மூடும் நிலை வந்திருக்கிறது. சர்க்கார் புதிய கண்ணோட்டத்தோடு, புதிய நோக்கோடு ஏதாவது ஒரு பாதையை வகுத்துக்கொள்ளவேண்டும். இன்றைக்கு ஜப்பானிலே பெரிய தொழில்களை எல்லாம் பிரித்து, சிறு தொழில்களாக கிராமங்களிலே ஏற்படுத்தி, அவற்றின் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல் செய்திருக்கிறார்களே, அது போன்று இங்கே செய்ய வசதி இருக்கிறது. ஏனென்றால், இன்று எல்லா இடங்களிலும் பழைய காங்கிரஸ் ஆட்சி, இல்லாவிட்டால், கூட்டாட்சி இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய இராஜ்யத்திலே ஒரே ஆட்சி, மாற்றுக் கட்சி ஆட்சி பொறுப்பிலே இருக்கிறது. ஆகவே, கிராமங்களை முன்னேற்றுவதற்கு, கிராம மக்களை முன்னேற்றுவதற்கு இந்த அரசாங்கம் திட்டவட்டமாக முடிவெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரேயான் போன்ற துணிகளை வரவேற்கிறேன். இந்த நாட்டிலே கூட உற்பத்தி செய்கிறோம் அதே நேரத்திலே ஒரு ரேயான் உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கும் போது அது 10 துணி ஆலைகளைக் கெடுக்கிறது. அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

புதிய கல்லூரிகளைத் திறப்பது இப்பொழுது மேனியா ஆகிவிட்டது, ஃபாஷன் ஆகிவிட்டது, நாகரீகமாக ஆகிவிட்டது. ஏன் இப்படிக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டும் ? நான் கல்லூரிகளைத் திறக்கக் கூடாது என்று

சொல்லவில்லை. ஆனால், அங்கு கற்றுக் கொடுக்கின்ற கல்வியின் தரம் எப்படி இருக்கிறது? அது நல்ல மாணவர்களை உற்பத்தி செய்கிறதா? சுய நம்பிக்கையுள்ள மாணவர்களை உற்பத்தி செய்கிறதா? கல்வியின் தரத்தை உயர்த்தப் போதிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அது வரையிலே புதிய கல்லூரிகள் ஆரம்பிப்பதை நிறுத்தி வைக்க வேண்டும். இப்படியே பி.ஏ. படித்தவர்கள் எம்.எல்.ஏ.-க்களைப் பார்க்கிறார்கள், வேலைக்காக, எப்ரல், ஜூன் மாதங்களில் நாங்கள் எல்லாம் இங்கே வர வேண்டிய அவசியமே கிடையாது. "அங்கே இடம் வாங்கித் தாருங்கள், இன்ஜினீரிங் கல்லூரிக்கு, மருத்துவக் கல்லூரிக்கு இடம் வாங்கித் தாருங்கள், வேலை வாங்கிக் கொடுங்கள்" என்று வருகின்ற நேரத்திலே நாமெல்லாம் நம்முடைய அறையிலே இருப்போம் என்ற நம்பிக்கை கிடையாது. என்னைப் பொறுத்த வரையில், ஓடிவிடுவது என்று முடிவு செய்திருக்கிறேன். நண்பர்களாக உள்ள இரண்டு மூன்று பேருக்கு வேலை வாங்கிக் கொடுக்கலாம், அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது என்ற ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, புதிய கல்லூரிகள் ஆரம்பிப்பதை கொஞ்ச காலத்திற்கு இல்லாமல் செய்தால் கூட சரியாக இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இதையெல்லாம் கவனத்திலே வைத்துக் கொண்டு, கிராமப் பொருளாதாரம், வேலை இல்லாத நிலை இவைகளைக் கவனத்திலே கொண்டு மாநில அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. என். மருதாசலம்:** சபாநாயகர் அவர்களே, இன்று 1969—70 வருஷத்திய வரவு–செலவுத் திட்ட இறுதி மதிப்பீட்டின்மீது என்னுடைய கருத்தை சொல்ல விரும்புகிறேன். வரவு–செலவுத் திட்டத்திலே பல மானியங்கள் வந்தன. அந்த மானியங்களிலெல்லாம் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது முதலாவது தண்ணீர், இரண்டாவது உணவு, மூன்றாவது தொழில். இந்த மூன்றும் இருந்தால்தான் இந்த நாடு செழிப்படையமுடியும். நாட்டுக்கு முக்கியமான ஒருவிஷயத்திலே இன்றைக்கு நாடு செழிப்படைந்திருக்க வேண்டுமானால் இன்றைக்கு குடிநீர் வளம் பெருக வேண்டும், நிலவளம் பெருக வேண்டும். நில வளம் பெருகினால் தான் தானிய உற்பத்தியை அதிகரிக்க முடியும். உற்பத்தியான அந்த தானியத்தை வாங்கிச் சாப்பிடுவதற்குப் பொருள்கள் வேண்டும். பொருள்கள் வேண்டுமானால் இன்றைக்குத் தொழில் வேண்டும். இப்படி ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கிறது. அப்படி இருந்தால் தான் இந்த நாடு செழிப்படையும் என்று நான் கருதுகிறேன்.

அதே சமயத்திலே இன்றைக்கு ஒவ்வொரு பகுதியிலும் மழை இல்லாத காலங்களிலே அணைக்கட்டுகள் கட்ட வேண்டும், குளங்கள் கட்ட வேண்டும். குளங்கள் கட்டவேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. எங்களுடைய பகுதியிலே இன்றைக்கு மலையச்சாம்பட்டி கிராமத்திலே குளத்தைக் கட்டுவதற்காக நம் பொதுப்பணித்துறை அதிகாரிகள் சர்வே எடுத்திருக்கிறார்கள். அதற்கு எஸ்டிமேட் போடவில்லை. அது இந்த கிராமத்திலே வரவேண்டுமென்று கருதுகிறேன். அதே மாதிரிதான் இன்றைக்கு மதுக்கரையிலே ஒரு கால்வாய் இருக்கிறது. அந்தக் கால்வாய்க்கு அணை கட்டப்பட வேண்டுமென்று அதற்கும் சர்வே எடுக்கப்பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறை அதிகாரிகள் சர்வே எடுத்து, எஸ்டிமேட் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அரசு உடனே அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

துனியாமத்தூரில் உயர் நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட வேண்டியிருக்கிறது. அந்தப் பள்ளிக்கு இடம் போதவில்லை. குளம் புறம்போக்கு 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இதைப் பற்றி உயர்நிலைப்பள்ளி அதிகாரிகளும், உயர்நிலைபள்ளிக் குழுவினரும் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். பொதுப்பணித் துறை அலுவலர்களும் நேரில் வந்து பார்த்திருக்கிறார்கள். ஹெல்த் ஆபீசர் வந்து பார்த்து, அந்த இடத்தில்



கட்டடம் கட்டலாம் என்று சிபார்சு பண்ணியிருக்கிறார்கள். அதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து, ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு தானிய உற்பத்தியைப் பொறுத்த வரையில் சில இடைஞ்சல்கள் இருக்கின்றன. உடனடியாக அரசு இடைஞ்சல்களை நீக்க வேண்டும், ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் இருக்கக் கூடிய அரிசனங்கள், குத்தகை விவசாயிகள் குத்தகைக்குப் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் குத்தகை விவசாயிகளுக்கு அந்தத் தானியத்தைக் கொடுக்காமல், அவர்களுக்கே உரிமையாகச் செய்துகொண்டு போய்விட்டார்கள். காரணம், இருக்கிற குத்தகைக்காரர் பாதுகாப்புச் சட்டப்படி, அதை அவர்களுக்கு விட்டு வைத்திருந்தால், அவர்களுக்கே உரிமையாகி விடும் என்ற நோக்கத்தில் அம் மாதிரி இடைஞ்சலை அரிசனங்களுக்குச் செய்திருக்கிறார்கள்.

ஹரூர் தாலுகா சக்கிலிப்பட்டி கிராமத்தில் அரிசனங்கள் 200 பேர்கள் குடியிருக்கிறார்கள். மின்கம்பங்கள் போடப்பட்டு, அந்தக் கிராமத்திற்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமத்திலுள்ள விவசாயிகள் 30 பேர்கள் சொந்த நிலம் உள்ளவர்கள் மின் இணைப்பு கோரி விண்ணப்பம் கொடுத்து, ஒரு வருஷம் ஆகியும், இதுவரையில் மின் இணைப்பு கிடைக்கவில்லை. அப்படி மின் இணைப்புக் கொடுத்தால் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று கருதுகிறேன்.

அதே நேரத்தில் உணவு தானிய உற்பத்தியை அதிகம் பெருக்க வேண்டுமென்றால், விவசாயத்திற்குத் தகுதிவாய்ந்த நிலம் மாநிலத்தில் எவ்வளவு இருக்கிறதோ, அந்த நிலத்தை நாம் அரிசனங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அரிசனங்கள் முன்னேறுவார்கள், நாட்டில் தானிய உற்பத்தி அதிகரிக்கும். அந்த முறையை அரசு கையாள வேண்டும். அந்த முறையைக் கையாண்டால்தான் அரிசனங்களுக்கு நன்மை செய்யப்பட்டதாகக் கருதப்படும். அந்த முறை மிகச் சிறந்த முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு ஏழை எளிய மக்கள் பள்ளிகளுக்குச் செல்ல முடியவில்லை. பள்ளிக்குப் போக முடியாத நிலையில் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ரூ. 2,000 வருமானம் இருந்தால் அவர்கள் சம்பளம் கட்டவேண்டியிருக்கிறது. அந்த லிமிட்டை 2,000-த்திலிருந்து ரூ. 3,000-ஆக உயர்த்தினால் தான் சாதாரண ஏழை எளிய மக்கள், சாதாரண விவசாயத் தொழிலாளிகள், மில் தொழிலாளிகள் தங்களுடைய குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதற்கு முன்வர முடியும். ஆகவே, இந்த முறையை இந்த அரசு கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ந. வீராசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், ஸார், மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் பேசுகிற நேரத்தில் 1968–69-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டின்மீது பேசுவதாகச் சொன்னார்கள். அது நேற்று முடிந்துவிட்டது. இன்றைக்கு அப்படிப் பேசுவது முறையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு அதனுடைய நிதி ஒதுக்க மசோதா அடுத்து வருகிறது.

**திரு இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, நேற்றும், இன்றும் நம்முடைய கனம் விருத்தாசலம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் நமது மாநிலத்தினுடைய நிதிநிலையின்மீது மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு இங்கே பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த பட்ஜெட் விவாதத்தில் தொடர்ந்து பேசிய பல காங்கிரஸ் அங்கத்தினர்களும் ஒரு குறிப்பினை மனதில் வைத்துக்கொண்டு பேசியதை நாம் எல்லோரும் அறிவோம். தி.மு.க. அரசு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வரி போடாமல் காரியங்களையெல்லாம் சாதிக்க முயற்சி செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிற வகையில், ஏன் வரி போடவில்லை என்று எடுத்துச் சொல்கிற வகையில் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். கனம் விருத்தாசலம் உறுப்பினர் அவர்கள் பற்றுகுறை பட்ஜெட் போடுகின்ற விஷயத்தைப் பற்றியும், மற்றும் சப்ளிமெண்டரி

டிமாண்டில் இருந்த சூழ்நிலையைப் பற்றியும் விளக்கமாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள். டெல்லியில் இருக்கிற நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் அங்கே பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறாரா என்று பார்த்தால், அங்கே அவர்கள் வரிகளையும் போட்டு, பற்றாக்குறை பட்ஜெட்டையும் தயாரித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்ஜெட்டை தயாரித்திருக்கிற திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் மாநிலத்தில் வரி போடக்கூடாது என்ற காரணத்திற்காக பற்றாக்குறை பட்ஜெட் போடப்பட்டது என்ற கருத்தை வெளியிட்டதன் விளைவாகவோ என்னவோ தெரியாது, அதே கருத்து எல்லா இடங்களிலும் எதிரொலித்திருக்கிறது. நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த வரையிலே, எல்லா மாநில அரசுகளைப் பொறுத்த வரையிலே, காங்கிரஸ் ஆட்சி செய்த சென்ற இருபது ஆண்டு காலத்தில் எல்லா வரி இனங்களும் மூடப்பட்டுவிட்டன என்பதை நாம் அறிவோம். வரி முறைகளில் டைரக்ட் டாக்சேஷன், இன்டைரக்ட் டாக்சேஷன் என்ற இரு விதங்கள் உண்டு. டைரக்ட் டாக்சேஷன் என்ற தலைப்பின்கீழ் பார்த்தால், மாநிலங்களுக்கு நில வரியும், விவசாய வருமான வரியும் தான் வரும். அதே போல் எக்சைஸ் டியூடி, கஸ்டம்ஸ் டியூடி, இன்கம்டாக்ஸ் ஆகியவை டைரக்ட் டாக்சேஷன் என்ற முறையில் மத்திய அரசுக்கு வருவாய்க் குவிக்கின்ற வழிகளாக அமைந்திருக்கின்றன. மாநில அரசுக்கு உள்ள இன்டைரக்ட் டாக்சேஷன் எது என்று பார்த்தால், சேல்ஸ் டாக்ஸ் ஒன்று தான் இன்டைரக்ட் டாக்சேஷனாக இருந்துகொண்டிருக்கிறது. மேலும் வரி போடுவதற்கு வழி இல்லாத ஒரு சூழ்நிலையில், கிடைக்கின்ற வரிகளையெல்லாம் நல்ல முறையில் பெற்று அவைகளை எந்த வழிகளில் செலவழிக்க வேண்டுமோ அந்த வழிகளில் சிக்கனமாகவும், சிறப்பாகவும் செலவழித்தால்தான் முடியும் என்ற ஒரு நிலைமையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம்.

விருத்தாசலம் உறுப்பினர் அவர்கள் ரெவின்யூ போர்டை எடுப்பது பற்றிய கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ரெவின்யூ போர்டை எடுக்க வேண்டும் என்ற கருத்து இன்றைய தினம் புதியதாகச் சொல்லப்படுகின்ற கருத்து அல்ல. ஏற்கனவே காங்கிரஸ்காரர்கள் காலத்தில் பல தடவை வற்புறுத்தப்பட்டு வந்த கருத்துதான். அப்படி வற்புறுத்தப்பட்டு வந்த பல கருத்துக்களை அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குத் தயங்கிய சூழ்நிலை மாறி, அவைகளையெல்லாம் செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தோடு இன்றைய தினம் நாம் முடிவுகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் சொன்னார்கள். ரெவின்யூ போர்டைச் சீர்திருத்தினது மட்டுமல்ல, செக்ரடேரியட்டையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அது ஒரு வரவேற்கத்தக்க கருத்து. அது மட்டுமல்ல.

இன்றைக்கு இன்னும் கொஞ்சம் வேகமாகச் சென்று மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே உள்ள உறவுகளைக் கூட சீர்திருத்த வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். எப்பொழுதும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, காங்கிரஸ்காரர்களுக்கு, தி.மு.க. சொல்கிற கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கொள்ளலாமா என்ற எண்ணம் ஏற்படுகிறது. அந்த நிலையில்தான் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு மாநில செக்ரடேரியட் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் 5 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் சென்றால், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கிற அந்த நிலைமைகளையெல்லாம் சீர்திருத்த வேண்டும் என்ற எண்ணம் எழக்கூடும் என்று நான் கருதுகிறேன். அப்படிச் சொல்வதற்குக் காரணம், இன்றையதினம் திரு. காமராஜர் அவர்களால் அதுபற்றி பேசபட்டு, அவர்களும் கருத்துதெரிவித்திருக்கிறார்கள். நேற்றைய தினம் கூட பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்கூட இதுபற்றி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கூற்றுகளைப் பார்த்தால், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே இருக்கிற உறவு முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்கின்ற ஒரு பிரச்னை இன்றைக்குப் பெரிய பிரச்னையாகப் பேசப்பட்டு வருகிறது. தி.மு.க. 15, 20 ஆண்டுகளாக எழுப்பிக்கொண்டு வருகிற இந்தப் பிரச்னையின் மூல நோக்கம் உணரப்பட்டு, பேசப்பட்டுக் கொண்டு வருகிறது. அதனுடைய தாத்பரியம் நிதிநிலைமைகளெல்லாம் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதுதான்.



திரு. பூவராகன் அவர்கள் மேலும் சொன்னார்கள்—சிக்கனம் செய்ய வேண்டும், நிர்வாகச் செலவு ஏறிவிட்டது என்பதையெல்லாம் பற்றி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உண்மைதான். வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஒரு பங்காக இருந்தது, 5 பங்காக நிர்வாகச் செலவு அதிகமாகி இருக்கிறது என்று டெல்லியில் போடப்பட்ட பல கமிட்டிகள் எடுத்துச் சொல்லியிருக்கின்றன. டெல்லி சர்க்கார் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 100 கோடிக்கு பாதுகாப்புச் செலவை அதிகரித்திருக்கிறார்கள். 100 கோடி ரூபாய்க்கு பாதுகாப்புச் செலவை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது என்பது நமக்குத் தெரியவில்லை. சிக்கனம் செய்ய வேண்டிய வழி வகைகள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கின்றன. கனம் விருத்தாசலம் உறுப்பினர் அவர்கள் பேசுகிற நேரத்தில் சென்னை மாநிலத்திலே ரூ. 66 கோடிக்கு துணை மானியக் கோரிக்கையை எழுப்பலாமா என்ற ஒரு கேள்வியை எழுப்பினார். அவர்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பு இருந்த காங்கிரஸ் அரசு துணை மானியக் கோரிக்கைகள் எழுப்பாமல் இல்லை. 1962–63-ல், அப்பொழுது நம்முடைய பட்ஜெட் தொகையாக இருந்தது ரூ. 121 கோடி. ரூ. 121 கோடியாக நம்முடைய பட்ஜட் இருந்தபோது, அவர்கள் எழுப்பிய சப்ளிமென்டரி பட்ஜட் ரூ. 36 கோடி. 121 கோடிக்கு 36 கோடி. பிறகு 1963–64-ல் நம்முடைய பட்ஜட் ரூ. 135 கோடியாக இருந்தபோது, சப்ளிமென்டரி பட்ஜட் ரூ 53 கோடியாக இருந்திருக்கிறது. அதேபோல 1964–65-ல் முதல் பட்ஜட் ரூ. 151 கோடியாக இருந்தபோது, சப்ளிமென்டரி எஸ்டிமேட்டுகள் ரூ. 55 கோடியாக இருந்திருக்கிறது. ஆக அதே வகையில் கணக்கிட்டுக் கொண்டு வந்தால், ரூ. 247 கோடி வருமானமுள்ள பட்ஜட்டாக உயர்ந்திருக்கும்போது, அந்தக் காலத்தில் ரூ. 100 கோடிக்கு சப்ளிமென்டரி பட்ஜட் போட்டிருப்பது ஒரு பெரிய தொகை என்று சொல்லிவிடமுடியாது. இன்னொன்றையும் எண்ணிப்பார்க்க வேண்டும். ரூ. 100 கோடி என்று சப்ளிமென்டரி பட்ஜெட் இருந்தாலும், உள்ளபடியே எந்த அளவிற்கு அது இருக்கிறது என்றால், ரூ. 54 கோடிதான் வரும். மீதமுள்ள ரூ. 46 கோடி, 1966–67-ல் கணக்கு முறைகளில் புதிய விதிகளைக் கொண்டு வந்து, அந்தக் கணக்கு முறைகளில் வைக்கும் விதிகள் பிரகாரம், இந்தத் தொகை இங்கே ஏறியிருக்கிறது. காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்தில் எவ்வளவு துணை மானியக் கோரிக்கைகள் கேட்டிருக்கிறதோ அந்த ரேஷியோவைக் கணக்கிட்டுப் பார்த்தால், அந்த அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு பெறவில்லை என்ற உண்மை விளங்கும்.

மற்றொன்று, ரிசர்வ் பாங்கு கடன் பற்றிச் சொன்னார்கள். ரிசர்வ் பாங்க் கடன்பற்றி நம்முடைய நிதி அமைச்சர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிகமாக ஓவர்டிராப்ட் வாங்கிக் கஷ்டப்படும் மாநிலம் அல்ல நாம் என்பதை பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம். மற்றும் நேற்று அவர்கள் குறிப்பிட்டார்கள், "குமுதம்" பத்திரிகைக்கு ஏழு லட்ச ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள் என்று. கொடுக்கலாமா என்கிற தோரணையில் கேட்டார்கள். கடன் கொடுத்திருக்கிறது என்றால், அது "குமுதம்" பத்திரிகைக்கு என்று அல்ல, "குமுதம்" பத்திரிகையாளர், அங்கே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, அச்சக ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதற்காக சர்க்காரைக் கடன் கேட்டார்கள். "எப்படிச் செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டதற்கு, அவர்கள் பதில் சொன்னார்கள், "வீடுகளைக் கட்டி, தொழிலாளர்களிடம் வாடகையே வாங்காமல், இந்தத் தொகைக்கான வட்டியையும் சேர்ந்து, கடன் பணத்தை இத்தனை ஆண்டுகளில் தருகிறோம்" என்று கேட்டார்கள். இது ஒரு நூதனமான எண்ணமாக இருக்கிறது, முதலாளி தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து, வாடகையை வாங்காமல் கொடுக்கத் தயாராக இருக்கிறாரே, இது ஊக்குவிக்கப் படவேண்டும் என்று உணர்ந்து, இதை ஆதரிக்கும்முறையில், இதை வளர்க்கும் முறையில், ரூ. 7 லட்சம் கடன் கொடுத்திருக்கிறது. இது இஷ்டப்படி கொடுத்தது அல்ல. இதை நான் எடுத்துச் சொல்லுவதற்குக் காரணம் இருக்கிறது. சென்னை மாநகரததைப் பொருத்தவரையில், வீட்டுப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சனை. 24 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். ஆனால் இருக்கின்ற மொத்த வீடுகள் 1,04,000 தான். சென்னை மாநகரத்தில் 20 ஆண்டு காலம் ஆட்சி செலுத்திய காங்கிரஸ், ஹவுஸிங் போர்டு, ஸிடி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட், என்றெல்லாம்

வைத்துக்கொண்டு, ஏராளமான கோடிக்கணக்காக ரூபாய்களை செலவழித்திருந்தும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை—லோ இன்கம் க்ரூப், மிடில் இன்கம் க்ரூப், ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 6,000 வீடுகள் கட்டி அமைக்கப் பட்டிருக்கின்றன. இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் மொத்தம், 1,10,000 வீடுகள் தான் 25 லட்ச மக்களுக்கு இருந்து கொண்டு இருக்கும் நிலைதான் இருக்கிறது. சென்னை மாநகரத்தில் கிட்டத்தட்ட 500 குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன. அது ஒரு பெரிய பிரச்னை. சென்னை மாநகரத்தை பொறுத்த வரையில் குடிசை வாழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று நாம் பணத்தை ஒதுக்கிச் செயல் படுகிறோம். அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கும் ஹவுசிங் போர்டு என்கிற நிறுவனத்தை இரண்டாக ஆக்கி, அதில் ஒன்று "ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் போர்டு" என்று சிருஷ்டிக்கப்பட வேண்டும். குடிசை வாழ் மக்களுடைய பிரச்னைகளைக் கவனிக்க ஒரு "ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் போர்ட்" என்று ஒன்றை ஏற்படுத்தி, நகரப்பகுதிகளில் இருக்கும் மக்களின் பிரச்சினையைக் கவனிக்கும் முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய எலக்ட்ரிசிடி போர்டு இருக்கிறது. நாம் வரி போட்டு மட்டும், எதிர்காலத்தில் வாழ்க்கையையும், அரசாங்கத்தையும் ஓட்ட முடியாது. வருமானம் வருவதற்கான வழிமுறைகளைத் தேட வேண்டும். ஆராய்ந்து பார்க்க வேண்டும். கண்டுபிடிக்க வேண்டும். அப்படிப் பார்த்தால், எலெக்ட்ரிசிடி போர்டு கிட்டத்தட்ட ரூ. 120/160?) கோடி ரூபாயை நம்மிடமிருந்து கடன் வாங்கியிருக்கிறது. அது ஒரு பெரிய போர்டாக இருப்பினும், ஒரு கார்ப்பரேஷன் போல இயங்கிக் கொண்டு இருக்கிறது. ரூ. 16 கோடியைப் பெற்றுக் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு அதிலிருந்து ஆதாயமோ வருமானமோ வருகிறதா என்று பார்த்தால், காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் வந்ததில்லை. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற முறையில் இந்த இரண்டு ஆண்டு காலத்திலும் எந்த விதமான ஆதாயமும் கொடுக்கப்படவில்லை. இந்த நிலை நீடிக்கக் கூடாது. இன்றைக்கு இருக்கின்ற அமைச்சர் வாலிபராக இருப்பதால், அவர்கள் இதில் அக்கறை எடுத்துக் கொண்டு, எலெக்ட்ரிசிடி போர்டில் இருக்கும் குற்றங்குறைகளை—குற்றம், குறைகள் இல்லை என்று சொல்லவில்லை—இருக்கின்றன—களைந்து, திருத்துவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும்.

அதே போல, நமக்கு வருமானம் வருவதற்கு வழியாக இருப்பது, பெரிய ஸ்தாபனமாக இருப்பது, பஸ் போக்குவரத்துத் துறை. அதிலே நல்ல அக்கறையையும் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு முதல் அமைச்சராக இருப்பவர் அன்றைக்கு அந்தத் துறை அமைச்சராக இருந்தபோது இப்பொழுது இருக்கும் அமைச்சரும் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தால், அந்தத் துறையில் வருமானத்தைப் பெருக்க முடியும். அப்படி வருமானம் பெற, பஸ் போக்குவரத்துத் துறையைச் சர்க்காரே ஏற்று நடத்துவதற்குப் பதிலாக, அதை ஒரு கார்ப்பரேஷனாக அமைக்க வேண்டும் என்கிற கருத்து நீண்ட நாளாகப் பலராலும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. மறைந்து விட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கருத்தினைக் கொண்டு இருந்ததையும் நாம் அறிவோம். ஆகவே, பஸ் போக்குவரத்தை கார்ப்பரேஷன் என்ற அளவில் அமைக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

கடைசி...யாக, ஒரே ஒரு கோரிக்கை. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் எந்த... அளவிற்கு எதிர்க் கட்சிகளை மதிக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் வகை...யில், பெரிய நோக்கத்தோடு, அந்த மாபெரும் எண்ணத்தோடு, எதிர்க்... கட்சித் தலைவருக்கும் நல்ல அந்தஸ்தும், கவுரவுமும் கொடுக்க வேண்...டும் என்று பல வசதிகளைச் செய்து கொடுக்க, எதிர்க் கட்சிகளை மதிக்க... வேண்டும் என்கிற ஜனநாயகப் பண்பை திராவிட முன்னேற்றக் கழக...ம் பெற்று இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக, எதிர்க் கட்சித் தலைவ...ருக்கு சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று முன்வந்திருக்கி...றது. சட்ட மன்றத்திலே மட்டுமல்ல, வெளியிலேயும் இந்த உணர்வினை ...ய காங்கிரஸ்காரர்களும் காட்ட வேண்டும். பல



பெரிய தேசியத் தலைவர்களைப் பெற்றிருந்தவர்கள், காங்கிரஸ்காரர்களா, ஆகவே, அவர்கள் சட்ட மன்றத்திலே போல, வெளியிலேயும் கூட இந்த ஜனநாயகப் பண்பின் அடிப்படையில், அன்பான அழகான உணர்வினைக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று சொல்லி அமைகிறேன்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான நிதி நிலை அறிக்கையில் அநேகமாகப் பல அங்கத்தினர்களும் பேசிவிட்டார்கள். இறுதியாக நான் பேசி, அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். சட்ட மன்றத்திலே இந்த இரண்டு வருஷங்களில் அதிகமான நாட்கள் கூடியிருக்கிறோம். அப்படிக் கூடும்போது, இடையில் மிகவும் சோகச் செய்தியுடன் இருந்தோம். மதிப்பிற்குரிய நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் மறைவும், அதைத் தொடர்ந்தும் நாம் அதிகமான நாட்களுக்குக் கூடவேண்டிய நிலை இருந்தது. நடந்ததை எல்லாம் மறந்து, சட்ட மன்றத்திலே, நாம் பணியாற்ற வேண்டியதாக இருந்திருக்கிறது. இங்கே மன்றத்தில் எழுப்பிய பிரச்னைகளுக்கு அமைச்சர்கள் பதில் சொன்னார்கள். அதிலே எழுப்பிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எந்த முறையில் நடத்தப் போகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். வருஷத்திற்கு ஒரு முறை நிதி அறிக்கையின் மீது ஏதோ பேசிவிட்டு விட்டால் போதும் என்று செய்யும் நிலை கிடையாது. இப்படியே இரண்டு சபையைக் கூட்டிவிட்டு, மறுபடியும் ஏற்படக்கூடிய நிலை என்று இல்லாமல், சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த இரண்டு வருஷங்களில் நடந்த நிகழ்ச்சிகளில், கொடுத்த வாக்குறுதியெல்லாம், நிறைவேற்றப்படவில்லை. எத்தனையோ அறிக்கைகள், எத்தனையோ கமிஷன்கள், கேட்டுக் கேட்டுச் சலித்துப் போய்விட்டது. திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். ஆனால் ஒன்றையும் வைக்கவில்லை. ஒரு கேள்விக்குப் பதில் கேட்டால், "அது ஹைக்கோர்டில் இருக்கிறது" "அதற்கு கேஸ் இருக்கிறது" என்று பதில் சொல்லக்கூடாது. மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் சட்ட மன்றத்தில் எழுப்பக்கூடிய பிரச்சினைகளுக்குப் பொறுப்போடு பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செஞ்சி தொகுதி அங்கத்தினர் ஓவர்டிராப்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நாங்கள் ஓவர்டிராப்ட் வாங்கக் கூடாது என்று சொல்லவில்லை. வாங்கித்தான் தீரவேண்டுமென்றால் ஓவர்ட்ராப்ட் வாங்கவேண்டும். அப்படி வாங்குவது கணக்கில் வரவில்லையே என்பதைத் தான் சொல்கிறோம். மற்றொன்றையும் கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். பெரிய மனிதர்கள்தான் கடன் வாங்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். கடன் வாங்குவதும் பெரிய மனிதர்கள்தான். இன்சால்வென்ட் கொடுப்பதும் பெரிய மனிதர்கள்தான்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் .:** தலைவர் அவர்களே, எல்லா பெரிய மனிதர்களும் இன்சால்வென்ட் கொடுப்பதில்லை. அந்தப் பெரிய மனிதர்களில் சில பெரிய மனிதர்கள்தான் இன்சால்வென்ட் கொடுக்கிறார்கள். இன்சால்வென்சி கொடுக்காத பெரிய மனிதர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** வரியை ஏமாற்றிக்கொண்டு, நாங்களும் பெரிய மனிதர்கள் என்று சொல்லுவதும் அமைச்சர்களுக்குத் தெரியும். பெரிய மனிதர்கள்தான் சில காரியங்களைச் செய்கிறார்கள். ஆகவேதான் அந்த நிலைக்கு வர வேண்டாம் என்று சொல்கிறேன். சர்க்கார் என்பது வேறு, தனிப்பட்ட மக்களுடைய நிலை வேறு. மக்களுடைய வரிப்பணத்தை வாங்கி, அதை உபயோககரமாகச் செலவிடுவதற்காக உங்களை காவலர்களாக அங்கே வைத்திருக்கிறார்கள். நீங்கள் சரியாக நடத்த வேண்டுமென்பதற்காகத் தான் உங்களைக் கண்காணிக்க நாங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறோம். நாங்கள் எதிர்க் கட்சியே தவிர, எதிரிக் கட்சி அல்ல. கொஞ்சம் கடுமையாகவும் சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. தவறை ஆழமாக, அழுத்தமாக, இடித்துரைத்துச் சொல்ல எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் நீங்கள்தான் அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. "அப்படியா சங்கதி, இதோ நீங்கள் செய்கிறோம்" என்று நீங்கள் சொல்ல

தாக எனக்குத் தெரியவில்லை. நாங்கள் கேட்பதற்கெல்லாம் வேறு எதாவது சொல்லி, கெட்டிக்காரத்தனமாகச் சொல்லி தப்பித்துக்கொள்கிறீர்கள். "கழுவிய மீனிலே நழுவிய மீன் மாதிரி" திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கெட்டிக் காரத்தனத்திலே சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்று சொல்லலாம். எதற்கும் நேரடியாகப் பதில் சொன்னது கிடையாது. இரண்டு வருஷங்களாக நாங்கள் இதைச் சொல்லியாகிவிட்டது. மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களிடமும் நாங்கள் இதைச் சொல்லாமல் இருந்தது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : "கழுவிய மீனிலே நழுவிய மீன்" என்கிறீர்களே, கழுவிய மீனிலே சின்ன மீன்கள்தான் நழுவிவிடும், பெரிய மீன்கள் நழுவாதே ?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நீங்கள் சின்ன மீனைத்தான் பார்த்திருக்கிறார்கள். உங்களுக்கு அந்த விஷயத்தில் அனுபவம் இல்லையென்று நினைக்கிறேன். பெரிய பெரிய மீன்களையெல்லாம் நழுவ விட்டு விட்டீர்கள். நாங்கள் எதாவது ஆலோசனைகளைச் சொன்னால் அதை நீங்கள் ஏற்றுக் கொண்டு கடைப்பிடிப்பது இல்லை. நாங்கள் இங்கே இருப்பதைப்போலவே, வெளியிலேயும் மரியாதையாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். ரொம்ப காலமாக இருக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். தவறு இருந்தால் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

சட்டசபையில் விவாதம் நடைபெறுகிறது. பஞ்சாலை பற்றி விவாதம் நடைபெறுகிறது. அப்போது நாங்கள் எங்கள் கட்சியில் ஒரு தீர்மானத்தைப் போட்டு, "மூடப்பட்ட மில்களை ஆரம்பிக்கும் நிலை இல்லாவிட்டால் போராட்டத்தை நடத்த வேண்டியதிருக்கும்" என்று அறிவித்தோம். ஆளும் கட்சியில் இருக்கும் நீங்கள் முன்பு தீர்மானமே போட்டதில்லையா ? போராட்டம் நடத்தவில்லையா ? கல்வி அமைச்சர் அவர்கள், "போராட்டம் நடத்துகிறோம் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்கிறார்கள். இது ஒரு ஸ்டண்ட்" என்று சொன்னார்கள். இது ஒரு ஸ்டன்ட் என்றால் உங்களுடைய ஸ்டண்டுகளை விவரிக்க ஆரம்பித்தால் நன்றாக இருக்காது. பொறுப்புகளைத் தீர்க்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தீர்ப்போம்" என்று சொன்னீர்கள். இப்போது ஆட்சி நடத்துகிறீர்களே, என்னதான் செய்திருக்கிறீர்கள் இதுவரை ? இது உங்களுக்கு நன்றாக இருக்கிறதா ? இன்னொரு அமைச்சர் பேசியதாகக் கேள்விப்படுகிறேன். "இந்தக் காங்கிரஸ்காரர்கள் எல்லாம் கையிலே இருப்பதையெல்லாம் காலிலே போட்டுக்கொண்டிருக்கிறார்கள். காலிலே இருப்பதையெல்லாம் கையிலே போட்டுக்கொள்ளுகிறார்கள். வாயிலே இருப்பதையெல்லாம் எங்கேயோ வைத்திருக்கிறார்கள்;" என்ற முறையில் பொறுப்புள்ள அமைச்சர் பேசியிருக்கிறார். இப்படிப் பேசலாமா ? இதற்கு நான் பதில் சொல்லலாமா ? பொறுப்புள்ள அமைச்சர் பேசும்போது மக்களும் அதைக் கேட்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் "இந்தப் பத்திரிகை, அந்தப் பத்திரிகை" என்று சொல்கிறார்கள். கட்சி சார்பாக நடக்கும் பத்திரிகை, அவர்களுடைய ஆசிர்வாதம் பெற்று நடக்கும் பத்திரிகை என்று சொல்வதற்கே அருகதையில்லாமல் இருக்கின்றன. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கேட்டால், "இது காங்கிரஸ் பத்திரிகை" என்று சொல்லிவிடுகிறார்கள். "நாத்திகம்", "கடிதம்" காங்கிரஸ் பத்திரிகைகள் இல்லையென்று சொல்லியாகிவிட்டது. காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு பத்திரிகையும் இல்லை. "நாத்திகம்", "நவசக்தி" போன்ற எந்த பத்திரிகையும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இல்லை. காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் நடத்துகிறார்கள். இதுபோல் உங்கள் கட்சியில் கூட இருக்கிறது. "நம் நாடு" ஒன்றுதான் கட்சிப் பத்திரிகை. பாக்கியெல்லாம் கட்சிப் பத்திரிகைகள் அல்ல, அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறீர்கள். அமைச்சர் அவர்களுக்குச் சொந்தக்காரர்கள் நடத்தும் "மடல்" பத்திரிகையில் வரும் பேச்சைப் பார்த்தால், "மடல், மடலாக" இருக்கிறது. "கடிதம்" பத்திரிகையிலே இருக்கும்படியான வார்த்தைகளைப் பற்றி மறைந்த முதலமைச்சர் அவர்கள் "எழுத்து எப்படியிருந்தாலும், தமிழ் கொஞ்சுகிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். உங்கள் பத்திரிகையிலே இருப்பதைப் பார்த்தால் அப்பப்பா ! சொல்ல முடியாது. வெளியிலே போய் பிரச்சினையைக் குழப்ப





மாக வைத்து, "பார், பார், நாத்திகம், கடிதம் போன்ற பத்திரிகைகள் காங்கிரஸ் பத்திரிகைகள் இல்லையென்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்கிறார்" என்று சொல்வார்கள். நாட்டினுடைய பிரச்சினையைத் தீர்க்காமல் இருக்கிறீர்கள். இப்போது பஞ்சப் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம்.. .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : உங்கள் பத்திரிகையப் பற்றிச் சொல்லப் போனால் விளக்கம் சொல்ல முடியாது. நான்கைந்து ஆண்டுக் காலமாக காங்கிரஸ் கட்சியில் காங்கிரஸ்காரர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளில் தரக் குறைவான முறையில், நாங்கள் எதிர்க் கட்சியிலிருந்து இன்றைக்கு ஆளும் கட்சியில் இருக்கும் வரைக்கும் எங்களைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவைகளைத் தனியாகப் படித்துக் காட்ட இருக்கிறேன். டெல்லியிலே, நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருக்கும் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்த நேரத்தில், "நாம் எல்லாம் ஒன்றாக உட்கார்ந்து பேச வேண்டும்" என்று சொல்லியிருக்கிறேன். அது கவனிக்கப்படாத காரணத்தால், மற்றப் பத்திரிகைகளும், "நாம் சொல்பவைகளை எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் கவனிப்பதாக இல்லை. ஆகவே, பதிலுக்குப் பதில் எழுத வேண்டியதுதான்" என்று எண்ணி பதில் எழுத ஆரம்பித்து விடுகின்றன. அந்த முறையை திராவிட முன்னேற்றக் கழக அரசோ, முன்னேற்றக் கழகத் தலைவர்களோ யாரும் விரும்பவில்லை. "நாத்திகம்" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருந்தவர், அந்தப் பத்திரிகைக்கு அப்படிப்பட்ட தலைப்பு போட்டு, முன்னேற்றக் கழகப் பத்திரிகை என்று போடக்கூடாது, அப்படித் தான் போடுவேன் என்று சொன்னால் கட்சியிலிருந்து விலக்கப்படும்" என்று சொன்னார்கள். அதன் பிறகு அவர் முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி, காங்கிரஸ் கட்சியில் இடம் பெற்று பத்திரிகை நடத்துகிறார். அந்தப் பிரச்சினைகளையெல்லாம் ஆராய நான் விரும்பவில்லை. நேற்று, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் "மறவன் மடலிலே" வந்த ஒரு கட்டுரையைப் பற்றிக் குறிப்பிட்டு, விசாரிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள், நான் படித்துப் பார்த்ததில் பிற பத்திரிகைகளில் அப்பேர்ப்பட்ட செய்திகள் எதாவது போட்டிருந்தால், அதற்குப் பதிலாக சில சமயம் இவர்கள் போடுகிறார்கள். அப்படிப் போடுகிற முறைகளைக் கூட நாங்கள் ஏற்றுக்கொள்வது இல்லை. அதற்கு நாங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு எழுதியுள்ள பதிலை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

" அன்புடையீர்,

வணக்கம். தங்கள் 22–3–1969-ம் நாள் கடிதம் கிடைக்கப்பெற்றேன். தாங்கள் குறிப்பிட்டிருந்த விபரம் குறித்து "மறவன் மடல்" ஆசிரியருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். இதுபோன்று தொடர்ந்து எழுதாமல் இருக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். காங்கிரஸ் சார்புடைய ஏடுகள் பலவற்றில் நான்கைந்து ஆண்டு காலமாக எழுதப்பட்டு வருகின்ற கண்ணியமற்ற எழுத்துக்களையும் தாங்கள் கண்டிருப்பீர்கள். பொதுவாக எல்லா தரப்புப் பத்திரிகைகளின் தரம் உயர்வதற்கு நாமெல்லாம் கூடிப் பேசுவது நலம் என எண்ணுகிறேன்.

நம்முடைய முடிவுக்குக் கட்டுப்படாத பத்திரிகைகளை நமக்குத் தொடர்புடைய பத்திரிகை அல்ல என அறிவித்துவிடுவது தமிழ்நாட்டு அரசியல் பண்பாட்டுக்கு உகந்தது எனக் கருதுகிறேன். தாங்கள் விரும்பினால், இதுபற்றி பேச நான் தயாராக இருக்கிறேன்.

அன்புள்ள,
மு. கருணாநிதி."

என்று 26–3–69 அன்று நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு எழுதியிருக்கிறேன். நம்முடைய முடிவிற்கு எந்தப் பத்திரிகையேனும் கட்டுப்படாவிட்டால் அதற்கும் அந்தக் கட்சிக்கும் சம்பந்தம் இல்லை என்பதாக அறிவித்துவிட வேண்டும் என்பதாகவும் நாங்கள் விரும்புகிறோம். இது பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சம்மதித்தால் நான் உட்கார்ந்து பேசத் தயாராக இருக்கிறேன். அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : திரு. சுப்பிரமணியம் தங்களுக்கு எழுதிய கடிதத்தையும் படித்துக் காட்டுங்கள்.

**மாண்புமிகு மு. கருணுநிதி :** அவர் 22-3-69 அன்று எழுதியுள்ள கடிதம் இதுதான்—

" அன்புடையீர்,

18-3-1969 தேதியிட்ட "மறவன் மடல்" என்ற பத்திரிகையில் வெளிவந்திருக்கும் ஒரு பகுதி என் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது. வேலை மிகுதியால் தாங்கள் அதைக் கவனிக்காதிருந்திருக்கலாம். அதை இத்துடன் அனுப்பியுள்ளேன். பெண்களைப் பற்றி இவ்வாறு எழுதியது முறையா என்பதுபற்றி சிந்திக்க வேண்டுகிறேன். தவறு என்று தாங்கள் கருதினுல் இவ்வாறு பத்திரிகைகளில் எழுதாமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
சி. சுப்பிரமணியம்."

என்று எழுதியிருக்கிருர்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் தலைவரும், ஆளும் கட்சித் தலைவரும் இதுபற்றி கடிதம் பறிமாறிக் கொண்டிருப்பதற்கு மிகுந்த நன்றி. இந்த விஷயத்தில் இரு கட்சித் தலைவர்களும் கூடி ஒரு நல்ல முடிவை எடுத்துவிட்டால் அதறகுப் பூர்ணமாக ஆதரவு எங்கள் பக்கத்திலிருந்து உண்டு என்று சொல்ல விரும்புகிறேன். இன்று இந்தப் பத்திரிகை தவருன முறையில் எழுதுவார்கள் என்ருல் நாளைக்கு மற்றொரு பத்திரிகை எழுதுவார்கள். தவருன கருத்தை யார் எழுதினுலும் சரியல்ல. இன்றைக்கு வேறு ஒருவர் மீது நாம் மாசு கற்பிக்கலாம். நாளை நமக்கே அது வரும்போது நம் மனம் புண்படும்படியான நிலைமை ஏற்படும். ஆகவே இது பற்றி கட்சித் தலைவர்கள் கூடி ஒரு வரன்முறையை ஏற்படுத்திக்கொள்வது நல்லது என்று சொல்ல விரும்புகிறேன். அந்தப் பத்திரிகையில் எழுதினுர்கள், ஆகவே இந்தப் பத்திரிகையில் எழுதுகிறேம் என்கிற போக்கே இருக்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அன்றைக்குப் பஞ்சாலைகளைப் பற்றிக் குறிப்பிட்டேன். இந்தப் பிரச்சினையை ஒத்திவைக்கக்கூடாது. இதை உடனடியாகத் தீர்ப்பதற்கு முன்வந்தாக வேண்டும்.

மேலும், அன்றைக்குப் பேசுகிறபோது குறிப்பிட்டேன். கட்சித் ஊழியர்களின் மீது தவருன வழக்குகள் போடப்படுகின்றன. சாதாரண கிரிமினல் வழக்குகளைவிட அரசியல் குரோதத்தின் காரணமாக போடப்படுகிற வழக்குகள் பலவிதமாக இருக்கின்றன. இதற்கு ஒரு முடிவு எடுக்கவேண்டும். இல்லை என்ருல் காந்தி நூற்ருண்டு விழா கழிந்த பிறகு இதுபற்றி ஒரு போராட்டமே நடத்த வேண்டியிருக்கும் என்று சொன்னேன். இது போன்ற ஒரு சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே சொன்னேன். ஆனுல் அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் என்ன ? "எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிரட்டுகிருர்கள். போராட்டம் நடத்தினுல் போலீஸ்காரர்கள் பூப் பறித்துக் கொண்டு இருப்பார்களா ?" என்று சொல்லியிருக்கிருர்கள். பொறுப்புள்ள அமைச்சர் இப்படியா சொல்வது ? காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் போராட்டம் நடத்தினுல் போலீஸ்காரர்கள் பூப்பறித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனுல் அவர்களுடைய கூட்டணிக் கட்சிக்காரர்கள் போராட்டம் நடத்தினுல் பூப்பறித்துக் கொண்டிருப்பார்கள் என்பது பொருளா ?

**மாண்புமிகு திரு மு. கருணுநிதி :** வன்முறைச் செயல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டாலும் போலீஸ்காரர்கள் அவர்கள் இஷ்டத்திற்குச் செய்துகொண்டுபோகட்டும் என்று விட்டுவைக்க மாட்டார்கள். எந்தக் கிளர்ச்சி நடைபெற்ருலும் அது வன்முறை என்கிற அளவுக்குப்போனுல் போலீஸ்காரர்கள் தங்கள் இஷ்டத்திற்கு நடவடிக்கைகள் எடுப்பார்கள். அவர்கள் கை பூப்பறித்துக்கொண்டிருக்காது என்றுதான் சொன்னேன். அதையே இப்போதும் சொல்கிறேன்.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வன்முறைச் செயல்களில் யார் ஈடுபட்டாலும் அனுமதிக்க முடியாது. நானே வன்முறைச் செயலில் ஈடுபட்டால் சுட்டுத் தள்ளுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனுல், எந்தக் காலத்திலும் நாங்கள் வன்முறைச் செயலில் ஈடுபட மாட்டோம். நியாயமான முறையில், அஹிம்சா முறையில், சத்திய முறையில்தான் மக்களுக்கு உள்ள நிலைமையை எடுத்துச் சொல்வோம். வன்முறை தவறு என்றேதான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (ஒரு குரல் :—மதுரையில் நடந்தது என்ன ?) நெய்வேலியில் பண்ணியதை விடவா மதுரையில் பண்ணிவிட்டார்கள் ? அந்தக் கதை எல்லாம் வேண்டாம்.

இன்றைக்கு நாட்டில் உள்ள நிலைமை என்ன ? மாணவர்களுக்குப் படிப்பு கெடும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேலை பாதிக்கும்படியான தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிடம் இருந்து மானியம் கேட்டிருக்கிருேம் என்று சொல்கிருர்கள்.

மத்திய சர்க்காரிடம் இருந்து உரிமைகளைப் பெறுவதில் ஆட்சேபணை கிடையாது. ஆனுல் உங்களுக்கு இருக்கிற வசதியைப் பயன்படுத்திக் கொண்டீர்களா ? உங்களுடைய வசதியைப் பூரணமாக பயன்படுத்திக் கொண்டு தானே பிறரைக் குறை சொல்லவேண்டும்?

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். நம்முடைய மாநிலத்தில் வசூலாகிற இன்கம்டாக்ஸ் தொகையில் மத்திய சர்க்கார் நமக்கே 75 சதவீதம் கொடுத்துவிடுகிருர்கள். 25 சத வீதம்தான் மத்திய சர்க்காருக்குப் போகிறது. ஏன் நீங்களே இந்த இன்கம்டாக்ஸை வசூல் செய்து, அவர்களுக்கு 25 சதவீதம் கொடுத்துவிட்டு, பாக்கியை நீங்களே வைத்துக் கொள்ளக்கூடாது ? அந்தப் பொறுப்பை எடுத்துக்கொள்வீர்களா ?

பாதுகாப்புக்காக எதற்கு 100 கோடி ஒதுக்கவேண்டும் என்று கேட்கிறீர்கள். பாகிஸ்தான் ரகளை, சீனுக்காரன் ரகளை எல்லாம் இருக்கிற போது இது பொறுப்புள்ள வாதமாக இருக்கமுடியுமா ? மத்திய சர்க்காருக்கு தேசப் பாதுகாப்புப் பொறுப்பு இருக்கிறது. மற்ற மாநிலங்களை எல்லாம் கவனித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த மாநிலத்திற்கு ஏன் இவ்வளவு கொடுத்தார்கள், இந்த மாநிலத்திற்கு ஏன் இவ்வளவு கொடுத்தார்கள் என்பது எல்லாம் சரியான வாதமாகுமா? கேரளாவை எடுத்துக் கொண்டால் அந்நியச்செலாவணி 100 கோடிக்கு மேல் அங்கே வருகிறது. அங்கே இருக்கிற அனுகூலம் நமக்கு இருக்க முடியாது. ஆந்திராவில் இருக்கிற அனுகூலம் நமக்கு இருக்க முடியாது. டெல்லிக்கு போகிருர்கள். நன்ருகப் பேசி வருகிருர்கள். நல்லமுறையில் வெற்றிகரமாகவும் பேசிக்கொண்டு வருகிருர்கள். ஆனுல் இங்கே வந்தவுடன் என்ன நிலைமை ? மாநில சுய ஆட்சிக்காகப் போராட்டம் நடத்துவேன் என்று ம.பொ.சி. அவர்கள் சொன்னுர்கள் என்ருல், உடனே நமது முதல் அமைச்சர் அவர்கள் "போராட்டத்தில் நான்தான் முதலில் குதிப்பேன்" என்று சொல்லியிருக்கிருர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** பத்திரிகையில் வருகிற தலைப்பை மட்டும் படித்துவிட்டு விமர்சனம் செய்யப் புகுவது நியாயம் இல்லை. நான் அன்றைக்கு என்ன குறிப்பிட்டேன் என்ருல்—"எங்கள் கருத்துக்கள் ஏற்கப்படாவிட்டால் மத்திய அரசு மாநில அரசுகளை அடிமைகளைப்போல் நடத்துகிற முறை மாற்றப்படாவிட்டால் நாங்களே போராட்டத்தை நடத்துவதற்குச் சளைத்தவர்கள் அல்ல" என்று குறிப்பிட்டிருக்கிறேன். "போராட்டத்தில் குதிப்பார்" என்று பத்திரிகை தலைப்பிட்டதை வைத்துக்கொண்டு விமர்சனம் செய்வது சரியல்ல.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** பத்திரிகைத் தலைப்பை மட்டும் பார்த்து பேசவில்லை. மேலே இருந்து கீழ் வரை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். படித்துவிட்டும்தான் பேசுகிறேன். அந்தப் பேச்சிலே கொஞ்சம் வாசனை—பிரிவினை வாசனை அடிக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** போராட்டம் என்று சொன்னால் பிரிவினை வாசனை அடிக்கிறது என்றால் அவர்கள் போராட்டம் நடத்தப் போவதாகச் சொன்னார்களே, அதிலும் பிரிவினை வாசனைதான் அடிக்கிறதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதுதான் பிரச்சினை. அதைச் சொன்னால் இதைச் சொல்வது. நாங்கள் பிரிவினை கூடாது என்பதற்காகவே பலவிதமான தியாகங்களைப் புரிந்து வந்தவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாகிஸ்தான் என்று ஏன் பிரித்தீர்கள் ?

**திரு பி. ஜி. கருத்திருமன் :** அது அரசியல் அமைப்பிலேயே ஏறபட்டது. அதைக்காட்டி இப்போது தனித் தமிழ்நாடு வேண்டுமென்று கேட்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதே தனித்த தமிழ்நாடு வேண்டும் என்று கேட்கிற பிரிவினை உணர்ச்சியைச் சார்ந்தது என்றால் திரு. பிரம்மானந்த ரெட்டி அதையே சொல்கிறாரே, அவர் பிரிவினைக் கட்சியைச் சார்ந்தவரா? திரு காமராஜ் அவர்கள் இந்தியப் பிரதமர் மாநில முதல் அமைச்சர்களை எல்லாம் கூட்டி இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே, அவர் பிரிவினை வாதி. ா ? மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பது எப்படிப் பிரிவினை ஆகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் விளக்கவேண்டும்.

பி. ப. 1-30 **திரு. பி. ஜி. கருத்திருமன் :** மாநிலத்திற்கும் மத்திய சர்க்காருக்கும் உள்ள அதிகாரங்களைப்பற்றிப் பேசுவதை, பிரிவினை என்று சொல்லக் கூடிய முட்டாள் அல்ல நான். நான் சொல்லக்கூடியதெல்லாம், பேசக்கூடிய முறைப்படிப் பேசுங்கள் என்பதுதான். இது என் ஸ்டன்ட் ? தமிழரசுக் கட்சித் தலைவர் மாநில சுயாட்சி வேண்டுமென்று போராட்டமென்று குதிக்கிறார், நீங்களும் குதிக்கிறீர்கள்......

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** கல்வியமைச்சர் அவர்கள் ஸ்டன்ட் என்று சொன்னதற்காக அவ்வளவு வருத்தப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, ம.பொ.சி. அவர்கள் இந்தச் சபையிலே இல்லாத போது ஸ்டன்ட் என்று சொல்கிறார்கள், அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்டசபைக்கு வந்திருக்க வேண்டியது அவருடைய கடமை. என்னுடைய பொறுப்பிலே நான் சொல்லிக் கொள்கிறேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வந்திருக்கிறாரா என்று கேட்பது சரியல்ல. ஸ்டன்ட் என்று சொல்லலாமா ? அவர் இல்லாதபோது அப்படிச் சொல்லலாமா ? எதிர்க்கட்சித் தலைவரே, "அப்படிச் சொல்லலாமா ?" என்று முன்பு கேட்டுவிட்டு, இப்போது, அந்தச் சொல்லை உபயோகப்படுத்தலாமா அவரே என்றுதான் முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கல்வியமைச்சரே சொல்லிவிட்டார். கல்வியமைச்சர் சொன்னமாதிரி நான் சொன்னேன். கல்வியமைச்சர் சொன்னது தவறு என்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே கொஞ்ச நேரத்திற்கு முன்பு ஸ்டன்ட் என்று சொன்னால் அது தவறு என்று சொல்லிவிட்டு இப்பொழுது அவர்களே அதைச் சொல்லுகிறார்களே என்றுதான் சொன்னேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், தமிழரசுக் கட்சித் தலைவரே போராட்டம் என்று குதிக்கிறார் என்று சொன்னார்கள். குதிக்கிறார் என்று சொல்வது சரியா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ரொம்ப ஜோராக இருக்கிறது !



அடுத்தபடியாக, விவசாயிகளுடைய பிரச்சினையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே பஞ்ச நிலைமை இருக்கிறது. வறட்சி நிலைமை இருக்கிறது. 31-ம் தேதியன்று முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தை கூட்டி விவாதிக்க வேண்டுமென்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அப்படி நடக்கும்படியான சந்தர்ப்பத்திலே சம்பந்தப்பட்ட எல்லா ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்ட்ஸ்ஸும் வந்தால் நன்றாக இருக்கும். சில பேர்கள் பாசனத்தைப்பற்றிச் சொல்வார்கள். சில பேர்கள் வேறு வேறு கருத்துக்களைப் பேசலாம். எனவே, அதற்கான செயற்குறிப்பை இரண்டு நாட்களில் தயாரித்துவிட்டால் எல்லோரும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கும் என்பதை என்னுடைய ஆலோசனையாக இந்த நேரத்திலே தெரிவிததுக்கொள்கிறேன்.

விலைவாசியைப்பற்றிச் சொன்னால் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், அது தவறு, இது தவறு என்று சொல்வார்கள். படியரிசியும் போடுவார்கள், விலையும் அதிகமாகக் கொடுப்பார்களா என்று சொல்வார்கள்? தேர்தல் காலத்திலே அவர்கள் என்ன என்ன சொன்னார்கள் ? பெரிய பெரிய போஸ்டர்கள் போட்டார்கள், ஒரு படியரிசி போடுவோம் என்று போஸ்டர் போட்டார்கள். அதற்குக் கீழே என்ன வாசகம் எழுதினார்கள்? விவசாயிகளுடைய நலன் பாதிக்கப்படாமல் படியரிசி போடுவோம் என்று சொன்னார்கள். விவசாயிகளுடைய நலன் பாதிக்கப்படாமல் இருப்பது என்பது எங்களுடைய வயிற்றில் அடிப்பதா ? விவசாயிகளுடைய நலன் பாதிக்கப்படாமல் படியரிசி போடுவோம் என்று சொன்னீர்கள். நீங்கள் சொன்னதைத்தான் கேட்கிறோம். நீங்கள் சொல்லாததை நாங்கள் கேட்கவில்லை. ஏர் முனை இருந்தால்தான் எழுது முனை சரியாக இருக்கும். இப்பொழுது இந்த அப்ரோப்பிரியேஷன் பில் கொண்டு, வந்திருக்கிறார்கள். 216 கோடி ரூபாய்க்கு என்றால், அங்கே ஏர்முனை சரியாக இருக்கவேண்டும். விவசாயிகளுக்குக் கட்டுபடியான விலை இருக்கவேண்டும். விவசாயைப் பதுக்கல்காரன் என்றோ, கடத்தல் காரன் என்றோ கருதக்கூடாது. பல விதமான புகார்கள் வருகின்றன.

ஒரு கருத்தைச் சொன்னார்கள். 10 ஏக்கருக்கு மேல் உள்ளவர்கள் தான் பணக்காரர்கள் அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதில்லை, கீழே உள்ள விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். வெளி மார்க்கெட்டிலே என்ன விலை இருக்கிறது ? நடமாட்டம் தடைவேண்டுமென்று சொல்கிறீர்கள். எவ்வளவுக்கெவ்வளவு நடமாட்டத்தைத் தடைசெய்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு விலை ஏறிக்கொண்டேதான் இருக்கும். யார் சமூக விரோதிகளாக இருக்கிறார்களோ அவர்கள் தப்பித்து கொள்கிறார்கள். கொள்முதலுக்குக் கொடுக்கக்கூடாது என்று பணக்காரர்கள் தான் சொல்கிறார்கள். அவர்கள்தான் ஹைகோர்ட்டுக்குப் போகிறார்கள். ஆகவே, பண வசதியுள்ளவர்கள் கோர்ட்டுக்குப் போய் விடுகிறார்கள், அந்த வசதியில்லாதவர்கள் அப்படிச் செய்யமுடியவில்லை, அதனால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஹைகோர்ட் இதிலே என்ன தீர்ப்புக் கொடுக்கிறது ? உற்பத்தியை வைத்து விலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறது ? நாங்கள் சொன்னால் தப்பு. ஹைகோர்ட் சொல்கிற நேரத்திலே அதற்கு ஸ்டே போடுகிறார்கள். விவசாயிகளை நீங்கள் கவனிப்பதே கிடையாதே. தாசில்தார் அடிப்பட்டார் என்றெல்லாம் புகார்கள் வருகின்றன. கொள்முதல் நியாயமாகக் கொடுக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. தொந்தரவுகள் இருக்கத்தான் இருக்கின்றன. தவறுகள் இருக்கத்தான் இருக்கின்றன, கட்டாயம் இருக்கத்தான் இருக்கின்றன, தப்பித்துக்கொள்கிறவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். ஏழை விவசாயிகள், சாதாரண விவசாயிகள்தான் மாட்டிக்கொள்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்றால் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி சர்க்காரே நியாயமான விலையைக் கொடுக்கவேண்டும்.

நிதியமைச்சர் அவர்கள் பேசும்படியான சமயத்திலே அன்றைக்கு ஜமாபந்தித்திட்டம், போர்டு ஆஃப் ரெவின்யூ இவற்றை ஒழித்துவிட்டோம் என்று சொன்னார்கள், என் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசினார்கள். அப்படி எடுத்துவிட்டால் அதைவிடத் திறம்பட வேலை செய்யக்கூடிய

அமைப்பு இருக்கவேண்டும். 1952-லே ராஜாஜி அவர்கள் இதை யோசித்தார்கள். இதை எடுத்துவிட்டு ஒரு பிராந்தியத்திற்கு ஒரு கமிஷ்னர் என்று போட்டு நான்கு பிராந்தியங்களுக்கு நான்கு கமிஷனர்கள் போட்டு, கலெக்டர்கள், கலெக்டர்களுக்கு மேலே கமிஷனர்கள், கமிஷனருக்கு மேலே சர்க்கார் என்றெல்லாம் போட்டு அதற்காக நிர்வாகச் செலவுகள், கட்டடங்கள் அதிகமாகப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. சென்னையிலே போர்டு ஆப் ரெவின்யூ அதிகமாகச் செலவாகாமல் இருக்கக்கூடிய அமைப்பு. ரெட் டேப்பிஸத்தைக் குறைக்கலாம். போர்டு மெம்பர்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் திறமையானவர்கள் என்று. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் முடிவு எடுக்கவேண்டும். ஒவ்வொருவரும் தனித்தனியாக இருந்து ஒவ்வொரு இடத்திற்குச் சென்றுவிட்டால், எப்படி நல்ல முடிவு எடுக்கமுடியும் ? எனவே போர்டு ஆப் ரெவின்யூவை ஒழித்தாலும்கூட வேறு அதைவிடத் திறமையான அமைப்பை ஏற்படுத்தினால் செலவுகள் அதிகமாகும். எஃபிஷியன்ட் அட்மினிஸ்டிரேஷன் குறையும் என்ற காரணத்தால் அதை நிறுத்திவைத்திருப்பதாக அறிகிறேன். அப்படி அதை ஒழித்துவிட்டாலும் அதைவிடத் திறமையாக நடக்கிற நிர்வாக அமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரித் தண்ணீர் வீராணம் ஏரியிலிருந்து வரும் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணாவிலிருந்து கூட தண்ணீர் வரும் என்று டெல்லியிலிருந்து வந்தவுடன் சொன்னார்கள். அங்கே அடிக்கல் நாட்டி காவேரி அம்மன் கொண்டுவந்து வைத்து திறப்புவிழாவை நடத்திவிட்டோம். இப்பொழுது கிருஷ்ணாவிலிருந்து வரும் என்று சொன்னார்கள். டெல்லி பாராளுமன்றத்திலே நான் இரிகேஷன் மீது பேசுகின்றபோது, கிருஷ்ணா நீரை இங்கே கொண்டுவரலாம் என்று சொன்னேன். அப்படி 120 கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டத்தை ஏற்படுத்திக் கொண்டுவந்தால் அதனால் செங்கற்பட்டு, தென்ஆற்காடு வடஆற்காடு போன்ற மாவட்டங்களுக்குப் பாசன வசதிகள் நிறையக் கிடைக்கும், அதற்கு 150 கோடி ரூபாய் ஆனாலும் பரவாயில்லை. இப்பொழுது 110 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். இன்னும் அதற்காகக் கொஞ்சம் மத்திய சர்க்காரிடமிருந்துகூட பெற்று பம்பு பண்ணுத-கிரேடியண்ட்—முறையில் தண்ணீர், பெறுவதைப்பற்றி பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது டாக்டர் கே. எல். ராவ் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். நெல்லூர் வழியாகக் கொண்டுவந்தால் சென்னையிலே குடிநீர்ப் பஞ்சமே எப்போதும் வராத நிலைமையில் இருக்கும். அவர்கள் அதற்காக ஓவர் ஹெட் சார்ஜஸ் இல்லாத நிலைமை இருக்கும் என்று கூட அவர்கள் சொன்னார்கள். எனவே இதைச் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது சம்பந்தப்பட்ட ஆந்திர அமைச்சரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. இதுபற்றிப் பேசி அதிகாரிகள் நோட் அனுப்பியிருக்கிறார்கள். முதலில் அதிகாரிகள் மட்டத்திலே பேசப்பட்டு, பிறகு அமைச்சர்கள் மட்டத்திலே பேச்சுவார்த்தைகள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நன்றி. டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தால் 100 வருஷத்திற்குக்கூட சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம் வராது. அதோடு பாசன வசதிகளும் அதிகமாகப் பெருகும். 150 கோடி ரூபாய் திட்டத்தை......

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 150** கோடி ரூபாய் வேண்டியதில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படி வேண்டியிருந்தாலும் பரவாயில்லை என்று சொன்னேன். 110 கோடி ரூபாய் வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். போதவில்லையென்றால் மத்திய அரசிடமிருந்துகூட வாங்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இதுவரை எத்தனையோ அறிக்கைகள் தயாராக இருந்தும் இன்னும் கொடுக்கப்படாத நிலைதான் இருக்கிறது. திங்கட்கிழமை சட்ட மன்றக் கூட்டத்தின் கடைசி நாள். சோமசுந்தரம் அறிக்கை இது



வரை வரவில்லை, வேட்டைக்காரன்புதூர் தங்கவேல் கவுண்டர் அடிக்கப்பட்டதைப் பற்றிய கெய்வார் கமிஷன் அறிக்கை வரவில்லை. தீ விபத்து அறிக்கை வராவிட்டாலும் தீ விபத்து ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. அதற்கு யார் காரணம் என்று இன்னும் தெளிவாகச் சொல்லவில்லை, துப்பாக்கிச் சூடுகள் 11 இடத்தில் நடந்தன. எந்தெந்த இடத்தில் ஜுடிஷியல் என்குயரி வைத்தார்களோ அதெல்லாம் வரவில்லை. கீழ்வெண்மணி சம்பவத்தைப் பொருத்தவரை நீதி விசாரணை என்பது கூலிப்பிரச்சினை சம்பந்தப்பட்ட வரையில்தானே தவிர, ஏற்பட்டுவிட்ட சம்பவங்களைப் பற்றி விசாரணை அல்ல. இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஒரு கோழி செத்தால்கூட நீதிவிசாரணை வேண்டுமென்று கேட்கக் கூடியவர்கள், இதற்கு விசாரணை வேண்டாமென்று கூறுகிறார்கள். 43 பேர் எரிந்த இந்த நிகழ்ச்சிக்கு நீதிவிசாரணை தேவையில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதோடு காங்கிரஸ்காரர்கள் பொறுப்பு என்று வேறு கூறுகிறார்கள். அவ்வாறு சொன்னதற்காக பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னதற்காகப் போடப்பட்ட கமிட்டியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அடுத்த செஷனில் எடுத்துக் கொள்வது என்று சொன்னால் ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்றாகிவிடும். "Strike while the iron is hot" அடுத்த நாளே அதற்கான கமிட்டியைப் போட்டிருக்கவேண்டும். சர்க்காரிடத்தில் தான் தயக்கம் இருக்கிறது என்றால்—நான் சபாநாயகர் அவர்களைத் தவறாகச் சொல்லவில்லை—சுறுசுறுப்பாக இருக்கிறீர்கள், திறம்பட நடத்துகிறீர்கள்; இதற்கு ஏன் கமிட்டி போடவில்லை என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

நேற்று முன்தினம், முதலமைச்சர் அவர்கள் சில சலுகைகளையும் உரிமைகளையும், சவுகரியங்களையும் எதிர்க் கட்சித் தலைவருக்கு அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மரபு காக்கப்பட வேண்டும். அதற்காக நான் அவரை மிகவும் பாராட்டுகிறேன். நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்றவர்கள் நல்ல முறையில் பணி செய்வதற்காக அந்தச் சலுகைகளையும், சவுகரியங்களையும் கொடுத்ததைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் கொஞ்சம் யோசனை செய்து பார்த்தேன். இப்போது நம் நாட்டில் இருக்கும்படியான பஞ்ச நிலைமை, பற்றாக்குறை பட்ஜட், பசி, பட்டினி நிலை, அதற்காக மத்திய சர்க்காரையே உதவி கேட்கின்ற நிலை அவ்வளவையும் பார்க்கும்போது பொதுமக்கள் என்ன நினைப்பார்கள், சர்க்காருக்குக் கூடக் கெட்ட பெயர் ஏற்படக்கூடுமே என்ற காரணத்தால் இந்த நேரத்தில் அதை ஏற்றுக் கொள்வது அவசியமா என்று யோசித்தேன். வீடு கொடுத்திருக்கிறார்கள், பர்னிசர் கொடுத்திருக்கிறார்கள், முன்பு இருந்ததை விட பல சவுகரியங்களைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பரிபூரணமான நன்றியைச் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில், நாடு இருக்கும் நிலைமையில், பற்றாக்குறை பட்ஜட் உள்ள இந்த நேரத்தில் அதை ஏற்றுக் கொள்ளாது, நல்ல பட்ஜட்டாக வந்து, மக்களுக்கு சுபீட்ச வாழ்வு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் யோசித்து எடுத்துக் கொள்ளும்படியான நிலைமையில் இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சட்டசபை, தேர்தல் போன்ற மானியங்களின் மீது பேசும்போது இதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கட்சித் கூட்டத்தில் கூட இதைப் பற்றி விவாதித்ததாகக் கூறினார்கள். யார் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தாலும், எந்தக் கட்சி எதிர்க் கட்சியாக இருந்தாலும் இந்தச் சவுகரியங்கள் எல்லாம் செய்து தரப்பட வேண்டுமென்று மறைந்த அண்ணா அவர்களுக்கே எழுதியிருக்கிறேன் என்று அவர்கள் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல், எதிர்க் கட்சித்தலைவருக்கு செக்ரடேரியட் டிலிருந்து கடிதங்கள் வருகின்றன, அவற்றுக்கெல்லாம் பதில் எழுதி சர்க்காருக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது ; அதற்கு சில சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லும் போது பற்றாக்குறை பட்ஜட் இல்லையா ? முந்தாநாள் அவ்வாறு பேசும் போது மக்களுக்கு கஷ்டங்கள் இல்லையா ? திடீரென்று இப்படி ஏதாவது சொல்லுவார்கள் என்பதை நாங்கள் மனத்தில் வைத்துக்கொண்டுதான் இருந்தோம். அண்ணா அவர்களுக்கே இதைப் பற்றியெல்லாம் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அண்ணா அவர்களே கூட இந்த பட்ஜட்டிலே இதை

யெல்லாம் செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். அந்த அடிப்படையிலேதான் கருத்தை அறிவித்தேன். அன்றையதினம் அறிவிக்கப்பட்ட கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறேன். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்லவில்லை. இந்தச் சவுகரியங்கள் எல்லாம் தேவைதான். மீண்டும் யோசிப்பதற்குகூடச் சந்தர்ப்பம் கிடையாதா ? எதிர்க் கட்சித் தலைவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் மறைந்த முதலமைச்சர் அவர்களிடத்திலேயே கூறியிருக்கிறேன். அன்றே இவற்றைக் கொடுத்திருந்தால் வேறு நிலை. அன்று சுபீட்சமான நிலைமை இருந்தது. இப்போது இருக்கும்படியான சூழ்நிலையில் . . . . . .

[Thiru D. S. Authimoolam: you need not fear.

எனக்கு மனசாட்சி இருக்கிறது, சர்க்காருடைய செலவுகளே பற்றுக்குறையாக இருக்கும்போது அதிகப்படியாக இந்தச் செலவு வேண்டியதில்லை என்று இந்த நேரத்தில் நினைக்கிறேன். தாங்கள் காட்டிய பண்பாட்டுக்கு நன்றி. ஆகவே, எப்போது வேண்டுமோ அப்போது யோசித்துப் பெற்றுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காங்கிரஸ் கட்சியின் சார்பில் வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கின்ற நேரத்தில் தலைவரைக் கலந்துகொண்டுதான் கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நண்பர் திரு. ஜார்ஜ் அவர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணை "மாமன்ற உறுப்பினர்களுடைய சம்பளத்தை அதிகமாக்க வேண்டும்" என்பது பற்றியதாகும். அவர்கள் நாட்டிலுள்ள பஞ்ச நிலைமையைக் கருதாமல் அந்த வெட்டுப் பிரேரணையைக் கொடுத்தார்களா என்று தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அன்றைக்கு ஒத்துக்கொண்டார்கள். அவர்களாகவே வலிந்து அண்ணா அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அன்று அப்படிச் சொன்னவர், கடிதம் எழுதியவர், முந்தாநாள் கூடச் சொன்னவர் இன்று வேண்டாமென்று மறுக்கக் காரணம் என்ன என்று புரியவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன் செய்ததைத் தவறு என்று நான் குற்றம் சாட்டவில்லை. மரபைக் காப்பதற்காகச் செய்த காரியத்தை நன்றியறிதலோடு பாராட்டுகிறேன். இப்போது நாடு இருக்கும்படியான நிலைமையில் யோசனை செய்ய வேண்டியிருக்கிறது. சர்க்கார், நாங்கள் சொன்ன பிரச்சினைகளை எல்லாம் நடத்துவார்களானால் சந்தோஷமான சூழ்நிலை ஏற்படும்போது இதை ஏற்றுக்கொள்வது பற்றிக் கூறுகிறேன் என்று கூறி அமருகிறேன். வணக்கம்.

**திரு. என். சங்கரய்ய :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது "இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி கோழி செத்தாலும் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்பார்கள், ஆனால் கீழ்வெண்மணி சம்பவத்திற்கு அவர்கள் வேண்டாமென்று கூறுகிறார்கள்" என்று கூறினார்கள். இதைப் பற்றித் திரும்ப திரும்ப எங்கள் கட்சியின் சார்பில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றத்திற்காக பல மிராசுதார்கள் கைது செய்யப்பட்டு வழக்கில் இருக்கிறார்கள். அவர்கள் தப்பக் கூடாது. இதிலே என்குயரி கமிஷன் வந்தபோது, கமிஷன் இருக்கிறது என்ற காரணத்திற்காக அந்த வழக்கை நடத்தக்கூடாது என்ற நிலை ஏற்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் தப்பிவிடக்கூடாது என்ற காரணத்தால் தான், 44 பேரை எரித்த குற்றம் சாட்டப்பட்ட மிராசுதார்கள் தப்பித்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகதான் நீதி விசாரணை வழக்கு நடக்கும்போது தேவையில்லை என்று சொன்னோம். அதற்கு ஏதாவது வழி சொல்வார்களானால் எந்த வழியில் வேண்டுமானாலும் விசாரிப்பதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் கட்சித் தலைவர் திரு. ராமமூர்த்தி அவர்களே நீதி விசாரணை வேண்டாமென்று கூறியிருக்கிறார்கள். அதைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டார்கள். நாங்கள் கீழ்வெண்மணி சம்பவத்திற்கு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறோம்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் சொல்லுவது, நீதி விசாரணை நடத்தப்பட்டால் வழக்கு நடத்த முடியாது. பஸ் தொழிலாளர்-மாணவர் நிகழ்ச்சியில் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்துவிட்ட காரணத்தால் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது போல் இதிலும் ஏற்பட்டுவிடக் கூடாது, வழக்கு தடைப்படக்கூடாது, மிராசுதாரர்கள் அல்லது குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளக்கூடாது என்பது தான். அதனால்தான் நீதி விசாரணை வேண்டாமென்று அரசு தீர்மானித்தது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நமது முதலமைச்சர் அவர்கள் இம்மாதிரி சில வசதிகளை எதிர்கட்சித் தலைவருக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்ற உயரிய கருத்தை சொன்னார்கள். அதை இந்தச் சபையில் உள்ள நாங்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இப்போதுள்ள பற்றுக்குறை நிலையில் வேண்டாமென்று கூறினாலும், இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனநாயகமுறைப்படி காட்டப்படுகின்ற மரியாதை, பண்பு என்ற கருத்தில் சட்டத்தை நிறைவேற்றி விடுங்கள். அவரைப் பொருத்த வரையில் அவர் பீரியட் வரை வேண்டாமென்று எழுதிக் கொடுத்து விடட்டும். அது சட்ட பூர்வமாக ஆக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் சொன்ன அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு அது சட்டமாக்கப்படும் என்பதை எடுத்துச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் பேசுகிற நேரத்தில் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பு செஸ் நிதியிலிருந்து ரோடு போடவேண்டிய அவசியத்தை வலியுறுத்திக் கூறினார்கள். அவருடைய கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால், அதில் தவறாக அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்தார்கள். அரசியல் நோக்கோடு அந்த ரோடு போடுகிற விஷயத்தில் ஏதோ தவறு நடந்ததுபோல் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அவருடைய தொகுதியில் உள்ள அருணா சர்க்கரை ஆலைப் பகுதியில் ஒரு ரோடு 1968–69-ல் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரோடிற்காக எரையூர்-கந்தப்பன் குறிச்சியில் 22 மைல் நீளமுள்ள சாலை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது பெரிய ரோடாக இருப்பதால் முதற்படியாக இப்போது 5,50,000 ரூபாய் செலவில் அந்த ரோடு அமைக்கவும் ஐந்து கிலோ மீட்டர் நீளம் தார் போடுவதற்கும் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் அரசியல் நோக்கம் இல்லை என்பதைத் தெரிவிப்பதற்காகவும், அப்படி அந்தக் கருத்தைச் சொல்வதன்மூலம் அது மற்ற சர்க்கரை ஆலைப் பகுதிகளுக்கும் பொருந்தும். ஆகவேதான் இதைச் சொல்கிறேன். ஒவ்வொரு சர்க்கரை ஆலையையும் கலந்துகொண்டு அந்தப் பகுதிக்கு எந்த ரோடு அவசியம் என்று ஆலைக்காரர்கள் சொல்கிறார்களோ அந்த ரோட்டைத்தான் டயரக்டர் அவர்கள் தேர்ந்தெடுத்து அந்த ரோடை சீர்திருத்தம் அல்லது அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். ஒருரோடுக்கு மட்டும் அவர்கள் எஸ்டிமேட் போட்டுக் கொடுத்தால் போதாது. ஒவ்வொரு ஆலையையும் இரண்டு ரோடுகள் போட்டுக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம் என்பதையும் நான் இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பல சர்க்கரை ஆலைகளும் ஷுகர் கேன் செஸ் கொடுப்பதில் சிறிது காலதாமதம் இருந்தாலும், வரவேண்டிய நிலுவை நிறைய இருந்தாலும், பெண்ணாடம் பொறுத்தவரையில் ஒழுங்காக நிதி செலுத்தியிருப்பதால் இந்த ரோடு எடுக்கப்பட்டிருக்கிறது. இதில் அரசியல் நோக்கு எதுவும் இல்லை. நேற்று கூடச் சொன்னார்கள், அரசியல் நோக்கோடு அவர்கள் தொகுதி புறக்கணிக்கப்படுகிறது என்று. பஞ்சப் பகுதியாக, வரட்சிப் பகுதியாக அவர்கள் தொகுதியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் விட்டு கேட்காமல் இருந்தாலும் கூட, அவர்கள் தொகுதியைச் சார்ந்திருக்கிற ஊமங்கலம் பிர்க்கா இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

**திரு. கோ. பூவராகன்:** அமைச்சர் அவர்கள் என் தொகுதியில் அந்த வேலை நடப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது என் தொகுதியில் இல்லை. அந்த ஆலை என் தொகுதியில் இல்லை, அடுத்த தொகுதி

யில் இருக்கிறது. என் தொகுதியில் போட்ட மதிப்பீடுகள் நிறைவேற்றப் படவில்லை. சிறு சிறு சாலைகள், இரண்டு மைல்கள், மூன்று மைல்கள் என்று சாலைகளுக்கு மதிப்பீடு போட்டும் அவை நிறைவேற்றப்படவில்லை. பஞ்ச நிவாரண வேலைகளுக்காக என் தொகுதியில் ஏராளமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி ஒன்றும் இருப்பதாக தெரியவில்லை. பணம் ஒதுக்கியதற்கு வேலை செய்ததாகத் தெரியவில்லை. பெரியகாப்பான் ஓடையில் வாய்க்கால் அமைக்க நான்கு லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் இருந்தது. அதனால் 300 எக்கர் பாசன வசதி பெறும். அது நிறை வேற்றப்பட வில்லை. முதலைமேல்வாரி ஓடைத் திட்டத்திற்காக ஐந்து லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு போட்டு அவற்றையெல்லாம் நிறுத்தியிருக்கிறார்கள். இப்படி நிறையச் சொல்ல முடியும். அரசியல் நோக்கோடு நிறுத்தாமல் அவற்றை நிறைவேற்றினால் அதைப் பாராட்ட நான் காத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. மதியழகன்** உளுந்தூர்ப்பேட்டை அது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் தொகுதி. வறண்டிருக்கும் பகுதிகளில் சேர்க்கப் பட்டிருக்கிறது, உறுப்பினர் அவர்களின் தொகுதியில் ஒரு பகுதியும் திரு. கந்தசாமி படையாச்சி அவர்களின் தொகுதியில் ஒரு பகுதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. நான்கு இலட்சம், மூன்று இலட்சம் என்று கணக்கு சொன்னார்கள். மொத்தமே தற்சமயம் நாம் ஒதுக்கியிருப்பது 15 இலட்சம் ரூபாய்தான். அவர்கள் தொகுதி ஒன்று மட்டுமல்ல, திண்டிவனம், செஞ்சி அறவே வறண்டு போயிருக்கிறது. ஆகவே, பரவலாகப் பகிர்ந்து ரோடு போடுவது,கிணறுகள் எடுப்பது போன்றவைகள் செய்யப்படும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது இந்த சட்ட சபைத் தொடரின் இறுதி நாள் விவாதத்தில் எதிர்க்கட்சிகளின் தலைவர் களும், உறுப்பினர்களும், கடைசியாக எதிர்கட்சி தலைவர் அவர்களும் பேசிய மேலான கருத்துக்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த சட்டமன்றத் தொடர் ஏறக்குறைய நாற்பது நாட்கள் கொண்ட தாக இருக்கிறது. உறுப்பினர்கள் நல்ல அரிய கருத்துக்களைத் தெரிவித் திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல், இந்த மாநிலத்திலுள்ள மக்களின் நலன்களுக்காகத் தான் நாம் இங்கு விவாதம் செய்கிறோம் என்ற அளவில் 31-ம் தேதி அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கு ஒரு தீர்மானம் கொண்டுவர இருக்கிறார்கள். நம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற துயரமிக்க நிலையை விளக்குவதற்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறுவதற்காக, மத்திய அரசிட மிருந்து உணவுப்பொருள் பெறுவதற்காக வர இருக்கிற அந்தத் தீர்மானத்தோடு இந்தக் கூட்டத் தொடர் முடியப்போகிறது.

சிறிது நேரத்திற்கு முன்பாக, எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அவர் களுக்குக் கொடுக்கப்படவிருக்கும் அந்தஸ்துக்களை மறுக்கவும் இல்லை என்றும், "நீங்கள் அதை மறுக்கக் கூடாது" என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவும் போன்றதொரு நிலை எதைக் காட்டுகிறது என்றால் அது நம் ஜனநாயக மரபைச் சுட்டிக் காட்டுகிறது. ஜனநாயகத்தின் தாயகம் என்று சொல்லப்படும் இங்கிலாந்து போன்ற நாடுகள் கூட நம்மிடம் பாடம் கற்றுக்கொள்ளும் நிலையில் நாம் இருக்கிறோம். அதில் சந்தேகமில்லை. விவாதங்கள் சில வேளைகளில் காரசாரமாக இருந்திருக்கலாம். சில வேளை களில் தீப்பற்றி எரிந்திருக்கலாம். சில வேளைகளில் ஒளி வீசிக் கொண் டிருக்கலாம். ஆனால், மக்களின் நன்மைக்காகத் தான் இவைபற்றி யெல்லாம் விவாதிக்கிறோம் என்பதில் இந்த மன்றம் பெருமை கொள்ளலாம்.

நான் நிரம்ப நேரத்தை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. உறுப் பினர்கள் நல்ல பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவற்றிற் கெல்லாம் நான் பதில் சொல்லாமலிருந்தால் அவற்றையெல்லாம் நான் விட்டுவிட்டதாகக் கருதிக்கொள்ளத் தேவையில்லை.





திரு. சங்கரய்யா அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள் எலக்டிரிசிடி போர்டில் செய்வது போல் ஒரு புத்தகத்தை அச்சடித்துக் கொடுக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அப்படிக் கொடுக்கலாம், அதில் தவறு இல்லை. ஆனால், அப்படி அச்சடித்துக் கொடுக்க ஆரம்பித்தால்,

thetime and labour involved will not be commensurate with the result

என்பதைப் பார்க்க வேண்டும்.

நான் ஐந்தாறு தலைப்புகளில் பதில் அளிக்கலாம் என்று கருதுகிறேன். நிதி அமைச்சர் என்ற முறையில் அது தவிர்க்க முடியாத தொரு கடமை அந்த விவரங்களை மட்டிலும் தெரியப்படுத்திக் கொண்டு என் உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். ஓவர் ட்ராஃப்ட் பற்றிச் சொன்னார்கள். மாஜி மந்திரி திரு. பூவராகன் அதைப் பற்றிச் சொன்னார்கள். திரு சங்க ரய்யா அவர்கள் பொதுத் துறையில் தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய – மாநில அரசு உறவு பற்றிச் சொல்லப்பட்டது. மதுவிலக்கைப் பற்றிச் சொன்னார்கள். ஆகவே, கொள்கை ரீதியாக ஐந்தாறு தலைப்புகளில் பதில் அளிக்க நினைக்கிறேன்.

முதலாவதாக, ஓவர் டிராஃப்ட்.

ஓவர் டிராஃப்ட்டைப் பற்றி நான் ஏற்கெனவே சொன்னேன். யாரும் பயப்படாதீர்கள், ஒன்றும் ஆபத்து வந்துவிடவில்லை. இன்ஸால்வெண்ட் ஆகிவிடவில்லை. என்னுடைய உரையிலேயே சொல்லி யிருக்கிறேன்.

There is nothing unusual or alarming about the overdraft which we are availing of from the Reserve Bank of India. பி. ப. 2-00

கொஞ்சமும் பரபரப்பு அடையக் கூடியதாகவோ அல்லது வழக்கத்திற்கு மாறாகவோ இல்லை. சாதாரணமாக ஒரு தற்காலிகமாகச் செய்யப்படும் காரியம் தான். ஓவர் டிராஃப்ட் வாங்கக் கூடாது தான். எப்போது ? அடித்தளத்திற்கே, ஆணிவேருக்கே ஆபத்து என்றால் வாங்கக் கூடாதே தவிர, இப்பொழுது நிதி ஆதாரங்களிலே எந்த விதமான ஆபத்தும் வந்துவிடவில்லை. கைமாற்று வழங்குவதைப் போல. நான் காரணம் கூடச் சொல்லியிருந்தேன். யாராவது கேட்பார்கள் என்று பார்த்தேன். காரணத்தைக் கூட நான் சொல்லி யிருந்தேன்.

One of the main reasons for this overdraft is the fact that large sums of money far in exceus of our overdraft are still due to us from various departments of the Central Government as arrearsof Central assistance and as our share of Central taxes.

என்று ஒரு வரியை நான் அதிலே எழுதி யிருக்கிறேன். அதை யாராவது கேட்பார்களா என்று இரண்டு மூன்று நாட்களாக இந்த மன்றத்திலே பார்க்கிறேன், கேட்கவே இல்லை. ஓவர் டிராஃப்ஃட் கிடையாது என்று வாதாடுகிறேன். எனக்குக் கொஞ்சம் பொறுமை உண்டு, அரசிய லிலும் பொறுமை உண்டு, தனி வாழ்க்கையிலும் பொறுமை உண்டு. அந்தப் பொறுமையின் அடிப்படையிலே தான் இருக்கிறேன். ஓவர் டிராஃப்டினால் இன்ஸால்வெண்ட் ஆகி விடவில்லை. நிதி ஆதாரத் திற்கு ஆபத்து வந்து விடவில்லை. ஓவர் டிராஃப்ட் வாங்குவதும் தவறு அல்ல. ஓவர் டிராஃப்ட் என்பது விதிமுறைகளிலே இருக்கும் ஒரு முறை தான். ஏராளமான தொகைகள் மத்திய உதவி நிலுவை வகையிலும், மத்திய வரிகளின் மாநிலப் பங்கு வகையிலும், மத்திய அரசின் பற்பல துறைகளிலிருந்து நமக்கு இன்னும் சேரவேண்டி யிருப்பது இந்த ஓவர் டிராஃப்டிற்கு முக்கிய காரணங்களில் ஒன்று. நாம் கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் அளவுக்கு அதிகப்பற்று வாங்கி யுள்ளோம். நம்மிடம் ஏறக்குறைய 23 கோடி ரூபாய் அளவுக்கு உரத்தை மூட்டை கட்டி வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்தப் பணத்தைக் காட்டிலும் இந்த ஓவர் டிராஃப்ட் அதிகம் அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், சொல்ல வேண்டுமென்பதற் காகத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

[திரு. கே. எ. மதியழகன்] [1969 மார்ச் 28

ஓவர் டிராஃப்ட் என்பது ஏதோ நாம் தான் நிதியமைச்சராக வந்ததனுலேயோ அல்லது எனக்கு முன்னுலே என் அண்ணன் நிதியமைச்சராக இருந்ததாலேயோ ஏற்பட்ட நிலே அல்ல. இந்த ஓவர் டிராஃப்ட் கதை ரொம்ப நாளாகத் தொடர்ந்து நடப்பது. மாபெரும் பெரியார் இராஜாஜி அவர்கள் பதவி துவங்கிய காலத்திலேயிருந்து இருக்கிறது. ஓவர் டிராஃப்டுக்கு நான் விரோதி அல்ல. பிஸினஸுக்குக் கூட வாங்குகிருேம். ஒரு லட்சம், இரண்டு லட்சம் போட்டிருப்பவர்கள் கூட ஓவர் டிராஃப்ட் வாங்குகிருர்கள். இதெல்லாம் விதிமுறைகளிலே இருக்கிற முறைகள். பெரிய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், விலேவாசிகளேக் கட்டுப்படுத்த வேண்டும், அத்தியாவசியமான பொருள்களேக் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு வாங்கி வைக்கவேண்டும், மக்களுக்கு சாப்பாடு போட வேண்டும், விலேவாசிகளே சீரான முறையில் அமைக்க வேண்டுமென்றிருக்கின்ற இராஜ்யத்திலே, கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிறது. அரசாங்கத்திற்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. இந்த மன்றம் ரொம்பச் சுவையாகக் கருதும் என்று கருதுகிறேன். ரொம்ப நேரம் செலவு செய்துவிட்டாலும், இந்த ஓவர் டிராஃப்ட் எப்படி எப்படி இருந்தது என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. கோ. பூவராகன்** : எந்தத் தலேப்பிலே, வேஸ் அண்ட் மீன்ஸ்லே வருகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இவ்வாறு கேட்பதிலிருந்து இதிலே உறுப்பினரவர்கள் ஓரளவுக்கு அனுமதிக்கிருர்கள் என்று தெரிகிறது. 1951-ம் வருஷத்திலிருந்து ஓவர் டிராஃப்ட் வாங்கிய ஒரு நிலேமையைக் கூறுகிறேன். 1951–52-ல் 17 கோடியே 80 லட்சம் ரூபாய். 1952–53-ல் 22 கோடி ரூபாய். 1953–54 முதல் கொஞ்சம் குறைவாக இருந்தது. அது வேண்டாம். 1957–58-ல் 8 கோடி ரூபாய், 1962–63-ல் 8·83 கோடி ரூபாய். அப்பொழுது திரு. சுப்பிர மணியம் அவர்கள் வந்து விட்டார்கள். எங்கள் ஊர்க்காரருடைய ஓவர் டிராஃப்ட் 1963–64-ல் 16·13 கோடி ரூபாய். 1965–66-ல் 24·56 கோடி ரூபாய். திரு பக்தவத்சலம் அவர்கள் இருந்தார்கள், பொதுத் தேர்தலுக்கு முன்பு.

For the last two years 1966–67 and 1967–68, the maximum overdraft was Rs. 16·8 crores.

இன்னும் பெரிய முக்கியமான அம்சத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாம் இப்பொழுது வாங்கியிருக்கும் ஓவர்டிராஃப்ட் 15 கோடி ரூபாய் அளவிற்கு. எத்தனே கோடிக்கு 15 கோடி ரூபாய் என்றுல், கிராமக் கணக்குப்படி சொன்னுல், 277 கோடி ரூபாய் அளவில் சுற்றுகிற ஒரு பெரிய தொகைக்கு நாம் வாங்கியிருப்பது 15 கோடி ரூபாய். ஆனுல், எத்தனே சத வீதம் என்று பார்த்தால் 5 சத விகிதம் தான் ஆகிறது. இராஜாஜி அவர்கள் காலத்தில் வாங்கி யிருப்பது 29·97 சத விகிதம். 37·83 சத விகிதம் 1952–53-ம் வருஷத்திலே. மொத்தத்தில் ஒன்-தேர்டுக்கு மேலே. இதையெல்லாம் நான் சொல்லக் காரணம், டாக்டர் ஹாண்டே அவர்களுக்காகத் தான். சுமார் 37 சத விகிதம் வாங்கியிருந்திருக்கிருர்கள். இன்றிருப்பது 5 சத விகிதம் தான். இதை நான் சொல்லக் காரணம், குறை சொல்லவேண்டுமென்று சொல்லவில்லே.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : ஓவர் டிராஃப்டைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிருர்கள். மதிப்பிற்குரிய திரு. பூவராகன் அவர்கள், அந்த ஓவர் டிரா..ப்ட் வேஸ் அண்ட்மீன்ஸ் பட்ஜெட்டில் வரவில்லே என்ற கருத்தில் சொன்னதாகக் கருதுகிறேன். வேஸ் அண்டு மீன்ஸ் பட்ஜெட்டிலே வர முடியாது என்பது என்னுடைய கருத்து. ஓவர் டிராஃப்ட் என்பது மத்திய சர்க்கார் நமக்கு ஒரு தொகையைக் கொடுப்பதாக வாக்களித்து, அது வருவதற்கு நாளாகிவிட்டால் இடைக்காலத்தில் ஓவர் டிராஃப்ட் கொடுத்து வாங்கியிருக்கிறது. இதை அமைச்சரவர்கள் விளக்கவேண்டும்.



1969 மார்ச் 28

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : அதை நீங்களே விளக்கிவிட்டீர்கள். நான் சில விளக்கங்களே சொல்வது இல்லே. அவர்களுக்கு தெரியாது என்றுல் கோபித்துக்கொள்வார்கள். நிரம்பத் தெரிந்தவர்கள், சாதாரண விஷயங்களில் கூட ஓவர்டிராஃப்ட் 1 கோடி ரூபாய் வாங்கி மறுநாள் செலுத்தி விடுகிருர்கள். மூன்றுவது நாள் வாங்கி நான்காவது நாள் திருப்பி விடுகிருர்கள். 15 கோடி ரூபாய் "அப்ரோபிரியேஷன் பில்"லில் வர வேண்டுமென்று கூறப்படுகிறது. ஐந்து வருஷங்கள் அமைச்சராக இருந்தவர்கள். எலிமெண்டரி விவகாரம் கூடத் தெரியாது என்று நான் எதிர்பார்ப்பதற்கில்லே.

**திரு. கோ. பூவராகன்** : தெரியவில்லே என்று........

**THE HON. THIRU K. A. MATHIALAGAN** : I am not yielding. கடைசியிலே வேண்டுமென்றுல் சொல்லுங்கள்.

**திரு. கோ. பூவராகன்** : எனக்குத் தெரியவில்லே என்றுல் அவருக்கு என்ன தெரியும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : தெரியவில்லே என்று சொல்லவில்லே. தெரிந்திருப்பதால் வரும் ஆபத்து தான்.

**திரு கோ. பூவராகன்** : ஐந்து ஆண்டுகள் அமைச்சராக இருந்தவருக்கு இந்தச் சிறு விஷயம் தெரியவில்லே என்று சொல்லுகிருர்கள். அதைத் திரும்பப் பெற வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இதை ஒரு காரணம் ஆக்குகிருர்கள் என்ற கருத்தைத்தான் சொனனேனே தவிர, தெரியவில்லே என்று நான் ஏன் சொல்லப்போகிறேன் ?

**மாண்புமிகு பேரவைத் தலேவர்** : தெரியாது என்று நினைக்க முடியாது என்று தான் சொன்னுர்.

**திரு. கோ. பூவராகன்** : எனக்குத் தெரியாது என்று சொன்னுல் அவருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : தெரியாது என்று கூறுவதில் கௌரவக் குறைவு இல்லே. நீங்கள் சகலகலாவல்லவர்.

**திரு. கோ. பூவராகன்** : எனக்கு விஷயம் தெரியவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர்** : பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனுக்கு இடம் தருகிறேன். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கோ. பூவராகன்** : கேட்பதற்கு எனக்கு........

**மாண்புமிகு பேரவைத் தலேவர்** : கேட்பதற்குரிய நேரத்தில் கேளுங்கள். பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் கேட்பதற்கு அவகாசம் தருகிறேன். அமைச்சரவர்கள் பேசி முடிந்ததற்குப் பிறகு இடம் தருகிறேன்.

**திரு. கோ. பூவராகன்** : விளக்கம் வேண்டும்.

**THE HON. THIRU K. A. MATHIALAGAN** : Sir, I am not yielding. Is it in order for an hon. Member to stand when I am not yielding ?

**மாண்புமிகு பேரவைத் தலேவர்** : விளக்கம் கேட்பதற்கு வாய்ப்புத்தர மறுக்கவில்லே. அமைச்சரவர்கள் பேசிக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் பேசிய பிறகு, அதிலேயிருந்து உங்களுக்கு ஐயப்பாடு தோன்றினுலும், உங்களுக்குக் குறைபாடு இருந்தாலும் தன்னிலே விளக்கத்திற்கு இடம் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கடைசியிலே கேளுங்கள் மிஸ்டர் பூவராகன். நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. 1 have grat respect for him கோபம் வந்தால் என்ன பிரயோஜனம் ? கோபம் வந்தால் எப்படி ? எவ்வளவோ காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. ஓவர் டிராப்டைப் பற்றி நான்கு நாட்கள் மன்றத்திலே பேசினார்கள். நாடும் நம்புகிறது. அதைப் பற்றிச் சொல்லி முடிப்பதற்குக் கூட விடமுடியவில்லையே! இருக்கும் முறைகளைப் பற்றி நான் தெளிவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஓவர் டிராப்ட் வாங்கலாம். பழைய அரசாங்கம் வாங்கியிருக்கிறது. ஒரு விவகாரம் முடிந்து விட்டது. இன்றைக்கிருக்கிற நிலவரத்தையும் என்னுடைய உரையிலே இரண்டு நாளைக்கு முன்னாலே விளக்கமாகச் சொல்லியிருந்தேன், நமக்குப் பங்கு வரவேண்டியது மத்திய சர்க்காரிடத்திலே இருக்கிறது. மொரார்ஜி தேசாய் சொல்கிறார் என்றால் அவர் இன்னும் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். அவர் சொல்லியிருக்கக்கூடாது. அவர் கணக்கைப் பார்த்திருக்க வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் 10 சத விகிதம் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஜூலை மாதத்திலே, வருமான வரியின் பங்குத் தொகையாக, நமக்கு. அக்டோபர் மாதத்திலே 25 சத விகிதம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இங்கே திருபொன்னப்பா நாடார் கேட்டார், மார்ச் மாதத்திலே வேலை நடக்கவேண்டுமென்றால், எப்படி வேலை நடக்கும் ? மார்ச்சிலே 45 சதவிகிதம். இப்படியா கொடுப்பது, நமக்குச் சேரவேண்டிய பங்கை ? நாம் விட்டு விடுகிறோமா, சேல்ஸ் டாக்ஸ் கொடுக்கவில்லையென்றால் ? எவ்வளவு நோட்டீஸ் அனுப்புகிறோம் ? மத்திய சர்க்காருக்கு நோட்டீஸ் அனுப்பினால் உடனே பிரிவினை கேட்கிறார்கள் என்று சொல்வார்கள். மார்ச் மாதம் கொடுத்திருக்கவேண்டாமா ? இப்படி 3 மாதம், 4 மாதம் என்று கொடுக்கிறார்களே, அக்டோபரிலே கொடுத்தால், என்ன குடியா முழுகிப் போயிருக்கும் ? இதையெல்லாம் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் கேட்டால் நன்றாக இருக்கும். அரசாங்கத்திலே இருக்கிற வேஸ் அண்ட் மீன்ஸ் சிறப்பாக இருந்திருக்கும். ஒரு கற்பனையான வாதத்தை, இல்லாத வாதத்தை நிலைநாட்டுவதை விட, நீங்களும் நாங்களும் சேர்ந்து செய்யவேண்டிய காரியங்கள் நிரம்ப இருக்கின்றன. இது ஒன்று.

இரண்டாவது, நான் ஒன்றைச் சொன்னேன். இதற்கு முன்னால் ஓவர்டிராப்ட் கொடுப்பதற்குக்கூட பர்சென்டேஜ் இருந்தது, சாதாரண நாட்களிலே, 1·8 பர்சன்டேஜ் ஓவர் டிராப்ட் கொடுத்திருந்தார்கள். இப்பொழுது அதை 0·6 ஆகக் குறைத்து விட்டிருக்கிறார்கள். அதாவது இது வரை 3 கோடி ரூபாய் ஓவர் டிராப்டு வாங்கிக் கொண்டிருந்தோம் என்றால், இப்பொழுது ஒரு கோடி ரூபாய்க்குத் தான் ஓவர் டிராப்ட் வாங்க முடியும். இது என்ன நியாயம் ? ரிசர்வ் பாங்க் செய்வதுதான் என்ன நியாயம் ? மத்திய சர்க்கார் செய்வதுதான் என்ன நியாயம் ? நமக்கு வரவேண்டியதை பாக்கியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் என்ன நியாயம் ? ஊரிலே உள்ளவர்கள் கேட்கவேண்டாமா ? உலகத்திலே உள்ளவர்கள் கேட்கவேண்டாமா ?

நான் அடிப்படையான யோசனையை நிதி அமைச்சர் என்ற முறையிலே சொல்லியிருக்கிறேன். மத்திய சர்க்காரினுடைய பாக்கியைப் பற்றி இன்னும் 3 நிமிஷத்திலே சொல்லுகிறேன். 31-ம் தேதிக்குள் அவர்கள் கொடுக்கவேண்டிய பாக்கியை இன்னும் கொடுக்கவில்லை. நாம் வாங்கிய ஓவர் டிராஃப்ட் 23 கோடி ரூபாய். இதற்குப் பெயர் ஓவர் டிராஃப்டா ? கிராமத்திலே இருக்கிற சிறு தொழிலாளிக்குக் கூட இந்தக் கணக்குத் தெரியுமே. வேறு எத்தனை மாதிரியான ஓவர் டிராஃப்ட் வாங்கி இருக்கிறோம் ? அதை எதற்காக வாங்கினோம் என்று தினந்தோறும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்கார் பணம் கொடுககிற முறையை மாற்ற வேண்டும். ரிசர்வ் பாங்க் 23 கோடி ரூபாய் ஓவர் டிராஃப்ட் கொடுத்திருக்கிறது. நாம் 5 சத விகிதம் தானே வாங்கி இருக்கிறோம். 37 சத விகிதம் ஓவர் டிராஃப்ட் பழைய நாட்களில் இருந்தது. இன்றைக்கு கொடுத்து விடுகிறோம்



இன்றைக்கு 31-ம் தேதி வரையிலே நமக்குச் சேரவேண்டிய தொகையைச் சொல்லுகிறேன். அதை இரண்டு பிரிவாக நான் பிரித்து வைத்திருக்கிறேன். அவர்கள் ஒத்துக்கொண்டு தருவதாகச் சொல்லிய தொகை 22 கோடியே 11 இலட்சம். இன்னும் அவர்கள் "நாங்கள் கொடுத்து விடுகிறோம்." என்று சொல்லி அவர்களுக்கும் நமக்கும் வியாஜ்யம் நடந்து கொண்டிருக்கும் தொகை 15 கோடி ரூபாய். ஆக, 37 கோடி ரூபாய் மொத்தம் வரவேண்டும். அதுவும் இந்த 31-ம் தேதிக்குள்ளே 22 கோடி ரூபாய் அவர்கள் கொடுத்திருக்கவேண்டும். இது வந்திருந்தால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்த வேலை இருக்குமா ? அல்லது ஓவர் டிராஃப்ட்டுக்குச்—சமாதானம் வழங்கக்கூடிய வேலை நடந்திருக்குமா ? யார் இதை மறுக்கமுடியும் ?

| | *Amount to which the Central Government are committed.* | *Amount for which the Central Government have not given any firm commitment.* |
|---|---|---|
| | RUPEES IN LAKHS | RUPEES IN LAKHS. |
| Balance of Union Excise Duties. | 478 | .. |
| Balance of Additional Excise Duties. | 69 | .. |
| Balance of Plan assistance .. | 952 | 41 |

இவைகளை எல்லாம் 31-ம் தேதிக்குள் கொடுத்திருக்க வேண்டும் ஆளை அனுப்பி இருக்கிறோம். நேற்றுக்கு முன்தினம் கொஞ்சம் சீக்கிரம் கொடுங்கள் என்று வசூல் செய்வதற்கு ஆளை அனுப்பியிருக்கிறோம்.

| | | |
|---|---|---|
| Assistance for Cellular Concrete Plant. | 100 | .. |
| Assistance for Water Supply Scheme to Madras Fertiliser Plant, Manali and Atomic Energy Plant, Kalpakkam. | 147 | .. |
| Reimbursement of loss incurred in Cinchona cultivation. | 65 | — |

மாஸ்கோ........(குறுக்கீடு) ஏதோ இதைப் பயிரிட்டதாக; ரஷியாவுக்குக் கொள்முதல் செய்து கொடுத்த வகையிலே இந்த 65 கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது.

| | | |
|---|---|---|
| Short term loans for fertiliser marketing. | 460 | 1,118 |
| Assistance for expenditure on cyclone repairs. | .. | 197 |
| Assistance for relief works in drought affected areas for 1968-69. | .. | 157 |
| | 2,211 | 1,513 |

ஆக, 22 கோடி இந்த மாதம் 31-ம் தேதிக்குள் நமக்குச் சேர வேண்டியது. எங்கே ஓவர் டிராஃப்ட்? இந்த மன்றத்திலே அதைச் சொன்னால் ஓவர் டிராப்ட் ஓவர் டிராப்ட் என்று. அப்படி அசைப்படுகிறார்கள், திவாலாகப் போய்விடவேண்டும் என்று. நீங்களும் திவாலாகப் போய்விவீர்கள். இந்த மன்றத்திலே கோபித்துக்கொள்கிறார்கள், தெரியுமா என்று சொல்கிறேன், என்று. 18 வருடம் அரசாண்டவர்கள் கோபித்துக் கொள்ளலாமா? எனக்குத் தெரியவில்லை யென்றால் பரவாயில்லை. நான் ஒத்துக்கொள்கிறேன் சகலகலாவல்ல இலட்சுமணசாமி முதலியார் முன்னால் உட்கார்ந்த இருக்கிறோம்? நாங்கள் நாட்டு மக்களுடைய கட்டளையைப் பெற்றிருக்கிறோம்.

THIRU D. S. AUTHIMOOLAM: You are one of the best Finance Ministers of Bharat.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆதிமூலம் அவர்கள் சொல்லிவிட்டால், ஆதியே, மூலமே சொல்லிவிட்டதாக அதற்குப் பொருள். நான் நல்ல நிதி அமைச்சனா என்பது அல்ல பிரச்னை. இன்று கொள்கைகள் நல்லவைகளா? அவைகளிலே என்ன தவறு இருக்கிறது என்பதே தவிர வேறில்லை. நேற்றைக்கு, முன்னால், நான் நன்றாக சமாதானம் சொன்னேன், இப்படியெல்லாம் ஓவர் டிராப்ட் வாங்குவதிலே தப்பில்லை என்று அதைப்பற்றி கூட என்னுடைய உரையிலே சொல்லியிருந்தேன். (குறுக்கீடு) அதைத்தான் பொறுமை என்றேன். 15 கோடி தான் பாக்கி கொடுக்கவேண்டும். உங்கள் ஆட்கள், ஆகையினாலே அதைச் சொல்லியிருக்க முடியும். இன்றைக்கு மத்திய அரசுக்குச் சொல்கிறேன், திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் அங்கே இழுத்துச் சொன்னதோ அல்லது வேறு விஷயம் தெரிந்து சொன்னதோ, அவர்களுக்குக்கூட தெரிந்திருக்காது. அவர்களுக்கு எப்படி எப்படி தெரியும்? இதிலே மாறுதலை ஏற்படுத்தவேண்டும். இதிலே மாறுதலைக் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் இரண்டு மூன்று விவரங்களை நாம் அவசரமாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. இதிலே ஒன்றும் கட்சி மாச்சரியங்கள், வேறு காரியங்கள் இல்லை. மாநிலத்தினுடைய முன்னேற்றத்தைத்தான் நாம் முக்கியமாகப் பார்க்கவேண்டும்.

கடன் பற்றிச் சொன்னார்கள். நாங்கள் சொன்னால் உடனே பிரிவினை கேட்கப்போகிறார்கள் என்று நாகாலந்துக்காரனைப் பார்த்துப் பயப்படுகிற மாதிரி, கிழக்குப் பாகிஸ்தான் மாதிரி சொல்லிவிடுகிறீர்களே பிரிவினை என்று சொல்லியாராவது ஏமாற்றி .....(குறுக்கீடு) அயூப்கான் போய்விட்டார் என்றா கருதினீர்கள்? மறுநாளும் வந்துவிட்டது, நம் ஊருக்குப் பக்கத்திலேதான். எவ்வளவு தூரம் மனம் விட்டுப் பார்க்கவேண்டுமோ அந்த அளவு பார்க்க வேண்டுமே தவிர, இவைகளிலெல்லாம் இன்றைக்கு மத்திய அரசு இவ்வாறு இருக்கக் கூடாது.

மத்திய-மாநில அரசு உறவு என்று சொன்னவுடனே, சண்டை போடுகிறார்கள். இது என்ன நியாயமா என்று. ஆனால் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள், காங்கிரஸ் பெருந்தலைவர் சொன்னார், முதலமைச்சர் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். நான் கூட வரவேற்றிருக்கிறேன். இன்றைக்கு நாம், ஆர அமர யோசிக்க வேண்டுமென்று திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள். நிரம்ப நன்றாகவும் சொன்னார்கள். உண்மையாகவும் சொன்னார்கள். நிரம்ப ஆர அமர யோசிப்பதைத் தவிர வேறு தன்மையே கிடையாது.

ஐம்பது கோடி மக்கள் அரசியல் வட்டம் என்பதில் வளைய வந்து கொண்டிருக்கிறார்களே. கல்கத்தா விமான நிலையத்திலே நேற்றைக்குத் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒன்று சொன்னார்கள், எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. ஏதோ கான்ட்ரவர்ஸி இருப்பதாகச் சொன்னார்கள். இருபது ஆண்டு அரசியல் சாஸனத்தை வைத்திருந்தவர்கள்,





50 கோடி மக்களை பார்த்துவிட்டு இன்றைக்கு ஒரு மாறுதல் தேவை, மறு சிந்தனை தேவை என்று சொன்ன நேரத்தில், ஆகாய விமானத்திலே உட்கார்ந்துகொண்டு, கான்ட்ரவர்ஸி என்று சொன்னார். பத்திரிகைக்காரன் எப்படிப் போட்டானோ தெரியவில்லை. இருந்தாலும் திரு காமராஜ் அவர்கள் உண்மையான அக்கறை கொண்டிருக்கிறார். நான் அவரைப் பெரிதும் பாராட்டுகிறேன். பெருந்தலைவர் மட்டத்திலே, இருப்பதை, அங்கே இருந்துதான் சொல்ல வேண்டும். நாங்கள் சொல்லிக்கொண்டுதான் இருந்தோம். அண்ணா அவர்கள் சொன்னார்கள், திரு நம்பூதிரிபாட் அவர்களும் சொன்னார்கள், அண்ணா அவர்கள் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன் என்று. இதில் அரசியல் நோக்கம் இல்லை. காங்கிரஸ் கட்சி, வேறு கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்று எதுவும் இதில் கிடையாது. இன்றைக்கு கேரளாவிலே ஈ.எம்.எஸ். அவர்கள் இருக்கிறார்கள். வங்காளத்தில் ஜோதி பாசு இருக்கிறார், ஒரிஸ்ஸாவில் தேவ் சிங், இருக்கிறார், மு.ப. 5-30
பஞ்சாபிலே குர்நாம் சிங் இருக்கிறார்கள், எந்தக் கட்சி என்று கூட நமக்குத் தெரியவில்லை. இது மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் நடக்கிற போராட்டம்; டெல்லியிலே அதிகாரம் இருக்க வேண்டுமா, ஹைதராபாத்திலே அதிகாரம் இருக்க வேண்டுமா, கல்கத்தாவிலே அதிகாரம் இருக்க வேண்டுமா, திருவனந்தபுரத்திலே அதிகாரம் இருக்க வேண்டுமா என்பது. ஒரு மாறுதலைச் செய்ய வேண்டுமென்றுதான் சொல்கிறோம்.

யோசித்து, யோசித்து, நீங்கள் இந்த மாமன்றத்திலே நிதி நிலையை நோக்குவீர்களானால், நமது அரசியல் வானத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கவனிப்பீர்களானால், நம் மாமன்றம்தான் இதைப் பற்றி மிக விரிவான விவாதத்தை நடத்தி இருக்கிறது. முதலமைச்சர்களுடைய மாநாட்டிலே அல்ல, நாளைக்கு பிரதம அமைச்சரவர்கள் கூட்டுகிற மாநாட்டிலே அல்ல, தமிழ்நாடு சட்ட மாமன்றம் மத்திய அரசு, மாநில அரசு உறவுகளை விவாதித்து, நிதி நிலை அறிக்கைக்குப் பிறகு 20 நாட்களாகப் பத்திரிகையில் பார்த்திருப்பீர்களானால், இது அகில இந்திய தலைப்பாக ஆகி, எல்லோரும் உண்மையான தன்மையை கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கவனிப்பதை நான் வரவேற்கிறேன். அதை உதாசீனப்படுத்தவில்லை. ஒருவரை ஒருவர் சொல்வதற்காகச் சொல்லவில்லை, ஒன்றிரண்டு மட்டும் உதாரணத்திற்காகச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடன்கள், கடன்களைப் பற்றிச் சொன்னால் எல்லோரும் கோபித்துக் கொள்கிறார்கள். எவ்வளவு அக்கிரமமாக இருக்கிறது, உறுப்படியாக இருக்குமா, இன்சால்வெண்டு என்று சொன்னார்கள். இப்படியே நிலைமை போகுமானால், மாநிலங்களெல்லாம் இன்சால்வெண்டாகி டெல்லியில் சில பேரரசுகளைப் போல, மொகலாய சக்கரவர்த்தியைப் போல, சக்கரவர்த்திகளையும், சக்கரவர்த்தினிகளையும் சிருஷ்டிக்கிற ஒரு நாள் இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் வரும். நிதி ஆதாரங்களில் மாறுதல் ஏற்படாமல் இருக்குமானால், இந்த நிலைமை ஏற்பட்டால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. நான் மிகத் தெளிவாகவும், உணர்வோடும் மட்டுமல்ல, மிக அழுத்தம் திருத்தமாக, தீர்க்கதரிசனத்தோடு தூரப் பார்வையோடு இதனைச் சொல்கிறேன். கடன் வாங்குகிறோம் என்று சொல்கிறார்கள். 1951-52-ம் ஆண்டில் எல்லா மாநிலங்களும் சேர்ந்து, மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிடிய கடன் ரூ. 445 கோடியாக இருந்தது. மொத்தக் கடன்கள் மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள், மாநில அரசுகள் கொடுக்க வேண்டிய கடன்கள் ரூ. 445 கோடியாக இருந்தது. எல்லா மாநிலங்களுக்குமாகத்தான் நான் இப்பொழுது பேசுகிறேன். நம்முடைய தமிழ் நாட்டுக்காக மட்டுமல்ல. எவ்வளவு ஆபத்து என்று பாருங்கள்? மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலே மாநிலங்கள் கொடுக்க வேண்டிய கடன்கள் ரூ. 5,502 கோடியாக உயர்ந்தன. அதே கடன்கள் இன்றைக்கு 1968-69-ம் ஆண்டில் ரூ. 7,032 கோடியாக உயர்ந்திருக்கின்றன மாநிலங்கள் கொடுக்க வேண்டியது. ஒரு பெரிய வேடிக்கையாகச் சொல்லவேண்டுமானால், ஆண்டுதோறும் ரூ. 445 கோடி ரொக்கத்திற்காகவும், அதாவது பிரின்சிபலுக்காகவும், வட்டியாக ரூ. 250 கோடியும் எல்லா மாநிலங்களும் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கு என்ன பொருள்? சென்ற 20 ஆண்டு காலத்தில் இந்த அரசாட்சியின் நிலை என்னவென்றால், மாநிலங்களின் கடன்கள் எப்படி வளர்ந்திருக்கிறது? ரூ. 7,000

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 மார்ச் 28

கோடிக்கு வளர்ந்திருக்கிறது. சுயராஜ்யம் பெற்ற நேரத்தில் ரூ. 44 கோடியாக இருந்தது, எல்லா மாநிலங்களும் கொடுக்க வேண்டிய கடன் இன்றைக்கு ரூ. 7,032 கோடியாக, வெறும் ரூபாய் இல்லை, கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. வருஷத்திலே ரூ. 455 கோடி மூலதனத்திற்காகவும் (பிரின்ஸிபல்), ரூ. 250 கோடி வட்டிக்காகவும் திருப்பிக் கொடுக்கவேண்டிருக்கிறது.

உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன். இதெல்லாம் தெரியவேண்டியிருக்கிறது. இதுதான் மாநில, மத்திய அரசு உறவு முறை. ரூ. 800 கோடி போட்டிருக்கிறார்கள் லோன் அசிஸ்டென்ஸுக்கு இந்த வருஷம் எல்லா மாநிலங்களுக்கும் சரி. இந்த ரூ. 800 கோடி அங்கிருந்து வந்துகொண்டிருக்கிறது. திருப்பி மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. மொரார்ஜிதேசாய் அவர்களுக்கு எவ்வளவு அனுப்பிவைக்கிறோம். மாநிலங்களுக்கு கொடுக்கப்படுகிற கடன் தொகை ரூ 800 கோடி ரீபேமெண்டு ஆஃப் லோனுக்கு போன வருடக் கடனை திருப்பிக் கொடுப்பதற்கு ரூ. 453 கோடி அதாவது ரு. 100 கோடி வாங்கினால் ரு. 55 கோடி திருப்பிக் கொடுக்கப்பட்டு விடுகிறது. இந்த மாமன்றத்தில் கூட சொன்னேன். இந்த வருஷம் நமக்கு அவர்கள் லோன் வகையிலே கொடுத்தது ரூ. 27 கோடி. நாம் திரும்பிக் கொடுக்க வேண்டியது ரூ. 37 கோடி. அவர்களிடமிருந்து வாங்கியதை மட்டும் நாம் திருப்பிக் கொடுக்கவில்லை. இன்னும் இங்கிருந்து, டெல்லி அரசுக்கு, யூனியன் அரசுக்கு, ரூ. 10 கோடி மேலேயே கொடுக்கிறோம்.

மூன்று ஆண்டுகளாக ஆரம்பித்துக் கொண்டிருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும் நாம் செலுத்த வேண்டியிருக்கிற கடன்தொகை ரூ. 148 கோடியாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு அவர்கள் கொடுக்கிற பணம் ரு. 140 கோடி. எப்படி வாழ முடியும்? எப்படி ராஜ்யம் நடக்கப்போகிறது? இவைகளையெல்லாம் உணர்ந்து யாராவது சொல்ல வேண்டாமா? யாராவது ஒருவர் ஏற்றுக்கொண்டு தானே ஆகவேண்டும்? இதுதான் இன்றைக்கு இருக்கிற நிலை.

இவையெல்லாம் பார்க்கிற நேரத்தில் நான் இந்த மாமன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு ஒன்று சொல்கிறேன். இந்திய மாநிலங்களுக்கு இருக்கிற கடன்கள்? இந்தக் கடன்களால் ஏற்படுகிற விளைவு, இவைகளையெல்லாம் பரிசீலனை செய்ய, விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் அளிக்க பரிகாரம் தேடினதுபோல், இந்த ரு. 7000 கோடி கடனைப் பொறுத்த வரையில், இதனுடைய முக்கியத்துவம் என்ன, இதனை எந்த முறையில் சரி செய்து பொருளாதார வளர்ச்சியை நல்ல முறையில் அமைக்க முடியும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்ய, ஹைபவர் எக்ஸ்பர்ட் ஸ்டடி டீம் ஒன்று நிறுவப்பட்டு அதன் மூலம் இதை ஆராய்ந்து, சீக்கிரமாக பரிகாரம் தேட வேண்டியது மிகவும் அவசியம். இல்லாவிட்டால், மாநிலங்களின் நிலை ரொம்ப சீக்கிரம் பொறையோடிவிடும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

எங்களுடைய அண்ணன் மாண்புமிகு முன்னாள் முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இது சம்பந்தமாக சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். கன்ஸாலிடேட் பண்ண வேண்டும், எல்லாவிதமான கடன்களையும் கன்ஸாலிடேட் பண்ண வேண்டும், மாரடோரியம் கூட கொடுக்க வேண்டும், வட்டிக்காக என்று சொன்னார்கள். அவைகளெல்லாம் அவர்கள் காதில் சரியாக ஏறவில்லை. எத்தனையோ தவறுகள் இருக்கின்றன கடன்களில்.

திரு. காசிராமன் அவர்கள் கூட கேட்டார்கள், நீங்கள் மட்டும் மத்திய அரசிடமிருந்து கடன் வாங்கினால் 7 வருஷங்கள் கழித்துத்தானே திருப்பிக் கொடுக்கிறீர்கள், முனிசிபாலிடிகள் கொடுக்க வேண்டிய கடன்களை மட்டும் ஏன் சீக்கிரமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும், ஏன் அதிகமாக தவணை கொடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். அது கூட நல்ல யோசனைதான். அதையெல்லாம் யோசிக்க வேண்டியதுதான். அவர்கள் சொல்கிறார்கள்



1969 மார்ச் 28] [திரு கே. ஏ. மதியழகன்]

என்பதற்காகப் புறக்கணிப்பதற்கில்லை. மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கினால் 30 வருஷங்கள தவணை வாங்கிக்கொள்கிறது, கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு. ஆனால், நாம் மட்டும் மாநில அரசு மட்டும் 7 வருஷங்களில் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது, என்ன முகாந்திரம் இருக்கிறது என்று புரியவில்லை. அவர்கள் திருப்பிக் கொடுப்பது 30 வருஷங்களில். அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சொல்வது அப்படி. நேற்று கூட பத்திரிகையில் பார்த்தேன். ரூ. 160, 170 கோடிக்கு செக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் நிரம்ப வசதிகள் இருக்கின்றன. நிதி வாயில்கள் இருக்கின்றன.

பரம்பிக்குளம் வாய்க்காலை வெட்டுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அது எப்பொழுது வரப்போகிறது? அவர்களுக்குத்தான் வெளிச்சம் நாம் போடுகிறோம் நீர்ப் பாசனத் திட்டங்களை. அதற்கெல்லாம் பணம் வருவதற்கு ரொம்ப நாட்கள் ஆகும். கொடுக்க வேண்டியவைகளை எல்லாம் 7 வருஷங்களில் கொடுங்கள் என்று சொல்கிறார்கள்.

நாம் பொற்கொல்லர்களுக்குக் கடன் கொடுத்திருக்கிறோம். பர்மா அகதிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். அந்தக் கடன் தொகைகளை திருப்பி வசூலிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆனால், வசூல் செய்யப்படாமல் இருக்கும்பொழுது, "எங்களுக்குக் கொடுத்துவிடுங்கள்" என்று நோட்டீஸ் கொடுப்பது என்ன நியாயம் என்பது தெரியவில்லை.

மாநில அரசுகளும், மத்திய அரசும் இரண்டு பேர்களும் பங்குதார்கள். மத்திய அரசு எஜமானர்கள் அல்ல. நாம் அடிமைகள் அல்ல. அவர்கள் முதலாளிகள் அல்ல; நாம் அவர்களிடம் அண்டிப் பிழைக்கவந்தவர்கள் அல்ல, ஆங்கிலத்தில் சொல்லப்போனால், நாம் இருவரும் பார்ட்னர்ஸ். நாட்டை ஒன்றுபடுத்த, நாட்டு மக்களை சுபிட்சமாக வாழச் செய்வதற்கு நாட்டு மக்களை மேலும் மேலும் மேம்பாடு அடையச் செய்வதற்கு நாம் பொறுப்பேற்றுக்கொண்டிருப்பவர்கள். அவர்கள் வேண்டுமானால், 60 சத வீத பங்குதாரர்களாக இருக்கட்டும், நாம் 40 சத வீத பங்குதாரர்கள் என்ற அந்த உறவு முறையில் தான் நான் பேசுகிறேனே தவிர, ஏதோ இச்சகம் அல்லது யாசகம் கேட்பதற்காக இன்றைக்கு நாம் மத்திய அரசாங்கத்தினிடம் போகவில்லை.

அதே மாதிரியாக இன்னொரு முக்கியமான அம்சத்தையும் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இண்டர் ஸ்டேட் கவுன்சில் பற்றிப் பேசினார்கள். இண்டர் ஸ்டேட் கவுன்சில் அப்பாயிண்டு பண்ணியாக வேண்டும். அரசியல் ாஸனம் 263-வது விதியின்படி இந்திய ஜனாதிபதி அவர்கள் மாநிலங்களும், மத்திய அரசுக்கும், இரண்டு மாநிலங்களுக்குமிடையே இருக்கிற உறவு முறைகளைச் செம்மைப்படுத்ததுவதற்காக இண்டர் ஸ்டேட் கவுன்சிலை நியமிக்கலாம். அந்த மாதிரி அரசியல் சாஸனததில் கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய பெரு மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களும் திரு. கஜேந்திரகட்கர் போன்ற பெரிய நீதிபதிகளும் இதையெல்லாம் பற்றி அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் அவர்களும் இது பற்றி எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். பேமஸ் நம்பூதிரி பாட் அவர்களும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டுவந்திருக்கிறார்கள். இது அவசரமும், அவசியமுமான தேவையாகிவிட்டது. இரண்டு பேர்களுக்கும் தொடர்புடைய, டெல்லி அரசு, தமிழக அரசு இரண்டுக்கும் மத்தியிலே இடையறாது நடைபெற வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. அப்படி நடைபெற வேண்டிய காரியங்களிலும், வேலைகளிலும் பல சிக்கல்கள் ஏற்படும்பொழுது, நியாயம் வழங்கி இந்தக் காரியங்களை எல்லாம் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இண்டர் ஸ்டேட் பினான்ஸ் கவுன்சில் வெகு வேகமாக நியமிக்கப்பட வேண்டிய ஒரு வாய்ப்பும், அவசரமும், அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. ஃபோர்த் பினான்ஸ் கமிஷன் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

The Fourth Finance Commission has pointed out the need for suitable institutional arrangements for inter-governmental consultations on financial matters. The Centre-State Financial Council in which the பி. ப. 2.30,

Union Government and the State Governments are represented will be the proper institution for such discussions and consultations. என்று அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். நாமும் ஐந்தாவது ஃபைனான்ஸ் கமிஷனுக்குச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அண்ணா அவர்களும் அப்பொழுது சொல்லியிருக்கிற வாசகத்தை ஐந்தாவது ஃபைனான்ஸ் கமிஷனிடம் அவர்கள் சொன்ன வாசகத்தைச் சொல்லவேண்டும்.

Our case is that sales tax, being almost the only elastic source of revenue in the armoury of the States, cannot be surrendered in favour of the Centre and that difficulties which arise from inter-state variations in rates of sales tax and procedures of taxation can be satisfactorily met by periodical consultations at regional and nationa level and from this point of view alone there is no need for replacement of sales tax by excise duties.

என்று சொல்லிவிட்டு A forum for such consultations could be secured if an inter-State council as enviseaged in Article 263 of the Constitution is established.

என்று அண்ணா அவர்களே ஃபைனான்ஸ் கமிஷனிடம் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்தை வெகு வேகமாக இந்திய ஜனநாயக முறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுத்துறை பற்றி திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுவதற்கு விரும்புகிறேன். எங்களுடைய ultimate aim public sector தான். எந்தத் தனியாரும், முதலாளிகளும் யாரும், பொது மக்களுடைய உற்பத்திச் சாதனங்களை, தங்களுடைய சொந்த உபயோகங்களுக்காக, தங்களுடைய குழந்தைகள், வம்சாவளிக்காக, அவர்கள் சீமான்களாக வாழ, சுரண்டிக் கொண்டுபோகும் நிலைமைகளை முன்னேற்றக் கழகம் ஒருநாளும் ஒப்புக்கொள்ளாது. சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்லும் பாதையில் கொஞ்சமும் மாறுதல் இல்லை. (குறுக்கீடு) ஆவடி மாதிரியோ எதுமாதிரியோ. நமக்கு இருக்கிற மாதிரி. ஆவடிக்குப் போய்க்கொண்டிருந்தால், அவர்களே போகட்டும். ஆவடிக் கொள்கை அவர்களுடைய கொள்கை. முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அல்ல.

ஆனாலும், அரசியல் அமைப்பின்படி, இந்திய யூனியனில், பிரைவேட் செக்டாருக்கு மரியாதைகள் இருக்கின்றன. நாம் பொதுத் துறையை வளர்க்கிற நேரத்தில், தனியார் துறையையும், முற்றிலும் புறக்கணித்து விட்டால், இன்றுள்ள அமைப்பில் நமக்குப் பெரிய நஷ்டம் ஏற்படும். உதாரணமாக, ஆறு, ஏழு கோடி ரூபாய் அளவில் ஒரு செமெண்ட் தொழிற்சாலையை பொதுத் துறையில் அமைத்திருக்கிறோம். (குறுக்கீடு) ஆமாம், ஆலங்குளத்தில் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதே மாதிரி அவருடைய ஊருக்குப் பக்கத்தில், 45 கோடி ரூபாயில் ஒரு உரச்சாலை, தனியார் துறையில் வருகிறது. இதிலே பணத்தைப் போட்டுவிட்டோம். இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருந்தால், பயந்து பயந்து இருந்தோம், அப்படியில்லாமல் இருந்திருந்தால், வெளியே இருக்கிற பணத்தை வரவழைத்திருக்கலாம். நமக்குப் பொதுத் துறை இறுதி லட்சியம் என்றாலும், இன்றைக்கு இருக்கும் அமைப்பில், பணம் கொடுக்கும் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், பாங்கு நிறுவனங்கள், எல்லாம் பம்பாய் நகரத்தைத் தலைநகராகக் கொண்டிருக்கின்றன. அந்தத் தொழிற்சாலையைக்கூட கொண்டுவந்திருக்கலாம். அப்படிப்பட்ட கொள்கையைத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. 45 கோடி தொழிற்சாலை என்றால், ஆசையாகத்தான் இருக்கிறது. தூத்துக்குடியில் எத்தனையோ காரியங்கள் எண்ணுகிறோம். (திரு ஆதிமூலம்: அந்த பாக்டரியும் நின்றுவிடும்). ஆகவே, நாம் 2 கோடி, 3 கோடி பங்குத் தொகையாகப் போடுகிறோம். தனியார் துறையானாலும், அவர்களும் இன்ஷூரன்ஸ் கம்பெனி, பம்பாயி



லிருந்து, வேறு இடத்திலிருந்துதான் கடன் வாங்குகிறார்கள். ஆனாலும், ஒரு தொழிற்சாலை வந்துவிடுகிறது. அதுதான் இன்றைக்கு இருக்கக் கூடிய கொள்கை. எவ்வளவு விரைவாகப் பொதுத் துறைக்குப் போக முடியுமோ, அவ்வளவு விரைவு படுத்துகிறோம். அதே நேரத்தில், பொதுத் துறையில் ஏற்படுகிற விரயங்கள் வீணான காரியங்கள் இவற்றையெல்லாம், நல்ல வகையில் சீர்திருத்த, சிக்கனமாகச் செய்ய முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

ஒரு முக்கியமான அம்சமாக ஒன்றை திரு. மாரிமுத்து எடுத்துச் சொன்னார்கள். சுருக்கமாகச் சொல்லுகிறேன். நாழி ஆகிவிட்டது. (ஒரு குரல் : பசி !) நாட்டிலேயே பசியாக இருக்கிறது.

அதே சமயத்தில், அதே நேரத்திலே, ஒரு தவறான கருத்து வெளியிலே சொல்லுகிறார்கள். பிரைவேட் செக்டார் நன்றாக நடக்கிறது, ஆனால் பப்ளிக் செக்டார் அப்படியில்லை, ஆகவே, அவற்றை எடுத்துவிடுங்கள் என்பது திரு. ஆதிமூலம் கட்சியாளர்களுடைய கொள்கை. மு ப. 5-30

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்துஸ்தான் ஸ்டீல், இன்னும் மூன்று ஸ்டீல் ப்ளாண்டுகளில் ரூ. 900 கோடி போட்டுச் செய்ததில், 72 கோடி நஷ்டம் என்று பார்லிமெண்டிலேயே நிதி மந்திரி பதிலில் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனியார் துறையில் மட்டும் முதலாளிகளுடைய வீட்டுப் பிள்ளைகள் பிறக்கும்போதே திறமை பெற்று வந்தார்கள் என்பதில்லை. நம்முடைய மாநிலத்தில் டி.வி.எஸ். பஸ் ஸ்தாபனம் நன்றாக இருக்கிறது. எங்கள் ஊரைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் சர்க்கரை ஆலை நடத்துகிறார்கள். லட்சக் கணக்கில் லாபம் வருகிறது என்கிறார்கள். கூட்டுறவு அமைச்சர் நேராகக் காண்பார்கள். இன்றைக்கு டி.வி.எஸ்.-ல் பணிபுரிபவர்கள், பிறவியிலேயே நிபுணர்கள் இல்லை, மக்கள் பிரதிநிதிகளும் மானேஜ்மெண்ட் செய்கிறார்கள். மானேஜ்மெண்டில் ஊனம் இல்லாமல் இருக்க வேண்டும். பப்ளிக் செக்டாரில் கூட அப்படித் தான். இன்றைக்கு நம்முடைய பஸ் போக்கு வரத்து, மாதவரம் பண்ணை ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் இவற்றிலெல்லாம் கூட திறமையாகச் செய்வார்கள். எதையோ வைத்துக்கொண்டு பப்ளிக் செக்டாரை எடுத்துவிடுங்கள் என்றால், அது ஒரு நல்ல சித்தாந்தம் இல்லை, பிற்போக்கான தன்மையைக் காட்டும். அதில் இந்த அரசு தெளிவான கருத்தைக் கொண்டிருக்கிறது.

நிதி நிலை அறிக்கையில் பேசும் போது கேட்டார்கள், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், "ரூ. 5.6 கோடி என்று இருக்கிறதே, அதை எப்படிச் சரிக்கட்டப் போகிறீர்கள் ?" என்று. அப்படிக் கேட்ட நேரத்தில் பதில் சொன்னேன், இன்றைக்கு திரு. மாரிமுத்து அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்கு சந்தோஷப்படுகிறேன். மாரிமுத்து போன்ற இப்படிப்பட்ட மெம்பர்கள் இருந்தால், சபை நடவடிக்கை ரொம்பச் செவ்வையாக இருக்கும். அதற்கு முதலிலே திரு. மாரிமுத்துவிற்குப் பாராட்டு தெரிவிக்கிறேன். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், சுருக்கமாகச் சொல்லுகிறேன் ; இருக்கிற விஷயம் சின்ன விஷயந்தான். ரூ. 5.6 கோடி இருக்கிறது, additional mobilisation என்று. எப்படிச் செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, These resources could in part be secured through rural debenture என்றேன். அதைத்தான் இங்கே இருக்கிற வாசகம் காட்டுகிறது. பதில் உரையில் சொல்லும்போது, As far as possible through rural debentures, by economising administrative expenditure and by trying to secure more profits from public sector undertakings, etc. என்றேன். இருக்கிற விவகாரம் என்னவென்றால், (குறுக்கீடு) நானே சுருக்கமாக முடிக்கிறேன். தப்பு ஒன்றும் செய்துவிடவில்லை. இது ஒரு முக்கியமான விஷயம் மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ரூரல் டிபெஞ்சர்ஸ் என்றால் கடன் வாங்குவதாயிற்றே, 5.6 கோடி வசூலிக்கும்போது, கணக்கை ரெவின்யூ அகௌண்டில் காட்டி

யிருக்கிறதே, அதைக் கேபிடல் அகௌண்டில் காட்ட வேண்டாமா என்று கேட்டார்கள். சரியான கேள்வி. நல்ல கேள்வி. நியாயமான கேள்வி. அதற்கு ஒரு சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கணக்குப் புத்தகத்தில் ரூரல் டிபெஞ்சர்ஸ் மூலமாகத்தான் 5.6 கோடி என்று கொண்டு வருவார்கள் என்று சொல்லவில்லை. பல வகைகளில் வருமானத்தை அதிகரிக்கலாம், வரி போடுவது ஒன்று மட்டும் இல்லை ஐயா, வரி போடுவது, சிக்கனச் சீரமைப்பு, போன்ற வகைகளிலும், அதோடு ரூரல் டிபெஞ்சர் மூலமாகவும் என்று சொன்னேன். அது ரெவின்யூ கணக்கில் வராது என்பது வாஸ்தவம். ஆனால், முழுக்க, முழுக்க, ஓவர்-ஆல் ரிஸோர்ஸ்-ல் சேரும், என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் அமைச்சர் கூறுகின்றபோது, ரூரல் டிபெஞ்சர், வரி, ஏதோ வகைகளில் ஈடு செய்து கொள்ளலாம் என்றார்கள். ஆனால், ரெவின்யூ ஸைடில், அவுட்ஸைட் காபிடல் அகௌண்ட் என்றால் காபிடல் எக்ஸ்பெண்டிசர் செய்யலாம். 'விதின் தி ரெவின்யூ அகௌண்டி,ல் வருகிறதை காபிடல் எக்ஸ்பெண்டிசர் செய்கிறார்கள். மூதலீடு, மூலதனம் 'விதின் தி ரெவின்யூ அகௌண்டி'ல் இருக்கிறது. அவுட்ஸைட் ரெவின்யூ வருமான இனத்தை வெளியிலேயிருந்து கொண்டுவருவதானால், டிபெஞ்சர் மூலம் செய்யலாம். ஆனால் இங்கே வரவு வைத்தது தவறு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். இந்தத் தலைப்பிலே வரவு வைக்க முடியாது என்பது வாஸ்தவம். ஓவர் டிராப்ட் துண்டில் விழுகிற பணத்திலே இந்தப் பணத்தை செலவு செய்யக்கூடாது என்பது நியதி அல்ல. இது ஒரு டெக்னிகல் மேட்டர். இந்த ஜேபியிலே 7½ கோடி ரூபாய், அந்த ஜேபியிலே 14 கோடி ரூபாய் என்ற கணக்குத்தான்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இப்போது நமக்கு டெஃபிஸிட் 16 கோடி சொச்சம் ரூபாய். ரெவின்யூக் கணக்கிலே 5 கோடியே 60 லட்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது. மொத்தத்தையும் சேர்த்தால் 23 கோடி சொச்சம். காஷ் கணக்கிலே வருகிற தொகையை காஷ் கணக்குக்குத்தான் வரவு வைக்க வேண்டும். வருவாய்க் கணக்கிலே வருகிற தொகை வருவாய்க் கணக்கிலேதான் வரவு வைக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 5 கோடியே 60 லட்சம் ரூபாய் கணக்கில் இதில் எந்த அளவிற்கு நாம் வசூல் செய்கிறோமோ அதை நிறைவு செய்ய விட்டிருப்பதற்குத்தான். அடிஷனல் மொபலிசேஷன் என்பதில் வரி போடுவதன் மூலம், சிக்கனம் செய்வதன் மூலம் கிடைக்கலாம். ரெவின்யூ அடிஷனல் டிபெஞ்சர் என்றாலும் லோன் என்றுதான் அர்த்தம். அது இந்தக் கணக்கிலே எப்படி வரும் என்று கேட்கிறார்கள். இது ரெவின்யூ கணக்கிலே வராது என்பதுதான் பொருள். ஓட்டு மொத்தமாக கணக்கிலே வந்துதான் தீரும். இப்போதெல்லாம் மாடர்ன் பைனான்சில் கேபிடல் அக்கவுண்ட், ரெவின்யூ அக்கவுண்ட். என்றுதான் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கவனிப்பது இல்லை. அதனால் எந்தவிதத் தவறும் நிகழ்ந்துவிடவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு இதனை யொட்டி வரி போடக்கூடாது என்பதால் போடவில்லை.

உறுப்பினர்கள் பேசும்போது அரசு சிக்கனமாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். நண்பர் திரு. கோ. பூவராகன் அவர்கள் சிக்கன சீரமைப்புகளைப்பற்றியும், விரயங்களைத் தவிர்க்க வேண்டுமென்றும் சொன்னார்கள். சிக்கனமாகச் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. வருவாயைப் பெருக்குவதற்காக பொதுத் துறை இருக்கிறது, பஸ் டிரான்ஸ்போர்ட் இருக்கிறது, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஸ்பின்னிங் மில்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளிலே எல்லாம் லாபம் வருவதில்லை. பொதுச் சொத்து என்றால் கோயில்



சொத்துபோல் இருக்கிறது. நாம் பொதுத் துறையை தொடங்கி வைப்போம் என்ற அடிப்படையில் இருப்பதால் இலாபம் சம்பாதிக்க முடியவில்லை. என்ன என்ன வரவினங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டு ஸ்பின்னிங் மில்கள் பணியாற்றக்கூடிய நிலையில் உயர்தர அதிகாரி ஒருவரை நியமித்து சிக்கனத்தை ஏற்படுத்த இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது. தொடர்ந்து வருவாய் அதிகரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது

**திரு. கோ. பூவராகவன்** அவர்கள் ரெவின்யூ போர்டைப்பற்றிச் சொன்னார்கள் இதற்கு ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். இறுதிக் கட்டத்திற்குக் காத்திருக்கிறோம். 'Final decision is awaited.'

ஜனநாயகத்திலே ஒரு வாய்ப்பு கொடுப்பதற்காகக் கொடுத்திருக்கிறோம். எல்லோரும் ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். இதைப்பற்றி எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல முடிவு எடுக்கலாம்.

அடுத்தபடியாக, திரு, கோ. பூவராகவன் அவர்கள் செகரிடேரியட்டை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். எவ்வளவோ மாற வேண்டியிருக்கின்றன. அதற்காக உறுப்பினருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுடைய எண்ணங்கள், நிர்வாக இயந்திரங்கள், மக்களுடைய தேவைகள் இவைகளைப்பொறுத்து, முன்னேற்றம் அடையும் படியாகச் செயல்பட வேண்டும்.

என்னுடைய கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. எம். இராஜா அவர்கள் பெரிய காரியங்களைச் சொன்னார்கள். திரு. சங்கரய்யா அவர்களும் அரிய கருத்துக்களைச் சொன்னார்கள். இன்று இந்த விவாதத்திலே பேசிய உறுப்பினர்களில் திரு. இராஜா அவர்களுடைய உரையும், திரு. சங்கரய்யா அவர்களுடைய உரையும்தான் எனக்குப் பிடித்திருந்தன. இதற்காக மற்றவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது என்று முதலிலேயே கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோதுமையைப்பற்றிச் சொன்னார்கள். 5 லட்சம் டன் கோதுமையை முதலமைச்சர் அவர்கள் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் கேட்க முடியும். திரு. இராஜா அவர்கள் சொன்னது நியாயமானது. ரேஷனுக்குக் கொடுப்பதற்குத்தான் நாம் கேட்கிறோம். மத்திய அரசோடு மாநில அரசு கருத்து வேற்றுமை இருக்கிறது. சண்டை போட்டுக்கொள்கிறார்கள் என்று இங்கிருக்கிறவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். மத்திய அரசுடன் நாங்கள் சண்டை போடவில்லை. மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. நான் இரண்டு வருஷமாக உணவு அமைச்சர் வேலையைப் பார்த்ததற்காகப் பாராட்டி, நன்றியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

'My dear Mathialagan,

I appreciate very much the co-operation that you gave me n handling the difficult problem of food while you were in charge of the subject in the State of Tamil Nadu and I thank you for the same.'

என்று எழுதியிருக்கிறார்கள். இதைவிட எங்களுக்கு என்ன சான்று வேண்டும்? நாங்களாகவே கேட்டு மத்திய அரசிடமிருந்து இந்தக் கடிதம் வரவில்லை. அவர்களாகவே அனுப்பியிருக்கிறார்கள். ஆரம்பத்திலே "I appreciate" என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. 'Very much' என்று சொல்லியிருக்கிறார்கள்.

'I appreciate very much.' (சிரிப்பு). for the co-operation that you gave me in handling the difficult problem of food while you were Food Minister.' இரண்டு வருஷ காலத்தில் நாங்கள் இவ்வளவு செய்திருக்கிறோம் என்பதைப் பாராட்டி கடிதம் எழுதியிருக்கிறார்கள். திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் மத்திய அரசிலே பெரிய மந்திரி மட்டுமல்ல. ஒரு பெரிய தலைவர். தாழ்த்தப்பட்ட மக்களின் பெருந் தலைவர். திருமதி இந்திரா காந்தியின் தந்தையாரின் காலத்திலேயே அவர் மந்திரியாக இருந்தவர். ஆகவே, எங்களுடைய உறவுமுறை சீராக இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கடிதத்தின் மூலமாக உறவுமுறை, மேடையிலே உறவு இல்லை. சில ரகசிய உறவுகள் இருக்கும் போல் தெரிகிறது.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** இது மாதிரியான நல்ல உறவு முறைகள் இந்திரா காந்திக்கும் எங்களுக்கும் இருக்கிறது. திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுக்கும் எங்களுக்கும் இருக்கிறது. எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டிய பெரிய பொறுப்பாக இருக்கிறது.

மத்திய மாநில உறவுமுறைகளைப் பற்றி திரு காமராஜ் அவர்கள் சொன்னார்கள். எல்லா முதலமைச்சர்களும் கூடி சட்ட நிபுணர்களும் சேர்ந்து ஒரு கமிட்டிபோடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் நல்ல வகையில் வரவேற்றிருக்கிறார்கள். காங்கிரஸ் மாநிலங்களும் காங்கிரஸ் அல்லாத மாநிலங்களும் நல்ல எண்ணத்தை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதில் கட்சி வித்தியாசம் வேண்டாம். நல்ல காரியங்கள் நிறைய இருக்கின்றன. அடுத்த மாதம் 3-ம் தேதி டெல்லியிலே வட மாநிலங்களைச் சேர்ந்த முதல் அமைச்சர்களின் மாநாடு நடைபெற இருக்கிறது. அதில் நானும் விவசாய அமைச்சர் அவர்களும் கலந்து கொள்ள இருக்கிறோம். 17,18-ம் தேதிகளில் நடைபெற இருக்கிற கூட்டங்களில் இந்திரா காந்தி அம்மையாரைக் கண்டு பேசுவதற்கு வாய்ப்பு இருப்பது வரவேற்புக்குரிய விஷயம். ஆனால் இதில் கட்சி வேறுபாடு இல்லை. இரண்டே கட்சிதான். திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்களும், திரு. நிஜலிங்கப்பா அவர்களும் எங்களையும் விட மிக அழுத்தமாக இந்தக் கருத்துக்களைச் சொல்லியதைப் பார்த்தேன்.

இந்த நிலை நீடிப்பது நாட்டுக்கும் நல்லது அல்ல. கட்சிக்கும் நல்லது அல்ல. இந்த நிலை நீடித்தால் மூன்று வருஷம் கழித்துப் பார்த்தால் டெல்லியில் காங்கிரஸ் ஆட்சி இருக்காது. டெல்லி ஆட்சி கலகலத்துப்போகும். நான் வேடிக்கைகாகச் சொல்லவில்லை. இந்திய அரசியல் வானில் வங்காளம். பீகார், கேரளம், தமிழகம்—இங்கெல்லாம் ஏற்பட்டிருக்கிற நிலையை மறந்துவிட முடியாது. இன்றைக்கு பாராளுமன்றத்தில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் இருக்கிறார். திருவாரூர் சாம்பசிவம் இருக்கிறார்கள். இவர்கள் தானே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் எல்லாம் யார்? இங்கு மட்டும் அல்ல—டெல்லி ஆட்சியையே திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்கொள்ளும் நிலை என்றைக்கும் வரலாம். ஏதோ அது தங்களுடைய பிதுரார்ஜ்ஜித சொத்துபோல இந்தியப் பிரதமரும் கருதத் தேவையில்லை. மற்றவர்களும் கருதத்தேவையில்லை. மத்திய அரசு—மாநில அரசுகள் என்கிற உறவு முறையில் பார்ட்னர்களைப் போல நடத்துகிற நிலை—அரசியல் சாசனத்தைத் திருத்தியாவது வந்தாக வேண்டும். பாகிஸ்தானில் நேற்று அயூப்கான் இருந்தார் இன்றைக்கு ஒரு காக்கிச் சட்டைக்காரர் இருக்கிறார். நாளைக்கு எப்படியோ ? நம்முடைய தேசத்தில் நிலைமை அப்படியா ? கடந்த இருபது ஆண்டுகளாக ஜனநாயகத்தின் தொட்டிலாக இருக்கிற நிலையை வளர்த்துவந்துவிட்டு—இன்றைக்கு இந்த சமதர்ம சமுதாய அமைப்பை பரவலாக அமைக்க முன்வந்தாகவேண்டும் என்ற கருத்து வளர்க்கப் படுகின்றது.

தமிழகத்தின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன். நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மாநிலங்களில் அதிக உரிமைகளைப் பெறுவதற்காக போராட்டத்தை வெற்றிபெறச் செய்ய நிச்சயம் ஒத்துழைப்பார்கள். இதில் காங்கிரஸ் மாநிலம் காங்கிரஸ் அல்லாத மாநிலம் என்கிற வேறுபாடே இல்லை. மேற்கு வங்காளத்தில இருக்கிற எனது நண்பர் ஜோதிபாசு அவர்களும் இதே கருத்துத்தான். வீரேந்திர பட்டீல் அவர்களுக்கும் இதே கருத்துத்தான். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப்படவேண்டும், இதுபற்றி விவாதிக்க முதல் மந்திரிகளின் மகாநாட்டை இந்திய பிரதமர் கூட்டவேண்டும் என்று நமது மதிப்பிற்குரிய திரு. காமராஜர் குறிப்பிட்டதற்காகநான் அவரைப் பாராட்டுகிறேன். கை



குலுக்குகிறேன். கடந்த இருபதாண்டுகளாக நாட்டின் ஜனநாயகத்தை வளர்த்த முதுபெரும் தலைவர்கள் எல்லாம் இதை உணர்ச்சி பூர்வமாக அணுகாமல் பிரத்யட்ச கண்ணோட்டத்துடன் அணுகவேண்டுமென்று மனதார விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் திடமான—வலுவான அரசாங்கத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கலைஞர் கருணாநிதி தலைமையில் அமைத்திருக்கிறது. வேறு யாராவது சொன்னால் ஒரு விதமாகப் பார்ப்பார்கள் இதில் கட்சி மாச்சரியம் இல்லை—நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படவேண்டுமென்ற குரலை எழுப்பியிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு செவி கொடுத்தேயாகவேண்டும். இன்றைக்கே எச்சரிக்க விரும்புகிறேன். இந்த மு.ப. 5–30
எச்சரிக்கையை எடுத்துக் கொள்ளாமல் இருப்பார்களேயானால், இந்த நாட்டினுடைய எதிர்காலம் " பிரிவினையை நினைக்காவிட்டாலும் தேசம் சிதறுண்டுபோய் பிரிவினை வந்துவிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்களுடைய கட்சியே கலகலத்துப்போய் இப்போதுள்ள அதிகாரங்கள் இல்லாமலே போய்விடலாம். சொந்த நிலையில் கூட பலவிதமான சிக்கல்களுக்கு உள்ளாகும் அபாய விளக்கு தென்படுகிறது.

ஏதோ விருத்தாசலத்தில் பம்பு செட்டுபோடுவதற்குப்பணம் இல்லை என்பதற்காக மத்திய சர்க்காருடன் சண்டை. போடுதவாக யாரும் கொஞ்சங்கூடக் கருதத் தேவையில்லை. ஏதோ இந்தமாதிரி பதவிக்காக ஆசைப்பட்டிருப்பதாக நினைக்கவேண்டாம். நாட்டுமக்களுடைய நன்மைக்காகவே கடந்த இருபது ஆண்டுகளாக சிறைச்சாலையே வீடாகவும் இருந்து பயிற்சி பெற்றவர்கள் நாங்கள். மக்கள் எங்களைச் சட்டமன்றத்திற்கு போகச் சொன்னால் போகிறோத். கோட்டை அமைச்சரவைக்கு அனுப்பினால் போகத் தயார். போர்களம் குதித்து சிறைச்சாலைக்குப்போகச் சொன்னாலும் போகத் தயார். எதற்கும் நாங்கள் அஞ்சவில்லை. இதில் ஒளிவு மறைவு இல்லை. எல்லாத் துறையிலும் நல்ல பயிற்சி பெற்ற படையாகவே நாங்கள் இன்றைக்கு விளங்குகிறோம். ஆகவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தந்தாக வேண்டும் இதைப் போராடியே பெற்றாக வேண்டுமென்றால் போராட்டத்தை நடத்துவதற்கும் நாங்கள் தயங்கப்போவதில்லை. ஆகவே இன்றைக்கு காங்கிரஸ் தலைமையினருக்கு நமது மதிப்பிற்குரிய திரு காமராஜ் அவர்கள் எடுத்துச் சொல்லி தெளிவான முறையில் முன்னோடியாக இருந்து இக்கருத்தைச் செயல்படுத்தவேண்டும் என்று கூறிக்கொண்டு இந்த நிதி ஒதுக்கீட்டை இந்த மாமன்றம் ஏற்று அளிக்கவேண்டுமென்று வேண்டி கேட்டுக்கொண்டு முடித்து கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 9/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவைமுன் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுத் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இதந் மசோதா நிறைவேற்றப் படவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுகக (எண் 4) மசோதா.**

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்** : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 10/69), ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இந்த மசோதா நிறைவேற்றப் படவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(10) அரசினர் தீர்மானங்கள்.**

**(அ) மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.**

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, "1969–70-ம் ஆண்டுக்குரிய சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்வதற் கென, ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை, பேரவைக்கு அறிவிக்குமாறு இப்
பி. ப· பேரவை சட்ட மேலவைக்குப் பரிந்துரை செய்கிறது" என்கிற தீர்
3-00 மானத்தை பேரவை ஏற்கவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Mr. Speaker, Sir, I move the following Resolution standing in my name :—

'That the following draft of rules to be issued by the State Government under sub-section (1) of section 17 of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931), amending Schedules II and III to the said Act, be approved as required by sub-section (3) of the said section :—

*Draft Rules.*

In exercise of the powers conferred by sub-section (i) of section 17 of the Maras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to Schedules II and III to the said Act.

*Amendments.*

(1) In the said Schedule II, for the entries in columns (2) and (3) against item 4 (iv) in column (1), the following entries shall respectively be substituted namely : -

"50·00 75"

(2) In the said Schedule III, for the entries in columns (2) to (5) against item (4) (*d*) in column (1), the following entries shall respectively be substituesed, namely :—

"6·00 18·00 9·00 27·00."

*Explanatory note.*

The tax payable under the Madras Motor Vehicles Taxation Act, 1931 in respect of omnibuses namely, vehicles permitted to ply solely as contract carriages (not being stage carriages plying as



contrac rcarriages) and to carry more than five persons (other than the driver) is Rs. 30 per seat per quarter. With a view to avoiding unhealthycompetition between omnibuses and regularstagecarriages, it is proposed to increase the tax for the omnibuses to Rs. 50 per sea per quarter so as to be on par with the rate of tax for stage carriages.

**(ஆ) தமிழ்நாடு/சென்னை மோட்டார் வாகன வரிச் சட்டத்தின் கீழ் இயற்றப்படும் வரைவு விதிகள்.**

தீர்மானம், பேவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல் கள் இத்துடன் முடிவுறுகின்றன. மீண்டும் 31—3—1969 அன்று காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

**(11) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

A. *Statutory rules and orders.*

* 105. Notification issued with G.O. Ms. No. 1879, Rural Development and Local Administration, dated the 19th September 1968 in regard to delegation of powers to Collectors to grant exemption from payment of panchayat taxes. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958)].

* 106. Statement of guarantees given by the Government of Tamil Nadu to the State Housing Board during 1968–69. [*Laid on the Table of the House under section* 160 (4) *of the Madras State Housing Board Act,* 1961 (*Madras Act* 17 *of*1961,].

B. *Reports, Notifications and other Papers.*

† 132. The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1969 (L.A Bill No. 10 of 1969).

133. Report of the Committee on Estimates relating to the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Motor Vehicles Tax Administration (Ninth Report).

134. The Report of the Committee on Agriculture (Tenth Report) (Dummy Report).

135. Report of the Public Accounts Commisttee on the action taken by the Government on the recommendations of the Committee contained in its earlier Reports (Dummy Report).

136. Fourth Report of the Committee on Subordimate Legislation for the year 1968-69 (Fourth Assembly).

137. Report of the Committee of Privileges in regard to the alleged direct accusation made by Dr. H. V. Hande, M.L.A., against the Chair.

* Placed on the table of the House on 27-3-69.

† Despatched to members on 28-3-69.

138. Report of the Committee of Privileges in regard to the alleged incorrect statement made by late Thiru S. Balasubramanian, M.L.A., while he raised a privilege matter against the then Hon. Minister for Public Works.

139. Interim Report of the Committee of Privileges :—

(i) Matter of privilege in regard to the wrong and untrue statement attributed to the Hon. Speaker by the Hon. Member Thiru T. Martin.

(ii) Matter of privilege against the Editor and Publisher of the Tamil Daily ' Kaditham ' in regard to the publication of certain passages in its issue dated 27th August 1968.

(iii) Matter of privilege against Thiru A. Balasubramanyan and others.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

**திங்கட்கிழமை, 1969 மார்ச் 31.**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **புலவர் கா. கோவிந்தன்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### * 1. வினுக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினு எண் 535 வரை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.*

### *Connemara Library Building.*

* 536 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any leakage in the building in which the Connemara Public Library is housed at Egmore ;

(*b*) if so, since how long ; and

(*c*) the steps taken by this Government to repair the library building ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) ஆம்.

*(உ) அவ்வாறு நீர் ஒழுக்கல் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படும் போதெல்லாம் உடனடி நடவடிக்கைகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் மேற்கொள்கின்றனர்.*

Dr. H. V. HANDE : Is it a fact that in a number of places, where there are cubicles at the bottom, a number of valuable journals and periodicals have been affected by this leakage ? If so, will the Hon. Minister be able to tell us the estimated extent of damages caused by this leakage ? What action has been taken by the concerned departments to see that these books and periodicals are made ' utilisable ' once again ? What is the extent of the damage this time ? Is this a chronic feature or has it happened only last year ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** *தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் 1896-ம் ஆண்டிலே கட்டப்பட்டது. ஆகவே, அடிக்கடி ஒழுகல் ஏற்படுகிறது என்பது உண்மைதான். அது அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு பொதுப்பணித் துறையினர் அதைப் பழுது பார்க்க ஏற்பாடு செய்தார்கள். கடந்த மழைக் காலத்திலே ஏற்பட்ட ஒழுகலும் உண்மைதான். எவ்வளவு டாமேஜ் ஆகி இருக்கிறது என்பதுபற்றி குறிப்பு இல்லை. ஒழுகல் ஏற்பட்ட உடனே பொதுப்பணித் துறையினர் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுப் பழுது பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது.*

**திரு. கே. வினுயகம் :** *அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து எப்போது எப்போது ஒழுக்கல் ஏற்படுகிறதோ, அப்போது அப்போது பழுது பார்க்கப்பட்டதாகத் தெரிகிறது. கடந்த 10 ஆண்டு காலத்திலே எத்தனை முறை ஒழுகல் ஏற்பட்டிருக்கிறது ? அத்தனை முறையும் பழுது பார்க்கப்பட்டிருக்கிறதா ? இப்படி இருப்பதால் இந்த நூல் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?*

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேள்வி, ஒழுகல் ஏற்பட்டதுபற்றி கொடுக்கப்பட்டதால்தான் அப்படிப் பதில் இருக்கிறது. அந்தக் கட்டடம் முழுவதையும் விட்டுவிடுவதற்கில்லை என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் நானும் அதிகாரிகளிடம் கேட்டேன், இப்போது எதுவும் இல்லை, மழை காலம் வருவதற்கு முன்னாலேயே எச்சரிக்கையாகப் பழுது பார்க்கிறோம் என்று சொன்னார்கள்.

**திரு. ம. சோ. கோவிந்தராசன் :** இந்தக் கன்னிமாரா லைப்ரரியில் ஒழுகல் ஏற்படுவதுபோல், மதுரையிலுள்ள மகாலிலே ஒழுகல் ஏற்படுவதால் அதைப் பழுது பார்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அங்கேயுள்ள நீதி மன்றங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அந்தக் கட்டடத்தை சரித்திரப் பூர்வமான சின்னமாக ஆக்க 5 லட்சம் ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டு, நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டவுடன் அந்த நீதி மன்றங்களை மாற்றுவது பற்றிய வேலை பின்னால் தொடரும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கன்னிமாரா லைப்ரரியில் நீர்க்கசிவு இருக்கிற காரணத்தால் குறிப்பிட்ட மதிப்பு மிக்க நூல்கள் செல்லரிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் செல்லரித்துவிட்ட நூல்களைப் புதுப்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒழுக்குகள் ஏற்படுவதுபற்றிதான் என்னிடத்தில் குறிப்பு இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்கிறது. புத்தகங்கள் புதுப்பிப்பது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

**DR. H. V. HANDE :** The Hon. Minister said in his reply that a number of books had been spoiled. Will the Minister be able to tell us whether the concerned Librarian drew the attention of the Government to the leakage immediately after the books were affected last year or was he waiting till this question was tabled ? May I know whether the Government have any long-term programme or short-term programme to see that the building is properly repaired so that there may not be such leakage and such damages to the books and periodicals in future ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புத்தகங்கள் பழுது அடைந்தது என்பதுபற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. ஒழுகலைப் பழுது பார்ப்பது பற்றி உடனடியாக பொதுப்பணித் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்கள் பழுது பார்க்கின்றனர். மழைக் காலத்தில் அதை எதிர்பார்த்து அவர்கள் அதைப் பழுதுபார்க்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

*Temporary Assistant Professors, etc.*

*537 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of Assistant Professors, Tutors and Demonstrators ousted from Government Colleges in April 1968 ; and

(*b*) whether it is proposed to re-appoint them in future vacancies ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) 293.

(இ) இப்பதவிகளில் முறையாக நியமிப்பதற்காக வேட்பாளர்களைத் தெரிந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் முதலில் நியமிக்கப்படுவார்கள். காலியிடங்கள் எஞ்சியிருந்தால் கடந்த கல்வியாண்டின் இறுதியில் பணியிலிருந்து நீக்கப்பட்ட தாற்காலிக ஆசிரியப் பணியாளர்கள், உரிய கல்வித் தகுதி பெற்றிருந்து, முன்னர் அவர்கள் மன நிறைவளிக்கத் தக்க வகையில் பணியாற்றியிருந்தால், அவர்களைத் தாற்காலிகமாக நியமிப்பது குறித்து ஆலோசிக்கப்படும்.

**திரு எ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இப்படி ஆசிரியர்கள் பல ஆண்டுகளாகத் தற்காலிகமாக இருந்து வருகின்றனர். அந்தத் தற்காலிக வேலைமுறையையே மாற்றி ஆசிரியர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தற்காலிகமாக நியமிக்கப்படுவதை நாம் முற்றிலும் நீக்கிவிட முடியாது. எந்த அளவிற்குக் குறைக்க வேண்டுமோ அந்த அளவிற்குக் குறைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. புதிதாகக் கல்லூரிகள் ஆரம்பித்தால் எத்தனை ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள் என்று கணக்கிடுகிறோம். அப்படிக் கணக்கிட்டு, பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அவர்களைத் தேர்ந்தெடுக்கும்படி அனுப்புகிறோம். அவர்கள் தேர்ந்தெடுத்து முடிவை நமக்குத் தெரிவித்து நாம் அவர்களை நியமிக்கின்ற வரையில் ஒரு இடைக்காலம் இருக்கிறது. அந்த இடைக்காலத்திலே ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். பப்ளிக் சர்விஸ் கமிஷன் லிஸ்டிலே தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவர்கள் பெயரும் வந்தால் உடனடியாக அவர்களை நியமிக்கிறோம். நியமிக்கப்படாமல் அந்த இடங்கள் காலியாக இருந்தால், அவர்களையே நியமிப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** எதற்காக வேண்டி அவர்களை வேலைக்கு எடுக்கவேண்டும் ? மீண்டும் தற்காலிகமாக நீக்க வேண்டும் ? அவர்களை நியமிப்பதற்கு சர்விஸ் கமிஷனுக்கு அனுப்பி அவர்களைத் தேர்வு செய்வது என்பதை விட்டு, அவர்கள் இரண்டு ஆண்டு காலம் வேலை செய்த பிறகு அவர்களை சர்விஸ் கமிஷனுக்கு அனுப்பாமலேயே மீண்டும் எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைத்தான் நான் விளக்கமாகச் சொன்னேன். இதுபோன்று ஆசிரியர் பணிக்கு நியமிக்கும்போது, சர்விஸ் கமிஷன் மூலமாகத்தான் நாம் நியமிக்க வேண்டும். ஆனால், உடனடியாகக் கல்லூரிகள் திறக்கும்போது, இடைக்காலத் தேவைக்காக ஆசிரியர்களை நேர்முகமாகப் பணியிலே அமர்த்துகிறார்கள். அவர்களை ஓராண்டுக்கு அமர்த்துகிறார்கள். இதற்கிடையிலே சர்விஸ் கமிஷனைக் கேட்கிறோம், எவ்வளவு காலி இடங்கள் இருக்கின்றனவோ அவற்றுக்குத் தேர்வு நடத்த வேண்டும் என்று. அவர்கள் தேர்வு நடத்தி அறிவிக்கின்ற வரையில் உள்ள அந்த இடைக்காலத்திற்கு நாம் இப்படிப்பட்ட பணிகளுக்கு ஆசிரியர்களை நேர்முகமாக நியமிக்கத்தான் வேண்டும்.

**திரு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, தற்காலிகப் பேராசிரியர்களை வேலை நீக்கம் செய்யும்போது, ஸீனியாரிடியைப் பார்த்து, குறைந்த சர்விஸ் உள்ளவர்களை வேலை நீக்கம் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? ஸீனியர்கள் வெளியூர்களில் இருந்தால், இங்கேயிருக்கக்கூடிய ஜூனியர்களை வைத்துக்கொண்டு, வெளியூர்களில் உள்ள ஸீனியர்களை, "வேலை காலி இல்லை" என்று நீக்கும் சூழ்நிலை இருக்கிறது. உதாரணமாக, கோயம்புத்தூரில் வேலை செய்யக்கூடிய ஒருவர், அவர் ஸீனியராக இருந்தாலும், வேலைநீக்கம் செய்யப்படுகிறார். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்போது, ஜூனியராக இருப்பவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஸீனியராக இருக்கக்கூடியவரை வேலைக்கு வைத்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாவதன் :** *தற்காலிகமாக வேலையில் இருப்பவர்களை நீக்கும்போது, அவர்களுடைய வேலைப் பணித் திட்டத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஸீனியாரிடி உள்ளவர்களைத்தான் வைத்துக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.*

THIRU K. VINAYAKAM : Sir, whereas it has been the policy to recruit these professors and tutors only through the Madras Public Service Commission, whereas this kind of recruitment on a temporary basis is done by the Director of Public Instruction of the Government of Madras, whereas appointments to different posts are made only by the Employment Exchange, would the Government think of the possibility of handing over the entire job of recruitment to the Employment Exchange instead of vesting this power in the Director of Public Instruction ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** *எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சினர், வேலைக்குச் சேர்ப்பதாக எனக்குத் தகவல் இல்லை. வேலைக்குச் சேர்க்கின்ற இடங்களுக்குப் பெயர்களை அனுப்புகிறார்கள். சர்விஸ் கமிஷன் மூலமாகத்தான் நாம் வேலைக்குச் சேர்க்கிறோம். எவ்வளவு பேர்கள் வேண்டும் என்று நாம் அவர்களுக்குத் தெரிவிக்கிறோம். "299 பேர்களில் 169 இடங்களுக்கு உடனடியாக நீங்கள் பர்மனெண்ட் வேகன்ஸிக்குத் தேர்வு நடத்த வேண்டும்" என்று சர்விஸ் கமிஷனுக்கு எழுதியிருக்கிறோம். அவர்கள் தேர்வு செய்து நமக்கு அந்த அறிக்கையை அனுப்புகிற வரையில் உள்ள அந்த இடைக்காலத்தில், ஆசிரியர்களை நாம் நியமித்துத்தான் ஆகவேண்டும். அதற்கு இயக்குநருக்கு நாம் அதிகாரம் கொடுத்திருக்கிறோம்.*

## *Private tuition.*

* 538 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether private tuition is prohibited for school and college teachers ; and

(*b*) if so, the steps taken by the Government to enforce it strictly ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** *(அ) சில கட்டுபபாடுகளுக்கிணங்க, மாணவர்கட்குத் தனிப்பட்ட முறையில் பாடம் சொல்லிக் கொடுத்தல்* (private tuition) *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*(இ) இந்தக் கட்டுப்பாடுகள், கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன.*

**திரு பி. எஸ். மணியன் :** *தலைவர் அவர்களே, பல ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் பயிற்சியை முடித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்தக் குறையை நீக்கும் முறையில் தனியாக ட்யூஷன் சொல்லிக் கொடுக்கும் உரிமையை, பயிற்சியை முடித்துவிட்டு வேலையில்லாமலிருக்கும் இத்தகைய ஆசிரியர்களுக்கு மட்டுமே உண்டு என்று அரசு உத்தரவிடுமா ?*

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** *பணிபுரியக் கூடிய ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பள்ளி வகுப்புக்களிலேயே சிறந்த முறையில் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். தனியாகச் சொல்லிக் கொடுப்பது என்பதை அனுமதிக்கும் காரணத்தால் சில தவறுகள் ஏற்படும் என்பதுதான் இந்தக் கேள்வியின் குறிக்கோள். அதைத் தடுப்பதற்கு நாம் சில கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறோம். வேலையற்றிருக்கும் ஆசிரியர்களுக்கு இந்த வேலையைக் கொடுத்தால்கூட அவர்கள் ஏற்றுக்கொள்ள முன்வரமாட்டார்கள். அவர்களுக்கு நிரந்தரமான வேலையைத் தேடித் தருவதுதான் அரசாங்கத்தின் கொள்கை.*





**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** *சில கட்டுப்பாடுகளை அடிப்படையாக வைத்து ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் மாணவர்கட்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு அனுமதி தருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தக் கட்டுப்பாடுகள் என்ன என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?*

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** *ஓராசிரியர் தனித்துப் படிப்பு சொல்லிக் கொடுப்பதற்கு முன்னால், அதுபற்றி அந்தக் கல்விக்கூடத்தின் தலைமை ஆசிரியருக்கு அறிவிக்க வேண்டும். தனியார் நிறுவனமாக இருந்தால், அந்த நிர்வாகத்தினருடைய அனுமதியைப் பெறவேண்டும். இத்தனை மாணவர்களைத்தான் அவர்கள் ஒரு சமயத்தில் எடுக்க முடியும் என்ற கட்டுப்பாடு இருக்கிறது. இத்தனை நாட்கள் அல்லது இத்தனை மணி நேரங்கள்தான் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று இருக்கிறது. அப்படி அவர்கள் செய்யும்போது மாணவர்களுடைய உடல் வளர்ச்சிக்குரிய விளையாட்டுக்குரிய நேரம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்றும் நாம் கண்டிப்பாக வலியுறுத்தி வருகிறோம். இந்தக் கட்டுப்பாடுகளை மீறுகிறவர்களைப் பொறுத்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரம் கொடுத்திருக்கிறோம்.*

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, a good number of students call at the tutorial colleges for getting themselves equipped for writing examinations. In such cases the colleges charge heavy fees from the students. May I request the Hon. Minister to state whether the Government will come forward to fix the fees leviable by those colleges just like regular colleges ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** *ட்யூட்டோரியல் காலேஜைப் பொறுத்த வரையில் ஏற்கனவே ஒரு சட்டம் நிறைவேற்றி இருக்கிறோம். அந்தச் சட்டம் உயர்நீதி மன்றத்திலே இருக்கிறது. அந்தச் சட்டம் செல்லும், என்று உயர்நீதி மன்றம் சொன்னதற்குப் பின்னால், எந்தெந்த முறையில் நாம் அந்தக் கல்லூரிகளை ஒரு வரையறைக்குக் கொண்டு வரலாம் என்பதை யோசிக்கலாம். இப்போதுகூட, மாணவர்கள் கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை நாம் கல்லூரிக்கு நிர்ணயிப்பதில்லை. பல்கலைக் கழகம்தான் அதைப்பற்றி நிர்ணயிக்கிறது. அவர்கள் கூட ஏதோ ஒரு மினிமம், ஒரு மாக்ஸிமம் என்று நிர்ணயிக்கிறார்கள். இதிலேகூட ஒவ்வொரு கல்லூரிக்கும் வேறுபாடு வருகிறது. அதைப் பல்கலைக்கழகம்தான் முடிவு செய்ய வேண்டும்.*

THIRU K. S. KOTHANDARAMIAH : There are a number of causes why teachers take to private teaching. The first thing is that the salary they get is not adequate, and with the soaring prices they are not able to make both ends meet with that amount. Secondly, teachers are not posted to schools in time. For example, in my taluk even for six months, teachers are not posted and therefore parents themselves send their children. Therefore, will the Government see that the orders in regard to private tuition are not strictly enforced ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** *ஆசிரியர்களை நிர்ணயிப்பதிலே ஆங்காங்குள்ள அதிகாரிகள் கவனம் எடுத்துக்கொண்டு செய்கிறார்கள். அதன் காரணமாக, தனித்து அவர்கள் ட்யூஷன் இருக்க வேண்டும் என்று கருதுவதாக நினைக்கவில்லை. சில மாணவர்களுக்குக் கொஞ்சம் படிப்பில் கவனம் வரவேண்டும் என்று பெற்றோர்கள் விரும்பி அவர்கள் ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அதை முழுவதுமாகத் தடுத்துவிடுவது முடியாத காரியம்.*

[1969 மார்ச் 31

**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் கல்வி கற்பித்துக் கொடுப்பதைத் தடை செய்ய வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். அவர்கள் தனிப்பட்ட முறையில் வீட்டுக்கு மாணவர்களை வரச்சொல்லி கற்பிக்கிறார்கள் என்றால், அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்கு அசராங்கம் என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே கூட அந்த விதி முறை இருக்கிறது. உடனடியாகத் தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். எந்த வகுப்பு மாணவர்களுக்கு எவ்வளவு நேரம் சொல்லிக் கொடுக்கிறார்கள், எவ்வளவு பணம் வாங்குகிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அந்தப் பணத்திற்குக் கூட ஒரு வரம்பு விதித்து இருக்கிறோம். அந்த வரம்பை மீறி அவர்கள் செய்கிறார்களா என்று பார்க்கப்படுகிறது. அதற்கான அனுமதியை அவர்கள் வாங்க வேண்டும். 200 ரூபாயாக இருந்தால், டிவிஷனல் இன்ஸ்பெக்டருடைய அனுமதியை வாங்க வேண்டும், 100 ரூபாயாக இருந்தால் மாவட்டக் கல்வி அதிகாரியினுடைய அனுமதியை வாங்கவேண்டும் என்றெல்லாம் வைத்திருக்கிறோம். அனுமதியின்றிச் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** பள்ளியாசிரியர்கள் தனியாகப் பாடம் சொல்லிக் கொடுப்பது மாணவர்களுடைய அறிவும், திறமையும் வளருவதற்கு எதுவாகிறது. ஆனால், அதே நேரத்தில், பள்ளியிலே திறமைக் குறைவான போதிப்பு நடைபெறுகிறதே, அதைத் தடுப்பதற்கும் எந்த முறையைக் கையாண்டால் மாணவர்களின் கல்வி அறிவு சரியாக வரும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பள்ளிகளிலே சிறந்த முறையில் கற்பித்து, மாணவர்களை உற்சாகப்படுத்துவதுதான் நல்லது என்பது அரசாங்கத்தினுடைய கருத்து. மாணவர்கள் தனித்துப் படிக்கவேண்டும் என்று விரும்புவதில்லை. யாரோ ஒரு சில மாணவர்களுடைய பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளின் கல்வித் தகுதி குறைந்திருக்கிறது, ஆகவே அதிகத் தகுதி பெறுவதற்கு ட்யூஷன் வேண்டும் என்று கருதினால் அதை நாம் ஆட்சேபிக்க முடியாது.

<u>தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்.</u>

* 539 வினா :—**திரு. பெ. சௌந்தர பாண்டியன்.** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுபவர் தலைமை ஆசிரியராக பணியாற்றும் போது ஊதியம் அதிகமாக கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** (அ) இல்லை. ஆயினும் 3-11-61 தேதி வரை தலைமை ஆசிரியர் படி பெற்று வந்த உள்ளாட்சி மன்றத் தலைமை ஆசிரியர்களுக்கு அது தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

(இ) அரசின் நிதி நிலைமை சிரமமாக இருப்பதே காரணம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இதர துறைகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு, அவர்கள் வகிக்கின்ற பொறுப்புக்குத் தக்கபடி ஊதியம் அளிக்கப்படுகிறது. அதுபோல் தொடக்கப்பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் அத்தகைய ஊதியம் தருவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கலவி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, தகுந்த முறையில் நம்முடைய பே கமிஷன் அவர்களுடைய சம்பளத்தையும், படியையும் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாம் கொடுத்து வருகிறோம். அதிலே, பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும்



1969 மார்ச் 31]

தலைமையாசிரியர்களுக்குத் தனியாகப் படி கொடுத்துவந்திருக்கிறார்கள். அது பிற பள்ளிகளில் கிடையாது. அந்தப் படியை 1961ம் ஆண்டில் எடுத்துவிட்டிருக்கிறார்கள். மறுபடியும் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு பி. வேலுசாமி :** இந்தத் தொடக்கப் பள்ளியிலேயிருக்கும் மாணவர்கள் முழுதுமாக சாதாரண பிஞ்சு உள்ளங்களோடு இருக்கிறவர்களாகையால் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு கல்வி போதிக்கும் முறையை அரசு கொண்டுவருமா ? அப்படிப் போதிப்பதன் மூலம் அந்த இளம் பிஞ்சு உள்ளங்களின் வளர்ச்சி சரியாக இருக்கும் என்று சர்க்கார் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆசிரியர் பயிற்சிக்குத் தாய் குலத்திலிருந்து ஏராளமானவர்கள் எடுக்கப்படுகிறார்கள். இன்றைக்கும் ஏராளமானவர்கள் அவர்களில் பணியாற்றுகிறார்கள். அவர்களிலே சிறந்த முறையில் பணியாற்றுகிறவர்களும் உண்டு. மோசமானவர்களும் இருக்கலாம். ஆகவே, தாய்க்குலம்தான் அதற்குத் தகுந்தவர்கள் என்று நாம் சொல்லிவிட்டால் ஆண்குலம் எதிர்க்கும் என்று நம்புகிறேன்.

**Thiru K. VINAYAKAM** : Sir, whereas elementary school teachers who serve as headmasters are expected to do some extra work in their capacity as headmasters, is the Government aware of the fact that private managements are giving incentives from their funds to the teachers employed as headmasters and, if so will the Government fall in line with this policy of giving a 'hεadmaster allowance' to such of those teachers who work in that capacity?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** என்னிடத்தில் இருக்கக்கூடிய தகவலின்படி தனியார் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய தலைமையாசிரியர்களுக்கு இந்தப் படி கொடுக்காத காரணத்தாலே பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் வேலை பார்த்து வருகின்ற தலைமையாசிரியர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்று முன்பிருந்த அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனால், என்னுடைய கருத்து அவர்களுக்குக் கொடுக்காததால் இவர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்பது அல்ல. இவர்களுக்குக் கொடுப்பது நியாயம் என்று கருதுகிறேன். அதைப் பற்றி அரசாங்கம் இப்பொழுது பரிசீலித்து வருகிறது.

<u>சிறு தொழில்கள்.</u>

*540 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களை பலப்படுத்தவும், அவைகளுக்கு ஊக்கமளிக்கவும் சர்க்காரின் நடவடிக்கை என்ன ?

(இ) இவைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், சிறு தொழில்களின் மூலம் உற்பத்தி செய்யும் பண்டங்களை இதர பெரிய தொழில்களின் மூலம் உற்பத்தி செய்வதை தடை செய்ய திட்டம் ஏதேனும் இருக்கின்றதா ?

(உ) அப்படி எந்தெந்த பண்டங்கள் சிறு தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன, மேலும் என்னென்ன பொருள்களை ஒதுக்க உத்தேசம், விவரம் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவர அறிக்கை [a] ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

[a] 832—835-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 31

* 541 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of applications for loan under the Madras State Aid to Industries Act received during 1966-67 and 1967-68 (till date) ; and

(*b*) the number among them still pending sanction ?

THE HON. THIRU S. MADHAVAN :

| | *During* 1966-67. | *During* 1967-68. |
|---|---|---|
| (*a*) | 5,032 | 5,327 |
| (*b*) | *Nil.* | 283 |

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், என்னுடைய கேள்வியில் இருப்பது சிறு தொழில்களைப் பாதுகாப்பதற்காகவேண்டி பெரிய தொழில்களைக் கட்டுப்படுத்தவேண்டுமென்பது தான். அதற்கு நடவடிக்கை எடுக்க மத்திய அரசாங்கத்திற்குத்தான் அதிகாரம் உள்ளது என்று இந்தப் பதிலிலே இருக்கிறது. ஆகவே, சர்க்கார், அந்தச் சிறு தொழில்கள் நல்ல முறையிலே இருக்கவேண்டுமானால், வளரவேண்டு மானால் சிறு தொழில்களில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களைப் பெரிய தொழில்களிலே உற்பத்தி செய்யக்கூடாது என்ற அளவுக்கு மத்திய சர்க்காரை வற்புறுத்த இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கட்டாயத்தால் அப்படிப்பட்ட நிலை உருவாகும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இப்பொழுது கூட ஒரு பெரிய தொழிற்சாலை இருக்கிற இடத்தைச் சுற்றிச் சிறு சிறு தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. பெரிய தொழிற்சாலைகளை நடத்துகிறவர்களே கூட தங்களுக்குத் தேவையான சிறு சிறு பொருள் களை அவர்களே சிறு சிறு தொழில்களுக்கு உதவி செய்து, கடன் கொடுத்து, அவர்கள் மூலம் தயாரிக்கச் செய்து வாங்கிக்கொண்டால் செலவு குறையும் என்று கருதுகிறார்கள் என்று சொன்னார்கள். எனவே. இந்த அரசாங்கம் சிறு சிறு தொழில்களுக்கு உதவி செய்யவேண்டு மென்ற முறையிலேதான் இத்தகைய வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, 1966-67லே 5,032 விண்ணப்பங்களும், 1967-68-லே 5,327 விண்ணப்பங்களும் ஏறக் குறைய மொத்தம் பத்தாயிரம் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அந்தப் பத்தாயிரம் விண்ணப்பதாரர்களுக்கும் கடன் கொடுக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியானால் மொத்தம் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ? கடன் வாங்கிய அப்படிப்பட்ட 10 ஆயிரம் விண்ணப்ப தாரர்களில் எத்தனை பேர்கள் அந்தப் கடனைப் பயன்படுத்தித் தொழில்களை ஆரம்பித்துருக்கிறார்கள், இன்னும் எத்தனை பேர்கள் ஆரம்பிக்காமல் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கடன் கொடுக்கும் பொழுது தொழில்களை ஆரம்பிக்கிறார்களா என்று பகுதி பகுதியாகப் பார்த்துத் தான் கொடுக்கப்படுகிறது. 1966-67-லே ரூ. 39,51,200-ம் 1967-68லே ரூ. 36,72,934-ம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** பெரிய தொழில்களுக்கு சிஸ்டர் கன்சர்ன் ஆக அநேகமாக அவை இருக்கக்கூடியவை. பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் மாறி மாறி அவற்றை நடத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அப்படியில்லாமல் புதிய புதிய ஆட்கள் அவற்றை நடத்துமாறு செய்து தொழில் முன் னேற்றம் நல்ல வகையில் ஏற்படுத்துவதற்கு முன் வருவார்களா ?



1969 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியார் துறையினரே சிஸ்டர் கன்சர்ன் வைத்திருந்தால் அதை நாம் தடுக்கமுடியாது. தொழிற்சாலை உருவாகவேண்டுமென்றுதான் நாம் நினைக்கிறோம். ஐ.டி.ஐ.-யிலே பயிற்சி பெற்றவர்களைப் பொறுத்தவரையில், பஞ்சாப் மாநிலத்திலே தொழில்கள் உருவாகின்றதைப் போன்று, ஒவ்வொருவரும் தொழிலை தொடங்கி நடத்தவேண்டுமென்ற அளவில்தான் நாம் இத்தகைய வசதிகளைச் செய்துகொடுக்கிறோம். அவர்கள் அதைப் பயன்படுத்தினால் ஏராளமான சிறு தொழில்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

**திரு என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, பொதுவாக பெரிய இயந்திரங்களே ஏகபோகமாக வளர்வதனால் சிறு தொழில்களை பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்பதை இந்திய அரசினரே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, கைத்தறித் தொழில் மில் தொழிலோடு போட்டி போட முடியாததால் கஷ்டப்படுகிறது. எனவே, பெரிய தொழில்கள் சிறு தொழில்களைப் பாதிக்காமல் இருக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் எடுத்துச் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய அரசு இந்தச் சிறிய தொழில்களைப் பாதுகாப்பதற்கு ஒரு அமைப்பை வைத்திருக்கிறார்கள். அந்த அமைப்பின் மூலம் அடிக்கடி நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நம்முடைய மாநிலத்திலே சிறு தொழில்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கவேண்டுமென்ற முறையில் தான் இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கிறோம். எந்த எந்தத் தொழில்களிலே ஊக்கம் கொடுக்கப்படும் என்ற பட்டியலை வைத்திருக் கிறோம். அவர்கள் எந்த எந்தத் தொழில்களை செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களோ அதைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதற்குப் பிறகு நாம் அதற்காக ஊக்கம் கொடுக்கக்கூடிய முறையில் உதவி செய் கிறோம்.

**திரு. நா. சௌந்தர பாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழில் துறையிலே நாங்குனேரி, ஓமலூர், திருவரம்பூர் போன்ற இடங்களிலே சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கு அந்தத் திட்டங்களில் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஆனால், அவை நல்ல முறையிலே நடைபெறவில்லை என்று அறிகிறேன். எனவே, தமிழ்நாடு அரசாங்கம் தீவிரப்படுத்தி அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட முயற்சியிலேதான் ஈடுபட்டு வருகிறோம். சிறு தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று தான் உதவிகள், பண உதவிகள் செய்து உருவாக்கச் செய்கிறோம். கனம் உறுப்பினர் அவர்கள் எந்தத் தொழிலைப் பற்றிக் கேட்கிறார் கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் விவரத்தைச் சொல்லலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தப் பெரிய தொழில் களிலே, மூலதனம், கட்டடம், நிர்வாகச் செலவு, இயந்திரம் போன்றவை மிக அதிகமாக ஆவதால், உற்பத்தியாகிற பொருள்களின் விலையை அதிகமாக வைத்து விற்கக்கூடிய நிலைமை இருப்பதால் வாங்குகிறவர் களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அம்மாதிரியான நேரத்தில் இரண்டு சிறு தொழில்களை ஏற்படுத்தி அதன மூலம் உற்பத்தி செய்தால் உற்பத்தி செலவு குறைந்து, விலையும் குறைகிறது. சிறு தொழில்களை, பெரிய தொழில்கள் போட்டியின் மூலம் கவிழ்த்து விடுகின்றன. எனவே, சிறு தொழில்களைப் பாதுகாக்க அவற்றிற்கு ஊக்கம் தர பெரிய தொழில்களில் ஒரே மாதிரியான பெரிய தொழில்கள் இன்னும் ஏற்படாமல் சிறு சிறு தொழில்களை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டாமென்று சொல்லமுடியாது. பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டால் உற்பத்தி ஏராளமாக ஆகும். உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. நான் முன்பே குறிப்பிட்டபடி, பெரிய தொழில்களை நடத்துகிறவர்களே ஒப்புக்கொள்கிறார்கள், அவர்களுக்கு வேண்டிய பொருள்களைச் சிறு சிறு பொருள்களை—சிறிய தொழில்களை ஊக்குவித்து அவற்றின் மூலம் செய்தால் செலவு குறையும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையிலேதான் நாம் முயற்சி செய்துகொண்டு வருகிறோம். எனவே, பெரிய தொழில்களே வேண்டாம் என்று சொல்வது சரியாகாது.

**திரு. வி. கே. கோதண்ட்ராமன் :** சிறு தொழில்களை ஊக்கப்படுத்துவதற்காகவேண்டி 25 தொழில்களில் இன்ன இன்ன தொழில்கள் என்று இந்த லிஸ்டிலே கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவும் குடிசை தொழில்களில் தயார் செய்யக்கூடிய பொருள்களாகத் தான் இருக்கின்றன. ஆகவே, நல்ல முறையிலே சிறு தொழில்களை ஊக்குவிக்கக் கூடிய தன்மையிலே சிறு தொழில்களின் மூலம் மோட்டார், பம்பு செட்டு இவை போன்ற பலதரப்பட்ட பொருள்களைத் தயார் செய்வதற்கென்றே ஒதுக்கிவிட ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுதுகூட கோவை மாவட்டத்திலே பம்புசெட்டுகள் தயாரிப்பதற்காக ஏராளமான சிறு சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகளின் மூலமாக ஏராளமான உற்பத்தி செய்தால் அது பொருளாதாரத்தைப் பாதித்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. தொழில்கள் பெருக வேண்டுமென்ற அடிப்படையிலே தான் நாம் இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்து வருகிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, டிரான்ஸ்போர்ட், எலெக்ட்ரிசிடி போர்டு போன்ற இலாக்காக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கவேண்டுமானால் சிறு தொழிற்சாலைகள் மூலம் தயாரிக்கப்படுகின்ற பொருள்களை வாங்கிக்கொள்ளவேண்டும், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கக்கூடாது என்று அரசு கட்டுப்படுத்த முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சில மாநிலங்களிலே அப்படிப்பட்ட விதிமுறைகள் இருப்பதாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அரசு நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை அரசு தொழிற்சாலைகளிலே வாங்கவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு அரசு சிறந்த முறையில் ஊக்கம் தரவேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதை எப்படி அமல்படுத்துவது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண்கள் 542, 543 தள்ளி வைக்கப்படுகின்றன.

## உள்ளாட்சி மன்ற அலுவலகங்களில் திருவள்ளுவர் படம்.

* 544 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி**
**திரு. நா. காசிராமன்** } மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர சபை, பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து அலுவலகங்களில் திருவள்ளுவர் படம் வைத்து, திருக்குறளும் எழுதவேண்டுமென தமிழ்நாடு அரசு உத்திரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?





**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) : (இ) : ஆம். உள்ளாட்சி அமைப்புக்களின் பணியாளர்கள், பொது மக்கள், அனைவரது மனத்திலும் திருக்குறளின் கருத்தினைப் புகுத்தும் பொருட்டு, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், ஊராட்சி அலுவலகங்கள், இந்த உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் பள்ளிகள், ஏனைய நிறுவனங்கள் அனைத்திலும் அரசாங்கம் ஒப்புதலளித்த புலவர் திருவள்ளுவரின் படத்தினை வைக்குமாறு அரசாங்கம் பரிவுரை செய்துள்ளது. திருக்குறட்பா ஒன்றினையும் படத்திற்குக் கீழ் எழுதி வைக்குமாறு சமீபத்தில் அரசாங்கம் அறிவித்து உள்ளது.

**திரு. கே. வினயகம் :** திருவள்ளுவர் படத்தை வைத்து அதன்கீழ் அவர் எழுதிய ஒரு குறளைப் பொறிப்பது நியாயம், நல்லதும் கூட. அவ்வாறு குறளை எழுதும்போது புரியும் அளவுக்கு உள்ள குறளை மாத்திரம் எழுத வேண்டுமே தவிர, புரியாத குறளை எழுதி வைப்பதால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. ஆகவே, புரியும் அளவில் உள்ள குறளை மாத்திரம் எழுதவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 1,330 குறள்களிலே எந்தக் குறள்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுக்கு விளக்கம் தெரியவில்லை என்று கூறினால் அதற்கான விளக்கத்தையும் எழுதி வைக்கலாம்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்களின் அலுவலகங்களில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற சிறப்பு வாய்ந்த தலைவர்களுடைய படங்களை வைக்கிறார்கள். அதைப் போல் நம்முடைய தமிழகத்தின் முதற் தலைமகன் அறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தை எல்லா அலுவலகங்களிலும் வைக்க வேண்டுமென்று சர்க்கார் முடிவு எடுத்து அங்கீகாரம் பெற்ற ஒரு படத்தை வைப்பதற்கு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஆணை பிறப்பித்து நடத்தப்பட வேண்டிய காரியமாக இதைச் சர்க்கார் கருதவில்லை. இப்போதே ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களில் அவர்களாகவே அண்ணா அவர்களின் படத்தை வைக்க முன் வந்து சிறப்பாகப் போற்றுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நகர சபை, பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் திருவள்ளுவர் படத்தைத் திறந்து திருக்குறளை எழுதி வைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். இந்தச் செலவுக்காக எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அல்லது எவ்வளவு செலவாகி இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதற்கு ஆகக்கூடிய செலவைச் சிறப்புச் செலவாகக் கருதி வேண்டிய தொகையை உள்ளாட்சி அமைப்புகளின் நிதிகளில் இருந்து பெறுவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு சி. கிருஷ்ணமூர்த்தி :** பஞ்சாயத்து கூட்டு மன்றத்திற்குட்பட்ட பள்ளிகளில் திருவள்ளுவர் படத்தையோ அமைச்சர்கள் படத்தையோ வைக்க பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் அனுமதி அளித்தாலும் அத்தகைய படத் திறப்பு விழாக்களுக்கு பொதுமக்கள் இஷ்டப்படி அமைச்சர்களையோ, அரசியல் தலைவர்களையோ வரவழைத்து விழா நடத்த பஞ்சாயத்து கூட்டு மன்றம் அனுமதி கொடுக்க மறுக்கிறது. படம் கொடுத்தவர்கள் அவர்கள் இஷ்டப்படி விழா நடத்திக்கொள்ள அனுமதி வழங்கப்படவேண்டுமென்ற முறையில் சர்க்கார் உத்தரவு அளிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பேரவைமுன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** 3 இடங்களில் தனியார் கட்டடங்களை வாடகைக்கு எடுக்க வேண்டுமென்றும் அதற்காக வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவி அளிக்கும் பொருட்டு துணைக்குழு அமைக்கப் பட வேண்டுமென்றும் லிஸ்டில் உள்ளது. அந்தத் துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதா ? யார் யார் அந்தத் துணைக் குழுவிலே உள்ளார்கள் ? கட்டடங்கள் எடுக்கப்பட்டனவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கோவை மாவட்ட தொழிலாளர் தலைவர்கள் இதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொன்ன நேரத்தில், கட்டடம் இல்லாத நிலை அரசு அதிகாரிகளால் சுட்டிக் காண்பிக்கப்பட்டது. கோவை நகர தொழிலாளர் குழு அமைத்து அவர்களும் உதவி செய்து 13 கட்டடங்கள் வந்து ஏப்ரல் 13-ம் தேதியில் இருந்து இந்தத் திட்டத்தைத் தொடங்குவதாக அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தத் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சேரவேண்டிய தொகையை, கட்டணத்தை எந்தெந்த தொழில் அதிபர்கள் இதுவரையில் கொடுக்காமல் இருக்கிறார்கள். அப்படிக் கொடுக்காமல் இருப்பவர்கள் யார் யார் என்று அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த தொழில் அதிபர்கள் தரவில்லை, பாக்கி இருக்கிறது என்ற விவரம் என்னிடம் இல்லை. பாக்கியிருப்பவர்களிடத்தில் வசூலிப்பதற்கு தொழிலாளர்கள் தலைவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரினோம். அப்படி வசூலிக்கும்போது அதன் காரணமாக தொழிற்சாலையை மூடிவிட்டால் அதையும் நம் தொழிற்சங்கத் தலைவர்கள் பரிசீலித்து ஏதாவது ஆலோசனை கூற வேண்டுமென்று அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**திரு எம். பூபதி :** இங்கு வைக்கப்பட்டுள்ள பட்டியலில் தொழிலாளர் குடும்பங்களுக்கு பேனல் சிஸ்டத்திற்கு பதிலாக சர்விஸ் ஸிஸ்டம் அமல் படுத்தப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அது எப்போது அமல் படுத்தப்படும் ? எந்த முறையில் இதை உடனடியாகக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது இந்த பேனல் ஸிஸ்டம் கோவையில் இருக்கிறது. அதை சர்விஸ் ஸிஸ்டமாக மாற்றுவது குடும்ப இன்ஷூரன்ஸ் பெனிஃபிட்ஸ் எப்போது கொடுக்க முடிவு செய்கிறோமோ அப்போது கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்தோம். ஏப்ரல் 13-ம் தேதியிலிருந்து கொடுக்க முடிவு செய்திருக்கிறோம்.

**திரு கே. என். குமாரசாமி :** ஈ. எஸ். ஐ.-க்குக் கட்டவேண்டிய பணத்தை ஆலை அதிபர்கள் கட்டாததால் அந்தப் பகுதித் தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி கிடையாது என்று வைத்திய அதிகாரிகளால் மறுக்கப்பட்டு அவர்கள் பெருங்கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கட்டவில்லையென்றாலும் தொழிலாளர்களுக்கு வைத்திய உதவிச் சலுகைகள் அளிக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுபற்றி அந்தக் கூட்டத்தில் அடிக்கடி பரிசீலிக்கப்பட்டது. ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் பங்குத் தொகை வராமல் எப்படிக் கொடுப்பது என்று வாதாடுகிறார்கள். இதை நாம் கட்டாயமாகக் கொடுக்கவேண்டுமென்று கூறினால் யார் அந்தப் பகுதிக்குப் பணம் கொடுப்பது என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. இடைக் காலத்தில் தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கும்போது ஏதாவது அப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டால் கட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும் குறிப்பிட்ட காலம்வரையில் பணம் கட்டாவிட்டாலும் வைத்திய வசதி கொடுக்கவேண்டுமென்ற முடிவுதான் எடுக்கப்பட்டிருக்கிறது.

a 835–368-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



வெளியூர் பஸ்களில் பெயர்ப்பலகை.

* 546 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வெளியூர்களுக்கு செல்லும் சாதாரண பேருந்துகளில் அவைகள் போகின்ற ஊர்களை அறிவிக்கின்ற பலகைகள் மாட்டப்படும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தமிழ் நாடு அரசு போக்குவரத்துறை பேருந்து செல்லும் வழியிலுள்ள ஊர்களின் பெயர்கள் அனைத்தையும் பேருந்தின் மீது எழுதுவது நடைமுறையில் இயலாது என்பதால், அவ்வாறு எழுதும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** இந்த ஊர் பெயர்களை பக்கத்திலே தனியாக ஒரு பலகையில் எழுதி காட்டுகிற வகையில் செய்யலாம். குறிப்பாக இப்போது வெளி ஊர்களுக்குச் செல்லும் பஸ்களுக்கும் சென்னை நகரில் ஓடுகிற பஸ்களுக்கும், எந்தவிதமான வேறுபாடும் தெரிவதில்லை. ஆகவே, கிராமப்புற ஜனங்கள் எந்த பஸ் வருகிறது என்று தெரிந்து கொள்ள முடியாமல் சென்னை நகரில் பஸ் ஏறுகிறபோது தொல்லைக்குட்படுவதை உத்தேசித்து இந்த பஸ்களின் வர்ணத்தையாவது மாற்றுவதற்கு ஏதாவது உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தனியார் துறையில் ஓடுகிற பேருந்துகளில் பக்கவாட்டில் அவைகள் செல்கிற ஊர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்பது தெரிந்ததே. ஆனால் அரசுத் துறையில் ஓடுகிற பேருந்துகள் அடிக்கடி வழித்தடங்கள் மாறுகிற காரணத்தினால் அப்படி பக்கவாட்டில் எழுதுவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஆனால் பேருந்துகள் செல்கிற ஊர்கள், இடையிலுள்ள சில முக்கிய ஊர்கள் இவைகள் எல்லாம் பஸ் நெற்றியில் காண்பிக்கப்படுகின்றன.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** :பக்கவாட்டில் எழுதுவதற்குப் பலகை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வழித்தடங்கள் மாறுவதால் அப்படி எழுதுவதற்கு வசதியில்லை என்றார்கள். ஆனால் சிறு சிறு பலகைகளில் ஊர்களின் பெயர்களை எழுதி பாசஞ்சர் ஸீட்டுக்கு அருகில் உள்ள கம்பியில் அவற்றை மாட்டினால் தெரிந்துகொள்ளமுடியும். அதையாவது செய்ய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உறுப்பினர் அவர்களின் கருத்து நன்றாகவேதான் தோன்றுகிறது. அது நடைமுறையில் சாத்தியமா என்பதைக் கவனிப்பேன்.

*Mylapore Bus Stand.*

* 552 *Q.*—THIRU G. GOMATHY SANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there are proposals to shift the Government bus terminus at Sri Kapaleeswarar Temple Tank, Mylapore, to Mandavalli ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) whether the views of the residents of the area have been obtained for this move ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் அரசாங்கத்திகு வரவில்லை. விழா எடுக்க வேண்டுமென்றால், இவ்வளவு தான் செலவு செய்யவேண்டுமென்ற விதிமுறைகள் இருப்பதால் அதற்கு மேற்பட்ட செலவுகளை தனிப்பட்டவர்கள் செய்ய முன் வருவார்களானால் ஆங்காங்குள்ள ஊராட்சி மன்றங்கள் ஒப்புதல் வழங்கும். இதிலே ஏதேனும் குறைபாடுகள் இருந்து சுட்டிக்காட்டினால் அறிவுரைகள் வழங்கலாம்.

## கூனிமேடு பஞ்சாயத்து முன்னாள் தலைவர்.

*545 விஞ—**திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) திண்டிவனம் வட்டம், மரக்காணம் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சார்ந்த கூனிமேடு பஞ்சாயத்து முன்னாள் தலைவர் மீது சென்னை பஞ்சாயத்து சட்டம் 173 (1)-ன் படி நடவடிக்கை எடுக்கக் கோரி 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதியிட்ட பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி யின் ரிப்போர்ட்டு ஒன்று அரசாங்கத்தின் பார்வைக்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது.?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :**

(அ) மரக்காணம் ஊராட்சியின் முன்னாள் தலைவராகிய திரு கே. எம். பட்டுராசா என்பவர் மீது தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின் 173 (1)-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மரக்காணம் ஊராட்சி நலப்பரப்பு அதிகாரி 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதியன்று கூனிமேடு ஊராட்சித் தலைவருக்குக் குறிப்பு ஒன்று அனுப்பியுள்ளார்.

(இ) இது பரிசீலனையில் இருந்து வருகின்றது.

**திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** பணம் கையாடிவிட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டு 1967, 1968, 1969 என்று இவ்வளவு காலம் வரையில் பரிசீலித்துக்கொண்டே இருக்கிறதே தவிர, நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை. இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பணம் கையாடல் செய்யப் பட்டதைக் கண்டுபிடிக்க உடனேயே அதை வசூலிக்க அதிகாரங்கள் இல்லை. அதற்கான நோட்டீஸ்கள் கொடுக்கவேண்டும், வழக்கு மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் அங்கே இருக்கக்கூடிய அரசாங்க வழக்கறிஞரிடத்தில் ஆலோசனை கேட்கவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருடைய கட்டளைகளைப் பெற வேண்டும். இப்படிப்பட்ட சட்டச் சிக்கல்கள் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது. என்றாலும், நிதியை வசூலிக்கத் தேவையான நடவடிக்கைகளை முறையாக எடுத்து வருகிறார்கள். விரைவாகத் தொகையை வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** பணமும் போகக்கூடாது, நடவடிக் கையும் எடுக்கவேண்டும், ஒரு சமயம் அவர், "பணத்தைக் கட்டி விடுகிறேன், விட்டு விடுங்கள்" என்று கூறினால் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பணத்தைக் கட்டிவிட்டாலும் கிரிமினல் குற்றமாக இருந்தால் அதற்கான வழக்குகள் தொடரப்படும். அதற்குத் தேவையான வாய்ப்புகள் இல்லாவிட்டால் சிவில் கோர்ட்டில் வழக்குப் போட்டு பணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்



கொள்ளப்படும். பணத்தைக் கட்டிவிட்டால் குற்றம் செய்தவரை விட்டு விடுவது என்ற நிலை கிடையாது. அதற்கான வழக்குகள் தொடரப்படும்.

## வல்லம்படுகை—குமராட்சி சாலை

*550 விஞ.—**திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடை யளிப்பர்ரா :

சிதம்பரம் தாலூகா வல்லம்படுகையிலிருந்து வடக்குமாங்குடி, தெற்குமாங்குடி, அத்திப்பட்டு நந்திமங்கலம், கீழக்கரை முதலிய இராமங்கள் வழியாக குமராட்சிக்கு ரோடு போடும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது :

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தெற்கு மாங்குடிக்கும் அத்திப் பட்டுக்குமிடையேயும், நந்திமங்கலத்துக்கும் கீழக்கரைக்குமிடையேயுந் தான் சாலை வசதிகள் தற்சமயமில்லை. இவ்விரு சாலைகளையும் கிராமப் பணித் திட்டத்தின் கீழ் குமராட்சி பஞ்சாயத்து ஒன்றியமே அமைத்துக்கொள்ள முடியும். நந்திமங்கலம்—கீழக்கரை சாலைக்கு வேண்டிய நிலம் இலவசமாகக் கிடைக்காவிடில், இந்த இணைப்புச் சாலைக்கான செலவு 40,000 ரூபாய்க்கு மேலாகலாம். அந்த நிலையில் இந்த வேலை "ஏனைய சாலைகளின்" கீழ் மேற்கொள்ளப்படவேண்டி யிருந்தால், இந்த இணைப்புச் சாலையை அமைக்க இன்னும் சில ஆண்டுகளாகும்.

**திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** சிதம்பரம் தாலூக்கா குமராட்சி யூனி யனுககுக் கிழக்கேதான் எல்லா பஞ்சாயத்துக்களும் அடங்கியிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் அந்தக் பகுதி கிராம மக்கள் குமராட்சிக்குத் தான் வர வேண்டியிருக்கிறது. சுற்றிப் போனால் 15 மைல் ஆகிறது. குறுக்கே போனால் ஆறு அல்லது ஏழு மைல்தான் ஆகும். ஆகவே, இந்தக் குறுக்கு ரோடை வல்லம்படுகை, வடக்கு மாங்குடி, தெற்கு மாங்குடி, புல்லம்பாடு வழியாக போட்டுக் கொடுத்தால் பொதுமக்களுக்கு சவுகரியமாக இருக்கும். இதை உடனடியாக அரசாங்கம் நிறைவேற்றித் தருமா ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** தொகையை அதிகமாகச் செல வழிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்போது புதிய பணிகளாகத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. புதிய பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலையை ஆங்காங்கு இருக்கும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் பரிந்துரை செய்து அனுப்புகின்றன. மூன்றாவது திட்டத் திற்காக மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஏற்கனவே தேர்ந்தெடுத்த 212 வேலைகளில் இன்னும் 184 பணிகள் அனுமதி வழங்கப்படாத நிலை இருக்கிறது. இந்தப் பணியை அந்த முறை வரிசைப்படி எடுத்துக் கொள்ள வேண்டிய சங்கடம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு உரிய அடுத்த கேள்விக்குக் கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்—

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிறுவனக் கூட்டம்

*551 விஞ.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடை யளிப்பாரா :

27—5—1968 தேதி ஊட்டியில் நடந்த தொழிலாளர் நல அரசாங்க இன்சூரன்ஸ் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

அரசு ஊழியர்களுக்கு பேருந்துகளில் இலவசச் சீட்டுகள்.

* 553 **வினா—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

அரசு பேருந்து வண்டிகளில் செல்லுவதற்காகச் சென்னை நகரில் சர்க்கார் ஊழியர்களுக்கு இலவசச் சீட்டு (free pass) வழங்குவதற்கு சர்க்காரிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** சர்க்கார் ஊழியர்களுக்கு இப்படி இலவசச் சீட்டு கொடுப்பதில் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டமாகும் ? இதை மீண்டும் பரிசீலனை செய்து இலவசப் பாஸ் கொடுப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த இலவசப் பாஸ்கள் கொடுப்பதில் எவ்வளவு நஷ்டம் என்ற பிரச்சினை எழவில்லை. 1967-ல் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள் ஒரு மனு கொடுத்தார்கள். அதில் இலவச பாஸ், அல்லது அதற்குப் பதிலாக போக்குவரத்து படி ரூ. 10 என்று கேட்டிருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு இங்கு செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு மத்திய அரசு கொடுக்கிறபடி, நகரப்படி, அகவிலைப்படி இவை கொடுத்து விட்டபடியால் இலவச பாஸ் கொடுக்கிற பிரச்சினை மீண்டும் எழவில்லை.

கோயில்களிலிருந்து சிலைகள் களவு.

* 547 **வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-67-ம் ஆண்டில் கோயில்களிலிருந்து களவுபோன சிலைகள் எத்தனை ?

(இ) அதன் காரணமாக வழக்குகள் தொடரப்பெற்றனவா ?

(உ) ஆம் எனில், எத்தனை வழக்குகள் வெற்றி பெற்றன, எத்தனை வழக்குகள் தோல்வியுற்றன ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) 77.

(இ) ஆம். 12 வழக்குகள் தொடரப்பட்டன.

(உ) 11 வழக்குகள் வெற்றிபெற்றன. 1 முடிவு பெறவில்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** திருட்டுப்போன சிலைகள் எந்தக் கடவுள் களுக்குச்சொந்தமானவை ? இனிமேல் இந்தக் கடவுள்களைக் காப்பாற்று வதற்காக தனியாக ஒரு போலீஸ் படைய்ய அமைக்க அரசுக்கு ஏதாவது உத்தேசமிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** நாற்பது கோவில்களில் சிலைகள் திருடு போயிருக்கின்றன. அவை மாவட்டவாரியாக இருக்கின்றனவே தவிர, எந்தெந்த சாமிகள் என்பது பற்றி தகவல் இல்லை. இது சம்பந்த மாக தனியாக ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ் போட்டு புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

**திரு. தி. பொன்னுமலை :** அடிக்கடி சாமி கோவில்களில் சாமி விக்கிரகங்கள், சாமியின் நகைகள் இவை பல்வேறாக திருடு போய்க் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோவிலிலும் பல வகைப்பட்ட சாமிகள் இருக்கின்றன. சாமிகளுக்குள்ளேயே சாமிகள் திருட்டுப்



போகிறதா, கோர்ட்டுக்குப் போகிறபோது சாமிகள் மீது வழக்குப் போடப் படுகிறதா அல்லது அவர்கள் சாட்சிக்கு அழைக்கப்படுகின்றனரா என்ற விவரத்தை அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அது சம்பந்தமான தகவல இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** சிலைகள் திருட்டுப் போவதாகச் சொன்னார்கள். இந்தச் சிலைகள் திருட்டுப்போவது அதன் உலோகங் களுக்காகத் திருட்டு போகிறதா அல்லது வெளிநாடுகளில் புராதன சிற்பங்களைச் சேகரிக்கிறவர்கள் அதிக விலைக்கு வாங்கிச் சேர்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள், ஆகவே அதன் காரணமாகத் திருடு போகிறதா? எந்த நோக்கத்தோடு இவை திருடப்படுகின்றன என்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** பல்வேறாகப் பேசப்படுகிறது என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், திருடுபோவது எதற்காக என்பது பற்றி என்னிடம் தகவல் இல்லை.

மரக்காணம் பூமலிங்கீஸ்வரர் தேவஸ்தானம்.

* 554 **வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மரக்காணம் பூமலிங்கீஸ்வரர் தேவஸ்தான நிர்வாக தர்மகர்த்தாவின் மீது செய்யப்பட்ட புகார் எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இது குறித்து சென்னை, இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளர் 27—11—1968 தேதியன்று விசாரணை ஒன்றை நடத்தினார். ஸ்ரீ பூமீஸ்வரர் கோவிலின் பரம்பரை அறங்காவலர் கோயில் அலுவல்களைச் சரியான முறையில் நிர்வகித்து வராததன் காரண மாக கோயில் பணி ஒழுங்காக நடைபெறுவது தடைப்பட்டது. எனவே, தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ் ஆணையாளர் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமித்தார். கோயிலின் பொறுப்பு, பதிவேடுகள் முதலியவற்றைப் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டு மென்றும் பரம்பரை அறங்காவலருக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவரவர்களே, அந்தப் பரம்பரை அறங்காவலர் அவர்கள் நீண்ட நாட்களாக அங்கேயிருந்து வந்ததன் பேரில் நிறைய பணம் கையாடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருந்து வருவதும், அதன் காரணமாக ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவர் பேரிலே புகார் செய்யப்பட்டு அந்தப் புகாரை விசாரிப்பதற்கு அவர் முன்னால் அமைச்சர் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்ற அந்தக் காரணத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுவதும் உண்மையா ? இப்பொழுதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதற்கு என்னிடத்தில் தகவல் இல்லை. ஆனால் அவர் பரம்பரை அறங்காவலராக இருந்து கோவில் சரியானபடி நிர்வகிக்க கப்படவில்லை என்ற காரணத்தினால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு, அதற்காக ஒரு அதிகாரியையும் அந்தக் கோயிலுக்கு நியமனம் செய்து உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு யூனிட் மின்சாரத்தின் அடக்க விலை.

* 548 **வினா.—திரு. எஸ். அக்கினிராஜு :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் 1 யூனிட்டின் அடக்க விலை என்ன ?

[1969 மார்ச் 31

(இ) நீர்வீழ்ச்சியின் மூலமாக உற்பத்தியாகும் மின்சாரம் 1 யூனிட்டின் அடக்க விலை என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் :** (அ) யூனிட்டுக்கு 12·3 காசு.

(இ) யூனிட்டுக்கு 2·6 காசு.

*Confidential report of N.G.G.Os.*

* 491 *Q.*—Dr. H.V. HANDE, Thiru N. S. V. CHITHAN : Thiru K. VINAYAKAM : Thiru S. ALAGIRISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state.—

(*a*) whether it is proposed to discontinue or change the system of maintaining confidential reports of N.G.G.Os. ; and

(*b*) if so, the detials thereof ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) and (இ) அரசுப் பணியாளர் சங்கங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களிலும் பத்திரிக்கைகளில் வெளியான கடிதங்களிலும் கட்டுரைகளிலும் இது குறித்துச் சில கருத்துரைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இவற்றை அரசாங்கம் நாட்டத்தில் கொண்டுள்ளது. தேவையென்று கருதும் அளவிற்கு இம்முறையைச் சீர்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சார், இந்தத் தலைமை அதிகாரிகள் மற்றும் பெரிய பெரிய உயர்ந்த அதிகாரிகள், சிறிய அதிகாரிகளோ அல்லது என். ஜி. ஓக்களோ அவர்கள் செய்யும் பணி சரியாக இல்லை என்றாலோ, அல்லது அவர்கள் மீது குற்றங்குறைகள் இருந்தாலோ, இந்த இரகசியக் குறிப்பில் எழுதப்பட்டு மீண்டும் அந்த அதிகாரிக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று முறையிருந்தாலும் கூட, பல்வேறு இலாக்காக்களிலே இது சரியான முறையில் கையாளாமல் கடைபிடிக்காமல் இருக்கிறார்கள். அப்படியிருப்பதால் நிரம்ப அதிகாரிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அரசாங்கம் உணருகிறதா ? அப்படியிருந்தால் அப்படி உணருகிறார்கள் என்றால், உடனடியாக இதற்குத் திட்டவட்டமான உத்தரவு போட்டு இப்படிப்பட்ட இரகசியக் குறிப்பு தேவையில்லை என்று ஒரு உத்தரவைப் போடத் தயாராக இருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரகசியக் குறிப்பு தேவையில்லை என்று அரசாங்கம் உத்தரவு போடுவதற்குத் தயாராக இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதிகாரிகள் மீது எழுதப்படுகின்ற குறைகள் உடனடியாக அவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அப்படித் தெரிவிக்கப்படுகிறது என்பதற்கு முறையிருந்தாலும் அப்படித் தெரிவிக்கப்படுகிற முறை நடப்பில் இல்லை என்று சொன்னார்கள். அந்த முறையில் தெரிவிக்கப்படாமல் இருந்தால் அது உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. கே. விநாயகம் :** நமது அரசில் உத்தியோகம் செய்கிற அதிகாரிகளைப்பற்றி இப்பேர்ப்பட்ட இரகசியக் குறிப்பு தேவையற்றது என்று இன்றைய தலைமைச் செயலக சீஃப் செக்ரடரி, உயர்ந்த அலுவலர் இதுமாதிரி ஒரு கருத்தை ஒரு மாநாட்டில் வெளிப்படுத்தி இருக்கிறார்களா ? அப்படி அவர் வெளிப்படுத்தியிருந்தால் அது ஆட்சியின் அனுமதியைப் பெற்றா அல்லது தனிப்பட்டவருடைய கருத்தா ? இதைப்பற்றி ஆட்சி யோசித்து இருக்கிறதா ? இதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை, எடுத்திருக்கிறது ?



1969 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில் இப்படிப்பட்ட கோரிக்கை வெளியிடப்பட்டபொழுது, அது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றுதான் தலைமைச் செயலாளர் குறிப்பிட்டிருப்பதாக நான் அறிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்த இரகசியக் குறிப்பு எழுதுவதன் மூலமாகச் சில தவறான நடவடிக்கைகளுக்கு, பெரிய அதிகாரிகளுக்கு உடந்தையாக இல்லை என்பதற்காக, எவ்வளவு நேர்மையானவராக இருந்தாலும்கூட இரகசியக் குறிப்பு எழுதுவதன் மூலமாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, நமது அரசு கட்டாயமாக, அவர்களைப் பாதிக்காத முறையில் அதை எடுத்துவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படித் தவறாக இருந்தால் மேல் அதிகாரிக்களுக்கு அப்பீல் செய்து கொள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை இருக்கிறது.

*Safety of Tamil population in Bombay.*

* 492 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Thiru M. P. SARATHI : Will the Hon. the Chief Minister be pleased to state whether he has written to the Chief Minister of Maharashtra about the safety of Tamil population in Bombay, about the 17th February 1969 ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** ஆம்.

**திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் :** சபாநாயகர வர்களே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சொத்துக்கள் எவ்வளவு நஷ்டமாகிவிட்டன ? அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு மகாராஷ்டிர அரசாங்கத்திற்குத் தகவல் அளிக்கப்பட்டதா ? அவர்களின் பாதுகாப்பிற்கு மேலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மராட்டியத்தில் இந்த சிவசேனைரகளைகளின் காரணமாக மொத்தமாக ஏற்பட்ட விரயம் 4 முதல் 5 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலே தனிப்பட்ட முறையிலே தமிழர்கள் இல்லங்கள், அவர்களுடைய உடமைகளுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்பதற்கான விவரம் எதுவுமில்லை. அதற்கு நஷ்டஈடு தரும் முறையில் மகாராஷ்டிர அரசாங்கம் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தமிழர்கள் பம்பாயிலிருந்தும், இலங்கையிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டது போலவே இன்று மராட்டியத்திலிருந்தும், மற்ற வடமாநிலங்களிலிருந்தும் விரட்டியடிக்கப்படுகிறார்கள். இந்திய ஒருமைப்பாடு என்னும் பெயரால் "ஜன கண மண" பாடுவதற்கு மட்டும் தானா தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழர்கள் இனி தமிழ்நாட்டில் மட்டும்தான் வாழ முடியும் என்ற நிலை உருவாவது அரசுக்குத் தெறியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் மராட்டிய முதல்வருக்கு எழுதிய கடிதத்திற்கு அவர் பதில் எழுதும்போது, தற்பொழுது முற்றிலும் இயல்பான நிலை நீடிக்கிறது என்றும், அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்க காவலர் தங்களால் இயன்றதை எல்லாம் செய்து வருகின்றனர் என்றும் மராட்டிய முதலமைச்சர் பதில் அளித்திருக்கிறார். ஆகவே, தமிழர்களுக்கு இனி அங்கு தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்த சிவசேனைக்காரர்கள், தமிழர்கள், கன்னடியர்கள், மலையாளிகள் இந்த மூன்று இனத்தார்களையும் சேர்த்துத் தாக்குகிறார்களா ? அல்லது தனிப்பட்ட, தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை மட்டும்தானா தாக்குகிறார்கள் ? அப்படி மூன்று இனத்தார்களையும் சேர்த்து என்றால், இந்த மூன்று நாட்டைச் சேர்ந்த முதலமைச்சர்களும் சேர்ந்து யோசனை செய்து ஏதாவது ஒரு தீவிர நடவடிக்கை எடுக்க முன் வர முடியுமா என்பதற்கு நமது முதலமைச்சரவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதில் தென்னாட்டைச் சேர்ந்த அனைவரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மராட்டிய முதல்வர் எழுதிய கடிதத்தில், தென்னிந்தியர்களுக்குச் சொந்தமாக அல்லாத சில கடைகளும் இந்தக் கலவரத்தில் அழிக்கப்பட்டன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குறி வைத்து தென்னாட்டவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்றுதான் நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, மராட்டியத்திலே ஏற்பட்ட இந்த நிகழ்ச்சிகளுக்கான பின் விளைவுகள் இதற்கான அடிப்படைக் காரணங்கள் இவைகளையெல்லாம் நல்ல முறையிலே அறிந்து வருவதற்கு இந்த அரசு, அரசின் சார்பிலே ஒரு குழுவை அனுப்பிவைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கெனவே, நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி, எம். பி. அவர்களும், திரு. உமாநாத், எம். பி. அவர்களும் இங்கிருந்து அனுப்பப்பட்டார்கள். சென்றவர்களும் தாக்கப்பட்டு திரும்பினார்கள்.

*Protective face nets for policemen.*

* 531 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government proposes to provide steel protective net for face for the policemen; and

(*b*) if, so, how much would that steel-helmeted protective net cost ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. வினாயகம் :** அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்கு, இல்லை என்று பதில் சொல்லுகிறார்கள். நானே பார்த்தேன், அண்ணா சவ அடக்கம் செய்யக் கொண்டுவரும்பொழுது, நம்முடைய போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் இந்த protective steel-helmets வைத்துக் கொண்டு, கல் எறிபவர்களிடமிருந்து அவர்கள் மேல் விழாமல் பார்த்துக்கொள்ள வைத்திருந்ததை நானே பார்த்தேன். இது இல்லை என்று சொன்னால் எது பொருத்தம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைத் தாங்கள் புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்கள் என்பதுதான் பொருத்தம். ஏனென்றால், கேட்டிருக்கும் கேள்வியில், "காவலர்கள் முகத்தில் அணிந்துகொள்ள உருக்காலான பாதுகாப்பு வலை கொடுக்க அரசு கருதியுள்ளதா ?" என்று கேட்டிருக்கிறீகள். அப்படியென்றால், உருக்குத் தொப்பியுடன் கூடிய அந்தப் பாதுகாப்பு வலைக்கு ஆகும் செலவு எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். முகத்திலே அணிந்து கொள்ள உருக்காலான பாதுகாப்பு வலை கொடுக்கப்படுவதற்கு உத்தேசம் இல்லை என்று சொன்னேன். அதைப் புரிந்து கொள்ளாமல் மாண்புமிகு திரு. வினாயகம் அவர்கள் பேசுவது சரியல்ல.



**திரு. கே. வினாயகம் :** என்னிடத்தில் இருக்கிற கேள்வி, ஆங்கிலத்தில் உள்ளதைப் பார்த்து நான் கேட்டேன்.

Protective net does not men only for the head.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** "நெட்" என்பதற்கு என்ன பொருள் ?,

**திரு. கே. வினாயகம் :** வலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வலை இல்லை. நீங்கள் சொல்வது ஷீல்ட்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, தொடர்ந்து ஆங்கிலக் கேள்வியில் if so, how much would that steel—helmeted prote:tive net cost ? என்று இருக்கிறது. ஹெல்மெட் என்றால் என்ன ?

THIRU K. VINAYAKAM: Helmet means also armour.

**மாண்புமிகு திரு. பேரவைத்தலைவர்:** அது வேறு. ஹெல்மெட், நெட், ஷீல்ட், மூன்றுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டால் அமைச்சவரர்களின் அந்தப் பதிலை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். மீண்டும் மீண்டும் திரு. வினாயகம் அவர்கள் வற்புறுத்துவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

<u>புதிதாகப் பிரிக்கப்பட்ட வட்டங்களுக்கு கிராம அதிகாரிகள்.</u>

* 540 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் புதிதாக பிரிக்கப்பட்டிருக்கிற வட்டங்களுக்குப் புதிதாக கிராம முன்சீப், கிராம கர்ணம் நியமிக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, சர்வே அண்ட் செட்டில்மெண்டுக்குப் பிறகு ஏறக்குறைய ரூ. 2,000 வரி வசூலிக்கக் கூடிய நிலையிலே இருக்கிற ரெவினியூ கிராமங்களை ஒன்றிணைத்து அதற்குப் புதிதாக கிராம முன்சீப்கள், கிராமக் கர்ணங்கள் போட வேண்டுமென்ற ஒரு செயற் குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதே, அது எப்படி செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டது அல்ல. தாலூகாக்கள் இருக்கின்ற நேரத்திலே கிராமங்களில், ஒவ்வொரு கிராமமும் இன்னொரு தாலூகாவுக்கு மாறி இருக்கலாம். ஆனால், கிராமங்களை மாற்றித் தனியாக வேறு மாறுதலான கிராமங்கள் அமைக்கிற முயற்சி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, ரூ. 2,000 வருமானம் உள்ள கிராமங்களை ஒன்றிணைத்து சர்வே அண்ட் செட்டில்மெண்டுக்குப் பிறகு புதிதாக வட்டங்களாகப் பிரித்து அதற்கு வட்டவாரி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்காக ஒரு கிராம முன்சீப், கிராமக் கர்ணம் போடுகின்ற உத்தேசம் சர்க்காரினுடைய கவனத்திலே இருந்து வருகிறது. நான் கேள்வியிலே, "வட்டவாரி" என்று தான் கொடுத்துள்ளேன். புதிதாக ஆரம்பித்திருக்கிற "வட்டவர்ரி" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தான் ஆங்கிலத்திலே "நியூலி பார்ம்ட்

டாலுக்ஸ்'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நான் குறிப்பிட்ட செயற்குறிப்பின்மீது சர்க்கார் விரைவிலே முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படித் திருத்தப்பட்டு, ஆங்கிலத்திலும் தமிழிலும் அடுத்த சட்டமன்ற கூட்டத்தில் தனியாக ஒரு கேள்வி உறுப்பினர் கேட்டால் அதற்குப் பதில் அளிக்கப்படும்.

## தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி.

*532 **வினா—திரு என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஒன்று அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இம்மாநிலத்தில் புதியதொரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்குவது, அதனை எங்கு அமைப்பது என்பதுபற்றிய செயற்குறிப்பு ஒன்றை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது.

**திரு என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தொழில் துறையில் மட்டுமே சிறந்து விளங்கும் வட்டத்தில் விவசாயக் கல்லூரி இருக்கும் போது தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கக்கூடிய ஆடுதுறையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா ? அதைத் தற்போது இல்லாவிட்டால் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தஞ்சை நெற்களஞ்சியம் மாத்திரம் அல்ல, தஞ்சையிலே நெல் ஆராய்ச்சி நிலையமும் இருக்கிறது. மண் ஆராய்ச்சி நிலையமும் ஆடுதுறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இதிலே இருக்கிற முக்கியமான பிரச்னை ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமானால் குறைந்தபட்சம் 2 கோடி ரூபாய் செலவாகும். அதில் பொது மக்கள் பங்காக 25 இலட்சம் ரூபாயும் அந்த கல்லூரிக்குத் தேவையாகக் கிட்டத்தட்ட, குறைந்தபட்சம் 400 ஏக்கர் நிலமும் வேண்டும். பொதுமக்கள் சார்பிலே அவர்கள் பங்காக 400 ஏக்கர் நிலமும் 25 இலட்சம் ரூபாயும்—தஞ்சை மாவட்டத்திலே நிறைய செல்வந்தர்கள் நிலவுகிற காரணத்தினால்—அங்கே கொடுப்பார்களானால் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போகவேண்டிய அவசியம் கிடையாது. அடுத்த ஆண்டிலேயே துவக்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில், அதுவும் கீழைத் தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய திருவாரூர் நகரத்தில் இந்த விவசாயக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கீழைத் தஞ்சையில் மட்டும் அல்ல, மேற்கு தஞ்சையிலும் அந்தக் கோரிக்கை இருக்கிறது. திருவாரூர் என்று குறிப்பிட்டதனாலே அதற்கு முதல் சலுகை கிடைக்கும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட நிலைமை அல்ல. நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, 25 இலட்சம் ரூபாயும் 400 ஏக்கர் நிலமும் திருவாரூரில் இருக்கிற செல்வந்தர்கள் கொடுத்தாலும் அங்கேயும் அதைக் கொடுப்பதற்கு யோசிக்கலாம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், தூத்துக்குடியில் இருக்கிற ஒரு வியாபாரப் பிரமுகர் ஏராளமான பணமும், நிலமும் நன்கொடையாகத் தர முன்வந்ததாகத்தகவல் வெளிவந்தது. அப்படி அவர் தர விரும்பினால் இந்த விவசாயக் கல்லூரியைத் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கின்ற உத்தேசம் அமைச்சர் அவர்களுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தூத்துக்குடியில் ஆர். ஆர். ஆறுமுகசாமி நாடார் என்பவர் 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை விவசாயக் கல்லூரிக்கு வழங்குவதற்குத் தாயராக இருப்பதாக மாவட்டக் கலெக்டர் மூலமாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொகை போதாத காரணத்தால்தான் இதைச் செய்ய முடியாது. 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலம் தருகிறேன், "ஆறுமுகசாமி நாடார் கல்லூரி" என்று பெயர் வைத்தால் போதும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் கூடுதலாகக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வந்தால் அதைப்பற்றி யோசிக்கலாம். பட்டா நிலத்தைத்தான் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று அல்ல, புறம்போக்கு நிலத்தைச் சதுரமாகக் காண்பித்தால்கூட ஏற்றுக்கொள்ளலாம்.

## மதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

* 533 **வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு உணவு—வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சாத்தமங்கலம் பால் திட்டத்தோடு மதுரை கூட்டுறவு பால் யூனியனையும் நடத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், யூனியனில் வேலை பார்க்கும் சிப்பந்திகளையும் பால் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் உத்தரவு ஏதேனும் அனுப்பியதுண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) & (இ) : மதுரை நகரில் பால் வாங்குபவர்களுக்குப் பால் வழங்குவதற்காக மதுரை பால் பாதுகாப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தியதன் விளைவாக, மதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் பால் வழங்கும் பணியைக் கைவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டது. இந்தச் சங்கம் சேகரிக்கும் பாலை மதுரை பால் பாதுகாப்புப் பண்ணையிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும், பாதுகாப்பு நிலையத்திடம் ஒப்படைப்பதற்காகப் பாலை உற்பத்தி செய்வதையும் சேகரிப்பதையுமே இது மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டது. அதற்கிணங்கக் கூட்டுறவுச் சங்கம் பால் வழங்கும் பணியைக் கைவிட்டது. இதற்கெனச் சங்கம் நியமித்திருந்த பணியாளர்களை ஆட்குறைப்புச் செய்ய வேண்டியதாயிற்று. சங்கம் ஆட்குறைப்புச் செய்த 54 பணியாளர்களில் 46 பேர் மதுரை பால்பண்ணையிலேயே வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டனர். சங்கத்தின் எழுத்தர் பணியாளர்களாகிய எட்டுப் பேருக்கும் மதுரை பால் பண்ணையில் வேலைக்கு எடுத்துக் கொள்வதற்குத் தேவையான தகுதியிராததால், அவர்களைப் பணியிலமர்த்திக் கொள்ளவில்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** சாத்தமங்கலம் பால் திட்டத்தோடு மதுரை கூட்டுறவுப் பால் பண்ணை இணைக்கப்பட்ட பிறகு வேலையிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேர்களுக்கும்—அவர்கள் வேலை இல்லாது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால்—மீண்டும் பரிசீலனைசெய்து சாத்தமங்கலம் பால் திட்டத்திலேயே ஏதேனும் வேலை கொடுத்துப் பாதுகாக்க அரசு முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வேலையிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேர்களும், போதுமான தகுதி (குவாலிஃபிகேஷன்) இல்லாத காரணத்தினால் தான் நீக்கப்பட்டார்கள். அவர்களுடைய படிப்புக்குத் தகுந்த வேலை வேண்டுமென்றால் அரசாங்கம் யோசிக்கும்.

## *Town Planning Officers.*

* 534 *Q.*—**Thiru S. RAMACHANDRAN :** Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the stage at which the proposal of provincialisation of the services of Municipal Town Planning Officers stands ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இச்செயற் குறிப்பு ஆலோசனையில் உள்ளது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநில அளவிலே ஒரு சர்வீஸிலே அவர்களைக் கொண்டுவருவதற்கான செயற் குறிப்பு ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதன் மீது விரைவிலே முடிவெடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதிலே இரண்டு வழி முறைகளை இன்றைக்கு அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டு வருகிறது. ஒன்று, நகராட்சி மன்றங்களின் அதிகாரிகளில் அல்லது பணியாளர்களில் ஒரு வகையினரை, தமிழ்நாடு நகராட்சிப் பணியினராக அறிவிப்பு மூலம் அமைப்பதற்கு அரசு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 77–ஏ பிரிவு வகைசெய்கிறது. நகராட்சி மன்றங்கள் அனைத்தையும் கலந்தாலோசித்த பிறகும், அவ்வாறு கலந்தாலோசிக்கப்பட்ட மன்றங்களில் பெரும்பாலானவை அத்தகைய கருத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகுமே அதை ஏற்றுக் கொள்ளலாம் என்பது ஒரு கருத்து.

இரண்டாவது, தமிழ் நாட்டிற்காக (அரசு) சிவில் பணி ஒன்றை ஏற்படுத்துவதாகும். இதற்குச் சட்டம் இயற்றுவது அவசியமாகும். இந்தச் சிவில் பணிக்கு நகராட்சி மன்றங்களில் எந்த ஒரு வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளை அல்லது பணியாளர்களை அறிவிப்புமூலம் ஏற்றுக்கொள்ளலாம் என்று 1966-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் மசோதாவின் 102-ம் பிரிவின்படி ஒரு விதி இருக்கிறது. அந்த விதி இப்பொழுது காலங் கடந்ததாகிவிட்ட காரணத்தால் மீண்டும் அந்த விதியின் அடிப்படையில் ஒரு சிவில் பணியில் அவர்களை வைத்துக்கொள்ளலாமா, அதற்கு யார் யாரை,எந்த எந்த வகையிலே ஏற்றுக்கொள்வது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறது. அதில் எதைச் செய்ய முடியுமோ, அதைச் செய்யும். எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவிலே முடியும்.

அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரி.

*535 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச்சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் மருத்துவர்கள் எந்தெந்தத் தகுதியின் அடிப்படையில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர் ?

(இ) எத்தனை ஆசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றுகின்றனர் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியின் சித்த முறையில் எச். பி. ஐ.எம். (H.P.I.M)., ஜி.ஸி.ஐ.எம், (G.C.I.M.) எல். ஐ. எம். (L.I.M.) பட்டம் பெற்றவர்களும், சித்த முறையில் பதிவு செய்யப்பட்ட பரம்பரை வைத்தியர்களும் (R.I.M.P.) ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எச். பி. ஐ. எம். (H.P.I.M.) ஜி.ஸி. ஐ. எம். (G.C.I.M.) பட்டதாரிகள் முதல் நிலை விரிவுரையாளர்களாகவும், எல்.ஐ.எம். (L.I.M.) பட்டதாரிகள் இரண்டாம் நிலை விரிவுரையாளர்களாகவும் ஆர்.ஐ. எம்.பி. (R.I.M.P.) போன்றவர்கள் உதவி விரிவுரையாளர்களாகவும் மருத்துவ அதிகாரிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர்.

(இ) 12.





**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த இந்திய மருத்துவ முறையை மக்கள் எளிதில் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் அரசு ஏதாவது சிறப்பான திட்டத்தை வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்திய மருத்துவ முறையில், குறிப்பாகச் சித்த முறையைத்தான் இன்றைக்கு மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். அந்த முறையைப் படிப்பதற்கும் மாணவர்கள் அதிகமாக அக்கறைக் காட்டுகிறார்கள். ஏனைய இரண்டு முறைகளான ஆயுர் வேத, யுனானி முறைகளைப் படிப்பதற்கு மாணவர்கள் அக்கறை காட்டவில்லை. அதற்காகத்தான் 1964-ம் ஆண்டில் பாளையங்கோட்டையில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டிருக்கிறது. திருச்சிக்குப் பக்கத்திலும் மருத்துவ மனை கட்டப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டைக் கல்லூரியில் படிக்கிறவர்கள் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகப் பட்டம் பெற்று மருத்துவர்களாக வருவார்கள். அதைப்போல் இன்னும் பலர் அக்கறை காட்டுவதற்கான முறைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்து வருகிறது.

**புலவர். பொ. பொன்னம்பலம் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நம் நாட்டு மருத்துவ முறையிலே பெருமை பெற்ற ஒருவரை இந்த மருத்துவப் பிரிவுக்காக ஒரு தனி இயக்குநராக நியமிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் ஆய்வில் இருக்கிறதா? ஆமெனில், எப்பொழுது அது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படி ஒரு இயக்குநரை அமைக்க வேண்டுமென்ற ஒரு எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவிலே அது ஏற்றுக்கொள்ளப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** உலகத்தில் மிகச் சிறந்த வைத்திய முறை, சித்த வைத்திய முறை என்று சொல்லப்படுகிறது. அந்த வைத்திய முறைக்கான பச்சிலைகள், மூலிகைகள் இவைகளின் பெயர்கள் சரியாக வெளிப்படுத்தப்படாமல் இருப்பதால், அவைகளைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. அவைகளை ஆராய்ச்சிசெய்து, அந்த முறை தனிப்பட்ட முறையில் வளர்வதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த, தலைமுறை தலைமுறையாக உபயோகப்படுத்தப்பட்ட பச்சிலைகள் மூலிகைகள் எவை எவை என்று கண்டுபிடிப்பதற்கு ஒரு குழுவை நியமிப்பதுபற்றி அரசாங்கம் உத்தேசிக்குமோ ? அது எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்தத் துணைக் கேள்வி வேறு மூலக் கேள்வி வேறு. தனியாகக் கேள்வி போட்டால் அதற்குரிய விவரங்களைப் பெற்றுத் தரலாம். இப்பொழுது இதற்கு என்று ஒரு ஹெர்பேரியம் இருப்பதாக எனக்கு நினைவுக்கு வருகிறது. பச்சிலை மூலிகைகளை ஆராய்ந்து தேவையானவை எவை என்பதைப்பற்றியெல்லாம் ஆரய்ச்சி செய்ய ஒரு குழு நடைமுறையில் இருக்கிறதா, இல்லையா என்பதை நான் அறியேன். தனிக் கேள்விபோட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

**திரு. க. ர. நல்லசிவம் :** பாளையங்கோட்டையில் உள்ள சித்தவைத்தியக் கல்லூரிக்குச் சித்த வைத்தியத்தின்மீது முழு நம்பிக்கை உள்ள ஒருவரைப் பேராசிரியராக நியமிக்க அரசாங்கம் ஏதாவது யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் இப்பொழுது சொன்னேன். படித்துப் பட்டம் பெற்றவர்தான் முதல்வராக இருக்கிறார். பிறகு முதல்நிலை, இரண்டாம் நிலை விரிவுரையாளர்கள் இருக்கிறார்கள். துணை விரிவுரையாளர்கள் இருக்கிறார்கள். எச்.பி.ஐ.எம்., ஜி.ஸி.ஐ.எம்., எல்.ஐ.எம். படித்துப் பட்டம் பெற்றவர்கள்தான் இந்தப் பணியில் இருக்கிறார்கள். முதல்வர் ஒரு பட்டதாரிதான்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இன்றைக்கு ஜி.வி.ஐ.எம். படித்துப் பட்டம் பெற்றவர்களை முதல் நிலைப் பேராசிரியராகப் போட்டிருக்கிறார்கள். அதாவது இன்டெக்ரேடட் மெடிஸின் கோர்ஸ், பாதி ஆங்கில மருத்துவ முறையையும் அவர்கள் படித்திருக்கிறார்கள். பட்டம் பெறாத சில பரம்பரை வைத்தியர்கள், இந்திய மருத்துவத்தில் நல்ல அனுபவம் பெற்றவர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் திரு. பலராமையா போன்றவர்கள் இருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களை ஹானரரி புரொபஸர்ஸாக நியமித்து, மாணவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த வைத்திய முறையில் பட்டம் பெற்றவர்கள் என்று தேர்ந்தெடுக்கக்கூடிய ஆசிரியர்கள் நமக்கு அதிகமான அளவு கிடைக்கவில்லை. பரம்பரை பரம்பரையாக வைத்தியம் செய்தவர்கள், அனுபவம் காரணமாகச் சிறந்தவர்கள் என்று தெரிந்தவர்களுக்குதான் பதவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் நடத்துகிற கல்லூரியில் மேலும் மாணவர்கள் படித்து, தேர்ச்சி பெற்று பட்டம் பெற்றவர்கள் கிடைக்கும் வரையிலும், அனுபவத்தில் வைத்தியப் பணியில் தேர்ந்தவர்கள்தான் இதுபோன்ற பணிகளில் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் இப்பொழுது இருக்கும் 12 பேர்களில் 10 பேர்கள் அனுபவம் பெற்றவர்கள் : இரண்டு பேர்கள்தான் ஏற்கெனவே முறையாகப் படித்துப் பட்டம்பெற்றவர்கள்.

### *Late Chief Minister Thiru C. N. Annadurai's medical expenses.*

*P. N. Q. No.* 1—

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I want to put this rivate notice question. The question is as follows with regard to emand No. 8—Head of State, Ministers and Headquarters Staff.

Regarding the payment of Rs. 94,000 incurred for the medical xpenses of the late Thiru C. N. Annadurai, it was not shown in the Budget papers circulated to the Members and placed on the table of the House. This information was given to the House only by the Hon. Chief Minister on 26-3-1969. May I know when exactly the amount of Rs. 94,000 was paid by the D.M.K. Party? May I also know whether it was credited in the account of the State and if so may I request that the date of credit of the said amount be furnished ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே அண்ணா அவர்களுடைய சிகிச்சைக்காக பொதுமக்களிடமிருந்து வசூலித்து தி.மு.க. தலைமைக் கழகத்தின் சார்பாக 12–9–1968-அன்று கட்டப்பட்டத் தொகை இந்த அரசாங்கத்திற்குச் திரும்பச் செலுத்திய தொகை ரூ. 38,770·21. இரண்டாவதாக, 26–12–1968 அன்று கட்டப்பட்ட தொகை ரூ. 94,752·74. மொத்தம் கட்டப்பட்டத் தொகை ரூ. 1,33,522·95.

மேற்கண்ட தொகையைத் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சேர்ப்பதுபற்றிய விவரம் :

பொதுவாகத் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ள அக்டோபர் 1-ம் தேதி வரையில் உள்ள கணக்குகள் சேர்க்கப்படும். அதற்குப்பிறகு உள்ளவை திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா. அந்த அடிப்படையில் 1968–69-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடு 18–11–1968 அன்று முடிவடைந்தது. இதில் முதலில் கட்டப்பட்ட தொகை ரூ. 38, 770·21 சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக 26-12-1968 அன்று கட்டியதொகை சேர்க்கப்பட முடியவில்லை. ஏனென்றால், 18–11–68 அன்று கணக்கை முடித்துவிட்டனர். இரண்டாவதாகக் கட்டப்பட்ட தொகை 3–1–1969-ல் கிரெடிட் ஆகியிருக்கிறது. 18–11–1968-ல் கணக்குகள் முடிந்துவிட்ட காரணத்தினால், அந்தக் கணக்கில் இந்தத் தொகை சேர்க்கப்படவில்லை. இந்தத் தொகை அடுத்த ஆண்டு பட்ஜெட் மெமொராண்டத்தில் சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. தகவல் கோரல்.

**வினுக்கள் துணை வினுக்கள்முதலியவை பற்றிய புள்ளிவிவரம்.**

THIRU K. VINAYAKAM : On a point of information, Sir. Today is the last day of our sitting for the Budget session. We are going to adjourn today. It is left to you, Sir, to prolong it, adjourn *sine die* or fix a date for the next meeting. The usual practice on the last day is that the Hon. Speaker will give a list of how many questions were raised, how many questions were disallowed, how many questions were answered, who is the person who has given notice of more questions, who is the person who has asked more supplementaries. It is the practice of the Hon. Speaker to enliven the House by giving the above information so as to enable us to take more interest in interpellations. For instance the late Sri Satyamurthi was more known as "Supplementary Murthy" because he was famous in putting supplementary questions. That will give pep to members to take more interest in the proceedings of the House. Will the Hon. Speaker be pleased to give us more information in that regard ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சபை முடிகின்ற நேரத்தில் இந்த விவரங்களைக் கொடுப்பதற்காக எழுதி வைத்திருக்கிறேன். அதற்குள் திரு. விநாயகத்திற்கு அவசரம் (Thiru K. Vinayakam I am sorry.) திரு. சத்திய மூர்த்தி அவர்களின் பெயர் திரு. விநாயகத்திற்கு வருமா என்பது சந்தேகத்திற்குரியது.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

க்வாலிடி ரெஸ்டாரெண்ட் கதவடைப்பு.

**மாண்புமிகு திரு. பேரவைத் தலைவர் :** திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். சென்னை மவுண்டு ரோடிலுள்ள க்வாலிடி ரெஸ்டாரெண்டை திடீரென்று "27–3–'69 முதல் கதவடைப்புச் செய்துவிட்டதால், அதனால் பாதிக்கப்பட்ட சுமார் 60 தொழிலாளர்கள் கதவடைப்பை எதிர்த்துப் போராடி வருவதைப்பற்றி விவாதிக்கச் சபையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்" என்று கோரியிருக்கிறார்.

கதவடைப்புகள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுப்பதை அனுமதிக்கக்கூடாது என்று பல முறை தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதி 41(3)ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது என்பதைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 5. கவன ஈர்ப்பு.

### (அ) கோவை மாவட்டத்தில் சில கிராமங்களில் குழாய் கிணறுகளிலிருந்து பம்பு செட்மூலம் தண்ணீர் எடுப்பதால் தண்ணீர்ப்பஞ்சம்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** பேரவைத் தலைவர் அவர்களே சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"கோவை மாவட்டத்தில் பூளைலப்பட்டி கிராமத்திலும், மத்வராயபுரம் மாதம் பட்டி இன்ன பிற கிராமத்திலும் நொய்யலாற்றின் கரைகளில் குழாய்க் கிணறுகள் தோண்டி மிகச் சக்தி வாய்ந்த பம்பு செட்டுகள் வைத்துத் தண்ணீர் உறிஞ்சுவதால் அப்பகுதியிலுள்ள ஜனங்களுக்கும் கால்நடைகளுக்கும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் இருப்பதால் அந்நிலையைப் போக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியம்."

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஐந்தாண்டுக் கால அளவில் படிப்படியாக நில நீர் வாய்ப்புக்களை விரிவாக ஆராயவும், புலனுய்வு நடத்தவும் 1967 ஜூலையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மாடம்பட்டி, மாதவ புரம், இருட்டுப்பள்ளம், கிராமங்களில் ஆய்வுத் துளைகளை இட்டுப் பொதுப்பணித் துறை இப்பணியைத் தொடங்கியது. மேலே சொன்ன சோதனைத் துளைகள் அனைத்திலும் பணி நடந்து வருகிறது. இதுவரையில் இந்தத் துளைகள் எதிலும் நீர் ஊற்றுக்கள் வெளிவரவில்லை.

கோயம்புத்தூர் நகராட்சியின் நீர் வழங்குதலில் ஏற்படும் நெருக்கடியைச் சரிசெய்யும் அவசர நடவடிக்கையாக குமாரசாமி, செல்வ சிந்தாமணி ஏரிகளில் புதிய துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன.

இந்தச் சோதனைத் துளைக் கிணறுகளிலிருந்து நில நீர் எத்தகைய சிறப்பான பயனுக்குப் பயன்படுத்தப்படுமென்பது இச் சோதனைத் துளைக் கிணறுகள் முடிவடைந்ததும் நடத்தப்படவிருக்கும் நீரின் அளவு, நீரின் இயல்பு குறித்த சோதனைகளைப் பொறுத்ததாகும். இந்தக் கிணறுகளிலிருந்து பெருமளவு நீரையோ அல்லது நல்ல தரமான நீரையோ எதிர்பார்ப்பது இப்போதைக்கு இயலாத ஒன்றாகும். இந் நீர் குடிப்பதற்கு ஏற்றதென்று கொண்டால் கோயம்புத்தூர் நகராட்சியில் இந்த ஆண்டு ஏப்ரல் மே மாதங்களில் வழங்கப்படக்கூடிய நீரின் அளவு சுமார் 10 முதல் 12 மில்லியன் கன அடியாகும். இந்த நீர் அளவு 50 முதல் 60 ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே பாசனம் அளிக்க முடியும். இந்த வடி நிலத்தில் 20,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் உள்ளன என்பதைக் கருதிப்பார்க்கும்போது இது மிகக் குறைந்த அளவேயாகும். கோயம்புத்தூருக்கு நீர் வழங்க நீர்த் தேக்கத்திலிருந்து நீரை விசையேற்றம் மூலம் இறைப்பதற்குச் செலவு குறையுமாதலால் நீண்டகாலப் பயனுக்குத் துளைக் கிணறுகளிலிருந்து நீரை இறைப்பது கைவிடப்படலாம். சோதனைக் கிணறு



களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் சோதனைகள், உழவர்களுக்கும் அந்தப் பகுதிக்கும் பயனுள்ள தகவலை அளிக்கும் : பல ஐயங்களையும் அவசரமாகக்கொண்ட தவறான கருத்துக்களையும் தெளிவாக்கும்.

நொய்யல் வடி நிலப்பகுதியில் துளைக் கிணறுகள் இறக்கப்படுவதால் அருகிலுள்ள பகுதிகளிலுள்ள கிணறுகள் வறண்டுவிடுமென்ற அச்சம் அடிப்படை யற்றதாகும்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் பதிலில் கோவை நகரத்திற்குக் குடி தண்ணீர் கொடுப்பதற்காகக் கிணறுகள் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அமைச்சரவர்களும், அதிகாரிகளும் மற்றுமுள்ள முனிசிபல் கவுன்சிலர்களும் கூடிய குழுவில் ஆராயப்பட்டு, அந்தப் பகுதியில் குழாய்க் கிணறுகள் போடுவதால், அந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைக் கைவிடலாம் என்ற அபிப்பிராயம் கோவை நகரில்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கந்தான் பெறலாம். இரண்டொரு கேள்விகள்நான் போடலாம். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** மன்னிக்கவேண்டும். இந்த அரசாங்கத்தின் ஆணைப்படி விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது என்பதை ஆராய்ந்துபார்க்க கலெக்டர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பதில் இல்லை. அதற்கான காரணம் என்ன ? அமைச்சரவை ஒரு திட்டத்தை போட்டபிறகு, அதற்கு மாறாக அமல் செய்திருப்பின் அதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அமைச்சரவையில் முடிவு குமாரசாமி, செல்வசிந்தாமணி ஏரிகளில் துளைக்கிணறு போடவேண்டும் என்பது. அதோடு மாடம்பட்டி, மாதவபுரம், இருட்டுப்பள்ளம் இங்கெல்லாம் போடப்படும் கிணறுகள் சோதனைக்கிணறுகள்தான். இதில் நீர் கிடைக்கும்போது, அது விவசாயிகளுக்குப் பெருந்துணையாகத்தான் இருக்குமேயல்லாது, அது பாதகமாக இருக்காது. அப்படிப்பட்ட அச்சம் ஆதாரமற்றது. விவசாயிகளுக்கும். சாகுபடிக்கும் குந்தகம் ஏற்படாது.

### (ஆ) தென்னார்க்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்தில் குடி தண்ணீர் வழங்கல்.

**திரு. என். ராஜாங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம், குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்து எல்லையில் சுமார் 12 ஆயிரம் மக்கள் வசிப்பதால் அந்நகரப் பஞ்சாயத்துக்குட்பட்ட இரண்டு "போர்" கிணறுகளும், மற்றுமுள்ள நீர்த் தேக்கங்களும், தண்ணீர் இல்லாமல் வறண்ட காரணத்தால், குடிதண்ணீருக்கு பஞ்சம் ஏற்பட்டதை நீக்கி, மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்துதர வேண்டும்."

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி ஊராட்சிக்காக நீர் வழங்குத் திட்டம் எதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கவில்லை. இந்த ஊராட்சிக்காக நீர் வழங்குத்திட்டம் எதையும் மேற்கொள்ளும் செயற்குறிப்புத் தற்போதைக்கு இல்லை. நகர நீர் வழங்கு, கழிவு நீர் அகற்றுத் திட்டங்களுக்காக நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 12·50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யக்கருதப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கத்தில் பெரும் பகுதி மூன்றாவது திட்டத்தில் முழுவதும்

நிறைவேற்றப்படாது. எஞ்சி நிற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் நிதிப் பற்றுக்குறை காரணத்தால், குறிஞ்சிப்பாடி ஊராட்சிக்காக நீர்வழங்குத் திட்டமொன்றை நான்காவது திட்டக்கால அளவில் மேற்கொள்ள இயலாது.

**திரு. என். ராஜாங்கம் :** தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்துத் தகராறு காரணமாக, கோர்ட்டில் வழக்குகள் இருப்பதால், எந்தத் திட்டத்தையும் செய்யமுடியவில்லை. அதிகாரிகள் இஷ்டம் போல் செய்ய முடியவில்லை. மக்களுக்குத் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க, கலெக்டர் மூலமாகவாவது தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஊராட்சி மன்றங்களேதான் தண்ணீர் வினியோகம் செய்ய வேண்டும். அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டால், அவர்களே அவற்றைத் தீர்த்துக்கொள்ள முயற்சிகள் செய்ய வேண்டும். அதற்காக அரசாங்கம் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவது சரியில்லை. ஊராட்சி மன்றத்திற்கே வசூல் செய்யவும், பணிகளைச் செய்யவும் அதிகாரம் இருக்கிறது. அதில் அரசாங்கம் எந்த விதமான முடிவும் எடுக்க முடியாது.

**திரு. என். ராஜாங்கம் :** தலைவர் அவர்களே, கோர்ட்டில் வழக்குகள் இருப்பதால், அதிகாரிகளுக்கு அதிகாரம் இருந்தாலும், எதுவும் செய்யமுடியாமல் இருக்கிறது. ஆகவே, கலெக்டருக்கு இந்த விஷயத்தை விளக்கி, அவர் மூலமாகவே ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான் கோரிக்கை. பஞ்சாயத்தில் நிதி இருக்கிறது, அப்படியிருந்தும் அதை எடுத்துச் செலவுசெய்ய அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதைக் கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வை. சுவாமிநாதன் அவர்களும், திரு. கருப்பையா அவர்களும் தங்கள் தங்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

## 6. அரசினர் மசோதா.

### தமிழ்நாடு 1969-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் மசோதா

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : Sir, I beg to move :

'That leave be granted to introduce the Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1969."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : I introduce the bill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) மாநிலத்தில் வறட்சி நிலையும், துயர்தணிப்பு நடவடிக்கைகளுக்கு மத்திய அரசின் உதவியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த அவையின் முன் வைக்கிறேன் :

" 1968-ம் ஆண்டில் வான் பொய்த்ததன் விளைவாக, தமிழ்நாடு முழுவதும் பொருளாதார நிலை சீர்கெட்டு வரட்சி நிலைமை உருவாகி பல்வகையிலும் மக்கள் துன்பத்துக்குள்ளாகியிருப்பதோடு உணவு உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டு மிக நெருக்கடியான எதிர்காலத்தைச் சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். வரட்சி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் போதுமான துயர் தணிப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டு இருக்கிறது. அதற்குரிய உடனடி உதவிகளைச் செய்து தருமாறு மாநில அரசு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, தலைமை அமைச்சர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர்களும், துணைத் தலைமை அமைச்சர் மாண்புமிகு திரு. மொரார்ஜி தேசாய் அவர்களும் உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. ஜெகஜீவன்ராம் அவர்களும் அனுதாபத்துடன் காரியமாற்ற முன்வந்திருப்பதை இம்மன்றம் நன்றியுடன் பாராட்டுகிறது.

தமிழ்நாடு அரசு விரும்பியவாறு மத்தியக் குழு ஒன்றினை அனுப்பி வைத்தமைக்கும், தலைமை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சில வரட்சிப் பகுதிகளைப் பார்வையிட வருவதற்கு ஒப்புதல் தெரிவித்தமைக்கும் இம்மன்றம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

இன்றுள்ள வறட்சி நிலை விரிவடையக் கூடுமென்று அஞ்சுவதாலும், உணவு பற்றுக்குறை, குடி தண்ணீர்ப் பஞ்சம், வேலையின்மை போன்ற இடர்ப்பாடுகள் மேலும் அபாயகரமாக உருவெடுக்கக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுவதாலும், தமிழ்நாடு அரசின் சார்பில் முதல் தவணையாகக் கேட்கப்பட்டுள்ள ஒரு லட்சம் டன் அரிசியுடன், மேலும் இரண்டு லட்சம் டன் அரிசியை மத்திய அரசு உடனடியாக வழங்கவேண்டுமென்று மத்திய அரசிடம் வலியுறுத்துமாறு தமிழ்நாடு அரசுக்கு இம்மன்றம் பரிவுரை செய்கிறது ;

நாளுக்கு நாள் சீர்கெட்டு வரும் வரட்சிப் பகுதிகளுக்குத் துயர் தணிப்புப் பணிகளுக்காக ஏற்கனவே தமிழ்நாடு அரசு கேட்டுள்ள தொகையினையும், இனியும் தேவையென்று கணக்கிடப்படுகின்ற தொகையினையும் மத்திய அரசு உடனடியாக மானியமாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள தமிழ்நாடு அரசுக்கு இந்த மன்றம் பரிந்துரைக்கிறது."

**திரு. க. இராமமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் தீர்மானத்திற்குத் திருத்தங்களைக் கொண்டுவருகிறேன். அரசினரின் தீர்மானத்தின் இறுதியில் கீழ்க்கண்ட சொற்றொடர்களை இணைக்கவேண்டும்: முற்பகல் 10-30

" தலைவர் அவர்களே, வரட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளுகின்ற துயர் தணிப்புப் பணிகளை ஆய்ந்து முடிவெடுக்கவும், இந்தப் பணிகள் நடைபெறும் விதம்பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்து அரசுக்குக் கருத்துக்களைத் தெரிவிக்க, அந்தப் பகுதிகளில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், சட்ட மேலவை உறுப்பினர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள், பஞ்சாயத்துப் பெருமன்றத் தலைவர்கள், அந்தப் பகுதிகளில் பணிபுரியும் அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழு அமைப்பதோடு, மாநில அளவில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும், மாநிலத்தில் உள்ள பொருளாதார மற்றும் விவசாயத் துறை வல்லுநர்களையும்கொண்ட குழுவை அமைப்பதுடன் இம்முடிவினை மத்திய அரசுக்குத் தெரிவிக்க தமிழ்நாடு அரசுக்கு இந்த மன்றம் பரிந்துரைக்கிறது."

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : நான் இத்திருத்தத்தை வழிமொழி கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I move the following amendment :

Add the following at the end :

But this House however regrets to note that the name of the State of Tamil Nadu did not find a place in the list of the names of the drought affected States presented to the Parliament by the Central Government a few weeks ago. This House also feels that the Central Government must give definite financial aid by way of a special grant in addition to the promised loan so that we may effectively combat at least partially the present drought condition prevailing in Tamil Nadu. This House is of the view that there is neither logic nor reason in the Central Government asking the State Government to make the payment of rupees twelve crores towards the return of the loan accrued by the composite Madras State for relief operations for Rayalaseema famine more than a decade ago. This House therefore recommends that the Government of Tamil Nadu should urge the Central Government to either write off this amount or allow it to be repaid at least in easy instalments.

This House further recommends that famine relief committees be organised Assembly constituency or taluk-war and the local Member of the Legislative Assembly and Member of Parliament be drafted into these committees. The area Member of the Legislative Assembly must be made the chairman of the concerned committee and he must be given full powers to brush aside the customary red tape and recommend *ad hoc* payment for relief measures. This House feels that this is the only manner in which the legislative representatives of the people can play their full part in directly participating in the relief operation of their respective constituencies.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : I second the amendment.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் தீர்மானத்திற்கு என் பெயரால் கொடுக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

தீர்மானத்தின் இறுதியில் கீழ்க்காணும் சொற்றொடர்களை இணைக்கவும்:—

"துயர் தணிப்புகளுக்காகவும், மீண்டும் இது போன்ற வரட்சி நிலை ஏற்படாமலிருக்க, தமிழ்நாட்டிலுள்ள சுமார் 10 மேஜர் நீர்த் தேக்கங்களை யும், சுமார் 40 மீடியம் நீர்த் தேக்கங்களையும் கட்டி முடிப்பதற்காகவும், தேவையான பணத்தை உடனே மானியமாக கொடுத்து உதவ வேண்டு மெனவும், தற்போது உரத்தின் மீதும், பம்பு செட் மீதும் விதித்துள்ள வரிகளை ரத்து செய்யவேண்டுமெனவும், மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள தமிழ்நாடு அரசுக்கு இந்த மன்றம் பரிந்துரைக்கிறது."

திரு. கோ. பாரதிமோகன் : நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் ஒருமனதாக முடிவினை எடுத்து, மத்திய அரசிடத்திலே தமிழ்



நாட்டினுடைய தேவைகளை வலியுறுத்துகின்ற வகையில் உறுதுணையான நல்ல கருத்துக்களையெல்லாம் வழங்கும் என்று எதிர்பார்க்கிறேன். நான் தந்துள்ள தீர்மானத்திற்குத் திருத்தங்கள் சிலவற்றை மாண்புமிகு உறுப் பினர்கள் தந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினால், நான் முன்கூட்டியே அவைகளைப் பற்றி எல்லாம் பேச விரும்பவில்லை. அதனையொட்டிய கருத் துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்க இருக்கிறார்கள். எந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டாலும், அவையனைத்தும், இந்த மாமன்றம் ஒருமனதாக தமிழ்நாட்டினுடைய உடனடித் தேவைகளை நிறைவேற்று வதற்கு மத்திய அரசு முன்வந்து உதவிட வேண்டுமென்ற வகையில் அமைய வேண்டுமென்பதற்காக, அனுசரணையாக இருக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை இந்த மன்றத்தின் முன்னால் வைத்து, உறுப்பினர்களுடைய கருத்துக்களைப் பெற்ற பிறகு, அதன்மேல் இறுதி யாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்தின் மீது எல் லோரும் பேசவேண்டியதில்லை. கட்சித் தலைவர்கள் மட்டும் பேசினால் போதும். அடுத்து, திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்கள் பேசுவார் கள்.

**THIRU K. VINAYAKAM: If only leaders of parties are allowed to participate in this discussion, how about such of those members who have moved amendments ? They are not leaders of parties. Their amendments have to be discussed and they have got a right to take part in the discussion and express their views. What is the position in view of your decision ? The Chief Minister was pleased to say 'Let me hear even all the members'.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "உறுப்பினர்கள் பேசுவார்கள். அதைக் கேட்ட பின்னர் நான் முடிவுரை நிகழ்த்துகிறேன்" என்று கூறி யிருக்கிறார். நீங்கள் கட்சித் தலைவர்கள் பேசினால் போதும் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. பேசுவதற்கு யாரைக் கூப்பிடலாம் என்பது பற்றிப் பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. திருத்தங்கள் கொடுத்தவர்கள் எல்லாம் பேசித் தீர வேண்டுமென்று இல்லை. அவர்களுடைய கட்சித் தலைவர்களே திருத்தத்தை யொட்டிப் பேசிவிடலாம். எல்லோரும் பேசவேண்டுமென்றால், ஒவ்வொரு வரும் ஐந்து நிமிடத்திற்குமேல் பேச முடியாது. இந்த ஐந்துநிமிடத்தில் யாரும் விரிவாகப் பேச முடியாது. ஆகவே, கட்சித் தலைவர்கள் தங்கள் கட்சியினுடைய கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லவேண்டு மென்பதற்காக வே இந்த முடிவு மேற்கொள்ளப்படுகிறது.

**திரு க. இராமமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தங்களைக் கொடுத்திருக்கிற உறுப்பினர்கள் எதற்காகத் திருத்தங்களைக் கொடுத்திருக் கிறார்கள் என்பதை விளக்குவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். கட்சித் தலைவர்கள் மட்டும் பேசிவிட்டால், உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள திருத்தத்தின் மீது எப்படி தங்களுடைய கருத்துக்களை விளக்க முடியும் ? உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய கட்சித் தலைவரைக் கலக்காமல் திருத்தத்தைக் கொடுத்திருப்பார் என்று சொல்ல முடியாது. கட்சித் தலைவருடைய ஒப்புதலின் பேரில்தான் திருத் தத்தைக் கொடுத்திருப்பார். மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், தன்னுடைய கட்சித் தலைவரிடத்தில் விளக்கமாகச் சொல்லிவிடலாம்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசாங்கத் தரப்பில், குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற பஞ்ச நிவாரண தீர்மானத்தையொட்டி, கனம் அங்கத்தினர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, தமிழகத்தில், தாற்காலிகமாகப் பஞ்சம் வருவதாகக் கருதக் கூடாது. தமிழகத்தில் சில பகுதிகள் நிரந்தரமாகப் பஞ்சப் பிரதேசமாக, பஞ்சப் பகுதியாக இருந்து வருகின்றன. நஞ்சையில் நீர்ப்பாசன வசதிகளைப் பெறாத நிலையில், மழை தவறிய காரணத்தால்தான் பஞ்சம் ஏற்படுகிறது என்ற நிலைதான் நம் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டுகிறது. நிரந்தரமாக சில பகுதிகள் பஞ்சப் பகுதியாகவே இருந்து வருகின்றன. குறிப்பாக, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டத்தில் பெரும் பகுதி முதலிலியவை பஞ்சப் பகுதியாக இருந்து வருகின்றன. இந்த ஆண்டில் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதே போல் சேலம் மாவட்டத்தில் ஓசூர் பகுதியில் பெரும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. செங்கற்பட்டிலும் யாரும் எதிர்பார்க்காத அளவிற்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. "வைகையில் கையை வைத்தால் தண்ணீர் வரும்" என்று சொல்வார்கள். அதைப் போல் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் போன்ற ஊற்றுப் பெருக்கு உள்ள இடங்கள் எல்லாம் இன்றையதினம் வறண்டு விட்டிருக்கின்றன. சில காலங்களில் மட்டும் பஞ்சமாக இருக்கும் நிலை மாறி, இப்பொழுது தமிழகத்தில் நிரந்தரமாகவே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தில் உள்ள மக்கள் பொறுப்பும், பொறுமையும் உள்ளவர்கள். இயற்கை பொய்த்தாலும், செயற்கை பொய்த்தாலும், இரண்டுக்கும் இடையில் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இயற்கை பொய்க்கின்ற சில காலங்களில் அவர்கள் உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்று குடியேறுகிறார்கள், பர்மனென்ட் செட்லர்ஸ் ஆகிவிடுகிறார்கள்.

இன்றைய தினம் தமிழக மக்கள் பல தீவுகளிலும், பல நாடுகளிலும் சென்று குடியேறியிருக்கிறார்கள். பர்மாவை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட பத்து, பதினைந்து லட்சம் பேர் வாழ்கிறார்கள். மலேயாவில் 10 லட்சம் மக்கள், சிலோனில் சுமார் 7 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். எந்தெந்த இடத்தில் தீவுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் தமிழக மக்கள் போய் குடியேறி வாழ்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

குறிப்பாக, உசிலம்பட்டி பகுதியில்—ஒரு சுயநலத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—பத்தாயிரம் ஏக்கரா மட்டும் ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு வைகைப் பாசனம் பெறுகிறது. பெற்றும் அரைகுறையாக விளைந்து இருக்கிறது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், தண்ணீர் பாய்கிற நிலங்களை உடையவர்கள் யாரையும் நிலப் பிரபுக்கள் என்று கருத வேண்டாம். இரண்டு ஏக்கரா, மூன்று ஏக்கரா நிலத்தை மட்டும் வைத்துப் பலன் அடைகிற மக்கள்— விளைகிற விளைச்சல் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் வருஷத்தில் தாக்குப் பிடிப்பது கிடையாது. உசிலம்பட்டி பகுதியில் ஆயக்கட்டுக்கு அப்பால் கடுமையான பஞ்சம். அங்கு இருக்கிற ஆஸ்பத்திரி கிணற்றில் புல் முளைத்திருக்கிறது. கடுமையான பஞ்சத்தின் காரணமாக இன்னும் கடனைத் தள்ளிப்போட முடியவில்லை.

அதே போல, இப்போது மதிப்பிற்குரியவர்கள்—ஹோசூரைச் சேர்ந்தவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். "சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சொல்லிப் பார்க்கிறோம். எங்களை நம்பமாட்டேன் என்கிறார்கள். ஹோசூரைச் சேர்ந்த கிருஷ்ணகிரிப் பகுதியிலுள்ள மக்கள் ஆடு, மாடுகளை விற்றுக்கொண்டு வருகிறார்கள். பிழைப்பைத் தேடிப் பெங்களூருக்குக் குடிபெயர்ந்துகொண்டிருக்கிறார்கள்—தண்ணீர் கிடைக்காது கண்ணீரையே இரத்தமாக இறைக்கிறோம்" என்றெல்லாம் மிக்க வேதனையோடு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.





இந்த நிலைமையை எல்லாம் பார்க்கிறபோது தமிழகத்தில் நாம் எதிர்பார்ப்பதற்கு மேல் அதிகமான கொடுமை இந்தப் பஞ்சத்தால் வரும் போல இருக்கிறது. பட்டினிச் சாவுகள் ஏற்படும் போல இருக்கிறது. இந்தியாவின் பல பாகங்கள் பஞ்சத்தைக் கண்டிருக்கின்றன. ஒரிசாவில் பார்த்தோம், பீகாரில் பார்த்தோம், ராஜஸ்தானில் பார்த்தோம். பஞ்சத்தைப் பார்த்துப் பார்த்து பழகிவிட்டதன் காரணத்தினால் இப்போது உருவாகிக்கொண்டிருக்கிற தனி நிலையை அலட்சியம் செய்துவிடக் கூடாது. இதுவரை பெரிய அதிகாரிகள் எல்லாம் ஓரளவுக்குக் கணக்கெடுத்துப் பார்த்தார்கள். ஆனால் இரண்டு மாதங்களுக்குள் மீண்டும் கணக்கெடுக்க வேண்டிய நிலைமை உருவாகியிருப்பதைப் பார்க்கிறோம். பட்டினிச் சாவுகள் ஏற்படுகிற நிலை உண்டாகி வருகிறது. உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்த மக்கள் வழக்கமாக பஞ்சம் பிழைக்க கேரளத்திற்கு மலைப்பிரதேசத்திற்கு, கோயம்புத்தூருக்குப் போய்வருவார்கள். கோயம்புத்தூருக்கு கடலை எடுத்துப் போவது வழக்கம். இந்த ஆண்டு கேரளத்திற்குப் போய் அங்கும் வழியின்றி வந்துவிட்டார்கள். குளத்தில் தண்ணீர் அற்றுப் போக, தண்ணீர் உள்ள இடங்களை நாடி பறவைகள் பறந்து போவது போல இந்தப் பகுதி மக்கள் பிழைக்க கேரளாவுக்குப் போய் வழியின்றித் தவிக்கிறார்கள்.

இப்படி சகஜமாகவே பஞ்சம் பிழைக்கப்போகிற நிலை இருந்து வந்திருக்கிறது. இதற்கு நிரந்தரமாக ஒரு பரிகாரம் காண வேண்டும். இன்றைக்கு பருவ மழை பொய்த்ததன் காரணமாகப் பெரும் அளவுக்கு வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பஞ்சத்தைக் கண்டு சொல்லும் செயலும் அற்ற பெரு மதிப்பிற்குரிய அமைச்சரவை மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் தலைமையில் வடக்கே சென்று வெற்றியுடன் வந்திருக்கிறது. பஞ்சப் பிரதேசத்தைப் பார்வையிட இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் வருகிறார்கள். அவர்கள் பஞ்சப் பகுதியைப் பார்வையிட வருகிறார்கள் என்பது வரவேற்கத்தக்க ஒன்று. நன்றி பாராட்டவேண்டிய ஒன்று தீர்மானத்திலேயே நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். நமக்குப் மிகப் பெரிய சோதனை இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. இந்தியப் பிரதமர் ஒரு சில பகுதிகளைத்தான் பார்வையிட முடியும். அந்தப் பகுதியில்தான் சரியான கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்தப் பகுதியில் போய்ப் பார்க்கிறபோது இன்னும் பஞ்ச நிவாரண வேலைகள் துவங்கப்பட்டதாகத் தெரியவில்லை. பெரிய திட்டம் தீட்டிய பிறகு, பணமும் ஒதுக்கிய பிறகு, பஞ்சாயத்துக்குப் போன பிறகு வருமோ என்னமோ தெரியவில்லை. பஞ்சம் நமக்காகக் காத்திருக்காது. பட்டினிச் சாவுகள் நமக்காகக் காத்து இருக்காது. பஞ்ச நிவாரணவேலைக்காக உடனடியாக நமது அரசு ஒரு கோடி ஐம்பது லட்சத்திற்கு மேல் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக நிவாரண வேலைகள் துவங்கப்பட்டாக வேண்டும்.

பஞ்ச நிவாரண வேலைகள் அனைத்தையும் நம்மால் செய்துவிட முடியாது. மத்திய சர்க்கார்தான் உதவி செய்தாக வேண்டும். அதுதான் சட்டியாக இருக்கிறது. மாநில சர்க்கார் அகப்பைதான். சட்டியில் இருந்துதான் அகப்பைக்கு வந்தாக வேண்டும். நமக்கு அவர்களை நம்புவதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது. ஆகவே, அவர்கள் நமக்கு உதவ முன்வந்திருப்பதற்கு நன்றி. முதல் அமைச்சர் அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். உடனடியாக உதவி வந்தாக வேண்டும். செத்த பிறகு நிவாரணம் தேவையில்லை. இதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் நம்முடைய பெருமதிப்பிற்குரியவர், நல்ல பரம்பரையில் வந்தவர்கள். அவர்களிடமே பிரதமர் நிதி என்று தனியாக இருக்கிறது. நாம் கேட்டால் அதில் இருந்தும் கொடுக்கலாம். நிச்சயமாக அந்த நிதியில் இருந்தும் கொடுக்கத் தயாராய் இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

(**திரு. கே. விநாயகம்**: அது என்ன, ஒரு இலட்சம், இரண்டு இலட்சம்) அதுவே போதும். கிடைப்பதை விடாதீர்கள். ஒரு சில லட்சம் என்பவை கூட பிரித்துக் கொடுக்கிறபோது பத்து நயா பைசாவுக்கு வராது. பெட்டிஷன் போட்ட காசு வராது. ஆகவே, அதிக அளவில் எல்லாத் துறைகளிலிருந்தும் நிவாரண நிதியைச் சேர்த்தாக வேண்டும்.

மத்திய சர்க்காரிடமிருந்து பெறுகிற தொகையைக் கடனை மட்டும் கேட்க வேண்டாம். பாட்டன், முப்பாட்டன் என்பதாக முன்னே வாங்கியுள்ள கடன்களுக்கான வட்டியைக் கூட கொடுத்துவருகின்ற நிர்ப்பந்தத்தில் நாம் இருக்கிறோம். அதைக் கூட வஜா பெறமுடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவேதான் இப்போது பெறுகிற தொகையைக் கிராண்டாகத்தான் பெறவேண்டும். 'frequent visitation of the famine' என்பதுதான் தமிழகத்தில் இருந்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்கார் நல்ல முறையில் உதவி செய்தாக வேண்டும். ஆகவே, கேட்பதை கிராண்டாகத்தான் தர வேண்டுமென்று தைரியமாகக் கேளுங்கள். முதல் அமைச்சர் டெல்லி போகிறபோதெல்லாம் வெற்றியுடன் திரும்பி வருகிறார்கள். ஆகவே, இதிலும் வெற்றியுடன் சமாளித்தாக வேண்டும்.

நமக்குப் பஞ்சம் ஏற்பட்டதற்குக் காரணம் இயற்கை பொய்த்தது ஒருபுறம். ஆயினும் நிரந்தரமான பரிகாரம் ஒன்று கண்டாக வேண்டும். காற்று எல்லோருக்கும் சொந்தமானதாக இருக்கிறது. அது போலவே சாலைகளையும்—நாஷனல் ஹைவேஸ் என்பதாக எல்லோருக்கும் பொதுவாக்கியிருக்கிறோம். அது போலவே உணவுப் பங்கீட்டு சம்பந்தமாக சதர்ன் ஸோன் என்பதாக தென் மாநிலங்களை ஒரு மண்டலமாக வைத்திருக்கிறோம். அது போலவேதான் நதிகளின் நீரைப் பகிர்ந்து கொள்வதிலும்—சதர்ன் ஸோன் என்பதாக்கி—மைசூர், கேரளம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகியவை தங்கள் தங்கள் ஆற்று நீரைப் பகிர்ந்துகொள்ள ஒரு நாஷனல் வாட்டர் வேஸ் என்பதாக அமைத்தாக வேண்டும். இப்படிச் செய்யப்பட்டால் இது நிரந்தரமான பரிகாரமாக இந்தப் பகுதிகளுக்கு அமையும். இதற்கும் மத்திய சர்க்கார் உதவியாக இருக்க வேண்டும். ஜனநாயகம் நிலைக்க வேண்டும். அரசியல் நிலைக்க வேண்டும் என்கிற ஜனநாயக அரசியல் உணர்வு ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டாக வேண்டும். அப்போதுதான் இண்டக்ரேஷன்—தேச ஒற்றுமை என்பது எம்டி ஸ்லோகன் ஆகாது. ஆகவே, நதியின் நீர் எல்லோருக்கும் பொதுவானது என்கிற ஓர் நிலையை ஏற்படுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அமைச்சரவையை நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். பெருமதிப்பிற்குரிய கேரள முதலமைச்சர் அவர்கள் காலத்திலேதான் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தை நிறைவேற்றி அதன் மூலம் தமிழகத்திலே மிக வறண்ட பகுதியாக இருந்த கோயம்புத்தூர் பகுதி செழிப்படையக் கூடிய காரியத்தைச் செய்தார்கள். அதே பெருந்தகையவர்கள் இப்பொழுது அங்கே தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலே பேசி, நல்ல முறையிலே காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களிடம் ஓடுகின்றனவே ஆறுகள், கீரியாறு, பெரியாறு, இவற்றிலே பத்து கோடி ரூபாய்த் திட்டத்தை நிறைவேற்றினால் ஒரு டன்னலை ஏற்படுத்தினால், அதன் மூலம் இரண்டரை லட்சம் ஏக்கர் பாயும் என்று திட்டத்திலே இருக்கிறது. வெறும் விவகாரம் செய்யாமல், தண்ணீர்ச் சண்டை என்று போடாமல், உன் தண்ணீர், என் தண்ணீர் என்று சொல்லாமல், இது சம்பந்தமாக மத்திய சர்க்காரை அணுகி மாநில சர்க்காரும் பக்கத்திலே இருந்து பேசி இதிலே ஒரு முடிவிற்கு வர வேண்டும். காரணம் நிரந்தர நிவாரணம் அதிலேதான் இருக்கிறது.

அதே போன்று கிருஷ்ணா தண்ணீர் இங்கே குடி தண்ணீருக்குக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. நான் மத்திய சர்க்கார் மந்திரி திரு. ராவ் அவர்களைச் சந்தித்தேன். அப்பொழுது அவர்கள் சொன்னார்



கள், கிருஷ்ணா வாட்டரைக் குடிநீருக்காகக் கொண்டுவருவோமானால், அதை ஏன் நிலங்களுக்கும் கொண்டுவர முடியாது என்று சொன்னார்கள். ஆந்திராவினுடைய பார்டர் தமிழ்நாட்டில் 60, 70 மைல் இருக்கிறது. அந்தப் பகுதி பூராவும் தண்ணீர் பாயும். குடி தண்ணீரும் கிடைக்கும். அதே சமயத்திலே நிலங்களுக்கும் பாயும். எனவே, ஏன் அதைக் கொண்டு வந்து நிரந்தர நிவாரணம் ஏற்படுத்தக் கூடாது ? இதை நாங்கள் ஏதோ பிரச்சாரத்திற்காகச் சொல்லவில்லை. டாக்டர் லோகநாதன் தலைமையில் உள்ள கமிட்டி அப்படி ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறது.

இருபது ஆண்டுகளாக நாம் திட்டம் போட்டு தண்ணீரைப் பயன்படுத்தியும், எல்லா ஆற்றையும் நேஷனல் வாட்டர் வேஸ் ஆக்க வேண்டும், அதாவது தேசீய ஆறுகளாக ஆக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கேரள சர்க்கார் திட்டமிட்டு அணைகள் கட்டி ஒவ்வொன்றாகக் கட்டி முடித்த பிறகு கூட மீதி நிற்கின்ற தண்ணீரைக்கொண்டு 5, 6 லட்சம் ஏக்கராக்கள் பாயச் செய்ய முடியும் என்றும், ராஜபாளையம் வழியாக, திருநெல்வேலி வழியாக, திருமங்கலம் வழியாக, வைகை வழியாக, பெரியாறு வழியாக நாம் அந்த ஆறுகளைப் பயன்படுத்திக்கொண்டால், நாம் அவர்களுக்கு அரிசியைக் கொடுக்கலாம், பஞ்சத்தையும் போக்கலாம் என்று டாக்டர் லோகநாதன் கமிட்டி ரிப்போர்ட் இருக்கிறது. அந்த ரிப்போர்ட் எதற்காக இருக்கிறது? படிக்கவா, பயன்படுத்தவா, நாட்டு மக்களுக்கு பயன்படுத்தவா ?

கிருஷ்ணா வாட்டர் என்று சொல்கிறபோது, இருபது ஆண்டுகளாகத் திட்டங்கள் போட்டு தண்ணீரைப் பயன்படுத்திய பிறகும், பங்குபோட்ட பிறகும்கூட, மீதியிருக்கிற தண்ணீர் இன்னும் 20 லட்சம் ஏக்கர் பாயக் கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தத் தண்ணீர் கடலில் விழுந்துவிடுகிறது. அந்தத் தண்ணீரைத் தெற்கு நோக்கித் திருப்பினால், தமிழ்நாட்டுக்குத் திருப்பினால் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த குளங்கள் இருக்கின்றன. அவற்றில் அந்த நீரை நிரப்பிவிட்டால் மூன்று ஆண்டுகளுக்குத் தண்ணீரை நிரப்பி வைக்கக்கூடிய அளவில் அந்தக் காலத்தில் பெரியோர்கள் கட்டி வைத்திருக்கிறார்கள். எனவே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்தால் நிரந்தர நிவாரணம் ஏற்படும். சிலோனிலிருந்து அகதிகள் வருகிறார்கள். இராமநாதபுரத்திலே உள்ள மக்கள் எல்லாம் இங்கே சென்னையிலே பிளாட்பாரத்திலே வசிக்கக்கூடிய நிலைமையைத்தான் பார்க்கிறோம். ஈஸ்ட் இராமநாதபுரத்திலுள்ளவர்கள் முஸ்லீம்கள், பெரும்பாலும் பின்தங்கியவர்கள், பிளாட்பாரத்திலே நிற்கிறார்கள். தமிழ்நாட்டு அகதி, ஆகவே அப்படி நிற்கிறான். அகதிகள் என்றால் மற்றப் பகுதிகளில் நிலைமை வேறு. தமிழகத்து அகதிதான் தெருவிலே நிற்கிறான். சிலோனிலிருந்து வருகிற அகதிகள், இராமநாதபுரத்திலே போய்ப் பார்த்தால் வீடு தெரியவில்லை, பட்டா தெரியவில்லை, அந்த அளவுக்குப் பஞ்சம் இருக்கிறது. பிழைப்பதற்காகப் போனவர்கள் தமிழகத்திற்கு வந்துகொண்டேதான் இருப்பார்கள். எனவே இங்கு பஞ்சம் இருந்து கொண்டேதான் இருக்கும். இதற்கிடையில்..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எதிர்க்கட்சித் தலைவரையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் தவிர 8 தலைவர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. பி. கே. மூக்கையாதேவர்**: நாங்கள் அதனால்தான் பேசக் கூடியவர்களைக் குறைத்துக்கொண்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எட்டுத் தலைவர்கள் பேசியாக வேண்டும்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்**: பஞ்ச நிலைமை இருப்பதால் நான் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லித்தான் ஆகவேண்டும். அகதிகளாக வருகிற மக்களுக்காக, கோடானு கோடிரூபாய் வடக்கே செலவு செய்கிறார்கள்.

தொழிற்சாலைகள் கட்டப்படுகின்றன, கோடீஸ்வரர்களை உண்டாக்குகிறார்கள் அங்கே. ஆனால் தமிழகத்திற்கு மட்டும் அதிலே நியாயம் கிடைக்கவில்லை. நமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று கேட்கிற இடம் இந்த இடம்.

மழை பொய்த்ததற்குக் காரணம் கேரளப் பகுதிகளிலுள்ள காடுகள் வெட்டப்பட்டு நீக்கிரையானதுதான். அதேபோல் மாநிலம் முழுவதும் உள்ள காடுகள் வெட்டப்பட்டு இருக்கின்றன. காடுகள் குறைந்துவிட்டதால் மழையும் குறைந்துவிட்டது. பஞ்சநிவாரண வேலை எடுத்துக் கொள்ள வேண்டிய இடங்களைத் தமிழ்நாட்டிலே ஜில்லாவாரியாகப் பார்க்கும் பொழுது அங்கே முன்னால் இருந்த காடுகள் எவ்வளவு, பெய்த மழை எவ்வளவு என்று பார்த்தால் அது ஒன்றே போதும் நமக்குச் சான்று.

பஞ்சம் என்று சொன்னவுடனே நஞ்சைப் பகுதியில் ஆயக்கட்டுக் குறைந்தால்தான் பஞ்சம் என்று கருத வேண்டாம். புஞ்சைப் பயிர்களும் இருக்கின்றன, அதைப் பொறுத்தும் பஞ்சம்தான். ஏழைகள் புஞ்சைப் பயிர் செய்யக்கூடியவர்கள் ஒரு நேரச் சாப்பாடோடு இருக்கிறவர்களும் உண்டு. எனவே மனதிலே இவற்றை வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வளவு பேசியும், இந்த மன்றத்திலே இத்தனை உறுப்பினர்கள் பேசியும் இன்னும் ஒன்றும் செய்யவில்லை. வசூல்களை நிறுத்தவேண்டும் என்று திருப்பித் திருப்பிச் சொல்லியும்—ரெவின்யூ அமைச்சர் அவர்களிடம் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஏழைகளோடு நெருக்கம் உள்ளவர்கள். நன்றாகக் கேட்கக் கூடியவர்கள்—பஞ்ச நிவாரண வேலைகள் லேட் ஆக வந்தாலும் வரட்டும். ஆனால் இந்த வரி வசூலை நிறுத்திவைக்க வேண்டும். அவன் படுகிறபாட்டை எந்தக் கடன்காரனும் படமாட்டான், அப்படி நிலைமை இருக்கிறது. இந்தச் சட்ட மன்றத்திலே பலமுறைகள் இதைப்பற்றிச் சொல்லியும், இன்னும் வசூலுக்காக பூட்டை உடைத்து பெட்டியைத்தூக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. கிணற்றில் விவசாயி தண்ணீர் இறைத்தால் அது தண்ணீராக இல்லை. சிறு சிறு விவசாயிகள், 2 ஏக்கர், 3 ஏக்கர், வைத்திருக்கின்றவர்கள் கிணற்றைப் பாருங்கள். தண்ணீரே கிடையாது. ஊற்றும் போய்விட்டது. இப்படிப்பட்ட நிலைமையில் எப்படி வசூல் செய்யமுடியும்? உசிலம்பட்டியில் கூட்டுறவு சொஸைடி கடனுக்காக பூட்டை உடைத்து பெட்டியைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் அருப்புக்கோட்டை, காரியாபட்டி பகுதிகளிலும் இருக்கிறது. ஆகவே, வரிக் கொடுமையை நிறுத்தும்படி செய்ய வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இதற்காக இந்த மன்றம் என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்கிறதோ அவற்றிற்கு உறுதுணையாக இருப்போம் என்று என்னுடைய கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். சங்கரய்யா:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய கட்சியின் சார்பாக உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், அதைப்பற்றி அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இதிலே பஞ்சத் துயர் தணிப்புக்காக தமிழ் நாட்டிலே உள்ள நீர்த் தேக்கங்களைக் கட்டி முடிப்பதற்கான மானியத்தை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. உரத்தின்மீதும், பம்பு செட்டின்மீதும் விதிக்கப்பட்டிருக்கின்ற வரிகளை ரத்து செய்ய வேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்த மன்றத்திலே பேசிய பல உறுப்பினர்கள் பின்னாலே சொல்லப்பட்டிருப்பவைபற்றி வற்புறுத்தியிருக்



கிறார்கள். எனவே அதையும் இந்தத் தீர்மானத்தில் சேர்த்துக்கொள்ள இயலுமா என்பதைப்பற்றி அவர்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய கட்சியின் சார்பிலே நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும், மக்களுடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புவது என்னவென்றால் பஞ்ச நிவாரண வேலையிலே முதலில் கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கும், விவசாய மக்களுக்கும் நாம் முதலிடம் கொடுத்தாக வேண்டும்.

(திரு. நா. வீராசாமி அவர்கள் தலைமை.)

குறிப்பாக, தங்களுக்கென்று நிலம் இல்லாமல் இதரர் நிலத்தில் பாடுபட்டு வேலை செய்யக் கூடியவர்கள், நிலங்களில் பயிர் வேலை இல்லாத காரணத்தால் வாழ வசதியின்றி பயங்கரமான வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதனால் விவசாயத் தொழிலாளர்களும், அரிசனங்களும் பாதிக்கப்பட்டு பெரும் துன்பத்தில் இருக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்கு ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்து இவர்களுடைய உயிரைப் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்று காலை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். வட ஆற்காடு மாவட்டத்தில், வாலாஜா தாலுக்காவில் இருக்கும் விவசாயத் தொழிலாளர்கள், அரிசனங்கள் எந்த விதமான வேலையும் இல்லாத காரணத்தால் இதர மாநிலங்களில் உள்ள பிராஜக்ட் ஏரியாக்களுக்குச் சென்று பிழைப்பதற்காக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மக்களுக்கு வேலை கொடுத்துப் பாதுகாக்க வேண்டுமென்றால் பொது நீர்நிலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைகளில் அரசு ஈடுபட வேண்டும். தனிப்பட்டவர்களுடைய கிணறுகளைத் தோண்டுவதற்கு நிதி உதவி செய்வதும் அவசியமானதுதான். ஆனால், அதனால் பிரதானமாகப் பயன்பெறுகிறவர்கள் அவற்றுக்குச் சொந்தக்காரர்கள் மட்டுந்தான். ஆகவே, ஏழை விவசாயத் தொழிலாளர்கள், அரிசனமக்கள் இருக்கும் இடங்களில் சமுதாயக் கிணறுகளைத் தோண்டுவதன் மூலமும், அவற்றை ஆழப்படுத்துவதன் மூலமும், பொது நீர்நிலைகளைச் சீர்திருத்துவதன் மூலமுந்தான் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும்.

அடுத்தபடியாக, மிகவும் முக்கியமான பிரச்சினை, குடி தண்ணீர்ப் பிரச்சினை. நம்முடைய அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உத்தரவிட்டு அவர்களுடைய பொறுப்பிலேயே அதற்கான காரியங்களைச் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். தண்ணீர் வறண்ட இடங்களில் லாரிகள் மூலமாகக் கிராம மக்களுக்குக் குடி தண்ணீர் கொடுக்க அவர்களாகவே லாரிகள் வாங்கிக் கொள்ளவும், அல்லது தனிப்பட்டவர்களிடமிருந்து கட்டாயமாக லாரிகளை வகைப்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு அதிகாரமிருக்க வேண்டும். அந்த வகையில் ஏற்பாடுகளைச் செய்து கிராம மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை ஓரளவு தீர்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, கால்நடைத் தீவனம் கிடைப்பதுகூட அரிதாக இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் கூட கால்நடைத் தீவனம் கிடைப்பது அரிதாக இருப்பதால் பல விவசாயிகளும், கிராமங்களில் உள்ளவர்களும் தங்களுடைய கால்நடைகளைக் குறைந்த விலைக்கு விற்று வருகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அரசாங்கம் என்ன முறையில் ஏற்பாடு செய்து கால்நடைகளுக்கான தீவனங்களைக் கொடுத்து ஓரளவுக்குப் பாதுகாக்க முடியும் என்று யோசிக்க வேண்டும்.

இன்று எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். மத்திய அரசாங்கம் அனுப்பிய அதிகாரி செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது அவர்கள் தங்களுடைய பகுதிகளிலும் நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கம் 3 லட்சம் டன் அரிசி கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரிசியோடு, கோதுமைப் பண்டங்களையும் வாங்கி நியாய விலைக்

[திரு. என். சங்கரய்யா] [1969 மார்ச் 31

கடைகள் மூலம் விநியோகிப்பதோடு கொள்முதல் செய்வதையும் கடுமையாக அமல் நடத்த வேண்டும். பத்து எக்கர், அதற்குமேல் வைத்திருப்பவர்களிடம் உள்ள உபரி தானியம் பூராவையும் கொள்முதல் செய்வது என்பது அரசாங்கத்தின் குறைந்தபட்சக் கடமையாக இருக்கிறது. மூன்று எக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடம் இருந்து அவர்களால் கொடுக்க முடிந்ததைக் கொடுக்க வேண்டுமென்று நியாயத்தின் பேரில் கேட்க வேண்டும். எல்லா அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்போடு எவ்வளவு அதிகப்படியாகக் கொள்முதல் செய்யமுடியுமோ, அவ்வளவு செய்து நியாய விலைக் கடைகளை அதிகமாக ஏற்படுத்தி மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

சில இடங்களில் கஞ்சித் தொட்டிகளைத் திறக்க வேண்டிய அவசியம் கூட ஏற்படலாம். பயங்கரமான நிலைமை ஏற்பட்டு, மக்கள் சாகக்கூடிய நிலைமையைத் தவிர்க்க வேண்டும். உஷார் தன்மையுடன் மாவட்ட அதிகாரிகளும், கலெக்டர்களும், கவனித்து தங்கள் தங்களுடைய மாவட்டத்தில் எந்தப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசாங்கத்திற்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

கலெக்டர்களுடைய மாநாடு வரக்கூடிய மாதத்தில் நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டங்களை அவசரமாக நடத்த அரசாங்கம் உத்தரவிட்டு, அந்தக் கூட்டங்களில் எந்தெந்தப் பிரதேசங்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றி சட்டமன்ற உறுப்பினர்களும், அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களும் கொடுக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் மாவட்ட கலெக்டர்கள் மாநாடு நடத்தப்பட்டால் பயனுள்ள முறையில் காரியங்களைச் செய்ய உபயோகமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

இப்போதுள்ள நிலைமையில் குத்தகையைக் கொடுக்க முடியாத நிலையில் பல விவசாயிகள் இருக்கிறார்கள். முழுதும் பாதிக்கப்பட்ட இடங்களில் குத்தகையை வஜா செய்ய வேண்டும். ஓரளவு பாதிக்கப்பட்ட இடங்களில் குத்தகையைக் குறைக்கவேண்டும். குத்தகை வரவில்லை என்று விவசாயிகளை நிலத்தில் இருந்து வெளியேற்றவோ, அவர்கள் மேல் வழக்குப் போடவோ யாரும் முன்வந்தால் அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய கடன்கள், கூட்டுறவு சொஸைடிக்குச் சேர வேண்டிய கடன்களைப் பொறுத்தவரை வசூலிப்பதில் கொஞ்சம் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும். விவசாயிகளுக்குத் தொல்லைகள் ஏற்படாமல் வசூலை நிதானமாக நடத்த வேண்டும். தேவையான இடங்களில் ஒத்தி வைக்கவேண்டும்.

கள்ள மார்க்கெட்காரர்களும், கொள்ளை லாபக்காரர்களும், வறட்சி நிலையைப் பயன்படுத்தி மக்களுடைய உயிரைப் பணயம் செய்ய அனுமதிக்கக்கூடாது. அப்பேர்ப்பட்டவர்களை அரசு தடுத்து, அவர்கள் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்திருந்தால், அரசாங்கம் அதை எடுத்து சேமித்து வைத்துக் கொள்ளவேண்டும். எந்தக் கட்சியும் இல்லாமல், எந்தவிதமான சட்டமும் இல்லாமல், மனிதாபிமானத்தின் பெயரால் உபரி தானியத்தை வைத்திருப்பவர்கள் அரசுக்குக் கொடுக்க வேண்டும். பெரும் அரசியல் இயக்கமாகக் கருதி ஊழியர்களைப் பயன்படுத்தி கிராமப்புறங்களில் உபரி தானியத்தைக் கொள்முதல்செய்து மக்களுக்கு கொடுக்க வேண்டும்.

மதுரை, திண்டுக்கல், திருமங்கலம் போன்ற பகுதிகள் பெரிய அளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப் பூண்டி, வேதாரண்யம், தலைஞாயறு, புஞ்சைப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்கு இராமநாதபுரத்தில் புஞ்சைப் பயிர்கள் தீய்ந்து போய்விட்டன. இவற்றுக்கெல்லாம் நிவாரண வேலைகள் அதிகமாகத் தேவை. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு ஏற்பட்டிருக்கக்கூடிய விசேஷமான சூழ்நிலையில் எல்லா



1969 மார்ச் 31] [திரு. என். சங்கரய்யா]

அரசியல் கட்சிகளும் பொதுப் பிரச்சினையாகக் கருதி, மக்கள் மேலும் அதிகமான அளவு பாதிக்கப்படாத அளவுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு மாநில அரசு எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எங்களுடைய கட்சி பூரணமான ஆதரவை அளிக்கும் என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தைப் பூரணமாக ஆதரிப்பதாகத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய பஞ்சக் கொடுமை மிகவும் வேதனைக்குரிய சம்பவமாக இருக்கிறது. இயற்கையின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்றாலும் விஞ்ஞான ரீதியாக நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டுள்ள நிலைமையைத் தவிர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதை நாம் முதல் கடமையாகக் கொள்ள வேண்டும்.

பஞ்சத்தின் காரணமாகக் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே மக்கள் துன்பத்திற்கு ஆளாகி வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதிலே தீவிரமான கவனத்தை அரசு செலுத்த வேண்டும். விவசாயிகள் கடந்த மூன்று ஆண்டுகளாகவே சரியான வேளாண்மை இல்லாமல் இன்று எங்கே தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து வெளியேறுகின்ற கொடுமையான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள விவசாயிகள், குறிப்பாக, கோவையிலுள்ள விவசாயிகள் மைசூர் மாநிலம், மற்ற மாநிலங்களில் எங்கே தண்ணீர் இருக்கிறதோ அந்த மாநிலங்களுக்குக் குடி பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இருபதாயிரம், முப்பதாயிரம் ரூபாய் என்று செலவழித்து, கிணறுகள் தோண்டிப்பார்த்தும், 200 அடி 300 அடி என்று "போர்" போட்டுப்பார்த்தும் தண்ணீர் கிடைக்காத நிலையில் வேறு எங்காவது சென்று பிழைக்க முடியுமா என்ற அடிப்படையில் அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அதை நம்பி வாழும் கூலிகள், உழைப்பாளிகள், குடி பெயர்ந்து எங்கேயோ சென்று பிழைப்பிற்காகத் திரிகிறார்கள். அவர்களைப் பாதுகாக்கும் ஒரு அமைப்பு முறை தமிழகத்தில் இருந்தாலும் அந்தப் பகுதிகளுக்கு அவர்கள் செல்ல முடியாத ஒரு துர்ப்பாக்கியகரமான நிலை இருக்கிறது. ஆகவே அவர்களைப் பாதுகாப்பதற்குத்தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். வெளியூர்களுக்குச் சென்று குடும்பம் நடத்தும் நிலையில் அந்த பிரதேசத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய இடங்கள் இல்லை. அவர்கள் மலைப் பகுதிகளில், தண்ணீர் இருக்கிற பகுதிகளில் வாழ்க்கை நடத்துகிற ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையைப் போக்க நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை உதவி கோரும் முறையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஒரு தீர்மானத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டும் கடுமையானதொரு நிலைதான் ஏற்பட்டது. ஆனால் இன்றைக்கு குடிநீர் பிரச்சனை பயங்கரமான அளவிற்கு விளையாடுகிறது. இன்று எங்கள் பகுதிகளில் கிணறுகளில் தண்ணீர் கிடையாது. அப்படி ஏதாவது ஒன்றிரண்டு கிணறுகளில் தண்ணீர் இருந்தாலும் அங்கு ஒரு குடம் தண்ணீர் இருபது பைசாவிற்கு விற்கக் கூடியவிதத்தில், அப்படி மக்கள் வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்க அரசு துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இன்று தமிழ்நாட்டில் வசதி படைத்தவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். இன்று பெரும் முதலாளிகள் கூட தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களிடத்திலிருந்து கூட நிவாரணத்திற்கான ஒரு நிதியைத் திரட்ட முடியும். சகல கட்சிகளும், அரசாங்கமும் ஒன்று சேர்ந்து இந்தப்

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நிதி வசதி படைத்தவர்களிடம் இருந்து ஒரு நிதி திரட்ட அரசாங்கம் முயற்சி எடுத்தால் அதன் மூலமாகவும் சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

மத்திய அரசாங்கத்தினிடம் நிதி உதவி கேட்பது மட்டுமல்லாமல் உணவுப் பொருள் கொடுக்கவேண்டுமென்று கேட்பது மட்டுமல்லாமல் வெளி மாநிலங்களில், பஞ்சம் இல்லாத மாநிலங்களிடம் கூட இப்பிரச்சினைக்கு அவர்களிடம் உதவி கோருவதில் எந்தவிதமான தயக்கமும் நாம் காட்டக் கூடாது. இந்த தேசத்தில் எங்கேயாவது ஒரு இடத்தில் ஆபத்து அல்லது இயற்கையினால் கோளாறு ஏற்பட்டால் அத்தனை மக்களும் சேர்ந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற ஒருமைபாட்டுடன் கூடிய அரசியல் வகையில் இருப்பதால் நம் தேசத்திலுள்ள அத்தனை மாநிலங்களிலிருந்து உதவி கோருவதில் தயக்கம் காட்டக் கூடாது. அந்த அளவிற்கு துரித நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். ஆகவே சர்வ கட்சித் தலைவர்களையும் கொண்ட, அரசாங்கத் தரப்பில் உள்ளவர்களையும் சேர்த்து ஒரு குழுவை ஏற்படுத்தி நிவாரண வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள முயற்சி எடுக்கவேண்டும்.

விவசாயக் கடன்களைத் தள்ளி வைப்பதாக அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். உண்மையில் கொடுக்கக் கூடியவர்களிடமிருந்து வாங்கிக் கொள்கிறோம். அப்படிக் கொடுக்க முடியாதவர்களிடம் ஜப்தி இல்லாத அளவில் பார்த்துக் கொள்கிறோம் என்று மட்டும்தான் அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்களே தவிர அதிகாரிகள் கேட்கும்போது எதையாவது செய்து கொடுக்க முயற்சி செய்வார்களே தவிர மறுத்தால் என்ன செய்வார்களோ என்று பயப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆகவே நான் சொல்வது என்னவெனில் பஞ்சம் என்று ஏற்பட்டால் கடன்கள் வசூலிப்பதைத் தள்ளிவைக்க வேண்டும், எந்தவிதமான வசூலும் இருக்காது என்று உறுதியாகக் கூறவேண்டும், அதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அடிஷனல் செக்யூரிட்டி டிபாசிட்டை தள்ளி வைக்கவேண்டுமென்று கோரினோம். அதற்கு மின்சார அமைச்சர் அவர்கள் ஆறு தவணைகளில் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். எப்படி அவர்கள் அதைக் கட்டுவார்கள் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிறுகச்சிறுக அவர்கள் கஷ்டங்களைத் தீர்த்து அவர்கள் வாழ வழி செய்யவேண்டும்.

அடுத்து, கூட்டுறவு பாங்குகளில் இருந்து கொடுக்கப்பட்ட கடன்களை ஓவர் டியூப் கடன்களாக இருந்தால் அதைக்கட்டி விடவேண்டுமென்று தீர்மானம் அரசாங்கத்தின் மூலம் இன்று சொஸைட்டிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதை எப்படிக் கட்ட முடியும்.? அதையும் கட்டமுடியாது. ஆகவே, ஓவர் டியூப்பாக இருந்தாலும் சரி, எதுவானாலும் சரி அதைத் தள்ளிவைக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கடன் அந்தக் கடன் என்றில்லாமல் சகல கடன்களையும் தள்ளி வைக்கவேண்டும்.

பல்லடம் தாலுக்காவில் கால்நடைகள் இப்போது கிடையாது. ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் இப்போது அவர்கள் விற்றாகிவிட்டது. அங்கு கிராமத்தில் ஒரு ஆயிரம் எருதுகள் இருந்திருந்தால் இப்போது 50 எருதுகளைத்தான் அங்கு காண முடியும். கால்நடைத் தீவனத்திற்காக அரசாங்கம் ரூ. 120 கொடுக்கிறார்கள். அது போதாது. ஆகவே அரசாங்கம் நிவாரணமாகவும், கடனாகவும் கொடுத்து கால்நடைகளைப் பாதுகாப்பதில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று கிராமமக்களுக்கு வேலை கிடையாது. வேலையில்லாமல் அவர்கள் எப்படி வாழ முடியும் ? அதற்கு அங்குள்ள அதிகாரிகள், எப்படியாவது பிழைத்துக்கொள்வார்கள் அதற்கு நாம் என்ன செய்ய முடியும் என்று சொல்லுகிறார்கள். ஹரிஜனங்களின் நிலையோ மிகக் கஷ்டம். அவர்கள் வாழ முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே





கிராமங்களில் கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்தி வைக்கவேண்டும். கஞ்சித் தொட்டி வைப்பது கேவலமாகக் கூட இருக்கலாம். அங்குள்ள மக்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு கூட இல்லாமல் இரண்டு நாட்களுக்கு ஒரு வேளையாவது உணவு கிடைக்குமா என்ற நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலையும் இல்லை, சாப்பாடும் இல்லை. ஆகவே என்ன செய்வது என்றிருக்கிறார்கள். எனவே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் கிராமங்கள் முழுவதும் கஞ்சித் தொட்டிகளை ஏற்படுத்தி ஹரிஜனங்களைப் பாதுகாக்கிற அளவிற்கு நிலையை உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அதைச செய்யாமல் இருந்தால் அனேகம் மக்கள் மடிகிற சூழ்நிலைக்குப் போய்விடும். 1953-ல் ஒரு பஞ்சம் வந்தது என்று சொன்னார்கள். அப்படிப் பஞ்சம் வந்ததும் பல்லடம் பிர்க்காவில் கஞ்சித் தொட்டிகளை ஏற்படுத்தினார்கள். இப்படி ஏற்படுத்தி பாதுகாப்புக் கொடுத்தார்கள். அதைவிட கொடுமையானதொரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நாம் பஞ்சப் பகுதிகளில உள்ள மக்களுக்கு உணவு அளிக்க முயற்சி எடுத்துககொள்ளவில்லை என்றால் நிலைமை என்னவாகும் என்பது பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே ஹரிஜனங்களைப் பாதுகாக்கும் முறையிலே கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்தி அந்தப் பிரதேச மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சம் வந்த காலத்தில் யாரும் கடன் கொடுப்பதில்லை. விவசாயிகளுக்கு, பஞ்சம் வந்த காலத்தில் எங்குமே கடன் கிடைக்காது. ஆகவே அரசாங்கத் துறையிலே பாங்குகள் ஏற்படுத்தி அந்த பாங்க்ஸ் மூலம் பஞ்ச காலத்தில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவது அல்லது உதவிகள் வழங்குவது என்ற முறையிலே அந்த பாங்குகள் மூலம் விவசாயிகளுக்கு உதவி செய்வோமானால் காலம் மாறும்போது அவர்கள் அந்தக் கடன்களைத் திருப்பிக்கட்டக் கூடிய முறையில் அப்படிப்பட்ட பாங்குகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்லடத்தில் மழை பெய்கிற கணக்கை எடுத்துப் பார்த்தால் 1953-ல் எவ்வளவு பெய்ததோ அதில் 6 சதவிகிதம் 1968-ல் பெய்திருக்கிறது, அதில் 2 சதவீதம் 1969-ல் பெய்திருக்கிறது என்று விவசாய காலேஜிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கு கூறுகிறது. இப்படி குறைந்து குறைந்து பெய்து இன்று மழையே இல்லாத வறட்சிப் பகுதியாக ஆகிவிட்டது. இந்தப் பிரதேசங்களில் இன்று 200 அல்லது 300 அடி வெட்டினாலும் தண்ணீர் கிடையாது. அங்கு கிணறுகளுக்காக வழங்கப்பட்ட மூலதனங்கள், சர்க்கார் பணம் எல்லாம் வேஸ்ட். அங்கு நிரந்தரமாக மேலே தண்ணீர் பாய்கிற அளவிற்கு ஒரு விமோசனம் ஏற்படவில்லை என்றால் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. ஆகவே லோயர் பவானி திட்டம் மூலம் அப்பகுதிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது அவனாசி மட்டும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அத்திட்டத்தை விஸ்தரிக்க வாய்ப்பிருக்கிறது. அந்தப் பகுதி விவசாயிகளுக்கு மூன்று மாதங்களுக்காவது குளம் குட்டைகளில் தண்ணீர் தேங்கியிருக்கும்படி செய்தால்தான் நிலைமை சீரடையும். ஆகவே அதை விஸ்தரிக்கவில்லை என்றால் எங்கள் பகுதிகளைப் பாதுகாக்க முடியாது. ஆகவே எங்கள் பகுதிகளில் நீர்ப்பாசனத் திட்டத்தை, ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக மிகவும் அக்கறையோடு செயல்படுகிறது. ஆனால் அதிகாரிகள், பஸ்களில் கூட்டம் குறையவில்லையே சினிமாக் கொட்டகைகளில் கூட்டம் குறையவில்லையே என்று சொல்கிறார்கள். நகரப்புறங்களில் உள்ள மக்களுக்கும் கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. நகரங்களில் எப்படியாவது வேலை கிடைக்கும் வேலை செய்தால் கூலி கிடைக்கும். ரேஷன் வசதியும் இருக்கிறது. ஆகவே பஸ்களில் கூட்டம் இருக்கலாம்.

சினிமாக் கொட்டகைகளில் கூட்டம் இருக்கலாம். ஆனால் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு அப்படி என்ன வேலைகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எப்பொழுதாவது ஒரு காலத்தில் போட்ட ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டு இப்படிப் பார்ப்பது சரியல்ல. நாம் அந்த நிலையிலே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முறையிலே, கிராமத்திலுள்ள மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற முறையிலே நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். மத்திய சர்க்காரோடு, சேர்ந்து மாநில அரசாங்கம் நிச்சயமாக எந்தெந்தத் துறையிலே செயல்பட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நல்வழி செய்ய முடியுமோ அதைச் செய்ய முயற்சி யெடுத்தால் அதற்கு நாங்கள் பூரணமான ஒத்துழைப்பைக் கொடுப்போம் என்று கூறி இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில முழுமனதோடு வரவேற்று ஒரு சில வார்த்தைகள் கூற முன் வருகிறேன். இன்று நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, இதற்கு முன்னால் 20 வருஷ காலமாக ஏற்படாத ஒரு பெரிய நெருக்கடி. இதைப் போக்குவதற்கு நாம் சகல கட்சியைச் சேர்ந்தவர்களும் முழுமையாகச் சேர்ந்து செயல்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த நெருக்கடியில், இன்று நம்முடைய மாநிலத்தில் பெரும்பாலான மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கோயில்பட்டி தாலுக்கா, சங்கரன் கோயில் தாலுக்கா நாங்குநேரி தாலுக்காவில் பெரும்பகுதி மிகவும் அதிகமாகப் பாதிக்கபட்டிருக்கிறது, தென்காசியில் ஒரு பகுதி பாதிக்கப் பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட பகுதிகளில், பல கிராமங்களில், குடி தண்ணீர் கூட இல்லாமல், குடிதண்ணீருக்காக பல இடங்களுக்கு அலைய வேண்டிய நிலை இருக்கிறது. ஆடு, மாடுகளை சாகாமல் பாதுகாக்க முடியுமா என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில், அடுத்த ஆண்டிலும் பருவமழை பொய்த்துவிட்டால் விவசாயத்தை எப்படிச் செய்வது என்ற பயங்கரமான நிலை இருக்கிறது.

குறிப்பாக, நம் நோக்கம், நம் கவனமெல்லாம் நஞ்சைப் பகுதிகளில், வறண்டுவிட்ட பகுதிகளில்தான் அதிகமாகச் செல்கிறதே தவிர, புஞ்சைப் பகுதிகளில் மழை இல்லாமை மற்றும் பல்வேறு காரணங்களால் புஞ்சைப் பகுதிகளில் பஞ்சமாக ஏற்பட்டாலும் கூட நம்முடைய கவனம் அங்கு அவ்வளவு வருவதாகத் தெரியவில்லை. ஆகவே, புஞ்சைப் பகுதிகளில் தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பருவமழை இல்லாததனால் பாதிக்கப்பட்டு, இப்போது கடுமையான, கோரமான நிலை அங்கிருந்து கொண்டிருக்கிறது. குடிதண்ணீர் கிடையாது, ஆடுமாடுகளைப் பாதுகாக்க முடியவில்லை. வாங்கிய கடன்களை, சர்க்கார் கடன்களோ அல்லது சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரிகளோ, அல்லது தனியாரிடத்தில் வாங்கிய கடன்களோ அத்தனைக்கும் இன்றைய தினம் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எனவே, புஞ்சைப் பிரதேசங்களில் வரியை வஜா செய்யவேண்டும், கடன்களை ஒத்திவைக்க வேண்டுமென்று வலுவான கோரிக்கை இருக்கிறது. குறிப்பாக, இன்று நாம் வரி வசூல் செய்யும் நேரத்தில், மெதுவாக வசூல் செய்யும் நிலையில் இருந்தால் போதும் என்றிருப்பதைவிட அறவே கூடாது என்று செய்ய வேண்டும். ஏனென்றால், சாதாரண மக்கள் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கும். சில வசதி படைத்தவர்களைத் தவிர, மற்றவர்களிடம் வசூல் செய்துவிடுவார்கள். ஆகவே, உடனடியாகப் பஞ்சப் பகுதிகளுக்கு நிவாரணம் செய்ய வேண்டும். நம்முடைய மாநில அரசு மட்டும் இதைத் தடுக்க முடியாது. மத்திய அரசிடம் முதலமைச்சரவர்கள் வற்புறுத்திக் கேட்கவேண்டும். 20 கோடி ரூபாய் அளவிலே இந்தப் பஞ்சத்தைத் தடுப்பதற்கு முயற்சித்தால் தான், எதிர் காலத்திலே இப்படிப்பட்ட நிலைமைகள் வந்தாலும் தாக்குப் பிடிக்க முடியும். மத்திய சர்க்காரிடமிருந்து 15 கோடி



ரூபாயைப் பெற்று, மாநில சர்க்கார் 5 கோடி ரூபாயைப் போட்டு, பஞ்சத் தடுப்புத் திட்டத்தை உருவாக்கி, பஞ்சநிலைமை ஏற்பட்டுள்ள அத்தனையிடங்களிலும் உள்ள மக்களுக்குப் பாதுகாப்புக்கு வழிசெய்தால்தான் இடைஞ்சல்களைப் போக்க முடியும். குடிதண்ணீர் இல்லாத கிராமங்களுக்கெல்லாம், உடனடியாக அந்த இடங்களை மிகுந்த அவசர காரியமாக எடுத்துக் கொண்டு, கிணறுகளை ஆழப்படுத்துவதோ அல்லது புதிதாக கிணறுகளை வெட்டுவதற்கோ உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமப் பகுதிகளிலுள்ள மக்கள் மழையில்லாவிட்டால் வேறு இடங்களுக்குப் போகும் நிலையிருந்தது. ஆனால் இந்த ஆண்டு வேறு எங்கு போனாலும்கூட பிழைக்க முடியாத அளவிற்கு இருக்கிறது. இதற்கு முன்னால் தஞ்சை மாவட்டம் போன்ற வேறு பல மாவட்டங்களுக்கு, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்ட மக்கள் சென்று பிழைப்பார்கள். ஆனால் இந்த ஆண்டு அங்கும் பஞ்சம். எனவே, மக்களை வெளியேற விடாமல் அந்தந்த வட்டாரத்திலுள்ள மக்கள் அங்கங்கேயே பிழைப்பதற்கு, கிணறுகளை ஆழப்படுத்துவது அல்லது கால்வாய்களைச் சீர் செய்வது அல்லது புதிய கிணறுகளை வெட்டுவது அல்லது ரோடுகளைப் போடுவது போன்ற பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பித்து அவர்களுக்கு உடனடியாக வேலைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்று, நம்முடைய கிராமங்களிலே உணவுப் பொருள்கள் கிடைக்காத ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எனவே, நிவாரணக் கடைகளை ஆரம்பித்து, அரிசியாகவோ அல்லது வேறு பல தானியங்களாகவோ, சோளமாகயிருந்தாலும் நிவாரணம் அளிக்கும் முறையில், நியாயவிலைக் கடைகளை ஆரம்பித்து, ஏழை எளிய மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப்பொருள்கள் கிடைக்க உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சர்வ கட்சிக் குழுக்களை அமைத்து, பஞ்சத்தை தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதற்கு சர்வகட்சிக் குழுக்கள் அமைத்து, அதில் அதிகாரிகளையும் இணைத்து, நிவாரண வேலைகளைத் துவக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்று வசூல் செய்யக்கூடிய கடன்களை, சர்க்கார் கடன்களோ அல்லது எந்தக் கடன்களோ அவைகளை ஒரு வருஷத்திற்கு வசூல் செய்யாமல் உடனடியாக ஒத்தி வைக்க வேண்டும். அப்படி ஒத்தி வைக்கும் கடன்களை, வாங்கக்கூடிய கடைசித் தவணையின்போதுதான் வசூல் செய்ய வேண்டும். இப்போது ஒத்தி வைக்கும் கடனை அடுத்த ஆண்டே சேர்த்து வசூல் செய்யத் தேவையில்லை. இப்பொழுது இந்த ஆண்டு ஒத்தி வைத்துவிட்டு, அடுத்த ஆண்டு அதனையும் சேர்த்து வசூல் செய்தால் கஷ்டமான நிலை ஏற்படும். எனவே, ஒத்திவைத்த கடனை, 10 ஆண்டுகள், 11 ஆண்டுகள் கழித்து, கடைசித் தவணை வசூல் செய்யும் போது வசூல் செய்யக்கூடிய நிலையிலே இந்த ஆண்டு கடன்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவுக் கடன்கள் நாம் அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். அந்தக் கடன்களை வசூல் செய்யும் நேரத்தில், மகசூல் இல்லாத காரணத்தால் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருப்பதால், குறுகிய காலக் கடன்களாக இருப்பதை, 3 ஆண்டு, 5 ஆண்டு மத்திய காலக் கடன்களாக மாற்றி அந்தத் தவணை முறையில் வசூல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு, புதிதாக இந்த ஆண்டு விவசாயம் செய்வதற்குப் புதுக் கடன்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தனியார் கடன் கொடுத்திருப்பவர்கள் இந்த நேரத்தை, இந்தச் சந்தர்ப்பத்தைத் பயன்படுத்திக் கொண்டு, சாதாரண ஏழை எளியவர்களிடம் உள்ள நிலம், தோட்டம் ஆகியவைகளை ஜப்தி செய்யக்கூடிய

[திரு. சோ. அழகர்சாமி] [1969 மார்ச் 31

நேரத்தில், பறிமுதல் செய்யக்கூடிய ஆபத்திருக்கிறது. எனவே முன்னே கொண்டு வந்த கடன் நிவாரணச் சட்டத்தை இப்பொழுது கொண்டு வர வேண்டும். தவிர, தனியாரும் இந்த ஆண்டு கடன் வசூல் செய்வதை உடனடியாகத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய கோயில்பட்டி வட்டாரத்தில் தொடர்ந்து ஒரு சில ஆண்டுகளாக வறட்சி, பஞ்சம் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தத் தாலுக்காவில் ஓரியாறு பாசன வசதி வந்தால் வசதியாக இருக்கும். அதைக் கொண்டுவருவதற்கு கேரள முதலமைச்சரோடு பேச்சு நடத்தி, அந்தத் திட்டம் விரைவில் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்த இடத்திலே பலவிடங்களில் 300 அடிக்குக் கீழே, பூமிக்குக் கீழேயிருக்கும் தண்ணீரை, சர்க்கார் முன்முயற்சி எடுத்து, சமுதாயக் கிணறுகள் போடுவதைப்போல், 300 அடிக்குக் கீழே இருக்கும் தண்ணீரை வெளியே கொண்டுவருவதற்கான திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால், கோயில்பட்டி வட்டாரம் எந்தவிதமான பாசன வசதியும் அற்ற பிரதேசம். பூமியின் அடியிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ள வகை செய்தால் அவர்கள் நல்ல நீர் வசதி பெற முடியும். அந்த முறையிலே அந்த வட்டாரத்திலே இரண்டு மூன்று இடங்களில் சர்க்கார் பண்ணைகளிலே போட்டிருக்கிறார்கள், விவசாயப் பண்ணையிலே. அதுமாதிரி, 300 அடிக்குக் கீழேயுள்ள தண்ணீரை போரிங் போட்டு, சமுதாயக் கிணறுகளுக்குப் பாசன வசதி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எல்லாவிதமான கடன்களையும் ஒற்றி வைத்து, எந்தவிதமான வசூலும் பஞ்சப் பிரதேசங்களில் செய்யக்கூடாது என்று தெரிவித்துக்கொண்டு, நம்முடைய மாநிலத்தில் எந்தெந்த இடங்களில் பஞ்சமாக இருக்கிறதோ அவைகளையெல்லாம், தைரியமாக, பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இன்றைக்கு தஞ்சை மாவட்டம் நீங்கலாக எல்லாப் பகுதிகளிலும் பஞ்சம் பரவியிருக்கிறது. சமீப காலத்தில் இப்படி ஒரு ஜில்லா நீங்கலாக மீதி எல்லா மாவட்டங்களிலும் பஞ்சம் இருந்த சூழ்நிலை கிடையாது. இந்த வருஷம்தான் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. ஒன்று இப்போது புதிய அரசு இருக்கிறது. இரண்டாவதாக, இந்த அரசாங்கத்தில் சொன்னால் செய்வார்கள் என்ற நம்பிக்கைதான் ஜனங்களுக்கிடையே கிளர்ச்சியோ அல்லது பரபரப்போ இல்லாமல் பஞ்சத்தை சகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நான் இந்தப் பஞ்சத்தைப் பொறுத்த வரையிலும் உணர்கின்ற முறைகூட மாறுதலாக இருக்கிறது. அதாவது, எப்படி கிணறுகளிலே வெயில் ஏறி தண்ணீர் வற்றுகிறதோ அதைப்போலவே, உணர்கின்ற முறையில் மாறுதல் இருப்பதை நாம் பார்க்கிறோம். நிதியாண்டு அறிக்கையில், இரண்டாண்டுகளாக மழை இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறது. அதற்கடுத்து, வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கொடுத்த குறிப்பில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் எவ்வளவு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று ஒரு குறிப்பு இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 35 லட்சம், வடார்க்காடு மாவட்டத்திற்கு 35 லட்சம் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 10 லட்சம், தர்மபுரி மாவட்டத்திற்கு 10 லட்சம், திருநெல்வேலி மாவட்டத்திற்கு 8 லட்சம், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 40 லட்சம் என்று உள்ள குறிப்பைப் பார்த்தோம். முதலமைச்சரவர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்தைப் பார்க்கும்பொழுது அந்த நிலைமைகளை உணர்ந்து இன்னும் வேகமாகச் செய்ய வேண்டும்



1969 மார்ச் 31] [திரு. க. ர. நல்லசிவன்]

என்ற நிலைமை தெரிகிறது. இதை அனுசரித்து நாம் செய்ய வேண்டிய காரியமாக ஒன்றிரண்டை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஏப்ரல் மாதத்தில் மழை பெய்தால் நமக்கு ஓரளவுக்கு ஆறுதலாக இருக்கும். இந்த மாதத்திலே அப்படி ஒரு சீஸன். அப்படிப் பெய்தால் ஓரளவுக்கு ஆறுதலாக இருக்கும். இப்பொழுது ஒன்றிரண்டு இடங்களில் ஆரம்பித்திருக்க வேண்டும். இன்னும் ஆரம்பித்ததாகத் தெரியவில்லை ஆகையால், நாம் திட்டவட்டமாக விரிவான நடவடிக்கைகளை எடுக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். முற்பகல் 11-30

அதாவது, கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, திருநெல்வேலியிலே ஒரு பகுதி, இராமநாதபுரத்திலே ஒரு பகுதி இவைகள் நிரந்தரமாக பஞ்சப் பிரதேசங்களாக இருக்கின்ற காரணத்தாலே கடந்த காலத்திலே கூட அதைப்பற்றி உணர்ச்சிகள் குறைவாக இருந்தன. ஆனால் இப்பொழுது மாநிலத்திலே பெரும்பகுதி பஞ்சத்தைக் கண்டுள்ளதனாலே, பஞ்சத்தை நிரந்தரமாக தவிர்க்கக்கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். சர்க்காரினுடைய உணவு தானியங்களை மிக அதிகமாகப் பெருக்க வேண்டுவது முக்கியம். எங்கள் மாவட்டக் கலெக்டர், மத்திய சர்க்கார் அதிகாரியிடத்திலே கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு மட்டும், பஞ்சத்தைத் தணிப்பதற்கு, அங்கே உள்ளவர்களுக்கு நியாய விலையிலே உணவு தானியங்கள் கொடுப்பதற்கு 2 லட்சம் டன் தேவைப்படும் என்று கூறியிருப்பதாக நேற்று மாலை பத்திரிகையிலே படித்தேன். அப்படிப் பார்க்கும்போது, நிச்சயமாக 5 இலட்சம் டன் தவிர, இன்னும் ஒரு மாதம், 2 மாதம் போனால் இன்னும் அதிகமாகக் கேட்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுமோ என்று நான் அஞ்சுகிறேன். ஆகவே, நாம் கேட்பதை அதிகமாகவே கேட்டு வைக்க வேண்டும். ஒன்று, தொகையைப் பொறுத்த வரையில் ஒன்று தற்காலிகமாக பஞ்ச நிவாரணத்திற்காக உதவ வேண்டும், இரண்டாவதாக, நிரந்தரமாக அது உதவவேண்டுமென்ற நிலையிலே 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரை அதிகமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்க வேண்டும். இன்று தஞ்சாவூர், கன்னியாகுமரி மாவட்டங்களிலே ஓரளவுக்கு மழை பெய்திருக்கிறது. மற்ற மாவட்டங்களிலே மழை இல்லை. அங்கு இருக்கக் கூடிய நீர்ப்பாசன வசதிகளிலே கூட ஒரு பகுதி பாய்ந்தும் ஒரு பகுதி காய்ந்தும் கிடைக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு வைகை, பவானி பகுதியிலே ஒரு பகுதிதான் பாசன வசதி பெற்றிருக்கிறது. மற்றப் பகுதிகள் பஞ்சப் பிரதேசமாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதைக் கவனத்திலே வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். எப்படி கோயம்புத்தூருக்கும் சென்னைக்கும் படி அரிசி திட்டம் இருக்கிறதோ அதைப் போல் மிக மோசமாக, பஞ்சம் தாக்கியுள்ள பகுதிகளிலே ஜனங்களுக்கு வாங்கும் சக்தி இல்லை. ஏனென்றால் வேலை கிடையாது, விவசாயம் கிடையாது. பஞ்ச நிவாரண வேலைகள் ஆரம்பமாகவில்லை, ஆகவே அங்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். மதிப்பிற்குரிய குமாரசாமி அவர்கள் சொன்னார்கள், மக்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்று. அவர்களிடம் பணம் கிடையாது. உணவு தானியத்தைக் கூட வாங்குவதற்குச் சக்தி உள்ளவர்களா என்று பார்க்க வேண்டும். படி அரிசியோ அல்லது கம்போ, சோளமோ, ராகியோ எதுவாயிருந்தாலும் கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

இன்றைக்கு அரிசியைப் பொறுத்த வரையிலும் பர்மாவோடு மாத்திரம் அல்ல, இந்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு—தாய்லாந்தில் அரிசி அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள்—அங்கிருந்து அரிசி பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

குடிநீர்த் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். சுகாதார அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், ஆகவே அதைச் சொல்கிறேன். பெருந்துறை, சென்னிமலை, இன்னும் 20, 30 குடி நீர் திட்டங்கள் அரசினுடைய கையிலே இருக்கின்றன. அவைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். லாரி

களைப் பொறுத்த வரையில், ஃபையர் சர்வீஸ்களிடம் ஒன்றிரண்டு லாரிகளை வைத்துவிட்டு, காவேரி, பவானி போன்ற ஆறுகளி லிருந்தெல்லாம் தண்ணீர் ஏற்றி, நீண்ட தூரத்தில் உள்ளவர்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு வசதி செய்ய வேண்டும். பல இடங்களிலே ஒரு குடம் தண்ணீர் 10 பைசா, 20 பைசா, 30 பைசா என்றெல்லாம் விற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று நினைக்கிறேன். இன்னும் சில மாதங்கள் போனால் எப்படி யிருக்கும் என்று சொல்ல முடியவில்லை.

சர்க்கார் கடன்கள் ஒத்தி வைக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. அது கூட்டுறவுக் கடனாக இருந்தாலும் சரி, சர்க்கார் கொடுக்கக்கூடிய கடனாக இருந்தாலும் சரி ஒத்தி வைக்கப்படும் என்ற நம்பிக்கை எனக் கிருக்கிறது. சிறு நிலச் சுவான்தார்கள், ஒரு ஏக்கர், 2 ஏக்கர், 5 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள் தனிப்பட்டவர்களிடம் ஏராளமாகக் கடன் வாங்கி இருக்கிறார்கள். அந்தச் சிறு நிலச்சுவாந்தார்கள் பாதிக்கப் படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நேரத்திலே எனக்கு முன்னால் பேசிய நண்பர் அழகர்சாமி அவர்கள் சொன்னபடி, கட்டாயப்படுத்தி வசூல் செய்தால் அவர்கள் சொத்து, சுதந்திரங்களை விட்டு விட்டுப் போவதைத் தவிர வேறு வழியே இல்லை. 1936-ம் ஆண்டிலே எப்படி கடன் ஒத்திவைப்புச் சட்டம் கொண்வரப்பட்டதோ அதைப்போல நீண்ட காலத்திற்கு அல்ல, நான் சொல்வது எல்லாம் கொஞ்ச காலத் திற்கு ஓராண்டு காலத்திற்கு கடன்களை ஒத்தி வைக்கக்கூடிய நிலையிலே ஓர் அவசரச் சட்டத்தை சர்க்கார் கொண்டுவர வேண்டுமென்று தெரிவித் துக்கொள்கிறேன்.

ஏரி, குளங்களை நிவாரண வேலைகளில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏரி, குளங்களைச் செப்பனிடுவது, ரோடுகள் போடுவது, சல்லிகள் உடைப்பது இவைகளை யெல்லாம் செய்கிறார்கள். அதே நேரத்தில் கஞ்சித் தொட்டிகளை இவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வரக்கூடாது. அதைக் கொஞ்சம் தள்ளி வைத்து, வேலையைக் கொடுத்து, அதன் மூலமாக ஜனங்கள் உணவு தானியத்தை வாங்குகிற நிலைமையை உண்டாக்குகிற அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பிறகு, தேவைப் பட்டால், கஞ்சித் தொட்டிகள் வைக்க வேண்டும்.

இந்த நேரத்திலே மத்திய அரசாங்கம் அனுதாபம் உள்ளவர்களாகவும் பரிவு உள்ளவர்களாகவும் இருக்கிற காரணத்தாலே, நதிகளை நிரந்தரமாக இணைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த நேரத்தில் இந்தியாவில் வட பகுதிகளிலே இருக்கக் கூடிய ஆறுகளையும், தென் பகுதிகளிலே இருக்கக்கூடிய ஆறுகளையும் இணைத்து தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்திலே பழைய பாதையிலேயே, காவேரி பாசனத் திலே, பவானி பாசனத்திலே, அமராவதி பாசனத்திலே, பெரியாறு பாசனத்திலே ஒவ்வொரு க்யூசெக்ஸுக்கும் 25,000 ஏக்கர் பயிரிடக் கூடிய முறைகள் இருக்கின்றன. அந்த முறையை மாற்றி ஒவ்வொரு க்யூசெக்ஸுக்கும் 50,000 ஏக்கர் பயிரிடக்கூடிய முறையைக் கொண்டு வந்தால், 2 இலட்சம், 3 இலட்சம் ஏக்கர்களுக்குப் புதிதாக தண்ணீர் கொடுக்க முடியும்.

கடைசியாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஓரளவுக்கு மழை வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மாநில மக்களிடத்திலே மரம் வைப்பதற்கான உணர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு காலத் திலே செய்யப்பட்டது. ஆனால் மக்களிடத்திலே எடுபடவில்லை. இன் றைக்கு ஜனங்கள் எல்லாம் ஏராளமாகப் பெருகிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, குடியிருப்பு வசதி, மற்ற வசதிகளுக்காக காட்டிலுள்ள மரங்க ளெல்லாம் வெட்டப்பட்டு வருகின்றன. நீலகிரி காடுகளிலும் மரங்கள் வெட்டப்பட்டன. இதை யெல்லாம் ஞாபகத்திலே கொண்டு எல்லா இடங் களிலும் மரங்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



ஒன்றே ஒன்று சொல்லி முடித்துவிடுகிறேன். அரசாங்கம் செலவுசெய்து பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. பிறகு பரம்பிக்குளம்—ஆளியாறு போன்ற திட்டங்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து நிறைவேற்றுகிறார்கள். இதைப் பேசும்போது விவசாயிகள் என்னைத் தாக்குவார்கள், திட்டுவார்கள் என்று எனக்குத் தெரியும். நிச்சயமாக உணவு தானியப் பயிர்களை இவ்வள வைத்தாக வேண்டும் என்று சொல்லவேண்டும். கரும்போ, மற்றவை களோ அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இவ்வளவு உணவு தானியங் களைப் பயிரிடவேண்டும். மற்றவைகளை இவ்வளவு தான் பயிரிடலாம் என்று ஒரு சட்டத்தைப் கொண்டுவந்தால் கூட நான் நினைக்கிறேன்—இதற்கு எதிர்ப்பு வந்தால் கூட சமாளித்துக்கொள்ளலாம்., அப்படி ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால் தான் நிச்சயமாக நம்முடைய மாநிலம் தன்னிறைவு உடைய மாநிலமாகவும் பஞ்சம் வந்தால் கூடச் சமாளிக்கக்கூடிய மாநிலமாகவும் இருக்கும். எங்கெல்லாம் முடியுமோ, அங்கெல்லாம் கரும்பு, கடலை, மஞ்சள் மற்றுமுள்ள வியாபாரப் பொருள்களைப் பயிர் செய்கிறார்கள். இன்றைக்கு சர்க்கார் சமாதானம் சொன்னாலும் கூட, சர்க்கார் கொடுக்கிற விலையானது, போதுமானதாக இல்லை, இலாபகரமானதாக இல்லை, கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை. ஆகவே, ஜனங்கள் வியாபாரப் பயிரைச் சாகுபடி செய்கிறார்கள். இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரிகள் தங்கள் சொந்த நிலத்திலே இலாபம் அடையாமலிருக்க சர்க்கார் பாசனம் செய்யக்கூடிய பகுதியிலே, இவ்வளவு தான் வியாபாரப் பயிர்கள் செய்யவேண்டும், இவ்வளவாவது உணவுத் தானியங்களைப் பயிர் செய்யவேண்டும் என்ற சட்டத்தைத் தயவு செய்து ஓராண்டு காலத் திற்குள் கொண்டு வரவேண்டும். எங்களுடைய முழு ஆதரவைக் கொடுத்து, முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை மனப்பூர்வ மாக ஒப்புக்கொள்கிறேன். ஆனால், கேட்டிருக்கிற அரிசி போதுமான தாக இல்லை. பணம் கூட அதிகமாக இல்லை. 10 கேட்டால் 5 தான் கிடைக்கும். ஆகவே, தயவுசெய்து முதலமைச்சர் அவர்களை நான் 5-ஐ 10 ஆக்க வேண்டும். 10-ஐ 20 ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ம. பொ. சிவஞானம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன் மொழிந்துள்ள தீர்மானத்தை மன நிறைவுடன் ஆதரித்து, தமிழரசுக் கழகத்தின் சார்பில் என் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் படித்த இலக்கியங்களிலே, 12 ஆண்டுகள் தொடர்ந்து மழை பெய்யவில்லை என்றால், பஞ்சம் என்று வந்திருக்கிறது. ஆனால், ஓராண்டு பருவ மழை பொய்த்த அளவிலே, உலகத்துக்குத் தெரிகிற அளவிலே பஞ்சத்தைப் பற்றிப் பேச வேண்டிய நிலையில் தமிழ்நாடு இருக்கிறது. ஆகையால், இது பொய் அல்ல, மிகை அல்ல, ஏற்கனவே பஞ்சத்தில் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு இது சான்றாக இருக்கிறது. ஏற்கனவே இருந்த பஞ்சம் கூடுதலாகிவிட்டதால், குமுறல் அதிகமாகி இருக்கிறது.

சோதனை வரும்போதுதான் நமது அரசினுடைய பொருளாதார நிலை எவ்வளவு பலவீனமாக இருக்கிறது, நம்முடைய பொருள் வளத்தை நாம் எவ்வளவு அதிகம் பெருக்கிக் கொள்ள அவசிய மிருக்கிறது என்பது தெரிகிறது. ஓராண்டு பருவ மழை பொய்த்து, பஞ்சம் என்றவுடனே, நிவாரணத்தின் ஆரம்ப வேலைகளுக்காக, அதுவும் குடி தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க, 1,500 மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுக்கு மனுப் போட்டுள்ளோம். அதைப் பார்த்து, பிரதமர் அவர்கள் ஐந்து வார அவகாசத்திற்குப் பிறகு வந்து பார்ப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கு இரண்டு வார அவகாசத் திற்கு முன்பு ஒரு நிபுணர் குழு வந்து பார்வையிட்டுள்ளது. அது என்ன முடிவு செய்திருக்கிறது என்று தெரியாமல் தவிக்கிறோம்.

உருவாகியிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறபோது, பஞ்சத்தை விடவும் பயங்கரமாக இருக்கிறது., நமக்கு இருக்கிற அரசியல் சூழ்நிலை என்பதையும் நான் நினைப்பூட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நாம் பார்க்க வேண்டும். பஞ்ச நிவாரண வேலைகளைப் பற்றி எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். அவற்றையே நான் திரும்பவும் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. பலவீனப் பகுதிகளுக்கு, பலவீன ஜீவன்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசு முதலில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, தண்ணீர்ப் பஞ்சத்தின் விளைவாக முதலில் பாதிக்கப்படுவது கால்நடைச் செல்வம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். கால்நடைச் செல்வம் பாதிக்கப்பட்டால் மிகப் பயங்கரமான நிலை ஏற்படும். மக்களுடைய வாழ்க்கை அதனால் பாதிக்கப்படக்கூடும். உழவுத் தொழில் போன்ற மற்ற தொழில்களும் அதனால் பாதிக்கப்படக்கூடும். ஆகவே, கால்நடைகளுக்குப் போதுமான அளவு தண்ணீர் கிடைக்க அதிகக் கவனம் செலுத்தி, அதற்கு முதல் முக்கியத்துவம் தரவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர்ப் பஞ்சம் இல்லாத காலத்திலேயே, பல நூற்றாண்டு காலமாக, அரிசன மக்களுக்குத் தண்ணீர்ப் பஞ்சம் உண்டு. அவர்கள் எல்லா இடங்களுக்கும் போய் குடி நீர், குளி நீர் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படாத நிலை இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தில், அரிசன மக்களுக்கு எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அகில உலகும் அறியும். என்றாலும் கூட, சமுதாயத்திலுள்ள சாதிக் கொடுமை—கிராமங்களிலுள்ள சாதிக் கட்டுப்பாட்டின் வலிமை—காரணமாக, அவர்களுக்கு இன்னும் சுத்தமான தண்ணீர் கிடைக்காத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தண்ணீர் வழங்குகிறபொழுது, பலவீனப் பகுதிகள் சேர்க்கப்பட்டு, சேரிப் பகுதிகளில் மிகுந்த அக்கறை கொண்டு, அரிசனங்களுக்குத் தண்ணீர் கிடைக்க அரசு வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் சென்னை மாநகரையும் பார்க்க வேண்டும். அது பலவீனப் பகுதி இல்லை என்று வைத்துக் கொண்டாலும் கூட, மிகவும் அவசிய மும் அவசரமுமான தொழில் நிறுவனங்களைக் கொண்ட பகுதி சென்னை மாநகரம். கனம் அங்கத்தினர் இராசரத்தினம் தனது பூவிருந்தவல்லித் தொகுதி பற்றியும் சொல்லுமாறு என்னைப் பார்க்கிறார். சென்னை மாநகரைத்தைப் பற்றியும் சென்னை மாநகரத்துச் சுற்றுப் புறப் பகுதிகளைப் பற்றியும் அரசு விசேஷ அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்களிலே யாரும் சென்னை மாநகரத்தைப் பற்றிப் பேசாததால், இங்கே ஒருவேளை, பஞ்சப் பிரச்னை இருக்கிறதோ, இல்லையோ என்ற ஐயம் கூட ஏற்படக்கூடும் ஒன்று நான் திரும்பவும் சொல்லுகிறேன். சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையிலும், அவை விசேஷப் பிரச்னையாக எடுத்துக் கொள்ள வேண்டும. தண்ணீர்ப் பஞ்சத்தின் பயங்கரமான தன்மையை மனதில் கொள்ள வேண்டும். மற்றவை கூடுதலோ குறைவோ எப்படி இருந்தாலும், இதை விசேஷப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவேண்டும் காரணம், இங்கே நாள்தோறும் இலட்சக்கணக்கான மக்கள், "ஃப்ளோட்டிங் பாபுலேஷன்", என்ற முறையில், வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். ஆகவே, சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையை ஒரு விசேஷப் பிரச்சினையாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இராஜ்யத் தலைநகர மாவட்டமான சென்னையை மற்ற மாவட்டங்களோடு ஒன்றாகக் கணக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. எல்லா மாவட்டங்களுக்குமாகக் கடமையாற்றுகின்ற அலுவலகங்களும், அரசின் துறைத் தலைமை அலுவலகமும், எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்து போகிற மக்களுக்கு உணவு கொடுக்கின்ற உணவுச் சாலைகளும் (ஓட்டல்ஸ்) சென்னை மாநகரத்தில் இருக்கின்றன. அந்தப் பகுதி





களுக்கெல்லாம், அந்தத் துறைகளுக்கெல்லாம், அந்த அலுவலகங்களுக்கெல்லாம் குடிநீர் கொடுப்பதைப் பொறுத்து இருக்கிறது, நேரத்தோடு கடமையாற்றுகிற பொறுப்பை நிர்வகிக்கும் சென்னை மாநகரத்தின் வாழ்வு என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்னொன்றும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பஞ்ச நிலைமை எவ்வளவு நாள் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் விரைவிலே விடுமுறை விடப்படலாமென்றாலும், பஞ்ச நிலைமை நெடுங்காலம் நீடிக்குமென்ற அச்சம் பற்றி இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுகாதாரமற்ற நீரை, சுத்தமற்ற நீரை, குடித்து நம் குழந்தைச் செல்வங்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படக் கூடாது. மக்களுக்குக் குடிநீர் கொடுப்பதில் அரசு மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ளும் அதே நேரத்தில், பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத்தைக் காப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். புழலேரித் தண்ணீர் சென்னை மாநகரத்திற்குப் போதுமானதாக இல்லை. எந்தக் காலத்திலும் தண்ணீர்ப் பஞ்சம் வரக்கூடிய நிலையில் தான் சென்னை மாநகரம் இருந்து கொண்டிருக்கிறது. கமிஷனர் கூட, ஒரு முறை, "மக்கள் வெளியேறக்கூடிய நிலை கூட ஏற்படலாம்" என்று கூறியிருக்கிறார். பம்பாயில் பயங்கரமான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டபொழுது, மக்களில் சரிபாதி பேர் நகரிலிருந்து வெளியேறி விடவேண்டும் என்ற உத்தரவு போட்டார்கள். சென்னை மாநகரத்தில் உள்ளவர்கள் இராஜ்யம் முழுவதுமுள்ள மக்களுக்குக் கடமையாற்றக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். நேரத்தோடு கடமையை ஆற்றக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். நகரத்தைவிட்டு மக்கள் வெளியேற வேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால், இராஜ்யம் முழுவதும் அதனால் பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது. சென்னை மாநகரிலுள்ள தொகுதிகளின் ஒன்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி என்ற முறையில் நான் கடமையைச் செய்யவேண்டியவன் என்பது மட்டுமல்ல ; நகரத்தின் பிரச்சினைகளை உண்மையாக உணர்ந்தும் சொல்கிறேன். அதிர்ஷ்டவசமாக, முதல் அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரத் தொகுதி ஒன்றிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அமைச்சர்களில் மிகுதியானவர்கள் சென்னை மாநகரத் தொகுதிகளிலிருந்து தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால், சென்னை மாநகரத்தின் நிலைமையை அவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

குடிநீரைப் பற்றி இலக்கியத்தில் ஒரு பாட்டு வருகிறது. கடல் நீர் உப்பு நீரானாலும், கடலருகே ஊற்றுப்பெருக்கெடுத்தால் உண்ணீரும் ஆகிவிடும் என்பது அந்தப் பாட்டு. கடற்கரையை ஒட்டிய பிரதேசங்களில் உண்ணீர் நமக்குக் கிடைக்கும் என்ற நிலை இருப்பதனால், சென்ற இரண்டாவது மகா யுத்தங்களின்போதுகூட, கடல் அருகே கிணறுகளைத் தோண்டி, குடி நீர் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கடல் அருகில் எந்தத் தூர அளவில் குடிநீர் கிடைக்கிறதோ, அந்த அளவில் குடிநீர் எடுக்க ஏற்பாடு செய்வது இந்த அரசின் பொறுப்பு.

மற்ற அங்கத்தினர்கள் சொன்னதைப் போல் நானும் சொல்கிறேன். பஞ்சப் பிரச்னையில், ஜீவ நதி இல்லாத நம்முடைய இராஜ்யப் பிரச்சினையில் எப்பொழுதும் நாம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. நாடு முழுதும், எந்தச் சமயத்திலும் யுத்தம் மூளலாம். படையெடுப்பு ஏற்படலாம் என்று எதிர்பார்த்து, இராணுவங்களை வைத்துக் கொண்டு, அதற்காகப் பணம் செலவழித்து வருகிறோம். அதைப் போல, பஞ்சம் எப்பொழுதும் வரக்கூடும் என்று எதிர்பார்த்து நம்முடைய நிவாரண ஏற்பாடுகள் நிரந்தரத் தன்மை பெற்றவையாக இருக்கவேண்டும். அதிலும், சென்னை நகரத்திற்கான ஏற்பாடுகள் நிரந்தரத் தன்மையுள்ளவையாக இருக்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன். இதிலுள்ள அபாயத்தை சிந்தித்துப் பார்த்துத் தான் சொல்

கிறேன். இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குக் கொஞ்சம் பணம் வீணாக, கூடுதலாகச் செலவழிந்தாலும், அவை நிரந்தரத் தன்மை உள்ளனவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்ச நிவாரணத்திற்குப் பல கோடி ரூபாய் செலவழிக்கிறபோது, ஊழல்கள், ஊதாரித்தனம் ஏற்பட்டு, இடையிலிலுள்ள சில கொள்ளைக் காரர்கள் பணத்தைக் கொள்ளையடிக்க முன்படுவார்கள். அந்த மாதிரி நிலை, பஞ்ச நிவாரண வேலைகளுக்குப் பணம் செலவழிக்கப்படும்பொழுது ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

பஞ்ச நிவாரணத்திற்காக நாம் மத்திய அரசிடம் பணம் கேட்டிருக்கிறோம். ஆந்திராவுக்கு 12 கோடி ரூபாய் கொடுத்திருப்பதைப் பார்க்கிறோம் பஞ்ச நிவாரணத்திற்காக. ஜீவநதி ஓடுகின்ற அந்த இராஜ்யத்திற்கு அவ்வளவு பணம் தரப்பட்டிருக்கிறது. அங்கே "பஞ்சப் பிரதேசம் எது"? என்று தேட வேண்டும். ஆந்திராவுக்குக் கொடுப்பதை நான் குறை கூறவில்லை. தமிழ்நாட்டின் நிலை அப்படி இல்லை. பஞ்சத்தால் பாதிக்கப்படாத பகுதி எது என்று தேடிப் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. பெரிய ஜீவ நதி எதுவும் நம் இராஜ்யத்தில் இல்லை. 12 கோடி ரூபாயில், மூன்றில் இரண்டு பங்கு பணம் இலவசமாகத் தரப்பட்டுள்ளது ஆந்திராவுக்கு. மைசூருக்கு பத்து கோடி ரூபாயும் கொடுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஜீவநதியான காவேரியைப் பெற்றுள்ள மைசூருக்கும், கிருஷ்ணா, கோதாவரியைப் போன்ற ஜீவ நதிகளைப் பெற்றுள்ள ஆந்திராவுக்கும் பத்து கோடி ரூபாயும், பன்னிரண்டு கோடி ரூபாயும் ஏற்கெனவே பஞ்ச நிவாரணத்திற்குக் கொடுத்தாகிவிட்டது. தமிழ் நாட்டிற்கு இன்னும் வரவில்லை பிரதமர். ஏப்ரல் மாதம் 19-ம் தேதி வரப் போகிறார். இடைக் காலத்தில் நம்மைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். நம்முடைய கால்நடைச் செல்வங்களையும் குழந்தைச் செல்வங்களையும் நம்முடைய நாட்டையும் கடவுள் தான் காக்க வேண்டும். ஜீவ நதி இல்லாத நம் இராஜ்யத்திற்கு பஞ்ச நிவாரணத்திற்கு நிதி கிடைப்பதற்கு ஏனோ இவ்வளவு தாமதம்? "ராஜாங்கம் போனாலும் ராஜநடை போகாது" என்ற போக்கு தான் நிலவுகிறது. நான் குற்றம் சொல்வதாகக் கருத வேண்டாம். நிவாரணம் அவசரமாகத் தேவை என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பிரதமர் இங்கே உடனடியாக வருவதற்குத் தவறிவிட்டார்.

இன்னொன்றையும் சொல்லி நான் முடிக்கிறேன். சென்னையிலேயும், மற்ற இடங்களிலேயும் உள்ள நிலைமைகளையெல்லாம் பார்க்கிறபொழுது, நிவாரண வேலைகளுக்காக நிரந்தரமாக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். சட்டமன்றம் இப்பொழுது கூடியிருப்பதால், கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒற்றிவைப்புத் தீர்மானம் இவைகளையெல்லாம் உடனடியாகக் கொண்டுவர முடிகிறது. சட்டமன்றம் கூடாத நேரத்தில், இந்த நிவாரண வேலைகள் எந்தப் பகுதியில் செய்யப்பட வேண்டும், அதன் விளைவுகள் என்ன, என்னென்ன நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டும், மத்திய அரசினிடமிருந்து எந்த உதவி எப்படி கிடைக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் முன்கூட்டியே ஆராய்ந்து வைத்துக்கொள்ள முடியாது. நிவாரண வேலைகள் செய்யப்படும்பொழுது, அதைப் பற்றி யெல்லாம் பரிசிலிக்க சர்வகட்சிப் பிரதிநிதிகள் கொண்ட, மேலவை, பேரவைப் பிரதிநிதிகள்கொண்ட ஒரு நிரந்தரக் குழுவை முதல் அமைச்சர் அவர்கள் அமைக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் திரும்பவும் சொ[illegible]ன், நாட்டினுடைய நன்மையைக் கருதி, சென்னைக்கு விசேஷ முக்கியத்துவம் கொடுத்து, குடிநீர்ப் பஞ்சத்திற்கு நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னை நகரத்தையும், அதற்குச் சுற்றுப்புறத்திலுமுள்ள பகுதிகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு



வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, தீர்மானத்தில் உள்ள ஒரே ஒரு குறையை மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடிக்கிறேன். தீர்மானத்தில், மிக அழகாக பிரதமருக்கும் நிதி அமைச்சர் அவர்களுக்கும் உணவு அமைச்சர் அவர்களுக்கும், மொத்தமாக மத்திய அரசுக்கும், சிறப்பாக இங்கே வந்து போன குழுவுக்கும் நமது முதல் அமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்திருக்கிறார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு".

என்ற வள்ளுவர் குறளைத் தெரிந்தவராதலால், நிவாரண உதவி வருதற்கு முன்னாலேயே, அட்வான்சாக ஏகப்பட்ட நன்றியைச் செலுத்தியிருக்கிறார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். நன்றி செலுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்களுக்கு அவ்வளவு நன்றி சொல்வது அவர்களை அவமதித்ததாகிவிடுமோ என்று எண்ணுகிறேன். அயல்நாட்டினர் பெரிய உதவி செய்தால் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியது தான். அமெரிக்கா ரஷ்யா போன்ற அயல் நாடுகள் உதவி செய்தால் நன்றி செலுத்துவதை நாம் பார்த்திருக்கிறோம். நாம் அவர்களில் ஒரு பகுதி. அவர்கள் நம்மில் ஒரு பகுதி; வலது கை இடது கைக்கு நன்றி செலுத்துவது புதிய மரபு என்று எண்ணினாலும், கொஞ்சம் அழுத்தமாகச் சொல்லுங்கள், நல்லது தான்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தீர்மானத்தில் 1968-ம் ஆண்டில் வான் பொய்த்ததின் விளைவாக என்று சொல்லப்பட்டிருக்கிறது. என் இப்படிக் குறுகிய காலத்தைச் சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை. காரணம், தமிழ்நாடு பல பகுதிகளும், முக்கியமாக, சேலம், இராமநாதபுரம், போன்ற மாவட்டங்கள் வரட்சி மிகுதியாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது 1965-லிருந்தே இருந்து கொண்டிருக்கிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே ஜி.ஓ.கள் போட்டிருக்கிறார்கள். ஜி.ஓ. எம். எஸ். 1162, 6—4—66-ம், 1151, 4—6—68-ம் குறிப்பிடத்தக்கவை. ஆகவே, பல ஆண்டுகளாகப் பஞ்சம் இருந்தும், என் நாம் இப்பொழுது 1968-லிருந்து மட்டும் குறிப்பிட வேண்டும் என்பதுதான் தெரியவில்லை. நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்ன வென்றால், இந்தத் தீர்மானத்தைக் கொஞ்சம் திருத்தி அமைத்தால் நலமாக இருக்கும். நம்முடைய தீர்மானத்தைப் பார்த்துவிட்டு, மத்திய சர்க்காரில், இப்பொழுதுதானே ஒரு வருஷமாகிறது, பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்பார்கள். ஆகவே, அத்தகைய எண்ணம் வராமல் இருக்க வேண்டும். அதற்காக 1965-ல் இருந்தே தமிழ்நாட்டில் பல பகுதிகளில் வறட்சி ஏற்பட்டு, சீர்கேடான நிலை இருந்து கொண்டு இருந்தும், இப்பொழுது நடப்பு ஆண்டில், 1968-69-ல் வான் பொய்த்ததால் என்று சொல்லிவிட்டால், கொஞ்சம் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன். பல பகுதிகளிலும் ஆண்டுக்காண்டு தவித்துக் கொண்டு இருக்கிறார்கள் மக்கள். இந்த ஆண்டும் அதிகமாகத் தவிக்கிறார்கள். அதுதான் நிலைமை, அந்த நிலைமை தெரிந்தாலாவது; கருணை உள்ளம் வரும் அவர்களுக்கு என்று நினைக்கிறேன். ஆகவே, தீர்மானத்தை அந்த வகையில் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். திருநெல்வேலிப் பகுதியில், கோவில்பட்டி, சங்கரன்கோவில், நாங்குநேரி போன்ற பகுதிகள் 10 வருஷமாகத் தவித்துக் கொண்டிருக்கிறது. தென்காசிப் பகுதி தவிக்கிறது. சேலம் பூராவும், தவித்துக் கொண்டிருக்கிறது. ராமநாதபுரம் பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆகையினால், 1968 என்று குறிப்பிடுவதை

விட்டு, தீர்மானத்தைத் திருத்த வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் அவர்கள் உன்னிப்பாகக் கவனிப்பார்கள் என்றும் நினைக்கிறேன்.

அதோடு நிரந்தரமான வழிவகை செய்ய வேண்டும். சுதந்தரம் பெற்றபிறகு 20 ஆண்டுகளாகியும், இன்னமும் குடிநீர் கூட இல்லை. என்கிற நிலைமை வந்துவிட்டது. திரு. மூக்கையா தேவர் அவர்கள் சொன்னார்கள். அச்சங்கோவில் ஆறு, அது அவர்கள் பகுதியில் ஓடுகிறது, அதிலிருந்து நீர் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்த நேரத்தில் மத்திய சர்க்கார் மூலமாக அந்த அச்சங்கோவில் ஆற்றைத் திருப்பிவிட்டு, அதற்கு நாம் கொடுக்க வேண்டியதெல்லாம் ராயல்டி ஒன்றுதான், அதை உடனடியாகச் செய்ய வழிவகை செய்யப்பட்டால், நலமாக இருக்கும். அதே போலத்தான், பிராஜக்டுகள். இந்த வருஷம் அமைச்சரவர்கள் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் சர்க்கார் பாங்கிகள் மூலமாக நிதி வசதி செய்ய வழிவகை ஏற்பட்டால் நிரந்தரமாக நலன் ஏற்படும்.

அதுபோக, வறட்சியான பகுதிகளில், அண்டர்-கிரௌண்ட் வாட்டரை எடுக்க வழிவகைகள் செய்ய வேண்டும். வறண்ட பகுதிகளுக்கு என்று இல்லாமல், எண்ணெய் உற்பத்திக்கு என்று எடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக, அது வரவேற்கத் தக்கதுதான் என்றாலும், வறட்சியையும் கவனிக்க வேண்டும். அதற்காகவும் அண்டர்-கிரௌண்ட் வாட்டரை எடுக்க முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உடனடியாகச் செய்யக் கூடியது என்னவென்றால், லாண்ட் மார்ட்கேஜ் பாங்கு, கிரெடிட் பாங்கிகள் மூலம் கொடுக்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்களை லாங் டர்ம் லோன்களாகச் செய்ய வேண்டும்.

மாவட்டந் தோறும் ஒரு அமைச்சர் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் தீர்மானம் மத்திய சர்க்காரை அணுகுவது பற்றிச் சொல்லுகிறது. நாம் என்ன என்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்பதை பார்க்கும்போது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அல்லது இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு அமைச்சர் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும். வறட்சியை நேரிடையாகப் பார்க்கவேண்டும். ஆங்காங்கே சட்டசபை அங்கத்தினர்களைக் கேட்கவேண்டும். பணத்தை ஒதுக்கவேண்டும். திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ, 8 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே நான்கு தாலூகாக்கள் இருக்கின்றன. அவையெல்லாம் 10 வருஷமாகக் கஷ்டப்படுகின்றன. சாத்தாங்குளம், ராதாபுரம், போன்ற பகுதிகளிலிருந்து ஆட்கள் வெளியே போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்த மாவட்டத்திற்கு ரூ. 8 லட்சம் என்பது பரிதாபத்துக்குரியது. அமைச்சர்கள் மாவட்டங்களுக்குத் தனிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, ஒன்று சேர்ந்து கிடைக்கும் பணங்களை ஒழுங்காக பிரித்து வழங்குவதில்தான் நேர்மையான முடிவு ஏற்படும். இதற்காகச் சுற்றுப் பிரயாணம் செய்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும். வறட்சியான பகுதிகளை நேரிடையாகப் பார்த்தால்தான், அரசுக்கும் மதிப்பு, ஆளுங்கட்சிக்கும் மதிப்பு ஏற்படும், அதோடு மக்கள் தொடர்பும் ஏற்படும்.

குடும்பக் கார்டு வறட்சியான பகுதிகளில் கொடுக்கப்படுகிறது. அது இரண்டு வாரத்திற்கு, மூன்று வாரத்திற்கு ஒரு முறைதான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, வறட்சிப் பகுதிகளுக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும். இதற்கெல்லாம் ஒரு நிரந்தாமான திட்டத்தைக் கவனிக்கவேண்டும். மத்திய சர்க்காரை அணுகும்போது, ஏன் நாம் குறுகிய கால அளவோடு அணுகவேண்டும். ஆகவே, 1968-லிருந்து என்பதை 1965-லிருந்து என்று, அன்றிலிருந்து கஷ்டப்படுகிறோம் என்பதை அழுத்தமாகச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி ஜி. கருத்திருமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்பொழுது அவைமுன் இருக்கப்பட்டதான மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்



களைச் சொல்ல விரும்புகிறேன். வருமுன் காப்போன், வந்தபின் காப்போன் என்ற இரு நிலைகள் இருக்கின்றன. ஒரு நிலை வருவதற்கு முன்னேயே திட்டங்களைப்போட்டு, செயல்படுவது இன்றியமையாதது. வந்தபின் என்ற நிலையில், பஞ்சம் வந்துவிட்டது, மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறோம் என்கிறோம். சட்டசபை ஆரம்பித்தபோது, நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்தபோது, இருந்த நம்பிக்கையை விட, சில நாட்களுக்குப் பின்னால் நிச்சயமாக நாம் பஞ்சத்தில் இருக்கிறோம் என்கிற நிலையில், இப்பொழுதாவது, நம்முடைய தமிழ்நாடு சர்க்கார் உணர்ந்ததற்காக, உணந்தார்களே என்பதற்காகவாவது, பஞ்சத்தில் வாடும் மக்கள் சார்பாக நம்முடைய நன்றியைத் தெரிவிக்கவேண்டும்.

இப்போதையப் பிரச்சினையில், கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னது போல, 1965-லிருந்தே இந்தப் பஞ்ச நிலை தொடர்ந்து வந்திருக்கிறது இடையில் எப்பொழுதாவது மழை வந்துவிட்டால், சரி பஞ்சம் தீர்ந்துவிட்டது என்று நினைத்துவிட்டோம். ஒரு தரம் பெய்த மழை, மறு தரம் பெய்யாது. அப்படிப்பட்ட நிலையில் ஆபத்தான சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படித்தான் இப்பொழுதும். இப்பொழுது இருக்கும்படியான நிலையில், இப்பொழுது இருக்கும்படியான அரசாங்கம், திட்டவட்டமாக எடுத்த நடவடிக்கை என்ன? என்னென்ன திட்டங்கள் போட்டார்கள் ?) வைத்தியத்திற்கு மருந்து கொடுங்கள் என்கிறார்கள். ஆனால், வைத்தியம் செய்வதற்கு நோய் என்ன என்றே தெரிந்துகொள்ளவில்லை. நோய் என்ன என்று ஆராய்ந்து தெரிந்து கொண்ட பிற்பாடல்லவா, மருந்து என்ன என்று தீர்மானம் செய்து மருந்து கேட்கவேண்டும் ? அது சரியாக இருக்கும். அதில்லாமல், மருந்தைக் கொடுங்கள், மருந்தைக் கொடுங்கள் என்றால் அதை ஒரு விசேஷமாகக் கருதமுடியாது.

எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகளை எந்த முறையில் அணுகவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். 1952–57-ல் நான் முதலிலே சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது, கோவையில் ஒரு கலெக்டர் இருந்தார்கள். இப்பொழுது ரெவின்யூ போர்டு மெம்பராக இருக்கும் திரு. என். எஸ். மணி கலெக்டராக இருந்தார்கள். முன்னால் அவரை நான் நேரிலே பார்த்தது கிடையாது. ஒரு நாள் அவர்கள் ஆபீசில் —கோவையில்—சென்று, சில விஷயங்களைச் சொன்னேன். 10, 12 விஷயங்களைச் சொன்னேன். அவர் கேட்டுக் கொண்டிருந்தார். அதோடு மட்டுமல்ல, கோபிசெட்டிபாளையம் முகாம் வருகிறேன், அப்பொழுது இந்தப் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லுகிறேன் என்றார்கள். அன்றிலிருந்து மூன்றும் நாள் அவர்கள் கோபிசெட்டிபாளையத்திற்கு முகாம் வந்தார்கள். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. பார்த்தவுடன் திருப்திகரமான சூழ்நிலை ஏற்பட்டது. என்ன செய்தார்' என்றால், கொடுத்த 12 பிரச்சினைகளுக்கும் பதில்கள் சரியாக வைத்திருந்தார்கள். என்னென்ன பிரச்சினைகள் தீர்ந்துபோன பிரச்சினைகள், என்னென்ன பிரச்சினைகள் தீர்க்கமுடியாது, இன்னின்ன பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது, என்பதுபோன்ற குறிப்புக்களை எழுதி வைத்திருந்தார்கள். அது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. பாக்கி கலெக்டர்கள் தவறு செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. 12, 15 ஆண்டுகளுக்கு முன்னால், நான் கொடுத்த 12 பிரச்சினைகளில், இன்னின்ன தீர்ந்துபோனவை, இன்னின்ன தீர்க்க முடியாதவை, இன்னின்ன தீர்க்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்கிற அளவில் திட்டவட்டமாகக் குறிப்புக்கள் வைத்திருந்தார்கள். அந்த முறையிலே அந்தப் பிரச்சினைகளை அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், பஞ்சம், வறட்சி, பற்றாக்குறை, குடிதண்ணீர்ப் பற்றாக்குறை போன்றவற்றைத் தீர்ப்பதற்கு இந்தச் சர்க்கார் ஒரு திட்டவட்டமான நிலையில் இல்லையென்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

முதலிலே இருப்பது தண்ணீர்ப் பிரச்சினை. இது மிகவும் முக்கியமான பிரச்சினை என்பது அனைவருக்கும் தெரியும். மனிதனுக்கு ஓரளவு தண்ணீர் கிடைக்கிறதென்றாலும், கால்நடைகளுக்குத் தண்ணீ இல்லையென்றால் விவசாயமே இருக்காது. விவசாயம் இல்லையென்றால் உணவு உற்பத்தி இருக்காது. கால்நடைகளுக்குத் தீவனம் போட்டு நாம் வளர்க்க முடியாத சூழ்நிலை ஏற்படும். கால்நடைகள் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லையென்றால், அவைகளை வேறு இடங்களுக்குக் கடத்திச்செல்ல வேண்டிய நிலைதான் ஏற்படும்.

தமிழ்நாட்டில் நூற்றுக்குப் பத்து சதவீத இடங்களைத் தவிர, மற்ற இடங்கள் எல்லாம் இன்றைக்குப் பஞ்சத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக. காவேரி டெல்டாப் பிரதேசம், ஆறுகள் ஓடும் இடம், அணைகளிலிருந்து தண்ணீர் பாயக்கூடிய இடங்கள் போன்றவற்றைத் தவிர பாக்கி எல்லாப் பகுதிகளிலும் தண்ணீர் கிடைக்கவில்லை. கிணறுகளைப் பொறுத்தவரையில் நூற்றுக்குத் தொண்ணூறு கிணறுகள் வறண்டு விட்டன. மீதி பத்து சதவீத கிணறுகளில்கூட ஓரளவு தண்ணீர் தான் கிடைக்கிறது. சில பகுதிகளில் கிணறுகளில் தண்ணீர் ஊற்று வருமோ, வராதோ என்ற சூழ்நிலை இருக்கிறது. பஞ்சத்தைப்பற்றி பழைய காலத்தில் இருந்த ஏற்பாட்டைப்பற்றி "மூன்று வருடங்கள் மழை பெய்யாமல், ஒன்றுமே இல்லாமல் இருந்தால், அந்தப் பகுதியைப் பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க வேண்டும்" என்று சட்டம் இருந்ததாகச் சொல்வார்கள். அன்றைக்குச் சட்டம் அப்படி இருந்திருக்கலாம். இப்போதிருக்கும் நிலை என்னவென்றால், குடி தண்ணீருக்குக்கூட ரேஷன் கார்டு கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. முன்னே இருந்த காங்கிரஸ் அரசாங்கத்தை, "சாப்பாட்டிற்கு சிகப்பு, கறுப்பு அரிசி போடுகிறார்கள், இது சாப்பிட லாயக்கா ?" என்று தாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றையதினம் இவர்களது ஆட்சியில் குடிதண்ணீருக்குக் கூட ரேஷன் வந்துவிட்டது. விருதுநகரில் ரேஷன், ஆரணியிலே ரேஷன், ஒரு குடம் தண்ணீர் ஆறு அணா, எட்டணா, இன்னும் கேட்டால் ஒரு ரூபாய்கூட விற்கும் நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த மாதிரியான கொடூரமான, குரூரமான நிலைமை இருந்து வருகிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, ஆரணியிலே தண்ணீருக்கு ரேஷன் கார்டு கிடையாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உறுப்பினர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி (திரு. கே. விநாயகம் : கலசப்பாக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது) கலசப்பாக்கத்தில் கார்டே கொடுத்திருக்கிறார்களே ! (இன்னொரு குரல் : களம்பூர்) கலசப்பாக்கத்தில் இல்லை, களம்பூரில் ரேஷன் கார்டு கொடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, களம்பூருக்கும், கலசப்பாக்கத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சரி, உங்கள் ஆட்சியிலே தண்ணீருக்கும் ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. (மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நம் ஊரில் வெள்ளக்கோயிலில்கூட இருக்கிறது). மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெள்ளக்கோயிலில்கூட ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார். ஆகவே, குடிதண்ணீருக்கும் கூட ரேஷன் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொல்லவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, குடி தண்ணீருக்கு ரேஷன் இருக்கிறதென்றால், அது தவிர்க்கப்பட வேண்டியது தான். "நாங்கள்தான் ரொம்ப செய்தோம்" என்று சொல்லி, நீங்கள் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்ட பிறகும் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்க வழி செய்யவில்லை. இப்பொழுது இருக்கும் நிலைக்கு



நாங்கள் பொறுப்பு ஏற்க வேண்டுமென்றால், முன்பிருந்தவர்கள் செய்த குற்றத்திற்காக அவர்களும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, நாங்கள் செய்த தவறைக் காட்டி, இவர்களும் தவறு செய்யக்கூடாது. நாங்கள் தப்பு செய்தோம், தப்பு செய்தோம் என்று சொல்லிக்கொண்டே, அதையே இவர்களும் செய்து வருகிறார்கள். நாங்கள் தப்பு செய்தோம். அந்தத் தவறுகளைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லித்தான் இவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே இவர்கள் இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

முப்பது லட்சம் டன்னாக இருந்த தானியங்களின் உற்பத்தியை 50 லட்சம் டன்னாக மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினால் உயர்த்தினோம். இப்போது நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? "நாங்கள் ஆட்சிக்கு வந்த இரண்டு வருஷ காலத்தில் இதைச் சாதித்துவிட்டோம்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இதையெல்லாம் குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லை. தவறு என்றால் தவறுதான். எந்தச் சர்க்கார் வந்தாலும் இருக்கிற நிலைமையைப் புரிந்து பணியாற்றவேண்டும். அப்பொழுது என்ன சொன்னீர்கள், இப்பொழுது என்ன சொல்கிறீர்கள் ?

"மத்திய அரசாங்கம் எங்களுக்கு உதவி செய்வதில்லை, எங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டும்" என்று சொல்கிறீர்கள். 1,500 மைலுக்கு அப்பால் உள்ள இடத்திற்கு ஏன் போகவேண்டும் என்று தமிழரசுக் கழகம் கேட்கிறது. 1,500 மைலுக்கு ஏன் போகவேண்டும், இங்கே பூமிக்கு அடியில் 1,500 அடி வரையில் போங்கள் என்று சொல்கிறார்கள். இந்த நேரத்தில் மனிதாபிமானத்துடன் செய்ய வேண்டிய பிரச்சினைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நானும் மத்திய சர்க்காரிடத்தில் உதவியைக் கேட்க, அவர்களும் உதவியளிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். நாம் மத்திய சர்க்காரிடத்தில் உதவி கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. அதேபோல் அவர்களும் கொடுக்கக் கடமைப் பட்டவர்கள். இதைவிட்டு, விரோத மனப்போக்குடன் இருக்கக்கூடாது. அதிகாரம் உங்களிடத்தில் இருக்கிறது. எது எது நியாயம் என்பதைக் கண்டு, உங்களுடைய சாமர்த்தியத்தையெல்லாம் காட்டி மத்திய உதவி பெறச் செய்வதில் எங்களுக்கு ஆட்சேபம் இல்லை, இதற்கு இத்தனை கோடி ரூபாய் வேண்டும், அதற்கு அத்தனை கோடி ரூபாய் வேண்டும் என்று சொல்லக்கூடாது. முன்பு ஒரு லட்சம் டன் தானியம் கேட்டீர்கள், இப்பொழுது திடீரென்று 3 லட்சம் டன்னாக ஆகிவிட்டது. அவர்களுடைய அருமை நண்பர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களும் கையை விரித்து விட்டார். நாம் கேட்பது நியாயமாக இருக்கிறதா என்பதை அறிந்து கேட்கவேண்டும். சுமார் பத்து நாட்களுக்கு முன்னால் ஒரு லட்சம் டன் தானியம் மத்திய அரசிடத்திலிருந்து உதவியாக வரவேண்டும் என்று சொன்னீர்கள். இப்போது மூன்று லட்சம் டன் தானியம் வேண்டும் என்று சொல்கிறீர்கள். இந்த மூன்று லட்சம் டன்னும் அரிசியா, கோதுமையா என்பது தெரியவில்லை. நீங்கள் அதிகமாகக் கேட்டாலும் கூட, மத்திய சர்க்கார் தங்கள் கையில் இல்லையென்று சொல்கிறார்கள். இப்போதுதான் சர்க்கார் உண்மை நிலையை ஓரளவு உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். உண்மை நிலை பூராவும் அவர்களின் மனத்திற்குள்ளே இருக்கிறது. வெளியே சொல்வதற்குக் கொஞ்சம் பயம் இருக்கிறது அவர்களுக்கு. "இவையெல்லாம் காங்கிரஸ் செய்த திட்டங்கள். தொடர்ந்து காங்கிரஸ் செய்த திட்டங்களைத்தான் நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்" என்று சொல்வதற்கு உங்களுக்குக் கொஞ்சம் வெட்கம். வெட்கத்தை விட்டால்தான் நல்லது. கெட்டதை உணர்ந்துகொள்ள முடியும். எந்தெந்த இடங்களில் பஞ்சம் என்பதை நாம் இன்னும் பூரணமாக உணராமல் இருக்கிறோம்.

மாவட்டக் கலெக்டர்கள் தங்களை மறைத்துக்கொள்வதற்காக, தங்களுடைய மாவட்டத்தைப் பற்றி நல்லமுறையில் படம் பிடித்துக் காட்டுவோம் என்று எண்ணிக்கொண்டு, தங்களுடைய மாவட்டத்தின் உண்மை நிலைகளையெல்லாம் மறைத்துவிடுகிறார்கள். ஆகவே, ஒரு சில இடங்களில்தான் பஞ்சம் என்று அரசாங்கம் கருதுகிறது. மழை பெய்யாதா என்ற ஆவல். ஆனால் வானம் பொய்த்துவிட்டது. ஆகவே, இனிமேல் திட்டம் போட்டு வேலைகளைச் செய்வதற்குள், பஞ்சமே ஓடிவிடும்.

நான் 1965-66-ம் ஆண்டில் பீகாருக்குப் போயிருந்தேன், ராஜஸ்தானுக்குப் போயிருந்தேன், யு.பி-க்குப் போயிருந்தேன். அங்கெல்லாம் பஞ்சத்தின் போது ரயில்வே வாகனங்களில் கொண்டுபோய் தண்ணீர் விநியோகம் செய்தார்கள். லாரியில் கொண்டுபோய் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். இப்பொழுது நம்மிடத்தில் என்ன திட்டம் இருக்கிறது ? ஒரு அவசரத் திட்டத்தை (க்ராஷ் புரோகிராம்) நாம் மேற்கொள்ள வேண்டும். பஞ்சத்திற்காக கோயம்புத்தூருக்கு 35 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதில் 11 லட்சம் கால்நடை தீவனத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் தொகை கால்நடைகளுக்குப் போதுமானது அல்ல. இந்தத் தொகை சுமார் நாலாயிரம் கால்நடைகளுக்குக்கூட போதுமானதல்ல. யானைப் பசிக்கு சோளப் பொரி கொடுத்ததைப் போல, இந்தத் தொகை போதுமானது அல்ல. கோயம்புத்தூர் பகுதியில் கிட்டத்தட்ட 30 லட்சம் கால்நடைகள் இருக்கின்றன. கோபிச்செட்டிபாளையம் போன்ற தண்ணீர் உள்ள இடங்களில் 5 லட்சம், 6 லட்சம் கால்நடைகள் இந்தப் பஞ்சத்தினால் பாதிக்கப்படாமல் இருக்கலாம். பாக்கி 25 லட்சம் கால்நடைகள் இந்தப் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள பணம் நாலாயிரம் கால்நடைகளுக்குக்கூட போதுமானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடைத் தீவனத்திற்காக 11 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லி, வறட்சி நிலைமையைத் தீர்க்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை) விவசாயிக்கு விவசாயம் இல்லையென்றால், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். பஞ்சப் பிரதேசங்களுக்கு உணவு தானியங்கள் போய்ச் சேருவதற்கு வகை செய்ய வேண்டும். 1952-53-ம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தின்போது ஏழைகளுக்குக் கஞ்சி கொடுத்து, அவர்கள் தங்களுடைய உயிரைத் தாங்கிக்கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது.

இது பற்றி திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவையும் எடுத்துக்கொண்டு—எந்தெந்த ஜில்லாக்களில் பூரண வறட்சி ஏற்பட்டிருக்கிறது, சர்க்காரே உணவு கொடுக்க ஏற்பாடுகளை செய்தாக வேண்டிய இடங்கள் என்ன, எந்தெந்த இடங்களில் வேலைத் திட்டங்களைப் போட்டு வேலை வாய்ப்பைக் கொடுத்தால் அவர்கள் கூலி பெற்று வாங்கிச் சாப்பிட முடியும் என்பவை எல்லாம் திட்டமிடப்பட வேண்டும்.

நம்முடைய சர்க்காரில் இருக்கும்படியான வசதிகள் என்ன, மத்திய சர்க்காரிடம் இருந்து பணமாக எந்த அளவு உதவி பெற்றாகவேண்டும், தானியமாக எந்த அளவு உதவி பெற்றாக வேண்டும் என்பதை அப்போதுதான் சரியான முறையில் நிர்ணயித்துக்கொண்டு செயல்பட முடியும்.

இப்போது என்னமோ 3 லட்சம் கேட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். எந்த அடிப்படையில் 3 லட்சம் என்று கேட்டார்கள் ? அதை வாங்கிப் பதுக்கி வைத்துக்கொள்ளப் போகிறார்களா ? அப்போது இவர்களையும் பதுக்கல்காரர்கள் என்றுநாம் சொல்ல முடியுமே, விவசாயிகள் இருக்கக்கூடிய நிலைமையை உணர்ந்து சாப்பாட்டிற்காக, விதைக்காக நெல்லை வைத்துக்கொண்டால், அவர்களைப் பதுக்கல்காரர்கள் என்று சொல்கிறோமே. உண்மையிலேயே லாப நோக்கோடு பதுக்கி வைக்கிறவர்கள் இருக்கலாம். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். ஆனால் விவசாயிகள் நெல்லை சேமித்து வைத்துக்கொண்டால்தான்



—அந்த ஊரில் உள்ள மக்களுக்கு வேலை கொடுக்க முடியும். பஞ்சத்தினால் பாதிக்கப்படுகிறபோது விதைக்காவது நெல் இருக்கிறது என்கிற நிலை இருக்க முடியும். அவர்களிடம் இருக்கும் இருப்பைக் கூட பறிமுதல் செய்கிறது—அவர்களைப் பதுக்கல்காரர்கள் என்பது எல்லாம் சரிதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இப்போது முதல் அமைச்சர் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். இதிலேயே ஒரு காலவரம்பு திட்டவட்டமாக இருக்க வேண்டும். இன்ன இன்ன ஜில்லாக்களிலே இவ்வளவு கிணறுகள் இருக்கின்றன, இவ்வளவு பூரணமாக வறண்டுவிட்டன. இவ்வளவு கிணறுகள் உடனடியாக எடுத்தாகவேண்டும் என்பதான செயற்குறிப்பு இருந்தால் நமக்கு உடனடியாக இவ்வளவு ரூபாய்கள் தேவை என்பதை மதிப்பிட முடியும். செயற்குறிப்பு எதுவும் இன்றி நாங்கள் 3 லட்சம் டன் கேட்டோம். அவர்கள் ஒரு லட்சம் டன் தானியம்தான் கொடுத்தார்கள், ஆகவே, சமாளிக்க முடியவில்லை என்பதாக மத்திய சர்க்கார் மீது பழியைப் போட்டு தப்பித்துக் கொள்கிற காரியமாகத்தான் இது தோன்றுகிறது. எந்தெந்த ஜில்லாக்களுக்கு எவ்வளவு டன் தேவை என்பது எங்கே மதிப்பிடப்பட்டிருக்கிறது ?

நாடு பூராவும் பஞ்ச நிலைமையால் பாதிக்கப்பட்டிருக்கிறபோது உடனடியாக எல்லா இடங்களிலும் நில வரியை ரத்து செய்திருக்க வேண்டும். முதல் நடவடிக்கை நில வரியை ரத்து செய்வதுதான். செய்து விட்டார்களா ? நிதி நிலைக் குறிப்பிலே விவசாய வருமான வரி 140 லட்சம் என்பது 151 லட்சமாக்கப்பட்டிருக்கிறது. பூமியே விளையவில்லை, பஞ்சநிலை என்கிற போது விவசாய வருமான வரியைக் கட்டுவதற்கு விவசாயம் எப்படி லாபமாக இருக்க முடியும் ? மரியாதைக்காக, கடனை வாங்கியாவது வரியைக் கட்டுகிற நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, நில வரி ரெமிஷன் ஏற்படுகிறபோது விவசாய வருமான வரியையும் பூரணமாக ஒத்தி வைக்கின்ற அறிவிப்பு இருந்தால் நன்றாக இருக்கும்.

நாங்கள் கடந்த ஒரு வருடமாகவே இத்தகைய ஒரு பேராபத்து வர இருக்கிறது என்று சொல்லி வந்தோம். காங்கிரஸ்காரர்கள் தோற்றுவிட்டார்கள், ஆகவேதான் இந்த மாதிரி ஒரு நிலையைச் சித்தரிக்கிறார்கள் என்று எங்களது எச்சரிக்கையை ஏற்றுக்கொள்ளாமலேயே பேசி வந்தார்கள். இதே சட்டமன்றத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இப்படிச் சொல்லியிருக்கிறாரே என்று கேட்டதற்கு நிதி அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் ? அவர் ஒன்றும் எங்களுக்குப் பொருளாதார ஆலோசகர் இல்லை என்று நிதி அமைச்சர் சொன்னார். நாட்டு மக்களுடைய நிலையை எடுத்து ஒரு மாபெரும் ஸ்தாபனத்தின் தலைவர் சொல்லக் கூடாதா ? அவர் இந்த மன்றத்திற்குள் சொல்லவில்லை. வெளியில் சொன்னார். இருந்தால் என்ன ? இத்தகைய ஒரு ஆபத்து ஏற்பட்டு வருகிறது என்று அவர் சொன்னதை அன்றைக்கே கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாதா ? அந்த ஆலோசகருடைய யோசனை தேவையில்லை, வேண்டாம் என்று சொன்னார்கள். இன்றைக்கு அவர்களைத் தானே கேட்டுக்கொண்டிருக்கிறோம் ? இது சரியான நிலை அல்ல. யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்களுடைய சுபிட்ச வாழ்வுக்குத் திட்டம் தீட்டியாக வேண்டும். இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பஞ்ச நிலையில் மக்களுக்கு உதவியாக வேண்டும். அதில் அபிப்பிராய பேதம் கிடையாது. ஆனால், தீர்மானம் மேலழுந்தவாரியாகத்தான் இருக்கிறதே தவிர திட்டவட்டமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

நிச்சயமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்று இருக்கிற பஞ்ச நிலையைச் சமாளிக்க சர்க்காரில் உள்ள அத்தனை அதிகாரிகளும் இக்காரியத்தில் துரிதமாக ஈடுபட்டாக வேண்டும். அமைச்சர்கள் சுற்றுப் பயணத்தை ரத்து செய்து ஒவ்வொருவரும் ஒவ்வோர் இடத்தில் மூன்று மாதமாவது தொடர்ந்து உட்கார்ந்து பஞ்ச நிவாரணப் பணிகளைக் கவனித்தாக வேண்டும். பஞ்ச நிலை நீங்கும் வரையில் எந்த விதமான ஆடம்பரங்களிலும் ஈடுபடக் கூடாது. ஆடம்பரமான விருந்துகளில் கலந்துகொள்ளக் கூடாது.

பொது மக்களுடைய பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளவும் வேண்டும். இதில் அரசியல் பிரச்சினையே இருக்கக் கூடாது. சொன்னால், உடனே உங்களுக்குத் தவறாகப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்திற்காக எத்தனையோ லட்சம் ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட தொகை எப்படிச் செலவிடப்பட்டது? தென்காசி இடைத் தேர்தலை வைத்து அவசரம் அவசரமாக வேலைகள் நடத்தப்பட்டன. இப்படி நடத்த வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், ஒதுக்கப் படுகிற பணம் சீராக அந்த மாவட்டம் பூராவுக்கும் செலவிடப்படவில்லை. அப்படியானால் பெருந்துறைத் தேர்தல் வருகிறதே, அந்தப் பக்கத்திற்கு எதுவும் செய்ய வேண்டாம் என்று சொல்கிறீர்களா என்று அமைச்சர் அவர்கள் கேட்பார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. நல்ல முறையில் திட்டமிட்டு அந்தத் திட்டத்தின் அடிப்படையில் செலவிடப்பட வேண்டும். இங்கே ரெவின்யூ போர்டு மெம்பர்கள் இருக்கிறார்கள். கீழே இருக்கும்படி யான அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். யுத்தம் வந்தால் அந்த யுத்தத் தில் ஜெயிப்பதற்கு எவ்வளவு தூரம் பலவிதமான காரியங்களில் தீவிர மாக ஈடுபடுவோமோ அதுபோல இந்தப் பஞ்சத்தை நீக்குவதற்கும் திட்டமிட்டு தீவிரமாகச் செயல்பட்டாக வேண்டும். மேலெழுந்தவாரியாகப் பார்ப்பதில் பிரயோசனம் கிடையாது. நல்ல முறையில் திட்டமிடுங்கள். இப்போது மத்திய அரசிடம் இருந்து மூன்று லட்சம் டன் கேட்டிருக்கிறீர் கள். உங்களது அருமை நண்பர், அடிக்கடி இந்த ஆட்சியைப் பாராட்டு பவர், உங்களுக்கு உதவி செய்வார். சிபார்சு செய்ய வேண்டுமென்றால், நாங்களும் சிபார்சு செய்கிறோம். டெல்லிக்குப் போகப் போகிறேன்.. கொடுங் கள் என்று சொல்லத் தயாராய் இருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் இப் படித்தான் நையாண்டி செய்துவருகிறீர்கள். உங்களைப் பார்த்துச் சிரித் துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உங்களைப் பார்த்துச் சிரிக்கின்றார் கள் எனக் குறிப்பிட்டார்கள். தலைவர் அவர்களே, அது உங்களைக் குறிக் கிறதா? (சிரிப்பு).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஏதாவது சொன்னால், சபாநாயகர் மூலமாகத்தான் சொல்லிக்கொள்கிறேன். சபாநாயகர் சிரித்தால் சபையி லுள்ள அத்தனை பேர்களும் சிரித்தார்கள் என்று அர்த்தம்.

விவாதம் செய்துவிட்டு, இந்தப் பிரச்னையை விட்டுவிடக்கூடாது. அடுத்து இந்தச் சட்டசபை எப்பொழுது கூடப்போகின்றதோ, மூன்று மாதமோ, நான்கு மாதமோ தெரியவில்லை. எனவே தயவு செய்து வருகின்ற மே மாதத்திலே இந்தச் சட்டசபையைக் கூட்டி மறுபடியும் விவாதம் செய்ய வேண்டும். இப்பொழுது செயற்குறிப்பு ஒன்றும் இல்லாத காரணத்தாலே, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 18, 19 தேதிகளில் தமிழ்நாடு பூராவும் சுற்றிப்பார்ப்பது இயலாத காரியம், சில இடங்களைக்காட்டி இப்படிப்பட்ட நிலைமைதான் எல்லா இடங்களிலும் இருக்கிறது என்று காட்டக்கூடிய முறையில்தான் இப்பொழுது ஏற்பாடு செய்யமுடியும். இந்த மாமன்றத்தை மே முதல் வாரத்தில் கூட்டி, என்ன என்ன இடங்களிலே இந்த நட வடிக்கைகள் எடுத்து இருக்கிறோம் என்று தாலூகாவாரியாக, பிர்க்கா வாரியாக, முடிந்தால் பஞ்சாயத்து யூனியன் வாரியாகக் கூட—ஏனென்றால் கிராமவாரியாக முடியாது—என்ன என்ன செய்திருக்கிறோம், உணவு போய்ச் சேருவதற்கு என்ன என்ன செய்திருக்கிறோம், தண்ணீர் இல்லாத இடங்களிலே தண்ணீர் போய்ச் சேருவதற்கு என்ன என்ன செய்திருக் கிறோம் என்பதையெல்லாம் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டு மேலும் நடவடிக்கைகள் எடுத்தால்தான் பொதுமக்களுடைய ஆதரவைப் பெற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இன்னும் 6 வாரத்திற்குள் சட்டசபையைக்கூட்டி ஒரு செயற்குறிப்பு வைத்தால் எல்லா அங்கத்தினர்களுக்கும் எந்த எந்த இடங்களில் செய்யப்பட்டு இருக்கிறது, எந்த எந்த இடங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை, எந்த எந்த இடங்களில் அரசியல் நோக்கத்தோடு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை,



எந்த எந்த இடங்களில் நாம் இன்னும் செய்ய வேண்டும் என்பதை யெல்லாம் சொல்லிக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி இருக்கும்படியான நிலைமையிலே எந்த எந்த இடங்களிலே தண்ணீர் கிடைக்கிறதோ எந்த எந்த இடங்களில் விவசாயம் செய்ய முடியுமோ, அந்த அந்த இடங்களில் எல்லாம் இன்டென்சிவ் புரோகிராமாக நிறைய காரியங்கள் செய்ய வேண்டும். சில சமயங்களில் நன்றாக விளையவேண்டும் என்று எல்லோருக்கும் ஆசை இருக்கிறது—எனக்கு ஏற்பட்ட அனுப வத்தை நான் சொல்லிக்கொள்ள விருப்புகிறேன். எனக்கு வேண்டிய வர், ஒரு உறவினர் விவசாயம் செய்கிறார். அவரிடம், தண்ணீர் பயிரில் நிற்கவேண்டுமென்று எண்ணவேண்டாம். தண்ணீர் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகப்பாய்ச்சுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு விளைச்சல் அதிக மாகும் என்று சொன்னேன். அதற்கு அந்த உறவினர், தண்ணீர் குறைந்துவிட்டால் களை அதிகமாகி விடும். அதற்காக கூலி வேறு சாஸ்தி யாகிவிடும் என்று சொன்னார். நான் சொன்னேன், ஐயா தண்ணீர் நிறையாக இருந்தால் களை வராது, ஆனால் வெளாண்மை குறையும் என்று சொன்னேன். களை எடுப்பதற்குக் கூலி 2 ரூபாய் ஆகும். அந்த இரண்டு ரூபாயைப் பார்க்கப்போனால் அது விளைச்சல் குறைவின் மூலம் 50 ரூபாய் நஷ்டத்தைக் கொண்டுவந்து விடும் என்று சொன்னேன். எனவே இதிலேயும் கவனம்செலுத்தி இன்டன்ஸிவ் கல்டிவேஷன், அகல உழுவதைக்காட்டிலும், ஆழ உழுவதற்குத் தீவிரமாக முயற்சி செய்ய வேண்டும்.

பெர்டிலைசர்ஸ் அதிகமாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். நன்றி, ஆனால் வாங்கமுடியாத நிலை இருப்பது விலையின் காரண மாகவோ அல்லது சக்தியில்லாததன் காரணமாகவோ இருக்கிறது. தண்ணீர் வசதியுள்ள இடங்களில் விவசாயிகளுக்கு இரசாயன உரத்திற்காக ஒரு கார்டு கொடுத்து அதன்மூலம் அவர்களுக்கு உரம் கொடுத்துவிட்டு, பிறகு வெளாண்மை முடிந்ததற்குப்பிறகு அதை வசூல் செய்துகொள்ளலாம். ரசாயன உரம் நிலங்களுக்குப்பட்டா மூலமாகக் கொடுக்கவேண்டும். அவர் களுக்கு 5 சதவீதமோ 6 சதவீதமோ அதற்காகவட்டியைக் போட்டுக்கொள் ளுங்கள், அதையும் சேர்த்து, பிறகு விளைந்தபிறகு புரக்யூர்மெண்டுக்கு போகிறபோது கொள்முதலுக்குச் செல்கின்ற நேரத்தில் அதையும் வசூல் செய்துகொள்ளலாம். அப்படிச் செய்தால் விவசாயிகள் தீவிரமாக விவ சாயத்தில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்க முடியும். எந்த எந்த இடங் களில் தண்ணீர் வசதி இருக்கிறதோ அங்கே செய்தால் ஒன்றுக்கு ஒன்றரை மடங்காக உற்பத்தி பெருகும். எந்த எந்த இடங்களில் பற்றாக்குறை இருக்கிறதோ அந்தப் பற்றாக்குறையை இதன் மூலம் ஈடுசெய்யலாம். அதேமாதிரி திட்டங்களை எடுத்துச் செய்தால், செய்யும்போழுது ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் போய் யூனியனிலே உள்ளவர்கள் மற்ற மற்ற அதிகாரிகள் எல்லாரையும் கூப்பிட்டு பேசி மேலும் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி முடிவு செய்ய வேண்டும். எப்படியும் வருஷப் பிறப்பிற்குள், 13-ம் தேதிக்குள் திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் அத்தனை பேர்களையும் கூப்பிட்டுப்பேசி பிரதமர் அவர்கள் வருவதற்கு முன்னாலேயே ஒவ்வொரு ஜில்லாவிற்குமாக ஒரு செயற்குறிப்பைக் கொடுத்தால் அவர் களிடமிருந்து நாம் பெறும்படியானதைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப் பம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாங்கியதைப் பூரண மாகப் பிரயோஜனப்படுத்த வேண்டும். வீணாகக் கூடாது, சர்க்கார் எந்தக் காரியத்தைச் செய்தாலும் வீணாகவிரையமாகப் போகாமல் செய்யவேண் டும். அந்தப் பணம் யார் யாருக்குப் போகவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேராமல் இருப்பது விநியோகிக்கப்படவேண்டியதை விநியோகிக்கா மல் இருப்பது, அதைத்தடுப்பது, இப்படிப்பட்ட சூழ்நிலைகளை யெல்லாம் போக்க வேண்டும்.

குடிநீர் பிரச்னை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்னைகள் இன்றும் இருக்கின்றன. படித்த மாணவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கிறார்கள். வேலை கிடைப்பதற்கு அவர்களுக்கு எந்தவிதமான சாத்தியக் கூறுகளும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அப்படிப்பட்ட மாணவர்களை இந்தப் பஞ்ச நிவாரண வேலையிலே ஈடுபடுத்தலாம். பத்தாவது படித்தவர்கள் லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் இதிலே ஈடுபடுத்திக்கொள்ளலாம். நம்முடைய நாட்டிலே உள்ள கஷ்டத்தை நீக்குவதற்கு எல்லோருடைய சேவையும் தேவையாக இருப்பதால், கட்சிக்கு அப்பாற்பட்ட நிலைமையில், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, அரசியல் நோக்கத்துடன் இல்லாமல், காரியங்களைச் செய்தால் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து செயலாற்றவேண்டும். பிரச்னை தீர்ந்து விட்டால் தீர்ந்துவிட்டது என்று சொல்லிவிடுவார்கள். வைத்துக்கொள்ளலாம். தீராவிட்டால் 15 வருஷம் ஆட்சி செய்தார்கள் அதனால்தான் தீரவில்லை என்று சொல்லாமல்—பழிபோடாமல் காரியங்களைச் செய்ய வேண்டும்.

ஆறு வாரத்திற்குள் சட்டசபையைக் கூட்டவேண்டும். அதற்குள் ஒரு செயற்குறிப்பு இதைப்பற்றி, என்ன என்ன திட்டங்களைப் போட்டிருக்கிறோம்; இன்னும் என்ன என்ன திட்டங்களைச் செய்ய வேண்டும்—பஞ்சம் இந்த வருடம் மட்டுமல்ல, இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகள் நீடிக்காமல் இருக்கக் கூடிய வகையில்—தொடர்ந்து காரியங்களைச் செய்தால்தான் இந்தக் கஷ்டகாலத்தை மாற்ற முடியும் என்று சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய கட்சியின் ஆதரவு வேண்டுமென்றால் என்னுடைய கட்சியின் ஆதரவு உண்டு என்பதைச் சொல்லிக்கொண்டு, கொடுக்கும்படியான உதவிகளை நேரடியாக அங்குள்ளவர்கள் அனுபவப்பூர்வமாகப் பெற்றுக்கொள்ளத் தக்க வகையில் மக்களுக்கு அது போய்ச் சேரும்படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை, ஒரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முன்னால் சொல்லிவிட விரும்புகிறேன். தயவு செய்து நான் உங்களைக் குறைத்துச் சொல்லிவிட்டதாகக் கருதிவிடவேண்டாம், எல்லா ஸ்தானங்களிலும், தேவஸ்தான மந்திரியிடம் சொல்லி, எல்லா தேவாலயங்களிலும் ஒரு வருண ஜபம் நடத்த வேண்டும் என்று சர்க்குலர் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே இன்று இந்த மாமன்றத்தின் முன்னால் நான் வைத்துள்ள தீர்மானத்தினையொட்டி எதிர்க் கட்சித் தலைவரும், தோழமைக் கட்சிகளுடைய தலைவர்களும் தங்களுடைய சீரிய நற்கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், "ஆதரிக்கிறேன்" என்று முடித்த அந்த சொற்றொடரைத் தமிழ் நாட்டினுடைய நன்மைக்காக நான் பயன்படுத்திக்கொள்வதில் தவறு இல்லையென்று கருதுகிறேன். "ஆதரிக்கிறேன்" என்ற வார்த்தைக்கு முன்னதாக அவர்கள் பேசிய நீண்ட நேரப் பேச்சில் முன்னேற்றக் கழக அரசை எந்த அளவுக்கு அவர் தாக்கிவிடவேண்டுமோ, அந்த அளவுக்குத் தாக்குதல்களையெல்லாம் நடத்தி முடித்திருக்கிறார்கள். இதை அவர் உள்ளபடியே கருதிச் செய்தாராஎன்பது என்னைப் பொருத்தவரையிலும் ஐயப்பாட்டிற்குரிய ஒன்று. மற்றவர்கள் கேட்பார்களே, என்று அவர்களுக்காகவாவது அவர் அதையெல்லாம் பேசவேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஏற்கனவே, இந்த மாமன்றத்தைக் கூட்டிப் பொதுவாக இந்தத் தீர்மானத்தைப் போடவேண்டுமென்று நானும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களும் கூடிப் பேசித்தான் இன்றைய தினம் இந்த மாமன்றம் கூட்டப்பட்டிருக்கிறது ஆகவே கூட்டப்பட்டு இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட இருக்கும்போது இந்தத் தீர்மானத்தையொட்டியே அவர் நமக்கு ஆதரவாகவும், மத்திய





அரசை மேலும் வலியுறுத்துகின்ற முறையிலும் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் மிகுந்த சந்தோஷப்பட்டார். "உங்கள் ஜகஜீவன்ராம் அவர்கள் 3 லட்சம் டன் இல்லையென்று சொல்லி கைவிரித்து விட்டார்" என்று மிகுந்த மகிழ்ச்சியோடு சொன்னார். நல்ல வேளையாக இந்த மன்றத்திலே உள்ள குறிப்பெழுதுகின்ற அலுவலாளர்களும், பத்திரிகை நிருபர்களும் வார்த்தைகளைத் தான் எழுதிக் கொள்கிறார்களே தவிர, எதிர்க் கட்சித் தலைவருடைய முகபாவத்தை எழுதிக்கொள்ள மாட்டார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவர்கள் 1 லட்சம் டன்தான் கேட்டார்கள், திடீரென்று மூன்று லட்சம் ஆகிவிட்டது. ஜகஜீவன்ராம் அவர்கள் எங்களுடைய அமைச்சராக இருந்தாலும், உங்களுடன் நட்பும் தோழமையும் உள்ளவர்கள் 1 லட்சம் இல்லை, 10 ஆயிரம் டன்தான் என்று சொல்லி விட்டார்கள், அவர்கள்கூட இல்லையென்று சொல்லி விட்டாரே என்றுதான் சொன்னேன். அவர்கள் அதிகமாகக் கொடுத்தால் எனக்கு அதிலே ஒன்றும் வருத்தம் கிடையாது. அவ்வாறு மனதில் வைத்துப் பேசுவதாகக் கருதவேண்டாம். முதலமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு தூரம் பொறுப்பும் அக்கறையும் இருக்கிறதோ அதைவிட அதிகமான பொறுப்பும், அக்கறையும் எனக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது உள்ள நிலை, மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்ல. உண்மையான நிலையை விளக்கி இருக்கிறார்கள். உலகத்திலே கிடைக்காததைக் கேட்டிருக்கிறார்கள். உலகத்திலே கிடைக்காததைக் கேட்டால் அவர்கள் எப்படிக் கொடுப்பார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாங்கள் ஒன்றும் பாரிஜாத மலரைக் கேட்கவில்லை. உலகத்தில் கிடைக்காததைக் கேட்டதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். புராண காலத்திலே, கிடைக்காத ஒன்றைப் பெற்று வா என்று சொல்லி, அப்படிப் பெற்று வந்தால் தான் ராஜகுமாரியைத் திருமணம் செய்து வைப்பேன் என்பது புராண காலத்துக் கதைகள். கிடைக்கக் கூடியதைத் தான், தரக்கூடியதைத் தான் தமிழ்நாடு அரசின் சார்பாக நாங்கள் மத்திய உணவுத் துறை அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களைக் கேட்டிருக்கிறோம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள்—"முன்பு ஒரு லட்சம் டன் கேட்டீர்கள், இப்போது 3 லட்சம் டன் கேட்கிறீர்களே" என்றார்கள். "இரண்டு லட்சம் டன்னைப் பதுக்கி வைக்கப் போகிறீர்களா" என்றும் கேட்டார்கள். நான் மிகவும் வருத்தப்படுகிறேன். பதுக்கல்காரர்களோடு தமிழக அரசையும் இணைத்துப் பேசியதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். ஒரு நல்ல தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் இவைகளைப் பற்றிய விமர்சனங்களில் ஈடுபடுவது நல்லதல்ல. எதிர்க்கட்சியின் சார்பில் நம்முடைய நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறார் என்பதை மாத்திரம் இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற வலிவாக ஏற்றுக்கொண்டு, மத்திய அரசுக்குக் கொடுக்கிற கோரிக்கைக்கான வலிவாக ஏற்றுக்கொண்டு அதற்காகப் பெருமைப்படுகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே வான் பொய்த்ததன் காரணமாக, சென்ற ஆண்டு தென்மேற்குப் பருவமழை இல்லாததால் 17·7 சதவிகிதமும், வட மேற்குப் பருவ மழை சரியாக இல்லாததால் 30·2 சதவிகிதமும் நமக்கு மழை அளவில் போய்விட்டது. தஞ்சை மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் வறட்சி நிலைமை ஏற்பட்டது. நாங்கள், மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது செங்கற்பட்டு, வட ஆற்காடு என்று சொல்லிக் கொண்டிருந்த நேரத்திலே அதோடு தென்னாற்காடும் இணைந்து கொண்டது, இராமநாதபுரம் மாவட்டமும் சேர்ந்து கொண்டது, கோயம்புத்தூர் மாவட்டமும் சேர்ந்து கொண்டது. இப்படி ஒவ்வொரு மாவட்டமாக வறட்சி நிலை மாவட்டங்களோடு நாளுக்குநாள் சேருகின்ற நிலைமை வளர்ந்துவிட்ட காரணத்தால்தான் இந்த வறட்சி நிலையிலிருந்து, உணவுத் துறையைப் பொறுத்தவரை, மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக முதலிலே நாம் ஒரு லட்சம் டன் என்று கணக்கிட்டாலும் கூட, அது

[திரு. மு. கருணாநிதி] [1969 மார்ச் 31

போதுமானதாக இருக்காது, அதிகமாக மேலும் இரண்டு லட்சம் டன் தேவைப்படும் என்ற அளவிலே மத்திய அரசிடத்திலே இந்தத் தீர்மானத்தின் மூலமாக மொத்தம் மூன்று லட்சம் டன் உணவுப் பொருள்வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

தமிழ் நாட்டிலே பாசன வசதி பெறுகிற நிலங்கள் 40 சதவிகிதம் ஆகும். பாசன வசதி பெறுமல் ஏரி, குளங்களை மாத்திரம் நம்பியிருக்கிற வான்பார்த்திருக்கிற பகுதிகள் 60 சதவிகிதமாகும். இந்தக் கணக்கை நாம் மறந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட இந்த 60 சதவிகிதத்தில் வறட்சி நிலையின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து இந்தப் பஞ்ச நிலை சிறிது சிறிதாகத் தலைநீட்டி வருகிறது என்று தமிழரசுக் கழகத் தலைவர் திரு. மா. பொ. சி. அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் அவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைநீட்டியது என்றாலும், கடந்த சில மாதங்களிலே மிகுந்த அபாயகரமான அளவுக்கு விரிவடையத் தொடங்கி, அதுவும், பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு இந்த அரசுப் பொறுப்பை, குறிப்பாக முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டு மற்ற நண்பர்களோடு பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில், நெருக்கடி மிகுந்தது, வறட்சி நிலை பல்வேறு மாவட்டங்களுக்குப் பரவியது. ஆகவே, உடனடியாக பிப்ரவரி திங்கள் 17-ம் நாள் அவசர அவசரமாக அதிகாரிகள் மட்டத்தில் ஒரு மாநாட்டினைக் கூட்டி இந்த மாவட்டங்களில், வறட்சியால் பாதிக்கப்பட்டபகுதிகளில் உடனடியாகத் துயர் தணிப்பு வேலைகளில் ஈடுபட வேண்டுமென்று திட்டமிட்டு அதற்காக ரூ. 1,57,00,000 ஒதுக்கினோம். அப்படி ஒதுக்கப்பட்டதில் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது ரூ. 44,43,000 ஆகும். அதிலே ரூ. 28,23,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கிய தொகை ரூ. 38 லட்சம். அதிலே 21 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 40 லட்சம் ரூபாய். அதிலே செலவழிக்கப்பட்டது இதுவரை 35 லட்சம் ரூபாய். தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி தாலூக்காக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 15 லட்சம் ரூபாய். அதில் இதுவரை 14 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலே தென்காசிக்குச் செலவழித்து விட்டோம் என்று சொன்னார்கள். ஒதுக்கப்பட்டதே இப்போதுதான். ஓட்டைப்பிடாரம், விளாத்திகுளம், சங்கரன்கோவில், ஆலங்குளம், கடையநல்லூர் போன்ற பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 10 லட்சம் ரூபாய். செலவழிக்கப்பட்டது இதுவரை 8 லட்சம் ரூபாயாகும். சேலத்திற்கு 20 லட்சம் ரூபாய் குடிதண்ணீர்க் கிணறு வெட்ட ஒதுக்கப்பட்டு முழுத் தொகையும் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் அதாவது இன்றோடு செலவழிக்கப்பட்டு முடிகிறது என்ற செய்தி வந்திருக்கிறது. தருமபுரி மாவட்டத்தில் ஹொசூர் தாலூகா அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இதுவரை 7 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மதுரையில் குடி தண்ணீருக்காக ஒதுக்கப்பட்ட தொகை 2·75 லட்சம் ரூபாய் ; முழுவதும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு என்ன நிவாரணம் அளிக்கலாம் என்பது பரிசீலனையில் உள்ளது. கோவை மாவட்டத்தில் தாராபுரம், பல்லடம், அவனாசி தாலூக்காக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகளுக்குத் தீவனம் கூடக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, அங்கே கால்நடைத் தீவனங்களுக்காக 10 லட்சம் ரூபாயும், குடி தண்ணீருக்காக 28 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு கோடி அறுபது லட்சத்திற்கு மேற்பட்ட தொகை இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. நாம் முதலிலே ஒரு கோடி ஐம்பத்துஏழு லட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டாலும் தற்போது அது இரண்டுகோடி ரூபாய் வரை செலவழிக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தமிழ் நாடு அரசின் சார்பாக, பாதிக்கப்பட்ட பகுதிகளிலே செலவழிப்பதற்காகத் திட்டமிட்டிருக்கிறோம். நாம் மத்திய அரசிடத்திலே உடனடி நிவாரணமாக, "நீங்கள் இந்தத் தொகையை அளிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். மேலும் அதிகத் தொகை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்குத்



1969 மார்ச் 31] [திரு. மு. கருணாநிதி]

தீர்மானத்தை நிறைவேற்ற இருக்கிறோம். இந்தப் பணத்தைக் கொடுத்தால் தமிழக அரசு இந்த வேலைகளை உடனடியாக மேற்கொள்ளலாம் என்று நம்முடைய நிதியமைச்சர் சட்ட மன்றத்தில் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவும், நானும் மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும் டெல்லியில் தலைமை அமைச்சரையும், துணைப் பிரதம அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களையும் கண்டு பேசிய நேரத்திலே விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவும் அவர்கள், "உடனடியாக வேலைகளைத் தொடங்குங்கள், பணத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்" என்ற உறுதிமொழிக்கேற்ப வேலை தொடங்கி நடைபெற்றிருக்கிறது. இன்று 12 மணிக்குக் கிடைத்த தகவலின்படி இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கும் பணத்திற்காக ரூ. 1,25,00,000 தர மத்திய அரசு சம்மதித்திருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்) மற்றும், இன்னும் தேவைப்படுகின்ற தொகையைப் பற்றியும் யோசிக்கிறோம். பரிசீலிக்கின்றோம் என்ற தகவலையும் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ரூபாயைக் கடனாகத் தருவது கூடாது, மானியமாக வழங்க வேண்டும் என்பது நம்முடைய மாநில அரசின் கோரிக்கையாகும். அதையும் மத்தியப் பேரரசு கவனிக்கும் என்று திடமாக நம்புகின்றோம். இப்போது அவர்கள் அனுப்பி வைத்த குழு, சில பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பியிருக்கிறது. அவர்களுடைய அறிக்கையை இங்கே சமர்ப்பிக்க மாட்டார்கள். அவர்களுடைய அறிக்கையை மத்திய அரசினிடத்திலே தருவார்கள் அல்லது தந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்த அறிக்கைக்குப் பிறகுதான் இன்று பகல் 12 மணிக்கு இந்தச் செய்தி கிடைத்திருக்கக் கூடும் என்றும் கருதுகிறேன். நிவாரண வேலைகளுக்காக என்னென்ன திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்றெல்லாம் அந்தக் குழுவினிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 1,060 புதிய குழாய்க் கிணறுகளைத் தோண்ட வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

என்னென்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதற்காகவே தான் இவைகளைச் சொல்லுகிறேன். தீர்மானத்திலேயே என்னென்ன திட்டங்கள் என்று போடமுடியாது. தீர்மானம், மத்திய அரசு மாநில அரசுக்கு உதவிட வேண்டுமென்ற அந்த வாசகத்தை மையமாகக்கொண்டுதான் நிறைவேற்ற வேண்டும். எப்படி எப்படித் திட்டங்களை நிறைவேற்றப் போகிறோம், எங்கெங்கே நிறைவேற்றப் போகிறோம், எந்தெந்த குக்கிராமத்திலே எந்தெந்த ஏரிகளை, எந்தெந்த வடிகால்களை எடுத்து நிறைவேற்றப் போகிறோம் என்பதற்கான புள்ளி விவரங்களை எல்லாம் தீர்மானத்திலே நாம் சொல்ல முடியாது.

அதற்காகத்தான் அந்தத் தீர்மானத்தையொட்டி இங்கு ஒரு விவாதத்திற்கு ஏற்பாடு செய்தோம். அந்த விவாதத்தில் அதைப் பற்றிய திட்டங்கள் எப்படி எப்படி இருக்கவேண்டுமென்று நீங்கள் கூறவும், அந்தத் திட்டங்கள் இப்படி இப்படி இருக்கும் என்று சமாதானம் நாங்கள் கூறவும் தான் அந்தத் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து இந்த ஒரு நாளை அந்த விவாதத்திற்காக நாம் ஒதுக்கியிருக்கிறோம். 1,060 புது குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கும், 1,525 கிணறுகளை ஆழப்படுத்தவும் அந்த வேலைகளுக்காக 38 பவர் ட்ரில்களும், 40 ஹாண்ட்போரிங் செட்ஸ்ும் 180 பாறை உடைக்கிற கருவிகளும், சாதனங்களும் தேவைப்படும் என்று இவைகளுக்கான மொத்தச் செலவு ரூ. 3,84,00,000 ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

88,000 ஏக்கர்களில் மண் வளப் பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு 70 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் அந்த மத்திய குழுவினிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம். தீவிர உரம் இடும் திட்டம், விதைகளை சலுகை விலையில் விநியோகித்தல் இவைகளுக்காக நான்கு கோடி ரூபாய் தேவைப்படலாம். என்றும் நாங்கள் அவர்களிடத்தில் எடுத்துக் கூறியிருக்கிறோம். இவைகளுக்கெல்லாம் நாம் மத்திய அரசிடத்தில் நிதி உதவி கோருகிறோம். அப்படி அவர்கள் தருகிற அந்த நிதி உதவியை, கடனாக

அல்லாமல் மானியமாகவே வழங்கவேண்டும் என்று கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. அதைத்தான் நமது தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம.பொ.சி. அவர்கள் இதற்கு நன்றி கூறவேண்டுமா என்று கேட்டார்கள். கடமை இருக்கிறதல்லவா என்று சொன்னார்கள்: கடமையை அவர்கள் நிறைவேற்றினாலும் நன்றி கூறுவது என்பது ஒரு பண்பாட்டின் அடிப்படையில் நன்றி தெரிவிக்கிறோம். நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில் நாங்கள் இவைகளுக்காக நன்றி தெரிவிக்கிறோம். இன்னும் அதிகப்படியாக செய்தால் அதிகமாக நன்றியை தமிழக அரசிடமிருந்து எதிர்பார்க்கலாம் என்பதற்காகவும் நாம் ஒரு அடையாள பூர்வமாக, முன்னோடியாக அந்த நன்றியைக் கூறியிருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உணவைப் பொறுத்த வரையில், நான் ஏற்கனவே சொன்னேன். ஒரு லட்சம் டன் முதலில் கேட்டோம். இப்போது மூன்று லட்சம் டன் கேட்கிறோம் என்றால், நிலைமை போகிற போக்கைப் பார்த்தால் எப்படி ஆங்காங்கு இந்த வறட்சி நிலைமை நாட்டில் பல பகுதிகளில் பரவி வருகிறதோ அதே போல் உணவுப் பற்றாக்குறையும் ஏற்பட்டு விடக்கூடும், இங்கு நிலைமை நன்றாக இருந்த நேரத்தில் மத்திய அரசின் பரிந்துரையின்படி கேரளா போன்ற மாநிலங்களுக்கு நாம் அரிசி வழங்கியிருக்கிறோம். இலட்சக்கணக்கான டன்கள் தந்திருக்கிறோம். கடைசியாகக் கூட சென்ற ஆண்டு என்று கருதுகிறேன். நமது இன்றைய நிதி அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு மதியழகன் அவர்கள் உணவு அமைச்சராக இருந்த நேரத்தில், 40,000 டன் கேரள மாநிலத்திற்குத் தந்திருக்கிறார்கள். நாம் நன்றாகயிருந்தபோது கொடுத்தோம். மத்திய அரசு பரிந்துரை செய்தது. ஆகவே, அந்த உரிமையோடுதான் இன்று மத்திய அரசைப் பார்த்துக் கேட்கிறோம். அப்படிக் கேட்கிற அதே நேரத்தில் கோதுமையையும் நாம் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராகயிருக்கிறோம்.

கோதுமை விஷயத்தைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கோதுமைக்கு எதிரிகளாயிற்றே நீங்கள், நீங்கள் கோதுமையை வரவேற்கிறீர்களே, அதற்கு மாலை போட்டு வரவேற்கிறீர்களே என்று பேசினார்கள். நாங்கள் என்றைக்குக் கோதுமைக்கு எதிரிகள்? இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் போல் கோதுமை எதிர்ப்புப் போராட்டம் நடத்தினோமா என்றால் இல்லை. கோதுமை தமிழகத்திற்குப் பழக்கபடாத உணவாக இருக்கிறது. அது மலிவான உணவாக இல்லை. கிராமத்திலுள்ள சாதாரண ஏழை எளிய மக்கள் அரிசியை வாங்கி, சமைத்து, கொஞ்சம் தண்ணீரை ஊற்றி வெறும் சோறாகக் கூட சாப்பிட்டு விட்டுப்போகக் கூடிய அளவிற்கு அவர்களை பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை இரவில் சமைத்து, சோற்றில் தண்ணீரை ஊற்றி, காலையில் பழைய சோறு என்று சாப்பிட்டு விட்டுப் போகக்கூடிய அளவிற்கு தமிழ் நாட்டிலுள்ள கிராம மக்கள் பழகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கோதுமையைப் பொறுத்த வரையில் அதை பூரியாகச் சாப்பிடவேண்டும். அல்லது சப்பாத்தியாக அதைப் பக்குவப்படுத்தவேண்டும் என்று ஏதாவது ஒரு பலகார உருவில் கோதுமை யிருந்தால்தான் சாப்பிடமுடியும் என்ற அளவிற்குத் தான் கிராம மக்கள் பழக்கப்பட்டிருக்கிறார்கள். வெறும் பூரி சாப்பிட முடியுமா ? அதற்குக் கொஞ்சம் உருளைக்கிழங்கு மசாலா இருக்க வேண்டும். திரு கருத்திருமன் அவர்கள் சொல்கிறார்கள், கொஞ்சம் கோழிக் குருமாவும் இருக்கவேண்டும் என்று. அது அவர்களைப் போன்ற வீர சைவர்களுக்குப் பொருத்தமுடையதாக இருக்கலாம்! (சிரிப்பு). அப்படிக் கிராம மக்கள் கோதுமையைப் பலகாரமாகச் சாப்பிடுவதற்கு முனைந்தால் அது மலிவான விலைக்குக் கிடைக்கக் கூடிய உணவுப் பொருளாக அவர்களுக்கு இருக்கமுடியாது. ஆகவேதான், கோதுமையையும் அரிசியைப்போல் சமைப்பதற்கு அவர்கள் கற்றுக் கொண்டாகவேண்டும். நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்.



நான் டெல்லிக்குப் போயிருந்தபோது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் வீட்டில் ஒரு விருந்து வைத்தார்கள். அந்த விருந்தில் எங்களுச்கு பரிமாரியது கோதுமை உணவு. கோதுமை, அரிசியைப் போல் இரண்டாக உடைக்கப்பட்டு, அரிசியை நாம் வேக வைப்பது போலவே உலையில் இட்டு வேக வைத்து அதை இலையில் சோறு பரிமாறுவது போல் பரிமாறி அதற்கு சாம்பார், பிறகு ரசம், தயிர் இவைகளையெல்லாம் ஊற்றி நாம் அரிசியைச் சாப்பிடுவது போலவே அதை சாப்பிடுவதற்கு அவர்கள் பழகிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களிடத்தில் சொன்னேன். இப்போதுதான் இந்தப் புது முறை எங்களுக்குத் தெரிகிறது. இதைத் தமிழ்நாட்டிற்குச் சென்று தமிழ் நாட்டு மக்களிடத்தில் அறிமுகப்படுத்த முன்னேற்றக் கழக அரசு சார்பாக முயற்சி எடுத்துக்கொள்வேன் என்று குறிப்பிட்டேன். நமது உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அதைப் பற்றிக் கூறிவிட்டு கோதுமையை கிராம மக்கள் ஏற்றுக்கொள்கிற அளவிற்கு நாம் பிரசாரத்தில் ஈடுபட வேண்டுமென்று அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்குள்ளாக நம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், “ பார்த்தீர்களா ? கோதுமை விரோதிகள் கோதுமைக்கு மாலை யிட ஆரம்பித்துவிட்டார்கள் ” என்று சொல்லி, அந்தப் பிரசாரத்தின் வேகத்தைக் கெடுத்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நானே கோதுமைதான் சாப்பிடுகிறேன். அரிசி சாப்பிடுவது இல்லை. 10 சதவிகிதம் பேர்கள் கோதுமை சாப்பிடத் தான் செய்கிறார்கள். எதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். இப்போது அந்த சூழ்நிலை வந்திருக்கிறது என்று தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கோதுமை சர்க்கரை வியாதிக்குக் கூட சிலாக்கியமானது. அந்த முறையில் கோதுமையைத் தமிழ் நாட்டிலுள்ள கிராம மக்கள் அரிசிச் சோற்றைப் போல் சாப்பிடுவதற்குப் பழகிக் கொள்வதற்கு ஆங்காங்கு கிராமங்களில் இருப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்தப் பயிற்சியை ஆங்காங்குள்ள உள்ளாட்சித் துறை அலுவலகத்தில் அலுவல் பார்க்கும் அலுவலர் ஒரு பிரச்சாரமாக ஆக்குவதற்கு இன்று திட்டமிடப்பட்டிருக்கிறது. நல்ல விளம்பரங்களை அரசு சார்பில் பத்திரிகைகளில் கொடுப்பது, எப்படி கோதுமையைச் சமைப்பது, எப்படி மலிவான விலையில் அதை ஒரு உணவுத் தானியமாகக் கொள்வது என்ற பிரசாரங்களில் தமிழக அரசு நிச்சயமாக ஈடுபட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியாது. இப்போது கோதுமையின் விலை கிலோ 83 காசாக இருக்கிறது. அந்த விலையைக் குறைத்து 65 காசுக்குக் கொடுப்பது என்றதொரு முடிவு எடுப்போமானால் கிராம மக்கள் கோதுமையை வாங்கக் கவரப்படுவார்கள், ஈர்க்கப்படுவார்கள், அப்படி 65 காக்குக் கிடைக்க வேண்டுமேன்றால் மானியம் தந்தாகவேண்டும். அப்படி மானியம் தருவதாகயிருந்தால் ஒரு டன்னுக்கு 180 ரூபாய் மானியம் ஆகும். இரண்டு லட்சம் டன் கோதுமையைத் தமிழ் நாட்டில் விநியோகிக்கிறோம் என்றால், $3\frac{1}{2}$ கோடி ரூபாய் கோதுமைக்காக மானியமாகத் தரவேண்டியிருக்கும். அந்த மானியத்தை மத்திய அரசு தருவதற்கு கடமைப்பட்டிருக்கிறது. ஏனென்றால் கோதுமை சாப்பிட்டுப் பழக்கப்பட்ட வட மாநிலங்களுக்கே கோதுமைக்கு மானியம் கொடுத்து வழங்கியிருப்பது மத்திய அரசு, முன்பு கொடுத்திருக்கிறார்கள். இப்போது இல்லாவிட்டாலும் முன்பு கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு சார்பில் அவர்கள் கோதுமைக்கு மானியம் கொடுத்திருக்கிறார்கள். கோதுமை சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்களுக்கே மானியம் கொடுத்திருக்கும்போது இங்கே நாம் மானியமாக ரூ. $3\frac{1}{2}$ கோடிதான் கேட்கிறோம். கோதுமை சாப்பிட்டுப் பழக்கப்பட்டிருக்கும் வடபுலத்து மாநிலங்களுக்கு ரூ. 100 கோடி மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதில் 33-ல் ஒரு பங்குதான் நாம்

மானியமாக அவர்களிடமிருந்து கேட்கிறோம். அதுவும் இங்கிருக்கிற தமிழ்நாட்டு கிராம மக்கள் கோதுமையைப் பழக்கிக் கொள்ளாதவர்கள் பழக்கிக்கொள்ளவும், அதைச் சமைக்கிற பயிற்சி பெறவும், கோதுமைக்கு அவர்கள் ஈர்க்கப்படவுமான நிலைமைக்கு இந்த மானியத்தை மத்திய அரசு தரவேண்டுமென்று இம்மாமன்றத்தின் சார்பாக அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தண்ணீர், குடி தண்ணீர்ப் பஞ்சம், வேலையின்மை இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், தோழமைக் கட்சித் தலைவர்களும் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் களம்பூரில் ரேஷன் கார்ட் கொடுத்துத் தண்ணீர் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். தங்கள் ஆட்சியில் தர்மவான்களே, தண்ணீருக்குக் கூட ரேஷன் கார்டா ? என்று கேட்டார்கள். அவர்கள எங்களை தர்மவான்கள் என்று கூறுவது எந்தப் பொருளில் இருந்தாலும், நான் அதை ஒத்துக்கொள்ளத் தயாராக யிருக்கிறேன். ஆனால் களம்பூரில் தண்ணீர ஏன் ரேஷன் கார்ட் மூலம் கொடுக்கப்படுகிறது ? யாரால் கொடுக்கப்படுகிறது என்றால், களம்பூரில் பஞ்சாயத்து மூலம் தரப்படுகிறது. அந்தப் பஞ்சாயத்தின் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்தான். அங்கே பல கிணறுகள் இருக்கின்றன, எல்லாக் கிணறுகளிலும் தண்ணீர் தாராளமாக இருக்கிறது. ஓரேவொரு கிணற்று நீரை அந்த ஊரிலே மக்கள் விரும்புகிறார்கள். காரணம, அந்தத் தண்ணீரை ஊற்றி சமைத்தால்தான் பருப்பு வேகுமாம். பருப்பு வேகவைக்கப்பட வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட கிணற்றிலேயுள்ள தண்ணீரைப் பயன்படுத்தினால்தான் அது வேகும் என்ற காரணத்தினாலே அந்த ஊரிலேயுள்ள எல்லா மக்களும் அந்தக் கிணற்று நீரை விரும்புகிறார்கள். அப்படி விரும்புகின்ற காரணத்தினால், அதற்கு ரேஷன் கார்டு முறையை, அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவர், தர்மவான், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர், அந்த முறையை அமல் படுத்தியிருக்கிறார்கள் என்ற விவரத்தை நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு கே. விநாயகம் :** விருதுநகர் முனிசிபாலிட்டியிலே அதிகாரியாக இருப்பவர், கமிஷனர் அவர்கள், அட்டை வைத்து ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பானை தண்ணீர்தான் தரப்படும் என்று விநியோகம் செய்திருந்த அந்த அட்டைகள் உங்களுக்கும் வந்திருக்கிறது, எனக்கும் காப்பி அனுப்பியிருக்கிறார்கள். அது மாத்திரம் எந்த தர்மவான் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அங்கேயும் திராவிட முன்னேற்றக் கழகக்காரர் நகரசபைத் தலைவராக இல்லை.

**திரு. கே. விநாயகம் :** கமிஷனர் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நகரசபைத் தலைவர் சொல்லி கமிஷனர் செய்திருப்பார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இருக்கும்படியான நிலைமைகளை எடுத்துச் சொல்வதே தவிர, அவர்கள் எண்ணும்படியான நிலை இல்லை. எந்த இடத்திலேயிருந்தாலும், தண்ணீருக்குக் கூட பஞ்சம் இருப்பதைச் சொல்லும்படியான நிலை. தண்ணீருக்குக் கூட ரேஷன் ஏற்பட்டிருக்கிறதே. ஆகவே, யார் ஆட்சிக்கு வந்தாலும் கஷ்டத்தைத் தவிர்க்க முடியாது என்பதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டதே தவிர, வேறொன்றும் இல்லை, அதைத் தவிர வேறு இடத்திலே தண்ணீர்ப் பஞ்சம் இல்லையா ? இன்னொன்றும் சொல்கிறேன், இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் சொல்லுகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு நிலைமைபற்றி சொல்வது என்று அடிக்கடி நிலைமைக்காகச் சொல்வார்கள். பதில் சொன்ன பிறகு நிலைமைக்கு ஏற்ப சொல்லுவார்கள்.

பஞ்ச நிலையை உத்தேசித்து, கடன் வசூல்களைத் தள்ளிப்போட வேண்டுமென்று இங்கே ஒரு கருத்து கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது அரசு இந்தக் கடன் வசூல்களைத் தள்ளிப் போடுவதிலே, ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கேற்ப நடந்து கொண்டு வருகிறது. எங்கெங்கே பாதிக்கப்பட்டிருக்கிறதோ அங்கே அதைத் தள்ளிப் போடவும், ஒற்றி வைக்கவும், தாமதமாக வசூலிக்கவும் இப்படிப்பட்ட முறைகளைக் கையாண்டுவருகிறது. எங்கேயாவது அதிகாரிகள் அரசினுடைய இந்த ஆணையை மீறி, தவறாக நடந்துகொள்வார்களேயானால் அது உடனடியாக, தொடர்புடைய இலாக்காவிற்குத் தெரிவிக்கப்படுமேயானால் நிச்சயமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆனால், கடன் வசூல் முழுவதையுமே தள்ளிப் போட்டுவிடுகிறோம் என்றால், அப்படித் தள்ளிவிடுவதால் மாத்திரம் விஷயம் முடிவது அல்ல. அதைத் தள்ளிப் போட வேண்டும் என்றும் அதே சமயத்தில், கடன் விநியோகிப்பதையும் தொடர்ந்து நடத்த வேண்டும், சொஸைட்டிகளின் பங்குத்தொகை அதற்காக அதிகப்படுத்த வேண்டியிருக்கும். அப்படி, நில அடமான பாங்கு மூலம் கடன் தரும் தொகை அதிகப்படுத்தலாம் என்றால் அதற்கு 27 கோடி ரூபாய் நிச்சயமாக வேண்டும். இந்த 27 கோடி ரூபாயை நாம் மத்திய சர்க்காரிடமிருந்து தான் கேட்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கடன் தொகை வசூலை அறவே தள்ளிப் போட்டுவிட்டு, தொடர்ந்து விவசாயிகளுக்குக் கடன் தருகின்ற முயற்சிக்கு வங்கிகளோடு தொடர்பு கொள்ள 27 கோடி ரூபாயை மத்திய அரசிடம் கேட்பதா ? என்பது அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறது.

இந்தத் தீர்மானத்தையொட்டி மூன்று திருத்தங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்திருக்கிறார்கள். நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்களும், நண்பர் திரு. கோதண்டராமன் அவர்களும், நண்பர் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் மூன்று திருத்தங்களை அளித்திருக்கிறார்கள். அதில், திரு. இராமமூர்த்தி அவர்கள் அளித்திருக்கும் அந்தத் திருத்தத்தை இந்தத் தீர்மானத்தோடு எந்த வகையிலேயும் இணைக்க முடியாது. ஏனென்றால், தீர்மானம், மத்திய அரசைக் கேட்டு கொள்ளப் பரிந்துரை செய்கிற தீர்மானம். மத்திய அரசைப் பார்த்து, "நீங்கள் எங்கள் ஊரிலேயுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைச் சேர்த்து கமிட்டி போடுங்கள்" என்று மத்திய அரசிடம் பரிந்துரை செய்கின்ற ஒரு திருத்தத்தை இந்தத் தீர்மானத்தோடு நிச்சயமாக இணைக்க முடியாது என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களும் உணர்வார்கள். அவர் அறிந்து, திருத்தம் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, தீர்மானத்தோடு இணைய வேண்டுமென்று கருதியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த நிலையில் நாம் செயல்பட வேண்டுமென்ற கருத்தினை இந்த அரசுக்குத் தெரிவிப்பதற்காகவே இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருப்பார்கள் என்றே நான் நம்புகிறேன்.

கலெக்டர்களுடைய மாநாடு ஒன்றினை ஏப்ரல் 9-ம் தேதி நாம் நடத்தவிருக்கிறோம். அந்த மாநாட்டில் அவர்களுக்கு, எப்படியெப்படி மாவட்டங்களில் இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கலெக்டர்கள் அளவில், தமிழக அரசின் சார்பில் சில யோசனைகளைச் சொல்ல இருக்கிறோம். மாவட்டங்களுக்கு ஏற்றவாறு இந்தத் துயர்தணிப்புப் பணி நடைபெற வேண்டியிருக்கிறது. சில இடங்களில் கால்வாயை அகலப்படுத்துவது, ஏரிகளைத் தூர் எடுப்பது என்ற முறையிலே துயர் தணிப்புப் பணி நடைபெறலாம். சில இடங்களில் குடிதண்ணீர்ப் பிரச்னையை முக்கியமாகக் கருதி, அந்த வேலைகளிலே அங்குள்ளவர்கள் ஈடுபடுத்தப்படலாம். இன்னும் சில இடங்களில் சாலை வசதிகளைப் பெருக்குவது முக்கியமாக, இன்றியமையாததாகக் கொள்ளப்பட்டு அந்தத் துயர் தணிப்புப் பணிகளில் அங்கிருப்பவர்கள் ஈடுபடுத்தப்படலாம். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்

டில் இதுபற்றி யோசிக்கப்படும். இங்கு பேசிய. தலைவர்களுடைய பேச்சுக்களை, அதிலே சொல்லப்பட்ட முக்கியமான கருத்துக்களைக் குறிப்பெடுத்து, வரவிருக்கும் கலெக்டர்களுக்கு அனுப்பிவிடுங்கள் என்று நான் சம்பந்தப்பட்ட துறையினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தையொட்டி விவாதத்திலே கலந்துகொண்ட மாண்புமிகு தலைவர்களுடைய அபிப்பிராயங்களைக் கலெக்டர்களுக்கு அனுப்பி வைத்து விடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதைப் படித்துவிட்டு, மாநாட்டிற்கு வரும் நேரத்தில் அதுபற்றி யோசனை கூற எதுவாக இருக்கும் என்று, உங்களுடைய யோசனைகளை அவர்களுக்கு அனுப்பச் சொல்லி நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்திற்கேற்ப, மாவட்ட நிலையிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், யூனியன் தலைவர்கள் இவர்களைச் சந்திப்பதற்கு ஏற்ற இடமாக மாவட்ட வளர்ச்சிக்கு குழு இருக்கிறது. அங்கே இதைப்பற்றி விவாதிக்கலாம், என்னென்ன நடந்திருக்கிறது என்பதைப்பற்றி விவாதிக்கலாம். இதற்கிடையில் அமைச்சர்களும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுற்றுப் பயணம் செய்யவிருக்கிறோம். அவர்கள் சொன்னார்கள்—அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யக் கூடாது என்று ஒரு வாக்கியத்தில் சொல்லிவிட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பஞ்ச நிலையை அறிய வேண்டும் என்று சொன்னார்கள். சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளாமல் அந்தக் காரியத்தை எங்களால் செய்ய முடியாது. ஆகவே, நாளையதினம் நாங்கள், அமைச்சர்கள் கூடி எந்தெந்த அமைச்சர்கள் எந்தெந்த மாவட்டத்திற்குச் செல்வது, அதுவும் ஒரு குறிப்பிட்ட நாளிலே சென்று வருவது மட்டும் அல்ல, அவ்வப்போது, அடிக்கடி அந்த மாவட்டங்களுக்கு, குறிப்பிட்ட மாவட்டங்களை, குறிப்பிட்ட அமைச்சர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அங்கிருக்கின்ற அதிகாரிகளைச் சந்தித்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் அத்தனை பேரையும் சந்தித்து, அங்கே திட்டமிடப்பட்டிருக்கும் வேலைகள் சரிவர நடக்கின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவருடனும், ஏனைய அதிகாரிகளுடனும் கலந்து ஆவன செய்யும் முயற்சியிலே இந்த அமைச்சரவை தொடர்ந்து ஈடுபடும். இரவு நேரங்களிலே, 6 மணி, 7 மணிக்கு மேல், அங்கு செல்லும் அமைச்சர்கள் வேறு நிகழ்ச்சிகளுக்கோ, கூட்ட நிகழ்ச்சிகளுக்கோ போகக்கூடிய சூழ்நிலைகள் இருந்தாலும் கூட, பகலெல்லாம், நல்ல வெய்யில் என்றாலும், பெரும் கோடை என்றாலும், பெரும் வறண்ட இடம் என்றாலும் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். ஏனென்றால், அப்படிப் பழக்கப்பட்டுவிட்ட, சாதாரணமான, சாமானிய மானவர்கள்தான் இந்த அமைச்சரவையில் இருக்கின்றார்கள் என்ற காரணத்தினால் நிச்சயமாக அந்த முடிவு மேற்கொள்ளப்படும், நல்ல வகையில் அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்று அதிகாரிகள் மட்டத்திலும், பொதுமக்கள் மட்டத்திலும் ஆராயப்படும் என்ற உறுதியினை நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நீர்த் தேக்கங்களைக் கட்டிமுடிப்பதற்காகவும், அதைப் போலவே, இந்த உரத்தின் மீதும், பம்பு செட் மீதும் விதித்துள்ள வரிகளை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவும் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தை இதிலே இணைக்க முடியாவிட்டாலும், அவர் தந்திருக்கும் கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. என்னுடைய நண்பர், நிதியமைச்சர் மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்தில், இப்படி பம்பு செட் மீதும், உரத்தின் மீதும் போடப்பட்டுள்ள வரிகளால் தமிழ் நாட்டு விவசாயப் பெருமக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதையும், அதை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்றும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகின்ற காரணத்தினால்,



வெளியிலேயுள்ள காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர்கள், தவறாக எடுத்து விமர்சிக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு பேசுகின்ற நேரத்தில, அவர் மத்திய சர்க்காரை, "உன்னால் என்ன செய்ய முடியும், என்னை உங்களால் எதிர்க்க முடியுமா? ஒரு கை பார்க்கிறேன், ஜாக்கிரதை, எச்சரிக்கிறேன்" என்ற தோரணையிலே சொல்லவில்லை. நாட்டினுடைய நிலையை உணருங்கள், மாநிலங்கள் தங்களுடைய உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழும் காட்சியைக் காணுங்கள், மக்கள் உள்ளத்திலே உள்ள புது எழுச்சியைப் புரிந்து கொள்ளுங்கள் என்ற கருத்திலே, நல்லெண்ணத்தோடு குறிப்பிட்டார்கள். ஆனால். அந்த வார்த்தையினுடைய ண்மை பலயப் புரிந்துக்கொள்ளாமல், "மதியழகன் எச்சரிக்கை செய்கிறார்" என்று காங்கிரஸ் கட்சியினுடைய பெருந்தலைவர் நேற்றையதினம் பேசியதாகப் பத்திரிகையிலே நான் படித்துப் பார்த்தேன். எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பது நல்லெண்ணத்தோடு சொல்லப்பட்டது. "நான் யார் தெரியுமா? ஆகவே, ஜாக்கிரதை, எச்சரிக்கை" என்கின்ற அர்த்தத்திலே சொல்லப்பட்டது அல்ல.

அதைப்போலவே தான் இன்றையதினம் இந்தத் தொடர்க் கூட்டத்திலே கடைசி நாளாக இருக்கிற காரணத்தால் இன்னொரு விளக்கத்தையும் சொல்ல விரும்புகிறேன். யாரோ ஒரு காங்கிரஸ் கட்சி நண்பரைப் பார்த்து நான் ரௌடி என்று சட்டசபையிலே குறிப்பிட்டதாக மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் பேசி, பத்திரிகையிலே வந்திருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் என்னிடத்திலே சொன்னார்கள். "நானும் இங்கிருந்து காதால் கேட்டேன். முதலமைச்சர் கூறியபோது அப்படிப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்தவே இல்லை. நான் இன்னும் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக குறிப்புகளைப் பார்த்தேன், அதிலேயும் இல்லை. அவர் அப்படி சொல்லவே இல்லை, நான் அப்படி கேட்கவே இல்லை" என்று திரு கருத்திருமன் அவர்களேகூடச் சொன்னார்கள். ஆகவே, திரு. காமராஜ் அவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, கருத்திருமனுக்குத் தான் இருக்கிறது என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் சட்டசபை நிகழ்ச்சிகள் வெளியிலே இப்படி திரித்துக்கூறப்படுகிறது. அதற்காகத்தான் இந்த நேரத்தை பயன்படுத்திக்கொண்டேன். ஏனென்றால், ஒரு முதலமைச்சர் மீதும், நிதி அமைச்சர் மீதும், நாங்கள் எச்சரிக்கை செய்தோம், அல்லது ரௌடிகள் என்று சொன்னார் என்றெல்லாம் திரித்த வார்த்தைகளை, இங்கே பேசியதாகத் தெரிவித்துக்கொள்வது, இந்த மாமன்றத்தை இந்த மாநில அரசைப் பற்றி மற்ற மாநிலங்களிலே இருக்கிற அரசுகளும், குறிப்பாக, மத்திய அரசும் வெகுத் தவறாகக் கருதிக் கொள்வதற்கு இடம் ஏற்படுத்தும், அரசியல் நாகரிகம் கற்றவர்கள் மத்தியில் தவறான நிலை ஏற்படுத்தும் என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தைச் சொன்னேன்.

திரு. கோதண்டராமன் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தைப் பொறுத்தவரையில் உரம், பம்ப் செட் இவைகள் மீதுள்ள வரிகளை நீக்க வேண்டுமென்று நிதி அமைச்சரும் இங்கே கூறியிருக்கிறார். நானும் நண்பர் மாதவன் அவர்களும் டெல்லிக்குச் சென்றிருந்த போது, நாங்களும் மொரார்ஜி தேசாய் அவர்களிடத்திலே வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். இந்தக் கருத்து இந்த அரசுக்கு ஏற்புடைய கருத்து என்பதால் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே இந்த தீர்மானத்திலே அந்த திருத்தத்தை இணைத்துக் கொள்ள தேவையில்லை.

மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் தந்திருக்கிற திருத்தத்தில், முன்பு சென்னை மாநிலத்தில் ஆந்திராவும் சேர்ந்திருந்தபோது ராயலசீமா பஞ்சத்திற்குத் தரப்பட்ட அந்தக் கடன் தொகையையும் நம்முடைய கணக்கிலே எழுதி வைத்திருக்கிறார்கள், அதை "ரைட் ஆஃப்" செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்காக நாம் போராடி வருகிறோம். இந்தக் கருத்தையெல்லாம் நாம் அடிக்கடி மத்திய அரசோடு பேசி வருகின்றோம். ஆகவே, அதுவும் ஏற்புடைய கருத்து என்ற காரணத்தினாலும் நாம் அவர்களிடத்திலே நிதி உதவி கேட்கின்ற இந்த அளவில்

வாய் அளவில் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற காரணத்தினாலும், இந்தத் தீர்மானத்திலே அதை நுழைக்காமல் கடிதப் போக்குவரத்துக்களின் மூலமாக அதற்கு நிவாரணம் காண முடியும் என்ற காரணத்தினாலேயும், அவைகளை இதிலே நுழைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவிக்கிறேன். இதை டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு நிரம்ப வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஏனைய கட்சித் தலைவர்களும் வெகு விளக்கமாகச் சொன்னார்கள். அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் நாம் எவ்வளவு கோடி ரூபாய் செலவழித்தாலும் அது மக்களுக்குப் போய்ச் சேரும். மூன்று ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய பலன்களை ஏழை எளியவர்கள் அனுபவிக்கவில்லையென்றால், ஏழை எளியவர்களுடைய வீட்டுக் கதவைப்போய், செலவழித்த பணம் தட்டவில்லை. அவர்களுடைய வீட்டுப் படிக்கட்டை அரசாங்கத்தினுடைய பணம் போய்ச் சந்திக்கவில்லை என்ற இதே கருத்துக்களை காங்கிரஸ் கட்சியினுடைய பெருந்தலைவர்களே கூறிக் கவலைப்பட்டார்கள். ஆகையினாலேதான் இங்கே எதிர்க்கட்சியிலே அப்பொழுதிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு பனிக்கட்டியை எடுத்து ஒருவனுடைய கையிலே கொடுத்து, அது 10 பேருடைய கையிலே மாறி, கடைசியிலே கொடுத்தவனுடைய கைக்குத் திரும்புகிற நேரத்தில் பனிக்கட்டி வராது, ஒரு சொட்டுத்தண்ணீர்தான் மிச்சமாக வரும், என்று சொன்னார்கள். அதேபோல் பல பேருடைய கையிலே மாறுகிற பனிக்கட்டி திரும்பி வருகிற போது ஒரு துளித் தண்ணீராக மாறிவிடக் கூடும். ஆனால், அந்தப் பனி பல பேர் கையிலே போகும்போது நல்ல மரத்தூள்களையெல்லாம் வைத்து, நல்ல அடக்கம் செய்த பெட்டியிலே வைத்து, அது போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு நிச்சயமாகச் சேரச் செய்வதிலே மிகுந்த அக்கறையோடு இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஈடுபடும் என்று எடுத்துக் கூறி இந்தத் தீர்மானத்தை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு நான் உங்கள் அத்தனை பேருக்கும் என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்து திருத்தங்களைக் கொடுத்தவர்கள் உள்ளத்திலே பதிய வைக்கவேண்டுமென்பதற்காகக் கொடுத்தார்கள் என்பதை ஏற்றுக்கொண்ட காரணத்தால், அந்தத் திருத்தங்களை எல்லாம் திரும்பப் பெற்று, இந்த மாமன்றம் ஒரு மனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது என்பதற்கு அடையாளமாக அந்தத் திருத்தங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவோடு அமைகிறேன். வணக்கம்.

**திரு கே. விநாயகம் :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிஃபிகேஷன், சார். ஆந்திரம் இந்தப் பிரதேசத்தோடு ஒன்றாக இருந்தபொழுது "மெட்ராஸ் ஸ்டேட்" என்று இருந்தது. எஸ். ஆர். சி. ரிப்போர்ட்டின்படி ஸ்டேட்ஸ் ஆர்கனைசேஷன் கமிஷன் ரிப்போர்ட் படி, ஆந்திரம் பிரிந்தது. அப்பொழுது அவர்கள் அதற்குத்தகுந்த சட்டம் பாராளுமன்றத்திலே கொண்டு வந்தபொழுதே இந்த அசெட்ஸ் அண்ட் லையபிலிட்டீஸ்ஸை எப்படி பிரித்துக்கொள்வது என்ற விவாதம் எழுப்பப்பட்டது. நம்மிடமிருந்து அவர்கள் பிரிந்ததாலே நாம் தான் ரெசிடுவரி ஸ்டேட், என்று அன்றைய சர்க்கார் ஒத்துக்கொண்டு, சட்டபூர்வமாக அந்த லையபிலிட்டியை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லி, அது முடிந்த விஷயமாகி விட்டதே, இப்பொழுது அதைப்பற்றிக் கிளர்ச்சி செய்வது சரிதானா, சர்க்கார் என்பது தொடர்ந்து இருப்பது. It is a continuous Government நம் கட்சி புதிதாக இருக்கலாம். ஆனால் சர்க்கார் என்பது, "மெட்ராஸ் கவர்ன்மென்ட்" என்பது ஒரு "கண்டினுவஸ் புராஸஸ்". ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருக்கிற இதைத் திரும்ப "ஓப்பன்" பண்ணுவது, புனர் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்வது சரிதானா?



Is it in conformity with the political propriety of this Government.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ரைட் ஆஃப் செய்யவேண்டுமென்பது டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கருத்து. இந்த அரசாங்கத்தினுடைய கருத்தைப் பொறுத்தவரையில், நாம் இந்த ஒரு மாத காலமாக இந்த மன்றத்திலே விவாதித்து இருக்கிறோம். நம்முடைய கடன்கள் ஏறிக்கொண்டே இருக்கின்றன. இந்த ஆண்டே கூட 37 கோடி ரூபாய் பழைய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. 27 கோடி ரூபாய்க் கடன் தான் இந்த ஆண்டு வருகிறது. இந்த நிலைமையில் இந்த ராயல்சீமா கடன் என்பது பழைய மாநிலத்திற்கு ஏற்றுக்கொண்டதே தவிர, நாம் கேட்பதிலே நியாயம் இருக்கிறது. அந்தக் கடனை இப்பொழுது திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களே, அதை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கைதான் டாக்டர் ஹாண்டே அவர்களுடைய திருத்தத்தினுடைய நோக்கம் கூட. அதிலே நியாயம் இருக்கிறது. இந்தக் கடனை ரைட் ஆஃப் பண்ணுவதில் ஒன்றும் தவறுகூடக் கிடையாது. அதை ஒத்துக்கொண்டதனாலே ரைட் ஆஃப் பண்ணக்கூடாது என்பதும் அல்ல. ரீ-ஷெடியூல் ஆஃப் டெட்ஸ் பற்றி வாதாடிக்கொண்டு வருகிறோம். அதிகமாக நிதி ஒதுக்கப்பட்ட விதத்தில் எல்லா மாநிலங்களிலும் சேர்ந்து "செல்ஃப் ரைட்ஸ்" பெற்ற நேரத்திலே 44 கோடி ரூபாய் இருந்த கடன் இன்றைக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் எல்லா மாநிலங்களிலும் சேர்ந்து பெருகி இருக்கிற காரணத்தாலே விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் மாதிரி இதை ஒரு கமிட்டி ஆராயவேண்டும். மாநிலங்களினுடைய பொருளாதார நிலையைச் சரி செய்வதற்கும் நம்முடைய பொருளதாரத்தை மேம்பாடு செய்வதற்கும் இன்றைக்கு மாநிலத்தின் சார்பிலே கோரிக்கைகளை மாநிலங்களின் கடன்களைப் பற்றி நிபுணர் குழு ஆராய்ந்து முடிவு செய்தால் நம்முடைய திட்டங்கள் நிறைவேறுவதற்கு வசதியாக இருக்கும் என்பதையும் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதிலே முரண்பாடும் இல்லை, அதைத் திருப்பி, ரீ-ஓப்பன் பண்ணுவதும் இல்லை. இந்தக் கருத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் ஏற்புடைய கருத்து என்று தான் சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு ஆலோசனை. கலெக்டர்கள் மாநாடு 9-ம் தேதி கூடப் போவதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநாட்டுக்கு முன்னாலே அபிவிருத்திக் கவுன்சில்களை எல்லாம் அங்கங்கே மாவட்டத்திலே கூட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனையையும் கேட்டு, அவர்கள் மாநாட்டுக்கு வந்தால் நன்றாக இருக்கும் என்ற ஆலோசனையை முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னமாதிரி அந்தப் பஞ்ச நிவாரண காரியங்களைத் தொடர்ந்து ஒரு பெரிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை கலெக்டர்களுக்கும் தெரியும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நடவடிக்கைகளை மிகுதியாக்க வேண்டுமென்பதற்காகவும் தீவிரப்படுத்துவதற்காகவும் நிதி உதவிகள் பெறும் அளவிலே நம்முடைய மாநில அரசுக்கு நாம் ஒரு மொத்தமாக, மாமன்றத்தினுடைய ஒரே கருத்தை, ஏக கருத்தை, கட்சிக்கருத்தாக இல்லாமல், அரசாங்கக் கருத்தாக இல்லாமல், நாட்டு மக்களுடைய கருத்தாக இருக்க வேண்டுமென்பதற்காக இந்த மாதிரியான காரியம் செய்கிறோம். இது நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிரம்பத் தெளிவாக விளக்கினார்கள். ஒன்றரைக் கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டதற்கான காரணங்களைக் கூறினார்கள். கலெக்டர்களுடைய மாநாடு, வேலைகளை மதிப்பீடு செய்வதற்கும் மற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கூட்டப்பட்டிருக்கிறது. குறுகிய கால அளவிலே இந்த அபிவிருத்திக் கவுன்சில்களைக் கூட்ட வேண்டிய அவசியம் இல்லையென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : In addition to what Mr. Vinyakam said, may I remind the House that some years ago when the State's reorganisation took place, the Tamil Nadu Government, then called the Madras Government, was very liberal. In fact, a number of things they let go because of customary liberalism. A number of officers and staff were given away. In view of this thing and in view of the difficulties that we are going to experience, can we request the Congress Party here to help the Government of Tamil Nadu at least in persuading the Central Government to write off the loan ? That will be ideal. Failing this, will the Congress Party assist us in requesting the Central Government to allow us to repay in easy instalments ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் அதைதத் தான் சொன்னேன். நிதிநிலை அறிக்கையிலே இதைப் பற்றிக் கூறியிருக்கிறேன். இந்த மன்றத்திலும் 4, 5 தடவைகள் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர், முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் இதைப் பற்றிப் பேசப்போகிறார்கள். நீண்ட நாட்களாக இருக்கிற ஒன்று இது. ஆந்திர மாகாணம் தோன்றியதற்கு முன்பே மத்திய அரசு கணக்கு எழுதி, ஏராளமான பணம் கடன் கணக்கில் இருக்கிறது. அதற்கெல்லாம் வட்டி விகிதம் இருக்கிறது. இவைகளையெல்லாம் ஓரளவுக்குப் பரிசீலனை செயவது தேவை என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. அவர்கள் ஏற்கெனவே இங்கு குறிப்பிட்டதையும், அவர்கள் யோசனையையும் அழுத்தம் திருத்த மாக அங்கே வற்புறுத்துவோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். என்னுடைய திருத்தத்தின் நோக்கத்தை முதல் அமைச்சர் அவர்கள் பூரணமாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். வட்டார அபிவிருத்தி மன்றங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுகின்றன. அல்லது மாதக் கடைசியிலே கூடுகின்றன. அப்படிக் கூடுகின்ற நேரத்தில் செய்த வேலைகளைப் பரிசீலனை செய்கின்ற நிலைமை இருக்கிறதே தவிர, செய்யப் போகிற வேலைகளைப் பற்றி அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினர்களையும் கலந்து ஆலோசனை செய்யும் நிலைமை இருக்காது. செய்துவிட்ட வேலை களுக்கு அப்ரூவல் கொடுகின்ற நிலைமை நல்லதல்ல. உதாரணமாக, திண்டிவனம், செஞ்சி ஆகிய வறண்ட பகுதிகளுக்கு ரூ. 15 லட்சத்தில் ரூ. 14 லட்சம் செலவிடப்பட்டுவிட்டதாக முதல் அமைச்சரவர்கள் கணக்குக் கொடுத்தார்கள். அது எந்த வழிகளில் செலவழிக்கப்பட்டது என்ற விவரங்கள் இது வரையில் யாருக்கும் தெரியாது. அது மட்டுமல்ல. எனக்குக் கிடைத்த தகவலின்படி அந்தப் பகுதி பஞ்சாயத்து யூனியனுக்கு, அவசரம் அவசரமாக கமிஷனரை வைத்துக்கொண்டு, சில திட்டங்களைத் தயாரித்து, அதன் அடிப்படையில் செலவழித்திருக்கிறார்கள். அதிலும் கூட திண்டிவனம் நகராட்சிக்கு பஞ்சாயத்து யூனியனைவிட குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களைக் கலந்துகொண்டு செய்யா விட்டால், மற்ற காரணங்களுக்காக அரசியல் காரணங்களுக்காக, இப்படி யெல்லாம் செய்திருக்கிறார்களோ என்ற நிலைமை வந்துவிடும். அந்தப் பகுதியில் இருப்பவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து கொண்டு, ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு முடிந்த பிறகு உடனடியாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களைக் கூட்டி சட்டமன்ற உறுப்பினர்கள், ஏனைய மக்கள் பிரதிநிதிகளைக் கலந்துகொண்டு என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்பது பற்றி ஆலோசனை செய்யலாம் என்கின்ற யோசனையை நாம் அவர் களுக்குத் தெரிவிக்கலாம் என்று இருக்கிறேன். யூனியனுக்குக் கூட



தலாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. திண்டிவனம் நகராட்சிகு அவ்வளவு செலவழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நகர்ப்புறங்களுக்கு அதிக மாகச் செலவிடுறார்கள். கிராமங்களுக்குச் செலவிடவில்லை என்று காங்கிரஸ்காரர்கள் பேசிக் கொள்ள போகிறார்களே என்ற பயத்தின் காரணமாக, திண்டிவனம் நகராட்சிக்குக் கொஞ்சம் குறைவாகக் கொடுத் திருக்கலாம். அதை நான் கவனிக்கச் சொல்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரி பிகேஷன். என்னுடைய திருத்தத்தில் மேஜர் நீர்த் தேக்கங்களையும், மீடியம் நீர்த் தேக்கங்களையும், உடனடியாகக் கட்டி முடிப்பதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து போதுமான அளவுக்கு மானியமாகப் பணம் பெறவேண்டும் என்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அதற்குக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவில்லை. குறிப்பாக இதைப் பற்றி எதற்குச் சொல்கிறேன் என்றால், எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வரும் முன் காப்போன் என்று சொன்னார்கள்- பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்துவிட்டால் மட்டும் போதாது. நிரந்தரமாக பஞ்சம் தலைதூக்காத அளவுக்கு இதுபோன்ற முக்கியமான காரியங்களைச் செய்வது நல்லது அல்லவா ? ஏற்கனவே மத்திய சர்க் காரிடம் பேசியிருக்கிறார்களா, கேட்டார்களா, அதைக் கணக்கில் எடுத்துக் கொள்வார்களா ? எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் சொல்வதற்குத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். இந்த நேரத்தில் அல்லவா அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நீர்ப்பாசன திட்டங்களுக்குத் தேவை யான தொகையை நம்முடைய நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் மூலம் பெற்று அந்தத் காரியங்களைச் செய்ய இருக்கிறோம். துயர்தணிப்பு பணி களுக்கு, நிவாரண நிதிக்கு, பணம் கேட்கின்ற நேரத்தில், இதை இணைத் துக்கொள்வது சரியாக இருக்காது என்ற காரணத்தினால், அதை இணைக்கவேண்டாம் என்று க்ருதுகிறேன்.

**திரு. தே. மு. நல்லசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் துயர்த் தணிப்பு வேலைகள் பற்றி மாவட்ட வாரியாகப் புள்ளி விவரங்களைச் சொல்லும்போது திருச்சி, குறிப்பாக திருச்சி தென் மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. கோவையை விடவோ, அல்லது இராமநாதபுரம் பகுதியை விடவோ எந்த வகையிலும் சிறந்த பகுதி அல்ல அது. அதேமாதிரி, குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத பகுதி, கால்நடைகளுக்குத் தீவனம் இல்லாத பகுதி என்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

இரண்டாவதாக, கட்சித் தலைவர்கள் இந்தத் தீர்மானத்தின் மீது பேசுகிற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, அவர்கள் பேசிய பேச்சுக்கள் மாவட்டக் கலெக்டர்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்றும், அவர்கள் அந்தக் குறைகளைத் தெரிந்துகொண்டு, கலெக்டர்கள் மகாநாட்டிற்கு வருவார்கள். அதற்குப் பரிகாரம் தேடலாம் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பேசிய தலைவர்கள் யாரும் திருச்சியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. திருச்சியைப் பொறுத்தவரையில் காவேரி நதி ஓடுகின்ற காரணத்தினால், தஞ்சை மாவட்டத்திற்கு ஒப்பாக அதை மதிக்கக் கூடாது..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏதாவது விளக்கம் வேண்டுமென் றால், கேட்கலாம். 'என்னுடைய பகுதியைப் பற்றிச் சொல்லவில்லை' என்று ஒவ்வொரு உறுப்பினராக எழுந்து குறிப்பிடுவது முறையாகாது. தலைவர் கள் பேசுவார்கள் என்று முடிவாயிற்று. பொதுவாக வறட்சி நிலையைப் பற்றித் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். குறிப்பிட்ட இடங்களுக்கு ஆங் அங்கு உள்ள கலெக்டர்கள் தகவல் தெரிந்துகொண்டு, நிவாரணம் காணிப்பார்கள். ஒவ்வொரு உறுப்பினராக எழுந்து தங்கள் பகுதியைப்

பற்றிப் பேசவில்லை என்று சொல்ல ஆரம்பித்தால், அதுவே ஒரு விவாத மாகிவிடும். அமைச்சர் அளித்த பதிலைப் பற்றி ஏதாவது தெளிவு பெற வேண்டுமானால், அதைப் பற்றி மட்டும் விளக்கம் கேட்கலாம்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** தலைவர் அவர்களே, அந்த மாவட்டத் தைச் சேர்ந்த உறுப்பினர் என்ற முறையில் அந்தப் பகுதியின் வறட்சி நிலையைப் பற்றிச் சொல்லுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும். இதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஏதாவது சொன்னால் நல்லதாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திருச்சியைப் பற்றி தலைவர் பேச வில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை உறுப்பினர் குறை கூறி னார். இப்பொழுது திருச்சியைப் பற்றி அவரே பேசிவிட்ட காரணத்தினால், அது குறிப்பில் இடம் பெற்று கலெக்டருக்கு அனுப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராமமூர்த்தி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் கொடுத்த திருத்தத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப் படுகின்றன.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" 1968-ம் ஆண்டில் வான் பொய்த்ததின் விளைவாக, தமிழ் நாடு, முழுவதும் பொருளாதார நிலை சீர் கெட்டு வரட்சி நிலைமை உருவாகிப் பல்வகையிலும் மக்கள் துன்பத்துக் குள்ளாகியிருப்பதோடு உணவு உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டு மிக நெருக்கடியான எதிர்காலத்தைச் சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். வரட்சி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் போதுமான துயர் தணிப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டு இருக்கிறது. அதற் குரிய உடனடி உதவிகளைச் செய்து தருமாறு மாநில அரசு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, தலைமை அமைச்சர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர்களும், துணைத் தலைமை அமைச்சர் மாண்புமிகு திரு. மொரார்ஜி தேசாய் அவர்களும் உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. ஜெகஜீவன்ராம் அவர்களும் அனுதாபத்துடன் காரியமாற்ற முன்வந் திருப்பதை இம்மன்றம் நன்றியுடன் பாராட்டுகிறது ;

தமிழ்நாடு அரசு விரும்பியவாறு மத்தியக் குழு ஒன்றினை அனுப்பி வைத்தமைக்கும், தலைமை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சில வரட்சிப் பகுதிகளைப் பார்வையிட வருவதற்கு ஒப்புதல் தெரிவித்தமைக்கும், இம் மன்றம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது ;

இன்றுள்ள வரட்சி நிலை விரிவடையக் கூடுமென்று அஞ்சுவதாலும், உணவுப் பற்றுக்குறை , குடிதண்ணீர்ப் பஞ்சம், வேலையின்மை போன்ற இடர்ப்பாடுகள் மேலும் அபாயகரமாக உருவெடுக்கக் கூடுமென்று எதிர் பார்க்கப்படுவதாலும், தமிழ்நாடு அரசின் சார்பில் முதல் தவணையாகக் கேட்கப்பட்டுள்ள ஒரு லட்சம் டன் அரிசியுடன் மேலும் இரண்டு லட்சம் டன் அரிசியை மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டுமென்று மத்திய அரசிடம் வலியுறுத்துமாறு தமிழ்நாடு அரசுக்கு இம்மன்றம் பரிவுரை செய்கிறது;

நாளுக்கு நாள் சீர்கெட்டுவரும் வரட்சிப் பகுதிகளுக்குத் துயர்த் தணிப் புப் பணிகளுக்காக ஏற்கனவே தமிழ்நாடு அரசு கேட்டுள்ள தொகையினை யும் இனியும் தேவையென்று கணக்கிடப்படுகிற தொகையினையும் மத்திய அரசு உடனடியாக மானியமாகக் கொடுத்து உதவவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள தமிழ்நாடு அரசுக்கு இந்த மன்றம் பரிந்துரைக் கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.



(2) **தகவல் கோரல்**—தொடர்ச்சி.

**வினாக்கள், துணை வினாக்கள் முதலியவைபற்றிய**

புள்ளிவிவரம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய திரு. விநாயகம் அவர் கள் காலையில் சில விளக்கங்கள் கேட்டார்கள். அது பற்றி இப்பொழுது கூறுகிறேன். இந்தத் தொடர் கூட்டம் 33 நாட்கள் நடைபெற்றிருக்கின்றன, உட்கார்ந்து நாம் நிகழ்ச்சியை நடத்திய நாட்கள்.

41-வது விதியின் கீழ் 223 அறிவிக்கைகளைக் கொடுத்திருந்தார்கள் உறுப்பினர்கள். அவைகளில் 103 அறிவிக்கைகளுக்கு அனுமதி தரப் பட்டன. 103 அறிக்கைகளில், 100 அறிக்கைகளுக்கு இங்கே அறிக்கை கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மூன்று அறிவிக்கைகளைப் பொறுத்த வரையிலும்கூட, அவைகளுக்கான அறிவிக்கைகளைக் கொடுத்த உறுப்பினர் கள் தாங்கள் அன்று வருவதற்கில்லை, பிறகு ஒரு நாள் எடுத்துக்கொள்ள லாம் என்று சொல்லிவிட்டு, வராத போன காரணத்தினால் தான், அந்த மூன்று அறிக்கைகளும் கொடுக்கப்படாமல் விடப்பட்டன. ஆக, 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில், 100-க்கு 100 அறிக்கைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

உறுப்பினர்கள் கொடுத்த வினாக்களைப் பொறுத்தவரையில், அனுமதி கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை 2166. அது நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதிலே 554 வினாக்கள் இந்த அவையிலே கொண் வரப்பட்டு, விடை அளிக்கப்பட்டிருக்கின்றன. அதில் துணை கேள்விகள் மட்டும் 1,625 கேள்விகளுக்கு விடை அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் என்ற கணக்கில் பார்த்தால், ஒரு மணி நேரத்தில் மூல வினாக்கள், துணை வினாக்கள் ஆக 70 வினாக்களுக்கு விடை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், யார் அதிகமாகத் துணை வினாக்கள் போட்டார்கள் என்பது பற்றி விவரம் சேகரிப்பதற்கு நேரம் இல்லை.

(**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எவ்வளவு மணி ?) பேரவை 165 மணி நேரம் நடந்திருக்கிறது.

பேரவையின் நிகழ்ச்சிகள், இன்று இந்த அளவில் முடிவுறுகிறது. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல், பேரவையை ஒத்திவைக்கிறேன். வணக்கம்.

*பின்னர் பேரவை, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.* பிற்பகல் 1-21

**7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

**A.—*Statutory Rules and Orders.***

**107. Notification issued with G.O. Ms. No. 800, Home, dated the 20th March 1968 in regard to exemption form payment of Tax leviable in respect of the vehicles bearing registration MSQ 2837 and MSQ 2841, belonging to the Co-operative for American Relief everywhere. (Laid on the Table of the House under section 11(2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].**

**B. *Reports, Notifications and other papers.***

***Nil.***

## இணைப்பு I

[761-ம் பக்கத்தில் 540-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) சிறு தொழில்களை ஊக்கமூட்டி வளர்க்கும் வகையில் கீழ்க் கண்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன :—

(1) தொழில்களுக்கு அரசாங்க உதவியளித்தல் சட்டத்தின்கீழ் கடன்கள்.

2) மின்சாரத்திற்கு உதவித் தொகை.

(3) எளிதில் கிடைக்காத பொருள்களை மூலப் பொருள் கிடங்குகள் மூலம் வழங்குதல்.

(4) தொழில்பேட்டைகள் மூலம் மின்சாரம், நீர் வழங்கல் முதலியன போன்ற வசதிகளுடன் தொழிற்சாலை இடத்தை ஏற்படுத்தல்.

(5) மின்சாரம் வழங்கல், நீர் வழங்கல், கழிவு நீர்க்கால் அமைப்பு, முதலியன போன்ற எல்லா வசதிகளுடன் தொழிற்சாலைக் கூடங்களை அமைப்பதற்காக மேம்பட்ட மனைகளை ஏற்படுத்தித் தருதல்.

(6) விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை வசதிகள் செய்தல்.

(7) அரசாங்கக் கடைகள் தேவைக்காக விலைச் சலுகையளிப்பதன் மூலம் விற்பனை உதவி செய்தல்.

(8) கீழ்க்கண்டவை மூலம் பலவகைப் பணி வசதிகள் :—

(அ) பொதுப்பணி வசதி நிலையங்கள்.

(ஆ) பொதுக் குத்தகைக் கடைகள்.

(இ) கருவிகள் அறைகள்.

(ஈ) தொழில் நுட்பத் தகவல் நிலையங்கள்.

(உ) மட்பாண்டங்கள், கருவிகள் வடிவமைப்பு முதலிய தனிச் சிறப்பு வாய்ந்தவற்றிற்குப் பயிற்சி நிலையங்கள்.

(9) இறக்குமதி உரிமம் பெறுவதற்கான இன்றியமையாச் சான்றிதழ் கள் வழங்குதல்.

(10) வாடகைக் கொள்முதல் முறையில் இயந்திரங்கள் வழங்குவதற் காகப் பரிவுரை செய்தல்.

(11) தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலமாகப் பயிற்சித் திறனுள்ள வர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(12) பொறியியற் கல்லூரிகள், பலதொழிற் பயிற்சிப் பள்ளிகள் மூல மாக பயிற்சித் திறன் கொண்ட மேற்பார்வைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(13) இம் மாநிலத்திலுள்ள சிறு தொழில்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை வெளியிடுதல்.

(இ) சிறு தொழில்கள் துறையில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படு வதை ஊக்குவிக்கும் வகையில் பெரிய அளவுத் தொழில்களின் சில உற்பத்திப் பொருள்களைத் தடை செய்வது, இந்திய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதாகும். சில தொழில்கள் சிறு தொழில்கள் துறைக் காகவே ஒதுக்கப்பட்டுள்ளன.

(உ) சிறு தொழில்கள் துறையில் மேம்பாடு செய்ய ஊக்குவிக்கப்படு வதற்கான பொருள்களின் இனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) ஓவியர்களுக்கான வண்ணங்கள்.

2) இரும்புச் சாமான்கள், உலோகம்.

(3 ரிம்கள், சங்கிலிகள், சக்கரங்கள் நீங்கலாக சைக்கிள் பாகங்கள் துணைக் கருவிகள்.



(4) வண்ண ஓவியக் கோல்.

(5) பவுண்டன் பேனாக்கள்.

(6) சிகரெட் பற்றவைப்புக் கருவிகள்.

(7) உருக்கு இரும்பு அழுக்கமற்ற குழாய்களும் அவற்றின் பொருத் துக் கருவிகளும்.

(8) உடைவார்பூட்டு—உலோகம்.

(9) உடை கொக்கிகள், கண்கள் முதலியன—உலோகம்.

(10) தலை முடி ஊசிகள்—உலோகம்.

(11) தலை முடி "கிளிப்புகள்"—உலோகம்.

(12) பிளாஸ்டிக் நீங்கலாக ஒட்டும் டேப்புகள்.

(13) பூட்டுகள் (பெரிய அளவுத் துறையில் தற்போதுள்ள பிரிவுக ளில் விரிவாக்கம் செய்யப்படுவது தவிர).

(14) அளவு நாடாக்கள்—பருத்தி.

(15) இயந்திர விளையாட்டுப் பொருள்கள்.

(16) உலோகப் பொத்தான்கள், வில்லைகள்.

(17) நகம் நறுக்கும் கருவிகள்.

(18) காகித ஊசிகளும் "ஜம் கிளிப்புகளும்" (பிளாஸ்டிக் தவிர).

(19) அழுக்குப் பொத்தான்களும் பிணைப்புக் கருவிகளும்.

(20) ஊக்குகள்.

(21) பூட்ஸ் கூட்டும் துவாரங்கள்.

(22) மூக்குக் கண்ணாடி பிணைகள்.

(23) ஸ்பிரிங் வாஷர்கள்.

(24) மெத்தை சுருள் கம்பி.

(25) எடைகள், அளவைகள்.

மேற்சொன்னவாறு ஒதுக்கப்படுவதை, புதுடில்லி இந்திய அரசின் வளர்ச்சி ஆணையர் (சிறு தொழில்கள்) முடிவு செய்கிறார். பட்டியலில் கூடுதலாக சேர்க்கப்பட்டவை குறித்துத் தகவல் எதுவும் இல்லை.

(a) The following forms of assistance are given to encourage and develop small-scale industries :—

(1) Loans under State Aid to Industries Act.

(2) Subsidy on power.

(3) Supply of scarce materials through the Raw Materials Depots.

(4) Provision of factory space with facilties like power, water supply, etc., through Industrial Estates.

(5) Provision of developed plots for construction of factory sheds with all facilties like power supply, water-supply, drainage, etc.

(6) Marketing facilities through a chain of sales emporia.

(7) Marketing assistance by way of price preference for Government stores purchase.

(8) Various service facilities through—

(a) Common Service Facilities Centres.

(b) Common Lease Shops.

(c) Tool Rooms.

(d) Technical Information Centres.

(e) Training Centres for specialised lines like Ceramics Die and Tool Design, etc.

(9) Issue of Essentiality certificates for getting import licence.

(10) Recommendation for supply of machines on hire purchase.

(11) Training of skilled operatives through Industrial Training Institutes.

(12) Training of skilled supervisory staff through Engineering Colleges and Polytechnics.

(13) Publication of a Directory of Small-scale Industries in the State.

(b) The question of banning certain products of large-scale industries so as to encourage production of the same in the small-scale industries sector is a matter which comes under the purview of the Government of India. There are certain industries which are exclusively reserved for the small-scale industries sector.

(c) The following items of products are intended to be encouraged for development in the small-scale sector :—

(1) Artists' colours.

(2) Builder's Hardware—Metallic.

(3) Bicycle parts and accessories other than rims , chains and free wheels.

(4) Chalk Crayons.

(5) Fountain pens.

(6) Cigrette lighters.

(7) Cast iron non-pressure soil pipes and thier fittings.

(8) Garment Buckles—Metallic.

(9) Garment hooks and eyes—Metallic.

(10) Hair clippers.

(11) Hair pins—Metallic.

(12) Insulating adhesive tapes except plastic.

(13) Locks (except of expansion in the existing units in the large-scale sector).

(14) Measuring tapes, cotton.

(15) Mechanical toys.

(16) Metal buttons and badges.

(17) Nail cutters.

(18) Paper pins and Gem clips (except plastic).

(19) Press buttons and snap fasteners.

(20) Saftey pins.



(21) Shoe eyelets.

(22) Spectacle hinges.

(23) Spring washers.

(24) Upholstry coil springs.

(25) Weights and measures.

These reservations are decided by the Development Commis sioner (SSI) Government of India, New Delhi. No information is available regarding additions to the list.

## இணைப்பு II.

[767-ம் பக்கத்தில் 551-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

அக்கூட்டத்தில் கீழ்க்காணும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(1) தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் மருத்துவ நலன்கள், கோயம்புத்தூர் பகுதியில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு மேலும் காலம் தாழ்த்தப்படாமல் நீடிக்கப்பட வேண்டும். இதற்காக 2—10—1968 குறிக்கோள் தேதியாகத் தாற்காலிகமாக குறிப்பிடப்பட்டது.

(2) அப்பகுதியில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்படும்போது, கோயம்புத்தூர் பகுதியில் தற்போதுள்ள பட்டியல் முறை (Panel System) மாற்றப்பட்டு பணி முறை (Service System) செயல்படுத்தப்படவேண்டும்.

(3) பட்டியல் முறைக்குப் பதிலாக நிறுவப்படவிருக்கும் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு இடவசதியளிப்பதற்காக, கோயம்புத்தூர் பகுதியில் 13 இடங்களில் தனியார் கட்டிடங்களை வாடகைக்கு எடுத்துக்கொள்ளச் சுகாதார பணிகள், குடும்பக் கட்டுப்பாடு இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

(4) தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு இடவசதியளிப்பதற்காக கோவையில் ஏற்ற கட்டடங்களைப் கண்டுபிடிப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியளிக்கும் பொருட்டு, கோயம்புத்தூரில் வாழும் வாரியத் தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய துணைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இத் துணைக் குழுவிற்கு கோவையிலுள்ள வட்டார நிர்வாக மருத்துவ அதிகாரி (தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி) தலைவராயிருப்பார்.

(5) வேலை நிறுத்தம், கதவடைப்பு நேரங்களில், ஈட்டுறுதி செய்து கொண்டவர்கள், வேலைக்குச் செல்லாமலிருப்பதற்காக மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குமாறு இம் மருந்தகங்களின் மருத்துவ அதிகாரிகளை அணுகுவதனின்றும் அவர்களைத் தடுக்கத் தொழிலாளர் தலைவர்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

(6) தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சேரவேண்டிய தொகைகளைக் கட்டத் தவறும் தொழிலதிபர்களிடமிருந்து அவற்றை வசூலிப்பதில் உறுப்பினர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

The following important decisions were taken at the meeting :—

(1) The Medical Benefits under the Employees' State Insurance scheme should be extended to the families of incured persons in coimbatore area without further delay. The date 2nd October 1968 was provisionally fixed as the target date for the purpose.

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK Co., Mylapore, Madras-4.
Messrs. HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No, 2/4. Mount Road, Madras-2.

## IN MUFASSAL OF MADRAS STATE

Sri R. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co. ,Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district
Messrs A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. AIR BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29,
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

---

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

களுக்கு (பத்திரிகையாளர்கள் 723 பேர், பத்திரிகை நிறுவனங்களின் பிற பணியாளர்கள் 2,863) ஊதிய வாரியம் பரிவுரை செய்தது. அவற்றில் 37 நிறுவனங்கள் (பத்திரிகையாளர்கள் 604 பேர், பத்திரிகை நிறுவனங்களின் பிற பணியாளர்கள் 2,863) உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகை நிறுவனங்களின் பிற பணியாளர்களுக்கும் செய்த பரிவுரைகளைச் செயல்படுத்தின. செய்தித்தாள் நிறுவனங்களெனத் தங்களை வகைப்படுத்தியதை எதிர்த்து இரு நிறுவன நிர்வாகத்தினர் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த ரிட் மனுக்கள் முடிவுரு நிலையில் இருந்தன.

22. தொழிற் சங்கங்கள்.—1968 சனவரி 1-ம் தேதியன்று இம் மாநிலத்தில் பதிவான தொழிற்சங்கங்கள் 1,530 இருந்தன. இந்த ஆண்டில் 239 சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 101 சங்கங்களின் பதிவு, ரத்து செய்யப்பட்டது. இரண்டு சங்கங்கள் கலைக்கப்பட்டன. எனவே இந்த ஆண்டின் இறுதியில் செயல்பட்டுக்கொண்டிருந்த தொழிற் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 1,666 ஆக இருந்தது.

23. தொழிலில் ஒழுங்குநெறி முறை விதிகள்.—தொழிலில் ஒழுங்கு நெறிமுறை விதிகளைச் செயல்படுத்தும் பணி மாநில ஆய்வு செயல் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழில் ஒழுங்கு நெறிமுறை குறித்த விதித்துறைகள் தொழிலதிபர்களுக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் அச்சிட்டு வழங்கப்பட்டன. தொழிலாளர்நல அதிகாரிகளும் தொழிற்சாலை ஆய்வாளர்களும் எந்த ஒரு மத்திய அமைப்புடனும் இணைக்கப்பட்டிராத பல்வேறு தொழிலதிபர்களுடனும் தொழிலாளர் சங்கங்களுடனும் உள்ளாட்சி மன்றங்களுடனும் தொடர்பு கொண்டு, தொழிலில் ஒழுங்கு நெறிமுறை விதிகளை உறுதிப்படுத்துமாறு அவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும் என்று கட்டளை இடப்பட்டுள்ளது. 260 நிர்வாகங்களும் 1,650 தொழிலதிபர் சங்கங்களும் 26 உள்ளாட்சி மன்றங்களும் 31-12-1968 வரையில் ஒழுங்கு நெறிமுறை ஏற்றுக்கொண்டுள்ளது.

1968 சனவரி 1-ம் தேதி அன்றைய நிலவரப்படி 276 நேர்வுகளில் தொழிலாளர் சட்டங்களின் விதித்துறைகள் மீறப்பட்டன. 31-12-1968 வரையில் தொழிலாளர் குறித்த சட்டங்கள் 1,832 நேர்வுகளில் மீறப்பட்டதாகத் தெரிய வருகிறது. 2,108 முறையீடுகளில் 1,429 அறிவுரை வழங்குவதன் மூலம் தீர்க்கப்பட்டன. 288 நேர்வுகள் குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 73 நேர்வுகளில் விசாரணை செய்ததன்மேல் அவற்றை மெய்ப்பிக்கக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. 318 முறையீடுகள் 31-12-1968 அன்று விசாரணையில் இருந்தன.

ஒழுங்கு நெறிமுறை விதிகளை மீறியதாகவும் தொழில்மன்றத் தீர்ப்புகளைச் செயல்படுத்தாமல் இருந்ததாகவும் தொழிற்சங்கங்களை ஏற்காமல் இருந்ததாகவும், 100 நேர்வுகளில் முறையீடு செய்து கொள்ளப்பட்டது. (1-1-1967 அன்று 39 முறையீடுகள் விசாரணையில் இருந்தன. 1968-ல் 61 முறையீடுகள் அனுப்பப்பட்டன.) அவற்றில் 63 குறித்து ஆய்வாண்டில் தீர்வு காணப்பட்டது. ஆண்டு இறுதியில் 37 விசாரணையில் இருந்தன.

தொழிலாளர் துறை ஆணையாளர் மாநில ஆய்வு-செயல்குழுவின் தலைவராவார். தொழிலாளர் துறை தனித் துணை ஆணையாளர் அதன் செயலாளராவார். 1968-ம் ஆண்டில் மூன்று முறை குழு அவை கூடி, தொழில் ஒழுங்கு நெறிமுறை விதிகள் மீறப்பட்டதாகச் செய்துகொண்ட முறையீடுகள் குறித்தும் சங்கங்களை ஏற்பது குறித்தும் ஆய்வு-செயல் பணி குறித்த ஏனையவை குறித்தும் விவாதித்தது.

24. 1965-ம் ஆண்டு பூரிப்பூதியம் வழங்கல் சட்டம்.—ஓர் ஆண்டுக்கென வழங்கப்படும் பூரிப்பூதியத் தொகை மீதான வருமான வரித் தள்ளுபடித் தொகை அடுத்த ஆண்டில் கிடைக்கும் மிகுதியுடன் சேர்க்கப்படுவதற்கு வகை செய்யும் விதமாக இந்திய அரசு ஓர் அவசரச் சட்டத்தின் மூலம் இச் சட்டத்தைத் திருத்தியது.



மேற்படி சட்டத்தின் 19-வது பிரிவில் வகை செய்துள்ளபடி பூரிப்பு ஊதியத்தை வழங்குவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரியாக தொழிலாளர் துறை ஆணையாளரை அரசாங்கம் நியமித்துள்ளது. ஆய்வாண்டின்போது (கூட்டுறவு நிறுவனங்கள் குறித்த 10 நேர்வுகள் உட்பட) 25 நேர்வுகளில் கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. 1967-ல் 34 கால நீட்டிப்புகள் (கூட்டுறவு நிறுவனங்கள் குறித்த ஒன்பது நேர்வுகள் உட்பட) வழங்கப்பட்டன.

1965-ம் ஆண்டு பூரிப்பு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 3 (b) பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்பட வேண்டிய 2 (i) பிரிவில் வகை செய்துள்ளபடி நிர்வாகத்தினர் தங்களது கணக்கு ஆண்டை மாற்றிக் கொள்ள அனுமதி அளித்து இரு நேர்வுகளில் ஆணைகள் இந்த ஆண்டில் பிறப்பிக்கப்பட்டன.

இந்த ஆண்டில் பூரிப்பூதியம் வழங்கல் சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து மாநில வீட்டுவசதி வாரியத்திற்கு 1967-68 முதற்கொண்டு மூன்றாண்டுகளுக்கு அரசாங்கம் விலக்களித்தது.

## IV. சமூகப் பாதுகாப்புச் சட்டம்.

25. 1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.—இந்த ஆண்டில் 1,194 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 1967-ல் 968 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றைத் தவிர, இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 551 வழக்குகள் விசாரணையில் இருந்தன மொத்தம் 1,745 வழக்குகளில் 1,329 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது. 1967-ல் 918 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீட்டு கேட்கிற தகுதியுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கு வழக்காடும் உதவிக்கென அரசாங்கச் செலவில் ரூபாய் 1,000 தொகையை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளரின் ஆணைகளுக்கு எதிராக நிர்வாகம் முறையீடு செய்து கொள்ளும்போது, காயமுற்ற தொழிலாளர்களுக்கும், மரணம் அடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து உள்ளவர்களுக்கும் உயர்நீதி மன்றத்தில் எதிர் வழக்காட உதவி அளிக்கப்படுகிறது. தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளருக்கு முன்பு நடக்கும் சட்ட நடவடிக்கைகள் குறித்து அத்தகைய உதவி வழங்கப்பட்டது. 1968-ல் ஒரு நேர்வில் வழக்காடுவதற்கான உதவியாக மொத்தம் ரூ. 40 வழங்கப்பட்டது.

1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கேட்கக்கூடிய தகுதியுள்ள தொழிலாளர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் ஆகியோருக்கு அரசாங்கச் செலவில் வழக்காடுவதற்கான உதவி அளிப்பதற்காக சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கூட்டு ஆணையாளர்கள் ஒவ்வொருவராலும் ஆண்டொன்றுக்கு ரூ. 300-க்கு மேற்படாத செலவுத் தொகைக்கும், சென்னை தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளரால் ஆண்டுதோறும் ரூ. 100 செலவிட 1970 பிப்ரவரி 28-ம் தேதி வரை அதாவது மூன்றாண்டு கால அளவுக்கு 1967 ஆகஸ்டில் அரசாங்கம் நிலையான ஒப்புதலளித்தது.

26. 1961-ம் ஆண்டு பேறுகால உதவிச் சட்டம்.—1961-ம் ஆண்டு பேறுகால உதவிச் சட்டத்தின்கீழ் செய்துள்ள விதிகளை மாநில அரசாங்கம் 1967-ம் ஆண்டு ஆகஸ்டில் உறுதிப்படுத்தியது. 1967-ம் ஆண்டு செப்டம்பர் முதற்கொண்டு அந்த விதிகள் செயலுக்கு வந்தன.

27. 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம்.—1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் சட்டம் 1968-ம் ஆண்டில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு, வகை நிறுவனங்களுக்கு, அவற்றிற்கெதிராக குறிப்பிட்டுள்ள தேதிகள் முதல் மேற்கொண்டும் நீட்டிக்கப்பட்டது.

போக்குவரத்தைச் சமாளிக்க தனி வண்டிகள் ஓட்டப்பட்டன. கூட்டம் அதிகமாயுள்ள வண்டி நிற்குமிடங்களில் பயணச் சீட்டுகள் கொடுக்க தனி பயணிகள் வழித்துணைவரைப் போடும் முறை தொடர்ந்து செயல் பட்டது.

(ஈ) பல்கலைக்கழகக் கட்டிடத்திற்கு எதிரே "அண்ணா சதுக்கம்" என்றழைக்கப்படும் இடத்திற்குப் புதிய போக்குவரத்து முனை தொடங்கப் பட்டுள்ளது; இங்கு 38-H, 11-C, 27-C, 33-A, ஆகிய எண்ணுள்ள பேருந்துகள் வந்து சேர்கின்றன. மெரினா வழியாகச் செல்லும் மற்ற பேருந்துகளும் அண்ணா சதுக்கத்தில் நிற்கின்றன.

(உ) தற்போது 23 நெரிசல்நேரப் போக்குவரத்துக்கள் (தனிப் போக்கு வரத்துக்கள் உட்பட) நகரில் பல்வேறு வழித்தடங்களில் செயல்படுகின்றன. 120 வழித்தடங்களில் போக்குவரத்துக்கள் மூலம் உரிய ஆதாயம் கிட்டுவதாயில்லை. அத்துடன், நெரிசல் நேரப் போக்குவரத்து அனைத்தும் தனிப் போக்குவரத்து அனைத்தும் உரிய ஆதாயம் அளிப்பனவாயில்லை. பயணம் செய்யும் பொது மக்களின் நலனை முன்னிட்டும், நெரிசல் நேரப் போக்குவரத்தைச் சமாளிக்கவும் உரிய ஆதாயம் தராத இந்தப் போக்கு வரத்துக்கள் இயக்கப்படுகின்றன.

(ஊ) சென்னை மாநகரிலும், மாவட்டங்களிலும் இப்போது 1,207 பேருந்துப் பணிகள் இயக்கப்படுகின்றன; நெரிசல் நேரப் பேருந்துப் பணிகள் உட்பட இப்போது 700 நகரப் பேருந்துப் பணிகளும், 52 மாநகர—வெளியூர்ப் பேருந்துப் பணிகளும், 455 வெளியூர், மாவட்டப் பேருந்துப் பணிகளும் இயக்கப்படுகின்றன.

## 7. கட்டணங்களை மாற்றியமைத்தல்

சென்னை மாநகரிலும், 15 மைல் அல்லது 24 கி. மீட்டர் சுற்றளவுக்குள் அமைந்த புறநகர்ப் பகுதிகளிலும் நடத்தும் பேருந்துப் பணிகளில், 1967 செப்டம்பர் 15-ம் தேதிக்கு முன்னர் கட்டண வீதம், தோராயமாக முதல் நிலை 2 கி. மீட்டர் தொலைவுக்கு 10 காசு வீதமும், தோராயமாக அடுத்த ஒவ்வொரு 2 கி. மீட்டர் தொலைவிற்கும் 4 காசு கூடுதலாகவும் வசூலிக்கப்பட்டது. சில்லறை கொடுப்பதில் பேருந்துப் பணியாளர்களுக்கும், பயணிகளுக்கும் ஏற்படும் இடர்ப்பாட்டைத் தவிர்க்கவும் இப் பேருந்துப் பணிகளில் நீள் தொலைவுப் பயணம் செய்யும் பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டும் இப்பணிகளுக்காகும் கட்டணங்கள் 1967 செப்டம்பர் 15-ம் தேதி முதல் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன:—

| தொலைவு. | 1967 செப்டம்பர் 15-க்கு முன்பிருந்த கட்டணம். காசு. | 1967 செப்டம்பர் 15 முதல் பின்பற்றப் படும் கட்டணங்கள். காசு. |
|---|---|---|
| 2 கி. மீட்டர் | 10 | 10 |
| 4 கி. மீட்டர் | 14 | 15 |
| 6 கி. மீட்டர் | 18 | 20 |
| 8 கி. மீட்டர் | 22 | 20 |
| 10 கி. மீட்டர் | 26 | 25 |
| 12 கி. மீட்டர் | 30 | 30 |
| 14 கி. மீட்டர் | 34 | 35 |
| 16 கி. மீட்டர் | 38 | 35 |
| 18 கி. மீட்டர் | 42 | 40 |
| 20 கி. மீட்டர் | 46 | 45 |
| 22 கி. மீட்டர் | 50 | 45 |
| 24 கி. மீட்டர் | 54 | 50 |



1968 ஏப்ரல் 5-ம் தேதி முதல் இத்துறையின் புறநகர-மாவட்டப் பேருந்துப் பணிக் கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. திருத்தியமைத்த கட்டண அமைப்பு கீழ்க்கண்டவாறாகும்:—

(அ) சென்னை மாநகரிலிருந்து 15 கல் தொலைவு அல்லது 24 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் சென்னைக்கிளை இயக்குகின்ற புறநகர்ப் பேருந்துப் பணி—

| | |
|---|---|
| (i) சென்னை மாநகரிலிருந்து 15 கல் தொலைவுடைய சுற்றுப்பகுதிக்குள். | மாநகரப் பேருந்துப் பணிகளிலுள்ளவை போன்ற அதே கட்டணங்கள். |
| (ii) சென்னை மாநகரிலிருந்து 15 கல் தொலைவிற்கு அப்பால் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும். | கூடுதலாக 2·5 காசு வசூலிக்கப்படும். |

இக் கட்டணங்கள் 5 காசின் மடங்குகளாக விதிக்கப்படும்; 5 காசின் உயர்ந்த மடங்குகளுக்கு முழுமைத் தொகையாக அமைக்கப்படும்.

(ஆ) **சென்னைக் கிளையின் மாவட்டப் போக்குவரத்துக்கள்.**—இப் பேருந்துப் பணிகளில், குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே நிற்கும் பேருந்துகள் உட்பட, 1968 ஏப்ரல் 5-ம் தேதி முதல் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2·5 காசு வீதம் கட்டணங்கள் நிகராக வசூலிக்கப்படுகின்றன. அவ்வாறுகணக்கிடப்படும் கட்டணங்கள் 10 காசு என்னும் உயர் அளவிற்கு முழுமையாக்கப்படுகின்றன. இப் பேருந்துப் பணிகளில், குறைந்த கட்டணம் 20 காசு.

(ஈ) **கன்னியாகுமரி கிளை.**—நாகர்கோயில் நகரிலிருந்து 10 கல் சுற்றளவுக்குள் ஓட்டப்படுகின்ற நகரப் பேருந்துகளும் புறநகர் பேருந்துகளும். இப் பேருந்துப்பணிகளில் சென்னை மாநகரக் கட்டண வீதம் பின்பற்றப்படுகிறது.

(உ) **கன்னியாகுமரி கிளை.**—நாகர்கோயிலிலிருந்து 10 கல் சுற்றளவுக்கு அப்பாற்பட்ட தொலைவுடைய வழித்தடங்களில் ஓட்டப்படும் புறநகர்ப் பேருந்துப் பணி.

| | |
|---|---|
| நாகர்கோயிலிலிருந்து 10 கல் தொலைவுச் சுற்றளவிற்குள். | சென்னை மாநகரப்பேருந்துப் பணிகளில் உள்ள அதே கட்டண வீதம். |
| நாகர் கோயில் நகரிலிருந்து 10 கல் தொலைவிற்கு அப்பால் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும். | கூடுதலாக 2·5 காசு. |

கட்டணங்கள் 5 காசின் மடங்குகளாக இருக்கும். இவை 5 காசின் உயர் மடங்கிற்கு முழுமையாக்கப்படும்.

(ஊ) கன்னியாகுமரி கிளை—வெளியூர், மாவட்ட, இடை மாநிலப் பேருந்துப் பணிகள்.—இப்போக்குவரத்துகளில் கட்டணம், கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2·5 காசு. இக்கட்டணங்கள் குறைந்த அளவுக் கட்டணம் 20 காசு என்கிற கட்டணத்திற்கு உட்பட்டு 10 காசின் உயர் மடங்குகளாக முழுமையாக்கப்படும்.

## 8. விடுமுறை நாட்களில் சலுகைப் பயணச் சீட்டுகள்.

இத் துறையினால் ஓட்டப்படுகின்ற நகரப் பேருந்துகளில் விடுமுறை நாட்சலுகைப் பயணச் சீட்டுகள் வழங்கப்படவேண்டுமென்று பொது மக்களிடமிருந்து முறையீடுகள் வந்தன. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதி முதற்கொண்டு விருப்பப் பயணச் சீட்டுகளைப் பயணிகளுக்கு வழங்குவதற்

*திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளைப் பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். துணை மதிப்பீட்டில் ஏறக்குறைய 66 கோடி ரூபாய்க்குக் கேட்டிருந்தாலும் ஒரு 11 கோடி ரூபாய் மட்டுமே வருவாய்க் கணக்காகவும், எஞ்சிய தொகையைப் பொறுத்தவரையில், மூலதனக் கணக்கிலும் கடன் வகைகளைத் திருப்பிக் கொடுக்கும்வகையிலும் அமைந்திருப்பதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பிட்ட இனங்களுக்குத் தொகைகளை ஒதுக்கியிருப்பதைக் கூர்ந்து கவனிக்கிறபோது நம்முடைய அரசு, எது எது இன்றியமையாதது, எது எது முக்கியமானது என்பதைக் கருத்திலே கொண்டு காரியமாற்றியிருக்கிறது. ஆயினும், எந்தெந்த இனத்திற்குத் தொகைகள் ஒதுக்கப் பெற்றுள்ளதோ அவைகளைச் செலவழிக்கிறபோது, திட்டத்தை ஆரம்பித்து நடத்தும்போது, நிர்வாகத்திலுள்ள சிலர் செய்கின்ற தவறுகளின் காரணமாக அலுவல்களிலே தாமதமாவதைக் காண்கிறோம். இதனால் அரசுக்கும், அமைச்சரவைக்கும் கெட்ட பெயர் உண்டாகிறது.

தஞ்சை மாவட்டம் முழுவதிலும் இறைவைப் பாசனம் தேவைப்படுகிறது என்ற திட்டத்தின் அடிப்படையில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் சென்ற ஆண்டு மூன்று இறைவைப் பாசனத் திட்டத்தையும், இந்த ஆண்டு ஒரு இறைவைப் பாசனத் திட்டத்தையும், அந்தத் தொகுதியில் மட்டும் மொத்தம் நான்கு இறைவைப் பாசனத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர இன்னும் வேலைகள் தொடங்கப்படவில்லை. என்ன காரணம் என்று கேட்டால், இறைவைப் பாசனத் திட்டத்தின் கீழ் அக்ரிமெண்ட் விதி இருக்கிறது, அதை எழுத வேண்டுமென்று நிர்வாகத்தினர் கூறுகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அப்படிப்பட்ட ஏற்பாடு தேவையில்லையென்று அறிவித்து, அந்த உத்திரவை மாற்றி வேலைகளை ஏற்று நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. இப்படிப்பட்ட நிர்வாக நிலைமை சில இடங்களில் இருக்கிற காரணத்தினால், நம்முடைய அமைச்சர்களுக்கும், நம்முடைய அரசுக்கும் கெட்ட பெயர் ஏற்படுவதைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். உணவுப் பொருள் அபிவிருத்தியில் கவனம் செலுத்தும்போது, ஒரு வட்டத்தின் அடிப்படையில் கவனம் செலுத்துவதற்கு முக்கியத்துவம் தர வேண்டும். திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் பாமினியாறு திட்டம் 25 ஆண்டு காலமாக இருந்து, அரசாங்கத்தின் கவனத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகக் குறிப்புகள் கொடுக்கப்பட்டு, அது தலைமைப் பொறியாளருக்கு வந்திருப்பதாக அறிகிறேன். இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு முன்வந்து நிறைவேற்றிவிட்டால், இதனால் சுமார் முப்பது, நாற்பது கிராமங்களுக்கு நன்மை விளையும். இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டுவருகிறபோது, அரசாங்கம் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தாலும், அரசாங்க அதிகாரிகள் செய்கிற தவறுகளின் காரணமாக அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. அரசாங்க அதிகாரிகள் செய்கிற தவறுக்கு ஓர் உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய ஊரான முத்துப்பேட்டைக்கு அருகே ஒரு பெரிய கோயில் உண்டு. அந்தக் கோயிலுக்கு அறங்காவலர்கள் மூன்று பேர் உண்டு. ஒருவருடைய இடம் சென்ற மாதம் காலியானதால், நான் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தேன். என்னை எதிர்த்து இன்னொருவர் விண்ணப்பம் செய்திருந்தார். விண்ணப்பம் செய்த இருவர்களில், யாருக்குத் தகுதி இருக்கிறதோ அவரை நியமிக்க வேண்டும். அதுதான் முறை, அதுதான் மரபு, நான் யாரை எதிர்த்து விண்ணப்பம் செய்திருந்தேனோ, அவரையும் போட வேண்டுமென்று நிர்வாகத் தலைவர் புதிதாக ஓர் இடத்தை உற்பத்தி செய்து, அவரையும் என்னையும் நியமனம் செய்திருக்கிறார். நிர்வாக அதிகாரிகள் அரசாங்கத்தின் லட்சியத்திற்கு முரணானவர்களாக இருப்பதால், இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படுகின்றன. இறுதியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள 66 கோடி ரூபாய்க்குள்ள இறுதித் துணை மதிப்பீட்டை ஆதரித்து, என் உரையை முடித்து, அமர்கிறேன், வணக்கம்.



*திரு. பி. எஸ். எல்லப்பன் : உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை ஆரம்பத்திலிருந்து பஞ்சம், பஞ்சம் என்ற பஞ்சப்பாட்டுத்தான். எங்கேயும் தண்ணீர் இல்லை, உணவு இல்லை, நாடே படுசூரணமான நிலையில் இருக்கிறது என்று எல்லோரும் சொன்னார்கள். இம்மாதம் 23-ம் தேதியன்று நம்முடைய கவர்னர் அவர்கள் மதுராந்தகம் தாலுகாவிலே சில முக்கியமான இடங்களிலே சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். எங்கேயும் தண்ணீர் இல்லை, ஒன்றும் கிடையாது. "பார்த்த பார்வையில் தாண்டி, உள்ளத்தைப் பறித்துக்கொண்டாண்டி" என்று சொல்வார்களே, அது போல கவர்னர் அவர்கள் அந்த இடங்களைப் பார்த்ததும் அங்குள்ள நிலைமைகளைப் பார்த்து, உண்மையிலேயே பஞ்சம்தான் என்று தீர்மானித்துவிட்டார்கள்.

அடுத்து, மிகவும் முக்கியமானது கால்நடை. கால்நடைகள் க்ஷேமமாக இருந்தால்தான் அடுத்த வருஷமாவது நல்ல மாசூல் செய்ய முடியும். விவசாயம் செய்ய முடியும். இப்போது ஆடு, மாடுகள் அவ்வளவையும் அடிமாட்டுக்காக தெருவிலே ஓட்டிக்கொண்டு, சந்தைக்குக் கொண்டு போகிறார்கள். பாவம் விவசாயி என்ன செய்வான்? தண்ணீர் இல்லை, உணவு இல்லை. ஆடு, மாடுகள் எல்லாம் கசாப்புக் கடைக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. கால்நடைகள் இல்லாவிட்டால் விவசாயம் எப்படி நடக்கும்? உண்மையிலே பின்னாலே தெய்வசக்தி இருந்து, மழை பெய்து, க்ஷேமம் வந்தது என்று சொன்னால் கால்நடைக்கு எங்கே போக வேண்டும்? ஆடு, மாடுகளை வைத்துக்கொண்டுதான் மனிதன் வாழ முடியும், வாழ வேண்டும். கால்நடைகள் இல்லாமல் மனிதன் வாழ முடியாது. மனைவிக்குப் புருஷன், புருஷனுக்கு மனைவி என்று சொல்வார்களே, அது போல, ஆடு, மாடுகளுக்கு மனிதன், மனிதனுக்கு ஆடு, மாடுகள் என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் கால்நடைகள் தண்ணீர் இல்லாமல், உணவு இல்லாமல் பரிதவிக்கின்றன.

ஒரு கிணறு எடுத்தால், சர்க்காரில் 3 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கிறார்கள். ஒரு சில இடங்களில் போரிங் பம்ப் செட்டுகளைப் போட்டால் தண்ணீர் கொப்பளிக்கிறது. ஆகவே, சுலபமாக ஆயிரம் ரூபாய் செலவில் போரிங் செட் பைப்புகளைப் போட்டால் மாட்டுக்கும் தண்ணீர் கிடைக்கும், மனிதனுக்கும் தண்ணீர் கிடைக்கும், விவசாயம் செய்வதற்கும் தண்ணீர் கிடைக்கும். ஆகவே, சர்க்கார் முதலிலே போரிங் செட் பைப்புகளைப் போடத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இதை நான் கவர்னர் அவர்களிடத்திலும் சொன்னேன். எனக்கு இங்கிலீஷ் தெரியாது. கவர்னர் அவர்களுக்குத் தமிழ் தெரியாது. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்பதைப் பக்கத்திலிருந்தவர்களிடம் கேட்டார். நான் சொன்னதை அவர் இங்கிலீஷில் கவர்னர் அவர்களிடம் சொன்னார் உடனே கவர்னர் என்னுடைய கருத்தைப் புரிந்துகொண்டார். நேற்றையதினம் நடந்த டின்னர் பார்ட்டியிலேகூட, கவர்னர் அவர்கள் என்னைப் பார்த்ததும், நீ மதுராந்தகத்தைச் சேர்ந்தவர் அல்லவா? என்று கேட்டார். குடி தண்ணீர் விஷயத்தில் ரொம்ப அவசரமாக ஆடு, மாடுகளைக் காப்பாற்ற வேண்டுமானால், இந்த போரிங் செட் பம்புகளைப் போட வேண்டும். இதை என்னுடைய தீர்மானமாக வைத்துக்கொள்ளுங்கள்.

பஞ்சம் வருகிறதே, இந்த மந்திரிதான் என்ன செய்வார்? எல்லோரும் பஞ்சத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர் என்ன செய்வார்? பாவம். (சிரிப்பு). அவரும் நம்மைப் போன்ற மனிதர்தான். எத்தனை விஷயங்களை அவர் சிந்திக்க முடியும்? ஒரு ஜில்லாவில் பஞ்சம், இரண்டு ஜில்லாவில் பஞ்சம் என்று சொன்னால், ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவிற்குத் தூக்கிப் போடலாம். நாடு பூராவுமே பஞ்சம் என்றால், மந்திரி என்ன செய்வார்? நானும் நாலு வார்த்தைதான் பேசினேன், சும்மாவா இருந்தேன் என்று சொல்லும் அந்த நிலையில் எல்லோரும் பேசுகிறார்கள். இதற்கெல்லாம் பரிகாரம் எங்கே இருக்கிறதென்றால், ஆண்டவனிடத்தில்தான் இருக்கிறது. அவன் சரியாகக் கணக்குப் பார்த்தால்தான் எல்லாம் சரியாகும். மாரி இல்லையென்றால் காரியம் இல்லை

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை |
| 2 | ஆதித்தனார், சி. பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம் |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம் |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்) | உப்பிலியாபுரம் |
| 5 | அழகர்சாமி, சோ. | கோவில்பட்டி |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ. வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ. வ.) |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். | கடம்பத்தூர் |
| 11 | அண்ணாமலை, வி. டி. | பெரணமல்லூர் |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம் |
| 13 | அரங்கண்ணல், இராம | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்) |
| 14 | அரசு, அ. பொ | திருவெற்றியூர் |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம் |
| 18 | ஆசைத்தம்பி, ஏ. வி. பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்) |
| 19 | ஆதிமூலம், டி. எஸ். | சேரன்மாதேவி |
| 20 | பாலன், எம். சி. | நாகர்கோயில் |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ. கோ. | வானூர் (செ. வ.) |
| 22 | பலராமன், இல. | கணியம்பாடி |
| 23 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல் |
| 24 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர் |
| 25 | பாரதி மோகன், கோ. | குத்தாலம் |
| 26 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு |
| 27 | பூவராகன், கோ. | விருத்தாசலம் |
| 28 | போஜன், கே. | உதகமண்டலம் |
| 29 | சீனைச்சாமி, கரு. | மானாமதுரை |
| 30 | சிதம்பரநாத நாடார், எ. | கொளச்சல் |
| 31 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்துர் |
| 32 | சின்னசாமி. மு. | ஈரோடு |
| 33 | சின்னசாமி, வி | ஏர்க்காடு (ஆ. வா.) |
| 34 | சித்தன், என். எஸ். வி. | திருமங்கலம் |
| 35 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ. வ.) |
| 36 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 37 | துரைராஜ், சு. ம. | திருவள்ளூர் (செ. வ.) |
| 38 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி |
| 39 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ. வ.) |
| 40 | துரைசாமி, சு. | திருப்பூர் |
| 41 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி |
| 42 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர் |
| 43 | இளம்வழுதி, இரெ. | கடலூர் |
| 44 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 45 | கணேசன், எல். | ஒரத்தநாடு |
| 46 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில் |
| 47 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம் |
| 48 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம் |
| 49 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம் |
| 50 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.) |
| 51 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம் |
| 52 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்) | செய்யாறு |
| 53 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை-சென்ட்ரல் |
| 54 | கோவிந்தராஜன், சி. | நெல்லிக்குப்பம் |
| 55 | கோவிந்தராசன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்) |
| 56 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்-மேற்கு |
| 57 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி |
| 58 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்) |
| 59 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்) |
| 60 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை |
| 61 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர் |
| 62 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார் |
| 63 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு |
| 64 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ வ.) |
| 65 | ஜயராமன், கி. | சேலம்–1 |
| 66 | ஜெயராமன், பி. | பேர்ணம்பட்டு (செ, வ.) |
| 67 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.) |
| 68 | கனகசபை, ரா. | சிதம்பரம் |
| 69 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி |
| 70 | கந்தசாமி, எம். | குளித்தலை |
| 71 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை |
| 72 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்) |
| 73 | கண்ணப்பன், எம். | திணத்துக்கடவு |
| 74 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை |

(2) The existing panel system in Coimbatore area should be replaced by the Service system, when the scheme is extended to the families of Insured persons in that area.

(3) The Director of Health Services and Family Planning was authorised to take over private buildings on rent in 13 places in Coimbatore area for housing the Employees' State Insurance dispensaries to be set up in replacement of the panel system.

(4) A sub-Committee, consisting of the employees representatives of the Board who are residing in Coimbatore [with Regional Administrative Medical Officer (E.S.I.) Coimbatore as Chairman] should be set up, for assisting the Collector, in finding out suitable buildings in Coimbatore for housing the Employee's State Insurance dispensaries.

(5) The labour leaders should extend their co-operation during periods of strikes and lockouts to prevent the insured persons from approaching the Medical Officers of the dispensaries to issue Medical Certificate for abstention.

(6) The members should use their good offices in the ma'tter of recovery of Employees State Insurance Corporation's dues from defaulting employers.

61458